விடுதலை

ஏப்ரல் - மே

1936

காங்கிரஸ் எலக்ஷ

'அயோக்கியத்தனங்க
பித்தலாட்டங்களுப்

சேலம் தமிழரே! தென்னுட்டு
கண் விழியுங்க

(நமது நிருபர்)

காங்கிரஸுக்கு எலக்ஷன் ஜுரம் வந்ததும் போதும். அப்பா! இவர்கள் செய்யும் அயோக்கியத்தனங்களுக்கும், பித்தலாட்டங்களுக்கும் எல்லையே இல்லை என்று சொன்னால் காங்கிரஸ்காரர்களாகிய ஓட்டல் சசிசிலே ஐயர் முதல் ஜட்ஜ் ஐயர் வரையிலும், அவர்களின் எடுபிடி ஆட்களாகிய பிராமணரல்லாதாரும் என்மேல் சொல்லொணுக் கோபப்படுவார்கள். ஆனல், கோபித்துக் கொண்டிருக்கிறார்களே யென்று இவர்கள் செய்யும் தகடு தத்தங்களை வெளியில் சொல்லாமலிருக்க முடியுமா? அப்படியும் மீறிகோபித்துக் கொண்டால் அக்கோபம் என்னை என்ன செய்யும். தப்பு! அவர்களுக்கு கோபமே வராது; வரவும் கூடாது. ஏன் என நீங்கள் கேட்கலாம். அதுதான் அவர்கள் அஹிம்சா மூர்த்திகள் ஒரு கன்னத்தில் அடிபட்டால் மறு கன்னத்தையும் திருப்பிக் கொடுப்பவர்கள்; கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். எடுத்ததற்கெல்லாம் காககா வலிப்பு பிடிப்புப் பிடித்த உண்ணுவிரத பூச்சாண்டி காட்டும் அஹிம்சா மூர்த்தியென சொல்லப்பட்ட காந்தியாரின் சிடர்கள் அல்லவா? அதற்காகத்தான் சொன்னேன்.

* * *

இந்த தென்னுட்டு பருத்தி நூல் ஜர்ப்பை வெண்ணெ வெட்டி சூரர்கள் இருக்கின்றார்களே இவர்கள் நம் தென்னிந்திய குடிகளாகிய தமிழர்கள் அத்தனை பேரும் மடச் சாம்பிராணிகளென்றே, தோப்புக்கரணம் போடுகின்றாயா என்று கேட்பதற்குள் எத்தனை கோவிந்தா சாமி என்று சொல்லும் மூளை உடையவர்களென்றே, வெண்ணை காக்கா பறந்தது என்றால், ஆம் நானும் பார்த்தேன், அதற்கு மூன்று கால்கள் இருந்தன என்று ஆமாம் போடுபவர்களாய் இருக்க வேண்டுமென்றே மற்றும் எவ்விதமோ நினைத்து தங்கள் மாய ஜாலங்கள் கணக்கற்று செய்கின்றனர். ஆனல், இவர்கள் எண்ணுவது போல தமிழரில் சிலர் இல்லையென்று சொல்லாமல் மூடிவைப்பதற்கு மில்லை. ஏன்! மோத்துரங்களும், அவனுசிகளும், ராஜாக்களும், பக்தவத்சலங்களும் இல்லாமலில்லை. இவர்களெல்லாம் இருக்கும்வரை அவர்களுக்கு யாது குறைவேற்படப் போகின்றது.

* * *

ஜில்லா போர்டு எலக்ஷன்கள் நடந்த சித்தூரில் கன்னுடம் நடமாக வெற்றி ஓட்டுகளைப் பறித்தார்கள். நேற்றுவரை ஜஸ்டிஸ் கட்சியிலிருந்தவர்களை உத்தியோக வேட்டைக்காரர்களென அழைத்து இன்று அவர்களின் சார்பாக நிறுத்தினர்கள். வட ஆற்காட்டில் கள்ளு சாராயம் குத்தகைதாரர்களை பெட்சர்களாக நிறுத்தினர்கள். த்த ஜஸ்டிஸ் ஆட்களை ண்டே தங்களின் சார்பாய் பி ம செய்யச் செய்து கொண்டார் லேயே சேலம் முனிசிபல் டைத் தேர்தலில் வெற்றிக்கா ரணமாக, பகிரங்கமாக லஞ்சம் கொடுக்கப்பட்டு கள்ளஓட்டுகள் பெற்றனர். யார் இந்த விதமான லாட்டத்தனங்களை வேலை செய் ன சென்று கேட்கிறீர்கள். அவர் ன்தான் இன்று சம்பிடம் வந்து ங்கள் காந்தி பக்தர்கள், கள்ளுக் கடைகள் மறியல் செய்தோம். டிபட்டு இரத்தம் கக்கினேம், நேக குத்தகைதாரர்களை எலம் டுக்காமல் செய்யச் செய்தோம். ன்று, மான ஈனமற்று பேசும் வன் நெஞ்சர்களாகிய காங்கிரஸ்காரர் ள்.

* * *

சோம்ப சோம்பப் பெரிய தேச

பக்தர்களெனச
காந்தியாரின்சம்
நர் சோட்டா
கோபாலாச்சாரி
யாயிருக்கலாம்;
ஞல் பிறந்த வி
சேர்ந்த சேலமா
னுட்டுத் திலக
பெற்ற டாக்டர்
வின் சேலமா பி
இப்பேர்பட்டவர்க
ஜஸ்டிஸ் கட்சி யெ
கட்சியின பாக்த
நில் விசியதும், தி
குயுக்த புத்தியும், அ
மும் இன்று செல்ல
சுவாமிகள் இப்பெ
காந்தியாயும் அப்பெ
காந்தியாய் மிருந்த
நிடி அவருக்கு இட
வலது கையாகவே
ற்ற ஆய்போகவும் 'எ
தாய் விட்டது' கான் எ
வுக்குள்ளும் வருணச
பத்திரமாகப் பாதுகாக்க
சபையைக் கவனிக்கவும்
றேனென்று, விஜயராகவ
சுவாமிகள் சமபிரீட்ட
மையாகவே நியாயக் க
ராமணரல்லாதாருக்கு
வழக்க ஏற்பட்டிருக்கிற
அது இருக்கே ஆகட்
மம, தான எவ்வளவ
ஞம் இந்த பருத்தியும்
வைத்தே
அது பயனப
லம். எண்ணி காயுகோரு
கொள்ளவும் ஆசிறது,
க்கடி காட்டப்பட்டது;
பதினறு ஆண்டுகள்
ஆனல், இப்போது இ
பசிச காங்கிரசுக்கு வந்
சம சக்கரத்தை அபக
லவா! இந்த சக்கரத்தை
ஒழித்துக் கொண்டு
றென்றோ தெரியவில்லை
காங்கிரஸ்ஸயானது அசம்
ஷனும் ஜில்லா போர்டு
களும்தானென்று நான்
நீங்கள் தெரிந்து கொள்
டிய அவசியமில்லை. இந்த
னது பாழும் காங்கிரஸ்
களிலும் வந்து படாத
எவ்வாறு ஜில்லா போர்டு
களில் என்ன அயோக்கி
கள் நடந்ததோ அதே இப்
இவர்களுள் நடந்து வ
உதாரணமாக மேற்சொன்
தில் என்ன நடந்ததென்பவ
கவனியுங்கள். இதைச்
போனால் அநேகர் என்மே
யாச (?) அவதாரம் எடு
ஆனல் இன்று நடந்த அயோ
தனங்களை வெளியில்
வன் பாவி என்ற நிலைமை
இருப்பதினால் நான் சொல்
கள் படிக்கவேண்டியிரு
சென்ற வருட சேலம் ஜில்
கிரஸ் தலைவராய் இரு
வெங்கிடாசல செட்டியார்
தெடுக்கப்பட்டிருந்ததும்
இவர் மாகாண காங்கிரஸ்
யின் காரியதரிசியா யிரு
அதன் பின் இவர் அ
சம்பேலிக்க
செய்ததாக போலீசார் கைது
இவரின் மேல் வழக்குத்
இவர் ஜாமீனில் வெளி
சேலம் ஜில்லா காங்கிரஸ்
த்தலைமை பதவியையும்,
கமிட்டி காரியதரிசி பதவி
ராஜிநாமாச் செய்ததும்
அறிந்ததே. இவர்ராஜிநாம
தாலும்இவரின்பிரிவேண்டி
னத்திற்கு சோட்டா
கட்டளையை சிரமேற்கொண்
கும் ஒருதரவாது தாரை
டாபிஷேகம் செய்யப்பட்டு
கட்சியாரின் கட்டடத்தில்
இருந்த காங்கிரஸ் காரியால
சென்று சமாப்தி அடைய
இடமாகிய அக்கிரஹார

தேர்தல்
தேர்தல்
போதும்
சேலத்
சொல்லப்
பார்கள்.
அப்பொழுது

என்னட
கொடுத்தால
இன்றுவென
விடுபவர்,
பிறந்தவர்
பதவிகளு

க்குச் சமர்ப்பிக்கிறேன். 'ஜஸ்டிஸ்' 'விடுதலை' இரண்டையும் ஒரே ஆசிரியர் நடத்துவதைக் கண்டித்து, யாரோ ஜஸ்டிஸ் தொண்டர், விடுதலைக்கு ஓராண்டு சம்பளமின்றி ஆசிரியராக இருக்க முன்வந்ததாகவும், அந்தத் தியாகியின் வரத்தைப் பெற்றுக் கொள்ள கட்சி மறந்து விட்டதெனவும், தாங்கள் கூறுவதிலிருந்து ஏற்படுகிறது. மந்திரியின் ஆக்கத்திலிருந்து, மற்றப் பிரமுகரின் ஏலக்காய்த் தோட்டம் வரையில், வெட்ட வெளிச்சமாக, பகிரங்கமாக, பெயருடன் தகவல்களைத் தீட்டிய

செய்யும்
மடையையும்
ளன்றுங்கள்.
ம் நல்லது.
தாவில் பாத்
இதை எழுத
குத்தெரி
ளும் நமஸ்காரம்,

பரதன்.

நல்வேலி ஜில்லா

கரைப்பட்டி வாலிப
ற்ற சங்க ஆண்டு விழா

திருநெ ல், 23 ர்சங்கத்தின் ஆண்டு விழா 4-36 புதன்கிழமை இரவு மணிக்கு திரு எம். எஸ். சிலாமணி அவர்களின் தலைமை கொண்டாடப்பட்டது. ஏராளமான பிரமுகர்களும், வாலிபர்களும் விஜயஞ் செய்தனர். காரியதரிசியின் அறிக்கைக்குப் பிறகு, தோழர்கள்: தி. முத்தையா, எம். ஏ. நேசமணி எஸ். எஸ். ஷண்முகதாஸ், எஸ். சி. சுப்பையா, எஸ். கே. சடைமுத்து, முறையே, சமூக சீர்திருத்தம், கல்வியின் பயன், மதமும் ஆலயப் பிரவேசமும், பத்திரிகைகளின் அவசியம் என்னும் விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். "விடுதலைப்" பத்திரிகையை ஆதரிக்க வேண்டுமெனத் தோழர் எஸ். கே. சடைமுத்து பேசிய பிறகு, தேநீர் விருந்து நடத்தப்பட்டு விழா முடிவடைந்தது.

மதக் குளிகை

ர்த்தியைக் கொடுப்பதில் நிகரற்றது.

து க்ஷீணித்ததின் காரணமாக ஆண் தன்மையை இழந்து,
ட மருந்துகளை வாங்கிப் புசித்துக் கடைசியில் உத்தமமான
சதா துன்ப சாகரத்தில் ஆழ்ந்து அயரப்படுகின்றனர்.
மதக் குளிகையை உபயோகிப்பார்களானால் இன்ப சாகரத்தி
இல்லற இன்பத்தை அனுபவிப்பார்களென்பது திண்ணம்.

20-குளிகை ரூ. 2.

154, அருணாசல நாய்க்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.

ஐயப்பசாமி வைத்தியசாலை, பழனி.

இத்தாலி

வடக்

தலைநக

டெ

பா

அட்டின்
எதியோப்ய தலை
அபாபாவுக்கு 120
துள்ள டெஸியோடா
இத்தாலியரின் முன்
நடைபடுத்த சக்க
ருப்புகள் தீவிரமாகப்
வருவதாகத் தெரிகிறது.

வடக்கு தெற்கே ஆ
போர்முனைகளிலும் கடும் போ
ந்து வருவதாக கூறப்படுகிறது

டெஸ்லிக்கு தெற்கு 20
தூரத்தில் அட்டின் அபாப
செல்லும் பாதைகளில் ஆ
னத்தைத் திருப்பி
நாசப்படுத்தும் வேலையில் ஈடுபட்டிரு
ப்பதாகவும் இத்தாலியர் அவர்களை
கலைக்கும் பொருட்டு விமானங்க
ளிலிருந்து வெடிகுண்டுகளை வீசியும்
இயந்திர பீரங்கிகளை உபயோகி
த்தும் வருவதாகவும் கூறப்படுகிறது.

டெஸ்லி பாதை வழியாக ஆயிரக்
கணக்கான எதியோப்பியத் துருப்பு
கள் ஒட்டகங்கள் மேலேறி வருவ
தாகவும், அவர்களிலிருந்து தேர்க

வு

பரம்

லிற்கு
வன்

சங்கம்

டன், ஏப், 23
முழுமையன்று
பாக்ஷேமந்திரி
பர்லென் பிரிட்
திட்டத்தை
சபையில் ப

தவிட இவ்
செலவிற்காக
அதிகமாக
ாகக் கூறினர்.
ம் அதிக செல
டன் வாங்கி
ன்று கூறினர்.
ரில் 3 பென்ன்
ில் 1 பவுன்
ரூம் உயர்த்
அவர் அதி
வினர் இதைப்
தனர்.

பெருகி வருவதாகவும் அவர் கூற
இருர்.

எதிர்பாருங்கள்! விரைவில்
ஏராளமான பொருட் செலவில், உ
சினிமா ராணி ஸ்ரீம
வித்வான் சீனிவா
ஸ்ரீமதிகள்: S. S. ராஜாமணி, K. R. ரெங்க
பாமா
அநேக
சம்பூர்ண கோவலன், லலி
மற்ற விவரங்களுக்கு:—ராயல் டா

ிந்து முஸ்லீம் கலவரம்

ள், 2 மசூதிகள் தாக்கப்பட்டன

ட்டில்களும், கற்களும் பறந்தன

ார் உள்பட 160 பேருக்குக்காயம்

பேர் மாண்டனர்

னுவம் அழைக்கப்பட்டது

பூனா, ஏப், 25

தினங்களாக பூனா ல் முன் வாத்தியம் ம்பந்தமாக ஹிந்துக் ஸ்லீம்களுக்கும் இரு கசசல் ஏற்றுபட்டிருக்கிறது

ன் மத்தியிலுள்ள கன் க் என்ற விடத்தி ம்படி. நெருக்கடியான ம்பட்டிருக்கிறது. அவ் னியா மாருதி கோவிலில் திருவிழாவையொன்னிட்டு லெக்டர் வாத்தியமவாசிக்க த்தார். இதைக்கண்டு அக க் கருகிலுள்ள மசூதியில் கள் கூடி கற்களையும், ா புட்டிகளையும், தடி வீசத்தொடங்கி விட்டனர். முகமதிய போலீஸ் இன்ஸ் ர் கலவரத்தை அடக்க கையில் காயமடைந்து கிடக் க் கிடக்கிறார். இதற்குள் இரு திலும் 5000 பேர் கூடிவிட்ட 00 போலீசார் இருதரப்பின நெருங்க லொட்டாமல் ன்றனர்.

மை முற்றி விடக்கூடும் தெரிய வந்தே போலீஸ் தருவிக்கப் பட்டது. அடிஷ ல்லாமாஜிஸ்திரேட், ஜில்லா ஜிஸ்டிரேட், கௌரவ மாஜிஸ் டுகள், போலீஸ் அதிகாரிகள் ம் ஸ்தலத்தண்டை வந்து னர்.

த்தனம் முற்றிப் போய ால் கடைகள் யாவும் மூடப் ா. சிற்சில இடங்களில் தனிப் பர்கள் தாக்கப்பட்டு வரு னர்; போலீஸ்காரர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

இரு பக்கத்திலும் கூட்டத்தினர் தடிகளுடன் தயாராயிருக்கின்றனர். கலெக்டர் ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்துவிட்டார். இரு சமூகத் தலைவர்களும் கூட்டத்தை சமாதானப்படுத்த முயன்றும், அவர்கள் பிடிவாதமாகவே இருந்து வருகின்றனர்.

இரு கூட்டங்களுக்கு மிடையில் 200 கெஜ தூரத்தை போலீசார் மிருந்த கஷ்டத்துடன் காலியாக்கி விட்டனர்.

மாலை 4-15-க்கு கூட்டத்தினர் கட்டுக்கடங்காமல் 2 மசூதிகளையும், 8 ஹிந்து ஆலயங்களையும் எரித்து நாசமாக்கி விட்டனர்.

சாமர்செட் காலாட்படை உடனே தருவிக்கப்பட்டது. நகரில் அவர்கள் சுற்றி வருகின்றனர். ராணுவமும், போலீஸ் படையும் நகரின் முக்கிய இடங்களில் பாரா வைக்கப் பட்டிருக்கின்றன. ஊரடங்குச் சட்டம் பிரயோகிக்கப்பட்டது.

சில குறிப்பிட்ட நேரங்களில் சோன்யா மாருதி கோவிலில் வாத்தியம் வாசிக்கலாம் என்ற உத்திர ரத்து செய்யப்பட்டது. கலவரம் நடைபெற்ற ஸ்தலத்தில் கூட்டம் கூடக் கூடாதென்று மற்றொரு உத்திரவு பிரயோகிக்கப் பட்டது.

50 போலீசார் உள்பட 160 பேருக்குக் காயமேற்பட்டதாகத் தெரியவருகிறது. மாலை 7 மணிக்கு ஆஸ்பத்திரியில் இருவர் இறந்து விட்டனர்.

காஸ்பா பேத் மசூதி தீயினால் முழுதும் எரிக்கப் பட்டது.

இரவில் எத்தகைய அசம்பாவிதமும் ஏற்படாமலபடிக்கு பலத்த பாரா வைக்கப் பட்டிருக்கிறது.

திய சட்டசபைகள் வாக்காளர் ஜாப்தா

உதகமண்டலம், ஏப், 23

திய அரசியலின் கீழ் ஏற்படும் சபைகளின் வாக்காளர் ஜாப்தா ச்ச விதிகளை நாட்டு பாஷை மொழிபெயர்ப்பது சிக்கிரம் வேண்டுமென்றும் அம்மொ பெயர்ப்பையும் அவ்விதிகளை லைக்கிலும் அடுத்த மாத தேதிக்கு முன்பு மூன்று பிரசுரிக்க வேண்டுமென்றும் ர் கலெக்டர்களுக்கு வற்புறுத் னர்.

காலியின் யுத்தச் செலவு

த்தாலி — அபிசீனியப் ரை நடத்த இதுவரையில் 000,000 பவுன் செலவு செய் யதாக ராய்ட்டர் செய்தி ு கூறுகிறது.

ரங்கு டெலிபோனுடன் இணைக்கப் பட்டது

திருநெல்வேலி, ஏப், 24

முதற்கொண்டு டிரங்கு போனுடன் திருநெல்வேலி ன்னூர்ப்பும் இணைக்கப் து பொதுஜனங்கள் உபயோ கிருக்கும் திறக்கப் பட்டது.

ஜஸ்டிஸ் இளைஞர் சங்கம்

அனுதாபக் கூட்டம்

பசுபதிகோவில், ஏப், 24

இச்சங்கத்தின் அவசரக் கூ ம் இன்று மாலை 3-30 மணிக் "நாகம்மாள் இல்லத்தில்" நடை பெற்றது.

இச்சங்கத் தலைவர் தோழர் பி. செல்லச்சேலு தலைமை வகித்தா இயக்கத்தில் தலைவர், தோழர் பிரமணியத்தின் மறைவு நம ஜீஇயக்கத்திற்கு ஓர் ஈடு செய்ய மு யாத கஷ்டமாகுமென்று கூறி

அவரைப் பின்பற்றி தோழர் டி. எஸ். அருணசலம் பி என். இருட்டினதான், சுந்தரமூர்த்தி, வி. சயம்பு ஆகியவர்கள் பேசினர்.

சங்க அமைச்சர் தோழர் அ பதி கீழ்கண்ட தீர்மானத் கொண்டுவந்தார். "நீதிக் கட்சி ஒப்பிலாத் தொண்டனும், காலம் 'திராவிடன்' ஆசிரி பிருந்து ஊழியம் புரிந்தவ தன்னுடைய வாழ்நாள் முழு யும் நமது கட்சி நலங்கோரி உழை தவரும், நமது உண்மைத் தோழ மான தோழர் டி. வி. சுப்பிரம யம் திடீரென மறைந்தமை கு துப் பெரிதும் வருந்துவதோடு வருந்தும் குடும்பத்தினர் நமது ஆழ்ந்த அனுதாபம்"

தலைவர் முடிவுரைக்குப் மாலை 5-மணிக்குக் கூட்டம் முற்றது.

இந்தியா சட்டசபை

கடைசி நாள் நடவடிக்கை

காப்புவரிச் சட்டத்திருத்த மசோதாவிவாதம்

கனம் ஜாபருல்லா பதில்

மசோதா நிறைவேறியது

புதுடில்லி, ஏப், 23

இந்தியா சட்டசபையின் சென்ற செவ்வாய்க்கிழமை கூட்டத்தில் பாஹூராம்பூர் பஞ்சத்தைப் பற்றியும், மைமன்சிங் ஜில்லாவில் அடைத்து வைக்கப்பட்ட பந்தோபஸ்து கைதி கவினகுமார் சக்கரவர்த்தியின் தற்கொலையைப் பற்றியும் இரண்டு அவசரப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டன. முன்னது ஒத்திவைக்கப்பட்டது. இரண்டாவது பிரேரணையை தலைவர் அனுமதிக்க மறுத்துவிட்டார்.

பிறகு இந்திய சுரங்க மசோதா, அரக்கு வரி மசோதா முதலியன நிறைவேறின.

கண்டோன்மெண்டுச் சட்டத் திருத்த மசோதாவை இக்கூட்டத்தில் மேற்கொண்டு விவாதிப்பதில்லையென்ற முடிவுக்கு சர்க்கார் வந்திருப்பதாகவும் எதிர்க்கட்சியினருடன் இது சம்பந்தமாக கலந்து ஆலோசித்ததாகவும் திரு டாட்டன்ஹாம் அறிவித்தார்.

கண்ணாடித் தொழிற்சாலைகளையும், [illegible] சாலைகளிலும் வேலை நேரத்தைக் குறைப்பதுபற்றி ஜினிவாவில் நடந்த சர்வதேச தொழிலாளர் மகாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாதென வைசிராய்க்கு சிபார்சு செய்வதாக தொழில் மந்திரி சர். பிராங் நாய்ஸ் பிரேரணை செய்த இரு தீர்மானங்களும் நிறைவேறின.

இந்தியா சட்டசபையின் நேற்றையக் கூட்டத்தில், துண்டுத் துணிகள் இறக்குமதி சம்பந்தமாக காப்புத் தீர்வைச் சட்டத் திருத்த மசோதாவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வர்த்தக மந்திரி சர். ஜாபருல்லா பிரேரணை செய்தார். அது சம்பந்தமாக தனிக் கமிட்டி செய்துள்ள பல மாறுதல்களையும் அவர் விளக்கிக் கூறினர்.

டாக்டர் ஜியாவுத்தீன், ஒன்றரை மணி நேரம் இம்மசோதாவைப் பற்றிப் பேசினர். அவர் கூறியதாவது:—நிஷ்பட்சபாதமான விசாரணையின்றி எத் தொழிலுக்கும் பாதுகாப்பு அளிக்கக் கூடாது. சாமான் வாங்குவோர், வரி செலுத்துவோர் ஆகிய இருவர் நன்மைகளைக் கவனியாமல், முதலாளிகள் ஆலைச் சொந்தக்காரர்களின் கோரிக்கைக்கு இணங்கிப் பாதுகாப்பு அளிப்பது நியாயமல்ல. சர்க்கரை, இரும்பு, எஃகு ஆகிய தொழில்களில் மிதமிஞ்சிய பாதுகாப்பு அளிக்கப்பட்டுவருகிறது. சர்க்கரை சம்பந்தப்பட்ட மட்டில் பாதுகாப்புத் தீர்வையால், விவசாயிகள் லாபமடையவில்லை. 1938ல் பாதுகாப்பு நிறுத்தப்பட்டதும் அநேகம் சர்க்கரைத் தொழிற்சாலைகள் விழுந்துவிடும் என்று நான் அஞ்சுகிறேன். இரும்பு எஃகுத் தொழில் சம்பந்தப்பட்ட மட்டில் பங்குதாரர்கள் 100 க்கு 6 விகிதத்துக்கு மேல் லாபமடையாதபடி சர்க்கார் கவனித்துக்கொள்ள வேண்டும். மிதமிஞ்சிய பாதுகாப்பும், தாராதரத்தைக் கவனியாத பாதுகாப்பும் விதிப்பதனால் கைத்தொழிற் பண்டங்களை விட விவசாயப் பொருள்களை அதிகமாக விலை குறைந்து விடுகின்றன. பின்னல் உருப்படி விஷயத்தில் பாதுகாப்புத் தீர்வை விதிப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆயினும், அவ்விஷயத்தில் சர்க்கார் அடிக்கடி மனம் மாறிக்கொண்டே இருப்பதை நான் கண்டிக்கிறேன்.

புரோபஸர் ரங்கா:- கமிட்டியால் திருத்தப்பட்ட இந்த மசோதாவையும் நான் எதிர்க்கிறேன். இது இந்தியப் பொது ஜனங்களின் நன்மையை நாடியதல்ல. காப்புவரி போர்டார் பிரத்தியேகமாய் விசாரணை நடத்திய பின்னரே இந்தியத் தொழில்களுக்கு அளிக்கவேண்டிய பாதுகாப்பு விகிதத்தை நிர்ணயிக்க வேண்டும். அதற்கு நேர்மாறாக, யாரோ சிலர் சொன்ன விகிதங்களுக்கு சர்க்கார் சம்மதித்து விட்டார்கள்.

கனம் ஜாபருல்லா பதில்

வர்த்தக மந்திரி சர். ஜாபருல்லா பதிலளிக்கையில் கூறியதாவது:— இந்த மசோதா, புதிய பாதுகாப்புக் கொள்கை எதையும் அனுசரிக்க கொண்டிருக்கவில்லை. ஆகையால், நான் பிரத்தியேக விசாரணை நடத்தவில்லை. காப்புத் தீர்வை போர்டார் யோசனை கூறியதும், இச்சபை அங்கீகரித்ததுமான பழைய பாதுகாப்புக் கொள்கையைத் தொடர்ந்து அனுஷ்டித்துவரவே இம்மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. பிரிட்டனை தவிர்த்த இதர நாடுகள், முக்கியமாக [illegible] ஜப்பான், [illegible] ஜவுளி [illegible] களை இங்கு அனுப்பிவர ஆரம்பித்துவிட்டது. அதனால் இந்தப் பாதுகாப்புப் போதாதென்று ஏற்கனவே தெரிய வந்திருக்கிறது. ஆகையால்தான் திருத்த மசோதாவைக் கொண்டுவர [illegible]. பருத்தித் துண்டு 1932-ம் ஆண்டு இறக்குமதி மாத்திரம் [illegible] வருஷம் [illegible] லட்சம் கெஜம் 2 கோடி ஆக. 1934-35-ம் வருஷம் [illegible] டியே மூப்பது லட்சம் கஜங்கள் உயர்ந்திருக்கிறது. செயற்கைப் பட்டுத் துண்டுத் துணி வகைகளுக்கு மதிப்போ இரண்டு வருஷமிருக்கிறது. முன் மிக அற்பமாயிருந்தது 1934-35-ம் வருஷம் [illegible] 11 மாத காலத்தில் ஒரு கோடி உயர் 60 லட்சம் கஜங்களாக ஏறிவிட்டது. [illegible] முதலிய பின்னல் சென்ற படிகள் இறக்குமதியே 32 மடங்கு மூன்று வருஷ காலத்தில் [illegible]. பாதுகாப்பு அதிகரித்து விட்டது. [illegible] காப்புச் சுவற்றில் ஏற்பட்ட இந்த உடைவை அடைக்கவே [illegible] மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒட்டாவா ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட சலுகைக்கும், இதற்கும் இதர சம்பந்தமில்லை. பிரிட்டனிலிருந்து [illegible] சாமான்களுக்கு வரியைவிட [illegible] விதிக்கும் [illegible] அதிகத் தீர்வை விதிப்பால் அவற்றின் [illegible] என்னவென்றால், [illegible] மிகவும் இறக்குமதிகளே இந்திய தொழில்களை அதிகரித்து, இந்நாட்டுப் [illegible] களின் நிலைமையை [illegible] ஆக்கியிருக்கின்றன.

மசோதாவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற பிரேரணை இதுடன் நிறைவேறியது. பிறகு, பிரிவுவாரி விவாதம் ஆரம்பமாயிற்று.

இச்சமயம் திரு. சத்தியமூர்த்தி எழுப்பிய ஓர் ஒழுங்கு முறைபற்றி ஆட்சேபம் பொருத்தமல்லவென்று சொல்லி தலைவர் நிராகரித்து விட்டார்.

துண்டுத் துணிகள் இறக்குமதித் தீர்வை சம்பந்தமான (சி) உபபிரிவை நீக்கவேண்டுமென்று திரு. [illegible] கொண்டுவந்த திருத்தம் [illegible] ஓட்டெடுக்கப்படாமலே தோல்வியுற்றது.

[illegible] திருத்தம்

திரு. கோபா[illegible] [illegible]. கெளபா [illegible]

பிறகு திரு. கே. [illegible] கொண்டுவந்தார். ஒரு திருத்தம் [illegible] அதன் சாரமாவது:— [illegible] இறக்குமதி துண்டுத் துணிகள் [illegible] தற்போது சம்பந்தப்பட்டமட்டில் [illegible] க்குச் சரக்கு பிரிட்டிஷ் துணிகளு[illegible] மதிப்பில் 100-க்கு 25 விகிதமும், பிற நாட்டுத் துணிகளுக்கு சரக்கு மதிப்பில் 100-க்கு 35 விகிதமும் விதிக்கப்படுகின்றன. இந்த விகிதங்கள் இன்னும் இருந்து வரவேண்டும். பருத்தித் துண்டுத் துணிகள் சம்பந்தப்பட்ட மட்டில் நீள நிர்ணயத்தில் எவ்வித மாறுதலும் வேண்டியதில்லை. ஆனால், செயற்கைப் பட்டுத் துண்டுத் துணிகள் சம்பந்தப்பட்ட மட்டில் நாலு கெஜம் என்று நீளம் நிர்ணயமாக்கப்பட்டிருப்பதை இனி 2 1/2 கெஜம் என்று நிர்ணயித்துவிட வேண்டும்.

சர். மோடி சமாதானம்

சர்க்கார் என்னிடம் அந்தரங்க யோசனை கேட்டதுண்டு. நானும் சர்க்காரும் சேர்ந்து எவ்வித சூழ்ச்சியும் செய்யவில்லை. நான் ஏதாவது அற்ப வெற்றி அடைந்திருப்பேனேயானால், அதற்குக் காரணம் என் கட்சியின் நியாயமேயாகும்.

சில அங்கத்தினர்:- இல்லை, இல்லை.

சர். மோடி:— ஒன்றுமே யில்லாததற்குக் கிடைத்தவரையில் ஆதாயம் என்பது என் நம்பிக்கை. நான் அநுபவ சாத்தியமான முறைகளையே அனுஷ்டிப்பவன். ஆகையால், கிடைத்த பிச்சையைப் பெற்றுக் கொண்டு மேலும் கொடுக்க வேண்டுமென்று பின்னால் வற்புறுத்தப் போகிறேன்.

வர்த்தக மந்திரி சர். ஜாபருல்லா, திரு. கெளபா திருத்த "பிரேரணையை ஏற்றுக்கொண்டார். செயற்கைப் பட்டுத் துண்டுகளின் நீளத்தைக் குறைத்தால் கஷ்டம் ஏற்படும் என்றும், மேற்கொண்ட நடவடிக்கை எடுக்கும் அவசியமிராதென்றும் அவர் கூறினர்.

இதன்மேல், திரு. கெளபாவின் திருத்தம் நிறைவேறியது.

புதுடில்லி, ஏப், 24

இந்தியா சட்ட சபையின் கடைசி நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. காப்புவரிச் சட்டத் திருத்த மசோதாவைப் பற்றி விவாதம் தொடர்ந்து நடைபெற்றது.

ஒட்டாவா ஒப்பந்தத்தோடு இம் [illegible] சம்பந்தப்பட்ட ஏகாதிபத்திய [illegible] மறையவேண்டுமென [illegible]ந்தசயனம் ஐயங்கார் [illegible] செய்தார்.

சர். முகமத் ஜாபருல்லா ஒட்டாவா ஒப்பந்தத்தை ரத்து செய்கையில் மொத்தமாக இவ்விஷயம் யோசிக்கப்படுமெனக் கூறினர்.

திருத்தம் வாபஸ் வாங்கிக்கொள்ளப்பட்டது.

பின்னர் திரு. கெளபாவின் திருத்தம் விவாதத்துக்கு வந்தது.

திரு. கெளபாவின் திருத்தமாவது:— "பருத்தி கைதையல் துணிகள் (ஸ்டாகிங்ஸ் போன்றவை) டஜன் 4 பவுண்டு நிறைக்கு மேற்படாவிட்டால் சொத்து மதிப்பின்மேல் 100-க்கு 25 விகிதம்; அல்லது பவுண்டுக்கு 12 அணா. அதில் இரண்டில் எது அதிகமோ அந்தத் தொகை; டஜனுக்கு 4 பவுண்டு நிறைக்கு மேற்பட்டால் சொத்து மதிப்பின்மேல் 100-க்கு 25 விகிதம் அல்லது பவுண்டுக்கு 10 அணா ஆகிய இரண்டில் எது அதிகமோ அந்தத் தொகை"

பல அங்கத்தினர்கள் பேசியபின் திரு. கெளபாவின் திருத்தம் நிறைவேறியது.

வர்த்தக மந்திரி பதிலளிக்கயின் காப்புவரிச்சட்டத்திருத்த மசோதா கடைசிமுறை படிக்கப்பட்டு நிறைவேறியது.

விதவைகள் அநாதைக் குழந்தைகள் இன்ஷியூரன்ஸ் சம்பந்தமாக நடந்துள்ள ஜினிவா ஒப்பந்தத்தை அங்கீகரிக்கவில்லையென்று தொழில் மந்திரி சர். பிராங் நாய்ஸ்கொண்டு வந்த தீர்மானத்தையும், பொதுக் கணக்குக் கமிட்டி யாதாஸ்தையும் சிம்லாக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும்.

இத்துடன் டில்லி கூட்டம் முடிவடைந்தது. அடுத்த கூட்டம் ஆகஸ்ட் 31-ம் தேதி சிம்லாவில் ஆரம்பமாகும். சிம்லாக் கூட்டமும் அக்டோபர் 15ம் தேதிவரை நடக்குமெனத் தெரிகிறது.

சென்னை சட்டசபை

ஆகஸ்டில் அடுத்த கூட்டம்

உதகமண்டலம், ஏப், 23

சென்னை சட்டசபையின் அடுத்த கூட்டத்தின் தேதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லையாயினும், பொப்பிலி ராஜா சட்டசபை கூட்டத்தின் கலந்து கொள்ளுமாறு தேதிகளை நிச்சயிப்பார்களென்று திட்டமாகத் தெரிகிறது.

சென்னை பப்ளிக் அக்கவுண்ட் கமிட்டியின் கூட்டம் ஜூன் 25-ம் தேதியன்று தற்காலிகமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

க்ஷவரத் தொழிலாளர் தூது கோஷ்டி

கமிஷனர் உறுதி மொழி

சேலம், ஏப், 24

க்ஷவரத் தொழிலாளர் சங்கத்தாரால் முனிசிபல் சபைக்கு அனுப்பப்பட்டிருந்த லைசென்ஸ் ரத்து தீர்மான விஷயமாய் முனிசிபல் கமிஷனரைக் கண்டு பேச மேற்படி சங்கத் தலைவர், காரியதரிசி சில அங்கத்தினர்கள் அடங்கிய தூது கோஷ்டி இன்று காலை முனிசிபல் கட்டிடத்திற்கு சென்றனர்.

இன்று நடந்த முனிசிபல் கூட்டத்திற்குப் பிறகு கமிஷனர் ஆபிஸில் மேற்படி தூது கோஷ்டி கமிஷனரைக் கண்டு தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லி தங்கள் சங்கத்தாரால் முனிசிபல் சபைக்கு அனுப்பியுள்ள தீர்மானத்தின் மீது எவ்விதமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் போகிறார் என்பதை அறிய விரும்புவதாகத் தெரிவித்துக் கொண்டார்கள்.

அதற்கு பதிலாக கமிஷனர் பிரஸ்தாப லைசென்ஸ் கட்டண விதிப்புத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டு மூன்று மாதங்கள் ஆகவில்லையாதலால் அதை ரத்து செய்யும் விஷயமாய் அதற்கு முன் எதுவும் செய்ய சாத்தியமில்லை என்றும், தன்னைப் பொறுத்தவரை அவர்கள் விஷயத்தில் அனுதாபம் இருப்பதாகவும், இரண்டு மாதங்களுக்குப்பின் தானே ஆபீஸ் நோட்டு மூலமாய் மேற்படி தீர்மானத்தை சபையின் ஆலோசனைக்கு வைப்பதாகவும், அதுவரை லைசென்ஸ் கட்டணம் வசூலிப்பதை நிறுத்திவைக்க ஏற்பாடு செய்வதாகவும் வாக்குறுதி கொடுத்தார்.

கமிஷனரின் உபசாரவார்த்தைகளுக்காக தூது கோஷ்டியினர் தங்கள் வந்தனத்தை தெரிவித்துக் கொண்டனர். —காரியதரிசி.

மரணம்

மதுரை மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் தேவஸ்தானம் டிரஸ்டியும் ஜஸ்டிஸ் கட்சி பிரபலஸ்தருமான திரு. ஆர். என். நாயுடுவின் சகோதரரான டாக்டர் ஆர். என். நாயுடுவின் மனைவியார் ஏப்ரல் 12-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலமானர்.

பாலப்பட்டி தேவேந்திர வாலிப சங்கம்

மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டமொன்று 19-4-36 ஞாயிற்றுக்கிழமை திரு. ஆ. பட்டன் மூப்பனர் தலைமையில் நடைபெற்றது. தலைவர் கல்வி, சுகாதாரம், நாகரிகம் என்னும் விஷயமாகப் பேசியபின், மாகாண சங்கத் தலைவர் வி. எம். பழனிவேல் அவர்கள், பள்ளிக்கூடம் அமைக்க வேண்டியதைப் பற்றியும், குடி தண்ணீர் வசதிக்காக ஜில்லா போர்டாரும், கலெக்டரும் உதவி செய்ய வேண்டுமென்றும் பேசினர். காரியதரிசியின் வந்தனோபசாரத்திற்குப் பிறகு கூட்டம் கலைந்தது. —காரியதரிசி.

மே தினக் கொண்டாட்டம்

சென்னை, ஏப், 25

27-4-36 திங்கட்கிழமை மாலை 6-மணிக்கு, பண்ணைக்கார ஆண்டியப்பன் தெரு, ஜார்ஜ் டவுனில் மே தினம் கொண்டாடுவதைக் குறித்து சுயமரியாதை சமதர்ம சங்கங்களின் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெறும்.

காந்தியார்மீது புகார்

பட்டாபி சீதாராமய்யா பிரசங்கம்

காந்தியார் கடிதம் எழுதினரா?

"லக்னோவில் கயா நாடகம் நடந்திருக்கும்"

மசூலிப்பட்டணம், ஏப், 22

காங்கிரஸ் காரியக் கமிட்டியின் பழைய மெம்பரான டாக்டர் பட்டாபி சீதாராமய்யா, நேற்று மாலை மசூலிப்பட்டினம், ஸ்ரீ ராமலிங்கேஸ்வரா கோவிலெதிரில் நடந்த பொதுக் கூட்டத்தில், காங்கிரஸ் தலைவர் ஸ்தானத்திற்கு போட்டியிட முன் வந்தவர்களுக்கெல்லாம், காந்தியார் பண்டித ஜவஹர்லாலுக்காக அவர்கள் விட்டுக் கொடுத்து விலகிவிட வேண்டுமென, கடிதம் அனுப்பியதாகப் புகார் செய்தார்.

மேலும், டாக்டர் பட்டாபி பேசுகையில், "சென்ற மார்ச்சு மாதம் டெல்லியில் கூடியது பழைய காங்கிரஸ், தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் (பண்டித ஜவஹரின்) விருப்பத்திற்கு எதிரிடையான தீர்மானங்களை நிறைவேற்றியதாகவும், முன்பு, தமது சட்டசபைப் பிரவேசக் கொள்கைக்கு எதிராகக் காங்கிரஸ் இருந்ததால், கயா காங்கிரசில் தலைமை வகித்த திரு. சி. ஆர். தாஸ் தமது பதவியை ராஜீநாமா செய்ததுபோலவே, லக்ஷ்மணபுரியிலும் நடந்திருக்குமென்றும்; ஆனால், அந்நிலைமையைத் தடுக்க, பதவி மோகங் கொண்டவர்கள், பதவிப் பிரசினையை ஒத்தி வைத்துக் கொண்டனரெனவும், இந்த சந்தர்ப்பத்தில் தலைவர் தமது பதவியை ராஜீநாமா செய்வது அவர்களுக்கு இஷ்டமில்லாததால்தான் பிரசினையை ஒத்தி வைத்துக் கொண்டனரெனவும்" கூறினர்.

இந்தியாவின் கல்வி கமிஷனர்

திரு. ஏ. எச். மெகன்ஸிக்கு பதவி

லக்ஷ்மணபுரி, ஏப், 23

ஐக்கிய மண்டல சர்க்கார் கல்வி டைரக்டராக இருந்தவரும், உஸ்மானிய சர்வகலாசாலையின் உப அத்தியக்ஷகருமான திரு. ஏ. எச். மெகன்ஸி சர். ஜார்ஜ் ஆண்டர்ஸனுக்குப் பின் இந்தியா சர்க்காரின் கல்விக் கமிஷனராக வேலை பார்க்கத் தெரிந்தெடுத்துள்ளாரென்று தெரிகிறது.

படுக்கை யறையில் சிறுத்தை

சின்சூரா (தபால்)

பாசபாராவைச் (பாலகார்) சேர்ந்த திரு. எம். ரே. என்பவர் ஒரு நாள் காலை தான் தூங்கிக் கொண்டிருந்த அறையில் சிறுத்தை ஒன்று படுத்திருப்பதைக் கண்டு திகைத்துப் போனர். அதிர்ஷ்டத்தை விடாமல் அவர் எழுந்து கதவின் பக்கமாக மெதுவாகச் சென்று, வெளிப்புறம் தாளிட்டு விட்டு தப்பித்துக் கொண்டார். சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் ஒரு துப்பாக்கியுடன் வந்து கதவைத் திறந்து சிறுத்தையைக் கொன்று விட்டார். ஆனால், அது இறப்பதற்குள்ளாக சிறுத்தை அவரை கன்னத்தில் தனது கூரிய நகங்களால் கிழித்துவிட்டது. கல்கத்தாவில் ஓர் ஆஸ்பத்திரியில் அவர் சேர்க்கப் பட்டிருக்கிறார். அவர் நிலைமை கவலைக்கிடமானதாயிருப்பதாகத் தெரிய வருகிறது.

பெண்ணை பலவந்தப் படுத்தியதாக

கான்ஸ்டேபிளுக்கு 4 மாத கடின காவல்

லாகூர், (தபால்)

ஒரு பெண்ணின் கற்பை அழிக்க முயன்றதற்காக, காஜன்சிங் என்ற போலீஸ் கான்ஸ்டேபிளுக்கு, 4 மாத கடின காவல் தண்டனை மாஜிஸ்திரேட் கான் சாஹிப் மியான் ஹமீம் உத்தின் விதித்துள்ளார்.

மேகங்களின் எடை

613, 800,000 பவுன்

பெர்லின் (தபால்)

மேக மண்டலத்தில் காணப்படும் எல்லா மேகங்களையும் ஒன்று திரட்டி எடை போட்டுப் பார்த்தால் அவைகள் 613,800,000 பவுன் எடை இருக்கக் கூடுமென ஜெர்மனி பரோமீட்டர் சாஸ்திர ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகின்றனர்.

சைவர் மரபில் புரோகிதம் ஒழிந்தது

திருச்சி, ஏப், 24

திருச்சி நாடகாசிரியர் ம. நாகரெத்தினம் பிள்ளையின் வாழ்க்கைத் துணைவியும், சமதர்மப் பாவலர் டி. என். என். கவிக்குஞ்சரத்தின் அன்னையாருமாகிய இராமு அம்மாள் 8-4-36-ல் காலமானர். 16-ம் நாள் இதுவரை செய்து வந்த கருமக்கிரியை யாகிய பார்ப்பனப் புரட்டை அறவே ஒழிக்கப்பட்டு எளியவர்களுக்கு அன்னமளிக்கப்பட்டது. பார்ப்பனியத்தின் புரட்டையும், புரோகித ஒழிப்பின் மேன்மையும் உணரும் பொருட்டு, அன்று வந்திருந்த சகலருக்கும், பார்ப்பனர் சூழ்ச்சி விளக்கம் என்ற புத்தகம் இலவசமாய்க் கொடுக்கப்பட்டது. சைவ மரபினர் எதிர்ப்புகள் பல இருந்தும், அதை லட்சியம் செய்யாது சுயமரியாதை பின்படி நடந்தது குறிப்பிடத்தக்கதாகும். இதன் ஞாபகார்த்தமாக 'பார்ப்பனர் சூழ்ச்சி விளக்கம்' என்ற புத்தகம் "விடுதலை", "குடியரசு" "நகரதூதன்" இம்மூன்று பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு இனம் அளிக்கத் தீர்மானித்திருக்கின்றோம் ஆதலால், புத்தகம் வேண்டியோர் கீழ்க்கண்ட விலாசத்தாரிடம் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—சமதர்மப் பாவலர் டி. என். என். கவிக்குஞ்சரம், [illegible] சிந்தாமணி, காவேரிப்பாலம், தெப்பகுளம் போஸ்ட், திருச்சி.

சென்னை சர்ஜன் ஜெனரல் பதவி

உதகமண்டலம், ஏப், 23

சென்னை சர்க்கார் சர்ஜன் ஜெனரலான மேஜர் ஜெனரல் சர். எப். கானர் ஏப்ரல் 24-ம் தேதி பிரிகிருர்கோ; அல்லது, அதற்குப் பிறகு அவருக்குப் பதில் உத்தியோகஸ்தர் வரும் தினத்திலிருந்தோ 6 மாதம் 20 நாள் ரஜாவில் செல்வதால், அவருக்குப் பதிலாக வைத்திய கல்லூரி பிரின்ஸ்பால் கர்னல் ஹூகோ வேலை பார்ப்பாரெனத் தெரிகிறது.

அகில இந்திய டைப்-ரைட்டிங் போட்டி

கல்கத்தா, ஏப், 23

கல்கத்தா, காளிகாட் 139-2 ரஸ்ஸா ரோட்டிலுள்ள அகில இந்திய ஸ்டெனோகிராபர் இன்ஸ்டிட்யூட் கௌரவ காரியதரிசி பின் வருமாறு எழுதுகிருர்:—

வருகிற ஜூன் மாதம் இந்தியாவிலுள்ள பல முக்கிய நகரங்களிலும், பட்டணங்களிலும் இவ்வருஷத்திய டைப்-ரைட்டிங் போட்டி நடைபெறும். வெற்றி பெறுபவர்களுக்கு வெகுமதிகளுடன் சர்டிபிகேட்டுகளும் கொடுக்கப்படும்.

சினிமா பகுதி

சென்னையில் சினிமா காட்சிகள்

ராக்ஸி : "கண்ணுக்குப் புலப்படாத இரணம்"
வெல்: "1936-ம் வருஷ பிராட்காஸ்ட்"
எல்பின்ஸ்டன் : "கர்லி டாப்"
போகன் : "அன்னு கரினினு"
கெயிட்டி : "மார்க்கண்டேயர்"
வெஸ்ட் : "அதிரூப அமராவதி"
ஸ்டார் : "அனேகா பிரேம்"
கிரௌன் : "மினுநூரா"
பிராட்வே : "கருட கர்வ பங்கம்"
கினிமா : "தாரா-சசாங்கம்"
சரஸ்வதி : "திரௌபதி வஸ்திராபஹரணம்"
பிரைட்டன் : "சிறுத்தொண்ட நாயனார்"
செலக்ட் : "மறுக்கப்பட்ட மணப் பெண்"
ரீகல் : "யஹூதி-கி-லட்கி"

பாரகன் டாக்கீஸில் இன்றையதினமிருந்து காண்பிக்கப்படப் போகும் 'அன்னு கரினினு' என்ற படத்திலிருந்து ஒரு காட்சி.

ஸ்டார்

சங்கீதப் பிரசித்தி பெற்ற மிஸ் கஜ்ஜன் நடிக்கும் 'அனேகா பிரேம்' என்ற உருது பேசும் படம் இங்கு நேற்று முதல் காண்பிக்கப்பட்டு வருகிறது.

பணத்திற்காசைப் பட்டு, ஒரு அழகிய சிறு பெண்ணை, அப்பெண்ணின் சொந்தக்காரர், ஒரு கிழவனுக்கு மணம் செய்து கொடுப்பதும், பெண் தன் புருஷன் வீட்டிலிருந்து தப்பி ஓடி, சங்கீதப் பயிற்சி பெற்று அதில் சிறந்து விளங்குவதும், பின்பு சந்தோஷகரமாக அப்பெண்ணின் வாழ்க்கை முடிவுறுவதும் கதைச் சுருக்கம். மிஸ் கஜ்ஜன் இப்படத்தில் அச் சிறு அழகிய பெண்ணாக நடிக்கிறார். ஜகதீஸ், யூசப், பேஷன்ஸ் கூப்பர் முதலியோர் இதர நடிகர்களாவர்.

கினிமா

மதுரை முருகன் டாக்கீஸாரின் 'தாரா-சசாங்கம்' என்ற தமிழ் பேசும் படம் இங்கு நாளைய தினமிருந்து காண்பிக்கப்படும்.

ஸ்ரீமதிகள் டி. வி. இராஜசுந்தரி (தாரை), டி. பி. லெக்ஷ்மிகாந்தம் (அநுசூயா), ராமதிலகம் (மேனகா), எம். ஏ. சச்சிதானந்தம் (பிரஹஸ்பதி), ஜி.என். விஜயராவ் (சந்திரன்), சீதாராமன் (நாரதர்), பி. ஆர். துரைசாமி (அத்திரி), டி. பாஸ்கரன் (இந்திரன்), மாஸ்டர் கோவிந்தன் (பாலசந்திரன்) முதலிய முக்கிய நடிகர்களும், மற்றும் பலரும் இப்படத்தில் நடிக்கின்றனர்.



'கண்ணுக்குப் புலப்படாத இரணம்' என்ற படத்திலிருந்து ஒரு காட்சி. இப்படம் இன்று முதல் ராக்ஸியில் காண்பிக்கப்படும்.

ஈஸ்ட் இந்தியா பிலிம்ஸாரின் 'துருவா' என்ற தெலுங்கு பேசும் படத்திலிருந்து ஒரு காட்சி.

மினர்வா டாக்கீஸ்

சென்னை, ஏப், 25

சென்னை ஜார்ஜ் டவுன் (லோன் ஸ்கொயருக்கருகில இருக்கும்) டேவிட்சன் தெருவில் சமீபத்தில திறக்கப்பட இருக்கும் மினர்வா டாக்கீஸில், 'சதி அநுசூயா' 'துருவ விஜயம்' என்ற இரு தெலுங்கு பேசும் படங்களும், பல முக்கிய க்ஷேத்திரங்களின் காட்சிகளும் காண்பிக்க ஏற்பாடாகி இருக்கிறது 'சதி அநுசூயா' என்ற படத்தில் நடிப்பவர்களெல்லாம் சிறுவர், சிறுமிகளே என்பது குறிப்பிடத்தக்கது.

செலக்ட்

சபிதா தேவி நடிக்கும், சாகர் பிலிம் கம்பெனியாரின் 'மறுக்கப்பட்ட மணப் பெண்' என்ற ஹிந்தி பேசும் படம் இங்கு நேற்று முதல் காண்பிக்கப் பட்டு வருகிறது.

உதய நகர் அரசன் தனது இளைய சகோதரனை துன்பப் படுத்த அவன் அரசனின் இரட்டைக் குழந்தைகளில் ஒருவனாகிய இந்திரஜித்தை எடுத்துக் கொண்டு காட்டிற்கு ஓடிவருகின்றான். சில வருஷங்கள் சென்றதும், உதய நகர இளவரசனை சத்ரஜித்துக்கும், ராஜநகரின் அழகிய இளவரசியான சந்திராவுக்கும் திருமணம் நடைபெற முயற்சிகள் நடை பெறுகின்றன. சத்ரஜித்தின் கெட்ட நடவடிக்கைகளை இளவரசி சந்திரா அறிந்து அவனை மணக்க மறுதலிக்கிறாள். கால வித்தியாசத்தால் அவள் இந்திரஜித்தை சந்தித்து அவனைக் காதலித்து, மணம் செய்துகொள்ள சம்மதிக்கிறாள். கலியாண தினத்தில் சத்ரஜித் தனது கூத்தியார் வீட்டில் குடித்து விட்டு இருக்க, உதய நகர திவான் ஒரு சூழ்ச்சியால் இந்திரஜித்தை, சத்ரஜித்தைப் போல பாவிக்கச் செய்து வருகிறார். திருமணம் நடந்தேறியதும் உண்மை வெளியாகி விடுகிறது.

ரீகல்

சைகால், நவாப், ரத்னபாய் முதலிய நடிகர்கள் நடிக்கும் 'யஹூதி-கி-லட்கி' என்ற பேசும் படம் இங்கு நேற்று முதல் காண்பிக்கப்பட்டு வருகிறது.

பிரைட்டன்

பரமேஸ்வர டாக்கீஸாரின் 'பக்த சிறுத்தொண்டர்' என்ற தமிழ்ப் பேசும் படம் இங்கு இன்று முதல் காண்பிக்கப்படும்.

கெய்டி

ஸ்ரீமதிகள் கண்ணுமணி, கண்ணாம்பாய முதலிய நடிகர்கள் நடிக்கும் வேல் பிக்சர்ஸின் 'மார்க்கண்டேயர்' என்ற தமிழ் பேசும் படம் இங்கு நாளைய தினமிருந்து ஒரு வாரத்திற்கு காண்பிக்கப்படும்.

ஈஸ்ட் இந்திய[illegible] 'துருவா' என்[illegible] பேசும் படத்தி[illegible] ஜீ. என். [illegible]

கலெக்டர்கள் மகாநாடு

மே, 25-ல் கூடும்

உதகமண்டலம், ஏப், 23

கலெக்டர்கள் மகாநாடு மே மாதம் 25-ந் தேதி கூடும். அதில் புதிய வைஸிராய் லார்டு லின்லித்கோவின் விருப்பப்படி ஜில்லா ஆபீசர்கள் கிராம வாசிகளுடன் நெருங்கிய சம்பந்தம் வைத்துக் கொள்ள வசதிகள் ஏற்படுத்தும் விஷயத்தைப் பற்றியும் ஆலோசிக்கப்படும். இவர்களுக்கு ஆபீஸ் வேலையில்லாமல செய்வது விரும்பத்தகுந்ததென சர்க்கார் அபிப்பிராயம் படுகின்றனர். ஆனால், அதற்கு அதிக செலவும், அதிக உத்தியோகஸ்தர்களும் பிடிக்கும். இது எவ்வளவு தூரம் சாத்தியமாகக் கூடும் என்பது பற்றி இம்மகாநாட்டில் ஆலோசிக்கப்படும்.

'சதி-[illegible]க்கு [illegible]அநுசூயா' என்ற தெலு[illegible] [illegible]பேசும் படத்தில் நடிக்கும் [illegible]ள். கிருஷ்ணவேணி.

'சதி அநுசூயா' என்ற தெ[illegible]க்கு பேசும் படத்திலிருந்து ஒரு காட்சி.

வெஸ்ட் எண்ட்

அதிரூப அமராவதி

டி. என் சிவக்கொழுந்து ஸ்ரீமதி டி. என் வேலம்மாள், தங்கவேலு பிள்ளை முதலிய நடிகர்கள் நடிக்கும் 'அதிரூப அமராவதி' என்ற தமிழ் பேசும் படம் இங்கு இன்றுமுதல் காண்பிக்கப்படும்- கதைச் சுருக்கம் பின் வருமாறு:—

விசித்ர ராஜனென்னும் அரசன் தான் வயோதிக நிலைமையடைந்ததால் தன் மகன் அதிரூபனுக்கு இராஜ்யத்தை முடிசூட்ட விரும்புகிறான். ஆனால் அதிரூபனோ, தான் அரசாளுவதற்கு முன்பு, உலக யாத்திரை செய்து தன் படிப்பைப் பூர்த்தி பண்ணிக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்து, தன் தந்தையின் அநுமதியின் பேரில் மாடவ்யனென்னும் பெயருடைய தனது நண்பனோடு பிரயாணத்திற்குப் புறப்படுகிறான்.

வழியில் களைப்பினால் அதிரூபன் ஒரு அழகிய தோட்டத்தில் சயனித்திருக்கிறான். அச்சமயம் அங்கு வந்த இராஜ குமாரத்தியாகிய அமராவதி அவனைக்கண்டு, அவனிடம் காதல் கொள்கிறாள். அக்காதலுக்கு அறிகுறியாக உறங்கும் அதிரூபனது மோதிரத்தை எடுத்துக் கொண்டு தன் மோதிரத்தை அவன் விரலில் இட்டுப் போகிறாள். நித்திரை விட்டெழுந்ததும், அதிரூபன் நடந்த விஷயமொன்றும் அறியாமல், தன் நண்பனுடன் தன் வழியே செல்கிறான்.

செல்லும் மார்க்கத்தில் அவன் ஒரு தோட்டத்தில் உல்லாசமாய்ப் பாடிக்கொண்டிருக்கும் ரத்னவல்லி என்னும் மங்கையைச் சந்திக்கிறான். ஒருவர் மீதொருவர் காதல் கொள்கின்[illegible] மோதி[illegible]ரம[illegible]னர். அவர்கள[illegible] மாற்றிக்கொள்ள விரும்பி தங்களிரங்களைக் கழற்றும்போது, ரத்னமோதிரத்திற்குப் பதிலாக வடிவணியப் பட்டிருக்கும் அமராவதியின் சித்திரத்தைக் கண்டு அதிரூபன் ஆச்சரியமடைந்து ரத்னவல்லியை மணப்பதற்குமுன் அம் மோதிரத்தின் வரலாற்றை அறிய வேண்டுமென்று நிச்சயித்து, தான் சீக்கிரம் திரும்பிவந்து அவளை விவாகம் செய்துகொள்வதாக ரத்னவல்லிக்கு வாக்குறுதி செய்துவிட்டு மேல் நடப்படுகிறான். ஆனால், இனி அதிரூபன் தனியாகத்தான் செல்ல நேரிடுகிறது. ஏனெனில் அவன் நண்பன் மாடவ்யன், ரத்னவல்லியின் தோழியிடம் மையல் கொண்டு அதினின்றும் மீள முடியாமல் அவளைக் கல்யாணம் செய்துகொண்டு இல்லறம் நடத்த தீர்மானித்து விடுகிறான்.

அமராவதியைப்பற்றி அவனு[illegible] அதிரூபன் தான் ஒரு பைத்தியக்காரன் போல் நடந்து அவளைத் தேடி அலைகிறான்.

அமராவதி அதிரூபனிடம் கொண்ட காதலால் வருந்தும்போது அவள் சிற்றன்னையின் தம்பி சோமாலி அவளிடம் ஆசை கொண்டு தன்னை விவாகம் செய்து கொள்ளும்படி அவளைத் தொந்திரவு செய்கிறான். இதைப் பொறுக்க முடியாமல் அமராவதி அவனைப் புடைத்துத் தன் வீட்டை விட்டுத் துரத்துகிறாள். இவ்விஷயத்தைச் சோமாலி தன் தமக்கை ஜகஜண்டியிடம் சொல்லவே, அவள் அவனை விவாகம் செய்துகொள்ளும்படி அமராவதியைக் கேட்கிறாள். அமராவதி மறுக்கவே, ஜகஜண்டி கோபாவேசமுற்று அவளைக் கொல்லத் தீர்மானிக்கிறாள்.

ஆனால் விதியை விலக்க யாரால் முடியும்? அமராவதிக்கென ஜகஜண்டி ஏற்பாடு செய்திருந்த விஷம் கலந்த பாலை சோமாலியே பருகி உயிர் துறக்கிறான்! இதைக்கண்டு சகிக்க முடியாமல், அமராவதி தூங்கும்போது அவளைக் காட்டில் கொண்டுபோய்க் கொன்றுவிடும்படி ஜகஜண்டி கொலைக்காரர்களை ஏற்பாடு செய்கிறாள்.

உறக்கத்திலிருந்து கண்விழித்த அமராவதி தான் காட்டிலிருப்பதையும், தன்னைச் சுற்றி கொலைஞரிருப்பதையுங்கண்டு, தந்திரமாய் அவர்களிடமிருந்து தப்பி அதிரூபனைத் தேடிக்கொண்டு செல்கிறாள். வழியில் பிறர் துன்புறுத்துவார்களென்று [illegible] ஒரு பைத்தியக்காரி போல் உடையணிந்து போகிறாள். பைத்தியக்காரனும் பைத்தியக்காரியும், திருடர்களால் ஆக்ரமிக்கப்பட்ட ஒரே காட்டிற்குள் வெவ்வேறு வழியாக வந்து சேருகிறார்கள். ஒரு திருடர் கூட்டம் இருவரையும் பிடித்துக் கொள்கிறது. அதிரூபனும், அமராவதியும் அந்தக் காட்டின் முக்கிய கள்வர் தலைவன் முன் கொண்டுவரப் படுகையில் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்கின்றனர். திருடர்களனைவரும் அதிரூபன் வாய்மூலமாக அவன் விருத்தாந்தத்தைக் கேள்விப்பட்டு, இனி தாங்களும் யோக்கியமாகக் காலங்கழிக்க விரும்பி அவனுடனேயே அவன் இராஜ்யத்திற்குப்புறப்பட்டு விடுகிறார்கள்.

அமராவதி, ரத்னவல்லி சமேதனாக அதிரூபன் சிம்மாசன மேறுகிறான்.

தென் இந்தியா ஆரிய ஸமாஜ் திறப்பு விழா

மகரிஷி ஸ்வாமி தயானந்த சரஸ்வதியின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆரியஸமாஜம் இச் சென்னையில் ஸ்தாபிக்கவேண்டும் என்னும் நோக்கத்துடன் பழைய உழைப்பாளர்களான தென் இந்தியர்கள் ஒன்று சேர்ந்து 26-4-36-ம் தேதி காலை 8-30 மணிக்கு பார்க் டவுன் சைனியப்ப நாயக்கன் தெரு 6-வது நம்பர் வீட்டில் அக்னிஹோத்திரம் அதாவது ஹோமமும் அத்துடன் பல பெரியார்கள் சொற்பொழிவுகளும் நிகழ்த்துவார்கள்.

—காரியதரிசி.

நூதன் சிகிச்சைக்கு சரியான பரிசு!

சிட்டகாங் பக்கிரின் வைத்திய முறை

சிட்டகாங்கில், காஜாஅலி இஸ்லாம் என்னும் போலீஸ்காரனுக்கு ஏற்பட்ட வியாதிக்காக, அவன் ஒரு பக்கிரிடம் (முஸ்லீம் சாது) சிகிச்சை பெறச் சென்றான். பக்கிர் சிகிச்சை செய்வதாகக் கூறி பலத்த அடிகொடுத்ததால் கான்ஸ்டேபிளுக்கு வலி ஏற்பட்டு, அதன் காரணமாக அவன் மாண்டுவிட்டான். சிட்டகாங் ஜட்ஜ், அந்த பக்கிருக்கு 4 1/2 வருஷக் கடுங்காவல் தண்டனையும், 200 ரூபாய் அபராதமும் விதித்தார்.

கோடம்பாக்கம் ரேஷனலிஸ்ட் ரெக்ரியேஷன் கிளப்

கோடம்பாக்கம், ஏப், 23

மேற்படி சங்கத்தின் அங்கத்தினர் பொதுக் கூட்டம், கோடம்பாக்கம் வரதராஜப் பேட்டையில் 26-4-36 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சங்கத்தலைவர் திரு. எல். ராமசாமி (ஆசிரியர், ஆனந்தபோதினி) தலைமையில் கூடும். அது சமயம் திரு. எம். சிதம்பரம் "முயற்சி" என்னும் பொருள் பற்றி பேசுவார். மேலும் சங்கத்தின் பல விஷயங்களைப் பற்றியும் பேசப்படும்.

—காரியதரிசி.

க்ஷவரத் தொழிலாளர்கள் மகாசபைக் கூட்டம்

லைசன்ஸ் முறையை ஒழிக்க கிளர்ச்சி

(நமது நிருபர்)

சேலம், ஏப், 22

சேலம் முனிசிபாலிடி யாரால் க்ஷவரத் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தப் பட்டிருக்கும் லைசன்ஸ் முறையை ரத்துச் செய்வதற்கான முறைகளைப் பற்றி யோசிப்பதற்காக க்ஷவரத் தொழிலாளர் சங்க மகாசபைக் கூட்டம் 16-4-36 சங்கக் கட்டிடத்தில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப் பட்டது.

தீர்மானம்

நகரிலுள்ள சலூன்களுக்கு விதித்திருக்கும் லைசன்ஸ் முறையை அமுலுக்குக் கொண்டு வருவதானது சிறு தொழில்களில் ஒன்றாகிய க்ஷவரத் தொழிலின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் பாதகமாக இருப்பதால் மேற்படி முறையை அடியோடு ரத்துச்செய்ய வேண்டுமாய் முனிசிபல் சபையாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

17-4-36 வெள்ளிக்கிழமை கூடிய நிர்வாக சபைத் தீர்மானத்திற்கிணங்க 18-4-36 சனிக்கிழமை சேலம் டவுன் முழுமையுமுள்ள சலூன்கள் அடைக்கப்பட்டன. சலூன்களில் வேலை செய்யும் தொழிலாளர்களும், இதர க்ஷவரத் தொழிலாளருமாக சுமார் 500-க்கு மேற்பட்டவர்கள் சரியாய் காலை 7 மணிக்கு செவ்வாய்ப் பேட்டையிலுள்ள க்ஷவரத் தொழிலாளர் சங்கக் கட்டிடத்தில் ஒன்று கூடி தங்கள் குறைகளைத் தெரிவிக்க அச்சிடப்பட்ட விண்ணப்பத்துடன் எல்லா வார்டு கவுன்சிலர்களையும் கண்டு பேச பெரும் திரளாகச் சென்றனர்.

கவுன்சிலர்கள் அனைவரும் மேற்படி லைசன்ஸ் முறையை ரத்துச் செய்வதாக வாக்களித்தனர்.

அன்று முழுதும் தொழில் நிறுத்தம் செய்யப்பட்டிருந்தது.

சாரதா சட்டம்

மீரத்தில் புதிய தீர்ப்பு

திரு. பேஸ் என்பவர், சாரதா சட்டத்தை மீறி மணம் செய்ததாக ஒருவர் மீது மீரத்தில் வழக்குக் கொண்டுவந்தார். மீரத் ஜில்லா மாஜிஸ்டிரேட், கலியாணம் நடந்தது உண்மை என்ற போதிலும், சாரதா சட்டப்படி "கலியாணப் பூர்த்தி" தான் சட்டத்தை மீறுவதாகுமென்றும், சட்டப்படி வயது வருமளவரையில் தம்பதிகள் சேர்ந்து வாழாதிருந்தால், அப்போது, சாரதா சட்டம் அவர்களை ஒன்றும் செய்ய முடியாதெனக்கூறி, கேசைத் தள்ளி விட்டார். தம்பதிகள் ஒன்று சேர்ந்து வாழுவதில்லை என 200 ரூபாய்க்கு ஜாமீன் பத்திரம் எழுதித் தரவேண்டும், வருஷா வருஷம் ஏப்ரல் மாதம், தம்பதிகள் கோர்ட்டுக்கு வர வேண்டுமென்றும், எப்போது டாக்டர் அவர்களுக்கு யுக்த வயது வந்ததாகக் கூறுகிறாரோ அப்போதுதான் 'சாந்தி' செய்து வைக்க வேண்டுமென்றும் மாஜிஸ்டிரேட் தீர்ப்பு கூறினர்.

சென்னை தொழிலாளர் சங்கம்

சென்னை, ஏப், 23

கீழ் காணும் தந்திச்செய்தி, வைசிராயின் அந்தரங்கக் காரியதரிசிக்கும், சென்னைக் கவர்னரின் அந்தரங்கக் காரியதரிசிக்கும், சென்னை தொழிலாளர் சங்க உபதலைவர், திரு. சக்கரை செட்டியாரால் அனுப்பப்பட்டது.

"பக்கிங்ஹாம் கர்னாடிக் ஆலை, மெகானிகல் பகுதியில் ஆட்களை வேலையிலிருந்து எடுத்துவிட்டார்கள். அதிக அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. வைசிராய் அவர்கள் தலையிடக் கோரப்படுகிறது. கடிதமும் அனுப்பப் படுகிறது." என தோழர் ஜி. ராமானுஜலு நாயுடு, எழுதுகிறார்.

ஒரு பொதுக் கூட்டம்

சென்னை, ஏப், 20

சென்ற சனிக்கிழமை மாலை 6 மணிக்கு வியாசர்பாடி பி. சி. எம். பாடசாலையில். தோழர் தர்மதீரர் தலைமையில் மேற்படி கழகத்தின் பொதுக் கூட்டம் கூடியது. அச்சமயம் தலைவர் மனித வாழ்க்கை என்பதுபற்றி ஓர் விரிவுரை நிகழ்த்தினர். பின்னர் தோழர் வி. ஆர். தாமோதரம் மனித வாழ்க்கையும், மக்கள் கடமையும் என்று பேசும்போது மக்களுக்கு மதம் அவசியம் இல்லை என்றும், வாழ்க்கைக்கு கல்வியும், சமத்துவமும், அவசியம் வேண்டுமென்றும் பேசி முடித்தார். டாக்டர் எம். மாசிலாமணி மக்கள் வாழ்க்கைக்கு இன்று மதமும், கடவுளும் முட்டுக் கட்டையாக விருப்பதால் இதை மக்கள் அவசியம் உணர்ந்து அப்புறப்படுத்த வேண்டும் என்றும், உலகத்தில் காங்கிரஸ் போல் புது புது பித்தலாட்டங்கள் நடக்கிறதென்றும் அதை நாம் இன்னும் அறியாமலிருப்பதால் ஒவ்வொருவரும் நம்மை ஏமாற்றி வருகிறார்கள் என்றும் பேசினர். கடைசியாக பேசிய தோழர் தண்டபாணி மக்கள் வாழ்க்கை என்பதைப்பற்றி பேசுவதற்கு முந்தி, மிருக வாழ்க்கை யின்னது என்பதை உங்களுக்கு ஞாபக மூட்டுகிறேன். இன்று மக்களது வாழ்க்கையானது மிருக வாழ்க்கையிலும் கேவல நிலையில் இருந்து வருவது யாவரும் அறிந்த விஷயம். அதை மாற்றி அமைக்க நாம் எல்லாத்துறையிலும் முயல வேண்டும் என்றும், மக்கள் வாழ்க்கை ஒரு சில கூட்டத்தினரால் சின்னாபின்னப் பட்டுவிட்டது என்றும், கூட்டத்திற்கு வந்தவர்கள் மனதுருகும்படி நீண்ட நேரம் பேசினர். பின்னர் தலைவரின் முடிவுரைக்குப் பின் காரியதரிசியின் வந்தனத்துடன் இரவு 9 மணிக்கு கூட்டம் கலைந்தது.

—காரியதரிசி

திருநெல்வேலி முனிஸிபல் கமிஷனர்

தோழர் புருஷோத்தம முதலியார் இலங்கை விஜயம்

தென் இந்தியர்களின் குதூகலமான வரவேற்பு

கொழும்பு, ஏப், 20

இலங்கைக்கு விஜயம் புரிந்துள்ள திருநெல்வேலி முனிஸிபல் கமிஷனர் தோழர் டி. புருஷோத்தம முதலியாரை வரவேற்கு முகத்தான் 13-4-36 திங்கட்கிழமை மாலை 5-45 மணிக்கு கொழும்பு, கொள்பேட்டி "இந்திய கேசரி" பத்திரிகாலயத்தின் கண் பிரஸ்தாப பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஜீ. பி. வேதநாயகம் தலைமையின் கீழ் தென் இந்தியர்களைக் கொண்ட ஓர் மாபெருங் கூட்டம் நடை பெற்றது.

தலைவர் முகவுரை நிகழ்த்தி ஆசனத்தமர்ந்ததும். இராமநாதபுரம் ஜில்லா ஆதிதிராவிட மஹாஜன சங்கத் தலைவர் தோழர் எ. எஸ். ஜான் தோழர் புருஷோத்தம முதலியாரை சபையோர்களுக்கு அறிமுகப்படுத்துங்கால், தோழர் முதலியார் வயதளவில் வாலிபராய்த் தோன்றினும் செயலளவில் வயோதிகப் பெரியார் என்பதற்கு கடந்த பதினைந்து ஆண்டுகளாக அவர்கள் செய்து வந்த தீரம் பொருந்திய தொண்டும், தியாகமும், தாழ்த்தப்பட்ட மக்கள் பால் அவர் காட்டி வரும் கருணையும் ஓர் தக்க சான்றாகும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன் எனவும், தோழர் டபிள்யூ. பி. எ. சௌந்திர பாண்டியன் இராமநாதபுரம், ஜில்லாபோர்டு தலைவராக திகழ்ந்த காலையில் அவர்களும், தோழர் புருஷோத்தம முதலியாரும் அங்குள்ள ஆதிதிராவிட மக்களுக்கு, ஜாதி மமதை கொண்ட உயர்குலத்தோரென்பவர்களால் ஏற்படும் இன்னல்களை அப்போதைக்கப்போது அகற்றி சீர்திருத்தத்தை நிலைநாட்டினர்கள் எனவும், கார், பஸ் முதலிய வாகனங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரயாணஞ் செய்யக் கூடாதென்று ஏற்படுத்தி வந்துள்ள பழையகால பாழாய்ப் போன சட்ட திட்டங்களை உடைத்தெறிந்து மேற்படி வாகனங்களில் கோட்டி முதல தொண்டமான் வரையிலும் சரி நிகர் சமத்துவமாய் பிரயாணஞ் செய்யத் தக்க உரிமையை உறுவகப்படுத்தி அதன்படியே இன்றுவரை நடைபெற்றுக் கொண்டும் வருவதானது அவரது அரும், பெரும் சேவையை தெளிவு படுத்துகிறதெனவும், பள்ளிக்கூடங்களிலும், இன்னம் இவை போன்ற கவர்மெண்ட் பொது ஸ்தாபனங்களிலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமத்துவ மளிக்கத்தக்க ஏது கரத்தை இயக்கிவைத்த பெருமை தோழர் சௌந்திரபாண்டியனுக்கும், தோழர் புருஷோத்தம முதலியாருக்குமேயாகும் எனவும்,

இராமநாதபுரம் ஜில்லாவில் இவர்கள் இருவரும் உடலும், உயிரும் போலிருந்து, உயர்ஜாதி என்போர்களினதும், விசேஷமாய் பார்ப்பனர்களினதும் கொட்டங்களைப் பரிக்க வொட்டாது பாழாக்கியதின் பயனாய் இவ்விரு சார்பார்களும் சாக மாட்டார்களா? என்று சாஸ்திரங்களை சதா புரட்டி, புரட்டிப் பார்வையிடுவதும் திட்டுவதுமாகவே இருப்பதை யான் பல தடவை கண்ணுற்றிருக்கிறேனெனவும், இத்தகைய கொடிய அரக்கர்களின் மத்தியிலே சலியாதுழைத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமத்துவத்தை நல்கிய தோழர்களிருவரையும் என்னென்றும் பொன்னே போல் போற்றக் கடமை கொண்டவர்களாக இருக்க வேண்டுமெனவும், இன்னமும் சமீப காலத்திற்குள்ளாகத் திருநெல்வேலி ஜில்லாவில் 1000 குடிகளடங்கிய ஓர் பெரிய நகரத்தை ஸ்தாபிக்க திட்டம் போட்டிருக்கிறார்கள் எனவும், 'இத்தகைய பொதுத் தொண்டில் ஈடுபட்டு நியாய சீலியுடனும், நேர்மையுடனும் உழைத்துவரும் உத்தமத் தோழர்களை உபசரித்து வரவேற்பது நம் ஒவ்வொருவரின் கடமைகளில் ஒன்றென்பதை நம் இதயத்தில் பசுமரத்தாணிபோல் பதிய வைத்துக் கொள்ளல் வேண்டுமெனவும் கூறி தமது ஆசனத்தமர்ந்ததும், கரகோஷம் செவிடுபட்டொலித்தன.

அதன் பின் கொழும்பு சுயமரியாதை சங்கத்தாராலும், யூனியன் பிரஸ் தொழிலாளர் சார்பிலும், பேட்டுமாநகர் "முஸ்லீம் இளைஞர் சங்கத்தி"ன் சார்பிலும், திருநெல்வேலி 6 வது வார்டின் சார்பிலும், இராமநாதபுரம் ஜில்லா ஆதிதிராவிட மஹாஜன சங்கத்தின் சார்பிலும் தோழர் புருஷோத்தம முதலியாருக்கு நறுமணங் கமழ் மலர்மாலைகள் சூட்டி மரியாதையோடு கூடிய வரவேற்பும் மனமுவந்த நன்றியும் வழங்கப்பட்டன.

பின்பு, தோழர் புருஷோத்தம முதலியார் பெருத்த கரகோஷங்களுக்கிடையே தமது சொற்பெருக்கை நிகழ்த்துங்கால் தோழர் எ. எஸ். ஜான் கூறியுள்ளவாறு இராமநாதபுரம் ஜில்லாவில் பல விஷயங்களைச் செய்து முடித்திருப்பதாகவும், இன்னமும் சமயம் வாய்த்தபோதெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தொண்டாற்றவும் உயிரைத்தியாகம் செய்யவும் தயங்கமாட்டேனெனவும், உயர் ஜாதிக்காரர் எனப்படுவோரால் தாழ்த்தப்பட்ட மக்கள் அடைந்து வரும் கொடுமைகளை நோக்குங்கால் என் ரத்தம் துடிக்கிறதெனவும், இத்தகைய கொடுமைகளை ஒழிக்கும் மார்க்கத்தை தேடாது வாளாவிருக்கும் மனிதவர்க்கம் இப்பூவுலகில் ஏன் ஜனித்ததென்பதுஎனக்கு விளக்கவில்லையெனவும், பல இடங்களில் முனிசிபல் கவுன்ஸிலர்களாக இருக்கும் ஆதித்திராவிட அங்கத்தவர்களை கவுன்ஸிலின் கூட்டகாலங்களில் கூட்டத்தின் உள்ளும் நுழைய வொட்டாது வாசலுக்கு வெளியே நிறுத்தி கையொப்பம் வாங்கிக்கொண்டு வந்த வழியேபோ என அனுப்பிவிட்டு கூட்டங்களுக்கு விஜயம் புரிந்ததாக விஷய ஜாபிதாவில் குறிப்பிட்டுக் கொள்வதை பல இடங்களில் யான் கண்ணுற்று இப்படிப்பட்ட அயோக்கியத்தனத்தோடு கூடிய போக்கிரித்தனத்தைக் கண்டித்தும் வந்தபடியால் இப்பொழுது அப்படிப்பட்ட செய்கைகள் ஒழிந்து தாழ்த்தப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமத்துவம் வழங்கப்பட்டு வருகிறது எனவும், துறையூர் எனும் நகரத்தில் நாடகம் நடக்கிற ஓர் சமயம் நாடகக் கொட்டகையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரிசர்வ் சீட் கொடுக்கப்படமாட்டாதென்பதை நோட்டீஸ் மூலம் அறிந்து உடனே நாடகக் கொட்டகையின் ஏஜண்டிடம் சென்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரிசர்வ் சீட் கொடுக்கப் படமாட்டாதென நோட்டீஸில் குறிப்பிட்டிருப்பதை ரத்துச்செய்து அவர்களுக்கும் மேற்படி சீட்டில் இடமளிக்க வேண்டுமெனவாதாடியும், ஜாதித் திமிர் பிடித்த ஏஜண்ட் அப்படிச்செய்ய இயலாதெனவும், செய்தால் அதன் மூலம் குழப்பம் ஏற்படும் என்று மறுப்புக் கூறி விட்டதாகவும், அதன்பின் அந்நகரத்தின் கவர்மெண்ட் டாக்டரிடம் விஷயத்தை விளக்கிக் காண்பித்து மேற்படி நகரத்தில் காலராஎன்னும் தொத்து நோய் வியாபித்துக் கொண்டிருக்கிறபடியால் நாடகம் நடத்தக் கூடாதென லைசென்ஸை ரத்துச் செய்து நாடகத்தைதடைபடுத்தி விட்டதாகவும் சமீபத்தில் காங்கிரஸின் போலி "ஹரிஜன இயக்கம்" என்ற ஒன்றை ஸ்தாபித்துக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சகல நன்மையையும் செய்வோமெனவும், கோயில்களை திறந்து கொடுப்போமெனவும் அதன் மூலம் ஏமாற்று நாடகம் நடித்து பணத்திரட்ட ஆரம்பித்திருக்கிறார் எனவும், 100-க்கு 97 பேர் படிப்பின்றி பாமரமக்களாய் மிருகத்திலும் கேடாய் அலைந்து திரியும் தாழ்த்தப்பட்ட மக்களை ஆலயங்களுக்குள் தள்ளி விடுவதை விடுத்து, அம் மக்களை கல்வி கற்கக் கூடிய பள்ளிகளுக்கு அனுப்பும்படி அவர்களது வீடுகள்தோறும் சென்று தூண்டிக் கொண்டிருப்பதுமே நாம் அவர்களுக்குச் செய்யும் பெரும் கைங்கரியமாகுமெனவும், இருக்க இடமும், படுக்கப் பாயும், குடிக்கக் கூழும் அறியக் கல்வியுமில்லாது தயங்கித் தத்தளிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆலயப் பிரவேசம் அவசியமில்லையெனவும், இன்னும் பல அரிய, பெரிய விஷயங்களை எடுத்துரைத்ததுடன், இராமநாதபுரம் ஜில்லாவில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இதர வகுப்பினர்களால் ஏ படும் இடுக்கண்களை அகற்ற இன்னமும் எனக்குச் சமயம் வாய்த்தபோதெல்லாம் முன்னிலும் அதிகம் செய்யக் கடமைப் பட்டிருக்கிறேனெனவும், பேட்டுமாநகரம் முஸ்லிம் இளைஞர் சங்கத்தார் கேட்டுக்கொண்டபடி சகல வசதிகளையும் செய்து கொடுப்பதாகவும், அதன்பின் திருநெல்வேலி 6-வது வார்டார் கேட்டுக்கொண்ட விஷயங்களுக்கும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வேனெனவும் வாக்குறுதி செய்து தம்மை மலர் மாலை சூட்டி வரவேற்புச் செய்துள்ள சங்கத்தாரனைவருக்கும் தமதுநன்றியைக் கூறி
வர் முடிவுரைக்குப் பின் வ
சாரத்துடன் மாலை 6-30
கூட்டம் இனிது கலைவுற்ற

—கா

வருகிறது! வருகிறது!! வருகிறது!!!

வாய்வுகளால் படும் கஷ்டம் | நீடித்த மலச் சிக்கலால் படும் அவஸ்தை | கோடையின் கொடூரத்தால் ஏற்படும் உஷ்ணம்

இவற்றை நீக்கிக் கொள்ள நல்ல சந்தர்ப்பம்

விளம்பர போர்டுகளுடன் அடியிற்கண்ட நமது T. A. N. 453 நெ கார் 15—4—36-க்கு மேல் தஞ்சாவூர், பொன்மலை. திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம், மதுரை, புதுக்கோட்டை, காரைக்குடி, தேவகோட்டை, அரிமளம் முதலான ஊர்களுக்கும், அதைச் சுற்றியுள்ள பல ஊர்களுக்கும் வருகிறது.

அதிலுள்ள ஏஜண்டிடம் பெருங்காய லேகியமும், நன்னாரி எஸன்சும், எங்கும் கிடைக்காத நறுமணமும் அதி குணமும் அமைந்த தாமரைப்பூ ஷர்பத், தாழம்பூ ஷர்பத், சந்தன ஷர்பத், மல்லிகைப்பூ ஷர்பத், ரோஜா பன்னீர் ஷர்பத், இன்னும் இதர மருந்துகளும் விலைக்குப் பெறலாம். ஷை காரில் ஸ்டாக் இல்லாமற் போனால் ஏஜண்டிடம் ஆர்டர் கொடுக்கலாம்.

குறிப்பு:—ஷை காரில் வரும் ஏஜெண்டிடம் மாத்திரம் முதலில் பரீக்ஷிக்க நன்னாரி எஸன்ஸ் 1-அவுன்ஸ் அணா 0—5—0-க்கும், ஷர்பத் வகைகள் 1-அவுன்ஸ் அணா 0—1—0-க்கும் பெறலாம். மற்ற ஊரிலுள்ளவர்கள் நேரே எழுதவும்.



110 நெ. பெருங்காய லேஹியம்

கை கால், இடுப்பு முதலான வலி, விலா வலி, பிதக வலி, வயிற்று வலி, பித்த வாய்வு முதலான சகல வாய்வுகளும், வாதங்களும் தீரும். 1, 2 தடவை மலத்தைக் கழித்து நீடித்த மலச் சிக்கலைப் போக்கும் பத்தியமில்லை. சாப்பிட அருவருப்பில்லை.

¼-சேர் டப்பி 1-க்கு ரூ. **1—0—0**

110 நெ. நன்னாரி எஸன்ஸ்

பச்சை வேரிலுள்ள வாசனையை அப்படியே காணலாம். இரத்தக் கொதிப்பை தீர்த்து இரத்தத்தை சுத்திபாக்கும். கெட்ட ரத்தத்தால் ஏற்படும் எல்லா ரோகங்களுக்கும் நன்மை தரும். தனி பாலிலோ, காபி அல்லது டீயிலோ சாப்பிடலாம். உயர்வான ஷர்பத்துகள் குறைந்த விலைக்கு தயாரிக்கலாம்.

¼-அவுன்ஸ் பாட்டல் 1-க்கு ரூ. **1—4—0**

ஹக்கீம் ம. அ. ஷம்சுத்தீன் சாஹிப்,
பூனா சித்த வைத்தியசாலை, மாயவரம்.

தமிழும், ஹிந்தியும்

ஹிந்தி பொது மொழியானால்........

ஆரியர் தம் சூழ்ச்சி

பொதுப் பணத்தை வாரியிறைப்பது நேர்மையாகாது

(நாத்தக்குடி திரு. யா. ஞா. அழகனார்)

நாட்டுத் தொண்டர்களில் பலர் ஹிந்தி மொழியை இந்திய நாடு எங்கணும் நாட்டிவிடல் வேண்டுமென்று வேலை செய்கின்றனர். ஹிந்தி மொழியைத் தமிழர்களாகிய நாம் ஏற்றுக்கொள்ளலாமா? அதனால் விளையும் பலாபலன்கள் என்ன? இவைபற்றி ஆய்வதே இதன் ஒரு புடைநோக்கம்.

பொது மொழி நிறுவுவது எளிதல்ல

இந்திய நாடெல்லாம் நிலவக்கூடிய பொதுமொழியொன்றைநாட்டுவதெனின் அதை மொழிவல்லார் எல்லாரும் கூடி நாட்டிவிடக் கூடுமா? ஆயின், எம்மொழி பொதுமொழி ஆதற்குச் சிறந்தது என்பனவற்றை நனித்தாராய்ந்து செய்தல் வேண்டும். ஐந்திணை நிலங்கள் வரவப்பெற்று அவ்வவ் நிலங்களுக்கேற்ப குணச்சிறப்பும், கொள்கை வேறுபாடும், நாப்பழக்கங்களும் அமைந்ததோர் பரந்த கண்டமெனக் காணும் நந்தமநாட்டிடை ஓர் பொது மொழியை நிறுவ நினைப்பது எளிதாகாது.

பல்வேறு அபிப்பிராயங்கள்

ஹிந்தி மொழியைப் பொதுமொழி ஆக்கற்கு அனைத்து மக்களது கருத்தும் ஒன்றுபட்டுளதாயினின் அன்றென்றே அறைதல் வேண்டும். சின்னாள் முன்னர் சாண் ர்ஸ் என்பார் 'உருது மொழியே இந்தியாவின் பொதுமொழி ஆதற்பாலது' என்றார். 'அந்தந்த மாகாணத்து வழக்கு மன்றங்களில் அந்தந்த மாகாணத்துத் தாய் மொழியே நிலவல் வேண்டும். ஆங்கிலத்தையே பொதுமொழி ஆக்கக் கொளல்வேண்டும்' என்றார் மற்றொரு பெரியார். தாய் மொழியின் மூலமாகவே கல்வி அனைத்தையும் கற்றல் வேண்டும் என்பர் கவி ரவீந்திரநாத போன்ற அறிஞர்கள். இங்ஙனம் இயம்பின், ஆங்கிலமே பொதுமொழி ஆதற்குத் தடையென்? கற்றோராலும், அரசியலாராலும் தற்போது பொது மொழியாகக் கொள்ளப்படுவது அதுவே அன்றோ? நம் நாடு இற்றைப் போது மேனாடுகளைப் புகழ்பெற்றனவெனினும், நாம் அரசியலில் முன்னேற்றம் அடைந்துளோம் எனினும் அதற்குக் காரணம் ஆங்கில மொழியே என்று உண்மை கூறல் வேண்டும். தவிர நம் நாட்டுப் பல்வேறு தாய்மொழிகள் உண்டும். ஏனைய நாடுகளிலும் சிறப்பாக எண்ணப்படுகின்றன என்றால் அதற்கு ஒருபுடை காரணம் ஆங்கில மொழி ம், ஆங்கில மக்களுமே எனின் து ஏற்படும் குறை யாதோ றிலேன்.

ய்மொழிப் பயிற்சி எனின் து இயற்கைக்குப்பொருந்தியது ற மொழிப்பயிற்சி எனின் இயற்கையோடு மாறுபட்டது. நாடுகள் இற்றை நாள் செயற்கை வாழ்க்கையில் இறங்கி முன்னேறுவதைக் கண்டு, கீழ்நாடுகள் அவற்றைப் பின்பற்றுகின்றன. 0 ஆண்டுகளாக ஆங்கில ஆட்சி ந்தும், 150 ஆண்டுகளாக ஆங்கில மொழி பொதுமொழி வழங்கினும், இந்திய நாடு வதும் மேனாட்டார் வாழ்க்கை முறையைப் பின் பற்றிற்று ன்? இந்திய நாட்டில்தான் கை இன்னமும் உரங்கொண்டு கின்றது. இத்தகைய நாட்டில் ஒருவனைத் தாய்மொழிப் சியாகிய இயற்கை வாழ்க்கை வேற்று மொழிப் பயிற்சி செயற்கை வாழ்க்கைக்குத் முடியுமா? ஆங்கில மொழி டும் பிரயாணம் செய காலத்தில் பிரயாணம் செய்வது எளிதில்லை என்பர். ஏனெனில், வங்காளிகள் ஆங்கிலம் அறிந்தாராயினும் தாய்மொழியிலேயே உரையாடுகின்றனராம். உண்மைதான். செயற்கையில் ஒருவாறு ஒருமொழியைப் பேச அறிந்தும் இயற்கைக்குப்படிந்து உரையாடுவதே யார்க்கும் எளிதன்றோ! இன்பமும் அன்றோ! செயற்கை மொழிப்பயிற்சியில் இறங்குவதென்றாலும் தமிழர்கள் ஆங்கிலத்தில் ஒருவேளை இறங்கிவிடலாம். ஹிந்தியில் இறங்குவதென்றால் அரிதினும் அரிதே. ஏனெனில், தமிழ்மொழியாளர் ஓரே ஓசை யெழுத்துப்பயிற்சியோடு மூச்சுச்செட்டும், சொற்செட்டும் பொருந்தியதோர் இனிய மொழியைப் பேசப் பழக்கத்தினர்.

ஹிந்தி மொழியை நிறுவ முயல்வோர் அதனால் இந்திய மக்களிடையில் ஓர் கட்டுணர்ச்சியும், இன்னலையும் ஏற்படலாம் என்பர். அவ்வித நிலையைத் தடுத்து நிற்பது நாட்டில் நிலவும் பல்வேறு மொழிகள் அல்ல என்பதை அவர்கள் ஓர்தல் வேண்டும். நந்தம் பல்வேறு வர்ணக் கட்டுகளும், ஒழுக்க வேறுபாடுகளும் பழக்க வழக்கங்களும் நாட்டில் நிலவுங் காலமாவும் மக்களிடையில் ஓர் கட்டுணர்ச்சியைக் காண்பது கனவிலும் கூடாத தோர் காரியமே ஆகும். தமிழ் நாட்டின் கண்ணுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் தமிழ் மொழியே பேசுகின்றனர். மொழி உரிமையில் ஒன்றுபட்டிருந்தும் வாழ்க்கை முறையில் ஒத்த உரிமையை அவர்கள் அடைந்துளரோ? இந்நிலையையே தமிழ் நாடன்றி ஏனைய நம் நாடுகளிலும் காணலாம். எனவே, ஒற்றுமையை உண்டாக்கற் பாலது வாய்ப்பேச்சு அன்று, உள்ளத்தின் தன்மையே என்பது கண்கூடு.

மதப்பற்றும் மொழிப்பற்றும்

தவிர, நம்மக்களிடை மதப்பற்றும், மொழிப்பற்றும் ஒன்றையொன்று விஞ்சி விளங்குதலைக் காணலாம். மகம்மதியர் கொரானைப்படிக்க வேண்டுமானால் உருதுப் பயிற்சி உடையராதல் வேண்டும். பெரியபுராணம் தேவாரம் முதலிய நூல்களும் அந்நூல்களைக் கற்கும் தமிழ் ஆர்வமும் இந்து சைவர்களுக்கு இன்றியமையாதவே. மதத்தோடு பொருந்திய மொழிப்பற்றே மதத்தை வளர்ப்பதற்கும், மொழியைப் பேணுதற்கும் கருவியாய் அமைந்துள்ளது. ஒரே கடவுள் வழி பாட்டில் படியாமல் பல்வேறு கடவுள் வழிபாடுகளில் படிந்து, மதப்பற்றும், மதத்தை வளர்க்கும் மொழிப்பற்றும் வாய்ந்த இந்திய நாட்டு மக்களையெல்லாம் மதத்தோடு கலவாத ஹிந்தி மொழி எவ்வாறு ஒரு முகப்படுத்த வல்லதோ? நாட்டில் நிலவும் பல்வேறு மதங்களையும், அறிவினத்தையும் ஒழித்தாலன்றி ஈண்டு நிலவும் மொழிகளை ஒழிக்கவும் இயலாது; ஹிந்தி செழிக்கவும் இயலாது என்பது ஒருதலை.

ஹிந்தி பொது மொழியானால்

ஹிந்தி பொதுமொழியாயின், ஏனையமொழிகளைப் போலவே தமிழும் தன்மணத்தையும், குணத்தையும், வளிமையையும் இழக்கும் என்பதில் ஐயமில்லை. நம் தமிழ்மொழி அக்காலம் முதல் பல்வேறு மொழிகளின் சேர்க்கையினால் பல்வேறு மாற்றங்களைப் பெற்றுளது. ஆரியர்கள் இந்நாட்டில் குடியேறித் தங்கள் செல்வாக்கைத் தமிழர் மீது செலுத்தா நிற்கையில், அந்தோ! நம்தமிழ் மொழி பல்வேறு வடமொழிகளை விரவப்பெற்றது. காலேக்கு மொழிகளை ஈன்றும் நாளும் மாறுக் கன்னித்தன்மை வாய்ந்த நம்மொழி ஆரியக் கலப்பின் காரணத்தால வடமொழியினின்றும் வந்ததோ என்று பலரும் ஐயுறற்கு இடனாய்த் தன் சிறப்பிழக்கப் பார்த்தது. பிற்றை நாளில் மகம்மதியர்களின் கூட்டுறவினால் ஹிந்துஸ்தானி, பாரசீகம் முதலிய மொழிகளின் சேர்க்கையுற்று, கிராம முனிசிபு, தாசில்தார் முதலிய அரசியல் அலுவலர் கள் தமிழரசில் இல்லையோ என்னும் ஐயத்தைக் கிளப்பிவிட்டது. நாயக்கர் அரசர் காலத்தில் தெலுங்கு மொழி தமிழுலகில் அரசியல மொழியாக நிலவிற்றென்பர். தெலுங்குமொழி தமிழ்த்தாயின் செல்வக் குழந்தைகளிலொன்றாகலின் அக்குழந்தையால் தாயானவள் ஒருவாறு கெடாது வாழ்ந்தனள் எனலாம். இக்காலத்தில் ஆங்கில மொழி அரசியல் மொழியாக நிலவ, நந் தமிழ்மொழியும், தமிழ் மக்களும் மொழியளவில் அடைந்த அவ நிலைமை மொழிதற்கு வெட்கமானதே. ஆங்கிலங் கற்றார்க்கு நாட்டு மொழிப்பற்று ஒருவாறு அற்றது. அவர்களது உரையாடலும், உணர்ச்சியும் வேறுவழிக்குத் திரும்பின. அன்னவர்க்கும், அறிவிலார்க்கும் இடையில் கட்டுறவு என்பது கடவுள் வந்து கூட்டினும் அமையாது போலும்! தமிழ் எழுத்தறியாதாரும் பேச்சு வழக்கில் ஆங்கிலமும், தமிழும் கலந்து உரையாடுகின்றனர். பின்னை ஆங்கிலம் கற்றவர்களைக் கேட்பானேன்.

தாய்மொழி மூலமே முன்னேற்றம்

இவ்வாறு கற்றோரது கல்வியானது கல்லாத நாட்டு மக்களுக்குப் பயன்படாது கற்றதன் நாடானது கல்வியில் முன்னேற்றங் கண்டபாடில்லை. இந்திய நாடுகள் எல்லாம் கல்வியிலும், ஒற்றுமையிலும் முன்னேற்றம் காணவேண்டுமானால், அவ்வந்நாடுகள் தத்தம் தாய்மொழிகளின் மூலமாகவே முன்னேற்றத்தைக் காணல் கூடும். இது ஏனைய நாடுகளில் கண் கூடாகக்கண்ட காரியம். இப்பரந்த கண்டத்தில் இக்கலங்களை வளர்க்கவேண்டுமானால் மொழிப்படர்ச்சியைப் பின்பற்றி மொழிவாரியாக நாடுகளைப் பிரித்து அந்தந்த மொழிவழக்கினருக்குள் அந்தந்த தாய்மொழிகளின் மூலமாகவே தொண்டாற்றுதல் வேண்டும். இவ்வாறு இந்நலங்களை அடைந்த பின்னரே ஒருங்கிணைக்கப்பட்டதோர் கூட்டு வாழ்க்கைக்கு மக்களை எளிதில் வழிநடத்தலாம். தாய்மொழியின் மணமறிந்த மக்கள் நம் நாட்டிடை நூற்றிற்கு 6½ பேர்கள் தான் உண்டு. ஹிந்தி ஒரு மொழியாகி இற்றை நாளில் நன்மை செய்யக் கூடுமானால் எதிய அளவில் இந்த 6 1/2 பேர்களுக்கு மட்டுமே நன்மை செய்தல் கூடுமன்றோ, ஹிந்தி பரவுவதற்கு உழைக்கின்றவர்கள் தாய்மொழியும், பிற மொழியும் அறிந்த மக்களிடமே உழைக்கின்றனர்! அவர்கள் தாய்மொழி அறிவும் இல்லாது தயங்கும் நாட்டு மக்களுக்கு ஹிந்தி மொழியைக் கற்பிக்க முனைந்துளரோ? அது அவர்களால் எங்ஙனம் கூடும்! நாவினிருக்கும் தாய்மொழி அறிவே சாலாத மக்களுக்கு நாவுக்கடாத ஹிந்தி மொழியைப் புகட்டுவது இயலாது என்பதை அவர்களும் அறிந்திருக்கின்றனர் என்பது வெளிப்படை. ஆதலின், நாட்டுக் கல்வியின் ஏழ்மை நிலையை உன்னி, மக்களை எம்மொழியின் மூலமாய்ச் செலவின்றியும், வீண் காலக் கழிவின்றியும், நாவுக்கு இடரின்றியும், உள்ளத்துச் சோர்வுக்கு இடனின்றியும் கல்வி பயிற்றல் கூடுமோ அம்மொழியின் மூலமாகவே பயிற்றல் நன்று. அம்மொழி தாய்மொழியே என்பது அறிஞர் அனைவருக்கும் உடன்பாடு என்பது உறுதியாம்.

இப்படியிருக்க ஹிந்தி மொழியைப் பொது மொழியாக்க நினைப்பதன் காரணம் யாதோ? பரந்த வடநாட்டினர் ஒடுங்கிக்கிடக்கும் தென்னாட்டின் கண் தங்கள் செல்வாக்கைத் திணிக்க வேண்டுமென்று நினைப்பதாலோ? இது தொடங்கிய நாள் தொட்டு வடநாட்டில் வேலையில்லாது திண்டாடிய சிலர் தென்னாட்டின் கண் கல்லூதியம் பெறுகின்றனர். ஹிந்தி நூல்கள் வெளியிடும் கடைகளும் போதிய பணவைப் பெறுகின்றன. மாணவர்களில் பலர் ஹிந்திமொழியைக் கற்கப் புகுந்து தமிழ்த் தேர்ச்சி பெறுவதிலும் திண்டாடுகின்றனர். நாளடைவில் ஹிந்திமொழி யாசிரியர்கள் தாய்மொழியாசிரியர்களைவிட உயர்வாகவே கருதப்படுவதும் எதிர்கொள்ளக் கிடக்கின்றது. ஆங்கிலம் கற்றவர்க்கே வேலையில்லாத திண்டாட்டமாயின் ஹிந்தியைக் கற்போருக்கும் அந்த திண்டாட்டந்தானே? தவிர பிற மொழிகளை முதன்மையாகக் கொள்வது கொண்டவர் மீது அடிமைத்தனத்தைச் சுமத்தியதே எனலும் இழுக்காகாது.

ஆரியர் சூழ்ச்சி

இதன் மற்றோர் காரணம் ஆரியர் சூழ்ச்சியோ என்னும் கொள்ளக் கிடந்தது. ஹிந்திமொழி பெரிதும் வடமொழிக் கலப்பும், வடிவமும் பொருந்தியது. அத்தகையதோர் மொழியைப் பழகுவது ஆரியக் கலப்புடையவர்களுக்கு எளிதாயும், சிறப்பாயும் அமைந்துள்ளது. தவிர இறந்துபட்ட வடமொழி ஹிந்தி மொழியால் உயிருடன் இயல்கின்றது என உள்ளத்தை ஆறுதல் செய்து கொள்ளவும் இடனுள்ளது. தற்போதையே இந்தியாவில் இறந்து பட்டதோர் மொழியை உடையார் நாட்டுமொழிப் பற்றின்றி வாழும் ஒரு குழுவினரே ஆங்கிலத்தைப்பற்றிக் கற்றதுபோல, ஹிந்தியையும் கற்கத் தொடங்கியிருப்பதிலிருந்து அவர்களாலேயே ஹிந்தி மொழிப் படர்ச்சி வளர்கின்றது எனலாம். ஆதலின், இக்கொள்கையை நாட்டினவர்கள் அவர்களேயோ என்று ஐயுற வேண்டியிருக்கின்றது. இதற்கு வடநாட்டினரோ, பார்ப்பனரோ எவர் காரணமாயிருந்தாலும், அத்தொண்டர்கள் தம் கருத்தை மற்றவர்மீது வற்புறுத்தி வருகின்றனர். ஜில்லா போர்டு முதலிய பொது நிலையங்களின் பணங்களைக்கொண்டு ஹிந்தியைக் கற்பிக்க வேண்டுமென்று ஆணைகளை அமுலுக்குக் கொண்டு வருகின்றனர். இடம் விட்டுப்பெயர இயலா எளிமை வாய்ந்த இந்நாட்டு மக்களுக்கு எள்ளளவும் பயன்படாத ஹிந்தி மொழியைக் கற்பிப்பதற்குத் தம் சொந்தப் பணத்தை விடுத்துப் பொதுப்பணங்களை வாரி இறைப்பது நேரியது ஆகாது. தாய் மொழிப் பயிற்சியைத் தள்ளி ஹிந்திமொழியை வற்புறுத்தும் பழக்கம் நாட்டிடை இப்பொழுதே தலைகாட்டத் தொடங்கி இருப்பது மிகவும் வருந்தத்தக்கதோர் செயலாகும். ஆதலின், கற்றவர்களிடை ஹிந்தி பரவுதலில் முயற்சி எடுக்கும் தொண்டர்கள் அதைவிடுத்துக் கல்லாத மக்களிடை அவரவர்கள் தம தாய்மொழி அறிவை அடைய முயற்சி செய்வார்களாயின், நாடு விரைவில் புத்தறிவுற்றுத் தன் நெடுங்கால இழிநிலையை நீக்கிக் கொள்ளும் என்பதை அனைவரும் அறிவார்களாக.

—(செந்தமிழ்ச் செல்வி)

-: இடி முழக்கமல்ல! :-

தாரையின் முழக்கமே தரணியை செவிடுபடச் செய்கிறது.

தமிழ் டாக்கிகளுக்கெல்லாம் தலைமை வகிப்பது எது?
லீலா விநோத கோலாகலமான படம் எது? எது?
தாரணியிலே தனிப்புகழ் நாட்டும் படம் எது? எது? எது?

அது தான்
மிஸ். T. V. ராஜசுந்தரிபாய் நடித்த

1. தாரா - சசாங்கம்

என்ற ஒப்பற்ற தமிழ் பேசும் பாடும் படம்.

24-4-36 முதல் சில்வர் ஜூபிளி டாக்கிஸிலும்,
25-4-36 முதல் சென்னை கினிமா சென்ட்ரலிலும் நடைபெறுகிறது
திருச்சி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி முதலிய முக்கிய நகரங்களில்
ஆரம்ப தினத்தை எதிர்பாருங்கள்.

சென்னை பிலிம் போர்டு தேர்தலில் முதன்மை ஸ்தானம் பெற்ற
இந்திய நடிகை மிஸ். S. D. சுப்புலக்ஷ்மி தனக்கு நிகரில்லை எனும் நடிப்புடன்;
Mr. C. V. V. பந்துலு, Mr. M. V. கிருஷ்ணப்பா, மிஸ். M. S. பட்டம்மாள்
முதலியோருடன் நடித்த

2. உஷா-கல்யாணம்

இந்திய நடிகை
Miss S. D. சுப்புலக்ஷ்மி,
இந்திய நடிகர்
Mr. M. K. தியாகராஜ பாகவதர்
ஒருங்கே சேர்ந்து நடித்ததும்,
பிலிம் போர்டு தேர்தலில் முதல்தரமான தமிழ்ப் புராணப் படமெனத் தேர்ந்தெடுக்கப்பட்டதுமான

3. நவீன் சாரங்கதரா

விபரங்களுக்கு:—முருகன் டாக்கி பிலிம் கம்பெனி,
8, சின்னக் கடைத் தெரு, மதுரை.
Telegrams:—"TALKO FILMS" Telephone:—No. 53.

புதிய சீர்திருத்தமும், ஸ்தல ஸ்தாபனமும்

தொழிலாளர்களை ஆதரிக்க வேண்டுகோள்

சென்னை, ஏப், 23

சென்னைத் தொழிலாளர்களின் தலைவரும், ஸ்ரீ சுமுகவிலாச சபையின் தலைவருமான திரு. ஆர். சபாபதி முதலியார் எழுதுகிறார்:—

வரப்போகும் சீர்திருத்தத்தில், எல்லா ராஜீய ஸ்தாபனங்களுக்கும் கையினால் வேலை செய்யும் தொழிலாளிகளை அனுப்ப வேண்டும். இதை உலகத் தொழிலாளர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கின்ற கார்ப்பொரேஷன்களில் இருக்கின்றவர்களில் ஒருசிலர் தவிரமற்றவர் எல்லோரும் ஏழைகளின் கஷ்டங்களை உணராதவர்கள். இதை உணர்ந்து வாக்காளர் எல்லோரும் தொழிலாளிகளை ஆதரிக்க வேண்டும். தேசத்தில் எல்லாக் கட்சிகளும் அரசியல் ஸ்தாபனங்களில் இருந்தவரும் காலத்தில் ஏழைகளுக்கு என்ன நன்மை செய்தார்கள்; உள்ளே போகிற வரைக்கும் 'செய்கிறேன்' என்று வாக்களித்துவிட்டு, போன பிறகு கவனித்தது கிடையாது. அதனால், தொழிலாளர்கள் அரசியல் ஸ்தாபனங்களுக்குப் போக வேண்டியது வேண்டற்பாலது. சமீபத்தில் இங்கிலாந்திலுள்ள தொழிலாளிகள் பலவிதமான அபிப்பிராயங்கள் இருந்தாலும், அவைகள் அனைத்தையும் காட்டாமல் தங்கள் சுதந்திரத்திற்காகப் போராடுவதுமன்றி தங்கள் ஜீவனத்திற்குப் போதுமான சம்பளம் இல்லையென்று சொல்லுவதுமல்லாமல் நாங்கள் ஏன் சுதந்தரமாக வாழக்கூடாது என்று கிளர்ச்சி செய்துகொண்டும் வருகிறார்கள்.

இவைகள் அனைத்தும் தெரிந்த தொழிலாளத் தோழர்களை நாமும் நமது சுதந்திரத்திற்காக வேலை செய்யவேண்டும். வாக்காளரும் ஏழைகள் மீது கருணைவைத்து ஒரு தடவை தொழிலாளிகளுக்கே சுதந்திரத்தைக் கொடுத்து அனுப்பினால் என்ன வேலை செய்கின்றார்களென்று தெரிந்துவிடும். கஷ்டங்கள் அனைத்தும் மகாராஜருக்குத் தெரியாது; ஏழைகளுக்குத்தான் தெரியும். ஏழைகளின் கஷ்டங்கள் உணர வேண்டுமானால் ஏழைத் தொழிலாளர்களுக்கே இவ்வாண்டில் நடைபெறப்போகும் எல்லா அரசியல் ஸ்தாபனங்களிலும் பெரும்பாலான ஏழைத் தொழிலாளர்களை ஆதரித்து சட்டசபைகளுக்கும், கார்ப்பொரேஷன்களுக்கும் பெருவாரியாக அனுப்பி தொழிலாளரை முன்னுக்குக் கொண்டுவரும்படி வேண்டிக்கொள்ளுவதோடு ஏழைகள் கஷ்டத்தை நீக்கவேண்டிய வேலைசெய்ய ஆண்டவன் அருள் செய்வானாக.

தாழ்த்தப்பட்டார் வாலிபர் சங்கம்

விசேஷ பொதுக்கூட்டம்

செம்பூர், ஏப், 23

துறையூர் பஞ்சாயத்து போர்டுக்குச் சம்பந்தப்பட்ட செம்பூர் தாழ்த்தப்பட்டார் வாலிபர் சங்கத்தின் விசேஷ பொதுக் கூட்டம் சென்ற சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு துறையூர் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தலைவரும், வழக்கறிஞருமாகிய திரு. எம். ஆர். ராஜகோபால்பிள்ளை பி. ஏ. பி. எல். தலைமையில் கூடிற்று.

அதுபோது தாழ்த்தப்பட்டார் வாலிபர் சங்க சார்பாக தலைவருக்கு தோழர் ஆர். ரெங்கசாமியால் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்து அளிக்கப்பட்டது.

பின்பு தோழர்கள் பூர்ணம்பிள்ளை வாலிபர் கடமை என்பது பற்றியும், துறையூர் பஞ்சாயத்து போர்டு உபதலைவர் தோழர் டி. வி. எஸ். சிவலிங்கம்செட்டியார் அரசியல் உரிமை என்பது பற்றியும், தோழர் சைமன் ராமசாமி மதுவிலக்கு என்பது பற்றியும், தோழர் செ. வி. பெருமாள் செட்டியார் தீண்டாமை என்பது பற்றியும் விரிவாகவும், தெளிவாகவும் பேசப்பட்டபின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறிற்று.

மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியின் மரணத்திற்காக இச் சங்கம் வருந்துவதுடன் மேரி ராணியாருக்கும், தற்போது ஆட்சிக்கு வந்திருக்கும், மாட்சிமை தங்கிய எட்டாம் எட்வர்ட் மன்னருக்கும் இச் சங்கம் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறது.

பண்டித ஜவஹர்லாலின் மனைவியாரும், பெண்களின் திலகமுமாகிய ஸ்ரீமதி கமலா நேரு இயற்கை முடிவடைந்ததை முன்னிட்டு இச் சங்கம் வருந்துகிறது.

நம் நாட்டிற்கு தமிழ்த் தொண்டாற்றிவந்த அரும் பெரும் புலவரும், ஜாதி பேதமின்றி அனைவரையும் ஆதரித்த மாபெரும் வள்ளல் திரு. கா. நமச்சிவாய முதலியார் மரணத்திற்காக இச் சங்கம் வருந்துவதுடன் அன்னார் குடும்பத்தார்க்கும் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

டிெ. சங்கத்திற்கென சாஸ்வதமான கட்டிடம் ஒன்றும், மேற்படி சங்கத்தின் ஆதரவில் இலவச வாசகசாலையும் திறக்க உத்தேசித்திருப்பதால் அபிமானிகள் மேற்படி கைங்கர்யத்திற்கு பொருளுதவி செய்யும்படி இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

மேற்படி வாசகசாலையை மே மாதத்தில் நடத்தவேண்டும் என்றும், திறப்பு விழாவிற்கும், கோகலே படம் திறக்குதலைக்கவும் ஜில்லா போர்டு தலைவர் தோழர் பி. ஆர். தேவர் உபதலைவர் தோழர். எ. வி. ரெங்கசாமி செட்டியார் ஆகியோரை அழைக்கவேண்டுமென்று இச்சங்கம் தீர்மானிக்கிறது.

சங்கத்திற்கு குடி அரசு, விடுதலை, தமிழ்நாடு, நகரதூதன், தினமணி, கிராம ஊழியன்முதலிய பத்திரிகைகளை இலவசமாக அனுப்பும்படி பத்திராதிபர்களை இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

பின்னர் காரியதரிசியால் தயாரித்துவந்த சங்கத்தின் சட்ட திட்டங்கள் வாசித்து எல்லோராலும் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

பிறகு தலைவர் முடிவுரையில் தாழ்த்தப்பட்டார் வாலிபசங்கத்தார் முன்னுக்கு வரவேண்டியதைப் பற்றி பிறவியில் தாழ்த்தப்பட்டார் இல்லை என்றும், தொழிலின் காரணமாக ஏற்பட்டதென்றும், சுத்தம், சுகாதாரத்தைக் கைக்கொள்ள வேண்டியதைப் பற்றியும் தெளிவாகவும், விரிவாகவும் பேசி முடித்தார். பின்னர் காரியதரிசி, தோழர் ஆர். ரெங்கசாமியால் தலைவருக்கு பூமாலை சூட்டப்பட்டு வந்தனோபசாரம் கூற இரவு 8-30 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

—காரியதரிசி

ஓமலூர்

ஆதித்திராவிட மஹாஜன சபா

சேலம் ஜில்லா கலெக்டருக்கு வேண்டுகோள்

சேலம், ஏப், 23

ஓமலூர் தாலுக்கா ஆதித்திராவிட மஹா ஜனசபையின் காரியதரிசியும் ஹானரெரி சப்ஜெயில் விசிட்டருமான எ. சின்னசாமி சென்ற 19-4-36-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையதினம் சேலம் ஜில்லா கலெக்டரை டெபுடேஷன் பார்த்து மேற்படி தாலுக்கா வேட்டப்பட்டி கிராமம் ஆதித்திராவிட தெரு சுமார் 32 வீடுகள் 11-4-36-ந் தேதி மத்தியானம் தற்செயலாய் தீக்கிரையாகி விட்டபடியால் மேற்படி ஜனங்கள் யாவரும் பாதை மரங்களின் நிழலில் குடியிருந்து கஷ்டப்பட்டு வருவதால் மேற்படியார்கள் வீடு கட்டிக்கொள்ளும் பொருட்டு மேற்படி கிராம சமீபத்திலுள்ள சர்க்காருக்கு சம்பந்தப்பட்ட பனம் தோப்புகளில் வீடு ஒன்றுக்கு 4 பனைமரங்களும், ஓலைகளும் கொடுத்து உதவி செய்யும்படிக்கும் மேற்படி தாலுக்கா செட்டிநூர் ஆதித்திராவிட தெருவிலுள்ள ஏழை ஆதித்திராவிட குடிகள் வீடுகள் கட்டி குடியிருக்கவும் தங்களின் குடும்பத்தை காப்பாற்றிவர சாகுபடி செய்ய நிலமில்லாமலும், அவஸ்தைப்பட்டு வரும் ஆதித்திராவிடர்களுக்கு சேர்வராயன்மலை பிட் பண்ணி காடு பாரெஸ்டு ரிசர்வு பாகத்தில் மரமட்டைகள் இல்லாமல் மூன்று புதரினால் மூடியிருந்துவரும் சுமார் 300 ஏக்கர் நிலத்தை நபர் 1-க்கு 5 ஏக்கர் கிலவீதம் அடமானம் செய்து கொடுத்து ஆதரிக்கும்படிக்கும், இன்னும் இத்தாலுக்காவிலுள்ள ஏழை ஆதித்திராவிடர்களுக்கு மனைக்கட்ட நிலமும், ஜலவசதி இல்லாத ஊர்களுக்கு சேந்துக் கிணறுவெட்டிக் கொடுத்தும் ஆதரிக்கும்படியாக கேட்டுக்கொண்டதில் கலெக்டர் தம்மாலியன்றவரை பூரண உதவி செய்வதாக வாக்களித்துள்ளார். இதுபோல் ஏழைமக்கள்பால் பூரணகருணை கொண்டுள்ள சேலம் ஜில்லா பாரெஸ்டு ஆபீசரும், செகண்டி ரெவினியூ டிவிஷனல் ஆபீசரும், ஓமலூர் - தாலுக்கா தாசில்தாரும், சேலம் ஜில்லா போர்டு பிரசிடெண்டும் பூரண சலுகைகாட்டி தக்க சவுகரியம் தேடிக்கொடுக்குமாறு இச்சங்க சார்பாக வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

—காரியதரிசி

தூத்துக்குடி அச்சுத் தொழிலாளர் சங்கம்

அங்கத்தினர்களுக்கு வேண்டுகோள்

சென்னைத் தலைவர்களின் அறிக்கை

சென்னை, ஏப், 23

சென்னை சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள அச்சுக்கூடத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் திரு. ஆர். சபாபதி முதலியார் கூட்டுக்காரியதரிசிகள் திருவாளர்கள்: எம். கே. சுவாமிநாதன், என். வி. ஆர். பாபுராயுடு ஆகியோர் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர்: சமீபத்தில் தூத்துக்குடியில் அச்சுத்தொழிலாளர் சங்கம் ஸ்தாபிதமாய் இருப்பது அனைவரும் அறிந்த விஷயம். இச்சங்கம் ஸ்தாபிதமானது மிகவும் போற்றத்தக்கது. சென்னையில் தான் அச்சுக்கூடத் தொழிலாளர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு நெடுநாளாக வேலை செய்து கொண்டு வருகிறது. இப்பொழுது தூத்துக்குடியில் காரியதரிசி, திரு. எம். முத்தையாவும், இன்னும் இதர கனவான்களாலும் ஒரு சங்கம் ஸ்தாபிதமாய் இருப்பது கண்டு சந்தோஷிக்கிறோம். ஆகையினால், தூத்துக்குடியிலுள்ள அச்சுத் தொழிலாளர்கள் மேற்படி சங்கத்தை ஆதரித்து அதில் அங்கத்தினராகிச் சங்கத்தை கௌரவிக்க விரும்புகிறோம். சங்கத்தினால் தான் உலகம் முன்னுக்கு வர முடியும்; ஒற்றுமை வளரும். இதே போல் மற்றும் பல ஊர்களிலும் அச்சுத்தொழிலாளர் சங்கத்தை ஸ்தாபிக்குமாறு சென்னை மாகாணத்திலுள்ள எல்லா சகோதரர்களையும் வேண்டிக்கொள்ளுகிறோம். தூத்துக்குடி அச்சுத் தொழிலாளர் சங்கம் நீடூழிவாழ ஆண்டவனை வேண்டுகிறோம்.

—காரியதரிசி

ராமசாமி—பாண்டியன் அறிக்கைக்கு ஆதரவு

கோபிசெட்டிபாளையம், ஏப், 23

19—4—36 மாலை 6 மணிக்கு கோபிசெட்டிபாளையம் சமூக சீர்திருத்த சங்க ஆதரவில் ஓர் கூட்டம் நடைபெற்றது.

திரு. குப்புசாமி பி. ஏ. எல். டி. தலைமை வகித்தார். நானது மேமீ இரண்டாவது வாரத்தில் சமூக சீர்திருத்த மகாநாட்டை கோபியில் நடத்துவதைப்பற்றி ஆலோசிக்கப்பட்டது. அடுத்தவாரம் அதற்காக பூர்வாங்க வரவேற்புக் கழகக் கூட்டத்தை கூட்டுவதென்று முடிவு செய்யப்பட்டது. நானது 5-5-36-ல் திருச்சியில் தோழர்கள்: ஈ. வி. ராமசாமி டபிள்யூ. பி. ஏ. சௌந்திரபாண்டியன் இவர்கள் அழைப்புக்கு இணங்கி கூட்டப்படும் கூட்டத்துக்கு இச்சங்கத்தின் ஆதரவில் பி. எம். முருகண்ண கவுண்டர், ஜீ. அரசப்பன், எ. கோவிந்தசாமி ஆகியோரை பிரதிநிதிகளாக அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

(ஒ-6)

கடிதங்கள்

மிஷனரிகளும், மத மாற்றமும்

ஆசிரியர்: "விடுதலை",

ஐயா!

கிறிஸ்துவ பாதிரிமார்கள் மத மாற்றஞ் செய்து வருவது, இப்போது கண்கூடாகும் ஓர் நூதன விஷயமன்று. அநேக நூற்றாண்டுகளாக அன்னிய நாட்டு மிஷனரிகள், ஜாதி இந்துக்களால் புறக்கணிக்கப்பட்டும், இம்சிக்கப்பட்டும் இருந்த ஹரிஜனங்களில் அநேகமாயிரமானவர்களை மத மாற்றஞ் செய்தும், அவர்கட்கு கல்வி முதலிய விஷயங்களில் தங்களுடைய சொந்தப் பணத்தைக் கொண்டு அபிவிருத்தி செய்து வந்திருப்பது உலகறிந்த உண்மை. இத்தனை வருடங்களாக நடந்து வரும் மத மாற்றத்திற்காக எவரும் ஆட்சேபனை செய்யாதிருந்து, இப்போது வெகு சில காலமாக மட்டும் இவ்வித மாற்றங்களில் அனுதாபங் காட்டி நுழைந்து வாதாட வருவது பெரும் வியப்பைத் தருகின்றது.

மேலும், ஹரிஜனங்களின் முன்னேற்ற முதலிய விஷயமாக பத்திரிகை மூலமாகவும், பிரசங்க மேடை மூலமாகவும் வெளிப்படுத்தி வரும் வெறும் வாய்ப் பேச்சை விட்டு உண்மை மனத்தவராய், ஆலயப்பிரவேசமும், கடவுள் தரிசனமும் அவர்களுக்கு வருவித்து, தங்களைப் போலவே ஹரிஜனத்தாரையும் பாவித்து சம நிலையில் வைத்திருக்கும்போது மிஷனரிகள் தலையிட்டால், அப்போது இவ்வித உணர்ச்சி யுண்டானால் கவனிக்கத் தகுந்ததாகும். ஆனால் அதற்கு முன்னேற்படும் உணர்ச்சிகளெல்லாம் வெறும் ஓசாய் அனுதாபமேயாகும்.

இந்த ஏழை ஹரிஜன மக்கள் அதிக கஷ்டத்துடன் சம்பாதித்த தங்கள் சொந்த பணத்தையே செலவு செய்து, ஆலயஞ் சென்று கடவுளைவணங்கலமெனும் போவாவுடன் போயும், ஆலயப்பிரவேசமுமின்றி, கடவுள் தரிசனமுமின்றி மிருகங்களைப் போல தாழ்த்தப்படுவதைப் பார்க்கிலும், தங்களுக்கு ஓர் கஷ்டமுமின்றி, மிஷனரிகளின் சொந்த செலவில் ஆலயப் பிரவேசமும், கடவுள் வணக்கமும் கிடைப்பது எவ்வளவோ மேலல்லவா? இத்தகைய ஜீவகாருண்ய பேருபகாரத்தைத் தீதானதென்று சொல்லித் தடுக்க யார் முன்வருவர்?

எப்போது ஹரிஜனங்கட்கு பூரண சுதந்தரம் கொடுக்கும் தனித்தொகுதி முறையைத் தள்ளி, பொதுத் தொகுதி யிருக்கவேண்டுமென்று காந்தியார் முதலியவர்கள் கங்கணங்கட்டி [illegible] அப்போதே இவ்வரிஜனங்கட்கு கேவலம் சரசையுமின்றி, சமநிலையுமின்றி எப்போதுமுள்ள அடக்குமுறையிலிருந்து அடிமைகளாகவே யிருக்க வேண்டும் எனும் உட்கருத்து மாறவில்லை யென்றும், இவர்களை இந்துக்களுடன் சேர்த்துக் கொண்டால் அதிக ஜனத் தொகையால் தங்களுக்கு அரசியல் விஷயங்களில் அனுகூலமாகும் எனும் எண்ணத்துடன் இவ்வித சூழ்ச்சி ஏற்பட்டிருக்கிறதென்றும் இப்போது ஹரிஜனங்கட்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிந்திருக்கின்றது. ஆகையால் இவ்வித நாய் அனுதாபத்திற்கும் ஏமாறுமளவில் கண்விழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நன்கு உணரவும். ஆதலால் சுயநலப் பிரியர்களாகிய சில ஹரிஜனப் பிரதிநிதிகளின் வார்த்தைகளைக் கேட்டு நம்பி எல்லா ஹரிஜனங்களும் தங்களை நம்பியிருக்கிறார்களென்று நினைப்பது முழு மோசமேயாகும்.

ஆதலால், பின் பயமுறுத்தலால் ஜாதி இந்துக்களுக்குப் பாதகமாகவே முடியுமேயன்றி, ஒரு போதும் சாதகமாகாது என்றும், ஒவ்வொரு ஹரிஜனக் குடும்பத்திலும் ஒரு கிறிஸ்தவன் இருக்கிறான் என்பதையும் திட்டமாய் தெரிந்து கொள்ளவும்.

பீ. எம். தாஸ்.

இந்துதேச சரித்திரங்களும், முஸ்லீம் மன்னர்களும்

ஆசிரியர்: "விடுதலை",

ஐயா,

பிராமணர்களால் எழுதப்பட்ட பல இந்து தேச சரித்திரங்கள் தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் பாடப் புத்தகங்களாக வைக்கப் பட்டிருக்கின்றன. அவைகளில் முஸ்லிம் மன்னர்களைப் பற்றிச் சொல்லும் விருத்தாந்தங்கள் பெரும் பாலும் பொய்யானவை. முஸ்லிம் மன்னர்கள் மீது கொண்ட துவேஷம் காரணமாகவே அந்நூலாசிரியர்கள் பற்பலக் கதைகளைக் கட்டிவிட்டிருக்கின்றனர். தேச முன்னேற்ற காரணமாய் ஒவ்வொரு மதத்தவரும் அன்னிய மதத்தவர்களைக் கௌரவிக்க வேண்டுமென கூறப்படும் இது போழ்து இம்மாதிரியான துவேஷப் பிரசாரம் பள்ளிச் சிறுவர்கள் மத்தியில் நடந்தால் நாடு எங்ஙனம் முன்னேற்ற மடையும்? முஸ்லிம் மன்னர்களைக் குறித்துச் சொல்லப் பட்டிருக்கும் சரித்திர சம்பந்தமான விஷயங்களைப் பற்றி யான் இங்கு அதிகம் எழுத முற்படவில்லை. எனினும் ஒரு விஷயத்தை மாத்திரம் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அக்பர், சிவாஜி, அசோகர் ஆகிய, மும்மன்னர்கள் நீங்கலாக மற்றவர்களின் பெயரை "அவன்" என்றே எழுதப்பட்டிருக்கிறது. கீழானவர்களைத்தான் அவன் என்று சொல்லுவது சர்வ சாதாரணம். அப்படியானால், இந்நூலாசிரியர்கள் அபிப்பிராயத்தில், மற்றும் முஸ்லிம் மன்னர்கள் கீழானவர்களா? அரசியல் விஷயத்தில் அக்பருக்கும், அவுரங்கசீபிற்கும் வித்தியாசமிருக்கலாம். எனினும், அரசன் என்ற முறையில் எந்த வித்தியாசமும் இருக்கக் காரணமில்லை. எனவே, சரித்திரக்காரர்கள் எல்லா முஸ்லிம் முஸ்லிமல்லாதவர்களைப்பற்றி எழுதும்போதெல்லாம் கௌரவமாகவே எழுதவேண்டும். "அவன்" என்பது ஒருமைப் பதமே தவிர கீழான பதமல்ல என்று ஒரு நூலாசிரியர் என்னிடம் வியாக்கியானம் கூறுகிறார். அப்படியானால் அக்பரையும், அசோகரையும், சிவாஜியாரையும் "அவன்" என்று எழுதினாலென்ன? இது போதுள்ள முஸ்லிம் மாணவர்கள் இச்சரித்திரங்களைப் படிக்கும்போது அதிக மனவருத்த மடைகின்றார்களென்றும், உபாத்தியாயர்களுக்குப் பயந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி பயந்து கொண்டிருப்பது முஸ்லிம் மாணவர்களின் கோழைத்தன மென்றே யான் கூறுவேன். இம்மாதிரி முஸ்லிம் மன்னர்களைப் பற்றி அவதூறாக எழுதப் பட்டிருக்கும் எந்த சரித்திரப் பாடங்களையும் முஸ்லிம் மாணவர்கள் படித்து பரீட்சை எழுதக் கூடாது. இது சம்பந்தமான குறைகளை உடனே கல்வி அதிகாரிக்கு, அல்லது, கல்வி மந்திரிக்குத் தெரியப் படுத்தவேண்டும்.

மறைமலை யடிகளின் "அறிவுரைக் கொத்து"க்கு மறுப்பெழுதிய பிராமணர்களும் அவர்களுக்கு வக்காலத்துவாங்கிப் பேசிய பத்திராதிபர்களும் இது விஷயத்தின் ஏன் கவனம் செலுத்தவில்லை.

இப்புத்தகங்களெல்லாம் பெரும்பாலும் (Text Book Committee) துரைத்தனத்தால் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றன. புத்தகக் கமிட்டியாருக்காவது இவ் விஷயங்கள் தென்படாமற்போனதேன்?

இவர்களைப் பற்றி முஸ்லிம்கள் உடனே கவனம் செலுத்த வேண்டும். மதபக்திகொண்ட (பணத்துக்கு ஆசை கொண்டு கோலம் பூண்டவர்களும், பிராமணர்களுக்கு நதான்று கூறுபவர்களும் ஒரு நாளும் இதைக் கவனிக்க மாட்டார்கள்) முஸ்லிம் பத்திராதிபர்களும் சட்ட சபை முஸ்லிம் மெம்பர்களும் உடனே இவ்விஷயத்தில் கிளர்ச்சி செய்து முஸ்லிம் மன்னர்கள் மீது சுமத்தப் பட்டிருக்கும் குறைகளை நீக்குவார்களாக!

வ. மி. ஷம்சுத்தீன் சாஹிப்,
'டர்ஸ் மன்ஸில்',
ஸ்ரீ வைகுண்டம்.

ஒற்றுமை

ஒரு இனிய மாதப் பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 1. தனிப்பிரதி விலை அணா 1. எல்லா ஸ்டேஷன் புத்தக சாலைகளிலும் கிடைக்கும். மாதிரிப் பிரதி இலவசம். சந்தாதாரர்களுக்கு காலண்டர் இனாமாகக் கொடுக்கப்படும்.

ஒற்றுமை ஆபீஸ்,
சைதாப்பேட்டை, மதறாஸ்.

குணமாகாத மூத்திர வியாதிகளுக்குப் புதிதாகக் கண்டுபிடித்திருக்கும் அற்புதமான சிகிச்சை!

வெட்டை ரோகத்திற்கு சிறந்தது!!

வெட்டைரோக கிருமிகளை கொல்லக்கூடியது!

"கோனு கில்லர்" (ரிஜிஸ்டர் செய்யப்பட்டது)

சேவல் மார்க்கை பார்த்து வாங்கவும்

இதுதான் இப்பொழுது எடுக்க ஔஷதம். ஆங்கில, உள்நாட்டு வைத்தியர்கள் உங்களைக் குணப்படுத்தியிராவிடில் வாக்லைன்களும், இன்செக்ஷனும் பலன் தந்திராவிடில் கடைசியாகவேனும் எமது கோனோ-கில்லர் என்னும் ஔஷதத்தைப் பரீக்ஷித்துப் பாருங்கள். உங்களுக்கு வியாதி கண்டு எவ்வளவு காலமிருந்தாலும் அது குணப்படுத்திவிடும். ஸ்திரீகள், புருஷர்கள் இவர்களுக்கு ஏற்படும் மூத்திர வியாதிகளுக்கும், எல்லாவித வெட்டை ரோகங்களுக்கும், மூத்திரம் அதிகமாக இறங்குவதற்கும், மூத்திரம் பெய்கையில் ஏற்படும் கஷ்டம் நிவர்த்தி செய்யவும், மூத்திரப் பையில் ஏற்பட்டிருக்கும் அழற்சியைப் போக்கவும், வெட்டை வியாதிக் கிருமிகளால் ஏற்படும் வேறு பல வியாதிகளை போக்கவும் இது சிறந்த மருந்து. போலி மருந்துகள் வாங்காதீர்கள்! வாங்கும்போது எங்கள் கோழி ரேக்கைப் பார்த்து வாங்குங்கள்.

போலிகளைப்பற்றி உஷார்!

50-மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு ரூபா. 3. வி. பி. சார்ஜு வேறு. வெளி நாட்டு கேயார்கள் ரூபா. 4—8—0 முன் பணம் அனுப்பவும்.

டாக்டர் டி. என். ஜஸானி, கிர்காம் பாக் ரோடு, பம்பாய், 4.

Dr. D. N. JASANI, Girgaum Back Road., BOMBAY, 4.

சென்னை ஏஜண்டு:—நாதா & கோ.,
நெ. 52, கவினியப்ப நாய்க்கன் தெரு, P. T., சென்னை.

F. M. S. & S. S. ஏஜண்டு:—N. O. A. முகம்மது இப்ராஹிம் & பிரதர்ஸ்,
நெ. 193, காவா ரோட், சிங்கப்பூர்,

என். ஏ. காதர் மெய்தீன், சிட்டுக் குருவி மெடிகல் ஸ்டோர்.
நெ 39. Old Butcher Street, Pettah, கொழும்பு.

உங்கள் வறுமை கஷ்டம் நீங்கி அதிர்ஷ்டம் உண்டாகிவிடும்.

ரசமணி

இது அற்புத சக்தி வாய்ந்தது. உடைத்து கீறப் போகும் இந்திரியம் இறுகி தாதுபுஷ்டியில் யானை பலம் உண்டாகும். விந்து ஸ்தம்பித்து நிற்கும். தொழில் விருத்தியாகி செல்வம் உண்டாகும். கொடிய பீடைகள், கஷ்டம், வறுமை நீங்கிவிடும். நினைத்த காரியங்கள் சித்திக்கும். குடும்பம் க்ஷேமமடையும். 25 ரூ. மணி 1-க்கு விலை ரூ. 10.

இதைவிட தாதுபுஷ்டி வல்லமையும் அதிப்பிரகாசம் ஜொலிக்கும் அற்புத ஸ்பெஷல் மணி ரூ. 50. சாதா மணி ரூ. 17.

தீராத குஷ்டம் திமிர் மதமதப்பு மாயமாய் மறைந்துவிட்டது.

சித்தாதி யெண்ணெ

குஷ்டம், குழிப்புண், குறைநோய், சர்ம குஷ்டம், விஷ குஷ்டம், விஷகிர தேமல், ஊறல், சொறி படர்தாமரை, வெண் குஷ்டம் வெண் புள்ளி, கருங் குஷ்டம், செம்மேகத் தடிப்புகள் மத மதப்பு-திமிர் சூலை, சோரி, மூலக்கு சூலை, பவுத்திரம், ஆறாத ரணங்கள், கால் ஆணி, முதலிய மேக வியாதிகள் ஆச்சரியமாய் குணமாகிவிடும்.

இந்த வியாதிக்கு இது கைகண்ட உயர்ந்த மருந்து.

1 புட்டி ரூ. 1. [illegible]களுக்கு ரூ. 5

கே. எஸ். பதி வைத்தியசாலை பழனி, S. I. R.

விடுதலை யாவர்க்கும் யாதெனக் கேட்பாரின்
கேடுதவ நேசி நகரில் நின்று
[நாட்டினரெல்லாம்
பொருள் சுகப்போகங்கள் சர்வமும் பெற்ற
நிகரில் வாழ்நலமேயாம்

விடுதலை

VIDUTHALAI

மலர்-1] சென்னை: (25-4-1936) தாதுவருஷ சித்திரைமீ 13உ சனிக்கிழமை [இதழ்-93

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்ற நின்ற
செம்மொழியை திருமொழியை
[தேன்மொழியை
தனித்தியங்கும் ஆற்றலுள தொன்மொழியை
[அமிழ்தினைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
[அநுதினமும் பழக்கம் செய்வீர்.

"தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி"

:o:

திரு. எஸ். கே. சீனிவாசன் விடைக்குவிடை

'ஐயர்' யாவர்?

(திரு. வி. தில்லைச் சிதம்பரனார்)

"தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி"யைப்பற்றி திரு. ஐயங்கார் விடுத்த வினாக்கட்கு உயர் திரு பாரதியார் 11-3-36 ல் ஜோதித் தாளில் விடுத்த விடைகட்கும் கேட்ட கேள்விகட்கும் பதில் சொல்ல முடியாமல் மன்னிப்புக் கேட்டுக் கொள்வோமா? அப்படி மன்னிப்புக் கேட்டுக்கொண்டால் நமது தமிழாசிரியர் பதவிக்கு ஏதாயினும் இழுக்கு நேரிடுமோ? என்று அச்சங் கொண்டிருக்கின்ற ஐயங்காருக்குச் சார்பாகத் திரு. சீனிவாசன் அவருடன் கலந்து கொண்டார்.

இவர் கிலே, இலைக்கு மண்ணுங்கட்டி ஆதாரம், மண்ணுங்கட்டிக்கு இலை ஆதாரம் என்பதை ஒக்கும். பெயலும், புயலும் கலந்தகாலத்து இலை மண் எங்கேயுறுமோ அங்கேயே. உண்மைக் கூற்றுகள் வெளிவர வெளிவர அவர்கள் பொய்மைக் கூற்றுத் தாக்கப்பட்டுப் பொடிப் பொடியாகப் போகும் என்பதில் ஐயமில்லை. இப்பொழுதும் தகர்ந்து கொண்டே வருகின்றதென்பதை ஆய்ந்தறிவார்களாயின் அவர்களுக்கே நன்கு புலனாகும்.

இனி, திரு. சீனிவாசன் கூறிய ஆராய்ச்சியிற் சென்று பார்ப்போம்: ஆராயுங்கால், கற்பு என்பதற்குப் பொருள் கூறுதல் என் நோக்கமல்ல. இக்களவு, கற்பு முதலியவைகட்கு முன்னமே சில பேராசிரியர்கள் பொருள் கூறி இருக்கின்றார்கள். மற்றும் திரு. சீனிவாசன் அவர்கள் எழுதியவை பொருத்தியவைதாமா? என்பதை ஆய்வது என் நோக்கமாகும். இவர் கூற்றால் இவர் மிக நன்றாகத் தொல்காப்பியத்தை எழுத்தெண்ணிப் படித்தவராகக் காணப்படுகின்றார். ஆனால், பொருளொன்றும் படிக்கவில்லை என்பது அவர் கூற்றிலேயே நன்கு விளங்கும். அன்றியும், தாம் ஆங்கிலத்திற் கண்ட உண்மையான உள்ளவாறே கூறாது, ஒரு சாராகக் கூறுதலை அவர் பெருந் தன்மைக்குச் சிறிது இழுக்கை உண்டாக்குகின்றது என்பதைத் தமிழாசிரியரும், ஆரியரும் நன்குணர்வார்கள். ஆரியர் வெளியிட்டுக் கூறிவிட்டாலும் அவரவர் மனத்தில் இஃது உண்மைக் கூற்றே என்றுணர்வர். அக்கூற்றைப் பிறழக் கொண்டு [illegible] இடர்ப்படுகின்றார் அதை என்னென்று ஆய்வோம்.

கற்பு

"கற்பு என்பதைத் தொல்காப்பியர் இருவகைப் பொருள்களில் வழங்குவதைக் காணலாம். ஒன்று, களவொழுக்கத்தின் பின் நிகழும் திருமணமாகும். மற்றொன்று, நிறையுடைமை, பதிவிரதா தர்மமாகும். இவ்வாறு ஆசிரியர் கூற, இவ்விரண்டிற்கும் உள்ள வேற்றுமையை அறியாது மறந்து இப்பொழுது [illegible] வாதமெல்லாம் நடைபெறுவது வருந்தத்தக்கது. அப்படியான இப் பொருள் வகையினை யுணர்ந்தோர் இக் கிளர்ச்சியில் ஒருபோதும் கலவார்" என்று கூறினார்.

இந்நிலையில் எழுதிவந்த ஆசிரியர்களில் ஒருவராவது கற்பு இருவகையல்ல என்றாலும், அஃது இருபாலருள் ஒருவருக்கே உரியது என்றாவது கூறியது யான் கண்டதுமில்லை. கேட்டதுமில்லை. அப்படி இவர் கூறுவதற்குச் சான்று யாண்டுளதோ தெரியவில்லை. அன்றி, ஆரியர் மேலோரல்லவா? அக்காரணத்தால் ஒருவர் சிந்தித்த செய்தியை அறிவு மாற்றல் உள்ளவராக இருத்தல் வேண்டும். இவர் தம் மதிப்புரையில் எடுத்துக் காட்டிய பழமொழி இவர்க்கே சாலும் என்பதில் ஐயமில்லை. அதாவது "தன்னியலில் நடைபெற்றுவந்த களவொழுக்கத்தில் பொய் வழுக்கள் இடையில் தோன்றினமை பற்றி, சடங்கை ஏற்படுத்தி மறுக்க முடியாதபடி வற்புறுத்தினர் என்பதே முடிவாகும். இவ்வாறன்றி, ஆரிய நாட்டார் செய்த குற்றத்திற்காகத் தென்னாட்டார் கீழ்ப்படுத்தற்கு உள்ளாக்கப்பட்டனர் என்பது "தென்னைமரத்தில் தேள் கொட்டப் பனைமரத்தில் நெறி கட்டியது" என்பதை யொக்கும்" என்றார். அக் கூற்றை அப்படியே திருப்பி "தமிழ் மக்களை ஏன் பழித்துரைத்தீர் ஐயா? அவ்வாறு நீவிர் கூறுகின்ற கூற்றுக்கு ஆதாரங் காட்ட முடியுமா?" என்று கேட்டால், "கற்பு இருவகைப் படும் ஆசிரியர் அவ்வாறுதான் ஆளுகின்றார். அக்கூற்றையறியாது மாறுபட்டுப் பேசுகின்றனர்" என்றெல்லாம் பிதற்றுகின்றாரே யல்லாமல் கேட்ட கேள்விக்கு விடையிறுத்தாரில்லை. அதனால், அவர் கூற்றுக்கே அப்படி மொழி பொருந்தும் என்பதும், இதை அவர் மறுக்க முடியாதென்பதும் திண்ணமாகும்.

"பொய்யும் வழுவும்"

என்று தொடங்குகின்ற சூத்திரத்தின் பொருளைத் தெளிய ஆராயாத காரணத்தாலும் இக் கிளர்ச்சி எழுந்ததென்றார். இச் சூத்திரத்திற்கு தாம் கண்டவற்றையும் மனதில் நினைத்த வற்றையும் காவாது உள்ளதை உள்ளவாறே கூறுவதால், "ஆரியப் பகைவர்" என்று கூறப்படும் என்று அரும் பெறற் பேராசிரியர் உயர் திரு. சோமசுந்தர பாரதியார் 11-3-26 ஜோதித் தாளில் கூறிய செம்மை சான்ற பொன்னுரையை உற்று நோக்குவாராயின் இவ்வாறு பிதற்றார். அவ்வுரை வருமாறு:—

"பொய்யும் வழுவும் வழக்கத் தோன்றின்மையால் ஐயர் (அறிஞர்) கரணங்களை மனத்துக்கு வகுத்தனர் என்பதே. கரணம் என்பது மணச் சடங்கு. சடங்குகளின்றி திருமணம் நடந்து வந்தது; ஆனால், பின்னர் பொய்யையும் வழுவையும் தடுப்பதற்கு ஐயர் வெளிப்படைச் சடங்குகளைத் திருமணத்திற்கு விதித்தனர். அன்றித் தமிழருக்குள் ஒழுக்குடைய மணமோ கற்போ இல்லையெனக் கூறவில்லை" என்று எழுதியதை யறியாது என்னென்னவோ கூறினார் என்று வசவுச் சொற்களை நிறைத்தாரேயல்லாமல், உண்மை இன்னது, ஐயங்கார் தான் தவறிவிட்டார் என்று கூறுதற்கு அஞ்சுகின்றார்.

அஞ்சாமைக் கஞ்சுவது பேதைமையன்றோ? மற்றும் பொய் வழுக்கள் இன்ன என்பதை விளக்க, உயர் திரு. பாரதியாரின் கூற்றைக் கண்டு நடுங்கி உண்மையை யாராயாது எடுத்துக் கொண்டு "முன்னதாயின் ஐயங்கார் கூற்றை ஒட்டியதே, பின்னதாயின் பிறரோடான ஒழுக்கத்தைப் பார்த்து தூய்மையான தமிழ்மக்களைப் பழிப்பதுபோல அவர்க்கொரு நிந்தையேற்படுத்தினர் என்பது முற்றும் அசங்கதமாகும்" என்றெல்லாம் பிதற்றுகின்றார். உயர் திரு. பாரதியார் கூறியதில் இன்னதவறு என்பதை எடுத்துக்காட்ட முடியாது அவர் என்ன பொருளில் வழங்குகின்றாரோ தெரியவில்லை என வாய்ப்பறை யறைகின்றார். இச் சூத்திரப் பொய்வழுக்கட்கு உயர் திரு பாரதியார் எழுதிய பொருள் விளங்காத சீனிவாசன், உயர் திரு. பாரதியார் கூறிய பொன்மொழிகளை எவ்வாறு மறுத்து தொல்காப்பிய ஆராய்ச்சியை நிலைநிறுத்த முன் வந்தார்? இவர் கூற்று நகைக்கிடக் கருதலேயன்றி, நரி தன் வாலைக் கொண்டு கடலையாழம் பார்க்கத் தலைப்பட்டது போலாம் என்ற பழமொழியையும் [illegible] உள்ளடக்கியுள்ளது.

மற்றும் பொய்யும் வழுவும் என்ற சூத்திரத்தை ஆய்ந்த திரு. ஐயங்கார் இறுதியில் இழுக்கமான அப்பொய் வழுக்களில் இராக்கதம் போல்வனவும் அடங்கும் என்று கூறினார். அடங்குமென்றாலும் ஆசிரியர் கூறினார் என்பதே அவர் கருத்தாகும். இக்கூற்றை திரு சீனிவாசன் எடுத்துக் கொண்டு "பொய் வழுக்களில் இராக்கதமும் அடங்குமென்று சொல்லன்றி, அதுவே தமிழ் ஒழுக்கமாயாண்டும் எழுதியவல்லர். அங்ஙனமாகவும் தொல்காப்பியர் கூறாத இராக்கதத்தைத் தமிழ்நாட்டில் இருந்ததாக ஐயங்கார் கூறித் தமிழ் ஒழுக்கத்தைப் பழித்துவிட்டார் எனச் சிலர் கூறுவர்" என்று அவர் பழிக்காதது போலவும், அவருக்கு இவர் ஆற்றில் இறங்குதற்கு மண் குதிரை கொடுப்பது போலவும் தட்டுத்தடுமாறி எழுதுகின்றார். பாவம், அப்படிக் கூறுவதன் கருத்தென்னே? அவ்வன்பரே நடுநிலைமையிலிருந்து உளக்கை ஒழி வழிப்படுத்திச் சிந்திப்பாராயின் உண்மை விளங்கும். அவர் கூறிய பொய்மொழியை இவர் எவ்வளவு மறைத்தாலும் தமிழறிஞர் உணராதுவிடார்.

(தொடரும்)

சமீபத்தில் பட்டிவீரன்பட்டியில் தோழர் சின்னசாமிக்கும், மிஸ். அனுசூயாபாய்க்கும் சுயமரியாதைக் கொள்கைப்படி திருமணம் நடைபெற்ற பொழுது எடுக்கப்பட்ட படம்.

செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

சங்கரநாயினார் கோவில், ஏப், 23

மேற்படி சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு விழா சங்கரநயினார் கோவில் செங்குந்தர் மாதாவின் கோவில் தெருவில் அமைந்திருக்கும் பந்தலில் 26-4-36ல் வழக்கறிஞர் திரு. எஸ். பழனியாண்டி முதலியார் பி.எ. தலைமையில் நடைபெறும்.

அவ்வமயம் நெல்லை ஜில்லா போர்டு அங்கத்தினர் திரு. சங்கரசுப்பையா முதலியார் விழா வைபவத்தை ஆரம்பித்துவைக்க இசைந்துள்ளார்.

திருநெல்வேலி வக்கீல் திரு. வி. எஸ். சங்கரசுப்பிரமணிய முதலியார் பி.எ. பி.எல். "கைத்தறி நெசவாளர் தற்கால நிலைமை" என்பது பற்றியும், திரு. எஸ். ஆறுமுக முதலியார் "கல்வி" என்பது பற்றியும் திரு. [illegible] "சீர்திருத்தம்" பற்றியும் பேசுவார்கள்.

—காரியதரிசி.

ராஜாங்க சபை

புதுடில்லி, ஏப், 20

ராஜாங்க சபையின் அடுத்த கூட்டம் அநேகமாக அடுத்த செப்டம்பர் மாதம் 14-ந் தேதி ஆரம்பமாகக் கூடுமெனத் தெரிகிறது.

50 வருஷங்களுக்கு மேலாக தென் இந்தியாவில் பிரசித்தி பெற்றுள்ள தொழிற்சாலை. 50

நம்பிக்கை! நாணயம்!! உத்தரவாதம்!!!

திருடர்களின் சத்துரு!

திடமான பெட்டிகள்!

எல்லா சைஸ்களிலும் எப்பொழுதும் கிடைக்கும்.

விலை விவரங்களுக்கு இன்றே எழுதுக:

அ. வரதராம் ஆச்சாரி சன்ஸ்,
இரும்புப் பெட்டி தொழிற்சாலை,
நாகல் நகர், திண்டுக்கல், S.I.

பண்ட் அண்டு கோ.

குரோம் லெதர் ஒர்க்ஸ்

1890-ல் ஸ்தாபகம்.

உயர்ந்த சாமான்!

குறைந்த விலை!

(தங்க மெடல் பரிசுபெற்றது.
தென்னிந்தியாவிலேயே எங்களிடமிருந்துதான் ஏராளமான செருப்புகள் தயாராகின்றன.

மொத்த விற்பனைக்கும், சில்லரை விற்பனைக்கும் நம்பிக்கையான இடம். தோல் சரியானபடி அதிகநாள் உழைப்பதற்காக விலையுயர்ந்த சாமான்களால் பதனிடப்பட்டது.

170, பிராட்வே, சென்னை.

ஒற்றுமை விடுதி

தியாகராய நகர், சென்னை.

தூய உடலார் பலர் பருத்தி நூல்காரர் விடுதியில் சாப்பிடுவதாலும், பருத்தி நூல்காரர் செய்தித் தாளை வாங்குவதாலும், பருத்தி நூல்காரர் பலருக்கு வேலை அளிக்கிறார்கள். ஆனால், நம்மவர்களுக்கு வேலை வேண்டும்பொழுது மாத்திரம், பருத்தி நூல்கார விண்ணப்பக்காரர்களை ஒதுக்கி விட்டுத் தங்களையே நியமிக்க வேண்டுமென உரிமை பாராட்டுகிறார்கள்.

அவர்கள் செயல் அறிவுடைமையாமா?
அவர்கள் பாராட்டும் உரிமை ஒப்புக் கொள்ளக்கூடியதா?

ஆராய்க.

இ. சோமசுந்தரம்,
அமைச்சர்.

சே. தெ. நாயகம்,
தலைவர்.

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN, AT THE JUSTICE PRINTING WORKS, 14, MOUNT ROAD, MADRAS.

விலை அரை அணா 8 பக்கங்கள் மலாய் நாட்டில் 5 சதம் Regd. No. M 3298.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா
உள்நாடு

1 மாதம்	... 0 6 0
3 மாதம்	... 1 0 0
6 மாதம்	... 1 14 0
1 வருடம்	... 3 10 0

சென்னைக்கு

1 மாதம்	... 0 4 0
3 மாதம்	... 0 10 0
6 மாதம்	... 1 4 0
1 வருடம்	... 2 6 0

விடுதலை
VIDUTHALAI
(வாரம் இருமுறை வெளிவரும்)
ஆசிரியர்: டி. ஏ. வி. நாதன்.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா.
வெளிநாடு

1 மாதம்	... 0 10 0
3 மாதம்	... 1 14 0
6 மாதம்	... 3 12 0
1 வருடம்	... 7 4 0

சர்க்கார், முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டுகளுக்கு:

உள்நாடு:	வருடம்	ரூ. 7 8 0
சென்னை:	"	ரூ. 4 8 0

மலர்-1] சென்னை: (29-4-1936) தாதுஹூ சித்திரைமீ 17உ புதன்கிழமை [இதழ்-94

அட்டிஸ் ஜனங்களுக்கு இத்தாலியர் பயமுறுத்தல்

உடனே சரணடையுங்கள்; இல்லாவிட்டால்.....!

"படுகொலை செய்யப்படுவீர்கள்— வீடுகள் தரைமட்டமாக்கப்படும்"

விமானங்களிலிருந்து துண்டுப் பிரசுரங்கள்

தலைநகரை வளைத்துக் கொண்டனர்

அட்டிஸ் அபாபா, ஏப், 28

'இத்தாலியரிடம் உடனே சரணடையுங்கள். இல்லாவிட்டால் உங்களை படுகொலை செய்யப்படுவது மட்டுமின்றி உங்கள் வீடுகளும் தரை மட்டமாக்கப்படும்' என்ற பயமுறுத்தல் வார்த்தைகளடங்கிய துண்டுப் பிரசுரங்கள் நேற்று காலை இத்தாலிய விமானங்களால் தலைநகரில் போடப்பட்டன. அவ்விமானங்களின் இறக்கைகள் கட்டிடங்கள் படக்கூடிய விதமாக அவ்வளவு கீழாகப் பறந்தது எதியோப்பிய மக்களிடைமிருந்த கிலியை ஏற்படுத்தியுள்ளது. அவ்விமானங்கள் மீது எத்தகைய துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்படவில்லை.

எதியோப்பியர் இத்தாலியர் ஆதிக்கத்திற்கு உட்படுவார்களேயானால், அவர்களுக்கு நாகரிகமும், சுபிட்சமும், வர்த்தகமும் இத்தாலியர்களால் தரப்படுமென்றும், வட எதியோப்பியா முழுமையையும், ஒகாடனையும் இத்தாலியர் பிடித்துவிட்டதாலும், கூடிய சீக்கிரத்தில் ஆண்டவன் கிருபையால் அட்டிஸ் அபாபாவிலும் நுழையப் போகிறபடியாலும், எதிர்ப்பதில் பிரயோஜனமில்லையென்றும், ஆகவே தங்கள் ஆயுதங்களைக் கீழ் வைத்துவிட்டு தங்களை வரவேற்பதே உத்தமமான வழியென்றும், அப்பிரசுரங்களில் மேலும் கூறப்பட்டிருக்கிறது.

சாஸா பேனுவுக்கருகில் கடும்போர் நிகழ்ந்து வருவதாகவும், எதியோப்பியத் துருப்புகள் மூன்று பக்கங்களிலும் இத்தாலியர்களால் வளைக்கப்பட்டுக் கொண்ட பொழுதிலும், சரணடைய மறுத்து வருகின்றனரென்றும், இன்னும் தலைநகரை அடைய 70 மைல் தூரம் தான் இருந்து வருகிறதென்றும் தெரியவருகிறது.

இத்தாலியர் அப்போரில் வெற்றியடையக் கூடுமானால் ஹாரார்-ஜீபூதி ரயில்வே அவர்கள் வசமாகிவிடும். அப்படியாகும் பக்ஷத்தில் வடக்கிலும், தெற்கிலுமுள்ள இத்தாலியத் துருப்புகளுக்குள் அட்டிஸ் அபாபாவையார் முதலில் அடைவதென்ற பந்தயம் நடைபெறக்கூடும்.

எதியோப்பியா இளவரசி

உலக மாதர்களுக்கு வேண்டுகோள்

'காலம் கடப்பதன் முன் உதவி புரியுங்கள்'

அட்டிஸ் அபாபா, ஏப், 28

இத்தாலியரின் விஷப்புகை யுத்தத்தையும், கொடிய ஆக்கிரமிப்பையும் தடுக்க தக்க நடவடிக்கைகள் உடனே எடுத்துக் கொள்ளும் வரையில் தங்கள் தங்கள் தேசத்தின் சர்க்காருக்கு ஓய்வே கொடுக்க முடியாமலபடி கிளர்ச்சி செய்துவரும்படி நீகஸின் (எதியோப்பிய சக்கரவர்த்தி) குமாரியாகிய இளவரசி ஷாகாய், உலக மாதர்களுக்கு மிகவும் உருக்கமான வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

அதற்காக அடிக்கடி கூட்டங்கள் கூட்டியும், விண்ணப்பங்கள் விடுத்தும், குடி அரசுத் தலைவர்களுக்கும், பிரதம மந்திரிகளுக்கும் நேராக எழுதும் படியும் இளவரசி உலக மாதர்களை கேட்டுக் கொண்டுள்ளார். அவ்விதம் மேற்படி தேசங்களின் சர்க்கார் வற்புறுத்தப் படுவார்களேயானால், தான் சேகரம் செய்து வைத்திருக்கும் விஷப்புகையை யெல்லாம் அழித்துவிடும்படி இத்தாலியை சர்வதேச சங்கம் கேட்கும்படி செய்யக் கூடுமென அவர் கூறுகிறார். "காலம் கடந்து போவதற்கு முந்தி, எங்கள் துர்ப்பாக்கிய நாட்டிற்கு உண்மையில் ஏதாகிலும் உதவி செய்யக் கூடிய முறையில் நீங்கள் ஒன்று சேர்ந்து செய்யும்படி ஆண்டவனை முன்னிட்டுக் கேட்டுக் கொள்கிறேன்."

மன்னரின் எதிர்பாரா விஜயம்

'ஆக்ஸ் போர்டு' வழியாக எட்வர்டு மன்னர் மோட்டாரில் போகையில், தமது பழய கல்லூரியாகிய மாக்டலன் காலேஜுக்கு திடீரென விஜயம் செய்து, அரைமணி நேரம், தாம் முன்பு இருந்துவந்த அறையைப் பரிசோதித்து, நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். கையில் கொண்டு போயிருந்த காமிராவைக் கொண்டு பல போட்டோக்கள் எடுத்தாராம். காலேஜ் அதிகாரிகளுக்கு அரசர் விஜயம் அறிவிக்கப் படவேயில்லை. கல்லூரி பிரின்ஸ்பால் திரு. ஜி.எஸ். கார்டன் வெளியே சென்றிருந்தார்.

100 மணி நேரம் கண்ணாடி முன்

வைசிராயினியின் தர்பார் டிரஸ்

ஐந்து மாத காலமாக, மொத்தத்தில் சுமார் 100 மணி நேரம் தனது புதிய தர்பார் உடைக்காக நிலைக்கண்ணாடி எதிரில் உட்கார்ந்திருந்ததாக, வைசிராயினி கூறினர்.

பச்சைமரம் தீ பிடித்த அதிசயம்

சென்னை, ஏப், 27

நேற்று மாலை 'பாடி கார்ட்', ரோடிலுள்ள ஒரு பெரிய மரத்தில் தீ பிடித்துக் கொண்டது. சுமார் 4 மணிக்கு, மரத்தின் அடிப்பாகத்திலுள்ள ஒரு போரையிலிருந்து நெருப்புச் சுவாலைகள் காணப்பட்டன. தீ அணைக்கும் இயந்திரங்கள் உடனே மேற்படி இடத்திற்கு வந்து ஒரு மணி நேரம் போராடிய பின்னரே தீ அணைக்கப்பட்டது.

திருவண்ணாமலை ஜில்லா போர்டு

தலைவர் தேர்தல்

திருவண்ணாமலை, ஏப், 27

தலைவர் தேர்தலை ஒட்டி சென்ற 25-ந் தேதியன்று நடைபெற்ற திருவண்ணாமலை ஜில்லா போர்டு கூட்டத்தில் திரு. ஷண்முகமுதலியார் 25 ஓட்டுகள் கிடைக்கப்பெற்று தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு எதிராக நின்ற திரு. பி. ரங்கசாமி செட்டிக்கு 10 ஓட்டுகள் கிடைத்தன,

மன்னர் மகுடாபிஷேகம்

ஆயிரக்கணக்கில் பிரமுகர்கள் விஜயம்

60 கோடி பவுன் செலவிடுவார்கள்

லண்டனில் ஆனந்த அமளி

எட்டாவது எட்வர்டு அரசர் அடுத்த ஆண்டு மே மாதம் மகுடாபிஷேகம் செய்து கொள்வதென்ற தீர்மானப்படி, இப்போதிருந்தே விசேஷ ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. மன்னர்கள், அரசகுமாரர்கள், மந்திரிகள், அயல் நாட்டு ராஜதந்திரிகள், கோடீசுவரர்களாக உலகில் பல பாகங்களிலுமிருந்து பிரமுகர்கள் பலர் இந்த வைபவத்தில் கலந்து கொள்ள, விஜயம் செய்வார்கள். லண்டன் நகரில் பல வாரங்கள் வரையில் ஆடம்பரமான ஆனந்த அமளியாக இருக்கும். இதற்கு முன் என்றும் கண்டிராத காட்சிகள் லண்டனில் காணலாம். முப்பது இலக்ஷம் பிரமுகர்கள் விஜயம் செய்வார்களென எதிர்பார்க்கப் படுகிறது. லண்டன் ஓட்டல்காரர்கள், வருபவர்களுக்குப் போதிய இடமும் அகப்படாது என பேசிக் கொள்ளுகின்றனர். விஜயம் செய்கின்ற பிரமுகர்கள் சுமார் 60 கோடி பவுன் செலவு செய்வார்களென எதிர்பார்க்கப் படுகிறது. லண்டன் வாசிகள் இதுவரை காணாத ஊர்வலம் நடைபெறும்.

25—4—36 முதல்
மதுரை நியூ சினிமாவிலும்
மற்றும் அநேக பிரபல நகரங்களிலும்
பாதுகா பட்டாபிஷேகம்
T. D. ருக்மணி, — — M. R. கிருஷ்ணமூர்த்தி,
P. B. ரெங்காச்சாரி, T. S. சந்தானம்
முதலியவர்கள் நடித்த
உயர்தர தமிழ் பேசும், பாடும் படம் நடைபெறும்.
விவரங்களுக்கு:—
கிருஷ்ணா டாக்கி பிலிம் கம்பெனியார், மதுரை.

டெர்பி
ஸ்வீப்ஸ்டேக்டிக்கட்டுகள்
கிடைக்கும் இடம்:—
T. கந்தசாமி, டூரிஸ்ட் ஏஜன்ஸி, கோபிசெட்டிபாளையம், S.I.
கிளை ஆபீஸ்:—
டூரிஸ்ட் ஏஜன்ஸி, ஹைகோர்ட்டுக்கு எதிரில், சென்னை.

ஒற்றுமை விடுதி
தியாகராய நகர், சென்னை.

தூய உடலார் பலர் பருத்தி நூல்காரர் விடுதியில் சாப்பிடுவதாலும், பருத்தி நூல்காரர் செய்தித் தாளை வாங்குவதாலும், பருத்தி நூல்காரர் பலருக்கு வேலை அளிக்கிறார்கள். ஆனால், தங்களுக்கு வேலை வேண்டும் பொழுது மாத்திரம், பருத்தி நூல்கார விண்ணப்பக்காரர்களை ஒதுக்கி விட்டுத் தங்களையே நியமிக்க வேண்டுமென உரிமை பாராட்டுகிறார்கள்.

அவர்கள் செயல் அறிவுடைமையாமா?
அவர்கள் பாராட்டும் உரிமை ஒப்புக் கொள்ளக்கூடியதா?
ஆராய்க.

இ. சோமசுந்தரம், அமைச்சர்.
சே. தெ. நாயகம், தலைவர்.

ஜெர்மன் சர்வாதிகாரி ஹெர் ஹிட்லர்

ஹிட்லரின் மந்திர சக்தி— மாண்டவன் மீண்டான்

சிறையில் எழுதிய சுய சரிதை

ஹிட்லர் - ஹிண்டன்பர்க் போட்டி

துண்டு அதிகாரம் வேண்டாம்!

(C. N. அண்ணாதுரை, M. A, எழுதுவது)

(18-4-36 இதழ்த் தொடர்ச்சி)

அரசியல் பிரசங்கி

இச்சமயத்தில், ஹெர் ஹிட்லரை, யுத்தத்தினின்றும் திரும்பிய படைகளுக்கு அரசியல் விஷயம் போதிக்கும் பிரசங்கியாக, அரசாங்கத்தில் நியமித்தனர். ஹிட்லரின் வாழ்க்கையில் இதுவொரு முக்கியமான சம்பவம். ஏனெனில், இதனால் தான் அவருக்குத் தனக்குப் பேசுந்திறமை இருப்பது விளங்கிற்று. ஹிட்லரின் அரசியல் எதிரிகளுங்கூட அவருடைய பிரசங்கத்திறமையைப் போற்றுகின்றனர். பல்லாயிரக் கணக்கான பாமர மக்களுக்கிடையே, ருசி, ஆவேசம், நயம், ததும்பப் பேசும்வல்லமை ஹிட்லருக்குண்டு. முதலில் அவர் அரசியல் பிரசங்கியாக நியமிக்கப்பட்டபோது அவர் ஜெர்மனியில் கட்சிப் பிரதி கட்சியில் கூட்டங்களுக்குச் சென்று நடவடிக்கைகளைக் கவனித்து வந்தார். பலவிதமாக அநேகர் பேசிவந்தனரேனினும், அவர்கள் யாவரும் ஜெர்மனி விஷயத்தில் நம்பிக்கை இழந்தவர்கள் என்பதையும், ஜெர்மனிக்கு என்றும் விமோசனம் இல்லை என்று திடமாக நம்பின மனப்பான்மை கொண்டவர்கள் என்பதையும் தமது பிரசங்கங்களில் காட்டினார்கள். ஜெர்மனி யுத்தத்தில் தோற்றுப் போனதால், அது என்றென்றும் தலை இறக்கத்துடன் இருக்க வேண்டுமென எண்ணினர். இந்த மனப்போக்கு ஹிட்லருக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. வீரர்களை உற்பவித்த ஜெர்மனியில் கோழைகள் நிரம்பி இருப்பதையும், உலகில் தாமே சிறந்தோர் என்று தேசியப் பெருமை அடித்துக் கொண்டுவந்த நாட்டில், குலாம்கள் நிறைந்தனரோ என எண்ணி ஹிட்லர் மனமிக வாடினார். அந்தக் காலத்துத் தலைவர்கள் பலர்! அவர்களில் பலர் ராஜதந்திரிகள். அயல் நாட்டாருடன் ஒப்பந்தம் செய்து கொள்வது, மகாநாடுகள் கூட்டுவது, பரஸ்பரம் கொண்டாடுவது போன்ற வித்தைகளில் கைதேர்ந்தவர்கள்! ஆனால், அவர்களில் ஒருவராவது, பொது மக்களிடத்தில் ஒரு நம்பிக்கை, உற்சாகம், ஊக்கம் உணர்ச்சி, ஆர்வம் எழும் வகையில் நடக்கச் சக்தி அற்றவர்கள்! பொதுமக்களிடம் நெருங்கிய சம்பந்தம் வைத்துக் கொள்ளும் வகையறியாதவர்கள். பொதுமக்களின் அவசரத்தைத் துடைக்கவோ, அல்லது கஷ்டப்படுவோருக்குச் சற்று ஆறுதல்தரவோ, அவர்களால் முடியவில்லை. ஏனெனில், அவர்களுக்கே ஜெர்மனிவிஷயமாக நம்பிக்கை கிடையாது. தோல்வியை விட இந்நிலை மோசமானது. ஒரு தேசம் போரில் தோல்வியடையலாம், ஆனால், அதன் தலைவர்களிடை தன்னம்பிக்கை இருந்தால், அந்தத் தேசம் என்றைக்கேனும் ஜெயமடைவது திண்ணம். தோல்வியால் மனக்கசப்பு ஒரு தேச மக்களுக்கு உண்டாவது இயல்பு. ஆனால், அங்குள்ள தலைவர்கள் திறமை உள்ளவர்களானால், மக்களிடம் நெருங்கிய உறவு கொண்டு உண்மையில் போற்றப்படுபவரானால், இந்த மனக் கசப்பு மாறிவிடும். தோல்வி வெற்றிக்கு வழி; ஆனால், அதற்குத் தக்க மனோபலம் இருக்க வேண்டும். அதைத்தான் அந்நாளைய ஜெர்மன் பிரமுகர்கள், நிபுணர்கள், ராஜதந்திரிகள் மக்களிடை பரப்பவில்லை, அவர்களிடையேயும் அது இல்லை என்றே கூறலாம்.

பீர்ஹால் கூட்டம்!

ஜெர்மனியில் பீர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில், பெரிய ஹால்கள் உண்டு. அதற்கு வாடகை கொடுத்து, பல அரசியல் கட்சிகள் பிரசங்கங்கள் செய்வது வழக்கம். அத்தகைய பீர் ஹால் கூட்டம் ஒன்றில், ஹிட்லர் பிரசன்னமாக இருந்தார். பிரசங்க முடிவில், யாரோ ஒருவர் ஹிட்லரிடம் வந்து ஒரு காகிதத்தைக் கொடுத்து விட்டுப் போனார். இதுவும் ஹிட்லரின் வாழ்க்கையில் ஒரு சிறந்த சம்பவம். ஏனெனில், அந்தக் காகிதத்தில் நாஜி சங்கத்துக் கொள்கைகள் அச்சடிக்கப்பட்டிருந்தது. அன்று, ஹிட்லர் அதைப் படித்துப் பார்த்தார். ஏறக்குறைய அதில் காணப்பட்ட கொள்கைகள் ஹிட்லர் மனதில் குமுறிக் கொண்டிருந்தவைகளாகவே காணப்பட்டன. சர்வதேசப் புரட்சி வாதமும், அபேதவாதமோ, யூதர்களைக் கொழுக்க வைக்கும் தத்துவமோ, அயல் நாட்டவருக்கு சலாம் போடும் குலாமிக் கூத்தோ, அதில் இல்லை. ஆனால், ஹிட்லருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆகவே, அவர் அந்தப் புதிய சங்கத்திற்குச் சென்றார். அரை டஜன் ஜெர்மானியரே அதில் இருந்தனர். அவர்கள் சேர்ந்து ஆரம்பித்ததே நாஜி கட்சி. தன் மனதிற்கு மிகப் பிடித்தமாக இருந்த அக் கூட்டத்தில் ஹிட்லர் சேர்ந்தார். சேர்ந்தது முதல், அவருடைய விசேஷித்த பலத்தால், அச் சங்கத்தின் முக்கியஸ்தரானார். அதனுடைய போக்கையே மாற்றினார். சேர்ந்தகாலமுதல், நாஜிச் சங்கத்தைப் பலப்படுத்திப் பரப்ப திட்டங்கள் போட்டார். பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். தங்களுக்குள்ளே பிரிவு போட்டுக் கொண்டு, சிறு தொகை வசூல் செய்து, அந்தப் பணத்தைக் கொண்டு, பெரிய பீர் ஹால் வாடகைக்கு எடுத்து, அங்கு நாஜிக் கொள்கைகளைப் பற்றிப் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். முதலில், அவருடைய அரசியல் எதிரிகள், நாஜிக் கட்சியைப் பற்றித் துளியும் கவலையோ, பயமோ கொள்ளவில்லை. ஒரு சாதாரண சிப்பாயால் நடத்தப்படும் கட்சி செல்வாக்குள்ள தம்மை என்ன செய்யும் என எண்ணி ஏமாந்தனர்.

மாண்டவன் மீண்டான்

ஆனால், ஹிட்லர் பிரசங்கமாரி பொழிய ஆரம்பித்ததும், மக்களிடை ஒரு பரபரப்பு உண்டாயிற்று. அவருடைய அபாரமான பேசுந்திறமை மட்டுமல்ல, மக்களுடைய மனதை, அவர் கூறிய விஷயங்கள், எடுத்துக் காட்டிய உதாரணங்கள், கொள்ளைகொண்டன. மற்ற எத்தனையோ கட்சிப் பிரசாரகர்கள் தங்கள் திட்டங்களைப் பற்றி நிபுணத்வர்களிடைப் பேசிக் கொண்டு வந்தனர். ஆனால், அவர்களுடைய பேச்சு, மக்கள் மனதைக் கவரவில்லை. ஹிட்லர் பேச ஆரம்பித்ததும் இவன் ஒரு புதுமனிதன்-இவனுடைய பேச்சே ஒரு தனி முறை என்பதை ஜனங்கள் உணர்ந்தனர். மற்றவர்கள், "கஷ்டப்பட்டு தர வேண்டும், உடன்படிக்கையை மீறாது அயல்நாட்டவருடன் ஒழுங்காக நடக்கவேண்டும்" என்ற அடிமை வேதாந்தம் பேசினர். ஆனால், ஹிட்லர் ஆரம்பமுதல் "ஜெர்மனி மறுபடி வீறுகொண்டு எழவேண்டும், ஜெர்மானியர் மறுபடி உன்னதமான நிலைமைக்கு வர வேண்டும். அயல்நாட்டவர் ஜெர்மனிக்கு சம அந்தஸ்து, சம உரிமை தரவேண்டும் அப்படித் தர மறுத்தால் அந்த அந்தஸ்தை அடையும் மார்க்கம் நம்மிடமே இருக்கிறது. தேசியப் புனருத்தாரணத்திற்காக அயல் நாட்டினர் தயவு தேவையில்லை. நமது வல்லமையை, நமது பழைய சரித்திரத்தை நாம சரிவர உணர்ந்து கொண்டால் அன்றோ நமது விடுதலைக்கு அடிகோலியவராவோம். ஜெர்மனியார் எதிரிகளுக்கு அஞ்சா வீரர்கள் அவர்களை யாரும் தோற்கடிக்கவில்லை, பல வெளிநாட்டு ராஜதந்திரிகளும் யூதர்களும், உள்நாட்டுக் கோழைகளும், சேர்ந்து செய்த சூழ்ச்சியே, ஜெர்மனியின் தற்கால நிலைமைக்குக் காரணமாகும். ஆனால், இந்த நிலைமையை மாற்றிக் கொள்ள முடியும். நிலைமை மாறுவதற்கு, தேசத்தின் சக்தியைத் திரட்ட வேண்டும். நம் மீது அநியாயமாகப் பூட்டப்பட்ட வார் சேல்ஸ் தளையை தகர்த்து விட்டு, சுயமதிப்பை நாட வேண்டும்" என்று ஹிட்லர் கர்ஜித்தார். இது ஜெர்மனியில் புதுமாதிரியான பிரசங்கம். இதைக் கேட்ட மக்களின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவர்களுக்கு எல்லையிலா ஆவேசங்கிளம்பிற்று. இந்த ஹிட்லரின் வாக்கு பலிக்கும், இவனால் விடுதலை ஏற்படும், இவனே நமது தலைவன்-என்று பல்லாயிரக் கணக்கான மக்கள் எண்ணலானார்கள். வேலையில்லாதார் பிரச்னை விஷயமாக ஹிட்லர் போட்ட திட்டத்தைக்கேட்ட வாலிபரும், தொழிலாளரும் அவரைப் போற்றலானார்கள். நாள் தவறாது, தனது உயிர்த் தோழர்களுடன் ஜெர்மனி முழுவதும் ஹிட்லர் இடிமுழக்கம் செய்துவந்தார். கூட்டத்தில் அமளி ஏற்பட்டால் அதை நாஜிகள் அடக்கலானார்கள். அதற்காகத் தனியான படை திரட்டினர். தனது கட்சியின் மெம்பர்களுக்கு, புதிய உடை, கொடி, பாட்டு, வந்தன முறை இவைகளெல்லாம் ஏற்பாடு செய்தார். நாஜி இயக்கம் மிக விரைவாகப் பரவ ஆரம்பித்தது. அதிகமாகப் பரவ ஆரம்பித்த போதுதான், ஜெர்மனியிலிருந்த பல திறப்பட்ட அரசியல் கட்சிகளும், ஹிட்லர் மீதும், நாஜி மீதும் எதிர்ப்பிரசாரம் செய்தனர், இந்த எதிர்ப்பிரசாரத்தால், நாஜிகளைப் பற்றி ஜெர்மனியர்களுக்கு அதிகம் தெரிந்து கொள்ள வழி ஏற்பட்டது. சிறிது சிறிதாக ஏற்பட்ட விஷய ஞானத்தினால், ஜெர்மனியில் தேசியப் புனருத்தாரணம் உதயமாக ஆரம்பித்தது. ஹிட்லரின் மந்திரசக்தியின் பயனாக மாண்டவன் மீண்டான்.

சிறையில் 'எனது போர்'

1923-ம் வருஷம் ஹிட்லரின் பலம் திரண்டு வந்து கொண்டிருந்தது. தீவிர ஜெர்மன் வாலிபர்கள் நாஜிகளாயினர். ஹிட்லர் சற்று முன்யோசனையை இழந்து, அரசியல் அதிகாரத்தை, புரட்சி முறையால் சாதிக்கலாம் என எண்ணினார். ஆகவே அவர், முதலில் பெர்லின் நகரத்தில், ஜெர்மன் பிரதம மந்திரி வான்கார் என்பவர் ஒரு பீர்ஹாலில் பிரசங்கம் செய்து கொண்டிருந்த போது, தனது சகாக்களுடன் உள்ளே நுழைந்து, ரிவால்வரால் சுட ஆரம்பித்தார், கூட்டம் குழப்பத்தில் முடிந்தது. இரண்டு நாட்களுக்கெல்லாம், மியூனிச் நகரத்திலுள்ளே, தனது படைகளுடன் பிரவேசித்தார். அங்கு கைது செய்யப்பட்டு, அவர் ஐந்து வருஷம் சிறைத்தண்டனை பெற்றார். இது, அவருடைய திறமைக்கு மேலும் கொடுத்ததுபோலாயிற்று. அவர் தேசிய வீரரானார். மக்கள் உள்ளத்தில் பெருங்கிளர்ச்சி ஏற்பட்டது. ஹிட்லருடைய ஆப்த நண்பர்கள், தலைவரின் சிறைவாசத்தின் போது தமது பிரசார பலத்தைக் குறைக்கவில்லை. சிறை சென்ற எட்டாம் மாதம், ஹிட்லர் விடுவிக்கப்பட்டார். சிறையிலிருந்த போது, அவர் "எனது போர்" என்ற தமது சுயசரிதையை எழுதினார்! அதில் அவரது மனதில் பட்டவைகளை ஒளிப்பின்றி எழுதியுள்ளார்.

கொடி பறந்தது

சிறையினின்றும் வெளி வந்த ஹிட்லர், புரட்சியால் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாதென்ற உண்மையை உணர்ந்தார். அரசியல் அதிகாரத்தை சட்டபூர்வமான முறையிலேயே பெறவேண்டுமென்று தீர்மானித்து, அதற்குச் சாதகமான பிரசார வேலையில் தீவிரமாக இறங்கினார். ஜெர்மனி முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்தார். அவருடைய பிரசங்கங்கள் மக்கள் மனதில் புரட்சியை உண்டாக்கிவிட்டது. வெளிநாட்டவரின் கண்ணோக்கமும் அவர் மீது விழ ஆரம்பித்தது. நாஜிகள், தேர்தலுக்கு நிற்க ஆரம்பித்தனர். பொதுஜன ஆதரவும் கிடைத்துவந்தது. முழுமெஜாரிடி கிடைக்காவிட்டபோதிலும், நாஜிகளின் தொகை பெருகிக்கொண்டே வந்தது. கடைசியாக, நாஜிக்கட்சியின் ஒத்துழைப்பு இல்லாவிடில், வேறு எந்தக் கட்சியும் அரசியலை நடத்தமுடியாத நிலைமை வளர்ந்தது. நாஜிகளின் சுவஸ்திகக் கொடி ஜெர்மனியில் உயரப் பறக்கலாயிற்று.

துண்டு அதிகாரம் வேண்டாம்

ஜெர்மன் ராணுவ தளபதி வான் ஹிண்டன்பர்க் ஒரு மதிப்புவாய்ந்த கிழவர். ஜெர்மன் யுத்தத்தில் அவருடைய கீர்த்தி உலகெங்கும் பரவிற்று. யுத்தத்திற்குப் பிறகும், அவருடைய புகழ் மறையவில்லை. இரும்பு மனிதனென மதிக்கப்பட்டுவந்த ஹிண்டன்பர்க்குடன், ஹிட்லர், குடிஅரசுத் தலைவர் ஸ்தானத்திற்கு, போட்டியிட்டதில், ஹிட்லர் தோற்றார். அவ்வருஷம் ரீஷ்டாக்கில் (ஜெர்மன் பார்லிமெண்டு) நாஜி மெம்பர்கள் தொகை அதிகரித்தது. அவர்களுடைய கூட்டுறவு கிடைக்காவிட்டால் வேறு எந்தக் கட்சியும் தடுமாறவேண்டிய நிலைமை ஏற்படவே, ஹிண்டன்பர்க், ஹிட்லரை, வான் பேபன் என்னும் சான்சலருடன் ஒத்துழைக்க வேண்டுமெனவும், உபசான்சலராக ஹிட்லர் இருக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். ஹிட்லர் இந்த யோசனைக்குச் செவி சாய்க்கவில்லை. அவருடைய ராஜதந்திரம் அன்று மிக ஸ்பஷ்டமாக வெளியாயிற்று. ஹிண்டன்பர்க்கும் மற்றையோரும், ஹிட்லரைத் தங்களுடன் சேர்ந்து அதிகாரம் வகிக்கும்படி செய்துவிட்டால், நாஜிகளின் கர்ஜனைக்கு வழியிராது. தேச மக்கள் 'நாஜிப் பித்து' கொள்ளமாட்டார்கள். அரசாங்கம் என்ன பிழை செய்தபோதிலும், ஹிட்லருக்கும் அதில் பாகம் ஏற்படும். ஆகவே ஜனங்கள் அவரையும் குறைகூறத் தொடங்குவர். ஹிட்லரின் செல்வாக்கு குறையும் என்ற நோக்கத்துடனேயே, ஹிட்லருக்கு உபசான்சலர் பதவிதரமுன் வந்தனர். ஆனால் அவர்களுடைய சூழ்ச்சி வலையில் ஹிட்லர் விழவில்லை. "கொடுத்தால் முழு அதிகாரமும் கொடுக்க வேண்டும். இல்லையேல் அதைப் பெறும் காலம் வரும் வரையில் நான் காத்துக் கொண்டிருப்பேன், இந்த துண்டு அதிகாரம் வேண்டாம்" என ஹிட்லர் கூறினார்.

(தொடரும்)

-: இடி முழக்கமல்ல! :-

தாரையின் முழக்கமே தரணியை செவிடுபடச் செய்கிறது.

தமிழ் டாக்கிகளுக்கெல்லாம் தலைமை வகிப்பது எது?
லீலா விநோத கோலாகலமான படம் எது? எது?
தாரணியிலே தனிப்புகழ் நாட்டும் படம் எது? எது? எது?

அதுதான்
மிஸ். T. V. ராஜசுந்தரிபாய் நடித்த

1. தாரா - சசாங்கம்

என்ற ஒப்பற்ற தமிழ் பேசும் பாடும் படம்.

24-4-36 முதல் சில்வர் ஜூபிளி டாக்கியிலும்,
25-4-36 முதல் சென்னை கினிமா சென்ட்ரலிலும் நடைபெறுகிறது
திருச்சி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி முதலிய முக்கிய நகரங்களில்
ஆரம்ப தினத்தை எதிர்பாருங்கள்.

சென்னை பிலிம் போர்டு தேர்தலில் முதன்மை ஸ்தானம் பெற்ற
இந்திய நடிகை மிஸ். S. D. சுப்புலக்ஷிமி தனக்கு நிகரில்லை எனும் நடிப்புடன்;
Mr. C. V. V. பந்துலு, Mr. M. V. கிருஷ்ணப்பா, மிஸ். M. S. பட்டம்மாள்
முதலியோருடன் நடித்த

2. உஷா - கல்யாணம்

இந்திய நடிகை
Miss S. D. சுப்புலக்ஷிமி,
இந்திய நடிகர்
Mr. M. K. தியாகராஜ பாகவதர்
ஒருங்கே சேர்ந்து நடித்ததும்,
பிலிம் போர்டு தேர்தலில் முதல்தரமான தமிழ்ப் புராணப் படமெனத் தேர்ந்தெடுக்கப்பட்டதுமான

3. நவீன சாரங்கதரா

விபரங்களுக்கு:—முருகன் டாக்கி பிலிம் கம்பெனி,
8, சின்னக் கடைத் தெரு, மதுரை.
Telegrams:—"TALKO FILMS"
Telephone:—No. 53.

இந்தியா சட்டசபைத் தலைவர்

ஐரோப்பா பயணம்

பம்பாய், ஏப், 27

இந்தியா சட்டசபைத் தலைவரான சர், அப்துல் ரஹீம் சென்ற சனிக்கிழமை ஐரோப்பாவிற்கு புறப்பட்டுச் சென்றார்.

பல்லாவரம் வாலிபர் சங்கம்

ஜாதி இந்து செய்கை கண்டனம்

மேற்படி சங்கக் கமிட்டி கூட்டம் 26-4-36 ஞாயிற்றுக்கிழமை, சங்கத் தலைவர் தோழர் எம். தர்மலிங்கம் தலைமையில் கூடிற்று. அது போது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

1. பொது நலப் பிரியரும், சமதர்ம வாதியுமான வாலிப வீரர் தோழர் டி. வி. சுப்ரமணியம் தனது 38-வது வயதில் அகால மரணம் அடைந்ததை முன்னிட்டு இக் கூட்டம் வருந்துவதுடன், மேற்படியார் குடும்பத்திற்கு அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

2. இச் சங்கத்தின் மெம்பர் கிறிஸ்தவ ஆதித்திராவிட தோழர் ஏ. அந்தோணி ராஜ் 24-4-36 வெள்ளிக்கிழமை வழக்கம் போல், பல்லாவரம் மாங்காளியம்மன் கோவில் தெரு அக்ரகாரத்தில் வசிக்கும் ஒரு பிராமண உபாத்தியாயரிடம் பாடம் கற்றுக் கொண்டிருக்கும் பொழுது, அதே வீதியிலுள்ள ஒரு பார்ப்பனர் பறையன் அக்ரகாரத்தில் ஏன் வந்தானென்று மேற்படி ராஜுவை செருப்பால் தாக்கியதாகக் கேள்விப்பட்டு இக் கூட்டம் மேற்படி பார்ப்பனரின் அடாத செய்கையை வன்மையாகக் கண்டிப்பதுடன், போலீஸ் அதிகாரிகளும் கவர்ன்மெண்டாரும் இவ்விஷயத்தில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறது.

3. மே தினத்தை இச் சங்கத்தின் ஆதரவில் கொண்டாடவேண்டுமென்று தீர்மானிக்கிறது.

மனம்போன போக்கு

—:0:—

(“குட்டிச்சாத்தான்” எழுதியது.)

“தின மணி” நேற்றைய தினம் மூன்று காலம் மூக்காலழுதிருக்கிறது. ஐயோ பாவம்! வேலூர் ஜில்லா போர்டு தலைவர் தேர்தலில் காங்கிரஸ் தோற்றுப் போய் விட்டதாம்; காங்கிரஸ் அங்கத்தினர்கள் துரோகம் செய்து விட்டார்களாம். தோழர் அப்துல் ஹக்கீம் ஜெயித்து விட்டாராம். ஆகிக்கு மாரடிப்பவர்கள் யாராவது இருந்தால் “தின மணி”யுடன் சேரும்படி கேட்டுக் கொள்கிறேன். மாரடிப்பவர் மகாநாடு ஒன்று வைத்து, புதிதாகக் காங்கிரசில் சேர்ந்த தோழர் வி. எம். ராமசாமி முதலியாரைத் தலைவராகக் கொண்டு, வேலூர் தேர்தலைக் குறித்து கவனிக்கும்படி செய்தால் ரொம்பவும் நல்லது. அம்மகாநாட்டிற்கு அரசியல் விடுமுறை நிபுணரான தோழர் ராஜகோபாலாச்சாரியாரும், அரசியல் சாக்கடை நாயனார் தோழர் சத்தியமூர்த்தியும் விஜயம் செய்யவேண்டும். அப்போது காங்கிரஸ் பண்டாரங்களைப்பற்றி பேசவேண்டும். முக்கியமாக வேலூரிலும், திருவண்ணாமலையிலும் “காங்கிரஸ்” என்றால் காலித் தப்புப்படியான நிலைமையை ஏற்படுத்தியதற்கு யார் ஜவாப்தாரி என்று பார்க்க வேண்டும்.

* * *

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் இப்போது இருக்கும்படியான பலிஷுக்கு, துரோகம் ஒரு குற்றமாகுமா? மதுவிலக்குப் பிரசார மகாத்மா ராஜகோபாலாச்சாரியார் அரசியலில் இருந்து சநா பெற்றுக் கொண்டதால், காங்கிரஸ் மதுவிலக்கை ஒழித்து விட்டதென்று நினைத்து, கள்ளுக்கடை குத்தகைக்காரர்களை காங்கிரஸ் அபேட்சகர்களாக நிறுத்தியது குற்றமா, குற்றமில்லையா? அந்தக் குற்றத்தை ஏன் யாரும் கண்டிக்கவில்லை? கள்ளுக்கடைக்காரர்கள் காங்கிரஸ் அபேட்சகர்களானது காங்கிரஸ்கொள்கைக்கு விரோத மன்றென்றால், காங்கிரஸ்காரர்கள் தோழர் அப்துல் ஹக்கீமுக்கு 'ஓட்' செய்தது மாத்திரம் எப்படி காங்கிரஸ் கொள்கைக்கு மாறுபட்டது என்று கூற முடியும்? “ஆடுவமே கள்ளுப் போடுவமே” என்பது காங்கிரசின் புதிய மந்திரமாய் விட்டதா?

* * *

“வேலூர் மோசடி” என்று தலைப்பிட்டு நேற்றைய தினம் கண்ணீர் வடித்த “தின மணி”, கள்ளுக்கடைக்காரர்களை அபேட்சகர்களாக நிறுத்தி, காங்கிரஸ் கொள்கையை மோசடி செய்த முத்தண்ணக்களை ஏன் நன்றாகக் கண்டிக்கவில்லை? தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் திருட்டுத்தனங்களையும், அயோக்கியத் தனங்களையும், ஆபாசங்களையும் கண்டனம் செய்வதற்காக, ஒரு வெற்றிலைத் தோட்டம் வாங்கினால் நலம் என்று நினைக்கிறேன். வெற்றிலைத் தோட்டத்திற்கும் காங்கிரசிற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கலாம். தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்களுடைய கூட்டத்தைப் பற்றி பொது ஜனங்கள் அபிப்பிராயத்தைச் சொல்வதற்கு வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, கிராம்பு, ஏலக்காய், ஜாபத்திரி முதலிய வேண்டும். யோக்கியதையும், ஒழுக்கமும், சுயமரியாதையும் உள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் வெற்றிலை 'சப்ளை' செய்வதென்றால் ஒரு பெரிய வெற்றிலைத் தோட்டம் வேண்டும். அவர்கள் எல்லோருக்கும் வெற்றிலையும் அதன் உபகரணங்களையும் வழங்கி, வாய் நிறைய மெல்லும்படி செய்து, காங்கிரஸ் ஜில்லா போர்டுகளின் அங்கத்தினர்கள், தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் முதலியவர்களை அழைத்து மாலையிட்டு, அவர்கள் முகார விந்தங்களில் சிகப்பு 'கலர்' வரும்படியாகத் தமிழ் மக்கள் தம்முடைய அபிப்பிராய மாரியைத் தெளிக்க வேண்டும். பிறகு, வண்ணான் வாகனங்களில் அவர்களை ஏற்றி ஊர்வலம் செய்வித்து, “கள்ளுக்கடைக்காரர்களை தொழும் காங்கிரஸ் தலைவர்கள் வருகிறார்கள்; பராக்! பராக்!!” என்று தெருப் பெருக்கும் சாமரங்களை வீச வேண்டும். தற்போதைய தமிழ் நாட்டுக் காங்கிரஸ் அப்படிப்பட்ட மரியாதைக்குத்தான் பூரணமாக உரித்தானது. இது விஷயமாகச் சந்தேகம் உள்ளவர்கள், மகாத்மா காந்திக்கு எழுதி, “கள்ளுக்கடைக்காரர்கள் வெற்றி காங்கிரஸ் வெற்றியாகுமா?” என்று கேட்டுத் தெளிந்து கொள்ளுவார்களாக.

* * *

கள்ளுக்கடை மறியல் செய்து சிறை சென்ற காலமெல்லாம் போய், கள்ளுக்கடைக்காரர்களையே சரணமடைந்த காங்கிரஸ்காரர்கள், தோழர் ஹக்கீமுக்கு 'ஓட்' செய்த காங்கிரஸ்காரர்களைக் குறை கூறுவது, பானையைப் பார்த்து சட்டி ‘நீ கறுப்பா யிருக்கிறாய்’ என்று கூறுவதைப் போலிருக்கிறது. தோழர் ஹக்கீம் தங்கமான மனிதர்; தர்மாதுரை என்றால் அவருக்குத்தான் தகும்; சிறந்த கொடையாளி; ஜில்லா போர்டு நிர்வாகத்தில் அநுபவமுள்ளவர். ஜில்லாவின் நன்மையை உத்தேசித்து அவரை மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுப்பதற்கு உதவி செய்த காங்கிரஸ்காரர்களுக்குக் கற்கண்டு கொடுக்க வேண்டும். வேலூர் ஜில்லா போர்டு அங்கத்தினர்கள் சென்னையில் கூடிய போது, தோழர் ராஜகோபாலாச்சாரியார் யாரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பிரசங்கம் செய்தார்? தோழர் ஹக்கீம் பெயரைப் பிரேரேபித்தவர் அவரல்லவா? ஆனால், மற்றவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. தமிழ் நாட்டுக் காங்கிரஸ் அபிப்பிராயத்தின்படி நடந்த காங்கிரஸ்காரர்களைத் தண்டிக்க வேண்டும் என்று “தின மணி” கூறுகிறது.

* * *

“வேலூரில் துரோகஞ் செய்தவர்களை உடனே கண்டு பிடித்து அவர்களை ராஜிநாமாச் செய்யும்படி செய்ய வேண்டும். அப்படிச்செய்விக்க போர்டிற்கு சக்தியில்லையானால், அவர்கள் ராஜிநாமாச் செய்து விலகிக் கொள்ளுவது மேல்,” என்று “தினமணி” அபூர்வமான உபாயம் கூறுகிறது. தங்களைத் தண்டிக்க காங்கிரஸ் ஜில்லா போர்டுக்குச் சக்தியில்லை என்று தெரிந்தவுடன், குற்றவாளிகள் தங்களைத் தாங்களே தண்டித்துக் கொள்ள வேண்டும். என்ன புத்தி கூர்மை! என்ன கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிக்கும் உபாயம், காங்கிரசிலிருந்து தன் துரோகிகளை எல்லாம் வெளிப்படுத்தி விட்டால், ஒரு ஆள் கூட பாக்கியிருக்க மாட்டாரே? காங்கிரசை அடியோடு ஒழிப்பதற்கா “தின மணி” பாடுபடுகிறது. சேச்சே! “தின மணி”க்குத் தெரியாது போலும்—காங்கிரசில் பெரும் பாலும் மோசக்காரர்களும், அயோக்கியர்களும் இருக்கிறார்களென்று.

* * *

அப்படிப்பட்ட காங்கிரஸ் உருப்படுமா? “காந்திக்கு ஜே,” “பாரத மாதா கீ ஜே” என்ற தந்திரங்களை ஆயிரம் தடவை உருப்போட்டாலும் கூட, உருப்படாது. இந்த சமயத்தில் “ஜஸ்டிஸ்கட்சி உருப்படுமா?” என்று “காருதனி”ல் “கேசரி” எழுதியது ஞாபகத்துக்கு வருகிறது. “கேசரி” என்றால் எனக்குக் கொஞ்சம் பயந்தான். காட்டு மிருகமல்லவா? சில வாரங்களாக “கேசரி” ஜஸ்டிஸ் கட்சியைக் கண்டு கர்ஜித்துக் கொண்டிருக்கிறது. கர்ஜனையில் சில உண்மையான விஷயங்கள்; சில உண்மையென்று நினைத்துக்கொண்ட விஷயங்கள். அவற்றிற்குப்பதில் எழுதுகின்ற முறையில், ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள தவறுகளையும், அதைப்பற்றி உண்மைத் தோழர்களிடம் கூட உள்ள தவறான எண்ணங்களையும்பற்றி அடுத்த வாரம் எழுதலாமென்று நினைக்கிறேன். தவறுகளிருப்பதனால் தலைவரே போய் விட்டதென்று ஒருபொழுதும் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். ஜஸ்டிஸ் கட்சி உருப்படுமா? என்று எனது அண்ணன் “கேசரி” கேட்டார். ஜஸ்டிஸ் கட்சி உருவோடுதான் இருக்கிறது; மேலும் உருப்படவும் போகிறது; வைகைக் கூட்டக் கட்சியை உருக தெரியாமல் குலைக்கவும் போகிறது, என்று மாடி மீதேறி நேதான் தட்டிக் கூறுவேன். எனது ஜோஸியத்திற்கு குருவும், சூரியனும் நான் குறித்த இடங்களில் இருக்க வேண்டும (?) அதற்கான வேலைகளைச் செய்வது தலைப்பாகையுள்ள தலைவர்கள் மாத்திரமல்ல; தலை தம் பிடியாகத் திரியும் குட்டிச்சாத்தான்கள் பலருடைய கடமையாகும். இதைப்பற்றிய வியாக்யானத்தை ராம-பாண்டியருடைய திருச்சி மகா நாட்டுக்குப் பின் ஒத்தி வைத்துக் கொள்ளுகிறேன்.

பொப்பிலி ராஜா

இலண்டன் சேர்ந்தார்

சென்னை, ஏப், 29

பொப்பிலி ராஜா லண்டனை சௌக்கியமாக சேர்ந்ததாக தந்தி மூலம் தகவல் கிடைத்திருக்கிறது.

வேலூர் ஜில்லா போர்டு தலைவர் தேர்தல்

திரு. அப்துல் ஹக்கீம் வெற்றி

வேலூர், ஏப், 28

நேற்று வட ஆற்காடு ஜில்லாகலெக்டர் தலைமையில் நடைபெற்ற வேலூர் ஜில்லா போர்டு தலைவர் தேர்தலில், திரு. வி. அப்துல் ஹக்கீமுக்கு 17 ஓட்டுகளும், காங்கிரஸ் சார்பாக நின்ற திரு. கண்ணப்ப முதலியாருக்கு 15 ஓட்டுகளும் கிடைத்ததால் திரு. அப்துல் ஹக்கீம் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக கலெக்டர் அறிவித்தார்.

வேலூர் ஜில்லா போர்டு உபதலைவராக டாக்டர். ஆர். டி. சுந்தானியல் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

சென்னை சர்வகலாசாலை

ரீடர்,பிரதம போதகாசிரியர் நியமனம்

சென்னை, ஏப், 28

திருவாளர்கள் எஸ். அனவரத விநாயகம்பிள்ளை, கே. என். சிவராஜ பிள்ளை இருவரும் விலகுவதால்,ஏற்பட்ட காலிஸ்தானத்திற்கு, திரு. வையாபுரிப்பிள்ளையை ரீடராகவும். ஆர். பி. சேதுப் பிள்ளையை பிரதம போதகாசிரியராகவும், நியமிப்பதென, (தேர்ந்தெடுக்கும்) கமிட்டி சிபார்சு செய்துள்ளது. மே 6-ந் தேதி நடைபெறப் போகும், சிண்டிகேட் கூட்டத்தில் இதைப்பற்றி முடிவுசெய்யப்படும்.

மே தினக் கொண்டாட்டம்

சென்னை சுயமரியாதை, சமதர்ம சங்கங்களின் சார்பில் டாக்டர் பி. வரதராஜலு நாயுடு தலைமையில் 1-5-36 வெள்ளிக்கிழமை மாலை 5–30 மணிக்கு பெரம்பூர் வாடியா பார்க்கில், மே தினம் கொண்டாடப்படும். அதுபோது தோழர்கள்: டாக்டர் எம். மாசிலாமணி, கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., சி. என். அண்ணாதுரை, எம். ஏ., பி. பாலசுப்பிரமணியம், எம். வரதராஜ பி. ஏ., சி. கலியாணசுந்தரம், ஆர்.டி. ரூபாக்கண்ணு முதலியவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

ரஷியன் கைது செய்யப்பட்டான்

சென்னை, ஏப், 28

நேற்று கோட்டைக்கருகில் சந்தேகத்தின் மீது வாரன்லோவ், என்ற ரஷியன் கைது செய்யப்பட்டான். பம்பாயிலிருந்து இரண்டு தினத்திற்கு முந்தி அவன் இங்கு வந்து நகரில் சுற்றிக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட ரஷியன் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான்.

சம உரிமைப் போர் துவக்கிய இயக்கம்

மறைந்த மணிகளின் மகத்தான சேவை

வீரமும், இளமையும் நிறைந்த தலைவர்

தோழர்கள் சொற்பொழிவு

சென்னை, ஏப், 27

சென்ற 25-4-36 சனிக்கிழமை மாலை 6-மணிக்கு சென்னை தங்கசாலைத் தெரு, 327-வது நெம்பர் கட்டிட மேல் மாடியில் சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றத்தின் ஆதரவில் தோழர் டி. சாரகிருஷ்ணன் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரை கூறியபின் தோழர்கள்: கே. எஸ். நாதன், எஸ். பிரகாசம் ஆகியவர்கள் “ஜஸ்டிஸ் இயக்கம்” என்பது பற்றி பேசினார்கள்.

திரு. கே. எஸ். நாதன்

சென்ற சிறிது நாட்களாக பொதுவாக சென்னை மாகாணத்தின் பல பாகங்களில் ஜஸ்டிஸ் இயக்கத்தைக் குறித்து மிகவும் துவேஷமாக பிரசாரத்தைச் செய்து வருகின்றனர்கள். இந்த பிரசாரத்திற்கு பெரும் வெட்கமளிக்கக்கூடிய மாதிரி நமது நண்பர்களில் பலரும் அவர்களுக்கு மனப்பூர்வமாக பேருதவி செய்யாவிடினும் நண்பர்களது போக்கை அவர்கள் தங்களுக்கு பயனளிக்கக் கூடியதாக ஆக்கிக் கொள்ளுகின்றார்கள்.

ஜஸ்டிஸ் பிறப்பு

சென்ற 19 ஆண்டுகளாக தென்னாட்டு பிராமணரல்லாதார் மக்கள் தம சுதந்திரத்தை அளித்த உரிமை பெறுகின்றனரென்றால் ஜஸ்டிஸ் கட்சியைத் தவிர வேறு எந்த கட்சியாலும் அளிக்க இயலவில்லை. பல நூற்றாண்டாக தமிழ் நாட்டு மக்கள் அனைவரும் பிராமணர்களின் அடிமைகளென்றும், அவர்கள் சொல்படி ஆடும் கருவிகளென்றும் கருதி வந்ததை அறவே ஒழித்தது. சமூகக் கொடுமைகளிலும், அரசியல் கொள்கை-உத்தியோகம் முதலியவைகளிலும் கடந்த அரை நூற்றாண்டுகளாக பிராமணர் ஆதிக்கம் பெற்றிருந்ததைக் கண்டு நம் மக்களும் சம உரிமை பெறவேண்டும் என்ற சுயமரியாதை சுதந்திர உணர்ச்சியைக் கொண்டே இக் கட்சியை காலஞ்சென்ற டாக்டர் நாயர் பெருமானும், சர். தியாகராயரும் கண்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அடிமைத்தனத்தில் ஆழ்ந்து கிடந்த பிராமணரல்லாதார் மக்களுக்கு இவ் வறிஞர்கள் கண்ட [illegible] “ஜஸ்டிஸ் இயக்கம்” பெரும் ஆதாரவாக இருந்தது என்பதை கூறவும் வேண்டுமா?

வாலிப இளைஞர்கள் தங்கள் சுயமரியாதையைக் காப்பாற்ற முன்வந்து நியாயக் கட்சியின் கொள்கைகளை தீவிரமாக பிரசாரஞ் செய்ய ஆரம்பித்தார்கள். அக் கூட்டத்தில் நமது நண்பர்களான தோழர்கள்: ஜே. என். இராமநாதன், ஏ. வி. ஸ்ரீனிவாசன், திண்டுக்கல் சுப்பிரமணியம் போன்றவர்களின் பெயர்கள் குறிப்பிடத்தகுந்ததாகும்.

தலைவர்கள் என்பவர்கள் எப்பொழுதும் சாசுவதமாக ஒரு இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்க முடியாது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அது குறிப்பாக பெரும்பான்மையான ஒரு பெருங் குடி மக்களின் சுயமரியாதையை தங்கள் மேற் போட்டுக்கொண்டு டாக்டர் நாயரும், சர். தியாகராயரும் அதிக நாள் வாழ இயலவில்லை. அவர்கள் அகால மரணமடைந்தனர். அதன்பின் ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர் காலஞ் சென்ற பனகல் பெயர் குறிப்பிடத்தகுந்தது. அஞ்சா நெஞ்சம் படைத்த இவ்வீர சிங்கம் கட்டுதிட்டங்களுடன் கட்சியை பலப்படுத்தி செய்து வைத்த சீர்திருத்தக் கோட்டையின் மதிற் சுவர்களில் தான் இன்று ஜஸ்டிஸ் கட்சி நிற்கின்றது எனக் கூறல் மிகையாகாது.

தென்னிந்திய சரித்திரத்தில் பனகல் ராஜா செய்து முடித்த அரிய செய்கைகள் என்றும் தங்க லிபிகளில் எழுதக் கூடியவைகளாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் — இந்து மத சீர்திருத்த பரிபாலன போர்டு போன்ற குறிப்பிடக் கூடிய பல முக்கிய செய்கைகளுக்கு கர்த்தா இவர் என்றால் தென்னாடு இவருக்கு என்றும் கடமைப் பட்டுள்ளது. இவ்வீர சிங்கம் மறைந்த பின்னர் பிராமணரல்லாதார் இயக்கத்தின் கதி சிறிது மங்கிவிட்டது எனக் கூறித்தான் தீர வேண்டும். சரியான தலைவர் இன்றி கட்சிக்குள் சிறிது கட்டுப் பாடின்றி சிறிது காலம் ஊக்கத்தை குறைத்துக் கொண்டிருந்தது. இக்குறை மிகவும் குறிப்பிடக் கூடியதோர் வெற்றியை கட்சிக்கு அளிக்க முடியாமல்-சிறிது காலம் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கையில் தற்போது கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கனம். பொப்பிலி ராஜா அவர்களை இயக்க அபிமானிகள் தங்கள் தலைவராக அமைத்துக் கொண்டார்கள். வீரமும்-இளமையும் நிறைந்த இவர் கட்சிக்காக அல்லும் பகலும் உழைக்கும் உத்தமர்.

ஜஸ்டிசும் பொது மக்களும்

பொது மக்களைக் குறித்த வரையில் இக்கட்சியின் பிரதான கொள்கைகள் பிராமணரல்லாதார் சமூகத்திற்கே குறிப்பாக உரியதென நாம் முன்னமேயே குறிப்பிட்டு விட்டோம். ஏழைக் கோடி நசுக்கப்பட்ட ஆதித்திராவிட மக்களின் உரிமைக்காக பாடுபட்டு அவர்களை முதன்மைப் படுத்தி இன்று இந்திய சட்ட சபைகளிலும் மாகாண சட்டசபைகளிலும் தங்களது உரிமைகளை எடுத்துரைக்க நாவன்மை படைத்த தலைவர்கள் இருக்கின்றார்கள் என்றால், அவர்களை உற்பத்தி செய்த பெருமை ஜஸ்டிஸ் கட்சிக்கு என்றும் உரித்தாகும். கல்வியிலும் பொது மக்களுக்காக ஜஸ்டிஸ் கட்சியார் செய்ததைப் போல் வேறு எக்கட்சியின் சேவகத்திலும் செய்ய இயலவில்லை எனக் குறிப்பிடுவது பெருமையாகாது. நேற்று முன் தினம் ஸ்ரீமதி ஹரிஜன இயக்கத்திற்கு பின் ஏற்படுத்தப் பட்ட சில கல்வி பயிற்றுவிக்கும் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுவதற்கு முன்னமேயே ஜஸ்டிஸ் கட்சியார் கட்டாய படிப்பு திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமெனவும், அதற்காக மிகவும் உழைத்தும் வெற்றிபெற்றிருக்கின்றார்கள். மற்றமாகாணங்களுடன் சென்னை மாகாணத்தை ஒப்பிட்டுப் பார்க்கையில் மற்ற மாகாண பொது மக்கள் கல்வியில் எவ்வளவு பிற்போக்கானர்களாக இருக்கின்றார்கள் என்பது கண்டறிந்த உண்மையாகும். சென்னை மாகாணத்திற்குட்பட்ட சுதேச சமஸ்தானங்களை எடுத்துப் பார்த்த போதிலும் கொச்சி, திருவாங்கூர், மைசூர் போன்ற சமஸ்தானங்களில் கல்வி பெற்றவர்கள் நிறைந் திருப்பது போல வேறு எந்த சமஸ்தானத்திலும் இல்லை என்பது தெரிந்த விஷயம். குறிப்பாக பெண்கல்வியில் இந்தியாவிற்கே இச்சமஸ்தானங்கள் திலகமென விளங்குகின்றது.

குறிப்பிட்டவரை அரசாங்கத்தின் உதவியைக் கொண்டு பொது மக்களுக்கு கல்வியை எவ்வளவு தூரம் பரப்பலாமோ அத்தனை தூரமும் ஜஸ்டிஸ் கட்சியார் பிரயாசைப்பட்டு வருகின்றனர்.

ஜஸ்டிஸிற்கும்,சுயமரியாதை இயக்கத்திற்கும் எப்படிப்பட்ட தாரதம்மியமான வித்தியாசங்களை அவர்கள் எதிரிகள் அல்லது நண்பர்கள் கற்பித்த போதிலும் இரண்டும் சகோதர இயக்கங்கள் என்பதை ஒருவராலும் மறுக்க முடியாது.

திரு. எஸ். பிரகாசம்

ஜஸ்டிஸ் கட்சி தோன்றி இன்று 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் அது செய்த பல தொண்டுகளை மக்கள் வெகு சீக்கிரத்தில் மறந்து விடுவதற்கு காரணம் பார்ப்பனர்களின் விஷமப் பிரசாரமேயாகும். இக்கட்சி வகுப்புத் தீர்ப்பின்படி எல்லா வகுப்பாருக்கும் விகிதாசாரப்படி உத்தியோகம் வழங்கியதால் 100க்கு 70 அல்லது 80 விதம் பெரிய உத்தியோகங்களில் கலந்து கொண்டிருந்த பார்ப்பனர்கள் ஆத்திரம் கொண்டு இக்கட்சியை வகுப்புவாதக் கட்சி என்றும் இன்னும் பலவாராகத் தூற்றுகின்றார்கள். வகுப்புத் தீர்ப்பு இல்லாவிடில் தாழ்த்தப்பட்ட மக்கள் உத்தியோகம் செய்ய முடியாது. ஜஸ்டிஸ் கட்சி இவர்களுக்கு நன்மை செய்திருக்கின்றது. என்பதற்கு வகுப்புத்தீர்ப்பு ஒன்றே போதுமான அத்தாட்சியாகும். வகுப்புத் தீர்ப்புப்படி பார்ப்பனர்களுக்கு 100க்கு 3 அல்லது 4 உத்தியோகங்கள் தான் கிடைக்கும் என்ற காரணத்தால் பார்ப்பனர்கள் இக்கட்சியை தூற்றுவதைக் கண்டு நம்மவர்களும் அவர்களுடன் சேர்ந்து கொண்டு வகுப்பு வாதத்தை கிளப்புகின்றார்கள் என்று சொல்வது நம்மவர்களின் அறிவின்மையைக் காட்டுகின்றது.

ஜஸ்டிஸ் கட்சி ஏழை விவசாயிகளுக்கு நன்மை செய்து இருக்கிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயமாகும். தாழ்த்தப்பட்டவர்களின் கல்வி இலவசமாக அநுமதித்தது பள்ளிக்கூடங்கள், பொதுக் கிணறுகள் முதலிய வசதிகள் ஏற்படுத்தியது காங்கிரஸ் தீண்டாமை விலக்கு ஆரம்பிப்பதற்கு முன்னமே தாழ்த்தப்பட்டவர்களை தாலுக்கா போர்டு, ஜில்லா போர்டு, சட்ட சபைகளிலும் மேல் ஜாதிக்காரருக்கு சமமாக உட்கார வைத்ததென்றால் ஜஸ்டிஸ்,காங்கிரசை விட பெரிய கட்சிதான்,

இன்னும் ஏழை விவசாயிகளுக்கு சாதகமாக இனாம் மசோதாவும் கொண்டுவந்து நிறைவேற்றியது. அது உள்நாட்டு [illegible] இன்மையாலும், பலருடைய சூழ்ச்சியாலும் வைசிராயால் அங்கீகரிக்கப் படாமல் போயிற்று. மீண்டும் ஜஸ்டிஸ் கட்சியாரால் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு கனம் வைசிராயின் அங்கீகாரம் பெறப்பட்டது என்று பேசி முடித்தார்.

நிமேயர் அறிக்கை

வெள்ளிக்கிழமை பிரசுரம்

சிம்லா, ஏப், 28

நிதி பரிசீலனை சம்பந்தமாக சர். ஆட்டோ நிமேயரின் அறிக்கை ஏப்ரல் 30-ந் தேதி பார்லிமெண்டுக்குச் சமர்ப்பிக்கப்படு மென்றும், அதன் பின் ஏககாலத்தில் அதாவது, மே 1-ந் தேதி வெள்ளிக்கிழமையன்று இங்கிலாந்திலும், இந்தியாவிலும் வெளியாக்கப்படு மென்றும் தெரிகிறது.

ஒரே வாரத்தில்
நீரழிவு
குணமாகி விட்டது.

அடிக்கடி போகும் நீரழிவு, தாகம், வரட்சி, பசியின்மை, நீரோடு இந்திரியம் விழுதல், அன்றி கெட்டை, அதிக மூத்திரம், சோகை, சரீர வெளுப்பு, காலை, கண் எரிச்சல் முதலிய நீரழிவு சோதனை

மந்திராசக்தி குளிகை
சாப்பிட்ட ஒரே வாரத்தில் குணமாகி விடுகிறது. ஆச்சரியமானது.
100 குளிகை ரூ. 10.
50 குளிகை ரூ. 5-8-0.
கே.எஸ்.பதி வைத்தியசாலை,
பழனி.

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே!

ஏழையென்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே!

மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையை கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த வகையினும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! (பாரதி)

விடுதலை

சென்னை : 1936-ஸு ஏப்ரல்-மீ 29-உ
புதன்கிழமை

புலாபாய் கம்பெனி
நிகர லாபம் 0-0-0

அரசியல் துறவறத்தைத் துறந்து, சட்டசபைப் பிரவேசத்தில் மூழ்ந்து நின்ற காங்கிரஸ் வாதிகள், சென்ற அசெம்பிளி தேர்தலின் போது, செப்படிவித்தைக்காரனைப்போல, பல ஜாலங்கள் செய்து பொது மக்களை மயக்கியே வெற்றி பெற்றார்கள் என்று நாம் அடிக்கடி கூறியதுண்டு. டில்லி அசெம்பிளி தேர்தல் காலத்தில், மேடை வீரராகிய காங்கிரஸ் வாதிகள் தாய் நாட்டின் விடுதலைக்காகவே தாம சட்டசபைகளுக்குப் போவதாகவும், அங்கு சென்றதும், அரசியலில் ஒரு புதிய ஜோதி உண்டாகுமெனவும், அடிமைத் தளைகளை உடைத்தெறியும் ஆற்றல் தமக்கே உண்டெனவும், அஞ்சாநெஞ்சுடன் அரசாங்கத்திடம் சமர் செய்து, சுயராஜ்யத்தைக்கொண்டு வருபவர் தாமே எனவும் கர்ஜனை செய்ததைத் தமிழ் நாட்டார் மறந்து விட்டிருக்க மாட்டார்கள் எனவே நம்புகிறோம். முக்கியமாக, புதிய சீர்திருத்தத்தை துவம்சம் செய்வது, அடக்கு முறைச் சட்டங்களை ரத்து செய்வது, தேசிய மகாசபை கூட்டுவது, என்ற மூன்று வாக்குறுதிகளைக் காங்கிரஸ் பிரதிநிதிகள் பொது மக்களுக்குக் கொடுத்தது யாவருக்கும் கவனமிருக்கும். அன்று அவர்கள் நடத்திய அமளியில் வீரம் பொங்கி வழிந்தது. "இதோ வந்தார் விடுதலை வீரர்" எனப் பொது மக்கள் அக்காலத்தில் நம்பியதில் ஆச்சரியமும் நமக்கு ஏற்படவில்லை. ஆனால், வீரம் பேசி, ஓட் வாங்கி டில்லி சென்ற நமது காங்கிரஸ் தோழர்கள், தாம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது திகைத்தனர். அதைக்காண நமக்கு உண்மையில் பரிதாபமே ஏற்படுகிறதெனினும், அவர்கள் இன்னமும் மக்களை ஏய்க்க வேண்டுமென்றெண்ணி, அசெம்பிளியில் தாங்கள் ஏதோ பிரமாதமான-மகத்தான-அரு ஜோடில்லாக் காரியங்களைச் செய்து சாதித்து விட்டதாகக்கூறி, பொது மக்களின் முன்பு மார்தட்டி நின்று, மெடல் கேட்பதைப் பார்க்கும்போது, பரிதாபபடுமல்ல, உண்மையில் சிரிப்பு பொங்குகிறது. ஆ! எவ்வளவு எளிதில் பொதுமக்களை ஏமாற்ற முடியுமென எண்ணுகின்றனர், இந்தக் காங்கிரஸ் வாதிகள்.

அசெம்பிளியில் காங்கிரஸ்கட்சி செய்த வேலையைப்பற்றி நீண்டதொரு அறிக்கை சின்னாட்களுக்குமுன்பு வெளியிடப்பட்டது. தேசிய விளம்பர சபையாரின் அறிக்கையை ஒட்டி, நம் தென்னாட்டு தேசியப்பத்திரிகைக் கூட்டம் தலையங்கங்களைத் தீட்டிற்று. "பலதடவைகளில் அரசாங்கம் தோற்றதாம்—ஓட்டவா ஒழிந்ததாம்—நிதி மசோதா தள்ளப்பட்டதாம்—2000 கேள்விகள் கேட்டனராம் காங்கிரஸ் வாதிகள்—திரு. சத்தியமூர்த்தி ஓயாது பேசினாராம்"—இத்தகைய பல லீலைகளைக் காங்கிரஸ் கட்சியினர்-புலாபாய் கம்பெனி—அசெம்பிளியில் புரிந்ததாகவும், அதனால் அதைப் பாராட்ட வேண்டுமெனவும் கூறப்படுகிறது.

காங்கிரஸ் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தகவல்களின் உண்மைத் தத்துவத்தை ஆராயு முன்பு, அசெம்பிளியில் காங்கிரஸ்காரரின் உண்மையான நிலைமை என்னவென்பதைக் கூற விரும்புகிறோம். அசெம்பிளியில் 'காந்தி பக்தர்கள்'—உண்மையைக் கூற வேண்டுமானால் காந்திபக்தியை அரசியலில் விளம்பரமாக உபயோகிப்பவர்—தொகை 43. இந்தச் சிறுபான்மைக் கூட்டத்தவர், எவ்வளவு கட்டுப்பாடாக இருந்த போதிலும், இவர்களுடைய தலைவர் திரு. தேசாய் சூத்திரக் கயிறை எவ்வளவு சாமர்த்தியமாக இழுத்த போதிலும் இந்த 43 பேர் மட்டும் தனித்து ஒரு காரியத்தையும்—காகித வெற்றியைக் கூட சாதிக்க முடியாது என்பதை பொதுமக்கள் உணர வேண்டுகிறோம். ஆகவே, இவர்கள் சாதித்ததாகக் கூறுவது, உண்மையாக சாதிக்க வேண்டிய காரியங்களாக இருந்தபோதிலும் கூட, இவர்களாலேயே நடைபெற்றது எனக் கூறமுடியாது. காகித வெற்றியிலுங்கூட, அசெம்பிளியின் மற்றைய அங்கத்தினர்களுக்கு, அதாவது குறிப்பிட்ட விஷயங்களுக்குக் காங்கிரசுடன் சேர்ந்து ஓட் செய்த மாளவியா கோஷ்டி, ஜின்னாக் கூட்டம், மற்றும் முன்ன சுயேச்சை வாதிகளுக்கும் கூடப் பங்குண்டு, என்பதைக் காங்கிரஸ் நேசம் பாடுவோர் நினைவில் நிறுத்த வேண்டும். தேசிய அச்சுக்கிரசாலையினின்று வெளிவரும் '[illegible]' பத்திரிகையில் கண்டுள்ளபடி "காங்கிரஸ் கட்சியானது முக்கியமான பிரச்னைகளில், தான் முடிவிற்கு வருவதற்கு முன்பு திரு. ஜின்னாவின் முடிவைத் தெரிந்துகொள்ளும் வரை காத்திருக்க வேண்டும்." இதனால் புலாபாய் கம்பெனியார், எவ்வளவு தூரம் திரு. ஜின்னாவின் தயவை எதிர் பார்த்திருந்தனரென்பது விளங்கும். மேலும், வகுப்புத் தீர்ப்பு விஷயமாக அசெம்பிளியில் காங்கிரஸ் கட்சி நடந்து கொண்டதைப் பார்க்கும் போதும், உண்மையில் அசெம்பிளியில் திரு. ஜின்னாவிற்கு ஏற்பட்டதைப் போன்ற வெற்றி காங்கிரசுக்கு ஏற்படவில்லை" என்பது விளங்கும். ஆகவே, காங்கிரஸ் கட்சி அறிக்கையில் கண்ட காகித வெற்றிகளுக்குக் கூட, காங்கிரஸ்காரர்கள் மட்டுமே உழைத்து அடைந்ததல்ல.

இனி, அறிக்கையில் குறிப்பிட்டுள்ள 'மகத்தான' ஜெயங்களை ஆராயுமிடத்து, அவைகள் யாவும், வெறும் விளம்பரங்களே என்பது நன்கு விளங்கும். வைசிராயின் விசேஷ அதிகாரமென்பது, இன்று நேற்று இந்திய அரசியலில் புகுத்தப்பட்டதல்ல. காங்கிரஸ்காரர் அரசியல் அஞ்ஞாதவாசம் செய்துவந்த காலத்திலேயும் வைசிராய்க்கு விசேஷ அதிகாரமிருந்து வந்தது. இந்திய அரசியலமைப்பில் இது ஒருவருக்குத் தக்க நிலைமை, இதனை மறுக்கவோ, மறைக்கவோ, முடியாது. ஆதலால்தான், காங்கிரஸ்அசெம்பிளி சென்றால், செய்வதாகக் கூறினவற்றைச் செயலிழந்து என அசெம்பிளித் தேர்தலின் போது நாம் கூறினோம். திலகர் கட்டடத் தீர்மானங்களை, டில்லி சட்டசபையில் சாயாது என்றுளறுத்துரைத்தோம். விருப்புக்கு எதை வேண்டுமானாலும் செய்யலாம்; ஆனால், வைசிராயின் விசேஷ அதிகாரத்தின் முன்பு காங்கிரஸ்காரரின் தேர்தல் வாக்குறுதி தலைகாட்டாது என்று இடித்துக் கூறினோம். நம் வாக்கின்படி இன்று, காங்கிரஸ்காரரின் அத்தனைத் தீர்மானங்களும், வைசிராயினால் நிராகரிக்கப்பட்டன. "காங்கிரஸ் வெற்றி" என அலங்காரத் தலையங்கம் எழுதிய பத்திரிகைகளே, வைசிராயின் விசேஷ அதிகாரம் செலுத்தப்பட்டதால், காங்கிரஸ் கட்சியின் உழைப்பு விழலுக்கிறைத்த நீராயிற்றெனும் உண்மையை வெளியிட்டன. அசெம்பிளிக்குச் செல்லும் போதே, தமக்கு இக்கதியே வருமெனத் திடமாகத் தெரிந்தும், மற்றையோரால் செய்ய முடியாத வீரதீரச் செயல்களைத் தாம் செய்வதாகப் பொது மக்களிடம் புளுகி ஓட் வாங்கிய சிலர்கள், தோற்றபிறகாவது உள்ளதை ஒளியாது கூறாது, மீசையில் மண்படவில்லை எனப் பேசுகின்றனர். என்னே இவர் தம் நெஞ்சழுத்தம்!

2000 கேள்விகள் கேட்டனராம் காங்கிரஸ்காரர்கள்! இதற்கு நிகரான தேசியத் தொண்டை யாரால் செய்யமுடியும்!! நாம் கேட்கிறோம், இந்த 2000 கேள்விகளைக் காங்கிரசார் கேட்டுவிட்டதால், பொதுமக்களுக்கு அரை அவுன்சு நன்மை விளைந்ததா? பாரதமாதாவின் சுயராஜ்ய ரதம் ஒரு அங்குலம் முன்னுக்கு நகர்ந்ததா? பொறுப்பான, அவசியமானகேள்விகளையா காங்கிரசார் அசெம்பிளியில் கேட்டனர்? அநாவசியமான கேள்விகளை மனம் போனபடி கேட்டு விட்டு, அரசாங்கத்தார் பதில் தயார் செய்து வைத்திருக்கும் போது, அசெம்பிளியில் பிரசன்னமாகாது மறைந்தனர் இந்த மகானுபாவர்கள். இதைக் குறித்து, சின்னாட்களுக்கு முன்பு அசெம்பிளி தலைவர் கூட அழுத்தமாகக் கூறவில்லையா? "வினாக்கள் காலங்கழித்தது போதும், இனி ஏதேனும் வேலையைக் கவனிப்போம்" என்று சர்க்கார் மெம்பரும், தலைவரும் புத்திமதி கூறும் விதத்திலன்றோ, நமது காங்கிரஸ் நேசர்கள் நடந்து கொண்டனர். அநாவசியமான கேள்விகளைக் கேட்டு, அதற்காகப் பதில் தயார் செய்வதற்காக, அரசாங்கம் பணத்தைச் செலவிட வேண்டி வருகிறது. இது பொது மக்களுக்கு வீணாக ஏற்படும் சிரமம்—என்று கிரிக் மந்திரி முன்பொருமுறை, காங்கிரஸ் கட்சியினரைக் கண்டித்ததைப் பொது மக்கள் மறந்தனரெனவா, காங்கிரஸ் கட்சியினர் எண்ணுகின்றனர்! இந்த இரண்டாயிரம் கேள்விகளிலும், பொறுக்கி எடுத்த அசட்டுக் கேள்வியை, நமது சென்னை நகரத்தின் பிரதிநிதியாகத் தொழும் திரு. சத்தியமூர்த்தியன்றோ கேட்டார்? "டோக்கியோ நகரத்திலுள்ள உலக மியூசியத்தில், 'நாய்களும் இந்தியர்களும் உள்ளே வரக்கூடாதென எழுதப் பட்டிருக்கிறதா?' என்ற கேள்வியைத் திரு. சத்தியமூர்த்தி கேட்டார். பாரததேவியின் மான சம்ரக்ஷணத்தின் முழுப் பொறுப்பு தனக்கே என எண்ணினார் போலும் திரு மூர்த்தி. டோக்கியோ நகரத்திற்கு தந்தி பறந்தது. கடைசியில் கிடைத்தபதில் யாதெனில், "டோக்கியோ நகரில் அவ்விதமான மியூசியமே கிடையாது, நகரில் வேறு எந்த இடத்திலும், இந்தியர் வரக்கூடாதென எழுதப்பட்டிருக்கவில்லை" இப்படி அபத்தமான விஷயத்தை எடுத்துக்கொண்டு, அதற்கொரு அநாவசியக் கேள்வி போட்டு பொது மக்களின் பணத்தை வீண் செலவு ஏற்படுத்துவது, தேசத் தொண்டாகுமா; இவ்விதமான "அபூர்வக்" கேள்விகளைக் கேட்டு விட்டதற்காக, பொதுமக்கள் தம்மைப் பாராட்டவும் வேண்டுமென காங்கிரஸ் கட்சியினர் எண்ணுகின்றனரே, இது எந்த ரகத்தில் சேர்ந்ததென நம்மால் கூற முடியவில்லை.

நடந்த சம்பவம் இவ்விதமிருக்க "சுதேசமித்திரன்" "அவர்கள் (காங்கிரஸ்காரர்கள்) ஜனங்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் பலவற்றையும் நிறைவேற்றி வைத்திருக்கிறார்கள்" எனக் கூசாது கூறுகிறது. உடனே, பொது மக்களுக்கு உண்மை தெரிந்து விட்டிருக்குமென்ற அச்சம் பிடரியைப் பிடித்துத்தள்ளவே அதே 'மித்திரன்' 'கைமேல் பலன் இல்லை எனில் அது அவர்களுடைய குற்றமன்று' என்று வேதாந்தம் பேசுகிறது. குற்றம் யாருடையது என்று ஆராய நாம் இப்போது ஆசைப்படவில்லை. ஆனால், காங்கிரஸ் கட்சி அசெம்பிளியில் சென்றதால் "கைமேல்பலனில்லை" என்பதை மட்டும் அழுத்தமாகக்கூற அவாவுகிறோம்.

காற்றில் பறந்தவாக்குறுதிகளையாவது மறந்து, காங்கிரஸ் கட்சியினரை மன்னிக்கலாம். "காகித வெற்றி"களுக்காகப் பெருமை அடித்துக் கொள்வதைக் கூடப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால், தேர்தலின் போது தேனொழுகப் பேசி டில்லிசென்ற அவர்கள், தொழிலாளர்களுக்குச் செய்த துரோகத்தையாரால் தான் மறக்கமுடியும்-அப்பாதகத்தைக் கண்டு எவரே சகிப்பர்! சம்பளப் பட்டுவாடா விஷயமாகத் திரு. மோடி கொண்டு வந்த திருத்தம் தொழிலாளர்களுக்குப் புதிய தொரு விலங்கு. அதைப் பூட்ட உடந்தையாக இருந்தவர்கள் தான் நமது தேசியத் தலைவர்கள்! இதை 'தின மணி' எவ்வளவு சாதுர்யமாக மறைத்து மழுப்புகிறது! 'தொழிலாளர் சம்பளப் பட்டுவாடா மசோதாவில் மட்டும் இந்திய முதலாளிகளின் கட்சியுடன் சர்க்கார் ஒரு மிகப் பிற்போக்கான திருத்தத்தை நிறைவேற்றிக் கொண்டார்கள்' என்று 'தின மணி'யெங்கேயோ, யாரோ, எதையோ செய்தார்கள் என்பது போல, மழுப்பி விடுகிறது. அனேக முறை அரசாங்கத்தைத் தோற்கடித்ததாகச் சங்கநாதம் செய்யும் காங்கிரஸ் கட்சியினர், மோடி திருத்தத்தின் போது என்னவானார்கள்? முதலாளிகளின் கட்சியின் நிழலில் ஒதுங்கி நின்றனரா? ஒருவர் இருவர் தவிர மற்றையக் காங்கிரஸ் பிரதிநிதிகள், தொழிலாளருக்குத் தீங்கிழைத்தனர். இதை மறுக்க முடியாது. 'தினமணி' விஷயத்தை மழுப்பிவிட்டது. ஆனால் "மித்திரன்" சற்று ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்து, "சம்பளபட்டுவாடா விஷயத்திலும் அவர்கள் (காங்கிரஸ்) முன்னெச்சரிக்கையாகவும் உதாரமாகவும் இருந்திருந்தால், தொழிலாளர் குறைபடுவதற்கு இடமிராது" எனக் கூறுகிறது. டோக்கியோவில் இல்லாத மியூசியத்தைப்பற்றியும் கேள்வி கேட்கும் தேசிய வீரர் நிறைந்த காங்கிரஸ் கட்சியினர், ஏழைத்தொழிலாளியின் ஜீவியத்தைப்பாதித்து உரிமையைத் தாக்கி சுதந்திரத்தைப் பங்கப்படுத்தும் பிரச்னையின் போது, முன்னெச்சரிக்கையாகவும் உதாரமாகவும் இல்லாதது, அவர்களுடைய வன்னெஞ்சைக் காட்டுகிறதெனவே நாம் நம்புகிறோம்.

இவ்வித குண விசேஷங்கள் நிரம்பிய காங்கிரஸ் கட்சியினர்-பொது மக்களுக்காக, அசெம்பிளியில் சாதித்தது என்னவென்று அலசிப்பார்க்கும்போது, சுத்த சூன்யம் - என்றுதான் ஏற்படும். நாமமட்டுமல்ல, நடுநிலையில் நின்றுபார்க்கும் ஒவ்வொருவரும் புலாபாய் கம்பெனியால் தேசத்திற்குக் கிடைத்த நிகர லாபம் 0-0-0 என்ற முடிவிற்குத் தான் வந்து தீரவேண்டும் இந்நிலையில், காங்கிரஸ் கட்சியினர் வெளியிட்டுள்ள அறிக்கையைப் படிக்கும் போது,

"நெஞ்சிலுரமுமின்றி
நேர்மைத்திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடி-கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி"

என்ற பாரதி கீதம் நமது செவியில் ஒலித்தபடி இருக்கிறது.

எதியோபியத் துருப்புகளின் வீரம்

சண்டையைத் தொடர்ந்து நடத்த தயார்

ஆனால் சர்க்காரால் திருப்பி அழைக்கப்பட்டனர்

அட்டிஸ் அபாபா, ஏப், 28

வடக்கிலிருந்து திருப்பி அழைக்கப்பட்டுள்ள எதியோபியத் துருப்புகள் மிகுந்த வீராவேசத்தைக் காட்டிவருகின்றன. இத்தாலியரின் வெடிகுண்டுகளையும், விஷப் புகையையும் லக்ஷியம் செய்யாமல் சண்டையை தொடர்ந்து நடத்த தாங்கள் தயாராயிருப்பதாகவும், ஆனால் சர்க்கார் உத்திரவுக்குக் கீழ்ப் படிந்தே தாங்கள் திரும்பி வரும்படி நேரிட்டதென்றும் கூறுகின்றனர்.

டெஸ்ஸிக்கு கிழக்குப் பாதையிலுள்ள டெப்ரா பிர்ஹனில் காயமடைந்த எதியோபியத் துருப்புகளின் எண்ணிக்கை அதிகமாயிருப்பதால் மேற்படி ஸ்தலத்திற்கு லாரிகளை அனுப்பும்படி பிரிட்டிஷ் ஆம்புலன்ஸை கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

வட சீனாவில் ஜப்பான் ஆதிக்கம்

ஹோபே, சாஹார் மாகாணங்களுடன் ஒப்பந்தம்

முக்கிய இடங்களில் துருப்புகளை வைக்க உரிமை

ஷாங்கை, ஏப், 28

வட சீனாவில் ஜப்பான் தன் ஆதிக்கத்தை இன்னும் அதிகமாக பலப்படுத்த முற்பட்டிருக்கிறது. சுயாட்சி பெற்றுள்ள, ஹோபே, சாஹார் என்ற இரு வட மாகாணங்களின் அரசியல் கவுன்சிலுடன் ஜப்பான் ஒரு இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

அவ் வொப்பந்தப்படி, பொதுவுடமைக்காரர்களுக்கு எதிராக ஏகோபித்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், மேற்படி இரு மாகாணங்களின் மேற்கு, தெற்கு எல்லைப்புறங்களிலும், ரயில்வே பாதையிலுள்ள பல முக்கிய இடங்களிலும் துருப்புகளை ஜப்பான் வைக்க உரிமை பெற்றிருப்பதாகவும் தெரிகிறது.

8 கோடி பவுன்

ஜெர்மனிக்கு பிரிட்டன் கடன்?

பெர்லின், ஏப், 27

ஜெர்மனிக்கு 8 கோடி பவுன் கடன் கொடுக்க லண்டனில் முடிவாகி யிருக்கிற தென ஜெர்மன் பாங்கிக்காரர்களிடை ஒரு வதந்தி உலாவி வருகிறது.

ஆஸ்திரிய சான்சலருக்கு எச்சரிக்கை

ஹெயிம்வர் படைக்கு உதவி செய்தல் வேண்டும்

ஸ்டாரம்பர்க் இளவரசர் உறுதி

வியன்னா, ஏப். 27

15,000 ஹெயிம்வர் துருப்புகளிடையே நேற்று ஆஸ்திரிய வைஸ் சான்சலரான ஸ்டாரம்பர்க் இளவரசர் பேசிய பொழுது குறிப்பிட்டதாவது:-

"ஹெயிம்வர் படையை நிராயுதபாணிகளாக்க முடியுமென்று அரசியல் ஞானசூனியர்களும், அறிவீனர்களும்தான் எதிர் பார்ப்பார்கள். எனது ஜீவன் உள்ளவரையிலும் அப்படைகளைக் கலைப்ப தென்பது முடியாத காரியம். நமது சான்ஸலர் ஷுஷ்னிக் நம்பிக்கை வைத்து நமக்கு உதவி புரிதல் வேண்டும். இல்லாவிடில அவர் திணறடிக்கப்பட்டு அகற்றப்படுவார்."

ஹெயிம்வர் படையைக் கலைத்து ஸ்டாரம்பர்க் இளவரசரை பதவியிலிருந்து விலக்கிவிட சில மந்திரிகள் முயற்சித்ததற்கு இளவரசரின் பிரசங்கம் ஆணித்தரமான பதிலாகக் கருதப்படுகிறது.

பூனாவில் அமைதி

சமரசப்படுத்த தலைவர்கள் முயற்சி

பூனா, ஏப், 28

சென்ற சில தினங்களுக்கு முன்பு நடைபெற்ற கலவரத்திற்குப் பின் பூனாவில் இப்பொழுது அமைதி நிலவி வருகிறது. இரு சமூகத் தலைவர்களும் சமரச வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். நகரிலும், கண்டோன்மெண்டிலும் உள்ள எல்லா சமூகத் தலைவர்களும் நேற்று மாலை கோகலே ஹாலில் கூடி சம்பந்தப்பட்ட இரு சமூகங்களுக்கும் இடையில் சமாதானத்தை நிலவச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைப்பற்றி யோசனை செய்தார்கள்.

எகிப்து அரசர் மரணம்

ரீஜன்ஸி கவுன்சில் நியமனம்

கெய்ரோ, ஏப், 28

இன்று மாலை 1-மணிக்கு எகிப்து மன்னரான பாட் அரசர் காலமானார். அவரது மரணச் செய்தி டெலிபோன் மூலம் பிரதம மந்திரிக்கு அறிவிக்கப்பட்டது. வியாழக்கிழமையதினம் இறுதிச் சடங்குகள் நடைபெறும்.

நைல் நதிப் பள்ளத்தாக்கையும், சஹாரா பாலைவனத்தையும், எதிர் நோக்கி மோகத்தம் குன்றின் அடிவாரத்தில் தானே கட்டி முடித்த எல்ரிபாய் மசூதியில் பாட் அரசரின் சவம் அடக்கம் செய்யப்படும்.

இங்கிலாந்தில் வாசித்து வரும் பரூக் இளவரசர், எகிப்துக்குத் திரும்பி வருகிறார்.

பரூக் இளவரசர் பாலிய வயதினராயிருப்பதால், பாட் அரசரின் மரணம் ரீஜன்ஸி கவுன்சிலை நியமிக்கச் செய்திருக்கிறது. 1922-ல் பாட் அரசரால் அங்கீகரிக்கப்பட்ட அங்கத்தினர்கள் ரீஜன்ஸி கவுன்சிலில் அங்கம் வகிப்பர். மேற்படி அங்கத்தினர்களில் யாராகிலும், அங்கம் வகிக்க அசக்தர்களாயிருப்பார்களானால் அவரது ஸ்தானத்திற்கு வேறொரு அங்கத்தினரை நியமிக்க எகிப்து மந்திரி சபை உரிமை பெற்றிருக்கிறது.

புதிய பர்மா கவர்னர்

ரங்கூன், ஏப், 28

புதிய பர்மா கவர்னரான ஸர். ஆர்ச்சி பால்ட் கோக்ரேனின் பதவி ஏற்பும், ராஜ விஸ்வாசப் பிரமாணமும் மே மாதம் 8-உ தேதி மேமியோவில் நடைபெறுமெனத் தெரிகிறது.

"உங்கள் தேசத்தின் லக்ஷியத்திற்காகப் போராடுங்கள்"

வாலிபர்கள் கடமை

சர். ராதாகிருஷ்ணன் வேண்டுகோள்

சென்னை, ஏப், 27

ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலை கீழ்த்திசை மத தத்துவ ஆசிரியராக நியமிக்கப்பட்டிருக்கும் சர். எஸ். ராதாகிருஷ்ணனுக்குச் சென்னை மாணவர்களால் சென்ற சனிக்கிழமை மாலை கோகலே ஹாலில் ஒரு உபசாரம் நடத்தப்பட்டது. மாணவர்கள் உபசாரப் பத்திரத்தை ஏற்றுக் கொண்டு, சர். ராதாகிருஷ்ணன் கூறிய பதிலின் சாரமாவது:-

"நான் இதுவரையில் கடினமான நிர்வாகப் பதவியை வகித்திருந்தேன். இப்போது சுலபமான ஓர் புரொபஸர் பீடத்தை அடையப் போகிறேன். ஆக்ஸ்போர்டில் கீழ்நாட்டு வேதாந்தம், தாம சாஸ்திரங்களுன்பட பல உபயோகமற்ற விஷயங்களைப் பாதுகாத்து வருகிறார்கள் என்றும், வேண்டிக்கொண்டாலன்றி அங்கு புரொபஸர்கள் பிரசங்கம் செய்வதேயில்லை யென்றும், உபாத்தியாயர்கள் சுருட்டுப் புகைப்பதைத் தவிர வேறொன்றும் செய்வதில்லை யென்றும், மாணவர்கள் சுகாதாரமற்ற புராதன அறைகளில் வசித்து, எட்டாம் ஹென்றி சமையலறையில் தயாராகும் உணவை அருந்துகிறார்கள் என்றும் சமீபத்தில் ஒரு பிரபலஸ்தர் கூறினர். ஆகையால், கடின நிர்வாக வேலையை விட்டு, வாரம் ஒன்றிரு முறையே பிரசங்கம் செய்யும் சுலபமான வேலைக்கு நான் போவதற்காக, என்னை நீங்கள் வாழ்த்த வேண்டியது தான்.

"என்றாலும், ஏராளமான இந்திய மாணவர் ஆக்ஸ்போர்டில் படிக்கச் செல்லுகிறார்கள். இதன் காரணமென்ன? ஆக்ஸ்போர்டு மாணவன் ஓர் விளையாட்டில் தோற்றாலும் தோற்பானேயன்றி, மோசமாக ஆடமாட்டான் என்று ஓர் அமெரிக்கப் பண்டிதர் கூறியது உண்மையாகும். ஆக்ஸ்போர்டு மாணவர்கள் எதிரிகளுடனும் தர்மமாய் நடந்து கொள்ளுவார்கள். சூழ்ச்சி, மோசடி முதலியவைகளில் அவர்களுக்கு வெறுப்பு. அவர்கள் சுயமதிப்பும், உறுதியான நாணயமும் உடையவர்கள். உலகை அதன் நெருக்கடியினின்றும் காப்பாற்ற இந்த குணங்களே தேவையாகு மல்லவா?

"மனமுருக்கும் வசனங்களையும், அலங்கார வார்த்தைகளையும் நாம் கேட்டுவிட்டோம். நாம் உயர்ந்த விஷயங்களைப்பற்றியெல்லாம் பேசுகிறோம். அப்படியிருந்தும் அந்த உயர்ந்த கொள்கைகளை அனுஷ்டானத்தில் கைக்கொள்ள முடியவில்லையே? உலகத்தின் பிசகு என்ன? ஞானம் என்பது, புலனடக்கமும், உயர்ந்த லட்சியமும், தன்னலத் தியாகமும், மனதைக் கெடுக்கும் காமக் குரோதாதிகள் விலக்கும் உடைய ஞானியின் சொத்து. இன்று உலகத்தில் மனிதர்களின் மூளையும் சாமர்த்தியமும் அதிகரித்துவிட்டன. ஆனால், போதிய ஞானமும், ஆத்மத் தூய்மையும் ஏற்படவில்லை. இதுதான் இன்று உலகின் குற்றமாகும். உன்னத அபிலாஷைகளுடன் கூடிய சர்வ தேசச் சங்கம் இருக்கத்தான் இருக்கிறது. என்றாலும், எங்கோ ஏதோ ஒரு கோளாறு ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் தான், அச் சங்கத்தார் பேசும் பேச்சை யெல்லாம் அனுஷ்டானத்தில் கொண்டுவர அவர்களால் இயலவில்லை.

"வெறும் ஆராய்ச்சி அறிவு மட்டும் போதாது. ஆத்ம வளர்ச்சியும் உண்மையான ஞானமும் நமக்கு வேண்டும். இந்த லட்சியமான அனுஷ்டானத்தில் கொண்டுவர முடியவில்லை. அதில் தான் உண்மையான சங்கடம் இருக்கிறது. மனித சமூகத்தின் தொல்லைகளுக்கெல்லாம் காரணம், குரோதமும் தன்னலமுமேயாகும். அந்தத் தீய குணங்களை நாம் ஒழிக்க வேண்டும்.

"நம் சொந்தப் பாட்டைப் பார்த்துக்கொண்டு சௌக்கியமாய் வாழ்ந்து மடிந்தால் போதும் என்று சொல்லுவோர் இருக்கிறார்கள். என்றைக்கிருந்தாலும் சாவு நிச்சயமேயாயினும், இம்மையில் சுகபோகங்களை அனுபவிப்பதுடன், வாழ்க்கையின் உயர்ந்த லட்சியங்களுக்குப் பாடுபட்டுச் செல்வது நம் கடமையாகும் என்று கூறும் மறுசாரார் இருக்கிறார்கள்.

துரோபதி வாக்கியம்

"இன்று ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வோர் லட்சியம் இருக்கிறது. இந்திய மாணவரும் அந்த மாதிரி இன்று கடைப்பிடிக்க வேண்டிய ஓர் லட்சியம் இருக்கிறது. துரோபதை பின்வருமாறு கூறினள்:-

"உன்னதமான ஐதிகங்கள் நிறைந்த பெருங் குடும்பத்திலே நான் பிறந்தேன். ஆனால், இன்று நான் மண்ணில் புரண்டு தவிக்கிறேன். இந்த நிலையிலேயே எப்படி நான் வாழ்ந்து கொண்டிருப்பேன்?

"இன்று நமது நிலைமையும் மண்ணைக் கவ்வி வாழும் மானமற்ற வாழ்க்கையாகவே யிருக்கிறது. நாம் இவ்வுலகில் மானமாகவும் கௌரவத்தோடும் வாழ்வதற்கு என்ன செய்ய வேண்டும்? உங்களுக்கு ஓர் செய்தி அளிக்கும்படி என்னை நீங்கள் கேட்கிறீர்கள்.

"வாலிபருக்கு ஓர் லட்சியம் வேண்டும். உங்களுக்கு வேலை கிடைக்காவிட்டால் பாதகமில்லை. அதனால், வேலையில்லாத் திண்டாட்டத்தின் அபாயங்களை நான் அலட்சியம் செய்வதாக நீங்கள் எண்ணிவிடலாகாது. வேலையில்லாத் திண்டாட்டம் மிக முக்கிய விஷயந்தான். ஆனால் இவ்வுலக வாழ்க்கையில் உங்களுக்கு ஏதேனும் லட்சியம் இருக்குமானால், அது வேலையை விட மிகப் பெரிய விஷயமாகும். வேலை கிடைக்காத அபாயத்தை விட, எவ்வித லட்சியமுமில்லாத அபாயம் மேலும் மேலும் அதிகக் கேடாகும்.

"இந்நாட்டின் வாழ்க்கையில், ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு திசையிலும் இதனை அடிமை விலங்கு சூழ்ந்திருக்கிறது. அந்த அடிமைத் தனத்தினின்றும் இதனை விடுவிப்பதற்காக, உங்களாலான முழு முயற்சியையும் நீங்கள் செய்ய வேண்டும்.

"இந்திய மாணவர்கள் வருங்காலத்தை நோக்க வேண்டும். நாமும் மனிதர் என்ற உணர்ச்சியை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

"தேசத்தை அடிமைத்தனத்தினின்றும் விடுவிக்க அவர்கள் சங்கல்பம் செய்துகொண்டார்களானல், குடும்பம், வகுப்பு என்ற எண்ணங்களை யெல்லாம் அகற்றி, தேசமே ஞாபகமாயிருக்க வேண்டும். மாணவர்கள் அப்படிச் செய்வார்களானால், அவர்கள் தேச விடுதலைக்குப் போராடுவார்கள். இல்லையானால், அவர்கள் அடிமைத்தனத்தைத்தான் நிரந்தரமாய் இந்நாட்டில் ஸ்தாபித்து விடுவார்கள். தங்கள் போராட்டத்தில் அவர்கள் தோல்வியுற்றாலும் அதனால் பாதகமில்லை. "நான் [illegible] போராடி விட்டேன். வெற்றி பிறர் கையிலேயே இருக்கிறது" என்றுமது சொல்லக்கூடிய நிலைமையில் அவர்கள் இருந்தால் போதும்."

முஸ்லிம்களும், புதிய அரசியலும்

"பதவி ஏற்கத்தான் வேண்டும்"

திரு. அப்துல் ஹமீத்கான் பிரசங்கம்

சென்னை, ஏப், 27

சென்ற சனிக்கிழமை மாலை திருவல்லிக்கேணி கிரஸெண்ட் ஹாலில், முஸ்லிம் பார்லிமெண்டின் ஆதரவில் நடைபெற்ற ஓர் பொதுக் கூட்டத்தில், சென்னை நகர மேயரும், காங்கிரஸ் கட்சியினருமான திரு அப்துல்ஹமீத்கான் அகில இந்திய முஸ்லிம் லீகின் கொள்கைகளை விளக்கிப் பேசியதின் சாராம்சமாவது:-

"காங்கிரஸ்தான் தேச விடுதலைக்குப் போராடுகிறதே, அப்படியிருக்க, முஸ்லிம் லீக் வேறு எதற்கு என்று சிலர் கேட்கலாம். காங்கிரசுக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானது இந்து மகா சபையாகும். காங்கிரஸிலுள்ள இந்து அங்கத்தினர் இந்து மகாசபைக்கு அஞ்சுகிறார்கள். ஆகையால், வகுப்புப் பிரச்னைகளில், அவர்கள் திட்டமான அபிப்பிராயம் தெரிவிக்க மாட்டோமென்கிறார்கள். காங்கிரஸ் மகாசபை இந்துக்களையும் திருப்தி செய்யமுடியாமல், முஸ்லிம்களையும் திருப்தி செய்யமுடியாமல் திண்டாடுகிறது. காங்கிரஸ் இப்படி நடந்துகொள்ளுவதால், இருசமூகங்களுக்கும் சமரசம் ஏற்படுத்துவது சாத்தியமில்லை. இந்நிலைமையில், முஸ்லிம்கள், தங்கள் லீகில் சேர்ந்து, தனியாகவே போராடுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை.

"காங்கிரஸ், சட்டசபைப் பிரவேசம் செய்யத் தீர்மானித்துவிட்டது. ஆகையால், புதிய அரசியல் திட்டத்தை ஓரளவு நடத்திவைக்கவே அது தீர்மானித்துள்ளது. பதவி ஏற்க வேண்டுமென்பதை ஆதரிப்போர் காங்கிரசுக்குள் ஏராளமாயிருக்கிறார்கள். சுயராஜ்ஸ்காரர் மந்திரிப் பதவி ஏற்றபின் என்ன செய்யப் போகிறார்கள் என்பது யாருக்கும் தெரியாது. ஆகையால், ஒத்துழையாமை என்ற பேச்சுக்கு இனி அடியோடு இடமில்லை. ஆகையால், மாகாணங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், புதிய அரசியல் திட்டத்தைக் கைப்பற்றி சாத்தியமான மட்டில் அதனை நாம் உபயோகித்துக் கொள்ளுவது தான் வழி. சர்க்கார் ஆட்டிவைத்தபடி ஆடப்போகும் நபர்கள் அதனைக் கைப்பற்ற நாம் இடங்கொடுப்பதால் பயன் ஒன்றுமில்லை. மத்திய மாகாண தேர்தல் போர்டுகள் அமைக்க வேண்டுமென்று அகில இந்திய முஸ்லிம் லீக் முடிவு செய்திருக்கிறது. முஸ்லிம்கள் தங்கள் சொந்த வேலைத் திட்டத்தைத் தயாரித்துக் கொள்வதும் அவசியமாகும்.

"முஸ்லிம்கள் பிற்போக்குக் கட்சியாயிருக்கப் போவதில்லை. சர்க்காரிடம் கேவலமாக அடி பணிந்து அவர்கள் ஒத்துழைக்க மாட்டார்கள். முன்னேற்றமான திட்டமொன்றை அவர்கள் தயாரித்துக் கொண்டு, தங்கள் லட்சியங்களுக்கும், நோக்கங்களுக்கும் ஏறக்குறைய இசைந்த இதர கட்சிகளோடு ஒத்துழைப்பார்கள்.

"மந்திரி பதவி ஏற்கும் விஷயத்தில் காங்கிரஸ் என்ன முடிவு செய்யப் போகிறதென்பதை நாம் அறியோம். பதவி யேற்கக் கூடாதென்று முஸ்லிம் லீக் ஒருபோதும் தடை செய்யாதென்றே நான் நம்புகிறேன். மந்திரி பதவி ஏற்கலாகாதென்று காங்கிரஸ் தடை செய்துவிடுமானால், சென்னை முஸ்லிம்கள் காங்கிரசையன்றி வேறு முற்போக்கு கட்சியொன்றுடன் சேர்ந்துழைப்பதுமேலமா என்று யோசிக்க நேரிடும். ஐக்கிய கட்சி யொன்று அமைக்கும் யோசனை ஒன்று உலவுகின்றது. ஆனால் மிக முற்போக்கான திட்டங்களையுடைய ஓர் கட்சியுடனேயே முஸ்லிம்கள் ஒத்துழைப்பார்கள்."

ஐ. சி. எஸ். உத்தியோகம்

நபர்களைத் தேர்ந்தெடுப்பதில் மாறுதல்

இந்தியா மந்திரி அறிக்கை

சிம்லா, ஏப், 28

ஐ. சி. எஸ். உத்தியோகத்திற்கு சேர்க்கப்படும் நபர்களிடை இருந்து வரும் விகிதாசாரத்தைப் பற்றி இந்தியா மந்திரி நூதனமான நியமன முறையை ஏற்படுத்தியிருக்கிறார். அது பின்வருமாறு:—

லண்டனிலும், டில்லியிலும் இரு போட்டிப் பரீட்சைகள் நடத்துவதன் மூலம் ஐ. சி. எஸ். உத்தியோகங்களுக்கு, சம எண்ணிக்கை ஆங்கிலேயரையும், இந்தியரையும் எடுக்கும் முறையை ஏற்படுத்தி 10 வருஷங்களுக்கு மேலாகிறது. முதலில் லண்டன் பரீட்சை நடக்கும். அதில் தேறிய ஐரோப்பியர் எண்ணிக்கையிலிருந்து, இந்தியர் எண்ணிக்கையைக் கழிப்பார்கள். மீதி வரும் ஸ்தானங்களுக்கு, டில்லியில் பரீட்சை நடத்துவார்கள். 1925 ஆம் ஏற்படுத்திய இந்த முறையில் இரு பெருங்குறைகள் இருக்கின்றன. இந்தியரை எடுப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்ட டில்லிப்பரீட்சைக்குப் போதிய ஸ்தானங்கள் அளிக்க முடியவில்லை. லண்டன் பரீட்சை மூலம் போதிய ஆங்கிலேயரும் கிடைக்கவில்லை. இதனால், சமீப வருஷங்களில், ஐ. சி. எஸ். உத்தியோகங்களில் இந்தியரும், ஐரோப்பியரும் சம எண்ணிக்கை இருக்க வேண்டுமென்ற விகிதத்தைப் பாதுகாக்க முடியவில்லை.

ஆகையால், புதிய அரசியல் சட்டத்தின் 244-வது பிரிவு அமுலுக்கு வந்ததும் பின்வரும் ஏற்பாட்டைக் கைக்கொள்ள வேண்டுமென இந்தியா மந்திரி தீர்மானித்திருக்கிறார்.

குறையும் ஐரோப்பியர் எண்ணிக்கையை ஈடுசெய்வதற்கு அங்கீகாரம் பெற்ற சர்வகலாசாலைகளில் ஆனர்ஸ் பட்டம் அடைந்தவர்களை ஓர் விசேஷக் கமிட்டி பொறுக்கியெடுத்து சிபார்சு செய்யவேண்டும். அக் கமிட்டியாருக்கு இங்கிலாந்திலுள்ள சிவில் சர்வீஸ் கமிஷனர்கள் உதவி செய்வார்கள்.

சிவில் சர்வீஸ் கமிஷனைக் கலந்து ஆலோசித்து, இந்தியா மந்திரி நிர்ணயிக்கும் யோக்கியதாம்சங்களைப் பெற்றிருப்பவர் மாத்திரமே, இந்தியரானாலும் பிரிட்டிஷ்காரரானாலும், ஐ. சி. எஸ். உத்தியோகங்களுக்கு நியமனம் பெறுவர்.

இந்தியரை ஐ. சி. எஸ். உத்தியோகங்களுக்கு எடுப்பதற்கு முக்கிய ஏற்பாடாக டில்லிப் பரீட்சையே இருந்து வரும். எனினும், இங்கிலாந்திலேயே படித்து ஆனர்ஸ் பட்டம் பெற்ற இந்தியர் மட்டில் லண்டன் பரீட்சையில் போட்டி போடுவதற்காக சில ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படும். ஆனால், அவர்கள் லண்டனில் இரண்டு வருஷங்களாவது வசித்திருக்க வேண்டும்.

லண்டன் பரீட்சையில் இந்தியர் போட்டி போடக் கூடிய ஸ்தானங்கள் பின்வரும் எண்ணிக்கைகளுக்கு மேலிராது-1937-ம் ஆண்டு 12; 1938-ம் ஆண்டு 10; 1939-ம் வருஷம் 8; 1940-ம் வருஷமும் பிறகும் 6.

லண்டன் பரீட்சையில் பிரிட்டிஷ்காரர் போதிய எண்ணிக்கை கிடைக்காவிட்டால், அக்குறை மேலே கண்ட நியமன ஏற்பாட்டின் படி ஈடு செய்யப்படும். இந்தியர் எண்ணிக்கை குறைந்தால், டில்லிப் பரீட்சை ஸ்தானங்களை அதிகரித்து அக்குறை ஈடு செய்யப்படும்.

ஐ. சி. எஸ். பரீட்சையில் தேறிய இந்தியர் இரண்டு வருஷமும், பிரிட்டிஷ்காரர் ஒரு வருஷமும் இங்கிலாந்தில் பயிற்சி பெற வேண்டுமென்று இப்போது விதியிருந்து வருகிறது. 1937-ம் வருஷமும், அதன் பின்னரும் தேறுவோர் யாவரும் இங்கிலாந்தில் ஒரு வருஷம் பயிற்சி பெற்றால் போதும்.

இந்தியாவில் எடுக்கப்படும் இந்தியர் வயது 23-க்கு மேல் போகக் கூடாது என்றிருப்பதை, 24-க்கு மேல் போகக் கூடாது என்று இனி திருத்தப்படும்.

ராஜாங்க சபை

கடைசி நாள் கூட்டம்

காப்பு வரித் தீர்வை மசோதா நிறைவேறியது

புதுடில்லி, ஏப், 27

சென்ற வெள்ளிக்கிழமையன்று கூடிய ராஜாங்கசபைக் கூட்டத்தில், கோதுமை, அரிசி இறக்குமதித் தீர்வை மசோதாவை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று திரு. ஸ்டெவர்ட் பிரேரணை செய்து கூறியதாவது:- இந்திய கோதுமையின் விலை உலக விலையோடு சமமாயிருக்கிறது. கோதுமை இறக்குமதி வரியை ஒரு ரூபாய்க்குக் குறைப்பதால் இந்திய கோதுமைக்குக் கெடுதி நேராது. அரிசித் தீர்வை தற்போதுள்ளதே போதுமானதாகையால் இன்னும் ஒரு வருஷத்திற்கு அதை நீடிக்க சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர்.

கோதுமை வரியைக் குறைத்தது சம்பந்தமாக பொதுவாக உத்தியோகப்பற்றற்ற மெம்பர்களும், முக்கியமாக கோதுமை விளையும் மாகாணத்தவர்களும் சர்க்காரது செயலைக் கண்டித்துப் பேசினர்கள்.

நியமன அங்கத்தினரான சர். ஹைபத் கான் நூன் கூட பலமாக ஆட்சேபித்தார். சர். அக்பர்கான், லாலாராம் சரணதாஸ் முதலியோரும் கோதுமைத் தீர்வைக் குறைப்பைக் கண்டித்தார்கள். சர். டேவிட் தேவதாஸ் சென்னை மாகாண அரிசி வியாபாரிகள் கவலை எடுத்துரைத்தார்.

சர். ஜகதீஸ் பிரசாதர் பதில்

சர்க்கார் கட்சித் தலைவரான சர். ஜகதீஸ் பிரசாதர் பதிலளிக்கையில்:—பம்பாய், கல்கத்தா ஆலை முதலாளிகள் தூண்டுதலின் பேரில் சர்க்கார் இப்படிச் செய்திருப்பதாகச் சிலர் கூறியது அடியோடு பொய்யாகும். ஐக்கிய மாகாணத்தில் சர்க்கார் 100-க்கு 25 வரை நில வரியைக் குறைத்து வஜா செய்திருக்கிறனர். விவசாயிகள் துன்பத்தை சர்க்கார் அறிந்திருக்கின்றனர், அவர்களுக்கு சகல விதத்திலும் உதவி செய்ய சர்க்கார் ஆவலுள்ளவர்களாக இருக்கின்றனர். தீர்வையைக் குறைத்ததால் உள்நாட்டு விலைக்கோ இறக்குமதிக்கோ எவ்வித பாதகமும் ஏற்படாது. சர்க்கார் மதிப்புத் தவறுமானல் தீர்வையை) மறுபடியும் உயர்த்த சர்க்காருக்கு அதிகாரமிருக்கிறது.

வர்த்தகக் காரியதரிசி திரு. ஸ்டெவர்ட் பிறகு பேசுகையில், பழைய சட்டம் காலாவதியானபிறகு தாமதமாக இந்த மசோதாவை சர்க்கார் கொண்டுவந்தனர் என்று சொல்லி கெட்ட எண்ணங் கற்பிப்பதை மறுதலித்தார். பிறகு மசோதாவை ஆலோசனைக்கெடுத்துக் கொள்ளுவதென்ற பிரேரணை நிறைவேறியது.

பிறகு மசோதாவின் பிரிவுகள் விவாதிக்கப்பட்டு இறுதியில் மசோதாவைச் சட்டமாக்க வேண்டுமென்ற பிரேரணை நிறைவேறியது.

பிறகு திரு. [illegible] பிரேரணைமேல் இந்தியச் [illegible] சட்ட மசோதா நிறைவேறியது.

சனிக்கிழமை ராஜாங்க சபை கடைசி முறையாகக் கூடி அன்னிய துணித் துண்டுகளின் மீது காப்பு வரித் தீர்வை விதிப்பது பற்றிய மசோதாவை விவாதித்தது கடைசியில் மசோதா நிறைவேறியது.

சபை கால வரையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

வைசிராய்க்கு இந்திய குதிரை

ஷாகரன்பூர் டிபோவுக்கு விஜயம்

சிம்லா, ஏப், 28

ஏப்ரல் 27-ம் தேதி யன்று ஷாகரன்பூர் ரீமவுண்ட் டிபோவுக்கு வைஸ்ராய் விஜயம் செய்து 3 குதிரைகளைத் தேர்ந்தெடுத்தார்.

அக் குதிரைகளில் இரண்டு ஆஸ்திரேலியா தேசத்தினதாகும். மற்றொன்று மாண்ட் கோமரி பிரதேசத்தில் [illegible] தாகும். இந்திய குதிரைமீது வைஸிராய் விசேஷ பிரீதியுடையவராயிருக்கிறார்.

முஸ்லிம்களின் கடமை

திரு. ஜின்னு விளக்கம்

புதுடில்லி, ஏப், 27

நேற்று டில்லியில் நடைபெற்ற முஸ்லிம் தலைவர்கள் கூட்டத்தில், முஸ்லிம்களின் கடமையைக் குறித்து திரு. ஜின்னு கீழ்வருமாறு கூறியுள்ளார்:—

"முஸ்லிம் சமூகத்தார் சர்க்காரிடம் விஸ்வாசத்துடன் நடந்து கொண்டு வருவதால் சர்க்கார் தங்களிடம் விசேஷ சலுகை காட்டுவார்களென்று கருதுவோருக்கு நான் கூறுவதென்ன வென்றால், அவ் விதம் மனப்பால் குடிப்பதை விட்டுவிட வேண்டு மென்பதே. எல்லா சமூகத்தாரிடமும் க்ஷேமகரமான நடத்தை அளிப்பதாக வாக்களிக்கவோ அளித்த வாக்குறுதியை நான் உங்களுக்கு ஞாபகமூட்டுகின்றேன். சமரசத்திற்காக காங்கிரஸை எதிர்பார்ப்பவர்களுக்கு நான் கூறுவதென்ன வென்றால், முதலில் நாம் நமது கோரிக்கையை வற்புறுத்த தக்க அளவு பலப்பட வேண்டுமென்பதாகும். முதலில் தகுதியுடைமை வேண்டும், பிறகே விருப்பம் கொள்ள வேண்டும்"

சமூகத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு சுயாலப் பிரியர்களாகத் திரிபவர்களை நம்பவேண்டாமென்றும் திரு. ஜின்னு எச்சரிக்கை செய்தார். முஸ்லிம் சமூக நன்மையையும், இந்தியாவின் நன்மையையும் பிரதானமாகவும் சொந்த நன்மையைக் கடைசியாகவும் கருதி நடப்பவர்களையே சட்டசபைக்குத் தெரிந்தெடுக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர். ஜின்னு மேலும் ஜாக்கிரதையாகக் குறிப்பிட்டதாவது:— "முஸ்லிம்களாகிய நாம் நம்மிடை கட்டுப்பாடு செய்துகொள்ள வேண்டுமென்று நான் கூறியபோது என்மீது தப்பபிப்பிராயம் கொள்ளவே கூடாது. முஸ்லிம் சமூகம் உயர்வடைந்தால் முஸ்லிம்கள் தீவிர தேசபக்தியுடன் இதர சமூகம் போல தேசத்திற்குச் சேவை புரியக்கூடும். கட்டுப்பாடு வேண்டுமென்று நான் கூறியதின் தாத்பரியம் இதுவே."

ஒளவைத் தமிழக மாணவர் கழகம்

முதலாண்டு விழா

நிகழும் தாது-ஆம் சித்திரை மீ 20, 21 தேதி சனி, ஞாயிற்றுக் கிழமை 2, 3—5—26-ம் தேதிகளில் இக்கழகத்தின் முதலாண்டு விழா, திருவொற்றியூர்க் கிராமணி பேட்டை, செல்வ விநாயகர் திருக்கோயில் முன் அமைந்துள்ள திருவள்ளுவர் நிலயத்தில், செஞ்சிறப்பொடு குறித்தவாறு நடைபெறும்.

அவ்வமயம், பல்லாவரம் ஸ்ரீலஸ்ரீ, சுவாமி. வேதாசலம் என்னும் மறைமலையடிகள் தலைமை தாங்க இசைந்துள்ளார். புலவர் பெருமக்கள் பலர் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள்.

நிகழ்ச்சி நிரல்:— சனிக்கிழமை (2-5-36) மாலை 3-30 மணிக்கு திரு. தே. அண்ணாமலை முதலியார், திரு. க. அப்பாதுரை முதலியார், தேவார ஆசிரியன்மார் ஆகியோரால் தமிழ்மறை ஓதல்; வரவேற்பு வழங்கல்; தலைவர் முன்னுரை; அதன் பிறகு திரு. திரிபுரசுந்தரியால் "தமிழும் தமிழ் மாதரும்" என்பது பற்றியும், திரு. சி. எஸ். இராஜப்பிள்ளையால் "காரைக்காலம்மையார்" என்பது பற்றியும், வித்துவான் திரு. கோ. பாலசுந்தரநாயகரால் "பட்டினத்தடிகள்" என்பது பற்றியும் சொற்பொழிவுகள் நடைபெறும்.

மறுநாள், அறிக்கை படித்த பிறகு திரு. கு. வச்சிரவேலு முதலியார் "திரு. நீலகண்டர்" என்பது பற்றியும், திரு. ஆசிரியர் அ. வரதநஞ்சைய பிள்ளையால் "சேக்கிழாரும் பிறகவிஞரும்" என்பது பற்றியும், திரு. ஒளவை சு. துரைசாமிப் பிள்ளையால் "[illegible] தடைகட்கு விடை" என்பது பற்றியும் சொற்பொழிவுகள் நடைபெறும். பிறகு தலைவர் முடிவுரையுடன் நன்றி கூறப்பட்டு தமிழ் மறை ஓதலுடன் விழா முடியும் என —வரவேற்புத் தலைவர் எழுதுகிறார்.

பாண்டியன்—ராமசாமி அறிக்கை

திருச்சியில் கூட்டம்

"குடி அரசு" எழுதுகிறது :—

26-1-36-ந் தேதி குடி அரசில் வெளியான பாண்டியன்-ராமசாமி அறிக்கையின்படி கூட்டப்படவேண்டிய கூட்டம் மே மாதம் 3-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை திருச்சியில் கூட ஏற்பாடு செய்திருக்கும் விஷயம் முன்னமேயே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி அக் கூட்டம் 3-5-36-ந் தேதி திருச்சியில் தோழர்கள்: டி. பி. வேதாசலம், கே. ஏ. பி. விஸ்வநாதம் ஆகியவர்கள் முயற்சியில் தென்னூர் பழனிச்சாமி பிள்ளை பங்களாவில் கூட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டம் ஒரு கூட்டத்தாருக்கு முக்கியமானதொரு கூட்டம் என்பதைப்பற்றி நாம் விவரிக்க வேண்டியதில்லை. பார்ப்பனரும், பார்ப்பனக் கூலிகளும் இதைப்பரிகசிக்கக்கூடும். அது அவர்களது ஜாதிப்புத்தியும், இழி சுபாவமுமாகும்.

பார்ப்பனரல்லாதார் சமூக முன்னேற்றத்திற்கு என்றே ஆரம்பிக்கப்பட்ட ஒரு கட்சியானது இந்த 20 வருஷ காலமாக தென் இந்தியாவில் எவ்வளவோ வேலைசெய்து வந்திருக்கிறது. சமூகத் துறையில் இதுவரை எந்தக்கட்சியாரும், எந்த தனிப்பட்ட பெரியாரும் எந்த அரசாங்கமும் செய்திருக்காத செய்ய நினைக்கவும் இல்லாத அளவு காரியங்களைச் செய்து ஒரு புரட்சியை உண்டாக்கி இருக்கிறது.

அதாவது, இந்த பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்தின் பயனாக பார்ப்பனரல்லாத சமூகத்தைச் சேர்ந்த மக்கள் கல்வி, உத்தியோகம், அரசியல், சமூக இயல்புகளில் சம்பந்தம் சில சந்தர்ப்பங்களில் ஆதிக்கம் முதலாகியவைகளில் முன்னேற்றம் அடைந்திருப்பதோடு பார்ப்பனரல்லாத மக்கள் என்று ஒரு சமூகம் தென்னிந்தியாவில் அனுமதேயமாய், அடிமையாய், இழி ஜாதியாய், மிருகங்களிலும் கேவலமாய், மிருகப் பிராயமாய் இருந்தது மாறி இன்று அவர்களும் ஒரு சக்தியுள்ள மக்களாய் சுயமரியாதையில் உணர்ச்சி உள்ளவர்களாய் இருந்து வருகிறார்கள் என்று இந்தியாவுக்கும், உலகத்துக்கும் எடுத்துக்காட்டும்படி செய்திருக்கிறது.

பார்ப்பனரல்லாதார் இயக்கம்

சுருக்கச்சொல்ல வேண்டுமானால் பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்று ஒன்று ஏற்பட்டு இந்த 20 வருஷ காலமாய் இந்த நாட்டில் இவ்வளவு வேலை செய்திருக்க வில்லையானால் இன்று அரசாங்கத்திலோ, காங்கிரசிலோ, ஜஸ்டிஸ்கட்சியிலோ, சுயமரியாதை இயக்கத்திலோ, அல்லது ஸ்தல ஸ்தாபனங்களிலோ, மற்றும் வேறுபல காரியங்களிலோ விளம்பரம் பெற்றும், பிரபலம் பெற்றும் ஆதிக்கம் பெற்றும் இருக்கும் பார்ப்பனரல்லாதார்கள் இன்றுள்ள இந்த நிலைமையில் இருந்திருக்க முடியுமா என்பதைக் கவனித்தால் அக்கட்சியின் பெருமையும், அது செய்துள்ள வேலையும் விளங்கும். உண்மையாகவே இன்று பார்ப்பனரல்லாதார் இயக்கம் இல்லையானால் இன்று தேசபக்தர்களாய்-சுயமரியாதை வீரர்களாய், தாழ்த்தப்பட்ட சமூகத்தலைவர்களாய், சமதர்ம அபிமானிகளாய் பார்ப்பனரல்லாத சமூகப் பிரமுகர்களாய் பலதுறைகளில் மேதாவிகளாய் இருந்து வரும் தோழர்களில் 100-க்கு 90 பேர்களும் (காந்தியார் இஷ்டப்படி அவரவர் வர்ணாசிரமத் தொழில்—பாரம்பரியமான தொழில் செய்ய வேண்டும் என்பதுபோல்) தானாக சேவகத்திலும் போலீசு கான்ஸ்டேபிளாயும், வாத்தியக்காரராயும், பறை அடிப்பவர்களாகவும், பாதரக்ஷை உற்பத்திக்காரராகவும், உப்புமிளகாய் பேரிச்சம்பழம் உருண்டை நட்டம் விற்பவராகவும், நாவிதர்களாகவும், கைவண்டி, ரிக்ஷாவண்டிக்காரர்களாகவும், மற்றும் இப்படிப்பட்ட பல தொழில்காரர்களாகவும் இருந்து கொண்டு பார்ப்பானை பூஜித்து அவன் எச்சிலை சாப்பிட்டுக் கொண்டுதான் இருக்க வேண்டும் என்பதை ஒளிக்காமலும், சிறிதும் தளர்ச்சி இல்லாமலும் அழுத்தம் திருத்தமாய் எடுத்துரைப்போம்.

இதற்கு என்ன ஆதாரம் என்று யாராவது கேட்பார்களேயானால் அதற்கு ஒரே ஒரு பதில்தான் சொல்லுவோம்.

அதாவது முதலிலே சொல்லப்பட்ட ஆட்கள் அல்லது இவர்களுக்கு (ஞாபகத்துக்கு வராத வரையில்) முன் உள்ள இவர்களது பல தலைமுறை முன்னோர்கள் என்ன காரணத்தால் என்ன தொழிலில் எப்படி வாழ்ந்து வந்தார்கள் என்பதை யோசித்துப் பாருங்கள் என்பதேயாகும்.

அப்படிப்பட்ட நிலையும், நிர்ப்பந்தமும் உள்ள மக்களின் சமூகத்துக்கு என்று ஏற்பட்ட இயக்கம் இந்த 20 வருட காலமாய் தனது வேலையை கூடியவரையில் தைரியமாக செய்து வந்து இருக்கிறது என்பதை நாம் முதலில் விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

அப்படிப்பட்ட இயக்கம் இன்று சிறிது தளர்ச்சி அடைந்திருக்கிறது; சிறிது செல்வாக்கும் குறைந்து வருகிறது. பொது ஜனங்களிடத்தில் ஒரு அளவுக்கு அருவையும் வெறுப்பையும் கூட பெற்று வருகிறது. இருந்தாலும் இவையெல்லாம் எப்படிப்பட்ட இயக்கத்துக்கும் ஒவ்வொரு சமயங்களில் ஏற்படுவது இயற்கையேயாகும். அதிலும் ஒரு புரட்சிகரமான—மக்களின் சுயலத்துக்கு ஏற்பட்ட கொள்கைகளுக்கு விரோதமான இயக்கத்துக்கு எதிர்ப்பும், தொல்லையும், தளர்ச்சியும் ஏற்படுவது ஒரு நாளும் அதிசயமாகாது.

ஏனெனில், எப்படிப்பட்ட இயக்கமும் மக்களால்தான் நடத்தப்பட வேண்டியதாகும், மக்கள் யோக்கியதை சராசரி—பெரும் பாலும் எப்படிப்பட்டது என்பது நாம் அறியாததல்ல.

தனி உடைமை உலகில்—தனிப்பட்ட மக்கள் தங்கள் சுயலத்துக்கே தனிப்பட்ட உணர்ச்சியாலேயே போட்டியோடு வாழும் முறைகொண்ட உலகில் கொள்கை, ஒழுக்கம், நீதி, நன்றி ஆகிய காரியங்களை எதிர்பார்ப்பது நெருப்பு குளிர்ந்திருக்க வில்லையே என்று விசனப்படும் முட்டாள் தனத்துக்கே ஒப்பானதாகும். ஆகவே, இதுவரையிலாவது இந்த இயக்கம் எப்படி இந்த 20 வருஷமாய் வாழ்ந்து வந்தது என்றுதான் ஆச்சரியப்பட வேண்டுமே ஒழிய இந்த 20-வது வருஷத்தில் ஏன் இப்போது மாத்திரம் தளர்ச்சி அடைந்து விட்டது-செல்வாக்கு குறைய நேரிட்டு விட்டது என்று யாரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

ஆதலால், இப்போது அவ்வியக்கத்தில் பிரதானயம்சம் பாதித்துக் கொண்ட சிலரின் துரோகத்தால்—அலட்சியத்தால்—நன்றி கெட்டதனத்தால் அவ்வியக்கம் தளர்வுற்றதானால் மற்ற மக்கள் அதைப் பார்த்து சிரித்துக் கொண்டு குறை கூறிக்கொண்டு இருப்பது என்றால் அது துரோகம் செய்த மக்களின் இழி செய்கையை விட மோசமான செய்கை-இழிவான செய்கை என்றே சொல்லுவோம்.

மேலே சொன்ன பிரமுகர்களான துரோகக்காரர்கள் துரோகம் செய்தாலும் அவ்வியக்கத்தில் இருந்து கொண்டே இருக்கிற அளவுக்காவது அவர்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால், அவ்வியக்கத்தினாலேயே மனிதன் என்று மற்ற மக்களின் ஞாபகத்துக்கு வரவேண்டியவனாகி பின்பு அவ் வியக்கத்துக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று சொல்லி வெளியில் இருந்துகொண்டு வையும் பார்ப்பனரல்லாதார்கள் அதை விட மோசமானவர்களாகவும் இழி பிறவிக்காரர்களாகவும்தான் மதிக்கப்பட வேண்டியவர்களாவார்கள். இப்படிப்பட்ட ஜனங்களில் அதாவது, இன்று ஜஸ்டிஸ் கட்சியை குறை கூறும் மக்களில் 100-க்கு 99 பேர்களுடைய தனிப்பட்ட யோக்கியதையும் நாணயமும் அவர்களது, 'ஜாதகமும் முன்பின் ஜன்மமும்'' நாம் அறியாததல்ல.

ஆகையால், இப்படிப்பட்ட இரண்டு கூட்டத்தின் துரோகத்தையும், நன்றிகெட்ட தனத்தையும், தொல்லையையும் சமாளித்து அந்த அதாவது, பார்ப்பனரல்லாத இயக்கத்தை தற்காலம் உள்ள நிலையிலிருந்து தப்புவிக்கச் செய்து—காப்பாற்றி அது, முன் ஜனங்களுக்கு செய்து வந்த நன்மையை மறுபடியும் செய்யுமபடியாகச் செய்வதற்கே மேற் குறிப்பிட்ட 3-5-36-ந் தேதி கூட்டம் கூட்டப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்ளவே இவற்றை எழுதுகிறோம்.

இந்த பார்ப்பனரல்லாதார் இயக்கத்துக்கும், சுயமரியாதை இயக்கத்துக்கும் உள்ள சம்பந்தத்தையும், சுயமரியாதை இயக்கத்துக்குமுள்ள சம்பந்தமும் தொடர்பும் இருக்க வேண்டிய அவசியத்தையும் இதற்கு முன் பல தடவை நாம் விளக்கி இருக்கிறோம். ஒன்றையொன்று நேசிக்கா விட்டாலும் ஒன்றில்லாமல் ஒன்று வாழ்வது கஷ்டம் என்றும், அதாவது அவற்றின் கொள்கைகள் நிறைவேறப் பெறுவது அசாத்தியம் என்றும் தெரிவித்து வந்திருக்கிறோம்.

ஜஸ்டிஸ் கட்சியில் பலர் சுயமரியாதைக் கட்சியை வெறுக்கலாம், தூற்றலாம். ஆனால், இவர்களின் யோக்கியதை, நாணயம் அவர்களது பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி நன்றியறியும் தன்மை, லக்ஷியம் முதலியவை நாமும், பொது ஜனங்களும் நன்றாய் அறியாததல்ல.

அதுபோலவே சுயமரியாதைக்காரர்களிலும் சிலர் ஜஸ்டிஸ் கட்சியை வெறுக்கவும், சிலர் தூற்றவும் செய்யலாம். அதிலிருப்பது தங்களுடைய சுயமரியாதைக்கு கேடு என்று கூட சொல்லலாம். அவர்களுடைய-அப்படிப்பட்டவர்களுடைய யோக்கியம், லக்ஷியம், நாணயம், வாழ்க்கையின் முன்பின் நிலை, பொறுப்பு, நன்றி அறியும் தன்மை, நடத்தையில் உள்ள கொள்கை முதலிய வெகு சங்கதிகளும் நமக்கும் பொது மக்களில் பலருக்கும் தெரியாததுமல்ல.

இந்த இரு கூட்டங்களின் வாழ்வுக்கு ஆகவே, ஜஸ்டிஸ் கட்சியும், சுயமரியாதை இயக்கமும் தோன்றவில்லை. இது இழிவு படுத்தப்பட்ட, கொடுமை படுத்தப்பட்ட கோடிக்கணக்கான மக்களின் நன்மைக்கு ஆகவே—அவர்களின் மனிதத் தன்மைக்காகவே தோன்றி இரவும் பகலும் அதற்காக உழைத்து வரும் மக்களாலும், இயக்கங்களின் பேரால் எவ்வித சுயநலமும், வாழ்க்கை மார்க்கமும் தேடாத மக்களாலும் துவக்கப்பட்டு அதற்கு ஆகவே உயிர் வாழ்ந்து அதற்கு ஆகவே ஜீவனையும் வாழ்க்கையையும் தத்தம் செய்யும் ஆட்களின் முயற்சியாலேயே வாழ்ந்து வருகிறது.

ஜஸ்டிஸ் கட்சியும், சுயமரியாதைக் கட்சியும் ஒன்று சேரக் கூடாது என்று சொல்லியும் அவற்றை தனித் தனியே குற்றம் கூறியும் பிரசாரம் செய்தும் வரும் மக்கள் இரண்டு கூட்டத்திலும் இருப்பதானாலும் பொதுவாக பார்ப்பனரல்லாத அதாவது, சமூகத்திலும் அரசியலிலும் பொருளாதாரத்திலும் தாழ்த்தப்பட்ட மக்களின் நன்மைக்கு ஆக உழைக்க வேண்டும் என்கின்றவர்களும்-தங்கள் ஓய்வு நேரங்களிலாவது குஷாலுக்கு ஆக இந்த வார்த்தை பேசவேண்டும் என்று கருதுகிறவர்களும் மற்றும் தாங்கள் சுகபோகங்களுக்கு இப்படிப்பட்ட இயக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றாவது நினைக்கிறவர்களும் ஆகிய எல்லோரும் இந்த சமயத்தில் சற்று கவலை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நாம் மிகவும் வணக்கமாய் விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

இயக்கத்தில் முக்கியமாய் உழைக்க வேண்டியவர்களும் அதன் பொறுப்பை வகிக்க வேண்டியவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி 25-1-36-ந் தேதி அறிக்கையில் தோழர்கள் பாண்டியனும், ராமசாமியும் விளக்கி இருக்கிறார்கள். ஆதலால், குறிப்பிட்ட மே மாதம் 3-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை யன்றைக்கு தென்னாட்டில் ஒவ்வொரு இடத்திலும் இருக்கிற—பார்ப்பனரல்லாதார் இயக்கத்திலும், சுயமரியாதை இயக்கத்திலும் அன்பும், கவலையும் கொண்ட மக்கள் பலர் திருச்சிக்கு வந்து நம் முன்னணி வேலையையும், பிரசார முறையையும் விளக்கி வகுத்து தொடர்ச்சியாய் காரியம் செய்ய உதவி அளிக்கவேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். கண்ணியமாய் அபிப்பிராய பேதமுள்ள தோழர்களை நாம் சிறிதும் குறை கூற முன் வரவில்லை. என்றாலும், அவர்களுடைய கண்ணியமான தொல்லையில் இருந்து இவ்வியக்கங்கள் பாதுகாக்கப்பட வேண்டிய முயற்சியை நாம் எடுத்துக் கொள்ளாமல் இருக்க முடியாது என்பதை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

வாலிபர்களுக்கு வேண்டுகோள்

கடைசியாக நம் அதாவது, பார்ப்பனரல்லாத வாலிபர்களுக்கு நாம் ஒன்று தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகின்றோம். வாலிப பருவம் அபாயகரமான பருவம். சுலபத்தில் நெருப்புப் பற்றிக் கொள்ளக் கூடிய வஸ்து போல் மிக பத்திரமாய் காப்பாற்றப்பட வேண்டிய பருவம். அப்பருவத்தை பொறுப்பற்ற, பயனற்ற, சுயநல, நிலையற்ற தற்கால விளம்பர காரியங்களுக்கு அடிமைப்படுத்தி விடாமலும், பின்னால் சலிப்பும் துக்கமும் படவேண்டிய காரியங்களுக்கு பந்தப்படுத்தி விடாமலும் நன்றாய் ஆய்ந்து ஓய்ந்து பார்த்து அவசியமானதும், நிலையானதும், காரியத்தில் செய்யவும் பயனளிக்கவும் கூடியதுமான காரியத்துக்கு பயன்படுத்தவேண்டுகிறோம்.

புதிய சீர்திருத்தம் என்பது வெறும் உத்தியோகமயமும், பதவி மயமுமேயாகும். இந்நிலையில் பார்ப்பனரல்லாத ஏழை மக்கள் தொழிலாளி மக்கள் முதலியவர்களிடமிருந்து அரசியல் பேரால் கோடிக்கணக்காய் பொருள் பறித்து நாட்டிற்கு, சமூகத்துக்கு யாதொரு பயனும் இல்லாத புல்லுருவி போலும் சமூகத்தை அழிக்கும் க்ஷயரோகக் கிருமி போலும் வாழ்ந்து வரும் பார்ப்பன சமூகமும் அவர்களது கால்களை அலம்பி குடித்து உயிர்வாழும் அவர்களது அடிமைகளும் அனுபவிக்கவும் வாழவும் விட்டு விட்டு அதைப் பார்த்துக் கொண்டு உயிர்வாழ்வது போன்ற இழிநிலையும் சுயமரியாதை அற்ற தன்மையும் உலகில் வேறு இல்லை என்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டுகிறோம்.

பார்ப்பனரல்லாதாரின் ஒவ்வொரு குடும்பத்திலும் இன்று 2, 3, 4 பிள்ளைகள் படிக்கின்றன. வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி வாழ்க்கையைச் சுருக்கி பிள்ளைகள் படிப்பிக்கப்படுகின்றன. எல்லாம் ஒரே ஒரு அதாவது, அது சரியாய் இருந்தாலும் தப்பாய் இருந்தாலும் உத்தியோகம் என்னும் ஒரே ஒரு காரியத்தை உத்தேசித்தே (100-க்கு 90 பிள்ளைகள்) படிப்பிக்கப் படுகின்றன.

இன்று இப்படிப் பட்ட குடும்பக்காரர்கள் தேசாபிமானம்—சமதர்ம வீரம் என்னும் பேர்களால் அவற்றின் போதையால் பார்ப்பனர்களை சீர்திருத்தத்தில் உள்ள உத்தியோகம் பதவி, அதிகாரம் ஆகிய எல்லாவற்றிலும் ஆதிக்கம் செலுத்த இடம் கொடுத்து விட்டால் பிறகு இக் குழந்தைகள், இக்குடும்பங்கள், இவர்களது பின் சந்ததிகள் ஆகியவைகளின் யோக்கியதை என்ன ஆவது என்பதையும், இச்சமூகம் மறுபடியும் தலையெடுக்க எத்தனைகாலம் ஆகும் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

ஆகையால், ஒவ்வொரு முக்கிய பட்டணங்களில், ஸ்தலங்களில் உள்ள முக்கிய கவலை உள்ளவர்கள் ஒவ்வொருவரும் திருச்சி கூட்டத்திற்கு வரவேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறோம்.

இக்கூட்டம் நடைபெறுவதற்கு திருச்சி தோழர்கள் கே. ஏ. பி. விஸ்வநாதமும், டி. பி. வேதாசலமும் வேண்டிய முயற்சி எடுத்துக் கொண்டு அவற்றிற்கான உதவி செய்து வருவதை நாம் மனமார பாராட்டுவதோடு நமது நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பாண்டியன்—ராமசாமி அறிக்கை

3-5-36-ல் திருச்சியில் பார்ப்பனரல்லாதார் கூட்டம்

தோழர்களே !

வெ. ரா.—பாண்டியன் அறிக்கை சம்பந்தமாக மாகாண முழுவதுமுள்ள பார்ப்பனரல்லாத இயக்க பிரமுகர்களின் கூட்டம் ஒன்று திருச்சி-தென்னூர், பழனிசாமி பிள்ளை ரிவர் சைட் பங்களாவில் 3—5—36-ந் தேதி காலை 8-மணி முதல் நடைபெறும்.

பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் வளர்ச்சியைக் கருதிய ஒவ்வொருவரும் அவசியம் வந்து சேர வேண்டுமென கேட்டுக் கொள்ளுகிறோம்.

திருச்சி,
23—4—36.

(Sd) T. P. வேதாசலம்,
K. A. P. விஸ்வநாதம்.

குறிப்பு :—வெளியூர் நண்பர்களுக்கு ஷை இடத்தில் மத்தியான சாப்பாடு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மேற்படி இடம் திருச்சி ஜங்ஷனிலிருந்து புத்தூர் செல்லும் டவுன் பஸ்ஸில் ஏறி, டாக்டர் மதுரம் பங்களாவில் இறங்கி, கிழக்கே அரை பர்லாங் தூரம் வரவும்.

தேவை

கீழ்கண்ட இடங்களில் 'விடுதலை' பத்திரிகைகள் விற்பதற்கும் டிபாஸிட்டு பணத்துடன் ஏஜெண்டுகள் தேவை.

நெல்லிக்குப்பம்
சீர்காழி
இராணிப்பேட்டை
ஆரணி
ஆம்பூர்
வாணியம்பாடி
திண்டுக்கல்
ராஜபாளையம்
தஞ்சாவூர்
மாயவரம்
செங்கல்பட்டு
காஞ்சீபுரம்
தேவக்கோட்டை
நாமக்கல்
கோபிசெட்டிப்பாளையம்
நாச்சியார்கோவில்
நன்னிலம்
விருதுநகர்
மேலப்பாளையம்
பட்டுக்கோட்டை
காரைக்கால்
நீடாமங்கலம்
திருப்பாப்புலியூர்
தென்காசி
பரங்கிப்பேட்டை
தாராபுரம்

கௌரவ காரியதரிசி,
"விடுதலை"
14, மவுண்ட் ரோட், சென்னை

உத்தமர் உயிர் பிரிந்தார்

'சீர்திருத்தம்' ஆசிரியர் திரு. எம். என். முத்துக்குமாரசாமி பாவலர் எழுதுகிறார் :—

"யானேதும் பிறப்பஞ்சேன், இறப்பதற் கென் செய்வேன்" என்று வருந்திச் சென்றார் ஒரு பெரியார். மரணத்தின் இலக்கானவர்களுக்கு பிறகு ஏதும் கவலையோ, துக்கமோ இல்லை யெனினும், பிரிந்தவர் செய்து வந்த காரியங்களும், பிரிந்தவரால் ஆதரிக்கப்பட்டவர்களும் தான் உண்மையில் மிக்க துக்கமடைய நேருகின்றது. ஒருவர் பிரிவால் பலர் சங்கடப் படவேண்டியிருக்கின்றது. இதனாற்றான் இறப்பதற்கென் செய்வேனென ஏங்குறுவர்.

தோழர் டி. வி. சுப்பிரமணியத்தின் மறைவானது காங்கிரஸ்வாதிகளின் உச்சி குளிர்ந்திருக்கும். தோழர் டி. வி. சுப்பிரமணியம் தமிழனாகப் பிறந்தார்—தமிழருக்காக உழைத்தார்—தமிழர்கள் கொள்கைகளைப் பரப்பினார்—தமிழர்களுக்காக உயிர் விட்டார். இவ்வீர இளைஞர் ஓர் காலணா காங்கிரஸ் மெம்பராக இருந்திருந்தால் இது நாள் திரு. சத்தியமூர்த்திக்கு மேம்பட்ட பதவியை அடைந்திருக்கலாம். முடிவாக எனது தென்னாற்காடு ஜில்லாவே அவருக்கு கூற்றுவனாக நின்றது. சமீபம் நடந்த தென்னாற்காடு ஜில்லா தேர்தலில் அவருழைத்த உழைப்பே அவருக்கு முடிவைக் கொண்டு வந்து விட்டது.

இனி செய்வது என்ன?

இனி என்ன செய்வது? " இவ்விதம் வருவாயை எல்லாம் செலவழித்து விடுகின்றீர்களே ; ஏதாவது சேமித்து வைப்பது தானே" என்று நான் அடிக்கடி கேட்பதுண்டு. எனது மூளையே எனக்கு ஆஸ்தி ; அது இருக்கிறவரையிலே வேறு ஆஸ்தி வேண்டுமா? என்பார் இத்தன்னலத்தியாகி. கருணைமிக்க செட்டிநாடு குமார ராஜா தோழர் டி. வி. என். நிதிக்கு முதன்மையாக ரூ. 500 கொடுத்தது போற்றுதற்குரியதாகும். மற்ற பிரபலஸ்தர்களும் தாராளமாக அந்நிதிக்கு உதவி புரிதல் வேண்டும். காலஞ்சென்றவர் ஓர் பிராமணராக இருந்திருப்பின் தேசியப் பத்திரிகைகள் சங்கநாதம் முழங்கி இருக்கும். இதற்குள் பல்லாயிர ரூபாய் நிதிக்காக சேர்ந்திருக்கும் என்பதை அன்பர்கள் மனதில் வைத்து நிதி சேர்த்து அவர் குடும்பத்திற்கு உதவிபுரிய வேண்டுகிறேன்.

முதலியார் கடமை

ராவ்பகதூர் தோழர் டி. எம். ஜம்புலிங்க முதலியாருக்காக சமீப தேர்தலில் தோழர் டி. வி. எஸ். தீவிரமாகவும், புத்திசாலித்தனமாகவும் பாடுபட்டாரென்பதை மறுப்பதிற்கில்லை. முதலியார் இல்லத்தில்தான் பிரிந்த நண்பர் காலில் நெருப்பு பட்டதாம். தோழர் டி. வி. சுப்பிரமணியத்தின் அபாய நிலை முதலியாருக்குத் தெரிவிக்கப் பட்டும் முதலியார் இது பற்றி சிரத்தையெடுத்துக் கொள்ளவில்லை யென்று அறிவிக்கப்படுகிறது.

முதலியாரை, தோழர் டி. வி. என். நிதிக்கு ஏராளமாகவும்—தாராளமாகவும் பொருளுதவி செய்யக் கேட்டுக் கொள்ளுகிறேன். எத்தனையோ காரியங்களுக்கு பொருளை வாரியிட்ட முதலியாரவர்கள் இந்நிதிக்கு உதவி செய்வது பெரிதல்ல. மனம் வேண்டும். மற்ற நண்பர் இதனைக் கவனித்து தோழர் நிதியை பூர்த்தி செய்து வைக்குமபடி கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஓர் நல்ல செய்தி!

"குடி அரசு", "பகுத்தறிவு" கழக புத்தகங்கள்

டி. சுப்பிரமணியம்,
42, அய்யனார் கோவில் தெரு,
புதுப்பாளையம்,
கடலூர், N. T.
என்ற விலாசத்தில் கிடைக்கும்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின்மீது கண்டனம்

திருப்பூர் கதர் வியாபாரிகள் அறிக்கை

சங்க நிர்வாகத்தில் எதேச்சாதிகாரம்

திருப்பூர் கத்த காதி மர்ச்சண்ட்ஸ் அசோஸியேஷன் தலைவர் திரு. ரூ. நி. முத்துச்சாமி செட்டி எழுதுகிறார்:—

கையால் நூற்று கைத்தறியால் நெசவு செய்யப்படும் கதரை விர்த்தி செய்வதற்காக திருப்பூர் கத்த காதி மர்ச்சண்ட்ஸ் அசோஸியேஷன் என்று ஒரு சங்கம் ஏற்படுத்தி ரிஜிஸ்டர் செய்யப்பட்டு, கதர் உற்பத்தி விற்பனை செய்பவர்களுக்கு இச்சங்கத்தின் பெயரால் அத்தாட்சி பத்திரம் கொடுக்கப்பெற்று நடந்து வருகிறது. இதைக் கண்டு அகில பாரத சர்க்கா சங்கம் தமிழ் நாட்டு காரியதரிசி பொருமைப்பட்டு இரண்டு துண்டு பிரசுரங்கள் வெளியிட்டிருப்பதை அன்பர்கள் பார்த்திருக்கலாம்.

முதலாவது துண்டு பிரசுரத்தில் நூற்பவர்களுக்கு வியாபாரிகள் சால் 1-க்கு 0-1-0 கூலி கிடைக்கும்படி கொடுப்பதாகவும் சர்க்கா சங்கம் 0-2-0 கூலி கிடைக்கும்படி கொடுப்பதால் அதிக விலைகொடுத்து சர்க்கா சங்கத்தின் கதரையே வாங்கும்படிக்கும் சொல்லி இருக்கிறார். இரண்டாவது துண்டு பிரசுரத்தில் வியாபாரிகள், மில் நூலைக் கலந்து சுத்தகதர் என்று பொதுமக்களை ஏமாற்றுவதாகச் சொல்லுகிறார்.

சங்கத்தின் அங்கத்தினர்களால் தயார் செய்யப்படும் கதரில், மில் நூல் கலந்து தயார் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை நிரூபிக்கும்படி அன்பர்கள் டி. காரியதரிசியைக் கூப்பிடுகிறோம். அவர் வந்து நிரூபணம் செய்யட்டும். அப்படி அவர் முன்வராவிட்டால் பொய்யான துண்டு பிரசுரங்களுக்கு, பொது நிதியில் செலவிட்டு வருவதற்கு அன்பர்கள்தான் போதிய படிப்பினை காட்டவேண்டும். மேலும், அவருடைய துண்டு பிரசுரத்தில் கதருக்கு அத்தாட்சி கொடுப்பதற்கு அகில பாரத சர்க்கா சங்கத்தை ஏற்படுத்தி இருக்கிறதென்று சொல்லுகிறார். அதை நாங்களும் ஒப்புக் கொள்ளுகிறோம்.

மேலே குறித்த சங்கத்தின் அங்கத்தினர்கள் அ. பா. ச. சங்கம் ஏற்பட்டதிலிருந்து அத்தாட்சி பெற்று அதனுடன் ஒத்துழைத்து வந்தவர்கள் அப்பொழுதெல்லாம் அ. பா. ச. சங்கத்திற்கு பொறுப்புள்ள காரியதரிசிகள் இருந்து வந்தார்கள். அவர்கள் எல்லா விஷயங்களுக்கும் வியாபாரிகளைக் கலந்து காரியங்களை நடத்தி வந்தார்கள். இப்பொழுது அ. பா. ச. சங்கத்தின் நிர்வாகம் அதற்கு முற்றிலும் மாறாக கர்வம் பிடித்து எதேச்சை அதிகாரம் செலுத்த வேண்டும் என்று பேராசை பிடித்தவர்கள் கையில் கிடைத்து அல்லல்படுகிறது. அக்கிரமமாக அவர்கள் விதிக்கப்பட்டு வரும் நியாயவரம்பு மீறிய அதிகாரத்துக்கும் உட்பட முடியாமல், வியாபாரிகள் தனியாக சங்கம் ஏற்படுத்தி அதன் ஆதரவில் கதர் வேலையை செய்து வருகிறார்கள். காங்கிரஸ் மகாசபைக்கு இது எவ்விதத்திலும் எதிரானது அல்ல.

சர்க்கா சங்க காரியதரிசிக்கு கதர் வியாபாரிகள் பேரில் இரண்டு விதத்தில் சீற்றம். முதலாவதாக, வியாபாரிகளுக்கு அத்தாட்சி பத்திரம் கொடுத்து, தான் எஜமானனாக இருப்பதற்கு இல்லையே என்பது; மற்றொன்று சமீபத்தில சர்க்கா சங்கம் கதர்விலையை உயர்த்தி இருக்கிறது. வியாபாரிகள் முன் விலைக்கே விற்று வருவது; சர்க்கா சங்கம் 100 - 100 கூலியை உயர்த்தி இருப்பதாக தம்முடைய துண்டு பிரசுரத்தில் சொல்லியிருக்கிறது. அது உண்மையல்ல. ரூபாய்க்கு பதினொன்று சிட்டம் விதம் வாங்குகிறார்கள். பஞ்சேயம் ருபடி 0-6-0-ம் போக நூற்பவர்களுக்கு 0-10-0 கூலி கிடைக்கிறது. அதே நூலுக்கு வியாபாரிகள் 0-9-0 கூலி கொடுக்கிறார்கள். அதிகமாக கிடைக்கும் இரண்டணா கூலிக்கு நூற்பவர்கள் எண்ணி சிட்டம் கட்டும் கூலிக்கு சரியாக இருக்கும். சர்க்கா சங்கம் தாம் சொல்லுகிறபடி நூற்பவர்களுக்கு அதிக கூலி கிடைப்பது உண்மையானால் வியாபாரிகளுக்கு குறைந்த கூலிக்கு நூற்பார்களா என்பதை அன்பர்கள் யோசிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

கதர் விற்பனை 1931-ம் வருஷத்தைவிட இப்பொழுது 1/4 பாகம் கூட ஆகிறதில்லை. இதர ஜவுளிகளின் விலை ரொம்பவும் மலிவாக இருக்கும் இக்காலத்தில் பொருளாதாரமந்தம் உலகத்தை தாக்கியிருக்கும் இத்தநேரத்தில் கதர் விலையை திடீரென்று உயர்த்தினால், கதர் விற்பனை இதுவும் நடைபெறாமல் போய்விடும். அப்பொழுது நூற்பவர்களுக்கு தற்சமயம் கிடைக்கும் கூலிகூட கிடைக்காமல் நின்றுபோய்விடும். ஆதலால், தேசபக்தர்களும், கதர் அன்பர்களும் எங்கள் சங்கத்தில அத்தாட்சி பெற்றவர்களின் கதரை வாங்கி எங்களுக்கு ஆதரவு அளிக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தமிழ் அருமை வெளிப்படுத்தல்

(திரு. பெ. கோவிந்தன், கோமுடி)

1. அஞ்சிறை மடவண்டே அழகியசெந் தமிழ்மணம்போல்
நெஞ்சினுக்கும் காதினுக்கும் சிமிர்செவிக்கும் மூக்கினுக்கும்
எஞ்சுதலி லாதுமணம் ஈயவல்ல மலமணமொன்
றஞ்சலத் தறாலோ டலையுமோ அறிவாயோ

2. தண்டலையும் வண்டினமே சாருமையம் உண்டினமே
கண்டாலும் உரைத்தாலும் காதாலே கேட்டாலும்
உண்டாலும் தித்திக்கும் ஒண்டமிழ்த்தேன் போலொருதேன்
கண்டீரோ கண்ணாலே காதாலும் கேட்டீரோ

3. மன்றலினத் தென்றல்நீ வந்தெமக்கு நல்குமணம்
குன்றிலுள்ள அகில்மணமோ குளிர்செய்தற் பூமணமோ
துன்றுபொழிற் கனிமணமோ தொன்னகர்ப்பெண் குழல் [மணமோ
ஒன்றியினப் நடைமணமோ ஒண்டமிழின் தொடைமணமோ

4. பூந்தொடையின் தேனுண்ணும் பொறிவண்டே இனிப்பன்றித்
தீந்தமிழின் தொடையிலெங்கும் திகழ்கின்ற எண்சுவையும்
மாந்திமகிழ் வுறவுனக்கு வழியுண்டோ திறமுநவும்
ஆய்ந்தறிந்த லன்றிப்பத் தழகறிய வல்லுநையோ

5. மயிலேநீ ஆடுகின்றாய் வண்டேநீ ஊதுகின்றாய்
குயிலேநீ பாடுகின்றாய் கொண்மூநீ கொட்டுகின்றாய்
மயலேய்த்த கொன்றைப்பொன் வழங்குகின்றாய் தமிழ்க்கடிப்பை
அயலேவா தறிந்தீரோ ஆமென்று கூறுவீரோ

6. காட்டிதுறை பைக்கிளியே கன்னிச்செந் தமிழ்த்தாயை
வேட்டலையின் சிலம்புமணி மேகலையா சொடுபத்துப்
பாட்டறிவாய் பொருளறிவாய் பலதொகையும் பாலபெறுவாய்
கேட்டுவக்கும் திருப்புகழும் கிடைக்கும் கிளைப் புனக்குண்டோ

7. இன்றமிழ்ப்பண் பலபாடும் இளம்பூவால் காற்புறமும்
வென்றிசைசொல் டிரவாழ் விருப்புண்டோ வெல்லுவையால்
தென்றமிழ்ச்சொல் வென்றுரைக்கத் தெரிந்தாரு மில்லையவர்
என்றமுயன் றுலும்அதை எழுதளழத் தம்மிலலே

8. அலைகின்ற இலங்காற்றே அறிவையுல கத்தினையும்
இலைபெண்ணு தெக்காரும் ஈவோர்கள் வாழ்காடு
கலைதெரிந்தோர் வாழ்காடு கற்புடையோர் வாழ்காடு
தலைமைபறம் வாழ்காடு தமிழ்நாடோ பிறநாடோ

9. ஆழ்கடலின் வாழ்முதலாய் அன்பின்றி சின்னெறு [illegible]
வாழ்மீனை கொன்றுண்பாய வள்ளுவர்சொல் வழிசென்று
மூழ்கிச்செந் தமிழ்க்கடலில் முப்பாலுண் டெப்பாலும்
தாழ்வாரும் கொலைவிடுத்தோம் தமிழ்க்கடற்கள் தேருவயாவு

10. இருநாட்டுக் கிடைகின்றே எப்புறமும் காண்கின்ற
கருங்கோட்டு வெங்கடமே காண்மனத் தாரியப்பெண்
பெருங்காட்டைச் சென்றடையப் பேசுநீர தெமக்கினித்து
மருநோட்டுத் தமிழ்க்கன்னி வாழும்வகை யறிவாயோ

—(செந்தமிழ்ச் செல்வி)

இரண்டு இரட்டைப் பிறப்பு

ஜெக்கோஸ்லோவேகியாவிலுள்ள ஒரு மாதிற்கு முதலில் ஒரு இரட்டைக் குழவி பிறந்தது. பிறகு பூரா குணமாகாததால், வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதில், எட்டுவாரங்கள் கழித்து மறுபடியும் ஒரு இரட்டைக் குழவி பிறந்ததாம்.

பொன்மலை, தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கம்

திருச்சி, ஏப், 27

1936-ம் வருஷம் ஏப்ரல்மீ 22-ந் தேதி புதன்கிழமை மாலை 7 மணிக்கு மேற்படிசங்கமைதானத்தில் சங்க அங்கத்தினர் திரு. டி. சிங்காரவேலு தலைமையில் வருஷாந்திர சங்க நிர்வாக கூட்டம் நடைபெற்றது.

கீழ்க்கண்ட தீர்மானங்களும் 1936, 37 வருஷத்து சங்க உத்தியோகஸ்தர்கள் தேர்தலும் ஏகமனதாக நிறைவேறியது.

26-4-36-ந் தேதி ஞாயற்றுக்கிழமை திருச்சி பெரியகடைத்தெருவில் இருக்கும் சாவடி விலாஸ் எலிமெண்டரி பாடசாலையில் நடைபெறப்போகும் நமது மத்திய சங்க வருஷாந்திர கூட்டத்தை இக்கூட்டம் ஒப்புக்கொள்கிறது.

1935,36-ம் வருஷத்து சங்க வருஷாந்திர வரவு|செலவு கணக்கை காரியதரிசியால் வாசிக்கப்பட்டு ஏகமனதாக|ஒப்புக்கொள்ளுகிறது.

1936,37-ம் வருஷத்துக்கு டி. கிருஷ்ணசாமி பிள்ளை, ரெத்தினசாமி, சையத் சுலேமான், கே. வெங்கடாஜலம், கே. எஸ். நாகப்பிள்ளை, இவர்களை, தலைவர் காரியதரிசி உதவி காரியதரிசிகள் பொக்கிஷதார்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்

நமது சங்க வருஷாந்திர மகாநாட்டுக்கு 28 டெலிகேட்களும், 7 மத்திய சங்க நிர்வாகஸ்தர்களும், இந்த சங்கத்திற்கு நிர்வாகஸ்தர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பின் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 8 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது என காரியதரிசி எழுதுகிறார்.

இந்து மதமும், தீண்டாமையும்

மதமாற்றத்தால் பிரயோஜன மில்லை

தீண்டாமையை ஒழிக்கவே பாடுபட வேண்டும்

லண்டன் (தபால்)

இந்தியாவின் பல பாகங்களிலும் நடக்கும் இந்துமத அநீதியையும் அநாகரிகப் பழக்க வழக்கங்களையும் நேரில் கண்ட எந்தஅயல தேசத்தாரும் நகையாமலிருக்க முடியாது இவைகளை இந்தியாவினின்று போக்குவதற்குச் சிலர் முன் வந்தும், சட்டங்களியற்றியும் அவைகளும் அந்தாகதியாகிவிட்டது. இந்து மதத்தில் தீண்டாமையை நேரில் பார்த்து வந்த இவ்விடமுள்ள சில ஆங்கிலேயரும், மற்றவர்களும் இதைப் பலமாகக் கண்டிக்கிறார்கள். சுமார் 2000 இந்துக்களிருக்கிற லண்டனிலும் ஓர் விஷ்ணு ஆலயம் கட்டுவதற்கு திருதாண்டிசாமி பெரு முயற்சி செய்திருக்கிறார். அக்கோயில் கட்டிடச் செலவிற்காக திப்பாரா மகாராஜா தலையிட்டிருக்கிறார். கோயில் கட்ட வேலை வேனிற்காலத்தில் ஆரம்பமாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தியாவிலுள்ள இந்துமதச சட்டம் இவ்விடமும் வந்து விடுமோ என இவ்விடமுள்ள ஆங்கிலேயர் சந்தேகிக்கக் கூடும். இவைகளை யெல்லாம் கண்ணுணர்ந்த டாக்டர் அம்பேத்கார், (இந்தியாவில் தீண்டாமை யென்னும் பேயை நாட்டைவிட்டு துரத்திவிட வேண்டுமென்ற உணர்ச்சியுடன் நாளுக்கு நாள் வளர்ந்து வருமிக்காலில்) அவசரப் பட்டு மதமாற்றம் செய்ய பெண்ணி இருப்பதும், அதற்குச் சில மகாநாடுகள் ஆதரவளித்திருப்பதும் "லண்டன் டைம்ஸி"லும் இந்தியப் பத்திரிகைகள் மூலமாயும் வெளியாயிருக்கிறது. இருந்தாலும்தன் மத ஞான அறிவை முற்றிலும் தெரியாத பாமர ஏழை ஜனங்களை மதமாற்றம் செய்து அதனால் அவர்கள் உன்னத நிலைமையையடைந்து மோக்ஷவாசலும் திறக்கப்படுமென்பதற்கில்லை. சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்து தனக்குத்தானே மனதுக்கு முக்தி வலிக்குமென்று தெரிந்து மனமாற்றம் செய்துக் கொள்வானானால் அதுதான் உண்மை ஞானமாகும். அவன் மனோபீஷ்டத்தையும் நிறைவேற்றும்.

ஒன்றுமறியாத ஏழைகளை மதமாற்றம் செய்யலாமே தவிர உண்மை மதமாற்றம் அவர்கள் உள்ளத்தில் பதியாது. இக்கலிகால வறுமையில் வயிறு பிழைக்க ஒருவருக்கொருவர் அன்பு, சமத்துவம், சுதந்தரம் என்பவைகளை உலக இன்பத்திற்காக மனிதன் பாடுபடும்போது இதையே குதூகலத்தோடு பசிக்குசாப்பிட மனமில்லாத சுமமனிதவர்க்கம் பரலோக இன்பத்தைத் தேடுவது மிக இழிவானது. ஆகையால், தீண்டாதாரின் உரிமைகளுக்காக (பல ஆதரவுகளிருக்கும் இச்சமயம்) இன்னும் போராடி அவைகளை ஜெயம் பெறுவதே புகழுக்குரியதல்லாமல் தன் மத ஞானம் தெரியாத பாமர ஏழை ஜனங்களுக்கு பிறமதம் உபதேசம் செய்து அவர்களை மத மாற்றம் செய்வதும், மத மாற்றம் செய்யத் தூண்டுபவருக்கும் அதனால் சித்தி உண்டாகாது. இக்கலிகால நாகரிககாலத்தில் இன்னும் இப்பெரும் அபவாதத்திற்கு ஆளாகாமல் இந்து தேசம் கலன்பெற உண்மை தேசபக்தர்கள் முன்வர எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

லண்டனுக்கு புதிய விமான நிலையம்

6 லக்ஷம் பவுன் செலவு

லண்டன், ஏப், 22

லண்டனில் புதிய விமான நிலையம் ஒன்று அமைக்க இல்போர்ட் (எஸ்ஸெக்ஸ்)க்கு அருகில் 1000 ஏகர் நிலம் வாங்க யோசனையிருந்து வருகிறது. இப்புதிய விமான நிலையம் கட்டி முடிக்க 6 லக்ஷம் பவுன் பிடிக்குமெனத் தெரிகிறது.

திருச்சியில் விதவா விவாகம்

ஸ்ரீரங்கம், ஏப், 27

சென்ற புதன்கிழமை மாலை 5 1/2 மணிக்கு திருச்சி ஜில்லா மருத்துவர் விதவா விவாக சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீரங்கம் கீழ் அடையவளஞ்சான் மருத்துவர் வீதியில் அமைத்துள்ள காவணத்தில் சென்னை மாகாண சுயமரியாதைச் சமதர்ம சங்கக் காரியதரிசிகளில் ஒருவரான ஸ்ரீமதி நீலாவதி தலைமையில் மதுரை மு. முத்தையா பண்டிதர்-திருச்சி சௌபாக்கியத் தம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீரங்கம் சுயமரியாதைச் சங்கத்தினர்களும், திருச்சி நகர சுயமரியாதைச் சங்கத்தார்களும், திருச்சி ஜில்லா மருத்துவ குலசங்கத்தினர்களும், காங்கிரஸ்காரர்களும், தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தினர்களும், திரளாக வந்திருந்து சிறப்பித்தார்கள். தொடக்கத்தில் கோயமுத்தூர் திரு. இராமநாதன் சமதர்ம கீதங்கள் பாடினார். ஸ்ரீமதி நீலாவதி தலைமை வகித்து முகவுரையாக விதவா விவாகம் என்பது பற்றி பேசி மணமக்கள் 20-3-36ல் திருச்சி ஜில்லா ரிஜிஸ்தரார் ஆபிஸில் மனுக்கொடுத்து 17-4-36-ல் சாட்சிகளுடன் சென்று ரிஜிஸ்தரார் முன்பாக வாழ்க்கை ஒப்பந்தஞ் செய்து கொண்டு இண்டியன் மாரேஜ் ஆக்டுப்படி ரிஜிஸ்தர் செய்யப் பெற்றிருப்பதை பொதுஜனங்களுக்கு விளக்கிக் கூறி மணமக்களை மாலை மாற்றிக் கொள்ளும் படி சொன்னார். மணமக்கள் மாலை மாற்றிக் கொண்டார்கள். அதன் பின் தோழர்கள்: திருச்சி கா. சு. மு. செல்வக்கணபதியார், சென்னை மாகாண சுயமரியாதைச் சமதர்ம சங்கப் பொதுக் காரியதரிசி ப. ஜீவானந்தம், ஸ்ரீரங்கம் பு. துரைசாமி ச. மருதை பண்டிதர், மருத்துவகுலச் சங்கத் தலைவர் பிச்சைமுத்து பண்டிதர், விதவா விவாக சங்கக் காரியதரிசி சி. சிவலிங்கம் பண்டிதர், முதலானவர்கள் விதவாவிவாகம், சமூகப் புரட்சி, சமூக சீர்திருத்தம் என்பது பொருளாக சொற் பொழிவு செய்தார்கள். பின்னர் தலைவர் நீலாவதி விதவாவிவாக அவசியத்தைப் பற்றியும், வாலிபர்கள் முன் வந்து இக் கொடுமைகளை நாட்டைவிட்டுத் துரத்த வேண்டிய தேவையையும் விதவைகளாகி கண்ணீர் விட்டு மடியும் பாலிகைகள் தைரியமாக சௌபாக்கியத் தம்மாளைப் போல முன்வர வேண்டு மென்பதையும், வற்புறுத்திக் கூறி இரக்கம் ஏற்பட்டு சில மாதங்களை ஆயினும் இது போன்ற பற்பல மணங்கள் நடைபெறத்தக்க முறையில் விடாமுயற்சியுடனும், ஒத்துழைப்புடனும், ஊக்கமாக வேலை செய்வதைப் பாராட்டிக் கூறினார். இரவு 9-30 மணிக்கு மருதை பண்டிதர் சொற்பொழிவாளர்களுக்கும் மற்ற பிரமுகர்களுக்கும், தலைவருக்கும் வந்தனங் கூறி மலர் மாலைகள் சூட்டிய பின் எல்லோருக்கும் கற்கண்டு வழங்கப் பட்டு கூட்டம் கலைந்தது என காரியதரிசி எழுதுகிறார்.

சீர்காழி

விஸ்வகர்ம சங்கம்

சீர்காழி, ஏப், 27

சென்ற செவ்வாய்க்கிழமையன்று மாலை 7-30 மணிக்கு திரு. டி. மாணிக்க பத்தர் பஜனை மடத்தில் உப தலைவர் திரு. என். இராமச்சந்திர ஆச்சாரியார் பி. ஏ. தலைமையில் சமூகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் நிர்வாக முறையைப்பற்றி நன்றாய் எடுத்துரைத்த பின் காரியதரிசி அதைத்தழுவிப்பேசி கூட்டம் முடிவுற்ற பிறகு, விஸ்வப்ரம்ம மகா ஜன நாட்டாண்மை திரு. என். கிருஷ்ணசாமிப்பத்தர் தலைமையில் நடந்த மகாஜன கூட்டத்தில் 1904-ல் இருளாண்டி ஆச்சாரியாரால் ஏற்பட்ட தர்மச் சொத்துக்களை பரிபாலிக்க 7 பேர் அடங்கிய பஞ்சாயத்துக் கமிட்டி ஒன்று ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு 10-30 மணிக்கு இனிது நிறைவேறியது என காரியதரிசி எழுதுகிறார்.

பாமா பரிணயம்
அல்லது
ச்யமந்தகமணி
மிகவும் உன்னதமான புராண தமிழ் பேசும் படம்.
உங்கள் அன்பும் ஆதரவும் பெற்ற உயர்தர நடிக ரத்தினங்கள்:
மிஸ். டி. பி. ராஜலக்ஷ்மி
மிஸ். எஸ். பி. லெக்ஷ்மி
மிஸ். எஸ். எஸ். ராஜாமணி
மிஸ். கே. ரங்கநாயகி
செருகளத்தூர் சாமா
வித்வான் சீனிவாசன்
ராஜா எம். ஜி. தண்டபாணி
ஆர். நடேசய்யர்
எம். ஏ. ராஜாமணி
மற்றும் இதர நடிகர்கள்.
கதை அமைப்பு டைரக்ஷன் } மிஸ்டர் ஒய். வி. ராவ்: டைரக்டர்.
சென்னை நேஷனல் மூவிடோனில் தயாராகி வருகிறது.
தயாரில் இருக்கும் படங்கள்:—
கோவலன் லலிதாங்கி தூக்கு-தூக்கி கிருஷ்ணா-அர்ஜுனா.
ராயல் டாக்கி டிஸ்டிரிபியூட்டர்ஸ், மதுரை.

[illegible] யாதெனக் கேட்பாராயின்
கேடுதரு நீதி [illegible] நீளைய
[நாட்டினரெல்லாம்
பொருள் சுகப்பேறுகள் சர்வமும் பெற்று
நிரம்பிக வாழ்தலேயாம்

விடுதலை

VIDUTHALAI

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்று நின்ற
செம்மொழியை திருமொழியை
[தேன்மொழியை
தனித்தியங்கும் ஆற்றலுள தொன்மொழியை
[அமிழ்தனைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
[அனுதினமும் பழக்கம் செய்வீர்.

மலர்-1] சென்னை: (29-4-1936) தாது ஞு சித்திரைமீ 17உ புதன்கிழமை [இதழ்-94

"தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி"

——:o:——

திரு. எஸ். கே. சீனிவாசன் விடைக்குவிடை

'ஐயர்' யாவர்?

(திரு. வி. தில்லை சிதம்பரனார்)

(25-4-36 இதழ் தொடர்ச்சி)

ஐயர்

திரு. சீனிவாசன், ஐயர் என்பார் ஆரிய மேலோர், இருடிகள் முனிவர்கள் என்றெல்லாம் பொருள் மொழிச் சென்றார். இது பொருந்தாக் கூற்றென்பதை முன் அறிஞர் உரைத்த உரையால் உணர்வாராக. அன்றியும் இச்சொல், முதல் முதல் யாருக்குரியது? பின் யாவருக்கு வழங்கப்பட்டு வருகின்றது? என்பது ஆராய்தல் அவசியமாகும்.

இவ்வையர் என்னுஞ்சொல் தமிழ் நாட்டில், முக்காலமு முணரும் ஆன்றவிந் தடங்கிய சான்றோராய தமிழ்த்துறவிகளுக்கு வழங்கி அழைக்கப்பட்டு வந்தது. இவரே வாகைத்திணையில் "அறிவன் றேயன்" என்பதில் அறிவர் என்று அழைக்கப்படுகின்றவரும் ஆவர்.

பின் ஆரியர் தமிழ்நாடு புகுந்து தமிழ் நாகரிகத்தைக் கற்று தமிழ்நாட்டு மக்களிடை வேற்றுமை யின்றி, அமைந்து ஒழுகிய சிலர் தமிழ்த்துறவிபோல் உண்மையில் ஆகியவரையும் தமிழ் நாட்டு மக்கள் ஆரியத்துறவியையும் சிறப்பின்மை ஐயர் என்று அழைத்தார்கள். பின் ஐயர் என்ற பெயர் காலமுடிவில் பொருளில்லாமலே ஆரியரையே குறிப்பதாயிற்று. இஃதிவ்வாறிருக்க, இச்சொல் தற்காலத்தில் வழங்குகின்ற நிலைமையைக் கொண்டு ஐயங்கார் முக்காலத்தும் ஆரியரையே குறித்ததாக மயக்கங்கொண்டு தன் மதிக்குத் தோன்றியவாறெல்லாம் பொருள்கூறியுள்ளார். இக்கொள்கையான் மேலே கூறிய செய்தியால் பொருந்தாதென்பதை அறிஞர் யாவரும் ஒப்புக்கொள்வார்கள் என்பதில் என்னே தடை?

இவ்வுண்மையை உணர்ந்த திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், சதியினராயிருந்தும் உண்மையைக் கரவாது உரைத்தார் என்பது "கலைமகள்" என்னும் பத்திரிகையை நோக்கியவர் உணராதார்? கடுமின்றதலன்றோ அவ்வாறு எழுதத் துணிந்தனர்.

இதுவரையில் வேறு எந்தப் பார்ப்பனராகிலும் அவர் கொள்கையை மறுத்தார்களா? என்பதை உன்னில், வெளியாகும்.

ஐயர் என்றசொல் இன்னும், புறநானூறு முதலிய நூல்களில், "என்னைக்கு இஃது இன்மையினும்" 'இனந்துளான் என்னைக்கு' என்னை "புறமையுண்டும் வெருந் தோளன்னே" என்றெல்லாம் 'ஐ' தலைமைப் பொருளை யுணர்த்தி வருவது அறியக் கிடக்கின்றது. ஆசிரியர் தொல்காப்பியர் "ஐ, வியப்பாகும்" என்று வியப்புப் பொருளில் வழங்குமென்றார்.

தலைமையில் வியப்பும், அறிவில் வியப்பும், செயலில் வியப்பும் கண்டவிடத்து அவரை 'ஐயர்' என்று அழைத்தனர். மற்றும் ஐயர் என்ற சொல்லை உரையாசிரியர் மேலோர்முனிவர் என்றே பொருள் கூறுகின்றனர். அதனால், அச்சொல் தமிழேயாயினும் ஆரியமேயாயினும் ஆருகமேலோர் என்ற பொருளையே உணர்த்தும். அவ்வையர் நால்வகை வருணங்கட்கும் சடங்கு வகுத்த முனிவர்களை என்று கூறி இதற்கு மேற்கோள் எல்லாம் எடுத்துக் காட்டியுள்ளார்.

ஐயர் என்ற சொல் முனிவர் என்ற பொருளை எவ்வாறு உணர்த்தும்? இதன் முதனிலைப் பொருளும் அதன் முதனிலைப் பொருளும் உணர்ந்தாரானால் உரையாசிரியர் கூற்றையும் இவர் மறுத்திருக்கலாம்.

இஃது உணராததால் அவர் கூற்றை வைத்துக்கொண்டு விழித்து எவ்வாறு பொருள் கூறுவதென்று தடுமாறி, "பொருளில் மயக்கங்கொண்டு கூறுவார்" என்று கூறியதாம் மயங்குவார் ஆயினர். அல்லது அவர் சொந்த அகராதியில் அவ்வாறு பொருள் உள்ளது போலும்.

"இனி ஆசிரியர் தொல்காப்பியனார் பொய் வழுக்களைப் பொதுச் சொற்களாற் கூறினாரே யல்லாமல் 'இன்ன பொய், இன்னவழு' என்று கூறவில்லையாதலான் பைசாசமும் அதில் அடக்கினால் வரும் இழுக்கென்னை?" என்று கடாவுகின்றார்.

இப்பைசாசம் முதலிய ஒழுக்கமில் இழுக்கமாயமணம் ஆரியர்களே... உரியது.

இவ்வகாரிக முடைய நாம் தூய தமிழருடன் கலந்திருப்பதால் அவர்கள் நம்மைப் பழித்தொதுக்குவர் என்ற காரணத்தை உன்னியே, தமிழர்களிடையும் இராக்கதம் பைசாசம் முதலியனவும் இருந்ததென்று தம் நூலில் கூறியுள்ளார். இது முக்கருத்தான் கதையை மாறும். தமிழ்நாட்டிலிருந்து தமிழ் ஊதியம் பெற்றுவளர்ந்த ஐயங்காரை விட ஒருபடி மேலாகக்கூறிப் பைசாசத்தை புனைடக்கிய இவருக்கு தமிழன்னை பொறுக்க முடியாத தண்டனை விதிப்பாளாக.

அறிவர்

"அறிவர், என்றவர் குலவாசிய புரோகிதர் ஆவர். இவரைக் குறிஞ்சிக்கலி சோதிடம் வல்லாராகவும் கூறும். பாணன், பாங்கி முதலிய வாயில்களுள் ஒருவராகக் கற்பியல் இறுதியில் இவரை ஆசிரியர் வைத்து என்றுதல் காணலாம். அன்றியும், இவ்வறிவரை பண்டைத் தமிழ் நூல் 'ஐயர்' என்று அழைக்கி...லே" என்று கூறினர். அறிவர் என்பார் இருவராக தொல்காப்பியத்தில் ஆசிரியர் ஆண்டிருப்பதை அறியாது கூறுகின்றார். வாகைத் திணையில "மறுவில செய்தி மூவகைக்காலமும் நெறியி னாற்றிய அறிவன் றேயமும்" என்று கூறப்பட்ட அறிவர் ஒருவர்.

மற்றொருவர் திரு. சீனிவாசன் கூறுவதுபோல் கற்பியல் இறுதியில் கூறப்பட்டவர் ஆவர். இவருட் பின் கூறியவர் காமத்துறுநராதலால், உடல் கேழ்க்குழி, அது தீர்த்தற்குரியரேயல்லால இவர் காரணம் வகுத்தற்குரியரல்லர். முற்கூறியவரே காரணம் வகுத்தவர் ஆவர். வாகைத்திணையில் கூறிய அறிவர் காமவாயிலாகார். வாயிலாகக் கூறப்பட்ட அறிவர் காரணம் புணர்த்தற்குரியரல்லர். இவ்விருவருக்கும் வேறுபாடு மிகவுண்டென்பதை அவர் மனத்தில் பதிப்பாராக. இவ்விருவரையும் ஒருவரேயெனக் கொண்டதால் "மேலோர் கீழோர் ஆகிய இருவர்க்கும் காரணம் வகுத்தார் இவரே என்று கூறுவார்கள் போலும்" என்றார். சந்தேகப்படுவானேன்? மேலோர்க்கும் முற்கூறிய மறுவில செய்தி மூவகைக் காலமும் நெறியினாற்றிய அறிவரே வகுத்தார் என்றால் வரும் இழுக்கென்னை? அதுதானே உண்மை. இஃதன்றி பின் கூறிய காமவுறுநராய அறிவரே கீழோர்க்கு காரணம் வகுத்தார் என்று கூறினர். ஒரு தலைவற்கு காதல் காரணமாகத் துறந்து செல்கின்றவர் அத்தலைவற்கே, காணம் வகுத்தார் என்று கூறுதல் எவ்வாறு பொருந்தும்? பெரிய காணத்தைப் புணர்த்தவர் இச்சிறிய காரியத்தில் ஈடுபடுவாரோ என்று உய்த்துணர்ந்தால் அவ்வன்பர்க்கு நன்கு புலப்படும்.

இவ்வாறு கருது ஒருவரே என்று மாறுபட உணர்ந்துகொண்டு இடர்ப்படுவது பாவம்! இரங்கத்தக்கதே!! என் நண்பர் இராமலிங்கத்தை "இராக்கதமென்பதை முன்னர் 'மூன்றும் கைக்கிளை குறிப்பே' என்பதில் அடக்கினர். இன்னொன்ன அடிப்படையான சிறு பொருட் கூறுபாடுகளையும் அறியாதார் தொல்காப்பியத் துறையில் இறங்குவது இரக்கத் தக்கதே" என்றார். இப்போது இவர் அறியாதவரா? அவர் அறியாதவரா? என்று நான் கேட்கின்றேன்.

மற்றும் இராக்கதம் என்ற சொல், தொல்காப்பியத்தில் காணப்படவில்லையே. ஐயா! என்று கேட்டால் மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள் என்பதிலும் "முன்னர் மூன்றும் கைக்கிளைக் குறிப்பே" என்பதிலும் அடக்கிவிட்டார் என்று நண்பர் இராமலிங்கத்தை வைதாரே யல்லாமல் கேள்விக்குப் பதில் இல்லை.

அன்றியும், மறையோர் தேஎத்து மன்றல் எட்டென்றாரே யல்லாமல் தமிழ் நாட்டு மணம் கூறிற்றிலர். உரையாசிரியர் அவ்வாறு அடக்கிக் கூறுகின்றாரே யல்லாமல் தொல்காப்பியர் அவ்வாறு அடக்கினார் என்பது பொருந்தாக் கூற்றாகும்.

மகட்பாற் காஞ்சியை எல்லாம் இராக்கதமென்று ஆசிரியர் கருதுவாரே யாகில், இவர்கள் கூறுமாறு அடக்கிக் கூறுவானேன்? வெளிப்படையாகக் கூறுவாரே. இதுதானே ஆசிரியர் இயல்பு. அவ்வாறு ஆசிரியர் கருதி போந்ததால், மகட்பாற் காஞ்சியை இராக்கத மென்றல் அவர்க்குக் கருத்தன்று என்பது வெள்ளிடை. மற்றும் மகட்பாற் காஞ்சியைப் பற்றி நண்பர் வெள்ளை வாரணன், ஞானம்பிகை அம்மையார், நண்பர் வடிவேலன் முதலியவர்கள் எழுதியவைகளின் உண்மையை யுணர்ந்தாரே யாகில், இக்கொடுங் கூற்றெல்லாம் இளைப்பியானை தானே தலையில் மண்ணை யள்ளிக் கொட்டிக் கொள்வது போல் கூறார். இவர் என் நண்பர்களை நுணங்கிய கேள்வியரல்லர் அதனால் வணங்கிய வாயினராக இருக்கவில்லை என்றார். இவர் நுணங்கிய கேள்வி எம்மட்டு என்பதை இது காறும்யான் எடுத்துக் கூறியவைகளைக் கொண்டு தமிழர் ஆரியர் எல்லோரும் உணர்வாராக.

சிற்றின்பக் கனிரசம்

சிற்றின்பத்தைப் பற்றிய அநேக ரகஸ்ய விஷயங்கள் அடங்கியது. விலை ரூ. 2-4-0. விரிவான விளம்பரம், மாதிரிப் படம் இனாம். 300 பக்கங்கள், புத்தக ஆர்டருக்கு காலண்டர் இனாம்.

நாலணா ஸ்டாம்பு அனுப்பினால் கர்ப்பத்தடை முறைகள் என்ற புத்தகம் இனாமாக அனுப்பப்படும்.

ஒற்றுமை ஆபீஸ்,
சைதாப்பேட்டை, மதராஸ்.

ரயில்வே கால அட்டவணை

சென்னை: (சென்ட்ரல் ஸ்டேஷன்)

வண்டியின் பெயர்		புறப்படும் நேரம்	வரும் நேரம்
பெங்களூர்	மெயில்	மாலை 9-30	காலை 6-10
,,	பாசஞ்சர்	மாலை 9 40	காலை 5-30
,,	பாசஞ்சர்	காலை 6-20	மாலை 7-40
,,	எக்ஸ்பிரஸ்	மாலை 1-0	மாலை 2-10
பம்பாய்	,,	காலை 8-30	மாலை 4-55
,,	மெயில்	மாலை 8-45	காலை 5-55
வால்டேர்	பாசஞ்சர்	மாலை 7-30	காலை 10-35
,,	பாசஞ்சர்	காலை 9-5	மாலை 6-10
,,	பாக்ஸ் ,,	மாலை 7-30	— —
கிராண்ட் டிரங்க்	எக்ஸ்பிரஸ்	காலை 7-45	மாலை 5 15
ராய்ச்சூர்	பாசஞ்சர்	காலை 9-20	மாலை 3-40
ஜோலார்பேட்டை	பாசஞ்சர்	மாலை 12-50	மாலை 2.-0
ரேணிகுண்டா	பா-ர்	—	மாலை 9-22
காட்பாடி	பாசஞ்சர்	மாலை 5-30	காலை 9-40
அரக்கோணம்	பாசஞ்சர்	மாலை 6-30	— —
மலபார்	எக்ஸ்பிரஸ்	மாலை 8-5	காலை 7-20
கல்கத்தா	மெயில்	மாலை 8-35	காலை 7-50
புளுமவுண்டன்	எக்ஸ்பிரஸ்	மாலை 9-15	காலை 6-30

சென்னை: (எழும்பூர்)

வண்டியின் பெயர்		புறப்படும் நேரம்	வரும் நேரம்
செங்கோட்டை	பாசஞ்சர்	காலை 7-30	மாலை 7-30
கடலூர்	பாசஞ்சர்	மாலை 4-5	காலை 11-20
இண்டோ—சிலோன்	எக்ஸ்பிரஸ்	,, 9-0	,, 6-45
திருவனந்தபுரம் பாஸ்ட்	பாசஞ்சர்	,, 9-30	,, 6-10
திருச்சி பார்சல்	பாசஞ்சர்	,, 10-20	,, 5-30
கார்டு லைன்			
தனுஷ்கோடி பாஸ்ட்	பாசஞ்சர்	காலை 11-25	மாலை 2-45
திருவனந்தபுரம்	எக்ஸ்பிரஸ்	மாலை 8-0	காலை 7-20

உங்கள் அறிவு விருத்தியாக வேண்டுமா?

ஆனால்,

"பகுத்தறிவு" பத்திரிகையின் இரண்டாம் ஆண்டின் முதல் இதழை வாங்கிப் படியுங்கள் அதில், அறிஞர்களான ஈ. வெ. ரா., சித்திரபுத்திரன், திருகூடசுந்தரம் பிள்ளை, கைவல்யம், ஜே. பி. கிருஷ்ணன், ஜே. எ. ஹெட்டர்விக்கு முதலிய பல அறிஞர்களால் எழுதப்பட்ட இராமனுக்கு சீதை தங்கை, கடவுள் கதை, விக்கிரக வணக்கமும், மனிதன் தலைவிதியும், மனிதன் எதனால் உயர்ந்தவன், அபிராமி, உலக உற்பத்தியும் உயிர் தோற்றமும், சிவராம சாஸ்திரிகளுக்கும், மருதையா பிள்ளைக்கும் சம்பாஷணை, சௌமப் புனருத்தாரணப் புரட்டு முதலிய ஆராய்ச்சி மிகுந்த அருமையான கட்டுரைகளும், கதைகளும், சம்பாஷணைகளும் நிறைந்துள்ளன.

இம்மாத வெளியீடு, ஒவ்வொரு சுயமரியாதைக்காரரிடமும் அவசியம் இருக்க வேண்டும். (80 பக்கங்கள்) விலை அணு 0—1—6.

வருட சந்தா ரூ. 1—0—0. வெளிநாடு சந்தா ரூ. 1—8—0.

இது எல்லா "குடி அரசு" ஏஜெண்டுகளிடமும், ஹிக்கின்பாதம்ஸ் புக் ஸ்டால்களிலும் கிடைக்கும்.

மானேஜர்:—"பகுத்தறிவு" ஆபீஸ், ஈரோடு.

50 வருஷங்களுக்கு மேலாக 50
தென் இந்தியாவில் பிரசித்தி பெற்றுள்ள தொழிற்சாலை.

நம்பிக்கை! நாணயம்!! உத்தரவாதம்!!!

திருடர்களின் சத்துரு!

திடமான பெட்டிகள்!

எல்லா சைஸ்களிலும் எப்பொழுதும் கிடைக்கும்.

விலை விவரங்களுக்கு இன்றே எழுதுக:

அ. வரதராம் ஆச்சாரி சன்ஸ்,
இரும்புப் பெட்டி தொழிற்சாலை,
நாகல் நகர், திண்டுக்கல், S.I.

சி. எம். சாமி
மன்மதக் குளிகை.

மிகுந்த பலத்தையும் வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

தாது புஷ்டி மருந்து.

அநேக பரிசுகள் பெற்று, உலகெங்கும் புகழப்பட்டது! இதற்கு நிகரான தாதுபுஷ்டி ஔஷதம் வேறில்லை. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம்.

இழந்த ஆண்மையும், பலமும் திரும்ப வரும். நல்ல ஜீரணம், ரத்த விருத்தி, இந்திரியக்கட்டு, தாதுபுஷ்டி இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாதுகஷ்டம், அசிதஸ்கலிதம், இடுப்பு வலி, உஷ்ண ரோகங்கள் நீங்கும். ஒருமுறை பரீக்ஷித்தவர்களுக்குஇதன் அருங்குணம் விளங்கும். கேட்லாக்கிற்கு எழுதுங்கள்.

பிராஞ்சு:—1/54, அருணாசல நாயக்கன் தெரு, சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.

தலைமை ஆபீஸ்:—
மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி, S. I.

20 குளிகை விலை ரூ 2.

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN, AT THE JUSTICE PRINTING WORKS, 14, MOUNT ROAD, MADRAS.

விலை அரை அணா '8 பக்கங்கள் மலாய் நாட்டில் 5 சதம் Regd. No. M 3298.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா
உள்நாடு

1 மாதம்	...	0 6 0
3 மாதம்	...	1 0 0
6 மாதம்	...	1 14 0
1 வருடம்	...	3 10 0

சென்னைக்கு

1 மாதம்	...	0 4 0
3 மாதம்	...	0 10 0
6 மாதம்	...	1 4 0
1 வருடம்	...	2 6 0

விடுதலை
VIDUTHALAI
(வாரம் இருமுறை வெளிவரும்)
ஆசிரியர்: டி. ஏ. வி. நாதன்.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா.
வெளிநாடு

1 மாதம்	...	0 10 0
3 மாதம்	...	1 14 0
6 மாதம்	...	3 12 0
1 வருடம்	...	7 4 0

சர்க்கார், முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டுகளுக்கு:
உள்நாடு: வருடம் ரூ. 7 8 0
சென்னை: " ரூ. 4 8 0

மலர்-1] சென்னை: (6-5-1936) தாதுஹூ சித்திரைமீ 24உ புதன்கிழமை [இதழ்-96

எதியோபியாவின் பரிதாபகர நிலைமை

தாய் நாட்டை விட்டு சக்கரவர்த்தி புறப்பட்டுவிட்டார்

மந்திரிகளிடம் சர்க்கார் நிர்வாகம்

பாலஸ்தீனுக்குச் செல்ல விருப்பம்

தலை நகரில் கொலையும், கொள்ளையும்

இரண்டு பிரஞ்சுக்காரர்களும் ஒரு ஸ்திரீயும் கொலை யுண்டனர்

இத்தாலியத் துருப்புகள்-தலை நகருக்கு விரைவாக முன்னேறுகின்றன

லண்டன், மே, 4

எதியோபியச் சக்கரவர்த்தியும், அவரது கோஷ்டியினரும் இன்று ஜிபூதியிலிருந்து "எண்டர் பிரைஸ்" என்ற கப்பலில் ஹைபாவிற்கு பிரயாணப்பட்டனரென்று காமன்ஸ் சபையில் பிரிட்டிஷ் அன்னிய நாட்டு மந்திரியாகிய திரு. ஈடன் அறிவித்தார். திரு. ஈடன் மேலும் கூறியதாவது:—

தனது மந்திரி சபையிடம் நீகஸ் (எதியோபிய சக்கரவர்த்தி) தனது சர்க்கார் நிர்வாகத்தை ஒப்படைத்து விட்டதாகவும், தனது குடும்பத்துடன் பாலஸ்தீனுக்குச் செல்ல சக்கரவர்த்தி விருப்பம் கொண்டிருப்பதாகவும், அட்டிஸ் அபாபாவிலுள்ள பிரிட்டிஷ் மந்திரிக்கு சென்ற வெள்ளிக்கிழமை மாலை அறிவிக்கப் பட்டது. அவருடைய வேண்டுகோளை பிரிட்டிஷ் சர்க்கார் அங்கீகரித்து 'எண்டர் பிரைஸ்' என்ற கப்பலை ஜிபூதிக்கு அனுப்பி, சக்கரவர்த்தியையும் அவரது கோஷ்டியையும் நேராக ஹைபாவுக்குக் கொண்டு செல்லும்படி உத்திரவிடப்பட்டது.

பாலஸ்தீனத்தில் இருக்கும் பொழுது போரைத் தொடர்ந்து நடத்த சக்கரவர்த்தி முயற்சிக்க மாட்டாரென எதிர்பார்க்கப்படுகிறது.

தலை நகரில் அக்னி ஜ்வாலை

கொலையும், கொள்ளையும்

லண்டன், மே, 3

சங்கம் கைவிட்டு விட்டதாலும், இத்தாலியின் படை வலிமையையும் உணர்ந்து, சக்கிரவர்த்தினியின் வற்புறுத்தலுக் கிணங்கி தேசத்தை விட்டுச் செல்ல நீகஸ் சம்மதித்தார். ராஜ தந்திர முறையில் எதியோபியாவின் சுதந்திரத்தை நடத்திச் செல்ல அவ்விதம் செய்வது நலத்தைக் கொடுக்குமென அவர் கருதி சக்கிரவர்த்தினியுடனும், குடும்பத்துடனும், ஜிபூதிக்கு அர்த்த ராத்திரியில் புறப்பட்டு விட்டார்.

புறப்பட்டுப் போவதற்கு முன் அரண்மனையை ஜனங்களுக்கு திறந்து விட்டுவிடும்படி நீகஸ் உத்தரவிட்டு விட்டார்.

இச் சமாச்சாரம் தெரியவந்ததும் காலிகளும், கலைக்கப்பட்ட துருப்புகளும், அரண்மனையைச் சூறையிட்டனர். ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கூட்டத்தினர் நகரைச் சுற்றி நாள் முழுதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொள்ளையிட்டனர். அன்னிய நாட்டு மக்கள் பத்திரமாக தங்கள் தங்கள் ஸ்தானிகர்கள் காரியாலயங்களில் அடைக்கலமாயினர்.

இதற்கிடையில் எதியோபிய சர்க்கார் மந்திரி சபையினர் அட்டிஸ் அபாபாவுக்கு 60 மைல் தென்மேற்கிலுள்ள கோரி என்ற இடத்திற்கு மோட்டாரில் சென்று விட்டனர்.

சக்கரவர்த்தி தேசத்தை விட்டு நீங்கிய பொழுதிலும் சட்டப்படி அவர் சக்கரவர்த்தியாகவே இருந்து வருவாரென்று கூறப்படுகிறது.

தன்னுடைய அதிகாரத்தை மந்திரிகளிடம் மாற்றிவிட்ட பொழுதிலும், சிம்மாசனத்தையே துறந்து விட்டாரா என்பதைப்பற்றி ஒன்றும் நிச்சயமாகத் தெரியவில்லை.

2 பிரஞ்சுக்காரர்கள் மாண்டனர்

பாரிஸ், மே, 3

கொள்ளைக்காரர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தால் இரண்டு பிரஞ்சுக்காரரும் ஒரு ஸ்திரீயும் மாண்டனர். இதையொட்டி பிரெஞ்சு சர்க்கார் இத்தாலி சர்க்காருக்குத் தெரிவித்த தன்மேல் இத்தாலி சர்க்கார் எதியோபியாவிலுள்ள இத்தாலி தளபதிக்கு முன்னணித் துருப்புகளை உடனே அட்டிஸ் அபாபாவுக்கு அனுப்பும்படி தந்திமூலம் உத்தரவிட்டிருக்கின்றனர். இத்தாலித் துருப்புகள் அட்டிஸ் அபாபாவுக்கு 25 மைல் தூரத்தில் வந்துவிட்டனர்.

நகரின் மத்திய பாகம் அழிந்தது

ஜிபூதி, மே, 3

அட்டிஸ் அபாபாவின் மத்திய பாகம் சூறையிடப்பட்டும், நிர்மூலமாக்கப்பட்டும், எரிக்கப்பட்டும் போயின. கட்டடங்கள் ஹோட்டல், சாமான் கிடங்குகள், நேஷனல் பாங்க் முதலியவைகள் முந்திய இரவே தீயிடப்பட்டு விட்டதாகக் காலையில்தான் தெரிய வந்தது.

அமெரிக்க வைஸ் கான்சல் விடு தாக்கப்பட்டது

அமெரிக்கமாது மாண்டாள்

வாஷிங்டன், மே, 3

அமெரிக்க பாதிரியாகிய டாக்டர் ஏ. ஆர். ஸ்டேடின் மனைவி இன்று அதிகாலையில் நடந்த கலவரத்தில் மண்டையில் துப்பாக்கி ரவை பாய்ந்து மாண்டனள். நகர் கலகக்காரர்களின் கையில் சிக்கிவிட்டதென்றும், எங்கு பார்த்தாலும் கொள்ளையும், கொலையும் துப்பாக்கி சப்தமுமாகவே இருப்பதாகத் தெரியவருகிறது. அமெரிக்க வைஸ் கான்சல் விடும் கலகக்காரர்களால் தாக்கப்பட்டு சூறையிடப்பட்டது. ஆனால், அவருக்கும், மற்ற ஸ்தானிகர்களுக்கும் யாதொரு ஆபத்தும் ஏற்படவில்லை. 30 கிரேக்கர்களும், 6 ரஷியர்களும் அமெரிக்க ஸ்தானிகர் காரியாலயத்தில் அடைக்கலம் புகுந்தனர்.

பிரெஞ்சு ஸ்தானிகர் காரியாலயத்திற்கு தீ யிடப்பட்டது

பாரிஸ், மே, 3

ஆயுதம் தாங்கிய எதியோபிய புலர்களால் நேற்று இரவு பிரெஞ்சு ஸ்தானிகர் காரியாலயம் தாக்கப்பட்டு தீயிடப்பட்டது. ஆனால், அல்காரி காவற் துருப்புகளால் அவர்கள் விரட்டப்பட்டனர்.

சக்கரவர்த்தி ஜிபூதி வந்து சேர்ந்தார்

ஜிபூதி, மே, 4

ஞாயிற்றுக் கிழமை மாலை சக்கரவர்த்தி ஜிபூதி வந்து சேர்ந்தார். பிரெஞ்சு சர்க்காரின் விருந்தாளியாக தற்பொழுது அங்கு தங்கி வருகிறார். அவரது எதிர்காலநடை முறையைக் குறித்து பிரிட்டிஷ் பிரெஞ்சு சர்க்கார்கள் ஆலோசனை புரிந்து வருகின்றனர்.

ஜிபூதியிலிருந்து புறப்பாடு

எதியோபிய சக்கரவர்த்தி தனது மனைவியுடனும், ராஜ குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களுடனும் "எண்டர் பிரைஸ்" என்ற கப்பலில் 7-30 மணிக்கு ஜிபூதியை விட்டுப் புறப்பட்டு விட்டார்.

சீக்கியர்கள் தீரம்

உதவிக்குத் தயார்

வாஷிங்டன், மே, 4

அட்டிஸ் அபாபாவில் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களின் கீழிருந்து வரும் சீக்கியப்படை, அன்னிய நாட்டு மக்களுக்கு மிகுந்த ஆதரவை அளித்து வருகிறது. அந்த நேசத்தைச் சம்மதப்பட்ட மக்களுக்கும் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் அவர்கள் முன் சென்று காப்பாற்றி வருகின்றனர். அமெரிக்க ஸ்தானிகர் காரியாலயத்தில் இருந்து வந்த ஸ்திரீகளையும், குழந்தைகளையும் 3 லாரிகளில் ஏற்றி பத்திரமான பிரிட்டிஷ் ஸ்தானிகர் காரியாலயத்திற்கு கொண்டு வந்து விட்டனர்.

அட்டிஸபாவுக்கு பிரஞ்சு துருப்புகள்

ஜிபூதி, மே, 3

அட்டிஸ் அபாபா ரயில்வே ஷ்டேஷனிலும் கலகக்காரர்கள் புகுந்து விட்டதை முன்னிட்டு பிரெஞ்சு சோமாலிலாந்து அதிகாரிகள் இரண்டு கம்பெனி செனிகாலி துருப்புகளை தலைநகருக்கு அனுப்பியுள்ளனர்.

டைர்டாவாவில் பிரெஞ்சு முஸ்தீபுகள்

பாரிஸ், மே, 4

ஜிபூதியிலிருந்து டைர்டாவாவிற்கு பிரெஞ்சு துருப்புகள் அனுப்பப் பட்டிருப்பதாக உத்தியோக தோரணையில் கூறப் படுகிறது.

இந்திய ஸ்டோர் முற்றுகை

அட்டிஸ் அபாபா, மே, 3

அட்டிஸ் அபாபாவிலுள்ள முஹம்மதலி ஸ்டோரை கலகக்காரர்கள் முற்றுகை யிட்டனர். இந்திய உத்தியோகஸ்தர்கள் அவர்களுடன் தீரமாகப் போராடி அதனைப் பாதுகாத்தனர். அவர்களுக்கு உதவியாக பிரிட்டிஷ் ஸ்தானிகராகிய திரு. ஹோப்கின்ஸும், அவரது கோஷ்டியும் வந்தனர்.

துருக்கி ஸ்தானிகர் காரியாலயமும் தப்ப வில்லை

10 ஐரோப்பியர்கள் கொல்லப்பட்டனர்

ரக்பி, மே, 4

நேற்று ஆயுதந்தாங்கிய கலகக்காரர்கள் துருக்கி ஸ்தானிகர் காரியாலயத்தையும் தாக்கினர். தங்களால் ஆனவரையிலும் அவர்கள் கொள்ளைக்காரர்களை எதிர்த்துப் பார்த்தும் முடியாமல் கைவிட்டனர். பிறபாடு பிரிட்டிஷ் ஸ்தானிகர் காரியலயத்திலிருந்து ஒரு பாதுகாப்புக் கோஷ்டி புறப்பட்டு அவர்களை பிரிட்டிஷ் ஸ்தானிகர் காரியாலயத்திற்கு பத்திரமாகக் கொண்டு வந்து சேர்த்தனர்.

2000 பேர் அடைக்கலம்

பிரிட்டிஷ் ஸ்தானிகர் காரியாலயத்தில் தற்பொழுது 23 தேசத்தைச் சேர்ந்த 2000 மக்கள் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

சென்ற இரண்டு தினங்களுக்குள் கிரேக்கர்களும், அமெரிக்கர்களுமாகச் சேர்ந்து 10 ஐரோப்பியர்கள் மாண்டிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

சரணாகதியை இத்தாலியர் எதிர் பார்க்கின்றனர்

தலைநகர் மீது விமானங்கள் வட்டம்

ரோம், மே, 4

தலைநகரை இத்தாலியரிடம் ஒப்புவிக்க அட்டிஸ் அபாபாவிலிருந்து ஒரு கோஷ்டி வரக்கூடுமென இத்தாலியர் எதிர் பார்க்கின்றனர். நகரையும், அதன் சுற்றுப் பக்கங்களையும் விமானங்கள் இடைவிடாமல் வட்டமிட்டு வருகின்றன. எதிர்ப்பு இருக்கக்கூடுமென்பதாகச் சிறிதும் தெரியவில்லையென கூறப்படுகிறது.

இத்தாலியில் சந்தோஷம்

ரோம், மே, 4

பலத்த சந்தோஷத்தினிடையே, அட்மிரல் சியானோ "நேகஸ் ஓட்டம் பிடித்தார்" என டெபுடி சேம்பரில் அறிவித்தார்.

பிரிட்டிஷ் மந்திரி சபைக்கூட்டம்

ரக்பி, மே, 4

இன்று காலை நடைபெற்ற பிரிட்டிஷ் மந்திரி சபையின் விசேஷக் கூட்டத்தில் எதியோபிய நிலைமையைக் குறித்து பரிசீலனை செய்யப்பட்டது.

ஒகாடனில் இத்தாலி துருப்புகளுக்கு வரவேற்பு

ரோம், மே, 4

ஒகாடனில் ஜனங்கள் இத்தாலி துருப்புகளை இரக்ஷகர்த்தாக்களென்று வரவேற்றனர்.

மதனலீலை செந்தூரம்

இழந்த பலத்தை உடனே கொடுக்கும். இரத்தத்தைச் சுத்தி செய்து நரம்புகளைப் பலப்படுத்தும். மூளையை சீக்கி இளமையைக் கொடுக்கும். இல்லறத்தை நல்லறமாக்கும்.

பத்தியமில்லை—விலை அணா 6.

7½-அணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு பாக்கட் அனுப்பப்படும்.

"ஒற்றுமை" ஆபீஸ்,
சைதாப்பேட்டை, சென்னை.

டெர்பி
ஸ்வீப்ஸ்டேக் டிக்கட்டுகள்
கிடைக்கும் இடம்:—
T. கந்தசாமி, ரேஸ்ட் ஏஜன்ஸி, கோபிசெட்டிபாளையம், S.I.
கிளை ஆபீஸ்:—
ரேஸ்ட் ஏஜன்ஸி, ஹைகோர்ட்டுக்கு எதிரில், சென்னை.

திலகர் சுயராஜ்ய நிதி மோசடி

பர்மாவில் வசூலித்த பணம் எங்கே?

கணக்கு தரப்படவில்லை!

"மஹிஷத்தின்மீது மாரிபொழிந்த மாதிரி"

"உடனே கணக்கை வெளியிடு!"

"சுதந்திரன்" சவுக்கடி!

ரங்கூன், மே, 1

திலகர் சுயராஜ்ய நிதி மோசடியை நாம் வெளியிட்டுப் பல மாதங்கள் ஆகின்றன. இன்றுவரை தக்க சமாதானம் கூற எந்தக் காங்கிரஸ் வாதியும் வெளிவரவில்லை. நிற்க, அதே நிதிக்காக பர்மாவிலே, காங்கிரஸ் கட்சியினர் இரண்டு லக்ஷத்துச் சொச்சம் வசூல் செய்து, அதற்குத் தக்க கணக்கை, பல முறை பகிரங்கமாகப் பத்திரிகைகள் வாயிலாகக் கேட்டும், பர்மா காங்கிரஸ் கமிட்டி, பொது மக்களிடை சமர்ப்பிக்கவில்லையெனவும், அப் பணத்தை மோசமாகச் சிலர் கையாண்டனரெனவும் பர்மாவிலிருந்து வெளியாகும் தேசீய வாரப் பத்திரிகையான "சுதந்திரன்" எழுதுகிறது. அதனைக் கீழே பிரசுரிக்கிறோம் :—

திலகர் சுயராஜ்ய நிதிக்காக, ஒரு கோடி ரூபாய் 1920-ம் ஆண்டு இந்தியில் வசூல் செய்யப்பட்டதை நமது வாசகர்கள் அறியவே செய்வர். அந்த நிதி ஒழுங்காக விநியோகிக்கப்படவில்லையென்று, மகாராஷ்டிர காங்கிரஸ் கமிட்டி மாஜீ காரியதரிசி திரு. பி. வி. மஹாஜன் பகிரங்கமாக எடுத்துக்காட்டினர். அது பற்றி பிரம்மாண்டமான கிளர்ச்சி நமது தாய் நாட்டில் நடை பெற்று வருகிறது. நிதியின் நிர்வாகஸ்தர்களும் தக்க சமாதானங்களைக் கூறி வருகின்றனர். நாம் பர்மாவில் அந்த நிதியின் கதி யென்னவாயிற்றென்று சற்று ஆராய்தல் பொருத்தமல்லவா? இங்கு வசூலான தொகை மொத்தம் ரூ. 2,23,837 இதில் குறிப்பிட்ட விஷயத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1, 27, 276. பொது உபயோகங்களுக்காக குறிப்பிட்ட தொகை ரூ. 96,561. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பங்குக்கென ரூ. 81,880 அளிக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. கதருக்காக ரூ. 26,970-ம் காரியாலயம், பிரசாரம், தொண்டர்படி, பஞ்சம், ஹரிஜனங்கள் இவைகளுக்காக ரூ. 25,132-ம் செலவானதாகக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த விவரங்கள் 1921-1925 கணக்குகளில் இருந்து அறியக்கிடக்கின்றன. நமதறிந்தவரையில் மேற்காட்டிய செலவினங்கள் இரண்டின் மொத்தம் ரூ. 52,102 ஒழுங்காக நடைபெற வில்லையென்றே கூறி விடுவோம். ஒரு மாமாங்கத்திற்கு மேலாக, பர்மா மாகாண காங்கிரஸ் கமிட்டியை கணக்குகள் வெளியிடும்படி நாம் எத்தனையோ முறை ஆங்கில, தமிழ் பத்திரிகைகளில் பகிரங்கமாகக் கேட்டும், நிர்வாகிகள், மஹிஷத்தின் மீது மாரி பொழிந்த மாதிரி இருந்துவருகிறார்களென்போம். காரியாலயம் தொண்டர் வகையறாச் செலவுகள் இங்கு அதிகம் கிடையாது. ஹரிஜனம் என்ற நாமமே 1921-1925-ல் பிறக்கவில்லை. இந்தப்பணத்தைக்கொண்டு பெரிய மனிதர்கள் என்ற சில குஜராத்தியர்களே விளையாடியவர்களென்பது வெளிப்படை. மற்ற மாகாணத்தவர்களுக்கு இந்த பர்மா காங்கிரஸ் கமிட்டியில் அதிக சம்பந்தம் கிடையாது. இவண் காங்கிரஸ் கமிட்டியென்பது ஒரு சிலர் விளம்பரம் செய்து கொள்ளுவதற்காக சமயா சமயங்களில் வெளிவருவதைத் தவிர வேறு வேலை செய்வதில்லையென்று நாம் திட்டமாய்க் கூறி விடுவோம். இப் பணத்தை நியாயமல்லாத முறையில் ஒரு சிலர் மோசம் செய்து விட்டதாக மக்களிடை பலத்த நம்பிக்கை இருந்து வருகிறது. ஆகவே முழு விபரங்களையும், பொது மக்கள் அறியும் வண்ணம் உடனே பத்திரிகைகளில் வெளியிடுமாறு நாம் மிகவும் பலமாக எச்சரிக்கிறோம். இது வரையில் நாம் கேட்டதற்கு செவிடன் காதில் ஊதிய சங்கு போல இருந்த மாதிரி இருக்கலாகாதென நாம் எடுத்துக் காட்டவும் வேண்டுமோ? —"சுதந்திரன்"

சென்னை ஆக்டிங் கவர்னர்

சர். கே. வி. ரெட்டி நியமனம்

ஜுன் 20-ந்தேதி பதவி ஏற்பார்

லார்டு எர்ஸ்கின் 4 மாத ரஜாவில் செல்கிறார்

சிம்லா, மே, 4

இந்திய சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுவதாவது:

கனம் சர். கே. வி. ரெட்டி.

மேன்மை தங்கிய சென்னை கவர்னர் லார்டு எர்ஸ்கினுக்கு ஜுன் மாதம் 18-ந்தேதி முதல் நான்கு மாதத்திற்கு மேற்படாத ரஜா இந்தியா மந்திரி அனுமதித்திருக்கிறார்.

லார்டு எர்ஸ்கின் ரஜாவிலிருக்கும் காலத்தில் ஆக்டிங் கவர்னராக விருக்க சர். கே. வி. ரெட்டி நாயுடு நியமனம் செய்யப்பட்டிருப்பதை அரசர் பெருமான் அங்கிகாரம் செய்துள்ளார்.

ஜுன் மாதம் 20-ந்தேதி பதவி ஏற்பார்

உதகமண்டலம், மே, 4

லார்டு எர்ஸ்கின் தம்பதிகள் ஜூன் மாதம் 18-ந் தேதி உதகமண்டலத்திலிருந்து பம்பாய் செல்வர். பம்பாயிலிருந்து 20-ந் தேதி இங்கிலாந்திற்குப் புறப்படுவார்கள்.

சர். கே. வி. ரெட்டி அதே தேதியன்று இம்மாகாணத்தின் கவர்னர் பதவியை ஏற்பார்.

செப்டம்பர் கடைசியில் லார்டு எர்ஸ்கின் இந்தியா திரும்பக் கூடுமென்று கருதப்படுகிறது.

ஜார்ஜ் மன்னர் வாசகசாலை

(ஒரு நிருபர்)

தேவூர், மே, 4

தஞ்சை ஜில்லா நாகப்பட்டணம் தாலுக்கா தேவூரில் 27-4-36-ல் பொதுஜன ஆதரவில் ஒரு வாசகசாலை நியமனம் செய்யப்பட்டது. மேற்படி வாசகசாலைக்கு காலஞ்சென்ற ஐந்தாம் ஜார்ஜின் ஞாபகார்த்தமாய் மேற்படியாரின் திருவுருவப்படத்தை வாசகசாலைக் கட்டிடத்தில் திறந்து வைத்தும் மன்னர் பிரான் பெயரை வாசகசாலைக்கு வைத்தும் சிறப்பிக்கப்பட்டது.

மேற்படி விழாவை திருவிசநூர் தோழர் டி. பி. நாராயணசாமி தலைமையில் நடத்திவைக்கப்பட்டது.

தலைவர் முகவுரைக்குப் பின் தோழர் மா. ஆறுமுகம் வந்தனோபசாரம் கூறப்பட்டு தோழர் டி. பி. துரைசாமி தேவர் வழங்கப்பட்டு சந்தன தாம்பூலத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

இருகூர்

தேவேந்திர வேளாள முன்னேற்ற சங்கம்

(ஒரு நிருபர்)

இருகூர், மே, 4

தேவேந்திர வேளாள முன்னேற்ற சங்கத்தின் ஆதரவில் 26-4-36-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு மேற்படி சங்க பிரசிடெண்டு திரு. ப. தேவராஜ் தலைமையில் ஓர் அநுதாபக் கூட்டம் நடைபெற்றது. அது சமயம் மேற்படி கூட்டத்திற்கு ஆண் பெண் இருபாலருமாக சுமார் 100-க்கு மேற்பட்டவர்கள் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. பின் தோழர் கே. கருப்பண்ணன் சுயமரியாதைக் கீதங்கள் பாடினர். அடுத்தபடியாக மேற்படி சங்கக் காரியதரிசி தோழர் டி. வி. சுப்பிரமணியம் இன்றுவரை நமக்கும் பொதுவாக ஜஸ்டிஸ் கக்ஷிக்கும் செய்து வந்த அரும் பெரும் சேவைகளைக் குறித்து ஓர் சொற்பொழிவாற்றினர். பின் இதைச் சார்ந்து தோழர்கள் கே. கருசையன், ஆர். எஸ். மதியாணன் ஆகியோர் பேசி முடித்த பின் அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற கூட்டம் 10-30 மணிக்கு இனிது கலைந்தது.

ஜஸ்டிஸ் கக்ஷிக்கு அருந் தொண்டாற்றி வந்தவரும், மாஜி "திராவிடன்" பத்திரிகையின் ஆசிரியராக இருந்து வந்த தோழர் டி. வி. சுப்பிரமணியம் தனது 38-வது வயதில் இவ்வுலக இன்பத்தினின்று நீக்கமடைந்ததற்காக இக்கூட்டம் வருந்துவதுடன், அன்னவருடைய குடும்பத்திற்கு தங்கள் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

தோழர் மு. ராகவ அய்யங்கார் தன்னுடைய சமூகத்தை உயர்த்தியும், மற்ற பார்ப்பனர் அல்லாத சமூகங்களைத் தாழ்த்தியும் எழுதியுள்ள "தொல்காப்பிய" மென்னும் நூலை இக் கூட்டம் கண்டிப்பதுடன், அந்நூலை இயற்றிய பெரியாரையும் இக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

திரு. எம். ஸி. ராஜாவின் அறிக்கைக்கு எதிர்ப்பு

திரு. சன்னாசியின் விஷயம் கவனத்திலிருக்கட்டும்

"ஜாதி ஆணவம் கொண்ட கட்சியில் எப்படிச் சேருவது?"

திரு. ஆறுமுகம் எழுதுகிறார்:—

திரு. எம். ஸி. ராஜா ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதில் அவர் கூறியிருப்பதாவது:—

"ஆதித்திராவிடர்கள் தம்மிடையே ஒற்றுமையை ஸ்தாபித்துக்கொண்டு வேலை செய்ய வேண்டும். அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள விரும்பும் ஆதித்திராவிடர்கள் ஹிந்து சமூகத்திருந்து நீங்கக் கூடிய எவ்வித காரியமும் செய்யலாகாது. வேறு மதத்தில் சேருவது தற்கொலைக்கு சமம்" என்று வெளியிட்டதை, அது தவறான முறை என்று அழுத்தமாகக் கண்டிக்கிறேன்.

பல ஆண்டுகளாக ஹிந்து சமூகத்தோடு ஈடுபட்டு அடைந்த பிரயோஜனம் என்ன? ஹிந்துக்கள் ஒரு ஆதித்திராவிடனை, பகுத்தறிவுள்ள மனிதன்தானே என்று நினைக்கிறார்களா? அதுவும் மல்லாமல், ஹோட்டல்களிலும் பஞ்சமர்கள் பிரவேசிக்க கூடாது என்றால் என்ன அநியாயம், பகுத்தறிவுள்ள ஆதித்திராவிடனை ஏன் பிரவேசிக்க விடக் கூடாது என்றுதான் கேட்கிறேன். இந்நிலைமையில், ஹிந்து மதத்தில் சேர்ந்திருப்பதை விட, உதறித் தள்ளிவிட்டு சம உரிமை அளிக்கும் சமூகம் எதுவோ அச்சமூகத்தில் சேருவதுதான் நியாயமான முறை என்று எடுத்துக் கூறுகிறேன்.

வேறு மதத்தில் பிரவேசிப்பது தற்கொலைக்கு சமம் என்று தெரிவித்த, திரு. எம். ஸி. ராஜாமேல் கூறிய சீர்கேடான நிலைமையை கவனிக்கவில்லையா? காங்கிரஸ் கட்சி என்பது தேச முன்னேற்றத்திற்குற்ற கட்சிதானே! அக்கட்சியில் சேர்ந்த திரு. சன்னாசிக்கு கட்சி பிரமுகர்கள்-சமபந்தியில் சேர அநுமதித்தார்களா? என்று கேட்கிறேன். அவர்கள் ஓர் ஆதித்திராவிடன் என்று தானே புறக்கணித்தார்கள். மேற்படி கட்சி செய்த அவமரியாதை போதுமானதாயிருக்கிறதே! இப்பேர்க்கொத்த சாதி ஆணவம் கொண்ட கட்சியில் எப்படி சேருவது என்றுதான் கேட்கிறேன்.

50 வருஷங்களுக்கு மேலாக 50
தென் இந்தியாவில் பிரசித்தி பெற்றுள்ள தொழிற்சாலை.
நம்பிக்கை! நாணயம்!! உத்தரவாதம்!!!
திருடர்களின் சத்துரு!
திடமான பெட்டிகள்!
எல்லா சைஸ்களிலும் எப்பொழுதும் கிடைக்கும்.
விலை விவரங்களுக்கு இன்றே எழுதுக:
அ. வரதராம் ஆச்சாரி சன்ஸ்,
இரும்புப் பெட்டி தொழிற்சாலை,
நாகல் நகர், திண்டுக்கல், S.I.

25—4—36 முதல்
மதுரை நியூ சினிமாவிலும்
மற்றும் அநேக பிரபல நகரங்களிலும்
பாதுகா பட்டாபிஷேகம்
T. D. ருக்மணி, — — M. R. கிருஷ்ணமூர்த்தி,
P. B. ரெங்காச்சாரி, T. S. சந்தானம்
முதலியவர்கள் நடித்த
உயர்தர தமிழ் பேசும், பாடும் படம் நடைபெறும்.
விவரங்களுக்கு:—
கிருஷ்ணா டாக்கி பிலிம் கம்பெனியார், மதுரை.

ஸி. எம். சாமி
மன்மதக் குளிகை.
மிகுந்த பலத்தையும் வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.
தாது புஷ்டி மருந்து.
அநேக பரிசுகள் பெற்று, உலகெங்கும் பரவியுள்ளது! இதற்கு நிகரான தாதுபுஷ்டி ஔஷதம் வேறில்லை. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம்.
இழந்த ஆண்மையும், பலமும் திரும்ப வரும். நல்ல ஜீரணம், ரத்த விருத்தி, இந்திரியக்கட்டு, தாதுபுஷ்டி இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாதுக்ஷயம், துரிதஸ்கலிதம், இடுப்பு வலி, உஷ்ண ரோகங்கள் நீங்கும். ஒருமுறை பரீக்ஷித்தவர்களுக்குஇதன் அருங்குணம் விளங்கும். கேட்லாக்கிற்கு எழுதுங்கள்.
பிராஞ்சு:—1/54, அருணாசல நாயக்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.
தலைமை ஆபீஸ்:—
மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி, S. I.
20 குளிகை விலை ரூ 2.

மனம்போன போக்கு

—:0:—

(''குட்டிச்சாத்தான்'' எழுதியது.)

சென்ற ஞாயிற்றுக்கிழமை திருச்சிராப்பள்ளியில் நடந்த ராமசாமி—பாண்டியன் அறிக்கை மகாநாடு, பார்ப்பனரல்லாத இயக்கத்தின் ஊன்றுகோலாகும் என்பது என் மனப்பூர்வமான நம்பிக்கை. சென்ற சில ஆண்டுகளாக ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களுடைய சொந்த சொத்தாகக் கருதப்பட்டு வந்தது. அதனால்தான், கட்சி அங்கத்தினர்களும், அபிமானிகளும், தொண்டர்களும் எல்லா விஷயங்களுக்கும் தலைவர்களையே மேல் நோக்கிக் கொண்டிருந்தார்கள். சின்னஞ் சிறு சமாசாரம் முதல் மாபெரும் தீர்மானத் திட்டம் வரையில், எல்லாம் தலைவர்கள் செய்தால் தான் உண்டு. ''தலையில்லாமல் வாலாடுமா'' என்று சொல்லுவார்கள். அந்த மனப்பான்மை இதுகாறும் இருந்த காரணத்தால் தான் நமது கட்சி இந்த நிலைமைக்கு வந்திருக்கிறது. தலையாடும் போதெல்லாம் வாலும் ஆடவேண்டும்; தலையாடாத போதும் வாலாட வேண்டும்; தலையில்லாத போதும் வாலாட வேண்டும் என்பது தான் என்னுடைய சித்தாந்தம். வாலாடுவதென்றால், 'மங்கி பிராண்ட்' கதையல்ல. ராமருடைய தூதர் அனுமார் இலங்கையில் வாலவிழ்த்து விட்டு அசோக வனத்தில் பாணவேடிக்கை செய்ததோ, அம்மாதிரியல்ல நான் சொல்வது. வாலாடுவதென்றால், வால்தன் கடமையைச்செய்ய வேண்டும் என்ற பொருளில் நான் கூறுகிறேன். 'கிரிக்கெட் மேட்ச்'சில், வாலாடுவதென்ற பேச்சு சர்வ சாதாரணம். 'தி டெயில் வாக்ஸ்' என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். உதாரணமாக, முன்பு ஆஸ்திரேலியாவிலிருந்து வந்த 'கிரிக்கட்' கோஷ்டியினர் சென்னையில் சாதாரண 'மேட்ச்' ஆடிய போது, அக்கோஷ்டியில், 'ரன்' எடுப்பதில் பெரும் புலிகள் என்று கருதப் பட்டவர்களெல்லாம் சுன்னமும், சொற்பமுமான 'ஸ்கோர்' எடுத்த போது, கடைசியில் உள்ள 'வால்' தான் வீரங் கொண்டாடி தன் கட்சிக்கு வெற்றி கொண்டு வந்தது

ஃ ஃ ஃ

திருச்சியில் நடந்த மகாநாடு தலைவர்களும், தொண்டர்களும் கூடிய மகாநாடு. அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியை வலுப்படுத்தும் நோக்கத்தோடு, எதிர்கால வேலைத் திட்டத்தை நிர்ணயித்ததை நோக்கும் போது, பார்ப்பனரல்லாத இளைஞர்கள் ஒவ்வொருவருடைய உள்ளத்தில் ''ஜெய முண்டு பயமில்லை'' என்ற உணர்ச்சி நிச்சயமாக எழும் என்று நான் நினைக்கிறேன். ஜஸ்டிஸ் கட்சிக்கு, என்ன நடந்தாலும், நடக்காவிட்டாலும், அழிவு கிடையாது என்று கருதுபவர்களில் நான் ஒருவன். ஏன்? தோழர் ஈ. வே. ரா. வினுடைய அன்பும் ஆதரவும் அதற்குப் பூரணமாக இருக்கிறது. அது ஜஸ்டிஸ் கட்சிக்கு கற்றூண் போன்றதாகும். அவ்வொரு தூணே கட்சி முழுமையும் தாங்கும் வலிமையுடையது என்பதை நான் அறிவேன். இப்பொழுது, தோழர் ஈ. வெ. ரா. ஜஸ்டிஸ் கட்சியைப் பலப்படுத்துவதென்ற நோக்கங்கொண்டு, சுயமரியாதை யாழின் நரம்புகளைக் கூடத் தளர்த்தியிருக்கிறார். அதனால் ஏதாயினும் இலாப முண்டோ என்றால் செம்பாலடித்த காசு கூடக் கிடையாது. ஜஸ்டிஸ் கட்சியில் பூரணமாகச் சேர்ந்ததால் அவருக்குப் பல தொந்தரவுகள் அதிகரித்தனவே யொழிய வேறில்லை. அப்படியானால் ஏன் சேர்ந்தார் என்றால் ஜஸ்டிஸ் கட்சி அழிந்தால் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றம் முயற் கொம்பாகும்; பார்ப்பனர் ஆதிக்கம் மிகும்; பார்ப்பனர் ஆதிக்கம் மிகுந்தால் சுயமரியாதை இயக்கம் அதோகதிதான்; கடவுளையும், மதத்தையும் தூஷணை செய்பவர்களைச் சிறையிலிடவேண்டும் என்று ஒரு சட்டம் கொண்டுவந்து விடுவார்கள்; அதன் பின்னர் தமிழ் மக்கள் அறிவு வளர்ச்சியும், சமூக முற்போக்கும் கோடைகால பிரளிற் கண்ட கனவாய் முடியும்.

ஃ ஃ ஃ

தோழர் ஈ. வெ. ரா. ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிரிடையாகப் பிரசாரம் செய்தால், தற்போது அவருக்குப் பல மரியாதைகள் கிடைக்கும். காங்கிரஸ் தலைவர்களும் பொது உடமைக் கட்சியினரும், இதர அனுமதேயப் பேர்வழிகளும், ஈரோட்டை காசியாகவும், மெக்காவாகவும், ஜெருசலேம் நகரமாகவும் கருதுவார்கள். தோழர் ஈ. வெ. ரா. வை நாடெங்கும் ஊர்வலம், பூர்ணகும்பம் முதலிய மரியாதைகளோடு அழைத்துச் செல்வார்கள். ''ராமசாமிக்கு ஜே! ஈரோடு சிங்கத்திற்கு ஜே!! விடுதலை வீரருக்கு ஜே!!!'' என்ற கோஷம் காதைக்கிழித்துக்கொண்டு போய் விடும். அப்படிப்பட்ட கவுரமானதும், சுகமானதுமான வாழ்க்கையை விட்டு, ''ஊருக்கு ஒருபக்கம் இடி, மத்தளத்திற்கு இருபக்கம் இடி'' என்ற நிலையில் தோழர் ஈ. வெ. ரா. இருப்பதை, அவரை அறியாமையால் எதிர்ப்பவர்கள் சற்றுயோசிக்க வேண்டும். ஜஸ்டிஸ் கட்சியைப் பார்ப்பனர் அழித்து விட்டால், சுயமரியாதைக் கட்சி உடனே பசடி மலையை விழுங்கின மகாதேவனுக்கு கதவு ஒரு கப்பளம் மாதிரி. இரண்டு கட்சியும் ஒன்று சேர்ந்தால், மக்களை ஏமாற்றி வயிறுவளர்க்கும் கூட்டத்தின் ஆதிக்கத்தை அடியோடு ஒழிக்கலாம். ஒன்றுபட்டால் தானுண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வுதானே. இந்தச் சின்ன விஷயத்தை தலைமைப் பதவிக்காக வேற்றுமையை விளைவிக்கும் பெரியார்கள் சற்று கவனிக்க வேண்டும்.

ஃ ஃ ஃ

தோழர் ஈ. வெ. ரா. விற்கு நான் வக்காலத்து வாங்கவில்லை. என்னமோ, மனம்போன போக்கின்பட்ட எண்ணங்களை எழுதுகின்றேன். பார்ப்பனரல்லாத கட்சி நன்மைக்காக யாரார் உழைக்கிறார்களோ அத்தொண்டர்களின் அடிப் பொடியை வணங்குபவன் நான். ''அடியார்க்கு மடியார்க்கு மடியேன்'' என்ற கோஷ்டியில் நான் ஒரு 'மெம்பர்'. அதனால்தான், திருச்சியில் நடந்த மகாநாட்டில் இரண்டு முக்கியமான விஷயங்களைத் தீர்மானித்ததற்காக நான் மகிழ்ச்சிப் பெருக் கடைகிறேன். ஒன்று ஜஸ்டிஸ் கட்சிக்கு ஒரு தமிழ் தினசரிப் பத்திரிகை வேண்டுமென்பது. இரண்டாவது, அதிதீவிரப் பிரசாரம் செய்ய வேண்டுமென்பது. இந்த இரண்டும் நடந்தால்-சீக்கிரம் நடந்தால்-வெள்ளி 'மெடல்' களுக்குத் தங்க மூலாம் பூசி நம்பிக்கை மோசடி செய்த கூட்டத்தின் இறுமாப்பை அடக்கலாம்; பலத்தை ஒடுக்கலாம். தமிழ் தினசரி இருந்தால், இனப்புளுகு மணி, பிராமண மித்திரன், முதலிய பார்ப்பனர்களுக்குத் தானம் போடும் பத்திரிகைகளின் பொய்ப் பிரசாரத்தை மக்களுக்கு எடுத்துக் காட்டி, ஜஸ்டிஸ் கட்சி நாட்டிற்குச் செய்த நன்மையைச் சாங்கோபாங்கமாக விளக்கி, தியாகக் கொடியை உயர்த்தி, பச்சோந்திக் கொடியை, மூன்று நிறமுடையது, காலத்திற்கேற்றவாறு 'கலர்' மாறும் கன்னிய முடைய காங்கிரஸ் கொடியை வீழ்த்தி ஆவன செய்வதற்கேதுவும்.

ஃ ஃ ஃ

இப்பொழுது ஜஸ்டிஸ் கட்சிக்காகத் தொண்டாற்றும் தமிழ்ப் பத்திரிகைகளில் முக்கியமானவை நான்கு; அவற்றில் ஒன்று கூட தினசரியில்லை. அவையாவன: ''குடி அரசு'', ''விடுதலை'', ''நகர தூதன்'', ''இந்திய கேசரி'' இந் நான்கில் மூன்று தான் நமது தமிழ் நாட்டிலுள்ளது ''கேசரி'' இலங்கையில் கொழும்பிலிருந்து பிரசுரிக்கப்படுகிறது. ''குடி அரசு'' தோழர் ஈ. வெ. ரா. வின் பத்திரிகை. அது ஜஸ்டிஸ் கட்சிப் பத்திரிகைகளை விட ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கைகளைத் தமிழ்நாட்டில் பரப்பி வருகிறது. ''தமிழ்நாடு'' என்ற பத்திரிகை கூட பார்ப்பனரல்லாதாருக்காக சிற்சில சமயங்களில் உழைத்து வருகிறது. அதை நான் ''தமிழ்நாயுடு'' பத்திரிகை என்று கூறுவதுண்டு. சிலர் விளக்கெண்ணெய் பத்திரிகை என்று கூறுகிறார்கள். அதில் ரொம்ப உண்மை யிருக்கிறது. பார்ப்பனரல்லாதார் ''தமிழ்நாயுடு'' பத்திரிகையை நம்பினால், மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கிய கதை போலாகும் ஆகையால் தான், உண்மையான பார்ப்பனரல்லாதார் பத்திரிகை இராமேசுவரத்திற்கு இப்பால் மூன்றென்று கூறினேன். அப்பாலுள்ள ''இந்திய கேசரி'' நம்முடைய கட்சி நலத்திற்காக யாதொரு பிரயோசனமும் கருதாமல் பெரும் போராடி வருவதற்கு கட்சி என்றும் கடப்பாடுடையதாகும். இப்பாலுள்ள பத்திரிகைகளில் திருச்சியில் ஒரு ''கேசரி'' இருக்கின்றது. அது ஜஸ்டிஸ் கட்சி உருப்படாது என்று பொருள்படும்படி சில வாரங்களாக 'நகர தூதனி'ல் எழுதி வந்தது எனக்கென்னமோ வருத்தத்தை உண்டு பண்ணியிருக்கிறது.

ஃ ஃ ஃ

ஏன் வருத்தம் என்றால், ''கேசரி'' எழுத்தாளர் எனக்கு அண்ணாத்தை மாதிரி. அண்ணனும் தம்பியும் வாக்கு வாதம் செய்தால், பார்ப்பவர்களுக்கு வேடிக்கையாயிருக்கும். ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்ட மல்லவா? என்ன அய்யா, உள்ள இரண்டொரு பத்திரிகைகளில் ஒன்று கட்சியையும் கட்சித் தலைவர்களையும் தாக்கி எழுதினால், எப்படியிருக்கிறது? ''தோண்டின குளம் மூன்று; இரண்டு குளம்பாழ்; மூன்றாவதில் தண்ணீரே யில்லை'' என்ற கதைபோலிருக்கிறது. நம்முடைய கண்ணில் நாமே குத்திக்கொண்டால், அதில் நன்மையாவது பெருமையாவது இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நம்முடைய கட்சியில் குறையில்லாமலில்லை; தலைவர்களிடம் குற்றமில்லாமலில்லை. அக்குறைகளையும் குற்றங்களையும், தேங்காய் உடைத்தமாதிரி கட்சியின் அந்தரங்கக் கூட்டங்களில் வெளிப்படுத்தி, தலைவர்களின் மேல்குற்றஞ்சாட்டி, அவர்களுடைய சமாதானங்களைக் கேட்டு, அதற்குமேல் நடக்க வேண்டிய விஷயங்களுக்குக் கட்சியினர் யோசித்துத் தீர்மானிக்கவேண்டியது முறையும் நியாயமும் ஒழுங்குமாயிருக்க, அந்தி பூத்தமாதிரி அபூர்வமாக இருக்கும், கட்சியபிமானப் பத்திரிகைகளில், எதிரிகள் ஏளனம் செய்வதற்கு இடம் கொடுக்கும்படியாக கட்சியைத் தூற்றலாமா என்றுதான் ''கேசரி'' அண்ணாத்தையைக் கேட்கிறேன்.

ஃ

ஒன்று கூறலாம்: கட்சி கூட்டம் நடந்தால் தானே குறைகளைச் சொல்லக் கூடும் என்று. கட்சி கூட்டத்தைக் காலா காலங்களில் தலைவர்கள் கூட்டா விட்டால், கட்சியினர்களில் 10 அல்லது 15 பேர்கள் சேர்ந்து கூட்டத்தைக் கூட்டும்படி செய்யலாம் என்பது தெரிந்த விஷயம். அப்படியும் கூட்டா விட்டால், கட்சியினர் சேர்ந்து தாமே கூட்டம் கூட்டி தமது கட்டளையைக் கீழ்ப்படியாத உத்தியோகஸ்தர்களை விலக்கி, வேறு உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்து, கட்சி வேலைகளை நடத்தலாமென்பதும் சாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அப்படிப் பட்ட முறைகளிருக்க, பத்திரிகைகளில் உண்மையான விஷயங்களாயிருந்தாலும் வெளியிட அவசியமில்லாத வற்றைப் பிரசுரித்தால் என்ன பிரயோசனம்? ''கேசரி'' கட்சி நன்மைக்காக என்று நினைத்து எழுதிய வற்றை-கட்சியைத் தாக்குவதற்காக ஒரு காங்கிரஸ் பத்திரிகை உபயோகப்படுத்தி யிருக்கிறதைப் பார்த்தால், நான் செய்த தவறு அதற்குப் புலப்படும் என்று நினைக்கிறேன். பெரிய கொட்டை யெழுத்தில் அக் காங்கிரஸ் பத்திரிகை ''ஜஸ்டிஸ் கட்சி உருக் குலைந்தது; உருப்படாது; எருமை மாட்டின் மேல் மழை பெய்த மாதிரி ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள்; பொப்பிலி ராஜா சாஹிபின் யதேச்சாதிகாரப் போக்கு ஸ்ரீ இராமசாமி முதலியாரின் கவலையும் கர்வமும்; ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் ஒரு சுயநலக் கூட்டம்'' —என்று பல தலைப்புகள் கொடுத்து, ''கேசரி''யின் கட்டுரைகளில் சில பாகங்களை மாத்திரம் பொறுக்கியெடுத்து பிரசுரித்திருக்கிறது. கட்சித் தலைவர்கள் குறைகளை வெளிப்படுத்தும் இடம் கட்சிக் கூட்டமே யன்றி, நமது கட்சிக்குரிய அபூர்வமான தமிழ்ப் பத்திரிகைகளிலல்ல. நமது வீட்டிலிருக்கும் சண்டை, சச்சரவுகள், குறைபாடுகள் முதலியவற்றைத் தெருவில் நின்று கூறுவது நமக்குப் பெருமையல்ல; அதனால் இழிவுதானே யொழிய வேறில்லை. மல்லாந்து படுத்து மேலே துப்பின மாதிரிதான்.

ஃ ஃ ஃ

இதைக் குறித்து எழுதுவதாக நான் கூறியது ''கேசரி'' அண்ணாத்தைக்குக் கொஞ்சம் கோபத்தை உண்டாக்கி யிருப்பதாகத் தெரிகிறது. நான் ''என்னென்னமோ எழுதப் போவதாக பயமுறுத்து''வதாக ''கேசரி'' எழுதியிருக்கிறது. அஞ்சா நெஞ்சங்கொண்ட ''கேசரி''யைப் பயமுறுத்துவதென்பது ''குட்டிச்சாத்தானு''க்கு ஆகிற காரியமல்ல; அந்த மாதிரியான எண்ணம் எப்பொழுதும் கிடையாது. நான் வாக்குவாதத்திற்கும், வம்பு சண்டைக்கும், போட்டா போட்டிக்கும் போறவனல்ல, ''கேசரி'' யிடம் அப்படிப் பட்ட தண்டாவிற்கு நான் வரவில்லை. ''கேசரி'' மேல் எனக்கு ரொம்ப மதிப்புண்டு. ''நகர தூதனி''ல் ''கேசரி'' நர்த்தனத்தைக் கண்டு நான் மகிழ்வதுண்டு. தாலியறுத்த மூர்த்தி யெல்லாம் அந்தாண்டவத்தில் தவிடு பொடியானதை நான் அறிவேன். அப்படிப்பட்ட தாண்டவம் ஜஸ்டிஸ் கட்சியின் மேல் சென்றது தான் எனக்குக் கொஞ்சம் கஷ்டம். நம்முடைய கட்சிப் பத்திரிகைகள் ஒன்றுடன் ஒன்று வாதம் செய்வது நமது எதிரிகளுக்கு 'என்டர் டெயின் மெண்ட்' ஆகும். ஜஸ்டிஸ் கட்சிப் பத்திரிகைகளையும் ஒருவாறு ஏளனம் செய்த ''கேசரி'' அண்ணாத்தை எழுதியிருப்பது நியாயம் தான் என்று அவரே சொல்லிவிட்டால் நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

ஃ ஃ ஃ

''பொது மக்களுக்கு ஹானி உண்டுபண்ணும் சட்டப் பிரயோகங்களைச் செய்கிறார்களே. இதை யெல்லாம் கண்டிப்பது கூடவா தப்பு? இதிலெல்லாமா ராஜ விஸ்வாசம்?''—என்று ''கேசரி'' கட்சிப் பத்திரிகைகளைக் குறை கூறுகிறது. அநேக தடவைகளில் அரசாங்கத்தைக் கண்டித்து ''ஜஸ்டிஸ்'' பத்திரிகை எழுதியிருக்கிறது. உதாரணமாக அச்சுச்சட்டம், இந்திய சட்டசபை அங்கத்தினர் சொற்பெருக்கை பிரசுரித்த பத்திரிகைக்கு அரசாங்கத்தார் ஜாமீன் கேட்டது. சென்னை 'பப்ளிக் சர்விஸ் கமிஷன்' ஊழல்கள், முதலியவற்றைக் கண்டனம் செய்து ''ஜஸ்டிஸ்'' எழுதியிருக்கிறது. அரசாங்கம் மக்களுடைய சுதந்தரம், சுகவாழ்வு, உரிமை முதலியவற்றைப் பாதிக்கும் சட்டங்களைக் கொணர்ந்த காலத்திலெல்லாம் ''ஜஸ்டிஸ்'' பத்திரிகை அச்சட்டங்களைக் கண்டித்தெழுதியிருக்கிறது. ''விடுதலை''யில் ''சத்துள்ள பதார்த்தம்'' இல்லை என்று ''கேசரி'' கூறுகிறது. ''மறைமலை அடிகள் எழுதிய தமிழர் நாகரிகம் என்னும் புத்தகவாராய்ச்சியும், மூ. இராகவய்யங்கார் எழுதிய தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ஆபோசனையும் தவிர வேறு எதாவது சத்துள்ள பதார்த்தம் இருக்கிறதா?'' என்று ''கேசரி'' கேட்கிறது. இதைவிட சத்துள்ள பதார்த்தம் வேறென்ன இருக்கிறதென்று நான் கேட்கிறேன்.

ஃ ஃ ஃ

பார்ப்பனரல்லாத தமிழ்ப் பேரறிஞர் பார்ப்பனர்களுடைய சில குறைகளைத் தம்முடைய நூலில் எடுத்துக் காட்டியதற்காக, பல்கலைக்கழகப் பாட புத்தகமாக இருப்பதினின்று நீக்கிவிட வேண்டுமென்று பார்ப்பனர் செய்த கிளர்ச்சிக்கு, ''விடுதலை'' யல்லவா எதிர்க்கிளர்ச்சி செய்து பார்ப்பனரல்லாதார் வெற்றிக்கு அனுகூலம் செய்தது? தமிழ் மக்கள் கற்பென்பதறியார் என்று ஒரு பார்ப்பன ஆராய்ச்சியாளர் கூறியதை மறுத்து தமிழ் மக்கள் சுயமரியாதையையும், பெருமையையும் நிலை நிறுத்தும்படியான கட்டுரைகளை ''விடுதலை'' யன்றோ வெளியிட்டது? நாடெங்கணும் உணர்ச்சி உண்டாகி, பார்ப்பனரல்லாத வித்துவான்களும், ஆராய்ச்சியாளர்களும், இளைஞர்களும் ஆத்திரத்துடனும், ஆவேசத்துடனும் எழுதிய கட்டுரைகள் பிரசுரிக்கப்படா விட்டால், தமிழ் மக்களின் உணர்ச்சி எப்படி வெளியில் தெரிவது? ''சத்துள்ள பதார்த்தம்'' பூரியும் போண்டாவும், பரோட்டாவும் குருமாவும், ரொட்டியும் வெண்ணெயும் பத்திரிகையுடன் அனுப்பினால் நன்றாயத்தானிருக்கும். ஆனால், இப்பொழுது பத்திரிகைக்குள்ள அசௌகரியங்களுள் இது நடைபெறுவதற்கு இயலாதென்று எனக்குத் தெரிகிறது. பத்திரிகை நடத்துபவர்கள் இலாபங்கருதி நடத்துகிறார்களல்லர். பத்திரிகை ஆசிரியரும் சம்பள மில்லாமற்றான் வேலை செய்கிறார். கொள்கையே பெரிதென்று நோக்கங்கொண்டே ''விடுதலை''யும் ''ஜஸ்டிஸு''ம் நடைபெற்று வருகின்றன. நிதி மிகுந்தவர் ஒரு சிலர் அப்பத்திரிகைகளுக்குப் பெரும் பொருள் வழங்கி யிருக்கின்றனர். பார்ப்பனரல்லாதாருக்காக உழைப்பதையே தனித் தொண்டாகக் கொண்ட அப்பத்திரிகைகளை பார்ப்பனரல்லாதார் ஆதரிக்காமல் செய்ந்நன்றி மறந்தது வருந்தத் தக்கது. இந்த நிலையில், நிதி மிகுந்தவர், நிதி குறைந்தவர், என்ற வகுப்புகளில் இல்லாமல், கட்சிக்காக உழைப்பவர் என்ற வகுப்பைச் சேர்ந்தவர் ''வாய்ச் சொல் அருளுகலை''க் கூடவிட்டு வாயம்பு எய்வதில் யாது பயன்? ''வில்லம்பு சொல்லம்பு மேதினியில் இரண்டுண்டு, வில்லம்பிற் சொல்லம்பே மேலதிகம்,' என்றார் கவி. அக்கூரிய சொல்லம்பை நம்முடைய கட்சி மேல் நாமே எய்வதில் பயனிருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

* * *

இடமின்மையால், ''கேசரி'' குறித்த வேறு விஷயங்களை அடுத்த வாரம், கட்சியின் நன்மை என்ற அரணிலிருந்து ஆராயலாம் என்று கருதியுள்ளேன்.

தமிழ் மக்களே! தமிழ் மக்களே!!

தொண்டு தியாகம் ஒற்றுமை

ஜாக்கிரதை!
ஜாக்கிரதை!!

காங்கிரஸ் சங்கீத விழாவில் தொண்டாற்றிய சங்கீத வித்வான்களை ஏமாற்றியவர்கள் உங்களையும் மீண்டும் ஏமாற்றுவார்கள்.

வெள்ளி மெடல்களுக்குத் தங்க மூலாம் பூசி, வித்வான்களை மோசம் செய்தவர்கள் என்ன செய்ய மாட்டார்கள்?

*

பகிரங்க மன்னிப்புக் கேட்பதை விட்டு
மழுப்புபவர்கள் யோக்கியர்களா?
யோசியுங்கள்!

*

ஜஸ்டிஸ் இளைஞர் கழகத்தார்,
(''யங் ஜஸ்டிஸைட்ஸ் லீக்'')
சென்னை.

மேல்புவனகிரி

பிராமணரல்லாத வாலிபர் சங்கம்

அநுதாபக் கூட்டம்

மேல்புவனகிரி, மே, 4

சென்ற 26-4-36-ம் தேதி மேல்புவனகிரி பிராமணரல்லாத வாலிபர் சங்கம் திரு. செல்லப்பா தலைமையில் கூடி கீழ்க்கண்ட அநுதாபத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது:—

திருநெல்வேலியில் சைவ வேளாள குலத்தில் பிறந்து இளமையிலேயே தமிழ், ஆங்கிலம் கற்று பிறவியில் வேற்றுமை கண்டு மனஞ்சகியாது, மக்கள் யாவரும் சமம் என்பதை உணர்ந்து, மக்கட்குத் தொண்டாற்றுவதே தமது முக்கிய கடனாகக் கொண்டு, பார்ப்பனரல்லாதார் முன்னேற்றம் கருதி சுமார் 20 வருட காலம் உழைத்தவரும், சிறிதுகாலம் ''திராவிடன்'' ஆசிரியரா யிருந்தவரும், பல பார்ப்பனரல்லாத மகாநாட்டிற்கு தலைமை வகித்து சுயமரியாதை உணர்ச்சியை தட்டி எழுப்பியவரும், சமீபத்தில் அதாவது, 1935 டிசம்பர் 8-ந்தேதி இச்சங்கத் திறப்பு விழா வாற்றியவருமான தோழர் டி. வி. சுப்ரமணியம் அகால மரணமடைந்ததைக் கேட்டு இச் சங்கம் அளவிலாத் துன்ப மடைகிறது. அவரது பிரிவானது பிராமணரல்லாதாருக்கு ஈடு செய்ய முடியாத ஓர் பெருந் துன்பமே யாகும். அவரது குடும்பத்தார்க்கு இச் சங்கத்தின் அநுதாபம் உரியதாக என காரியதரிசி எழுதுகிறார்.

ரேடியோ.

புதன்கிழமை 6உ
புரொபஸர் பிரபு நாராயண்
—இந்துஸ்தானி சங்கீதம் (பாட்டு)

வியாழக்கிழமை 7உ
திரு. சீனிவாச ராஜு
—தென்னிந்திய சங்கீதம் (வீணை)

வெள்ளிக்கிழமை 8உ
கிருஷ்ணவேணி அம்மாள் பேத்திகள்
—தென்னிந்திய சங்கீதம் (பாட்டு)

சனிக்கிழமை 9உ
திரு. ஈ. வெ. ராமச்சந்திர ஐயர்
—தென்னிந்திய சங்கீதம் (பாட்டு)

வெப்பம்

புதன்கிழமை (மாலை 3-15 மணி)
அதிகம்: 90·1. குறைந்தது: 75·9.

காலண்டர்—மே

தேதி.கிழ.	சூரி.		சந்.	
	காலை	மாலை	மாலை	காலை
6 புதன்	5-46	6-25	6-17	5-14
7 வியா	5-46	6-25	7—8	5-58
8 வெள்	45-5	6-25	8—1	6-46
9 சனி	5-45	6-26	8-53	7-37

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே!

ஏழையென்றும் அடிமை யென்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே!

மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையை கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த வகையினும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! (பாரதி)

விடுதலை

சென்னை : 1936-ஞு மே - மீ 6-உ
புதன்கிழமை

நமது கட்சியின் இரண்டாவது மாபெரும் வெற்றி

நமது மாகாண கவர்னர், லார்டு எர்ஸ்கின் ஜூன் மாதம் 18-ந் தேதி முதல் நான்கு மாதங்கள் ரஜாவில் சீமைக்குச் செல்கிறார்; அப்போது ஆக்டிங் கவர்னராக, கனம் சர். கே. வி. ரெட்டி வீற்றிருப்பார் என்ற செய்தியை நாம் மகிழ்ச்சிப் பெருக்குடனும், பெருமையுடனும் தெரிவிக்கிறோம். நமது கட்சிப் பிரமுகர்களில், முதலாவதாக இத்தகைய கௌரவம் பெற்றவர் கனம் சர். மகமது உஸ்மான்; இரண்டாம் முறையாக இப்பதவி நம் கட்சி பிரமுகரும், கட்சியின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவருமான, சர். கே. வி. ரெட்டி அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

சர். கே. வி. ரெட்டி மிகச் சிறந்த அரசியல் நிபுணர். முதல் ஜஸ்டிஸ் மந்திரி சபை அமைக்கப்பட்டபோது அவர் அபிவிருத்தி மந்திரியாக இருந்தார். ஆப்பிரிக்காவில் ஏஜண்டு ஜெனரலாக வேலை பார்த்தார். வெளி நாட்டில், நம்தம் தாய் நாட்டு மக்களுக்காக அவர் அரும்பாடு பட்டதை யாரும் மறவார். அவர் ஏஜண்டு ஜெனரலாக இருந்து செய்த சேவைகள் சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளன.

சர். கே. வி. ரெட்டி நாவன்மை, கொள்கையில் உறுதி, ஒழுக்கம் யாவும் கொண்ட குணசீலர் என்பது தென்னாட்டில் அறிந்ததே. ஆகவே, கீர்த்தி வாய்ந்த அவருக்கு இம்மாகாண ஆக்டிங் கவர்னர் பதவி கிடைத்ததுபற்றி தென்னாட்டவர் மகிழ்வர். பல துறைகளிலும் ஈடுபட்டுப் பணியாற்றியதாலேற்பட்ட பழுத்த அனுபவம் அவருக்குண்டு. ஆகவே, இப்பெரிய பதவியை வகித்து, யாவரும் போற்றும் விதமாக நடாத்தும் வன்மை அவருக்குண்டு. மிகச் சிறந்த பதவியை அவர் பெற்றமைக்கு நாம் அவரை மனமார வாழ்த்துகிறோம்.

காங்கிரஸ் தலைவரின் கண்ணியமற்ற போக்கு

சென்ற ஞாயிற்றுக்கிழமை, திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில், சில தோழர்கள், தங்க முலாம்பூசிய வெள்ளிமெடலை, தங்க மெடலெனக் கூறி சங்கீத வித்துவான்களுக்கு, காங்கிரஸ்காரர் பரிசளித்த விஷயமாகக் கேள்வி கேட்டனராம். காங்கிரசில் நடக்கும் அயோக்கியத்தனத்தைப் பொது ஜனம் தெரிந்துகொள்ள அன்று சந்தர்ப்பம் வாய்த்தது அதுமட்டுமல்ல, காங்கிரஸ் தலைவர்களென்போர், தமது ஊழல்களைப்பற்றி வெளிவரும்போதெல்லாம், விஷயத்தை மழுப்பிவிடப் பார்க்கும் வித்தையையும் பொது மக்கள் அன்று தெரிந்துகொண்டனர். முலாம்பூசிய மெடலைக் கொடுத்து சங்கீத வித்துவான்களை ஏமாற்றிய தவறை, தமிழ் நாட்டு பிரபல சங்கீத வித்துவானாகிய, சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை பத்திரிகைக்குத் தெரிவிக்கையில், "சாதாரண சர்டிபிகேட்டோ, கதர் துண்டோ, பரிசாகக் கொடுக்கப்பட்டிருந்தால் கூட, அதைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டிருப்போம்" என விளக்கமாகக் கூறியுள்ளார். ஆனால், திரு. ராஜகோபாலாச்சாரியார், தங்க மெடல் தேவையோ, சங்கீத வித்துவான்கள் சண்டைக்கு வருவது போல விஷயத்தைத் திரித்து, "எந்த மெடலாக இருந்தாலென்ன வித்துவான்கள், மெடல் தங்கமா, அல்லவா என்று கவனிக்கக் கூடாது. தேசத்தின் மதிப்பு அதில் இருக்கிறதென எண்ணி அவர்கள் திருப்தி அடையவேண்டும்" என வாதம்—குதர்க்கம் — செய்தார்! இது மோசத்தை மறைக்கப்பார்க்கும் மழுப்பலைத் தவிர வேறு என்ன எனக் கேட்கிறோம், அவ்வளவுடன் நிறுத்திக்கொண்டாரில்லை, காந்தியாரின் சம்பத்தி காங்கிரசின் குட்டை வெளிப்படுத்திய, சங்கீத வித்துவான்களை இழித்துக் கூறவும் ஆரம்பித்தார். "இரும்பு மெடலைக் கொடுத்திருந்தால் நான் சந்தோஷப்பட்டிருப்பேன், ஏனெனில் இரும்பு மெடலை விற்கமுடியாதன்றோ" என்றார் திரு. ராஜகோபாலாச்சாரியார். இதில் எவ்வளவு அகந்தை இருக்கிறதென்பதைக் கவனித்துப் பார்க்கும்படி நாம் பொது மக்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம். தங்கமெடல் கொடுத்தால் வித்துவான்கள் இவைகளை விற்றுவிடுவார்கள்—மெடலை விற்றுவிடும் வழக்கம் சங்கீதவித்துவான்களுக்குண்டு என்ற பொருள் படும்படியாகவன்றோ, திரு. ராஜகோபாலாச்சாரியார் பேசியுள்ளார். காங்கிரசின் சார்பாக நடந்த சங்கீத உற்சவத்தில், இத்தகைய கலைஞர்களின் வேண்டுகோளுக்கு மதிப்பு தந்து, அவர்களை கௌரவித்த சங்கீத வித்துவான்களுக்கு, காங்கிரஸ் தலைவர்கள் எவ்வளவு மதிப்பு தருகிறார்கள் என்பது காண நாம் உள்ளபடி வருந்தி, சங்கீத வித்துவான்களிடம் இரங்குகிறோம். தமிழ் நாட்டில், இத்தகைய போலித் தலைவர்களும் மோசடி முறைகளும் தலைவிரித்தாடும் கோலம் கண்டு, தமிழர் தாங்கொணா அவமானமும் கொள்வர் என்பது திண்ணம்.

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் அடிக்கடி புரிந்து வரும் திருவிளையாடல்களைக் கண்டும் கேட்டும் வரும் சங்கீத வித்துவான்கள், தமக்குப் பரிசளிக்கப்பட்ட மெடல்கள், மின்னிய போதிலும் பொன் தானா என்று சந்தேகித்தது சகஜமென்றே நமக்குத் தோன்றுகிறது. பரிசோதனைக்குப் பிறகு மெடல் மோசடியை அவர்கள் கண்டு கொண்டனர். காங்கிரஸ் தலைவர்கள், தாம் செய்த தவறை ஒப்புக்கொண்டு, பொது மக்களிடை மன்னிப்பு கேட்டுக் கொண்டிருந்தால், எவ்வளவோ கண்ணியமாக இருந்திருக்கும். அதை விட்டு அகாரகம் செய்து, மழுப்பி, வித்துவான்களையும் இழித்துக் கூறிய காங்கிரஸ்தலைவர்களின் போக்கை நாம் அழுத்தமாகக் கண்டிக்கிறோம்.

பர்மாவிலும் திலகர் நிதி மோசடி!

இரங்கூனிலிருந்து வெளியாகும் 'சுதந்திரன்' எனும் தமிழ் வாரப்பத்திரிகை, தேசியம் தரும் புவது. அதன் தலையங்கப் பக்கத்தை நோக்கின், ஆங்கு சர்க்காக் கொடி ஏந்தி, தாமரை மீது 'பாரத மாதா' அபயாஸ்தத்துடன் சக்கரம், கதை தாங்கி நிற்பதையும், சுதந்திரம் பிறப்புரிமை- மாற்றுவோர் கிடக்கோடேல்—சத்தியமே ஜெயம் என்ற எழுத்தாரமும், மிளிருவதைக் காணலாம். அத்தகைய 'சுதந்திரன்' மே மாத முதல் தேதி வெளியீட்டில், தீட்டியுள்ள, பர்மாவில் திலகர் நிதி மோசடி விஷயத்தை பிறிதோரிடத்தில் வெளியிட்டுள்ளோம். வீண் நடீ விவாதத்திற்காக, நாம் திலகர் நிதி மோசடி விஷயமாக மீண்டும் மீண்டும் எழுதவில்லை. இதனை ஆரம்பித்தவரே, காலஞ்சென்ற லோகமான்ய திலகரின், பேரன். ஆகவே, இது ஜஸ்டிஸ் கட்சியின் பிரசாரமல்ல வென்பது வெளிப்படை. ஆனால், புனிதமானது - மகத்துவம் வாய்ந்தது- சத்திய சோதனையில் ஈடுபட்டுள்ள தலைவரைக் கொண்டது என்றெல்லாம் சுய விளம்பரம் செய்து கொள்ளும் ஒரு ஸ்தாபனத்தின், நிதி நிர்வாகம் இவ்வளவு ஒழுங்காக இருக்கிறதென, பொது மக்களுக்கு எடுத்துக் கூற நாம் கடமைப்பட்டுள்ளோம். திலகர் நிதியின் இந்திய சரிதையை இன்று தமிழ் நாட்டவர்கள் அறிவர். அதற்குப் பதில் கூறாது, காங்கிரஸ் கட்சியினர் மழுப்புவதும் பலரறிந்த விஷயமே. பர்மாவிலும் திலகர் நிதிக்கு இத்தகைய கதியே நேரிட்டதென்பதைக் கேட்கும்போது, காங்கிரசின் "கீர்த்தி" கடல் தாண்டியும் என நமக்குத் தோற்றுகிறது. பர்மாவில் 2,23,837 ரூபாய் திலகர் நிதிக்கென வசூல் செய்யப்பட்டதாகவும், 'ஒரு மாமாங்கத்திற்கு மேலாக, கணக்கு வெளியிடப்படவில்லை என்றும், 'இப்பணத்தை நியாயமில்லாத முறையில் ஒரு சிலர் மோசம் செய்து விட்டதாக மக்களிடை பலத்த சம்சயங்கள் இருந்து வருகிறது' எனவும் 'சுதந்திரன்' கூறுவது கேட்க, உண்மையில் நமக்கு பர்மியர்பால் பரிதாபம் உண்டாகிறது. 'எனக்கு கேட்டகதிதானா உனக்கும்?' என்று கேட்கவேண்டியிருக்கிறது. செவ்வனே தாக்கல் காட்டப்பட்ட பல இனங்களை பிரதி என அப்பத்திரிகை கூறுவதுடன், உதாரணமாக "ஹரிஜன" என்கிற நாமமே 1921-1925-ல் பிறக்கவில்லை" இருந்தும் ஹரிஜனச் செலவு ஒரு இனமாகக் குறிக்கப்பட்டிருக்கிறதாம் இவண் காங்கிரஸ் கமிட்டியென்பது ஒரு சிலர் விளம்பரம் செய்துகொள்ளுவதற்காக சமயா சமயங்களில் வெளிவருவதைத் தவிர வேறு வேலை செய்வதில்லை யென்று நாம் திட்டமாய்க் கூறி விடுவோம்" என்று 'சுதந்திரன்' கூறும்போது உங்கள் பர்மாவில் தான் என்று எண்ணவேண்டாம் இங்கும் அப்படித்தான் என்று கூற நாம் விரும்புகிறோம். சென்றவிடமெல்லாம இத்தகைய 'சிறப்பு' பெறும் ஸ்தாபனத்தைத்தான், தமிழ் நாட்டார் ஆதரிக்க வேண்டுமெனப் பலமாக நமது எதிரிகள் பிரசாரம் செய்தபடி இருக்கின்றனர். பொதுமக்கள் பல சமயங்களில் மயங்கியதுபோல இனியும் மயங்காதிருக்க, இந்த பர்மாச் செய்தி, உதவியாக இருக்குமென நம்புகிறோம். காங்கிரஸ் வாதிகள் இனியாவது, தமது கணக்குகளைச் சமர்ப்பிப்பார்களா? அல்லது, 'சுதந்திரன்' கூறுவதுபோல மகேஷத்தின் மீது மாரி பொழிந்தது போலத்தான் இருக்கப் போகிறார்களா எனக் கேட்கிறோம்.

காலஞ்சென்ற தோழர் டி. வி. சுப்பிரமணியம்

மனைவியின் நன்றியறிவு கூறுதல்

என்னுடைய கணவர் அற்பவாழ்நாளோடு இடையென்று எதிர்பாராத நிலைமையில் காலம் சென்றமை எனக்கும் என்னுடைய மாமியார் அவர்கள் (காலம் சென்ற என் கணவருடைய தாயார்) தெய்வம்மாள் அவர்கட்கும் ஆற்றொணாத்துயர் தருவதோர் பெருங்கேடாய் முடிந்தது. என்னுடைய கணவர் தம் வாழ்நாள் முழுவதும் 'நியாயக் கட்சி'யின் முன்னேற்றத்திற்காகவே தொண்டாற்றிக் காலத்தைக் கழித்து விட்டார் தம்முடைய குடும்ப நன்மையை ஒரு சிறிதும் கவனித்தார்கள் இல்லை. அதன் பயனாக இன்று நாங்கள் வறிய நிலையில் வருந்துகின்றோம்.

இங்ஙனம் நாங்கள் இடுக்கண்பட்டு ஏங்கியிருக்கும் இக் காலத்தில் 'நியாயக்கட்சி'யைச் சார்ந்தபெரியார் பலரும் எங்களிடத்தில் இரக்கம் காட்டியதோடு அமையாமல் தாராளமாகப் பொருளுதவியும் செய்ய முன்வந்துள்ளமை எங்கட்குப் பெரிதும் ஆறுதல் அளிக்கின்றது. 'காலத்தினால் செய்த நன்றி ஞாலத்தின் மாணப் பெரிது' ஆதலின் எங்களிடத்து இரக்கம் பாராட்டிய அந் நல்லார்கட்கு நாங்கள் மிகுதியும் கடமைப் பட்டவர்கள் ஆகின்றோம். அப்பெரியார் பலர்க்கும் அவர்களுடைய குடும்பங்கட்கும் இறைவன் நல்வாழ்வு அருளுமாறு அவன் திருவடிகளை வணங்குகின்றோம்.

டி. வி. எஸ். பாலம்மாள்,
தெற்குத் தெரு,
குலசேகரன்பட்டினம்,
3-5-1936.

பிரபலஸ்தர் குடும்பத்தில் திருமணம்

சென்னை, மே, 4

திரு. டி. சுந்தரராம நாயுடு, பி. ஏ. பி. எல்., எம். எல். சி. அவர்களின் ஜேஷ்டபுத்திரி சௌ. லக்ஷ்மி அம்மாளுக்கும், திரு. ஏ. தம்மராஜ நாயுடுகாரும், திரு. நாயுடுவின் ஜேஷ்ட புத்திரன் திரு. டி வெங்கடபதி ராவ் நாயுடுவுக்கும், சௌ. பார்வதவர்த்தனி அம்மைக்கும், சென்னை ஹாரிஸ் ரோட்டிலுள்ள, அவரது 'ஆஸ்ரமம்' எனும் பங்களாவில் திருமணம் மிகச் சிறப்பாக மேமீ 3-ந் தேதிகாலை 5-30லிருந்து 7-மணி வரையில் நடைபெற்றது. பல பிரமுகர்கள் விஜயம் செய்தனர். மணமக்களுக்கு ஆசீர்வாதங்கள் ஏராளமாகத் தந்தனர். மாலையில், மின்னோகளும்பாளின் சங்கீதக் கச்சேரி நடந்தது.

சர். மகமது உஸ்மான், திவான் பகதூர் டாக்டர் சி. நடேச முதலியார், கனம். பி. ராமச்சந்திர ரெட்டியார், பீமபுரம் ஜமீன்தார், கனம் [illegible] ராஜா முதலிய பல பிரமுகர்கள் திருமணத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.

அட்டிஸ் அபாபாவிற்குள் இத்தாலியர் பிரவேசம்

ராஸ் நாஸிபுவும், வஹீம் பாக்ஷாவும் நழுவினர்

கட்டுப்பாடான எதிர்ப்பு முறிந்தது

பெல்ஜிய ஸ்தானிகர் காரியாலயம் தாக்கப்பட்டது

அமெரிக்க ஸ்தானிகர் காரியாலயத்தை எடுத்துவிட உத்தரவு

அட்டிஸ் அபாபா, மே, 5

இன்று காலை எதியோப்பிய தலை நகரான அட்டிஸ் அபாபாவிற்குள் இத்தாலித் துருப்புகள் பிரவேசித்து விட்டன.

அட்டிஸ் அபாபாவில் இருந்து வரும் பிரிட்டிஷ் மந்திரியாகிய சர். ஸிட்னி பார்ட்டின், லண்டனிலுள்ள பிரிட்டிஷ் அன்னிய நாட்டுக் காரியாலயத்துக்கு பின்வருமாறு தெரிவித்துள்ளார்:—

இன்று 16—00 மணி முதற் கொண்டு ஏராளமான இத்தாலியத் துருப்புகள் அட்டிஸ் அபாபாவிற்குள் பிரவேசித்து வருகின்றன.

எதியோப்பிய தளபதியான ராஸ் நாஸிபுவும், துருக்கி ஆலோசனை கர்த்தாவாகிய வஹீம் பாஷாவும் டைர்டாவாவிலிருந்து ஜிபூதிக்குச் சென்று விட்டனர். ஆகவே, இனி கட்டுப்பாடான எதிர்ப்பு இத்தாலியருக்கு நேரிடாது.

பிரிட்டிஷ் செஞ்சிலுவைப் படையைச் சேர்ந்த டாக்டர் மெலலி, காயமடைந்த ஒரு எதியோப்பியனை தம்முடைய காரில் வைத்துக் கொண்டு புறப்படும் சமயம், ஒரு எதியோப்பிய குடிவெறியன் அவரை மார்பில் சுட்டுவிட்டான். அவருடைய நிலைமை சில தினங்கள் வரையில் கவலைக்கிடந் தருவதாகவே இருந்துவரும்.

அமெரிக்க பாதிரியின் மனைவியாகிய ஸ்ரீமதி ஸ்டேடின் தூங்கிக் கொண்டிருந்த பொழுது ஒரு சவை ஆஸ்பத்திரியின் கூரையிலிருந்து மண்டையின்மீது விழவே, மண்டை சிதறிவிட்டது.

கொள்ளை அடிப்பது தற்பொழுது அடங்கியிருந்தபொழுதிலும் சுற்றுப் பக்கங்களிலிருந்து குலலாஸ் என்ற மூர்க்க ஜாதியினர் நகரைச் சுற்றி வருகின்றனர்.

அட்டிஸ் அபாபாவிலுள்ள அமெரிக்கஸ்தானிகர் காரியாலயத்தை எடுத்து விடும்படி செனேட்டர் கார்டெல் ஹல் உத்தரவிட்டுள்ளார்.

பிரெஞ்சு சர்க்கார் வேண்டுகோளுக்கிணங்கி இத்தாலிய சர்க்கார் அட்டிஸ் அபாபாவிலுள்ள ஸ்தானிகர் காரியாலயங்களுக்கு உதவி செய்ய எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு வருவதாக உத்தியோகஸ்தாபனமில ரோமில் இத்தாலிய சர்க்கார் தெரிவிக்கப்பட்டுள்ளது. விமானங்களைக் கூட அவர்களுக்கு உதவியாக அனுப்ப எண்ணங் கொண்டுள்ளனர்.

பெல்ஜிய ஸ்தானிகர் காரியாலயம் முற்றுகை

ரஷிய கோஷ்டி காப்பாற்றப்பட்டது

அட்டிஸ் அபாபா, மே, 5

வாளேந்த கத்தியுடனும், ரைபிள்களுடனும் ஏராளமான எதியோப்பியர்கள் பெல்ஜிய ஸ்தானிகர் காரியாலயத்தைத் தாக்கினர். பிரிட்டிஷ் பாராக் கோஷ்டி ஒன்று அவர்களுக்கு உதவியாக சென்றுள்ளது.

பிரிட்டிஷ் ஸ்தானிகர் காரியாலயத்திலிருந்து வந்த ஒரு ரஷிய கோஷ்டி முற்றும் தனி இடத்திலிருந்து உணவுப் பண்டங்களை எடுத்துக்கொண்டு வரும் பொழுது கலகக்காரர்களால் தாக்கப்பட்டனர். ஆனால், அவர்கள் விரட்டப்பட்டு அக கோஷ்டியார் ஸ்தானிகர் காரியாலயத்திற்கு யாதொரு அசம்பாவிதமும் நேரிடாமல்படி போய்ச் சேர்ந்தனர்.

ரோமில் குதூகலம்

ரோம், மே, 5

அட்டிஸ் அபாபாவில இத்தாலியர் பிரவேசித்ததானது இங்கு மிகவும் குதூகலத்துடன் கொண்டாடப் பட்டது.

முசோலினி "பிராட்காஸ்ட்"

"யுத்தம் நின்றது"

ரோம், மே, 5

பியஸா வெனிஸியாவிலுள்ள தனது காரியாலயத்திலிருந்து முசோலினி பின்வருமாறு பேசினார். ஏராளமான இத்தாலியர் அவர் பேசுவதைக் கேட்க குழுமியிருந்தனர். முசோலினி கூறியதாவது:—"சென்ற 30 நூற்றாண்டுகளாக இத்தாலியின் சரித்திரத்திலேயே பல அரிய சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அவைகள் எல்லாவற்றிலும் இன்றைய தினமே மிகவும் விசேஷமானது. இத்தாலிய மக்களுக்கும், உலகத்திற்கும் யுத்தம் நின்று விட்டதாக நான் அறிவிக்கிறேன். திரும்பவும் அமைதி நிலை நாட்டப்பட்டதாக நான் இத்தாலிய மக்களுக்கு அறிவிக்கிறேன். 7 மாதங்களுக்குப் பின் இத்தகைய உயரிய வார்த்தைகளை நான் உச்சரிக்கிறேன்."

ஜஸ்டிஸ் கட்சியின் எதிர்கால வேலைத் திட்டம்

திருச்சி மகாநாட்டு நடவடிக்கைகள்

தோழர் ஈ. வே. ராமசாமிபிரசங்கம்

தமிழ்த் தினசரியின் அவசியம்

பிரசாரத்திற்கான ஏற்பாடுகள்

பாண்டியன்-ராமசாமி அறிக்கை விளக்கம்

(நமது நிருபர்)

திருச்சி, மே, 5

பாண்டியன்–ராமசாமி அறிக்கை விஷயமாக கலந்தாலோசிக்கவும், ஜஸ்டிஸ் கட்சியின் நிலைமையைப் பற்றி கவனிக்கவும், திருவாளர்கள்: கே. ஏ. பி. விஸ்வநாதன், டி. பி. வேதாசலம் இவர்களின் அழைப்பிற்கிணங்கி, ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்கள் திருச்சி, தென்னூர் திரு. பழனிச்சாமி பிள்ளையின் பங்களாவில் 3-5-36 காலை 8 மணிக்கு ஒரு மகாநாடு கூட்டினர். மாகாண முழுவதிலுமிருந்து சுமார் 400 பிரதிநிதிகள் விஜயம் செய்தனர். கோவாபரேடிவ் சொஸைடி ரிடையர்டு டிப்டி ரிஜிஸ்டிரார், திரு. சி. டி. நாயகம் தலைமை வகித்தார்.

வரவேற்புப் பிரசங்கம்

திரு. கே. ஏ. பி. விஸ்வநாதன், பிரதிநிதிகளை வரவேற்று, ஜஸ்டிஸ் கட்சியைப் பலப்படுத்தும் நோக்கத்துடனே தயாரிக்கப்பட்ட பாண்டியன்-ராமசாமி அறிக்கையைப்பற்றி ஆராயவே இம்மகாநாடு கூட்டப்பட்டதெனக் கூறி, அறிக்கையை வாசித்தார். சமீபத்தில் கட்சிக்கு ஏற்பட்ட சில தோல்விகளைக்கூறி சில தலைவர்கள் கட்சி சேவையில் ஈடுபடாதிருப்பது பற்றியும், சிலர் காங்கிரசில் சேர்ந்தது பற்றியும், வேறு சிலர் காங்கிரசில் சேர எண்ணுவதைப் பற்றியும், திரு. விஸ்வநாதன் கூறிவிட்டு, இனிப் பிரசாரமே தக்க மருந்தெனக் கூறினார். மகாநாடு வெற்றிகரமாக நடக்க வேண்டுமென, திருநெல்வேலி டாக்டர் ஆர். வி. சொக்கலிங்கம், டாக்டர் ஆனந்தம், வி. ஒ. சிதம்பரம் பிள்ளை, எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை, மற்றும் பலரும் அனுப்பிய நற்செய்திகள் வாசிக்கப்பட்டன.

தலைவர் பிரசங்கம்

மகாநாட்டிற்குத் தலைமை வகித்த திரு. நாயகம், தான் தோழர்களுடன் சேர்ந்து சேவை செய்யவே வந்ததாகவும், தன்னைத் தலைமை வகிக்க வேண்டுமென ஆருயிர் நண்பர்கள் கேட்டுக்கொண்டதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வதாகவும், கட்சியின் நலனையே கோரி கூட்டப்பட்டிருக்கும் இம்மகாநாட்டு நடவடிக்கைகளுக்கும் ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகளுக்கும்முரண்பாடு எதுவுமிரா தெனவும், தலைவர்கள் செய்யாது விட்ட வேலைகளைச் செய்து முடிக்கவே மகாநாடு கூடியிருப்பதாகவும் கூறினார். மேலும் பேசுகையில், திரு. சி. டி. நாயகம் கூறியதாவது :— 'காங்கிரஸ்காரர்களும் ஜஸ்டிஸ்கட்சியின்பாதைக்கே வருகின்றனர். இரு கட்சிகளுக்குமிடையே கோரிக்கையில் வித்தியாசம் கிடையாது. இருகட்சிகளும் சுயராஜ்யம் வேண்டுமென்கின்றன. ஜஸ்டிஸ் கட்சி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை பிரதானமாகக் கருதுகிறது. வடக்கே, முஸ்லிம்களின் கோரிக்கைகளுக்கு காங்கிரஸ் இணங்கி வந்திருக்கிறது. அங்கு, பிராமண — பிராமணரல்லாதார் பிரச்னை கிடையாது. இந்து முஸ்லிம் தொல்லைதான் உண்டு. கட்சிப் பிரமுகர்கள் ஒன்று கூடி வேலைத் திட்டத்தைப் பற்றிப் பேச வேண்டும். சமீபத்தில் தோல்விகள் ஏற்பட்டதைக் குறித்துத் தலைவர்களுக்கு மனக் கஷ்டம் இல்லாதிருக்கலாம் ஆனால், தொண்டர்கள் இத்தோல்விகளை மனதில் [illegible], கட்சியின் சார்பாகப் பணியாற்ற வேண்டும்.'' தன்னைத் தலைமை வகிக்கக் கேட்டுக் கொண்டதற்காக வந்தனம் அளித்து தலைவர் முன்னுரையை முடித்துக் கொண்டார்.

தோழர் ராமசாமி நாயக்கர் பிரசங்கம்

தோழர் ஈ. வே. ரா. பேசுகையில், கட்சித் தொண்டர்களின் மகாநாட்டின் அவசியத்தைப் பற்றித் தலைவர்கள் உணரவில்லை எனவும், அவர்களில் பலர் பிரசன்னமாகவில்லை என்றும் ஆனால், பாண்டியன் ராமசாமி அறிக்கையை ஜஸ்டிஸ் கட்சி முன்பே ஏற்றுக் கொண்ட தெனவும், மந்திரிகள் வரவில்லையே என எண்ணிக் கொண்டிருப்பதில் பயனில்லை எனவும், கட்சிப் பிரசாரமில்லாக்குறையினாலேதான் காங்கிரஸின் வெற்றி ஏற்பட்டதெனவும், சுப்பராயன் மந்திரி சபையிடமிருந்து ஜஸ்டிஸ் கட்சி அதிகாரத்தை எடுத்துக் கொண்ட 6 ஆண்டுகளாக, கட்சிப்பிரசாரமே இல்லாது போனதால்தான் எதிரிகள் பொது மக்கள் மனதை மயக்கச் செய்தனரெனவும், அசெம்பிளி ஸ்தலஸ்தாபனம் போன்றவை காங்கிரஸ்காரர் ஸ்தானங்களைப் பிடித்து விட்டதை எண்ணிக் கொண்டிருப்பதில் பயனில்லை எனவும் கூறினார். "இரண்டு பெருங்குறைபாடுகள் இருக்கின்றன. ஒன்று, காங்கிரசின் பெயரைக் கூறிக் கொண்டு வெளியிடப்படும் தமிழ் பத்திரிகைகளின் விஷமப் பிரசாரத்தை எதிர்த்து நமது கட்சியின் சார்பாகப் பேச ஒரு தமிழ் தினசரி இல்லை. இரண்டாவதாக, பிரசாரம் கிடையாது. ஒன்றிரண்டு வருஷங்களுக்கு மாதம் 500 ரூபாய் செலவில் காலணாப் பத்திரிகை நடத்தலாம். 40,50 இடங்களில், 100 பேருக்கு விற்குமானால், கட்சியின் கொள்கைகளையும், சேவைகளையும், பொதுவாக மக்கள் உணர்வர். நான் கோயமுத்தூரில் பத்திரிகை நடத்த அனுமதி கேட்கையில் ஜில்லா மாஜிஸ்டிரேட் 5000 ரூபாய் டிபாசிட் கேட்டார். இப்போது 3000 கேட்கிறார்கள். விருதுநகர் மகாநாட்டிற்குப் பிறகு, பிரசாரக் கமிட்டி ஏற்பாடாயிற்று. ஆனால், ஒரு மாதத்திற்குப் பிறகு அவர்களை காத்துக் கொண்டிருக்கும்படி சொல்ல வேண்டி வந்தது. உயர்பதவிகளின்னோசையும், தலைவர்களையுமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. என்ன நடந்த போதிலும் கட்சியின் கொள்கை போகக் கூடாதெனவே இங்கு யாவரும் விஜயம் செய்துள்ளனர்" எனப் பேசினார். பிறகு, அவர் தமிழ் ஜில்லாக்களில் பிரசாரம் செய்வதற்கான திட்டத்தை விளக்கினார். பதவி ஏற்கக் கூடாதென, பாண்டியன்-ராமசாமி அறிக்கையில் குறித்துள்ள பகுதி, கடை முறையில் இடைஞ்சலை விளைவிக்குமாதலாலும், பலருக்கு அது பிடித்தமில்லாதிருப்பதாலும், அப்பகுதியை நீக்கி விடுவதாகவும், கூறினார்.

அவருக்குப் பிறகு, திருவாளர்கள்: செங்கல்பட்டு எம். கே. செட்டி, விருதுநகர், வி. வி. ராமசாமி, சமி நெம்பரனார், டி. என். பொன்னுசாமிப் பிள்ளை, முதலியோர் தமது யோசனைகளைக் கூறினர். திருச்சி திரு. நீலியம் பிள்ளையின் பிரசங்கத்திற்குப் பிறகு, மாதர்கள் விஷயமாக, மாயவரம், ஸ்ரீமதி ராமாமிருதத்தம்மாள் பேசினார்கள். தோழர் வி. ஜீவானந்தம், சமதர்மி என்ற முறையில் தனது அபிப்பிராயத்தைக் கூறினார். கட்சியின் சரிதையை விளக்கி, திரு. சௌந்திரபாண்டியன் பேசிய பிறகு காலைக் கூட்டம் கலைந்தது.

இடை வேளைப் போஜனத்திற்குப் பிறகு, பகல் 2-30 மணிக்கு திரு. கே. ஏ. பி. விஸ்வநாதன் மகாநாட்டை ஆரம்பித்து, தோழர் ஜீவானந்தம் தனிப்பட்ட முறையில், கட்சிக்குக் கேடு வராத முறையில் வேலை செய்து வருவாரெனவும், அவருடைய கொள்கைகளை அனுசரித்து வேலை செய்வது இயலாத காரியமெனவும் கூறினார்.

கமிட்டி, வேலைத்திட்டம், பணம் பிரசாரம் இந்நான்கும் அவசியமென, திரு. ஈ. வே. ரா பேசினார். பிறகு,கீழே காணப்படும் தீர்மானங்கள் நிறைவேறின.

1. தமிழ் நாடு பார்ப்பனரல்லாதார் இயக்கப் பிரசாரக் கமிட்டி என்னும் பெயரால் அடியிற் கண்ட கனவான்களை நிர்வாக அங்கத்தினர்களாகக் கொண்டு மத்தியக் கமிட்டி ஏற்படுத்தப்பட்டது.

அங்கத்தினர்கள்

தோழர்கள்: ஐ. சி. சக்கரம் பிள்ளை (திருநெல்வேலி), வி. வி. ராமசாமி (ராமநாதபுரம்), டபிள்யூ. பி. ஏ. சௌந்திரபாண்டியன் (மதுரை), கே. சி. எம். வெங்கடாசலம் செட்டியார், கே. ஏ. பி. விஸ்வநாதம் (திருச்சி), என். ஆர். சாமியப்ப முதலியார், தாயரோகணம் பிள்ளை, என். ஆர். பி. நாராயணசாமி நாயுடு (தஞ்சாவூர்), எம். ஜம்புலிங்க முதலியார் (தென்னாற்காடு) சௌகார் அப்துல் ஹக்கீம் சாயபு, சுகானந்த முதலியார் (வட ஆற்காடு), என். என். பொன்னையா, ஈ. வி. ராமசாமி (கோயம்புத்தூர்), ராஜமாணிக்க பண்டாரம் (சேலம்), எம். கே. செட்டியார் (செங்கற்பட்டு), சி. டி. நாயகம், டாக்டர் மாசிலாமணி முதலியார் (மதராஸ்). இவர்களில் தோழர்: டபிள்யூ. பி. ஏ. சௌந்திரபாண்டியன் அவர்கள் தலைவராகவும், தோழர்கள்: சி. டி. நாயகம், ஈ. வி. ராமசாமி ஆகியவர்கள் காரியதரிசிகளாகவும், தோழர் வி. வி. ராமசாமி பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

2. ஜில்லா ஒன்றுக்கு ரூ. 1250-க்குக் குறையாமல் பிரசார செலவிற்காக மத்தியக் கமிட்டியார் வசூல் ~~செய்ய வேண்டியது.~~

3. தோழர்கள்: டபிள்யூ. பி. ஏ. சௌந்திரபாண்டியன், ஈ. வெ. ராமசாமி, சி. டி. நாயகம், வி. வி. ராமசாமி ஆகியவர்கள் மத்திய கமிட்டியின் சார்பாகச் சுற்றுப் பிரயாணம் செய்து அந்தந்த ஜில்லாவிலுள்ள மத்திய கமிட்டி மெம்பர்கள் மூலம் பணம் வசூல் செய்து பிரசார வேலை தொடங்க வேண்டியது.

4. கட்சிப் பிரசாரத்தை உத்தேசித்து காலணாப் பத்திரிகை நடத்துவதற்கு "திராவிடன்" தினசரிப் பத்திரிகையின் பெயரைக் கொடுத்து உதவும்படி செட்டி நாடு குமாரராஜா மு. அ. முத்தையா செட்டியாரை இக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

5. தோழர் டி. வி. சுப்பிரமணியத்தின் அகால மரணத்திற்கு இக் கூட்டம் வருந்தி, தமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

இன்னும் பல தீர்மானங்கள் நிறைவேறியன பிறகு,தலைவர் முடிவுரை கூறியவுடன் தோழர் கே. ஏ. பி. விஸ்வநாதம் நன்றிகூற, மாலை 6-30 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

சென்னை சர்வகலாசாலை பட்டமளிப்பு விழா

உதகமண்டலம், மே, 5

சென்னை சட்டசபைக் கூட்டம் நடக்க வேண்டியதை முன்னிட்டு ஆகஸ்டு மாதக் கடைசியில் நடைபெறவிருக்கும் சென்னை சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில். மஹோபாத்யாய என். குப்புசாமி சாஸ்திரிகள், பட்டமளிப்பு விழாப் பிரசங்கம் செய்வார்.

பழனியில் பார்ப்பனர் சூழ்ச்சி பலிக்கவில்லை

வரி கொடுப்போர் சங்கம் — மகாஜன சங்கம் ஆன விந்தை!

பட்டதாரிகள் ஓடிய பரிதாபக் காட்சி!!

(ஒரு நிருபர்)

பழனி, மே, 2

பழனி ஹைஸ்கூல் கடைசி சர்க்கார் உத்திரவின்படி நடத்துவது பலவிதத்திலும் இடைஞ்சல் என்பதையும், பல மாணவர்களும் உபாத்தியாயர்களும் வெளியே போவதைத் தடுக்கவும் பாடசாலையை எடுத்து விடுவதென்று நேர்மையாக முடிவு செய்தனர். ஆனால், பார்ப்பனர் பலருக்கு இது பொறுக்கக் கூடாத ஆத்திரத்தை உண்டாக்கிவிட்டபடியால், மேற்படி கவுன்சில் தீர்மானத்தை கண்டிப்பதற்கென்று வரி கொடுப்போர் சங்கம் என்ற ஓர் அநாமதேய சங்கத்தின் ஆதரவில் சென்ற 30-4-36-ந் தேதி மாலை 6 மணிக்கு இவ்வூர் நவரங்க மண்டபத்தில் ஓர் பொதுக் கூட்டம் கூடுமென்றும், சில பார்ப்பன வக்கீல்கள் பேசுவார்களென்றும் ஒரு துண்டுப் பிரசுரம் நகரெங்கும் வழங்கப்பட்டது. இதை யறிந்த பல பார்ப்பனரல்லாத தலைவர்களும், வாலிபர்களும் பார்ப்பன சூழ்ச்சியை பலிக்காது செய்யமுடிவு செய்து பொதுக் கூட்டத்தை அடைந்தனர்.

சுமார் 7½-மணிக்கு கூட்டம் ஆரம்பமாயிற்று. நோட்டீஸில் கண்டபடி தேவஸ்தான கௌரவ டிரஸ்டியும், வக்கீலுமான திரு. என். முத்துசாமி முதலியார் அக்ராசனராக தேர்ந்தெடுக்கப்பட்டு முகவுரையாக சில வார்த்தைகள் பேசிய பின்னர், திரு. சுந்தரராஜ ஐயர் எம். ஏ. பி. எல். பேசுவார் என்று முடிக்கும் போது கூட்டத்திலிருந்து ஒருவர் "வரி கொடுப்போர் சங்கம் என்பது தோன்றிருக்கிறதா? அது எப்போது யாரால் ஸ்தாபிக்கப்பட்டது? அதன் ஆதரவில் இக்கூட்டம் கூட்டப்பட்டிருப்பதாக நோட்டீஸில் அறிவிக்கப் பட்டிருப்பது உண்மைதானா? என்பதை முதலில் பொதுஜனங்கள் அறிய ஆவலுள்ளவர்களாய் இருக்கிறார்கள்" என்றார்.

திரு. சுந்தரராஜ ஐயர்:—வரி கொடுப்போர் சங்கம் எனப் போடப்பட்டிருப்பது தவறு; இது மகாஜனக் கூட்டம் என்றார்.

கூட்டத்திலிருந்த ஒருவர்:-பொய்யாக இல்லாத ஒன்றை இருப்பதாக, கற்பனையாக சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறது பொறுப்புள்ளவர்கள் செய்கையாகுமா? இது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். இத்தகைய பொய் விளம்பரம் செய்ய காரணமாயிருந்தவர் யாரென்பதை நாங்கள் அறிய வேண்டும். அவர் எங்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

தலைவர் குறுக்கிட்டு:-''நான் தலைமை வகிக்கும் போது நீங்கள் இங்கு வியவகாரம் செய்து கொண்டிருப்பது முறையாகாது. நான் தலைமை வகிப்பது உங்களுக்கு இஷ்டமில்லையென்றால் தெரிவித்து விட வேண்டும்".

ஒருவர்-இல்லை, நாங்களே இருக்கலாம்; ஆனால் எங்களிருப்பத்தை தாங்களே நிறை வேற்றினாலும் சரியே முதலில் நாங்கள் நோட்டீஸ் போட்டவர்கள் இன்னாரென்பதை அறிய வேண்டும். பின் அவர் மன்னிப்பு கேட்பதோடு "முனிசிபல் சபைத் தீர்மானத்தைக் கண்டிப்பது" என்ற வாக்கியத்தை வாபீஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

தலைவர் தன்னுடைய பார்ப்பன நண்பர்களிடம் கலந்தார். வக்கீல்களும், பட்டதாரிகளும் உள்ள அக்கூட்டத்தில் ஒருவராவது நான் செய்தேன் என்று தைரியமாக சொல்ல முன் வரவில்லை. குனிந்த தலை நிமிராமல் மணப்பெண்ணைப் போல எல்லோரும் பூமியையே உற்று நோக்கினர். (ஆகா இந்த சமயத்தில் என்கையில் ஒரு காமிரா இருந்தால், ஒன்றும் எழுதாமலே படம் பிடித்து அதை மட்டும் அனுப்பி விடுவேன். துரதிர்ஷ்டவசமாக அச்சமயம் என்னிடம் அதுமட்டுமில்லை.)

தலைவர் : நான் எத்தனையோ கூட்டங்களில் தலைமை வகித்திருக்கிறேன். இன்று நடந்த மாதிரி என்றும் நடக்கவில்லை. நான் இத்தஸ்தானத்தை ஏற்றுக் கொண்டதற்காக வருந்துகிறேன் என்று எழுந்து போகவே அவரது பார்ப்பன சகாக்களும் அவரைத் தொடர்ந்தனர்.

கூட்டம் அப்படியே இருந்தது. மேற்படி கூட்டத்திற்கு கௌரவ மாஜிஸ்டிரேட்டும், பஞ்சாயத்து கோர்ட் பிரசிடெண்டுமான ஜனாப் என். காதர் முகமது ராவுத்தர் தலைமை வகிக்க, பொது ஜனங்களுக்கு ஸ்கூல் எடுக்கப் பட்டதின் உண்மையான காரணம் விளக்கப் பட்டதோடு, கவுன்சில் தீர்மானத்தைப் பாராட்டியும், அடுத்த வருடத்தில் முனிசிபாலிட்டியார் ஒரு மிடில் ஸ்கூலாவது நடத்த வேண்டும் என்ற தீர்மானம் பலத்த கரகோஷத்தினிடையே ஏகமனதாய் தீர்மானிக்கப் பட்டு கூட்டம் சந்தோஷ ஆரவாரத்தினிடையே கலைந்தது.

காங்கிரஸ் கூட்டம்

திரு. என். தண்டபாணி பிள்ளை மகாநாட்டுக் காரியதரிசி, தமிழ் நாடு காங்கிரஸ் எழுதுகிறார்:—

1—5—36 மாலை 7 மணிக்கு காஞ்சிபுரம் செல்லிகாரத் தெரு ராஜகோபால கல்யாணமண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்திற்கு பல பிரமுகர்கள் வந்திருந்தனர். அதுசமயம் "நவசக்தி" ஆசிரியர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் தலைமை வகித்தார். தற்கால தென்னாட்டு காங்கிரஸ் தலைவர்களின் பிற்போக்கான காரியங்களை சீர்திருத்த (காங்கிரஸ் தலைவர்களில் அதிருப்தி அடைந்தவர்களெல்லாம் கூடி தனிப்பட்ட முறையில் வேறு தலைவர்களையும் கமிட்டி அங்கத்தினர்களையும் அமைப்பதின் பொருட்டு) ஜூன் மாதம் கடைசியில் காஞ்சிபுரத்தில் 38-வது காங்கிரஸ் மகாநாடு அவசியம் கூட்ட வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது. வரவேற்புக் கமிட்டியார் தற்காலிகமாக மகாநாட்டுக்கு வேண்டிய விளம்பரங்களும், மற்றவைகளும் செய்வதற்கு சண்முக நாயனாருக்கும், என். தண்டபாணிப் பிள்ளைக்கும் அதிகாரம் கொடுக்கப் பட்டதாய் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

மாகாண சுயாட்சி

1937 ஏப்ரல் முதல் தேதி

லண்டன், மே, 5

1-4-37-ல் இந்தியாவில் மாகாண சுயாட்சியை அமுலுக்குக் கொண்டு வருவதாகக் குறிப்பிட்டு, மன்னர் பிறப்பித்துள்ள உத்தரவை விட்ஸண்டைட் விடுமுறைக்குப் பின் பார்லிமெண்டின் இரு சபைகளிலும் கொண்டு வரப்படுமென்ற செய்தி இப்போது ஊர்ஜிதம் செய்யப்படுகிறது.

லண்டனில் இந்திய கிரிக்கட் கோஷ்டி

வொர்சஸ்டர்ஷயருடன் முதல் 'மாட்ச்'

இந்தியர் தோல்வி

லண்டன், மே, 5

சென்ற சில தினங்களுக்குமுன்பு லண்டனிலுள்ள இந்திய கிரிக்கட் கோஷ்டிக்கும், வொர்சஸ்டர்ஷயருக்கும் முதல் 'மாட்ச்' நடைபெற்றது.

முதல் இன்னிங்ஸில் இந்தியர் 229 ரன்கள் எடுத்தனர். இரண்டாவது இன்னிங்ஸில் 150 எடுத்தனர். வொர்சஸ்டர்ஷயர் முதல் இன்னிங்ஸில் 248-ம் இரண்டாவது இன்னிங்ஸில் 7 விக்கட்களுக்கு 134-ம், எடுத்து வெற்றி பெற்றது. முதல் இன்னிங்ஸில் இந்திய கோஷ்டியில் அதிக ரன்கள் எடுத்தவர் மேஜர் சி. கே. நாயுடு, அவர் எடுத்த ரன்கள் 46. இரண்டாவது இன்னிங்ஸில் மகமது உசேன் 55 ரன்கள் எடுத்தார்.

இந்தியக் கோஷ்டியில் ஆடினவர்கள் பெயர்கள் பின் வருமாறு:- முஷ்டாக் அலி,பாலியா, அமர்நாத், சி. கே நாயுடு, வி. எம். மர்ச்சண்ட், முகம்மத் ஹுசேயன், விஜயநகரம் மகாராஜ் குமார் (காப்டன்), சி. ராமசாமி, பாகா ஜிலானி, மெஹர்ஹோம்ஜி, முஹமத் நிஸார்.

திருநெல்வேலி ஜில்லா சிவயோகி குல சங்கம்

திறப்பு விழா

(ஒரு நிருபர்)

தூத்துக்குடி, மே, 4

திருநெல்வேலி ஜில்லா சிவயோகி குல சங்கத்தின் திறப்பு விழா 30-4-36 வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு மேலூர் சேதுபாதை "பண்டாரபவனத்திற்கு" அருகிலுள்ள மேற்படி சங்கத்திற்குப் பாத்தியப்பட்ட நிலத்தில் அலங்காரப் பந்தலில் நடைபெற்றது. அவ்வமயம் இந்நகர் முனிசிபல் வெட்டர்னரி டாக்டர் கே. ஆறுமுகம் திறப்பு விழா வாற்றினர். காரப்பேட்டை நாடார் வித்தியாசாலை ஆசிரியர் க. ஆறுமுகம் "நம் குல சங்கம்" என்னும் விஷயமாய் அரிய சொற்பொழி வாற்றினர். பின்னர் நிர்வாகஸ்தர்கள் தேர்தல் நடைபெற்றது. இந்நகர் பிரபல ஜவுளி வர்த்தகர் திரு. மு. பலவேசப் புலவர் தலைவராகவும், திரு. க. ஆறுமுகம் காரியதரிசியாகவும், மற்றும் 9 நிர்வாக மெம்பர்களும் தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர், காரியதரிசி வந்தனோபசாரம் கூற கூட்டம் இரவு 10 மணிக்கு இனிது கலைந்தது.

வேண்டுகோள்

(ஒரு நிருபர்)

உடையார்பாளையம், மே, 4

இவ்வூரில் இருந்து வரும் உயர்தரக் கலாசாலையானது சுமார் 20 வருடங்களாக வேலை செய்து வருகிறது. இதில் இருந்து ஏராளமான மாணவர்கள் வெளியேறி யிருக்கின்றனர். அவர்கள் ஒன்று கூடும் சமயம் வாய்ப்பது அரிதாகயிருக்கின்றது. ஆகவே, இக்கலாசாலையில் ஒரு "பழையமாணவர் மன்றம்' இருப்பின் அதன் மூலமாக அவ்வூருக்கும், ஊர் மக்களுக்கும் பள்ளிக் கூடத்திற்கும் நன்மைகள் செய்ய சௌகரியமாக இருக்கும்.

ஆகலின், அக்கலாசாலையில் பயின்ற மாணவர்கள் எல்லாம் சேர்ந்து "பழைய மாணவர் மன்றம்" நியமிக்க என்ன முயற்சி செய்ய வேண்டுமோ அம் முயற்சிகள் எடுத்துக் கொள்ளுவார்கள் என நான் எண்ணுகின்றேன்.

மேலும் இதனியமாக இக்கலாசாலையின் மேலதிகாரிகளை பழைய மாணவர்களுக்கு வேண்டிய உதவி செய்யும்படி நான் இதன் மூலமாக பணிந்து கேட்டுக் கொள்ளுகின்றேன்.

"காற்றடிக்குது, - - கடல் குமுறுது"

—:o:—

காங்கிரஸ் தலைவர்கள் திணறல்

திரு. இராஜகோபாலாச்சாரியாருக்குச் சரமாரியான கேள்விகள்

குல்லுகபட்டரின் குதர்க்கம்

முலாம் பூசிய மெடல்-முலாம் பூசிய பேச்சு!

சுடச் சுட மற்றொரு புகார்!

கதை சொல்லிக் காலந் தள்ளினர்

திரு. சத்தியமூர்த்தியின் "ததாஸ்து"

("நக்கீரன்" நேரில் கண்டவை)

லக்ஷ்மணபுரியில் காங்கிரஸ் பல விஷயங்களைச் சாதித்து விட்டதாக, சென்ற ஒரு வாரமாக, காங்கிரஸ் தலைவர்கள் பிரசாரம் செய்து வருகிறார்கள். முக்கியமான விஷயங்களை அவர்கள் மழுப்பி விட்டது தெரிந்திருந்தும், காங்கிரஸ் தலைவர்களை அதிலும் திரு. ராஜகோபாலாச்சாரியார் என்ன சொல்லுகிறார் கேட்போமென நான், மே, 3-ந் தேதி, திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த காங்கிரஸ் கூட்டத்திற்குச் சென்றேன். கூட்டத்திற்கு தலைமை வகித்தார். திரு. ராஜகோபாலாச்சாரியார். திரு. ஆதிகேசவலு நாயக்கரும், தாவுத்ஷாவும், பக்தவத்சலமும் பேசினார்கள். அவர்கள் பேச்சைக் கேட்கவா நான் போனேன்! பிறகு ஆரம்பித்தார். திரு. ராஜகோபாலாச்சாரியார் அவருடைய பிரசங்கமிருக்கட்டும், அவருடைய 'தொனி' இருக்கிறதே அது மிக வேடிக்கையானது. ரேடியோவில் ஒரு பாட்டு முடிந்து மற்றொரு பாட்டு ஆரம்பமாவதற் கிடையில் ஒருவித சப்தம் 'கர்' என்று கேட்கிறது அது போல அவருடைய பேச்சுத் 'தொனி' இருப்பதாக நான் எண்ணுகிறேன். ஆனால், அதைச் சொன்னால் கூடதப்பு! தொண்டைக் காரலாக இருக்கிறதென்றால் 'அது தேசபக்தர்' அதைக் குறை கூறுவது தேசத்துரோகம். அதைக் கேட்டால், பாரதமாதா பிலாபிப்பாள் என்று அடுத்த காங்கிரஸ் கூட்டத்தில் எந்தக் கிராமபோனாவது பாடி விடும்.

காங்கிரசும், பத்திரிகைகளும் 'கணவன்-மனைவி' மாதிரி

லக்ஷ்மணபுரி வைபவங்களைக் கூறினார். திருச்செங்கோட்டார். பிறகு, வார்தாவிலே நடந்த காரியக் கமிட்டியிலே ஒருவித தகராறும் ஏற்படவில்லை. அதுமிக்க தவறு ரும், என்றார். பத்திரிகைகளில் அப்படி அந்த விஷயம் அடிபட்டதே என்று எண்ணினேன். அந்த விஷயங்களை வெ பத்திரிகைகள் வெளியிட வேண்டுமென எண்ணி, எனக்குக் கோபம் கோபமாகத் தான் இருந்தது. ஆனால், திரு. ராஜகோபாலாச்சாரியார் "பத்திரிகைகளைக் குறை கூறுவதாக என்று பேசியிருந்து நீங்கள் முடிவு செய்து விடக் கூடாது. காங்கிரசுக்கும், பத்திரிகைகளுக்குமிருக்கும் சம்பந்தம் கணவன் மனைவி மாதிரி" என்றார். அந்தக் குடும்பச் சண்டையில் நான் தலையிட விரும்பவில்லை எனினும், அடங்காப்பிடாரியாக ஒரு மனைவியும், இரண்டுங்கெட்டானை ஒரு கணவனும் சேர்ந்த குடும்பத்தை நடத்தினால், ஊர் சிரிக்கு மென்பதை மட்டும் கூற விரும்புகிறேன். வார்தா, எங்கேயோ, கண் காணாத தூரத்தில் இருக்கிறது. அதைப் பற்றி எனக்கு அவ்வளவு கவலையில்லை. கண்ணுக்கு எட்டின வேலூரிலே நடந்ததே விபரீதம், அதைப்பற்றி, காங்கிரஸ் தலைவர்கள் என்ன சொல்லப் போகிறார்களென ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தேன் வேலூர் சம்பவத்தால் திரு. ராஜகோபாலாச்சாரியார் மன வேதனைப் பட்டாராம்.

வேலூர் தேர்தல் சம்பவம்

ஆனால், 'பெரிய யுத்தங்களில்கூட ஒருசமயம் தோல்வி ஏற்பட்டுத் தான் தீரும்' என்று அவர் கூறினார். தோல்வி அடைந்ததைப் பற்றல்ல இப்போது எழும்பியுள்ள பிரச்னை. மிக மிகப் பரிசுத்தவான்கள் என்று மார்தட்டிய காங்கிரசில் விஷயம் இவ்வளவு மோசமாக நடந்ததே என்பதுதான் இன்று கொதிக்கும் விஷயம். இதையன்றோ, அவர் கூற வேண்டும். அதை விட்டு, தோல்வி அடைவது சகஜந்தானென்று, ஏன் இவர் போட வேண்டும். காங்கிரசின் பெயரால் நிற்பவருக்கே 'ஓட்' கொடுப்பதாக வேலூர் ஜில்லா போர்டு காங்கிரஸ் மெம்பர்கள், திரு. ராஜகோபாலாச்சாரியாரிடம் வாக்குறுதி அளித்தார்களாம். இருமுறை வாக்குறுதி கூறினார்களாம். "26 அங்கத்தினர்களையும் ராஜினாமா செய்யச்சொல்வதே பரிகாரமென நான் கருதுகிறேன்" என்று அவர் கூறினார். இதைத்தான் நான் இனி வெகு ஆவலுடன் எதிர்பார்க்கிறேன் உள்ளபடி ரோஷ முள்ளவர்களானால் இதைத் தான் செய்ய வேண்டும். பொறுத்திருந்து பார்ப்போம்! முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் இது. ஆனால், திரு. ராஜகோபாலாச்சாரியார், அதை ஏனோ தானோ என்று சொல்லி விட்டு, பிறகு இத்தாலிய-அபிசீனிய யுத்தம் சத்தியமே ஜெயம் என்று கதை சொல்லிக் காலந்தள்ள ஆரம்பித்தார். தென்னாட்டிலே அவருடைய "மூளை" மிக நுட்பமானதெனச் சிலர் கூறுவதுண்டு. அப்படிப்பட்ட மூளை, அன்று, ஏன் தாறுமாறாகத் திரிந்து, தடுமாறிற்று என்பது எனக்குத் தெரியவில்லை. பிறகு, திரு. வி. கலியாணசுந்தரனார் மீது பாய்ந்தார். திரு. ராஜகோபாலாச்சாரியார். உடனே குதித்தெழுந்தார் தோழர் தண்டபாணி, இது கண்ட திரு. ராஜகோபாலாச்சாரியார் "தம்பியைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவதுபோல," "காங்கிரசை விட்டு திரு. வி. கலியாணசுந்தரனார் போன்றோர், போனதால் தான் இக் குறைகள் ஏற்பட்டன இருமடங்கு சக்தியுடன் திரு. வி. க. காங்கிரசில் சேர்ந்து தொண்டாற்றுவாரென்று நான் நம்புகிறேன்" என்று கூறினார். இங்கு கவனிக்கப்பட வேண்டிய விஷயம் யாதெனில், காங்கிரசின் போக்கும், அதன் தலைவர்களின் நடத்தையும் பிடிக்காததால் தான். திரு. கலியாணசுந்தரனார் காங்கிரசை விட்டு விலகினார். இன்று தென்னாட்டுக் காங்கிரசில் உள்ள ஊழலைக் கண்டு, அவர் மனம் சகிக்காததுதான் "நவசக்தி" யுடன் வெளிவருகிறார் என்பதே யாரும். காங்கிரஸ்காரர்கள் எதை வேண்டுமானாலும் கூறலாம். நாம் கேட்டுக் கொண்டுதான் இருக்க வேண்டுமென்னும் மனப்பான்மை ஒழிய வேண்டுமென நான் பல தடவைகளில் எண்ணியதுண்டு. உதாரணமாக, அசெம்பிளி தேர்தலின் போது, "ராமசாமி முதலியார் தாலியை அறுத்தார்" என்று காங்கிரஸ்காரர், மேடை மீதேறிக் கூறினார்களே அதைக்கூடக் கேட்டுக் கொண்டிருக்கவில்லையா நமது மக்கள். "சட்டிக் கேட்ட அம் இல்லா விட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்" என்பது அனுபவ உண்மையல்லவா? அந்த மனப்பான்மையை மாற்றவே, வாலிபவீரர் தோழர்: என். சங்கரதம ஒரு கேள்வி கேட்டார் திரு. ராஜகோபாலாச்சாரியாரை? கேட்க வேண்டிய கேள்விதான். அதாவது, "ஐயா! ராஜகோபாலாச்சாரியாரே. நீர்தான் அரசியலை விட்டுப் போய் விட்டீர்களே, இப்போது ஏன் திரும்பி வந்தீர்கள்?" என்று கேட்டார் திரு. ராஜகோபாலாச்சாரியார், தாம் துறவுமை பூண்டு. ராமாயண பாராயணம் செய்யப் போவதாகப் பத்திரிகைகளில் வெளியிட்டார் "குடி முழுகிவிடுமே! தமிழ் நாடு அழுமே!! ஐயோ!!! ஜஸ்டிஸ் கட்சிக்காரன் சிரிப்பானே!!!!" என்று காங்கிரஸ் வாதிகளும், அவர்களுடைய பத்திரிகைகளும் ஓலமிட்டன. பிறகு, ஓய்வு எடுத்ததாகச் சொன்னார். திடீரென்று காரைக்குடி மகாநாட்டிற்கு வந்து, அங்கு திரு. முத்தரங்கத்தைத் தோற்கடித்தார். ஆகவே, ஏன் இவர் போகிறேன் என்று கூறுவது, பிறகு உடனே நுழைவது. இது விளம்பரமா? வேடிக்கையா? வியாபாரமா? என்று தெரிந்து கொள்ள வேண்டுவது நியாயமல்லவா? அதனால்தான், தோழர் என். சங்கரதம அந்தக் கேள்வியைக் கேட்டார். ஒரு பெரிய தலைவர்! தென்னாட்டிலே காந்தியின் நிழலாக இருப்பவர். அப்படிப்பட்டவர். இதற்கு என்ன பதில் கூற வேண்டும். எந்த முறையில் பேச வேண்டும்! நிதானி, உணர்ச்சியற்றவர் அவர். எனக்கே, ஏதடா விஷயம் இப்படியாகி விட்டதே என்று தோன்றிற்று. "நான் போவேன். வருவேன் என் இஷ்டம் உனக்கென்ன" என்று அடிப்பட்ட குழந்தை அழுவதைப்போல ஆரம்பித்து விட்டார் அந்தப்பெரிய தலைவர்! இந்த வாலிபர்கள் அவ்வளவு அதோடு விடவில்லை. சமயோசிதமான கேள்விகளைப் போட்டனர். காரைக்குடியில் யாரிடமோ, அவர் புதிய சீர்திருத்தத்தைத் தகர்க்க முடியாதென்று கூற அதை வேலைசெய்யத் தான் வேண்டுமென்றாராம். அதைப் பற்றி திரு. ராமமூர்த்தி என்பவர் பொதுக் கூட்டத்தில் கூறினாராம். அது உண்மையா? என்று ஒரு கேள்வி கேட்டனர். உள்ளபடி, தம்மை இப்படிச் சந்திக்கிழுப்பார்களென அவர் எண்ணியிருந்திருக்கமாட்டார். பாதி ஒத்துக் கொண்டார் திரு. ராஜகோபாலாச்சாரியார், அதாவது, நான் புதிய சீர்திருத்தத்தை தகர்க்க முடியாது என்று காரைக்குடியில் ஒருவரிடம் கூறியது உண்மையே. ஆனால், வேலை செய்யத்தான் வேண்டுமெனக்கூறவில்லை என்று கூறினார். போகிறது! அந்தப் பாதியைத்தான் எடுத்துக் கொள்வோம், புதிய சீர்திருத்தத்தை தகர்க்க முடியாதென, ஒருவரிடம் ஒத்துக்கொண்ட இவர், ஏன் புதிய சீர்திருத்தத்தை "வார்சேல்ஸ் உடன்படிக்கையை எப்படி ஜெர்மானியர் தகர்த்தனரோ அப்படி நாங்கள் தகர்த்து எறியப்போகிறோம்" என்று வீண் வீரம்பேச வேண்டும். வார்சேல்ஸ் உடன்படிக்கையின் முழுவரலாறும்-அதை ஒட்டிய சரிதமும், அவருக்குத் தெரியாதெனவே நான் எண்ணுகிறேன். ஏனெனில், வார் சேல்ஸைப் போல புதியசீர்திருத்தத்தை தகர்ப்பதென்றால், முதலில் எப்படி ஜெர்மானியர் வார் சேல்ஸ் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு நடத்திக் காட்டினரோ, தாஸ்போன் போன்ற முறைகளையும் ஏற்றுக்கொண்டார்களோ, அப்படி, இவரும் இந்தப் புதிய சீர்திருத்தத்தை ஏற்று நடத்துவது, என்று தான் பொருள் ஏற்படும். ஆகவே ஒன்று, இந்த வார் சேல்ஸ் கதையைக் கூறாதிருக்க வேண்டும்; அல்லது, புதிய சீர்திருத்தத்தை நடத்தத்தான் வேண்டுமென ஒப்புக்கொள்ள வேண்டும். அதை விட்டு சரித்திரத்தைத் திரித்துப் பேசிக் கொண்டு, 'குல்லுகபட்டர் குதர்க்கம்' செய்தார் அன்றையக் கூட்டத்தில்.

தங்க முலாம் பூசிய வெள்ளி மெடல்கள்

தங்க முலாம் பூசிய மெடல் விஷயமாக ஒரு தோழர் கேள்வி கேட்கும் போது, திரு. ராஜகோபாலாச்சாரியார் தடுமாறிப் பதில் கூறினார். அதாவது, "இதுபோதக் கூட்டத்தில் பேச்சுப்பட வேண்டிய விவகாரமல்ல" என்றார். கேள்வி கேட்ட நண்பர், திரு. ராஜகோபாலாச்சாரியாரின் ஜட்ஜ் மென்டைக் கோரவில்லை காங்கிரஸ் அயோக்கியத்தனத்திற்கு இது ஒரு சான்றல்லவா? என்ற முறையில் தான் கேட்டார். "தங்க மெடல்தான் வேண்டும் இரும்பு மெடல் கொடுத்தால் கூடத்தான் திருப்தி அடைய வேண்டுமென" அவர் கூறினார் இது கேள்விக்குப் பதிலாகுமா? விஷயத்தை வெளிக்கு கொண்டு வந்த சங்கீத வித்வான் கூறினார், "ஐயா இவ்வித மோச மெடலைத் தந்ததை விட எங்களுக்கு ஒரு துதை கதர் வேஷ்டி தந்திருந்தால் நாங்கள் திருப்தி அடைந்திருப்போம்" என்று. ஆகவே, இப்போது, தங்க மெடல் வேண்டுமென யாரும் காங்கிரஸ்வாதிகளுடன் சண்டைக்கு வரவில்லை. செய்கை மோசமானதா அல்லவா? அயோக்கியத்தனமானதா அல்லவா, என்பதே கேள்வி. அதற்குப்பதில் கூறாது முலாம் பூசிய மெடலுக்கு "முலாம் பூசிய பேச்சு" பேசினார் திரு. ராஜகோபாலாச்சாரியார். கேள்வி கேட்ட நண்பர், ஏனய்யா! "இந்த முலாம் பூசிய பேச்சு?" என்று வெறுத்து வாங்கினார்.

மோடி திருத்த விஷயமாகக் கேள்வி கேட்கப் பட்டது. அதற்கு அவர் கொடுத்த விடையை எண்ணினால் தான் வேடிக்கையாக இருக்கிறது. என்ன சொன்னார் தெரியுமா! "எனக்கு இந்த அசெம்பிளி விஷயமாக ஒன்றும் சம்பந்தமில்லை" என்றார் அதோடு நிறுத்திக் கொண்டாரா? கிடையாது! இதைக் குறித்து நீங்களும் கேட்கக் கூடாது (டிரேட் யூனியன்) தொழிற் சங்க காங்கிரசுக்கு இதைப்பற்றி எழுத வேண்டும். அப்போது பதில் கிடைக்கும் என்று கூறினார். பேஷான ஏமாற்றமல்லவா?

திரு. சத்தியமூர்த்தி மீது அடிக்கடி புகார் வருவது சகஜம். இக் கூட்டத்திலும் சுடச்சுட ஒரு புகார் வந்தது. அதாவது, "88 அங்கத்தினரை லக்ஷ்மண புரிக்கு அழைத்துச் செல்வதாகவும், அதற்காகக் காங்கிரசிலிருந்து 10,000 ரூபாய் பெற்றுக் கொண்டதாகவும், தோழர் முத்து என்பவர் கேட்டார். திரு. ராஜகோபாலாச்சாரியார் அவ்விதமான புகாரே தவறெனவும், அதனால் மனம் புண்படுமெனவும் கூறினார்.

திரு. சத்தியமூர்த்தி பிறகு பேசினார். சுருக்கமாக-சுவையின்றிப் பேசினார். திரு. ராஜகோபாலாச்சாரியார் கூறிய தெல்லாம்தான் "ததாஸ்து" கூறுவதாகச் சொன்னார். அன்று நடந்த கூட்டத்தைக் கவனித்த பிறகு "காற்றடிக்குது, கடல் குமுறுது" என்ற பாட்டு ஞாபகத்திற்கு வந்தது. ஆமாம் எத்தனை காலைக்குத்தான் நம் தோழர்கள் காங்கிரசின் புளுகைக் கேட்டுச் சகிப்பார்கள்! எத்தனை நாட்கள்தான் பொதுஜனமும் என்ன செய்வது என்று இருப்பார்கள்! காங்கிரசின் மீது ஜனங்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகம், அன்றையக் கூட்டத்தில் தெளிவாக விளங்கிற்று.

எகிப்து தேர்தல் முடிவுகள்

வாப்து கட்சிக்கு அதிக ஸ்தானங்கள்

கெய்ரோ, மே, 5

எகிப்தில் சில தினங்களுக்கு முன்பு நடைபெற்ற தேர்தலில் தீவிர தேசியக் கட்சியினராகிய வாப்து கட்சிக்கு 163 ஸ்தானங்கள் கிடைத்தன. மற்ற 6 கட்சிகளுக்கும் சேர்ந்து 54 ஸ்தானங்கள் கிடைத்தன.

வேலூர் ஜில்லா போர்டு தேர்தல் எதிரொலி

'தலைவர்களும், காங்கிரஸ் கமிட்டியுமே ராஜினாமா செய்தல் வேண்டும்'

—:o:—

அங்கத்தினர்கள் ராஜினாமா செய்வது பொருத்தமற்ற காரியம்

'சாக்ஷியம் கொடுக்க மறுத்து விடுங்கள்'

காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கு வேண்டுகோள்

"காங்கிரஸ் வாதி" எழுதுகிறார்:—

நேற்றைய தினம் பீச்சு மீட்டிங்கில் திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் வேலூர் ஜில்லா போர்டு காங்கிரசின் சார்பாக நின்ற 26 பேர்களையும் ராஜினாமா செய்வதற்காக தீர்மானம் செய்யப் போவதாகவும் சொன்னார். அதன்படி தீர்மானம் செய்யும் பக்ஷத்தில் அதை நீங்கள் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. ஏன் என்றால், ஏப்ரல் 20-ந்தேதி சென்னை காங்கிரஸ் மண்டபத்தில் கூடிய கூட்டத்திலிருந்தே திரு. ராஜகோபாலாச்சாரியார் உங்கள் முன்னிலையில் திரு. அப்துல் அக்கீமுக்கும் ஓட் செய்யும்படி உங்களை கேட்டுக் கொண்டது நீங்கள் அறிந்த விஷயமே

இப்பொழுது தேர்தலில் வெற்றி பெற்றிருக்கும் ஒவ்வொரு அங்கத்தினரும் காங்கிரஸ் செல்வாக்காலோ பணச் செலவில்லாமலோ வெற்றிபெறவில்லை. ஆயிரக் கணக்கான பொருள் செலவால் வெற்றி பெற்றீர்கள். செலவு செய்த பணத்தை இந்த திரு. ராஜகோபாலாச்சாரியோ அல்லது காங்கிரஸ் கமிட்டியோ கொடுத்துவிடுமானால் ராஜினாமா செய்வது நியாயமென சொல்லலாம். இல்லாவிடில் ராஜினாமா செய்வதற்கு மீண்டும் காங்கிரஸ் பேரால் நின்று வெற்றி பெறுவது நிச்சயமில்லை. ஆதலால், எக்காரணம் பற்றியும் ராஜினாமா செய்ய வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ராஜினாமா செய்யா விட்டாலும் ஜில்லா போர்டில் திரு. அக்கீம் கொண்டுவரும் தீர்மானங்களை கட்டுப்பாடாய் இருந்து தடுக்க வேண்டுமென்பதை திரு. ராஜகோபாலாச்சாரியார் சொல்கிறார். அதைப்பின்பற்றினாலும் ஜில்லா போர்டு கலைக்கப் பட்டுவிடும். ஆதலால், அம்முறையும் கைப்பற்றலாகாது.

1921-வது ஆண்டில் இருந்து 36-வது ஆண்டுவரைக்கும் திரு. சி. அப்துல் அக்கீம்சமார் ஒருலக்ஷத்தி முப்பதினாயிரம் ரூபாய் வரையில் காங்கிரசுக்கு கொடுத்திருப்பதாக திரு. சி. ராஜகோபாலாச்சாரியாரும் மற்ற அனைவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இப்படி இருக்க தேர்தல் காலத்தில் அவருக்கே போட்டியாக ஆளை நிறுத்தியதும் தவிர ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் என்று கொட்டை எழுத்துக்களால் சகல பத்திரிகைகளிலும் பிரசாரம் செய்ததோடு நில்லாமல் சகல காங்கிரஸ்காரர்களும் அவருக்கு எதிரிடையாய்ப் பிரசாரம் செய்து வாக்காளர்களை ஓட்டு போட வேண்டாம் என்று சொன்னார்கள்.

திரு. அக்கீம் வெற்றி பெற்றபின் காங்கிரஸ் மண்டபத்தில் கூடிய மெம்பர்களின் கூட்டத்தில் திரு. ராஜகோபாலாச்சாரி திரு. அக்கீமுக்கே ஓட்டு கொடுக்கும்படி கேட்டுக் கொண்டதால் அவர் வார்த்தைக்கு இணங்கியே பார்ப்பனர்களும், பார்ப்பனர் அல்லாதவர்களும் திரு. அக்கீமுக்கு தங்கள் ஓட்டைக் கொடுக்க நேரிட்டது.

தான் செய்த இப்பெரும் குற்றத்தை ஜில்லா போர்டு அங்கத்தினர்களின் பேரில் சுமத்தி ஜனங்களை ஏமாற்றுவதின் பொருட்டு கமிட்டியையும், தானும் ராஜினாமா செய்வதை விட்டுவிட்டு ஜில்லா போர்டு அங்கத்தினர்களை ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்லுவது பொருத்தமற்ற காரியமாகும்.

இத்தகைய முக்கிய காரணங்களைக் கொண்டு தலைவர்களையும், கமிட்டியையும் ராஜினாமா செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள வேண்டுமே ஒழிய நீங்கள் ராஜினாமா செய்யக்கூடாது.

தங்கள் பழியை வெளிக்குக்காட்டாமல் தங்களுடைய அடிமைகளாகிய இருவர்களை வேலூருக்கு அனுப்பி விசாரணை செய்து வரும்படி தீர்மானித்திருப்பதுவும் ஒரு பெரும் சூழ்ச்சியாகும். சூழ்ச்சி வலைக்குள் சிக்காமல் நீங்கள் இருவருக்கும் சாக்ஷியம் கொடுக்காமல் மறுத்துவிடவேண்டும் என்ற உண்மையை உங்களுக்கு அறிவிக்கலானேன். சர்வஜாக்கிரதையாய் இருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்னை மாகாண புரோசஸ்சர்வர்கள் யூனியன்

(ஒரு நிருபர்)

சேலம், மே, 4

3–5–36-ந் தேதி திருச்சியில் நடந்த ஜஸ்டிஸ் பிரமுகர்கள் மகாநாட்டில் திருவாளர்கள்: ஈ. வி. ராமசாமி நாயக்கர், சி. ஜெயராம் நாயுடு எம்.எல்.சி., கே. எம். பால சுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்., இவர்களை சென்னை மாகாண சிவில் கோர்ட் புரோசஸ்சர்வர்களின் யூனியன் காரியதரிசி இவர்கள் கண்டு சங்க அபிவிர்த்தி விஷயமாய்க் கலந்து பேசினார். மேற்படியார்கள் ஏழைகள் பேரில் அனுதாபங் கொண்டு நல்வார்த்தை கூறி யிருக்கிறார்கள். கள்ளிக் கோட்டை 11-வது மகாநாட்டுக்கு கொடி ஏற்றுவிழா பாலக்காடு கனம் சி. சுந்தரேசன் பி. ஏ. பி. எல். அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். மத்திய சங்கத்தில் அங்கத்தினர்களாய் பதிவு ஆகின விஷயம் தெரிந்த முக்கியமானவர்களை செலக்ஷன் செய்து தீர்மானத்துடன் மகாநாட்டுக்கு அனுப்பி வைக்க கோரப் படுகிறது. இம் மாதம் 17, 18 இந்த தேதிகளில் மகாநாடு நடப்பதால் முன்னடியாக நன்கொடையும், டெலிகேட் பீஸ் இதுகள் அனுப்பிவைக்கக் கோரப் படுகிறது.

ஒரே வாரத்தில்
நீரழிவு
குணமாகி விட்டது.

அடிக்கடி போகும் சிறுநீர், தாகம், வரட்சி, பசியின்மை, நீரோடு இந்திரியம் விழுதல், அந்தி கெட்டை, அதிக மூத்திரம், சோகை, சரீர வெளுப்பு, காமாலை, கண் எரிச்சல் முதலிய சிறுநீர் ரோகத்தை

மந்திரசக்தி குளிகை

சாப்பிட்ட ஒரே வாரத்தில் குணமாகி விடுகிறது. ஆச்சரியமானது.

100 குளிகை ரூ. 10.
50 குளிகை ரூ. 5-8-0.
கே.எஸ்.பதி வைத்தியசாலை,
பழனி.

இந்தியா சட்டசபையில் வாய்ப் பேச்சு வீணர்கள்

வருணாச்சிரம மாளவ்யா கூட்டம் | வகுப்புவாத ஜின்னு கூட்டம் | முதலாளித்வ மோடி கூட்டம்

மூன்று கூட்டத்தாருக்கும் காங்கிரஸ்காரர் நிபந்தனை இல்லா அடிமைகள்

தேசிய வாழ்க்கை—வயிற்றுப் பிழைப்பு வியாபாரம்

'வெண்ணெய் வெட்டிகளை'ப் பற்றி "குடி அரசு"

"அரசியல் என்பது யோக்கியமான வழியில் வாழ்க்கை நடத்தத் தகுதியற்றவர்களின் கடைசி வயிற்றுப் பிழைப்பு மார்க்கம்'

என்பதாக மேல் நாட்டு அறிஞர் ஒருவர் கூறியிருப்பது யாவரும் அறிந்ததேயாகும்.

அதை நமது நாட்டு பார்ப்பன 'தேசிய வாதிகள், தேசாபிமானத் தலைவர்கள் என்பவர்கள் மெய்ப்பித்துக்காட்டி விட்டார்கள். வக்கீல் வேலையிலும், வியாபாரத்திலும், தாசித்தொழிலிலும்பிரவேசிக்கின்றவர்களுக்கு எப்படி நாணயம், ஒழுக்கம், சத்தியம் முதலியவைகள் வேண்டியதில்லையோ—இருக்க முடியாதோ—இருக்கக் கூடாதோ அது போல் நமது தேச பக்த கூட்டங்களுக்கும், தேசியத் தலைவர்களுக்கும் நாணயமும், ஒழுக்கமும், சத்தியமும் சிறிது கூட இல்லாமல் போய் விட்டன. இவர்களுக்கு வேண்டியதெல்லாம் எப்படி பாமர மக்களை ஏய்ப்பது, எந்த இழிவான காரியம் செய்தாவது ஸ்தானங்களைக் கைப்பற்றுவது என்கின்ற இரண்டு காரியங்களே யாகும்.

ஆதலால், நம் தேசியத் தலைவர்கள் இந்த இரண்டு காரியங்களிலும் முதல் நெம்பர் கெட்டிக்காரர்களாகி இன்று அரசியலில் தலை சிறந்து விளங்குகிறார்கள். இந்தக் கூட்டத்தாரின் தேசாபிமானமும், தேசிய வெற்றியுமெல்லாம் பாமர மக்கள் சரியானபடி ஏய்க்கப்பட்டார்களா. அரசியல் பதவிகள் எல்லாம் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு பயன்படும்படி கைப்பற்றப் பட்டனவா என்பதை லக்ஷியமாய்க் கொண்டனவே யாகும்.

இதை நமது வாலிபர்களும், ஏழைப் பாமர மக்களும் உணராமல் ஏமாந்து போய் இந்த ஒழுக்கங் கெட்ட, நாணயங் கெட்ட பித்தலாட்டக் கூட்டத்தாருக்கு அடிமையாகி தங்கள் சமூக நலனைக் கெடுத்து நாசமடைந்து வருகிறார்கள்.

இம்மாதிரியான பித்தலாட்டக் கொடுமையில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதே முக்கிய விடுதலை என்றும்,—மனிதனின் சுயமரியாதை என்றும் கருதி 10, 15 வருஷ காலமாகவே நாம் முயற்சித்து வருகிறோம். அம்முயற்சியைப் பார்ப்பன தேசிய வீரர்களும், தேசியத் தலைவரும் தொடர்ந்து கட்டுப்பாடாய் குறைகூறி விஷமப் பிரசாரம் செய்து எதிர்த்து வருகிறார்கள். இவ்வெதிர்ப்புகளை அவர்களது அடிமையாய் இருந்தாலொழிய பிழைக்க முடியாது என்று கருதி இருக்கும் சில ஜனங்களும் ஆதரித்து வந்து பார்ப்பனரிடம் பாத தீர்த்தம் பெறுகிறார்கள்.

என்னதான் குறைகூறி, எவ்வளவுதான் விஷமப் பிரசாரம் செய்து வந்தாலும் ஏதாவது ஒரு காலத்தில் உண்மை வெளிப்படாமல் போவதில்லை.

உதாரணமாக, இந்திய சட்டசபை தேர்தலின் போது பார்ப்பனர்களும், அவர்களது அடிமைகளும் வெற்றிபெற பார்ப்பன தேச பக்தர்களும், பார்ப்பன தேசியத் தலைவர்களும் செய்த காரியங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அரசியலைப் பற்றி மேனாட்டு அறிஞர் ஒருவர் சொன்னதற்கு மேலாகவே நடந்து காட்டினார்கள். அதனால் மக்கள் நன்றாய் ஏமாற்றப்பட்டார்கள்.

ஓட்டுப் போட்டு விட்டு வீடு திரும்புவதற்கு முன் வெள்ளைக்கார அரசாங்கம் ஆகாயக் கப்பலில் ஓடிவிடும் என்றும், அரிசியும் பருப்பும் அன்றாடம் தபாலில் விலையில்லாமல் வீடுவந்து சேரும் என்றும், தாங்கள் அனுபவிக்கும் பூமிகளுக்கு சர்க்கார் வரியே செலுத்த வேண்டியதில்லை என்றும் கருதினார்கள். ஆனால் எலக்ஷன் நடந்து இன்றைக்கு ஒன்றரை வருஷ காலமாகிறது. என்ன பலன் ஏற்பட்டது? ஒருவனுக்கு குண்டூசிக்காவது பயன்பட்டதா என்று பார்த்தால் ஒன்றும் இல்லை என்பதோடு அதை சிந்தித்துப் பார்க்கக்கூட நம் பாமர மக்களுக்கு புத்தியில்லையே என்று விசனப்பட வேண்டி இருக்கிறது.

மக்களின் ஒழுக்கத்தையும், புத்தியையும் கெடுக்க தேவதாசிகளும், கள்ளுக்கடைகளும் எப்படி இருக்கின்றனவோ அது போலவே நமது நாட்டின் மக்களின் ஒழுக்கத்தையும், புத்தியையும் மற்றொரு விதத்தில் கெடுக்க காங்கிரசும், தேசிய பத்திரிகைகளும் இருந்து வருகின்றன என்று சொல்லவேண்டி இருக்கிறது. ஆதலால், இந்த ஸ்தாபனங்களுக்கும், அவைகளை ஆதரிக்கும் பத்திரிகைகளுக்கும் அழிவு காலம் ஏற்பட்டு நாணயமாயும், யோக்கியமாயும் நடைபெறும்படியான ஸ்தாபனங்களும், பத்திரிகைகளும் ஏற்பட்டாலொழிய மனித சமூகம் ஒரு நாளும் உருப்படப் போவதில்லை என்பது உறுதியாகும்.

அசெம்பளி தேர்தலில் வெற்றி பெற்ற தோழர்கள் அசெம்பளிக்கு சென்ற ஒவ்வொரு நிமிஷமும் தங்களை விளம்பரஞ்செய்துகொண்டார்கள். அவற்றிற்குப் பார்ப்பனப் பத்திரிகைகள் அளவுக்கு மேற்பட்ட விளம்பரங்கள் கொடுத்தன.

1926,27-ல் இக்கூட்டத்தார் சுயராஜ்யக் கட்சியின் பேரால் அசெம்பளியில் இருந்து கொண்டு செய்த தடபுடலுக்கு சமமாக, ஆகத்தக்க அளவு செய்து பார்த்தார்கள். "சர்க்காருக்கு தோல்வி மேல் தோல்வி, காங்கிரசுக்கு வெற்றிமேல்வெற்றி" என்று பறை முழக்கினார்கள். "அரசாங்க மெம்பர்களின் வாய்கள் அடைக்கும்படியாக வீர கர்ஜனை செய்தார்கள்", "3 நாள், 4 நாள் தொடர்ந்து பேசினார்கள்", "அரசாங்க மெம்பர்கள் தலைகுனிந்தார்கள்", "சத்தியமூர்த்தியின் வீரகர்ஜனை, புலாபாயின் மேதாவித்தனம், அணியின் விவேகத்தின் ஆணித்தரமான கேள்விகள்" என்றெல்லாம் கொட்டை எழுத்தில் போட்டார்கள். முடிவில் என்ன ஆயிற்று என்பதே அறிவாளிகள் யோசிக்கத் தக்க விஷயமாகும்

நாடகத்தில் ராஜவேஷக்காரனும், மந்திரி வேஷக்காரனும், சேவக வேஷக்காரனும் பேசும் சவடால்கள் போலவே முடிந்ததே தவிர வேறு என்னவாவது ஆயிற்று என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

இந்திய சட்டசபைக்கு இந்த வாய்ப்பேச்சு வீணர்கள் சென்றதின் பயனாக, நடந்திருக்க வேண்டிய காரியங்கள் பல நல்ல காரியங்கள் நடக்க முடியாமல் போயின. சமூக சீர்திருத்த சம்பந்தமான சட்டங்கள் ஏதும் கொண்டு வரவோ, செய்யவோ முடியாமல் போயிற்று. இது பார்ப்பனர்களுக்கும், காந்தியாருக்கும் ஒரு வெற்றி என்று அவர்கள் மகிழலாம்.

தேசத்தின் அருமையான நேரமும், ஏழை மக்களின் ரத்தம் சிந்தி சம்பாதித்த பணமும் வெறும் நாசமாயின. 150 மெம்பர்களுக்கு நாள் ஒன்றுக்கு 20 ரூபாய் என்றால் தினம் 3000 ரூபாய் தினப்படி ஆய் விட்டது. இவர்கள் ரயில் சார்ஜு விஷயத்தில் 30 ஆயிரம் ரூபாய் போல் செலவு ஆகின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சம்பளமே இந்த 2, 3 மாதங்களுக்கும் லக்ஷக் கணக்கில் ஆகி இருக்கும். விளம்பரங்களுக்கு ஆகவும், கட்சி துவேஷத்துக்காகவும், விஷமத்தனத்துக்காகவும் கேட்கப்படும அனுவசியமானதும் திருத்துருவமானதுமான கேள்விகளுக்குப்பதில் சேகரிப்பதற்கு லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவாகும். இவ்வளவும் போதாமல் கட்சி பிரதி கட்சி காரணமாய் சர்க்காருக்கு ஆள் பிடிப்பதற்காக பல உத்தியோகங்கள், பதவிகள் உற்பத்தி செய்வதிலும், வேறு விதமான அனுகூலம் செய்வதிலும் எவ்வளவோ செலவுகளும், அசௌகரியங்களும், அனுபவிக்க வேண்டி வரும். இவ்வளவு செய்தும் ஏற்பட்ட பலன் என்ன என்று கேட்கின்றோம்.

தோழர் புலாபாய் தேசாய் நல்ல கெட்டிக்கார வக்கீல் ஆனார், சத்தியமூர்த்தியார் பெயர் பெற்ற வாயாடி ஆனார், சில பச்சகானுக்கள் தப்பட்டிக்கு கொம்பு முளைத்தது போல் விளம்பரம் பெற்றார்கள்.

ஆனால், இவர்கள் அரசாங்க மெம்பர்களால் எவ்வளவு முட்டாள்கள் என்றும், தேச நலத்துக்கு விரோதமாய் வந்து விளம்பரத்துக்கு ஆக தேச நேரத்தையும், பணத்தையும் பாழாக்குறார்கள் என்றும் பட்டவர்த்தனமாக வெளியாக்கப்பட்டு விட்டார்கள்.

இவை ஒரு புறமிருக்க, முக்கியமாக இக்கூட்டத்தார் இந்திய சட்டசபைக்குச்செல்ல ஓட்டு வாங்கும் போதுபொதுமக்களுக்குக்கொடுத்த வாக்குறுதிகளில் எதையாவது நிறைவேற்றினார்களா?

அல்லது அப்படி ஒரு வாக்குறுதி கொடுத்ததையாவது ஞாபகப்படுத்திப் பார்த்தார்களா என்று யோசித்துப்பார்க்க வேண்டுகிறோம். வாக்குறுதிகளாவன:—

1. புதிய சீர்திருத்தத்தை உடைத்து உருவில்லாமல் ஆக்கிவிடுகிறோம்.

2. ஒருபுதிய தேசிய சபையை கூட்டச்செய்து அதன்மூலம் இந்நாட்டுத் தேவைகளை நிர்ணயித்து அதை அமுலுக்குக் கொண்டு வருவது.

3. அடக்கு முறைச் சட்டங்களை ஒழித்து விடுகிறோம் என்று சொன்னார்கள்.

இந்தக் காரியங்களில் எதையாவது செய்ய முடிந்ததா, செய்ய முயற்சித்தார்களா என்பதே முக்கிய கேள்வியாகும்.

முதலாவது காங்கிரஸ்காரர்கள் தங்களுக்கு போதிய பலமில்லாததால் வேறு இன்று மூன்று கூட்டத்தாருக்கு தாங்கள் நிபந்தனை இல்லாத அடிமைகள் ஆகவேண்டியவர்களானார்கள்.

அதாவது, வருணாச்சிரம மாளவியா கூட்டத்தாருக்கும், "வகுப்பு வாத" ஜின்னா கூட்டத்தாருக்கும், முதலாளித்துவ மோடி கூட்டத்தாருக்கும் அடிமைகளாக வேண்டியவர்களானார்கள்.

இதனால் சீர்திருத்தத்தை உடைக்கவோ, வேறு ஒரு பொது பிரதிநிதித்துவக் கூட்டம் கூட்டவோ யோக்கியம் இல்லாமல் போய் விட்டதுடன், அடக்கு முறைச் சட்டங்களை ஒழிக்க இவர்களுக்கு வாயளப்பைவிட வேறு காரியம் முடியாது என்பதும் வெளிப்பட வேண்டியதாயிற்று.

ஆகவே, ஒரு அளவு தந்திரத்தாலும், தாங்கள் கொள்கைக்கு விரோதமாக சில விட்டுக்கொடுக்கும் இழிதொழிலாலும் தாங்கள் இருப்பதாய்க் காட்டிக்கொண்டதைத் தவிர வேறு ஒரு காரியமும் செய்ய முடியாமல் போய்விட்டது.

சென்னை சட்டசபையில் உள்ள ஜஸ்டிஸ்கட்சி மெம்பர்களையும், மந்திரிகளையும் என்னவெல்லாம் குறைகூறினார்களோ அக் குறைகளுக்கெல்லாம் இந்திய சட்டசபையில் காங்கிரஸ்காரர்கள் ஆளானதோடு காங்கிரஸ் மெம்பர்கள் ஜனப் பிரதிநிதிகள் அல்ல என்பதை கல்லின் மேல் எழுத்துப்போல எழுதும்படியாக நடந்துகொண்டு விட்டார்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

சுமார் 50, 60 தீர்மானங்கள்வரை காங்கிரஸ் காரர்களால் நிறைவேற்றப்பட்டவைகளில் ஒன்றுவது சர்க்காரால் ஒப்புக்கொள்ளப்படாமல், அநேகமாய் எல்லாம் குப்பைத் தொட்டிகளில் போடப்பட்டன என்றால், காங்கிரசுக்காரர்கள் ஜனப் பிரதிநிதிகளாய் இருக்கத்தகுதி உடையவர்களா, அல்லது சுயமரியாதையுடையவர்களா என்று கேட்கின்றோம்.

சர் ஷண்முகத்தை "தோற்கடித்த வீர" தோழர் சாமி வெங்கடாசலம்செட்டியார் இன்று எங்கே இருக்கிறார்? அவரது மேல் விலாசம் என்ன? என்பது பூதக் கண்ணாடி வைத்துத் தேடவேண்டிய நிலைமையில் மறைந்துவிட்டார். அவர் ஏழைப்பாட்டாளி மக்களுக்கு செய்த மகத்தான துரோகத்தைப் பற்றி ஒரு காங்கிரசுக்காரரோ, அல்லது ஒரு தேசியப் பத்திரிகையோ வாயைக்கூடத் திறக்காமல் சாமி வெங்கடாசலத்தினிடம் பங்கு பெற்றுக்கொண்டன என்றால் "தேசிய வாழ்க்கை என்பது யோக்கியமாய்ப் பிழைக்க முடியாத அயோக்கியர்களின் வயிற்றுப் பிழைப்பு வியாபாரம்" என்பதை பச்சையாக ரூஜுப்படுத்தி விட்டார்கள் என்றுதானே கருதவேண்டியிருக்கிறது.

ஆகவே, இந்த ஒன்றரை வருஷ இந்திய சட்டசபை வேலை பொது மக்களின் பல லக்ஷ ரூபாய் பாழாகி தொழிலாள ஏழை மக்களுக்குத் துரோகம் செய்து சில பேர்விகளும், போக்கில்லாதவர்களும் விளம்பரம் பெற்றார்கள் என்பதோடு முடிவடைந்து விட்டது.

இதற்குப் பெரும்பாலும் காந்தியாரே பொறுப்பாளியாவார், காந்தி பெயரையும், காந்தியார் குல்லாயையும் காட்டியே இப்போலிகள் ஓட்டு வாங்கினார்கள்.

காந்தியாரின் தோல், வரவர காண்டாமிருகத்தின் தோலுக்கு ஒப்பாய் விட்டதால் அவருக்கும் இதைப்பற்றி யெல்லாம் லக்ஷியமில்லாமல் மகாத்மா பட்டத்தை மாத்திரம் காப்பாற்ற வேண்டியவராய் விட்டார்.

ஆகவே, இனியாவது பொது மக்களுக்கும், ஏழைப் பாட்டாளி மக்களுக்கும் புத்தி வந்து தேர்தல் காலங்களில் வயிற்றுப் பிழைப்பு வியாபார தேசியத் தலைவர்களையும்—தேசியப் பத்திரிகைகளையும் நம்பி மோசம் போகாமல் புத்தியாயும், மானமாயும் நடந்து கொள்ள மாட்டார்களா என்கின்ற ஆசையில் இதை எழுதுகிறோம்.

—"குடி அரசு"

காங்கயம் பாளையம்

மே தினக் கொண்டாட்டம்

(ஒரு நிருபர்)

சூலூர், மே, 4

சூலூருக்கு அடுத்த காங்கயம் பாளையம் கிராமத்தில், சென்ற சனிக்கிழமை இரவு 9 மணிக்கு, தோழர். சுப்பண்ண கவுண்டர் தலைமையில், மேதினக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின் சூலூர் தோழர், என். டி. சம்பந்தம், மேதினம் என்றால் என்ன? என்னும் பொருள் பற்றி விளக்கமாக உபன்யாசம் செய்தார். பின்பு, தோழர்கள், எஸ். நாகராஜன், ராஜு, முத்து ராமலிங்கம், முதலானவர்கள்,முறையே, 'தொழிலாளர் முன்னேற்றம்', 'வாசகசாலைகள் அவசியம்', 'கல்வியின் அவசியம்' முதலிய விஷயங்களைக் குறித்து உபன்யாசம் செய்தார்கள்.

தலைவர் முடிவுரையுடனும், வந்தனோபசாரத்துடனும் கூட்டம் இனிது கலைந்தது.

தஞ்சை ஜில்லா உயர்தரப் பள்ளிக்கூடங்கள் முற்றிலும் பார்ப்பனர் மயம்

(இக்கட்டுரை "தஞ்சை ஜில்லா செகண்டரி எஜுகேஷன் போர்டு எலக்ஷன் லிஸ்டை" வைத்துக் கொண்டு எழுதப்பட்டது.

(தோழர் கணபதி)

தஞ்சை ஜில்லாவிலுள்ள பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், அதில் தமிழர் இத்தனையர், பார்ப்பனர் இத்தனையர் என்ற புள்ளி விபரங்களைக் குறிப்பிட்டிருக்கின்றேன். இதைக் கொண்டு பார்ப்பனர்—தென்னாட்டுக் காங்கிரஸ்காரர்கள் ஏன் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஒழிக்க பெரிதும் பாடுபடுகின்றார்கள் என்பதை தோழர்கள் உணரவே இதை எழுதலானேன்.

பள்ளிக்கூடங்கள்	தலைமையாசிரியர்	மொத்த ஆசிரியர்கள்	பார்ப்பனர்	தமிழர்
1. போர்டு உயர்தரப் பள்ளி அய்யம்பேட்டை	பார்ப்பனர்	15	10	5
2. ,, ஒரத்தநாடு	தமிழர்	15	8	12
3. ,, பாபநாசம்	பார்ப்பனர்	14	8	6
4 ,, குடவாசல்	தமிழர்	26	13	13
5. ,, குத்தாலம்	தமிழர்	23	14	9
6. ,, நன்னிலம்	பார்ப்பனர்	22	19	3
7. ,, திருவாரூர்	பார்ப்பனர்	34	20	14
8 ,, திருத்துறைப்பூண்டி	தமிழர்	22	15	7
9. ,, பட்டுக்கோட்டை	தமிழர்	23	16	7
10. மத்தியதரப் பள்ளி, இராசாமடம்	பார்ப்பனர்	11	7	4
11. ,, ,, முத்துப்பேட்டை	பார்ப்பனர்	6	4	2
12. ,, ,, கூத்தாநல்லூர்	தமிழர்	11	4	7
13. முனிசிபல் உயர்தரப் பள்ளி, மாயவரம்	பார்ப்பனர்	34	30	4
14. ,, மத்தியதரப் பள்ளி, கொரநாடு	பார்ப்பனர்	7	7	—
15 கல்யாணசுந்தரம் உயர்தரப்பள்ளி தஞ்சாவூர்	பார்ப்பனர்	39	31	8
16 செண்ட் பீட்டர்ஸ் உயர்தரப்பள்ளி, தஞ்சை	தமிழர்	36	21	15
17. உயர்தரப்பள்ளி, திருவையாறு	பார்ப்பனர்	15	13	2
18. சிவசாமி ஐயர் உயர்தரப்பள்ளி, திருக்காட்டுப்பள்ளி	,,	16	15	1
19. டவுன் ஹைஸ்கூல், கும்பகோணம்	பார்ப்பனர்	33	30	3
20. வாணாதுறை ஹைஸ்கூல், கும்பகோணம்	பார்ப்பனர்	11	10	1
21. நேஷனல் ஹைஸ்கூல், கும்பகோணம்	பார்ப்பனர்	11	11	—
22. லூதர் மிஷன் ஹைஸ்கூல், கும்பகோணம்	தமிழர்	8	7	1
23. லூதர் மிஷன் ஹைஸ்கூல், சீயாழி	தமிழர்	15	2	13
24 சபாபதி முதலியார் ஹைஸ்கூல், சீயாழி	பார்ப்பனர்	15	12	3
25. நேஷனல் ஹைஸ்கூல், நாகபட்டினம்.	பார்ப்பனர்	46	41	5
26 மிஷன் ஹைஸ்கூல், நாகபட்டினம்	தமிழர்	17	8	9
27. நேஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி	பார்ப்பனர்	21	21	—
28 பின்லே ஹைஸ்கூல், மன்னார்குடி	தமிழர்	21	12	9
29. நாடார் ஹைஸ்கூல், பொறையார்	பார்ப்பனர்	14	8	6
30. ஏ. வி. மிடில் ஸ்கூல், கோமல்	பார்ப்பனர்	6	6	—
31. நேஷனல் செகண்டரி ஸ்கூல், மாயவரம்	பார்ப்பனர்	5	5	—
32. ஆதீனம் ஹைஸ்கூல், திருவாடுதுறை	பார்ப்பனர்	11	9	2
33. செண்ட் அந்தோனி ஹைஸ்கூல், தஞ்சை	தமிழர்	16	7	9
34. வீரராகவ செகண்டரி ஸ்கூல், தஞ்சை	பார்ப்பனர்	10	9	1
35. மத்தியதரப்பள்ளி, உடையாளர்புரம்	பார்ப்பனர்	8	7	1
36. ஜார்ஜ் மிடில் ஸ்கூல், விஷ்ணுபுரம்	பார்ப்பனர்	5	4	1
ஆகக் கூடுதல்,		632	449	183

ஆக மொத்தப் பள்ளிக்கூடங்கள் 36. இதில் ஜில்லா போர்டு முனிசிபல் பள்ளிக்கூடங்கள் 14; மானேஜ்மெண்ட் பள்ளிக்கூடங்கள் 22. ஆசிரியர்கள் தொகை 632. பார்ப்பனர் 449. தமிழர் 183 பேர்களே! இதில் ஜில்லா போர்டு, முனிசிபல் பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர் 253 பேர்களில் 93 பேர்களே தமிழர்கள். ஆனால், மீதி 160 பேர்கள் பார்ப்பனர்கள். என்னே! நம் நிலைமை!! நூற்றுக்கு மூன்று பேர்கள்தான் பார்ப்பனர்கள். ஆனால், தமிழ்ப் பெருங்குடி மக்களாகிய நாம் 97 பேர்கள் இருக்கின்றோம். இருந்தும் என் செய்வது? உத்தியோகங்களில்—அதிலும் உலக முன்னேற்றத்திற்கு முன்னணியில் நிற்கும் வாலிபர்—மாணவர் உலகத்தை இவர்கள் (பார்ப்பனர்கள்) கையிலா கொடுப்பது? இவர்களா இருப்பது? இப் பார்ப்பனர்கள், அடிமைப் புத்தியுடையவர்களாகவும் புத்தகப் பூச்சிகளாகவுமல்லவோ மாணவர்களை ஆக்குவார்கள்!!! ஆக்குகின்றார்கள்!!!!

இவை கிடக்க, மானேஜ்மெண்ட் பள்ளிக்கூடங்களை நினைத்தாலோ வயிறு எரிகின்றது. அவைகளிலுள்ள ஆசிரியர்கள் 379. பார்ப்பனர் 289. தமிழர்கள் 90 பேர்கள்தான்! முக்கால்வாசிப் பேர் பார்ப்பனர்கள், கால்வாசிப் பேர்கள் தானு தமிழர்கள்? இதிலும் நான்கு பள்ளிக்கூடங்களில் தமிழர்களே கிடையாது. அப்படி யிருப்பினும், தமிழ்ப் பண்டிதர், கீழ் வகுப்பு ஆசிரியர்கள் (எல் டி. அல்லாதவர்கள்) இவர்கள்தான் தமிழர்களா யிருக்கின்றனர். பல பள்ளிக்கூடங்களில் தமிழ்ப் பண்டிதர்கள்கூட பார்ப்பனர்களே!! இந்த மானேஜ்மெண்ட் பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர்கள்—ஏன் தமிழர்கள் நிலை, மாணவர்கள் நிலை சொல்லத்தரமன்று. (இது குறித்துப் பின்னர் விரிவாக எழுதுவேன்.

இனி, இப் பள்ளிக்கூடங்களின் தலைமை ஆசிரியர்கள் 36. இதில் தமிழர்கள் 12 பேர்களே, மீதி 24 பேர்களும் பார்ப்பனர்கள். இதிலும் மானேஜ்மெண்ட் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர்கள் அத்தனை பேரும் (லூதர் மிஷன், கிறிஸ்டியன் பள்ளிக்கூடங்கள் தவிர) பார்ப்பனர்களே. இதில் தமிழர்களால் நடத்தப்படும் பள்ளிகள் பல இருந்தும் ஆசிரியர்கள்—தலைமை ஆசிரியர்கள் பார்ப்பனர்களே! இதற்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை!! இருப்பினும் இப் புள்ளி விபரங்களை வெளியிட்டால், இதைப் பார்த்தேனும் நம் நீதிக் கட்சித் தலைவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்; நம் தமிழர்களும் உணர்ந்து ஆவன செய்வார்கள் என்றும் அவாவு பற்றியே இதை எழுதலானேன்.

—(குடி அரசு)

'கிராம ஊழியன்'

கிராமப் புனருத்தாரணத்திற் குழைப்பது. பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்ற மொன்றையே லக்ஷியமாகக் கொண்டு, சாதி, சமயப் பூசல்களை ஒழித்து, விவசாயிகள், தொழிலாளர் குறைகளை முறையிட்டு அகற்றும் நோக்கங்கொண்டு மாதம் இரு முறை வெளிவரும் பத்திரிகை. வருட சந்தா ரூபா 2—0—0

மானேஜர் :— கிராம ஊழியன்,
துறையூர். (திருச்சி ஜில்லா)

விடுதலை யாவதி யாதெனக் கேட்பீராயின்
கெடுதலை நீக்கி நடுநிலை நின்று
[நாட்டினரெல்லாம்
பொருள் சுகப்பேறுகள் சாலவும் பெற்று
இருமிக வாழ்தலே யாம்

விடுதலை

VIDUTHALAI

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்று நின்ற
செம்மொழியை திருமொழியை
[தேன்மொழியை
தனித்தியங்கும் ஆற்றலுள தொன்மொழியை
[அமிழ்தனைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
[அனுதினமும் பழக்கம் செய்வீர்.

மலர்–1] சென்னை: (6–5–1936) தாது௵ சித்திரை௴ 24௳ புதன்கிழமை [இதழ்–96

மதுரை

சுதேசி பொருட்காட்சி சாலை திறப்பு விழா

(நமது நிருபர்)

மதுரை, மே, 4

சைத்திரோத்சவத்தை முன்னிட்டு ஏற்படுத்தியுள்ள சுதேசி பொருட்காட்சி சாலையை 1-5-36-ந் தேதி சென்னை வர்த்தக சங்கத் தலைவர் சேனகர் வி. அப்துல் அகிம் சாஹிப் திறந்துவைத்தார். மேற்படி பொருட்காட்சி சாலை வழக்கம் போல் சேதுபதி ஹைஸ்கூலில் ஏற்படுத்தி இருக்கிறது. இக்காட்சி 1-5-36 முதல் 20-5-36 முடிய நடைபெறும். பொருட்காட்சியை கண்டு களிக்க விரும்புவோர் டிக்கட் வாங்கிக்கொண்டுதான் உள்ளே பிரவேசிக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்படுத்தியிருப்பது பலருக்கு அசௌகரியத்தைக் கொடுக்கக் கூடியதாக இருப்பதால் அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்த நிர்ப்பந்தத்தை நீக்குவார்களென்று எதிர் பார்க்கப்படுகிறது.

தேவஸ்தானக் கூட்டம்

இராமேஸ்வரம் தேவஸ்தானக் கமிட்டி கூட்டம் 1-5-36-ந் தேதி தேவகோட்டையில், ஜெமீன்தார் பங்களாவில் நடைபெற்றது. 5 மெம்பர்களுக்கு மூன்று பேர் விஜயம் செய்திருந்தார்கள். அத்துடன் தேவஸ்தானம் டிரஸ்டி திரு. என். ஆர். சுப்பிரமணியராஜாவும் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். தேவஸ்தானத்தின் 1346 பசலி நிலுவை பட்ஜெட் 1346-47 பசலி பட்ஜெட் எஸ்டிமேட் ஆகியவைகள் சில மாறுதல்களுடன் சாங்ஷன் செய்யப்பட்டது. பின்னர் இராமேஸ்வரம் கோவில் டிரஷரரின் சம்பளத்தை ரூ. 50-லிருந்து 75 ஆக உயர்த்தப்பட்டது. பின்னர் மற்ற இதர விஷயங்களைக் குறித்து பேசிய பின் கூட்டம் கலைவுற்றது.

தூத்துக்குடி

போல்டன் துரை மரணத்திற்கு அநுதாபம்

(ஒரு நிருபர்)

தூத்துக்குடி, மே, 4

தூத்துக்குடி போல்டன் புரத்தில் ஆதித்திராவிட தெருவில் எஸ். பி. ஜி. கோவில் முன் காலி மனையில் மேற்படியூர் முனிசிபல் கவுன்சிலரும் பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பருமான, திரு. டி. சித்திரை ஜேக்கப் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரையில் காலஞ்சென்ற கனம் போல்டன் துரை ஆதித்திராவிடர்களுக்கு செய்த நன்மைகளையும், மேற்படி ஏழை ஜனங்களுக்கு தர்மமாக நிலம் சரி செய்து குடியேற்றி வைத்த ஞாபகார்த்தமாக. இந்த தெருவுக்கு போல்டன் புரம் என்ற நாமம் ஏற்பட்டதையும் சாங்கோபாங்கமாக பேசியபின் தூத்துக்குடி முனிசிபல் கவுன்சிலர் திரு. எஸ். மாடசாமி கனம் துரையின் மரணத்தைப்பற்றி துக்க சாகரத்தோடு அவர் செய்த நன்மைகளை எடுத்துக்கூறி இரண்டு நிமிஷம் மவுனமாக ஜனங்கள் எழுந்து நிற்க கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

காலஞ்சென்ற கனம் போல்டன் துரை ஐ. சி. எஸ். மரணத்தைப் பற்றி மேற்படியாரின் மனைவியாருக்கு தூத்துக்குடி ஆதித்திராவிடர்கள் தமது ஆழ்ந்த அநுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கம்

நிறைவேறிய தீர்மானங்கள்

திருச்சி, மே, 4

1936-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 30-ந் தேதி மாலை 6-மணிக்கு சங்க மைதானத்தில் டிஷ சங்கத்தின் நிர்வாக அங்கத்தினர் தோழர் எஸ். தம்பி ஆறு செட்டியார் தலைமையின் கீழ் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அது சமயம் ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

தலைவர் முகவுரையாக 26-4-36-ந் தேதி திருச்சியில் நடைபெற்ற வருடாந்திர கூட்டத்தின் நடவடிக்கைகளைப் பற்றியும், டிஷ வருடாந்திர கூட்டம் நடைபெற வொட்டாது அடியாட்களை வைத்துக்கொண்டு கூட்டத்தை நடத்த வொட்டாது ஆர்ப்பாட்டம் செய்த அவதானியின் நடத்தையைக் கண்டிக்கப் பேசி எவ்வித சச்சரவின்றி டிப்டி போலீஸ் சூப்பரின்டெண்டின் உத்திரவிற் கிணங்க மகாநாடு இனிது நிறைவேறியதைப் பற்றியும் வெகு தெளிவாக எடுத்துரைத்தார்.

பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

26-4-36-ல் சின்னக் கடைத் தெரு 6-ஜெ. வீட்டில் நடைபெற்ற வருடாந்திரக் கூட்ட தீர்மானங்களையும், அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்க உத்தியோகஸ்தர்களையும் இக்கூட்டம் மனப் பூர்வமாய் ஒப்புக் கொள்கிறது.

ரெயில்வே ஆட்குறைப்பு திட்டத்தை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

ரயில்வே தொழிலாளர் சங்கத்திற்கு சம்பந்தமில்லாதவரும் சங்க முன்னேற்றத்திற்கு இடையூறு இழைத்துவருபவருமான திரு. அவதானியின் நடத்தையை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன் அவருக்கும் நமது சங்கத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லையென்பதை தொழிலாளர் உலகம் அறிவதுடன் நமது சங்கத்தின் பெயரை வைத்துக் கொண்டு போடும் கூட்டத்தை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன் அல்லாது சங்கத்தின் பெயரால் சங்கத்திற்கு சம்பந்தமில்லாதவர்கள் கூட்டம் போடுவதைப்பற்றி தகுந்த நடவடிக்கை எடுத்துக் சொல்லும்படி பொதுக் காரியதரிசி திரு. டி. வி. கே. நாயுடுவை இக்கூட்டம் கேட்டுக்கொள்வதுடன் அதிகாரிகளும் பத்திரிகை ஆசிரியர்களும் மேற்படியார்களின் வார்த்தையை நம்பக்கூடாதென்று தெரிவித்துக் கொள்கிறது.

தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் திரு. ஜம்னாதாஸ் மேத்தா பம்பாய் மேயரானதைப்பற்றி இக்கூட்டம் தனது சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

பின்னர் தோழர்கள்: தங்கவேலு பிள்ளை, சையது கலிமான், டி. என். சுந்தரமூர்த்தி முதலியவர்கள் மே தினத்தைக் கொண்டாட வேண்டியதும், காசையிலிருந்து வந்திருக்கும் சிறை சென்ற தலைவர் திரு. டி. பி. ஆறுமுகம் பிள்ளை சொற்பொழிவு நிகழ்த்தியதும் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூற பின்னர் தலைவர் முடிவுரைக்குப்பின் இரவு 8-30 மணிக்கு இனிது கலைந்தனர். என காரியதரிசி எழுதுகிறார்.

சென்னை சுயமரியாதை இளைஞர் கழகம்

நிறைவேறிய தீர்மானங்கள்

(ஒரு நிருபர்)

சென்னை, மே, 4

சென்னை சுயமரியாதை சமதர்ம சங்கங்களின் ஆதரவில் சென்ற வெள்ளிக்கிழமை மாலை 5-15 மணிக்கு வாடியா பார்க்கில் திரு ஆர். டி. ஜயாகண்ணு தலைமையில் 'மே' தினக் கொண்டாட்டம் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள்: சி. என். அண்ணாதுரை எம். ஏ. உடுமலை கனகராஜன், காஞ்சி கல்யாணசுந்தரம், நாராயணன் நாயர், கே. ஆர். யதிராஜ் ஆகியவர்கள் 'மே' தினம் என்பதுபற்றி பேசினார்கள். பிறகு கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேறின.

தீர்மானங்கள்

பக்கிங்காம் கர்னாட்டிக் மில் மெகானிக் டிபார்ட்மெண்டு தொழிலாளிகளில் 106 பெயரை திடீரென்று எடுத்துவிட்டதற்காக இக்கூட்டம் வருந்துவதுடன் இவ்விஷயத்தில் கவர்ன்மெண்டார் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு மறுபடியும் அவர்களை வேலையில் எடுத்துக் கொள்ள ஏற்பாடுகளை செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறது.

சர்வதேச சங்க சுற்றறிக்கையில் தொழிலாளிகளுக்கு வருஷத்தில் 6 நாளாவது சம்பளத்தோடு லீவு கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டதை இந்திய கவர்ன்மெண்டார் நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்வதுடன் குறைந்தது 'மே' தினமாகிய தொழிலாளர்களின் தினத்தையாவது சம்பளத்துடன் விடுமுறை நாளாக வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறது.

சர்வதேச தொழிலாளர் சங்கத்தின் சுற்றறிக்கை பிரகாரம் வாரம் 40 மணி நேரம் வேலை திட்டத்தை இந்திய கவர்ன்மெண்டார் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இக்கூட்டம் வற்புறுத்துகிறது.

இந்திய சட்டசபையில் நிறைவேறிய சர். மோடி என்பவரின் சம்பள பட்டுவாடா திருத்த மசோதாவை இக்கூட்டம் வன்மையாக கண்டிப்பதுடன் மேற்படி திருத்த மசோதாவை நிராகரிக்க வேண்டுமென்று இந்திய கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

சிந்தாதிரிப்பேட்டை சுயமரியாதை சங்கம்

நிறைவேறிய தீர்மானங்கள்

(ஒரு நிருபர்)

சென்னை, மே, 4

சிந்தாதிரிப் பேட்டை சுயமரியாதை சங்க நிர்வாக அங்கத்தினர் கூட்டம் 30-4-36 வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு உபதலைவர் தோழர் எம். வி. தேவதாஸ் தலைமையின் கீழ் கூடிற்று அப்போது கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின:—

பொதுத் தொண்டே கலைமேனக் கருதி, உழைத்து வந்த சுயமரியாதை வீரர் இளைஞர் தோழர் டி. வி. சுப்ரமணியம் தனது 38-வது வயதில் திடீரென்று அகால மரணம் அடைந்ததை முன்னிட்டு இக்கூட்டம் வருந்துவதுடன் அன்னாரின் குடும்பத்திற்கு தங்களது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

தோழர் ஜவஹர்லால் நேரு தனது குமாரத்தியாகிய இந்திரா நேருக்கு ஆங்கிலத்தில் எழுதிவந்த கடிதங்களை அதிக சிரமத்துடன் தமிழில் மொழிபெயர்த்து 'தமிழ் நாடு' பத்திரிகையில் தினசரி வெளியிடுவதை பாராட்டுவதுடன் அக்கட்டுரையை புஸ்தகமாக அச்சிட்டு வெளியிடும்படி மேற்படி பத்திரிகையின் மானேஜரையும் ஆசிரியரையும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பிராமணர் அல்லாதாருக்காக வாரம் இருமுறை உழைத்து வரும் "விடுதலை" பத்திரிகையை தினசரியாக்கும்படி மேற்படி கட்சித் தலைவர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பல்லாவரம் வாலிபர் சங்கத்தின் அங்கத்தினர் தோழர் ஏ. அந்தோணிராஜ் என்பவரை கடந்த 24-4-36 தேதி வெள்ளிக்கிழமை அன்று அக்ரஹாரம் வீதியாய் சென்றுக் கொண்டிருந்தபோது ஒரு ஆரியன் திமிர் கொண்டு மேற்படி அந்தோணியை செருப்பால் அடித்ததை இக்கூட்டம் வன்மையாய் கண்டிக்கிறது.

தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இரவு 9-30 மணிக்கு இனிது கலைந்தது.

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்

சென்னை, மே, 4

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றத்தின் விசேஷ அவசர பொதுக் கூட்டம் (அங்கத்தினர்கள்) சென்ற வியாழக்கிழமை மாலை 6-30 மணிக்கு மன்றக் காரியாலயத்தில் உபதலைவர் தோழர் கே. எம். பாலசுப்ரமணியம் பி. ஏ. பி. எல். தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

தீர்மானங்கள்

இந்தக் கூட்டம் இப்போது சங்கத்தின் காரியதரிசியான தோழர் எம். என். முத்து என்பவரிடம் நம்பிக்கையை இழந்துவிட்டதால் அவரை காரியதரிசி பதவியிலிருந்தும் கமிட்டி அங்கத்தினர் பதவியிலிருந்தும் நீக்க தீர்மானிக்கிறது.

இந்தக் கூட்டம் தோழர் என். சங்கரனை முழுமனதுடன் இச்சங்கத்தின் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கிறது.

இந்தச் சங்கத்தின் கமிட்டியில் காலியான ஸ்தானத்தில் தோழர் டி. பி. பி. சாமியை இக்கூட்டம் தேர்ந்தெடுக்கிறது என காரியதரிசி எழுதுகிறார்.

பாமா பரிணயம்

அல்லது

ச்யமந்தகமணி

மிகவும் உன்னதமான புராண தமிழ் பேசும் படம்.

உங்கள் அன்பும் ஆதரவும் பெற்ற உயர்தர நடிக ரத்தினங்கள்:

மிஸ். டி. பி. ராஜலக்ஷ்மி — செருகளத்தூர் சாமா
மிஸ். எஸ். பி. லெக்ஷ்மி — வித்வான் சீனிவாசன்
மிஸ். எஸ். எஸ். ராஜாமணி — ராஜா எம். ஜி. தண்டபாணி
மிஸ். கே. ரங்கநாயகி — ஆர். நடேசய்யர்
எம். ஏ. ராஜாமணி

மற்றும் இதர நடிகர்கள்.

கதை அமைப்பு டைரக்ஷன் } மிஸ்டர் ஓய். வி. ராவ்: டைரக்டர்.

சென்னை நேஷனல் மூவிடோனில் தயாராகி வருகிறது.

தயாரில் இருக்கும் படங்கள்:—

கோவலன் லலிதாங்கி தூக்கு-தூக்கி கிருஷ்ண-அர்ஜுன.

ராயல் டாக்கி டிஸ்டிரிபியூட்டர்ஸ், மதுரை.

இடி முழக்கமல்ல! தாரையின் முழக்கமே தரணியை செவிடுபடச் செய்கிறது.

தமிழ் டாக்கிகளுக்கெல்லாம் தலைமை வகிப்பது எது? லீலா விநோத கோலாகலமான படம் எது? எது?
தாரணியிலே தனிப் புகழ் காட்டும் படம் எது? எது? எது?

அதுதான் - மிஸ். T. V. ராஜசுந்தரிபாய் நடித்த

1. தாரா - சசாங்கம்

என்ற ஒப்பற்ற தமிழ் பேசும் பாடும் படம். பிரபல நகரங்களில் நடைபெறுகிறது.

சென்னை பிலிம் போர்டு தேர்தலில் முதன்மை ஸ்தானம் பெற்ற
இந்திய நடிகை மிஸ். S. D. சுப்புலக்ஷிமி தனக்கு நிகரில்லை எனும் நடிப்புடன்;
Mr. C. V. V. பந்துலு, Mr. M. V. கிருஷ்ணப்பா, மிஸ். M. S. பட்டம்மாள்
முதலியோருடன் நடித்த

2. உஷா - கல்யாணம்

Miss S, D. சுப்புலக்ஷிமி, Mr. M. K. தியாகராஜ பாகவதர் ஒருங்கே சேர்ந்து நடித்ததும்
பிலிம் போர்டு தேர்தலில் முதல்தரமான தமிழ்ப் புராணப் படமெனத் தேர்ந்தெடுக்கப்பட்டதுமான

3. நவீன சாரங்கதரா

முருகன் டாக்கி பிலிம் கம்பெனி, 8, சின்னக் கடைத் தெரு, மதுரை.
Telegrams:—"TALKO FILMS" Telephone:—No. 53.

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN, AT THE JUSTICE PRINTING WORKS, 14 MOUNT ROAD, MADRAS.

விலை அரை அணா | 8 பக்கங்கள் | மலாய் நாட்டில் 5 சதம் | Regd. No. M 3298.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா

உள்நாடு

1 மாதம்	...	0 6 0
3 மாதம்	...	1 0 0
6 மாதம்	...	1 14 0
1 வருடம்	...	3 10 0

சென்னைக்கு

1 மாதம்	...	0 4 0
3 மாதம்	...	0 10 0
6 மாதம்	...	1 4 0
1 வருடம்	...	2 6 0

விடுதலை

VIDUTHALAI

(வாரம் இருமுறை வெளிவரும்)

ஆசிரியர்: டி. ஏ. வி. நாதன்.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா

வெளிநாடு

1 மாதம்	...	0 10 0
3 மாதம்	...	1 14 0
6 மாதம்	...	3 12 0
1 வருடம்	...	7 4 0

சர்க்கார், முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டுகளுக்கு:

உள்நாடு:	வருடம்	ரூ. 7 8 0
சென்னை:	"	ரூ. 4 8 0

மலர்-2] சென்னை: (3-6-1936) தாது௵ வைகாசி௴ 21௳ புதன்கிழமை [இதழ்-1

ராம ராஜ்யம் வரப் போகிறதாம்!

காங்கிரஸ் ஆட்சியில் மக்களுக்கு ஆயுள் வளரும்

திரு. சி. அப்துல் ஹகீம் சாயபுக்கு திரு. ஆச்சாரியார் சிபார்சு செய்யவில்லையாம்!

10 வருஷத்தில் வைஸ்ராய், கவர்னர் மாளிகைகளின் மீது தேசியக் கொடி

ஆரணி கூட்டத்தில் திரு. சத்தியமூர்த்தியின் பேச்சு

சுடச்சுட கேள்விகளுக்கு வழவழ பதில்; சில கேள்விகளுக்கு பதிலுமில்லை

(நமது நிருபர்)

ஆரணி, மே, 31

நேற்று மாலை 6 மணிக்கு ஆரணியில் கூடிய ஓர் பொதுக்கூட்டத்தில் திரு. சத்தியமூர்த்தி பேசியதின் சாராம்சம் வருமாறு:—

ஆரணி வாசிகள் தனக்கு கொடுத்த வரவேற்பு வைபவங்களுக்கு நன்றியறிதலை சொல்லிவிட்டு தான ஆரணிக்கு வந்து பல வருடங்களாகியும் தனக்கு ஆரணி வாசிகள் அவ்வளவு உபசாரம் செய்தது தனக்கல்ல வென்றும், எல்லாம் காங்கிரஸுக்குத் தான் என்று சொல்லி மேலே பேசியதாவது:-எங்கும் காங்கிரஸை பலப்படுத்த வேண்டும். தன் கட்டளைப்படி 21 ஜில்லா போர்டு மெம்பர்கள் ராஜிநாமாசெய்தார்கள். மீண்டும் ஜில்லா போர்டுக்கு தான் அபேக்ஷகர்களை நிறுத்தி வைக்கப்போவதாகக் கூறினார். அவர்களை மீண்டும் ஆதரிக்கும்படியும் ஜனங்களை வேண்டிக் கொண்டார். ஒரு நாள் கூட போர்டில் உட்காராமல் கட்டுப்பாட்டை அநுசரித்து ராஜிநாமா செய்து விட்ட அந்த 21 பேரையும் புகழ்ந்தார். காந்தி படேல் முதலியவர்கள் இதைக் கண்டு சந்தோஷப்படுகிறார்களாம். காங்கிரசுக்கு பணமும், சர்க்கார் தயவும் இல்லையாம்- திரு. வி. ஜி. சேஷாசல செட்டியாரையும், திரு. என். ஏ. ஆலால சுந்திர முதலியாரையும் மீண்டும் ஜில்லா போர்டுக்கு நிற்கும்படி வேண்டிக் கொண்டார்-திரு. என். ஏ. ஆலால சுந்திர முதலியாரும் அவர் உத்திரவுப்படி நடப்பதாக ஒப்புக்கொண்டார். திரு. சேஷாசல செட்டியார் மௌனமாகவே இருந்தார்.

சவுகார் சி. அப்துல் ஹகீம் பேரில் கோபம் ஒன்றுமில்லையாம். கட்டுப்பாட்டுக்கு இணங்கியே அவர்கள் மீண்டும் அபேக்ஷகர்களை நிறுத்தப்போகிறார்களாம். இதை பகிரங்கமாக சொல்கிறாராம். திரு. சி. ராஜகோபாலாச்சாரியார், ஹகீம் சாயபுவுக்கு ஜில்லா போர்டு தலைவர் பதவிக்கு சிபார்சு செய்யவில்லையாம். யாரோ சிலர் விஷயத்தை திரித்துக் கூறுகிறார்களாம். திரு. சி. அப்துல் ஹகீமுக்கு அவர் லெட்டர் எழுதவில்லையாம். அந்த லெட்டரை காண்பிக்கும்படி சொல்கிறார் நமது மூர்த்தி. தந்தி மாத்திரம் சவுகாரிடமிருந்து வந்ததாம். அதற்குக் கூட அவர் பதில் தந்தி கொடுக்கவில்லையாம். ஜனங்களுடைய மனப்பான்மை அவருக்கு தெரியுமாம். அவர் தூங்கி 6 மாதம் ஆய் விட்டதாம், வாக்காளர்கள் அதிகப்பட வேண்டும். அது தான் ஜனநாயக ஆட்சி என்று சொன்னார்!

காங்கிரசுக்கு ஏராளமான மெம்பர்கள் சேர்ந்தால், எதிரிகள் தேர்தலிலேயே நிற்க மாட்டார்களாம். காங்கிரசுக்கு ஜாதி வித்தியாசம் இல்லையாம். சர்க்காருக்கு காங்கிரஸ் இடத்தில் பயமும், மரியாதையும் உண்டாம், அஹிம்சா முறையில் சுயராஜ்யம் பெற முடியுமாம். 1931-ல் உப்பு சத்தியாக்கிரகத்தையும், காந்தி இர்வின் ஒப்பந்தத்தையும் புகழ்ந்து பேசி விட்டு கிராம பஞ்சாயத்து முதல் அசம்பிளி வரையில் காங்கிரஸ்காரர்கள் கைப்பற்ற வேண்டுமாம். இந்த தேசம் விடுதலைக்கு அன்று சிலர் முட்டுக் கட்டையாய் இருந்தார்கள். இன்று பொப்பிலி ராஜா முட்டுக்கட்டையாய் இருக்கிறாராம். தேசத் துரோகிகளுக்கு இந்த நாட்டில் மதிப்பில்லையாம். மேலே பேசுகையில் தான் அசம்பிளியில சாதித்ததை எடுத்து விளக்கி சர்க்காருக்கு எப்போதும் தோல்வியே ஏற்பட்டதாகவும் கொக்கரித்தார்.

ஒட்டவா ஒப்பந்தத்தை முறியடித்து விட்டாராம். தாங்கள் பட்டம் பதவிகளுக்கு ஆசைப்படுவதில்லையாம், இந்த நாட்டை அன்னியர் ஆளக்கூடாது, நாம்தான் ஆள வேண்டும் என்று சொன்னார்.

காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவி ஏற்றால் ஏழைகளுக்கு நல்ல காலம் ஏற்படுமாம், வரி குறையுமாம், குடிசைத்தொழில் ஓங்குமாம், ஆஸ்பத்திரிகள் ஏற்படுமாம், நல்ல ரோட்டுகள் ஏற்படுமாம், எல்லா லக்ஷியமும் கைகூடுமாம், மக்களுக்கு ஆயுள் விருத்தியாகுமாம், தமிழ் நாட்டில் 3 லட்சம் காங்கிரஸ் மெம்பர்களும், இந்தியாவில் 3 கோடி மெம்பர்களும் சேர்ந்தால் சர்க்கார் பயந்து விடுமாம்.

சர். ஷண்முகம், திரு. ஏ. ராமசாமி முதலியார் இவர்கள் பேச்சைக் கேட்டு, அசம்பிளி கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தல் நடத்த லார்டு வில்லிங்டன் ஏற்பாடு செய்தாராம். தேர்தலில் சர். ஷண்முகமும், திரு. ஏ. ராமசாமியும் தோல்வியடைந்ததைச் சொல்லி, தான் தேர்ந்து எடுக்கப்பட்டதையும் பெருமை பாராட்டிக் கொண்டார் இதற்கு சமஸ்கிருதத்தில் ஓர் பாட்டு சொல்லி, கேலியாய் பேசினார். வைஸ்ராயை தங்கள் கட்சியார் அலக்ஷியப்படுத்தியதை பெருமையாய்ப் பாராட்டிக் கொண்டார்.

திரு. சத்தியமூர்த்திக்கு கேள்விகள்

சிறை சென்றவரும் இவ்வூர் காங்கிரஸ் தொண்டருமான திரு. ராஜகோபால் நாயுடு கீழ்க் கண்ட கேள்விகளைக் கேட்டார்.

கேள்வி:—ஆனைமலையில் வெள்ளையர் சங்க கூட்டத்தில் காங்கிரஸ் லக்ஷியம் பூரண சுயராஜ்யம் இல்லை என்றும், குடியேற்ற நாட்டு அந்தஸ்து கிடைத்தாலே போதுமென்று பேசி இருக்கிறீர்களே, இது காங்கிரஸ் லட்சியத்தைக் காட்டிக்கொடுத்ததாகாதா?

திரு. சத்தியமூர்த்தி:—நான் அப்படி ஒன்றும் சொல்லவில்லை.

இவர் குடியேற்றநாட்டு அந்தஸ்து கிடைத்தாலே போதுமென்று பேசி இருப்பது, "தமிழ் நாடு" தின மணி" பத்திரிகைகளில் பிரசுரமாய் இருக்கிறது.

காங்கிரசுக்கு நேர் விரோதமான இத்தகைய அபிப்ராயத்தை உடைய தாங்கள் 'தமிழ்நாடு' காங்கிரஸ் கமிட்டி தலைவர் பதவியை ஏன் வகித்து வருகிறீர்கள்?

திரு. சத்தியமூர்த்தி:—இதற்கு பதில் சொல்லவில்லை.

கேள்வி:—மாயவரத்திலும், இன்னும் மற்ற இடங்களிலும் சமதர்மத்தை எதிர்த்து பேசி இருக்கிறீர்களே, சமதர்மத்தின் மீது தங்கள் உண்மை கருத்து என்ன?

திரு. சத்தியமூர்த்தி:—இது என் சொந்த அபிப்பிராயம் சமதர்ம கொள்கையை நான் விரும்பவில்லை. 27 சோஷ்யலிசம் இருக்கின்றது. எதை எடுத்துக் கொள்வது என்று தெரியவில்லை முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இருக்கிற வித்தியாசத்தைப் பற்றி பேசலாம். சமதர்மத்தில் அநேக அம்சங்கள் உண்டு ஏழைகளுக்கு சம உரிமை வேண்டும்.

(4) கேள்வி:— சென்ற விடமெல்லாம் மந்திரி பதவியும், கவர்னர் பதவியும், தாங்கள் வகிக்க வேண்டுமென்றும் தாங்கள் ஆசைப்படுவதும், அதைப்பற்றி பேசுவதும் வாடிக்கையாய் கொண்டு இருக்கிறீர்களே பதவி மோகத்துக்குத் தான் தாங்கள் காங்கிரசில் தலைவர் பதவி சுமந்து கொண்டு இருக்கிறீர்களா?

திரு. சத்தியமூர்த்தி:—மகாத்மா வைசிராய் ஆக வேண்டுமென்று சொல்லவில்லையா. நான் ஏன் சொல்லக் கூடாது, நான் ஏன் மந்திரியாய் வரக்கூடாது, நான் என்ன பறயனா பொப்பிலியும், குமாரசாமி செட்டியாரும், மந்திரியாய் இருக்கும் போது நான் மந்திரியாய் இருக்க முடியாதா; எனக்கு யோக்கியதை இல்லையா.

ஒருவர்:—சேதுரத்தினம் மந்திரியாய் வரவில்லையா.

திரு. சத்தியமூர்த்தி:— அவன் கிடக்கிறான்!

கேள்வி:— மந்திரி பதவி ஏற்றபின் சீர்திருத்தத்தை தடுக்க முடியுமா?

இதற்கு பதில் இல்லை.

இத்தகைய அபிப்பிராயம் கொண்டுள்ள தங்கள் கொள்கைக்கும், ஜஸ்டிஸ் கொள்கைக்கும் என்ன வித்தியாசம். இதற்கு பதில் திரு. சத்தியமூர்த்தி சொல்லவில்லை மேலே பேசுகையில் திரு. சத்தியமூர்த்தி கூறியதாவது:—

இம்மாதிரி கேள்விகள் கேட்கப்படாது. என்னிடம் நேரில் வந்து கேட்கிறது நானே, எதற்காக கேள்வி அச்சடித்து கொடுக்க வேண்டும் என்று சொன்னார். காங்கிரஸ் மந்திரிகள் 500 ரூ. சம்பளம் பெறுவார்கள் என்றும் ஜேபியில் ராஜினாமா கடிதம் எப்பொழுதும் இருக்குமென்றும் சொன்னார் எதிரிகள் நகைக்கும்படி கேள்வி கேட்கக்கூடாதென்றார். நான் ஈஸ்வரன் அல்ல தனியாக நேரில்வந்து கேள்வி கேட்கலாம் என்றார்- ராம ராஜ்யம் வரப்போகிறது. அது தான் உண்மையான சுயராஜ்யம் அந்த ராஜ்யத்தில் எல்லோருக்கும் சவுகரியம் உண்டு, ஜஸ்டிஸ் கட்சி வேண்டாமென்றும், சுயராஜ்யம் வரத்தான்போகிறதுஎன்று சொல்லி 10 வருடத்திற்குள் வைசிராய் கவர்னர் மாளிகைகளில் தேசியக் கொடி நட்டுவோம் என்று பேசினார். ஆரணி யூனியன் போர்டில் அவருக்கு ஓர் உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. இப்போர்டு கலையுந் தருவாயில் இருக்கிறது. 10 மெம்பர்களில் 6 பேரே உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுப்பதற்கு ஆதரவளித்தார்கள்.

திரு. சத்திய மூர்த்தியின் விஜயத்தை முன்னிட்டு ஜில்லாவிலுள்ள காங்கிரஸ்காரர்கள் எல்லோரும் விஜயம் செய்து இருந்தார்கள். பெருமாள் சாமி ரெட்டியார் பாக சங்கர், கோபால கிருஷ்ணன், க. அண்ணாமலை பிள்ளை, குப்புசாமி முதலியார் உபய தல்லா முதலியவர்கள் விஜயம் செய்து இருந்தார்கள்.

தமிழர் சுயமரியாதை காப்பாற்றப்பட்டது

திரு. மு. இராகவ அய்யங்காரின் தொல்காப்பிய ஆராய்ச்சி கண்டனம்

திரு. ஆர். நரசிம்ம செட்டியார் தீர்மானம்

ஏகமனதாய் நிறைவேறியது

(நமது நிருபர்)

சேலம், மே, 28

இன்று காலை 8-மணிக்கு முனிசிபல் சேர்மன் திரு. பி. ஏ. ராஜரத்தினம் தலைமையில் கூடிய முனிசிபல சபைக் கூட்டத்தில் திரு. ஆர். நரசிம்ம செட்டியார் கொண்டுவந்த கீழ்க்கண்ட தீர்மானம் விவாதமின்றி ஏகமனதாக நிறைவேறியது

தீர்மானம்

"திரு. மு. இராகவய்யங்கார் எழுதியுள்ள தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சியில் "தமிழ் மக்களுடைய பண்டைக்கால நாகரீகத்தை மிகவும் இழிவு படுத்தியிருப்பதால் அப்புத்தகத்தை பாட புத்தகமாக வைத்திருப்பதை எடுத்து விட வேண்டுமாய் யூனிவர் சிடியாரைக் கேட்டுக் கொள்ளுகிறது."

இம் முனிசிபல் கூட்டத்திற்கு ஜஸ்டிஸ், சுயமரியாதை காங்கிரஸ் ஆகிய பல கட்சியையும் வகுப்பையும் சேர்ந்த கவுன்சிலர்கள் வந்திருந்தும் இத் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியதிலிருந்து இப் பிரச்னையை ஒருசாரார் கிளர்ச்சி என யுனிவர்சிடியாரும் புறக்கணிப்பதற்கில்லை எல்லாகட்சியையும் சேர்ந்த பிராமணரல்லாதாரும் திரு. அய்யங்காரின் ஆராய்ச்சியை முழுமனதோடு வெறுக்கிறார்கள் என்பதை சேலம் முனிசிபல் சபைத் தீர்மானம் நிரூபித்துக் காட்டி விட்டது. இம்மாதிரி முக்கியமானபிரச்னைகளில் பொதுஜன அபிப்பிராயத்தை எடுத்துக் காட்டுவதற்கு இம்மாதிரியான சபைகளின் தீர்மானங்கள் சாதகமான கருவி என்பதில் ஆக்ஷேபனை இருக்க முடியாது. இதைப் பின்பற்றி மற்ற முனிசிபாலிடிகளிலும் ஜில்லா போர்டுகளிலும் தீர்மானங்கள் செய்து தமிழர்களின் மானத்தையும், சுயமரியாதையையும் காப்பாற்ற வேண்டியது அவசியம் இது சம்பந்தமாய் தமிழ் நாட்டில் பொது மக்களால் எவ்வளவோ கிளர்ச்சி செய்யப் பட்டும், கூட்டங்களில் தீர்மானங்கள் செய்து யுனிவர் சிடியாருக்கும் சர்க்காருக்கும் அனுப்பிவைத்திருந்தும் இதுவரை கவனிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் ஸ்தல ஸ்தாபனங்களில் இம்மாதிரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

இது சம்பந்தமாய் சிரமம் எடுத்துக் கொண்டு இத்தீர்மானத்தை இவ்வளவு வெற்றி கரமாய் நிறைவேற்றிவைத்தமைக்காக கவுன்சிலர் திரு. ஆர். நரசிம்ம செட்டியாரை தமிழ் மக்கள் போற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை. பொதுவாகவே திரு. செட்டியார் தமிழ் வளர்ச்சியிலும் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திலும் ஆர்வமுள்ளவர். சேலம் செந்தமிழ்ச்சங்கத்தில் நீண்டகாலமாகவே தலைவராக இருந்து அரும் பெரும் தொண்டுகள் செய்திருக்கிறார் என்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடாமலிருப்பதற்கில்லை.

லண்டன் மீது வெடிகுண்டு எறியப்பட்டால்

விமானமூலம் லண்டன்மீது வெடி குண்டு எறியப்பட்டால், லண்டன் மியூஸியத்திலும், சித்திர கூடங்களிலும் வைக்கப்பட்டிருக்கும் தேசியப் பொக்கிஷங்களின் கதி என்னவதென்று கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு அவைகள் சேதப்படாமலிருக்கக் கூடிய பத்திரமான இடத்திற்குக் கொண்டுபோய் வைக்கப்படுமென தொழில்இலாகாமுதல் மினிஸ்டர் பார்லிமெண்டில் கூறினார்.

பருத்த திரேகத்தின் விளைவு

அமெரிக்காவில் அனுமதியில்லை

51 வயதுள்ள லங்காஷயர்வாசியாகிய மிஸ். ஜோரஸி பருத்த திரேகத்துடன் இருந்த காரணம் பற்றி அமெரிக்க சர்க்கார் தங்கள் நாட்டில் பிரவேசிக்க அனுமதி மறுத்து விட்டனர்.

காண்ஸ்டேபிள் எம். ஏ.

ஜூமில் ஆன் காண்ஸ்டேபின், ஸ்காட்லண்டின் இரண்டாவது ஸ்திரீ போலீஸ் உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார். எடின்பரோ சர்வகலாசாலையில் அவர் எம். ஏ. பட்டம் பெற்றிருக்கிறார். அவருக்கு வயது 26 தான்.

பரதன்

எழுதிய

பகிரங்கக் கடிதங்கள்

(1)

பண்டித ஜவஹருக்கு:

தோழரே வந்தனம்! ஆனந்த பவன வாழ்க்கையிலிருந்து கொண்டு அலகாபாத் நகரிலேயே அதிகமான வருமான வரி செலுத்துவதாகக் கூறப்படும் தாங்கள், சமதர்மம் பேசுவது பலருக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. எனினும், எனக்கு அதில் ஆச்சரியமேயில்லை. ஆனால், சமதர்மத்தைக் கரைத்துக் குடித்துள்ளதாகக் கூறப்படும் நீர், ஏன் அதைப்பற்றிப் பேசுங் காலத்து முன்னுக்குப் பின் முரண்படும் விதமாகப் பேசுகிறீர்; நடை முறையில் மார்க்கங்கள் வகுப்பதில் ஏன் அவ்வளவு தடுமாறித் திகைக்கிறீர் என்பது தான் எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. அன்று பம்பாயிலே, பத்திரிகா நிருபர்களிடம், "சமதர்மத்தை ஏற்படுத்த இரண்டு வழிகள் உண்டு. ஒன்று புரட்சி, அதில் எனக்கு விருப்பமில்லை. மற்றொன்று இருதரப்பினரும் ஒப்பந்தம் செய்து கொள்ளுதல், அது இந்தியாவில் நடை பெறாது. எனக் கூறினீர். தெரிந்த இருமுறைகளும் உதவாதெனத் தள்ளிவிட்டீர்; வேறு எந்த முறையைக் கொண்டு சமதர்மத்தை ஏற்படுத்தப் போகிறீர்?

பம்பாயில், காலையில், பத்திரிகை நிருபர்களிடம் பேசும்போது, "இந்தியா முதலில் சுதந்திர மடைய வேண்டும்; பிறகுதான் சமதர்மம் உதயமாகும்" என்றீர். அன்று மாலைப் பொதுக் கூட்டத்தில், "மதமுக்கியமன்று, அவசரமான பிரச்னைகள் யாவும் பொருளாதாரக் குறைகளே யாகும்" என்று பேசியிருக்கிறீர். இவ்விரு கூற்றுக்கும் முரண்பாடு ஏன்? மேலும், காந்தியாருக்கு நீர் கூறும் பொருளாதாரச் சமதர்மத்தில் விருப்பமில்லை என்பது நன்கு தெரிந்திருந்தும், காந்தியாரின் கொள்கையைப் பற்றிக் குறை கூறும் சமதர்ம வாதிகளை ஏன் நீர் மிரட்டுகிறீர்? இதன், புரட்சியின்றி, சட்ட ரூபமாக, ஏழைக் குடியானவர்களின் சௌகரியத்தின் பொருட்டு, ஜஸ்டிஸ் கட்சியினர் கொண்டுவந்துள்ள இனாம் மசோதாவை இந்தப் பிரதேச காங்கிரசார் எதிர்ப்பது, உமது சமதர்ம உள்ளத்தை வாட்டவில்லையா? வாட்டினால், ஏன் அவர்களுக்கு நீர் சரியான சூடு தரக்கூடாது? பொதுவான காரியங்களில் எல்லாக் கட்சியினரும் ஒன்றாகச் சேரவேண்டுமெனக் கோரும் நீர், ஏழைகளுக்காகக் காட்டும் அபிமானத்தை, உருவான சட்ட மூலமாகத் தெரிவிக்க ஜஸ்டிஸ் கட்சியார் கொண்டுவரும் இனாம் மசோதாவை ஆதரிக்க முன் வருவீரா?

இப்படிக்கு,
பரதன்.

(2)

பிரிட்டிஷ் பிரதம மந்திரி பால்ட்வினுக்கு:

ஆமாம், மிஸ்டர் பால்ட்வின்! இது ஏன் இப்படி ஒவ்வொருவராக, உமது மந்திரி சபையிலிருந்து வெளியேறியபடி இருக்கிறார்கள். முதலாவதாக, மாஜி இந்தியா மந்திரி, சர். சாமுவேல் ஹோர் ஓடி விட்டார். அவர் மீது குற்றமிருந்தது. ஆகவே, அவர் வெளியேறினார் என்றனர் பலர். ஒரு சிலர், பாவம் சர். சாமுவேல் ஹோர் பலிக்கடா வாக்கப்பட்டார். அவர் மீது மட்டும் பழியைச் சுமத்தி விட்டார்கள் என்று கூறினார்கள். பிறகு, மந்திரி சபையின் போக்கு தனக்குப் பிடிக்கவில்லை என்று சர் [illegible] பர்சி, தமது பதவியை ராஜிநாமா செய்து விட்டார். இப்போது, ஆசாங்க வரவு செலவு கணக்கில் ஏதோ சூது நடந்ததாக விசாரணை நடந்து வரும் சமயத்தில், திரு. தாமஸ், மந்திரி சபையினின்றும் விலகி இருக்கிறார். "உமது நிலைமையில் நானிருந்தால் நானும் ராஜிநாமா செய்துதான் இருப்பேன்" என்று நீரும் அவருக்குக் கடிதம் எழுதியிருக்கிறீர். என்னைப்போன்ற பாமரருக்கு, அடிக்கடி நடைபெறும் இந்த ராஜிநாமா சம்பவங்கள், சந்தேகத்துடன் கலந்த ஆச்சரியத்தைத் தருகிறது. எங்கள் தேசத்திலேகூட, இப்போது வேடிக்கையான ராஜிநாமா நடந்தது. கட்சித் தலைவர்களின் பட்டி நாடகத்தால் சில சபாசகள் வேலூர் ஜில்லா போர்டு தேர்தலில் நடைபெற்றன. கட்சித்தலைவர்கள், பக்குவசாலிகள், ஆட்டிவைப்பதில் "கைதேர்ந்தவர்கள்! காரியவாதிகள்!!" எங்கு தமது குட்டு வெளியாகி விடுகிறதோ எனப்பயந்து, அந்த ஜில்லா போர்டில், தமது கட்சியின் பெயரால் நின்ற மெம்பர்களில் பெரும்பான்மையினரை, ராஜிநாமா செய்யும்படி கட்டளையிட்டனர். அந்த மெம்பர்கள் காடிப்பானையில் விழுந்தனர். தலைவர்கள் பாடு சற்று க்ஷேமமாக முடிந்தது. இல்லையேல், எங்கே ஆரம்பித்தது குற்றம், என்று சற்று சாவதானமாகமட்டும் விஷயத்தை ஆலசிப்பார்த்திருப்பார்களேயானால், வீணுக்கு இத்தனை ஆசாமிகள் பலிக்கடாவாகி இருக்கமாட்டார்கள். எங்கள் ஊரிலே இது சேதி; அங்கு, அடிக்கடி ராஜிநாமா நடந்தபடி இருக்கும் காரணம் என்ன? விஷயம் சாதாரணமானதாக இருந்தால் நமக்கு எழுதவும். ஒரு வேளை அது அரசியல் இரகசியமாக இருந்தால், எப்படி உம்மால் எழுத முடியும்? எதற்கும் சற்று பொறுத்துப் பார்க்கிறேன்.

இப்படிக்கு
பரதன்.

(3)

பித்தாபுரம் மஹாராஜா சமுகம்:

ராஜாதி ராஜனே! ராஜமார்த்தாண்டனே! ஏதோ இந்த கஷ்ட காலத்திலே, நீர் அரசியல் நடத்த முன் வந்தது யார்செய்த புண்ணியமோ தெரியவில்லை. ஏதோ தங்களுடைய தயவினாலே, பத்துபேருக்கு அரசியலில் புதிய வேலை, அரசியல் பிழைப்பு ஏற்பட வழி உண்டாகும் போலிருக்கிறது. விஷயம் அகப்படாது இருக்கும் பத்திரிகைகளுக்குச் சற்று விநோதரசமஞ்சரி கிடைக்கும் சந்தர்ப்பத்தை அளித்த தங்களுக்கு, பத்திரிகை உலகின் சார்பாக அனந்தகோடி தண்டம் சமர்ப்பிக்கிறேன். ஆனால், மஹாராஜாவே கோபிச்சிக்கப் படாது, உமது கட்சிக்குக் கொள்கை என்ன வென்று புரட்டிப் புரட்டிப் பார்த்தாலும் ஒன்றும் தெரியவில்லை. ஆணுமல்ல பெண்ணுமல்ல, ஆனால் அலியென்றால் கோபங் கொள்வேன் என்று ஒரு பழங்காலத்துப் பேச்சிருக்கிறது. அப்படித் தாங்களாவது, தங்களுக்கு "பார்க்கு" கூறும் அன்பர்களாவது, என் மீது கோபித்துக் கொள்ளக் கூடாது. உள்ளபடி, ஒரு புத்தப் புதிதாக கட்சி முளைத்திருக்கிறதே, அது எப்படிப் பட்டது என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். மந்திரிப் பதவியை வகிக்கப் போகிறோமென்கிறீர்கள் - சரி—வேறுவேலையை வெறுத்து விடுங்கள்! எட்டினால் பேத்துக் கொள்ளுங்கள். எட்டாத கனிக்கு ஏணியிட்டும் பாருங்கள். அல்லது கிட்டாதாயின் வெட்டென மற என்ற சூத்திரத்தைக் கவனியுங்கள். அந்த விஷயமாக நீர் கவனித்து நடந்து கொள்ளுங்கள். முதலிலே, கொள்கை என்னவென்று கூற வேண்டாமா? ஒரு புத்திசாலிக் கிழவியாம், [illegible], பிளாட்பாரத்திலே உலாவிக் கொண்டிருந்தாளாம். [illegible] என்று இரக்கம்கொண்ட ஸ்டேஷன் மாஸ்டர், 'பாட்டி எத்தனையாவது வண்டிக்குக் காத்திண்டிருக்கே' என்று கேட்டார். நாம் போக வேண்டிய பெயரை இவனுக்கு ஏன் சொலவது என்ற எண்ணம் பாட்டிக்கு. ஆகவே, நான் [illegible] தஞ்சாவூருக்கு என்றாள் பாட்டி. "அதோ வந்துவிட்டதே தஞ்சாவூர் வண்டி" என்று ஸ்டேஷன் மாஸ்டர் கூறி, தஞ்சாவூர் போகும் வண்டியைக் காட்டினார். அதில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். பொக்கை வாய்தான் இருந்தாலும் சிரிப்பு பொங்கிற்று பாட்டிக்கு. வண்டி கிளம்பிய உடனே, ஸ்டேஷன் மாஸ்டரைப் பார்த்து "அடே வைத்தியக் காரா நான் உன்னை ஏமாத்திட்டேனே; நான் தஞ்சாவூருக்குப்போகலே; பம்பாய் போகறேன்" என்று நாம் பாட்டி, அதைப்போல, இவன் கேட்பதா, நாம் சொல்வதா என்று எண்ணிக்கொண்டு, ஏதேனும் அந்தப் பாட்டி மாதிரி செய்ய வேண்டாம். உங்கள் கட்சி அறிக்கையை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதிலே, முதலிலே, மாண்டேகு சீர்திருத்தத்தை, சென்னை மாகாணம்தான் ரொம்ப ஜோராக நடத்திக் காட்டிற்று என்று இருக்கிறது. சென்னையிலே அந்த வேலையைச் செய்த கட்சி, ஜஸ்டிஸ் கட்சி. அதற்கு 'சர்ட்டிபிகேட்' உம்மிடமிருந்து வந்தது, வயிஸ்ராய் வாயாலே [illegible] பட்டம் வாங்கினது போலாகும். உடனே, என்னடா இது மாட்டிக் கொண்டோமே, ஜஸ்டிஸ் கட்சி ரொம்ப ஜோராக, சீர்திருத்தத்தை வேலை செய்து காட்டிற்று என்று கூறி விட்டோமே, அப்போ, அந்தக் கட்சிதானே புதிய சிக்கலான சீர்திருத்தத்தை நடத்தி வைக்க லாயக்குள்ள கட்சி என்று ஜனங்கள் எண்ணிக்கொண்டு, கடைசியிலே ஏண்டா இந்த மஹாராஜா ஒரு படை திரட்டிக்கொண்டு வருகிறாரென்று கூறுவார்களே என்ற பயம் உங்களுக்கு உண்டாகி விட்டது போலத் தெரிகிறது. அதனால்தானே, இப்போது அதிகாரத்திலிருக்கிற கட்சி (ஜஸ்டிஸ்) க்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிற தென்பதைக் கூற வேண்டிய அவசியமில்லை என்று குசுகுசுவாக அறிக்கையிலே சொல்லியிருக்கிறது. இது என்ன விஷமத்தனம். தானே உள்ளதைமறைப்பது தானே உள்ளபடியே ஜஸ்டிஸ்கட்சிக்குச்செல்வாக்கு இல்லை என்றால், அதைக் கண்டு ஏனய்யா இப்படி பயப்படுகிறீர்கள். காங்கிரஸ் ஒரு பக்கம், தப்பு தண்டா செய்து, முலாம் பூசி உண்டி குலுக்கி, ஊரை வளையக் கட்டப் பார்க்கிறது. நீங்கள் வேறே, அங்கே, இங்கே ஆள் தேடிப் பிடித்து அவஸ்தைப்படுகிறீர்கள். செல்வாக்கு இல்லாத கட்சியானால், இவ்வளவு பயம் உங்களுக்கெல்லாம், காந்தி குல்லாய்களுக்கெல்லாம் ஏற்படுமா? இதை ஜனங்கள் தெரிந்து கொள்ளமாட்டார்களா? போகட்டும் கொள்கை தான் புதிதா ஒன்று மில்லை, கட்சிக்கு பேராவது புதிதா தயார் செய்யக் கூடாதா! பெயர் வைப்பது தானு கஷ்டம் அப்படி கஷ்டமாயிருந்தால், 'தினமணி' வெளியே வருவதற்கு முன்பு "என்ன பேர் வைப்பது" என்று கேட்டு, ரூபாய் கொஞ்சம் பரிசு கொடுத்து 'தினமணி' என்ற பெயரைப் பெற்றதே அப்படி ஏதாவது விளம்பரம் செய்து பார்த்து பெயர் கிடைக்கூடாதா? சைமன் கமிஷன் காலத்திலே "பீபிள்ஸ் பார்ட்டி" என்று கட்சி ஏற்படுத்தப்பட்டது. அந்தப் பெயரைத் தேடிக் கண்டு பிடித்து எடுத்துக் கொண்டீர்களே. இது என்ன இரவல்கேட்டு வாங்கிக்கொண்டதா, அல்லது அகப்பட்டதே போதும் என்பதா? கிட்டு நகைக்குக்கூட மெருகு போடும் காலமாயிற்றே இது! வெள்ளி மெடலுக்கு தங்க முலாம் பூசும் காலம்! இந்தக் காலத்திலே, புதிதா ஆரம்பிக்கிற கட்சிக்கு, அதிலும் மஹாராஜா, மாஜி மந்திரி இன்னும் பல பல மாஜிகள் சேர்ந்து ஆரம்பிக்கிற கட்சிக்கு ஒரு புது பேரில் கூடவா அகப்படவில்லை! என்ன கஷ்ட காலம்! என்ன கஷ்ட காலம்!! லட்சணம் இப்படி இருக்கிறதால் தான், அடேபீபிள்ஸ் பார்ட்டியா, அது கருவிலே செத்த குழந்தையாச்சே என்று பலமேலே எதிக் கூறுகிறார்கள். செட்டியார் முடுக்கிலே என்ன இருக்கிறது மஹாராஜா, எல்லாம் சரக்கு முடுக்கிலிருக்க வேண்டும். அப்போது தான், ஏதாவது பேரம் கிடைக்கும். இல்லா விட்டால்,

'திறந்து வைத்த கடைதான்
அதைத் திரும்பி பார்க்க
ஆளில்லே
புதிதா வைத்த கடைதான்
அதைப் புகுந்து பார்க்க
ஆளில்லே !!
ஆளில்லே, ஆளில்லேயே
அந்தக் கடையிலே
அடைத்திடலாம் கதவை !!!"

என்று 'தன்னுன' பாட வேண்டி தானே வரும்?

இப்படிக்கு,
பரதன்.

(4)

மகாகனம் சாஸ்திரியாருக்கு:

என்னங்கரே சாஸ்திரியார்வாள்! கடுகு செத்தாலும் காரம் போகாது என்பதுபோல, தளர்ந்து போயிருந்த போதிலும் உங்களுக்கு அந்த செருக்கு உரைப்பு மட்டும் போகமாட்டேனென்கிறது. மிதவாதக் கட்சிக்காரர் சர். எம். ராமசந்திரராவ் மரண அனுதாப விஷயமாகப் பேசுங் காலத்திலே, அந்த மைலாப்பூர் மனப்பான்மையைக் கொஞ்சம் காட்டிவிட்டீரே! சர். ராவுக்கு அரசாங்க சேவாசபை மெம்பர் ஸ்தானம் கிடைப்பதாக இருந்தது. ஆனால், இந்த பிராமணரல்லாதார இயக்கம் அதைப்பாழாக்கி விட்டது. பல பிராமணப் பிரமுகர்களின் பாடு, அந்த இயக்கம் எழும்பிய பிறகு திண்டாட்டமாகி விட்டது என, வயிற்றெரிச்சல் பேசுகிறீரே. பல நூற்றாண்டுகளாக "சூத்திரர்" இருந்து வந்த பிராமணரல்லாப் பெருங்குடி மக்கள் சற்று தலையைத் தூக்கி, சுயமரியாதையுடன் நடக்க ஆரம்பித்தது உமது கண்களுக்குப் பிடிக்கவில்லையே. நிர்வாகசபை, மந்திரிசபை, சட்டசபை மெம்பர், ஜில்லா சங்க பிரதிநிதித்வம், ஹைகோர்ட்டு, எங்குபார்த்தாலும் ஏகபோக மிராசு செலுத்திக்கொண்டு உமது வகுப்பார் இருந்துவந்த அக்ரமத்தைப்பற்றி பிராமணரல்லாதார் இயக்கம் ஒன்றும் செய்துவிடவில்லையே. அந்த இயக்கம் தோன்றுமுன்பு, உங்கள் வகுப்பார் பாடு, 'அல்பிரான் [illegible]'யாக இருந்தது. இப்போது அது மாறிவிட்டது, ஆனாலும், உமது வகுப்பாரின் செல்வாக்கு பல இடங்களில் அதிகரிக்கப்பட்டு தானேவருகிறது. மதமாயிற்று முதலில், பிறகு பிரிட்டிஷ் அரசாங்கமாயிற்று, இப்போது காங்கிரஸ்போர்வை அகப்பட்டுவிட்டது. அதைப் போர்த்துக்கொண்டு, வெளுத்ததெல்லாம் பால், கருத்ததெல்லாம் நீர் என நம்பும் கள்ளங் கபடற்ற, சூதுவாதற்ற பிராமணரல்லாச் சமூகத்தாரை உமது வகுப்பினர் நசுக்குகின்றனரே, இந்த அக்ரமத்தைக் கண்டிக்கக் கூடாதா நீர். உம்! எப்படி கண்டிப்பீர்!! அன்றுமுதல் சர்வகலாசாலையை அக்ரகார மயமாக்கிய உம்மிடமிருந்து என்ன நியாயத்தை எதிர்பார்க்க முடியும்! அரசியல், சமூக இயல் போன்ற துறைகளில், அக்ரகார ஆக்ரமிப்பு ஏழக் கூடாதென, சம உரிமைப் போர் துவக்கிய பிராமணரல்லாதாரின் கட்சி உமது வயிற்றெரிச்சலைக் கிளப்பிற்றே, அதுவே அக்கட்சி உள்ளபடி பிராமணரல்லாதாருக்காகப் பாடுபட்டு வந்திருக்கிறது என்பதற்கு சரியான "சர்ட்டிபிகேட்".

இப்படிக்கு,
பரதன்.

மதனவிலேசெந்தூரம்

இழந்த பலத்தை உடனே கொடுக்கும். இரத்தத்தைச் சுத்தி செய்து நரம்புகளைப் பலப்படுத்தும். முதுமையை நீக்கி இளமையைக் கொடுக்கும். இல்லறத்தை இன்பமாக்கும்.

பத்தியமில்லை—விலை அணு 6.

7½-அணு ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு பாக்கட்டு அனுப்பப்படும்.

"ஒற்றுமை" ஆபீஸ்,
சைதாப்பேட்டை, சென்னை.

அன்னியூர் திருநாவுக்கரசு கழகம்

மடாதிபதிகளுக்கு வேண்டுகோள்

நிறைவேறிய தீர்மானங்கள்

அன்னியூர் (விழுப்புரம்) ஜூன், 1

அன்னியூர் திருநாவுக்கரசு கழகத் தலைவர் திரு. எம். பச்சையப்பன் எழுதுகிறார்:—

இக்கழகத்தின் ஐந்தாவது ஆண்டு விழாவை அதற்கென அமைக்கப்பட்டிருந்த அழகான பெரிய பந்தலில் 23-5-36-ந் தேதி மாலை 2 மணிக்கு சிதம்பரம் ஜாயிண்டு சப் ரிஜிஸ்ட்ரார் திரு. எஸ். பூவராகன் பி. ஏ. ஆரம்பித்து வைத்தார். சென்னை பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர் திரு. டி. செங்கல்வராய பிள்ளை பி. ஏ. எல். டி. அவைத் தலைமை வகித்தார். கழகத் தலைவர் திரு. எம். பச்சையப்பன் வரவேற்புப் பத்திரத்தை முறையே வாசித்துக் கொடுத்த பின் அன்னியூர் சப் ரிஜிஸ்ட்ரார் திரு. எஸ். ராமலிங்க முதலியார் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். அன்னியூர் வன்னிய மகாஜன சார்பாக சிதம்பரம் திரு. எஸ். பூவராகனுக்கு [illegible] பஞ்சாயத்துக் கோர்ட்டுத் தலைவர் திரு. வெ. நாராயணசாமி நாயக்கர் ஒரு வாழ்த்துப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்.

அவைத் தலைவர் முன்னுரையில் கழகத்தின் நோக்கங்களைப் பற்றியும் இக்கிராமத்தில் இக்கழகம் ஏற்படுத்தி ஆண்டு விழாவைக் கொண்டாடுவித்த சிறப்பைப் பற்றியும், கழகத்தாருக்குத் தமிழிடம் உள்ள அன்பைப் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார். கழக அமைச்சர் திரு. எஸ். அருணாசலம் வாசித்த சென்ற ஆண்டு அறிக்கை ஒப்புக்கொள்ளப்பட்டது.

அன்னியூர் மாதர்கள் சார்பாக ஸ்ரீமதி டி. எஸ். குஞ்சிதம் [illegible] வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேறிய பின்னர் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது. 26-5-36-ந் தேதி இரவு கழக உறுப்பினர்களால் 'பாலசுந்தரம்' அல்லது "பணியின் கொடுமை" என்ற நாடகம் நடிக்கப்பட்டது.

தீர்மானங்கள்

சென்ற ஆண்டு விழாவின்போது இவ்வூரில் ஆஸ்பத்திரி ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று தென் ஆர்க்காடு ஜில்லா போர்டாரை தீர்மான மூலமாகக் கேட்டும் 30-9-35-ந் தேதி டி. ஜில்லா போர்டு மீட்டிங்கில் அன்னியூரில் ஆஸ்பத்திரி ஏற்படுத்த தீர்மானித்தபடி ஏற்படுத்தாமல் தற்போது போர்டில் பணம் இல்லாமையால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கும் ஜில்லா போர்டாரை இக்கிராமத்தினரும், இக்கிராமத்தைச் சார்ந்த 60 கிராம பொது மக்களும் வைத்திய உதவியின்றி படும்கஷ்டத்தைக் கவனித்து அன்னியூரில் ஆஸ்பத்திரி ஒன்று இவ்வாண்டில் ஏற்படுத்த இக்கூட்டம் கேட்டுக் கொள்வதுடன் டி. ஆஸ்பத்திரி ஏற்படுத்த போதுமான நிதி கொடுத்துதவ வேண்டுமாறு அரசாங்கத்தாரை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

தற்போது கழகத்தில் திறவப்பட்டிருக்கும் நூல் நிலையத்தை மிகவும் பயன்படுமபடி பெரிதாக்க உதவி செய்ய வேண்டுமாக கிராமத்தார்களையும் வெளியூர் கனவான்களையும் கேட்டுக்கொள்வதுடன் அரசாங்கத்தில் இருக்கும் நூல் நிலையத்திற்குப் பொருளுதவி செய்ய வேண்டுமாக இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

இக் கிராமத்திலும், சுற்றுப்புற கிராமங்களிலுமுள்ள போர்டு பாடசாலைகளில் உயர்தர வகுப்புகள் இல்லாமையால் பிள்ளைகள் கல்வி விருத்திக்கு வசதியின்றி இருக்க நேரிடுவதால், அன்னியூர் போர்டு ஆண் பாடசாலையை உயர்தரப் பாடசாலையாக ஏற்படுத்த வேண்டுமாக ஜில்லா போர்டாரை இக்கூட்டம் பணிவுடன் கேட்டுக் கொள்கிறது.

அன்னியூர் போர்டு பெண் பாடசாலையில் பெண்களுக்கு கைத்தொழில், நூல் பின்னல் வேலைகள், சங்கீதம் இவைகள் கற்பிக்கத்தக்க எலிமெண்டரி உயர்தர ட்ரெயினிங் பரீக்ஷையில் தேறிய உபாத்தியாயினி ஒருவரை நியமிக்க வேண்டுமாக ஜில்லா போர்டாரை கேட்டுக் கொள்ளுகிறது.

தமிழுக்கும் தமிழர் முன்னேற்றத்திற்கும் பெரிதும் உழைத்து வரும் "விடுதலை" பத்திரிகையானது தற்காலம் வாரம் இரு முறையாக நடந்து வருவது போதுமானதாக இல்லை. ஆதலால், அதை தினசரியாக ஆக்க வேண்டுமென்று அதன் நிர்வாகிகளை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இந்து மதத்திலுள்ள ஆதி திராவிடர்கள் இந்து மதத்தில் இருந்து விலகி பிறமதம் புகுந்து விட வேண்டுமென்று தீர்மானித்து சேர்ந்துக்கொண்டு வருகிறார்கள். அப்படி சேர்ந்துவரும் பட்சத்தில் இந்துமதம் கூடிய சீக்கிரத்தில் எண்ணிக்கையில் குறைபட்டு விடும். ஆகையால் இந்து மதத்தலைவர்களாகிய மடாதிபதிகளும், சங்கராச்சாரியார்களும் மேற்கண்டவைகளைக் கவனித்து ஜாதி இந்துக்களுக்குள்ள சகல உரிமைகளையும் ஆதி இந்துக்களுக்குக் கொடுத்து அவர்களை இந்த மதத்திலிருந்து விலகாமலிருக்கும்படி தகுந்த ஏற்பாடு செய்ய இக்கூட்டம் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறது.

சென்னை மாகாண யூனிவர்சிட்டிக்கு உயர் திரு. எ. லட்சுமணசாமி முதலியாரை ஆக்டிங் வைஸ் சான்சலராக நியமித்திருப்பதைக் குறித்து இக்கூட்டம் வாழ்த்துகிறது.

இராஜபாளையம்

சமதர்ம இளைஞர் சங்கம்

சேலம் காங்கிரஸ் காலிகள் நடத்தை கண்டனம்

சங்கக் காரியதரிசி எழுதுகிறார்:—

இராஜபாளையம் மே, 29

நேற்றுமாலை 7-மணிக்கு 'நித்தியானந்த' ஆச்சிரமத்தில் சங்கத் தலைவர் தோழர் ஜி. முத்துச்சாமி தலைமையில் மேற்படி, சங்கத்தின் கூட்டம் கூடியது. தோழர் கே. பெரியசாமி சேலத்தில் நடைபெற்ற அடிதடியைக் கண்டித்துப் பேசியதோடு காங்கிரஸ்காரர்களின் காலிச் செய்கை இது முதல்தடவை யல்லவென்றும், சமயம்வாய்க்கும்போதெல்லாம் இத்தகைய செய்கையையே கையாண்டு வருகிறார்களென்றும் கூறினார்.

பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

சேலம் காங்கிரஸ் கூட்டத்தில் கேள்விகள் கேட்டதற்காக தோழர். சித்தய்யனையும் அவரது தோழர்களையும், கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல ஆண்மையற்று, மிருகத்தனமான முறையில் காங்கிரஸ்காரர்கள் தாக்கியதற்கும் அப்போது திரு. சத்தியமூர்த்தி உபயோகித்த ஈனத்தனமான வார்த்தையையும் இக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

(2) கரிசல் குளத்தில் நடைபெற ஏற்பாடாயிருக்கும் ராமநாதபுரம் ஜில்லா 2 வது ஜஸ்டிஸ் மகாநாட்டை வரவேற்பதாயும், ஜில்லாவிலுள்ள எல்லா தமிழ்மக்களும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறது.

(3) ஜஸ்டிஸ் தலைவர்கள் தளவாய்புர விஜயத்திற்குப் பின்னர் இத்தாலுகா வாசிகளிடையே விழிப்புணர்ச்சி உண்டாயிருப்பதால் தோழர்கள் எ. பொன்னம்பலம், கே. வி. அழகர்சாமி ஆகியோரை வரவழைத்து தொடர்ந்து எல்லாகிராமங்களிலும் பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்வதென தீர்மானிக்கிறது.

"வேலூருக்குப் - - புறப்படுங்கள்"

(தோழர் எஸ். வி. லிங்கம்)

நண்பர் திரு. சத்தியமூர்த்தி சேலத்தில், எனது நண்பர்கள் சிலரை அடிக்க இடமளித்ததாக பார்த்தேன். திரு. மூர்த்தி நேராக எனது நண்பர்களை அடித்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். அப்படி இல்லாமல் ஓர் பார்ப்பனத் தலைவர் நமது பார்ப்பனரல்லாத நண்பர்களை பார்ப்பனரல்லாதார்களைக் கொண்டே தாக்கினர் என்பதில் சற்று சந்தோஷம்! நண்பர்கள் தாக்கப்பட்டதை கண்டு சகலரும் ஆத்திரம் காட்டினர்கள். இவைகள் எல்லாம் திரு. சத்தியமூர்த்திக்கு பதிலாகாது. திரு. மூர்த்திக்கு நல்ல ரூபி கொடுக்க வேண்டுமானால் சகலரும் வேலூருக்கு புறப்படுங்கள். காங்கிரஸ்காரர் கமிட்டீக்கு பக்த 21 கனவான்கள் ராஜீனாமா கொடுத்து விட்டார்கள் அதற்கு தேர்தல் ஜூன் மாத கடைசியில் வரக்கூடும். அத்தேர்தலில் நாம் காங்கிரஸுக்கு பாடம் கற்பிக்க வேண்டும் என்பதேனது தாழ்மையான எண்ணம். சென்ற அசம்பளி தேர்தலில் இருந்த வேலூர் தேர்தல் வரையில் ஜயத்தைப் பார்த்து வந்த காங்கிரஸ் கும்பல்கள் வேலூர் ஜில்லா போர்டு தலைவர் தேர்தலில் குனிந்து ஓடும்படிச் செய்தோம். மாகாண டிக்டேட்டர்—ராஜாஜி மகாத்மாவின் சம்பந்தி — சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி நேராக வந்து வேலூர் தேர்தலுக்கு தலைமைத் தோள்கொடுத்தும், தோல்வியாகி ஓடும்படிச் செய்தோம். இந்த ஆத்திரத்தை அவர்கள் தீர்த்துக்கொள்ள முயலுகிறார்கள். மீண்டும் ராஜீனாமா கொடுத்த அண்ணாக்களை தேர்தலுக்கு நிற்கப் போகிறார்களாம். அவர்களில் மூன்று ஐயன்மார் இடங்களுக்கும் நாம் பலமான போட்டியிட்டு ஆகவேண்டும். அய்யர் ஒழிப்பு வேலூர் ஜில்லா போர்டில் இருக்கச்செய்ய வேண்டும் மிகுதி உள்ள 18 ஸ்தானங்களில் எட்டு ஸ்தானங்களுக்கு பலமான போட்டி போட்டு வெற்றியடையச் செய்யவேண்டும். காங்கிரஸ்காரன் மூலபலம்-பணபலம்-அடிக்க ஆள்பலம்-பிராமணீய போலீஸ் பலம்- இவைகள் அத்தனையும் வேலூரில் குவிக்கப்படுகிறது. தப்பு காரணங்கள் காட்டி-பல மூக்கிய பிராமணரல்லாத உத்தியோகஸ்தர்கள் காகல் மாற்றப்பட்டு பிராமண உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். தேர்தல் காலங்களில் நடுநிலைமை வகிக்கக்கூடிய போலீஸ் ஆபீஸர்களை நியமித்த குற்றத்துக்காக பல உத்தியோகஸ்தர்கள் மாற்றப்பட்டு பார்ப்பனர் பேச்சு கேட்கிறவர்களான பிராமணரல்லாத உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இத்தகைய விதமாக சர்க்கார் பலத்துடனும், வெளி பலத்துடனும் காங்கிரஸ் பட்டாளங்கள் அணி வகுக்கப்பட்டு இருக்கின்றன.

ஆதலால், தமிழ்நாட்டு இளைஞர்களே! நண்பர் சத்தியமூர்த்தி ஐயர் அவர்களுக்கு நல்ல பதில் கொடுக்க வேண்டுமானால் வேலூருக்கு புறப்படுங்கள்.

தனித் தமிழ்த் திருமணம்

(ஒரு நிருபர்)

ஏத்தாப்பூர், ஜூன், 1

சேலம்—வேலூர் க. ச. கந்தசாமிக் கவுண்டர் நடுநிலைப் பள்ளிக்கூடத் தமிழாசிரியர் 'வித்துவான்' வை. கனகசபை என வழங்கும் பொன்னம்பலனார்க்கும், சேலம் ஜில்லா ஆத்தூர் தாலூகா செக்கடிபட்டிக் குறுநில மன்னர் (ஜமீன்தார்) திரு. ஆ. ஆனந்தப் படையாட்சியார் மனைவியின் தங்கை திருவளர் செல்வி 'அலர்மேல்' அம்மையாருக்கும் 31-5-36 ஆம் நாளன்று 'ஏத்தாப்பூரில்' குறுநில மன்னரது 'கணேச நிலையம்' என்னும் புதிய மாளிகையில் சைவத் திரு. பொதுநிலைக் கழகப் பேராசிரியர் மறைமலை யடிகள் திருமகனார் 'வித்துவான்' மறை 'திருநாவுக்கரசர்' அவர்களைத் திருமண ஆசிரியராகக் கொண்டு, தனித் தமிழ் முறையில் திருமணம் இனிது நிகழ்வுற்றது.

மாலை 8 மணிக்கு கல்லல் மறைத் திருவாளரும், சைவ சித்தாந்தப் பேராசிரியருமாகிய திரு. ருக்மணி வாசக சரணாலய அடிகளின் தலைமையின் கீழ்க் கூட்டம் கூடியது.

அதுபோழ்து சென்னை நகராண்மைக்கழக உயர்நிலைப் பள்ளிக்கூடத் தமிழாசிரியர் 'வித்துவான்' மறை திருநாவுக்கரசர் 'திருஞானசம்பந்தர்' என்ற பொருள் பற்றியும், திருமுதுகுன்றம் உயர் நிலைப் பள்ளிக்கூடத் தலைமைத் தமிழாசிரியர் 'வித்துவான்' ஆ. கந்தசாமி உடையார் 'இல்லறம்' என்ற பொருள் பற்றியும், வெடுக்கூர் இரா. விசுவநாதன் 'திருக்குறளும் காந்தியடிகளும்' என்ற பொருள்பற்றியும், ஏத்தாப்பூர் திரு. அருணாசலம் 'சிக்கனம்' என்ற பொருள் பற்றியும்'' அழகாக விரிவுரை யாற்றினார்கள்.

பின்னர், அவைத் தலைவர் யாவரது உள்ளங்களும் இன்பத்திற்றிளைக்க இனிய அரிய பெரிய கருத்துக்களுடன் முடிவுரை கூறினார்கள்.

பிறகு மணமகனார் வெளியூரினின்று வந்திருந்தவர்கள் முதலாக யாவர்க்கும் நன்றிகூற கடவுள் வணக்கத்துடன் கூட்டம் இனிது நிகழ்வுற்றது.

பொதுக் கூட்ட அறிக்கை

சென்னை, ஜூன், 2

நகர நிட்டர் ஜாப்தா தயாரிப்பு விஷயமாக தோழர்கள்: டி. சுந்தரராவ் நாயுடு, எம். எஸ். சி. காஞ்சி அண்ணாதுரை எம். ஏ., ஆர். டி. ரூபாகண்ணு, பி. சம்பந்தம் பி. ஏ., (ஆனர்ஸ்) எம். தர்மலிங்கம், ஜனாப் மகமத் இப்ராஹிம் சாயபு, (ஜீவன் ஆசிரியர்) சி. தங்கராஜ், காஞ்சி கலியாணசுந்தரம் எம். சி. எஸ்., தாசன், எஸ். பி. ஜூ. பாலகுருசிவம் இன்னும் பலரும் பேசுவார்கள்.

ஜூன் மாதம் 3-ந் தேதி புதன் கிழமை மாலை 6-மணிக்கு தாக்கர்ஸ் லேன், புரசைவாக்கம். 4-ந் தேதி வியாழன் மாலை 6-மணிக்கு தாமோதர தெரு, அம்மன் கோவில் மைதானம் வெள்ளாளதேனம்பேட்டை, செயின்ட் ஜார்ஜ் கெத்தடிரல் ரோட். 6-ந் தேதி சனிக்கிழமை மாலை 6-மணிக்கு பண்ணைக்கார ஆரோக்கியம் தெரு, வெஸ்லியன் மிஷன் பள்ளிக்கூடத்திற்கு எதிரில், மக்கீ தோட்டம். 7- தேதி ஞாயிறு மாலை 6-மணிக்கு குட்டி மேஸ்திரி தெரு, ஜார்ஜ் டவுன். 8-ந் தேதி திங்கள் மாலை 6-மணிக்கு அருகம்மன் கோவில், கோசப்பேட்டை, சவலைக் கார்டன், ராயப்பேட்டை. 9-ந்தேதி செவ்வாய் மாலை 6-மணிக்கு சமரச சன்மார்க்க சங்கம், பிச்சன் தெரு, பறங்கிமலை.

பிராமணரல்லாதார் வாலிபர்
கழகம், புரசை.

பேரம்பூர் வானவில் சங்கம்

முதலாவதாண்டு
டென்னிஸ் போட்டிப் பந்தயம்

சங்கக் காரியதரிசி திரு. பி. ராஜா பாதர் எழுதுகிறார்:—

சென்னை, ஜூன், 1

மேற்படி போட்டிப் பந்தயத்தின் கடைசி ஆட்டம் நேற்று (31-5-36) ஞாயிறு மாலை 5 மணிக்குமேல் இண்டியன் இன்ஸ்டிட்யூட் விளையாட்டு மைதானத்தில் பி. பி. எப். சி. கிளப்பாருக்கும், பி.என்.சி. கிளப்பாருக்கும் நடைபெற்றது. அதில் பி.என்.சி. கிளப்பார் ஜெயமடைந்தனர்.

டி. ஆர்.சன்யாசு பரிசு வழங்கினார்.

"'விடுதலை''யின் இரண்டாம் ஆண்டு வாழ்த்து

(வித்துவான் கந்தசாமி)

1. பார்ப்பனர் அல்லா மக்கள் பண்பினைக் குழைப்ப தொன்றே
எற்புடை நோக்க மாக ஏந்திய 'தமிழ்த்தாய்' வாழ்க!
ஆர்ப்புடைச் சத்ய மூர்த்தி அறைகளுக் கறைத் வாசப்
போர்ப்படை யேறு நிற்கும் 'விடுதலை'! வாழி!! வாழி!!!

2. பழந்தமிழ் மக்கட் காகப், பழந்தமிழ்ப் பாஷைக் காக,
பழங்குடி மக்கட் காகப் பரிந்துபே செழுந்தான்! வாழ்க!
பழந்தமிழ்ப் புலவர் பாக்கள் பயனுடை யுரைக ளாகப்
பழந்தமிழ் வளர்ப்பான் வேண்டிப் பரப்பிடும் தானே! வாழ்க!

3. அறிவரைக் கொத்தைத் தாக்கி அல்லலுண் டாக்கி நின்ற
அறிவிலாப் பருத்தி நூலார் அகந்தையை அடித்துச் சாய்த்து
'அறிவுரைக் கொத்தின் கொன்றே அகற்றுமஞ் ஞான மென்று
அறிவொடு வளர்ச்சி செய்த 'விடுதலை'! வாழி!! வாழி!!

4. 'நினைத்தவன் நினைத்த வாறே, ஒருத்தியை யவிந்து சென்று
மணம்போன படிவாழ்ந்தானென்' றறைதலும், 'மட்டார் காஞ்சி
இன்னதென் றெடுத்துக் கூறத் தவறுடைக் கூற்றும், 'ஐயர்,
நன்மண ஆரியமேலோர்' என்றுரை உளறல் யாவும்

5. தக்கவா றெடுத்துக் காட்டித் தவறுடை யதைக்காற்போல
பக்குவ மனத்தார் யாண்டும் பதறியே மனம் கொதிக்க,
'இக்கண மதனிற் றூனே எடுத்திடல் வேண்டும் அந்தப்
பக்குவம் உணராப் பார்ப்பான் பகர்ந்திட்ட நூல்'' என்றே

6. பைந்தமிழ்ப் புலவர் தாமும் பைந்தமிழ் மக்கள் தாமும்
பைந்தமிழ்த் தாய்கள் தாமும் பதறியே அடிப்ப, " பார்ப்பான்
பைந்தமிழ்த் துரோகம் செய்தான் ; பார்மினோ! பார்மின் !! " என்றே
பைந்தமிழ்க் குழைக்கும் செல்வ " விடுதலை " ! வாழி !! வாழி !!!

7. இவர்தம் நிதிமோ சத்தைத் தெளிவுறச் செய்தே, பர்மாத
இவர்தம் நிதிமோ சத்தைத் தெளிந்திட்ட " தானே " ! வாழ்க !!
" கலகமும் வறுமை சோகம் கலந்தாண் டவமே செய்ய
அவனிலா விளையாட் டாடும் அக்ரமக் 'காங்ரஸ்' தன்னை "

8. " உறுதுணை என்று கொண்டு, உண்மையை உணரா மக்கள்
அரியகம் 'நேர்மைக் கட்சி' அழிந்தில காடு நின்றார் ;
அரியரம் கட்சி நாசம் அவருடை நாச மன்றோ ?
அறிகுதென் றிந்த மக்கள் அழிவிலவ் வுண்மை தன்னை '' ?

9. என்றுமே வருந்தி நந்தம் எண்ணமில் மக்கட் கெல்லாம்
உண்மையை யெடுத்துக் கூறி, உருக்கமாய் எழுதி, மக்கள்
நன்மையும் அறிவும் சால நாடியே உழைத்து வாழும்
என்னுயிர் அனைய தானே ! " விடுதலை " !! வாழி !!! வாழி !!!!

ஜீவன் வாழ்த்து

'விடுதலை'' யென்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட நமது சகோதரப் பத்திரிகை சென்ற ஒரு வருடமாக இந்திய மக்களிடையே குழி செய்துக் கொண்டிருக்க ஒரு கூட்டத்தாரின், சூழ்ச்சியை பகிரங்கமாக பொது மக்களுக்கு எடுத்து போதித்து, அக்கிரமக்காரர்களின் சூழ்ச்சியிலிருந்து விடுதலை செய்த பெருமை யிருக்கிறது. அப்பெருமை நமது "விடுதலை"க்கே தகும்.

"விடுதலை'' யென்ற பெயருக்கேற்ப, மக்களின் விடுதலைக்கு பாடுபடுவது "விடுதலையே''யாகும். விடுதலையின் பெருமையை உணராத தமிழன் யாரும் இரானென்பது உலகறிந்த உண்மை.

விடுதலையில் அக்கரையுள்ள ஒவ்வொரு தமிழரும் விடுதலையை ஆதரித்து தினசரியாக்க இந்த இரண்டாமாண்டில் இந்திய மக்களின் விடுதலைக்கு வழிகாட்டுமாறு விடுதலைக்கு வாழ்த்து கூறுகிறோம்.

திரு. பி. எம். முஹம்மது அப்துல் காதர்

நம் நாடு விடுதலையடைய வேண்டுமென பேரவாக் கொண்ட தமிழ் மக்களுக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட நமது "விடுதலை"க்கு இரண்டாவதாண்டு ஆரம்பமாவதைக் கண்டு தமிழ் மக்கள் களிப்பெய்துவார்கள் என்பதில் ஐயமில்லை. "விடுதலை" யின் ஊழியர்கள் இவ் "விடுதலை" யின் முன்னேற்றத்தில் எடுத்துக் கொண்டிருக்கும் ஊக்கமானது போற்றத்தக்கதே. அத்துடன் நம் விடுதலையின் தாகங் கொண்ட தமிழ் மக்களுக்கு "விடுதலை" யென்ற பெயருடன் தொண்டாற்ற முன் வந்திருக்கும் நமது அருங் குழந்தை முதலாவது ஆண்டை முடித்து, இரண்டாவதாண்டு ஆரம்பத்திற்கு வந்திருப்பதால், விடுதலை நோக்க முடைய, தமிழ் மக்கள் "விடுதலை"யை ஆதரித்து வாரமிருமுறை வந்து நமக்கு ஊக்கந் தருவதிலிருந்து, தினசரி விடுதலையின் தாகத்தை மூட்டிக் கொண்டிருக்க கடவுளை பிரார்த்திப்பதோடு இவ்வாண்டிலேயே "விடுதலை" தினசரியாகத் திகழ எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பானாக.

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

கா. போ. முஹம்மது இபுராஹிம்

இந்திய மக்கள் உலகத்திலேயே அராஜீக வளர்ச்சி யுடையவர்கள் சுதந்தர புருஷர்களாக விளங்க வேண்டுமென்ற அவாவுடையவர்களென்று போற்றப்பட்டும், தூற்றப்பட்டு வரும்போது, இந்தியாவின் சுதந்தரப் போராட்டத்தின் பெயரால் சுயராஜ்யம் என்றும், வந்தே மாதரமென்றும் கூறி பாமர மக்களை ஏமாற்றி சில குறிப்பிட்ட நபர்கள் சௌகரியமடைவதற்காக பாமர மக்கள் தங்கள் பக்கமே யிருப்பதாகக் கூறி அரசாங்கத்தை ஏமாற்றிக்கொண்டு காலங்கடத்த கருதிய சில பத்திரிகைகளையும், தலைவர்களையும் சின்னா பின்னப்படுத்தி இந்த சுயநலமிகளின் கொட்டத்தையும், அவர்களது சூழ்ச்சிகளையும் அம்பலத்துக்கு கொண்டு வந்து, பாமர மக்களை விழிக்க செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்ட நமது "விடுதலை" இன்று இரண்டாவதாண்டு ஆரம்பமாவதைக்கண்டு விடுதலையில் ஆவலுள்ள இந்தியனெவனும் சந்தோஷமடையாமலிருக்க முடியாது.

இந்திய மக்களை விடுதலையென்ற பெயரால், சுயராஜ்ய மென்ற பெயரால் ஏமாற்றி வந்த பார்ப்பன ஆட்சியை அடக்கி யொடுக்கி உண்மையான விடுதலையை போதிக்க ஆரம்பிக்கப்பட்ட "விடுதலை" இன்னும் ஊக்கத்துடன் தினசரியாகி, முதலாவதாக சூட்சிக்காரர்களின் சூட்சியிலிருந்து மக்களை விடுதலை யடைய செய்து பிறகு, பாரதியார் கூறியபடி "விடுதலை! விடுதலை! விடுதலை! இங்கு தீப் புலையருக்கும் விடுதலை!" என்ற கவியின் பிரகாரம் இந்திய மக்கள் விடுதலையடைய பாடுபட எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

"விடுதலை" வரவேற்பு

'விடுதலை' பத்திரிகை ஆரம்பித்து இன்று இரண்டாவது ஆண்டு முதல் வெளியீட்டை சென்னையிலுள்ள, சுயமரியாதை சமதர்ம சங்கங்கள் மனமார வரவேற்கின்றன. பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்கும், குறிப்பாக, தொழிலாளர் ஆதித்திராவிடர் முன்னேற்றத்திலும், சிறப்பாக தமிழ்வளர்ச்சிக்கும் சென்னையிலுள்ள எல்லா பத்திரிகைகளை விட முன்னணியில் நின்று வேலை செய்து வந்தது தெளிவு. சுயமரியாதை சமதர்ம சங்கங்களின் கொள்கைகளை ஆதரித்து தீவிரமாக வேலை செய்யும் பத்திரிகைகளில் இது ஒன்று. ஆகவே, சென்னையிலுள்ள சுயமரியாதை சமதர்ம சங்கங்கள் 'விடுதலை' கடந்த ஆண்டைக்கொண்ட கொள்கைகளையும், வேலை திட்டங்களையும் நழுவவிடாமல் இன்னும் தமிழருக்கும், குறிப்பாக வாலிபருக்கும் உற்சாகத்தை ஊட்டிவேலை செய்யும் என்று நம்பி முழுமனதுடனும், ஆவலுடனும் வரவேற்கின்றோம்.

எம். தர்மலிங்கம், லெனின் ஸ்போர்ட்ஸ் கிளப் காரியதரிசி; எ. ஷண்முகம், சென்னை பிரம்பூர் சுயமரியாதை சங்கக் காரியதரிசி; எம். இ. எஸ். தாஸன் புரசைவாக்கம் உண்மை நாடுவோர் கழகக் காரியதரிசி; ஆ. அ. கபாலமூர்த்தி, சிந்தாதிரிப்பேட்டை சுயமரியாதை சங்கம்; சி. தங்கராஜ் வியாசர்பாடி சோஷியலிஸ்ட் லீக்; எஸ். ரங்கநாதம், சுயமரியாதை இளைஞர் மன்றம்.

சிந்தாதிரிப்பேட்டை சுயமரியாதைச் சங்கம்

பொதுக் கூட்டம்

சென்னை, ஜூன், 1

மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டம் 31-5-36 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு காஞ்சி தோழர். சி. என். அண்ணாதுரை எம். ஏ. தலைமையின் கீழ்கூடி அடியிற்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றின.

இதுவரையில், சுயமரியாதை இரவு பாடசாலை என்ற பெயருடன் தோழர் ஆ. அ. கபாலமூர்த்தி நடத்திவரும் பாடசாலையை இவ்வாண்டு முதல் சுயமரியாதைச் சங்கத்துடன் இணைப்பதெனவும்,

நமது சங்கத்தின் சார்பாக, 2 அல்லது 3 பிரசாரகர்களைத் தயார் செய்து சென்னையிலுள்ள, சுயமரியாதை சங்கமல்லாத மற்றைய சங்கங்களிடம், நேசபாவமான வாதாடுதலை ஏற்பாடு செய்தல்.

ஜூன் 21-ந் தேதி ஞாயிற்றுக் கிழமை சுயமரியாதைச் சங்க இரவு பாடசாலையின் ஆண்டு விழா நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

சினிமா மகாநாடு

(நமது நிருபர்)

கோவை, ஜூன், 2

31-5-36ந் தேதி கோயமுத்தூர், லிட்டரெரி சொஸைட்டியின் ஆதரவில் மாலை 6-மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஹால் நிறைய ஜனங்கள் கூடியிருந்தார்கள். திரு. சேதுராமராவ் பி.ஏ.பி.எல். தலைமை வகித்தார். தென்னிந்திய சினிமா மகாநாடு கோயமுத்தூரில் நடைபெறப் போவதைப் பற்றியும், தமிழ் சினிமா நிலைமை பற்றியும் ''சினிமா உலகம்'' ஆசிரியர் திரு. பக்கிரிசாமி செட்டியார், யோகீஸ்வரர், திரு. எஸ். வி. லிங்கம் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள் அக்கிராசனர் உபன்யாசகர்கள் சொற்களை ஆதரித்து முடிவுரை பேசியபின் திரு. வெங்கட்ராம ஐயர் பி. ஏ. பி. எல். வந்தனோபசாரம் சொல்ல இரவு 9 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

ஸ்ரீமத் திருவள்ளுவர் முத்தி அடைந்த திருநக்ஷத்திர வைபவம்:— தெய்வப் புலமை திருவள்ளுவ நாயனார் பிறந்து முத்தியடைந்த இடமான திருமயிலையில், திருவள்ளுவர் பேட்டையில் திருவள்ளுவர் ஆலயத்தில் நாளது வருஷம் வைகாசி மாதம் 22-ந் தேதி (4-6-36) வியாழக்கிழமை மேற்படி நாயனார் திருநக்ஷத்திர மாகையால் திரிகால அபிஷேக ஆராதனையும் மத்தியான வேளையில் ஏழைகளுக்கு அன்ன மளித்தலும் நடக்கிறது.

அபிசீனியாவுக்கு இத்தாலியின் "தானம்"

புதிய சட்டமா? அடிமைச் சாசனமா?

ரோம், ஜூன், 1

அபிசீனியா, எரிட்ரியா, இத்தாலிய சோமாலிலாந்து, பிரதேசங்கள் உட்பட இத்தாலியக் கிழக்கு ஆப்பிரிக்காவை அமைப்பதென இத்தாலிய மந்திரி சபை ஒப்புக்கொண்டு, புதிய ஏற்பாட்டை உடனே அமுலுக்குக் கொண்டுவரத் தீர்மானித்துள்ளது.

இதற்கு ஒரு கவர்னர் ஜெனரலும், அவருக்கு உதவியாக நிர்வாக சபையும் ஏற்படுத்தி, இத்தாலியர், 6 சுதேசிகள் அடங்கியபொது ஆலோசனை கவுன்சிலையும் நிறுவுவர். எரிட்டிரியாவிற்கு அஸ்மாராவும், அம்ஹாராவிற்கு, கோண்டார் கல்லாஸிடாமுக்கு ஜிமாவும், ஹாராருக்கு ஹாராரும், சோமாலிலாந்திற்கு மொகாடி சோவும் தலைநகரங்களாகவும், இத்தாலியக் கிழக்காப்பிரிக்காவிற்கு, அடிஸ் அபாபா தலைநகராவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சுதேசிகளின் மதமாகிய காப்டிக் சர்ச் முறையும், முஸ்லீம்கள் வசிக்கும் பிரதேசத்தில் அரபி பாஷையையும் இத்தாலியர் அங்கீகரிப்பார்களாம்.

அதிராம் பட்டணம்

சேலம் காங்கிரஸ் காலிகளின் நடத்தைக் கண்டனம்

அதிராம்பட்டணம், ஜூன், 1

இவ்வூர் மஜ்லிஸுல் இஸ்லாம் சங்கப் பொதுக் கூட்டம் கடந்த 30-5-36-ந் தேதி மாலை 6-30 மணிக்கு சங்க மண்டபத்தில் கூடியது. அச்சமயம் தோழர் எஸ். எ. ஐப்பார் சாகிப் ஜஸ்டிஸ் கட்சியால் ஏற்பட்ட நன்மைகளைப் பற்றி விளக்கமாக கூறிவிட்டு, சேலத்தில் திரு. சத்தியமூர்த்தியின் ஏவலால் ஏற்பட்ட கலவரத்தில் காங்கிரஸ் காலிகள் சுயமரியாதை தோழர்களான: ஆர். நடேசன், ஏ. சித்தய்யன், ஏ. சங்கரன், பி. கே. வரதராஜலு, ராஜகோபால முதலானவர்களை 18-5-36-ந் தேதி சேலத்தில் நடந்த காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் அடித்துக் கஷ்டப்படுத்தியதற்காக அவர்களுக்கு தக்க புத்தி கற்பிக்க வேண்டியது அவசியமாகிறது என்று பேசி முடித்தார். அதை யொட்டி தோழர்கள்: மு. அ. மு. முகம்மது சருமத்துல்லா, கா. மு. ம. முகம்மது சாலிஹு, அ. அ. மு. முகம்மது ஷம்சுதீன், க. மு. முகம்மது அப்துல்காதர் ஆகியவர்கள் பேசினார்கள்.

தீர்மானம்

1. 18-5-36-ல் சேலத்தில் கூடிய காங்கிரஸ் கூட்டத்தில் திரு. சத்தியமூர்த்தியை கேள்வி கேட்ட சுயமரியாதை தோழர்களை மேடைக்கு அழைத்து பலாத்காரமாக தாக்கிய காங்கிரஸ் காலிகளையும் அதற்கு காரணமாயிருந்த திரு. சத்தியமூர்த்தியையும் இக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

2. பொறுப்பு வாய்ந்த தலைமைப் பதவி வகித்து வரும் தமிழ்நாட்டு தலைவர் எனப்படும் திரு. சத்தியமூர்த்தி மேற்கண்ட செய்திகளைக் கண்டிக்காமலும், தகுந்த சமாதானம் சொல்லிக் கொள்ளாமலும், பிள்ளையார்போல் உட்கார்ந்து இருந்ததை இக்கூட்டம் கண்டிப்பதோடல்லாமல் காங்கிரஸ் காரர்கள் வாயளவில் அஹிம்சை என்று சொல்லி செய்கையில் இம்சையைச் செய்துகொண்டு வருகிறார்கள் என்பதை பொது ஜனங்களுக்கும் சர்க்காருக்கும் இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

பிரான்ஸில் வேலைநிறுத்தம்

தொழிற்சாலைகளிலே பிரசன்னமாக இருந்தும், வேலைமட்டும் செய்யாத, வேலைநிறுத்த முறை, பிரான்ஸில் பல தொழிற்சாலைகளிலும், ஓட்டல்களிலும் வெகு துரிதமாகப் பரவிக்கொண்டு வருகிறது.

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே!

ஏழையென்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே!

மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையை கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த வகையிலும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! (பாரதி)

விடுதலை

சென்னை: 1936-ஞ ஜூன்-மீ 3-உ
புதன்கிழமை

'விடுதலை'யின் இரண்டாவது ஆண்டு

சென்ற ஆண்டு ஜூன் மாதம் முதற்தேதி ஆரம்பிக்கப்பட்ட "விடுதலை" ஓராண்டு முடிந்து, இன்று இரண்டாவதாண்டு தொடங்குகிறது. பல அசௌகரியங்களுக் கிடையே ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகை, ஜஸ்டிஸ் கட்சியைப் பின்பற்றுபவர்களின் ஆதரவினாலும், பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்தில் நாட்டங்கொண்டவர்களின் கூட்டுறவினாலும், தமிழ் மக்களின் நல்லாதரவினாலும், பத்திரிகை உலகத்தில் தலையெடுத்து, ஓராண்டு காலம் தமிழ் நாட்டிற்குத் தொண்டுசெய்து வந்திருக்கிறது. இவ்வோராண்டிற்குள், மக்களுடைய அடிமை வாழ்வின் விடுதலைக்காக நடத்தப்படும் போரில் பெரும் பங்கெடுத்துக் கொண்டிருக்கிற தென்பதைத் தமிழ் நாட்டார் அறிவார்கள். மதம், புரோகிதம், சாத்திரம், ஜோசியம் முதலிய அறிவு வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் தடையாயுள்ளவற்றை ஒழிப்பதற்கும் பிறப்பினாலும், பணத்தினாலும், படிப்பினாலும் ஏற்பட்ட உயர்வு தாழ்வுகளினால் ஏழை மக்களுக்குண்டாகும் துயரங்களை நீக்குவதற்கும், "விடுதலை" ஆவன செய்ய முயன்றிருக்கிறது. தமிழ் நாட்டில் ஜாதி இறுமாப்பையும், அறியாமை இருட்டையும் விரட்டி ஓட்டுவதற்காக, "அறிவுரைக்கொத்து," "தொல்காப்பிய ஆராய்ச்சி" முதலிய வெளியீடுகளை பரப்புவதற்கும், பலப்படுத்துவதற்கும் உதவி யளித்திருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் தேர்தல் கழகத்தில் ஒரு சிறு கூட்டத்தாரின் ஆதிக்கத்தைப் போக்கவும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நயவலக் குழுவினரின் சூழ்ச்சிகளை வெளிப்படுத்தவும், ஆகிய கத்தி வியக்கத் தொண்டும் செய்திருக்கிறது. ஆனால், "சென்ற நாளெல்லாம் சிறுவிரல் வைத் தெண்ணலாம், வரும் காலம்தான் நமக்குப் பெருங்காலம்" என்ற கொள்கையையுடைய நாம் இனிமேல் நடக்கவேண்டிய வேலையில்கவனம் செலுத்தவேண்டியது அவசியம். "விடுதலை"யின் இரண்டாவதாண்டு ஜஸ்டிஸ் கட்சிக்கும், தமிழ்நாட்டிற்கும் மிகவும் முக்கியமான காலத்தில் வந்திருக்கிறது. புதிய அரசியல் சீர்திருத்தங்கள் வரப்போகின்றன. நாட்டிலே புதியதொரு சகாப்தம் ஆரம்பிக்கிற தென்ற முறையில், மகத்தான மாறுதல்கள் ஏற்படப்போகின்றன. அரசியல் திட்டத்தின் கீழ் வரப்போகும் சட்டசபைகளின் அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்கும் உரிமை இலட்சக் கணக்கான மக்களுக்கு அதிகமாக அளிக்கப் பட்டிருக்கிறது. ஜன நாயகப் பொறுப்பாட்சியை நடத்துவதற்கு யோக்கியமும், நேர்மையும், ஒழுக்கும் உள்ள பிரதி நிதிகளைத் தெரிந்தெடுப்பதில், வாக்காளர்கள் ஜாக்கிரதையாயிருத்தல் வேண்டும். மழை கொண்டு வருகிறேன், வரிகளையெல்லாம் எடுத்து விடுகிறேன், கொடி பறக்க விடுகிறேன், என்று மக்களை ஏமாற்றும் கூட்டத்தினரை அவர்கள் விலக்கவேண்டும். அதுதான் முன்னணியில் நிற்கும் வேலையாகும். அதற்காக, அரசியல் இயக்கங்களின் தலைவர்களும், தொண்டர்களும், ஒற்றுமையுடனும், உறுதியுடனும் இடைவிடா துழைத்தல் வேண்டும். அறியாமையுடன், அஞ்ஞானம், அயோக்கியத்தனம், அதிக்கிரமம் முதலியவை அழிந்தால்தான், நாடு விடுதலையடைந்து மக்கள் சுகமுறுவார்கள், அவ்விடுதலைக்கு இடையூறாய் நிற்பவைகள், அன்னியராட்சி பார்ப்பனர் ஆதிக்கம், முதலாளிகளின் கொடுமை, பெண்களின் அடிமைத்தனம் முதலியனவாகும். அவற்றை ஒழிப்பதற்கு "விடுதலை" பாடுபடும். தமிழுலகம் அதற்குத் ஆவன செய்யுமாக!

திலகர் நிதிமோசடியும் சென்னை காங்கிரஸ் தலைவர்களும்

பொதுவாகத் தமிழ் நாட்டிலும், சிறப்பாகச் சென்னையிலும், காங்கிரஸ் தலைவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் திலகர் சுயராஜ்ய நிதிப் பணத்தைக் கணக்கு விவரங்கள் சரியாக எழுதாமல் செலவிட்ட மோசடியான விஷயத்தைக் குறித்து, திரு. ஆதிநாராயண செட்டியார் காங்கிரஸ் புத்தகங்களை ஆராய்ந்து கண்டு பிடித்து வெளியிட்ட விவரங்களை நமது வாசகர்களுக்கு எடுத்துக் காட்டி யிருந்தோம். சென்ற இதழில், அங்கத்தினர்கள்கொடுத்த பணத்தைக் கணக்கிலும் எழுதாமல், பாங்கியிலும் கட்டாமல் இருந்த சென்னை காங்கிரஸ் கமிட்டியின் நடத்தையைக் கண்டித்து, திரு. செட்டியார் எழுதியிருந்ததைக் குறிப்பிட்டோம். இன்று நாலாண்டுக் கணக்கில் எவ்வளவுகாங்கிரஸ்காரர்கள் பொதுப்பணத்தைக் கையில வைத்திருந்தார்கள் என்பதைத் திரு. செட்டியார் குறிப்பிட்டிருக்கிறார். அவர்களில் சிலருடைய பெயர்களும், "வரவேண்டிய பாக்கி நிலுவை"த் தொகைகளும் பின்வருமாறு:—

ஸ்ரீ. எ. என். ராமுலு	ரூ 160—4—8
,, கல்யாண சுந்தர முதலியார்	,, 50–12—0
,, ஆதிகேசவ நாயக்கர்	,, 50—0—0
,, ஷாபி மகமத்	,, 50—0—0
,, எம். கே. ஆசார்யா	,, 22–11—0
,, ஜி. கிருஷ்ணமூர்த்தி	,, 162—3—0
,, எ. இ. சுப்பய்யர்	,, 44—2—9
,, திருமலை சுரியார்	,, 8—2—9
,, சக்கரை செட்டியார்	,, 9—0—0
,, பிரகாசம்	,, 9–10—0
,, ஆர். சென்னசாமி அய்யங்கார்	,, 4—8—0
,, என். எஸ். ராமஸ்வாமி அய்யங்கார்	,, 58—3—2
,, எல். கே. அய்யங்கார்	,, 20–15—0
,, ரூபவேலு	,, 20–14—0
,, "ஹிந்து" ஆபீஸ் குமஸ்தா ஒருவர்	,, 0–14—0

மேற்குறித்த தொகைகளெல்லாம் பின்பு கொடுக்கப்பட்டனவா, அல்லவா என்பதற்குக் காங்கிரஸ் கமிட்டியார்தான் தகவல் சொல்லவேண்டும். இப்படியாக மனம் போனவாறு, புள்ளி விவரங்கள் சரியாக இல்லாமல், பொதுப் பணங்களைக் கையாடிய காங்கிரஸ் கமிட்டியாரைப்பற்றி என்னென்று கூறுவது? திலகர் நிதி மோசடியைப்பற்றிக் காங்கிரஸ்காரர்களை குறைகூறியிருக்க, காங்கிரஸ் விரோதிகள் குற்றங் கூறுகிறார்கள் என்பது எவ்வளவு பொய்யான கூற்று? காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு, திலகர் நிதியைப்பற்றி சரியான சமாதானம் கூறுவதற்குப் பதிலாக, வீணாகக் கோபங்கொண்டுள்ளார். அதனால், பொதுமக்களின் உள்ளத்தே குடிகொண்ட சந்தேகங்கள் மாறப்போவதில்லை. அவற்றை மாற்றுவதற்கு ஒரே வழிதானுண்டு. அதாவது, ஒரு சிறுகமிட்டி ஏற்படுத்தி பகிரங்க விசாரணை செய்வதாகும். அப்படிச் செய்வதற்குக் காங்கிரஸ் தலைவர்களுக்குத் தைரியமுண்டா என்று கேட்கிறோம்.

"கேள்விகளுக்குப் பதிலளிக்க மாட்டேன்"

தஞ்சையில் நடந்த கூட்டத்தில் பின்வருமாறு திரு. சத்தியமூர்த்தி கூறியதாக, "சுதேச மித்திரன்" வெளியிட்டிருக்கிறது" :—

"சுயமரியாதை கோஷ்டியினரின் இடஞ்சலுக் கெல்லாம் நான் பயந்தவனல்ல. அவர்களுக்கு ஏதாவது கேள்விகள் கேட்க வேண்டுமானால், எனக்கு ஒழிந்தபோது நேரில் வந்து கேட்கட்டும், நான் பதிலளிக்கிறேன். இப்பேர்ப்பட்ட காங்கிரஸ் கூட்டத்தில், காங்கிரஸ் வாதிகளிடமிருந்து வரும் கேள்விகளுக்குத்தான் நான் பதில் சொல்லுவேனே தவிர, மற்றக் கட்சிக்காரர்களுக்குப் பதிலளிக்க மாட்டேன். ஆகையால், என்னை உபத்திரவம் செய்வதில் பயன் யாதுமில்லை. கூட்டத்தில் நான் பேசும்போது அக்கேள்விகளைக் கேட்க உரிமையுமில்லை."

இதைப் படிக்கும் பள்ளிச் சிறுவனும் திரு. சத்தியமூர்த்தியின் விபரீத மனப்போக்கைக் கண்டு எள்ளி நகையாடுவானென் பதில் சந்தேகமில்லை. பொதுக் கூட்டங்களில் பொய்மூட்டைகளை அவிழ்க்கும் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவரைக் கேள்விகேட்க சுயமரியாதைக்காரர்களுக்கும், ஜஸ்டிஸ்கட்சியினருக்கும் உரிமையில்லை. என்று கூறிவிட்டால், அவ்வுரிமையைத் தாபிக்க அவர்கள் நியாய ஸ்தலம் செல்லுவார்கள் என்று திரு. மூர்த்தியார் நினைத்தார் போலும். சேலத்தில்காங்கிரஸ்காரர்கள் செய்தகாலித்தனத்திற்கு இன்றைய வரையில் மன்னிப்பு கேட்கப் படவில்லை. அக்காலம் இனிமேல் [illegible]க்கும் பதில் சொல்லமாட்டேன் என்று காலித் தலைவர் கூறிவிட்டார். இதற்குத் தக்கதொரு படிப்பினை கற்பிப்பது சுயமரியாதையுடைய பார்ப்பனரல்லாத இளைஞர்களின் கடமையாகும்.

"ரஷ்யா"வின் ஓராண்டு நிறைவு

ஒரு நன்கொடை

தோழர் எஸ். குருசாமியின் பெண் குழந்தை "ரஷ்யா"வின் ஓராண்டு நிறைவின் பொருட்டு, "விடுதலை"க்கு இரண்டு ரூபாய் நன்கொடையாக அனுப்பப்பட்டதை வந்தனத்துடன் பெற்றுக்கொண்டோம்.

ஜஸ்டிஸ் கட்சியை பலப்படுத்த

திருநெல்வேலியில் பிரமுகர்கள் சந்திப்பு

பிரசாரத்தின் அவசியம்

திருநெல்வேலி, ஜூன், 1

திரு. சி. டி. நாயகத்தின் தலைமையில், திருநெல்வேலி ஜில்லா ஜஸ்டிஸ் பிரமுகர்கள் கூட்டமொன்று, வண்ணாரப்பேட்டை, காஸ்மோபாலிடன் கிளப்பில் கூடிற்று. தோழர்கள்: ஈ.வெ. ராமசாமி, டபிள்யூ. பி. ஏ. சவுந்திரபாண்டியன், வி. வி. ராமசாமி நாடார், பொன்னம்பலனார், ஆவுடையப்ப பிள்ளை, ஈஸ்வரன் பிள்ளை, சங்கரபாணி, நம்பியார், கே. கே. பெரியசாமி நாடார், டாக்டர் சுப்ரமணியப் பிள்ளை முதலியோர் விஜயஞ் செய்தனர்.

முன்பு திருச்சியில் நடந்த ஜஸ்டிஸ் கூட்டத்தைப் பற்றியும், கட்சிக்கு பலமளிக்கப் போட்ட திட்டங்களைப் பற்றியும், கட்சிப் பிரசாரகர்கள் நியமிக்க வேண்டியதின் அவசியத்தைப்பற்றியும், கட்சியில் சச்சரவுகள் நீக்க வேண்டியதன் முக்கியத்தைப்பற்றியும் தலைவர் குறிப்பிட்டார்.

பின்னர் சுயமரியாதை இயக்கத் தலைவர் திரு. ஈ.வெ. ராமசாமி நாயக்கர் பேசியபோது சமூக சீர்திருத்த விஷயமாகவும், சட்டசபைகளில் வகுப்புவாரி பிரதிநிதித்வ விஷயமாகவும் ஜஸ்டிஸ் கட்சியின் ஆலோசனைகளை காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளுமானால். இருஸ்தாபனங்களும் ஒன்றுபட்ட விஷயங்களில் சேர்ந்து உழைக்க முடியுமென்று குறிப்பிட்டார்.

மேலும், திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் பேசுகையில் சமீப நாட்களுக்கு முன்பு, திருவாளர்கள் சி. ராஜகோபாலாச்சாரியாருக்கும், வி. ஓ. சிதம்பரம் பிள்ளைக்கும் கடிதம் எழுதியிருந்ததாகவும், அதில் தேசத்திலுள்ள பல முக்கிய விஷயங்களை விவாதித்து எல்லா கட்சிகளுக்கும் திருப்திகரமான முறையில் முடிவு செய்வதற்காக ஒரு சர்வ கட்சி மகாநாட்டை கூட்டுவது நல்லது என்று குறிப்பிட்டிருந்ததாகவும் கூறினர்.

திரு. எஸ். பழனியாண்டி முதலியார், காங்கிரஸ் பொதுஜன இயக்கமாக மாறி விட்டதென்றும் ஆகவே வருகிற தேர்தல்களில் வெற்றிபெற விரும்புபவர்கள் அவ்வியக்கத்தில் சேர்ந்து கொள்ள வேண்டுமென்றும் கூறினர்.

பிறகு, திருநெல்வேலி ஜில்லாவில் ஜஸ்டிஸ் கட்சியைப் பலப்படுத்தும் பொருட்டு 50 அங்கத்தினர்கள் கொண்ட ஒரு ஜில்லா கமிட்டியொன்று நியமிக்கப்பட்டது. அக்கமிட்டிக்கு திரு. ஐ. சி. ஈஸ்வரன் பிள்ளை தலைவராகவும், திருவாளர்கள்: வி. எம். கலியாணசுந்தரம் பிள்ளையும், டாக்டர் ஆர். வி.சொக்கலிங்கம் பிள்ளையும் காரியதரிசிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கட்சி நிதிக்காக திரு. ஈஸ்வரன் பிள்ளை ரூ. 25. கொடுக்க சம்மதித்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

பின்னர் தலைவர் முடிவுரையுடனும் வந்தனோபசாரத்துடனும் கூட்டம் இனிது கலைந்தது.

ஜப்பானுடன் போர்புரிவோம்

சீனத் தலைவர் உறுதி

ஹிட்லர், முசோலினியுடன் கலந்தாலோசிக்க புறப்பாடு

திரு. அரிட்டாவின் அகம்பாவமான பதில்

(சென்ற 'விடுதலை' இதழில், "மாணவாயிலில் சீனா" என்ற விஷயத்தை நண்பர்கள் பார்த்திருப்பார்கள். அதில் குறிப்பிட்டதன்படி, இன்று சீனா உறுதியுடன் ஜப்பானை எதிர்த்துப் போரிடத் துணிந்து விட்டது.)

சிங்கப்பூர், ஜூன், 2

ஐரோப்பிய ராஜ தந்திரிகளையும் முக்கியமாக, ஹிட்லர், முசோலினியுடனும், சீனாவின் நிலைமையைப் பற்றிப் பேசி, அவர்களின் ஆதரவைப் பெறவேண்டி, சுங்ஷான் சர்வகலாசாலை சான்சலர் திரு. சோவு, ஐரோப்பா புறப்பட்டு விட்டார். தன்னைப் பாதுகாத்துக் கொள்வதுடன், மனித வர்க்கத்திற்கே பாதுகாப்பைத் தேடும் பொருட்டும் ஜப்பானை எதிர்த்தாக வேண்டுமென அவர் கூறுகிறார்.

தென் சீனாவிலுள்ள அதிகாரிகள் மத்ய அரசாங்கத்திற்கு, உடனே ஜப்பான் மீது போர்தொடுக்க வேண்டுமெனத் தந்தி கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

ஷாங்கை, ஜூன், 1

வட சீனாவில் ஜப்பானியத் துருப்புகள் அதிகரிக்கப்படுவதைக் கண்டித்து சீனத் தூதர், புகார் செய்தார். ஜப்பானிய வெளி நாட்டு மந்திரி திரு. அரிட்டா, அங்கு குழப்பமும் பொதுவுடமைக் கிளர்ச்சியும் இருப்பதால் துருப்புகள் அதிகரிக்க வேண்டிய அவசியமிருப்பதாகப் பதில் கூறினர். ராணுவ அதிகாரிகள் கலந்தாலோசித்து வருகிறார்கள்.

ஜப்பானை எதிர்க்க, சீனத் தலைவர்கள் சகல ஏற்பாடுகளையும் செய்வதாகத் தெரிகிறது. டீன்ட்சின் பிரதேச மாணவர்கள், ஜப்பானியத் துருப்புகள் அதிகரிப்பதைக் கண்டித்து மூன்று நாள் வேலை நிறுத்தம் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

பொருளாதாரப்பிரச்னைகளை இப்போது கவனிக்க வேண்டாமாம்!

"சுயாட்சிக்குப்பின் சமதர்மம்"

"அவர்கள் நாட்டில் பிளவு ஏற்படுத்துவர்"

ராஜேந்திரர் சமதர்மிகள்மீது காய்கிறார்!

பாபு ராஜேந்திரர், சமதர்மிகள் தமது கொள்கைகளைப் பற்றிப் பிரசாரம் செய்து நாட்டில் பிளவையே ஏற்படுத்துவார்களெனவும், அதனால் தேசம் சீரழியு மென்றும், சுயாட்சி லட்சியம் கைகூடா தென்றும், ஒற்றுமை மறையு மெனவும் கூறி, சமதர்மத்தைத் தாக்கி, இன்று தேசமுள்ள நிலைமையில் பொருளாதாரப் பிரச்னைகளிலே கவனம் செலுத்தி, சமதர்ம முறைகளினால் அவைகளைத் தீர்க்க யோசிக்கக் கூடாதென்றும், சுயாட்சிக்குப் பிறகு இவைகளைப் பார்த்துக் கொள்ளலா மென்றும், சப்ராவில், ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினர்.

பீபிள்ஸ் பார்ட்டி விஷயமாக வந்த "கயறு"

சர். மகமது உஸ்மான் மறுப்பு

"புதியகட்சியில் நான் சேரவில்லை"

பீபிள்ஸ் பார்ட்டியைத் தலைமை பூண்டு நடத்த சர். மகமது உஸ்மான் இசைந்துள்ளதாக பத்திரிகைகளில் இரண்டொரு தினங்களுக்கு முன்பு வெளிவந்த செய்தியைப்பற்றி "மதராஸ் மெயில்" நிருபர், சர். உஸ்மானை பேட்டி கண்டு விசாரித்ததில் "அச்செய்திக்கு ஆதாரமில்லை. அது உண்மையல்ல, நான் புதியகட்சியை நடத்த இசையவில்லை. நான் ஜஸ்டிஸ் கட்சியைவிட்டு விலக எண்ணவேயில்லை" என்று சர். மகமது உஸ்மான் கூறினர்.

'திரு. தாமஸே குற்றவாளி'

பிரிட்டிஷ் "பட்ஜட்" விஷயமாகத் தகவல் கொடுத்தார்

லண்டன், ஜூன், 2

பிரிட்டிஷ் அரசாங்க வரவு செலவுப்பட்டி (பட்ஜட்) விஷயத்தில், திரு. தாமஸ் (மந்திரி சபையிலிருந்து சில நாட்களுக்கு முன்பு விலகியவர்) தகவல்களை திரு. பேட்ஸ், சர். ஆல்பர்ட்பட் என்பவர்களுக்குக் கொடுத்ததாக, விசாரணை கமிட்டியார் ஏகமனதாகத் தீர்மானித்தனர். இதைக் கேட்டு, "இடுக்கிட்டுப் போனேன்" என்கிறார், திரு. தாமஸ்.

அவருடைய மகனுக்கு இவ்விஷயத்தில் ஒரு சம்பந்தமுமில்லை எனவும், மேற்படி தகவலைக் கொண்டு திரு. பேட்ஸ், சர். ஆல்பர்ட்பட் என்பவர்கள் இலாபமடைந்தனரெனவும் கூறப்படுகிறது.

திரு. சத்தியமூர்த்திக்கு சவுக்கடி

“காங்கிரசைக் காட்டிக் கொடுத்தார்”

“வெள்ளையரைக் ‘குல்லா’ போட எண்ணுகிறார்”

‘காங்கிரஸ் “ஜூடாஸ்” வாய் வீச்சு’

மயிலை ரத்தின சபாபதி முதலியாரின் குற்றச் சாட்டு

திருவல்லிக்கேணி கடற்கரையில் கண்டனக் கூட்டம்

சென்னை, ஜூன், 1

சென்ற சனிக்கிழமை மாலை திருவல்லிக்கேணி கடற்கரையில் திரு எச். டி. ராஜா தலைமையில் நடைபெற்ற ஓர் பொதுக் கூட்டத்தில், சமீபத்தில் ஆனைமலையில், ஐரோப்பியர் சங்கத்தில் திரு. சத்தியமூர்த்தி பேசியுள்ளதை பலர் பலமாகத் தாக்கிப் பேசினார்கள்.

இந்திய தேசிய காங்கிரசின் கொள்கைக்கும், அதன் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேருவின் கொள்கைக்கும் நேர்மாறாக திரு சத்தியமூர்த்தி தற்பொழுது செய்து வரும் பிரசாரத்தைக் கண்டிப்பதற்காக இக்கூட்டம் கூட்டப்பட்டிருப்பதாக தலைவர் கூறி மேலும் பேசியதாவது:—

“குடியேற்ற நாட்டந்தஸ்து” தான் காங்கிரசின் லக்ஷியமென்று திரு. சத்தியமூர்த்தி திரித்துக் கூறிவருகிறார். உண்மைக்கு அது முற்றிலும் மாறுபட்டதாகும், பூரண சுயாட்சிக்கே காங்கிரஸ் போராடி வருகிறது என்பது யாவருக்கும் தெரியும். பிரிட்டிஷ் தொடர்பிலிருந்து கத்தரித்துக் கொள்ள வேண்டுவதே அதன் அர்த்தமாகும். காங்கிரசின் லக்ஷியம் தான் தான் கூறுவதுதானென்று சொல்ல திரு. சத்தியமூர்த்திக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. எல்லாரைக் காட்டிலும் மேம்பட்டவரென்றோ, அல்லது பேசுவதிலும், எழுதுவதிலும் தனக்கு நிகரானவர்கள் யாருமில்லையென்று சத்தியமூர்த்தி தன்னைத்தான் நினைத்துக் கொண்டிருந்த பொழுதிலும், பூரண சுயாட்சிக்கே காங்கிரஸ் போராடி வருகிறது என்று கூறிவரும் பண்டித ஜவஹர்லால்நேருவினும் மேம்பட்டவரல்லர் என்பது மட்டும் நிச்சயம்.

எந்த அடிப்படையான கொள்கைக்காக காங்கிரஸ் போராடி வருகிறதோ அதனை மந்திரி பதவி வகிக்க வேண்டுமென்ற பேராசையில் திரு. சத்தியமூர்த்தி மறந்துவிட்டதாகவோ, அல்லது வேண்டுமென்றே திரித்துக் கூறுவதாகவோதான் நினைக்க வேண்டியிருக்கிறது.

விசாரணையின்றி சில காலம் தடைப்படுத்தி வைத்திருப்பதை காங்கிரஸ் அனுமதிக்கும் என திரு. சத்தியமூர்த்தி மற்றொரு தவறான விஷயத்தைக் கூறியிருக்கிறார். விசாரணையின்றி ஒரு நிமிஷம் கூட தடைப்படுத்தி வைப்பதைகாங்கிரஸ் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இதுவே உண்மை.

இம்மாதிரிப்பிரசாரங்களினால் பல கட்சிகளின் ஆதரவையும் பெற்றுதன் நோக்கத்தைஅடையப்பெற்று பின்னர் பாமர மக்களை தலை தூக்க விடாமல்படி செய்து விடலாமென திரு சத்தியமூர்த்தி நினைத்துக் கொண்டிருக்கிறார் போலும். அரசியலையடைப்பதற்காகவோ அல்லது அதை ஏற்று நடத்துவதற்காகவோ பதவியை விரும்பவில்லையென்றும், பின்னர் அதனை உபயோகித்து அதன் மூலம் எவ்வளவு அனுகூலங்களை அடைய முடியுமோ அவ்வளவையும் கிரகிப்பதற்காகவே, காங்கிரஸ் பதவி ஏற்கும் என்ற அர்த்தத்தையே நாம் அவர் பேச்சிலிருந்து யூகிக்க வேண்டியிருக்கிறது.

தங்கள் சுயநலத்திற்காக தேசத்தை எந்த நிமிஷத்திலும் காட்டிக்கொடுக்கக் கூடியவர்களை நம்ப வேண்டாமென்று கூறிவிட்டு தலைவர் மேலும் கூறியதாவது:—

“இம்மாதிரி விஷயங்கள் நடைபெற நாம் அனுமதிப்போமேயானால் இன்றையதினம் தானே சர்வாதிகாரியென நினைத்துக்கொண்டு பேசிவரும் திரு. சத்தியமூர்த்திக்கு காலைத்தினம் ஒரு சமயம் மந்திரி பதவி கிட்டும் பக்ஷத்தில் தன்னுடைய நலத்தைப் பாதுகாப்பதற்காக நம்மீதே முதலில் பாணம் தொடுப்பாரென்பது நிச்சயம். ஆகவே, தேசத்திற்காகவும் பாமர மக்களின் முன்னேற்றத்திற்காகவும் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் தியாகம் செய்பவர்களையே நீங்கள் ஆதரித்து நிற்க வேண்டுமென உங்களை கேட்டுக் கொள்ளுகிறேன்.”

“காங்கிரஸ் ஜூடாஸ்கள்!”

அடுத்தபடியாக மயிலை ரத்தினசபாபதி முதலியார் தமிழில் பேசுகையில், திரு. சத்தியமூர்த்தியின் குறும்புத்தனமான . பிரசாரங்களைக் கண்டித்து, ஐரோப்பியர்களுக்கும், ஆங்கிலோ இந்தியர்களுக்கும் குல்லா போட்டு அவர்களை தனக்கு ஆதரவாக இருக்கும்படிச் செய்து இம் மாகாணத்தின் மந்திரிபதவியை அடைய வேண்டுமென்ற பேராசை கொண்டு, இயேசு கிறிஸ்துவை ஜூடாஸ் காட்டிக் கொடுத்தது போல், தேசத்தையும், காங்கிரசையும் காட்டிக் கொடுத்தார் எனக் கூறினார். மேலும் அவர் கூறியதாவது,

பத்திரிகைகளில் வெளிவந்துள்ள விஷயங்களைக் காட்டிலும் மோசமாக திரு. சத்தியமூர்த்தி பேசியுள்ளார். ஆனமலை, ஐரோப்பிய சங்கத்தில் திரு. சத்தியமூர்த்தி பேசின பொழுது பத்திரிகை நிருபர்கள் ஒருவரும் அங்கு கிடையாது. ஆகவே, தேசத்திற்கும், காங்கிரசுக்கும் எதிரிடையாக தான் அங்கு பேசிய முக்கிய விஷயங்களை மறைத்து விட்டு மற்ற விஷயங்களை தானே ரிபோர்ட்டர்களுக்கு ஒப்புவித்தார்.

முடிவுரையாக திரு. முதலியார் பேசியதாவது, தனக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தை திரு. சத்தியமூர்த்தி துஷ்பிரயோகம் செய்து வருகிறார். திருவல்லிக்கேணி ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தலைவர் தேர்தலில் நடைபெற்ற மோசங்களைக் கவனியுங்கள். அத்தேர்தலில திரு. சத்தியமூர்த்திக்கு எதிராக ஒருவர் நின்றார் அவரை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் பிரியப்பட்டார்கள். சச்சரவு ஏற்படாமல் இருப்பதற்காக அவ்விஷயம் ஒரு மத்தியஸ்த போர்டின் ஆலோசனைக்கு விடப்பட்டது. அத்தினத் தன்று திரு. சத்தியமூர்த்தி ஆஜராயிருந்தார். ஆனால், அவருக்கு எதிராக நின்றவர் வரவில்லை. ஆகவே, மற்றொரு நாளைக்கு கூட்டத்தை ஒத்திப் போடலாமென்றும் அத்தினத்தன்று போட்டி அபேக்ஷகரைவரச் செய்து சமாதானப்படுத்தி விஷயத்தை சௌஜன்னியமாக முடிக்கலாமென்று திரு.ஷாபி முகம்மது ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். மேலும் முதலியார் பேசுகையில், கமிட்டியில் அங்கத்தினராயிருந்த திரு. ரத்தின சபாபதி முதலியார் தீர்மானத்தை ஆதரித்து ஓட்டுக் கொடுத்தார். இது திரு சத்தியமூர்த்திக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணிவிட்டது. உடனே அவர் திரு. முதலியாரிடம் இது தான் நீங்கள் பிரசன்னமாயிருக்கும் கடைசி ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் எனக் கூறினர். அப்பொழுதிருந்து தமிழ் நாட்டின் ஹிட்லரும், குட்டி முசோலினியுமான திரு. மூர்த்தி, அடுத்து வந்த ஒவ்வொரு கூட்டத்தின் பொழுதும் அவர் பெயரை ஒதுக்கியே வந்தார். திரு. சத்தியமூர்த்தியைக் கண்டித்து வேறு பலரும் பேசியபின் கூட்டம் முடிந்தது.

பாரத சேவாஜன சங்க 3-வது மகாநாடு

ஒத்திவைக்கப்பட்டது

(நமது நிருபர்)

இராணிப்பேட்டை, ஜூன், 1

பாரத சேவாஜன சங்க 3-வது மகாநாட்டை ஜூன்மாத முதல் வாரத்தில் இராணிப்பேட்டையில் நடத்துவதென தீர்மானித்ததை ஜூலைமாத கடைசிவாரத்தில் நடத்துவதென தீர்மானித்திருக்கின்றனர்.

மனிதக் குரலில் பேசும் எருது

உழும்பொழுது எஜமானுக்கு உபதேசம்

வெள்ளம் வரும் எனக்கூறிவிட்டு மாண்டது

மாதுபான் பிரதேசத்தைச் சேர்ந்த காவார் என்ற கிராமத்திலிருந்து ஒரு அதிசய செய்தி கிடைத்திருக்கிறது.

ஒரு குடியானவன் தன் நிலத்தை உழுதுக் கொண்டிருக்கும் பொழுது சாந்தமாக உழுது வந்த எருதுகளில் ஒன்று திடீரென்று நின்று தனது எஜமானனுக்கு மனிதக் குரலில், இந்நிலம் பூராவும் வெள்ளத்தால் அழியப்போகிறது. ‘எஜமானே நீங்கள் கஷ்டப்பட்டு உழுவதால் என்ன பயன்’ என்று உபதேசிக்கத் தொடங்கியது.

குடியானவன் பிரமிப்பு அடைந்தவனாய் கிராமத்திற்கு ஓடிச்சென்று தான் கேட்ட அதிசயத்தை வெளிப்படுத்தினான். கிராமவாசிகளும் இதைக் கேட்டு ஆச்சரியமடைந்தவர்களாய் அவ்வெருதைப்பார்க்கச் சென்றனர். முன் கூறியதையே திரும்பவும் கூறிவிட்டு, அவ்வெருது நிலத்தின்மீது விழுந்து மாண்டது.

பிரான்ஸில் அல்லி தர்பார்!

பிரான்சில் பெண்களுக்கு ஓட்டுரிமை கிடையாது! இப்போது அங்கு மாதர்கள் தமக்கு ஓட்டுரிமை வேண்டுமென கிளர்ச்சி செய்கின்றனர். பார்லிமெண்டு கட்டடத்தில், மாதர்கள் விஜயம் செய்து, தங்களை மறக்கக் கூடாதென்ற போஸ்டரை ஒட்டி, ஆரவாரம் செய்தனர். காவல்காரர்கள் போஸ்டரைக் கிழித்தெறிந்தனர். சில மாதர்களிடமிருந்து போலீஸ் வாக்கு மூலம் வாங்கப்பட்டது. பார்லிமெண்ட் [illegible]. “அல்லிகளுக்கு” சபாஷ்பட்டம் தந்தனராம்.

குளிக்கரையில் திரு. சத்தியமூர்த்தி மீது பாணம்!

தோழர்களின் கேள்விகள்—ஞானியாரின் மழுப்பல்

காங்கிரசுக்கு திரு. சத்தியமூர்த்தி செய்த துரோகம்

(நமது நிருபர்)

திருவாரூர், ஜூன், 1

திருவாரூரை யடுத்த குளிக்கரையில் சென்ற 29-5-31 வெள்ளிக்கிழமை மாலை 6-15 மணிக்கு ஒரு காங்கிரஸ் கூட்டம் நடந்தது. அவ்வமயம் திருவாரூர் திரு. தியாகராஜ ஞானியார் தலைமை வகித்தார். ஜனாப் பி. தாவுத்ஷா முதலியோர் வந்திருந்தனர். அவ்வூர் காங்கிரஸ்வாதியான திரு. வைத்திலிங்கம் பிள்ளை பேசியதின் முக்கிய கருத்தாவது: “காங்கிரஸ்கொள்கையைக் கெடுக்க மந்திரி பதவியில் மோகம் பிடித்த திரு சத்தியமூர்த்தி கிளம்பி விட்டார். இவர்பேச்சும் செய்கையும் கண்டிக்கத் தக்கது. இண்டியன் எக்ஸ்பிரஸில் ஒரு விஷயம் வெளியாயிருக்கிறது. அது உண்மையாயின் திரு. சத்தியமூர்த்தியின் ஒழுங்கீனமானசெய்கை வெளியாகிறது. ஆனமலை வெள்ளையர்கூட்டத்தில்பேசிய சத்தியமூர்த்தி தான் அபேதவாதத்தை எதிர்ப்பதாக பேசி இருக்கிறார். இது மிகவும் கண்டிக்கத் தக்கது. மேலும் அம்மாபேட்டை மகாநாட்டில் தான் பேச அருகதையற்ற ஒரு பிரச்சினையைக் கிளப்பிவிட்டார். லட்சுமணபுரியில் கூடிய காங்கிரஸில் ‘பதவி’ ஏற்பதா! அல்லது ஏற்பதில்லையா என்ற பிரச்னை வாதத்துக்கு வந்தது. பதவி ஏற்புக்கு எல்லோரும் ஆதரவாய் இருந்தார்கள். ஆனால், பண்டிதர் மட்டும் அதை எதிர்த்துப் பேசினார். பிறகு அதை அவர் இஷ்டப்படி அ. இ. கா. கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதைப்பற்றிக் கமிட்டியைத் தவிர பிறர் பேச கொஞ்சமும் அருகதை இல்லை. ஆனால், நமது திரு. சத்தியமூர்த்தி மட்டும் அதைப்பற்றி பேச ஆரம்பித்து விட்டார். அதைப்பற்றி ஒருதீர்மானமும் அவர் இஷ்டப்படியே நிறைவேறியிருக்கிறது. அத்தீர்மானத்தில், ‘இம்மகாநாடு பதவி ஏற்புக்கு சிபார்சு செய்கிறது. இவ்விஷயத்தைப்பற்றி அ. இ. கா. கமிட்டி மாகாண தேர்தலுக்கு மூன்று மாதத்திற்கு முன் முடிவு செய்துவிட வேண்டும்’ என்று இருக்கிறது. ஆகவே, இத் தீர்மானம் மர்மமாகவே இருக்கிறது. ஆகவே, திரு. சத்தியமூர்த்தியின் போக்கும் விபரீதமாகவே இருக்கிறது. இவ்விஷயத்தைப்பற்றி அவருடைய அபிப்பிராயத்தை அறிய நானும், லால்குடி கிருஷ்ணய்யரும் கலந்து ஆலோசித்து சில கேள்விகளை எழுதி நேற்று திருவாரூரில் நடந்த கூட்டத்தில் பேசிய திரு. சத்தியமூர்த்தியிடம் பதில் சொல்லுமாறு கொடுத்தோம். ஆனால், அவசரமேயாய் ஏதோ பதில் சொல்லாமல் போய்விட்டார்.

பிறகு ஜனாப் தாவுத்ஷா பேசும்போது பொப்பிலியும் மற்றவர்களும் காங்கிரசுக்கு துரோகம் செய்து விட்டனர் என்று பேசினார். அச்சமயம் அவ்விடம் போயிருந்த ஸ்ரீரங்கம் சுயமரியாதை சங்க அங்கத்தினர் தோழர் என். சின்னையா, “ஐயா! எனது சந்தேகத்தை தயவு செய்து நிவர்த்தியுங்கள். ஆதியில் நாட்டை வெள்ளையர் வந்த பொழுது சிலர், பொப்பிலி ராஜா முதலியவர்கள் இப்பொழுது காங்கிரசை காட்டிக் கொடுத்து துரோகம் செய்வது போல், காட்டிக்கொடுத்து விட்டு துரோகம் செய்திருக்கின்றார்கள் என்று பேசினீர்களே? காங்கிரஸ் காரர்களால் மும்முறை சிறைசென்ற தியாகி என்று கொண்டாடக் கூடியவரும், தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டித் தலைவருமாகிய திரு. என். சத்தியமூர்த்தி ‘மிதவாதம் பேசும் டாக்டர் சுப்பராயன் மந்திரி சபைக்கு திருட்டுத் தனமாக ஆதரவு கொடுத்து வந்ததும், அன்று முதல் இன்றுவரை தேச பக்தராக இருக்கக் கூடிய திரு. சக்கரைச் செட்டியாருக்கு விரோதமாக அசல் வெள்ளையரான மிஸ்டர் லேடன் துரையை மேயராக்கி வைத்ததும் காங்கிரசுக்கு துரோகம் அல்லவா இது எந்தரகத்தில் சேர்ந்தது?’” என்ற கேள்வியை ஒரு கடிதத்தில் எழுதிக்கொண்டு போய் கொடுத்தார். அக்கேள்விக்கு தலைமை பூண்டு இருந்த திரு. ஞானியார் பதில் சொல்லி மழுப்பினர்.

பிறகு திரு. ஞானியார்; டாக்டர் சுப்பராயன் மிதவாதி அல்லவென்றும், அசல் காங்கிரஸ்காரர் என்றும், மேயர் பதவிக்கு கிறிஸ்தவராக வேண்டுமென்கிற விதி இருக்கிறதென்று தூக்கமயக்கத்தில் தடுமாறுவதுபோல சொல்லிவிட்டு பிறகு திரு. சக்கரைச் செட்டியார் காங்கிரஸ் பெயரால் மேயர் பதவியை அடையக்கூடிய நிலைமைக்கு வந்தவுடன் ஜஸ்டிஸ்காரருடன் சேர்ந்துகொண்டதினால் திரு. சத்தியமூர்த்தி இப்பேர்ப்பட்ட துரோகியை மேயராக்கி வைப்பதைவிட அசல் வெள்ளையரை மேயராக்கி வைப்பது சொல்லவும் தகும் என்று கருதி அவ்வாறு செய்தார் என்றும், சத்தியமூர்த்தி செய்தது சரி என்றும் பேசிவிட்டு நாணயமற்ற முறையில் பொப்பிலி ராஜா மீது வசைபுராணம் படிக்க ஆரம்பித்தார்.

‘மேடை மீது ஏறி தனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் உரிமை இந்தியருக்கு ஜஸ்டிஸ் கட்சியால் கிடைக்கவில்லை காங்கிரஸ் கட்சியால் தான் கிடைத்தது என்று சொல்லும் காங்கிரஸ் தோழர் ஒருவரைச் சேர்ந்தவர்கள் தானே நீங்கள்? உங்கள் காந்தியாரைக் கேளுங்கள் அவர் உங்களுக்குப் புத்திக் கொடுப்பார்? காங்கிரஸ் தோழர்களை உங்களுக்கு இதிலிருந்து அரசியலில் எவ்வளவு அனுபோகம் என்பது நன்கு விளங்குகின்றதல்லவா? சுயமரியாதைத் தோழர் ஒருவரைக் கண்டால் மணப் பெண் மாதிரி குனிந்து போகும் நீங்கள் அன்று கூட்டத்தில் ஆரவாரம் செய்திர்களாமே? என்ன? கையில் சரக்கு இல்லாமலே மூட்டை அளக்க துணிந்து விட்டீர்களோ? இனிமேல் நாணயத்துடனும், ஒழுங்குடனும் நடப்பீர்களாக? இன்றேல், உங்களது வேஷம் வெளிப்படுத்தப் படும். கௌரவமான கண்ணிய முறையில் ‘கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்றபடி’ நினைக்க கடவுங்கள்! உம் இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறேன். என்னே! இவர்களின் போக்கு?’

பாலஸ்தீனத்தில் அமளி

ஜெருசலம், ஜூன், 1

பாலஸ்தீன அமளி அதிகரித்தபடியே இருக்கிறது. யூதர் அராபியர் பிணக்கே இதற்குக்காரணம்.

கலகக்காரர், பஸ்ஸில் போய்க் கொண்டிருந்த, ஹூப்ரூ சர்வ கலாசாலை மாணவரைச் சுட்டு வீழ்த்தினர். வேறு பக்கங்களும் தாக்கப்பட்டன. காஸா நகருகில் ரயில் பாதையில் வெடிகுண்டு வீசப்பட்டது.

உலகத்தில் பெரிய தேனீக் கூண்டு

1 டன் எடையாம்

7000 பவுண்டு தேன் கிடைத்தது

ஆஸ்திரேலியரின் அதிர்ஷ்டம்

உலகத்தில் பெரிய தென மதிப்பிடக்கூடிய ஒரு தேனீக் கூண்டை ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டாக்டர் வில்மத் கண்டு பிடித்தார்.

ஒருபிரமாண்டமானயூகலிப்டஸ் மரத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்த அந்த கூண்டின் உயரம் 36 அடியாகவும், அகலம் 21 அடியாகவும் இருந்ததாம்.

மரம் வெட்டப் பட்டு அக் கூண்டிலிருந்து 7000 பவுண்டு தேனை டாக்டர் எடுத்தார். கூண்டு 1 டன் பாரம் இருந்ததாம்.

சர், ராகவேந்திரருக்கு யோகம் வருகிறதாம்

மத்ய மண்டலத்திற்கு ஆக்டிங் கவர்னராக வீற்றிருக்கும், சர். ராகவேந்திராவ்நாயுடு, தென் ஆப்பிரிக்காவில் இந்திய அரசாங்கத்தின் ஏஜண்ட் ஜெனரலாக, தற்போது இருக்கும் சர். ரஜா அலி விலகியதும், நியமிக்கப்படலாமென, கல்கத்தா பத்திரிகையொன்று கூறுகிறது.

மூக்குக் கண்ணாடியை உபயோகிக்கும் முதல் நாய்

பிரிட்டன், இப்ஸ்விச் என்ற விடத்தில் வசிக்கும் திரு. கே. எப். செம்பென்சில்லியமன் என்ற கண் வைத்தியரின் 4 வயது நாயாகிய புரூன் மூக்குக் கண்ணாடியை உபயோகித்து வருகிறதாம். உலகிலேயே மூக்குக் கண்ணாடியை உபயோகிக்கும் முதல் நாய் அதுவே எனக் கூறப்படுகிறது.

முசோலினியின் விஷப்புகை யுத்தத்தை தாக்கி எழுதியதற்காக கிரீஸில் ஒரு சமதர்ம பத்திராதிபர் சிறைப்படுத்தப்பட்டார்.

• • •

ஏப்ரல்முதல்வரையில் 44 கப்பல்களைக் கட்டித்தருமாறு பிரிட்டிஷ் கம்பெனிகளிடமிருந்து, ஜெர்மனியில் கப்பல் உற்பத்திசெய்யும் தொழிற் சாலைகளுக்கு உத்திரவு வந்திருக்கிறது.

• • •

ஜெர்மனியில் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டவர்களும், பத்திரிகைகள் வெளியிடுபவர்களும், அவர்கள் மனைவிகளும் 1800 முதல் கலப்படமற்ற சுயஜெர்மனிய ரத்தமே தங்கள் நரம்புகளில் ஓடுவதாக தஸ்தாவேஜுகள் சமர்ப்பிக்க வேண்டுமென்று ஜெர்மனியில் சமீபத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள புதிய தோர் சட்டம் கூறுகிறது.

• • •

விவாகரத்து செய்பவர்களுக்கு வரியும், குழந்தைகளை அதிகமாய் உடைத்தாயிருப்பவர்களுக்கு பண உதவியும் செய்ய சோவியத்சர்க்கார் திட்டம் கொண்டு வந்திருக்கின்றனர். விவாகரத்துமூலம் குழந்தைகள் அதிகம் பிறப்பது தடைபடக் கூடுமென்று அவர்கள் கருதுவதே அதற்குக் காரணம்.

• • •

16 வயது சமார் பெண்ணுடன் ஸ்திரீ சோரம்செய்ததற்காக மிர்ஸாபுரியைச் சேர்ந்த பிரான்ஸிஸ் ஜேக்பாருக்கு 5 வருடகடுங்காவல் தண்டனையும், 400 ரூபாய் அபராதமும், 10 கசையடிகளும் கொடுக்கப்பட்டது.

• • •

4 மைல் உயரத்தில் பறக்கக் கூடிய விமானங்கள் மீது ரவை பாய்ந்து செல்லும் சக்தி வாய்ந்த துப்பாக்கிகள் பிரிட்டனில் இருப்பதாகத் தெரியவருகிறது.

இந்து மதத்தை விட்டு விலக மாஹர்கள் முடிவு

டாக்டர் அம்பேத்கார் ஆலோசனை அங்கிகரிப்பு

'சீர்திருத்தக்காரர்களிடம் நம்பிக்கையில்லை'

பம்பாய் மகாநாட்டின் தீர்மானங்கள்

பம்பாய், ஜூன், 1

பம்பாய் மகாண மாஹர் (தாழ்த்தப் பட்டோர் சமூகத்தில் ஒரு முக்கிய ஜாதியினர்) மகாநாட்டின் நேற்றைய கூட்டத்திற்கு டாக்டர் அம்பேத்கார் விஜயம் செய்து தீண்டாதார்களின் மத மாற்றத்தின் அவசியத்தைக் குறிப்பிட்டு மேலும் கூறியதாவது:—

மத மாற்றமானது குழந்தை விளையாட்டல்ல. வெறும் திண்ணைப் பேச்சுமல்ல; பல லக்ஷக் கணக்கான ஜனங்களின் வாழ்க்கையையே பாதிப்பதாக இருக்கிறது.

மத மாற்றம் வெற்றிகரமாக இருக்க வேண்டுமாயின் பூர்வாங்கமாக அவசியமானவைகளைச் செய்தாக வேண்டும்.

அகோலாவிலே மத மாற்ற விஷயமாக நான் கூறிய முக்கிய விஷயத்தைப் பற்றி கிராமப் புறங்களிலுள்ளவர்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தைக் கூறி இருக்கிறார்கள். ஆனால், முடிவாக ஓர் தீர்மானத்தைச் செய்ய தாழ்த்தப்பட்ட வகுப்பினரெல்லாம் சேர்ந்து ஒரே கூட்டத்தில் கூடுமாறு எவ்வித முயற்சியும் இதுவரை செய்யவில்லை.

தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் எவ்வித முடிவு செய்யப் போகிறார்களென்பதைப் பற்றி எனக்கு தெரியாதவரை, நான் மதமாற்ற விஷயமாக பூர்வாங்க வேலைகளை கைக்கொள்ளுவதற்கில்லை.

தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் கருத்தை அறிவதற்காகவே இம் மகாநாடு கூட்டப்பட்டுள்ளது.

மதமாற்றம் ஓர் முக்கியமான விஷயம். இதைப்பற்றி தாழ்த்தப் பட்ட சமூகத்திலுள்ள தனித்தனி ஜாதியினரின் அபிப்பிராயத்தை அறிவதற்காகவே இப்போது மாகாணங்கள் மகாநாடுகள் கூட்டப்பட்டுள்ளது.

மதமாற்ற விஷயத்தை இரு அம்சங்களில் பரிசீலனை செய்யலாம், ஒன்று சமூகம்; மற்றொன்று ஆன்மார்த்தம். தீண்டாமை யென்பதின் கருத்தை சரியாக தெரிந்து கொண்டாலே இப்பிரச்னையை சரியாக நிதானிக்கலாம்.

தீண்டாமை யென்பது, தீண்டத்தக்கவர்களுக்கும், தீண்டாதாருக்கும் சமூக சம்பந்தமான ஓர் போராட்டம்.

பூர்வாங்கமாகவும், மேலெழுந்தவாரியாகவும் பார்த்தால், இது சமூக அந்தஸ்தைப் பற்றியதேயன்றி பொருளாதார பிரச்னையைப் பற்றியதல்ல வென்று தோன்றும். முடிவாக பரிசீலனை செய்தால் இது பொருளாதார போராட்டமாகவுமிருக்கும்.

எனவே தாழ்த்தப்பட்டவர்கள் தீர்மானிக்க வேண்டிய முக்கிய விஷயமென்ன? அவர்கள் தங்கள் பிறப்புரிமையாகிய சமூக அந்தஸ்தை போராட்ட மூலம் அடைய விரும்புகிறார்களா இல்லையா என்பதே.

போராட்ட மூலம் வெற்றிபெற பல தடைகளுள்ளன. ஆள் பலமோ அல்லது பணமோ தாழ்த்தப்பட்டோருக்கு இல்லை. மேலும் அடிமை மனப்பான்மையினால் மற்றும் கஷ்டமேற்படுவதாக இருக்கும். பிறப்புரிமையைப் பெற எவ்விதம் சக்தி பெறுவதென்பதே முக்கிய விஷயம்.

தங்கள் சொந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கே அச் சமூகத்தினர் உதவி செய்கின்றனரென்பது அநுபவத்தில் கண்ட உண்மை. இப்போது தாழ்த்தப்பட்டவர்கள் எந்த சமுதாயத்தையும் சேராமல் தனிப்பட்ட நிலைமையிலுள்ளனர். தாழ்த்தப்பட்டவர்கள் போதிய சக்தி பெறாது பொருளாதார போராட்டத்தில் வெற்றிபெற விரும்பினால் அவர்கள் இவ்விதம் தனித்திருக்க முடியாது. ஏதாவது ஓர் சமூகத்தினருடன் சேர்ந்து அச் சமூகத்தின் உதவியும் ஆதரவும் தங்கள் போராட்டத்திற்குக் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இது மத மாற்ற மென்பதற்கு மற்றோர் பெயர் என்றே நான் அபிப்பிராயப்படுகிறேன்.

மதத்தின் ஆன்மார்த்த அம்சத்தை எடுத்துக் கொள்வோம். தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஹிந்து மதம் எவ்வித சாந்தியையும், சந்தோஷத்தையும் அளிக்க தவறி விட்டது. தாழ்த்தப்பட்டவர்கள் மதம் மாறக்கூடாதென்று பலர் கூறிய ஆட்சேபங்களும் வாதங்களும் என் மனதிற்கு திருப்தியளிக்கவில்லை.

தாழ்த்தப்பட்டவர்களின் மூதாதையர் இந்து மதத்தை மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டார்களென்று நான் மதிக்கவில்லை. இந்து சமுதாயத்தில் வாழ அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி யிருக்கிறார்களென்றே நான் நினைக்கிறேன்.

சீர்திருத்தக்காரர்களிடம் எனக்கு நம்பிக்கையில்லை. ஏனெனில், அவர்கள் தங்கள் சொந்த சாதியினரின் எதிர்ப்பையே சமாளிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். தங்கள் ஜாதிக்குள்ளாகவே கலியாணம் செய்துகொண்டு, அவர்களுக்குள்ளாகவே வாழ்ந்து, அந்த ஜாதியிலேயே சாகவேண்டுமெனும் விருப்பமுள்ள, ஜாதி ஒழிந்து சீர்திருத்தக்காரர்களிடம் எனக்கு நம்பிக்கையில்லை. மதத்திலில்லா விட்டாலும், பெயரிலாவது ஓர் மாறுதல் செய்துகொள்ள வேண்டியது அவசியமென தாழ்த்தப்பட்டவர்களே பொதுவாக உணர்ந்துள்ளனர். இவ்விதம் பெயரை மாற்றிக்கொள்ள வேண்டுமெனும் உணர்ச்சி ஏற்படுவானேன்? நிலைமுறை தத்துவமாக உள்ள தீண்டாமை எனும் கேட்டை ஒழிக்க வேண்டுமென்று அவர்களுக்கேற்பட்டுள்ள ஆர்வமே இதற்குக் காரணம். மாறுதல் அவசியமானால், ஏன் மதமாற்ற மூலம் நிரந்தரமான மாறுதலைப் பெறக்கூடாது? இதனால் புதிய பெயரும், புதிய மதமும் தாழ்த்தப் பட்டவர்களுக்கு கிடைக்கும். ஜாதிப் பெயரை மாற்றிக்கொள்வதை விட இந்த புதிய மதம் மேலானது, அதிகம் நீடித்திருக்கவும் கூடியது.

நிறைவேறிய தீர்மானங்கள்

1. (அ) மஹார் சமூகத்தார் சமத்துவமும், சுதந்திரமும் அடைய மதமாற்றமே வழியாகும்.

(ஆ) இச் சமூகத்தார் அனைவரும் மதமாற்ற தயாராக விருக்கின்றனரென்று இம் மகாநாடு தலைவர் டாக்டர் அம்பேத்காருக்கு உறுதி கூறுகிறது.

(இ) மத மாற்றத்திற்கு ஆரம்ப நடவடிக்கையாக ஹிந்து தேவதைகளைப் பூஜை செய்வதையும், ஹிந்து திருவிழாக்கள் கொண்டாடுவதையும், ஹிந்து புண்ணிய ஸ்தலங்களுக்கு விஜயம் செய்வதையும் உடனே நிறுத்தும்படி இம்மகாநாடு மஹார் சமூகத்தினரை வற்புறுத்துகிறது.

2. டாக்டர் அம்பேத்கார் ஸ்தாபித்துள்ள "ஜனிதா" என்ற புதிய வாரப் பத்திரிகைக்கு சந்தா செலுத்தும்படி இம்மகாநாடு மஹார் சமூகத்தாரை வற்புறுத்துகிறது.

பலர் பேசுகையில், தாழ்த்தப் பட்ட சமூகத்தார் சம்பந்தமாக ஜாதி ஹிந்துக்கள் கொண்டுள்ள மனப்பான்மையைப் பலர் கண்டிக்கின்றனர். மத மாற்றத்தாலேயே விமோசன மேற்படுமென்றும் வற்புறுத்தினர். ஹிந்து சீர்திருத்தக்காரர்களையும் குறை கூறிய தோடு மகாத்மா காந்தியாலும் அவரது ஹிந்து இயக்கத்தாலும் விமோசனம் ஏற்படாதென்றும் கூறினர்.

டாக்டர் அம்பேத்கார் அபிப்பிராயத்தை எல்லோரும் ஆதரித்துப் பேசினர். அவரைப் பின்பற்றி நடக்க மஹார் சமூகத்தார் சர்வ சித்தமாக விருப்பதாகவும் குறிப்பிட்டனர்.

பச்சையப்பன் கல்லூரி மைதானத்தில் மாபெருங் கூட்டம்

தமிழ் நாட்டின் எதிர்கால அரசியல் நிலைமை

5-6-36 வெள்ளிக் கிழமை மாலை 5-30 மணிக்கு பச்சையப்பன் கல்லூரி மைதானத்தில், 'தமிழ்நாட்டின் எதிர்கால அரசியல் நிலைமை' என்பது பற்றி பல கட்சி பெரியோர்கள் பேசுவார்கள்.

அதுசமயம் 'தமிழ்நாடு' ஆசிரியர், டாக்டர் வரதராஜுலு நாயுடு தலைமை வகிப்பார். யாவரும் வந்து நடைபெறும் விஷயங்களைக் கேட்டுச் சிந்திக்கும் படிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பண்டிதர் திருஞானசம்பந்தம்,
மே. மாசிலாமணி முதலியார்,
கூட்ட அமைப்பாளர்.

"அநுதாபம்"

பட்டிவீரன்பட்டி தோழர் சௌந்திர பாண்டியன் எம். எல். ஸி. அவர்களின் 16 வயதுள்ள இரண்டாவது புதல்வர் கடந்த 24-5-36-ல் கொடைக்கானல் மலை ஏரியில் அகால மரணமடைந்ததை "விடுதலை" வாயிலாக அறிந்து மிகவும் வருந்துகிறேன்.

தோழர் பாண்டியன் பார்ப்பனரல்லாதார் இயக்க விஷயமாக தீவிர பிரசார முன்னேற்றத்தில் ஈடுபட்டிருக்கு மிச்சமயத்தில், அருமைப் புதல்வரை பறிகொடுக்க நேர்ந்ததை யாரால் சகிக்கக்கூடும்?

எனினும் இயற்கையின் முடிவை யெண்ணி ஆறுதலடைவாரென நம்புகிறேன். புதல்வரைப் பிரிந்து வருந்தும் தோழர் பாண்டியன் குடும்பத்தாருக்கு எனது மனமுவந்த ஆழ்ந்த அநுதாபம் உரித்தாகுக என, கொழும்பு எஸ். பெரியஸ்வாமி எழுதுகிறார்.

பலி!

இத்தாலிய அபிசீனியப் போரில், 2766 இத்தாலியரும், 1593 (இத்தாலியருடன் சேர்ந்த) அபிசீனியரும் இறந்ததாக, (இத்தாலிய) அதிகாரத் தோரணையில் கூறப்படுகிறது.

அந்த 'பாழாய்ப் போன' வார் சேல்ஸ்!

கேப்டவுன், ஜூன், 2

வார்சேல்ஸ் உடன்படிக்கையைக் கண்டித்து, அதை மாற்றவேண்டிய தன் அவசியத்தை வற்புறுத்தி, சர்வதேச சங்கம் உலக சமாதானத்திற்குப்பாடுபட உறுதியுடன் உழைக்க வேண்டுமென்றும், இனியுத்தம் ஏற்பட்டால் அதற்குக்காரணம் அந்த பாழாய்ப் போன "வார்சேல்ஸ்" ஒப்பந்தமே எனவும், பிரிட்டன் ஆயுதத்தைக் குறைத்துக் கொள்ளவில்லை என்று குறை கூற முடியாதெனவும், ஏனெனில், சாத்தியமான வகையில் ஆயுதப் பரிஹாரணம் செய்ததோம் அது நன்றுதான் எனவும், ஆப்ரிக்கா பிரதமமந்திரி, திரு. ஹெர்ட்ஸாக், செனெட் சபையில் பேசினர்.

சென்ற மே 24-ந் தேதி கோடைக்கானல் ஏரியில் மூழ்கி மாண்ட திரு. டபிள்யூ. பி. ஏ. சௌந்தர பாண்டியன் இரண்டாவது குமாரர், காலஞ்சென்ற மாஸ்டர் ராஜ சேகரன்.

இருகூர் தேவேந்திர வேளாள வாலிப சங்கம்

அநுதாபத் தீர்மானம்

காரியதரிசி எழுதுகிறார்:—

இருகூர், ஜூன், 1

மேற்படி சங்க வாராந்திரக் கூட்டம் 31-5-36-ந் தேதி 7 மணிக்கு சங்கத் தலைவர் இல்லத்தில் திரு. சி. நாராயணசாமி தலைமையில் கூடிற்று. சங்க அங்கத்தினர்களும், பொது ஜனங்களும் அநேகமாகக் கூடியிருந்தனர்.

ஸ்ரீமதி எம். மதுரை மீனாக்ஷியம்மாள் "பெண்கள் விடுதலை" என்னும் விஷயத்தைப்பற்றி ஓர் சொற்பொழிவாற்றினார். இதைத் தழுவி திருவாளர்கள்: பி. கருப்பண்ணன், வி. பெருமாள், பி. ஆறுமுகம், கெ. சுப்பையன் இவர்கள் உபன்யாசித்தார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் அடியில் கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறின.

தீர்மானம்

சுயமரியாதை இயக்கத் தலைவர் திரு. டபிள்யூ. பி. ஏ. சௌந்திர பாண்டியன் எம். எல். ஸி. திருக்குமாரர் திரு. போஸ் என்ற ராஜசேகரன் 24-5-36-ந்தேதி கொடைக்கானல் ஏரியில் வீழ்ந்து அகால மரணமடைந்தமைக்கு இக் கூட்டம் பெரிதும் வருந்துவதுடன் மேற்படி வருத்தத்தை திரு. பாண்டியனுக்கும் அவர் குடும்பத்துக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறது.

குனியமுத்தூர்

தேவேந்திர வாலிபர் சங்கம்

காரியதரிசி எழுதுகிறார்:—

குனியமுத்தூர், ஜூன், 1

மேற்படி சங்கத்தின் வாராந்திரக் கூட்டம் 24-5-36-ம் தேதி மாலை 8-மணிக்குசங்கத்தலைவர் திரு. சி. ப. பேச்சிப்பண்ணை தலைமையில் அண்ணார் இல்லத்தில் கூடிற்று. சங்க அங்கத்தினர்களும் பொது ஜனங்களும் அநேகமாகக் கூடியிருந்தனர் அவ்வமயம் இருகூரில் இருந்து இங்கு விஜயம் செய்திருந்த திரு. சி. நாராயணசாமி "சமூக சீர்திருத்தம்" என்னும் விஷயத்தைப்பற்றி ஓர் சொற்பொழிவாற்றினர். இதைத் தழுவி திரு. வைத்திய ஆறுமுகம், இராமசாமி, பி. ஆறுமுகம் முதலியவர்கள் உபன்யாசித்தார்கள். தலைவர் முடிவுரையில் உபன்யாசகரை ஆதரித்தும் சங்க அங்கத்தினர்கள் ஒத்துழைப்பைப் பற்றியும் கூறினர் முடிவுரைக்குப்பின் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறிக் கூட்டம் இனிது முடிவுற்றது.

உலகத்திலுள்ள பெரிய துறைமுகங்கள்

உலகிலுள்ள பெரிய துறைமுகங்களில் நியூயார்க்கே பெரியதெனக் கூறப்படுகிறது. அதற்கு அடுத்தாற்போல லண்டனும், ஆண்ட்வெர்ப்பும், ஹாம்பர்க்கும் முறையே வருகிறது. இந்த மூன்று ஐரோப்பிய துறைமுகங்களுக்குப் பின்னரே ஷாங்கேய் துறைமுகம் வருகிறது.

வரி! வரி! புதிய வரி!!

காங்கிரஸ் ஆட்சியில் கைமேல் பலன்!

திருவண்ணாமலை ஜில்லா போர்டு கூட்டம்

தேர்தல் 'பேச்சு' காற்றில் பறந்தது

ஏழைகளுக்கு ஜஸ்டிஸ் கட்சியினர் ஆதரவு

(நமது நிருபர்)

திருவண்ணாமலை, ஜூன், 1

29-5-36 சனிக்கிழமை பகல் 1 மணிக்கு ஜில்லா போர்டுக் கூட்டம் திரு. எம். ஷண்முக முதலியார் தலைமையில் கூடிற்று. ஒருவர் நீங்கலாக எல்லா அங்கத்தவர்களும் விஜயம் செய்திருந்தனர். தலைவர் தேர்தல் காலத்தில் காங்கிரஸ் கட்டளைப்படி மூவர் நீங்கலாக கதராடை உடுத்தி கதர் குல்லா யணிந்து அணிவகுத்து அமர்ந்திருந்தார்கள். இதை 'புளுகுமணி' எல்லோரும் கதர் உடைதரித்து கதர் குல்லா யணிந்திருந்ததாக ஜம்பம் அடித்துக்கொண்டது. அடுத்த முதல் மீட்டிங்கு தினமாகிய இன்று, கதர் குல்லாக்கள் போன இடம் தெரியவில்லை. சுதேசி பரதேசி கலந்த உடைகளை தரித்திருந்தார்கள். தலைவர் அவர்களும் சில்க்கு தலைப்பாகையுடன் அமர்ந்திருந்தார். "கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் தெரியும்" என்பார்கள். திருவண்ணாமலை போர்டு காங்கிரஸ்காரர்களின் புளுகு மறுதினமாகிய முதல் கூட்டத்திலேயே தெரிந்து விட்டது.

புதிய வரிகள்

தலைவர் திரு. எம். ஷண்முக முதலியார் திருவண்ணாமலை நகரசபைத் தலைவரா யிருந்தபோது முன்னால் வண்டிவரி ஒரு அணாவாய் இருந்ததை இரண்டணாவாக்கினர். இவ்வரியானது பூராவும் கிராமவாசிகளிடம் தான் வசூலிக்கப் பட்டு வருகின்றது. இதனால், கிராமவாசிகள் அடையும் துயரத்தை சொல்ல முடியாது. ஜில்லா போர்டுக்கு காங்கிரஸ்சார்பாக நின்ற காலத்தில் வரிகளை எல்லாம் தள்ளி விடப் போவதாக கிராமவாசிகளிடம்போய் பிரசாரம் செய்தார்கள். சொல்லி ஒரு அமாவாசைக்குள் இவர்களின் குட்டு வெளியாகும்படி புதிய வரிகளை ஏழை பாமர விவசாயிகளின் தலையில் போட ஆரம்பித்து விட்டார்கள்.

1. கம்பளி நூல் அல்லது மயிர் சுத்தம் செய்வது அல்லது உலர்த்துவது இதற்கு வரி ரூ. 5.

2. விவசாயிகள் விவசாயத்திற்கு மட்டும் உபயோகப் படுத்தப்படும் எஞ்சின்களுக்கு ரூ. 5.

3. யாதொரு ஹோட்டல் சிற்றுண்டி சாலை சிற்றுண்டி வழங்கப்படும் இடம் இதற்கு வரி ரூ. 5.

மேற்கண்ட வரிகள் பெரும்பாலும் பயிரிடும் விவசாயிகளையும் ஏழை தொழிலாளிகளையும். பாமரர்களையும் பாதிக்கக்கூடியன வாகும். தெருவில் பலகாரக் கடை வைத்துக் கொண்டு 2 ரூபாய் முதலில்லாத மக்களை பாதிக்கக் கூடியன வாயிருக்கிறது.

இத்தீர்மானங்களை பிரேரேபித்தவுடன் நியாயக் கக்ஷியாளரும் பொது ஜன ஊழியருமான திரு. எம். வி. ரங்கசாமி ரெட்டியார் நீண்ட நேரம் வரிகளைப் போடக் கூடாதென வாதித்தார். அவர் கக்ஷியைச் சேர்ந்தவர்களும் ஆமோதித்தபின் உண்மை தேசாபிமானிகளும் சேர்ந்தார்கள். ஷை தீர்மானங்கள் இரண்டும் தோல்வியுற்றன. மூன்றாவது தீர்மானம் ரூ. இரண்டாக தீர்மானிக்கப் பட்டது. என்னே இவர்களின் வாய் வீரம்! தேர்தல் காலத்தில் கிராமங்கள் தோறும் வீடு வீடாய் பிரசாரத்திற் கென ஏராளமான பொருள் செலவிட்டு அழைத்து வந்த பிரசாரகர்கள் சென்று 'நீங்கள் காங்கிரசுக்குஓட்டு போடுங்கள், காங்கிரசுக்கு ஓட்டு போடுங்கள் உங்கள் வரிகளை எல்லாம் நாங்கள் தள்ளி விடுகிறோம்" என்று கூக்குரலிட்டார்கள். அரங்கமேடைகளில் நடிப்பது போல பெரிய பெரிய காங்கிரஸ் தலைவர்களை தருவித்து கூட்டம் போட்டு பேசினார்கள். இவர்கள் கூக்குரலும் பேச்சும் ஏமாற்ற எண்ணம் கொண்டு செய்ததாக ஏற்படுகிறதே ஒழிய கடுகளவாவது உண்மை இல்லை யென்று முதல் கூட்டத்திலேயே காண்பித்து விட்டார்கள். காங்கிரஸ் அங்கத்தவர் ஒருவரைக் கண்டு பேசிய போது "நாங்கள் என் செய்வோம் போர்டை நடத்த பணம் வேண்டாமா" என்று சொல்லுகிறார்கள். இதற்கு முன் மூன்று வருஷ காலமாக போர்டை நடத்திய நியாயக் கட்சியார் புது வரிகள் போடாமல் போர்டை சரிவர நடத்தவில்லையா? பாமர ஜனங்களே! கவனியுங்கள். காங்கிரஸ்காரர்களால் சுகமடையப் போகிறோம், எங்கள் வரிகள் எல்லாம் தள்ளிவிடப் போகிறார்கள் என்று அவர்கள் பொய்க் கூற்றை நம்பினீர்களே!! முதல் கூட்டத்திலேயே பத்மாசூரன் தலையில் கை வைத்ததுபோல உங்கள் தலையில் கையை வைத்து விட்டார்கள். இனியாவது உண்மையை உணருங்கள் காங்கிரஸ்காரர்களின் மூட்டையை நம்பி வீண் கஷ்டத்திற்குள்ளாகாதீர்கள்!!! உண்மையாளரை ஆதரித்து பொய்மையாளரை விரட்டுங்கள்.

திண்டுக்கல் சுயமரியாதை சங்கம்

(ஒரு நிருபர்)

திண்டுக்கல், ஜூன், 1

இன்று மாலை 6-30 மணிக்கு பெரியகடை வீதி ராஜேந்திர விலாஸ் ஹோட்டல் மேல் மாடியில் திரு. அ. கணபதி நாடார் தலைமையில் கூடி அடியில் கண்ட தீர்மானத்தை அக்கிராசனர் படிக்க அனைவரும் இரண்டு நிமிஷ நேரம் நின்று ஏகமனதாக நிறைவேற்றி தீர்மானத்தை, திரு. டபிள்யூ. பி. ஏ. சவுந்திரபாண்டியனுக்கு அனுப்புவதாக தீர்மானிக்கப் பட்டது.

தீர்மானம்

பொதுஜன சேவையே தனது லக்ஷிய மாகக் கொண்டவரும் சென்னை சட்டசபை அங்கத்தினரும் பிரபல தனவந்தருமான திரு. டபிள்யூ. பி. ஏ. சவுந்திரபாண்டியனின் இரண்டாவது புதல்வர் போஸ் என்ற ராஜசேகரன் தனது பாலவயதில் அகால மரணமடைந்ததற்கு இக் கூட்டம் தனது அநுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

திருத்தங்கல் "ராநீபாம" குடும்பத்தாரின் அநுதாபம்

திருத்தங்கல், ஜூன், 1

பட்டிவீரன்பட்டி திரு. டபிள்யூ. பி. ஏ. சௌந்திரபாண்டியன் இரண்டாம் புதல்வனின் அகால மரணம் எங்கள் குடும்பத்தாரைத் திடுக்கிடச்செய்து விட்டது. திரு. போஸின் மரணத்தைக் குறித்துத் திரு. பாண்டியனுக்கு ஏற்பட்டுள்ள சகிக்கமுடியாத துக்கத்துக்கு எங்கள் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் இயற்கையினுண்மையை யுணர்ந்த திரு. பாண்டியனுக்கும் மற்றையோரின் ஆறுதல் தேவையில்லை யென்றும் கருதுகிறோம். என தோழர்கள். எ. டி. நாயகம் எ. டி. இராஜன் எழுதுகின்றனர்.

தமிழ்நாட்டுச் செய்திகள்

கோயம்புத்தூர் ஜில்லா தாழ்த்தப்பட்டோர் சங்கம்

சேரிப் பிரசாரம்

(ஒரு நிருபர்)

காஞ்சிக்கோவில், ஜுன், 1

29-5-36-ம் தேதி ஈரோட்டைச் சார்ந்த காஞ்சிக்கோவில் ஆதித்திராவிட தெருவில் திரு. சகரியா தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

ஷை சங்கப் பிரசாரகர் திரு பெ. ஞா. மாணிக்கம் தீண்டப் படாத ஜாதியினர்களுக்கு கிடைத்தற்கரிய ஓட்டுரிமையின் சிலாக்கியத்தைப் பற்றியும், டாக்டர் அம்பேத்காரின் மதமாற்றத் தீர்மானத்தால் எழுந்துள்ள எழுச்சியைப் பற்றியும், விளக்கமாக சொற்பொழிவாற்றினர். தாழ்த்த வகுப்புகளிலிருந்தவர்களின் குறைபாடுகளைப்பற்றி மே. த. சென்னைக் கவர்னரிடம் தூது கோஷ்டியினராக சென்று முறையிட்ட விஷயங்களை விளக்கியதும், இஸ்லாமியரால் வெளியிடப்பட்டவைகளுமான "உபதேச ரத்தினம்" என்ற புத்தகங்கள் சபையோர்களுக்கு வழங்கப்பட்டன. திரு. சகரியா மேற்படி சேரியிலுள்ள எழுதப் படிக்கத் தெரிந்தவர்களை யெல்லாம் அழைத்துக் கொண்டு பெருந்துறை போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று வோட்டர்களாகப் பதிவு செய்ய தக்க முயற்சிகள் எடுப்பதாக வாக்குறுதி கூறினர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு தலைவர் முடிவுரை கூற கூட்டம் இனிது கலைந்தது.

தீர்மானங்கள்

தீண்டப்படாதாரிடையில் தேசீய, சமூக முன்னேற்றங்களுக்கான செய்திகளைப் பரப்பவும், விசேஷமாய், காருண்ய கவர்ன்மெண்டாரதும், ஜஸ்டிஸ், சுயமரியாதை போன்ற பிரபல இயக்கங்களால் புரியப்படும் நன்மைகளைப் பற்றியும், மற்ற இயக்கங்கள் தீண்டப்படாதார்களுக்கு செய்து வரும் நன்மை-தீமைகளைப் பற்றியும் விளக்கமாக பிரசாரம் புரிய நிரந்தரமாக சில தாழ்த்த வகுப்புப் பிரசாரகர்களை (சம்பளம் பிரயாணச் செலவுகளுடன்) நியமித்தருள இக் கூட்டம் வணக்கமாக கேட்டுக் கொள்ளுகிறது.

தமிழ் நாடு பார்ப்பனரல்லாதார் மத்திய பிரசார கமிட்டியார் ஆரம்பத்தில் இவ்வித பிரசாரகர்களை நியமனஞ்செய்து மேற்படி பிரசாரகர்களால் ஏற்படும் பல பலன்களை கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்து கவர்ன்மெண்டாரால் நியமனம் செய்யப்பட்ட சம்பளப் பிரசாரகர்களாக காலதாமதமின்றி செய்தருள இப்போதுக் கூட்டம் வணக்கமாக வேண்டிக் கொள்ளுகிறது.

மரணம்

பள்ளபட்டி, மே, 30

இவ்வூர் பிரபல யூனானி வைத்தியரும் தன்னலம் கருதாது பிறர் நலம் கருதி தொண்டாற்றிய பூமானுமாகவும் விளங்கிய ஆலிம் ஹுருப் கு. வெ. முஹம்மது யூசுப் ராவுத்தர் மர்ஹூம் 28-5-36 வியாழக்கிழமை மாலை 9 மணிக்கு சந்தைப் பேட்டை தெருவிலுள்ள தமதில்லத்தில் திடீரென அகால மரணமடைந்தாரென்பதை மிகுந்த துக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மர்ஹூம் இவ்வூர் பிரபல வைத்தியர்களில் ஒருவர். 24-5-36-ல் லக்வா என்னும் கொடியநோய் அவருக்கு ஏற்பட்டது. எவ்வளவோ சிகிச்சைசெய்தும் குணப்படாமல் போயிற்று.

இவருக்கு 4 புத்திரியும், புத்திரனும் உண்டு. அன்னாரின் பிரிவாற்றுமையால் வருந்தும் மனைவி மக்கள் மற்றும் யாவர்க்கும் எனது ஆழ்ந்த அனுதாபம் உரியதாகுமென புக்செல்லர்ஸ் வி.எம். அப்துல் அஜீஸ் தமது அனுதாபத்தை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறார்.

திருச்சிராப்பள்ளி

முத்துராஜு மகாஜன சங்கம்

பொதுக் கூட்டம்

(ஒரு நிருபர்)

காட்டுப்புத்தூர், ஜுன், 1

திருச்சி ஜில்லா முத்துராஜு மகாஜன சங்கத்தின் பிரசாரக் கமிட்டி அங்கத்தினர்களால் 23-5-36-ம் தேதி இரவு 7-30 மணிக்கு காட்டுப்புத்தூர் காளியம்மன் கோவில் சன்னதியின் முன்புறம் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஏராளமானவர்கள் விஜயம் செய்ததுடன் ஊர் பிரமுகர்கள் யாவரும் வந்திருந்தனர். கூட்டத்திற்கு காட்டுப்புத்தூர் ஜாயிண்ட் மிட்டாதார் திரு. கே. என். சீலமேக அம்பலகாரர் தலைமை வகித்து சமூகத்தின் முற்கால பெருமையையும், தற்காலத்திய சீர்கேடான நிலைமையையும் எடுத்துக் காட்டி சமூகம் முன்னேற வேண்டுமானால் ஒற்றுமை கல்வி அபிவிருத்தி, மிகவும் அவசியமென எடுத்துக் கூறி, அதற்கு அடிப்படையாக சங்கத்தில் ஒவ்வொருவரும் மெம்பராக பதிவு செய்துகொள்ள வேண்டுமென கேட்டுக் கொண்ட பின்னர் பிரசார கமிட்டி மெம்பர்களான திருவாளர்கள்: பிமகர், ப. முத்துக்கோத்தனார், ஸ்ரீரங்கம் துரைசாமி, பூவாளூர் என். ரெங்கன் முதலியவர்களால் 'சமூக ஒற்றுமை, கல்வி, மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தல்' என்பன பேசப்பட்டு கூட்டம் இரவு 9-30 மணிக்கு இனிது முடிந்தது. மறுநாள் பிரசாரக்கமிட்டியார், கரூர் தாலூக்காவிற்குப் பிரயாணமானார்கள்.

உத்தமபாளையம்

வாலிப போஸ் ராஜசேகரன் மரணத்திற்கு அனுதாபம்

உத்தமபாளையம், ஜுன், 1

சென்னை சட்டசபை மெம்பரும், நாடார் குலத் தலைவரும், பொதுஜன முன்னேற்ற உழைப்பாளருமான, பட்டிவீரன்பட்டி, திரு. டபிள்யூ. பி. ஏ. சௌந்திரபாண்டிய நாடாரின் இரண்டாவது புதல்வர் "வாலிப கேசரி" ராஜசேகரன் கடந்த 24-ம் தேதி கோடைக்கானல் மலையிலுள்ள ஏரியில் நீந்திக் கொண்டிருந்த சமயம் அபாயம் நேரிட்டு அகால மரணம் அடைந்தார் என்ற செய்தி தெரிந்து யாங்கள் ஆற்றொணாத்துயரடைந்தோம்.

வருங்கால வாலிப இலகமாகவும், நாடார் குலமணியாகவும் வரக்கூடிய போஸ் ராஜ சேகரன் பிரிவானது இலகுவில் ஈடு செய்து கொள்ள முடியாத பெரும் நஷ்டமென்றே கருதுகிறோம்.

உத்தமபாளையம்

வாலிப சன்மார்க்க சங்கம்

வாக்காளர் பதிவு வேலையில் முயற்சி

(ஒரு நிருபர்)

உத்தமபாளையம், ஜுன், 1

இங்கள் வாலிப சன்மார்க்க சங்கத்தார் சட்டசபை வாக்காளர் பதிவு வேலையில் மிக மும்முரமாக முயற்சி எடுத்து இரண்டு மூன்று தினங்களாக அறிக்கை மூலமாகவும், பிரசார மூலமாகவும் வேலை செய்து வருகிறார்கள்.

அதாவது சுமார் இரண்டாயிரம் அசல் பதிவு பாரங்கள் தயாரித்து சுற்றுக்கிராமங்களுக்கு அறிக்கைகளையும், அசல் பாரங்களையும் அனுப்பி அதைப் பூர்த்தி செய்ய வேண்டிய விதங்களைப்பற்றி தெரிவித்து வருகிறார்கள். இதன் நிர்வாகக் கமிட்டியார்கள் மிகுந்த உற்சாகத்துடன் வேலை செய்து வருகிறார்கள்.

இதுவரை சுமார் 500 பேர்கள் பூர்த்தி செய்தும், 500 பாரங்களனுப்பியுமிருக்கிறது. தொண்டர் லெனைச்சாமி வாக்காளர்பதிவு விஷயமாகவும், கிராமங்களிலும் தண்டோரா மூலம் தெரிவித்து வருகிறார்.

கொழும்பு

தென் இந்திய மருத்துவர் சங்கம்

கொழும்பு, ஜுன், 1

கொழும்பு தென்னிந்திய மருத்துவச் சங்கக் காரியதரிசி எழுதுகிறார்:—

1936ஆம் மேமீ 27-ம் தேதி இரவு 8மணிக்கு சங்கக்கட்டடத்தில் திரு. ப. பாலையா தலைமையில் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்ட விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டது.

சென்ற மீட்டிங்கில் நடந்த தீர்மானங்கள், சென்ற மாத வரவு கணக்குகள் முதலியன வாசித்து ஒப்புக் கொள்ளப்பட்டது.

இணைக் காரியதரிசியாக திரு. ரா. ப. ராஜலிங்கையும், பொக்கிஷதாராக திரு. ப. கந்தையாவையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஒவ்வொரு காலமும் பொக்கிஷதார் சங்கக் கணக்கை பார்வையிட்டு, கையெழுத்திட தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்திற்கு வேண்டிய சட்டதிட்டங்களைப் பரிசீலனை செய்யப்பட்டதோடு, சட்டத்தை புஸ்தக ரூபமாக அச்சடிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

"புதிய சீர்திருத்தத்தின் பயனுக்கு எழுத்தறிவுள்ள, 21 வயதிற்கு மேற்பட்ட பிரிட்டிஷ் இந்திய பிரஜைகள் யாவர்களும் ஓட்டராகலாமென்பதைக் கேட்டு இச்சங்கம் தன் சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், எழுத்தறிவு ஓட்டர்கள் தங்கள் பெயரை ரிஜிஸ்டர் செய்ய வேண்டிய மனுவை நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென்ற சேர்க்கத்தை நீக்கி மனுதார் பிரதிநிதி மூலம் சமர்ப்பிக்கலாம் என்று உத்தரவு செய்யும்படியாக சென்னை சர்க்காரை இச்சங்கம் வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறது" என்ற தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது. இதை சர்க்கார், சென்னை கவர்னருக்கு அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. பின்னர் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

சேலமீ காங்கிரஸ் காலிகள் நடத்தை

அணைக்குடி, ஜுன், 1

பொதுநலப் பிரியன் எழுதுகிறார்:—

"விடுதலை" யில் சென்ற 30-5-36-ம் இதழில். 5-ம் பக்கம் (சேலத்தில் சத்தியமூர்த்தியின் சாம்பியன் சுயராஜ்யம்) என்ற தலைப்பகத்தின் கீழ். கண்ணுற்றதின் காட்சி சொல்லத்தரமன்று. அக்காலத்து முரட்டு அரசர்களும் கூட இதுவரை அக்கிரமும் இம்சையும் செய்ததாக சரித்திரங்களின் மூலமாக காணோம். திரு சத்தியமூர்த்தியின் கோஷ்டியினர் கேள்வி கேட்ட நண்பரை அடிப்பதன்றுல என்ன அக்கிரம துஷ்ட செய்கை அவர்கள் செய்யும் அக்கிரமத்தையும், அட்டூழியத்தையும் நினைத்தால் ஆ! வயிறெரிகிறது!! ஆ. அக்கிரம அன்பர்களை (காந்தி. டிரஸ்) காங்கிரஸ் கூட்டம் கூடியபொழுது. கேள்விகேட்ட நண்பர்களை அடிக்கும் வழக்கம் அழகாகுமா? நீங்கள் தானா சுயராஜ்யம் வாங்கி கவிழ்த்து முடன்காலஷேபிக்க விடுபவர்கள். சுயராஜ்யமோவாங்கிவிட்டீரோ! அன்பர்களின் செயலை சொல்லவும் வேண்டுமா?

கதேம வாழலாம், அன்பர்கள் செய்யும் அட்டூழியம் அடாத செயலை உலகத்திற்கும் படமம் பிடித்ததின் காரணம், சுயராஜ்யம் வாங்கினாலும் ககேயோசராஜ்யமாகவே கொள்ளர்களேயன்றி மற்ற இதர பொது மக்களுக்கு ஆரோக்கிய மளிப்பது ஆண்டவன் தான் அறிய வேண்டும். மேலும் மேலும் கஷ்டப்படத் தருவதையே பிரியப்படுவார்களேயன்றி, வேறொன்றும் கருதார். என்பதைதமிழ்மக்களுக்கு சொல்லவும் வேண்டுமோ? அயோக்கியர்களின் அட்டூழியம் என்று ஒழியுமோ. அன்றோ நம் தமிழ்நாடு செழிப்புற்ற நாடென போற்றலாம். திரு. சத்தியமூர்த்தி அன்பரின் சாக்காள! அரும்பு பெட்டு கற்றுக்கொள்ளவில்லையோ. உண்மையாக தாங்கள் கற்றுக்கொண்டது பொருளா? பொருமையா?

நாகப்பட்டணம்

சுயமரியாதை தோழர்கள் கூட்டம்

(ஒரு நிருபர்)

நாகை, ஜுன், 1

29-5-36-ம் தேதி மாலை 6 1/2 மணிக்கு சுயமரியாதை சங்க அங்கத்தினர்கள் கூட்டம் தோழர் எஸ். வேலுஸ்வாமி தலைமையில் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றியது.

சுயமரியாதை இயக்கத் தலைவர் தோழர் டபிள்யூ. பி. எ. சௌந்திரபாண்டியன் இரண்டாவது குமாரர் அகால மரண மடைந்தது பற்றி இக் கூட்டம் தங்களின் துக்கத்தை தெரிவித்துக் கொள்ளுகிறது.

சர். கே. வி. ரெட்டி நாயுடு சென்னை மாகாண ஆக்டிங் கவர்னராக நியமிக்கப்பட்டிருப்பதற்காக இக் கூட்டம் தங்களின் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

நாகை சுயமரியாதை சங்க சர்வாதிகாரி தன்னுடைய உத்தியோக காலம் முடிவடைந்து ஐந்து மாதத்திற்கு மேலாகியும் புதுத்தேர்தல் நடத்தாதிருப்பதால் வருகிற 7-6-36-ம் தேதி யன்று தேர்தல் நடத்துவதற்காக அங்கத்தினர்களின் கூட்டத்தைகூட்டி அதற்கான ஏற்பாடு செய்யும்படி திரு. எஸ். பி. கிருஷ்ணனுக்கு அதிகாரமளிப்பதோடு ஷை திட்டத்தில் வந்து கலந்து கொள்ளுமாறு சர்வாதிகாரியாக இருக்கும் திரு. என். சிவஞானத்தை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

அறிவிப்பு

வரும் 7-6-36-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு சங்க அங்கத்தினர்கள் கூட்டம் திரு. என். அருணாசலத்தின் வியாபார ஸ்தலத்திலுள்ள பார்ப்பனரல்லாத இளைஞர் சங்கத்தில் நடைபெறும் என எஸ். பி. கிருஷ்ணன் ஆர்கனைசர் எழுதுகிறார்.

இடி முழக்கமல்ல!

தாரையின் முழக்கமே தரணியை செவிடுபடச் செய்கிறது.

தமிழ் டாக்கிகளுக்கெல்லாம் திலகமாய் விளங்குவது எது? வீணா விநோத கோலாகலமான படம் எது? எது?
தாரணியிலே தனிப் புகழ் நாட்டும் படம் எது? எது? எது?

அதுதான் - மிஸ். T. V. ராஜசுந்தரிபாய் - நடித்த

1. தாரா - சசாங்கம்

என்ற ஒப்பற்ற தமிழ் பேசும் பாடும் படம். :: பிரபல நகரங்களில் நடைபெறுகிறது.

சென்னை பிலிம் போர்டு தேர்தலில் முதன்மை ஸ்தானம் பெற்ற இந்திய நடிகை மிஸ். S. D. சுப்புலக்ஷ்மி தனக்கு நிகரில்லை என்னும் நடிப்புடன்; Mr. C.V.V. பந்துலு, Mr. M.V. கிருஷ்ணய்யா, மிஸ். M. S. பட்டம்மாள் முதலியோருடன் நடித்த

2. உஷா - கல்யாணம்

Miss S. D. சுப்புலக்ஷ்மி, Mr. M. K. தியாகராஜ பாகவதர் ஒருங்கே சேர்ந்து நடித்ததும், சென்னை பிலிம் போர்டு தேர்தலில் முதல்தரமான தமிழ்ப் புராணப் படமெனத் தேர்ந்தெடுக்கப்பட்டதுமான

3. நவீன சாரங்கதரா

முருகன் டாக்கி பிலிம் கம்பெனி, 8, சின்னக் கடைத் தெரு, மதுரை.
Telegrams :—"TALKO FILMS"　Telephone :—No. 53.

பாமா பரிணயம்
அல்லது
ஸ்யமந்தகமணி

மிக உன்னத புராணிக தமிழ் பேசும் படம். உங்கள் அன்பும் ஆதரவும் பெற்ற உயர்தர நடிக ரத்தினங்கள்.

மிஸ். T. P. ராஜலக்ஷ்மி
மிஸ். S. P. லக்ஷ்மி
மிஸ். S. S. ராஜாமணி
மிஸ். K. ரங்கநாயகி
மிஸ். M. A. ராஜாமணி

மிஸ்டர் செருகளத்தூர் சாமா
வித்வான் சீனிவாசன்
ராஜா M. G. தண்டபாணி
T. K. நடராஜ பத்தர்
R. நடேசய்யர் (காமிக்)

மற்றும் சிறந்த நடிகர்கள்.

கதை அமைப்பு டைரக்ஷன் } மிஸ்டர் ஒய். வி. ராவ். { சென்னை ஜெனரல் மூவிடோனில் தயாராகிறது.

கைவசமிருக்கும் படங்கள் :—
லவிதாங்கி, கிருஷ்ணா-அர்ஜுனா, கோவலன், தூக்கு-தூக்கி,

விவரங்களுக்கு :-ராயல் டாக்கி டிஸ்டிரிபியூட்டர்ஸ், மதுரை.

50 வருஷங்களுக்கு மேலாக 50
தென் இந்தியாவில் பிரசித்தி பெற்றுள்ள தொழிற்சாலை.

நம்பிக்கை! நாணயம்!! உத்தரவாதம்!!!

திருடர்களின் சத்துரு!　திடமான பெட்டிகள்!



எல்லா ஸ்டேஷன்களிலும் எப்பொழுதும் கிடைக்கும்.

விலை விவரங்களுக்கு இன்றே எழுதுக:

அ. வரதராம் ஆச்சாரி சன்ஸ்,
இரும்புப் பெட்டி தொழிற்சாலை,
நாகல் நகர், திண்டுக்கல், S.I.

ஆரோக்கிய லேகியம்

சிறந்த மல சுத்தி ஔஷதம்.

மலபந்தமே உங்களின் ஆரோக்கியத்துக்கு இடையூறாகும். ஆரோக்கிய லேகியம் சாப்பிடுவதால் தினசரி செம்மையாய் மலம் கழியும்; சோம்பல் தீரும்; உங்கள் தினசரி அலுவல்களுக்கு உற்சாகம், சுறுசுறுப்பு உண்டாகும்.

இன்னும் சித்திரை ஸ்கலிதம்; நீருடன் ஸ்கலிதமாதல், உடம்பு இளைத்து வருதல், கை கால்சதி, நடைச்சல் நீங்கி நல்ல ரத்தம் ஊறும். தேகபுஷ்டி உண்டாகிவிடும். பத்தியமில்லை.

20 ரூபா எடை டின் விலை ரூ. 2.　தபால் செலவு அணா 6.

தண்டபாணி வைத்தியசாலை, பழனி. (S.I.)

விடுதலை யாவர்க்கும் பாதுகை கேடயமென
கெடுதலை [illegible] நின்ற
[காட்டினரெல்லாம்
பொருள் சுதந்திரங்கள் சர்வமும் பெற்ற
திருமிகு வாழ்தலே யாம்

விடுதலை

VIDUTHALAI

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்று நின்ற
செம்மொழியை திருமொழியை
[தேன்மொழியை
தனித்தியங்கும் ஆற்றலுள தொன்மொழியை
[அமிழ்தனைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
[அநுதினமும் பழக்கம் செய்வீர்.

மலர்-2] சென்னை : (3-6-1936) தாது௵ வைகாசி௴ 21௳ புதன்கிழமை [இதழ்-1

பண்டைத் தமிழர் மணமுறை

(வித்வான் மா. இராசமாணிக்கம்)

சென்ற 'விடுதலை' (30—5—36) இதழில் 'ஐந்திணை அமுதம்' என்ற தலைப்பில் பண்டைத் தமிழர் மணத்தை விரிவாகக் குறித்தோம்; எனினும், இன்னவாறு பண்டைத் தமிழர் மணமுறை இருந்தது எனக் கூறினோமில்லை. ஆதலின், இவ்விதழில் 'பண்டைத் தமிழர் மணமுறை' இன்னபடி நடந்து வந்ததெனக் கூறுவேம்:

''அன்பின் ஐந்திணை களவெனப்
படுவ ;
அதுவே, தானே அவளே
தமியர் காணக்
காமப் புணர்ச்சி இருவயின்
ஒத்தல்''

என்று இறையனார் களவியல் கூறுமாறு, ஒருவனும் ஒருத்தியும் தம் முன்னவர் அன்றி எதிர்ப்பட்டுக் கொள்ளும் கூட்டுறவு 'களவு' எனப்படும். இக்களவு வெளிப்பட்டுப் பலர் அறியக் கிழவனும் கிழத்தியும் இல்வாழ்க்கை மேற்கொண்டொழுகுதல் 'கற்பு' எனப்படும். 'கற்பு'க்குத் தொடக்கமே 'கற்பு மணம்' (வெளிப்படை மணம்) எனப்படும்.

''கற்பெனப் படுவது கரணமொடு
புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன்
கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர்
கொடுப்பக்கொள் வதுவே''

என்னும் தொல்காப்பியர் கூற்றானும் அறியலாம்,

இக்கற்பு மணம் இக்காலத்தில் நடைபெறுவதைப் போல அக்காலத்தில் நடைபெற்றிலது; பஞ்சாங்கப் பார்ப்பான் பண்டைத் தமிழ் மணத்தில் இடம் பெற்றிலன்; பொருள் விளங்கா அவன் வடமொழி மந்திரங்கள் இல்லை; அவற்றை ஏற்பாரும் இல்லை; அம்மி மிதித்தல் இல்லை; தட்சணை இல்லை; ''குருக்கள் இன்றிக் கலியாணமா?'' என்னும் பழமொழி அக்காலத்தில் இல்லை. தலைவனையும் தலைவியையும் வாழ்க்கையில் ஒன்றுபடுத்தலே 'மணம்' எனப் பண்டைத் தமிழர் பண்பாக அறிந்திருந்தனரேயன்றி, அவ்விருவரையும் பெற்றோரை விடக் 'குருக்களே' ஒன்றுபடுத்தத் தக்கவன் என்னும் இக்கால உணர்ச்சியை அவர் உணர்ந்திலர். இக்காலத் தடபுடல் திருமணங்கள் செய்து 'இன்சால்வென்ஸி' வாங்கும் பெற்றோர் அக்காலத்தில் இல்லை. சிக்கன முறையிலும் பகுத்தறிவு முறையிலும் நாகரிக முறையிலும் அக்காலத் தமிழர் பகுத்தறிவு சான்ற நம்முன்னோர் கையாண்ட மணமுறை பெரும் பயன் விளைப்பதாயிருந்தது. அம்முறை இன்று வரினும் நாம் உய்ந்தவராவோம்; நாம் சிக்கனத்தைக் கைக் கொண்டு, மனிதத் தன்மையோடும் சுயமரியாதையோடும் வாழலாம். ஆ! அத்தகைய புனித 'மணமுறை' யாது?

வீட்டு முற்றத்தில் புது மணல் பரப்புவர்; வீடு அலங்கரிக்கப் பெற்றிருக்கும். முற்றத்தில் பந்தல் போடப் பட்டிருக்கும். மணத்துக்கு முன்னர், அனைவரும் செவ்வடிசில் சுவைபட உண்டு மகிழ்வர். பின்னர்ப் பெண்கள் பலர் நீர்க்குடங்களைக் கொண்டுவரப் பிள்ளை பெற்ற பெண்டிர் நால்வர் கூடித் தலைவியை நீராட்டுவர்; அந்நீரில் அலரியும் அரிசியும் கலந்திருக்கும்; நீராட்டிய பின்னர்த் தலைவியை அலங்கரித்துப் பந்தரில் மணல் மீது ஆதனமிடுவித்து அமரச் செய்வர்; அங்ஙனமே மணமகனும் நீராடி ஆடையணிகளோடு ஆதனத்து அமர்வன். பின்னர்த் தலைவியின் பெற்றோர் (அவர் இல்லாவிடில் சுற்றத்தோர்) தாத் தலைவன் பெற்றோர் (அவர் இல்லாவிடில் சுற்றத்தோர்) கொள்வர். அங்ஙனம் தருகையில பெண் வீட்டார் 'பேரில் கிழத்தி ஆகுக' என வாழ்த்தித் தருவர்;

பெண்டிர் நால்வர் தலைவியை நீராட்டுகையில்,

''கற்பின் வழாஅ நற்பல வுதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை
ஆகென''

வாழ்த்துவர். இதுதான் 'மணமுறை.' அன்றிரவே (உடன்புணர்க்குறில்) மணமகளை அலங்கரித்துச் சதுர்த்தி அறைக்கு அனுப்புவர். அன்றே 'இல்லறத் தொடக்கம்' தொடங்கப்படுகிறது. இங்ஙனம் நடைபெறும் முறையையே தொல்காப்பியர் 'கரணமொடு புணரக் கொளற்குரியோர் கொடுப்பக் கோடற்குரியோர் தலைவனையும், தலைவியையும் கோடல் 'கற்பு' என்றார். இங்ஙனம் நடைபெற்ற திருமணக் குறிப்பு, அக்கால நம்பிக்கைக் கேற்றபடி 'நல்லோரை'யில் நடத்தப்பட்டது என்பது உணரத் தக்கது. ஈண்டுக் கூறிய விவரங்கள் அகநானூற்று 86-ம் பாடலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளமை அறிக.

86-ஆம் பாட்டுக்குச் சிறிது பிற்பட்ட காலத்ததாகிய 136-ஆம் பாட்டால் சில புதிய செய்திகள் பண்டை மண முறையில் நுழைந்து விட்டதை அறியலாம். மணத்திற்கு முன்னர்க் கடவுள் வணக்கம்; பல்லியங்கள் ஒலித்தல்; பாவை வணக்கம். இம் மூன்றும் புதியனவாகக் கூறலாம். இன்றேல், கடவுள் வணக்கமும் வாத்திய ஒலியும் பழையனவாகக் கொள்ளினும், 'பாவை வணக்கம்' புதியதென்பதில் ஐயமில்லை. மணத்திற்கு முன்னர் விருந்துண்ணல், மணமகளை நீராட்டி அலங்கரித்தல், மணற் பரப்பில் மணமக்களை அமரச் செய்தல் முதலியன பழையனவே. 'தாலி' கட்டும் வழக்கம் அக்காலத்தில் இருந்ததாக இப்பழம் பாக்கள் உறுதி கூறிற்றில. எனவே, அப்பழக்கம் பிற்காலத்தது என்பது புலனாம். பலர் அறிய வாழ்க்கை மேற்கோடற்கே மதிப்புண்டே தவிர, கேவலம் 'தாலி' எவ்வாற்றானும் மண மக்கள் அன்பை வளர்க்கவோ, இல்லறத்தைப் பெருக்கவோ உற்ற துணையன்றென்பதை அப்பழங்கால மக்கள் புரிந்திருக்கலாம். எனவே, இந்நாகரிக காலத்தில் கிறித்தவர் முதலிய சமயத்தார் கையாளும் முறைப்படி அக்கால மக்களும் தாலியின்றி இருந்தனர் என்பதில் வியப்பில்லை என்க.

இனி, அக நானூற்று 136-ம் செய்யுள் பின் வருவது; அதனை வாசகரே படித்து இன்புறுவாராக.

''மைப்புறப் புழுக்கின்
நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு
புரையோர்ப் பேணிப்
புள்ளுப் புணர்ந்தினிய வாகத்
தெள்ளொளி
அங்கண் இரு விசும்பு விளங்கத்
திங்கள்
சகடம் மண்டிய துகள்தீர்
கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்
படுமண முழவொடு பருஉப்பணை
இமிழ
வதுவை மண்ணிய மகளிர்
விதுப்புற்றுப்
பூக்கணும் இமையார் நோக்குபு
மறைய
மென்பூ வாகைப் புன்புறக்
கவட்டிலை
பழங்கன்று கறித்த பயம்பமல்
அறுகைத்
தழங்குரல் வானின்
தலைப்பெயற் கீன்ற
மண்ணுமணி யன்ன மாயிதழ்ப்
பாவைத்
தண்ணறு முகையொடு வெண்
ணூல் சூட்டித்
தூவுடைப் பொலிந்து மேவரத்
துவன்றி
மழைபட் டன்ன மணல்மலி
பந்தர்
இழையணி சிறப்பிற்
பெயர் வியர்ப் பாற்றித்
தமர்நமக் கீத்த தலைநாள்
இரவில்''

களவு மணத்தில் 'இருவரும் மாறிப் இதயம் புக்கு' வாழ்ந்த நாள் முதல் கற்பு மணம் நிகழ்ந்த நாள் முடிய ஈருயிரும் ஓருடலுமாக இருந்த தலைவனும் தலைவியும்,

''அன்பும் மடனும் சாயலும்
இயல்பும்
என்பும் நெகிழ்க்கும் கிளவியும்
பிறவும்
ஒன்றுபடு கொள்கையொ
டோராங்கு முயங்கி''
—அகநானூறு, 225.

வாழ்ந்து வந்தனர் என்பது அறிதல் வேண்டும். இவ் வுண்மை,

''பிரிவின் றியைந்த துவரா
நட்பின்
இருதலைப் புள்ளின் ஓருயி
ரம்மே''
—அகம், 12.

என்பதால் தெளிவாம்.

சென்ற மே மாதம் 30-ந் தேதி பெங்களூரில் முதல் பலிஜா மகாநாட்டைத் திறந்துவைத்த மிர்ஸாபுரம் ஜமீன்தாரும், மகாநாட்டுக்குத் தலைமை வகித்த திரு. அனகல் நிம்மய்யாவும் மகாநாட்டுக் கட்டிடத்திற்கு மோட்டாரில் ஊர்வலமாக அழைத்துச் சென்றபோது எடுக்கப்பட்ட படம்.



ராவ்பகதூர் டி. கிருஷ்ணமூர்த்தி 1 மாத ரஜாவில் செல்வதால் அவரது ஸ்தானத்திற்கு போர்டின் ஆக்டிங் கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கும் இந்து மத பரிபாலன போர்டின் காரியதரிசி திரு. ஏ. பாலகிருஷ்ண பிள்ளை, பி. ஏ., எம். எல்.

திருச்சி

மருத்துவர் அநுதாபக் கூட்டம்

காரியதரிசி எழுதுகிறார்:—

திருச்சி, ஜூன், 1

29-5-36 மாலை 6-மணிக்கு டாக்டர் க. பிச்சைமுத்து தலைமையின் கீழ்க் கண்ட அநுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சுயமரியாதை இயக்கத் தலைவர் தோழர் டபிள்யூ. பி. ஏ. சௌந்திர பாண்டியன் திருக்குமாரர் 24-ந் தேதி காலை நீர்வீழ்ச்சியில் அகப்பட்டு அகால மரணமடைந்தமைக்கு இக்கூட்டம் வருந்துகிறது. இயற்கையையுணர்ந்த அக்குடும்பத்தாருக்கு இக்கூட்டம் அநுதாபத்தை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறது.

தென்காசி திருவள்ளுவர் கழகம்

9-வது ஆண்டு நிறைவு விழா

இக்கழகத்தின் 9-வது ஆண்டு நிறைவு விழா கழக நிலையத்தில் தாது வைகாசித் திங்கள் 22-23-ம் நாட்களாகிய (4-6-36, 5—6—36) வியாழன், வெள்ளிக் கிழமைகளில் சென்னை, ''நவசக்தி'' ஆசிரியர் உயர்திரு. திரு. வி. கலியாணசுந்தர முதலியார் தலைமையில் நடைபெறும் என அமைச்சர்கள் அறிவிக்கின்றனர்.

மின்சாரத்தின் மூலம் மீன் பிடித்தல்

ஐரிஷ் சர்க்கார் முயற்சி

வட அயர்லாந்தில் சர்க்கார் வேண்டுகோளின் மீது டெட்டிங்டனிலுள்ள தேசிய பிஸிகல் லெபோரடரியில், நடைபெற்ற பரீக்ஷையில் மின்சாரத்தின் மூலம் மீன்களை அதிகமாகப் பிடிக்கக் கூடுமெனக் கண்டுபிடிக்கப்பட்டது. மீன்களை குறிப்பிட்ட இடத்திற்கு போகச் செய்து பிறகு அவ்விடத்தினின்று அவைகள் திரும்பவும் ஓடிப் போகாமல்படி அத்தண்ணீரில் மின்சாரத்தைப் புகுத்தி அவைகளைப் பிடிப்பதேயாகும். அயர்லாந்து நதிகளில் இனிமேலும் இம் முறை பரீக்ஷிக்கப்படும்.

பறவைகளைப் போன்று மனிதர்களும் பறக்கக்கூடும்

பிரிட்டனில் பரீக்ஷை

கிளம் சோஹன் என்ற ''பறவை மனிதர்'' இங்கிலாந்தில் போர்ட்ஸ்மௌத் விமான நிலயத்தில், பறவைகளைப் போன்று மனிதர்களும் பறக்கக் கூடுமென்பதை ரூபித்து வருகிறார். 3000 அடி உயரத்திலிருந்து அவர் கீழே குதித்தார். 2000 அடி வந்த பின்னர் தனது பாரசூட்டை விரித்துக் கொண்டு கீழிறங்கினார். ஒரு தினமல்லா விட்டாலும் ஒரு தினம் மனிதர்களும் வீட்டுக் கூரைகளின் மீது ஏறிக்கொண்டு இறக்கைகள் மூலம் உயரப் பறக்கக் கூடுமென அவர் கூறுகிறார்.

சி. எம். சாமி
மன்மதக்
குளிகை.

தாது புஷ்டி மருந்து.

மிகுந்த பலத்தையும்
வீரிய
விருத்தியையும்
உண்டாக்கும்.

அநேக பரிசுகள் பெற்று உலகெங்கும் புகழப்பட்டது! இதற்கு நிகரான தாதுபுஷ்டி ஔஷதம் வேறில்லை. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம்.

இழந்த ஆண்மையும், பலமும் திரும்ப வரும். நல்ல ஜீரணம், ரத்த விருத்தி, இந்திரியக்கட்டு, தாதுபுஷ்டி இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாதுநஷ்டம், துரிதஸ்கலிதம், இடுப்பு வலி, உஷ்ண ரோகங்கள் நீங்கும். ஒருமுறை பரீக்ஷித்தவர்களுக்குஇதன் அருங்குணம் விளங்கும். லிஸ்ட்டுக்கு எழுதுங்கள்.

பிராஞ்சு:—1/54, அருணாசல நாயக்கன் தெரு,
சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.

தலைமை ஆபீஸ் :—
மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி, S. I.

20 குளிகை
விலை ரூ 2.

'கிராம ஊழியன்'

கிராமப் புனருத்தாரணத்திற் குழைப்பது. பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்ற மொன்றையே லக்ஷியமாகக் கொண்டு, சாதி, சமயப் பூசல்களை ஒழித்து, விவசாயிகள், தொழிலாளர் குறைகளை முறையிட்டு அகற்றும் நோக்கங்கொண்டு மாதம் இரு முறை வெளிவரும் பத்திரிகை. வருட சந்தா ரூபா 2—0—0

மானேஜர் :— கிராம ஊழியன்,
துறையூர். (திருச்சி ஜில்லா)

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN, AT THE JUSTICE PRINTING WORKS, 14 MOUNT ROAD, MADRAS.

விலை அரை அணா

8 பக்கங்கள்

மலாய் நாட்டில் 5 சதம்

Regd. No. M. 3298.

"விடுதலை"

வாரம் இருமுறை பதிப்பு சந்தா

உள்நாடு

1 மாதம்	...	0	6	0
3 மாதம்	...	1	0	0
6 மாதம்	...	1	14	0
1 வருடம்	...	3	10	0

சென்னைக்கு

1 மாதம்	...	0	4	0
3 மாதம்	...	0	10	0
6 மாதம்	...	1	4	0
1 வருடம்	...	2	6	0

விடுதலை

VIDUTHALAI

(வாரம் இருமுறை வெளிவரும்)

ஆசிரியர்: பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.

"விடுதலை"

வாரம் இருமுறை பதிப்பு சந்தா

வெளிநாடு

1 மாதம்	...	0	10	0
3 மாதம்	...	1	14	0
6 மாதம்	...	3	12	0
1 வருடம்	...	7	4	0

சர்க்கார், முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டுகளுக்கு:

உள்நாடு:	வருடம்	ரூ	7 8 0
சென்னை:	,,	ரூ	4 8 0

மலர்-2] சென்னை: (4-11-1936) தாது௵ ஐப்பசி௴ 19௳ புதன்கிழமை [இதழ்-44

ஜஸ்டிஸ் கட்சியார் ஒப்பற்ற சேவை

தொழிலாளர் விடுதலைக் குழைத்த முதல் வீரர் டாக்டர் நாயரே!

ஆதிதிராவிடர் முன்னேற்றத்துக்கு வழி காட்டியவரும் அவரே!

மந்திரி பதவி வெறுத்த தியாகி ஸர். தியாகராயர் ஒருவரே!

திலகர் கொள்கைப்படி உழைப்பது ஜஸ்டிஸ் கட்சி

எதிர்ப் பிரசாரங்களுக்கு நாம் அஞ்சப் போவதில்லை

திருச்செங்கோடு மகாநாட்டுத் தலைவர்

ராவ்சாகிப் பொன்னைய கவுண்டர் முழக்கம்

திருச்செங்கோடு, நவ, 1

திருச்செங்கோடு முதல் ஜஸ்டிஸ் மகாநாட்டில் இன்று கூடியிருக்கும் பிரதிநிதிகளுக்கும், தோழர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கல்வி கேள்விகளில் சிறந்த பெரியோர்கள் அநேகர் இருக்கும்போது, என்னைப் பொருட்படுத்தி இந்த மகாநாட்டில் தலைமை வகிக்கும்படி அழைத்திருக்கும் உபசரணைக் கமிட்டியாருக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

பிரிவாற்றாமை

ஜஸ்டிஸ் கட்சி என்கிற நீதிக்கட்சி நமது மாகாணத்தில் தோன்றி இன்றைக்கு சுமார் இருபது வருஷங்களாகின்றன. ஆனால், இது நமது நாட்டில் வேரூன்றியிருக்கும் ஒருபெரிய இயக்கத்தின் அறிகுறி என்பதில் சந்தேகமில்லை. இது சரித்திர சம்பந்தமான ஒரு பழைய இயக்கமென்றே சொல்லவேண்டும். சமூக வாழ்க்கையில் வேற்றுமை ஏற்படும் போதெல்லாம் இந்த இயக்கம் கிளம்பி, இந்திய மக்களுக்கு நீதி வழங்கி வந்திருக்கிறது. வசிஷ்டர், விஸ்வாமித்திரர் போன்ற ரிஷிகள் காலத்திலிருந்து திருவாங்கூர் புரொபஸர் சுந்தரம் பிள்ளை காலம் வரை அப்போதைக்கப்போது இந்த இயக்கத்தின் எதிரொலிகள் மகாஜனங்களின் காதில் பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால், அந்தப்பழங்கதையை விவரிக்கும் வேலையில் இறங்காமல், சில வருஷங்களுக்கு முன்பு காலஞ்சென்ற நமது மூன்று பெரிய தலைவர்களின் உட்கருத்துகளை ஞாபகப்படுத்திக்கொண்டு, பொது நல சேவை செய்ய நாம் எல்லோரும் கடமைப் பட்டிருக்கிறோம். டாக்டர் டி. எம். நாயர், ஸர். பிட்டி தியாகராய செட்டியார், பனகால் ராஜா ஆகிய மூன்று தலைவர்களின் உருவப்படங்கள் இன்று இவ்விடம் பிரதிஷ்டை செய்யப்படுவது ஒரு சிறந்த காரியம். அப்பெரியார்களின் அரிய சேவைகளை மகாஜனங்கள் அனைவரும் நன்குத் தெரிந்து கொள்ளவேண்டும். நாடு நகரங்களில் உள்ள ஏழை மக்களுடைய க்ஷேம லாபத்தையே முக்கியமாக நமது தலைவர்கள் நாடி வந்திருக்கிறார்கள்; இப்போதும் நாடி வருகிறார்கள்; இனிமேலும் அவ்விதமே செய்வார்கள் என்பது நிச்சயம். சில உதாரணங்களை மட்டும் குறிப்பிடுகிறேன்.

தொழிலாளர்

தொழிலாளர் இயக்கமானது இப்போது உலகமெங்கும் பரவி வருகிறது. தொழிலாளர் முன்னேற்றத்திற்காக பல வருஷங்களுக்கு முன்பே பாடுபட்ட முதல் இந்தியத் தலைவர் யார் என்பதை கவனித்தால் அந்தப் பெருமை டாக்டர் நாயருக்கே உரித்தாகிறது. இந்தியத் தொழிற் சாலைக் கமிஷன் 1908-ல் செய்த சிபார்சுகள் ஏழைத் தொழிலாளர்களுக்குச் சாதகமாயிருக்கவேண்டுமென்கிற கவலையுடன் லண்டன் சென்று, லார்டு மார்லி பீடத்தில் வாதாடிய இவ்வுத்தமரின் புகழ் எப்பொழுதும் அழியாது. தொழிலாளர் இயக்கமானது இன்று நமது நகரெங்கும் வலுத்து வருகிறது. புதிய சட்ட சபைக்கு தொழிலாளர்களே தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் சுதந்தரம் எளிதில் கிடைத்து விட்டது. இவ்விதமாக இவ்வளவு சீக்கிரத்தில் சர்க்காரும், ஜனத் தலைவர்களும் தொழிலாளர்களுடைய நியாயமான சுதந்திரத்தை அங்கீகரிப்பார்கள் என்பதை டாக்டர் நாயர் உயிரோடு இருந்த சமயத்தில் யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். டாக்டர் நாயருடைய தூரதிருஷ்டியை விளக்கிக் காட்டுவதற்கு இன்னும் ஒரு உதாரணம் வேண்டுமா? தாழ்த்தப்பட்ட சமூகத்தினரிடத்தில் அவருக்கு இருந்த அளவில்லாத அன்பையும், அநுதாபத்தையும் அவரது வாழ்நாள் முழுவதிலும் அவரது சொந்த நடத்தையால் நடத்திக் காண்பித்தாரே ஒழிய, வேறு வகை கைத்திரிபம் செய்தவரல்ல. தீண்டாமை வழக்கத்திற்கு சாஸ்திரங்களில் ஆதரவு உண்டா இல்லையா என்கிற சந்தேகத்தை அவர் கிளப்பினவரும் அல்ல. தீண்டாமை என்கிற ஜாதிப்பேயை இந்த சமூகத்திலிருந்து ஓட்டி விடுவதற்கு ஓர் சிறந்த சாதனத்தை அவர் தான் முதலில் கண்டு பிடித்தார். ஸ்தல ஸ்தாபனங்களிலும், சட்டசபைகளிலும் எல்லோருடனும் சரிசமமாக தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடம் கிடைத்தால்தான் இரு சாராருடைய மனோபாவத்தில் சரியான புரட்சி ஏற்படும் என்கிற உண்மையை அவர் முதலில் உணர்ந்து நடந்தார். அவரது செல்வாக்கின் பயனால், தாழ்த்தப்பட்ட இனங்களைச் சேர்ந்த பல கனவான்கள் பொது வாழ்க்கைத் துறையில் இப்போது பிரபலமான நிலைமையை அடைந்திருப்பதானது நமது சமூக சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயமாகும். தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் நமது நாட்டிலுள்ள ஏழை மக்களுடைய விடுதலைக்காக அர்ப்பணம் செய்த தியாக மூர்த்தியின் வாழ்க்கைச் சரிதத்தை யார்தான் மறக்க முடியும்?

திருச்செங்கோடு ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டிற்குத் தலைமை வகித்த திரு. என். என். பொன்னைய கவுண்டர்

ஸர் தியாகராயர் சேவை

விவசாயமும், கைத்தொழிலும், வியாபாரமும் நமது நாட்டில் ஒன்று போல செழித்திருந்த காலத்தில் ஜனங்களுக்கு எல்லாவித சுகங்களும் கிடைத்தன. விவசாயம் இப்போது ஒரு லாபகரமான தொழிலல்ல. ஆகவே, நமது நாட்டுக் கைத்தொழில்களையும், வியாபாரத்தையும் அபிவிருத்தி செய்வதற்காக சர். தியாகராய செட்டியார் தமது வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார். உதகமண்டலத்தில் பல வருஷங்களுக்கு முன்பு கூடிய கைத்தொழில் மகாநாட்டில் சர்க்காருக்கு அவர் கூறிய யோசனைகள் இப்போதும் பலன் தருகின்றன. திருச்செங்கோட்டிலும், இதைச் சுற்றிலுமுள்ள கிராமங்களிலும் ஆயிரக்கணக்கான நெசவாளிகள் இருக்கிறார்கள் என்று நம்புகிறேன். கைத்தறி நெசவாளிகளுக்கு இப்போது ஒரு சோதனைக் காலம் ஏற்பட்டிருப்பது வருந்தத்தக்கதே. ஆனால், அவர்களுக்காக சர். தியாகராய செட்டியார் பாடுபட்டது போல, நாமும் தேச வர்த்தமானப்படி நடந்து கொண்டால் கைத்தறி நெசவுக்கு ஏற்பட்டு வருகிற பலமான போட்டியை ஒருவாறு சமாளித்துக் கொண்டு, இந்த அழகான நாட்டுத் தொழிலைக் காப்பாற்ற முடியும். டாக்டர் நாயருடன், சர். தியாகராயர் சென்னை நகரசபையில் செய்த சேவையானது நிகரற்றது. சர். தியாகராயருடைய பெரிய உருவச்சிலை சென்னை நகர மண்டபத்தின்முன் நிற்கிறது. அது அவரது சிறந்த பொதுநல வேலைகளை ஞாபகப் படுத்துகிறது. இந்த வாரத்தில் நடைபெற்ற தேர்தலில், சென்னை நகரசபை "காங்கிரஸ் வசமாயிற்று" என்கிற கூற்றை ஒரு தமிழ் தினசரி கட்டிவிட்டிருக்கிறது. அதே தினத்தில் "மதராஸ் மெயில்" உள்ள நிலைமையை உள்ளபடி தெளிவு படுத்தியிருக்கிறது. "சென்னை நகர சபையில் காங்கிரஸ் கட்சிக்கு மெஜாரிட்டி இடையவே கிடையாது. ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தில் அரசியல் கட்சி பேதங்களுக்கு இடமில்லையென்று நம்புகிற பலருக்கு இந்த நிலைமை திருப்தியளிக்கும்" என்று பொருள் படும்படி 27-10-36ல் 'மதராஸ் மெயில்' எழுதியிருக்கிறது. இதிலிருந்து உண்மை விளங்குகிறது பாருங்கள்.

ஜஸ்டிஸ் கட்சிக்கு மகத்தான வெற்றி கிடைத்தபோது, சென்னை கவர்னராயிருந்த வில்லிங்டன் பிரபு ஸர். தியாகராயரை அழைத்து ஒரு மந்திரி சபை அமைக்கும்படி கேட்டார். தமது பெயருக்குத் தகுந்தபடி, சர். தியாகராயர் தமது மூன்று தோழர்கள் அடங்கிய மந்திரி சபையை அமைத்துக்கொண்டு தமக்கு எவ்வித பதவியும் தேவையில்லையென்று தியாக புத்தியுடன் சொல்லிவிட்டார். பதவி வேட்டை ஆடுகிறவர்கள் எல்லோருக்கும் இது ஓர் சிறந்த படிப்பினையாக விளங்குகிறது.

ஜஸ்டிஸ் கட்சியில் ராஜாக்களின் செல்வாக்கு நிறைந்திருக்கிறதென்று ஒரு சாரார் அடிக்கடி புகார் செய்கிறார்கள். இதை சற்று ஆராய்வோம். பனகால் ராஜா முதல் மந்திரி ஸ்தானத்தை சுமார் 6 வருஷம் வகித்தார். அரசியல் நிர்வாகத்தில் அவர் ஒரு சிறந்த ஞானியார், ஒரு பெரிய நிபுணர் என்பதை இப்போது எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். எல்லா வகுப்பினர்களுக்கும் அவர் நீதி வழங்கியதோடு, தாழ்த்தப்பட்டவர்களுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும், பின்னடைந்தவர்களுக்கும் அவர் விசேஷ உதவி செய்தார் என்பது வெளிப்படை. இனும் நிலங்கள் மசோதா சென்னை சட்டசபையில் சமீப காலத்தில் நிறைவேறி விட்டது. "சொத்துரிமையை இச்சட்டம் பாதித்து விட்டது" என்றும், இது போன்ற சட்டங்கள் காலக் கிரமத்தில் ஏற்படும் போது ஜமீன்தார்களையும், ராஜாக்களையும் பெரிதும் பாதிக்கும் என்றும் ஒரு சில வழக்கறிஞர்கள் பூச்சாண்டி காட்டி வருகிறார்கள். அவ்வித ஆபத்தான நிலைமை கூடிய சீக்கிரம் ஏற்படலாம் என்று அடிக்கடி பயமுறுத்தப்பட்டும், கனம் பொப்பிலி ராஜா "இந்த பூச்சாண்டி வந்தாலும் வரட்டும்; ஏழைகளுடைய க்ஷேமமே பெரிது" என்று நம்பி ஏழை விவசாயிகளுக்கு நீதி செலுத்தக்கூடிய ஒரு சட்டத்தை தைரியமாய் இயற்றி வைத்திருக்கிறார். பொப்பிலி ராஜாவின் பெருந் தன்மையான இந்த ஒரு உதாரணத்தை பணக்காரர்கள் எல்லோரும் பின்பற்றக் கடமைப் பட்டிருக்கிறார்கள். சென்னை இனும் நிலச் சட்டத்தை ராஜப் பிரதிநிதி அங்கீகரித்து விட்டார் என்கிற சந்தோஷமான செய்தியை நேற்று பத்திரிகைகள் மூலம் கவனித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். ராஜா ஸர். அண்ணாமலை செட்டியார் அவர்களின் ஒரு பெரிய நன்கொடையால் சிதம்பரத்தில் ஒரு சர்வ கலாசாலை ஏற்பட்டு உயர்தரக் கல்வி பரப்பப் படுகிறது. அவரது புதல்வர் கனம் செட்டி நாட்டு குமார ராஜா ஜஸ்டிஸ் கட்சியின் கல்வி மந்திரியாக இப்போது விளங்குவது மிகவும் பொருத்தமாயிருக்கிறது. ஆகவே, "ராஜாக்கள் கட்சி" என்று ஜஸ்டிஸ் கட்சியைத் தூற்றுவது ஒரு பெரிய அநீதி என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சட்டசபை வேலை

ராஜாங்க விவசாயக் கமிஷன் தலைவராக லார்டு லின்லித்கோ சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு நமது தேசம் முழுவதிலும் சுற்றுப் பிரயாணம் செய்தார். அவரே இப்போது ராஜப் பிரதிநிதியாக விஜயம் செய்து, கிராமச் சீரமைப்பு இயக்கத்துக்கு ஒரு புதிய சக்தியும், செல்வாக்கும் கொடுத்திருக்கிறார். "விவசாயக் கமிஷன் தலைவராக அவர் செய்துள்ள சேவையை இந்தியா என்றும் மறவாது. அந்தக் கமிஷன் சிபார்சுகளை அவர் தமது உத்தியோக காலத்தில் நிறைவேற்றி வைத்து விடுவாரானால் அது ஒன்றே அவரை இந்தியர்கள் போற்றும்படி செய்யக்கூடியதாக இருக்கும்" என்று ஒரு காங்கிரஸ் தமிழ் தினசரிப் பத்திரிகை கூறுகிறது. சென்னை மாகாணத்தைப் பொறுத்தமட்டில், இது ஒரு வேண்டிய அடிப்படையான

தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டியின் சர்வாதிகாரப் போக்கு

கவர்னருக்கு போர்டு தலைவர் உபசாரப் பத்திரம் படிக்கக் கூடாதாம்

காங்கரஸ்வாதி கண்டனம்

திருநெல்வேலி, அக். 31

ஒரு காங்கரஸ் வாதி எழுதுவதாவது:—

தமிழ் நாடு காங்கரஸ் காரியக் கமிட்டி 21-10-36-ல் வெளியிட்டிருக்கும் உத்திரவைப்பற்றி சில காங்கரஸ் வாதிகள் கொண்டுள்ள அபிப்பிராயத்தை உங்கள் பத்திரிகை மூலம் வெளியிட விரும்புகிறேன்.

அவ்வுத்திரவில் இரு பிரிவுகள் அடங்கியிருக்கின்றன. அதில், ஜில்லா போர்டு அங்கத்தினர்கள் கவர்னரை வரவேற்கும் விழாவுக்குப்போகக் கூடாதென்பது ஒன்று. மற்றொன்று, ஜில்லா போர்டு தலைவர் கவர்னருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கக் கூடாது என்பது. இவற்றில் முதலியதைப் பற்றி சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை. ஆனால் இரண்டாவதான, போர்டு தலைவரை பத்திரம் படித்தளிக்கக் கூடாதென்பது, இதுவரை நடக்காததும் வழக்கத்தில் கொண்டுவர முடியாததும், ஒழுங்கீன முள்ளதாகவும் இருக்கிறது.

எந்த ஸ்தாபனத்திற்கும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படுபவர் எக்கட்சியினின்றும் தனித்து நின்று நடு நிலைமையுடன் விஷயங்களைக் கவனித்து வரல் வேண்டும். இவ்வுண்மையை நாம் நம் பெரிய பாராளும் மன்ற ஞானியாகவிருந்த திரு. வி. ஜே. படேல் என்பாரிடம் கண்டிருக்கிறோம். அவர் பதவிக்கு வந்தவுடன் ஒரு கட்சியிலும் சேராது தனித்து நின்றார். அதனால், எக் கட்சி உத்திரவும் அவரைப் பாதிக்கமுடியாது போயிற்று. அவர் இந்தியா சட்டசபைத் தலைவராக இருந்த காலம் முழுவதும் அந் நிலையிலேயே இருந்தார். ஒரு சமயம் காங்கரஸ்வாதிகள் யாவரும் இனித் திரும்பி வருவதில்லை யென்று கூறி சட்ட சபையினின்றும் வெளியேறிய பொழுதும் கூட அவர் பெரிய சுயராஜ்ய வாதியாக இருந்தும் அவைகளில் கலந்து கொள்ளவில்லை. நமது தமிழ்நாடு காங்கரஸ் தலைவர்களை விட பன்மடங்கு ஞானம் படைத்த அவருடைய கட்சித் தலைவர்களும் அவரை வெளியேறும்படி உத்திரவு பிறப்பிக்கவில்லை.

நடந்த காலத்தை விடுவோம். தற்பொழுது நடப்பதைக் கவனிப்போம். நமது சென்னை மேயர் எப்படி நடந்துகொண்டார் என்று பார்ப்போம். தமிழ்நாடு காங்கரஸ் காரியக் கமிட்டியிலிருக்கும் காங்கரஸ்காரர்களுக்கு அவர் எந்த விதத்திலும் தாழ்ந்தவரல்ல. சின்னாட்களுக்கு முன் அவர் காங்கரஸ் அபேட்சகராக நகரசபைத் தேர்தலுக்கு நின்று வென்றார். இவர் கவர்னர் வரும்போதும் போகும்போதும் முறையே வரவேற்கவும் வழியனுப்பவும் இரயில் வண்டி நிலயத்திற்கு போகாமலிரார். ஆகவும் கவர்னருக்கு நகரசபை காங்கரஸ்காரர்கள் வரவேற்புப் பத்திரமளிக்க மறுத்திருந்த பொழுதும் அவர் வண்டி நிலயத்திற்கு வரவேற்கச் சென்றிருந்தார். அவர் மேயர் என்ற முறையில் தனக்குள்ள சமூகக் கடமைகளும், மரியாதைகளும் எவ்விதமான உத்திரவுக்கும் மேலானதென்று அவர் நன்கு உணர்ந்திருந்ததே இதற்குக் காரணம்.

ஜில்லா போர்டு தலைவர் பதவியும் இத்தகையதே. ஒருகட்சி அபேட்சகராக நின்று தேர்தலில் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால், போர்டு தலைவராக வந்த பிறகு போர்டார் ஒப்புக்கொண்ட தீர்மானங்களை முடித்து வைக்கும் கடமை தலைவருடையது. இதற்கு மாறாக நடக்கும் யாரும் அவ்வேலைக்கு லாயக்கில்லாதவரே. அத்தகையோர் தம் பதவியை ராஜிநாமா செய்து விட்டு வெளியேறி விடவேண்டும். இந்த ஜில்லா போர்டார் சரியாகவோ தப்பாகவோ (தப்பாக என்று தான் நினைக்கிறோம்) கவர்னருக்கு வரவேற்புப் பத்திரம் அளிக்கப்பட வேண்டுமென்பதை ஆதரித்திருக்கின்றனர்.

ஆனால் தலைவர் என்ற ஹோதாவில் அவர் அதைப் பற்றிக் கேட்பதற்கில்லை. அவர்கள் நிறைவேற்றும் தீர்மானத்தை நிறைவேற்றி வைக்க வேண்டியதே அவர் கடமை.

இந்த சந்தர்ப்பத்தில் கடமைக்கு மாறாக நடக்கும்படி ஒரு உத்திரவு பிறந்திருக்கிறது. இது பாராளுமன்ற முறைக்கும், நடத்தைக்கும் முற்றிலும் மாறாயிருக்கிறது. இம்மாதிரியான முன் யோசனையில்லாத உத்திரவுகள் சிறிது காலத்திற்கு முன் சென்னை இராஜதானியிலே நமது ஸ்தாபனத்தை தள்ளப் பத்திற்குள் ஆழ்த்தின. பண்டித ஜவஹரும் திருச்சிக் குழப்பத்தைப் பற்றிக் கூறுகையில், இதற்கெல்லாம் காங்கரஸில் சர்வாதிகாரித்தனம் ஓங்கி வருவதே காரணமென ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

இங்குள்ளவர்களும் மற்றும் வேறு இடங்களில் உள்ள காங்கரஸ்காரர்களும் போர்டு தலைவரைப் பத்திரம் படித்துக் கொடுக்கக்கூடாதென காங்கரஸ் கமிட்டி உத்தரவிட்டிருப்பது பாராளும் மன்ற நடத்தைக்கு முற்றிலும் மாறானது என்றும், அதன் மூலம் அது பெரிய தவறிழைத்திருக்கிறதென்றும் அபிப்பிராயப்படுகின்றனர். நம் எதிரிகள் தேர்தல் பிரசாரத்தில், நமக்கு பாராளுமன்ற விஷயங்களிலோ அரசியல் விஷயங்களிலோ போதிய பயிற்சி இல்லையென்கிறார்கள். இச்செய்கை அவர்கள் பிரசாரத்திற்கு மிகவும் சாதகமாக இருக்கிறது. கமிட்டியார் தாம் பிறப்பித்திருக்கும் உத்திரவைப் பற்றி ஆலோசிக்கவேண்டும். இல்லாவிடில் தற்காலிகமாக காங்கரஸின் கட்டுப்பாட்டுத் தலைவர்களுக்கு எதிராக நடக்கவேண்டியிருந்தபொழுதிலும் போர்டு தலைவர் காங்கரஸ் பெருமையைக் காப்பாற்றவும் போர்டுக்குத் தன் கடமையைச் செய்யவும் தைரியமாய் முன்வரவேண்டும். தலைவர், தன் சுயமரியாதையைக் காப்பாற்றவும் போர்டின் தன் கடமையைச் செய்வதற்கும், காங்கரஸ்காரர்களிடையே பாராளும் மன்றத்தன்மையை வளர்ப்பதற்கும் இவ்வழி ஒன்றுதானுண்டு. என்ன நடக்கிறதென்று நவம்பர் மாதம் 16-ம் தேதி பார்ப்போம்.

தமிழ்நாடு காங்கரஸ் காரியக் கமிட்டியைத் தான் பிறப்பித்த உத்திரவைப்பற்றி நன்கு யோசிக்கும்படி மறுமுறையும் கேட்டுக் கொள்கிறோம்.

சென்ற ஞாயிற்றுக்கிழமைய தினம் வெல்லிங்டனில் சென்னை சர்க்கார் கல்வி மந்திரி செட்டிநாட்டு குமாரராஜா கனம் எம். ஏ. முத்தையா செட்டியாருக்கு ஒரு தோட்டக் கச்சேரி நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம். படத்தில் கனம் மந்திரியையும், மற்றவர்களையும் காணலாம்.
(போட்டோ நியூஸ் ஏஜன்சி)

சிவஞானம் பார்க்கில் கூட்டம்

மிதவாத காங்கரஸ் வாதிகள் அட்டகாசம்

தீவிர காங்கரஸ் வாதிகள் திண்டாட்டம்

சென்னை, நவ. 2

சென்னை கொண்டி சிவஞானம் பார்க்கில் 1-11-36 மாலை 6-மணிக்கு இளை, பாரத் சேவா ஜன சங்கத்தின் ஆதரவில் பொதுக் கூட்டம் நடைபெறும் என தெரியப்படுத்தியதற்கிணங்க, பெத்து நாயக்கன் பேட்டை காங்கரஸ் தொண்டர்களும், சில காலிகளும், சுமார் 50 பேர் வரை, கூட்டத்தைக் கலைத்து விட வேண்டுமென்ற நோக்கம் கொண்டு முன்னேற்பாடுடன் விஜயம் செய்து இருந்ததை உணர்ந்த இராணிப்பேட்டை, எம். ரங்கசாமி அவர்கள், கூட்டத்தினரை சமாதானமாய் இருக்கும்படி கேட்டுக் கொண்ட பின், தோழர் தீனதயாளன் அவர்கள், தலைமை வகித்து பேசியதாவது, தற்கால காங்கரஸ் மகா சபையின் வேலைத்திட்டம் ஏகாதிபத்தியத்தை ஒழிக்காது என்றும் ஏகாதிபத்தியம் ஒழிந்தால் தான இந்தியாவின் நிலை மேம்படும் என்றும் இந்நிலை அடைய மக்களிடையே, விடுதலை புரட்சி ஓங்கவேண்டுமென்றும் பேசிக்கொண்டு இருக்கும் தருவாயில் காங்கரஸ் தொண்டர்களும் காலிகளும் அவ்வப்போது அட்டகாசம் செய்தே வந்தார்கள்.

அடுத்தபடி இராணிப்பேட்டை காங்கரஸ் தலைவரும், அகில இந்திய பாரத் சேவாஜன சங்கத்தின் தலைவருமான தோழர் எம் ரங்கசாமி கூட்டத்தில் கலாட்டா செய்து கொண்டு இருந்த காங்கரஸ் தொண்டர்களைநோக்கி "ஏன் நீங்கள் கலாட்டா செய்கிறீர்கள், உங்கள் நோக்கமென்ன? நீங்கள் கேள்வி கேட்பதை ஒழுங்குடன் ஒவ்வொருவராய்க் கேளுங்கள். பதில் சொல்ல தயாராய் இருக்கிறோம். பலர் பலவிதக் கேள்விகளை ஏக காலத்தில் கேட்பது ஒழுங்கு முறையல்லவே. கேள்வி கேட்கும் தன்மையில் நீங்கள் வந்ததாக தெரியவில்லையே. கலாட்டா செய்து கூட்டத்தை கலைத்துவிட வேண்டுமென்ற நோக்கம் கொண்டுதான் வந்து இருப்பதாகத் தெரியவருகிறது. இவ்வித கலாட்டாக்களால் எங்களின் லக்ஷியத்தை அடக்கி விட முடியாது என்பதை உணருங்கள். காங்கரஸை தாக்க வேண்டுமென்ற நோக்கம் எங்கள் நோக்கமல்ல. நாங்களும் காங்கரஸ் ஊழியர்களே, காங்கரஸின் கட்டளையை சிரமேற்றாங்கி சிறை போன்ற பலவித இன்னல்கள் அடைந்தவர்களே. ஆனால்,நாங்கள் இன்றைய காங்கரஸ் திட்டத்தில் வேறுபாடு கொண்டவர்கள், காங்கரஸின் தற்கால வேலைத் திட்டத்தினால் நாட்டிற்கு எவ்வித பிரயோசனமும் ஏற்பட போவதில்லை என்பதை உணர்ந்தவர்கள் என்பதை நீங்கள் உணருங்கள். நீங்களும் காங்கரஸ் ஊழியர்களே, உங்களிடம் சத்தியமும், அஹிம்சையும் இருப்பதாக நானும் அறிய முடியவில்லை. இங்கு உள்ள பொது ஜனங்களும் அறிய முடியவில்லை" என்று சொல்லிக் கொண்டு இருக்கும் பொழுது ஒரே கூச்சலும், குழப்பமும் செய்துக் கொண்டு கன்னியப்ப முதலியார் பேச வேண்டும் என்று கலாட்டா செய்துக் கொண்டு இருந்தார்கள்.

கலாட்டா ஏன் செய்கிறீர்கள், கன்னியப்ப முதலியாரிடம் கேட்கப்போகும் கேள்விகளை என்னிடம் கேளுங்கள்; பதில் சொல்லுகிறேன் என்று பணிவுடன் சொல்லியும் கேளாது கலாட்டா செய்துகொண்டு பிரசங்கியின் அருகாமையில் இருந்த 13-வது டிவிஷன் காங்கரஸ் கமிட்டியின் அங்கத்தினர் திரு கன்னியப்ப முதலியார் அவர்கள் அணிந்து இருந்த காதி குல்லாயைப் பிடுங்கி கீழே போடுவதும் தள்ளுவதும், கட்டப்பட்டிருந்த தேசிய கொடியை பிடுங்குவதும் போன்ற அட்டகாசச் செயல்கள் அளவுகடந்து விட்டதும் தவிர, இழிவான சொற்களையும் சொல்ல ஆரம்பித்தனர். இவ்வேளையில் சுமார் 8-மணிக்கு பெரும் மழை கொட்ட ஆரம்பித்தது. சில பொது ஜனங்கள் கலைய ஆரம்பித்தனர். ஆனால் மேடைமீது இருந்த பிரசங்கியும், கூட்டத்தின் தலைவரும், கலகம் செய்பவர்த கோஷ்டிகளோடும், பெரும் மழையிலும் சம்வாதம் செய்துகொண்டு இருந்தார்கள். சுமார் 8-30 மணிக்கு மழை விட்டதும், பொது ஜனங்கள் கூட்டத்தை கலைத்துவிடும்படி கேட்டுக்கொண்டதால் பிரசங்கிகளும் கூட்டத்தைக் கலைத்துவிட்டனர். கூட்டமும் கலைந்தது. சுமார் 200 ஜனங்கள் கன்னியப்ப முதலியார் அவர்களைப்பின்தொடர்ந்தே கலாட்டா செய்துகொண்டு கொண்டலயர் வீதி வழியாக செல்லும்பொழுது, அவ் வீதியில் உள்ள ஜனங்கள், இக் காங்கரஸ் தொண்டர்களின் காலித்தனத்தைக் கண்டு மனம் சகியாது 'போன்செய்யுங்கள், போலீசை அழையுங்கள்' என்று சப்தமிட்டதுதான் தாமதம், காங்கரஸ் தொண்டர்கள் ஓட்டம் பிடித்தனர்.

எம். ரங்கசாமி

'வெற்றி என்று சொல்ல வெட்கமில்லையா?'

தீவிர காங்கரஸ் தொண்டர்களின் அறிக்கை

அன்பு உள்ள தோழர்களே,

காங்கரசுக்கு, வெற்றி, காங்கரசுக்கு, வெற்றி யென்று எங்கு பார்த்தாலும் பறை சாற்றப் படுகிறது. இப்பறை சாற்றுதலை அறிவுள்ள உலகம் ஒப்புக்கொள்ள முடியுமா? அகில இந்திய காங்கரஸ் மகாசபையிலே ஸ்தலஸ்தாபன மோகங் கொண்ட குலாம் கூட்டங்கள் வயிறு வளர்க்கும் ஓர் திட்டத்தை வகுத்துக் கொண்டால் அத்திட்டத்தைக் காங்கரசின் அடிப்படையான திட்டமென உண்மை தேசாபிமானம் உள்ள ஒருவன் சொல்ல முடியுமா? தற்கால ஸ்தல ஸ்தாபன பிரவேசத் திட்டத்தில் பெரும்பாலான ஸ்தானங்கள் காங்கரசுக்குக் கிடைத்து விடுவதால் காங்கரசின் வெற்றி என்று சொல்ல முடியுமா? ஓர் சிலரின் வெற்றி யென்றே சொல்ல வேண்டும். இவ் வெற்றியின் மூலம் சிலரின் செல்வ நிலை குடும்ப நிலை முன்னேற்ற மடைவதுதான் காங்கரசும் தேசமும் கண்டபயன். தேசத்தில் உள்ள வறுமை, பசி, வேலையில்லாமை, இவைகளைப் போக்கக் கூடியது சுதந்தரம்.

காங்கரசின் வெற்றி நம் உலகத்தின் வெற்றி. நம் முன்னோரின் வெற்றி. நம் இந்திய வீரர்களின் வெற்றி. நம் அன்னை பாரதமாதாவின் வெற்றி, என நம் வீரர்களின் உலகம் பறைசாற்றும். ஆனால், இன்றைய காங்கரசுக்கு வெற்றி கிடைத்ததாக, கோழைகள் உலகம், குலாம் உலகம், தேசத் துரோகிகளின் உலகம், வயிறு வளர்க்கும் கோஷ்டியின் உலகம் பறை சாற்றுதலால், துன்பமும், துவேஷமும் மக்களிடையே மலிந்து தலைவிரித்து ஆடுவதால் இவ் வெற்றி நடிகர்களின் ராஜாங்கம் தழைத்தோங்கச் செய்யும் வெற்றி என்றே அறிவுள்ள உலகம் சொல்லும்.

இங்ஙனம்:
ஸி. கன்னியப்பன்,
தங்கஞானமூர்த்தி,
இளை பாரத் சேவா ஜன சங்கம்,
சென்னை.

இராமநாதபுரம் ஜில்லா போர்டு கடைசிக் கூட்டம்

(நமது நிருபர்)

மதுரை, அக். 31

இராமநாதபுரம் ஜில்லா போர்டின் கடைசிக் கூட்டம் 16-11-36-ம் தேதி இராமநாதபுரத்தில் நடைபெறுமெனத் தெரிகிறது.

இனி அடுத்த கூட்டம் ஜில்லா போர்டு தேர்தல் நடந்த பின்னர் தான் நடைபெறும்.

இராமநாதபுரம் ஜில்லா போர்டு

23-11-36-ல் தேர்தல்

(நமது நிருபர்)

மதுரை, அக். 31

இராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தல் 23-11-36-ம் தேதி நடைபெறும். நாமினேஷன் 7-11-36-ம் தேதி வாங்கப்படும். தேர்தல் முடிவுக்குப் பின்னர்தான் போர்டை சர்க்கார் பிரிப்பார்கள். அப்படி இரண்டாகப் பிரிக்கப்படும் போர்டுக்கு, இராமநாதபுரம், விருதுநகர், செட்டிநாடு, சாத்தூர் சிவகெங்கை என்ற பெயர்களில் இரண்டு பெயர்கள் கொடுக்கவேணுமாய் பலர் அபிப்பிராயப் படுகிறார்கள். சர்க்கார் எண்ணம் எவ்விதமோ தெரியவில்லை.

ஜஸ்டிஸ் கட்சி வெற்றி

பாலையம்பட்டி பஞ்சாயத்துப் போர்டு தேர்தல்

காங்கரஸ் கட்சி எங்கே?

(நமது நிருபர்)

பாலையம்பட்டி, நவ. 1

பாலையம்பட்டி பஞ்சாயத்துப் போர்டு தேர்தலுக்கு ஏற்கனவே 11 வார்டுகளில் 5 வார்டுகளுக்கு அமைதியான முறையில் போட்டியன்னியில் 5 மெம்பர்களும் ஆதிதிராவிடர் ஸ்தானத்திற்கு ஒரு மெம்பரும் ஆக 6 மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டது போக பாக்கி 6 வார்டுகளுக்கு 29-10-36-ல் தேர்தல் நடைபெற்றது. கீழ் கண்டவர்கள் பெருவாரியான வோட்டுகளை அதிகமாகப் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

4-வது வார்டு

சின்னசாமி நாயக்கர்	41
ராமசாமியாபிள்ளை, மாஜி பிரசிடெண்டு (காங்)	34
ஆதிராமினவி மூப்பர்	

5-வது வார்டு

ராமமூப்பர்	87
மங்கைய மூப்பர்	75
தள்ளுபடியானது	3

8-வது வார்டு

தேவசகாய ராஜு	50
ஆ. சாமுவேல், மாஜி மெம்பர் (காங்)	47

9-வது வார்டு

கோபால் செட்டியார்	70
சின்னக்காசி செட்டியார்	25
தள்ளுபடியானது	1

மேற்படி வார்டில் இந்திய — கிறிஸ்தவ தொகுதி

கருப்பன் என்ற ஞானமுத்து	65
அனந்தன் என்ற அருளானந்தம்	24

10-வது வார்டு

காட்டாண்மை சொக்கப்ப செட்டியார்	68
மூ. வா. வாலகுருவா செட்டியார்	11

11-வது வார்டு

சின்னமூர்த்தி செட்டியார்	48
மூ. வா. மூர்த்தி செட்டியார்	43
தள்ளுபடியானது	7

மேலே கண்ட 6 வார்டுகளுக்கும் போட்டி பலமாக யிருந்ததுடன் 4, 8-வது வார்டுகளுக்கு பிரசாரத்திற்காக வெளியூர்களிலிருந்து காங்கரஸ் மெம்பர்களைக் கூட்டிவந்து கூட்டங்கள் கூட்டியும் ஆர்ப்பாட்டங்கள் செய்தும் ஜம்பம் ஒன்றும் பலிக்கவில்லை. எதிர் காலத்தில் போர்டு நிர்வாகம் குன்றின் மேலிட்ட தீபம்போல் பிரகாசிக்க செய்ய புதிய மெம்பர்கள் முயற்சி செய்வார்களென்றும் எதிர் பார்ப்பதோடு, எவ்வளவோ பலமான போட்டிக்கிடையில் வாக்காளர்கள் உண்மையான மெம்பர்களை தெரிந்தெடுத்ததைப் பற்றி பொது ஜனங்கள் வாக்காளர்களை வாழ்த்துவதோடு, இனி போலி வேஷதாரிகளுக்கு இப் போர்டில் இடம் கொடுக்க மாட்டோமென்பதை தேர்தல் மூலம் நிரூபித்து காண்பித்ததைப் பற்றியும் போற்றுகிறார்கள்.

"சமரவலம்"

ஓர் மாத வெளியீடு

மக்களின் நல்வாழ்வு, பொருளாதாரநிலை, கிராம சீரமைப்பு, சுகாதார விஷயங்கள் இவைகளை சமநோக்குடன் அபிவிருத்தி செய்யும் பத்திரிகை.

மானேஜர்:—
சமரவலம் ஆபீஸ்,
விழுப்புரம்.

திருச்செங்கோடு மகாநாடு

ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் விஜயம்

பலவிடங்களிலும் குதூகலமான வரவேற்பு

ஜஸ்டிஸ் கொடியேற்று விழா வைபவம்

தலைவருக்கு பல ஸ்தாபனங்களின் உபசாரப் பத்திரங்கள்

“விடுதலை” தினசரியாகும்

—ராஜா சாஹிப்

திருச்செங்கோடு, நவ, 2

திருச்செங்கோடு ஜஸ்டிஸ் மகாநாடு நேற்று காலை திருச்செங்கோடு ராஜலிங்கம் தியேட்டரில் ஆரம்பமானது. கனம் பொப்பிலி ராஜா மகாநாட்டுத் திறப்பு விழாவை ஆற்றி வைத்தார். கோயம்புத்தூர் முனிசிபல் கவுன்சில் சேர்மன் ராவ்சாகிப் என். என். பொன்னைய கவுண்டர் மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

ராஜா சாஹிபின் வருகையை முன்னிட்டு திருச்செங்கோடு ஆனந்த சாகரத்தில் மூழ்கியிருந்ததென்று கூறுவது மிகையாகாது. எல்லா இடங்களிலும் மக்கள் கனம் ராஜாசாகிபை மிகவும் ஆர்வத்துடன் வரவேற்றனர். தெருக்கள் தோறும் கொடிகளும், தோரணங்களும், தலைவர்களை வரவேற்கும் வளைவுகளும் காணப்பட்டன.

“வர்ணாஸ்ரமம் தேசத்தைப் பாழ்படுத்தியது,” “சுயராஜ்யத்தின் பேரால் காங்கரஸ் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயற்சிக்கிறது” எனப் பல வளைவுகளில் எழுதப்பட்டிருந்தன.

மகாநாடு ஆரம்பமாவதற்கு முன் கனம். ராஜா சாகிபும், மற்றுமுள்ள கட்சித் தலைவர்களும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். ஊர்வலம் திருச்செங்கோடு ஜில்லா போர்டு உயர்தர பாடசாலையில் ஆரம்பமாகி திருச்செங்கோட்டின் முக்கிய தெருக்கள் வழியாக ராஜலிங்கம் தியேட்டரிலுள்ள மகாநாட்டுப் பந்தலுக்குச் சென்றது. ஊர்வலத்தைக் கண்டு களிக்க நூற்றுக் கணக்கான மக்கள் சாலையின் இரு புறங்களிலும் கூடி விட்டனர். ஊர்வலம் மகாநாட்டுப் பந்தலை நெருங்க நெருங்க கூட்டம் சமாளிக்க முடியாமல்படி அதிகரித்து விட்டது. தலைவர் ராஜாசாகிபைத் தரிசிப்பதற்காக மக்கள் போட்டியிடலாயினர். திருச்செங்கோட்டிற்குப் பக்கத்திலுள்ள கிராமங்களிலிருந்தும் மக்கள் ராஜாசாகிப்பைக் கண்டு தரிசிப்பதற்கு வந்திருந்தனர். ராஜா சாகிபுடன் திவான்பகதூர் என். எல்லப்ப செட்டியாரும், திரு. ஆர். போக்ஸ் துரையும் வீற்றிருந்தனர். திரு கந்தசாமி முதலியார் ஜாகையை மோட்டார் அடைந்ததும், மகாநாட்டுத் தலைவர் திரு. பொன்னைய கவுண்டரும் மோட்டாரில் ஏறிக் கொண்டார். பின் ஊர்வலம் அக்ரகாரத்தின் வழியாக ஊர்ந்து சென்றது. ராஜா சாகிபைக் காண இங்கும் பார்ப்பனர்கள் மிகவும் ஆவலுடன் காத்திருந்தனர்.

குதூகலமான வரவேற்பு

ஊர்வலம் வலசக்காட் திரு. வேதப்ப கவுண்டர் பங்களாவிடம் நின்றது. கனம் ராஜாசாகிபும், மற்றுமுள்ள கட்சித் தலைவர்களும் அங்கு குதூகலமாக வரவேற்கப்பட்டனர். பிறகு, ராஜா சாகிபும் மற்றமுன்னோரும் பங்களாவிற்குள் சென்று பார்வை யிட்டனர். திருச்செங்கோடு பிரபல நகரவாசியாகிய திரு. நடேச முதலியார் கனம் ராஜா சாகிபை வரவேற்றார். பின்பு, அவருக்கு மாலைகள் சூட்டப்பட்டன. ஒரு சிற்றுண்டி விருந்துபசாரம் நடைபெற்றது. வந்திருந்த பிரமுகர்களுக்கெல்லாம், சந்தனம், தாம்பூலம் வழங்கப்பட்டு, பன்னீர் தெளிக்கப்பட்டபின் அவ்வைபவம் முடிந்தது.

இதற்குள் ராஜா சாகிபைக் காணுவதற்காக வந்த மக்கள் அதிகரிக்கத் தொடங்கி போலீசாராலும் சமாளிக்க முடியாமற் போயிற்று.

அதன்மேல் கனம் ராஜா சாகிப் மகாநாட்டிற்கு, பங்களாவிலிருந்து நடந்தே செல்ல தீர்மானித்தார். மகாநாட்டுப் பந்தலை ஊர்வலம் அடைந்ததும், மரியாதைக் குண்டுகள் முழங்கின.

மகாநாடு ஆரம்பம்

திரு. வி. வி. ராமசாமி
ஜஸ்டிஸ் கொடியை ஏற்றுவித்தார்

திரு. வி. வி. ராமசாமி “ஜஸ்டிஸ் கொடி”யை ஏற்றுவித்த பின் மகாநாடு ஆரம்பமானது. கொடியை ஏற்றுவிக்கையில் அவர் கூறியதாவது:—

எக்காலத்திலும் ஜஸ்டிஸ் கொடி தாழ்வுற்றதில்லை. ஒரு சில காலங்களில், ஒரு சில இடங்களில் ஜஸ்டிஸ் கட்சி தேர்தலில் தோல்வியுற்றிருக்கலாம். ஆனால், அதனை முன்னிட்டு, வெகு காலமாக எதற்காக பாடுபட்டு வருகிறோமோ அக்கொள்கைகளை நாம் புறக்கணிப்போமில்லை. தேர்தலில் வெற்றியடைவதற்காக நமது அரசியல் எதிரிகளான காங்கரஸ்காரர்களைப் போன்று சமயத்திற்கும் சந்தர்ப்பத்துக்கும் ஏற்றவாறு நமது கொள்கைகளை மாற்றுவோமில்லை. ஒரு சில குறிப்பிட்ட கொள்கைகளுக்காக ஜஸ்டிஸ் கட்சி ஆதிமுதல் போராடி வந்திருக்கிறது. பேசுவது ஒன்றும் செயலில் வேறொன்றுமாக அது நடந்தது கிடையாது. அவ்விதம் நடப்பது காங்கரஸ்காரர்களுக்கே உசிதம். பாமர மக்களின் முன்னேற்றத்திற்காக உண்மையில் பாடுபட்டு வருவது ஜஸ்டிஸ் கட்சியே. அத்தகைய சிறந்த கட்சியின் கொடியை ஏற்றுவிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததற்காக நான் பெருமையடைகிறேன். ஆகவே, ஜஸ்டிஸ் கட்சியில் மக்கள் ஏராளமாகச் சேர்ந்து அதன் உயர்ந்த கொள்கைகளுக்கு ஊக்க மளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (கரகோஷம்)

கொடி ஏற்றுவித்த பின் கனம் ராஜா சாகிப் மகாநாட்டைத் திறந்து வைத்தார். ராஜா சாகிபின் ஆங்கிலச் சொற்பொழிவு, தமிழில், “விடுதலை” கௌரவ மானேஜர் திரு. சி. டி. நாயகத்தால் மொழி பெயர்க்கப் பட்டது. (அதனைப் பிறிதோரிடத்தில் காணலாம்.)

உபசாரப் பத்திரங்கள்

திருச்செங்கோடு தென்னிந்திய நலவுரிமைச் சங்கம், ஆதிதிராவிட மகாஜன சங்கம், திருச்செங்கோடு முஸ்லிம் சங்கம், முதலிய ஸ்தாபனங்கள் கனம் ராஜா சாகிபிற்கு உபசாரப் பத்திரங்கள் வாசித்தளித்தன. அதற்கு கனம் ராஜா சாகிப் பதிலளிக்கையில் சட்டசபையிலும், வெளியிலும் தான் அடைந்த சிறிது வெற்றிக்கும் கட்சி மனிதர்களின் விஸ்வாசமும், ஆதரவுமே காரணமென்றும், உபசாரப் பத்திரங்களில் தன்னைக் குறித்து பட்சமாகக் கூறியுள்ள வார்த்தைகள், கட்சி முன்னேற்றத்திற்காகவும், தேச முன்னேற்றத்திற்காகவும் மேற்கொண்டு உழைக்க தனக்கு ஊக்க மளிப்பதாயும் கூறினர்.

ராஜா சாகிப் மேற்கொண்டு பேசுகையில், ஜஸ்டிஸ் கட்சியின் தமிழ்ப் பத்திரிகையான “விடுதலை” இன்னும் சில தினங்களில் தினசரியாகக் கூடுமென்பதைத் தாம் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்வதாகக் கூறினர்.

வரவேற்புக் கமிட்டித் தலைவர் உபசாரப் பத்திரம்

பிறகு வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு. எம். விஸ்வநாத முதலியார் தமது உபசாரப் பத்திரத்தை தமிழில் படித்தார். அதுபோது ஜஸ்டிஸ் கட்சியின் சேவைகளைக் குறித்தும், மதத்தின் பேரால் பார்ப்பனர்கள் புரிந்துவரும் மோசடிகளைக் குறித்தும், தற்காலநிலைமைக் கேற்றவாறு வர்ணாஸ்ரம தர்மத்திற்குப் பதிலாக, காங்கரஸ் போர்வையைப் போட்டுக்கொண்டு, தேசாபிமானிகள், தியாகிகள் போன்று அவர்கள் நடித்து வருவதைக் குறித்தும் விளக்கிக் கூறிய பின் அவர்களின் ஏகபோக ஆதிக்கத்தை ஒழித்து எல்லா சமூகங்களுக்கும் நன்மையை வழங்க பார்ப்பனரல்லாதார் யாவரும் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து ஒருமுகமாக பாடுபட முன்வர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இதன் பின் கோயம்புத்தூர் முனிசிபல் சேர்மன் ராவ் சாகிப் எஸ். என். பொன்னைய கவுண்டர் மகாநாட்டுத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டார். அவரது தலைமைப் பிரசங்கத்தை பிறிதோரிடத்தில் காணலாம்.

இடைவேளை போஜனத்திற்குப் பின் மகாநாடு கூடியதும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கலைந்தது.

ஜஸ்டிஸ் பொதுக் கூட்டம்

காங்கரஸ் காலித்தனம்

ஈ. வெ. ராவின் சாட்டை

திருச்செங்கோடு, நவ, 2

நேற்று மாலை இவ்வூர் 40 கால் மண்டபத்திற்கு முன்னுள் ஒரு பிரமாண்டமான பொதுக் கூட்டம் கூடியது. மழை தூறிக் கொண்டிருந்த போதிலும் கூட்டம் கொஞ்சம் கூட கலையாமல் அமைதியாக இருந்தது. கூட்டத்திற்கு கனம் பொப்பிலி ராஜாவும், தோழர்கள்: ஈ.வெ. ராமசாமிப் பெரியார், சி. டி. நாயகம், அ. பொன்னம்பலம், எ. வி. அழகர்சாமி முதலியவர்கள் அனைவரும் விஜயம் செய்திருந்தனர். சேலம் தோழர் ஜகதீச செட்டியார் தலைமை வகித்தார்.

முதன் முதலாக தோழர் பொன்னம்பலம் பேசிக் கொண்டிருக்கும் போது, கூட்டத்தின் ஓரத்திலிருந்த யாரோ ஒரு காங்கிரஸ் வாலா, “காங்கரஸ் கட்சி ஒன்று தான் பணம் கொடுத்து ஓட்டு வாங்குகிறதா?” என்று கத்தவே, கூட்டத்திலிருந்தவர்கள் எழுந்து சத்தம் போட ஆரம்பித்தனர். உடனே சப் இன்ஸ்பெக்டர் அப்படி சத்தம் செய்து கூட்டத்தைக் கலைக்க முயன்ற காங்கரஸ் வாலாவைக் கூட்டிச் சென்று புத்தி கூறினர். மீண்டும் அமைதி ஏற்பட்ட பின், தோழர் ஈ. வெ. ராமசாமி, ரோஷம் கிளம்ப, துடி துடித்துக் கொண்டு, இவ்வாறு கூட்டத்தின் அமைதியை கலைக்க முயலும் காங்கரஸ் காலிகளை கண்டித்து, இவ்வாறு செய்வது, அயோக்யத்தனம், பிலத்தனம், முட்டாள்தனம் என்று சரமாரியாகப் பேசினர். ஜனங்கள் உற்சாகமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். மழை வரவே, கூட்டம் மண்டபத்திற்குள் கூடியது. காங்கரஸ் காரர்கள், ஜஸ்டிஸ் காரர்களை தூற்றுவதற்கு பதில் அளிப்பதாகக் கூறி சுமார் 2மணி நேரம் மிக அருமையான பிரசங்கம் செய்தார்.

இரவு 9-மணிக்குக் கூட்டம் கலைந்தது. அப்போது “பொப்பிலி ராஜாவுக்கு ஜே!” என்ற கோஷம் வானைப் பிளந்தது.

பொப்பிலி ராஜாவுக்கு தேநீர் விருந்து

யூனியன் போர்டு வரவேற்புப் பத்திரம்

நேற்று மாலை மகாநாட்டின் நடவடிக்கைகளின் போது கனம் பொப்பிலி ராஜா விஜயம் செய்திருந்தார். மாலை 5மணிக்கு, போர்டு ஹைஸ்கூல் செண்டரல் ஹாலில் திருச்செங்கோடு வர்த்தகர்கள் ஒரு தேநீர் விருந்தளித்தனர். அது சமயம் முக்கியமான பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர். விருந்திற்குப் பின்னர், பொப்பிலி ராஜா அவர்கள் நேரே, பஞ்சாயத்துப் போர்டு வரவேற்புக்கு இணங்கி விஜயம் செய்தார். வெங்கட்ரமண ஹாலில் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. மரியாதைக்காக யூனியன் போர்டிலிருந்து குண்டுகள் போடப்பட்டன. பின் அங்கிருந்து மாலை நடந்த பொதுக் கூட்டத்திற்கு விஜயம் செய்தார். இன்று கனம் பொப்பிலி ராஜா அவர்கள் மற்ற தலைவர்களுடன் நாமக் கல்லுக்கு காரில் புறப்பட்டுச் சென்றார்.

கல்வி மந்திரிக்கு உபசாரம்

சென்னை, நவ, 2

கனம் குமார ராஜா எம். ஏ. முத்தையா செட்டியார், சென்னை சர்க்காரின் கல்வி இலாக்கா மந்திரியானது பற்றி வாழ்த்துக்கூற எழும்பூரிலுள்ள “வில்லிங்டன்” தோட்டத்தில் சென்ற சனிக்கிழமை ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. முன்னதாகவே “வில்லிங்டன்” தோட்டம் தோரணங்களாலும், கொடிகளாலும், மின்சார விளக்குகளினாலும் நன்கு அலங்கரிக்கப்பட்டு ஜ்வலித்துக் கொண்டிருந்தது. இவ்வானந்த வனத்தில் கனம் முத்தையா செட்டியாருக்கும், மற்றும் அங்கு விஜயம் செய்திருந்த நீதிபதிகளுக்கும், மந்திரிகளுக்கும், மற்ற கனவான்களுக்கும் மெக்ரென்னட் அண்டு கம்பெனியாரால் தயாரிக்கப்பட்ட பலவித உயரிய சிற்றுண்டிகளுடன் தேநீர் வழங்கப்பட்டது.

பின்பு நிபுணர், சாம்ப மூர்த்தி “ஆர்ச் சண்டார்” என்னும் வாத்தியத்தைக் கொண்டு ஒரு ஆனந்தமான கச்சேரி நடத்தினர். அது முடிந்த பிறகு யாவரும் சிறிது நேரம் அளவளாவிப் பேசியிருந்து, பின் சென்றனர்.

மதுரையில் கனம் குமார ராஜா

இரண்டு கூட்டங்களில் தலைமை வகிப்பார்

(நமது நிருபர்)

மதுரை, அக். 31

சென்னை அரசாங்கக் கல்வி மந்திரி கனம் குமார ராஜா எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்கள் 15-10-36-ந்தேதி இந்நகருக்கு விஜயம் செய்து அன்று நடை பெறும் சுகாதார வாரக் கொண்டாட்டக் கூட்டத்திலும் வர்த்தக சங்கத்தின் ஆண்டு விழாவிலும் தலைமை வகிப்பார்கள்.

“விடுதலை” நண்பர்களுக்கு

அறிக்கையும், வேண்டுகோளும்

வருகிற நவம்பர் முதல் “விடுதலை”யை நாள்தோறும் வெளியிடுவதற்கான எல்லா முயற்சியும் நடந்து வருகிறது.

அதற்கு ஏற்படுத்தக் கருதுகிற கட்டணம் விவரம் கீழே காண்க.

சென்னையிலும், விற்பனைக்காரர் உள்ள இடங்களிலும்

தனித் தாள்	0	0	6
1 மாதம்	1	0	0
3 மாதம்	2	14	0
6 மாதம்	5	10	0
1 ஆண்டு	11	0	0

தபால் வழி

உள் நாடு.

தனித் தாள்	0	0	9
1 மாதம்	1	4	0
3 மாதம்	3	10	0
6 மாதம்	7	0	0
1 ஆண்டு	13	0	0

வெளி நாடு

தனித் தாள்	0	1	6
1 மாதம்	1	10	0
3 மாதம்	4	12	0
6 மாதம்	9	12	0
1 ஆண்டு	19	0	0

நீடித்து நடக்கும் மற்றெந்த செய்தித் தாளையும் விட இதன் கட்டணம் குறைந்திருப்பதும், குறைந்த காலத்தை விட நீடித்த காலத்திற்குக் கட்டண விகிதம் குறைந்திருப்பதும் விளங்கும். ஆகையால், “விடுதலை” நண்பர்கள் எல்லாரும் சேர்ந்தாற்போல் ஒரு ஆண்டுக்காவது, கூடியவரை நீடித்த காலத்திற்காவது கட்டணம் செலுத்திச் சேரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வாரம் இரு முறைக்குக் கட்டணம் செலுத்தி யிருப்பவர்கள் புதிய விகிதப்படி ஏற்பட்ட மீதக் கட்டணத்தை உடனே அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கணிசமான எண்ணுள்ளவர்களுக்கு இதுவரை “விடுதலை” இலவசமாக அனுப்பப்பட்டு வருகிறது. இனி அப்படி அனுப்ப முடியாதென்பதை அவர்களே தெரிவார்கள். இலவசமாகக் கிடைத்தாலொழிய “விடுதலை” யைப் படிக்க முடியாது, அல்லது குறைந்த கட்டணத்திற்காவது கிடைத்தால்தான் படிக்க முடியும் என்ற நிலையிலிருப்பவர்கள் தகுந்தகாரணங்கண்டு உடனே விண்ணப்பம் அனுப்பி இலவசமாகவாவது, குறைந்த கட்டணத்திற்காவது அனுப்ப சம்மதம் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்படிச் சம்மதம் பெறாதவர்கள் முழுக்கட்டணம் அனுப்பி “விடுதலை” க்குத் துணை புரிய வேண்டுகிறேன்.

“விடுதலை” விற்பனைக்காரர்கள் தங்களுக்கு வேண்டிய எண்ணிக்கைக்கு உரிய இரண்டு மாதக் கட்டணத்தை முன் பணமாகக் கட்டித் தெரிவித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

தானும், தன் குடும்பமும், தன் இனமும், தனக்கும், தன் குடும்பத்திற்கும், தன் இனத்திற்கும் மிதி கல்லா யிருக்கிற மற்றவர்களும் மாத்திரம் தான் வாழ வேண்டுமென்ற குறுகிய நோக்கத்திற்கு ஆளாகாமல், எல்லா இனத்தாரும் இன்புற்று வாழ்ந்து நாட்டிற்குச் சீரும் சிறப்புந் தேட வேண்டுமென்ற பெரு நோக்கிற்கு உண்மையாக உழைப்பவர்களை எல்லாம் “விடுதலை”க்குப் பணம் செலுத்தியும், மற்ற வழியிலும் துணை புரியுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

24-10-36 செ. தெ. நாயகம்.

குறிப்பு: மேலே குறிப்பிட்டபடி, வருகிற நவம்பர் முதல் “விடுதலை”யை நாள் தோறும் வெளியிடுவதற்கான எல்லா முயற்சியும் செய்தும், நவம்பர் துவக்கத்திலிருந்தே அவ்வாறு வெளியிடும் நிலைமை கைகூடவில்லை. விரைவில் வெளியிடுவதற்கான முயற்சி குறைவில்லாமல் நடந்துவருகிறது.

31-10-36

சிவாஜி வியாயாம மண்டல்

வேப்பேரி, நவ. 1

சென்ற 30-10-36-மாலை 5-மணிக்கு எ. சி. எ. வி. ஸ்கூலில் சிவாஜி வியாயாம மண்டல் சார்பாக ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் டிப்டி இன்ஸ்பெக்டர் திரு. சி. தி. சம்பந்தம் பிள்ளை பி. ஏ; எல். டி., சபைத்தலைமை பூண்டார். திரு. டி. இ. வீரராகவன் எம். ஏ. ‘உடல நலம்’ என்பதைப்பற்றி ஆங்கிலத்தில் வெகு அழகாகப்பேசினர். பின்னர், சென்னைதிருப்பவும் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் திரு வி. நடேசன் அவர்கள் ‘தமிழர் வீரம்’ என்பதைப்பற்றி விரிவுரை நிகழ்த்தினர். கடைசியில் காரியதரிசி வந்தனோபசாரம் கூறக்கூட்டம் கலைந்தது.

கோவல் தமிழ்ச் சங்கம்

திருக்கோவலூர், நவ, 3

காரியதரிசி எழுதுகிறார்:—

கோவல் தமிழ்ச் சங்கத்தின் மூன்றும் ஆண்டு நிறைவிழா, திருக்கோவலூர் தெற்குவீதி, ஆரிய வைசியர் சத்திரத்தில், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழ்ப் பேராசிரியர், திரு. சோமசுந்தரபாரதியார் எம். ஏ., பி. எல்., தலைமையிலும், திருக்கோவலூர் டிவிஷன், டிப்டி கலெக்டர் திரு. கே. கோதண்டபாணி பிள்ளை பி. ஏ., தலைமையிலும், 1936-நவம்பர் 7-8 தேதிகளில் நடைபெறும்.

குஷ்ட ரோக நாள்

நவம்பர் 7-ந் தேதி

சென்னை நகர வாசிகளுக்கு வேண்டுகோள்

சென்னை, அக், 31,

சென்னை நகர குஷ்ட ரோக நிவாரணக் கவுன்சில் விளம்பர அதிகாரி பின் வருமாறு எழுதுகிறார்:—

குழந்தைகளின் க்ஷேமத்திற்காக இத்தேசத்தில் உழைத்து வரும் ஸ்தாபனங்களில் குஷ்ட ரோகத்தைப் போக்குவதற்காக உழைக்கும் ஸ்தாபனத்தைக் காட்டிலும் பெரியதோர் ஸ்தாபனம் பிறிதொன்றிருக்கமுடியுமா? மனிதசமூகத்தின் இன்பகரமான வாழ்க்கையில் பிரியமுள்ள சகலரும் இதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். இவ்விஷயம் நம்மனதை உருக்காமற் போமேயானால் நூற்றுக்கணக்கான வருடங்களாக நாம் அடைந்துள்ள நாகரீகம் வீணே. தர்ம சிந்தனையையும், அன்பையும் கற்பித்துச் சென்ற ஞானிகளின் உபதேசம் நம் செவிகளில் ஏறவில்லை யென்று தான் அர்த்தம்.

ஆகவே, நவம்பர் 7-ந் தேதியன்று குஷ்டரோக நிவாரண நிதிக்காக கொடிகள் விற்று பணம் வசூலிக்கப்படும். சென்னை நகர வாசிகள் அதற்கு தாராளமாக உதவி செய்ய வேண்டுகிறேன்.

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே!
ஏழையென்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே!
மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையை கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த வகையினும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! (பாரதி)

விடுதலை

சென்னை: 1936-ளு நவம்பர்-மீ 4-உ
புதன்கிழமை

திருச்செங்கோடு மகாநாடு

சென்ற ஞாயிறன்று திருச்செங்கோட்டில் கூடிய "ஜஸ்டிஸ்" கட்சி மகாநாடு வெகு சிறப்பாக நடந்தேறியிருப்பதைப் பார்த்துப் பெருமகிழ்ச்சி யடைகிறோம். மகா நாட்டைத் திறந்து வைத்த நம் கட்சித் தலைவர் கனம் பொப்பிலி ராஜா ஸாஹிபவர்களும், மகா நாட்டுத் தலைவர் ராவ் சாஹிப் பொன்னைய கவுண்டரவர்களும், மகாநாட்டில் ஜஸ்டிஸ் கொடியை ஏற்றிவைத்த திரு. வி. வி. ராமசாமி அவர்களும் நிகழ்த்திய சொற்பொழிவுகள், நம்மவர்களுக்கு மிக்க ஊக்கமும், உற்சாகமும் அளிக்கக் கூடியதாயிருப்பதுடன், நேர் வழியறியாது தத்தளிக்கும் காங்கரஸ் காரர்களுக்கும் நல்லறிவு புகட்டக் கூடியதாக இருக்கின்றன. தீர்க்க தரிசன சக்தியும், விசால மனப்பான்மையும், விஷய ஞானமும், சகிப்புத்தன்மையும், திடசித்தமும் ஆன்ற அறிவும், அனுபவமும் உடையவர்களுக்கே அரசியலில் இடமுண்டு. அனுபவ சாத்தியமல்லாத லக்ஷியங்களை முன் நிறுத்திக் கொண்டு பகற்கனவு காண்போருக்கு அரசியலிலோ, இதர துறைகளிலோ இடமே இல்லை. அத்தகையோரால் நாட்டுக்குத் தீமையன்றி நன்மை யுண்டாகப்போவதில்லை. ஒத்துழையாமை, சட்டமறுப்புப் பல்லவிகளை 1920 முதல் பாடிக்கொண்டு நாடுமேடெல்லாம் சுற்றியலைந்து அலுத்துக் கடைசியில் தமது தவறுதலை யுணர்ந்து சட்ட சபைகளைக் கைப்பற்ற காங்கரஸ்காரர் துணிந்திருப்பதை நமது தலைவர் கனம் பொப்பிலி ராஜா அவர்கள் ரத்னச் சுருக்கமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனால், சட்டசபைகளைக் கைப்பற்ற முடிவு செய்த பிறகும் அவர்கள் பழைய பாடம் படித்துக் கொண்டிருப்பது கனம் ராஜா ஸாஹிபவர்களுக்குப் பிடிக்கவில்லை. வரப்போகும் சீர்திருத்தத்தை நிராகரிப்பதும், முட்டுக்கட்டை போடுவதும் சாத்தியமல்ல வென்றும் நமது தலைவர் தக்க ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டியிருக்கிறார். அறிவு வேலைக்காரருக்கு சட்ட சபைகளில் என்ன வேலை என கனம் ராஜா ஸாஹிபவர்கள் கேட்பதும் ஆணித்தரமான கேள்விகளாகும். மேலும், சட்டசபையில் புகுந்து காங்கரஸ்காரர் செய்யப்போகும் வேலைகளை அவர்கள் வாக்காளர்களிடம் முன்னாடியே விளக்கிக் கூறத் தவறுவது ஒரு அரசியல் மோசடியாகும். காங்கரஸ் பத்திரிகையான "சுதேசமித்திர"னும் செமி காங்கரஸ் பத்திரியாக நடிக்கும் சென்னை "மெயிலும்" மற்றும் பகுத்தறிவுடைய காங்கரஸ் வாதிகளும் கூட, பதவி ஏற்கும் விஷயத்தில், காங்கரஸ்காரர் வழ வழாப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டித்து வருவது உலக மறிந்த உண்மை. எனினும், காங்கரஸ்காரருக்கு திருப்தி வரவில்லை. சமீபத்தில் திருச்சியில் கூடிய தேர்தல் பிரசாரக் கூட்டத்திலகூட, திரு. சத்தியமூர்த்தி, வரப்போகும் அரசியலை நடத்தி வைக்க காங்கரஸ்காரர் சட்டசபைகளுக்குச் செல்லவில்லையென்றும், சீர்திருத்தத்தை நிராகரித்து முட்டுக்கட்டை போடவே சட்டசபைக்குப் போகிறார்கள் என்றும் வெட்கமின்றி பகிரங்கமாக கூறியிருக்கிறார். காங்கரஸ்காரர் இவ்வண்ணம் பச்சையாகக் கூறிய பிறகும் வாக்காளர் அவர்களை ஆதரிக்க முன் வருவார்களானால் அது அவர்கள் தலைவிதி என்று தான் நாம் திருப்தி யடைய வேண்டும்.

லோகமான்ய திலகர் கொள்கையைப் பின்பற்றி ஜஸ்டிஸ் கட்சியார் காரியங்கள் நடத்துவதை மகாநாட்டுத் தலைவர் ராவ் சாஹிப் பொன்னைய கவுண்டரவர்கள் வெகு தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். தேச பக்தியிலோ, தியாகத்திலோ காலஞ்சென்ற திலகர், ஜவஹர்லாலுக்கோ, படேலுக்கோ, சத்தியமூர்த்தி கம்பெனியாருக்கோ இளைத்தவரல்ல. எனினும், தெளிவான அறிவும், அனுபவ ஞானமும் உடையவரானதினால் சாத்தியமானதையே அவர் கூறினார். கிடைத்ததைப் பெற்றுக்கொண்டு மேற்கொண்டும் அதிகப்படியாகப் பெறப் போராட வேண்டும் என்ற அவரது கொள்கையை அறிவாளிகள் எல்லாம் ஆதரிக்கத் தான் செய்வார்கள். மாண்டு போர்டு சீர்திருத்தம் அமுலுக்கு வந்த போதும், காங்கரஸ்காரர் தற்காலம் கூச்சல் போடுவது போல் பெருங் கூச்சல் போடத்தான் செய்தார்கள். இரட்டையாட்சி பயனற்றது; அதனால் நாட்டுக்கு நன்மை செய்ய முடியாது என்றெல்லாம் கத்தினார்கள். சட்ட மறுப்பினால் தான் சுயராஜ்யம் வரும் என்றார்கள். கடைசியில் கண்ட பலன் என்ன? ஒரு காலத்திலே சட்ட சபைகளை வெறுத்துத் தள்ளியவர்கள் இப்பொழுது சட்ட சபைகளிலே சரணாகதி யடையப் போகிறார்கள். மாண்டு போர்டு சீர்திருத்தத்தை ஏற்று நடத்திய நமது கட்சியார் சாத்தியமானவரை, நாட்டுக்கு நன்மை செய்து அரசியல் அனுபவம் பெற்று எதிர்கால அரசியலைத் திறம்பட நடத்தவும் ஆற்றல் பெற்றிருக்கிறார்கள். நமது கட்சியார் செய்துள்ள வேலைகளை அரசியல் ஞானமுடைய பெரியார்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள். திரு. சத்தியமூர்த்தியும் கூட நமது கட்சியார் செய்துள்ள வேலைகளை மறுக்கவில்லை; கொஞ்சம் கூட அதிகமாக செய்திருக்கலாம் என்றே குறை கூறுகிறார். ஆனால், எவ்வளவு எதிர்ப்புகளுக்கு இடையே, சிக்கலான இரட்டை யாட்சியை நமது மந்திரிமார் அமல் நடத்தியிருக்கிறார்கள் என்பதை அறியச் சக்தி யுடையவர்களுக்கு நாம் செய்துள்ள வேலைகள் அபாரமானவை யெனத் தோன்றாதொழியாது. குறை கூறுவோர் குறை கூறிக் கொண்டிருந்தாலும் நாம் செய்துள்ள வேலைகள் மகத்தானவை என்பதை ஒருவராலும் மறுக்க முடியாது. ஒடுக்கப்பட்டவர்களுக்கும், விவசாயிகளுக்கும் நாம் செய்துள்ள நன்மைகளை கனம் ராஜா ஸாஹிபவர்கள் நன்கு விளக்கியிருக்கிறார்கள். நாம் எதிர் காலத்துச் செய்ய வேண்டிய வேலைகளையும் மகாநாட்டுத் தலைவர் ராவ்சாஹிப் பொன்னையா கவுண்டரவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். தேச மக்கள் நமக்குப் போதிய அளவுக்கு ஆதரவளித்து நமது கட்சியாரைப் பெரும்பான்மையாகச் சட்டசபைக்கு அனுப்பினால்? திருச்செங்கோட்டு மகாநாட்டுத் தலைவர் குறிப்பிட்டிருக்கும் வேலைகளை நமது கட்சியாருக்குச் செய்ய முடியும். தற்காலத் தென்னாட்டு நிலைமையை உற்று நோக்கினால் நமது கட்சியின் பெருமையை இப்பொழுது தேச மகா ஜனங்கள் அறியத் தொடங்கி விட்டார்கள் என்று நிச்சயமாகக் கூறலாம். மேலைக் கோதாவரி, குண்டூர், வேலூர், திருச்சி முதலிய இடங்களில் நடைபெற்ற உப தேர்தல்களே அதற்கு அத்தாட்சி. காங்கரஸ்காரர் செய்த விஷமப் பிரசாரத்தினால் அசம்பிளித் தேர்தலில் நமக்குப் பெருந் தோல்வி ஏற்பட்டது. தற்பொழுது நாம் செய்து வரும் பிரசாரத்தினால் உண்மை நிலையை தேச மக்கள் உணர்ந்து வருகிறார்கள். அசம்பிளித் தேர்தலில் சென்னையில் முழுத் தோல்வியடைந்த நாம் நகரசபைத் தேர்தலில் 14 ஸ்தானங்களைக் கைப்பற்றி யிருப்பது பெரிய காரியமல்லவா? சுமார் இரண்டு வருஷ காலத்தில் சென்னை வாசிகள் மனத்தில் எவ்வளவு மாற்ற மேற்பட்டிருக்கிறது பாருங்கள். இற்றைக்கும், பொதுத் தேர்தலுக்கும் இடையிலுள்ள காலத்தை நாம் போதுமான அளவுக்குப் பிரயோஜனப்படுத்திக் கொண்டால், வரப்போகும் பொதுத் தேர்தலில் நமக்குப் பூரண வெற்றி ஏற்படுவது நிச்சயம். விரைவில் "விடுதலை" தினசரியாகிவிடும். மத்திய பிரசாரக் கமிட்டியாரும் இனித் தீவிரமாகப் பிரசாரம் செய்யத் தொடங்குவார்கள். "விடுதலை"யை கிராமங்கள் தோறும் பரப்ப நம்மவர்கள் முன் வரவேண்டும். ஒவ்வொரு தமிழன் கையிலும் ஒவ்வொரு பிரதி 'விடுதலை' இருந்து தீர வேண்டும். நமது பிரசாரகர்களின் போர் முழக்கம் கிராமங்கள் தோறும் கேட்க வேண்டும். இந் நிலைமை ஏற்படத் தமிழர்கள் எல்லாம் உதவி புரிவார்களாயின் நமக்கு வெற்றி நிச்சயம்! நிச்சயம்!! நிச்சயம்!!!

ஜவஹர் கருணை

அகில இந்திய அபேதவாதிகள் நிருவாகக் கமிட்டிக் கூட்டத்தில் பங்கு கொள்ளும் பொருட்டு அலகாபாதுக்குச் சென்றிருக்கும் அபேதவாதிகள், அலகாபாதில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தினார்கள். அப்பொழுது காங்கரஸ் லக்ஷியத்தையும், அபேதவாதிகள் லக்ஷியத்தையும் ஒப்பிட்டு, இந்தியா சுதந்தரம் பெறுவதோடு காங்கரஸ் லக்ஷியம் கைகூடி விடுமென்றும், ஆனால், சமூக, பொருளாதார விடுதலை பெற்ற பிறகே அபேதவாதிகள் லக்ஷியம் கை கூடுமென்றும் அபேதவாதிகள் பேசினார்களாம். அகில இந்திய காங்கரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் பேசுகையில், அபேதவாதிகள் தமது கொள்கைகளை விளக்கிப் பேசுகையில் காங்கரஸையோ, இதர கட்சிகளையோ தாக்கிப் பேசக்கூடாதென்றும் மற்றக் கட்சிகளுக்கும் இயங்க உரிமை யுண்டென்றும் கூறினாராம். தென்னாட்டுச் சுற்றுப் பிரயாண காலத்தில் ஜஸ்டிஸ் கட்சி ஒழியுமட்டும் நான் போராடுவேன்; ஜஸ்டிஸ் கட்சியை ஒழித்தே தீருவேன் என வீரம் பேசிய ஜவஹர்லாலுக்கு இப்பொழுது மனமாற்றம் மேற்பட்டிருப்பதற்குக் காரணம் என்னவோ தெரியவில்லை. காங்கரஸை அபேதவாதிகள் கண்டித்தது அவருக்குப் பிடிக்காததனால் அவர் அவ்வாறு கூறினாரா? அல்லது இதர கட்சிகளின் மீதும் அவருக்குக் கருணைபிறந்து விட்டதா? காங்கரஸ் ஒன்றுதான் வாழவேண்டும், இதர கட்சிகள் எல்லாம் ஒழியவேண்டும் என்று கூறுவோர் அரசியல் ஞானமே இல்லாத அடிமுட்டாள்களாவர். பல திறப்பட்ட கட்சிகள் இருந்தால்தான் தேசம் நலம் பெறும். ஒரு கட்சியே இருக்க வேண்டுமென்று கூறுவது ஒருமாதிரி "பாசிஸ்டு" நியாயமாகும். காங்கரஸ் இப்பொழுது 'பாசிஸ்டு' இயக்கமாகவே உருமாறி வருகிறது. வரப்போகும் தேர்தலில் காங்கரஸ்காரர் 'பாசிஸ்டு' முறைகளையே பின்பற்றப் போகிறார்கள். அபேதவாதிகள் காங்கரஸைத் தாக்கிப் பேசியதை, தாங்க முடியாத ஜவஹர்லால் மற்றக் கட்சிகளை அனாவசியமாகவும் அற்பத்தனமாகவும் தாக்கிப் பேசுவது என்ன நீதியோ தெரியவில்லை. அலகாபாத் கூட்டத்தில் இதர கட்சியாருக்கும் இயங்க உரிமை யுண்டென்று ஒப்புக்கொண்ட பண்டித ஜவஹர்லால் அவ்வபிப்பிராயத்தை உறுதியுடன் கடைப்பிடித்து இனிமேலாவது ஒழுகுவாரா?

"தங்கு தடையின்றி தலை நகரை அடைவோம்"

கலகத் துருப்பு அதிகாரிகள் செய்தி

சர்க்கார் துருப்புகள் கட்டுப்பாடு குலைந்தது

லிஸ்பன், நவ, 3

கலகத் துருப்புகள் தலை நகரை நோக்கி துரிதமாக முன்னேறி வருகின்றன. மாட்ரிட்டிற்கு 10 மைல் தூரத்திலுள்ள விலாவிஸியோசாவைக் கைப்பற்றி விட்டனர். தலைநகர்மீது இரண்டு தடவை விமானங்களிலிருந்து வெடி குண்டுகளை கலகத் துருப்புகள் வீசியதன் பயனாக 3 குழந்தைகள் உள்பட 8 பேர் மாண்டனர். மாட்ரிட்டிற்கு அருகிலுள்ள பல முக்கிய இடங்களையும் கைப்பற்றி விட்டனர். தாங்கள் கைப்பற்றியுள்ள இடங்களிலெல்லாம் முன் ஜாக்கிரதையாக பெரிய பெரிய பீரங்கிகளை நிறுத்தியிருக்கின்றனர். சர்க்கார் துருப்புகளின் கட்டுப்பாடு குலைந்து விட்டதாகவும், மாட்ரிட்டிற்குச் செல்லும் முக்கிய பாதையிலுள்ள ஜிடாபியை நாளைய தினத்திற்குள் பிடித்து விடக் கூடுமென்றும், அதன்பின் மாட்ரிட்டிற்கு யாதொரு தங்கு தடையுமின்றிச் செல்லக் கூடுமென்றும் கலகத் துருப்பு அதிகாரிகள் கூறுகின்றனர்.

சென்னை நகர சபை

ஸ்பெஷல் மெம்பர்கள் நியமனம்

சென்னை, நவ, 2

சானிட்டரி இஞ்சினியர் திரு. ஜி. வி. ராவும், ஸ்ரீமதி வி. ரசிங்க சின்னப்பாவும் சென்னை நகர சபைக்கு ஸ்பெஷல் மெம்பர்களாக சர்க்காரால் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஆர். டான் நியமனம்

சென்னை நகர சபைக்கு மூன்றாவது விசேஷ அங்கத்தினராக, நகர நிர்மாண நிபுணர் திரு. ஆர். டான் சர்க்காரால் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

பெடரல் கோர்ட்

1937 அக்டோபர் முதல்தேதி ஸ்தாபிதம்

பிரதம நீதிபதிக்கு மாதம் ரூ. 7000

சென்னை இராணுவ காரியதரிசிக்கு 1,12,000

புதுடில்லி, நவ, 3

பார்லிமெண்டுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் உத்திரவுகள் வெளியிடப்பட்டிருக்கிறது:— 1937 அக்டோபர் முதல் தேதி பெடரல் கோர்ட் ஸ்தாபிதமாகும். ஆறுபேருக்கு மேற்படாமல் அதில் நீதிபதிகளிருப்பார்கள். பிரதம நீதிபதிக்கு வேலைக் காலத்தில் ரூ. 7000 மாதச் சம்பளம் தரப்படும். மற்ற நீதிபதிகளுக்கு வேலைக் காலத்தில் ரூ. 5500 தரப்படும். 65 வயது வரையில் மேற்படி நீதிபதிகள் வேலை பார்க்கலாம். பிரதம நீதிபதிக்கு வேலையிலிருந்து விலகிய பின்பு வருஷம் 2000 பவுன் பென்ஷன் தரப்படும். வேலையிலிருந்துவரும் காலத்தில் பிரதம நீதிபதி இறப்பாரானால் அவருடைய வாரசுகளுக்கு 3000 பவுன் தரப்படும்.

கவர்னர்களுக்கு அலவன்ஸ்

ரஜாவில் செல்லும் காலத்தில், சென்னை, வங்காளம், பம்பாய், ஐக்கிய மாகாணம், பாஞ்சாலம், பீகார் கவர்னர்களுக்கு மாதம் ரூ. 4000 அலவன்ஸ் தரப்படும். மத்திய மாகாணம், பீரார் கவர்னர்களுக்கு 3000 ரூபாயும், இதர மாகாண கவர்னர்களுக்கு 2750 ரூபாயும் மாதம் தரப்படும். சில விசேஷ காரணங்களை முன்னிட்டு இந்த அலவன்சை இந்தியா மந்திரி 5500 ரூபா வரையிலும் அதிகரிக்கலாம், கவர்னர் அல்லது அவர் குடும்பத்தார் உபயோகிக்கும் சாமான் துணி வகையறாக்களுக்கு இந்தியாவில் தீர்வை விதிக்கப்படாது.

சர்க்கார் காரியாலயங்களை புதுப்பிக்கவும், சாமான்கள் வாங்கிப் போடவும் வருஷா வருஷம் பின்கண்ட தொகைகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன:— சென்னை ரூ. 14,000; பம்பாய் ரூ. 23,000 வங்காளம் ரூ. 20,500; ஐக்கிய மாகாணம் ரூ. 4000; பாஞ்சாலம் ரூ. 3000; பீகார் ரூ. 4500; மத்திய மாகாணம்; பீரார் ரூ. 2900; வடமேற்கு எல்லைப்புற மாகாணம் ரூ. 1750; ஒரிஸா ரூ. 2500: சிந்து ரூ. 1000.

கீழ்க்கண்ட விஷயங்களுக்காக வருஷா வருஷம் அனுமதிக்கப்படும் அதிகப்படியான தொகை பின் வருமாறு:—

இராணுவ காரியதரிசி அவரது சிப்பந்திகள்

சென்னை ரூ. 112000; பம்பாய் ரூ. 136000; வங்காளம் ரூ. 121000 ஐக்கிய மாகாணம் ரூ. 11 60,00; பாஞ்சாலம் ரூ. 88000; பீகார் ரூ 75000; மத்திய மாகாணம், பீரார் ரூ. 61000; அஸ்ஸாம் ரூ. 63000; வடமேற்கு எல்லைப்புற மாகாணம் ரூ. 68000; சிந்து ரூ. 59000; ஒரிஸா ரூ. 40000.

[illegible] பாண்டு

சென்னை ரூ. 36000; பம்பாய் ரூ. 33600; வங்காளம் ரூ. 50000.

மெய்க்காவலர்

சென்னை ரூ. 126000; பம்பாய் ரூ. 78000; வங்காளம் ரூ. 100000.

சர்ஜன் அவரது சிப்பந்திகள்

சென்னை ரூ. 36000; பம்பாய் ரூ. 33600; வங்காளம் ரூ. 34,800.

சுற்றுப் பிரயாணச் செலவுகள்

சென்னை ரூ. 113000; பம்பாய் ரூ 65000; வங்காளம் ரூ. 122000; ஐக்கிய மாகாணம் ரூ. 125000; பீகார் ரூ. 60000; மத்திய மாகாணம் ரூ. 26000; அஸ்ஸாம் ரூ. 55000; வடமேற்கு எல்லைப்புற மாகாணம் ரூ. 18000; சிந்து ரூ. 30000; ஒரிஸா ரூ. 35000.

மற்றும் பல செலவுகளுக்கும் தொகைகள் அனுமதிக்கப் பட்டிருக்கின்றன.

சென்னைச் சீர்திருத்த அசம்பிளி

வரப்போகும் தேர்தல்

ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகர்கள்

சென்னை, நவ, 2

திவான் பகதூர் டாக்டர் ஸி. நடேச முதலியார் எழுதுவதாவது:—

வரப்போகும் தேர்தலில் சென்னை அசம்பிளிக்கு சென்னை நகரசபை 24 முதல் 30 வரையுள்ள டிவிஷன் தொகுதிக்கு ஜஸ்டிஸ் கட்சி சார்பாக நான் ஒரு அபேட்சகராக நிற்க நிச்சயித்திருக்கிறேன்.

எட்டியாபுரம் ராஜா அபேட்சை

எட்டியாபுரம், நவ, 1

எட்டியாபுரம் ராஜா ஸாஹிபவர்கள் எழுதுவதாவது:—

நான் சென்னை லெஜிஸ்லேடிவ் அசெம்பிளிக்கு புதுச் சீர்திருத்தச் சட்டப்படி 1937 பிப்ரவரி மாதத்தில் நடக்கப் போகும் தேர்தலுக்குகோவில்பட்டி சங்கரான் கோவில் குரூப் மஹம்மதியரல்லாத பொதுத் தொகுதிக்கு ஜஸ்டிஸ் கட்சி சார்பில் அபேட்சகராக நிற்கிறேன்.

திரு. பி. சிவபிச்சை அபேட்சை

திருச்சி, நவ, 3

திரு. என். ஆரோக்கியசாமி எழுதுவதாவது:—

ஜஸ்டிஸ் கட்சி பிரபலஸ்தர்களில் ஒருவரும் தாழ்த்தப் பட்டோரின் க்ஷேமமே தனது க்ஷேமமாகக் கொண்டு சேவை செய்து வருபவருமான திரு. பி. சிவபிச்சை அவர்கள் 1937-ம் வருஷம் பிப்ரவரி மாதம் நடக்கப் போகும் அஸம்பிளித் தேர்தலில் தாழ்த்தப்பட்டோர் தொகுதிக்கு ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக நிற்கத் தீர்மானித்திருக்கிறார். அவருக்குப் பலமான ஆதரவிருக்கிறது. போட்டியும் ஏற்படாதெனத் தெரிகிறது.

ஆங்கிலோ இந்தியர் தொகுதி

ஸ்ரீமதி எம். நூனன் ஆஞ்சிலோ எழுதுவதாவது:—

சென்னை அசம்பிளிக்கு ஆங்கிலோ இந்தியர் தொகுதியில் நான் ஒரு அபேட்சகராக நிற்க முடிவு செய்திருக்கிறேன்.

ராஜாங்க சபைத் தேர்தல்

டிசம்பர் 14-ந் தேதி நடைபெறும்

சென்னை, அக், 31

1936-ம் ளு டிசம்பர் 22-ம் உக்குள் ராஜாங்க சபைக்கு தேர்தல் நடக்க வேண்டுமென்று வைஸ்ராய் தீர்மானித்திருப்பதால் சென்னை சர்க்கார் சென்னை மாகாணத் தொகுதிகளில் தேர்தல் நடப்பதற்கு பின்கண்ட தேதிகளைக் குறிப்பிட்டு வெளியிட்டிருக்கின்றனர்.

நவம்பர் 9-ந் தேதி, அபேட்சகர்கள் நியமனம்.

நவம்பர் 11-ந் தேதி, நியமனச் சீட்டுகள் பரிசீலனை.

டிசம்பர் 14-ந் தேதி, ஓட்டுக் கொடுப்பது.

திருச்செங்கோடு "ஜஸ்டிஸ்" மகாநாடு

அரசியல் நிராகரிப்பு முட்டாள் பேச்சு

அழிவு வேலைக்காரருக்கு சட்டசபையில் என்ன வேலை?

ஸ்தல ஸ்தாபன நிருவாகம் நடத்த முடியாதவர்களா மாகாண நிருவாகம் நடத்தப் போகிறார்கள்?

காங்கரஸ்காரர் பேச்சு சுத்த "ஹம்பக்"

தேச மக்களே! உஷார்! உஷார்!! உஷார்!!!

கனம் பொப்பிலி ராஜா எச்சரிக்கை

காங்கரஸ் தேர்தல் அறிக்கை அபத்தப் பஞ்சாங்கம். அறிக்கையின் ஒரு பகுதியில் கராச்சித் தீர்மானங்களை நிறைவேற்றி வைக்கப் போவதாகக் கூறப்பட்டிருக்கிறது. மற்றொரு பகுதியில் காங்கரஸ்காரர் மந்திரி பதவி ஏற்க மாட்டார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. மந்திரி பதவி ஏற்காமல் கராச்சித் தீர்மானங்களை எவ்வாறு நிறைவேற்றி வைக்க முடியும்?

ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தை ஒழுங்காக நடத்த முடியாத சமர்த்தர்களா மாகாண நிர்வாகத்தை திறமையாக நடத்தி வைக்கப் போகிறார்கள்?

ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றி சுவர்க்கமாக்கப் போவதாகக் கூறினார்கள். மற்றும் அதிகாரமுள்ள இடங்களை யெல்லாம் கைப்பற்றி காங்கரஸை வலுப்படுத்தப் போவதாகவும் கூறினார்கள். ஆனால், ஸ்தல ஸ்தாபனங்கள் சுவர்க்கமாகவுமில்லை; காங்கரஸ் வலுப்படுத்தப்படவுமில்லை. மாறாக, காங்கரசில் பிளவுகளே மிகுந்து வருகின்றன. எனவே, ஜில்லா போர்டுகளையே 'ஒழித்துவிட வேண்டு'மென்று இப்பொழுது சத்தியமூர்த்தி கம்பெனியார் கூறத் தொடங்கி யிருக்கிறார்கள்.

திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் போன்ற இந்த ஜில்லா, வெளி ஜில்லாத் தலைவர்கள் உதவியினால் அடுத்த தேர்தலில் அதிகப்படியான மெம்பர்களைச் சட்டசபைக்கு அனுப்பி, ஜஸ்டிஸ் கட்சி உயிரோடிருக்கிறது, அது சுறுசுறுப்பாகவுமிருக்கிறது என இந்த ஜில்லா, நிரூபித்துக் காட்டும் என நான் பூரணமாக நம்புகிறேன்.

—கனம் பொப்பிலி ராஜா.

திருச்செங்கோடு, நவ, 1

திருச்செங்கோடு ஜஸ்டிஸ் கட்சி மகா நாட்டைத் திறந்து வைத்த போது, சென்னை முதன் மந்திரி கனம் பொப்பிலி ராஜா சாஹிபவர்கள் பேசியதாவது:—

முதன் முதலாக, இம்மகா நாட்டைத் திறந்து வைக்கும் கௌரவத்தை எனக் களித்ததற்காக மகா நாட்டு நிர்வாகிகளுக்கு நன்றி செலுத்துகிறேன்.

அத்துடன் வாக்காளர்களை நேரில் சந்திப்பதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் அளித்ததற்காக திவான்பகதூர் எல்லப்ப செட்டியாரவர்களையும், திரு. போக்கையும் பாராட்டுகிறேன்.

நமது நாட்டுக்கும், நமது கட்சிக்கு மன்றி உலகம் முழுமைக்குமே ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில், நாம் இங்கு கூடியிருக்கிறோம். ஐரோப்பாவிலே ஜனநாயக அரசாங்கங்கள் கவிழ்ந்து வீழ்ந்து சர்வாதிகாரி அரசாங்கங்கள் தோன்றி வருகின்றன. கடந்த உலகப் பெரும் போர், சுய நிர்ணயப் போர் என்றும் போரை ஒழிக்கும் பெரிய போர் என்றும் சொல்லப்பட்டது.

ஆனால், இன்று நாம் மேல் நாடுகளில் காண்பதென்ன? மேலும், ஒரு உலகப் பெரும் போர் தொடுக்க எல்லாத் தேசங்களும் அவசரம் அவசரமாகப் போர்க்கருவிகளை சேகரம் செய்கின்றன. விஞ்ஞான அறிவுகளையெல்லாம், நகரங்களையும், பட்டணங்களையும் பாழாக்கக் கூடிய போர்க் கருவிகளைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் பிரயோகம் செய்து வருகிறார்கள். மேற்கொண்டு உண்டாகப் போகும் ஒரு பெரும் போரில் மேனாட்டு நாகரிகமே அழிந்து போகப் போவதாக அறிவாளிகளும் கூறத்தொடங்கி யிருக்கிறார்கள். ஆகவே, உலக சரித்திரத்திலேயே மிகவும் நெருக்கடியான காலம் இது.

சீர்திருத்த அரசியல் [illegible]

நமது நாட்டிலோ மகத்தான அரசியல் மாறுதல்கள் உண்டாகப் போகின்றன. 1937 ஏப்ரில் 1-ந் தேதி சீர்திருத்த அரசியல் அமலுக்கு வரப்போகிறது. அதன் மூலம் மாகாணங்களுக்குப் பூரண சுய ஆட்சி கிடைக்கப் போகிறது.

மாகாணங்களைப் பொறுத்தவரை, இனி மேல் எல்லா இலாகாக்களும் இந்திய மந்திரிகள் அதிகாரத்திலே இருந்து வரும். தற்பொழுது மாகாண சர்க்கார்கள் மீது மத்திய சர்க்காருக்கு இருந்து வரும் மேல் அதிகாரங்களும் கூட 1937 ஏப்ரில் 1-ந் தேதி முதல் நீங்கி விடும். தற்கால அரசியலை ஜஸ்டிஸ் கட்சியார் ஒப்புக்கொண்டு சாத்தியமான வரை தங்கள் கடமைகளைச் செவ்வையாக நடத்தி வந்திருப்பதினால் வரப்போகும் சீர்திருத்தத்தை எந்த அமிசங்களில் விருத்தி செய்யலாமென அறிய வசதியும், ஆற்றலுமுடையவர்களா யிருக்கிறார்கள்.

வரப்போகும் சீர்திருத்தம் குறைபாடுகள் உடையதாயிருந்தாலும், அதை சாத்தியமான வரை தேச மக்களுக்கு நன்மை யுண்டாகும்படி அமல் நடத்த வேண்டியது சட்ட வரம்புக்குட் பட்டொழுகும் ஒரு கட்சியான ஜஸ்டிஸ் கட்சியின் நீங்காக் கடமையாகும்.

மத்திய சர்க்காரில் பூரண பொறுப்பாட்சி இல்லை. கொஞ்ச காலத்துக்கு இராணுவமும், வெளி நாட்டு இலாகாவும் ஒதுக்கப்பட்ட இலாகாக்களாகவே இருந்து வரும். மத்திய சர்க்காரைப் பொறுத்த வரையில் 1937 ஏப்ரில் 1-ந் தேதி முதல் நமக்கு குடியேற்ற நாட்டு அந்தஸ்துக் கிடைக்கும் என்று நான் கூறவில்லை. மாகாணங்களைப் பொறுத்தவரையில் பூரண பொறுப்பாட்சி கிடைக்கப் போவது உறுதி. மத்திய சர்க்காரில் நமக்கு கிடைக்கப் போவது ஒரு மாதிரி இரட்டையாட்சியே. தற்பொழுது ஆலோசனையி லிருந்துவரும் அகில இந்திய சமஷ்டி அரசியலே, சமஸ்தானங்கள் உட்பட ஒரு இந்திய சாம்ராஜ்யம் உருப்படுத்த ஏற்ற கருவியென்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

மாகாணங்களைப் பொறுத்த வரை வரப்போகும் சீர்திருத்தம் குடியேற்ற நாட்டு அந்தஸ்துக்கு முதற்படியாகும். ஆகவே, நமது கட்சி ஸ்தாபகர்களின் கொள்கையைக் கடைப்பிடித்து நடக்க வேண்டியது நம்மவர்களின் நீங்காக் கடமையாகும். அதுவுமன்றி, இந்தச் சந்தர்ப்பத்தில் மதி மயங்காமல் நமது கட்சிக் கொள்கைப்படி நடக்க வேண்டியது மிகவும் முக்கியமாகும்!

காங்கரஸ் வேலைத் திட்டம்

காங்கரஸ் கொள்கையையும், வேலைத் திட்டத்தையும் பற்றி இந்தச் சந்தர்ப்பத்தில் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஒத்துழையாமையினாலும், சட்டமறுப்பினாலும், பள்ளிக்கூடங்கள், கோர்ட்டுகளை பகிஷ்கரிப்பதினாலும் மட்டுமே நாடு விடுதலையடையுமென 1920 முதலே காங்கரஸ்காரர் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். கடைசியாகத் தமது தவறுதல்களை யுணர்ந்து இப்பொழுது சட்ட சபைகளைக் கைப்பற்ற அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

சட்ட மறுப்பு, பகிஷ்காரப் புரளி செய்து கொண்டு நாடு மேடெல்லாம் சுற்றி அலைந்த காங்கரஸ்காரர்கள் கடைசியில் சட்டசபைக்குட் புக முடிவு செய்திருப்பதினாலே, நமது கொள்கையே சரியானதென்பது ருசுவாகி விட்டது.

ஆனாலும், அவர்கள் பழைய பல்லவியையே பாடிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் தேர்தல் அறிக்கை ஏமாற்றத்துக்கு இடமானதாயிருக்கிறது. மந்திரி பதவிகளை ஒப்புக்கொள்ளும் விஷயத்தில காங்கரஸ் கட்சியாருக்கு அவ்வறிக்கை வழிகாட்டவே இல்லை. அவ்வறிக்கையில் மூன்று விஷயங்களை முக்கியமாக முனைந்து நிற்கின்றன. ஒன்று சீர்திருத்தத்தை நிராகரிப்பதும் சட்டசபையில் முட்டுக்கட்டை போடுவதும். மற்றொன்று சட்ட சபையில் இருந்துகொண்டே சர்க்காரோடு போராடுவது. சட்ட வரம்புக் குட்பட்ட வேலைமுறையில காங்கரஸ்காரர்களுக்கு நம்பிக்கையில்லையானால் சட்ட சபைகளில் அவர்களுக்கு என்ன வேலை?

சத்தியமூர்த்தி [illegible]

கொஞ்ச நாட்களுக்குமுன் திரு. சத்தியமூர்த்தி நிகழ்த்திய ஒரு பிரசங்கத்திலே, அதிகார பதவிகளை யெல்லாம் கைப்பற்றி, சர்க்காரோடு போர் தொடுக்கப் போவதாகச் சொன்னார். ஆனால் வரப்போகும் சீர் திருத்தத்திலே அதிகார பதவிகளைக் கைப்பற்றுவோரே சர்க்காரை நடத்துபவர்களாயிருப்பார்கள். ஆகவே, அதிகார பதவிகளைக் கைப்பற்றி சர்க்காரை நடத்துகிறவர்கள் யாரோடு போர் தொடுக்கப் போகிறார்களோ தெரியவில்லை.

மற்றும், முட்டுக்கட்டை போடுவதும் சாத்தியமல்ல. சீர்திருத்தத்தை தகர்ப்போம், தேசியக் கடனை மறுப்போம் என்றெல்லாம் காங்கரஸ்காரர் பொறுப்பின்றிக் கூச்சல் போட்டதினால், அரசியலை காப்பாற்ற, வரப்போகும் சீர்திருத்தச் சட்டத்தில் ஏராளமான பாதுகாப்புகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

வரப்போகும் அரசியலில் மந்திரி பதவி ஏறும் கட்சியார் தமது அதிகாரங்களை அரசியலை உடைக்க உபயோகப் படுத்தினால் அதனால் பேராபத்து உண்டாவது உறுதி. எனினும், அரசியலை உடைப்போம் முட்டுக்கட்டை போடுவோம் என்றெல்லாம் உளறிக்கொட்டி காங்கரஸ்காரர் தேச மகாஜனங்களை ஏமாற்றி இருக்கிறார்கள்.

அம்மாதிரிப் பேச்சினால் நாட்டுக்கும், மக்களுக்கும் எவ்வளவு தீமை யுண்டாகு மென்பதை நீங்கள் யோசித்துப் பாருங்கள். எதிர்கால சர்க்கார் தேசோத்தாரண இலாகாக்களில் முட்டுக்கட்டை போடும் பொருட்டு தேசப் பாதுகாப்பு வழிகளை திறந்து விட்டால், நாட்டில் எவ்வளவு குழப்ப முண்டாகக் கூடுமென்று எண்ணிப்பாருங்கள். சீர்திருத்தத்தை நிராகரிப்பது பைத்தியக்காரப் பேச்சு. அதை விளக்குவதற்காகவே நான் இவ்வளவும் கூறினேன்.

காங்கரஸ் தேர்தல் பிரசாரம்

இந்த மாகாணத்தைப் பொறுத்த வரையில் மந்திரி பதவி விஷயத்தில் காங்கரஸ்காரர் நோக்கம் என்ன என்பது எனக்குத் தெரியும். மந்திரி பதவி விஷயத்தில் இப்பொழுது ஒரு முடிவு செய்தால் காங்கரஸ்காரர்களுக்குள்ளேயே பிளவு ஏற்பட்டு விடும். மற்றும், தேர்தல் முடிவைப் பற்றியும் அவர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டே இருக்கிறது. அதனாலேயே மந்திரி பதவி ஏற்கும் விஷயத்தில் ஒரு முடிவும் செய்யாமலிருக்கிறார்கள்.

தேர்தல் அறிக்கையின் ஒரு பகுதியில் கராசித் தீர்மானங்களை காங்கரஸ்காரர் நிறைவேற்றி வைப்பார்கள் எனக் கூறப்பட்டிருக்கிறது. மற்றொரு பகுதியில் காங்கரஸ்காரர் மந்திரி பதவி ஏற்கமாட்டார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால், மந்திரி பதவி ஏற்காமல் கராசித் தீர்மானங்களை அவர்கள் எவ்வாறு நிறைவேற்றி வைக்கப் போகிறார்கள் என்பதுதான் விளங்கவில்லை.

நமது மாகாணத்தில் காங்கரஸ்காரர் கைப்பற்றிய ஸ்தல ஸ்தாபன நிர்வாக அழகைப் பார்த்தால், அவர்கள் மந்திரி பதவி ஒப்புக்கொண்டால் என்ன சாதிப்பார்கள் என்பதை நிர்ணயம் செய்துவிடலாம். கேவலம் ஸ்தல ஸ்தாபனங்களைச் சரியாக நடத்த ஆற்றலில்லாதவர்களா தேச நிருவாகத்தை சமத்தாக நடத்திவிடப் போகிறார்கள்?

காங்கரஸ்காரர் ஆதிக்கம் பெற்ற ஜில்லா போர்டுகளிலும், நகர சபைகளிலும் வாக்காளர் விருப்பங்களுக்கு மாறாக அவர்கள் நடந்து வந்திருப்பதையும், காங்கரஸ் காரியக் கமிட்டி ஆர்டர்படி அவர்கள் காரியங்கள் நடந்து வருவதையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

ஜில்லா போர்டுகளில் வாக்காளர் கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கவும் காங்கரஸ்காரர்களால் முடியவில்லை; ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றியது மூலம் காங்கரஸை பலப்படுத்தவும் அவர்களால் முடியவில்லை. ஆகவே, ஜில்லா போர்டுகளையே ஒழித்துவிட வேண்டுமென்று சத்தியமூர்த்தி கம்பெனியார் கூச்சல் போடத் தொடங்கிவிட்டார்கள். தாம் செய்யப் போவதை விளக்கிக் கூறாமல் வாக்காளரிடம் வோட்டுக் கேட்கும் மூடத்தனத்தை ஜனநாயக ஆட்சி நடைபெறும் எந்த நாட்டிலும் பார்க்கமுடியாது. இம்மாதிரி தந்திரம் செய்து வாக்காளர்களை ஏமாற்றிவிடலாமென்று காங்கரஸ்காரர் மனப்பால் குடிக்கிறார்கள். ஆனால் நமது மாகாண ஜனங்கள் இயல்பாகவே புத்திசாலிகள். சமாதான முறையில் நிருவாகம் நடத்தி சுயராஜ்யத்துக்கு அடிகோலும் புத்திசாலிகளையே அவர்கள் சட்ட சபைகளுக்கு அனுப்புவார்கள். ஆக்கவேலை செய்தறியாத அழிவு வேலைக்காரரை அவர்கள் சட்டசபைகளுக்கு அனுப்பவே மாட்டார்கள்.

ஜஸ்டிஸ் கட்சியும் ஒடுக்கப்பட்டோர்களும்

இனி நமது கட்சிக் கொள்கைகளை கவனிப்போம். அரசியலிலும், சமூக இயலிலும் எல்லாருக்கும் சம நீதி வழங்குவதே நமது கட்சியின் லக்ஷ்யம். ஒடுக்கப்பட்டோர் முன்னேற்றம் நமது வேலைத் திட்டத்தில் முக்கியமானது. பொது ஸ்தாபனங்களில் ஒடுக்கப்பட்டவர்கள் பிரதிநிதித்துவம் பெற்றிருப்பதற்கும், உயர்ந்த ஜாதியாருக்கு சமமாக வீற்றிருப்பதற்கும் ஜஸ்டிஸ் கட்சியே காரணம்.

பொதுப் பணம் செலவு செய்து பராமரிக்கப்படும் குளங்கள், கிணறுகள், ஏரிகள் முதலியவைகளை எல்லாரும் ஜாதி வித்தியாசமின்றி உபயோகித்துக் கொள்ளுமாறு நாம் சட்டங்கள் இயற்றியிருக்கிறோம். சர்க்கார் புறம்போக்கிலும், சர்க்கார் விலைக்கு வாங்கிய இடங்களிலும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு 20,000 வீடுகள் கட்ட இடவசதி யளித்திருக்கிறோம். ஒடுக்கப்பட்டவர்களின் தனி உபயோகத்துக்காக சுமார் 20 லக்ஷம் ரூபாய் செலவு செய்து 3000 கிணறுகள் வெட்டிக் கொடுத்திருக்கிறோம். தற்காலம் பண நெருக்கடி ஏற்பட்டிருப்பதினால் ஒடுக்கப்பட்டவர்களுக்கென வீடுகள் கட்ட இடம் வாங்கும் செலவில் பாதியை பொதுப் பணத்திலிருந்து வழங்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். சர்க்கார் பள்ளிக்கூடங்களிலும், ஸ்தல ஸ்தாபனப் பள்ளிக்கூடங்களிலும் உதவிச் சம்பளமுதலிய விஷயங்களில் சாத்தியமான உதவிகளையும் வசதிகளையும் நாம் செய்து கொடுத்திருக்கிறோம். நாம் ஒடுக்கப்பட்டவர்களுக்காக இவ்வளவெல்லாம் செய்த பிறகு தான், ஹரிஜன முன்னேற்றத்துக்காக பாடுபட காங்கரஸ்காரர் இப்பொழுது முன் வந்திருக்கிறார்கள்.

இனாம் மசோதா

எனக்குக் கிடைத்திருக்கும் சொற்ப காலத்துக்குள், நமது கட்சி சாதித்துள்ள காரியங்களை யெல்லாம் விளக்கிக் கூறுவது சாத்தியமல்ல. ஆனால், இனாம் சட்டத்தை வைஸ்ராய் அங்கீகாரம் செய்ததற்காக என் சொந்த ஹோதாவிலும், இங்கு விஜயம் செய்திருக்கும் உங்கள் பொருட்டும் வைஸ்ராய்க்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதற்காக வைஸ்ராயையும், கவர்னரையும் பாராட்டி நீங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றுவீர்கள் என்றும் நம்புகிறேன்.

இனாம் சட்டத்தைப் பற்றி நான் அதிகமாக எதுவும் கூறத் தேவையில்லை. ஆனால், சென்னை மெயில் சில தப்பான அபிப்பிராயங்களை வெளியிட்டிருப்பதினால் அதைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற நான் விரும்புகிறேன்.

சீர்திருத்தச் சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களில் இனாம் சட்டம் மிகவும் மோசமானது என்று 'மெயில்' கூறுகிறது. இது விஷமத்தனமான அபிப்பிராயமாகும். குடிவாரச் சட்டங்களையும், தேச சட்டங்களையும் அறியாதவர்கள் வாயை மூடிக்கொண்டு இருப்பதே சிலாக்கியமாகும்.

ஆதாரமற்ற குற்றச் சாட்டு

பார்ப்பனர்களுக்குத் தீமை செய்யும் பொருட்டே இனாம் மசோதா கொண்டுவரப்பட்டதாக 'மெயில்' குறும்புத்தனமாகக் கூறுகிறது. சில தேசியப் பத்திரிகைகள் இதை ஒரு தேர்தல் சூழ்ச்சி எனவும் புரளி செய்கின்றன. ஆனால், தேர்தலை முன்னிட்டோ, வகுப்பு துவேஷத்தினாலோ இம் மசோதாவைக் கொண்டுவரவில்லையென நான் சட்ட சபையிலும், வெளியிலும் எத்தனையோ முறை விளக்கிக் கூறியிருக்கிறேன்.

பூர்வ கதை எப்படி யிருந்தாலும் சரி, இப்பொழுது இனாம்தார்களில் பெரும்பாலோர் பார்ப்பனரல்லாதாராகவே இருக்கிறார்கள். மசோதா விவாத காலத்தில் சட்ட சபையில் திரு. டி. சி. ஸ்ரீநிவாசய்யங்காரே இதை ஒப்புக் கொண்டிருக்கிறார். மேலும், தம் கட்சிக்கு ஆதரவு தேடும் பொருட்டு பொது நலங்களை ஆதரிக்கக் கூடிய ஒரு சட்டத்தை ஒரு அரசியல் கட்சி நிறைவேற்றுவது குற்றமு மல்ல. [illegible] தேர்தல் வெற்றியை மட்டும் நாம் முக்கியமாக எண்ணியிருந்தால், இந்த மசோதாவைச் சட்டமாக்கி செல்வாக்குள்ள இனாம்தார்களின் விரோதத்தை சம்பாதிக்க முயன்றிருக்கவே மாட்டோம். எதிர்ப்புகளை மதிக்காமல் 50 லக்ஷம் இனாம் குடிகளுக்கு நன்மை பயக்கக் கூடிய இந்த மசோதாவை நிறைவேற்றி வைக்க நேர்ந்ததைப் பற்றி நாம் மகிழ்ச்சியே அடைகிறோம்.

(இதன் தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

சென்னை நகரசபை

புதிய அங்கத்தினர்களின் காலம்

மேயர், உதவி மேயர் தேர்தல்

சென்னை, நவ, 4

புதிய முனிசிபல் சட்டத்தின் கீழ் நகர சபையின் முதற் கூட்டம் நேற்று மாலை, திரு. அப்துல் ஹமீத்கான் தலைமையின் கீழ் கூடி திரு. ஸ்ரீராமுலு நாயுடுவை மேயராகவும், திரு. எம். பக்தவத்சலத்தை உதவி மேயராகவும் தேர்ந்தெடுத்தது.

டாக்டர் சி. நடேச முதலியார், மேயரைப் பாராட்டிப் பேசுகையில், மேயர் தமது உத்தியோக காலத்தில் கட்சி வித்தியாசம் பாராட்டாமல் நடுநிலைமையுடன் நடந்து கொள்வாரென்றும், கூவம் நதியை சுத்தப்படுத்துவதும், சேரிப் பிரச்சினையும் அடுத்த வருஷம் மேயரின் உத்தியோக காலம் முடிவதற்குள் தீர்க்கப்படுமென்றும் தாம் நம்புவதாகக் கூறினர். மேலும், காங்கரஸ்காரர்கள் இப்பொழுது ராஜ விஸ்வாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டதால் இனிமேல் அவர்களுக்கும், ஜஸ்டிஸ் கட்சியினருக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை எனக் குறிப்பிட்டார். (சிரிப்பு) உதவி மேயர் திரு. எம். பக்தவத்சலத்தையும் பாராட்டிப் பேசினர்.

மற்றும் பல அங்கத்தினர்கள் பாராட்டிப் பேசியபின் பல ஸ்திரந கமிட்டிகளுக்கு பின்கண்ட அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கணக்குக் கமிட்டி:—திருவாளர்கள்: சாமி வெங்கடாசலம் செட்டி, என். ராஜகோபாலன், ராஜமன்னார் செட்டி, என். என். வரதாச்சாரி, ராதாகிருஷ்ண பிள்ளை, டி. வி. எதிராஜுலு செட்டி, வில்லியம்ஸ்.

கல்விக் கமிட்டி:—ஸ்ரீமதி அம்மு சாமிநாதன், திருவாளர்கள்: டி. ஜி. லக்ஷ்மணசாமி முதலியார், எம். பாலசுப்ரமண்ய முதலியார், ஏ. ஆர். வி. ஆச்சார், என். பக்கிரிசாமி பிள்ளை, வேலாயுதம் பிள்ளை, ரெவரண்ட் பிஷ்ஷி.

சுகாதாரக் கமிட்டி:—ஸ்ரீமதி ஆர். வி. சாஸ்திரி, டாக்டர் யூ. கிருஷ்ணராவ், டாக்டர் நியமதுல்லா, டாக்டர் கே. கண்ணப்ப முதலியார், திருவாளர்கள்: பி. என். பாஷ்யம் செட்டி, எம். என். சுப்ரமண்ய ஐயர், ஜி. ஈ. வாக்கர்.

வரி வரவு செலவுக் கமிட்டி,—திருவாளர்கள்: நாராயண தாஸ் கிர்தார் தாஸ், எம். பக்தவத்சலம், எம். தாமோதரம் நாயுடு, கந்தே ரங்கய்ய நாயுடு, அப்துல் ஹமீத்கான், கே. பாஷ்யம், கே. வி. கிருஷ்ணசாமி அய்யர்.

நகர நிர்மாணக் கமிட்டி:—திருவாளர்கள்: கே. சுப்ரமண்யம், ஆர். ஏ. ராஜகோபால் நாயுடு, எம். ராதாகிருஷ்ண பிள்ளை, ஜீ. ராஜமன்னார் செட்டி, என். என். வரதாச்சாரி, மெயின் பிரைஸ், அஜீஸ் முகம்மத் கவுன்.

ஒர்க்ஸ், கமிட்டி:—ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி, திருவாளர்கள்: பி. எம். ஆதிகேசவலு நாயக்கர், விநாயக முதலியார், டி. ஏ. சீனிவாசன், செல்வபதிசெட்டி, சி. சுப்ரமண்யம் செட்டி, என். எம். ஆன்வில்.

வரி அப்பீல்கமிட்டி:—திரு. சத்தியமூர்த்தி, திரு. அப்துல் ஹமீத்கான்

பிறகு ஒவ்வொரு வருஷமும் விலகக் கூடிய அங்கத்தினர்கள் பெயர்கள் சீட்டுக் குலுக்கி அறிவிக்கப் பட்டது.

1937 நவம்பர் முதல் தேதி விலகும் அங்கத்தினர்கள்

1. பார்த்தசாரதி நாயக்கர் (ஜ)
8. எம். என். சுப்ரமணிய ஐயர் (கா)
14. ராதா கிருஷ்ண பிள்ளை (கா)
18. என். பக்கிரிசாமி பிள்ளை (கா)
22. கே. வெங்கடசாமி நாயுடு (ஜ)
23. என். கோபால மேனன் (ஜ)
24. பி. கே. விநாயக முதலியார் (கா)
25. டி. ஜி. லக்ஷ்மணசாமி முதலியார் (கா)
30. டாக்டர் சையத் நியமதுல்லா (கா)
32. டாக்டர் சி. நடேச முதலியார் (ஜ)
34 ஏ. ஆர். வி. ஆச்சார் (கா)
36. கே. சுப்ரமண்யம் (கா)
40. ஜீ. ஜானகிராம செட்டி (ஜ)

தொழிலாளர் தெற்குத் தொகுதி:—என். பார்த்தசாரதி

ஆதிதிராவிடத் தொகுதி:—(18) எச். எம். ஜகன்னாதன்

மேற்கண்ட டிவிஷன்களுக்கு 1937-ல் தேர்தல் நடைபெறும்.

1938 நவம்பர் 1-ந் தேதி விலகும் அங்கத்தினர்கள்

2. என். சங்கரன்
4. எஸ். பி. ஜெயராம் நாடார் (ஜ)
6. அஜீஸ் முகம்மத் கவுன் (ஜ)
9. ஜீ. ராஜமன்னார் செட்டி (கா)
10. கே. ஸ்ரீராமுலு நாயுடு (கா)
12. சாமி வெங்கடாசலம் செட்டி (கா)
16. டி. வி. எதிராஜுலு செட்டி (கா)
17. ஜீ. செல்வபதி செட்டி (கா)
20 எம். தாமோதரம் நாயுடு (கா)
29. ஸ்ரீமதி அம்மு சாமிநாதன் (கா)
33. என். என். வரதாச்சாரி (கா)
35. டி. ஏ. சீனிவாசன் (கா)
37. கே. பாஷ்யம ஐயங்கார் (கா)
38. ஸ்ரீமதி ஆர். வி. சாஸ்திரி (கா)
29. (ஆதிதிராவிடத் தொகுதி) ஜே. சிவஷண்முகம் பிள்ளை.

மேற்படி டிவிஷன்களுக்கு 1938-ல் தேர்தல் நடைபெறும்.

1939 நவம்பர் 1-ந் தேதி விலகும் அங்கத்தினர்கள்

3. ஆல்பர்ட் ஜேசுதாசன்
5. பி. எம். ஆதிகேசவலு நாயக்கர் (கா)
7. டாக்டர் யூ. கிருஷ்ணராவ் (கா)
11. ஸ்ரீ. ரங்கய்ய நாயுடு (கா)
13. எம். பாலசுப்ரமணியம் (கா)
15. பி. எஸ். பாஷ்யம் செட்டி (கா)
19. டி. கே. கண்ணப்ப முதலியார் (கா)
21. டி. ஆர். கோதண்டராம முதலியார் (ஜ)
26. ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி (கா)
27. என். ராஜகோபாலன் (கா)
28. சி. பாசுதேவ்
31. அப்துல் ஹமீத்கான் (கா)
39. எம். பக்தவத்சலம் (கா)

தொழிலாளர் வடக்குத் தொகுதி:—ஆர். ஏ. ராஜகோபால் நாயுடு.

ஆதி திராவிட தொகுதி:—(3) பி. எம். வேலாயுதபாணி.

வெள்ளகோவில் பஞ்சாயத்து போர்டு தேர்தல்

(ஒரு நிருபர்)

வெள்ளகோவில், நவ, 3

சென்ற 27-10-36-ந் தேதி வெள்ளகோவில் கிராம பஞ்சாயத்து போர்டு தேர்தல் பஞ்சாயத்து தேர்தல் ஆபீசர் முன்னிலையில் நடைபெற்றது. இந்தக் கிராமத்திற்கு 15 வார்டுகளுக்கும் 15 மெம்பர்கள் யாதொரு விதமான போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆதிதிராவிட தொகுதிக்கு மாத்திரம் திரு. பெண்ஷன் சிபாய் குருபாதம் அவர்களே ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆதிதிராவிடர்களாக ஏற்கனவே மெம்பராக இருந்த திரு. சின்னக் கருப்பன் அவர்கள் பெயர் யாது காரணத்தினாலோ வோட்டர் லிஸ்டில் சேர்க்கப்படவில்லை.

தலைவர் தேர்தலிலும் பழைய தலைவர் திரு. ஆர். சன்னைய்ய கவுண்டர் அவர்களே போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

ராமச் சந்திரப்பூர் பஞ்சாயத்து போர்டு தேர்தல்

ஜஸ்டிஸ் கட்சிக்கு முழு வெற்றி

காங்கரஸ் அடியோடு தோலைந்தது

(ஒரு நிருபர்)

ராமச் சந்திரப்பூர், அக், 31

ராமச் சந்திரப்பூர் பஞ்சாயத்துப் போர்டின் 14 வார்டுகளுக்கு இம்மாதம் 29-ந் தேதி தேர்தல் நடைபெற்றது. அநேகமாக எல்லா வார்டுகளிலும் ஜஸ்டிஸ் கட்சிக்கும், காங்கரசுக்கும் பலத்த போட்டி இருந்து வந்தது. இருப்பினும் தேர்தலுக்காக நின்ற ஜஸ்டிஸ் அபேட்சகர்கள் 14 பேர்வழிகளில் 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

கீழ்க்கண்ட பேர்வழிகள் பஞ்சாயத்துப் போர்டு அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். அதில் மெஜாரிட்டி ஆட்கள் ஜஸ்டிஸ் கட்சியினர்.

திருவாளர்கள்: 1. வி. கிருஷ்ணராவ் பி. ஏ. (ஜஸ்டிஸ்) 2. என. கல்லண்ணு (ஜஸ்டிஸ்), 3. டி. சலபதிராவ் எல். எம். பி. (ஜஸ்டிஸ்), 4 சி. ராமமூர்த்தி, 5. பி. சூரியநாராயணு (ஜஸ்டிஸ்), 6. எம். சத்திய நாராயண செட்டி, 7. ஜீ. வெங்கண்ணு (ஜஸ்டிஸ்), 8. கே. அபலராஜு, (ஜஸ்டிஸ்), 9. எம். வி. ஜோகி ராஜா (ஜஸ்டிஸ்), 10. அப்துல் வாஹீது (ஜஸ்டிஸ்), 11. ராமண்ணு (ஜஸ்டிஸ்), 12. ஐ. சாமுவேல (ஜஸ்டிஸ்), 12. கே. ஞானையா (ஜஸ்டிஸ்), 14. ஏ. சதிகர் (ஜஸ்டிஸ்).

அய்யம்பேட்டை

பஞ்சாயத்து போர்டு தேர்தல்

(ஒரு நிருபர்)

அய்யம்பேட்டை, நவ. 1

அய்யம்பேட்டை பஞ்சாயத்து போர்டு தேர்தல் 26-10-36-ல் நடந்தது. இதற்கு 16 ஸ்தானங்கள் உள. இதில் முஸ்லீம்களுக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானம் ஒன்று. ஆக 15 வார்டுகள் உண்டு. 15 வார்டுகளில் 3 வார்டுகளில் போட்டியில்லை. எலக்ஷன் நடந்த 12 வார்டுகளில் 11 வார்டுகளுக்கு காங்கரஸ் கட்சியினர் போட்டி போட்டனர். 6 பேர் ஜெயித்தனர். எனவே 16 பேர்களில் 10 பேர் காங்கரஸ் அல்லாத சுயேச்சை வாதிகள் அங்கத்தினர்.

காங்கரஸ்காரர்கள் 6 பேர்

திருவாளர்கள்:— 1. ஜெ. ஆர். ரெங்கசாமி, 2. க.ரெ. சி. திருநாதன் செட்டியார், 3 எ. ராமசாமி பாகவதர், 4. எ. டி. பி. ராமசாமி செட்டியார், 5. கே. விஸ்வநாத அய்யர், 6. (நாதசுரம்) வேணுகோபால பிள்ளை.

சுயேச்சை வாதிகள் 6 பேர்

திருவாளர்கள்:— 1. கி. குப்புசாமி, 2. ரம்சா செங்கனுபது, 3. ஆர். தியாகராஜய்யர், 4 சாமிநாத பூசாரி. 5. எ. என், அஜீஸ் சாஹிப் 6. கோவிந்த ஆச்சாரியார்.

முன்னமே போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட சுயேச்சை வாதிகள் 5 பேர்.

திருவாளர்கள்.—1. மா. கா. அப்துல்லாசா ராவுத்தர், 2. பொ. முகம்மது உசேன், 3. அ. கா. முகம்மது சுல்தான் ராவுத்தர் (ரிசர்வட் சீட்) 4. ரா. கு. நடேசன் செட்டியார். இந்த 16 பேர்களில் 14 பேர் புதிய அங்கத்தினர்கள். பழைய அங்கத்தினர் இருவர்தான். பிராமணர் 2 பேர் தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். திரு. கி. குப்புசாமி அவர்கள் டெம்பரரி பிரசிடெண்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார். தலைவர் தேர்தல் நவம்பர் மாதத்திற்குள் நடக்கும்.

"பம்பாய் காங்கரஸ் மந்திரி சபை"

குஞ்சு பொரிப்பதற்கு முன் என்ன ஆரம்பித்த கதை

4 இந்துக்கள், 2 முஸ்லீம்கள்

ஜனநாயக சுயராஜ்யக் கட்சி மகாநாட்டுத் தலைவர் விளக்கம்

திரு. வல்லபாய் மழுப்பல்

நாசிக், நவ, 2

'காங்கரஸ் சர்வாதிகாரிகள், தங்கள் கட்சியினர் மெஜாரிட்டியாக இருக்கும் மாகாணங்களில் உத்தியோகம் ஏற்க தீர்மானித்து விட்டனர். பம்பாய் மாகாண காங்கரஸ்காரர்கள் 4 இந்துக்களையும். 2 முஸ்லீம்களையும் கொண்ட மந்திரி சபையையும் அமைக்க தீர்மானித்து விட்டனர்'' என சென்ற 31-ந் தேதி மாலை நடைபெற்ற ஜனநாயக சுயராஜ்யக் கட்சி மகாநாட்டுத் தலைவர் திரு. எல். பி. போபத்கார் தமது தலைமைப் பிரசங்கத்தின் பொழுது குறிப்பிட்டார். வகுப்புத் தீர்ப்பு விஷயத்தில் காங்கரஸ்காரர்களின் போக்கை பலமாகக் கண்டித்து அவர் மேலும் கூறியதாவது:—'இந்துக்களது உரிமைகள் பாத்தியதைகள் சம்பந்தமான முக்கிய விஷயங்களில் இந்து காங்கரஸ் மெம்பர்கள் நடு நிலைமை வகிக்கும்படி செய்வதற்காக, இந்திய சட்டசபையில் காங்கரஸ் கட்சியை முஸ்லீம்கள் ஆதரிப்பதாக திரு. ஜின்னு கூறினர். இந்துக்களின் நன்மைக்கு பாதகத்தை விளைவிக்கக்கூடிய அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்காக, முஸ்லீம்களின் ஆதரவை காங்கரஸ் சதா நாடி நிற்பது கண்டிக்கத் தக்கதாகும். இந்துக்கள் தங்கள் சமூக, மத, ராஜீய உரிமைகளை முஸ்லீம்களுக்கு அடகு வைத்து, உடனே சுயராஜ்யம் பெறுவதைக் காட்டிலும், படிப்படியாக சுயராஜ்யம் பெறுவதையே இந்துக்கள் உசிதமெனக் கருதுவார்களென நினைக்கிறேன். "இந்துஸ்தானம் இந்துக்களுடையதே: முஸ்லீம்கள் இந்துக்களுக்கு கட்டளை எதுவும் இட முடியாது."

எச்சரிக்கை

இந்துக்கள் சீக்கிரம் விழிக்க வேண்டும். இல்லாவிடில், இந்தியாவிலுள்ள பல்வேறு ஜாதிகளுக்கும், வகுப்புக்களுக்கும், பிரதிநிதி ஸ்தாபனமாயில்லாத காங்கரஸ் இந்துக்களின் நலன்களை விட்டுக்கொண்டே போகும். காங்கரஸ் வெறும் அரசியல் ஸ்தாபனமே. இந்தியாவின் சமூக வாழ்க்கைக்கு நாசத்தை விளைவிக்கக்கூடிய விஷமத்தனமான அர்த்தமற்ற கொள்கைகளைப் போதித்து தேச நலத்திற்கு விரோதமான வேலைகளில் இறங்கி வரும் சமதர்ம, பொதுவுடைமைக் கட்சியினரே அதில் தற்பொழுது ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

மேலும், சென்ற இந்திய சட்டசபைத் தேர்தலின், ஜனப் பிரதிநிதி சபை கூட்டப்போவதாக காங்கரஸ்காரர்கள் அளித்த வாக்குறுதி காற்றில் விடப்பட்டது போலவே, தற்பொழுது காங்கரஸ் வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் காணப்படும் பிரமாதமான வாக்குறுதிகளும் போகும்."

மழுப்பல்

"தேர்தல் முடியும் வரை காங்கரஸ்காரர்கள் உத்தியோகம் ஏற்கும் பிரச்சினையைப்பற்றி யாதொரு முடிவும் செய்யப்படமாட்டாதென அகில இந்திய காங்கரஸ் கமிட்டி தீர்மானம் செய்திருக்கையில், காங்கரஸ் "சர்வாதிகாரிகள்" உத்தியோகம் ஏற்க முடிவு செய்து விட்டதாகவும், பம்பாயைப் பொறுத்த மட்டில் காங்கரஸ் மந்திரிசபை கூட அமைக்கப்பட்டு விட்டதாகவும் திரு. போபத்கார் கூறியிருப்பது பொருத்த மற்றதாகும். காங்கரசினிடம் துவேஷத்தை உண்டாக்குவதற்காக ஏற்பட்ட கட்டுக் கதையாகும்'' என திரு. வல்லபாய் படேல் குறிப்பிட்டார்.

எட்வர்ட் மன்னரின் முதல் சொற்பொழிவு

முடி சூட்டு விழாவிற்குப் பின் இந்தியா விஜயம்

ஏகாதிபத்திய மகாநாடு கூட்டப்படும்

லண்டன், நவ. 3.

"எனது முடிசூட்டு விழாவிற்குப் பின், மீண்டும் இந்தியாவிற்கு விஜயம் செய்து, காலஞ் சென்ற எனது அருமைத் தந்தையாரைப் போல், இந்திய மக்களுக்கும், இந்திய சிற்றரசர்களுக்கும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மன்னராக நான் முடி சூட்டிக் கொண்டதை அறிமுகப் படுத்திக் கொள்ள விரும்புகிறேன்'' என, புதிய பார்லிமெண்டின் திறப்பு விழாவை ஆற்றிவைக்கையில் தமது சிம்மாசனத்திலிருந்து, மேன்மை தங்கிய எட்டாம் எட்வர்ட் மன்னர் தமது சொற்பொழிவின் போது குறிப்பிட்டார்.

அடுத்த வருஷம் மே மாதம் லண்டனில் ஏகாதிபத்திய மகாநாடு ஒன்று கூட்டப்படுமென்றும் கூறினர்.

கனம் முதல் மந்திரிக்கு வரவேற்பு

சென்னை மாகாண புரோசஸ்சர்வர்களின் உபசாரம்

(ஒரு நிருபர்)

சேலம், நவ, 3

இவ்விடம் நேற்று விஜயம் செய்த சென்னை சர்க்கார் முதல் மந்திரி கனம் பொப்பிலி ராஜா அவர்களுக்கு சென்னை மாகாண புரோசஸ் சர்வர்களின் சார்பாக சங்கக் காரியதரிசி திரு. என். வி. ரெங்கசாமி நாயுடு ஒரு வரவேற்புப் பத்திரத்தை வாசித் தளித்தார். அதற்கு கனம் மந்திரி அவர்கள் பதில் கூறுகையில் புரோசஸ் சர்வர்கள் சங்கம் அங்கீகாரம் செய்யும் விஷயத்தைப் பற்றி தாம் யோசிப்பதாகவும், சர்க்கார் இதுவரை புரோசஸ்சர்வர்கள் விஷயத்தில் தக்க கவனம் செலுத்தி வந்திருப்பதாகவும் மேலும் கவனம் செலுத்தத் தயாராயிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்தியா சட்டசபை கலைக்கப்பட்டது

புதுடில்லி, நவ. 2.

இந்தியா சட்டசபைக் கூட்டத்தை வைசிராய் கலைத்து விட்டார்.

திருச்செங்கோடு ஜஸ்டிஸ் மகாநாடு

(5-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சட்டசபையில் அதிகப்படியான இனாம்தார்கள் இல்லை யென்பது மற்றொரு குற்றச் சாட்டு. இது ஒரு விநோதமான அரசியல் நீதியே. ஒரு சட்டம் நிறைவேற்ற வேண்டுமானால் அச்சட்டத்தால் பாதிக்கப்படக்கூடியவர்கள் சட்டசபையில் அதிகமாக இருக்க வேண்டுமென்று கூறுவது வேடிக்கையாகவே இருக்கிறது. வாஸ்தவத்தில், சென்னைச் சட்டசபையில் தற்பொழுது 20,25 இனாம்தார்கள் மெம்பர்களாக இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலார் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவர்களே. அவர்கள் இனாம்தார்களாயிருந்தும் கட்சிக் கட்டுப்பாட்டுக் குட்பட்டு, மசோதாவை ஆதரித்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட ஒரு கட்சிக்கு நான் தலைவராயிருப்பது பற்றிப் பெருமை யடைகிறேன். (கேளுங்கள் கேளுங்கள்.)

மற்றும் ஒரு விஷயம், சென்னை 'மெயில்' சர்க்காரை ஆதரிக்கும் பத்திரிகை யென்றும் ஐரோப்பிய சங்கப் பத்திரிகை யென்றும் வெகுகாலமாகப் பலர் எண்ணியிருந்தார்கள். ஆனால் "மெயில்" ஐரோப்பிய சங்கப் பத்திரிகையுமில்லை. ஐரோப்பியர் அபிப்பிராயத்தை அது தெரிவிக்கவுமில்லை. தக்க ஆதாரங்களுடனேயே நான் இவ்வாறு கூறுகிறேன். சென்னை ஐரோப்பிய சங்கமே இதை ஒப்புக்கொண்டிருக்கிறது. சமீபத்தில் அரசியல் விஷயமாக சென்னை 'மெயில்' தன் பூர்வ அபிப்பிராயங்களை மாற்றிக்கொண்டு விட்டது. சென்னை 'மெயி'லின் அபிப்பிராயம் அதன் ஆசிரியரின் சொந்த அபிப்பிராயமாகும், ஐரோப்பிய சங்க அபிப்பிராயமல்லை. இதை நீங்கள் உணர்ந்திருக்கவேண்டும்.

கடைசியில் காங்கரஸ் கலாட்டாவைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பொதுக் கூட்டங்களில் கலவரம் செய்ய அவர்கள் துணிந்திருக்கிறார்கள். காங்கரசின் செல்வாக்குக் குறைந்து விட்டது. எனவே, எதுவும் செய்ய அவர்கள் துணிவு கொண்டு விட்டார்கள். ஆனல், அந்த வித்தை நமக்குத் தெரியாத வித்தையல்ல அவர்களைவிட கொஞ்சம் கூடத் திறமையாக நமக்கு அந்த வித்தையைச் செய்ய முடியும். (கேளுங்கள், நீண்ட கரகோஷம்.)

சமீபத்தில், காங்கரஸ் தலைவர் ஜவஹர்லால் பேசியபோது, ஜஸ்டிஸ் கட்சியைப்பற்றி ஏதோ சாயலாகக் கேட்டிருப்பதாகக் கூறினர். ஆனல், அவர் பெஜவாடாவை விட்டுப் புறப்படுமுன் அவர் பேசியுள்ள பேச்சுகளைப் பார்த்தால் ஜஸ்டிஸ் கட்சியே அவரது மூளையில் சதா இடம் பெற்றிருப்பதாகத் தெரிய வருகிறது.

வரப்போகும் தேர்தலில் திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் போன்ற இந்த ஜில்லா வெளி ஜில்லாத் தலைவர்கள் முயற்சியினல், இந்த ஜில்லாவிலிருந்து ஏராளமான பிரதிநிதிகளை சட்டசபைக்குத் தேர்ந்தெடுத் தனுப்பி, ஜஸ்டிஸ் கட்சி உயிரோடிருக்கிறது; அது சுறு சுறுப்பாகவும் இருக்கிறது என இந்த ஜில்லா, விளக்கிக் காட்டுமென நான் பூரணமாக நம்புகிறேன்.

இம்மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க ராவ்சாகிப் பொன்னையா கவுண்டரைத் தேர்ந்தெடுத்த இந்த மகாநாட்டு நிர்வாகிகளையும் பாராட்டுகிறேன். அந்தப் பதவிவகிக்க அவர் எல்லாவகையிலும் தகுதியுடையவரே, அவருடைய தலைமையில் இம்மகாநாடு வெற்றிகரமாக முடியுமென்பது நிச்சயம். இம்மகாநாட்டை மிக்க மகிழ்ச்சியுடன் ஆரம்பித்து வைக்கிறேன்.

கைத்தறி நெசவாளர் தவிப்பு

300-தொழிலாளர்கள் அயலூருக்கு வெளியேற்றம்

சர்க்கார் கவனிக்குமா?

ஜலகண்டபுரம், நவ, 1

ஜலகண்டபுரத்திலும், சுற்றுப்புறத்திலுள்ள கிராமாந்திரங்களிலும் உள்ள கைத்தறி நெசவு தொழிலாளர்களுக்கு 16-முழம் கார்பட்டு கலப்புள்ள நூல் சேலை ஒன்று நெய்தால் எட்டணா (0-8-0) கூலி கொடுத்து வந்தார்கள்.

முதலாளிகளுக்கு சேலை ஜவுளி விற்பனை ஆகாத காரணத்தால் முதலாளிமார்கள் நெசவு தொழிலாளர்களிடம் 'எங்கள் ஜவுளியைக் கேட்பார் யாருமில்லாததால் ஜவுளி ஏராளமாய் ஸ்டாக் நிற்கின்றது. சேலை நெய்து வைத்துக்கொள்வதால் முதலுக்கு மோசம் வந்துவிடும் போலிருக்கிறது. ஆனபடியால் எங்களிடம் உங்களுக்கு நெய்வதற்கு பாவுகிருப்பு இல்லை. நீங்கள் எல்லாம் எங்காவது சென்று வேறுதொழில் செய்து ஜீவனம் செய்து கொள்ளுங்கள்' என்று அனைவரும் சொல்லி விட்டனர். ஆனதினால், ஜலகண்டாபுரம் நெசவு நெய்யும், 4000 நாலாயிரம் தொழிலாளர்களுக்கும் எப்படி வேறு தொழில் இந்த ஊரிலேயே கிடைக்குமென்று இருநூறு, முன்னூறு தொழிலாளர்கள் வெளியூர்களுக்குக் கிளம்பினர்கள். சிலர் விவசாயத் தொழிலும் செய்கின்றனர். மற்றும் சிலர் மேட்டூர் "எலெக்டிரிக்கரண்ட்" எடுக்கும் தொழிலுக்கும், இன்னும் சிலர் சேலம் ராஜேந்திரா நூல் மில் வேலைக்கும் சென்றிருக்கின்றனர். இவைகளைக் கண்டறிந்த முதலாளிமார்களுக்குள் நிலைமை பெரும் பயத்தையும், கலக்கத்தையும் உண்டுபண்ணத்தக்கதாக இருந்து வருகிறது.

முதலாளிமார்களும், தொழிலாளர்களும் ஜவுளி வியாபாரம் எப்பொழுது வருமோ நம் குறைகளெல்லாம்-கஷ்டங்களெல்லாம நீங்குமோ நாங்களெல்லாம வயிறார கஞ்சி குடிப்போமோ என்று ஏங்கி ஏக்கமுற்று பேய் போல அலைகிறார்கள். இதனை அறிந்தாவது நம் காருண்ய கவர்ன்மெண்டார் ஏழைகளின் கஷ்டத்தைப் போக்க வழி தேடுவார்களா என்று சர்க்காரை ஜலகண்டபுரம் நகர வாசிகள் எதிர்பார்க்கின்றார்கள்.

ரெம்பூர்

தாழ்த்தப் பட்டார் வாலிபர் சங்கம்

விசேஷப் பொதுக் கூட்டம்

ரெம்பூர், அக், 25

25-10-36 க் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணிக்கு தேவேந்திர குல வேளாளர் மாரியம்மன் கோவில் முன்னிலையில் துறையூர் "கிராம ஊழியன்" ஆசிரியர் தோழர். என். பூர்ணம் பிள்ளை அவர்களின் தலைமையில் ரெம்பூர் தாழ்த்தப் பட்டார் வாலிபர் சங்கத்தின் விசேஷப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைமை தோழர் ஆர். செங்கசாமி பிரேரேபிக்க தோழர் என். வி. வீரப்பன் ஆமோதிக்க கரகோஷத்தினிடையே தோழர் என். பூர்ணம் பிள்ளை தலைமை வகித்தார். தோழர் வி. துரைசாமியால் சுயமரியாதைத் தெம்பாடப் பெற்று கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தாழ்த்தப்பட்டார் வாலிபர் சங்கத்தின் சார்பாக தோழர் ஆர். செங்கசாமியால் தலைவருக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. தலைவர் முகவுரையில் இச்ரெம்பூரில் தாழ்த்தப்பட்டார் வாலிபர் சங்கம் என்ற பெயரைத் தாங்கிய ஓர் சங்கம் சுமார் 3-9-மாத காலமாக நல்ல முறையில் தீவிரமாக நடத்தப்பட்டுவரும் விஷயம் சந்தோஷிக்கத் தக்கதென்றும், ஒற்றுமைக்கும் சமூகமுன்னேற்றத்திற்கும் அத்யாவசியமானது. இத்தகைய சங்கம ஓர் அருந்துணையாகுமென்றும், இன்னும் மற்றும் உள்ள வாலிபர்களும் சேர்ந்து இன்னும் தீவிரமாகவும், விடாமுயற்சியுடனும் நடத்தவேண்டியது அவசியம் என்றும் மிகத்தெளிவாகப்பேசி மற்றும் பேச வேண்டியதை முடிவுரையில் பேசுவதாகச் சொல்லி ஆசனத்தில் அமர்ந்தார். பிறகு 'கல்வி' என்பது பற்றி தோழர் ஆர். செங்கசாமி அவர்களாலும், 'தீண்டாமை' என்பதுப் பற்றி தோழர் வி. துரைசாமி அவர்களாலும், "பெண்கள் முன்னேற்றம்" என்பதுபற்றி தோழர் டி. எம். பெருமாள் நாயுடு அவர்களாலும் மிகத்தெளிவாகப் பேசப்பட்டது. பின் அடியிற்கண்ட தீர்மானங்கள் தோழர்களான ஆர். செங்கசாமி, ஆர். கருப்பண்ணன் கே. சுப்ரமணியம் ஆகியோரால் முறையே பிரேரேபிக்கப் பெற்று தோழர்களான கே. நல்லசெல்வம், கே. செங்கசாமி, எம். வேலாயுதம் ஆகியோரால் முறையே ஆமோதிக்கப்பெற்று ஏகமனதாக நிறைவேறின.

தீர்மானங்கள்

1. சென்னை கல்வி மந்திரியாக நியமனம் பெற்றிருக்கும், கனம் குமார ராஜா சாஹிப் அவர்களுக்கு இச் சங்கம் வாழ்த்துக் கூறுவதுடன் அவர்களை மந்திரியாக நியமனம் செய்த சென்னை சர்க்காருக்கும் நன்றி பாராட்டுகிறது.

2. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட லேபர் பாடசாலைகளில் ஆதிதிராவிட (தாழ்த்தப்பட்ட) உபாத்தியாயர்களையே நியமிக்குமாறு லேபர் ஆபீஸர் அவர்களையும், ஜில்லா கலெக்டர் துரை அவர்களையும் இச் சங்கம் பணிவுடன் கேட்டுக் கொள்கிறது.

3. இச்சங்கத்திற்கு "விடுதலை" "ஜன நாயகம்," "நவ மணி," "வெற்றி முரசு" முதலிய பத்திரிகைகளை இலவசமாக அனுப்பியருளுமாறு ஷை பத்திராதிபர்களை இச் சங்கம் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறது.

பின்னர் தலைவர் முடிவுரையில் தாழ்த்தப்பட்டார் சேரியில் மிக ஆபாசமாக இருக்கிற தென்றும் அந்த ஆபாசமே வியாதிக்குக் காரணம் என்றும், இந்தக் குறைகளை நமது பஞ்சாயத்து போர்டாருக்குத் தெரிவித்துக் கொண்டால் பஞ்சாயத்துபோர்டு ஸ்வீபரை அனுப்பி சுத்தம் செய்வார் என்றும், இந்தச் சிறிய காரியத்தை பொது ஜனங்கள் செய்யா மலிருப்பது உங்கள் அசிரத்தையைக் காட்டுகிற தென்றும், இத்தகைய குறைகளை தெரிவிக்க வேண்டியது சங்கத்தாரின் முதல் கடமை என்றும் சுத்தம் சுகாதாரத்தைக் கைக்கொள்ளாது கடவுள் கடவுள் என்று விக்ரஹங்களை தோளில் தூக்கி வைத்துக் கொண்டு சேறும், சகதியும் ஆபாசமும் நிறைந்த சேரியில் சுவாமியை மெரவனை செய்தால் கடவுள் மோட்சத்தை அளிப்பாரா? மோட்சம் என்பதற்கு அர்த்தம் சுகம் என்றும், அந்த மோட்சம், நரகம் இவ்வுலகிலேயே நாம் அனுபவிக்கிறோம் என்றும், அதாவது ஒருவன் கக்கூஸ் வாருகிறான், ஒருவன் உன்னத நிலையில் ஏகபோக உரிமைகளைப் பெற்று சுகத்தை அனுபவிக்கிறான். இதிலிருந்து மோட்சம், நரகம் இவ்வுலகிலே இருக்கிறது என்பது கண்கூடாக நமக்குத் தெரிய வில்லையா? ஆகையால், நம் முயற்சியால் தான் சுகம் அடையக் கூடும், என்றும் சுத்தம் சுகாதாரம், சமூக முன்னேற்றத்திற்கு வேண்டிய நன்மைகள் செய்து கொண்டு பிறகு உங்கள் இஷ்டப்படி சுவாமியை சேவித்தால் மனதிற்கே ஒரு நிம்மதியும், சந்தோஷமும், சுகமும் ஏற்படும் என்றும் பாமரர் மனதில் பசு மரத்தாணி போல் பதியுமாறு உணர்ச்சியோடு பேசி முடித்தார்.

பின்னர், உப காரியதரிசி தோழர் என். கே. எம்.-பெருமாள் அவர்களால் தலைவருக்கு மலர் மாலை சூட்டப்பட்டு வந்தனோபசாரம் கூற மாலை 5-30 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது என ஷை சங்கக் காரியதரிசி ஆர். செங்கசாமி எழுதுகிறார்.

செங்குந்தர் மாதர் சங்கம்

திறப்பு விழா

(நமது நிருபர்)

தல்லாகுளம், அக், 30

தல்லாகுளம் செங்குந்தர் நிலையத்தில் 26-10-36 க் தேதி மாலை 4-30 மணிக்கு ஸ்ரீமதி கமலம் ஞானமுத்து அம்மாள் பி. ஏ. தலைமையில் செங்குந்தர் மாதர் கூட்டம் நடைபெற்றது.

அவ்வமயம் ஸ்ரீமதி பரஞ்சோதி அம்மாள் பி. ஏ. எல். டி. அவர்கள், மாதர் முன்னேற்றத்தைக் குறித்து சிறிது நேரம் சொற்பொழிவாற்றிய பின், சங்கத்தை திறந்து வைத்தார். ஸ்ரீமதி ருக். என். தாமஸ் அம்மாள் அவர்கள் பெண் கல்வியின் அவசியம் என்பது பற்றியும், ஸ்ரீமதி பிச்சையம்மாள் (செங்குந்த மாணவர்) பெண்ணின் முதன்மைஎன்பது பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். வந்தனோபசாரம் கூறப்பட்டு சங்கத்தின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் வருடம் 1-க்கு அணா எட்டு செலுத்தவேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேறியது. சந்தனம், தாம்பூலம், கற்கண்டு யாவருக்கும் வழங்கப்பட்டது. இரவு 7 மணிக்கு கூட்டம் முடிவு பெற்றது.

செங்குந்த மாதர்கள், மாணவிகள் பலர் உட்பட சுமார் 200 பேர் வரை கூடியிருந்தனர். பிற சமூக மாதர்கள் பலரும் கூட்டத்தில் கலந்து கொண்டது குறிப்பிடத் தக்கது. இதுவரை இம்மாதிரி பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளாத நம் மாதர்கள் அன்று நூற்றுக் கணக்கில் வந்திருந்ததற்கு நம் குல மாணவிகளின் பெருமுயற்சியும், பெரியார்களின் தூண்டுதலுமே முக்கிய காரணமாகும். [illegible] செங்குந்த பெண் மணிகளிடையே இப்பொழுது ஓர் புத்துணர்ச்சியும், கிளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

கீழ்க் கண்டவர்களை நிர்வாக அங்கத்தினர்களாக இவ் வருடத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஸ்ரீமதிகள் ச. வி. சித்தம்மாள், தலைவர், தெ. ம. தி. பழநியம்மாள் உப தலைவர், சி. வ. பிச்சையம்மாள், காரியதரிசி, சா. சா. மீனாட்சியம்மாள், பொக்கிஷதார். நிர்வாக அங்கத்தினர்கள்: ச. கோ. ஆதிலட்சுமி, சோ. மா. வேலம்மாள், க. ச. வே. இராஜம், சா. மா. கு. கௌரியம்மாள், ப. மு. ப. நாகம்மாள், சி. ம. க. பொன்னம்மாள்.

சிலோன்

மத்திய மாகாண மருத்துவர் சங்கம்

(நமது நிருபர்)

கொட்டகெலை, அக், 31

சென்ற 30-10-36 மாலை 2-மணியளவில் மேற்படி சங்கத்தின் 8-வது மாதாந்தரப் பொதுக் கூட்டம் கொட்டகெலை 9 செ. கட்டிடத்தில் நாகசேன செல்வம் கம்பெனியரான உயர் திரு. என். முத்தையா அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

அவ்வமயம் தோழர் வி. எம். சுவாமி அவர்கள் சங்கத்தின் நோக்கங்களை தெளிவுபட எடுத்துப் பேசினார்கள். பின் அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. சேர்மாதேவி மருத்துவர்களுக்கும், மேற்படி கிராமத்தார்களுக்கும் சுமார் 10, 12 வருடமாக நடைபெற்று வந்த கேஸ் (புல்பெஞ்சு கோர்ட்டில்) நம் சகோதரர்களுக்கு அநுகூலமானதைப் பற்றி இச்சங்கம் சந்தோஷத்தை தெரிவித்துக் கொள்ளுகிறது.

2. சென்ற மாத வரவு செலவு கணக்குகளை காரியதரிசியவர்களால் வாசிக்கப்பட்டு ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

3. சந்தா பாக்கிகளை வசூல் செய்வதற்காக திரு. வி. எம். சுவாமி, திரு. என். முத்தையா, திரு. என். சாமிநாதன், திரு. பெ. மெய்யன் பண்டிதர் ஆகிய நால்வர் அடங்கிய கமிட்டி நியமிக்கப்பட்டது.

4. சங்கத்தின் சட்ட திட்டங்களைப் பிரகடனம் செய்யப்பட்டது.

5. கடிதங்கள் வாசிக்கப்பட்ட பின் காரியதரிசியவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 7 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

ஏமாறுதீர்கள் !

எங்கள் வைத்தியசாலையின் மருந்துகள் மிகவும் சிலாக்கியமானதெனப் பலராலும் புகழப்பட்டு வருதல் கண்டு, சிலர் வேறு மருந்துகளை எங்கள் மருந்துகள்—அதாவது சி. எம். சாமி மருந்துகள் என்று சொல்லி ஏமாற்றி விற்பனை செய்து வருகிறதாகத் தெரிகிறது. எங்கள் வைத்தியசாலையிலிருந்து வெளி இடங்களுக்கு நாங்கள் யாரையும் அனுப்பவில்லை. எங்கள் ஏஜெண்டென்றும், எங்கள் மருந்துகள் என்றும் யாராவது விற்பனை செய்தால் அதைப் பொது மக்கள் வாங்கி மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கிறோம்.

மருந்து வேண்டியவர்கள் நேரே எமக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி, S. I.

தீபாவளி !　　தீபாவளி !!

அசல் பட்டுப் புடவை

அழகிய சிறு ஜரிகைக் கரை, அசல் பட்டு. சிகப்பு, அரக்கு, புளு, பச்சை, ஸ்கை முதலிய கலர்களில் கிடைக்கும்.

12-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 5-12-0
16-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 7-8-0
18-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 8-8-0
5-முழம் x 44" அங்க வஸ்திரம் 1-க்கு ரூ. 3-8-0

வெண்பட்டு அங்க வஸ்திரம்

5 முழம் x 44" அழகிய கரைகள். சலவைக்கு [illegible].
விலை ரூ. 1—12—0-தான்.

☞ இந்த விலைகள் 10-11-36 வரைதான். ஞாபகத்தில் வையுங்கள்.
உடனே ஆர்டரை அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
(Proprietors : Sundarams Ltd.,)
சில்க் அவுஸ், காசி.

பெங்களூர் பங்கு மார்க்கெட்.

பெங்களூர், நவ, 3

பெங்களூர், புரோக்கர் எம். சஞ்சப்பைய ஜாகிர்தார் கீழ்க்கண்ட பங்கு விலைகளை அனுப்பியிருக்கிறார்.

	செலுத்தப் பட்டது	தற்கால விகிதம்	
	ரூ.	ரூ.	அ.
பாங்கி			
இம்பீரியல் எப்.பீ.	500	1587	2
இம்பீரியல் கண்ட்	125	394	0
ரிசர்வ்	100	138	12
இந்தியா	50	137	0
மைசூர்	100	298	6
பெங்களூர்	10	6	0
இண்டஸ்டிரியல்	25	6	4
தேவாங்கா	10	8	6
சென்ட்ரல்	25	36	4
குயிலான்	25	27	4
ஸ்டேட் எய்டட்	25	15	2
திருவாங்கூர்நாஷனல்	50	55	4
இந்தியன்	50	140	0
,,	10	29	6
இன்ஷ்யூரன்ஸ்			
ஏஷியாடிக்	5	5	0
ஓரியண்டல்	200	5380	0
நியூ இந்தியா	15	42	0
வல்கன்	10	7	8
ஆலை			
பெங்களூர்	100	166	0
,, பிரிபரன்ஸ்	100	113	0
பக்கிங்ஹாம்	100	173	0
,, பிரிபரன்ஸ்	100	164	0
கோகக்	100	281	0
கெய்சர்-இ-ஹிண்ட்	2 1/2	1	0
மினர்வா	100	57	0
மகாராஜா	50	82	0
கிருஷ்ணராஜேந்திரா	25	6	8
சீதாராம்	100	43	0
கம்போடியா	10	10	0
வசந்தா சாதா	100	106	8
,, பிரிபரன்ஸ்	100	112	0
ராஜலக்ஷ்மி சாதா	50	51	8
,, பிரிபரன்ஸ்	50	53	0
காலேஸ்வரா	100	281	0
டிபன்சர்			
கோலார்	100	100	4
நரசான்	100	106	0
மைசூர் சர்க்கரை	80	88	0
திருச்சி-ஸ்ரீரங்கம்	100	109	12
சில்லரை			
பிரீமியர் சாதா	75	88	8
,, பிரிபரன்ஸ்	100	110	0
டாடா ஹைட்ரோ சாதா	100	185	14
,, பிரிபரன்ஸ்	100	160	0
டாடா இரும்பு சாதா	75	204	8
,, டிபர்டு	30	825	0
,, 1-வது பி-ன்	150	200	0
,, 2-வது பி-ன்	100	173	0
பி. வி. ரயில்வே	25	19	12
பெங்களூர் பிரஸ்	100	79	0
பார்டன் சன்ஸ் சாதா	10	5	4
,, பிரபரன்ஸ்	10	5	14
ஸ்பென்சர் சாதா	10	7	0
,, ஏ-பிரிபரன்ஸ்	10	11	10
,, பி-பிரிபரன்ஸ்	10	12	4
மின்சாரம்			
ஆஜ்மீர்	10	13	14
வேலூர்	10	17	2
திருச்சினாப்பள்ளி	100	202	0
,,	10	20	0
விசாகப்பட்டணம்	50	70	0
கும்பகோணம்	10	14	6
கொச்சி	8	11	8
ரங்கன்	10	14	12
சுரங்கம்			
	ஷி.	ப.ஷி.பெ.	
சாம்பியன்	10	2 6 0	
மைசூர்	10	1 8 9½	
நந்தி துர்க்கம்	10	3 1 8	
ஊர்காம் சாதா	10	0 18 9	
சர்க்கரை			
மைசூர் சர்க்கரை	10	30	4
நியூ இந்தியா	10	7	0
டெக்கான் சாதா	100	384	0
,,	25	94	8

இராமேஸ்வரம் தேவஸ்தானம் கமிட்டி

தேவகோட்டை ஜமீன்தார் நியமனம்

(நமது நிருபர்)

மதுரை, அக். 31

தேவகோட்டை ஜமீன்தார் திரு. எ. எல். எ. ஆர். வெள்ளையன் செட்டியார் இராமேஸ்வரம் தேவஸ்தானம் கமிட்டி மெம்பராக இன்று இராமநாதபுரம் சப் கோர்ட்டரால் மறுபடியும் நியமனம் செய்யப்பட்டார். இவர் இதற்கு முன் 5 வருட காலம் மெம்பராக இருந்து வந்தார்.

வி. பார்த்தசாரதி நாயகர் இலவச வாசகசாலை

மாடல் லேயன் வண்ணாரப்பேட்டை

சென்னை, நவ, 2

வி. பார்த்தசாரதி நாயகர் இலவச வாசகசாலையில் 27-10-36 செவ்வாய்க்கிழமை இரவு 7-மணிக்கு வாசகசாலையின் தலைவர் மா. முனுசாமி பிள்ளையின் தலைமையில் கமிட்டிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

தீர்மானங்கள்

சென்னை நகரசபை தேர்தலில் வெற்றி பெற்ற திரு. என். பி. ஜெயராம் நாடார் அவர்களுக்கும், வி. பார்த்தசாரதிநாயகர், வி. பாகதேவ், பி. ஏ; பி. எல்., எஸ். சங்கரன், பி. ஏ., ஆல்பர்ட் ஜேசுதாஸ், பி. ஏ., ஜெ. சிவஷண்முகம் பிள்ளை எம். ஏ, இவர்கள் ஆகியபேரும் வெற்றி பெற்றதை மேற்படி வாசகசாலையார் பெரிய மனமகிழ்ச்சியுடன் பாராட்டுகிறார்கள்.

இவர்கள் இந்த வாசகசாலைக்கு உதவி அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்துடன் கூட்டம் இரவு 8-30 மணிக்கு முடிவு பெற்றது என காரியதரிசி எழுதுகிறார்.

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்

சொற்பொழிவு போட்டி

சென்னை, அக், 2

மேற்படி மன்றத்தின் ஆதரவில் சொற்பொழிவு போட்டி 31-10-36 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு 327 தங்கசாலைத் தெருவில் நடைபெற்றது அதுசமயம் கீழ்க்கண்டபடி பரிசு பெற்றவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

முதல் பரிசு: பி. தங்கராஜு, இரண்டாம் பரிசு: கே. கிருஷ்ணசாமி, மூன்றும் பரிசு: பி. என். குருசாமி என காரியதரிசி அறிவிக்கிறார்.

ஸ்ரீதேவி பலகீ பாதேனர் கேடாறாயின்
கெடுதலே நீசர் கீழ்நிலை நின்று
நாட்டினசெல்வம்
பொருள் கலப்பெருக்கர் பேவழும் பெற்று
நிதங்க வாழ்தலே யாம்

விடுதலை

VIDUTHALAI

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்று மறை
செம்மொழியை திருமொழியை
[தேன்மொழியை
தனித்தியங்கும் ஆற்றலுள தொன்மொழியை
[அமிழ்தனைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
[அனுதினமும் பழகும் சேவகர்.

மலர்-2] சென்னை : (4-11-1936) தாது௵ ஐப்பசி௴ 19௳ புதன்கிழமை [இதழ்-14

வெற்றிலையின் குணங்கள்

இந்திய மக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் வெற்றிலை பாக்கு மெல்லும் பழக்கம் உடையவராயிருக்கின்றனர். வெற்றிலையைக் குறித்து ஆயுர்வேத சாஸ்திரம் பின்வருமாறு புகழ்ந்து கூறுகிறது. "காரமுள்ளது; வாயுவைப் போக்கும் தன்மையுள்ளது; புழுக்களை அழிக்கும் வல்லமையுள்ளது; வாய்க்கு அழகு செய்வது; காதலைக் கிளப்புவது;"

பாக்கு ஜீரணம் செய்யும் சக்திவாய்ந்தது; நன்கு பழுக்காத பாக்கு கேடு விளைவிக்கும்; தலை வலி உண்டாக்கும்; உடம்பில் சுண்ணாம்பு சேர்வதால் எலும்புகள வலுவடையும்.

மிதமாக வெற்றிலையை உபயோகிக்கும்படி இந்த சாஸ்திரம் கூறுகிறது. ஒரு நாளைக்கு மூன்று தடவைக்கு மேல் வெற்றிலை போடக்கூடாதென கூறுகிறது. காலையில் பாக்கை அதிகமாகவும் பகலில் சுண்ணாம்பு அதிகமாகவும், இரவில் வெற்றிலையை அதிகமாகவும் மற்றவற்றைக் குறைவாகவும் சேர்த்துக் கொள்ளுமாறு கூறுகிறது. வெற்றிலை பாக்கு மெல்லும் பொழுது முதல் முதல் உண்டாகும் சாற்றை உமிழ்ந்து விட வேண்டுமென்று கூறுகிறது.

கல்யாணம் செய்துகொண்டு குடும்ப வாழ்க்கையை நடத்துவோரே வெற்றிலையை உபயோகித்தல்முறை. சதிபதிகள் அழகாயும் சந்தோஷமாயுமிருக்கச் செய்வதும் அதுவே.

மிதமிஞ்சி வெற்றிலையைப் போட்டுக் கொள்வதால் பற்களுக்குத் தீமை ஏற்படும்; பற்கள் தேய்ந்துபோகும். பல் ஈறு வலுவிழக்கும். நாக்கு சுவையறியும் தன்மை யற்றதாகி விடும்.

குறைந்த விலை.

சரியான மணி காட்டக் கூடியது. கெட்டியான அமைப்பு. ரவுண்டு நிக்கல் வாட்ச ரூ. 3-4-0. உயர்த்தது ரூ. 3-12-0 கோல்டன் ரூ. 4-4-0. ரேடியம் ரூ. 4-8-0. ரெக்டாங்குலர் நிக்கல் ரூ. 5-8-0. கோல்டன் ரூ. 6-8-0 பாக்கெட் வாட்ச ரூ 2-0-0. "பி" டைம்பீஸ் ரூ. 1-12-0. தபால் செலவு 0-8-0 எல்லா கெடியாரமும் 3 வருஷம் உத்திரவாதம்.

EASTERN TRADING CO., P.B. 12204,
Hatkhola, Calcutta (v. v.)...

முத்தத்தின் இன்பம்

3 அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு 50 பக்கம் கொண்ட புத்தகம் இனமாய் அனுப்பப்படும்.

ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராயநகர், மதராஸ்.

ஜஸ்டிஸ் கட்சியார் ஒப்பற்ற சேவை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சில துறைகளில் ஜஸ்டிஸ் கட்சியானது கெட்டியான வேலைகளை சாதித்திருக்கிறது. நமது கட்சியின் உருவகமான வேலைகளை கிராம சகோதரர்கள் எல்லோரும் சரிவரத் தெரிந்து கொள்ளும்படி இடைவிடாமல் பிரசாரம் செய்ய வேண்டும். ஒரு சில அம்சங்களில் நாம் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்படாவிடில் அக் குறையை ஜஸ்டிஸ் கட்சியின்பேரில் சுமத்துவது நியாயமல்ல.

மாண்ட்போர்ட் சீர்திருத்தத்தில், "இரட்டை ஆட்சி" முறைப்படி, அபிவிருத்தி இலாகாக்கள் பெரும்பாலும் இந்திய மந்திரிகள் வசத்தில் ஒப்படைக்கப்பட்டன. ஆனால், கிலவரி போன்ற பெரிய வருமான இனங்களை அதிகார வர்க்கத்தினர் கைவசத்தில் வைத்துக் கொண்டபடியால், அபிவிருத்தி இனங்களுக்குப் போதுமான பண சகாயம் கிடைக்காமல் போயிற்று. மேலும், சில அதிகாரங்களை மத்திய சர்க்காரே வகித்து வருவதால், நமது மந்திரிகள் இவைகளில் பிரவேசிக்கக் கூடவில்லை. இத்துடன் சென்ற ஆறு வருஷங்களாக பொருளாதாரச் சுணக்கத்தால் உலகமெங்கும் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் நமது மாகாணத்தையும் வாட்டிவிட்டன. இதையெல்லாம் தெளிவாய் தெரிந்தவர்கள் கூட 'ஜஸ்டிஸ்கட்சி இதைச் செய்யவில்லை; அதைச் செய்யவில்லை' என்கிற வீண் குற்றச் சாட்டில் கலப்பமாய்ச் சேர்ந்து கலக்கம் செய்வதைப் பார்க்கப் பார்க்க வருத்தமாயிருக்கிறது. இதற்கெல்லாம் மூல காரணம் சரியான பிரசாரம் இல்லாதது தான் என்று சொல்லவேண்டியிருக்கிறது. இது விஷயத்தில், ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த பெரியார்கள் மட்டும் பாடுபட்டால் போதாது. எல்லோரும் சிரத்தையுடன் உழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்ட்போர்ட் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுவதா அல்லது புறக்கணிப்பதா என்கிற விஷயத்தை ஆலோசிப்பதற்கு 1818-ம் வருஷத்தில் காங்கிரஸ் விசேஷ சபை பம்பாயில் கூடிற்று. சுயராஜ்யம் எனது பிறப்புரிமை என்று உபதேசித்த தலைவர் என்ன சொன்னார் என்பதை இது சமயத்தில் ஞாபகப்படுத்துகிறேன். "ஒரு ரூபாயில் 16 அணா வேண்டும் என்று பிரிட்டிஷாரைக் கேட்டோம்; நாலு அணா மட்டும் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பெற்றுக்கொண்டு, மீதியைக் கொடுக்கும்படி நாம் வற்புறுத்துவோம்' என்று சொன்னார். அதே மனோபாவத்துடன் தான் ஜஸ்டிஸ் கட்சியாரும் மாண்ட்போர்ட் சீர்திருத்தத்தை இவ்வளவு வருஷங்களாக நடத்திக்காட்டி வந்திருக்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் சென்னை சட்டசபையில் சாதித்த அளவுக்கு இதர மாகாணங்களில் எங்குமே வேலை நடக்கவில்லை என்கிற உண்மையை, அரசியல் பண்டிதர்கள் தாராளமாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சமஷ்டி அரசியலைப் பற்றியாவது, மத்திய சர்க்காரின் அதிகாரத்தைப் பற்றியாவது, புதிய சீர்திருத்தத்திட்டத்திலாவது அபிப்பிராய பேதத்திற்கு இடமிருக்கலாம். ஆனால் மாகாண சுய ஆட்சி விஷயத்தில் விருப்பத்தக்க அம்சங்கள் இருக்கின்றன. "சட்டசபைகளைக் கைப்பற்றுவோம்; பிற்போக்காளர்களின் கோட்டைகளை முற்றுகை செய்வோம்" என்று ஆரவாரம் செய்யும் அரசியல் வாதிகளின் கூற்றை எதிர்த்து ஜஸ்டிஸ் கட்சியார் தமது உருவகமான வேலைகளை சட்டசபைகள் மூலம் பரப்பத் தீர்மானித்திருக்கிறார்கள். ஜாதி மத வித்தியாசம் பாராட்டாமல் எல்லா சமூகங்களுக்கும் காரியத்தில் சரிசமமான அந்தஸ்தும் நீதியும் வழங்கும் கட்சி ஜஸ்டிஸ் கட்சி என்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள். இந்த உண்மையான நிலைமையை நமது சகோதர சகோதரிகள் எல்லோரும் சரிவரத் தெரிந்து கொள்ளும்படி செய்வதே நமது முக்கியமான கடமை.

நமது வேலைத்திட்டம்

கல்வி, சுகாதாரம், விவசாயம், கூட்டுறவு முதலிய துறைகளில் அபிவிருத்தி ஏற்படுத்துவதற்கு ஜஸ்டிஸ் மந்திரிகள் கூடியவரை பாடுபட்டிருக்கிறார்கள் என்பது வெளிப்படை. மாகாண அதிகாரிகளிடம் இதுவரை இருந்து வந்த அதிகாரங்களும், பணவசதிகளும் இந்திய மந்திரிகளிடம் மாகாண சுய ஆட்சிப் புதிய திட்டப்படி 1-4-1937-ல் ஒப்படைக்கப்படு மாகையால், நிர்வாக அனுபவம் நிறைந்த ஜஸ்டிஸ் கட்சிதான், வரப்போகும் தேர்தலில் வெற்றி யடைந்து சட்டசபைகள் மூலமாக பலவித உருவகமான நன்மைகளை மகா ஜனங்கள் அடையும்படி செய்யும். ஆகவே, தொடர்ந்து நாம் சட்ட சபைகளில் செய்யக்கூடிய பொதுநல வேலைகள் அநேகம் இருக்கின்றன. கட்டாய ஆரம்பக் கல்வி பரப்புவதற்காக ஜஸ்டிஸ் மந்திரிகள் ஒரு பத்து வருஷத் திட்டம் தயாரித்திருக்கிறார்கள். பொருளாதாரத் துறையிலும் இதுபோன்ற திட்டங்களை வகுத்து சரிவர அமுலுக்குக் கொண்டுவர இப்போதிருந்தே அவர்கள் பெரு முயற்சி செய்து வருகிறார்கள். கிராமப் பஞ்சாயத்துகள், கூட்டுறவுச் சங்கங்கள் கிராமச் சீரமைப்பு வழிகாட்டிகள் மூலமாக மகா ஜனங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குத் தேவையான உபாயங்களை ஜஸ்டிஸ் கட்சியார் தேடிக்கொடுக்க தயாராயிருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டமானது இப்போது உலகம் முழுவதிலுமே ஏற்பட்டிருக்கும் ஒரு சங்கடமான நிலைமை. இந்தச் சிக்கலான கஷ்டத்திலிருந்து விடுதலை அடைவதற்கு பலதேசங்களில் அரசியல் நிபுணர்கள் ஒரு வித திட்டம் வகுத்து வேலை செய்து வருகிறார்கள். சற்று முன்பு குறிப்பிடப்பட்ட துறைகளில் நமது நாட்டிற்கு சாத்தியமான அபிவிருத்தி ஏற்படும்போது இந்த வேலையில்லாக் கஷ்டம் பெரும்பாலும் நமது நாட்டில் குறையும் என்று நம்புவது மிகையாகாது. ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக்கூடம், பஞ்சாயத்து போர்டு கூட்டுறவு சங்கம் ஆகிய பொது நிலயங்கள் ஏற்படவேண்டும். தாலுகா தோறும் ஒரு நில அடமான பாங்கு, விளை பொருள்கள் விற்பனைச் சங்கம், முதியோர் கல்விச்சாலை, ஆஸ்பத்திரி முதலியவை ஏற்படவேண்டும். பிர்க்கா ஒவ்வொன்றிலும் பயிற்சி பெற்ற ஒரு வழிகாட்டியாவது தங்கியிருந்து கிராமவாசிகளின் தேவைகளை ஒருமுகமாக உள்ளபடி எடுத்துக் காட்டித் தக்க பரிகாரங்கள் தேடிக்கொடுக்கும் ஆற்றலும் அறிவும் உள்ளவர்களாய் அமையவேண்டும். கிராமங்களில் மருத்துவ வசதிகளை அதிகரிக்க வேண்டும். ரேடியோ, சினிமா, நிழல் படங்கள், நடமாடும் பள்ளிக்கூடங்கள், புஸ்தகசாலைகள் மூலமாக புதிய புதிய சத் விஷயங்களை மகா ஜனங்களுக்கு போதிக்க வேண்டும். சொற்பச் செலவில் சத்துள்ள சாப்பாடும், சுகாதார வீடுகளும் ஏழை மக்களுக்குக் கிடைக்க வேண்டும். நிலமில்லாத விவசாயத் தொழிலாளிகளுக்கு கூட்டுறவு முறையில் தொழிலாளர் சங்கங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஸ்தலஸ்தாபன ரோட்டுகளை அமைப்பதும், சீர்படுத்துவதுமான வேலைகளை கூட்டுறவு தொழிலாளர் சங்கங்களே நடத்தும்படி விட்டுவிடவேண்டும். ஒரு அளவுக்குக் கம்மியாக கூலி விகிதத்தைக் குறைக்கக்கூடாது என்று சட்டம் இயற்ற வேண்டும், ஆலைத் தொழில்களில் கிடைக்கும் லாபத்தில் ஒரு சிறு பகுதியாவது தொழிலாளர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். தொழிலாளர்கள் குழுமி இருக்கும் நகரங்களில் கூட்டுறவு முறையில் வீடு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும், நாடு நகரங்களில் கடன் சுமை தாங்க முடியாமல் கஷ்டப்படுகிற ஏழை மக்களுக்கு சீக்கிரத்தில் விமோசனம் தேடிக் கொடுக்க வேண்டும்.

ஒரு சில காரியங்களை மட்டும் குறிப்பிட்டேன். இவைகளையும், இதுபோல அநேக பொதுநல சேவைகளையும் செய்து முடிப்பதற்கு புதிய சட்டசபைகளே சிறந்த சாதனங்களாய் இருக்கின்றன. நாம் எதிர் பார்க்கிற அளவுக்கு மகா ஜனங்கள் க்ஷேமம் அடையா விட்டால், இன்னும் அதிகமாக அரசியல், நீதி சுதந்திரம் அளிக்கும்படி சர்க்காரை சட்ட ரீதியில் வற்புறுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம். நமது நியாயமான கோரிக்கைகளை அவர்களும் காலக் கிரமத்தில் பூர்த்தி செய்வார்கள் என்பது நிச்சயம்.

போது

பலவித முறைகளில் நடைபெற்று வருகிற எதிர்ப் பிரசாரத்தைக் கண்டு ஜஸ்டிஸ் கட்சியார் பயப்படப் போவதில்லை. ஜஸ்டிஸ்கட்சி இதுவரை செய்திருக்கும் ஆக்க வேலையையும், இனிமேல் செய்யக் கூடிய உருவகமான வேலையையும் மகா ஜனங்களுக்கு உள்ளது உள்ளபடி தெரிவித்துக் கொள்வது மட்டும் நமது கடமை. விஷயங்களை சீர்தூக்கிப் பார்த்து பாரபட்சமில்லாமல் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் சக்தியும், புத்தியும் மகாஜனங்களிடம் நிரம்பி இருக்கின்றன. பலவித அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் போக, மீதியுள்ளவர்களே அதிகமாக ஒவ்வொரு சமூகத்திலும் இருக்கிறார்கள். நடுநிலைமை வகிக்கிற இந்தப் பெரிய கோஷ்டியார் தான், கட்சிகளின் வெற்றி அல்லது தோல்வியை உண்டுபண்ணுகிறவர்கள். இந்த உண்மையை உணர்ந்து நியாயமான முறையில் நாம் தேர்தல் பிரசாரம் செய்து வெற்றி அடைவோமாக.

இனாம்! இனாம்!!

"ஒற்றுமை"

14-வருஷம் நடக்கிறது. வருட சந்தா ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனாம்.

ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராயநகர் மதராஸ்.

ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு விளம்பர போர்டு!

மதராஸ் பெரிய ரெயில்வே ஸ்டேஷன், மூர் மார்க்கெட்டுக்கு எதிரில் "கெய்ரோடைன்" டானிக்கைப் பற்றி ஒரு பெரிய விளம்பர போர்டு எழுதி 2-வருஷத்திற்கு ரூ. 1000 (ஆயிரம்) செலவு செய்து நாட்டியிருக்கிறோம். தயவுசெய்து அதைப் படித்துப் பாருங்கள்.

வீரிய பலத்திற்கு

உடனே பரீட்சை பார்க்கலாம்.

125 நற்சாட்சிகள் அடங்கிய பெரிய புத்தகமும், ஆறுமுகப் படமும் இனாமாக அனுப்புகிறோம்.

P. S. PATHY & CO. MADURA
TRADE MARK
TAMIL CHEMICAL WORKS

26 ஆண்டுகளாக அனுபவமுள்ள ஆறுமுக முத்திரையுள்ள உண்மையான மருந்துகள்.

5 லட்சம் புட்டிகள் விலையாகி விட்டன. பதினாயிரக்கணக்கான குடும்பங்களில் உபயோகிக்கிறார்கள்.

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்டர் செய்தது.

வீரிய பலத்திற்கு

'கெய்ரோடைன்'

தாதுபுஷ்டிக்கு "கெய்ரோடைன்" ஒரு ஆச்சரியமான மருந்து. இதைச் சாப்பிட்டால் என்றும் எதிர்பாராத அளவு மீறிய தாதுபுஷ்டியுண்டாகும். உடனே பரீட்சை பார்க்கலாம். இதனால் இரத்த விருத்தி, இரத்த சுத்தி, அளவு மீறிய தாது பலம், தேகக் குளிர்ச்சி, தேக புஷ்டி, அழகு, இந்திரியக்கட்டு உண்டாகும். வெள்ளை, மூலச்சூடு, வயிற்று வலி, வாய்வுகள், மலச் சிக்கல், உஷ்ண ரோகங்கள், இருமல், வாதம், தீர்கீர வியாதிகள் முதலிய நூற்றுக்கணக்கான ரோகங்களைக் குணப்படுத்தி பூரண தேக சௌக்கியத்தை உண்டாக்கும். யாதொரு பத்தியமுமில்லாமல் சாப்பிடலாம். பூரண சுகத்திற்கு ஒரே புட்டி போதுமானது.

80 வேளை மருந்து புட்டி 1-க்கு விலை ரூ. 5. தபால் செலவு வேறு.

விலாசம் :—

ஆர். எஸ். பதி & கோ., (Regd.).

தந்தி விலாசம் : "சித்தர்" மதுரை. 215, மேலே மாசி வீதி, மதுரை.
கிளை ஆபீஸ் : ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் கோவில், மேலைக் கோபுரம் உட்புறம், மதுரை.
சென்னை பிராஞ்சு :—51, ஆசாரப்பன் தெரு, மதராஸ்.

குமாரசஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
அண்ணாமலை
வைத்தியரின் மருந்து நிகரற்ற குணமுடையது
☞ வைத்தியர், அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை

எது?

தமிழ்நாட்டில் குறைந்த சந்தாவில்
அதிக பக்கங்களோடு வெளிவரும் தமிழ் மாதப் பத்திரிகை.

"சித்தன்"

ஒன்றே. இனிய கதைகள், நாடகம், உலகச் செய்தி, வைத்தியக் குறிப்பு, சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன நிறைந்தது.

வருட சந்தா அணா (8) எட்டே. வெளிநாடு ரூ. 1.
மாதிரிப் பிரதி இனாம். விளம்பர விகிதம் மிகவும் குறைவு.

விபரங்களுக்கு எழுதவும் :—
மானேஜர் :—"சித்தன்", பழனி, S. I.

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN, AT THE JUSTICE PRINTING WORKS, 14, MOUNT ROAD, MADRAS, EDITOR: PANDIT S. MUTHUSWAMI PILLAI

விலை அரை அணா

10 பக்கங்கள்

மலாய் நாட்டில் 5 சதம்

Regd. No. M. 3298

"விடுதலை"

வாரம் இருமுறை பதிப்பு சந்தா

உள்நாடு

1 மாதம்	...	0	6	0
3 மாதம்	...	1	0	0
6 மாதம்	...	1	14	0
1 வருடம்	...	3	10	0

சென்னைக்கு

1 மாதம்	...	0	4	0
3 மாதம்	...	0	10	0
6 மாதம்	...	1	4	0
1 வருடம்	...	2	6	0

"விடுதலை"

வாரம் இருமுறை பதிப்பு சந்தா.

வெளிநாடு

1 மாதம்	...	0	10	0
3 மாதம்	...	1	14	0
6 மாதம்	...	3	12	0
1 வருடம்	...	7	4	0

சர்க்கார், முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டுகளுக்கு:

உள்நாடு: வருடம் ரூ. 7 8 0
சென்னை: " ரூ. 4 8 0

விடுதலை

VIDUTHALAI

(வாரம் இருமுறை வெளிவரும்)

ஆசிரியர்: பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.

மலர்-2] சென்னை: (7-11-1936) தாது௵ ஐப்பசி௴ 22உ சனிக்கிழமை [இதழ்-45

பம்பாய் கலகம்! பண்டிதர் கலக்கம்!!

கொள்ளை! சூறை!! கொலை!!! குத்து!!!!

அலகாபாத் பண்டிதர் அபேதவாத ஔஷதம்

மசூதி - கோவில் மட்டமானால் மதம் மடியுமா?

மாண்டாலும் மாள்வர் - மக்கள் - மதத்தை மறவார்!

ஜாதி மதம் மலிந்த இந்தியாவில் சமதர்ம ஜம்பமேன்?

பம்பாய் நகரில் கத்தி வீச்சு! நாகபுரியில் தேசாய் வாய் வீச்சு!!

பம்பாய் நகரில் பிணக்கோலம்!

பண்டிதருக்கு தென்னாட்டில் ஊர்க்கோலம்!!

நீரோவுக்கும் நேருவுக்கும் வித்தியாசம் பேரில் தானே!

திரு. ரங்கய்யர், "ஜஸ்டிஸ்" பத்திரிகையில் எழுதியிருப்பதாவது:—

பனங்காட்டு நரியைப்போல் தோழர் பண்டிதர் ஜவஹர்லால் நேருவும் எந்த சல சலப்புக்கும் அஞ்சமாட்டா ரென்றே எண்ணியிருந்தேன். ஆனால், பம்பாய் ஹிந்து - முஸ்லீம் கலகம் கண்டு ஆசாமி கொஞ்சம் கலகலத்து விட்டாற் போல் தோன்றுகிறது!

அப்பாடா! அவர் பேசின ஜோரென்ன? அவர் பேசும் பேச்சென்ன? ஹார்னிமன் போன்ற ரோஷமுடையவர் அவர்? பிரிட்டிஷ் ராணுவத்தின் காலில் அவரா சரணடைவார்? அவருடைய அபேதவாத - சுதந்திர சுயேச்சை கொடி இவ்வளவு சீக்கிரத்திலா அடிசாய்ந்து விடும்? வாயுவேக மனோவேகமாகப் போய்க்கொண்டிருக்கும் பந்தயக் குதிரைக்கு 'சடன் பிரேக்' போட முடியுமா?

பம்பாயில் ரத்த வெள்ளம் ஓடினால் பண்டிதருக்கென்ன? "சுதந்திரம் வேண்டும். உத்தியோகம் வேண்டாம்"

என்ற பல்லவியைப் பாடிக்கொண்டிருந்தால் பகவான் விட்டவழி ஆகட்டுமே!

பிராமணியம் - தியாகமா! சேவையா!

தோழர் ஜவஹர் வகுப்புவாதம் பேசவில்லை. பம்பாய் கோவில் தகராறில் பம்பாய் ஹிந்துக்கள் மனம் கொதித்தது போலவே பண்டிதரும் மனம் கசிந்திருப்பது எனக்குத் தெரியும்.

சமதர்மம் - அபேதவாதம் பொதுவுடைமை - முதலியன பற்றி யெல்லாம் பண்டிதர் அமோகமாகப் பேசலாம்; ஆனால், தான் ஒரு ஹிந்து என்பதையும், அதிலும் பிராமணனென்பதையும் அவர் மறப்பதில்லை. நானும் பிராமணன் தான்; ஆனால், பிராமணீயம் என்பதற்கு தியாகம், சேவை என்பதே எனக்குத் தெரிந்த அர்த்தம். இக்காலத்திய பிராமணர்களும் பூர்வீக பிராமணர்களைப் போல, வேத வழியைப் பின்பற்றி தியாக புத்தியுடன் வாழ வேண்டுமென்பதே என் கோரிக்கை

மதவெறிக்கு பண்டிதர் மருந்து

இந்திய மக்கள் இவ்வாறு மத வெறி பிடித்து மண்டைகளை உடைத்துக் கொள்வதைக் காண வெட்கமாயிருக்கிறதென்று அக்டோபர் 18-ல் நெல்லூரிலும், மதம் அற்ப விஷயமென்றும், மதச் சின்னங்களான மசூதிகளையும், கோவில்களையும் இடித்துத் தகர்க்க வேண்டுமென்றும், இது விஷயத்தில் பகுத்தறிவுள்ள பொது ஜனத் தலைவர்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தைரியமாய்ச் சொல்லிவிட வேண்டுமென்றும், இந்நாடு முன்னேற வேண்டுமானால் மதவெறியர்களை மாற்ற வேண்டும், அல்லது அடக்க வேண்டுமென்றும் டெல்லியிலும் பண்டிதர் பேசியிருப்பதாக "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் படித்தேன். இந்த சாரமான பாகங்களை "ஹிந்து" பத்திரிகை பிரசுரிப்பதே இல்லை. "ஹிந்து"வே! ஏனோ இந்த மூடு மந்திரம்!

ஹிந்து—முஸ்லீம் சண்டை இன்று நேற்றையதா?

தோழர் நேருவின் மொழிகளை ஒவ்வொருவரும் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். மதம் அற்ப விஷயமென்று அவர் சொல்லுகிறார். நான் அவ்வாறு நினைக்கவில்லை. சரித்திர காலத்திலிருந்தே சமய சச்சரவுகள் உண்டு. ஆலயங்களை அழிப்பதும், விக்ரகங்களை உடைப்பதும், இன்று நேற்றுத் தோன்றியதல்ல. முஸ்லீம்கள் இந்நாட்டில் கால் வைத்தது முதல் கோவில்—மசூதி தகராறு ஆரம்பமானது. விக்ரக நிக்ரகம் முகம்மதிய மத சம்பிரதாயம். ஹிந்துக் கோவிலை இடிப்பது தன் கடமை யென்றே கஜினி முகமது சோமநாதபுர ஆலயத்தை இடித்தார். கோவிலைக் காப்பதே தங்கள் கடமை யென்று எண்ணித்தான் பல ஹிந்துக்கள் சோமநாதபுர ஆலய வாசலில் உயிர் துறக்கவும் துணிந்தனர். கடவுள்களிடையிலும் பொறாமையும், சச்சரவும் உண்டு! ஒரு காலத்தில் ஐரோப்பாவில் கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் சதா சண்டையிட்டு வந்தனர். அதே போல்தான் இன்று இங்கே ஹிந்து — முஸ்லீம் சண்டை நிகழ்கிறது. கோவில்களையும், மசூதிகளையும் இடித்து விடுவதாலேயே பல்லாண்டுகளாக பாசடைந்து ஊறிப்போயிருக்கிற மத பக்தியை அழித்துவிட முடியுமா?

மத சுதந்திரமே அரசாங்க அஸ்திவாரம்

மதம், பக்தி, மோட்சம் என்றே சதா தவம் செய்துகொண்டிருந்தனர் நம் 'ரிஷிகள்'. காணக்கிட்டாத கடவுளின் அனுக்கிரகம் பெறலாம் என்ற நம்பிக்கையின் பேரில் மற்றைய ஹிந்துக்கள் போலவே நானும், காசி முதலிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போவதுண்டு. எனக்கு மத நம்பிக்கை இருப்பதால்தான், சமதர்மம், அபேதவாதம், பொதுவுடைமை ஆகிய சுலோகங்களை எதிர்க்கிறேன். மத நம்பிக்கையால்தான் மன சுத்தியும், மனோ சாந்தியும், மன மகிழ்ச்சியும் உண்டாகும். படிப்பில்லா பகுத்தறிவில்லாப் பாமர மக்களுக்கும் பரமானந்த மளித்துக்கொண்டு வந்திருப்பதும் மத நம்பிக்கை தான்.

அவனவனிஷ்டம் போல், அவனவன் மதத்தை அனுஷ்டிக்கலாமென்று அனுமதித்திருப்பதால்தான் அன்னிய ஆங்கில அரசாட்சியின் அஸ்திவாரம் ஆட்டம் கொடுக்காமலிருக்கிறது.

மதமில்லை - விலங்கில்லை

தோழர் நேரு சொல்லுவதுபோல் மதம் அழிந்தால பிரிட்டிஷ் சர்க்கார் இந்நாட்டில் நிலைக்காது. ஹார்னிமனும் பிரிட்டிஷ் ராணுவத்தின் காலில் விழவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. மத விடுதலை அடைந்த அடுத்த நிமிஷத்தில் தேசம் அரசியல் விடுதலையைப் பெற்றுவிடும். நம்மைப் பிணித்துக் கொண்டிருக்கிற விலங்குகளும், சங்கிலிகளும் நம்முடையதே யல்லாமல் ஆங்கிலேயரிட்ட தல்லவே அல்ல. புது சீர்திருத்தத்திலுள்ள அவ்வளவு பாதுகாப்புகளும் நம் புத்தியீனத்தால் ஏற்பட்டதுதான். இந்த லட்சணத்தில் வைஸ்ராயை பகிஷ்கரிப்பதாலும், அசெம்பிளி முஸ்லீம்கள் காங்கிரஸ் கட்சியோடு சேர்ந்து எத்தனைதரம் வோட் செய்தார்களென்பதை பம்பாயிலிருந்து "பாஞ்சசென" மைல்களுக்கப்பாலுள்ள நாகபுரியில் புலாபாய் தேசாய் விரல்விட்டு எண்ணிக் கொண்டிருப்பதாலும் விளையப் போகும் பலனென்ன?

மாதா வயிறெரிய மகேஸ்வர பூஜையா?

"ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமை - தேசாய் வேண்டுகோள் - இந்தியாவின் தேவை"

என்ற தலையங்கமிட்டு நாகபுரி காங்கிரஸ் பத்திரிகை ஒன்று, அசெம்பிளி காங்கிரஸ் கட்சித் தலைவர் புலாபாய் தேசாயின் அக்டோபர் 18-ந்தேதி பிரசங்கத்தைப் பிரசுரித்திருக்கிறது. இதைக் காண ஒரு கதை ஞாபகத்துக்கு வருகிறது. ரோமாபுரியை ஒரு காலத்தில் நீரோ என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவன் மகா மதோன்மத்தன். ஒரு நாள் அவனுடைய பகைவர்கள் ரோமாபுரியின் மேல் படையெடுத்து வந்து, முற்றுகை போட்டு, கடைசியில் பட்டணத்திற்கே நெருப்பை வைத்து விட்டனர். உயிர் பிழைத்தால் போதுமென்று மக்கள் ஊரைவிட்டு ஓடிக்கொண்டிருந்தனர். அப்பொழுதுங் கூட அந்த 'ஆட்டமன் ராஜா' அரண்மனையில் வீணாகானம் செய்து கொண்டிருந்தானாம்! இந்த நீரோவுக்கும் நேற்று இங்கு வந்து போன நேருவுக்கும், அந்த தேசாய்க்கும் எந்த விதத்தில் வித்தியாசமென்று எனக்கு விளங்கவே இல்லை. வெள்ளைக்கார கவர்னருக்கிருக்கும் அக்கரையும், அபிமானமும் கூட, இந்த தேசபக்த சிகாமணிகளுக்கில்லையே? பம்பாய் நகரில் கொள்ளை! கொலை! சூறை! கழுத்தறுப்பு! கண்டதுண்டம்! ரத்த வெள்ளம்! ரணகளம்! தேசபக்தப் புலி தேசாய் எங்கே? நாகபுரியில் அதிகப் பிரசங்க அளப்பா? விடுதலை வீரச் சிங்கம் நேரு எங்கே? தென்னாட்டில் திக்விஜய குதிப்பா! மாதா வயிறெரிய 'ஒரு மடையன்' மகேஸ்வர பூஜை பண்ணினானாம்.

"உடன் பிறவா மாமலையிலுள்ள மருந்தே பிணி தீர்க்கும்" என்பது போல் வெள்ளைக்கார அன்னிய ஆங்கிலேய கவர்னர்,

மைசூர் தசராவுக்குப் போய்க் கொண்டிருந்ததையும் கை விட்டு, ஹோம் மெம்பருடன் ஓடோடியும் பம்பாய் சென்று, கல்லெறிக்கும், தடியடிக்கும், கத்திக் குத்துக்கும் இடையே நுழைந்து இருதரப்பின் தலைவர்களையும் சந்தித்து கலகத்தை ஒருவாறு அடக்கி விட்டார்.

வைஸ்ராயைப் பகிஷ்கரித்த புலாபாய் 'புலி' பட்டாக் கத்தி வெட்டுக்குப் பயந்து பம்பாய் கலகத்தையும் பகிஷ்கரித்து விட்டார் போலும்! காங்கிரசில் முதுகெலும்பில்லா மாமிச பிண்டங்கள் பல உண்டு. அக் கூட்டத்திற்கு புலாபாயே அக்கிராசன ரென்று சொல்ல வேண்டும். அவருக்குக் கொஞ்சமாவது தேசாபிமானம், தைரியம், இருக்குமானால், ஆக்டிங் இந்திய கவர்னரைத் தாக்குவதை விட்டு, பம்பாய்க்குச் சென்று கலகத்தை அடக்க கவர்னருக்கு வேண்டிய உதவி செய்திருக்க வேண்டும். ஆறாயிரம் மைலுக்கப்பாலிருந்து வந்த அன்னிய தேசத்தவரான ஆங்கிலேய கவர்னருக்கிருந்த மனுஷாபிமானம் கூட, இந்நாட்டில் பிறந்து, இந்நாட்டில் வளர்ந்த, பம்பாய் நகரவாசியான புலாபாய் தேசாய்க்கில்லாமல் போய் விட்டதே? மண்டைகளுடையுமிடத்திற்குப் போகக் கூடாதென ஒத்துழையாமை விரதம் பூண்டு விட்டாரா? பம்பாயில் தும்சம் கிளம்பும்போது ஜவஹர்லாலுக்குத் தென்னாட்டிலென்னவேலை? பம்பாய்த் தெருவில் பிணக்கோலம்! பண்டிதருக்குத் தென்னாட்டுத் தெருவில் மணக்கோலமா? பம்பாய் வாசிகள் துக்கம்! பம்பாய் காங்கிரஸ் கமிட்டிக்குத் துக்கமா? ஹிந்து-முஸ்லீம் "ஒற்றுமை ஒற்றுமை. ஒற்றுமை" என்று ஹிதோபதேசம் செய்வது தானே? சகோதரத்துவம் பற்றி சங்கீதம் பாடுவது தானே?

பசித்தவன் பழங் கணக்குப் பார்த்தானாம்!

பம்பாயில் ஹிந்துக்களும் - முஸ்லீம்களும் கத்தி வீச்சு வீசிக்கொண்டிருக்கும் போது, அசெம்பிளியில் நடந்த ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை நாடகம் பற்றி வாய்வீச்சு வீசுவதாலென்ன பயன்? நாற்பது தடவை முஸ்லீம்கள் காங்கிரஸ் கட்சியோடு சேர்ந்து வோட் செய்தார்களாம். 'பலே! அப்புறம்?' அசெம்பிளியிலுள்ள 33 முஸ்லீம்களில் 25-பேர் காங்கிரஸ் கட்சியை ஒரு தரம் கூட காட்டிக்கொடுக்கவே இல்லையாம். "பலே பலே! புலாபாய்!" பசித்தவன் பழங்கணக்கு பார்த்தது உமக்கே பொருத்தம்! டில்லி அசெம்பிளியில் ஒருவரோடொருவர், "ஒற்றுமை. ஒற்றுமை" யென்று உரக்க கொண்டாகப் பிதற்றிக் கொள்ளும் "தேச பக்த தென்ன மணிகளான" தேசாயும், ஜின்னாவும் பம்பாய்க்குப் போய் ஒற்றுமைப் பிரசங்கம் செய்யாமல் எங்கே போய் ஒளிந்தனர்? பிரிட்டிஷ் சர்க்காரை எதிர்த்த, "ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமைப் புலிகள்" பம்பாய் வாசிகள் பிரிட்டிஷ் ராணுவத்தின் காலில் விழுந்து விழுந்து எழுந்திருக்கும்போது, எங்கே போய் மறைந்தன? பிரிட்டிஷ் ராஜ்யம் ஒழிந்து, தோழர். நேரு கோரும் ராஜ்யம் ஏற்படும் காலத்தில் இத்தகைய வகுப்புக் கலகங்கள் ஏற்பட்டால் அதை "எந்த ராணுவம்" கொண்டு அடக்குவது? குஷியாகிற் போல் ஒருவரை யொருவர் கட்டிக் குத்திக் கொன்று கொள்வதா?

அடக்குமுறை அமுலா?

இந்திய மக்கள் சம்மதமின்றி ராணுவ பலத்தால், பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவை ஆளுகின்றன ரென்று புலாபாய் தேசாய் சொல்லுகிறார். மத வெறியர்களை அடக்கி கோவில்களையும், மசூதிகளையும் இடி

(இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

திருச்செங்கோடு முதல் ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு

வரவேற்புக் கழகத் தலைவர்

திரு. எம். விசுவநாத முதலியார் பேருரை

அன்புள்ள சகோதர சகோதரிகளே!

திருச்செங்கோடு தாலூகா முதல் ஜஸ்டிஸ் மகாநாட்டின் வரவேற்புக் கழகத்தின் சார்பாக உங்கள் அனைவருக்கும் நல்வரவு கூறும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது பற்றி நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

தோழர்களே! நமது நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கு முயற்சியெடுத்து எக்காலும் உழைத்து வரும் உங்கள் அனைவரையும் வரவேற்கும் பாக்கியத்தை நான் அடைந்தது பற்றியும், அந்தப் பொறுப்பை எனக்குக் கொடுத்து பெருமைப் படுத்திய வரவேற்புக் கமிட்டியாருக்கும், குறிப்பாக உங்களனைவருக்கும் என் மனமார்ந்த வந்தனம் உரியதாகுக.

இது ஒரு தாலூகா மகாநாடேயானாலும், நமது கட்சியின் மாபெருந் தலைவரான மாட்சிமை தங்கிய எம் பொப்பிலி ராஜா அவர்கள், தமது அனைவர்களுடன் இங்கு விஜயம் செய்திருப்பது நமது தாலூகா மகாநாட்டின் பெருமையை சிறப்பாக எடுத்துக் காட்டுவதாகும். நமது கட்சியின் பெரும் புகழினால் ஏற்படும் இச்சிறப்பினால் இந்நகரவாசிகளும், இத்தாலூகா வாசிகளும் பற்பல பாகங்களிலிருந்து வந்திருக்கும் மற்றையோர்களும் மகிழ்ச்சி யடைந்திருப்பது மட்டுமின்றி ஒருவித புது உற்சாகத்தை அடைந்தவர்களாகிறோம். இந்த சந்தர்ப்பத்தில் நமது கட்சியைத் தோற்றுவித்த தலைவர்களான காலஞ்சென்ற சர். பி. தியாகராய செட்டியார், டாக்டர் டி. எம். நாயர் அவர்களையும், அதை உன்னத நிலைமைக்குக் கொண்டு வந்த காலஞ்சென்ற பனகால் ராஜாவையும் நமது மனக்கண்ணால் பார்க்கிறோம். அவர்களுடைய அரிய முயற்சிகளினாலன்றோ நாம் இன்று சென்னை மாகாணத்தில் ஒரு கட்டுப்பாடான கட்சியாக இருந்து வருகிறோம் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவர்களுடைய அரசியல் ஞானபோதமே இம்மாகாணத்தில் நாம் நமது உரிமைகளைக் காத்து நன்மைகளை அடைவதற்கு சிறந்த வழியாக இருந்து வருகிறது. இன்றைக்கு இவ்விந்திய நாட்டிலுள்ள கட்சிகளுள் கட்டுப்பாடும், ஒழுங்கான ஏற்பாடும் உள்ளதும், மக்களுக்கு உண்மையாகப் பாடுபடுவதும், மிக உயர்ந்த கொள்கைகளை உடையதுமான கட்சி எதுவென்றால் அது ஜஸ்டிஸ் கட்சியேயன்றி வேறொன்றும் இல்லையெனலாம்.

நமது கட்சி செய்த நன்மைகள்

நமது கட்சியின் பொதுவான புகழ் ஒரு புற மிருக்கட்டும். சென்ற இருபது வருட காலத்திற்குள் நமது கட்சி மக்களுக்குச் செய்திருக்கும் நன்மைகள் ஒவ்வொன்றும் தனித் தனியே மற்றெந்த மாகாணத்திலும் வேறெந்தக் கட்சியும் செய்தறியாத ஓர் சிறப்பு வாய்ந்தது என்று தைரியமாகச் சொல்லுவேன். பெண் மக்களுக்கு ஓட்டுரிமையும், ஸ்தல ஸ்தாபனங்களில் ஸ்தானமும், அது போலவே தாழ்த்தப் பட்டவர்களுக்கு எல்லா வசதிகளும் அளிக்கப்பட்டதும், நாட்டு வைத்திய முறைகளுக்கு ஆங்கில முறைகளுக்குள்ளது போன்ற யோக்கியதையும் அங்கீகாரமும் அளிக்கப்பட்டதும், தேவஸ்தான பரிபாலன சட்டம் இயற்றி நமது கோவில்களுக்குப் போதிய பரிபாலிப் பளித்தது, தேவதாசி முறையைத் தடுத்து விபசாரத்தை ஒழித்ததும் கூட்டுறவு சங்கங்கள், நில அடமான பாங்குகள், கிராம பொருளாதார கௌன்ஸில் முதலிய ஸ்தாபனங்கள் மூலம் விவசாயிகளின் முன்னேற்றத்தைப் பெருக்கியதும் முடிவார மசோதா எஸ்டேட் கின மசோதா, இனாம் மசோதா முதலியவற்றால் குடியானவர்களுடைய அந்தஸ்தை சிறப்பித்ததும், வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் என்ற நமது கட்சியின் ஒப்பற்ற கொள்கையினால் சகல சமூகங்களும் சகல துறைகளிலும் மேன்மையடைந்ததும் நமது கட்சியின் அருஞ்செயலாலே என்பதை நமது எதிரிகளும் ஒப்புக்கொண்ட விஷயங்களாகும்.

அன்பர்களே! இத்தனை சிறப்பும் வாய்ந்த நமது கட்சிக்கு எதிர்ப்பு இக்காலத்திலும் இருந்து வருவது ஆச்சரியமான தெனினும் வருந்தத் தக்கதாயிருக்கிறது. மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தக் கால முதற்கொண்டு இன்றுவரை [மத்தியில் சிறிது காலந் தவிர] நமது கட்சியார் அரசியல் நிர்வாகத்தில் ஆட்சி புரிந்து பொது ஜனங்களுக்கும் சிறப்பாக பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்களான நமக்கும் எவ்வளவோ நன்மைகளைச் செய்தும், மற்றும் சமய சமூக பொருளாதார விஷயங்களிலும் நமது முன்னேற்றத்திற்கான அநேக சவுகரியங்கள் செய்தும், அவற்றின் பயனாக மிதமிஞ்சிய பார்ப்பன ஆதிக்கத்தை எல்லாத் துறைகளிலும் ஒழித்து வந்த காரணத்தால் சுயநலம், வகுப்பு நலம் இவை இரண்டினுமே கண்ணும் கருத்துமாயிருக்கும் பார்ப்பனர்கள் எதிரிகளாக மாறி நம்மவர்களில் சிலரைப் பார்ப்பன தாசர்களாக்கி தமது சுயநலம், வகுப்பு நலம் இவற்றை மறுபடியும் பெருக்கிக் கொள்ள பலவித இழிவான சூழ்ச்சிகளைக் கையாடி வருகின்றனர். இச் சூழ்ச்சிகளுக்குச் சில கூலிப் பத்திரிகைகளும் மற்றும் சில பிரபலப் பத்திரிகைகளும் உதவி புரிந்து வருகின்றன. இவை யெல்லாவற்றிற்கும் தேசியம் என்னும் போர்வை மறைப்பாக இருந்து பாமர மக்களின் திருஷ்டிக்குப் படாமல் இந்த துராத்மாக்கள் நல்லவர்களைப் போலவே காட்டி வருவதால் இந்த போலித் தேசியத்தின் போர்வையைக் கிழித்துப் போடுவதே நமது முதல் வேலையாகும்.

தேசிய வாதிகள் யோக்கியதை

இந்தப் போலித் தேசிய வாதிகள் யார்? இவர்களுடைய அந்தரங்க எண்ணந்தான் என்ன? என்பதை நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டுமாயின் நமது மாகாணத்திலுள்ள காங்கரஸ் கட்சியை உற்று நோக்குங்கள். நமது கட்சியின் முன்னேற்றத்தினால் சுயநலத்தை பெருக்கிக் கொள்ள முடியாமல் தவிக்கின்ற பார்ப்பனர்களும், பார்ப்பனரல்லாதாரில் பதவி வேட்டைக்கு ஜஸ்டிஸ் கட்சியை அனுசரணையாக்கிக் கொள்ள முயன்று ஏமாந்து கட்சி விட்டு கட்சி மாறிய சுயநலப் புலிகளும், பொதுஜன உழைப்பை பயன்படுத்திக் கொள்ள சேர்ந்திருக்கும் காலணா மெம்பர்களும் தவிர வேறு உண்மையானவர்கள் இந்த சென்னை மாகாண காங்கரசில் யாவர் உளர்? வட இந்தியக் காங்கரஸ் தலைவர்களைப் பற்றி நாம் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. வட இந்தியக் காங்கரஸ் தலைவர்களுடைய மதிப்பில் ஆயிரத்தில் ஒரு பங்கு மதிப்புடன் இருக்கும் ஒரு தலைவராவது இத் தமிழ்நாட்டு காங்கரசிலே உளரோ? இல்லையே. இவர்களது பதவி வேட்டைக்கும் பொதுஜன நிதித் திருட்டிற்கும் வேறெங்கும் உதாரணம் நாம் எக்காலத்தும் கண்டிலோம். இவர்கள் பாமர மக்களை காந்தியின் பெயரால் ஏமாற்றி, கதர் வேஷத்தால் மயக்கி, வட இந்தியத் தலைவர்களின் தென்னிந்திய சுற்றுப் பிரயாணத்தால் அறிவை இழக்கச் செய்து தாம் நினைக்கும் காரியத்தை முடித்துக் கொள்ளுகின்றனர். உண்மையை ஆராய்ந்து வெளிப்படுத்தினால் சீறி விழுகின்றார்கள். வெளிப் படுத்துவோரை தூஷிக்கவும் தொடங்கி விடுகிறார்கள். இப்போலித் தேசிய வாதிகள் நம்மை வகுப்பு வாதிகள் என்றும், தேசத் துரோகிகள் என்றும், உத்தியோக வேட்டைக்காரர்கள் என்றும் ஓயாமல் விஷமப் பிரசாரம் செய்து வருகிறார்கள். ஆகையால், இதைச் சிறிது ஆராய்ந்து பார்ப்பது மிகவும் அவசியமாகிறது. நமது அரசாங்க நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளுங்கள், குடிகள் சர்க்காருக்குச் செலுத்திவரும் வரித் தொகையைக் கொண்டே அரசாங்கம் நடைபெறுகிறது. வரி செலுத்தப்படாவிட்டால் அரசாங்கம் நடைபெற இயலாது. குடிகளுடைய வரிப்பணத்தால் அரசாங்கம் நடைபெறுவதால் அரசாங்க நிர்வாகத்தில் வரி கொடுப்போர் நிர்வாகம் வகிக்கப் பாத்தியம் ஏற்படுகிறதென்பதை மறுக்கமுடியாது. நமது இந்திய அரசாங்கம் நாம்செலுத்தும் வரிகளைக் கொண்டே நடைபெறுவதால் இவ்விந்திய அரசாங்கத்தின் நிர்வாகம் இந்திய மயமாயிருக்க வேண்டியது அவசியம்; இதுவே காங்கரசின் கிளர்ச்சி என்பதை நீங்கள் அறிவீர்கள். அதுபோலவே நமது சென்னை அரசாங்கத்திலும் வரி கொடுப்போரே நிர்வாகம் வகிக்க உரிமை உடையோராவர். சென்னை மாகாணத்தில் மொத்த வரி சுமார் 1755 லக்ஷம். இதில் பார்ப்பனர்கள் சுமார் 40 லக்ஷம் ரூபாய் மட்டுமே வரியாகச் செலுத்துகிறார்கள். பாக்கி 1715 லக்ஷம் ரூபாயும் பார்ப்பனரல்லாதாரான நாமே வரிகளாகச் செலுத்தி வருகிறோம். ஆனால், அரசாங்க நிர்வாகத்தில் பார்ப்பனர்களே மித மிஞ்சிய ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள் என்பது வெள்ளிடை மலை. அதைப் பின் வரும் புள்ளி விபரங்களாலும் அறியலாம்.

இந்தியன் வரி செலுத்துவதால் நடைபெறும் இந்திய அரசாங்கம் இந்திய மயமாய் இருக்க வேண்டும் என்ற காங்கரசின் கிளர்ச்சியையே நமது கட்சியாரும் எடுத்துக் கொண்டு பெரும்பான்மை வரி செலுத்தும் பார்ப்பனரல்லாதாரின் வரிப் பணத்தைக் கொண்டே சென்னை அரசாங்கம் நடைபெறுவதால் இந்த அரசாங்க நிர்வாகத்தில் பெரும்பான்மையோர் பார்ப்பனரல்லாதாரே இருக்க வேண்டுமென்றால் இதில் என்ன கொள்கை வித்தியாசம் வந்து புகுந்து கொண்டு உத்தியோக வேட்டையாக மாறிற்று என்று கேட்கிறேன். அன்பர்களே தயவு செய்து யோசியுங்கள்.

பார்ப்பனர் பகற் கொள்ளை

இன்னொரு விஷயம் மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பார்ப்பனர்கள் செலுத்தும் வரி யெல்லாம் சுமார் 40 லக்ஷம் மட்டுமே. ஆனால், அரசாங்க உத்தியோகத்திலிருக்கும் பார்ப்பனர்கள் சம்பளமாக அரசாங்கத்தினிடமிருந்து திருப்பிப் பெறுவது சுமார் 163-லக்ஷம் ரூபாய்கள். (அதாவது கொடுப்பதைவிட நான்கு மடங்கு திருப்பிப் பெறுவது) இதுவா நியாயம்? இதைக் கண்டித்தால் வகுப்புவாதம் என்கிறார்கள். பார்ப்பனரல்லாதாரோ அரசாங்கத்திற்கு வரியாகக் கொடுப்பது சுமார் 1715 லக்ஷம் ரூபாய்கள். ஆனால், அவர்கள் அரசாங்க உத்தியோகத்தில் சம்பளமாகத் திருப்பிப் பெறுவது 10-ல் ஒரு பங்குக்கும் குறைவாக சுமார் 159 லக்ஷம் ரூபாய்களே. (அதாவது பார்ப்பனர் பெறுவதைவிட 40 பங்கு குறைவாக) ஜனத்தொகை விகிதாசாரமாகப் பார்க்கப்புகின் நம்மவர் நிலைமை இன்னும் கேவலமாயிருக்கிறது. பார்ப்பனர் சராசரி தலை ஒன்றுக்கு 18-ரூபாய் விகிதமும் பார்ப்பனரல்லாதார் தலை ஒன்றுக்கு நாலணா விகிதமும் பெற்று வருகிறார்கள். சுயமரியாதையுள்ள எந்த தேசிய வாதி தான் இதைக் கண்டிக்காமல் இருப்பான் என்று கேட்கிறேன். மற்ற நாட்டில் ஒவ்வொருவருடைய சராசரி வருமானத்தையும், இந்திய நாட்டிலுள்ள ஒவ்வொருவருடைய சராசரி வருமானத்தையும் ஒப்பிட்டு முதலைக் கண்ணீர் விடும் போலித் தேசிய வாதிகள் இதற்கு என்ன பதில் அளிக்கப் போகிறார்களெனக் கேட்கிறேன்.

சர்வம் பார்ப்பன மயம்

இது மட்டுமோ? உயர்ந்த மதிப்பும், அதிகச் சம்பளமும், அதிகாரமும் உடைய உத்தியோகங்கள் எல்லாம் சொற்பவரி செலுத்துவோரும், சிறுபான்மை சமூகத்தாருமான பார்ப்பனர்கள் அனுபவித்து பார்ப்பனரல்லாத ஏழை மக்களின் வரிப் பணத்தை வாயில் கொட்டிக் கொள்ளுகிறார்கள். போதாக்குறைக்கு சுதேச சமஸ்தானங்களிலும் நுழைந்து ஆங்காங்கு ஏழை மக்களின் வரிப் பணத்தில் கைவைத்து விடுகிறார்கள். அதிக வரி செலுத்தும் பெரும்பான்மை சமூகத்தாரான பார்ப்பனரல்லாதாரோ கேவலமான உத்தியோகங்களிலும், மதிப்பும் அதிகாரமுமில்லாத உத்தியோகங்களை ஒப்புக்கொண்டு ஏமாந்த சோணகிரிகளாக இருந்து வருகிறார்கள். அந்தோ! இதை எல்லாம் ஒழுங்கு படுத்தவே நமது கட்சியார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் திட்டம் ஏற்படுத்தி அமுலுக்குக் கொண்டு வந்திருக்கின்றனர். எனினும், காரியபலன் இன்னும் வந்தபாடில்லை. பன்னிரெண்டு ஸ்தானங்களுக்கு இரண்டு ஸ்தானங்கள் பார்ப்பனர்களுக்கு என்றிருக்கும் திட்டத்தை ரத்துச் செய்து ஒரே ஒரு ஸ்தானம் கொடுத்தால் தான் இன்னும் சுமார் 15- அல்லது 20-வருடங்களில் காரிய பலன் கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியும். முன் சொல்லியபடி 40 லட்சம் கொடுப்பவர்கள் 163 லட்சம் பெறுவதை ஆட்சேபித்து, 1715 லட்சம் கொடுப்பவர்கள் 159 லட்சம் பெறுவது போதாது. இன்னும் அதிகமாகப் பெறுவது தான் நியாயம் என்று நமது கட்சியார் சொன்னால் அது தேசத்துரோகமாம்! உத்தியோக வேட்டையாம்!! இதை உத்தியோக வேட்டை என்று சொல்லுபவர்களுக்கு மண்டையில் ஏதோ கோளாறுதான் ஏற்பட்டிருக்க வேண்டுமென்பதில் சந்தேகமேயில்லை என்பேன். இதை பாமர மக்கள் அறியாமலிருக்கும் பொருட்டு இந்தப் பார்ப்பனர்கள் தமது விஷமப் பிரசாரத்தின் மூலம் ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் தான் ஆயிரம் ஆயிரமாய் ஏழைகளின் பணத்தைச் சம்பளமாகப் பெறுகிறார்கள் என்று சொல்லி வருகிறார்கள்! நமது கட்சி மந்திரிகளும் இவர்களுடைய நெருங்கிய சுற்றத்தார்களுமே அரசாங்கத்திற்குச் செலுத்தும் வரிப்பணத்தில் இவர்களுடைய சம்பளம், படிச் செலவுகள் 20-ல் ஒரு பங்குகூட ஆவதில்லை என்பது திண்ணம். பார்ப்பனர்களே ஏழை மக்களின் வரிப்பணத்திலிருந்து வருஷா வருஷம் 163லட்சம் ரூபாய்கள் விழுங்கி வருகிறார்கள் என்பதை அன்பர்களே அறியுங்கள்.

திரு. எம். விசுவநாத முதலியார்.

இவற்றை எடுத்துக் காட்டுவதைப்பற்றி இந்த பார்ப்பன— பார்ப்பனரல்லாதார் கிளர்ச்சியையே அடிப்படையாகக் கொண்ட வகுப்புவாதக் கட்சியே நமது ஜஸ்டிஸ் கட்சி யென்பர் சில அறிவிலிகள். நமது கட்சி பார்ப்பனர் உள்பட சகல சமூகத்தாருக்கும் விகிதாசாரப்படி உரிமைகளை அளித்துக் காக்க விரும்புகிறதென்பதை இங்கு அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன்.

"புலவர்" புலம்பல்

ஒரு "புலவர்" இன்னும் அதிகமாகச் சென்று தமிழர் வாழ்க்கை, மொழி, நாகரீகம், கௌரவம் முதலியவற்றின் சிறப்பிற்கெல்லாம் பார்ப்பனர்களும் காரணர்களாயிருப்பதால் அவர்களை இழித்துக் கூறுவது தமிழர் நாகரீகத்திற்கே தற்கொலை செய்வது போலும் என்றும், "பிராமணீயத்தை" வெல்லும் அழித்துவிட முடியாதென்றும், அழிக்க முயலவும் கூடாதென்றும் வாய் நீண்டவரை பேசி, நம் நாட்டிற்கு வரப்போகும் ஒப்பற்ற சுதந்திரத்தின் பெருமையும் "அந்தண்மை"யினால் தான் வரப்போகிற தென்றும், பிதற்றி வருகிறார். அவரால் சிறப்பிக்கப்பட்டுள்ள பிராமணர்களான இராம கிருஷ்ண பரமஹம்சர், தயானந்த சரஸ்வதி, ராஜாராம் மோகன்ராய், திலகர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசர், அருணந்தி சிவாச்சாரியார், உமாபதி சிவம், சங்கரர், ராமானுஜர், மத்வர், தொல்காப்பியர், பரிமேலழகர், முதலியப் பெரியார்களின் பெயரை இக்காலம் பெயரளவில் பிராமணராக இருந்து வரும் பார்ப்பனர்களுடன் சரியாக வைத்துப் பேசுவதற்கு இவர் மனம் கூசாதது என்ன காரணமோ அறிகிலோம். பிரமத்தை உணர்ந்த அப்பெரியார்களின் தன்மையை யார்தான் அளவிட முடியும்? கேவலம் ஜாதித் திமிர் பிடித்து இருமாந்து தமது உடன் பிறப்பாளர்களாகிய மற்ற மக்களை பல வழிகளிலும் வஞ்சித்து வயிறு வளர்த்து வரும் ஒரு கூட்டத்தாரை அப்பெரியோர்களுடன் சேர்த்து மாசு படுத்தும் மடமையை என்னென்று சொல்வது. இன்னும் பார்ப்பன சூழ்ச்சியால் பலர் ஏமாந்து மயங்கியிருப்பதைக் குறை கூறுவதினின்றும் பழந் தமிழ் மன்னர்களையும், புலவர்களையும் அறிவிலிகளாகக் கூறுவதாகத் திரித்துக் கூறும் அவர்களின் வன்னெஞ்சத்தின் ஆழம் தான் என்னே! தமிழர் நாகரீகம் வாழ்க்கை; இலக்கிய இலக்கணச் சிறப்பு; சமய சமூக பாத்தியம் முதலியவற்றை அறியாத அறிவிலிகள் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று திரியும் தான் தோன்றித் தம்பிரான்களாய் பழந் தமிழ் நாட்டு "அந்தண்மை"யை இக்காலப் பார்ப்பனத் தன்மையுடன் ஒன்றுபடுத்த முனைந்து நிற்பது ஆரிய நாட்டில் வழங்கிவந்த அநுலோமத்துடன் சேர்ந்ததாகுமேயல்லாது வேறல்ல வென்போம்.

வரப்போகும் போர்

அன்பர்களே! பார்ப்பனக் கூலிகளின் படுமோசங்களடங்கிய ஆபாசப் புராணங்களில் வெளி வருவனவற்றை ஆங்காங்கு மறுப்புகளால் வெளியாக்க விட்டு விட்டு நமது கட்சியார் இப்போதுள்ள நிலைமையில் என்னென்ன செய்ய வேண்டியது என்பதைப்பற்றி ஆராய வேண்டியிருக்கிறது. எனினும், உங்களது அரிய காலத்தை இன்னும் அதிகமாகச் செலவிட நான் விரும்புகிலேன். அடுத்தாற்போல வரும் ஜில்லா போர்டு தேர்தல்களிலும், மாகாண சட்டசபைத் தேர்தல்களிலும் நம்முடன் காங்கரஸ் கட்சி கடுமையாகப் போராட முன் வந்திருக்கிறது. ஏற்கனவே, காங்கரஸ் கைப்பற்றியுள்ள சிற்சில ஸ்தல ஸ்தாபனங்களில் ஊழல்கள் மலிந்து பொது ஜனங்களின் நன்மை பாதிக்கப்பட்டிருக்கிறது கண்கூடான விஷயம். காங்கரசினால் பொது ஜனங்களுக்கு விளையும் அளவிலாத் தீமைகளை முளையிலேயே களைந்து அரசியல் நிர்வாகத்தைச் சரிவர நிலைநிறுத்தி மக்களுக்கு நன்மையை உண்டு பண்ணாவிடில் நமது நாடே பாழ்த்துப் போகுமென்பதில் சந்தேகமேயில்லை. ஆகையால், இந்தப் போலித் தேசிய வாதிகளான சுயநலமிகளை பொது வாழ்க்கையிலிருந்து வெளியேற்றி பொது நன்மைக்காகப் பாடுபடும் நமது கட்சியார் அரசியலில் வெற்றியடைய வேண்டியது அவசியம். அதற்குத் தடையாக இருக்கும் எந்தக் கட்சியையும் எதிர்த்துப் போராடியே தீரவேண்டும். ஆகையால், அன்புள்ள தோழர்களே! உங்கள் கடமை இச்சமயம் மிகப் பெரியதானது என்பதை உணருங்கள். இந்தக் கடமையை சரிவர நிறைவேற்றி வைக்கும் விஷயத்தில் உங்களுக்கு ஆலோசனை கூறி எல்லா ஒத்தாசைகளும் செய்வதற்கு தகுந்த அறிவும், ஆற்றலும், போதிய அனுபவமும் ஒருங்கே தம்முட்கொண்ட பெரியார் உயர் திருவாளர் ராவ் சாஹேப் என். என். பொன்னைய கவுண்டர் அவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுடன் இத் தாலூகாவிலுள்ள பெருங்குடி மக்கள் அனைவருக்கும் பிரதிநிதிகளாக வந்திருக்கும் நீங்கள் பூரண சகோதரத்துவ உணர்ச்சியுடன் ஒத்துழைக்கவேண்டி உங்கள் அனைவரையும் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். எங்கள் வரவேற்பை ஏற்று இம் மகாநாட்டின் தலைவரைத் தேர்ந்தெடுப்பீர்களாக. ஜஸ்டிஸ் கட்சியின் நிறைசீர் ஓங்குக.

நன்றி

தோழர்களே! இன்று நமது கட்சி தீவிரமான வேலை செய்வதற்கேற்ற தீர்மானங்களைச் செய்து சமூகம் சிறப்படைவதற்கான வழிகளைக் காணவேண்டியது உங்கள் கடமை யென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இம் மகாநாட்டைச் சிறப்பிக்க விஜயம் செய்துள்ள உங்களனைவருக்கும் மீண்டும் நல்வரவு கூறுகிறேன். இன்று இம் மகாநாட்டிற்குத் தலைவராக விஜயம் செய்துள்ள தோழர், ராவ் சாஹேப் என். என். பொன்னைய கவுண்டர் அவர்களும், மற்ற தலைவர்களும் என்றும் நமது கட்சியின் நலனைப் பாதுகாக்க வேண்டுமென்றும் அவர்களது உழைப்பு நல்ல பயன் தரவேண்டுமென்றும் ஆசைப்படுகிறேன். எங்களது அழைப்பிற்கிணங்கி ஈண்டு வந்துள்ள அனைவருக்கும் வரவேற்புக் கழகத்தின் சார்பாக உள்ளன்போடு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு இத்துடன் எனது வரவேற்பு பிரசங்கத்தை முடித்துக் கொள்ளுகிறேன்.

அறிவிப்பு

(1) தமிழ் நாட்டிலுள்ள முக்கிய பட்டணங்களில் எல்லாம் நமக்கு நம்பிக்கையான நிருபர்கள் தேவை.

(2) நிருபர்களாக இருக்க விரும்புவோர், அந்தந்த இடங்களிலுள்ள ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களின் சிபார்சு கடிதங்களுடன் விண்ணப்பம் செய்து தத்தம் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

(3) கடிதங்களும், கட்டுரைகளும் அனுப்புவோர் தத்தம் பூரண விலாசத்தையும் கடிதங்கள் அல்லது கட்டுரைகளின் கீழ் எழுதியனுப்ப வேண்டும். அவர்கள் விரும்பினால் பெயரும், விலாசமும் வெளியிடப்படும்; இன்றேல் மறை பெயருடன் பிரசுரம் செய்யப்படும்.

(4) தூஷணையான விஷயங்கள் கண்டிப்பாகப் பிரசுரம் செய்யப்படா.

(5) செய்திகள் அனுப்புவோர் சாத்தியமான வரை சுருக்கமாக எழுதியனுப்ப வேண்டும். இயன்றமட்டும் எழுத்துப் பிழை, இலக்கணப் பிழையின்றி தெளிவாக எழுதியனுப்ப வேண்டும்.

(6) வாசிக்க முடியாத கடிதங்கள் பிரசுரிக்கப்படமாட்டா.

7. தள்ளப்பட்ட விஷயங்களைத் திரும்பப்பெற விரும்புவோர் தபால் செலவுக்கு ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

சென்னை }
28-10-36 }
ஆசிரியர்
"விடுதலை"

வாரம் பூராவும்
பரீட்சியுங்கள்!
இதைவிட 4-பங்கு விலை வாட்சுகளுக்கு இணையானது. திருப்தியில்லையேல் பூராப் பணமும் வாபீஸ்.
5 வருஷம் உத்தரவாதம்.
டாவன்
லீவர் ரிஸ்டு வாட்சு
உயர்தர லீவர் ஓட்டம். சிறிய அளவில் அழகிய அமைப்பு. சரியான மணி காட்டி பல வருஷம் உழைக்கும்.
பிரகாசமான நிக்கல் வெள்ளி கேஸ் ரூ. 6—4—0
கோல்டு பிளேட் கேஸ் ரூ 6—12—0
ரேடியம் டயலுக்கு தனி 0—8—0
போஸ்டேஜ் & பாக்கிங் 0—7—0
கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதுக.
Sole Agents :—
THE UNION TRADING CO.,
2, Doyehatta St., (D/3),
CALCUTTA.

பட்டேல் வருகிறார் !

பணப்பை ஜாக்கிரதை !! ஜாக்கிரதை !!! ஜாக்கிரதை !!!

பார்ப்பனர்—உஷார்!

தென்னாட்டு மக்களிடம் காங்கிரஸ் பேரால் பணம் வசூலித்து பார்ப்பனப் பிரசாரம் செய்து அப்பணத்தை பார்ப்பனர்களிடம் ஒப்புவித்து விட்டுப்போக இம்மாதத்தில் தோழர் பட்டேல் வரப்போகிறாராம். இதுவரை கொடுத்தது போதாமல் இன்னமும் பணம் கொடுத்து ஏமாந்த சோணகிரிகளாகப் போகிறீர்களா? அல்லது உஷாராய் இருக்கப்போகிறீர்களா? என்று தமிழ்நாடு பார்ப்பனரல்லாத மக்களைக் கேட்கின்றோம்.

இதுவரை பார்ப்பனர்கள் பல ஆசாமிகளைக் கூட்டி வந்து எத்தனை தடவை எவ்வளவு லக்ஷ ரூபாய் தமிழ்நாட்டில் வசூலித்து இருக்கிறார்கள் என்பதைக் கவனித்துப்பாருங்கள். கல்யாணம், கருமாதி, கோவில், குளம், பண்டிகை, உற்சவம், பூணூல், கர்ப்பாதான முகூர்த்தம், வளைகாப்பு, சஷ்டி பூர்த்தி முதலியவைகளுக்கு ஆக என்று அவர்கள் வசூலித்ததைப் பற்றியோ கோவில் வழியாக கொடுத்ததைப் பற்றியோ நாம் இங்கு இப்போது பிரஸ்தாபிக்கவில்லை. அந்த வகையில் தென்னாட்டில் மாத்திரம் 2½ கோடி தமிழ்மக்கள் பல 2½ கோடி ரூபாய்களை பாழாக்கி அவற்றில் பல 2½ கோடிகளுக்கு மேல் பார்ப்பனர்களுக்குப் போய்ச் சேரும்படி செய்கிறார்கள். அது ஒருபுறமிருக்க. இப்போது ஒரு புது "சனியன்" காங்கிரஸ், சுயராஜ்யம் தேசியம், சமதர்மம், சுதந்திரம் என்கின்ற பெயர்களில் வருஷா வருஷம் பல லக்ஷம் ரூபாய்கள் பாழாகின்றனவே அதைப் பற்றியே சொல்லுகின்றோம்.

இவ்வித வசூல் செலவு வகைகள் எவ்வளவு தவறுதலான முறையில் நடந்திருந்தாலும் அவைகளை லட்சியம் செய்யாமல் போனாலும் கூட அந்தப் பணங்களுக்கு என்ன பலன் ஏற்பட்டது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அதுவும் பாத்திரமெடுத்துக் கொண்டு அலையவேண்டிய பார்ப்பனர்கள் இன்று ஐ. சி. எஸ். ஆனார்கள் என்பதைத் தவிர வேறு என்ன நடந்தது என்று யோசித்துப் பாருங்கள்.

கதருக்கு வசூலித்த பல லக்ஷ ரூபாய்கள் என்ன கதி அடைந்தது? அதனால் கதர் வேஷத்தால் ஊருக்கு நாலு இரண்டு பார்ப்பனர்கள் முனிசிபாலிட்டிக்கும் ஜில்லா போர்டுக்கும் மெம்பராகிறார்கள். வேலையில்லாக் கஷ்டகாலத்தில் பல பார்ப்பனர்கள் கதரின் பேரால் வயிறு வளர்த்தார்கள்—வளர்க்கிறார்கள். இதைத் தவிர வேறு என்ன நடந்தது? கதருக்கு பணம் வசூலிப்பதற்கு முன் நமது நாட்டில் கதர் உற்பத்தி ஆகி கதர் பரவி இருந்த அளவில் பகுதியில் பகுதியாவது இன்று கதர் உற்பத்தி ஆகிறது என்றோ, பரவி இருக்கிறது என்றோ சொல்ல முடியுமா என்று கேட்டு உங்கள் மனதில் வைத்துப்பாருங்கள்.

பிறகு தீண்டாமை விலக்குக்கு பல லக்ஷ ரூபாய் வசூலிக்கப்பட்டது. அந்த பணம் என்ன ஆயிற்று? எலக்ஷன் செலவுக்கும் எலக்ஷனில் பார்ப்பனர் வெற்றி பெறவும் பயன்படுத்தப்பட்டது என்பதை யாராவது மறுக்க முடியுமா? உதாரணம் வேண்டுமானால் சொல்லுகிறோம்.

வட ஆற்காட்டில் தோழர் கல்யாணராம அய்யர் என்கின்ற ஒரு பார்ப்பனர் சிறு வாத்தியார் வேலையில் இருந்து கீழ்வேலைக்கு வராதவர், அவருக்கு தீண்டாமை கமிட்டியில் அதைவிட அதிகச் சம்பளம் கொடுத்து நியமித்தார்கள். அவர் வட ஆற்காடு ஜில்லா போர்டுக்கு மெம்பராகவும், மற்ற மெம்பர்களுக்கு பிரசாரம் செய்யவும் பயன்படுத்திக் கொண்டார்கள். மற்றும் எத்தனையோ பேர்கள் தேர்தல் பிரசாரம் தீண்டாமை கமிட்டி சம்பளத்தில் செய்தார்கள்.—இந்த மாதிரி தமிழ்நாட்டிலும் மலையாள நாட்டிலும், ஆந்திர நாட்டிலும், தீண்டாமைக் கமிட்டி சம்பளக்காரர்கள் எத்தனைபேர் எலக்ஷனில் வேலை செய்யாதவர்கள், எலக்ஷனில் நிற்காதவர்கள், வெற்றிபெறாதவர்கள் என்று காங்கிரஸ் கணக்குக் காட்ட முடியுமா என்று கேட்கின்றோம்.

தோழர் ராஜன் தீண்டாமை கமிட்டி பிரசிடெண்டு என்கின்ற ஹோதாவில் தனது செல்வாக்கை எலக்ஷன்களுக்கு பயன்படுத்தி தீண்டாமை விலக்கு கமிட்டி சிப்பந்திகள் எலக்ஷன்களில் பிரசாரம் செய்து பல ஸ்தாபனங்களில் ஸ்தானம் பெற்றார். அவர் காங்கிரசுக்கு "துரோகம்" செய்த காரணத்தால் விலகவேண்டி வந்தாலும் கூட அந்த தலைமை ஸ்தானத்துக்கு மறுபடியும் அவரையே அழைத்தார்கள். அது பயன்படவில்லை. பிறகு மற்றொரு பார்ப்பனர் தான் தோழர் மதுரை வைத்தியநாதய்யர் தலைவராக ஆக்கப்பட வேண்டி இருந்ததே தவிர ஒரு பார்ப்பனரல்லாதாரோ, தீண்டாத வகுப்பைச் சேர்ந்தவரோ வர முடியவில்லை. ஏன்? தீண்டாமை விலக்குக்கு காந்தியார் வசூலித்த பணம் பார்ப்பனருடையது என்கின்ற எண்ணமா, அல்லது 10-ல் ஒரு பங்காவது பார்ப்பனர் பணம் அதில் இருக்கிறது என்கின்ற எண்ணமா என்று யோசித்துப் பாருங்கள்.

விஷயம் தீண்டாமை விலக்குதல்.
தீண்டாமைக்கு காரணஸ்தர்கள் பார்ப்பனர்கள்.
தீண்டாமையால் கஷ்டப்படுகிறவர்கள் பார்ப்பனரல்லாதார்கள்.
பணமும் பார்ப்பனரல்லாதாருடையது.
அந்த கமிட்டிக்கு தலைவர்கள் எல்லாம் பார்ப்பனர்கள். அந்த வேலை செய்யும் சம்பள சிப்பந்திகள் பெரிதும் பார்ப்பனர்கள்.

இந்த உண்மை அறிந்த பிறகு கூட தீண்டாமை விலக்குப் பணம் நாணயமான தத்துவத்தின் மீது யோக்கியமான முறையில் செலவழிக்கப்படுகின்றது என்று எந்த மூடன் தான் ஒப்புக்கொள்ள முடியும்? இது ஒருபுறமிருக்கட்டும்.

1920-ம் வருஷம் முதல் 1936-ம் வருஷம் வரை காங்கிரசும் அரிஜன கமிட்டியும் 30, 40 லக்ஷம் ரூபாய்களும் தீண்டாமை விலக்குக்காக செய்த வேலையின் பலனாக சில பார்ப்பனர்கள் அரசியலில் விளம்பரமும், ஸ்தாபனங்களில் ஸ்தானங்களும் பெற்றதல்லாமல் தீண்டாமை விலக்குக்கு என்ன நன்மை ஏற்பட்டது என்று கேட்கின்றோம். கிறிஸ்தவர்களாகவும் முஸ்லீமாகவும் ஆனவர்களில் சிலருக்கு தீண்டாமை விலகிற்று என்பதல்லாமல், ஜஸ்டிஸ் கட்சி அரசியல் ஆதிக்கத்தின் பயனாய் சட்ட மூலமாய் சில கொடுமைகள் நீக்கப்பட்டது என்பது அல்லாமல் மற்றபடி ஏற்பட்ட நன்மை என்ன என்று பார்ப்பனர்களையும் அவர்களது கூலிகளையும் கேட்கின்றோம்.

இனி இப்போதும் தேர்தலுக்கு ஆக பணம் வசூலிப்ப தென்றால் என்ன செய்வதற்கு ஆக? பார்ப்பனரல்லாத மக்களிடம் தேர்தலுக்கு பணம் வசூல் செய்து பார்ப்பனர்களை அவர்கள் உரிமைக்கு மேல் 100-க்கு 400, 500 பங்கு அதிகமான பார்ப்பனர்களை சென்னை சட்டசபை, ஸ்தல ஸ்தாபன சபை ஆகியவைகளை பார்ப்பன சபை, பார்ப்பன ஆதிக்க சபை என்று ஆக்குவதற்கு அல்லாமல் வேறு எதற்கு ஆக பணம் பயன்படுத்தப் போகின்றது என்று கேட்கின்றோம்.

உதாரணமாக சென்னை கார்ப்பரேஷனுக்கு பார்ப்பன ஜன சமூக எண்ணிக்கைப்படி 2 கவுன்சிலர்கள் தான் பார்ப்பனர்கள் வரலாம். பொதுப் பணத்தை கார்ப்பரேஷன் தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்தப்பட்டதின் பயனும் தீண்டாமை விலக்குக் கமிட்டி மெம்பர்களும், சிப்பந்திகளும் வந்து பிரசாரம் செய்ததின் பயனும் 40 ஸ்தானங்களில் 11 ஸ்தானங்கள் பார்ப்பனர்கள் அடைந்து விட்டார்கள்.

இந்தப் பார்ப்பனர்களில் பலர் எப்படி ஓட்டர் லிஸ்டிக்கு வந்தார்கள் என்பதே கண்டுபிடிக்க முடியாத காரியம். அப்படிப்பட்ட யோக்கியதை உடையவர்கள் வந்துவிட்டார்கள். ஊர் ஆட்சிசெய்ய என்பது ஒருபுறமிருக்கவும் போதாக் குறைக்கு ஆல்டர்மென் என்று தேர்ந்தெடுக்கப்படும் 5 ஸ்தானங்களுக்கும் 2½ பார்ப்பனர்கள் தெரிந்தெடுக்கப்படப் போகிறார்களாம். அதாவது தோழர்கள் சத்தியமூர்த்தி அய்யர், பிரகாசம் பந்துலு, முத்தையா செட்டி மற்றவர்கள் யாகூப் ஹஸன் சாயபு, மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆகிய இருவர் தானும். ஆகவே கிடைத்த சந்தர்ப்பங்களை யெல்லாம் பார்ப்பனர் [illegible] யாகவும் அதிகமாகவும் ஆதிக்கம் செலுத்தப் பயன்படுத்திக் கொ[illegible] ஏபோக வேறு எதற்குப் பயன்படுத்தப் படுகிறது என்று யாரு[illegible] னுவதல்லாமல் படியும் பணம் வசூல் செய்யவும் அதை தேர்[illegible]ள். இந்த நிலையில் மறு வசப்படுத்தவும் தோழர் பட்டேல் [illegible]க்கு பயன்படுத்த பார்ப்பான் அவர்கள் வருகிறார் என்றால் ஜாக்கிரதை! ஜாக்கிரதை!! ஜாக்கிரதை!!! என்று எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

(குடி அரசு)

திருச்செங்கோடு ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு

நிறைவேறிய தீர்மானங்கள்

திருச்செங்கோடு, நவ. 5

சென்ற முதல் தேதி திருச்செங்கோட்டில் நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் பின் வருமாறு:—

சென்னை சட்டசபையால் கொண்டு வரப்பட்ட இனாம் மசோதாவை சட்டமாக்கிய வைசிராயையும், கவர்னரையும் பாராட்டுவதோடு அம் மசோதாவைக் கொண்டு வருவதற்கு உறுதியுடன் நின்று போராடிய சென்னை சட்ட சபை மெம்பர்கள், நிர்வாக சபை அங்கத்தினர்கள், மந்திரிகள் முதலியோரையும் பாராட்டுகிறது.

சர்க்கார் உத்தியோகத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென்று சென்னை சட்ட சபையில் திரு. செ. கெ. நாயகம் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை இம் மகாநாடு ஆதரிக்கிறது.

நிலத் தீர்வையை, நில விஸ்தீரணத்திற்கு தக்கபடி போடாமல், நில வருமானத்துக் கேற்றபடி போல் வசூலிக்க வேண்டுமென்று ஏகமனதாக தீர்மானிக்கிறது. தென் ஜில்லாக்களில் ஜஸ்டிஸ் கட்சி சார்பாக, பிரசாரம் செய்து வந்த மத்திய பிரசாரக் கமிட்டியை இம் மகாநாடு பாராட்டுகிறது.

மேலும், ஜில்லா போர்டுகளில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு அதிகப் படியான ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பதன் மூலம் அவர்களின் நியாயமான உரிமைகளை சர்க்கார் அங்கீகரிக்க வேண்டுமென்றும், தர்காஸ்து நிலங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்க வேண்டுமென்றும், பரம்பரை கிராமாதிகாரிகள் சட்டத்தைத் திருத்த வேண்டுமாயும், இந்தியா சட்ட சபையில் திரு. எம். சி. ராஜா கொண்டு வந்துள்ள பொது வுரிமை மசோதாவை ஆதரிப்பதாயும் பல தீர்மானங்கள் நிறைவேறின.

நாடார் பாங்க் ஏஜண்ட் தகராறு

தூத்துக்குடி, நவ. 2

தூத்துக்குடி நாடார் பாங்கியில் தற்போது ஏஜண்டாக இருந்து வரும் நாடாரை நீக்கிவிட்டு அந்த இடத்தில் ஓர் பிராமணரை வைக்க வேண்டுமென்று நாடார் சமூகத்தில் ஒரு சாரார் முயற்சி எடுத்து வருகின்றார்கள். மற்றோர் சாரார் நாடாரையே வைக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டு வருகிறார்களெனத் தெரிகின்றது.

மதிப்புரை

சிரஸ் ஆயில்

திருநெல்வேலி ஜில்லா களக்காடு பாலாசா ராஜா சஞ்சீவி வைத்திய சாலையிலிருந்து வந்த "சிரஸ் ஆயில்" மாதிரிப் புட்டி வரப்பெற்றோம். அதை உபயோகித்துப் பார்த்ததில், கண்ணுக்கும், மூளைக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. அதை நெடுநாள் உபயோகித்தால் சிரசு சம்பந்தமான வியாதிகள் ஒழியுமென்று நம்பலாம். மூளை யுழைப்பாளிகளுக்கு அது நல்ல பலன் செய்யும் என்பது நிச்சயம். பரிமள மிகுந்ததாயிருப்பதினால் தினப்படியும் தலைவார உபயோகப்படுத்தலாம். விலை புட்டி ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

கிடைக்குமிடம் ராஜ சஞ்சீவி வைத்தியசாலை, களக்காடு, திருநெல்வேலி ஜில்லா.

தேசம், சமூகம் முன்னுக்கு வர வழி காட்டும் படம்!

வெற்றி முழக்கம்!
❋
ஆயிரக்கணக்கான மக்கள்
கண்டு மகிழ்கிறார்கள்! இடத்திற்கு முந்துங்கள் !!

குடும்ப சகிதமாய் கண்டு களிக்க வேண்டிய படம் !!

மதுரை: நியூ சினிமாவில்—4-வது வாரம். திருநெல்வேலி: சரஸ்வதி டாக்கீஸில்—2-வது வாரம்.
காரைக்கால்: ஹமீத் டாக்கீஸில்—3-11-36 முதல் நடைபெறுகிறது.

மாஸ்டர் M. K. ராதா, மாஸ்டர் S. V. வெங்கட்ராமன், இளவுன் M. S. சுந்தரம்,
மிஸ். T. N. மீனாக்ஷி, மிஸ். K. P. ஜெயலக்ஷ்மி, மிஸ். P. R. மங்களம்
மற்றும் அநேக பிரபல நடிகர்கள் சேர்ந்து தங்கள் முழுத் திறமையுடன் நடித்த

சந்திரமோஹனா அல்லது சமூகத் தொண்டு

ராகினி தேவி நடனம், ஹாரிஸ் சகோதரிகளின் டான்சும்,
காதல், சோகம், ஹாஸ்யம் ஒருங்கே அமையப்பெற்ற தலைசிறந்த தமிழ் பேசும் படம்! பார்க்கத் தவறாதீர்கள் !!
எதிர்பாருங்கள் ! 21—11—36 சனிக்கிழமை முதல் எதிர்பாருங்கள் !!
சென்னை பிராட்வே டாக்கீஸிலும்,
13—11—36 வெள்ளிக்கிழமை முதல்: கும்பகோணம் ராஜா டாக்கீஸிலும், தஞ்சை ராஜாராம் டாக்கீஸிலும், [illegible] கே. டாக்கீஸிலும்
மகத்தான ஆரம்ப விழாவை எதிர்பாருங்கள் !!!
திருச்சி வெலிங்டன் டாக்கீஸிலும், கோயம்புத்தூர் நியூ தியேட்டரிலும், சேலம் சென்ட்ரல் டாக்கீஸிலும்,
மாயவரம் சுந்தரம் டாக்கீஸிலும் ஆரம்ப தினத்தை எதிர்பாருங்கள் !!

படம் வேண்டுவோர்:— மோஹன் மூவிடோன் கம்பெனி, 157, தெற்கு மாசி வீதி,
தந்தி: MOVIETONE. போன்: 96. மதுரை.

பெண்ணுலகத்திற்கு புத்துயிர் அளிக்கக் கூடிய தலைசிறந்த படம்!

- மகத்தான -
வெற்றி முழக்கத்துடன் !!!

பெண்ணடிமையை அகற்றுவதும், உண்மை காதலைப் பெறுவதுமான மகத்தான படம் !!

T. K. சுந்தரப்பா, K. சாந்தாதேவி, J. சுசீலாதேவி, T. S. கிருஷ்ணவேணி
முதலியோர் முழுத் திறமையுடன் நடித்த

இந்திர சபா

காதல், சோகம், சிங்காரம், ஹாஸ்யம் ஒருங்கே அமையப் பெற்றதும், மகாபாரதத்தில் சிறந்த ஓர்
அம்சமுமான புண்ணிய, புராண தமிழ் பேசும் படம்.
எல்லா ஊர்களிலும், பிரபல தியேட்டர்களில், எண்ணிறந்த மக்களுக்கு
மகத்தான காக்ஷி யளித்து வருகிறது! பார்க்கத் தவறாதீர்கள் !!

கைவசமிருக்கும் படம்:—
மிஸ். T. N. மீனாக்ஷி, பாட்லிங் மணி முதலியோர் நடித்த மதுரூஸ் மெயில் சண்டைகளும், திடுக்கிடும் சம்பவங்களும், நிறைந்த தமிழ் பேசும் படம்.

படம் வேண்டுவோர்:— தந்தி: "Teebeekey" போன் நெ. 96.
இந்திரா டாக்கீஸ், புரொப்ரைட்டர், T. B. கிருஷ்ணய்யர்,
59, மஞ்சணக்காரத் தெரு, மதுரை.

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே!

ஏழையென்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே!

மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையை கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த வகையினும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! (பாரதி)

விடுதலை

சென்னை: 1936-ஞு நவம்பர்-மீ 7-உ
சனிக்கிழமை

வெற்றி வெறி மயக்கம்

கள் வெறியை விட அதிகார வெறி மிகக் கொடியது என்பார்கள். அது மெய்யான அபிப்பிராயம் என காங்கரஸ்காரர்கள் இம்மாதம் 3-ந் தேதி சென்னை நகரசபையில் காட்டி விட்டார்கள். காங்கரஸ் மெஜாரட்டி பெற்றிருப்பதினால் காங்கரஸ் வாதிகள் மேயராகவும், உதவி மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதைக் குறை கூறுவதற்கில்லை. ஆனால், ஸ்தாயிக் கமிட்டிகளில் இதர கட்சி மெம்பர்களை காங்கரஸ்காரர் சேர்த்துக் கொள்ளாதது அவர்களது ஜனநாயக ஞான சூனியத்தையும், பழிக்குப் பழி வாங்கும் குணத்தையும், அற்பத்தனத்தையும், பேராசையையுமே காட்டுகிறது. ஸ்தாயிக் கமிட்டிகளில் எதிர்கட்சியாருக்கு 40 சதமானம் ஸ்தானங்கள் வழங்குவது பார்லிமெண்டரி முறை. ஆனால், பாசிஸ்டு நாடக மாடும் காங்கரஸ் காரர்களுக்கு அந்த உண்மை விளங்கவில்லை. பேராசை மிகுதியினால் கைப் பற்றக் கூடிய ஸ்தானங்களை யெல்லாம் கைப் பற்றி விட்டார்கள். இது காங்கரஸ்காரரை ஆதரிக்கும் சென்னை "மெயி"லுக்குக் கூடப் பிடிக்கவில்லை "பேராசையினால் காங்கரஸ்காரர் அழிந்து போகப் போகிறார்கள். அவர்கள் வாழ்வு நெடுநாள் நிலைத்து நிற்கப்போவதில்லை" என காங்கரஸ் அபிமானியான "மெயில்" சபமிடுகிறது.

ஸ்தாயிக் கமிட்டிகளில் ஜஸ்டிஸ் கட்சியாருக்கு ஸ்தானங்கள் வழங்கப்படாததைப் பற்றி நாம் வருந்தவில்லை. ஏனெனில், நமது பிரதிநிதிகளின் கூட்டுறவைப்பெற காங்கரஸ்காரருக்கு என்ன யோக்யதை இருக்கிறது? அழிவு வேலைக்காரரும், ஆக்க வேலைக்காரரும் ஒத்துப் போக முடியுமா? எனவே "இனம் இனத்தோடே வெள்ளாடு தன்னோடே" என்றபடி அழிவு வேலைக்காரர்களான காங்கரஸ் வாலாக்கள் தம் இனத்தவரைத் தம்முடன் சேர்த்துக் கொண்டதைப் பார்த்து ஆச்சரியப்படுவதற்கில்லை. மற்றும், சுமார் 15 வருஷ காலம் பைத்தியகாரர் மாதிரி, காடு மேடெல்லாம் சுற்றி யலைந்து தடியடிபட்டு, சிறைப்பட்டு உப்புக் காய்ச்சி, மறியல் செய்து சோர்ந்தவர்கள் ஒரு காசுமில்லாத இருக்கைகளாகப் புது வாழ்வில் இறங்கினால் தலைகால் தெரியாமல் குதிக்கத்தானே செய்வார்கள். "வெற்றிக் காலத்திலே வணங்கிடு" என காந்தியார் சொல்லுகிறார். ஆனால் அவர் பெயரால் வோட்டு வாங்கும் காங்கரஸ் மெம்பர்களோ வெற்றிக் களத்துக் குடிவெறியர் மாதிரி கூச்சல் போடுகிறார்கள்; கூத்தாடுகிறார்கள். ஆனால், "துள்ளின மாடு பொதி சுமக்கும்" என்றதிப்படி அவர்கள் செய்த வினைக்கு ஏற்ற பலனை அவர்கள் அடைவார்கள் என நாம் திருப்தி யடைவதைத் தவிர வேறு வழியில்லை. 3-ந்தேதி சம்பவத்திலிருந்து ஒரு விஷயத்தை நம்மவர்கள் உணர வேண்டும். வரப்போகும் சீர்திருத்த அரசியலில் காங்கரஸ்காரர் அதிகார பதவிக்கு வந்தால் மைனாரட்டிகளின் கதி என்னாகுமென்பதை 3ந் தேதி சம்பவத்திலிருந்து ஒருவாறு ஊகித்தறிந்து கொள்ளலாம். அரசியலிலே தாம் இழந்துவிட்ட செல்வாக்கை மீண்டும் பெற பார்ப்பனர்கள் வெகு தந்திரமாக வேலை செய்து வருகிறார்கள். அவர்களின் சூழ்ச்சிகளை அறியாத நம்மவர்களும் அவர்களுக்கு பக்க பலமாய் நிற்கிறார்கள். திரு. மூத்தையா முதலியாருக்கு இரண்டு முறை ஏற்பட்ட ஏமாற்றத்தை அறிந்த பிறகும், நம்மவர்களுக்கு நற்புத்தி பிறக்கவில்லை. ஜனாப் தாவுத்ஷாவுக்கு நேர்ந்த கதியை உணர்ந்த பிறகும் நம்மவர்களுக்கு மயக்கம் தெளியவில்லை. எனினும், வெகு சீக்கிரத்தில் அவர்களது மயக்கம் தெளியப்போவது நிச்சயம். சிலரைச் சில காலம் ஏமாற்றலாம்; பலரைப் பல காலம் ஏமாற்றலாம்; ஆனால், எல்லாரையும் எல்லாக்காலமும் ஏமாற்ற முடியாது. திருநெல்வேலி, திருச்சி, வேலூர் சம்பவங்களுக்குப் பிறகும் காங்கரஸ் பார்ப்பனர் நற்புத்தி கற்றுக்கொள்ளாதது அவர்களது அறிவீனத்தையே காட்டுகிறது. அதிகார வெறியினால் அவர்களுடைய சாதாரண அறிவும்கூட மழுங்கி விட்டது. பார்ப்பனரல்லாதாரை எப்படியாவது நசுக்கிவிட வேண்டுமென்ற ஆசைப் பெருக்கினால் பலாபலன்களை லக்ஷியம் செய்யாமல் தான்தோன்றித்தனமாக நடக்கிறார்கள். நம்மவர்களுக்கு எதிராக நம்மவர்களையே ஏவிவிட்டு நாடகம் பார்க்கிறார்கள். நம்மவர்களைக் கொண்டே நம்மவர்களைத் திட்டும்படி செய்கிறார்கள். நாம் செய்வது என்ன, நமது செயலின் பலாபலன்கள் என்ன என்பனவற்றை சிந்தித்துப் பாராமல் நம்மவர்களும் கண்மூடித்தனமாக அவர்களுக்கு ஒத்தூதுகிறார்கள். ஆனால், சூழ்ச்சிகளும், சதிகளும் நெடுநாள் நிலைக்க மாட்டா. பார்ப்பனர் சூழ்ச்சிகளை நம்மவர்கள் முன் பல சந்தர்ப்பங்களில் உணர்ந்தார்கள்; பல சந்தர்ப்பங்களில் அவர்களை எதிர்க்கவும் முனைந்தார்கள். எனினும், பார்ப்பன சூழ்ச்சியில்-வலையில்-எப்படியோ மீண்டும் சிக்கி விட்டார்கள். எனினும், நிரந்தரமாக அவர்கள் சிக்கிக் கிடப்பார்கள் என எண்ண இடமில்லை. சாமர்த்தியமான பிரசாரங்களினாலும் தந்திரங்களினாலும் பார்ப்பனர்கள் காலப்போக்கைத் தமக்கு அநுகூலமாக்கிக் கொள்கிறார்கள். நெருக்கடியேற்படும் போது வடநாட்டுத் தலைவர்களை அழைத்து வந்து பிரசாரம் செய்து மக்களை ஏமாற்றுகிறார்கள். எனினும் வரப்போகும் தேர்தலோடு காங்கரஸ் பார்ப்பனர்களின் உண்மைச் சொரூபம் வெட்ட வெளிச்சமாகி விடுமென்பது உறுதி. அக்காலத்துப் பார்ப்பனர் வலையில் சிக்குண்டு கிடக்கும் நம்மவர்கள் மயக்கம் தெளிந்து உண்மை நிலை காண்பார்கள் என்பது நிச்சயம். அந்நிலை ஏற்படும்போது பார்ப்பனியத்துக்குச் சாவுமணி அடிக்கப்படுவது நிச்சயம். அந்நாள் வரை நாம் நமது கடமையைப் பொறுமையுடன் செய்துகொண்டு இருப்போமாக!

மூச்சூடும் முட்டாள் தனமே!

மே. த. கவர்னர் அவர்கள் திருநெல்வேலிக்கு விஜயம் செய்யும் போது, அவருக்கு உபசாரப் பத்திர மளிக்க வேண்டுமென்று காங்கரஸ் ஆதிக்கம் பெற்ற திருநெல்வேலி ஜில்லா போர்டு எப்படியோ தீர்மானித்து விட்டது. அது தமிழ்நாடு காங்கரஸ் காரியக் கமிட்டிக்குப் பிடிக்கவில்லை. ஜில்லா போர்டு உபசாரப் பத்திர மளிக்கத் தீர்மானித்திருந்தாலும் ஜில்லா போர்டு தலைவர் உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கக் கூடாதென்று தமிழ்நாடு காங்கரஸ் காரியக் கமிட்டி ஜில்லா போர்டு தலைவருக்குக் கட்டளை பிறப்பித்திருக்கிறதாம். சட்டப்படி பார்த்தால் ஜில்லா போர்டுக்கும் தமிழ் நாடு காங்கரஸ் காரியக் கமிட்டிக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை. கட்சி சம்பிரதாயப்படி, தமிழ் நாடு காங்கரஸ் காரியக் கமிட்டிக்கு ஜில்லா போர்டு தலைவர் மீது குதிரையேற அதிகாரமிருக்கலாம். ஆனால், காரியக் கமிட்டி உலக ஞானமில்லாத ஒரு கூட்டம் என ஏற்கனவே காட்டிக்கொண்டிருக்கிறது. திருச்சி வாக்காளர் விருப்பத்துக்கு மாறாக காரியக் கமிட்டி நடந்ததினால் திருச்சியிலே காங்கரஸே குடைசாய்ந்து கிடக்கிறது. இரண்டு பிரபல காங்கரஸ் தலைவர்கள் அரசியல் விதவைகளாகும்படியும் நேர்ந்தது. காரியக் கமிட்டியாரின் முட்டாள் போக்கினால் திருச்சி காங்கரஸ் பொது ஜன ஆதரவைப் பூராவாக இழந்து விட்டது. அதற்கு சமீபத்தில் நடைபெற்ற நகரசபை உபதேர்தலே அத்தாட்சி. மற்றும், காங்கரஸ் கமிட்டிக்கு நிருவாகம் நடத்தத் திராணியில்லையென்றும் அது உடனே ராஜிநாமாச் செய்யவேண்டுமென்றும் "தின மணி" போன்ற அசல் காங்கரஸ் பத்திரிகைகளே தீர்ப்புக் கூறியிருக்கின்றன. இந்நிலையில் செல்லாக்காசான தமிழ்நாடு காங்கரஸ் காரியக் கமிட்டியின் கட்டளையை திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவர் லக்ஷியம் செய்வார் என்று நாம் எண்ணவில்லை. ஜில்லா போர்டு தலைவர் திரு. குமாரசாமி முதலியார், காங்கரஸ் வாதி என்று சொல்லிக்கொள்ளப் பட்டாலும் தலைவரான போதே அவர் பொது மனிதராகி விட்டார். மே. த. கவர்னருக்கு உபசாரப் பத்திரமளிக்க வேண்டுமென்று காங்கரஸ் கட்சி மெம்பர்கள் மட்டும் தீர்மானிக்கவில்லை. ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்களும் சேர்ந்துதான் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. ஆகவே, ஜில்லா போர்டின் கட்டளையை நிறைவேற்றி வைக்க வேண்டியது ஜில்லா போர்டு தலைவரின் நீங்காக் கடமை. அக்கடமையை நிறைவேற்றி வைக்க அவர் துணிந்து நிற்பதாகவும் தெரிய வருகிறது.

ஆனால், சமீபத்தில் திருநெல்வேலிக்கு விஜயம் செய்த சத்தியமூர்த்தி கம்பெனியார், தலைவரைச் சந்தித்து மிரட்டிப் பார்த்தார்கள்; தலைவர் அசையவில்லை. ஆகவே, பாளையங்கோட்டை கோபாலசாமி கோவில் மண்டபத்தில் ஒரு கூட்டம் போட்டு தலைவரையும், மற்றும் காங்கரஸ் மெம்பர்களையும் திட்டித் தொண்டை கிழியும் மட்டும் கத்தினார்களாம். திரு. சத்தியமூர்த்தி பேசுகையில் "திருநெல்வேலி ஜில்லா போர்டு நிலைமை திருப்திகாரமாயில்லை. காங்கரஸ் கட்சி ஒரு மாதிரியாக இருக்கிறது. காங்கரஸ் கட்சியார் காங்கரஸ் கட்டளைப்படி நடக்கிறார்களா இல்லையா என்று சோதிக்க 16-11-36-ல் ஒரு நல்ல சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. அந்தச் சோதனையில் காங்கரஸ்காரர் தவறிவிட்டால், பொது வாழ்வில் அவர்கள் மூக்கறுபட்டுப் போகும்" என்றெல்லாம் வெளுத்து வாங்கினாராம். அவரது பேச்சைப் பாராட்டி "தின மணி" எழுதுகையில் "கவர்னருக்கு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுப்பதென்று ஜில்லா போர்டு தீர்மானித்தது முதல் முட்டாள்தனம். அப்படிச் செய்யக் கூடாதென்று காங்கரஸ் சொல்லிய பின்பும் சிலர் செய்துதான் தீருவோமென்று பிடிவாதம் செய்வதாயிருந்தால் அதைவிடப் பெரிய முட்டாள்தனம் வேறில்லை" எனச் செப்புகிறது. ஆனால், காங்கரஸ்காரர்களிடம் முட்டாள் தனத்தைத் தவிர புத்திசாலித்தனத்தைக் கடுகத்தனையாவது எதிர்பார்க்க முடியாதென்ற உண்மை "தின மணி"யின் மர மண்டையில் இதுவரை ஏறவில்லையா? கணபதிக்குக் குட்டும் போதே காங்கரஸ்காரர் முட்டாள்தனமாக நடந்து கொண்டதை "தின மணி" உணரவில்லையா? அக்காலத்து காங்கரஸ்காரரின் முட்டாள் தனத்தை "தின மணி" ஆதரிக்கவில்லையா? வாஸ்தவத்தில் திருநெல்வேலி ஜில்லாபோர்டு தேர்தல் விஷயமாக காங்கரஸ்காரர் காட்டிக் கொண்ட முட்டாள் தனத்தில் "தினமணி"க்கும் ஒரு பெரிய பங்குண்டு. ஜில்லா போர்டு தலைவர் தேர்தலுக்கு காங்கரஸ் பேரால் அபேட்சகரை நிறுத்தக் கூடிய கூட்டத்தன்று, காங்கரஸ் மெம்பரான ஒருவரை, தலைவர் பதவிக்கு அபேட்சகராக நிறுத்தியது முதல் முட்டாள்தனம்; காங்கரஸ் வாடையே அறியாத ஒருவர் கடைசிவரைக் காங்கரஸ் கட்டளைப்படி நடப்பார் என நம்பியது இரண்டாவது முட்டாள் தனம்; ஜில்லா போர்டு தலைவர் பதவி கொடுப்பதாக வாக்களித்து காங்கரஸில் சேர்த்த ஒருவரைக் கடைசி நேரத்தில் கை விட்டு, காங்கரஸ் கட்சிக்குள் பிளவையுண்டு பண்ணியது மூன்றாவது முட்டாள் தனம்; ஜில்லா போர்டு காங்கரஸ் மெம்பர்களின் அட்டூழியங்களைப் பொறுக்க முடியாமல் அவர்களில் ஒரு பகுதியார் ஒரு தனிக் கட்சி ஸ்தாபித்துக்கொண்டு எட்டிக்குப் போட்டி நாடகம் ஆடுவதைப் பார்த்தபிறகும், திருநெல்வேலி ஜில்லா போர்டு விஷயத்தில் தலையிடாமல் ஒதுங்கிக் கொள்ளாதது தமிழ்நாடு காங்கரஸ் காரியக்கமிட்டியாரின் நான்காவது முட்டாள் தனம்; காங்கரசின் போக்கை அறிந்திருந்தும், கவர்னருக்கு உபசாரப் பத்திர மளிப்பதென்று துணிந்து தீர்மானம் நிறைவேற்றிய திருநெல்வேலி ஜில்லா போர்டு காங்கரஸ் கட்சி மெம்பர்கள் தமிழ்நாடு காங்கரஸ் காரியக்கமிட்டியாரின் ஓலைப் பாம்புக்கு பயந்துவிடுவார்கள் என எண்ணியது ஐந்தாவது முட்டாள் தனம். ஜில்லா போர்டு தலைவருடைய உறுதியையும், காங்கரஸ் மெம்பர்களுடைய உறுதியையும் பிரத்தியட்சமாக உணர்ந்த பிறகும், "மூக்கறுபட்டுப் போகும் அப்புறம் இந்த ஜன்மத்தில் பொது வாழ்க்கையில் தலையிட முடியாது" என்றெல்லாம் திரு. சத்தியமூர்த்தியும் "தின மணி"யும் புலம்புவது ஆறாவதான ஹிமாலய அடி முட்டாள்தனம். வாஸ்தவத்தில் நவம்பர் 16ல் காங்கரசுக்கு ஒரு சோதனை காலந்தான். காங்கரசின் சாயம் அன்றுதான் வெளுக்கப்போகிறது. உலக மறிய ராஜ விசுவாசப் பிரமாணம் செய்து இம்மாதம் 3-ந் தேதி சென்னை நகரசபையில் அக்கிராசனத்தினராய் உட்கார்ந்த காங்கரஸ்காரர், திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவர், கவர்னருக்கு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கக் கூடாதென்று கூறுவது போக்கிரித்தனமா இல்லையா என்பதை நவம்பர் 16-ந் தேதி திருநெல்வேலி ஜில்லா போர்டு காங்கரஸ் மெம்பர்கள் முடிவு செய்யப்போகிறார்கள். ஆகவே, திரு. சத்தியமூர்த்தியும் "தின மணி"யும் புலம்புவதில் பயனில்லை. வாஸ்தவத்தில் "தின மணி" கூறுவதுபோல் திருநெல்வேலி ஜில்லா போர்டு காங்கரஸ் மெம்பர்களுக்கு "தலைக்கிறுக்கு" இல்லை. சத்தியமூர்த்தி கம்பெனியாருக்கும், "தின மணி"க்கும்தான் தலைக்கிறுக்கு ஏற்பட்டிருக்கிறது.

காங்கரஸ் வெறியர் கவனிப்பார்களா?

அமெரிக்கத் தலைவர் பதவிக்கு ரிபப்ளிகன் கட்சி சார்பாக ஆல்ப் லாண்டனும், டெமக்ராட்டிக் கட்சி சார்பாக ரூஸ்வெல்ட்டும் போட்டி போட்டார்கள். ரூஸ்வெல்ட்டு மிகவும் அதிகப்படியான வோட்டுகள் பெற்று வெற்றி யடைந்தார். தேர்தல் முடிவு வெளியாகு முன்னமேயே, தேர்தலில் தோல்வியடைந்த ஆல்ப் லாண்டன், வெற்றி யடைந்த ரூஸ்வெல்ட்டுக்கு வாழ்த்துக் கூறி தந்திச் செய்தி யனுப்பினாராம். "தேச மக்கள் முடிவு கூறி விட்டார்கள். அம் முடிவுக்கு அமெரிக்கர் கட்டுப்பட்டு நடப்பார்கள்" எனவும் ரூஸ்வெல்ட்டுக்கு உறுதி கூறினாராம். இதை வெற்றி வெறியால் தலைகால் தெரியாமல் கூத்தாடும் காங்கரஸ் வம்பர்கள் கவனிப்பார்களா? ரூஸ்வெல்ட்டுக்குக் கிடைத்த வெற்றி சாமானிய வெற்றியல்ல. அதுபோலவே லாண்டன் அடைந்த தோல்வியும் படுதோல்வி, பாதாளத் தோல்வியாகும். எனினும் அவர் வெற்றியடைந்தவரையோ அவரது கட்சியையோ தூற்றவில்லை. வெற்றி பெற்ற ரூஸ்வெல்ட்டும், தோல்வியடைந்த ரிபப்ளிக் கட்சி குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விட்டதாகக் கூறவில்லை அவரது கட்சியார் லாண்டன் கட்சியாரைத் திட்டவுமில்லை. தேர்தல்களிலே கட்சிப் பிரதிகட்சிகள் போட்டி போடுவதும் வெற்றியோ தோல்வியோ அடைவதும் இயல்பு. வெற்றிபெற்ற கட்சியார் மற்றக் கட்சி அல்லது கட்சிகள் புதைக்கப்பட்டு விட்டதாகக் கூறுவது வடிகட்டின அயோக்கியத்தனமாகும். 26-வது டிவிஷனில் வெற்றி பெற்ற ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மீபதி அம்மையாருக்கு ஊர்வலம் நடந்ததாம். அந்த சம்பவத்தைப் பிரசுரம் செய்த "தின மணி" அச் செய்திக்கு "ஜஸ்டிஸ் கட்சியைப் புதைத்த 26-வது டிவிஷனில்" எனத் தலைப்புக் கொடுத்திருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சியாருக்குத் தோல்வி யேற்படும்போதெல்லாம ஜஸ்டிஸ்கட்சி புதைக்கப்பட்டு விட்டதாகப் புலம்புவது 'தின மணி'யின் வாடிக்கையாக இருந்து வருகிறது. எனவே, பிணந்தின்னும் தொழிலில் நிபுணத்துவம் பெற்ற அசுரர்களும் பிணம் பிடுங்கும் கழுகுகளுந்தான் "தின மணி" காரியாலயத்தில் அடைபட்டுக் கிடக்கின்றனவோ என்று சந்தேகம் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. தேர்தல்களில் தோல்வியேற்பட்டதினால் ஒரு கட்சி புதைக்கப்பட்டு விடுமானால் திருச்சி வேலூர், மேலைக் கோதாவரி முதலிய இடங்களில் சமீபத்தில் காங்கரசுக்கு ஏற்பட்ட தோல்வியினால் காங்கரஸ் கட்சியும் புதைக்கப்பட்டுத்தானே போயிருக்க வேண்டும்? சென்னை நகர சபை தேர்தலில் காங்கரஸ் பத்து டிவிஷன்களில் தோல்வியடைந்ததினால் அந்த டிவிஷன்களில் காங்கரஸ் புதைக்கப்பட்டுத்தானே இருக்க வேண்டும். அங்கெல்லாம் "தின மணி" காரியாலயத்தார் சென்று கருமாதி நடத்தினார்களா? மொட்டை போட்டுக் கொண்டார்களா? மீசையைச் சிரைத்தார்களா? வாஸ்தவத்தில் 'தின மணி' காரியாலயத்தாரின் போக்கிரிப் போக்கு சகிக்க முடியாததாகவே இருக்கிறது. அவர்கள் புத்தி போகும் போக்கைப் பார்த்தால் "கேடுவரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே" என்ற பழமொழி தான் நமது ஞாபகத்துக்கு வருகிறது.

மாட்ரிட் முற்றுகை ஆரம்பம்

கலகக்காரர் வெடிகுண்டு வீச்சுகள்

இராணுவ ஆஸ்பத்திரி காலி செய்யப்பட்டது

விமான நிலையம் நாசமுற்றது

சர்க்கார் துருப்புகள் பின்னடைகின்றன

மாட்ரிட், நவ, 6.

நகருக்கு எட்டு மைல் தூரத்திலுள்ள அல்கார்கானிலிருந்து கலகத் துருப்புகள் பீரங்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்து விட்டன. கலகத் துருப்புகள் முன்னேறி வரும் வழியிலுள்ள இராணுவ ஆஸ்பத்திரி காலி செய்யப்பட்டு மாட்ரிட்டிலுள்ள பெரியதோர் ஹோட்டலுக்கு மாற்றப்பட்டது. விமான வெடிகுண்டு வீச்சின் பயனாக ஜீடாபேயிலுள்ள ஒரு வீடு கூட நல்ல நிலைமையிலில்லை. தெருக்களெல்லாம் இடிந்து போன கட்டிடங்களால் அடைபட்டுப் போயிருப்பதுடன், பிணங்களை அகற்றுவாரில்லாமல் நாற்றமெடுத்துக்கிடக்கிறது. விமான நிலையமும் நாச முற்றது.

மாட்ரிட்டிற்கு ஏழு மைல் தூரத்திலுள்ள செர்ராடெல்லோஸ்—ஆஞ்சிலஸ் என்ற மற்றோரிடத்தையும் கலகக்காரர் கைப்பற்றிக் கொண்டனர். மாட்ரிட்டைக் காப்பாற்ற சர்க்கார் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றனர். ஆனால், திறமை வாய்ந்த தலைவர்களின் கீழ் கட்டுப்பாட்டுடன் முன்னேறி வரும் கலகத் துருப்புகளுக்கு முன், சர்க்கார் துருப்புகள் நிற்க மாட்டாமல் பின்னடைந்து வருகின்றன. நகருக்குச் செல்லக்கூடிய பாதைகளெல்லாம் அரண் செய்யப்பட்டிருக்கிறது. பீரங்கிகளின் இடி முழக்கம் போன்ற சப்தங்களையும், விமானங்களின் கர்ஜனைகளையும் கண்டு நகர மக்கள் பீதியுற்றிருக்கின்றனர்.

"ஜஸ்டிஸ்" வெற்றி

பார்ப்பனர் சூழ்ச்சி பலிக்க வில்லை

(ஒரு நிருபர்)

தேலூர், நவ, 6.

தேலூர் கிராம பஞ்சாயத்து கோர்ட்டு தேர்தல் சென்ற 3-11-36-ல் நடைபெற்றது. ஒருவர் காலி ஸ்தானத்திற்கு இருவர் போட்டிப் போட்டார்கள். பார்ப்பனரால் நிறுத்தப்பட்ட செ. நாராயணசாமி பிள்ளைக்கு ஓட்டு 95. பொது ஜன ஆதரவில் ஜஸ்டிஸ் கட்சிபோல் நிறுத்தப்பட்ட ந. சாமியப்ப கோனார். அவர்களுக்கு ஓட்டு 135.

பொதுஜன ஆதரவில் நிறுத்தப்பட்ட ந. சாமியப்பக் கோனார் வெற்றி பெற்றார்.

பார்ப்பனரல்லாதார் வாலிபர் மகாநாடு

கனம் குமாரராஜா தலைவர்

தஞ்சை, நவ, 6.

காரியதரிசி எழுதுகிறார்:—

தஞ்சை பார்ப்பனரல்லாதார் மகாநாடு நவம்பர் 3-வது வாரத்தில் தஞ்சையில் நடைபெறும். சென்னை சர்க்கார் கல்வி மந்திரி கனம் குமாரராஜா எம். ஏ. முத்தையா செட்டியார் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க சம்மதித்துள்ளார். நிச்சயமான தேதி தெரிந்தவுடன் மகாநாட்டின் மற்றைய விபரங்கள் அறிவிக்கப்படும். வரவேற்புக் கமிட்டித் தலைவராயிருக்க திரு. ஏ. ஒய். ஏ. நாடார் சம்மதித்துள்ளார்.

இத்தாலிக்கு பிரிட்டனின் சூடு

"மத்திய தரைக் கடல் எங்களது ராஜபாட்டை; குறுக்கு வழியல்ல"

உலக சமாதானத்திற்கு பிரிட்டனின் யுத்த தளவாடங்கள் பலப்படுத்தப்படவேண்டும்

திரு. அந்தோணி ஈடன் விளக்கம்

ரக்பி, நவ, 6

நேற்று மாலை பிரிட்டிஷ் அன்னிய நாட்டு மந்திரியான திரு. அந்தோணி ஈடன், சாமன்ஸ் சபையில் சர்வதேச நிலைமையைக் குறித்து பின்வருமாறு கூறினர்:—

சர்வதேச சங்கத்தைப் பலப்படுத்த வல்லரசுகள் முன்வர வேண்டும். பிரிட்டன் தன் உரிமைகளைக் காப்பாற்றும் விஷயத்தில் எத்தேசத்திற்கும் பின்வாங்கிவிடாதென்பதை மற்ற தேசங்கள் உணரவேண்டும். இதுவரையிலும் ஆங்கிலோ-இத்தாலிய யுத்தம் ஏற்பட்டதில்லை. மத்தியதரைக் கடல் பிரிட்டனின் ராஜபாட்டையாகும். சினர் முசோலினி கூறியுள்ளபடி குறுக்கு வழியல்ல. இத்தாலிக்கு மத்திய தரைக் கடல் எவ்விதம் உயிர் நாடியாயிருக்கிறதோ, அது போன்றே பிரிட்டனின் போக்குவரத்துக்கும் அது முக்கியமாகும். ஆகவே, அபாயம் விளைவிக்கவோ, தடைப்படுத்தவோ சினர் முசோலினி முனையமாட்டாரென்று நம்புகிறேம். மேலும், உலக சமாதானத்திற்கு தற்போதுள்ள நிலையில் பிரிட்டனின் யுத்த தளவாடங்களைப் பலப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

"விடுதலை" நண்பர்களுக்கு

அறிக்கையும், வேண்டுகோளும்

வருகிற நவம்பர் முதல் "விடுதலை"யை நாள்தோறும் வெளியிடுவதற்கான எல்லா முயற்சியும் நடந்து வருகிறது.

அதற்கு ஏற்படுத்தக் கருதுகிற கட்டணம் விவரம் கீழே காண்க.

சென்னையிலும், விற்பனைக்காரர் உள்ள இடங்களிலும்

தனித் தாள்	0	0	6
1 மாதம்	1	0	0
3 மாதம்	2	14	0
6 மாதம்	5	10	0
1 ஆண்டு	11	0	0

தபால் வழி

உள் நாடு

தனித் தாள்	0	0	9
1 மாதம்	1	4	0
3 மாதம்	3	10	0
6 மாதம்	7	0	0
1 ஆண்டு	13	0	0

வெளி நாடு

தனித் தாள்	0	1	6
1 மாதம்	1	10	0
3 மாதம்	4	12	0
6 மாதம்	9	12	0
1 ஆண்டு	19	0	0

நீடித்து நடக்கும் மற்றெந்த செய்தித் தாளையும் விட இதன் கட்டணம் குறைந்திருப்பதும், குறைந்த காலத்தை விட நீடித்த காலத்திற்குக் கட்டண விகிதம் குறைந்திருப்பதும் விளங்கும். ஆகையால், "விடுதலை" நண்பர்கள் எல்லாரும் சேர்ந்தாற்போல் ஒரு ஆண்டுக்காவது, கூடியவரை நீடித்த காலத்திற்காவது கட்டணம் செலுத்திச் சேரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வாரம் இரு முறைக்குக் கட்டணம் செலுத்தி யிருப்பவர்கள் புதிய விகிதப்படி ஏற்பட்ட மீதக் கட்டணத்தை உடனே அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கணிசமான எண்ணுள்ளவர்களுக்கு இதுவரை "விடுதலை" இலவசமாக அனுப்பப்பட்டு வருகிறது. இனி அப்படி அனுப்ப முடியாதென்பதை அவர்களே தெரிவார்கள். இலவசமாகக் கிடைத்தாலொழிய "விடுதலை"யைப் படிக்க முடியாது, அல்லது குறைந்த கட்டணத்திற்காவது கிடைத்தால்தான் படிக்க முடியும் என்ற நிலையிலிருப்பவர்கள் தகுந்தகாரணங்கண்டு உடனே விண்ணப்பம் அனுப்பி இலவசமாகவாவது, குறைந்த கட்டணத்திற்காவது அனுப்ப சம்மதம் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்படிச் சம்மதம் பெறுதவர்கள் முழுக்கட்டணம் அனுப்பி "விடுதலை"க்குத் துணை புரிய வேண்டுகிறேன்.

"விடுதலை" விற்பனைக்காரர்கள் தங்களுக்கு வேண்டிய எண்ணிக்கைக்கு உரிய இரண்டு மாதக் கட்டணத்தை முன் பணமாகக் கட்டித் தெரிவித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

தானும், தன் குடும்பமும், தன் இனமும், தனக்கும், தன் குடும்பத்திற்கும், தன் இனத்திற்கும் மிதி கல்லாயிருக்கிற மற்றவர்களும் மாத்திரம் தான் வாழ வேண்டுமென்ற குறுகிய நோக்கத்திற்கு ஆளாகாமல், எல்லா இனத்தாரும் இன்புற்று வாழ்ந்து நாட்டிற்குச் சீரும் சிறப்புந் தேட வேண்டுமென்ற பெரு நோக்கிற்கு உண்மையாக உழைப்பவர்களை எல்லாம் "விடுதலை"க்குப் பணம் செலுத்தியும், மற்ற வழியிலும் துணை புரியுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

24-10-36 செ. தே. நாயகம்.

குறிப்பு: (1) மேலே குறிப்பிட்டபடி, வருகிற நவம்பர் முதல் "விடுதலை"யை நாள் தோறும் வெளியிடுவதற்கான எல்லா முயற்சியும் செய்தும், நவம்பர் துவக்கத்திலிருந்தே அவ்வாறு வெளியிடும் நிலைமை கைகூடவில்லை. விரைவில் வெளியிடுவதற்கான முயற்சி குறைவில்லாமல் நடந்துவருகிறது.

31-10-36

செ. தே. நாயகம்.

(2) 16-11-36 (திங்கட்கிழமை) முதல் நாள் தாளாக வெளிவரும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

7-11-36

செ. தே. நாயகம்.

கனம் குமார ராஜா செட்டிநாடு விஜயம்

குதூகலமான வரவேற்பு

பல ஸ்தாபனங்களின் உபசாரப் பத்திரங்கள்

கானாடுகாத்தான், நவ, 5

சென்னை சர்க்கார் கல்வி மந்திரி செட்டி நாட்டுக் குமார ராஜா கனம் எம். ஏ. முத்தையா செட்டியார், ராஜ்குமாரி முத்தையா செட்டியாருடன் நேற்று காலை செட்டி நாட்டுக்கு விஜயம் செய்தார். மந்திரி பதவியேற்றபின் செட்டி நாட்டுக்கு இதுவே அவரது முதல் விஜயம்.

செட்டிநாடு ரயில்வே ஸ்டேஷனில் நகரத்தார் பிரபலஸ்தர்கள் அவரை வரவேற்க ஏராளமாகக் குழுமியிருந்தனர். சலூனை விட்டிறங்கியதும் குமார ராஜா அவர்களுக்கும், ராஜ்குமாரி முத்தையா செட்டியாரவர்களுக்கும் மலர் மாலைகள் அணிவிக்கப்பெற்று நன்கு வரவேற்கப்பட்டனர். பிறகு பாண்டு வாத்தியம் முழங்க கனம் மந்திரி தமது அரண்மனைக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். கனம் செட்டிநாடு ராஜா அவர்களுடைய அரண்மனையில் வந்திருந்தோரனைவர்க்கும் உயரிய முறையில் விருந்து அளிக்கப் பெற்றது.

ஊர்வலம்

மாலை, செட்டிநாடு அரண்மனையிலிருந்து கனம் குமார ராஜா முத்தையா செட்டியார் ஊர்வலமாக நகரத்தார் ஹாலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

உள்ளூர் பாடசாலை மாணவ மாணவிகள் குமார ராஜாவை வாழ்த்திப் பாடினர். பிறகு கானாடுகாத்தான் நகரத்தார்களும், கானாடுகாத்தான் பஞ்சாயத்து போர்டும் கனம் மந்திரிக்கு உபசாரப் பத்திரங்கள் வாசித்தளித்தன. திரு. ராமசாமி செட்டியார் கனம் செட்டிநாடு ராஜா அவர்களுடைய பரம்பரைப் பெருமைகளைக் குறித்து விரிவாகப் பேசினர்.

வரவேற்புகளுக்கும், பாராட்டுரைகளுக்கும் கனம் குமார ராஜா தக்க பதிலளித்தார். தேக் கச்சேரிக்குப் பின் விழா இனிது நிறைவெய்தியது. இரவு வாணக் காட்சிகள் சிறப்பாக இருந்தன.

பள்ளத்தூரில் உபசாரம்

கானாடுகாத்தான், நவ, 6

நேற்று காலை ராவ்பகதூர் அருணாசலம் செட்டியார் உயர்தர பாடசாலையில் செட்டிநாடு நகரவாசிகள் சட்ட மந்திரி சர். கே. வி. ரெட்டி நாயுடுவுக்கும், கல்வி மந்திரி கனம் எம். ஏ. முத்தையா செட்டியாருக்கும் உபசாரப் பத்திரங்கள் வாசித்தளித்தனர்.

சர். கே. வி. ரெட்டி நாயுடுவும், சர் முகமத் உஸ்மானும் நேற்று காலை செட்டிநாடு ரயில்வே ஸ்டேஷனில் வந்திறங்கினர். ராஜா சர். அண்ணாமலை செட்டியார் அவர்களுக்கு மாலை போட்டார். பிறகு, ராஜா சர். அண்ணாமலை செட்டியார், குமார ராஜா எம். ஏ. முத்தையா செட்டியார் முதலியோருடன் அவர்கள் பள்ளத்தூரிலுள்ள செட்டிநாடு அரண்மனைக்கு மோட்டாரில் சென்றனர்.

திரு. அருணாசலம் செட்டியார் உயர்தர பாடசாலையில் தமிழிலும், ஆங்கிலத்திலும், உபசாரப் பத்திரங்கள் சட்ட மந்திரிக்கும், கல்வி மந்திரிக்கும் வாசித்தளிக்கப்பட்டன.

சர். கே. வி. ரெட்டி நாயுடு உபசாரப் பத்திரத்திற்கு பதிலளிக்கையில், குமார ராஜா முத்தையா செட்டியார் கல்வி மந்திரியாக நியமனமானதைக் குறித்து பாராட்டிப் பேசினர். பள்ளிக் கூடஸ்தாபகராகிய திரு. அருணாசலம் செட்டியாரையும் பாராட்டிப் பேசினர்.

குமார ராஜா முத்தையா செட்டியார் பதிலளிக்கையில், சிறுவர்களைப் படிக்க வைப்பதுபோல் பெண்மணிகளையும் படிக்க வைப்பதில் நகரத்தார் அதிக ஊக்கம் எடுத்துக்கொள்ளும்படி தான் வேண்டிக் கொள்வதாகக் கூறினர்.

பிறகு பள்ளத்தூர் யூனியன் போர்டும், கானாடுகாத்தான் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பொரேஷனும் முறையே கல்வி மந்திரிக்கும் சட்ட மந்திரிக்கும் உபசாரப் பத்திரங்கள் வாசித்தளித்தன.

திருச்சியில் வரவேற்பு

திருச்சிராப்பள்ளி, நவ, 5

திருச்சிராப்பள்ளி வழியாக செட்டி நாட்டிற்கு நேற்று காலை மந்திரி கனம் குமார ராஜா எம். ஏ. முத்தையா செட்டியார் செல்கையில் திருச்சி ரயில்வே ஸ்டேஷனில் பிரமுகர்கள் பலர் வரவேற்று உபசரித்தனர். ரயிலை விட்டிறங்கியதும் தென்னிந்திய நல உரிமைச் சங்கம், திருச்சி ஜில்லா வியாபாரிகள் சங்கம், நகர அமசருர்கள், நகர சோஷியல் கிளப், ஆரம்ப பாடசாலை உபாத்தியாயர்கள் சங்கம், டாக்டர் டி. எம். நாயர் வாசகசாலைச் சங்கம், தாழ்த்தப்பட்ட வகுப்பு இளைஞர் சங்கம், முதலியவற்றின் பிரதிநிதிகள் அவருக்கு மாலை சூட்டினர். அது சமயம் கீழ்க்கண்ட பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர்:—

ராவ்சாஹிப்கள்: அனந்த சுப்பிரமணிய ஐயர் (ஸ்ரீரங்கம் முனிசிபல் சேர்மன்) சிவஞான முதலியார், டேவிட், பொன்னுரங்க முதலியார், திருவாளர்கள்: கே. சின்னசாமி உடையார், டி. ஆர். கோபால் ராவ், (திருச்சி முனிசிபல் வைஸ் சேர்மன்) டி. பி. வேதாசலம், டி. ஏ. ஜீ. ரத்னம், டி. வி. கே. நாயுடு, கந்தசாமி செட்டியார், ஜே. எஸ். ராமானுஜம், டி. எஸ். சஞ்சீவி செட்டியார்,

---

அசம்பிளித் தேர்தல்

திரு.எம். மூர்த்தி அபேட்சை

பள்ளிகொண்டா, நவ, 6

பள்ளிகொண்டா திரு. எம். மூர்த்தி எழுதுகிறார்:—

வரப்போகும் அசம்பிளித் தேர்தலில் வட ஆர்க்காடு ராணிப்பேட்டை ஆதிதிராவிடர் தொகுதிக்கு ஜஸ்டிஸ் கட்சி சார்பாக நான் ஒரு அபேட்சகராக நிற்கிறேன்.

வட ஆர்க்காடு 'ஜஸ்டிஸ்' மகாநாடு

வாணியம்பாடியில் கூட்டம்

கனம் மந்திரி ராஜன் தலைவர்

(நமது நிருபர்)

வேலூர், நவ, 6

வடார்க்காடு ஜில்லா ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு இம் மீ மூன்றாவது வாரத்தில் வாணியம் பாடியில் நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றது. கனம் பி. டி. ராஜன் அவர்கள் தலைவராகவும், கனம் பொப்பிலி ராஜா அவர்கள் திறப்பாளராகவும், கனம் குமார ராஜா எம். முத்தையா செட்டியார் அவர்களால் கொடி ஏற்று விழா நடத்துவதென்றும், அவ்வூர் திருவாளர்களான கெ. சி. கந்தசாமி முதலியார், எஸ். விஸ்வநாத முதலியார், அப்பாதுரை முதலியார், குடியாத்தம் ஜீ. எம். அன்னல் தங்கோ ஆகியவர்கள் மகாநாட்டை சிறப்பாக நடத்த முயற்சி செய்து வருகின்றனர். அடுத்த வருஷம் ஆரம்பத்தில் நடைபெறப் போகும் சென்னை சட்டசபை தேர்தலுக்கு ஜஸ்டிஸ் கட்சி சார்பாக வடார்க்காடு ஜில்லாவின் அபேக்ஷகர்களையும் மகாநாடு முடிந்தவுடன் வாணியம்பாடியிலேயே யோசித்து முடிவு செய்வார்கள். ஆனதால் ஜஸ்டிஸ் கட்சியின் மீது அன்புகொண்ட பிரமுகர்களை எல்லாம் வாணியம்பாடிக்கு அன்று வந்து உதவி செய்யும்படி கேட்டுக் கொள்ளுகின்றனர்.

இந்த மகாநாடு முடிந்த பின் டிசம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் குடியாத்தம் தாலூக்கா ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு, குடியாத்தம் டவுனில் நடத்த ஏற்பாடு செய்திருக்கின்றனர். இதற்கு கனம் குமார ராஜாவை தலைவராகவும், கனம் பொப்பிலி ராஜா அவர்களை திறப்பாளராகவும், ஈ. வெ. ரா. அவர்களை கொடி ஏற்று விழா நடத்தவும் கேட்டு இருக்கின்றனர். மற்ற விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஸ்ரீமதி நாகமணி அம்மாள் காலமானார்

(ஒரு நிருபர்)

சேலம், நவ,

ரிடையர்டு பாரஸ்ட் ரேஞ்ச ஆ சரும், சேலம் மேட்டுத் தெரு எக்ஸ்டென்ஷனில் குடியிருப் வரும், ஜஸ்டிஸ் கட்சியின் சேலம் மத்திய பிரசார கமிட்டி அங்கத் னருமான திரு ஏ. சித்த பிள்ளை யின் 19 வயது குமாரியான ஸ்ரீமதி நாகமணி அம்மாள், சென்ற 3 மாதங்களாய் காச நோயால் பீடிக்கப்பட்டு சிறந்த வைத்திய உதவி செய்து பார்த்தும் பயன்படாமல் நேற்று காலை காலமானார் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சில வருஷங்களுக்கு முன்பு தான் தமது மனைவியை இழந்த திரு. சித்த பிள்ளை, தமது ஒரே குழந்தையையும் தற்பொழுது இழக்க நேர்ந்தமைபற்றி பலர் துக்கிக்கின்றனர்.

திரு. எம். வி. இ. கே. காசிச்சாமி நாடாருக்கு ராவ்சாஹிப் பட்டம்

திருநெல்வேலி ஜில்லா கலெக்டரின் தர்பார்

தூத்துக்குடி, நவ, 6

இன்று மாலை திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் திரு. டி.டி. வாரன் தூத்துக்குடி சப் கலெக்டர் ஆபிஸில் தர்பார் நடத்தி பிரபல வியாபாரியும், பொதுஜனங்களுக்காக சத்திரம், முதலியன கட்டிக் கொடுத்திருப்பவருமான திரு. எம் வி. இ. கே. காசிச்சாமி நாடார் அவர்களுக்கு ராவ் சாஹேப் பட்டத்தை வழங்கினர். ஷடி வைபவத்திற்கு பல பிரபலஸ்தர்கள் விஜயம் செய்திருந்தனர்.

பின்னர் ராவ் சாஹிப் எம். வி. இ. கே. காசிச்சாமி நாடார் அவர்களுக்கு ஓர் தேநீர் விருந்து ஸ்தல பிரமுகர்களால் நடத்தி வைக்கப்பட்டது.

தம்பதிகளுக்கோர் நற்செய்தி!
நற்கதி அளிக்கவரும் ஜோதி!!

எதிர்பாருங்கள்!

அது எது?

அக விருளைப் போக்கி
ஆத்ம லாபத்தை யளிக்கும்

சதி அநுசூயா

என்னும்
பதிவிரதா தர்மத்தின் வன்மையை
நிரூபிக்கும் புண்ணிய காட்சி.

☞ ஆண் பெண் இரு பாலர்க்கும் அவசியமான காட்சி இது!

ஞாபகத்திலிருக்கட்டும்!

பிரேம் சேத்ன அவர்களின்
பிரபல டைரக்ஷனில்

தென்னிந்திய சாரீர சம்பன்ன சங்கீத வித்வ மணிகளைக் கொண்டு
— ஏராளமான பொருட் செலவில் தயாரிக்கப்பட்டது. —

Apply to:—

M. A. S. CHELLAM & Co., Coimbatore.

சினிமா பகுதி

அகில இந்திய 2-வது சினிமா மகாநாடு

சென்னை, நவ, 6

அகில இந்திய 2-வது சினிமா மகாநாடு வருகிற கிறிஸ்மஸ் வாரத்தில் நடைபெற முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. சினிமா நடிகர்கள், பட முதலாளிகள், படம் பிடிப்போர், சினிமா அபிமானிகள் முதலியோர் ஒன்று கூடி தத்தம் அபிப்பிராயங்களை தாராளமாய் வெளியிடவும், சினிமா சம்பந்தமான பல துறைகளில் உள்ள நன்மை தீமைகளை ஆராய்ச்சி செய்யவும், சினிமாக் கலை முன்னேற்றத்திற்கான வழிகளைச் செய்வதற்காகவுமே இம்மகாநாடு கூட்டப்படுகிறது.

சென்னை பிலிம் லீக் காரியதரிசிகளும், அகில இந்திய 2-வது சலனப் பட மகாநாட்டுக் காரியதரிசிகளும் இது சம்பந்தமாக பின் வருமாறு எழுதுகின்றனர்:—

மகாநாட்டு பிரசார சப் கமிட்டி அங்கத்தினர்கள் சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம் முதலிய இடங்களிலெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்துவந்தனர். பிரசாரக் கமிட்டிக்கு சென்ற இடமெல்லாம் ஸ்டுடியோ சொந்தக்காரர்களும், பட முதலாளிகளும், தியேட்டர்காரர்களும், நடிகர்களும், வித்வான்களும், ரசிகர்களும் பெருவாரியாக ஆதரவு புரிந்தார்கள். அகில இந்திய சினிமா மகாநாடு கூடுவதை மனப்பூர்வமாக ஆமோதித்தார்கள். தங்கள் தங்களாலான உதவியைச் செய்வதாயும் வாக்குறுதி யளித்தார்கள். பிரசாரக் கமிட்டியார் சந்தித்த ஒவ்வொருவரும் மகாநாட்டின் வரவேற்புக் கழகத்தில் அங்கத்தினராகச் சேர்ந்ததோடு, சில முதலாளிகள் பொருளுதவியும் செய்திருக்கிறார்கள். தென்னிந்தியாவில் புகழ்பெற்ற நடிகைகளான ஸ்ரீமதிகள் எம். எஸ். விஜயாளும், ஜீ. பி. ராஜாயியும் வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களாகச் சேர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. மகாநாட்டு நிதிக்காக நன்கொடை அளித்தவர்கள் பின்வருமாறு:—

திரு. பி. எல். கெம்கா-கல்கத்தா ஈஸ்ட் இந்திய பிலிம் கம்பெனி மானேஜர் ரூ 200; ஸ்ரீமதி டி. பி. ராஜலக்ஷ்மி ரூ. 100; திரு. மெய்யப்பசெட்டியார்-காரைக்குடி முனிசிபல் சேர்மன், காரைக்குடி நடராஜா டாக்கீஸ் மானேஜர் ரூ. 100; திரு. அசான் தாஸ்-அசான் தாஸ் கிளாசிகல் டாக்கீஸ் ரூ. 100; மதுரை ராயல் டாக்கீஸ் டிஸ்டிரிபியூட்டர்கள் ரூ 100; தியாகராய டாக்கீஸார் ரூ 50; ஓரியண்டல் டாக்கீஸார் ரூ. 25; சந்திரா பிலிம்ஸ் ரூ 50; திருவாளர்கள்: எ. நாராயண், சிதம்பரம்செட்டியார், எம்.டி.ராஜன் ஆர். கே. ராமகிருஷ்ண செட்டி, என். வின்செண்ட் முதலியோர் ஒவ்வொருவரும் ரூ. 100. மொத்தம் இதுவரையிலும் ரூ. 1,325 நன்கொடையாக வரப் பெற்றிருக்கிறது.

இரண்டாவது அகில இந்திய சினிமா மகாநாட்டிற்கு ஆதரவு தேடுவதற்காக திரு. கே. சுப்ரமணியம் கல்கத்தாவில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார். குறைந்தது 25 பிரதிநிதிகளாவது அங்கிருந்து வரக்கூடுமென எதிர் பார்க்கப்படுகிறது.

* * *

"டேவிட் காப்பர் பீல்ட்" என்ற படத்தில் நடித்து பிரசித்திபெற்ற சிறுவன் பிரெட்டி பார்த்தலோமியோவுக்கு வருஷம் பதினாயிரம் பவுன் கொடுக்க மெட்ரோ கோல்ட்வின் கம்பெனியார் சம்மதித்துள்ளனர்.

* * *

ஹாலிவுட் நகரில் 300 சினிமா நிருபர்கள் இருக்கின்றனர். இவர்கள் மூலமாகத்தான் சினிமா விஷயம் உலகம் பூராவும் பரவுகிறது.

ஸ்டார்

தேவிகா ராணி நடிக்கும் "அச்சுத் கன்யா" என்ற ஹிந்தி பேசும் படம் நேற்று முதல் இங்கு இரண்டாவது வாரமாக நீடிக்கப்பட்டிருக்கிறது.

சரஸ்வதி

எம். கே. ராதா நடிக்கும், "சதி லீலாவதி" என்ற தமிழ் பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும்.

கினிமா

சீனிவாச சினிடோனின் "விஸ்வாமித்திரா" என்ற தமிழ் பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும். ராஜ சுந்தரி, கோபாலய்யர் முதலியோர் இப்படத்தில் நடிக்கின்றனர்.

வெஸ்ட் எண்டு

ஸ்ரீமதிகள் பி. என். சிவபாக்கியம், காந்திமதி பாய் முதலியோர் நடிக்கும் "பீஷ்மா" என்ற தமிழ் பேசும் படம் இன்று முதல் இரண்டாவது வாரமாக இங்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

பாலஸ் டாக்கீஸ்

"பதி பக்தி" என்ற தமிழ் பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும்.

கெய்டி

தேவி பிலிம்சாரின் "சம்ஸ்சார நௌகா" என்ற கன்னட பாஷைப் பேசும் படம் இன்று முதல் இரண்டாவது வாரமாக இங்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

பிரைட்டன்

ஸ்ரீமதி டி. பி. ராஜலக்ஷ்மி நடிக்கும் "சீமந்தினி" என்ற தமிழ் பேசும் படம் இரண்டாவது வாரமாக இங்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

பிராட்வே

பிரபாத் பிலிம் கம்பெனியாரின் "அமர் ஜோதி" என்ற ஹிந்தி பேசும் படம் இன்று முதல் மூன்றாவது வாரமாக இங்கு நீடிக்கப் பட்டிருக்கிறது.

ரீகல்

ஜுபேடா, பாய் தேசாய் முதலியோர் நடிக்கும். "ஆனந்த போஜா" என்ற உருது பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும்.

மினர்வா

வாரன் வில்லியம், ஹென்ரி வில்கோசியன் முதலியோர் நடிக்கும் "க்ருசேட்ஸ்" என்ற ஆங்கில பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும்.

கோவை பேலஸ் தியேட்டர்

திறப்பு விழா

கோவை, அக், 30

போத்தனூர் ரோட்டில் வெரைட்டி ஹால் சொந்தக்காரர் திரு. என். வின்சென்ட்டால் புதிதாய்க் கட்டப்பட்ட பேலஸ் தியேட்டரின் திறப்பு விழா நேற்று மாலை 6-30 மணிக்கு நடைபெற்றது.

ஆரம்ப விழாவின் அழைப்பிற்கிணங்கி உள்ளூர், வெளியூர் சினிமாப்பட முதலாளிகளும், பிலிம் டைரக்டர்களும், பிரபல ஆங்கில கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களும், விஜயம் செய்திருந்தார்கள், வந்தவர்களை திரு. என். வின்சென்ட் வரவேற்று உபசரித்தார். விஜயம் செய்திருந்தவர்களுக்கு பத்திரிகைகளில் விளம்பரப் படுத்தியிருந்தபடி "2 வினோதவீரர்" என்ற ஹாஸ்யப் படக்காட்சியும் அத்துடன் பிரபல இங்கிலீஷ் கலர் காவல்படமும் காண்பிக்கப்பட்டு இரவு 8-30 மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

ரேடியோ.

ஞாயிற்றுக்கிழமை 8௳
ஸ்ரீமதி கே. கோசம்மாள்
—தென்னிந்திய சங்கீதம் (பாட்டு)

திங்கட்கிழமை 9௳
ஸ்ரீமதி கமலா தேவி தொம்பத்
இந்துஸ்தானி சங்கீதம் —(பாட்டு)
5-45 ரேடியோ பேச்சு—"தீபாவளியும், வாண வேடிக்கையும்"

செவ்வாய்க்கிழமை 10௳
திரு. வி. எம். கிருஷ்ண மூர்த்தி
—தென்னிந்திய சங்கீதம் (பாட்டு)

புதன்கிழமை 11௳
மாஸ்டர் கே. குல்முகம்மத் சாகிப்
—இந்துஸ்தானி சங்கீதம் (பாட்டு)

தங்கம்—வெள்ளி

சென்னை, நவ, 7

	ரூ-அ-பை
பம்பாய் ஆலைத் தங்கம்	85—3—6
" வாய்தா	85—5—0
மூனா தோலா 1-க்கு	84—13—6
சவரன் மொத்தம்	22—6—9
சவரன் சில்லரை	22—7—0
வெள்ளி ரூ. 100 எடை	51—10—0
" ரூ. 1 எடை	0—8—3

ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் பக்தஜன சபை:—நாளை (8-11-36) மாலை 3-மணிக்கு, சென்னை கம்பூலையர் தெரு, நெ. 39 ஆஸ்ரமத்தில் பிரசங்க பூஷணம் திரு. பூ. பா. இரத்தின சபாபதி நாயக்கர், 'ஸ்ரீவல்லி தேவசேனை திருமணம்' என்பது பற்றி சொற்பொழிவாற்றுவார்.

காலக்ஷேபம்:— சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் தேவஸ்தான ஆழ்வார்கள் சம்ப்ரோக்ஷண விழாவின் தொடர்பாக 1936-ம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ந்தேதி சனிக்கிழமை இரவு 8-மணிக்குமேல் மேற்படி ஆலயத்தில் திரு. சுதர்ஸன ராமானுஜதாசரால் பண்ணிசை காலக்ஷேபம் நடத்தப்படும்.

ஸ்ரீபாலசுப்ரமணிய பக்தஜன சபை:—சென்னை, ராயப்பேட்டை குகானந்த நிலையத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மேற்படி சபையில் நாளை (8-11-36) மாலை 3-மணிக்கு கந்தமூர்த்தி சுவாமிகளைப்பற்றிய 7-வது பிரசங்கம் நடைபெறும்.

சென்னை நகரசபை

சென்னை, நவ, 6

சென்னை நகரசபையின் அடுத்த கூட்டம் 24-ந் தேதி நடைபெறும். நிரந்தரக் கமிட்டிகள் பலவற்றிற்கும் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க நிரந்தரக் கமிட்டிகளின் முதற் கூட்டம் 9-ந் தேதி நடைபெறும்.

* * *

சென்ற ஒரு வருஷத்திற்குள் பீபிங்கில் மட்டும் 168-ஜதை இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கின்றன.

விரைவில் வெள்ளித் திரையில் வெளிவரும்
— மகத்தான ஆரம்ப தினத்தை எதிர்பாருங்கள்! —

பிரபல வியாபாரியும், காலஞ் சென்ற
ஸ்ரீமான் V. S K. முத்துராமய்யர்
அவர்களின் குமாரர்
Mr. V. S. M.
ராஜாராமய்யர்
அவர்கள்
கதாநாயகராக நடித்த

டைரக்டர்:
டி. பி. கைலாசம்,
B.A., A.R.C.Sc., (London)

வேல் பிக்சர்ஸ் ஸ்டுடியோ
— வில் தயாரித்தது. —

"குட்டி"
அல்லது
சாமாஜக சித்திரம்
என்னும் சமூக சீர்திருத்த உயர்தர தமிழ் பேசும் படம்.

படம் வேண்டுவோர்:—
தந்தி: 'JARIVASTAR'
V. S. டாக்கீஸ்,
மதுரை.
சொந்தக்காரர்: V.S.K. முத்துராமய்யர் & சன்ஸ்

நீங்கள் இன்னும் பார்க்கவில்லையா?
வெற்றிக்கு மேல் வெற்றி!
இதுவரை கீழ்கண்ட இடங்களில் மட்டும்
10,000 ஜனங்கள் பார்த்தாய் விட்டது!!

M. K. தியாகராஜ பாகவதர்
M. S. தேவசேனு
முதலியவர்கள்
சிறப்புடன் நடித்த

டைரக்டர்: B. சம்பத்குமார்

சத்தியசீலன்
*
அல்லது
தந்தை சொல்
மறவாத் தனயன்
*

புதுக்கோட்டை—வெஸ்ட் டாக்கீஸ்: 4-வது வாரம். நாகப்பட்டணம்—ஜெயராம் டாக்கீஸ்: 4-வது வாரம்.
நாகர்கோவில்—கிருஷ்ணு டாக்கீஸ்: 2-வது வாரம்.
திருச்சி—வெல்லிங்டன் டாக்கீஸ்: 25—10—36 முதல் சேலம்—சென்ட்ரல் டாக்கீஸ்: 25—10—36 முதல்

படம் தயாரித்தவர்கள் :—தியாகராஜா டாககீஸ், திருச்சி. 'தந்தி: தியாகராஜ்'

நல்ல வேளை

காரைக்குடி "குமரன்" எழுதுவதாவது:—

அண்ணாமலை யுனிவர் சிட்டியின் உப அத்யட்சகராக இருக்கும் மகா கனம் சீனிவாச சாஸ்திரியார் விழுப்புரம் முனிசிபல் பள்ளிக்கூடத்தில் ஒரு உபந்யாசம் செய்த செய்தி பத்திரிகைகளில் வெளியாகியிருக்கிறது. கனம் சாஸ்திரியாரின் அரசியல் கொள்கையை உலகறிந்தது. சமூக சீர்திருத்தக் கொள்கையில் சிறிது அபிவிருத்தியுண்டென்று பலர் கருதியிருந்தனர். தமிழ்க் கல்விக்கு உயிர்ப்பிச்சை கிடைக்குமென்று பலரால் எதிர் பார்க்கப்பட்டுவரும் அண்ணாமலை யுனிவர் சிட்டியின் தலைமைஸ்தானத்தை அடைந்துள்ள கனம் சாஸ்திரியாரின் வாய்மொழி பெரிதும் கவனிக்கத் தக்கது. கனம் சாஸ்திரியார் அபிப்பிராயமும், அவர் இருக்குமிடமும் ஸ்தானத்தின் மகிமையும் பெரிதாக ஜனங்களால் கருதப்படுவனவாக இருக்கின்றன. "நான் சர்வாதிகாரியாக இருந்தால்" என்னசெய்வேன் என்பதைக்குறிப்பிடுகிறார். படிக்கும்போது தேசிய உணர்ச்சி யுள்ளவர்க்கு நடுக்கமெடுக்கும் செய்தி சாஸ்திரியாரின் வாய்மொழியாக வெளிவந்திருக்கிறது. நல்லவேளையாக அவர் சர்வாதிகாரியாக இல்லாமற்போனது நாடு செய்த தவப் பயனேயாகும்.

"நான் சர்வாதிகாரியாக இருந்தால் எல்லா ஹிந்துமகா சபைகளையும், முஸ்லிம் சங்கங்களையும் அழித்து விட்டு எல்லா இந்தியர்களையும் ஒரே மதத்தையுடையவர் என்று ஏற்படுத்துவேன். இவ்வித உடன் பாட்டுக்கு எதிராக 35-வயதுக்கு மேற்பட்டவர்கள் இணங்குவது கடினம். ஆனால், 35-வயதுக்குட்பட்டவர் நடக்க கஷ்டமிராது"

என்று பேசியிருக்கிறார். இரண்டு மத ஸ்தாபனங்களை யொழித்து விட்டுப் புதிதாக ஒரு மதம் சாஸ்திரியார் ஏற்படுத்த நினைப்பதில் தான் மூளைக் கோளாறிருக்கிறது. இதுவரை இருந்த மதங்களைச் சமரசம் செய்ய முயன்ற மதத் தலைவர் யாவரும், இருக்கிற பலவற்றுடன் புதிதாக ஒன்றையுண்டாக்கினதைத் தவிர அடைந்தபலன் ஏதாவதுண்டா? 100-சண்டையோடு சமரச மதமொன்று, ஆக நூற்றுஒன்று என்று வளர்ந்ததைத் தவிர வேறு கண்ட பலனென்ன? இந்தப் பேச்சிலிருந்து கனம் சாஸ்திரியாரின் கருத்தை ஒருவாறாக யூகிக்கலாம். பேதமற்ற உணர்ச்சிக்குப் பெரியவர்கள் சம்மதியார்கள்;* இளைஞர்கள் முழுமையும் இணங்குகின்றனர் என்பதேயன்றோ?

இப்படிப் பட்ட மற்றொரு விஷயத்தைப் பேசும் போது கனம் சாஸ்திரியாரின் 'கலர்' வேறுபடுகிறது. தாழ்த்தப்பட்டவர்களைப் பற்றிப் பின்வருமாறு பேசியிருக்கிறார்:—

"தாழ்த்தப்பட்ட ஹிந்துப் பையன்களை சாதாரண ஹிந்துப் பள்ளிக்கூடங்களில் சேர்த்தால் தாங்கள் தாழ்ந்த வம்சத்தைச் சேர்ந்த மக்கள் என்ற ஞாபகம் அவர்கட்கு ஏற்பட்டு அவர்களே விலகிக் கொள்வார்கள். ஆகவே, அவர்கட்குத்தனியாக அழகானதும் சுத்தமானதுமான பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த வேண்டும். அதேபோல கோவில்கள் அவர்களுக்கெனத் தனியாகக்கட்டி அமைக்க வேண்டும்" என்று பேசி முடித்திருக்கிறார். மதத்தைப் பற்றிப் பேசியதற்கும் இதற்கு முள்ள மாறுபட்ட தன்மை நோக்கத்தக்கது. முஸ்லிம்களையும் ஹிந்துக்களையும் இருக்கிற இரு மதங்களையும் ஒழித்து ஒரே மதத்தினராக்க வாலிபர் உதவி கிடைக்குமென்றும், தனக்கு அதிகாரமிருந்தால் செய்துவிடுவேனென்றும் கூறும் சாஸ்திரியார், ஜாதியில் வரும்போது தாழ்த்தப்பட்டவர், உயர் ஜாதி ஹிந்துக்களுடன் ஒன்றாக இருப்பதும் கூடாதென்கிறார். இரு குழந்தைகளும் ஒரு பள்ளியில் படிக்கமுடியாதென்கிறார்; கூடாதென்கிறார். சாதியும், சாஸ்திரியும் ஒரு மதமாவது முடியுமாம், ஒரு ஆதித்திராவிட ஹிந்துவும், ஒரு உயர் ஜாதி ஹிந்துவும் பள்ளியில் கலந்து படிக்க முடியாதாம். தனிப் பள்ளிக்கூடம் வைக்க வேண்டுமாம். பறைச்சேரி இதுவரை இருந்தது போதாதா? இப்பெரியார் அண்ணாமலை சர்வகலாசாலையின் உச்சியில் இருக்கின்றார். தமிழ்த்தாயே! உன் நிலையை யெண்ணி நடுங்குகிறோம். உனக்கு விமோசனம் என்று வருமோ? இளைஞர்களே! இம்மாதிரியான உரைகளின்று தப்பிப் பிழையுங்கள்! மதம் ஒன்று பட்டாலும் ஜாதிப்பிரிவு அவசியமா? சாஸ்திரியார் நல்ல வேளையாக சர்வாதிகாரியாக இல்லை. வயதாகிவிட்டதால் இனி வருவதும் முடியாது. ஆனாலும், இந்த அபிப்பிராயம் இளைஞர்களின் வெறுப்பிற்குரிய தென்பது ஞாபகத்தில் வைத்துக்கொள்ளத் தக்கதாகும்.

பார்ப்பனக் கொடுமையும், சூழ்ச்சியும்

(நவுக்கரசு நவில்வது)

திருவாரூர், நவ, 29

இந்நகரத்தின் பொது வாழ்வு பல வருடங்களாகக் கெட்டுப் போய்விட்டது. இதற்குக் காரணம் ஒரு சில பார்ப்பனர்கள் தங்கள் சுயநலம் கருதி செய்து வரும் சூழ்ச்சிகளே. இவர்களது சூழ்ச்சிகளைத் துணையாய்க்கொண்டு, தங்கள் பட்டம் பதவிகளைக் காப்பாற்றுவதில் கண்ணும் கருத்துமாயுள்ள சில பெரிய மனுஷர்களும் இதற்கு ஓர் அளவு ஜவாப்தாரிகளே. இவர்கள் ஆசைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய சமயம் நேரும் போதெல்லாம், மேற்சொன்ன பார்ப்பனர்கள், தாங்கள் எல்லாவற்றையும் சாதித்துவிடக் கூடியவர்கள் என்று பறையடித்துக்கொண்டு நிமிஷத்துக்கொரு கட்சிமாறித் தங்களுக் கியல்பாயுள்ள கவனஞ்சகப் பேச்சால் மயக்கித் தங்கள் வருவாயைத் தேடிக் கொள்வதில் பின்வாங்கமாட்டார்கள்; அம்மம்ம! கொடுமை, கொடுமை இவர்கள் கொடுமை சகிக்க முடியாது. அப்படிப்பட்ட சமயம் சேர்ந்தபோது தங்கள் கட்சியிலேயே இருந்து வந்தவர்களானாலும் அவர்கள் பார்ப்பனர்களாயிருந்தாலும்கூட, அவர்களைக் காலைவாரிவிட்டு விட்டுத் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ள தயங்கமாட்டார்கள். இவர்களது துணைப் பலத்தால் இந்நகரப் பொது ஸ்தாபனங்களை யெல்லாம் கைப்பற்றிக்கொண்டு, தமது ஏகபோக உரிமையாய் ஆண்டு வந்த ஒருவர் மேற்சொன்ன கும்பலாலேயே உதறித் தள்ளப்பட்டு இப்போது சற்று ஒதுங்கியிருக்கும் நிலைமையையடைந்து விட்டார் என்பது ஆச்சரியப் படத்தக்க விஷயமல்ல. இவர்கள் ஒரு புறமிருக்க, கூலி கிடைத்தால் போதுமென்று மாரடிக்கும் குலாம் கும்பல்கள் மலிந்து விட்டன. இவர்கள் எந்தக் கட்சி உயர்ந்து ஜயம் பெறுமோ அந்தக் கட்சியில் சேர்ந்து கொண்டு பொது ஸ்தாபனங்களெல்லாம், தங்கள் பாட்டன் வீட்டு சொத்துப் போல் பங்கிட்டனுபவித்து வரும் அக்கிரமம் சகிக்க முடியவில்லை. சட்டமே தெரியாதவர்களெல்லாம், சட்டமியற்ற முற்படுவதைப்போல், பலர் நியாயம் வழங்கும் ஸ்தானங்களில் அமர்ந்து விடுகிறார்கள். தீர்மானம் என்றால் என்ன? திருத்தம் என்றால் என்ன? பிரேரபனை என்றால் என்ன? எதிர்ப்பு என்றால் என்ன? எவர் எந்த விஷயத்தைப் பற்றி என்ன பேசுகிறார்? நாமதில் சம்பந்தப்படுவது சாதகத்துக்கா? பாதகத்துக்கா? என்பதைக்கூட உணராதவர்கள், பலர் ஸ்தல ஸ்தாபனங்களில் அமர்ந்து விடுகிறார்கள். சிலர் திருந்தாலும், தமது மனச் சாட்சியை விற்றேனும், வருவாய் தேடிக் கொள்வது ஒன்றை மட்டில் குறியாய்க் கொண்டு, 'ஆமாம்சாமி' போட்டு ஆசனத்தில் ஆடம்பரமாயமர்ந்து ஒரு கைக் கிருகை தூக்கி விடுகிறார்கள். அப்படிச் செய்வதால் எந்த சமூகம் பாதிக்கப்படுகிறது என்பது கூட இவர்கள் அகக் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. இத்தகைய போலிகள் கூட்டம் மலிந்து போனால் உண்மையான பொது ஜன உணர்ச்சியும், பொது வாழ்வும் எங்ஙனம் சிறப்படையும்? ஆகவே, பொது வாழ்வு குன்றி, மக்கள் நடைப்பிணமாய்க் காலம் கழிக்கவேண்டிய நிலைமையில் உண்டாகிவிட்டது. என்செய்வது? என்றுதொலையுமோ? இந்தப் பாவம்? அன்றுதான் நகரம் சிறப்படையும், நகர மக்கள் சுயேச்சையுடன் சுகத்தை யனுபவிக்கலாம். உதாரணமாக இரண்டொரு குறிப்பிட்ட விஷயத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஆலய நிலைமை

இவ்வூருக்குள்ள பெரியஆலயம், ஆயிரம் வேலி நிலங்களையுடையது இது பல மடத்தார் வசமிருக்கிறது. அதில் அபிஷேக அன்னதான கட்டளைகளுக்குச் சமார் 600 வேலி நிலங்களுண்டு. இதைப் பரிபாலிக்க வேண்டியவர் வெள்ளை வேட்டி கட்டி, வெளியெலாம் சுற்றி அலையும் வேளாகுறிச்சி யாதீனஸ்தாவார். இவரது நிர்வாகக் குறைவால், கடனதிமாகி இவர் இருக்குமிடம் தெரியாமல், மறைவாய் வாசம் செய்கிறார். இவரது நிர்வாகத்தை மேற்பார்க்க, இவர் ஸ்தானத்தில் பல அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளிருந்தாலும் அவர்களுக்குச் செல்வாக்கில்லையாம். இவரதுஉறவினராக நடிக்கும் ஒருவர்தான் சர்வாதிகாரி. இவர்கள் கட்டளை வரவுக்கு, ஒரு பார்ப்பன கிளர்க் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர், வசூல் செய்யும் தொகை, இவர் வகைச் செலவுக்கே போதவில்லை. கொஞ்சம் பணம் கஜானுவுக்கு வந்தால் உடனே அது வியாச்சியச் செலவுக் கென்று போய்விடும். சுவாமிக்குத் தாம்புக் கயிறுதான் சொந்தம். நேற்று முன் தினம் நடத்த வேண்டிய அன்னாபிஷேகம் நிறுத்தப்பட்டது. கஜானுவில் பணமிருந்தும், சர்வாதிகாரிக்கும், பார்ப்பன கிளர்க்குக்கும் மனமில்லையாம். கிளர்க்குக்கு குடிகளிடம் தள்ளிக்கொடுத்து வசூல் செய்யும் அதிகாரமும், டிரஸ்டியால் கொடுக்கப்பட்டிருக்கிறதாம். அந்த வகையில் பார்ப்பனக் கோஷ்டிக்குப் பலமான கந்தாய பலன்தானும். பழம் பெருச்சாளியான பார்ப்பன குமாஸ்தா ஒருவர் இவருக்குப் பக்கத்துணையாம், என்னே! விபரீதம். ஐயோ! இது வென்ன காலம்? கேட்பாரும் கவனிப்பாரு மில்லையா?

எட்வர்டு ஹால்

இன்னொரு விஷயமும் சொல்ல வேண்டியிருக்கிறது. இங்கு பல அன்பர்களுடைய பொருளுதவி கொண்டு கட்டப்பட்ட எட்வர்டு ஹாலும், அதில் நடைபெறும் காரனேஷன் கிளப்பும் 1902-ம் வருடம் மன்னர் முடி சூட்டு ஞாபகமாய் ஏற்பட்டது. அது பல வருடங்களுக்கு முன்னால் என். பி. வெங்கிட்டராமய்யர் என்ற வக்கீல் அவர் காரியதரிசி என்ற முறையில் அவர் வசம் இருந்து அப்போது அங்கத்தவராயிருந்தவர்களிடம் வருவாயின்றித் தடுமாறிற்று. அந்தக் கட்டிடத்தை கோவாப்ரேடிவ் பாங்கிக்கு வாடகைக்குக் கொடுத்து அதன் வருவாயைக் கொண்டு, ஒரு சில பார்ப்பனர்கள் சில பத்திரிகைகளை வரவழைத்துப் படித்துப் பயன் பெற்று வந்தார்கள். அவர் இந்த ஊரை விட்டுப்போக வேண்டிய சமயம் வந்தது. தன்னுடைய மாப்பிள்ளை வசம் இதை ஒப்படைத்துப் போனார். பிந்தியவர் பல வருடங்கள் ஆண்டு அனுபவித்துத் தான் ஊரை விட்டுப்போகும்போது அதை மற்றொரு பார்ப்பனர் வசம் விட்டுப் போயிருக்கிறார். [illegible] மட்டில், தேர்தல் முதலியன சட்டப்படி நடக்கவில்லை. இப்போது இதன் பலனை யனுபவிப்பது சில பார்ப்பன வக்கீல்களே ஆகும். இதை எல்லாருக்கும் பயன்படும்படி செய்ய வேண்டிய விஷயத்தில் தலைவர்களைப் பார்ப்பனரல்லாத் தலைவர் என்று சொல்லிக் கொள்ளும் தலைவர்கள் கவனம் செலுத்தவே இல்லை. நகர மக்களுக்கு உல்லாசமாய்க் காலம் கழிக்கவும், மாலை வேளைகளில் படிக்கவும், பொதுக் கூட்டங்கள் நடத்தவும் வசதியுள்ள பொது ஸ்தலம் இல்லாதது முக்கியமாய் வருந்தத்தக்கது.

பார்ப்பனரல்லாத மக்களே! தன்கையே தனக்குதவியென்று நீங்கள் ஒன்று சேர்ந்து உங்கள் முன்னேற்றத்துக்குப் பாடுபடுங்கள். நகரப் பொது வாழ்வு சிறப்பட உழையுங்கள். ஏமாந்த காலம் போதும். உஷார்! உஷார் !!

கல்லுப்பட்டி சத்திரமும், பார்ப்பன அதிக்கமும்

குன்னத்தூர், நவ, 1

திருமங்கலம் தாலுகா தே. கல்லுப்பட்டியில் ஒரு சத்திரம் நீண்ட காலமாய் இருந்து வருகின்றது அந்தச் சத்திரத்தில் நாளொன்றுக்கு 8 பேர்களுக்கு சாப்பாடு போட வேண்டுமென நியதி இருக்கின்றது. அந்தச் சாப்பாட்டுச் சீட்டுகள் இதற்குமுன் பெரிய தனக்காரர் வி. மு. அல்லது கர்ணம் இப்படிப் பொறுப்பு வாய்ந்த மனிதர்களால் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது சீட்டுக் கொடுக்கும் அம்முறை மாறி சத்திரம் அருதார் தம்மிஷ்டப்படி தம் இனத்தவராயப் பார்ப்பனர்கட்கே பெரும்பாலும் சாப்பாடு போட்டு 'வருகின்றார்.' பிராமணரல்லாத ஏழை மக்கட்கோ சாப்பாடு போடுவதென்றால் தம் குடும்பசொத்து போய் விடுவது போல் நினைக்கின்றார். உபாத்தியாயப் பார்ப்பான் முதல் உத்தியோகப் பார்ப்பான் வரை 'சாப்பிட்டு வருகின்றார்கள். இது பார்ப்பனர்களுடைய இயற்கைக் குணம். இன்னும் சத்திரத்தின் ஊழல்கள் மிகைபட உளது. மாத மொன்றுக்கு சத்திரத்திற்கு ரூ. 85-0-0 வரையிலும் போர்டிலிருந்து உதவி வருகின்றார்கள். இப்பணத்தைக் கொண்டு எத்தனை ஏழைகட்கு அன்னம் அளிக்கலா மென்பதை யோசியுங்கள். சராசரி நான்கு பேர்கள் சாப்பிடுவதாய்க் கூடசொல்ல முடியாது. மேலும், சத்திர அதிபர் மாதத்தில் பதினைந்து நாட்கள் சத்திரத்தில் இருப்பதென்பது அரிதிலும்அரிது அப்படி மதுரை முதலிய இடங்கட்கு பிரயாணம் செய்கின்ற காலத்து சத்திரத்தின் வேலைப் பாடுகள் எவ்வளவோ குந்தக மடைகின்றது. தவிர இவருக்கு வயதோ 65 ஆகிறது. நிருவாகங்கள் செவ்வனே கவனிப்பதற்கு இயலாதவராய் இருகின்றார். சத்திரத்தின் சீரிய ஒழுக்கங்கள் பலவும் சிதறிப் போகின்றது. பிராமணர்கட்கும், பிராமணரல்லாதார்கட்கும் வித்தியாசமின்றி நடைபெற வேண்டிய இவ்வன்னச் சாலையில் இவ்வித ஊழல்கள் காணடையில் நடைபெற்று வருவதை ஸ்தல ஸ்தாபனத் தலைவர்கள் கவனிப்பாரின்றிக் கிடக்கின்றது. நீதிக் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சியினர் நிர்வகிக்கும் இக்காலத்தில் இப்பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்காமற் போனால் எக்காலத்தில் விமோசனம் கிடைக்கப்போகிறது? எனவே, ஜில்லா போர்டு தலைவர்கள் நன்கு கவனித்து பிராமணரல்லாதாரில் தக்கதொரு மனிதரை தெரிந்தெடுத்து சத்திர நிருவாகத்தை சரியாய் நடத்தி வரவேணுமாய் பிராமணரல்லாதாரின் சார்பாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஜஸ்டிஸ் கட்சிப் பிரசாரகர்

பாகனேரி

நகர வைசிய இளைஞர் தமிழ்ச் சங்க ஆண்டு விழா

(ஒரு நிருபர்)

பாகனேரி, நவ, 2

இச்சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழா நாளது ஐப்பசி 23-ந் தேதி நடத்துவதாகத் தீர்மானித்திருந்தது. ஆனால், சில காரணங்களால் ஐப்பசி 22ந் தேதி சனிக்கிழமை மாலை 3மணிக்கு நடத்தத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. பண்டிதமணி, மு. கதிரேசன் செட்டியார் அவர்கள் தலைமை வகிப்பார். சொற்பொழிவாளர்கள்: திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் ("நவசக்தி" ஆசிரியர் சென்னை) 2. கமலாசிவ சுப்ரமணியம் அவர்கள் பி. ஏ. (கௌரவ மாஜிஸ்திரேட் தேவ கோட்டை) 3. லெட்சுமிபுரம், சொக்கலிங்க வித்தியா சாலை மாணவர்களால், பாட்டு, பேச்சு, நடிப்பு, நாடக சம்பாஷணைகள் நடை பெறும்.

பொது ஜன சங்கம்

(ஒரு நிருபர்)

திருநெல்வேலி, நவ, 1

இச்சங்கம் திருநெல்வேலிஜில்லா சம்பந்தப்பட்ட வரையில் பொது ஜன நன்மைக்கான பல துறைகளிலும் வகுப்பு, கட்சி பேதமன்னியில் கீழ்க்கண்ட முறையில் வேலைசெய்யும்.

1. பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நடைபெற்று வரும் ஸ்தல ஸ்தாபன ஆட்சி முறைகளில் பொது ஜனங்களின் நன்மைக்கு விரோதமான எத்தகைய காரியங்களும் நடைபெறாமல் கவனித்து வேண்டுவன செய்தல்.

2. பொதுஜன வசதிக்கான காரியங்களில் அவைகள் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களின் மூலம் நன்மை கிடைக்கும்படி தகுந்த முயற்சிகளை எடுத்துக் கொள்ளுதல்.

3. தொழிலாளிகள், விவசாயிகள், வியாபாரிகள் ஆகியவர்களின் குறைகளை அவர்களின் வேண்டுகோளை அனுசரித்து நிவர்த்திக்க ஆவன புரிதல்.

4. மேற்கண்ட காரியங்களை நிறைவேற்றும்வகையில் சட்டவரம்பிற்குட்பட்டு கடிதப் போக்குவரத்து செய்தல், மகஜர் அனுப்புதல், பகிரங்கக்கூட்டம் கூட்டுதல், துண்டுப்பிரசுரம் வெளியிடல், சட்டப்படிக்கான நடவடிக்கை நடத்துதல் முதலான வேலைகளைச்செய்யும்.

5. இச்சங்கம் பொதுத்தேர்தல்களில் தனிப்பட்ட நபர்களுக்கு யாதொரு வேலையும் செய்யாது ஆனால் தேர்தல் சம்பந்தமாய் பொதுஜனங்கள் அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்களை அவ்வப்போது எடுத்துக்காட்டும்.

6. இச்சங்கத்திற்கு வகுப்பு-கட்சி பேதமில்லாமல் மேஜரான ஆண்-பெண் அனைவரும் மெம்பராகச் சேரலாம். மெம்பராயிருக்க வருடச் சந்தா அணா 2.

இச்சங்க நிர்வாகம் அடியிற்கண்ட ஐவர்களால் நடத்தப்படும். பொது நன்மையைக் கருதி யாவரும் மெம்பராகச் சேர்ந்து குறிப்பிட்ட நோக்கங்களில் ஒத்துழைக்கும்படி வேண்டப்படுகிறது.

எம். தேவதாசன் பி.ஏ., பி.எல்., எம். எல். சி.,

டாக்டர் என். ஆர். வி. சொக்கலிங்கம்,

உ. ப. சங்கரநாராயண பிள்ளை,

கே. மாமது ஹுசேன், பி. ஏ., பி. எல்.,

எ. இராமநாதர்

திருவாரூர்

சுயமரியாதைச் சங்கம்

திருவாரூர் நவ, 2.

25-10-36 மாலை 7மணிக்கு மேற்படி சங்க கட்டிடத்தில் அங்கத்தினர்களின் பொதுக் கூட்டம் ஒன்று மேற்படி சங்கத் தலைவர் திரு. வி. பார்த்தசாரதி அவர்கள் தலைமையில் கூடியது. அவ்வமயம் திரு. மாணிக்கம் அவர்களால் இனிமையான சு-ம. கீதங்கள் பாடியதும் தோழர்களான கே. எஸ்.எஸ். ராஜன், கோதண்டபாணி முதலியவர்கள் "நமது சங்கமும் வருங்கால வேலை திட்டமும்," என்பதைப் பற்றி பேசினார்கள்.

பிறகு காலியாய் இருந்த ஸ்தானங்களுக்கு தோழர் டி. என். லெக்ஷப்பா அவர்களை காரியதரிசியாகவும், உப காரியதரிசியாக கே. சுந்தரராஜன் அவர்களையும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவுடன் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறக் கூட்டம் கலைந்தது.

பிறகு 27-ந் உ மாலை 7மணிக்கு மேற்படி சங்க நிர்வாக கமிட்டிக் கூட்டம் டிை சங்க உப தலைவர் தோழர் சே.எஸ். எஸ். ராஜன் அவர்கள் தலைமையில் கூடியது. அவ்வமயம் இச்சங்கத்தின் மூலம் மக்களுக்கு அறிவைத் தூண்டவும், நமது இயக்க கொள்கைகளைத் துண்டு பிரசாரத்தின் மூலம் பரவச் செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றியும் தோழர்களான ஜி.கண்ணுசாமி, டி. என். லெக்ஷப்பா முதலியவர்கள் பேசிய பின்பு கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டதும் தலைவர் முடிவுரைக்கு பின் கூட்டம் இனிது கலைந்தது.

தீர்மானங்கள்

(1) இச்சங்கத்தின் அங்கத்தினர்கள் பொதுக் கூட்டத்தை ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 3-வது ஞாயிற்றுக் கிழமைகளில் கூட்டுவது.

(2) மாதம் ஒரு முறை இயக்க சம்பந்தமான பிரசுரங்களை வெளியிடுவது.

குறிப்பு:--இவ்வூரில் சு-ம. சங்கம் ஆரம்பிப்பதற்கு முன் இருந்த "பிரீ திங்கர்ஸ் சங்கத்தை சு. ம. சங்கத்துடன் இணைக்கப் பட்டு விட்டது என டி. சங்கத்தின் காரியதரிசி அறிவிக்கிறார்.

தரங்கம்பாடி

நகரசபை தேர்தல்

(ஒரு நிருபர்)

தரங்கம்பாடி, நவ, 2

அக்டோபர் 29-ந் தேதி நடந்த நகரசபை தேர்தலில், கீழ்க்கண்டவர்கள் வெற்றி பெற்றனர்:- 1-வது வார்டு வீரப்ப செட்டியார் (இவருக்கு எதிரிடையாய் நின்ற காங்கரஸ் அபேட்சகருக்கு ஒரு ஓட்டும் கிடைக்கவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது.) 8-வது வார்டு எஸ். பகவதி நாடார், 9-வது வார்டு சாமிநாத பத்தர், 10-வது வார்டு ராம. தொரைசாமி பிள்ளை, 11-வது வார்டு, ராஜகோபால் பத்தர். ஏற்கனவே போட்டியில்லாமல் 11 மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மொத்தம் 16 ஸ்தானங்களில் 9 ஸ்தானங்களை ஜஸ்டிஸ் கைப்பற்றிவிட்டது. தலைவர் தேர்தலுக்கு தேதி குறிப்பிடவில்லை.

கீழ்த் தஞ்சை ஜில்லா போர்டு தேர்தல்

இந்த போர்டின் மெம்பர்கள் ஸ்தானத்திற்கு 14-11-36-ல் நியமனச் சீட்டுகள், மாயவரம், நன்னிலம், சீகாழி, திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டிணம் தாலுகா தாசில்தார்கள் ரிடேர்னிங் ஆபீசர் என்ற முறையில் பெற்றுக் கொள்வார்கள். 27-11-36-ல் தேர்தல் நடைபெறும். இவ்வருடம் பலமான போட்டிகள் இருக்கும். தேர்தல் சம்பந்தமாக ஜில்லா போர்டு தலைவர் திரு. சாமியப்பா அவர்கள் பிரபலஸ்தர் பலருடனும் கலந்தாலோசித்து வருகிறார்.

அனுதைப் பிரேதங்கள்

முகத்துவாரத்தில் இரண்டு பிரேதங்கள் வந்து ஒதுங்கியது. பிரேத பரிசோதனைக்காக போலீசாரால் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப் பட்டது.

திடீர் மரணம்

செம்படத் தெருவழியாக ஒரு பிரபலஸ்தரின் பிரேதம் போய்க் கொண்டிருக்கும்போது எண்ணெய் தேய்த்துக்கொண்டிருந்த ஒருவர் வெளியில் வர எத்தனிக்கையில், அப்படியே விழுந்து மரணமானார். அவருக்கு 8 வயதுள்ள சிறுமியைத் தவிர வேறு உறவினர்கள் கிடையாது. அப்பரிதாபகரமான மரணம் கல் மனதையும் கலக்கச் செய்தது.

பிரஞ்சு இந்திய கவர்னரின் விஜயம்

பிரஞ்சு இந்திய கவர்னரின் வருகைக்காக விசேஷ ஏற்பாடுகள் செய்திருந்தது. ஆனால், அன்று வாராமல் மறுநாள் காலையில் வந்து 'டேனிஷ்பர்க் கேஸில்" முதலிய கட்டிடங்களை பார்வையிட்டு சென்றார். இவருடன் காரைக்கால் மேயரும் வந்திருந்தார்.

ஜஸ்டிஸ் மகாநாடு

கூடிய சீக்கிரத்தில் ஜஸ்டிஸ் மகாநாடு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. தேதி பின்னால் அறிவிக்கப்படும்.

காங்கரசுக்கு ஆள் சேர்த்த விந்தை

அன்புக்காகவா? அதிகாரத்துக்காகவா?

ஆசிரியர்களின் நிர்க்கதி

அதிகார பார்ப்பனர் தேசபக்தி

(எஸ். கே. முத்துசாமித் தேவர்)

ஸ்ரீவில்லிபுத்தூர், அக், 30

ராஜபாளையம் நகர காங்கரஸ் கமிட்டியில் 1000-க்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் காங்கரசில் சேர்ந்து விட்டதாகப் பெருமை பேசி பொதுஜனங்களை ஏமாற்ற முயற்சிக்கும் காங்கரஸ் கூட்டத்தார்கள், ராஜபாளையத்திலுள்ள ஆரம்ப ஆசிரியர்கள் பூராவையும் அங்கத்தினராக சேர்க்க கையாண்ட முறையானது எதேச்சாதிகாரப் போக்குடையதாக இருக்கிறது.

ராமநாதபுரம் ஜில்லா கல்விச் சபை உப தலைவராக தோழர் பி. என். குமாரசாமி ராஜா எம்.எல்.ஏ., அவர்கள் இருந்து வருவதால் ஆரம்ப ஆசிரிய மானேஜர்களின் குடுமி அவர் கையில் சிக்கிக் கொண்டிருப்பதைத் தெரிந்த காங்கரஸ்காரர்கள் ஆரம்ப ஆசிரிய மானேஜர்கள் ஒவ்வொருவரிடமும் சென்று ஒவ்வொரு பாடசாலையிலுமுள்ள ஆசிரியர்கள் பூராவும் காங்கரசில் சேர வேண்டுமென்றும், இல்லாவிடில் பாடசாலைகளுக்கு இடையூறு ஏற்படும் என்றும் கூறியதைக் கண்டு ஆசிரிய மேனேஜர்கள் நடுக்கம் கொண்டதுடன் ஸ்ரீவில்லிபுத்தூர் ரேஞ்சில் காங்கரஸ் கட்டளைக்குக் கீழ்படியாமலும், காங்கரசை மதியாமலும் நடந்து வருகிற ஒரு சில பாடசாலைகளைக் கெடுத்து அங்கீகாரத்தை ரத்து செய்துவிட வேண்டுமென்று காங்கரஸ் தலைவர்கள் செய்துவந்த சதிகளையும் சூழ்ச்சிகளையும் கண்ட ஆசிரியர்கள் காங்கரஸினிடத்து அநுதாபம் இல்லாவிட்டாலும் கூட அதிகாரத்துக்குப் பயந்து, தம் வயிற்று பிழைப்பைக் கருதி, அங்கத்தினர் பாரத்தில் கையெழுத்திட்டதுடன் 4-அணா சந்தாவும் செலுத்தினார்கள். சில ஏழைகளான உதவி ஆசிரியர்கள், 'எங்களுக்கு காங்கரசிடம் அநுதாபம் கொஞ்சங்கூட கிடையாது. மானேஜர்கள் பயப்படுவதால் அவருக்காக வேண்டி, அங்கத்தினர் பாரத்தில் கையெழுத்திடுகிறோம், ஆனால், 4-அணா கொடுக்கமாட்டோம்' என்று மறுத்து விட்டார்கள். இவ்வாறு பயமுறுத்தி சுமார் 150 ஆசிரியர்கள் வரை அங்கத்தினராக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதுபோலவே, பயமுறுத்தியோ, பணம் கொடுத்தோ இதர அங்கத்தினர்களையும் சேர்த்திருப்பார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ஆனால், பத்திரிகைகளில் ஆயிரக்கணக்காக அங்கத்தினர்கள் சேர்ந்து விட்டதாக சாடு விடுவதை நம்புகிறவர்கள், ராஜபாளையத்தில் அங்கத்தினர்களை சேர்க்க காங்கரஸ்காரர் கையாண்டமுறையை உற்று நோக்கினால், ஒவ்வொரு இடத்திலும் இம்மாதிரியாகவே அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மறுக்கமுடியாது. காங்கரஸ் என்றால் என்ன? திட்டம் என்ன? கொள்கை என்ன என்பது அறியாத சிலரையும், பதவி எலும்புக்காக காத்துக் கிடக்கும் பலரையும், 4-அணா பெற்றுக் கொண்டு ஞானஸ்நானம் [illegible] பக்தர் என்று பட்டத் [illegible] படுவதாலேயே, தமிழ் நாட்டு காங்கரஸ் வாலாக்களிடையே ஏற்பட்ட சாக்கடை நாற்றமானது தேசமக்களின் மூக்கைத் துளைத்து செல்கின்றது. காங்கரஸிடம் அநுதாபம் உடைய யோக்கியர் ஒருவரையாவது ராஜபாளையம் காங்கரஸ் சபையில் அங்கத்தினர்களாக சேர்த்திருந்தால், சர்க்காரைத் தாங்கி நிற்கும் ராவ்பகதூர் தர்மராஜு கட்சியுடன் பஞ்சாயத்து போர்டு தேர்தலில் போட்டியிட்டே விரும்பார்கள். வெளியிடங்களில் சென்று, ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றி ஜனங்களுக்கு நன்மை செய்யப் போவதாக வாய் கூசாமல் வீரம் பேசும் காங்கரஸ் தலைவர் தோழர் குமாரசாமி ராஜா அவர்கள் ஏன் ராஜபாளையம் பஞ்சாயத்து போர்டைக் கைப்பற்றி எல்லா சமூகத்துக்கும், சமத்துவம் வழங்க முன்வரவில்லை என்று கேட்கிறேன். இதிலிருந்து, காங்கரஸில் யோக்கியர் ஒருவருமில்லை என்பதை காங்கரஸ் தலைவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டும். அல்லது தோழர் குமாரசாமி ராஜாவின் சகோதரரும், மாமனாரும் தலைவர்களாக நடத்தி வருகிற பஞ்சாயத்து போர்டை காங்கரஸ் கைப்பற்றக் கூடாதென்ற சுயநலம், தோழர் குமாரசாமி ராஜாவுக்கு உண்டாகியிருக்க வேண்டுமென்பதை பொது மக்கள் உணர்வார்களானால் சமீபத்தில் நடக்கப் போகிற ராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தலில் வாய்ப்பந்தல் போடவரும் தோழர் பி. என். குமாரசாமி ராஜாவுக்கு பொது மக்கள் சரியான புத்திகற்பிப்பார்கள் என்பது நிச்சயம்.

சென்னை மாகாண மத்திய தொழிலாளர் போர்டு

திரு. ஆர். சபாபதி முதலியார் அறிக்கை

சென்னை, நவ, 4

சென்னை மாகாண மத்தியத் தொழிலாளர் போர்டின் தலைவரான திரு. ஆர். சபாபதி முதலியார் பின்வருமாறு அறிவிக்கிறார்:—

அடுத்த வருஷம் நடைபெறப் போகும் சென்னை சட்டசபைத் தேர்தலுக்கு தொழிலாளர் சார்பாக அபேட்சகர்களை நியமித்து காங்கரஸ் பார்லிமெண்டரி போர்டுக்கு சிபார்சு செய்ய நாளைய 8-11-36-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்கு மேல் சென்னை சிந்தாதிரிப்பேட்டை 57. குருவப்ப செட்டித் தெருவிலுள்ள போர்டின் தலைவர் திரு. ஆர். சபாபதி முதலியார் வீட்டில் பொதுக் கூட்டமொன்று நடைபெறும். அச்சமயம் சென்னையிலுள்ள எல்லா தொழிற் சங்கங்களிலிருந்தும் இரண்டு பிரதிநிதிகள் வருமாறு வேண்டப்படுகிறது.

சென்னை கருணீகர் கூட்டுறவு நல் வாழ்க்கைச் சங்கம்

நிர்வாகிகள் தேர்தல்

(ஒரு நிருபர்)

சென்னை, நவ, 2

நேற்று காலை 8-30-மணிக்கு சென்னை பவழக்காரத்தெரு 138-நெ. இலக்கத்தில் சென்னை கருணீகர் பொதுக் கூட்டமொன்று காஞ்சிபுரம் திரு. ஆ. சுப்ரமணிய பிள்ளை தலைமையின் கீழ்கூடி பின் வரும் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தது. தலைவர்: திரு. பி. வி. சுப்ரமணிய பிள்ளை, உபதலைவர்: திரு. வி. சுப்ரமணிய பிள்ளை, காரியதரிசி: திரு. வி. எம். கடிகாசலம், உதவி காரியதரிசி: திரு. சி. ராஜகோபால், டைரக்டர்கள்: திருவாளர்கள். கே. ராஜகோபால், சி. என். சுப்ரமணியம், ஏ. ராஜபூபதி, பி. ஏ. எல். டி.

பார்ப்பன வக்கீல் அட்டகாசம்

விக்டோரியா இந்து எலிமெண்டரி பாடசாலை கமிட்டி கூட்டம்

கூட்டத்தில் பெருங் கலகம்

(ஒரு நிருபர்)

திருவண்ணாமலை, நவ, 1

25-10-36 ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு மேற்படி கமிட்டி கூட்டம் விக்டோரியா ஸ்கூல் கட்டடத்தில் கூடியது. கமிட்டி அங்கத்தவர்களும், அங்கத்தவர்கள் அல்லாத பார்ப்பனர்களும், சில பார்ப்பனரல்லாத முக்கியஸ்தர்களும் விஜயம் செய்திருந்தனர். தலைவர் வக்கீல் திரு. சேதுராமய்யர், மேற்படி கமிட்டி காரியதரிசி திரு. பி. என். ஸ்ரீநிவாச கோபாலய்யங்கார் (வக்கீல்), ராவ்சாஹிப் எம். என். சேஷாசலய்யர் முதலானவர்கள் குதூகலத்துடன் அமர்ந்திருந்தனர். இக் கமிட்டி கூட்டம் கமிட்டி மெம்பர்களுள் இருவர்கள் ஸ்தானம் காலியானதற்காக தேர்ந்தெடுக்க வேண்டி கூட்டப் பட்டது.

சட்டப்படி 30 தினங்களுக்குக் குறையாமல் தேர்தல் விஷயத்தை பகிரங்கப்படுத்த வேண்டும். தேர்தல் தினத்திற்கு முன்தினம் தான் நோட்டீஸ் மெம்பர்களுக்கு சர்வானதாகச் சொல்லப்படுகிறது.

கூட்ட நடவடிக்கை ஆரம்பித்ததும் கமிட்டித் தலைவர் பேசவேண்டியிருக்க காரியதரிசி அய்யங்கார் எழுந்து "காலி ஏற்பட்ட இரண்டு ஸ்தானங்களுக்கு தேர்தல் நடத்த வேண்டும். ஒரே காலத்தில் குறைந்தது ரூ. 30 (முப்பது) ஸ்கூலுக்காக நன்கொடை கொடுத்தவராகவாவது, பி. ஏ. பட்டதாரிகளாகவாவது, பென்ஷன் பெற்ற உத்தியோகஸ்தராகவாவது இருந்தாலொழிய ஓட்டுசெய்வதற்கு தகுதியுள்ளவர்கள் ஆகமாட்டார்கள். மற்றவர்கள் வெளியே போய்விட வேண்டும். யார்யாருக்கு நோட்டீஸ் கிடைத்ததோ அவர்கள் மாத்திரந்தான் கூட்டத்திலிருக்க வேண்டும்" என்று பேசினாராம்.

கமிட்டி அங்கத்தவர்களுள் தற்கால மிருப்பார்கள் பெரும்பாலும் பார்ப்பனர்களே; சிலரே பார்ப்பனரல்லாதார். பூராவும் பார்ப்பன கோட்டையாக இருக்கவேண்டும் என்கின்ற எண்ணம் கொண்டார்கள். அதற்கு அநுசரணையாக பார்ப்பனர்களை அதிகமாய் கூட்டத்திற்குக் கொண்டு வந்திருந்தார்கள். என்று சொல்லப்படுகிறது.

இதற்குமுன் ஒரு கமிட்டி கூட்டத்தில் ரகசியமாக ஒரு கூட்டத்தை கூட்டி தங்களுக்கு அனுகூலமாக பைலா ஒன்றை பாஸ் செய்து வைத்துக் கொண்டார்களாம். ஆனால், சட்டப்படி நோட்டீஸ் மாத்திரம் சரியான காலத்தில் விளம்பரம் செய்யவில்லை. இந்த விஷயத்தைப் பற்றி கமிட்டி மெம்பர் திரு. இ. சா. முத்துகுமாரசாமி முதலியார் எழுந்து விவாதம் செய்து கூட்டத்தை ஒத்திவைக்க பிரேரேபிக்க ஒருவர் ஆமோதித்தாராம். இந்த சமயத்தில் திருவண்ணாமலை டவுன் பஞ்சாயத்து போர்டு தலைவராயிருந்த திரு. வே. மு. சாமி செட்டியார் ஏதோ பேச ஆரம்பித்தாராம். உடனே ஒரு பார்ப்பனர் எழுந்து ஏதோ தாறுமாறாகப் பேசியதாகச் சொல்லப்படுகிறது. உடனே கூட்டம் குழப்பமாக ஆரம்பித்தது. மற்றவர்கள் இருதாரத்தாரையும் சமாதானப் படுத்தினார்களாம். முன்யோசனையின்றி பேசிவிட்ட பார்ப்பனர் பாடு திண்டாட்டமாய் விட்டதாகவும், திரு. சாமி செட்டியாரிடம் மன்னிக்க வேண்டும் என்று பலதரம் கெஞ்சி கூத்தாடினதாகவும் சொல்லப்படுகிறது. அதற்கு மேல் குழப்பத்தினால் கூட்டத்தை நடத்தாமல் ஒத்திவைத்து விட்டார்களாம். திரு. சாமி செட்டியார் அவர்கள் வக்கீல் பி. என். ஸ்ரீநிவாச கோபாலய்யங்கார் பேரில் திருவண்ணாமலை டவுன் சப் மேஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்கை தாக்கல் செய்து விட்டதாகவும் தெரிகிறது. 7-11-36-ல் வாய்தா குறிக்கப்பட்டிருக்கிறதாம்.

உலகின் முதல் மோட்டார்

1874-ம் ஆண்டில்தான் மோட்டார் முதன் முதலாக உலகில் தோன்றியது. அதைக் கண்டு பிடித்தவர் பிரான்சிலே, ஜீராவென்ற விடத்திலுள்ள மாரன் நகரவாசியாவர். அவர் பெயர் எம். பால். ஜெருமான். பாடசாலையில் வாசித்து வருங்காலத்தில், தரையில் ஓடக்கூடிய மோட்டார் ஒன்றை சிருஷ்டிக்க முயற்சித்து வந்தார். ஒரு எஞ்சின் ஓட்டி இயந்திர சம்பந்தமான நுணுக்கங்களை யெல்லாம் அவருக்குக் கற்றுக் கொடுத்தான். அவரது முயற்சி ஈடேறுவதற்காக அவரது அத்தை பணவுதவி தந்தனள். பல நாள் இடைவிடாமல் உழைத்து கிராஸின் சக்தியால் ஓடக்கூடிய ஒரு மோட்டாரை ஜெருமான் கண்டுபிடித்தார். அதனைப் பரீக்ஷித்துப் பார்ப்பதற்காக ஓர் நாள் இரவு தன் சிநேகிதர்களுடன் அதில் ஏறிக்கொண்டு மார்யேர் குன்றின் மீது செலுத்தினார். இரண்டுமைல் உயரமுள்ள அக்குன்றின் மீது அம்மோட்டார் ஏறிவிட்ட பொழுதிலும், அது ஏறுவதற்குள் அதனால் ஏற்பட்ட சப்தத்தினால் வழியில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தவர்களெல்லாம் விழித்தெழும்படி நேரிட்டது. அடுத்த நாள் காலை அவர் அவ்வூர் மேயரால் அழைக்கப்பட்டார். தனக்கு ஏதோ கவுரவமளிக்கப் போகிறார்களென ஜெருமான் கனாக்கண்டார். ஆனால், அதற்கு மாறாக மேயர் "அம்மோட்டார் பொதுஜன அமைதிக்கு அபாயத்தை விளைவிக்கக் கூடுமெனத் தான் கருதுகிறபடியால் உடனே அதை உடைத்துச் சுக்கலாகப் போடவேண்டும். இல்லாவிடில் சீர்திருத்தப் பாடசாலைக்குச் செல்ல வேண்டும்" எனக் கூறினார். இம்மாதிரி மேயர் கூறியது ஜெருமானுக்கு அக்கினிவாரிப் போட்டது. உடனே வீட்டிற்குச் சென்று தமது அருமை மோட்டாரை உடைத்து சின்னாபின்னம் செய்துவிட்டார். நகர மக்கள் இவரை எள்ளி நகையாடினர். அப்பொழுதும் ஜெருமான் மனந் தளர்ச்சியடையாமல் மேல்கொண்டு ஆராய்ச்சிகளை நடத்தி வந்தார்.

1914-ம் ஆண்டில் தமக்கு 59-வயதான பொழுதும் அதனைப் பாராட்டாமல் ஜெருமான் மகா யுத்தத்தில் சேர்ந்து படுகாய மடைந்தார்.

இனாம்! இனாம்!!

"ஒற்றுமை"

14-வருஷம் நடக்கிறது. வருட சந்தா ரூ. 1—0—0

மாதிரிப் பிரதி இனாம்.

ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராயநகர் மத்ராஸ்.

ஆனந்த விகடனுக்கு "ஆப்பு"

விகடம் காலித்தனமாக மாறுகிறது

உஷார்! உஷார்!! உஷார்!!!

(கோபால் நாயுடு, வண்ணை.)

இம்மாதம் 24-ந் உ வெளியான "ஆனந்த விகடன்", உயர் திருவாளர் டாக்டர். ஏ. லட்சுமண சுவாமி முதலியாரைப் பரிகசித்துக் கேவலமாக எழுதியுள்ளான். விகடனுக்கு 'எது விகடம்?' 'எது தவறு?' என்பது கூடத் தெரியவில்லை. அவன் சென்ற பிப்ரவரியில் 'தமிழன் மூளை' என மகுடமிட்டுத் தோழர் சோமசுந்தர பாரதியாரை ஏளனம் செய்தான்; அதற்குச் சரியான "ஆப்பு" விடுதலை விடுத்தது. அத்துடன் அடங்கிக் கிடந்த விகடன் இப்போது தனது வாலை நீட்டத் தொடங்கி இருக்கிறான். 'ஆனந்த விகடன்' துக்க விகடனாக மாற விருப்பமோ என்னவோ தெரியவில்லை. 'கேடுவரும் பின்னே, மதி கெட்டுவரும் முன்னே' என்பது தமிழ்ப் பழமொழி. அது விகடனுக்குச் சாஸ்வத 'காபிரைட்' போலும்!

டாக்டர். ஏ. லட்சுமண சுவாமி முதலியார் 'சர்வகலாசாலை மூசோலினி' என விகடன் பிதற்றுகிறான். அவர் மூசோலினியாக இருந்து சாதித்த காரியங்களில் தீங்கென்ன? அவர் - ஒரு பார்ப்பனரல்லாதார் வைஸ் சான்ஸலராக இருந்தது 'பார்ப்பன விகடனு'க்கு வயிற்று எரிச்சல். அவருக்குச் சிண்டிகேட்டில் 'மெஜாரிட்டி' இருப்பதும் பார்ப்பானருக்கு வயிற்றெரிச்சல். முதலியார் கொசுவைத் தட்டக் கை எடுத்தாராம். உடனே எல்லா மெம்பர்களும் கை தூக்கி விட்டனராம். சிலர் அவர் தயவைப் பெற இரண்டு கைகளையும் தூக்கினராம். என்ன அயோக்யத்தனம்! பல்கலைக் கழக மெம்பர்கள் அவ்வளவு மூடர்கள் என்பதல்லவா இதன் பொருள்! இது பல்கலைக் கழக மெம்பர் அனைவருக்கும் அவமானத்தைக் கொணரும் கூற்றல்லவா? சில மாதங்கட்கு முன்னதாகப் 'பார்ப்பனர் அல்லாதார் விஷயத்தில் தலையிடாதே' எனத் தலையில் அடித்திருந்தும், விகடன் தனது வாலை நீட்ட முயல்வது அவனது திமிரையே காட்டுகிறது. விகடனைப் படிக்கும் பார்ப்பனரல்லாத மக்கள் தங்கள் பிரமுகர் ஒருவரை இவ்வாறு விகடன் பரிகசித்திருப்பதை அவமானமாக உணர்ந்தால், விகடன் கதி யாதாகும்? ஆனந்த விகடா! நீ பிழைப்பது யாரால்? பார்ப்பனரல்லாப் பாமர மக்களின் பணத்தால் அல்லவா? அவர்கள் பணத்தைத் தின்று, அவர்கள் பிரமுகரையே இழிவாகப் பேசுவது உனது இரு பிறப்புப் புத்தியைத் தானே காட்டுகிறது! சில மாதங்கட்கு முன்தானே அசாங்கம் உன்னை எச்சரித்து விட்டது! அதற்குள் கர்வம் கொண்டு அலைகிறாயே. உஷார்! இனி பார்ப்பனர் அல்லாத பெரு மக்களிடை மரியாதையாக நட. இன்றேல் உன்னை ஒழித்துவிட நேரம் அதிகமாகாது என்பதையும் அறிந்துகொள். 'விளையாட்டு வினையாகும்' என்பதையும் அறிந்துகொள். உன் விளையாட்டைச் சாஸ்திரிகள் கூத்தியாரோடு சரஸ லீலைகள் செய்வதிலும், ஒன்றாக உராய்ந்து கொண்டு கார்களில் போவதிலும், கிருஷ்ணையர் தோட்டத்தில் காபி சாப்பிடுவதிலும் காலம் போக்கும் பக்தரிடம் காட்டு. இங்கே வேண்டாம் ஆழம் பார்க்காது காலை விடாதே. உஷார்! டாக்டர் முதலியாரைப் பற்றி நீ எழுதிய விகடத்தை உன் பார்ப்பனச் சாதியினரே இழிவாகக் கருதுகிறார்கள் என்பதையும் அறிக. இனி எந்தப் பார்ப்பன மெம்பராவது வந்து உன்னிடம் டாக்டரைப் பற்றி எழுதும்படிக் கூறினால், "ஐயா, அந்தத் தொல்லை வேண்டாம்; விடுதலை 'ஆப்பு' அறையும்" என்று பதில் கூறிவிடு. இப்போதும் உன்னை எழுதத் தூண்டிய பார்ப்பனர் யாவர் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். அதை இங்குக் கூறவேண்டுவதில்லை. 'உரைப்பார் உரைத்தால் "உன் மதி" எங்குப் போச்சு? இனியும் வால் நீட்டினால்... உஷார்! உஷார்!! உஷார்!!!

"சமரவலம்"

ஓர் மாத வெளியீடு

மக்களின் நல்வாழ்வு, பொருளாதாரநிலை, கிராம சீரமைப்பு, சுதந்திர விஷயங்கள் இவைகளை சமநோக்குடன் அபிவிருத்தி செய்யும் பத்திரிகை.

மானேஜர்:—
சமரவலம் ஆபீஸ்,
விழுப்புரம்.

ஏமாறாதீர்கள்!

எங்கள் வைத்தியசாலையின் மருந்துகள் மிகவும் சிலாக்கியமானதெனப் பலராலும் புகழப்பட்டு வருதல் கண்டு, சிலர் வேறு மருந்துகளை எங்கள் மருந்துகள்—அதாவது சி. எம். சாமி மருந்துகள் என்று சொல்லி ஏமாற்றி விற்பனை செய்து வருகிறதாகத் தெரிகிறது. எங்கள் வைத்தியசாலையிலிருந்து வெளி இடங்களுக்கு நாங்கள் யாரையும் அனுப்பவில்லை. எங்கள் ஏஜெண்டென்றும், எங்கள் மருந்துகள் என்றும் யாராவது விற்பனை செய்தால் அதைப் பொது மக்கள் வாங்கி மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கிறோம்.

மருந்து வேண்டியவர்கள் நேரே எமக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி, S. I.

தமிழ்நாட்டுச் செய்திகள்

மேலத் தஞ்சை ஜில்லா போர்டு

சர்க்கிள்கள் பிரிவினை

(ஒரு நிருபர்)

தஞ்சாவூர், நவ, 3

கவர்ன்மெண்டார் மேலத் தஞ்சை ஜில்லா போர்டிலுள்ள 6-தாலுக்காக்களையும் 28-சர்க்கிள்களாகப் பிரித்து அதற்கு ஒவ்வொரு ஸ்தானம் (பொது) அளித்ததோடு, 9-ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களையும் கொடுத்திருக்கின்றனர். ஆக ஸ்தானங்கள் 37.

தாலுகா வாரியாகப் பிரிக்கப்பட்ட சர்க்கிள்கள்

அ. பாபநாசம் தாலுகா:— 1 ஆலங்குடி; 2 அலூர்; 3 சாலியமங்கலம்; 4 மெலட்டூர்; 5 பாபநாசம்.

ஆ. கும்பகோணம்:— 6 திருப்பனந்தாள்—பந்தநல்லூர்; 7 கும்பகோணம்; 8 நாச்சியார் கோவில்; 9 ஆடுதுறை; 10 சோழபுரம்;

இ. பட்டுக்கோட்டை தாலுகா:- 11 பட்டுக்கோட்டை அதிராமபட்டினம்; 12 ஒரத்தநாடு—பாப்பாநாடு; 13 மதுக்கூர்; 14 பேராவூருணி; 15 காவாலிப்பட்டி.

ஈ. அரந்தாங்கி தாலுகா:— 16 அரந்தாங்கி; 17 வென்னூர்; 18 பொன்பேத்தி;

உ. மன்னார்குடி தாலுகா:— 19 மன்னார்குடி—கோட்டூர்; 20 நீடாமங்கலம்; 21 வடுவூர்; 22 சாத்தனூர்; 23 பாலூர்.

ஊ. தஞ்சாவூர் தாலுகா:— 24 திருக்காட்டுப்பள்ளி; 25 திருவையாறு; 26 நடுக்காவேரி; 27 செங்கிப்பட்டி; 28 உளூர்.

ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள் 9-ல், ஆதிதிராவிடர்களுக்கு 4-கிறிஸ்தவர்களுக்கு 1, முஸ்லீம்களுக்கு 2 ஸ்திரிகளுக்கு 2-மாக விநியோகிக்கப் பட்டிருக்கிறது.

இதில் ஆதிதிராவிடர் ஸ்தானங்கள் நான்கும் 1. சாலியமங்கலம்; 2. சாத்தனூர்; 3. நடுக்காவேரி; 4. செங்கிப்பட்டிக்கும்; கிறிஸ்தவர் ஸ்தானம் ஒன்று வடுவூர் சர்க்கிளுக்கும்; ஸ்திரீகள் ஸ்தானம் இரண்டும் 1. நாச்சியார் கோவில்; 2. ஒரத்தநாடு-பாப்பாநாடு சர்க்கிள்களுக்கும், முஸ்லீம் ஸ்தானங்கள் இரண்டும் 1. சோழபுரம்; 2. மதுக்கூர் சர்க்கிள்களுக்குமாக அளிக்கப்பட்டிருக்கிறது.

29-10-37-ல் நடந்த ஜில்லா போர்டு மீட்டிங்கில், கவர்மெண்டின் யோசனை சிலதிருத்தங்களுடன் ஒப்புக் கொள்ளப்பட்டது.

கல்லிடைக் குறிச்சி

செங்குந்த வாலிபர் சங்கம்

(ஒரு நிருபர்)

கல்லிடைக் குறிச்சி, நவ, 3

இவ்வூர் செங்குந்த மக்கள் கல்வியிலும், கைத்தொழிலிலும் பிற்போக்கடைந்தும், மூடப் பழக்க வழக்கங்களில் ஆழ்ந்தும், ஒற்றுமை இன்றியும், தேச சேவைக்கு லாயக்கற்றவர்களாகவும் இருந்து வருவதை நிவர்த்தித்து சமூகத்தை முன்னேற்றத்திற்குக்கொண்டு வருவான் சில வாலிபர்களின் பெரு முயற்சியின் பயனால் 31-10-36-ந்தேதி இரவு 8-மணிக்கு மேல் இவ்வூர் சங்கபஜாரில் சங்கத்திற்கென ஏற்படுத்திய கட்டிடத்தில் செங்குந்த வாலிபர்களின் கூட்டமொன்று சமூகப் பிரசாரகரும், அம்பா சமுத்திரம் செங்குந்தர் வாலிப சங்கத்தின் காரியதரிசியுமான கே. பழனி முதலியார் அவர்களின் தலைமையில் கூட்டப்பெற்று செங்குந்தர் வாலிப சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

முதலில் ஒருகாபிக்குல் இஸ்லாமிய சங்கத்தின் உப தலைவர் ஜனாப் இ. வி. கே. மீரான்சாகிப் அவர்களும், டி சங்கத்தின் உதவி காரியதரிசியும் மதராஸா ஆசிரியருமான ஜனாப் எ. பி. பீர் முகம்மது லெப்பை அவர்களும், எம். ராமசுவாமி முதலியார் அவர்களும் கீதங்கள் பாடி வீற்றிருந்தோர் செவி கேட்க நல் விருந்தளித்தனர்.

தலைவர் முன்னுரையாக, சமூகம் இதுபோதிருக்கும் தாழ்ந்த நிலைமையை எடுத்து இயம்பி அதனின்றும் மேன்மையடையக் கூடிய நெறிகளையும் சுட்டிக் காட்டி சொற்பெருக்கு ஆற்றினர். ஆர். ராமசுப்பிரமணியம் அவர்களும், வி. சிவனு முதலியார் அவர்களும் "கல்வியின் மேன்மையும், அவசியமும்" என்ற மகுடத்தின் கீழும் ஒருகாபிக்குல் இஸ்லாமிய சங்கத் தலைவர் ஜனாப் செய்யத் முகம்மது சாயபு அவர்களும், மேற்படி சங்கத்தின் காரியதரிசி அவர்களும், பஞ்சாயத்து போர்டு - பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பருமான ஜனாப் கே. எம். ஷேக்பீர் முகம்மது சாகிப் அவர்களும், திரு. ஏ பி.என். மகாலிங்க முதலியார் அவர்களும் "சங்கத்தின் அவசியமும், அதை நிர்வகிக்கும் முறைகளும்" என்ற தலைப்பின் கீழும் சொற்பொழிவு நிகழ்த்தினர். பின்னர் சங்க நிர்வாகத்திற்குரிய உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவரின் நீண்ட ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கிய பொன்னுரைக்குப் பின் காரியதரிசியின் வந்தனோபசாரக் கூற்றை பெற்று அவை இனிது கலைவுற்றது.

திருத்துறைப் பூண்டி தாலுகா

கன்னந்தங்குடியில் ஆதிதிராவிடர் பொதுக் கூட்டம்

(நமது நிருபர்)

திருத்துறைப் பூண்டி, நவ, 2

1-11-36 மாலையில் கீழ் தஞ்சை ஜில்லா போர்டு மெம்பர் தோழர் ராமன் வாய்க்காரர் அவர்களால் கூட்டம் கூட்டப்பட்டு மேற்படி போர்டு மெம்பர் திரு. சவரிமுத்து நாடார் அவர்கள் தலைமையில் நடந்தது. கூட்டத்திற்கு ஆண் பெண் உள்பட 500 ஜனங்கள் வந்திருந்தார்கள். தலைவர் தேர்தலுக்குப் பிறகு, திருத்துறைப் பூண்டி சுயமரியாதைக்காரர் தோழர் சமத்துவம் என்பவரால் "சுயமரியாதை கீதம்" பாடப்பட்டது. பிறகு திரு. டி. எம். உத்திராபதி, "ஆதிதிராவிடர்கள் முன்னேற்றத்திற்கு ஜஸ்டிஸ் கட்சி செய்த நன்மைகளும், காங்கரஸ் செய்த தீமைகளும்" என்பதைப் பற்றி பேசினர். பிறகு தோழர் ராமன் வாய்க்காரர் தங்கள் வகுப்பில் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும், அதற்காக இவ்விதமாகவே எல்லா கிராமத்திலும் கூட்டம் போட வேண்டுமென்றும் பேசினர். கடைசியாக வீரப்ப வாய்க்காரர் என்பவரும் கதர் அணிவதைக் கண்டித்துப் பேசினர். கடைசியாக வந்தன உபசாரம் கூறப்பட்டு கூட்டம் முடிவடைந்தது.

புதிய வாரச் சந்தை திறப்பு விழா

ஜில்லா போர்டு மெம்பருக்கு உபசரிப்பு

(ஒரு நிருபர்)

திருப்பத்தூர், நவ, 3

வட ஆர்க்காடு ஜில்லா திருப்பத்தூர் தாலுக்கா காட்டறம்பள்ளி கிராமத்திற்கு 5-மைல் தூரத்திலுள்ள வெலகல்நத்தம் கிராமத்தில் புதிய பிரைவேட் வாரச் சந்தை ஒன்று 1936-ம௵ அக்டோபர் மீ 30-ந் உ வெள்ளிக்கிழமைய தினம் ஜில்லா போர்டு மெம்பர் திரு. சி. சாமுண்டி கவுண்டர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அது சமயம் புதிய சந்தைக்கு வியாபாரிகளும் சுற்றுப் பக்கம் கிராமத்திய பிரபலஸ்தர்களும் கூடியிருந்து புகைப்படமெடுத்ததுடன் சந்தைக்கென வந்தயாவருக்கும் பழைய கால முறைப்படி பானகம் செய்து கொடுத்து உற்சாக மூட்டினர்.

பின்னர் ஜில்லா போர்டு மெம்பர் காட்டறம்பள்ளி திரு. கவுண்டர் அவர்களுக்கு கிராம பஞ்சாயத்தாராலும், கிராமவாசிகளாலும் ஒரு வந்தனோபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுத்து குறைகளை தெரிவித்து முடிந்ததும் உபசாரத்திற்கு பதில் சொல்லு முகத்தான் கிராமவாசிகளின் ஒற்றுமை தன்மையையும், இந்த இடத்திற்கு ஒரு வாரச்சந்தை இருக்க வேண்டியதின் அவசியத்தைப்பற்றியும், பாமர ஜனங்களுக்கு விளங்கும்படியான எளிய நடையில் பேசியதுடன், கிராம முன்னேற்றத்திற்கு சாதகமாயிருக்கவும் பிற்கால வாழ்விற்குமாக தற்கால ராஜீய துறையிலும் சிறிது அனுபவம் பெறவேண்டியதுடன் கிராமச் சிறுவர்களை பயில்விக்க வேண்டுமென்றும் பேசி முடித்த பின்னர், வந்தனோபசாரம் கூற கூட்டம் முடிவுற்றதும் பாண்டு மேளவாத்தியத்துடன் வழியனுப்பி வைக்கப்பட்டனர்.

உத்தமபாளையம்

போர்டு ஆரம்ப ஆண் பாடசாலை வெள்ளி விழா

(ஒரு நிருபர்)

உத்தமபாளையம், நவ, 3

மதுரை ஜில்லா பெரியகுளம் தாலுகாவைச் சேர்ந்த உத்தமபாளையத்தில் நடந்து வரும் போர்டு ஆண் பாடசாலையின் 25-ம் வருடக் கொண்டாட்டம் ஜில்லாக் கல்வியிலாகா அதிகாரி திரு. எஸ். வி. பால்ராஜ் பி.ஏ., எல்.டி. அவர்கள் தலைமையின்கீழ் 1-11-36 ஞாயிற்றுக்கிழமை மாலை சிறப்பாக நடைபெற்றது. டி விழாவிற்கு கல்வியிலாகா உத்தியோகஸ்தர்களும், உத்தமபாளையம் இலாகா ஆரம்பப் பாடசாலையின் ஆசிரியர்களும், உள்ளூர் வாசிகள் பலருமாக 500 பேர்கள் வரை விஜயம் செய்திருந்தார்கள்.

கடவுள் வணக்கம், தலைவரின் முன்னுரைக்குப்பின், போர்டு பெண் பாடசாலைச் சிறுமிகளால் கும்மி கோலாட்டம் வெகு அழகாக நடைபெற்றது. பின்னர் பாடசாலையின் தலைமை ஆசிரியர் திரு. எ. என். ஆறுமுகம் பிள்ளை வெள்ளி விழாவின் அறிக்கை வாசித்தார். 1911ம் ஆண்டில் 2 உபாத்தியாயர்களுடனும், 70 பிள்ளைகளுடனும், ஆரம்பிக்கப் பெற்ற இப்பாடசாலை தற்சமயம் 10 ஆசிரியர்களுடனும், 360 பள்ளிச் சிறுவர்களுடனும், விருத்தியடைந்திருப்பதையும், பாடசாலையின் இடவசதியின்மையாலும், போதிய ஆசிரியர்கள் இல்லாத குறையாலும் இன்னும் அநேகமான பிள்ளைகள் இப் பாடசாலையில் கல்வி பயில இயலாததைப் பற்றியும் எடுத்துரைத்தார். பிள்ளைகளின் தேக வளர்ச்சிக்கும் பாடசாலைக்குச் சொந்தமான விளையாட்டு மைதானம் இல்லாததைப் பற்றியும் குறிப்பிட்டார்.

பெற்றோர்களின் ஒற்றுமையைப் பற்றி ஜில்லா போர்டு கல்வி யதிகாரி கனம் டி. என். கிருஷ்ணமூர்த்தி ஐயர் எம். ஏ. எல். டி. சொற்பொழிவு நிகழ்த்தினர். பாடசாலையின் குறைகளை தாம் கவனிப்பதாகவும் தெரிவித்தார். உத்தமபாளையம் போர்டு ஹைஸ்கூலின் தலைமையாசிரியர் திரு. எம். ஆர். செங்கசாமி ஐயங்கார் எம். ஏ. எல். டி. கோவிலாபுரம் கிராமப் புனருத்தாரணத் தொண்டர் திரு. வி. அன்னசாமு பி. ஏ., முதலியோர்கள் வெள்ளி விழாவைப் பற்றியும், கிராமச் சீர் அமைப்பு வேலையைப் பற்றியும் முறையே பேசினர். ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் திரு. சங்குப் புலவர், தான் இயற்றிய வெள்ளி விழா வாழ்த்துப் பாக்களைப் பாடினர். சுகாதார விஷயமாய்ப் பள்ளிச் சிறுவர்கள் நாடக முறையில் நடத்திய சம்பாஷணைகள் மிக்க மகிழ்ச்சியைத் தந்தன. விளையாட்டுப் பந்தயத்தில் தேர்ச்சி பெற்ற சிறுவர்களுக்கும், வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கும் அவைத் தலைவர் அன்புடன் பரிசுகளை அளித்தார்.

அவைத் தலைவர் தன் முடிவுரையில், ஜீவியத்தின் நோக்கமே பொது ஜன சேவையாக இருக்க வேண்டுமென்றும், இப்பாடசாலையின் ஆசிரியர்களது உண்மை உழைப்பைச் சிலாகித்தும் பேசினர்.

"பாரதி" ஆசிரியர் திரு. நாராயணசாமி ஆரம்பக் கல்வியை ஆதரித்து அபிவிருத்தி செய்ய வேண்டியதைப் பற்றியும், ஆரம்ப ஆசிரியர்களைப் போற்றி ஆதரிக்க வேண்டியதைப் பற்றியும் உணர்ச்சி ததும்ப பேருரை செய்து, பின்னர் உள்ளூர் வாசிகள் சார்பாக தலைவருக்கும், விழாவைச் சிறப்பித்த மற்றோர்களுக்கும் வந்தன உபசாரம் கூறினர். தலைமையாசிரியர் திரு. எ. எஸ். ஆறுமுகம் பிள்ளை, தலைவருக்கும் மற்றும் யாவருக்கும் வந்தனம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

ஜலகண்டபுரம் பஞ்சாயத்துபோர்டு கூட்டம்

நிறைவேறிய தீர்மானங்கள்

ஜலகண்டபுரம், நவ, 4

சென்ற 31-10-36ல் நகர பஞ்சாயத்து போர்டின் கடைசிக் கூட்டம் தலைவர் திரு. எஸ். ராஜகோபால செட்டியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. அப்பொழுது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:—

பாராட்டு

"ஜஸ்டிஸ் கட்சியின் பிரதம கொறடாவாக இருந்தவரும், கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான செட்டிநாட்டுக் குமார ராஜா கனம் முத்தையா செட்டியார் அவர்களுக்கு அரசாங்கத்தினர் கல்வி மந்திரிப் பதவி அளித்தமைக்கு இக் கூட்டம் மகிழ்ந்து பாராட்டுகிறது.

அடுத்தபடியாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் முக்கியமாக சேலம், மேட்டூர் ஜல சப்ளைத் திட்டத்திலிருந்து இவ்வூருக்கும் குடி தண்ணீர் சப்ளை செய்ய வேணுமாக ஊர் பொது ஜனங்கள் எழுதிக் கொண்ட மகஜர் விண்ணப்பத்தின் பேரில், குடி தண்ணிருக்காக மக்கள் படும் அவஸ்தையை எடுத்துக்காட்டியும், ஜல சப்ளை விஷயமாக தயாரித்திருக்கும் திட்டத்தில் செலவைக் குறைத்து, வேறு திட்டம் தயாரித்து, அவசியம் மேட்டூர் ஜலம் சப்ளை செய்ய வேணுமாயும், அது விஷயமாக அரசாங்கத்தினர் அவசியமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேணுமாக போர்டாரும் கேட்டுக்கொள்வதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறிப்பிடத் தக்கது.

கூட்டம் முடிவில் தலைவர் திரு. எஸ். ராஜகோபால செட்டியார் அவர்கள், போர்டு நிர்வாகத்தில் இந்நாள் வரையில் தன்னுடன் ஒத்துழைத்து, பல முக்கியமான காரியங்களைச் செய்து முடிக்க அனுகூலமாயிருந்த எல்லா மெம்பர்களுக்கும் நன்றி கூறினர். பிறகு சிற்றுண்டி வழங்கப்பட்டு, புகைப் படம் எடுக்கப்பட்டு கூட்டம் இனிது முடிவுற்றது.

அடுத்த தேர்தல்

போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து போர்டின் புது மெம்பர்கள் எல்லாருக்கும், கட்சிப் பிரதி கட்சியில்லாமலும், போட்டியில்லாமலும் செய்வித்த நன் முயற்சியாளரில் முக்கியஸ்தரான இவ்வூர் தனவந்தர் திரு. மு. பெ. அர்த்தநாரி செட்டியார் அவர்கள் பாராட்டுதலுக்கு உரியவராவர்.

நடைபெறப் போகும் தலைவர் தேர்தலில் சேலம் ஜில்லா ஜஸ்டிஸ் பிரசாரக் கமிட்டி மெம்பர் திரு. வ. ச. இ. ராமசாமி செட்டியாரைத் தலைவராகவும், டி பிரசாரக் கமிட்டி மெம்பர் திரு. ப. கு. சுந்தரம் செட்டியாரை உப தலைவராகவும், தேர்ந்தெடுப்பதாக முடிவு செய்யப்பட்டுவிட்டது.

முத்தத்தின் இன்பம்

3 அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு 50 பக்கம் கொண்ட புத்தகம் இனமாய் அனுப்பப்படும்.

ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராயநகர், மதராஸ்

தீபாவளி! தீபாவளி!!

அசல் பட்டுப் புடவை

அழகிய சிறு ஜரிகைக் கரை, அசல் பட்டு. சிகப்பு, அரக்கு, புளு, பச்சை, ஸ்கை முதலிய கலர்களில் கிடைக்கும்.

12-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 5-12—0
16-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 7—8—0
18-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 8—8—0
5-முழம் x 44" அங்க வஸ்திரம் 1-க்கு ரூ. 3—8—0

வெண்பட்டு அங்க வஸ்திரம்

5 முழம் x 44" அழகிய கரைகள், சலவைக்கு கேர்த்தியானது.
விலை ரூ. 1—12—0—தான்.

☞ இந்த விலைகள் 10-11-36 வரைதான். ஞாபகத்தில் வையுங்கள்.
உடனே ஆர்டரை அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
(Proprietors : Sundarams Ltd.,)
சில்க் அவுஸ், காசி.

குமார சஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
அண்ணமலை
வைத்தியரின் மருந்து நிகரற்ற குணமுடையது
☞ வைத்தியர், அண்ணமலை முதலியார்
வைத்தியர் அண்ணமலை தெரு, மயிலாப்பூர், சென்னை

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

"அறிவுக் கொடி"

ஒரு சிறந்த தமிழ் மாத வெளியீடு.

ஆசிரியர் :—ஸ்ரீமதி சாமி சிதம்பரனுர்.

1936௵ நவம்பர்௴ 15-ந் தேதி முதல் ஒவ்வொரு ஆங்கிலமீ 15-ந் தேதியிலும் தவருமல் வெளிவரும்.

அறிவு வளர்ச்சி, மாதர் முன்னேற்றம், தமிழ் மொழி வளர்ச்சி, விஞ்ஞானம், வைத்தியம், விகடம், சங்கீதம், நாடகம், படக் காட்சி, மணமகக் கமழும் சிறு கதைகள் முதலிய சிறந்த பல விஷயங்களும், இனிய பாடல்களும் வெளிவரும்.

உள்நாடு வருட சந்தா ரூ. 1. வெளிநாடு ரூ. 1-8-0.

மானேஜர் :—"அறிவுக் கொடி" ஆபீஸ்,
462, கீழ்க் கடலங்குடித் தெரு, கும்பகோணம்.

பண்ட் அண்டு கோ.

குரோம் லெதர் ஒர்க்ஸ்

1890-ல் ஸ்தாபகம்.

உயர்ந்த சாமான்!

குறைந்த விலை!

(தங்க மெடல் பரிசுபெற்றது.
தென்னிந்தியாவிலேயே எங்களிடமிருந்துதான் ஏராளமான செருப்புகள் தயாராகின்றன.

மொத்த விற்பனைக்கும், சில்லரை விற்பனைக்கும் நம்பிக்கையான இடம். தோல் சரியானபடி அதிகோன் உழைப்பதற்காக விசேயுயர்ந்த சாமான்களால் பதனிடப்பட்டது.

170, பிராட்வே, சென்னை.

'கிராம ஊழியன்'

கிராமப் புனருத்தாரணத்திற் குழைப்பது. பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்ற மொன்றையே லக்ஷியமாகக் கொண்டு, சாதி, சமயப் பூசல்களை ஒழித்து, விவசாயிகள், தொழிலாளர் குறைகளை முறையிட்டு ஆதரவும் நோக்கங்கொண்டு மாதம் இரு முறை வெளிவரும் பத்திரிகை. வருட சந்தா ரூபா 2—0—0

மானேஜர் :— கிராம ஊழியன்,
துறையூர். (திருச்சி ஜில்லா)

விடுதலை மாந்தி வாழ்வதைக் கேட்பீராயின்
கெடுதலை நீக்கி மதியில சிந்தை
[நாட்டினரெல்லாம்
பொருள் சகப்பேறுகள் எவ்வும் பெற்று
திருமிக வாழ்தலே யாம்

விடுதலை

VIDUTHALAI

மலர்-2] சென்னை : (7-11-1936) தாதுவருஷ ஐப்பசிமீ 22உ சனிக்கிழமை [இதழ்-45

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்றுகின்ற
செம்மொழியை திருமொழியை
[தேன்மொழியை
தனித்தியங்கும் ஆற்றலுள தொன்மொழியை
[அமிழ்தனைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
[அனுதினமும் பழக்கம் செய்வீர்.

பம்பாய் கலகம்! பண்டிதர் கலக்கம்!!

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

க்கவேண்டுமென்று தோழர். நேரு கூறுகிறார். இது அடக்கு முறை அல்லவோ? பிரிட்டிஷ் ராணுவம் மட்டும் இல்லாமலிருந்திருந்தால், பம்பாயில் ஒரு உயிர் கூட தப்பியிருக்குமா? கலகக்காரர்களை ராணுவ பலத்தால் தானே அடக்க முடியும்?

ஆங்கில அரசின் அவசியம்

பம்பாய் கலகம் போன்ற அபாய சந்தர்ப்பங்களில் தேசியத் தலைவர்கள் வெளியில் தலையை நீட்டுவதில்லை.

ஒன்று மௌனம் சாதிக்கிறார்கள். அல்லது தூரத்திலிருந்து தேசாபிமானம், வகுப்பு ஒற்றுமை என்று சிங்கம் போல் கர்ஜித்து விடுகின்றனர். கடைசியில், வகுப்புக் கலகம் என்னும் பெரும் பூனையின் கழுத்தில் மணியைக் கட்டும் 'எலி' வேலையை பிரிட்டிஷ் ராணுவம் தான்!

கராச்சிக் கலகம்

சென்ற ஆண்டிலும் கராச்சியில் ஒரு ஹிந்து-முஸ்லிம் கலகம் ஏற்பட்டிருக்கும். நல்ல வேளையாக பிரிட்டிஷ் ராணுவத்தால் அது முளையிலேயே கிள்ளப்பட்டது. ஆவேசமும், ஆத்திரமும் கொண்ட முஸ்லிம் ஊர்வலமொன்று ஹிந்துக்களைத் தாக்க வந்தபோது, பிரிட்டிஷ் சோல்ஜர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து முஸ்லிம் கும்பலைப் பயமுறுத்தி விரட்டாவிட்டால், கராச்சி ஹிந்துக்களின் நிலைமை திண்டாட்டமாகப் போயிருக்கும். கராச்சி நகரமும் தவிடு பொடியாகியிருக்கும். சோல்ஜர்களின் இத்தகைய சேவை போற்றத்தக்கதொன்றாகும். ஆனால், அசெம்பிளியிலுள்ள தேச பக்த சிரோமணிகளான ஜின்னாவும், தேசாயும் சோல்ஜர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கக் கூடாதென்று மனம் கசிந்துக் கொண்டனர்! கராச்சி ஹிந்து பிரஜைகளைக் காப்பாற்றிய தோஷத்திற்காக காங்கிரஸ் ஹிந்துக்கள் பிரிட்டிஷ் சோல்ஜர்களை தூஷித்தனர். இப்பொழுது பம்பாய் ஹிந்துக்கள் பிரிட்டிஷ் ராணுவத்தைப் போற்றுவது போன்றே, அப்பொழுதும், கராச்சி ஹிந்துக்கள் பிரிட்டிஷ் ராணுவத்தைப் போற்றினர். ஆனால், ஹிந்து-முஸ்லிம் தலைவர்களென்று சொல்லிக் கொள்ளும் ஜின்னாவும், தேசாயும் பிரிட்டிஷ் ராணுவத்தைத் தூற்றித் திரிகின்றனர்!

இவ்வாறாக, பொது ஜனங்களுக்கும், பொது ஜனத் தலைவர்களுக்கும் யாதொரு சம்பந்தமில்லாமல் எட்டிக்குப் போட்டியாக இருந்து கொண்டிருக்கிறது.

சீர்திருத்த உடைப்பா?

புது சீர்திருத்தத்தை உடைத்துச் சின்னாபின்னப்படுத்தி சுயராஜ்யம் பெற்றுவிட்ட பிறகு, ஜாதி மதச் சண்டைகள் ஒழிந்துவிடுமோ? இந்தியத் தெருக்களில் ரத்த வெள்ளம் ஆறாய்ப் பெருகுமே! பொது உடைமைப் பிரசாரமும், சமதர்ம பிரசங்கங்களும் ரத்த வெள்ளத்திலடித்துப்போகுமே! மசூதிகளையும், ஆலயங்களையும் இடித்துத் தள்ள மகா ஜனங்கள் சம்மதிப்பரோ? பக்த கோடிகள் சத்தியாக்கிரகம் செய்வரோ? அவர்களை யெல்லாம் சுட்டு வீழ்த்த தோழர் நேரு உத்தரவு செய்வரா? உயிரை விடத் துணிந்தாலும் துணிவர்; மக்கள், மதத்தைவிட மனம் துணிவரா? ஜாதி மதப் பழக்க வழக்கங்களுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் ஆதரவாயிருப்பதால் தானே, அங்கே சர்க்காரிருந்தும் ஆடாது அசையாதிருந்து கொண்டிருக்கிறது. இந்த உண்மை சுயபேச்சைக்காரர்களும், பொதுவுடைமைக்காரர்களும் கொஞ்சமும் சிந்தித்துப் பார்ப்பதே இல்லை.

சட்ட திட்ட சமதர்மம்

சட்டதிட்ட விதிகளுக்குட்பட்ட அரசியல் முறையால் தான் கோரிக்கை ஈடேறுமென்றும், எதிர்மாறான கிளர்ச்சி முறையால் ஸ்பெயின் அடைந்துள்ள கதியைத்தான் அடைய வேண்டுமென்றும் வைஸ்ராய் லார்டு லின்லித்கோ, பேசியிருப்பதை தேச பக்தர்கள் சிந்திக்க வேண்டும்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குள்ளிருக்கச் சம்மதித்து விட்டால், சட்டதிட்ட முறைகளால் மிக எளிதில் சுயராஜ்யத்தையும், சமதர்மத்தையும் ஸ்தாபித்து விடலாம்.

மன மாற்ற பிரசாரம்

மத வெறியர்களை மாற்றாமல் அல்லது அடக்காமல் நாடு முன்னேறாதென்று தோழர் நேரு சொல்லுகிறார். மத வெறியர்களை அடக்கிவிடலாமென்பது சாத்தியமில்லை. காரணம், அதிகாரம் நம் கையிலில்லை. புது சீர்திருத்தத்தால் அடக்கி ஆளும் அதிகாரமும் வருமென்றாலும், பிரசாரம் செய்து மக்கள் மனத்தை மாற்ற முயற்சிப்பதே மேலானது.

மத விஷயத்தில் மக்கள் மனத்தை மாற்றும் பிரசாரத்தில் காங்கிரஸ் ஈடுபடுமா? அத்தகைய பிரசாரத்திற்கு தேர்தல் மேடைதான் சரியானது. சீர்திருத்தத்தை உடைக்கும் வீண் பேச்சை விட்டு விட்டு, தேசியத்திற்கும், ஜனநாயகத்திற்கும் விரோதமான வகுப்புப் பிணக்குக் காரணமாயிருந்து கொண்டிருக்கிற மனப்பான்மையை மாற்ற சர்வ மதத்திலுமுள்ள அறிவாளிகளும் தலைவர்களும் முன்வருவாரா?

'பிரஜைகளின் பிதா'

பல் வேறு வகுப்புகளையும் சேர்ந்த பிரஜைகளை யெல்லாம் தன்னுடைய பிள்ளைகள் போல் பாவிப்பதாகச் சொல்லிய லார்டு லின்லித்கோ இப்பொழுது வைஸ்ராயாக இருப்பதும் நம் பாக்கியமே. அத்தகைய பெரியாரின் மனத்தையும், காங்கிரஸ்காரர்கள் தங்கள் யோசனையற்ற நடத்தையால் நோகச் செய்துவிட்டனர். இப்பொழுதும் ஒன்றும் முழுகிப் போகவில்லை. சமூக ஒற்றுமை ஏற்படுத்த முயலும் வைஸ்ராயின் வார்த்தையில் நம்பிக்கை இல்லையானால், பம்பாயின் கோரக் காட்சிகளாவது, காங்கிரஸ் தலைவர்களின் முகக் கண்ணையும், அகக் கண்ணையும் திறக்குமா?

பிரிட்டிஷ் இல்லையானால்?

பிரிட்டிஷார் இந்நாட்டிலுள்ளளவும் வகுப்பு வாதத்தால் பிரமாதம் ஒன்றும் விளைந்து விடாது. பிரிட்டிஷார் கப்பலேறி விட்டால் இந்நாடு அல்லோல கல்லோலம் தான். வகுப்பு வாதம் உள்ளளவும் சமதர்மமும் பொது வுடைமையும் உருப்படவே செய்யாது. இந்தியப் போலீஸிலும், இந்திய ராணுவத்திலும் ஜாதி மதப் பித்தர்களுண்டாகலால் அவர்களாலும் வகுப்புக் கலகங்களை சமாளிக்க முடியாது. அவரவர்கள், அவரவர்கள் ஜாதி மதங்களைத் தாங்கியே துப்பாக்கியைத் தூக்கி எதிரிகளைத் தாக்குவர். இந்தியாவின் நிலைமை ஸ்பெயினைவிட மோசமடைந்திடும். அச்சமயம் இந்நாட்டை மற்றொரு அந்நிய தேசம் வந்து பிடித்துக் கொள்ளும். 'பழைய கருப்பனே கருப்பன்' என்ற பழைய பல்லவி பாடவேண்டியது தான்! இதற்கு நம் தேச சரித்திரமே சாட்சி.

காந்தியும் — நேருவும்

வகுப்புப் பூசலை அடக்க வேண்டியிருப்பதால் தலைவர்கள் சமரசமாகவும், சாந்தமாகவும், அமைதியாகவும் பேசக் கற்றுக் கொள்ள வேண்டும். கடபடா பேச்சால் காரியமாகாது. மகாத்மா காந்தி வடதுருவமென்றால், பண்டித நேரு தென் துருவம் என்றே சொல்ல வேண்டும். மகாத்மா சாந்த சொரூபியானால், பண்டிதரோ அவசரக் குடுக்கை. [மகாத்மா, தன் எதிரிகளையும் மதித்துப் பேசுவார்; நேருவோ எதிரிகளை அவமதித்து அலட்சியமாகப் பேசுபவர். நல்ல வேளையாக அவரிடத்தில் அதிகாரமில்லை. அதிகாரம் கிடைத்துவிட்டால் தலை தப்புவது தம்பிரான் புண்ணியந்தான்.

இவ்வளவு விருப்புடைய தோழர் ஜவஹர்லால் நேரு கலகம் நடக்குமிடத்தில் மட்டும் காலடி எடுத்து வைப்பதில்லை!

ஆக்க வேலை

இதுவரையிலும் நடந்து வந்த அழிப்பு வேலை போதும். இனியாவது ஆக்க வேலையிலிறங்கினால் நலம். பம்பாய் கலகத்தால் தன் மனம் கலக்கமடைந்ததாக தோழர் நேரு கண்ணீர் வடிக்கிறார்! சட்டதிட்ட விதிகளுக்கு ஒவ்வொரு பிரஜையும் அடங்கி நடக்கவேண்டிய அவசியத்தை அவர் இப்பொழுதாவது உணர்கிறாரா? சட்டமறுப்பியக்கத்தால் மக்கள் அராஜகத்திலும் இறங்கத் தலைப்பட்டு விடுவார்களென்பது அவருக்குப் படுகிறதா? வகுப்புவாத பூதம் எழுந்தாடத் தொடங்கிவிட்டால் சட்டம் திட்டம் காங்கிரஸ் லட்சியமெல்லாம் ஆடிக்காற்றிலகப்பட்ட எச்சிலிலை போலத் தானென்பதை அறிந்தாரா? கான்பூர் கலகம் ஞாபகமிருக்கிறதா? பிரபல காங்கிரஸ் தலைவரான கணேச சங்கர் வித்தியார்த்தி மத வெறியால் வெட்டி வீழ்த்தப் பட்டது தெரியுமா? இதோடு 'தோழரே' பம்பாய் கலகமும் ஞாபகமிருக்கட்டும்.]

முள்ளங்கி

முள்ளங்கியினால் வாதரோகங்கள், கரப்பான் ரோகங்கள், வயிற்று வியாதிகள், சூலை வியாதிகள், குடல் வியாதிகள், காச ரோகங்கள், பல் வியாதிகள், குன்ம வியாதிகள், இரைப்பு வியாதிகள், கடுப்பு வியாதிகள், தலைவலிகள் முதலியவைகளும் இவை சம்பந்தமான தொடர் வியாதிகளும் தீரும்.

நீர்த்தாரையில் உண்டாகின்ற கல் அடைப்பு என்ற கொடிய ரோகத்தைப் போக்குவதில் பிரபலமானது முள்ளங்கி. நீர்த்துவார ரோகங்கள் எதுவாயினும் அதை நீக்குவதில் முள்ளங்கிக் கிழங்கு ஒப்பும் ஈடும் இல்லாத சஞ்சீவி குணம் அமைந்தது.

குழந்தைகளின் பால் கட்டி, குலைக் கட்டி, குடல் கட்டிகளும், பெண் பாலரின் சூதக வாத ரோகங்களால் உண்டாகின்ற கட்டிகளும், குன்மக் கட்டிகளும், முள்ளங்கியின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் சூரியனைக் கண்ட பனி போல் மறைந்து போகுமென ஔவைப் பிராட்டியார் கூறியுள்ளதும் கவனிக்கத் தக்கது.

சென்னை அச்சுக்கூடத் தொழிலாளர் மகாநாடு

திரு. என். ஏ. ஆர். பாபு நாயுடு வேண்டுகோள்

சென்னை, நவ, 4

சென்னை அச்சுக்கூடத் தொழிலாளர் சங்கத்தின் ஆதரவில் நடைபெறப் போகும் 2-வது சென்னை அச்சுக்கூடத் தொழிலாளர் மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு. என். ஏ. ஆர். பாபு நாயுடு பின்வருமாறு அறிவிக்கிறார்:—சென்ற மாதம் நடைபெற வேண்டிய மகாநாடானது சென்னை கார்ப்பொரேஷன் தேர்தலை முன்னிட்டு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. அதை மீண்டும் புனராலோசனை செய்ய நாளைய 8-11-36-ந் தேதி மாலை 4-30 மணிக்கு மேல் சென்னை சிந்தாதிரிப்பேட்டை நெ. 57 குருவப்ப செட்டித் தெருவிலுள்ள திரு. ஆர். சபாபதி முதலியார் வீட்டில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். அச்சமயம் எல்லா அச்சுக்கூடங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வருமாறு வேண்டப்படுகிறது.

ரூபா 2—8—0-க்கு 3 வாட்சுகளும், பரிசுகளும்.

ஏக காலத்தில் ரூ. 2-8-0-க்கு 10 பாட்டில் ஆட்டோ டில்குஷ் அத்தர் புட்டிகள் வாங்குபவர்களுக்கு ரயில்வே டைம் பாக்கெட் கெடியாரம் 1, டைம் பீஸ் ரிஸ்டு வாட்ச் 1, 10 வருஷ உத்திரவாதமுள்ள ஒழுங்காக மணி காட்டக்கூடிய "B" டைம்பீஸ் 1, 300 அடி வெளிச்சம் காட்டும் டார்ச் விளக்கு 1, 14 காரட் ரோல்டு கோல்டு கிப்பு பவுண்டன் பேனா 1, முத்து மாலை 1 இலவசமாக அனுப்பப்படும். உடனே எழுதுங்கள். தபால் செலவு அணா 14 பிரத்தியேகம்.

DUTTA & Co., (V. V.)
15/1, Joymitter Street,
Hatkhola P. O.,
CALCUTTA.

குணமாகாத மூத்திர வியாதிகளுக்குப்
புதிதாகக் கண்டுபிடித்திருக்கும்
அற்புதமான சிகிச்சை!

வெட்டை ரோகத்திற்கு
சிறந்தது!!

வெட்டைரோக கிருமிகளை கொல்லக்கூடியது!

"கோனு கில்லர்" (ரிஜிஸ்டர் செய்யப்பட்டது)

இதுதான் இப்பொழுது எடுத்த நவ ஔஷதம். ஆங்கில, உள்நாட்டு வைத்தியர்கள் உங்களைக் குணப்படுத்தவியலாவிடில் வாக்குறுதிகளையும், இன்ஜெக்ஷனும் பண்ணத் தகதிராவிடில் கடைசியாகவேனும் நமது கோனோ-கில்லர் என்னும் ஔஷதத்தைப் பரீக்ஷித்துப் பாருங்கள். உங்களுக்கு வியாதி கண்டு எவ்வளவு காலமிருந்தாலும் அது குணப்படுத்திவிடும். ஸ்திரீகள், புருஷர்கள் இவர்களுக்கு ஏற்படும் மூத்திர வியாதிகளுக்கும், எல்லாவித வெட்டை ரோகங்களுக்கும், மூத்திரம் அதிகமாக இறங்குவதற்கும், மூத்திரம் பெய்கையில் ஏற்படும் வலியை நிவர்த்தி செய்யவும், மூத்திரப் பையில் ஏற்பட்டிருக்கும் அழற்சியைப் போக்கவும், வெட்டை வியாதிக் கிருமிகளால் ஏற்படும் வேறு பல வியாதிகளைப் போக்கவும் இது சிறந்த மருந்து. போலி மருந்துகள் வாங்காதீர்கள்! வாங்கும்போது எங்கள் கோழிமார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

சேவல் மார்க்கை பார்த்து வாங்குவீர்.

GONO KILLER

போலிகளைப்பற்றி உஷார்!

50-மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு ரூபா. 3. வி. பி. சார்ஜு வேறு. வெளி நாட்டு நேயர்கள் ரூபா. 4—8—0 முன் பணம் அனுப்பவும்.

டாக்டர் டி. என். ஜஸானி, கிர்காம் பாக் ரோடு, பம்பாய், 4.
Dr. D. N. JASANI, Girgaum Back Road, BOMBAY, 4.
சென்னை ஏஜண்டு:—தாதா & கோ.,
நெ. 52, தம்பியப்ப நாய்க்கன் தெரு, P. T., சென்னை.
F. M. S. & S. S. ஏஜண்டு:—N. O. A. முகம்மது இப்ராகிம் & பிரதர்ஸ்,
நெ. 198, காலாங் ரோட், சிங்கப்பூர்,
எஸ். ஈ. காதர் மொய்தீன், பிட்டுக் குருவி மெடிகல் ஸ்டோர்.
நெ. 89. Old Butcher Street, Pettah, கொழும்பு.

எ து ?

தமிழ்நாட்டில் குறைந்த சந்தாவில்
அதிக பக்கங்களோடு வெளிவரும் தமிழ் மாதப் பத்திரிகை.

"சித்தன்"

ஒன்றே. இனிய கதைகள், ஹாஸ்யம், உலகச் செய்தி, வைத்தியக் குறிப்பு, சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன நிறைந்தது.

வருட சந்தா அணா (8) எட்டே. வெளிநாடு ரூ. 1.

மாதிரிப் பிரதி இலவசம். விளம்பர விகிதம் மிகவும் குறைவு.

விபரங்களுக்கு எழுதவும் :—
மானேஜர்:—"சித்தன்", பழனி, S. I.

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN. AT THE JUSTICE PRINTING WORKS, 14, MOUNT ROAD, MADRAS. EDITOR: PANDIT S. MUTHUSWAMI PILLAI.

விலை அரை அணா   8 பக்கங்கள்   மலாய் நாட்டில் 5 சதம்   Regd. No. M. 3298.

“விடுதலை”
வாரம் இருமுறை பதிப்பு சந்தா

உள்நாடு		
1 மாதம்	...	0 6 0
3 மாதம்	...	1 0 0
6 மாதம்	...	1 14 0
1 வருடம்	...	3 10 0
சென்னைக்கு		
1 மாதம்	...	0 4 0
3 மாதம்	...	0 10 0
6 மாதம்	...	1 4 0
1 வருடம்	...	2 6 0

விடுதலை

VIDUTHALAI
(வாரம் இருமுறை வெளிவரும்)
ஆசிரியர்: பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.

“விடுதலை”
வாரம் இருமுறை பதிப்பு சந்தா.

வெளிநாடு		
1 மாதம்	...	0 10 0
3 மாதம்	...	1 14 0
6 மாதம்	...	3 12 0
1 வருடம்	...	7 4 0

சர்க்கார், முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டுகளுக்கு:

உள்நாடு:	வருடம்	ரூ.	7 8 0
சென்னை:	”	ரூ.	4 8 0

மலர்-2]   சென்னை:   (11-11-1936)   தாது ஹு ஐப்பசி மீ 26உ   புதன்கிழமை   [இதழ்-46

மூடுமந்திர காங்கரசு மூட்டை! முதன் மந்திரி சாட்டை!!

மலை கிள்ளி எலி பிடிக்கும் காங்கரஸ் புலிகள்!

கராச்சி திட்டமும், காங்கரஸ் தேர்தல் பித்தலாட்டமும்

புரட்சிக்கு சட்ட உடைப்பு பிள்ளையார் பூஜையா?

உலகப் புரட்சியும், ஜவஹர் சூழ்ச்சியும்

—:(O):—

திரு. ரங்கய்யர் “ஜஸ்டிஸ்” பத்திரிகையில் எழுதியிருப்பதாவது :—

ஸ்பெயினும், இந்தியாவும்

ஆங்கினது போதும், பெருந் துக்கம் பெருந் துக்கமாக முடியும். அரசியலில் கொள்ளைக்காரர்கள் நுழைந்து விட்டனர். கும்பகர்ண உத்தியோகத்தால் குடி முழுகிப்போகும். உள்நாட்டு விவகாரங்களில் அயல் நாடுகள் தலையிடக் கூடாதென்னும் சர்வதேச சங்க கமிட்டியில் அங்கம் வகிக்கும் ருஷியா, ஸ்பெயின் கலகத்தில் தலையிட்டு விட்டது. உலக புரட்சியில் இந்தியாவும் பங்கெடுக்க வேண்டுமென்று தோழர் நேருவும் உறுமுகிறார். பொதுவுடமைக்காரர்களின் கிளர்ச்சியால் பிரிட்டிஷ் சர்க்காரும், சட்ட வரம்பு ஸ்தாபனங்களும் பலஹீனமானால், இந்தியாவிலும் ருஷியா தலையிடத்தான் போகிறது. அப்புறம் ரத்த வெள்ளம் தான்.

பொப்பிலி புலியின் போடு

காங்கரஸ் திட்டத்திலுள்ள மூடு மந்திர தந்திரங்களையெல்லாம், முதன் மந்திரி, பொப்பிலி ராஜ தந்திரி, மாதம் ஒன்றுமிடத்தில் கூடிய பொதுக்கூட்டத்தில், வெட்ட வெளிச்சமாக்கி அம்பலத்தில் விழுத்து விட்டு விட்டார். காங்கரஸ் திட்டம் அஹிம்சை திட்டமல்லவென்றும், முற்றும் முன்னுக்குப் பின் முரணானதென்றும், நன்கு விளக்கிக் காட்டி வியாக்கியானம் செய்து விட்டார். இந்த நன்மை செய்வோம், அந்த நன்மை செய்வோம் என்று காங்கரஸ் திட்டம் கூறுகிறது. அதே திட்டத்தில் மற்றோரிடத்தில் சீர்திருத்தத்தை உடைப்போம் என்று கண்டிருக்கிறது. சீர்திருத்தத்தை உடைப்பது உண்மையானால், நன்மை செய்வதெப்படி? நன்மை செய்யப் போவது உண்மையானால், சீர்திருத்தத்தை உடைப்பதெப்படி? காங்கரஸ் திட்டத்தின் நிலைமை பாம்புக்குத் தலையும், மீனுக்கு வாலும் காட்டி வாழும் ஒருவகை பிராணியின் நிலைமையையே ஒத்திருக்கிறது. வோட்டர்களை அவ்வளவு அடிமடையர்களென்று எண்ணிவிட்டார்கள். வோட்டர்களை எப்படிவேண்டுமானாலும் பொம்மை போல் ஆட்டி வைக்கலாமென்று தீர்த்து விட்டார்கள். வோட்டர்களை ஈரக் களிமண்ணென்று கருதிவிட்டார்கள். தேச பக்தர்களென்று சொல்லிக் கொள்ளும் வீரர்கள் இப்படியும் எஜமானர்களாகிய வோட்டர்களை அவமதிக்கலாமா? பொது ஜனங்களின் புத்தியை ஆழம் பார்ப்பவன் அகப்படாமலா போய் விடுவான்? பல நாள் திருடன் ஒரு நாள் அகப் படுவானென்பது பழமொழியாச்சே?

மலை கிள்ளி எலி பிடிக்கும் புலிகள்

தேர்தல் சமயத்தில் தேனொழுகச் சொல்லும் வாக்குறுதிகளை காங்கரஸ்காரர்கள் சட்டசபையில் நிறைவேற்றிவைப்பதே இல்லை யென்று பொப்பிலி ராஜா கூறுவது முற்றிலும் உண்மை தான். அசெம்பிளி தேர்தலின் போது என்னென்னவோ சொன்னார்கள். சர்க்காரை ஸ்தம்பிக்கச் செய்வோமென்று ஜம்பம் பேசினார்கள். பிரதிநிதி சபை கூட்டுவோமென்று பிதற்றினார்கள். அசெம்பிளி நுழைந்து ஆண்டு இரண்டாகி விட்டன. சாதித்த சாதிப்பென்ன? எடுத்ததற்கெல்லாம் அவசரத் தீர்மானம்! ஆர்ப்பாட்ட அர்த்தமற்ற பேச்சு! விளையாட்டுப் பிள்ளை மாதிரி வெளியேற்றம்!—இவை தான் சத்தியமூர்த்தி கம்பெனியார் சாதித்த சாதனை. அடே! அப்பா! இப்பொழுது பொது தேர்தல் நெருங்குவது கண்டு, காங்கரஸ் திட்டமென்று ஒரு புது மூட்டை அளப்பு புறப்பட்டிருக்கிறது!

காங்கரஸ் மூடு மந்திரம் திறந்த
பொப்பிலி ராஜ தந்திரம்

பெரும் புத்தியும், திட சித்தமும், அருஞ்சக்தியும், அருங் குணமும் அபரிமிதமாக அமையப்பெற்ற அரசியல் அறிஞர் பொப்பிலி ராஜதந்திரியை முதன் மந்திரியாகக் கொண்டிருக்கும் இச்சென்னை மாகாணத்தின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். அப்பேரறிஞர், காங்கரஸ் திட்டம் பற்றி கூறுவதாவது:—“சீர்திருத்தத்தை உடைப்பதற்காகவே சட்டசபைக்குப் போவதாக ஓரிடத்திலும், கராச்சி தீர்மானங்களை நிறைவேற்றிவைக்கப் போவதாக மற்றோரிடத்திலும் காங்கரஸ் திட்டம் கூறுகிறது. ஒன்றுக்கொன்று முரணான இவ்விரண்டு வாக்குறுதிகளும் ஏக சமயத்தில் எவ்வாறு சாத்தியமாகுமென்பது புரியவில்லை. சீர்திருத்தத்தை உடைப்பதானால் மந்திரி உத்தியோகம் ஏற்க முடியாது. மந்திரி உத்தியோகம் ஏற்காமல் கராச்சி திட்டம் நிறைவேறாது”—என்று பொப்பிலி ராஜா காங்கரஸ் திட்டத்தின் குட்டை புட்டுக் காட்டி விட்டார்.

ஹிம்சையா! அஹிம்சையா!!

சாத்திரே பல்லியாம், இருத்தாப்போல் வார்ப்பதாம்! அப்படித் தானிருக்குது காங்கரஸ் நியாயம். கொலை செய்தல் கொடுமை. ஆனால், கொலைஞன் தைரியம் மெச்சத்தக்கதென்று காங்கரஸ்காரர்கள் கூறுகிறார்கள். பகத்சிங் போன்ற அரசியல் கொலைஞர்களின் தைரியத்தையும் தன்னலமற்ற தன்மையையும் போற்றியும், கொலைஞர்களை தூக்கி விட்ட சர்க்காரை தாக்கியும் கராச்சி காங்கரஸ் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. காங்கரஸ்காரர்களின் கோழைத் தனத்திற்கு இதைவிட வேறு உதாரணம் வேண்டாம். இந்த வெட்கங் கெட்ட கோழைத்தனமான தீர்மானத்திற்கு வாய்ச் சொல் வீரர் தோழர் பண்டித ஜவஹர் ‘சுகலாம் பாதாம்’ பாடினார்; அஹிம்சா அவதாரம் காந்தி மகாத்மா மங்களம் பாடினாராம். பகத்சிங் மாத்திரம், அசட்டுத்தனமாயில்லாமல் தன் வேலை திறத்தைச் சரியாகக் காட்டி யிருந்தால், அசெம்பிளியில் வீற்றிருந்த அத்தனை சுயராஜ்யக் கட்சி சூரர்களும், அலகாபாத் பண்டிதரின் அருமை தந்தையும் அதே நிமிஷத்தில் வைகுண்ட வழி பிடித்திருப்பார்கள். பகத்சிங் குண்டு சரியாகப் பாய்ந்திருக்குமா? [illegible] சீர்திருத்த குண்டு தவறிவிட்டது!

கராச்சி திட்டமும்,
பயங்கர புரட்சியும்

திட்டம் ஒருபுற மிருக்கட்டும், அதன் நோக்கமெல்லாம், பயங்கரமான பொதுவுடமை புரட்சிதான். ரத்த வெள்ளப் புரட்சியை சென்னை மாகாணம் ஆதரிக்கத் தயாரா? காங்கரஸ் தயாரா யிருப்பதாக தோழர் நேரு கூறிவிட்டார். உலக புரட்சி ஏற்படப் போவதாகவும், அதில் இந்தியாவும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் பண்டிதர் பாட்டுகிறார். நேரு கோருவது ரத்தம் சிந்த வேண்டியதும் பயங்கரமானதுமான ருஷிய பொதுவுடமை யென்றே தோன்றுவதாக பொப்பிலி ராஜாவும் அபிப்பிராயப் பட்டுவிட்டார். பிரிட்டிஷ் சம்பந்தமுள்ள குடியேற்ற நாட்டந்தஸ்தைக் கோரும் பொதுஜனத் தலைவர்கள் தீவிர பிரசாரம் செய்து காங்கரசின் வண்டவாளத்தை பட்டப்பகலாக்காவிட்டால், பின்னால் வருந்தவேண்டி வரும். வெள்ளத்திற்குமுன் அணை கோலுவதே மேல். ருஷியாவுடன் சேருவதற்குமுன், பிரிட்டிஷ் சம்பந்தம் அற்றுப்போக வேண்டுவது அவசியமென்று எண்ணித்தான் சுயேச்சை, விடுதலை, யென்று காங்கரஸ் கூச்சல்போட ஆரம்பித்திருக்கிறது. ருஷியா அடைந்திருக்கும் பொதுவுடமை நிலைமைக்கு இந்தியா லாயக்கில்லை யென்பதை நம் அண்ணாத்தைகள், அரசியல் ஞான சூனியங்கள் இன்னும் அறிந்துகொள்ளாமலிருப்பதற்கு அழுவதா, சிரிப்பதா?

பண்டிதர் படபடப்பு

‘காமாலை கண்ணனுக்கு காண்பதெல்லாம் மஞ்சளே’—என்பது காஷ்மீர் பண்டிதருக்கே பொருத்தம். அவருடைய பார்வைக்கு உலகமெல்லாம் கொதிப்பதாகவும், கொந்தளிப்பதாகவுமே தோன்றுகிறது போலும்! உலகப் புரட்சிகள் கிளர்ச்சிக்காரர்களின் சிருஷ்டி யல்லவென்றும், இயற்கையின் சேஷ்டையென்றும், புரட்சி சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்பவனே சரியான தலைவனென்றும், பண்டிதர் பெஜவாடாவில் பேசியிருக்கிறார்.

புரட்சிக்கு முற்படி
சட்ட உடைப்பா?

உலக புரட்சிக்கு பண்டிதர் இந்தியாவை தயார் செய்கிறாராம்! சீர்திருத்தத்தை உடைப்பது புரட்சிக்கு பிள்ளையார் பூஜையாம். 1919-ல் ருஷியாவில் நடந்த கொள்ளைகளும், கொலைகளும் ஞாபகமிருக்கட்டும். குத்தும், வெட்டும் கொலையும், கொள்ளையும், வேண்டுமா அல்லது குடிகளின் க்ஷேமமும், சமாதான வாழ்க்கையும், அமைதியும் வேண்டுமா என்பதை 1937 ம் வருடம் மார்ச்சு மாதம் நடைபெறவிருக்கும் தேர்தலில் பொது ஜனங்கள் தீர்மானிக்க [illegible]

பொதுவுடமை ஏஜண்டுகள் ஒவ்வொரு தேசத்திலும் இருக்கிறார்கள். அவர்கள் தேசத்திற்கேற்ற வேஷம் போடுவார்கள். தேசிய உணர்ச்சிமிகுந்திருக்கும் தேசத்தில் தேசிய போர்வை போட்டுக் கொண்டு, கிளர்ச்சிக்கும், கலகத்துக்கும் விதை நடுவார்கள். இதற்காக 1918-ல் லெனின் முதலியோர், ஒரு திட்டம் வகுத்திருக்கிறார்கள். அத்திட்டத்தைப் படித்தால் சீர்திருத்தத்தை உடைக்க வேண்டுமென்று சொல்லும் காங்கரஸ்காரர்களின் அந்தரங்க நோக்கங்கள் நன்கு விளங்கும். அந்நோக்கங்கள் இரண்டு: (1) இந்தியாவின் விடுதலை; (2) உலக புரட்சியில் பங்கெடுப்பது.

உலக புரட்சி திட்டம்

அயல் நாடுகளிலுள்ள ருஷிய பொதுவுடமை ஏஜண்டுகள் செய்ய வேண்டியவேலை:—

1. சண்டை மூட்டல்
2. கிளர்ச்சி செய்தல்
3. ஜனத் தலைவர்கள் மூலம் சர்க்காரை தாக்குதல்
4. பிரசாரம் மூலம் வேலை நிறுத்தம் விளைத்தல்.

காங்கரஸ் பொது வுடமைக்காரர்களின் பிரசங்கங்களும் பத்திரிகைகளும் மேற்படி வேலைகளையேதான் செய்து கொண்டிருக்கின்றன. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை தாக்குவதெல்லாம் செல்வாக்குள்ள ஜனத்தலைவர்களை கையில் போட்டுக் கொள்வதற்காகத்தான். உண்மை நோக்கம் பயங்கர புரட்சிதான். “ருஷிய புரட்சிக்கு முன்னால், பொது வுடமைகாரருக்கிருந்த செல்வாக்கு, இப்பொழுது இந்நாட்டில் காங்கரஸ்காரர்களுக்கிருக்கும் செல்வாக்கை விட ஒன்றும் அதிகமானதாயிருந்ததில்லை! அப்படியிருந்தும் ருஷிய பொதுவுடமை இயக்கம் ஜெயம் பெற்று விட்டிருக்கும் என [illegible] கொள்ளுகிறார்கள்.

எதிர் பிரசாரம் அவசியம்

மாஸ்கோ நகரம் ஒரு காலத்தில் பொது வுடமையை காரசம் போல் எண்ணியிருந்தது. இடைவிடாது செய்த பொதுவுடமை பிரசாரத்தாலும், சொத்துரிமையாளர்களின் அசிரத்தையாலும், அதே மாஸ்கோ, இப்பொழுது உலக புரட்சிக்கும் ருஷிய புரட்சிக்கும் தாயகமாகி விட்டது! சட்டவரம்பு, சமாதானம், சௌகரியம், பொது ஜன க்ஷேமம் கோரி நிற்கும் பொது ஜனத் தலைவர்களும், ஜன சமூகமும் கை கோர்த்தால், அடுத்த பொதுத் தேர்தலில் காங்கரசை குழி தோண்டிப் புதைத்து விடலாம்.

இனாம்!   இனாம்!!

“ஒற்றுமை”

14-வருஷம் நடக்கிறது. வருட சந்தா ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனாம்.
ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராயநகர் மதராஸ்.

தீபாவளி!   தீபாவளி!!

அசல் பட்டுப் புடவை

அழகிய சிறு ஜரிகைக் கரை, அசல் பட்டு. சிகப்பு, அரக்கு, புளு, பச்சை, ஸ்கை முதலிய கலர்களில் கிடைக்கும்.

12-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 5-12—0
16-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 7—8—0
18-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 8—8—0
5-முழம் x 44" அங்க வஸ்திரம் 1-க்கு ரூ. 3—8—0

வெண்பட்டு அங்க வஸ்திரம்

5 முழம் x 44" அழகிய கரைகள் சலவைக்கு சோத்தியானது.
விலை ரூ. 1—12—0-தான்.
☞ இந்த விலைகள் 10-11-36 வரைதான். ஞாபகத்தில் வையுங்கள்.
உடனே ஆர்டரை அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
(Proprietors : Sundarams Ltd.)
சில்க் அவுஸ், காசி.

காங்கரஸும், நகர சபையும்

ஆரம்பத்திலேயே பிராமணர்களின் ஆதிக்கம்

சென்ற நகர சபைத் தேர்தலில் 65 ஸ்தானங்களில் 30 டிவிஷன் அங்கத்தினர்களும், 5 ஆல்டர் மென்களும், 2 வியாபாரிகளும் ஆக மொத்தம் 37 ஸ்தானங்கள் காங்கரசுக்குக் கிடைத்தன வென்பதை யாவரும் அறிவார்கள். அதில் 13 பிராமணர்களும், 21 பிராமண ரல்லாதவர்களும் 3 மகமதியர்களும் (தாழ்த்தப் பட்டவர்களுக்கு இடமில்லை) இருக்கின்றனர். வெள்ளையர்கள் 9 பேரும், ஜஸ்டிஸ் கட்சியினரும், மற்றவர்களும் (ஒரு பிராமணர் உட்பட) 19 பேர்களுமாக இருக்கின்றனர்.

ஆல்டர் மென்

நகரசபை விஷயத்தில் கவனம் செலுத்தாதவர்கள் எல்லாம் ஆல்டர் மென்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால், நகரசபையில் அனுபவம் பெற்றவர்களுக்கெல்லாம் இடம் கிடையாதென்றால் இது பிராமணர்களின் சூழ்ச்சி என்று சொல்ல வேண்டியதில்லையா?

மேயர் தேர்தல்

இரண்டாவதாக மேயர் பதவியும், உதவி மேயர் பதவியும் காங்கரஸ்காரர்களே குத்தகைக்கு எடுத்துக் கொண்டனர்.

நிரந்தரக் கமிட்டி

மூன்றாவதாக இப்பொழுது நிரந்தரக் கமிட்டிகளின் வரலாற்றைப் பற்றி [illegible]விப்போம். பலவித அரசியல் [illegible]மையைக் கண்கூடாகக் கண்டு வ[illegible]க்கால மக்களுக்கு நிரந்தரக் [illegible]ஸ்தானங்களில் எதிர் கட்சி[illegible] ஒருவித அந்தர[illegible] அரசியல் பெருந்தன்மை[illegible]ம், நியாயம், ஒழுங்கு என்பன[illegible] தெரிந்து கொண்டிருக்கிற[illegible]ன்பதைக் காணும்போது [illegible]பையின் நிலை இப்படியும் ஆனதற்[illegible]மலிருக்க முடியவில்லை.

தேர்தல் முடிந்தது. காங்கரசின் பேரால் மனம் போனவாறு காரியங்களைச் செய்துவிட்டுப் பின்னும் பார்த்துக்கொள்ளலாம் என்று நினைக்கும் எண்ணம் சிலருக்குத் தோன்றியிருக்கலாம். அவ்வெண்ணம் நிலைபெற்றிருக்காது. பொதுமக்கள் பேரால் செய்யப்படுவன எல்லாம் பொது மக்களின் ஆதரவுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும். எச்சாராருக்கும் இழிவு செய்வதாக இருத்தல் கூடாது. பெரும் பான்மையான கட்சி, சிறுபான்மையான கட்சியை அவமதித்து நடத்தல் கூடாது. அது, அரசியல் பாற்பட்டதாயினும் சரி, மதத்தின் பாற்பட்டதாயினும் சரி, சமூகத்தின் பாற்பட்டதாயினும் சரி நமது நாட்டு தர்மத்திற்குட்பட்டதல்ல.

நிரந்தரக் கமிட்டித் தேர்தல் விவரம் பின்வருமாறு:—

கமிட்டிகளின் பெயர்	மொத்த ஸ்தானங்கள்	பிராமணர்	பிராமண ரல்லாதார்	வெள்ளையர்
கணக்குக் கமிட்டி	7	2	4	1
கல்விக் கமிட்டி	7	2	4	1
சுகாதாரக் கமிட்டி	7	3	3	1
வீதிக் கமிட்டி	7	2	5	0
நகர நிர்மாணக் கமிட்டி	7	2	4	1
வொர்க்ஸ் கமிட்டி	7	2	4	1
வரிவிதிப்பு அப்பீல்கள் கமிட்டி	2	1	1	0
மொத்தம்.	44	14	25	5

65 அங்கத்தினர்களில் 7 கமிட்டிகளிலும் தவறாமல் (பட்டம் பெற்றவர் உட்பட) 14 பிராமணர்களில் 13 பிராமணர்கள் அங்கம் வகிக்கின்றனர். மற்ற 42 பிராமணரல்லாதார்களில் 19 (காங்கரஸ் 17, ஜஸ்டிஸ் 2) பிராமணரல்லாதார்களும் 9 வெள்ளையர்களுக்கு 5 வெள்ளையர்களும் அங்கம் வகிக்கின்றனரென்பதை கவனிக்கவும்.

இப்படிச் செய்வது நியாயமாகுமா? இச்செய்கை ஒரு சாராரின் மனத்தை புண்படுத்தாதா? புண்பட்டவர்கள் வஞ்சம் தீர்க்க ஆசைப்படாரா? அப்பொழுது சமூகச் சண்டை பலம் பெறாதா? அது பலம் பெறக் காரணம் காங்கரஸ்காரர்களே காரணர்களல்லவா? இது காங்கரஸின் பேரால் செய்யப்படலாமா? தேச முன்னேற்றத்திற்கு இது தடை செய்யாதா? இது போன்ற சிறு குணத்திற்குப் பெருங் குணத் தலைவர்கள் இடங்கொடுக்கலாமா? இதை யெல்லாம் நகர வாசிகள் கவனிக்கவும்.

வெள்ளையர்களை கமிட்டியில் சேர்த்ததற்குக் காரணம் என்னவெனில் அவர்கள் காங்கரசை எப்பொழுதும் ஆதரிப்பார்களாம்! ஆனால், ஜஸ்டிஸ் கட்சியார் எப்பொழுதும் எதிர்ப் பார்களாம்! இது எங்கு கண்ட உண்மை; எவர் சொன்ன உண்மை. காங்கரஸின் முதல் கொள்கை வெள்ளையர்களை இந்தியாவை விட்டு துரத்தி விட்டு நாம் ராஜ்யம் ஆளவேண்டுமென்றிருக்க அவர்களை எப்பொழுதும் தூக்கி வைத்துக் கொண்டு திரியும் வெள்ளைப் பத்திரிகையுங் கூடக் கண்டித்திருக்கிறது. இங்கிலாந்து பார்லிமெண்டிலும் கூட சிறுபான்மையான கட்சிக்கு 100 க்கு 40 வீதம் இடம் கொடுப்பார்களென்றால் நமது இந்தியாவில் சுயராஜ்யம் வாங்கப் போகும் காங்கரஸ் இம்மாதிரி நடந்து கொள்ளுமானால் அதை [illegible] இக்கமிட்டிகளில் எல்லாக் கட்சியினருக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கின்றனர்.

காங்கரஸ் தலைவர் ஜவஹர்லால் நேரு வந்தபொழுது அவரை மயக்குவதற்காக திரு. சத்தியமூர்த்தி, நாங்கள் உத்தியோகம் பெறுவதற்காக சட்டசபைக்குப் போக இஷ்டப்படவில்லை என்று கூறினார். அவர் இப்பொழுது நகரசபையிலேயே கமிட்டிகளில் காங்கரஸுக்கும் வெள்ளையருக்கும் தவிர வேறு கட்சியினர்களுக்கு இடம் இல்லாமல் செய்தார். அப்படியிருக்க சட்டசபைக்குச் சென்றதும் பதவியை ஏற்கமாட்டாரா என்று கேட்கின்றோம்? அதோடு பட்டம் பெற்ற ஒரு பிராமணரையும் கமிட்டியில் சேர்த்திருக்கின்றனர். அவரும் காங்கரசை ஆதரிப்பாரா வென்று கேட்கின்றோம்?

மோடி திருத்தத்தை ஆதரித்து ஏழைத் தொழிலாளிகளின் வயிற்றில் நெருப்பைப் போட்ட திரு. சத்தியமூர்த்தி இப்பொழுது நகர சபையில் வரிவிதிப்பு அப்பீல் கமிட்டிக்கு அங்கத்தினராகச் சென்றிருப்பவர் ஏழை வரி செலுத்துவோருக்கு வரி அதிகரிப்பாரா அல்லது குறைப்பாரா என்று வாசகர்களே அறிந்து கொள்ளலாம்.

சென்னை நகர
காங்கரஸ் அங்கத்தினர்.

அரசியல் அவியல்

(தேசிக நாண்)

காங்கரஸ் வலிமை, பார்ப்பனர் வலிமை என்றோம். கேட்டார்களா? கார்ப்பரேஷன் தேர்தலை கண்டீர்களா? 3% பார்ப்பனர்க்கு 30·/· ஸ்தானங்களா? ஓ ஹோ! பூஜ்யத்துக்கு மதிப்பில்லையோ!

• • •

அசெம்பிளியில் அய்யமார்களுக்கு 50% கார்ப்பரேஷனில் 30·/·. பொதுத் தேர்தலில் எத்தனை /·? சத்தியமூர்த்தியும், சர்வேஸ்வரனும் தான் சொல்ல வேண்டும்!

• • •

“பார்ப்பனர் 3·/· தானே. ஏன் இவ்வளவு பயம்?”—என்று பாபு ராஜேந்திரர் ஒரு முறை சொன்னார். கூட்டம் 3·/·. ஆனால்—குறும்பு 97·/· என்றேன் நான். கார்ப்பரேஷன் தேர்தல் கண்டால் பாபுஜி என்ன சொல்லுவாரோ? ஸைபருக்கு 'கை வேல்யூ' என்பாரோ!

• • •

டாக்டர் நாயர் தெரியாமலா சொன்னார்? பார்ப்பனரல்லாதார் கூட்டம் பெரிதானாலும், பகுத்தறிவு சிறிதாகையால், பார்ப்பனர் விஷமம் பெரிதாகையால், தனித் தொகுதியே வேண்டுமென்று சாதித்தார். அவருக்குப்பின் வந்த தலைவர்கள், தேசாபிமானப் பித்தம் தலைக்கேறி பொதுத் தொகுதிக்கு சம்மதித்தனர். படு மனமே படு! மறுபடியும் பார்ப்பானுக் கடிமைப் படு! தனித் தொகுதிக் கிளர்ச்சி செய்ய தைரியமுண்டா? இல்லையேல், இந்தியா உள்ள நிலைமையில் பார்ப்பனரல்லாதாரின் மூளை இருக்கும் கோணத்தில் - தலைதூக்க முடியாதென்பது சத்தியமே!

• • •

அடிபட்ட நாகப் பாம்பு கடித்தே தீரும். பழிக்குப் பழி வாங்க பார்ப்பான் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறான். பார்ப்பனரல்லாதா[illegible]ப் படுத்திக் கொள்ள வேண்டியது தான்!

• • •

ஜஸ்டிஸ் கட்சிக்கு புத்தியிருந்தால் இனி போட்டி போடாதென்று காங்கரஸ் “தின மணி” கூறுகிறது. பார்ப்பனரல்லாதாருக்கு புத்தியிருந்தால் தினம் புளுகி பத்திரிகைகள் தெருவில் நின்று திண்டாட வேண்டியது தான்!

• • •

‘ஜஸ்டிஸ் கட்சிக் காரில் ஏறிக்கொள்ளுங்கள் — ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகர் பணத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்—போலிங் பூத்துக்குப் போனதும் காங்கரஸ் அபேட்சகருக்கு வோட் கொடுத்து விடுங்கள்’—என்று படேபடே தலைவர்கள் பொது மக்களுக்கு புத்திமதி கூறுகிறார்கள். ஏன் கூறார்கள்? அரிச்சந்திரன் பிறந்த நாடல்லவா இது!

• • •

ராயப்பேட்டை கூட்ட மொன்றில் அமீர்கான் ஆங்கிலத்தில் பேசினார். காங்கரஸ் அபேட்சகர் சுப்ரமண்ய அய்யர் மொழி பெயர்த்தார். சிவராஜைப் பற்றி மொழி பெயர்க்கும் போது, “சிவராஜ், காங்கரஸ் பத்திரத்தில் கையொப்ப மிடுவானேயானால்”—என்றார் அய்யர். இது தான் ஹரி ஜனுக்கு அய்யர் ஜன் காட்டும் மரியாதையோ!

• • •

காங்கரசுக்கு லஞ்சம் கொடுத்தும் கார்ப்பரேஷன் தேர்தலில் கச்சாபகேச முதலியார் கவிழ்ந்து விட்டாரே? பணம் திரும்புமா? பார்ப்பனரல்லாத அண்ணாத்தை நகரே! பணப்பை உஷார்!

• • •

வல்லபாய் நிதி யென்று ஒரு புது நிதி புறப்பட்டிருக்கிறது சபாஷ்! திலகர் நிதி திருட்டுப் போயிற்று. கதர் நிதி காற்றில் பறந்தது. ஹிந்தி நிதி பொந்தில் புகுந்தது. ஹரிஜன் நிதி ஜீரணமாகிறது. வல்லபாய் நிதி என்னாகும்? தில்லாலே பாடுமோ!

• • •

சடங்கில் தட்சணை; சமயத்தில் தட்சணை; சமூகத்தில் தட்சணை; சாமிகோவிலில் தட்சணை; சத்திரத்தில் தட்சணை; அரசியலில் மாத்திரம் அய்யமார் சும்மா உழைப்பரோ? தட்சணை வழி வந்த சமூகமாச்சே!

• • •

மதம், வருணாசிரமம்—ஆகியன பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கும்படி பண்டித ஜவஹரை நாகப்பட்டினத்தில் ஒருவர் கேள்வி கேட்டார். “என் ஜீவிய சரித்திரம்” படித்துத் தெரிந்து கொள், என்று பண்டிதர் பதிலளித்தார். அப்படியானால், காங்கரஸ், சுயராஜ்யம், பொதுவுடைமை ஆகியன பற்றி மாத்திரம் ஏன் அங்கும் இங்கும் ஓடி ஓடி இக் கத்திக்கத் திணறித் திணறி இக் கிஷயம் செய்கிறீர்? அவைகளைப் பற்றியும் அவ்வெழுதிய புஸ்தகத்திலிருந்தே படித்துக் கொள்ளக் கூடாதா?

• • •

‘பிராமணீயம்’ என்பதற்கு தியாகம், சேவை என்பதே பொருள், என்று சி. எஸ். ரங்கய்யர் கூறுகிறார். இது புது அர்த்தம். பொதுநல த்யாகம், சஜாதி சேவை என்பதே நமக்குத் தெரிந்த பொது அர்த்தம். இவ்விரண்டுள் எவ்வர்த்தம் பொருத்தமென்பதை பொது மக்கள் தான் முடிவு கட்ட வேண்டும்!

தஞ்சாவூர்

ஜில்லா போர்டுகள் எலக்ஷன்

(ஒரு நிருபர்)

தஞ்சாவூர், நவ, 8

கீழ்த் தஞ்சை ஜில்லா போர்டுக்கு 25 சர்க்கிள்கள் உண்டென்றும், அதில் பொது அங்கத்தினர்கள் ஸ்தானம் 25 என்றும், ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள் 8 என்றும்

மேலத் தஞ்சையின் சர்க்கிள்கள் 28 என்றும், ஒதுக்கப்பட்ட ஸ்தானம் 9 என்றும் ஆக 37 ஸ்தானங்கள் என்றும் முடிவான உத்திரவு சீக்கிரம் பிறப்பிக்கப்படும்.

தேர்தல்களுக்காக 16-11-36-ல் நாமினேஷன் பேப்பர் வாங்கப்படுமென்றும், தேர்தல் 28-11-36-ல் நடக்குமென்றும் தெரிகிறது.

பாபநாசம்

மின்சார விளக்கு திறப்பு விழா

(ஒரு நிருபர்)

பாபநாசம், நவ, 8

இவ்வூர் பஞ்சாயத்து போர்டு தலைவர் திரு. ஆர். என். எதிராஜுலு நாயுடு அவர்களின் நன்முயற்சியால் போர்டு எல்லைக்குள் மின்சார விளக்குகள் போடப்பட்டதை, தஞ்சை ஜில்லா கலெக்டர் திவான் பகதூர் ஆர். சுப்பையா நாயுடு காரு (பி. ஏ.) அவர்களால் 31-10-36-ல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கலெக்டர் அவர்கள் சுகாதார விஷயமாக சில யோசனைகள் எடுத்துச் சொன்னார்.

திரு. சொக்கலிங்கம் பிள்ளை அவர்களின் முயற்சியால் இவ்வூர் சீனிவாசப் பெருமாள் கோவிலுக்கு மின்சார விளக்குகள் போடப்பட்டிருப்பதை தாசில்தார் திரு. ராம சுப்பிரமணிய அய்யர் ஆரம்பித்து வைத்தார்.

சைகிள் திருடுவதை பொட்டி 12-வயது நீக்ரோ சிறுவனைக் கைது செய்து, செய்து களைத்துப் போன ஜெப்பர்சன் நகர போலீசார் அவனுக்கு ஒரு சைகிளையாகிலும் வாங்கித் தந்து விடுவதற்காக, பணத்திற்கு பொது மக்களிடம் விண்ணப்பித்துக் கொண்டுள்ளனர்.

அயர்லாந்தில் பெண்கள் எண்ணிக்கை சென்ற 10 வருஷங்களுக்குள் மிகவும் குறைந்து விட்டது.

ஜாதி வெறி பிடித்த திருச்செங்கோட்டில் சமபந்தி போஜனம்

திரு. ஈ. வெ. ராமசாமிக்கும், திரு. செ. தெ. நாயகத்திற்கும் பாராட்டு

(கோக்கலா—கோம்பன்)

திருச்செங்கோடு, நவ, 7

சேலம் ஜில்லாவிலேயே ஜாதி வித்தியாசத்தில் பேர் போனது திருச்செங்கோடு. அங்குள்ள ஓட்டல்களில் இன்றைக்கும்கூட தாழ்த்தப்பட்டவர்களுக்கு சாக்கடை ஓரங்களில் வைத்தே, சாப்பாடு போடப்படுகிறது. எம்மினரை மனிதத் தன்மையின்றி பேசுவதிலும், ஏதாவது சிறு தப்பிதம் செய்து விட்டாலும், அடித்து இம்சிப்பதிலும், இவ்வூர் முதல் பரிசைப் பெற்றே தீரும்.

இவ்வளவு அகம்பாவமும், வெறியும், கர்வமும் பிடித்த இந்த ஊரில் அநேக ‘சீர்திருத்த’ சங்கங்களும், ‘காங்கரஸ்’ அபிமானிகளும் இருந்து வருவதோடு, இந்த ஊருக்குச் சமீபத்திலேயே ‘காந்தி ஆசிரமம்’ ஒன்றும் இருந்து வருகிறது. தீண்டாமையை ஒழிக்கப் பாடுபடுகிறோம் என்று வாயளவில் சொல்லி வருபவர்களும், நிதி வசூலித்து தங்கள் வயிற்றை நிரப்புகிறவர்களும் இந்த ஊரிலுள்ள கொடுமைகளை ஒழிக்க கவனத்தைச் செலுத்தவே இல்லை. சென்ற வருஷத்தில் கூடிய காங்கரஸ் மகாநாட்டில் எம்மவர்களுக்கு, ஓட்டல்களில் தனியாக சாக்கடை ஓரங்களிலேயே வைத்துச் சாப்பாடு போடப்பட்டது.

[illegible]மவர்களை தனியே வைத்துச் சாப்பாடுபோட சில ஜாதி வெறியர்கள் முயற்சித்தார்கள். ஆனால், அவையெல்லாம் ஈரோடு பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், பிடிவாதத்தாலும், பெருந்தன்மையான குணத்தாலும், சூரியனைக் கண்ட பனி போல் பறந்தோடின.

டீ மகாநாட்டிற்குச் சென்ற எம்மவர்களுக்கு காலையில் ‘முசாபரி பங்களா’வில் தனியாகவே ‘டிபன்’ வழங்கப்பட்டது. இதையறிந்த திரு. ஈ. வெ. ராவும், திரு. சி. டி. நாயகமும், மத்தியானச் சாப்பாட்டுச் சமயம் எங்களனைவர்களெல்லோரையும், கூட்டிக்கொண்டு, அவர்களுக்கும் எங்களுக்குமாக ‘முசாபரி பங்களா’ விற்கு சாப்பாடு கொண்டுவரும்படி சொல்லிவிட்டு ‘பங்களா’ விற்கு வந்து விட்டார்கள். இவர்கள் சாப்பிடாமல் எங்களுடன் தனியாக வந்து விட்டது அநேகருக்குத் தெரிந்ததே. அவர்கள் வருந்தி அவர்களை தனியாக அழைத்து வரும்படி 4,5 தடவை காரை அனுப்பியும், செல்ல மறுத்து, எங்களவர்கள் கூடத்தான் தாங்களும் சாப்பிடுவதாகவும், ஜாதி வெறியர்கள் மத்தியில் தாங்கள் சாப்பிட முடியாதென்றுஞ் சொல்லிவிடவே, பலர் அவர்களைப் புகழ்ந்து, சமபந்தி போஜன மென்றும் இரு பெரியார்களையும் காரில் வரும்படியும், எங்களனைவரையும் சாப்பிடும் இடத்திற்கு நடந்து வரும்படியாயும், ஏற்பாடுசெய்து காரை அனுப்பியும், பெரியார்கள் காரில் ஏற மறுத்து, எங்களவர்களுடன் நடந்தே வந்து, சமபந்தியுடன் யாதொரு வித்தியாசமும் இல்லாமல் சாப்பிட்டோம். அப்போது எங்களவர்களுக்கு உண்டான, சந்தோஷத்திற்கு எல்லையில்லை. அன்றே எங்கள் விடுதலையென [illegible] ஒழுக்க உண்மையுடன் பாடுபடுகிறவர்கள். இவர்களைப்போல் தலைவர்கள் முயற்சிப்பார்களானால் எங்கள் குறை எளிதில் நீங்கிவிடுமல்லவா?

அன்று இரவு எங்கள் பொதுக்கூட்டம் ஒன்று கூடியது. அக்கூட்டத்தில் திரு. ஈ. வெ. ராவையும், சி. டி. நாயகத்தையும் பலர் பாராட்டிப் பேசினதோடு, ஒரு பாராட்டுத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

குமார சஞ்சீவினி
[illegible]
குழந்தைகளின்
கால்-குல் ஜூரக்கட்டி
வியாதிகளுக்கு
அருமருந்து
[illegible]

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

“அறிவுக் கொடி”

ஒரு சிறந்த தமிழ் மாத வெளியீடு.

ஆசிரியர்:—ஸ்ரீமதி சாமி சிதம்பரனார்.

1936ஆ நவம்பர்௴ 15-ந் தேதி முதல் ஒவ்வொரு ஆங்கிலமீ 15-ந் தேதியிலும் தவறாமல் வெளிவரும்.

அறிவு வளர்ச்சி, மாதர் முன்னேற்றம், தமிழ் மொழி வளர்ச்சி, விஞ்ஞானம், வைத்தியம், விகடம், சங்கீதம், நாடகம், படக் காட்சி, மனதைக் கவரும் சிறு கதைகள் முதலிய சிறந்த பல விஷயங்களுடன், இனிய பாடல்களும் வெளிவரும்.

உள்நாடு வருட சந்தா ரூ. 1. வெளிநாடு ரூ. 1-8-0.

மானேஜர்:—“அறிவுக் கொடி” ஆபீஸ்,
462, கீழ்க் கடலங்குடித் தெரு, கும்பகோணம்.

"அரசியல், சமூக. சமத்துவமே ஜஸ்டிஸ் லக்ஷ்யம்"

எச் சமூகத்தினிடமும் நமக்குத் துவேஷம் இல்லை

உரவக்கொண்டாவில்

கனம் பொப்பிலி ராஜாவின் பேருரை

இருபதினாயிரம் மக்களின் உற்சாகமான வரவேற்பு

காங்கரஸ் கொள்கை கண்டனம்

"சட்ட ரீதியான முறைகளில் நம்பிக்கையில்லாததும், உத்தியோகம் ஏற்பதா இல்லையா என்ற விஷயத்தில் மௌனம் சாதிப்பதுமான ஒரு கட்சிக்கு சட்டசபையில் என்ன வேலையிருக்கிறது"

அனந்தபூர், நவ, 9

சென்னை சர்க்கார் முதன் மந்திரி கனம் பொப்பிலி ராஜா சென்ற 6-ந் தேதி காலை குண்டக் கல்லுக்கு விஜயம்செய்தார். திருவாளர்கள்: சோமி ரெட்டி, தாமி ரெட்டி, நாராயணப்பா, நாராயணசாமி, அனந்த[illegible] பிள்ளை போர்டு இஞ்சினியர் பஞ்சா, [illegible] ரெட்டி முதலியோரும் மற்றும் பலரும் கனம் ராஜா சாகிபை ஸ்டேஷனில் வரவேற்றனர்.

சரியாக 9-மணிக்கு கனம் மந்திரி மோட்டாரில் அனந்தபூருக்கு விஜயம் செய்தார். திருவாளர்கள்: சோமி செட்டியும், நாராயணசாமியும் மற்றும் பலரும் ராஜா சாகிபுடன் வந்தனர். உரவக் கொண்டாவில் 20,000 மக்கள் ராஜா சாகிபைத் தரிசிக்க காத்திருந்தனர். கிராம எல்லையிலிருந்து கனம் மந்திரி ஊர்வலமாக திரு. சின்னப்ப பாசப்பாவின் பங்களாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு ஒரு பெரிய பொதுக் கூட்டம் நடைபெற்றது. அது சமயம் கைத் தறியாளர் கூட்டுறவு சங்கத்தாரும், பஞ்சாயத்து போர்டாரும் கனம் மந்திரிக்கு உபசாரப் பத்திரங்கள் வாசித்தளித்தனர். உபசாரப் பத்திரங்களுக்கு பதிலளிக்கையில் கனம் மந்திரி கூறியதாவது:—

இவ்விடத்திற்கு நான் விஜயம் செய்ததை முன்னிட்டு எனக்கு நீங்கள் அளித்த வரவேற்புக்காக எனது வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஸ்தல சுயாட்சியின் யூனிட்டுகளாக பஞ்சாயத்துகளை அபிவிருத்தி செய்ய வேண்டுவதே சர்க்காரின் கொள்கை யென்பது உங்களுக்குத் தெரியும். சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டப்படி பஞ்சாயத்து போர்டுகளின் நில 'செஸ்' வருமானம் இரட்டிக்கப்பட்டிருக்கிறது. மேலும், பஞ்சாயத்து போர்டுகளுக்கு அதிகப்படியான அதிகாரங்களைக் கொடுக்க சர்க்காரும் பொருளாதார கவுன்சிலும் ஆலோசித்து வருகின்றனர். கிராமாந்திரங்களில் ரோடு போடுவது சம்பந்தமாகவும், தண்ணீர் சப்ளை சம்பந்தமாகவும், பஞ்சாயத்து போர்டுகள் சரியான புள்ளி விவரங்களையும், திட்டங்களையும் சர்க்கார் முன் சமர்ப்பிப்பார்களேயானால் அவைகளுக்குப் பண உதவி செய்ய சர்க்கார் தயாராயிருக்கின்றனர். கிராமவாசிகளின் முன்னேற்றத்தைக் கருதி ஜில்லா பொருளாதார கவுன்சில்களை சர்க்கார் ஸ்தாபித்திருக்கின்றனர். இந்தியா சர்க்காரால் கிராமாபிவிருத்திக்காக அளிக்கப்பட்ட நன் கொடையின் ஒரு பகுதி அவர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது.

துங்க பத்திரா திட்டம்

துங்கபத்திரா திட்டம் சம்பந்தமாக இன்னும் தாமதமேற்பட்டு வருவதற்கு வருந்துகிறேன். இது விஷயமாக சென்னை சர்க்காருக்கே பூரண அதிகாரம் இல்லை. இந்திய சமஸ்தானங்கள் உள்பட, எல்லா அதிகாரிகளுக்கும் திருப்தியான முறையில் ஒரு திட்டத்தை தயாரித்து வருகிறோம். சம்பந்தப்பட்டவர்கள் சகஜமாக ஒத்துக்கொள்ள [illegible]னால் இந்தியா சர்க்கார் இவ்விஷயத்தை மத்தியஸ்தத்திற்கு விட முடிவு செய்துள்ளனர். சென்னை சர்க்கார் சம்பந்தப்பட்ட வரையில் பிளான்களும், எஸ்டிமேட்டுகளும் தயாராய் இருக்கின்றன. தீர்ப்புக் கூறப்பட்டதும் வேலை ஆரம்பிக்கப்படும். இத் திட்டத்தின் முக்கியத்வத்தை உணர்ந்தே எனது பல பொதுப் பிரசங்கங்களிலும் இதைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறேன்; கட்சியின் முதன்மையான திட்டமாகவும் கொண்டிருக்கிறேன்.

இது மட்டுமின்றி சீதன ஜில்லா வாசிகளின் நிலைமையை உயர்த்துவதற்கு சர்க்கார் மற்றும் பல முக்கியமான திட்டங்களை ஆலோசித்து வருகின்றனர். சீதன ஜில்லாக்களில் பல கிணறுகளை வெட்டவும், விவசாயிகளுக்கு மின்சாரத்தின் உதவிகொண்டு தண்ணீர் சப்ளை செய்யவும் ஒரு மத்திய தெர்மால் ஸ்டேஷனை அமைக்க, வும் திட்டங்கள் சர்க்காரின் ஆலோசனையிலிருந்து வருகிறது.

குடிசைத் தொழில்கள்

குடிசைத் தொழில்களை ஆதரித்து அபிவிருத்தி செய்து வருவதே சர்க்காரின் முக்கிய நோக்கமாயிருந்து வருகிறது. கைத்தறியாளர் கூட்டுறவு சங்கங்களை மேற்பார்வையிட்டு வரும் மத்திய டைரக்டர்கள் மீது உங்கள் அதிருப்தியைத் தெரிவித்துள்ளீர்கள். ஆனால், அதற்கு நியாயமில்லை, என்றே நான் கருதுகிறேன். ஏனெனில், தற்பொழுது உங்களது சங்கங்கள் மூலமே டைரக்டர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மேலும், சர்க்காரின் மேற்பார்வையில் இனி அவர்களில்லை.

இச் சங்கங்களின் குறைகளை சர்க்கார் கவனித்து வருகிறார்கள். குடிசைத் தொழில்களுக்கு சரிவர பாதுகாப்பு ஏற்படாததற்கு இந்தியா சர்க்காரின் தீர்வைக் கொள்கையே காரணம். ஐப்பானிய நாணய மதிப்பு குறைவுபட்டதும் ஒரு காரணமாகும். இது மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்ட விஷயமாகும். இம்மாகாணத்திலுள்ள பஞ்சாலைப் பிரதிநிதிகளுடன் கலந்து, இந்தியா சர்க்காருக்கு ஒரு திட்டத்தை சமர்ப்பிக்க முடிவு செய்திருக்கும் விஷயம் பற்றி நீங்கள் பத்திரிகை வாயிலாக அறிந்திருக்கலாம். குடிசைத் தொழில்கள் மட்டுமின்றி சீதன ஜில்லாக்களில் பஞ்சு அடிக்கும் ஆலைகளையும் ஏற்படுத்த சர்க்கார் ஆலோசித்து வருகின்றனர். அதன் மூலம் இப்பக்கங்களில் நூல்களை நயமான விலைக்குக் கொடுக்க முடியும். பலருக்கு வேலையும் கிடைக்கக் கூடும்.

கடைசியாக, வரப் போகும் மாகாண தேர்தல் சம்பந்தமாக உங்களை நான் ஒன்று வேண்டிக் கொள்வதாயிருக்கிறேன். அடுத்த வருஷம் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நம் தேசத்தில் பெருத்த அரசியல் மாறுதல்கள் ஏற்படப்போகின்றன. மாகாணங்களில் பூரண சுயாட்சி ஏற்படப் போகிறது.

தாழ்த்தப்பட்ட, பிற்போக்கான சமூகங்களின் நிலைமையை உயர்த்துவதை தன் பிரதம திட்டங்களில் ஒன்றாகக் கொண்டு 1917-ம் வருஷத்தில் ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. அரசியலிலும், சமூக சம்பந்தப்பட்ட விஷயங்களிலும், ஜாதி மத பேதமின்றி எச்சமூகத்தினரும் சமத்வமாய் வாழ வேண்டுவதே அதன் முக்கிய நோக்கமாய் இருந்து வருகிறது. எத்தனிப்பட்ட சமூகத்தினரிடமும் அதற்கு துவேஷம் கிடையாது. மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தம் நம் தேசத்திற்கு வழங்கப்பட்ட காலை இம்மாகாணத்திலுள்ள பார்ப்பனரல்லாதார் சமூகம் மிகவும் பிற்போக்கான நிலைமையிலிருந்தபடியால் மாகாண சட்டசபைகளில் இச் சமூகத்தினருக்கு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென்று அப்பொழுது கேட்கப்பட்டதை உங்களுக்கு நினைவுறுத்த விரும்புகிறேன். தற்பொழுது சர்க்கார் [illegible] பல பொது ஸ்தாபனங்களிலும் [illegible] சமூகத்தினரும் பிரதிநிதித்துவம் வகிப்பதற்கு ஜஸ்டிஸ் கட்சியின் தீவிர முயற்சியே காரணமென்பதை நீங்கள் அறிய வேண்டும். இம் மாபெரும் ஜஸ்டிஸ் இயக்கத்தின் பலனாக நம் சமூகத்தினர்க்கு இனி விசேஷ பாதுகாப்புகள் தேவையில்லை. புதிய இந்தியா சட்டத்தில் நமக்கு அவ்வித பாதுகாப்பளிக்க வேண்டுமென்று நாம் கேட்போமில்லை. இம்மாகாணத்திலுள்ள விவசாயிகளின் முன்னேற்றத்தையே ஜஸ்டிஸ் கட்சி தனது திட்டங்களில் முதன்மையாகக்கொண்டிருக்கிறது. விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கும் நோக்கத்துடனேயே சர்க்கார் விவசாயக் கடன் சட்டத்தை திருத்தியுள்ளனர். மேலும், கடன் சமரச போர்டுகள், நில அடமான பாங்குகளை வருஷா வருஷம் அதிகரிக்கச் செய்வது முதலியவற்றின் மூலம் விவசாயிகளுக்கு அதிக உதவிகளை அளிக்க தீர்மானித்துள்ளனர். இது மட்டுமின்றி பல ஜில்லாக்களில் விவசாய கூட்டுறவு, கடன், விற்பனை, சங்கங்களையும்; தானியக் களஞ்சியங்களையும் சர்க்கார் ஏற்படுத்தியுள்ளனர்.

எதிர்காலத் திட்டம்

கிராமவாசிகளின் முன்னேற்றத்திற்காக எல்லாக் கிராமங்களுக்கும் தண்ணீர் சப்ளை செய்வது, நல்ல ரோடுகள் அமைப்பது, விளக்குகள், கிராமத் தொழில்கள் முதலியவற்றிற்கு குறைந்த விகிதத்தில் மின்சாரம் கிடைக்கச் செய்வது முதலியவைகளை ஜஸ்டிஸ் கட்சி தன் எதிர் காலத் திட்டங்களாகக் கொண்டிருக்கிறது. ஆகவே, வரப்போகும் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியினரையே நீங்கள் பெருவாரியாக ஆதரித்து சட்ட சபைகளுக்கு அனுப்பி, நாங்கள் மேற்கொண்டுள்ள கிராமாபிவிருத்தித் திட்டத்தை பூர்த்தி செய்விக்க ஓர் சந்தர்ப்பம் அளிப்பீர்களென நம்புகிறேன். காங்கரஸ் கட்சியினர் தங்கள் எதிர்காலத் திட்டம் இன்னதென்பதைப் பற்றி பொது மக்கள் முன்பு இன்னும் எடுத்துக் கூறாமலிருந்து வருகின்றனர். உத்தியோகம் ஏற்பதா, இல்லையா என்ற விஷயத்தில் மௌனம் சாதித்து வருவதும் சட்ட ரீதியான முறைகளில் நம்பிக்கை யில்லாததுமான ஒரு கட்சிக்கு சட்ட சபையில் என்ன வேலையிருக்கிறது

திரு. பாக்கம் எர்ரப்பா வந்தனோபசாரம் கூறியபின் கனம் மந்திரி மோட்டாரில் அனந்தபூருக்குப் புறப்பட்டுச் சென்று அன்றிரவே குண்டக்கல்லுக்குப் புறப்பட்டு விட்டார்.

காங்கரஸ்காரர் ஜாமீன் தொகையை இழந்தார்

2 ஓட்டுகளே கிடைத்தன!

சிதம்பரம் உப தேர்தல்

சிதம்பரம், நவ, 6

சிதம்பரம் முனிசிபாலிடிக்கு 3-வது வார்டில் நடைபெற்ற உப தேர்தலில் திரு. சொக்கலிங்கம் பிள்ளை, வெற்றி பெற்றார். அவருக்கு எதிராக நின்ற காங்கரஸ்காரர் திரு. என். பி. ராமசாமி பிள்ளை, பெருவாரியான ஓட்டுக்களால் தோற்கடிக்கப்பட்டார். திரு. ராமசாமி பிள்ளைக்கு கிடைத்தது 2-ஓட்டுக்கள்தான். அவர் ஜாமீன் தொகையைக் கூட இழந்து விட்டதாகத் தெரியவருகிறது. ஸ்தல காங்கரஸ் வாதிகளும், முனிசிபல் சேர்மனும் அவர் வெற்றியடைவதற்காக பகீரதப் பிரயத்தனங்கள் செய்து பார்த்தும் அவருக்கு ஏற்பட்ட படுதோல்வி குறிப்பிடத்தக்கது.

குறைந்த விலை.

சரியான மணி காட்டக் கூடியது கெட்டியான அமைப்பு. ரவுண்டு நிக்கல் வாட்ச ரூ 3 4-0. உயர்ந்தது ரூ 3-12-0 கோல்டன் ரூ. 4-4-0. ரேடியம் ரூ 4-8-0. ரெக்டாங்குலர் நிக்கல் ரூ. 5-8-0. கோல்டன் ரூ. 6-8-0 பாக்கெட் வாட்ச ரூ.2-0-0. "பி" டைம் பீஸ் ரூ 1-12-0, தபால் செலவு 0-8-0 எல்லா கெடியாரமும் 3 வருஷம் உத்திரவாதம்,

EASTERN TRADING CO., P.B. 12204,
Hatkhola, Calcutta (v. v.)...

முத்தத்தின் இன்பம்

3 அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு 50 பக்கம் கொண்ட புத்தகம் இனாமாய் அனுப்பப்படும்.

ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராயநகர், மதராஸ்.

"விடுதலை" நண்பர்களுக்கு

அறிக்கையும், வேண்டுகோளும்

வருகிற நவம்பர் முதல் "விடுதலை"யை நாள்தோறும் வெளிவிடுவதற்கான எல்லா முயற்சியும் நடந்து வருகிறது.

அதற்கு ஏற்படுத்தக் கருதுகிற கட்டணம் விவரம் கீழே காண்க.

சென்னையிலும், விற்பனைக்காரர் உள்ள இடங்களிலும்

தனித் தாள்	0	0	6
1 மாதம்	1	0	0
3 மாதம்	2	14	0
6 மாதம்	5	10	0
1 ஆண்டு	11	0	0

தபால் வழி

உள் நாடு.

தனித் தாள்	0	0	9
1 மாதம்	1	4	0
3 மாதம்	3	10	0
6 மாதம்	7	0	0
1 ஆண்டு	13	0	0

வெளி நாடு

தனித் தாள்	0	1	6
1 மாதம்	1	10	0
3 மாதம்	4	12	0
6 மாதம்	9	12	0
1 ஆண்டு	19	0	0

நீடித்து நடக்கும் மற்றெந்த செய்தித் தாளையும் விட இதன் கட்டணம் குறைந்திருப்பதும், குறைந்த காலத்தை விட நீடித்த [illegible] காலத்திற்குக் கட்டணம் [illegible]ம் விளங்கும். ஆகையால், "விடுதலை" நண்பர்கள் எல்லாரும் சேர்ந்தாற்போல் ஒரு ஆண்டுக்காவது, கூடியவரை நீடித்த காலத்திற்காவது கட்டணம் செலுத்திச் சேரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வாரம் இரு முறைக்குக் கட்டணம் செலுத்தி யிருப்பவர்கள் புதிய விகிதப்படி ஏற்பட்ட மீதக் கட்டணத்தை உடனே அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கணிசமான எண்ணுள்ளவர்களுக்கு இதுவரை "விடுதலை" இலவசமாக அனுப்பப்பட்டு வருகிறது. இனி அப்படி அனுப்ப முடியாதென்பதை அவர்களே தெரிவார்கள். இலவசமாகக் கிடைத்தாலொழிய "விடுதலை" யைப் படிக்க முடியாது, அல்லது குறைந்த கட்டணத்திற்காவது கிடைத்தால்தான் படிக்க முடியும் என்ற நிலையிலிருப்பவர்கள் தகுந்தகாரணங்கண்டு உடனே விண்ணப்பம் அனுப்பி இலவசமாகவாவது, குறைந்த கட்டணத்திற்காவது அனுப்ப சம்மதம் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்படிச் சம்மதம் பெறாதவர்கள்முழுக்கட்டணம் அனுப்பி "விடுதலை" க்குத் துணை புரிய வேண்டுகிறேன்.

"விடுதலை" விற்பனைக்காரர்கள் தங்களுக்கு வேண்டிய எண்ணிக்கைக்கு உரிய இரண்டு மாதக் கட்டணத்தை முன் பணமாகக் கட்டித் தெரிவித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

தானும், தன் குடும்பமும், தன் இனமும், தனக்கும், தன் குடும்பத்திற்கும், தன் இனத்திற்கும் மீதி எல்லா யிருக்கிற [illegible] தான் வாழ வேண்டுமென்ற குறுகிய நோக்கத்திற்கு ஆளாகாமல், எல்லா இனத்தாரும் இன்புற்று வாழ்ந்து நாட்டிற்குச் சீரும் சிறப்புந் தேட வேண்டுமென்ற பெரு நோக்கிற்கு உண்மையாக உழைப்பவர்களை எல்லாம் "விடுதலை"க்குப் பணம் செலுத்தியும், மற்ற வழியிலும் துணை புரியுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

24-10-36 சே. தே. நாயகம்.

குறிப்பு: (1) மேலே குறிப்பிட்டபடி, வருகிற நவம்பர் முதல் "விடுதலை"யை நாள் தோறும் வெளியிடுவதற்கான எல்லா முயற்சியும் செய்தும், நவம்பர் துவக்கத்திலிருந்தே அவ்வாறு வெளியிடும் நிலைமை கைகூடவில்லை. விரைவில் வெளியிடுவதற்கான முயற்சி குறைவில்லாமல் நடந்துவருகிறது.

31-10-36 சே. தே. நாயகம்.

(2) 16-11-36 (திங்கட்கிழமை) முதல் நாள் தாளாக வெளிவரும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

7-11-36 சே. தே. நாயகம்.

ஏமாறாதீர்கள்!

எங்கள் வைத்தியசாலையின் மருந்துகள் மிகவும் சிலாக்கியமானதெனப் பலராலும் புகழப்பட்டு வருதல் கண்டு, சிலர் வேறு மருந்துகளை எங்கள் மருந்துகள்—அதாவது சி. எம். சாமி மருந்துகள் என்று சொல்லி ஏமாற்றி விற்பனை செய்து வருகிறதாகத் தெரிகிறது. எங்கள் வைத்தியசாலையிலிருந்து வெளி இடங்களுக்கு நாங்கள் யாரையும் அனுப்பவில்லை. எங்கள் ஏஜெண்டென்றும், எங்கள் மருந்துகள் என்றும் யாராவது விற்பனை செய்தால் அதைப் பொது மக்கள் வாங்கி மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கிறோம்.

மருந்து வேண்டியவர்கள் நேரே எமக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி, S. I.

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே!
ஏழையென்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே!
மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையை கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த வகையினும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! (பாரதி)

விடுதலை

சென்னை : 1936-ஹு நவம்பர்-மீ 11-உ
புதன்கிழமை

பைத்தியம் முற்றுகிறது

தேர்தல் நாள் அடுக்க அடுக்க, திரு. சத்தியமூர்த்தியின் பைத்தியமும் முற்றி வருகிறது. வெறி பிடித்தவர் போல் உளறிக் கொட்டுகிறார். நரம்பில்லா நாக்கினால் நாற்ற வார்த்தைகளை வாரி வீசுகிறார். மந்திரி பதவிக்கிருக்கினால், மரியாதையான வார்த்தைகளைக் கூட அவருக்கு உச்சரிக்க முடியவில்லை. வேலூர்ப் பிரசங்கம் வெறி பிடித்தவனை புலம்பல் மாதிரியாகவே இருக்கிறது. நாவடக்க மென்பது ஒரு சிறிதுமில்லாத ஒரு ஆசாமியைத் தலைவராகக் கொண்ட ஒரு ஸ்தாபனத்தை கண்ணியமுடையவர்கள் மதிப்பார்களா? ஒரு ஸ்தாபனத்துக்கு ஏற்படக்கூடிய பெருமையெல்லாம் ஆளினாலேயே. எனவே, சத்திக் கூத்தரும் சண்டிகளைத் தலைவராகக் கொண்ட எந்த ஸ்தாபனமும் பொதுஜன மதிப்பைப் பெறாது. ஜஸ்டிஸ் கட்சித்தலைவர்களை 'விசண்டி'கள் என்றும் கொலை பாதகர் என்றும் கூறும் ஒருவர், ஒன்றில் பைத்தியகாரனாக இருக்க வேண்டும்; அல்லது மேதை மரியாதையறியா பட்டிக்காட்டானாயிருக்க வேண்டும். "இங்கிலீஷ்காரராவது சுடுவதற்குத் தயங்குவார்கள். ஆனால், ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளோ இரக்க மின்றிச் சுட்டு வீழ்த்தி விடுவார்கள். ஜஸ்டிஸ் மந்திரிகளைவிட இங்கிலீஷ்காரர் மிக்க மனிதத் தன்மையுடையவர்கள்" என ஒரு மனிதன் பட்டப்பகலிலே ஒரு பொதுக் கூட்டத்திலே மனந் துணிந்து பேசுவானானால் அவனது மூளை எவ்வளவு தூரம் அழுகிப் புழுத்திருக்க வேண்டுமென்பதை வாசகர்களே ஊகித்தறிந்து கொள்ளட்டும். மற்றும், 'மீண்டும் ஜஸ்டிஸ் மந்திரிகள் பதவி வகிக்கும்படி நேர்ந்தால் ஏமாந்து தற்கொலை செய்து கொள்ளுவதாக' திரு. சத்தியமூர்த்தி பயமுறுத்துகிறார். இம்மாதிரி புலம்பும் ஆசாமிகள் பொது வாழ்வுக்கு லாயக்குடையவர்களா என்பதையும் தென்னாட்டு மக்களே நிர்ணயம் செய்து கொள்ளட்டும். தேர்தல் காலங்களிலே ஒரு கட்சியார் மற்றக் கட்சியாரைத் தாக்கிப் பேசுவது இயல்புதான். ஆனால், அந்த தாக்குதலுக்கும் ஒரு எல்லையுண்டு. பைத்தியக்காரன் மாதிரி கன்னா பின்னாவென்று கத்துவதை எந்த யோக்கியப் பொறுப்புள்ள சமூகமும் ஆதரிக்காது. அம்மாதிரி புலம்புகிறவர்கள் அரசியல் வாழ்வுக்கு லாயக்குடையவர்களல்ல

அயோக்கிய சிகாமணியான "தின மணி"யோ சாக்கடைச் சந்தனமாக மாறிவருகிறது. ஜஸ்டிஸ் கட்சிமீது "தின மணி"க்கு இருந்துவரும் அசட்டு மனப்பான்மையைத் தென்னாட்டார் நன்கறிவர். ஜஸ்டிஸ் கட்சியைத் தூற்றுவதையே தன் பிறவி லக்ஷ்யமாக அது கொண்டிருக்கிறது. காங்கரசுக்கு, ஹனுமாரைப்போல் மலைகளைத் தகர்த்தெறியும் சக்தியும், அகஸ்தியரைப் போல் கடலை வற்றவைக்கும் சக்தியும் உண்டாம். 1934-க்குப் பின் நடந்த [illegible] தேர்தலிலும் [illegible] வருகிறதாம். அப்படியிருந்தும் ஒவ்வொரு தேர்தலிலும் புதிது புதிதான மூடர்கள் காங்கரசை எதிர்க்கப் புறப்பட்டு அவமானமடைந்து வருகிறார்களாம். இவ்வாறெல்லாம் "தின மணி" புலம்புகிறது. காங்கரஸை எதிர்ப்பவர்களெல்லாம் மூடர்கள் எனக் கூறுவோர் அசல் போக்கிரிகளாகத் தான் இருக்க வேண்டும். திருச்சியிலும், வேலூரிலும், ஆந்திர தேசத்தில் பல இடங்களிலும் சமீபத்தில் காங்கரசுக்கு முழுத் தோல்வி ஏற்பட்டதை அயோக்கிய "தின மணி" அறியவில்லையா? வாஸ்தவத்தில் காங்கரசுக்கு ஹனுமார் சக்தியும், அகஸ்தியர் சக்தியு மிருக்குமானால் மற்றக் கட்சிகளுக்கு "தின மணி" ஏன் பயப்படவேண்டும். "ஜஸ்டிஸ் கட்சியே! ஜன நாயக கட்சியே! உங்களைப் பார்த்து நான் பயப்படவில்லை. நீங்கள் எல்லாம் கொசுக்கள். காங்கரசை எதிர்க்க தாராளமாக முன் வாருங்கள். ஒரு கை பார்த்து விடலாம்" என்று தானே "தின மணி" மார்தட்டி அறை கூவி அழைக்க வேண்டும். அந்த ஆண்மை இல்லாததினாற்றானே "தின மணி" எதிரிகளைத் திட்ட முன் வந்திருக்கிறது. வசவுகளுக்கும், போக்கிரித்தனத்துக்கும் பயந்து எந்த அரசியல் கட்சியாவது பின் வாங்குமா? "நமது மாகாணத்தைப் பொறுத்த வரையில் ஜஸ்டிஸ் கட்சியைக் கழுதை தேய்ந்து கட்டெறும்பான மாதிரி செய்தாய் விட்டது" என "தின மணி" பெருமை யடித்துக் கொள்கிறது. அப்படியானால் ஜஸ்டிஸ் கட்சி மீது "தின மணி" சதா சீறிவிழுந்துகொண் டிருப்பதேன்? கட்டெறும்புகளைத் தாக்குவது தான் 'தின மணி'யின் வீரமா? வாஸ்தவத்தில் சமீபத்தில் திருச்சி, வேலூர், ஆந்திர தேசம் முதலிய இடங்களிலும், சென்னை நகர சபைத் தேர்தலில் 10 டிவிஷன்களிலும் காங்கரசுக்கு ஏற்பட்ட படு தோல்விகள் "தின மணி"யின் மூளையைக் குழப்பிவிட்டது. வரப்போகும் தேர்தலில் காங்கரஸ் "கோவிந்தா" ஆகப்போகிறதையும் "தின மணி" முன்னதாகவே உணர்ந்துகொண்டு விட்டது. ஆகவே, பைத்தியம்பிடித்தமாதிரி ஆபாசம் பேசி தென்னாட்டுப் பத்திரிகை யுலகத்தைக் குட்டிச் சுவராக்க "தின மணி" வரிந்து கட்டிக் கொண்டு புறப்பட்டிருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சிமீதுள்ள பகையினால் மானவுணர்ச்சியையே "தின மணி" முற்றிலும் இழந்து விட்டது. மாஜிஸ்டிரேட்டுகளைப் பார்த்தும் "தின மணி" பூச்சாண்டி காட்டுகிறது. 'அடுத்த தேர்தலில் காங்கரஸ்காரர்தான் மெஜாரட்டியாக வரப்போகிறபடியால், சில்லறை விஷமங்கள் செய்வது ஆபத்து என்பதை போலீசாருக்கும், மாஜிஸ்டிரேட்டுகளுக்கும், எச்சரிக்க விரும்புகிறோம்.' எனவும் "தின மணி" கூறுகிறது. அடுத்த தேர்தலில் காங்கரசுக்கு மெஜாரட்டி கிடைப்பது அவ்வளவு நிச்சயமானால் "தின மணி" அந்தப் பாட்டிகள் மாதிரி இப்பொழுது வயிற்றிலடித்துக் கொள்ளுவதேன்? மற்றக் கட்சிகளைப் பார்த்து பயப்படுவதேன்? "தின மணி"யின் போக்கைப் பார்த்தால், ஜஸ்டிஸ் கட்சி, "தின மணி"யின் மூளையை வெகுவாகக் குழப்பி வருவதாகவே தோற்றுகிறது. ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி "தின மணி" சதா கனவு காண்பதினால் "தின மணி"யின் மூளையே கெட்டுப்போய் விட்டது. வரப்போகும் தேர்தல் ஜஸ்டிஸ் கட்சி வெற்றி பெற்று விட்டால் "தின மணி" காரியாலயத்தார் மூக்கும் தற்கொலை செய்து விடுவார்களோ என அஞ்ச வேண்டியதாகவும் இருக்கிறது. அசல் பார்ப்பனப் பத்திரிகைகளுக்குக் கூட ஜஸ்டிஸ் கட்சி மீது அவ்வளவு வெறுப்பையும் பகையையும் காணவில்லை. ஒரு பார்ப்பனரல்லாதாரை பிரதம ஆசிரியராகக் கொண்ட "தின மணி" ஜஸ்டிஸ் கட்சி மீது சதா வசைபுராணம் பாடிக்கொண்டு இருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

"ஆறுநாள் இருந்து அரகரா என்றாலும் சோற்றிலே இருக்குது சொக்கலிங்கம்" என்ற பழமொழி பொய்யாகுமா?

ஜவஹர்லாலுக்கு உபசாரப் பத்திரமில்லை

மேல் கோதாவரி ஜில்லா போர்டு தீர்மானம்

எல்லூர், நவ, 8

நேற்று மாலை மேல் கோதாவரி ஜில்லா போர்டின் விசேஷக் கூட்டமொன்று சித்தலைப்புடி போர்டு உயர்தர ஆரம்ப பள்ளிக்கூடத்தில் திரு. டி. நாராயணராஜு தலைமையில் நடைபெற்றது. மொத்தம் 41 அங்கத்தினர்களில், ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர்கள் 21 பேரும், காங்கரஸ் கட்சி அங்கத்தினர்கள், தலைவர் உள்பட 19 பேரும் பிரசன்னமாகியிருந்தனர். சபையின் நடவடிக்கைகளை கவனிக்க ஏராளமான பொது ஜனங்களும் வந்திருந்தனர்.

காங்கரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு எல்லூருக்கு வரும்பொழுது அவருக்கு ஒரு உபசாரபத்திரம் அளிக்க வேண்டுமென்று காங்கரஸ் அங்கத்தினரொருவர் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினரான திரு. வி. புல்லைய நாயுடு அத்தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார். திரு. புல்லைய நாயுடு பேசுகையில், போர்டின் முந்தின கூட்டம் தாடேபள்ளி கூடத்தில் கூடி சென்னை சர்க்கார் முதன் மந்திரி எல்லூருக்கு விஜயம் செய்யும் பொழுது அவருக்கு ஒரு உபசாரப் பத்திரம் வாசித்தளிக்க வேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானத்தை காங்கரஸ் கட்சியினர் தோற்கடித்ததால், அதே காரணத்தைக் கொண்டு இப்பொழுது காங்கரஸ் தலைவருக்கு உபசாரப்பத்திரமளிப்பதை ஜஸ்டிஸ் கட்சியினர் ஆதரிக்க மாட்டார்களெனக் கூறினார்.

பிறகு தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு, 19 பேர் சாதகமாகவும், 21 பேர் எதிராகவும் ஓட்டுக் கொடுத்ததால் தீர்மானம் தோல்வியுற்றது.

ஜஸ்டிஸ் கட்சி வெற்றி

சீர்காழி பஞ்சாயத்து போர்டு தேர்தல்

சீர்காழி, நவ, 10

நேற்று மாலை 3 மணிக்கு நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் சீர்காழி பஞ்சாயத்து போர்டு தலைவராக திரு. எஸ். வாதகிரி முதலியாரும், மாலை 4 மணிக்கு நடைபெற்ற விசேஷ கூட்டத்தில திரு. பொன்னுசாமி பிள்ளை உபதலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இருவரும் ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர் என்பது குறிப்பிடத் தக்கது.

கீழத் தஞ்சை ஜில்லா போர்டு தேர்தல்

தஞ்சை, நவ, 10

நன்னிலம் தாலூகா வெட்டார் திரு. எஸ். குப்புசாமி பிள்ளை அவர்கள் கங்களாஞ்சேரி பிர்க்காவுக்கு சுயேச்சையாகவாவது அல்லது நீதிக் கட்சியின் சார்பாகவாவது நிற்பாரெனத் தெரிகிறது.

திரு. பிள்ளை அவர்களுக்கு எல்லா சமூகத்தாருடைய ஆதரவு கிடைக்கும் என்று தோழர் எஸ். வி. வாசுதேவன் எழுதுகிறார்.

சீர்காழி நகரசபை தேர்தல் மர்மம்

பார்ப்பன சூழ்ச்சி பலிக்கவில்லை!

காங்கரஸ்காரர் தோல்வி

சீர்காழி, நவ, 10

இவ்வூர் நகரசபை தேர்தலில் பிரபல பார்ப்பனர் ஒருவர் 1-வது வார்டில் காங்கரஸ் கமிட்டித் தலைவர் திரு. சி. எஸ். சாமிநாத செட்டியாரையும், 7-வது வார்டில் அட்வோகேட் கே. சீதாராமய்யர் அவர்களையும் அபேக்ஷகர்களாக நிறுத்திவேலை செய்து போர்டை பார்ப்பனர்கள் பிடிக்க நினைத்து கடுமையாய் வேலை நடந்தது பார்ப்பன சூழ்ச்சி பலிக்கவில்லை. வெற்றி 1-ல் திரு. பொன்னுசாமி பிள்ளையும், 7-ல் திரு கே. எஸ். முத்துகிருஷ்ணனும் வெற்றி பெற்றார்கள். பல பார்ப்பனரல்லாத தோழர்களின் உதவியால் பார்ப்பன சூழ்ச்சிக் கோட்டை தகர்க்கப்பட்டது.

நேற்றைய தலைவர்கள் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி முக்கியஸ்தர்களான தோழர்கள்: என். வேதகிரி முதலியார் டி. கே. பொன்னுசாமி பிள்ளை அவர்களும் முறையே பிரசிடெண்டு, வைஸ்பிரசிடெண்டுகளாக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டு வழக்கம் போல் பார்ப்பனரல்லாதார் கோட்டையாக்கப்பட்டது. நகர சபையில் சந்தன தாம்பூலம் வழங்கி, மாலைகள் சூட்டி கார் மூலம் தத்தம் இல்லம் ஏகினார்கள்.

சென்னை அசெம்பிளி தேர்தல்

திரு. எம். சிக்கைய நாயக்கர் அபேட்சை

ஈரோடு, நவ, 10

ஈரோடு அர்பன் பாங்கு தலைவரும், மகாஜன ஹைஸ்கூல் செக்ரடேரியும், ஈரோடு முனிசிபல் கௌன்சிலரும், பிரபல வியாபாரியும், பாங்கருமான திரு. எம். சிக்கைய நாயக்கர் வரப்போகிற அசெம்பிளி தேர்தலுக்கு ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக ஈரோடு பிர்க்காவிற்கு ஒரு அபேட்சகராக நிற்கிறாரென திரு. ஈ. சங்கரய்யா அறிவிக்கிறார்.

பிரிட்டன் அடுத்த யுத்தத்திற்கு தயாராகிறது

விமானப் படைக்கு 60, 000 பேர் மனு

"பூரண ஜயம் கிடைக்கும் வரையிலும் முயற்சியைக் கைவிடப் போவதில்லை"

சர். டி. இன்ஸ்கிப் முழக்கம்

லண்டன், நவ, 10

பிரிட்டன் பாதுகாப்பு சம்பந்தமாக இன்று மாலை காமன்ஸில் சர். தாமஸ் இன்ஸ்கிப் பேசுகையில், எதிரிகளின் விமானப் படை எதிர்ப்பை சமாளிக்கவே பிரிட்டனின் விமானப்படை அதிகரிக்கப் படுகிறதென்றும், யுத்தம் நேரிட்டால் பிரிட்டனின் கடற்படையே முன்னணியில் நிற்கு மென்றும், எதிரிகளின் பீரங்கிகளுக்கு பிரிட்டனின் பீரங்கிகள் எவ்விதத்திலும் சளைக்காதென்றும், லண்டனைப் பாதுகாக்கவும் தக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப் படுமென்றும், 1940-வரையிலும் வருஷா வருஷம் யுத்த தளவாடங்கள் அதிகரித்துக் கொண்டே செல்லுமென்றும், காட்டிங்காமிலுள்ள சர்க்கார் பீரங்கித் தொழிற்சாலை இன்னும் ஆறுவாரத்திற்குள் தன்வேலையைத் துவக்கி விடுமென்றும் கூறினர்.

சர். இன்ஸ்கிப் மேலும் பேசுகையில், காலாட் படையைக் காட்டிலும், கடற்படை, விமானப் படைகளில் சேரவே [illegible] வருகின்றனரென்றும், விமானப் படையில் 20, 000 ஸ்தானங்களுக்கு 60,000 மனுக்கள் வந்திருக்கின்றன வென்றும், அது போலவே கடற்படையிலும் இருந்து வருகிறதென்றும், அடுத்த யுத்தத்தில பிரிட்டன் இறங்க நேரிடுமானால் பூரணஜயம் கிடைக்கும் வரையிலும் விலகப் போவதில்லை யென்றும் கூறினர்.

ஜெனரல் பிராங்கோ கொடி நாட்டப்பட்டது

லண்டன், நவ, 10

கலகத் துருப்புகளின் தலைவரான ஜெனரல் பிராங்கோவின் கொடி பெர்லினிலுள்ள ஸ்பானிய சர்க்கார் காரியாலயத்தில் நாட்டப்பட்டது. பழைய ஸ்பானிய ஸ்தானிகரான சினர் எம். அக்ராமண்டே மீண்டும் ஜெனரல் பிராங்கோ சார்பாக அந்த ஸ்தானத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். ஸ்பானிய அரசர்களின் நந்தவனமான சாகாடி காம்போ கலகக்காரர்களின் வசமாகி விட்டதென்றும், அங்கு ஏற்பட்ட வெடிகுண்டு வீச்சால் 10 பேர் மாண்டும் 120 பேர் படுகாய முற்றனரென்றும், தெரிகிறது. ஸ்திரீகள், குழந்தைகள், அன்னியநாட்டு ஸ்தானிகர்கள் காரியாலயங்கள் முதலியவைகளை கலகத் துருப்புகள் ஒன்றும் செய்யமாட்டார்களென ஜெனரல் பிராங்கோவின் விமானங்கள் தலைநகரில் துண்டுக் கடிதங்கள் போட்டன. மூன்று நிமிஷத்திற் கொருதடவை சர்க்கார் துருப்புகள்மீது வெடிகுண்டுகள் கலகக்காரர்களால் வீசப்பட்டு வருகின்றன. மக்கள் மிகவும் பீதியடைந்துள்ளனர்.

கலகத் துருப்புகள் தலை நகருள் நுழைந்து விட்டால் நகர மக்கள் கூரைகள் மீதிருந்து கொண்டு அவர்கள்மீது பெட்ரோல் கொண்ட புட்டிகளைப் பற்ற வைத்து எறிய வேண்டு மென்றும், நகரிலுள்ள பாசிஸ படையினரை உடனே அழித்துவிட வேண்டு மென்றும், அவர்கள் முன்னேற வொட்டாமற்படி நகரவாசிகள் தங்களாலான முயற்சிகளெல்லாம் செய்ய வேண்டு மென்றும் இராணுவ காரியாலயத்தினர் கட்டளை பிறப்பித்திருக்கின்றனர்.

காங்கரஸ் கூட்டம் குழப்பத்தில் முடிவுற்றது

போலீஸ் உதவியை நாடுகின்றனர்

விருதுநகர், நவ, 8

நேற்று மாலை, விருதுநகரில் காங்கரஸ் அங்கத்தினரான திரு. வ. ஆனந்தராம நாடாரை ஆதரிக்க ஒரு பொதுக் கூட்டம் நடைபெறப் போவதாகவும், அதுசமயம் திரு. ஆர். எஸ். வெங்கடராமய்யர் பேசுவாரென்றும், துடுப்படித்து தெரிவிக்கப்பட்டது. ஆனால், பேசப் போவதாக அறிவிக்கப்பட்டவர் வரவில்லை. திரு. கே. எஸ். முத்துசாமி ஆச்சாரி கூட்டத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பேசுகையில் காங்கரசிற்கு புறம்பானவர்களைப் பலமாக கண்டித்துப் பேசத் தொடங்கினர். அதன் மேல் ஸ்தல ஜஸ்டிஸ் வாதிகளான இருவாளர்கள்: கே. மகாலிங்க நாடார், உத்தாண்டன், எம். அருணாசலம், தனுஷ்கோடி நாடார் முதலியோர் அவர் கூறியதை எதிர்த்து உடனே வாபஸ் வாங்க வேண்டுமெனக் கூறினர்.

கூட்டத்தில் குழப்பம் ஆரம்பிக்கத் தொடங்கவே காங்கரஸ்காரர்கள் போலீஸ் உதவியை நாடினர். 6-போலீஸ் காரர்கள் உடனே ஸ்தலத்திற்கு வந்து கூட்டத்தைக் கலைத்து விட்டனர். பிறகு ஜஸ்டிஸ் கட்சியினர் ஊர்வலமாகச் சென்று ஒரு பொதுக்கூட்டம் நடத்தி, வரப்போகும் தேர்தலில் திரு. வி. வி. ராமசாமியையே ஆதரிக்க வேண்டுமென பொதுமக்களைக் கேட்டுக் கொண்டனர்.

செங்கற்பட்டு ஜி[illegible] ஆதிதிராவிட மகாஜன சபை

சென்னை சட்டசபை தேர்தல்

பொன்னேரி, நவ, 16

8-11-36 காலை பொன்னேரி பெரிய காவனத்தில ஷை சபையின் ஆதரவில் ஓர் பொதுக் கூட்டம் நடந்தது. மகா மதாகவி வி. வி. முருகேச பாகவதர் தலைமை வகித்தார். பல கிராம ஆதி திராவிடர்கள் குழுமியிருந்தனர். கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

"சென்னை சட்டசபைக்கு தாழ்த்தப்பட்டோர் சார்பாக பொன்னேரி, திருவள்ளூர் பிர்க்காவில் சமீபத்தில் நடக்கும் தேர்தலில் நமது சபையின் பிரசிடெண்டும் சென்னை முனிசிபல் கவுன்சிலருமாகிய ஷட்டாவதானம் திரு. வேலாயுதபாணி அவர்களை அபேட்சகராக நிறுத்துகின்றோம்."

பின்னர் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது என உதவி காரியதரிசி அறிவிக்கின்றார்.

தேர்தல் விளம்பரம்

சென்னை சட்டசபை (மேல் சபை)

சென்னை நகர பொதுத் தொகுதி

சென்னை சட்டசபை (மேல் சபை)க்கு சென்னை நகர் பொதுத்தொகுதி சார்பாக நிற்கும் கோயம்புத்தூர், விவசாய கல்லூரி, ரிடையர்டு பிரின்ஸிபால் ராவ்பகதூர் சி. தாதுலிங்க முதலியார், ஷை தொகுதியாளர்கள் தன்னையே ஆதரிக்கும்படி வேண்டிக் கொள்வதுடன் 1936ஹு செப்டம்பர்மீ 19-ந் தேதி தபால் மூலம் அவர்களுக்கு அனுப்பியுள்ள வேண்டுகோளை கவனிக்க வேண்டுமென்றும், தேர்தல் 1937, பிப்ரவரி 15-ந் தேதி நடைபெறுமென்றும், கூடிய சீக்கிரத்தில் மேற்படி தொகுதியாளர்களை நேராக சந்திப்பதாகவும் அறிவிக்கிறார்.

திருச்சியில் கனம் குமாரராஜா

பலவிடங்களுக்கு விஜயம்

உபசாரப் பத்திரங்களுக்குப் பதில்

திருச்சிராப்பள்ளி, நவ, 9

சென்னை சர்க்கார் கல்வி மந்திரியான கனம் செட்டி நாட்டுக் குமாரராஜா எம். ஏ. முத்தைய செட்டியார் சென்ற 7-ந் தேதி காலை செட்டி நாட்டிலிருந்து திருச்சிக்கு விஜயம் செய்தார். திருச்சி வாசிகள் அவரை குதூகலமாக வரவேற்றனர். பல ஸ்தாபனங்களால் மாலைகள் அணிவிக்கப்பட்ட பின் ஒரு புகைப் படமும் எடுக்கப்பட்டது. திரு. பிரோன் (கலெக்டர்), மீனும்பள்ளி ஜமீன்தார், ராவ்பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை, ராவ்சாகிப் ஏ. அனந்த சுப்ரமணிய ஐயர், கான் பகதூர் கலிபுல்லா சாகிப், திருவாளர்கள்: டி. ஆர். கோபால் ராவ், சின்னசாமி உடையார், டி. வி. கே. நாயுடு, கே. ஏ. பி. விஸ்வநாதம், வேதாசலம் பிள்ளை, ஏ. ராமசாமி தேவர் முதலியோர் கனம் மந்திரியை ஸ்டேஷனில் வரவேற்றனர்.

திருச்சியில் பல இடங்களுக்கும் கனம் மந்திரி விஜயம் செய்தார். முதன் முதலில் ஹோலி கிராஸ் கல்லூரிக்கு விஜயம் செய்தார். ரெவரண்ட் பாதர் கார்டியும், ஜில்லா கல்வி அதிகாரி திரு வி. ஆர். ரங்கநாத முதலியாரும், கல்லூரி பிரின்சிபால் அன்னை சோபியும் கனம் மந்திரியை வரவேற்றனர். மாணவிகள் வரவேற்புக் கீதங்கள் பாடிய பின் [illegible]

கல்லூரி மாணவர்கள், உபா[illegible]யர்கள் சார்பாக மிஸ் மேரி ஆன்லாம், கனம் மந்திரிக்கு ஒரு உபசாரப் பத்திரம் அளித்தார்.

உபசாரப் பத்திரத்திற்கு பதிலளிக்கையில், தனது அரும் பெரும் நண்பர் ரெவரண்டு கார்டியைச் சந்திக்க நேர்ந்ததற்கு தான் சந்தோஷப் படுவதாகவும், ரெவரண்டு பாதர் பெர்ட்ராம் காலமானதிற்கு தான் வருந்துவதாகவும், இத்தேசத்தின் இப் பகுதியில் ஜெசுயிட் பாதிரிகள் கல்வித்துறையில் செய்துள்ள வேலைகள் போற்றத் தக்கதென்றும், உயர்தர ஆரம்பக் கல்வியில் இந்தியாவில் சென்னை மாகாணமே முதன்மை ஸ்தானம் பெற்று விளங்குகிறதென்றும், பெண் கல்வியில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்றும், விசேஷ வகுப்புகள் அக் கல்லூரியில் ஏற்பட தான் விரும்புவதாகவும் கனம் மந்திரி கூறினர்.

பிறகு மணிக்கூண்டு சர்க்கார் ஆஸ்பத்திரியை பார்வையிட்டார். சயின்ஸ் ஆராய்ச்சி பயிற்சி சாலையில் அவரது நண்பர்களால் அவருக்கு சிற்றுண்டி விருந்தொன்று நடைபெற்றதும், நகர பிரமுகர்களுக்கு கனம் மந்திரி பேட்டி யளித்தார்.

செயிண்ட் ஜோசப் கல்லூரியில் வரவேற்பு

மாலையில் செயிண்ட் ஜோசப் கல்லூரிக்கு விஜயம் செய்தார். கல்லூரியைச் சேர்ந்த லாலி மண்டபத்தில் மாணவர்களும், உபாத்தியாயர்களும் ஏராளமாகக் கூடியிருந்தனர். ரெவரண்டு பாதர் கார்டியும், ரெவரண்டு பாதர் ஜெரோம் டிரூசாவும் கனம் மந்திரியை வரவேற்று, கலாசாலையைச் சேர்ந்த பௌதிக சாலை, விஞ்ஞானப்பகுதி, தொழிற்சாலை, லாபரேட்டரி முதலியவைகளைக் காண்பித்தனர். லாலி ஹாலிற்கு திரும்பி வந்ததும் மாணவர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தனர்.

கல்லூரி பிரின்ஸிபால் ரெவரண்டு டிரூசா கனம் மந்திரியை வரவேற்றுப் பேசுகையில் கூறியதாவது:—

பதினெட்டு வருஷங்களுக்கு முன்பு தங்களை இக்கலாசாலையைச் சேர்ந்த ஒரு மாணவராகச் சேர்த்துக் கொள்ளும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது. இப்பொழுது மந்திரி யென்ற ஹோதாவில் உங்களை வரவேற்கவும் நாங்கள் பாக்கியம் செய்திருக்கிறோம். இம் மாகாணத்தில் கல்விக்காக தாங்களும், தங்கள் குடும்பத்தினரும் செய்திருக்கின்ற மகத்தான சேவைகள் போற்றற்குரியன. சென்னை நகர சபையின் முதல் மேயராகவும், 'சேம்பர் ஆப் காமர்ஸ்' சபைக்குத் தலைவராகவும் தற்பொழுது சென்னை சர்க்காரின் கல்வி மந்திரியாகவும் தாங்கள் நியமிக்கப்பட்டிருப்பதைக்கண்டு நாங்கள் பெருமையடைகிறோம்.

மந்திரி பதில்

உபசாரப் பத்திரத்திற்குப் பதிலளிக்கையில் கனம் மந்திரி கூறியதாவது:—

"நீங்கள் எனக்கு இன்று அளித்த அளவு கடந்த உபசாரத்திற்கு நான் வந்தனம் செலுத்துகிறேன். நான் இங்கு மாணவனாக இருந்த காலத்தைக் குறித்து எனக்கு உண்மையிலேயே பெருமை ஏற்படுகின்றது. தென்னாட்டில் கல்வித் துறையில் கத்தோலிக்க பாதிரிமார்கள் செய்துள்ள சேவைகள் போற்றத் தக்கன. சென்னையில் சமீபத்தில் லயோலோ கல்லூரி ஏற்பட்டு மிக [illegible] என்று [illegible]ததில் காலமான பொட[illegible] பாதிரியார் எவ்வளவோ சிறந்த தொண்டாற்றியிருக்கிறர். அவரது பிரிவினால் தமிழ்நாடு ஒரு சிறந்த கல்வி ஊழியரை இழந்து விட்டது என்றே கூறவேண்டும். மாணவர்களாகிய நீங்கள் சேவை செய்வதையே உங்கள் பிரதம நோக்கமாகக் கொள்ளவேண்டும்.

சென்னை நகரசபை அங்கத்தினர்கள் என்னை இரு முறை மேயராகத் தேர்ந்தெடுத்ததற்காக என் மனமார்ந்த வந்தனத்தை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்களின் அச் செய்கையாகப்பட்டது வாலிபர்கள் மீது அவர்களுக்கிருக்கும் நம்பிக்கையைக் காட்டுகிறது.

உலகமெங்கும் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியின் காரணமாகவே சமீப காலத்தில் கல்வித் துறையில் அதிக நன்கொடைகள் அளிக்கப்பட வில்லையென்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

தேக் கச்சேரி

பிறகு திரு. பி. ரத்ன வேலு தேவரை தலைவராகக் கொண்ட திருச்சிராப்பள்ளி யுனைடெட் கிரிக்கட் கிளப் அங்கத்தினர்கள் கிளப் மைதானத்தில் கனம் மந்திரிக்கு ஒரு தேக் கச்சேரி நடத்தினர். கிளப் காரியதரிசி டாக்டர் எம். கே. சகாதேவன் கிளப்பின் நடவடிக்கைகளைக் குறித்து ஒரு அறிக்கை வாசித்தார். கனம் மந்திரி பேசியபின், அங்கிருந்து மோட்டாரில் முனிசிபல் பப்ளிக் ஹாலிற்குச் சென்றார். நகர பிரமுகர்கள் பலர் விஜயம் செய்திருந்தனர்.

முனிசிபல் உபசாரப் பத்திரம்

திருச்சி முனிசிபல் வைஸ் சேர்மன் திரு. டி. ஆர். கோபால் ராவ் கமிஷனர் திரு. டி. கே. சுந்தரராஜன், திரு. வி. என். லோகநாத முதலியார், கவுன்சிலர்கள், ஆகியோர் கனம் மந்திரியை வரவேற்றனர். முனிசிபல் உபசாரப் பத்திரத்தை திரு. கோபால் ராவ் வாசித்து ஒரு வெள்ளிப் பேழையில் வைத்துக் கொடுத்தார்.

உபசாரப் பத்திரத்திற்கு கனம் மந்திரி தக்கவாறு பதிலளித்தார். அதன் பின் ஸ்ரீரங்கத்திற்குச் சென்றர். அங்கு ஸ்ரீரங்கம் முனிசிபாலிடியார் காவேரியின் ஹாலில் கனம் மந்திரிக்கு ஒரு உபசாரப் பத்திரம் வாசித்தளித்தனர். முனிசிபல் கட்டிடத்தில் முனிசிபல் சேர்மன் திரு அனந்த சுப்ரமணிய ஐயர், கமிஷனர் வி. டி. ஷண்முகம், கவுன்சிலர்கள் ஆகியோர் கனம் மந்திரியை வரவேற்றனர். மந்திரியின் வருகையை முன்னிட்டு முனிசிபல் கட்டிடம் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. உபசாரப்பத்திரத்திற்கு கனம் மந்திரி தக்கவாறு பதிலளித்தார். திரு. எம். கே. முகம்மத் இப்ராஹீம், கனம் மந்திரிக்கு ஒரு விருந்துபசாரம் நடத்தினர். ஏராளமான பிரமுகர்கள் வந்திருந்தனர்.

ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர்கள் சந்திப்பு

நேற்று காலை (8-11-36) உறையூர் திரு. ஆ. ராமசாமி ஐயர் பங்களாவில், ஜில்லா ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களையும், அங்கத்தினர்களையும் கனம் செட்டிநாட்டுக் குமாரராஜா சந்தித்து கட்சி சம்பந்தமாகவும், வரப்போகும் தேர்தல் சம்பந்தமாகவும் வெகு நேரம் பேசினர்.

பிறகு முனிசிபல் பப்ளிக் ஹாலில் சென்ட்ரல் அர்பன் பாங்கியின் வெள்ளி விழா வைபவத்திற்கு தலைமை வகித்தார். பாங்கியின் பிரசிடெண்டான திரு. நாராயணசாமி பிள்ளை கனம் மந்திரியை வரவேற்று, பாங்கியின் முன்னேற்றத்தை எடுத்துரைத்தார். திரு. ஆர். கே. பிரசன்னவெங்கடேச ராவ், சர். டி. தேசிகாச்சாரியார், ராவ்சாகிப் டி. நடராஜ பிள்ளை முதலியோரின் உருவப் படத்தை திறந்து வைக்கும்படி கனம் மந்திரியைக் கேட்டுக் கொண்டார்.

சென்ட்ரல் அர்பன் பாங்கியின் உபசாரப் பத்திரத்திற்கு கனம் மந்திரி தக்கவாறு பதிலளித்த பின் மேற்படி உருவப் படங்களைத் திறந்து வைத்தார். [illegible] எம். [illegible] சாமிப் பிள்ளை ஒரு சிற்றுண்டி உபசாரம் நடத்தினர்.

நேஷனல் கல்லூரிக்கு விஜயம்

சாயங்காலம் திருச்சி நேஷனல் கல்லூரிக்கு கனம் மந்திரி விஜயம் செய்தார். கல்லூரி கமிட்டித் தலைவர் சர். டி. தேசிகாச்சாரி, கல்லூரி பிரின்ஸிபால் திரு. சாரநாதன், காரியதரிசி, திரு. வி. ஜெயராமய்யர், திரு. கந்தசாமி செட்டியார், மற்றும் பல கல்லூரிக் கமிட்டி அங்கத்தினர்களும் கனம் மந்திரியை வரவேற்றனர். கல்லூரிச் சாரணர்கள் அணிவகுத்து நின்று கனம் மந்திரிக்கு மரியாதை செலுத்தினர். கல்லூரி லெபாரட்ரியையும், ஹாஸ்டலையும் கனம் மந்திரி பார்வையிட்டார். ஹாஸ்டலில் நகரத்தார் மாணவர்கள் அவருக்கு மாலை அணிவித்தனர். பிறகு சென்ட்ரல் ஹாலில் கனம் மந்திரிக்கு ஒரு உபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. திரு பி. ரத்னவேலு தேவர் அது சமயம் பிரசன்னமாகி யிருந்தார். கல்லூரிக் கமிட்டி சார்பாக திரு. வி. ஜெயராமய்யர் மந்திரிக்கு ஒரு உபசாரப் பத்திரம் வாசித்தளித்தார். உபசாரப் பத்திரங்களுக்கு கனம் மந்திரி தக்கவாறு பதிலளித்த பின் ராவ்சாகிப் கே. ஏ. சிதம்பரம் ஐயர் வந்தனோபசாரங் கூற வைபவம் இனிது முடிவெய்தியது. பலத்த கரகோஷங்களுக்கிடையே திங்கட்கிழமை தினம் விடுமுறை நாளென மந்திரி அறிவித்தார்.

புகையிலை வியாபாரிகள் வரவேற்பு

திரு. எம். என். நடேசம் பிள்ளையின் கருட்டுத் தொழிற் சாலையில், புகையிலை வியாபாரிகள் சங்கத்தினர் கனம் மந்திரிக்கு ஒரு தேக் கச்சேரி நடத்தினர். அது சமயம் ஒரு உபசாரப் பத்திரமும் வாசித்தளிக்கப்பட்டது. திரு. பி. ஆர். தேவர் பிரசன்னமாயிருந்தார். புகையிலை வரி மசோதாவை ரத்து செய்ததற்காக ஜஸ்டிஸ் கட்சியைப் பாராட்டி அவ்வுபசாரப் பத்திரத்தில் கூறியிருந்தனர்.

வியாபாரிகள் தங்கள் நன்மையைக் கருதி ஒற்றுமையுடனிருக்க வேண்டுமென்றும், புகையிலை வியாபாரத்தை அபிவிருத்தி செய்ய அவர்கள் முயல வேண்டுமென்றும் கனம் மந்திரி குறிப்பிட்டார்.

காங்கரஸ் பகட்டினால் மதி மயங்காதீர்!

(5-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

களால் கிராமாபிவிருத்தி மார்க்கங்களை கவனிக்க முடியும். கிராமச் சீர்திருத்த வேலைகளை ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்துவது சாத்தியமில்லையானால் வேறு ஸ்தாபனங்களை ஏற்படுத்த வேண்டியதாக வரும். ஆனால், இம்மாதிரி ஸ்தாபனங்களை விருத்தி செய்துகொண்டு போவது உசிதமானதல்ல.

நாங்கள் வாக்காளர் முன் சமர்ப்பிக்கும் வேலைத் திட்டங்களை நிறைவேற்றிவைக்க சாத்தியமானவரை முயற்சி செய்வோம். தேர்தலுக்காக மட்டும் நாங்கள் திட்டங்கள் வகுக்கவில்லை. உண்மையாக வேலை செய்யவே திட்டங்கள் வகுத்திருக்கிறோம்.

பொக்கிஷ அதிகாரம் மந்திரிகளுக்குக் கிடைக்கப்போவதினால் மந்திரிகள் கிடுகிடுவென்று தோண்டி யெடுத்து விடுவார்கள் என்று வாக்காளர் எண்ணிவிட வேண்டாம். வரி வருமானம் அதிகமாகக் கிடைக்கு மென்று நம்புவதற்கில்லை. வரி வருமானம் நிலையற்றதாக விருப்பதினால் வரிப் பளுவைக் குறைப்பதும் சாத்திய மென்று தோன்றவில்லை. வரவு செலவுகள் எப்படி யிருந்தாலும் சரி, காரியங்கள் மட்டும் சரியாக நடக்க வேண்டும் எனப் பலர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன் ஆனால், வர்த்தக முறையில் எனக்கு கொஞ்சம் அனுபவமுண்டு. எனவே, வரவு செலவுகளைக் கவனியாமல் காரியங்களை சரியாக நடத்துவது சாத்தியமல்ல.

உத்தியோகஸ்தர் சம்பளம்

[illegible] ண்டால் [illegible]தமாகுமென்று சொல்லப்படுகிறது. பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு பெருந் தொகையான சம்பளங்கள் கொடுப்பதே உசிதமல்லவானாலும் நியாயமான - சாத்தியமான முறையில் தான் சம்பளங்களைக் குறைக்கலாம்.

சிவில் ஸர்வீஸ் உத்தியோகஸ்தர்கள் தேசத்துக்குச் செய்துள்ள சேவைகள் மறக்கக் கூடியவைகளல்ல. தேச முன்னேற்றத்துக்கு அவர்கள் மிகவும் உதவி புரிந்திருக்கிறார்கள். எனவே, அவர்கள் சேவை மேலும் நமக்குத் தேவையானதே. சர்க்கார் வேலை சரியாக நடக்க வேண்டுமானால் உத்தியோகஸ்தர்களுக்கு திருப்திகரமான சம்பளம் கொடுக்க வேண்டியதுதான்.

பொதுத் தேர்தல்

வெகு சீக்கிரத்தில் பொதுத் தேர்தல் வரப்போகிறது. எதிர்கால க்ஷேமம் அப்பொழுது வாக்காளர் செய்யும் முடிவையே பொறுத்திருக்கிறது. மாகாண முன்னேற்றத்துக்காக நாங்கள் ஏற்கனவே எவ்வளவோ வேலைகள் செய்திருக்கிறோம். எதிர்காலத்தும் எக்காலமானாலும் நாங்கள் உழைத்துக் கொண்டே இருப்போம்.

எவ்வாறோ குற்றம் குறைகள் உடைய இரட்டை ஆட்சியை நாங்கள் வெற்றிகரமாக நடத்தி வைத்ததினாலேயே பொறுப்பு மிக்க இந்தியர்களுக்குத் திராணி யுண்டென பிரிட்டிஷார் ஒப்புக்கொண்டு மாகாணங்களிலேயே எல்லா இலாகாக்களையும் இந்திய மந்திரிகள் வசம் ஒப்படைக்கப் போகிறார்கள். வரப்போகும் அரசியலையும் வெற்றிகரமாக நடத்திவைத்து மேலும் அதிகப்படியான அதிகாரங்களைப் பெற முயற்சி செய்வோம்.

அப்பால் தலைவர், கனம் மந்திரியவர்களைப் பாராட்டிப் பேசினர்.

கடைசியில் திரு. கெ. ஏ. பி. விசுவநாதம் அவர்களால் நன்றி கூறப்பட்டுக் கூட்டம் கலைந்தது.

தேக ஆரோக்கியத்தை முன்னிட்டு "ஜெம் பி காட்" என்ற தோர் கிளப்பை வியன்னா மாதர்கள் ஆரம்பித் திருக்கின்றனர். அதில் தற்பொழுது 5000-பேர் அங்கத்தினராய்ச் சேர்ந்திருக்கின்றனர்.

ஈரோடு முனிசிபல் சேர்மன்
ஜனப் ஷேக் தாவுத் சாயபு
பகதூர் அவர்களுக்கு

ஓர் வேண்டுகோள்

தாங்களும், முனிசிபல் கவுன்சிலர் அண்டா பரக்கர் கனம் சிக்கைய நாயக்கரும் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்திருப்பதாகவும் கோயம்புத்தூர் ஜில்லாவில் கட்சிக்காக வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் போவதாகவும் கேள்விப் பட்டேன். ஆனால், சமீபத்தில் நடந்த சென்னை நகரசபை எலக்ஷனில் ஜஸ்டிஸ் கட்சி தோல்வியடைந்திருப்பதை தேசியப் பத்திரிகைகளும், தேசிய தலைவர்களும், பிரசாரப் புலிகளும், மற்றும் சில பேர்வழிகளும் ரொம்பவும் பிரமாதமாக எழுதுவதும், பேசுவதும் கண்டு தாங்கள், கனம் ஜமால் முகம்மது சாகிப் அர்ப்போதனையில் சிக்காமல் தோல்வியும் வெற்றியும் உலக சகஜ மென்று எண்ணி வரப்போகும் மாகாண அசெம்பிளி சட்டசபைத் தேர்தலில் தாங்கள் முஸ்லீம் தொகுதியில் ஒரு பிரதிநிதியாக நிற்க வேணுமாய் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். தற்போது சென்னையிலுள்ள நமது முஸ்லீம் கட்சிகள் இரண்டையும் சேர்ந்தவர்கள் தான் தேர்தலில் நிற்பார்கள் என்று எண்ணி விட வேண்டாம். தனியாக நிற்கப்போகிறவர்களும் உண்டு. சவுக்கார் வி. அப்துல் ஹக்கீம் கட்சியின் போக்கை நான் ஆமோதிக்கிறேன். அதிலும் சில நண்பர்களை அறவே நீக்க வேண்டும். ஜஸ்டிஸ் தலைவர்களில் தற்கால முக்கியத் தலைவரும் உத்தம சீலருமாகிய டாக்டர் முகம்மது உஸ்மான் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஜஸ்டிஸ் கட்சியைத் தீவிரமாக ஆதரித்து வந்தால் தான் டெ. யா கட்சிக்கு உயிருண்டு. வழிகள் பேச்சைக் கேட்டு சவுக்கார் கடப்பாவலினர். உஸ்மான் கட்சி யொன்று தனியாக ஏற்படுமென்பது திண்ணம். மேற் சொல்லப்பட்ட இவ்விரு கட்சிகளால் தமிழ்நாடு, மலையாளம் முதலிய நாடுகளில் உண்டாகும் முடிச்சுகளை 15 வருஷ காலமாக எனது சுற்றுப் பிரயாணத்தின் அனுபவத்தாலும், ஆண்டவன் கிருபையாலும் சகலமின்றி சமூக நலம் கருதிய உண்மையைக் கொண்டும், அவிழ்க்க முடியுமென்பதைத் திண்ணமாகச் சொல்லுகிறேன்.

ஆகையால், தாங்கள் நமது சமூகத்தைக் கூட்டி, கழுத்தறுக்கும் காங்கிரஸ் போக்கை கையாளும் கனவான் வலையில் சிக்காமல், இன்று தனித் தொகுதியாயிருக்கும் முஸ்லீம் தனித் தொகுதியை ஒழிக்க காங்கிரஸ் எடுத்துக் கொண்ட முயற்சி முஸ்லீம்களுக்கு சாதகமா? பாதகமா? என்பதை ஆராய்ந்து பார்க்கவும். இவ்விதமான அனேக சாதகங்களை ஜஸ்டிஸ் கட்சியார் நமக்கு செய்தும்-செய்து வந்துகொண்டு மிருக்கிறார்கள். எனது 15-வருஷ அனுபவத்தில் முஸ்லீம்கள் காங்கிரஸை ஆதரிப்பது விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் விழுவதைப் பொருக்கும். வடநாட்டில் காங்கிரஸ் ஊழியனாக நின்றவரும் ஒரு சில உருது பத்திரிகைகளைப் பற்றியும் அதன் ஆசிரியர்களைப் பற்றியும் கூடிய சீக்கிரம் நான் ஒரு புத்தகம் வெளியிடுகிறேன். அதில் அவர்களுடைய நடவடிக்கைகள் நன்றாக உங்களுக்குத் தெரியவரும். வரப்போகும் மாகாண சட்டசபை தேர்தலில் தங்களுக்கு எதிராக எவரும் நிற்க மாட்டார்கள் என்பது திண்ணம். தாங்கள் ஜஸ்டிஸ் கட்சி சார்பாக எலக்ஷனில் நிற்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
அ. ஜமின் சாகிப்.

திருபருக்கு அறிவிப்பு

சோற்று சோக்கலிங்கத்தின் கூத்து!

முழுப் பெயருடன் இந்தக் கடிதத்தைப் பிரசுரிக்கத் தயார். திருபர் விலாசம் தெரிவிக்கவும்.

ஆசிரியர்: "விடுதலை"

நோட்டீஸ்

கீழ்த் தஞ்சை ஜில்லா போர்டின் வைத்திய சாலைகளில் வேலையில் அமரத் தகுதி பெற்ற ஆண், பெண் காசிக் ஆர்டர்லி களிடமிருந்து மனுக்கள் 20-11-36 வரையில் ஏற்றுக் கொள்ளப்படும். மனுதார் குறைந்தது 5-வது வகுப்பு தேறியவராயும், காசிக் ஆர்டர்லி வேலைக்குச் சர்க்கார் ஏற்படுத்தியுள்ள பயிற்சி பெற்றவராயும் இருக்க வேண்டும். அவர்களின் வயது, வகுப்பு முதலியன குறிப்பிட்டு தமது நற்சாட்சிப் பத்திரங்களின் நகல்களை அனுப்ப வேண்டும். மாதசம்பளம் ரூ 12-1/2-18.

(ஒ) கெ. ரா. சாமியப்ப முதலியார்,
பொப்பிலி கட்டடங்கள், } தலைவர்.
நாகப்பட்டணம்.

மணமகள் தேவை

"எம்மதமும் சம்மதமே"

தொண்டை மண்டல வேளாளர் வகுப்பைச் சேர்ந்த இங்கிலீஷ் ஸ்கூல் பைனல் பாஸ் செய்து ஒரு பெரிய செவு ஆபீஸுக்கு ஏஜெண்டாக மாத சம்பளம் ரூ 75 பெற்றுள்ள, வயது 23 உடையவருக்கு, உபாத்தியாயினி உத்தியோகத்தில் உள்ள பூரா சுயமரியாதை கொள்கை உள்ளவும், சுமார் அழகு, திடகாத்திரம், வயது 22 க்கு மேற்படாமல் ஒரு பெண் தேவை. பிரியமுள்ளவர்கள் புகைப் படத்துடன் நவம்பர் மாதம் 25-ந் தேதிக்குள் தெரிவிக்கவும். கடிதம் ரகசியமாக வைக்கப்படும்.

N.B. விவாகம் சட்டபூர்வமாக நடக்கும்.

விலாசம்:—
"பனகால் வில்லா"
சோழவந்தான்,
S. I. Ry.

பஞ்சாயத்து தலைவர் தேர்தல்

மெம்பர் பேரில் அயநூரகப் பெட்டிஷன்

(ஒரு நிருபர்)

லால்குடி, நவ, 10

மேற்படி போர்ட் மெம்பர் எலக்ஷன் சென்ற 6-7-36 அன்று நடந்தது. அதில் 6 தமிழர்களும், ஒரு பார்ப்பனரும் வெற்றியடைந்தார்கள். அவரும் தமிழர்களின் உதவியாலேதான் வர முடிந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களில் தோழர் எல். ஜி. கருப்பண்ண பிள்ளை அவர்களுக்குப் படிக்கத் தெரியாதென்று புரோகித தோழர் எல். என். ராமச்சந்திரய்யர் அவர்கள் மேலதிகாரிகளுக்கு மனு போட்டிருந்தார். விசாரணைக்கு வந்ததில், மனு பொய்யாகி விட்டது. பேரில் அய்யரைக் கேட்டதில் சொல்லக் கேள்விபெனச் சொன்னார். இம்மாதிரியாக ஒருவரை வீணில் இழிவு படுத்தி எழுதினதற்கு யாவரும் அய்யரை வெறுத்தார்கள். இதற்காக லால்குடி வெள்ளாள ஜாதியார்கள் ஒன்று கூடி தங்களுக்குப் புரோகிதம் செய்வதினின்று நீக்கிவிட்டதாகச் சொல்லப் படுகிறது.

தலைவர் தேர்தல்

25-10-36-ல் லால்குடியில் நடந்தது. தேர்தலை செகிண்டு இன்ஸ்பெக்டர் நடத்தினர். ஆஜரான மெம்பர்கள் 1 எல். என். அம்மையப்ப பிள்ளை, 2 எஸ். என். பரமசிவம் பிள்ளை, 3 எல். ஜி. கருப்பண்ண பிள்ளை, 4 எல். ஒ. குழந்தை பிள்ளை, 5 எல். ஏ. பரமசிவஞ் செட்டியார், 6 எஸ். டி. ராஜகோபால், 7- எல். ஆர். ராஜகோபாலய்யர்.

தோழர். எல். என். அம்மையப்ப பிள்ளை, அவர்களைத் தலைவராகத் தோழர் பரமசிவஞ் செட்டியாரால் பிரேரிக்கப்பட்டு ஒ. குழந்தை பிள்ளையால் ஆமோதிக்கப்பட்டு, ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பார்ப்பனர் செய்த சூழ்ச்சி எல்லாம் வீணானது குறிப்பிடத்தக்கது.

சென்னை அரசாங்க பிரதம மந்திரி கனம்

பொப்பிலி ராஜா K. C. I. E., அவர்களுக்கு

நாமக்கல்லில் கூறிய வாழ்த்து வெண்பாக்கள்

1. மங்களஞ் சேர் சென்னை வளருமுதன் மந்திரியாம்
எங்களிறை பொப்பிலிமன் வேந்தனாஞ்—சிங்கம்
பகரு ருவிற் பலவன்மை செய்வோர்
தகவுடனே வாழ்க தழைத்து.

2. சங்கர்ரவுங் வேதா சலபதி ராமகிருஷ்ண
ரங்கராய் பொப்பிலிமன் னெங்களிறை—துங்கமவன்
நாட்டிற் பெரியவெனும் நற்பெயரைக் கொள்புரிந்து
நாட்டினரு வாழ்க தழைத்து.

3. சுவை சிறந்த இனிய தமிழ் நாட்டின்
வாகை சிறந்த மதிநிலவர்—ஒகையிரு
மாதவக ராயர் வளர்மா தவரையர்
எந்தவன காலிறைவ ரே.

4. அன்னேரின் பின்னேயு மத்தொண்டை யாற்றவோர்
வண்ணமுறு பொப்பிலி மன்னராம்—தன்னையஞ்சேர்
மன்னிநிக் கட்சிக்கு மாதலைவராய் வளர்வோர்
எக்காளும் வாழ்க இனிது.

5. வளரும் வயதினில் மாவினொரு சேறும்
பணி லதிவுமுதிய பான்மை—வளபெரியார்
ஆக்கம் அடைதுடனே ஆற்றல் மிகவோங்கி
ஊக்கமுடன் வாழ்க வுவந்து.

6. தமதா மிளமசோ தாவிஞன் மிக்க
அமைவான சன்மைபல வாக்கும்—சமையாருக்
நீரர் வளருஞ் செழுந் தமிழ்நாட் டுத்தலைவர்
வீரமொடு வாழ்க மிளர்ந்து.

7. நாட்டு மக்கள் கல்வி நவின்றுமேன் மேலாகக்
காட்டுஇட்ட நாட்டுக் கவினுடையார்—நாட்டிகர்
இன்னும் நமக்கான எற்றபல நன்மைசெய்து
மன்னியே வாழ்க மகிழ்ந்து.

8. சர்க்கரைப்புத் திட்டந்தாழ்த் தப்பட்டோர் முன்னேற்றஞ்
சிப்பெறவே தொண்டாற்றுஞ் செவ்வியோர்—பாரதனில்
மேலா மதிநுடையோர் வேண்டுவெல்லா மாற்றிச்
சீலமுடன் வாழ்க சிறந்து.

9. அன்னோர் வாவும் அனைய வரவாகி
எக்காளு மேலாம் பலனீந்து—சுக்காட்டின்
தக்க நிலைமையது தாங்கித் தழைத்தோங்கி
மிக்கோராய் வாழ்க மிளிர்ந்து.

10. வாழ்கவியர் பொப்பிலிமன் வாழ்கவவர் சீடரும்
வாழ்கவவர் ஆட்சி வளர்ந்தோங்கி—ஆழியென
எல்லா நலமும் மினிதேற்று நீடூழி
வல்லவரு வாழ்க மகிழ்ந்து.

— நாமக்கல் } [illegible] தங்கக்கார்

"காங்கரசும், ஜவஹர்லாலும்"

திரு. வி. ஆர். சீனிவாச ஐயங்கார் 'பொன் மொழிகள்'

இவை 'ஹிந்து' பத்திரிகையில் வெளிவந்த ஆங்கிலக் கட்டுரையி லிருந்து பொறுக்கியெடுத்த மணிகள். இவ்வாங்கிலக் கட்டுரையை வரைந்தவர் "சுதேச மித்திரன்" பத்திரிகையின் ஆசிரியர் வி. ஆர் சீனிவாச ஐயங்கார். அவர் பிரபல காங்கரஸ் வாதி எனப் பார்ப்பன வட்டாரங்களில் கருதப்படுபவர். தேச பக்தர். அவர் "பொன் மொழிகள்" கவனிக்கத் தக்கவை. ஆதலால், "விடுதலை" வாசகர் அறியும் பொருட்டுத் தருகின்றோம். [ப-ர்]

1. நான் பார்த்த பண்டிதர் ஜவஹர்லால் சாதாரண மனிதர் தான். அவரிடம் பல குறைகள் காணப்படுகின்றன.

2. தான் செய்வதும் சொல்வதும் தான் சரி என்ற ஆணவம் அவரிடம் பெரிதும் காணப்படுகிறது.

3. மரியாதையோ கட்டை; அரசியல் அனுபவம் அவருக்கு இல்லை.

4. அவரது சுபாவத்தில் மேன்மை என்பதே கிடையாது; மூர்க்கத்தனமே காணப்படுகிறது.

5. அவரிடம் தன்னம்பிக்கை கிடையாது.

6. நாட்டில் உள்ள எல்லா சீர்கேட்டிற்கும் அவர் கூறும் ஒரே மருந்து, அவரே ஒரு முடிவுக்கும் வராத 'அபேதவாதம்' தான்.

7. அவர் பேசும் சொற்களோ கடுஞ் சொற்கள்.

8. காந்திஜீ கட்டளையை ஒருவரும் மதிக்காததால் அவர் காங்கரசி லிருந்து விலகி நழுவிடுத்துக் கொண்டார்.

9. அறிவு, ஞானமாகப் பரிணமிக்காத ஒரு வயதில் பெரிய பொறுப்புள்ள ஸ்தானத்திற்கு வந்தும், அவர் வகிக்கும் பதவிக்குத் தகுந்த முறையில் கௌரவமாக நடந்து கொள்ளும் தன்மையும், அதற்கேற்ற மனப் போக்கும் அவரிடம் மிகக் குறைவே.

10. தெளிவான - விரிவான 'வேலைத் திட்டம்' ஒன்றும் இல்லாமையால் காங்கரஸ் ஸ்தாபனம் வெறும் தேர்தல் ஸ்தாபனமாகிக்கொண்டு வருகிறது.

11. பஞ்சாயத்துப் போர்டு முதல், மாகாண சட்டசபைகள் வரை தேர்தலில் வெற்றி பெறுவது ஒன்றே காங்கரசின் வேலையாக இருந்து வருகிறது.

12. ஒவ்வொரு ஜில்லாவில் உள்ள காங்கரஸ் தொண்டர்கள் தேர்தல் பிரசாரம் செய்வதற்காகப் பல இடங்களில் சுற்றித் திரிகிறார்கள். இங்கு அவர்களைச் சுற்றிலும் காணப்படும் வேலைகளைச் செய்வதற்குக் கொஞ்சமேனும் கவலை கொள்வதில்லை.

சுயமரியாதைத் திருமணம்

(ஒரு நிருபர்)

கிழ சால், நவ, 3

கிழ சால் இராஜா ஸ்கூல் நிர்வாகஸ்தர் தோழர் சிவசத்தியவேல், ப. பொன்னம்பலம் தனது சகோதரி காசியம்மாளை தனது மைத்துனர் தங்கச்சாமி அவர்களுக்கு சுயமரியாதைத் திருமணமாக கூட்டி வைத்தார்கள். அவ்வமயம் திருவாளர்கள். வேல், என். பி. முத்தையா பி. ஏ. செகினியூ இன்ஸ்பெக்டர் ஸ்டம்ப், வேல், என். துரைசாமி பிரபல மிராசுதார் அயன் பொம்மயாபுரம் கி. இல்லைடாசன், வேல், வெள்ளசாமியுடன் இன்னும் பல தோழர்கள்: விஜயஞ் செய்திருந்ததுடன் ஆத்தக்குடி நடராஜன், பழனிச்சாமி முதலிய தோழர்கள் மணத்தை ஆதரித்து தந்திகொடுத்தது பாராட்டத் தகுந்ததாகும்.



கல்வி மந்திரி கனம் செட்டிநாட்டு குமாரராஜா காரைக்குடி (செட்டிநாடு)யில் வரவேற்று உபசரிக்கப் பட்ட பொழுது எடுக்கப்பட்ட படம். சர். முகம்மது உஸ்மான் அவ் வைபவத்தின்போது தலைமை வகித்தார். படத்தில் சர். கே. வி. ரெட்டி, சர். முகம்மது உஸ்மான், கனம் செட்டிநாடு குமாரராஜா முதலியோர் காணப்படுகின்றனர்.

—P. P. B.

பள்ளத்தூர் அருணாசலம் செட்டியார் உயர்தர பாடசாலைக்கு சர். கே. வி. ரெட்டி, சர். முகம்மது உஸ்மான், கனம் செட்டிநாடு குமாரராஜா முதலியோர் விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படம். அங்கு அவர்களுக்கு உபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப் [illegible]

—P. P. B.



திருச்சி ரயில்வே ஸ்டேஷனில் கல்வி மந்திரி கனம் குமார ராஜா முத்தைய செட்டியாரை வரவேற்றபோது எடுக்கப்பட்ட படம். படத்தில் கலெக்டர் திரு. ஜே. வி. பிரௌன் ஐ. சி. எஸ். மீனும்பள்ளி ஜமீன்தார், ராவ்பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை, ராவ்சாகிப் ஏ. அனந்த சுப்ரமணிய ஐயர், மற்றும் பலரும் காணப்படுகின்றனர்.

—P. P. B.

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில், கல்லூரி பிரின்ஸிபாலும், உபாத்தியாயர்களும் கல்வி மந்திரி கனம் செட்டிநாட்டுக் குமாரராஜாவை வரவேற்று உபசரித்தபோது எடுக்கப்பட்ட படம்.

—[illegible] ஸ்டுடியோ.

சட்டசபை தேர்தல்கள்

ஷெடியூல்டு வகுப்புகள்

தேர்தல் போர்டு நடவடிக்கை

சென்னை, நவ, 4

நவம்பர் 2-ந் தேதியன்று சென்னை மாகாண ஷெடியூல்டு வகுப்பு தேர்தல் போர்டு கூட்டமொன்று ராவ்பகதூர் எம். சி. ராஜா தலைமையில் நடைபெற்றது. மேற்படி வகுப்பு அபேட்சகர்கள் கையெழுத்திட வேண்டிய சுல் வாக்குறுதிப் பத்திரத்தின் வாசகம் ஒப்புக்கொள்ளப்பட்டது. தங்கள் அபேட்சகர்களுக்குப் பச்சை நிற பாலட் பெட்டிகளை வைக்குமாறு சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அடுத்து வரும் சென்னை சட்டசபைத் தேர்தல்களில் கீழ்க்கண்டவர்கள் ஷெடியூல்டு வகுப்பு அபேட்சகர்களாக நிற்பர்:—

சென்னை நகரம் (பழைய 17, 18, 19, 20, 21, 22, 23 டிவிஷன்) தொகுதி திரு. பி. கே. புஷ்பராஜ.

செங்கற்பட்டு—மதுராந்தகம் தாலூகா:-ராவ்பகதூர் எம். சி. ராஜா.

திருவள்ளூர் டிவிஷன்:-திரு. ஏ. பி. பார்த்தசாரதி பிள்ளை.

ராணிப்பேட்டை:—திரு. டி. டி. தயாளம்.

திருவண்ணாமலை:-திரு. வி. ராமலிங்க சுவாமிகள்.

சிதம்பரம் டிவிஷன்:- சாமி சகஜானந்தம்.

திருக்கோவலூர் டிவிஷன்:-ராவ்சாகிப் வி. ஐ. முனிசாமிப்பிள்ளை.

மன்னார்குடி:—திரு. ஏ. ஐ. கதிர்வேலு காட்டாண்டை.

பொள்ளாச்சி:—திரு. ஆர். டி. கேசவலு.

நாமக்கல்:—திரு. ஆர். ராமசாமி யாவது, திரு ஆர் [illegible] டாரமாவது (ஒருவர் வேறு தொகுதியில் நிறுத்தப் படுவார்).

மாவல்புரம்:-திரு. [illegible]. கண்ணன்.

ஜம்மலமடுகு:—டாக்டர் எம். கந்தாசிவம்.

பூர்த்தியான ஜாபிதா பின்னர் வெளியிடப்படும். தேர்தல் போர்டுக்கு ராவ்பகதூர் எம். சி. ராஜா தலைவராகவும், வி. ஐ. முனிசாமி பிள்ளை உப தலைவராகவும், பி. கே. புஷ்பராஜ் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். இவர்கள் சாமி சகஜானந்தத்துடன் அபேட்சகர்களைக் கலந்துகொள்ள சுற்றுப் பிரயாணம் செய்வார்கள்.

ஷெட்யூல்டு வகுப்புக்குத் தேர்தல் டிசம்பரில் நடக்கும்

சென்னை, நவ 5

சென்னை மாகாண சட்டசபைத் ராஜாங்க சபை இவற்றின் பொது தேர்தலில் அபேட்சகர்களாக நிற்கும் ஷெட்யூல்டு வகுப்பினருக்கு பூர்வாங்கத் தேர்தல் டிசம்பர் மாதம் நடக்கும். நியமனச் சீட்டுகள் டிசம்பர் 8-ந் தேதிக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும் 10-ந் தேதி பரிசீலனை நடைபெறும். டிசம்பர் 21-ந் தேதி ஓட்டுக் கொடுக்கும் தினம். அபேட்சகர் வர்ணப்பெட்டிகளை உபயோகிப்பது இதற்கும் அமுலிலிருக்கும்.

ஈரோடு நேஷனல் புக்ஸ் பப்ளிஷிங் சொசைட்டி (லிமிடெட்)

ஈரோடு, நவ, 5

ஈரோடு நேஷனல் புக்ஸ் பப்ளிஷிங் சொசைட்டி லிமிடெட்டின் வைசஸ்பாடி மீட்டிங்கு டிசம்பர் மாதம், முதல் தேதி, மாலை 5 மணிக்கு ஈரோடு சொசைட்டி ஆபிஸில் கூடும். அப்போது சொசைட்டியின் நிலைமையைப்பற்றியும், மேல் நடப்பைப் பற்றியும் யோசித்து முடிவு செய்யப்படும். மெம்பர்கள் வரவேண்டுமாய் கோரப்படுகிறேன்.

[illegible] ஈ. வெ. [illegible]

விடுதலை யாவது யாதெனக் கேட்பாயேல்
வெறுமை நீக்கி மனிதரை நீள்ள
[நாட்டினரெல்லாம்
பொருள் சுகப்பேறுகள் சர்வமும் பெற
நிருமிக வாழ்தலே யாம்

விடுதலை

VIDUTHALAI

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்று நின்ற
செம்மொழியை நிருமொழியை
[தேன்மொழியை
தனித்தியங்கும் ஆற்றலுள தொன்மொழியை
[அமிழ்தனைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
[அனுதினமும் பழக்கம் செய்வீர்.

மலர்-2] சென்னை: (11-11-1936) தாதுவருஷ ஐப்பசிமீ 26உ புதன்கிழமை [இதழ்-46

தூத்துக்குடி காங்கரஸ் ஊழல்

(ஒரு நிருபர்)

தூத்துக்குடி, நவ, 2

தூத்துக்குடி நகர காங்கரஸ் காரியதரிசி திரு. பெ. கந்தசாமி பிள்ளை தன்னுடைய காரியதரிசி பதவியை சரிவர நடத்தாமலும், காங்கரஸ் மகா சபைத் தீர்மானங்களில் ஒன்றாகிய "ஹிந்தி" பாஷையை பொது பாஷையாக்க வேண்டுமென்ற தீர்மானத்திற்கு விரோதமாக சென்ற முனிசிபல் கூட்டத்தில் ஹிந்தி கட்டாய பாடமாக வைக்க வேண்டிய அவசியமில்லை என்ற தீர்மானம் வந்தபோது மேற்படி தீர்மானத்தை ஆக்ஷேபிக்காமலிருந்ததோடு, நகரத்திலுள்ள ஏழை மக்கள் தண்ணீரின்றிப்படும் கஷ்டத்தை நிவர்த்திப்பதற்காக தீர்மானம் வந்தபோதும் பேசாதிருந்ததைக் கண்டித்து அதி தீவிர காங்கரஸ் வாதிகள் காங்கரஸின் பெயரைச் சொல்லி மக்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருப்பதைப் பற்றி "சுதந்திர வீரன்" பத்திரிகை மூலமாகவும், துண்டு பிரசுரங்கள் மூலமாகவும் விளம்பரம் செய்தனர். காரியதரிசி தன்மேல் சாட்டிய குற்றங்களுக்குப் பதிலின்றி துண்டுப் பிரசுரங்கள் [illegible] செய்தவர்களின் நடத்தையைக் கண்டித்தும், "சுதந்திர வீரன்" பத்திரிகை ஆசிரியரும், பிரபல காங்கரஸ்வாதியுமான திரு. கொட்டீக்கலை கண்டித்தும் பொதுக் கூட்டங்களில் கண்டனங்கள் செய்து வருவதைக் கண்ட பொது ஜனங்கள் காங்கரஸ் பெயரைச் சொல்லி பணம் வசூல் செய்யவே காங்கரஸ் வாதிகளிருக்கின்றார்களே யன்றி, செயலில் ஒன்றும் சாதிக்கப் போவதில்லை என்று பேசிக் கொள்ளுகின்றார்கள்.

நாடார் வாலிபர் சங்க ஆண்டு விழா

இச்சங்கத்தின் ஆண்டு விழா டிசம்பர் மாதம் 13-ந் தேதி நடைபெறும். அவ்வைபவத்திற்குத் தலைமை வகிக்கும்படி திரு. டபிள்யூ. பி. ஏ. சௌந்தரபாண்டிய நாடார் எம். எல். ஸி. அவர்களைக் கேட்டிருப்பதாகத் தெரிகின்றது.

சென்னை சட்ட சபை தேர்தல்

வருகிற சென்னை சட்டசபைத் தேர்தலுக்குத் தூத்துக்குடி டிவிஷனுக்கும் காங்கரஸ் சார்பாக நிற்கும்படி ஸ்தல சமதர்ம வாதியும், ஜஸ்டிஸ் கட்சித் தலைவருமான திரு. கே. கே. ஏ. பெரியசாமி நாடாரை பல காங்கரஸ் வாதிகள் கேட்டதற்குத் தான் காங்கரஸ் சார்பாக நிற்க முடியாதென்று தெரிவித்துவிட்டார். தூத்துக்குடி டிவிஷனுக்கு திரு. என். என். சின்னக்கண்ணு பிள்ளை அவர்கள் சொந்த ஹோதாவில் நிற்பதாகத் தெரிகின்றது.

திருமணங்கள்

இன்று காலையில் தூத்துக்குடி பெரிய தனவர்த்தகர்களில் தலை சிறந்தவரும், பிரபல பாங்கரும், முனிசிபல் அங்கத்தினரும், வாலிப நாடார் சங்கத் தலைவருமான உயர் திரு. எம். வி. எஸ். கதிரவேல் அவர்கள் தங்கையும் காலஞ்சென்ற திரு. எம். வி. ஷண்முகவேல் நாடார் அவர்களின் புதல்வியுமான ஸ்ரீமதி மீனும்பாளுக்கும், திரு. [illegible]க்கும் திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. திருமண வைபவத்திற்கு உள்ளூரிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் ஆயிரக் கணக்கான பிரமுகர்கள் வந்திருந்தனர்.

மத்தியான விருந்திற்கு நகரெங்கும் மோட்டார்களில் ஆட்கள் சென்ற வண்ணமாக இருந்த வைபவம் இவ்வூரில் இதுவே முதல் தடவை என்று சொல்லலாம்.

மாலையில் ஆயிரக் கணக்கான பிரமுகர்களுக்கு நவீன முறையில் உபசாரங்கள் நடைபெற்றன.

சென்ற 29-10-36 ல் பிரபல முனிசிபல் அங்கத்தினரும், நவுளி வியாபாரியுமான திரு. பி. எஸ். சோமசுந்தர நாடார் அவர்களின் புதல்வன் பொன்னுசாமிக்கும், இராஜம்பாளுக்கும் திருமணம் மிகவும் சிறப்பாக சிவகாசியில் நடைபெற்றது.

மேற்படி திருமணத்திற்கு செம்பை வைத்தியநாத அய்யரும், மைசூர் சௌடய்யாவும், மிருதங்கம் - ராமதாசும் வந்து பாட்டுக் கச்சேரி நடத்தினர்கள். பின்னர் 30-10-36 ல் நடைபெற்ற ஊர்வலத்திற்கு நாதஸ்வர வித்வான் வீருசாமி பிள்ளையும், தவில்-மீனாட்சி சுந்தரமும் வந்திருந்தனர்.

விதவா விவாகம்

தூத்துக்குடி சர்க்கார் ஆஸ்பத்திரியில் லேடி டாக்டராக வேலை பார்த்து வரும் ஸ்ரீமதி கே. ஏ. அமிர்தராஜு [illegible] செல்வராயகம் என் [illegible] விதவா விவாகம் நடை[illegible] மேற்படி விவாகத்தை முன்னிட்டு தூத்துக்குடி மெடிக்கல் அஸோஸியேஷன் அங்கத்தினர்களுக்கு ஓர் விருந்தும் 30-10-36-ல நடைபெற்றது.

தென்னிந்திய ஆதிதிராவிட வாலிபர் கழகம்

(ஒரு நிருபர்)

பம்பாய், நவ. 7

1—11—36 ஞாயிற்றுக்கிழமை இரவு 8-30 மணிக்கு தாராவி, விநாயகர் ஆலயத்தில், தென்னிந்திய ஆதிதிராவிட வாலிபர் கழகத்தின் 4-வது மாதாந்தர பொதுக் கூட்டம், தென்னிந்திய ஐக்கிய மகா ஜன சங்கத்தின், தலைவர், திரு. எம். எஸ். வேல்மயில் மேஸ்திரியாரவர்கள் தலைமையின் கீழ் வெகு விமரிசையாக நடைபெற்றது. அவ்வமயம் ஏராளமான ஆதிதிராவிட வாலிபர்கள் விஜயம் செய்திருந்தனர்.

முதலாவதாக, திரு. எம். எஸ். வேல்மயில் மேஸ்திரியாரவர்கள் கரகோஷத்தினிடையே தலைமை வகித்து முன்னுரையாக சில விஷயங்களை பேசியமர்ந்ததும், சென்ற மாத கூட்ட நடவடிக்கைகளை காரியதரிசி, ஜனாப் கே. எஸ். பாலகிருஷ்ணன் அவர்களால் வாசிக்கப்பட்டு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அடுத்தபடியாக, பாம்பே, முனிசிபாலிட்டியாரிடமிருந்து வந்த கடிதத்தை, கௌரவ காரியதரிசி, ஜனாப், எம். என். தருமலிங்கம் அவர்களால் வாசிக்கப்பட்டதும், பொதுக் காரியதரிசி, ஜனாப் வி. எஸ். டி. ராஜா அவர்கள் எழுந்து ஜனாப் எம். என். மோசஸ் அவர்கள், பல ஆண்டுகளாக நம் சமூகத்திற்கு அநேக தொண்டுகள் செய்திருப்பதாகவும், இந்த, முன்சிம் கலவரம் முடிந்த பின் அன்னவருக்கு நமது சமூகத்திலிருந்து ஸ்பெஷல் கூட்டம் ஒன்று ஏற்படுத்தி கௌரவிக்க வேண்டுமென்றும் கேட்டு கொண்டதற்கு, எல்லோராலும் மேற்படி திருத்தம் ஒப்புகொள்ளப் பட்டது.

இறுதியில், கௌரவ காரியதரிசி ஜனாப் எம். என். தருமலிங்கம் அவர்களால் வரவு செலவுக் கணக்கு வாசிக்கப்பட்டதோடு கீழ் கண்ட தீர்மானங்களை ஏகமனதாய் நிறைவேற்றி தலைவர், முடிவுரையுடன் இரவு 11-மணி அளவில் கூட்டம் இனிது கலைந்தது.

தீர்மானங்கள்

மேன்மை தங்கிய மைசூர் மகாராஜா அவர்கள், மைசூர் தசரா தர்பாரில் தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகளுக்கும் சமத்துவ மளித்து, தர்பாரில் கலந்துகொள்ளும்படியாக அங்கீகரித்த பெருந் தன்மையைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறதோடு இதர சமஸ்தான இந்து மன்னர்களுக்கும் வழிகாட்டியாக மகாராஜா அவர்கள் நடந்துகொண்ட உயரிய நோக்கத்திற்கு தென்னிந்திய ஆதிதிராவிட வாலிபர் கழகத்தின் ஆழ்ந்த நன்றி யறிதலை மன்னருக்கும், அரச குடும்பத்தவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறது.

தாராவி, போலீஸ்டேஷனில் நீண்டகாலமாய் உத்தியோகத்திலிருந்து தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு [illegible] அநேக சேவைகள் [illegible] வந்தவரான ஜனாப் [illegible] சாமி ஐயங்கார் அவர்கள் தற்சமயம், பம்பாய் போலீஸ் இன்ஸ்பெக்டராக நியமனம் பெற்றிருப்பதை கண்டு மகிழ்ச்சி அடைகிறதோடு அவர்களை இன்ஸ்பெக்டராக நியமனம் செய்த மேல் அதிகாரிகளுக்கும் நன்றி பாராட்டுகிறது.

தென்னிந்திய ஆதிதிராவிட வாலிபர் கழகத்தின் கமிட்டி அங்கத்தினர் திரு. ஏ. என். தாசராயர் அவர்களின், புதல்வி, மிஸ். விக்டோரியா உயிர் நீத்ததைப்பற்றி வருந்துகிறதோடு அன்னவருக்கும், அன்னவரின் குடும்பத்தார்களுக்கும் கழகத்தின் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

கீழ ஈரால்

சிக்கனக் காதல் மணம்

(ஒரு நிருபர்)

கீழ ஈரால், நவ. 3

அரப்புக் கோட்டையை அடுத்த காத்தநப்பட்டி ஸ்ரீமதி குப்பம்மாளுக்கும், பொம்மக்கோட்டை திரு. ராமசாமி அவர்களுக்கும் தோழர் மானசெட்டியார் குமாரர்களுடன் கீழ ஈரால் சமுதாயச் சீர்திருத்த சங்கத்தின் ஆதரவில் தங்கள் வாழ்க்கை ஒப்பந்தத்தை நடத்திக் கொண்டார்கள். அவ்வமயம் திருவாளர்கள் கரு. கா. மு. வெ. பொன்னுசாமி, பண்டிட் சின்னசாமி, மூக்கா நாயக்கர், வேல், வெள்ளசாமி இன்னும் சில தோழர்களால் மணம் சிக்கனத்திலும் சீர்திருத்த முறையிலும் நடத்திவைக்கப்பட்டது.

அய்யம்பேட்டை

பஞ்சாயத்து போர்டு

(ஒரு நிருபர்)

அய்யம்பேட்டை, நவ, 7

பழைய போர்டின் கடைசிக் கூட்டம் 31-10-36 மாலை நடந்தேறியது. திரு. ஐப்பார் சாஹிப் அவர்கள் தலைவர் பதவியிலிருந்து விலகும் திரு. பிரதாப கிருஷ்ணசாமி நாயக்கர் அவர்கள் சென்ற இரண்டு வருஷ காலமாக போர்டுக்குச் செய்த அரிய ஊழியத்தை பாராட்டிக் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியது. மூன்று சிப்பந்திகளுக்கு தலா ரூ. 2 வீதம் சம்பள உயர்வு சாங்க்ஷன் செய்தது. புது போர்டுக்கு இது விஷயம் விட்டு விடலாமென திரு. முனிசாமி அவர்கள் சொன்ன யோசனை ஒப்புக் கொள்ளப்படவில்லை.

டிப்டி ரிஜிஸ்டிரார் விஜயம்

தஞ்சை ஜில்லா ஐக்கிய நாணய டிப்டி ரிஜிஸ்டிரார், திரு. ஏ. பழனியப்ப முதலியார் எம். ஏ. அவர்கள் 31-10-36 ல அய்யம்பேட்டைக்கு விஜயம் செய்தார். அது சமயம் இரண்டு புதிய ஐக்கிய நாணய சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

1. 'கடன், விற்பனை சொசைடி' என்பது ஒன்று.

2. 'விவசாய பொருள்கள் விற்பனை சங்கம்' என்பது மற்றொன்று.

முதலாவது சங்கத்தில் தானியத்தை ஈடாக வைத்து 100-க்கு 75-வீதம் கடன் கொடுத்து, பின்னர் நல்ல விலைக்கு விற்க ஏற்பாடு செய்யப்படும்.

இரண்டாவது சங்கத்தில் விவசாயக் கருவிகள், விதைகள் முதலி[illegible] இந்த இரு சங்கங்களின் நன்மையைப் பற்றி விளக்கிப் பேசினார்கள்.

பெருந்தலையூர்

ஆதிதிராவிட நலவுரிமைச் சங்கம்

(ஒரு நிருபர்)

பெருந்தலையூர், நவ, 8

30-11-36-ந் தேதி இச் சங்கத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் சங்கத் தலைவர் திரு. எம். குருசாமி தலைமையில் நடைபெற்றது.

தீண்டாமையின் கொடுமைகளைப் பற்றி திருவாளர்கள்: கே. எம். தானியேல், பெ. ஞா. மாணிக்கம், முதலியவர்களால் விளக்கமாக சொல்லப்பட்டன. பிறகு கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டம் இனிது கலைவுற்றது.

தீர்மானம்

1. இச் சங்கத்தின் கௌரவ காரியதரிசியாகவும், லீகல் அட்வைஸராகவும் தோழர் கே. எம். தானியேல் மேஸ்திரியை நியமனஞ் செய்ததை ஏற்றுக்கொள்ள தீர்மானிக்கிறது.

2. இச்சங்கத்தினுடைய [illegible] சேகர தாழ்த்தப்பட்டோர்களின் 2-வது மகாநாட்டை தோழர் ஈ. வெ. ராமசாமிப் பெரியார் அவர்களின் தலைமையில் நடத்துவதெனவும், இம்மகாநாட்டிற்கு ஜஸ்டிஸ்-சுயமரியாதை இயக்கங்களில் தலைவர்களாக உள்ள அநேகரை அழைப்பதெனவும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இம்மகாநாட்டுக்குப் பொருள் வசூலிக்கவும், கடிதப் போக்குவரத்துக்களை நடத்தவும் திருவாளர்கள்: எம். குருசாமி, கே. எம். தானியேல், பெ. ஞா. மாணிக்கம் முதலியவர்களுக்கும் இச்சங்கம் அதிகாரம் கொடுத்ததாகத் தீர்மானிக்கப்பட்டது.

சென்னை

தமிழ் மாகாண விச்வகர்ம இளைஞர் மத்திய கழகம்.

(குறள் வெண்பா)

நல்புல வாண்டு நவிலப் படித்திங்கள்
நல்லவை நாட்டினரால் நன்று.

(ஆசிரிய விருத்தம்)

சீர் பெருகு சென்னையில் திகழ் தமிழ் மாகாண
திரு விச்வ கர்ம வினைஞர்
பேர் பெருகு மத்ய சபை தன்னைத் அமைத்தனர்
பி. டி. ராஜன் தலைமையில்

சேர் பெருகு சட்டசபை உபதலைவ ராகிய
செயமிகு நடேச மேலோன்
ஏர் பெருகு மச்சபை எங்கள் கலைஞரும்
எமதினோர்க் கருவி யுமே.

(இராகம்—காம்போதி. தாளம்—ரூபகம். ராமநாமமே—என்ற மெட்டு)

(பல்லவி)

விச்வ கர்ம இளைஞர் மத்ய சங்க ஸ்தாபனம்
சாசுவதமாய் தமிழ் மாகாண (வி)

(அனுபல்லவி)

குலத்திற் காகத் தொண்டு செய்ய
நலமுடன் சென்னையில் நாளைக் [illegible] (வி)

(சரணம்)

ஒன்றுபட நூண்டு வாழ்வென வினைந்து
அன்றுமுதல் சென்னை இளைஞர்க ளொத்து
நன்று செய்தனர் அவர்கட்கு வாழ்த்து
ஞானிலம் புகழ மேதினியி லோங்கும் (வி)

பால சுப்ரமண்யம் சங்கத் தலைவராய்
வேல் முருக கிருஷ்ணன் பொதுக் காரியதரிசியாய்
வள்ளல் வரதாச் சாரி போஷகராய்
வாருட னமைந்ததே ஆக்க வேலை செய்ய (வி)

கிராமங்கள் தோறுமே சங்கங்க ளமைத்து
கிரமமா யவைகளை இத்துட னிணைத்து
சரி சமானமாய் சட்டங்கள் சமைத்து
சாதக மாகவே சாதிக் குழைத்திடும் (வி)

பொருளாதா ரத்தினால் கஷ்ட மிகப்பட்டு
அருமை கைத் தொழில் அத்தனையும் விட்டு
சிறு பொருளையும் கல்வியில் செலவிட்டு
திக்கற்ற மக்களை ஆதரித்திடும் நம் (வி)

குல வளர்ச்சிக் காகக் குறைகளைப் போக்கவும்
செம்மையாய் சமூகத் தேவையை நீக்கவும்
பல பல நன்மைகள் மற்றும் நா மேற்கவும்
பக்குவமுடன் வேலை இங்ஙனம் செய்திடும் (வி)

வாலிபர் களது வாழ்வை சீர்க்கியே
வேலை யற்றோருக்கு வேலையும் தேடியே
காலத்திற் கேற்ப நம் வாழ்க்கையை மாற்றியே
கோரிய பலன்களை கருத்துட னுழைத்திடும் (வி)

கவர்மெண்டின் விசேஷ சலுகையைப் பெற்று
புவர்களுக்கு வேண்டும் பதவியை பெற்று
அவனியோ ரளிக்கும் ஆதர வுற்று
அன்புடன் அளவிலா நன்மைகள் புரியும் (வி)

இளைஞர்கள் முன்னேற இச்சங்கம் பிறந்து
சினக்காம லுழைக்க தன்னலம் மறந்து
சேர்த்திடக் கழகம் யாவரும் விரைந்து
வருகுவீர் முன்னணி பெருகுவீரே நலம். (வி)

—சீர்காழி பி. சுப்பையா.

'கிராம ஊழியன்'

கிராமப் புனருத்தாரணத்திற் குழைப்பது. பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்ற மொன்றையே லக்ஷியமாகக் கொண்டு, சாதி, சமயப் பூசல்களை ஒழித்து, விவசாயிகள், தொழிலாளர் குறைகளை முறையிட்டு அகற்றும் நோக்கங்கொண்டு மாதம் இரு முறை வெளிவரும் பத்திரிகை. வருட சந்தா ரூபா 2—0—0

மானேஜர் :— கிராம ஊழியன்,
துறையூர். (திருச்சி ஜில்லா)

PRINTED AND PUBLISHED BY T. A. V, NATHAN, AT THE JUSTICE PRINTING WORKS, 14, MOUNT ROAD, MADRAS. EDITOR ; PANDIT S. MUTHUSWAMI PILLAI.

விலை அரை அணா | 8 பக்கங்கள் | மலாய் நாட்டில் 5 சதம் | Regd. No. M. 3298

“ விடுதலை ”
வாரம் இருமுறை பதிப்பு சந்தா

உள்நாடு

1 மாதம்	...	0 6 0
3 மாதம்	...	1 0 0
6 மாதம்	...	1 14 0
1 வருடம்	...	3 10 0

சென்னைக்கு

1 மாதம்	...	0 4 0
3 மாதம்	...	0 10 0
6 மாதம்	...	1 4 0
1 வருடம்	...	2 6 0

விடுதலை

VIDUTHALAI
(வாரம் இருமுறை வெளிவரும்)
ஆசிரியர்: பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.

“ விடுதலை ”
வாரம் இருமுறை பதிப்பு சந்தா.

வெளிநாடு

1 மாதம்	...	0 10 0
3 மாதம்	...	1 14 0
6 மாதம்	...	3 12 0
1 வருடம்	...	7 4 0

சர்க்கார், முனிசிபாலிட்டி,
ஜில்லா போர்டுகளுக்கு:

உள்நாடு:	வருடம்	ரூ.	7 8 0
சென்னை:	,,	ரூ.	4 8 0

மலர்-2] சென்னை: (14-11-1936) தாது ஸு ஐப்பசி மீ 29உ சனிக்கிழமை [இதழ்-47

“மித்திரன்”, “மெயில்”, “ஹிந்து” பத்திரிகைகளுக்கு சவால்!

சத்தியமூர்த்தி சலசலப்பைக் கேட்டீர்களா?

சுடச்சுட சுயராஜ்யம் கொண்டு வரப் போகிறாராம்!!

வரட்டுமே! வந்தால் நமக்கும் பங்குண்டல்லவா?

வருமா? என்பதுதான் கேள்வி!

நெல்லை ஜில்லா போர்டு, கவர்னருக்கு உபசாரமளிக்கக் கூடாதாம்!

—:(o):—

தேசியக் கொடியை ரிப்பன் மண்டபத்தில் பறக்கவிட வேண்டுமாம்!!

—:(o):—

உங்கள் அபிப்பிராயம் என்ன? தயவுசெய்து கூறுங்கள்!

(இந்திரஜித்தன்)

இந்திய அரசியல் வான மண்டலம் மப்பு மந்தாரமாயிருக்கிறது. சட்ட மறுப்புச் செய்த காங்கரஸ்காரர் சட்டசபைப் பிரவேசம் செய்ய முடிவு செய்ததோடு இந்தியாவைப் பிடித்திருந்த சனி ஒழிந்ததென்று அரசியல் விவேகிகள் நம்பினார்கள்.

ஆனால், அவர்கள் நம்பிக்கைகள் எல்லாம் வீணாய் விட்டன. சட்டசபைகளைக் கைப்பற்றப் போகும் காங்கரஸ்காரர் சட்டசபைக்குள்ளும் ஒத்துழையாமைப் போரை நடத்தப் போவதாகப் புரளி செய்கிறார்கள்.

“காங்கரஸ் மந்திரிகள் ஜீவிய காலம் 3 மாதமோ, மூன்று வாரமோ, மூன்று நாளோ தெரியாது. ராஜிநாமாக் கடிதம் எப்பொழுதும் அவர்கள் கையில் இருக்கும். எங்கள் இஷ்டப்படி கவர்னர் நடக்காவிட்டால் நாங்கள் சர்க்காரைக் கவிழ்ப்போம். உலகத்தில் பல சக்திகள் இப்பொழுது வேலை செய்கின்றன. அனேகமாக மாட்ரிட் விழுந்து விட்டது. அதன் வீழ்ச்சியுடன் ஜிப்ரால்டரும் போய்விடும்”

“பிறகு நமது நண்பர்கள் இந்தியாவுக்கு வந்தாகவேண்டும். எகிப்துக்கு அனுஷ்டானத்தில் பூரண சுதந்தரம் கொடுத்ததுபோல் இந்தியாவிற்கும் கொடுக்கலாம். அப்பொழுது பிரிட்டன் மகாத்மா காந்தியை அழைக்கலாம். அப்பொழுது காங்கரஸ் மகாசபை இருதரப்பினருக்கும் கண்யமான தொரு ஒப்பந்தம் செய்து கொள்ளத் தயாராயிருக்கும்”

என்றெல்லாம் திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரியார் அளக்கிறார்.

வாய்ப் பந்தல்

அவர் கூறுகிறபடி பிரிட்டிஷாரும், காங்கரசும் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வதின் மூலம் இந்தியாவுக்குப் பூரண சுயராஜ்யம் கிடைக்குமானால் எனக்கும் மெத்த சந்தோஷந்தான்.

சுயராஜ்யத்தை ‘யார்’ தான் வெறுப்பார்கள்? சுதந்தரம் யாருக்குத்தான் கசப்பாக இருக்கும்? ஆனால், திரு. சத்தியமூர்த்தி போடும் வாய்ப்பந்தல் நிழலளிக்குமா என்பது தான் கேள்வி.

சுயராஜ்யக் கதை அப்படி நிற்கட்டும். ஆனால், காங்கரஸ்காரர் மற்றும் சில திருக் கூத்துகள் நடத்தப் போகிறார்களாம். ஆக்டிங் கவர்னர். வெங்கட ரெட்டி நாயுடுகாரு அவர்களுக்கு உபசாரப் பத்திரமளிக்கக் கூடாதென சென்னை நகரசபையில் காங்கரஸ் மெம்பர்கள் தீர்மானித்ததையும் அதுதவறு என காங்கரஸ் மெம்பர்கள் சிலர் பிறகு சென்னை நகரசபையில் பகிரங்கமாக ஒப்புக்கொண்டதையும் நம்மவர்கள் அறிவார்கள்.

நமது கவர்னர் திருநெல்வேலிக்கு விஜயம் செய்யும் போது அவருக்கு உபசாரப் பத்திரம் அளிக்க வேண்டுமென்று காங்கரஸ் ஆதிக்கம் பெற்ற திருநெல்வேலி ஜில்லா போர்டு தீர்மானித்திருக்கிறது.

காரியக் கமிட்டியார் கட்டளை

அந்தத் தீர்மானம் தப்பு என தமிழ் நாடு காங்கரஸ் காரியக் கமிட்டியார் கூறுகிறார்கள். ஜில்லா போர்டு தீர்மானம் செய்திருந்தாலும் காங்கரஸ் வாதிகளான ஜில்லா போர்டு தலைவரும், உபதலைவரும் கவர்னருக்கு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கக் கூடாதென்றும் காரியக் கமிட்டியார் கட்டளையிட்டிருக்கிறார்களாம்.

ஆனால், திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவர் மசியவில்லையாம். இம்மாதம் 16-ந் தேதி கவர்னர் திருச்சிக்கு விஜயமாகும் போது ஜில்லா போர்டு தலைவர் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கத்தான் போகிறாராம்.

எனினும் காங்கரஸ் காரியக் கமிட்டியாரும், ஏனைய காங்கரஸ் வாதிகளும் ஜில்லா போர்டு தலைவரையும், ஜில்லா போர்டு மெம்பர்களையும் பூச்சாண்டி காட்டும் திருவிளையாட்டை மட்டும் இன்னும் நிறுத்தவில்லை.

பூச்சாண்டி

16-ந் தேதி தலைவரும் மற்றும் காங்கரஸ்காரரும் கவர்னருக்கு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தால் என்ன வென்ன வெல்லாமோ செய்யப் போகிறதாக காங்கரஸ் காரியக் கமிட்டியார் வாய் வீச்சு வீசுகிறார்கள். அப்பால் அவர்களுக்கு பொது வாழ்வில் இடமில்லாமலாகி விடுமாம். அவர்கள் அரசியல் விதவைகள் ஆகவேண்டியதுதானும்.

தமிழ்நாடு காரியக் கமிட்டியாரின் தீர்மானத்தையும் பயமுறுத்தல்களையும், சோஷியலிஸ்டு பத்திரிகைகளான இந்தியன் ‘எக்ஸ்பிரசும்’, ‘‘தின மணி’’யும் ஆதரித்து விட்டன. காங்கரஸ் வாதிகள் கவர்னருக்கு உபசாரப் பத்திரமளிக்கக் கூடாதாம். அம்மட்டோ! வேறும் ஒரு சங்கதி எட்வர்டு மன்னர் பெருமான் இந்தியச் சக்கரவர்த்தியென்ற பட்டம் சூட்டிக் கொள்ளக் கூடாதாம். இந்தியாவில் வந்து மகுடாபிஷேகமும் நடத்தக் கூடாதாம்.

இவையாவற்றிற்கும் மேலாக சென்னை ரிப்பன் மண்டபத்தில் தேசியக் கொடியைப் பறக்கவிட வேண்டுமென்று காங்கரஸ் வாதிகள் அடுத்த கூட்டத்தில் கொண்டு வரப் போகும் தீர்மானத்தையும் அந்த இரண்டு பத்திரிகைகளும் ஆதரிக்கின்றன.

உங்கள் அபிப்பிராயம் என்ன?

ஆனால், மேலே கூறிய விஷயங்களில் உங்கள் அபிப்பிராயம் என்ன? நீங்களும் தேசியப் பத்திரிகைகள் ஆச்சே. தேசமக்களுக்கு வழிகாட்ட வேண்டியது உங்கள் கடமையல்லவா? மற்றும் சென்னை மாகாணத்தில் நீங்கள் மூன்று பேரும் மூத்த பத்திரிகைகள் அல்லவா?

இம்மாதிரி நெருக்கடியான காலங்களில் உங்களில் ஒன்றான ‘ஹிந்து’ பல முறை வழிகாட்டியும் இருக்கிறது.

அந்த அய்யங்கார் இருந்திருந்தால்

சட்ட மறுப்புச் சூறாவளியில் அகப்பட்டு காங்கரஸ்காரர் தவித்துக் கொண்டிருந்த போது, சட்ட மறுப்பினால் பயன் ஏற்படாதென்று கூறி சட்டசபைகள் மூலம் வேலை செய்யவேண்டுமென்று நல்வழி காட்டிய பெருமை மாஜி ‘‘ஹிந்து’’ ஆசிரியர் திரு. ரங்கசாமி அய்யங்காருக்கே சொந்தம். அவர் மட்டும் இப்பொழுது உயிரோடு இருந்திருந்தால் காங்கரஸ்காரரின் தற்கால இந்திரஜால வித்தைகளை தடுக்காமலிருந்திருக்க மாட்டார் என நம்புகிறவர்களில் நானும் ஒருவன்.

‘‘மித்திரன்’’ ‘‘மெயில்’’ ‘ஹிந்து’ ஆகிய நீங்கள் மூன்று பேரும், காங்கரஸ்காரர்களின் தற்கால பைத்தியகாரப் போக்கை ஆதரிக்கவில்லையென பல சந்தர்ப்பங்களில் காட்டியுள்ளீர்கள். ஆயினும், உங்கள் அபிப்பிராயங்களைக் கட்டுப்பாடாகவும், தெளிவாகவும் வெளியிடத் தயங்கிக் கொண்டுதான் இருக்கிறீர்கள்.

அந்த நிலைமை தேச முன்னேற்றத்துக்கு அடுத்ததே அல்ல.

ஆகவே, மேலே விளக்கப்பட்டிருக்கும் கவர்னர் உபசாரப் பத்திர விஷயம், தேசியக் கொடி விஷயம் முதலியவைகளில் உங்கள் அபிப்பிராயம் என்ன என்பதை தெளிவாக விளக்கிக் கூறி நாட்டுக்கு நல்வழி காட்டுமாறு மிக வணக்கமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

தேவகோட்டை பஞ்சாயத்து போர்டு தேர்தல்

ஜஸ்டிஸ் கட்சி வெற்றி

காங்கரஸ் அங்கத்தினருக்கு 2 ஓட்டுகள்!

(ஒரு நிருபர்)

தேவகோட்டை, நவ. 11

சென்ற நவம்பர் 9-ந் தேதி தேவகோட்டை பஞ்சாயத்து போர்டு காரியாலயத்தில் பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல் நடைபெற்றது. ஜஸ்டிஸ் கட்சி சார்பாக திரு. பி. ஆர். கே. சொக்கலிங்க சேர்வையும், காங்கரஸ் சார்பாக திரு. பி. ராமசாமி ஐயரும் நின்றனர். ஓட்டெடுக்கப்பட்டதில் ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினருக்கு 12 ஓட்டுகளும், காங்கரஸ் அங்கத்தினருக்கு 2 ஓட்டுகளும் கிடைத்து முன்னவர் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

தேவகோட்டை தென்னிந்திய நலவுரிமைச் சங்கத் தலைவர் இது விஷயம் அறிந்ததும், உடனே சென்று புதிதாகத் தேர்தெடுக்கப் பட்ட மேற்படி போர்டின் தலைவரை பாராட்டிப் பேசினர். பிறகு தலைவருக்கு மாலைகள் சூட்டப்பட்டு ஊர்வலமாக அவரது ஜாகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு சிற்றுண்டி உபசாரமொன்று நடைபெற்றது.

மாகாண சட்ட சபைகள்

வாக்காளர் ஜாப்தாக்கள் விலை விவரம்

சென்னை, நவ. 12

சென்னை நகரசபைக் கமிஷனர் அறிவிப்பதாவது:—

மாகாண சட்டசபைக்கும், மாகாண அசெம்பிளிக்கும் வாக்காளர்கள் ஜாப்தா பொதுத் தொகுதிக்கும், முஸ்லீம், கிறிஸ்தவ தொகுதிகளுக்கும் 7-11-36-ல் வெளியாகியிருக்கிறது. கீழ்க்கண்ட விலை விகிதப்படி அவைகளின் நகல்கள் கிடைக்கும்.

அசெம்பிளி

பொதுத் தொகுதி.	ரூ.	அ.	பை
1. சென்னை நகர், வடக்கு	4	7	3
2. ,, ,, வடமத்தி	5	0	3
3. ,, ,, தென்மத்தி	6	3	0
4. ,, ,, தெற்கு	6	11	3
முஸ்லீம் தொகுதி	5	7	9
இந்திய கிறிஸ்தவ தொகுதி	2	5	6

சட்ட சபை

பொதுத் தொகுதி	0	15	6
முஸ்லீம் தொகுதி— சென்னை வடமத்தி	0	3	0
இந்திய கிறிஸ்தவ தொகுதி	0	2	3

ரூபா 2—8—0-க்கு 3 வாட்சுகளும், பரிசுகளும்.

GUARANTEED

ஏக காலத்தில் ரூ. 2-8-0-க்கு 10 பாட்டில் ஆட்டோ டில்ருஷ் அத்தர் புட்டிகள் வாங்குபவர்களுக்கு ரயில்வே டைம் பாக்கெட் கெடியாரம் 1, டைம் சிறு வாட்ச 1, 10 வருஷ உத்திரவாதமுள்ள ஒழுங்காக மணி காட்டக்கூடிய “B” டைம்பீஸ் 1, 800 அடி வெளிச்சம் காட்டும் டார்ச் விளக்கு 1, 14 காரட் ரோல்டு கோல்டு கிப்பு பவுண்டன் பேனா 1, முத்து மாலை 1 இலவசமாக அனுப்பப்படும் உடனே எழுதுங்கள். தபால் செலவு அணா 14 பிரத்தியேகம்.

DUTTA & Co., (V. V.)
15/1, Joymitter Street
Hatkhola P. O.,
CALCUTTA.

குமாரசஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
அண்ணாமலை
வைத்தியரின் மருந்து நிகரற்ற குணமுடையது
☞ வைத்தியர். அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு. மயிலாப்பூர். சென்னை

ஜீவானந்தம் கோஷ்டியார் பதிலுரைப்பார்களா?

ஜலகண்டபுரம் சுயமரியாதை சமதர்மிகளின் பகிரங்கக் கேள்விகள்

1. ஜீவானந்தம் கோஷ்டியாரே! தங்கள் சுயமரியாதை சமதர்ம அரங்கத்தினர் இரண்டணா டிக்கட்டில் அச்சிடப்பட்டுள்ளபடி (முற்போக்கான கொள்கைகளை ஆதரித்தும், பிற்போக்கான கட்சிகளின் குறைபாடுகளை பொது ஜனங்களுக்கு விளக்கிக் காட்டியும், சுயமரியாதை அல்லது பகுத்தறிவு சமதர்மக் கொள்கைகளுக்காக பாடு படுதல் என்றும், ஜஸ்டிஸ் காங்கரஸ் போன்ற பிற்போக்கான கட்சிகளின் ஊழல்களை வெளிப்படுத்துவதையும் மேற்கொள்ளும்) என்று வேலைத் திட்டம் வகுத்து விட்டு தற்சமயம் பிற்போக்கான காங்கரஸுடன் கலந்து சமதர்மம் பேசுவது எந்த நோக்கத்தின் மீது?

2. இதுவரையில் காங்கரஸ் ஸ்தாபனமானது, சமதர்மத் திட்டம் தயாரித்து அதன்படி, சமதர்மிகளைச் சேர்த்து ஏதாகிலும் ஒரியாம்சையில், காரியங்கள் செய்துக் காட்டியிருக்கிறதா?

3. சுயமரியாதை இயக்கத்தலைவர் ஈ. வெ. ரா. வகுத்த சமதர்மத் திட்டங்களை, காங்கரஸ் ஸ்தாபனமானது ஏற்றுக் கொண்டதா?

4. காங்கரஸ் தலைவர்களான, மகாத்மா காந்திஜீ, ராஜேந்திர பிரசாத், மாளவியா, சரோஜினி, சர்தார் வல்லபாய் படேல், ராஜகோபாலாச்சாரி, சத்திய மூர்த்தி போன்ற தலைவர்களெல்லாம் பழுத்த வருணாச்சிரம பித்து பிடித்த வைதிகர்களாச்சே. அவர்களெல்லாம், தங்கள் பச்சை நாஸ்திக அபேதவாதக் கொள்கைகளை ஒப்புக் கொண்டார்களா? ஒப்புக் கொண்டு தங்கள் சமதர்ம திட்டத்தைக் காங்கரசில் ஏற்றுக் கொண்டு தங்கள் திட்டப்படி காங்கரசை நடத்த முன் வருவார்களா?

5. அகில இந்திய காங்கரஸ் கமிட்டித் தலைவர், ஜவஹர்லால் நேரு, காந்திக சமதர்மவாதி என்பதும், ஏழை பங்காளன் என்பதும், வாயளவில், ஏட்டளவில், புத்தகப் படிப்புடன்; என்பதும், அவரது தென்னாட்டு எலெக்ஷன் சுற்றுப் பிரயாணம் தெள்ளென விளக்கிக் காட்டவில்லையா? பகுத்தறிவு வாதியும், பச்சை நாஸ்திக சமதர்ம வாதியுமான தாங்கள், தோழர் நேருவின் குணங்களை அறிந்திருந்தும், காங்கரசில் சேர்ந்து, மற்ற சு. ம. சமதர்மிகளையும் காங்கரசில் சேரும்படி அழைப்பதைப் பற்றி மிக்க சந்தேகம் கொள்ளுகிறோம்.

6. வருணாச்சிரம காந்திஜீ அவர்களே காங்கரசில் ஊழல் இருப்பதை உணர்ந்து, ஓய்வு எடுத்துக் கொள்ளுகிறேன் என்று கொண்டிச் சாக்குச் சொல்லி காங்கரசை விட்டு விலகி விட்டார். காந்திஜீயின் சம்பந்தியான தென்னாட்டு காந்தி திரு. ராஜகோபாலாசாரியும் காங்கரசில் உள்ள ஊழல்களை சகிக்கமாட்டாது, காங்கரசை விட்டு விலகி விட்டார். தலைவர்களே உதறி விட்டு வந்த இடத்திற்கு தாங்கள் போய்ச் சேர ஆசைப்படுவது எந்த கருத்தின் மீது? என்பதை தெரிய ஆசைப்படுகிறோம்.

7. காங்கரஸ் பேரால் வசூல் செய்யப்பட்ட பல லட்சக்கணக்கான பணங்களை பார்ப்பனர்கள் இன்று ஏப்பம் விட்டு விட்டு, அவைகளைப் பற்றி கேள்வி கேட்ட "பார்ப்பன நலவாத வீர உணர்ச்சியுள்ள சமதர்மிகளை" பண்டித ஜவஹர்லால் "உங்களை எல்லாம் கோர்ட்டுக்கு இழுத்து விடுவேன்," "நீ என்ன கேட்பது" என்றெல்லாம் பயமுறுத்த வில்லையா? இது தங்களுக்குத் தெரியாதா?

8. தென்னாட்டுச் சுற்றுப் பிரயாணத்தில், தோழர் ஜவஹர்லால் அவர்கள், சுயமரியாதை சமதர்மிகளை, பொய்யர் என்றும், அரசாங்கக் கூலிகள் என்றும், திட்டியிருக்கிறார். இது தங்களுக்குத் தெரியாதா?

9. ஆகவே தங்கள் திட்டம், கொள்கை, லட்சியம் ஆகியவைகளை தெரிவித்தால், நாங்களும், தங்கள் கட்சியில் சேர்ந்து உழைக்கத் தயாராய் இருக்கிறோம்.

இங்ஙனம்:
ஜலகண்டபுரம் சு. ம. சமதர்மிகள்.
வி. பி. வி. மாரிச் செட்டி,
பி. வீரண்ணன்,
எம். எஸ். மாணிக்கம்,
டி. வி. பாலசுப்பிரமணியம்.

காங்கரஸை நம்பி மோசம் போகாதீர்!

இதுவரை லக்ஷக்கணக்கான ரூபாய்களை சூறையாடி விட்டனர்

காங்கரசுக்கு 'ஓட்' கொடாதீர்கள்!

பெங்களூர் தண்டு முனிசிபல் தேர்தலும், காங்கரசும்

(பொது நலப் பிரியன்)

பெங்களூர், நவ, 7

காங்கரஸ் தோன்றி 50-வருஷங்களாகின்றன. இது தோன்றிய காலம் முதற்கொண்டு இந்தியவுக்குத் தீமையே ஒழிய நன்மை இல்லை. சத்தியாக்கிரகம், மறியல் என்ற பலமுறைகளைக் கையாண்டு மார்தர்களை நசுக்கிவிட்டது. போராடுவதற்குப் பாக்கியுள்ளவர்களிடம், கஷ்டப் படுபவர்களுக்கு உதவிக்காக வென்றும், மற்றும் பலவும் சொல்லி பணம் பெருவாரியாக வசூல் செய்தது. அந்தப் பொருள் போன வழியே தெரியாது போயிற்று. இம்மட்டோ, இன்னும் எத்தனையோ தொந்தரவுகளைக் காங்கரஸ் பொது மக்களிடைப் புகுத்தியது.

ஹரிஜன சேவைக்கென காந்தியவர்கள் பெங்களூர் தண்டிலும், நகரத்திலும், மைசூரிலும், மற்றும் பல விடங்களிலும் ஆயிரக் கணக்கான ரூபாய்களை வசூல் செய்து கொண்டு போனார்கள். ஆனால், பெங்களூர் தண்டில் உண்ண உணவும், உடுக்க உடையும் இல்லாதிருக்கும் ஆயிரக்கணக்கான ஏழை ஆதிதிராவிடர்களைக் கண்ணெடுத்துப் பார்த்தவர் கிடையாது.

ஆதலால், அன்பர்களே! இவ்வளவு ஊழல்களைத் தம்முள் அடக்கிக் கொண்டிருக்கும் காங்கரஸ் கூட்டத்தாரை ஆதரிக்காதீர்கள். பெங்களூர் தண்டு தேர்தலுக்கு காங்கரஸ் துரோகிகளும் அபேட்சகர்களாக விருக்கிறார்கள். அவர்களை முற்றிலும் முறியடிப்பது உங்கள் கடமையெனக் கொள்ளுங்கள். ஆதரித்தீர்களேல் உங்கள் தலைக்காக்கல் தேடிக் கொண்டவர்களாவீர்கள்.

பெங்களூர் தண்டு 4-வது, 6-வது டிவிஷன்களுக்கு முறையே அபேட்சகர்களாக நிற்கும், காங்கரஸ்காரர் அல்லாதவர்களான ராவ்சாகிப் ராஜகோபால முதலியாருக்கும், திரு. ஒ. ஆர். நாகப்பாவுக்கும் உங்கள் ஓட்டுகளைக் கொடுத்து ஆதரியுங்கள்; காங்கரசை ஒழியுங்கள்.

அமெரிக்காவிலுள்ள இல்லினாய்ஸ் மாகாணத்திலுள்ள ராபர்ட் பெர்லிங் வாட்லோ என்ற 18 வயது வாலிபன் 8 அடி 5 அங்குல உயரமும், 420 பவுன் எடையும் இருக்கிறான்.

தாழ்த்தப்பட்டவர் தொகுதிகளில் காங்கரஸ் போட்டி

"பூனா ஒப்பந்தத்துக்கு முரண்பட்டது"

எம். ஸி. ராஜா அறிக்கை

சிதம்பரம், நவ, 10

ஷெடியூல் வகுப்பாருக்கு ஒதுக்கி வைத்திருக்கும் ஸ்தானங்களையும் போட்டி போட வேண்டுமென்று தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவர் திரு. சத்தியமூர்த்தி அறிக்கை வெளியிட்டதைக் கவனித்தேன். இது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இவர் சொல்வதும் காங்கரஸ் தலைவர்களான மகாத்மா காந்தி, சர்தார் வல்லபாய் படேல் முதலியோர் கூறியிருப்பதும் முரண்படுகிறது. சென்ற மார்ச்சு மாதம் 1-ந் தேதியன்று டில்லி ஆதி இந்து ஸ்தாபனத்தில் மகாத்மா காந்தியை பேட்டி கண்டு பேசினேன். அந்த விபரத்தின் ஒரு பாகம் பின் வருமாறு:—

"புதிய அரசியல் திட்டத்தில் ஆதி இந்துக்கள் எந்த அரசியல் கட்சியோடும் சேர முடியுமா வென்று ராவ்பகதூர் எம். ஸி. ராஜா ஆச்சரிய மடைகிறார். இது விஷயமாக மகாத்மா காந்தியின் அபிப்பிராயம் பின்வருமாறு அழுத்தமாயிருக்கிறது. மகாத்மா சொல்வதாவது, "நீங்கள் எந்த கட்சியுடனும் சேரக்கூடாது தற்கால மிருந்துவரும் சர்க்கார் முறை சம்பந்தமாய் என் அபிப்பிராயம் இன்னும் மாறுதல் அடையவில்லை. ஆனால், உங்களுக்குள்ள பிரத்தியேக கஷ்டங்கள் காரணமாக நெடுங்காலம் நீங்கள் அவதியுறுவதை முன்னிட்டு இந்தியாவிலுள்ள அதிதீவிர வாதக்கட்சியுடனும் கூட நீங்கள் ஐக்கியப்படக் கூடாதென்று நான் எதிர் பார்க்கிறேன். சர்க்கார் அளித்ததை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், உங்கள் சுயமரியாதையை இழந்து விடக்கூடாது. மதுவிலக்கு, உப்புவரி யொழிப்பு முதலிய நல்ல திட்டங்களைக் காங்கரஸ்காரர்கள் கொண்டு வந்தால் அவைகளை நீங்கள் ஆதரிக்கவேண்டும். அதன் மூலம் இந்தியாவிலுள்ள ஏழைகளின் க்ஷேமலாபத்தில் உங்களுக்கும் சிரத்தை யுண்டென்பதை நீங்கள் உலகத்தாருக்குக் காட்டவேண்டும். அந்த ஏழை மக்களுடன் வேறுபட்டிருக்கவில்லையென்பதை நீங்கள் தெளிவு படுத்த வேண்டும். நீங்கள் எந்தக் கட்சியிலும் சேராதிருந்தாலும் தேசத்தை ஒருபோதும் நீங்கள் காட்டிக் கொடுக்கக்கூடாது. இந்த விதமாய் நடந்து கொள்வீர்களானால் இந்தியாவில் ஆதி இந்துக்களுக்கு முதன்மை ஸ்தானம் உண்டு. ஆதி இந்துக்கள் இப்படி விழிப்படைவீர்களானால் ஒதுக்கிவிட முடியாத சக்தியாய் அவர்கள் விளங்குவார்கள்"

ஷெடியூல் வகுப்பார் வேறெந்த கட்சியின் தலையீடில்லாமல் தங்களுக்குள் கட்டுப்பாடு செய்து கொண்டு பொது ஜனங்களின் க்ஷேமத்துக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் உழைக்க வேண்டுமென்பது மேற் கூறியதிலிருந்து தெளிவாகிறது.

பூனா ஒப்பந்தத்தின் பலன்

இன்னும் வேண்டுமானால், ஜூலை 8-ந் தேதி பம்பாயில் சர்தார் வல்லபாய் படேல் கூறியதைக் கீழே தருகிறேன்:—

'தாழ்த்தப்பட்டவருக்குரிய பிரத்தியேக ஸ்தானங்கள் சம்பந்தமாய் முதல் முறைத் தேர்தலில் காங்கரஸ் தலையிடாது. இது முடிந்ததும் காங்கரஸ் அபிமானமுள்ள அபேட்சகர்களையும், காங்கரஸ் கொள்கையையும் திட்டத்தையும் அங்கீகரித்து, காங்கரசில் தேர்தல் உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்திடத் தயாரா யுள்ளவர்களையும் காங்கரஸ் ஆதரிக்கும். முதல் தேர்தலில் வெற்றி பெறுபவர்களில் அநேகர் இப்படிப்பட்டவர்களாயிருப்பார்களென்பதில் எனக்குச் சந்தேகமே கிடையாது.'

மகாத்மா காந்திக்கும், ஷெடியூல் வகுப்புத் தலைவர்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தையே பூனா ஒப்பந்தமாக சர்க்கார் அங்கீகரித்தார்கள். அதன் ஷரத்துப்படி தங்கள் குறைகளை வெளியிட்டு தங்கள் வகுப்பாரின் நன்மைகளைப் பாதுகாக்கக் கூடியவர்களைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு ஏற்பட வேண்டும். இந்த முதல் தேர்தலில் வெற்றி பெற்றவர்களை பொதுத் தேர்தலுக்கு அனுப்ப வேண்டும். இந்தப் பொதுத் தேர்தலில்தான் இதர கட்சிகள் மேற்கண்டவர்களில் தங்களுக்குப் பிடித்தமானவர்களை ஆதரிக்க முற்படவேண்டும்.

பூனா ஒப்பந்த சம்பந்தமான காங்கரஸ் கொள்கையை திரு. சத்தியமூர்த்தி சரியாக உணரவில்லையென்று தோன்றுகிறது. இந்தத் தவறுதலை அவர் நீக்கி விடுவாரென்று நம்புகிறேன்.

பிரஷியாவில் பன்னிரண்டு அங்குலம் குறுக்களவுள்ள பெரிய காளான் ஒன்று முளைத்திருக்கிறதாம்.

வரப்போகும் சட்டசபைத் தேர்தல்

தாழ்த்தப்பட்ட மக்களே! கண் விழியுங்கள்!!

திருவள்ளூர், பொன்னேரி தாலுகா ஆதிதிராவிடர் கடமை

(வி. பி. வடிவேலு)

தாழ்த்தப்பட்ட மக்கள் தாசர் திரு. எம். ஸி. லட்சமணம் பிள்ளை, வரப்போகும் சட்டசபைத் தேர்தலுக்கு அபேட்சகராக நிற்கிறார். அவரை வெற்றி பெறச் செய்யும் கடமை முக்கியமாகத் தாழ்த்தப்பட்ட மக்களையே சாரும் என்பதை அவர்கள் அறிய வேண்டும் மற்றவர்களும் அவருக்கு ஆதரவளிக்கப் பின்வாங்கமாட்டார்கள் என்பதே நம்பிக்கை.

திரு. எம். ஸி. லட்சமணம் பிள்ளை, செங்கற்பட்டு ஜில்லா ஆதிதிராவிட மகாஜனசபைக் காரியதரிசியாகவும், அதே ஜில்லாபோர்டு அங்கத்தினராகவும் இருந்து அவர் செய்த பெருஞ் சேவைகள் நீங்கள் அறியாததல்ல. அவைகளுள் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி வசதிக்காக ஆங்காங்கு சிறுபாடசாலைகள் திறவித்ததும், பொதுமக்கள் இன்புறுமாறு புறம்போக்கு நிலங்களைத் தற்காஸ்துச் செய்து கொடுத்ததும், செலவாகும் மற்றும்பல துறைகளிலும் ஆதிதிராவிட மக்களுக்காக அதிகம் உழைத்திருக்கிறார். இப்பொழுதும் செய்கிறார்.

அப்பேர்ப்பட்ட உத்தம ஊழியர் எம். ஸி. லட்சமணம் பிள்ளை வரப்போகும் சட்டசபைத் தேர்தலுக்குத் திருவள்ளூர்-பொன்னேரி தாலுகா ஆதிதிராவிடத் தொகுதி அபேட்சகராக நிற்கிறார். அவருக்கு ஆதரவளித்து வெற்றியைக் கொடுக்கக் கூடிய சந்தர்ப்பத்தைக் கைநழுவ விட்டு விடாதீர்கள். பெருவாரியான ஓட்டுகளால் அவரை வெற்றிபெறச் செய்யும்படி பொன்னேரி தாலுகா ஆதிதிராவிட மக்களையும் மற்றோரையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அமெரிக்காவிலுள்ள இரகசிய சங்கங்களில் மிகப் பெரியது கூகிளக்ஸ் கிளான் என்ற சங்கமாகும். நீக்ரோக்கள், கத்தோலிக்கர்கள், யூதர்கள் ஆகியவர்களை ஒழிப்பதுதான் இச்சங்கத்தின் நோக்கம். இச் சங்கத்தில் 60 லக்ஷம் அங்கத்தினர்கள் இருக்கின்றார்கள்.

வாரம் பூராவும் பரீட்சியுங்கள்!
இதைவிட 4-பங்கு விலை வாட்சுகளுக்கு இணையானது. திருப்தியில்லையேல் பூராப் பணமும் வாபீஸ்
5 வருஷம் உத்தரவாதம்.
டாவலன்
லீவர் ரிஸ்டு வாட்சு
உயர்தர லீவர் ஓட்டம். சிறிய அளவில் அழகிய அமைப்பு. சரியான மணி காட்டி பல வருஷம் உழைக்கும்.
பிரகாசமான நிக்கல் வெள்ளி கேஸ் ரூ. 6—4—0.
கோல்டு பிளேட் கேஸ் ரூ. 6—12—0
ரேடியம் டயலுக்கு தனி 0—8—0.
போஸ்டேஜ் & பாக்கிங் 0—7—0.
கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதுக.
Sole Agents :—
THE UNION TRADING CO.,
2, Doyehatta Sts, (D/3),
CALCUTTA.

ஆனந்த இலவச வாசக சாலை

(ஒரு நிருபர்)

குடியாத்தம், நவ, 9

8-11-36 ஞாயிற்றுக் கிழமை மாலை, சுமார் 6-30 மணிக்கு, ஆ. இ. வாசக சாலையின் பெரும்பான்மையான உத்தியோக அங்கத்தினர்களாலும், பொதுஜன அங்கத்தினர்களாலும் மற்றுமுள்ள, ஜனங்களாலும், மேற்படி டவுன் பஞ்சக்குட்டித் தெருவிலிருக்கும் முனிசிபல் கன்யா, எலிமெண்டரி பாடசாலையில் ஆ. இ. வாசகசாலைக்கு, பெரிதும் உழைத்த ஸ்கூல், ஜூனியர் டிபுடி, இன்ஸ்பெக்டர் ஏ. மாரிமுத்து பி. ஏ. எல். டி., அவர்களுக்கு, திரு. கோபாலன் நாயர், (பி. டபிள்யூ டி.) ஓவர்ஸியர் தலைமையில். மேற்படியார் அயலூர் மாற்றப்பட்டதின் காரணமாக பிரிவுபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

அதுசமயம் அன்னாருக்கு மாலையும், தலைவருக்கு மாலையும், ருட்டி தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. இக் கூட்டத்தில் முனிசிபல் கவுன்ஸிலர்களும், ஹைஸ்கூல் உபாத்தியாயர்களும், மற்ற கனதனவான்களும் கூடியிருந்தனர். ரீடிங்ரூம் சார்பாகவும், விசேஷமாகவும் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் துரைசாமி பிள்ளையும், மற்றும் இரண்டொருவர்களும் சிறப்பாக பேசி முடித்தனர்.

தேசம், சமூகம் முன்னுக்கு வர வழி காட்டும் படம்!

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!
21-11-36 சனிக்கிழமை முதல்
சென்னை பிராட்வே டாக்கீஸில்.
13—11—36 வெள்ளிக்கிழமை முதல்:
கும்பகோணம் ராஜா டாக்கீஸிலும், தஞ்சை ராஜாராம் டாக்கீஸிலும், ஊர்காம் கே. டாக்கீஸிலும்.

குடும்ப சகிதமாய் கண்டு களிக்க வேண்டிய படம்!!

வெற்றி முழக்கத்துடன் ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு மகிழ்கிறார்கள். இடத்திற்கு முந்துங்கள்.

எம். கே. ராதா, எஸ். வி. வெங்கட்ராமன், எம். எஸ். சுந்தரம்
டி. என். மீனாக்ஷி, கே. ஆர். ஜெயலக்ஷ்மி, பி. ஆர். மங்களம்,
மற்றும் அநேக பிரபல நடிகர்கள் சேர்ந்து தங்கள் முழுத் திறமையுடன் நடித்த

சந்திர மோஹனா அல்லது சமூகத் தொண்டு

ராகினி தேவி நடனமும், ஹாரிஸ் சகோதரிகளின் டான்ஸும், காதல், சோகம், ஹாஸ்யம் ஒருங்கே அமையப் பெற்ற தலைசிறந்த சமூக தமிழ் பேசும் படம்! பார்க்கத் தவறாதீர்கள்!!

திருச்சி வெலிங்டன் டாக்கீஸிலும், கோயம்புத்தூர் ரீயூ தியேட்டரிலும், சேலம் சென்டிரல் டாக்கீஸிலும், மாயவரம் சுந்தரம் டாக்கீஸிலும் ஆரம்ப தினத்தை எதிர்பாருங்கள்!!

படம் வேண்டுவோர்:— தந்தி: MOVIETONE. மோஹன் மூவிடோன் கம்பெனி, 157, தெற்கு மாசி வீதி, மதுரை. போன்: 96.

சரமாரி

(வில் விஜயன்)

அப்பாடா!

சத்தியமூர்த்தி மூளையே மூளை, மற்றவர்கள் மூளையெல்லாம் களிமண் தான். பொப்பிலி ராஜாவுக்கு சீர்திருத்த அரசியல் உடைப்பைப் பற்றி எதுவுமே தெரியாதாம். அந்த வித்தை காங்கரஸ்காரருக்குத்தான் தெரியுமாம். சீர்திருத்தத்தை கவிழ்க்கக் கூடாதென்று கூறுகிறவர்கள் எல்லாம் சீர்திருத்தச் சட்டத்தைப் படித்தறியாதவர்களாம், அல்லது அதன் கருத்தை உணரமுடியாதவர்களாம். சீர்திருத்த அமைப்பை திரு. மூர்த்தியார் நன்றாகப் படித்திருக்கிறாராம். ஆம். அவர் ஒரு லாயரல்லவா? எத்தனை கேஸ்களில் அவர் வெற்றி பெற்றிருக்கிறார் என்று மட்டும் கேட்டு விடாதீர். "பிராக்டிஸ்" கிடைத்தாலும் சரி; கிடைக்காவிட்டாலும் சரி. அவர் ஒரு லாயர் தான். சென்னை அட்வக்கேட்டுகள் ஜாபிதாவில் அவரது பெயர் இருக்கும்வரை அவர் லாயர் தானே. ஆனால், லாயர்வாள்—அரசியல் நிபுணர்—வரப்போகும் சீர்திருத்த அரசியல் சட்டத்தை ஆராய்ந்திருக்கும் முறை வெகு விநோதமாகத்தான் இருக்கிறது. அதாவது வரப்போகும் சீர்திருத்தம் மாகாணங்களுக்கும்,

பொறுப் பாட்சி

அளிக்கவில்லை யென்று அவர் கண்டிப்பாகக் கூறுகிறார். ஆனால், பொறுப்பாட்சி என்ற பதத்தின் பொருளை அவர் சரியாக உணர்ந்திருக்கிறாரா என்பது சந்தேகமாகவே இருக்கிறது. வரப்போகும் மாகாணசுய ஆட்சியில் மந்திரிமாரெல்லாம் சட்டசபைக்கு ஜவாப்தாரிகளாகவே இருப்பார்கள். சீர்திருத்தச் சட்டத்தை மேற் பரப்பாகப் படிக்கிறவர்களுக்குக்கூட இது தெரியும். சட்டசபையின் நம்பிக்கையைப் பெறாத எந்த மந்திரி சபைக்கும் ஒரு நிமிஷங்கூட இயங்க முடியாது. மந்திரிகள் மீது சட்டசபை மெம்பர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினால் மந்திரிமார் ராஜீனாமாச் செய்ய வேண்டியதுதான். இந்த நிலை பொறுப்பாட்சி அல்லவானால் வேறு எதுதான் பொறுப்பாட்சியோ தெரியவில்லை. சென்னை நகரத்தின் பெயரால் இந்திய சட்டசபையில் பிரதிநிதியாக வீற்றிருப்பவரும், தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவரும், வரப்போகும் அரசியலில் மந்திரி பதவி வகிக்கத் தவித்துக் கொண்டிருப்பவருமான ஒரு கனவான் பொறுப்பாட்சியின் பொருளையே உணராமல் கண்ணு பின்னு கத்துவது முட்டாள்தனமல்லவா? மற்றும் அரசியல் சட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புகளின் தத்துவங்களையும் திரு. சத்தியமூர்த்தி சரியாக உணரவில்லையென்றே தோற்றுகிறது. வரப்போகும் சீர்திருத்தத்தில் பாதுகாப்புகள் இருப்பதினால், அது பொறுப்பாட்சியல்ல வென்று ஏற்பட்டு விடவே செய்யாது. கொள்ளை, கொலை திருட்டுகளைத் தடுக்க இப்பொழுது கிரிமினல் சட்டம் இருக்கத்தான் செய்கிறது. எனவே மக்களுக்கு இப்பொழுது சுதந்தரமே இல்லை யென்று கூற முடியுமா? சாதாரண காலங்களில் கிரிமினல் சட்டம் மக்கள் சுதந்தரத்துக்கு முட்டுக்கட்டை போடவே இல்லை. கொள்ளை, கொலை முதலிய அசாதாரண சம்பவங்கள் நேரும் போதுதான் கிரிமினல் சட்டம் குறுக்கிடுகிறது. அதனாலே கிரிமினல் சட்டங்கள் இருப்பதினால் நமது சுதந்தரத்துக்கு எப்படி பாதகமேற்படவில்லையோ, அப்படியே அரசியல் இயல்பாக இயங்கிக்கொண்டு இருக்கும்போது, பாதுகாப்புகள் குறுக்கிடவே மாட்டா. வேண்டுமென்றே அரசியலை ஒழிக்கவேண்டுமென்று யாராவது முயற்சி செய்தால் அப்பொழுது பாதுகாப்புகள் குறுக்கிடத்தான் செய்யும். குறுக்கிடவேண்டியது அவசியந்தான். பூர்ண சுதந்தரம் அமலில் இருக்கும் நாடுகளில் கூட அரசியல் அமைப்பில் பாதுகாப்புகள் இருந்தே வருகின்றன. பாதுகாப்புகள் இல்லாத அரசியல் புரட்சிக்கு உதவியளிக்க கூடியதாகவே இருக்கும். ஆகவே, தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவர்

கூற்று

பைத்தியக்காரப் புலம்பல் என்பதற்கு சந்தேகமே இல்லை. மற்றும் கவர்னர் தம் விசேஷ அதிகாரங்களைப் பிரயோகம் செய்யும்படி அரசியலில் முட்டுக்கட்டை போட்டுவிட்டால் சீர்திருத்தம் கவிழ்ந்து விடுமென்று சத்தியமூர்த்தி தம்பெனியார் முட்டத்தனமாகக் கூறுகிறார்கள். ஏனெனில், பாதுகாப்புகள் சீர்திருத்தச் சட்டத்தின் ஒரு அம்சமே. கவர்னரும் சீர்திருத்தச் சட்டத்தின் ஒரு அம்சமே. அவருக்குள்ள சாதாரண அதிகாரங்களும், விசேஷ அதிகாரங்களும் சீர்திருத்தச் சட்டத்தினால் வழங்கப்பட்டவைகளே. சட்டசபை தான் சர்க்கார் என்று காங்கரஸ்காரர் பைத்தியக்காரத்தனமாக நம்பிக்கொண்டு இருப்பதினாலேயே சீர்திருத்தத்தைக் கவிழ்க்க முடியுமென்று காங்கரஸ்காரர் புலம்புகிறார்கள். வாஸ்தவத்தில் சட்டசபை மட்டுமே சர்க்கார் அல்ல. சட்டசபையும், மந்திரிகளும், மற்றும் உத்தியோகஸ்தர்களும், கவர்னரும் சேர்ந்த ஸ்தாபனமே சர்க்கார் எனப்படுவது. இதை உணரும் அளவுக்கு மூளையில்லாத காங்கரஸ் வாதிகள் சீர்திருத்த ஒழிப்பைப் பற்றிப் பேசுவது பைத்தியக்காரப் பேச்சாகும். அதனாலேயே, காங்கரஸ்காரர் மந்திரிகளானால் அவர்களே சர்க்கார் என்றும், அவர்கள் யாரோடு சண்டை போடப் போகிறார்கள் என்றும் கனம் பொப்பிலி ராஜா கேட்டார். ஆனால் சீர்திருத்தச் சட்ட நுட்பங்களை யறியாத "தின மணி" சத்தியமூர்த்திக்கு வக்காலத்துப் பேசுவது போல பொப்பிலி ராஜாவைத் தாக்க என்னவென்ன வெல்லாமோ உளறிக் கொட்டிற்று. அரசியலிலாகட்டும், பொருளாதார இயலிலாகட்டும், இதர துறைகளிலாகட்டும் தன்னைப் போன்ற அறிவாளிகள் இந்த உலகத்திலேயே இல்லை யென்ற அகம்பாவ மண்டைக் கிறுக்கு "தின மணி"க்கு ஜாஸ்தியாக உண்டு. எனவே, சர்வ ஞானியைப் போல வாய் வீச்சு வீசுவது அதன் வாடிக்கையாகி விட்டது. அரை குறைப் படிப்பாளிகள் தாண்டவமாடும் காலமல்லவா இது!

குணியமுத்தூர் தேவேந்திர வாலிபர் சங்கம்.

வாராந்தரக் கூட்டம்.

(ஒரு நிருபர்)

குணியமுத்தூர், நவ, 8

மேற்கண்ட சங்கத்தின் சார்பாக நவம்பர் 8-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை திரு. கி. பா. பேச்சியப்பண்ணடி தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

அதுகாலை திருவாளர்கள்: பி. ஆறுமுகம் பொது விஷயமாகவும், ச. வேலுமயில் சுகாதார விஷயமாயும், ச. முத்துச்சாமி கல்வியென்பது பற்றியும், க. ராமசாமி மதுபானம் பற்றியும், கோ. ராமசாமி சமூக சீர்திருத்த விஷயமாகவும் விரிவாகப் பேசினார்கள். கூட்டத்திற்கு வாலிபர்களும், பெரியோர்களும் பெருவாரியாக வந்திருந்தனர்.

தலைவர் முடிவுரைக்குப்பின் காரியதரிசி வந்தனோபசாரம் கூற கூட்டம் இரவு 9 மணிக்கு இனிது கலைந்தது.

சென்னை மாகாண ஷெடியூல்டு ஜாதிக் கட்சி

தேர்தல் போர்டு அமைப்பு

சென்னை, நவ, 11

வரப்போகும் சென்னை அசெம்பிளி தேர்தல்கள் சம்பந்தமாக விவாதிப்பதற்காக பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட வகுப்பு மெம்பர்களின் கூட்டமொன்று சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை திவான்பகதூர் ஆர் சீனிவாசன் தலைமையில் அவரது வீட்டில் நடைபெற்றது.

திவான்பகதூர் ஆர். சீனிவாசன் எம். எல். ஸி., ராவ்பகதூர் எம். ஸி. ராஜா எம். எல். ஏ., ராவ்சாகிப் வி. ராஜகோபால் பிள்ளை எம். எல் ஸி., ராவ்சாகிப் வி. தர்மலிங்கம் பிள்ளை எம். எல். ஸி., ராவ்சாகிப், எல். ஸி. குருசாமி, பண்டிட் பி. எம். பழனிசாமி பிள்ளை, திருவாளர்கள்: பி. கே. புஷ்பராஜ், (வக்கீல்) ஜே. சிவஷண்முகம் பிள்ளை (முனிசிபல் கவுன்சிலர்), பி. எம். பி. பரசுபாணி பிள்ளை, பி. பரமேஸ்வரன், பி. எம். வெங்கடபதி நாவலர், எம். கங்காதரன், எஸ். பி. ஐ பாலகுருசிவம், பி. செல்வநாதன், டி. சின்னையா, ஸி. ஆர். பலராமன், ஜி. ஜய். பொன்னையா, என். ரங்கராஜு, எச். பி. பெருமாள், ஆர். பி. சாமி, பி. ஆர். பத்மநாபன், ஏ. பி. கோபால் பிள்ளை, டி. எம். அருணாசலம், ஆர். ராஜகோபால் முதலியோரும் மற்றும் பலரும் விஜயம் செய்திருந்தனர்.

தலைவர் பேசுகையில், ஷெடியூல்டு ஜாதிகளுக்கென ஏற்பட்டிருக்கும் தனி ஸ்தானங்களுக்கு தக்க அபேட்சகர்களை நிறுத்தும் விஷயமாகவும், தாழ்த்தப்பட்ட ஜாதியினர் பிற ஜாதியினரைப் போல் கட்டுப் பாட்டுடன் வேலை செய்து தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்பது குறித்தும் பேசினார்.

தீர்மானங்கள்

பிறகு, சென்னை மாகாண ஷெடியூல்டு ஜாதிகளின் கட்சி யென்று ஒன்றை ஸ்தாபிக்க வேண்டுமென்றும், இக்கட்சி தேர்தல் போர்டில் இதுவரை தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக இருந்துவரும் தேர்தல் போர்டுகள் மறைந்து விட வேண்டுமென்றும். இக்கட்சியில் அங்கத்தினராகச் சேர விரும்புபவர்கள் பிற கட்சி ஸ்தாபனங்களில் அங்கத்தினர்களாயிருந்தால் அதை ராஜினாமா செய்து விட வேண்டுமென்றும், இக்கட்சி சார்பாக தேர்தல்களுக்கு நிற்க விரும்புவோர் இக்கட்சிக்கென தனிப் பிரமாணம் செய்து கொடுக்க வேண்டு மென்றும், இக்கட்சியில் சேர விரும்புவோர் வருஷம் 4 பேர் சந்தா முன்பணமாக தங்கள் விண்ணப்பங்களுடன் அனுப்பிவிட வேண்டு மென்றும், அபேட்சகர்களாக நிற்க விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை கட்சி தேர்தல் போர்டுக்கு நவம்பர் 20-ந் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டு மென்றும், தவிர ஒவ்வொரு அபேட்சாரும் உறுதி மொழிப் பத்திரத்தில் கையெழுத்திட்டு 15 ரூபாயுடன் தங்கள் தங்கள் விண்ணப்பங்களைக் கூட்டுக் காரியதரிசிக்கு (திரு. பி. கே. புஷ்பராஜ், அட்வகேட், நெ. 38. எ. பீர்டன் ரோடு, ராயப்பேட்டை) அனுப்பவேண்டுமென்றும், பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இப்புதிய கட்சியின் அறிக்கையொன்றை கூடிய சீக்கிரத்தில் வெளியிடவும் தீர்மானிக்கப்பட்டது.

இப்புதுக் கட்சிக்கு திவான் பகதூர் ஆர். சீனிவாசன் தலைவராகவும், ராவ் பகதூர் எம். ஸி. ராஜா, ராவ் சாகிப் என். சிவராஜ் உபதலைவர்களாகவும், திரு. பி. கே. புஷ்பராஜன், திரு. ஜே. சிவஷண்முகம் பிள்ளை கூட்டுக் காரியதரிசிகளாகவும், ராவ் சாகிப் எல். ஸி. குருசாமி பொக்கிஷதாரராகவும், ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மலேயாவில் இந்தியக் கூலிகள்

தற்கால நிலைமை

சர்க்கார் அறிக்கை

கோலாலம்பூர், நவ, 3

இவ்வருடத்தின் முற்பாதியில் சம்பளங்கள் அதிகரித்தன, தொழிலாளர்களிடையே சுகாதாரம் நன்றாயிருந்தது. விவாகமாகாத வேலைக்காரர்கள் காலத்தில் கட்டப்பட்ட கூலி லயன்களெல்லாம் குடும்பங்களுக்கு உகந்த வீடுகளாகத் திருப்பிக் கட்டப்பட்டன. சுகாதாரத்திற்காக ஏராளமான வேலைகள் செய்யப்பட்டன; பல பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன.

மேலும் அவ்வறிக்கை கூறுவதாவது:—

"மலாயாவுக்கு தங்கள் சொந்த பிரயாணச் செலவில் வரும் டெக் பிரயாணிகளிடையேயுள்ள தொழிலாளர்கள் விகிதாசாரம் தொடர்ந்து மிக்க அதிகமாயிருந்தது. முன்பெல்லாம இப்பிரயாணிகளில் சுமார் 80 சதவிகிதம் கொண்டவர்கள், வியாபாரிகளும், லேவாதேவிக்காரர்களும், குமாஸ்தாக்களுமாயிருந்தனர். இப்பொழுது தொழிலாளர்களே மெஜாரிட்டியாயிருக்கின்றனர்.

"அவர்களிற் பலர் முன்பு இங்கு வேலை பார்த்தவர்களாயிருக்கின்றனர். ஆனால், முதன்முதலாக வரும் தோட்ட வேலைக்காரர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. ஏனெனில், ஏற்கனவே மலாயாவிலுள்ள அவர்களது சிநேகிதர்களிடமிருந்தும், உறவினர்களிடமிருந்தும் சாதகமான செய்திகள் கிடைப்பதே.

"கட்பு வேலை நிலைமைகளும், சம்பள விகிதங்களும் மலயாவிலுள்ள தொழிலாளர்களுக்குத் திருப்திகரமாயும், சென்னையிலுள்ள அவர்களது சிநேகிதர்களுக்குக் கவர்ச்சியளிக்கக் கூடியதாயும், இந்தத் தொழிலாளர் நடமாட்டமானது காட்டுவதாகத் தெரிகிறது.

சிலர் திரும்புகின்றனர்

"அதிகமான தொழிலாளர்கள் இந்தியாவுக்குத் திரும்பிய போதிலும் இவர்களது எண்ணிக்கையானது முன் காலத்திய எண்ணிக்கைகளுடன் ஒப்பிடின் சொற்பமாயிருக்கிறது. இது ஆச்சரியமே. ஏனெனில், அக்காலத்தில் தொழிலாளர்கள் சொற்ப சம்பளத்தைப் பெற்று அதிகமான ஜீவனச் செலவு கொடுக்கவேண்டியிருந்ததால் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லுவதற்கு இப்பொழுதை விடக் குறைவான சக்தி வாய்ந்திருந்தனர்.

"இதைப்பற்றி விசாரித்ததில் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லுவதற்கு இவ்விதம் வெறுப்பு ஏற்படுவதின் முக்கிய காரணம், அங்கு வேலை கிடைக்கும் நம்பிக்கை அவ்வளவாக இல்லாதிருப்பதே யென்று தெரிகிறது. இந்தியாவிற்கு விடுமுறையாகச் செல்லுபவர்கள் மலாயாவுக்குத் திரும்பி வந்ததும் இதரர்களிடம் இந்தியாவிலுள்ள நிலைமைகளைச் சொல்லி அங்கு செல்ல வேண்டாமெனப் போதிக்கின்றனர்.

"முக்கியமாக பாலப் பருவத்தில் இங்கு வந்து வயது வந்ததும் தங்களது பழக்க வழக்கங்களை சென்னை நிலைமைகளுக்கு ஒத்தவாறு மாற்றிக் கொண்டவர்களிடையே தான் இது காணப்பட்டது.

"வீதிகளில் காணப்படும் தொழிலாளர்களின் ஆடைகளது நிறமும், வாழ்க்கை முறையும் எதைக் காட்டுகிற தென்றால், அவர்கள் இந்தியாவுக்கு விடுமுறையாகச் செல்லுவதைத் தடுப்பது பணமல்ல வென்று தெரிகிறது. சேமிப்புப் பணங்களைக் காவந்து பண்ணி வைப்பதற்காக அதிகமான கூட்டுறவுச் சங்கங்கள் வேண்டுமென எஸ்டேட்டுகளில் கேட்டுக் கொள்ளப் படுவதிலிருந்து இவ்விஷயம் ஸ்திரமாகிறது. தற்பொழுது பயிற்சி யளிக்கப்படும் உத்தியோகஸ்தர்கள் தயாராகும் வரை இத்தேவையை நிவர்த்திக்க முடியாது.

"மலாயாவையே தங்கள் இருப்பிடமாக ஆக்கியிருக்கும் இந்தியர்களின் தொகை தொடர்ந்து அதிகரிக்கிற தெனத் துலக்கமாகத் தெரிகிறது."

"விடுதலை" நண்பர்களுக்கு

அறிக்கையும், வேண்டுகோளும்

வருகிற நவம்பர் முதல் "விடுதலை"யை நாள்தோறும் வெளியிடுவதற்கான எல்லா முயற்சியும் நடந்து வருகிறது.

அதற்கு ஏற்படுத்தக் கருதுகிற கட்டணம் விவரம் கீழே காண்க.

சென்னையிலும், விற்பனைக்காரர் உள்ள இடங்களிலும்

தனித் தாள்	0	0	6
1 மாதம்	1	0	0
3 மாதம்	2	14	0
6 மாதம்	5	10	0
1 ஆண்டு	11	0	0

தபால் வழி

உள் நாடு.

தனித் தாள்	0	0	9
1 மாதம்	1	4	0
3 மாதம்	3	10	0
6 மாதம்	7	0	0
1 ஆண்டு	13	0	0

வெளி நாடு

தனித் தாள்	0	1	6
1 மாதம்	1	10	0
3 மாதம்	4	12	0
6 மாதம்	9	12	0
1 ஆண்டு	19	0	0

நீடித்து நடக்கும் மற்றெந்த செய்தித் தாளையும் விட இதன் கட்டணம் குறைந்திருப்பதும், குறைந்த காலத்தை விட நீடித்த காலத்திற்குக் கட்டண விகிதம் குறைந்திருப்பதும் விளங்கும். ஆகையால், "விடுதலை" நண்பர்கள் எல்லாரும் சேர்ந்தாற்போல் ஒரு ஆண்டுக்காவது, கூடியவரை நீடித்த காலத்திற்காவது கட்டணம் செலுத்திச் சேரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வாரம் இரு முறைக்குக் கட்டணம் செலுத்தி யிருப்பவர்கள் புதிய விகிதப்படி ஏற்பட்ட மீதக் கட்டணத்தை உடனே அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கணிசமான எண்ணுள்ளவர்களுக்கு இதுவரை "விடுதலை" இலவசமாக அனுப்பப்பட்டு வருகிறது. இனி அப்படி அனுப்ப முடியாதென்பதை அவர்களே தெரிவார்கள். இலவசமாகக் கிடைத்தாலொழிய "விடுதலை"யைப் படிக்க முடியாது, அல்லது குறைந்த கட்டணத்திற்காவது கிடைத்தால்தான் படிக்க முடியும் என்ற நிலையிலிருப்பவர்கள் தகுந்தகாரணங்கண்டு உடனே விண்ணப்பம் அனுப்பி இலவசமாகவாவது, குறைந்த கட்டணத்திற்காவது அனுப்ப சம்மதம் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்படிச் சம்மதம் பெறாதவர்கள் முழுக்கட்டணம் அனுப்பி "விடுதலை"க்குத் துணை புரிய வேண்டுகிறேன்.

"விடுதலை" விற்பனைக்காரர்கள் தங்களுக்கு வேண்டிய எண்ணிக்கைக்கு உரிய இரண்டு மாதக் கட்டணத்தை முன் பணமாகக் கட்டித் தெரிவித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

தானும், தன் குடும்பமும், தன் இனமும், தனக்கும், தன் குடும்பத்திற்கும், தன் இனத்திற்கும் மிதி கல்லா யிருக்கிற மற்றவர்களும் மாத்திரம் தான் வாழ வேண்டுமென்ற குறுகிய நோக்கத்திற்கு ஆளாகாமல், எல்லா இனத்தாரும் இன்புற்று வாழ்ந்து நாட்டிற்கு சீரும் சிறப்புத் தேட வேண்டுமென்ற பெரு நோக்கிற்கு உண்மையாக உழைப்பவர்களை எல்லாம் "விடுதலை"க்குப் பணம் செலுத்தியும், மற்ற வழியிலும் துணை புரியுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

24-10-36 சே. தே. நாயகம்.

குறிப்பு: (1) மேலே குறிப்பட்டபடி, வருகிற நவம்பர் முதல் "விடுதலை"யை நாள் தோறும் வெளியிடுவதற்கான எல்லா முயற்சியும் செய்தும், நவம்பர் துவக்கத்திலிருந்தே அவ்வாறு வெளியிடும் நிலைமை கைகூடவில்லை. விரைவில் வெளியிடுவதற்கான முயற்சி குறைவில்லாமல் நடந்துவருகிறது.

31-10-36 சே. தே. நாயகம்.

(2) 16-11-36 (திங்கட்கிழமை) முதல் நாள் தாளாக வெளிவரும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

7-11-36 சே. தே. நாயகம்.

(3) "விடுதலை" நாள் தாளாக வருமுன் செய்யப்பட வேண்டிய வேலைகள் சில இன்னும் அரை குறையாகவே இருக்கின்றன. 16-11-36 ல் அவ்வாறு வெளிவரும் என்ற நம்பிக்கை முற்றுப் பெற வழி இல்லை. விரைவில் வெளிவருவதற்கான முயற்சிகள் குறைவின்றி நடந்து வருகின்றன.

14-11-36 சே. தே. நாயகம்.

திரு. அப்துல்லா காந்தி

இந்து மதத்திற்குத் திரும்ப முடிவு

பம்பாய், நவ, 13

காந்தியாரின் மூத்த புதல்வரும் சமீபத்தில் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியவருமான திரு. அப்துல்லா காந்தி மீண்டும் இந்துமதத்தில் சேர முடிவு செய்துள்ளார். மதமாற்றச் சடங்கு நாளையதினம் ஆரிய சமாஜத்தார் ஆதரவின் கீழ் நடைபெறும்.

மூன்றணா ஸ்டாம்பு அனுப்பினால்
"தங்கசாலைத் தெரு தாசியின் ரகஸியங்கள்"
என்ற நாவல் இனாமாக அனுப்பப்படும்.
ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராயநகர், மதராஸ்

தங்கம்—வெள்ளி

சென்னை, நவ, 14

	ரூ-அ-பை
பம்பாய் ஆலைத் தங்கம்	35—2—3
„ வாய்தா	35—3—6
மூனா தோலா 1-க்கு	34–12—3
சவரன் மொத்தம்	22—7—0
சவரன் சில்லரை	22—7—6
வெள்ளி ரூ. 100 எடை	52—8—0
„ ரூ. 1 எடை	0—8—6

வாலிப இந்திய அமச்சூர் தேகாப்பியாச சங்கம்:—மேற்படி சங்கத்தின் இரண்டாவது வருஷாந்திரக் கொண்டாட்டம் நாளை (15-11-36) மாலை 4-மணிக்கு சென்னை ராயபுரம் அர்தான் ரோட் நகரசபை சிறுவர் பாடசாலையில், நகரசபை மேயர் திரு. கே. ஸ்ரீராமுலு நாயுடு தலைமையில் நடைபெறும்.

அதுசமயம் தேகாப்பியாசத்தின் அவசியத்தைக் குறித்து, ஒய். எம். ஸி. ஏ. வைச் சார்ந்த திரு. வி. அஸாரியாவும், வித்வான். ஆர். சாம்பசிவ சர்மாவும், முறையே ஆங்கிலத்திலும், தமிழிலும் பேசுவார்கள்.

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே!

ஏழையென்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே!

மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையை கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த வகையினும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! (பாரதி)

விடுதலை

சென்னை: 1936-ஹு நவம்பர்-மீ 14-உ
சனிக்கிழமை

"தின மணி" ஞானோபதேசம்

சென்னைத் தினசரிகளில் "தின மணி"யைப் போல அகம்பாவம் கொண்ட பத்திரிகை இல்லவே இல்லை. அப்பத்திரிகை நிபுணத்துவம் பெறாத விஷயங்களே உலகத்தில் இல்லை யென்பது அதன் திடமான கருத்து. அரசியலிலாகட்டும், பொருளாதாரத் துறையிலாகட்டும், சமூகத் துறையிலாகட்டும் அது கூறுவதுதான சரி. அதன் முடிவுகளை யெல்லாம் மூச்சுக் காட்டாமல் எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். ஒப்புக் கொள்ளாதவர்களுக்கு மூடப்பட்டமோ, துரோகப் பட்டமோ வழங்க அது தயங்குவதும் கிடையாது.

இன்று, செட்டி நாட்டில் கோனிபூரில் நகரத்தார் ஒரு கூட்டம் கூடுகிறார்களாம். பண்டித ஜவஹர்லால் செய்து வரும் அபேதவாதப் பிரசாரத்தை எதிர்க்கவும், புதிய சீர்திருத்தத்தைப் பற்றி ஆலோசிக்கவும் அந்தக் கூட்டம் கூட்டப்படுகிறதாம். அக்கூட்டம் கூட்டுவோர் பண்டித ஜவஹர்லாலின் அபேதவாதம் என ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருக்கிறார்களாம். அதில் "காணப் பட்டிருப்பவை யெல்லாம் வெறும் பீதியால் எழுதப்பட்டவை" என முடிவு கூறிக் கொண்டு "அபேதவாத"த்தை "தினமணி" சென்ற வியாழக்கிழமைப் பத்திரிகையில் வியாக்கியானம் செய்யத் தொடங்கியிருக்கிறது.

"அபேதவாதம் என்பது ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு விதமாயிருக்கிறது. இந்தியாவில் அபேதவாதம் ஏற்படுவதோ, ஏற்பட்டால் எம்மாதிரி அபேதவாதம் வேண்டுமென்பதோ எதிர்கால பார்லிமெண்டு முடிவு செய்ய வேண்டிய விஷயம். பண்டித ஜவஹர்லால் முதலில் சுயராஜ்யத்திற்காகப் பாடுபட வேண்டும் என்றே கூறுகிறோம்" என பிள்ளையாருக் குட்டும் போதே "தின மணி" ஒரு ஹிமாலயப் புளுகு புளுகுகிறது. தென்னாட்டுச் சுற்றுப்பிரயாண காலத்தில், முதலில் வேண்டுவது சுயராஜ்யம் என்றும் அபேதவாதம் சுயராஜ்யம் கிடைத்த பிறகு ஆலோசிக்க வேண்டிய விஷயமென்றும், ஜவஹர்லால் கூறியது மெய்யே. ஆனால், அங்ஙனம் சுற்றுப் பிரயாண காலத்தில் அவர் கூறியது என்ன? சுயராஜ்யம் வந்த பிறகு அபேதவாதத்தைப் பற்றி யோசிக்கலாம் என்பது வைத்தியக்காரப் பேச்சு; சுயராஜ்யமும், அபேதவாதமும் ஏககாலத்தில் வரவேண்டியதுதான்' எனப் பொருள்பட ஜவஹர்லால் பேசியிருக்கிறாரே? இதை "தின மணி" அறியவில்லையா? அறிந்திருந்தும் மேலே எடுத்துக் காட்டியுள்ளபடி அது கூறுவது யோக்கியப் பொறுப்பாகுமா? சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி விஷயத்தைத் திரித்துக் கூறுவது ஒரு மாதிரித் திருட்டுத்தனம் தானே! இம்மாதிரிப் புரட்டுகளில் நகரத்தார் ஏமாறக் கூடியவர்களா?

அப்பால் 'இந்தியாவுக்கு சுயராஜ்யம் கிடைத்தாலொழிய வெளிநாட்டு இந்தியர்களின் உரிமைகளை நாம் பாதுகாக்க முடியாது' என 'தின மணி' செப்புகிறது. எடுத்ததற்கெல்லாம் காங்கரஸ் சுயராஜ்யப் பல்லவி பாடுவது ஒரு வாடிக்கையாகி விட்டது. எனினும், "தின மணி"யின் இக் கூற்றை நாமும் ஒப்புக் கொள்கிறோம். ஆனால், சுயராஜ்யம் பெற வழி என்ன என்பது தான் கேள்வி. "மாட்ரிட் வீழ்ந்து விட்டது. எனவே, ஜிப்ரால்டரும் வீழ்ந்து விடும். அப்போது பிரிட்டன்பாடு திண்டாட்டத்தில் ஆகிவிடும். இந்தியர்களின் உதவியைப் பெற பிரிட்டன் வலிய வரும். அப்பொழுது சுயராஜ்யத்தைப் பிடுங்கிக்கொள்ளலாம்" என திரு. சத்தியமூர்த்தியைப் போல புலம்பினால் சுயராஜ்யம் வந்து விடுமா? அல்லது சட்டசபைக்குள் சென்று முட்டுக்கட்டை போடுவதினால் சுயராஜ்யம் வந்து விடுமா? சட்ட மறுப்பு, உப்புக் காய்ச்சு, மறியல் முதலிய வித்தைகள் எல்லாம் பலிக்காது போனதை மறந்து மீண்டும் சட்டசபைக்குள் சென்று முட்டுக்கட்டை போட்டு சுயராஜ்யம் கொண்டு வருவோம் எனக் கூறுவோரை அம் முட்டாளர்கள் அல்லது வைத்தியக்காரர் என்று தானே கூறவேண்டும்.

மூன்றாவதாக "இல்லாதவர்களுக்கு இருக்கிறவர்கள் உதவ வேண்டு மென்பதே அபேதவாதத்தின் அடிப்படையான தத்துவம்" என "தின மணி" கூறுகிறது. "தினமணி" அபேதவாதத்துக்குக் கூறும் இந்த பாஷியம் சரியானால் அதை எவரும் ஆக்ஷேபிக்க மாட்டார்கள். 'இல்லாதவர்களுக்கு உள்ளவர்கள் உதவ வேண்டும்' என்றே ஹிந்து மதம் உட்பட எல்லா மதங்களும் போதனை செய்கின்றன. ஆனால், இன்று அபேதவாதிகள் என கடிப்போர் கூறுவதென்ன? "பணக்காரர் ஒழிய வேண்டும், ஜமீன்தாரர்கள் ஒழியவேண்டும், மன்னர்கள் ஒழிய வேண்டும் ஏகாதிபத்தியங்கள் ஒழியவேண்டும்" என்று தற்கால அபேதவாதப் பிரசாரகர்கள் பகிரங்கமாகக் கூறுகிறார்களே. "இல்லாதவர்கள் உடையவர்கள் சொத்தைப் பிடுங்கவேண்டும்" என்பது தானே அவர்களது கூச்சலின் உட்பொருள். இதை "தின மணி"க்கு மறுக்க முடியுமா!

நான்காவது "நகரத்தார்களும் அபேதவாதிகளே" எனக் கூறும் "தின மணி"யின் வாதத்திற்றான் அதன் சமத்து அடங்கியிருக்கிறது.

"லக்ஷ, லக்ஷமாய் செட்டியார்கள் சம்பாதிக்கிறார்கள். அதே மாதிரி லக்ஷ லக்ஷமாய் தான தருமங்களுக்குக் கொடுக்கிறார்கள். செட்டியார்கள் திருப்பணி செய்யாத பெரிய கோயில்கள் தமிழ் நாட்டில் இருப்பது அரிது. அதைப் போலவே கல்விக்கும், சத்திரங்களுக்கும் ஏராளமாய் தானம் செய்கிறார்கள், செட்டியார்கள் ரத்தத்தில் தான தர்மம் ஊறிப்போய் விட்டது. அதை யாராலும் அசைக்க முடியாது. அவ்வளவு விசால நோக்கத்துடன் செய்யும் தர்மங்களை "அபேதவாதம்" என்று சொல்லி யாராவது பயமுறுத்த முடியுமா? அப்படியே பயமுறுத்தினாலும் அதற்காக நகரத்தார்கள் இந்த தர்மங்களை விட்டு விடுவார்களா? ஒருநாளும் விட மாட்டார்கள். அவர்கள் செய்யும் தர்மங்களுக்கு யார் என்ன பெயரிட்டால் என்ன? அதற்காக அவர்கள் பின் வாங்கப்போவதில்லை. இவ்வளவு தர்மகுணம் படைத்த நகரத்தார்களிடம் சென்று அபேதவாதம் என்பது ஏதோ ஒரு பெரிய பூதம் என பயமுறுத்த முயல்வது பலமாகக் கண்டிக்கத்தக்கது" என "தின மணி" வெளுத்து வாங்குகிறது. "தின மணி"யின் இந்தப் புரட்டைப் பார்த்து சிரிப்பதா, இரங்குவதா என விளங்கவில்லை. நகரத்தார்கள் செய்யும் தான தருமங்கள் அபேதவாதத்தின் பாலபட்டதே என்னும் அபிப்பிராயத்தை இப்பொழுதுதான் "தின மணி" மூலம் நாம் அறிகிறோம். இந்தியர்கள் இயல்பாகவே தார்மிஷ்டர்கள். எனவே, அபேத வாதத்தை அவர்கள் ஆட்சேபிக்க இடமில்லை. மாறாக வரவேற்கத்தான் செய்வார்கள். எனினும், [illegible] அன்ன பிரபலஸ்தர்கள் எல்லாம் அதை எதிர்க்கத்தான் செய்கிறார்கள். திரு. சத்தியமூர்த்தி உட்பட பல காங்கரஸ்வாதிகளும் அதை எதிர்க்கத்தான் செய்கிறார்கள். காந்தியாரும் அதை ஆதரிக்கவில்லையென்றே தோற்றுகிறது. "தின மணி" கூறுவதை ஒப்புக் கொண்டால் அபேத வாதத்தை எதிர்ப்போரெல்லாம் அதர்மிகள் என்றே ஏற்படும். அபேதவாத எதிரிகள் எல்லாம் அதர்மிகள் என "தின மணி" நெஞ்சில் கை வைத்துக் கூறுமா? அபேதவாதமும், தான தருமங்களும் ஒன்றெனக் கருதியிருக்கும் "தின மணி"யின் போக்கு மோசடியானதல்லவா? நகரத்தார் தான தருமங்கள் செய்வதை எவரும் ஆக்ஷேபிக்க மாட்டார்கள். தான தர்மங்கள் செய்ய நகரத்தார் ஒருபொழுதும் பின்வாங்கவும் மாட்டார்கள். ஆனால், நகரத்தார் வருந்தித் தேடிய முதலை பொதுவுடைமையாக்க வேண்டுமென்றால் அவர்கள் ஆக்ஷேபிக்கத்தான் செய்வார்கள் அவர்கள் மட்டுமா? பகுத்தறிவுடையவர்கள் எல்லாம் ஆக்ஷேபிக்கத்தான் செய்வார்கள். தபால், தந்தி இலாகா, ரயில்வே, ஜில்லா போர்டு, நகர சபைகள் முதலியவைகளை சர்க்காருக்கு சொந்தமாக்குவதும் அபேதவாதமே என்றும் அதை யாராவது ஆட்சேபிப்பார்களா என்றும் "தின மணி" கேட்பதற்குப் பொருளே இல்லை. தபால், தந்தி, ரயில்வே, ஜில்லா போர்டு முதலியன எந்தத் தனி நபருடையவும் சொத்தல்ல. ஆகவே, அதை சர்க்கார் சொந்தமாக்குவதை எவரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். ஆனால், தம சுய முயற்சியினால் ஒருவன் சம்பாதித்ததைப் பொதுவுடைமையாக்க வேண்டுமென்பதை அறிவுடையவர்கள் ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். உலகத்திலே மதியுடையவர்களுக்கு சம சந்தர்ப்பங்கள் இருந்தே வருகின்றன. எத்தனையோ ஏழைகள் சுய முயற்சியினால் சீமான்களாகியுள்ளதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். மதியுடையோர் சுக வாழ்வு வாழத்தான் செய்வார்கள். மதியற்றோர் கஷ்டப்படத்தான் செய்வார்கள். இது இயற்கை விதி. இதை எல்லாரும் ஒப்புக் கொண்டுதானாக வேண்டும். ஆனால், இயற்கைவிதி ஒன்று மக்களுக்குத் துன்பம் செய்யக் கூடியதாயிருந்தால் அதற்குப் பரிகாரம் தேடவேண்டியது அறிவுடையோர் கடமை. மதியின்மையால் கஷ்டப்படுவோரின் துன்பங்களைப் பரிகரிக்க வேண்டியது மதியுடையோர் கடமையே. ஆகவே தம்மினும் எளிய நிலைமையிலிருப்போருக்கு உதவி புரிய வேண்டியது உதவி புரிய சக்தியுடையவர்கள் கடமைதான். அந்தக் கடமையைச் செய்யுமாறு மக்களைத் தூண்டுவதை எவரும் கண்டிக்க மாட்டார்கள். "ஏழைகளுக்கு உதவுங்கள்" என ஜவஹர்லாலோ ஏனைய அபேதவாதிகளோ கூறினால் யார் தான் ஆட்சேபிப்பார்கள்? "உள்ளவர்களிடமிருந்து பிடுங்கி இல்லாதவர்களுக்குக் கொடுங்கள்" என அபேதவாதிகள் கூறுவதையே ஏனையோரைப் போல் நாமும் ஆட்சேபிக்கிறோம். சீமான்கள் எல்லாம் பாமர மக்களின் "டிரஸ்டி"களாயிருக்க வேண்டுமென்று காந்தியார் கூறுவதை நாம் ஆதரிக்கிறோம், சீமான்களுக்கு "டிரஸ்டி" மனப்பான்மை யுண்டாகும்படி பிரசாரம் செய்வதை எவரும் தடுக்க மாட்டார்கள். ஆனால், அபேதவாதிகள் அவ்வாறு செய்யவில்லை "இல்லாதவர்களுக்கு இருக்கிறவர்கள் உதவவேண்டும்" என அபேதவாதிகள் கூறவில்லை. இல்லாதவர்கள் உள்ளவர்களின் உடைமைகளைப் பிடுங்க வேண்டும் என்றே அபேதவாதிகள் பிரசாரம் செய்கிறார்கள். அவர்கள் அவ்வாறு பிரசாரம் செய்து கொண்டிருக்கும் வரையில் நகரத்தார் மட்டுமல்ல அறிவுடையவர்கள் அனைவரும் எதிர்க்கவே செய்வார்கள். எனவே "தின மணி"யின் மாரீச வாதங்களைப் பார்த்து நகரத்தார் ஏமாந்து போக மாட்டார்கள் என நம்புகிறேன்.

ஈ. வெ. ரா. வெற்றி

தீண்டாதார் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு திரு. ஈ. வெ. ராமசாமிப் பெரியார் 12 வருஷங்களுக்கு முன் வைக்கத்தில் தொடங்கிய சத்தியாக்கிரகப்போர், சில வாரங்களுக்கு முன் சமஸ்தானப் பொது ஸ்தாபனங்களில் எல்லாம் எல்லா ஜாதியாரும் பிரவேசிக்கலாம் என திருவிதாங்கூர் மகாராஜா பிறப்பித்த உத்தரவினால் அரைவாசி வெற்றி பெற்றது; சென்ற வியாழனன்று திருவிதாங்கூரிலுள்ள சர்க்கார் ஆலயங்களில் எல்லாம் ஒடுக்கப்பட்டோர்கள் பிரவேசிக்கலாம் என திருவிதாங்கூர் மகாராஜா பிறப்பித்துள்ள உத்தரவினால் பூராவும் வெற்றி பெற்று விட்டது. "கேரளம் பைத்தியக்கார ஆஸ்பத்திரி" என்று கூறினார் காலஞ்சென்ற விவேகானந்தர். அத்தகைய கேரளத்தில் ஒரு பகுதி திருவிதாங்கூர். அது இதுவரை வைதீகக் கோட்டையாகவே இருந்து வந்தது. இம்மாதம் 12-ந் தேதியோடு திருவிதாங்கூரிலே வைதீகம் ஒழிந்து விட்டது; பகுத்தறிவு வெற்றி பெற்று விட்டது. ஹிந்து சமயம் வாழ வேண்டுமென்று விரும்புவோரும், சீர்திருத்தக்காரர்களும் திருவிதாங்கூர் மகாராஜாவை வாழ்த்துவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஏனைய ஹிந்து சமஸ்தானங்களும் திருவிதாங்கூரைப் பின்பற்றுமானால் "ஹிந்து" மதத்தைப் பிடித்திருக்கும் தீண்டாமைக் கறை ஒழிந்துவிடும் என்பது நிச்சயம்.

திருவிதாங்கூர் முற்போக்கு

தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆலயப்பிரவேச உரிமை

மகாராஜா அறிக்கை

ஈ. வெ. ரா. வெற்றி

திருவனந்தபுரம், நவ, 13

"திருவனந்தபுரத்திலுள்ள இந்து மக்கள், எவ்வகுப்பினராயினும், எச்சாதியினராயினும், வித்தியாசமின்றி இனி சமஸ்தான நிர்வாகத்திற்குட்பட்ட கோயில்களிற் சென்று வழிபடலா"மென நேற்று நடைபெற்ற தமது 25-வது பிறந்த தினக் கொண்டாட்டத்தின் பொழுது திருவாங்கூர் மகாராஜா ஒரு உத்திரவு பிறப்பித்திருக்கிறார்.

மகாராஜாவின் இவ்வுத்திரவு திருவாங்கூர் மக்களிடை மிகுந்த குதூகலத்தை ஏற்படுத்தியுள்ளது.

மகாராஜாவைப் பாராட்டி பல விடங்களிலும் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன.

இந்தியாவின் இதர பாகங்களுக்கும் திருவாங்கூர் ஓர் வழிகாட்டியாயிருக்குமென கருதப்படுகிறது.

கிருஷ்ணகிரி பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல்

ஜஸ்டிஸ் கட்சியின் பெரும் வெற்றி

திரு. கே. எஸ். ஆர். அமீனுத்தீன் தேர்ந்தெடுக்கப் பட்டார்

கிருஷ்ணகிரி, நவ, 13

9-11-36-ந் தேதி திங்கட்கிழமை நடந்த இவ்வூர் பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தலில் பிரபல புகையிலை வியாபாரியும், கிருஷ்ணகிரி தென் இந்திய நல உரிமை கிளை சங்கத்தின் பொக்கிஷதாருமான, பாவாஜி (எ) கே. எஸ். ஆர். அமீனுத்தீன் சாஹிப் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இவருக்கு 8 ஓட்டுகளும், இவருக்குப் போட்டியாய் நின்றவருக்கு 5 ஓட்டுகளும் களும் கிடைத்தன. அன்று மாலை நடந்த உப தலைவர் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகர் திரு. கே. ஈ. முனுசாமி கவுண்டர் உப தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்று எலக்ஷன் ஆபீசுக்கெதிரில் சுமார் 2000 ஜனங்களுக்கு அதிகமாய் கூடி தலைவருக்கும், உபதலைவருக்கும் நூற்றுக் கணக்கான புஷ்ப மாலைகள் சூட்டி சந்தோஷத்தைக் கொண்டாடினார்கள்.

பீரார், நிஜாம் ஆட்சிக்கு உட்பட்டது

பட்டத்திளவரசருக்கு 'பீரார் இளவரசர்' பட்டம்

புதுடில்லி, நவ, 13

இந்தியா சர்க்கார் விசேஷ கெஜட் ஒன்று பின்வருமாறு கூறுகிறது:-

நிஜாம் மன்னரின் ஆட்சியின் கீழ் இனி பீரார் இருந்து வரும். பட்டத்து இளவரசர், பீரார் இளவரசர் என அழைக்கப்படுவார். நிஜாம் மன்னருடன் ஆலோசித்தபின்பே மத்தியமாகாண-பீரார் கவர்னர் நியமிக்கப்படுவார். பிரிட்டிஷ் கொடிக்குப் பக்கத்தில் நிஜாம் மன்னர் கொடியும் பறக்கும். பீராரிலும் நிஜாம் மன்னர் தர்பார்கள் நடத்தக் கூடும்.

கிருஷ்ணா ஜில்லா போர்டு தேர்தல்

13 ஜஸ்டிஸ் கட்சியினர் எதிர்ப்பின்றி தேர்ந்தெடுப்பு

பெஜவாடா, நவ, 12

கிருஷ்ணா ஜில்லா போர்டு தேர்தலுக்கு நின்ற அங்கத்தினர்களில் ஜஸ்டிஸ் கட்சி சார்பாக நின்ற கீழ்க்கண்ட 13 அங்கத்தினர்கள் எதிர்ப்பின்றி தேர்ந்தெடுக்கப் பட்டனர். அவர்கள் பின் வருமாறு:—

திருவூறு தாலூகா:-

1. சத்ராபி சர்க்கிள்:—மீர்ஸாபுரம் ஜமீன்தார் எம். எல். ஸி.

2. திருவூறு சர்க்கிள்:—பெத்தாவரம் ஜமீன்தார், திரு. வி. சத்யநாராயண ராவ்பகதூர்; திரு. புராகா பிக்ஷாவதி (ஆதி ஆந்திரா); முனிகிபாடு ஜமீன்தார், திரு. வி. பார்த்தசாரதி ராவ்பகதூர்.

நஸ்வித் தாலூகா:-

1. நஸ்வித் சர்க்கிள்:—கோடபாடு ஜமீன்தார்; வி. கோடையா (ஆதி ஆந்திரா); 2. சருலகூடம் சர்க்கிள்:-ஜமீன்தார் திரு. கே. வெங்கடராம ராவ்பகதூர்; ஜூராவரம் ஜமீன்தார்.

கானவரம் தாலூகா:-

1. கானவரம் சர்க்கிள்:-அல்வரேபெட் ஜமீன்தார், திரு. கே. சீதாராம ராவ்பகதூர்; திரு. யேடால சாம்யூவல்.

பெஜவாடா தாலூகா:-

1. மைலாவரம் சர்க்கிள்:-திரு. ஆர். எஸ். வி. பாப்பைய ராவ்பகதூர்.

2. பெஜவாடா சர்க்கிள்:—திரு. ஜனாப் குலாம்மோஹிதீன் சாஹிப் பகதூர்.

நந்திகாமா தாலூகா:-

1. கஞ்சிகாசெர்லா சர்க்கிள்:- திரு. ஜி. வெங்கடரங்க ராவ்.

அமெரிக்க குடியரசுத் தலைவருக்கு வருஷ சம்பளம் 20,000 ரூபாய் (75000 டாலர்). ஜப்பான் முதல் மந்திரிக்கு 7488 ரூபாய் (8000 யென்) இங்கிலாந்து முதல் மந்திரிக்கு 665000 ரூபாய் (5000 பவுன்) இங்கிலாந்து வார்டு சான்ஸலருக்கு 10 60.000 ரூபாய் (8000-பவுன்) இந்திய வைஸிராய்க்கு 2,50,00-ரூபாய்கள்.

நந்தியாலில் கனம் பொப்பிலி ராஜா

ஆயிரக் கணக்கான மக்களின் குதூகலமான வரவேற்பு

அஞ்சுமான் கட்டிட திறப்பு விழா வைபவம்

நந்தியால், நவ, 12

சென்னை சர்க்கார் முதன் மந்திரி கனம் பொப்பிலி ராஜா வருகையை முன்னிட்டு நந்தியால் இந்திர லோகம்போல் காணப் பட்டது. ஸ்தல முனிசிபாலிடியாரும், நகர மக்களும், நகரை அலங்கரிக்க விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டனர். கொடிகளும், தோரணங்களும், வரவேற்பு வளைவுகளும் பல இடங்களிலும் காணப் பட்டன. 8-11-36 மாலை 12-41 மணிக்கு ராஜா சாகிப் ஸ்டேஷனில் வந்திறங்கினர். ஸ்டேஷனில் ஏராளமான மக்கள் அவரைத் தரிசிக்க காத்திருந்தனர். ஜில்லா கலெக்டர், திவான்பகதூர் வி. என். விஸ்வநாதராவ்; திரு. ஏ. சத்திய நாராயணமூர்த்தி நாயுடு, நந்தியால், சப்-டிவிஷனல் ஆபீசர்) திரு. வெங்கடசாமி நாயுடு (நந்தியால், டெபுடி போலீஸ் சூபரிண்ட்), ஜனுப் குலாம் மஹபூப் சாகிப் (நந்தியால், தாசில்தார்), திரு. ஜீ. நாசி ரெட்டி (நந்தியால், ஜில்லா முன்சிப்), ஜனுப் தாதேகான் வீரானி சாகிப் பகதூர் (முனிசிபல் சேர்மன்), முனிசிபல் கவுன்சிலர்கள், மற்றும் பல உத்தியோகஸ்தர்களும், உத்தியோகஸ்தரல்லாதாரும், ராஜா சாகிபை வரவேற்றனர். ராவ்பகதூர் பி. பி. சேஷாரெட்டி வந்திருந்தோர்களைவரையும் ராஜா சாகிபிற்கு அறிமுகம் செய்து வைத்தார். எல். பி. ஜீ. உயர்தர பாடசாலை, டிசெய்னிக் பாடசாலை மாணவர்கள் அணிவகுத்து நின்று மரியாதை செலுத்தினர். சிற்றுண்டி உபசாரத்திற்குப் பின் ராஜா சாகிபும், மற்றுமுள்ளோரும் விவசாயப் பண்ணை பங்களாவிற்கு மோட்டாரில் சென்றனர். அங்கு ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த இரு கோஷ்டித் தலைவர்களையும் ராஜா சாகிப் சந்தித்து அவர்களுக்குள் சமரசத்தை யுண்டு பண்ணி, வரப்போகும் அசெம்பிளி, சட்டசபைத் தேர்தல்களுக்கு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. ராஜா சாகிபின் வருகையினுல் இவ்விடத்திலுள்ள ஜஸ்டிஸ் கட்சி பலப்பட்டிருக்கிறது.

மாலை 4-30 மணிக்கு, அலங்கரிக்கப்பட்டுள்ள தெருக்களின் வழியாக ராஜா சாகிப், முனிசிபல் சேர்மனுடன், முனிசிபல் காரியாலயத்திற்கு வந்தார். ராஜா சாகிபைத் தரிசிப்பதற்காக 1 மணியிலிருந்தே ஜனங்கள் கூட ஆரம்பித்து விட்டனர். ஜனத்திரள் அதிகரிக்கத் தொடங்கவே முக்கிய கடைத் தெருவில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. குழந்தைகளும், ஸ்திரீகளும் மாடிகளின் மீதிருந்து கொண்டு ராஜா சாகிபைத் தரிசித்தனர். முனிசிபல் கட்டிடத்திலும் எள் விழ இடமில்லாமற்படி ஜனத்திரள் அவ்வளவு அதிகரித்திருந்தது. கூட்டத்தை சமாளிக்க முடியாமற் போயிற்று. போலீசாரும், பாடசாலை மாணவர்களும் கூட்டத்தினை ஒழுங்கு படுத்துவதில் மிகவும் பிரயாசை எடுத்துக் கொண்டனர். சுருக்கச் சொல்லுமிடத்து நந்தியால ஒரு திருவிழாத் தினம் போன்றே காணப்பட்டது. பக்கத்து கிராமங்களிலிருந்து கூட மக்கள் ராஜாசாகிபைக் கண்டு தரிசிக்க வந்திருந்தனர்.

நகரசபை உபசாரப் பத்திரம்

மாலை 5-30 மணிக்கு முனிசிபல் காரியாலயத்திற்கு ராஜா சாகிப் விஜயம் செய்தார். முனிசிபல் சேர்மன், கவுன்சிலர்கள், அதிகாரிகள் முதலியோர் ராஜா சாகிபை வரவேற்றனர். சேர்மன் ராஜா சாகிபிற்கு மாலை அணிவித்தார். முனிசிபல் இந்து பாடசாலை மாணவிகள் ஸ்தோத்திரப் பாக்கள் பாடியபின் திரு. ஜீ. குருநாதம் முனிசிபல் உபசாரப் பத்திரத்தை வாசித்தார்.

உபசாரத்திற்கு ராஜா சாகிப் தக்கவாறு பதிலளித்தார்.

பிறகு, அஞ்சுமான் கட்டிட திறப்பு விழாவை ஆற்றி வைத்து அவர்கள் உபசாரப் பத்திரத்திற்கும், தென்னிந்திய கலவுரிமைச் சங்கத்தின் உபசாரப் பத்திரத்திற்கும் தக்கவாறு பதிலளித்தார்.

வட ஆற்காடு ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு

வேலூரில் கூட்டம்

(நமது நிருபர்)

வேலூர், நவ, 13

வடாற்காடு ஜில்லா ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு நாம் முன்னர் அறிவித்தது போல் வாணியம்பாடியில் நடைபெற இடவசதி முதலிய சவுகரியங்கள் பொருத்தமாக இல்லை. ஆனதால், ஜில்லாவின் தலை நகரான வேலூரில் இம்மாதம் 26-ந்தேதி வியாழக்கிழமை நடத்துவதென்று வரவேற்புக் கமிட்டியார் முடிவு செய்து சென்னையி லிருக்கும் கட்சி தலைவர்களுடன் கலந்து யோசித்து முடிவு செய்து விட்டனர். கனம் பி. டி. ராஜன் அவர்கள் மகாநாட்டிற்குத் தலைமை வகிப்பதாக அன்புடன், ஒப்புக் கொண்டு விட்டதுடன் கனம் பொப்பிலி ராஜா அவர்கள் திறப்பாளராகவும் வந்து மகாநாட்டை ஆரம்பித்து வைக்க ஏற்றுக்கொண்டார். அன்று டாக்டர் நாயர் பெருமான் படத்தை கனம் குமார ராஜா எ. முத்தையா செட்டியார் அவர்கள் திறந்து வைப்பதென்றும் ஏற்பாடு செய்திருப்பதுடன், ஈரோடு திரு. ஈ. வெ. ராமசாமி நாய்க்கர் கொடி ஏற்றி வைப்பார். வரவேற்பு கமிட்டித் தலைவரான பென்ஷன். ரிஜிஸ்தரார் திரு. ஆர். பெரியசாமி முதலியார், காரியதரிசிகளான திருவாளர்கள்: வி. கிருஷ்ண செட்டியார் பி. ஏ., பி. எல்., குடியாத்தம், ஜீ. எம். அண்ணல் தங்கோ. பொக்கிஷதார், பி. ரங்கநாத முதலியார் ஆகியவர்கள் மகாநாட்டை சிறப்பாக நடத்த தீவிரமாக முயற்சித்து வருவதுடன் மாகாணத்தின் நானு பாகத்தில் இருக்கும் கட்சிப் பிரமுகர்களுடன் கடிதப் போக்குவரத்து செய்வதுடன், கட்சியில் அபிமானம் கொண்ட பிரமுகர்களையும், வாலிபர்களையும் வந்து உதவி செய்யுமாறு அழைப்பு அனுப்ப ஏற்பாடு செய்து வருகின்றனர். வரவேற்பு மெம்பர்களாக இருக்க அன்பு கொண்டவர்கள் ரூ. 3-0-0 செலுத்த வேண்டுமெனவும், பிரதிநிதிகளாக வர விரும்புகின்றவர்களுக்கு 1-0-0 ரூபாயும் விசிட்டர்கள் கட்டணம் 0-4-0 அணுவும் ஏற்படுத்தி இருக்கின்றனர். சென்னை சட்டசபை தேர்தல் நடைபெற சில மாதங்களே சமீபத்துள்ள முக்கியமான இச்சமயத்தில்ஜில்லா ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு இவ்வூரில் கூடுவதால் மெத்த சிறப்பாக இருப்பதுடன், அநேக முக்கியஸ்தர்கள் விஜயம் செய்வார்கள் என்று நம்பப்படுகிறது. அன்று மகாநாடு முடிந்தவுடன், கட்சியின் சார்பாக சட்டசபை அபேட்சகர்களை இந்த ஜில்லாவில் தேர்ந்தெடுத்தால், ஜெயிக்க கூடுமென்பதை கலந்து யோசித்து முடிவு செய்யப்போவதால் ஜஸ்டிஸ் கட்சி சார்பாக சட்டசபைக்கு நிற்க பிரியமுள்ள கனவான்களும் தவறாமல் வரும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். மகாநாட்டை நடத்த எந்த கொட்டகையில் வைத்தால் போதுமென்பதை முடிவு செய்த பின், இடம், காலம் முதலிய விவரங்கள் அறிவிக்கப்படும்.

ஜூடா சிங்கத்திற்குப் பதில் பெண் ஓநாய்

அட்டின் அபாபா ரயில்வே ஸ்டேஷனிற்கு வெளியில் நிறுத்தப் பட்டிருக்கும் "ஜூடா சிங்க" த்திற்குப் பதில் வெங்கலத்தினுல் செய்யப்பட்ட பெண் ஓநாய் சிலையொன்று கூடிய சீக்கிரம் ரோமிலிருந்து அட்டின் அபாபாவிற்கு அனுப்பப்படும். "ஜூடா சிங்கம்" ரோமிற்கு ஏற்றுமதி செய்யப்படும் [illegible] நிறுத்தப்படும்.

கீழத் தஞ்சையில் காங்கரஸுக்கு சாவு மணியா?

தேர்தல் மும்முரம்

திருவாரூர் நகரசபை தலைவர் கவனிப்பாரா?

(திரு. ரா. ரெத்தினசபாபதி)

திருவாரூர், நவ, 9

கீழத் தஞ்சை ஜில்லாவில் தேர்தல் விஷயம் அதிகமாக பரபரப்புடன் பேசப்படுகிறது. கீழத் தஞ்சை ஜில்லா போர்டை காங்கரஸ்காரர்கள் தாங்கள் கைப்பற்ற முடியாது என நன்கு தெரிந்திருந்தும் ஒவ்வொரு தொகுதிகளிலும் ஆட்களை நிறுத்த முடியாமற் போனுல் காங்கரஸுக்கு பெரிய அவமானம் வந்து சேரும் என எண்ணி, சொந்தத்தில் ஒரு பொறுப்பில்லாத ஆட்களை எல்லாம் நிறுத்தி இருக்கிறார்கள். அத்துடனல்லாமல் கீழத் தஞ்சையின் மானத்தைக் காப்பாற்ற மேலத் தஞ்சையிலிருந்து ஆட்களைக் கொண்டுவந்து இங்கு நிறுத்தி அப்படியாவது கீழ்த் தஞ்சையில் காங்கரசுக்கு வெற்றி கொண்டுவர முடியாதா என எண்ணுகின்றனர். பாவம்!

காங்கரஸ் இதுகாறும் கிளர்ச்சி செய்ததெல்லாம் தேர்தலுக்காக என்பது எந்த மூழ மூடனுக்கும் தெரிந்த விஷயம். அவர்கள் நோக்கமெல்லாம் பதவி வேட்டையாடுவதே. பாமர ஜனங்களிடம் "சுயராஜ்யம் வருவதற்கு ஓட் கொடுங்கள்" என்றும் காந்தி ஆணை, காங்கரஸ் ஆணை என்றெல்லாம் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள் அது மட்டுமா? வீடு வீடாக இப்போதே புக ஆரம்பித்து விட்டனர். ரோடுகளிலெல்லாம் ஒரு ஐம்பதோ, அறுபதோ பெயர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு ஜஸ்டிஸ் கட்சியாளரை திட்டி விட்டு மகாநாடு பிரமாதமாக நடந்தது என்று எழுதி விடுகிறார்கள். இதை தேசியப் பத்திரிகைகள் மோசைக் கொட்டை எழுத்துகளில் விளம்பரம் செய்து விடுகின்றன.

இது சமயம் ஜஸ்டிஸ் கட்சி தோழர்கள் வீட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கலாமா? அல்லது மோட்டாரில் உல்லாசமாய்ப் பிரயாணம் செய்தால் போதுமா? பாமர ஜனங்களிடம் அவர்களுடைய காங்கரஸ் மோகத்தை ஒழிக்கவும், ஜஸ்டிஸ் கட்சியின் மேலிருக்கும் தவறுன அபிப்பிராயத்தை நீக்கவும் நாம் பிரசாரம் செய்ய வேண்டாமா? பிரசாரம் பிரசாரம் என்று எவ்வளவோ சொல்லியும் காணுது வரை திருவாரூரில் பிரசாரம் உண்டா? கூட்டம் உண்டா? மகாநாடுகள் உண்டா? திருவாரூரில் தென்னிந்திய கலவுரிமைச் சங்கம் உண்டா? ஏன் இன்னும் ஆரம்பிக்கப்படாமலிருக்கிறது. மகா நாட்டை இந்நகர் சேர்மன் தோழர் ராமானுஜ முதலியார் அவர்களை நடத்தப் போவதாகச் சொல்லப்பட்டது. காணுதுவரை நடத்தப்படவில்லை. இவ்வாறு பேசாமலிருந்துவிட்டு எலக்ஷனுக்கு 10 நாள் முன்னதாக பாமர ஜனங்களை, அரசியல் அறிவில்லாத மக்களை துன்புறுத்துவதால் என்ன பயன் சென்றது செல்லட்டும். இன்றே பிரசாரத்தை துவக்குங்கள். ஆங்காங்கு பிரசங்கங்களை [illegible]கள். ஜஸ்டிஸ் கட்சியின் வெற்றிக்கு சந்தேகப்பட வேண்டியதில்லை முடிவாக இன்றைய பிரபலஸ்தர்களுக்கு ஒரே வார்த்தை. இதுகாறும் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்துவிட்டு இன்று தேர்தலை புத்தேசித்த காங்கரசுக்குள் புகுந்துகொண்டு ஜஸ்டிஸ் கட்சியின்மேல் கல்லெடுத்துப் போடுவதும், ஜஸ்டிஸ் கட்சி பிரபலஸ்தர்களின் தனிப்பட்ட விரோதங்களை எல்லாம் உபயோகித்துக் கொள்ள நினைப்பது மிக ஆபத்தும், அபாக்கியத்தனமானதுமாகும் என்பதை [illegible]. காங்கரசுக்குக் கொடுக்கும் ஒவ்வொரு ஓட்டும் பார்ப்பனருக்கு [illegible] ஜஸ்டிஸ் கட்சிக்குக் கொடுக்கும் ஒவ்வொரு ஓட்டும் பார்ப்பனர்களை [illegible] கொடுப்பதாகும் என்பதை இப்போது நினைப்பூட்டுகிறேன்.

பார்ப்பனர் மணியம் பொல்லாதது

சென்னை நகரசபை அநியாயம்

(குடு குடுப்பை)

காங்கரஸுக்குள்ளிருந்தே சில போலிக் காங்கரஸ் பார்ப்பனர் தமிழருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்து, தமிழரை மடக்க சதி செய்து வருவதாகச் சொக்கம்மா கூறுகிறுங்கோ...பகவதி...பதறித் துடிக்கிறுங்கோ. வேலூரில் நடை பெறப்போகும் தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித் தேர்தலில் மீண்டும் பார்ப்பன ஆதிக்கத்தைக் கொண்டு வர அந்த ரகத்தில் வேலைகள் ஜோராக நடக்கிறதாம்! இந்தப் போலிக் காங்கரஸ் பார்ப்பனரின் மகேசசக்திக்கொண்டு, பதவிக்காக ஓடிவிலையும் பார்ப்பனப் பக்தர்கள், பதவி வேட்டைக்காரர், உண்மைத் தமிழ் இரத்தம் இல்லாத பேடித் தமிழர்கள், அந்தப் பார்ப்பனர் சூழ்ச்சிக் குடக்கையாக இருந்து கொண்டிருக்கிறுர்களாம். அம்மான்...பகவதி...பார்ப்பனர் வெறும் வார்த்தையில மயங்கி, அவர்கள் பட்டில் சிக்குண்டு கிடக்கிறுர்களென ஒரு புகார் கிளம்பியிருக்கிறது. சென்னைக் கார்ப்பொரேஷன் மேயர் தேர்தலில் ஒரு சம்பவம் நடந்ததாம். வழக்கம் போல் சென்னை மேயர் பதவிக்கு இவ்வருடம் ஒரு இந்து தமிழரை மேயராகத் தேர்ந்தெடுத்து விட்டார்கள். அந்த மேயர் பதவிக்கு ஆதிகேசவலு நாயக்கர் தலையை நீட்டினராம்! அவர் தலையைத் தட்டிப் புதுக் காங்கரஸ் பக்தர் ஸ்ரீராமுலு நாயுடு காரை மேயராகத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனுல், டெபுட்டி மேயர் பதவிக்குத் தான் பெரும் தகராறு ஏற்பட்டதாம். தமிழரில் நூற்றுக்கு 2-பேர்கள் கூட இல்லாத பார்ப்பனர், சென்னை கார்ப்பொரேஷனில் சுமார் 14 பேர் களிருக்கிறுர்கள் ஆகவே, மெஜாரிட்டியார் பார்ப்பனராக இருப்பதால், டெபுட்டி மேயர் பதவிக்கு ஒரு பார்ப்பனரையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கார்ப்பொரேஷன் பார்ப்பன குலாங்கள் பேசிக் கொண்டனவாம். டெபுட்டி மேயர் பதவிக்குத்தன்னையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று மீண்டும் ஆதிகேசவலு நாயக்கர் வற்புறுத்தினராம். பதவி மோகம் கொண்ட இவரைப் பார்ப்பனர் தட்டிவிட்டுப், பார்ப்பனர் பக்தரும், பார்ப்பனர் வார்த்தைகளையே வேதவாக்காகக் கொண்டு பார்ப்பனரைத் தஞ்சமடைந்திருக்கும் திரு. பக்தவத்சல முதலியாரை டெபுட்டி மேயர் பதவிக்குத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தார்களாம்! இந்த சூழ்ச்சியும், வதந்தியும் உண்மையெனின் இதைக் கண்டு, தமிழர் உள்ளம் பதறித் துடிக்கும்...சொக்கம்மா...உண்மைத் தமிழரின் இரத்தம்கொதிக்கு மென்பதறுதுச் சந்தேகமில்லை. பகவதி...காங்கரஸ் பெயரைச் சொல்லிக் காங்கரஸுக்குள்ளாகவா இந்தச் சூழ்ச்சி நடக்கவேண்டும்? இது மானங்கெட்ட சூழ்ச்சி. தமிழரே உஷார்! அம்மான் பகவதி...தமிழரை நீயே தட்டியெழுப்பி விடுவாயாக...குடு...குடு.

காங்கரஸில் போலிகளும் வெறும் வேஷதாரிகளும் மலிந்துவிட்டார்கள். இவர்களைக் காங்கரஸிலிருந்து வெருட்டியடிக்க வேண்டும். இவர்களால் தான் காங்கரசுக்குக் கெட்ட பெயர். தமிழர் காங்கரஸை புனிதப்படுத்த வேண்டும். போலிகளை விரட்டியடித்து உண்மைக் காங்கரஸ் பக்தர்கள் காங்கரஸைக் கைப்பற்ற வேண்டும். சோழமுன்ன வீர இரத்தம் ஓடும் உண்மைத் தமிழர் உடனே முன்வருவார்களாக! சொக்கம்மா... சென்னையிலேயே இந்தச் சதி நடந்ததென்றால், வர்-வராகச் சுருதி. அடுத்த சட்டசபைத் தேர்தலுக்கு அபேட்சகர்களை தேர்ந்தெடுக்கும் [illegible] இன்னும் என்ன சூழ்ச்சி செய்வார்களோ தெரியவில்லை... அம்மம்மா! இந்தப் பார்ப்பனர் மணியம் பொல்லாதது! இவர்கள் [illegible] பிரேரணை, அந்தப் பிரேரணைகளே [illegible] கொண்டு போய் [illegible] பார்ப்பனர், பார்ப்பனன் என்ற தான் அடிக்கும் போனது! தூக்கு, தமிழா! விழிப்பாய் இருக்க. ஏமாந்து விடாதே! வேண்டாம்.

"தமிழ் மணி"

ஜஸ்டிஸ் வீரரின் வெற்றி

காங்கரஸுக்கு இழவு ஓலை

தோழர் குமாரசாமி ராஜா ஒப்பாரி

(எஸ். கே. முத்தசாமித் தேவர்)

ஸ்ரீ வில்லிபுத்தூர், நவ, 11

ராமநாதபுரம் ஜில்லாபோர்டு தேர்தலில் ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலூகா சம்மந்தப்பட்ட, 7-ஸ்தானங்களுக்கும் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக அங்கத்தினர்கள் நிறுத்துவதற்காக கனம் சேத்தூர் ஜமீன்தாரவர்கள், தகுந்த ஏற்பாடுகள் செய்து வருவதாகத் தெரிந்த காங்கரஸ் தலைவர், தோழர் பி.எஸ். குமாரசாமி ராஜா எம். எல். ஏ அவர்களுக்கும், இதர காங்கரஸ் வீரப்புலிகளுக்கும், மனதில் திகில் உண்டாகிவிட்டது. கனம் ஜமீன்தாரவர்களோ, முன் வைத்த காலைப் பின் வைக்காத வைராக்கியமுடைய வீரராவர். அவருடன், காங்கரஸ் போட்டியிடுவதென்றால் காங்கரசுக்கு குழிதோண்டிய பொறுப்பு தங்களையே சாருமெனக் கருதி, தோழர் குமாரசாமி ராஜா அவர்கள் தனது சகோதரரான, பி. எஸ். ராமசாமி ராஜா அவர்களையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு சேத்தூர் போய், கனம் ஜமீன்தாரவர்களிடம் சமாதானம் பேசியதில் கனம் ஜமீன்தாரவர்கள் நிற்கும் ஸ்தானங்களுக்கு காங்கரஸ் போட்டியிடுவதில்லை என்றும், ராஜபாளையம் சர்க்கிளிலுள்ள ஒதுக்கப்பட்ட ஸ்தானத்தை ஜஸ்டிஸ் கட்சிக்கு விட்டுக் கொடுத்து விடுவதென்றும் பொதுத் தொகுதியிலுள்ள ஸ்தானத்தில தோழர் குமாரசாமிராஜா அவர்கள் நின்று கொள்வதென்றும் ஆகவே, ஜஸ்டிஸ் கட்சிக்கு இரண்டு அங்கத்தினர்களை விட்டுக் கொடுத்துவிட்டு காங்கரஸ் ஒரு ஸ்தானம் பெற்றுக் கொள்வதென்று, ஒப்பந்தம் பேசி முடிவு செய்தபின், நியமனச் சீட்டுத் தாக்கல் செய்த தினத்தில் கனம் ஜமீன்தாரவர்களிடம் காங்கரஸ் தலைவர் தோழர் குமாரசாமி ராஜா செய்துவந்த ஒப்பந்தத்தை மீறி, மறைமுகமாக 3-மணி 50-நிமிடத்திற்கு திடீர் என்று, இதற்கு முன் காங்கரஸ் பொது கூட்டங்களில் கழுதையை கொண்டு வந்துவிட்டு இதற்கும் சுயராஜ்ஜியம் கொடுங்கள் என்று கேட்கும், தேசபக்தர் தேசிகரு ராஜா என்னும் ஓர் பேர் வழியை காங்கரஸ் சார்பாக ஜஸ்டிஸ் தலைவர் கனம் ஜமீன்தார் அவர்களுக்குப் போட்டியாக நியமனச் சீட்டு தாக்கல் செய்திருப்பதாக தெரிந்த மறுநிமிடமே, கனம் ஜமீன்தாரவர்களின் நியமனசீட்டு ஒன்று தோழர் குமாரசாமி ராஜாவுக்கு எதிரியாகத் தாக்கல் செய்யப்பட்டது. கனம் ஜமீன்தாரவர்களை ஏமாற்றி தாம் தப்பித்துக் கொள்ளலாம் என்று சொப்பனம் கண்டு கொண்டிருந்த காங்கரஸ் வாலாக்களின் முகம் இஞ்சி தின்ற...... போல் ஆகிவிட்டது. தோழர் குமாரசாமி ராஜாவுக்கு நெஞ்சு படபடத்தது. தனக்கு போட்டியாக வந்த ஜமீன்தாரவர்களைப் பற்றிய திகில் பிடித்துக்கொள்ளவே, மோட்டார் வண்டியை ராஜபாளையத்துக்கு முடுக்கினர். தனது சகோதரர் தோழர், பி. எஸ். ராமசாமி ராஜா அவர்களை, காரில் உட்கார வைத்தார், திரும்பவும் சேத்தூர் போய் 'மகாராஜாவே தங்களிடம் செய்த ஒப்பந்தத்தை மீறியதற்காக மன்னியுங்கள். தங்களுக்குப் போட்டியிட்டது எங்கள் குற்றம். இதோ இருக்கிறது வாபீஸ் பிடியுங்கள்' என்றுகூறி ஒப்பாரி வைத்ததைக் கண்ட நமது ஜமீன்தாரவர்கள் மனம் உருகி நியமனசீட்டை வாபஸ் பெற்றுக் கொள்வதாக கூறினர். தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென நினைத்த தோழர் குமாரசாமி ராஜா அவர்கள் காங்கரசுக்கு ஏற்பட்ட சமாசாரத்தை தெரிவிக்க சென்னையைப் பார்த்து புறப்பட்டு விட்டார்.

கனம் ஜமீன்தாரவர்களோ, ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வந்து அபேட்சகர் சீட்டு வாபஸ் தினத்தில் பக்கத்து கிராமங்களிலுள்ள எல்லா முக்கியஸ்தர்களையும் வரவழைத்து தாம் ஜஸ்டிஸ் கட்சிக்கே உழைப்பதாகவும், எல்லா பொதுமக்களும் ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகர்களையே ஆதரிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். பொது ஜனங்களோ, முழு ஆதரவையும் ஜஸ்டிஸ் கட்சிக்கே கொடுப்பதாக வாக்களித்தார்கள். ஸ்ரீவில்லிபுத்தூர் ஜஸ்டிஸ் கட்சித்தலைவர் தோழர் எஸ். பி. சிவசாமி நாடார் அவர்களும், தோழர்கள்: எஸ். கே. முத்துசாமித்தேவர், சக்கையப்பநாடார் முதலியவர்களும் தேர்தல் வேலையை மிக மும்முரமாக செய்து வருகிறார்கள்.

சென்னை இளைஞர் கழகம்

இரண்டாவது ஆண்டு விழா வைபவம்

டாக்டர் அப்பாதுரை சொற்பொழிவு

சென்னை, நவ, 14

சென்னை, ஜார்ஜ் டவுனிலுள்ள இளைஞர் கழகத்தின் இரண்டாவது ஆண்டு விழா வைபவம் நேற்று மாலை, புரோகிரசிவ் யூனியன் ஹாலில் நடைபெற்றது. திவான் பகதூர் எஸ். ஈ. ரங்கநாதம் தலைமை வகித்தார். அது சமயம் லயோலா கலாசாலையைச் சேர்ந்த டாக்டர் அப்பாதுரை 'புதிய அரசிய''லைக் குறித்து ஒரு அரிய சொற்பொழிவு ஆற்றினர்.

தலைவர் முகவுரைக்குப் பின் கழகக் காரியதரிசி திரு. ஜி. பழனி ரத்னம், கழகத்தின் 1935-36-ம் ஆண்டு அறிக்கையை வாசித்தார். திரு. கே. வி. வீரராகவன் இளைஞர் பார்லிமெண்டின் அறிக்கையை வாசித்தார்.

அறிக்கைகள் வாசிக்கப்பட்ட பின் கழக பொக்கிஷதாரரான திரு. என். ராஜபூஷணம், சமீபத்தில் நகரசபை தேர்தலில் வெற்றி பெற்ற கழகத் தலைவர் சி. பாசுதேவ், உபதலைவர், திரு. ஆல்பர்ட் ஜேசுதாசன், கழக அங்கத்தினர் திரு. என். சங்கரன் முதலியோரைப் பாராட்டிப் பேசினர். பாராட்டு மொழிகளுக்கு திரு. என். சங்கரன் தக்கவாறு பதிலளித்தார்.

பிறகு டாக்டர் அப்பாதுரை "புதிய அரசிய"லைக் குறித்து சொற்பொழி வாற்றுகையில், புதிய அரசியலில் "பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களும், 600 இந்திய சமஸ்தானங்களும் இணைக்கப்பட்டிருக்கிறதென்றும், மாகாணங்களில் இரட்டையாட்சிக்குப் பதில் பூரண சுயாட்சி வழங்கப் பட்டிருக்கிறதென்றும், 350 லக்ஷம் மக்கள் வாக்குரிமை பெற்றிருக்கின்றனரென்றும், கவர்னர்களுக்கும்; வைசிராய்க்கும் விசேஷ அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருந்த பொழுதிலும், மந்திரிகள் தங்கள் நிர்வாகத் திறமையினல் அவைகளுக்கு அவசியம் ஏற்படாதபடிச் செய்யக் கூடுமென்றும், புதிய அரசியலை ஏற்று நடத்துவதே பலன் தருமென்றும் கூறினர்.

பம்பாய் பார்ப்பனரல்லாதார்

தேர்தல் முஸ்தீப்பு மும்மரம்

தார்வார், நவ, 12

காங்கரஸ் கட்சி, சமூக விஷயங்களிலும் மற்றும் சில்லறைப் பிரச்னைகளிலும் ஏற்பட்டிருக்கும் தகராறுகளைத் தீர்த்துக் கொண்டிருக்கும் போது, இங்குள்ள பார்ப்பனரல்லாதார் ஒன்று சேர்ந்து தேர்தல் சம்பந்தமான விஷயங்களை முன்னிட்டு அதி தீவிரமாக உழைத்து வருகிறார்கள். தங்கள் கட்சியின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கு முன்னர் காங்கரஸ் கட்சியின் சார்பாக நிற்கும் நபர்களின் முடிவான ஜாப்தாவை எதிர் பார்க்கின்றனர். திவான் பகதூர் கம்பிளி அவர்கள் நேர்முகமாக அந்த ஜில்லாவில் தேர்தல் முஸ்தீபுகளை நடத்தி வருகிறார். தார்வார் தெற்கு வடக்கு தொகுதிகளுக்கு பெண்கள் ஸ்தானத்தைச் சேர்த்த இரு பிரதிநிதிகளை நிறுத்த பார்ப்பனரல்லாத கட்சியார் முடிவு செய்திருக்கிறார்கள். திருவாளர்கள்: ராவ்பகதூர் என். என். அங்காடி அவர்களும், எம். எஸ். பாளி அவர்களும் மேற்படி கட்சியின் சார்பாக பெல்காம் தொகுதிக்கு அபேட்சகர்களாக நிற்பார்களெனத் தெரிகிறது.

சினிமா குறிப்புகள்

பிராட்வே

"அமர் ஜோதி" என்ற ஹிந்தி பேசும் படம் இங்கு இன்று முதல் நான்காவது வாரமாக நீடிக்கப்பட்டிருக்கிறது.

சரஸ்வதி

மிஸ். நாதியா நடிக்கும் "ஹண்டர் வாலி" என்ற உருது பேசும் படம் இங்கு நேற்று முதல் காண்பிக்கப்பட்டு வருகிறது.

வெஸ்ட் எண்டு

சென்ற மூன்று வாரமாக காண்பிக்கப்பட்டுவரும் "பீஷ்மா" என்ற தமிழ் பேசும் படம் இங்கு இன்று முதல் நான்காவது வாரமாக நீடிக்கப்பட்டிருக்கிறது.

பிரைட்டன்

தண்டபாணி தேசிகர் நடிக்கும் "பட்டினத்தார்" என்ற உயரிய தமிழ் பேசும் படம் இங்கு இன்று முதல் காண்பிக்கப் படும்.

கினிமா

"விஸ்வாமித்திரா" என்ற தமிழ் பேசும் படம் இங்கு இன்று முதல் மற்றொரு வாரத்திற்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

பாலஸ் டாக்கீஸ்

இன்று முதல் "சில்வர் கிங்" என்ற பேசும் படம் இங்கு காண்பிக்கப்படும்.

கெயிட்டி

சினிவாணி சினிடோனில் தயாரிக்கப்பட்ட "மீராபாய்" என்ற தமிழ் பேசும் படம் இங்கு இன்று முதல் காண்பிக்கப்படும். மிஸ். ராஜலக்ஷ்மி, மிஸ். அக்கமுத்து, சி. வி. வி. பந்துலு, மாஸ்டர் நாராயணன் முதலியோர் இதில் நடிக்கின்றனர்.

ஸ்டார் டாக்கீஸில் காண்பிக்கப்பட்டு வரும் "அச்சுத் கன்யா" என்ற படத்தில் நடிக்கும் தேவிகா ராணி.

செலக்ட்

சபிதா தேவி நடிக்கும் "ஜீவன் லதா" என்ற ஹிந்தி பேசும் படம் நேற்று முதல் இங்கு காண்பிக்கப்பட்டு வருகிறது.

வாலிப பாரிஸ்டரான ஜீவன், மகாபலேஸ்வரத்தில் தன் விடுமுறை காலைக் கழித்துக்கொண்டிருக்கையில் ஒரு தினம் லதா என்ற அழகிய பெண்ணை சந்தித்து காதலுறுகிறான் ஆனால் பின்னர் லதா காட்டியக்காரி எனத் தெரிந்ததும் மனமுடைபட்டு அவளை விட்டு ஜீவன் நீங்குகின்றான். ஒரு சமயம் ஜீவன் மோட்டாரில் அகப்பட்டு லதாவால் உபசரிக்கப் படுகிறான். பல கஷ்டங்களை அனுபவித்தபின்னர் காதலரிருவரும் ஒன்றுகூடி வாழ்கின்றனர்.

ராக்ஸி

சார்லி சாப்ளின், பாலட் காடார்ட் நடிக்கும் "மாடர்ன் டைம்ஸ்" என்ற ஆங்கில பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும்.

ஸ்டார்

பம்பாய் டாக்கீஸாரின் "அச்சுத் கன்யா" அல்லது "ஹரிஜனப் பெண்" என்ற உருது பேசும் படம் நேற்று முதல் இங்கு 3-வது வாரமாக நீடிக்கப்பட்டிருக்கிறது. தேவிகா ராணி, அசோக குமார் முதலியோர் இதில் நடிக்கின்றனர்.

* * *

சினிமாப் படங்கள் முதலில் அசையும் படங்களாகவும், பின்னர் பேசும் படங்களாகவும் மாறின. இப்பொழுது அதில் வர்ணக் காட்சிகளும் காட்ட முயற்சிக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி அக்காட்சிகள் காண்பிக்கப் படும்பொழுது அதற்கேற்ற வாசனையை யுண்டுபண்ணும் முறையையும் இங்கிலாந்தில் இருவர் கண்டு பிடித்திருக்கின்றனர். உதாரணமாக சமையலறைக் காட்சி காண்பிக்கும் பொழுது சமையல் வாசனை வீசும். அப்படியே மற்றவற்றிலும்.

விரைவில் வெள்ளித் திரையில் வெளிவரும்
— மகத்தான ஆரம்ப தினத்தை எதிர்பாருங்கள்! —

பிரபல வியாபாரியும், காலஞ் சென்ற
ஸ்ரீமான் V. S. K. முத்துராமய்யர்
அவர்களின் குமாரர்
Mr. V. S. M.
ராஜாராமய்யர்
அவர்கள்
கதாநாயகராக நடித்த

டைரக்டர்:
டி. பி. கைலாசம்,
B.A., A.R.C.Sc., (London)

வேல் பிக்சர்ஸ் ஸ்டுடியோ
வில் தயாரித்தது.

"குட்டி"
அல்லது
சாமாஜக சித்திரம்
என்னும் சமூக சீர்திருத்த உயர்தர தமிழ் பேசும் படம்.

படம் வேண்டுவோர்:—
தந்தி: 'JARIVASTAR'
V. S. டாக்கீஸ்,
மதுரை.
சொந்தக்காரர்:
V.S.K. முத்துராமய்யர் & சன்ஸ்

வெற்றிக்கு
மேல் வெற்றி !!!

நகர சபைத் தேர்தலிலும்
சட்டசபைத் தேர்தலிலும்
வெற்றி !

தமிழ்நாட்டுச் சினிமா உலகில்
வெற்றி காண்பதெக் காலமோ
என்றுதானே ஏங்குகிறீர்கள் ?

இதோ!
உங்கள் ஆர்வத்தைத் தணிக்கச்
சென்ற விடமெல்லாம் வெற்றிக்
கொடி நாட்டி வரும்

சத்தியசீலன்

டைரக்டர்:
B. சம்பத்குமார்

M. K. தியாகராஜ பாகவதர்
M. S. தேவசேனு
M. L. நாராயண ராவ்
இன்னும்
பல பிரபல நடிகர்கள் !!

படம் வேண்டுவோர்:— 'தந்தி: தியாகராஜ்'
தியாகராஜா டாக்கீஸ், திருச்சி.

எதிர்பாருங்கள் !

அகத்தின் இருளை நீக்கும்
இகத்தின் பயனை அளிக்கும்
ஜெகத்தில் கற்பை விளக்கும்
சகத்தின் நிலையைப் பயக்கும் !!!

புண்ணியக் காட்சி

சதி அனுசூயா

பிரேம் சேத்னு அவர்களின் சிறந்த டைரக்ஷனில்
உயரிய முறையில்
கோவை பிரிமியர் சினிடோனில்
தயாராகிறது.

*

நடிகர்கள்:
G. N. பாலசுப்ரமணியம் B.A., (Hons)
(பாமா விஜயம் நாரதர்)
M. V. மணி (சதி லீலாவதி)
பண்டரிபுரம் ராமகோடி ஸ்வாமிகள்
இன்னும்
T. N. ஞானலக்ஷ்மி
(நாட்டின்ஸ் சதி அனுசூயா)
R. சகுந்தா பாய்
ராஜேஸ்வரி
சகுந்தலா
பட்டம்மாள்

For Booking Apply to :—
M. A. S. CHELLAM & Co.,
Premier Cinetone Ltd., COIMBATORE.

பெண்களுக்கு சம சொத்துரிமை

14-வயது வரையில் கட்டாயக் கல்வி

வரதட்சணை வழக்கம் ஒழிய வேண்டும்

எம். ஸி. ராஜா மசோதாவுக்கு ஆதரவு

தலைவி அலர்மேலுமங்கைத்தாயாரம்மாள் பிரசங்கம்

விருதுநகர் மாதர் மகாநாட்டுத் தீர்மானங்கள்

(ஒரு நிருபர்)

விருதுநகர், நவ, 9

தமிழ்நாடு மாதர் மகாநாடு இம்மாதம் 8-ந்தேதி யன்று மிகுந்த உற்சாகத்தினிடையே விருதுநகரில் நடைபெற்றது. சென்னை ஸ்ரீமதி கே. அலமேலுமங்கைத் தாயாரம்மாள் எம். எல். ஸி. மகாநாட்டிற்கு தலைமை வகித்தார். மதுரை தேச சேவகி ஸ்ரீமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம் (மதுரை ஜில்லா ஹரிஜன சேவா சங்க காரியதரிசி திரு. பி. கே. ராமாச்சாரியின் பத்தினியார்) மகாநாட்டை திறந்து வைத்தார். எல்லா ஜில்லாக்களிலிருந்தும் பிரதிநிதிகள் மொத்தம் 500 பேர்கள் வரை வந்திருந்தனர்.

அன்று முற்பகல் 9-30 மணிக்கெல்லாம் மகாநாட்டு தலைவரும், திறப்பாளரும் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் டிரெயினில் வந்து சேர்ந்தனர். மகாநாட்டின் உபசரணை கமிட்டியாரும் மாதர் சங்க நிர்வாகிகளும் ரயிலடியில் தலைவர்களை தக்கபடி வரவேற்றார்கள். யானை, கொடி முதலிய விருதுகளுடனும், தக்க மேளவாத்தியங்களுடனும் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். நகர் க்ஷத்திரிய பெண் பாடசாலை கட்டிடத்தில் மகாநாட்டிற்காக அலங்கார பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. பெண் மக்களின் முன்னேற்ற அவசியம்பற்றி வற்புறுத்தும் வசன மொழிகள் பொறிக்கப்பட்ட அழகிய போர்டுகள் ஏராளமாக தொங்கவிட்டிருந்தன.

திறப்பு விழா

'சிறந்திடும் சேவை செய்வோம்' என்ற மாதர் ஒற்றுமை கீதம்பாடப்பட்டு மகாநாடு ஆரம்பமானது. ஸ்ரீமதிகள்: டி. பத்மாவதி, உ. ராஜம்மாள் ஆகியவர்கள் கேட்டுக்கொள்ள மதுரை தேச சேவகி ஸ்ரீமதி பி. கே. ஆர். லட்சுமி காந்தம் மகாநாட்டை திறந்து வைத்து பேசினார். இப்படிப்பட்ட மகாநாடுகள் எவ்வளவோ அவசியமாக இருந்தாலும் மிகவும் அபூர்வமாயிருக்கின்றதென்றார். பெண்கள் ஒன்று கூடி தாங்கள் முன்னேறும் வழிகளை ஆலோசித்து அதன்படி வேலை செய்யவில்லை என்றால் அவர்கள் இன்னும் கற்பகோடி காலம் அறியாமையில் மூழ்கி அறிவிலிகளாகவும், அடிமைகளாகவுமிருக்க நேரிடுமென்பதில் சந்தேகமே இல்லையெனத் தெரிவித்தார். வீட்டிலும், வெளியிலும் சுதந்திர மற்று கல்வி வாசனை சிறிது மின்றி சமூகக்கொடுமைகளால் நசுக்கப்பட்டு பல விதங்களில் இழிவுற்று வாழ்ந்து வருகின்ற இன்றைய பெண் சமூகத்தை நினைக்கின் உடல் நடுங்குகின்றது; உள்ளம் பதைக்கின்றது. என்று அன்னார் கூறியது உண்மையில் மிக உருக்கம் நிறைந்த இடமாகவே இருந்தது. நெருக்கடியான இச் சந்தர்ப்பத்தில் பெண்கள் ஒவ்வொருவரும் தன்னுடைய கடமையை உணர வேண்டாமா எனக்கேட்டார்.

மாதர் கல்வி

'கண்களை யொத்த கல்வி புருஷர்களை போல மாதர்களுக்கும் அவசியம் வேண்டும். புருஷர்கள் மட்டும் படித்துவிட்டு பெண்கள் படியாமலிருந்தால் ஒரு உடலில் பாதி உயிருடனும், மறுபாதி உயிரன்றியும் இருப்பதற்கொப்பாகும். படித்த பெண்கள் வித்யா கர்வத்தினால் பெரியோர்களுக்கு பணிந்து நடக்க மாட்டார்களென்றும், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய பெண்களின் சிறந்த குணங்களை அனுஷ்டிக்க மாட்டார்களென்றும், ஒழுக்கம் குறைந்து விடுவார்களென்றும் சிலர் சொல்லுகிறார்கள். இது கல்வி சரியான முறையில் போதிக்கப் படாததின் பலனே யொழிய கல்வியின் குற்றமல்ல. முன்கால முறைப்படி கல்வி கற்ற சீதை, சாவித்திரி, மைத்ரேயி போன்ற பெண்கள் கல்வி பதிவு வொழுக்கம் ஆகிய இவைகளில் சிறந்து விளங்கவில்லையா? சிலர் ஒழுக்கத்திலும், நடத்தையிலும் தவறவும் செய்கிறார்கள். அவர்கள் கல்விகற்றாலும் கற்காவிட்டாலும் தவறத்தான் செய்வார்கள். சில சமயங்களில் காற்று மழை, வெயில் மனித சமூகத்திற்கு கெடுதல் விளைவித்து விடுவதினால் அவைகளை வேண்டாமென்று சொல்வதில் அர்த்தமெதுவுமிருக்க முடியுமா? பெண்கள் கற்றிருந்தால் தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளை உயர்ந்த வீரர்களாகவும், சிறந்த தியாகிகளாகவும், உன்னத தேச பக்தி நிறைந்தவர்களாகவும் செய்து விடுவார்கள். இதன் மூலம் அவர்கள் எவ்வளவோ தேச கைங்கரியத்தில் உழைத்தவர்களாகி விடுகிறார்கள். நாட்டின் நாளைய பிரஜைகளான இன்றைய இளம் பாலர்களை விஷயம் நிறைந்த போதனைகளால் பக்குவம் செய்து விடுவார்கள். மாதர்கள் கல்வி பெற்றிருந்தால் தங்கள் நாதர்களுக்கு மந்திரிகளைப்போல புத்தி சொல்லியும், காரியதரிசியைப்போல குடும்பநிர்வாகம் செய்தும், கணக்கர்களைப் போல வீட்டு கணக்குகளை வைத்துக் கொண்டும், தாயைப் போல் புருஷர்களை போஷித்தும், வைத்தியரைப்போல உடல் நலத்தை கவனித்தும், சங்கீத வித்வானைப்போல் ரசமான பாடல்களைப் பாடி மனமகிழச் செய்தும் பேரானந்தத்தை அளிப்பார்கள். மாதர்களுக்கு கல்வி கற்பித்து வைக்காமல் அவர்களிடம் சிறந்த அறிவும், நிறைந்த ஒழுக்கமும், மிகுந்த ஆற்றலும் எதிர்பார்ப்பது காசுக்கொரு குதிரையும் வேண்டும், அது காற்றாய் பறக்கவும் வேண்டும் என்ற கதையாகத்தான் இருக்கின்றது. அன்றியும் பெண்களுக்கு இன்று கொடுக்கப்படும் கல்வியோ அன்னிய பாஷையிலும் ஒழுக்கம், தர்க்கம் நீதி இவைகளில் பல குறைபாடுகளுடனும் ஆடவர்களுக்கும் பெண்களுக்கும் ஒரேவிதமாக இருந்து வருகின்றது. இதை நீக்கி புராதன குருகுல முறைப்படி நமது தாய்பாஷையில் மாதர்களுக்கு பிற்கால வாழ்விற்கு உபயோகப்படும் விஷயங்களாகிய குடும்ப நிர்வாகம், சிசு பராமரிப்பு, இலகு வைத்தியம், சுகாதாரம், சமையல், சங்கீதம் ஆகியவைகளைப் போதித்து சிறந்த துணைவிகளாகவும், உயர்ந்த தாய்மார்களாகவும் ஆக்க வேண்டும். படித்த பெண்கள் தங்களை சுற்றி உள்ள மற்ற பெண்டுகளின் அறிவை விருத்தி செய்யும் சேவையில் ஈடு படவேண்டும்.

பால்ய விவாகக் கொடுமை

அடுத்தபடியாக மாதர்கள் முன்னேற்றத்தை வேகத்துடன் தடுத்துக் கொண்டிருப்பது சமூக கொடுமை. பால்ய விவாகத்தின் கோரத்தைப் பற்றி விவரமாக நான் கூற வேண்டியதிருக்கின்றது. விதவா விவாகமாவது செய்ய வேண்டும். அல்லது பால்ய மணமாவது நிறுத்தப்பட வேண்டும். பால்ய விவாகம் அறவே நடக்கா வண்ணம் சாரதா சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும். சர்க்கார் இவ்வேலையை தங்கள் இலாகாவுடன் சேர்த்து பார்க்க வேண்டும். சில 'கட்டுப்பாடுகளுடன் விரும்புகின்றவர்கள் மாத்திரம் விதவா விவாகம் செய்து கொள்ள அனுமதி தரவேண்டும். இன்றேல் பெண் சமூகத்தின் பலவீனம் விருத்தி அடைந்து விரைவில் நாசமடைந்து விடுமென்பதை சோதரிகள் உணரவேண்டும். புருஷன் பல தடவைகளில் தெரிந்து செய்யுமொரு குற்றம் பெண் ஒரு தரம் தெரியாமல் செய்து விட்டால் அதற்கு விதிக்கப்படும் தண்டனை அளவு கடந்து சொல்ல இயலாது. புருஷர்களுக்கொரு நீதியும், பெண்களுக்கொரு நீதியுமான இக்கோர பாரபட்சம் ஒழிய வேண்டும். எனப் பேசி முடித்தார்.

வரவேற்பு பிரசங்கம்

பின்னர் மகாநாட்டு உபசரணைக் கமிட்டி தலைவர் ஸ்ரீமதி பி. சொரூபராணி பரமசிவம் யாவரையும் வரவேற்றுப் பேசினர். பத்[illegible] அகில இந்திய மாதர் மகாநாடு வரும் டிசம்பரில் ஆமதாபாத் நகரில் நடைபெற விருக்கின்ற தென்றும், அகில இந்திய மகாநாட்டின் ஒரு உறுப்பாகிய தமிழ்நாட்டுப் பகுதி மாதர்களாக கூடி உள்ள நாம் பொதுவாக இந்திய மாதர்களும் விசேஷமாக தமிழ்நாட்டு மாதர்களும் முன்னேறும்படியான மார்க்கங்களை வற்புறுத்தும் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டுமென்றும், நம்முள் எவ்வளவு ஒற்றுமை உணர்ச்சி ஏற்படுகின்றதோ அவ்வளவுக்கு காரிய சித்தி கிடைக்குமென்றும், சமூகத்திலுள்ள கேடான பழக்க வழக்கங்களை அறவே ஒழிக்க பாடுபட வேண்டுமென்றும் யாவரும் தங்களது நியாயமான உரிமையை அடைய பாடுபட வேண்டுமென்றும், பெண் கல்வி உத்வேகத்துடன் பரவ இலவச கட்டாய கல்வி கற்பிக்கப்படச்செய்தல் அவசியமென்றும், பெண்கள் கஷ்டங்களை பெண்களே அறிவார்களாதலால் சம உரிமையும் சொத்துரிமையும் பெற்று தீரவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

ஸ்ரீமதி அலமேலு மங்கைத் தாயாரம்மாள் பிரசங்கம்

ஸ்ரீமதிகள்: ஆர். கோமதிநாதன் (கோவில்பட்டி) பி. சொரூபராணி ஆகியவர்கள் கேட்டுக் கொள்ள, சென்னை ஸ்ரீமதி அலமேலுமங்கைத் தாயாரம்மாள் எம். எல். ஸி. மகாநாட்டிற்கு தலைமை வகித்தார். சென்ற 30 வருடங்களுக்கு முன் தமிழ்நாட்டு பெண்கள் இருந்த சீர்கெட்ட நிலைமையை அப்படியே சித்தரித்துக்காட்டி பின்னர் படிப்படியாக ஏற்பட்டுவரும் முன்னேற்றங்களைக் குறிப்பிட்டார். பண்டைகாலில் நம் மாதர் பெற்றிருந்த மகோன்னத நிலைமையை அழகுபெற உயிர்ப்பித்துப் பேசினர். அகநானூறு, புறநானூறு, சங்க கால நூல்கள் ஆகியவைகளிலிருந்து பல மேற்கோள்களை எடுத்துக் கூறினர். பெண் கல்வியின் அவசியம் பற்றி வெகுவாகச் சொன்னர். மேலும் அவர் பேசியதாவது:—

"விஷய ஞானத்தை பெருக்கிக் கொள்ள அறிஞர்கள் எழுதி உள்ள நூல்களைப் படிக்கவேண்டும்; இதன் மூலம் அடைந்த விஷயத்தை மற்ற சோதரிகளுக்கு எடுத்துக் கூற வேண்டும்; படிப்பில்லாத தாய்மார்களிடம் கூட விஷய ஞானம் பரவும்படி செய்வது மாதர்கள் முன்னேற்றத்திற்கு மிக மிக அவசியமாகும். அன்று தமிழ் மாதர்கள் விசேஷ ஞானமும் வீரமும் பெற்று திகழ்ந்த நிலையை நாமும் அடைய வேண்டும்; நாட்டின் இன்றைய நிலைமையை உணர வேண்டும் தேச பழக்கத்திற்கான சில நகைகளையே அணிந்து கொள்ள வேண்டுமே அல்லாது டாம்பீகத்திற்காக நகைப் பித்துக் கொள்ளலாகாது. அப்படிக்கான மௌடீக வாழ்க்கையில் செலவிடப்படும் பணத்தை நாட்டின்முன்னேற்றத்திற்கான வழிகளில் செலவுசெய்யலாம். அதை சோதரிகள் தெரிந்து கொள்ளவேண்டும். நீதியையும், தியாகத்தையும், ஒழுக்கத்தையும், தவறிவிட்டால் நமக்கு முன்னேற்றமும், நன்மையும் என்றும் ஏற்படாது. உத்தம வாழ்க்கையை தான் விரும்ப வேண்டும். அதை விட்டு மேனாட்டு நாகரீகத்தில் சிக்கி விவாக ரத்து போன்றவைகளை ஆதரிக்கக் கூடா தென்பது தான் எனது கருத்தாகும். பெண் சமூகத்தினிடையே புதைந்து கிடக்கும் அன்பையும், வீரத்தையும், தியாகத்தையும் வெளிகிளப்ப ஒன்றுபட்டு வேலை செய்யக் கோருகின்றேன்" எனப்பேசினர்.

பிறகு அவையினர் யாவரும் எழுந்து நின்று மாதர் சேவை பாடல்களைப் பாடினர். மதியம் 1 மணிக்கு மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது. வரவேற்பு கமிட்டியார் யாவருக்கும் விமரிசையான விருந்து நடத்தினர். பிற்பகல் 3 மணிக்கு விஷயாலோசனை கமிட்டி கூட்டம் நடந்தது. விவாதத்தில் எல்லா ஜில்லா பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

தீர்மானங்கள்

பிற்பகல் 4 மணிக்கு மகாநாடு கூடியதும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

"பெண்களின் எல்லா உரிமைகளுக்கும் சொத்துரிமையே மூல காரணமாக இருக்கிறதால் ஆண்களைப்போல பெண்களுக்கும் சொத்துரிமை அளிக்கப்பட வேண்டுமென்று மகாநாடு வற்புறுத்துவதுடன் இந்திய சட்டசபையில் டாக்டர் தேஷ்முக் கொண்டு வந்துள்ள பெண்கள் சொத்துரிமை மசோதாவை ஆதரிக்கிறது. மசோதாவை ஆதரிப்பவர்களுக்கே வரும் தேர்தல்களில் ஆதரவு கொடுக்கவேண்டுமென வாக்காளர்களைக் கேட்டுக் கொள்கின்றது."

"பெண்களுக்கு பதினான்கு வயது வரை கட்டாயம் இலவசக் கல்வி அளிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கத்தாரை கேட்டுக் கொள்கின்றது."

"மறு மணம் செய்ய இஷ்டப்படும் விதவைகளை அவ்விதம் செய்ய அனுமதிக்க வேண்டும். அவ்விதம் செய்ய விடாது கஷ்டத்திற்குள்ளாக்குவோர்களின் மீது கவர்ன்மெண்டார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றது."

"இளம் விவாகம் தேச நலத்தை மிகப்பாதிக்கிறது என்பதை இம் மகாநாடு நிச்சயமாய் கருதுகிறபடியால் சாரதா சட்டத்தை மீறி நடைபெறும் இளமணங்களை சாரதா சட்டத்தின் மூலம் தண்டனையை அதிகரிக்க வேண்டுமென வற்புறுத்துகின்றது"

"இந்து சமூகத்திலுள்ள வரதட்சிணை எனும் வழக்கத்தால் பல குடும்பங்கள் கஷ்டப்பட நேரிடுவதால் அதை ஒழிக்க வேண்டுமென தீர்மானிக்கின்றது."

"பல மனைவிகளை ஒரு கணவன் மணப்பதால் பெண் உரிமை பெரிதும் பாதிக்கப்படுவதினால் பல மனைவிகளை மணக்கும் வழக்கத்தைக் கண்டிக்கின்ற தென்றும், கிராமப் பெண்களின் குடிசை தொழில்களுக்கு வசதி செய்து கொடுக்கும்படி சர்க்காரை வற்புறுத்துகின்ற தென்றும், பெண்களுடைய கஷ்டநஷ்டங்கள் பெண்களே அறிவார்களாதலால் பொது ஸ்தாபனங்களில் மூன்றிலொரு பங்கு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்றும், தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காக இந்திய சட்டசபையில் ராவ்பகதூர் எம். ஸி. ராஜா கொண்டுவந்துள்ள மசோதாவை ஆதரிக்கின்ற தென்றும், பால்ய மணத்தை எதிர்த்து விதவைகளின் துயர் நீக்க பாடுபட்டு திருநெல்வேலியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சீர்திருத்த சங்கத்தை ஆதரிப்பதுடன் சங்க ஆதரவின் கீழ் ஆரம்பிக்கப்பட விருக்கும் விதவா ஆஸ்ரமத்திற்கு வேண்டிய உதவி செய்யும்படி சகோதரிகளை கேட்டுக்கொள்ளுகின்றதென்றும்" தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

ஸ்ரீமதிகள்: நேசமணி பால், டி. கற்பகவல்லி, ஏ. பாக்கியம். உ. ராஜம்மாள், பி. சொரூபராணி, ராஜமார்த்தாண்டம், டி. பத்மாவதி, ஏ. அமிர்தம், எஸ். எம். ஜோதி சோர்ணம்பாள் டி. வி. என். பத்மாவதி, ஸ்வர்ணம்மாள், சுப்பிரமணியம், எ. கே. தமயந்தி, பி. கே. ஆர். லக்ஷிமிகாந்தம், செண்பகம் ஆகியவர்கள் தீர்மானங்கள் பற்றி விரிவாகப் பேசினர்கள். ஸ்ரீமதி ஆர். கோமதிநாதன் அகில இந்திய மாதர் மகாநாடுகள் (பத்து) பெண் சமூகத்திற்கு செய்த சேவை பற்றி பிரசங்கம் செய்தார். பின்னர் அகில இந்திய மகாநாட்டிற்கு தமிழ்நாட்டு பகுதி மாதர்களின் பிரதிநிதிகளாக ஆமதாபாத் செல்ல ஸ்ரீமதிகள்: கே. அலமேலுமங்கை தாயாரம்மாள், பி. கே. ஆர். லக்ஷிமிகாந்தம், டி. கற்பகவல்லி, நேசமணி பால், ஆர். கோமதிநாதன், அன்புடையாள், டி. சி. கே. எம். தேனம்மாள், வெயிலு முத்துசாமி, வி. வி. ஆர். சிவகாமி டி. பத்மாவதி, ஸ்வர்ணம்பாள் சுப்பிரமணியம் ஏ. பாக்கியம் ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். தலைவர் தம் முடிவுரையில் ஒன்றுபட்டு உரிமை பெற பாடுபட வேண்டுமென்றார். ஸ்ரீமதி டி. கற்பகவல்லி வந்தனோபசாரம் கூற மகாநாடு இரவு 8 மணிக்கு இனிது முடிந்தது.

மகாநாடு வெற்றிகரமாய் நடக்க சகல ஏற்பாடுகளையும் ஸ்ரீமதிகள்: ஏ. பாக்கியம், டி. கற்பகவல்லி, உ. ராஜம்மாள், டி. பத்மாவதி, பி. சொரூபராணி ஆகியவர்கள் செய்து வைத்திருந்தனர். இரவிலும் விமரிசையான விருந்து நடந்தது. க்ஷத்திரிய பெண்பாடசாலை வழிகாட்டி சாரண மாணவிகள் மகாநாட்டில் விசேஷ தொண்டு செய்தனர்.

குணமாகாத மூத்திர வியாதிகளுக்குப்
புதிதாகக் கண்டுபிடித்திருக்கும்
அற்புதமான சிகிச்சை!

வெட்டை ரோகத்திற்கு
சிறந்தது!!

வெட்டைரோக கிருமிகளை கொல்லக்கூடியது!

"கோனு கில்லர்" (ரிஜிஸ்டர் செய்யப்பட்டது)

இதுதான் இப்பொழுது எடுத்த ஒளஷதம். ஆங்கில, உள்நாட்டு வைத்தியர்கள் உங்களைக் குணப்படுத்தியிராவிடில் வாக்குறுதிகளும், இன்ஜெக்ஷனும் பலன் தந்திராவிடில் கடைசியாகவேனும் நமது கோனோ-கில்லர் என்னும் ஒளஷதத்தைப் பரீக்ஷித்துப் பாருங்கள். உங்களுக்கு வியாதி கண்டு எவ்வளவு காலமாயிருந்தாலும் அது குணப்படுத்திவிடும். ஸ்திரீகள், புருஷர்கள் இவர்களுக்கு ஏற்படும் மூத்திர வியாதிகளுக்கும், எல்லாவித வெட்டை நோய்களுக்கும். மூத்திரம் அதிகமாக இறங்குவதற்கும், மூத்திரம் பெய்கையில் ஏற்படும் வலியை நிவர்த்தி செய்யவும், மூத்திரப் பையில் ஏற்பட்டிருக்கும் அழற்சியைப் போக்கவும், வெட்டை வியாதிக் கிருமிகளால் ஏற்படும் வேறு பல வியாதிகளைப் போக்கவும் இது சிறந்த மருந்து. போலி மருந்துகள் வாங்காதீர்கள்! வாங்கும்போது எங்கள் கோழிமார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

சேவல் மார்க்கை பார்த்து வாங்கவும்

போலிகளைப்பற்றி உஷார்!

50-மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு ரூபா. 3. வி. பி. சார்ஜு வேறு. வெளி நாட்டு நேயர்கள் ரூபா. 4—8—0 முன் பணம் அனுப்பவும்.

டாக்டர் டி. என். ஜஸானி, கிர்காம் பாக் ரோடு, பம்பாய், 4.
Dr. D. N. JASANI, Girgaum Back Road, BOMBAY, 4.
சென்னை ஏஜண்டு:—தாதா & கோ.,
நெ. 52, கவிளியப்ப நாய்க்கன் தெரு, P. T., சென்னை.
F. M. S. & S. S. ஏஜண்டு:—N. O. A. முகம்மது இப்ராஹிம் & பிரதர்ஸ்,
நெ. 193, காலாங் ரோட், சிங்கப்பூர்,
என். ச. காதர் மொய்தீன், பெட்டிக் குருவி மெடிகல் ஸ்டோர்.
நெ. 39. Old Butcher Street, Pettah, கொழும்பு.

பண்ட் அண்டு கோ.

குரோம் லெதர் ஓர்க்ஸ்

1890-ல் ஸ்தாபகம்.

உயர்ந்த சாமான்!

குறைந்த விலை!

தங்க மெடல் பரிசுபெற்றது.
தென்னிந்தியாவிலே யே எங்களிடமிருந்து தான் ஏராளமான செருப்புகள் தயாராகின்றன.

மொத்த விற்பனைக்கும், சில்லரை விற்பனைக்கும் நம்பிக்கையான இடம். தோல் சரியானபடி அதிகமாக உழைப்பதற்காக விலையுயர்ந்த சாமான்களால் பதனிடப்பட்டது.

170, பிராட்வே, சென்னை.

விடுதலை யாவதி யாதெனக் கேட்டாயின்
கேடுதலை நீக்கி நன்னிலை நின்று
[நாட்டினரெல்லாம்
பொருள் சுகப்பேறுகள் சர்வமும் பெற்று
திருமிக வாழ்தலே யாம்

விடுதலை

VIDUTHALAI

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்று கின்ற
செம்மொழியைத் திருமொழியை
[தேன்மொழியை
தனித்தியங்கும் ஆற்றலுள தொன்மொழியை
[அமிழ்தனைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
[அனுதினமும் பழக்கம் செய்வீர்.

மலர்-2] சென்னை: (14-11-1936) தாது ஸு ஐப்பசிமீ 29உ சனிக்கிழமை [இதழ்-47

பலதலைப் பேச்சு

(தேவாதி)

கார்ப்பரேஷன் தேர்தல்:— இது நமக்கு நல்லபாடம் படித்துக் கொடுத்துவிட்டது. ஜஸ்டிஸ் பார்ட்டிக்கு அமைப்பு பற்றாது. ஊக்கம்பற்றாது. உழைப்பு பற்றாது என்றெல்லாம் காங்கரஸ்காரர்கள் கூறுகின்றனர். இதில் ஒருவாறு உண்மையையும் காணலாகும். காங்கரஸ் தொண்டர்கள் வோட்டுச் செய்யும் காலத்தில் சத்தியாக்கிரகத்தைப் பத்திய மாகத் தள்ளிவிட்டு உக்கிரகாரத்தில் ஈடுபட்டுப் பலபக்தம்செய்து வோட்டுப் பெறுகின்றனர். காலத்திற்குத் தக்க கோலம் போட்டு பலபக்தத்தைப் பலபக்தத்தாலே நாமும் எதிர்த்தல் வேண்டும். நாடெங்கும் ஜஸ்டிஸ் கட்சி வாலிபர்களைத் திரட்டிச் சிறந்த தொண்டர்களாகப் பயிற்சியளித்தல் வேண்டும். நாம் கோருகின்ற குடியேற்ற நாட்டந்தஸ்து மக்கள் விடுதலையோடு சேர்ந்து கிடைக்க வேண்டுமென்ற நமது இட்டத்தை அறிவுடைய மக்கள் யாவரும் விரும்பி ஏற்பார்கள் என்பதற்கு ஐயமில்லையே. அந்நோக்கத்தையே நமது வாலிபர் உள்ளத்தில் புகுத்தி ஜஸ்டிஸ் கட்சியின் முன்னணியில் நின்று வீறுடன் சேவை செய்யத் தக்கதான தொண்டர் படைகளைத் தமிழ் நாடெங்கும் ஸ்தாபிப்போமானால், நிச்சயமாகவே நாம் அடுத்த தேர்தலில் முற்றும் வெற்றி பெறல் கூடும். தவிர, 'வல்லபாய் பட்டேல் பணமுடிப்பு' வாங்க வருகின்றார் என்று மூர்த்தியார் கோட்டைக் கொடுத்து விட்டார். காங்கரஸ்காரர் பண வேட்டையாடி ஊரைப்பறித்து, உத்தியோகமற்று அரசாங்கப் பணவேட்டையும் ஆடிவிடலாம் என்று எண்ணுகிற கனவை நனவிற்கு வராமல் செய்வது நமது கடமையல்லவா? இதுவரையில் பல உத்தியோகங்களில் ஜஸ்டிஸ் உதவியால் அமர்ந்து செல்வத்தில் சிறிது களித்திருக்கும் நமது கட்சிப் பிரமுகர்கள் யாவரும் இக்காலத்தில் தங்கள் உழைப்போடு உதார அளவில் செல்வத்தையளித்து, ஒவ்வொரு இடத்திலும் ஜஸ்டிஸ் அபேக்ஷகர்களை நிறுத்தி அவ்வவரைப் பண உதவியினாலும் ஊக்குதல் வேண்டும். நாடெங்கும் தற்போது செய்துவரும் பிரசாரத்தை மும்முரமாக நடத்துதல் வேண்டும். ஆயின் நமது வெற்றி உறுதியாகும்.

வெள்ளையரும் சொள்ளையரும்:— காங்கரஸ் கட்சியில் சொள்ளையருக்குத்தான் பங்கு என்றால் வெள்ளையரும் கூடிக் கொள்கிறார்களே அதன் ரகசிய மென்ன? திரு. சத்திய மூர்த்தி வெள்ளைக்காரருக்கு அநுகூலமாக யாதாம் ஒப்பந்தம் செய்திருக்கிறாரா? அவர் வெள்ளையரிடத்தில், எங்களுக்கு பிராமணரல்லதார் மேல்தான் துவேஷம், உங்கள் மேல் யாதொரு துவேஷமும் கிடையாது. நாங்கள் அந்நாள் முதலே ஆங்கில ஆட்சிக்கு அநுகூலமாயிருந்து வருவது உங்களுக்குத் தெரியாதா? நாங்கள் காங்கரஸ் வாயிலாக அரசாங்கத்தில் பதவி வைத்துக் கொண்டு பிராமணரல்லாதாரை நசுக்கி உங்களுக்கு அநுகூலஞ்செய்கிறவர்களாயிருப்போம். நீங்கள் எங்களைப்பற்றிப் பயப்பட வேண்டாம் என்று ஒப்பந்தம் பேசியிருக்கிறாரா? இதன் ரகசியத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். அற்றப்படி மதராஸ் மெயில் என்ற வெள்ளைப் பத்திரிகை காங்கரஸையும், மூர்த்தியையும் ஆதரிக்கக் காரணம் என்ன? வெள்ளையர் களெல்லாம் வோட்டுக்கொடுத்து திரு. சத்திய மூர்த்தியை ஆல்டர்மென் ஆக்கக்காரணம் என்ன? வெள்ளையர் சங்கத்தின் நோக்கத்திற்கும் விரோதமாக 'மதராஸ் மெயில்' பத்திரிகை எழுதுகிற தென்றால் வெள்ளையரெல்லாம் அந்தப் பத்திரிகையை ஏன் வாங்கிப் படிக்கிறார்கள்? அவர்கள் அதை உடனே ஒழித்துவிட்டு ஜஸ்டிஸ் பத்திரிகையை வாங்கிப் படிக்கலாமே.

பாரதியார் பாடல்:— முன்னாளில் காயத்திரிஜெபமும், பகவத்கீதையும் தான் கல்வி. இக்காலில் பாரதியார் பாடல் தான் கல்வியின் அம்சமெல்லாம் என்று காங்கரஸ் பேர்வழிகள் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். பாரதியார் பாடலுக்கு நல்லகாலம் பிராமணர்களாலேயே பிறந்து விடும் போலும். இனிமேல் கார்ப்பரேஷன் பள்ளிக்கூடங்களில் எல்லாம் ஔவைப் பாட்டும், கம்பன் கவியும் ஓசைபடக்கப் போம். பாரதியார் என்ற பிராமணக் கவியின் பாடல்களே பயிலப்படல் வேண்டுமென்று திட்டஞ் செய்யப்படுமாம். கல்யாணசுந்தர முதலியார் போன்ற பிராமணரல்லாதாரில் சிலருங்கூட நாட்டுக்கவிகளை எழுதி நூல்வாயிலாக வெளியிட்டுதான் செய்கிறார்கள். ஆனால், அவர்களில் யாருடைய பெயராவது வெளியே விளம்பரப் படுத்தப் படுகிறதா பாருங்கள். பாரதியார் பாடலென்ன? எக்காலத்தும் நிலைக்கக்கூடிய சிறந்த லட்சியமுடையதாமா? கண்ணம்மா என் காதலி, என்றும், பாப்பாப் பாட்டென்றும் பிள்ளைப் புத்திக்கு ஏற்ற செவ்விசாலாத பாடல்களைப் படிப்பதே கல்வியென்றால் மற்ற சமூகத்தாரையெல்லாம் அறிவீனத்தில் தள்ளிவிடவே காங்கரஸ் பிராமணர்கள் விரும்புகிறார்களா? காங்கரஸ்காரருடைய கல்வித்திட்டத்தைச் சென்னைவாசிகள் ஏற்பாரானால் அவர்கள் இம்மூன்றாண்டுக்குள் தங்கள் குழந்தைகளை மூடர்கள் ஆக்க வேண்டுமாயின் அப்படியே செய்யலாம். ஆகையால், சென்னை வாசிகள் ஒருங்கு சேர்ந்து காங்கரஸ்காரர் தேர்தல் திட்டத்தோடு வெளியிட்ட சென்னை நகர் கல்வித் திட்டத்தை எதிர்க்க வேண்டுமென்று அன்னவரைக் கேட்டுக் கொள்கின்றேன்.

கார்ப்பரேஷன் கவுன்சிலர்கள்:— காங்கரஸ் பேர்வழிகள் இவர்கள் தங்கள் சுயரூபத்தை முற்றும் காட்ட ஆரம்பித்து விட்டனர் என்பது அவர்கள் ஒவ்வொரு கமிட்டிக்கும் பொறுக்கி இருக்கும் ஆட்களிலிருந்து தெரிகிறது. எவ்வளவோ அநுபவம் படைத்து நகரை எவ்விதத்திலும் முன்னேற்றத்திற்குக் கொண்டுவரவிரும்பும் திரு. பி. நடேச முதலியாரையும் அவர் போன்றவர்களையும் கூட ஒரு கமிட்டியிலும் அவர்கள் சேர்த்துக் கொள்ளவில்லை. இவர்களைத் தேசத்துரோகிகள் என்றால், காங்கரஸ் அல்லாத பேர்வழிகளை வாயினால் பிரேரேபிப்பதும் பாவமென்றால், வெள்ளையர்களைச் சேர்த்துக் கொண்டதன் நோக்கம் யாதோ அறியோம். வேலூர் முதலிய ஸ்தல ஸ்தாபனங்களில் நடந்த ஊழல் போன்ற ஊழல்கள் நுழைந்தாலும் வெளிக்குத் தெரியாமல் இருக்கட்டுமென்றே வேறொருவரையும் கமிட்டியில் சேர்த்துக் கொள்ளவில்லை போலும், பிராமணர்கள் தங்களையே உயர்ந்த ஜாதி அந்தணர் என்றும், ஏனையரை யெல்லாம் கேவலம் சூத்திரர் என்றும் எண்ணுவது போல காங்கரஸ் வாலாக்கள் தங்களையே தேசபக்தர் என்றும், ஏனையரை யெல்லாம் தேசத்துரோகிகள் என்றும் எண்ணிக் கர்வம் அடையட்டும். அந்த ஒருபடியிலும் கூட இல்லாமல் வெள்ளையரைச் சேர்த்துக் கொண்டிருப்பது என்றால் அவர்களுடைய தேசபக்தி எத்துணை இழிந்தது என்று கூறத்தேவையில்லை. இப்பேர்க்கொத்த மனப்பான்மையுடைய காங்கரஸ் வாலாக்களா, வெள்ளையர்களை வெருட்டி அடித்து நமக்கு சுயராஜ்யம் வாங்கித்தரக் கூடியவர்கள்? வெருகன்று! ஜவஹர்லால் காங்கரஸ் போரால் சமதர்மத்தைப் பிரசங்கித்து அலைகிறார். இங்கே மூர்த்தி ராஜ்யோர் காங்கரஸ் போரால் வெள்ளையர்களோடு ரகசிய உறவு கொண்டு தொலைகிறார். தலைவன் தன்னிருக்கு இழுக்கிறது, ஒருவன் வெளிக்கு இழுக்கிறது. இவ்விரண்டும் ஒருங்கு சேர்ந்து நடத்தி முடிக்கத்தக்க காரியம் யாதுண்டோ தெரிகிலேம் அம்மா!

மஞ்சள்

மஞ்சள் தேய்த்து குளிக்கும் பெண்மணிகளுக்குக் கற்றாழை நாற்றமும், வேர்வையும், வேர்வையாலுண்டாகிற துர்க்கந்தமும், முகத்திலுண்டாகிற ரோகமும் நீங்கும். வாத, பித்த, கபம் என்பவற்றாலுண்டாகும் முத்தோஷமும் விலகும். தலைவலி, ஜலதோஷம், விக்கம், வண்டு கடி, விஷம், இவைகேரும். உடல் பொன் நிறமாகி வசீகர சக்தியையும், அழகையும் அடையும். மேலும் மஞ்சள் பூச்சு சீதளம் வராமலும், காலில் சேற்றுப் புண் வராமலும் தடைப் படுத்துகிறது. மேலும் மார்பு அடி வயிறு, முகம், அக்குள், புஜங்கள் முதலிய இடங்களில் நன்றாய்ப் பூசித் தேய்த்துக் குளித்து வருவார்களாயின் வாட்சியான தேக முடைய தாய்க்கும் பால் உண்டாகும். சிசுக்களின் செழிப்பில் கவனிப்புடைய தாய்மார்கள் சோப் குளித்தலை நீக்கி மஞ்சள் பூசிக் குளித்தல் நலம். சமையலறையில் அதிக நேரம் அவர்கள் உழைக்க வேண்டி இருத்தலால் அதிக வெப்பம் அவர்கள் மேல் தாக்காமல் தடுத்து வருகிறதும் மஞ்சளே. பெண்கள் சுவாசத்திலும் வேர்வையிலும் ஓர்வித நச்சுத் தன்மை கலந்திருக்கிறது ஆகவே, பெண்களுடைய சுவாசம் தமக்குரிய ஆடவர்கள் மீது படாமலும் அதிலும் படுத்திருக்கும் காலத்தில் மூக்கில் படாமலும் படி நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிடில் அந்த நச்சுத் தன்மையுள்ள சுவாசம் நாசியின் வழியாக உட்சென்று சுவாசப் பையில் தங்கி நோய்க்கு இடமுண்டு பண்ணும். சுவாசாசயத்தில் தீங்கு நேரிடுவதால் ஆயுள் குறையும். இவ்வாறு பலநாட்களாக நடைபெற்றால் சீக்கிரம் மரணமடைய நேரிடும். இந்நச்சுத்தன்மையை நீக்குங் குணம் மஞ்சளிடம் இருக்கின்றது. அதை அறிந்தே மஞ்சளை விஷத்தன்மையை விலக்கும் மருந்துப் பொருளாக உபயோகப் படுத்தி வரும் வழக்கத்தை நம்மவர்கள் கையாண்டு வந்தனர். அதுபற்றியே மஞ்சள் பூசுவதால் நாயகனுக்கு ஆயுள் பெருகு மென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

மணிக்கு 113 மைல் வேகத்தில் லண்டனில் முதன் முதலாக ஒரு ரயில் ஓடியுள்ளதாக கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

எமாறுதீர்கள் !

எங்கள் வைத்தியசாலையின் மருந்துகள் மிகவும் சிலாக்கியமானதெனப் பலராலும் புகழப்பட்டு வருதல் கண்டு, சிலர் வேறு மருந்துகளை எங்கள் மருந்துகள்—அதாவது சி. எம். சாமி மருந்துகள் என்று சொல்லி ஏமாற்றி விற்பனை செய்து வருகிறதாகத் தெரிகிறது. எங்கள் வைத்தியசாலையிலிருந்து வெளி இடங்களுக்கு நாங்கள் யாரையும் அனுப்பவில்லை. எங்கள் ஏஜெண்டென்றும், எங்கள் மருந்துகள் என்றும் யாராவது விற்பனை செய்தால் அதைப் பொது மக்கள் வாங்கி மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கிறோம்.

மருந்து வேண்டியவர்கள் நேரே எமக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி, S. I.

ரயில்வே கால அட்டவணை

சென்னை: (சென்ட்ரல் ஸ்டேஷன்)

வண்டியின் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
பெங்களூர்		
மெயில் ...	மாலை 9-30	காலை 6-1
,, பாசஞ்சர் ...	மாலை 9 40	காலை 5-3
,, பாசஞ்சர் ...	காலை 6-20	மாலை 7-4
,, எக்ஸ்பிரஸ் ...	மாலை 1-0	மாலை 2-10
பம்பாய் ,, ...	காலை 8-30	மாலை 4-55
,, மெயில் ...	மாலை 8-45	காலை 5 55
வால்டேர் பாசஞ்சர் ...	மாலை 7-30	காலை 10-3
,, பாசஞ்சர் ...	காலை 9-5	மாலை 6-10
கிராண்ட் டிரங்க்		
எக்ஸ்பிரஸ் ...	காலை 7-45	மாலை 5 15
செய்ச்சூர்		
பாசஞ்சர் ...	காலை 9-20	மாலை 8-40
ஜோலார்பேட்டை		
பாசஞ்சர் ...	மாலை 12-50	மாலை 2-0
ரேணிகுண்டா லோகல் ...		காலை 9-40
,, பாசஞ்சர்	— —	மாலை 9-22
காட்பாடி		
பாசஞ்சர் ...	மாலை 5-30	காலை 9-40
அரக்கோணம்		
பாசஞ்சர் ...	மாலை 6-30	— —
மங்களூர்		
எக்ஸ்பிரஸ் ...	மாலை 8-5	காலை 7-20
கல்கத்தா		
மெயில் ...	மாலை 8-35	காலை 7-50
புளூமவுண்டன்		
எக்ஸ்பிரஸ் ...	மாலை 9-15	காலை 8-30

சென்னை: (எழும்பூர்)

வண்டியின் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
செங்கோட்டை		
பாசஞ்சர் ...	காலை 7-30	மாலை 7 30
கடலூர்		
பாசஞ்சர் ...	மாலை 4-5	காலை 11-20
இண்டோ—சிலோன்		
எக்ஸ்பிரஸ்	,, ,, 9-0	... 6-45
திருவனந்தபுரம் பாஸ்டு		
பாசஞ்சர்	,, 9-30 ,,	... 6-10
திருச்சி பார்சல்		
பாசஞ்சர்	,, 10-20 ,,	... 5 30
கார்டு லைன்		
தனுஷ்கோடி பாஸ்டு		
பாசஞ்சர் ...	காலை 11-25	மாலை 2-4
திருவனந்தபுரம்		
எக்ஸ்பிரஸ் ...	மாலை 8-0	காலை 7-20

எது ?

தமிழ்நாட்டில் குறைந்த சந்தாவில்
அதிக பக்கங்களோடு வெளிவரும் தமிழ் மாதப் பத்திரிகை.

"சித்தன்"

ஒன்றே. இனிய கதைகள், ஹாஸ்யம், உலகச் செய்தி, வைத்தியக் குறிப்பு, சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன நிறைந்தது.

வருட சந்தா அணா (8) எட்டே. வெளிநாடு ரூ. 1.

மாதிரிப் பிரதி இலவசம். விளம்பர விகிதம் மிகவும் குறைவு.

விபரங்களுக்கு எழுதவும் :—
மானேஜர்:—"சித்தன்", பழனி, S. I.

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள் !!

"அறிவுக் கொடி"

ஒரு சிறந்த தமிழ் மாத வெளியீடு.

ஆசிரியர்:— ஸ்ரீமதி சாமி சிதம்பரனார்.

1936ஸு நவம்பர்மீ 15-ந் தேதி முதல் ஒவ்வொரு ஆங்கிலமீ 15-ந் தேதியிலும் தவறாமல் வெளிவரும்.

அறிவு வளர்ச்சி, மாதர் முன்னேற்றம், தமிழ் மொழி வளர்ச்சி, விஞ்ஞானம், வைத்தியம், விகடம், சங்கீதம், நாடகம், படக் காட்சி, மனதைக் கவரும் சிறு கதைகள் முதலிய சிறந்த பல விஷயங்களும், இனிய பாடல்களும் வெளிவரும்.

உள்நாடு வருட சந்தா ரூ. 1. வெளிநாடு ரூ. 1-8-0.

மானேஜர் :—"அறிவுக் கொடி" ஆபீஸ்,
462, சின்ன கடலங்குடித் தெரு, கும்பகோணம்.

மோட்டார் குபேரர் எனப் புகழப்படும் ஹென்றி போர்டு வட மிச்சிகானிலுள்ள தமது பெரும் பண்ணையில் உலகிலேயே கண்டிராத ஒரு அதிசய கிராமத்தை சிருஷ்டி செய்ய திட்டம் போட்டுள்ளார். அக்கிராமத்தில் 30-குடும்பங்கள் தான் வசிக்க அனுமதிக்கப் படும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் 350-ஏகர் நிலம் அளிக்கப்படும்.

இங்கிலாந்தில் நார்பக் என்ற ஊரில் வசிக்கும் திரு. ஜார்ஜ் ஸ்மிட் என்பவர் தமது 90-வயதில் 31-வயதுள்ள ஓர் அழகிய பெண்ணை இரண்டாந் தாரமாக கட்டிக் கொண்டார். இவள் மூலம் அவருக்கு 5-வயதும் 2-வயதுமான இரு குழந்தைகள் இருக்கின்றன. கடைசி குழந்தை இவருடைய 101-வது வயதில் பிறந்தது.

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN. AT THE JUSTICE PRINTING WORKS, 14, MOUNT ROAD, MADRAS, EDITOR: PANDIT S. MUTHUSWAMI PILLAI.

விலை அரை அணு 8 பக்கங்கள் மலாய் நாட்டில் 5 சதம் Regd. No. M. 3298.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா

உள்நாடு

1 மாதம்	...	0 6 0
3 மாதம்	...	1 0 0
6 மாதம்	...	1 14 0
1 வருடம்	...	3 10 0

சென்னைக்கு

1 மாதம்	...	0 4 0
3 மாதம்	...	0 10 0
6 மாதம்	...	1 4 0
1 வருடம்	...	2 6 0

விடுதலை

VIDUTHALAI

(வாரம் இருமுறை வெளிவரும்)

ஆசிரியர்: பண்டித எஸ். முத்துசாமிப் பிள்ளை.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா.

வெளிநாடு

1 மாதம்	...	0 10 0
3 மாதம்	...	1 14 0
6 மாதம்	...	3 12 0
1 வருடம்	...	7 4 0

சர்க்கார், முனிசிபாலிட்டி,
ஜில்லா போர்டுகளுக்கு:

உள்நாடு:	வருடம்	ரூ.	7 8 0
சென்னை:	"	ரூ.	4 8 0

மலர்-2] சென்னை: (18-11-1936) தாதுவருஷ கார்த்திகைமீ 3உ புதன்கிழமை [இதழ்-48

கண்ணப்பர் கம்பெனியார் கதி தெரியாதா?

ஈ. வெ. ரா காங்கரஸை எதிர்ப்பது இன்று? நேற்று?

போகிறவர்கள் தாராளமாகப் போகட்டும்; ஆனால் போகிற போக்கில் ஏன் திட்ட வேண்டும்?

ஆதாரமற்ற குற்றச் சாட்டுகளால் அசைக்க முடியாது

நாயக்கர் தியாகம் நாடறிந்த விஷயம்

சிதம்பரம், நவ, 15

சென்ற சில மாதங்களாக, சுயமரியாதை இயக்கத்திலிருந்த தோழர்களிற் சிலர் மேற்படி இயக்கத் தலைவராகிய, திரு. ஈ. வெ. ரா. அவர்களைக் குறை கூறிக் கூட்டங்களில் தூற்றி வருகின்றனர். "உடன் பிறந்தே கொல்லும் வியாதி" யென்பது போல், உடனிருந்து வேலை செய்த தோழர்களாகிய முத்துசாமி வல்லத்தரசு, நீலாவதி, சிவானந்தம் முதலியவர்களின் செயல் இருக்கின்றது.

காங்கரசை எதிர்ப்பது இன்று? நேற்று?

சுயமரியாதை இயக்கம் தோன்றிய நாள் தொட்டுக் காங்கரசையும், காங்கரசுக் கொள்கைகளையும் கண்டித்துப் பேசியும், எழுதியும் கூடும் மகாநாடுகளிற் தீர்மானங்களின் மூலம் காங்கரசை எதிர்த்து நமது இயக்கக் கொள்கைகளை வெளியிட்டும் வந்திருப்பதை யாவரும் அறிவார்கள். திரு. ஈ. வெ. ரா. இன்று தான் காங்கரசை எதிர்க்கின்றாரென்பதில்லை. காங்கரசில் சேர்ந்து வேலை செய்து அங்குள்ள பார்ப்பன ஆதிக்கத்தையும், தன்னலக் கூட்டத்தினருடைய தந்திரங்களையும், கண்டறிந்து அக்காங்கரசினின்று வெளியேறி பன்னிரண்டு வருடங்களாகக் காங்கரசை எதிர்த்துத் தாக்கி வருகின்றார். மேற் கூறிய தோழர்கள் யாவரும் இவற்றை நன்குணர்ந்தவர்கள். இவர்களும் உடனிருந்து காங்கரஸ் கொள்கைகளை எதிர்த்துப் பேசியவர்கள், எழுதியவர்கள், தீர்மானங்கள் கொணர்ந்தவர்கள், இவர்களே இன்று காங்கரசில் சேரப் போவதாக வெளிப் படையாக மகாநாடுகள் கூட்டித் தங்கள் கருத்தை வெளியிட்டு வருகின்றனர்.

போகிற போக்கில் ஏன் திட்ட வேண்டும்?

இவர்கள் காங்கரஸ் கட்சிக்குப் போனால் போகட்டும்; காங்கரஸ் அபேத வாதத் தலைவர்களானாலுமாகட்டும்; சிறை புகுந்த தேச பக்தர்களானாலும் ஆகட்டும். அது பற்றி நாம் சிறிதும் வருந்தவில்லை. போகின்றவர்கள் திரு ஈ. வெ. ரா. வையும் அவரைச் சேர்ந்தவர்களையும், தாறுமாறாகப் பேசி அதனால் காங்கரஸ்காரர்களிடம் நல்ல பிள்ளைகள் என்ற பட்டம் வாங்கலாம் என்றெண்ணினார்களானால், பெரிய ஏமாற்றத்திற் காளாவார்களென்பதை சில நிகழ்ச்சிகளின் மூலம் எடுத்துக் காட்டுகின்றோம். இவர்கள் அவசரப்பட்டுச் சுயமரியாதைச் சமதர்ம மகாநாட்டைத் திருச்சியிற் கூட்டித் திரு. பாங்கே அவர்களைத் திறப்பு விழா வாற்றச் செய்து திரு. நாயக்கர் போக்கைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டியதில்லை. கட்சித் தலைவருடைய போக்கு கட்சியிலுள்ள மற்றவர்கட்குப் பிடிக்கவில்லை யென்றால் மகா நாட்டினைக் கூட்டிக் கட்சித் தலைவரையும் மற்றைய தோழர்களையும் வரவழைத்துத் தலைவருடைய கொள்கை பிடிக்கவில்லை யென்பதை நம்முடைய காரியக் கமிட்டிக் கூட்டத்திற்குள்ளேயே கலந்து பேசி தலைவரிடம் நம்முடைய அபிப்பிராய பேதத்தை எடுத்துக் கூறி நம் வழியிற் தலைவரைத் திருப்ப முயல வேண்டும். இயக்கத்திலுள்ள பெரும் பாலாருடைய ஆதரவையும் நாம் பெற்றிருக்க வேண்டும். இங்ஙனம், பெரும்பாலான அங்கத்தினர்களுடைய விருப்பத்திற்கு மாறாகத் திரு. ஈ. வெ. ரா. அவர்கள் சென்றார்களானால் நாம் அவர்களைக் குறைகூறலாம். [illegible] கூடிய மகாநாட்டில் தோழர் ஈ. வெ. ரா. அவர்கள் சிவானந்தம், முத்துசாமி, வல்லத்தரசு முதலிய தோழர்கட்கு [illegible] அருமையான சொற்பொழிவைக் கேட்ட பின்னரும், இவர்கள் அவர்களிடம் வேற்றுமை கொள்வது மிகவும் அருவருக்கத் தக்க செய்கையாகும். தன்னலமில்லாமல் தமிழ் நாட்டில் பல ஆண்டுகள் வேலை செய்த தலைவர் ஒருவர் உண்டென்றால் அவர் தோழர் ஈ. வெ. ரா. அவர்களே யாவர். இப்படிப்பட்ட தன்னலமற்ற தலைவரைத் தாறுமாறாகத் தாக்குவது கொடுமையிலும் கொடுமை யன்றோ? இவர்கள் சொற்பொழி வெல்லாம் சுயமரியாதை இயக்கத்தைக் கெடுக்கவும் பிரிவினை உண்டாக்கி மாற்றாருக்கு இடங் கொடுக்கவும் வழிகாட்டியாய் இருக்கின்றதென்றே கொள்ளவேண்டும்.

ஆதாரமற்ற குற்றச் சாட்டுகள்

இவர்கள், திரு. ஈ. வெ. ரா. அவர்களைப்பற்றிக் கூறும் குறைகளுளொன்று; அவர் ஏகாதிபத்தியத்தை ஆதரிக்கின்றாரென்பது. ஏகாதிபத்தியத்தை எதிர்த்தே திரு. ஈ. வெ. ரா. அவர்கள் பன்முறை சிறைக் கூடம் கண்ணினார்கள். ஏகாதிபத்தியத்தை எதிர்த்தே தனது பெரும் பொருளை இழந்தார்கள். இவை உலகறிந்த இரகசிய மாகையால் இவைபற்றி அதிகம் எழுதாது விடுகின்றோம்.

இரண்டாவது முதலாளி வர்க்கத்தை ஆதரிக்கின்றாரென்பது. முதலாளிக் கூட்டத்தினரை எதிர்த்துக் கடன் கொடுத்து மனிதனை மனிதன் சுரண்டல் முறையோடு சிறைக் கோட்டத்தில் அடைப்பது சரிய செய்கை அன்றென்பதை அறிவுறுத்தவே தான் பட்ட கடனைப் பலர் தீர்ப்பதாகச் சொல்லியும் அதற்கு உடன் படாமல் சிறைக் கூடம் அடைந்தார்கள். முதலாளிக் கூட்டமெல்லாம் திரு. ஈ. வெ. ரா. அவர்களைக் கண்டால் எப்போதும் பயந்து கொண்டே வந்தன; வருகின்றன. அரசாங்கத்தாரும் இவர்கள் மூச்சு விட்டாலும் அதைக் குறிக்கும்படி இரகசியப் போலீசாரை உடனனுப்பி வருகின்றார்கள். இச்செய்கைகள் யாவும் மேற்கூறிய தோழர்கள் அறிந்தனவே.

இங்ஙனமாக இவர் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து வேலை செய்வதற்குக் காரணம் என்ன என்பது ஒரு கேள்வி. அதற்குக் காரணம் சுயமரியாதைக்காரர்களால் வகுக்கப்பட்ட திட்டங்கள் பத்தினையும் 'ஜஸ்டிஸ்' கட்சிக்காரர்கள் ஏற்றுக் கொண்டு சில தீர்மானங்களை நடைமுறையில் (இனாம் குடிவார மசோதா முதலியன) கொண்டு வந்ததேயாம்.

இவ்வாறு திரு. ஈ. வெ. ரா. அவர்களின் செயலுக்குத் தெளிவான காரணமிருப்பவும் அவற்றை அறியார் போன்று தங்கள் சுயநலங் காரணமாக அவர்களைக் குறை கூறித் தூற்றித் திரிவார்களேல், இன்று திரு. கண்ணப்பருக்கும், ஏனையோருக்கும் என்ன கதி ஏற்பட்டிருக்கின்றதோ அதே கதி தான் இவர்கட்கும் நேரு மென்பதை முன் கூட்டி அறிவுறுத்த விரும்புகின்றோம்.

இங்ஙனம்:
ஒரு சுயமரியாதைத் தொண்டன்.

மூப்புடாரி அம்மன் ஆலயத்தில் பலி

ஹரிஜனங்கள் பலியிடுவதை நிறுத்திக் கொண்டார்கள்

(ஒரு நிருபர்)

சங்கரன்கோவில், நவ, 14

சங்கரன் கோவில் மூப்புடாரியம்மன் ஆலயத்தில், ஆண்டுதோறும் ஐப்பசி மீ ஆடுகளைப் பலி யிடும் வழக்கப்படி 10-11-36-ல் பலி நடைபெற்றது. ஜீவரட்சக சபைத் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன. சுவரொட்டிகள் பல முக்கியமான இடங்களில் ஒட்டப்பட்டிருந்தன. ஹரிஜனங்கள் பலி இடுவதினின்றும் விலகிக்கொண்டார்கள். இவ்வாண்டு பலி இடும் வழக்கம் மிகக் குறைந்து ஒருசில ஆடுகளே வெட்டப்பட்டன. இவ்வாலயத்தில் பலி இடுவதில் இந்நகர் கிராம முன்சிப் திரு. ஆர். சுப்பிரமணிய பட்டர் அவர்கள் முதலில் ஆடுவெட்டுவதும் அப்புறம்தான் மற்றவர்கள் ஆடுகளை பலி இடுவது என்ற வழக்கம் இருக்கிறது. [illegible] அய்யர் முதலில் பலி இடுவது அவர் அந்தஸ்திற்கும் உலகத்தில் உயர்ந்த குலம் என செப்புகிற பிராமண சமூகத்திற்கும் இழிவைத் தருவதாகு மென்றும், மேலும் பலி இடுவது அறிஞர்கள் கண்டிக்கத்தக்க செய்கையாகும் என்றும் தொண்டர்கள் வேண்டிக் கொண்டதின் காரணமாக பலியிடும் ஸ்தலத்திற்கு மேற்படி பட்டர் வரவே இல்லை. அடுத்த ஆண்டு பலியை அறவே நிறுத்துவதாக பல பெரியார்கள் வாக்குறுதி செய்திருக்கிறார்கள். சென்னை ஜீவரட்சக சபையினரும் ஒத்துழைப்பார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

"கீழ் நாட்டைவிட்டு வெளியேற வேண்டியதே"

பிரிட்டனுக்கு ஜெர்மானியரின் புத்திமதி

ஜப்பானுக்கு எதிராக இந்தியா போரிடாது

மேற்கில் சாம்ராஜ்யம்

ஒரு ஜெர்மானிய மாணவர் பின் வருமாறு அபிப்பிராயப் படுகிறார்:-

கீழ்ப் பிரதேசங்களில் ஜப்பான் வெகு தீவிரமாக முன்னேறி வருகிறது. வெகு சீக்கிரத்தில் ஐரோப்பிய வல்லரசுகள் கீழ்ப் பிரதேசங்களிலுள்ள தங்கள், தங்கள் காலனிகளை இழக்க வேண்டியே நேரிடும். ஜப்பானுடன், பிரிட்டன் யுத்தம் தொடுக்க நேரிடுமானால் ஹாங்காங்கையும், சிங்கப்பூரையும் பிரிட்டன் இழப்பதுடன், ஆஸ்திரேலியாவும், இந்தியாவும் ஜப்பானுக்கு எதிராக பிரிட்டனுக்கு உதவி புரியாது. காலக்கிரமத்தில் ஆப்கானிஸ்தானம், சையாம், டச்சு ஈஸ்ட் இந்தியத் தீவுகள், பிரிட்டிஷ் மலேயா முதலிய தேசங்களையும் ஜப்பானியர்கள் தங்கள் கைவசமாக்குவர். கீழ் நாட்டில் தன் உரிமைகளை பிரிட்டன் ஒரு சமயம் இழக்க நேர்ந்தாலும், கனடாவை நடு நாயகமாகக் கொண்டு பிரிட்டன் மேல் நாட்டில் தன் சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கக் கூடும்.

இராமநாதபுரம் ஜில்லா போர்டு

இரண்டு தலைவர்கள் போட்டி

(ஒரு நிருபர்)

விருதுநகர், நவ, 14

முதுகுளத்தூர் தாலூகாவில் திரு. உ. முத்துராமலிங்கத் தேவர் மேல வட்டகை மறவர் சங்கம் பிரசிடெண்டாவர். திரு. ரத்தினவேல் சாமித் தேவர் கீழ வட்டகை மறவர் சங்கம் பிரசிடெண்டாவர். ராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தலில் முன்னவர் காங்கரஸ் சார்பாகவும், பின்னவர் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாகவும் அபேட்சகர்களாக நின்று பெரும் போட்டி போட்டு வேலை செய்கிறார்கள். ஒவ்வொரு வட்டகை வாசிகளும் தம் தம் தலைவரை வெற்றிபெற வேண்டுமென்பதாக மும்முரமாக வேலை செய்கிறார்கள். இருவரும் தாம் போர்டில் போய் மறவர் சி. டி. ஆக்ட் விஷயமாக நிவர்த்தி தேடப் போவதாகவே ஜனங்களிடம் பிரஸ்தாபிக்கிறார்கள். திரு. ரத்தினவேல் தேவரவர்களே, ஏற்கனவே முதுகுளத்தூர் தாலூகாவில் எல்லா மறவர்களையும் சி. டி. ஆக்டில் சேர்க்க வேண்டுமென்று சர்க்கார் அதிகாரிகள் எடுத்த முயற்சியை எதிர்த்து, குற்றவாளிகளான ஒரு சிலரைத் தவிர ஏனையவர்களுக் கெல்லாம் இடைஞ்சலின்றி நிவர்த்தி செய்தவராகும். தற்போது பார்வையிலிருப்பவர்களும் தங்கள் நல் நடத்தையால் நிவர்த்தி பெறலாம்.

காங்கரஸ்காரர்களின் மூட நம்பிக்கை

(புதுப் பாரதி)

வரப்போகும் தேர்தலில் காங்கரஸ் கட்சிக்குரிய ஓட்டுப் பெட்டி மஞ்சள் வர்ணமாயிருக்குமாம், மஞ்சள் மங்களவஸ்துவாம்! மஞ்சள் நிறம் சுபகாரியங்களை விளக்கும் குறியாம்! இது வரப்போகும் தேர்தலில் காங்கரஸ் வெற்றிக்கு அறி குறியாம்! என்னே அறிவு!! கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தார்; எடிஸன் மின்சாரம் கண்டு பிடித்தார்; சத்தியமூர்த்தி காங்கரஸ் வெற்றிக் கென்றே மஞ்சள் நிறத்தைக் கண்டு பிடித்தார். சபாஷ்! வெற்றியையும், தோல்வியையும் நிறத்தைப் பொறுத்து எப்படி நிச்சயிப்பது? மஞ்சள் குளித்த மங்கையர்கள் கோடிக் கணக்கில் வாழா வெட்டி விதவைகளாய் இருப்பதும் மஞ்சளை வியாபாரம் செய்தவர்களே ஆயிரக் கணக்கில் முதலிழந்ததும் இவர்கள் கண்டதும் கேட்டதும் இல்லையா? என்னே இவர்களின் குருட்டு நம்பிக்கை. இந்தச் சோற்றுக் குடுக்கைகள் தான் சுயராஜ்யம் வாங்கித்தரப் போகின்றதாம்! வெட்கக் கேடு!!

மஞ்சள் வண்ணப் பெட்டிக்கு
மயங்க மாட்டோம்-கெட்ட
வஞ்ச நெஞ்சப் பார்ப்பனர்க்
கிணங்க மாட்டோம்
தஞ்ச மென்று யாரையும் போய்க்
கெஞ்ச மாட்டோம்-வரும்
சட்டசபைத் தேர்தலுக்கு
அஞ்சமாட்டோம்.

காங்கரஸ் கூட்டத்தில் கேள்விகள்

சோமயாஜுலு மழுப்பல்

ஒரு கேள்விக்கு பதிலே இல்லை

(ஒரு நிருபர்)

சங்கரன்கோவில், நவ, 16

11-11-36-ல் இரவு 8-மணிக்கு சங்கரன்கோவில் சுவாமி சந்நிதி முன்பாக பஞ்சாயத்து போர்டு உறுப்பினர் திரு. ஆ. கு. முத்தாசாரியவர்கள் தலைமையில் காங்கரஸ் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கவிஞர் திரு. மீ. கதிர்வேல் பிள்ளையவர்கள் யுத்த எதிர்ப்பு என்பது பற்றி வீர கர்ச்சனை புரிந்தார்கள். பின், நெல்லை ஜில்லா போர்டின் காங்கரஸ் கட்சி மெம்பர்களையும், அக்கிராசனாதிபதியவர்களையும், காங்கரஸ் கட்சிப் பதவியை ராஜினாமாச் செய்தவர்கள், தனிக் கட்சி ஏற்படுத்தியவர்கள் யோக்கியப் பொறுப்புகளைப்பற்றி கேள்விகள் கேட்கப்பட்டது. திரு. சோமயாஜுலு அவர்கள் பதில் கூறும்முகத்தான், "சகோதரர்களே! கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சுருக்கமாக பதில் சொல்லுகிறேன், மன்னிக்க வேண்டும்" என மழுப்பி பேசியதின் சுருக்கம் வருமாறு: நல்ல மனிதர்கள் காங்கரஸ் கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடப்பார்கள். பொது நலத் தொண்டுகளை தயங்காது செய்வார்களென காங்கரஸ் நம்பி உங்களை நெல்லை ஜில்லா போர்டு தேர்தல் காலத்து காங்கரஸ் அபேட்சகர்களுக்கே வாக்குகளை கொடுக்க வேணுமென்று கேட்டோம். நீங்களும் காங்கரஸ் கட்டளையை நிறைவேற்றினீர்கள். ஜில்லா போர்டு மெம்பர்களான உடன் காங்கரஸை இன்று விட்டார்களே! உண்பது சாகமாக இருந்தால் துரோகம் செய்ய மாட்டார்கள். தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டியும் எத்தனையோ முறை எச்சரித்தது; எச்சரிக்கும் வருகிறது. நாம் என் செய்வது, யாரிடத்தில் முறையிடுவது? தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டியில், துப்பாக்கி இல்லை, பீரங்கி இல்லை, ஜெயில் இல்லை. காங்கரஸ் கட்டளைக்குக் கீழ்படியாத ஜில்லா போர்டு நிர்வாகிகளைக் கண்டு உலகம்தான் சிரிக்க வேண்டும் என்றும், பின்னால் பொது வாழ்க்கையில் அவர்களுக்கு இடம் கொடுக்க கூடாதென்றும் 16-11-36 நெல்லைக்கு வரும் மே. த. கவர்னர் அவர்களுக்கு ஜில்லாபோர்டு தலைவர் வரவேற்புப் பத்திரம் படித்துக் கொடுப்பாரே யாகில் அவர்மீது தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்; அவரை சும்மா விட்டுவிடாது என்றும் கூறினர். இனி எங்களுக்கு இந்த பணக்கார அண்ணாத்தைகள், வயல வீரர்கள் வேண்டாம். நாங்கள் பெற்ற அனுபவத்தின் பயனாக வரும் சென்னை சட்டசபைத் தேர்தலுக்குச் சிறைசென்று, பெருந்தொகைகளை அபராதம் செலுத்தி, தியாகம் புரிந்த அசல் காங்கரஸ்காரர்களை நிறுத்தப் போகிறோம். அவர்களை ஆதரிக்க வேணுமென்றும் முடிவாக இந்த ஜில்லா போர்டு தொல்லைகளெல்லாம் நமக்கு வேண்டாம். இனி ஸ்தல ஸ்தாபனம் சம்பந்தமாக கேள்விகள் கேட்காதீர்கள் என்று முடித்தார். மேற்கண்ட கேள்விக்கு பதில் சொல்ல தைரியம் இல்லாமல் போய் விட்டது. கேள்வியையே மறைத்து விட்டார்.

இச் ஜில்லா போர்டு தலைவர் தேர்தல் காலத்து கட்சிக்கு துரோகம் செய்த ஆறு காங்கரஸ் உறுப்பினர்கள் யார், யார் என்பது பகிரங்கமாகத் தெரிந்திருந்தும் ஏன் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை? (இதற்குப் பதிலே இல்லை) தலைவர் அவர்கள் முடிவுரையாக நகர் பஞ்சாயத்து போர்டில் நடைபெறும் ஊழல்களையும் லஞ்சாதிகாரத்தையும் கண்டித்து பேசினர். வந்தனோபசாரத்திற்குப் பின் கூட்டம் கலைந்தது. மதுரையிலிருந்து விஜயம் செய்திருந்த காங்கரஸ்காரர் திரு. வி. ரகுநாதன் அவர்கள் பேசுவாரென டாம், டாம் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் பேசாமடந்தையாகவே கூட்டத்தில் உட்கார்ந்திருந்தார். மக்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

நாவுக்கரசர் நழுவாதிருப்பாரா?

(ஆரூர் வஸந்தன் எழுதுவது)

திருவாரூர், நவ, 15

சென்ற சனியன்று வெளிப்போந்த "விடுதலை"யில் நாவுக்கரசர் என்பார் திருவாரூரிலே பார்ப்பன ஆதிக்கம் மிகுந்துளது என்றும், நினைத்தால் ஒருவனை உச்ச ஸ்தானத்தில் வைப்பதும், நினைத்தால் ஒருவனை பாதாளத்தில் அமுக்குவதும் அவர்களுடைய தொழில் என்ற பொருள்படும்படி எழுதி இருக்கிறார். இது உண்மையே. எவனோ ஒரு முட்டாள் "ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே" என எழுதி இருப்பதாக நமது ஞாபகத்துக்கு வருகிறது. "ஆவதும் பாப்பாலே அழிவதும் பாப்பாலே" என்று திருத்தி அமைத்தால் மிகப் பொருத்தமாகவும் இன்றைய நடவடிக்கைகட்கு ஒத்துமிருக்கும். இந்த நாவுக்கரசரின் அபிப்பிராயம் புதியதல்ல. திருவாரூரைப் பொருத்தவரை நாவுக்கரசர் உண்மையிலேயே நாவுக்கு-அரசரே. எந்தப் பொதுக் கூட்டமும் நாவுக்கரசரின் அபிப்பிராய மின்றி முடிவடையாது. அவ்வளவு சர்வவியாபி. ஆனால் இந்தப் பார்ப்பனர்களைப் பற்றி இதற்கு முன் எத்தனை முறை இவ்வபிப்பிராயத்தை வெளியிட்டிருப்பாரோ, அத்தனை தடவை இவ்வபிப்பிராயத்தை மாற்றி விட்டு பார்ப்பனர்களை அண்டினாலல்லது அவர்களுடைய கூட்டுறவில்லாமலிருக்க முடியாது என்று சொல்லிருப்பார். காங்கரஸ் கூட்டங்களில் காங்கரஸ் தலைவர்கள் வந்தால் மிகப் பிரமாதமான ஆடம்பரத்துடன் ஆஜராவர். அம்மட்டோ! ஒருவருடைய வேண்டுகோளுக்கோ, ஆமோதிப்புக்கோ சிரமம் கொடுக்காமல் கூட்டங்களில் பேசவும் செய்வார். நாவுக்கரசரின் துரதிருஷ்டமோ அல்லது பொது மக்களுடைய நாசகாலமோ நாவுக்கரசரின் அபிப்பிராயத்தை [illegible] கேட்க வசதியில்லாமல் அனேக கூட்டங்கள் முடிவடைந்து விடுவது வாடிக்கையாய் [illegible]டது. சுயமரியாதைக் கூட்டம் என்றாலும் நமது தோழர் ஒருபடி முந்தியே நிற்பார். அக்கொள்கைகள் தான் தனக்கு உடன்பாடு என்பார். அப்போது காங்கரசைப்பற்றிய அபிப்ராயத்தைக் கேட்டால் "காங்கரஸ் பிற்போக்காகப் போய் விட்டது. தலைகால் தெரியாமல் சிலரிடம் சிக்கி விட்டது" என்பார் பிறிதொரு சமயம் ஜஸ்டிஸ் கட்சி ஒன்றுமானால் அதை ஆதரிக்கும்முறையில் "தான் எப்போதுமே ஒரு பச்சை தேசிய பார்ப்பனரல்லாத வாதியாகவே தன் வாழ்நாள்முழுதும் இருந்து வந்ததாகவே பகிரங்கப்படுத்துவார். உடனே 'சுதேசமித்திரன்' பத்திரிகையை ஆதரித்துப் பிரசாரம் செய்து கொண்டிருப்பார். துணிந்து கேட்டால் "சுதேசமித்திரன் பத்திரிகையின் முதலே பார்ப்பனரல்லாதாரின் முதல் அதை ஆதரிப்பதில் பிசகில்லை," என்று தத்துவார்த்தம் பேசுவார். பிறகு, "நான் ஒரு கட்சியிலுமில்லை. எல்லாம் சுத்த சொங்கித்தனமான பார்ட்டியாகப் போய் விட்டது. நான் பார்ப்பனரல்லாதார் காங்கரஸ் சபையை தன்னாலில் புனருத்தாரணம் செய்யப் போவதாகவும்," சொல்வார். பிறகு, ஒரேயடியாக எல்லாவற்றையும் துறந்து விட்டு பிரசாத—மூர்த்தியாக ஆனாலும் ஆகிவிடுவார். எனக்குத் தெரிந்தவரை புதிய ஜனநாயகக் கட்சிதான் நாவுக்கரசரின் ஆசிர்வாதத்திற்கு உட்படாமலிருப்பதாக தெரிகிறது. நாவுக்கரசரின் சித்தாந்தப்படியே அவர் பார்ப்பனரின் அஸ்திவாரத்திலேயே வாழ வேண்டி யிருக்கிறார் போலும்! இப்போதும் நாவுக்கரசர் உண்மையாகவே பார்ப்பனர்மேல் வெறுப்புக் கொண்டிருப்பாரானால் அவர் தாராளமாகப் பார்ப்பனர் சூழ்ச்சியை உடைத்தெறிய முன் வரட்டும். சென்ற நவம்பர் 23-ல் தான் தோழர் நாவுக்கரசருக்கு காங்கரஸ் கமிட்டியில் பட்டாபிஷேகம் செய்துவைத்திருப்பதாகவும் அறிகிறேன். இவைகளெல்லாம் வைத்துக் கொண்டு தோழர் நாவுக்கரசர் பார்ப்பன சூழ்ச்சியை உடைக்க முற்பட்டால் ஆபத்து வரலாம். தாராளமாக பார்ப்பனரல்லாதாருக்கு அவர் முன்னணியில் இருந்து வழிகாட்டட்டும். எம்போன்ற பலர் அவரின் மேற்கண்ட திருப்பணிக்குத் தொண்டு செய்யக் காத்திருக்கிறோம். ஆனால், அவர் செய்யவேண்டியது ஒன்றே. பார்ப்பன சூழ்ச்சியை ஒளிமறைவின்றி கண்டிக்கத் தயார்தான் என்றும், இனி ஸ்திரமாகவே இத்துறையில் தன்னுடைய சேவையை எதிர்பார்க்கலாம் என்றும் நாவுக்கரசர் ஸ்பஷ்டமாக ஓர் அறிக்கை வெளியிடுவாரா? முன்வரத் தயாரில்லாவிடில் இவ்வளவு சிரமத்துடன் உண்மையான பெயரையும் கூட மறைத்துக்கொண்டு எழுதாமல் பேசாமலிருக்கட்டும். முன்வரத் தயாரானால் ஆரூர் பார்ப்பனரல்லாதார். அவரை ஆர்வத்துடன் வரவேற்பார்கள் என்பது நிச்சயம்.

உலகின் பெரிய வஸ்துக்கள்

உயர்ந்த கட்டிடம்:—நியூ யார்க்கிலுள்ள எம்பயர் ஸ்டேட் கட்டிடம். பூமி மட்டத்திலிருந்து 1248 அடி உயரம் ஆகும்.

நீளமான சுவர்:—சீன மதிற் சுவர். 1000 மைல் நீளம். 2000 வருஷங்கட்கு முன்பு கட்டப்பட்டது.

நீளமான நதிகள்:—தென் அமெரிக்காவிலுள்ள அமேஸானும், ஆப்பிரிக்காவிலுள்ள நைல் நதியும். இரண்டும் 4000மைல் நீளமுள்ளவைகள்.

பெரிய புத்தகாலயம்:— (லைப்ரரி) உலகிலேயே பெரிய புத்தகாலயம் பிரிட்டிஷ் மியூசியத்திலுள்ளது. 40 லக்ஷம் புத்தகங்கள் அதில் இருக்கின்றன.

பெரிய பிரிட்டிஷ் ரயில்வே ஸ்டேஷன்:—லண்டனிலுள்ள வாட்டர்லூ ரயில்வே ஸ்டேஷன். 24 1/2 ஏகரா விஸ்தீரணமுள்ளது.

பெரிய ரயில்வே பிளாட்பாரம்:—உலகிலேயே பெரிய பிளாட்பாரம் இந்தியாவில், சோனேபூரிலுள்ளது. 805 கஜம் நீளமாகும்.

பெரிய அரண்மனை:— ரோமில் போப் வசிக்கும் வாடிகன் அரண்மனை.

பெரிய பாலம்:— ஸ்காத்லாந்திலுள்ள டே பாலமாகும். 2 மைல நீளம். (காலிபோர்னியாவிலுள்ள சான்பிரான்சிஸ்கோ-ஓக்லாண்ட் பாலம், கட்டி முடிந்து விட்டால் மேற் குறித்த பாலத்தை தோற்கடித்து விடும். ஏனெனில் இப்பாலம் 8 1/4 மைல் நீளமென கணக்கிடப்பட்டிருக்கிறது.)

பாலையம் பட்டியில் வழிப்பறி கொள்ளை

(ஒரு நிருபர்)

பாலையம்பட்டி, நவ. 14

சென்ற 10-11-36 ந் தேதி காலை 8-30 மணிக்கு ஓர் நாடார் ஸ்திரீ காட்டிற்குப் போய்க்கொண்டிருக்கும்போது கிழக்கே அரண்மனைக்குப் பக்கத்தில் ஓர் திருடனால் வழி மறிக்கப்பட்டு இரண்டு காதுகளிலும் அணிந்துகொண்டிருந்த தண்டட்டி இரண்டு, அரிசித்தனுக்கு இரண்டு ஆக உருப்படி நாலையும் (6 பவுன் மதிப்புள்ளது) அறுத்துக் கொண்டு போய்விட்டான். இது விஷயம் உடனே அறுப்புக்கோட்டை டவுன் போலீசாருக்கு அறிவிக்கவே ஹெட்கான்ஸ்டேபிள் திரு. செல்வநாயகம் அவர்கள் புலன் விசாரித்து ஆமணக்கநத்தம் ஆவீரம் மூப்பன் என்பவனை இருக்குளம் என்னுமூரில் கைது செய்து களவுபோன நகைகளையும் அவனிடமிருந்து கைப்பற்றி எதிரியை ரிமாண்டில் வைத்திருக்கிறார்கள். இக்கேஸ் விஷயமாய் அறுப்புக்கோட்டை டவுன் போலீசார் எடுத்துக்கொண்ட முயற்சி மிகவும் பாராட்டத் தக்கது.

பார்ப்பனரல்லாதார் வெற்றி

காங்கரஸ் கட்சி முறியடிக்கப் பெற்றது

(நமது நிருபர்)

கும்பகோணம், நவ, 15

14—11—36-ல் கும்பகோணம் முனிசிபல் சேர்மன் தேர்தலுக்கு திருவாளர்கள்: கே. ஆர். எம். சிங்காரம் செட்டியாரவர்கள், ஆர். சுப்ரமணிய அய்யர், சி. எஸ். ஆராவமுது ஐயங்காரவர்கள் அபேக்ஷகராக நின்றார்கள். முதல் பாலெட்டில் மேற்படி செட்டியாரவர்களுக்கு 19 வோட்டுகளும், மற்ற இருவர்களுக்கு 5 வோட்டு விதம் முறையே கிடைத்தன. சீட்டுக் குலுக்கிப்போட்டதில் திரு. ஆர். சுப்ரமணிய அய்யர் விலக்கப்பட்டு செட்டியாரவர்களும், ஐயங்காரும் இரண்டாவது பாலட்டுக்கு நின்றார்கள். அப்பொழுது மேற்படி செட்டியாரவர்களுக்கு 20 ஓட்டும், ஐயங்காருக்கு 9 ஓட்டும் கிடைத்தன. மிகவும் கரகோஷத்துடனும், மகிழ்ச்சியுடனும் செட்டியாரவர்கள் கும்பகோணம் நகரசபைக்கு சேர்மெனாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். தேர்தலுக்கு முன் பிராமணர்களுடைய சூழ்ச்சியும், சுயவஞ்சகமும் அதிகப்பட்டிருந்த போதிலும் பிராமணரல்லாதார் ஏகோபித்து ஒரு மனத்துடன் செட்டியாரவர்களை தேர்ந்து எடுத்து ஜஸ்டிஸ் கொள்கையை நிலை காட்டினார்கள்.

பெரியகுளம் ரேஞ்சு

ஆசிரிய மானேஜர் சங்கம்

(ஒரு நிருபர்)

சின்னமன்னூர், நவ, 14

இச்சங்கத்தின் கூட்டமானது 7-11-36-ந் தேதி சின்னமன்னூர் சொக்கையா எலிமெண்டரிப் பாடசாலைக் கட்டிடத்தில் உத்தமபாளையம் 'பாரதி' ஆசிரியர் திரு. ஆர். நாராயணசாமிச் செட்டியார் தலைமையில் நடந்தது.

தலைவரவர்கள் முன்னுரையில் நமது நாட்டில் ஆசிரியர்களுக்கு தக்க மதிப்புக் கொடுக்கவில்லையென்றும், எல்லோரும் ஒற்றுமையாய்க் கிளர்ச்சி செய்து தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமென்றும், மேனாட்டினரைப் போல ஆசிரியர் பதவி உயர்ந்தாலல்லது தக்க ஆசிரியர் நமது நாட்டில் கிடைப்பது அருமையாகுமென்றும் இன்னும் பல விஷயங்களைப் பற்றி தக்க மேற்கோளுடன் எடுத்துச் சொன்னார்.

பின்பு டிப்டி இன்ஸ்பெக்டரவர்கள் மூலமாய் வந்த பல கவர்ன்மெண்டு உத்தரவுகளைச்சங்கத்திற்கு வாசித்துக் காட்டப்பெற்றது.

தனிப்பட்ட உபாத்தியாயர்களின் பாடசாலை நமது மாகாணத்தில் 20,000 க்கு மேலிருப்பதால், கனம் டைரக்டர் மேற்படி பாடசாலைகளை எடுத்து விடத் தீர்மானித்திருக்கும் அபிப்பிராயத்தை எதிர்ப்பதுடன், இந்த ஜில்லா சட்டசபை மெம்பர்களை ஒரு தூதுக் கோஷ்டி கண்டு பேசி அடுத்துவரும் நவம்பர் சட்டசபைக் கூட்டத்தில் இதைப்பற்றி தாவா செய்ய இச்சங்கம் சட்டசபை மெம்பர்களைக் கேட்டுக் கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கப் பெற்றது.

இச் சங்கத்தின் செலக்ட் கமிட்டியாரால் தயாரிக்கப்பட்ட சிலபஸை ஒப்புக்கொண்டு மெம்பர்களுக்கு விநியோகிக்கப் பெற்றது.

சங்கத்திற்கு இலவசமாய் சிலபஸ் அச்சிட்டுக் கொடுத்த மதராஸ் தமிழ்க்கடல் ஆபீஸ் புரொப்ரைட்டருக்கு இச்சங்கத்தின் நன்றியைச் செலுத்துமாறு தீர்மானிக்கப்பெற்றது.

கடைசியாக அக்கிராசனர் முடிவுரைகூறி சங்கக் கூட்டம் கலைந்தது.

தமிழர் சீர்திருத்த சங்கம்

திருச்சினப்பள்ளியில் கிளைச் சங்கம் ஸ்தாபனம்

(ஒரு நிருபர்)

திருச்சினப்பள்ளி, நவ, 15

திருநெல்வேலியில் தலைமை ஆபீஸாக இருக்கும் தமிழர் சீர்திருத்த சங்கத்தின் கிளையொன்று திருச்சியில் ஸ்தாபிக்க வேண்டுமென நண்பர்கள் வேண்டுகோளின்படி 14-11-36 சனிக்கிழமை மாலை 4-மணிக்குத் திருச்சி சின்னப்பட்டு நாஸ்காரத் தெரு, பத்ம விலாஸில் திரு. டி. டி. சிவபுண்யம் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. காரியதரிசி திரு. கே. என். தங்கவேலு சங்கத்தின் நோக்கங்களையும் தலைமைச் சங்கத்துடன் கிளைச்சங்கம் நடந்துகொள்ளவேண்டிய திட்டங்களையும் நமது கொள்கைகளை செய்கை அளவில் நடத்த சங்க உத்தியோகஸ்தர்கள் பொறுப்பும் கவலையும் எடுத்து வேலைசெய்ய வேண்டுமென்றும் பேசித் தலைமைச்சங்கத்தலைவர் தூத்துக்குடி திரு. கே. கே. ஏ. பெரியசாமி அவர்களின் படத்தையும் திறந்து வைத்துத் திருச்சி பத்ம விலாஸில் டிடி கிளைச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. சங்கத்திற்கு போர்டு மினிட்புக்கு, கணக்கு, ரசீது முதலிய பைலாக்களுக்கும், ஆரம்ப செலவிற்கும் ரூபா. 15 சாங்க்ஷன் செய்து மேற்கண்ட உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுத்து ஒப்புக்கொண்டதற்கு அவர்களது கையெழுத்துடன் ரிக்கார்டு செய்யப்பட்டது. தலைவர் திரு. டி. வி. சோமசுந்தரம் பி. ஏ. பி. எல். அட்வகேட். உபதலைவர்கள், திரு. என். பி. பி.சாமி, திரு. என்.ஏ. வைரவசாமி, காரியதரிசி — பொக்கிஷதார் திரு. டி. பத்மாநந்தம், உப காரியதரிசி, திரு. டி டி. சிவபுண்யம்.

தென்காசி

சர்வ தேச கூட்டுறவாளர் தினம்

(நமது சொந்த நிருபரிடமிருந்து)

தென்காசி, நவ, 9

தென்காசி கோவாப்ரேட்டிவ் பாங்கி ஆதரவின் கீழ் தென்காசி பஞ்சாயத்து போர்டு ஹாலில் நவ, 7ட சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சர்வ தேச ஐக்கியநாணய விழா நடந்தது. ஊரிலுள்ள பிரமுகர்களும் தனதனவான்களும் விஜயம் செய்திருந்தார்கள். சிற்றுண்டி நடந்த பின் பொதுக் கூட்டம் வக்கீல் திரு. சகஸ்ரநாம அய்யரவர்கள் தலைமையில் நடந்தது. போர்டு ஹைஸ்கூல் உபாத்தியாயர் திரு. எஸ். வி. வெங்கிட சுப்பிரமணியய்யர் பி. ஏ. எல். டி. ஐக்கிய இயக்கத்தின் கோட்பாடுகளையும், நன்மைகளையும், மேல் நாடுகளிலுள்ள இயக்கத்தின் நிலைமையையும், நமது தேசத்தில் இயக்கத்தைப் பலப்படுத்த செய்ய வேண்டிய வழிகளையும் பற்றி ஒரு அழகான சொற்பொழிவு தமிழில் நடத்தினர். அதன் பின் கோவாப்ரேட்டிவ் இன்ஸ்பெக்டர் திரு. சுப்பிரமணியய்யர் தமிழ் நாட்டிலுள்ள நமது இயக்கத்தைப் பற்றியும், தென்காசி பாங்கு நடப்பு வருஷத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் நிர்வாக சபை அங்கத்தினர்களின் திறமையாலும் பொது ஜன சேவை பிரியத்தாலும் டெபாசிட் புத்துயிர் பெற்று இப்பொழுதுள்ள பண நெருக்கடியான காலத்தில் மெம்பர்களுக்கு நாணய உதவி புரிந்து வருவதைப் பற்றியும், மேலும் மேற்படி பாங்கை முன்னுக்குக் கொண்டு வர வேண்டிய வழிகளைப் பற்றியும் ஆங்கிலத்தில் சொற்பொழிவு ஆற்றினர். பிறகு வக்கீல் திரு. சங்கர நாராயணய்யர் வட்டி ரேட்டைக் குறைக்க வேண்டுமென்றும், தென்காசி தாலுகாவிலுள்ள மிராசுதாரர்கள், நிலச்சுவான்தார்கள் இவர்களின் கடன் பளுவை நிவர்த்திக்க ஒரு நில அடமான பாங்கு ஒன்று ஸ்தாபிக்க வேண்டுமென்றும் பிரேரபேணை கொண்டு வந்து வக்கீல் வி. எம். சோமசுந்தரம் பிள்ளையவர்களால் ஆதரிக்கப் பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

பாங்கி தலைவர் திரு. வி. எம். சோமசுந்தரம் பிள்ளையவர்களால் வந்தனம் கூறப்பட்டு பின் கூட்டம் இரவு 8—மணிக்கு கலைந்தது.

மதிப்புரை

"புதிய இந்திய அரசியல் அமைப்பு"

1937-ஏப்ரில் 1-ந் தேதி புதிய சீர்திருத்த அரசியல் அமலில் வரப் போகிறது. 1937 பிப்ரவரியில் தேர்தல் நடைபெறும். தேர்தல் பிரசார வேலைகள் இப்பொழுதே ஆரம்பமாகி விட்டன. புதிய சீர்திருத்தப்படி நமது மாகாணத்தில் 70-லக்ஷம் ஜனங்களுக்கு வோட்டுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வோட்டுரிமையை அவர்கள் புத்திசாலித்தனமாக பிரயோகம் செய்ய வேண்டுமானால் புதிய சீர்திருத்த அரசியல் சட்டத்தை சிறிதளவாவது படித்திருக்க வேண்டும். புதிய சீர்திருத்தச் சட்டமோ ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. நம்மவர்களில் பெரும் பாலாருக்கு ஆங்கிலம் தெரியாது. ஆனவே, ஆங்கிலம் அறியாதாருக்கு உதவியாக, மதுரை வக்கீல் திரு. கே. வி. ராமசுப்பிரமணிய அய்யரவர்கள் புதிய சீர்திருத்தச் சட்டத்தைத் தமிழில் மொழி பெயர்த்து இரண்டு பாகமாக வெளியிட்டிருக்கிறார்கள். முதற் பாகத்தில் "புதிய அரசியல் திட்டத்தின் விவரம் பூராவும்" அடங்கி யிருக்கிறது. இரண்டாம் பாகத்தில் "சட்டசபைகள், தேர்தல்கள் இவைகள் சம்பந்தமான பூரா விஷயங்களும், ஜனங்களின் ஸ்திதி கதி விவரத் தொகுதியும், முக்கியமான சில புள்ளி விவரங்களும்" அடங்கி யிருக்கின்றன. இவ்விரண்டு புஸ்தகங்களும் தமிழர்களுக்கு மிகவும் அவசியமானவை என்பதற்கு சந்தேகமே இல்லை. நடை மிகவும் எளியதாயும், இனியதாயும் இருக்கிறது. காலப் போக்கை புணர்ந்து இந்நூலை வெளியிட்டிருக்கும் திரு. அய்யரவர்களுக்கு தமிழர்கள் எக்காலும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

விலை விவரம்

முதற் பாகம்	0—12—0
இரண்டாம் பாகம்	0—12—0

தபாற் செலவு வேறு.

கிடைக்குமிடம்:—கே. வி. ராமசுப்பிரமணிய அய்யர், பி.ஏ.,பி.எல். வக்கீல், மதுரை.

ஆதிதிராவிடர்களின் பொதுக் கூட்டம்

(ஒரு நிருபர்)

சிங்காநல்லூர், நவ, 13

இன்று மாலை 5-30 மணிக்கு சிங்காநல்லூர் ஆதிதிராவிட வாலிப சங்கத்தின் ஆதரவில் திரு. சி. கருப்பமுத்து அவர்களின் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திருவாளர்கள்: எஸ். மாணிக்கம், ப. குமாரசுவாமி, ஜீ. மத்தேயு, அருளானந்தம் முதலியவர்கள் முறையே "சமூகத்தொண்டு" 'வாலிபர் கடமை' "கல்வியபிவிருத்தி" "கட்டு" என்னும் விஷயங்களைப் பற்றி சொற்பொழி வாற்றினார்கள். திரு. டி. எஸ். சுந்தரம் அவர்கள் பேசுகையில் காங்கரஸ் பத்திரிகையான 'தின மணி'யானது தாழ்த்தப்பட்டோர்களாகிய தாசமுத்து, கோபாலன் என்றவர்களை முறையே 'சக்கிலியன்' 'பறையன்' எனக் குறிப்பிட்டதைக் கண்டித்தும், திரு. சத்தியமூர்த்தியின் தேர்தல் அறிக்கையின் போக்கைக் கண்டித்தும் பேசினார். பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறை வேற்றப்பட்டது.

1. சென்னையில் கிளப்பட்டிருக்கும் தாழ்த்தப்பட்டோரின் தேர்தல் போர்டை இக் கூட்டம் பாராட்டுவதோடு, ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள அனுபவம் வாய்ந்த பிரதிநிதிகளைச் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறது.

2. திரு. ஆர். வீரையன் அவர்களையே கோவை ஜில்லா ஒதுக்கப்பட்ட ஸ்தானத்திற்கு நிறுத்தி வைக்குமாறு தேர்தல் போர்டை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

அரசியல் அவியல்

(தேசிய நாளன்)

தியாகராய நகருக்கு சாக்கடை வேண்டுமென்கிறார் சி. ஆர். யாரு- சி. ஆரா? இவரெங்கே வந்தாரு? அறவி கிறவி இன்னுங்களோ!

• • •

சக்ரவர்த்தி அல்லவா—சம்மனில்லாமல் ஆஜராவாராம். அரசியலில் தானே அறவி? முனிசிபலிடியுக்கென்ன?

• • •

சாராய விளம்பர 'ஹிந்து' பத்திராதிபர் கஸ்தூரி ரங்கய்யங்கார், மதுவிலக்கு பிரசங்கம் செய்கையில் மூன்றுமுறைப் பின் முனைந்து யாரோ முனுமுனுத்தாராம். பத்திராதிபர் தோரணையில் பேசவில்லையென்று பிரசங்கியார் பதிலளித்து அசந்தர்ப்பப் போவதைப் அடக்கி விட்டாராம். அந்த அய்யங்காருக்கு இளைந்த புள்ளியா இந்த ஆசாமி!

• • •

நேற்று முளைத்த தியாகராய நகருக்கு சாக்கடை வேண்டுமென்னும் சி. ஆருக்கு சேரிகள் நிலை தெரியுமா? 'சைத்தான்ஜன்' களிடமிருக்கும் அபிமானம் கூட, இந்த சோட்டா காங்கிரசு, ஹரிஜன்களிடமில்லையே!

• • •

தியாகராய நகரின் பரந்த பங்களாக்களையும், பார்க்குகளையும் கண்டு சென்னை நகர் பொறுமைப்பட வேண்டாமாம். வெள்ளிப் பணம் கொட்டிக் கொட்டி விலைக்கு வாங்கினதாம். காங்கரசும் சமதர்மம் பேசுகிறது!

• • •

கார்ப்பரேஷனில் லஞ்சத்தை நீக்க வேண்டுமாம். அவன் கெட்டான் குடியன்! திலகர் நிதி திருட்டு—ஹிந்தி நிதி புரட்டு—ஹரிஜன நிதி அவுட்டு—கதர்நிதி மழுட்டு—இதறெல்லாம் கணக்குக் கொஞ்சம் காட்டு தம்பி காட்டு!

• • •

ஜஸ்டிஸ் கட்சி மெஜாரிட்டியில் காங்கரசுக்கும் கமிட்டிகளில் இடமிருந்தது. இப்போ? ஜஸ்டிசுக்கு எதிலும் ஜாகை இல்லை. காங்கரஸ்காரர்கள் கூட பைத்தியக்காரர்களா?

• • •

கமிட்டி தேர்தல் ஜன நாயக முறையல்ல, ஜெர்மன் முறை என்றார் பாகதேவ். அவன் தம்பி அங்கதன். கிளை ஒன்று போட்டால் கனை நன்று முளைக்கும். ஜெர்மனியும், காங்கரசும் ஆரிய ஸ்தாபனங்கள்தானே. ஆரியர் அகராதியில் தாட்சண்யம், தயாளம் ஏது?

• • •

கார்ப்பரேஷன் கமிட்டி தேர்தல் போக்கை, காங்கரஸ் ஈரல் பிடிக்குதே "மதாராஸ் மெயில்", "தமிழ் நாடு" பத்திரிகைகள் கூட கண்டிக்கின்றன. "தின மணி"யோ அவ்விரண்டையும் கண்டிக்க வேண்டுமென்கிறது. அநுமார்களும், விபீஷணர்களுமின்றி அய்யமார்களால் எக்காரியம் தான் சாதிக்க முடியும்!

• • •

காங்கரஸ் அபேட்சகரை எதிர்ப்போர் யாராயிருந்தாலும் (பொப்பிலி ராஜாவாயிருந்தாலும், ஈ. வெ. ரா. அவர்களாயிருந்தாலும், டாக்டர் வரதராஜுலுவாயிருந்தாலும்) அவன் காங்கரஸ் விரோதி, எதிரிக்கு உதவுபவன்—என்று ஐயரவர் பேசினரும்—சே! நமக்கேன் அந்த அற்பத்தனம்—பேசினராம்.

• • •

"காங்கரஸ் அபேட்சகர்களை எதிர்ப்பவர்கள் தேசத் துரோகிகள் என்று யோக்கியமானவர்கள் சொல்லமாட்டார்கள்" என்று "தமிழ் நாடு" கூறியதைக் கண்டு கோடரிக்காம்பு "தின மணி"க்கு வந்து விட்டது மூக்கு மேலே கோபம்!

• • •

"மகா தேசபக்தியில் மூழ்கியதைப்போல் வரதராஜுலு பேசுகிறார்" 'தின மணி' கிண்டல் செய்கிறது. வரதராஜுலு சிறைவாசம் செய்த காலத்தில், 99% காங்கரஸ் வீரர்களுக்கு சிறைக்குப் போகும் வழிகூட தெரியாதென்று சி. ஆர். கே. ஒரு முறை சொன்னார். சோதா சொக்கலிங்கத்துக்கு சிறையிருக்கும் இடமாவது தெரியுமோ!

• • •

"கமிட்டிகளுக்குள் ஜஸ்டிஸ் கட்சியை விட்டால், கிளை தோட்டத்தில் பெருச்சாளியை விட்டுவிடுவது போலாகும்"-என்று 'ஜெய பாரதி' சால்ஜாப்புகிறது. கோவில் பெருச்சாளி கும்பலின் பிறவி குணம் போகுமா!

• • •

திலகர் நிதியை வேட்டை போட்ட கள்வர்கள் கார்ப்பரேஷன் பொக்கிஷத்தை வேட்டையாடப் போகையில் எதிரியை உள்ளே விட்டுக் கொண்டால் இடைஞ்சல் தானே!

• • •

"மகாஜன சபாட்சியில் மந்திரிகளே அரசாங்கம். அப்போ, மந்திரி சத்தியமூர்த்தி யார் புரிவது யாருடைய?" என்று முன் மந்திரி பொப்பிலி ராஜ தந்திரி போட்டார் ஒரு சரியான போடு. அவ்வளவுதான். காங்கரஸ் தவடுதத்தங்கள் திக்கு முக்காடுதுகள்!

• • •

ஒருவேளை சத்தியமூர்த்தி தன் நிழலோடு குஸ்தி பிடிக்கலாம்! அல்லது காங்கரஸ் மந்திரிகளுக்குள் மூலபலச் சண்டை நடக்கலாம். அமைச்சன் ஆசனத்தில் அய்யர்வாள் அமரும் போது அழகு சொட்டுமா—அசடு தட்டுமா!

• • •

ஜஸ்டிஸ் கட்சி ஒரு பெரிய கட்சி என்று "ஜெய பாரதி" சொல்லிவிட்டது. மறந்துசொன்னதா—மனதாரச் சொன்னதா? பார்ப்பனர்க்கும் பின் புத்தி தானோ? பண்டித ஐயரவர்க்கு இப்பின் புத்தி கூட இல்லையே!

• • •

பொப்பிலி சுத்த வீரனுல் நேர் முகமாக யுத்தம் புரியட்டுமே என்று அந்த பத்திரிகை சவால் கூறுகிறது. முஷ்டி புருவரோடு முஷ்டி யுத்தம் செய்வது சுத்த வீரனுக்குரிய லட்சணமல்லவே!

• • •

வோட்டு விற்பது பாவம் என்கிறார் சத்தியமூர்த்தி! உண்மை. பொய் சொல்வது புண்யமா! ஓய்! பதில் சொல்லும் காணும்!

• • •

சரி, தொலைகிறது. பாவத்திற்கு மன்னிப்பு இன்னிப்பு உண்டோ? உண்டென்று உளறல், என்ன?—வோட்டுக்கு வாங்கின பணத்தை கோயிலிலே போட்டுட்டா, பாவம் ஓட்டம் பிடிக்குமாம். ஓ! பாவம் பண்ணியாவது பணம் பறித்து பார்ப்பான் தொப்பையை ரொப்பிடணும்!!

• • •

'வாலே முளைத்தவர்போல் பார்ப்பனர் மேலே இருப்போமென்கிறார்'—என்று அந்தோ காலம் சென்ற திராவிட சிங்கம் வாகிடி. வி. சுப்ரமண்யம் பாடுவதுண்டு. கார்ப்பரேஷனை பாருங்கள். பாஷ்யம் அய்யங்கார் மேலே பூட்டாரு—பார்ப்பனரல்லாதார் வாலாய் விட்டார்கள்!

• • •

ரங்கய்யருக்கு பயித்தியமா! ஐயர் ஐம்பப் பேசச் சண்டு சட்ட உடைப்பு முதற்படி-தவடைப்பு, இரண்டாம்படி-புரட்சி மூன்றும்படி யென்று வீண் காப்ரா செய்து கொள்கிறார்! 1926-ல் சட்டமுடைப்போம், பொல்லாப் பட்டமுடைப்போமென்று சட்டசபை நுழைந்த காங்கரஸ்காரர்கள் சுப்பராய மந்திரி சபையைத் தாங்கி நிற்கவில்லையா? அப்போ பிணுபிணு மந்திரி சபை! இப்போ பிராமண மந்திரி சபை! பூவ்வளவுதானே!

• • •

உத்தியோகம் ஏற்பதா வேண்டாமா என்பதை வோட்டு கொடுத்த பிறகு சொல்லப் போகிறார்களாம். ஒருவர் வேண்டு மென்பதும் மற்றொருவர் வேண்டா மென்பதெல்லாம் மறாக்கு! வோட்டர்களை ஏமாற்றலாமென்றே காங்கரஸ் நினைத்துவிட்டது. வோட்டரே! 'மணசிலாயோ'?

ஆதிதிராவிடர் போட்டி

ஜில்லா போர்டு தேர்தல்

23-11-36-ல் நடைபெறும்

(ஒரு நிருபர்)

ஆரணி, நவ, 16

வேலூர் ஜில்லா போர்டுக்கு சில மாதங்களுக்கு முன்பு ஆதிதிராவிடர்களுக்கு தேர்தல் நடைபெற்றது. அத் தேர்தலில் திரு. முருகேசம் என்கிற ஆதிதிராவிடர் நியமனப் பத்திரம் சரிவர எழுதாததால் அது செல்லுபடியாகவில்லை. பாக்கியநாதம் என்கிறவர் அச்சமயம் வாபஸ் வாங்கிக்கொண்டார். இதனால் அச்சமயம் ஓர் ஆதிதிராவிட பிரதிநிதி தேர்ந்து எடுக்கப்படவில்லை. சென்ற 9-11-36-ம் தேதி ஆரணி சர்க்கிளில் சார்பாக ஆதிதிராவிட பிரதிநிதியைத் தேர்ந்து எடுக்க ஓர் நியமனச் சீட்டு, வேலூர் பஞ்சாயத்து ஆபீசர் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த தேர்தலுக்கு மேல் சொல்லப்பட்ட திரு. முருகேசனும், திரு. பாக்கியநாதனும் போட்டி போடுகிறார்கள். தேர்தல் 23-11-36-ம் தேதி ஆரணி சர்க்கிளில் நடைபெறும். இவர்களுக்குள் போட்டி பலமாய் இருந்து வருகிறது.

"காங்கரஸ் காரர்களை நம்பாதீர்கள்!"

பாய் பரமானந்தர் எச்சரிக்கை

காசி, (மெயில்)

பாய் பரமானந்தர் பாட்னாவிலிருந்து திரும்பியதும் காசியில் நடைபெற்ற ஆரிய சமாஜப் பொதுக் கூட்டத்தில் பேச அழைக்கப்பட்டார். அவர் அக் கூட்டத்தில் பேசுகையில், காங்கரஸ் செய்தன்ன நிலைமைகளை மனதில் வைத்து, ஹிந்துக்களின் நன்மைகளைப் பொறுத்தமட்டில் ஹிந்து வாக்காளர்கள் இனி காங்கரசை நம்பி மோசம் போகக் கூடாதென்றும் ஹிந்துக்கள் ஒன்று சேர்ந்து தங்களுடைய உரிமைப் பாதுகாக்க வேண்டுமென்றும் எச்சரிக்கை செய்தார்.

கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் பாய் பரமானந்தர் ஹரிஜனங்கள் சீக்கிய மதத்தைத் தழுவுவதைப் பற்றி தான் எதிர்க்கவில்லை யென்றும் அது நடைமுறையில் வருவதைப் பற்றித்தான் சந்தேகமடைவதாகவும் கூறினார்.

வடார்க்காடு ஜில்லா

ஜஸ்டிஸ் மகாநாடு

—:o:—

26—11—36 வியாழக்கிழமை வேலூர் ராக்ஸி தியேட்டரில் நடைபெறும்.

மகாநாட்டுத் திறப்பாளர்:

கனம் பொப்பிலி ராஜா அவர்கள்.

மகாநாட்டுத் தலைவர்:

கனம் பி. டி. ராஜன் அவர்கள்.

டாக்டர் நாயர் படத் திறப்பாளர்:

கனம் குமாரராஜா முத்தைய செட்டியார் அவர்கள்

கொடியேற்று விழா ஆற்றுபவர்:

தோழர். ஈ. வெ. ராமசாமிப் பெரியார்

மகாநாட்டிற்கு மற்றும் பல ஜஸ்டிஸ் இயக்கத் தலைவர்கள், பெண்மணிகள் அன்பர்கள் இளைஞர்கள் விஜயஞ் செய்வார்கள்.

வரவேற்புக் கழக அங்கத்தினர் கட்டணம்	ரூ. 3—0—0
பிரதிநிதிக் கட்டணம்	ரூ. 1—0—0
பார்வையாளர்கள் கட்டணம்.	ரூ. 0—4—0

வி. சண்முக முதலியார்,
வரவேற்புக் கழகத் தலைவர்.

"ஹானரரி மாஜிஸ்டிரேட் பதவி"

ஆரணியில் வேட்டை

5 பேர் போட்டி

(ஒரு நிருபர்)

ஆரணி, நவ, 6

ஆரணியில் ஹானரரி மாஜிஸ்டிரேட் பதவி ஒன்று காலியாயிற்று அப்பதவிக்கு இவ்வூரில் பலத்த போட்டி ஏற்பட்டு இருக்கிறது ஹானரரி மாஜிஸ்டிரேட் பதவி காலியாகும் போதெல்லாம், தேர்தலில் அபேக்ஷகர் நிற்பது போல் பலர் போட்டிபோட்டுச் சர்க்காருக்கு விண்ணப்பம் அனுப்புகிறார்கள். தற்சமயம் காலியான பதவிக்கு அமெரிக்கன் ஆற்காட்டு மிஷின் அச்சுக் கூட சொந்தக்காரரும், பிரபலஸ்தரும், எல்லோராலும் பாராட்டு வருபவருமான திரு. எம். பி. ஒய். ரத்தினம் அவர்களும், பட்டு ஜவுளி வியாபாரியான, திரு. க. மு. அண்ணாமலை செட்டியாரும், மற்றொரு வியாபாரியான, திரு. ஜனார்த்தன பாகவதரும், ஷராப்பு வியாபாரியான, ரேணு செட்டியாரும், லாடிரன் எனகிற கிறிஸ்துவரும் போட்டி போடுகிறார்கள். சில தினங்களுக்கு முன்பு காலியான ஓர் பெஞ்ச் ஸ்தானத்தில் ஓர் பிராமணர் ஹானரரி மாஜிஸ்டிரேட்டாய் நியமிக்கப்பட்டார். அது ஒரு கிறிஸ்தவருக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானமாய் இருந்தும், வெளியூரில் இருந்து இங்கு வந்து இருக்கும் பிராமணருக்குக் கொடுத்ததை ஒருவரும் விரும்பவில்லை. இம்மாதிரி தாழ்த்தப்பட்டவருக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இப்பதவி கொடுக்காமல், உயர்ந்த ஜாதியாருக்குக் கொடுப்பது வெறுக்கத்தக்கது இது பரியந்திரம் ஓர் முகம்மதியருக்கு இந்த ஸ்தானம் கொடுக்கப்படவில்லை. ஆதி ஹிந்துக்களுக்கும் கொடுபட்டதில்லை இருக்கக்கூடிய நான்கு ஸ்தானங்களில் (3) உயர்தர ஹிந்துக்களுக்குக் கொடுத்தாலும், ஒரு ஸ்தானமாவது இதர மதஸ்தர்களுக்குக் கொடுக்க வேண்டும். இப்போது போட்டி போட்டு இருக்கும் ஐவரில் இரண்டு பேருக்கு ஆங்கிலமும் தெரியாது. தமிழிலும் அதிக யோக்கியதாம்சமில்லை. இப்படிப்பட்டவர்கள் எல்லாம் பதவி வேட்டையாடுகிறார்கள். இப்போது திரு. எம். பி. ஒய். ரத்தினம் பிள்ளைக்குத் தான பலத்த ஆதரவு இருப்பதாகத் தெரிகின்றது. சர்க்கார் கிறிஸ்தவ சமூகத்துக்கு ஓர் பிரதிநிதியை நியமிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"விடுதலை" நண்பர்களுக்கு

அறிக்கையும், வேண்டுகோளும்

வருகிற நவம்பர் முதல் "விடுதலை" யை நாள்தோறும் வெளியிடுவதற்கான எல்லா முயற்சியும் நடந்து வருகிறது.

அதற்கு ஏற்படுத்தக் கருதுகிற கட்டணம் விவரம் கீழே காண்க.

சென்னையிலும், விற்பனைக்காரர் உள்ள இடங்களிலும்

தனித் தாள்	0	0	6
1 மாதம்	1	0	0
3 மாதம்	2	14	0
6 மாதம்	5	10	0
1 ஆண்டு	11	0	0

தபால் வழி

உள் நாடு.

தனித் தாள்	0	0	9
1 மாதம்	1	4	0
3 மாதம்	3	10	0
6 மாதம்	7	0	0
1 ஆண்டு	13	0	0

வெளி நாடு

தனித் தாள்	0	1	6
1 மாதம்	1	10	0
3 மாதம்	4	12	0
6 மாதம்	9	12	0
1 ஆண்டு	19	0	0

நீடித்து நடக்கும் மற்றெந்த செய்தித் தாளையும் விட இதன் கட்டணம் குறைந்திருப்பதும், குறைந்த காலத்தை விட நீடித்த காலத்திற்குக் கட்டண விகிதம் குறைந்திருப்பதும் விளங்கும். ஆகையால், "விடுதலை" நண்பர்கள் எல்லாரும் சேர்ந்தாற்போல ஒரு ஆண்டுக் காலமோ, கூடியவரை நீடித்த காலத்திற்காவது கட்டணம் செலுத்திச் சேரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வாரம் இரு முறைக்குக் கட்டணம் செலுத்தி யிருப்பவர்கள் புதிய விகிதப்படி ஏற்பட்ட மீதக் கட்டணத்தை உடனே அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கணிசமான எண்ணுள்ளவர்களுக்கு இதுவரை "விடுதலை" இலவசமாக அனுப்பப்பட்டு வருகிறது. இனி அப்படி அனுப்ப முடியாதென்பதை அவர்களே தெரிவார்கள். இலவசமாகக் கிடைத்தாலொழிய "விடுதலை" யைப் படிக்க முடியாது, அல்லது குறைந்த கட்டணத்திற்காவது கிடைத்தால்தான் படிக்க முடியும் என்ற நிலையிலிருப்பவர்கள் தாங்கள் காரணங்கண்டு உடனே விண்ணப்பம் அனுப்பி இலவசமாகவாவது, குறைந்த கட்டணத்திற்காவது அனுப்ப சம்மதம் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்படிச் சம்மதம் பெறாதவர்கள் முழுக்கட்டணம் அனுப்பி "விடுதலை" க்குத் துணை புரிய வேண்டுகிறேன்.

"விடுதலை" விற்பனைக்காரர்கள் தங்களுக்கு வேண்டிய எண்ணிக்கைக்கு உரிய இரண்டு மாதக் கட்டணத்தை முன் பணமாகக் கட்டித் தெரிவித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

நாடும், தன் குடும்பமும், தன் இனமும், தனக்கும், தன் குடும்பத்திற்கும், தன் இனத்திற்கும் மீதி கல்லா யிருக்கிற மற்றவர்களும் மாத்திரம் தான் வாழ வேண்டுமென்ற குறுகிய நோக்கத்திற்கு ஆளாகாமல், எல்லா இனத்தாரும் இன்புற்று வாழ்ந்து நாட்டிற்கு சீரும் சிறப்புக் தேட வேண்டுமென்ற பெரு நோக்கிற்கு உண்மையாக உழைப்பவர்களை எல்லாம் "விடுதலை"க்குப் பணம் செலுத்தியும், மற்ற வழியிலும் துணை புரியமாறு கேட்டுக் கொள்கிறேன்.

24-10-36 நெ. தெ. நாயகம்.

குறிப்பு: (1) மேலே குறிப்பிட்டபடி, வருகிற நவம்பர் முதல் "விடுதலை"யை நாள் தோறும் வெளியிடுவதற்கான எல்லா முயற்சியும் செய்தும், நவம்பர் துவக்கத்திலிருந்தே அவ்வாறு வெளியிடும் நிலைமை கைகூடவில்லை. விரைவில் வெளியிடுவதற்கான முயற்சி குறைவில்லாமல் நடந்துவருகிறது.

31-10-36 நெ. தெ. நாயகம்.

(2) 16-11-36 (திங்கட்கிழமை) முதல் நாள் தாளாக வெளிவரும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

7-11-36 நெ. தெ. நாயகம்.

(3) "விடுதலை" நாள் தாளாக வருமுன் செய்யப்பட வேண்டிய வேலைகள் சில இன்னும் அரை குறையாகவே இருக்கின்றன. 16-11-36 ல் அவ்வாறு வெளிவரும் என்ற நம்பிக்கை முற்றுப் பெற வழி இல்லை. விரைவில் வெளிவருவதற்கான முயற்சிகள் குறைவின்றி நடந்து வருகின்றன.

14-11-36 நெ. தெ. நாயகம்.

ஆரணியில் மழை

ஏழைகளுக்குத் தொல்லை

(நமது நிருபர்)

ஆரணி, நவ, 16

ஆரணியில் சென்ற 10 தினங்களாய மழை பெய்த வண்ணமாய் இருக்கின்றது. கமண்டல நாகநதியில் பெரும் வெள்ளம் வந்து 3 வண்டி மாடுகளை அடித்துக் கொண்டு போய்விட்டது. இம் மழையினால் சோட்டுகளெல்லாம் சிதைக்கப்பட்டுப் போய்விட்டது. ஆரணியைச் சுற்றியுள்ள எல்லா கிராமங்களிலும் கனத்த மழை பெய்து இருக்கிறது. ஏரி, குளம் எல்லாம் நிரம்பிவிட்டது. கடலைக்காய் வியாபாரம் இவ்வருடம் விசேஷமாய் இல்லை. கடலைக்காய் உற்பத்தியே இப் பக்கங்களில் குறைந்து விட்டது. இன்று காலையும் மழை பெய்தது. இன்னும் மப்பும் மந்தாரமாய் இருந்து வருகிறது. இம் மழையினால் ஏழை எளியவர்கள் பிழைப்பின்றி கஷ்டப்படவேண்டி இருந்தது.

நோட்டீஸ்

கீழ்த் தஞ்சை ஜில்லா போர்டின் வைத்திய சாலையில் வேலையில் அமரத் தகுதி பெற்ற ஆண், பெண் நர்சிங் ஆர்டர்லிகளிடமிருந்து மனுக்கள் 20-11-36 வரையில் ஏற்றுக் கொள்ளப்படும். மனுதார் குறைந்தது 5-வது வகுப்பு தேறியவராயும், நர்சிங் ஆர்டர்லி வேலைக்குச் சர்க்கார் ஏற்படுத்தியுள்ள பயிற்சி பெற்றவராயும் இருக்க வேண்டும். அவர்களின் வயது, வகுப்பு முதலியன குறிப்பிட்டு நமது நற்சாட்சிப் பத்திரங்களின் நகல்களை அனுப்ப வேண்டும். மாத சம்பளம் ரூ 12-1/2-18.

(ஒ) நெ. ரா. சாமியப்ப முதலியார்,
பொப்பிலி கட்டடங்கள், நாகப்பட்டணம். } தலைவர்.

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே!

ஏழையென்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே!

மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையை கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த வகையினும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! (பாரதி)

விடுதலை

சென்னை: 1936-௵ நவம்பர்-௴ 18-௳
புதன்கிழமை

வாக்காளர்களே! எச்சரிக்கை

காலித்தனம் செய்வது காங்கரஸ்காரரின் வாடிக்கை யாகி விட்டது. சென்னை நகர சபைத் தேர்தலின் தலைநாள் இரவு 12 மணிக்கு காங்கரஸ் தொண்டர்கள் லாரிகளில் சென்று திரு. டி. சுந்தர ராவ் வீட்டு முன் நின்று கல் எறிந்து கூச்சல்போட்டுக் கலவரம் செய்ததுடன் அவருக்கு வோட்டளிக்கத் தயாராகயிருந்த ஆதி திராவிடர்களின் வீடுகளுக்குச் சென்று பயமுறுத்தி அட்டகாசம் செய்தனர். ஆனால், மறுநாள் காலை 5-மணிக்கு காங்கரஸ் தொண்டர்களை ஜஸ்டிஸ் கட்சித் தொண்டர்கள் அடித்தது மன்றி, ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மீபதியைக் கத்தியால் குத்துவதாய்ப் பயமுறுத்தியதாயும் அச்சிட்ட நோட்டீஸ்களை நகர முழுதும் பரப்பி நகர வாசிகளுக்கும், வோட்டர்களுக்கும் திரு. டி. சுந்தர ராவ் நாயுடு பேரில் துவேஷமும் வெறுப்பும் உண்டாகும்படி செய்தனர். இவ்விஷயத்தை திரு. சுந்தர ராவ் நாயுடு அவர்களே துண்டுப் பிரசுரங்கள் மூலம் வெளியிட்டிருக்கிறார். ஒரு பேட்டையிலோ பிர்க்காவிலோ காங்கரஸ் அபேட்சகருக்கு ஆதரவில்லையெனக் கண்டால், அந்த அபேட்சகருடன் போட்டி போடுவோர் மீது அபாண்டமான பழிகளைச் சுமத்தி விஷமப் பிரசாரம் செய்வது காங்கரஸ் காலித்தனங்களில் ஒன்றாக இருக்கிறது. அசெம்பிளித் தேர்தல் காலத்து திவான்பகதூர் ராமசாமி முதலியார் மீது தாலியறுத்த பழி சுமத்தி போக்கிரித்தனமாகப் பிரசாரம் செய்ததை தமிழ் நாட்டார் மறந்திருக்க மாட்டார்கள். ராமநாதபுரம் ஜில்லாவில் தேர்தல் பிரசாரம் மும்முரமாக நடைபெற்று வருகிறது. ஜஸ்டிஸ்கட்சியாரும், காங்கரஸ் கட்சியாரும், இதரர்களும் தேர்தலில் போட்டி போடுவதாகத் தெரியவருகிறது. யோக்கியப் பொறுப்பான பிரசாரங்கள் செய்வதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். ஆனால், பிரசாரம் காலித்தனமாக மாறுமானால் அதை விவேகிகள் கண்டிக்கத்தான் செய்வார்கள். ராமநாதபுரம் ஜில்லாவில் ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகர்களுக்குப் பலமான ஆதரவு இருந்து வருவது கண்டு ஏமாந்த காங்கரஸ்காரர், ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகர்களையும், பிரசாரகர்களையும் பலவிதமாகத் துன்புறுத்தி வருவதாய் நமக்குப் பிரதி தினமும் செய்திகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக விருதுநகர் திரு. வி. வி ராமசாமி மீதே காங்கரஸ் காலிகள் கண் வைத்திருப்பதாகத் தெரிகிறது. அவரைப் பல வழியில் காங்கரஸ் காலிகள் துன்புறுத்துவதோடு நில்லாமல் அவரது பிரசாரகர்கள் கத்தி வீசிப் பயமுறுத்துவதாயும், வாக்காளர்களைத் தொந்தரவு செய்து வருவதாயும், போக்கிரித்தனமான பொய்ச் செய்திகளையும் கட்டிவிடுகின்றனர். நேற்றைய காங்கரஸ் பத்திரிகையில் விருதுநகரில் ஜஸ்டிஸ் கட்சியார் பெரிய அமர்க்களம் நடத்துவதாயும் போலீசார் அவைகளை கவனிக்கவில்லையென்றும் கூட ஒரு பொய்ச் செய்தி வெளிவந்திருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சிப் பிரசாரகர்கள் விஷமம் செய்தால்தானே போலீசார் அதைத் தடுக்க முயல்வார்கள். வீணே அபாண்டப் பழிகளைச் சுமத்தினால் போலீசார் லக்ஷியம் செய்வார்களா? காலித்தனம் காங்கரஸ்காரரின் "காபிரைட்". தேர்தல் காலங்களில் கள், சாராயம் 'சப்ளை' செய்வதும் காங்கரஸ்காரர் திருவிளையாடல்களில் ஒன்று. பலவிடங்களில் நடைபெற்ற தேர்தல்களில் வாக்காளர்களுக்கு காங்கரஸ்காரர் கள் வாங்கிக் கொடுத்ததாக நமது பத்திரிகையில் முன் வெளிவந்துள்ள செய்திகளை எந்த காங்கரஸ் வீரரும் இதுகாறும் மறுக்க முன்வரவில்லை. ஆகவே, தமது அயோக்கியத் தனங்களை பிறர் மீது ஏற்றி காங்கரஸ் காலிகள் விஷமப் பிரசாரம் செய்வதை வாக்காளர் நம்ப மாட்டார்கள் என நம்புகிறோம். கண்ணை மூடிக் கொண்டு தம் கட்சி அபேட்சகரையே ஆதரிக்க வேண்டுமென்று ஜஸ்டிஸ் கட்சியார் கூறவில்லை. யோக்கியதையுடையவர்களை ஆதரிக்க வேண்டுமென்றே ஜஸ்டிஸ் கட்சியார் தேச மகா ஜனங்களை வேண்டிக்கொள்கிறார்கள். யோக்கியர்களையே அவர்கள் அபேட்சகர்களாகவும் நிறுத்தி வருகிறார்கள். திரு வி. வி. ராமசாமி பொது வாழ்வில் ஈடுபட்டு நல்ல அனுபவம் பெற்றவர். விருதுநகர் நகரசபை மெம்பராகவும் தலைவராகவும், செனட் மெம்பராகவும் அரிய சேவை செய்து வருபவர். எந்த ஸ்தாபனத்துக்கும் அழகு செய்யக் கூடியவர். எனவே, காங்கரஸ்காரரின் பொய்ப் பிரசாரத்தினால் மயங்காமல் ராமநாதபுரம் ஜில்லா வாக்காளர்கள் அவரையும் ஏனைய ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்களையும் கட்டாயம் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

அழுதது போதாதா? மேலும் பணமா?

தேர்தல் பிரசார சம்பந்தமாக சர்தார் படேல் வரப்போகிறாராம். தேசத்துக்கும், காங்கரசுக்கும் அவர் செய்த தியாகம் அளவிட முடியாததாம். ஆகவே காங்கரஸ் ஜெயிக்க வேண்டும் என்று விரும்புகிறவர்களும், சர்தாரிடம் பக்தியுடையவர்களும் படேல் நிதிக்கு ஏராளமாகப் பணம் கொடுக்க வேண்டுமாம். அந்தப் பணம் எதற்காக? தேர்தலில் ஜனங்கள் காங்கரசை ஆதரிக்க வேண்டும் என்று பிரசங்கம் மூலமாகவும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் பிரசாரம் செய்வதற்காகவாம். தொகை எவ்வளவு? கொஞ்சந்தான். இரண்டு லக்ஷம் ரூபாய்.

காங்கரஸே இந்தியாவாம்; தேசமகா ஜனங்களெல்லாம் காங்கரஸையே ஆதரிப்பார்களாம். காங்கரஸ் பேரால் ஒரு கழுதையை நிறுத்தினாலும் வெற்றி நிச்சயமாம். வரப்போகும் தேர்தலில் காங்கரஸ்காரர்தான் நிச்சயமாக வெற்றிபெறப் போகிறார்களாம். இவையாவும் நிச்சயமாக இருந்தும் தேர்தல் பிரசாரத்துக்கு இரண்டு லக்ஷம் ரூபாய் ஏன் வேண்டு மென்பதுதான் தெரியவில்லை. காங்கரஸ்பேரால் அபேட்சகர்களை நிறுத்தி அவர்களுக்கே வோட்டுக்கொடுக்க வேண்டுமென்று அகில இந்திய காங்கரஸ் தலைவரும், தமிழ் நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவரும், மற்றும் படே, சோட்டா தலைவர்களும்—தலைவிகளும்—வீராங்கனைகளும்—தேவிமாரும், பிரதி தினமும் காங்கரஸ் பத்திரிகைகளில் அறிக்கைகள் வெளியிட்டுக் கொண்டு இருந்தால் போதாதா? பணம் எதற்காக வேண்டும்? அதுவும் இந்த பஞ்ச காலத்திலா? காங்கரஸ் புள்ளி விவரக் கணக்குப்படி இந்தியரின் சராசரி தின வருமானம் ஒன்றரை அணாவாம். அவ்வளவு குறைந்த வருமானமுள்ள ஏழை இந்தியர்களிடம் இரண்டு லக்ஷம் ரூபாய் பிடுங்கப் போகும் காங்கரஸ் வாலாக்களை மகா பாவிகள் என்றாலும் குற்றமாகுமா!

வீர ஜவஹர்லால் தென்னாட்டில் விஜயம் செய்தபோது லக்ஷோபலக்ஷம் ஜனங்கள் அவரை ஒவ்வொரு ஊரிலும் தரிசனம் செய்ததாக காங்கரஸ் பத்திரிகைகள் கோஷித்தன. சென்னையில் மட்டும் அவரை ஆறு லட்சம் ஜனங்கள் தரிசனம் செய்தார்களாம். ஆனால் அவருக்குக் காணிக்கை அளிக்க மொத்தம் வசூலான தொகை காங்கரஸ் பத்திரிகைகளில் வெளிவந்த கணக்குகளின்படி 9 ஆயிரத்துக்கு மேலில்லை. பெரிய பெரிய காங்கரஸ் தலைவர்கள், பக்தர்கள், வீராங்கனைகள் நிறைந்த சென்னை நகரத்திலேயே 1500-க்குமேல் வசூலாக வில்லையாம். எனவே, படேல் நிதிக்கு எவ்வாறு இரண்டு லட்சம் வசூலாகப் போகிறதோ தெரியவில்லை. திலகர் சுயராஜ்ய நிதிக்கும் ஹரிஜன நிதிக்கும் ஏற்பட்ட கதியை உணர்ந்துள்ள தென்னாட்டார் மேலும் ஏமாந்து போகமாட்டார்கள் என்பது நிச்சயம்.

சித்தூர் ஜில்லா போர்டு உப தேர்தல்

ஜஸ்டிஸ் அபேக்ஷகரின் வெற்றி

(ஒரு நிருபர்)

சித்தூர், நவ, 12

சித்தூர் ஜில்லா வேப்பஞ்சேரி, தொகுதி பிரதிநிதியான திரு. வி. ஆர். செட்டி ராஜிநாமா கொடுக்கவே காலியான ஸ்தானத்திற்கு மேற்படி தொகுதிக்கு இருவர்கள்: வெங்கடகிருஷ்ண நாயுடு (ஜஸ்டிஸ் கட்சி) வி. நாராயணசாமி செட்டி (காங்கரஸ்) இருவரும் அபேட்சகர்களாக நின்றனர். மேற்படி ஜில்லாபோர்டு தலைவரும் இன்னும் அனேக பார்ப்பனர்களும் காங்கரஸிற்காக உழைத்து வந்தனர். ஆனால் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியின் அபேக்ஷகரான வெங்கடகிருஷ்ண நாயுடுவே வெற்றி பெற்றார். பார்ப்பனர்கள் முயற்சி இங்கு பலிக்கவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது.

ஜில்லா பொருளாதார கவுன்சில்கள்

சர்க்கார் நியமனங்கள்

சென்னை, நவ, 17

மாகாண கிராமப் புனருத்தாரண சம்பந்தமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஜில்லா பொருளாதார கவுன்சில்களுக்கு சர்க்கார் கீழ்க்கண்ட அங்கத்தினர்களை நியமித்திருக்கின்றனர். ஜில்லா கலெக்டரே அச ஜில்லா கவுன்சிலின் தலைவராயிருப்பார். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் இரண்டு சர்க்கார் அங்கத்தினர் இருப்பார்கள்.

அனந்தபூர்:—திருவாளர்கள்: ஜீ. சோமி ரெட்டி, ஜீ. ராமேஸ்வர ராவ்.

வட ஆற்காடு:—திருவாளர்கள்: ஜே. ஜே. வாலஸ், எம். பி. ரங்கசாமி ரெட்டி.

தென் ஆற்காடு:—திருவாளர்கள்: எம். ஜீ. பார்த்தசாரதி முதலியார், எச். சீதாராம ரெட்டி.

செங்கல்பட்டு:—மிஸ். பி. எம். டேவிட்ஸ், ராவ்சாகிப் எம். வேதாசல முதலியார்.

சித்தூர்:—ராவ்பகதூர் வி. ரகுநாத ரெட்டி, திரு. பி. வெங்கடரங்க நாயனிங்கார் (காளஹஸ்தி)

கோயம்புத்தூர்:—திருவாளர்கள்: சி. எஸ். ரத்னசபாபதி முதலியார், ஜே. என். ஐயகரன்.

கடப்பை:—ராவ் சாகிப்கள்: பி. ராகவ ரெட்டி, சி. பி. ராமசந்திர ராவ்.

கீழ் கோதாவரி:—திவான்பகதூர் டி. சேஷகிரி ராவ் பந்துலு, திரு. சி. அப்பாலசாமி ரெட்டி.

மேல் கோதாவரி:—திருவாளர்கள்: ஸ்ரீராமுலு நாயுடு, ஜீ. வெங்கடா ரெட்டி நாயுடு.

குண்டூர்:—திருவாளர்கள்: ஜே. குப்புசாமி சௌத்ரி, டி. காரல் ஸ்மித்.

தென் கன்னடம்:—கான்பகதூர் முகம்மத் ஹாஜ்னுட், திரு. எம். எஸ். சிரேஸ்டார்.

ராமநாதபுரம்:—திருவாளர்கள்: வி. வி. ராமசாமி, ஸி. வி. ஸி. ஜே. வெங்கடாசலம் செட்டியார்.

கர்நூல்:—ராவ்பகதூர் பி. பி. சேஷா ரெட்டி, திரு. சபா ரெட்டி.

மதுரை:—ராவ்பகதூர்கள்: கே. தேவாஜி ராவ், வேதகப தேவர்.

மலையாளம்:—கான்சாகிப் வி. குன்ஹி மோயி ஹாஜி சாகிப், திரு. வி. ஆர். நாயனர்.

நெல்லூர்:—ராவ்சாகிப் எம். ஏ. அப்பாய் நாயுடு, திரு. பி. கோவிந்த ரெட்டி.

நீலகிரி:—திரு. பி. கே. நந்தி கௌடர், ரெவரண்டு எம். பி. டெய்லர்.

கிருஷ்ணா:—ராவ்சாகிப் ஸி. கொழுந்தை செட்டி; மீர்சாபுரம் ஜமீன்தார்.

சேலம்:—திருவாளர்கள்: டி. ஆதிநாராயண செட்டியார், கே. ஏ. நாச்சியப்ப கவுண்டர்.

தஞ்சாவூர்:—பாவா ஸி. கோபாலசாமி முதலியார், ராவ்சாகிப் ஐ. குமாரசாமி பிள்ளை.

திருநெல்வேலி:— திரு. எம். தேவதாசன், திரு. கே. கே. வெங்கடராம நாயுடு.

திருச்சினாப்பள்ளி:—ராவ்பகதூர் கே. ஸி. சப்தரிஷி ரெட்டியார், ராவ்சாகிப் எல். என். பரமசிவம் பிள்ளை.

அப்துல்லா காந்தி ஹீராலாலானர்

பம்பாய், நவ, 16

காந்தியாரின் மூத்த குமாரரும், சமீபத்தில் இஸ்லாம் மதத்தைத் தழுவி அப்துல்லா காந்தி எனப் பெயர் சூட்டிக் கொண்டவருமான ஹீராலால், மீண்டும் இந்து மதத்தைத் தழுவி விட்டார். பம்பாய் ஆரிய சமாஜத்தார் சுத்திச் சடங்கைச் செய்தனர். ஏராளமான பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர். பழைய பெயரே (ஹீராலால்) அவருக்கு வைக்கப்பட்டது.

"அமரநாத் மீது கடுமையான நடவடிக்கை"

கட்சி தோல்விக்கு அது ஓர் காரணம்!

"திறமையின் மீது இனி கேப்டன் நியமிக்கப் படும்"

ராமசாமி, மர்ச்சண்டுக்குப் பாராட்டு

போமாண்ட் கமிட்டியின் விசாரணை அறிக்கை

பம்பாய், நவ, 17

இங்கிலாந்தில் சுற்றுப் பிரயாணம் செய்த இந்திய கிரிக்கட் கோஷ்டியின் நடவடிக்கைகளைப் பற்றி விசாரணை செய்ய போமாண்ட் கமிட்டியின் அறிக்கை ஏறக்குறைய பூர்த்தியாகி விட்டது. அது போபாலுக்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதற்காக அனுப்பப்படும். அமரநாத் மீது காப்டனும் மானேஜரும் எடுத்துக் கொண்ட நடவடிக்கை மிகவும் கடுமையானதென்றும், கட்சியில் கட்டுப்பாடு குலைந்ததற்கும், கட்சி தோல்விக்கும் அது ஓர் காரணமாகுமென்றும், இனித் திறமையின் மீதே காப்டனை நியமிக்க வேண்டுமென்றும், சி. ராமசாமியும், வி. எம். மர்ச்சண்டும் பாராட்டுதற் குரியவர்களென்றும் இங்கிலாந்து சுற்றுப்பிரயாணத்தால் 100 பவுன் லாபம் ஏற்பட்டிருக்கிறதென்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திருச்செங்கோடு

பஞ்சாயத்து போர்டு

(ஒரு நிருபர்)

திருச்செங்கோடு, நவ, 16

16-11-36-ல் திருச்செங்கோடு பஞ்சாயத்து போர்டு கூட்டத்தில் தோழர் டி. ஆர். வையாபுரி முதலியார் போர்டின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இங்கு நடைபெற்ற தேர்தலில் காங்கரசிலேயே பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் போட்டி ஏற்பட்டது. இருதரப்பிலும் அபேட்சகர்கள் நிறுத்திவைக்கப்பட்டனர். பலத்த போட்டியும் நடைபெற்றது முடிவில் காங்கரஸ் பார்ப்பனரல்லாதாரே வெற்றி பெற்றார். இருதரப்பிலும் தேர்தலுக்காகவே இதுவரையும் காங்கரசில் சேராமலிருந்தவர்களை கட்டாயப்படுத்தி காங்கரசில் சேர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

காஞ்சிபுரம்

மெய்கண்டார் கழகம்

(ஒரு நிருபர்)

காஞ்சிபுரம், நவ, 15

மெய்கண்ட தேவநாயனார் திருநாள் இக்கழகத்தின் சார்பில் 12, 13-11-36-ம் நாட்களில் பிரம்மஸ்ரீ ஈ. பரமசிவ ஐயர், பி. ஏ., பி. எல்., டிஸ்டிரிக்ட் முனிசிப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முதல் நாள் இக்கழகத்தின் இளைஞர் தொகுதித் தொடக்க உரை தலைவர்களால் நிகழ்த்தப்பெற்றது. மறுநாள், உயர் திரு. மறைமலை அடிகள் மாணவர் திரு. இளவழகனார் அவர்கள் "சித்தாந்தம்" என்னும் பொருள் பற்றியும், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் "மெய்கண்டார்" என்னும் பொருள் பற்றியும் விரிவுரை நிகழ்த்தினார்கள். திரு. வி. க. முதலியார் அவர்கள் 'சிவஞான போதம்' மெய்கண்டார் தமது மோன நிலையில் அருள்கூர ஒளியில் உணர்ந்து செந்தமிழில் அருளிய முதல் நூலென்றும், அது எந்நாட்டினர்க்கும், எம்மொழியினர்க்கும், எச்சமயத்தினர்க்கும் பொதுவாகிய சமரச நூலென்றும் விளக்கினார்கள். தலைவர் அவர்கள், எந்நாட்டிலும், எம்மொழியிலும், மெய்யுணர்வுடையார்கள் அருளிய பெருநூல்களின் தொகுப்பே வேதம் எனப்படும் என்றும், இவ்வுண்மையை உணர்ந்தால் சமயச்சண்டைக்கு ஏது இல்லையென்றும் வற்புறுத்திக் கூறி முடித்தார்கள்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கட்சி

தேர்தல் போர்டு கூட்டம்

சென்னை, நவ, 16

சென்னை மாகாண தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கட்சி, கௌரவ காரியதரிசி எழுதுவதாவது:—

சென்னை மாகாண தாழ்த்தப்பட்ட கட்சியின் தேர்தல் போர்டு கூட்டமொன்று நேற்று காலை 9-மணிக்கு திவான்பகதூர் ஆர். சீனிவாசன் எம். எல். ஸி., தலைமையில் ராயப்பேட்டை நெ. 41. லாயிட்ஸ் ரோட் கட்டிடத்தில் கூடியது. உப கமிட்டியாரால் தயாரிக்கப்பட்ட கட்சியின் நகல் அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது. கீழ்க்கண்ட தீர்மானங்களும் நிறைவேறின.

புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களின் பிரதிநிதியாக விளங்குகிற சென்னை மாகாண தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கட்சியின் அபேட்சகர்களுக்குப் போட்டியாக, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கென ஏற்படுத்தப்பட்டிருக்கும் தனித் தொகுதிகளில் காங்கரஸ் அபேட்சகர்களை நிறுத்தி வைக்க திரு சத்தியமூர்த்தி முயற்சிப்பதால் அக்காரியத்தில் தலையிட்டுத் தடுக்க வேண்டி மகாத்மா காந்தியை இக் கட்சி வேண்டிக் கொள்வதாகவும் அவசியமானால் கட்சித் தலைவர் திரு. ஆர். சீனிவாசன் திரு. காந்தியுடன் கலந்து பேசுவா ரென்றும், இது விஷயமாக தந்தி யொன்று திரு. காந்திக்கு அனுப்பப்பட வேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டது.

வரப்போகும் தேர்தல்களில் இக் கட்சி சார்பாக நிற்கும் அபேட்சகர்களுக்கு சிகப்பு நிற ஓட்டுப் பெட்டிகள் அளிக்கப்பட வேண்டு மென்றும் அது சாத்தியப் படாவிட்டால் பச்சை நிற ஓட்டுப் பெட்டிகளாவது அளிக்கப்பட வேண்டு மென்றும் சர்க்காரை வேண்டிக் கொள்கிறது.

தனித் தொகுதிகளுக்கு அபேட்சகர்களைப் பொறுக்கி யெடுக்க தேர்தல் போர்டின் அடுத்த கூட்டம் நவம்பர் 22-ந் தேதி மாலை 3-மணிக்குக் கூடும்.

வந்தனோப சாரத்துடன் கூட்டம் கலைவுற்றது.

3 கிறிஸ்தவர் இந்து மதத்தைத் தழுவினர்

சென்னை, நவ, 18.

ஸ்ரீமதி ஜியாஜியானு, திருவாளர்கள் எம் வி. செசியன், ஜீ. எச். சாரா என்ற மூன்று கிறிஸ்தவர் இந்து மதத்தைத் தழுவியுள்ளனர். சென்னை ஆரிய சமாஜத் தலைவரான பண்டிட் கே. ஞானி சுத்திச் சடங்கைச் செய்தார். முன்னவரிருவர் பிறப்பிலேயே கிறிஸ்தவர்கள். பின்னவர் பார்ப்பனராயிருந்து மதமாறியவர். அவருக்கு ஒரு இந்து மனைவியும் இரு குழந்தைகளும் இருக்கின்றனர். ஆனால், மனைவியும், குழந்தைகளும் அவருடன் மதமாற மறுத்து விட்டனர். அவர்கள் மூவருக்கும் முறையே ஜான்சிபாய், கேசவன், ஹரிஹரன் என இந்துப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திருநெல்வேலி ஜில்லா குடிசைக் கைத்தொழிற் பொருட் காட்சி

(ஒரு நிருபர்)

திருநெல்வேலி, நவ, 15

ஜில்லா பொருளாதார சங்கத்தின் சார்பாகக் கூட்டுறவு இலாகா அதிகாரிகளால், 1936-ம் வருஷம் நவம்பர் மாதம் 18, 19, 20-ந் தேதிகளில் திருநெல்வேலித் தாலூகா கச்சேரி கட்டிடத்தில் ஒரு பொருட் காட்சி நடைபெறும். ஜில்லா கிராமாந்திரங்களில் உள்ள கூட்டுறவு சங்கங்களின் மெம்பர்களால் தயாரிக்கப்பட்ட விசித்திர கைத்தொழிற் பொருள்கள், காட்சிக்குக் கொண்டு வரப்படும்.

உயர் திருவாளர் டி. கே. சிதம்பரநாத முதலியார் பி. ஏ., பி. எல்., மேற்படி பொருட் காட்சியை 18-ந் தேதி காலை 9-மணிக்குத் திறந்து வைப்பார்.

அனந்தபூர் ஜில்லா போர்டு தலைவரின் பரிதாபகரமான நிலைமை

இருதலைக் கொள்ளி நடுவில் அகப்பட்ட எறும்பு போல், அவர் படும்பாடு

பதில் கொடுக்க விரும்பிய கமிட்டியின் கும்பகர்ணப் போக்கு

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருமுன் திரு. ஒபி ரெட்டி ராஜிநாமா செய்வாரா?

ஒரு காங்கரஸ்வாதி "ஜஸ்டிஸ்" பத்திரிகையில் எழுதுகிறார் :—

அனந்தபூர் ஜில்லா போர்டில் காங்கரஸ்காரரின் நிர்வாக ஊழலைக் குறித்து செப்டம்பர் மாதம் 10-ந்தேதி "ஜஸ்டிஸ்" பத்திரிகையில் நான் எழுதியுள்ள கட்டுரையைக் கண்டு காங்கரஸ்வாதிகளிடை சிறிது சலசலப்பு ஏற்பட்டுள்ளது. ஸ்தல தெலுங்கு வாரப் பத்திரிகையான "சாதனா" என் மீது பாணந்தொடுக்க ஆரம்பித்து விட்டது. ஆனால் நான் கூறியதின் கண்ணுள்ள உண்மைகளை மறுத்துக் கூறுவதற்கு அதற்குத் தைரியமில்லை. ஆரம்பக் கல்வி நிதி சம்பந்தமாக போர்டு தலைவரான திரு. சி. ஒபி ரெட்டி, பார்ப்பன உப தலைவரான திரு. எம். சேஷாராவுக்கு தமக்குள்ள அதிகாரங்களை தத்தம் செய்திருப்பதைக் குறித்து அப்பத்திரிகை ஆசிரியரான திரு. பி. ராமாச்சார்லு மறைமுகமாக நியாயம் கற்பிக்க முயலுகிறார்.

இதன் பின்னர் காங்கரஸ் கட்சியினர் அந்தரங்கமாகக் கூடி ஆலோசித்தனர். எனது கட்டுரைக்குப் பதில் விடுப்பதற்காக மூன்று பேரடங்கிய ஒரு கமிட்டியை நியமித்தனர். ஆனால் அவர்களின் பதில் இன்னும் சூரிய ஒளியைக் காணப் பெறாமலிருக்கிறது. உண்மையை மறைத்துக் கூற அவர்களால் எப்படி முடியும்? ஆயினும் தங்கள் நாவன்மையினால் பொய்யை மெய்யாக்கவும், மெய்யை பொய்யாக்கவும் திறமை கொண்டுள்ளனர்.

உப தலைவருக்கு தலைவர் தமது அதிகாரங்களைத் தத்தம் செய்ய என்ன உரிமையிருக்கிறது என்று நான் கேட்கவில்லை. அவர் தமது அதிகாரங்களை வற்புறுத்தலின் மீது கொடுத்தாரா அல்லது தானே பிரியப்பட்டு கொடுத்தாரா என்பதே எனது கேள்வி. இதற்குப் பதில் கொடுப்பதை விட்டு திரு. ஆச்சார்லு தலைவருக்குள்ள உரிமைகளைக் குறித்து பேச முற்பட்டு விட்டார். இதன் மூலம் தப்பித்துக் கொள்ளலாமென்பது அவரது எண்ணம் போலும். அடுத்தபடியாக திரு. சேஷாராவ் ஜஸ்டிஸ் கட்சியினரால் தான் உப தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதாகக் கூறுகிறார். வாஸ்தவமே. வேறு வழியில்லாவிட்டால் என் செய்வது? காங்கரஸ் கட்சியினரால் நிறுத்தப்பட்ட அங்கத்தினரை ஆதரித்திருக்க வேண்டுமென்று திரு. சேஷாராவ் எண்ணுகிறாரா? ஆனால் காங்கரஸ் கட்சியால் நிறுத்தப்பட்ட அங்கத்தினருக்குப் போட்டியாக நின்ற காங்கரஸ் கட்சியின் கொறடாவான திரு. சேஷாராவை அக்காங்கரஸ் கமிட்டியினர் என்ன செய்து விட்டனர். ஒன்றுமில்லை! ஏன்? அவர் பார்ப்பனராக இருந்த காரணத்தினாலல்லவா!

ஜில்லா போர்டு தலைமைப் பதவியை ராஜிநாமா செய்து, ஜில்லா காங்கரஸ் கமிட்டி திரு. சி. ஒபி ரெட்டி அனுப்பியதாக நான் முன் எழுதியிருந்தேன். ஆனால், நான் முதலிலேயே நினைத்திருந்தபடி திரு. ஆச்சார்லு கோஷ்டியார், அவரை ராஜிநாமாச் செய்யாதபடிக்குப் பக்குவப்படுத்தி விட்டனர். ஏனெனில் அவர் ராஜிநாமா செய்து விட்டால் உப தேர்தலில் காங்கரஸ்காரர்களுக்கு விமோசனமில்லை என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

தேர்தல் காலத்தின் பொழுது காங்கரஸ்காரர்கள் வெகு வேகமாகப் பிரசாரம் செய்தனர். தாங்கள் வெற்றி பெற்றால் தங்களது மந்திரக் கோலின் உதவியால் ஒரு புது உலகையே சிருஷ்டிக்கக் கூடுமென்றும், அதில் எல்லோரும் கஷ்டமின்றி சுபிட்சமாய் வாழலாமென்றும், கிராமாந்தரங்களில் ரோடுகள், ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், கிணறுகள் முதலியதெல்லாம் ஏற்படுமென்றும் பறை சாற்றினர். மேலும், போர்டு தலைவரின் விஷயங்களில் தாங்கள் தலையிடுவதில்லையென்றும், அவருக்குப் பரிபூரண சுயேச்சை கொடுப்பதாகவும் முழங்கினர். ஆனால், தற்பொழுது நடைமுறையில் நாம் காண்பதென்ன? ஒரு நாள் தவறாமல், காங்கரஸ் அங்கத்தினர்கள் ஏதாவதொரு சலுகையை முன்னிட்டு போர்டு தலைவரை பேட்டி காணாமலிருப்பதில்லை. போர்டு தலைவருக்கு இது அருவருப்பைக் கொடுப்பதாயிருக்கும். ஏனெனில் ஒரு காங்கரஸ் அங்கத்தினரின் தாட்சண்யத்தை வேண்டி ஒரு உத்தரவு பிறப்பிக்கிறார். ஆனால், அடுத்த நிமிஷமே மற்றொரு காங்கரஸ் அங்கத்தினர் உடனே வந்து அதை ரத்துசெய்ய வற்புறுத்துகிறார். அது ரத்து செய்யப்பட்டதை அறிந்த முதல் காங்கரஸ் அங்கத்தினர் அதைப் புதுப்பிக்க வேண்டுமென மீட்டுகிறார். இவ்விதம் அவரது நிலைமை இருதலைக் கொள்ளியின் நடுவிலகப்பட்ட எறும்பைப் போல் ஊசலாடும் தன்மையதாயிருக்கிறது. இதுதான் காங்கரஸ் நிர்வாகத்தின் அழகு. இது போன்றே டெண்டர்கள், உத்தியோக நியமனங்கள், ஏழை ஆரம்பக் கல்வி உபாத்தியாயர்களை இடம் விட்டு இடம் மாற்றுவதிலும் அவரது நிலைமையிருக்கிறது.

ஆரம்பக் கல்வி சம்பந்தமாக தமக்குள்ள அதிகாரங்களை தத்தம் செய்யுமுன்பு, போர்டு தலைவரின் ஜாகை, காங்கரஸ் அங்கத்தினர்கள், உபாத்தியாயர்கள், ஜில்லா போர்டு ஊழியர்கள் முதலியோரின் யாத்திரை ஸ்தலமாக காணப்பட்டது. குமாஸ்தாக்களில் பெரும்பாலோர் ஆபீஸ் கோர்ட்களிலும் கூட தலைவரின் ஜாகையிலேயே பெரும்பான்மையான நேரத்தைப் போக்கினர். காரியதரிசி எப்பொழுதும் ஜாகையிலேயே இருந்து வந்தார். ஜாகை முடிந்த பின்னரும் கூட திரும்பமாட்டார்; அல்லது ஜாகையை நீடிக்க வேண்டுமென்றும் விண்ணப்பம் போடமாட்டார். இவ்விதம் யாதொரு ஒழுங்குமின்றி போர்டின் காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

கடைசியாக இன்ஷ்யூரன்ஸ் சம்பந்தமாக ஒரு விஷயம் குறிப்பிட விரும்புகிறேன். கல்கத்தா நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் கடப்பை பிரதம ஏஜண்ட், திரு. ஒபி ரெட்டியின் ஒன்றுவிட்ட சகோதரரான திரு. சி. வெங்கடசிவா ரெட்டியை இப்பக்கங்களில் சமீப காலத்திற்கு முன் அதாவது 3 அல்லது 4 மாதங்களுக்கு முன் நியமனம் செய்துள்ளார். இந்த சொற்ப காலத்திற்குள் ஜில்லா போர்டின் கிராமாந்திர சிப்பந்திகள் அக் கம்பெனியில் இன்ஷ்யூர் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுளது.

சில கேள்விகள்

ஆகவே, ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த இச் ஜில்லா போர்டு மெம்பர்களில் எவராகிலும் ஒருவர் கீழ்க்கண்ட தீர்மானங்களைக் கொண்டு வந்து அதற்கு விடைபெற முயல்வார்களா?

1. தலைவர் கீழ்க் கண்டவைகளுக்குத் தயவு செய்து பதிலளிப்பாரா:-

(1) திரு. வெங்கடசிவா ரெட்டி தலைவருக்குச் சொந்தக்காரரா; அவ்விதமிருக்கும் பக்ஷத்தில் எம்முறையில்;

(2) கல்கத்தா நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் ஏஜண்டாக திரு. வெங்கடசிவா ரெட்டி நியமனமான தேதி;

(3) கம்பெனியின் பிரதம ஏஜண்ட் தலைவர் வீட்டிலேயே தங்கி வருகிறாரா: அப்படியானல் எவ்வளவு காலம்; எந்த மாதங்களில்;

(4) வெங்கடசிவா ரெட்டி மூலம் இது வரையில் கம்பெனிக்கு கிடைத்த புரோபோசல்கள் எவ்வளவு; இதுவரையிலும் கிடைத்த மொத்த பாலிசிகள் எவ்வளவு; அதற்கு முன்னர் கம்பெனியின் பாலிசிகளும் மொத்தத் தொகையும் எவ்வளவு;

(5) கம்பெனியில் இன்ஷ்யூர் செய்துள்ள ஜில்லா சிப்பந்திகள் எத்தாலூகாவாசிகள்; அவர்கள் புரோபோசல்களின் தேதிகள்.

2. ஜில்லா போர்டு தலைவரின் டைரியும், ஜூலை மாதம் முதற்கொண்டு அவரது பிரயாணப் படிச் செலவு ரசிதுகளும். அவரது காம்ப் கிளார்க் நாராயண ரெட்டியினுடையவும்.

3. தலைவருடன், அவரது காரில் இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்ட் சுற்றுப் பிரயாணம் செய்தாரா?

திரு. ஒபி ரெட்டிக்கு அணுவளவாவது சுயமரியாதை இருக்குமானல் உடனே ராஜிநாமா செய்ய வேண்டும். இல்லாவிடில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அவர் கவிழ்க்கப்படுவது திண்ணம்.

சிந்தாதிரிப்பேட்டை உயர்தர பாடசாலை

தலைமை உபாத்தியாயருக்கு உபசாரம்

சென்னை, நவ, 17

சிந்தாதிரிப்பேட்டை உயர்தர பாடசாலையின் தலைமை உபாத்தியாயரான திரு. பி. திருவேங்கட முதலியார், திருவாரூர் போர்டு உயர்தரப் பாடசாலையின் தலைமை உபாத்தியாயர் பதவியை ஏற்கப் போவதால், அவரைப் பாராட்டி சென்ற சனிக்கிழமை மாலை ஜார்ஜ் டவுன் கிபோ கோமளவிலாசில் ஓர் தேநீர் உபசாரம் நடைபெற்றது. ஏராளமான பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர்.

திரு. வி. கந்தசாமி முதலியார், அவருக்குப் பதிலாக சிந்தாதிரிப் பேட்டை உயர்தர பாடசாலையின் தலைமை உபாத்தியாயராக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

கிறிஸ்தவ மாணவி இந்துவானர்

பெங்களூர், நவ, 17

பெங்களூர் பைபிள் பிரசாரச் சங்க மானேஜரின் புத்திரியும் இண்டர் மீடியேட் வகுப்பில் வாசித்து வருபவருமான மிஸ். சாந்தா கிறிஸ்தவ மதத்தைத் துறந்து ஆர்ய சமாஜ முறைப்படி இந்துவானர். அதன்பின் அவருக்கும் திரு. துரை ராஜுக்கும் விவாகம் நடைபெற்றது.

சென்னை அசம்பிளி தேர்தல்

வட ஆற்காட்டுக்கு 10 ஸ்தானங்கள்

தொகுதிகள் விபரம்

(நமது நிருபர்)

ஆரணி, நவ, 16

சென்னை அசம்பிளிக்கு வட ஆற்காடு ஜில்லா சார்பாக பொதுத் தொகுதிக்கு 10 பேர் ஸ்தானம் வகிக்கும் பொறுப்பு இருப்பதாய்த் தெரிகின்றது. திருப்பத்தூர் தாலூகாவுக்கு ஒரு ஸ்தானமும், குடியாத்தம் தாலூகாவுக்கு ஒரு ஸ்தானமும் வேலூர் ஆரணி தாலூகாவுக்கு ஒரு ஸ்தானமும் ராணிப் பேட்டை அரக்கோணம் தாலூகாவுக்கு இரண்டு ஸ்தானமும் செய்யார்—வந்தவாசி தாலூகாக்களுக்கு ஒரு ஸ்தானமும், திருவண்ணாமலை—செங்கம் தாலூகாவுக்கு இரண்டு ஸ்தானமும் ஆக 8 ஸ்தானங்கள் தாலூகா வாரியாக இருப்பதாகத் தெரிகின்றது. முகம்மதியருக்கு இந்த ஜில்லா சார்பாக ஒரு ஸ்தானமும், இந்திய கிறிஸ்துவர்களுக்கு பல்லாரி, கடப்பை கர்னூல், அனந்தபுரம், சித்தூர், வட ஆற்காடு ஜில்லாக்களைச் சேர்த்து ஒரு ஸ்தானமும், நிலச்சுவான்தார் தொகுதிக்கு வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோவை, சேலம், திருச்சி ஜில்லாவுள்பட இந்த ஜில்லா சார்பாக ஒரு ஸ்தானமும், சென்னை அசெம்பிளிக்குத் தாழ்த்தப்பட்ட சமூகத்துக்கு ராணிப்பேட்டை தாலூகா சார்பாக ஒரு ஸ்தானமும், திருவண்ணாமலை தாலூகா சார்பாக ஒரு ஸ்தானமும் ஆக இரண்டு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. பொதுத் தொகுதி மூலமாய் 10 ஸ்தானங்கள் இந்த ஜில்லாவுக்கு இருந்து வருகிறது. மேல் சபைக்கு (கவுன்சிலுக்கு) பொதுத் தொகுதி மூலமாய் ஒரு ஸ்தானமும், முகம்மதியருக்கு, சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு உள்பட ஓர் ஸ்தானமும் மேல் சபைக்கு இருந்து வருகிறது.

* * *

சத்தியமூர்த்திக்கும் ராஜாஜிக்கும் சண்டை?

தற்போது டில்லி சட்டசபையில் காங்கரஸ் கட்சி மெம்பராக உள்ள அசம்பிளி மெம்பர்கள் வரப்போகும் மாகாண சட்டசபை தேர்தலுக்காக தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்யக்கூடாதென்றும், மாகாண தேர்தலுக்கு அபேட்சகராக நிற்கக் கூடாதென்பதும், அ. இ. காங்கரஸ் கமிட்டி தீர்மானமாம். திரு. எஸ். சத்தியமூர்த்தி அவர்களும், திரு. சாமி வெங்கடாசலம் செட்டியார் அவர்களும் தாங்கள் அவசியம் பதவிகளை ராஜிநாமா செய்யப் போகிறோமென்றும், எந்த விதமாகவாவது தங்கள் ராஜிநாமாக்களை ஒப்புக்கொண்டு, மாகாண சட்டசபை தேர்தலுக்கு அபேட்சகராக நிற்க அனுமதி பெறவேண்டி முயலுகிறார்கள். இதனால், சக்ரவர்த்தி திரு. ராஜகோபாலாச்சாரிக்கும் திரு. சத்தியமூர்த்திக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு இருக்கிறது. (ஜன நாயகம்)

* * *

ஜெர்மனியின் புதிய வெடிகுண்டு

பெர்லின், நவ, 17

ஜெர்மன் நதிகளை மற்ற நாடுகள் உபயோகித்துக் கொள்வது பற்றி வெர்சேல்ஸ் உடன்படிக்கையில் கண்டுள்ள விதிகளைத் தாம் இனி மதிக்கப்போவதில்லை யென ஹெர் ஹிட்லர் ஒரு அறிக்கை விடுத்துள்ளார். இனி ஜெர்மனி எத்தகைய கட்டுப்பாடுகள் விதித்தாலும் அவைகளுக்கு அன்னியநாட்டு கப்பல்கள் உட்பட்டாக வேண்டும்.

“குதிருக்குள் என் அப்பன் இல்லை!”

திரு. சத்தியமூர்த்தி கம்பெனியாரின் நடத்தை

பிரிட்டிஷ் தோட்டக்காரர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் அவர் அளித்த வாக்குறுதிகள்

இனும் மசோதா விஷயத்தில் மௌனம் சாதித்த காங்கரஸ் கமிட்டியினர்

புதிய காங்கரஸ் பக்தர்களை திருப்திப் படுத்த விசேஷ கவலை

சேலம், நவ, 16

சேலம், வக்கீல், திரு. சி. அனந்தாச்சாரி பி. ஏ., பி. எல்., எழுதுவதாவது:—

“ஜவஹர்லாலுக்கு பதில்” என்று மகுடமிட்டு சென்ற 7-ந் தேதி தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவரும், அவரது நண்பர்களும் பத்திரிகைகளில் வெளியிட்டுள்ள அறிக்கை என்னை சிரிப்படையச் செய்கிறது. “குதிருக்குள் என் அப்பன் இல்லை, இல்லவே யில்லை” என தன் திருட்டுத் தந்தையைத் தேட வந்த காலத்து மகன் அழுத்தி அழுத்திக் கூறியதால் சந்தேகங்கொண்டு அக்கோஷ்டியினர் குதிரைப் பார்க்க அதனுள்ளிருந்து திருடன் வெளிப்பட்டான், என்று தமிழ் நாட்டில் வழங்கிவரும் ஒரு சொல் இச் சந்தர்ப்பத்தில் எனக்கு ஞாபகம் வருகிறது. ஏனெனில், பண்டித ஜவஹர்லால் சென்ற 5-ந் தேதி கல்கத்தாவில் பேசிய பொழுது இத் தமிழ் நாட்டு காங்கரஸ் கமிட்டி பிரகஸ்பதிகளைக் குறித்து ஒன்றும் குறிப்பிடவில்லை. அல்லது “மந்திரி பதவிகளை வகிக்க வேண்டுமென்று கூறுபவர்கள் வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் உள்ளூர சர்க்காருடன் ஒத்துழைக்கவே விரும்புகிறார்கள்” என்று கூறியவிடத்தும், இவ்வுத்தமோத்தமர்களைத் தான் மனதில் வைத்துக் கொண்டு கூறியதாகவும் காணப்படவில்லை. அவரது வார்த்தைகள் அவருடைய கள்ளங்கபடற்ற தன்மையையே குறிப்பிடுகின்றது. ஆனால் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் நம் தமிழ்நாட்டுக் காங்கரஸ் கமிட்டித் தோழர்கள் தங்களைத்தான் குறிப்பிட்டிருக்கிறார் என்று நினைத்துக் கொண்டு அவரைக் கண்டிக்கத் தொடங்கி விட்டனர்.

இது ஒரு புறமிருக்க, புதிய காங்கரஸ் ராஜ்யத்தின் கீழில்லாவிட்டாலும், தன் மேற் பார்வையின் கீழ் பிரிட்டிஷ் தோட்டக்காரர்கள், வர்த்தகர்களின் நன்மைகள் பாதுகாக்கப்படும் என்று அவர்களுக்கு உறுதி மொழி கொடுக்க தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவர் எடுத்துக் கொண்ட சிரமம் மக்களுக்குத் தெரியாதா? மேலும், இனும் குடிகளுக்கு நில உரிமையை அளிக்கும் விஷயத்தில் இம் மாகாணத்திலேயே ஒரு கிளர்ச்சி ஏற்பட்டிருந்த சமயத்தில் தமிழ் நாடு காங்கரஸ் கமிட்டியினர் ஒன்றும் கூறாமல் மௌனம் சாதித்ததேன்?

சமதர்மம்—ஓர் பாஷாணம்

சமதர்மத்தைக் கண்டு அவர்கள் அஞ்சுவானேன். அதைக் குறித்துப் பேசுவதற்குக்கூட காங்கரஸ் கட்டடத்தை அனுமதிக்க மறுத்ததேன? சுயராஜ்யத்திற்குப் பின்னரே சமதர்மப் பேச்சு என்று பொருள்படத்தக்கவிதமாய்க் காங்கரஸ் தலைவரின் தமிழ்நாட்டுச் சுற்றுப் பிரயாண வுரைகள் இருப்பதேன். ஒரு சமயம் அவரது பேச்சுகள் பத்திரிகைகளில் வெளியாவதன் முன் அவருடன் சுற்றி வந்த தமிழ் நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவரால் ‘எடிட்’ செய்யப்பட்டே அனுப்பப்பட்டனவா? அல்லது தேசத்தின் இப்பகுதியில் சமதர்மத்தைக் குறித்துப் பேச வேண்டுமானல் இம்மாதிரித்தான் பேசப்பட வேண்டுமென முன்னரே காங்கரஸ் தலைவர் அறிவுறுத்தப்பட்டாரா? ஏனெனில், சமீபத்தில் கல்கத்தாவில் காங்கரஸ் தலைவர் பேசியுள்ள பேச்சுக்களிலிருந்து சமதர்மத்தைக் குறித்து அவரது உண்மை அபிப்பிராயம் இதுதானென கொள்வதற்கில்லை.

புது காங்கரஸ் பக்தர்களைத் திருப்தி செய்ய கவலை

காங்கரஸிற்காக உடல், பொருள், ஆவியையும் தியாகம் செய்தவர்களைப் புறக்கணித்து, புதிய காங்கரஸ் மோகிகளைத் திருப்தி செய்வதில் தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டியினர் கவலை கொண்டுள்ளதேன். ஸ்தல காங்கரஸ் வாதிகளுக்குள் ஏற்படும் தகராறில் தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டியினர் தமது கட்டளையை வற்புறுத்துவது நியாயமாகுமா? காங்கரஸ் கட்சியாய் இருக்கும் வரையில் அவர்கள் எக்கட்சியாய் இருந்தால் அதற்கென்ன?

சமீபத்தில் நகரசபை நிர்வாகக் கமிட்டி தேர்தலில் ஒவ்வொரு கமிட்டியிலும் 7 ஸ்தானங்களிருக்க, 6 ஸ்தானங்களுக்கு மட்டும் காங்கரஸ் அங்கத்தினர்களை நிறுத்திவிட்டு மற்றொரு ஸ்தானத்திற்கு நிறுத்தாமலிருந்ததின் கருத்தென்ன? ஒரு சமயம் ஐரோப்பிய அங்கத்தினரொருவருக்கு சலுகை அளிப்பதற்காகவா?

இவைகளெல்லாம் எதைக் குறிப்பிடுகின்றன? வரப்போகும் புதிய அரசியலில், தாங்கள் ஓர் சமயம் அரசியலை ஏற்று நடத்தநேருமானல் எல்லாருடைய ஆதரவும் தனக்குக் கிடைக்க வேண்டுமென்று காங்கரஸ்காரர்கள் கொண்டுள்ள கவலையல்லவா? புதிய அரசியலை ஏற்று நடத்துவதாயிருந்தால் தானே இவர்கள் ஒத்துழைப்பு காங்கரசிற்குக் கிடைக்கக்கூடும். காங்கரஸின் எண்ணமும் அதுவாயிருந்தால் ஏன் வெளிப்படையாக அதை சொல்லிவிடக் கூடாது. அதை விட்டு ஏமாற்றும் பேச்சுகள் எதற்கு?

அசெம்பிளித் தேர்தல்

சுப்பிரமணியம் அபேட்சை

வேலூர், நவ, 17

வட ஆற்காடு ஜில்லா தாழ்த்தப்பட்ட ஐக்கிய சங்கத்தின் பொது காரியதரிசியும், ஜஸ்டிஸ் கட்சி ஊழியருமான சுப்ரமணியம், ராணிப்பேட்டை-அரக்கோணம் வாசிகள் பலர் கேட்டுக் கொண்டதற்கிணங்க ராணிப்பேட்டை ஆதிதிராவிட தொகுதிக்கு ஜஸ்டிஸ் கட்சியின் அபேட்சகராக நிற்கப் போவதாக [illegible] கிறார்.

தண்ணி மயக்கமா? ஆணவ மயக்கமா?

தோழர் சத்தியமூர்த்திக்கு தலை கிறுகிறுத்து விட்டது. இடுப்பில் வேஷ்டி இருக்கிறதா இல்லையா, மகனா மனைவியா, என்பவைகளை உணரக் கூடாத அளவு போதை ஏறிவிட்டது. இது தண்ணி போதையா? அல்லது சென்னை கார்ப்பரேஷன் எலக்ஷனில் 10, 15 பார்ப்பனர்கள் வெற்றி பெற்று விட்ட ஆணவ போதையா என்பது நமக்கு விளங்கவில்லை. அசம்பிளி தேர்தலில் பல பார்ப்பனர்கள் வெற்றி பெற்றவுடன் இதுபோன்ற போதை வெறி ஒரு 2, 3 மாத காலம் தலைவிரி கோலமாய் பிசாசண்டி மாதிரி திரியும்படி செய்தது. பிறகு ஜில்லா போர்டுகளும் முனிசிபாலிட்டிகளும் நல்ல பாடம் கற்பித்து வெறியை இறக்கிவிட்டன. இப்போதும் அது போலவே தலை கால் தெரியவில்லை. தெரியவில்லை என்பது ஒருபுறமிருந்தாலும் பொது ஜனங்கள் கண்களில் மண்ணைப் போட்டு அடுத்த சட்டசபைத் தேர்தலில் ஏமாற்றுவதற்கு ஆக அதிக போதை ஏற்றிக் கொண்டு கண்டபடி உளறுகிறார்.

அவரது ஜாதிப் புத்தி போகவில்லை. போக்கிரித்தனமாக ராக்ஷதன், சூரன், அசுரன் என்று ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களை இழித்துக் கூறும் அற்பத்தனம் ஒய்ந்தபாடில்லை. அதாவது இவர் சேலத்தில் 6-ந்தேதி ஒரு கூட்டத்தில் பேசும் போது "தென்னாற்காடு கும்பகர்ணனையும் திருநெல்வேலி ராவணனையும் ஒழித்துவிட்டோம், இனி சேலம் நகர சூரனை ஒழிக்கப் போகிறோம் ஜஸ்டிஸ் கட்சி தலையில் கல்லைப்போட வேண்டும். அதை ஒழிக்கா விட்டால் நான் உயிர் வாழமாட்டேன், எனது ஜன்மம் சாபல்யமாகாது" என்று பேசியிருக்கிறார். இந்த மாதிரியாகப் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரை இழிவு படுத்தும் அயோக்கியத்தனத்தை அடியோடு ஒழிக்கவே ஜஸ்டிஸ் கட்சி போராடி வருகிறது. இந்தப் போராட்டத்தின் நடுவில் பதவியோ அதிகாரமோ கிடைத்தால் அதையும் பெற்று இந்த பார்ப்பன அயோக்கியத்தனத்தை ஒழிப்பதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்கு ஆகத்தான் பதவிகளைப் பற்றி கவலை கொள்வதே ஒழிய மற்றபடி மந்திரி பதவியோ, அரசாங்க அதிகாரமோ பெறுவதற்கு ஆகவே ஜஸ்டிஸ் கட்சி இன்று இருந்து வரவில்லை என்பதை யாவரும் அறிவார்கள்.

ஒரு சமயம் அதற்கும் ஆசைப்பட்டது என்று சொல்லுவதானாலும் அதையும் மறுக்க நாம் வரவில்லை. ஆசைப்படுவதாகவே வைத்துக் கொள்வோம். அதனால் கெடுதி என்ன? தேசத்துக்குத்தான் என்ன கெடுதி? சமூகத்துக்குத் தான் என்ன கெடுதி? பதவிகளையும் அதிகாரங்களையும் ஆசைப்படாமலும் லக்ஷியம் செய்யாமலும் பார்ப்பனரல்லாதார் சமூகம் ஏமாந்த சோணகிரிகளாய் இது வரை இருந்ததாலேயே மதத்தில் பார்ப்பனன் சங்கராச்சாரியாகி, குருவாகி பார்ப்பனரல்லாதார் தோளில் சவாரி செய்வது போல அரசியலில் சத்தியமூர்த்தி போன்றவர்கள் குருவாகி இன்று பார்ப்பனரல்லாதார் தோளிலேயே சவாரி செய்து "திக்கு விஜயம்" செய்கிறேன் என்கிறார்.

செல்லுமிடங்களில் எல்லாம் "ஜஸ்டிஸ் கட்சி செத்து விட்டது, க்ஷேமமாகவும் செய்து விட்டது" என்கிறார்.

உடனே அதே நிமிஷத்தில் "ஜஸ்டிஸ் கட்சியை கொல்லாமல்-ஒழிக்காமல் இருக்க மாட்டேன்; ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்கா விட்டால் நான் செத்துப் போவேன், எனது ஜன்மம் சாபல்யமடையாது" என்கிறார். இவருடைய போதை வெறிக்கு இதுவே ஒரு பெரிய உதாரணமாகும். செத்துப் போன ஜஸ்டிஸ் கட்சியை கொல்லுவதற்கு இத்தனை பார்ப்பனர் [illegible] இத்தனை விபிஷணர்களும், இத்தனை [illegible]ார்களும் எதற்காக தோழர் சத்தியமூ[illegible]த் துணை வேண்டி யிருக்கிறது என்று கேட்கின்றோம்.

அவர் சொல்லுவதில் ஒரு விஷயம் மாத்திரம் உண்மையும், நிச்சயமுமான காரியமாகும்.

அதென்ன வென்றால் ஜஸ்டிஸ் கட்சி கொல்லப்படா விட்டால் சத்தியமூர்த்தியார் சாகவேண்டியது தான். தோழர் ராஜகோபாலாச்சாரியும், ஸ்ரீநிவாச சாஸ்திரியும் சொல்லுவது போல், ஜஸ்டிஸ்கட்சி ஒழிக்கப்படா விட்டால் அவர்கள் வங்காளக் குடாக் கடலில் விழுந்து சாக வேண்டியதுதான். அதனாலேயே தான் அவர்கள் (பார்ப்பனர்கள்) போராடுகிறார்கள். ஏனெனில், ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டது மந்திரி பதவிக்கும், அதிகாரத்துக்கும் சம்பளத்துக்கும் மாத்திரமானால் பார்ப்பனர்கள் சந்தோஷமாக ஒவ்வொரு அதிகாரத்துடனும், ஒவ்வொரு பதவியுடனும் ஒவ்வொரு மங்கைப் பருவமுள்ள பெண்ணையும் வைத்து கன்னிகாதானமாக தாரை வார்த்துக் கொடுத்து விடுவார்கள்.

அடுத்தபடியாக ஜஸ்டிஸ் கட்சி 'அரசாங்கத்தைத் தாங்குகின்றதே' என்ற கவலையும் அவர்களுக்கில்லை. ஏனெனில், அரசாங்கத்தை தாங்குவதற்கு எவரும் வேண்டியதில்லை என்பதும் ஜஸ்டிஸ் கட்சி தாங்குவதன் மூலமாகத்தான் அரசாங்கம் நிலைக்கக்கூடிய அவ்வளவு பலமற்ற அரசாங்கமல்ல பிரிட்டிஷ் அரசாங்கம் என்பதும் சத்தியமூர்த்திகளுக்கும், ராஜகோபால ஆச்சாரிகளுக்கும், ஸ்ரீநிவாச சாஸ்திரிகளுக்கும் நன்றாய்த் தெரியும்.

பிரிட்டிஷ் அரசாங்கமானது இன்று இந்த பார்ப்பனர்களையும், மற்றும் இவர்கள் போன்ற எத்தனையோ பேர்களையும் தாங்கிக்கொண்டிருக்கிறது என்பதை இந்தக் கூட்டத்தார் அறியாததல்ல. மற்றப்படி ஏன் ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்க வேண்டும் இல்ல விட்டால் சாக வேண்டும் என்று சொல்லுகிறார்கள் என்றால் ஜஸ்டிஸ் கட்சி இந்த பார்ப்பனர்களை சித்திரத்தில் எழுத ஒரு மாதிரி ஆசாமிகூட கிடைப்பதற்கு இடமில்லாமல் போன பின்புதான் ஓய்வெடுப்பது என்று கங்கணம் கட்டிக்கொண்டு உட்கார்ந்து இருக்கிறது. அதனாலேயே பார்ப்பனர்கள் தங்களை ஒழிக்க எண்ணினவர்களையும் தங்கள் பெண்டு பிள்ளைகளை சிறை வைத்தவர்களையும் அழைக்கும்-அழைப்பு முறையில் ராக்ஷதன், சூரன், அசுரன் என்கின்ற வாக்கியங்களால் அழைக்கிறார்கள்.

திரு. சத்தியமூர்த்தியார் ராவணன் என்று நம்மை அழைப்பதில் நமக்குக் கோபம் இல்லை; மகிழ்ச்சி தான். ஆனால் ராவணன் பார்ப்பனர்களை கருவறுக்கும் வேலையில் முனைந்திருந்தான் என்பதோடு மாத்திரம் கதை இருந்தால் நாம் அந்தப் பெயரை மகிழ்ச்சியோடு வரவேற்கலாம். ஆனால், ராவணன் மீது வேறு ஒருவிதமான பழி சுமத்தப்பட்டிருக்கிறது. அது உண்மையானாலும், பொய்யானாலும் இப்பொழுது பார்ப்பனர்களைக் கருவறுக்க வேண்டுமென்று எண்ணங்கொள்ளுகிற யாரும் அம்மாதிரி யாருடைய மனைவியையும் கவர்ந்து செல்லவில்லையே? கவர்ந்து செல்லக் கருதவுமில்லையே? இப்படி இருக்கும்போது அப்படிச் சொல்லுவது அயோக்கியத் தனம் அல்லவா என்றுதான் கேட்கின்றோம்.

உதாரணமாக "திருநெல்வேலி ராவணனுன்" ஈஸ்வரம் பிள்ளை எந்தப் பார்ப்பனன் அல்லது ஆரியர் வீட்டில் ராவணவேலை செய்தார்? அதை ருஜுப்பித்தல்லவா பிறகு ஒருவரை ராவணன் என்று அழைக்க வேண்டும்?

பார்ப்பனர்களை கருவறுக்க வேண்டுமென்றால் பார்ப்பனர் என்று பெயர் சொல்லிக்கொண்டிருக்கும் மக்களே இல்லாமல் போகும்படி செய்வது அல்ல என்பதை நன்றாய் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். அந்தப்படி செய்ய முடியாது. முடியுமானாலும் அப்படிச் செய்யும் உத்தேசம் ஜஸ்டிஸ் கட்சிக்கு இல்லை. மற்றென்ன வென்றால் பார்ப்பனர் என்று சொல்லிக்கொண்டு அடையும் உயர்வையும் அதற்குரிய சின்னங்களையும் அடியோடு ஒழிக்க வேண்டு மென்பது தான்.

அந்தக் காரியத்தை ஜஸ்டிஸ் கட்சி விட்டுவிடும் என்றோ அப்படிச் செய்வதிலிருந்து ஜஸ்டிஸ் கட்சியை சத்தியமூர்த்திகளாலோ, மற்றும் அவர்கள் கூட்டங்களாலோ தடுப்பது என்பதோ ஒரு நாளும் முடியாத காரியம் என்பதை நாம் தூக்கு மேடையில் இருந்தும் கூறுவோம்.

மற்றும், ஜஸ்டிஸ் கட்சி செய்யப் போகும் இந்தக்காரியத்துக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை அதற்கு ஆக ஜஸ்டிஸ் கட்சி பிரிட்டிஷ் அரசாங்கத்தை தாங்கவேண்டிய அவசியமும் இல்லை. இருப்பதாகச் சொல்லப்படுமானாலும் இந்த பார்ப்பனியமும் ஒழிவதற்கு ஆகத்தான் பிரிட்டிஷ் அரசாங்கம் இருக்கட்டும் என்று சொல்லக் கூடியதாக ஏற்படலாம். இந்த முயற்சிக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் எதிர்ப்பாய் இருந்தால் அது இருப்பதைவிட போவது மேல் என்று குஷாலாய் ஜஸ்டிஸ் கட்சி சொல்லும்.

ஆகவே, ஜஸ்டிஸ் கட்சி சாகப் போவதில்லை. மந்திரி பதவி போய் விட்டாலும் கூட அது செத்துப் போவதில்லை. இன்னமும் சொல்ல வேண்டுமானால் மந்திரி பதவி இக்கட்சிக்கு விலக்கமுடியாத சனியன் என்று தான் சொல்ல வேண்டி இருக்கிறதே தவிர விலக்கக்கூடுமானால் ஜஸ்டிஸ் கட்சியின் உண்மைக் கொள்கை முயற்சிக்கு அனுகூலம் என்றே சொல்வோம். ஆனால் சுலபத்தில் ஜஸ்டிஸ்கட்சியை விட்டு மந்திரி பதவிகள் போய்விடும் என்று கருதி விடுவதற்கு ஒரு காரணமும் ஏற்பட்டு விடவில்லை.

அது எப்படி ஆனாலும் இன்று ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றியும் அதன் தலைவர்களைப் பற்றியும் இவ்வளவு கேவலமாகவும், இழி தன்மையாகவும் பேசுவது யோக்கியமா என்றும் இம்மாதிரி "ஜஸ்டிஸ் கட்சி செத்தும் போய் விட்டது, ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பது எனது முதல் வேலை, ஜஸ்டிஸ் கட்சி ஒழியா விட்டால் செத்துப் போவேன், ஜஸ்டிஸ் கட்சியைவிட வெள்ளைக்காரரே மேல்" என்பதாக வெல்லாம் குடிகாரன், வெறிகாரன் மாதிரி புளறலாமா என்றும் தான் கேட்கின்றோம். —(குடி அரசு)

சென்னைத் தொழிலாளர் சங்கம்

நிறைவேறிய தீர்மானம்

சென்னை, நவ, 16

சென்னை தொழிலாளர் சங்கப் பொதுக் கூட்டம் ஒன்று திரு. டி. வி. கலியாணசுந்தர முதலியார் தலைமையில் இன்று மாலை 5-மணிக்கு திவான்பகதூர் கேசவப் பிள்ளை பார்க்கில் நடைபெற்றது. அதுகாலை தொழிலாளர் மேற்படி சங்க பிரபல ஊழியரும், சென்னை தொழிலாளர் சங்கம் நிறுவப்படுவதற்கே ஆஸ்பதமாக இருந்தவருமான திரு. வரதராஜுலு நாயக்கர் இறந்தது குறித்து ஒரு அனுதாபத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேறியது.

பிறகு லேபர் கமிஷனரின் கடிதமும், 1934-'35, 1935-'36 முதலிய இரு வருஷங்களுக்கான சங்கக் கணக்கைப் பற்றிய ஆடிட் குறிப்புகளும், அவைகளுக்குச் சங்கம் கொடுத்த பதில்களும் ஒவ்வொன்றாக வாசிக்கப்பட்டன. அவ்விரு வருஷத்திய ஆடிட் குறிப்புகள் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டன.

மாகாண கௌரவ மாஜிஸ்திரேட்டுகள் சங்கம்

சென்னை, நவ, 17

சென்னை மாகாண கௌரவ மாஜிஸ்திரேட்டுகளின் வருஷாந்திரப் பொதுக் கூட்டம் நாளை (18-11-36) மாலை 5-30 மணிக்கு தம்புச் செட்டித் தெரு, நெ 10. காளமந்திரத்தில் நடைபெறும்.

இந்தக் காட்சி எப்படி இருக்கும்?

(கோமாளி எழுதுவது)

காங்கரஸ் ஜெயித்து சட்டசபைக்குப் போய் மந்திரி பதவி ஏற்றுத் தோழர் சத்தியமூர்த்தியார் கட்சித் தலைவரும், முதல் மந்திரியும் ஆகி, தோழர் சுப்பையா முதலியார் விப் ஆகி, தோழர்கள் ராமலிங்கம் செட்டியார், ரத்தின சபாபதி முதலியார், டாக்டர் சுப்பராயன், காடி முத்துப் பிள்ளை முதலியவர்கள் கதர் உடுத்திக் காங்கரஸ் குல்லாய் போட்டுக்கொண்டு சட்டசபைக்குள் தோழர் சத்திய மூர்த்தியாருக்குப் பின்னால் வரிசையாக நடந்துபோகவும், அவர் வெளிவரும் போது வரிசையாக வெளிவரவும், அவர் வந்த உடன் எழுந்து நின்று, அவர் உட்கார்ந்த உடன் உட்காரவுமான ஒரு காட்சி நடப்பதானால் அந்தக் காட்சி எப்படி இருக்கும்? பாரதமாதா இதைப் பார்த்துப் பெரிய பாளையத்து அம்மன் உற்சவத்தில் பெண்கள் ஆடுகிற மாதிரி ஆனந்தக் கூத்தாடுவாள்; இந்த மக்களை சபாஷ்! சபாஷ்!! என்று தட்டிக் கொடுப்பாள். சுயராஜ்யம் அந்த சட்ட சபையில் சொட்டு சொட்டு என்று பொட்டு பொட்டாய் ஒழுகும்—இவர்களுக்கு சுயமரியாதை 'கொழுந்து விட்டு எரியும்'

அந்தச் சமயத்தில் இந்த மூன்று பேரும் மனதில் என்ன நினைத்துக் கொள்வார்கள் என்பது தெரிய சிலர் ஆசைப்படலாம்.

என்ன நினைப்பார்கள்? 'உன்னாலே நான் கெட்டேன், என்னாலே நீ கெட்டாய்' என்று ஜாடை காட்டிக்கொண்டு 'சோத்துக்கு இருக்க, கஞ்சிக்கு இருக்க, இந்த உபாதானப் பார்ப்பனர் பின்னால் பராக்கு போடத் தலை எழுத்தா' என்று நினைத்து நினைத்து "யாரை விட்டது காண தலைவிதி? எவரை விட்டது காண தலை எழுத்து?" என்று பாட்டுப் பாடுவார்கள்.

சுயராஜ்யம் என்றால் இவ்வளவு தானா இன்னும் எவ்வளவோ இருக்கிறது. பின்னால் வரும்.

• • •

ஒரு ராத்திரிக் கூத்துக்கு மீசையைச் சிறைத்துக் கொண்டாய் விட்டது

தோழர் டி. எ ராமலிங்கம் செட்டியார் அவர்கள் திவான்பகதூர் பட்டத்தை விட்டுவிட்டார். அய்யோ பாவம் காங்கரஸ் ஜெயிக்குமா! ஜெயித்தாலும் மந்திரி பதவி ஏற்குமா!! ஏற்றாலும் இவருக்குக் கிடைக்குமா!!! கிடைத்தாலும் நிலைக்குமா!! நிலைப்பதானாலும் பார்ப்பனர்களுக்கு லாபமோ ஆதிக்கமோ இல்லாவிட்டால் அவர்கள் வெளியேறும் நாடகம் நடிக்காமல் இருப்பார்களா? வெங்கிட்டராம சாஸ்திரியார் போன்ற சனிக்கிழமை ராத்திரி தாலிகட்டி திங்கட்கிழமை காலையில் அறுபட்டது போல அறுந்து விட்டால் என்ன செய்வது? மீசையைச் சிறைத்து விட்டாலும் பரவாயில்லையே; ரோமசங்காரி பவுடர் போட்டு என்றுமே வளர முடியாத மாதிரியில் மொழுமொழு என்று செய்து கொண்டல்லவா காலைக்குவர் என்றால் வரும் ? அய்யோ பாவமே ஒரு நாள் கூத்துக்கு மீசையை சிறைத்துக் கொள்ளலாமா? என்கின்ற கவலை ஏற்பட்டு வயிற்றுப் போக்கில் இருக்கிறார்.

• •

சபாஷ் முதலியார்!

தோழர் சி. என். ரத்தினசபாபதி முதலியாரை ஏமாற்ற செட்டியார்கள் தந்திரம் செய்தார்கள். அதாவது:-மூக்கை அறுத்துக் கொண்டால் மோட்சலோகம் தெரியும் என்றார்கள் செட்டியார்கள். எப்படி அறுத்துக் கொள்ளுவது? கொஞ்சம் நீயே அறுத்துக் கொண்டு காட்டு பார்க்கலாம் என்றார் முதலியார். இப்படித்தான் என்று தங்கள் மூக்கை அறுத்துக் காட்டினார்கள் செட்டியார்கள்.

'அதிலேயே எனக்கும் மோட்சலோகம் தெரிந்து விட்டது என் மூக்கை அறுத்துக் கொள்ள வேண்டியதில்லை' என்று சொல்லிவிட்டார் முதலியார்.

வேடிக்கை பார்த்தவர்கள் சபாஷ் முதலியார்! என்று கூவி இனிமேல் இந்தப் பக்கமே திரும்பிப் பார்க்காதே என்று சொல்லி விரட்டி விட்டார்கள் முதலியாரை. இந்த தப்பு தப்பினால் இனிமேல் மக்களே கதி என்று அடித்தார் சவால் முதலியாரும். இது ஒரு நல்ல ஜோக் அல்லவா? —குடி அரசு

ஜஸ்டிஸ் கட்சித் தேர்தல் முழக்கம்

விருதுநகரில் தொண்டர்களின் சண்டமாருதப் பேச்சு

காங்கரஸ் காலித்தனம் பலிக்கவில்லை

(ஒரு நிருபர்)

விருதுநகர், நவ, 14

இராமநாதபுரம் ஜில்லா போர்டுத் தேர்தல் நவம்பர் மாதம் 23-ந் தேதி முடிவடைகிறது. இதற்காக ஜஸ்டிஸ் காங்கரஸ் கட்சியினர் அவரவர்களின் கட்சியின் சார்பாக இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள எல்லா சர்க்கிள்களிலும் அபேட்சகர்களை நிறுத்தி, வெகு தீவிரமாக அவரவர்களின் கட்சியினர் ஜெயிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு வேலை செய்து வருகின்றனர். முக்கியமாக இரு கட்சியினர்களுடைய அதி தீவிரமான பிரசாரங்களையும், மற்ற ஏற்பாடுகளையும் கவனித்து வருபவர்கள், ஒரு சில இடங்கள் தவிர மற்ற எல்லா சர்க்கிள்களையும் ஜஸ்டிஸ் கட்சியினர் கைப்பற்றி விடுவரெனப் பேசிக் கொள்ளுகின்றனர். டிசம்பர் மாத மத்தியில் ஜில்லா போர்டை இரண்டாகப் பிரித்து விடும் வேலை சரிப்பட்டு விடுமானால் இரண்டு போர்டுகளிலும் ஜஸ்டிஸ் இயக்கப் பிரமுகர்களே தலைவர்களாக வர முடியுமென எதிர்பார்க்கப் படுகிறது.

இம்மாதிரி உள்ள நிலைமையில் காங்கரஸ்காரர்களுக்கு நாளுக்கு நாள் இராமநாதபுரம் ஜில்லாவில் பொது ஜன ஆதரவும், ஓட்டர்களிடத்தில செல்வாக்கும் குறைந்து வருவதினால் அவர்கள் அஹிம்சா தர்மத்தை மறந்து மானங்கெட்ட செய்கைகளிலும் பலாத்காரத்திலும் நம்பிக்கை கொண்டு வருகிறார்கள். பொதுவாக காங்கரஸ்காரர்கள் தகுதியற்ற அதாவது அரசியலில் அனுபவமில்லாத நபர்களை ஒவ்வொரு சர்க்கிள்களிலும் நிறுத்தி வைத்துக் கொண்டு ஜஸ்டிஸ் கட்சியினரை அதாவது, தக்க தகுதியான மனிதர்களை பொறுப்பற்ற முறையில் பேசியும், எதிர்த்தும் வருகிறார்கள். இதற்கு அநேகமாய் பக்கங்களில் பகிரங்கமாக காங்கரசின் சார்பாக காலில்லாதவன், கையில்லாதவன், நொண்டி, முடம், கூன், குருடர்களாகயிருந்தாலும் அல்லது இவர்களில் யாரென்றாலும் ஓட்டர்கள் ஓட் செய்ய வேண்டுமென்று காங்கரஸ் காலிகளும், கூலிகளும் பிரசாரம் செய்து வருகின்றார்கள் என்பதிலிருந்து காங்கரஸ்வாதிகளின் பிரசாரம் எவ்வளவு மனிதத்தன்மையற்ற முறையில் போய்க் கொண்டிருக்கின்றது என்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டும். இத்தோடு நிற்காமல் பொது ஜன ஆதரவில்லாத இடங்களில் காங்கரஸின் பேரால் பட்டம் சாத்திக்கொண்டு கூலிக்கு மாரடிக்கும் தேச பக்தர்களும், புதிதாக நாலு அணா கொடுத்து காங்கரஸில் டிக்கட் பெற்றவர்களும் ஒன்று சேர்ந்து கூலிகளையும், காலிகளையும் தொண்டர்களாக வைத்துக் கொண்டு ஒவ்வொரு சர்க்கிள்களிலும் கலகமும், அட்டூழியமும் செய்து வருகின்றார்கள். ஜஸ்டிஸ் கட்சியினர் பொதுக் கூட்டங்கள் போட்டுப் பேசினால், மேற்படிப் பொதுக் கூட்டங்களுக்கு காங்கரஸ்காரர்கள் வந்து கலகம் செய்வதும், ஜஸ்டிஸ் கட்சியினர்களுடையக் கூட்டங்களில் காலிகளை ஏவி கற்களை எறியச் செய்து பொதுக் கூட்டங்களை கலைக்க முயற்சி செய்வதுமான காரியங்கள் செய்து வருவதோடு, சமூகத்திற்குச் சமூகம், ஜாதிக்கு ஜாதி சென்று துவேஷமான பிரசாரம் செய்து, கோள் சொல்லி, சமூகத்தில் பிளவு உண்டு பண்ணுவதுமான காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இதற்கு உதாரணமாக விருதுநகர் பிரகாரவான 8-வது சர்க்கிளில் அபேட்சகராக நிற்கும் விருதுநகர் முனிசிபல் சேர்மன் திரு. வி. வி. ராமசாமி அவர்களை விருதுநகர் டவுனில் ஒவ்வொரு மதில் சுவர்களிலும், நடு ராத்திரிக்குமேல் வந்து கருப்புச் சாயத்தில் தனிப்பட்ட முறையில் தாக்கி எழுதி வைத்து விட்டுப் போய்விடுவதும், வீட்டுக்கும், சேர்மன் கடைக்கும் உள்ள டெலிபோன் தந்திக் கம்பிகளை அறுத்து விடுவதும், தோழர் சேர்மன அவர்கள் காரில் வெளியில் சென்றால் காங்கரஸ் காலிகள் ஜே! ஜே!! என்று சப்தமிடுவதுமான அவ்வளவு கேவலமான முறையில் காங்கரஸ் தோழர்கள் விருதுநகரில் வேலை செய்து வருகிறார்கள். இன்னும், ஜஸ்டிஸ் பொதுக் கூட்டம் 14-11-36-ந் தேதி விருதுநகரில் நடக்கும்போது, காங்கரஸ்காரர்கள் கற்களை வாரி வீசியதோடு, பக்கத்தில் 10,15 காலிகளை நிறுத்தி வைத்துக் கொண்டு, பிரசாரகர்கள் பேசுவது பொதுஜனங்கள் கேட்காமல் போகவேண்டு மென்பதற்காக சப்தம் போட்டுக்கொண்டே யிருந்தார்கள். இதனை உணர்ந்த பொதுஜனங்கள் காங்கரஸ்காரர்களின் செய்கையை ஆதரிக்காமல் பொதுஜனங்களே காங்கரசின் அடாத செய்கைகளை அடக்கி விடுவதென்று முற்பட்டு விட்டார்களென்றால், காங்கரசின் கேவல ஊதாரித்தனம் வெளிப்பட்டு வருகிறதென்றே சொல்லலாம். இதை 'ஜயபாரதியும்' 'தினமணியும்' விருதுநகரில் ஜஸ்டிஸ் கட்சியின் அடாத செய்கை யென்று எழுதுமானால் தேசியப் பத்திரிகைகளின் மானங்கெட்ட செய்கைகளை வாசகர்கள் தான் யோசிக்க வேண்டும்.

இம்மாதிரியே சாத்தூரிலும் ஜஸ்டிஸ் கட்சியினர்களின் பொதுக் கூட்டத்தைக் காங்கரஸ் காலிகள் கலைத்துவிட்டனர். இம்மாதிரியே மற்ற சர்க்கிள்களிலும் அசம்பாவிதமான காரியங்களில் காங்கரஸ்காரர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

இது தவிர முடிவாக காங்கரஸ்காரர்கள் ஓட்டர்களை கத்தி தடி போன்ற ஆயுதங்களைக் காட்டி பயமுறுத்தி வருவதோடு, லஞ்சம், ரூம்சி, தந்திரம் ஆகியவைகளின் மூலம் இன்னும் எதை விற்றாவது ஜஸ்டிஸ் கட்சியினரை ஜெயித்து விடவேண்டும் என்பதற்காக இவ்வளவு வேலைகள் செய்து வருகின்றார்கள்.

ஜஸ்டிஸ் கட்சியினர் விருதுநகர் தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தின் சார்பாக உள்ளூர் வெளியூர் தோழர்களான அ. பொன்னம்பலனார், மதுரை பண்டிட் முத்துசாமி, சேலம் சித்தையன், ஜோதிசன் செட்டியார், காஞ்சி கலியாண சுந்தரன், சென்னை ரங்கநாதம், விருதுநகர் என். உத்தண்டன், எம். அருணாசலம், ஆகியவர்கள் ஜஸ்டிஸ் கட்சியினர் நிற்கும் எல்லா சர்க்கிள்களிலும் விருதுநகர் முனிசிபல் சேர்மன் வி. வி. ராமசாமி அவர்கள் பெரும் முயற்சியால் வேலை செய்து வருவதோடு அதிதீவிரமாக பிரசாரமும் செய்துவருகின்றார்கள். பிரசாரகர்களுக்கு ஒவ்வொரு ஊர்களிலும் அமோகமான ஆதரவு அந்தந்த ஊர்வாசிகள் அளித்து வருகின்றனர். தினம் 10- கூட்டங்களுக்குமேல் பிரசாரகர்கள் உபன்யாசம் செய்து வருகிறார்கள்.

ஜஸ்டிஸ் கட்சி பிரசாரம்

(ஒரு நிருபர்)

தேவகோட்டை, நவ, 15

தேவகோட்டை தென்னிந்திய நலவுரிமை சங்கத் தலைவரான திரு. டாக்டர் மூர்த்தி நாயுடுவும், காரியதரிசியான திரு. எப்பநும் செட் நாட்டில் பலபாகங்களிலும் பிரசா கர்களோடு பிரயாணஞ் செய்வார்கள். அங்கங்கே பொதுக்கூட்டங்கள் கூட்டி இராமநாதபுரம் ஜில்லாபோர்டிற்கு ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகர்களை நிறுத்த பிரசாரம் செய்வார்கள்.

"தாருல் இஸ்லாம்" ஆசிரியர் கூறும் விநோதக் கூற்றுகள்

(ஆசிரியர். வமி. ஷம்சுத்தீன் சாஹிப்)

எனது பழைய நண்பர் ஜனாப் பா. தா. அவர்கள் வரும் சென்னை அசம்பளி எலக்ஷன்களில் முஸ்லிம் லீக் பார்லிமெண்டரி போர்டை ஆதரிக்க வேண்டுமென்றும், முஸ்லிம் லீக் காங்கரசுடன் ஒத்துழைப்பதாகவும் வக்கீல் விவாதம் செய்து தென் இந்திய முஸ்லிம் மக்களின் கண்களைத் துடைக்கப் பார்க்கின்றார். எனினும், முஸ்லிம்கள் அவர் விவாதத்தை ஏற்றுக் கொள்ளுவதில்லை என்பதை அறிந்து இப்பொழுது 'முஸ்லிம் வாலிபர்காள் குதித்தெழுங்கள்!' என்கிறார். கொள்கையற்ற ஒருவர் எப்படி முஸ்லிம்களுக்கு வழிகாட்ட முடியும்? இதற்குப் பழைய நடவடிக்கைகள் சான்று பகருகின்றன. என்று, பா. தா. அவர்கள் ஜனாப் ஜின்னாவையும், அவர் லீக்கையும் ஆதரிக்க வேண்டும் அல்லது லீகையும், முஸ்லிம் புரோகிரசிவ் சங்கத்தையும் ஆதரிக்காமல் பள்ளிகளை இடித்துத் தள்ளவேண்டுமென்று கூறும் காங்கரஸ் தலைவர் ஜவஹர்லாலையும், முஸ்லிம்கள் ஏகதெய்வ வணக்கத்துக்குப் பதிலாக பாரத மாதா கோவிலைத் தொழ வேண்டுமென்று கூறும் கான் அப்துல் கப்பார்கானையும் ஆதரித்து தனது பத்திரிகைக்கு ஹிந்து அன்பர்களிடம் செல்வாக்கு தேடவேண்டும். இதற்கு பதிலாக, ஒரு சமயம் இவர் முஸ்லிம் லீக்கை ஆதரித்து விட்டு மறு சமயம் முஸ்லிம் லீக்கைக் கண்டிக்கும் நோக்கம் என்ன? இதில் சிதம்பர இரகசியமொன்று மில்லை. தான் "பழுத்த தேசபிமானி" என்று தமிழ்நாட்டுத் தலைவர் மூர்த்தியாருக்குக் காட்டிக் கொள்ளத்தான்.

சென்னை முஸ்லிம் லீக் பார்லிமெண்டரி போர்டு திருநெல்வேலி சம்பந்தப்பட்டவரை தகுந்த பிரதிநிதிகளைக் கமிட்டி மெம்பர்களாகச் சேர்க்கவில்லை. இக்குறையைக் குறித்து காயல்பட்டணம் ஜனாயக சபையார் அதன் தலைவருக்கு ஒரு நிருபம் விடுத்தார்கள். அதற்கு இது வரையும் பதிலில்லை. இக்குறையைப் பற்றியாவது ஜனாப் பா. தா. கண்டித்தாரா? இல்லை. அப்படியிருக்க முஸ்லிம் பார்லிமெண்டரி போர்டு காங்கரஸ் மஹாசபையை அப்படியே காப்பியடிக்க வில்லை என்று இவர் கூறுவதின் நோக்கமென்ன? இவருக்குக் கொள்கை ஒன்று இருக்குமானால் இவர் உடனே முஸ்லிம் லீக் பார்லிமெண்டரி போர்டை ஆதரிக்காமல் காங்கரஸை ஆதரித்து தனது கொள்கையைக் காட்ட வேண்டும்.

முஸ்லிம் லீக் காங்கரஸை ஆதரிக்கிறது என்ற சாயம் வெளுத்து விட்டது. கல்கத்தாவில் பண்டிதர் ஜவஹர்லால் பின்வருமாறு பேசியிருக்கிறார். "காங்கரசுடன் பூரணமாக ஒத்துழைக்காத ஜின்னா வேண்டாம்."

இதிலிருந்து ஜின்னாவின் ஒத்துழைப்பைப் பண்டிதர் ஒரு சிறிதும் விரும்பவில்லை. இங்ஙனம் முஸ்லிம்களை அவமானப் படுத்திய ஒருவரையே ஜனாப் பா. தா. பின்பற்றச் சொல்லுகிறார். இப்படிச் சவுகரியத்துடன் சொல்லுமிவர், "மதத்தைப்பற்றிப் பேசும் மதவாதிகள், பணம் பெற வேண்டி கிளர்ச்சி செய்கின்றனர்" என்கிறார். அப்படியானால் எனது நண்பர் தான் தனது பத்திரிகை பிரபல்யம் அடையவிரும்பிச் சுயநலத்துடன் முஸ்லிம்களின் முன்னேற்றத்தைத் தடுத்து அவர்களின் தனி வாக்கு உரிமைகளை ரத்துச் செய்ய விரும்பும் காங்கரசை ஆதரிக்கிறார் என்பேன்.

நண்பர் பா. தா. முஸ்லிம் லீக்கை மறை முகமாக எப்படித் தாக்குகிறார் என்பது கீழ்க் காணும் குறிப்பிலிருந்து தெரியும். நவ. 7-ல் வெளியான "தாருல் இஸ்லாம்" ஆசிரியர் குறிப்பில் பின் வருமாறு எழுதியுள்ளார்:—

"முஸ்லிம் லீக் கொள்கைகளுக்கு அநுகூலமாக முஸ்லிம் லீக் மெம்பர்கள் காங்கரஸ் அல்லது வேறு எந்த முற் போக்குக் கட்சியுடனாவது ஒத்துழைக்கலாம் என்று ஜனாப் ஜின்னா குழப்பிப் பேசுவதில் அர்த்தமில்லை. எனவே, ஜின்னா காங்கரசுடன் ஒத்துழைப்பதாகச் சொன்னாலல்லாது, அவரது வேலைத்திட்டத்தால் பலனில்லை"

இதிலிருந்து அன்பர்கள் பா. தா. கூறும் குயுக்தி விவாதத்தைக்கவனித்து அவரது பொய்ப் பிரசாரத்திற்கு செவி சாய்க்கா திருப்பார்களாக!

முஸ்லிம்களுக்கு சென்னை செனட்டர் அப்துல் ஹக்கீம் அவர்களின் புரோகிரசிவ் பார்ட்டி கலஞ் செய்கிறதா? லீக் பார்லிமெண்டரி போர்டு கலஞ் செய்கிறதா? என்பதை அடுத்த வியாசத்தில் குறிப்பிடுவேன்

ஓர் பாராட்டுக் கூட்டம்

(ஒரு நிருபர்)

சென்னை, நவ, 14

சென்னை ராஜதானி தோல் பதனிடும் தொழிலாளர் சங்கத்தின் காரியதரிசியான திரு. ஏ. எம். ஆரோக்கியசாமி பிள்ளை அவர்கள் ஆப்காரி அட்வைஸரி கமிட்டி மெம்பராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டதை முன்னிட்டு வாதராஜப்பேட்டை வாசிகள், அன்னாரை கோடம்பாக்கம் ஸ்டேஷனில் வரவேற்று மாலை சூட்டினார்கள். அங்கிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு வாதராஜப் பேட்டையில் ஓர் பொதுக் கூட்டம் திரு. கே. பொன்னுசாமி பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. திரு. ஆரோக்கியசாமி பிள்ளை அவர்கள் தன்னை தேர்ந்தெடுத்த அரசாங்கத்தாருக்கும் தன்னை கௌரவித்த அவ்வூர்வாசிகளுக்கும் தன் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ள கூட்டம் இனிது முடிந்தது.

மணமகன் தேவை

23-வயதுடைய 6-வது வகுப்பு பாஸ் செய்திருக்கிற மாநிறமும், அழகும் வாய்ந்த சைவ வகுப்பைச் சார்ந்த விதவைப் பெண்ணிற்கு மணமகன் தேவை.

மணமகன்: 30-வயதுடையவராகவும், ஆங்கிலம் கற்று உத்தியோகத்திலோ, வியாபாரத்திலோ தக்க வருவாய் வரக்கூடியவராகவும், பொருளுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

விருப்பமுள்ளவர்கள் அடியிற் கண்ட விலாசத்திற்கு புகைப்படத்துடன் 0-1-0 தபால் தலை வைத்து அனுப்பவேண்டும்.

மனைவி இருப்பவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் எழுதக் கூடாது.

விலாசம்:— சு. ம. சி. பரமசிவம், நெ. 30, பெரிய செட்டி தெரு, உறையூர் போஸ்டு, திருச்சி.

குமாரசஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
அண்ணாமலை
வைத்தியரின் மருந்து நிகரற்ற குணமுடையது
☞ வைத்தியர். அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை

பொறுக்கு மணிகள்

ஆஸ்திரேலியாவில் 11 கோடி ஆடுகளிருக்கின்றன.

• • •

பிரிட்டனில் 75,000 குருடர்கள் இருக்கிறார்கள்.

• • •

ஆண்களை விட பெண்களே அதிக ஆபரேஷன்களைச் செய்து கொள்கிறார்களாம்.

• • •

சாதாரண வண்ணாத்திப் பூச்சி ஒரு விநாடிக்கு ஒன்பது தடவை இறகை அடித்துக் கொள்ளுகிறது.

• • •

நியூயார்க்கில் ஒரு குதிரை, யானையைக் கண்டு அலறி, ஒரு சில நிமிஷத்திற்குள் இறந்துவிட்டதாம்.

• • •

சில புதிய பல்தேய்க்கும் பிரஷ்களில் முகம் பார்க்கும் கண்ணாடிகள் இருக்கின்றன.

• • •

ஜெர்மனியில் தற்பொழுது 60,000 ஹோட்டல்களும், அவைகளில் மொத்தம் 8 லக்ஷம் படுக்கைகளும் இருக்கின்றன.

• • •

லண்டன் தீயணைக்கும் படையினரிடம் 52 மைல் தூரம் வரையில் ஜலத்தைச் செலுத்தக் கூடிய குழாயிருக்கிறது.

• • •

கிரேட் பிரிட்டனில் தீ விபத்துக்களால் 90 லட்சம் பவுன் மதிப்புள்ள சொத்துக்கள் சேதமாகின்றன.

• • •

33 வருஷங்களுக்குள் போர்டு மோட்டார் கம்பெனியின் மூலம் 24,500,000 மோட்டார்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன.

• • •

குடி விபத்தால் விபத்துக்குண்டாகும் மோட்டார் ஓட்டிகள் குடித்திருக்கிறார்களா என்பதைப் பரிசீலனை செய்ய ஜெர்மன் சர்க்கார் ஒரு புது முறையைக் கையாண்டு வருகின்றனர். அதன்படி அம்மோட்டார் ஓட்டி அருகிலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரத்த பரீட்சை செய்யப் படுகிறார்.

• • •

ஆப்பிரிக்கா கேப் மாகாணத்தைச் சேர்ந்த லெமாக்ஸி ஹெயட் என்ற கிராமத்தில் ஒரு விவசாயியின் பெட்டைக் கோழி 9 அங்குல நீளமும், 7½ அங்குல சுற்றளவுமுள்ள ஒரு முட்டையை விட்டதாம். முட்டைக்குள் முட்டையாக இம் முட்டையில் மூன்று முட்டைகள் இருந்ததாம். முட்டையின் கனம் 5 அவுன்ஸ்.

• • •

சமீபத்தில் மதராஸில் சௌராசி என்ற ஒரு சமண ஆலயத்திலிருந்து 3 விக்கிரகங்கள் காணாமல் போய்விட்டது. ஒன்று விலையுயர்ந்த நீலக்கல்லால் செய்யப் பட்டது. மற்ற இரண்டும் தங்கம், வெள்ளிகளால் செய்யப்பட்டவை. விக்கிரகங்களின் மதிப்பு 15000 ரூபாய். இது சம்பந்தமாய் விசேஷ பரபரப்பு அங்கு ஏற்பட்டிருக்கிறது.

நரி விழுங்கும் பாம்பு!

மதராஸிக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு பெரிய மலைப் பாம்பு, ஒரு பெரிய குள்ளநரியைப் பிடித்து விழுங்கத் தொடங்கியது. குள்ள நரியின் பரிதாபக் குரல் கிராமவாசிகளுக்கு கேட்கத் தொடங்கி உடனே சப்தம் வரும் திக்கை நோக்கி விரைந்து வந்தனர். இவர்கள் வருவதற்குள் குள்ள நரியின் பாதிக்கு மேற்பட்ட பாகம் பாம்பின் வாயிற்குள் சென்று விட்டதைக் கண்டு ஆச்சரிய முற்றனர். மிகுந்த பிரயாசையுடன் அப்பாம்பை அக்கிராமவாசிகள் அடித்துக் கொன்றனர்.

சங்கரநயினார்கோவில்

ஜஸ்டிஸ் அபிமானிகள் பொதுக் கூட்டம்.

(ஒரு நிருபர்)

சங்கரநயினார்கோவில், நவ, 13

சங்கரநயினார்கோவில் 9-11-36ல் மாலை 6-மணிக்கு செங்குந்தர் கார்த்திகை குரு பூஜை நிலையத்தில் திரு. என். ஆறுமுக முதலியார் அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தலைவர் முன்னுரையாக ஸ்தல ஸ்தாபனங்களில் காங்கரஸ்காரர்களின் திருவிளையாடல்களும், ராஜிநாமாக்களும் என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்தினர். பின் திரு. பி. சுப்பையா முதலியார் அவர்கள் பேசியதின் சுருக்கம் வருமாறு:— திருநெல்வேலி ஜில்லா போர்டு தேர்தல் காலத்தில் காங்கரஸ்காரர்கள் போர்டுக்குள் சென்று என்னவெல்லாமோ சாதிக்கப்போவதாக நீண்ட அறிக்கைகள் வெளியிட்டார்கள். திரு. சத்தியமூர்த்தி உள்பட்ட பல பிரசாரகர்கள் பிரமாதமாக வாய்ப்பறை சாற்றினார்கள். காங்கரஸ்காரர்கள் இப்போதுதான் முதல் முதலாக ஸ்தல ஸ்தாபனங்களை கைப்பற்ற தீர்மானித் திருக்கிறார்களென்றும், காங்கரஸ்காரர்களுக்கே ஓட்டைக் கொடுக்கவேணுமென்றும் வாக்காளர்களைக் கெஞ்சினார்கள். வாக்காளர்களும் ஏதாவது கதி பிறக்குமென நம்பி தங்கள் வக்குகளைக் கொடுத்தார்கள். ஆனால், காங்கரஸ்காரர்கள் ஜில்லா போர்டில் சாதித்தது என்ன? ஒன்றையும் காணோம். நன்மை செய்யாவிட்டாலும் மக்களுக்குத் துன்பம் விளைவிக்காமலாவது இருப்பதற்கில்லை. ஏழை ஆசிரியர்கள் தலையில் கைவைத்தார்கள். அநேக ரோடுகள் மோசமான நிலைமையிலிருக்கின்றன. காங்கரஸ் அங்கத்தினர்களுக்குள் கட்டுப்பாடில்லை. ஆரம்பத்திலேயே கட்சிக்கு துரோகம் செய்தார்கள். சிலர் பல புகார்களைக் கூறி கட்சிப் பதவிகளை ராஜிநாமாச் செய்தார்கள். தனிக் கட்சி ஏற்படுத்தினார்கள். சங்கரன்கோவில்தாலூகா பஜார் வட்டாம் மெம்பர் ரோட்டைப்பார்த்தால் ஜில்லா போர்டில் காங்கரஸ் ஆட்சியின் யோக்யதை தெளிவாய் விளங்கும். மழை காலத்தில் சேறும் சகதியுமாகி மனிதன் போவதற்கு யோக்யதையற்ற நிலைமையில் இருக்கிறது.

அன்பார்ந்த சகோதரர்களே! சென்னை சட்டசபை எலக்ஷன் நெருங்குகிறது. காங்கரஸ்காரர்கள் வாக்காளர்களை மயக்குவதற்கு மாயவலை வீசுகிறார்கள். இனியும் ஏமாற வேண்டாம். 'ஜே' கோஷத்தில் மயங்கி விடாதீர்கள். சொல்வதை, செயலில் செய்துகாட்டும் ஜஸ்டிஸ் அபிமானிகளுக்கே ஓட்டுகளைக் கொடுக்க வேண்டுகிறேன்" என வேண்டிக் கொண்டார். கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

தீர்மானங்கள்

1. நெல்லை ஜில்லாவில் கூட இருக்கும் ஜஸ்டிஸ் மகாநாட்டை விரைவில் கூட்ட நெல்லை ஜில்லா பிரமுகர்களை இக்கூட்டம் வேண்டிக் கொள்ளுகிறது.

2. சங்கரன்கோவில் தாலூகாவிலும் ஓர் ஜஸ்டிஸ் மகாநாடு கூட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இங்குள்ள ஜஸ்டிஸ் அபிமானிகளை இக்கூட்டம் வேண்டுகிறது.

3. "விடுதலை"ப் பத்திரிகை தினசரியாக வெளிவர இருப்பதை அறிந்து மகிழ்ச்சி யடைகிறது.

4. உண்மைக்கு மாறுக விஷயங்களைத் திரித்துக்கூறும் பார்ப்பனப் பத்திரிகைகளையும், பார்ப்பனக் கூலிகளையும் இக்கூட்டம் பலமாய்க் கண்டிக்கிறது.

5. திருநெல்வேலி ஜில்லாவில் தீவிரமாகப் பிரசாரம் செய்ய ஜஸ்டிஸ் அபிமானிகளையும், ஜஸ்டிஸ் பிரசாரகர்களையும் இக்கூட்டம் வேண்டுகிறது.

தலைவர் முடிவுரையாக, காங்கரஸ்காரர்கள் வாக்காளர்களை மயக்கும் தந்திரங்களைப்பற்றியும், சிலைகளைப்பற்றியும் விளக்கிக் காட்டினர். வந்தனோபசாரத்திற்குப் பின் 10-மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

"நாடகம்"

ஓர் வேண்டுகோள்

(பூவாளூர் பி. ஏ. பழனியப்பா)

தோழர்களே! நாடகாபிமானிகளே! இன்று நமது நாட்டில் அரிய பெரிய தத்துவங்களெல்லாம் எழுதப்பட்டும், பேசப்பட்டும் வருகின்றன இன்னும் இந்தியா தேசம் கலைவாணரைக், கல்வியாளரைப் பெற்றுயர்ந்த பெருமையுடையது என்றெல்லாம் பெருமை பேசப்படுகிறது. அதனாலெல்லாம் நமது நாடு பிறநாட்டாரை விடப் பெருமை கொள்ள இடமில்லாமற் கிடக்கின்றது. ஒரு நாட்டை உயர்த் தெடுத்துப் பேசப்புகின், கீழ்க் காணும் வாய்ப் பெலாம் பெற்றிருத்தல் இன்றியமையாதது. அவையாவன:—கல்வி, நாகரீகம், நாடகம், இவற்றிற்கு மூலாதாரமான பொருளாதாரம், கைத்தொழில், இயந்திரத் தொழில், வாணிபம், போக்கு வரவு சாதனம், விவசாயம் ,இவையே ஒரு நாட்டின் செல்வவளம் என்னலாம். இவற்றுள் ஒன்று குறைபடினும் நாடாகாது. இவற்றுள், நமது செய்தி, நாடகக் கலையுலக நற்செய்தி யாரும் என்பதை அறிவிக்க ஆசைப் படுகின்றோம். நமது விருப்பும் வேண்டுகோளும் இதுவாக இருக்க, நமதிந்திய நாட்டின் நாடக வியலை, கூத்தர் இயலை நினைக்கின் கொலைக்களமே போன்ற குறிப்புருவே மனத்திடைக் கூத்திடக் காணலாம். என் செய்வலாம்! இனியாவது பல்கலைக் கழகம் போன்ற கலைக் கூடங்களில் நமது பழந் தமிழர் நாடகப் பண்பையும், கூத்தியல் மனப்பான்மையையும் கூத்திடக் கிளர்ச்சி செய்து கலை வளர்ச்சி பெறுவோமாக!

நமது தமிழ் நாட்டில் இக்காலை ஒரு சில எண்ணிவிடக்கூடிய பாரதிகளும், நாடகாசிரியர்களும் உள்ளனர். அவர்களை இன்றில்லா விடினும் பிற்காலத்திலாவது நமது நாட்டு வழக்க முறையில் போற்றிப் புகழ்ப்படப் போவது உறுதி.

இத்தகையாரில், தமிழ்ப் பேராசிரியர் விபுலானந்த அடிகளாரைத் தமிழ்நாடு நன்கு தெரிந்து வணக்கம் செய்யாதது தமிழர் செய்த பாவமே யாகும். அண்மையில் அடிகளார் பல்கலைக் கழக சூழ்ச்சிச் சுழலிற் படாது சுயமரியாதையோடு வெளியேறி நாடக வியலை நாட்டிடைப் பரப்ப நாட்டம் கொண்டு தனது தனிப் பெரும் ஆராய்ச்சியிற் கண்ட இசை நூல் நுணுக்க அனுக்கங்களை சிறு கூட்ட சிறசபை (சைவ சித்தாந்த சபை)களில் பேருரையாக செய்தது, அத்துணைச் சிறப்புடைய அடிகளார் கருதிய அளவு பயனையும் அளிப்பதற்கில்லை என்பதையும் கடமை முறையில் சொல்லாதிருத்தற் கியலவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆகவே, கூடிய சீக்கிரம் திருச்சி லால்குடியை அடுத்த பகுதியில் ஒரு நடிகர்சபை நடத்தத் தக்கார் பலர் முயல்கின்றனர். கூத்து விரும்பிகளும் கலையுணர்வில் நம்பிக்கையுள்ள தனவான்களும் போதரவு செய்யப் பெரிதும் பணிந்து வேண்டுகிறோம்.

அத்துடன் இவ் வேண்டுகோளை மதித்து வெளியிடும் எல்லாப் பத்திரிகை நட்பும் எங்கள் "தமிழ்நாடு சீர்திருத்தக் கூத்தரச சார்பாக நன்றியும் கடமையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடுத்த கூத்தரசத்திறப்பு விழாவையும், இடம், தேதி, கிழமை விளக்க முறைகளையும் விரைந்து எதிர் பாருங்கள் என்பதோடு அமைகின்றோம்.

"ஒற்றுமை"

14-ம் வருஷம் நவம்பரில் ஆரம்பம். ஸ்டாம்பு செலவுக்கு 12 அணு அனுப்பினுல் ஒரு வருஷப் பத்திரிகை அனுப்பப்படும்.

மாதிரிப் பிரதி இனாம்.

ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராயநகர், மதராஸ்.

பெங்களூர் பங்கு மார்க்கெட்.

பெங்களூர், நவ, 17

பெங்களூர், புரோக்கர் எம். நஞ்சப்பையா ஜாகிர்தார் கீழ்க்கண்ட பங்கு விலைகளை அனுப்பியிருக்கிறார்.

	செலுத்தப் பட்டது	தற்கால விகிதம்	
	ரூ.	ரூ.	அ.
பாங்கி			
இம்பீரியல் எப்.பி.	500	1583	8
இம்பீரியல் கண்ட்.	125	332	0
ரிசர்வ்	100	139	6
இந்தியா	50	136	0
மைசூர்	100	307	8
பெங்களூர்	10	6	2
இண்டஸ்டிரியல்	25	6	0
தேவாங்கா	10	8	8
செண்ட்ரல்	25	36	10
குபிலான்	25	27	0
ஸ்டேட் எய்டட்	25	15	10
திருவாங்கூர்நாஷனல்	50	55	6
இந்தியன்	50	142	0
,,	10	29	0
இன்ஸ்யூரன்ஸ்			
ஏஷியாடிக்	5	5	0
ஓரியண்டல்	200	5309	0
நியூ இந்தியா	15	44	0
வலகன்	10	7	8
ஆலை			
பெங்களூர்	100	167	0
,, பிரிபரன்ஸ்	100	113	0
பக்கிங்ஹாம்	100	175	0
,, பிரிபரன்ஸ்	100	165	0
கோரக்	100	206	0
கெய்சர்-இ-ஹிண்ட்	2½	1	0
மினர்வா	100	54	0
மகாராஜா	50	82	0
கிருஷ்ணராஜேந்திர	25	6	8
சீதாராம்	100	45	0
கம்போடியா	10	9	14
வசந்தா சாதா	100	106	8
,, பிரிபரன்ஸ்	100	112	8
ராஜலக்ஷிமி சாதா	50	57	0
,, பிரிபரன்ஸ்	50	53	0
காலேஸ்வரா	100	285	0
டிபன்சர்			
கோலார்	100	100	8
ஹாசன்	100	106	0
மைசூர் சர்க்கரை	80	85	0
திருச்சி-ஸ்ரீரங்கம்	100	109	8
சில்லரை			
பிரீமியர் சாதா	75	88	0
,, பிரிபரன்ஸ்	100	112	0
டாடா ஹைட்ரோ சாதா	100	192	0
,, பிரிபரன்ஸ்	100	162	0
டாடா இரும்பு சாதா	75	208	0
,, டிபர்டு	30	831	6
,, 1-வது பி-ஸ்	150	202	0
,, 2-வது பி-ஸ்	100	176	0
பி. வி. சப்ளை	25	19	8
பெங்களூர் பிரஸ்	100	80	0
பார்டன் சன்ஸ் சாதா	10	5	0
,, பிரபரன்ஸ்	10	5	10
ஸ்பென்சர் சாதா	10	7	0
,, ஏ-பிரிபரன்ஸ்	10	11	8
,, பி-பிரிபரன்ஸ்	10	12	4
மின்சாரம்			
ஆம்பூர்	10	14	6
வேலூர்	10	17	8
திருச்சிராப்பள்ளி	100	202	0
,,	10	20	0
விசாகப்பட்டணம்	50	71	0
கும்பகோணம்	10	14	8
கொச்சி	10	13	8
ரங்கூன்	10	15	8

சுரங்கம்

	வி.	ப.	வி.	பெ.
சாம்பியன்	10	2	6	2
மைசூர்	10	1	7	8
நந்தி துர்க்கம்	10	3	1	6
ஊர்காம் சாதா	10	0	15	2

சக்கரை

மைசூர் சர்க்கரை	10	33	4
நியூ இந்தியா	10	7	2
டெக்கான் சாதா	100	384	0
,,	25	95	9

மாஸ்கோவில் சமீபத்தில் ஒரு ஷவரக்கடை ஏற்பட்டிருக்கிறது. வேண்டுவோர் காசுகொடுத்து தாங்களே ஷவரம் செய்து கொள்ளலாம்.

விடுதலை யாவரி யாதெனக் கேட்பீராயின்
கேடிலை நீக்கி நலிலை நின்ற
[நாட்டினரெல்லாம்
பொருள் சுகப்பேறுகள் சர்வமும் பெற்ற
திருமிக வாழ்தலே யாம்

விடுதலை

VIDUTHALAI

மலர்-2] சென்னை: (18-11-1936) தாது௵ கார்த்திகை௴ 3௳ புதன்கிழமை [இதழ்-48

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்று நின்ற
செம்மொழியை திருமொழியை
[தேன்மொழியை
தனித்தியங்கும் ஆற்றலுள தொன்மொழியை
[அமிழ்தனைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
[அனுதினமும் பழக்கம் செய்வீர்.

ஜஸ்டிஸ் கட்சியை ஆதரியுங்கள்

(திரு. ஆர். சதாசிவம் பிள்ளை)

சகோதர-கிராம உத்தியோகஸ்தர்களே! நம் தாய்நாட்டின் கண்ணுள்ள நம் காருண்ய கவர்ன்மெண்டின் ஆதிக்கத்தில், மாற்றல் உபத்திரவமின்றி பரம்பரைப் பாத்தியதையை ஆதாரமாகக்கொண்டு சர்க்கார் உத்தியோகஸ்தர்களாயிருப்பவர்கள் கிராம உத்தியோகஸ்தர்களே!

எந்த ராஜாங்கத்துக்கும் அடிப்படையான அஸ்திவாரம் போல ஆதாரமாயிருப்பவர்களும் கிராம உத்தியோகஸ்தர்கள் தான்!

ராஜாங்கத்துக்குப்பயந்து சொற்ப சம்பளத்தில் குடும்பத்தைக் கஷ்டநிலைமையிலும் நடத்திக்கொண்டு பொறுப்புடன் சட்டவரம்பிற்குட்பட்டு உழைப்பவர்களும் கிராம உத்தியோகஸ்தர்களே என்பது எளிதில் புலனாகும்!

உழைப்புக்குத் தகுந்த ஊதியமின்றிப் பரம்பரைப் பாத்யதையை விடாது, பொறுமையுடன் தன் பொறுப்பை உணர்ந்து சேவகம் செய்வதும் சகோதர கிராம உத்தியோகஸ்தர்கள் தான்!

கிராமாந்திரங்களினுடையவும் கிராமவாசிகளினுடையவும் கலைகளை நேரில் கண்முன்பாக கண்டும், கேட்டும் ராஜாங்கத்தாரின் பார்வைக்கு, கொண்டு வருபவர்களும் கிராம உத்தியோகஸ்தர்களே!

ஒரு கிராமத்தின் முன்னேற்றத்திற்கும், பிற்போக்கிற்கும் காரணமாயிருப்பவர்களும் கிராம ஜனங்கள் ராஜாங்க முறைகளை தெரிந்துகொள்ளவும், ராஜாங்க ஒழுக்கங்களை மீறவிடாது குடிகளின் நன்மைக்காகப் பாடுபடுபவரும் ராஜாங்க நடவடிக்கைகளில் கலந்து சர்க்கார் ஒழுக்கங்களுக்குட்படும்படி ஜனங்களை கொண்டு வரவேண்டியவர்களும் கிராம உத்தியோகஸ்தர்களே!

இந்த ராஜாங்கத்தில் சொற்பச் சம்பளமும், அதிக உழைப்பும், ஒரு இலாக்கா பாக்கியில்லாமல் உத்திரவுக்கு கீழ்ப்படிவதும், அதிகாரிகளால் கேவலமாக நடத்தப்படுவதும் நமது கிராம உத்தியோகஸ்தர்களின் கடமையாகவிருக்கிறது. ஒவ்வொரு தாலூகாவிலும் தாலூகா எஜமானர்களால் கேவலமாய் நடத்தப்படுவதும் கிராம உத்தியோகஸ்தர்களேயே! நாம் மேல் கண்ட ராஜாங்க குடி சம்பந்தப் பட்டவரையில் பொறுப்புள்ள ஊழியத்தை வகித்தும் நாம் நடத்தப்படும் நிலைமை மிக்கக் கேவலமான தாகும்.

நமக்கோ ராஜாங்கத்தில் இடப்படும் வேலைகளோ அனந்தம். சம்பளமோ மிகக் குறைவு. எனினும் மேலுக்கு மேலாக அடிக்கடி வேலைகளை உயர்த்தி வருவதை காண்கிறோமேயொழிய நம் வறுமையைக் கவனிப்பார் ஒருவருமில்லை. எந்த சபையிலாகட்டும், எந்தக் கூட்டத்திலாகட்டும் நம்மைப்பற்றி அறிவிக்கக் கூட யாரும் நினைக்கிறார்களில்லை. அவ்வளவு அதிர்ஷ்டசாலிகளாக நம்மைக் கடவுள் ஏன் படைத்தார் என்பது நம் துரதிஷ்டமே.

இன்னும் இதைப்போன்ற சொல்லிடலாகாக் குறைகள் நமக்கிருக்கின்றனவெனினும் இவைகளுக்கெல்லாம் காரணம், நாமே என்பது என் அபிப்பிராயம்.

முதன் முதல் நாம் நம் குறையை போக்கவும், நாம்முன்னுக்கு வரவும், சுயமரியாதையைப் பெறவும் நாம் செய்ய வேண்டிய முறைகளை ஒற்றுமையுடனும், ஒழுங்காகவும் செய்து வருவோமேயானால் நம் குறையும் நீங்கும், நாமும் மரியாதையுடன் ஜமாபந்தி காலங்களில் கேவலமாக நடத்தப்படாமலும் அதிக வேலைகளை நீக்கிக் கொள்ளவோ அன்றி உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெறவோ கூடும்.

நாம் கர்ணம் மணியக்காரர் என்கிற ஒற்றுமையான மனதுடன் பரஸ்பரம் விரோத பாவத்தை அறவே ஒழிக்க முயலவேண்டும்.

சர்வ ஜனங்களான நம்கிராமக்குடிகளின் நன்மைக்கே பாடுபட்டு குடிகளை ராஜாங்க ஒழுக்கங்களுக்குத் தெரிந்து நடக்கப் பழக்கவேண்டும்.

பிர்க்கா வாரியாகவும், தாலூகாக்கள் வாரியாகவும் கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தை ஸ்தாபித்து, முதலில் நம் குறைபாடுகளைச் சீர்திருத்திக்கொண்டு தேவைகளுக்கு மேலதிகாரிகளிடம் முறையிடவேண்டும். கூடுமான போதெல்லாம் சங்கம் தீர்மானத்தின்மேல் டெபுடேஷன் போக வேண்டும். நம் தேவைகளை நேரில் அதிகாரிகளுக்கு மெய்ப்பிக்கவேண்டும்.

ஒவ்வொரு சங்கத்திற்கும் புத்திமதிகளைப் போதிக்கக் கூடியதும், சுயரியாதையைக் காப்பாற்றக் கூடியதும், தேசநலத்தை நாடி உழைப்பதும், உலகநன்மை ஒன்றையேநாடிப் பாடுபட்டு வரும் கட்சியை ஆதாரமாகக்கொண்டுள்ள வாரதினசரி பத்திரிகையை இலவசமாக அடைந்து அதில் மின்னும்படியான தேசிய ராஜீய உணர்ச்சிகளையும், வர்த்தமானங்களையும் பிரசாரங்களையும் ஒவ்வொரு சகோதர உத்தியோகஸ்தர்களும் படித்தறிந்து கொண்டு வரப்போகும் புதிய அரசியலிலாவது நமக்கு நன்மை உண்டாக வேணுமென்ற நோக்கத்துடன் நியாயக் கட்சிக்கு அனுசரணையாக நடந்து, நமது குறைகளை ஒழிக்க முற்படவேண்டும். அதற்கு இப்போது நம்நாட்டில் வெளிவந்து கொண்டிருக்கும் 'விடுதலை' 'வெற்றிமுரசு' 'ஊழியன்' என்பன போன்ற உயரிய நோக்கம் கொண்ட பத்திரிகைகளே நமக்குப் போதுமானவைகள் மேற்சொல்லிய பத்திரிகைகளை சங்க அங்கத்தினர்கள் படித்து அவரவர்கள் ஆதிக்கத்தின் கீழ் உள்ள கிராம ஜனங்களுக்கு பிரசாரம் செய்ய வேண்டும்.

வரவிருக்கும் சென்னை சட்ட சபை எலக்ஷனில் தேர்தல் நடக்கப் போவதால் ஒவ்வொரு கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கமும் ஒன்றுகூடி எந்த ஸ்தல ஸ்தாபன சபைகளுக்கும், எந்த கட்சியரால் நன்மை செய்யக் கூடுமென்பதை தீர்மானித்து அக்கட்சியினருக்கு வாக்கு கொடுத்து தேர்தலில் வெற்றி பெறுமாறு செய்வோமாகில் நம் சமூகத்துக்கு நியாயக் கட்சியரால் பூரண ஆதரவு கிடைக்கும் என்பதை நம்பிக்கையுடன் இது விஷயத்தில் நாம் பூரணமான வெற்றியும் அடையலாம். கிராம உத்தியோகஸ்தர்களாகிய நாம் ஒற்றுமையுடன் ஜனங்களுக்கு நியாயக்கட்சியை விளக்கித் தேர்தல் விஷயங்களில் உண்மையான தேசபக்தியும் ராஜபக்தியு முடையவர்களைத் தேர்ந்தெடுக்கக் கிராமாந்திரங்களை ஒற்றுமைக்குக் கொண்டு வருவோமானால் போலிக் கட்சிகளின் வஞ்சக வார்த்தை செல்லுபடியாகாது. ஆகவே சகோதர கிராம உத்தியோகஸ்தர்கள் நியாயக் கட்சிக்குப்பாடுபட்டு நியாயக் கட்சியின் ஆதரவு பெற்று, இனிவரப் போகும் சீர்திருத்தத்திலாகினும் நம் குறைகளைக் களைந்தெறிய ஊக்கம் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

உண்ணாமுலைக்கடையில் விதவா விவாகம்

(நமது நிருபர்)

நாகர்கோவில், நவ. 14

சென்ற புதன்கிழமை காலை மார்த்தாண்டத்தை அடுத்த உண்ணாமுலைக்கடையென்னும் ஊரில் ஓர் விதவா விவாகம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. மணமகன் திரு. என். சுப்பையாவும், மணமகள் ஸ்ரீமதி எ. உமையபார்வதி அம்மாளும் பட்டாரியர் சமூதாயத்தைச் சேர்ந்தவர்கள். இச் சமூதாயத்தார் இதுகாறும் விதவா விவாகத்தை அனுஷ்டித்ததில்லை. எனினும், தம்பதிகளின் சுற்றத்தாரும், ஊராரும் பூரண சம்மதத்துடன் வந்திருந்து மண மக்களை ஆசிர்வதித்தனர்.

இவ்வூரில் இதே சமூதாயத்தைச் சேர்ந்த சூரியன் என்பவர் சுமார் ஒரு வருஷத்திற்கு முன் ஒரு விதவையை மண முடித்த பொழுது உற்றாரும், ஊராரும் மிகுந்த எதிர்ப்பை வெளிப்படுத்தினர் என்பது கவனிக்கத்தக்கது.

மணத்தின் போது உள்ளூர் பிரமுகர்களும், அயலூர் நண்பர்களும் ஏராளமாக விஜயம் செய்திருந்தனர்.

திருமணம் முடிந்ததும் மணமக்கள் பிரமுகர்கள் உள்பட ஒரு குரூப் போட்டோ எடுக்கப்பட்டது. பின் தோழர் ஆர். ராமலிங்கம் அவர்கள் தலைமையில் ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. மணமக்களின் தைரியத்தையும், விதவா விவாகத்தின் அவசியத்தையும் விளக்கி தோழர்கள்: ஆ. ஈ. பெருமாள், என். சுப்பையா, எஸ். பூதலிங்கம், ஆ. சுப்பையா ஆகியோர் சொற்பெருக்கிட்டனர். தலைவர் முடிவுரையுடனும், சமபந்தி போஜனத்துடனும் வைபவம் இனிது முடிந்தது.

சுமார் 5 வருஷங்கட்கு முன் நாகர்கோவில் கோல்டன் சினிமா தியேட்டர் ஹாலில் ஈரோடு தோழர் ஈ. வெ. ராமசாமி, காரைக்குடி தோழர் முருகப்பா தம்பதிகள் ஆகியோர் முன்னிலையில் இந்நகரில் முதன் முதல் விதவா விவாகம் நடத்திய வீரர் திரு. உ. நல்லசிவன் அவர்களது பெரு முயற்சியின் பலனாகவே மேற்கண்ட விதவா விவாகம் உண்ணாமுலைக்கடையில் நடைபெற்றது எனபதையும், அவர்களது முயற்சியால் இன்னும் பல விதவா விவாகங்கள் அங்கு நடைபெறக் கூடும் என்பதையும் இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிடுவது அவசியமாகும்.

ஆடுகளுக்கு பூட்ஸ்!

ஆடுகளின் குளம்புகள் புழுப்பிடித்துப் போகாமலிருப்பதற்காகவும், அங்கேயே மற்ற ஆடுகளுக்கும் பரவாமலிருப்பதற்காகவும் சாமர் செட்டிலுள்ள இரண்டு குடியானவர்கள், அவைகளின் குளம்பிற்கு பொருந்தமாயிருக்கத் தக்கவிதமாய் 'பூட்ஸ்'கள் செய்து கெண்ட், ஆஷ்போர்டு விவசாயக் கல்லூரியில் பரிக்ஷார்த்தமாக ஒரு ஆட்டிற்குப் போட்டு காண்பித்தனர். பூட்சை அணிந்து கொண்ட ஆடு, யாதொரு கஷ்டமுமின்றி எப்பொழுதும் போல் ஓடி ஆடிற்றும்.

ஏமாறாதீர்கள்!

எங்கள் வைத்தியசாலையின் மருந்துகள் மிகவும் சிலாக்கியமானதெனப் பலராலும் புகழப்பட்டு வருதல் கண்டு, சிலர் வேறு மருந்துகளை எங்கள் மருந்துகள்—அதாவது சி. எம். சாமி மருந்துகள் என்று சொல்லி ஏமாற்றி விற்பனை செய்து வருகிறதாகத் தெரிகிறது. எங்கள் வைத்தியசாலையிலிருந்து வெளி இடங்களுக்கு நாங்கள் யாரையும் அனுப்பவில்லை. எங்கள் ஏஜெண்டென்றும், எங்கள் மருந்துகள் என்றும் யாராவது விற்பனை செய்தால் அதைப் பொது மக்கள் வாங்கி மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கிறோம்.

மருந்து வேண்டியவர்கள் நேரே எமக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி, S. I.

ரயில்வே கால அட்டவணை

சென்னை: (சென்ட்ரல் ஸ்டேஷன்)

வண்டியின் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
பெங்களூர் மெயில் ...	மாலை 9-30	காலை 6-10
,, பாசஞ்சர் ...	மாலை 9-40	காலை 5-30
,, பாசஞ்சர் ...	காலை 6-20	மாலை 7-40
,, எக்ஸ்பிரஸ் ...	மாலை 1-0	மாலை 2-10
பம்பாய் ,, ...	காலை 8-30	மாலை 4-55
,, மெயில் ...	மாலை 8-45	காலை 5 55
வால்டேர் பாசஞ்சர் ...	மாலை 7-30	காலை 10-35
,, பாசஞ்சர் ...	காலை 9-5	மாலை 6-10
கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ ...	காலை 7-45	மாலை 5-15
ரெய்ச்சூர் பாசஞ்சர் ...	காலை 9-20	மாலை 3-40
ஜோலார்பேட்டை பாசஞ்சர் ...	மாலை 12-50	மாலை 2-0
ரேனிகுண்டா லோகல் ...		காலை 9-40
,, பாசஞ்சர்	— —	மாலை 9-22
காட்பாடி பாசஞ்சர் ...	மாலை 5-30	காலை 9-40
அரக்கோணம் பாசஞ்சர் ...	மாலை 6-30	— —
மலபார் எக்ஸ்பிரஸ ...	மாலை 8-5	காலை 7-20
கல்கத்தா மெயில் ...	மாலை 8-35	காலை 7-50
புளூமவுண்டன் எக்ஸ்பிரஸ ...	மாலை 9-15	காலை 6-30

சென்னை: (எழும்பூர்)

வண்டியின் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
செங்கோட்டை பாசஞ்சர் ...	காலை 7-30	மாலை 7-30
கடலூர் பாசஞ்சர் ...	மாலை 4-5	காலை 11-20
இண்டோ—சிலோன் எக்ஸ்பிரஸ்	,, ,, 9-0	... 6-45
திருவனந்தபுரம் பாஸ்டு பாசஞ்சர்	,, 9-30 ,,	... 6-10
திருச்சி பார்சல் பாசஞ்சர்	,, 10-20 ,,	... 5-30

கார்டு லேன்

வண்டியின் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
தனுஷ்கோடி பாஸ்டு பாசஞ்சர் ...	காலை 11-25	மாலை 2-45
திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ ...	மாலை 8-0	காலை 7-20

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

"அறிவுக் கொடி"

ஒரு சிறந்த தமிழ் மாத வெளியீடு.

ஆசிரியர்:—ஸ்ரீமதி சாமி சிதம்பரனார்.

1936௵ நவம்பர்௴ 15-ம் தேதி முதல் ஒவ்வொரு ஆங்கில௴ 15-ம் தேதியிலும் தவறாமல் வெளிவரும்.

அறிவு வளர்ச்சி, மாதர் முன்னேற்றம், தமிழ் மொழி வளர்ச்சி, விஞ்ஞானம், வைத்தியம், விகடம், சங்கீதம், நாடகம், படக் காட்சி, மனதைக் கவரும் சிறு கதைகள் முதலிய சிறந்த பல விஷயங்களும், இனிய பாடல்களும் வெளிவரும்.

உள்நாடு வருட சந்தா ரூ. 1. வெளிநாடு ரூ. 1-8-0.

மானேஜர்:—"அறிவுக் கொடி" ஆபீஸ்,
462, கீழ்க் கடைவீதித் தெரு, கும்பகோணம்.

எது?

தமிழ்நாட்டில் குறைந்த சந்தாவில்
அதிக பக்கங்களோடு வெளிவரும் தமிழ் மாதப் பத்திரிகை.

"சித்தன்"

ஒன்றே. இனிய கதைகள், ஹாஸ்யம், உலகச் செய்தி, வைத்தியக் குறிப்பு, சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன நிறைந்தது.

வருட சந்தா அணா (8) எட்டே. வெளிநாடு ரூ. 1.

மாதிரிப் பிரதி இனாம். விளம்பர விகிதம் மிகவும் குறைவு.

விபரங்களுக்கு எழுதவும்:—
மானேஜர்:—"சித்தன்", பழனி, S. I.

விஷவாயுவிலிருந்து குழந்தைகளைத் தப்புவிப்பதற்காக பிரிட்டனில் ஒரு தனிஉடை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அந்த உடைக்குள் வெளிக்காற்று புகமுடியாது. சில மணிக்கொருதரம் அதற்குள் காற்று செலுத்தப்படுகிறது. குழந்தைகள் அப்பைகளில் போட்டுக் கட்டப்படுகின்றன.

சராசரி ஒரு நாளில் போலீஸ்காரன் 20 மைலும், பஸ் கண்டக்டர் 5 மைலும், பண்டங்களை விற்கும் பெண் 2 மைலும், ஆபீஸில் வேலை செய்யும் பெண் 3 மைலும், மாணவி 11½ மைலும், மாணவன் 15 மைலும், ஒரு மனிதன் 8 மைலும் நடப்பதாக கூறப்படுகிறது.

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN, AT THE JUSTICE PRINTING WORKS, 14, MOUNT ROAD, MADRAS. EDITOR: PANDIT S. MUTHUSWAMI PILLAI

விலை அரை அணா　　8 பக்கங்கள்　　மலாய் நாட்டில் 5 சதம்　　Regd. No. M. 3298.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா

உள்நாடு

1 மாதம்	...	0 6 0
3 மாதம்	...	1 0 0
6 மாதம்	...	1 14 0
1 வருடம்	...	3 10 0

சென்னைக்கு

1 மாதம்	...	0 4 0
3 மாதம்	...	0 10 0
6 மாதம்	...	1 4 0
1 வருடம்	...	2 6 0

விடுதலை

VIDUTHALAI

(வாரம் இருமுறை வெளிவரும்)

ஆசிரியர்: பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா.

வெளிநாடு

1 மாதம்	...	0 10 0
3 மாதம்	...	1 14 0
6 மாதம்	...	3 12 0
1 வருடம்	...	7 4 0

சர்க்கார், முனிசிபாலிட்டி,
ஜில்லா போர்டுகளுக்கு:

உள்நாடு:	வருடம்	ரூ.	7 8 0
சென்னை:	"	ரூ.	4 8 0

மலர்-2]　சென்னை:　(25-11-1936)　தாது௵ கார்த்திகைமீ 10௳　புதன்கிழமை　[இதழ்-50

காங்கரஸ் வாலாக்கள் அசட்டுப் பூச்சாண்டி

மண்டியிட்டு ராஜ விசுவாசப் பிரமாணம் செய்யலாமாம்!

ஆனால் கவர்னருக்கு உபசாரம் செய்யக் கூடாதாம்!!

சர்க்காரை கவிழ்ப்போர் கவர்னர் உதவி நாடுவது வீரமாகுமா?

காங்கரஸ் வாலாக்களுக்கு மூளையுண்டா? பகுத்தறிவுண்டா?

(இந்திரஜித்தன்)

மனிதனிடத்திலே மற்றப் பிராணிகளுக்கில்லாத ஒரு அபூர்வச் சரக்கு இருக்கிறதாம். அந்தச் சரக்குத் தான் மூளை. அதனாலேயே மனிதன் மற்றப் பிராணிகளை விடச் சிறந்தவனாக இருக்கிறானாம்.

ஆனால், இந்தியாவுக்கு கலப்பற்ற பூரண சுயராஜ்யம் கொண்டுவரப் போவதாய்க் கூச்சல் போடும் காங்கரஸ்காரரிடம் "மூளை" என்னும் அந்த அபூர்வச் சரக்குத் தான் சூன்னியம் எனத் தோற்றுகிறது.

"சட்ட சபையினால் சுயராஜ்யம் வராது; கழுதைகள் தான் சட்ட சபைக்குச் செல்லும், சட்ட சபைக்குச் செல்பவர்கள் எல்லாம் சர்க்கார் தாசர்கள்" என ஒரு காலத்திலே காங்கரஸ்காரர்கள் கூச்சல் போட்டார்கள்.

ஆனால், அந்த ஆசாமிகளே இப்பொழுது சட்டசபைகளைக் கைப்பற்ற பகீரதப் பிரயத்தனம் செய்கிறார்கள். தமிழ் நாட்டுத் தேர்தல் பிரசாரத்துக்காக ஏழை எளியோரைக் கசக்கிப் பிழிந்து இரண்டு லக்ஷம் ரூபாயும் வசூல் செய்யப் போகிறார்கள்.

ஆனால், சட்டசபைக்குச் சென்று அவர்கள் சாதிக்கப் போவதென்ன? அதை இப்பொழுது சொல்லமாட்டார்களாம். தேர்தல் முடிந்த பின் தான் சொல்வார்களாம்.

மெஜாரட்டி கிடைத்தால்

தேர்தலில் காங்கரசுக்கு மெஜாரட்டி கிடைக்கும் மாகாணங்களில் காங்கரஸ்காரர் மந்திரி பதவி ஒப்புக் கொள்வார்கள் என்று சிலர் காதோடு காதாய்ச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

சீர்திருத்தத்தைக் கவிழ்க்கப் போகும் காங்கரஸ்காரர் எப்படி மந்திரி பதவிகளைக் கைப் பற்றலாம் என்று கேட்டால், சீர்திருத்தத்தைக் கவிழ்க்கத் தான் மந்திரி பதவிகளைக் கைப்பற்றப் போகிறோம் என்றும் அவர்கள் வாய் கூசாமல் கூறுகிறார்கள்.

ஆனால் அகில இந்திய காங்கரஸ் தலைவரான பண்டித ஜவஹர்லாலோ மந்திரி பதவிகள் ஒப்புக் கொள்வது சர்க்காருடன் ஒத்துழைப்பதேயாகுமென்று சந்தேகத்துக்கு இடமின்றிக் கூறுகிறார்.

இவ்வண்ணம் பிதற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு "மூளை" இருக்கக்கூடுமா என்ற பிரச்சினையை தேசமகா ஜனங்களே முடிவு செய்து கொள்ளட்டும்.

பேடிகள் பூச்சாண்டி

முக்கியமான பிரச்சினைகளில் அவர்கள் இவ்வாறு முட்டாள்தனமாக உளறிக் கொண்டிருப்பதையாவது மன்னித்து விடலாம். ஏன்? மூளையில்லாத கூட்டங்கள் இம்மாதிரிதான் புலம்பிக் கொண்டு இருக்கும்.

ஆனால், "தலையை வாங்கி விடுவோம், மூக்கை அறுத்து விடுவோம்" என அவர்கள் பூச்சாண்டி காட்டுவதைத்தான் பொறுத்துக் கொண்டு இருக்க முடியவில்லை.

திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவர் திரு. தளவாய் குமாரசாமி முதலியார், மே. த. கவர்னர் அவர்களுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்துவிட்டாராம். காங்கரஸ்வாதியான திரு. முத்தையபிள்ளையும் அப்பொழுது விருபம் செய்திருந்தாராம். ஆகவே, அவர்களுக்கு ஒருபாடம் கற்பிக்கவேண்டுமென்று "தினமணி" உறுமுகிறது; திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரியாரும் சீறுகிறார். ஏனைய காங்கரஸ் வாலாக்களும் கத்துகிறார்கள்.

வணங்கா முடியர்

ஆனால், இந்த மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சக்கூடியவரல்ல வீர தளவாய் முதலியார். தளவாய்க் குடும்பத்தார் வணங்காமுடியர்; அஞ்சாத நெஞ்சத்தவர்கள்; சுயபுத்தியுடையவர்கள்; மனச்சாட்சிப்படி நடப்பவர்கள்; மடிசஞ்சிகள், தற்பைப் புல்கள், இறல் பஞ்சாங்கங்கள், விபீஷணர்கள், குலத்தைக் காட்டிக் கொடுப்பவர்கள் பூச்சாண்டிகளுக்கு தளவாய் முதலியாரோ, முத்தையபிள்ளையோ அஞ்சக் கூடியவர்களல்ல அஞ்சக் கூடியவர்களாயிருந்தால் தற்பைப் புல் கட்டளைகளை அவர்கள் மீறியிருப்பார்களா?

பேடிக் கூட்டம்

மற்றும், தளவாய் முதலியாரைப் பூச்சாண்டி காட்டும் இந்தப் பேடிக் கூட்டத்துக்கு ஏதாவது சாதிக்க முடியுமா? நல்ல பிள்ளைகளாய் நடந்து கொள்வதாக உறுதி வாக்களித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு சிறைகளைக் காலி செய்து சட்டமறுப்பையும் நிறுத்திக்கொண்ட இந்த வழுக்கல்கள் சீர்திருத்தத்தை உடைக்கப் போகிறோம். காங்கரஸ் கட்டளைகளை மீறியவர்களைத் தண்டிக்கப் போகிறோம் என்றால் யாராவது நம்புவார்களா?

காங்கரஸ் கட்டளைகளை மீறிய திருச்சிக் காங்கரஸ்காரர்களை இந்த வீரர்கள் என்ன செய்தார்கள்? அவர்களது ஒரு சிறு ரோமத்தையாவது இந்த மானங்கெட்டக் கூட்டத்துக்கு அசைக்க முடியுமா?

காங்கரஸ் கட்டளையை மீறியவர்கள் வீட்டு வாயிலில் மறியல் நடக்கப் போவதாகக் கூறப்பட்டதே! அது என்னவாயிற்று? மறியல் நடக்க திருச்சிக்குச் செல்பவர்களுக்கு பாதுகா பட்டாபிஷேக உபசாரம் நடக்கக் கூடுமென பயந்து எவரும் மறியல் செய்ய முன்வரவில்லையெனக் கூறப்படுவது உண்மைதானா?

திருச்சியில் சாய்க்காத வீரர்களா திருநெல்வேலியில் சாய்த்து விடப் போகிறார்கள்?

எங்குதான் காங்கரஸ் வாழ்கிறது?

மற்றும், எந்த இடத்திற்றான் காங்கரஸ் வாழ்கிறது.

வேலூரில் காங்கரஸ் முறியடிக்கப்படவில்லையா? ஜில்லா போர்டு உபதேர்தலில் போட்டி போட்ட புது காங்கரஸ் பக்தர் திரு. வி. எம். ராமசாமி முதலியார் புற முதுகு காட்டி ஓடியதேன்?

வேலூர் காங்கரஸ் வாலாக்கள் இரு கட்சிகளாகி ஒருவரையொருவர் திட்டிக் கொள்ளவில்லையா!

தென்னாற்காடு ஜில்லா நிலைமை என்ன? காங்கரஸ் கட்சிக்குள்ளேயே ஒரு குட்டிக்கட்சி தோன்றக் காரணம் என்ன?

சென்னை நகர சபையிலே காங்கரஸ்காரர் மெஜாரட்டி பெற்று விட்டார்களாம். இருக்கட்டும். ஆனால், கண்ட பலன் என்ன? அகில இந்திய காங்கரஸ் டெலிகேட்டு தேர்தலில் பாஷ்யம் கட்சியார், சத்தியமூர்த்தி கட்சியாரை யொழிக்க பகிரங்கமாக வேலை செய்தார்களாமே! மூன்றாம் முறையும் தமிழ் மாகாண காங்கரஸ் கமிட்டித் தலைவர் ஆக முயலும் திரு. சத்தியமூர்த்தி காலை வார காங்கரஸ்காரர்களுக்குள்ளே சதி வேலை நடக்கிறதாமே?

அட அசடுகளே!

இந்த லக்ஷணத்தில் தளவாய் முதலியாரைப் பூச்சாண்டி காட்ட காங்கரஸ் அசடுகளுக்கு யோக்கியதை யுண்டா!

ஜில்லா போர்டு தேர்தல்களில் வெற்றிக் கொடி காட்டி விட்டோம்; மெஜாரட்டி பெற்று விட்டோம் எனக் காங்கரஸ் வாலாக்கள் கூப்பாடு போட்டார்கள். ஆனால், சாதித்த தென்ன? காங்கரஸ் ஆதிக்கம் பெற்ற ஜில்லா போர்டுகளில் எல்லாம் சண்டை சச்சரவுகளும், சூழ்ச்சி சதிகளுந்தான் தாண்டவ மாடுகின்றன. வரப் போகும் பொதுத் தேர்தலுக்கு காங்கரஸ் ஆதிக்கம் பெற்ற ஜில்லாக்களில் தகுதியுடைய ஆட்கள் கிடைப்பதே கஷ்டமாகிவிட்டது.

சேலம், கீழ்த் தஞ்சை, மேல் தஞ்சை, ராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தல்களிலும் எங்களுக்குத்தான் வெற்றியென காங்கரஸ்காரர் மார்தட்டிக் கூறுகிறார்கள்.

அந்த ஜில்லா போர்டுகளில் எல்லாம் காங்கரசுக்கு வெற்றிகிடைக்க வேண்டுமென்றுதான் நானும் ஆசைப்படுகிறேன். ஏன்? வெற்றிகிடைத்தால் தான் அந்த ஜில்லாக்களிலும் காங்கரஸ்காரர் யோக்கியதை வெளியாகும்.

மேலும் ஒரு சங்கதி

கவர்னருக்கு உபசாரமளித்தால் காங்கரஸ் அந்தஸ்துக் குறைந்து விடுமாம். சென்னை கவர்னர் சென்னையிலிருந்து போகும் போதும், சென்னைக்கு வரும் போதும் சென்னை மேயர் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று முறையே வழியனுப்பவும், வரவேற்கவும், செய்தால் காங்கரஸ் கௌரவம் குறைந்து விடுமாம். கவர்னர் விருந்துகளிலும் காங்கரஸ்காரர்கள் கலந்து கொள்ளக் கூடாதாம். சமீபத்தில் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு சென்னைக்கு வந்த கவர்னரை சென்னை மேயர் வரவேற்கவுமில்லை.

ஆனால், காரைக்குடியிலே தேர்தல் போர் முழங்கியிருக்கிறதாம். காங்கரஸ்காரர் மிரட்டல்கள் பலிக்கவில்லையாம். ஆகவே, சென்னை கவர்னரைப் பேட்டி கண்டு காங்கரசுக்கு உதவி தேடுங்கள் என ஒரு காரைக்குடி காங்கரஸ் வீரர் "ஹிந்து" பத்திரிகை மூலம் சென்னைத் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறார்.

கவர்னரைக் கண்டாலும் பாவம், அவமானம் எனக் கூறும் காங்கரஸ் வாலாக்கள், கவர்னரைப் பேட்டி காணுங்கள், உதவி தேடுங்கள் எனக் கத்துவது என்ன வீரமோ தெரியவில்லை.

போக்கிரித்தனமா? மூடத்தனமா?

கவர்னர் சக்கரவர்த்தி பிரதிநிதி; மாகாணத்திற்கு அதிபதி; எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவானவர். தேர்தலில் எந்தக் கட்சி வெற்றி பெறுகிறதோ அந்தக் கட்சியுடன் சேர்ந்து ஒத்துழைக்கக் கடமைப் பட்டவர். அடுத்த தேர்தலில் காங்கரஸ் மெஜாரட்டி பெற்றால் காங்கரஸ் மந்திரிகளோடு ஒத்துழைக்கப் போகிறவர்.

எனவே, அரசியல் காரணங்களை மனத்தில் வைத்துக் கொண்டு கட்சிக் கட்டுப்பாடுகளுக்குப் புறம்பான கவர்னரிடம் அவமரியாதையாக நடந்து கொள்வது போக்கிரித் தனமா! மூடத்தனமா? எனக் கேட்கிறேன்.

சென்னைப் ப்ரசைக் கப்பர் கழகம்

சென்னை, நவ, 22

நாளது தாது ஆண்டு, கார்த்திகைத் திங்கள் 7-ம் நாள் (22-11-36) ஞாயிறன்று காலை 9-30-மணிக்குக் கீழ்ப்பாக்கம் கார்ப்பரேஷன் பாடசாலைக் கட்டடத்தில் மேற்படிக் கழகத்தலைவர் திரு. கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் தலைமையில் ஓர் அநுதாபக் கூட்டம் கூடிற்று. அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானத்தை யாவரும் நின்று தீர்மானித்தனர்.

"இத் தமிழகத்தின் தவப்புதல்வராய்த் தோன்றித் தம் வாழ்நாளைத் தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்காக உடல், பொருள், ஆவியை யுதவிய பெரியார் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் உயிர் நீத்ததைக் கேட்டுத் திடுக்கிற்று அன்னாரின் ஆன்மா சாந்தியடையுமாறு எல்லாம் வல்ல இறைவனை மனமொழி மெய்களால் சிந்தித்து வாழ்த்தி வணங்குகிறோம்."

இத்தீர்மானத்தை அன்னாரின் குடும்பத்தாருக்கு அனுப்பத்தலைவர் அவர்களை இக்கூட்டம் கேட்டுக் கொண்டு முடிவெய்தியது எனக் காரியதரிசி எழுதுகிறார்.

ஸ்தல ஸ்தாபன மேற் பார்வை

3 டெபுடி இன்ஸ்பெக்டர்கள் நியமனம்

சென்னை, நவ, 24

ஸ்தல ஸ்தாபனங்களின் மேற்பார்வை தீவிரமாக நடைபெறும் பொருட்டு 3 டெபுடி இன்ஸ்பெக்டர்களை புதிதாக நியமிக்க சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர். இது சம்பந்தமாக இம் மாகாணம் 3 டிவிஷன்களாக பிரிக்கப்படும்.

மதுரை செங்குந்தர் மாதர் சங்கம்

லேடி டாக்டர் மிஸ். எஸ். இராஜமாணிக்கம் அம்மாள் தலைமையுரை

(ஒரு நிருபர்)

மதுரை, நவ, 22

மதுரை செங்குந்தர் மாதர் சங்கத்தின் ஆதரவில் திருவாப்புடையார் கோவில் செங்குந்தர் நீடு மஹாலில் 21-11-36-ந் தேதி மாலை 5-30 மணிக்கு செங்குந்தர் சமூகப் பொதுக் கூட்டம் மதுரை அகம்படிய சமூகத்தைச் சேர்ந்த (ட. டி. மெட்டர்னிட்டி ஹோம் லேடி சூப்ரண்டெண்ட்) அவர்களின் தலைமையின் கீழ் வைபவத்துடன் நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீமதி அன்பு ஜோதி முத்து அம்மாள் (மதுரை அமெரிக்கன் காலேஜ் தமிழ் லெக்சரர் கனம் ஜோதி முத்து எம். ஏ, அவர்களின் மனைவியார்) பெண் கல்வியின் அவசியத்தைப் பற்றியும், சமூகக் குறைபாடுகள், குழந்தைகளின் வளர்ப்பு ஆகிய விஷயங்களை எடுத்துக் கொண்டு சிறந்ததோர் சொற்பொழிவு ஆற்றினார்கள். பின்பு அக்ராசனர் எழுந்து மேற்படியார் செய்த பிரசங்கத்தை முழுதும் ஆதரித்து பெண்கள் கல்வியிலும், அறிவிலும் நாகரீகத்திலும் முன்னேறவேண்டியதின் முக்கியத்தையும்; பெண்கள் சொத்து சுதந்தர உரிமை அடைவதில் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் அத்துடன் குழந்தைகளின் வளர்ப்பை பிரத்தியக்ஷ உதாரணங்களுடன் எடுத்து சவிஸ்தாரமாய்ப் பேசி முடித்தார்கள் முடிவில் சங்க செக்ரட்டரி வந்தனோபசாரம் கூற, அக்ராசனருக்கும், அவ்வமயம் சொற்பொழிவாற்றிய அம்மாள் அவர்களுக்கும் மாலைகள் சூட்டிக் கண்யப்படுத்தப் பட்டது.

"ஒற்றுமை"

14-ம் வருஷம் நவம்பரில் ஆரம்பம். ஸ்டாம்பு செலவுக்கு 12 அணா அனுப்பினால் ஒரு வருஷப் பத்திரிகை அனுப்பப்படும்.

மாதிரிப் பிரதி இனாம்.

ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராயநகர், மதராஸ்.

ஆம்பூர் ஹிந்து ஹைஸ்கூல்

கல்வி மந்திரி குமாரராஜா திறப்பு விழாப் பிரசங்கம்

வரவேற்புப் பத்திரத்துக்கு ஜனுப் அப்துல் ஹக்கிம் ஸாஹிப் பகதூர் பதில்

(நமது நிருபர்)

வேலூர், நவ, 20

ஆம்பூரில் சுமார் 45 ஆயிரம் ரூபாய் செலவு செய்து நூதனமாய்க் கட்டப்பட்டிருக்கும் இந்து ஹைஸ்கூல் கட்டடத்தைத் திறந்துவைக்க மூன்றுவது மந்திரி கனம் எம். ஏ. முத்தையா செட்டியார் 19-ந்தேதி விடியற் காலை தனி ஸலூனில் ஆம்பூர் வந்து சேர்ந்தார். விடிந்து காலை 7-30 மணிக்கு இந்து ஹைஸ்கூல் நிர்வாகஸ்தர்களும், உள்ளூர் பிரமுகர்களும் பிளாட்பாரத்தினிடம் சென்று மாலையிட்டு அங்கிருந்து பாண்டு வாத்தியம் முழங்க புதிய கட்டடத்தண்டை அழைத்து வந்து வரவேற்புப் பத்திரம் வாசித்தனர். அதன் பின் போட்டோ படம் எடுத்து முடிந்ததும் புதிய கட்டடத்தை சந்தோஷ ஆரவாரத்தினிடையே கல்வி மந்திரி கனம் குமார ராஜா திறந்து வைத்தார். எல்லோரும் உள்ளே சென்று கட்டடத்தின் அமைப்புகளையும், அறைகளையும் அவைகள் விசாலமாகவும், அழகாகவும் கட்டப்பட்டு இருப்பதையும் குமார ராஜா அவர்களும், சவுகார் ஜனுப் வி. அப்துல் ஹகிம் சாயபும், மற்றும் விஜயம் செய்திருந்த சட்ட சபை மெம்பர்களான திருவாளர்கள் வி.எம். ராமசாமி முதலியார், எம். பி. ரங்கசாமி செட்டியார், கார்க்கூர் சங்கரய்ய நாயுடு, ரோஷன் கம்பனி முதலாளி, காகா இன்மாயல் சாயபு, வக்கீல் வி. கிருஷ்ண செட்டியார், வாணியம்பாடி திருவாளர்கள்: கந்தசாமி முதலியார், டி.வி.கே. பொன்னுசாமி செட்டியார், தங்கவேலு முதலியார் இன்னும் வந்திருந்த பிரபலஸ்தர்களும் பொது மக்களும் கண்டுகளித்தனர். சுற்றிப் பார்த்தபின் செட்டி நாட்டுக் குமார ராஜாவும் சவுகார் ஜனுப் வி. அப்துல் ஹக்கிம் சாயபு மேடை மீது அமர்ந்தனர். சவுகார் ஜனுப் வி. அப்துல் ஹகிம் சாயபுக்கு இந்து ஹைஸ்கூல் கமிட்டியார் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தனர் வரவேற்பு பத்திரங்கள் வாசித்த பின் சிறுவர்களும், சிறுமிகளும் இனிமை தரும்பும் பாக்களும் சம்பாஷணைகளும் செய்தனர்.

கனம் குமார ராஜா வரவேற்புப் பத்திரம் தமக்கு அளித்ததற்கு வந்தனம் கூறிப் பேசியதாவது:—

முதன் முதலில் இந்த ஊர் இந்து பாடசாலை டிரஸ்டிகள் வந்து என்னை புதிய கட்டடத்திறப்பு விழாவை நடத்த வரவேணுமென அழைத்த போது கொஞ்சம் தயங்கினேன் ஆயினும் எனது ஆத்ம நண்பரும், பெரியாரும் பிரபல தர்மிஷ்டருமான சவுகார் வி. அப்துல் ஹகிம் சாயபு அவர்களால் பணவுதவி செய்யப்பட்டு அவர்களின் பெயரையே இக்கட்டடத்தின் பெயராக வைத்துள்ளீர்கள் என அறிந்து அளவிலா சந்தோஷமடைந்து இதனைத் திறந்துவைக்க ஒப்புக்கொண்டேன். சவுகார் சாயபு அவர்களின் தருமத்தைப்பற்றி என்னால் சொல்ல முடியாது. அவர் தருமமே அவதாரமாக வந்தவர். அவர் இந்த மாகாணம் முழுதும் செய்துள்ள பல தர்மத்தை நான் அறிவேன். அவர் பெயரால் பல பள்ளிக்கூடங்களும், ஆஸ்பத்திரிகளும் நடந்தேறி வருகின்றன. இந்தப் பெரியாரின் உதாரகுணத்தால் கட்டப்பட்ட இந்த பள்ளிக்கூடம், சிறந்த முறையில் நன்கு அமைக்கப்பட்டு இருக்கிறது. கட்டடம் கட்டுவதற்கு முதலில் போட்ட பிளான் மாற்றப்பட்டு இப்போதுள்ள முறைப்படி கட்ட அதிக செலவு தொகைக்கு இரண்டு கொடுக்கும்படி உங்கள் பத்திரத்தில் குறிக்கப்பட்டு இருக்கிறது. திருத்தப்பட்ட பிளானும் இன்னும் அரசாங்கத்திற்குச் சேரவில்லை. ஆகையால் அதன் பின் உங்கள் குறைகளை என்னால் இயன்றவரை கவனிக்கிறேன். ஸ்கூலுக்கு புஸ்தக சாலை மற்ற வசதிகள் பணமில்லாத குறையால் நின்று போய் இருப்பதாகச் சொல்லி இருக்கிறீர்கள். இதற் கொன்றும் அரசாங்கம் உதவி செய்கிற நிலைமையில் இல்லை. இந்த ஊரிலும் இதை அடுத்த பேட்டைகளிலும் எத்தனையோ தனவந்தர்கள் இருக்கிறார்கள். வியாபாரிகள் பெருத்த இடம் ஆம்பூர் என்று சொல்லுவார்கள். அப்படிப்பட்டவர்கள் உங்களுக்கு வலிய வந்து உதவி செய்ய பின்வாங்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். நல்ல காரியத்திற்கு பலரும் உதவி செய்வார்கள். என்னை இங்கு அழைத்து இந்த கலாசாலையைத் திறந்து வைக்கும்படி செய்த இந்து ஹைஸ்கூல் நிர்வாகஸ்தர்களுக்கும், மற்றவர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனம் அளிக்கிறேன்.

பின்பு சவுகார் ஜனுப் வி. அப்துல் ஹக்கிம்சாயபு அவர்கள் தமக்களித்த வரவேற்புப்பத்திரத்திற்கு நன்றி கூறிப் பேசியதாவது:—

எனது நண்பர் கனம் குமார ராஜா அவர்கள் தருமத்தில் சிறந்தவர். அவரால், சிதம்பரத்தில் சுமார் 30 லக்ஷம் ரூபாய் செலவு செய்து கட்டப்பட்டுள்ள தமிழ் சர்வகலாசாலை கட்டடத்தின் கர்த்தா. தேசத்தில் கல்விக்காகப் பணத்தை அள்ளிக் கொடுத்த வள்ளலின் திருக்குமாரர். குமார ராஜா முத்தையா செட்டியார், கல்வி மந்திரியாக வந்ததைப் பத்திரிகையில் பார்த்து சந்தோஷமடைந்தேன். இவரின் காலத்தில் நம் மாகாணத்தில் பள்ளிக் கூடங்களுக்கு நல்ல உதவி செய்யப்பட்டு நல்ல முறையில் செவ்வனே நடந்து முன்னேறிப் போகு மென்பது எனது நம்பிக்கை இந்தப் பள்ளிக்கூடத்திற்கு நான் பண உதவி செய்வதாய் வாக்களித்தபோது இந்த ஊரில் இருந்து சில முஸ்லிம் பிரபலஸ்தர்கள் என்னிடம் வந்து கமிட்டியில் இரு முஸ்லீம்களைச் சேர்த்துக் கொள்ளச் செய்யும்படி என்னிடம் சொன்னார்கள். அதை இப்போது உங்களுக்கு நான் சொல்லுகிறேன். நமக்குள் இந்து முஸ்லீம்கள் வேற்றுமை இன்றி சமத்துவமாகவும், சகோதரர்களாகவும் இருக்கின்றார்கள் என்பதை காட்டிக் கொள்ள இவ்வூர் யூனியன் சேர்மென் ஜனுப. நவாண் கான் சாயபு அவர்களையும், பிரபல வர்த்தகர் ஜனுப். காகா இன்மாயல் சாயபு அவர்களையும் உங்கள் கமிட்டியில் சேர்த்துக்கொள்ளும்படி சிபார்சு செய்கிறேன். இந்து பிள்ளைகள் வாசிக்கும் பள்ளிக் கூடங்களில் அநேகமாய் முழுச் சம்பளம் வாங்குவதாய்த்தெரிகிறது. ஏழைப் பிள்ளைகளுக்கு இந்த கலாசாலைகளில் சவுரியமும், உதவியும் கிடைப்பதில்லை. முஸ்லீம் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களில் அப்படி இல்லை. அநேகருக்கு அரைச் சம்பளமும், சம்பளமில்லாமலும் வாசிக்க இடந்தரவேண்டி இருப்பதால் வருவாய்க்கென்று அவைகளுக்கு சொத்துக்கள் ஏற்படுத்தி வருமானம் தேட வேண்டியதாய் இருக்கிறது. நீங்களும் அப்படி நீடிகாலம் பள்ளிக்கூடம் நடக்குவா இதற்கென சொத்துகள் ஏற்படுத்த வேலை செய்துவர வேண்டியதுடன் சம்பளம் கொடுத்து வாசிக்க முடியாத நிலைமையில் இருக்கும் ஏழைப் பிள்ளைகளுக்கு உபகார சம்பளமும், இலவசப் படிப்பு வசதியும் செய்து தரவேண்டுமென்று சொல்லுகிறேன். நல்ல விதமாகப் படிப்பு வசதிகளுக்காகச் செய்யப்படும் எந்த வேலைக்கும் அரசாங்கம் பண உதவி செய்யும். ஆனால், அரசாங்கத்திற்கு எழுதி உத்திரவு பெற்று பணம் வந்தபின் செய்ய வேணுமென்றால் எந்த வேலையும் நடைபெறாது. முதலில் கையில் இருந்து பணத்தை செலவு செய்து பின் கேட்டால் கொடுத்து விடுவார்கள். என்னால் நடைபெறும் விஷாரம் முதலிய இடங்களில் இருக்கும் பள்ளிக் கூடங்களில் அப்படித் தான் செய்து வருகிறோம்.

இந்தக் கலாசாலை கட்டுவதற்கு பண உதவி செய்வதாக நான் வாக்குக் கொடுத்தபோது, எனக்குக் காட்டிய பிளானைப் பார்த்தேன். ஆனால் இவ்வளவு சிறந்த முறையில் திறந்த வெளியாகவும், நல்ல காற்றோட்டம், வெளிச்சம் முதலியவைகள் அமைந்து கெட்டித்தரமாக இருக்குமென நான் எதிர்பார்க்கவில்லை வேலூர் ஜில்லா போர்டாரால் சுமார் 60 ஆயிரம் ரூபாய் செலவு செய்து, செய்யாறில் கட்டப்பட்ட பள்ளிக் கூடமாகட்டும், என்னால் 20 ஆயிரம் செலவு செய்து விஷாரத்தில் கட்டி இருக்கும் கட்டடமாகட்டும் இவ்வளவு அழகாகவும், கம்பீரமாகவும் இல்லை இந்தப் பள்ளிக்கூடத்தின நிர்வாகஸ்தர்களுக்கும், இங்கு இன்று விஜயம் செய்துள்ள கல்வி மந்திரி குமார ராஜாவுக்கும், மற்றவர்களுக்கும் எனக்கு அளித்த உபசரிப்பிற்கும் வந்தனம் செய்கின்றேன் இதன் பின், அநேக பிள்ளைகளுக்கு சவுகார் சாயபு கையால் பிள்ளைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பள்ளிக்கூடத்தின் டிரஸ்டிகள் சம்பந்தமாய் வந்திருந்தவர்களுக்கு பாலூர் சேஷாத்திரி ஆச்சாரி வந்தனம் கூறியதில், சவுகார் சாயபு அவர்கள் கமிட்டியில் இரு முஸ்லீம் சகோதரர்களை சேர்க்கும்படி சொன்னதற்கு கமிட்டியில் வைத்து முடிவு செய்யப்படுமென்றும், விஜயம் செய்துள்ள எல்லோருக்கும், தங்களின் நன்றி அறிதலைக் கமிட்டியின் சார்பாக அறிவிப்பதாகவும் சொன்னர்.

புத்தக சாலைக்கு ஜனுப் காகா இன்மாயல் சாயபு அவர்களும், கார்க்கூர் திரு. சங்கரய்ய நாயுடு அவர்களும், ஒவ்வொருவரும் தனித்தனியாய் ஆயிரம் ரூபாய் நன்கொடை அளிப்பதாக வாக்குறுதி அளித்தனர். இத்துடன் விழா இனிது முடிந்தது.

புரோசஸ் சர்வர்கள் மத்திய சங்கம் அறிக்கை

சேலம், நவ, 22

மாகாண கமிட்டிக் கூட்டம் மதுரை, ராமனுதபுரம் இந்த ஜில்லாவில் டிசம்பர் மாதத்தில் கூட்டுவதாக உத்தேசங் கொண்டு மேற்படி யூனியன் காரியதரிசி அவர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் பதில் கிடைக்கவில்லை. 30-11-36-ந் தேதி சென்னையில் சட்டசபை கூட்டம் நடப்பதால் அச்சமயம் மத்திய சங்கத்தார் சென்னைக்குப் புறப்படுவார்கள். 1,2 சர்குலர் அனுப்பியும் அட்மிஷன் பாரம், சந்தா வகையராக்கள் அனுப்பாமலிருப்பது ஏழைகளின் துரதிஷ்டமே ஆகும். மெம்பர்கள் பெயர் ரிஜிஸ்தரில் பதிவு ஆக வேண்டியிருப்பதால் தயவு செய்து உடனே அனுப்புவார்கள் என்று மத்திய சங்கம் எதிர்பார்க்கிறது இதுவரையில் நடந்த கடிதப் போக்குவரத்துகள் அச்சிட்டு எல்லா யூனியன்களுக்கும் 31-10-36-ல் ரிபோர்ட்டு செய்து இருக்கும் அதைப் பார்த்தும் கவனிக்காமல் இருப்பது ஆச்சரியம். பொருள் ஆதரவு கொண்டுதான் மத்திய சங்க நடவடிக்கைகள் இனி நடக்க வேண்டியது அதிகம் இருக்கிறது என காரியதரிசி எழுதுகிறார்.

தோழர் சொக்கலிங்கம் திருக்கூத்து

சேலம் செவ்வாய்ப் பேட்டை எஸ். ராமசாமி எழுதுகிறார்:—

காங்கரஸ் பெயரால் செல்வாக்கடைந்த ஒரு பத்திரிகையை கையில் வைத்துக்கொண்டு திரு. டி. என். சொக்கலிங்கம் பிள்ளை என்னும் தென்காசி வாசி சென்னையில் இருந்து வருவதை அன்பர்கள் அறிவார்கள். ஆதியில் தென்காசியை விட்டு சேலத்திற்கு வந்து டாக்டர் வரதராஜுலு நாயுடுவை அண்டிப் பிழைத்து வந்தார். காலடைவில் டாக்டர் நாயுடுவின் தயவால் பத்திரிகாசிரியர் என்னும் பெயரும் பெற முடிந்தது.

"தமிழ் நாடு" பத்திரிகையை விட்டுவெளி வந்த இரண்டு மூன்று தடவைகளில் அவர் பட்ட கஷ்டங்களை அநேகர் அறிய மாட்டார்கள். இந்த மஹானுபாவனுக்கு எவரையேனும் இட்டிக்கொண்டிருக்க வேண்டுமென்பது தான் பிறவியிலேயே ஏற்பட்டுவிட்ட பாக்யம். அந்த 'நல்ல' குணம் இந்த ஜென்மத்தில் ஒழியா தென்றே தோற்றுகிறது.

கொஞ்ச நாட்களுக்கு முன்பு "ஆனந்த விகடன்" மீது பாய்ந்து போட்டிப் பரிசைத் தாக்கித் தனது "காந்தி" பத்திரிகையில் எழுதி விட்டு பட்ட பாட்டை என்னென்று கூறுவது! விகடனிடம் மூட்டிக் கொண்டு தன் தலை சொட்டையானது தான் கண்ட பலன் 'விகடனை'த் திட்டியதால் 'காந்தி' பத்திரிகையின் செல்வாக்கும் குறைந்து அன்ன விசாரமும் தலை விரித்தாட ஆரம்பித்து விட்டது. அந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் கை கொடுக்க வந்தது காங்கரஸ் சட்டசபைப் பிரவேசம். அதைப் பிடித்துக் கொண்டு தேர்தல் பிரசாரத்திற்கென 'தின மணி' பத்திரிகையை ஆரம்பித்து அதன் மூலம் தன் வாழ் நாட்களை செழுமையாக்கிக் கொள்ள முனைந்து விட்டார். அன்பர் சொக்கலிங்கம், காங்கரஸ் பத்திரிகை என்பதினால் 'தின மணி'க்கு இருந்து வரும் சிறிது செல்வாக்கை தனது ஆயுதமாகக் கொண்டு தனக்குப் பிடிக்காதவர்களை அற்பத்தனமாகவும், கேவலமாகவும் திட்டுவது அவருடைய வாடிக்கையாகி விட்டது.

அவர் தனிப்பட்ட முறையில் ஒரு அணுவையும் அசைக்க முடியாதென்பது உலகறிந்த விஷயம். அதே இடத்தில் ஒரு பிராமணர் இருப்பாராகில் இவ்வளவு கேவலமாகவும், அயோக்கியத்தனமாகவும் பிராமணரல்லாதாரைத் தாக்கத் துணிய மாட்டாரென்பது திண்ணம். "சுதேசமித்திரன்" "ஜெயபாரதி" போன்ற பத்திரிகைகளே இதற்கு அத்தாட்சி. இவரைப் போன்ற கோடாரிக் காம்புகளால் தான் பிராமணரல்லாதாரின் நிலைமை தினே தினே கேவலமாகிக் கொண்டு வருகிறதென்பது வெளிப்படை.

சென்னை கார்ப்பரேஷனில் நிரந்தரக் கமிட்டிகளில் ஜஸ்டிஸ் கட்சியைச் சார்ந்தவர்களை சேர்த்துக் கொள்ளாததைப் பற்றி "மதராஸ் மெயில்" "ஜன நாயகம்" "தமிழ் நாடு" போன்ற பத்திரிகைகள் கண்டித்து எழுதியிருந்தன. கார்ப்பரேஷன் தேர்தலில் காங்கரஸ் மெஜாரிடி ஸ்தானங்கள் பெற்று விட்டமமதையினால் செய்த இச்செய்கையை பகுத்தறிவும் நியாய புத்தியுமுள்ள யாவரும் கண்டிப்பதில் ஆச்சரிய மொன்றுமில்லை. நிலைமை அவ்வளவிருக்க, காங்கரஸ் தவறு செய்திருந்தும் அதை மறந்து கோவிந்தா போடுவதையே தனது கொள்கையாகக் கொண்ட 'தின மணி' டாக்டர் நாயுடுவை இழிவுபட்ட முறையில் தாக்கியிருப்பது தானது அதன் அற்பத்தனத்தையே காட்டுகிறது. 'தின மணி'யின் பதிலிலிருந்து, காங்கரஸ்கார கார்ப்பரேஷன் அங்கத்தினர்கள் செய்கையைக் கண்டித்ததற்குப் பதில் எழுதியதாகப் பொருள்படவில்லை. டாக்டர் நாயுடுவை தாக்குவதற்கு சமயம் பார்த்திருந்தவர் இச்சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொண்டதாகத்தான் ஏற்படுகிறது.

டாக்டர் நாயுடு கார்ப்பரேஷனில் காங்கரஸ் செய்கை பெருந்தன்மை வாய்ந்ததாக இல்லையென எடுத்துக்காட்டினரே யல்லாது வேறு எவரையும் நேரடியாகத் தாக்கவில்லை. அப்படியிருக்க டாக்டர் நாயுடு எழுதியதற்கு கௌரவமான முறையில் நேர்மையான பதிலளிக்காமல் குறும்புத்தனமாக எழுதியிருப்பதை மானமுள்ள தமிழர்கள் கண்டிக்க வேண்டிய தவசியமாகும். இம்மாதிரி செய்கைகளை இனியும் விட்டுக் கொண்டு போனால் நிலைமை இன்னும் மோசமாகத்தான் போகுமென்பதில் எவருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை. உண்மைத் தமிழ் ரத்தம் ஓடும் யாவரும் "தின மணி"யைக் கண்டிப்பாக பகிஷ்கரிக்க வேண்டு மென்பது தான் எனது இறுதியான வேண்டுகோள். தமிழ் மக்கள் அவ்வாறே செய்து திரு. சொக்கலிங்கத்துக்கு நற்புத்தி புகட்டுவார்களா?

வட ஆற்காடு ஜில்லா ஜஸ்டிஸ் மகா நாடு

வேலூர், நவ, 22

வேலூரில் சுகாதார நிலைமை திருப்தி கரமாய் இருக்கிறது. மகா நாட்டிற்கு விஜயம் செய்யும் வரவேற்புக்கமிட்டி அங்கத்தினர்களும், டெலிகேட்டுகளும் தம் தம் படுக்கையுடன் வரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மகாநாட்டிற்கு விஜயம் செய்யும் வரவேற்புக் கமிட்டி மெம்பர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும், தொண்டர்களுக்கும் தங்க இடவசதி முதலியன முறைப்படி செய்யப்பட்டிருக்கிறது.

மகாநாடு அதிகாலையிலேயே தொடங்கிவிடுமாகையால் 26-11-36 மாலை 6-30-க்குள்ளாக ராக்ஸி தியேட்டரில் இருக்கும்படியாக பிரதிநிதிகளையும், விசிட்டர்களையும் கேட்டுக் கொள்ளப்படுகிறது என காரியதரிசி எழுதுகிறார்.

"சமரஸம்"

ஓர் மாத வெளியீடு

மக்களின் நல்வாழ்வு, பொருளாதாரநிலை, கிராம சீரமைப்பு, சுகாதார விஷயங்கள் இவைகளை சமநோக்குடன் அபிவிர்த்தி செய்யும் பத்திரிகை.

மானேஜர்:—
சமரஸம் ஆபீஸ்,
விழுப்புரம்.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

"அறிவுக் கொடி"

ஒரு சிறந்த தமிழ் மாத வெளியீடு.

ஆசிரியர்:—ஸ்ரீமதி சாமி சிதம்பரனுர்.

ஒவ்வொரு ஆங்கிலமீ 15-ந் தேதியில் வெளிவருவது.

அறிவு வளர்ச்சி, மாதர் முன்னேற்றம், தமிழ் மொழி வளர்ச்சி, விஞ்ஞானம், வைத்தியம், விகடம், சங்கீதம், நாடகம், படக் காட்சி, மனதைக் கவரும் சிறு கதைகள் முதலிய சிறந்த பல விஷயங்களும், இனிய பாடல்களும் வெளிவரும்.

உள்நாடு வருட சந்தா ரூ. 1. வெளிநாடு ரூ. 1-8-0.

மானேஜர்:—"அறிவுக் கொடி" ஆபீஸ்,
462, மேல் கடலங்குடித் தெரு, கும்பகோணம்

ஏமாறுதீர்கள்!

எங்கள் வைத்தியசாலையின் மருந்துகள் மிகவும் சிலாக்கியமானதெனப் பலராலும் புகழப்பட்டு வருதல் கண்டு, சிலர் வேறு மருந்துகளை எங்கள் மருந்துகள்—அதாவது சி. எம். சாமி மருந்துகள் என்று சொல்லி ஏமாற்றி விற்பனை செய்து வருகிறதாகத் தெரிகிறது. எங்கள் வைத்தியசாலையிலிருந்து வெளி இடங்களுக்கு நாங்கள் யாரையும் அனுப்பவில்லை. எங்கள் ஏஜெண்டென்றும், எங்கள் மருந்துகள் என்றும் யாராவது விற்பனை செய்தால் அதைப் பொது மக்கள் வாங்கி மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கிறோம்.

மருந்து வேண்டியவர்கள் நேரே எமக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி, S. I.

மனம்போன போக்கு

("குட்டிச்சாத்தான்" எழுதியது)

"தூங்காமற் தூங்கிச் சுகம் பெறுவதெக்காலம்?" என்றார் தாயுமானார். தூங்கித் தூங்கிச் சுகம் பெறுவதெக்காலம், என்று நான் கேட்கிறேன். தூங்குவதே சுகம் என்பது ஒருசாரார் சித்தாந்தம், எனது குரு ஒருவரிருக்கிறார். தூக்கத்தில் முதல் 'பிரைஸ்' கொடுப்பதென்றிருந்தால், அவருக்குத்தான் அப் 'பிரைஸ்' கிடைக்கும். தூங்குவதென்றால் பாதம் அல்வாவைப் பதர் பேணியில் போட்டுச்சாப்பிடுவதைப் போலிருக்கும் அவருக்கு. ஒருநாள் அவரைப் பார்த்து "சுவாமிகளே! தினந்தோறும், அரிது அரிது மானிடராதலரிது, என்று சிறப்பிக்கப்பட்ட மனிதவர்க்கத்திற்கு 24-மணி நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் 7-அல்லது 8-மணி நேரம் கும்பகர்ண சேவை செய்தால் போதும் என்று மகாபெரிய வைத்திய சாத்திர நிபுண சிகாமணிகளெல்லாம் கூறியிருக்கிறார்கள். தாங்களோ, 12-மணி போதாமல் 18-மணி நேரம் தூங்குகிறீர்கள். மிகுதியான 6-மணி நேரமும் தூங்கிக் கொண்டே சாப்பிடுகிறீர்கள்; பேசுகிறீர்கள்; படிக்கிறீர்கள்; நடக்கிறீர்கள்; இது தருமமோ? இது முறையோ? இது தருமந்தானோ?" என்று கேட்டேன்.

ஃ ஃ ஃ

சுவாமிகள் என்னைப் பார்த்துத் திருவாய் மலர்ந்தருளினர்:—"அஞ்ஞானிகள் தூக்கத்தின் மகிமையை அறியார்கள். தூக்கம் துக்க நாசம் என்பது என் சித்தாந்தம். நமது இந்திய நாடு தூக்கத்திற்குப் பேர்போனது. தூங்கித் தூங்கி நம்முடைய அரசாங்க நிர்வாகத் தொகைகளையும், துக்கங்களையும் மேல்நாட்டினர்க்குக் கொடுத்து விட்டோம். இப்போது கவலையற்ற பாடு; நிர்ச்சிந்தையான நிலைமை. யாருக்குத்தான் தெரியும் அதன் பெருமை? தாயுமானப் பெருந்தகையார் கூறிய உண்மை அதுதான். சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியம் என்ற நான்கு நிலைகளைப் போல் தாயுமானர் சித்தாந்தத்திலிருந்து நான் நான்கு நிலைகளைப் பிரித்திருக்கிறேன். அவற்றில் முதலாவது, தூங்கிச் சுகம் பெறுவது; இரண்டாவது தூங்காமற் சுகம் பெறுவது; மூன்றாவது தூங்காமற் தூங்கிச் சுகம் பெறுவது; நான்காவது தூங்கித் தூங்கிச் சுகம் பெறுவது. இதில் நான்காவது தான் சாயுச்சியம். அதுவே முக்தி, மோட்சம், சச்சிதானந்த நிலை என்பது என்னுடைய முடிவான துணிபு."

ஃ ஃ ஃ

"தூங்கித் தூங்கிச் சுகம் பெறும் பெருமையை மேலும் கேட்பாய், எனது அன்பிற்குப் பாத்திரமான சீடனே!" என்று ஒரு வெள்ளிப் பொடி டப்பியை இரண்டு தட்டு தட்டி, அதிலிருந்து மூன்று 'சிடிகை' பொடியை ஒன்றரை 'சிடிகை' வீதமாக இரண்டு நாசித் துவாரத்திலும் அடைத்து, தூர்க்கந்தமே ஒருருவெடுத்தனைய கைக்குட்டையால் நான்முறை துடைத்துக்கொண்டு, பாராயணம் செய்ய ஆரம்பித்தார்:—

"மந்திரமாவது தூக்கம்,
வானவர் மேலது தூக்கம்,
சிந்தை தெளிவது தூக்கம்,
சிவன் சேவடி சேர்வது
[தூக்கம்"

என்று ஆசாரிய சுவாமிகள் கூறியதைக் கவனித்தல் வேண்டும்- யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும் என்ற தமிழ் ஞானியின் உபதேசத்திற்குச் செவி சாய்ப்பாயாக. மேலும் தூக்கத்தினுடைய பெருமையைக் கேள். நீ சாப்பாட்டு ராமனாய் இருப்பதால், அந்த உவமையைச் சொன்னால் தான் உனக்கு நன்றாக விளங்கும். தூக்கத்தினுடைய நற்சுவையின்பம் எத்தகைத்து தெரியுமா?

"தனித்தனி முக்கனி பிழிந்து,
வடித் தொன்றாய்க் கூட்டி,
சர்க்கரையும் கற்கண்டின்
பொடியு மிகக் கலந்தே
இனித்த நறு நெய்யளைந்தே
இளஞ் சூட்டின் இறக்கி
எடுத்த சுவைக்கட்டியினும்
இனித்திடும் தெள்ளமுதே"

என்று இன்னிசையுடன் பாடினர். இக் குருமூர்த்தி ஆ! குருநாதன கூறியபடி, ஐம்புலன்களும் அடங்கி சாந்த நிலையடைந்து, அமைதியே உருவமான உறக்கத்தின் சுகம் அமுதத்தின் சுவை போன்றது தான். இல்லாவிட்டால், நம்மனோர்களெல்லாம் உறங்குவார்களா? பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்கள் பெருந்தூக்கமே கதி யென்று கிடப்பார்களா? தூங்காமல் தூங்கியும், தூங்கித் தூங்காமலும், தூங்கித் தூங்கியும், இப்படிப் பலவிதமான தூங்கு மூஞ்சிகளாக இருப்பார்களா?—என்று பலவிதமாக யோசித்துக்கொண்டேயிருந்து, கடைசியில் நானும் தூங்கிவிட்டேன். தூக்கம் என்றால் தூக்கமல்ல! அப்பேர்ப்பட்ட தூக்கம்!

ஃ ஃ ஃ

ரிப்வான் விங்கில் என்பவன் ஒரு பெருந் தூங்கி. எத்தனையோ வருடக் கணக்காகத் தூங்கினனும். பிறகு விழித்துப் பார்த்தானும். சுற்று முற்றும் காடு, மலை, வனம், வனாந்திரமாக இருந்ததாம். கண்ணைத் துடைத்துக் கொண்டு, காலை 'ஸ்டெடி' செய்து கொண்டு, தட்டுத் தடுமாறி நடந்து சென்று தன் ஊருக்குள் சென்றானும். எங்கு பார்த்தாலும் புதிய தோற்றங்கள்; புதிய முகங்கள்; புதிய வீடுகள். தன்னைத் தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று பார்த்தான்; விசாரித்தான்; ஒருவரையாவது காணோம். பழைய ஆசாமிகளெல்லாம் 'காலி'. கடைசியில் ஒரு படுகிழவன் வந்தான்- மீசையும் நரைத்து ஆசையும் நரைத்த கிழவன். அவனும் ரிப்வான் விங்கிளும் பழஞ் சிநேகிதர்கள். அவன் பழைய விருத்தாந்தத்தைச் சொன்னான் 40-50 வருடங்களாக ரிப்வான் விங்கிளைக் காணோமென்றும், அசலூர் விங்கிள் இறந்துவிட்டானென்று ஊர் ஜனங்கள் பேசிவந்தனர் என்றும் அவன் கூறியதைக் கேட்டு, விங்கிள் தனனுடைய நீண்ட தாடியை உருவி எத்தனை வருடங்களாக நித்திரையில் ஆழ்ந்திருந்தேன் என்று நினைத்து நினைத்து ஆச்சரியப்பட்டானும். அம்மாதிரி, நானும் நீண்ட தூக்கத்திலிருந்து எழுந்தேன்; கண்களைத் துடைத்துக் கொண்டேன்; விழித்தேன்.

ஃ ஃ ஃ

அப்போது நான் கண்ட காட்சி ஒரு அற்புதக் காட்சி என்றே சொல்லவேண்டும். 'லைன், லைனா'க, பார்ப்பனரல்லாத மக்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். இது என்ன? கலாசாலை 'ஹாஸ்டலா? அல்லது பொதுத் தூங்கு மடமா?' என்று உற்றுப் பார்த்தேன். விளங்கவில்லை. ஒருக்கால் தேர்தல் முடிந்த பிறகு, உழைத்த அலுப்பால மக்கள் உறங்குகிறார்களோ? என்னவோ? என்று ஒருவரைத் தட்டி எழுப்பினேன். அரைமணி நேரமாயிற்று அரைக் கண் திறப்பதற்கு! "ஐய! உம்மைத்தானே! ஏன் காணும் உறங்குகிறீர்? பிரசார வேலை செய்ய வேண்டாமா? தேர்தல் முடிந்து விட்டதா? நடக்கப் போகிறதா? முடியவில்லை என்றால், எப்போது நடக்கப்போகிறது?" என்ற அரை டஜன் கேள்விகளுக்கு ஒரு பதில் கிடைத்ததும் கிடைக்காததுமாகக் கிடைத்தது. "பிப்ரவரி மாதம் தேர்தல்" என்று சொல்லி விட்டு அந்த அரைக்கண் மூடிக் கொண்டது.

ஃ ஃ ஃ

ஒரு உச்சிக்குடுமிப் பார்ப்பான் வந்தான். "எல்லாரும் தூங்கட்டுமே" என்று பல்லை இளித்தான். "சூத்திரப் பயல்களுக் கெல்லாம் உதை கொடுக்கப் போறோம்" என்று குடுமியை முறுக்கினன்—மீசையில்லை முறுக்குவதற்கு! எனக்குக் கோபம் பொங்கியது; பொங்கித் ததும்பியது; ததும்பி வழிந்தது. செருப்பைக் கழட்டிக் கொண்டு, அந்த உச்சிக் குடுமி மேலேயே இரண்டு வாங்கிவிடலாமா என்று நினைத்தேன். சே! அவனை அடிப்பதில் என்ன பிரயோசனம்? பிறகு சொன்னேன் "ஐய! பார்ப்பனப் பிண்டமே! சூத்திரப் பயல்கள் 'ரெஸ்ட்' எடுத்துக் கொள்ரா. தூக்கம் கலைந்ததும் பாரும் என்ன நடக்கிறதென்று. சூத்திரன்தான் மறுபடியும் மந்திரிகளா வரப்போறா. ஜஸ்டிஸ் கட்சிக்காரர்தான் அரசாங்கத்தை நடத்தப் போறா. பாரும் என் ஜோசியத்தின் உண்மையை." என்றேன். "ஹி, ஹி, ஹி" என்று இளித்தான் பார்ப்பனன். பல்லை இளிக்கும் காலம் ஒரு காலம், பல்லைக் கடிக்கும் காலம் ஒரு காலம், அது வரத்தான் போகிறது பாரும் என்று எச்சரிக்கை செய்தேன்.

ஃ ஃ ஃ

பிறகு மனம் களித்து உட்கார்ந்தேன். திலகர் திதி. திருடர் கூட்டம் கொஞ்சம் தூரத்தில் எக்காளம் போட்டுக் கொண்டு இருப்பதைக் கண்டேன். "ஜஸ்டிஸ் கட்சியினர் மறுபடியும் மந்திரிகளாய் வந்தால் குத்திக் கொண்டு சாவேன்" என்று ஒரு காங்கிரஸ் தலைவர் கத்தினர். பிறகு இனிமையான குயில் போன்ற குரலில் சில வனிதையர்கள் பாடினர்கள். ஓவியத் தெழுதவொண்ணா உருவ இளமயில்கள் சில வாக்காளர்களுக்கு சந்தனம், புஷ்பம் முதலியவற்றை அளித்து, காங்கிரஸ் கட்சியினர்க்கு 'ஓட்'டுக் கேட்டார்கள். சீதேவிகளெல்லாம் சிறப்பான ஆடை யாபரணங்களை அணிந்து, அங்கனை அழகு கூவி அழைப்பதொப்ப நடந்தார்கள்; நடனமிட்டார்கள்; நாட்டிய மாடினர்கள். நம்மிடத்தில் மாத்திரம் மூதேவி குடி கொண்ட காரணமென்ன என்று என்னையே நான் கேட்டுக் கொண்டேன். பதில் தெரியாமல் விழித்தேன்.

பொங்கல்! பொங்கல்!!

அசல் பட்டுப் புடவை

அழகிய சிறு ஜரிகைக் கரை, அசல் பட்டு சிகப்பு, அரக்கு புளு, பச்சை, ஸ்கை முதலிய கலர்களில் கிடைக்கும்.

12 முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 5—12—0
16 முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 7—8—0
18 முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 8—8—0
5 முழம் x 44" அங்க வஸ்திரம் 1-க்கு ரூ. 3—8—0

வெண்பட்டு அங்க வஸ்திரம்

5 முழம் x 44" அழகிய கரைகள் சலவைக்கு சேர்த்தியானது.
விலை ரூ. 1—12—0—தான்.

☞ இந்த விலைகள் 15—1—37 பொங்கல் வரை தான்.
ஞாபகத்தில் வையுங்கள். உடனே ஆர்டரை அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
(Proprietors : Sundarams Ltd.,)
சில்க் அவுஸ், காசி.

தி * விபத்து * கப்பல் * ஆயுள் * இன்ஷ்யூரன்ஸ் * நடத்துகிறது

உச்ச நிலையிலுள்ளது

நியூ இந்தியா

என்?

இக்கம்பெனி, இந்தியாவில் கப்பல், தீ, விபத்து முதலிய துறைகளில் பெருகிய வியாபாரம் செய்கிறது. அம்மட்டோ! இந்த ஏழாவது வருடத்தில் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் ஒரு கோடியே எழுபத்தாறு லட்சம் ரூபாய்க்குச் செய்திருக்கின்றது என்பதைத் தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

எமது கம்பெனி!

மூலபலம்—கீர்த்தி—பொறுதன நம்பிக்கை முதலியனவைகளைக் கொண்டது என்பதற்குக் கீழ்க்கண்ட புள்ளி விபரங்களே அத்தாட்சியாகும்.

கையொப்பமிட்ட மூலதனம்	...	...	ரூபா 3,56,05,275
சேர்க்கப்பட்ட மூலதனம்	...	...	,, 71,21,055
மொத்தம் நிதி	...	...	,, 1,94,84,774

இதுவரை கொடுக்கப்பட்ட உரிமைகள் (Claims)
மொத்தம் ஆறு கோடிக்கு மேல் ஒடுகின்றது.

1935-36-ம் வருஷத்திய மொத்த பிரீமிய வருமானம்
86 லட்சத்துக்கு மேல் இருக்கிறது.

ஐந்து வருட "ஆயுள்" இன்ஷ்யூரன்ஸ் வளர்ச்சிப் புள்ளி.

	1931—32 ரூபா	1932—33 ரூபா	1933—34 ரூபா	1934—35 ரூபா	1935—36 ரூபா
புதி அஷ்யூரன்ஸ் ...	88,00,000	1,05,00,000	1,11,66,500	1,41,02,250	1,76,41,750
மொத்தம் உள்ள கணக்கு	1,46,00,000	2,19,00,000	2,84,25,834	3,85,43,292	5,29,23,711
முதிர்ந்து கொடுக்கப் பட்ட உரிமைகள்	41,000	1,26,000	1,29,750	2,15,100	2,76,592

விசேட நன்மை அளிக்கும் எங்கள் அரிய திட்டம் எது?

5000 ரூபாய் பாலிசிக்கு 18,690 ரூபாய் கோப்பதாகச் செய்து கொள்ளும் ஒப்பந்தத் திட்டம்.

மெச்சத்தக்க எங்கள் முதல் போனஸ்.

4% விகித வட்டிப்படி ரூபாய் 10, 15-ம் போனஸ். 1936-ம் வருட மேற்படக்கூடிய மூன்று வருட மதிப்பு வரை மேற்கண்ட தற்கால போனஸ் கொடுக்க உத்தரவாதம் செய்யப்பட்டிருக்கின்றது.

வருடப் பிரீமியம்களின்மேல் 2½% குறைவு.

ஏஜன்ஸி மனுதார்கள் தேவை.

வேண்டுவோர்:—கே. கே. ஸ்ரீனிவாசன், பிராஞ்சு மானேஜர்,
என்ற விலாசத்திற்கு எழுதுக.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி,
மதராஸ் கிளை: 4, 5 முதல் லைன் பீச்சு.

தென்னிந்திய நலவுரிமைச் சங்க கூட்டம்

தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் நிர்வாகக் கூட்டமொன்று 29-11-36-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு, சென்னை, தியாகராய ஞாபகார்த்தகட்டடத்தில் நடை பெறும். அது சமயம் வரப் போகும் தேர்தல் சம்பந்தமாக ஜஸ்டிஸ் கட்சியின் திட்டத்தைக் குறித்து ஆலோசிக்கப் படும்.

எ. அப்பாதுரை
தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்,
நிர்வாகக் கமிட்டி.

சென்னை,
18—11—36.

இருதய நாதன் மரணம்

சென்னை, நவ, 25

ஜஸ்டிஸ் காரியாலயத்தில் சுமார் 8 வருஷ காலம் உழைத்த திரு. எஸ். இருதய நாதன் நேற்று காலை மைலாப்பூரில், தமது இல்லத்தில் அகால மரண முற்றதைக் கேட்டு நாம் மிகவும் வருந்துகிறோம். நிரோக அசௌக்கியத்தை முன்னிட்டு சென்ற மார்ச்சு மாதம் அவர் ரஜாவில் சென்றார். வைத்தியப் பரிசோதனை மீது அவர் க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட் டிருப்பதாகத் தெரிய வந்தது. 1934-ம் வருஷத்தில் அவருக்கு விவாகம் நடைபெற்றது. "சத்திய சீலன்" "குடும்பத் திறவுகோல்" என்ற இரு புத்தகங்களுக்கு ஆசிரியராவர். அவரது மரணத்தால் வருந்த முற்றிருக்கும், அவரது குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

குமார சஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
அண்ணாமலை
வைத்தியரின் மருந்து நிகரற்ற குணமுடையது
☞ வைத்தியர், அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை

குனியமுத்தூர்

தேவேந்திரர் வாசகசாலைத் திறப்பு விழா

(ஒரு நிருபர்)

குனியமுத்தூர், நவ, 23

1936 நவம்பர் 29 ஞாயிற்றுக்கிழமை காலை 10-மணிக்கு விநாயகர் கோவில் வீதியிலுள்ள தேவேந்திர வாலிபர் சங்கத்தில், தேவேந்திரர் வாசகசாலைத்திறப்புவிழா நடைபெறும். அதுசமயம் குனியமுத்தூர் யூனியன் சேர்மென் திரு. காளியப்பக் கவுண்டர் அவர்கள் தலைமை வகிப்பார். திரு. மு. நடேசிவாய சேர்வைகாரர் திறப்புவிழா ஆற்றுவார். திருவாளர்கள்: வேலாயுதம் சேர்வைகாரர் (பஞ்சாயத்து கோர்ட்டு பிரசிடெண்டு), முத்து நாயக்கர் (பட்டாக்காரர்) அங்கமநாயுடு, கோவை எ ஆர். சிவானந்தம் முதலிய பெரியார்களும் விஜயம் செய்வார்கள்.

மதிப்புரை

'ஜெயபாரதி' வாரப் பதிப்பு

22-11-36 முதல் வெளிவரத் தொடங்கியிருக்கும் 'ஜெய பாரதி' வாரப் பதிப்பின் முதல் இதழ் வரப் பெற்றோம். இதில் ருசிகரமான பல கதைகளும், கட்டுரைகளும் அடங்கியிருக்கின்றன. அவற்றுள் அன்பர் தி. ஜ. ரா-வின் அந்திமாலை முக்கியமாகக் குறிப்பிடத் தக்கது. அழகிய இனிய தமிழ்நடை. டெம்மி 4 ல 36 பக்கம் கொண்ட இப் பத்திரிகையின் விலை அணா ஒன்றே. இந்த முயற்சியைத் தமிழர்கள் ஆதரிப்பார்களாக.

சந்தா விவரம்

ஒரு வருஷம்	உள்நாடு	4—0—0
,,	வெளிநாடு	6—0—0
அரை வருஷம்	உள்நாடு	2—8—0
,,	வெளிநாடு	3—8—0

கிடைக்கு மிடம்:— மானேஜர் "ஜெய பாரதி" மவுண்ட்ரோடு, சென்னை.

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே!
ஏழையென்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப இந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே!
மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையை கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த வகையினும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! (பாரதி)

விடுதலை

சென்னை : 1936௵ நவம்பர்௴ 25௳
புதன்கிழமை

காந்தி உயிரைக் காப்பாற்றியதற்குக் கூலி!

ஒடுக்கப்பட்டவர்களை எந்நாளும் ஹிந்துக்கள் அடிமைப் படுத்தி வைப்பதற்கு அனுகூலமாகவே புனா ஒப்பந்தம் ஏற்பட்டது. எனினும், "ஹரிஜனங்களை ஒதுக்கி வைக்கக் கூடாது. அவர்கள் எந்நாளும் ஹிந்துக்களில் ஒரு பகுதியாகவே இருக்கவேண்டும்" என வெளிப் படையாக காங்கரஸ்காரர் ஒரு பட்டுக் காரணமும் சொல்லிக் கொண்டார்கள். வகுப்புத் தீர்ப்பில் ஒடுக்கப்பட்டவர்களுக்குத் தனித் தொகுதி வழங்கப்பட்டதே இந்தப் புரளிகளுக் கெல்லாம் காரணம். பொதுத் தொகுதியை ஒடுக்கப் பட்டவர்களில் கைவிரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில சுயநலக்காரரே ஆதரித்தனர். பெரும்பாலோர் தனித் தொகுதியையே ஆதரித்தனர். ஒடுக்கப்பட்டவர்களுக்குத் தனித் தொகுதி வழங்கினால் நான் பட்டினி கிடந்து சாவேன் எனக் கூறி காந்தியார் பட்டினி கிடந்ததினால் தனித் தொகுதியை ஆதரிப்போரும் பொதுத் தொகுதியை ஆதரித்து புனா ஒப்பந்தத்தில் கையொப்ப மிட்டனர். புனா ஒப்பந்தப்படி ஒடுக்கப்பட்டவர்களுக்கு மாகாண சட்டசபைகளில் சில அதிகப்படியான ஸ்தானங்கள் கிடைத்தது உண்மையே. ஆனால், அந்த ஸ்தானங்களினால் ஒடுக்கப்பட்டவர்களுக்கு அதிகப்படியான நன்மைகள் ஏற்பட வேண்டுமானால் ஒடுக்கப்பட்டவர்களின் அபிமானம் பெற்றவர்களே அந்த ஸ்தானங்களைக் கைப்பற்ற வேண்டும். ஆனால், காங்கரஸ் பற்றுடைய ஒடுக்கப்பட்ட தலைவர்கள் ஒடுக்கப்பட்டவர்களின் பூரண ஆதரவைப் பெற்றவர்கள் அல்ல. சமூகத்தைக் காட்டிக் கொடுத்தாவது தமது நலத்தை விருத்தி செய்து கொள்ள வேண்டும் என்ற கீழ்த்தரமான மனப்பான்மை யுடையவர்களே காங்கரஸ் பற்றுடையவர்களாக இருக்கிறார்கள். பொதுத் தொகுதியில் ஜாதி ஹிந்துக்களின் ஆதரவைப் பெறும் பொருட்டு தமது சமூகத்துக்கு எத்தகைய துரோகமும் செய்ய அவர்கள் தயாராகவே இருப்பார்கள். இந்த நிலை, புனா ஒப்பந்தத்தில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டவரும், பொதுத் தொகுதி அபிமானியுமான ராவ் பகதூர் எம். ஸி. ராஜாவுக்கே இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. எனவே, அவரது முயற்சியினால் பல திறப்பட்ட அபிப்பிராயமுடைய ஒடுக்கப்பட்டவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு ஐக்கிய கட்சி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. எந்த அரசியல் கட்சியுடனும் சம்பந்தம் வைத்துக் கொள்ளாது தனியாக நின்று தேர்தலில் போட்டி போட்டு வெற்றி பெற்று சமூகத்துக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று அந்தக் கட்சி முடிவு செய்திருக்கிறது. எனவே, சமீபத்தில் நடைபெறப் போகும் ஒடுக்கப் பட்டோர் ஆரம்பத் தேர்தலில் அக் கட்சி அபேட்சகர்களை நிறுத்த முடிவு செய்திருக்கிறது. இது தமிழ் நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவர் திரு சத்தியமூர்த்திக்குப் பிடிக்கவில்லை. இந்த ஆரம்பத் தேர்தலிலும் காங்கரஸ் அபேட்சகர்களை நிறுத்தப் போவதாக அவர் கூறினார். ஒடுக்கப்பட்ட ஐக்கிய கட்சியார் அதை எதிர்த்தனர். காந்தி-படேல் முதலிய பெரிய தலைவர்களிடமும் முறையிட்டனர். எனினும் பலன் ஏற்படவில்லை. திரு. சத்தியமூர்த்தி முயற்சியே வெற்றி பெற்று விட்டது. காந்தியாரும் கூட இந்தத் தகராறில் தலையிட முடியாதென்று கை மலர்த்திவிட்டார். இதனால் மனம் புண்பட்ட ராவ் பகதூர் எம். ஸி. ராஜா காங்கரஸ் போக்கைக் கண்டித்து ஒரு நீண்ட அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதை வேறிடத்துக் காணலாம். காங்கரஸ்காரர் புனா ஒப்பந்தத்துக்கு மாறாக நடப்பதை அவர் அவ்வறிக்கையில் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். ஆனால், நாம் இதைப் பார்த்து ஆச்சரியப்படவில்லை. எந்தக் காரியத்திற்குத்தான் காங்கரஸ்காரர் ஒழுங்காகவும் யோக்கியப் பொறுப்பாகவும் நடந்து கொண்டிருக்கிறார்கள்? ஒன்றைச் சொல்வதும், ஒன்றைச் செய்வதும் அவர்களுடைய வாடிக்கையாகிவிட்டது. வாக்குறுதிகளை மீறுவதும் அவர்களுடைய பிறவிக் குணம் ஆகிவிட்டது. அவர்களிடம் குற்றம் காண முயல்வது மணற் சோற்றில் கல் பொறுக்கும் பைத்தியக்கார வேலை. காங்கரஸ்காரரின் பித்தலாட்டங்களையெல்லாம் பகிரங்கமாகக் கண்ட பிறகும் பொதுஜனங்கள் அவர்களை ஆதரிப்பது தான் ஆச்சரியமாக இருக்கிறது. ராவ் பகதூர் எம். ஸி. ராஜாவின் அறிக்கையைப் பார்த்த பிறகாவது ஒடுக்கப் பட்டவர்களுக்கும், ஏனையோருக்கும் புத்தி வருமா? காந்தியார் உயிரைக் காப்பாற்றுவதற்காக புனா ஒப்பந்தத்தை ஆதரித்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு காங்கரஸ்காரர் காட்டும் நன்றி இது தானா?

இந்நிலையில் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் கடமை என்ன? புனா ஒப்பந்தக் கட்டுப் பாட்டிலிருந்து விடுபட்டுத் தனித் தொகுதி பெறத் தொடர்ச்சியாகக் கிளர்ச்சி செய்து வெற்றி யடைந்து காங்கரஸாரின் ஜாதித் திமிரை அடக்க வேண்டியதே ஒடுக்கப் பட்டோர் கடமை.

அசட்டுத்தனமா? அயோக்கியத் தனமா?

பார்ப்பன ரல்லாதாருக்கு மதிப்புக் கொடுக்கும் விஷயத்தில் "தேசிய" 'ஹிந்து'வுக்கு இருந்து வரும் வெறுப்பு பல முறை இப் பத்திரிகையில் வெட்ட வெளிச்சமாக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அபேதவாதப் பத்திரிகையான 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'க்கும் அம்மாதிரியான வெறுப்புத்தோன்றி யிருப்பதைப் பார்த்து ஆச்சரியப் படுகிறோம்.

சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற சென்னை முஸ்லிம் லீக் மகாநாட்டில் பேசிய பம்பாய்த் தலைவர் ஸர். பிரோஸ் சேத்னா, அம் மகாநாட்டுக்குத் தலைமை வகித்த ஸர். கே. வி. ரெட்டி நாயுடுகாரு அவர்களைப் பாராட்டிப் பேசுகையில் சென்னை ஆக்டிங் கவர்னர் பதவியை அவர் வெகு திறமையாக நிர்வகித்து அகில இந்தியப் புகழ்பெற்று விட்டதாகக் குறிப்பிட்டார். ஆனால், இந்த விஷயத்தை வழக்கப்படி "தேசிய" தினசரியான "ஹிந்து"வும் அபேதவாத தினசரியான 'இந்தியன் எக்ஸ்பிரசும்' பிரசுரம் செய்யவே இல்லை. யோக்கியப் பொறுப்புள்ள எந்தப் பத்திரிகையும் இம்மாதிரி செய்திகளை மறைக்கவே செய்யாது. கட்சி வித்தியாசம் பாராட்டாமல் சகல கட்சிச் செய்திகளையும் பிரசுரம் செய்யவேண்டியதே பொறுப்புவாய்ந்த பத்திரிகைகளின் கடமை யென, பண்டித ஜவஹர்லால் சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்திருந்த போது ஒரு பத்திரிகைக்கு அனுப்பிய செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், பிரஸ்தாப விஷயம் கட்சி சம்பந்தமானது மல்ல. ஒரு பொறுப்பு வாய்ந்த தலைவர் மற்றொரு இந்தியப் பிரமுகரைப் புகழ்ந்து பேசிய பேச்சை அந்த இரண்டு பத்திரிகைகளும் அமுக்கி விட்டது மிகவும் கேவலமான செயலாகும். தேசியமும், சமதர்மமும் பேசும் அப் பத்திரிகைகள் உண்மையில் வகுப்பு வாதப் பத்திரிகைகளாக இருப்பதை தேச மக்கள் இப்பொழுதாவது உணர்வார்களாக!

ஸ்பானியக் கடலில்

பிரெஞ்சுக் கொடி பாதுகாக்கப்படும்

கடற்படை மந்திரி சபையினர்க்கு உத்தரவு

பாரிஸ், நவ, 24

ஸ்பானியக் கடலில், பிரெஞ்சுக் கொடியைப் பாதுகாக்க எல்லா முயற்சிகளையும் கையாளும்படி, கடற்படை மந்திரி சபையினருக்கு சர்க்கார் அறிவித்துள்ளனர். பார்சிலோனாவிற்குச் செல்வதைத்தடைப் படுத்த கலக அதிகாரிகளுக்கு உரிமை கிடையாதென பிரெஞ்சு அதிகாரிகள் கருதுகின்றனர்.

உபாத்தியாயர்களுக்கு அதிக சம்பளம்

4,60,000 அங்கீகாரம்

சென்னை, நவ, 26

ஆரம்பக் கல்வி கிராண்டை அதிகரிக்க 4,60,000 ரூபாய் கொடுக்க வேண்டு மென்று சர்க்கார் தீர்மானித்து விட்டதாகத் தெரிகிறது. இதன்படி உயர்தர ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளம் மாதம் ஒரு ரூபாய் விதம் உயர்த்த 2,18,000 ரூபாயும், செகண்டரி ஆசிரியர்களின் சம்பளத்தை ஒரு ரூபாய் விதம் உயர்த்த 42,000 ரூபாயும் கிராண்டில் செய்யப்பட்ட 11 ./. குறைவைத் திறமையான பள்ளிக் கூடங்களுக்கு ஈடு செய்து கொடுக்க 2 லட்சம் ரூபாயும் உபயோகிக்கப்படும்.

சென்னை நகர சபை வெடி குண்டு

500 ரூபாய்க்கு மேற்பட்ட சம்பளம் கிடையாது

ஒரு கவுன்சிலரின் எச்சரிக்கை

சென்னை, நவ, 25

நேற்று மாலை சென்னை நகரசபையின் சாதாரணக் கூட்டமொன்று மேயர் திரு. கே. ஸ்ரீராமுலு நாயுடு தலைமையின் கீழ் கூடிற்று. திருவாளர்கள் என். ராஜகோபாலன், ஜி. ரங்கைய நாயுடு, ஸ்ரீமதி அம்மு சாமிநாதன் முதலியோர் நகர சபை சார்பாக ஜில்லா கல்விக் கவுன்சிலில் பிரதிநிதித்வம் வகிக்க தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிறகு காங்கரஸ் முனிசிபல் கட்சித் தலைவர் திரு. கே. பாஷ்யம் உத்தியோக சம்பந்தமாக அஜண்டாவிலுள்ள 2, 3 ஐட்டங்களை முதலில் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அது விஷயமாக உள்ள குறிப்பொன்று பின்வருமாறு கூறுகிறது:- சென்னை முனிசிபல் திருத்தச் சட்டத்தின் 85-வது விதிப்படி ஒரு சுகாதார அதிகாரி, ஒரு என்ஜினியர், ஒரு ரெவின்யூ அதிகாரி, ஒரு எலக்டிரிகல் என்ஜினியர், வாட்டர் ஒர்க்ஸ் என்ஜினியர், கல்வி அதிகாரி மற்றும் பல அவசிய இலாக்காக்களின் அதிகாரிகளைக் கவுன்சில் நியமிக்கவேண்டும். சட்டத்தின் கீழ் அவர்களின் குறைந்த, அதிகப்படியான மாதச் சம்பளமும் குறிக்கப்பட்டிருக்கிறது.

அதாவது, சுகாதார அதிகாரி, என்ஜினியர், எலக்டிரிகல் என்ஜினியர்; (குறைந்தது) ரூ 500, (அதிகம்) ரூ 1200; ரெவின்யூ அதிகாரி, ரூ 500—1000; வாட்டர் ஒர்க்ஸ் என்ஜினியர் ரூ 400—800; கல்வி அதிகாரி ரூ 250—800. டாக்டர் எஸ். கோவிந்த பிள்ளை (சுகாதார அதிகாரி), திரு. ஐ. குரியன் (என்ஜினியர்), திரு. எஸ். சுப்ரமண்ய செட்டி (ரெவின்யூ அதிகாரி) தற்போது முறையே 1000, 1000, 800 ரூபாய்கள் சம்பளம் பெற்று வருகின்றனர். திருத்தப்பட்ட சட்டத்தின்படி திரு. ஐ. குரியன் ரூ 750—25—1000 சம்பளத்தில் ஸ்திரமாகக் கவுன்சிலால் முன்னமே நியமிக்கப்பட்டிருக்கிறார். திரு. வி. கிருஷ்ணசாமி செட்டி (எலக்டிரிகல் என்ஜினியர்), திரு என். சச்சிதானந்தம் பிள்ளை (கல்வி அதிகாரி) முறையே ரூ. 1200-ம் ரூ. 300-ம் 1919-ம் வருஷத்திய சட்டப்படி பெற்று வருகின்றனர்.

பிறகு திரு. கே. பாஷ்யம் ஷெ. பிரச்சினை இரண்டு மாத காலம் வரையில் ஒத்திவைக்கப் படுமென்றும், அதற்குள் சுகாதார அதிகாரி எலக்டிரிகல் என்ஜினியர், ரெவின்யூ அதிகாரி முதலிய உத்தியோகஸ்தர்களுக்கு முறையே ரூ 500, ரூ 400, ரூ 250 சம்பளத்தில் விண்ணப்பங்கள் வரவழைப்பதெனவும், சம்பந்தப்பட்ட கமிட்டிகளை மேற்படி வேலைகளுக்கு வேண்டிய யோக்கியதாம்சங்களைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்வதெனவும், ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.

திரு. என். எஸ். வரதாச்சாரி மேற்படி தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார்.

திரு. கே.வி கிருஷ்ணசாமி ஐயர் (சர்வ கலாசாலை) மேற்படி தீர்மானத்தை எதிர்த்து மேற்குறித்த அதிகாரிகள் நியமன சம்பந்தமாக கவுன்சில் தலையிடுமாயின் சர்க்காரின் எதிர்ப்புக்கு அவர்கள் உள்ளாக வேண்டியிருக்கு மென்றும், நஷ்ட ஈட்டிற்கும் உட்பட வேண்டியிருக்கு மென்றும் கூறினர்.

சம்பளம் குறைப்பதை மற்றும் பல அங்கத்தினர்கள் ஆதரித்துப் பேசினர்.

டாக்டர் நடேச முதலியார், தேசத்தின் ஏழ்மை நிலையைக் கவனிக்கும்போழுது ரூ. 500 குறைந்த சம்பளமாகக் கருதப்படமாட்டாதெனக் குறிப்பிட்டார்.

கமிஷனர் திரு. ஜவாத் ஹுசேன் சம்பள விஷயத்தில் கவுன்சில் தலையிட வேண்டாமெனக் கேட்டுக் கொள்வதாகவும், அப்படி அவர்கள் சம்பளத்தைக் குறைத்துத் தானாக வேண்டுமென்று விரும்பும் பக்ஷத்தில் இனி நியமிக்கப்படும் அபேட்சகர்கள் விஷயத்தில் அம்முறையை அனுசரிக்கலா மென்றும் கூறினர்.

பிறகு தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு நிறைவேறியது.

ஐக்ய கோர்ட்டு

பிரதம நீதிபதி சர். மாரிஸ் காயர்

அட்வகேட் ஜெனரல்
சர். பி. எல். மித்தர்

புது டில்லி, நவ, 24

ஐக்ய கோர்ட்டின் அமைப்பு விஷயமாக இந்தியா சர்க்காருக்கும், இந்தியா மந்திரிக்கு மிடையில் இன்னும் கடிதப் போக்கு வரத்து நடந்து வருகிறது. சர். பி. எல். மித்தருக்கு ஐக்ய கோர்ட் அட்வகேட் ஜெனரல் பதவி அளிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப் பட்டது. புதிய இந்தியா சர்க்கார் சட்டத்தின் நகலைத் தயாரிப்பதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்ட சர் மாரிஸ் காயருக்கு ஐக்ய கோர்ட்டின் பிரதம நீதிபதி பதவி கிடைக்கலாமென சொல்லப்படுகிறது. மற்ற இரு நீதிபதிகளுள் ஒருவர் இந்துவாகவும், மற்றொருவர் முஸ்லீமாகவுமிருப்பர். இந்து நீதிபதி பதவி சர். ஷாதிலால், சர். அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் இவர்களுள் ஒருவருக்கும், முஸ்லீம் நீதிபதி பதவி சர். அப்துல் காதர், சர். முகம்மது ஸுலைமான் ஆகியவர்களுள் ஒருவருக்கும் கிடைக்கலாமென வதந்தி உலவுகிறது. இன்னும் திட்டமான முடிவு செய்யப்படவில்லையாயினும் ஐக்ய கோர்ட் 1937 அக்டோபரில் அமுலுக்கு வர விருப்பதால் நீதிபதிகளாக யாரை நியமிப்பது என்பது பற்றி அதிகாரிகள் விரைவில் முடிவு செய்ய வேண்டி யிருக்கும்.

முஸ்லீம் முன்னேற்றக் கட்சி

அங்கத்தினர்கள் நியமனம்

சென்னை, நவ, 24

முஸ்லீம் முன்னேற்றக் கட்சி காரியதரிசி எழுதுவதாவது:—

கீழ்க்கண்ட கனவான்கள் அவர்களுக்குப் பின் குறிக்கப்பட்டுள்ள தொகுதிகளுக்கு கட்சியின் அபேட்சகர்களாக நிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

மாகாண அசெம்பிளி (முகம்மதியர்)

1. கான்பகதூர் ஏ. அப்துல் கரீம் சாகிப் பகதூர் (சென்னை நகரம்).
2. கான்பகதூர் எஸ். கே. அப்துல் ரஜாக் சாகிப் பகதூர் (செங்கல்பட்டு - தென் ஆற்காடு ஜில்லாக்கள்).

மாகாண கவுன்சில் (மேல் சபை)

1. திரு. அப்துல் லதீப் பரூக்கி சாகிப் பகதூர் (சென்னை வடமத்தி- சென்னை நகரம், செங்கல்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு ஜில்லாக்கள்).

மற்ற தொகுதிகளுக்கு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுப்பது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

அகில இந்திய கைத் தொழில் பொருட் காட்சி

புதுடில்லி, நவ, 24

1937-ம் வருஷம் பிப்ரவரி 27-ந் தேதி முதல் ஏப்ரல் 5-ந் தேதி வரை 5-வது அகில இந்திய கைத் தொழில் பொருட்காட்சி புதுடில்லியில் நடைபெறும்.

சித்தூர் ஜில்லா போர்டு

காங்கரஸ் உபதலைவர் காங்கரசிலிருந்து ராஜினாமா

சித்தூர், நவ, 24

சித்தூர் ஜில்லா போர்டு, உபதலைவர் திரு. பி. நாராயண ரெட்டி பி.ஏ., பி.எல்., காங்கரசிலுள்ள தமது அங்கத்தினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டார். தமது ராஜினாமாக் கடிதத்தை ஆந்திரா காங்கரஸ் கமிட்டித் தலைவர் திரு. டி. பிரகாசத்திற்கு அனுப்பியுள்ளார்.

காங்கரஸ் கொள்கைகள் நசித்துப் போயின!

தஞ்சை அங்கத்தினர் ராஜினாமா

தஞ்சை, நவ, 20

தஞ்சை நகர் காங்கரஸ் கமிட்டியின் மாஜி காரியதரிசி, திரு. டி. என். சிவானந்தம் தமது காங்கரஸ் அங்கத்தினர் பதவியை ராஜினாமா செய்து விட்டார்.

காங்கரஸ் ஜில்லா போர்டு, மாகாண தேர்தல்களில் ஈடுபட்டதன் பயனாக தன் கொள்கைகளைக் கீழே தள்ளி மிதித்துத் துவைத்துவிட்டு பணம் படைத்தவர்களின் கை பாணமாக மாறி அவர்களைக் கை தூக்கிவிடுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிற தென்றும், எந்தக் கொள்கையை வற்புறுத்தும் பொருட்டு காங்கரஸ் இருக்கிறதோ, அக்கொள்கைகளையே இழந்து விட்டது என்றும் திரு. டி. என். சிவானந்தம் ஒரு அறிக்கையில் கூறுகிறார். போலிக் காங்கரஸ் காரர்களின் தனிப்பட்ட அபிலாஷைகளுக்கு காங்கரஸ் இடங்கொடுத்து வருகிறதேயல்லாது காங்கரஸுக்காக உயிரைக் கொடுக்க உறுதி கொண்டிருக்கும் உத்தமர்களை மேலெழும்ப விடுகிறதில்லை. பதவியில் மோகங் கொண்டவர்களையும், உத்தியோக வேட்டைக் காரர்களையும் அதிகாரத்தில் ஆசை கொண்டவர்களையுமே தத்தம் நோக்கங்களைப் பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு தேர்தல்களில் காங்கரஸ் போஸ் நிறுத்திவைக்கப் பட்டிருக்கிறதென்றும், உண்மை காங்கரஸ் காரர்களுக்கு தேர்தல்களில் இடங் கொடுக்கப் படவில்லை என்றும் கூறுகிறார். இத்தியாதி காரணங்களால் காங்கரசுக்கும் தனக்கு முள்ள தொடர்பைக் கத்திரித்துக் கொண்டதாகக் கூறுகிறார்.

இந்து மதத்தைத் தழுவினர்

சேலம், நவ, 24

ஆதிதிராவிடரா யிருந்து கிறிஸ்தவமதத்திற்கு சில வருஷங்களுக்கு முன்பு மாறிய வரதப்பன், முத்தையன் என்ற இரு உபாத்தியாயர்களும் நேற்று இந்து மதத்தை மீண்டும் தழுவினர். மதமாற்றச் சடங்கு இரண்டாவது அக்ரகாரத்திலுள்ள ஒரு வீட்டில் திரு. கே. வி. சுப்பராவால் நடத்தப்பட்டது.

நோபல் சமாதானப் பரிசு

ஆஸ்லோ, நவ, 24

1936-ம் வருஷத்திய நோபல் சமாதானப்பரிசு ஆர்ஜன்டைன் அன்னிய நாட்டு மந்திரியான எம். டெலாமாஸிற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சென்ற அக்டோபர் மாதம் சங்க அசெம்ப்ளியில் நாகரீகத்திற்கு அழிவுகாலம் வந்துவிட்டது என்பது பற்றி எம். டெலாமாஸ் சொற்பொழிவாற்றியுள்ளது குறிப்பிடத் தக்கது.

திருவிதாங்கூர் ஆலயப் பிரவேச விதிகள்

பார்ப்பனீயத்துக்குப் பாதுகாப்பு

மகாராஜா பிரகடனம்

திருவனந்தபுரம், நவ, 24

திருவாங்கூர் ஆலயப் பிரவேசப் பிரகடனம் சம்பந்தமான விதிகள் இன்று மகாராஜாவின் முத்திரையுடன் வெளியிடப்பட்டு விட்டன. மகாராஜா தமது பிரகடனத்தில், "கோவில்களின் சேர்மையான நிலைமையைப் பாதுகாக்கவும், அவர்களுடைய சடங்கு ஆசாரங்களை நிலைநிறுத்தவும், நம்மால் விதிக்கப்படும் சட்டங்களுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டு இன்று முதற்கொண்டு எந்த ஜாதியின் பேரிலும் பிறப்பாலோ, மதத்தாலோ நமது ஆதீனத்திலும், நமதுசர்க்கார் ஆதீனத்திலும், நிர்வாகத்திலும் இருக்கக் கூடிய ஆலயங்களில் சென்று வழி படுவதற்கு எத்தகைய தடைகளும் விதிக்கக் கூடாது என பிரசித்தமாக உத்தரவு செய்திருக்கிறோம்" எனக் குறிப்பிட்டுள்ளார். இப்பொழுது பிரசுரஞ் செய்யப்பட்ட சட்டங்கள் இந்நோக்கத்தை நிறைவேற்றுவனவாக அமைந்துள்ளன.

21-வது சட்டம்:—ஆலயப்பிரவேசப் பிரகடனத்தால் ஏற்பட்ட பெருஞ் சீர்திருத்தத்திற்கிசைந்த வண்ணம் ஆலயங்களில் நடைபெற்று வரும் சடங்கு, வழிபாடு சம்பந்தமான பழக்க வழக்கங்கள் சம்ரக்ஷிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. ஆலயம் அதன் பிரகாரங்களின் புனிதமும், சுத்தமும் குறைவதற் காஸ்பதமான எத்தகைய காரியங்களையும் யாரும் செய்யக் கூடாதெனவும், இடையே விதிக்கப்பட்டிருக்கிறது. கோவில் கட்டடங்களையும், பிராகாரங்களையும் வழிபாட்டுக்குச் சம்பந்தமில்லாத காரியங்களுக்கு உபயோகப்படுத்திக் கொள்வது சட்ட விரோதமாகக் கருதப்படும்.

'இன்னின்னர் இன்னின்ன இடத்திலிருந்துதான் தொழ வேண்டுமென்ற பழைய பழக்க வழக்கப்படி இருந்துவந்த கட்டுப்பாடு முன்னிருந்தபடியே எல்லா சமூகத்தாருக்கும் இருந்து வரும்,' என்றொரு முக்கிய விதியும் அச் சட்டத்தில் காணப்படுகிறது. பிரகடனத்தின் நோக்கத்திற்கு ஏற்றவாறு அவ்வப்பொழுது அவசியமான ஆலயப் பிரவேசம், வழிபாடு ஆகியவற்றிற்கு காலத்தை வரையறுத்து விடுவதற்கும், குறிப்பிட்ட காலத்தில் தெய்வ வழிபாட்டிற்குச் செல்லுபவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தவும், குறிப்பிட்ட காரியத்திற்காக சில தனிப்பட்டவர்களுக்கும், சமூகத்தினர்களுக்கும் பொருந்தக் கூடிய சில விசேஷ பழக்க வழக்கங்களை நிலைநிறுத்தவும் அவசியமான உத்தரவுகளிட, பிரதம ஆலய நிர்வாக அதிகாரிகளுக்கு அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. கோவில் பிராகாரங்களில் கூட அடி யெடுத்து வைக்கத் தகாத சில பிரிவினரையும் சட்டம் குறிப்பிடுகிறது.

அவர்கள் வருமாறு:—

ஹிந்துக்களல்லாத அனைவரும், குடும்பங்களில் ஏற்பட்ட இன்ன மரணங்களால் தீட்டுடையவர், குடியர்கள், ஒழுக்குமுறை தவறுபவர்கள், சில காலங்களில் பெண்கள், பிச்சைக்காரர்கள் முதலியவர்களாவர். ஆலயத்திற்குச் செல்வோர் நடை, உடை முதலியவைகளைப் பற்றியும், கோவிலுக்கு எடுத்துச் செல்லத் தகாத பொருள்களைப் பற்றியும் அச் சட்டங்களில் பொதுவாகக் குறிப்பிட்டிருக்கிறது. இச் சட்டங்களை மீறியவர்களைத் தண்டிப்பதற்கும் சட்டத்தில் இடமிருக்கிறது.

சட்டங்களின் வியாக்யான சம்பந்தமாக ஏற்படும் தகராறு, சந்தேகம் முதலிய விஷயங்களிலும், எதிர்பாராத கஷ்ட சமயத்திலும், அவசரமான சந்தர்ப்பங்களிலும் திவானுடைய தீர்ப்பே முடிவான தாகும்.

பூனா ஒப்பந்தத்துக்கு கோவிந்தா!

படேல்—காந்தி பல்டி

திரு. எம். ஸி. ராஜா அறிக்கை

சென்னை, நவ, 23

ராவ்பகதூர் எம். ஸி. ராஜா எம். எல். ஏ. கீழ்க் கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:—

காங்கரஸ் ஷெடியூல் வகுப்பும் தேர்தல் சம்பந்தமாக சர்தார் வல்லபாய் படேல் வெளியிட்ட அறிக்கையை நான் கவனமாகப் படித்தேன். அதில் முதன் முதலில் தென்படுவ தென்ன வென்றால் பூனா ஒப்பந்தம், அதில் சம்பந்தப்பட்டுள்ள விஷயங்கள் ஆகியவற்றை முற்றிலும் மறந்து இருப்பதேயாகும். இந்த ஒப்பந்தம் காந்தி, பண்டிட் மதன் மோகன மாளவியா, சர்தார் வல்லபாய் படேல், திருவாளர்கள்: ராஜேந்திர பிரசாத், ஸி. ராஜகோபாலாசாரி முதலிய காங்கரஸ் தலைவர்கள், சர் தேஜ் பகதூர், திருவாளர்கள்: எம் ஆர். ஐயகர், ஜி. டி. பிர்லா முதலிய மற்ற தேசியத் தலைவர்கள் ஒரு பக்கமும், மற்றொரு பக்கம் இந்தியாவின் பல பாகங்களிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் தலைவர்களுமாக இருந்து மிக்கக் கஷ்டத்துடன் தயாரித்து முடிவு செய்யப்பட்டதாகும். தேர்தலில், தாழ்த்தப்பட்ட மக்களை ஜாதி இந்துக்களினின்றும் பிரித்து தனியாக தேர்தல் நடத்துவதா? அல்லவா? என்பதே அங்கு விவாதிக்கப்பட்ட விஷயமாகும்.

பூனா ஒப்பந்தம் எங்கே

தாழ்த்தப்பட்ட பிரதிநிதிகளில் ஒரு சிலர் பொதுத் தேர்தல் முறையை ஆதரித்தனர். அவர்களில் நானும் ஒருவன். மற்ற பிரதிநிதிகள் அனைவரும் தனித் தொகுதி தான் எங்களுக்கு வேண்டுமென பலமாக வாதாடினார்கள். தேசியவாதிகளும், தனித்தொகுதி வேண்டுவோரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பதாய்க் காணவில்லை. மகாத்மாவின் ஆத்மா மயிர் முனையில் ஊசலாடிக் கொண்டிருந்தது. கடைசியாக இவ்வொப்பந்தம் நிறைவேறியது. ஜாதி இந்துக்கள் தாழ்த்தப்பட்டோரை ஏய்த்துவிடாதிருக்க எங்களுக்குள்ளேயே பூர்வாங்கத் தேர்தல் நடத்துவ தென்ற விதியும் அதில் ஏற்படுத்தப்பட்டது. இந்த விதிகளுக்கு ஏதாவது அர்த்தமிருக்குமானால் ஷெடியூல் வகுப்பினர், தேசம் தங்கள் சமூக நன்மை சம்பந்தமான விஷயங்களில் தங்கள் அபிப்பிராயங்களை மிகத்தெளிவாகத் தெரியப்படுத்துவதற்கும், பேசுவதற்கும் அனுமதிக்கப்பட வேண்டுமென்பதேயாகும். தாழ்த்தப்பட்டவர்களின் பூர்வாங்க தேர்தலில் காங்கரஸ் கமிட்டி தன் அபேட்சகர்களை நிறுத்துமானால்மேற் கண்ட நோக்கம் நிறைவேறுமா? காங்கரஸ் கமிட்டியின் இத்தகைய நடவடிக்கை பூனா ஒப்பந்தத்தின் நோக்கங்களையும், தத்துவங்களையும் உல்லங்கனம் செய்வதாகாதா? என சர்தார் வல்லபாய் படேலையே கேட்கிறேன்.

ஜாதி இந்துக்கள் மார்க்கம்

இந்த மாகாணம் சம்பந்தப்பட்டவரையில் தேசியம், தேசிய நோக்கங்கள் என்னும் போர்வையில் காங்கரஸ் கமிட்டி ஜாதி இந்துக்களின் ஆதிக்கத்தில் இருந்து வருகிறது என்பதை சர்தார் உணரவில்லை என நினைக்கிறேன். சில விசேஷத் தொகுதிகளைக் குறிப்பிட்டு அவைகளில் காங்கரஸ் அபேட்சகர்களை நிறுத்துமெனக் கூறுகிறார். இத்தொகுதிகளில் தாழ்த்தப் பட்டவர்களை முகமதியர்கள், செட்டியர்கள் முதலியவர்களுடன் சேர்த்திருக்கிறார். இது சம்பந்தமாக காங்கரஸ் ஷெடியூல் வகுப்பினருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. அதைக் கௌரவப்படுத்தி நிறைவேற்றி வைக்க வேண்டியது அதன் கடமையாகும். அதை அலட்சியப்படுத்தி நிராகரித்துவிட்டால் அதன் கண்ணியம் நிலையாது; மக்களின் நம்பிக்கை கெட்டுவிடும்.

காந்தி-படேல் பல்டி

காந்திஜி இதை இவ் வருஷ மார்ச்சு மாதத்திலேயே உணர்ந்து கொண்டார். நான் அச்சமயம் அவரை பேட்டி கண்ட பொழுது ஷெடியூல் வகுப்பார், எந்தக் கட்சியுடனும்-அது எவ்வளவு செல்வாக்குப் பெற்றிருப்பினும் சரி-சேரக் கூடாதெனக் கூறியுள்ளார். ஆனால், சர்தார் பட்டேல் ஷெடியூல் வகுப்பு அபேட்சகர்களை, காங்கரஸ் நியமிக்க வேண்டுமெனக் கூறுகிறார். ஷெடியூல் வகுப்பினருக்குள் பின் வேறுபடாமல் தடுப்பது காங்கரஸ் மேலுள்ள பெரும் பொறுப்பாகும். அது ஷெடியூல் ஐக்கிய கட்சிக்கு விரோதமாக அபேட்சகர்களை நிறுத்தக்கூடாதென்று சொல்லாமலே விளங்கும். எந்தக் கட்சியிலும் தேசத்தின் நன்மையைக் கருதி மற்ற கட்சிகளுடன் நாங்கள் ஒத்துழைப்போமாயினும், பூர்வாங்கத்தேர்தலில் ஜாதி இந்துக்கள் தலையிட்டு எங்கள் ஒற்றுமையையும், சுயேச்சையையும் பாதிக்காமல் காத்துக் கொள்ள நாங்கள் பாடுபடுவோம். எங்கள் உரிமை நியாயமும், அறிவுக்கேற்றதும் என்பதைப் பாராட்டி எங்கள் சமூகத்தின் நோக்கங்களை எடுத்துச்சொல்லி சமூக நன்மைகளை விருத்திக்குக் கொண்டுவரக் கூடியவர்களையே பூர்வாங்கத் தேர்தலில் நாங்கள் பொறுக்கி எடுத்துக் கொள்ள அவர்கள் அனுமதிப்பார்கள் என நம்புகிறேன்.

சென்னை நகர சபை

குண்டூர் புயற் சேதத்திற்கு 1000 ரூபாய்

சென்னை, நவ, 25

நேற்று நடை பெற்ற சென்னை நகர சபைக் கூட்டத்தில் குண்டூர் புயற் சேதத்தால் கஷ்டப் படுபவர்களுக்காக 1000 ரூபாய் நன்கொடையளிப்ப தென ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறை வேறியுள்ளது.

திராவிட வாசக சாலை

(ஒரு நிருபர்)

எழும்பூர், நவ, 23

1917-ம் வருஷம் துவக்கப்பட்டு பணமுடையால் 1933-ம் வருஷம் மூடப்பட்ட சென்னை எழும்பூர் திராவிட வாசகசாலையானது கனம் எ. கண்ணன் அவர்களின் பெரு முயற்சியால் 1936-ம் வருஷம் நவம்பர் மீ 22-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாமி செட்டி வீதி 52 பு. வீட்டில் கனம் தாமஸ் மரே அவர்களின் தலைமையில் கூடப்பட்டு கனம் கோவிந்த மாரார் பி. ஏ. பி. எல். அவர்களால் திறக்கப்பட்டது. நிர்வாக சபை கூட்டப் பெற்ற பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவடைந்தது.

வடார்க்காடு ஜில்லா

ஜஸ்டிஸ் மகாநாடு

—:o:—

26—11—36 வியாழக்கிழமை வேலூர் ராக்ஸி தியேட்டரில் நடைபெறும்.

மகாநாட்டைத் திறப்பாளர்:

கனம் பொப்பிலி ராஜா அவர்கள்.

மகாநாட்டுத் தலைவர்:

கனம் பி. டி. ராஜன் அவர்கள்.

டாக்டர் நாயர் படத் திறப்பாளர்:

கனம் குமாரராஜா முத்தைய செட்டியார் அவர்கள்

கொடியேற்று விழா ஆற்றுபவர்:

தோழர். ஈ. வெ. ராமசாமிப் பெரியார்

மகாநாட்டிற்கு மற்றும் பல ஜஸ்டிஸ் இயக்கத் தலைவர்கள், பெண்மணிகள் அன்பர்கள் இளைஞர்கள் விஜயஞ் செய்வார்கள்.

வரவேற்புக் கழக அங்கத்தினர் கட்டணம்	ரூ. 3—0—0
பிரதிநிதிக் கட்டணம்	ரூ. 1—0—0
பார்வையாளர்கள் கட்டணம்.	ரூ 0—4—0

வி. சண்முக முதலியார்,
வரவேற்புக் கழகத் தலைவர்.

மேலப் பாளையம் முஸ்லிம் சங்கம்

(ஒரு நிருபர்)

மேலப்பாளையம், நவ, 23

16-ந் தேதி மாலை 5 மணிக்கு ஜனாப் கே. முகம்மது உசேன் சாகிபு பி. ஏ. பி. எல். தலைமையில் மேற்படி சங்க மெம்பர்கள் சங்க ஹாலில் கூடி நிறைவேற்றிய தீர்மானங்கள்:

அடுத்து வரும் சென்னை சட்டநிரூபண சபை (அசம்பளி) தேர்தலில் திருநெல்வேலி ஜில்லா முஸ்லிம் தனித் தொகுதிக்கு இந்த அஸோஸியேஷன் செக்ரெட்டரியும், மேலப் பாளையம் பிரபல முஸ்லிம் இளைஞருமாகும், பொது ஜன ஊழியருமான ஜனாப் வ. செ. த. ஷெய்கு மன்சூர் சாஹிப் பகதூரவர்களை அபேக்ஷகராக நிற்க வேண்டுமென்று அக், 15-ல இச்சங்க மெம்பர்கள் ஏகமனதாய் தீர்மானம் நிறைவேற்றிக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அன்னவர்கள் மேற்படி தேர்தலில் அபேக்ஷகராக நிற்பதால் சென்னை மாகாண அகில இந்திய முஸ்லிம் லீக் பார்லிமெண்டரி போர்டு திருநெல்வேலி ஜில்லா முஸ்லிம் தொகுதிக்கு ஜனாப் வ. செ. த. ஷெய்கு மன்சூர் சாஹிப் பகதூரவர்களை அபேக்ஷகராக நிறுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறதென்று ஏகமனதாய்த் தீர்மானிக்கப் பெற்றது.

இரண்டு ஆண்டு விழாக்கள்

தஞ்சை, நவ, 23

அமைச்சர் செ. தியாக சம்பந்தம் எழுதுகிறார்.

பதின்மர் தமிழ்க் கழக முதலாண்டு விழாவும், தமிழ்க் கலைப் போட்டிச் சபை மூன்றாவது ஆண்டு விழாவும் ராவ்சாகிப் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை தலைமையில் நேற்று காலை கூடிற்று. திரு. இ. மு. வாசுதேவ முதலியார் வரவேற்புத் தாளை தலைவருக்குப் படித்துக்கொடுத்தவுடன் காரியதரிசி செ. தியாக சம்பந்தம் ஆண்டு அறிக்கை வாசித்தார். பின் திருவாளர்கள்: குடந்தை சாமி சிதம்பரனார், காரை ச. தண்டபாணி தேசிகர், ராமசாமி செட்டியார், காரை அருணாசலம் செட்டியார், திருவையாறு இலக்குவன், கானூர் மா. சூரியமூர்த்தி செட்டியார், பி. ஏ. பி எல், சிதம்பரம் இரத்தினசபாபதிப் பிள்ளை முதலியோர் அரும் பெரும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

பின் தமிழ்க் கலைப் போட்டிச் சபை பரிசளிப்புத் தொடக்கத்தில் திரு. வி. டி. செல்வம் சபையின் சரிதையையும், செ. தியாக சம்பந்தம் இவ்வாண்டு நடந்த சோதனை நிரலையும் பற்றிப் பேசி முடித்த உடன வெற்றிபெற்றோர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப் பின், காரியதரிசி நன்றி கூற கூட்டம் முடிந்தது.

காங்கரஸ் "வீடு தீப்பற்றிக் கொண்டது"

துரோகிகளுக்கு இடம் கொடாதீர்கள்

திரு. எஸ். கணேசன் வேண்டுகோள்

பணக்காரர் மோகம் பிடித்தலையும் நிர்வாகக் கமிட்டி

சென்னை, நவ, 24

திரு. எஸ். கணேசன் எழுதுவதாவது:—

தமிழ் நாட்டில் காங்கரசின் தற்போதைய நிலைமையை காங்கரஸ்காரர்கள் அறிவதற்காகவே இவ்வேண்டுகோளை வெளியிடுகிறேன். தமிழ் நாடு காங்கரஸ் நிர்வாகக் கமிட்டி சர்வாதிகாரித் தனமாக நடந்து வருவது யாவரும் அறிந்த விஷயமே. தாங்கள் கொண்டுள்ள எண்ணத்திற்கு மாறான எத்தகைய யோசனைகளையும், நடவடிக்கைகளையும், அவர்கள் தங்கள் சக்தியால் அடக்கி ஒடுக்கி வருகின்றனர். ஆகவே, தங்கள் நலத்தையும் பாராமல் காங்கரசிற்காக உண்மையில் உழைத்து வந்த பலர் அதனல் புறக்கணிக்கப்பட்டனர். சமீபத்தில் நடைபெற்ற நகரசபைத் தேர்தலுக்கு அவசரக் கமிட்டியின் அங்கத்தினர்கள் காங்கரஸ் அங்கத்தினர்களாக நிற்கக் கூடாதென உத்தரவு பிறப்பித்தனர். ஆயினும், அவசரக் கமிட்டியின் இடை விடாக் கிளர்ச்சியின் பயனாக அட்ஹாக் கமிட்டியினர் கடைசி மீட்டிங்கில் அவசரக் கமிட்டி அங்கத்தினர்களில் இருவரை சேர்த்துக் கொள்ளும்படி நேரிட்டது.

சமீபத்தில் திருவாளர்கள்: நேரு, படேல் முதலியோர் விடுத்துள்ள அறிக்கைக்கு ஏற்றாப்போல சென்னை காங்கரஸ் நிர்வாகக் கமிட்டியினர் தேர்தலில் ஜெயிக்க வேண்டும், சட்டசபைகளில் பெரும் பான்மையான ஸ்தானங்களைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் காங்கரசிற்காக நேற்று வரையில் சேவை செய்யாத பட்டதாரிகளேயாயினும் அல்லது மற்றெவரேயாயினும், அவர்கள் காங்கரசிற்கு தாராளமாக பண உதவி செய்யக் கூடியவர்களாயிருந்தால், அவர்களை அதன் அபேட்சகர்களாக நிறுத்த தீவிரமாக முயற்சித்து வருகின்றனர். பதவிமோகம் கொண்டு காங்கரஸ் கொள்கைகளையும், தேச நலத்தையும் தமிழ்நாடு காங்கரஸ் நிர்வாகக் கமிட்டி விட்டுக் கொடுக்கத் துணிந்து நிற்பது அதனிடமுள்ள ஊழல் எவ்வளவு தூரம் மலிந்து விட்டதென்பதையே குறிப்பிடுகின்றது. மேலும், உண்மைக் காங்கரஸ் ஊழியர்களின் யோசனையை ஏற்பதை விட்டு பயமுறுத்தியோ, வற்புறுத்தியோ அவர்களையும் தங்கள் போக்கிற்குத் திருப்ப முயற்சித்தும் வருகின்றனர். ஆகவே, காலங் கடப்பதன் முன் காங்கரஸ்காரர்கள் விழிப்படையவே நாங்கள் விரும்புகிறோம். காட்டிக் கொடுக்கும் நபர்கள் காங்கரசில் மிகுந்து வருகின்றனர். அவர்களால் காங்கரசின் பெருமையே சீர்குலைந்து வருகின்றது. வேலூரில் கூடப்போகும் காங்கரஸ்காரர்கள், காங்கரசிலுள்ள ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும் சீர்குலையச் செய்யும் இந் நபர்களுக்கு காங்கரசிலேயே இடமில்லாதபடி செய்து அதைப் பரிசுத்தப்படுத்த வேண்டும். சட்ட சபையில் மெஜாரிடியாயிருக்கவேண்டி அபேட்சகர்களைப் பொறுக்கும் விஷயத்தில் காங்கரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் தமிழ்நாடு காங்கரஸ் நிர்வாக கமிட்டி, புறக்கணிக்க நீங்கள் விட்டுவிட வேண்டாம். காங்கரஸ் வீடு தீப்பற்றிக் கொண்டது! காங்கரஸ்காரர்களே விழித்தெழுங்கள்!!

பல்கேரியாவில் 100 வயதிற்கு மேற்பட்டவர்கள் 158 பேர் இருக்கின்றனர். காய்கறிகள், வெண்ணெய், ரொட்டி இவைகளே அவர்கள் உணவு. மிதமாகவே சாப்பிடுகின்றனர்.

உளவாளிகளை அதிகரிக்க!

பிரிட்டன் யோசனை

உளவாளிகளை அதிகரிக்கவும், அவர்களுக்காக 1 லக்ஷம் பவுன் ஒதுக்கவும் பிரிட்டிஷ் சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர். இதற்குக் காரணம் பின் வருமாறு:—

அன்னிய நாட்டு உளவாளிகள் பலர் இங்கிலாந்தில் கப்பற் தொழிற்சாலைகளிலும், விமானத் தொழிற்சாலைகளிலும் வேலை செய்ய முயற்சிக்கின்றனர். இவர்களைக் கண்காணிக்கப்பட வேண்டியிருக்கிறது. ஜெர்மனியிலிருந்தும், ஸ்பெயினிலிருந்தும் வந்து பிரிட்டனில் அடைக்கலம் புகுந்தவர்களில் பல அன்னிய நாட்டு ஏஜெண்டுகளிருக்கின்றனர்.

ஸ்பெயினில் ஜெர்மனியும், இத்தாலியும் என்ன நடவடிக்கை எடுத்து வருகிறதென்பதைக் கண்டறிய ஒரு சக்தி வாய்ந்த ஏஜெண்ட் கோஷ்டியை ஸ்பெயினுக்கு அனுப்ப வேண்டியிருக்கிறது.

பாலஸ்தீனத்திலும், இராக்கிலும் நடைபெற்றுவரும் புரட்சி இயக்கத்தைக் கண்காணித்து வர, சில நபர்களை அனுப்பவேண்டியிருக்கிறது இதுவன்றி பிரிட்டனிலுள்ள பல அரசியல் ஸ்தாபனங்களுடைய தலைவர்களின் திட்டங்களைக் கண்டறிந்து சர்க்காருக்குத் தகவல் தெரிவிக்க ஒற்றறிவோரை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

அவசர காங்கரஸ் கமிட்டி

திரு. வி. ஓ. சிதம்பரம் பிள்ளைக்கு அனுதாபம்

சென்னை, நவ, 24

திருவல்லிக்கேணி, பைக்ராப்ட்ஸ் ரோட்டிலுள்ள தங்களது காரியாலயத்தில் அவசர காங்கரஸ் கமிட்டியினர் கூடி தமிழ் நாட்டு காங்கரஸ் கமிட்டி தங்கள் மீது விதித்துள்ள தடையை தமிழ் நாட்டு காங்கரஸ்காரர்களுக்கு விண்ணப்பித்துக் கொண்டிருப்பதுடன், சிறந்த தேசியவாதியான திரு. வி. ஓ. சிதம்பரம் பிள்ளை, சமீபத்தில் காலமானதைக் குறித்து தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டது. மேலும், மாகாண சட்ட சபைகளுக்கு அங்கத்தினர்களைத் தேர்தெடுப்பது சம்பந்தமாக பண்டித ஜவஹர்லால் நேரு திரு. படேல் முதலியோர் விடுத்துள்ள ஆணித்தரமான அறிக்கையை வரவேற்பதுடன், அதன்படி ஸ்தல பார்லிமெண்டரி கமிட்டி நடந்து கொள்ளுமென்றும் எதிர்பார்ப்பதாக மற்றொரு தீர்மானம் நிறைவேறியது.

சிறந்த தமிழறிஞர்

பண்டிதர் கோ. வடிவேலு செட்டியார் மரணம்

சென்னை, நவ, 25

சிறந்த தமிழறிஞரும், சென்னை வேதாந்த சங்கத் தலைவரும், அதன் ஸ்தாபகருமான பண்டிதர் கோ. வடிவேலு செட்டியார் நேற்று காலை 6 மணிக்குக் காலமானார்.

தேவை

மோட்டார் ரோட் ரோலர் டிரைவர் வேலைக்குத் தகுதி வாய்ந்த முகம்மதியர் ஒருவர் தேவை. மாதச் சம்பளம் ரூ 30. வேலை இரண்டு மாதங்கள் வரை நீடிக்கும். மனுதாரர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு 28—11—36-க்குள் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

ஸி. முத்தையா முதலியார்,
பிரஸிடெண்ட்.

ஜில்லா போர்டு ஆபீஸ்,
சைதாப்பேட்டை.
20-11-36.

ஒடுக்கப்பட்டோர் கட்சிக் கூட்டம்

கட்சியின் நோக்கங்களின் விளக்கம்

திவான் பகதூர் ஸ்ரீநிவாசன் எச்சரிக்கை

சென்னை, நவ, 23

சென்னையில் புதிதாகஸ்தாபிக்கப்பட்ட சென்னை மாகாண ஷெடியூல் வகுப்பார் (தாழ்த்தப்பட்டோர்) கட்சியின் லட்சியங்களையும், நோக்கங்களையும் பொது ஜனங்களுக்குத் தெரிவிக்க நேற்று முன் தினம் சனிக்கிழமை மாலை சென்னை பச்சையப்பன் கலாசாலையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. மேற்படி கட்சியின் தலைவராகிய திவான்பகதூர் ஆர். ஸ்ரீனிவாசன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். வெளி ஜில்லாக்களிலிருந்தும், சென்னை நகரத்தின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள்.

தலைவர் பேச்சு

தலைவர் கூட்டத்தை ஆரம்பித்துப் பேசுகையில் அங்கே ஏராளமான ஜனங்கள் வந்திருந்ததைக் குறித்துத் தாம் மிகுந்த சந்தோஷப்படுவதாகச் சொல்லிப் பின் கூறியதாவது:— 40 வருஷங்களுக்கு முன் வாயில்லா பூச்சிகளாக இருந்த நமக்கு, சென்னை மாகாண சட்டசபையில் 30 ஸ்தானங்கள் கிடைத்ததைக் குறித்து நாம் சந்தோஷப்படவேண்டும். நமது கட்சியை நாம் பலப் படுத்தினோமானால் அது ஒரு செல்வாக்குள்ள கட்சியாவதுடன் மந்திரிப் பதவியையும் பெறுவதற்கு நாம் லாயக்குடையவர்களாவோம். இந்த நோக்கத்துடன் தான் தாழ்த்தப்பட்ட வகுப்பாரில் சில படித்தவர்கள் ஒரு கூட்டமாகக் கூடி ஒரு கட்சியை ஏற்படுத்தி தேர்தலுக்கு அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்க ஒரு பார்லிமெண்டரி போர்டையும் நியமித்திருக்கிறார்கள். இக் கட்சிக்கு மந்திரி சபையில் ஒன்று அல்லது பல ஸ்தானங்கள் கிடைத்தால் அதைக் கொண்டு பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் மேம்பாட்டைய வழிகளைத்தேடி, சமூகத்தாரின் நிலைமையை மாற்றுவதற்கு முயற்சி செய்யலாம். இந்தக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தையும் வெளியிட்டிருக்கிறது.

ஜாதி ஹிந்துக்கள் சுயநலம் கொண்டு பூர்வாங்க தேர்தலில் தனியிடம் விருப்பதற்காக நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டு நின்று நம் கட்சியால் நிறுத்தப்படும் அபேக்ஷகர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நாம் பல காலங்களாக தாழ்த்தப்பட்டும், ஒதுக்கப் பட்டும் இருந்ததால் நாம் இன்னது செய்யவேண்டுமென்று தெரியாமலிருந்தோம். இதரர்களோ நமக்கு உதவி செய்யவில்லை. அவர்கள் நமக்கு செய்த உதவி யாதெனில் நம் பெயரை அடிக்கடி மாற்றி வந்தார்கள். எனவே, நம் கையே நமக்கு உதவி என்று கருதி நம்மவர்களுடைய ராஜீய உணர்ச்சியை வளர்த்து பலம் தேட நாமே வேலை செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டது. நம்முடைய பலம் சட்டசபையில்தான் இருக்கிறது. நாம் ஒற்றுமையாக ஒரு சக்தியாகவிருந்து நம்முடைய உரிமைகளைச் சம்பாதிக்க கிளர்ச்சிசெய்யாமல் இருக்கும்படிக்கும் நமக்கும் மந்திரி சபைகளில் ஸ்தானங்கள் கிடைப்பதை அபகரிக்கவும் ஜாதி இந்துக்கள் தங்கள் கட்சியைப் பலப்படுத்திக் கொள்வதற்காக நமக்குக் கொடுக்கப்பட்ட 30 ஸ்தானங்களையோ அல்லது அதில் பெரும்பாலான ஸ்தானங்களையோ நம்மிடமிருந்து பறிக்க முயற்சித்து வருவதை நீங்கள் கேட்டு ஆச்சரியமடைவீர்கள்.

எச்சரிக்கை

அவர்கள் உண்மையில் அவ்வாறு செய்வார்களானால் சமூக வழியிலும், ராஜீய வழியிலும் நமக்கு வேண்டியவைகளை செய்து கொள்ள நமக்கு சந்தர்ப்பம் அளிக்காவிட்டால், அவர்களின் ராஜீய மார்க்கத்தில் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடுவோம். கோடிக்கணக்கான வாயில்லாப் பூச்சிகளாகிய நாம் 45 வருஷ காலமாக சுயேச்சையாகக் கிளர்ச்சி செய்து பல கஷ்டங்களை அனுபவித்து 30 ஸ்தானங்களையும், இதர வசதிகளையும், உரிமைகளையும் சம்பாதித்துக் கொண்டோம். ஜாதி இந்துக்களுக்கிருக்கும் விருப்பத்தைப் போல நமக்கும் சமத்துவம்வேண்டுமென்று விருப்பமிருக்கிறது.

விவசாயத் தொழில் புரிந்து வரும் 6 கோடி நம் மக்களும், இன்னும் இதர வேலை செய்து வரும் கோடிக்கணக்கான நம் மக்களும், தாங்கள் ஜாதி கொடுமையால் கஷ்டப்பட்டு வருவதை உணர்ந்தால், அவர்கள் நம் சமூகத்திற்கு ஒரு பெரிய உதவியாக முன் வர முடியும். எனவே, தாழ்த்தப்பட்ட வகுப்பாரைச் சேர்ந்த ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தங்கள் நிலைமையை மேம்பாடு செய்ய ஒற்றுமையாக இருந்து தீர்மானித்துக் கொள்ள வேண்டுகிறேன்.

கட்சியின் நோக்கங்கள்

கட்சியின் காரியதரிசியாகிய திரு. பி. கே. புஷ்பராஜ் மேற்படி கட்சியின் நோக்கங்களை ஆங்கிலத்தில் படித்தார்.

நோக்கங்களின் சுருக்கம் பின் வருமாறு:—

தாழ்த்தப்பட்டோர் சமூகத்தாருடைய சுதந்தரத்தைப் பாதுகாத்து, அச் சமூகத்தாரிடையே ஒற்றுமையை வளர்த்து தேச க்ஷேமத்திற்காகவும், தாழ்த்தப்பட்டோர் சமூகத்தின் நலனுக்காகவும் வேலை செய்துவரும் கட்சியுடன் ஒத்துழைத்து சமூகத்தாருடைய உரிமைகளைச் சம்பாதிப்பது சென்னை மாகாண ஷெடியூல் (தாழ்த்தப்பட்டோர்) ஜாதிகளின் கட்சியின் நோக்கமாகும். இந்த நோக்கத்துடன் மேற்படி கட்சியின் போர்டு எதிர்கால சட்ட சபை தேர்தல்களில் ஒதுக்கப்பட்டு வைத்திருக்கும் ஸ்தானங்களுக்கு அபேட்சகர்களை நிறுத்தும். அபேட்சகர்கள் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர்கள் பொதுவாக தேச மகா ஜனங்களின் அபிலாஷைகளில் பங்கு எடுத்துக்கொண்டு பல துறைகளில் வேலை செய்யுமென்றும் குறிப்பிட்டிருந்தது.

இதைப் படித்து முடிந்ததும், திரு. எச். எம். ஜகநாதம், வந்தனோபசாரம் கூறினார். அக்கிராசனர் கூட்டத்தைக் கலைத்தார்.

கூட்டம் முடிந்ததும் அங்கு வந்தவர்களில் கூட்டத்தின் விஷயமே தங்களுக்கு ஒன்றும் புரியவில்லை என்றும், நோக்கங்களை தமிழில் மொழி பெயர்த்து சொல்லாததை ஆட்சேபித்தும் ஒரே ஆரவாரம் செய்தார்கள். திரு. ஜே. சிவஷண்முகம் மொழி பெயர்த்து சமாதானம் சொல்லிய பிறகு ஜனங்கள் கலைந்தார்கள்.

சென்னை மாகாண ஷெடியூல் கட்சி

சென்னை, நவ, 23

சென்னை மாகாண ஷெடியூல் கட்சியின் தேர்தல் போர்டின் கூட்டம் ஒன்று நேற்று மாலை இராயப் பேட்டையில் திரு. ஆர். ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு:— 1. வரப்போகும் சென்னை அசெம்பிளி சபைக்கு ஒதுக்கப் பட்ட ஸ்தானங்களுக்கு இந்த போர்டு மூலமாக நிற்க விரும்பும் ஷெடியூல் வகுப்பு அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்ப மனுக்கள் பெற்றுக்கொள்ளும் தேதியை நவம்பர் 25-ந் தேதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

(2) அபேட்சகர்களைப் பொறுக்குவதற்காக இந்த போர்டின் அடுத்த கூட்டம் நவம்பர் 26-ந் தேதி நடைபெறும்.

தஞ்சாவூர்

மேலத் தஞ்சை ஜில்லா போர்டு

(ஒரு நிருபர்)

தஞ்சை, நவ, 23

இதற்கு ஏற்பட்ட ஸ்தானங்கள் 37. தொகுதிகள் 28. பொது ஸ்தானங்கள் 28. ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள் 9. சில ஸ்தானங்களுக்கு போட்டியில்லை. மற்ற ஸ்தானங்களுக்கு 27-11-36ல் எலக்ஷன் நடக்கும்.

பாபநாசம் தாலூகா

இதற்கு ஏற்பட்ட பொது ஸ்தானங்கள் 5. ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள் 2. இந்த 7 ஸ்தானங்களுக்கும் 27-11-36ல் எலக்ஷன் நடக்கும். முன்னர் அறிவிக்கப்பட்ட ஜாப்தாவில் சிலர் வாபஸ் பெற்றுவிட்டனர். சில சர்க்கிள்களில் பலத்த போட்டி யில்லாவிட்டாலும் தேர்தல் என்ற நாடகம் நடைபெறும்.

கும்பகோணம் தாலூகா

கும்பகோணம் சர்க்கிள்:-(பொது ஸ்தானம் 1), திருவாளர்கள். 1. ஏ. வி. நாராயணசாமிபிள்ளை, 2. தியாகராஜ சாஸ்திரி.

திருப்பனந்தாள்:—(பொது 1), திருவாளர்கள்: 1. டி. ஆர். மாணிக்கம் பிள்ளை, 2. சி. எல். ஆராவமுத அய்யங்கார், 3. பசுபதியா பிள்ளை.

காசியபர் கோவில்:—(பொது ஸ்தானம் 1, ஸ்திரீகள் ஸ்தானம் 1) திருவாளர்கள்: 1. என். கெ. ஆர். நாராயணசாமி நாயுடு, 2. ஜெம்பக லட்சுமி அம்மாள், 3. சுப்பையா பிள்ளை, 4. பவானி அம்மாள்.

ஆடுதுறை:—(பொது 1) திருவாளர்கள்: 1. வி. கிருஷ்ணசாமி அய்யங்கார், 2 ராகவ அய்யங்கார்.

சோழபுரம்:—(பொது 1) திருவாளர்: ஆர். கோவிந்தசாமி மூப்பனார் (சக்கரப்பெருமாள் கோவில) போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

பட்டுக்கோட்டை தாலூகா

பட்டுக்கோட்டை சர்க்கிள்:—(பொது ஸ்தானம் 1) திரு. செங்கசாமித் தேவர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மதுக்கூர்:—ஸ்தானங்கள் 2. (பொது 1. ஒதுக்கப்பட்ட முஸ்லீம் 1). திருவாளர்கள்: தியாகராஜ சோழகர், அப்துல் ஹாசன் மரைக்காயர்.

ஒரத்தநாடு:—பாப்பாநாடு சர்க்கிள் (பொது 1. ஸ்திரீ 1.) திரு. ராவ் பகதூர் பி. எஸ். ராஜப்பா அவர்கள (பாப்பாநாடு ஜமீன்தார்) 2. திரு. வி. நாடிமுத்துப் பிள்ளை, (ஜில்லா போர்டு தலைவர்) 3. திரு. பாக்யெத்தம்மாள், 4. ஸ்ரீமதி. ஞானசிரோன்மணி அம்மாள்.

பேராவூரணி:— திருவாளர்கள்: 1. ஏ. வி. பாலசுப்பிரமணிய சேர்வை, 2. ஏ. ராமசாமி தேவர்.

காவாலிப்பட்டி:—திருவாளர்கள்: 1. நாடிமுத்துப் பிள்ளை, 2. பி.எஸ். ராஜப்பா, 3. என். வெங்கிடராமய்யர், 4. சிதம்பரம் செட்டியார்.

தஞ்சாவூர் தாலூகா

திருக்காட்டுப்பள்ளி சர்க்கிள்:—(பொது1.) திருவாளர்கள்: 1. சுயம்பிரகாசம் (வக்கீல்) 2. சேதுபதி நாயுடு.

திருவையாறு:— (பொது 1.) 1. திருவாளர்கள்: வி. கோவிந்தசாமி பிள்ளை, (மாதூர்), 2. கிருஷ்ண ராவ்.

நடுக்காவேரி:— (2. ஸ்தானங்கள் பொது 1. ஆதிதிராவிடர் 1.) திருவாளர்கள்: 1. பாலகுருநாட்டார். 2. நல்லமுத்து நாடார், 3. பெரியண்ணன் காலாடி, 4. செங்கன் காலாடி, இன்னும் 15 பேர், (ஆதிதிராவிடர்).

செங்கிப்பட்டி:— (பொது 1.) 1. திருவாளர்கள்: ராமலிங்கசாமி நாடார், பி. ஏ. பி. எல். 2. அய்யாக்கண்ணு மேற்கொண்டார்.

வல்லம்-உளூர்:-(ஸ்தானங்கள். 2) கிறிஸ்தவர் ஸ்தானம்:—திரு. ஏ. பொன்னுசாமி நாடார் - போட்டியில்லை.

பொது ஸ்தானம்:— திருவாளர்கள்: 1. ராஜமாணிக்கம் செட்டியார், 2. வீரய்யாபுள்ளுமூண்டார், 3. பழனிவேலு மண்ணையர், 4. கிருஷ்ணசாமி வன்னியர்.

குறிப்பு:— மன்னார்குடி, அரந்தாங்கி தாலூகாக்கள் விவரம் பின்னர் வரும்.

புரசைச் சிறுவர்கள்

வேடிக்கைத் தேர்தல்

ஜஸ்டிஸ் கட்சிக்கு வெற்றி

(ஒரு நிருபர்)

சென்னை, நவ, 21

சென்னைப் புரசைவாக்கம் வீராசாமி முதலி தெருவில் இன்று மாலை ஓர் ரசமான சம்பவம் நடைபெற்றது. அச்சம்பவம் அங்குள்ள சிறுவர்கள் ஜஸ்டிஸ் கட்சியின் பேரில் கொண்டிருக்கும் அபரிமிதமான அன்பையும், அவர்களின் உணர்ச்சியையும் நன்கு விளக்குவதால் அதை கீழே தருகிறோம்:—

மேற்படி தெருவிலுள்ள ஏ. எம். துரைராஜ், என். சுப்பையா என்னும் எட்டு வயதுடைய இரு சிறுவர்களும் தங்களைமுறையே ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினரென்றும், காங்கிரஸ் கட்சி அங்கத்தினரென்றும் வேடிக்கையாகப் பெயரிட்டுக் கொண்டு தங்களுடைய சிநேகிதர்களைத் தங்களுக்கு வோட்டுக் கொடுக்கும்படி சொல்லி விளையாடினார்கள். தேர்தல் நடைபெறவே ஜஸ்டிஸ் கட்சியில்நின்ற ஏ.எம். துரைராஜுக்கு 80 ஓட்டுகளும், காங்கிரஸ் கட்சியில் நின்ற சுப்பையாவுக்கு 38 ஓட்டுகளும் கிடைக்கவே ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த துரைராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டான். மாலையில் பிள்ளைகளுக்கெல்லாம் தேநீர் விருந்து நடைபெற்றது ஆறு மணிக்கு சுமார் 150 பையன்களடங்கிய ஓர் ஊர்வலம் புறப்பட்டு அத்தெரு வழியே சென்றது. அவர்கள் யூனியன் ஜாக் கொடிகளைப் பிடித்துக் கொண்டு 'ஜஸ்டிஸ் கட்சிக்கு ஜே!' 'கோதண்டராம முதலியாருக்கு ஜே' என ஆரவாரஞ் செய்தனர். பிறகு அப்பேட்டை வாசியும், முனிசிபல் கவுன்சிலருமான கோதண்ட ராம முதலியாருக்கு மாலை சூட்டினார்கள்.

இச்சம்பவம் ஜஸ்டிஸ் கட்சியின் மீது இளைஞர்கள் கொண்டிருக்கும் அன்பைக் காட்டுவது மின்றி வரும் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியினர் கண்டிப்பாக ஜெயமடைவார்களென நம்புவதற்கு இடமிருக்கிறது.

கீழ் தஞ்சை ஜில்லா போர்டு தேர்தல்

ஒரு விளக்கம்

நன்னிலம், நவ. 23

21-11-36 "விடுதலை"ப் பத்திரிகையில் கீழ்தஞ்சை ஜில்லாபோர்டு தேர்தல் சம்பந்தமாக நன்னிலம் தாலூகா திருமருகல் சர்க்கிளில் முகம்மதியர் தொகுதிக்குப் போட்டியிடத் துணிந்த ஜனாப் கா. முகம்மது இஸ்மாயில் அவர்களும் வாபீஸ் வாங்கிக் கொண்டார்கள்" என எழுதப்பட்டிருக்கிறது. அதன் வரலாறு அவ்விதமல்ல. மேற்படி ஜனாப் கா. முகமது இஸ்மாயில் அவர்கள் ஜெனரல் சீட்டுக்கு நாமினேஷன் கொடுத்தார்கள். அவர்களுக்கு அச் சர்க்கிளில் மிகுந்த செல்வாக்கும் பொது ஜன அபிமானமும் இருந்தும் ஜனாப் கொ. ப. முகமது தம்பி அவர்கள் தாம் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று பல பிரபலஸ்தர்கள் முன்னிலையில் அடி முகம்மது இஸ்மாயில் அவர்களை கேட்டுக் கொண்டபடியால், முகாமது இஸ்மாயில் அவர்கள் வாபீஸ் வாங்கிக் கொண்டார்கள். இவ்வளவு செல்வாக்கிருந்தும் மேற்படி முகம்மது இஸ்மாயில் அவர்கள் தம்முடைய ஸ்தானத்தை விட்டுக்கொடுத்ததற்காக திருமருகல் சர்க்கிள் பொது மக்களும் ஓட்டர்களும் வருந்துகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

க. முத்துவேலு.

மதுரை

திருமணம்

மதுரை, நவ, 25

மதுரை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. என். பகவந்த ராவ் அவர்களுக்கும், ஸ்ரீமதி என். கோகிலாபாய அம்மாளுக்கும் நவம்பர் 19-ந்தேதி திருப்பரங் குன்றத்தில் விவாகம் நடைபெற்றது. பல பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

நாகப்பட்டினம்

கீழ்த் தஞ்சை ஜில்லா போர்டு

(ஒரு நிருபர்)

நாகை, நவ, 22

கீழ்க் கண்டவர்கள் 16-11-36-ல வரப்போகும் கீழ்த் தஞ்சை ஜில்லா போர்டு எலக்ஷனுக்கு நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். மொத்தம் சர்க்கிள்கள் 25. அதற்கு 25 பொது ஸ்தானங்களும், 8 ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களும் ஆக மொத்தம் 33 ஸ்தானங்கள் உண்டு. இதில் 10 பேர் போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டனர். பாக்கி ஸ்தானங்களுக்கு 27-11-36-ல் தேர்தல் நடைபெறும்.

நாகப்பட்டினம் தாலூகா

நாகப்பட்டினம் சர்க்கிள்:—(ஸ்தானம் 1) திருவாளர்கள்: எஸ். ராஜகோபால நாயுடு (வடுகச்சேரி,) ஏ. எம். சாமிநாத செட்டியார். (திரு. அருணாசலம் பிள்ளை போட்டியிட மாட்டார்.)

திருப்பூண்டி:—(பொது ஸ்தானம் 1; கிறிஸ்தவர் 1) திருவாளர்கள்: ஜி. கிருஷ்ணசாமி நாயுடு, எ. எம்.பி. சுப்பராய செட்டியார், சவரிமுத்து நாடார், அந்தோனிசாமி பிள்ளை.

கீவளூர்:—(பொது 1; ஆதிதிராவிடர் 1) திருவாளர்கள்: பி. எம். சாமிநாதமுதலியார், ராமசாமி நாயுடு. லட்சுமண் சாம்பான், ராமன் வாய்க்காரன், வேலு வாய்க்காரன்.

திருவாரூர்:—(பொது 1; ஆதிதிராவிடர் 1) திருவாளர்கள்: ஜி. ராமானுஜ முதலியார், (சேர்மென்) நாகநாதய்யர், வைத்திலிங்கச் சாம்பான், வலியூரான்.

குன்னியூர்:—(ஸ்தானம் 1) திருவாளர்கள்: நாடிமுத்து பிள்ளை எம். எல். சி. கோபால செட்டியார் (வலிவலம்)

மாயவரம் தாலூகா

மாயவரம் சர்க்கிள்:—(பொது 1) திருவாளர்கள்: பி. நாகலிங்கம் பிள்ளை, முத்துகுமாரசாமி முதலியார்.

மணமேடு:-(பொது ஸ்தானம் 1; முஸ்லீம் 1) முஸ்லீம் ஸ்தானத்திற்கு ஜனாப் ஹாஜிமீ ஷம்சுத்தீன் சாஹிப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். பொது ஸ்தானம்: திருவாளர்கள்: இ. என். சோமசுந்தரம் பிள்ளை, திருஞானம் பிள்ளை.

குத்தாலம்:—(பொது 1) திருவாளர்கள்: நாராயணசாமி செட்டியார், ஒ. பி சிங்காரம் செட்டியார்.

மங்கநல்லூர்:—(பொது 1; ஆதிதிராவிடர் 1) திருவாளர்கள்: ஆர். என். கந்தசாமி பிள்ளை, நாராயணசாமி முதலியார், துரைசாமி சாம்பான், சந்தனம் சாம்பான்.

செம்பனார் கோவில்:—(பொது 1) திருவாளர்கள்: ராமலிங்க உடையார், டி. ஆர். சொக்கலிங்கம் செட்டியார்.

பொறையார்:—(பொது 1) திருவாளர்கள்: ரெத்தினசாமி நாடார், ஜெம்புகேச நாடார். (பொறையார்)

சீர்காழி தாலூகா

திருவெண்காடு:— (பொது 1) திருவாளர்கள்: கே. சொக்கலிங்கம் செட்டியார், என். சுப்பிரமணிய அய்யர்.

சீர்காழி:—(பொது 1) திரு. எம். டி. குழந்தைவேலு செட்டியார் (போட்டியில்லை)

மதனம்:—(பொது 1) திரு. டி. திருவேங்கடம் பிள்ளை (போட்டியில்லை)

நன்னிலம் தாலூகா

பேரளம் சர்க்கிள்:—(பொது 1) திரு. சி. மருதவனம் பிள்ளை (ஜில்லா போர்டு உபதலைவர்) போட்டியில்லை.

திருமருகல்:—(பொது 1; முஸ்லீம் 1) முஸ்லீம் ஸ்தானம்; திரு. கே. பி. முகம்மது தம்பிராவுத்தர் (போட்டியில்லை;) பொது ஸ்தானம்: திருவாளர்கள்: கோதண்டராம சாமி நாயுடு, டி. என். அருணாசலம் அய்யர்.

திருவிழி மிழலை சர்க்கிள்:—(பொது ஸ்தானம் 1) திருவாளர்கள்: முகம்மது கௌஸ் சாகிப் (எரவாஞ்சேரி) ஆர். பஞ்சாபிகேச அய்யர்

நன்னிலம்:—(பொது 1) திருவாளர்கள்: ஆர். ராதாகிருஷ்ண நாயுடு, (ஏனங்குடி) எம். ஆர். சாம்பசிவ அய்யர்.

அம்மையப்பன்:—(பொது 1) திருவாளர்கள்: பாவாசி பஞ்சாபிகேச முதலியார், சி. எஸ். வைத்தியலிங்கம் பிள்ளை.

கொரடாச்சேரி:-(பொது 1) திருவாளர்கள்: ஏ. அருணாசலம் பிள்ளை, எம். டி. தியாகராஜ பிள்ளை.

திருத்துறைப்பூண்டி தாலூகா

திருத்துறைப் பூண்டி சர்க்கிள்:—(பொது 1; ஸ்திரீகள் ஸ்தானம் 1) திருவாளர்கள்:-ஜி. வெங்கடாசல முதலியார் எம். எல். சி.யும், செல்வத்தம்மாள் (திரு. பன்னீர்செல்வம் அவர்களின் புதல்வி) அவர்களும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஆலத்தம்பாடி:—(பொது 1; ஆதிதிராவிடர் 1) திருவாளர்கள்: தென்பாதி டி. எஸ். ராமச்சந்திர நாயுடு (போட்டியில்லை), திரு. சூர்யமூர்த்தி சாம்பான் (போட்டியில்லை).

தலைஞாயிறு சர்க்கிள்:-(பொது 1) திருவாளர்கள்: வி. ராமலிங்க முதலியார், ராமச்சந்திர அய்யர்.

காச்சிகுளம்:—(பொது 1) திருவாளர் சுப்பையா தேவர்.

வேதாரண்யம்:—(1 பொது ஸ்தானம்) கீழ்த் தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் திரு. என். ஆர். சாமியப்பா முதலியார் அவர்கள் (நெடும்பலம்) போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திருவாரூர் சுயமரியாதை சங்கம்

திருவாரூர், நவ, 23

22-11-36 மாலை 7-30 மணிக்கு அடி சங்க கட்டிடத்தில் மாதாந்திரப் பொதுக் கூட்டமொன்று தோழர் சே. எஸ். எஸ். ராஜன் அவர்கள் தலைமையின் கீழ் கூடியது. அது காலை தோழர்கள்: டி. என். லெக்ஷ்மப்பா, கே சுந்தர ராஜன், வி. கோதண்டபாணி முதலியோர் திருவாங்கூர் சமஸ்தானத்தின் அதிகாரத்துக்குட்பட்ட பொது ஸ்தாபனங்களாகிய ஆலயங்களில் பிரவேச உரிமையைத் தாழ்த்தப் பட்டவர்களுக்கு அளித்ததைப் பற்றியும், தோழர் வி. ஒ. சிதம்பரம் அவர்கள் இறந்துவிட்டதைப் பற்றியும், அன்னாரின் குண செயல்களைப் பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

தீர்மானங்கள்

1. திருவாங்கூர் சமஸ்தானத்தின் அதிகாரத்துக்குட்பட்ட பொது ஸ்தாபனங்களாகிய ஆலயங்களில் தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்கு உரிமை அளித்ததைப்பற்றி திருவாங்கூர் மகாராஜாவை இக்கூட்டம் பாராட்டுவதோடு இதற்கு காரணமாக இருந்த நமது மாபெரும் தலைவர் தோழர் ஈ. வெ. ரா. வால் நடத்திய வைக்கம் சத்யாக்ரக நோக்கத்தை முற்றுப்பெறச் செய்த திவான் ஸர். சி. பி. ராமசாமியையும், மகா ராஜா அவர்களையும் இக்கூட்டம் முழுமனதுடன் வாழ்த்துகிறது.

2. தமிழ் நாட்டின் இலக்கமான தூத்துக்குடி வி. ஒ. சிதம்பரம் அவர்கள் இறந்ததைப்பற்றி இக்கூட்டம் ஆழ்ந்த துக்கமடைவதோடு அன்னாரின் குடும்பத்தாருக்கு இக்கூட்டம் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

இத்துடன் தலைவர் முடிவுரைக்குப் பின் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பெற்று கூட்டம் இனிது முடிந்தது.

தங்கம்—வெள்ளி

சென்னை, நவ, 25

	ரூ.அ.பை.
பம்பாய் ஆனைத் தங்கம்	35—0—0
„ வாய்தா	35—1—9
முனை தோலா 1-க்கு	34—10—0
சவரன் மொத்தம்	22—5—6
சவரன் சில்லரை	22—6—0
வெள்ளி ரூ. 100 எடை	52—0—0
„ ரூ. 1 எடை	0—8—6

26—9—36-ல் நடைபெற்ற

திருச்சி ஜில்லா

ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டு

வரவு செலவு கணக்குகள்.

வரவு.	ரூ.	அ.	ப.
கே. வி. எம். வெங்கடாஜலம் செட்டியார்	100	0	0
கே. வி. எஸ். ஸப்தரிஷி செட்டியார்	100	0	0
டாக்டர். மதுரம்	100	0	0
கே. கே. ஆர். எம். கடவூர் ஜமீன்	50	0	0
எம். எஸ். நடேசம் பிள்ளை	25	0	0
ஜம்புமடை ஆர். எம். கைலாசம் பிள்ளை	25	0	0
ராவ்சாஹிப் எல். என். பரமசிவம் பிள்ளை	20	0	0
பெருவளநல்லூர் பி. பி. கிருஷ்ணசாமி செட்டியார்	20	0	0
கே. சின்னசாமி உடையார்	10	0	0
புன்னைவாசல் பி. என். ராஜகோபால் பிள்ளை	10	0	0
எம். கே. முகம்மது இப்ராஹீம் ராவுத்தர்	10	0	0
உறையூர் சொக்கலிங்கம் பிள்ளை	10	0	0
சிறுதையூர் ஆ. பூமிநாதம்	10	0	0
அ. பொன்னம்பலனார்	5	3	0
டி. கே. இல்லைவேலு முதலியார்	5	0	0
டி. வி. மாணிக்கம் பிள்ளை	5	0	0
சேத் மங்குமல் ராம்சிங்	5	0	0
கந்தசாமி உடையார்	5	0	0
ச. மாணிக்கம் பிள்ளை	3	0	0
டி. பி. வேதாசலம் பிள்ளை	5	0	0
லால்குடி ஜி. வரதராஜுலு பிள்ளை	5	0	0
முசிறி பெத்துப் பிள்ளை	5	0	0
குளித்தலை என். சதாசிவம் பிள்ளை	5	0	0
வ. ராமசாமித் தேவர் (ஐ. டி. எப்.)	5	0	0
வெள்ளிக்கடை முகம்மது இவான் சாஹிப்	5	0	0
திருமங்கலம் டி. என். எம்.	5	0	0
ஸ்ரீரங்கம் வி. டி. எஸ்.	5	0	0
எஸ். எம். எஸ். ஆர். ரத்தினசாமி செட்டியார்	5	0	0
டி. ஆர். செங்கசாமி நாயுடு	3	0	0
டி. என். ராஜன் பிரதர்ஸ்	2	0	0
ஸ்மித் கே. ராமசாமித் தேவர்	2	0	0
ஹாண்டர். ஷண்முகத் தேவர்	2	0	0
டபிள்யூ. டி. ஜனும் பிள்ளை	1	0	0
வி. ஆர். ராஜகோபால் நாயுடு	1	0	0
வி. நாராயணசாமி ஐயர்	1	0	0
பழனியப்ப முதலியார்	1	0	0
ஹபிபுல்லா சாயபு	1	0	0
ஓர் அனுதாபி	1	0	0
கா. வேணுகோபால்சாமி பிள்ளை	1	0	0
வே. கந்தசாமி பிள்ளை	1	0	0
டாக்டர். ஞானராஜ்	1	0	0
டைலர். பழனியப்ப தேவர்	1	0	0
கல்யாணராம பிள்ளை	1	0	0
ஆர். வெங்கடேஸ்வர பெருமாள்	1	0	0
வி. நாராயணசாமி	1	0	0
ஆர். சதானந்தம்	1	0	0
அனுதாபி	0	8	0
டிக்கட் விற்பனை ரிஸப்ஷன் டிக்கட் 20—28 டிக்கட்டிற்கு	18	0	0
பிரதிநிதி டிக்கட்டுகள் நெ. 80—84, 121—144, 162 & 163, 175—210, 244 & 245 ஆக 69 டிக்கட்	34	8	0
கி. ஆ. பெ. விசுவநாதம்.	6	7	10
ஆக	645-10-10		

செலவு.	ரூ.	அ.	ப.
பொன்னம்பலனார் பில்படி செலவுகள்	38	8	6
பிரிண்டிங் செலவு	37	13	0
சாப்பாட்டுச் செலவு	37	8	0
கார் செலவு	20	14	0
பாண்டு செலவு	13	4	0
சில்லறைச் செலவு	13	0	4
புஷ்பச் செலவு	12	0	0
ஸ்டாம்புச் செலவு	10	11	6
போட்டோ	10	0	0
வளைவுகள்	7	8	0
வாலண்டியர்ஸ்	7	8	0
பிரயாணச் செலவு	7	5	0
நாற்காலி வாடகை, சத்திரம் வாடகை	6	0	0
மரியாதைக் குண்டுகள்	6	0	0
தோழர்கள் செலவு	4	0	0
வண்டிச் செலவு	3	9	6
கூலி வகையறா	3	5	0
பிரேம் சார்ஜ்	2	4	0
யானைச் செலவு	2	0	0
ஆபீசுக்கு காண்டு செலவு	2	0	0
பேப்பர் செலவு	0	8	0
ஆக செலவு	245-10-10		
நீக்கி இருப்பு	400—0—0		

(Sd.) கி. ஆ. பெ. விசுவநாதம்,

மகாநாட்டுக் காரியதரிசி.

குறிப்பு:—இத் தொகையை ஒரு தகுதியுடைய பாங்கில் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் பேரால் டிபாசிட் செய்ய வேண்டுமென்று 2-11-36-ல் கூடிய தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் தீர்மானம் செய்யப்பெற்றிருக்கிறது.

டி.பி. வேதாசலம், காரியதரிசி. கி.ஆ.பெ. விசுவநாதம், பொருளாளர்.



கனம் சர் கே. வி. ரெட்டி நாயுடு தலைமையில் சென்ற சனிக்கிழமை கோகலே ஹாலில் நடந்த பிலிம் லீக் பொதுக் கூட்டத்தில் "இந்தியச் சினிமாத் தொழில்" என்பது பற்றி சர். பிரோஸ் சேத்னா பேசிய போது எடுத்த படம். (போட்டோ நியூஸ் ஏஜன்ஸி)

திருநெல்வேலியில் சென்ற வியாழனன்று லேடி மார்ஜோரி எர்ஸ்கின் செஞ்சிலுவை குழந்தை நலச் சங்க ஸ்தாபனக் கட்டடத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டியபோது எடுத்த படம்.

ராஜா சர். அண்ணாமலை செட்டியார் சிதம்பரத்தில் சென்ற 20-ந் தேதி சென்னை கவர்னருக்கு சிற்றுண்டி உபசாரம் நடத்தியபோது எடுத்த படம்.

திருநெல்வேலி பொது மக்கள் சென்ற வியாழனன்று சென்னை கவர்னருக்கு தோட்டக் கச்சேரி நடத்தியபோது எடுத்த படம்.

நேரில் அறிந்தது

இரு பார்ப்பனர்களின் சம்பாஷணை மர்மம்

(பி. ஏ. நாதன்)

18-11-36 மாலை 8-மணி சுமாருக்கு கும்பகோணத்தில் ஓர் பிரபல மளிகைக் கடையில் நான் சாக்கு வாங்கிக் கொண்டிருக்கும் சமயத்தில், ஓர் வைதீகப்பார்ப்பனர் வந்து கடைக்காரரிடம் அரையணாவுக்குக் களிப்பாக்குக் கேட்டார். களிப்பாக்குக் கொடுக்கும் மத்தியில் இன்னொரு பார்ப்பனர் வந்து அவரைச் சந்தித்தார். சந்தித்தவர் முன்னவரை நோக்கி 'விஷயம் என்ன ஆச்சு' என வினவினர். என்ன ஆவது ஒன்றுமில்லாமல் போய்விட்டது. செலவழித்ததை வைத்துக்கொண்டு ஏதாவது ஒரு தொழிலைச் செய்தாவது மாதம் நூறு, ஐம்பது சம்பாதிக்கலாம். ரூபாய் 45 க்கு உத்தியோகம் பார்க்கப் போய் ஒன்றுமில்லாமல் போய் விட்டது' என்றார். கேட்டவர் காரணத்தை விபரமாகச் சொல்லச் சொன்னார். அவர் கூறிய விபரத்தில் சொன்னதாவது; ஒரு கிளார்க்கு உத்தியோகத்திற்கு ஒரு பார்ப்பனமாணவர் முயற்சித்து வேலை செய்ததாயும், இப் பையன் ஒரு மாஜி நீதிபதியின் புத்திரரென்றும், இவருக்கு உத்தியோகம் கிடைக்கும்படி ஒரு ஜட்ஜியாக உள்ளவரே சிபார்சு செய்தும் நியமனம் செய்ய உதவி செக்ரட்டரி பெருமுயற்சி எடுத்துக் கொண்டு உத்தரவு கொடுத்ததாயும், பின்னர் சீப் செக்ரட்டரி வந்து இதில் கலந்து கொண்டு பார்ப்பனர்களுக்கு 100-க்கு 12 1/2 விதம் தான் கொடுக்கச் சட்டமிருக்கிறது. ஆகவே அது பூர்த்தியடைந்து விட்டதாயும், இந்த மாணவருக்கு இந்த உத்தியோகம் கொடுத்தால் 100-க்கு 14 விதம் ஆகி விடுகிறதென்றும் கூறி அந்த உதவிக் காரியதரிசி சம்பளத்திலரு 10 வெட்டுச் செய்து கடப்பைக்கு மாற்றி விட்டு மாணவர் உத்தியோகத்தையும் கான்சல் செய்து விட்டதாகவும் கூறி முடித்து விட்டு, அந்த மாணவன் செலக்ஷனில் முதலில் தேறியிருந்தும், பாழும் பார்ப்பன ஜாதியில் பிறந்த கொடுமையால் இக்கெதியடைய நேரிட்டதென்றும் வருத்தப்பட்டுக் கொண்டார்கள். இவர்கள் சம்பாஷணையிலிருந்து சீப் செக்ரட்டரி ஒரு கிறிஸ்து மதக்காரரென்றும், உதவி செக்ரட்டரி பார்ப்பனர் என்றும் தெரிய வந்தது.

ஆகவே இதிலிருந்து பார்ப்பனரல்லாத மக்கள் தங்கள் நிலைமையை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். இதிலிருந்து பார்ப்பனர்களின் பரம்பரை உத்தியோகப் பிழைப்பில் மண்ணை வாரிப் போட்டவர்கள் யார்? எந்தக் கட்சியார்? என்பதனை விளங்கவே பாரும். ஒரு பார்ப்பன பள்ளிச் சிறுவனைக் கேட்டாலும், அவன் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களைத் தான் கூறுவான். இக் கொடுமைக்கு உள்ளாக்கிய ஜஸ்டிஸ் கட்சியை குழி தோண்டிப் புதைக்கா விட்டால் நான் பிராணத் தியாகம் செய்து கொள்வேன் என்று சொல்லத் துணிய திரு சத்தியமூர்த்தி ஐயர் ஏன் முன்வர மாட்டார்? நம் தமிழ் நாட்டின் காங்கிரஸ் உண்மை நிலைமையையும், தலைவர்களின் உட்கருத்துக்களையும் உணர்ந்த எந்த பார்ப்பனரல்லாதாரும், தனக்கும் தன் சந்ததியார்களுக்கும் படுகுழி வெட்டிக் கொள்ள மாட்டார்களென்றே நம்புகிறேன். நாட்டின் சுதந்தரத்தை யடைய எவரும் விரும்பாமலிருக்க மாட்டார்கள். ஆயினும், அதை உண்மையில் அடையும் வழியில் திரிகரண சுத்தியுடன் பாடுபட முன் வருபவர்களைக் காண்பது தான் துர்லபம். மேலும், காங்கிரஸ்காரர்கள் 'புதிய அரசியலை உடைத்தெறியப் போகிறோம்' என்பதாகக் கூறுவது வெறும் ஜம்பப் பேச்சு. கடைசியில் இச்சொல்லை அவர்கள் நிறைவேற்றப் போகிறதில்லை. நிறைவேற்றவும் முடியாது. ஆனால், நமது நாட்டு ஜனங்களின் இயற்கை சுபாவம் எப்பொழுதும் புதிதின் பேரிலேயே மோகம் அதிகம். அம்முறையால் தான் அரசியல் மனப்பான்மையும் தற் சமயம் நகரங்களினிடையில் பரவி இருக்கின்றது.

விடுதலை யவர்க்[illegible] ஏதெனக் கே[illegible]
தேசீய கீர்த்தி [illegible] [illegible]
காட்டினம் [illegible]
பொருள் சுகப்பேறுகள் சர்வமும் பெற
திருமிக வாழ்தலே யாம்

விடுதலை

VIDUTHALAI

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்று நின்ற
செம்மொழியைத் திருமொழியை
[தேன்மொழியை
தனித்தியங்கும் ஆற்றலுள தொன்மொழியை
[அமிழ்தனைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
[அனுதினமும் பழக்கம் செய்வீர்.

மலர்—2] சென்னை: (25-11-1936) தாதுஷூ கார்த்திகைமீ 10உ புதன்கிழமை [இதழ்—50

தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்

தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் யூனியன்

நிறைவேறிய தீர்மானங்கள்

(ஒரு நிருபர்)

திருச்சி, நவ, 20

1936-ம் வருஷம் நவம்பர் மாதம் 18-ந் தேதி புதன்கிழமை மாலை 6-மணிக்கு சங்க மைதானத்தில் தலைவர் டி. கிருஷ்ணசாமி பிள்ளை தலைமையின் கீழ் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தலைவர் முகவுரையாகப் பேசியதாவது:—தற்காலம் வாரத்திற்கு 40 மணி நேரம் வேலை வேண்டுமென்று கேட்கும் இக்காலத்து, நாம் நமது சங்கத்தை வலுவடையச் செய்யாததின் காரணந்தான், பொன் மலையில் இன்ஜினீரிங் டிபார்ட்மெண்டில் தினம் 9 1/4 மணி நேரம் வேலை வாங்கி வரும் பரிதாபகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவுக்கும் காரணம் நமக்குள்ளேயே சில கோடாரிக் காம்புகள் வீண் புகார் செய்து சங்கத்தைக் காட்டிக் கொடுத்து பிளவுபடுத்த முற்படுவதே யாகும். அவர்களின் நடத்தை கண்டிக்கத் தக்கதாகும். நமது ஓட்டுரிமை ரத்தான விஷயத்தைப் பற்றி நமது சங்க நிர்வாகஸ்தர்களும் நமது அகில இந்தியத் தலைவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, நமது சர்க்கார் ஓட்டுரிமை கொடுப்பதாக ஒப்புக்கொண்டதற்கு நன்றி செலுத்துவதோடு இதே போன்று வரப்போகும் சீர்திருத்தத்தில் மேல் சபையில் தொழிலாளர்களுக்கென பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென நமது தலைவர் திரு. என். எம். ஜோஷியவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்வதாகப் பேசினர். பின்னர் மதுரையில் நடைபெறப் போகும் மத்திய சங்க வருடாந்திரப் பொதுக் கூட்டத்தைப் பற்றியும் விபரமாகத் தெரிவித்து சங்கத்தை வலுவடையச் செய்வதற்கு ஒவ்வொருவரும் அங்கத்தினராக வேண்டுமெனக் கேட்டுக் கொண்டதும், சங்கத்தின் மத்திய நிர்வாக சபைக்கு 8 நிர்வாகஸ்தர்களையும் மதுரையில் 24, 25-ந் தேதிகளில் நடைபெறப் போகும் வருடாந்திரப் பொதுக் கூட்டத்திற்கு 32 டெலிகேட்டுகளையும், முறையே பிரேரிக்கப்பட்டு ஆமோதிக்கப்பட்டதும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

தீர்மானம்

சென்ற 29—10—36-ந் தேதி நடந்த பொதுக் கூட்டத் தீர்மானத்தை அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாதது பற்றி இக்கூட்டம் வருந்துவதுடன் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென இக் கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

பின்னர் திரு. தங்கவேலு பிள்ளை மதுரையில் நடைபெறப் போகும் நமது சங்கத்தின் வருடாந்திரப் பொதுக் கூட்டத்தைப் பற்றியும், அது சம்பந்தமாக நமது தலைவர் திரு. வி. வி. கிரி எவ்வித புகாருக்கும் இடமின்றி பூர்வாங்கமாக அங்கத்தினர்கள் ஜாப்தாவை சுமார் ஒரு மாதகாலம் தங்களின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு நாளது 24,25ந் தேதிகளில் தேர்தல் நடைபெறப் போவதால் அது செல்லத் தக்கது என்று சொல்லுவதற்கில்லையென்றும், அவ்வாறு ஆக்ஷேபிப்பவர்கள் சங்கத்திற்கு ஒரு பைசா வேனும் கொடுக்காதவர்களும், சங்க அங்கத்தினரல்லாதவர்களும், சங்க முன்னேற்றத்தைப் பாழ்படுத்துபவர்களுமாவார்களென்றும், அவர்களின் வார்த்தைக்கு சர்க்கார் அதிகாரிகள் செவிசாய்க்கக் கூடாதென்றும் பேசி முடித்ததும், காரியதரிசியால் மேற்கண்ட தீர்மானத்தையும், நிர்வாகஸ்தர்கள், டெலிகேட்டுகள் பெயர்களையும் மறுமுறை வாசிக்கப்பட்டுக் கரகோஷத்தினிடையே ஏக மனதாக ஒப்புக்கொள்ளப் பட்டதும், தலைவர் இரவு 7-15 மணிக்கு கூட்டத்தை இனிது கலைத்தார்.

அருப்புக்கோட்டை

கைத்தறி நெசவுத் தொழிலாளர் பொதுக் கூட்டம்

அருப்புக்கோட்டை, நவ, 23

அருப்புக்கோட்டை 19-11-36-ந் தேதி மாலை 3 மணிக்குச் சொக்கலிங்கபுரம் அக்கிராரம் மைதானத்தில் கைத்தறி நெசவுத் தொழிலாளரின் சங்கத்தின் சார்பாக, ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மேற்படி கூட்டத்திற்குச் சுமார் 700 ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள். ஷை கூட்டத்திற்கு தெற்குத் தெரு தோழர் வ. பெ. ச. சிங்கம் செட்டியார் அவர்கள் தலைமை வகித்து முகவுரையாக கூட்டத்தின் நோக்கத்தைப் பற்றிப் பேசிய பின்னர், தோழர் வி. ச. சு. பு. வீரய்யா அவர்களைத் தொழிலாளரின் விஷயத்தைப்பற்றிப் பேசும்படி கேட்டுக் கொண்டார்.

தோழர் வீ. ச. சு. பு. வீரய்யா பேசியதாவது:—

தற்சமயம் 23-10-36ந் தேதி கூட்டத்தில் தீர்மானித்த கூலியை இப்பொழுது வியாபாரிகள் குறைப்பது தறிக்காரர்கள் வாயில் மண்ணைவாரிப் போட்டது போல் ஆகுமல்லவா? ஆகையால் தறிக்காரர்கள் யாவரும் கூலியைக் குறைத்தால் நெசவு செய்யக் கூடாது என்றும் முந்தின கூலியைக் கொடுக்கும் வரை வேலை நிறுத்தம் செய்து, ஒற்றுமையுடன் போராட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

பின்னர் தோழர் ஈ. காருமணி பேசியதாவது:—

தற்சமயம் நெசவுக்காரர்களுக்கு வியாபாரிகள் கொடுக்கும் கூலியானது மிகவும் குறைவானது. நெசவு வேலைக்காரன் ஒரு காலைக்கு வேலை செய்தால் அணா 3 தான் கூலி கிடைக்கிறது. இந்தக் கூலியிலும் குறைத்து விட்டால் நெசவுக்காரர்கள் பாடு மிகவும் திண்டாட்டமாகி ஊரை விட்டு ஓடும்படியான நிலைமை வந்து சேரும் என்று பேசிப் பின்னர் வியாபாரிகள் முன் கூலியைக் கொடுக்கும் வரை நெசவுத் தொழிலாளர்கள் ஒருவரும் வேலை செய்யக் கூடாது. வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பின்னர் தலைவர் முடிவுரை கூறியபின் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

நம் ஊரில் 25,000 நெசவுக்காரர்கள் இருந்தும் கூட்டத்திற்குச் சொற்ப ஜனங்களே வந்திருப்பதால் நாளைய தினம் கூட்டத்தை ஒத்தி வைத்து ஆண், பெண் அனைவரும் வேலை நிறுத்தம் செய்து காலை 8-மணிக்கு இதே இடத்தில் கூட்டம் கூட வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. பின்னர், காரியதரிசி வந்தனோபசாரத்துடன் திரு. டி. வி. சோமய்யா தொழிலாளர்களின் மேல், பாட்டு பாடியபின் கூட்டம் இனிது கலைந்தது.

மற்றோர் பொதுக் கூட்டம்

20-11-36ந் தேதி காலை 8-மணிக்கு தண்டோரா மூலமாகவும், (விளம்பரம் செய்யும் தேவாங்கர் ஜாதி பிள்ளை) பசவன் மூலமாகவும் நெசவுக்காரர்கள் ஒருவரும் நெசவு செய்யக் கூடாது என விளம்பரம் செய்தார்கள். காலை 9-மணிக்குச் சொக்கலிங்கபுரம் அக்கிராரம் தெரு மைதானத்தில் 5000 தொழிலாளர்கள் நிறைந்த மாபெருங் கூட்டம் ஷை சங்கத்தின் தலைவர் திரு. க. கு. மு. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் இருந்த ஜனங்கள் யாவரும் ஒரே அமைதியுடன் நிசப்தமாக இருந்தனர். தலைவர் கூட்டத்தின் நோக்கத்தைப்பற்றித் தெளிவாய்ப் பேசிப் பின்னர் தோழர் வி. ச. சு. பு. வீரய்யா அவர்களைப் பேசும்படி கேட்டுக் கொண்டார். அந்தச் சமயத்தில் திரு. டி. வி. சோமய்யா தொழிலாளர்களின் கஷ்டத்தைப் பற்றி பாட்டுப் பாடினர். பின்னர் வி. ச. சு. பு. வீரய்யா அவர்கள் நேற்று ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தில் பேச வேண்டிய சில விஷயத்தைப்பற்றி பேசி விட்டு இப்பொழுது தீர்மானம் செய்ய வேண்டியது என்ன என்று ஜனங்களின் மனதில் ஊடுருவிப் பாயும்படி பேசினர். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானம் எல்லா ஜனங்களாலும் ஏகமனதாகத் தீர்மானிக்கலாயிற்று.

தீர்மானம்

1. வியாபாரிகளிடம் சென்று முன் கூலியைப் போல் இனிமேல் கொடுக்க வேண்டும் என்று கேட்க 13 மெம்பர்கள் (புளியம் பட்டி, அருப்புக்கோட்டை, மணி நகரம் தெற்குத் தெரு, மேற்குத் தெரு, சொக்கலிங்கபுரம்) 6. ஊருக்கு தேர்ந்தெடுத்து அனுப்புதல்.

2. முன் கூலியையே வியாபாரிகள் கொடுப்பதாக ஒப்புக் கொள்ளும் வரைக்கும் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்வது.

3. ஷை தொழிலாளர் யாராவது மீறி வேலை செய்தால் வேலை செய்வதை தடுப்பதற்கு 5-தொண்டர்களை நியமிப்பது.

4. வேலை நிறுத்தத்தினால் உணவுக்கு இல்லாத தொழிலாளிகளுக்குச் சங்கத்தில் உணவுப் பொருள் கொடுத்து அவர்களுக்கு உதவி அளிப்பது.

5. தீர்மானத்தின்படி கமிட்டி மெம்பர் 13-ம், தொண்டர் 5-பேரும் நியமிக்கப்பட்டது. ஷை தொண்டர்கள் 5-பேருக்கு ஷை சங்கத்தின் சார்பாக சாப்பாடு சப்ளை செய்ய வேண்டும் என்று எல்லா ஜனங்களாலும் ஏகமனதாகத் தீர்மானிக்கலாயிற்று.

பின் மாலை 5-மணிக்கு வெகு உற்சாகத்துடன் கூட்டம் கலைந்தது.

ஆம்பூர் இந்து பாடசாலைத் திறப்பு விழா

ஜனாப் சி. ஹக்கீம் சாஹிபுடன் கல்வி மந்திரி விஜயம்

(நமது நிருபர்)

வேலூர், நவ, 20

ஆம்பூர் இந்து உயர்தரப் பாடசாலை புதிய கட்டடத் திறப்புவிழா வைபவத்திற்கு வந்த கல்வி மந்திரி கனம் குமார ராஜா எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்களும், ஜனாப். சி. அப்துல் ஹக்கீம் சாஹிபவர்களும், அவ்வூர் பஞ்சாயத்து யூனியன் போர்டு ஆபிசுக்குக் காலை 10-மணிக்கு வந்தனர். அப்பொழுது யூனியன் போர்டு தலைவர் அவர்களை வரவேற்று மாலையிட்டு உபசரித்தார். பின், இருவரும் தமக்களித்த வரவேற்புக்கு வந்தனங்கூறி, யூனியன் போர்டுகள் நடைபெற வேண்டிய முறை, சிக்கனம், நகர சுத்தம் முதலியவைகளில் கவனம் செலுத்திப் பாடுபட வேண்டுமென்றும் கூறினர். மற்றும், நகரின் தண்ணீர் வசதிக்கான விஷயங்களில் கவனம் செலுத்துவதாகவும் சொல்லினர். அன்றியும், காங்கிரஸ்காரர்கள் தேர்தலுக்கா பொதுமக்களை ஏமாற்ற வானத்தை வில்லாய் வளைப்போம், மணலைக்கயிறாகத் திரிப்போம் என்று கூறும் யோக்யதைப் பொறுப்பில்லாத் தன்மையைக் கண்டித்துப் பேசினர். காங்கிரஸ்காரர்கள் ஆடும் கபட நாடகத்தில் மோகங் கொண்டு வாக்காளர்கள் தம் வாக்குகளை அவர்களுக்குக் கொடுத்து மோசம் போகாதிருக்கும்படி எச்சரித்து, ஜஸ்டிஸ் கட்சியின் தீவிர முயற்சியையும், செய்கையும் சொல்லி, அதையே மக்கள் ஆதரிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர்.

பிறகு அங்கிருந்து விடைபெற்றுச் சென்று எம். இ. எஸ். ஐ. எம். உயர்தரப்பள்ளியை யடைந்தனர். அங்கு அப்பள்ளித் தலைமையாசிரியர் அவர்களுக்கு மாலையிட்டு அழைத்துச் சென்று பள்ளியைச் சுற்றிக் காட்டினார். பின்பு 11-மணிக்கு [illegible] கனம் குமார ராஜா சென்னைக்கும், திரு. சாஹிபு விஷாரத்திற்கும் புறப்பட்டனர்.

இளைஞர் மன்ற வாராந்திரக் கூட்டம்

(ஒரு நிருபர்)

போளூர், நவ, 20

இவ்வூர் இளைஞர் மன்றத்தின் வாராந்திரக் கூட்டம் சென்ற 19-11-36 இரவு 9-மணிக்கு மன்றக் கட்டடத்தில் திரு. மாணிக்க முதலியார் அவர்கள் தலைமையில் கூடியது. திரு. டி. ஜெயதேவன் பெண்ணுரிமைக் கீதங்கள் பாடினர். இனாம் மசோதா நிறைவேறப்பட்டதை யொட்டி கனம் பொப்பிலி ராஜாவுக்கு அனுப்பப்பட்ட தீர்மானத்திற்கு ஷையார் அனுப்பிய கடிதத்தையும், சென்ற வார நிகழ்ச்சிக் குறிப்பையும் காரியதரிசி வாசித்தார். தலைவர் முகவுரையாக சில வார்த்தைகள் பேசியபின் திரு. ஆர். சபாபதி "இந்தியாவில் பெண் கல்வி" என்பது பற்றிய கட்டுரையை வாசித்தார். திரு. க. சுப்பிரமணியம் ஆலயப் பிரவேச உரிமை கொடுத்த திருவாங்கூர் அரசரது பிரகடனத்திற்காக மேற்படி அரசரையும் கவர்ன்மெண்டையும் பாராட்டிக் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரேரபிக்க அது ஏகமனதாய் நிறைவேறியது. காரியதரிசி வந்தன உபசாரம் கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

தீர்மானம்

"தனது 25-வது பிறந்த தினத்தன்று தனது சமஸ்தானத்திலுள்ள எல்லா தேவாலயங்களையும் தீண்டாதவர்களுக்கெல்லாம் திறந்து விட்டு விட்டதாகப் பிரகடனஞ் செய்த கனம் பொருந்திய திருவிதாங்கூர் அரசரது செய்கையை இம்மன்றம் நன்றியறிதலுடன் கூடிய சந்தோஷத்துடன் வரவேற்பதுடன் இந்து மதத்தை வைதிகக் குழியிலிருந்து மீட்க, தொன்று தொட்டு பல ரிஷிகள் ஆச்சாரியார்கள் செய்த ஜீவகாருண்யச் செய்கை முற்றுப்பெறாது கனம் திருவாங்கூர் அரசராலும் அவருக்கு அநுசரணையாக இருந்த உத்தியோகஸ்தர்களாலுமே முற்றுப் பெற்றதை யொட்டி மேற்படியார்களை மனதாரப் பாராட்டுகிறது!

தமிழ் நாடும், ஹிந்தி பாஷையும்

(பி. எம். தாஸ்)

வெகு காலமாக ஆதரவு குன்றியும், மறைந்தும் கிடந்த நம் தாய் மொழியாம் தமிழ் பாஷையை நம் தமிழறிந்த பெரியோர்கள் இனியாகிலும் அதனை முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமென்னும் பேராவுடனும், நல்லுணர்ச்சியுடனும் ஏதோ நல்ல காலமாக முன் வந்துள்ள இச்சமயத்தில் சிவ பூசையில் கரடியை விட்டதுபோல, இத்தென்னிந்தியாவிற்குச் சம்பந்தப்படாத ஆங்கிலேயத்தைப் போல் ஓர் அந்நிய வட மாகாணப் பாஷையாகிய ஹிந்தியை இத்தமிழ் நாட்டிலும் மூல பாஷையாகச் செய்தல் வேண்டுமென காங்கிரஸ் தேசாபிமானிகள் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றனர். இஃது நம் தமிழ் நாட்டிற்கே சொல்லொணா பெருந் தீங்கையும், அவமானத்தையும் விளைவிப்பதுடன் நம் தாய் பாஷையை மறுபடியும் அடியோடே பாதாளத்திலழுத்திப் போடுவதற்கும் ஏதுவாகும்.

இந்தியாவை பாரத மாதாவென்றும், தங்களுக்குத் தாய் நாடென்றும், தாங்கள் தாய் நாட்டுப் பக்தர்களென்றும் பறை யடித்து நடித்து வரும் இவர்கள், தங்களைப் போன்ற இந்திய தேச பக்தருடைய தாய் பாஷைகளை நிர் மூலஞ் செய்யக் கங்கணங்கட்டுவதும் தாய் நாட்டின் பக்தியாகுமோ?

ஆதலால், சகல விதத்திலும் மேம்பாடடைந்து, நறுமணம் வீசும் அருமொழியாம், தமிழ் பாஷையை ஒவ்வொரு தமிழபிமானியும், தன்னுயிரினும் பெரிதாகக் கருதி, நம் தமிழ் பாஷைக்குப் பங்கம் நேரிடாமல் அதனை நிலை நாட்டுவதற்கு முனைந்து வருவார்களென நம்புகின்றேன்.

இத்தேசத்திலுள்ள அநேக இந்திய மன்னர்கள் தங்களுடைய தேசத்தின் தாய் பாஷைகளை மூல பாஷையாக வழங்கி வருவதைப் போலவே, இத் தென் மாகாணத்தில் முக்கிய பாஷையாகிய தமிழை மூல பாஷையாகச் செய்தால் பெரிதும் போற்றத் தக்கதாகும்.

"கிராம ஊழியன்"

வாரப் பதிப்பு.

ஆசிரியர்:—S. பூரணம் பிள்ளை.

கிராமப் புனருத்தாரணத்தின் பொருட்டுத் தோன்றி மாதம் இரு முறையாக வெளிவந்த "கிராம ஊழியன்" இரண்டாம் ஆண்டின் ஆரம்பமாகிய 25—10—36உ முதல் பிரதி ஞாயிறுதோறும், நாட்டின் நலத்திற்கான நல்லோரின் கட்டுரைகள் தாங்கி எல்லோரும் கோரும் நல்லதோர் முறையில் வெளிவருகிறது. எல்லா இடங்களிலும் ஏஜெண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதுக.

உள்நாடு: வருட சந்தா ரூ. 3. வெளிநாடு: வருட சந்தா ரூ. 5.

மானேஜர்:—"கிராம ஊழியன்",
துறையூர். (திருச்சி ஜில்லா)

எது?

தமிழ்நாட்டில் குறைந்த சந்தாவில்
அதிக பக்கங்களோடு வெளிவரும் தமிழ் மாதப் பத்திரிகை.

"சித்தன்"

ஒன்றே. இனிய கதைகள், ஹாஸ்யம், உலகச் செய்தி, வைத்தியக் குறிப்பு, சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன நிறைந்தது.

வருட சந்தா அணா (8) எட்டே. வெளிநாடு ரூ. 1.

மாதிரிப் பிரதி இனாம். விளம்பர விகிதம் மிகவும் குறைவு.

விபரங்களுக்கு எழுதவும்:—
மானேஜர்:—"சித்தன்", பழனி, S. I.

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN, AT THE JUSTICE PRINTING WORKS, 14, MOUNT ROAD, MADRAS. EDITOR: PANDIT S. MUTHUSWAMI PILLAI.

விலை அரை அணா | 12 பக்கங்கள் | மலாய் நாட்டில் 5 சதம் | Regd. No. M. 3298.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா
முன் பணம்

உள்நாடு		
1 மாதம்	...	0 6 0
3 மாதம்	...	1 0 0
6 மாதம்	...	1 14 0
1 வருடம்	...	3 10 0
சென்னைக்கு		
1 மாதம்	...	0 4 0
3 மாதம்	...	0 10 0
6 மாதம்	...	1 4 0
1 வருடம்	...	2 6 0

விடுதலை

VIDUTHALAI
(வாரம் இருமுறை வெளிவரும்)
ஆசிரியர்: பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா.
முன் பணம்

வெளிநாடு		
1 மாதம்	...	0 10 0
3 மாதம்	...	1 14 0
6 மாதம்	...	3 12 0
1 வருடம்	...	7 4 0

சர்க்கார், முனிசிபாலிட்டி,
ஜில்லா போர்டுகளுக்கு:
உள்நாடு: வருடம் ரூ. 7 8 0
சென்னை: " ரூ. 4 8 0

மலர்-2] சென்னை: (28-11-1936) தாதுஹு கார்த்திகை மீ 13உ சனிக்கிழமை [இதழ்-51

பள்ளியில் பயின்றறியா நாயக்கர்

(o)

பண்டித முதலியாருக்கு பதில்

எட்டுக்கும் மூளைக்கும் உள்ள வித்யாசம்

(o)

"நூருக் கற்கினும் நூலறி வேன் செய்யும்"

—மனோன்மணீயம்.

"(நாயக்கர்) தன் புத்தியையே, தன் வலிமையையே, தன் பொறுப்பையே நம்பி தன் காலில் நிற்கக்கூடிய தன்மையிலேயே நடக்கிறவர்."

"வாலிபர் தேவையானால் ஈசல் புற்றில் இருந்து வருவதுபோல் வேண்டும்போது உண்டாக்கிக் கொள்ள அவருக்குத் தெரியும்."

"தலைமை ஸ்தானம் வேண்டுமானால் தான் உண்டாக்கிக் கொள்வாரே தவிர, தன்னை இன்னொருவன் தலைவராக்கும்படி செய்துகொள்ள மாட்டார். அத்தலைமையின் மேல் அரை நிமிஷமும் இருக்கவுமாட்டார், உலகோர் இன்ன விதம் சொல்ல வேண்டும் என்று உலக அபிப்பிராயத்தைத் தானே உண்டாக்க முயற்சிப்பாரே ஒழிய, உலக அபிப்பிராயம் இப்படி இருக்கிறதே என்று ஒரு சிறிதும் வருந்த மாட்டார்.

"மனிதன் கொஞ்சநாள் வாழ்வதானாலும், தன்னை நம்பி, தன் காலில் நின்று, தன் இஷ்டம் போல் இருந்து, சாவதே சுயமரியாதை என்று கருதியிருப்பவர் அவர்!"

—குடி அரசு

பாருங்கள் நாயக்கரின் தன்னம்பிக்கையை—ஆத்ம போதத்தை! அம்மவோ! கல்லினும்—இரும்பினும்—வைரத்தினும் வலிதாயிருக்கின்றதே!! கோவில் வேண்டாம், குளம் வேண்டாம், கடவுள் வேண்டாம், மதம் வேண்டாம் என்னும் நாயக்கரை நாஸ்திகன் என்கிறது அறிவற்ற உலகம்!

நாயக்கரின் தன் நம்பிக்கை—ஆத்ம போதம் நாஸ்திகமானால் அத்தகைய நாஸ்திகம் இந்தியர்கள் 35 கோடிப் பேரையும் பிடிக்க வேண்டுமென்பதே நமது ஆசை.

நாயக்கரின் நாஸ்திக மனப்பான்மை இந்தியர்களுக்கெல்லாம் தோன்றிவிட்டால் இந்தியா அன்றே விடுதலை பெறாதா? உலக சாம்ராஜ்ய கோஷ்டியில் இந்தியா முதல் இடம் பெறாதா?

—ஆசிரியர்.

"குடி அரசு" எழுதுவதாவது:—

தோழர் கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் 13-11-36-ந் தேதி "நவசக்தி"யில் நாயக்கர் என்ற தலைப்பில் ஈ. வெ. ராமசாமியை சில கேள்விகள் கேட்டு சில புத்திமதி கூறியிருக்கிறார். அதற்காக முதலியாருக்கு நன்றி செலுத்தி விடையளிப்போம்.

தோழர் முதலியார் அவர்கள், சர். கே. வி. ரெட்டி நாயுடுவும், சர். மகம்மது உஸ்மானும், குமார ராஜா முத்தைய செட்டியாரும் செட்டி நாட்டில் சமதர்மத்தைத் தாக்கிப் பேசி இருக்கிறார்கள் என்றும், இம்மூவர் பேச்சைப் பார்த்த பின்பு ராமசாமியாரே நீர் ஜஸ்டிஸ் கட்சியிலேயே இருக்கப் போகிறீரா? அப்படியானால் உம்மை நம்பிய இளைஞர் கதி என்ன? என்றும் கேட்டிருக்கிறார். ஆகவே, இந்த மூன்று விஷயம் பதிலளிக்கப்பட வேண்டியதாய் இருக்கிறது.

செய்யாமல் செய்த உதவி

அதற்கு நாம் மகிழ்ச்சியோடு விடை பகருகிறோம். இக்கேள்விகள் கேட்டதை நலமொரு சமயத்தில் நமக்குச் செய்யாமல் செய்த உதவி போல கருதி விடை பகருகிறோம்.

இந்த இடத்தில் தோழர் முதலியார் அவர்கள் பிரயோகித்திருக்கும் சமதர்மம் என்பதிற்குப் பொருளென்ன? கடவுள், மோக்ஷம், ஆத்மா என்கின்ற, விஞ்ஞானத்துக்கு அதீதப்பட்ட வார்த்தைகள் போன்ற வார்த்தையாய் சமதர்மம் என்ற வார்த்தையையும் கருதி பிரயோகித்திருக்கிறாரா? அல்லது நம் போன்ற எளிய அறிவுள்ளவர்களுக்கும் புரியும்படியான வார்த்தை என்று கருதி பிரயோகித்திருக்கிறாரா? என்பது எனது முதல் விடையாகும். இதை முதலியார் கருணை இருந்தால் அதை அடுத்த முதல் சந்தர்ப்பத்தில் விளக்கித்தர விழைகின்றோம். அது நிற்க,

வியவகார முறையில் விடை பகருகிறோம்.

சமதர்மம் வேண்டாம் என்கின்ற செட்டியாரும், ரெட்டியாரும், சாயபும் ஜஸ்டிஸ் கட்சியில் இருப்பதால் உண்மை சமதர்மிகள் என்பவர்களுக்கு ஜஸ்டிஸ் கட்சியில் இடமில்லாமல் போக வேண்டியது தான் என்பது முதலியார் அவர்களின் முடிந்த முடிவானால் காங்கரசில் தோழர்கள் காந்தியார், படேல், ராஜேந்திரர், சத்தியமூர்த்தியார், ஆச்சாரியார், ஜார்ஜ் ஜோசப், ஜமால் மகம்மது, நாயுடு முதலியவர்கள் சமதர்மத்தைப்பற்றிப் பேசுவதும் தோழர் நேரு சமதர்மத்தைப் பற்றிப் பேசுவதும், தோழர்கள் மசானி, சர்மா, பிரகாசம் முதலியவர்கள் சமதர்மத்தைப்பற்றிப் பேசுவதும், ஆன கருத்துகளின்படி இவர்கள் எல்லோரும் காங்கரசில் இருக்க இடமுண்டா என்று அறிய ஆசைப்படுகிறோம்.

அதையும் முதல் அவசர சந்தர்ப்பத்தில் முதலியார் அவர்கள் விளக்குவார் என்று நம்புகிறோம்.

சத்தியமூர்த்தியார்

சத்தியமூர்த்தியார் என்றால் திருமயம் பஞ்சாங்க புரோகிதப் பார்ப்பனர் வம்ச சத்தியமூர்த்தியார் என்று நாம் இப்பொழுது பிரஸ்தாபிக்கவில்லை. தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவர் தமிழ்நாடு காங்கரஸ் தொண்டர்களும், பிரமுகர்களும் கைகட்டி வாய் பொத்தி தலை குனிந்து வணங்கும் தலைவர் சத்தியமூர்த்தி அவர்கள் ஆனைமலையில் காங்கரஸ் தலைவர் என்கின்ற முறையில் வெள்ளைக்கார முதலாளிமார்கள் முன் சமதர்மத்தைப் பற்றியும் காங்கரஸ் கொள்கையைப்பற்றியும், பேசின பேச்சுகளை நமது மதிப்பிற்குரிய தோழர் முதலியார் அவர்கள் கண்டும், கேட்டும், வாசித்தும், நினைத்தும் உள்ளாரே. அங்ஙனமிருக்க, அந்த முதலியாருக்கு இன்னமும் காங்கரசில் இருக்க இடம் இருந்தால் எப்படி இருந்தது என்பதை தெரிவித்தருளினால் தோழர் ராமசாமியாரைக் கடாவும் கடாவுக்கு விடை கிடைக்கலாம் என்று விண்ணப்பித்துக்கொள்ளுகிறோம்.

அன்றியும், முதலியார்வாள் தமது எந்தக் கொள்கையைச் சிறிதாவது விட்டுக் கொடுக்காமல் காங்கரசில் இருந்து காங்கரஸ் தலைவர்களை ஆதரித்து வருகிறார் என்பதை அறிய விழைகின்றோம்.

காந்தியில்லாத காங்கரஸ்

காங்கரசில் காந்தியார் கொள்கைகளில் எது இன்று காங்கரஸ் கொள்கையாக இருந்து வருகிறது என்பதையும், காந்தியார் காங்கரசில் தாம் இருப்பது தகுதி அல்ல என்று கருதி நாலணா மெம்பராகக் கூட இல்லாமல் வெளிப் போந்திருக்க, காந்தியடிகளை வழிகாட்டியாக - உபதேச மூர்த்தியாகக் கொண்ட முதலியார்வாள் எந்த விதமான ஆதாரத்தின் மீது காங்கரசில் இருந்து கொண்டு காந்தியைப் புகழ்ந்து ஏற்றிப் போற்றி ஆதரித்துக் கொண்டு இருக்கிறார் என்பது விளக்கப் பட்டால் ராமசாமியார் ஜஸ்டிஸ் கட்சியில் இருப்பதற்கு இடம் உண்டா இல்லையா என்பது விளங்காதா? என்று கருதுகிறோம்.

போற்றுதலுக்குக் காரணம் என்ன?

காந்தியார் அவர்களை சத்தியமூர்த்தி அவர்களும் போற்றுகிறார். நேரு அவர்களும் போற்றுகிறார்; இர்வின் பிரபும் போற்றினார்; மற்றும் பலரும் போற்றுகிறார்கள். அவைகளைப் பற்றி கவனிக்க வேண்டியதில்லை. ஆனால், முதல் மூவர் போற்றுவது போலத் தான் முதலியார் அவர்களும் காந்தியாரைப் போற்றுகிறாரா அல்லது வேறு காரணங்களுக்காகவா, அல்லது ஒவ்வொருவர் போற்றுகிற காரணங்களிலும் சிறிது சிறிது எடுத்துச் சேர்த்தா என்பதை முதலியார் அவர்கள் உண்மையைத் தீர விருத்திக் கொண்டால் ராமசாமியா

டின் கட்சியில் இடம் உண்டா இல்லையா என்பது தெளிவாகலாம் என்று கருதுகிறோம்.

இப்படி இன்னம் அநேக விஷயங்கள் முதலியாரின் தெளிவுக்கு உதவியாக எடுத்துக் காட்டலாம்.

எனினும், வியவகார முறையை விடுத்து அதாவது கனல் வாதம், புனல் வாதம் விடுத்து உண்மை விளக்கம் முறையில் சிறிது தெளிவிக்க விரும்புகிறோம்.

உண்மை விளக்கம்

ராமசாமியார் சமதர்மத்தில் கருத்துக் கொண்டவர்; ஆர்வம் கொண்டவர். அதுவே இன்று நாடும் மனித சமூகக் குறைகள் பெரும்பாலானவற்றிற்கும் மருந்து என்பதை முடிந்த முடிவாகக் கொண்டவர். ஆனால், சமதர்மம் பொருளாதார சமதர்மம் என்றாலும், அரசியல் சமதர்மம் என்றாலும், சமுதாய சமதர்மம் என்றாலும், தேசிய சமதர்மம் என்றாலும் வார்த்தை வேறுபாடுகள், இட்ட வேறுபாடுகள், செய்முறை வரிசைக் கிரம வேறுபாடுகள் ஆகிய பல சமதர்மம் என்பதோடு சதா போரிட்டு வருகின்றன என்பதை முதலியார் அவர்கள் ஒப்புக்கொள்வார் என்றே கருதுகிறோம். அதை "நவசக்தி" தலையங்க குறிப்புகளிலும் காண்கிறோம்.

சமதர்ம ரகங்கள்

ராமசாமியின் சமதர்மம், காந்தியாரின் சமதர்மம், நேருவின் சமதர்மம், ருஷ்யாவின் சமதர்மம், ஜர்மனியின் சமதர்மம், ஸ்பெயினின் சமதர்மம், இந்தியாவின் பழைய சமதர்மம் என்பன போன்ற பல சமதர்மம் பேர், இடம், காலம் ஆகியவைகளையும் கொண்டு சமதர்மம் விவாதப் போரிட்டு வருகின்றது என்பதும் முதலியார் அவர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள் என்றே கருதுகிறோம்.

இவைகள் தவிர எந்த இயல் சமதர்மமானாலும் எந்த பேர் சமதர்மமானாலும் எந்த தேச எந்த கால சமதர்மமானாலும் இடம், பொருள், ஏவல் ஆகியவைகளைப் பொறுத்துத்தான் கையாள வேண்டியதாகுமே தவிர எல்லா இடத்திலும், எந்நேரமும், எக்கொள்கையிலும் ஒரேமாதிரி கையாளுவதென்பது அறிஞர்கடன் அல்ல என்பதையும் முதலியார் அவர்கள் அனுமதிப்பார்கள் என்றே கருதுகிறோம்.

ஆகவே, தயவு செய்து முதலியார் அவர்கள் ராமசாமியார் சமதர்மத்தை விட்டுவிட்டார் என்றோ, ராமசாமியார் சமதர்மத்துக்கு ஜஸ்டிஸ் கட்சியில் இடமில்லை என்றோ கருதாமல் இருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

ராமசாமி சமதர்மம்

ராமசாமியார் சமதர்மக்காரர் தான். ஆனால் அவரது சமதர்மம் சரண் மார்க்

வைப் பார்த்தோ, லெனினைப் பார்த்தோ ஏற்பட்டதல்ல என்பதையும் அல்லது அவர்களிடம் இருந்து கற்றுக்கொண்டவை அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அன்றியும் ராமசாமியின் சமதர்மம் வயிற்றுப் பிழைப்புக்கோ, மேடைப் பிரசாரத்துக்கோ, தலைமைப் பதவிக்கோ, ஊர்மேய்வதுக்கோ ஏற்பட்டதல்ல என்பதையும் முதலியார் அவர்கள் உணர வேண்டுகிறோம்.

அன்றியும், ராமசாமியாரின் சமதர்மமானது, ஜஸ்டிஸ் கட்சியையோ, காங்கரசையோ, இளைஞர்களையோ முதியோர்களையோ செல்வ ராஜாக்களையோ, காலடிகளையோ லட்சியம் செய்தோ, நம்பியோ பிரசாரம் செய்யவோ, அமுலுக்குக் கொண்டு வரச் செய்யவோ வேண்டியது அல்ல.

அன்றியும், இன்று ராமசாமியார் தனது சமதர்மத்தை நடத்துவது சமதர்ம பூமியில் இருந்தோ, பொது உடைமை ஆட்சியிலிருந்தோ நடத்துவதாகக் கருதிக் கொண்டிருக்கும் பெரும் ஆளல்ல. மற்றும் ராமசாமி தனது சமதர்மத்துக்கு எந்த நபருடைய நற்சாக்ஷி பத்திரத்தையோ, ஆமோதிப்பையோ எதிர்பார்த்து நடத்த வேண்டியவரும் அல்ல.

அதற்கு ஆக சங்கமோ, ஸ்தாபனமோ குறிப்பிட வேண்டும் என்ற கவலை கொண்டவரும் அல்ல.

தானே தனக்குத் துணை

மற்றென்ன வென்றால் தன் புத்தியையே தன் வலிமையையே தன் பொறுப்பையே நம்பி தன் காலில் நிற்கக் கூடிய தன்மையிலேயே நடக்கிறவர்.

அதற்கு அவருக்கு துணைவர்கள் யாராவது உண்டு அல்லது வேண்டும் என்று ஏற்பட்டால் "குணம் குடிகொண்டால் உயிருக்கு உயிர் தான், இல்லாவிட்டால் என்னமோ" என்கின்ற மாதிரி தன்னை நம்பி தன்னை அடைந்து தனது கொள்கையை கமா, புள்ளி மாறுதல் இல்லாமல் ஒப்புக்கொள்ளுகிறவர் எவரோ அவரே துணைவர்; அவரே நண்பர் அவரே தோழர். மற்றவர் யாரானாலும் உலக வியவகாரத்துக்கு நண்பரே கூட்டாளியே அல்லாமல் உண்மைக்கோ சமதர்ம முயற்சிக்கோ அல்ல என்பது அவர் கருத்து.

வேண்டும்போது தானாக வரும்

வாலிபர் தேவையானால் ஈசல் புற்றில் இருந்து வருவது போல் வேண்டும்போது உண்டாக்கிக் கொள்ள அவருக்குத்தெரியும் அவர் எந்த வாலிபருக்கும் எவ்வித வாக்குத் தத்தமும் கொள்கை உறுதியும் கொடுத்து எப்போதும் யாரையும் அழைத்ததில்லை. சேர்த்ததுமில்லை. வாலிபர் வருவதும் போவதும் சர்வ சாதாரணமான அறிவில

வங்காளத்தில் பிளவு

ஒழிந்த தேசியக் கட்சி அமைப்பு

தேர்தலில் போட்டி போடத் தீர்மானம்

வங்காளத்தில் ஹிந்து தேசியக் கட்சி யென ஒரு கட்சி சமீபத்தில் அமைக்கப் பட்டிருக்கிறது. இதன் தேர்தல் விக்ஞாபனத்தில் வங்காள ஹிந்துக்களுக்கு ஒரு பெரிய கெடுதி யேற்படுவதாக விருக்கிறதென்றும், வகுப்புத் தீர்ப்பு விஷயமாகக் காங்கிரஸ் தலைவரின் அபிப்பிராயத்திலிருந்து வங்காள ஹிந்துக்களுக்கு அரசியல் விஷயங்களில் ஒருபெரிய ஆபத்தே ஏற்படுமெனத் தெரிவதாகவும் கூறப்பட்டிருக்கிறது. மற்ற வகுப்புகளுடன் சினேக பான்மை யுண்டு பண்ணுவது இதன் நோக்க மென்றும் கூறப்படுகிறது.

வங்காள ஹிந்துக்கள் நன்மையைப் பாதுகாக்கக் கூடாதவர்கள் எனத் தோன்றும் அபேக்ஷகர்கள் நிற்கும் ஒவ்வொரு தொகுதியிலும் இக்கட்சி தனது அபேக்ஷகர்களை நிறுத்தி வைக்கும்.

திரு. பி. வி. சாட்டர்ஜி எம். எல். ஸி. தலைவராகவும், வங்காள ஹிந்து மகாசபைக் காரியதரிசியான திரு. பாசேந்திரநாத் காரியதரிசியாகவுமுள்ள ஒரு தேர்தல் போர்டு அமைக்கப் பட்டிருக்கிறது.

சென்னை அச்சுக்கூடத் தொழிலாளர் சங்கம்

வரவேற்புக் கமிட்டிக் கூட்டம்

சில தீர்மானங்கள்

சென்னை, நவ. 26

சென்னை அச்சுக்கூடத் தொழிலாளர் சங்கத்தின் ஆதரவில் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு சென்னை சிந்தாதிரிப்பேட்டை 67 குருவப்ப செட்டித் தெருவிலுள்ள விலாசத்தில் இதன் இரண்டாவது வருஷாந்திர மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டிக் கூட்டமொன்று சங்கத் தலைவர் திரு. ஆர். சபாபதி முதலியார் தலைமையில் நடைபெற்றது. முதன் முதலில் வெகு நேர ஆலோசனைக்குப்பின் சங்கத்தின் கூட்டுக் காரியதரிசி திரு. என். ஏ. ஆர். பாபு நாயுடு பிரேரிக்க அதைக் காரியதரிசி திரு. எம். கே. சுவாமிநாதன் ஆமோதிக்க ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேறியது.

வருஷாந்திர மகாநாடு

அடுத்த டிசம்பரில் சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் கூட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

திருவாங்கூர்
மஹா ராஜாவுக்குப் பாராட்டு

சமீபத்தில் திருவாங்கூர் மகாராஜா தன் சாம்ராஜ்யத்தில் எல்லா கோவில்களிலும் ஹரிஜனங்களை விடுவதென்ற தீர்மானத்தைக் கேட்டு சந்தோஷப்படுவதாகவும், அதற்காக மகா ராஜாவைப் பாராட்டுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

காலஞ் சென்ற
திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை

சமீபத்தில் தூத்துக்குடியில் பழைய தேசிய வாதியும், தொழிலாளர் தலைவருமான திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை இம் மண்ணுலகை விட்டு விண்ணுலகம் எய்தினதைக் கேட்டு ஆழ்ந்த துயரப் படுவதாகவும், அன்னார் ஆத்மா சாந்தி அடையுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அன்னார் குடும்பத்தார்களுக்கு எங்கள் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சட்டசபையும், தொழிலாளரும்

சமீபத்தில் காலியாகப் போகும் சென்னை சட்டசபைத் தேர்தலின் உண்மைக் கையினுள் வேலை செய்யும் தொழிலாளர் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்குமாறு சென்னை மாகாணத்திலுள்ள தொழிலாளர்களை

தலைக்கு ஒரு எலி!

இல்லாவிட்டால் அபராதம்

அடுத்த மாதம் வார்சாவில் எலி வேட்டை வாரம் ஆரம்ப மாகின்றது. அது பொழுது வார்சா வாசி ஒவ்வொருவரும் ஒவ்வொரு எலியைக் கொல்ல வேண்டும். அவ்விதம் செய்யத் தவறுபவர்களுக்கு கடுமையான அபராதம் விதிக்கப்படுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

லோயர் கிரேடு ஆசிரியர்கள்

பசியா வரம் பெற்றவர்களா?

(பி. பரிமணப் பல்லவராயர்)

'ஜன நாயகம்' 23-11-36-ல், 6-ம் பக்கத்தில், ஹையர்கிரேடு ஆசிரியர்களின் சம்பளத்தில் ஒரு ரூபாய் விதம் உயர்த்த இரண்டு லட்சம் ரூபாய் கொடுக்கும்படி போட்டிருந்த திட்டத்தை, சட்டசபை நிதிக் கமிட்டியார் அங்கீகரித் திருப்பதாகத் தெரிகிறது. லோயர்கிரேடு ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிடப்படாததைப் பார்க்கும் போது 20-ரூ சம்பளம் வாங்கும் ஹையர் கிரேடினரை விட, 15-ரூ சம்பளம் வாங்கும் லோயர் கிரேடினர் குறைந்த சாப்பாடு சாப்பிடுபவர்களா? பசியாவரம் பெற்றவர்களா? என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. அல்லது இனிமேல் பசியாவரம் பெறப் போகிறார்களா என்று நினைக்க வேண்டியிருக்கிறது. (லோயர் கிரேடு) ஆசிரியர்க்கு மட்டும் பசியாவரம் கிடைப்ப தென்றால், ஆசிரியர் தவிர தம் குடும்பத்தினருக்கு ரூ. 15 போது மெனலாம். பசியாவரம் கிடைத்தால் மட்டும் போதுமா? துணிமணிகள் கிழியாவாறும், கல்மை நிலைகள் ஏற்படாவாறும், குழந்தை குட்டிகள் பிறந்து அதிகச் செலவு ஏற்படா வாறும் ஏற்படுதல் வேண்டுவதும் அவசியமாகும். இந்த வரங்களை இந்தக் காலத்தில் எதிர்பார்ப்பது முயற்கொம்பாகவோ, குதிரைக் கொம்பாகவோதான் காணலாம்.

ஆகவே, லோயர் கிரேடு ஆசிரியர்களும், உயிர்ப் பிராணிகள் தான். பசிக்கும் இயல்பையும், ஆகாரமுண்ணும் அவசியத்தையும், மற்றும் குடும்பப் பொறுப்பு முதலியவற்றையும், ஹையர் கிரேடினரைப் போல உள்ளவர்கள் தான் என்பதை கிளறிப் பார்த்து, சர்க்காரின் சட்டசபை நிதிக் கமிட்டியாரும் ஏனையோரும் லோயர் கிரேடு ஆசிரியர்களும் தமது பொறுப்பை—கடமையைச் சரிவரச் செய்ய வேண்டியதற்குப் பொருளாதாரம் அவசிய மென்பதை உணர்ந்து, லோயர் கிரேடினருக்கும் ஹையர் கிரேடினருக்கு அங்கீகரித்தது போல் செய்தருளுமாறு வேண்டிக் கொள்ளுகின்றேன்.

'நகர தூதன்' 1-11-36-வெற்றியின் 13-ம் பக்கத்தில் தோழர் பி. கே. ராமச்சந்திர படையாச்சியார் சட்டசபையில் கூறியதைக் குறிப்பிட்டு நாம் தெரிவித்துள்ள மேற்கண்ட அபிப்பிராயம் கமிட்டியாரின் கவனத்துக்கு எட்டியிரா தென்றே நினைக்க வேண்டியிருக்கிறது. சட்டசபைக் கூட்டத்திலாவது சட்டசபை அங்கத்தினர்கள் இதற்குப் பரிகாரம் செய்தருளுவார்களென்றும் எதிர்பார்க்கிறோம்.

ஸ்பானிய கலகத் துருப்புகள் தலைவர் ஜெனரல் பிராங்கோவிற்கும், ஜெக்கோ ஸ்லோவேகிய பூட்ஸ் உற்பத்தி செய்பவருக்கும் ஒரு ஒப்பந்த மேற்பட்டிருக்கிறது. அதன்படி பணத்திற்குப் பதில் பூட்ஸ் சப்ளை செய்பவருக்கு வாழைப் பழங்கள் கொடுக்கப்படும்.

• • •

பிரான்ஸில் மாதர்களையும் ராணுவத்தில் சேர்க்க முயற்சிக்கப் படுகிறது; பிரெஞ்சு ஜனன விகிதம் குறைந்திருப்பதே அதற்குக்காரண



கனம் குமார ராஜா எம். ஏ. முத்தையா செட்டியார் ஆம்பூரில் சென்ற 19-ந் தேதி இந்து உயர்தரப் பாடசாலையின் புதுக் கட்டடத்தைத் திறந்து வைத்தபோது எடுத்த படம். படத்தில் சௌகார் சி. அப்துல் ஹக்கீம் சாயிப் பகதூர், திரு டி. என். நடராஜ பிள்ளை முதலியோர் காணப்படுகின்றனர்.

ஆஜ்மீரிலுள்ள ஜெனரல் அஸ்யூரன்ஸ் லிமிடெட்டார் அக் கம்பெனியின் கிளைகளுக்கும், ஏஜன்சிகளுக்கும் பிரதம சூப்பரின்டென்டாகவிருந்து தற்பொழுது வேலையிலிருந்து விலகும் டாக்டர் ஆர். பி. ஐயருக்கு ராயப்பேட்டை மாடர்ன் இந்து ஹோட்டலில் சென்ற 21-ம் தேதி தேக் கச்சேரி நடத்திய போது எடுத்த படம். கனம் சர் டேவிட் தேவதாஸ் தலைமை வகித்தார். படத்தில் இடது புறத்தில் இரண்டாவதாக நிற்கும் திரு. எம். மாதவராவ், பி. ஏ., இனி அப் பதவியை வகிப்பார்.

தென்காசி

அநுதாபக் கூட்டம்

(நமது நிருபர்)

தென்காசி நவ. 23

தென்காசி திருவள்ளுவர் சமாஜத்தின் ஆதரவின் கீழ் திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையின் மரணத்தின் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதற்காக கூட்டம் 21-11-36 சனிக்கிழமை இரவு கூடியது. திரு. சண்முக கவிஞர் பிள்ளையவர்கள், அட்வகேட், தலைமை வகித்தார். தமிழ் மொழிக்காகவும், தமிழ் உலகுக்காகவும் பிள்ளையவர்கள் செய்த அருந் தொண்டினை தலைவர் விரிவாக எடுத்துரைத்தார். பண்டைக் கால நீதி நூல்கள், சமய நூல்கள் எல்லாம் கடின நடையில் எழுதப்பட்டிருக்கின்றதால் யாவரும் அவற்றைக் கற்றுணர்ந்து அறிய இயலாமை கண்டு அவைகளில் முக்கியமான தொல்காப்பியம், திருக்குறள் இந்த இரண்டையும் சிறுவர்களுக்கும் விளங்கும்படி எளிய நடையில் எழுதி வெளிப்படுத்தினர். தவிர, செய்யுள் நடையிலும், உரைநடையிலும், வாசகத்தில் மெய்யறம், மெய்யறிவு, சாந்திக்கு மார்க்கம், மனம்போல் வாழ்வு முதலிய அரிய நூல்களையும் இயற்றினர். அரசியல் வாழ்வில் திலகர், லஜபதி ராய், அரவிந்தகோஷ் போன்ற தீவிர வாதியா யிருந்து தென் இந்தியாவில் தேசிய உணர்ச்சியை யாவரும் வியக்கும் வண்ணம் முதன் முதல் உண்டாக்கினர். அதிகாரவர்க்கத்தினருக்கு பயம் மிகுந்த அக்காலத்தில் பிள்ளையவர்கள் தேச சேவையைத் தன்னுடைய ஜீவிய லக்ஷியமாகக் கொண்டு தன்னுடைய உடல், பொருள், ஆவி மூன்றையும் கவனியாமல் தேச முன்னேற்றத்திற்கு ஈடுபட்டு சிறைவாசம் செய்து

யில் சுதேசி கப்பல் கம்பெனி ஆரம்பித்து வெள்ளையர் கம்பெனியுடன் போட்டி செய்து அதை முற்றிலும் முறியடித்து வெள்ளையர்கள் அதிருப்திக் குள்ளானார்கள். காங்கிரஸிலே கலந்து அருஞ் சேவைகள் செய்து வரும் காலை அவற்றின் வழிகள் இவருக்குப் பிடிக்காததினால் அதை விட்டு விலகிவிட்டார். தன் இறுதி காலத்தை விருப்புவெறுப்பற்ற சமுதாய சேவைக்கும் தமிழ் கலைக்குமாக தீவிரமாக உழைத்து வந்தார்.

பின் திருவாளர்கள் ஆ. முத்துக்குமாரசுவாமி, வக்கீல் ராமநாதய்யர், சீதாராமய்யர், பால்பெருமாள் செட்டியார் முதலியோர்கள் பிள்ளையவர்களின் அரிய குணங்களைப் பற்றிப் பேசினார்கள். முடிவில் பிள்ளையவர்களின் பிரிவாற்றாமைக்காக ஓர் அநுதாப தீர்மானம் கொண்டு வரப்பட்டு சபையோர்கள் எல்லோரும் எழுந்து நின்று தீர்மானத்தை நிறைவேற்றி வைத்தார்கள்.

செங்கோட்டையா அத்லெடிக் அசோஸியேஷன்

ஒரு பொதுக் கூட்டம்

(ஒரு நிருபர்)

சென்னை, நவ. 23

ஞாயிற்றுக் கிழமை 22-ந் தேதி மாலை 5-மணிக்கு [illegible] வாசிகளின் ஒரு பொது கூட்டம் நடைபெற்றது.

அதுபோது சங்கத் தலைவர் திரு. கே. திருவேங்கட நாயுடு அவர்கள் அக்ராசனம் வகித்தார். ஏராளமான ஜனங்கள் கூடி இருந்தனர். தஞ்சாவூர் வாத்தியம் வெகு விமரிசையாக வித்வான் ஸ்ரீ. நாராயணசாமி பிள்ளை, அவர்களால் நடைபெற்றது. கடவுள் வணக்கத்திற்குப் பிறகு கார்பொரேஷன் பாடசாலை தலைமை உபாத்தியாயர் திரு. ஆர். எல். காந்திமதிநாதம் கல்வி என்னும் பொருளைப் பற்றி சிறிய சொற்பொழிவு செய்தார்.

சென்னை நகர தேர்தலில் ஜெயம் பெற்ற திரு. கே. ஸ்ரீராமுலு நாயுடுகாரு, எம். ஆதிகேசவலு நாயக்கர், ஆல்பர்ட் ஏகநாதன், டி. ஆர். கோதண்டராம முதலியார், பி. எம். வேலாயுதபாணி பிள்ளை அவர்களுக்கும் வந்தன உபசார பத்திரிகைகள் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அதற்கு அவர்கள் அளித்த பதிலில் வீடுகளில்லாது தவிக்கும் ஏழைகளுக்கு வீடு வசதி ஏற்படுத்தும் திட்டத்திலும் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் சேரிகளை மிகவும் அழகாகவும் சுகாதாரமாகவும் வைத்துக் கொள்ளும் விஷயத்திலும் ஈடுபடுவதாக வாக்களித்தார். கோயம்பத்தூர் ஸ்ரீ சாரதா மில்ஸ் மேனேஜிங் ஏஜெண்டும் இச்சங்கத்தின் உயிர் பாதுகாப்பாளருமாகிய திரு. வி. என். செங்கோட்டையா முதலியார் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் சேரிகளை மிகவும் அழகாகவும், சுகாதாரமாகவும் வைத்துக் கொள்ளும் விஷயத்திலும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கும் விஷயத்திலும் ஈடுபடுவதாக வாக்களித்தார். கோயம்பத்தூர், ஸ்ரீ சாரதா மில்ஸ் மேனேஜிங் ஏஜெண்டும், இச் சங்கத்தாரின் உயிர் பாதுகாப்பாளருமாகிய திரு. வி. என். செங்கோட்டையா முதலியார் அவர்களால் தானமாகக் கொடுத்த துணிகளை தலைவர் ஏழைகளுக்குக் கரகோஷ மத்தியில் கொடுத்தார்.

திருவாங்கூர் மகாராஜாவையும், அவருடைய திவானையும், எல்லா ஹிந்துக்களையும் சமஸ்தான அதிகாரத்திற்குட்பட்ட கோவில்களிலும் தங்களுக்குச் சொந்தமான கோவில்களிலும் பிரவேசிக்கும்படி கொடுத்த அனுமதிக்காகப் பாராட்டி ஒரு தீர்மானம் திரு. ஆல்பர்ட் ஏகநாதன் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு திரு. பி. எம். ஆதிகேசவலு நாயக்கர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு, எல்லோராலும் ஏக மனதாய் நிறைவேற்றப்பட்டது. இரவு 8 மணிக்கு சிற்றுண்டியும், சங்கீத கச்சேரியும் வெகு விமரிசையாக நடந்தன. தலைவருக்கு வந்தனம் அளித்த பின் கூட்டம் இனிது கலைந்தது.

சென்னை மாகாண வள்ளுவர் மகாஜன சங்கம்

குல நலச் செல்வர்காள்!

பண்டைய காலத்து நமது வள்ளுவ சமூகம் முன்னணி வகுத்து நின்றதுபோல் இன்றைய காலத்தும் அவ்வாறு திகழச் செய்வது நம்மவர்களின் இன்றியமையாக் கடமையாகும். ஆகவே, "சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை" எனும் அரிய வுரையிற்கிணங்க அறிவான் மிக்க நமது குலமணிகள் பலர் சேர்ந்து தமது பெருமுயற்சியோடு பொருளும் கல்வி, மற்றும் பலரின் உதவியையும், துணையையும், கொண்டு சென்ற வாண்டு தஞ்சை ஜில்லா பேரளம் ஆரோக்கிய ஆஸ்ரமத்தில் முதல் மகாநாடு இனிது முடிவுபெறச் செய்ததை யாவரும் அறிவார்கள். அது போலவே இரண்டாவது மகாநாடு சென்னைமா நகரத்தில் தாது ஆண்டு மார்கழித் திங்கள் 10-ம் நாள் (24-12-'36) தேதிக்குமேல் டி. மகாநாடு நடத்துவதாகத் தீர்மானித் திருப்பதால் அவ்வமயம் கவர்னர், மந்திரிகள், சட்டசபை அதிகாரிகள், முதலானவர்களை மகாநாட்டிற்கு வரவழைத்து நமது சமூகக் குறைபாடுகளைச் சட்ட மூலமாக அறிவித்து அவர்களின் பேருதவிகொண்டு நமது மக்களுக்கு வேண்டிய கல்வி, பொருளாதாரம் சட்டசபை அதிகாரம், முதலியவைகளைப் பெறவேண்டியிருப்பதால் குலமக்களனைவரும் இதற்கு வேண்டிய பெரு முயற்சிகளைத் தீவிரமாக சென்னை நகரத்திலும், பல ஜில்லாக்களிலும், மற்றும் ஆங்காங்கு பெருகச் செய்வதுடன் ஜில்லா பிரதிநிதிகளின் மூலமாகவோ அல்லது மாகாணச் சங்க விலாசத்திற்கோ தம்மாலியன்ற பொருளுதவியை முன்னதாகவே புரிந்து டி. மகாநாட்டை இனிது முடிவுபெறச் செய்விக்கவென முற்றும் நம்புகின்றோம்.

ஜில்லாப் பிரதிநிதிகள்:- திருவாளர்கள்: பெல்லாரி: லெப்டினெண்ட் பகதூர் ஆர். சுந்தரமூர்த்தி நாயனர் ஓ. பி. ஐ; வேலூர் தங்கவயல்: உரிகம் உதவி இஞ்சினியர் வி. ஆறுமுக நாயனர்; வட ஆற்காடு ஜில்லா வேலூர் டிஸ்ட்ரிக்ட் போர்டு மெம்பர் வி. வேதலிங்க நாயனர்; செங்கல்பட்டு ஜில்லா: காஞ்சீபுரம் மாஜி கவுன்சிலர் ஏ. க. நாகலிங்க நாயனர்; சென்னை: த. பெ. பொன்னுசாமி நாயனர்; தென்னாற்காடு ஜில்லா: கடலூர் கௌரவ மாஜிஸ்திரேட், சி. சங்கரலிங்க நாயனர்; கீழ்த்தஞ்சை ஜில்லா: தஞ்சை மானம்புச்சாவடி ஆர். சவிபாணசுந்தர நாயனர்; மேல் தஞ்சை ஜில்லா: கும்பகோணம் ஜீ. வடிவேலு நாயனர்; சேலம் ஜில்லா: கே. கந்தசாமி நாயனர்; கோயம்புத்தூர் ஜில்லா: சி. எ. சண்முக நாயனர்; திருச்சி ஜில்லா: எம். பி. ஆறுமுக நாயனர்; திருநெல்வேலி ஜில்லா: எம். திருமலைக் கொழுந்து நாயனர் முதலியோராவர்.

இப்படிக்கு:
கே. என். சொக்கலிங்க நாயனர்,
கே. விஸ்வலிங்க நாயனர்,
காரியதரிசிகள்.

"சமரஸம்"

ஓர் மாத வெளியீடு

மக்களின் சுவாதாரம், பொருளாதாரம், கிராம சீரமைப்பு, சுகாதார விஷயங்கள் இவைகளை முக்கிய நோக்குடன் அபிவிருத்தி செய்யும் பத்திரிகை.

மானேஜர்:—
சமரஸம் ஆபீஸ்,
விழுப்புரம்.

நமது முன்னேற்றத்திற்குக் காரணம் ஜஸ்டிஸ் கட்சியே!

——:o:——

கட்சி தினசரி இல்லாமல் வெற்றி பெற முடியாது

நாம் தூங்கியது போதும்! போதும்!!

செய்த வேலைகளைவிட செய்ய வேண்டிய வேலைகள் ஏராளமா யிருக்கின்றன

வட ஆற்காடு ஜில்லா ஜஸ்டிஸ் மகாநாடு

வரவேற்புக் கழகத் தலைவர்

திரு. வெ. ஷண்முக முதலியார் பேருரை

26–10–36க் தேதி வேலூரில் கூடிய வட ஆற்காடு ஜில்லா, ஜஸ்டிஸ் மகாநாட்டில் வரவேற்பு கமிட்டி தலைவர், வாணியம்பாடி திரு. வே. ஷண்முக முதலியார், பிரதிநிதிகளையும், ஏனையோரையும் வரவேற்று செய்த பிரசங்கம் வருமாறு.

முன்னுரை

சகோதரிகளே! சகோதரர்களே!

இ வட ஆற்காடு ஜில்லா, ஜஸ்டிஸ் கட்சியின் முதலாவது மகாநாட்டிற்கு விஜயம் செய்து இருக்கும் பிரதிநிதிகளையும், பொது மக்களையும், வரவேற்பு கமிட்டித் தலைவர் என்கிற முறையில் நான் மனமார வரவேற்கிறேன். இம்மகாநாட்டுக்கு தலைமை வகிக்க என்னைவிட அறிவாளிகளும், பிரமுகர்களும் தேச விடுதலையிலும், சமூக விடுதலையிலும் ஆர்வமுள்ள பலர் இருக்கும், என்னை இப் பதவிக்கு தேர்தெடுத்தது பொருத்த மற்றதென்று நான் சொல்வது மிகையாகாது. இருந்த போதிலும் உங்களால் இடப்பட்ட கட்டளையைச் சிரமேற் தாங்கி, இப்பதவியை ஆற்ற முன் வந்துளேன். நாங்கள் செய்த ஏற்பாடுகளில் சில குற்றங் குறைகள் இருந்தாலும் எங்களை மன்னித்து, இம்மகாநாடு சிறப்பாக நடைபெற என்னுடன் ஒத்துழைப்பீர்களென்று நம்புகிறேன்.

அசிரத்தையே காரணம்

சென்னை மாகாணத்திலே, அதிலும் தமிழ் நாட்டிலே, வட ஆற்காடு ஜில்லா பல துறைகளிலும் எல்லா வகையிலும் மிகவும் பிற்போக்காய் இருந்து வருகிறதென்பதை நீங்கள் அறிவீர்கள். அதிலும் பல வசதிக் குறைகள் நம் ஜில்லா வாசிகளுக்கு இருந்து வருகின்றன. தமிழ் நாட்டில் ஏழை ஜில்லா ஏதாவது இருப்பதென்றால், அது வட ஆற்காடு ஜில்லா தான். மற்ற ஜில்லாக்களைப்போல் நம் ஜில்லாவிலும் நமது இயக்க அபிமானிகள் விசேஷமாய் இருந்து வருகிறார்கள். அவர்களை உற்சாகப்படுத்தி, தட்டி எழுப்பினால் அவர்கள் வீறு கொண்டு வேலை செய்வார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு இந்த ஜில்லாவில் இம்மாதிரி ஓர் மகாநாட்டை நடத்த முயற்சி எடுத்தவர்களில் நானும் ஒருவன் என்பதை தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அக்காலத்தில் இந்த ஜில்லாவுக்கே ஒரு பூஷணமாய் விளங்கி வந்தவரும் பிரபல தலைவருமான காலஞ் சென்ற திவான்பகதூர் டபிள்யூ. விஜயராகவ முதலியாரின் காலத்திலும், அவருக்குப் பின்னால் காலஞ் சென்ற ராவ்பகதூர் கரூர் கிருஷ்ணசாமி நாயுடுகாரு காலத்திலும், செய்த முயற்சிகளுக்குப் பலத்த ஆதரவு இருந்தும், ஓர் பெரும் தொகை கையொப்பம் செய்யப்பட்டுமிருந்தும், ஏதோ துரதிர்ஷ்டவசமாக எடுத்த காரியங்கள் அக் காலத்தில் சரியாக நடைபெறாததற்குக் காரணம் நம்மவர்களில் பலருக்கு ஊக்கமில்லாமையும், அசிரத்தையுமே காரணம் என்று சொல்ல வருந்துகிறேன். அக்காலத்திலே நமது இயக்கத்துக்கு பலத்த ஆதரவு இருந்ததென்பதையும், பல தோழர்களின் முயற்சியின்மையே மகாநாட்டை கூட்ட முடியவில்லை என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. இன்றைக்கும் பல தோழர்களுக்கு சிறப்பாக வாலிபர்களுக்கு தேச விடுதலையில் அளவுக்கு மிஞ்சிய ஆர்வமும், சமுதாய விடுதலையில் நல்ல உணர்ச்சியும் இருந்து வருகிறதென்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தலைவர்களுக்குள் தற்காலமிருக்கும் ஒற்றுமைக் குறைவும், ஒருமனப்பட்ட மனப்பான்மை இல்லாக்குறையும், அலட்சிய புத்தியும் தான் நம்மவர்களிடையே இருந்து வரும் உணர்ச்சி குன்றியதற்குக் காரணமே தவிர வேறொன்றுமில்லை. சிறப்பாகச் சொல்லவேண்டுமானால் முன்னணியில் தோழர்களின் அசிரத்தையும், இக்காலத் தலைவர்களின் அசிரத்தையும் தான் நமது இயக்க அபிவிருத்திக்கு இடைஞ்சலாய் இருந்து வருகிறதே தவிர, பொது மக்களின்பேரில் குறை சொல்வதில் பலனில்லை. இதுவே நான் கண்ட உண்மை.

நமது இயக்கத்தின் மேன்மை

நமது இயக்கம், (கட்சி) காலஞ் சென்ற சர். பி. டி. தியாகராய செட்டியார், டாக்டர் நாயர் முதலிய ஒப்பற்ற தலைவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு, சுமார் 20 வருடகாலமாய் பல எதிர்ப்புகளுக்கு இடையே இன்னும் இருந்து நம்மவர்களின் விடுதலைக்குப் பாடுபட்டுவந்திருக்கிறது. ஜஸ்டிஸ்கட்சி ஏற்படுத்திய காரணங்களை விஸ்தரித்துச் சொல்ல, இது தருணமல்ல. ஏனென்றால், நமது மாகாணத்தில் நம்முடைய கட்சி செய்து இருக்கக்கூடிய வேலைகளை நீங்கள் எல்லோரும் அறிந்தே இருக்கிறீர்கள். இன்றைய தினம் ஜஸ்டிஸ் கட்சி இல்லையானால் நம்மவர்கள் அரசியல் துறையில் இவ்வளவு முன்னேற்றமடைந்து இருக்க முடியாது. சிறப்பாக சொல்லவேண்டுமானால், அது ஒவ்வொரு சமூகத்துக்கும் ஒற்றுமையையும், முன்னேற்றத்தையும் குறிக்கோளாகக் கொண்டு, உழைத்து வருகின்றது. ஒரே சமூகத்தார் முன்னேற்றத்தை அது விரும்பவில்லை. ஏக போக உரிமையை அது உடைத்தெறிந்தது, இந்த உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டே இக்கட்சி நமது மாபெருந் தலைவர்களால் அமைக்கப் பட்டதே தவிர ஒரு சிலர் கூறுகிறபடி எந்த வகையிலும் எந்த சமூக முன்னேற்றத்துக்கும் அது முட்டுக் கட்டையாய் இல்லை. உதாரணங்கள் பல தரலாம். இந்து மத பரிபாலன போர்டுக்கு தலைவராக காலஞ் சென்ற பெரியார் மாஜி ஹைகோர்ட்டு ஜட்ஜு சர். சதாசிவ ஐயர் நமது கட்சி தலைவர்களால் முதல் முதலாக நியமிக்கப்பட்டதே நம்முடைய கட்சி வகுப்புவாத கட்சியல்லவென்பதை நிரூபிக்கும் நம்முடைய ராஜீய எதிரிகள் நம் கட்சியைப் பற்றி தூற்றித் திரிவதை நாம பொருட்படுத்த வேண்டியதில்லை. அதிகாரத்தில் இருக்கும் ஒரு கட்சியைப் பற்றி தூஷணை செய்வதில் அதிசயமொன்றுமில்லை. அறிவுள்ள மக்கள் நமது கட்சியின் மேன்மையை உணர்ந்து கொள்ளுவார்கள். இந்தக் கட்சியை ஸ்தாபித்த நமது தலைவர்களின், ராஜீய ஞானத்தையும், அவர்களுடைய அறிவு, ஆற்றல்களையும் நாம அடிக்கடி போற்ற வேண்டும்.

நமது கட்சியும், பத்திரிகைகளும்

ஒரு அரசியல் கட்சி முன்னேற்றமடைந்து, அது பலவகைகளிலும் பயன்பட வேண்டுமானால் அக்கட்சிக்குப்பத்திரிகைகள் அவசியம். நமது கட்சிக்குப் பல வருடங்களாய் ஓர் தமிழ் தினசரி இல்லை, 'திராவிடன்'பத்திரிகைக்குப் பின் ஓர் தமிழ் தினசரி ஏற்படுத்தாமல் இருப்பது நமது தலைவர்களின் அசிரத்தையைக் காட்டுகின்றது. "ஜஸ்டிஸ்" என்ற ஆங்கில தினசரி ஒன்று இருப்பது உண்மையானாலும், ஆங்கில பத்திரிகையினால் தமிழ் நாட்டில் பாமர மக்களுக்கும், ஆங்கிலம் தெரியாத பெரும்பாலோருக்கும் அதனால் ஒரு பயனுமில்லை. தமிழ் நாட்டுக்கு, நமது கட்சிக்குப் புத்துயிர் கொடுக்க வேண்டுமானால், தமிழ் தினசரி மெத்த அவசியம். நம்முடைய பிரசாரங்களை வெளியிடவும், மக்களுக்கு நமது இயக்கத்தின் அவசியத்தை எடுத்துச் சொல்லவும், எழுதவும் பத்திரிகை இல்லை என்றால் நமது இயக்கம் மக்களிடை எப்படி சிறப்படையச் செய்யும். நமது எதிர்கட்சிகளுக்கு ஏராளமான தினசரிகள் இருந்து வருகின்றன. நம்முடைய கட்சியைக் குறைகூறி, இல்லாததையும், பொல்லாததையும் எடுத்து எழுதவும், நமது தலைவர்களின் பேரில் குற்றம் குறைகளையும் கூறவும் அப்பத்திரிகைகள் அஞ்சுவதில்லை. அதை மறுப்பதற்கோ, அல்லது உள்ளதை எடுத்துச் சொல்லி எழுதவோ, நமக்குப் பத்திரிகை இல்லை என்றால் மக்கள் பொய் வதந்திகளை நம்பத்தான் செய்வார்கள். வார இருமுறை பத்திரிகையான "விடுதலை"யை உடனே தினசரி யாகச் செய்தாலொழிய நமக்குக் கதிமோட்சமில்லை. பத்திரிகையின் அவசியத்தை நம் தலைவர்களுணர்ந்தும், காலத்தைப் போக்குவதில் என்ன பயன்? நமது இயக்கத்துக்கு ஓர் தினசரி பத்திரிகை இல்லை என்றால் நமது இயக்கம் வெற்றியடைய முடியுமா? பத்திரிகைகளின் மூலமாய்த் தான் மக்கள் குறைகளையும், தேவைகளையும் அறிந்து கொள்ள முடியும். நமது இயக்கத் தலைவர்களின் பிரசங்கங்களையும் பிரசாரகர்களுடைய பேச்சுகளையும் பத்திரிகை இல்லாமல் எப்படி மக்களுக்குத் தெரியப்படுத்த முடியும்? பல கட்சி அபிமானிகள் நமது கட்சிக்கு பத்திரிகை இல்லையே என்று வருந்துவதைபல தடவை நான் கேட்டிருக்கிறேன்.

சட்டசபையும், நமது கட்சி வேலையும்

இப்போது அனுஷ்டானத்தில் இருந்துவரும் இரட்டை ஆட்சியைத் திறம்பட நடத்தியது நமது கட்சியேயாகும். இதை அரசியல் அறிஞர்கள் யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். கிடைத்ததைப் பெற்றுக்கொண்டு, மேல் கொண்டும் உரிமைகளைப் பெற போராட வேண்டியது தான் ஜஸ்டிஸ் கட்சியின் நோக்கமே தவிர, ஆகாத காரியத்தைச் செய்ய நமது கட்சி என்றும் முற்பட்டதில்லை. நமது மந்திரிகள் சிறப்பாக பானகல் ராஜாவும், பொப்பிலி ராஜாவும் நமது கட்சிக்காகப் பட்ட பாடுகளையும் அவர்கள் ஆட்சியில் இயற்றிய பல சமூகாய சட்டங்களையும் அது மக்கள் முன்னேற்றத்துக்கு எவ்வளவு பயன் படக்கூடியதென்பதையும் விவேகிகள் அறிந்து இருப்பார்கள். நமது ராஜீய எதிரிகளே நம் தலைவர்கள் செய்த சில அரிய சட்டங்களை ஒப்புக்கொண்டு, இன்னமும் பலகாரியங்களைச் செய்து முடித்து இருக்கலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். நமது கட்சி எவ்வளவோ அரிய காரியங்களைச் செய்து இருக்கின்றது.

சமயத்தில் தொண்டு

அரசியல் வானம் இருண்டிருக்கும் இக்காலத்தில், இது தான் நல்ல சமயம் என்று நமது கட்சியைப் பலவாறு தூற்றி பாமர மக்கள் மனதைக் கெடுக்கவும் துஷ்பிரசாரத்தைச் செய்துவரும் நமது எதிரிகள் நாச வேலையிலே இன்னும் கண்ணோட்டமாய் இருந்து வருகிறார்கள். இத்தனை வருடங்கள் அனுபவத்துக்குப் பின்னும் அவர்கள் ராஜீய அறிவு தெளியவில்லை. மக்களுடைய அறியாமையைத் தங்கள் ஆயுதமாக அவர்கள் உபயோகித்து, மனம் போனவாறு பேசி ஓட்டர்களையும், பொது மக்களையும் தேசியத்தின் பேரால் வஞ்சித்து அவர்களைத் தங்கள் வாக்கை நம்பும்படி பிரசாரம் செய்து வருகிறார்கள். இதை சகிக்கமாட்டாமல், மக்களுக்கு உண்மை விஷயங்களை எடுத்துச் சொல்லி அவர்கள் மாய வலையில் விழாதிருக்கும்படி, நமது இயக்கத்தின் தத்துவங்களையும் நமது கட்சியின் மேன்மைகளையும், காலமறிந்து ஊழியம் செய்து வரும் நமது வைக்கம் வீரர் திரு. ஈ. வெ. ராமசாமி, திரு. வி. வி. ராமசாமி, திரு. சவுந்தரபாண்டியன் முதலியவர்களுக்கு நாம் நம்முடைய நன்றியறிதலை சந்தோஷத்துடன் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

நமது ஒப்பற்ற தலைவர்

நமது ஜஸ்டிஸ் கட்சிக்கு உடல் பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்து நம்முடைய மக்கள் முன்னேற்றத்துக்கு இரவும், பகலும் உழைத்துவரும் நமது மாபெரும் தலைவர் பொப்பிலி ராஜாவுக்கு நாம் என்றென்றும் நன்றி செலுத்துவோமாக. அவர் ஒரு ஜமீன்தாராய் இருந்தும் இனாம் மசோதா மூலம் சுமார் 50 லட்சம் ஜனங்களுக்கு சில உரிமை வழங்கி இருப்பது ஒன்றே அவருடைய உயர்ந்த லட்சியத்தைக்காட்டுகின்றது. ஒருவரைப் போல் வீண் ஆரவாரங்களில், காலத்தைச் செலுத்தாமல் மக்களுக்கு நிரந்தரமான நன்மையை அவர் செய்கையில் செய்து காட்டி விட்டார். அவர் ஒரு ஜமீன் பிரபுவாய் இருந்தும் சமதர்மத்தில் அவருக்கு இருக்கும் பற்றை அளவிட்டு சொல்லவும் வேண்டுமா!

நமது கல்வி மந்திரி

செட்டி நாட்டு குமார ராஜா சாஹேப் அவர்கள் நமது மாகாணத்திற்கு கல்வி மந்திரியாய் நியமிக்கப்பட்டு இருப்பதை எல்லோரும் பாராட்ட வேண்டியதுதான். அவரும் அவருடைய தகப்பனாரான ராஜா சர். அண்ணாமலை செட்டியாரும் கல்வி அபிவிருத்திக்காக செய்து இருக்கும் தொண்டை நாம் பொன்னே போல் போற்றுகிறோம். குமார ராஜா அவர்கள் பெரிய சீமானாய் இருந்தும் எல்லோரிடத்திலும் அன்னியோன்னியமாய்ப் பழகி வருவதை நான் அறிவேன். அவர் ஏழை எளியவர்கள் விஷயத்தில செய்து வரும் உபகாரங்களை எல்லோரும் அறிவார்கள். அவரிடத்தில் இயற்கையாய் அமைந்து இருக்கும் உயர்ந்த குணங்களை நான் போற்றுகிறேன். ராஜா சர். செட்டியார் குடும்பத்தார் செய்து இருக்கும் கல்வி தானங்கள் சூரிய சந்திரர்கள் இருக்கும் வரையில பிரகாசித்துக் கொண்டு இருக்கும். நமது குமார ராஜா அவர்கள் எதிர்காலத்தில் கிராம ஜனங்களுடன் பழகி அவர் குறைகளையும், தேவைகளையும் நேரில் அறிந்து, நமது மக்களுக்குத் தொண்டு செய்ய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன். அவர் நம்முடைய மக்களுக்கு வழி காட்டியாய் இருந்து நமது கட்சியை முன்னேற்றமடையச் செய்வார் என்று நம்புகிறேன்.

எதிர்கால வேலை

நாம் இதுவரையில் தூக்கத்தில ஆழ்ந்துவிட்டோம். இனி விழித்துக் கொள்ள வேண்டும். நமது கட்சியின் வேலைகளையும், அது செய்து இருக்கும் நன்மைகளையும் நாடெங்கும், தெருத் தெருவாய் முழக்க வேண்டும். நம் மக்களுக்கு உணர்ச்சியை ஊட்டி, உற்சாகப் படுத்த வேண்டும். நமது எதிரிகள் நம்மைப் பற்றி தூற்றுவதற்குச் சுடச்சுட பதிலளிக்க வேண்டும். நாம் ஒன்றுபடவேண்டும். நமக்குள் பிரிவினை கூடாது. நமது சொந்த வெறுப்பு விருப்புகளை உதறித்தள்ளவேண்டும். கட்சி முன்னேற்றத்துக்குத் தீவிரமாய் உழைக்க வேண்டும். இது பிரசார காலமென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். நமது "விடுதலை" "குடியரசு" முதலிய இயக்கப் பத்திரிகைகளை ஒவ்வொருவரும் கட்டாயம் ஆதரிக்க வேண்டும்.

ஓட்டர்களுக்கு எச்சரிக்கை

இன்னும் 2, 3 மாதங்களில் சட்டசபை அசெம்பிளித் தேர்தல் வரப்போகின்றது. நமது கட்சி சார்பாக நிறுத்திவைக்கப்படும். அபேக்ஷகர்களை ஆதரித்து வெற்றியடையச் செய்ய வேண்டும். தமிழர்கள் எல்லோரும் ஒன்று பட வேண்டும். ஒன்று பட்டு நின்று வெற்றி முழக்கம் செய்வோமாக.

முடிவுரை

இம் மகாநாட்டுக்கு தலைமை வகிக்கும் கனம் பி. டி. ராஜன் அவர்கள், நமது இயக்கத்துக்கு செய்து இருக்கும் சேவையை நாம போற்றுவோமாக. அவர் இம்மகாநாட்டுக்கு தலைமை வகிக்கும்படி நேர்ந்தது நமது பாக்கியமேயாகும். அவரை இம்மகாநாட்டுக்கு தலைமை வகிக்கும்படி உங்கள் சார்பாக அவரை கேட்டுக் கொள்ளுகிறேன். என் பிரசங்கத்தை இவ்வளவு காலம் பொறுமையாய் கேட்ட உங்களுக்கு என் நமஸ்காரத்தையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

A. S. ஆனந்தம், புரொப்ரைட்டர்.

சிரமம் ஒழிந்தது!

இனி உங்களுக்கு கவலை வேண்டாம்!!

சென்னைக்கு அடுத்த மதுரை நகரிலும், ஜில்லாவிலும் வியாபாரம், சினிமா சம்பந்தமான வால் போஸ்டர்கள், தண்டுப் பிரசுரங்கள், நீடித்த கால விளம்பர போர்டுகள், விசேஷ உற்சவ காலங்களில் ஸ்பெஷல் விளம்பரங்கள், பிரிண்டிங், சித்திர போஸ்டர்கள் முதலியவைகள் எங்கள் நேர் பார்வையிலேயே தேர்ந்த வேலையாட்களைக் கொண்டு நூதன முறையில் குறைந்த சார்ஜில் அச்சிட்டு பிறர் மனதைக் கவரக்கூடிய வண்ணம் விளம்பரங்கள் செய்து கொடுத்து வருகிறோம்.

ஒருமுறை எமது கம்பெனி மூலமாய் உங்கள் விளம்பரங்களைக் கொடுத்து பரிக்ஷித்துப் பாருங்கள். அதிக லாபமடைவீர்கள்.

!! விபரங்களுக்கு உடனே கடிதம் எழுதுக. !!

ஆனந்தா அட்வர்டைஸிங் ஏஜன்ஸி,
தெற்கு வாசல், மதுரை. S. I.

எது?

தமிழ்நாட்டில் குறைந்த சந்தாவில்
அதிக பக்கங்களோடு வெளிவரும் தமிழ் மாதப் பத்திரிகை.

"சித்தன்"

ஒன்றே. இனிய கதைகள், ஹாஸ்யம், உலகச் செய்தி, வைத்தியக் குறிப்பு, சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன நிறைந்தது.

வருட சந்தா அணா (8) எட்டே. வெளிநாடு ரூ. 1.
மாதிரிப் பிரதி இனாம். விளம்பர விகிதம் மிகவும் குறைவு.

விபரங்களுக்கு எழுதவும் :—
மானேஜர்:—"சித்தன்", பழனி, S. I.

10,000 பிரதிகள் அச்சிடப்பட்டு வெளிவருகிறது!!!

'ஸிட்டி கெஜட்' 1937-ம் வருட மலர்

தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களால் இலக்கியம், நாவல், சரித்திரம், அரசியல், சினிமா விமர்சனம், சுதேச ஸ்தாபனங்கள், கூட்டுறவு இயக்கம், தொழிலாளர் இயக்கம் இவைகளைப் பற்றி எழுதிய கட்டுரைகளும், பிரபல தலைவர்கள், சினிமா நடிகர்கள், பொதுஜன சிறப்பு போட்டோக்களுடன் அழகிய பல கலர் மைகளால் அச்சிடப்பெற்று 200 பக்கங்களுக்கு அதிகமாக 'ஸிட்டி கெஜட்' 1937-ம் வருட மலர் ராயல் 1 x 4 சைசில் வெளிவருகிறது. விற்பனைக்கு ஏஜண்டுகள் தேவை.
தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர் :—'ஸிட்டி கெஜட்', 197, கீழவெளி வீதி, மதுரை.

"ஜஸ்டிஸ் கட்சியை ஒரு சிறிதும் அசைக்க முடியாது"

பண்டித நேருவுக்கு ஆணித்தரமான பதில்

இந்து—முஸ்லிம் ஒற்றுமைக்கு காங்கரஸ்காரர் செய்ததென்ன?

கோயில்களையும், மசூதிகளையும் தரை மட்டமாக்க காங்கரஸ் தலைவரின் விருப்பம்

பார்லிமெண்டரி ஜனநாயக முறையே இந்தியாவுக்கு பொருந்தும்

வட ஆற்காடு ஜில்லா ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில்

கனம் பி. டி. ராஜன் தலைமையுரை

சென்னை சர்க்கார் மந்திரி கனம் பி. டி. ராஜன் வட ஆற்காடு ஜில்லா ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டிற்கு, தலைமை வகித்து நிகழ்த்திய சொற்பொழிவாவது:—

"எனது வாடிப்பட்டிப் பேச்சு இதற்குள் பலித்துவிட்டது. ஸ்தல காங்கிரஸ்காரர்களின் அழைப்பிற்கிணங்கி, காங்கரஸ் தலைவர் இம்மாகாணத்திற்கு வந்து மகா ஆர்ப்பாட்டமான பிரசாரத்தை நடத்திவிட்டுச் சென்றார். அவரைப் பின்பற்றி மற்றும் இதர அகில இந்திய காங்கரஸ் தலைவர்களும் இம்மாகாணத்திற்கு வரப் போவதாகக் கூறப்படுகிறது.

"ஜஸ்டிஸ் கட்சியைக் குறித்து நான் வெகு தொலைவில் கேள்விப்பட்டிருக்கிறேன். அக்கட்சி இப்பொழுதிருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. அக்கட்சி இனி நிலைத்திருப்பதற்கு ஆபத்தேற்பட்டுவிட்டதோ என்னமோ, அதிக கூர்நாள் போடத் தொடங்கிவிட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சர்வாணுக இருந்து அதன் நிழலில் அக்கட்சி வளர்ந்து வந்தது ஆச்சரியகரமாக இருக்கிறது. அத்தகைய ஓர் கோஷ்டியை நாம் ஒழித்து சின்னா பின்னமாக்க வேண்டும்" என பண்டித நேரு தமது தமிழ்நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின் பொழுது குறிப்பிட்டுள்ளார்.

இம்மாதான சம்பந்தமாக பண்டிதரின் அறியாமையையே இது புலப்படுத்துகிறது. ஒரு பண்டிதரிடம் இவ்வறியாமையை நாம் மன்னிக்கக் கூடுமாயினும், ஒரு அகில இந்திய காங்கரஸ் தலைவரிடம் இது மன்னிக்கக் கூடாத விஷயமாகும்.

ஜஸ்டிஸ் கட்சியை அசைக்க முடியாது

இம்மாகாணத்திலுள்ள முனிசிபாலிடிகளிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் காங்கிரஸ்காரர்கள் நுழைந்து, நடத்திய ஊழல் நிர்வாகத்தை மறைக்கவும், காங்கரஸிற்கு மக்களுடைய ஆதரவைத் தேட வேண்டியுமே அவர் அலகாபாத்திலிருந்து இவ்வளவு தூரம் அழைத்து வரப்பட்டார் என்பதை நீங்கள் அறிய வேண்டும்.

பண்டிதர்கள் எவ்வளவு பேர் வேண்டுமானாலும் வந்து கொண்டும் போய்க் கொண்டுமிருக்கலாம். ஆனால் ஜஸ்டிஸ் கட்சியை அவர்கள் ஒரு சிறிதும் அசைக்க முடியாது என்பதை அவர்கள் உணர வேண்டும்.

ஜஸ்டிஸ் கட்சி தோன்றிய காலமுதற்கொண்டு பிராமணரல்லாதார் சமூகத்தினர், தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் முதலியோரின் முன்னேற்றத்திற்காக, இத்தேசத்திலுள்ள ஏழ்மை, அறியாமை முதலியவற்றைப் போக்கவும் பாடுபட்டுவருகிறது. ஆனால் காங்கரசோ அரசியல் சுதந்திரத்தைப் பெறுவதற்காகவே, தோன்றிய நாள் முதற்கொண்டு கிளர்ச்சி செய்து வருகிறது. சுருங்கக் கூறுமிடத்து நீதி, சமத்வம் என்றவற்றின் அடிப்படையின் மீதே ஜஸ்டிஸ் கட்சி தோன்றியுள்ளது. இத்தேசத்தின் பசிப்பிணியையும், ஏழ்மையையும், அறியாமையையும் போக்க, இங்குள்ள பல்வேறு கட்சிகளின் ஆதரவையும் அதை நிவர்த்திப்பதற்குப் பதில், பெற்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஒழிக்க வேண்டும், சீர்திருத்த சட்டத்தை உடைக்க வேண்டும், சமூக-பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை வேருடன் களைந்தெறிய வேண்டும் எனப் பண்டிதர் அறைகூவுகிறார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஒழிப்பதெப்படி?

சீர்திருத்த அரசியலிலும், புதிய சட்டசபைத் தேர்தல்களிலும் தனக்கு நம்பிக்கையில்லை யென்று கூறிய பொழுதிலும், காங்கரஸுக்கே தேச மக்கள் ஓட்டுக் கொடுக்க வேண்டுமென்று அவர் வேண்டிக் கொள்கிறார். ஆனால் ஏகாதிபத்தியத்தை ஒழிக்க எம்முறைகளைக் கையாள வேண்டுமென்று அவர் கூறுமலிருக்கிறார். பலாத்காரமற்ற காந்தியாரின் ஒத்துழையாமையைத் தேசம் கைக் கொள்வதா அல்லது பலாத்காரமான புரட்சி முறைகளைக் கைக் கொள்வதா என்பது தெரியவில்லை.

முன் கூறியதைப் பின் பற்றியதனால் இத்தேச முன்னேற்றம் ஒரு இம்மியளவு கூட நகரவில்லை என்பது நமது பிரத்யக்ஷ அனுபவமாகும். பின்னதைப் பின் பற்றினாலோ அது இத்தேசத்தை எக்கதிக்கு உள்ளாக்குமோ என்பது நமக்குத் தெரியவில்லை. பண்டித நேருவைப் பொறுத்தமட்டிலும் அவர் இத்தேசத்தில் ஓர் புரட்சியை ஏற்படுத்தத் தயாராகவே யிருக்கிறார். அப்புரட்சிக்கு நீங்களும் தயாராயிருக்கிறீர்களா என்பதே நான் உங்களைக் கேட்பது. ஐரோப்பாவில் எந்த நிமிஷத்திலும் யுத்த மேகம் படக்கூடும். அதை நான் வரவேற்கிறேன். ஏனெனில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு அது சாவுமணி அடிப்பதாகும். எனப் பண்டிதர் மேலும் கூறுகிறார். ஐரோப்பாவின் ஒவ்வொரு தேசமும் யுத்தத்திற்குத் தயாராகிக் கொண்டு வருவதென்பது உண்மைதான். ஆனால், அதனுல் ஏற்படக்கூடிய விளைவின் அபாயத்தை உணர்ந்தே இதுவரையிலும் எத்தேசமும் யுத்தத்தைத் தொடங்காமலிருக்கிறது. ஒரு சமயம் அப்படியே யுத்தம் மேற்பட்டு, பிரிட்டிஷார் தோற்கடிக்கப் பட்டாராயின், வெற்றி பெற்ற தேசங்களில் ஒன்று இந்தியாவின்மீது தன்னுடைய ஆதிக்கத்தை ஏன் செலுத்தக் கூடாது? ஆகவே, ஒரு சர்க்கார் போய் இன்னொரு சர்க்கார் ஏற்படுவதால் நம் தேசத்திற்கு ஒருவித பலனும் மேற்பட்டு விடாது. எதிரிகள் நம் தேசத்தில் புகுவதைத் தடுப்பதற்கு நாம் இப்பொழுது தயாராயில்லை. சமீபத்தில் வீர புருஷர்கள் நிரம்பிய எதியோப்பியாவில் ஒரு சிறிய கட்டுப்பாடான நாடாகிய இத்தாலி புகுந்து அக்கிரமமான முறைகளைக் கொண்டு கைப்பற்றியதை நாமறிவோம். அந்நிய நாட்டினர் ஒரு சமயம் நம தேசத்தின்மீது படையெடுத்து வருவார்களாயின் நாமும் அக்கதிக்கே உள்ளாக வேண்டுமென்பதில் சிறிதும் சந்தேகம் வேண்டியதில்லை. சோவியத் முறையில் இந்திய சர்க்கார் முறை அமைக்கப்படவே பண்டிதர் விரும்புகிறார். அதுவே, இத்தேசத்தின் கண்ணுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உற்ற மருந்தாகுமெனக் கூறுகிறார்.

இத்தேசத்திற்கு ஒரு சர்வாதிகாரி ஏற்படுவதைக் குறித்து எனக்கு ஒரு சிறிதும் கவலையில்லை. ஏனெனில், ஒரு சர்வாதிகாரியின் கீழ் எப்பிரச்சினையும் சீக்கிரம் முடிவு பெறக்கூடும். ஆனால், அச்சர்வாதிகாரி இந்துவாயிருக்க வேண்டுமா, அல்லது முஸ்லீமாயிருக்க வேண்டுமா என்ற பிரச்சினை எழும்பக்கூடும். யாராயிருந்த போதிலும், பல்வேறு மதங்களையும் பல்வேறு வகுப்பினரையும் கொண்ட இத்தேசத்தில் அச்சர்வாதிகாரிக்குப் போதிய ஆதரவும், பெருமையும் கிடைக்காதென்பது திண்ணம். மேலும் இராணுவத்தின் பக்க பலமும் அவருக்குக் கிடைப்பதரிது. ஆகவே, பரஸ்பர நம்பிக்கை, நல்லெண்ணம் முதலியவற்றை இப்பல்வேறு சமூகங்களிடையேயும் உதிக்கச் செய்வதன் மூலமே நாம் அவைகளை இணைக்க முடியும். இது விஷயத்தில் பார்லிமெண்டரி ஜனநாயக அரசியல் முறையே இந்தியாவிற்கு மிகவும் பொருத்தமானது. மற்ற முறைகளெல்லாம் இதற்கு முன்னர் பல தடவை கையாளப்பட்டு பலனின்றிப் போயிற்று.

பொறுப்புள்ள சர்க்கார்

இத்தேச சரித்திரத்திலேயே ஜனங்களுக்குப் பொறுப்புள்ள சர்க்கார் ஏற்படுவது இதுவே முதல் முதலாகும். சீர்திருத்தத்தை உடைக்கச் செய்வது மக்களின் சுதந்திரத்தையும், அதிகாரத்தையும் பறிகொடுக்கச் செய்வதாகும். ஆகவே, சீர்திருத்தத்தை ஏற்று நடத்தி அதிலுள்ள நன்மைகளை அடையும் பொருட்டு தலைவர்களைக் காட்டிலும் பாமர மக்களே அதிக முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். பிரிட்டிஷ் தொடர்பை அறுக்கவும், சீர்திருத்தத்தை உடைக்கவும் ஏதாவது முயற்சிக்கப்படுமாயின், அதன் மூலம் வகுப்புத்துவேஷங்களும், வகுப்புக் கலகங்களும் அடிக்கடி இத்தேசத்தில் ஏற்படத் தொடங்கும்.

மேலும், நமக்கு ஆயுத பலமும் கிடையாது. ஒன்று பட்டும் நிற்கப் போவதில்லை. ஆகவே, நமது முயற்சியில் நாம் வெற்றி பெறுவது துர்லபமே. நமது எதிரி நம்மீது படை எடுத்துவரும்பொழுது பல்வேறு சமூகத்தினராகிய நாம் ஒன்றுபட்டு எதிர்க்கப்போவதில்லை. அவர்கள் சென்ற பின்னரும் நாம் ஒற்றுமையாய் வாழப் போவதில்லை. என்று இந்தியர்களாகிய நாம் ஒன்று பட்டு வாழ முயற்சிக்கிறோமோ, அன்றே இத்தேச நிர்வாகத்தை இங்கிலீஷ்காரர்கள் நம் கையில் ஒப்படைத்துச் செல்வர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. சமாதான முறையிலேயே நாம் இதனை அடையக்கூடுமாதலால் பலாத்கார முறையைப் பின்பற்றி அனாவசியமாக இரத்தத்தை ஏன் சிந்தவேண்டும்? ஆகவே, பிரிட்டிஷ் தொடர்பைக் காட்டிலும், பல்வேறு சமூகத்தினராகிய நாம் ஒற்றுமைப் படுவதிலேயே நம் விசேஷ கவனத்தைச் செலுத்தவேண்டும்.

இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்கு என்ன செய்தனர்?

இன்று இந்தியாவில் காங்கரசே தேசிய ஸ்தாபன மென்றும், இந்திய மக்கள் பேரால் எடுத்துப் பேசக்கூடியது அதுதானென்றும் கூறப்படுகிறது. அப்படியானால், தேசியப் பிரச்சினையில் மிக முக்கியமானதாகிய இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்கு அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் என்று நீங்கள் காங்கரஸ்காரர்களைக் கேட்கவேண்டும். தங்கள் கையால் ஆகாததனாலேயே அப்பிரச்சினையை பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் முடிவுக்கு அவர்கள் விட்டு விட்டனர். அவ்விதமே அவரால் கொடுக்கப்பட்ட வகுப்புத் தீர்ப்பை வெளிப்படையாக அங்கீகரிக்கவோ, எதிர்க்கவோ அவர்கள் முன்வராமலிருக்கின்றனர்.

ஒவ்வொரு வருஷமும் வட இந்தியாவில் வகுப்புக் கலகங்கள் ஏற்பட்டு மக்களின் உயிருக்கும், சொத்திற்கும் நஷ்டம் ஏற்பட்டு வருவதைக் கேட்டு வருகிறோம். இன்றைய தினம் பம்பாயில் அத்தகைய கலகத்தால் மக்கள் தைரியமாக தங்கள் தினசரி காரியங்களை நடத்த முடியாமலிருக்கின்றனர். அக் கலகத்தை அடக்க இராணுவத்தை உடனே அமர்த்தச் செய்யவேண்டுமென எல்லாக் கட்சித் தலைவர்களும் சர்க்காரை வேண்டிக்கொண்டிருக்கின்றனர்.

இது விஷயமாக பண்டிதரிடம் கேட்ட பொழுது, கோயில்களையும், மசூதிகளையும் இடித்து தெறித்து விட்டால் இத்தகைய கலகங்கள் ஏற்படாதெனக் கூறியதாகத் தெரிகிறது. இது அவரது அரசியல் ஞான சூனியத்தையே புலப்படுத்துகிறது. எப்பிரச்சினையைக் காட்டிலும் இப்பிரச்சினை முதலில் தீர்க்கப்பட வேண்டியதாயிருக்கிறது. அதிர்ஷ்டவசமாக நம் மாகாணத்தில் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமலிருந்து வருகின்றன. ஜஸ்டிஸ் கட்சி இருக்கும்வரையிலும் அத்தகையதொன்றும் இங்கு ஏற்படாதென்பது திண்ணம்.

பிரிட்டிஷ் தொடர்பால் பட்டது இத்தேசத்தில் அடிமைப் புத்தியை வளர்த்ததாகக் கூறப் படுகிறது. வேறு அன்னியாட்சிகளின் கீழ் இந்தியா இருந்த நிலைமைக்கு இது எவ்வளவோ மேலானதென்று தான் கூற வேண்டும். இது வன்றி மத சமூகத்தின் பேரால் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் இத்தேச மக்களைப் பல நூற்றாண்டுகளாக அடக்கி ஆண்டு வருவதைக் காட்டிலும் இது மோசமானதெனக் கூற முடியாது.

பிரிட்டிஷாரும்-காங்கரசும்

இத்தேசத்தில் தேசிய இயக்கம் ஏற்படுவதற்கு பிரிட்டிஷ் ஆட்சியே காரணம். காங்கரசின் முதல் முப்பது வருஷ கால சரித்திரம், பிரிட்டிஷ் தொடர்பின் மீது அதற்கிருந்த பற்றையே குறிப்பிடுகிறது. இங்கிலீஷ்காரரின் ஒத்துழைப்பினாலேயே காங்கரஸ் இத்தேசத்தில் தோன்றியது. இந்தியர்களின் அபிலாஷைகள் வெற்றி பெறுவதற்கு இரு திறத்தாரின் ஒத்துழைப்பும் அவசியமென்பதை அக்காலத்தில் உணர்ந்திருந்தனர்.

இத்தேசம் ஒரே ஆட்சியின் கீழ் உட்பட்டிருப்பது நமது அதிர்ஷ்டமே. கைவிரலவிட்டு எண்ணக்கூடிய ஒரு சில இங்கிலீஷ்காரர்களால் இத்தேசம் ஆளப்படுவதை இந்தியர்கள் கண்ணுற்ற போது தான் அவர்களுக்கு ரோஷமும் வெட்கமும் ஏற்பட்டு, அவர்களிடை தேசிய உணர்ச்சியை எழச் செய்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு வெளியிலுள்ள எத்தேசத்திலும் காணப்படாத பேச்சு சுதந்திரத்தை இந்தியா இன்று அனுபவித்து வருகிறது. அமெரிக்காவில் கூட இத்தகைய சுதந்திரத்தைக் காண முடியாது.

ஐரோப்பியத் தேசங்கள் சிலவற்றில் சர்க்காருக்கு எதிரிடையாக தப்பித்தவறி ஒரு வார்த்தை கூறி விட்டாலும் மிகவும் கொடூரமான தண்டனை விதிக்கப்படுகிறது. இந்தியருக்கு பிரிட்டனால் கொடுக்கப்பட்டுள்ள இச்சுதந்திரத்தை காங்கரஸ் ராஜ்யத்தில்கூட நாம் காண முடியாது. காங்கரசைத் தவிர்த்த இதர கட்சிகளின் கூட்டங்கள் கலவரமின்றி நிம்மதியாக நடைபெற முடியாது. இதை இப்பொழுதே நீங்கள் நேரிலும், பத்திரிகை வாயிலாகவும் அறிந்திருக்கக்கூடும். உதாரணமாக சமீபத்தில் சென்னை காங்கரஸ் வாதிகள் காங்கரஸ் கட்டிடத்தில் ஓர் காங்கரஸ் அபேதவாதி பேச இடம் கொடுக்க மறுத்தது உங்களுக்கு நினைவிருக்கும். அப்படியிருந்தும், தாங்கள்தான் தேசியவாதிகள், தேச சுதந்திரத்திற்காகப் போராடுபவர்கள் என உண்மைக்கு மாறாக பிதற்றித் திரிகின்றனர்.

ஐரோப்பாவிலுள்ள ஒரு தேசத்திற்கு இந்தியா ஒப்பிடப்படுகிறது. ஆனால் அது சரியல்ல. ஐரோப்பாவிற்கே இந்தியாவை ஒப்பிடலாம். அக் கண்டத்தில் உள்ளதைப் போன்றே இந்தியாவிலும் பல்வேறு மதங்களும், பல்வேறு பாஷைகளும் நிலவி வருகின்றன. ஆகவே இந்தியாவின் பிரச்சினை, ஐரோப்பியப் பிரச்சினையைப் போன்று மிகவும் சிக்கலானது. அதனைத் தீர்க்க இங்கிலீஷ்காரர்கள் உள்பட, இந்தியாவின்மீது உண்மை அபிமானங் கொண்ட எல்லோரின் ஒத்துழைப்பும் அவசியம் வேண்டியிருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒழிந்து, இந்தியா சுதந்தரமடைந்த பின்னரே, இத்தேச பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப் படுமென கூறப்படுகிறது. ஓர் சுதந்தர தேசம் தனது பொருளாதார முறையைத் தன்னிஷ்டம் போல் மாற்றிக் கொள்ளக் கூடும் என்பது உண்மையே. ஆனால், சுதந்தர தேசங்கள் கூட அவற்றை லேசாகத் தீர்த்துக் கொள்ள முடியாமலிருக்கிறது. சீனா சுதந்தர தேசமாக விளங்கிய பொழுதிலும் தனது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாமலிருக்கிறது அதற்குப் பதில் தன் தேசத்தில் ஒரு பகுதியை சிறிது சிறிதாக இழந்து கொண்டு வருகிறது. அடுத்தபடியாக மற்றோர் அபேக்ஷையுடன் ஸ்பெயினைப் பார்ப்போமேயானால் அங்கும் அமைதியில்லாமலிருக்கிறது. தனது சமூக பொருளாதார முறையை மாற்றியமைக்கும் விஷயமாக தற்பொழுது அங்கு உள்நாட்டுக் கலகமேற்பட்டு உயிர்ச்சேதமும், பொருட் சேதமும் ஏற்பட்டு வருகிறது. தற்போது நமக்கு முன்னுள்ள இரு பிரச்சினைகளில் அரசியல் பிரச்சினையைக்காட்டிலும், பொருளாதாரப் பிரச்சினையே மிக முக்கியமென்பதை எவரும் மறக்க முடியாது.

பொருளாதாரக் கொள்கை

சோவியத் ருஷிய முறையில் நமது கொள்கை திருத்தியமைக்கப்பட வேண்டுமென்ற விஷயத்திற்கு நமது தேசம் அவ்வளவு சுலபத்தில் இடங் கொடுத்து விடுமா என்பது எனக்கு ஆச்சரியகரமாகவே யிருக்கிறது. பொதுவுடமை ராஜீகத்தால் ருஷியாவிற்காவது அனுகூலமேற்பட்டதா என்பது சந்தேகமாகவேயிருக்கிறது.

சோவியத் பிரசாரத்தின் மூலமே நாம் ருஷிய விவகாரங்களை அறிகிறோம். அத்தேசத்திற்குப் போய்ப் பார்த்து வந்தவர்கள் கூட அதன் அரசியல், பொருளாதார நிலைமையை சரிவர கூற முடியாமலிருக்கின்றனர். இந்தியாவில் நாம் அனுபவித்து வரும் ஒரு சில சுதந்திரத்தைக் கூட பொதுவுடமை அரசாங்கமெனக் கூறப்படும் ருஷியாவில் அம்மக்கள் அனுபவித்து வரவில்லையென அங்கு நடைபெற்று வரும் சம்பவங்களால் நாம் ஊகிக்க வேண்டியிருக்கிறது. அத்தகையதோர் ராஜ்யத்தில் நமக்கும் அக்கதியே ஏற்படாதென்பதற்கு என்ன அத்தாக்ஷியிருக்கிறது.

தனி வுடமை ஒழிபட்டு பொதுவுடமை ஏற்பட வேண்டுமெனக் கூறுவது, கேட்பதற்கு இனிமையாயிருக்கலாம். அப்படியாயின இதையே தன் தேர்தல் பிரச்சினையாகக் கொண்டு காங்கரஸ்காரர்கள் ஏன் போட்டி யிடக் கூடாது. இம்மாகாணத்திலுள்ள காங்கரஸ்காரர்களின் யோக்யதை நமக்குத் தெரியும். வாக்காளர் முன்பு எத் திட்டத்தையும் ஒளி மறைவின்றிக் கூறி அவர்கள் போட்டியிடப் போவதில்லை.

பண்டித நேருவையும், மற்றும் இதர அகில இந்திய காங்கரஸ் தலைவர்களையும் தங்கள் கலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளவே அவர்களை இங்கு அழைத்து வருகின்றனர். காங்கரஸ் பேரால் பாமர மக்களை ஏமாற்றி அவர்கள் ஓட்டுக்களைச் சம்பாதித்து, பதவி ஏற்கவே இவர்களின் அந்தரங்க நோக்கமாகும். ஆகவே, இவர்களது சூழ்ச்சியைக் கண்டு நமது கட்சியோ, இங்கிலீஷ்காரரோ ஏமாறப் போவதில்லை.

வாக்காளர்கள் தான் முடிவில் ஏமாறப் போகின்றனர். காங்கரஸ் ஆட்சியால் தேசம் ஒரு சிறிதும் முன்னேறப் போவதில்லை. முனிசிபாலிடிகள், ஸ்தல ஸ்தாபனங்கள் ஆகியவற்றில் காங்கரஸ்காரர்கள் அமைத்து நடத்திய ஊழல் நிர்வாகத்தைப் பொது மக்கள் இதற்குள் மறந்திருக்க மாட்டார்களென நம்புகிறேன்.

பரிசுத்தக்காரர்கள்!

காங்கரஸ்காரர்கள் பெரும்பான்மையோராயிருந்த ஸ்தல ஸ்தாபனங்களிலெல்லாம் அவர்களுக்குள்ளேயே பிளவேற்பட்டு ஊழல் நிர்வாக மேற்படத் தொடங்கி விட்டது அதன் பின்னர் விழிப்படைந்த வாக்காளர்கள் உபதேர்தல்களில் காங்கரஸ்காரர்களை முறியடித்தனர்.

ஸ்தல ஸ்தாபனங்களைப் பரிசுத்தப் படுத்தப் போகிறோம். கட்சி அரசியல் அவைகளில் புகுந்த மாட்டோம் என்று அவர்கள் கூறிய தெல்லாம் எவ்வளவு 'தூய்மை' என்பதை

(இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க)

காங்கரஸ் அபேட்சகர்களுக்கு பெருந் தோல்வி

செட்டிமார் நாட்டுத் தேர்தல்

(ஒரு நிருபர்)

காரைக்குடி, நவ, 25

இராமனதபுரம் ஜில்லா தேர்தலுக்கு முறையே நெய்குப்பை வட்டத்திலும், கல்லல் வட்டத்திலும் நின்ற திரு. கே. முத்தையா செட்டியாரும், திரு. பழனியப்பச் செட்டியாரும் வெற்றிபெற்றுர்கள். இவர்களில் முன்னவர், 1,111 ஓட்டுகளாலும், பிந்தியவர் 947 ஓட்டுகளாலும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதன் விபரம் வருமாறு:—

நெய் குப்பை வட்டம்

திரு. கே. முத்தையா செட்டியார் (ஜஸ்டிஸ்)	1, 111
திரு. வல்லியப்பச் செட்டியார் (காங்கரஸ்)	1080
தள்ளுபடியான ஓட்டுகள்	—27

கல்லல் வட்டம்

திரு. பழனியப்ப செட்டியார் (ஜஸ்டிஸ்)	947
திரு. சுவாமிநாதன் சேர்வை (காங்கரஸ்)	869
திரு. வைரவ செட்டியார்	4
தள்ளுபடியான ஓட்டுகள்	-33

சதுர்வேதமங்கலம் வட்டத்தில் நின்ற திரு. சிவலிங்கம் செட்டியார் (காங்கரஸ்) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இராமனதபுரம் ஜில்லா போர்டு செட்டிநாட்டுத் தொகுதியில் தேர்தலுக்கு நின்றவர்களின் ஓட்டுகள் நேற்று திருப்பூர் தாலூகா மாஜிஸ்திரேட் முன்னிலையில் எண்ணப்பட்டன. அதுபோது பேலட் பேப்பரின் கவுண்டர் பாயில்கள் சுமார் 101-வரை காணப்படவில்லை. மறுபடியும் தேர்தல் ஏற்படலாம்.

பரமக்குடி தாலூகா

மதுரை, நவ, 25

பரமக்குடி தாலூகாவிலுள்ள வட்டங்களின் சார்பில் இராமனதபுரம் ஜில்லா போர்டு தேர்தலுக்கு நின்றவர்களின் ஓட்டுகள் நேற்று ஷை தாலூகா மாஜிஸ்திரேட் திரு. மொஹிடீன் பாட்சா முன்னிலையில் எண்ணப்பட்டன. அதன் விபரம் வருமாறு:—

பரமக்குடி வட்டம்

திரு. வீராசாமி ஆச்சாரி (காங்கரஸ்)	1,659
திரு. கோபால் ஐயங்கார்	140
தள்ளுபடியானது	—54

சாலிங்ராமம் வட்டம்

திரு. டி. சீனிவாசன் (காங்கரஸ்)	2,248
திரு. மகம்மது ராவுத்தர்	1,133
தள்ளுபடியானவை	54

போகலூர் வட்டம்

திரு. முத்து திருமேனியா பிள்ளை (ஜஸ்டிஸ் இவர் தற்பொழுதும் அங்கத்தினராகவே உளார்)	1,134
திரு. கோபாலராம ஐயர் (காங்கரஸ்)	733
தள்ளுபடியானவை	50

மக்காப்பட்டி வட்டம்

திரு. உடையப்பா (காங்கரஸ்)	1,764
திரு. சுப்பிரமணியம் செட்டியார்	303
தள்ளுபடியானவை	47

முதுகுத்தூர் வட்டம்

திரு. பு. முத்துராமலிங்க தேவர் (காங்கரஸ்)	1,369
திரு. இரத்தினவேலு தேவர்	508
தள்ளுபடியானவை	23

அருப்புக்கோட்டை தாலூகாவில் கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களாவன திருவாளர்கள், ஜெயராம் செட்டியார் (காங்கரஸ்), எனிசாண்டி ரெங்கசாமி ரெட்டியார் (பாளையம்பட்டி ராஜா), திரு. குமாரசாமி (ஆதிதிராவிடர் தனி) மேற்கண்டவரும் தற்பொழுது அங்கம் வகித்து வருபவர்களாவார்கள்.

நெல்லூரில் ஜஸ்டிஸ் வெற்றி

இரு போர்டுகளுக்கும் தேர்தல்

காங்கரஸ் காரியதரிசி படுதோல்வி

நெல்லூர், நவ, 26

நெல்லூர் ஜில்லா போர்டு, காவாலி போர்டெனவும், நெல்லூர் போர்டெனவும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுளது. இரு ஜில்லா போர்டுகளுக்கும் தேர்தல்கள் நடைபெற்று விட்டன.

காவாலி போர்டுக்கு 19 ஜஸ்டிஸ் கட்சியினரும், 9 காங்கரஸ்காரர்களும், 1 சுயேச்சை அங்கத்தினரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

நெல்லூர் ஜில்லா போர்டில், 22 ஸ்தானங்களில் 2 ஸ்தானங்களுக்கு தேர்தல் நிறுத்தப் பட்டுளது. மீதியுள்ள 20 ஸ்தானங்களில் ஜஸ்டிஸ் கட்சியினர் 7-ம், காங்கரஸ்காரர்கள் 8-ம், சுயேச்சைக் கட்சியினர் 5-ம் கைப்பற்றியுள்ளனர்.

நெல்லூர் ஜில்லா போர்டு தேர்தலில், போர்டு தலைவர் வெங்கடகிரி குமார ராஜா, காங்கரஸ் காரியதரிசி திரு. ஜி. ஹநுமந்தராவை விட 1300 ஓட்டுக்கள் அதிகம் பெற்று வெற்றி யடைந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த இரு போர்டுகளும் டிசம்பர் முதல் தேதியிலிருந்து வேலை செய்யத்தொடங்கும்.

இராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தல்

ஜஸ்டிஸ் கட்சிக்கு மகத்தான வெற்றி

(ஒரு நிருபர்)

கானாடுகாத்தான், நவ, 27

தொண்டி வட்டத்திற்கும், தேவகோட்டை வட்டத்திற்கும் முறையே அபேட்சகர்களாக நின்ற திருவாளர்கள்: தேவகோட்டை கலராஜ செட்டியாரும், லெக்ஷமணன் செட்டியாரும் பெருவாரியான ஓட்டுகளால் இராமனதபுரம் ஜில்லா போர்டு அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மற்றும், சிவகங்கை வட்டத்திற்கும், குன்னக்குடி வட்டத்திற்கும் முறையே அபேட்சகர்களாய் நின்ற சிவகங்கை இராஜாவும் திரு. பெரியண்ணு செட்டியாரும் அதிகப்படியான ஓட்டுகளால் மேற்படி ஜில்லா போர்டு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

ஆதிதிராவிடர் வாலிப சங்கம்

பொதுக் கூட்டம்

(ஒரு நிருபர்)

சமுத்திரம், நவ, 25

சென்ற மாதம் 11-ம் தேதி வெள்ளிக்கிழமை இரவு 7½ மணிக்கு சங்கக் கட்டடத்தில் உபதலைவர் திரு. மொ. குழந்தை அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு பெண்கள் உள்பட பெருவாரியாக வந்திருந்தனர்.

அதுகாலை தோழர்கள் பலர் அரிய பிரசங்கங்கள் செய்தனர். தலைவர் முடிவுரைக்குப் பின், திரு. எம் ரெத்தினம் சங்கத் தலைவர் திரு. வை. வையாபுரி அவர்களுக்கும், உபதலைவர் திரு. மொ. குழந்தை அவர்களுக்கும் வந்தனம் கூறுகையில் தலைவரும், உபதலைவரும் வயது சென்றவர்களாக இருந்தபோதிலும் வாலிபருடன் சேர்ந்துழைக்க முன் வந்திருப்பதைப் பாராட்டிப் பேசினர். அதன்பின் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூட்டம் கலைந்தது.

சேலம் மத்தியப் பிரசார ஜஸ்டிஸ் கமிட்டி அங்கத்தினரான திரு. செத்தப்பிள்ளையின் 19 வயது குமாரி இறந்தமைக்கு வருந்தி எங்கள் அநுதாபத்தை அன்னருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

காங்கரஸ்காரர் காலாடித்தனம்

வாக்காளர்களை வழிமறித்தல்

(ஒரு நிருபர்)

காரைக்குடி, நவ, 25

இன்று ராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தல் செட்டிநாட்டில் நடைபெற்றது. ஒழுங்கின்மையும், அமைதியின்மையும், குழப்பமும், கலகமும் ஏற்பட்டதால் தேர்தல் சரியானபடி நடக்கவில்லை. எங்கும் ஒரே கூக்குரலும், சலாட்டாவுமாகவே இருந்தது. இதுவுமின்றி வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமைகளைத் தாராளமாக தங்கள் மனதிற்கேற்றபடி கொடுக்கவும் முடியவில்லை. இதற்குக் காரணம் காங்கரஸ் கூலிகளின் காலாடித்தனமும், அயோக்கிய செய்கையும், கேவலப் புத்தியும் தானே யொழிய பிறிதொன்றில்லை. வாக்காளர்கள் போலிங் ஸ்டேஷனுக்கு வரும் வழியில் அவர்களை வழிமறித்து பயமுறுத்தி இம்சை செய்தனர். அவர்கள் மனசாட்சிக்கு விரோதமாக தங்கள் கட்சிக்கே வோட் செய்யும்படிக்கும் துன்புறுத்தினர். இம்மட்டன்றி தேர்தல் நடக்குமிடத்தில் கற்களை யெறிந்தும் துர் பாஷைகளைப் பிரயோகித்தும் தேர்தலில் அமைதியின்மையைப் பெருக்கி வந்தனர். அநேகர் காங்கரஸ் வாலாக்கள் செய்யும் அட்டூழியங்களைக், இன்னல்களைக்கண்டு சகியாது ஓட்டுக்கொடுக்காமல் வீடு திரும்பினர். போலீஸ் பந்தோபஸ்து அதிகமின்மையால் திருவடனியில் வோட்டுகள் எண்ணப் படாமலேயே நிறுத்தப்பட்டு விட்டது.

இதே சம்பவம் திருப்பத்தூரிலும் நீதிபதியின் முன்னிலையிலேயே நடந்தது. பொது மக்கள் தங்கள் வாக்குரிமைகளைக் கொடுப்பதற்கு பந்தோபஸ்து இல்லாதது பற்றி வருந்துகின்றனர். இனியும் காங்கரஸ்காரர் காலிகள் தொந்தரவு செய்யக் கூடுமோவென நினைக்க ஏது விருக்கிறது. ஆகையினுல் தேர்தல் நடக்கு மிடங்களில் இத்தகைய காங்கரஸ் வாலாக்களின் சேஷ்டைகள் நடக்கா வண்ணம் அமைதி நிலவ வேண்டுமென செய்யுமாறு வாக்காளர்கள் மேல் அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கின்றனர்.

"ஜெய பாரதியின்" பொய்ப் பிரசாரம்

சாத்தூர் நிருபரின் புரட்டு

சென்னை, நவ, 28

காஞ்சி கலியாணசுந்தரம் எழுதுவது:—

விருதுநகர் தேர்தல் சம்பந்தமாக ஓட் எண்ணுவதை கவனிப்பதற்காக சாத்தூர் சென்றிருந்த திருவாளர்கள்: வி. வி. ராமசாமி, ஊ. பு. அ. சௌந்தரபாண்டியன் எம். எல். ஸி. முதலியவர்களும் இன்னும் சில விருதுநகர் பிரபலஸ்தர்களும் தாக்கப்பட்டதாக 'ஜெய பாரதி' 26, 27-ந் தேதி பத்திரிகைகளில் வெளி வந்திருப்பது கலப்பற்ற பொய்யாகும். உண்மை வரலாற்றையும் இரண்டு போலீஸ்காரர்கள் கடு நிலைமை தவறி நடந்து கொண்ட விஷயத்தையும் விரிவாக பின் தெரிவிக்கிறேன்.

சென்னை மாகாண வள்ளுவர் மகாஜன சங்கம்

இச் சங்கத்தினுரால் டிசம்பர் மாதக் கடைசியில் கூடுவதாக 2 வது மாகாண வள்ளுவர் மகாநாட்டின் பிரசாரமாக நாளை (29-11-36) ஞாயிறு மாலை 6-1/2 மணிக்கு சென்னை வேளாளர் தேனாம்பேட்டை பாபு முதலி தெரு 15 நெ. இல்லத்தில் திரு. செ. நாராயணசாமி நாயனர், அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் திருவாளர்கள்: ஆ. அ. சிதம்பரநாயனர், கே. என். ராமலிங்க நாயனர், என். அமிர்தலிங்க நாயனர், தெ. ப. மெஞ்ஞான நாயனர். கெ. என். கன்னியப்ப நாயனர் இவர்கள் "வள்ளுவர் மாண்பு" என்பதைப் பற்றி பேசுவார்கள்.

வட ஆற்காடு ஜில்லா

ஜஸ்டிஸ் மகாநாடு

வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு. வே. ஷண்முக முதலியார்

அவரது நீண்ட கால சேவை

வேலூரில் இன்று (28-11-36) கூடியிருக்கும் வடாற்காடு ஜில்லா ஜஸ்டிஸ் மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு. ஷண்முக முதலியார் அவர்களைப் பற்றியும், அவரது பொது வாழ்க்கையைப் பற்றியும் அவரை நன்கு அறிந்த ஒருவர் எழுதுவதாவது:—

வட ஆற்காடு ஜில்லா ஜஸ்டிஸ் மகாநாட்டிற்கு உபசாரணை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் வாணியம்பாடி திரு. ஷண்முக முதலியார் அவர்கள் பொது வாழ்க்கையில் சுமார் 35 வருட காலமாய் பல துறைகளிலும் ஈடுபட்டு ஊழியம் செய்து வருகிறார். அவர் இந்த ஜில்லாவில் பிரபலஸ்தர்களில் ஒருவர். அவர் எப்போதும் உற்சாகமாகவும்; சுறு சுறுப்பாயும் இருந்து நடமாடுகிறார். கூட்டுறவு இயக்கத்தில் பல ஆண்டுகளாகச் சம்பந்தப்பட்டு இருக்கிறார். திருப்பத்தூர் தாலூகாவில், வெள்ளைகுட்டை, நாட்டறம்பள்ளி, அம்பலூர், புதூர், அம்பூர்பேட்டை, பெரியபேட்டை, வாணியம்பாடி முதலிய இடங்களில் இராம கிருஷ்ணமடம், விவேகானந்தர் சங்கஸ்தாபனங்களுக்கும், அதன் முன்னேற்றத்துக்கும் விசேஷமாய் பொருளுதவி செய்து இருக்கிறார். ஆம்பூரில் கூடிய வேளாளர் மகாநாட்டிலும் விசேஷ சிரத்தை எடுத்து வேலை செய்து இருக்கிறார். அது தவிர நாட்டறம்பள்ளி, ஆம்பூர் முதலிய இடங்களில் கூடிய கூட்டுறவு ஜில்லா மகாநாட்டிலும் அரிய ஊழியம் புரிந்து இருக்கிறார். நீண்டகாலத்திற்கு முன்பே அவர் தேசிய இயக்கத்தில் சம்பந்தப்பட்டு இருந்து, அமிர்த சரஸ், பெல்காம், முதலிய இடங்களில் நடைபெற்ற அகில இந்திய காங்கரசுக்குச் சென்று இருக்கிறார். பஞ்சாப் படுகொலை நடந்த அமிர்த சரசுக்கு சென்று அந்த இடங்களைப் பார்த்து இருக்கிறார். இந்த மாகாணத்திலே, முதல் முதலாக ஆம்பூரில் நிலஅடமான பாங்கை ஏற்படுத்துவதற்கு தீவிர முயற்சி செய்தவர்களில் நமது நண்பரும் ஒருவராவர். பல விவசாயிகளுக்கும், குடிகளுக்கும், இதன் மூலமாய பல நன்மைகள் ஏற்பட்டு இருக்கின்றன. "உண்மை சங்க"த்தை ஸ்தாபித்ததற்கு இவரது சிரத்தையே காரணமாகும்.

சுமார் 35 வருட காலமாய் தமிழ் பத்திரிகையைப் படித்து நமது நாட்டின் அரசியல் சமூக நிலைமையை அறிந்து இருக்கிறார். சில ஆண்டுகளாக ஒரு தமிழ் தினசரி, வாரப் பத்திரிகைகளையும் வாங்கி அன்றாடம் அதில் கவனம் செலுத்தி வருகிறார். நாட்டிலுள்ள கட்சிகளின் நிலைமையையும் நன்கு அறிவார். அவருக்கு ஏற்பட்டு இருக்கும் நீண்டகால அனுபவங்கள், பல துறைகளில் அவருக்கு வேலைசெய்ய அனுகுணமாயிருந்து வருகின்றன. விருந்தினர்களை உபசரிப்பதில் அவர் சளைத்தவரல்ல. அநேக வாசக சாலைகளையும், புஸ்தக சாலைகளையும் ஏற்படுத்தி இருக்கிறார். பெண் கல்வியின் முக்கியத்தை உணர்ந்து, அதற்காக ஓர் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி இருக்கிறார். கல்வி முன்னேற்றத்தில் அவருக்கு விசேஷ சிரத்தை உண்டு.

அவருக்கு ஆங்கிலம் தெரியாதபோதிலும் தனக்கு ஏற்பட்டிருக்கும் அனுபவங்களைக்கொண்டு பல விஷயங்களைத் தானே சிந்தித்து நிதானமாய் ஆடம்பரமின்றி ஊழியம் புரிவதில்தான் அவருக்கு விருப்பம் அதிகம். டாம்பீகத்தை சற்றும் விரும்பாதவர், தீண்டாதார் முன்னேற்றத்திலும், சமூக விடுதலையிலும் மிகவும் அக்கறையுள்ளவர். எல்லோரிடத்திலும் நிதானத்துடனும், ஞானத்துடனும் சம்பாஷணை செய்வார். பெண்களுக்குப் பிதுரார்ஜித சொத்தில பங்கு கொடுக்க வேண்டுமென

ந்தவர் விவாகத்திலும்
வுநடந்த விருப்ப
ணை அடைய
டைய

பதிலும், அவருக்கு அ
முண்டு. தேசம் வி
வேண்டுமென்பதில் அ
தேசபக்தி எவருக்கும் குறைந்தல்ல. சமூக விடுதலையால்தான் தேசம் விடுதலை அடையும் என்று நம்பிக்கை யுள்ளவர்களில் இவரும் ஒருவர்.

இப்படிப்பட்ட கனவான் நம்முடைய கோரிக்கைக்கு இணங்கி இப்பதவியை ஒப்புக்கொண்டு தொண்டாற்ற முன் வந்தது நமது அதிர்ஷ்டமே யாகும். திரு. முதலியார் திருப்பத்தூர் தாலூகாவில் மதிப்பும் செல்வாக்கும் உள்ளவரானபோதிலும், வட ஆற்காடு ஜில்லாவிலும் அவருக்குப் பல இடங்களில் பிரபலஸ்தர்களான நண்பர்கள் உண்டு. தமிழர்கள் முன்னேற்றத்தில் ஆர்வமுள்ள அவருக்கு நாம் நன்றி செலுத்துவோமாக. தேச விடுதலைக்கும், சமூக விடுதலைக்கும் அவர் நீண்டகாலம் உழைக்குமாறு கடவுள் அருள்புரிவாராக.

ஜஸ்டிஸ் இளைஞர் கழகம்

பெத்துநாய்க்கன் பேட்டை கிளை கூட்டம்

சென்னை, நவ, 26

சென்ற ஞாயிற்றுக்கிழமை (22-11-36) கூடிய பெத்துநாய்க்கன் பேட்டை ஜஸ்டிஸ் இளைஞர் கழக கூட்டத்தில் பின் கண்ட தீர்மானங்கள் நிறைவேறிற்று.

இளம் மசோதாவை அங்கீகாரம் செய்த மேன்மை தங்கிய வைசிராய்க்கும், சென்னை கவர்னருக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் எவ்வளவோ எதிர்ப்புகளுக் கிடையே அதனைக் கொண்டுவரச் செய்த, சென்னை சர்க்கார் முதன் மந்திரி, கனம் பொப்பிலிராஜாவுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

திருவாங்கூர் சமஸ்தானத்தின் நிர்வாகத்திற் குட்பட்ட எல்லாக் கோவில்களையும் தாழ்த்தப்பட்ட மக்களுள்பட எல்லா இந்து மக்களுக்கும் வழிபட திறந்துவிட்டதைப்பற்றி திருவாங்கூர் மகாராஜாவைப் பாராட்டுகிறது.

சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலை உப அத்தியக்ஷர் பதவிக்கு பார்ப்பனல்லாதார் சமூகத்தில் திறமையுள்ள பலரிருக்க திரு. ஐ. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியாரை தேர்ந்தெடுத்ததைக் குறித்து இக்கூட்டம் தனது அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்கிறது.

"விடுதலை" தினசரியாக வெளிவரப் போவதை இக்கூட்டம் வரவேற்பதுடன் தற்போதுள்ள அதன் சந்தா விகிதத்தை 25% குறைக்குமாறு தலைவர்களை வேண்டிக் கொள்கிறது.

1936, டிசம்பர் முதல் தேதி, அல்லது அதற்குப் பின்னிட்ட சில நாட்களுக்குள்ளாவது சமூகத்திற்கு ஒரு தகுதியான, கட்டடம் கிடைக்கும்படிச் செய்யுமாறு சமூக கவுன்சிலுக்கு அதிகாரம் கொடுக்கிறது.

கோர் இத்தாலியர் வசமாயிற்று

ஒரு சிறு எதிர்ப்பு கூடயில்லை

ரோம், நவ, 27

மேற்கு எதியோபியாவில் எதியோபிய சர்க்காரின் தலைமைக் காரியாலயமாயிருந்து வந்த கோரை இத்தாலியர் ஒரு சிறு எதிர்ப்பு மின்றி கைப்பற்றி விட்டனர். ராஸ் இம்ருவின் துருப்புகள் குரான் எலைக்குப் பின் வாங்கிவிட்டதாகத் தெரிய வருகிறது.

மாணவர் மன்றம்

சென்னை, நவ, 27

இம் மன்றத்தின் ஆதரவில், பெத்து நாயக்கன் பேட்டை சிவஞானம் பூம்பொழிலுக் கடுத்த சைவ பாடசாலையில் 29-11-36 ஞாயிறு காலை 8-30 மணிக்கு டி. திரு மோகனசுந்தர முதலியார் தலைமையில் தண்டை-பார்த்தன்-சம்பந்தம் "நாடகமும் தமிழும்" எனப் பேசுவர். அன்பர்கள் வருக.

தங்கம்-வெள்ளி

சென்னை, நவ, 28

	ரூ-அ-பை
பாய் ஆலைத் தங்கம்	35—0—9
வாய்தா	35—2—3
1-க்கு	34—10—9
	22—5—3
	22—5—6
	8—0
" ரூபா தோல	
சவரன் மொத்தம்	
சவரன் சில்லரை	
வெள்ளி ரூ. 100 எடை	52—
" ரூ. 1 எடை	0—8—

இத்தாலிய ஜப்பானிய ஒப்பந்தம்

எதியோபிய வெற்றி அங்கீகாரம்

டோகியோ, நவ, 27

எதியோபியாவில் இத்தாலியின் வெற்றியை ஜப்பான் அங்கீகரிப்பதெனவும், அதற்குப் பதிலாக மஞ்சுகோவில் ஜப்பானின் ஆட்சியை இத்தாலி அங்கீகரிப்பதெனவும் ஒரு உடன்படிக்கை மேற்படி தேசங்களுக்குள் ஏற்பட்டுள்ளதாக அரைகுறையான உத்தியோக தோரணையில் அறிவிக்கப் படுகிறது. எதியோபியாவில் ஜப்பானின் வர்த்தக உரிமைகளும் அவ்வொப்பந்தத்தில் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இடைகால் பஞ்சாயத்து போர்டு

(ஒரு நிருபர்)

தென்காசி, நவ, 27

தென்காசித் தாலூகா, இடைகாலில் பஞ்சாயத்துபோர்டு மெம்பர் தேர்தல் நடந்த விவரம் இதற்கு முன்பு இப் பத்திரிகையில் நண்பர்கள் வாசித்திருப்பார்கள். 23-11-36-ல் நடந்த ஷை கூட்டத்தில் திரு. எ. இராமலிங்க முதலியாரவர்கள் பிரஸிடெண்டாகவும், திரு. சங்கர நாராயணய்யர் வைஸ் பிரஸிடெண்டாகவும் ஏக மனதாய் தேர்ந்து எடுக்கப் பட்டார்கள். அன்று தேர்தலுக்கு முன்புவரை மிகவும் பரபரப்புடனேயே மெம்பர்கள் இருந்து வந்தார்கள். ஆயினும் கடைசியில் மிகவும் அமைதியுடன் தேர்தல் முடிவுபெற்றது போற்றத் தக்கது.

முஸ்லீம் இளைஞர் சங்கம்

(ஒரு நிருபர்)

மேலப்பாளையம், நவ, 19

மேற்கண்ட முஸ்லீம் சங்கத்தார் இன்று காலை உதவித் தலைவர், ஆலிஜனுப் கதீபு சங்கைவான் பொன்னு அகமது லெப்பை தலைமையில் கூடி கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றினர்.

"பொதுநல ஊழியர் ஜனுப் என். டி சேக்மன்சூர் சாகிபு அவர்கள் வருகிற சட்டசபைத் தேர்தலுக்கு திருநெல்வேலி ஜில்லா முஸ்லீம் தொகுதி அபேட்சகராக நிற்பதால அவருக்கு திருநெல்வேலி ஜில்லா முஸ்லீம் வாக்காளர்கள் நல்ல ஆதரவளிக்க வேண்டுமென்றும், நாங்களும் அதற்காக உழைப்பதாகவும், முஸ்லீம் பார்லிமெண்டரி போர்டும் அவரையே அத்தொகுதிக்கு அபேட்சகராக நிறுத்த வேண்டும்."

பிரம்பை தமிழ் மாணவர் சங்கம்

அனுதாபக் கூட்டம்

(ஒரு நிருபர்)

பிரம்பை, நவ, 25

25-11-36 புதன்கிழமை மாலை 4–30 மணிக்கு ஷை சங்கத்தின் சார்பாக உயர் திருவாளர்: கோ. வடிவேலு செட்டியார் உயிர் நீத்தமை பொருட்டு ஓர் அனுதாபக் கூட்டம் ஷை கலாசாலைத் தமிழாசிரியர் அ. அண்ணாமலையுடையார் அவர்கள் தலைமையின் கீழ் கூடியது. அது போது தலைவர், உயிர் நீத்த செட்டியார் அவர்களின் பெருமையைப் பாராட்டியும் இறந்தமையாலுண்டாகும் கஷ்டத்தைக் குறித்தும் பேசிய பின்னர் ஷை சங்கத்தார் எழுதிய அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் கலைந்தது.

விடுதலை! விடுதலை!! விடு **தலை!!!**

பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் வி
பரவரோடு குறவருக்கு மறவருக்
திறமைகொண்ட தீமையற்
தேர்ந்த கல்வி ஞான
ஏழையென் விடுதலை!
இழி ரும் விடுதலை!
ம தொழில் புரிந்து யாவரும்
மெய்தி வாழ்வமிந்த நாட்டிலே!
ம் அடிமை என்றும் எவனுமில்லை ஜாதியில்
ழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே!

மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையை கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த வகையினும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! (பாரதி)

விடுதலை

சென்னை: 1936-௵ நவம்பர்-௴ 28-௳
சனிக்கிழமை

யானைக்குப் பானை சரி

காங்கரஸ்காரர் அரிச்சந்திரர்கள் அல்லவா? சொன்ன சொல் தவறாத சுத்த வீரர்களல்லவா? ஆகவே, சென்னை நகரசபைத் தேர்தல் காலத்து வாக்காளர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை அவர்கள் கண்டிப்பாக நிறைவேற்றி வைத்து விட்டார்கள். அதாவது, கார்ப்பரேஷன், டிபார்ட்மெண்டு மேலதிகாரிகளுக்கு 500 ரூபாய்க்குமேல் சம்பளம் கொடுக்க முடியா தென்று தீர்மானித்து, தற்பொழுது அதிகப்படியான சம்பளம் பெற்று டிப்பார்ட்டுமெண்டு மேலதிகாரிகளாக இருக்கும் உத்தியோகஸ்தர்கள் மேற்கொண்டு 500 ரூபா சம்பளம் பெற்றுக் கொள்ள இணங்காவிட்டால் அவர்களை ஓசைப்படாமல் வீட்டுக்கு அனுப்பிவிட்டு, 500 ரூபாய் சம்பளம் வாங்க இணங்கும் புது உத்தியோகஸ்தர்களை நியமிப்ப தெனவும் தீர்மானித்து விட்டார்கள். வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டியது யோக்கியப் பொறுப்புடையவர்கள் கடமைதான். ஒழுங்கான முறையில் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வைப்பதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள்; ஆனால், வாக்குறுதிகளை நிறைவேற்றி வைப்பதற்காக முட்டாள்தனமாகக் காரியங்களை நடத்தினால் பொறுப்புடையவர்கள் எல்லாம் கண்டிக்கத்தான் செய்வார்கள். பாமர மக்களை ஏமாற்றும் பொருட்டு முட்டாள்தனமான வாக்குறுதிகளை யளித்துவிட்டு, அடிமுட்டாள் தனமான முறையில் அவைகளை நிறைவேற்றிவைக்க முயல்வது வன்மையாகக் கண்டிக்கத் தகும். கார்ப்பரேஷன் மேலதிகாரிகள் சம்பளத்தைக் குறைப்பதுபற்றி சமீபத்தில் ஒருபொதுக் கூட்டத்தில் பேசுகையில், அவர்கள் சம்பளத்தைக் குறைப்பதற்கு அனுகூலமாக நகரசபை சட்டத்தைத் திருத்துமாறு சர்க்காரை வற்புறுத்தப் போவதாக திரு. சத்தியமூர்த்தி கூறினர். அதைக் கண்டித்து சென்னை 'மெயி'லும் கூட ஒரு குறிப்பெழுதியது. எனவே தற்கால சட்டப்படி கார்ப்பரேஷன் மேலதிகாரிகள் தலையில் கைவைக்க நகரசபைக்கு அதிகாரமில்லையென்பதை திரு. சத்தியமூர்த்தியே அறிந்துள்ளார் என்பது தெளிவு. எனினும் சென்ற செவ்வாய்க்கிழமைக் கூட்டத்தில் காங்கரஸ் வீரர்கள் மேலே கூறியவாறு கோமாளித்தனமாக நடந்து கொள்ளக் காரணம் என்ன? காரணம் அவர்களது அறியாமையும் அற்பத்தனமும் பாமர மக்களை யேமாற்றும் சூழ்ச்சியுமே யாகும். கார்ப்பரேஷன் காங்கரஸ் அங்கத்தினர்களில் பெரும் பாலர் நகரசபை மெம்பர் பதவி போன்ற பொறுப்பான ஸ்தானங்களுக்குப் புதியவர்கள். இரண்டு, அரை கப் காபி கொண்டு ஒரு நாள் சாப்பாட்டைப் பூர்த்தி செய்து கொள்ளக் கூடியவர்களும், எதிரில் வருகிற மோட்டார் பஸ்களையும் லக்ஷியம் செய்யாமல் பட்டப் பகலில் மனோ ராஜ்யம் செய்து கொண்டு வழி நடப்பவர்களும், 'ஜெயில் ஜ்வரம்' பிடிபட்டவர்களும் வாய் வீச்சினாலேயே உலகத்தை யேமாற்றி வருவதுடன் பத்து ரூபாயாவது நிலை வருமானமில்லாதிருக்கும் இரண்டு மூன்று வீடுகளும் மோட்டார்களும் வாங்கி ராஜ வாழ்வு வாழும் சமர்த்தர்களும் கார்ப்பரேஷனுக்குச் சென்றால் அவர்கள் தலைகால் தெரியாமல் ஆடிப்பதைப்பற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை.

நகரசபைச் சட்டம் 85-வது பிரிவில் நகரசபை நியமனம் செய்யக்கூடிய அதிகாரிகளைப் பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அந்தப் பிரிவைக் கண்ணைத் திறந்து படித்துப் பார்க்காமல் சென்ற செவ்வாய்க்கிழமைக் கூட்டத்தில் நகரசபை காங்கரஸ் கௌன்ஸிலர்கள் திருக் கூத்தாடி விட்டார்கள். உத்தியோகம் காலியாயிருந்தால் தான் புதிய நபர்களை நியமனம் செய்யவேண்டு மென்பதை பள்ளிச் சிறுவர்களும் அறிவார்கள். ஆனால், எந்த நகரசபை மேலதிகாரி உத்தியோகமும் இப்பொழுது காலியில்லை. நகரசபைச் சட்டம் 87-வது பிரிவு 2-வது விதியை காங்கரஸ் கௌன்ஸிலர்கள் கண் திறந்து படித்திருந்தால் சென்ற செவ்வாய்க்கிழமை யன்று நடந்துகொண்டமாதிரி முட்டாள் தனமாக நடந்துகொண்டிருக்க இடமில்லை. 87-வது பிரிவு, 2-வது விதி கூறுவதென்ன? 85-வது பிரிவிலும், 86-வது பிரிவிலும் கூறப்பட்டுள்ளபடி "எந்த உத்தியோகங்களாவது காலியாகவோ, அல்லது 86-வது பிரிவுப்படி எந்தப் புதிய அதிகாரிகளையாவது நியமனம் செய்யத் தேவையுண்டாகவோ செய்தால் மூன்று மாதத்துக்குள் நகரசபை அந்த உத்தியோகங்களுக்கு ஆட்களை நியமனம் செய்ய வேண்டும்" என்று மட்டுமே அந்தப் பிரிவு கூறுகிறது ஆனால், அந்த நுட்பங்களை அறிவதற்கு காங்கரஸ் வாலாக்களிடம் மூளையுண்டா? வாக்காளர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி வைத்து விட்டதாக விளம்பரம் செய்ய ஒரு சந்தர்ப்பத்தைஉண்டு பண்ணிக் கொள்ள வேண்டும் அவ்வளவு தான் அவர்கள் ஆசை. எனவே, ஒரு அலங்காரத் தீர்மானத்தை நிறைவேற்றி வைத்து விட்டார்கள். அது அமலில் வராதென்பதும் அவர்களுக்குத் தெரியும். அது வரக்கூடாது என்பது தான் அவர்கள் அந்தரங்க விருப்பமும். கவைக்குதவாத அந்தத் தீர்மானத்தை சர்க்கார் குப்பைத் தொட்டியில் எறிந்து விட்டால் பொப்பிலி ராஜா துரோகம் செய்து விட்டதாக விஷமப் பிரசாரம் செய்யலாம் என்பதே இந்த கோமாளிக் கூத்தின் கருத்து. காங்கரஸ்காரர்களின் இந்த பைத்தியக்காரப் போக்கை, எப்பொழுதும் காங்கரஸை ஆதரிக்கும் "ஹிந்து"வும், "மெயி"லும் கூட கண்டித்திருக்கையில் நாமும் அதைப்பற்றி அதிகமாகக் கூறவில்லை.

இந்தியா ஒரு ஏழை நாடு என்பதை நாமும் ஒப்புக் கொள்கிறோம். பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு இந்திய நிலைமைக்கு பொருத்த மில்லாத பெரிய சம்பளம் கொடுக்கப்படுவதையும் நாம் ஒப்புக் கொள்ளுகிறோம். இந்திய நிலைமைக்குத் தக்கபடி உத்தியோகஸ்தர்கள் சம்பளத்தை நிர்ணயம் செய்ய வேண்டியது அவசியம் என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால், சர்க்கார் சர்வீஸில் இருக்கும் உத்தியோகஸ்தர்களின் சம்பளக் குறைப்புத் திட்டங்கள் நிர்ணயம் செய்யப்படும் போது நாகரிக உலகம் பின்பற்றும் பொது நீதி ஒன்றுண்டு. அதாவது. "ஹிந்து" கூறுகிறபடி "சாத்தியமானவரை ஏற்கனவே, உத்தியோகத்தில் இருப்பவர்களைப் பாதிக்காமல் பார்த்துக் கொள்வதுதான்" அந்தப்பொது நீதி. இந்த நீதியை டாக்டர் நடேச முதலியார் எடுத்துக்காட்டி, சம்பளக் குறைப்புத் திட்டம், புது உத்தியோகஸ்தர்களைப் பாதிக்கக் கூடியதாகவே இருக்கவேண்டும் என்றுவற்புறுத்தினராம். ஆனால்,காங்கரஸ்வீரர்கள், டாக்டர் முதலியாரின் நன்மொழிகளைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அழிவு வேலைக்காரரிடம் அவ்வளவு நற்புத்தியை எதிர் பார்க்க முடியுமா? டாக்டர் முதலியாரின் பொன் மொழியை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக கார்ப்பரேஷன் மேலதிகாரிகளுக்கு நீதிபோதனை செய்யவும் காங்கரஸ் தியாகிகள் ஆரம்பித்து விட்டார்கள். குறைவான சம்பளத்தை கண்ணியமாக ஒப்புக் கொண்டு இந்தியாவுக்கு வழி காட்ட வேண்டும் என்று ஒரு காங்கரஸ் தியாகி கூறினர். இந்தியாவில் நாங்கள் புது ஒரு உலகம் சிருஷ்டிக்கப் போகிறோம்; புது வாழ்க்கையை உருப்படுத்தப் போகிறோம் என்றெல்லாம் பகற்கனவு கண்டு கொண்டே வழி நடக்கும் ஒரு பேர் வழி பேசினர். ஆனால், இந்த தியாகிகளை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறோம் அசம்பிளி மெம்பர்கள் வாங்கும் பிரதி தினப் படியில் ஒரு பகுதியை காங்கரஸ் நிதிக்கு உதவ வேண்டுமென்று காங்கரஸ் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத் கேட்டுக் கொண்டதற்கு எந்த காங்கரஸ் தியாகியாவது இணங்கியதுண்டா? சொந்த ஹோதாவில் தியாகம்செய்ய விரும்பாத யோக்கியர்களுக்கு கார்ப்பரேஷன் மேலதிகாரிகளுக்கு ஞானோபதேசம் செய்ய நாக்குண்டா?

சம்பளக் குறைப்புத் தீர்மானத்தைப் பிரேரேபணை செய்த திரு. பாஷ்யம் அய்யங்காரைப் பார்த்து ஒரு அங்கத்தினர், "உங்கள் கொள்கையை நீங்கள் உங்கள் சொந்த வாழ்க்கையில் கைக்கொள்வதுண்டா?" எனக் கேட்டாராம். அதற்கு "ஆம்" என திரு. பாஷ்யம் விடையளிக்கவே "வருமான வரிக் கணக்கைப் பார்த்தாலுண்மை புலப்படும்" என மற்றவர் குத்தலாகக் கூறிய போது திரு. பாஷ்யம் விடையளிக்க முடியாமல் புன் முறுவல் பூத்து சமாளித்துக்கொண்டாராம். இதைப்பற்றி சென்னை "மெயில்" எழுதுவது வெகு ரஸமாக இருக்கிறது "பொது ஸ்தாபன உத்தியோகஸ்தர்களுக்கு கடுந்தர வாழ்க்கை நிலைமை இருக்க வேண்டுமென்று கூறிய அரசியல் வாதிகள் விலையுயர்ந்த மோட்டாரில் அன்று மாலையிலேயே ஏறிச் சென்றதை நாம் பார்த்தோம்" என சென்னை "மெயில்" காங்கரஸ் வீரர்களின் கன்னத்திலடித்தது போல் கூறியிருக்கிறது.

ஏற்கனவே நாம் கூறியபடி, அதிகாரிகள் சம்பளத்தைக் குறைப்பதைப்பற்றி நாம் குறை கூறவில்லை. வரப் போகும் தேர்தலில காங்கரஸ வெற்றி பெறுவது நிச்சயமென்றும் காங்கரஸ் மந்திரிகளே நிர்வாகம் நடத்தப் போகிறார்கள் என்றும் திரு. சத்தியமூர்த்தி மிக நம்பிக்கையுடன் கூறுகிறார். அவர் கூறுகிறது போல் காங்கரஸ் மந்திரிகள் வந்து எல்லா உத்தியோகஸ்தர்கள் சம்பளத்தையும் ஒரே அடியாய்க் குறைக்கும் வரை காங்கரஸ்காரர் ஏன் காத்துக் கொண்டு இருக்கக் கூடாது? அவ்வாறு செய்வதே நியாயமான முறை. அந்த நல்ல முறையை விட்டு 4 உத்தியோகஸ்தர்கள் தலையில் மட்டும் கை வைக்க வேண்டுமென்று கூறுவது மஹா நீசத்தனமாகும். காங்கரஸ் தலைவர் ஜவஹர்லால் நடத்தப் போகும் அபேதவாதஆட்சியில் நடக்கப் போகிறதை முன்னாடியே தேச மக்களுக்குக் காட்டிவிட வேண்டுமெனபது சென்ற செவ்வாய்க்கிழமைத் தீர்மானத்தின் உட்கருத்தா யிருந்தால் நாம் ஆட்சேபிக்கப் போவதில்லை. அப்படியானால் அதை வெளிப்படையாகச் சொல்லிவிடட்டுமே!

மற்றும் ஒரு சந்தேகம்; காங்கரஸ கார்ப்பரேஷன் கௌன்ஸிலர்கள் கண் வைத்திருக்கும் 4 உத்தியோகஸ்தர்களும் பார்ப்பனரல்லாதாரா யிருப்பதினால் தான் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதா? அப்படியானால் ஒரு விஷயத்தை பொது ஜனங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறோம். திரு. ஈ. வெ. ரா. பல முறை விளக்கிக் காட்டியுள்ளபடி தற்கால உத்தியோகஸ்தர்களின் அதிகச் சம்பளத்துக்கு காங்கரஸ் பார்ப்பனர்களே காரணம். உத்தியோக மெல்லாம் இந்திய மயமாக வேண்டும் என்று காங்கரஸ் மூலம் கிளர்ச்சி நடத்தி பெரிய உத்தியோகங்களுக்கு ஐயாயிரம், பத்தாயிரக் கணக்கில சம்பளமும் ஏற்படுத்தி, அந்த உத்தியோகங்களை யெல்லாம் கைப்பற்றிக் கொண்டதும் பார்ப்பனர்களே. இரட்டை ஆட்சியில மாகாண மந்திரிகளுக்கு 5000 ரூபாய்க்குக்குறையாமல் சம்பளம் ஏற்படுத்த வேண்டுமென்று ஜாயிண்டு பார்லிமெண்டரி கமிட்டியில் வாக்குமூலம் கொடுத்ததும் ஒரு பார்ப்பனரான ஸர். வி. பி. ராமசாமி அய்யரே. கார்ப்பரேஷன் மேலதிகாரிகளுக்கு ஞானோபதேசம் செய்யும் தியாகிகளான சத்தியமூர்த்தியும், வரதாச்சாரியும் ஒரு காரியம் செய்ய முன் வருவார்களா? தம் இனத்தவரான பெரிய உத்தியோகஸ்தர்கள் தமது சம்பளங்களைத் தாமாகவே குறைத்துக்கொண்டு மற்றைய உத்தியோகஸ்தர்களுக்கு வழி காட்ட வேண்டு மென்று ஒரு அறிக்கை வெளியிடுவார்களா? உத்தியோகஸ்தர் சம்பளங்களை உயர்த்துவதற்குக் காரணபூதர்களா யிருந்த பார்ப்பனர்களே முதன் முதலில வழி காட்ட வேண்டும். பஞ்சாங்கம், தர்ப்பைப் புல், மடி சஞ்சிகள் சந்ததிகளுக்கு 100, 200 ரூபாய் சம்பளத்தில் தாராளமாய் வாழ்க்கை நடத்த முடியாதா?

காங்கரஸ் வாலாக்கள் பேய்க் கூத்தையாவது ஒருவாறு பொறுத்துக் கொள்ளலாம். ஆனால், அவர்கள் பேய்க் கூத்தை ஆதரித்துக் கூத்தாடும் காங்கரஸ் கந்தல் பத்திரிகைகளின் அமர்க்களத்தை சகிக்க முடியவில்லை. அந்தக் கந்தல்களின் ஆர்ப்பாட்டத்தைப் பார்க்கும் போது,

கழுதை காவெனக் கண்டு நின்
றோடிய அலகை
தொழுது மீண்டுமக் கழுதையைத்
துதிசெய்த கதைபோல்
பழுதிலா நமக்கார்க்கிகள்
ஆமென என்னும்
முழுதுமுடனை மூடர் கொண்
டாடியமுறையே.

என்ற பழம் பாடலே நமது ஞாபகத்துக்கு வருகிறது.

விருதை வீரருக்கு ஜே!

ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களில் ஒருவரும் பார்ப்பனரல்லாதார் மத்திய பிரசாரக் கமிட்டி மெம்பரும் விருது நகர் நகரசபைத் தலைவருமான திரு. வி. வி. ராமசாமி, ராமநாதபுரம் ஜில்லாபோர்டு தேர்தலில் வெற்றி பெற்றதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றோம். அவரைத் தோற்கடிக்க காங்கரஸ்காரர்கள் தமது முழு பலத்தையும் பிரயோகம் செய்து பார்த்தார்கள். காலித்தனமும் செய்தார்கள்; அவரையும் அவரது பிரசாரகர்களையும் எவ்வளவுக்கு இம்சிக்கலாமோ அவ்வளவுக்கு இம்சிக்கவும் செய்தார்கள்; திரு. வி. வி. ராமசாமி மீது அபாண்டப் பழிகளைச் சுமத்தி விஷமப் பிரசாரமும் செய்தார்கள். கடைசியில் சத்தியமே வெற்றி பெற்றது. சூழ்ச்சிகளும் காலித்தனங்களும் மானங்கெட்ட தோல்வியடைந்தன. விருதுநகர் ஜஸ்டிஸ் கோட்டை என்பதும் சந்தேகத்துக்கு இடமின்றி ருசுவாக்கப்பட்டு விட்டது. நமது அன்பர் ராமசாமிக்கு நமது இருதய பூர்வமான வாழ்த்து உரியதாகுக! வரப்போகும் அசம்பிளித் தேர்தலில அவர் பெறப்போகும் வெற்றிக்கு இது ஒரு அறிகுறி யென்றும் நம்புகிறோம்.

சர்வதேச சங்கத்திற்கு ஸ்பானிய சர்க்கார் வேண்டுகோள்

உதவி வேண்டாம்; ஆபத்தான நிலைமையைக் கவனியுங்கள்

மாட்ரிட்டை தனிப்படுத்த கலக அதிகாரிகள் முயற்சி

சர்க்கார் துருப்புகள் முஸ்தீபு

லண்டன், நவ, 27

சர்வதேச சங்க கவுன்சிலை உடனே கூட்ட வேண்டுமென்றும், உலக சமாதானத்தைப் பாதிக்கும் விஷயங்களை சங்க அசெம்பிளி அல்லது கவுன்சிலின் கவனத்திற்குக் கொண்டுவர சங்க அங்கத்தினர்களுக்கு உரிமை கொடுப்பதாக ஒரு விதி அமைக்க வேண்டுமென்றும் ஸ்பானிய சர்க்கார் ஒரு குறிப்பு சங்கத்திற்கு அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது.

சங்கத்திடம் தாங்கள் உதவி கோரவில்லை யென்றும், ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருப்பதை சங்கம் கவனிக்கவே தாங்கள் விரும்புவதாகவும், லண்டன், அன்னிய நாட்டுக் காரியாலயத்தில் ஸ்பெயின் ஸ்தானிகர் கூறியுள்ளார்.

மாட்ரிட்டை தற்பொழுது எதிர்க்காமல், அதற்குச் செல்லும் வழிகளைத் தடைப்படுத்துவதில் கலக அதிகாரிகள் முனைந்திருக்கின்றனர்.

சர்க்கார் துருப்புகள் நகருக்கு வரக்கூடிய எல்லா பாதைகளிலும் பலத்த முஸ்தீபுகளுடன் இருந்து வருகின்றனர். அவர்களிடை 2000 இயந்திர பீரங்கிகள் இருக்கின்றன.

கார்டேஜினாவிலுள்ள சர்க்கார் கடற்படைத் தளத்தின் மீது கலகத் துருப்புகள் வெடிகுண்டுகளை வீசி, வெடி மருந்துகள் சேமித்து வைக்கப்பட்டிருந்த ஒரு துறைமுகத்தையும், பல கப்பல்களையும் சேதப்படுத்தியுள்ளதாகவும், அங்கிருந்து தப்பித்து ஓட முயற்சித்த கப்பல்களை கலகக்கார க்ரூயிசர்கள் தாக்கிச் சென்றதாகவும் தெரியவருகிறது.

அமெரிக்கா, அடுத்த யுத்தத்தில் இறங்க நேரும்

ஆசியாவில் ஜப்பானின் ஆதிக்கத்தை சகிக்க மாட்டோம்

ஜப்பான்-ஜெர்மானிய ஒப்பந்தத்தின் பலன்

ஐரோப்பிய யுத்தம் உலக யுத்தமே

அமெரிக்கப் பத்திரிகையின் சல சலப்பு

நியூயார்க், நவ, 27

ஜப்பான்—ஜெர்மானிய ஒப்பந்தமாகப்பட்டது, அமெரிக்காவை அடுத்த யுத்தத்தில இறங்கச் செய்வதா யிருக்கிறதென 'ஹெரால்டு டிரிபூன்' என்ற அமெரிக்கப் பத்திரிகை கூறுகிறது. அப் பத்திரிகை மேலும் கூறுவதாவது:— மேற்படி ஒப்பந்தம் ஆசியாவில ஜப்பானை வலுப்படுத்துவதற் கொப்பாகும். பிலிப்பைன் தீவுகளிலும் அதற்கப்பாலும் தனது சாம்ராஜ்யத்தை விஸ்தரிக்கச் செய்ய வேண்டுமென ஜப்பான் கனாக்கண்டு வருவதற்கு அவ்வொப்பந்தம் ஆதரவளிப்பது போலாகும். ஆகவே, இது விஷயமாக அமெரிக்கா வாளாயிருப்பதற்கில்லை. ஐரோப்பிய யுத்தம் உலக யுத்தமாக மாறும்படி ஜெர்மனி செய்து விட்டது. இதைக் காட்டிலும் மடத்தனம் வேறொன்றிருக்க முடியாது.

வட ஆர்க்காடு ஜஸ்டிஸ் கட்சி மகாநா

கனம் குமார ராஜா திறப்பு விழாப் பிரசங்கம்

ஜஸ்டிஸ் கட்சியார் செய்த நன்மைகள் பல

மேலும் பல செய்ய தயார்

ஒடுக்கப்பட்டோர் க்ஷேம லாபத்திலும் எமக்கு சிரத்தை யுண்டு

டாக்டர் நாயர் படத் திறப்பு விழா

சௌகார் அப்துல் ஹக்கீம் ஸாஹிப் வீரவுரை

நிறைவேறிய தீர்மானங்கள்

வேலூர், நவ, 27

நேற்று காலை சாக்லி தியேட்டரில் வட ஆர்க்காடு ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு, சென்னை சர்க்கார் அபிவிருத்தி மந்திரி கனம் பி. டி. ராஜன் தலைமையில் நடைபெற்றது. வேலூரில் முதன் முதலாகக் கூட்டப்படும் ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு இதுவேயாகையால் மக்களிடை அதிக உற்சாகம் காணப்பட்டது.

கனம் செட்டிநாட்டுக் குமார ராஜா மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார். திரு. டி. என். நடராஜ பிள்ளை ஜஸ்டிஸ் கொடியை ஏற்றினார். ஜனப் சி. அப்துல் ஹக்கீம் காலஞ்சென்ற டாக்டர் நாயரின் உருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

கனம் பொப்பிலி ராஜாவும், திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கரும் சில அசந்தர்ப்பத்தை முன்னிட்டு மகாநாட்டிற்கு விஜயம் செய்ய முடியாமற் போய் விட்டது.

கனம் பி. டி. ராஜனும், கனம் செட்டிநாட்டுக் குமார ராஜாவும், லக்ஷ்மணசாமி டவுன் ஹாலிலிருந்து ஊர்வலமாய் சாக்லி தியேட்டருக்கு பாண்டு வாத்திய சகிதம் அழைத்து வரப்பட்டார்கள். ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்கள், மகாநாட்டு பிரதிநிதிகள் உட்பட ஏராளமான பொதுமக்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். வழி நெடுக தோரணங்களும், கொடிகளும், வரவேற்பு வளைவுகளும் காணப்பட்டன

சாக்லி தியேட்டரை யடைந்ததும் அங்கு குழுமியிருந்த மக்கள் கரகோஷம் செய்தனர். ஜில்லாவின் பல தாலுகாக்களிலிருந்தும் பிரதிநிதிகள் ஏராளமாக வந்திருந்தனர். ஹாலில் எள் விழ இடமில்லாதபடி பொது மக்கள் கூடியிருந்தனர். ஸ்திரீகளும் பலர் வந்திருந்தது குறிப்பிடத் தக்கது.

ஜஸ்டிஸ் கொடி பறக்க விடப்பட்டது

திரு. டி. என். நடராஜ பிள்ளை ஜஸ்டிஸ் கொடியை ஏற்றி வைத்து பின்வருமாறு பேசினார்:- கட்சியினிடம் உண்மையாகவும், அதன் முன்னேற்றத்திற்காக தீவிரமாக உழைக்கும் நாம் வரவேண்டும். நமது கொடியை ஏற்றி வைப்பதின் தாத்பரியமும் இதுவே. 20 வருஷங்கட்கு முன் நமது கட்சி தோன்றிய பொழுது மக்களிடை எவ்வளவு உற்சாகமிருந்ததோ அதே உற்சாகம் இப்பொழுதும் காணப்படுகிறது. ஆனால், நாம் பிரசாரம் செய்யாமலிருந்து விட்டோம். இதுவே, நமது முக்கிய குறையாகும். நமது கட்சியால் மக்களுக்கு எவ்வளவோ நன்மைகள் கிடைத்திருக்கின்றன. இவை என்று எதிர்த்து எவராலும் கூற முடியாது. பார்ப்பனரல்லாதார் நிலைமையும் 20 வருஷத்திற்கு முன்னிருந்ததைக் காட்டிலும் இப்பொழுது எவ்வளவோ மாறியிருக்கிறது. [illegible] பார்ப்பனரல்லாதார் கௌரவமான பதவிகளை வகித்து வருவதற்கும் ஜஸ்டிஸ் கட்சியே காரணம். புதிய அரசியலை காங்கரஸ்காரர்கள் உடைத்துத் தெறியப் போவதாகக் கூறி வருவது ஓட்டுகளைப் பெற அவர்கள் கையாளும் சூழ்ச்சியைத் தவிர்த்து வேறொன்றுமில்லை. சென்னை நகர சபையில் காங்கரஸ்காரர்கள் நுழைந்ததும் தங்கள் சுயரூபத்தைக் காண்பித்து விட்டனர். எல்லா ஸ்தாபனக் கமிட்டிகளிலும் தங்கள் மனிதர்களையே சேர்ப்பி விட்டனர். ஐரோப்பியரை இந்தியாவை விட்டு மூட்டை முடிச்சுகளுடன் வெளியேற்றப் போவதாகக் கூறுகின்றனர். ஆனால் ஸ்தாபனக் கமிட்டிகளில் தங்கள் தேச மக்களாகிய ஜஸ்டிஸ் கட்சியினருக்கு இடங்கொடுக்க மனமில்லாமல் அவர்களுக்கு பிரதிநிதித்வம் கொடுத்தனர். நகரசபையில் ஜஸ்டிஸ் கட்சியினர் 'மெஜாரிடி'யாக யிருந்த காலத்தில, கட்சி அரசியலைப் பொருத்தமன்றி ஐரோப்பியர், காங்கரஸ்காரர்கள், சுயேச்சைக் கட்சியினர் ஆகிய எல்லோருக்கும் மேற்படி கமிட்டிகளில் பிரதிநிதித்துவம் கொடுத்தனர். எதிர்காலத்தில் காங்கரஸ் ஆட்சி ஒரு சமயம் ஏற்படுமாயின் அவர்கள் எம்மாதிரி நடந்து கொள்வார்களென்பதற்கு இதுவே போதிய உதாரணமாகும். சமீபத்தில் ஆந்திர தேசத்திலும், தமிழ் நாட்டிலும் நடைபெற்ற ஜில்லா போர்டு தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சிக்கு மகத்தான வெற்றி ஏற்பட்டுளது. இது வரப்போகும் பொதுத் தேர்தலிலும் ஜஸ்டிஸ் கட்சியின் வெற்றியையே குறிக்கிறது. சீர்திருத்த சபையிலும் ஜஸ்டிஸ் கட்சி மெஜாரிடியாக யிருந்து வருமென்பதைக் குறித்து சிறிதும் சந்தேகம் வேண்டுவதில்லை. நாம் தீவிரமாகப் பிரசாரம் செய்ய இப்பொழுதிருந்தே ஆரம்பிக்க வேண்டும். கட்சியின் பெருமையைக் காப்பாற்ற நமது இரத்தத்தையும் சிந்த நாம் தயாராயிருக்க வேண்டும். நமது கட்சி மனிதர்கள் எவ்வளவோ பேர் அதற்காக தங்கள் உயிரையும் தியாகம் செய்துள்ளனர். காங்கரஸ்காரர்களின் கோட்டையெனக் கருதப்படும் வேலூரில் இன்று நமது கொடியை உங்கள் முன்னிலையில் ஏற்றி வைக்கிறேன். அதன் கீழ் நீங்கள் யாவரும் ஒன்றுபட்டு அவர்கள் கோட்டையைக் கைப்பற்ற முயற்சிப்பீர்களென நம்புகிறேன்.

பின்னர் பலத்த கரகோஷத்தினிடையே கொடியைப் பறக்க விட்டார்.

மகாநாடு ஆரம்பம்

பிறகு கனம் மந்திரிகள், மகாநாட்டு ஹாலிற்கு அழைத்து வரப்பட்டனர்.

திருவாளர்கள்: வீரபத்ரமூர்த்தி, அர்ச்சுன கவுண்டர் ஆகிய இருவரும் வரவேற்புக் கீதங்கள் பாடியபின் வரவேற்புக் கமிட்டியின் சார்பாக டாக்டர் சீனிவாச முதலியார், கனம் செட்டிநாட்டுக் குமார ராஜா எம். ஏ. முத்தையா செட்டியாருக்கு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்.

கல்வி அபிவிருத்திக்காக செட்டிநாட்டு ராஜாவின் சேவையைக் குறித்தும், கல்வி மந்திரியாக குமார ராஜா நியமனமானதைக் குறித்து பாராட்டியும், குமாரராஜா கட்சியில் மீண்டும் சேர்ந்திருப்பது கட்சிக்கே ஒரு புதிய பலம் கொடுப்பதாகுமென்றும், கட்சியைப் பலப்படுத்த குமார ராஜா தீவிர முயற்சியை எடுத்துக் கொள்வாரென்று தாம் நம்புவதாகவும் உபசாரப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மகாநாட்டுக் கூட்டுக் காரியதரிசி திரு. ஜீ. எம். அண்ணல் தங்கோ கனம் பி. டி. ராஜனுக்கு ஒரு உபசாரப் பத்திரம் வாசித்தளித்தார். கனம் மந்திரியின் சேவையைப் பாராட்டியும், தலைவர்கள் கட்சிக்காக தீவிரப் பிரசாரம் உடனே ஆரம்பித்தாலன்றி வரப்போகிற தேர்தலில் கட்சி வெற்றியடைவது துர்லபமென்றும் மேற்படி உபசாரப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக திரு. ஆர். சுப்பிரமணியம் கனம் மந்திரிகளுக்கு உபசாரப் பத்திரங்கள் அளித்தார்.

பிறகு கனம் செட்டிநாட்டுக் குமாரராஜா மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

கனம் குமார ராஜா பிரசங்கம்

மகாநாட்டைத் திறந்து வைக்கையில் கல்வி மந்திரி கனம் குமார ராஜா அவர்கள் பேசியதாவது:—

இம்மகாநாட்டைத் திறந்து வைக்கும் கௌரவத்தை எனக்கு அளித்ததற்காக நான் மிகவும் நன்றி பாராட்டுகிறேன். கட்சி ஒற்றுமையை வளர்ப்பதற்கு இம்மாதிரி மகாநாடுகள் மிகவும் இன்றியமையாதவையாகும். எனவே எங்கும் இம்மாதிரி மகாநாடுகள் கூட்டவேண்டும். மகா நாடுகள் கூடும்போதெல்லாம் நம்மவர்கள் திரளாகச் சென்று மகாநாடு வெற்றிகரமாக நடக்கும்படி உதவி புரியவேண்டும். மாண்டு-போர்டு சீர்திருத்தம் எவ்வளவோ தடைகள் உடையவையாயிருந்தும் அதை ஜஸ்டிஸ் கட்சியார் சென்ற 20 வருஷ காலமாக வெகு திறமையுடன் வெற்றிகரமாக நடத்தி வைத்திருக்கிறார்கள். வரப்போகும் சீர்திருத்தம் உத்தமமானதென்று ஜஸ்டிஸ் கட்சியார் ஒரு பொழுதும் சொல்லியதே கிடையாது. நமது கட்சி சட்ட வரம்புக்குட்பட்டதாகையால் கிடைத்ததைப் பெற்றுக்கொண்டு அதிகப்படியான உரிமைகளைப் பெற நாம் சட்ட வரம்புக்குட்பட்டுக் கிளர்ச்சி செய்ய வேண்டும். வரப்போகும் சீர்திருத்தத்தை நாம் ஏற்று நடத்தி அதனால் சாத்தியமான வரை பொதுஜனங்கள் நன்மை பெறும்படி செய்ய வேண்டும். தற்கால அரசாங்கத்தைக் கவிழ்க்க காங்கரஸ்காரர் செய்த முயற்சிகள் எல்லாம் தோற்றமையால் இப்பொழுது சட்டசபைகளைக் கைப்பற்ற முன்வந்திருக்கிறார்கள். வடநாட்டு காங்கரஸ்காரர் கொள்கைக்கும், தென்னாட்டு காங்கரஸ்காரர் கொள்கைக்கும் மிக்க வித்தியாச முண்டு.

வடநாட்டுப் போக்கும், தென்னாட்டுப் போக்கும்

வடநாட்டுக் காங்கரஸ்காரர் சீர்திருத்தத்தை ஒழிக்கும் பொருட்டு சட்ட சபைக்குச் செல்லவேண்டுமென்கிறார்கள் தென்னாட்டு காங்கரஸ்காரர்களோ ஜஸ்டிஸ் கட்சியார் மீண்டும் மந்திரி பதவி வகிக்காமல் இருப்பதற்காக சட்ட சபைகளைக் கைப்பற்ற வேண்டுமென்கிறார்கள். இது ராஜ தந்திரிகளுக்கு அடுத்த பேச்சா? மந்திரி பதவி ஏற்கும் பிரச்சினையை அவர்கள் இன்று முடிவு செய்யவில்லை. அவ்விஷயத்தை வாக்காளர்கள் உணர முடியாமல் மர்மமாகவே வைத்திருக்கிறார்கள். காங்கரஸ்காரர் பொறுப்புடையவர்களாயிருந்தால் இந்தப் பிரச்சினையை முன்னிறுத்தியே வாக்காளர்கள் வோட்டைக் கேட்கவேண்டும். மந்திரி பதவியை அவர்கள் ஒப்புக்கொண்டால் அவர்களால் அரசியலை எவ்வாறு கவிழ்க்க முடியும்? முட்டுக்கட்டை விழுபத்தில் அரசியலை நடத்த உதவி புரியுமாறு கவர்னருக்கு ஏராளமான விசேஷ அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருப்பதினால் அவர்களுக்கு அரசியலைக் கவிழ்க்கவே முடியாது. இதுவோ ஜனநாயக காலம்; ஜனங்களே அரசியலை நடத்த வேண்டுமென்று ஜனங்கள் விரும்பும் காலம். எனவே கவர்னர் அரசியலை நடத்துவதை யாராவது விரும்புவார்களா? ஜஸ்டிஸ் கட்சி நிர்வாகத்தை ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் நாட்டுக்கு எண்ணற்ற நன்மைகள் செய்திருக்கும் உண்மை புலனாகும். ஜஸ்டிஸ் கட்சியார் ஒன்றுமே செய்யவில்லை யென்று கூறுவது மூடத்தனமாகும். ஜஸ்டிஸ்கட்சியார் சாதித்ததைப் போல் எந்தக் கட்சியும் சாதிக்கவில்லை யென்பது நிச்சயம். மேல் கொண்டும் தம்மாலானதை ஜஸ்டிஸ் கட்சியார் செய்து கொண்டே இருப்பார்கள்.

அபேதவாதம்

இன்று ஜவஹர்லால் அபேதவாதத்தைப் பற்றிப் பேசுகிறார். அபேதவாதத்தைப்பற்றி நமது அபிப்பிராயத்தை ஜஸ்டிஸ் கட்சியார் ஏற்கனவே வெளியிட்டிருக்கிறார்கள். நான் ஜமீன்தார்களுக்காகவோ, முதலாளிகளுக்காகவோ, பணக்காரர்களுக்காகவோ பரிந்து பேசவில்லை. ஏதாவது சொத்து வைத்துக்கொள்ளவேண்டுமென்பது நம்மக்களின் பொதுவான விருப்பமாகும். விவசாயிகளின் கடன் பளுவைக் குறைக்க ஜஸ்டிஸ் கட்சியார் தம்மாலானதைச் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு மற்றும் எவ்வளவோ வசதிகள் செய்தும் கொடுத்திருக்கிறார்கள். மேற்கொண்டும் அவ்வாறே செய்து கொண்டிருப்பார்கள். விவசாயிகளின் கடன் பளுவைக் குறைக்க சில ஜில்லாக்களில் கடன் சமரச போர்டுகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். எல்லா ஜில்லாக்களிலும் அம்மாதிரி போர்டுகள் ஸ்தாபிக்க முயற்சி செய்யப்படும்.

ஒடுக்கப்பட்டவர்கள்

ஒடுக்கப்பட்டவர்களைப் பற்றி காங்கரஸ்காரர் நினைப்பதற்கு முன்பே ஒடுக்கப்பட்டோர் உரிமைகளைக் காப்பாற்றுவதற்காக ஜஸ்டிஸ் கட்சியார் போராடி வந்திருக்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியார் இல்லாவிட்டால் ஹரிஜன சேவா சங்கமோ, இதர ஸ்தாபனங்களோ தோன்றியிருக்கவே மாட்டா. சமீபத்தில் திருவிதாங்கூரில் ஒடுக்கப்பட்டவர்களுக்கு மகாராஜா ஆலயப் பிரவேச உரிமை அளித்ததற்குக் காரணம் ஜஸ்டிஸ் கட்சியாரின் உழைப்பேயாகும். 20 வருஷங்களுக்கு முன்னே எழும்பூர் ஏரி மைதானத்தில் டாக்டர் நாயர் பேசியபோது ஒடுக்கப்பட்டவர்களுக்கு எல்லா உரிமைகளு[illegible]க்காமல் நாடு முன்னேறவே செய்யாது என்று கூறினார். எனவே, இதே பல்லவியை காந்தியாரும், காங்கரஸ்காரரும் இப்பொழுது பாடிக் கொண்டு இருப்பது ஆச்சரியமல்ல. ஒடுக்கப்பட்டவர்களின் க்ஷேமலாபங்களைக் காப்பாற்ற ஜஸ்டிஸ் கட்சியார் எப்பொழுதும் கண்ணும் கருத்துமாயிருப்பார்கள் என நான் உறுதி கூறுகிறேன்.

கல்வி

கல்வி விஷயத்திலும் எந்த மாகாணமும் சென்னையைப் போல அவ்வளவு அதிகப்படியான பணம் செலவு செய்ததே கிடையாது. ஆசிரியர்களின் சம்பள வெட்டை ரத்து செய்து சமீபத்தில் சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். பண முடை காரணமாக சம்பள வெட்டில் பாதி இப்பொழுது ரத்து செய்யப்பட்டு இருக்கிறது. வெகு சீக்கிரத்தில் மற்றப் பாதியும் ரத்து செய்யப்படுமென்று உறுதி கூறுகிறேன். வரப்போகும் தேர்தலில் நமது கட்சி வெற்றிபெற வேண்டுமானால் அதி தீவிர பிரசாரம் செய்ய வேண்டியது அவசியம். கிராமங்கள் தோறும் சென்று, தீவிரமாகப் பிரசாரம் செய்ய வேண்டும். நமது இளைஞர்கள் எல்லாம் தேர்தலில் தீவிரமாக ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். வாலிபர்கள் இம்முயற்சியில் பின்னடையலாகாது. கடைசியாக இம் மகாநாட்டை மிக மகிழ்ச்சியுடன் திறந்து வைக்கிறேன்.

டாக்டர் நாயர் படத் திறப்பு விழா

நாயர் படத்தைத் திறந்துவைக்க வேண்டுமென்று ராவ்பகதூர் வி. முருகேச முதலியார், சௌகார் வி. அப்துல் ஹக்கீம் ஸாஹிப் அவர்களைக் கேட்டுக் கொள்கையில் பார்ப்பனர் கொடுமை அதிகமாக இருந்த காலத்தில் டாக்டர் நாயர் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைத் தோற்றுவித்தாரென்றும் டாக்டர், நாயர் படத்தைத் திறந்துவைக்க சௌகார் ஸாஹிப் தகுதியுடையாரென்றும், அவர் ஜில்லா மக்களால் அழைக்கப்படுவது பொருத்தமானதென்றும், கல்வி அபிவிருத்திக்காக அவர் அபார உதவி செய்திருக்கிறாரென்றும், ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையில் மிக்க நம்பிக்கை யுடையாரென்றும் குறிப்பிட்டார்.

திருவண்ணாமலை திரு. எம். பி. ரங்கசாமி முதலியார் அவரை ஆதரித்துப் பேசினார். குடியாத்தம் நகரசபைத் தலைவர் திரு. பிரமராஜ முதலியாரும், [illegible] திரு ஸ்ரீநிவாச முதலியார், ஜனப் [illegible] அஜீஸ், திரு வீராசாமி முதலியாரும் மேலும் ஆதரித்துப் பேசினார்கள்.

அப்பால் முன்னுரையாக

சௌகார் அப்துல் ஹக்கீம்

பேசியதாவது:—

காலஞ்சென்ற டாக்டர் நாயரையும், தியாகராய செட்டியாரையும் எனக்கு வெகுகாலமாகத் தெரி ஆரம்ப காலத்தில் நியாயமான கோரிக்கைகளையே ஜஸ்டிஸ் கட்சி வற்புறுத்தினர். நியமன மு பார்ப்பனர்கள் அதிகப்படி பிரதிநிதித்துவம் பெற்று ஸ்தாபனங்களில் பார்ப்பனர் ஆதிக்கம் பெற்றிருந்ததினால், பார்ப்பனரல்லாதார் நியாயமான பிரதிநிதித்துவம் பெறும் பொருட்டு நியமன முறையை ஒழித்துத் தேர்தல் நடத்த வேண்டுமென்று டாக்டர் நாயர் கூறினார். அவருடைய லக்ஷியம் 8 வருஷங்களுக்கு முன் தான் கைகூடியது. என் மதிப்புக்குரிய ஒருவரின் படத்தைத் திறந்துவைப்பதை நான் பெரிய பெருமையாகவே பாராட்டுகிறேன். ஆர்க்காடு, ஜஸ்டிஸ் கட்சிக்கு முக்கியமான ஒரு ஜில்லா. இந்த ஜில்லாவில் காலஞ்சென்ற திவான்பகதூர் [illegible] ராகவ முதலியார் ஜஸ்டிஸ் கட்சியின் உயிராக இருந்தார். கட்சி முன்னேற்றத்துக்காக எவ்வளவோ பாடுபட்டார். காங்கரஸ்காரர் இப்பொழுது மிகவும் கூச்சல் போடுகிறார்கள். அவர்களது மாயவலையில் சிக்கிவிடக் கூடாது. வரப்போகும் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி வெற்றி பெறவே நீங்கள் எல்லோரும் உழைக்க வேண்டும். முஸ்லீம்களுக்கு தனித் தொகுதி வழங்கப்பட்டிருப்பதை காங்கரஸ்காரர் ஆட்சேபிக்கிறார்கள். இப்பொழுதும் அவர்கள் மிக கிளர்ச்சி செய்து கொண்டுதானிருக்கிறார்கள். ஆனால், முஸ்லீம் முன்னேற்றக் கட்சியார் ஏமாந்து போகமாட்டார்கள். அவர்கள் மாயவலையில் சிக்கவும் மாட்டார்கள். நான் டாக்டர் நாயர் படத்தை மிக்க மகிழ்ச்சியுடன் திறந்து வைக்கிறேன்.

அப்பால் திரு. அண்ணல்தங்கோ கேட்டுக்கொண்டபடி வாணியம்பாடி திரு. ஷண்முக முதலியார் மகாநாட்டுக்கு விஜயம் செய்திருப்பவர்களை வரவேற்று ஒரு பிரசங்கம் செய்தார். (அது வேறிடத்து வெளிவருகிறது.)

வரவேற்புக் கழகத் தலைவர் பிரசங்கம் முடிந்ததும் வாணியம்பாடி நகரசபைத் தலைவர் திரு. வி. என். விஜயராக முதலியார் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்குமாறு அபிவிருத்திமந்திரி கனம் பி. டி. ராஜன் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

திருவாளர்கள்: எம். பி. ரங்கசாமி செட்டியார், [illegible] முதலியார், துரைசாமி நாயுடு, செல்லப்பா, கணேச பிள்ளை முதலியோரும் ஆதரித்துப் பேசினார்கள்.

அப்பால் கனம் ராஜன் தமது தலைமைப் பிரசங்கத்தை நிகழ்த்தினார். அது மற்றோரிடத்து வெளிவருகிறது.

தலைவர் பிரசங்கம் முடிந்ததும் இடை வேளை சாப்பாட்டுக்காக மகாநாடு கலைந்தது

மீண்டும் கூடியபோது கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள்

நமது கட்சிக்குழைத்து வந்த தே. என். ராமநாதன், டி. வி. சுப்ரமணியம் முதலியோர் காலஞ்சென்றதைக் குறித்தும், தமிழ்புலவரும், தமிழ் நாட்டிற்குச் சிறந்த தொண்டாற்றிய வி. ஓ. சிதம்பரம் பிள்ளை காலஞ்சென்றமையைக் குறித்தும் இம் மகாநாடு வருத்தமுடன் அவர்களின் குடும்பத்தாருக்கும் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. தலைவர் ஒரு தீர்மானம் கொண்டு வர, எல்லோரும் நிற்க நிறைவேறியது.—

நமது சமஸ்தான விஸ்தாரத்திற்குட்பட்ட ஆலயங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரவேசிக்க உரிமையளித்த திருவாங்கூர் மகாராஜாவை இம் மகாநாடு பாராட்டுவதுடன், மகாராஜா உரிமையளித்த பிரகடனத்தில் கண்டுள்ள [illegible] விதிவிலக்கை எடுத்துவிடு

(இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

சினிமா பகுதி

இந்திய சினிமாத் தொழில்

சர். பீரோஸ் சேத்னு சொற்பொழிவு

சர். கே. வி. ரெட்டிக்குப் பாராட்டு

சென்னை, நவ, 26

சென்ற சனிக்கிழமை மாலை கலே ஹாலில் சென்னை பிலிம ின் ஆதரவில் ஒரு பொதுக் டம் நடைபெற்றது. சர். கே ரெட்டி தலைமை வகித்தார். அப்போது இந்திய சினிமா சங்கத் தின் தலைவரான சர். பீரோஸ் சேத்னு "இந்தியாவில் சினிமாத் தொழில்" என்பது பற்றி ஓர் சொற்பொழிவாற்றினர். அவர் பேசிய தின் சாராம்சமாவது:—

இதர தேசங்களில் சினிமாத் தொழில் அபிவிருத்தி யடைந்து வருவதைப் போலவே இந்தியாவிலும் அபிவிருத்தியடைந்து வருகிறது. இதுவரை 11 1/4 கோடி ரூபாயை சினிமாத் தொழிலில் இந்தியா போட்டிருக்கிறது. இந்தியாவில் சுமார் 650 சினிமா தியேட்டர்கள் இருக்கின்றன. 25,000 பேர் இதன் மூலம் ஜீவனம் செய்து வருகின்றனர்.

இந்தியாவிலுள்ள முக்கியமான தொழில்களில் சினிமாத் தொழில் ஏழாவது ஸ்தானத்தை வகிக்கிறது.

சினிமாத் தொழிலில் இந்திய சர்க்கார் அதிக கவனம் செலுத்துவார்களானால் அவர்களுக்கு வருமான வரி மூலமும், சுங்க இலாகா மூலமும் அதிக வருமானம் வருவதுடன் தேசத்திலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தையும் சிறிது குறைக்கச் செய்யலாம். மேலும், சினிமாத் தொழிலால் பல ஸ்தாபனங்கள் பலனடைகின்றன. இவைகளை யெல்லாம் உத்தேசித்து சர்க்கார் பிலிம் தொழிலுக்கு ஆதரவளிக்க வேண்டியது அவசியம். ஒவ்வொரு மாகாணத்திலும் பிலிம் ஸென்ஸார்கள் ஏற்படுத்த வேண்டுவதுடன் அவைகளுக்கு மத்ய ஸ்தாபனம் ஒன்று இருக்க வேண்டும்.

சர். பீரோஸ் சேத்னு தமது முடிவுரையில், சென்னை மாகாண ஆக்டிங் கவர்னராயிருந்த திறமையுடன் நிர்வாகத்தை நடத்திய சர். கே. வி. ரெட்டியைப் பாராட்டிப் பேசினர்.

தலைவர் முடிவுரையாகப் பேசுகையில் சர்க்காரின் செல்வ நிலை இன்னும் கொஞ்சம் விருத்தியாகுமானல், சினிமா சங்கத்தார் கேட்கும் ஆதரவு அவசியம் கொடுக்கப் படுமெனக் குறிப்பிட்டார்.

அகில இந்திய சலனப்பட மகாநாடு

திரு. சிமன்லால் பி. தேசாய் தலைமை வகிப்பார்

சென்னை, நவ, 27

இரண்டாவது அகில இந்திய சலனப் பட மகாநாட்டு வரவேற்புக் கமிட்டித் தலைவர் ராவ்பகதூர் பி. சம்பந்த முதலியார் எழுதுவதாவது:—

பம்பாய் சாகர் மூவிடோன் புரொப்ரைட்டர் திரு. சிமன்லால் பி. தேசாய் சமீபத்தில் கூடப்போகும் அகில இந்திய சலனப் பட மகாநாட்டிற்கு தலைமை வகிப்பாரென்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். டிசம்பர் 20-ந் தேதியன்று சென்னையில், சினிம திருவிழா நடைபெறும். இரண்டு தினம் நடைபெறும். மிகவும் முக்கியத்வம் வாய்ந்தது. இந்தியாவின் பல மாகாணங்களிலிருந்தும் பல பிரதிநிதிகள் விஜயம் செய்வர். இம் மகாநாட்டில் செய்யும் முடிவைப் பொறுத்தே இந்திய சினிமாத் தொழிலின் எதிர்காலமுமிருக்கும். அகில இந்திய பிரச்சினைகள் மட்டுமின்றி, நமது மாகாணம் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகளும் கவனிக்கப்படும்.

பிராட்வே

மோகன் மூவிடோனின் "சந்திர மோகன்" அல்லது "சமூகத் தொண்டு" என்ற தமிழ் பேசும் படம் இன்று முதல் இரண்டாவது வாரமாக இங்கு காண்பிக்கப்படுகிறது. எம். கே. ராதா, மிஸ். மீனுட்சி முதலியோர் இதில் நடிக்கின்றனர்.

மதுரை இந்திரா டாக்கீஸின் "இந்திர சபா"வில் ஓர் காட்சி.

பல தமிழ் சினிமாப் படங்களில் நடித்து பெரும் புகழ் பெற்ற மதுரை மிஸ். என். என். ராஜாமணி. இவர் இப்பொழுது "சித்ராமணி"யில் நடிக்கிறார்.

செலக்ட்

அர்ஜுனன், பிரேமலதா, சாதா ராணி, பிரேம், நார், ஷியாம சுந்தர் முதலியோர் நடிக்கும் "புகழ் பெற்ற இந்தியா" என்ற உருது பேசும் படம் நேற்று முதல் இங்கு காண்பிக்கப்பட்டு வருகிறது.

ஒரு பணக்காரப் பெண் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் கல்வி கற்று தன் தாய் நாடாகிய இந்தியாவிற்குத் திரும்புகிறாள். அவளுடைய தகப்பனர் அவளுக்கு மணம் செய்விக்க விரும்பி ஒரு வாலிபனைத் தேர்ந்தெடுக்கிறார். ஆனால், அவனை மணக்க அப்பெண் மறுக்கவே ஒன்றின்பின் ஒன்றாய் பல சம்பவங்கள் நடைபெறுகின்றன.

கெயிடி

"பீராமய்" என்ற தமிழ் பேசும் படம் இங்கு மூன்றாவது வாரமாக இன்று முதல் காண்பிக்கப்படும்.

சரஸ்வதி

மாஸ்டர் சந்திரராவ் காதம் நடிக்கும் "இரத்தக் கொதிப்பு" என்ற உருது பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும்.

கினிமா

டாம்டெய்லர், கோவா பீர், வில்லியம் டெமாண்ட் முதலியோர் நடிக்கும் "வனத்தின் மர்மம்" என்ற ஆங்கில பேசும்படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும்.

ஸ்டார்

தேவிகா ராணி நடிக்கும் "அச்சுத் கன்யா" அல்லது "ஹரிஜனப் பெண்" என்ற உருது பேசும் படம் இங்கு நேற்று முதல் ஐந்தாவது வாரமாக காண்பிக்கப்பட்டு வருகிறது.

வெல்லிங்டன்

மிஸ் மார்லின் டீட்ரிச், காரி கூப்பர் முதலியோர் நடிக்கும் 'விருப்பம்' என்ற பாரமௌண்ட் கம்பெனியாரின் ஆங்கில பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும்.

ராக்ஸி

யூனிவர்சல் கம்பெனியாரின் "காட்பிரே என் மனிதன்" என்ற ஆங்கிலப் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும். மிஸ் கரோல், வில்லியம் பவல், மிஸ். ஆலிஸ் பிராடி முதலியோர் இப்படத்தில் நடிக்கின்றனர்.

மாகாண சுகாதாரம்

சென்னை, நவ, 26

சென்ற 20-ந் தேதியுடன் முடிவாகிற வாரத்தில் மட்டும் இம்மாகாணத்தில் தொத்து நோயால் பீடிக்கப்பட்டவர்கள், மாண்டவர்கள் எண்ணிக்கை பின் வருமாறு:—

காலரா- பீடிக்கப் பட்டவர்கள் 2383, மாண்டவர்கள் 1166.

வைசூரி- பீடிக்கப் பட்டவர்கள் 61, மாண்டவர்கள் 7.

பிளேக்- பீடிக்கப் பட்டவர்கள் 28, மாண்டவர்கள் 11.

மாகாண கௌரவ மாஜிஸ்திரேட்டுகள்

சென்னை நகருக்கு

சென்னை, நவ, 26

சென்னை நகருக்கு பின் கண்டவர்களை மாகாண கௌரவ மாஜிஸ்திரேட்டுகளாக சர்க்கார் நியமனம் செய்துள்ளனர்.

திரு. ஆர். நடராஜ பிள்ளை
,, டி. திருவேங்கடாச்சாரி
,, கே. சங்கரம்
,, எம். என் ஜீவரத்ன செட்டியார்
,, எம் என். வெங்கட்ராமய்யா
,, டபிள்யூ. டி. சங்கரநாத முதலியார்

டாக்டர், என் வெங்கண்ண தேவர், ஸ்ரீமதி ராகேல் அலக்ஸாண்டர், முகம்மது யேசாசேட் சாஹிப் பகதூர், முகம்மது இப்ராஹீம் சாஹிப் பகதூர்.

வட ஆர்க்காடு ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு

(7-ம் பக்கத் தொடர்ச்சி

மாறு இம் மகாநாடு கேட்டுக் கொள்கிறது என மற்றொரு தீர்மானம் தலைவரால் கொண்டு வரப்பட்டு நிறைவேறியது.

கட்சிப் பிரசாரத்திற்காக "திராவிடனை" புதுப்பிக்கவேண்டும் அல்லது 'விடுதலை'யை உடனே தினசரியாக்க வேண்டுமென்று இம் மகாநாடு மூன்று மந்திரிகளையும் கேட்டுக் கொள்கிறதென திரு. அண்ணல் தங்கோவால் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேறியது. தினசரியின் அவசியத்தைக் குறித்து திரு. அண்ணல் தங்கோ வெகுவாகப் பேசினர்.

வரப்போகிற சீர்திருத்தத்தில் பல குறைபாடுகள் இருந்தபோதிலும், நமது கட்சியினர் சட்ட வரம்பிற்குட்பட்ட வழியில் ஏற்று நடத்தி, குடியேற்ற நாட்டந்தஸ்தைப் பெற முயற்சிக்க வேண்டுமென பண்டிதர் திரு ஞான சம்பந்தம் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். திரு. வில்வநாத முதலியாரும், கனம் செட்டிநாட்டுக் குமார ராஜாவும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர். தீர்மானம் நிறைவேறியது.

ஜஸ்டிஸ் மகாநாட்டை, ஜனவரி முதல் வாரத்தில் கூட்டும்படி, சென்னை தென்னிந்திய நலவுரிமைச் சங்க நிர்வாகக் கமிட்டியினரை இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறதென திரு டி. பி. வேங்கடராஜ முதலியார் ஒரு தீர்மானம் கொண்டு வர, நிறைவேறியது.

திரு. செ. தெ. நாயகம் சென்னை சட்டசபையில் கொண்டு வரயிருக்கும் வகுப்புவாரி உத்தியோக சம்பந்தமான தீர்மானத்தை ஜஸ்டிஸ் கட்சியினர் ஆதரித்து நிறைவேற்றுமாறு தங்கோவும் திரு. செல்லப்பா ஒரு தீர்மானம் கொண்டு வர, நிறைவேறியது.

இந்திய சிவில் சர்விஸ் உத்தியோகத்திற்கு போட்டிப் பரீட்சை யில்லாமல் யோக்யதை, திறமை முதலியவற்றை அனுசரித்து நியமனம் செய்ய வேண்டுமென்று சர்க்காரை இம் மகாநாடு கேட்டுக்கொள்கிறதென ஆரணி திரு. சிவராம அருணகிரி செட்டியாரால் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேறியது.

வடார்க்காடு ஜில்லா சர்க்கார் உத்தியோகஸ்தர்களில் ஒரு வகுப்பினரே ஆதிக்கம் வகித்து வருவதைக் கண்டு இம் மகாநாடு வருந்துவதோடு உடனே அதை மாற்றி எல்லா வகுப்பினர்க்கும் சம உரிமை யளிக்கும்படி சர்க்காரை இம் மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறதென திரு. செல்லப்பாவால் மற்றொரு தீர்மானம் கொண்டுவரப் பட்டு நிறைவேறியது.

திரு. எம். சி. ராஜா இந்திய சட்ட சபையில் கொண்டுவரும் தீண்டாமை விலக்கு மசோதாவை நிறைவேற்றி வைக்கும்படி இந்திய சட்டசபை அங்கத்தினர்களையும், கனம் வைஸிராயையும் இம் மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறதென திரு. ஆர். சுப்ரமணியம் ஓர் தீர்மானம் கொண்டு வர, நிறைவேறியது.

சென்னை சட்டசபையில் இனாம் மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றி வைத்த, ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் கனம் பொப்பிலி ராஜாவை இம் மகாநாடு வாழ்த்துவதுடன், அம்மசோதாவை அங்கீகரித்து சட்டமாக்கிய கவர்னரையும் வைஸிராயையும் இம்மகாநாடு வாழ்த்துகிறதென பண்டிதர் திரு ஞான சம்பந்தத்தால் மற்றொரு தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேறியது.

நில வரியைக் குறைக்க வேண்டுமெனவும், விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகள் செய்ய வேண்டுமெனவும், கடன் சமரச போர்டு விவசாயக் கடன் உதவி சட்டம் இவைகளை வட ஆர்க்காடு ஜில்லாவிலும் அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென, திரு. சீனிவாச முதலியாரால் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேறியது.

தலைவர் தமது முடிவுரையில், 'விடுதலை' சீக்கிரத்தில் தினசரியாகக் கூடுமென்றும், ஜஸ்டிஸ் கட்சியின் மூலமே இந்தியாவிற்கு சுயராஜ்யம் கிடைக்கக்கூடுமென்றும் கூறினர்

விரைவில் உங்களூர் வெள்ளித் திரையில்
வெளிவரும் ஆரம்ப தினத்தை எதிர்பாருங்கள் !!!

*

Mr. V. S. M. ராஜாராமய்யர் அவர்கள்

,, S R. கிருஷ்ணய்யங்கார்
,, S. R. மீனுக்ஷிசுந்தரம்
,, M. S. அனந்த நாராயண அய்யர்
மாஸ்டர் கல்யாணம்

மிஸஸ். ஜீ. விஸ்வேஸ்வரி அம்மாள்
மிஸ். P. S. கிருஷ்ணமணி
மிஸ். T. P. லக்ஷிமிகாந்தம்

முதலியோர் நடித்த

"குட்டி"

அல்லது

சாமாஜக சித்திரம்

●

கொலைக்கு அஞ்சா கொடும் காதகர் செயல்!
மெய்யர் போல நடித்த பொய்யர்களின் வஞ்சகம்!!
திடுக்கிடும் பல தீவிர சம்பவங்கள் !!!

இவைகளைச் சித்தரித்துக் காட்டும்
அதியுன்னத நவீன சமூக பேசும் தமிழ் படம்.

டைரக்டர் :
T. P. கைலாசம்
B.A, A R C. Sc, (London)

★

ஸ்டூடியோ :
வேல் பிக்சர்ஸ்
மதராஸ்.

புரொப்ரைட்டர்ஸ் :— V. S. டாக்கீஸ்,
V. S K. முத்துராமய்யர் & சன்ஸ்,
மதுரை.
தந்தி: 'JARIVASTAR'

"ஜஸ்டிஸ் கட்சியை ஒரு சிறிதும் அசைக்க முடியாது"

(4-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கீர்கள் இதிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டும். சென்னை சட்டசபையில் காங்கிரஸ்காரர்கள் 'மெஜாரிட்டி' ஸ்தானங்களை அடைந்ததன் பயனாக, காங்கிரஸ்காரர்களையே ஆல்டர்மேன்களாகத் தேர்ந்தெடுத்ததுடன், எல்லா கமிட்டிகளிலும் இதர கட்சியினர் பிரதிநிதித்துவம் இல்லாமற்படிக்கும் செய்தனர்.

அப்படியிருந்தும் ஸ்தல ஸ்தாபனங்களில் தங்களுடைய திறமையைக் கண்டு வரப்போகிற அசெம்பிளி, கவுன்சில் தேர்தலிலும் தங்களையே மீண்டும் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று வாக்காளர்களை வாய் கூசாமல் கேட்டு வருகின்றனர்!

சிறிய ஸ்தாபனங்களான, ஸ்தல ஸ்தாபனங்களையே திறமையாக நிர்வகிக்க முடியாத இவர்கள் இம்மாகாண அரசியலை எவ்விதம் திறம்பட நடத்தப் போகின்றனர்?

ஸ்தல ஸ்தாபனங்களில் காங்கிரஸ் கோஷ்டியின் வேலை முறையை விசாரித்துத் தீர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கமிட்டியினரில் ஒருவரான திரு. குமாரசாமி ராஜா, காங்கிரஸ்காரர்கள் பெரும்பான்மையான ஸ்தானத்தைக் கைப்பற்ற வேண்டுமென்ற ஆத்திரத்தினால் அக்கத்திரர்களைத் தேர்ந்தெடுப்பதிலும், தங்களவர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் விசேஷ கவனத்தை செலுத்தவில்லையெனக் கூறுகிறார். தற்போது அசெம்பிளி தேர்தல் விஷயத்திலும் அதே ஆத்திரம்தான் அவர்களிடை நிலவி வருகிறது. பிற கட்சியினரை காங்கிரஸ் மேடையின் மீது நிற்கும்படி அவர்கள் கெஞ்சிக் கேட்டு வருவதற்கும் அதுவே காரணம். ஜனநாயக ஸ்தாபனங்கள் வெற்றிகரமாய் நடைபெறுவதற்கு சகிப்புத் தன்மையும், எதிர்க் கட்சியினரின் யோசனைகளை மெச்சக் கூடிய மனப் பான்மையுமிருக்க வேண்டும். இதைக் காங்கிரஸ்காரர்களிடம் நாம் காணமுடியாது.

இறக்க விரும்பும் மனிதர்

தேர்தலில் தோல்வியடையக்கூடும் என்ற பயம் காங்கிரஸ்காரர்களை இப்பொழுதே பிடித்து வாட்டத் தொடங்கிவிட்டது. அதனால்தான், காங்கிரஸ்காரர்கள் தேர்தலில் தோல்வி யடைவார்களாயின், வங்காள விரி குடாவில் விழுந்து சாவதைத் தவிர வேறு வழியில்லையென ஒரு காங்கிரஸ்வாதி கூறுகிறார்; மற்றொரு காங்கிரஸ்வாதி ஜஸ்டிஸ் கட்சி வெற்றி யடையுமாயின் தான் தற்கொலை செய்து கொள்ளப் போவதாகக் கூறுகிறார். இத்தகைய கசப்புத் தன்மை அவர்களிடமிருந்து வருவது சீர்திருத்தத்தை வெற்றிகரமாய் நடத்துவதற்கு பெருந்தடையாய் இருந்துவரும் என்பதில் சந்தேகமில்லை.

என்னைப் பொறுத்த மட்டிலும், நான் முன் கூறியுள்ளபடி கிராமவாசிகளின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதையே நமது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளோம். கட்சியினால் வெளியிடப்பட்டுள்ள பல்வேறு துண்டுப் பிரசுரங்களின் மூலம், விவசாயிகளுக்கு கட்சியினால் ஏற்பட்டுள்ள நன்மைகளைப் பொதுமக்கள் அறிந்திருக்கக் கூடும். ஆனால், இன்னும் எவ்வளவோ நன்மைகள் அவர்களுக்காகச் செய்ய வேண்டியிருக்கிறது.

நமது நீதி மந்திரி கனம் சர் ஜாபமீபிராக்களின் உதவியினால் அபிவிருத்தி இலாக்காவில் பல்வேறு திட்டங்கள் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. விவசாயிகள் கடன் தொல்லையின்றி, எதிர் காலத்தில் சுபிட்சமாய் வாழவேண்டுமென்பதே அவைகளின் நோக்கம்.

தொழிலாளர்களிடையிருப்பதை விட படித்த வாலிபர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் தீவிரமாகயிருந்து வருகிறது. அதனைக் குறைப்பதற்காக படித்த வாலிபர்கள் பலருக்கு விவசாயப் பயிற்சி இம் மாகாணத்திலுள்ள பல்வேறு விவசாயப் பண்ணைகளிலும், கொடுத்து வருகிறோம். இதுமட்டுமின்றி அறியாமையைப் போக்கவும் கிராமப் புனருத்தாரண வேலைக்கும் அவர்களது சேவைகள் பயன்படக் கூடுமென நம்புகிறோம். கிராமப் புனருத்தாரண வேலையை ஜில்லா பொருளாதாரக் கவுன்சில்கள் ஜரூராக இப்பொழுதே துவக்கிவிட்டதை நான் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன். இவ்வேலைக்குத் தடை ஏற்படாமல் தொடர்ந்து நடத்த வாக்காளர்கள் இக்கட்சியையே ஆதரித்து, பெருவாரியாகத் தேர்ந்தெடுத்து சட்டசபைகளுக்கு அனுப்பவேண்டும். ஆகவே, வருகிற தேர்தலில் கட்சி வெற்றியடைய கட்சி மனிதர்களும், முக்கியமாக வாலிபர்களும் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

நமது நம்பிக்கை

கடைசியாக ஒரு வார்த்தை. நமக்கு எண்ணிக்கை பெரிதல்ல. கட்சியின் கொள்கைகளுக்காக உண்மையாக உழைக்கக் கூடியவர்களே நமக்குத் தேவை. ஆகவே, கட்சிக்காக உழைக்கக் கூடியவர்கள் ஆயிரத்திற்கு ஒருவர் இருப்பதைக் காட்டிலும் கட்சிக்காக உண்மையில் பாடுபடும் நபர்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒருசிலர் இருந்தாலும் போதுமானது.

இம் மாகாணத்தின் அபிவிருத்திக்கு ஜஸ்டிஸ் கட்சி ஓர் பெரிய சக்திவாய்ந்த ஸ்தாபனமாக இருந்து வந்தது. எதிர்காலத்திலும் அது அவ்விதமே யிருந்து வருமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. விவசாயத்தில் மட்டுமின்றி இந்தியாவின் முன்னேற்றத்திற்கான எல்லாத் துறைகளிலும் ஒற்றுமையாகப் பாடுபட வேண்டுமென்பதே நமது விருப்பம். பார்லிமெண்டரி ஜனநாயக முறையில் எனக்கு நம்பிக்கை அதிகம். அது தவறுமானால் இந்தியாவின் கடைசி நம்பிக்கையும் இழந்த மாதிரிதான்.

பாமா பரிணயம்

மதுரை சிடி சினிமாவில் மிஸ். டி.பி. ராஜலக்ஷிமி, மிஸ். எஸ். எஸ். ராஜாமணி முதலியோர் நடித்த "பாமா பரிணயம்" என்னும் தமிழ் படம் வெற்றிகரமாய் காட்டப்படுகிறது.

இந்திர சபா

மதுரை சிடிசினிமாவில் இந்திரா டாக்கீஸாரின் 'இந்திர சபா' என்ற தமிழ் படம் வரும் டிசம்பர் 12-ல் காட்டத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

"பிரேமா விஜயம்" என்ற தெலுங்கு பேசும் படத்தில் நடிக்கும் பானுமதி. இப்படம் கூடிய சீக்கிரத்தில் சென்னையில் காண்பிக்கப்படும்.

மதுரை மோஹன் மூவிடோன் கம்பெனியாரின் "சந்திர மோஹனா"வில் இரு காட்சிகள்.

மதுரை வி. எஸ். டாக்கீஸாரின் "குட்டி" என்னும் தமிழ் பேசும் படத்தில் கதாநாயகனாக நடிக்கும் மிஸ்டர் வி. எஸ். எம். ராஜாராமய்யர் அவர்கள்.

"குட்டி"

இக்கம்பெனியாரின் "குட்டி" என்னும் தமிழ் பேசும் படத்தின் எடிட்டிங் வேலை பூர்த்தியடைந்து வெகு துரிதமாக காபிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. 1937-ஜனவரி முதல் வாரத்தில் எல்லா ஊர்களிலும் காட்டத்தக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

"துளசிதாஸ்"

முருகன் டாக்கீஸார் மிஸ்டர் எம். கே. ராதா, மிஸ் சுப்புலக்ஷிமி முதலியவர்களைக் கொண்டு "துளசிதாஸ்" என்னும் படத்தை எடுக்க துரிதமாய் எல்லா ஏற்பாடுகளும் செய்து வருகின்றனர்.

"சிந்தாமணி"

ராயல் டாக்கீஸார் கல்கத்தா, தேவதத்தா ஸ்டூடியோவில் மிஸ். கே. அஸ்வத்தம்மா, மிஸ். எஸ். என். ராஜாமணி, மிஸ்டர் எம். கே. தியாகராஜ பாகவதர் முதலானவர்களைக் கொண்டு 'சிந்தாமணி'' என்னும் படத்தைத் தயாரிக்கின்றனர். இது வரை 15,000 அடி வரை பூர்த்தியடைந்து விட்டதாயும், அநேகமாய் ஜனவரி கடைசிவாரத்திற்குள் பூர்த்தியடையவும் பிப்ரவரி முதல் வாரத்தில் படம் வெளியிடவும் ஏற்பாடுகள் செய்து வருவதாயும் தெரிகிறது.

தேவை

மோட்டார் ரோட் ரோலர் டிரைவர் வேலைக்குத் தகுதிவாய்ந்த முகம்மதியர் ஒருவர் தேவை. மாதச் சம்பளம் ரூ. 30. வேலை இரண்டு மாதங்கள் வரை நீடிக்கும். மனுதாரர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு 28—11—36-க்குள் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

சி. முத்தையா முதலியார்,
பிரஸிடெண்ட்.

ஜில்லா போர்டு ஆபீஸ்,
சைதாப்பேட்டை,
20-11-36.

வாரம் பூராவும் பரீட்சியுங்கள்!

இதைவிட 4-பங்கு விலை வாட்சுகளுக்கு இணையானது. திருப்தியில்லையேல் பூராப் பணமும் வாபீஸ் 5 வருஷம் உத்தரவாதம்.

டாவலன்

லீவர் ரிஸ்டு வாட்சு

உயர்தர லீவர் ஓட்டம், சிறிய அளவில் அழகிய அமைப்பு. சரியான மணி காட்டி பல வருஷம் உழைக்கும்.

பிரகாசமான நிக்கல் வெள்ளி கேஸ் ரூ. 6—4—0.
கோல்டு பிலேட் கேஸ் ரூ. 6-12-0
ரேடியம் டயலுக்கு தனி 0—8—0.
போஸ்டேஜ் & பாக்கிங் 0—7—0.
கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதுக.

Sole Agents:—
THE UNION TRADING CO.,
2, Doyehatta St., (D/3),
CALCUTTA.

மூன்றணா ஸ்டாம்பு அனுப்பினால்
"தங்கசாலைத் தெரு தாசியின் ரகஸ்யங்கள்"
என்ற நாவல் இனாமாக அனுப்பப்படும்.

ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராயநகர், மதராஸ்.

"சமரஸம்"

ஓர் மாத வெளியீடு

மக்களின் நல்வாழ்வு, பொருளாதாரநிலை, கிராம சீரமைப்பு, சுகாதார விஷயங்கள் இவைகளை சமநோக்குடன் அபிவிருத்தி செய்யும் பத்திரிகை.

மானேஜர்:—
சமரஸம் ஆபீஸ்,
விழுப்புரம்.

வெற்றிக்கு
மேல் வெற்றி !!!

சென்னை பிராட்வே டாக்கீஸில்

★

மகத்தான 2-வது வாரம் வெற்றி முழக்கத்துடன் நடைபெறுகிறது.
ஆயிரக்கணக்கான மக்கள் இடமின்றி திரும்ப நேருகிறது! முந்துங்கள் !!

இதோ!
M. K. ராதா,
T. N. மீனாக்ஷி,
S. V. வெங்கட்ராமன்,
K. R. ஜெயலக்ஷ்மி
முதலியோர் நடித்த

சந்திர மோஹனா

அல்லது **சமூகத் தொண்டு**

குடும்ப சகிதமாய் பதினாயிரக்கணக்கான மக்கள் கண்டு மகிழ்கிறார்கள்.

காதல், சோகம், ஹாஸ்யம் ஒருங்கே அமையப் பெற்ற தலைசிறந்த சமூக தமிழ் பேசும் படம். பார்க்கத் தவறாதீர்கள்! மறுசமயம் வாய்ப்பதரிது !!

மற்ற ஊர் பிரபல தியேட்டர்களில் ஆரம்ப தினத்தை ஆவலுடன் எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள் !!

படம் வேண்டுவோர்:—
தந்தி: MOVIETONE.

மோஹன் மூவிடோன் கம்பெனி,

157, தெற்கு மாசி வீதி, மதுரை.
போன் ௳: 96.

ஜஸ்டிஸ் கட்சிக்கு அபார வெற்றி

கிருஷ்ணா ஜில்லா போர்டு தேர்தல்கள்

காங்கரஸ்காரர்கள் ஜாமீனிழந்தனர்

பெஜவாடா, நவ, 24

மேலக் கிருஷ்ணா ஜில்லா போர்டு தேர்தல் நேற்று வெகு மும்முரமாக நடந்தது. சென்ற ஒரு வாரமாக விடாது மழை பெய்துகொண்டிருந்தாலும் வாக்காளர்கள் ஏராளமாகச் சென்று தங்கள் ஓட்டுகளைப் பதிவு செய்தனர். ஜில்லா போர்டில் 27 ஸ்தானங்கள் காலியிருந்தும் 19 ஸ்தானங்கள் தான் தேர்தலுக்கு விடப்பட்டது. மீதி 8 ஸ்தானங்களுக்கும் ஹைகோர்ட்டின் உத்தரவினாலும் மற்றக் காரணங்களினாலும் தேர்தல் நடக்கவில்லை. மற்றொரு ஸ்தானத்திற்கு லோகல் போர்டு இன்ஸ்பெக்டர் உத்தரவின் மீது ஓட்டுகள் எண்ணப்படவில்லை.

ஜஸ்டிஸ் கட்சி அபேக்ஷகர்கள் பன்னிருவர் எதிர்ப்பின்றி தேர்ந்தெடுக்கப் பட்டனர். மற்றைய 6 ஸ்தானங்களையும் ஜஸ்டிஸ் கட்சி அபேக்ஷகர்களே அதிகப்படியான ஓட்டுகளால் கைப்பற்றினர். இத்தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சிக்குத் தலைமை வகித்து சிறப்புடன் நடத்தி வெற்றி மாலை சூட்டினவர் மீர்சாபுரம் ஜமீன்தாரேயாவர். இத்தேர்தலில் போட்டியிட்ட காங்கரஸ் அபேக்ஷகர்களும், தலைவர்களும் இருந்த இடந்தெரியாது முறியடிக்கப்பட்டனர்.

வெற்றிபெற்றவர்கள் விபரம்

1. நந்திகாமா:—மீர்ஸாபுரம் ஜமீன்தார் (எதிரி இல்லை)
2. பூத்திரில்லா:—வி. பார்த்தசாரதி ராவ், நுஜிக்கிப்படு ஜமீன்தார் (எதிரி இல்லை)
3. திருவூர்:—வி. சத்திய நாராயணராவ் பகதூர் (எதிரி இல்லை)
4. திருவூர்:—புருக பிக்ஷபதி (ஒதுக்கப்பட்ட ஸ்தானம்-எதிரி இல்லை)
5. கல்லிதர்:—காத்தப்படு ஜமீன்தார் (எதிரி இல்லை)
6. கல்லிதர்:—ஓய். கோட்டையா (ஒதுக்கப்பட்ட ஸ்தானம்-எதிரி இல்லை)
7. எடுலகூடன்:— கே. வி சாமாராவ் பகதூர் (எதிரி இல்லை)
8. சோமாவரம்:—ஆவயசம் ஜமீன்தார் (எதிரி இல்லை)
9. வீரவல்லி:— பத்துமி விசையா.
10. கன்னுவரம்:—கே. சீதாராம ராவ் பாதுர்காரு (எதிரி இல்லை)
11. கன்னுவரம்:—ஓய். சாமுவேல் (ஒதுக்கப்பட்ட ஸ்தானம்-எதிரி இல்லை)
12. உய்யூர்:—கே. உமாகேஸ்வரராவ்.
13 கபிலேஸ்வரபுரம்:— எம் வெங்கடரத்னம்.
14. சாங்கிபடு:—எம். வெங்கடசுப்பையா.
15. மைலாவரம்:— மைலாவரம் ஜமீன்தார் (எதிரி இல்லை)
16. பெஜவாடா:—ஜனப் மூசம்மது குலாம் மொகைதீன் சாகிப் (ஒதுக்கப்பட்ட ஸ்தானம். எதிரி இல்லை)
17. பெனுகாஞ்சிப்ரோல்:—கே சின்ன ரோசய்யா.
18. மக்கப்பேதா:—என். நரசிம்மம்.

நிரேவள்ளி வட்டம்

	ஓட்டுகள்
திரு. பி. வீராயா (ஜ)	2,137
திரு. என். சுப்பய்யா (கா)	1,135
செல்லுபடியாகாதவை	16

கபிலேஸ்வரபுர வட்டம்.

திரு. மாக்ரல வெங்கடரத்னம் —(ஜஸ்)
திரு. வெள்ளிப்பாசு ஆபய்யா —(காங்)

ஜஸ்டிஸ் கட்சி அபேக்ஷகர் 756 வோட்டுகள் அதிகப்படியாகக் கிடைக்கப்பெற்று தேர்ந்தெடுக்கப் பட்டார்.

காங்கிப்படு வட்டம்

திரு. எம். வெங்கட சுப்பையா —(ஜஸ்)
திரு. சாந்துபாலு லக்ஷ்மையா —(காங்)

ஜஸ்டிஸ் கட்சி அபேக்ஷகர் 552 வோட்டுகள் அதிகப்படியாகக் கிடைக்கப் பெற்று தேர்ந்தெடுக்கப் பட்டார்.

பெனு காஞ்சிப்ரோலு, மக்கபேத்தா, உய்யூர் வட்டங்கள்

திரு. என். நரசிம்மம் (ஜஸ்டிஸ்) 300 வோட்டுகள் அதிகப்படி கிடைத்து வெற்றி பெற்றார்.

திரு. கே. சி. ரோசய்யா (ஜஸ்டிஸ்) 1,100 அதிகப்படி வோட்டுகளால் காங்கரஸ் அபேக்ஷகரான ஜயந்திபுரம் ஜமீன்தாரை தோற்கடித்து வெற்றி பெற்றார்.

ஜயந்திபுரம் ஜமீன் ஜாமீன் தொகையை இழந்து விட்டார்.

திரு. கே. உமாகேஸ்வரராவ் (ஜஸ்) தன்னுடைய எதிரி காங்கரஸ் அபேட்சகரை அபரிமிதமான ஓட்டுகளால் தோற்கடித்தார்.

திரு. வி. வி. ராமசாமிக்கு பெருத்த வெற்றி

காங்கரஸ் அபேட்சகர் படுதோல்வி

விருதுநகரில் உற்சாகம்

(ஒரு நிருபர்)

விருதுநகர், நவ, 26

இராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தலில் போட்டி விருதுநகர் வட்டத்தில ஜஸ்டிஸ் கட்சிக்கும், காங்கரஸ் கட்சிக்கும் பலத்த போட்டி இருந்தது. அதில் ஜஸ்டிஸ் அபேட்சகர் திரு. வி. வி. இராமசாமிக்கு 2211 ஓட்டுகளும், காங்கரஸ் அபேட்சகருக்கு 1844 ஓட்டுகளும் கிடைத்தது. திரு. வி. வி. இராமசாமி வெற்றிபெற்றதாக சாத்தூர் தாசில்தார் நேற்றிரவு தெரிவித்தார். முடிவு அறிவிக்கப் பட்டதும் திரு. வி. வி. இராமசாமி பிரமாண்டமான கூட்டத்தின் மத்தியில் யானைகளுடன் வாத்தியங்கள் கோஷிக்க, ஆலக்கரையிலிருந்து ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார். வழிநெடுக திரு. ராமசாமிக்கு ஆயிரக்கணக்கான மாலைகள் சூட்டப்பட்டன. ஊர்வலத்தில் சுமார் ஒரு லக்ஷம் ஜனங்கள் கலந்து கொண்டனர். ஊர்வலத்தின் நீளம் ஒருமைல் 'ஜே' கோஷங்கள் வானமளாவின. ஊர்வலம் நகரின் எல்லா முக்கிய தெருக்களின் வழியாகச் சென்று கடைசியாக திரு. வி. வி. இராமசாமி வீட்டிற்கு வந்து சேர்ந்தது. அவர் வீட்டின் எதிரில் பிரமாண்டமான பொதுக் கூட்டம் நடந்தது. திரு. வி. வி. இராமசாமி கூட்டத்தில் பேசுகையில், தனக்கு ஆதரவளித்தவர்களுக்கு நன்றி செலுத்துவதாகவும், பொது மக்களுக்குத் தொண்டு செய்வதாக உறுதி கூறுவதாகவும் குறிப்பிட்டார். பின்னர் திருவாளர்கள் பொன்னம்பலம், உத்தண்டன் ஆகியோர் காங்கரஸ் பொய்ப் பிரசாரம் செய்ததை விளக்கிப் பேசிய பின்னர், ஜஸ்டிஸ் கட்சி மீது உள்ள பற்றை விருதுநகர் வெளிப்படுத்தி இருக்கிறதென்று கூறினார்கள். ஊர்வலத்தில் பல பெண்களும் கலந்து கொண்டனர். மாகாணத்தின் பல பிரபலஸ்தர்களிடமிருந்து மகிழ்ச்சித் தந்திகள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. எங்கும் உற்சாகம் நிலவியிருக்கிறது.

கிழக் கிருஷ்ணா ஜில்லா போர்டு தேர்தல்

ஜஸ்டிஸ் கட்சிக்கு காங்கரஸ் தலைவர் ஆதரவு

டாக்டர் பட்டாபி சீதாராமய்யாவின் கூற்று

மசூலிப் பட்டணம், நவ, 24

கிழக் கிருஷ்ணா ஜில்லா போர்டு தேர்தல் நேற்று யாதொரு கலவரமுமின்றி நடைபெற்றது. தனபாலத்தில் திருவாளர்கள்: கே. வி. ராமய்யா நாயுடுவும், எ. மதவராவும் போட்டியிட்டனர். இருவருக்கும் போட்டி அதி மும்முரமாக இருந்தது. தேர்தல் தினத்தன்று இரு கட்சியினருக்கும் கலகம் ஏற்படும்படியான அறிகுறிகள் காணப்பட்டன. எனினும், சமயத்தில் ரிசர்வ் போலீஸ் மசூலிப்பட்டணத்திலிருந்து வந்து சேர்ந்ததினால் அசம்பாவிதங்கள் நடைபெறக் கூடவில்லை.

காங்கரஸ்காரர்களுக்குள் ஏற்பட்ட பிணக்குகளினால் டாக்டர் பி. பட்டாபி சீதாராமய்யா தன்னுடைய சகாக்களோடு கே. வி. ராமய்யா நாயுடுவுடன் சேர்ந்து காங்கரஸுக்கு விரோதமாக வேலை செய்தார். இதனால் ஒரு காங்கரஸ் அபேட்சகராவது வெற்றி படைவரென்று சொல்லுவதற்கில்லை. காங்கரஸ் அபேக்ஷகர் நிற்காத இடங்களிலெல்லாம் பட்டாபி ராமய்யாவுக்கு சாதகமாகப் பிரசாரம் செய்தது மின்றி சமயத்திற்குத் தகுந்தாற் போல நடக்கும் பொருட்டு அவர்கள் காங்கரஸ் தலைவர்களோடு சேர்ந்து கொண்டதாகவும் பகிரங்கமாகச் சொன்னார்.

இவ்விதம் சொல்வதைக் கேட்ட பல காங்கரஸ் தலைவர்களைக் கேள்வி கேட்டனர். அதற்கு அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து அவர்கள் காங்கரஸ் கொள்கைகளை அடியோடு புறக்கணித்து விட்டு சமயத்திற்குத் தகுந்தாற்போல் நடப்பவர்களென்றும், சமயத் தருத்தவர்களென்றும் ஜனங்கள் சந்தேகப் படுகின்றனர்.

காங்கரஸ் ஹம்பக்

வரப்போகும் புதுச் சீர்திருத்தத்தினால் உருப்பெறும் சட்ட சபைகள் மூலம் அந்தச் சீர்திருத்தத்தையே கவிழ்த்து விட முடியுமென நான் நம்பவில்லை. சட்ட சபைகளாலும், மெம்பர்களாலும் எந்த அரசியல் அமைப்பும் கவிழ்க்கப் பட்டதாக நான் கேட்டதே இல்லை. ஒரு தேசத்திலுள்ள சகல கட்சிகளும், தலைவர்களும் சேர்ந்தால்தான் அரசியலைக் கவிழ்க்க முடியும்.

சென்னைச் சட்டசபைக் காங்கரஸ் கட்சித் தலைவர் ஸி. ஆர். ரெட்டி

மசூலிப்பட்டணம்

மசூலிப்பட்டணம், நவ, 25

கிழக் கிருஷ்ணா ஜில்லா போர்டில் ஜஸ்டிஸ் கட்சி இவ்வளவு மகத்தான வெற்றியை அடைவதற்குக் காரணம் செல்லப்பள்ளி ராஜா சாகிப் அவர்களின் தீவிர உழைப்பும் மேலான தலைமை வகிப்புமேயாகும். இதுவரையிலும் வெளியிடப் பட்ட வெற்றி பெற்றவர்கள் ஜாபிதாவை கீழே காண்க.

பந்தர் தாலூகா

பந்தர் பிர்க்கா

திரு. தாதா கணபதி (ஜஸ்) தன்னுடைய எதிரி காங்கரஸ் அபேக்ஷகரான திரு. தாடபள்ளி ஸ்ரீராமுலுவை அதிகப்படியான 1,260 வோட்டுகளால் தோற்கடித்தார்.

கூடூர் பிர்க்கா

திரு. ஜேவர் இமாம் சாகிப் (ஜஸ்) அதிகப்படியாக 80 ஓட்டுகள் கிடைக்கப் பெற்று சுயேச்சை அபேக்ஷகரான திரு. மதினா பீச் ஷைபவை தோற்கடித்தார்.

திவி தாலூகா

அவனிகத்தா பிர்க்கா

திரு. பாதெ சாமராவ் (ஜஸ்) 716 அதிகப்படியான ஓட்டுகளால் சுயேச்சை அபேக்ஷகரான திரு. சிலம் செட்டி வெங்கடரெத்னம் நாயுடுவை தோற்கடித்தார்.

நாகயிலங்கா பிர்க்கா

திரு. பிரசங்கி வெங்கடநாராயணு (ஜஸ்டிஸ்) 192 அதிகப்படி வோட்டுகளை பெற்று சுயேச்சை அபேட்சகர் மந்தல ராமசாமியைத் தோற்கடித்தார்.

கைக்கலூர் தாலூகா

மந்தவள்ளி பிர்க்கா

திரு. பர்வதநேனி பாசவசங்கரய்யா (ஜஸ்டிஸ்) 540 அதிகப்படி வோட்டுகளால் சுயேச்சை அபேட்சகரான திரு குடிவாடா சூரிய நாராயணுவைத் தோற்கடித்தார்.

கைக்கலூர் பிர்க்கா

திரு. காமநேனி பட்டாபி ராமய்யா (ஜஸ்டிஸ்) 1,132 வோட்டுகள் அதிகப்படியாக எடுத்து காங்கரஸ் அபேட்சகரான திரு. காமநேனி வெங்கடரெத்னத்தை தோற்கடித்தார்.

நந்திவாடா பிர்க்கா

	ஓட்டுகள்
திரு. அடுசுமல்லி ஹரிகேடு (ஜஸ்)	—1,553
திரு. எடெப்புாக்தி லிங்கய்யா (கா)	35

காங்கரஸ் அபேக்ஷகர் ஜாமீனை இழந்து விட்டார்.

குட்லாவல்லேரு பிர்க்கா

	ஓட்டுகள்
திரு. அடுசுமல்லி சுப்பாராவ் (ஜஸ்)	—3,260
திரு. கஸூரி தாமோதரய்யா	—1,200

ஸ்திரீகளுக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானம்

ஸ்ரீமதி அட்லூரி வெங்கடசீதம்மா (ஜஸ்)	2,980
ஸ்ரீமதி வல்லபாநேனி சீதாமகாலெட்சுமம்மா (காங்)	1,500

சென்னை கார்ப்பொரேஷன் தீர்மானம்

வெறும் வெத்து வேட்டு

பிரபல பத்திரிகைகள் கண்டனம்

சென்னை, நவ, 26

கார்ப்பொரேஷனில் காங்கரஸ் கட்சி, பழைய உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தை ரூ. 500-க்குக் குறைத்து விடச் செய்த தீர்மானத்தைப்பற்றி "ஹிந்து" பத்திரிகை எழுதுவதாவது:—

புதிதாக அமைக்கப்பட்ட நகர சபையின் நேற்றைய கூட்டம் கார்ப்பொரேஷனிலுள்ள ஐந்து பெரும் உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைக் குறைக்க வேண்டுமென்று தீர்மானித்தது. நகரசபை இவ்வளவு சீக்கிரம் தவறு செய்தமைக்காக வருந்துகிறோம். இத் தீர்மானம் கொண்டு வரப்படின் அந்த உத்தியோகஸ்தர்களின் சம்பளம் அதிகம் குறைந்து போகும். பொது ஸ்தாபன நிர்வாகத்தில் சம்பளக் குறைப்பு திட்டங்கள் ஆலோசிக்கையில், கூடியவரை ஏற்கனவே உத்தியோகத்தில் இருப்பவர்களைப் பாதிக்காமல் பார்த்துக் கொள்வது தான் முறை. காங்கரஸ் அட்ஹாக் கமிட்டியார் வெளியிட்ட தேர்தல் அறிக்கைத் திட்டத்தில் பலவற்றைச் செய்வதாகக் கூறப்பட்டிருந்ததில் ஒரு கட்டுப்பாடான சிக்கனத் திட்டத்தைக் கையாள்வது என்பது முக்கியமானது. ஆனால் நேற்று நடந்த நகரசபைக் கூட்டத்தில் காங்கரஸ் கட்சியார் கையாண்ட திட்டம் கட்டுப்பாடான திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஏற்பாடென்றோ அல்லது முழு யோசனையுடன் ஏற்படுத்தப்பட்ட திட்டத்தின் ஒரு பாகமென்றோ கூறுவதற்கில்லை யென்றே நாம் மதிக்கிறோம்.

"மதராஸ் மெயில்"

கார்ப்பொரேஷன் உத்தியோகஸ்தர்களுக்கு ரூ. 500-க்கு மேல் சம்பளம் தரக் கூடாதென்ற தீர்மானம் சபையில் விவாதிக்கப் பட்டபோது ஒரு அங்கத்தினர் "உத்தியோகஸ்தர்களுக்கு ரூ. 500-க்கு மேல் சம்பளம் கொடுக்கக் கூடாதென்றதை உங்களுடைய வாழ்க்கையில் கைக்கொண்டீர்களா?" என்று திரு. பாஷ்யத்தைக் கேட்டார். அதற்கு ஆமாம் என்று பதில் கொடுக்கப்பட்டது. அதற்கு, அந்த அங்கத்தினர் வருமான வரி கணக்கைப் பார்த்தால் உண்மை வெளிப்படும் என்று கூறிய போது திரு. பாஷ்யம் புன்னகை செய்தார். கொள்கையிலும், செய்கையிலும் வேற்றுமை இருப்பது முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம். பொது ஸ்தாபன உத்தியோகஸ்தர்களுக்கு கடுத்த வாழ்க்கை நிலைமை இருக்க வேண்டுமென்று கூறிய அரசியல் வாதிகள் விலை உயர்ந்த மோட்டாரில் அன்று மாலையிலேயே எதிர் சென்றதை நாம் பார்த்தோம். இப்போது வேலையிலுள்ளவர்களுக்குச் சட்டப்படி கோட்டிஷாம், நஷ்டஈடு ஏதாவது உண்டானால் அதையும் கொடுத்து பட்டுவாடா செய்த பின்பு இவ்வித நடவடிக்கை எடுத்துக் கொள்வது தான் சரியான வழியாகும்.

சக்கரவர்த்தியின் மகுடாபிஷேகம்

இந்திய சுதேச மன்னர்களின் வெகுமதிகள்

இந்திய சுதேச மன்னர்கள் எட்டாவது எட்வர்ட் சக்கரவர்த்தியின் முடிசூட்டு விழாவிற்கு இங்கிலாந்து சென்று மன்னர் பிரானுக்கு வெகுமதிகள் வழங்குவார்கள். விலை மதிக்க முடியாத பட்டு பீதாம்பரங்களும், வைடூரியங்களும் பம்பாயில் இன்ஷ்யூர் செய்யப்பட்டிருக்கின்றன. அவ் வைடூரியங்களில் சிறந்தன சூரிய காந்தமணி, சந்திர காந்தமணி, வஜ்ரா, முக்தா, மாணிக்யா முதலியனவாம். இவையனைத்தும் இந்தியாவில் ஆட்சி புரிந்த மொகலாய சக்கரவர்த்திகளுக்குச் சொந்தமானதெனத் தெரிகிறது.

இதுவரையும், 125 சுதேச மன்னர்கள் இங்கிலாந்து செல்லத் தீர்மானித்துள்ளனர்.

பொங்கல்! பொங்கல்!!

அசல் பட்டுப் புடவை

அழகிய சிறு ஜரிகைக் கரை, அசல் பட்டு. சிகப்பு, அரக்கு புளு, பச்சை, ஸ்கை முதலிய கலர்களில் கிடைக்கும்.

12-முழம் x 44"	புடவை 1-க்கு விலை	ரூ. 5-12—0
16 முழம் x 44"	புடவை 1-க்கு விலை	ரூ. 7—8—0
18 முழம் x 44"	புடவை 1-க்கு விலை	ரூ. 8—8—0
5 முழம் x 44"	அங்க வஸ்திரம் 1-க்கு	ரூ. 3—8—0

வெண்பட்டு அங்க வஸ்திரம்

5 முழம் x 44" அழகிய கரைகள் சல்லைக்கு சேர்த்தியானது. விலை ரூ. 1—12—0-தான்.

☞ இந்த விலைகள் 15—1—37 பொங்கல் வரை தான். ஞாபகத்தில் வையுங்கள். உடனே ஆர்டரை அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
(Proprietors : Sundarams Ltd.,)
சில்க் அவுஸ், காசி.

ரூபா 2—8—0-க்கு 3 வாட்சுகளும், பரிசுகளும்.



ஏக காலத்தில் ரூ. 2-8-0-க்கு 10 பாட்டில் ஆட்டோ டில்ருஷ் அத்தர் புட்டிகள் வாங்குபவர்களுக்கு ரயில்வே டம்மி பாக்கெட் கெடியாரம் 1, டம்மி ரிஸ்டு வாட்ச் 1, 10 வருஷ உத்திரவாதமுள்ள ஒழுங்காக மணி காட்டக்கூடிய "B" டைம்பீஸ் 1, 300 அடி வெளிச்சம் காட்டும் டார்ச் விளக்கு 1, 14 காரட் ரோல்டு கோல்டு கிப்பு பவுண்டன் பேனா 1, முத்து மாலை 1 இலவசமாக அனுப்பப்படும். உடனே எழுதுங்கள். தபால் செலவு அணா 14 பிரத்தியேகம்.

DUTTA & Co., (V. V.)
15/1, Joymitter Street.
Hatkhola P. O.,
CALCUTTA.

பண்ட் அண்டு கோ.

குரோம் லெதர் ஒர்க்ஸ்
1890-ல் ஸ்தாபகம்

உயர்ந்த சாமான்! குறைந்த விலை!



(தங்க மெடல் பரிசுபெற்றது.) தென்னிந்தியாவிலேயே எங்களிடமிருந்து தான் ஏராளமான செருப்புகள் தயாராகின்றன.

மொத்த விற்பனைக்கும், சில்லரை விற்பனைக்கும் நம்பிக்கையான இடம். தோல் சரியானபடி அநேக உழைப்பதற்காக விலையுயர்ந்த சாமான்களால் பதனிடப்பட்டது.

170, பிராட்வே, சென்னை.

பள்ளியில் பயின்றறியா நாயக்கர்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தவிர ஒரு "ஆத்ம" சக்தியாலோ, "மகாத்மா" சக்தியாலோ என்று அவர் கருதுவதில்லை.

வாலிபர்கள் என்றால் யார்? அவர்கள் பொறுப்பு என்ன? எதுவரை வாலிபப் பருவமோ வாலிப புத்தியோ நிற்கும்? அவர்களால் எந்த நிலையில் காரியம் செய்துகொள்ளலாம்? எந்த நிலையில் வாலிபர்களால் காரியம் கெட்டுவிடும்? என்பது ராமசாமி தனது வாலிப பருவத்தில் இருந்தே-தனது வாலிப அனுபவத்திலிருந்தே அறிந்ததே பாரும்.

மாறியாடும் பிள்ளையல்ல

ராமசாமி செல்லப்பிள்ளை-காலிப் பிள்ளை-பிரப்புப் பிள்ளை பொதுநல சேவைப் பிள்ளை—தேசபக்த வீரப் பிள்ளை—தேசத்துரோகப் பிள்ளை-வாலிபர்கள் துரோகப் பிள்ளை என்பதான பல நிலைகளிலும் இன்று இருக்கிற தன்மையில்—பதவியில்-நிலையில் இருந்துதான் வந்திருக்கிறாரே ஒழிய நிலை மாறியபோது பதவி மாறியோ, பதவி மாறிய போது நிலைமை மாறியோ போவதான நிலைமை அவர் ஒரு போதும் அடைந்ததே யில்லை.

ஆகையால், ராமசாமியாருக்கு கட்சியோ உலகோர் என்ன சொல்வார்கள் என்கிற கவலையோ வாலிபர்கள் என்ன நினைப்பார்கள் என்கிற லட்சியமோ சிறிதும் இல்லை.

தலைமை ஸ்தானம் வேண்டுமானால் தான் உண்டாக்கிக் கொள்வாரே தவிர தன்னை இன்னொருவன் தலைவனாக்கும்படி ஒரு காலும் செய்து கொள்ளமாட்டார். அத்தலைமையின் கீழ் அரை நிமிஷமும் இருக்கவும்மாட்டார். உலகோர் என்ன சொல்வார்கள் என்பதில் உலகோர் இன்ன விதம் சொல்லவேண்டும் என்று உலக அபிப்பிராயத்தைத் தானே உண்டாக்கமுயற்சிப்பாரே ஒழிய உலக அபிப்பிராயம் இப்படி இருக்கிறதே என்று சிறிதும் வருந்தமாட்டார்.

ராமசாமி சுயமரியாதை

மனிதன் கொஞ்சகாலம் வாழ்வதானாலும் தன்னை நம்பி தன் காலில் நின்று தன் இஷ்டம் போல் இருந்தே சாவதே சுயமரியாதை என்று கருதி இருக்கும் அவர் "உமக்கு கட்சியில் இடம் எங்கே?" "உம்மை நம்பினவர்கள் கதி என்ன?" என்பதற்காக கவலைப்படுவாரா? வெட்குவாரா? என்பதை முதலியார் அவர்கள் சாவதானமாய் இருந்து சிந்திக்க கெஞ்சுகிறோம்.

இன்று உண்மையிலேயே ஜஸ்டிஸ் கட்சியில் சமதர்மத்துக்கு இடம் இல்லாமல் போய் விட்டதினால் ராமசாமியின் சமதர்மத்துக்கோ, பொது சமதர்மத்துக்கோ என்ன கெடுதி என்பது விளங்கவில்லை

இனி ஒரு 2, 3 மாதத்தில் ஜஸ்டிஸ் கட்சி நிலை இன்னது என்று தெரிந்து விடப்போகிறது. அது பதவிக்கு வரும் வரா விட்டாலும் சரி, அதற்குப் பிறகு சமதர்மத்தைப் பிரசாரம் செய்வதில் தடை என்ன இருக்கிறது? என்றும், அப்புறம் வாலிபர்கள் உண்டாக மாட்டார்களா என்றும் கேட்கின்றோம்.

அம்மம்ம ! அழுதது கொஞ்சமா ?

எந்த வாலிபனிடமும், எந்தக் கூட்டு வேலைக்காரனிடமும் ராமசாமி தனது சமதர்மத்துக்கு ஒப்பந்தம் பேசி ஒரு காதொடிந்த ஊசியளவு பயனும் பெற்றுக்கொள்ளவில்லை. ராமசாமி எத்தனையோ பல சமதர்ம வாலிபருக்கு சோறு, உடை செலவுக்குக் காசு அவர்கள் குடும்பச் செலவுக்கு 25, 50, 100, 500, 1000 பணம் கொடுத்து மாதக் கணக்காய்—வருடக் கணக்காய் சாப்பாடு போட்டு வளர்த்து இருக்கலாமே தவிர ஒரு வாலிபனிடமாவது கூட்டுத் தோழர்களிடமாவது ராமசாமிக்கு என்று ஒரு சிறு உதவியும் பெற்று இருக்கமாட்டார். ஆதலால் ஒரு வாலிபரையும் அவர் மோசம் செய்யவில்லை.

இரண்டே காரியங்கள்

இரண்டு காரியம் இல்லாதவன் உலகில் எதற்கும் பயப்படவேண்டியதில்லை என்பதை முதலியாருக்குச் சமர்ப்பிக்கிறோம்.

1. தன் வாழ்வுக்கு எந்த நிலையிலும் மற்றொருவனை எதிர்பார்க்கக் கூடாது.

2. தன் சுயநலத்துக்காக என்று எந்தக் காரியத்தையும் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது—எதிர்பார்க்கக் கூடாது.

இப்படிப்பட்டவன் எந்தக் கொள்கைக்கும், எந்தக் கட்சிக்கும், எந்த வாலிபனுக்கும் பயப்பட வேண்டியதில்லை.

இப்படிப் பட்டவன் நிமிஷத்துக்கு ஒரு கொள்கை சொல்லலாம், நிமிஷத்துக்கு ஒரு கட்சியையும் ஆதரிக்கலாம், எதிர்க்கலாம், யாரையும் வெளியே போ, உள்ளே வா என்று கூப்பிடலாம். ஆனதால் ராமசாமி சமதர்மம் யாரை எதிர்பார்த்தும் இருக்காது; அவர் உள்ளவரை மறையாது.

ஒரு கேள்வி

உண்மையாகவே உள் சிரத்தையுடன் மனம் கனிந்து முதலியாரை ஒன்று கேட்கிறோம். அதாவது, தமிழ் நாட்டில் உண்மையான சமதர்மவாதி யார்? சமதர்ம வாலிபர் யார்? அவர்களின் சொந்த அந்தஸ்து, நடவடிக்கை, காரியம், உறுதி ஆகியவைகள் என்ன? அனுபவம் என்ன? அவற்றில் எதில் ராமசாமியார் குறைந்திருக்கிறார் என்பதுதான்.

நமக்கு அநேக சமதர்மவாதிகள் தெரியும். நாடகத்தில் குச்சிக்காரிகள் சந்திரமதி, சீதை வேஷம் போட்டு நடிப்பதுபோலவும் நாடகத்தில் குடிகாரர்களும், காலிகளும், சாதுக்கள், முனிவர்கள், தர்ம ராஜாக்கள் முதலியோர் வேஷம் போட்டு நடிப்பது போலவும் மேடையில் ஒருவிதமாகவும், மற்றவர்களிடம் ஒருவிதமாகவும், தனி சொந்த நடத்தையில் ஒருவிதமாகவும் நடிப்பது சமதர்மம் என்றால் அதை ராமசாமியார் எவ்வளவு மதிப்பார் என்பதை முதலியாரே அறிந்து கொள்ள வேண்டும். மேடையில் ஒரு பணக்காரனை, ஒரு ஜமீன்தாரனை வையலாம்; மேடை விட்டிறங்கியவுடன் அவர்களுக்கு விரோதமான பணக்காரனை செலவுக்குப் பணம் கேட்கலாம்; சாப்பாட்டு நேரம்வரை அப் பணக்காரன் வாயிலில் காவல் காத்திருக்கலாம்; இவர்கள் தான் சமதர்மவாதிகள் என்றால் அச் சமதர்மம் வாழ வேண்டுமா? அவர்கள் கூட்டுறவை ராமசாமியார் லட்சியம் செய்ய வேண்டுமா? என்று கேட்கின்றோம். இந்திய தேசம் இன்று தனி உடைமை தேசம். உடைமைக்கு இருக்கும் மதிப்பு ஒடிப்போகவில்லை. எந்த விதத்திலோ ஏதோ ஒரு பணக்காரனின் வெளிப்படையான தயவில்லாமல் பெரும்பான்மையான சமதர்மிகள் இன்று வாழ முடியவில்லை. சமதர்மிகளுக்குள் இன்று வரும் சண்டையும் சமதர்மிகள் மற்றவர்களை வையும் காரியமும் பெரிதும் பணம் காரணமாகவே என்பதை உள்நோக்கி பார்த்தால் முதலியார் அவர்கள் நன்றாய் அறியலாம்.

ஆகையால், இன்று சமதர்மத்துக்கு ஏற்பட்டிருக்கும் இழிவை ஒழிப்பதற்கு ஆகவாவது இன்று ராமசாமி போன்றார் கொஞ்ச காலைக்கு அந்தப் பேச்சை விட்டு வைத்திருப்பதே மேல். நிற்க,

"ஜஸ்டிஸ்" சமதர்மம்

பொருளாதார விஷயமாய் இல்லாவிட்டாலும் சமூதாயத் துறையில் ஜஸ்டிஸ் கட்சி ஏதாவது சமதர்ம வேலை செய்யவில்லையா என்பதையும், அதுவும் காங்கரஸ் 50 வருஷமாய் செய்யாத வேலையும் 35 வருஷமாய் நினைக்காத வேலையையும் செய்திருக்கிறதா இல்லையா என்று கேட்கின்றோம்.

ஜஸ்டிஸ் கட்சி என்றால் முதலியார் அவர்கள் தோழர் பொப்பிலி ராஜாவையும், முத்தைய செட்டியாரையும், ராஜனையும், உஸ்மானையும் பார்த்து காயக்கூடாது என்பதை முதலியார் உணரும் காலே ஜஸ்டிஸ் கட்சியின் யோக்யதையையும், அதன் பயனையும் உணரும் காலாகும்.

அவர்கள் வருவார்கள் போவார்கள்; தோல்வி அடைவார்கள், வெற்றி பெறுவார்கள்; மரிப்பார்கள். ஆனால், ஜஸ்டிஸ் கட்சி அதாவது அக்கொள்கை ஒருகாலும் மறையாது. அதின் அடிப்படை கொள்கை ராமசாமியின் சமதர்மத்தின் முக்கிய பாகமாகும்.

ஜஸ்டிஸ் கொள்கை நித்தியமானது

அக்கொள்கையை ராமசாமி ஒரு காலும் விடமாட்டார். ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து ராமசாமி விலகலாம், விலகக் கூடிய காலம் சீக்கிரம் அதுவும் வெகு சீக்கிரம் வரலாம், காங்கரசில் புகுதலாம் இந்தக் காரியங்கள் வேறு; ராமசாமியின் கொள்கை வேறு. அது தான் ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பித்தவர்களின் கொள்கை. அதை நடத்துவதே சமுதாயசமதர்மம்; அதுவே பொருளாதார சமதர்மம் கொண்டுவந்து விடும். அதற்கு இந்த வாலிபர்கள் அதாவது முதலியார் கருதி இருக்கும் வாலிபர்கள் போதாது.

காங்கரஸ்காரர்கள் தேர்தலில் வெற்றி பெறுவதே சமதர்மத்துக்கு அடையாளம் என்கிறார் முதலியார். இன்னம் யாராவது இப்படிச் சொல்லலாம்; குப்புசாமி, உபயதுல்லா, கிருஷ்ணசாமி பாரதி கூட்டம் சொல்லலாம். முதலியார் அவர்கள் இன்னமும் அந்த பள்ளிக் கூடத்தில் இருப்பது விசனப் படக் கூடியதேயாகும். இனி நாடு பட்டம், பதவி, பணம் முதலியவற்றில் கவனம் செலுத்தாது என்கிறார். இதிலிருந்து முதலியார் எந்த உலகத்தில் இருந்து எழுதுகிறார் என்று கவலைப்படவேண்டியிருக்கிறது.

தோழர் சத்தியமூர்த்தியார், டாக்டர் சுப்பராயன், தேவர் ஆகியவர்கள் முழங்காலுக்கு மேல் வேஷ்டி கட்டி ஆரஞ்சிப்பழ ரசமும் ஆட்டுப் பாலும் குடித்துக் கொண்டு நாட்டினம் சுற்றவா காங்கரசில் இருக்கிறார்கள்? அல்லது சமதர்மம் கொண்டுவரவா காங்கரசில் இருக்கிறார்கள்? என்று வணக்கமாய்க் கேட்கிறோம்.

பார்ப்பனியம் ஒழிய வேண்டும்

இந்த நாட்டில் பார்ப்பனன் வாழ்வு குலையாமல் பணக்காரன் வாழ்வு குலைவது சுலபமல்ல. பணத்தினாலேயே அதுவும் பணத்தை லக்ஷம், பத்துலக்ஷம், கோடி என்று வருவித்து கூலிகொடுப்பதாலேயே காங்கரஸ் நடக்கிறது என்பதை முதலியார் உணராமல் இருப்பார் என்று எந்த மூடனும் நம்பமாட்டான். முதலியார் ஒரு சமயம் அறியாமலிருப்பாரானால் பட்டேல் வருகிறார் பத்து லக்ஷம் வேண்டும் என்ற காங்கரஸ் தலைவர்கள் அறிக்கையைப் பார்க்கட்டும்.

பணம் காரணமாகவே தோழர்கள் குமாரசாமி முதலியார், டாக்டர் சுப்பராயன், நாடிமுத்து பிள்ளை, ராமலிங்கம் செட்டியார் முதலியவர்கள் காங்கரசில் இருக்கிறார்களே ஒழிய கொள்கையிலோ ஒழுக்கத்திலோ தேச பக்தியிலோ என்று அவர் உரை எழுதின திருவிளையாடல் புராணத்தின் மீது 'ஆணை'யாகச் சொல்லுவாரா என்று கேட்கிறோம்.

ஆகையால், ராமசாமிக்கு சமதர்மம் தெரியும். எப்போது பிரசாரம் செய்வது எப்படிச் செய்வது என்பதும் அவருக்குத் தெரியும்.

முதலியாரே பார்த்து பயந்து தோழரே! நாயக்கரே! வேண்டாம், இவ்வளவு வேண்டாம் என்று அன்பால் கெஞ்சி கருணையால் தாடையைப் பிடிக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

சமதர்மத்தின் பிறவி எதிரிகளான பார்ப்பனர்க்குப் கையாளாய் டவியாய் இருந்து சமதர்மசித்திக்கு அந்த ஆரம் ஏற்படுத்தலை விட கூடியவரை சமீபமாக நிலைமையை நாட்டை மக்களை செய்யலாம் என்பதே இன்றைய ராமசாமி தொண்டு. ஆகவே, முதலியார் பொறுத்தருள் வாராக.

தீ * விபத்து * கப்பல் * ஆயுள் * இன்ஷ்யூரன்ஸ் * நடத்துகிறது

உச்ச நிலையிலுள்ளது

நியூ இந்தியா

என் ?

இக்கம்பெனி, இந்தியாவில் கப்பல், தீ, விபத்து முதலிய துறைகளில் பெரிய வியாபாரம் செய்திருக்கிறது.—அம்மட்டோ ! இந்த எழாவது வருடத்தில் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் ஒரு கோடியே எழுபத்தாறு லட்சம் ரூபாய்க்குச் செய்திருக்கின்றது என்பதைத் தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

எமது கம்பெனி !

மூலபலம்—கீடிப்பு—பொதுஜன நம்பிக்கை முதலியவைகளைக் கொண்டது என்பதற்குக் கீழ்க்கண்ட புள்ளி விபரங்களே அத்தாட்சியாகும்.

கையொப்பமிட்ட மூலதனம்	... ...	ரூபா	3,56,05,275
கொடுக்கப்பட்ட மூலதனம்	... ...	,,	71,21,055
மொத்தம் நிதி	... ...	,,	1,94,84,774

இதுவரை கொடுக்கப்பட்ட உரிமைகள் (Claims) மொத்தம் ஆறு கோடிக்கு மேல் ஒடுகின்றது.

1935-36-ம் வருஷத்திய மொத்த பிரிமிய வருமானம் 86 லட்சத்துக்கு மேல் இருக்கிறது.

ஐந்து வருட "ஆயுள்" இன்ஷ்யூரன்ஸ் வளர்ச்சிப் புள்ளி.

	1931—32 ரூபா	1932—33 ரூபா	1933—34 ரூபா	1934—35 ரூபா	1935—36 ரூபா
புது அஷ்யூரன்ஸ் ...	88,00,000	1,05,00,000	1,11,66,500	1,41,02,250	1,76,41,750
மொத்தம் உள்ள கணக்கு	1,46,00,000	2,19,00,000	2,84,25,834	3,85,43,292	5,29,23,711
முதிர்ந்து கொடுக்கப் பட்ட உரிமைகள்	41,000	1.26 000	1.29.750	2,15,100	2.76.592

விசேட நன்மை அளிக்கும் எங்கள் அரிய திட்டம் எது ?

5000 ரூபாய் பாலிசிக்கு 18,690 ரூபாய் கொடுப்பதாகச் செய்து கொள்ளும் ஒப்பந்தத் திட்டம்.

மெச்சத்தக்க எங்கள் முதல் போனஸ்.

4% விகித வட்டிப்படி ரூபாய் 10, 15-ம் போனஸ். 1936-ம் வருட மேற்படக்கூடிய மூன்று வருட மதிப்பு வரை மேற்கண்ட தற்கால போனஸ் கொடுக்க உத்தரவாதம் செய்யப்பட்டிருக்கின்றது.

வருடப் பிரிமியங்களின்மேல் 2½% குறைவு.

ஏஜன்ஸி மனுதாரர்கள் தேவை.

வேண்டுவோர் :—கே. கே. ஸ்ரீனிவாசன், பிராஞ்சு மானேஜர், என்ற விலாசத்திற்கு எழுதுக.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி,
மதராஸ் கிளை : 4, 5 முதல் லைன் பீச்சு.

ஏமாறுதீர்கள் !

எங்கள் வைத்தியசாலையின் மருந்துகள் மிகவும் சிலாக்கியமானதெனப் பலராலும் புகழப்பட்டு வருதல் கண்டு, சிலர் வேறு மருந்துகளை எங்கள் மருந்துகள்—அதாவது சி. எம். சாமி மருந்துகள் என்று சொல்லி ஏமாற்றி விற்பனை செய்து வருகிறதாகத் தெரிகிறது. எங்கள் வைத்தியசாலையிலிருந்து வெளி இடங்களுக்கு நாங்கள் யாரையும் அனுப்பவில்லை. எங்கள் ஏஜெண்டென்றும், எங்கள் மருந்துகள் என்றும் யாராவது விற்பனை செய்தால் அதைப் பொது மக்கள் வாங்கி மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கிறோம்.

மருந்து வேண்டியவர்கள் நேரே எமக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி, S. I.

பிரிட்டனில் பொடி போடுகிறவர்கள் சென்ற சில வருஷங்களுக்குள் மிகவும் அதிகரித்திருக்கின்றனர்.

இன்னும் 10 வருஷங்களுக்குள் லண்டனில் டிராம் வண்டிகள் இருக்காது. அதற்குப் பதில் டிராலி பஸ்களும், மோட்டார் பஸ்களும் இருந்து வரும். ஜனப் போக்குவரத்து அதிகமுள்ள இடங்களில் டிராம் வண்டிகள் செல்வது உயிருக்கு அபாயத்தை விளைவிப்பதாயிருப்பதே அவ்விதம் டிராம் வண்டிகள் அகற்றப்படுவதற்குக் காரணம்.

சமையல் வேலையைக் கவனிப்பதை விட்டு தனது மனைவி கால்பந்து விளையாட்டில் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டு வந்ததால் வியன்னா வாசியாகிய காரல் லட்னர் விவாகரத்து கோரியுள்ளார்.

• • •

பிரான்சில் விபசாரத்தை ஒழிக்க ஒரு சட்டம் கொண்டுவரப்பட்ட மந்திரி சபையினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

விடுதலை யுடைய யாதெனக் கேட்பாயின்
கெடுதலை நீக்கி நடுநிலை நின்ற
[நாட்டினரெல்லாம்
பொருள் சுகப்பேறுகள் சர்வமும் பெற்று
நிருபிக வாழ்தலே யாம்

விடுதலை

VIDUTHALAI

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்று நின்ற
செம்மொழியைத் திருமொழியை
[தேன்மொழியை
தனித்தியங்கும் ஆற்றலுள தென்மொழியை
[அமிழ்தனைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
[அனுதினமும் பழக்கம் செய்வீர்.

மலர்-2] சென்னை: (28-11-1936) தாது ஞு கார்த்திகைமீ 13உ சனிக்கிழமை [இதழ்-51

முச்சங்க காலம்

(வித்வான் மா. இராசமாணிக்கம் அவர்கள் P. O. L., தமிழ்ப் புலவர், முத்தியாலுப்பேட்டை உயர்கலைக் கழகம், சென்னை.)

செந்தமிழ் நிலவும் சிறிய இத்தமிழகத்தே மண்ணைக் கொண்டும், கல்லைக் கொண்டும், எலும்புக்கூடுகளைக் கொண்டும், புதையுண்டு கிடக்கும் 'வீணானவை' என அறிவீனத்தால் நாம் மதியாது கிடக்கும் பல நிறப்பட்ட சிறிய பொருள்களைக் கொண்டும் அயல் நாட்டுச் சரித்திர நிபுணர் நம் முன்னையோர் தொன்மையையும் தமிழகத்துத் தனி நாகரிக நிலையையும் இலட்சக்கணக்கான பொருட் செலவில் அறிந்து நமக்குப் புத்துணர்ச்சி உண்டாக்கி வரும் இந்நாளினும் நம் கண்ணெதிரே (சிதைந்தன போக) இருக்கின்ற பழைய பனுவல்களையேனும் ஆழ்ந்து படித்து, 'அவற்றில் உள்ள தமிழகத்துச் செய்திகள் எம்மட்டும் நமது தொன்மையை புணர்த்துகின்றன—அவற்றினின்றும் நாம் எத்துணையளவு நமது தொன்மை நிலையைக் கணிக்கலாம்' என ஆராய்ச்சித் துறையில் அறிவினைச் செலுத்தும் தமிழர் சிலரேனும் இப்போது உளர் எனத் துணிதல் அரிதாகவுள்ளது. ஆங்கில அறிவும், தமிழறிவும் ஒருங்கே பெற்று விளங்கும் தமிழர் கூட இத்துறையில் துணிச்சலோடு முன்வருதல் இல்லையெனின், இத்தமிழகத்தின் எதிர்கால நிலையாதாகும்? அவரவர் தத்தம் அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் ஏற்றபடி பலவற்றையும் ஆராய்தல் தமிழ் வளர்ச்சிக்கு அடி கோலியவாறு ஆகுமன்றோ?

ஆங்கிலப் பட்டம் பெற்றுக் கல்லூரிகளில் சரித்திர ஆசிரியராயுள்ளார் சிலர், தமிழ் நூற்புலமை முற்றப் பெறாமலோ தாம் தாம் கண்ட அளவிலும், கேட்ட அளவிலும் உள்ள ஆதாரங்களைக் கொண்டு வரையும் நல்லெண்ணத்தாலோ, தீய எண்ணத்தாலோ கடைச் சங்கம் 6-ம் நூற்றாண்டு என்றும், 8-ம் நூற்றாண்டென்றும் மனம் போனவாறு ஆங்கிலத்தில் நூல்கள் வரைந்து வெளியிடுகின்றனர்; சிலர் 'சங்கங்கள் என்பதே பொய்'- எனச் சிறிதும் கூசாது தமது ஆங்கில பெருநூல்களில் எழுதி வருகின்றனர். அந்நூல்களைப் படிக்கும் ஆங்கிலேயர்கள் தமிழகத்தைப் பற்றியோ, தமிழைப் பற்றியோ என்னதான் மதிப்பார்கள் என்பதை நினைக்குங்கால் உள்ளம் வருந்துகின்றது. ஆங்கில அறிஞர் சிறு துரும்பையும் கொண்டு சரித்திரம் கட்டுங்கால், நம் நாட்டுச் சரித்திர ஆசிரியர்கள் தமிழ் நூற் செய்திகளையும், பழமொழியோடும் காதைகளில் வரும் தொன்று தொட்ட செய்திகளையும் சிறிதும் மதியாமல் அவற்றை ஒதுக்குதல், எவர் பால் கற்ற சரித்திர ஆராய்ப் பயிற்சியோ! அறியோம். இது நிற்க,

முச்சங்கங்களைப் பற்றி நமக்குக் கூறும் நூல்கள் இறையனார் களவியல் உரை, சிலப்பதிகார உரை ஆகிய இரண்டே. கடல் கோள் மும்முறை நிகழ்ந்ததாகக் களவியலும், ஒரு கடல் கோளைப் பற்றிக் கலித்தொகையும்* சிலப்பதிகாரமும்† சான்றுகவுள்ளன. இவற்றுடு நமது நாட்டையடுத்த இலங்கைச் சரிதங்கள், இழந்த லெமூரியாக் கண்டத்துச் செய்திகள் முதலியனவும் ஆராய்ச்சியாளரால் கிடைக்கப்பெற்ற மண், மணல், புதை பொருள்கள், இவற்றைப் பற்றிய அவர் தம் கருத்துக்கள் முதலியன நமது தொன்மையை ஒருவாறு உண்மையாகவே எடுத்துக் காட்டக் கூடும் என்பது அறிஞர் பலர் காட்டப்பட்ட கருத்தாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராயுமுன் காய்தல் உவத்தல் இன்றிச் சங்க காலத்தை நினைத்துப் பார்ப்பின், இப்போதுள்ள கடைச் சங்க நூல்கள் என்பனவோ, முதல்—இடைச் சங்கங்களில் அழிந்து பட்டனவாக் கூறப்படும் நூல்களோ ஒரு காலத்தில் பல புலவர் ஒருங்கிருந்து கூடிச் செய்யப் பட்டன அல்ல என்பது அக்கால நிலைகளை ஆராய்வோர் கண்டறியக் கூடும். பல புலவர் முதன் முதலில் தங்கள் கருத்துக்களை ஒருவாறு வெளிப்படுத்திப் பல நூல்கள் அவர்களின் பாக்குபட்ட காலங்களில் — ஆங்காங்குப் போட்டு மறைத்தனர்; அவற்றைத் தொகுக்க முதலில் முற்பட்டவர் அகத்தியர். அவர் அக்காலப் பாண்டியன் ஆணைக்கொண்டு தாம் தொகுத்தவற்றைச் சீர் செய்து, அவ்விலக்கியங்கட்கு ஏற்றதோர் இலக்கணத்தை (இலக்கியம் கொண்டு இலக்கணம் செய்தலே முறையாதலின்) அகத்தியமாகக் கொண்டு செய்தனர். அங்ஙனமே அவர்க்குப் பின் பல நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றிய தொல்காப்பியர் அகத்தியரைப் போலவே அரசன் துணையும், புலவர் துணையும் பெற்று அகத்தியர்க்குப் பிற்பட்ட சிதறிக் கிடந்த பாக்களையும், நூல்களையும் சேர்த்தனர். அவர்க்கு முன் பல நூற்றாண்டுகளாகக் கிடந்த பாக்கட்கும், அவற்றுக்கு முந்திய அகத்தியத்துக்கும் கால வேறு பாட்டால் உண்டான பலவகை மாறுதல்களை உளங்கொண்டு, அவற்றுக்கேற்பத் 'தொல்காப்பியம்' செய்தனர்; அவர்க்குப் பின் பல நூற்றாண்டுகள் கழிந்தன. முன்போலவே ஒரு பெரியார் தோன்றி மூன்றும் கூட்டத்தைக் கூட்டி அக்காலத்தில் கிடைத்தவற்றைக் கடைச் சங்க நூல்களாகத் தொகுத்தனர்; என்றிவ்வாறு ஊகிக்க இடமுண்டாதல் காண்க.*

எனவே, 'களவியல்' கூற்றில் முச்சங்கங்கள் இருந்தன என்ற அளவில் உண்மையாக இருந்திருக்கக் கூடும், இன்றேல், 'செந்தமிழ்' (செப்பஞ் செய்யப் பட்ட தமிழ்) என்ற சொல்லுக்குத் தான் பொருள் என்னை? அதனைச் செம்மைப் படுத்தியவாவது ஒரு கூட்டம் கூடியிராதா? ஆனால், களவியல் கூறுமாப் போல ஒரு சங்கம் (சில மாதங்கள் கூடியிருக்கலாமே யன்றி) ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நடந்திராது! ஒருபோதும் நடந்திராது!! இத்தகைய பொருந்தாவுரைகள் சில இருப்பதாலேயே அவ்வுரையை முற்றும் மறுத்தலும் இயலாது.

அகத்தியரும், முதற் சங்கமும்

''அகஸ்தியர்' என வட நாட்டினின்றும் ஒருவர் தமிழகத்தே குடிபுகுந்து தமிழைக் கற்றுப் பெரும் புலவராகி, 'அகத்தியம்' என்ற நூலைச் செய்தார்'' எனக் கூறும் கதையை எப்பக்கம் திருப்பிப் பார்ப்பினும் 'பொய்' என்பதை மும் மொழிப் புலவராய மறை மலையடிகள் அரிதின் ஆராய்ந்து பல வேறுபட்ட சான்றுகள் காட்டி ஆங்கிலக் கட்டுரைகள் வெளியிட்டு வருகின்றார்கள் 'அகஸ்தியர்-வேதாந்த கட்டுக் கதை' எனத் தமிழ்ப் பெரும் புலவர் கா. நமச்சிவாய முதலியாரவர்கள் சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் நிகழ்த்திய சொற் பொழிவுகள் இன்றும் எம் செவியண்டை ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவர் அது பற்றி அரியதோர் நூலையும் வெளிப் படுத்தியுள்ளனர். பொருள் அறிய அவாவுவோர் ''மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்'' 'அகத்தியர்' என்னும் அவர் இருவர் தம் நூல்களைக் காண்க. 'தமிழகத்தில் அகத்தியர்' என்னும் திரு. சிவராஜப் பிள்ளையவர்கள் நூலையாம் இது காறும் காணப்பேறு பெற்றோமில்லை.

''அகத்தியர்'' என தமிழகத்திலேயே பிறந்து வளர்ந்து சிறந்த புலமை பெற்ற ஒருவர் தொல்காப்பியத்துக்கு மிக மிக முற்பட்ட இலக்கணப் பேராசிரியராக இருந்திருக்கலாகாதோ?'' எனின், ஆம்: இருந்திருக்கலாம் எனக் கூறுவோம். என்னை? உலகில் ஒவ்வொரு மொழியும் ஒரு காலத்தில் ஒவ்வொரு வாற்றான் உயர்வடைந்த தென்பது உலகச்சரிதம் படித்தவர் உணர்வதே. அது போன்றே தமிழில் வளர்ச்சியுண்டாக்க விரும்பிய பெரியார் ஒருவர், தம் காலத்திய பாக்களையும் இலக்கணங்களையும் செவ்வழிப் படுத்த விழைந்து தமிழகத்துப் புலவரை ஒன்று கூட்டி, அக்காலப் பாண்டியன் துணைக் கொண்டு, களவியல் கூறுமாப் போலக் கடல் கொள்ளப் பட்ட 'உத்தர(தென்) மதுரை'யில் சங்கம் கூட்டியிருக்கலாம். அப்பெரியாரது பெரு முயற்சியால் தமிழ் வளர்ச்சி உண்டானதை நோக்கி, அக்காலப் புலவர் 'இவன் தமிழுக்கு அகத்தியன்' (தேவையானவன்) என அவரது உழைப்பு நோக்கிப் பாராட்டியிருக்கலாம். அங்ஙனம் பாராட்டப்பெற்ற பெயரே அவர் பெயராகப் பிற்காலத்தும் வழங்கப் பட்டதெனக் கோடல் தமிழ் முறைக்குப் பெரிதும் பொருந்தியதே. இவ்வுண்மை நாளடைவில் மறைபட்டுப் புதைபட்டு வட நாட்டு அகஸ்தியர் கதையோடு தொடர்பு படுத்தப் பட்டுப் புராணங்களிலும், பிற்கால நூல்களிலும் ஆபாசமாக-பொய்யாக வேற்றுருவ அகஸ்தியராக நந்தமிழ்ப் புலவர் பெருமான் மாற்றப் பெற்றார். இம்மடத்தனை மாறுதலுக்கு நாம் எவரை நோவது?

'அகத்தியம்' என்பது 'அவசரம்' 'தேவை' என்னும் பொருள்களில் வழங்குதலை இன்றும் உலக வழக்கில் காணலாம். பழங்காலப் புலவர் பெயர் ஒன்றும் இக்காலப் பெயர்கள் போல இடுகுறிப் பெயராகப் பெரும் பான்மை இல்லை என்பது, 'இளங்கோ, கோவூர் கிழார், இரும்பிடர்த் தலையார், கப்பசலையார்' போன்ற பெயர்களைக் கொண்டு தெளியலாம். 'பாழி' என்ற ஊரில் செருச் செய்து அதனை எறிந்த (வென்ற) காரணம் பற்றிச் சோழன் ஒருவன் 'செருப்பாழி எறிந்த இளஞ் சேட் சென்னி' எனப் பட்டான். இத்தகையன பல. எனவே, ஒரு பெரும்புலவர் (இறையனார் களவியல் கூறுகிறபடி) முதற் சங்கத்தைக் கூட்டித் தமிழ்ப் பாக்களை வகைப்படுத்தி அவற்றுக்குப் பெரிய தோர் இலக்கணம் செய்திருக்கக் கூடும்; அவரது இன்றியமையாமையை (அகத்தியத்தை) உணர்ந்து அக்காலப் பெரியோர் அவரை 'அகத்தியர்' எனப் புகழ்ந்து அழைப்பாராயினர்; இவருக்கும், வடநாட்டு அகஸ்தியருக்கும் ஒருவாற்றானும் தொடர்பில்லை எனக் கோடலே நன்மனத்தினுக்கும், அறிவினுக்கும் பொருத்த முடைத்து. இனி அகத்தியர் காலத்தை விளக்க முற ஆராய்வோம்.*

(தொடரும்)

---

* கலித்தொகை—104

† சிலப்—11-ம் காதை வரி 18-20

* இங்ஙனம் ஊகித்தற்கும் இடமில்லை யென்பர் தமிழறிஞர் திரு. கே. என். சிவராஜப் பிள்ளையவர்கள் 'பண்டைத் தமிழ்க் காலமுறை' என்னும் தமது அரிய ஆராய்ச்சி நூலில் விரிவாகக் காரணங்கள் (நமக்குப் புலப்பட்டவரை) காட்டி 18-ம் பக்க முதல் 26-ம் பக்கம் வரை விளக்கியுள்ளார்கள் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தகும். இறையனார் களவியல் உரையில் மிகச் சிறிய அளவேனும் உண்மையிருக்கக்கூடும் என்பதே எமது தாழ்மையான கருத்து.

*எமது ஆராய்ச்சி 'முடிபானது' எனக் கூறும் மடமை எம்பால் இல்லை என்பதை வணக்கத் தோடு அறிவிக்க அவாவுகின்றேம். அறிஞர் இத்துறையில் மேலும் உழைத்து 'முச்சங்கங்கள் இருந்தன வென்ற முற்றும் உண்மையே' என உலகினுக்கு நிரூபணம் செய்தல் வேண்டும் என்பதே எமது பேரவா.

உருளைக் கிழங்கு

விஞ்ஞான ஆராய்ச்சி யாளர்கள் மார்கிலே சர்வ கலாசாலை பௌதிக பரிசோதன சாலையில் மாவு பதார்த்த மில்லாத ஒரு உருளைக் கிழங்கைச் செய்துள்ளனர்.

அமெரிக்க ஐக்கிய மாகாணத்திலுள்ள பரிசோதனை சாலையில் சிவப்பு, மஞ்சள், ஊதா முதலிய நிறங்களுள்ள உருளைக் கிழங்குகள் பயிரிலைக்குக் கொண்டு வரப் பட்டன.

இவ்வுருளைக் கிழங்கை முதன் முதலில் பயிர் செய்தது ஜெர்மானிய அரசனான பிரடரிக் என்பவனேயாவன். அவனுடைய பேரன் உருளைக் கிழங்கைப் பயிர் செய்ய மறுத்தவர்களுக்கும் கடுந்தண்டனை விதித்தானாம். அக்காரணமாக ஒரு யுத்தம் கூட ஜெர்மனியில் நடந்ததாம்.

பெருவிலிருந்து உற்பத்தியான உருளைக் கிழங்கு சிறியதாக விருந்து சில இடங்களில் பயிராகும் உருளைக்கிழங்கு நூற்றுக்குப் பத்து வீதம் தான் சதைப் பற்றுள்ளதாயிருக்கிறது. உருளைக் கிழங்கில் 10க்கு 8பாகம் தண்ணீர் இருக்கிறது.

உருளைக் கிழங்கைப் பக்குவப் படுத்தி உப்பையும் வெண்ணெய்யையும் சேர்த்து ஆகாரமாகக் கொண்டு 300 நாட்கள் வரை வேறொரு ஆகாரமு மின்றி நல்ல தேக ஆரோக்கியத்துட னிருந்ததாகத் தெரிகிறது.

பாம்பைத் தவளை விழுங்கிற்று!

தவளையைப் பாம்பு விழுங்குவதைப் பலகாலும் கண்டும், கேட்டும் வருகிறோம். ஆனால், தாமோவிலிருந்து ஒரு அதிசய செய்தி கிடைத்திருக்கிறது. அவ்வூரில் வசித்து வரும் திரு. எம். பி. பாஞ்சியின் பங்களாவின் காம்பவுண்டிற்குள் ஒரு பெரிய தவளை பாம்பை விழுங்கிக் கொண்டிருந்ததை பலர் கண்டு ஆச்சரிய முற்றனராம்.

குணமாகாத மூத்திர வியாதிகளுக்குப் புதிதாகக் கண்டுபிடித்திருக்கும் அற்புதமான சிகிச்சை!

வெட்டை ரோகத்திற்கு சிறந்தது!!

வெட்டைரோக கிருமிகளை கொல்லக்கூடியது!

“கோனு கில்லர்” (ரிஜிஸ்டர் செய்யப்பட்டது)

இதுதான் இப்பொழுது எடுத்த நூதனம். ஆங்கில, உள்நாட்டு வைத்தியர்கள் உங்களைக் குணப்படுத்தியிராவிடில் வாக்ஸீன்களும், இன்ஜெக்ஷனும் பலன் தராவிடில் கடைசியாகவேனும் நமது கோனு-கில்லர் என்னும் ஔஷதத்தைப் பரீக்ஷித்துப் பாருங்கள். உங்களுக்கு வியாதி கண்டு எவ்வளவு நாளாகியிருந்தாலும் அது குணப்படுத்திவிடும். ஸ்திரீகள், புருஷர்கள் இவர்களுக்கு ஏற்படும் மூத்திர வியாதிகளுக்கும், எல்லாவித வெட்டை ரோகங்களுக்கும், மூத்திரம் அதிகமாக இறங்குவதற்கும், மூத்திரம் பெய்கையில் ஏற்படும் வலியை நிவர்த்தி செய்யவும், மூத்திரப் பையில் ஏற்பட்டிருக்கும் அழற்சியைப் போக்கவும், வெட்டை வியாதிக் கிருமிகளால் ஏற்படும் வேறு பல வியாதிகளைப் போக்கவும் இது சிறந்த மருந்து. போலி மருந்துகள் வாங்காதீர்கள்! வாங்கும்போது எங்கள் கோழிமார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

சேவல் மார்க்கை பார்த்து வாங்கவும்.

GONO KILLER

போலிகளைப்பற்றி உஷார்!

50-மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு ரூபா. 3. வி. பி. சார்ஜு வேறு. வெளி நாட்டு பேர்கள் ரூபா. 4—8—0 முன் பணம் அனுப்பவும்.

டாக்டர் டி. என். ஜஸானி, கிர்காம் பாக் ரோடு, பம்பாய், 4.

Dr. D. N. JASANI, Girgaum Back Road, BOMBAY, 4.

சென்னை ஏஜண்ட்:—நாதா & கோ.,
நெ. 52, சவினியப்ப நாய்க்கன் தெரு, P. T., சென்னை.
F. M. S. & S. S. ஏஜண்டு:—N. O. A. முகம்மது இப்ராஹிம் & பிரதர்ஸ்,
நெ. 198, காலாங் ரோட், சிங்கப்பூர்,
என். ஈ. காதர் மொய்தீன், பெட்டிக் குருவி மெடிகல் ஸ்டோர்.
நெ. 39. Old Butcher Street, Pettah, கொழும்பு.

குமாரசஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
அண்ணாமலை
வைத்தியரின் மருந்து நிகரற்ற குணமுடையது
☞ வைத்தியர், அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை

“கிராம ஊழியன்”

வாரப் பதிப்பு.

ஆசிரியர்:—S. பூரணம் பிள்ளை.

கிராமப் புனருத்தாரணத்தின் பொருட்டுத் தோன்றி மாதம் இருமுறையாக வெளிவந்த ''கிராம ஊழியன்'' இரண்டாம் ஆண்டின் ஆரம்பமாகிய 25—10—36உ முதல் பிரதி ஞாயிறுதோறும், நாட்டின் நலத்திற்கான நல்லோரின் கட்டுரைகள் தாங்கி எல்லோரும் போற்றும் நல்லதோர் முறையில் வெளிவருகிறது. எல்லா இடங்களிலும் ஏஜெண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதுக

உள்நாடு: வருட சந்தா ரூ. 3. வெளிநாடு: வருட சந்தா ரூ. 5.

மானேஜர்:—''கிராம ஊழியன்'',
துறையூர். (திருச்சி ஜில்லா)

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN, AT THE JUSTICE PRINTING WORKS, 14, MOUNT ROAD, MADRAS. EDITOR; PANDIT S. MUTHUSWAMI PILLAI.

விலை அரை அணா	8 பக்கங்கள்	மலாய் நாட்டில் 5 சதம்	Regd. No. M. 3298.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா
முன் பணம்

உள்நாடு

1 மாதம்	...	0 6 0
3 மாதம்	...	1 0 0
6 மாதம்	...	1 14 0
1 வருடம்	...	3 10 0

சென்னைக்கு

1 மாதம்	...	0 4 0
3 மாதம்	...	0 10 0
6 மாதம்	...	1 4 0
1 வருடம்	...	2 6 0

விடுதலை

VIDUTHALAI
(வாரம் இருமுறை வெளிவரும்)
ஆசிரியர்: பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா.
முன் பணம்

வெளிநாடு

1 மாதம்	...	0 10 0
3 மாதம்	...	1 14 0
6 மாதம்	...	3 12 0
1 வருடம்	...	7 4 0

சர்க்கார், முனிசிபாலிட்டி,
ஜில்லா போர்டுகளுக்கு:

உள்நாடு:	வருடம்	ரு.	7 8 0
சென்னை:	,,	ரு.	4 8 0

மலர்-2]	சென்னை:	(2-12-1936)	தாதுவருஷ கார்த்திகைமீ 17உ	புதன்கிழமை	[இதழ்-52

திருநெல்வேலி ஜில்லா - கவர்னர் வரவேற்பு

தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டியின் தடபுடல்

மூர்த்திக்கு ஓர் சட்டம்—தளவாய்க்கோர் சட்டமா?

காங்கரசிலும் மனு நீதியா?

சிதம்பரப் பார்ப்பான் செய்தால் கப்சிப்!
திருநெல்லை முதலியார் செய்தால் கடபடா!!

இந்த ஏமாற்று எத்தனை நாளைக்கு?

(உண்மை விளம்பி எழுதுவது)

திருநெல்வேலிக்கு கவர்னர் நவம்பர் 16-ந்தேதி வந்தார். திருநெல்வேலி ஜில்லாபோர்டு, கவர்னருக்கு வரவேற்புப் பத்திரம் வாசிக்கவேண்டுமென்று தீர்மானித்தபடி வரவேற்பு பத்திரமும் அளிக்கப்பட்டது. போர்டின் எந்த தீர்மானத்தையும் நிறைவேற்றி வைப்பது போல இத்தீர்மானத்தையும் நிறைவேற்றி வைக்க வேண்டியது பொறுப்புள்ள தலைவரின் கடமை. அதில் அறிவுள்ளவருக்குள், சரி ஆலோசனையில்லாதாருக்குள் அபிப்பிராய பேதமிருக்க முடியாது.

படேல் காட்டிய வழி

அதுவே சரியான வழி யென்று நமது மாபெருந் தலைவரும், பாரத மாதாவின் வீர புத்திரரும், சுயநலமின்மைக்கு ஓர் அறிகுறியாய் வாழ்க்கை நடத்தியவரும், சுதந்திர போராட்டத்திலே உயிரிழந்தவரும், சத்தியமூர்த்தி அய்யர் ஜெயில் வாழ்விற்குப் பயந்து திருவல்லிக்கேணியில் ஒழிந்து கிடந்த காலையில் சிறைச் சாலை சென்றவருமாகிய காலஞ் சென்ற திரு. வி. ஜே. படேலே காண்பித்திருக்கிறார். அவர் அசம்பிளிக்கு காங்கரஸின் பேரால் தெரிந்தெடுக்கப் பட்டார். காங்கரஸ் கட்சிக்கு உப தலைவராகவும் இருந்தார். காங்கரஸ் கட்சியின் ஆதரவாலேயே, சர்க்கார் போட்டிக்கும் எதிராய் அசம்பிளித் தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேர்தலானவுடன் அவர் என்ன சொன்னார் 'நான் இனிமேல் ஓர் கட்சியையுஞ் சார்ந்தவனல்லேன். எக்கட்சிக் கட்டுப் பாட்டுக்கும் அடங்கியவனல்லேன்.' என்றார். சொன்னதோடு நின்றாரில்லை. செய்கையிலும் காட்டினார். அசம்பிளியில் வைசிராய் பேசவரும்பொழுது காங்கரசார் வெளியேறவேண்டும் என்பது காங்கரஸ் விதி. அப்படியே மோதிலால் நேரும் மற்றவர்களும் வெளியேறினார்கள். ஆனால் படேல் அசம்பிளியில் இருந்து வைசிராயை மரியாதையாய் வரவேற்றார். அம்மட்டோ! சில வருடங்களுக்குப் பின் காங்கரஸ், 'சட்ட சபைகளில் யாதொரு பயனுமில்லை. காங்கரசார் எல்லோரும் வெளியேற வேண்டும்' என்று தீர்மானிக்கது எல்லாரும் வெளி யேறினார்கள். சட்ட சபையிலிருப்பது வீணென்று தீர்மானித்தபிறகும் படேல் அசம்பிளித் தலைவராகவே யிருந்தார் ஏன்? அது தான் தலைவர் பதவியேற்றவரும் நடக்க வேண்டிய முறை அதைச் சரியென்று மகாத்மாகாந்தி, நேரு போன்ற மாபெரும் தலைவர்களும் ஒப்புக் கொண்டார்கள். படேலாவது, நேருவாவது நமது அய்யரை விட தேசபக்தியிலும், காங்கரஸ் பக்தியிலும் குறைந்தவர்களா? இல்லையே.

மூக்கு ஜாக்கிரதை!

ஆனால், மகா மேதாவி யென்று தன்னைத்தானே மதித்த சத்தியமூர்த்தி அய்யரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டி, 'ஜில்லாபோர்டு தலைவர் வரவேற்பு பத்திரம் வாசித்துக் கொடுத்தல் கூடாது' என்று ஒரு பெரிய உத்தரவு போட்டுவிட்டது. அதற்கு கடுமையான தண்டனையும் விதித்து விட்டது. என்ன? 'பொது வாழ்வில் மூக்கறுபட்டுப் போமாம்'' மூக்கறுக்கும் தொழிலில் வேலையில்லா மூர்த்தி பிறந்துவிட்டார் அதற்கு 'தினமணி' பத்திராதிபரும் கத்திப்பெட்டி தூக்கிப் பின் தொடர்ந்து விட்டார். நண்பர்களே! மூக்கு ஜாக்கிரதை! ஜாக்கிரதை! போனால் தலைமுடி புடுங்குவது நிற்கட்டும்.

இப்படிச் செய்வதற்கு அய்யரும் அவரது சகிகளும், சீமான் படேலைவிட, மகாத்மா காந்தியைவிட, பண்டித மோதிலால் நேருவைவிட எதில் உயர்ந்தவர்கள்? தேசபக்தியிலா? தேசத்தொண்டிலா? தேசத்திற்காக பட்ட கஷ்டத்திலா? ராஜீய ஞானத்திலா? யோக்கியதையிலா? எதில் ஒன்றிலு மில்லையே. அல்லது இவர் சொல்வது தான் காங்கரஸ் விதியா? அந்த விதிதான் இதுவரை கைப்பற்றப்பட்டு வந்திருக்கிறதா? காங்கரஸ் விதிகளை மீறினவர்களுக்கெல்லாம் மூக்கறுத்தாய் விட்டதா? எத்தனை பேருக்கு இன்று மூக்கில்லை?

இதுவரையும் ''தாலி அறுத்த மூர்த்தியா'' யிருந்த, இன்று மூக்கறுக்கும் மூர்த்தியாய் மாறிய சத்திய மூர்த்தி அய்யரின் யோக்கியதைதான் என்ன? காங்கரஸின் விதிகளைவிட காங்கரஸின் கொள்கைதான் முக்கிய மென்று ராஜீயக் குழந்தைகளும் அறியும். காங்கரஸின் கொள்கை பூர்ண சுதந்திரம் பெறுதல் என்பது காங்கரஸில் நாலு அணா கொடுத்து கையெழுத்துப் போட்ட ஒவ்வொருவருக்கும் தெரியும். விதிகள் என்று சொல்லப்படுகிறவைகளை மீறுகிறவர்களுக்கு மூக்கறுபட வேண்டுமானால், கொள்கையையே இல்லை யென்று சொல்கிறவர்களுக்கு பொது வாழ்வில் மரண தண்டனையல்லவோ இடவேண்டும். அதைத் தானே செய்தார் சத்தியமூர்த்தி ஆனைமலையில். ஆனைமலை ஐரோப்பிய சங்கத்தில் [illegible] குடியேற்ற நாட்டு அந்தஸ்துதான்; பூர்ண சுதந்திரமில்லை யென்று முக்காலும் மூன்று முறை ஆணையிட்டுக் கொடுத்தாரே. இதைவிட காங்கரசுக்கு என்ன துரோகம் வேண்டும்? கொள்கை ஒப்புக்கொள்ளாத ஒருவன் காங்கரசில் நாலணா மெம்பருக்குப் லாயக்கு இல்லையே, நாட்டிக்கொடுக்கும் இவருக்கு இன்னும் தலைவர் பதவியா? இவர் மூக்கு அறுபட வில்லையே! மூக்கில கண்ணாடியும் இலங்குகிறதே!

கவர்னரைப் பேட்டி காணலாமா?

கவர்னருக்கு, ஜில்லா போர்டின் தீர்மானத்தை மதித்து வரவேற்பு வாசிப்பது காங்கரசுக்கு கேவலமானால், கவர்னர் வரும்போது சட்ட சபையிலிருப்பது கேவலமானால், சுயநலத்திற்காக, மந்திரி பதவி கிடையாதாவென்ற ஏக்கத்திற்காக, ஒரு காங்கரஸ் வாதி, அதுவும் ஓர் மாகாணத் தலைவர் பல்லெல்லாம் தெரியக் காட்டி, மிகப்பணிவுடன் வேண்டி அந்த கவர்னரைப் பேட்டி காணப் போவது காங்கரசிற்கு கேவலமல்லவா? கவர்னர் பேட்டி காணும் விதம் தெரியுமா? அவருடைய காரியதரிசிக்கு ''ஐயா தயவு கூர்ந்து எனக்கு கவர்னரிடம் உத்தரவு வாங்கிக்கொடுங்கள்'' என்று எழுத வேண்டும். இந்த நாள் இத்தனை மணிக்கு பேட்டி கொடுக்க கவர்னர் இசைந்துள்ளார் என்று காரியதரிசியிடமிருந்து பதில் வரும். அன்று அந்நேரத்திற்கு முன்பாகவே கவர்னர் மாளிகையில காத்து நிற்க வேண்டும். இது காங்கரசுக்கும், தலைவருக்கும் மரியாதை போலும். ஆனால் அது சுயநலத்திற்கு அல்லவா? அதுவும் பார்ப்பனரின் சுய நலத்திற்கல்லவா? ஆகையால் காங்கரஸ் மனுநீதியின் படி சரியாகத்தான் இருக்க வேண்டும் போலும். இத்தோடு நின்றாரா? ''மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்'' என்ற பொன்மொழியையும் மறந்து, காங்கரஸின் எதிரியாகிய பொப்பிலி ராஜாவையும் பேட்டி கண்டாராமே! அதை அவரே சொல்லிக் கொண்டிருந்தார். மூர்த்தியாரையும் பேட்டிகாணலாம்; எதுவும் செய்யலாம். தளவாய மாத்திரம் வரவேற்புப் பத்திரம் வாசிக்கக் கூடாதா?

பொய் மூட்டை அய்யர்

சத்தியமூர்த்தி அய்யர் சிம்லாவிலும், டெல்லியிலும் காலை சந்தியாவந்தனம் செய்ததும் கவர்ன்மெண்டு மெம்பர்களை தரிசிக்கப் போவது தானே வழக்கமாம். எல்லாரும் சொல்லுகிறார்களே. ஆனால், அவர் இல்லை என்று சொல்லலாம். நாம் நம்பத் தயாரில்லை. ஏனெனில் இவருக்கு அசத்தியமூர்த்தி அய்யர் என்ற பட்டம் கிடைத்து விட்டது. '' சத்தியமூர்த்தி பொய்யன் இல்லையென்று கோர்ட்டில் நடவடிக்கை எடுக்கட்டும்'' என்று ஜஸ்டிஸ் பத்திரிகை அறை கூவி அழைத்ததே. இதுவரை ஒன்றும் செய்ய வில்லையே. அது காணாதென்று சுதந்தரத்தாகம் ததும்பும் பத்திரிகையாகிய சுதந்தரச் சங்கின் பத்திராதிபரும் தேசிய வீரருமாகிய சங்கு கணேசன் அவர்கள் நாலு நாட்கு முன்பாக ''இச்சிறு சங்கதிக்கும் பொய்யா'' என்று கேட்டார்களே. பதிலில்லையே. ஆகையால், இல்லையென்று ரூபிக்க வேண்டுமானால், ஒரு கவர்மெண்ட் மெம்பராவது சர்ட்டிபிக்கட் கொடுக்க வேண்டும.

சரி, யோக்கியதை, நேர்மை என்பதே தெரியாத தலைவர் தான் போகட்டும்; மற்றவர்கள் கதி என்ன? விதிகளும் என்னாயின?

பட்டதாரிகளுக்கு
காங்கரசில் என்ன வேலை

காரைக்குடியில் பட்டதாரிகளுக்குக் காங்கரசில் இடமில்லை என்று தீர்மானித்த பிறகு, திவான்பகதூர் ரத்தினசபாபதி முதலியாருக்கும், ராவ்சாஹிப் கச்சாபகேச முதலியாருக்கும் காங்கரசில் என்ன வேலை? சத்தியமூர்த்தி அய்யருக்கு மந்திரி பதவிக்கு ஓட்டுக் கொடுப்பதற்காகவா? சித்தூர் ஜில்லா போர்டிற்கு காங்கரஸ்காரர் ஓட்டு காணமல் கடவுளும் ஓட்டுக்கொடுத்து தலைவரான சி. ஆர். செட்டியார், அதற்கு அடுத்த வாரம், மகாத்மா படமொன்று போர்டில் காங்கரஸ் மெம்பர்கள் சொந்தச் செலவில் வைப்பது என்று கொண்டு வந்த தீர்மானத்தை அநுமதிக்க மாட்டேனென்றாரே, ஆனால் கவர்னருக்கு ஏகோபசாரம் செய்தாரே! என்ன ஆயிற்று? அவர் சற்று அறிவுள்ளோர் அடங்கிய ஆந்திர காங்கரசை சார்ந்தவர். போகட்டும்.

மூக்கறுபட்டவர் எத்தனை ?

தமிழ் நாட்டில் மூக்கறுபட்டோர் கணக்கென்ன? சென்னை கார்ப்பொரேஷன் மேயர் ஹபீப்கான், ரயில்வே ஸ்டேஷன்களில் போலீஸ் கமிஷனருக்கு முன்னதாகவே போய் நின்று கவர்னரை வரவேற்பதுவும், [illegible] ஏற்றுவதுமாயிருந்தாரே என்ன ஆயிற்று? காங்கரஸின் பேரால் காங்கரஸின் வெற்றி என்ற முழக்கத்துடன் கவுன்சிலரானது தான் கைமேல் கிடைத்த பலன்.

தென்னாற்காடு ஜில்லா போர்டு தலைவர் திரு. செட்டியார், 'ஜில்லா போர்டு நிர்வாகத்தில், தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டியார் தலையிடுவது அதிகப் பிரசங்கித்தனம் என்றாரே!' அவர் மூக்கு இருக்கிறதா போய் விட்டதா?

ஜடாவல்லபர் மூக்குப் போயிற்றா?

சிதம்பரத்திலே திருச்சபையிலே நடராஜப் பெருமான் முன் தவமிருந்த சத்தியமூர்த்தி அய்யர், அவருடைய பார்ப்பன சகோதரர் ஜடா வல்லபருக்கு காங்கரஸின் பேரால் முனிசிபல் சேர்மனாக்கினாரே, அவர் சென்ற மாதம் அழகான டுவிட் சூட்டுடன் கவர்னருக்கு வரவேற்பு அளித்து கை குலுக்கிக் குலாவினாரே, அதற்கேன் தண்டனையில்லை? கூச்சமில்லை? மூக்கறுக்க கத்தி கிட்டவில்லை? அன்று ''தினமணி'' செத்துக் கிடந்ததா? மூர்த்தி மந்திரி பதவி மோகத்தில் மதிமயங்கிக் கிடந்தாரா? ஆனைமலையில் ஐரோப்பியர் முன் பூர்ண சுதந்தரம் வேண்டாமென்று சொன்ன பார்ப்பன சூழ்ச்சியோடு சேர்ந்த சூழ்ச்சிதானே. சிதம்பரம் பார்ப்பான் செய்தால் கப்சிப், திருநெல்வேலி முதலியார் செய்தால் கடபடாவா? அதுவும் போகட்டும். நமது ஜில்லாவில்தான் என்ன ஒழுங்கு?

ஜில்லா போர்டு தலைவர் பதவிக்காக காங்கரசில் கையெழுத்திட்டு எலக்ஷன் இல்லாமல் மெம்பரான திரு. சின்னகண்ணுப் பிள்ளையவர்களும், மற்றும் ஐவர்களும் எலக்ஷன் முடிந்து பத்து நாட்களுக்குள் கட்சி மாறினார்களே! என்ன ஆயிற்று? அன்னவர்களின் ஆப்தநண்பர் ஜில்லா காங்கரஸ் கமிட்டி தலைவர் என்ன செய்தார்? எந்தக் கூட்டத்தில் கண்டனம் செய்தார்?

குப்புசாமி மௌனியானதேன் ?

இந்த கவர்னர் வரவேற்புத் தீர்மானம் வரும்பொழுது போர்டு காங்கரஸ் கட்சித் தலைவர் திரு. குப்புசாமி அய்யர் என்ன செய்தார்? எதிர்த்தாரா? இல்லையே! சளசள என்று பேசும் நாவடக்கமேயில்லாத அவர், அன்று நாவடக்கி யிருந்ததின் மர்மமென்ன? கதர் குல்லாயும், சட்டையும் போட்டு அலங்காரமாய் முதல் சீட்டில் இருந்த அவர் கவர்னர் வரவேற்புக்கு எதிர் எத்தனை பேர் என்று பிரசிடெண்டு கேட்கும்போது அவரது கை வீரத்துடன் கதர் குல்லாயிற்கு மேல் வரவேண்டியதிருக்க சட்டைப் பைக்குள் போய் ஒளிந்ததேன்? இவரை என்ன செய்தார்கள்? வேறொன்றுமில்லாவிட்டாலும் தலைவர் பதவியை விட்டாவது நீக்கினார்களா? அன்று வரவேற்பு இல்லை என்று காங்கரஸ் முறைப்படி பண்ணுமல் சும்மாயிருந்த அய்யர் தலைவரை விட்டுவிட்டு, ஒழுங்குப்படி நியாயப்படி வரவேற்பு வாசித்துக்கொடுத்த முதலியாரின் பேரில் ஏன் இக்கோபம்? அய்யரின் குற்றத்தை மறைப்பதற்குத்தானே!

சங்கரன் கோவில் மெம்பர் திரு. அம்பலவாண பிள்ளை காங்கரஸ் கட்டளையை மீறினாரென்றும், ஜஸ்டிஸ் கட்சியுடனே ஓட்டுச் செய்கிறாரென்றும், உட்காருவதுகூட எதிரிகளுடன் உட்காருகிறாரென்றும் குற்றஞ் சாட்டியதின்மேல் தமிழ்நாடு கமிட்டியாரே அவரை ஜில்லாபோர்டு மெம்பர் பதவியை ராஜிநாமா செய்யச் சொல்லி கட்டளையிட்டார்களே! இன்றைக்கும் அவர் மெம்பர்தானே. தமிழ் நாட்டுக்கமிட்டியை நிராகரித்து 'போடா பொட்டைக்கண்ணு' என்று சொல்லித் திரிகிறவருக்கு கை மேல் என்ன பலன் தெரியுமா? ஜில்லா கமிட்டித் தலைவரின் பேருதவியால், பெய்ஸ்பூர் காங்கரசுக்கு பிரதிநிதியாகவும், தமிழ்நாடு கமிட்டியில் மூர்த்தி அய்யருடன் சம மெம்பராகவும் ஆகிவிட்டார். இனம் இனத்தோடு சேரவேண்டியது தானே.

லாலா ராஜ பக்தி

நமது டவுன் காங்கரஸ் பிரமுகர் மிட்டாய்க்கடை லாலா தெரியுமல்

(இதன் தொடர்ச்சி 8-ம்பக்கம் பார்க்க)

ஜஸ்டிஸ் கட்சிக்கு காங்கரஸ் எம். எல். ஸி. பாராட்டு

ஜனப் யாகூப் ஹாஸன் சேட்டு பேச்சு

இரட்டையாட்சியை நடத்தி வெற்றி பெற்றது

உத்தியோக மண்டலத்தில் பார்ப்பனரல்லாதார் உரிமையைக் காப்பாற்றியது

சென்னை, நவ, 30

வல்லபாய் படேல் பணமுடிப்பு நிதிக்குப் பொது ஜனங்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வதற்காக சென்ற வெள்ளிக்கிழமை மாலை கோகலே ஹாலில் ஒரு கூட்டம், மேயர் திரு. கே. ஸ்ரீராமுலு நாயுடு தலைமையில் நடைபெற்றது.

திரு. சி. ஆர். சீனிவாசன் பேசுகையில், மாகாண சட்டசபைத் தேர்தலுக்குக் காங்கரஸ்அபேட்சகர்களாய் நிற்பவர்களுக்கு உதவி செய்வதற்காகவே மேற்படி நிதி திரட்டப்படுவதாகக் கூறினர்.

தேசம் எம்மை நிலையில் இருக்கும் வரையில் அடிக்கடி இம்மாதிரி பணவசூலி கோரப் படுமென்று, ஸ்ரீமதி ஆர். வி. சாஸ்திரியும், தேர்தல் பிரசாரத்தை நடத்துவதற்காக காங்கரசிற்கு பணம் வேண்டியிருக்கிறதென்று திரு. என். எஸ். வரதாச்சாரியும் கூறினர்.

திரு. யாகூப் ஹாசன் சேட் அடுத்தபடியாகப் பேசுகையில் பின்வருமாறு கூறினர்:—

இந்தியாவில் சென்னை மாகாணமொன்றே கட்சி முறையில் வேலையை நடத்திவருகிறது. 30-வருஷங்கட்கு முன்பு பார்ப்பனரல்லாதார் தங்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதியை உணர்ந்து கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். அதன பயனாக ஜஸ்டிஸ் கட்சி தோன்றியது. அதன் சேவைகளைக் குறித்து என்ன தான் கூறிய பொழுதிலும், இத்தேச நிர்வாகத்தில் பார்ப்பனரல்லாதாருக்குள்ள நியாயமான உரிமைகளை கிடைக்கச் செய்ய வேண்டுமென்று அது கொண்டுள்ள முக்கிய நோக்கம் பெரும் பான்மையும் வெற்றி பெற்றுள்ளது. இரட்டையாட்சியை இந்தியாவில் வெற்றிகரமாக நடத்திய பெருமையும் அதற்கேயுண்டு. மேலும் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் நடைபெற்று வருவதைப் போன்று இந்தியாவில் முதன் முதலாகக் கட்சி முறையில் அரசியலை நடத்தி வந்த பெருமையும் அதற்கேயுண்டு. சென்னை சட்டசபையில் கட்டுப் பாடான ஓர் கட்சி ஏற்பட வேண்டியது மிகவும் அவசியம். தனிப்பட்ட கட்சியாகவோ அல்லது கட்சிகளாகவோ முஸ்லீம்கள் சென்னை அசெம்பிளி, அல்லது கவுன்சிலில் வீற்றிருப்பதை நான் விரும்பவில்லை.

வகுப்பு முறையில் கட்சி ஏற்படுவதை நான் முற்றிலும் வெறுக்கிறேன். பல்வேறு பிரச்சினைகள் மீதே கட்சிகள் தோன்ற வேண்டும். இது விஷயத்தில் ஜஸ்டிஸ் கட்சியையும், "பீபிள்ஸ் பார்டி"யையும் நான் பாராட்டுகிறேன். நான் சம்பந்தப்பட்டுள்ள ஐக்ய தேசீயக் கட்சி இந்த சட்டசபை கலைக்கவுடன் போய்விடும். ஆகவே, காங்கரஸ் கமிட்டியின் சார்பாக அபேட்சகராய் நிற்பதை விட எனக்கு வேறு வழியில்லை. ஆனல் இம்முடிவு இப்பொழுது தான் நான் செய்வதாக நினைக்க வேண்டாம். காங்கரஸ் சட்டசபைகளைக் கைப்பற்ற வேண்டுமென்று தீர்மானித்ததோ, அப்பொழுதே அவ்வித முடிவு செய்து விட்டேன்.

பணமின்றி காங்கரஸ் தேர்தலில் வெற்றிபெற முடியாது. ஒத்துழையாமை இயக்கத்தின் பொழுது ஒரு கோடி ரூபாய் அது வசூலித்தது. இப்பொழுது இருபட்டுக்காக மற்றொரு பெரிய பண முடிப்பை திரட்டியாக வேண்டும்.

திரு. சத்தியமூர்த்தி பிறகு பேசுகையில், சுப குறியான மஞ்சள் நிறத்தை சர்க்கார் காங்கரசுக்கு அளித்துள்ளதால் அடுத்த தேர்தலில் காங்கரஸ் வெற்றி பெறுவது நிச்சயம். ஜஸ்டிஸ் கட்சி சிகப்பு நிறத்தைப் பொறுக்கியுள்ளது அது அபாயகரமான குறியாகும்.

திவான்பகதூர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியாரையும், ராவ் பகதூர் சே. சீதாராம செட்டியையும் தங்கள் தங்கள் பட்டங்களைத் துறக்கச் செய்தது காங்கரசின் பெரியதோர் வெற்றியாகும்.

நாம் சுயராஜ்யத்தை அடைந்தே தீருவோம். நமக்கும் சுயராஜ்யத்திற்கும் இடையே நிற்கும் எவரையும் ஒழிக்கத் தான் போகிறோம். அவ்விதம் நின்று வரும் கட்சிகள் இம்மாகாணத்தில் இரண்டேயிருக்கின்றன. அவை தான் ஜஸ்டிஸ் கட்சியும் 'பீபிள்ஸ் பார்டி' யும். பின் கூறிய கட்சி இன்னும் இருந்து வருவது எனக்கு ஆச்சரியகரமாகவேயிருக்கிறது.

நாம் என்ன மடையர்களா? நமக்குப் பகுத்தறிவில்லையா? தேர்தல் காலத்தின் போது ஒரு சில வேலையில்லாமல் திண்டாடும் நபர்களைச் சேர்த்துக் கொண்டு "நாங்கள் ஓர் கட்சி" யென இவர்கள் கூறிவருவதின் அர்த்த மென்ன?

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்

நிறைவேறிய அனுதாபத் தீர்மானம்

(ஒரு நிருபர்)

சென்னை, நவ 27

ஷை மன்றத்தின் கூட்டம் ஒன்று இன்று மாலை 6-மணிக்கு 327, தங்கசாலைத் தெருவில் தோழர் டி. தாஸ் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரை கூறியபின் தோழர் முத்துசாமி ஜஸ்டிஸ் கட்சியும், சமதர்மமும் என்பதுபற்றியும், தோழர்கள் கே. கிருஷ்ணசாமி, கே. ஜெயராமன், வீரராகவன், சுப்பராவ் முதலியோர் 'தேர்தலும் அரசியல் கட்சிகளும்' என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினர். பிறகு கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறப்பட்டு தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் என். பிரகாசம் வந்தனோபசாரம் கூற இரவு 8-30 மணிக்கு கூட்டம் கலைந்தது.

தீர்மானம்

"இக் கூட்டம் பழம் பெருந்தேசபக்தர் திருவாளர் வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் மரணமடைந்ததைக் குறித்து வருந்தி, அன்னார் குடும்பத்திற்குத் தன்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது"

ஆண்மையுள்ள ஒரு தமிழன் இல்லையா?

'அய்யர்—அய்யங்கார் போட்டி

வேலூரில் ஜாக்கிரதை!

(வம்பன்)

ஜில்லா போர்டு தேர்தல் பேச்சை நிறுத்திக்கொண்டு, வம்பர் சென்னை காங்கரஸ் தேர்தல் பேச்சை ஆரம்பித்தார்கள். காங்கரஸ் தேர்தலிலுமா "கலாட்டா"! அட கர்மமே! திருவட்டீஸ்வரன்பேட்டை காங்கரஸ் தேர்தலில் அடிதடி நடந்ததைக் கண்டு காங்கரஸ்காரர் வெட்கித் தலை குனியவேண்டும். இந்த அசடிக்குக் காரணம், பதவி மோகம் பிடித்த சில காங்கரஸ் தலைவர்களே யென்பது வம்பர் அபிப்பிராயம். தலைவர் பதவிக்குக் காங்கரஸ்காரர் சிலர் போட்டி போடுகிறார்கள். நியாயமான போட்டி நல்லது தான் அதற்காகப் பலாத்காரத்தை உபயோகிப்பதையும், தேர்தலில் அற்பத்தனமான சூழ்ச்சி செய்வதையும் உண்மையான எந்தக் காங்கரஸ்வாதியும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. இந்தக் கலகத்துக்கு ஒரு சில தலைவர்களே காரணமென்று தெரிகிறது.

ஆதிகேசவலு நாய்க்கர் புதிதாகத் தோன்றிய ஒரு தலைவர். அவருக்குப் போட்டியாக, கே. பாஷ்யம் அய்யங்கார் வருகிறார். இவர்கள் இருவருக்கும் தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவராக வேண்டும்; அது கிட்டாவிட்டால், சென்னை ஜில்லா காங்கரஸ் கமிட்டித் தலைமைப் பதவியாவது கிட்டவேண்டுமென்ற அந்தரங்க நோக்கம் கொண்டிருக்கிறார்கள். ஆசையாரைத்தான் விட்டது? சத்தியமூர்த்தி ஐயருக்கோ தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டிக்கு மூன்றும் முறையும் தலைவராக வர வேண்டுமென்ற ஆசை ரொம்ப! காரைக்குடியில் தந்திரமாக முத்துரங்க முதலியாரை வீழ்த்திய அகம்பாவம் அவருக்கு இன்னமும் இருக்கிறது. வேலூரில், அடுத்த டிசம்பர் மாதம் 6, 7, 8ம் தேதிகளில் நடைபெறப் போகும் 38-வது தமிழ் மாகாண மகாநாட்டில் வேறு எந்தத் தமிழ்த் தலைவரையும் தோற்கடித்து வெற்றி பெற்று விடலாமென்று நினைத்துக் கொண்டிருக்கிறார். அவரை எதிர்த்துத் தோற்கடிக்க ஒரு தமிழரும் முன்வரக் காணோம். காங்கரசிலிருக்கும் ஒரு சில தமிழருக்காவது ஆண்மை இல்லையா? சத்தியமூர்த்தி அய்யருக்கோ, அல்லது பாஷ்யம் அய்யங்காருக்கோ இணையான தமிழ் தலைவர்கள் இல்லையா? நிர்வாகத் திறமையிலும், தியாகத்திலும் இந்த அய்யர், ஐயங்காரைவிடச் சிறந்த தமிழ் தலைவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்கள் ஏன் இன்னமும் வாய்மூடி மௌனிகளாக இருக்கிறார்களோ தெரியவில்லை. இவர்கள் மௌனத்தைக் கண்டு வம்பர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். பல தமிழர் கூட வியப்படைகின்றனர். அடுத்த தமிழ் நாடு காங்கரஸ் கமிட்டித் தலைமைப் பதவிக்கு ஒரு தமிழரே கண்டிப்பாக வரவேண்டும். அந்தத் தலைவரும் நிர்வாகத்திறமையிருப்பவராக இருக்க வேண்டியது மகா அவசியமாகும். ஏனெனில், அடுத்த வருடம் பல முக்கியமான பிரச்னைகளைத் தீர்க்க வேண்டியிருக்கும். வேதாசலம் பிள்ளைக்குத் தலைவராக வர எண்ணமிருக்கிறது. இவரைத் தவிர பகிரங்கமாக வேறு எந்தத் தமிழரும் இன்னமும் முன்வரவில்லை ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் நல்ல தியாகி. நிர்வாகத்திறமையிருக்கிறவர். குமாரசாமி ராஜாவும் தமிழர் அன்பைப் பெற்றவர். இவர்களில் யாராவது ஒருவரை தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டி தலைவராகத் தேர்ந்தெடுப்பதே நல்லது. வேலூரில் தமிழர் தங்கள் கடமையை மறந்துவிடக் கூடாது. வேலூரிலும், காரைக்குடியைப் போல தமிழர் ஏமாறுவார்களேயானால், அதைவிட மானக்கேடு வேறு வேண்டாம். தமிழர் இனிமேல் தலைகாட்ட முடியாதென்பதை தமிழ்நாட்டுக் காங்கரஸ் பிரதிநிதிகள் மனதில் பதிய வைத்துக் கொள்ளுவார்களாக.

காங்கரஸிலுள்ள தமிழர் ஆண்மை இழந்து, பார்ப்பனர் ஆட்டிவைக்கும் பொம்மைகளாக இருந்துக்கொண்டிருப்பது பெரிய அவமானம். இவர்கள் சுயநலமே இதற்கு முக்கிய காரணம். இது பிற்காலத்தில் தமிழ் நாடு காங்கரஸ் கமிட்டிக்கே பெரும் அவமானமாக வந்து முடியலாம்.

காலஞ்சென்ற வ. உ. சிதம்பரம் பிள்ளை ஒரு பெரிய தேசபக்தர். சிறந்த தியாகி. தென்னாட்டுத் திலகம். இவர் மரணத்துக்காக வருந்திச் சென்னையில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தினார்கள் கூட்டம் காங்கரஸ் மண்டபத்தில் நடந்தது. கூட்டத்துக்கு வந்தவர்களோ சொற்பம், ஏன்? அந்தக் கூட்டத்தை நடத்த சரியானபடி விளம்பரம் செய்யவில்லை. முன்னேற்பாடும் கிடையாது. தலைமை வகித்தவர் ஆதிகேசவலு நாய்க்கர். அவருக்கு சிதம்பரம் பிள்ளையைப் பற்றி என்ன தெரியும்? அவருடைய தியாகத்திலோ, தேச பக்தியிலோ இவர் தூசுக்குச் சமமாவாரா? நேற்று முளைத்த இந்தத் தலைவர்கள் சிதம்பரம் பிள்ளையின் பெருமையை அறிவது அஸம்பவமாகும். கூட்டம் நடந்து கொண்டிருந்தபோதே சத்தியமூர்த்தி ஐயர், தலைமை வகித்த ஆதிகேசவலுநாய்க்கர் முதலியோர் எழுந்து போய்விட்டார்களாம்! ஒரு சிறந்த தேசபக்தருக்குத் தலைவர்கள் காட்டும் மரியாதையா இது? சிதம்பரம் பிள்ளையின் கொள்கை, காங்கரஸ் கொள்கைக்குச் சிறிது மாறுபட்டிருக்கலாம். அதற்காக இந்தத் தலைவர்கள் இவ்வாறு அலட்சிய புத்தியுடன் நடந்துகொண்டதைத் தமிழர் அனைவரும் வெறுப்பார்களென்பதற்கு சந்தேகமில்லை. இதே சிதம்பரம் பிள்ளை ஒரு பார்ப்பனராக, அல்லது, வட இந்தியராக இருந்திருந்தால், இந்தக்கூட்டம் எந்த நிலைமையில் நடந்திருக்குமென்று நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள். கூட்டத்தைச் சரியானபடி நடத்தாமல மறுநாள் சிதம்பரம் பிள்ளையின் படமொன்றைக் காங்கரஸ் மண்டபத்தில் வைக்கப் போவதாக சத்தியமூர்த்தி ஐயர் வெளியிட்ட அறிக்கைக்கு அர்த்தமே இல்லை யென்று வம்பர்கள் பேசிக் கொண்டனர்.

—"தமிழ் மணி"

கட்சித் துரோகம்

ஜஸ்டிஸ் கட்சியின் உப்பைத் தின்றவர்களில் பெரும்பாலோருக்கு நன்றி விசுவாசம் அறியும் இயக்கம் அழிந்து போவதாகத் தெரிகிறது.

கடலூர் ஜில்லா போர்டு பிரசிடெண்டாய் இருந்த தோழர் சீதாராம செட்டியார் அவர்களின் ஒவ்வொரு மயிர்க்காலும் ஜஸ்டிஸ் உப்பைத் தின்றே வளர்ந்ததாகும். அவர் தனது தகுதிக்குப் பலமடங்கு மேற்பட்ட பலன்களை அக்கட்சி மூலம் அடைந்தார். கடைசியாக மாதம் ஆயிரக்கணக்கான சம்பளமுள்ள உத்தியோகமும் 4, 5 வருஷங்களாக, ஏன்? 6, 7 வருஷங்களாக அனுபவித்து வந்தார் அப்படிப் பட்டவர், உத்தியோகம் வாய்தா தீர்ந்த சட்டாம் ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிர்க்கட்சியில் சேர்ந்து, பார்ப்பனர்களுக்கு அடிமையாகி, பட்டத்தையும் விட்டுத் துணிந்து தன் கட்சியை ஒழிக்க முயற்சித்து முடிகட்டி நிற்கிறார். காங்கரசில் காங்கரசுக்கு விரோதமாக இருந்தவர்களைச் சேர்க்கக் கூடாது அபேட்சகர்களாய் நிறுத்தக் கூடாது என்று "ஐயர்" அறிக்கை இருக்கும் போதுவரை காங்கரசை வைது கொண்டு அதன் எதிர்கட்சியில் இருந்து வந்த ஒரு உத்தமரை - அதுவும் தான் உப்புத் தின்று வளர்ந்த கட்சிக்குத் துரோகம் செய்து விட்டுவந்த ஒரு "பெரியவரை" எப்படிச் சேர்த்துக்கொண்டார்கள் என்று பார்த்தால் காங்கரஸ் யோக்கியதையும், மாஜி ராவ்பகதூர் ஜஸ்டிஸ் துரோகி யோக்கியதையும் விளங்கும்.

(குடி அரசு)

பொங்கல்! பொங்கல்!!

அசல் பட்டுப் புடவை

அழகிய சிறு ஜரிகைக் கரை, அசல் பட்டு. சிகப்பு, அரக்கு புளு, பச்சை, ஸ்கைப் முதலிய கலர்களில் கிடைக்கும்.

12-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 5—12—0
16 முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 7—8—0
18-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 8—8—0
5-முழம் x 44" அங்க வஸ்திரம் 1-க்கு ரூ. 3—8—0

வெண்பட்டு அங்க வஸ்திரம்

5 முழம் x 44" அழகிய கரைகள் சலவைக்கு கேர்த்தியானது.
விலை ரூ. 1—12—0—தான்.

☞ இந்த விலைகள் 15—1—37 பொங்கல் வரை தான்.
ஞாபகத்தில் வையுங்கள். உடனே ஆர்டரை அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
(Proprietors : Sundarams Ltd.,)
சில்க் அவுஸ், காசி.

எது?

தமிழ்நாட்டில் குறைந்த சந்தாவில்
அதிக பக்கங்களோடு வெளிவரும் தமிழ் மாதப் பத்திரிகை.

"சித்தன்"

ஒன்றே. இனிய கதைகள், ஹாஸ்யம், உலகச் செய்தி, வைத்தியக் குறிப்பு, சினிமா விமர்சனம், சம்பாஷனை முதலியன நிறைந்தது.

வருட சந்தா அணா (8) எட்டே. வெளிநாடு ரூ. 1.
மாதிரிப் பிரதி இனாம். விளம்பர விகிதம் மிகவும் குறைவு.

விபரங்களுக்கு எழுதவும் :—
மானேஜர் :—"சித்தன்", பழனி, S. I.

குமார சஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
அண்ணாமலை
வைத்தியரின் மருந்து நிகரற்ற குணமுடையது
☞ வைத்தியர் அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

"அறிவுக் கொடி"

ஒரு சிறந்த தமிழ் மாத வெளியீடு.

ஆசிரியர் :- ஸ்ரீமதி சாமி சிதம்பரனர்.

ஒவ்வொரு ஆங்கிலமாதம் 15-ந் தேதியில் வெளிவருவது.

அறிவு வளர்ச்சி, மாதர் முன்னேற்றம், தமிழ் மொழி வளர்ச்சி, விஞ்ஞானம், வைத்தியம், விகடம், சங்கீதம், நாடகம், படக் காட்சி, மனதைக் கவரும் சிறு கதைகள் முதலிய சிறந்த பல விஷயங்களும், இனிய பாடல்களும் வெளிவரும்.

உள்நாடு வருட சந்தா ரூ. 1. வெளிநாடு ரூ. 1-8-0.

மானேஜர் :—"அறிவுக் கொடி" ஆபீஸ்,
462, மேலக் கடலங்குடித் தெரு, கும்பகோணம்

பாம்புப் படுக்கை

டென் மார்க்கில் தை என்று மிடத்திலுள்ள ஒரு இடையன் தன் படுக்கையில் படுத்துத் தூக்கம் வராது உழன்று கொண்டிருந்தான். பாதங்களில் குளிர் அதிகமாக இருப்பதாகத் தோன்றிற்று. படுக்கை ஒரு வேளை நனைந்திருக்கலாமோ வென்றெண்ணியவனாய் அதைப் பரிசோதிக்கத் தொடங்கினன். முதலில் படுக்கையிலுள்ள துணியினை சிறிது எடுத்ததும் இரண்டு 'அடர்' என்னும் கொடிய பாம்புகளைக் கண்டான். பின் முற்றும் பரிசோதிக்க ஒவ்வொன்றாக 11 பாம்புகளைக் கண்டு பிடித்தான்.

"ஒற்றுமை"

14-ம் வருஷம் நவம்பரில் ஆரம்பம். ஸ்டாம்பு செலவுக்கு 12 அணா அனுப்பினால் ஒரு வருஷப் பத்திரிகை அனுப்பப்படும்.

மாதிரிப் பிரதி இனாம்.

ஒற்றுமை ஆபீஸ்,
வியாசர்பாடி, மதராஸ்.

CHEAPEST RATES
MONEY BACK IF DISAPPROVED.
4 YRS. GTD STRONG ACCURATE AND STYLISH WRIST WATCHES ROUND NICKEL 2/10, GOLDEN 3/8 SQUARE NICKEL 3/12, GOLDEN 4/4 RECTANGULAR NICKEL 5/- GOLDEN 5/12 B-TIMEPIECE 1/6 POCKET WATCH 1/10 P. POSTAGE EXTRA BUT FREE
CALCUTTA CLOCK Co.
15/1, JOY MITTER ST. P.O HATKHOLA, CALCUTTA

மனம்போன போக்கு

("குட்டிச்சாத்தான்" எழுதியது)

விகடக் குரங்கு பழையபடி வாலை அவிழ்த்து விட்டிருக்கிறது. 'தாம, ததிங்கிணதோம்,' என்று ஞாயிற்றுக்கிழமை குதித்திருக்கிறது. "பேனாவைப் போட்டுவிட்டுப் பிரம்பை யெடுத்துக் கொண்டதாம குரங்கு! குரங்கு கையில் பூமாலையகப்பட்டால், பூமாலையின் கதி என்ன? அதே கதிதான் பேனா அகப்பட்டாலும் கூட! வரம்பு, முறை, ஒழுங்கு ஒன்றுமில்லாமல் வரைவது வக்கிரத்தின் வழக்கமாய் விட்டது. ஜஸ்டிஸ் கட்சி என்றால் குரங்குக்குத் தேள் கொட்டினதுபோல "இச், இரிச், இச், இரிச், இச், இரிச்" என்று பல்லை நறநற வெனக் கடிக்கும்; வாலைச் சுற்றிச் சுற்றி, 'ஸ்கிப்பிங்ரோப்'பைப்போல, தாண்டி, எகிரிக் குதிக்கும். ஒவ்வொரு சமயத்தில் பேனாவையே, பனங்கிழங்கு கடிப்பதுபோல் கடித்துவிடும். மூஞ்சியெல்லாம் 'இங்கி'யாய் விடும். குரங்கு அந்தப் பேனாவைப் போட்டுவிட்டுப் பிரம்பை யெடுத்துக் கொண்டதாம்! 'பேனா போச்சு, பிரம்பு வந்தது, டும், டும், டும்,' என்று ஒரு மேளம் அடித்தாலும் அடிக்கும். 'பிரம்பெடுத்த குரங்கே! பேசாய் வாய்திறந்து" என்று ஒரு மலை வாழைப் பழத்தையும், கடலைப் பட்டாணி-காராமணி சுண்டலையும் வைத்துக் கொண்டு கேட்டேன்.

* * *

குரங்கு சொல்லிற்று:-"நான் உபாத்தியாயராய் விட்டேன். அதற்காகத்தான் பிரம்பைக் கையிலெடுத்தேன். பத்திரிகாசிரியர் வேலையை விட்டு பள்ளிக்கூட வாத்தியாராய் விட்டேன்" என்று பல்லை யிளித்தது. "ஏன், பிரம்பைப் போட்டுவிட்டு ஒரு சவரக் கத்தியை எடுத்துக் கொள்வதுதானே?" என்றேன். பல்லிளிப்பு நீட்டல் விகாரம் பெற்றது. "பல் சுளுக்கிக் கொள்ளப்போகிறது! விஷயத்தைச் சொல்" என்றேன். "பிள்ளைகளுக்கு ஒரு கதை சொல்ல ஆரம்பித்தேன். ஒரு ஊரில் ஒரு ராஜா என்று சொல்வதற்குள் போலீஸ்காரர்கள் வந்தார்கள். செட்டி நாட்டு ராஜாவைப்பற்றி குற்றமாகச் சொல்லப் போவதாக அவர்கள் நினைத்தார்கள்" என்று குரங்கு கூறிற்று. இந்தக் கூற்றுக்கு "விகடம்" என்று பெயராம்; துடப்பைக் கட்டைக்குப் பட்டுக் குஞ்சம் கட்டியது போல், இதற்கு ஒரு அடை மொழிகூட— "ஆனந்த விகடம்"! குரங்கு நடந்த விஷயத்தைத் திரித்துக் கூறி, 'ஜோக்' செய்கிறதாம். நடந்த விஷயமென்ன? இராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தலில், காங்கரஸ் காலிகளும், கூலிகளும், தாலிகளும், தாலியறுத்தவைகளும், பிரசாரம் செய்தனவாம். அவற்றில் ஒன்று செட்டி நாட்டு ராஜாவைப் பற்றித் தூஷணை செய்ய ஆரம்பித்ததாம். அதைப் போலீஸ்காரர் தடுத்தார்களாம்; மீண்டும் எகிறிற்றும்; பிறகு மேடையிலிருந்து கீழே யிறக்கி, 'அலக்' காய் தூக்கிக் கொண்டு போய், அதிக தூரம் கொண்டு போய் விட்டு, 'உன், ஓடிப்போ' என்று துரத்தி விட்டார்களாம். இது நடந்த சமாசாரம்; பத்திரிகைச் செய்தி.

* * *

ஆகா! எப்படிச் செய்யலாம் அப்படி? இந்திய மக்களுக்குப் பேச்சு சுதந்திரம் இல்லையா? ஆச், பூச், என்று தொண்டர்களும், வண்டர்களும், குண்டர்களும் அட்டகாசம் செய்தார்கள். சுயலக் கூட்ட பத்திரிகைகள் [illegible] சென்றன. என்ன, இவ்வளவு 'கலாட்டா' செய்கிறார்களே, விஷயமென்ன என்று அறிய வேண்டி [illegible] கொம்பேரி மூக்கனை அனுப்பி உண்மையை அறிந்து வரச்சொன்னேன். மூன்றே முக்கால் நாழிகைக்குள், மூக்கன் வந்தான். "மூக்காழ்வாரே! செட்டி நாட்டு சம்பவம் என்ன?" என்றேன். "அத்தையேன் கேக்கரீங்க? செட்டிநாட்டு ராசாவைப் பத்தி, யாரோ ஒருத்தர் திட்டப் போனாராம். கூட்டத்திலே ஜஸ்டிஸ் கட்சி ஆசாமிகள் இருந்தாங்களாம். ஜஸ்டிஸ் பேரிலே 'போலி'யை பிடிச்சு பேசிக் கொண்டாங்களாம். போலீச்சக்காரன் கேட்டு, அடிதடியில்லாமல் ஆனால், தாணுக் கொட்டடியிலே போட்டு காவல் காக்கவோனும் மின்னு, பேச்சை அடக்குனங்களாம். போலீசுக்காரன் வாயை மூடிக்கினு இருக்காக்க, காங்கரஸ், கேகோன் அல்லாங் காலி; பேசின ஆளு பல்லும் அம்முட்டும் பொரி உழுந்த மாதிரி உழுந்து போயிருக்கும்; கண்ணும் புளுச்சிப் போயிருக்கும்; ஆளு வூட்டுக்குப் போனு, பொண்டாட்டிகாரி, 'இது யாரு? எங்கூட்டுக் காரில்லே' அன்னு சொல்ற மாதிரி மூஞ்சி, கிஞ்சியெல்லாம் அம்மி பொளிஞ்சாப்போல் ஆக்கியிருப்பார்களாம். தலை தப்பனது தாலிகட்டின அம்மா மகிமை இன்னு ஊர்காரஙல்லாம் சொல்லிக்கிறாங்க. இதுதான் சேதி"-இன்னு இழுத்தான் மூக்கன். சரி, அந்த மூலையிலே காங்கரஸ்காரன் ஒருத்தன் கள்ளுக்கடை வைத்திருக்கிறான்; அங்கே போய் ஒன்றரை போட்டுக் கொண்டு வீட்டுக்குப் போ என்று 'சம்திங்' கொடுத்தனுப்பினேன்.

* * *

உடல் நலம் குன்றாமல் வீடு போய்ச் சேர்ந்ததற்குப் போலீஸ்காரருக்கு வாழ்த்தும், வந்தனமும் கூறுவதை விட்டு, குறைகூறும் காங்கரஸ்காரர்களைப் பற்றி என்ன சொல்வது? நன்றி மறப்பது நன்றல்ல, என்று சொன்னால் தலை கொழுத்த தாண்டவராயர்கள் மண்டையில் ஏறுமா? இப்போது வர வர காங்கரஸ் பிரசங்கிகளுக்கு, விகடக் குரங்குக்கு வால் நீண்டு வருகிறமாதிரி, நா நீண்டு வருகிறது. ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களைப் பற்றி ஏக வசனமாகவும், தாறுமாறாகவும் பொதுக் கூட்டங்களில் கூறிக்கொண்டு வருகிறார்கள். ஜஸ்டிஸ் இளைஞர்களும், தொண்டர்களும் இனிமேல் செருப்பைக் கழற்றிக்கொள்ள வேண்டிவரும் என்ற நிலைமையை அவர்கள் உணர்ந்தார்களா? அடி உதவுகிறமாதிரி அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள் என்பார்கள். அம்மாதிரியான உயர்ந்த உதவியைக் காங்கரஸ்காரர் வலுவில் அழைக்கிறார்களா? உண்மையான பிரசாரமும், ஒழுங்கான பிரசாரமும் காங்கரஸ்காரர் செய்வதை யாரும் தடுக்கக் கூடாது. சோதாப் பையன்கள் மாதிரி பேசினால், 'அறுத்துக்கிஞ்சாம் கழுதை எடுத்துக்கிச்சாம் ஓட்டம்' என்ற பழமொழியை அவர்கள் விஷயத்தில் மெய்ப்பித்துக் காட்டவேண்டும்.

* * *

நன்றி மறப்பது நன்றல்ல என்றேன். சுயலக் கூட்டம் எவ்வளவு மகத்தான உபகாரத்தை மறந்து விட்டதென்பதை விகடக் குரங்கின் வாய்வீச்சின் மூலம் காட்ட விரும்புகிறேன். குரங்கு ஒரு கனவு கண்டதாம். கார்த்திகை தீபத்திற்குத் திருவண்ணாமலைக்குப் போயிற்றும். 'அண்ணாமலைக் கரோகரா' என்று கத்திற்றும். போலீஸ்காரர் ராஜா அண்ணாமலை செட்டியாரைப் பற்றிச் சொன்னதாகக் கருதி, போலீஸ் ஸ்டேஷனுக்குக் குரங்கை அழைத்துச் சென்றார்களாம். அதைப்பற்றி விசாரிக்கும்போது, "அவ்வளவு நகைச் சுவைக்கிடமான காரியத்தை நான் செய்வேன் என்று உங்களுக்குச் சந்தேகம் தோன்றிய காரணம் என்னவோ?" என்று கேட்டதாம். அண்ணாமலைச் செட்டியார் என்றால் நகைச் சுவையாகத்தான் இருக்கும்! அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கும்பல் கூடி அடித்து, கொள்ளையடித்து, வயிறு பெருத்து வருவது சுயலக் கூட்டத்தினரல்லவா? ஒரு சாஸ்திரி ஒழிந்தார்; வேறொரு சாஸ்திரி அவ்விடத்திற்கு வந்திருக்கிறாரல்லவா? சாஸ்திரிகளும், பிளாஸ்திரிகளும் பங்கு போட்டுத் தின்ற நன்றி கொஞ்சங்கூட இருக்கக் கூடாதா? ஆகா! இந்தப் பாப்பாரக் கூட்டம் உண்ட வீட்டுக் கிரண்டகம் செய்யுங் கூட்டமென்பதில் எட்டுணையும் சந்தேகமுண்டோ? சுயலமே உருவாக இருக்கிறவர்களுக்கு நன்றி எப்படியிருக்க முடியும்?

திரு கே. கே. எ. பெரியசாமி நாடார்

வருகிற அசெம்பிளித் தேர்தலில் தூத்துக்குடி நகரத் தொகுதிக்கு ஜஸ்டிஸ் கட்சி சார்பாய் அபேட்சகராக நிற்கிறார்.

* * *

செய்ந் நன்றி மறந்த காங்கரஸ்காரர்களின் செய்கை மற்றொன்றைக் கூறுகிறேன். அது காங்கரஸ் தலைவர் தோழர் ஜவஹர்லால் பொப்பிலி நகரத்திற்கு வந்தபோது நடந்தது. காங்கரஸ் தலைவர் ஒரு பிரசங்கம் செய்து கொண்டிருக்கும்போது தோழர் பொப்பிலி ராஜாவின் ஆட்கள் யானைகளைக் கூட்டத்தில் கொண்டுவந்ததாகவும், பிரசங்கத்தைக் கேட்க வொட்டாமல் தடுப்பதற்காக 'பாண்டு' வாத்தியத்தை வாசித்ததாகவும் காங்கரஸ் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தது; அது முழுவதும் உண்மை என்று நினைத்துக்கொண்டு விஷயத்தைக் கண்டனம் செய்து காங்கரஸ் பத்திரிகைகள் பல விதமாக எழுதின. இது என்ன விநோதமாக இருக்கிறதே! காங்கரஸ் கூட்டத்தைக் கலைப்பதென்றால் யானைகளும் 'பாண்டு' வாத்தியமும் வேணுமா என்று நானும் நினைத்தேன். பிறகு உண்மை வெளி வந்தது. அன்றைய தினம் பொப்பிலி பட்டணத்தில் வீற்றிருக்கின்ற ஸ்ரீ வேணுகோபால சுவாமிக்கு உற்சவமாம். அவ்வுற்சவ ஊர்கோல விமரிசைக்காக யானைகளும் பாண்டு வாத்தியமும் வந்திருந்தனவாம். அந்த ஊர்கோலம் புறப்படும் சமயத்தில் தோழர் ஜவஹர் வரும்படி ஏற்பாடு செய்தனர் உள்ளூர் காங்கரஸ்காரர்கள். உற்சவ அதிகாரிகள் காங்கரஸ் தலைவர் வந்து, தன்னுடைய அதிகப் பிரசங்கத்தை முடிக்கும்வரை காத்திருந்தார்கள். பிரசங்கமும் முடிந்தது, உற்சவத்தை ஆரம்பித்தார்கள். 'பாண்டு' காரர்கள் 'பாண்டு' வாசிக்கத் தொடங்கினர். வந்துவிட்டது கோபம் தலைவருக்கும் தலைவரின் வால்களுக்கும், 'எகிரிக் குதித்தாரையா, ராஜா தேசிங்கு. தடியைப் பிடிக்கிறாரையா, ராஜா தேசிங்கு! 'பாண்டு' [illegible] குறை கூறிய கேவலமான மனப்பான்மை உடையவர்களைப் பற்றி என்ன கூறுவது?

* * *

தோழர் பொப்பிலி ராஜாவையும், ஜஸ்டிஸ் கட்சியையும், பொப்பிலியில் நடந்த சம்பவத்திற்காக, மறைமுகமாகவும், நேர் முகமாகவும் தாக்கி எழுதிய பத்திரிகைகள், உண்மை வெளிவந்தவுடன், மாற்றி எழுதினவா, மன்னிப்புக் கேட்டனவா, என்றால் ஒன்றுமேயில்லை! பத்திரிகா தர்மத்தையும் புறக்கணித்த அற்பப் பத்திரிகைகளின் இருட்டுத் தனத்தையும், அயோக்கியத்தனத்தையும் பொது மக்கள் அறியவேண்டும். பெருந்தன்மை, நாணயம், நற்குணம் முதலியவை இருந்தாலல்லவா அவைகள் தம்முடைய தவறிற்காக வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளும்? கோயில் உற்சவத்திற்காகவந்த யானைகளையும் 'பாண்டு' வாத்தியத்தையும், காங்கரஸ் கூட்டத்தைக் கலைப்பதற்காகத் தோழர் பொப்பிலி ராஜா அனுப்பினார் என்று பொருள்படப் பத்திரிகைகளுக்கு எழுதிய பார்ப்பன நிருபர்களையும், அதை வியாக்கியானப்படுத்தி தலையங்கம் எழுதி, பிறகு உண்மை விவரம் தெரிந்தவுடன் தெரியாதது போல நடந்துகொண்ட பார்ப்பனப் பத்திராசிரியர்களையும் பற்றி என்னென்று சொல்வது? இம்மாதிரி அயோக்கியமான பிழைப்பைவிட, தஞ்சாவூர்த் தெருவில், விபசார விடுதி சட்டத்திடம் ஒத்துழையாமை செய்ய விரும்பி கள்ளிரவில் நடமாடும் [illegible] உதவி செய்து, பணம் பெற்று, வயிறு வளர்ப்பது மேல் என்று அத்தொழிலில் பரம்பரையாக ஈடுபட்ட குலத்தில் தோன்றிய பத்திரிகை தொழில் நடத்தும் பெரியார்களுக்கு அறிவுறுத்துகின்றேன்.

* * *

இதையெல்லாம் பார்த்தால், ஒரு பக்கம் சிரிப்பு வருகிறது; ஒருபக்கம் செருப்பை எடுத்துக் கொள்ளலாமா என்று கோபம் வருகிறது. விகடக் குரங்கு ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகருடைய பெயரைச் சொன்னால் "நகைச் சுவைக் கிடமான காரியம்" என்றல்லவா கூறிற்று? சில உண்மையான நகைச் சுவைக் கிடமான காரியங்களை இங்கே கூறலாம். [illegible] "அறிவுரைக் கொத்"'இல் [illegible] சினிமா கம்பெனி ஏற்படுத்தி, உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் சென்று பங்குத் தொகைகள் என்று ஏராளமான பணம் வசூல் செய்து, மலையாள தேசத்திலிருந்து நல்ல 'சரக்கு'களைக் கொண்டு வந்து, சென்னையில் திருவிளையாடல்கள் செய்த பார்ப்பனருடைய செய்கையும், கம்பெனியில் பங்கெடுத்து, திருவிளையாடல்களில் பெரும் பங்கெடுத்த சென்னைப் பார்ப்பனத் தலைவர்களுடைய செய்கையும் நகைச் சுவைக் கிடமானதல்லவா? திலகர் நிதியைக் கும்பல் கூடி 'க்ளோஸ்' செய்து ஏப்பமிட்ட தமிழ் நாட்டுச் சுயலக் கூட்டத்தினர் செய்கைகளை நகைச் சுவைக் கிடமானதல்லவா?

* * *

அம்பட்டன் குப்பையைக் கிளறினால் அத்தனையும் மயிர் என்பது போல், காங்கரஸ்காரர் விஷயங்களை உற்று நோக்கினால் அத்தனையும் ஆபாசம், நகைச்சுவை தான். ஆனால், ஒரு விஷயத்தில் விகடக் குரங்கை நான் பாராட்டுகிறேன். ஞாயிற்றுக் கிழமை இதழில் தோழர் யாகூப் ஹாசன் அவர்களுடைய படத்தை வெளியிட்டு, அவரைப் பற்றி சிலாக்கியமாக எழுதி யிருக்கிறது. "தென்னிந்தியாவில்—ஏன், இந்தியா முழுவதிலுமே—ஒத்துழையாமை இயக்கத்தின்போது முதன் முதலில் சிறை புக வழிகாட்டியவர் மௌலானா யாகூப் ஹாசன் சேட் தான்" என்று புகழுரை எழுதியிருக்கிறது. அப்படிப்பட்ட காங்கரஸ் தேசபக்தர் ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி என்ன சொல்லி யிருக்கிறார் தெரியுமா, குரங்கே? கொஞ்சம் வாலைச் சுருட்டி வைத்துவிட்டுக் கேள்: "பிராமணரல்லாத சமூகங்கள் அரசியலிலும் அரசாங்கத்திலும் பிரதிநிதித்துவம் பெறாத பெருங் குறையை நிவர்த்திக்க ஜஸ்டிஸ் கட்சி தோன்றியது. அக்குறையை நீக்குவதில் அக்கட்சி மகத்தான வெற்றியை அடைந்திருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சி இரட்டையாட்சியைத் திறமையாகவும் வெற்றிகரமாகவும் நடத்தியதோடு நில்லாமல், இந்தியாவிலேயே முதன் முதலாக, அரசியற் கட்சி திட்டத்தை நிறுவி, 'பிரிட்டிஷ் பார்லிமெண்'டில் எவ்வளவு திறமையாக அரசாங்கம் கட்சி நிர்வாகத்தால் நடைபெறுகின்றதோ, அவ்வளவு திறமையாக சென்னையில் நடத்திக் காட்டியிருக்கிறது" என்று காங்கரஸ் சட்டசபை அங்கத்தினர் தோழர் யாகூப் ஹாசன் விளக்கிக் காட்டியிருக்கிறார்.

* * *

குரங்கே! நீ யாரைப் பெரியோரென்று நினைக்கிறாயோ, அவர்கள் கூறுவதையாவது கவனித்து யோசித்துப் பார். நீ ஒரு குரங்கானால் நான் ஒரு குரங்காட்டி. நீ பேனாவைப் போட்டு விட்டு பிரம்பை எடுப்பாய். நான் பேனாவினாலேயே பிரம்படி கொடுப்பேன். ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொரு வாக்கியமும் 'சுருக், சுருக்', 'சுருக், சுருக்' என்று படவேண்டும். நீ உளறுவதிலிருந்தே உனக்குப் புத்திமதி கற்பிக்க வேண்டுமென்பது எனக்கு நோக்கம். ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றிய உண்மை உன் மண்டையில் ஏறும் வரை உன்னை ஆட்டங்காட்டப் போகிறேன்.

ஆடு குரங்கே! கூத்தாடு குரங்கே.
உண்மையை யறிந்தேனென்
று சொல் குரங்கே.

திருவண்ணாமலை டிவிஷன் ஜஸ்டிஸ் மகாநாடு

(ஒரு நிருபர்)

திருவண்ணாமலை, டிசம்பர், 1

திருவண்ணாமலை, போளூர், செங்கம் ஆகிய மூன்று தாலுக்காக்களும் சேர்ந்த (திருவண்ணாமலை டிவிஷன்) ஜஸ்டிஸ் மகாநாடு டிசம்பர் மாதம் இறுதியில் திருவண்ணாமலையில் கூடும். அம்மகாநாட்டிற்கு தோழர் பொப்பிலி ராஜா தலைமை வகிப்பார். மகாநாட்டின் வரவேற்பு கமிட்டி கூட்டம் டிசம்பர் மாதம் [illegible] கூடுமென்று தெரியவருகிறது. 1937-ம் வருஷம் ஜனவரி மாதம் இரண்டாவது வாரத்தில் செங்கம் தாலுகா ஜஸ்டிஸ் மகாநாடு கூடப் பெறும்.

மதிப்புரை

"திருக்குறள் நாட் குறிப்பு"

திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தார் அனுப்பின 1937-வது வருஷத்திய திருக்குறள் நாட் குறிப்பு வரப்பெற்றோம். சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தாரின் திருக்குறள் நாட் குறிப்பு தமிழுலக மதிப்புப் பெற்றது. நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கும் நாட் குறிப்பில் திருக்குறள் 110-ம் அதிகாரம் 7-வது குறள் தொடங்கி 133-ம் அதிகாரம் முடியவுள்ள 234 குறட் பாக்கள் 234 நாட்களுக்குக் குறிக்கப் பெற்றபின், எஞ்சிய வாகிய 131 நாட்களுக்கும் பொதுமறையாகிய திருக்குறளுக்கு ஒப்ப கடவுட் கொள்கையுடைய எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான கருத்துக்களடங்கிய வசனங்களை மூவர் தேவாரங்களிலிருந்தும் தெரிந்தெடுத்து வெளியிடப்பட்டிருக்கிறது. அழகான பதிப்பு.

விலை சாதா	0—5—0
பென்சில், ரப்பர் நாடாவுடன்	0—6—0

கிடைக்குமிடம்:— சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிமிடெட், பவழக்காரத் தெரு, சென்னை.

சென்னை தொழிலாளர் ஆலோசனைக் கூட்டம்

நிறைவேறிய தீர்மானங்கள்

(ஒரு நிருபர்)

சென்னை, நவ, 26

இன்று மாலை 6-30 மணிக்கு ஒரு தொழிலாளர் கூட்டம் ஒன்று திருவட்டீஸ்வரன் பேட்டையிலுள்ள 27-ம் நெ. கட்டடத்தில் நடந்தது. அதற்குத் தோல் பதனிடும் தொழிலாளர் சங்கத்தின் காரியதரிசி, தோழர் ஆரோக்கியசாமி பிள்ளை தலைமை வகித்தார். அக்கூட்டத்திற்கு சென்னையிலிருக்கும் தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளும், சங்கம் இல்லாத தொழிற்சாலை தொழிலாளர் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். அது போது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

அடுத்து வரும் சட்டசபை தேர்தலில் சென்னையிலிருந்து செல்லப்பட வேண்டிய தொழிலாளருக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் ஒரு ஸ்தானத்திற்கு யாரும் போட்டியில்லாமல் ஒரு தொழிலாளி நிற்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கவேண்டுமென்றும், அந்த ஸ்தானத்தைப் பெற அருகதையுள்ளவர்கள் தொழிலாளருள் இருப்பதாகவும், 15 வருட காலமாக பல ஸ்தாபனங்களிலும் அங்கம் வகித்தும், தொழிலாளர் இயக்கத்திற்கு நீடிய சேவை செய்து வருவோருமாகிய தோழர் எஸ். ராஜகோபால் அவர்களை தொழிற் கட்சி சார்பில் அந்த ஸ்தானத்திற்கு அபேட்சகராய் நிறுத்த வேண்டுமென்றும், மற்றும் சென்னை சட்ட சபையில் தொழிலாளருக்காக ஏற்பட்டிருக்கும் 6 ஸ்தானத்திற்கும் தொழிலாளர்களையே அபேட்சகர்களாக நிறுத்த வேண்டுமென்று தொழிற் கட்சி நிர்வாகஸ்தர்களைக் கேட்டுக் கொள்ளுவதாகவும், இந்த 6 ஸ்தானங்களுக்கும் எந்த அரசியல் கட்சியும் போட்டி போடாதிருக்க வேண்டுமென்று அக்கட்சிகளைக் கேட்டுக் கொள்ளுவதாகவும், சென்னை நகரசபை கவுன்சிலர் திரு. ஆல்பர்ட் ஜேசுதாசன் எம். எல். ஏ. ராஜகோபாலையே அபேட்சகராய் நிறுத்துவதற்கு விட்டுக்கொடுத்தமைக்கு அவரைப் பாராட்டுவதாகவும், ஹார்பர் அட்வைசரி போர்டுக்கு தொழிலாளர் சார்பில் தோழர் ஆரோக்கியசாமியையும், [illegible] தேர்ந்தெடுத்தமைக்கு சந்தோஷத்தை தெரிவித்துக் கொள்ளுவதாகவும் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு நிறைவேறின.

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே!
ஏழையென்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே!
மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையை கொளுத்துவோம்
வையவாழ்வு தன்னிலெந்த வகையினும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! (பாரதி)

விடுதலை

சென்னை: 1936-ஆ டிசம்பர்-மீ 2-உ
புதன்கிழமை

கவர்னர் பொன் மொழிகள்.

ஜஸ்டிஸ் கட்சிக்குப் பாராட்டு

வருஷந் தோறும் நவம்பர் 30-ந் தேதி, இந்திய மாகாணத் தலை நகரங்களில் நடைபெறும் செயிண்ட் ஆண்ட்ரூஸ் விருந்தின் போது, அந்தந்த மாகாண கவர்னர்கள் அந்தந்த மாகாண அரசியல் நிலைமையைப் பற்றி பிரசங்கம் செய்வது மரபு. அம் மரபுப்படி சென்ற நவம்பர் 30-ந் தேதி சென்னையில் நடந்த செயிண்ட் ஆண்ட்ரூஸ் விருந்தில் நமது கவர்னர் லார்டு எர்ஸ்கின் சென்னை மாகாண அரசியல் நிலைமையைப் பற்றிப் பேசினர். அப்பொழுது அவர் சில மறுக்க முடியாத உண்மைகளைக் கூறியது சென்னை தேசியப் பத்திரிகைகளுக்கும், காங்கிரஸ் கக்ஷிப் பத்திரிகைகளுக்கும் பெரிய வயிற்றெரிச்சலை உண்டு பண்ணியிருக்கிறது. நடுநிலைமை வகிக்க வேண்டிய கவர்னர் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்துப் பிரசாரம் செய்து விட்டதாகவும் அப் பத்திரிகைகள் குற்றம் சாட்டுகின்றன.

ஆனால், 1930-ம் வருஷ பொதுத் தேர்தலுக்கு முன் லார்டு கோஷன் செய்த பாரபட்சப் பிரசங்கத்தை ஆதரித்த சென்னை தேசியப் பத்திரிகைகள், இன்று லார்டு எர்ஸ்கின் பிரசங்கத்தை ஆட்சேபிப்பது ஆச்சரியமாகவே இருக்கிறது. சர்வ சமூக சமத்துவத்தை ஆதாரமாகக் கொண்ட ஜஸ்டிஸ் கட்சியை, அக் கட்சிக் கொள்கையினால் பாதகமடைந்த ஏகபோக உரிமையாளர், வகுப்புவாதக் கட்சியெனப் புரளி செய்ததை நம்பிய சுத்தாத்மாவான லார்டு கோஷன் வகுப்புவாதக் கட்சிகளால் நாட்டுக்கு நன்மையுண்டாகாதென 1930 தேர்தலுக்கு முன் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினர். தப்பெண்ணத்தினல் கூறப்பட்ட அம் மொழிகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு தேசியப் பத்திரிகைகளும், தேசிய வீரர்களும் தென்னாட்டு மக்களை ஏமாற்ற முயன்றும் பலிக்கவில்லை. வகுப்புவாத ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்க கூடாதென்று லார்டு கோஷனே கூறியிருப்பதாகத் தேர்தல் காலத்து ஜஸ்டிஸ் கட்சி எதிரிகள் விஷமப் பிரசாரம் செய்தனர். அத்தகைய சூழ்ச்சிப் பிரசாரத்தினல் ஜஸ்டிஸ் கட்சியைக் கவிழ்த்து விடலாமென்றும் அவர்கள் நம்பினர். எனினும், அவர்கள் முயற்சி பலிக்கவில்லை. ஜஸ்டிஸ் கட்சி வெற்றி பெறத்தான் செய்தது. ஆனல், அன்று லார்டு கோஷன், தப்பபிப்பிராயத்தினல் கூறிய மாதிரி லார்டு எர்ஸ்கின் இன்று எதுவும் கூறவில்லை. உண்மையே அவர் கூறியிருக்கிறார். வரப் போகும் சீர்திருத்தத்தைப் பற்றி அவர் பேசியபோது,

(1) "சென்னை மாகாண அநுபவத்தைக் கவனித்தால் மாண்ட்—போர்டு சீர்திருத்தம் செவ்வையாக அமல் நடத்தப்பட்டு வெற்றி பெற்றிருக்கிறது; அதை வெற்றிகரமாக நடத்தியவர்கள் அதிகப்படியான பொறுப்புகளும், உரிமைகளும் பெற லாயக்குடையவர்களே.

(2) புத்திசாலித்தனமான—நேர்மையான அரசியல் நிர்வாக விஷயமாக ஏனைய இந்திய மாகாணங்களுக்கு வழிகாட்டி, சென்ற 16 வருஷ காலமாக மாண்டு-போர்டு சீர்திருத்தத்தை வெற்றியுடன் நடத்திய சென்னை மாகாணம், இரட்டை யாட்சியை எங்ஙனமே வெற்றிகரமாக நடத்தி வைத்தது போலவே வரப்போகும் சீர்திருத்தத்தையும் வெற்றிகரமாக நடத்தி வைக்குமென்பது நிச்சயம்.

(3) இந்த மாகாணத்தில் சென்ற 16 வருஷ காலத்தில் உருவாகி வந்திருக்கும் ஐதீகத்தைப் பின்பற்றி, மேலும் கட்சிகள் நடந்தால் எதிர் காலத்தைப் பற்றி எனக்கு எள்ளத்தனையும் பீதியே கிடையாது."

எனக் குறிப்பிட்டார். ஜஸ்டிஸ் கட்சியைக் குழி தோண்டிப் புதைக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு இருப்பவர்களுக்கு இது பிடிக்குமா? ஆகவே, கவர்னர் பிரசங்கத்தைப் பலவாறுக் கண்டிக்க புறப்பட்டிருக்கிறார்கள். கக்ஷிப் பத்திரிகைகள் எப்படிக் கத்தினாலும் சரி, இரட்டை யாட்சியை வெற்றிகரமாக நடத்தி, சுயராஜ்யம் நடத்த இந்தியர்களுக்கு ஆற்றல் உண்டென சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்துக் காட்டிய பெருமை "ஜஸ்டிஸ்" கட்சிக்கே உரியது. இந்திய அரசியலிலே முதன்-முதலாகக் கட்சி முறையைப் புகுத்தி வெற்றிகரமாக நடத்திய கட்சியும் ஜஸ்டிஸ் கட்சியே. படேல் நிதிக்காக சென்னை கோகலே மண்டபத்தில் கூடிய காங்கிரஸ் கூட்டத்தில் ஜனப் யாக்கூப் ஹஸன் சேட் அதை ஒப்புக் கொண்டு பாராட்டிப் பேசியிருக்கிறார். காங்கிரஸ் பத்திரிகைகள் அவ் விஷயத்தைப் பிரசுரிக்கவில்லையாயினும் அன்று அங்கு விஜயம் செய்திருந்தவர்கள் அதைக் காதாரக் கேட்டிருக்கக் கூடும்; ஜனப் யாக்கூப் ஹஸன் சேட் கூறிய உண்மை மொழிகளைக் கேட்டு எவ்வளவு கொக்கரிக்கவும் கூடும்? யார் பொய்ப் பிரசாரம் செய்தால் என்ன? யார் மறைத்தால் என்ன? ஜஸ்டிஸ் கட்சியின் புகழை, திறமையை அரசியல் ஞானமுடையவர்கள் மறக்க மாட்டார்கள்.

இரட்டை யாட்சியை ஜஸ்டிஸ் கட்சியார் வெற்றிகரமாக நடத்தி வைத்ததாக லார்டு எர்ஸ்கின் கூறியது "சுதேசமித்திரன்" உள்ளத்தை அதிகமாகப் புண்படுத்திவிட்டது. ஆகவே, "ஜனங்களில் பெரும்பாலோர் விவசாயிகள்; அவர்களுடைய கஷ்டத்தைப் பரிகரிக்க அரசியலைத் திருப்திகரமாக நடத்தி வைத்த கோஷ்டியினர் முயன்றனரா? இல்லை; நிலவரி முறை பழைய சீர்கேடான நிலைமையிலேயே இன்னும் இருந்து வருகிறது" என்றெல்லாம் குறும்புத் தனமாக எழுதுகிறது. ஆனல், நிலவரி விஷயம் மந்திரிமார் அதிகாரத்துக்குட் பட்டதல்ல வென்பதை "சுதேசமித்திரன்" உணர்ந்திருந்தும், ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளைக் குறை கூறுவது அதன் துவேஷ புத்தியையே காட்டுகிறது.

கட்சி முறையை நிலைநாட்டி இரட்டை யாட்சியை வெற்றிகரமாக நடத்தி அதிகப்படியான பொறுப்புகளுக்குத் தன்னை லாயக்காக்கிக் கொண்டது ஜஸ்டிஸ் கட்சியே என எந்த மலை மேல் நின்று கூறவும் நாம் தயாராயிருக்கிறோம். இதர மாகாணங்களில் மந்திரிமார் இருந்துதான் வந்திருக்கிறார்கள்; இரட்டையாட்சியும் அமல் நடத்தப்பட்டுத் தான் வந்திருக்கிறது. ஆனல் சென்னை யொழிந்த எந்த இந்திய மாகாணத்திலும் கட்சி சம்பிரதாயம் ஏற்படுத்தப்படவே இல்லை. இதர மாகாணங்களில், செல்வாக்குடையவர்கள் சிலரைத் தம்முடன் சேர்த்துக் கொண்டு, குருடன் மாங்காய் எறிந்த மாதிரியே அரசியல் நடத்தி வந்திருக்கிறார்கள். காங்கிரஸ்காரருக்கும் இவ்வுண்மை தெரியும். அதனாலேயே ஜஸ்டிஸ் கட்சியை ஒழித்துவிட வேண்டுமென்று அவர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்கிறார்கள். வட நாட்டில் நடைபெறும் காங்கிரஸ் தேர்தல் பிரசாரங்களில் பம்பாய் மந்திரிகளையோ, மத்திய மாகாண மந்திரிகளையோ, ஐக்கிய மாகாண மந்திரிகளையோ, வங்காள மந்திரிகளையோ, பஞ்சாப மந்திரிகளையோ ஒழிக்க வேண்டுமென்று எந்த காங்கிரஸ் வீரனாவது கூறுவதுண்டா? இல்லவே இல்லை. ஏன்? அங்கே அரசியல் கட்சிகளே இல்லை. மந்திரிமார் தான் உண்டு. மந்திரிமார் ஒழிந்தால் அப்புறம் சூனியம்தான். சென்னை மாகாண நிலைமை அப்படி அல்ல. மந்திரிமார் போனாலும் கட்சி இருந்து கொண்டுதானிருக்கும். அரசியல் கட்சிகளுக்கெல்லாம் ஒவ்வொரு காலத்து ஏற்படக் கூடிய அசதி ஜஸ்டிஸ் கட்சிக்கு இப்பொழுது ஏற்பட்டிருந்தாலும் ஜஸ்டிஸ் கட்சி ஒழிந்து விட்டதென்றோ, ஒழியப் போகிறதென்றோ கூறுகிறவர்கள் உலகப் போக்கை அறியாத பச்சை பைத்தியக்காரரே யாவர். ஜஸ்டிஸ் கட்சிக்குத் தற்காலம் ஏற்பட்டிருக்கும் அசதிக்குக் காரணம் அதன் கொள்கையோ, லக்ஷியமோ மோசமாக இருப்பதல்ல. நீண்ட நாள் அதிகார பதவி வகிக்கும் கட்சி மீது பொதுஜன அவேஷம் ஏற்படுவது இயல்பு. சொந்த காரணங்களை முன்னிட்டு கட்சிக்குள்ளும், தப்பெண்ணங்களும், பிரிவினைகளும் ஏற்படுவது சகஜம். கட்சியினால் நலம் பெற்றவர்கள் கட்சி விஷயங்களில் அலக்ஷியமாக இருப்பதும், நலம் பெறாதவர்கள் இதர கட்சிகளில் புகுந்து நலம் பெற விழைவதும் சர்வ சாதாரணமே. எனவே, ஜஸ்டிஸ் கட்சியின் தற்கால நிலைமையைப் பார்த்து எவரும் மனந் தளர வேண்டியதில்லை; அஞ்ச வேண்டியதில்லை. ஜஸ்டிஸ் கட்சி ஒரு நாளும் தளராது; அழியாது. ஏன்? அதன் கொள்கை அவ்வளவு உத்தமமானது; லக்ஷியமோ கீர்த்தியமானது.

சர்வ தேச சங்க கவுன்சில்

டிசம்பர் 10-ந் தேதி கூடும்

பிரிட்டிஷ் அன்னிய நாட்டு மந்திரி விஜயம் செய்வார்

ஜெனரல் பிராங்கோவிற்கு 5000 — ஜெர்மானியர்கள்

லண்டன், டிச, 1

டிசம்பர் 10-ந் தேதி ஸ்பெயின் விவகாரங்களைக் குறித்த ஆலோசிப்பதற்காக சங்க கவுன்சில் ஜினிவாவில் கூடும். பிரிட்டிஷ் அன்னிய நாட்டு மந்திரியான திரு. ஈடன் அதற்கு விஜயம் செய்வார். ஜெனரல் பிராங்கோவிற்கு உதவியாக 5000 ஜெர்மானியர்கள் செவில்லியில் வந்திறங்கியிருப்பதாக, பிரிட்டிஷ் சர்க்காருக்கு செய்தி கிடைத்திருக்கிறது. பிரிட்டனில் இது சம்பந்தமாக மிகவும் பீதியேற்பட்டுள்ளது.

கலகத் துருப்புகளுக்கும், சர்க்கார் துருப்புகளுக்கும் இதுவரையும் கண்டிராத கடுமையான யுத்தம் மாட்ரிட்டில் நடைபெற்று வருகிறது.

சங்கக் கூட்டத்திற்கு இத்தாலியும், ஜெர்மனியும் வராவிட்டால் விவாதம் ஒரு பக்ஷமாகவே இருக்கக் கூடுமென்றும், அதனால் யாதொரு நன்மையும் ஏற்படாதென்றும் ஜினிவாவில் அபிப்பிராயம் நிலவி வருகிறது.

துருக்கி, இராக், ஈரான், ஆப்கானிஸ்தானம் ஒப்பந்தம்

சர்வ தேச நிலைமை நெருக்கடியே காரணம்

இஸ்டான்புல், டிச, 1

அநேகமாக வருகிற ஜனவரி முதல் தேதியின் பொழுது துருக்கி, இராக், ஆப்கானிஸ்தானம், ஈரான் முதலிய நாடுகளின் அன்னிய நாட்டு மந்திரிகள் இஸ்டான்புல்லில் கூடி ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளக் கூடுமெனத் தெரிகிறது. சர்வ தேச நிலைமையில் நெருக்கடியே அதற்குக்காரணமெனக் கூறப்படுகிறது.

தென்னிந்திய நலவுரிமைச் சங்கக் கூட்டம்

நகல் திட்டம் அங்கீகாரம்

தேர்தல் போர்டு அமைப்பு

சென்னை, டிச, 2

தென்னிந்திய நலவுரிமைச் சங்க நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு சர். தியாகராய ஞாபகார்த்த கட்டிடத்தில் நடைபெற்றது. ஜஸ்டிஸ் கட்சியின் பிரதம கொறடா திவான் பகதூர் ஏ. அப்பாதுரை பிள்ளை தலைமை வகித்தார்.

ராவசாகிப் பிஞ்சலை சுப்ரமணியம் செட்டியார், திரு. டி. வி. சுப்ரமணியம், ராவ்பகதூர் பாதேடி வெங்கடராமய்யா, திரு. டி. பாலசுந்தர முதலியார் ஆகியோர் காலமானதற்காக அனுதாபத் தீர்மானம் முதலில் நிறைவேறியது.

நிர்வாகக் கமிட்டியில் ஏற்பட்ட இரு காலி ஸ்தானங்களுக்கு செல்லபள்ளி ராஜா சாகிபும், திரு. பி. பாலசுந்தர முதலியாரும் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டனர்.

ஜஸ்டிஸ் கட்சியின் நகல் திட்டம் பின் அங்கீகரிக்கப்பட்டது.

சென்னை சாஸனச் சபை (கவுன்சில்), சென்னை அசெம்பிளி ஸ்தானங்களுக்கு அபேட்சகர்களை தேர்ந்தெடுக்கவும், [illegible] செய்யவும், தேர்தல் அறிக்கைகள் வெளியிடவும், தேர்தல் சம்பந்தமான மற்றும் பல விஷயங்களைக் கவனிக்கவும், மூன்று மந்திரிகள், சர் முகம்மது உஸ்மான், சர் ஏ. பி. பாத்ரோ, வெங்கடகிரி குமார ராஜா ஆகியோர்களடங்கிய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

புதுக் கட்சி வெற்றிகள்

சாயம் வெளுக்கிறது

பிரபலஸ்தர்கள் அறிக்கை

சென்னை, டிச, 1

கும்பகோணம் நகரசபைத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்ற திரு. சிங்காரம் செட்டியார் தன் கட்சியைச் சேர்ந்தவரென்று புதுக்கட்சிப் பத்திரிகை பெருமை யடித்துக் கொண்டது.

ஆனல் திரு. சிங்காரம் செட்டியாரே தாம் புதுக்கட்சி பேரால் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை யென பகிரங்கமாகக் கூறினர். அதை எவரும் மறுக்கவில்லை.

அப்பால் கிழக் கோதாவரி ஜில்லா போர்டு தேர்தலில் புதுக் கட்சிக்கு 28 ஸ்தானங்களும், காங்கரசுக்கு 18 ஸ்தானங்களும், சுயேச்சை அபேட்சகர்களுக்கு 5 ஸ்தானங்களும் கிடைத்து விட்டதாக புதுக் கட்சிப் பத்திரிகை தும்மாளம் போட்டது. ஜஸ்டிஸ் கட்சிக்கு ஒரு ஸ்தானம் வழங்கக் கூட புதுக் கட்சிப் பத்திரிகைக்கு மனம் இரங்கவில்லை.

ஆனல் கிழக்கோதாவரி ஜில்லா போர்டு தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் அனுப்பியுள்ள ஒரு அறிக்கையைப் பார்த்தால் ஜஸ்டிஸ் கட்சிக்கு 13 ஸ்தானங்கள் கிடைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

அவ்வறிக்கை வருமாறு:—

சமீபத்தில் நடைபெற்ற கிழக் கோதாவரி ஜில்லா போர்டு தேர்தலில், ஜஸ்டிஸ் கட்சி பேரால் திரு. ஆர். கே. ஜி. நரசராஜு தலைமையில் போர்டு போட்டு வெற்றி பெற்ற நாங்கள் கனம் பொப்பிலி ராஜா சாஹிப் கட்டளைக்கு கீழ்ப்பட்டு ஜஸ்டிஸ் கொள்கைப்படி நாங்கள் எந்தக் கட்சியிலும் சேரவில்லை யென்றும் ஜஸ்டிஸ் கட்சி விசுவாசிகள் என்றும் உறுதி கூறுகிறோம்.

இவ்வறிக்கையை எமது கட்சித் தலைவருக்கு அனுப்பவும் பத்திரிகைகளில் பிரசுரம் செய்யவும் ராஜா கே. ராஜகோபால் நரசராஜு பகதூர் அவர்களுக்கு அதிகாரமளிக்கிறோம்.

இங்ஙனம்:

1. வி. சூரியராவ்
2. ஏ. வி. என். நாராயண ராஜு
3. சையது மௌலா
4. எம். வீரண்ணா
5. சு. வி. ரமணராவ்
6. ஐ. வெங்கடராஜு
7. ஆர். கே. ஜி. நரஸராஜு
8. பி. சாமுவேல்
9. எஸ். பெத்தய்யா
10. ஆர். சூரியராவ்
11. கொலபதுல நரசய்யா (ஆதி ஆந்திரா)
12. எம். கோபால ராஜு
13. சத்திய நாராயண மூர்த்தி

சேலம் ஜில்லா போர்டு தேர்தல்

காரிப்பட்டி வட்டம்

ஜஸ்டிஸாருக்கு வெற்றி

(ஒரு நிருபர்)

பள்ளப்பட்டி, நவ. 30

நவம்பர் 23-ம் தேதி நடந்த சேலம் ஜில்லா போர்டு தேர்தலில் காரிப்பட்டி வட்டத்தில் நீண்டகாலமாக போர்டில் அங்கம் வகித்து வந்த திரு. செல்லமணி ராவுத்தருக்கும் (ஜஸ்டிஸ்) திரு. தொப்ப முதலியாருக்கும் (காங்கிரஸ்) பலத்த போட்டியிருந்தது. தொப்ப முதலியாருக்காக காங்கிரஸ் தொண்டர்கள் வெகுபாடுபட்டனர். எனினும், அவருக்கு 800-ஓட்டுகளே கிடைத்தன. கம ராவுத்தர் (ஜஸ்டிஸ்) 1478-ஓட்டுகள் பெற்று வெற்றி மாலை சூடினர்.

ஒதுக்கப்பட்ட ஸ்தானத்திற்குப் போட்டியிட்ட ஜஸ்டிஸ்காரர் திரு. சின்னானுக்கு 1389- ஓட்டுகளும் அதே ஸ்தானத்தை அபேட்சித்து நின்ற காங்கிரஸ்காரர் திரு. சென்னன் 166-ஓட்டுகளும் பெற்றனர்.

ஜப்பானுக்கு சீனவின் எச்சரிக்கை

மங்கோலியாவில் தலையிட்டால்...

முழு பலத்தையும் கொண்டு எதிர்க்கத் தயார்

நான்கிங், டிச, 1

மங்கோலிய உள்நாட்டுக் குழப்பத்தில் ஜப்பான் தலையிட முயற்சிப்பதை யொட்டி சீன சர்க்கார் ஜப்பானுக்கு கண்டிப்பான எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர்.

"சீன சமாதானத்தையேவிரும்புகிறது. தன்னைச் சுற்றியுள்ள தேசங்களிடமும் சகோதர பாவத்துடனேயே நடந்துகொள்ள விரும்புகிறது. ஆனல், தனது தேசத்தின் சமாதானத்தையும், கட்டுப் பாட்டையும் குலைக்க பிறர் முயல்வாராயின் அதைப் பார்த்துக் கொண்டு சீன வாளாவிருக்க முடியாது. தனது முழு பலத்தையும் சேர்த்து அவர்களை எதிர்த்தே தீரும்" என நான்கிங் அன்னிய நாட்டுக் காரியாலயத்தினர் உரைக்கின்றனர்.

ஐக்ய கோர்ட்டு

இந்தியாவின் முதல் பிரதம நீதிபதி

சர். மாரிஸ் கோயர் நியமனம்

புதுடில்லி, டிச, 1

சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுவதாவது:—

இந்தியாவின் முதல் பிரதம நீதிபதியாக சர். மாரிஸ் கோயரை மன்னர் அங்கீகாரம் செய்துள்ளார். 1937-அக்டோபர் முதல் தேதி ஐக்ய கோர்ட்டு அமுலுக்கு வரும் பொழுது இவர் பதவி ஏற்பார்.

கோர்ட்டு ஆரம்பமாவதற்கு முன்னதாகச சில விஷயங்களைக் கவனிக்க சர். கோயர் வருகிற ஜனவரி மாதத்தில் இந்தியாவிற்கு விஜயம் செய்வார்.

சென்னை அசெம்பிளி தேர்தல்

திரு. ஏ. கிருஷ்ணசாமி செட்டி அபேட்சை

கோயமுத்தூர் ஜஸ்டிஸ் இளைஞர் கழகத்தின் தலைவரும், மிராஸ்தாருமான திரு. ஏ. கிருஷ்ணசாமி செட்டி பி. ஏ., அடுத்துவரும் மதராஸ் லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி எலெக்ஷனில் கோயமுத்தூர் முனிசிபல், நகர தொகுதிக்கு ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக ஒரு அபேட்சகராக நிற்கிறார்.

சென்னை புரசைக் கம்பர் கழகம்

(ஒரு நிருபர்)

சென்னை, நவ, 29

இக் கழக ஆதரவில் இன்று காலை கழகத் தலைவர் திரு. வா. ச. கோவிந்தராஜ முதலியார் தலைமையில் கூடிய கூட்டத்தில் தமிழ்ப் பேராசிரியர் திரு. கோ. வடிவேலு செட்டியார் மரணத்துக்கு இரங்கி ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வருந்துகிறோம்

சில தினங்களுக்குமுன் ஸ்ரீவில்லி புத்தூரில், "ஐயனாலால வரவேற்பும், பார்ப்பன அதிகாரிகள் ஒத்துழைப்பும்" என்ற தலைப்பின் கீழ் வெளி வந்த செய்திக்கு ஆதாரமில்லையென்றும், யாரோ சொன்னதைக் கேட்டு எழுதி ஏமாந்து போனதாகவும் அதை எழுதிய திரு. எஸ். கே. முத்துசாமித் தேவர் தெரிவிப்பதினால் அச் செய்தியை வெளியிட்டதற்கு வருந்துகிறோம்.

ஆசிரியர்: "விடுதலை"

சென்னை சட்ட சபை

பல மசோதாக்கள் சட்டமாக நிறைவேறின

நில அடமான பாங்கி உத்தரவாதத் தொகை உயர்த்தப்பட்டது

சென்னை, டிச, 1

நேற்று காலை 11 மணிக்கு சென்னை சட்டசபையின் கூட்டம் கனம் பி. ராமச்சந்திர செட்டி தலைமையின் கீழ் ஆரம்பமாயிற்று.

பஞ்ச நிவாரண நிதிச் சட்டம், ஜில்லா முனிசிபல் திருத்தச் சட்டம், போர்ஸ்டல் கூடச் சட்டம், ஆற்றுப் பராமரிப்புச் சட்டம், போலீஸ் சட்டம், மோட்டார் வண்டிச் சட்டம், எஸ்டேட்ஸ் நிலத் திருத்தச் சட்டம், ஜில்லா முனிசிபல் லோக்கல் போர்டுச் சட்டம் முதலியவற்றிற்கு கவர்னரின் அங்கீகாரம் கிடைத்து விட்டதாகத் தலைவர் அறிவித்தார்.

பிறகு, நிதி மந்திரி கனம் சர். ஜாரி பிரேக்கன், 1934-35-ம் வருஷத்திய பொதுக் கணக்குக் கமிட்டி அறிக்கையையும், 1936-ம் வருஷத்திய ஆடிட் ரிப்போர்ட்டையும் ஆலோசனைக்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்று பிரேரேபித்தார்:—

திரு. ஜீ. ஆர். பிரேமய்யா ஒரு திருத்தத்தைப் பிரேரித்துப் பேசுகையில், நில அபிவிருத்திக் கடன் சட்டத்தின்படியும், விவசாயக் கடன் சட்டப்படியும் விவசாயிகளுக்கு விசேஷ கடன் உதவி அளிக்கப்பட வேண்டுமென்றும், கடன் மனுக்கள் சாதாரண காரணங்களுக்காக நிராகரிக்கப்படாமலும், துரிதமாகப் பைசல் செய்யப்படுமாறும், ஜில்லா உத்தியோகஸ்தர்கள் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் கூறினர்.

திரு. ஜி. ராமேஸ்வர ராவ் பேசுகையில், கடன் கொடுக்கும் விஷயத்தில் சர்க்கார் இன்னும் தாராளமான மனப் பான்மை காட்ட வேண்டுமென்றும், இந்த இலாகா விவசாயிகளுக்கு உண்மையில் உபயோகப்படுமாறு உடனே ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்றும், கடன் உத்தியோகஸ்தர் நிலத்திற்குப் போடும் மதிப்பு கூட்டுறவுச் சங்க மதிப்பை விட குறைவாயிருப்பதாயும், ஆகவே கூட்டுறவுச் சங்க மதிப்பை ஆதாரமாகக் கொள்ள வேண்டுமென்று விதிகள் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்றும் கூறினர்.

திரு. கே. ஏ. நாச்சியப்ப கவுண்டர், கடன் மனுப்போடும் விவசாயிகள் பலவிதக் கஷ்டங்களுக்கு உட்படுத்தப்படுவதாயும், தாராள மனதுடன் நடக்குமாறு சர்க்கார் எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் அறிவிக்க வேண்டுமென்றும் கூறினர்.

சர். ஏ. பி. பாத்ரோ பிறகு பேசுகையில், கடன் கொடுக்கும் விஷயத்தில் அனாவசியமான காலதாமதம் செய்யக் கூடாதென்றும், கடனுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையை மிச்சப்படுத்தாமலிருக்க ஜில்லா உத்தியோகஸ்தர்கள் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும், விவசாயிகள் கடன் பெறுவதை சாத்தியப்படாத வழியில் விதிகளியற்றப்படக்கூடாதென்றும் கூறினர்.

ரெவினியூ மெம்பர் பதில்

ரெவினியூ மெம்பர் விவாதத்திற்குப் பதிலளிக்கையில், பின்வருமாறு கூறினர்:—

தாழ்ந்த வகுப்பினர்க்கு கடன் கிடைப்பதில் கஷ்டமிருப்பதாக நான் நினைக்கவில்லை. அப்படி எவருக்காவது குறையிருந்தால் மேலதிகாரிகளுக்குத் தெரிவித்துக் கொள்ளவேண்டும். கடன் கொடுப்பது வரி கொடுப்போர் பணமாதலால் அது சரியாகச் செலவழிக்கப்படுமாறு பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இவ்வருஷம் வேலை துரிதமாகவே நடைபெற்றிருக்கிறது. செப்டம்பர் 30-ந் தேதிக்குள் 4 லக்ஷம் ரூ. வரை கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. தென்னூற்காடு, தென் கன்னடம், அனந்தபூர் முதலிய இடங்களிலிருந்து போதுமான மனுக்கள் வரவில்லை. விதிகள் அனுபவத்தில் எப்படி வேலை செய்கின்றன என்பதை ரெவினியூ போர்டைக் கொண்டு ஆராய்ந்து பின் அவசியமானால் மாறுதல்களைச் செய்யலாம்.

பிறகு திருத்தங்கள் வாபீஸ் வாங்கப்பட்டு ஆலோசனைக் கெடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற பிரேரணை நிறைவேறியது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு வசதி

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்ட மனை வாங்குவது சம்பந்தமாக இன்னும் மேலான முறைகளை அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்றும் இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை முழுமையும் திருப்பிக் கொடுக்கப்பட்டது நியாயமல்லவென்றும் திரு. பிரேமய்யா பிரேரித்தார்.

திரு. பெத்திராஜு, ஆதரித்துப் பேசுகையில் தொழிலாளர்களுக்கு மனைவாங்கிக் கொடுக்கையில் பின்னால் அவர்கள் அந்த இடத்திலிருந்து வெளியேற்றப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கூறினர்.

மற்றும் சில அங்கத்தினர்கள் ஆதரித்துப் பேசினர்.

கனம் ஹோம் மெம்பர், பதிலளிக்கையில் சர்க்கார் இது விஷயத்தில் அலக்ஷியமாகவில்லை யென்றும், புஞ்சை நிலத்திற்கு 150 ரூபாயும், நஞ்சை நிலத்திற்கு 350 ரூபாயும் எல்லையாக நிர்ணயிக்கப் பட்டிருப்பது அசாதாரண விலையல்லவென்றும், வீடு கட்ட நிலங்கள் வாங்குவது சம்பந்தமாக மனுக்கள் அனுப்பப்பட்டால் சர்க்கார் அதனை அனுதாபத்துடன் கவனிப்பார்களென்றும் கூறினர்.

திருத்தப் பிரேரணை வாபீஸ் வாங்கிக்கொள்ளப் பட்டது.

இடைவேளை போஜனத்திற்குப் பின் சட்டசபை மீண்டும் கூடியதும் சட்ட மந்திரி கனம் சர். கே. வி. ரெட்டி நாயுடு, 1920-ம் வருஷ சென்னை குழந்தைகள் சட்டத் திருத்த மசோதாவின் தனிக்கமிட்டி அறிக்கையை ஆலோசனைக் கெடுத்துக் கொள்ளுமாறு பிரேரித்தார்.

டாக்டர் சி. நடேச முதலியார் குற்றவாளி சிறுமியாக இருந்தால் அவளை மாஜிஸ்திரேட் முன்னர் ஆஜர் செய்ய பெண் போலீஸ் அதிகாரியை நியமிக்க வேண்டும் என்று ஒரு திருத்தம் பிரேரித்தார்.

மேற்படி யோசனையை ஆலோசிப்பதாகச் சட்டமந்திரி கூறியதின் பேரில், திருத்தம் வாபீஸ் வாங்கிக் கொள்ளப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேறியது.

பிறகு கிராமக் கோர்ட்டுகள் திருத்த மசோதாவும், மற்றும் சில மசோதாக்களும் சட்ட மந்திரியால் கொண்டுவரப்பட்டு நிறைவேறின.

மத்திய நில அடமான பாங்கி

சென்னை மத்திய நில அடமான பாங்கி வெளியிடும் டிபெஞ்சர்களுக்கு சர்க்கார் உத்தரவாத மளித்துள்ள எல்லையை 100 லட்சத்திலிருந்து 125 லட்சமாக உயர்த்த வேண்டுமென்று இச்சபை சர்க்காருக்குச் சிபார்சு செய்வதாக கனம் பி. டி. ராஜன் பிரேரித்தார்.

சர். ஏ. பி. பாத்ரோ தீர்மானத்தை எதிர்த்துப் பேசினர்.

திரு. சே. தே. நாயகம் பேசுகையில், சர்க்கார் உத்தரவாத மளிப்பது அவர்களே கடன் கொடுப்பதற்கு சமமாகுமென்றும், ஆகவே சர்க்கார் விவசாயக்கடன் சட்டப்படி கடன் கொடுக்கையில் செய்யும் முன் ஜாக்கிரதை ஏற்பாடுகள் இதிலும் செய்யப்பட வேண்டுமென்றும் பாங்கி தன் அதிகாரத்தை துர் உபயோகப்படுத்துவதைத் தடுக்க இப்போது சர்க்காருக்கு அதிகாரமில்லையென்றும், நில அடமான பாங்கியின் காரியதரிசியைத் தாங்களே நியமிக்க சர்க்கார் அதிகாரம் பெற வேண்டுமென்றும் கூறினர்.

மற்றும் சில அங்கத்தினர்கள் பேசியபின் பாங்கித் தலைவர் திரு. டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் பின்வருமாறு கூறினர்:

பாங்கியில் சர்க்கார் அதிகாரம் பெறுவது பற்றி அபிப்பிராய பேதமிருக்கிறது. டிபெஞ்சர் கடன் கொடுப்பதைப் பற்றி கூட்டுறவு சங்க ரிஜிஸ்தாருக்கு பூரண அதிகாரம் உண்டு. இந்த பாங்கியின் நிர்வாகம் சிறந்த முறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு போதுமான பாதுகாப்புகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. உத்தியோகஸ்தரைக் காரியதரிசியாக நியமிக்க நிர்வாக போர்டு சம்மதித்தது. ஆனால், பொதுச் சபை நிராகரித்து விட்டது. புதிதாக இனி பாங்குகளை ஏற்படுத்துவது ரிஜிஸ்திராரைப் பொறுத்தது. சர்க்கார் விவசாயிகளுக்குக் கொடுப்பதைவிட 100-க்கு அரை விதம் குறைந்த வட்டிக்கே பாங்கி கொடுக்கிறது.

கனம் பி. டி. ராஜன் சர்க்கார் இன்னும் பல நில அடமான பாங்கிகளை ஆரம்பிக்கப்படுவதால் மத்திய பாங்கியின் உத்திரவாதத்தை 25 லட்சமாக உயர்த்த வேண்டுமென்று கூறினர்.

அவசரப் பிரேரணை

இதற்குள் 4 மணி ஆகி விட்டதால் திரு. கோடி செட்டியின் அவசரப் பிரேரணை ஆலோசனைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது.

"இந்தப் பசலிக்குப் புஞ்சை நிலங்களுக்கும், தண்ணீர்த் தீர்வையிலும் வரி வஜா அளிக்க வேண்டு" மென்பதே திரு. கோடி செட்டியின் அவசரப் பிரேரணையாகும்.

பல அங்கத்தினர்கள் இதனை ஆதரித்துப் பேசினர்.

ரெவினியூ மெம்பர் சர். சார்லஸ் குட்டர் விவாதத்திற்குப் பின்வருமாறு பதில் கூறினர்.

புஞ்சை நிலத்திற்குச் சில வருஷங்களாக அளித்து வந்த வரி வஜா அளவுக்கு மிஞ்சிய தென்பதே என் அபிப்பிராயம். புஞ்சைத் தீர்வை ஏகருக்கு 7 அணா முதல் 1-12-0 வரை யிருக்கிறது. வஜா அளித்தால் மிகச் சிறு தொகையாக விருக்கும். அதனால் உண்மையில் பலனேற்படாது. நல்ல பலன் தராத ஒரு குறிப்பிட்ட புஞ்சை நிலப் பிரதேசத்திற்கு மட்டும் விசேஷமாக வரி வஜா செய்ய முடியுமே யொழிய எல்லா புஞ்சை நிலங்களுக்கும் வரி வஜா செய்ய முடியாது.

டெல்டா பிரதேசத்தைத் தவிர மற்ற இடங்களில் தண்ணீர்த் தீர்வை உயர்த்தப் படவில்லை. ஆகவே இப்போது அதைக் குறைக்கவும் வஜா அளிக்கவும் அவசியமில்லை.

பிறகு பிரேரணை ஓட்டுக்கு விடப்பட்டு நிறைவேறியது.

செவ்வாய்க்கிழமை கூட்டம்

இன்று காலை சென்னை சட்டசபை கனம் பி. ராமசந்திரரெட்டி தலைமையில் மீண்டும் கூடியது.

கேள்வி நேரத்திற்குப் பின், குண்டூர் புயல் சேத நிவாரண சம்பந்தமாக சர்க்கார் செய்து வரும் ஏற்பாடுகளைப் பற்றி யோசிப்பதற்காக சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென திரு. பி. வி. கிருஷ்ணைய சௌத்திரி ஒரு அவசரப் பிரேரணை கொண்டு வந்தார். பிரேரணை 4-மணிக்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுமென தலைவர் அறிவித்தார்.

பிறகு நில அடமான பாங்கியின் டிபெஞ்சர்களுக்கு உத்தரவாத மளிப்பதை 125 லக்ஷமாக உயர்த்துமாறு கொண்டுவரப்பட்ட பிரேரணை மீது நடந்த விவாதத்திற்கு கனம் பி. டி. ராஜன் பதில் கூறுகையில், பாங்கியின் நிர்வாகம் சரியாகவே நடந்து வருகிற தென்றும், பங்குகளை எல்லா வகுப்பினருக்கும் பிரதேசத்தினருக்கும் பிரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்றும், இனிப் பங்கு அளிக்கும் போது ஜெஜட்டிலும் வெளியிடுமாறு பாங்கியின் தலைவரைக் கேட்டுக் கொள்வதாகவும், பாங்கி உத்தியோகஸ்தரைக் காரியதரிசியாக நியமிக்கச் சம்மதித்தாலொழியச் சர்க்கார் இந்த அதிகப்படி உத்தரவாதத்தை அளிக்கமாட்டார்களென்றும், பாங்கு நிர்வாகத்திலோ, கூட்டுறவு இலாகாவிலோ ராஜீய உணர்ச்சிக்கு இடம் கொடுக்கக் கூடாதென்பதே சர்க்காரின் கொள்கை யென்றும் கூறினர்.

பிறகு தீர்மானம் நிறைவேறியது.

கைத் தொழில் சகாய மசோதா

கைத் தொழில் சகாயச் சட்டத் திருத்த மசோதாவை கனம் பி. டி. ராஜன் பிரேரேபிக்கையில் வெகு காலமாக இருந்து வரும் கைத் தொழில்களுக்கும், தகுதியானவைகளுக்கும் உதவியளிப்பதும் கடன் கொடுப்பது சம்பந்தமாக சில சௌகரியங்கள் செய்து கொடுப்பதுமே இம்மசோதாவின் நோக்க மெனக் கூறினர்.

சில அங்கத்தினர்கள் பேசிய பின் மசோதா சட்டமாக நிறைவேறியது.

பிறகு 1932-ம் வருஷ கூட்டுறவு சங்க சட்டத் திருத்த மசோதாவை கனம் பி. டி. ராஜன் கொண்டுவந்தார், மசோதா வியாழக்கிழமை வரையில் ஒத்திவைக்கப்பட்டது.

பிறகு, கனம் பொப்பிலி ராஜா சிக்காகோல் லோக்கல் பண்டு ஜில்லாவை விசாகப்பட்டணம் ஜில்லாவில் சேர்ப்பதற்காக லோக்கல் போர்டுத் திருத்த மசோதாவைப் பிரேரேபித்தார். மசோதா விவாதமின்றி சட்டமாக நிறைவேறியது.

பிறகு, 1934-35-ம் வருஷத்தில் சில இலாக்காக்களில் செலவழிக்க சில அதிகப்படித் தொகைகளை அனுமதிக்குமாறு பொக்கிஷ மெம்பர் பிரேரித்ததும் விவாதமின்றி அங்கீகரிக்கப்பட்டது.

நில வரி இலாகாவுக்கு 461500 ரூபாய் உபமான்யம் அனுமதிக்குமாறு ரெவின்யூ மெம்பர் கனம் சர். குட்டர் பிரேரேபித்தார்.

உபமான்யம் அனுமதிக்கப்பட்டது.

பிற்பகல் நடவடிக்கை

இடைவேளை போஜனத்திற்குப் பின் கனம் முதன் மந்திரி 24,400 ரூபாய் மான்யம் கோரினர். விவாதம் முடியவில்லை. இதற்குள் 4-மணி ஆகிவிட்டபடியால திரு. பி. வி. கிருஷ்ணைய சௌத்ரி அவசரத் தீர்மானத்தை ஆலோசனைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது.

அவசரத் தீர்மானம்

தமது அவசரத் தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசுகையில், குண்டூரில் புயல் ஏற்பட்டதின் காரணமாக பயிர்களுக்கும் கால் நடைகளுக்கும் ஏற்பட்ட சேதத்தை விளக்கிக் கூறியதுடன், அம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டத்தை நிவர்த்திப்பதற்கு பல்வேறு யோசனைகளையும் கூறினர். புயலால் விசேஷமாக பாதிக்கப் பட்டுள்ள இடங்களில் அதிக வஜா அளிக்க வேண்டுமென்றும், தோட்டப் பயிர்களை இழந்தவர்களுக்கு குறைந்த வட்டியில சர்க்கார் கடன் உதவி செய்ய வேண்டுமென்றும், கால் நடைப் பண்ணைகளிலிருந்து குடியானவர்களுக்கு மாடுகளை கொடுத்துதவ வேண்டுமென்றும், பக்கத்திலுள்ள காடுகளிலிருந்து புல் எடுத்துக்கொள்ள, குடியானவர்களுக்கு சர்க்கார் அனுமதியளிக்க வேண்டுமென்றும், வீடில்லாதவர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள மரங்களும், மூங்கிலும் கொடுத்துதவ வேண்டுமென்றும், தங்கள் கைத்தறிகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு சர்க்கார் பண உதவி செய்ய வேண்டுமென்றும் கூறினர்.

மற்றும் பல அங்கத்தினர்கள் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்.

ரெவின்யூ மெம்பர் சர். சார்லஸ் குட்டர் பதிலளிக்கையில், குண்டூரில் ஏற்பட்ட புயல் காரணமாக கஷ்டமடைந்த மக்களிடம், சர்க்கார் அனுதாபப் படுவதாகவும் அம் மக்களின் கஷ்டத்தை நிவர்த்திக்க சர்க்கார் தங்களால் கூடுமான எல்லாவற்றையும் செய்வார்களென்றும், வீடின்றித் தவிப்போருக்கு கடன் உதவி செய்யப்படுமென்றும் கூறினர்.

பிறகு தீர்மானம் வாபீஸ் வாங்கிக்கொள்ளப் பட்டது.

அடுத்த கூட்டம் 3-ந் தேதி வியாழக்கிழமை தினம் கூடும்.

மதுரை

ஜில்லா போர்டுக் கூட்டம்

(நமது நிருபர்)

மதுரை, நவ, 29

மதுரை ஜில்லா போர்டின் ஸ்பெஷல் மீட்டிங்கும், சாதாரணக் கூட்டங்களும் நாளது மீ 27, 28 தேதிகளில் மதுரை ஜில்லா போர்டு கட்டிடத்துக்குள் கனம். சேத்தூர் ஜெமீன்தார் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

மதுரைத் தாலூகா மதுரை சமயநல்லூர் சர்க்கிளில் காலியாயிருக்கும் ஐரோப்பியத் தொகுதிக்குக் கொடைக்கானல் கோவாப்ரேட்டிவ் சொசைட்டி காரியதரிசி, திரு. லோகன் அவர்களை போர்டு மெம்பராகத் தேர்ந்தெடுக்கப் பட்டது. இந்த ஸ்தானம் காலஞ் சென்ற திரு. போக்ஸ் இருந்த ஸ்தானமாகும்.

போர்டார் சுமார் 450 சாதாரண அயிட்டங்களைக் குறித்துப் பேசி முடிவு செய்தார்கள்.

இராமநாதபுரம் ஜில்லா போர்டு

இராமநாதபுரம் ஜில்லா போர்டின் அங்கத்தினர்களின் தேர்தல் இன்னும் முற்றுப் பெறாததை முன்னிட்டு பழைய அங்கத்தினர்களடங்கிய போர்டை டிசம்பர் முடிய சென்னை சர்க்கார் நீடித் திருப்பதாகத் தெரிகிறது.

இராமநாதபுரம் ஜில்லா போர்டுத் தேர்தல்

காங்கரஸ் காலிகள் அயோக்யத் தனம்

(டி. எஸ். என். எழுதுவது)

இராமநாதபுரம் ஜில்லா போர்டு சம்மந்தமாக இதுவரை நடந்திருக்கும் தேர்தல்களில் காங்கரஸ்காரர்கள் அதிகப்படியான ஸ்தானங்களை அடைந்திருப்பதாகக் கூறுகிறார்கள். உண்மையில் அவ்விதம் அதிகப்படியான ஸ்தானங்கள் அடைந்திருந்தால் அது காங்கரஸ்மீது கொண்ட காதலாலல்ல, காங்கரஸ் காலிகள் செய்த அயோக்யத் தனத்தாலேயே யாகும். இதுவரை தேர்தல் நடைபெற்ற எல்லா சர்க்கிள்களிலும் காங்கரஸ் காலிகளும் கூலிகளும் கலகம் நடத்தாமலிருக்கவில்லை. காங்கரஸ் காலிகளுடைய அட்டகாசத்திற்குப் பயந்தே பல ஓட்டர்கள் வெளியில்வந்து தங்கள் ஓட்டுகளை பதிவு செய்ய முடியாமல் போய்விட்டது. யோக்கியப் பொறுப்பு வாய்ந்த "ஜஸ்டிஸ்" கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் மானம், மரியாதைக்கு கொஞ்சம் அஞ்சியதால் காங்கரஸ் வெற்றியடைய நேரிட்டது. இல்லையேல் இராமநாதபுரம் ஜில்லாவில் காங்கரஸ் தலைகாட்ட முடியாது. போலீஸாரும் ஒரு சில இடங்களில் மௌனம் சாதித்து விட்டதாகவும் தெரிகிறது.

ஆகவே டிசம்பர் 12-ந் தேதி நடைபெறப் போகும் இராமநாதபுரம் சர்க்கிள் தேர்தலன்று எல்லா "ஜஸ்டிஸ்" கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் அந்த சர்க்கிளுக்குச் சென்று காங்கரஸ்காரருடன் எதிர்த்துப் போராடி அவர்களை முறியடித்துத் தலைகுனிந்து புறமுதுகுகாட்டி ஓடும்படி செய்ய வேண்டியது 'ஜஸ்டிஸ் கட்சி' தலைவர்களின் கடமையாகும். காலிகளுக்கு அஞ்சற்க!

சென்னை அசெம்பிளித் தேர்தல்

தாழ்த்தப்பட்ட வகுப்புக் கட்சி அங்கத்தினர்கள்

சென்னை, டிச, 1

சென்னை மாகாண தாழ்த்தப்பட்ட வகுப்புக் கட்சியின் காரியதரிசி, எழுதுவதாவது:—

சென்னை லெஜிஸ்லேடிவ் அசெம்பிளியில் தாழ்த்தப் பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 30 ஸ்தானங்களுக்கு மேற்படி கட்சியின் சார்பாக கீழ்க் கண்ட அங்கத்தினர்கள் அவர்கள் பெயருக்கு முன்னுள்ள தொகுதிகளுக்கு கட்சி தேர்தல் போர்டு அட்ஹாக் கமிட்டியினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்:—

சென்னை நகரம்:—சென்னை நகரம் தெற்கு மத்தி, திரு. ஜெ. சிவசண்முகம் பிள்ளை எம். ஏ., முனிசிபல் கவுன்சிலர், சென்னை.

நெல்லூர்:—கூடூர் டிவிஷன், ராவ் சாஹிப் எல். சி. குருசாமி, (மாஜி) எம். எல். சி.

கடப்பை:—ஜம்மால மடுகு, கடப்பை டிவிஷன்கள், டாக்டர் ஸ்காதசிவா, (மாஜி) எல். எல். சி.

கர்நூல்:—கர்நூல், தோன் டிவிஷன்கள், திரு. எச். எம். ஜெகன்னாதன், எம்.எல்.சி., முனிசிபல் கவுன்சிலர், சென்னை.

சித்தூர்:—திருத்தணி, புத்தூர் தாலூக்காக்கள், திரு. திருமலய்யா,

செங்கல்பட்டு:— செங்கல்பட்டு, மதுராந்தகம் தாலூகாக்கள், ராவ் பகதூர் எம். சி. ராஜா எம். எல். ஏ., செங்கல்பட்டு ஜில்லா போர்டு மெம்பர், கௌரவ மாஜிஸ்திரேட்.

திருவள்ளூர் டிவிஷன்:— ராவ் சாஹிப் வி. தர்மலிங்கம் பிள்ளை, எம். எல். சி.

வடார்க்காடு:—ராணிப் பேட்டை டிவிஷன் திரு. பி. எம். பழனிசாமி பிள்ளை.

திருவண்ணாமலை:—திரு. வி. ஜீவாகதேவ பிள்ளை, எம். எல். சி., எம். ஆர். ஏ. எஸ்.

தென்னார்க்காடு:— திண்டிவனம் செஞ்சி தாலூக்காக்கள். திரு. சே என். தமபியப்பன்.

சிதம்பரம் டிவிஷன்:— ஸ்வாமி ஏ. என். சகஜானந்தம் எம். எல். சி.

திருக்கோயிலூர் டிவிஷன்:— ராவ் சாஹிப் வி. ஐ. முனுசாமி பிள்ளை, எம். எல். சி.

தஞ்சாவூர்:—தஞ்சாவூர், பட்டுக்கோட்டை டிவிஷன்கள் திரு. ஆர். ஷண்முகம், (மாஜி ஜில்லா போர்டு அங்கத்தினர்.)

மன்னார்குடி டிவிஷன்:—திரு. ஆர். டி. மாணிக்கம்.

திருச்சினாப்பள்ளி:— அரியலூர் டிவிஷன், திரு. பாலகிருஷ்ண முப்பனர்.

மதுரை:— கொடைக்கானல் பழனி, திண்டுக்கல் தாலூக்காக்கள், ராவ் சாஹிப் என். சிவராஜ் பி. ஏ. பி. எல்., எம். எல். சி.

ராமனாதபுரம்:—சாத்தூர், அருப்புக்கோட்டை தாலூகாக்கள், திரு. பி. பரமேஸ்வரன், பி. ஏ.

திருநெல்வேலி:— கோவில்பட்டி டிவிஷன், திரு. ஆர். பி. பரமசிவம்

கோயம்புத்தூர்:— பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை, திரு. ஆர். தேசய்யா (மாஜி) எம். எல். சி.

சேலம்:—நாமக்கல் டிவிஷன், திரு. ஆர். கிருஷ்ண பண்டாரம், பி. ஏ. எல். டி.

திரு. சி. டி. டி. தயாளம் அபேட்சை

ராணிப்பேட்டை, நவ,

ராவ்பகதூர் ஆர். ஸ்ரீனிவாச அவர்களையும், ராவ்பகதூர் எம். [illegible] இராஜா அவர்களையும் தலைவர்களாகக் கொண்ட சென்னை தாழ்த்தப்பட்டோர் கட்சி [illegible] தற்சமயம் [illegible] சென்னை அசெம்பிளியின் [illegible] (கீழ் சபையில்) தாழ்த்தப்பட்டோருக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் 30-ல் [illegible]

—சி. டி. டி. தயாள

சுயமரியாதை சமதர்மக் காரர்கள் போக்கு

எலக்ஷன் பிரசாரத்தை வெறுத்த வீரர்கள் இன்று எலக்ஷன் பிரசாரம் செய்வது ஏன்?

நீலாவதி—ஜீவானந்தம் சட்டசபை எலக்ஷனுக்கு நிற்பார்களாம்?

நினைவு பேரேமி?

(தோழர் டி. எஸ். எஸ். மணியம் எழுதுகிறார்)

சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டு வேலை செய்து வந்த தோழர்களான:—ப. ஜீவானந்தம், நீலாவதி, ராம சுப்பிரமணியம், வல்லத்தரசு, அ. ராகவன் ஆகியவர்கள் சுயநலத்தையும், விளம்பரத்தையும், வருமானத்தையும் அடிப்படையாகக் கொண்டு சு. ம. இயக்கத்தை விட்டுப் பிரிந்து சு. ம, சமதர்ம இயக்கம் கண்டார்கள். தங்கள் அதி தீவிரக் கொள்கைகளைப் பரப்பப் போவதாகவும், பிற்போக்காளர்களையும் காங்கரஸ்-ஜஸ்டிஸ் கட்சிகளையும் எதிர்த்துப் பிரசாரம் செய்யப் போவதாகக் கிளம்பினார்கள். தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியோடு கலந்து விட்டார்; ராஜாக்கள், ஜமீன்தார்கள், மந்திரிகள் ஆகியவர்களின் அடிமையாய் விட்டார்; எலக்ஷன் பிரசாரக் கூலியாய் விட்டார்; தன்னுடன் வேலை செய்த சமதர்ம உணர்ச்சியுள்ள வாலிபர்களைக் காட்டிக் கொடுத்து விட்டார்; என்றெல்லாம் பிதற்றித் திரிந்தார்கள். தோழர் ஈ. வெ. ராமசாமி வீட்டில் உண்டு, உயிர் வாழ்ந்து, பணம் பெற்று, விளம்பரம் பெற்று பொறாமையால் வெளிப்பட்டவர்களால் வெளிவரும். "புது உலகம்"—'அறிவு' பத்திரிகைகளிலும் தூற்றி இழிவாய்ப் பிரசாரம் செய்தார்கள்; சு. ம. இயக்கம் வீழ்ச்சி பெற்றது என்றும் ஓலமிட்டார்கள். தமிழ்நாடு முழுதும் சு.ம. சமதர்ம நால்வர்கள் பிரசாரம் செய்வதாக விளம்பரப் படுத்தினார்கள்; பின் பண வசதியும் தேடினார்கள்; நாடு முழுதும் தங்கட்கு பூரண ஆதரவுகள் இருப்பதாகவும் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்; சென்ற இடங்களிலெல்லாம் தப்புப் பிரசாரம் செய்து ஆள் சேர்த்தார்கள்; எல்லா ஆர்ப்பாட்டங்களும் முடிந்ததும் திருச்சியில் சு. ம. சமதர்ம வீரர்களின் மகாநாட்டைக் கூட்டி யாவரும் காங்கரசில் சேர்ந்து அபேதவாதத்தை வலியுறுத்த வேண்டுமென்றும் முடிவு செய்து விட்டார்கள். திருச்சியிலேயே ஆரம்பித்த சு. ம. சமதர்மக் கூட்டம் திருச்சியிலேயே மறைந்தது.

இந்த சு. ம. சமதர்ம வீரர்கள் காந்தி முதல் ராஜகோபாலாச்சாரி, சத்தியமூர்த்தி, ஜவஹர்லால் வரை அவர்கள் போக்கையும் பொது மக்களை ஏமாற்றும் போலித் திட்டங்களையும், காரசித் திட்டத்திலுள்ள பல ஊழல்களையும் தேசியத் தலைவர்களின் நாணயம், ஒழுக்கம், சுயநலம், பதவி மோகம், உத்தியோக வெறி, ஏகாதிபத்தியத்தின் பெயரால் மக்களை வஞ்சிக்கும் பார்ப்பன தந்திரம், பார்ப்பனீயக் கொடுமை ஆகியவைகளை மேடைமேலேறி ஆவேசமாகப் பேசினவர்கள் தான். காந்தீயத்தையும், ராமராஜ்யத்தையும் எதிர்த்த வீரர்கள். பார்ப்பனர்கள் நிறைந்த தமிழ் நாட்டுக் காங்கரஸை குழிதோண்டிப் புதைக்க வேண்டுமென்று கச்சையிட்ட வீரர்கள். சத்தியமூர்த்தியின் வாய்க் கொழுப்பையும் சவடால் பேச்சையும் அவர் பிடரியில் அடித்து திருத்தி புத்தி கற்பிக்க வேண்டுமென்று கர்ஜித்த சு. ம. சமதர்ம சூரர்கள் இன்று காங்கரஸுடன் இரண்டறக் கலந்து விட்டார்கள். எந்தக் கட்சியையும் அங்கள் ஆதரியாமல் தங்கள் கால் பலத்திலேயே நிற்க புதுக் கட்சி தோற்றுவித்து பின்னர் அதைக் கொன்று விட்டு இன்று பார்ப்பனர்கள் ஆதிக்கமும், சத்தியமூர்த்தியின்பதவி மோகமும்பிடித்த கூட்டத்திற்கு நல்ல படித்த அடிமைகளாய்ப் போய்ச் சேர்ந்தார்கள். இந்தப் பதிவிரதைகள் காங்கரசுடன் கலந்ததுடன் நின்றாலும் அவர்களின் அபேதவாதத்திற்கு ஒரு அளவு கௌரவமாக இருந்திருக்கும்.

தங்கட்கு எலக்ஷன் பிரசாரம் பிடிக்கவில்லை யென்றும், எலக்ஷன் பிரசாரம்செய்வது கேவலம்-இழிவு, நாங்கள் எந்த எலக்ஷனிலும் தலையிடமாட்டோம்; நாங்கள் எலக்ஷன் கூலியாய்ப் போகமாட்டோம்; உத்தியோகம் பதவி மோகம் பிடித்தவர்களுடைய கும்பலில் கலந்து ஒத்துழைக்க மாட்டோம்; எங்கள் நோக்கம் இந்தியாவை—ரஷ்யாவாக்குவது? என்றெல்லாம் மானங்கெட்ட வீரம் பேசிவிட்டு இன்று தோழர்கள் ஜீவானந்தம் நீலாவதி கம்பெனி காங்கரஸ்காரர்களை ஆதரித்து எலக்ஷன் பிரசாரம் செய்கின்றார்கள். இத்துடனும் நிற்கவில்லை. பெண்கள் தொகுதிக்கு அம்மா நீலாவதியும் — தொழிலாளர்கள் பெயரால் ஜீவானந்தமும் வரப்போகும் சட்டசபை எலக்ஷனுக்கு அபேட்சகராக நிற்கப் போவதாக வதந்தியும் வெளியாய் விட்டது. இது பொய்யா? மெய்யா? என்பது தெரிய அதிக நாளாகாது. விரைவில் தெரிந்து விடலாம். இந்த ஆசைக்குப் பெயர் என்ன? தங்கள் பட்டம் துறந்து காங்கரஸில் புதிய ஞான ஸ்நானம் பெற்ற தோழர்கள்: ராமலிங்கம் செட்டியார். தொராம செட்டியார், ராமநாதன் செட்டியார் ஆகியவர்களும்; டாக்டர் பி. சுப்பராயன், காடிமுத்து பிள்ளை, கண்ணப்பர் கம்பெனி ஆகியவர்கள் எந்த நோக்கத்தோடு காங்கரஸில் கலந்தார்களோ அதற்கும், சு. ம. சமதர்ம வீரர்களில் சிலர் காங்கரஸில் கலந்து புதிய ஞானஸ்நானம் பெற்று தேர்தல் பிரசாரம் செய்வதற்கும் என்ன வித்தியாசம்?

இதனை நாம் விளக்க வேண்டியதில்லை சு. ம. சமதர்மக் கூட்டத்தில் முக்யஸ்தராயிருந்த தோழர் டி. என். ராமன் அவர்கள் சமீபத்தில் வெளியிட்ட கடிதமே விளக்கும்.

எவ்வித உடல் உழைப்புமில்லாமல் கை முதலு மில்லாமல் பொது வாழ்க்கை என்ற பெயரால் அதிலும் சமதர்ம-பொது வுடைமை-அபேதவாத—[illegible] வீரர்கள் என்ற விளம்பரத்தால் பொது மக்களை புதிய முறையில் ஏமாற்ற புறப்பட்டிருக்கும் புதிய காங்கரஸ் சமதர்ம—பொது வுடைமை—[illegible] வீரர்கள் தங்களுடைய முன்னுக்குப் பின் முரண் தெரியாமல் பொறாமை மேலீட்டால் சுயநல உணர்ச்சியால்—பதவி... விளம்பர மோகத்தால் எது வேண்டுமானாலும் செய்வார்கள்; செய்யட்டும். ஆனால், தோழர் ஈ. வெ. ராமசாமியையும் அவரைச் சேர்ந்தவர்களையும் குறைகூற வாய் உண்டா?

சென்னை மாகாணம் நிதானமுடையது.

இரட்டை யாட்சியில் வெற்றி பெற்றது

வெற்றி பெற்றவர்களுக்கு மேலும் சந்தர்ப்பமளிக்க வேண்டியதே முறை

கட்சி முறை அரசியல் சென்னை மாகாணத்துக்கே சொந்தம்

ஆண்ட்ரூஸ் விருந்தில் சென்னை கவர்னர் பேச்சு

சென்னை, டிச, 1

நேற்று மாலை பிரிமேசன் ஹாலில் திரு. ஸி. ஏ. ஹெண்டர்சன் தலைமையின் கீழ் செயிண்ட் ஆண்ட்ரூஸின் ஞாபகார்த்தமாக அளிக்கப்பட்ட விருந்தின்போது சென்னை கவர்னர் லார்டு எர்ஸ்கின் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கமாவது:—

"இத்தேசத்தின் நன்மையிலும், தீமையிலும் பங்குடைய மக்கள் இத்தேசத்திலுள்ள அரசாங்கத்தில் தங்கள் தங்களுக்குரிய பொறுப்பை ஏற்றுக்கொள்ளாவிடில், மற்ற அரசுரிமைப் பேர் வழிகள் கிளம்பி இதர குடியரசு நாடுகளில் செய்வதைப்போல பொது ஜனங்களுக்குப் பிரயோஜனப்படாத — தங்களுக்கு மட்டும் நம்பிக்கையுள்ள—விஷயங்களைப் போதிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

புதிய அரசியல் திட்டமானது ஜனநாயக முறைக்கு ஒரு சோதனையேயாகும். இதனால் ஜனங்களுடைய பிரதிநிதிகளுக்கு அதிகப்படியான அதிகாரம் கிடைக்கிறது. தென்னிந்தியா எப்போதுமே சட்ட வரம்புக்கு உட்பட்டு உழைக்கும் மனப்பான்மையை உடையது. ஆகவே, இப்புதிய சீர்திருத்தங்களையும் வெற்றிகரமாக நடத்தி வைக்குமென்று நான் நம்புகிறேன். கடந்த 16 ஆண்டுகளாய் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தை அது செவ்வையாக நடத்தி வந்ததுபோல இப்புதிய சீர்திருத்தத்தையும் நடத்துமென நம்புகிறேன்.

இன்னும் நான்கே நான்கு மாதங்களில் முற்றும் புதிய முறையில் அரசியல் திட்டம் வரப்போகின்றது என்பது நம் மாகாணத்தில் எத்தனைப் பேர்களுக்குத் தெரியும்? இந்தியாவில் இதுவரையில் இதைப் போன்றதோர் அரசியல் திட்டம் எந்த இடத்திலுமே இருந்தது கிடையாது. ஏனென்றால், இதுவரையில் அதிகார வர்க்க முறையே அமுலில் இருந்தது.

நான் ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். ஜனநாயக சர்க்கார் என்பது மிகமிகக் கஷ்டமான முறையாகும். இங்கிலாந்தில் ஜனநாயகம் உண்டு. அமெரிக்காவிலும் இருக்கிறது. இங்கிலாந்தில் இது எப்படி வெற்றிகரமாய் நடைபெறுகிறதென்றால் எந்தக் கட்சியும் நடைமுறையில் பரீட்சை செய்யப்படாத அதி தீவிரக் கொள்கைகளை வற்புறுத்துவது கிடையாது. நடு நிலைமையைப் பாதுகாக்கக்கூடிய ஓர் சக்தியைப் பெற்றிருப்பதால்தான், நாங்கள் பிரதிநிதித்துவங்களுடன் வெற்றியோடு நடத்தி வருகிறோம். ஆகவே, ஜனநாயக முறைகளைக் கொண்டுள்ள இந்தியாவுக்கு நாம் சொல்லுவது என்னவென்றால், அது எங்களிடமிருந்து அந்த சக்தியைக் கற்றுக் கொள்ள வேண்டும். அதாவது, எல்லா விஷயங்களிலும் மிதமாயிருக்க வேண்டும். அதி தீவிர மாறுதல் எக்காலத்திலும் யாருக்கும் பயன்படாது.

முன்பெல்லாம், பொது வாழ்க்கையில் ஈடுபடாதவர்கள் இப்போது சில மாதங்களாக வெளிவருகின்றதை நான் பார்க்கிறேன். அதிகார வர்க்க அரசாங்கத்தின்கீழ் முன்பிருந்தபோது, தேச க்ஷேம லாபத்தில் கவலைகொண்டவர்கள், அரசாங்கத்தின் தன்மையைப் பற்றியோ தங்களுடைய சொந்த அபிப்பிராயத்தைப் பற்றியோ வெளியிட வருவதில்லை. ஒருகால் அவசியமில்லை யென்று நினைத்தார்கள் போலும். ஆனால், இப்போது இந்த புதிய அரசியல் திட்டத்தின் கீழ், தங்களுடைய நன்மையையும் தேச நன்மையையும் கோருபவர்கள், அரசியல் திட்டத்தைப் பற்றியும், தங்கள் கருத்தைப் பற்றியும் வெளியிட வேண்டுமென்பதை உணர்ந்திருக்கிறார்கள்.

ஏனென்றால், தங்களுடைய அரசாங்க முறையில் தக்க பொறுப்பை தாங்கள் ஏற்றுக்கொள்ளாவிடில், வாய்ப்பேச்சு வீரர்கள் தலையெடுத்து மற்ற குடியரசு நாடுகளில் உதவாக்கரைப் பிரசாரம் செய்வது போல, இங்கும் செய்ய ஆரம்பிப்பார்கள். இது பொது ஜனங்களுக்கு நன்மையை உண்டாக்காது. தேசத்தின் க்ஷேம லாபத்தில் அக்கரை யுள்ளவர்களும், படித்தவர்களும், பேசத் தெரிந்தவர்களும், விஷயமறிந்தவர்களும் பொறுப் பேற்றுக்கொள்ளத் தயங்குவார்களானால், அவர்களில் பெரும்பாலோர் எதிர்காலத்தில் பாதகத்தையே அடைவார்கள்.

ஆனால், சில மாதங்களாக, இம்மாகாணத்தில் சில வருஷங்களாகவே நிலச்சுவான்தார்களும், பணக்காரர்களும் தங்களுடைய நேரத்தைப் பொருட்படுத்தாமல், பொது நல சேவையில் இறங்கி அரசாங்கத்தில் தங்களுக்குரிய இடத்தை ஏற்றுக்கொள்ள முயலுவதை நான் கண் கூடாய்ப் பார்க்கிறேன்.

திட்டத்தை நிராகரிப்போர்

புதிய திட்டத்தை நடத்தக் கூடாதென்று ஒரு சிலர் அபிப்பிராயப்படுவதாய்ச் சொல்லப்படுகிறது. ஆனால், அத்தகையவர்கள் இங்கு அதிகமாய்க் கிடையாதென்றே எண்ணுகிறேன். தென்னிந்தியாவில், பெரும்பாலோர் சட்ட ரீதியான வழியில் உழைக்க வேண்டுமென்ற மனப்பான்மை கொண்டவர்கள்.

மந்திரிகளுக்கு அதிக அதிகாரங்கள்

நிலவரி விஷயமானது பூராவும் புதிய மந்திரிகள் வசம் இருக்கும். இப்போதுள்ள முறையை மாற்றி, முற்றும் புதிதானதோர் முறையை அவர்கள் கொண்டுவந்து புகுத்தலாம். 30 வருஷத்திற்கொரு ரீசெட்டில்மெண்டு நடத்துவதை இனிமேலும் கையாளலாமா வேண்டாமா என்பதைப் பற்றி அவர்கள் சிந்திக்கவேண்டும்.

அடுத்தபடியாக கிராமக் கடன் விஷயமிருக்கிறது. இதையும், இந்தியாவின் குறை கூறப்படுகிற கல்வி முறையையும் கவனிக்க வேண்டும். சர்வ கலாசாலையைவிட ஆரம்பக்கல்விக்கு அதிகப் பணம் செலவழிக்க வேண்டுமென்று சொல்லுபவர்கள் உண்டு. மற்றுஞ் சிலர், இந்தியாவிலுள்ள தொழில்கள் சகலவற்றையும் அபிவிருத்தி செய்தால் போதுமென்கின்றனர். பிறகு, ஸ்தல சர்க்கார் நிர்வாகம் இருக்கிறது. இந்த ஸ்தல ஸ்தாபனங்கள், உத்தியோகப் பற்றற்ற சேர்மென்கள் கையில் இருப்பது நல்லதா அல்லது மத்திய சர்க்கார் அவ்வப்போது உத்தியோகஸ்தரை நியமித்துக் கொண்டிருக்க வேண்டுமா என்பதை முடிவுசெய்ய வேண்டும். இவைகளைப் பற்றி யெல்லாம் இரண்டுவித பலத்த அபிப்பிராயங்கள் உண்டு.

இவ்விஷயங்களுக் கெல்லாம் பொறுப்பு வாய்ந்தவர்கள் புதிய மந்திரிகள். அதாவது, சாதாரண குடியானவனுக்குரிய முக்கிய விஷயங்களாகிய கல்வி, சுகாதாரம், நிலவரி, மாகாண வரி முதலிய சகலவற்றையும் புதிய மந்திரிகள் தான் கவனிப்பார்கள்.

சென்னை மாகாணம் 16 வருஷங்களாக, மாண்டேகு-செம்ஸ் போர்டு சீர்திருத்தத்தை நன்கு நடத்தியிருக்கையில், வரும் திட்டத்தைப் பற்றி எனக்குப் பயமில்லை.

மறுமுறை இந்த விருந்து நடக்கும்போது, 1937-[illegible] அமுலிலுள்ள அரசியல் திட்டம் இப்போதுள்ளதைப் போல செவ்வையாக நடைபெறு மென்று நம்புகிறேன்."

நாகப்பட்டினம்

கீழத் தஞ்சை ஜில்லா போர்டு தேர்தல்

(ஒரு நிருபர்)

நாகை, நவ, 29

இதன் 33 ஸ்தானங்களில் 10ஸ்தானங்களுக்கு ஏற்கனவே போட்டியில்லை. 2 ஸ்தானங்களுக்குத் தேர்தல் நிறுத்தப்பட்டது. பாக்கி 21 ஸ்தானங்களுக்குத் தேர்தல் 27-11-36 நடந்தது. அதில் 11 ஸ்தானங்கள் முடிவு பின் வருமாறு:-பாக்கி 10 ஸ்தானங்கள் முடிவு பின்னர் அறிவிக்கப்படும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர் பின் வருமாறு:—

நன்னிலம் தாலூகா

திரு. ஸி. என். வைத்திலிங்கம் பிள்ளை (ஜ) அம்மையப்பன் சர்க்கிள்.

திரு. எம். ஆர். சாம்பசிவ அய்யர் (ஜ) நன்னிலம் சர்க்கிள்.

எரவாஞ்சேரி திரு. கே. எம். முகம்மது கௌஸ் சாயபு (ஜ) திருவீழிமிழலை சர்க்கிள்.

திரு. கோதண்டராமசாமி நாயுடு (ஜ) திருமருகல் சர்க்கிள்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை (காங்) கொரடாச்சேரி சர்க்கிள்.

மாயவரம் தாலூகா

திரு. பி. நாகலிங்கம் பிள்ளை (காங்) மாயவரம் சர்க்கிள்.

திரு. பி. திருஞானம் பிள்ளை (காங்) மணமேடு சர்க்கிள்

சீர்காழித் தாலூகா

குன்னம், திரு. சுப்பிரமணிய அய்யர் (காங்) திருவெண்காடு சர்க்கிள்.

நாகப்பட்டினம் தாலூகா

திரு. ராமசாமி நாயுடு (காங்) செவனூர் சர்க்கிள்

லட்சுமண சாம்பான் (ஆதிதிராவிடர்) (காங்) செவனூர் சர்க்கிள்.

திரு. ஏ. எம். சாமிநாத செட்டியார் (காங்) நாகப்பட்டணம் சர்க்கிள்.

தஞ்சாவூர்

மேலத் தஞ்சை ஜில்லா போர்டு எலக்ஷன்

(ஒரு நிருபர்)

தஞ்சாவூர், நவ, 30

இதற்கு 27-11-36 ல் எலக்ஷன் நடந்தது. ஏற்கனவே இதன் 37 ஸ்தானங்களில் 5 ஸ்தானங்களுக்கு போட்டியில்லை. பாக்கி 32 ஸ்தானங்களில் 17 ஸ்தானங்கள் விவரம் தெரிந்திருக்கிறது. பாக்கி 15 ஸ்தானங்களின் விவரம் பின்வருமாறு:—

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பெயர்

பாபநாசம் தாலூகா

திரு. ராஜகிரி பாவாஜி என்கிற அப்துல் முகம்மது ராவுத்தர் (ஜ) பாபநாசம் சர்க்கிள்.

திரு. ஆர். வி. சீனிவாச அய்யங்கார் (கா) பாபநாசம் சர்க்கிள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அய்யர் (கா) மெலட்டூர் சர்க்கிள்.

திரு. வஜ்ஜிரவேலு கொட்டைபுண்டார். ஆவூர் சர்க்கிள்.

திரு. ஏ. வீரய்யா வாண்டையார் (பூண்டி) சாலிய மங்கலம் சர்க்கிள்.

திரு. லோகநாத பண்டாரம் (ஆதிதிராவிடர்) சாலிய மங்கலம் சர்க்கிள்.

திரு. சாமி அய்யா கூராயர் ஆலங்குடி சர்க்கிள்,

கும்பகோணம் தாலூகா

திரு. டி. ஆர். தியாகராஜ சாஸ்திரி (கா) கும்பகோணம் சர்க்கிள்.

திரு. டி. ஆர். மாணிக்கம் பிள்ளை (கா) திருப்பனந்தாள் சர்க்கிள்.

திரு. சுப்பையா பிள்ளை (கா) நாச்சியார் கோவில் சர்க்கிள்.

ஸ்ரீமதி பவானி அம்மாள் (கா) நாச்சியார்கோவில் சர்க்கிள்.

தஞ்சாவூர் தாலூகா

திரு. நல்லமுத்து நாட்டார் (ஜ) நடுக்காவேரி சர்க்கிள்.

திரு. சண்முகம் காலாடி (ஜ) ஆதிதிராவிடர் சர்க்கிள்.

திரு. சுயம்பிரகாசம் பி. ஏ., பி. எல். (ஜ) திருக்காட்டுப்பள்ளி சர்க்கிள்.

திரு. ராமலிங்கசாமி பி. ஏ., பி. எல். (ஜ) செங்கிப்பட்டி சர்க்கிள்.

திரு. கிருஷ்ணராவ் (கா) திருவையாறு சர்க்கிள்.

அறந்தாங்கித் தாலூகா

ஜனாப் ஏ. ஆர். முகம்மது சாலிக்கு மரைக்காயர் (ஜ) பொன்பேத்தி சர்க்கிள்.

இராமநாதபுரம் சர்க்கிள் தேர்தல்

சேதுபதிக்குப் போட்டி பார்ப்பனரா?

(டி. எஸ். என். எழுதுவது)

இராமநாதபுரம் ஜில்லா போர்டின் இராமநாதபுரம் சர்க்கிள் தேர்தல் டிசம்பர் மாதம் 10-ந்தேதி நடைபெறப் போவதாகத் தெரிகிறது. இராமநாதபுரம் டவுனுக்கு நமது இராமநாதபுரம் இராஜாவும், அவருக்குப் போட்டியாக காங்கரஸ் பெயரால் ஒரு அய்யங்காரும் அபேட்சகர்களாக நிற்பதாகத் தெரிகிறது.

இராமநாதபுரம் இராஜா அவர்களை எதிர்த்துப்போடப் பிராமணரல்லாத பிரதிநிதிகளைத் தேடினார்கள். ஒருவரும் அகப்படவில்லை. முடிவில் காங்கரஸார் ஓர் அய்யங்காருக்குப் பட்டங்கட்டி பூமாலை சூட்டிப் போட்டியாக நிறக வைத்திருக்கிறார்கள். இப்போதைய காங்கரஸ் தலைவர் திரு. நேரு வந்து போட்டி போட்டாலும் ஜெயிக்க முடியாத நிலைமையில் ஓர் அய்யங்காரைப் போட்டியாக நிறுத்தியது இராமநாதபுரம் ஜில்லா காங்கரஸ்காரரின் அக்கிரமத்தை என்ன வென்று சொல்வது.

நமது இராமநாதபுரம் இராஜாவைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் இந்நாட்டிலில்லை. அவருக்குப் போட்டியாக நிற்கும் நபரைப் பற்றி அவர் தொகுதியினருக்கே தெரியாது. இந்நிலைமையிலுள்ளவர் இராமநாதபுரம் இராஜாவை எதிர்ப்பதென்றால் எவ்வளவு மானக்கேடான காரியம்.

இராமநாதபுரம் சமஸ்தானம் தென்னிந்தியாவில் பிரக்யாதி பெற்றவைகளில் ஒன்று. அது தமிழ் வளர்ச்சிக்காக செய்த வேலைகள் பல. இத்தகைய சமஸ்தான தலைவருக்குப் போட்டியாக, அதே சமஸ்தானத்தில் ஊதியம் பெற்று வந்த மரபில் தோன்றியதாக சொல்லப்படும் ஓர் அய்யங்கார் அபேட்சகராக நிற்பதென்றால் எவ்வளவு நன்றி கெட்டதனம்.

ஆகவே, காங்கரஸ் பெயரால் எந்த அய்யர், அய்யங்கார் நின்றாலும் சேதுபதி மன்னரை அசைக்க முடியாது என்பது திண்ணம். இனியாவது பிராமணர்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கையை நமது இராஜா அவர்கள் சிந்திப்பார்களாக.

சுயமரியாதை சமதர்மக் கட்சி

திரு. டி. என். ராமன் ராஜிநாமா

சென்னை, நவ, 27

சென்ற 1-11-36-ல் திருச்சினாப்பள்ளியில் நடைபெற்ற தமிழ் மாகாண சுயமரியாதை சமதர்மக் கட்சி மகாநாட்டில், சு. ம. சமதர்மக் கட்சி காங்கிரஸ் அபேதவாதக் கட்சியுடன் சேர்ந்து விடவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேறியது.

இவ்விஷயம் விஷயாலோசனைக் கமிட்டியில் வந்த பொழுது நான் அதை எதிர்த்தேன். பல தோழர்கள் தீர்மானத்தைக்கண்டு மனமுடைந்தனர்.

சிலர் கண்மூடி மௌனியாகவிருந்தனர். எனினும் இவ்விஷயம் மகாநாட்டில் தீர்மானமாக வெளிவர முடிவு செய்யப்பட்டது. இவ்விஷயம் முடிவு செய்யப்பட்ட நோக்கத்தை கவனித்தால் இரண்டொரு தோழர்களின் பொருட்டு தனிப்பட்ட முறையில் முடிவு செய்யப்பட்டதாகத் தோன்றுகிறதே தவிர சுயமரியாதை சமதர்மக் கட்சியின் முற்போக்கிற்காக செய்யப்பட்டதாகத் தோன்றவில்லை.

சுயமரியாதை சமதர்மக் கட்சியின் நோக்கங்களை புணர்ந்தோர் நான் சொல்வது சரியென உணர்வர்.

சுயமரியாதைக் கட்சிக் கொள்கைகள் நாட்டிற்கு அவசியமான முற்போக்குடையவைகளாக இருக்கை. இடையில் அக்கட்சி தான் கொண்ட கொள்கைகளினின்றும் தவறியதாக உணர்ந்த சிலர் அக்கட்சியின் முற்போக்கான கொள்கைகளை விடாது உழைத்து வருவதற்காக ஒன்று கூடி முடிவு செய்தோம். அதன் விளைவாக தோழர் முத்துசாமி வல்லத்தரசு அவர்கள் தலைமையில் திருச்சியில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் சு.ம.கட்சியின் முற்போக்கான கொள்கைகளை விடாது உழைக்க விரும்புபவர்களுக்கு ஒரு கட்சி வேண்டுமென முடிவு செய்து அக் கட்சிக்கு சுயமரியாதை சமதர்மக் கட்சி யெனப் பெயரிடப்பட்டது. அக்கட்சியின் முக்கிய கொள்கை வருமாறு:—

"நாட்டின் முற்போக்கிற்கு அவசியமான சமதர்மக் கொள்கைகளை ஆதரித்து பிற்போக்கான கட்சிகளின் குறைபாடுகளை பொது மக்களுக்கு விளக்கிக் காட்டி சுயமரியாதை அல்லது பகுத்தறிவு சமதர்மக் கொள்கைகளுக்காகப் பாடுபடுவதென்றும், ஜஸ்டிஸ் காங்கிரஸ் போன்ற பிற்போக்கான கட்சிகளின் ஊழல்களை வெளிப்படுத்தும் வேலையை மேற்கொள்ளவேண்டும்" என்பதுமாகும். தனியாக இருந்து கொண்டு யாதொன்றும் சாதிக்க முடியாது. எனவே காங்கிரசில் சேர்ந்தால் நமது கட்சிக் கொள்கைகளுக்காக அதிகமாகப் பாடுபட முடியும் என்பது நவம்பர் 1-ந் தேதி திருச்சியில் தீர்மானம் செய்தவர்களின் கருத்து. இதை நான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

காங்கிரசில் அபேதவாதக் கட்சி என்றொரு பிரிவு இருப்பது உண்மையே. அந்தப் பிரிவில் சேருவதற்கு முதலில் சாதாரண காங்கிரஸ் 4 அணா அங்கத்தினராய் சேர வேண்டும். பிறகுதான் காங்கிரஸ் சமதர்ம வாதியாக ஆக முடியும். எனவே சாதாரண காங்கிரஸ் கட்டுத் திட்டங்களுக்கு உள்ளடங்கித் தான் பேச முடியும். மீறிப் பேசினால் 'வெளியே போ' என்று சொல்லி விடுவார்கள். தனியாக இருந்ததை விட அங்கு போயும் நமது நடவடிக்கைகள் விசாலமடைய முடியாதென்பதற்காகவே இதைக் கூறவேண்டியிருக்கிறது. மற்றும் காங்கிரஸ் பிற்போக்கான கட்சி, அதன் ஊழல்களை வெளிப்படுத்த வேண்டியது நமது சு. ம. சமதர்மக் கட்சியின் தலையாய கொள்கையாக இருக்க அதற்கு மாறாக அந்த பிற்போக்கான கட்சியில் நன்றாம் புகுவதென்பது அதைவிடக் குறைவு வேறு ஒன்றும் இல்லை என்பது எனது கருத்து.

தனிப்பட்ட நபர்களிடம் உள்ள காய்ச்சலால் சில தனிப்பட்டவர்களின் சௌகரியத்திற்காகவும் திருச்சி மகாநாட்டுத் தீர்மானம் செய்யப்பட்டதாக எண்ண வேண்டியிருக்கிறதே தவிர முற்போக்குக்காக செய்யப்பட்டதாக என்னால் கருத முடியவில்லை. எதிரிகளின் கையில் சிக்கியதோடு நமது கட்சிக் கொள்கைகளையும் கை நழுவவிட்டு விட்டோமென்றே சொல்லவேண்டியிருக்கிறது.

இது குளிக்கப்போய் சேற்றைப் பூசிக் கொண்ட கதையாகவே இருக்கிறது. நமது கொள்கைக்கு முரணான எதிர் கட்சியில சேர வேண்டிய நிலைமை என்ன ஏற்பட்டுவிட்டதென்பதை என்னால் உணரக் கூடவில்லை. எனவே சு. ம சமதர்மக் கட்சி, தமிழ் மாகாணக் கமிட்டி, சென்னை ஜில்லாக் கமிட்டி ஆகியவற்றில் எனக்குள்ள பதவிகளை இதன் மூலம் ராஜிநாமா செய்து விடுகிறேன்.

சென்னை சட்டசபைத் தேர்தல்

வாக்காளர்களே உஷார்!

(எஸ். மதிவாணன்)

தாழ்த்தப்பட்ட மக்களைத் தட்டி எழுப்பி, அறிவூட்டி, உலகத்தைக் காணச் செய்த வீரர் திரு. பி. அருணாசலம், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சித் தாலூகாக்களின் தாழ்த்தப்பட்டோர் சார்பில் சென்னை சட்டசபைத் தேர்தலுக்கு அபேட்சகராக நிற்கிறார். அவர் கோவை ஜில்லா ஹரிஜனசங்க அங்கத்தினர் என்பதை தாழ்த்தப்பட்ட மக்கள் அறிவார்களாக. அன்னாருக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் நல்ல ஆதரவளித்து தேர்தலில் ஜெயம் பெறச் செய்வது அவர்களுடைய பெரிய கடமைகளில் ஒன்றெனக் கருத வேண்டும். அன்றியும், மற்றவர்களும் அன்னாருக்குத் தங்கள் ஓட்டுகளைத் தாராளமாகத் தருவார்கள் என்றே கருதுகிறேன்.

திரு. பி. அருணாசலம் தாழ்த்தப்பட்டோருக்காக இராப் பள்ளி யமைத்தும், இன்னும் பல துறைகளில நன்மை புரிந்து மிருப்பதால் அவர்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். முடிவில் தாழ்த்தப்பட்டோர் தம கடமையைச் செய்யப் பின் வாங்கமாட்டார்கள் என்னும் திருப்தியோடு, கோவை ஜில்லா தேவேந்திரகுல வேளாள மக்களை தங்கள் மகாஜன சங்கத் தலைவராய இவருக்காக உழைக்கும் படிக்கு வேண்டிக் கொள்கிறேன்.

ஹாசீம் முஸ்லிம் வாலிபர் சங்கம்

நிறைவேறிய தீர்மானம்

(ஒரு நிருபர்)

மேலைப் பாளையம், நவ, 26

இன்று மாலை 5 மணிக்கு திரு எ. செய்யது சாஹிப் தலைமையில மேற்படி சங்கத்தார் சங்கக் கட்டடத்தில கூடினர். அதுபோது சமூக ஸ்தாபனங்கள் பல வற்றில பெரும் பதவி வகிப்போரும், பல கம்பெனிகளின் முக்கியஸ்தரும, நகரசபை கவுன்சிலரும், பொதுஜன ஊழியருமான பிரபலஸ்தர் ஆலி ஜனாப் வ. செ. த. ஷெய்கு மன்சூர் சாஹிப் அவர்கள் சங்கம கேட்டுக் கொண்டதற்கிணங்க அடுத்துவரும் சென்னை அசம்பிளித் தேர்தலில் திருநெல்வேலி முஸ்லீம் தனித் தொகுதி அபேட்சகராய் நிற்கிறபடியால அகில இந்திய முஸ்லிம் பார்லிமெண்டரி போர்டார் அவரையே அத்தொகுதிக்கு அபேட்சகராக நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்வதாகவும், அத்தொகுதியிலுள்ளவர்களும் மற்றுமுள்ள முஸ்லிம்களும் அவருக்காகப் பாடுபட்டு அவரை வெற்றி பெறச் செய்யும்படி கேட்டுக் கொள்ளுவதாகவும் தீர்மானம் கொண்டுவரப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

சேலம் ஜில்லா போர்டு தேர்தல்

ராஜகோபால் வெற்றி

காங்கரஸ் குழிதோண்டி புதைக்கப்பட்டது

(ஒரு நிருபர்)

சேலம், நவ, 29

சேலம் ஜில்லா போர்டு தேர்தலில் மேற்கண்ட ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் தருமபுரி தாலூகாவில் பிரபல காங்கிரஸ் அபேட்சகர்களை முறியடித்து வெற்றி மாலை சூடினர். இந்த தாலூகாவில் ஜனங்கள் காங்கிரஸ் அபேட்சகர்கள் முறியடிக்கப்பட்டு மூக்கறுபட்டுக் கொண்டதை சந்தோஷத்துடன் கொண்டாடுகின்றனர். இரண்டு நாட்களாக டவுனெங்கும் இதே பேச்சாக இருக்கின்றது. பாண்டு வாத்தியங்களும், ஜே கோஷங்களும் வானைப் பிளக்கின்றன. சேலம் ஜில்லாவில் காங்கிரஸ் கட்சியின் தூண்களில் ஒருவராக கருதப்பட்ட ஒரு முக்கியஸ்தர் தோற்றமை குறிப்பிடத்தக்கது. தருமபுரியில காங்கிரஸ்காரர்கள் தாங்கள் ஜெயிப்பதற்கு பொய்ப் பித்தலாட்டப் பிரசாரங்கள் செய்தும் பயன்படவில்லை. டவுனில் அவர்களிருக்கு மிடமே தெரியவில்லை.

வெற்றி பெற்றவர்களின் விவரம்

நல்லம்பள்ளி சர்க்கில்

	ஓட்டுகள்.
திரு. எம். கந்தசாமி கவுண்டர்	650
திரு. ஸ்ரீராம ராஜு (காங்)	504
தருமபுரி சர்க்கில் பொதுத் தொகுதி	
திரு. பி. ஆர். ராஜகோபால கவுண்டர்	1686
திரு. டாக்டர் தருமலிங்கம் (காங்)	1412

இவரே காங்கிரசின் முக்கியஸ்தர்.

ஆதிதிராவிடத் தொகுதி

திரு. முனுசாமி	1509
திரு. கே. வரதன் (காங்)	262

பென்னாகரம் சர்க்கில்

திரு. கஞ்சா செட்டி—வெற்றி.
,, காங்கரஸ்—தோல்வி.

கீழத் தஞ்சை ஜில்லா போர்டு தேர்தல்

ஜனாப் க. ம. முகம்மது கோஸ் வெற்றி

(ஒரு நிருபர்)

இரவாஞ்சேரி, நவ, 29

நன்னிலம் தாலூகா திருவீழிமிழலை சர்க்கிளில் சென்ற 27-ந் தேதி நடைபெற்ற தேர்தலில் இரவாஞ்சேரி பிரபல மிராசுதாரும் இந்தியா, பர்மா, மலாயா முதலிய நாடுகளில் போற்றப்படும் பிரக்யாதிப் பெற்ற அநேக வியாபார ஸ்தலங்களின் சொந்தக்காரரும், மற்ற வர்த்தக சிங்க சிகாமணியும், பொதுஜனப் பிரியரும், தேசிய சுய கலைக்கோசா பரோபகாரியும், தயாளம் பொருந்திய உண்மை உத்தம சீலரும், பொது மக்கள் நலத்துக்காகவே இமைப் பொழுதும் பாடுபடும் வீரத் தியாகியுமான ஆலி ஜனாப் க. ம. முகம்மது கோஸ் அவர்களுக்கே பெருத்த வெற்றி.

ஜனாப் க. ம. முகம்மது கோஸ் அவர்களுக்கு 1100 வோட்டுகளும் அவருக்குப் போட்டியாய் நின்ற காங்கிரஸ் அபேக்ஷகரான முடிகொண்டான் திரு. ஆர். பஞ்சாபகேசய்யர் அவர்களுக்கு 923 வோட்டுகளும் முறையே கிடைக்கப் பெற்று 177 வோட்டுகள் அதிகமாக கிடைத்து ஜனாப் க. ம. முகம்மது கோஸ் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

காதலுணர்ச்சியை அளக்கும் கருவி

விஞ்ஞான ஆராய்ச்சியின் அபிவிருத்தி

ருமேனியா தேசத்தவரான புரபசர் ஜார்ஜ் மாரினெஸ்கோ என்பவர் காதலுணர்ச்சியை அளக்க ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடித்துள்ளார்.

அவ்வியந்திரத்தில் ஈயத்தால் செய்யப்பட்ட இரு தட்டுகளும், கேல்வனா மீடர் (அளவைக் காட்டும் கருவி) ஒன்று மிருக்கின்றன அவைகளுக்கிடையே பல மின்சாரக் கம்பிகளுமுண்டு.

யாருடைய காதலுணர்ச்சியின் அளவைக் கண்டுபிடிக்க வேண்டுமோ அவருடைய இரு கைகளிலும் அவ்விரண்டு ஈயத் தட்டுகளையும் கட்டிவிட்டு, காதலிப்பதாக சந்தேகிக்கப்படும் பெயர்களை ஒவ்வொன்றாய் சொல்ல வேண்டும். அப்படி ஒவ்வொரு பெயரையும் உச்சரிக்கும்போது கேல்வனா மீடரிலுள்ள ஊசி மன உணர்ச்சிக்குத் தகுந்தவாறு அசைவாடும்.

தியாகிகள் மோகம்

மாஜி திவான்பகதூர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியாரைப் பற்றி "நவமணி" கூறுவதாவது.

சென்றவாரம் தாங்கள் ராவ்பகதூர், திவான்பகதூர் பட்டங்களைத் துறந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கலக்கச் செய்த வீரத்தைப் பற்றி எழுதியிருந்தேன். தங்கள் தம்பியார் கோவை மகாத்மா—அவினாசிலிங்கம் செட்டியார் பிரிட்டிஷ் பி. அண்டு ஓ. பாங்கியின் கோயமுத்தூர் கிளை டைரக்டராக இருந்து கொழுத்த கமிஷன் அடிப்பது சுத்த சுதேசியமா? பரதேசியமா? சென்ற வாரம் அவசரத்தில் இன்னொரு முக்கியமான சங்கதியைக் குறிப்பிட மறந்து விட்டேன். தாங்களும் மேற்படி பிரிட்டிஷ் பாங்கியின் "சீக்மெண்டர்" பதவி வகித்து இலாபம் பெற்று வருவதாகக் கேள்விப் பட்டேன். சுதேசி உணர்ச்சியும், தேச பக்தியும் மேலிட்டு பிரிட்டிஷ் பட்டத்தை தியாகம் செய்த தாங்கள் அந்த பிரிட்டிஷ் சம்பந்தத்தை அறுத்துத் துறக்கிறீர்களா? இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

சென்னை ஆழ்வார் நகர் குடிவாசிகளின் கூட்டம்

(ஒரு நிருபர்)

சென்னை, நவ, 29

இன்று மாலை 6 மணிக்கு ஆ. தி. பொ. க. ஊழிய சங்கத்தில் திரு ஜீ. மாணிக்கம் பிள்ளை அவர்கள் தலைமையில் ஆழ்வார் நகர் குடிவாசிகளின் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. சங்கக் காரியதரிசி திரு. எம். பி. தங்க அரசன் கூட்டத்தின் நோக்கத்தைப் பற்றியும் அப்பேட்டையின் சுகாதாரக் குறைவைப் பற்றியும், பொது மக்கள் அதிகக் குடிக்கூலியால அடையும் கஷ்டங்களைப் பற்றியும் பேசினார். கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஜீ. மாணிக்கம் பிள்ளை பேசுகையில் அப்பேட்டையின் தெருவிலும் மேற் கரைகளும் கோர்ட்டில் ஒப்புவிக்கப் பட்டிருக்கிறதோடும், கோர்ப்பரேஷன் தங்கள் கஷ்டங்களையும், வேலையிலாமல் அவதிப்படும் நிலைமையையும் எடுத்துக் கூறிக் குடிக்கூலியைக் குறைக்குமாறு கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும் குறிப்பிட்டார். இவ்விஷயத்தைக் குறித்து ஒரு தீர்மானமும் நிறைவேறியது பின்பு காரியதரிசி வந்தனோபசாரம் கூறக் கூட்டம் இனிது கலைந்தது.

சென்னை முஸ்லீம் முன்னேற்றக் கட்சி

தொண்டர்கள் தேவை

(ஒரு நிருபர்)

சென்னை, நவ, 30

சென்னை இராஜதானி முஸ்லீம் முன்னேற்றக் கட்சிக்குக் கௌரவமாக சேவை செய்யும் தொண்டர்கள் அதிகமாக வேண்டியிருக்கிறது. அப்படிச் சேவைசெய்ய முன் வருவோருக்கு இக் கட்சி புது உடுப்புகளை உதவும், ஆதலால் இக் கட்சிக்கு உழைக்க விரும்பும் வாலிபர்கள் அனைவரும் தயவுசெய்து இக் கட்சித் தலைவர் சௌகார் பி. அப்துல் ஹக்கிம் சாஹிப் பகதூருக்கு எழுதவும்.

விலாசம்:- ஹக்கிம் மான்ஷன்ஸ்
14, ஸ்டிரிங்கர்ஸ் தெரு,
ஜி. டி. சென்னை.

பல் வயித்தியர் கூற்று

"பயப்படாதீர்"

ஹங்கேரியிலுள்ள பல் வயித்தியர் ஒருவரிடம் பல்வலி யுடைய ஒருவர் சென்று அந்தப் பல்லை எடுக்குமாறு கேட்டார். உடனே வயித்தியர் சம்மதித்து, "ஒன்றும் தொந்தர இல்லாது எடுத்து விடுகிறேன்" என்று தைரியம் கூறி அவரை அதற்கான ஆசனத்தில் அமர்த்தினார். பிறகு ஆயுதமோடு அவரை அணுகி பல்லைப் பிடுங்க ஆரம்பித்தார். இழுத்து இழுத்துப் பார்த்தார்; பல் வருகிற வழியாக இல்லை பிறகு முழுபலத்தோடு ஒரு இழுப்பு இழுத்தார், உடனே தலையே கையோடு வந்துவிட்டது. அதன் பிறகும் அவர் அதைச் சும்மா விடவில்லை. அவர் அந்தப் பல்லை பிடுங்கிய பிறகுதான் சமாதானம் அடைந்தார்.

ரயில்வே கால அட்டவணை

சென்னை: (சென்ட்ரல் ஸ்டேஷன்)

வண்டியின் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
பெங்களூர்		
மெயில் ...	மாலை 9-30	காலை 6-10
,, பாசஞ்சர் ...	மாலை 9-40	காலை 5-30
,, பாசஞ்சர் ...	காலை 6-20	மாலை 7-40
,, எக்ஸ்பிரஸ் ...	மாலை 1-0	மாலை 2-10
பம்பாய் ,, ...	காலை 8-30	மாலை 4-55
,, மெயில் ...	மாலை 8-45	காலை 5-55
வால்டேர்-பாசஞ்சர் ...	மாலை 7-30	காலை 10-35
,, பாசஞ்சர் ...	காலை 9-5	மாலை 6-10
சொரனூர் டிரங்க்		
எக்ஸ்பிரஸ் ...	காலை 7-45	மாலை 5-11
செய்யூர்		
பாசஞ்சர் ...	காலை 9-20	மாலை 8-40
ஜோலார்பேட்டை		
பாசஞ்சர் ...	மாலை 12-50	மாலை 2-0
ரேணிகுண்டா லோகல் ...		காலை 9-40
,, பாசஞ்சர்	— —	மாலை 9-25
காட்பாடி		
பாசஞ்சர் ...	மாலை 5-30	காலை 9-40
அரக்கோணம்		
பாசஞ்சர் ...	மாலை 6-30	— —
மலபார்		
எக்ஸ்பிரஸ் ...	மாலை 8-5	காலை 7-20
கல்கத்தா		
மெயில் ...	மாலை 8-35	காலை 7-50
புருமயவண்டன்		
எக்ஸ்பிரஸ் ...	மாலை 9-15	காலை 6-30

சென்னை: (எழும்பூர்)

வண்டியின் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
செங்கோட்டை		
பாசஞ்சர் ...	காலை 7-30	மாலை 7-30
கடலூர்		
பாசஞ்சர் ...	மாலை 4-5	காலை 11-20
இண்டோ—சிலோன்		
எக்ஸ்பிரஸ்	,, ,, 9-0	... 6-4
திருவனந்தபுரம், பாஸஞ்		
பாசஞ்சர்	,, 9-30 ,,	... 6-1
திருச்சி பார்சல்		
பாசஞ்சர்	,, 10-20 ,,	... 5-3
கார்டு லைன்		
தனுஷ்கோடி பாஸஞ்		
பாசஞ்சர் ...	காலை 11-25	மாலை 2-4
திருவனந்தபுரம்		
எக்ஸ்பிரஸ் ...	மாலை 8-0	காலை 7-20

பெங்களூர் பங்கு மார்க்கெட்.

பெங்களூர், டிச. 1

பெங்களூர், புரோக்கர் எம். கஞ்சப்பைய ஜாகிர்தார் கீழ்க்கண்ட பங்கு விலைகளை அனுப்பியிருக்கிறார்.

	செலுத்தப் பட்டது	தற்கால விகிதம்	
	ரூ.	ரூ.	அ.
பாங்கி			
இம்பீரியல் எப்.பி.	500	1573	0
இம்பீரியல் கண்ட்	125	392	0
ரிசர்வ்	100	138	12
இந்தியா	50	134	0
மைசூர்	100	304	0
பெங்களூர்	10	7	0
இண்டஸ்டிரியல்	25	6	0
தேவாங்கா	10	8	8
சென்ட்ரல்	25	35	10
குபிலான்	25	27	4
ஸ்டேட் எய்டட்	25	15	4
திருவாங்கூர்நாஷனல்	50	55	4
இந்தியன்	50	141	0
,,	10	30	2
இன்ஸ்யூரன்ஸ்			
ஏஷியாடிக்	5	5	4
ஓரியண்டல்	200	5460	0
நியூ இந்தியா	15	45	14
வல்கன்	10	8	0
ஆலை			
பெங்களூர்	100	167	0
,, பிரிபரன்ஸ்	100	113	0
பக்கிங்ஹாம்	100	180	0
,, பிரிபரன்ஸ்	100	164	12
கோகாக்	100	208	0
கெய்சர்-இ-ஹிண்ட்	2½	1	0
மினர்வா	100	62	0
மகாராஜா	50	82	8
கிருஷ்ணராஜேந்திரா	25	6	8
சீதாராம்	100	50	8
கமபோடியா	10	10	0
வசந்தா சாதா	100	106	0
,, பிரிபரன்ஸ்	100	113	0
ராஜலக்ஷ்மி சாதா	50	51	0
,, பிரிபரன்ஸ்	50	53	0
காலேஸ்வரா	100	294	8
டிபன்சர்			
கோலார்	100	100	4
ஹாசன்	100	106	0
மைசூர் சர்க்கரை	80	92	0
திருச்சி-ஸ்ரீரங்கம்	100	109	12
சில்லரை			
பிரீமியர் சாதா	75	87	0
,, பிரிபரன்ஸ்	100	112	0
டாடா ஹைட்ரோ			
சாதா	100	190	0
,, பிரிபரன்ஸ்	100	163	0
டாடா இரும்பு சாதா	75	212	0
,, டிபர்டு	30	827	0
,, 1-வது பி-ஸ்	150	202	0
,, 2-வது பி-ஸ்	100	179	6
பி. வி. ரயில்வே	25	20	0
பெங்களூர் பிரஸ்	100	80	0
பார்டன் சன்ஸ் சாதா	10	5	2
,, பிரபரன்ஸ்	10	5	8
ஸ்பென்சர் சாதா	10	7	10
,, ஏ-பிரிபரன்ஸ்	10	11	8
,, பி-பிரிபரன்ஸ்	10	12	4
மின்சாரம்			
அஜ்மீர்	10	14	6
வேலூர்	10	17	12
திருச்சினாப்பள்ளி	100	206	0
,,	10	20	0
விசாகப்பட்டணம்	50	73	0
கும்பகோணம்	10	14	6
கொச்சி	10	15	8
ரங்கூன்	10	15	6

சுரங்கம்

	ஷி.	ப.	ஷி.	பெ.
சாம்பியன்	10	2	5	6
மைசூர்	10	1	6	6½
நந்தி துர்க்கம்	10	3	1	8
ஊர்காம் சாதா	10	0	14	6½

சர்க்கரை

மைசூர் சர்க்கரை	10	33	12
நியூ இந்தியா	10	7	0
டெக்கான் சாதா	100	374	0
,,	25	94	8

விடுதலை யவரும் யாதெனக் கேட்போரவன
பேதமிலா நீதி வகையே யின்ன
[காட்டினரேலலாம்
பொதுள சுகப்பேறுகள் சுவமும் பெற
திருமிக வாழ்தலே யாம்

விடுதலை

VIDUTHALAI

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்று நின்ற
செம்மொழியை திருமொழியை
[தேன்மொழியை
தனித்தியங்கும் தூற்றலுறா தொன்மொழியை
[அமிழ்தனைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
[அனுதினமும் பழக்கம் செய்வீர்.

மலர்-2] சென்னை: (2-12-1936) தாதுவருஷ கார்த்திகைமீ 17உ புதன்கிழமை [இதழ்-52

சென்னை மாகாண வள்ளுவ மகாஜன சங்கம் 2-வது மகாநாடு

தேச ஊழியர்களை வரவழைப்பதே உத்தமமாம்?

பார்ப்பனப் படுகுழியில் இன்னுமா விழவேண்டும்?

வள்ளுவகுல வாலிப இயக்க ஊழியன் திரு. தி. ஆ. சொக்கலிங்க நாயனர் எழுதுவது:—

26-11-36 வியாழனன்று வெளியான 'தின மணி'யில் சகோதரர் அ. சி. சுப்பிரமணியம் நாயனர் எழுதிய விஷயங்களைக் கண்ணுற்றேன். அதன் சாராம்சமாவது:— நடக்கப் போகும் வள்ளுவ மகாநாட்டிற்கு கவர்னர், மந்திரிகள், ஜஸ்டிஸ் பிரமுகர்கள் இவர்களை வரவழைக்கக் கூடாது என்றும் அப்படி வரவழைத்தால் அக்குலத்திற்குக் கேடு வருமென்றும் குறிப்பிட்டிருந்தது. மேலும் ஜஸ்டிஸ் கட்சி இருக்கிறதா இல்லையா என்ற சந்தேகமும் தோன்றுகிறதாம்.

ஆகையால் காங்கிரஸ் பிரமுகர்களைக் கொண்டு மகாநாட்டை நிருகயமைந்து நடத்த வேண்டுமென்றும் எழுதியிருந்தது. உண்மையாகக் காணுமிடத்து ஆரம்ப முதல் இது பரியந்தம் நம் தாய் நாட்டிற்காக உழைத்து வருவது நம் ஜஸ்டிஸ் கட்சியே. காங்கிரசின் கொள்கைகள் புனிதமாக இருந்தாலும் அதை அழகான சந்திரனை மேகமானது வந்து மூடிக்கொள்வது போல தற்போது காங்கிரசை மூடிக்கொண்டிருப்பது பார்ப்பனச் சூழ்ச்சி, பதவியின் மோகம் முதலியவைகளாம். அப்பார்ப்பனச் சூழ்ச்சியில் நாம் அகப்பட்டு விடுவோமானுல் நம்மைப் படுகுழியில் தள்ளி இன்னும் கேவலமான நிலைக்குக் கொண்டு வந்து விடுவார்களோ என்னவோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. ஆனல் நம் ஜஸ்டிஸ் கட்சியோ ஆரம்ப முதல் இது பரியந்தம் நமக்கு வேண்டியதைச் செய்து வருகிறார்கள். செய்வதாகவும் வாக்குறுதி தந்தார்கள். நிற்க, "இந்தியர்கள் அரசியல் நிர்வாகிகள் என்பது நாணயம் கெட்டவர்களென்றும் அவர்களிடம் ஊழல்கள் நிரம்பியிருக்கிறதென்றும் பேசியது ஜஸ்டிஸ் கட்சியா, பார்ப்பனக் காங்கிரசா? (திரு. எஸ். சத்தியமூர்த்தி) என்பதை ஞாபகப்படுத்திப் பாருங்கள். இப்படியெல்லாம் கூறிவிட்டு இந்தியர்களுக்கு அதிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எப்படி நன்மை செய்ய முடியும்? இக்காரணங்களைக் கொண்டே சொல்வதொன்று, செய்வதொன்று எனும் நிலைக்கு காங்கிரசைப் பார்ப்பனச் சூழ்ச்சியானது திருப்பி விட்டபடியால் தாழ்த்தப்பட்டவர்கள் இனி அவர்களுடைய உபகாரத்தை நாடுவது தகுதியல்லவென்று "கருமமே கண்" என்றிருக்கும் நமது ஜஸ்டிஸ் பிரமுகர்களைக் கொண்டு மகாநாடு நடத்தப்போகும் நம் வள்ளுவ குல சங்கத்தார்களுடைய நோக்கம் மிகவும் உசிதமானது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பணச் செட்டு

ஆஸ்திரேலியாவிலுள்ள சிறுவர்கள் தங்களுக்குப் பெற்றோர்கள் கொடுக்கும் பணத்தை மிச்சம் பிடித்து பாங்கியில் போடுகின்றனர். ஒவ்வொரு குழந்தைக்கும் 27 பவுன் இருக்கிறது.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

இரங்கற் கூட்டம்

(ஒரு நிருபர்)

கரந்தை, நவ, 30

1936, நவம்பர், 26-ம் நாள் வியாழக்கிழமை மாலை 5-30 மணிக்கு நம சங்கத்தின் ஆதரவில் ஓர் இரங்கற் கூட்டம் நிகழ்ந்தது. அதுபோது கீழ்க்காணும் முடிவுகள் காலஞ்சென்ற திரு. வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள், காலஞ்சென்ற திரு. கோ. வடிவேலு செட்டியாரவர்கள் ஆகிய இவ் விருவரது சிறப்பியல்புகளைப் பாராட்டியதும் முடிவு செய்யப் பெற்றன.

1. தமிழ்நாட்டின் தவப் புதல்வரும், தூத்துக்குடி வழக்கறிஞரும், தமிழ் மொழிக்காக தொல்காப்பிய உரை முதலிய பழந் தமிழ் நூற்களை வெளியிட்டும் ஆங்கில மாதிய நூற்களை மொழி பெயர்த்தும், பழைய நூல்கட்கு புத்துரை எழுதியும், தமிழன்னையை அலங்கரித்தும் தமிழ் நாட்டின் நாட்டுரிமைப் போரில் முன்னின்று அருந்தொண்டாற்றியும் புகழ் பெற்ற திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் தமது 65-ம் ஆண்டினில் விண்ணுலகு புக்கச் சென்றமை குறித்து இச்சங்கம் தமது ஆற்றெணுத் துயரை அறிவித்துக் கொள்கிறது.

2. சென்னை நகரின் தமிழ்வளம் பெருக, சென்னை இந்து தியாலாஜிகல் உயர்தரப் பள்ளித் தலைமைத் தமிழ் ஆசிரியராக இருந்தவரும், சிந்தாதிரிப் பேட்டை வேதாந்த சங்கத் தலைவரும், பல உயரிய நூற்களின் பதிப்பாசிரியரும், திருக்குறள் விளக்க உரையாசிரியருமாகிய திருவாளர்: கோ. வடிவேலு செட்டியார் அவர்கள் தமது குன்று முயற்சியுடன் முதுமை நிலையிலும் தமிழ் தொண்டாற்றியதினினும் காலஞ்சென்றமை குறித்து நம சங்கம் கொண்ட துயரினைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

மேற் குறித்த முடிவுகளை நம சங்கத் தலைவர் திருவாளர் செந்தமிழ்ப் புலவர் இராவ் சாகிப் த. வே உமாமகேசுவரம் பிள்ளை பி. ஏ., பி. எல், அவர்களால் முன்மொழியப் பெற்று யாவராலும் ஒன்றுபட்ட உளத்தோடு "எழுந்து நின்று" ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒரு மறுப்பு

நாக்கநாயக்கன் பாளையம், நவ, 28

கோபி தாலுக்கா, நாக்கநாயக்கன் பாளையம் டி. என். பெருமாக் கவுண்டர் எழுதுகிறார்:—

சென்ற 23-11-36-ம் தேதி வெளியான 'தின மணி' பத்திரிகையில் பிரசுரமாயிருக்கும் கோபி செட்டிபாளையம் தாலுக்கா காங்கிரஸ் கமிட்டி நிர்வாகஸ்தர்கள் ஜாபிதாவில் டி. என். பெருமாக் கவுண்டர் என என் பெயர் தப்பிதமாகப் பிரசுரிக்கப்பட்டிருப்பதைக் கண்டு வருந்துவதுடன், அதில் கண்டபடி 20-11-36-ம் தேதி கோபியில் நடந்த தாலுக்கா காங்கிரஸ் கமிட்டி தேர்தலில் என்னை ஒரு நிர்வாக கமிட்டி அங்கத்தினராக என்னை பதியாமலும், எனது சம்மதமின்றியும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதால் நான் அக்கமிட்டியில் அங்கம்வகிக்க மறுப்பதுடன், காங்கிரஸ் தாலுக்கா கமிட்டிக்கும் எனக்கும் யாதோர் சம்பந்தமும் கிடையாது என்பதை இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவள்ளுவர் தமிழ் மாணவர் கழகம்

திருவையாறு, நவ, 21

அமைச்சர், திரு. அ. கணபதி எழுதுகின்றார்:—

எம்கழகத்தின் ஆதரவில் இன்று காலை 8-30 மணிக்கு ஓர் இரங்கற் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர், வித்தியாரெத்தினம் பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியார், எம். ஏ., பி. எச். டி. அவர்கள் தலைமை வகித்தார். கூட்ட ஆரம்பத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் தலைவரவர்களால் கொண்டு வரப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

"பழம் பெரும் தேச பக்தரும் தமிழ்ப் புலவருமான தூத்துக்குடி, திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் காலமானது குறித்து மிகுந்த வருத்த மடைவதுடன், அவரது மனைவி, மக்கட்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்."

பிறகு, திரு. டி. வி. சாந்தலிங்கம் ஷேக்ஸ்பியர் நாடகத்தின் ஓர் காட்சியை மெய்ப் பாட்டுடன் ஒப்பித்தார். பின்னர், தஞ்சை மிஷன் பள்ளிக்கூடங்களின் இன்ஸ்பெக்டரஸ் திருமதி சிறைண்டி ஜோசப் அம்மையார், பி ஏ., எல். டி. அவர்கள் "நற்குண வளர்ச்சி" என்ற பொருள் பற்றி ஆங்கிலத்தில் சிறந்ததோர் சொற்பொழி வாற்றினர் பின்னர், கல்லூரி ஆங்கில ஆசிரிய திரு. என். டி. சீனுவாசாச்சாரியார், எம் ஏ, எல். டி., அவர்கள் பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பிறகு, அமைச்சன் நன்றிகூறி, தலைவரவர்களும், சொற்பொழிவாளர்க்கும் மாலை சூட்டக் கூட்டம் இனிது முடிவுற்றது. ஆசிரியர்கள், மாணவர்கள், வெளியிலிருந்து பல பிரமுகர்கள் வந்து கூட்டத்தைச் சிறப்பித்தது குறிப்பிடத் தக்கது. திருவாளர்கள்: நடராச சோமுவர், எஸ். என். இராமசாமி ஆகியோர் கடவுள் வாழ்த்தும், தமிழ்த் தாய் வாழ்த்தும் பாடினர்.

திருவையாறு, நவ, 30

நேற்று மாலை 4 மணிக்கு இக்கழகத்தின் இவ்வாரக் கூட்டம், இக்கல்லூரி ஆசிரியர், உயர்திரு. வித்துவான் இ. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் திரு. எம். இராசமாணிக்கம், "ஒருவர் பொறை இருவர் நட்பு" என்ற பொருள் பற்றிப் பேசினர். அவரை பின்பற்றித் திருவாளர்கள்: எஸ். தாமஸ், டி. வி. முருகேசன், கே. நடராசன், அ. கிருட்டின மூர்த்தி ஆகியோர் பேசினர். தலைவர் முடிவுரை கூறிய பின்னர், அமைச்சன் நன்றி கூறக் கூட்டம் இனிது நிறைவேறியது. திருவாளர்கள்: தண்டபாணி, சிவலிங்கம், வில்வபதி, சின்னு நாயகர் ஆகியோர் கடவுள் வாழ்த்து, தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடினர்.

சிரிப்பிழந்தவட்கு 1,500 பவுன்

சிட்னியில் உல்லஹாரா என்னுமிடத்திலுள்ள ஸ்ரீமதி எல்லன் ஒரு டிராமில் சென்றுகொண்டிருந்த போது டிரக்கும் டிராமும் மோதியதால் காயமடைந்தார். அது முதற்கொண்டு அவருக்கு சிரிக்க முடியவில்லையாம்.

அவருக்கு அத்தியாவசியமான ஆனந்த சாதனமாம் சிரிப்பிழந்தமைக்கு நஷ்ட ஈடாக 1,500 பவுன்கள் கொடுக்கும்படி சிட்னி பிரதம நீதி மன்றத்தார் தீர்ப்பளித்தனர்.

எமாறுதீர்கள்!

எங்கள் வைத்தியசாலையின் மருந்துகள் மிகவும் சிலாக்கியமானதெனப் பலராலும் புகழப்பட்டு வருதல் கண்டு, சிலர் வேறு மருந்துகளை எங்கள் மருந்துகள்—அதாவது சி. எம். சாமி மருந்துகள் என்று சொல்லி ஏமாற்றி விற்பனை செய்து வருகிறதாகத் தெரிகிறது. எங்கள் வைத்தியசாலையிலிருந்து வெளி இடங்களுக்கு நாங்கள் யாரையும் அனுப்பவில்லை. எங்கள் ஏஜெண்டென்றும், எங்கள் மருந்துகள் என்றும் யாராவது விற்பனை செய்தால் அதைப் பொது மக்கள் வாங்கி மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கிறோம்.

மருந்து வேண்டியவர்கள் நேரே எமக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி, S. I.

திருநெல்வேலி ஜில்லா— கவர்னர் வரவேற்பு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

லவா? சினிமா ஒன்றும் நடத்தினரே. மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் இறந்ததற்காக சினிமாவை அடைத்துத் தனது ராஜ விசுவாசத்தை காட்டிக்கொண்டார் அதில் தப்பிதமென்ன? அவருடைய குருநாதர், தலைவர்கள் அண்ணுக்களெல்லாம் கதர் குல்லா தலையில தாங்கி ராஜ விசுவாசப் பிரமாணம் செய்வதற்கு இது அடுத்த படிதானே. ஆனல், கமலா நேரு, டாக்டர் அன்சாரி போன்ற பெரியோர் பிரிவாற்றுமையை எவ்வாறு காட்டினர்? சினிமாவை நடத்தியா அடைத்தா என்று யோசித்துப் பாருங்கள் அம்மட்டோ? இம்மாதம் மற்ற சினிமாக்களைப் போல இதற்கும் லைசென்ஸ் தகராறு வந்தவுடனே என்ன நடந்தது தெரியுமா? கதர் கொடியைக் காணோம். தேசியக் கொடி நிலைகொண்டு மறைந்தது வந்ததையா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக்கொடி, முதல் வகுப்பு காற்றாளிகளுக்கு மேலும், இரண்டாவது வகுப்பு காற்றாளிகளுக்கு மேலும்! ஆனல், ஒன்றும் பலிக்கவில்லை லைசென்ஸ் ரத்தாயிற்று. கேட்டுப் போனதென்ன? காங்கிரசு கோடு தந்த கைமேலே பலன். அவர்தான் நமது நகருக்குப் புது அசம்பிளி தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகராம்! ஒரு சந்தேகம். தேர்தல் போது நமது லாலா தேசியக்கொடி பிடிப்பாரா? யூனியன் ஜாக் பிடிப்பாரா?

கூத்தர் போக்கு

எல்லாம் தொலையட்டும், லாலாவும், அம்பலவாணரும் எப்படியும் போகட்டும். நமது ஜில்லா காங்கிரஸ் தலைவரும், மாஜி சர்வாதிகாரியுமான திரு. கூத்தர் நமக்கு நடத்திக் காட்டும் நல்வழியென்ன? சில நாட்களுக்குமுன் முனிசிபாலிட்டி தண்ணீர் தீர்வை பிரச்சினையில் எவ்வாறு நடந்துகொண்டார்? ஜில்லா காங்கிரஸ் கமிட்டியும், டவுண் காங்கிரஸ் கமிட்டியும் அவர் இல்லத்திலே, அதுதான் சாவடி நூலிலே அன்னாரின் தலைமையிலே கூடி இந்த தண்ணீர்த் தீர்வை பிரச்சினையில் காங்கிரஸ் கலந்துகொள்ளக் கூடாதென்று தீர்மானித்ததே. "தின மணியும்" கொட்டை எழுத்தில் பிரசுரித்ததே. அதற்கு இவர் செய்த மரியாதை என்ன? காங்கிரசின் பேச்சைச் சொல்லி, காங்கிரஸ் தொண்டர்களை உபயோகித்து கலாட்டா செய்தாரே! மற்றும் இரு தலைவர்களை அதற்கு எதிரிடையாய் நின்றார்களே! என்னுமேற்று? இவரின் மூக்கை இவரே அறுத்துக் கொண்டாரா? மூக்கு நீளமதானே கொஞ்சமாவது அறுத்துக் கொள்ளக் கூடாதா? இவரை தலைவர் பதவியை விட்டு விலக்க வேண்டாமா? அவசரப்படேல்; அவரே விலகப்போகிறார் என்று ஒரு சிட்டுக்குருவி சொல்லுகிறது. ஒன்னும் நற்சமயமுந்தான் பார்க்கிறாரும்? ஏனென்று கேட்டதாம் நமது குருவி; சொன்னாராம் பிள்ளை அவர்கள். "பெருமையும் புகழும் நாடிவந்தேன், காங்கிரசுக்கு. அவை கிடைத்தது. சர்வாதிகாரியானேன். இந்த ஜில்லாமட்டுமல்ல மற்ற ஜில்லாக்களிலும் காங்கிரஸ் பிரமுகர் காரில் சுற்றினேன் நாங்கிபும் வந்தார், நேருவும் வந்தார் என் வீட்டிற்கு. ஜில்லா போர்டிற்கு வந்த காங்கிரஸ் மெம்பர்கள் எல்லாம் என் தயவால் தான் வந்தார்கள் என்று நம்பவும் ஆகித் தாய் விட்டது. ஆனல், காலம் மாறுகிறது. பெருமையும் புகழும் போய், சிறுமையும், இகழும் வரும்போல் தெரிகிறது. செக்ஷன் 144 ஆம், ஜாமீனும் என்னமோ பேசுகிறார்கள். பக்கத்து ஜில்லாவில் காங்கிரஸ் தொண்டர்களுக்கும் சமயம் தெரியவில்லை. கவர்னர் வரும்போது தலைவர் வீட்டிலாவது கறுப்புக்கொடி வேண்டாமா என்கிறார்கள். சீக்கிரம் நழுவ வேண்டியது தான்." சிட்டுக் குருவி சொல்வதின் உண்மை சீக்கிரம் விளங்கிவிடும்.

கவனித்தீர்களா சகோதரர்களே! எத்தனை அப்பர்கள், தலைவர்கள் மூக்கு போனபின், முதலியார் மூக்குக்கு ஆபத்து வரவேண்டும்? முதலியார் அவர்கள் பயப்பட வேண்டாம். தங்கள் மூக்குப்போகுமுன், தங்கள் தலைவர் அசத்தியமூர்த்தியின் சிரசே போய் ஆகவேண்டும். ஆனல் எத்தனை நாளைக்கு இந்த ஏமாற்றம். பார்ப்பனரல்லாத மக்களே விழியுங்கள்.

எதியோப்பிய அரசரின் 12 வயது குமாரரான ஹாரார் டியூக் கால்பந்து பயிற்சி பெற்று வருகிறார்.

"கிராம ஊழியன்"

வாரப் பதிப்பு

ஆசிரியர்:—S. பூரணம் பிள்ளை.

கிராமப் புனருத்தாரணத்தின் பொருட்டுத் தோன்றி மாதம் இருமுறையாக வெளிவந்த "கிராம ஊழியன்" இரண்டாம் ஆண்டின் ஆரம்பமாகிய 25—10—36ஆ முதல் பிரதி ஞாயிறுதோறும், நாட்டின் நலத்திற்கான கட்டுரைகள் தாங்கி எல்லோரும் கோரும் நல்லதோர் முறையில் வெளிவருகிறது. எல்லா இடங்களிலும் ஏஜெண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதுக.

உள்நாடு: வருட சந்தா ரூ. 3. வெளிநாடு: வருட சந்தா ரூ 5.

மானேஜர்:—"கிராம ஊழியன்",
துறையூர். (திருச்சி ஜில்லா)

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN, AT THE JUSTICE PRINTING WORKS, 14, MOUNT ROAD, MADRAS. EDITOR: PANDIT S. MUTHUSWAMI PILLAI

விலை அரை அணு 8 பக்கங்கள் மலாய் நாட்டில் 5 சதம் Regd. No. M. 3298

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா
முன் பணம்

உள நாடு

1 மாதம்	...	0 6 0
3 மாதம்	...	1 0 0
6 மாதம்	...	1 14 0
1 வருடம்	...	3 10 0

சென்னைக்கு

1 மாதம்	...	0 4 0
3 மாதம்	...	0 10 0
6 மாதம்	...	1 4 0
1 வருடம்	...	2 6 0

விடுதலை

VIDUTHALAI

(வாரம் இருமுறை வெளிவரும்)

ஆசிரியர்: பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா.
முன் பணம்

வெளி நாடு

1 மாதம்	...	0 10 0
3 மாதம்	...	1 14 0
6 மாதம்	...	3 12 0
1 வருடம்	...	7 4 0

சர்க்கார், முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டுகளுக்கு:

உள்நாடு: வருடம்	ரூ.	7 8 0
சென்னை: ,,	ரூ.	4 8 0

மலர்-2] சென்னை: (5-12-1936) தாதுவருஷ கார்த்திகைமீ 20உ சனிக்கிழமை [இதழ்-53

சாத்தூரில் காங்கரஸ் காலித்தனம்

காங்கரஸ்காரர்களுக்கு போலீஸ் வீரர்கள் உதவி

சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் புகார்

"தின மணி", "ஜெய பாரதி" விஷமப் பிரசாரம்

(திரு. காஞ்சி கலியாணசுந்தரன்)

கடந்த மாதம் 23-ந்தேதி நடந்த இராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தலில் உயிருள்ள தேர்தலாக இருந்தது, செட்டிநாடும், விருதுநகரப் பிரதேசமுமே யாகும். விருதை வீரர்—ஜஸ்டிஸ் கட்சியின் கற்றான் இளங்காளை, தோழர் வி. வி. ராமசாமியை தோற்கடிக்க காங்கரஸ் காலாடிகள் கையாண்ட கண்ணியமற்ற முறைகளுக்குக் கணக்கே இல்லை. மலக் குழியிலிருந்து வாராதாரப் பிரசாரஞ் செய்து வரும் காங்கரஸ் கயவர்கள் பல கேவலமான - இழிவான முறைகளை மேற்கொண்டார்கள். அதற்கேற்றாற்போல் 'தின மணி' 'ஜெய பாரதி' போன்ற ரூபி சொரணை கெட்ட தேசிய பத்திரிகைகளும் கண்டபடி, பொதுவாக ஜஸ்டிஸ் கட்சி மீதும், குறிப்பாக தோழர் வி. வி. ராமசாமி அவர்கள் மீதும் பல அபாண்டமான கலப்பற்ற பொய் சேதிகளை பிரசுரித்து விஷமப் பிரசாரஞ் செய்தன. அத்தனையும் ஆற்றில் கரைத்த பெருங்காயமாகப் போய் விட்டது. இனியாவது கர்நல பத்திரிகைகள் தங்கள் பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். அவைகள் யோக்கியமாக நடந்து கொள்ளுமென்று சொல்வதற்கில்லை. "நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில்" வைத்து விட்டாலேயே, அந்நாய்க்கு புத்தி வந்து குப்பை மேடு செல்லுவதை விட்டு விடுமா?

இந்த இரண்டு பத்திரிகைகளின் பித்தலாட்டப் பொய்ப் பிரசாரத்தை விளக்க இரண்டொரு உதாரணத்தைக் குறிப்பிடுகிறேன்.

சைகிள் கதை

நீண்ட நாட்களாக ஒரு வாலிபன் விருது நகரிலுள்ள கடைக்காரர் ஒருவருக்குப் பணம் பாக்கி தர வேண்டியிருந்தது. தேர்தல் நடக்கும் இரண்டு, மூன்று தினத்திற்கு முன் அந்த வாலிபன் அந்தக்கடைப் பக்கமாக ஒரு சைக்கிளில் வந்தான். உடனே அக்கடைக்காரர் அவ்வாலிபன் பாக்கி தர வேண்டிய பணத்திற்காக அவன் ஏறி வந்த சைக்கிளைப் பிடுங்கிக் கொண்டார். உடனே அந்த வாலிபன் போலிஸ் ஸ்டேஷனுக்குச் சென்று தான் ஒரு காங்கரஸ் தொண்டன் என்றும், தேர்தலில் வேலை செய்வதற்காகக் கடைக்காரரால் பறிக்கப்பட்ட சைக்கிள் காங்கரஸ் கட்சியினரால் அமர்த்தப்பட்டதென்றும், தோழர் வி. வி. ராமசாமி அவர்களின் தூண்டுதலால் கடைக்காரர் தன்னிடமிருந்து சைக்கிளைப் பிடுங்கிக் கொண்டாரென்றும் பிராது கொடுத்தான். பிறகு, போலிஸ் சப் இன்ஸ்பெக்டர் அந்த கடைக்காரரை அழைத்து விசாரித்தார். விசாரணையின் பொழுது கடைக்காரர், அந்தக் காங்கரஸ் தொண்டன் தனக்குப் பாக்கி தரவேண்டு மென்றும், இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு அதிகமாக ஆய்விட்டதென்றும், எனவே தான் அத்தொண்டனின் சைக்கிளைப் பிடுங்கிக் கொண்டதாகவும், மேலும் அந்த சைக்கிள் காங்கரஸ் தேர்தல் வேலைக்காக அமர்த்தப்பட்டதென்பதைக் குறிப்பிடுவதற்கான 'கொடி' போன்ற சின்னங்கள் அதில் காணக்கூடவில்லை என்றும், தன்னுடைய அச்செயலுக்கு தோழர் வி. வி. ராமசாமி அவர்களுடையவோ அல்லது மற்றவர்களுடையவோ தூண்டுதல் கிடையாதென்றும் குறிப்பிட்டார்.

பின் சப் இன்ஸ்பெக்டர் அங்கிருந்த சைக்கிளைப் பறிகொடுத்த காங்கரஸ் தொண்டனைப் பார்த்து 'கடைக்காரர் சொல்வது உண்மையா, பொய்யா? என்று கேட்டார். அதற்கு அந்த காங்கரஸ் தொண்டனும் கடைக்காரர் சொன்னது முழுதும் உண்மைதானென்று ஒத்துக்கொண்டதோடு, தான் ஏறி வந்த சைக்கிளில் காங்கரஸ் கொடியும் கிடையாதென்று கூறினான். நிற்க,

'தின மணி' அயோக்கியத்தனம்

மேற்சொன்ன விஷயம் [illegible]வையும் 'தின மணி' வெளியிடாமல், தன்னுடைய பொறுப்பற்ற நிருபர் அனுப்பிய காங்கரஸ் தொண்டனுடைய பிராதை மாத்திரம் வெளியிட்டிருக்கிறது. இந்த ஒன்றிலிருந்தே 'தின மணி' நாணயத்தையும் அதன் நிருபரின் யோக்யதையையும் வாசகர்கள் அறிந்துகொள்ளலாம்.

சாத்தூர் சம்பவம் சம்மந்தமாக 'தின மணி'யிலும், 'ஜெய பாரதி'யிலும் வெளி வந்த செய்திகள் அவ்வளவும் புளுகு மூட்டையாகும். அங்கு நடைபெற்ற சம்பவம் முழுதையும் கூட்டுதல் குறைத்தலன்றி வெளியிடுகிறேன். அது வருமாறு:—

தேர்தல் நடந்த மறுதினம் அதாவது 24-ந் தேதி செவ்வாயன்று தோழர்கள் சௌந்தர பாண்டியன், வி. வி. ராமசாமி, பெரியசாமி, பெரிய வாலகுருஸாமி செட்டியார் முதலியோரும் இன்னும் பலரும் ஓட்டுக் கணக்கிடப் படுவதை கவனிப்பதற்காகச் சாத்தூருக்குச் சென்றிருந்தார்கள். சென்றிருந்தவர்கள் சுமார் 30 பேருக்கு அதிகம் இராது. சுமார் 2-30 மணி இருக்கும்பொழுது கட்டுமஸ்தான ஆள் ஒரு பைசிகளில் ஆங்கில 'ஜே' எழுத்தை தலைகீழாப் பொறித்த கருப்புக் கொடியை அமைத்துக் கொண்டு பெரிய சன்தாவில் நாலைந்து முறை அங்கு மிங்குமாக அலைந்துகொண் டிருந்தார். மூன்றும் முறையாக அந்தக் கருப்புக் கொடி 'குண்டன்' அலையும் பொழுது, அந்த சன்தாவின் ஓரத்தில் நின்று கொண்டிருந்த ஒரு விருதை வாசி மீது மோதி கீழே விழுந்தான். உடனே கருப்புக்கொடியும் பைசிகலும் விழுந்த அதிர்ச்சியில் நெக்குபோய் விட்டது. பைசிகிளால் மோதுண்ட விருதைவாசி ஆத்திரம் பொறுக்க முடியாமல் அக்குண்டனை அடித்து விட்டார். உடனே சில காங்கரஸ் குண்டர் அவ்விருதை வாசியை அடிக்க முயன்றார்கள். அவ்வளவு தான்; இருதிறத்தினரும் கைகலந்தனர். அதற்குப் பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு, இரண்டு போலீஸ் புலிகள் (ஜெ. ஆர். டி. 34 ஆர். டி. 971) தடிகள் ஏந்திய கையுடன் கூட்டத்தினிடை புகுந்து பைசிகிளில் வந்த காங்கரஸ் குண்டனைப் பிடித்துக் கொண்டு வாயில் வந்தவாறெல்லாம் திட்டி அடித்தவர்களைக் காட்டுமாறு கூச்சல் இட்டவண்ணம் வந்தார்கள். அங்கு சாலை ஓரத்தில் விட்டிருந்த பஸ்ஸில் பிரயாணிகளான தோழர்கள் அருணாசலத்தையும், மைகேலையும் அந்த இரண்டு போலீஸ் தடியர்களும் கீழே இழுத்துப் போட்டு அடி அடி என்று அடித்து விட்டார்கள். அத்துடன் அவ்விருவர்களையும் போலீஸ் ஸ்டேஷனுக்கும் அழைத்துப் போய் 'லாக்காப்பில்' போட்டு விட்டார்கள்.

என் மீது பாய்ச்சல்

இந்தக் கலகத்தில் கொஞ்சமும் சம்பந்தப்படாமல், சம்பவம் நடந்த இடத்திலிருந்து சுமார் 60 கஜ தூரத்தில் தங்கள் சொந்தக் கார்களில் வீற்றிருந்த தோழர்கள் பாண்டியன், வி. வி. ராமசாமி, பெரியசாமி முதலியவர்களிடம் விஷயத்தைச் சொல்லியவண்ணம் அவர்கள் காரின் பக்கத்தில் நான் நின்று கொண்டிருந்தேன். இருந்தாற்போல் இருந்து சுமார் இருபது முப்பது உள்ளூர்க்காரர்களும், முன் சொன்ன இரண்டு போலீஸ் காரர்களும் 'அதோ இருக்கிறான் அவன்' என்று இரைந்த வண்ணம் என்னை நோக்கி ஓடி வருவதைக் கண்டேன். தோழர் சௌந்தரபாண்டியனைக்கண்டதும், இந்த இரண்டு போலீஸ் வீரர்களும் என்னை நெருங்காமல் தூரத்தில் ஒதுங்கி தடிகளுடன் நின்றார்கள். அந்தக்கூட்டத்தில் இருந்த இரண்டு காங்கரஸ் தடியர்கள் என்னை அணுகி நான் அணிந்திருந்த மேல் அங்கியைப் பிடித்திழுத்தார்கள். அதனால், எனது அங்கி இரண்டிடத்தில் கிழிந்துவிட்டது. உடனே ஒருவிநாடியும் தாமதியாமல் 'காரை' விட்டு தோழர்கள் பாண்டியனும், வி. வி. ராமசாமியும், கீழே இறங்கினார்கள். அதே சமயத்தில் சப் இன்ஸ்பெக்டரும், சப் மாஜிஸ்டிரேட்டும் பிரஸ்தாப இடத்திற்கு வந்தார்கள். பிறகு என்னை அழைத்துக்கொண்டு மேற் சொன்ன இரு பிரமுகர்களும் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று, நடு நிலைமை தவறி காங்கரஸ் கயவர்களுக்கு சாதகமாக நடந்து கொண்டதை அந்த சமயத்தில் அங்குவந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் ரிப்போர்ட் செய்தார்கள். அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வதாக அவர் வாக்களித்தார். கலகத்தில் தீவிரமாக ஈடுபட்ட காங்கரஸ் கயவர்கள், நான்கு பெயர்கள் வரை போலீசிடம் ஒப்படைக்கப் பட்டார்கள். இது தான் சாத்தூர் சம்பவத்தின் உண்மை வரலாறு ஆகும். உண்மை இப்படி இருக்க, 'தின மணி'யிலும், 'ஜெய பாரதி'யிலும், மேல் சொன்ன பிரமுகர்கள் அனைவரும் அடிபட்டதாகவும், அவர்கள் கார்கள் உடைக்கப்பட்டு விட்டதாகவும் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. அவ்வாறு அங்கொன்றும் நடைபெறவில்லை என்பதை அவ்விரு பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இனியாவது அவர்கள் பொறுப்புற்ற தன்மையில், இதுபோன்ற நிருபர்களின் பொய்ச் செய்தியை வெளியிடாமல் இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

குறிப்பு:—சாத்தூர் பொய்ச் செய்தியை பிரசுரம் செய்த "ஜெய பாரதி", "மெயில்" பத்திரிகைகளின் மீது 20 ஆயிரம் ரூபாய்க்கு மான நஷ்ட வழக்குத் தொடரப் போவதாக திரு. வி. வி. ராமசாமி லாயர் நோட்டீஸ் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

தயாராகி விட்டது!

ஜன்னல்களுக்கு கம்பிகள் ஏன்?

தயாராகி விட்டது!!

திருடர்கள் ஜாக்கிரதை! மணிபர்ஸ் ஜாக்கிரதை!!

எதில்?

டைரக்டர்: T. P. கைலாசம் B.A., A.R.C.Sc., (London)

"குட்டி"
அல்லது
சாமாஜக சித்திரம்
என்னும் சமூக தமிழ் பேசும் படம்.

ஸ்டுடியோ: வேல் பிக்சர்ஸ் மதராஸ்.

Mr. V. S. M. ராஜாராமய்யர் அவர்கள்
(லேட் V. S. K. முத்துராமய்யர் குமாரர்)
கதாநாயகனாக தமது முழுத் திறமையுடன் நடிக்கிறார்.

மற்றும்
Mr. S. R. கிருஷ்ணய்யங்கார்
,, M. S. அனந்தநாராயண அய்யர், B.A.,
,, S. R. மீனாக்ஷிசுந்தரம்
மாஸ்டர் S. P. கல்யாணம்
மிஸஸ். G. விஸ்வேஸ்வரியம்மாள்
மிஸ். T. P. லக்ஷிமிகாந்தம்
,, P. S. கிருஷ்ணமணி
முதலியோர் நடித்தது.

விவரங்களுக்கு:—
தந்தி: 'JARIVASTAR"
V. S. டாக்கீஸ்,
போன் நெ: 58-A
மதுரை.
புரோப்ரைட்டர்ஸ்:—V. S. K. முத்துராமய்யர் & சன்ஸ்.,

நாகர் கோவிலில் ஆலயப் பிரவேச விழா

ஹரி ஜனங்களுக்கு வரவேற்பும் விருந்தும்

காங்கரஸ் மேடையில் சுயமரியாதை குண்டு

தோழர் ராமையாவின் வீர முழக்கம்

(டி. கே. சாமிநாதன்)

நாகர் கோவில், நவ, 29

திருவிதாங்கூர் மகாராஜாவின் ஆலயப் பிரவேசப் பிரகடனத்தைப் பாராட்டும் பொருட்டு 29-11-36 ஞாயிற்றுக்கிழமை திருவிதாங்கூர் முழுதும் "ஓர் விழா" போன்று கொண்டாடுவதை யொட்டி நாகர் கோவிலிலும் ஹரிஜன சேவா சங்கத்தின் சார்பாய் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

ஊர்வலம்

நகரெங்கும் வாழை, செடி, கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு மகாராஜாவின் உருவப்படங்கள் கடைகள் தோறும் தொங்க விடப்பட்டிருந்தன. ஹரிஜன சேவா சங்கத்தினர் மாலை 2-மணிக்கு மகாராஜாவின் உருவப்படத்தை அலங்கரித்து மோட்டாரில் ஊர்வலமாக, வசிந்திரம், இளங்கடை, இடலாக்குடி, வாகைத் தெரு, கோட்டாறு, வடிவீஸ்வரம், ஒழுகினசேரி, வடசேரி, கிருஷ்ணன் கோவில் முதலிய வீதிகளின் வழியாய் இரவு 8-20-மணிக்கு நாகர் கோவில் முனிசிபல் மைதானத்தில் வந்து சேர்ந்தது. தண்டு பிரசுரத்தின்படி முன்னதாகவே ஆயிரத்திற்கு மேற்பட்ட ஜனங்கள், மைதானத்திற் கூடி விட்டார்கள். ஊர்வலத்தோடு வந்த ஜனங்கள் உட்பட 2500-மக்களை குறிப்பிடலாம்

பொதுக் கூட்டம்

கூட்டத்திற்கு "ஜாதி ஹிந்துவான" வக்கீல் நீலகண்ட அய்யர் தலைமை வகித்தது குறிப்பிடத் தக்கது. தலைவர் முகவுரையாக மகாராஜாவின் பிரகடனத்தை ஆதரித்து ஹிந்து சமத்திற்கு இன்று தான் புத்துயிர் கிட்டியது என்று அழகாய் பேசினர். பின் சேவா சங்கத்தலைவர் டாக்டர் எம். இ. நாயுடு அவர்கள் மகாராஜாவின் பிரகடனத்தை வாழ்த்திப் பேசுகையில் இதற்கு நமது மகாத்மா காந்தியே காரணமாரும், என்று கூறி ஆசீர்வதித்தார். அதை ஆதரித்து தோழர்கள் சாம்ராஜ், தேவதாஸ், முத்துகருப்ப பிள்ளை, மணவாளப் பெருமாள் பிள்ளை, பெருமாள் மாணிக்கம், டாக்டர் பப்பு முதலியவர்கள் பேசினார்கள். கூட்டம் ஆரம்பிக்கும் முன், டாக்டர் எம். இ. நாயுடு அவர்களிடம் நாகர்கோவில் சுயமரியாதை இளைஞர் சங்கக் காரியதரிசியான கோட்டாறு தோழர். கே. ராமையா அவர்கள் பொதுக் கூட்டமான படியால் தமக்கும் பேச அனுமதி வேண்டுமென ஓர் கடிதம் கொடுத்தார்கள். நாயுடு அவர்கள் முதலில் ஒப்புக்கொண்டார். பின் தோழர் ராமையாவைக் கூப்பிட்டு ரகசியமாக, இன்று பேசுவதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறவர்களில் அநேகரை சமயம் இல்லாமையால் நிறுத்தி வைத்திருக்கிறோம். உங்களுக்கு இடம் கொடுத்தால் அவர்களுக்கு மனவருத்தம் ஏற்படும் என்று கூறி மறுத்துவிட்டார்.

கூட்டம் ஆரம்பமானதும் தண்டுப் பிரசுரப்படி எல்லோரும் எழுந்து கொண்டே இருந்தார்கள். தோழர் ராமையா, நாயுடுவின் சூழ்ச்சியை உணர்ந்துகொண்டு மற்றொரு லெட்டர் தலைவரிடம் கொடுத்து அனுமதி கேட்டார். தலைவர் அனுமதி கொடுத்தார். பின் தோழர் ராமையா பேசியதின் சுருக்கம் வருமாறு:—

அக்கிராசனாதிபதி அவர்களே! அன்புள்ள பிரியர்களே! பெரியோர்களே! எனது உணர்ச்சி மிகுந்த எண்ணத்திற்கு இடமில்லாது போகுமென எண்ணினேன். சூழ்ச்சியினின்றும் தப்பினேன் தலைவர் அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக!

சகோதரர்களே!

நமது மாட்சிமை தங்கிய மகாராஜா அவர்களின் பிரகடனமானது இன்று இமயமுதல் குமரிவரையும் பெரிய தோர புரட்சியை விளைவித்து விட்டது. பார்லிமெண்டு வரையும் நமது மன்னரின் திருப் புகழ் நாமதேயம் பறக்கின்றது. ஏன்?

ஜாதிப்பேயின் பிறப்பிடமும், இருப்பிடமும், வளர்ப்பிடமும் நமது திருவிதாங்கூர் ஒன்றேயாகும். அத்தகைய வெறிகொண்ட, திமிர்கொண்ட திருவிதாங்கூர் இத்தன்மையில் வந்ததைக் கண்டு மன்னரின் இம்முறையை போற்றுதல் கடமையே! திடீரென மக்களின் உள்ளம் பூரிப்படையும் படியானதோர் செய்கையை இன்று பூகம்ப அதிர்ச்சி போல் மன்னர்பிரான் செய்யத் துணிந்த காரணம் என்ன என்பதை நீங்கள் இன்னமும் தெரிந்துகொள்ள வில்லை என்றே கருதுகிறேன்.

தோழர்களே!

இப்பிரகடனத்திற்கு இன்று இங்கு கூறப்பட்டபடி காந்தியாருமல்ல, காங்கரசுமல்ல. 50லக்ஷம் ஜனத் தொகையை கொண்ட நம் திருவிதாங்கூரில், தோட்ட வித்தாரணத்தில் பாதிக்கு மேல் என்று என்பதுபோல் நமது 50 லக்ஷம் ஜனத் தொகையில் 20 லக்ஷம் கிறிஸ்தவர்களாகவும், 5 லக்ஷம் முஸ்லீம்களாகவும் இருக்கிறார்கள். இதில் ஹிந்து மதத்தின் கொடுமையையும், சட்டத்தின் அநியாய விதியையும் சகியாமல் ஆயிரக்கணக்காக மக்கள் தங்களுடைய மதங்களைத் தழுவ எத்தனித்துவிட்டார்கள். இன்னமும் 6 லக்ஷம் பேர் ஒரேயடியாக மதமாறுவோம் என்று கர்ஜித்தார்கள். இதுவே நமது மன்னரின் பிரகடனத்திற்கு காரணமாகும். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் ராம பிரகடனம் செய்தால் இந்து மதம் நிலைக்கும் என்ற கருத்துடனும், இன்றேல் ஹிந்து மதமே இல்லாது போய்விடும் என்ற எண்ணத்தின் மீதுமேயாகும் என்று (பேசுகையில். டாக்டர் எம். இ. நாயுடு அவர்கள்) அப்படியல்ல என்று கூறினார். தலைவருடைய வேண்டுகோளின்படி குறிப்பிட்ட நேரத்திற்குமேல் சமயம் ஆனபடியால் தோழர் ராமையா தமது பிரசங்கத்தை நிறுத்திக் கொண்டார். பின் தலைவர் முடிவுரையுடனும் நன்றி கூறுதலுடனும் கூட்டம் 9-45-க்கு இனிது முடிவுற்றது.

வாழ்க்கை ஒப்பந்தம்

திருப்பூர், நவ, 30

நாளது வருஷம் டிசம்பர் மாதம் 6-ந் தேதி காலை 10 மணிக்கு திருப்பூர் திரு. என். ராமசாமி முதலியார் புதல்வன் என். ஆர். சுப்பிரமணியத்திற்கும், பள்ளிபாளையம் திரு. பி. பி. லக்ஷ்மண முதலியார் புதல்வி எல். சென்னியம்மாளுக்கும் ஓ. கே. என். அண்டு எ. ஆர். ஆர். அண்டு பிரதர்ஸ் மண்டியில் தோழர் ஈ. வி. ராமசாமி அவர்கள் தலைமையின் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறுமென ஒரு நிருபர் எழுதுகிறார்.

உலக மல்யுத்தக் காரர்களை எதிர்க்க

போஸ்டன் லெவியாதென் முடிவு

610 பவுண்டு நிறை!

லெவியா தென் என்ற புனைப் பெயரைக் கொண்ட போஸ்டன் வாசியாகிய மார்டின் லெவி உலக மல்யுத்தக்காரர்களை எதிர்க்க தீர்மானித்திருக்கிறார். இவருக்கு வயது 35. 610 பவுண்டு நிறையுடையவர். யானைக்கால் வியாதியால் பிடிக்கப்பட்டிருக்கிறார். தவறிக் கீழே விழுந்து விட்டால் 40 பலமான மனிதர்கள் அவரைத் தூக்கி நிறுத்தவேண்டியிருக்கிறது. அவர் மிகப் பருமனாகவும், வழுவழுப்பாகவும், மிகப் பாரமாகவும் இருப்பதால் அவரது எதிரிகளால் அவரைக் கட்டிப் பிடிக்கவோ, வளைக்கவோ, தூக்கவோ முடியாமலிருக்கிறது. ஆகவே, குத்துச் சண்டையில் தனது எதிரியை சமயம் பார்த்துக் கீழே தள்ளி விட்டு, அவர் மீது படுத்துக் கொள்வதே அவர் மேற்கொண்டுள்ள தந்திரமாகும்.

நெசவுத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

வியாபாரிகள் வழிக்கு வந்தனர்

(ஒரு நிருபர்)

அருப்புக்கோட்டை, நவ, 21

அருப்புக்கோட்டை நெசவுத் தொழிலாளர், கூலி கட்டாததால் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தார்கள். பின், ஒரு அதுக் கோஷ்டி 21-ந் தேதி காலை வியாபாரிகளை அணுகி தொழிலாளர் படும் கஷ்டநிஷ்டூரங்களைக் கூறியது. அதைக் கேட்டு, வியாபாரிகள் மனமிரங்கித் தொழிலாளர்கள் 23-ந் தேதி ஒரு பொதுக்கூட்டம் கூடித் தீர்மானித்தபடி சாதா சேலை 15 முழ சேலைக்கு 2—8—0 ரூபாய் கூலி கொடுப்பதாக ஒப்புக் கொண்டனர். அதன்படி தொழிலாளர் சங்கத்திற்கு ஒரு உறுதி மொழிப் பத்திரமும் எழுதிக் கொடுத்தனர்.

வேலை நிறுத்தத்தின் போது ஏழைகளுக்கு உணவுப் பொருள்களும், செலவுக்குப் பணமும் சங்கம் கொடுத்துதவியது. அருத்தனிர் சாது கந்தசாமி அவர்களும் தொழிலாளர் கஷ்ட நிவர்த்திக்காக 5 ரூபாய் கொடுத்துதவினர். பின்னர், வியாபாரிகள் எழுதிக் கொடுத்த உறுதிமொழிப் பத்திரத்தை ஒரு பொதுக் கூட்டம் கூட்டி வாசித்துக் காண்பித்ததற்குப் பிறகு தம் வேலைகளை ஆரம்பித்தனர்.

குண்டுக்கு இரையாக்க!

நாங்கள் பிள்ளைகளைப் பெறமாட்டோம்

பிரிட்டிஷ் மாதர்கள் முடிவு

பிரிட்டனில் ஜன சங்கியை குறைந்து வருகிறபடியால், அதை நிவர்த்திப்பதற்காக, பிரிட்டிஷ் சர்க்கார், இத்தாலி, ஜெர்மனி தேசங்களைப் பின்பற்றி பிரசாரத்தில் இறங்கியுள்ளனர். பிரம்மச்சாரிகளுக்கு அதிக வரியும், விவாகம் செய்துகொள்ளுபவர்களுக்கும், அதிக குழந்தைகளை உடைத்தாயிருப்பவர்களுக்கும் வெகுமதியும் அளிக்கப்படும். பெண்கள் இனி வீட்டு வேலைகளைக் கவனிக்கவும், குழந்தைகளைப் பராமரிக்கவுமே சிறப்பாகப் பயிற்றப் படுவர். வெளி வேலைகள் அவர்களுக்குக்கொடுக்கப்பட மாட்டா. ஆனால் சர்க்கார் முயற்சி வெற்றி பெறுமா என்பது சந்தேகமே. ஏனெனில் குண்டுக் கிரையாக்க தாங்கள் ஏன் பிள்ளைகளைப் பெறவேண்டுமென பெற்ற தாய்மார்களின் எண்ணமாயிருந்து வருகிறது.

ரெவினியூ போர்டார் கவனிப்பார்களா?

சர்க்காருக்கு நஷ்டம்

ஏழை மக்களின் கஷ்டம்

(மா. செல்லம் தேசிகர்)

தென் ஆற்காடு ஜில்லா விருத்தாஜலம் தாலுகாவில் வில்லிங்டன் ரிசர்வாயர் இருக்கிறது. விருத்தாஜலத்திலிருந்து 28 மைலுக்கு மேற்கே தொழுதூர் கிராமத்திற்கு சமீபத்தில் வெள்ளாற்றில் அணை கட்டி ஏமனேரிக்குத் தண்ணீர் கொண்டு வந்து 15 வருஷங்களாக ஏராளமான ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சப் பட்டுவருகிறது. ஏரியில் தண்ணீர் வருகிறதற்கு முன் கிராமங்கள் தோறும் சில சிறு ஏரிகளையும், குளங்களையும் குடிகள் நீர்ப் பாய்ச்சலுக்கு உபயோகித்து வந்தனர். வில்லிங்டன் ரிசர் வாயர் வந்த பின்னர் அவைகள் காம்பு—தரிசு நிலங்களாக சர்க்காரால் ஒதுக்கப் பட்டுக் கிடக்கின்றன. இப்படிக் கிடக்கும் நிலங்கள் இருபது ஆயிரம் ஏக்கருக்கு மேல் இருக்கும். கைவலுவுள்ள கிராமக் குடிகள் காம்பாய் விடப்பட்ட சிறு ஏரிகளையும் குளங்களையும் தங்களுக்கு சொந்தம் என சொல்லிக் கொண்டு மழை காலத்தில் கரைகள் போட்டு வைத்துக் கொண்டு மீன் விழல் முதலியவை வளர்த்து விற்றுக் குத்தகைக்கு விட்டு ஏழைக்குடிகளை ஒடுக்கிச் சர்க்காரை வஞ்சித்து லாபம் அடைந்து வருகிறார்கள். இவ்விதமாயும் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்படுகிறது.

ஏமனேரி நீர் பாய்ச்சல் ஏற்பட்டு பதினைந்து வருஷங்கள் ஆய் விட்டது. இருபதினாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட தரிசு நிலங்களும், புறம் போக்கு நிலங்களும் வீணாய் இருக்கின்றன. இவைகளை ஏழைக் குடிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் விதம் பயிரிடக் கொடுத்திருந்தாலும் சர்க்காருக்கு வருஷம் ஒன்றுக்கு நாற்பதுஆயிரம் ரூபாய் வருஷந்தோறும் கிடைத்திருக்கும். கடந்த பதினைந்து வருஷங்களுக்கு ஆறு லக்ஷ ரூபாய் வரும்படி கிடைத்திருக்கும். இப்போது சர்க்காருக்கு ஆறு லக்ஷ ரூபாய் நஷ்டமாய் இருக்கிறது. வருஷந்தோறும் 20,000 ரூபாய் சர்க்கார் நஷ்டம் அடைந்து வருகிறார்கள் என்பது உண்மை. இந்த நஷ்டத்தை சர்க்கார் அதிகாரிகள் கவனிக்க வேண்டும். வில்லிங்டன் ரிசர்வாயர் பாய்ச்சல் தரிசு நிலங்களை ஏலத்தில் விற்று அதிகப் பணம் சம்பாதிக்கலாம் என்று ரெவினியூ போர்டாரையும், சர்க்காரையும் யாரோ சிலர் வஞ்சித்து விட்டார்கள். உண்மையில் இந்த நிலங்களை ஏலம் போட்டால் தற்கால நிலைமையில் நிலங்களின் விலைகள் குறைவாய் இருப்பதால் இந்த நிலங்களை ஏலத்தில் வாங்குபவர்கள் பின்னிட்டு ஏய்கிறார்கள். கடந்த 15 வருஷங்களாக புஞ்செய் நிலங்களை நஞ்செய் நிலங்களாக்கி ஏமனேரியின் தண்ணீரைப் பாய்ச்சி பயிர் செய்து வந்த கிராமத்தார் வில்லிங்டன் ரிசர் வாயர் தண்ணீரினால் விளையும் நெல் குறைவாய் இருக்கிறதென்று கஷ்டப்படுகிறார்கள். சாத்த நத்தம் தொள்ளார் முதலிய கிராமக்குடிகள் நஞ்செயான நிலங்களை புஞ்செய் பயிர்களாக மாற்றி இருக்கிறார்கள். இப்படிக் குடிகள் வில்லிங்டன் ரிசர் வாயர் தண்ணீர் பாயும் நிலங்களைப் புஞ்செய் ஆக்கிக்கொண்டிருக்கும்போது தரிசாய்க் கிடக்கும் ஏராளமான நிலங்களை ஏலத்தில் விற்று சர்க்கார் லாபம் அடையலாம் என்று நினைப்பது உசிதம் அல்ல.

கடந்த பதினைந்து வருஷங்களாக சர்க்கார் ஆறு லக்ஷ ரூபாய் நஷ்டப் பட்டும் ஏழை மக்கள் சாப்பாட்டிற்கு இல்லாமல் கஷ்டப் பட்டும் வருகிறார்கள். இப்படிக் கஷ்டப் படும் ஏழை மக்கள் தரிசாய் கிடக்கும் நிலத்தில் கொஞ்சம் சீர் திருத்தி பயிர் செய்தால் சாதாரணத் தீர்வையிலிருந்து 2 ரூபாய் முதல் 10 ரூபாய் வரைக்கும் தண்டத் தீர்வை விதித்து விடுகிறார்கள். இந்தத் தீர்வையைக் கொடுக்க சக்தி இல்லாமல் தாங்கள் திருத்தின நிலங்களை திரும்பவும் தரிசாய் விட்டு விடுகிறார்கள். இது சர்க்காரின் கொடுமையோ அல்லது மேல் அதிகாரிகளின் கொடுமையோ தெரியவில்லை. இதன் உண்மையை அறிய விரும்பும் ரெவினியூ போர்டாவது சர்க்கார் அதிகாரிகளாவது வில்லிங்டன் ரிசர்வாயர் தண்ணீர் திறந்து விடும் இடத்திலிருந்து அந்த வாய்க்கால் மணி முத்தா நதியில் சேருகிற இடம் வரைக்கும் 22 மைல் தூரம் கால்வாயின் இரு கரையிலும் உள்ள கிராமங்களில் மணியம் கர்ணம் முதலானவர்களையும் ஆதித்திராவிடர்களையும் இரகசியமாய் விசாரித்து தரிசுபுறம்போக்கு நிலங்களை பார்வை இட்டால் இதன் உண்மை விளங்கும். இது ஒரு கட்டுரையல்ல. இவைகள் உண்மையாய் நடந்து வருகிற விஷயம். இப்படித் தரிசாய் கிடக்கும் நிலங்களை சீர்திருத்தப் போனால் ஏக்கர் ஒன்றுக்கும் குறையாமல் ரூபாய் 25 செலவாகிறது.

முதலில் விஸ்தரித்த பழைய ஏரி, குளங்களிலிருந்து எவ்வித வரும்படியும் வந்ததில்லை என்பது உண்மை. விருத்தாஜலம் தாலுகாவில் அநேக ஏரிகளை விழல் குத்தகைக்கும், மீன் குத்தகைக்கும் விட்டு சர்க்கார் பணம் சேர்த்திருக்கிறார்கள். ஆனால், வில்லிங்டன் ரிசர்வாயர் பாய்ச்சலைச் சேர்ந்த பழைய ஏரி, குளங்களை உடைத்துக் காம பாக்கி விட்டதால், கிராமக் கணக்கப் பிள்ளையும், மணியக்காரரும், ரெவினியூ இன்ஸ்பெக்டர்களும், டெபுடி தாசில்தாரும் இந்தக் காம்பு நிலமாக்கப்பட்ட ஏரி, குளங்களை கவனிக்கிறதில்லை. ஆகையால், கை வலுவுள்ள சில குடியானவர்களுக்குக் கொள்ளைப் பொருளாக விடப்பட்டிருக்கிறது. எப்ரல் மாதக் கடைசிக்குள் சர்க்கார் அதிகாரி ஒருவர் இந்த ஏரி, குளங்களைப் பார்வை இட்டால் ஏரி தங்களுக்கு சொந்தம் என்று வைத்திருப்பவர்கள் விழல், அறுப்பதையும், மீன் பிடிப்பதையும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் அறியலாம். இப்படி, கை வலுவுள்ள குடியானவர்களால் அநுபவித்து வரும் காம்பு ஏரிகளை ஏழை மக்கள் யாராவது சீர்திருத்திப் பயிர் செய்யப் போனால் தண்டத் தீர்வை விதிப்பது விந்தையாய் இருக்கிறது. "கொள்ளை அடிக்கிறவர்கள் கொள்ளை அடித்துக் கொண்டு போனாலும் போகட்டும். ஆனால், ஏழை குடிகளை கிட்டேயும் போகக்கூடாது" என்று சொல்லுகிறது போல் இருக்கிறது.

இப்படி சர்க்காரால் காம்பாக்கப் பட்ட ஏரிகளில் ஒன்றை பெண்ணாடம் ரெவினியூக்குள் உள்பட்ட கத்தி மங்கலம் கிராமத்தில் 52 ஏக்கர் நிலத்தை ஏழை ஆதித்திராவிடப் பிள்ளைகளை பயிர் முறையில் பழக்கத் தரும்படி 5-2-35-ல் மனுப் போட்டேன். சில நாள் பொறுத்து இரண்டு பங்கு வாய்தா கட்டி நிலத்தை சீர்படுத்தலாம் என்று திட்டக்குடி டிப்டி தாசில்தார் உத்தரவு அனுப்பினர். இந்த உத்தரவை வைத்து செம்பரம் ரெவினியூ டிவிஷனல் ஆபீசருக்கு அப்பீல் செய்தேன். அத்துடன் இந்த நிலத்தை சீர்திருத்தம் செய்ய ரூ. 1000 செலவாகும். ஆகையால் வாய்தாவை குறைத்துத்தர வேண்டுமென்று அப்பீல் செய்தேன். அவரும் இரண்டு பங்கு தீர்வை கட்டுவது நியாயம்தான என்று உத்தரவு செய்தார். இதின்பேரில் மஞ்சக் குப்பம் ஜில்லாக் கலெக்டருக்கு இந்த உத்தரவை வைத்து மறுபடியும் அப்பீல் செய்தேன். ஜில்லாக் கலெக்டரோ, ரெவினியூ போர்டார் உத்தரவுப்படி இரண்டு பங்கு தீர்வை விதிப்பது நியாயம் தான் என்று உத்தரவு அனுப்பினர். மறுபடியும் என் அப்பீலை திரும்பக் கவனிக்க வேண்டுமென்று அவருக்கே எழுதினேன். அவரோ அந்த விண்ணப்பத்தை ரெவினியூ டிவிஷனல் ஆபீசருக்கு அனுப்பும்படி திருப்பி விட்டார். உடனே ரெவினியூ டிவிஷனல் ஆபீசருக்கு, ரிஜிஸ்டர் செய்தேன் இன்னும் சரியானபதில் கிடைக்கவில்லை. ஆகையால் இவையாவையும் விபரமாய் எழுதி ரெவினியூ போர்டாருக்கு அப்பீல் செய்கிறேன். இதை ரெவினியூ போர்டாரும் சட்டசபை அங்கத்தினர்களும் கவனித்து ஏழைக்குடிகளை காப்பாற்றவும் சர்க்காருக்கு வரும்படியை உண்டாக்கவும் கவனிப்பார்களென்று நம்புகிறேன். கடந்த 15 வருஷங்களாக ரூ. 6,00,000 சர்க்காருக்கு நஷ்டம், இந்த வருஷமும் கவனிக்காமல் விட்டு விட்டால் சர்க்காருக்கு, ரூ. 40,000 நஷ்டம், இப்படியே வருஷா வருஷம் நாற்பதினாயிரம் ரூபாய் நஷ்டம் ஆகிக்கொண்டே இருக்கும். கைவலுவுள்ள குடிகள் காம்பு ஆக்கப்பட்ட ஏரிகளின் வரும்படிகளைக் கொள்ளை அடித்துக்கொண்டே இருப்பர். ஏழைக் குடிகளோ கஞ்சிக்கு இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டே இருப்பார்கள். இதை வாசிக்கும் ஒவ்வொரு மேல் அதிகாரிகளும் கவனிக்கும்படியாக வேண்டுகிறேன்.

A. S. ஆனந்தம், புரொப்ரைட்டர்.

சிரமம் ஒழிந்தது!

இனி உங்களுக்கு கவலை வேண்டாம் !!

சென்னைக்கு அடுத்த மதுரை நகரிலும், ஜில்லாவிலும் வியாபாரம், சினிமா சம்பந்தமான வால் போஸ்டர்கள், தண்டுப் பிரசுரங்கள், நீடித்த கால விளம்பர போர்டுகள், விசேஷ உற்சவ காலங்களில் ஸ்பெஷல் விளம்பரங்கள், பிரிண்டிங், சித்திர போஸ்டர்கள் முதலியவைகள் யாவும் நேர் பார்வையிலேயே தேர்ந்த வேலையாட்களைக் கொண்டு நூதனமுறையில் குறைந்த சார்ஜில் அச்சிட்டு பிறர் மனதைக் கவரக்கூடிய வண்ணம் விளம்பரங்கள் செய்து கொடுத்து வருகிறோம்.

ஒருமுறை எமது கம்பெனி மூலமாய் உங்கள் விளம்பரங்களைக் கொடுத்து பரீக்ஷித்துப் பாருங்கள். அதிக லாபமடைவீர்கள்.

விபரங்களுக்கு உடனே கடிதம் எழுதுக

அனந்தா அட்வர்டைஸிங் ஏஜன்ஸி,
தெற்கு வாசல், மதுரை. S. I.

தீயே சிவம் - நீரே மால்

(பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்)

தாயின் கருப்பைக்குள் பேரிருளில் கட்டுண்டு கண்மூடி குருட்டுத் தன்மையிலிருந்த குழவி கருப்பையை விட்டு வெளிப்பட்ட வுடனே, தாயினும் இனிய மருத்துவியால், கண்மாசு நீங்கி முதலிற் காண்பது சூரிய ஒளியே யாகும். ஞாயிறு மறைந்த பின்னர், இரவில் விளக்கின் ஒளியால் பொருள்களைக் கண்ணுற் பார்த்து அறிகின்றோம். கனவிருள் தூக்கத்தில் அழுந்திக் கிடந்து விழித்த உடன் நமது கண்கள், தீப்பிழம்பாகிய சூரிய ஒளியின் உதவியால், பொருள்களைக் கண்டு மகிழ்கின்றன. காடு திருத்தி நாடாகு முன், வாழ்ந்த பண்டைக்கால மக்கள் பகலெல்லாம் உணவு தேடி யுண்டு, தூய நீரைக் குடித்து மகிழ்ந்து, மாலையில் சூரியன் மறைந்து, இருள் சூழ்ந்தவுடன், காட்டிலும், மலைப் பொந்துகளிலும், அடர்ந்த புதர்களிலும், உள்ள கொடிய விலங்குகட்கும், பாம்பு, தேள், முதலிய நச்சுப் பிராணிகட்கும், பனி, காற்று, மழை முதலியவைகளால் ஏற்படும் குளிருக்கும் அஞ்சித் தங்கள் குடிசைகளில் புகுந்து, கல்லினாலும், தீக்கடைக் கோலினாலும் தீயை யுண்டாக்கி அதனை வளர்த்து அத்தீயின் காவலில் வாழ்ந்தார்கள்.

இன்று காணப்படும் நகரங்களின் நெருங்கியடர்ந்த கல் வீடுகளுக்குள், உடம்பின் மீது உடை மேல உடை உடுத்தி, மின்சார விளக்கு ஒளியில் வாழும், இக்கால மக்களுக்குத் தீயின் கூறான ஒளியின் அருமை தெரியாது. அக்காலத்து மக்கள் தமக்கு உயிர்த்துணையாய் முதன் முதல் கண்டு உபயோகித்த பொருள்கள் பெருந்திக் கோளமாகிய ஞாயிற்றின் ஒளியும், தீயும், நீருமே யாகும். கண்ணால் பொருள்களைக் காண்பதற்குக் காரணமாயிருப்பதும், கண்ணால் கண்ட பொருள்களில் மிகப் பெரியதும், ஒளி விட்டெரியக் கூடியதும் உயிர் வாழ்க்கைக் கின்றியமையாததுமாகிய சூரியனை நமது முன்னோர் கடவுளெனக் கருதி வணங்கத் தொடங்கினர். அதனால், தாம கண்டவற்றுள் முதற் பெரும் பொருளாகிய ஞாயிற்றின் பெயரை கிழமைகளில் முதற் கிழமைக்கும், இரண்டாவதாக இரவில் குளிர்ந்த ஒளியால் தங்களை மகிழ்விக்கும் திங்களையே (சந்திரன்) அடுத்த நாளைக்கும் பெயர்கள் இட்டமைத்த நுட்பம் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும்.

இரவெல்லாம் காடுகளில் தீத்துணையிருந்து, கிழக்கிசையை நோக்கி அருணன் உதயத்தை எதிர் பார்த்திருப்பார்கள். கிழக்கு வெளுத்ததும் பாடி, ஆடி மகிழ்வார்கள். இத்தீயையும், நீரையும் மக்கள் மட்டுந்தான் முதன் முதலில் கண்டு மகிழ்ந்தார்கள் என்பதில்லை. பகுத்தறிவில்லா தாவர, சங்கமம் ஆகிய எல்லா உயிர்களும் நாள் தோறும் தீயையும், நீரையும் கண்டு மகிழ்ந்தன-மகிழ்கின்றன. இக்கால மக்களுக்கு அறிவு வளர்ந்து பகுத்து பலவகை அவர்கள் மிகுதிப் பட்டமையாலும், இயற்கைப் பொருள்களைத் தங்கள் தேவைக்குத் தக்கபடி செயற்கைப் பொருளாக்கி வருவதில், இவர்கள் கருத்து முழுவதும் ஊன்றி நிற்பதாலும், இயற்கையின் அழகையும், அற்புதத்தையும், அருமையையும் கண்டு மகிழ்வதற்குப் பலர் இயலாதவர்களாய் இருக்கின்றார்கள்.

ஐம் பெரும் பூதங் (பொருள்) களில் ஒன்றான தீயானது வெளியே அண்டத்தில் காணப்படுவதைப் போல் உடம்பாகிய பிண்டத்திலும், அளவிலிருந்து மாறுபடாம லிருக்கும் வரையில் உடல் நலங் கெடாமல், நோயின்றி நெடு நாள் வாழுமா மெனும் உண்மையையும் நாளாவட்டத்தில் மக்கள் கண்டறிந்தார்கள். தீயை எளிதில் உண்டு பண்ணத் தீப்பெட்டியில்லாத அக்காலத்தில் சிலர் தீயை வளர்த்துக் கொண்டே யிருப்பார்கள். அத் தீயிலிருந்து பலர் தங்களுக்கு வேண்டிய தணல் நெருப்பை எடுத்துச் செல்வார்கள். மழை, பனி, காற்று, குளிர் முதலிய துன்பங்களுக்கும், தேள், பூரான், எறும்பு, கொசு, ஈ, மூட்டைப்பூச்சி, பேன், தெள்ளுப் பூச்சி, தேனீ, குளவி, பலவகை வண்டுகள், மண்ணுண்ணிகள் முதலிய துன்பப்படுத்தும் சிற்றுயிர்களுக்கும் "சாம்பல்" விரோதப் பொருளெனக் கண்டபடியால், அவர்கள் நீராடினவுடனே, தாங்கள் வளர்க்கும் தீயில் நீற்று விழும் சாம்பலை உடல் முழுதும் பூசிக் கொள்வார்கள்.

சில விடங்களில் தீயை வளர்த்துக்கொண்டிருக்கும் வயது சென்றவர்கட்கு மற்றவர்கள் கிழங்கு, காய், கனி முதலிய உணவுகளைக் கொடுத்து உதவுவார்கள். பொதுவாக வானில் தோன்றும், சூரியன், சந்திரன், நட்சத்திரம், மின்னல், இடி, எரிமலை முதலியவைகளைக் கண்டு, உலகில் திகழும் எல்லா ஒளிகளும், தீயின் செயல்களே எனவும், இறப் பென்பது உடம்பிலுள்ள "உயிர்த் தீ" தன்னளவிற் குறைந்து அடங்கிப் போவதுதான் என்பதும் முன்னோர் கண்ட உண்மை. ஆற்றங்கரை, குளத்தங்கரை முதலிய இடங்களில் மக்கள் நீராடினவுடன், "குளிர் காயவும்" தீயை வணங்கவும் எப்போதும் தீ எரிந்து கொண்டிருக்கும். "அத் தீயே சிவமானது" அத் தீ வணங்குமிடமே கோயிலாக மாறினது. தீயானது தங்களுக்குத் துன்பத்தையும் அச்சத்தையும் நீக்கி இன்பத்தைக் கொடுப்பதாலும், சிவந்த நிறத்துடன் இருப்பதாலும், அதற்குச் சிவமென்னும் பெயரிட்டார்கள்.

இன்றும், பகல் இரவு விளக்கெரியாக் கோயில்களில், கடவுளில்லையென்னும் கொள்கையால், இவ்வுண்மை வெளியாகிறது. புத்தர்களும், கிறிஸ்துவர்களும், மெழுகுதிரியைப் பகலிலும் கோயிலில், கொளுத்தி வைத்தே வணங்குகிறார்கள். தமிழ்நாட்டில் கோயில்களில் மட்டுமின்றி, வீடுகளில் பகலில் செய்யும், நலக் கிரியைகளில் விளக்கேற்றிவைத்து பாலுள்ள சில மரத்தின் உலர்ந்த சிறு கிளைகளைக் கூட்டிவைத்து நெய் வார்த்து எரித்தும், அதன் பக்கத்தில் கலசம் (குடுவையில்) நீரை வைத்தும் வணங்குகின்றார்கள். ஒருவர் உயிர் நீங்கினவுடனே விளக்கேற்றி வைத்தும், அத்துடன் ஒரு ஏனத்தில் நீரை வைத்தும் வணங்குவார்கள். மயானத்திற்குச் சவத்தை எடுத்துச் செல்லும்போதும் சவத்துடன் தீயை ஒரு பாண்டத்தில் வளர்த்து சுமந்து சென்று, இறந்த வுடலை நெருப்பில் எரிப்பதே நல்லதெனக் கண்டார்கள்.

தீயானது எந்தப் பொருளை மிக விரைவில் பற்றி எரிகின்றதோ அந்தப் பொருள் தீக் கடவுளுக்கு மிக்க விருப்பமுள்ள பொருள் என நினைத்தார்கள். முதன் முதல் சூடானிலிருந்து கற்பூரம் வந்தபடியால் அதனைச் "சூடன்" என்றும் கற்பூரம் என்றும், தீயதனில் விரைவில் பற்றி எரிவதை மிக வியப்பாகக் கண்டு, அது கடவுள் தன்மையென வணங்கி மகிழ்ந்தார்கள். ஒருவர் பொய், களவு முதலிய குற்றஞ்செய்தால், சந்தேகப்பட்டவர்களை, ஆற்றில், குளத்தில் தலை முழுகி விளக்கேற்றி வைத்தாவது, கற்பூரத்தைக் கொளுத்தி வைத்தாவது 'இல்லை' என்று சொல்லி அத் தீயை அணைக்கச் சொல்லுகிற வழக்கம் இருந்து வருகிறது. இதனால் விளக்கிலும் கற்பூரத்திலும் தீப் பற்றி எரிவதை அவ்வளவு தெய்வத் தன்மையாய்க் கருதினார்கள் மலைச் சிகரங்களில் விளக்கேற்றி வணங்கினார்கள். இன்றும் ஆண்டுகள் தோறும் கோயில்களின் முன் வானுற வோங்கி வளர்ந்தெரியும் பெருந்தீயின் உருவைக்காண; பனை ஓலைகளைக் கூடாய்க்கட்டி "சொக்கப் பனை" என்று தீக்கொளுத்தியும், பொங்கலிட்டு சூரிய பூஜை செய்தும், வீடுகளிலாயினும் அம்பலங்களிலாயினும், பகலிலும் இரவிலும் திருவிளக்கேற்றியே தெய்வம் தொழுது வந்தார்கள். இவ்வழக்கம் இந்துக்களிடம் மட்டும் காணப்படுவதன்று. புத்தர், கிறிஸ்தவர், ஜெயினர், பாரஸீகர், சீக்கியர் முதலான சமயத்தவர்களும், தங்கள் வீடுகளிலும், கோயில்களிலும், இன்றும் பகலிலும் விளக்கேற்றியே வணங்குகின்றார்கள். இதனையே சைவ சமயாச் சாரியாராகிய அப்பர் சுவாமிகள்.

"எரிகொண்மேனி இளம் பிறை
வைத்தவர் கரியர் தாங் கடவூரின்
மயானத்தார்"

எனவும்

"எரி பெருக்குவர் அவ்வெரி
ஈசன துருவருக்க மதாவது
ணர் கிலார்"

எனவும்

"அருக்கன் பாதம் வணங்குவர்
அந்தியில் அருக்கனாவான்
அரனுரு வல்லனோ"

எனவும், திருஞான சம்பந்தர்

"கற்றாங்கெரி யோம்பி கலியை
வாராமே செற்றார் வாழ்தில்லைச்
சிற்றம் பல மேய"

எனவும்

"எரி கொண் மேனியர் எண்
பணிக்கின்பாய் திரியுமூ வெயிற்
தீயெழச் செற்றவர்"

எனவும்

"அழல தோம்பும் அருமறை
யோர் திறம், விழல தென்னும்
மருகர் திறத் திறம், கழலவாது
செயத்திரு உள்ளமே, தழலி
லங்கு திரு உருச் சைவனே"

எனவும்

"எரியலாலுருவமில்லை ஏறலா
லேறவில்லை, கரியலாற் போர்வை
யில்லைகாண்டகு சோதியார்க்குப்,
பிரிவிலா அமரர்கூடி பெருந்
தகைப் பிரானென் றேற்றும்,
அரியலால் தேவியில்லை யையனை
யாறனார்க்கே"

என அப்பர் சுவாமிகளும்

"சோதியே சுடரே சூழொளி
விளக்கே!
"சோதியாய் தோன்று
முருவமே"

என மாணிக்க வாசகரும் கூறுகின்றபடியால், தீயே சிவமென பிற்காலத்தில் வணங்கினார்கள் என உணரலாம். (தொடரும்)

திருவட்டீசுரன் பேட்டை காங்கரஸ் தேர்தல்

மீண்டும் நடத்தவேண்டும்

சென்னை, டிச, 3

திருவட்டீஸ்வரன் பேட்டை காங்கரஸ் மெம்பர்கள் சுமார் 25-பேர் கை யொப்பம் செய்து தேர்தல் அதிகாரிக்கு பின்வரும் கடிதத்தை அனுப்பி யிருக்கிறார்கள்:—

இதனடியில் கை எழுத்துச் செய்திருக்கும் நாங்கள் ஓட்டு கொடுப்பதற்காக காங்கரஸ் மண்டபத்திற்கு வந்தோம். அது காலை காங்கரஸ் மண்டபம் வெளிவாசல் கதவுகள் சாத்தித் தாளிடப் பட்டிருந்தன. விசாரித்ததில் உள்ளே தேர்தல் நடப்பதாகவும் எங்களை உள்ளே அனுமதிக்க முடியா தென்றும் சொல்லி விட்டார்கள். நாங்கள் யாவரும் சந்தா கொடுத்த அங்கத்தினர்களானவர்கள். ஆகையால் எங்களை உள்ளே அநுமதிக்காமல் தேர்தல் நடத்தப்பட்டதை நாங்கள் பலமாக ஆக்ஷேபிக்கின்றோம். எனவே இத் தேர்தல் சரியானபடி நடக்கவில்லை. நாங்கள் மாலை 5 1/2 மணிக்கு இங்கு வந்திருந்தும் எங்களை அநுமதிக்காமல் தேர்தல் நடந்தது என்பதை இங்கு குறிப்பிடுகிறோம். எனவே இத்தேர்தலை ரத்து செய்து மறு தேர்தல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

மூன்றணா ஸ்டாம்பு அனுப்பினால்
"தங்கசாலைத் தெரு தாசியின் ரகஸ்யங்கள்"
என்ற நாவல் இலவசமாக அனுப்பப்படும்.
ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராயநகர், மதராஸ்.

5-வருடங்கள் தூங்கின மாது

"ஆத்ம தத்துவ" நோயால் பீடிக்கப்பட்டாள்

அமெரிக்காவிலுள்ள பிரஸீல் நகரைச் சேர்ந்த 27-வயதுள்ள கோமியா என்னும் கன்னிப்பெண் 5-வருடம் தூங்கினாளாம். கண்விழித்ததும் வைத்தியர்கள் அம்மாதைப் பரிசோதித்து அவள் "ஆத்ம தத்துவ" நோயால் கஷ்டப் படுவதாகக் கூறியுள்ளனர்.

இப்பெண்மணியின் தகப்பன் பெட்ரோ பாஸ்டிரின் என்னும் இத்தாலியனாவான். இவள் சிறுவயது முதற்கொண்டே கடவுள் பக்தியுள்ளவளாக இருந்தாளாம். 1931-ம் வருஷம் மாதாக்கோவிலுக்குப் பிரார்த்தனைக்குச் சென்றவள், "உலகம் எனக்காக இருக்கவில்லை" எனக் கண்களில் நீர் ததும்பச் சொல்லிக் கொண்டே வீட்டை யடைந்தவள், அப்படியே தூக்கத்தில் ஆழ்ந்து விட்டாளாம். காப்பி, டீ, முதலிய திரவ பதார்த்தங்கள் தான் கொடுக்கப்பட்டனவாம். தன் தாயார் கூப்பிடும் பொழுது கண் விழித்து புன்முறுவல் செய்து மறுபடியும் கண்ணை மூடிக் கொள்வது வழக்கமாம். 1931-ம் வருடத்திலிருந்து ஒரு வார்த்தை கூட அம்மாது பேசவில்லை.

தியாகராய நகர் முன்னேற்றக் கழகம்

(கல்விப் பகுதி)

தியாகராயநகர், டிச, 3

காரியதரிசி எழுதுகிறார்:—

இக்கழகத்தின் கல்விப் பகுதியின் பொதுக் கூட்டமொன்று தியாகராய நகர் பள்ளிக்கூடக் கட்டடத்தில் ராவ்பகதூர் எம். ராமன் அவர்கள் தலைமையின் கீழ் நடை பெற்றது.

திரு. எ. வரதராஜ் "தற்கால இளைஞர்" என்ற விஷயத்தைப் பற்றி அரியதோர் சொற்பொழிவாற்றினார். அதில் ஒவ்வொரு தேச முன்னேற்றத்திற்கும் அந்நாட்டு இளைஞர் எவ்வளவு காரணஸ்தர்களாக இருந்தார்களென்பதை விளக்கிக் காட்டினார். இத்தேச இளைஞர் சமூகம், தேச முன்னேற்றத்திற்கு மிகவும் பாடுபட வேண்டியது எத்துணை அவசியம் என்பதை எடுத்துக் காட்டினார்.

திரு. இராதா கிருஷ்ணன் இந்தியாவின் முழு விடுதலைக்கும் இளைஞர் பாடுபட வேண்டுமென்றும், அப்படிச் செய்ய ஒவ்வொரு வாலிபனும் தன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டுமென்றும், 'தன்னையாளல்' என்ற சிறந்த முறையைக் கையாள வேண்டுமெனவும் விளக்கினார்.

திரு. வீரராகவன் மேல்நாட்டு இளைஞரைப்போல் இந்திய இளைஞரும் பல வேறு நாடுகட்குப்போய் ஆங்காங்குள்ள விஷயங்களை நேரே கண்டறிதல் அவசியமென்று கூறினார்.

பிறகு தலைவர் தன் முடிவுரையில் வயோதிகர்கள் உலக நன்மைக்கு வேண்டியன பல செய்யத் தவறியதால் இளைஞரே காரியங்களைக் கவனிக்க வேண்டுமென்றும், நாட்டு முன்னேற்றத்திற்கு தன்னலமில்லாத இளைஞர் பலர் வேண்டுமென்றும் கூறினார்கள். அரசியல் முன்னேற்றத்தை யன்றி, சமூக முன்னேற்றத்தையும் இளைஞர் பெரிதும் கவனிக்க வேண்டுமென்று விளக்கினார்.

ஷை சங்கத்தின் "கல்விக் கிளைக்கு" 1936—37 ஆண்டுக்கு கீழ்க்கண்டவர்கள் பொறுப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

தலைவர்:-ராவ்பகதூர் எம். ராமன்; காரியதரிசி:—திரு. எ. வரதராஜ்; கமிட்டியின் அங்கத்தினர்கள்:—திரு. வீ. கே. வீரராகவன், எ. ஆறுமுக முதலியார், கே. சிவன்.

வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!
"அறிவுக் கொடி"
ஒரு சிறந்த தமிழ் மாத வெளியீடு.
ஆசிரியர்:—ஸ்ரீமதி சாமி சிதம்பரனார்.
ஒவ்வொரு ஆங்கிலமீ 15-ந் தேதியில் வெளிவருவது.
அறிவு வளர்ச்சி, மாதர் முன்னேற்றம், தமிழ் மொழி வளர்ச்சி, விஞ்ஞானம், வைத்தியம், விகடம், சங்கீதம், நாடகம், படக் காட்சி, மனதைக் கவரும் சிறு கதைகள் முதலிய சிறந்த பல விஷயங்களும், இனிய பாடல்களும் வெளிவரும்.
உள்நாடு வருட சந்தா ரூ. 1. வெளிநாடு ரூ. 1-8-0.
மானேஜர்:—"அறிவுக் கொடி" ஆபீஸ்,
462, கீழ்க் கடலங்குடித் தெரு, கும்பகோணம்.

குணமாகாத மூத்திர வியாதிகளுக்குப் புதிதாகக் கண்டுபிடித்திருக்கும் அற்புதமான சிகிச்சை!
வெட்டை ரோகத்திற்கு சிறந்தது!!
வெட்டைரோக கிருமிகளை கொல்லக்கூடியது!
"கோனா கில்லர்" (ரிஜிஸ்டர் செய்யப்பட்டது)
இதுதான் இப்பொழுது எடுத்த ஒளஷதம். ஆங்கில, உள்நாட்டு வைத்தியர்கள் உங்களைக் குணப்படுத்தியிராவிடில் வாக்ஸின்களும், இன்செக்ஷனும் பலன் தந்திராவிடில் கடைசியாகவேனும் நமது கோனா-கில்லர் என்னும் ஒளஷதத்தைப் பரீக்ஷித்துப் பாருங்கள். உங்களுக்கு வியாதி கண்டு எவ்வளவு காலமிருந்தாலும் அது குணப்படுத்தி விடும். ஸ்திரீகள், புருஷர்கள் இவர்களுக்கு ஏற்படும் மூத்திர வியாதிகளுக்கும், எல்லாவித வெட்டை ரோகங்களுக்கும், மூத்திரம் அதிகமாக இறங்குவதற்கும், மூத்திரம் பெய்கையில் ஏற்படும் வலியை நிவர்த்தி செய்யவும், மூத்திரப் பையில் ஏற்பட்டிருக்கும் அழற்சியைப் போக்கவும், வெட்டை வியாதிக் கிருமிகளால் ஏற்படும் வேறு பல வியாதிகளைப் போக்கவும் இது சிறந்த மருந்து. போலி மருந்துகள் வாங்காதீர்கள்! வாங்கும்போது எங்கள் கோழிமார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.
சேவல் மார்க்கை பார்த்து வாங்கவும்.
போலிகளைப்பற்றி உஷார்!
50-மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு ரூபா. 3. வி. பி. சார்ஜு வேறு. வெளி நாட்டு பேர்கள் ரூபா. 4—8—0 முன் பணம் அனுப்பவும்.
டாக்டர் டி. என். ஜஸானி, கிர்காம் பாக் ரோடு, பம்பாய், 4.
Dr. D. N. JASANI, Girgaum Back Road, BOMBAY, 4.
சென்னை ஏஜண்டு:—தாதா & கோ.,
நெ. 52, கவினியப்ப நாய்க்கன் தெரு, P. T., சென்னை.
F. M. S. & S. S. ஏஜண்டு:—N. O. A. முகம்மது இப்ராஹிம் & பிரதர்ஸ்,
நெ. 193, சாலாங் ரோட், சிங்கப்பூர்,
எஸ். ஈ. காதர் மொய்தீன், சிட்டுக் குருவி மெடிகல் ஸ்டோர்.
நெ. 39. Old Butcher Street, Pettah, கொழும்பு.

பண்ட் அண்டு கோ.
குரோம் லெதர் ஒர்க்ஸ்
1890-ல் ஸ்தாபகம்.
உயர்ந்த சாமான்!
குறைந்த விலை!

(தங்க மெடல் பரிசுபெற்றது.
தென்னிந்தியாவிலேயே எங்களிடமிருந்து தான் ஏராளமான செருப்புகள் தயாராகின்றன.

மொத்த விற்பனைக்கும், சில்லரை விற்பனைக்கும் நம்பிக்கையான இடம். தோல் சரியானபடி அதிகநாள் உழைப்பதற்காக விலையுயர்ந்த சாமான்களால் பதனிடப்பட்டது.
170, பிராட்வே, சென்னை.

ஆச்சரியமான ரண வைத்தியம்

மனிதனுடைய ஹிருதயம் "டிகார்பனேஸ்டு" செய்யப்பட்டது

லண்டன் ராயல் செஸ்ட் ஆஸ்பத்திரியில் வில்லியம் ஹார்லி என்னும் 28 வயதுடைய வாலிபனது ஹிருதயமானது பிரபல டாக்டர்களால் "டிகார்பனேஸ்டு" செய்யப்பட்டது. அவனுடைய ஹிருதயத்தில் கரிய மலவாயு சம்பந்தமான வஸ்துக்கள் சேர்ந்து காலடைவில் ரத்தக் குழாய்களைப் பாதிக்க ஆரம்பித்தது. இதனால் ஹிருதயமும் சரியானபடி வேலைசெய்ய மறுத்து விட்டது.

வைத்தியர்கள் அவனுடைய மார்பைப் பிளந்து ஹிருதயத்தைப் பரிசோதனை செய்தனர். ஹிருதயத்தில் சாம்பல் படர்ந்தாற் போல் வெண்மையான வஸ்து அடர்த்தியாக இருப்பதைக் கண்டனர். ஹிருதய சம்பந்தமான கெடு காலாக இருந்தும் வியாதியென உணர்ந்து ஹிருதயம் வேலை செய்து கொண்டிருக்கும் போதே ரண சிகிச்சைக் கருவிகளின் உதவியினால் ஹிருதயத்தில் படிந்திருந்த வஸ்துக்களைத் தேய்த்துச் சுரண்டி எடுத்தார்கள். வைத்தியர்கள் வெகு சாமர்த்தியமாக ஆபரேஷன் செய்ததினால் அசம்பாவிதங்கள் ஒன்றும் நேரவில்லை.

அந்த வியாதியஸ்தன் நல்ல காற்றோட்டமான இடத்தில் வசிக்க வேண்டுமென்பதற்காக தனியாகக் கூடாரமொன்று அமைத்து, செல்லுலாய்டு ஜன்னல்கள் வைத்து அதில் அவனுடைய படுக்கையைப் போடப் பட்டிருக்கிறது. இதனால் அவன் 70% பிராண வாயுவை சுவாசிக்கிறான். பலர் அவனை வேடிக்கை பார்க்க வருகின்றனர். இன்னும் சுமார் ஒரு மாதம் வரை ஆஸ்பத்திரியில் அவன் இருக்கக்கூடுமெனத் தெரிகிறது.

இராசிபுரம் பஞ்சாயத்து போர்டு

ஜஸ்டிஸ் கட்சிக்கு வெற்றி

(ஒரு நிருபர்)

இராசிபுரம், டிச, 2

சென்ற மாதத்தில் இராசிபுரம் பஞ்சாயத்து போர்டு தேர்தல் நடைபெற்றதில் அங்கத்தினர் 15 பேருக்கு ஒருவர் தவிர மற்ற 14 பேரும் ஜஸ்டிஸ் கட்சியின் பெயராலேயே வெற்றி பெற்றனர். எஞ்சிய ஒருவரும் முஸ்லீம் தனித் தொகுதியில் வந்த காங்கரஸ்காரர். கடந்த 16-11-36ல் நடைபெற்ற தலைவர் தேர்தலிலும், 30-11-36ல் நடைபெற்ற உபதலைவர் தேர்தலிலும் முறையே திருவாளர்கள், சின்னத் தம்பி உடையார், பி. ஏ. அவர்களும் என். காவேரி செட்டியாரவர்களும் போட்டியின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திரு. வி. வி. ராமசாமிக்குப் பாராட்டு

ஏழாயிரம்பண்ணை, டிச, 4

சமீபத்தில் நடைபெற்ற இராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி சார்பில் அபேட்சகராக நின்று பெருவாரியான ஓட்டுகளால் வெற்றி பெற்ற திரு. வி. வி. ராமசாமியைப் பாராட்டுவதாகவும், வருகிற அசெம்பிளி தேர்தல் விஷயமாக இப்பொழுதிருந்தே தொடர்ச்சியாகப் பிரசாரம் செய்ய வேண்டுமென்றும், "விடுதலை" அதிசீக்கிரம் தினசரியாக வெளிவந்தால்தான் கட்சிப் பிரசாரத்திற்குப் பேருதவியாக இருக்குமென்றும் ஏழாயிரம்பண்ணை திரு. ராமையா, எழுதுகிறார்.

ரூ. 6½ லக்ஷம் கடன் வாங்க

சென்னை கார்ப்பரேஷன் தீர்மானம்

சென்னை, டிச, 2

நேற்று கூடிய சென்னை கார்ப்பரேஷனின் விசேஷக் கூட்டத்தில் சில வேலைகளுக்காக சர்க்காரிடமிருந்து ரூ 6½ லக்ஷம் கடன் வாங்குவதென்ற விஷயம் ஆலோசனைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்விஷயமாக ஸ்ரீ சாமிவெங்கடாசலம்செட்டியார் பேசுகையில் தற்சமயம் கார்ப்பரேஷன் இந்தக் கடனுக்குப் பொறுப் பேற்றுக்கொள்ள முடியாதென்று கூறி முன்பெல்லாம் வாங்கப்பட்ட கடன் செலவழிக்கப்படாமல் மீதமிருக்கும் விவரத்தைக் கூறி வாங்கப் போகும் கடன் இவ்வருடத்தில் சரியான வகையில், பொது ஜனங்களுக்கு உபயோககரமான வகையில் செலவழிக்கப்படுமென்று உறுதி கூறப்பட்டாலொழிய இதனை ஆதரிப்பதற்கில்லை என்றார்.

மற்றும் பலர் பேசியபின் கமிஷனர் பேசுகையில் கார்ப்பரேஷன் இப்பொழுது மேற்கொண்டிருக்கும் எல்லா வேலைகளையும் ஒரேபடியாக அவசரமாக செய்வதற்கில்லையென்று குறிப்பிட்டு, இவ்வேலைகளையெல்லாம் செய்யப்பட்டு இவ்வருஷ முடிவில் அவ்வளவாகப் பணம் மீதமாகாதென்றார்.

இந்த உறுதியின் பேரில் சர்க்காரை ரூ. 6½ லக்ஷம் கடன் கேட்பதென்று ஸ்ரீ என். என். வரதாசாரியார் ஒரு தீர்மானம் கொண்டுவர, அது நிறைவேறியது.

மேலப்பாளையம்

முஸ்லீம் முன்னேற்ற இயக்கம்

(ஒரு நிருபர்)

மேலப்பாளையம், டிச. 3

1937-வது வருஷத்தில் நடைபெற விருக்கும் சென்னை சட்டசபை அசெம்பிளி தேர்தலுக்கு திருநெல்வேலி ஜில்லா முஸ்லீம் தொகுதிக்கு மேலப்பாளையம் ஷம்ஷுத்தாலிம் ஹாமீம்பள்ளி அக்தார் ஜனப் வி. என். டி. ஷேக்மன்சூர் சாஹிப் பகதூர் அவர்கள் அபேட்சகராக நிற்பதை இச் சங்கம் பாராட்டுகிறது.

நம் சகோதர முஸ்லீம் வாக்காளர்களெல்லோரும் சமூக சீர்திருத்த திலகம் ஜனப் வி. என். டி. ஷேக்மன்சூர் சாஹிப் பகதூருக்கே தங்கள் வாக்குரிமைகளைக் கொடுத்து ஆதரிக்குமாறு இச் சங்கம் வேண்டிக் கொள்ளுகிறது.

சென்னை முஸ்லீம் லீக் பார்லிமெண்டரி போர்டாரும், சென்னை முஸ்லீம் முன்னேற்றக் கட்சியாரும் திருநெல்வேலி ஜில்லா முஸ்லீம் தொகுதிக்கு ஜனப் வி. என். டி. ஷேக்மன்சூர் சாஹிப் பகதூரையே அபேட்சகராக நியமிக்கும்படி இச் சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

திருவள்ளுவர் திருநாட் கழகம்

1936 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5-ஆம் நாள் சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு இக்கழக ஆதரவில் சென்னை, கோவிந்தப்ப நாய்க்கர் பள்ளிக்கூட மண்டபத்தில் ஓர் இரங்கற் கூட்டம் திரு. டி.என். நடராஜப் பிள்ளை பி.ஏ.,பி.எல். தலைமையின்கீழ் நடைபெறும். அதுபோது அண்மையிற் காலஞ்சென்ற திருக்குறள் உரையாசிரியர்களாகிய திருவாளர்கள்: வ.உ. சிதம்பரம் பிள்ளையவர்களைப் பற்றியும், கோ. வடிவேலு செட்டியாரவர்களைப் பற்றியும் அறிஞர் பலர் சிறக்கெடுத்துப் பேசுவர்.

அசம்பிளித் தேர்தல்

சேலம் நகரத் தொகுதி

திரு. ஜெகதீச செட்டியார் அபேட்சகர் ?

(ஒரு நிருபர்)

சேலம், டிசம், 2

சென்ற நவம்பர் மாதம் 29-ந் தேதி சென்னையில் நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சியின் கூட்டத்தில், வருகிற எம். எல். ஏ. ஸ்தானத்திற்கு ஜஸ்டிஸ் கட்சியின் பிரதிநிதியாக திரு. கே. ஜெகதீச செட்டியாரை ஓர் அபேட்சகராக சேலம் நகரத் தொகுதிக்கு நிறுத்த முடிவு செய்திருப்பதாய்த் தெரிய வருகிறது.

கீழ வீரகேவபுரம் பஞ்சாயத்துக் கோர்ட்டு தேர்தல்

(ஒரு நிருபர்)

மேலப்பாளையம், டிச, 1

கீழ வீரகேவபுரம் பஞ்சாயத்துக் கோர்ட்டு தேர்தல் இன்று காலை நடைபெற்றது. அதற்கு திரு. ஆலி ஜனப் வி. என். டி. ஷெய்குமன்சூர் சாஹிப் பகதூர் அவர்கள் எதிர்ப்பின்றி தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். இவர் மேலப்பாளையம் நெசவாளர் சங்கத்தின் காரியதரிசியும், முஸ்லிம் சங்கங்கத்தின் காரியதரிசியும், பிரபல முஸ்லிம் இனம் தாரும், பொது ஜன ஊழியருமாவார்.

சென்னை அசம்பிளி தேர்தல்

திரு.கே.ஆர். சுப்பிரமணிய கவுண்டர் அபேட்சை

(ஒரு நிருபர்)

சென்னை, டிச. 2

கோபிச் செட்டி பாளையம், கல்லுப்பட்டியிலிருக்கும் பிரபல மிராசுதார் திரு. கே. ஆர். சுப்பிரமணிய கவுண்டர் கோவை ஜில்லாவின் கோபி செட்டிபாளையம், கொல்லேகால், பவானி முதலிய தாலூக்காக்களுக்கு அசம்பிளியில் உள்ள ஸ்தானத்திற்கு தனிப்பட்ட ஹோதாவில் அபேட்சகராய் நிற்பதாகத் தெரிகிறது.

வங்க சட்டசபைக் கமிட்டியில் 18-பேர் ராஜினாமா

கல்கத்தா, டிச, 1

வங்காள காங்கரஸ் சட்டசபைக் கமிட்டியிலிருந்து டாக்டர் புரொபல்ல சந்திரகோஷ் டாக்டர் இந்திர நாராயண சென்குப்தா முதலிய 18-அங்கத்தினர் தங்களது பதவிகளை ராஜினாமா செய்து விட்டனர். இவர்கள் கமிட்டி ஜில்லா காங்கரஸ் கமிட்டி நியமித்த அபேட்சகர்களை நிராகரித்து புதிய அபேக்ஷகர்களை நியமித்ததை ஆக்ஷேபித்து இவ்வாறு ராஜினாமா செய்திருக்கின்றனர்.

சைவ சித்தாந்த சபை

அனுதாபக் கூட்டம்

(ஒரு நிருபர்)

தூத்துக்குடி, நவ, 29

ஷை சபையார் இன்று மாலை 5 மணிக்கு திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் மடாலயத்தில் கூடினர். அது காலை இச் சபையில் அதிக காலமாக அங்கம் வகித்து வந்தவரும், எண்ணிலடங்காத தொண்டாற்றியவருமான பெரியார் வ. உ. சிதம்பரம் பிள்ளை மரணத்தைக் குறித்து சபையார் தம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டதுடன், அன்னாரின் திரு உருவப் படத்தை அச்சிட்டு இனமாக வழங்கவும் தீர்மானித்திருக்கின்றனர்.

ஹரிஜனங்களும், காங்கரஸும்

திரு. சத்தியமூர்த்தி நிபந்தனைகள்

மகாத்மாவின் கருத்து

சென்னை, டிச, 4

ஹரிஜனங்களைக் காங்கரஸ் அபேட்சகர்களாக ஏற்றுக் கொள்ளுவதற்கு திரு. சத்தியமூர்த்தி சில நிபந்தனைகளை வரைந்து சகல ஹரிஜனத் தலைவர்களுக்கும் அனுப்பியிருந்தார். அதன் நகலொன்றை மகாத்மா காந்திக்கும் அவர் அனுப்பினார். அந்த நிபந்தனைகளாவன:—

1. ஹரிஜன முன்னேற்றத்தைத் தங்கள் வேலைத் திட்டத்தின் முக்கிய அம்சமாகக் கொண்டே காங்கரஸ் கட்சியினர் எப்போதும் வேலை செய்வார்கள்.

2. காங்கரஸ் கைக் கொள்ளும் சட்டசபை பகிஷ்காரமோ ஒத்துழையாமையோ அவர்களுக்குப் பிடிக்காவிட்டால் அது ஹரிஜனங்களைக் கட்டுப்படுத்தாது.

3. சர்க்கார் உதவி தேவையாகவிருக்கும் ஹரிஜன முன்னேற்றக் காரியங்களில் ஹரிஜனப் பிரதிநிதிகள் இஷ்டம்போல் ஓட்டுச் செய்யலாம். காங்கரஸ் கட்சி விதிகள் அப்போது அவர்களைக் கட்டுப்படுத்த மாட்டா.

4. கட்சிக்கும் தங்களுக்கும் ஹரிஜன முன்னேற்ற விஷயத்தில் அபிப்பிராய பேதம் மேற்பட்டால் அக்காரியங்களில் இஷ்டம்போல் ஓட்டுச் செய்ய ஹரிஜனப் பிரதிநிதிகளுக்கு உரிமையுண்டு.

இந்த நிபந்தனைகளைக் கவனித்து ஹரி ஜனங்கள் காங்கரஸ் கட்சி சார்பாக நிற்பரென்று எதிர்பார்க்கப் படுகிறது.

மகாத்மா கருத்து

மகாத்மா காந்தி பின்வருமாறு எழுதியுள்ளார்.

அன்பார்ந்த சத்தியமூர்த்தி,

உங்கள் நிபந்தனைகள் நியாயமானவையாகவிருக்கின்றன. ஆனால் ஹரிஜன முன்னேற்றம் என்றவார்த்தை தெளிவாகவில்லை. தீண்டாமையை வேரோடு களைய வேண்டுமென்பதே காங்கரசின் உறுதி மொழி. இது வேலைத் திட்டத்தின் ஓரம்சம். பூர்வாங்கத் தேர்தலில் போட்டியில்லா திருக்குமென்று நம்புகிறேன். நீங்கள் நிபந்தனைகளை யேன் ரகசியமாக வைத்திருக்க வேண்டும்? பெருவாரியான ஜனங்கள் சம்பந்தப்பட்ட காரியங்கள் பகிரங்கமாக நடைபெற வேண்டுமென்றே நான் யோசனை சொல்லுவேன்.

வாரம் பூராவும் பரீட்சியுங்கள்!

இதைவிட 4-பங்கு விலை வாட்சுகளுக்கு இணையானது. திருப்தியில்லையேல் பூராப் பணமும் வாபீஸ். 5 வருஷம் உத்தரவாதம்.

டாவஸன்

லீவர் ரிஸ்டு வாட்சு

உயர்தர லீவர் ஓட்டம். சிறிய அளவில் அழகிய அமைப்பு. சரியான மணி காட்டி பல வருஷம் உழைக்கும்.

பிரகாசமான நிக்கல் வெள்ளி கேஸ் ரூ. 6—4—0.
கோல்டு பிலேட் கேஸ் ரூ. 6-12-0
ரேடியம் டயலுக்கு தனி 0—8—0.
போஸ்டேஜ் & பாக்கிங் 0—7—0.
கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதுக.

Sole Agents :—
THE UNION TRADING CO.,
2, Doyehatta St., (D/3),
CALCUTTA.

எது ?

தமிழ்நாட்டில் குறைந்த சந்தாவில்
அதிக பக்கங்களோடு வெளிவரும் தமிழ் மாதப் பத்திரிகை.

"சித்தன்"

ஒன்றே. இனிய கதைகள், நாடகம், உலகச் செய்தி, வைத்தியக் குறிப்பு, சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன நிறைந்தது.

வருட சந்தா அணா (8) எட்டே. வெளிநாடு ரூ. 1.
மாதிரிப் பிரதி இனாம். விளம்பர விகிதம் மிகவும் குறைவு.

விபரங்களுக்கு எழுதவும் :—
மானேஜர் :—"சித்தன்", பழனி, S.I.

"கிராம ஊழியன்"

வாரப் பதிப்பு.

ஆசிரியர் :—S. பூரணம் பிள்ளை.

கிராமப் புனருத்தாரணத்தின் பொருட்டுத் தோன்றி மாதம் இருமுறையாக வெளிவந்த "கிராம ஊழியன்" இரண்டாம் ஆண்டின் ஆரம்பமாகிய 25—10—36௳ முதல் பிரதி ஞாயிறுதோறும், நாட்டின் நலத்திற்கான நல்லோரின் கட்டுரைகள் தாங்கி எல்லோரும் கோரும் நல்லதோர் முறையில் வெளிவருகிறது. எல்லா இடங்களிலும் ஏஜெண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதுக.

உள்நாடு : வருட சந்தா ரூ. 3. வெளிநாடு : வருட சந்தா ரூ. 5.

மானேஜர் :—"கிராம ஊழியன்",
துறையூர். (திருச்சி ஜில்லா)

ரூபா 2—8—0-க்கு 3 வாட்சுகளும், பரிசுகளும்.

ஏக காலத்தில் ரூ. 2-8-0-க்கு 10 பாட்டில் ஆட்டோ டிங்க்சர் அத்தர் புட்டிகள் வாங்குபவர்களுக்கு ரயில்வே டம்மி பாக்கெட் கெடியாரம் 1, டம்மி ரிஸ்டு வாட்ச 1, 10 வருஷ உத்திரவாதமுள்ள ஒழுங்காக மணி காட்டக்கூடிய "B" டைம்பீஸ் 1, 300 அடி வெளிச்சம் காட்டும் டார்ச் விளக்கு 1, 14 காரட் ரோல்டு கோல்டு கிப்பு பவுண்டன் பேனா 1, மூக்கு மாலை 1 இலவசமாக அனுப்பப்படும். உடனே எழுதுங்கள். தபால் செலவு அணா 14 பிரத்தியேகம்.

DUTTA & Co., (V. V.)
15/1, Joymitter Street,
Hatkhola P. O.,
CALCUTTA.

ரயில்வே கால அட்டவணை

சென்னை : (சென்ட்ரல் ஸ்டேஷன்)

வண்டியின் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
பெங்களூர்		
மெயில் ...	மாலை 9-30	காலை 6-10
,, பாசஞ்சர் ...	மாலை 9-40	காலை 5-30
,, பாசஞ்சர் ...	காலை 6-20	மாலை 7-40
,, எக்ஸ்பிரஸ் ...	மாலை 1-0	மாலை 2-10
பம்பாய் ,, ...	காலை 8-30	மாலை 4-55
,, மெயில் ...	மாலை 8-45	காலை 5 55
கால்டேர் பாசஞ்சர் ...	மாலை 7-30	காலை 10-35
,, பாசஞ்சர் ...	காலை 9-5	மாலை 6-10
கிராண்ட் டிரங்க்		
எக்ஸ்பிரஸ் ...	காலை 7-45	மாலை 5-51
ராய்ச்சூர்		
பாசஞ்சர் ...	காலை 9-20	மாலை 8-40
ஜோலார்பேட்டை		
பாசஞ்சர் ...	மாலை 12-50	மாலை 2—0
சேனிகுண்டா லோகல்	...	காலை 9-40
,, பாசஞ்சர்	— —	மாலை 9-22
காட்பாடி		
பாசஞ்சர் ...	மாலை 5-30	காலை 9-40
அரக்கோணம்		
பாசஞ்சர் ...	மாலை 6-30	— —
மலபார்		
எக்ஸ்பிரஸ் ...	மாலை 8-5	காலை 7-20
கல்கத்தா		
மெயில் ...	மாலை 8-35	காலை 7-50
புருஷவண்டன்		
எக்ஸ்பிரஸ் ...	மாலை 9-15	காலை 6-30

சென்னை : (எழும்பூர்)

வண்டியின் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
செங்கோட்டை		
பாசஞ்சர் ...	காலை 7-30	மாலை 7-30
கடலூர்		
பாசஞ்சர் ...	மாலை 4-5	காலை 11-20
இன்டோ—சிலோன்		
எக்ஸ்பிரஸ்	,, ,, 9-0	... 6-45
திருவனந்தபுரம் பாஸ்டு		
பாசஞ்சர்	,, 9-30 ,,	... 6-10
திருச்சி பார்ச்ல்		
பாசஞ்சர்	,, 10-20 ,,	... 5-30
கார்டு லைன்		
தனுஷ்கோடி பாஸ்டு		
பாசஞ்சர் ...	காலை 11-25	மாலை 2-45
திருவனந்தபுரம்		
எக்ஸ்பிரஸ் ...	மாலை 8-0	காலை 7-20

சென்னை மாகாண வள்ளுவர் மகாஜன சங்கம்

காரியதரிசி எழுதுகிறார் :—

சென்னை, டிச. 3

இச் சங்கத்தினாதரவில் சமீபத்தில் நடைபெறப் போகும் 2-வது மாகாண மகாநாட்டுப் பிரசாரத்திற்காக காரியதரிசி திரு. ச. சின்னலிங்க கவினர், பெங்களூர், கோலார், வட ஆற்காடு முதலிய இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்வார். ஆகவே, ஆங்காங்குள்ள நமது சமூக மக்கள மகாநாடு வெற்றி பெறுவதற்காக தாராளமாகப் பொருளுதவி புரியும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சென்னைச் சட்ட சபை

கடைசிக் கூட்டம்

கவர்னர் பிரிவுபசாரப் பிரசங்கம்

ஜஸ்டிஸ் கட்சிக்குப் பாராட்டு

சென்னை, டிச, 3

இன்று சென்னைச் சட்ட சபையில் மே. த. கவர்னர் அவர்கள் நிகழ்த்திய, பிரிவுபசாரப் பிரசங்கத்தின் சில பகுதிகள் பின் வருமாறு:—

எதிர் பாராத நிகழ்ச்சிகள் மேற்கொண்டு ஏற்படா விட்டால் இதுவே சட்ட சபையின் கடைசிக் கூட்டமாகும். தென்னிந்திய அரசியல் சரித்திரத்திலே சென்னைச் சட்டசபை ஒரு முக்கியமான கட்டத்தை யடைந்திருக்கிறது. அடுத்த சபை புதிய அரசியல் திட்டத்தின் கீழ் கூடும்.

சென்னையைப் பொறுத்த வரையில் புதிய அரசியலுக்குத் தேவையான பூர்வாங்க வேலைகள் எல்லாம் அநேகமாக முற்று பெற்று விட்டன. வாக்காளர் ஜாபிதாக்கள் பிரசுரம் செய்யப்பட்டு விட்டன. தேர்தலுக்குத் தேவையான முன்னேற்பாடுகளைத் தேர்தல் அதிகாரிகள் செய்து வருகிறார்கள். வாக்காளர்களைக் காலிகள் பயமுறுத்தாமல் தடுக்கும் பொருட்டுச் செய்யவேண்டிய வேலைகளையும் அதிகாரிகள் தேர்தல் விஷயங்களில் பாரபட்சமின்றி நடந்து கொள்ள வேண்டியதையும் சர்க்கார் அதிகாரிகளுக்கு எடுத்துக் காட்டப் பட்டுவிட்டன. எனினும், ஒரு விஷயத்தை நான் வற்புறுத்த விரும்புகிறேன். தேர்தல் பிரசாரத்தின் பெயரால் சர்க்காரைக் கவிழ்க்க விஷமப் பிரசாரம் செய்வதை சர்க்கார் எக்காரணம் கொண்டும் சகித்துக் கொண்டு இருக்க மாட்டார்கள். நியாயமான தேர்தல் பிரசாரங்களில் தலையிடாமல் இருக்குமாறும் தனி நபர்களோ, ஸ்தாபனங்களோ கட்டுப்பாடான ஏற்பாடுகள் வாக்காளர்களைப் பயமுறுத்தித் தொந்தரவு செய்தால் உடன் அவர்கள்மீது தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அதிகாரிகளுக்கு முறைப்படி உத்தரவுகள் அனுப்பப்படும். பயமுறுத்தலுக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் அஞ்சாமல் வாக்காளர் சுயேச்சையாக வோட்டுக் கொடுப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் எல்லாம் சர்க்கார் செய்வார்கள்.

சென்னை காட்டிய நல்வழி

மாண்ட்—போர்டு சீர்திருத்தத்தை வெற்றிகரமாக நடத்தி வைத்ததற்காக தற்காலச் சட்டசபை மெம்பர்களுக்கும், மாண்ட்—போர்டு சீர்திருத்தச் சட்டசபை யேற்பட்டது முதல் சட்டசபை மெம்பர்களாய் இருந்து வந்தவர்களுக்கும் நான் கடைசியாக வாழ்த்துக் கூறுகிறேன்.

ஜன நாயக நிர்வாக முறையை அமல் நடத்தும் விஷயத்தில் சென்னை ஏனைய மாகாணங்களுக்கு வழிகாட்டி யிருக்கிறது. அரசியலை நிதானமாகவும், புத்திசாலித்தனமாகவும் நடத்தி சென்னை மாகாணம் நியாயமான புகழும் பெற்றிருக்கிறது.

புது அரசியல் சட்டத்தின்படி மாகாணச் சட்டசபைகளுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே, வரப்போகும் சட்டசபைகளுக்கு அதிகப்படியான பொறுப்புகளும் வாய்த்திருக்கின்றன. சென்னை மாகாணத்தில் நிதானமாகவும், புத்திசாலித்தனமாகவும் புதிய அரசியல் அமல் நடத்தப் படுமென்றும் தேச மகா ஜனங்களின் முன்னேற்றத்துக்கு அநுகுணமாக சர்க்காரும் சட்டசபைகளும் நிர்வாகம் நடத்து மென்றும் நான் பூரணமாக நம்புகிறேன்.

எனது உத்தியோக காலத்தில் நீங்கள் ஒத்துழைத்ததற்காகவும் உதவி புரிந்ததற்காகவும் மீண்டும் ஒரு முறை நன்றி கூறுகிறேன். உங்கள் கட்சிக் கொள்கைகள் எவ்வாறாக இருந்த போதிலும் சரி, சொந்த ஹோதாவில் நீங்கள் எல்லாம் என்னிடம் வெகு அன்னியோன்னியமாகவும், அன்பாகவும் நடந்து வந்திருப்பது எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கின்றது. எதிர்காலத்தில் உங்களுக்கு வெற்றி புண்டாகுமாறு வாழ்த்துகிறேன்.

கூட்டுறவு மசோதா சட்டமாயிற்று

பல உப மான்யங்கள் நிறைவேறின

சென்னை, டிச 5,

சென்ற செவ்வாய்க்கிழமை இடைவேளை போஜனத்திற்குப் பின் சென்னை சட்ட சபை மீண்டும் கூடியதும் முதல் மந்திரி கனம் பொப்பிலி ராஜா மாற்றப்பட்ட இலாகாக்களுக்கு ரூ. 24,400 உப மான்யம் அளிக்கவேண்டு மென்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். தர்ம ஸ்தாபனங்களின் கணக்குகளை வைத்திருக்க இந்திய சர்க்காருக்கு 3100 ரூபாயும், ஜில்லா போர்டுகளை பிரிப்பதற்காக நியமிக்கப் பட்ட விசேஷ ஆபீசரின் சம்பளம், அலவன்சிற்காக 10,700 ரூபாயும் ஸ்தல ஸ்தாபன டிபுடி இன்ஸ்பெக்டர்கள் மூவருக்கு சம்பளத்திற்காக 10,600 ரூபாயும் இதில் சேர்ந்திருக்கின்றன.

சில அங்கத்தினர்கள் விவாதித்துப் பேசிய பின் கனம் பொப்பிலி ராஜா பதில் கூறுகையில், கட்சி நலத்தைக் கருதி ஜில்லா போர்டுகளை பிரிவினை செய்யப்பட வில்லை யென்றும், அவ்வித பிரிவிருக்குமானல் தாலுகா போர்டுகளை எடுத்திருக்கவே முடியா தென்றும் ஜில்லா போர்டுகளின் செல்வ நிலைமையை பலப் படுத்தத் துணிந்து அந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டதென்றும், சுயேச்சையாக எல்லா ஜில்லா போர்டுகளின் செல்வ நிலைமையையும் ஆராயவே ஒரு விசேஷ ஆபீசர் நியமிக்கப்பட்டிருக்கிறாரென்றும், மாகாணப் பொதுத் தேர்தலை உத்தேசித்தே நவம்பரில் ஜில்லா போர்டு தேர்தலை நடத்த உத்தரவிடப்பட்டதென்றும், ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தை நன்றாக நடத்துவதற்கும், அங்கு எவ்வித தவறுகளும் நடக்காமல் பார்த்துக் கொள்ளவுமே மேற் கூறியபடி விசேஷ உத்தியோகஸ்தர்கள் நியமிக்கவேண்டுமென்று கூறப்படுகிறதென்றும் அந்த மூவரில் ஒருவர் தேர்தலுக்குப் பொறுப்பாக விருப்பாரென்றும், மற்ற இருவரும் ஜில்லாக்களிலிருப்பார்களென்றும் கூறினர்.

வியாழக்கிழமை நடவடிக்கை

சென்னை சட்டசபை இன்று காலை 11 மணிக்கு கனம் பி. ராமச்சந்திர ரெட்டி தலைமையில் கூடியது. கேள்வி நேரத்திற்குப் பின் ஸ்தல ஸ்தாபன இலாகாவுக்கு ரூபாய் 24,400 உபமான்யம் வேண்டுமென கனம் முதன் மந்திரி கோரியது அனுமதிக்கப்பட்டது.

கூட்டுறவு சட்டத் திருத்த மசோதா

பிறகு கூட்டுறவு சட்டத் திருத்த மசோதாவை கனம் பி. டி. ராஜன் பிரேரேபித்தார். அவர் கூறியதாவது:—கூட்டுறவு சப் டிபுடி ரிஜிஸ்திரார்களை இப்போது சர்க்காரே நியமித்து வருகின்றனர். அவர்களை நியமிக்கும் அதிகாரம் இனி ரிஜிஸ்திராருக்கே இருந்து வரும். அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் கடன்களை ஒரு ஐக்ய நாணய சங்கம் வினியோகம் செய்தால் அதிகப்பட்ட தொகையை நிர்வாக சபைக் கமிட்டி மெம்பர்களிடமிருந்தும் அவர்களது சாதகிகளிடமிருந்தும் வசூலிக்கப்படும். ஒருவர் மீது டிக்ரி வாங்கப்பட்டிருக்கால அவரது சொத்துக்களை ஜப்தி செய்யாமலேயே ஏலத்திற்குக் கொண்டுவருவது, ரிஜிஸ்திராருக்கு டிக்ரியை நிறைவேற்றும் அதிகாரம் அளிப்பது.

திருத்த மசோதாவின் 4-வது பிரிவில் "பழைய கமிட்டி" என்ற வார்த்தையை நீக்கி விடுமாறு திரு. டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் பிரேரேபித்தார். திரு. செ. தெ. நாயகம் திருத்தத்தை ஆமோதித்து மந்திரிகள் தங்கள் கட்சி மனோபாவம் கொண்டு பழைய கமிட்டிகளைக் கலைத்துவிட இது இடமுண்டு பண்ணுமெனக் கூறினர்.

சர். ஏ. பி. பாத்ரோ திருத்தத்தை எதிர்த்துப் பேசினர்.

கனம் பி. டி. ராஜன் பதிலளிக்கையில், ரிஜிஸ்திராரின் முன் அனுமதி பெற்றே எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப் படுமெனதான் உறுதி கூறுவதாகவும், கால எல்லை ஏற்படுத்துவது பற்றி யோசிப்பதாயும் கூறினர்.

திருத்தம் தோல்வியுற்று மசோதா முடிவில் சட்டமாக்கப் பட்டது.

சிறைச்சாலை இலாகாவுக்கு 170,700 ரூபாய் உபமான்யம் அனுமதிக்குமாறு கனம் சட்ட மந்திரி கோரினர்.

திரு. காசியப்ப கவுண்டர் சிறையில் கைதிகளுக்கு மோர் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்த 100 ரூபாய் குறைக்குமாறு பிரேரேபித்தார்.

சட்டமந்திரி தமக்கு இது விஷயத்தில் அனுதாபமிருந்தும், பணமில்லை யென்றும், இதற்கு ஒரு லட்சம் ரூபாயாவது வேண்டுமென கணக்கிடப் பட்டிருக்கிறதென்றும், அடுத்த வருஷம் பணமிருந்தால் இதை அனுமதிக்கட்டும் என்றும் கூறினர்.

திருத்தம் தோல்வியுற்று உப மான்யம் அனுமதிக்கப்பட்டது.

பின்பு போலீஸ் இலாகாவுக்கு 1,60,000 உபமான்யமும், மின்சார இலாகாவுக்கு உபமான்யமும் அனுமதிக்கப்பட்டன.

பிறகு குமார ராஜா கனம் முத்தைய செட்டியார் கல்வியிலாகாவுக்கு 460,000 ரூபாய் உபமான்யம் அனுமதிக்குமாறு கோரினர்.

கிராமங்களிலுள்ள குழந்தைகளுக்கு அவ்விடத்திலேயே கல்வி கிடைக்குமாறு செய்யவேண்டுவது அவசியமாயிருப்பதாயும், மூன்றாவது வகுப்பு வரையுள்ள பள்ளிக் கூடங்கள் அதிகமாகவும் அதற்கு மேலுள்ள வகுப்புகளடங்கிய பள்ளிக்கூடங்கள் மத்திய ஸ்தலங்களிலும் இருக்குமாறு செய்வதாயும், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைக்கையில் அவர்களை நியமிப்பதுடன் பயிற்சி பெறுபவர்களைத் திடமென்று நீக்கக் கஷ்டமுண்டுபண்ணக் கூடாதென்றும், ஹையர் எலிமெண்டரி ஆசிரியர்களின் சம்பளமும், செகண்டரி ஆசிரியர்களின் சம்பளமும் ஒரு ரூபாய் உயர்த்தப் படுமென்றும், அடுத்த வருஷம் முன்னவர்களுக்கு ஒரு ரூபாயும், பின்னவர்களுக்கு 6 அணாவும் உயர்வு கொடுக்கப்படுமென்று நம்புவதாயும், ஆசிரியர்களின் வேலை நிலைமையை சர்க்கார் விசாரித்து வருவதாகவும் மேற்பார்வைக்கு 4 டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களையும், 29 ஜூனியர் டிபுடி இன்ஸ்பெக்டர்களையும் 2 சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்களையும் நியமிக்கப் போவதாகவும் கூறினர்.

பிற்பகல் நடவடிக்கை

பிற்பகல் சட்டசபை மீண்டும் கூடியதும், ஆரம்பக் கல்வி உபமான்யத்தின்மீது தீவிரமாக விவாதம் நடைபெற்றது. இதற்குள் கவர்னர் வருவதற்கான காலமாகிவிட்டதால் சபையின் நடவடிக்கை இதோடு நிறுத்தப்பட்டது. கவர்னர் சொற்பொழிவு 15 நிமிஷம் பிடித்தது. (கவர்னர் சொற்பொழிவு மற்றோரிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

வெள்ளிக்கிழமை — நடவடிக்கை

பாக்கியுள்ள உப மான்யங்களைப் பைசல் செய்ய சென்னை சட்டசபை இன்று காலை கூடியது. கேள்வி நேரத்திற்குப் பின் ஆரம்பக் கல்வி உப மான்யத்தைக் குறித்து மேற்கொண்டு விவாதம் நடைபெற்றது.

திரு. செ. தெ. நாயகம் பேசுகையில் உதவிப் பள்ளிக்கூடங்களில் குறைந்த பக்ஷ சம்பள விகிதமொன்றை யேற்படுத்த வேண்டுமென்றும், ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்திற் கேற்றபடி கிராண்டை யதிகரிக்க வேண்டுமென்றும், ஆசிரியர்கள் பிரைவேட் டியூஷன்கள் வைத்துக்கொள்ள அனுமதிக்கக் கூடாதென்றும் அவர்கள் புத்தகம் விற்பதையும் ஸ்டேஷனரி விற்பதையும் தடுக்கவேண்டுமென்றும் மேற் பார்வை உத்தியோகஸ்தர்கள் அதிகமாயிருந்தால் தான் ஒழுங்கீனங்களைத் தடுக்க முடியுமென்றும், அனாதை விடுதிகளுக்கு தாராளமாக கிராண்ட் அளிக்க வேண்டுமென்றும் ஸ்திரீ இன்ஸ்பெக்டர்களை அதிகரிக்க வேண்டுமென்றும் சர்க்காரிடம் கிராண்ட் பெறும பள்ளிக்கூடங்களில் கட்டாயமாக தாழ்த்தப்பட்ட வகுப்பு உபாத்தியாயரை நியமிக்க வேண்டுமென விதி ஏற்படுத்த வேண்டுமென்றும், தனிமையான தொழில் இலாகா பள்ளிக்கூடங்கள் மறைவதை ஆதரிப்பதியும் கூறினர்.

சுவாமி சகஜானந்தம், தொழிலாளர்களுக்குத் தனிப் பள்ளிக்கூடங்கள் அவசியமென்றும், சாதாரண பள்ளிக்கூடங்களில் தாழ்த்த வகுப்பினர்களைச் சேர்த்துக்கொண்டாலும் சரியாக நடத்துவதில்லை யென்றுங் கூறினர்.

ஸ்ரீமதி அலமேலுமங்கைத்தாயாரம்மாள், 5-ம் வகுப்பு வரையில் கட்டாயமாகக் கல்வி போதிக்கப்பட வேண்டுமென்றும், ஸ்திரீ உபாத்தியாயர்கள் மூலமே பெண்களுக்கு கல்வி போதிக்கப்பட வேண்டுமென்றும், வகுப்பு ஒற்றுமைக்கான வழியில் மத போதனை பள்ளிக்கூடங்களில் இருக்க வேண்டுமென்றும், கிராமப் புனருத்தாரண வேலையைக் குறித்து பள்ளிக்கூடங்களில் போதிக்கப்பட வேண்டுமென்றும், திறமையில்லாத பள்ளிக்கூடங்களை எடுத்துவிடாமல் அவற்றை திறமையுள்ளதாகச் செய்ய வேண்டுமென்றும் கூறினர்.

திரு. பஷீர் அகமது, ஆசிரியர்கள் நகர மனப்பான்மை கொள்ளாமல் கிராமாபிவிர்த்தி நோக்கமுள்ளவர்களா யிருக்குமாறு செய்ய வேண்டுமென்றும், ஆசிரியரின் சம்பளம் ஜீவனத்திற்குப் போதுமானதாயிருக்க வேண்டுமென்றும் கூறினர்.

கனம் மந்திரி பதில்

கல்வி மந்திரி கனம் குமார ராஜா எம். ஏ. முத்தைய செட்டியார் விவாதத்திற்குப் பின் வருமாறு பதில் கூறினர்.

ஏற்கனவே உள்ள லோயர்கிரேட் எலிமெண்டரி உபாத்தியாயர்களின் சம்பளம் எவ்விதத்திலும் பாதிக்கப்படாது. கல்விச் செலவில் பாதிக்கு மேல் ஆரம்பக் கல்விக்கே செலவிடப் படுகிறது. அசெண்டு கிராண்டில் விகிதாசாரக் குறைவு அடுத்த வருஷம் அடியோடு நீக்கப்பட்டு விடும். சர்க்கார் கொடுக்கும் கிராண்டு ஆசிரியர்களுக்குப் போய்ச் சேராமலிருக்கும் தீமைகளைக் கண்டு பிடித்துத் தடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. பள்ளிக் கூடங்களுக்கு திடீரென இன்ஸ்பெக்டர்கள் சென்று பார்வையிட வேண்டுமெனும் கொள்கை அநுஷ்டானத்தில் இருந்தே வருகிறது. டிவிஷன் இன்ஸ்பெக்டர்கள் நியமனத்தை ஒத்திவைக்க முடியாது. திறமையற்ற பள்ளிக்கூடங்களை அடியோடு எடுத்து விடப்போவதில்லை. அப்பள்ளிக்கூடங்களை அபிவிர்த்தி செய்து மேம்படுத்த முயலுவோம். தாழ்த்தப்பட்டவர்கள் பள்ளிக்கூடங்கள் திறமையாக நடந்தால் அவைகள் சர்க்காரின் பூரண ஆதரவைப்பெற்று வருமென உறுதி கூறுகிறேன். சர்க்கார் பண நிலைமை மேம்பட்டால் இண்டர் மீடியட் படித்த உபாத்தியாயர்களுக்கு அதிக கிராண்ட் அளிக்கப்படலாம். உபாத்தியாயினிகளை அதிகமாக நியமிக்க வேண்டுமென்பதை சர்க்கார் கவனிப்பார். தொழிற் கல்வி போதிக்கும் விஷயம் யோசனையிலிருந்து வருகிறது. ஆசிரியர்களின் வேலை கூடியவரை சாசுவதமாயிருக்க வழி செய்யப்படும். ஆசிரியர்கள் வேறு வேலை செய்வதை தடுப்பது ஆசிரியர் வேலை நிலைமையுடன் சேர்த்து ஆராயப்படும். தொழிலாளர் பள்ளிக் கூடங்களை திடீரென்று மூடிவிடுவது சாத்தியமில்லை. சர்க்காரே பாட புத்தகங்களை வெளியிடும் விஷயமாக இப்போது பைசல் செய்வதற்கில்லை. பள்ளிக் கூடங்களில் மத போதனையை எவ்வளவு தூரம் நடத்துவதென்பது சுலபமாக முடிவு செய்யக்கூடியதல்ல.

பிறகு உபமான்யம் அனுமதிக்கப்பட்டது. இத்துடன் சபை இடைவேளை போஜனத்திற்குக் கலைந்தது.

பிற்பகல் நடவடிக்கை

இடை வேளை போஜனத்திற்குப் பின் சென்னை சட்டசபை மீண்டும் கூடியதும் பல உபமான்யங்கள் கொண்டு வரப்பட்டு நிறைவேறின.

சட்ட மந்திரி சர் கே. வி. ரெட்டி சபைத் தலைவரை வாழ்த்திப் பேசினர். அவரைப் பற்றி மற்றும் பல அங்கத்தினர்கள் பேசினர்.

சட்டசபைத் தலைவர் கனம் பி. ராமச்சந்திர ரெட்டி எல்லோருடைய வாழ்த்துக்கும் தனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார்.

பிறகு சபையைக் கலைத்து விட்டதாக கவர்னரின் செய்தியை தலைவர் வாசித்தார்.

காங்கரஸ்காரர் திருவிளையாடல்

கவர்னருக்கு உபசாரப் பத்திர மளித்தால் காங்கரஸ் பெருமை குறைந்து விடுமாம். கவர்னர் வெளியூருக்குப் போகும்போதும், திரும்பி வரும்போதும் சென்னை மேயர் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று முறையே வழியனுப்பவும் வரவேற்கவும் செய்தால காங்கரஸ் மானம் கவிழ்ந்து விடுமாம்.

சட்டசபைகளுக்கு வைஸ்ராயும், கவர்னர்களும் விஜயம் செய்யும் போது எழுந்திருந்து மரியாதை செய்தால் காங்கரஸ்காரர் அந்தஸ்து அஸ்தமித்து விடுமாம்.

ஆனால், காங்கரஸ் தலைவர் என்று சொல்லிக் கொள்வோர் செய்வதென்ன?

புது காங்கரஸ் பக்தர் டாக்டர் சுப்பராயன் நவம்பர் 23-ந் தேதி கவர்னருடன் சிற்றுண்டியருந்தினாராம்.

காங்கரஸ் பக்தரான சிமிட்டி சாமி வெங்கடாசலம் செட்டியார் நவம்பர் 27-ந் தேதி கவர்னரைப் பேட்டி கண்டாராம்.

தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவர் திரு. சத்திய மூர்த்தியும் கவர்னரைப் பலமுறை பேட்டி கண்டிருக்கிறாராம்.

இந்தத் திருக்கூத்துகள் எந்த ரகத்தைச் சேர்ந்தவை? இவைதான் தேசியமா? தேச பக்தியா? காங்கரஸ் வீரமா?

பம்பாய் கோவிலில் தீ

வைத்தவர் யாரெனத் தெரியவில்லை

செய்தி டைரக்டர் கூறுவது:—

காக்பாதா விலுள்ள இந்து கோவில் முஸ்லிம்களால் தீயிடப்பட்டதென்று சென்ற செவ்வாய்க்கிழமையன்று பலபத்திரிகைகள் பிரசுரித்திருந்தன. அச்செய்தி ஆதார மற்றது. போலீசார் இது விஷயமாக தீவிரமாக விசாரணை நடத்தினர். அதினின்றும் வேண்டுமென்று யாரோ தீயிட்டிருக்கிறார்களென்று மாத்திரம் தெரிய வந்ததே யொழிய இன்னமதத்தார் தான் செய்தார்களென்பதற்கு ருசு ஒன்றுமில்லை.

தனிப்பட்டவர் கோயில்களிலும் பிரவேச உரிமை

திருவாங்கூரில் அளிக்கப்படுகிறது

சமஸ்தான மெங்கும் பாராட்டுக் கூட்டங்கள்

திருவனந்தபுரம், டிச, 3

திருவாங்கூரில் தனிப்பட்ட நபர்களுக்குச் சொந்தமான கோயில்களிலும் (பிரைவேட் கோயில்களிலும்) ஹரிஜனங்கள் செல்லுவதற்கு உரிமை அளிக்கப்படுவதாக இங்கு தகவல்கள் கிடைத்திருக்கின்றன. எண்ணக்காடு, குட்டநாடு, இவற்றிலுள்ள தனிப்பட்ட நபர்களது கோயில்களில் ஹரிஜனங்கள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டிருக்கின்றனராம்.

ஆதி திராவிடர் பொதுக் கூட்டம்

(ஒரு நிருபர்)

சென்னை, டிச, 5

நாளை மாலை 6 மணிக்கு சென்னை ஆதிதிராவிடர்களின் பொதுக் கூட்டமொன்று பீப்பிள்ஸ் பார்க்கில் நடைபெறும். அதற்கு திரு. பி. கே. புஷ்பராஜ், பி. எஸ். ஸி., பி. எல்., அட்வகேட் அவர்கள் தலைமை வகிப்பார்கள். மேற்படி பொதுக் கூட்டத்தில் வரப்போகும் சட்டசபைத் தேர்தலைப்பற்றிய விஷயங்கள் பேசப்படும்.

மதுரை மாணிக்கம் மறைந்தது

கோவை, டிச, 4

சாத்தூர் எஸ். ஏ. சோமசுந்தரம் பிள்ளை அவர்களின் இரண்டாவது புத்திரரும், மதுரை முனிசிபல் ஆபீஸ் கிளார்க்குமான திரு. என். என். மாணிக்கம் அவர்கள் சின்னாட்களாக காச நோயால் பீடிக்கப்பட்டு கோயம்புத்தூரில் தனது சகோதரர் நாயகம் அவர்கள் இல்லத்தில் சிகிச்சைபெற்று வரும் தருணத்தில் நோய் முற்றி சென்ற 2-ந் தேதி காலகதியடைந்தார். காலஞ்சென்ற திரு. பிள்ளையவர்களுக்கு சென்ற வருடம் தான் திருமணம் நிறைவேறியது. தனது இளம் மனைவியையும், தாயார், சகோதரர், சகோதரி, இஷ்ட சிநேகிதர்கள் முதலியவர்களையும் தவிக்கவிட்டு சென்ற திரு. பிள்ளை அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதாக கோவையிலிருந்து, என். எஸ். ஜி. நாயகம் எழுதுகின்றார்.

தமிழ்த் திருமணம்

வேலூர், டிச, 4

9—12—36 புதன்கிழமையன்று ஈ. வெ. இராமசாமிப் பெரியார் தலைமையில், வேலூரில், வாணியம்பாடி மாசிலாமணி முதலியார் தனயனார் புதல்வன் எம். துரைசாமிக்கும், வி. ரங்கநாதத்தின் குமாரி லெட்சுமியம்மைக்கும் தமிழ்த் திருமணம் நடைபெறுமென ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஒரு மரணம்

ஊர்காம், டிச, 4

சமூகாபிமானியும், சீர்திருத்தப் பிரியரும், நாகைவயல் விடுதலை ஏஜெண்டுமான சகோதரர் ஆர். சுப்பிரமணியம் அவர்களின் குழந்தை புனிதா கடந்த ஒரு வாரமாக நோயாயிருந்து 4-12-36 வெள்ளிக்கிழமையன்று உயிர் துறந்துவிட்டதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன் என தனபாலன் எழுதுகிறார்.

பம்பாய் அசெம்பிளி

பம்பாய், டிச, 3

திரு. ஏ. பி. ஷராப், இந்திய வியாபாரிகளின் சேம்பர் ஆப் காமர்ஸுக்கு ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கும் ஒரு ஸ்தானத்தை அபேட்சித்து பம்பாய் அசெம்பிளித் தேர்தலுக்கு நிற்க உறுதி செய்துள்ளார்.

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

பறையருக்கும் இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே!
ஏழையென்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே!

மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையை கொளுத்துவோம்
வையவாழ்வு தன்னிலெந்த வகையிலும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! (பாரதி)

விடுதலை

சென்னை: 1936-௵ டிசம்பர்-௴ 5-௳
சனிக்கிழமை

ராயர்—நாயர் சகாப்தம்

முதல் பகுதி பூர்த்தி

மாண்ட்—போர்ட்டுசீர் திருத்தப்படி உருவான சென்னைச் சட்டசபை நேற்று முடிவடைந்து விட்டது. அத்துடன் ராயர்—நாயர் சகாப்தத்தின் முதல் பகுதி பூர்த்திபெற்று இரண்டாவது பகுதி வருகிற ஏப்ரலில் ஆரம்பமாகப் போகிறது. ராயர்—நாயர் சகாப்தத்துக்கு ஆஸ்பதமான காரணங்களை நமவர்கள் மறந்திருக்க மாட்டார்கள். காலஞ்சென்ற டாக்டர் ஆனிபெசண்டு அம்மையார் தலைமையில் தென்னாட்டு விபூதிப் பார்ப்பனர் செய்த "ஹோம்ரூல்" கிளர்ச்சியின் பயனே ராயர்—நாயர் சகாப்தத் தோற்றத்துக்குக் காரணம். இந்தியா விடுதலை பெறுவதை ஸர். தியாகராயரும், டாக்டர் நாயரும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், இந்திய விடுதலையின் பேரால் தென்னாட்டில் பார்ப்பனர் ஆதிக்கம் வலுப்பதை அப்பெரியார்கள் விரும்பவில்லை. ஹோம்ரூல் கிளர்ச்சி மூலம் பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநாட்டச் செய்யப்படும் சூழ்ச்சிகளை உணர்ந்த அந்த மதியூகிகள், பார்ப்பனரல்லாதாரைத் தட்டி எழுப்பாவிட்டால் அவர்கள் பாடு அதோகதி ஆகிவிடுமென எண்ணி பார்ப்பனரல்லாதார் இயக்கம் கண்டதினால் ராயர்—நாயர் சகாப்தம் உதயமாயிற்று. அந்த சகாப்தத்தினால் சென்னை மாகாண ஆட்சியை சென்ற 16 வருஷ காலமாக நடத்தும்படியான பாக்கியம் நம்மவர்களுக்கு வாய்த்தது. மத்திய காலத்து நமது கட்சியைச் சேர்ந்தவரல்லவெனக் கூறிக் கொண்ட டாக்டர் சுப்பராயன் ஒரு பார்ப்பனக் கனவானையும் சேர்த்துக் கொண்டு மந்திரி சபை ஸ்தாபித்து நிருவாகம் நடத்தினாராயினும், [illegible] அவர் ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கையையே பின்பற்றி நடந்தார். மற்றும், ஜஸ்டிஸ்காரர் ஆதரவினாலேயே அவரது மந்திரி சபையும் இயங்கி வந்தது. பார்ப்பனர் உட்பட சர்வ சமூகங்களுக்கும் நியாயமான பிறப் புரிமையை வழங்கும் வகுப்புவாரி விகிதாசார உத்தியோக உத்தரவும் அக்காலத்திலேதான் பிறந்தது. எனவே 1920-ல் ஆரம்பமாகி 1937 மார்ச்சு 31-ந் தேதி முடிவடையப் போகும் இரட்டை யாட்சியை ஜஸ்டிஸ் கட்சியே நடத்தி வந்ததெனக் கூறுவது அவ்வளவு தப்பாகாது.

ஆகவே, ஜனநாயக ஆட்சி முறையில் சென்னை மாகாணம் ஏனைய மாகாணங்களுக்கு வழிகாட்டி நியாயமான புகழ் பெற்று விட்டதாக லார்டு எர்ஸ்கின் நேற்று முன்தினம் சென்னைச் சட்டசபையில் கூறிய பாராட்டு மொழிக்கு ஜஸ்டிஸ் கட்சியாரே உரிமையுடையவர் என்பதை எவரும் மறுக்க முன்வரமாட்டார்கள். கவர்னர் பொன் மொழிகளை பத்திரிகைகளில் படித்தபோது ஸர். தியாகராயர்—டாக்டர் நாயர் புனித நாமங்களே நமது ஞாபகத்துக்கு வந்தன. அந்தப் புண்யாத்மாக்கள் நமது கட்சியை அப்பொழுது தோற்றுவித்திருக்காவிட்டால் நம்மவர்கள் நிலை இன்று எவ்வாறாக இருந்திருக்கும்? நாட்டின் நிலை எவ்வாறாக இருந்திருக்கும்? இக்கேள்விகளுக்கு விடைபெற 1920-க்கு முன் நம்மவர்கள் இருந்த நிலையை ஞாபகப்படுத்திக் கொண்டால் போதும். 1920-க்கு முன்னே டாக்டர் நாயருக்குங்கூட அக்காலத்திய இம்பீரியல் கௌன்சிலில் ஸ்தானம் பெற முடியவில்லையென்றால் ஏனையோர் நிலைமையைப் பற்றிக் கூறவும் வேண்டுமா? மெய்யாகவே அக்காலத்துப் பார்ப்பனரல்லாதார் பார்ப்பனர்களின் அடிமைகளாகவே வாழ்ந்து வந்தனர். எல்லாத் துறைகளிலும் பார்ப்பனர்களே ஆதிக்கம் செலுத்தி வந்தனர். பார்ப்பனர்கள்தான் புத்திசாலிகள், ஏனையோரெல்லாம் அப்பாவிகள், பார்ப்பனர்களுக்கு அடிமைத் தொழில் புரியப் பிறந்தவர்கள் என்பனவே அக்காலத்திய நம்பிக்கைகளாக இருந்து வந்தன. திருநெல்வேலி ஜில்லாவிலே ஒரு சிவிலியன் கலெக்டராக வந்தபோது, கலெக்டர் ஆபீஸில் காலியாகவிருந்த ஒரு குமாஸ்தா வேலைக்கு ஒரு பிள்ளை விண்ணப்பம் செய்தாராம். பிள்ளை என்ற பெயரைப் பார்த்ததும் கலெக்டர் துரைக்கு ஒன்றுமே புரியவில்லையாம். "ஓய்! நீர் யார்? பிள்ளை அய்யரா? பிள்ளை அய்யங்காரா? பிள்ளை ஆச்சாரியாரா?" என்று கேட்டாராம். அவர் அவ்வாறு கேட்டதைப் பற்றி ஆச்சரியப்படுவதற்கு மில்லை. அக்காலத்திலே அய்யர், அய்யங்கார், ஆச்சாரியார் நாமங்களே பிரபலமாக இருந்தன; ஏனைய ஜாதியார் நாமங்களை, ராயர்—நாயர் சகாப்தத்திலேயே வெளி நாடுகளும், வெளி மாகாணங்களும் அறியலாயின.

சமூக நன்மைகள்

ராயர்—நாயர் சகாப்தத்தில் பார்ப்பனரல்லாத சமூகத்துக்கு ஏற்பட்ட நன்மைகள் அனந்தம். இன்று நம்மவர்கள் தலைநிமிர்ந்து நடப்பதற்கு அந்த சகாப்தமே காரணம். அந்த சகாப்த புண்ணியத்தினால் இன்று ஒரு முதலியார் இந்திய மந்திரி சபையிலே மெம்பராக வீற்றிருக்கின்றார். ஒரு சாயபும், ஒரு நாயுடுவும் மாகாண கவர்னர் ஆசனத்தில் உட்காரவும் பாக்கியம் பெற்றனர். ஒரு கிறிஸ்தவர் உள் நாட்டு மந்திரி ஆகவும் இடமேற்பட்டது. ஒரு செட்டியார் ஒரு சுதேச சமஸ்தானத்தில் திவானானார். முன்னர் சுதேச சமஸ்தான திவான் பதவி, பார்ப்பனர்கள் குடும்பச் சொத்தாகவே இருந்து வந்தது. ஸ்மார்த்தப் பார்ப்பனக் கோட்டையாக விருந்த சென்னை ஹைகோர்ட்டிலே நாயர்களும், செட்டிகளும், நாயுடுகளும், பிள்ளைகளும் இடம்பெறும் வசதியும் வாய்த்தது. சென்ற 16-வருஷ காலமாக மாகாண மந்திரிகள் எல்லாம் (ஒருவர் நீங்கலாக) பார்ப்பனரல்லாதாராக இருக்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. பிள்ளை, முதலியார், நாயக்கர், நாயுடு, செட்டி, செட்டி, நாடார், படையாச்சி முதலியோரும் ஏனை ஒடுக்கப்பட்ட சமூகத்தாரும் சட்ட சபைகளிலும் மற்றும் பொது ஸ்தாபனங்களிலும் பார்ப்பனர்களுடன் சரி நிகர் சமானமாக வீற்றிருக்கும் பெருமையும் வாய்த்தது. மாதர்கள் பொது ஸ்தாபனங்களில் ஸ்தானம் பெறவும் வாக்குரிமை பெறவும் சாத்திய மாகிற்று. ஒரு சகோதரி சென்னைச் சட்ட சபையில் உபதலைவராக வரும் நிலைமையும் ஏற்பட்டது. சமூக முன்னேற்றத்துக்கான பல சட்டங்களும் ஏற்பட்டன. நமது கட்சியார் நிறைவேற்றிய அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் வங்கத் தலைவர் காலஞ்சென்ற சித்தரஞ்சன் தாஸின் மதிப்பையும் பெற்றது. பெயரளவிலாவது சில பார்ப்பனரல்லாதாரைப் பிடித்துப் போட்டாற்றான் தமது செல்வாக்கைக் காப்பாற்ற முடியுமென, பார்ப்பன காங்கிரஸ் வாதிகளும் உணரும்படி நேர்ந்தது.

நாட்டுத் தொண்டு

பொக்கிஷ அதிகாரம் மந்திரிமார் கையில் இல்லாதிருந்ததினால் அரசியலில் பொருளாதாரச் சார்பாக தேச மக்களின் கோரிக்கை பூரணமாக நிறைவேறவில்லையாயினும், விவசாயிகளுடன் வரிப் பளுவைக் குறைக்கவும், இதர சௌகரியங்களை விருத்தி செய்யவும் நமது மந்திரிமார் சாத்தியமானவரை உழைத்து வெற்றி பெற்றிருப்பதை நேர்மையுடையவர்கள் எல்லாம் ஒப்புக் கொள்வார்கள்? ஜஸ்டிஸ் கட்சி—ஜமீன்தார் கட்சி, பணக்காரர் கட்சி—முதலாளிகள் கட்சி எனத் தூற்றுவோர் வாயடைக்கும்படி, இனாம்தார் மசோதாவை நிறைவேற்றி 50 லக்ஷம் இனாம் குடிகள் பிறப்புரிமை காப்பாற்றப் பட்டதும் இந்த ராயர்—நாயர் சகாப்தத்தினால் தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இன்றைய சென்னை மாகாணப் பொருளாதார நிலைமை திருப்திகரமாயிருப்பதாயும், சிக்கனமாகவும், புத்திசாலித் தனமாகவும் எதிர்கால அரசியல் நடத்தப்பட்டால் எதிர் காலத்தைப் பற்றி பீதியடையத் தேவையில்லையென்றும் மாகாண கவர்னரே ஒப்புக் கொள்வதற்கு ராயர்—நாயர் சகாப்த அரசியல் நிபுணர்களே காரணம். ராயர்—நாயர் சகாப்த ஆட்சிக்கு பிரபல ராஜ தந்திரியான பனகல் ராஜா அடிப்படை போட்டு வேலை ஆரம்பித்தார். அந்த வேலையை மற்றொரு ராஜ்ய தந்திரியான பொப்பிலி ராஜா பூர்த்தி செய்து ராயர்—நாயர் சகாப்த முதற்பகுதியை முற்று பெறும்படி செய்யப் போகிறார்.

இரண்டாவது சகாப்தம்

ராயர்—நாயர் சகாப்தத்தின் இரண்டாவது பகுதி வருகிற ஏப்ரலில் ஆரம்பமாகப் போகிறது. தென்னாட்டார் என்ன செய்யப் போகிறார்கள்?

சென்ற 16 வருஷ காலமாக இரட்டை யாட்சியை வெற்றிகரமாக நடத்தி வைத்து நியாயமான புகழ் படைத்த கட்சியாரிடம் சென்னை மாகாணத்தை ஒப்புவிக்கப் போகிறார்களா? அரசியல் அனுபவமே இல்லாத வாய்வீச்சுக்காரர்களிடம் ஒப்புவிக்கப்போகிறார்களா? ஜஸ்டிஸ் கட்சியார் செய்துள்ள வேலைகளை அறிய ஜோசியர் உதவி தேவையில்லை. சர்க்கார் ரிக்கார்டுகளே அவர்கள் செய்துள்ள வேலைகளுக்குச் சான்று. போதாக்குறைக்கு மாகாண கவர்னரே பகிரங்கமாக சட்டசபையில் நற்சாட்சிப் பத்திர மளித்திருக்கிறார்.

எதிர் கட்சியார் யோக்யதை என்ன? சென்ற 16 வருஷ காலமாக அவர்கள் கொடுத்துள்ள வாக்குறுதிகளில் ஒன்றையாவது நிறைவேற்றி வைத்திருக்கிறார்களா? இல்லவே இல்லை. சட்டசபைகள் மூலம் சுயராஜ்யம் பெற முடியாதென்ற வீரர்களில் சிலர் இன்று, சட்டசபைக்குள் புகுந்து அரசியலைக் கவிழ்த்து சுயராஜ்யம் கொண்டு வரப் போவதாகக் கூறுகின்றனர். இது பைத்தியகாரப் பேச்சென, சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வி. ஆர். செட்டியே கூறுகிறார். சத்தியமூர்த்தி கோஷ்டியாரோ, வரப்போகும் அரசியல் மூலம் சாத்தியமான நன்மைகளை யெல்லாம் தேச மகாஜனங்களுக்குச் செய்து கொண்டே அரசியலையும் கவிழ்த்துவிடப் போவதாக அளக்கிறார்கள். அதுவும் வெறும் பேச்சென்பதற்கு சந்தேகமே இல்லை. ஸ்தல ஸ்தாபனங்களில் காங்கிரஸ்காரர் செய்துள்ள வேலைகளை கவனித்தால் ஆக்க வேலைகளுக்கு அவர்கள் லாயக்கில்லையென்பது தெளிவாகிறது. காங்கிரஸ்காரர் ஜில்லா போர்டுகளில் செய்துவரும் அட்டூழியங்களை சகியாது ஸ்தல ஸ்தாபனங்களை யெல்லாம் சர்க்காரிடம் ஒப்படைப்பதே நலமென திரு. ராஜகோபாலாச்சாரியாரே கூறியிருக்கிறார். சென்னை நகரசபையில் காங்கிரஸ்காரர் செய்த முதல் வேலையை காங்கிரஸை ஆதரிக்கும் "ஹிந்து" "மெயில்" பம்பாய் "க்ரானிகல்" "செண்டினல்" போன்ற பத்திரிகைகளே வன்மையாகக் கண்டித்து எழுதியிருக்கின்றன. இங்ஙனம் ஆக்க வேலைகளுக்கு லாயக்கில்லாத ஒரு கூட்டத்தாரிடம் நாட்டை ஒப்புவித்தால் என்ன கேடு மென்பதை தேச மகா ஜனங்கள் நன்கு யோசித்து முடிவுசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

நமது கட்சியின் தற்கால நிலைமை ஒரு மாதிரியாக இருந்தாலும் நாம் முற்றிலும் மனச் சோர்வடையத் தேவையில்லை. போதிய அளவுக்குப் பிரசாரம் செய்தால் நமக்கு வெற்றி நிச்சயம் என்பதற்கு விருதுநகர், ஆந்திர தேச வெற்றிகளே சான்று. ஒரு கால் நமக்குத் தோல்வியேற்பட்டாலும் நாம் சங்கடப்படக் காரணமில்லை. நாம் இது காறும் செய்துள்ள வேலைகளைப் பார்த்தால் நாம் சங்கடப்படத் தேவையுமில்லை. தோல்விக்கு பயந்து எதிர்கட்சியில் சேர்வதைவிட ஜஸ்டிஸ் கட்சிபேரால் தோல்வி யடைவதிலும் மேலான ஒரு தனி மகிழ்ச்சியுண்டு.

ராயர்—நாயர் சகாப்தத் தோற்றத்துக்கும் வெற்றிக்கும் உழைத்து உதவி புரிந்த தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நமது சகாப்த வெற்றியில் பங்கு பெறும் பாக்கியத்தை இழந்துவிட்டு, பதவி பணம் காரணமாகவும், சொந்த மனஸ்தாபங்களை முன்னிட்டும் எதிரிகள் கோட்டைகளில் சரணடைந்திருக்கும் சஞ்சல புத்திகளான நமது சகோதரர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நமது மனமார்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்க! ராயர்
நாயர் நாமம்!
வாழ்க! "ஜஸ்டிஸ்"
கட்சியே!

தியாகிகளுக்கும் பதவி மோகமா?

கோதாவரி ஜில்லா தேர்தலிலே ஜனநாயக கட்சிக்கு இளமையிலேயே, அதனால் தாங்க முடியாத பெரிய வெற்றி கிடைத்து விட்டதாம். அதனால், பொப்பிலி ராஜா அவர்களுக்கும் காங்கிரஸ் கட்சியாருக்கும் பெருத்த வயிற்றெரிச்சல் உண்டாயிருக்கிறதாம். எனவே, ஜனநாயகக் கட்சி அந்த ஜில்லா போர்டில் நிர்வாக பதவி வகிக்க முடியாதபடி செய்வதற்கு பொப்பிலி ராஜாவும், காங்கிரஸ் கட்சியாரும் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிறார்களாம். இவ்வாறெல்லாம் கூறி "ஜனநாயகம்" பிரலாபிக்கிறது. "ஜனநாயகம்" கூறுவதெல்லாம் சரியென்றே வைத்துக் கொள்வோம். ஆனால் ஒரு கேள்வி. "எனக்கு ஜில்லா போர்டு தலைவர் பதவியும் வேண்டாம், மந்திரி பதவியும் வேண்டாம். பொது ஜன சேவையே எனக்கு முக்கியம்" என ஜனநாயகக் கட்சித் தலைவர் கூறியிருப்பதாக அப்பத்திரிகையே விளம்பரம் செய்திருக்கையில், ஜில்லா போர்டு நிர்வாக பதவியைப் பற்றி 'ஜனநாயகம்' ஏன் கவலைப்படவேண்டும்? சேவை செய்யப் பிறந்தவர்களுக்குப் பதவி மோகம் ஏன்? ஜில்லா போர்டு நிர்வாக பதவிகளை ஏற்காமல் சேவைசெய்ய வேறு வழிகளில்லையா? ஜனநாயகக் கட்சித் தலைவர் விரும்பாத நிர்வாக பதவிகளை யார் வகித்தால் என்ன? "ஜனநாயகம்" கூறிக் கொள்கிறபடி, "அழிந்த நந்தவனத்தில் ஆடு மேய்ந்தாலென்ன? கழுதை மேய்ந்தாலென்ன?

வகுப்பு வாரி உத்தியோகம்

திரு. நாயகம் தீர்மானத்துக்கு ஆதரவு

ஸ்ரீமதி அலர்மேல் மங்கைத் தாயாரம்மாள் பேச்சு

சென்னை, டிச, 2

சென்னைச் சட்டசபையில் திரு. வி. டி. நாயகம் கொண்டுவரப் போகும் வகுப்புவாரி உத்தியோகத் தீர்மானத்தை ஆதரிக்கும் பொருட்டு சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் டிசம்பர் 1-ந் தேதி கூடிய பொதுக் கூட்டத்தில் தலைமை வகித்த ஸ்ரீமதி அலர்மேல்மங்கைத் தாயாரம்மாள் முன்னுரையாகவும் முடிவுரையாகவும் செய்த பிரசங்கங்கள் வருமாறு:—

முன்னுரை

இவ்விஷயத்தைக் குறித்து இன்று இங்கு கூடிப்பேசி ஆதரித்து தீர்மானிக்கவே கூடியுள்ளோம். வகுப்புவாரி பிரதிநிதித்வம் இருப்பதினால் நம் நாட்டில் சில வருஷ காலங்களாக தாழ்ந்த ஜாதியார், தாழ்ந்த உத்தியோகம், கல்வி, பிறப்பு, ஏழ்மை என்ற எண்ணங்களெல்லாம் நீங்கி சற்று உயர் நிலைக்கு வந்துள்ளார்கள். பிராமணரல்லாத மக்கள் சிலர் தக்க உத்தியோகங்கள் அந்தந்த உத்தியோக சாலைகளில் பெற்றிருக்கின்றார்கள், பெற்று வருகின்றார்கள். ஆனால், இப்போது பெற்றிருப்பது போதாது. இப்போது உத்தியோகம் வகிப்போர் மிகக் கொஞ்சம் பெயரே ஆவார்கள். பிராமணரல்லாதார் ஜனத் தொகைக்குத் தக்கபடி இன்னும் அதிகமான உத்தியோகங்கள் அளிக்கப்படவேண்டும். கவர்ன்மெண்டார் இது வரை வகுப்பு வாரியாக ஒவ்வொரு வகுப்பில படிப்புக் குறைந்திருப்பவர்களுக்குப் படிப்பைக் கொடுத்து, அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உத்தியோகங்களையும் கொடுத்து வரவேண்டும். இப்போது ஷெடியூல்டு வகுப்பு என்னும் பிற்போக்குள்ள ஜாதியினரென்றும் இருப்பவருள் மிகச் சிலர் கல்வி கற்று உத்தியோகங்கள் வகிக்கக்கூடிய யோக்கியதை பெற்றிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கு முதலில் உத்தியோகங்கள் கொடுக்க வேண்டும். கொடுத்தால் அந்த இனத்தைச் சார்ந்தவர்களும் முன்னேற்ற மடைவார்கள். சில காலங்களுக்குமுன் கவர்ன்மெண்ட் கல்விச் சாலைகளைத் தவிர மற்ற ஜாதி இந்துக்களால் நடத்தப்படும் பாடசாலை, கலாசாலைகளில் தாழ்த்தப்பட்ட ஜாதியார், கிறிஸ்தவர், மகம்மதியர் என்போர்களைச் சேர்க்காமலிருந்தனர். கவர்ன்மெண்ட் கலாசாலைகளிலும், வைத்தியக் கலாசாலைகள், சட்ட கலாசாலை முதலியவைகளிலும் பிராமணரல்லாத வகுப்புப் பிள்ளைகளுக்குப் போதிய இடம் கிடைக்காமலே தானிருந்தது. வகுப்புவாரி கவனித்து அவர்களைச் சேர்ப்பதென்று ஏற்படுத்திய பின்னர் நம் மக்கள் பலர் படித்துப் பட்டதாரிகளாயும், பல உத்தியோகத்திற்கு யோக்யதை உடையவர்களாயு மிருக்கின்றனர். மேலான உத்தியோகங்களை வகித்தும் வருகின்றார்கள். இதனால் நாட்டிற்கு நன்மையும், க்ஷேமமும் உண்டாகி வருகின்றன. இவைகளெல்லாம் நியாயமாய் நம்மை ஆளும் கவர்ன்மெண்டாரோடு முறையிட்டு ஜஸ்டிஸ் கட்சியினரால் நம்மவருக்குக் கிடைத்ததேயன்றி வேறில்லை. இக்கட்சி பிறப்பதற்குமுன் பிறப்பிலே தாழ்ந்தவர்களென்று கூறி ஒரு சாராரை ஒதுக்கித் தள்ளி வைத்திருந்தனர். அவர்கள் யாருக்கும் பொதுவான கடவுளை கோவில் சென்று வழிபட அனுமதிக்கப்படவில்லை. சில வகுப்பினர் மாத்திரம் தான் கோவிலுக்குள் அனுமதிக்கப்பட்டு வந்தார்கள். இப்படிச் செய்யக்கூடாதென்று வேமன்ன என்பவரும், அவரைப்போன்ற பல ஞானிகளும் கூறியுள்ளார் என்று மேற்கோள்கள் கூறினர். நமக்கு உத்தியோகங்கள் வகுப்பு வாரியாகக் கொடுத்துவர சர்வீஸ் கமிஷன் வைத்திருப்பதும் சிலருக்கு நன்மை தருகின்றது. இப்போதைய நிலைமை போதாது, பின்னும் சில காலம் சற்றேறக் குறைய சகலரும் சமத்துவப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் வரை வகுப்பு பிரதிநிதித்துவம் இருந்து வரவேண்டும்.

முடிவுரை

உண்மையான மனப்பான்மை, சகோதர வாத்சல்யம்—சமத்துவம் என்பது எங்கே வளரச் செய்கிறார்கள்? ஜஸ்டிஸ் கட்சி ஐரோப்பியரைத் தாங்குவதிலும், அவர்களோடு கலந்து வேலை செய்வதிலும் உத்தியோக வேட்டைக்காக இக்கட்சி இருக்கின்றதென்றும் காங்கிரஸ் வாதிகள் கூறுகின்றனர். ஆனால், ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கை அவையல்ல. பொதுவாக தாழ்த்தப்பட்டோர்கள் கல்வி உத்தியோக முறைகளிலும் குறைந்த அந்தஸ்தில் இருக்கக் கூடிய பிராமணர் அல்லாத சகல சாதியினரும் முன்னேற்ற மடைய வேண்டுமென்பதும் தான் ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கை. இது காலபரியந்தமும், ஜஸ்டிஸ் கட்சி பிறப்பதற்கு முன் கவர்ன்மெண்டுடனும், ஆங்கிலேயருடனும் ஒத்துழைத்து உத்தியோக வேட்டை யாடினவர்கள் யாரென்பது சொல்லாமலே விளங்கும். இப்போது காங்கிரஸ் வாதிகளென்றும், தேசாபிமானி யென்றும் சொல்லிக்கொள்ளும் பலர் இந்தியாவிலிருக்கக் கூடிய இந்திய மக்களுக்கே ஆட்சியைக் கொடுத்து ஆளச் செய்வதில் ஏன் பேதம் பாராட்டவேண்டும்? காங்கிரஸ் வாதிகளாக விருந்து மந்திரி முதலிய உத்தியோகங்களை வகித்திருந்தால் அப்போது தான் உண்மையாக இந்தியர்களுக்கு சுயராஜ்யம் வந்ததற்கு ஒப்பாகுமா? இப்போது ஜஸ்டிஸ் கட்சியார் கவர்ன்மெண்ட் நிர்வகிக்கக் கூடிய பல ஸ்தானங்களைப் பெற்றிருப்பதால் காங்கிரஸ் கட்சியினருக்கு உண்மையான சுதந்திரமல்ல வென்று நினைக்கின்றனர் போலும்! உண்மையாகவே ஆங்கிலேயர்கள் இந்தியர்களை மதிக்கும்படி செய்து ஜஸ்டிஸ் கட்சியினர் ஞாய முறையில் அரசியல் சுதந்தரத்தைப்பெற்று நடத்திக்கொண்டு வந்ததினால் தான் நம் இந்தியர்களாகிய சர் மகமது உஸ்மான், சர். கே. வி. ரெட்டி நாயுடு முதலியோர் ஆக்டிங் கவர்னர்களாக வர முடிந்தது. நம்மிந்தியருக்கு இவ்விராஜதானியை ஆளும் ஒரு உன்னத ஸ்தானத்தைக் கொடுத்தபோது இவ்விராஜதானி வாசிகள் மிக மன மகிழ்ச்சி யடை

(இதன் தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

மன்னர் மகுடாபிஷேக விழா

எதிர்பாராத முட்டுக் கட்டை

மன்னர் காதலிக்கும் மாதை மணம் செய்யலாம்

ஆனால் காதல் மனைவி ராணியாகலாமா?

ஒரு சிக்கலான அரசியல் பிரச்னை

மந்திரிகள், குடியேற்ற நாடுகள் எதிர்ப்பு

லண்டன், டிச, 3

இன்று பிரிட்டிஷ் மகா ஜனங்கள் படுக்கை விட்டெழுந்ததும் ஒரு முக்கியமான அரசியல் பிரச்னையை முன்னிட்டு காலைப் பத்திரிகைகள் தலையங்கம் எழுதியிருப்பதைப் பார்த்துத் திகைப் படைந்தார்கள். முதன் மந்திரி திரு. பால்டுவின் நேற்று மாலை மன்னர் பெருமானைப் பேட்டி கண்டதாகவும் அவரது கலியாண ஏற்பாடுகள் மந்திரி சபையாருக்கு மிக்க கவலையை உண்டுபண்ணி யிருக்கின்றன என்றும் அந்தப் பிரச்னையைத் திருப்திகரமாக முடிவு செய்யாவிட்டால் பயங்கரமான அரசியல் நெருக்கடி ஏற்படுமென்றும் அதனால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் முழுதுமே பாதிக்கப் படுமென்றும் கூறியதாகவும் பத்திரிகைகள் கூறுகின்றன.

எட்வர்ட் மன்னர் ஒரு அமெரிக்கப் பெண்ணை விவாகம் செய்து கொள்ளப்போவதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக சில சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதென்றும், அவசியமேற்பட்டால் மன்னர் மகுடத்தையும் துறக்க சித்தமாக இருப்பதாகவும் பிரிட்டனிலுள்ள பல முக்கிய பத்திரிகைகள் செய்திகள் பிரசுரித்து தலையங்கங்கள் எழுதியுள்ளன.

மேற்படி அமெரிக்கப் பெண் பிரிட்டனின் ராணியாக வர லாயக்குள்ளவரா என்பதே முக்கிய விஷயமென்றும், மந்திரி சபையின் யோசனையை இவ்விஷயமாக மன்னர் கேட்க வேண்டுமென்றும் "நியூஸ் க்ரானிகிள்" கூறுகிறது.

பிரதம மந்திரியுடன் பேச்சு

இன்று மாலை பிரதம மந்திரி மிஸ்டர் ஸ்டான்லி பால்டுவின் மன்னருடன் அரண்மனையில் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

இது சம்பந்தமான செய்திகள் பத்திரிகைகளில் வெளி வந்ததால், சர்க்கார் கடன் பத்திரங்கள் மதிப்பு குறைந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

'அரசியல் நெருக்கடி'

'டெய்லி மெயில்', 'டெய்லி எக்ஸ்பிரஸ்' பத்திரிகைகள் 'அரசியல் நெருக்கடி' என்ற தலைப்பின் கீழ் பெரிய மகுடங்களிட்டு செய்திகள் பிரசுரித்துள்ளன.

மன்னர் ஓர் அமெரிக்கப் பெண்ணை விவாகம் செய்துகொள்ள விரும்புவதாகக் கூறியதாகவும், இதை மந்திரி சபை ஒப்புக்கொள்ளவில்லை என்றும் தெரிகிறது.

மன்னரும் மந்திரி சபையும் இவ்விஷயமாக ஓர் சமரச முடிவுக்கு வரவேண்டுமென சாம்ராஜ்ய மக்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்பதாக 'மெயில்', தலையங்கம் கூறுகிறது.

"இங்கிலேயிலே மன்னர் ராஜ்யத்தைத் துறப்பது மன்னரின் கோடிக்கணக்கான பிரஜைகளுக்கு பெரும் வருத்தமளிக்கும். இன்று அவர்தான் சாம்ராஜ்ய நாடுகளைப் பிணைத்திருக்கும் ஓர் முக்கிய இணைப்பு, இங்கிலாந்தும், டொமினியன்களும் சேர்ந்திருக்கச் செய்யும் சங்கிலி. எனவே அவர் சாம்ராஜ்யத்தின் அவசியத்தைக் கருதி மேலான முடிவு செய்வாரென்று பூரணமாக நம்புகிறோம்."

எட்டுப் பத்திரிகைகள் கருத்து

லண்டன், டிச, 2

மாஞ்செஸ்டர் கார்டியன், பர்மிங்ஹாம் போஸ்ட், யார்க்ஷயர் போஸ்ட் உள்பட எட்டு பிரபல மாகாண சமாசாரப் பத்திரிகைகள் மன்னர் நிலைமைப் பற்றி இன்று தலையங்கங்கள் எழுதியுள்ளன. டயோஸீஸன் மகாநாட்டில் ப்ராட் போர்டு பிஷப் டாக்டர் ப்ளண்ட் பேசியதை அடிப்படையாகக் கொண்டே இவ்வியாசங்கள் எழுதப்பட்டுள்ளன.

கம்யூனியன் சர்வீஸிலிருந்து மன்னர் முடிசூட்டைப் பிரிப்பதையே பிஷப் பலமாகக் கண்டித்துள்ளார். மன்னர் கடவுளின் கிருபை அவசியம் என்பதை உணர்ந்துள்ளாரெனத் தாம் நம்புவதாகவும், அதைத்தாம் உணர்ந்திருப்பதைக் காட்ட உறுதியான குறிகள் காட்ட வேண்டுமென அவர்களில் சிலர் விரும்புவதாகவும் பிஷப் கூறியுள்ளார்.

'மாஞ்செஸ்டர் கார்டியன்'

மாஞ்செஸ்டர் கார்டியன் கூறுவதாவது:—

மந்திரிகளுடன் மன்னர் சம்பந்தத்தை யொட்டிய முக்கியமான அரசியல் பிரச்னையில் சம்பந்தப்பட்ட, பிரச்னையை யொட்டியே சென்ற வெள்ளி கூடிய மந்திரிசபை யோசித்தது. பிரதம மந்திரி சாம்ராஜ்ய நலத்துக்குரிய விஷயங்களைப் பற்றி கொடுக்கும் யோசனையை அவர் அங்கீகரிக்கத் தயாராயிருப்பதும் அப்பொழுது பேசப்பட்டது.

இதர பத்திரிகைகளும் இதே தோரணையில் எழுதியுள்ளன. லண்டன் பத்திரிகை ப்ராட் போர்டு பிஷப் பேச்சை விசேஷமாகப் பிரசுரித்திருந்தாலும் அதை யொட்டி தலையங்கங்கள் எழுதவில்லை.

பிரிட்டிஷ் மக்கள் பெருங் கவலை

பத்திரிகைகளில் இன்று "பெரிய அரசியல் நெருக்கடி" என்ற மகுடங்களைப் பார்த்த, பிரிட்டிஷ் மக்கள் பெருங்கவலை யடைந்தனர். அரசரது திருமண விஷயம் திருப்திகரமாகத் தீர்க்காவிடில் பெரும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டு விடுமென பீதியடைந்துள்ளனர்.

தகராறுக்கு காரணம்

பிரிட்டிஷ் மன்னருக்கு மகுடாபிஷேகம் நடக்கும் சந்தர்ப்பத்தில் ஏற்பட்டுள்ள பல சடங்குகளில் ஒன்று "ஹோலி கம்யூனியன்" வாங்கிக் கொள்வது. அதாவது சர்ச்சுக்குச் சென்று புரோகிதரின் கையால், பலிபீடத்திலிருந்து பிரசாதமாக ஒரு ரொட்டித் துண்டையும், ஒயினையும் வாங்கி அருந்த வேண்டும். இவ்வாறு தெய்வீகப் பிரசாதம் வாங்கும் சடங்குகளுக்கு எட்வர்ட் மன்னர் உட்பட வேண்டியதில்லை யென்று பொருள்படும்படி பர்மிங்ஹாம் பிஷப் சமீபத்தில் சில வார்த்தைகள் கூறியிருக்கிறார். முடிசூட்டு விழாச் சடங்குகளில் இவர் சில மாறுதல்கள் செய்யலாமென்று யோசனை கூறியிருக்கிறார்.

ப்ராட் போர்ட் பிஷப் கண்டனம்

பர்மிங்ஹாம் பிஷப் கூறின அபிப்பிராயத்தை தீவிரமாக கண்டித்து ப்ராட் போர்ட் பிஷப்பான டாக்டர் ப்ளண்ட் என்பவர், கிறிஸ்துவ புரோகிதர் மகாநாட்டில் ஒரு பிரசங்கம் செய்தார்.

"சர்ச்சுக்கு அவமரியாதை"

முடிசூட்டு விழாவையும், கம்யூனியன் சடங்கையும் வேறு பிரிப்பது: பகிரங்கமாக கிறிஸ்துவ மதஸ்தாபனத்தின் ஒரு முக்கியமான பிரார்த்தனையை அவமதிப்பதாகும்.

மன்னர் தன் வாழ்க்கையை கடவுளுக்கு சமர்ப்பணம் செய்கிறார் என்பதே இச்சடங்கின் கருத்து.

மன்னர் அத்தாட்சி காட்டவேண்டும்

"இவ்வாறு தன் வாழ்க்கையை கடவுளுக்கு அர்ப்பணம் செய்து, கடவுளின் அனுக்கிரஹத்தைப் பெறுவது அவசியம்.

"இந்த அவசியத்தை நமது மன்னர் உணர்ந்திருப்பாரென்றே நம்புவோம்.

"ஆனால், இவ்விஷயத்தில் மன்னர் கடவுளின் பிரசாதத்தை முக்கியமானதென்று உணர்ந்திருப்பதற்கு அத்தாட்சியாக அவர் நமக்கு அடையாளம் காட்டவேண்டும்."

'மன்னரை கண்டிக்கவில்லை'

லண்டன், டிச, 2

தனது பிரசங்கத்தின் மீது பத்திரிகைகள் எழுதியுள்ள அபிப்பிராயங்களை பார்த்த பிறகு "ப்ராட் போர்ட் பிஷப், டாக்டர் ப்ளண்ட்" பின்வருமாறு கூறுகிறார்:—

"வேண்டாத விஷயங்களை யெல்லாம் இவர்கள் கிளப்பிவிட்டார்கள்

"நான் செய்த பிரசங்கத்தில் மன்னரைக் குறை கூறும் முறையில் அர்த்தம் செய்யக்கூடியது ஒரே ஒரு வார்த்தைதான்.

"மதச் சடங்குகள் விஷயத்திலும், தெய்வ வழிபாடு விஷயத்திலும் பகிரங்கமாக சிரத்தை காட்டுவதில் மன்னர் அலக்ஷியமாக இருப்பதாகக் காணப்படுகிறார்" என்று மட்டும்தான் நான் கூறினேன்.

"நமது மன்னர் இப்படி காணப்படுவது வருந்தத்தக்கதே.

"எனது பிரசங்கம் 6 வாரங்களுக்கு முன் எழுதப்பட்டது.

"மன்னரின் சொந்த வாழ்க்கையைப்பற்றிய வதந்திகள் வெளி வந்ததற்கு முன்னதாகவே என் பிரசங்கம் தயாரிக்கப்பட்டு விட்டது.

"ஆகையால், அவ்வதந்திகளுக்கும், என் பிரசங்கத்துக்கும் சம்பந்தமில்லை

"நான் மன்னரின் தனிவாழ்க்கையைப் பற்றி எதுவும் சொல்லாமல் ஜாக்கிரதையாகவே இருந்தேன் ஏனென்றால், அவரது தனி வாழ்க்கையைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.

"வெளிப்படையாக நமது மன்னரிடம் மத சம்பிரதாயப் பற்றுதலோ, சிரத்தையோ காணப்படவில்லை யென்பது பற்றியே நான் பேசினேன்."

தனி வாழ்வு கிடையாது

—பர்மிங்ஹாம் போஸ்ட்

"இந்த தேசத்து மக்களும் சரி, வெளிநாடுகளிலுள்ள பிரிட்டிஷ் பிரஜைகளும் சரி, மன்னரின் தனி வாழ்க்கை வேறு, அரசியல் வாழ்க்கை வேறு என்று பிரித்துப்பார்க்க மாட்டார்கள். இவ்விஷயத்தை எடுத்துக் காட்டி ப்ளண்ட் எச்சரிக்கை செய்கிறார். அதன் அபிப்பிராயத்தை நன்கு பட்டவர்த்தனமாக கூற அனுமதிக்கப்பட வேண்டும்" என்று 'பர்மிங்ஹாம் போஸ்ட்' என்ற பத்திரிகை கூறுகிறது.

"ஆத்ம சமர்ப்பணம் மிகவும் அவசியம்"

"யார்க்ஷயர் போஸ்ட்" என்ற பத்திரிகை மன்னரைப்பற்றி அமெரிக்கப் பத்திரிகைகளிலும் ஏகாதிபத்திய நாடுகளின் பத்திரிகைகளிலும் பலவிதமான வதந்திகள் கிளப்பப்படுவதை எடுத்துக் காட்டி மன்னரை எச்சரிக்கிறது.

"ஆகையால், இப்போது டாக்டர் ப்ளண்ட் கூறுவது போல மன்னர் தன் வாழ்க்கையை சடங்கு மூலமாக கடவுளுக்கு அர்ப்பணம் செய்வது மிக மிக அவசியம்.

இதை நமது மன்னர் அறியவில்லையோ என்று சந்தேகம் கொள்வோரின் தொகை இப்போது அதிகரித்து வருகிறது.

இப்போது இந்த பிரச்னையில் மன்னர் பிடிவாதம் செய்தால், மிகப் பெரிய அரசியல் சண்டை ஏற்படும். மன்னருக்கும், மந்திரிகளுக்கும் இவ்வாறு சண்டை ஏற்படுமாயின், அது பலருக்கு ஏமாற்றமும், வருத்தமும் தருவதாகும்.

நேற்றிரவு பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் பால்டுவின், எட்வர்ட் மன்னருடனே நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார். சம்பாஷணை முடிந்த பின்பு மன்னர் பெல்விடியர் கோட்டைக்குச் சென்றார்.

பக்கிங்காம் அரண்மனையிலிருந்து இன்று அதிகாலையிலே மிக முக்கியமானதும், அந்தரங்கமானதுமான தஸ்தாவேஜிகளை ஓர் மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர் பெல்விடியர் கோட்டையிலுள்ள மன்னருக்கு எடுத்துச் சென்றார்.

பின்பு மன்னர் தமது பொக்கிஷதாரையும், குதிரை லாய அதிகாரியையும், அந்தரங்கக் காரியதரிசியையும் அழைத்து நீண்ட நேரம் அந்தரங்கமாகப் பேசினர்.

இப்போது கேட்காதீர்கள்

இன்று பார்லிமெண்ட் சபையில் மெம்பர்களுக்குள் இதைப்பற்றித்தான் பேச்சு, பிரதம மந்திரி பால்டுவின் எழுந்து, மன்னர் விவாக விஷயமாகத் தாம் இன்று எவ்வித அறிக்கையையும் வெளியிடவில்லை என அறிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"இப்போது அரசியல் சம்பந்தமான சங்கடங்கள் எதுவும் இருப்பதாகவில்லை. பிரஸ்தாப விஷயமாக என்னை இப்போது எவ்வித கேள்வியும் கேட்பது உசிதமல்ல. இக்காலையில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டி யிருக்கிறது."

மெம்பர்கள் திகைப்பு

கர்னல் வெட்ஜ்வுட் ஓர் பிரேரணை கொண்டு வந்திருக்கிறார்.

"ஏற்கனவே எட்வர்ட் மன்னரிடம் எடுத்துக் கொண்டுள்ள ராஜ விசுவாசப் பிரமாணமானது, மகுடாபிஷேகச் சடங்கு எந்த முறையில் நடந்தாலும், அந்த சடங்குக்கு யார் வந்தாலும், யார் வராவிட்டாலும், எவ்விதமும் பாதிக்கப்படாது. வேறு யாரையும் இங்கிலாந்தின் மன்னராக வைக்கவும் காமன்ஸ் சபை விரும்பவில்லை" எனும் பிரேரணையை அவர் கொண்டு வந்திருக்கிறார்.

இந்தப் பிரேரணை சம்பந்தமாகப் பார்லிமெண்ட் மெம்பர்கள் பெரிதும் திகைப்பு அடைந்திருக்கிறார்கள்.

"எந்தப் பிரமுகர் வராவிடினும்" என்று குறிப்பிட்டுள்ளதானது, காண்டர்பரி ஆர்ச் பிஷப்பையோ, ப்ராட்போர்ட் பிஷப்பையோ பிரதம மந்திரியையோ தான் மனதில் வைத்துக் கொண்டு கர்னல் பிரேரணையைக் கொண்டு வந்ததாக 'ராய்ட்ட'ருக்குத் தெரிய வருகிறது.

மேரி ராணி—மன்னர் பேச்சு

இரவு 8-30 மணிக்கு மன்னர் பக்கிங்ஹாம் அரண்மனைக்குத் திரும்பி வந்தார். பிரதம மந்திரி, அவரை மீண்டும் சந்தித்துப் பேசுவார். யார்க் டியூக் (மன்னரின் அடுத்த சகோதரர்) பக்கிங்ஹாம் அரண்மனையில் காத்திருந்து தம் சகோதரருடன் நீண்டநேரம் சம்பாஷித்தார்.

மன்னர் மேரி மகாராணியுள்ள மார்ல்பரோ மாளிகைக்குச் சென்று தம் அன்னையைக் கண்டுவிட்டு, யார்க் டியூக் தம்பதிகளுடன் பேசியதாக அரண்மனை அறிக்கை கூறுகிறது.

கர்னல் வெட்ஜ்வுட் கருத்து

கர்னல் வெட்ஜ்வுட் 'ராய்ட்டர்' நிருபரிடம் கூறியதாவது:—

காரனேஷன் 'சர்வீஸ்' சர்ச்சு சம்பந்தமான ஓர் சடங்கேயாகும். இத்தேச மக்களுக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை. பழைய சம்பிரதாயங்களை விடாமல் பின்பற்ற வேண்டுமென்ற ஓர் ஆசையைத் தவிர இதில் வேறொன்றும் கிடையாது. எது நேர்ந்தாலும் சரி, மன்னர் மன்னராகவே தான் இருக்க வேண்டும். மன்னர் முடிதுறப்பதை எவ்விதத்திலும் தடுத்து விட வேண்டியது அவசியமாகும்.

பால்வினுக்கு ஆதரவு

எதிர்க் கட்சித் தலைவர்கள், பால்டுவின் அபிப்பிராயத்தைப் பொதுவாக ஆதரித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

மன்னரின் சொந்த குடும்ப விஷயங்களைப் பற்றி, மன்னருக்கும் அவரது மந்திரிகளுக்கும் அபிப்பிராய பேத மேற்பட்டுள்ளது அரசியல் முறை விஷயமாக ஓர் பிரச்னை ஏற்பட்டுள்ளது.

மிஸ்டர் பால்டுவின் நீண்ட நேரம் மிகவும் கவலையுடன் மன்னருடனே சம்பாஷித்து முடிந்ததும் அவர் பல மந்திரிகளுடனும் தனித்தனியே கூட ஆலோசனை செய்தார்.

லிபரல் கட்சித் தலைவரான சர். ஆர்ச் பால்ட் ஸின்க்ளேர் பிரதம மந்திரியின் காரியாலயத்திற்குச் சென்று அவருடன் கால்மணி நேரத்திற்குமேல பேசிக் கொண்டிருந்தார்.

மத்தியானம் சுமார் 1 மணிக்கு சர். சான்சைமன் டவுனின் தெரு சென்று, பிரதம மந்திரியுடன் 2-மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார். இப்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைப் பற்றி இன்னும் 36 மணி நேரத்திற்குள்ளாக ஓர் அறிக்கையை பிரதம மந்திரி பார்லிமெண்டில் வெளியிடலாமென்று தெரிய வருகிறது.

மன்னரின் யோசனைகள்

இதற்கிடையே அரண்மனையிலும் யோசனைகளும், பேச்சுகளும் துரிதமாக நடந்து வந்தன. மன்னர் தமது அந்தரங்க மெம்பர்களை அழைத்து அவர்களுடன் பேசினர்.

இன்று காலை அவசர அழைப்பின் மீது ஸ்காட்லாந்திலிருந்து யார்க் டியூக் தம்பதிகள் லண்டன் வந்து மார்ல்பரோ மாளிகையில் மேரி மகாராணியைக் கண்டு பேசினார்கள்.

இன்று மாலை அலுவல்களை எல்லாம் யார்க்டியூக் ரத்துசெய்து விட்டார். அவரது மனைவியாரும் இன்றைய அலுவல்களை ரத்து செய்து விட்டார்.

இன்று மாலை வெளியான பத்திரிகைகள் மிஸஸ் ஏர்னஸ்ட் ஸிம்ஸனின் படத்தை பிரசுரித்துள்ளன.

மன்னர் பெல்விடியர் அரண்மனையில் தங்கி இருக்கிறார். இன்று மாலை மேரி மகாராணி ஸிடன்ஹாமுக்குச் சென்று கிரிஸ்டல் மாளிகை எரிந்து விழுந்துள்ளதைக் கண்டார்.

ஆஸ்திரேலியா தீர்மானம்

(ராய்ட்டர்)

கான்பெரா, டிச, 3

பிரிட்டிஷ் அரசியல் நெருக்கடி விஷயமாக அபிப்பிராயத்தைத் தெரிவிக்குமாறு பிரதம மந்திரி பால்டுவின, ஆஸ்திரேலிய மந்திரி சபையைக் கேட்டுக் கொண்டிருந்தார். இன்னும் அவர்கள் எவ்வித தீர்மானமும் செய்யவில்லை. பிரிட்டிஷ் மந்திரி சபையின் அபிப்பிராயத்தையே ஆஸ்திரேலியாவும் ஆதரிக்குமெனக் கூறப்படுகிறது.

'டொமினியன்கள்' எதிர்ப்பு

(ராய்ட்டர்)

இரவு 9-15 மணிக்கு மிஸ்டர் ஸ்டான்லி பால்டுவின் பக்கிங்காம் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்.

தங்களைப் பாதிக்கும் விஷயங்களைப்பற்றி நேர் முகமாக மன்னருக்குத் தெரிவிக்கும் உரிமையானது வெஸ்ட்மினிஸ்டர் சட்டப்படி எல்லா டொமினியன்களுக்கும் உண்டு. அவ்வித உரிமையை டொமினியன்கள் உபயோகித்து மன்னருக்கு நேர் முகமாக தங்கள் கருத்துகளைத் தெரிவித்து வருவதாகவும், பிரிட்டிஷ் சர்க்காருடன் தந்திப் பேச்சு வார்த்தை நடத்தி வருவதாகவும் தெரியவருகிறது.

டொமினியன்கள் கண்டிப்பான அபிப்பிராயம் கூறியுள்ளன. பிரிட்டிஷ் மந்திரிகள் மட்டுமின்றி, டொமினியன் சர்க்கார்களும் மன்னரின் கருத்துக்கு மாறாக உள்ளதாகத் தெரியவருகிறது.

அமெரிக்கப் பத்திரிகைகளில் வெளியான செய்திகளுக்கு மறுப்புகள் வெளியாகாததைக் கண்டு டொமினியன் நாடுகளிலே கவலை ஏற்பட்டிருப்பதாகவும், இப்போதைய நிலைமை இனியும் நீடிக்குமாயின் சாம்ராஜ்யத்திற்குப் பிரதிகூலமான பலன்கள் ஏற்படுமோ என்று கவலைப் படுகின்றன. இனிமேல் மன்னருக்கு நேரடியாகவும் தெரிவித்துக் கொண்டுள்ளன.

"இந்த விவாகம் கூடவே கூடாது"

பிரஸ்தாப விவாக சம்பந்தம் கூடவே கூடாதென்றும், இதற்கு சாம்ராஜ்ய நாடுகள் ஒப்புக்கொள்ளாதென்றும் பட்ட வர்த்தமானமாக பிரிட்டிஷ் சர்க்காருக்கு டொ. தேசங்கள் கூறிவிட்டதாகத் தெரிகிறது.

லண்டனுக்கும், டொமினியன் தலை நகரங்களுக்கும் தந்திப்போக்கு வரத்துகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

விவாகமா? முடிதுறவா?

சாம்ராஜ்ய நாடுகளிலும் பிரிட்டிஷ் சர்க்காரும் கலந்து பேசித்து இறுதியான முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. மன்னர் பிரஸ்தாப விவாக யோசனையை விட்டுவிடவேண்டும்; அல்லது தமது முடியைத் துறக்கவேண்டும் என்பதே.

சென்னை ஷெரீப்?

சென்னை, டிச. 3

புது வருஷத்திற்குசென்னைக்குப் புதிய ஷெரீபை, சர்க்கார் சீக்கிரம் நியமிப்பார்கள். இதை யொட்டி திருவாளர்கள்: எஸ். வி. ராமசாமி முதலியார், திரு. சி. ஜெயராம நாயுடு, எம். எல். சி., இருவர் பெயரும் கூறப்பட்டிருக்கின்றன.

வகுப்புவாரி உத்தியோகம்

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

யத்தக்கது. ஆனால், சாதாரணமாக சிலருக்கு அதில் திருப்தியும், மதிப்பும் இல்லாது போகிறது. அதற்கு உதாரணம் சர். கே.வி. நாயுடுவுக்கு நகரசபையில் நல்வரவு பத்திரம் வாசித்துக் கொடுக்க வேண்டுமென்றபோது தமிழ்நாட்டு கா. தலைவர் கனம் சத்தியமூர்த்தி ஐயர் அவர்கள் "சர். கே. வி. செட்டியார் இல்லொத்தில் பிறந்து வந்திருக்கிறாரோ? இந்தியாவில் பிறந்தவர் தானே, அவருக்கெதற்குநல் வரவு பத்திரம்" என்று தடுத்துவிட்டார். என்னே அவரின் இணையற்ற தேசாபிமானம்! ஆனால், இச்சந்தர்ப்பத்தில் ஒன்று ஞாபகம் வருகிறது. அதாவது, வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்னும் முறையை, ஜஸ்டிஸ் கட்சியார் கொண்டுவந்ததனால் தான் நகரசபையார் மேயர் தேர்தலில் சென்ற வருஷத்தில் ஆதிதிராவிட அவர்களையும் இவ் வருஷத்தில் ஸ்ரீராமுலு நாயுடு அவர்களையும் தெரிந்தெடுக்க முடிந்தது. இன்றேல் இவர்களெல்லாம் இந்த ஸ்தானங்களைப் பெறுவது சுலபமாக முடியக்கூடியதா என்பதை யோசித்துப் பாருங்கள். ஆகவே, நம் நாட்டில் ஒரேவிதமான நீதி நிலுத்தும் மனப்பான்மை வேரூன்றும் வரைக்கும் இவ் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நம் ராஜதானியைப் பொறுத்த வரையில் மிகவும் அவசியமாகும்.

சினிமா பகுதி

வெஸ்ட் எண்டு

ஸ்ரீமதி டி. பி. ராஜலக்ஷ்மி நடிக்கும் 'குலேபகாவலி' என்ற தமிழ் பேசும் படம் இங்கு இன்று முதல் காண்பிக்கப்படும்.

சரஸ்வதி

ஸ்ரீமதி என். எம். சுந்தராம்பாள் நடிக்கும் 'நாயினி' என்ற தமிழ் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும்.

சினிமா ஸெண்ட்ரல்

ஸ்ரீமதி மீனாக்ஷி, எம். கே. ராதா முதலியோர் நடிக்கும் "சந்திர மோகனா" அல்லது "சமூகத் தொண்டு" என்ற தமிழ் பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும்.

பிராட்வே

தியாகராஜா டாக்கிஸாரின் 'சத்திய சீலன்' என்ற தமிழ் பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும். எம். கே. தியாகராஜ பாகவதர், மிஸ் தேவசேனா முதலியோர் இதில் நடிக்கின்றனர்.

எல்பின்ஸ்டன்

ஜெரமி ஷார்லி டெம்பிள் நடிக்கும் 'காப்டன் ஜனவரி' என்ற ஆங்கில பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும்.

வெல்லிங்டன்

ஆர். கே. ஓ. ரேடியோ கம்பெனியாரின் 'ஸ்காத்லாந்து தேசமேரி' என்ற ஆங்கில பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும். மிஸ் காதரின் ஹெப்பர்ன், பிரடரிக் மார்ச் முதலியோர் இதில் நடிக்கின்றனர்.

ராக்ஸி

பிரான்சாட் டோன், மார்கரெட் லின்ட்சே, பெட்டி டேவிஸ் முதலியோர் நடிக்கும் 'அபாயகரமானது' என்ற ஆங்கில பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும்.

பேரகன்

மெட்ரோ கோல்ட்வின் மேயர் கம்பெனியாரின் 'இரண்டு நகரங்களின் சரிதை' என்ற ஆங்கில பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும். எலிஜபெத் ஆலன், எட்னா மே ஆலிவர், பிளாஞ்சே யூர்கா மற்றும் பல நூற்றுக்கணக்கான நடிகர்கள் இதில் நடிக்கின்றனர்.

கெயிடி

நேஷனல் மூவிடோன் கம்பெனியாரின் 'பார்வதி கல்யாணம்' என்ற தமிழ் பேசும் படம் இங்கு இன்று முதல் ஆரம்பமாகும். ஸ்ரீமதி தனலக்ஷ்மி, சீனிவாச ராவ் முதலியோர் இதில் நடிக்கின்றனர்.

பரமேஸ்வரர் சௌண்ட் பிக்சர்ஸாரால் தயாரிக்கப்பட்டுவரும் "இரு சகோதரர்கள்" என்னும் தமிழ் பேசும் படத்தில் ஒரு காட்சி. இது கூடியசீக்கிரம் வெளிவரும்.

"பார்வதி கல்யாணம்"

நேஷனல் மூவிடோன் கம்பெனியாரின், புராண புண்ணிய படமாகிய "பார்வதி கல்யாணம்" என்ற தமிழ் பேசும் படத்தின் பிரத்தியேகக் காட்சி யொன்று இன்று காலை கெயிடி தியேட்டரில் கல்வி மந்திரி கனம் குமார ராஜா எம். ஏ. முத்தையா செட்டியார் முன்னிலையில் நடைபெற்றது.

என். துரைசாமி தேசிகர் (பரமசிவன்), பி. என். சீனிவாச ராவ் (மன்மதன்), டி.பி. ராமகிருஷ்ணன் (நாரதர்), ஸ்ரீமதிகள்: என்.பி. என். தனலக்ஷ்மி (பார்வதி) டி. என். தமயந்தி (ரதி) முதலியோர் இதில் பிரதம நடிகர்களாவர்.

மன்மதனை நடிக்கும் திரு. பி. என். சீனிவாசராவின் நடிப்பு பாராட்டத்தக்கது. உணர்ச்சியுடனும் திறமை யாகவும் இவர் தமது பாகத்தை நடிக்கிறார். பார்வதி பரமசிவனை விட்டுப் பிரிந்து புனர் ஜன்மம் எடுப்பதற்கு தீக்குளிக்கு முன் தமது மூத்த பிள்ளையாரிடம் விடைபெற்றுக் கொள்ளும் கட்டம் அதிகம் நீடிக்கப்பட்டுள்ளது. அது போலவே ரதியுடன் உல்லாசவனத்தில் தோழியர்கள் நடிக்கும் பாகமும் அதிகமாக நீடிக்கப்பட்டிருப்பதுடன், அருவருப்பைத் தரத் தக்கதாகவும் இருக்கிறது. இவைகளைக் குறைத்து விடக் கூடுமென நம்புகிறோம். மற்ற நடிகர்களும் சுமாராக நடித்திருக்கின்றனர். ஒலிப்பதிவும் படப் பிடிப்பும் சுமாராக இருக்கின்றன.

கல்வி மந்திரி கனம் எம். ஏ. முத்தையா செட்டியார், இப் படத்தைப் பாராட்டிப் பேசுகையில் பேசும் படக்காட்சிகள் மூலம் இத்தேச முன்னேற்றத்திற்கான பல வேலைகள் செய்யக் கூடுமென்றும், வேலையின்றிக் கஷ்டப்படுபவர்களுக்கும் இவைகளால் உதவி ஏற்படக் கூடுமென்று தாம் நம்புவதாகவும், பண்டைய கதைகளையும், சரித்திரங்களையும் மக்கள் அறிய இவைகள் ஓர் கருவியாக இருந்து வருகிறதென்றும், இவைகளின் பொதுஜன சேவையைத் தாம் பாராட்டுவதாகவும், இவைகள் மேன் மேலும் விருத்தியாக வேண்டுமென்று தாம் விரும்புவதாகவும் கூறினார்.

இரண்டாவது அகில இந்திய சினிமா மகாநாடு

சென்னை, டிச, 5

கௌரவ காரியதரிசிகள் எழுதுவதாவது:—

டிசம்பர் 26, 27-ந் தேதிகளில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இரண்டாவது அகில இந்திய சினிமா மகாநாடு, பம்பாய் சாகர் மூவிடோன் புரொப்ரைடர் திரு. பி. மெஸ்லால் பி தேசாய் தலைமையின் கீழ் நடைபெறும்.

பொது அறிவிப்பு

ஸ்டுடியோக்கள், படங்களை வினியோகப் படுத்தும் கம்பெனிகள், தியேட்டர்கள், பிலிம் சங்கங்கள், அல்லது சினிமாத் தொழில் அபிவிருத்தியில் நோக்கம் கொண்ட இந்தியாவிலுள்ள பொது ஸ்தாபனங்கள், மேற்படி மகாநாட்டுக்குப்பிரதிநிதிகளை அனுப்ப வேண்டிக்கொள்ளப்படுகிறது. டிசம்பர் 15-ந் தேதிக்குள் மேற்படி பிரதிநிதிகளின் பெயர்களை கௌரவ காரியதரிசிகளுக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறது.

பிலிம் ஆர்டிஸ்டுகள், டெக்னிஷியன்கள் முதலியோரும் டெலிகேட்டுகளாக சேர வேண்டிக்கொள்ளப் படுகிறது.

மகாநாட்டில் கொண்டுவர விரும்பும் சகல தீர்மானங்களின் காபிகளை டெலிகேட்டுகள் டிசம்பர் 15ந் தேதிக்குள் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தீர்மானங்களைப் பிரேரிப்பவரின் பெயரும், விலாசமும், அவர் பிரதிநிதியாக விளங்கும் ஸ்தாபனத்தின் பெயரும் தீர்மானத்துடன் அனுப்பப்பட வேண்டும்.

மகாநாட்டில் 'சினிமோடோகிராபி'யைக் குறித்து படிக்க விரும்பும் டெலிகேட்டுகள், தங்கள் பெயர், விலாசம், விஷயம் முதலியவற்றைக் குறித்து கௌரவ காரியதரிசிகளுக்கு முன்னதாகவே அறிவிக்கவேண்டும்.

டிசம்பர் 15-ந் தேதிக்கு முன் அறிவிக்கும் டெலிகேட்டுகளுக்கு தங்க வசதியும், சாப்பாட்டு வசதியும் அளிக்கப்படும்.

கட்டணம்

வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர் (சென்னை மாகாணத்திலிருந்து வரும் டெலிகேட்டுகளுக்கு) ரூ. 3.

டெலிகேட் (சென்னை மாகாணத்திற்கு வெளியிலிருந்து வரும் பிரதிநிதிகளுக்கு) ரூ. 2.

இன்று முதல் சென்னை பிராட்வே டாக்கிஸில் நடைபெறும் "சத்திய சீலனில்" நடிக்கும் எம். கே. தியாகராஜ பாகவதர்.

சந்திர மோஹனா

மதுரை மோகன் மூவிடோன் கம்பெனியார் தயாரித்த 'சந்திர மோகனா' அல்லது 'சமூகத் தொண்டு' என்னும் சமூகச் சீர்திருத்த தமிழ் பேசும் படத்தில் எம். கே. ராதா, எஸ். வி. வெங்கட்ராமன், டி. என். மீனாக்ஷி, எம். ஆர். மங்களம் முதலியோர் நடிக்கின்றனர். இப்படத்தின் கதை தற்கால சமூக நிலைமையை ஒட்டி தயாரிக்கப் பட்டதாகும். இக் கதையில் காமமோகத்தால் ஏற்படும் கஷ்டமும், பெண்களிடம் துர்ச்சிந்தனையோடு அணுகும் வாலிபர்களின் துன்ப முடிவும், தேசத்துக்கும் சமூகத்துக்கும் இதம் செய்வோர் பின்னர் அடையும் நன்மையும் நன்றாகப் படரூபமாகக் காட்டப்படுகின்றது இச் சமூகச்சீர்திருத்தக் கதைபலராலும் ரஸிக்கப் படுமென்பதில் சந்தேகமில்லை. ஒலிப்பதிவு, படப்பிடிப்பு யாவும் குறிப்பிடத் தக்க முறையிலிருக்கின்றன. இம்மாதிரி இன்னும் முன்னேற்றமாக, சமூக சீர்திருத்த தமிழ் படங்கள் தென்னாட்டில் ஏராளமாக வந்து ஜனங்களிடையே புத்துணர்ச்சியைப் பரவிட வேண்டுகிறோம்.

"சமரஸம்"

ஓர் மாத வெளியீடு

மக்களின் நல்வாழ்வு, பொருளாதாரநிலை, கிராம சீரமைப்பு, சுகாதார விஷயங்கள் இவைகளை சம நோக்குடன் அபிவிருத்தி செய்யும் பத்திரிகை.

மானேஜர்:—
சமரஸம் ஆபீஸ்,
விழுப்புரம்.

பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம்

(ஒரு நிருபர்)

சென்னை, டிச, 4

சென்னை 9-வது டிவிஷன் பிராமணரல்லாதார் வாலிபர் சங்கத்தின் பொதுக் கூட்டம் ஒன்று நேற்று மாலை 6-30 மணிக்கு திரு. டி. பார்த்தசாரதி தலைமையின் கீழ்கூடியது. அதுசமயம் சுமார் 200 ஜனங்கள் வந்திருந்தனர். கூட்டத்தில் திருவாளர்கள்: ஜி. கிருஷ்ணசாமி, டி. ஆளவந்தார், ஏ. கோவிந்தசாமி முதலியார் முதலானோர் மாகாண தேர்தல் விஷயத்தைப் பற்றி சொற்பொழிவாற்றினார்கள். ஜி. கிருஷ்ணசாமி அவர்கள் 15 வருஷமாக ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் டாக்டர் நாயர், சர் தியாகராஜ செட்டியார், பனகல் ராஜா, பொப்பிலி ராஜா முதலானோர் கட்சிக்காக உடல், பொருள், ஆவி முதலியவற்றை அர்ப்பணம்செய்வதை பாராட்டி பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்காக பாடுபடுவதை பட்டவர்த்தனமாகப் பேசி முடித்தார். பிறகு, தலைவர்கள் காங்கிரஸ் போர்வையைப் போட்டுக் கொண்டு பொது மக்களை ஏமாற்றி வரும் காலிகளைப் பற்றியும், நமது கட்சி பொது மக்களுக்கு செய்த நன்மைகளைப் பற்றியும் விரிவாக சுமார் 1-30-மணி வரைக்கும் பேசி முடித்து இப்பொழுது வரப்போகும் புது சீர்திருத்தத்தில் கூடியவரைக்கும் நன்மை செய்யப் போகும் ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகர்களையே பொது மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் தனது முடிவுரையில் பேசி முடித்தார்.

கடைசியாக தோழர் டி. ஆளவந்தார் அவர்களால் 9 வருஷம் வரைக்கும் நமது டிவிஷன் அங்கத்தினராக இருந்த எம். சுந்தரம் நாயுடு அவர்களின் ஞாபகார்த்த சின்னமாக அன்னாரது உருவப்படத்தை நகர பரிபாலன சபையில் வைக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி ஓர் தீர்மானம் கொண்டுவரப்பட்டு ஏகோபித்தவாறு ஆமோதிக்கப்பட்டு கூட்டத் தலைவருக்கு வந்தனோபசாரம் செய்யப்பட்டு இனிது கலைந்தது.

ஆரியசமாஜம்:—நாளை (6-12-36) காலை 8-30 மணிக்கு, சென்னை சைனா பஜார் 170-ந. கட்டடத்தில் கடவுள் பிரார்த்தனையும், அன்று மாலை 6-30 மணிக்கு திருவல்லிக்கேணி கடற்கரையில் வழக்கம்போல் ஒரு பொதுக் கூட்டமும் நடைபெறும். பண்டிட் ஞானி பேசுவார்.

ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை:- ஷை சபையில் கீழ்கண்டவாறு சொற்பொழிவுகள் நடைபெறும்.

சென்னை இராயப்பேட்டை, மோபரிஸ் சாலை குமாரசுந்த நிலையத்திலுள்ள மேற்படி சபையின் ஆதரவின் கீழ் நாளை (6-12-36) மாலை 6 மணிக்கு "சுந்தரமூர்த்தி சுவாமிகள்" 8 வது பிரசங்கமும் (7-12-36) திங்கட்கிழமை இரவு 8-மணிக்கு திரு. ஆர். முனுசாமி உடையார் பி. ஏ. அவர்களால் "இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்" என்பது பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தப்படும்.

"கார்ப்பரேஷன் லாரி ஸ்டேஷன் தொழிலாளர் சங்கம்:— மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று திங்கட்கிழமை, (7-12-36) 4–30 மணிக்கு தருமராஜா கோவில் அண்ணா பிள்ளை தெருவில் மோட்டார் லாரி தொழிலாளர்களின் பர்மனண்டைப் பற்றியும் இன்னும் மற்ற விஷயங்களைப்பற்றியும் பேசுவார்கள்.

கிரிஸ்துமஸ் விழாவின் பரிசு!

★ வேல் பிக்சர்ஸாரின் ★

மற்றோர் ஜெய கோஷம் முழங்குகிறது!

*

ஆந்திர நடிக இரத்தினங்கள்
அனைவரும் சேர்ந்து நடித்த

"மாயா பஜார்"
(தெலுங்கு பேசும் படம்)

19—9—'36 சனிக்கிழமை முதல்
பிராட்வே டாக்கிஸில்
ஆரம்பமாகிறது.

குதூகலமான ஆரம்ப விழா!

1936௵ டிசம்பர்௴ 5-ந் தேதி சனிக்கிழமை முதல்
தினசரி 3 காட்சிகள் 3, 6, 9-30 மணிக்கு

கெயிட்டி டாக்கிஸில்

மிஸ். தனலக்ஷ்மி, மிஸ்டர் ஸ்ரீநிவாச ராவ் — நடிக்கும்

பார்வதி கல்யாணம்

நாஷனல் மூவிடோனில் தயாரிக்கப்பட்டது. அஃடேகர் டைரக்ட் செய்தது.

இத்துடன் விடா நகைப்பைத் தரும் விகடப் படக் காட்சி:

துஷ்ட சிஷ்யன்

முருகேசம் & சுப்பிரமணிய முதலியார் நடித்தது.

கீழ்க்கண்ட இடங்களில் 9—12—36 முதல் ஆரம்பம்:
திருச்சி ஸ்ரீ இராமகிருஷ்ணா டாக்கீஸ். கும்பகோணம் சரஸ்வதி டாக்கீஸ்.

ஹிந்து-கிறிஸ்தவர்கள் ஒற்றுமை

(உண்மைப் பித்தன்)

ஆரியர்களால், விசேஷமாய் ஆரிய மதக் குருக்களாகிய பிராமணர்களால் கொண்டுவரப்பட்ட ஹிந்து மதத்தை இந்தியர்களில் பெரும்பான்மையர் தழுவியிருப்பது போல ஆரியர்களாகிய ஐரோப்பியரால் கொண்டு வரப்பட்ட கிறிஸ்துமதத்தையும் இந்தியர்களிற் சிறுபான்மையர் தழுவியிருக்கின்றனர். ஆயினும் ஹிந்து மதத்தைத் தழுவியிருக்கும் இந்தியர்கள் தம் மதத்தையே இந்நாட்டிற் குரிய சொந்த மதம் எனவும், கிறிஸ்து மதத்தை அந்நிய மதம் எனவும் திண்ணமாய் எண்ணி இருக்கின்றனர். போர்த்துகேசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர்களாலும், கடைசியாக இங்கிலீஷ்காரராலும் இந்நாட்டில் கிறிஸ்து மதம் நுழைந்த தென்றாலும், அதனை செய்யும் ஆங்கிலேயர் மீதுள்ள வெறுப்பாலேயோ, வேறு காரணத்தாலோ கிறிஸ்தவர்கள் மீதும் சினமுள்ள ஹிந்துக்கள் தம் வெறுப்பைப் புலப்படுத்தினர். ஐரோப்பியர் வந்த வெகு காலத்துக்கு முன்னரே சிரியர்களால் கிறிஸ்துமதம் இந்நாட்டில் பரவி யிருந்தமைக்கு சிரிய இந்திய கிறிஸ்தவர்களே சான்று. தவிர அதற்கு முன்பே திரு. தாமஸ் என்னும் யேசுவின் சிஷ்யரும் இந்நாட்டில் கிறிஸ்தவ பிரசாரம் நடத்தியதுண்டு. அதற்கும் முன்னால், கிறிஸ்துவைப் பிறந்த இடத்திலேயே பார்க்கச் சென்றவர்கள் கிழக்கு இந்திய சாஸ்திரிகள் என்றும், அவர்களாலேயே கிறிஸ்தவானவர் கீழ் நாடுகளில் பிரசாரம் செய்யப்பட்டார் என்று எண்ணவும் இடமுண்டு. எனவே ஐரோப்பியர்களாலேயே இந்தியாவில் கிறிஸ்து மதம் பரவிற்றென்பது வெற்றுரையே யாகும். அவர்களில் எவரும் வாராதிருப்பினும் வாராததற்கு முன்னும் கிறிஸ்து மதம் இந்தியாவில் வேரூன்றியே இருக்கும் என்பது தெளிவு.

கிறிஸ்து மதம் இந்நாட்டிற்குச் செய்திருக்கும் நன்மைகள் பல. தாழ்த்தப்பட்ட மக்களை யெல்லாம் உயர்த்தப்பட்ட நிலைக்குக் கொண்டுவர கிறிஸ்து மதம் பல வகையில் முயன்றது. நாட்டின் கல்வி வளர்ச்சிக்கும் கிறிஸ்து சமயத்தைப் போல எந்த மதமும், ஸ்தாபனமும் இதுவரையில் உழைத்ததுமில்லை. உழைக்கப்போவதுமில்லை. ஜாதி வித்தியாசத்தைப் போக்கவும் ஒற்றுமை யுண்டாக்கவும், சகோதரத்வம், உடை நடைகளில் நாகரீகத்தை உண்டாக்கவும் கிறிஸ்துசமயமே இந்நாட்டில் வழி காட்டியாயிருந்தது. இக்காரியங்களை நிறைவேற்றி முடிப்பதற்கென அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்வீடன் முதலிய நாடுக் கிறிஸ்தவர் தங்கள் செல்வங்களைத் தாராளமாக இந்நாட்டிற்குச் செலவிட்டிருக்கின்றனர். இவ்வாறு கிறிஸ்தவ சமூகம் இந்திய நாடுக் கிறிஸ்தவ சமூகம் இந்நாட்டின் பொதுநல அபிவிருத்திக்குச் செலவழித்திருக்கிற செல்வத்தைப் போல, இந்த நாட்டில் எந்த சமூகமும் செலவழித்ததில்லை. ஆயின், இப்பேர்க் கொத்த கிறிஸ்தவ சமூகத்தின்மேல் இந்துக்கள் தம வெறுப்பைச் செலுத்த யாதொரு நியாயமுமில்லை. ஆயினும் வெறுப்புடையராய் வெறுப்பைச் செலுத்தக் காரணம் என்ன?

'கடத்த பெருங் கடப்பாரோ மக்கள்மேல் காதல்' என்றொரு தமிழ்ப் புலவர் பாடினர். அது இந்துக்களைப் பொறுத்த மட்டில் ஏறக்குறைய தவறே ஆகும். ஹிந்துக்கள் பெரும்பாலும் மக்கட் பற்றுடையர் அல்லரோ அல்லர். ஒரு பிராமணர் அல்லது வேளாளர் எனினும் அவர் தம் புத்திரரில் ஒருவர், அன்பாக வளர்த்து நேசித்தவராகக் கருதப்பட்ட புத்திரர் ஒருவர் ஹிந்து சமயத்தை தழுவி கிறிஸ்து சமயம் புகுவாராயின், அந்தோ, அன்று முதல் அவரது புத்திரத்துவம் சென்றிடும். அன்று முதல் கிறிஸ்து சமயத்தைத் தழுவிய அப் புதல்வனை அவர் புத்திரர் என்று கருதார். அவருக்குச் சொந்தமான சொத்து சுகங்களை அனுபவிக்க அப் புத்திரனைச் செத்தவனாகக் கருதுவர். அந்தோ! அவரது புத்திர வாத்ஸல்யம் புழுதிபோலாகிவிடும். எனவே ஹிந்துக்களில் பெரும்பாலார்க்கு மதப் பற்றும் ஜாதிப் பற்றுமே உண்டு, மக்கட் பற்று என்பது மருந்துக்கும் கிடையாது. மக்கட் பற்று உளதேல் கிறிஸ்தவர்களுக்கும், இந்துக்களுக்கும் இடையில் ஒற்றுமை வளரும். மதப்பற்று உள்ளவரையில் ஒற்றுமை உண்டாகாது என்பது திண்ணம்.

கிறிஸ்தவர் எத்தகைய கல்விமான்களா யிருந்தும் அவர்களை மடையர் என்றும், புலையர் என்றும், தீண்டாதார் என்றும் பரிகசிக்கும் வழக்கம் இன்னும் ஒழிந்தபாடில்லை. இவ்வாறு இந்துக்கள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய போதிலும் கிறிஸ்தவர்கள் அவர்களுக்கும் பிரதி உபகாரம் செய்தே வருகின்றனர்.

கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்தைப் பற்றி பிரசாரம் செய்வதாலும், அவர்கள் அந்நிய நடையுடை பாவனைகளைப் பின் பற்றுவதாலும் ஹிந்துக்களில் பலர்க்கு அவர்கள் மீது வெறுப்பு ஏற்படுவதாகக் கூறிவிடுவது மன்றி, கிறிஸ்தவர்களை தேசாபிமான மற்றவர்களென்றும், செருக்கினர் என்றும் கூறுவதையும் கேட்டிருக்கின்றோம். ஆனால் தற்காலத்திலோ ஹிந்துக்களும் தங்கள் மதத்தைப் பிரசாரம் பண்ணவும், மதமாற்றங்களைத் தடுக்கவும் தொடங்கி விட்டனர். எனவே அவர்கள் கிறிஸ்தவர்களைக் குறைகூற அருகரல்லர். தவிர குறிக்கப்பட்டதோர் எல்லையில் நின்று பிரசாரஞ் செய்யும் உரிமை எவர்க்கும் எந்தப் பிரசினைக்கும் இருத்தல் அவசியம். அவ்வுரிமை இல்லா நாடு சுதந்தர நாடாகாது. பிரசாரத்தினால் ஹிந்துக்களைக் கிறிஸ்தவர்கள் இழுத்து தங்கள் பலத்தைக் குறைத்து விடுகிறார்கள் என்று பயப்படுவது வெட்டவேலை. ஒரு பக்கம் பலம் குறைந்தால் மறு பக்கம் பலமாகிறது. அந்தப் பலம் நமது நாட்டை விட்டுக் குடியேறிப் போகவில்லை. நமது நாட்டுக்குள்ளேயே இருக்கிறது. அதனால் நமது நாடு பலவீனமாகாது என்ற விசாலமான புத்தி வேண்டும். தவிர தற்காலத்தில் ஹிந்துக்களும் தலைமயிரை வெட்டவும் அந்நிய நடையுடை பாவனைகளைப் பின்பற்றவும் தொடங்குகின்றனர். இது ஒற்றுமையை வளர்ப்பதற்கு மிகவும் நல்ல கருவியாதலால் இதை வளர்த்தலே தகுதியாகும். மேலும் கிறிஸ்தவர்களுடைய உண்மையான தேசாபிமானத்திற்குக் கிறிஸ்தவ சங்கங்கள் இந்நாட்டில் செய்து வருகின்ற வேலைகளே சான்று. இந்நாட்டில் தேசாபிமானம் வேரூன்றக் காரணமாயிருந்தவர்களும், தீண்டாமைப் பிரச்சினையைக் கிளப்பியவர்களும் ஹிந்து மதத்திற் காணும் பல சீர்திருத்தங்களுக்கு ஏதுவாயிருந்தவர்களும் கிறிஸ்தவர்களே என்பதை எவரும் மறக்க முடியாது.

சில காலங்களாகக் கிறிஸ்தவர்கள் மிகவும் அருவருக்கப் பட்டனர். ஆயினும் அந்தக் காலம் மலையேறி விட்டது எனலாம். சில காலங்களாகக் கிறிஸ்தவர்கள் சர்க்கார் உத்தியோகங்களை வகிக்க அருகரல்லர் போல ஒதுக்கப்பட்டனர். ஆயினும் ஜஸ்டிஸ் கட்சியார் ஆளுகையின்கீழ் கிறிஸ்தவர்கள் பல சர்க்கார் உத்தியோகங்களை வகிக்க இடம் பெற்றுள்ளனர். பொதுவாக லஞ்சம் முதலியன கொள்ளாமல் நடுநிலையினின்று நியாயஞ் செய்யக் கூடிய கிறிஸ்தவ சர்க்கார் உத்தியோகஸ்தர் மீதே ஜனங்களுக்கும் மிகவும், நம்பிக்கையும் உற்சாகமும் ஏற்பட்டுளது. தேசீய வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும், பெண் கல்வியிலும் கிறிஸ்தவ சமூகம் தேசத்தின் ஓர் சிறந்த சேவைப் பற்றியுளது என்பதை எவரும் ஆக்ஷேபிக்க முடியாது. ஆகையால் ஹிந்து-கிறிஸ்தவர்கள் ஒற்றுமை அவசியம் வேண்டற்பாலது. அவ்வொற்றுமை காலத்தை மிகவும் நாங்கள் விரும்புகிறதுபோல் மற்றெல்லோரும் விரும்ப வேண்டுமென்பதே என் வேண்டுகோள்.

தமிழ்ப் பண்டிதர்கட்கு விமோசனம்

கல்வி மந்திரி அவர்கள் கவனிக்க வேண்டும்

ஆங்கில நாகரிக மோகம் காரணமாகப் புறக்கணிக்கப்பட்ட தமிழ் மொழி, கவி. சி. சுப்பிரமணிய பாரதியார் போன்ற சில வீரத் தமிழறிஞர்களின் அழுந்திய நினைப்பால் மீண்டும் ஒருவாறு போற்றப் படலாயிற்று. சென்னைப் பல்கலைக் கழகமும், அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் சிறப்பாகவும், கரந்தைத் தமிழ்ச் சங்கம், மதுரைத் தமிழ்ச் சங்கம் முதலிய சங்கங்கள் பொதுவாகவும் தமிழறிஞர்களைத் தோற்றுவித்துள்ளன; தோற்றுவித்து வருகின்றன. இவ்வாற்றால் இக்கால் தமிழ் நாட்டில் தமிழ் கற்றோர் தொகை ஓரளவுக்குப் பெருகியுள்ளது.

ஆங்கிலங் கற்றோர் ஏற்று நடத்தற்குரிய உத்தியோகத் துறைகள் பலவாகப் பல்கியுள்ளன. தமிழ் கற்றோர்க்கோ அவர்கள் உயர்தரப் பள்ளிகளில் தமிழ் மொழிப் பாடம் ஒன்றே போதித்தற் குரியர் எனவைத்துள்ளமையின், ஒரு ஜில்லாவுக்குப் பத்து அன்றிப் பதினைந்திற்கு மேல் இவர்கள் உத்தியோகஞ் செய்வதற்கிடமில்லை. இங்ஙனமாயின், ஆண்டு தோறும் ஐம்பது அறுபதாகத் தேறி வெளிவரும் வித்துவான்கட்குப் புகலிட மென்னே? இக்கால் வித்துவான் பட்டமும், போதனா முறைப் பயிற்சியும் பெற்று வெளிவரும் தமிழ்ப் பண்டிதர்கள் ஆங்கில மொழி சம்பந்தமான பாடந் தவிர மற்றெல்லாப் பாடங்களையும் ஆரம்பப் பள்ளி வகுப்புகட்கு நடத்தற் குரியராக அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பண்டிதப் பயிற்சி வகுப்பில் பயிற்றப்பெற்றும், இவர்கள் தமிழாசிரியராதற்கு மட்டுமே தகுதியுடையவர்களெனக் கல்வி அதிகாரிகள் கருதுவதற்கு இடமில்லை. இதனைத் தமிழ்ப் பண்டிதர் கழகத்தினர் செவ்வி வாய்த்த போது அரசியலதிகாரிகட்கு எடுத்துரைக்க வேண்டும்.

மற்றிக்கால் தமிழ்ப் பண்டிதர்கட்கு ஓரளவு விமோசனந்தரக் கூடிய வழி யொன்று அறிஞர் சிலரால் கூறப்படுகின்றது.

அஃதாவது, "உயர்தர ஆரம்பப் பள்ளிகட் கெல்லாம் ஒவ்வொரு தமிழ்ப் பண்டிதர் நியமிக்கலாம்" என்பதாகும்.

உயர்தர ஆரம்பப் பள்ளிகட்குத் தமிழ்ப் பண்டிதர் நியமிக்க வேண்டுவது மிக மிக இன்றியமையாததாகும். எதனாலெனின், நாட்டிற் கல்வி பயிலும் மாணவர்களிற் பெரும்பாலோர் ஆரம்பப் பள்ளிக் கல்வியோடு நின்று விடுவோராவார். இவர்கட்குப் பிற்கால வாழ்க்கையில் தமிழ் எழுதல், படித்தலறிவு ஓரளவுக்குப் பயன்படும்; தமிழ் இலக்கிய அறிவே வாழ்க்கையின்பத்திற்குப் பெரிதும் துணை செய்யத் தக்கதாயமைகின்றது. ஆதலின், அவர்கட்குத் தமிழ் மொழி திறம்படப் போதிக்க வேண்டுமென்பது தெளிவு.

இவ்வளவு இன்றியமையாத நிலையில் சிறப்பாகத் தமிழறிவு பெற வேண்டிய நிலையிலுள்ள மாணவர்கட்கு அரை குறையாகத் தமிழறிந்த ஆங்கில நாகரிகத்தில் மோகம் பெரிதுடைய ஆசிரியர்கள் தமிழ் கற்பிப்பதால் விளையும் தீங்குகள் எண்ணிலடங்கா.

இவ்வாசிரியர்கள், ரகர, றகர வேறுபாடுகளும் நன்கு அறிய மாட்டார்கள். நல்ல தமிழிற் பேசுவதை இவர்கள் அநாகரிகமென்று கருதுபவர். சந்திப் புணர்ச்சி முறைகளின் நுட்பங்கள் விளங்கா இவர்கள் விபரீதங்கள் பெருநகைப்பிற் குரியனவாகும். வடமொழி கலந்த மணிப்பிரவாள நடைபோன்று ஆங்கில கலந்த தமிழ் நடை யொன்றினை இவர்கள் பேச்சு வழக்கில் உண்டாக்கி வருகின்றனர். இந்நிலையிலுள்ள இவர்கள் கவிநயத்தையோ, காவியச் சுவையையோ உணர்வதெங்ஙே? இத்தகையவர்களிடம் கற்கும் மாணவர்கள் தங்கள் வாழ்க்கைக்குப் பயன் படுமளவு தமிழறிவைப் பெறுதல் யாங்ஙனம் இயலும்?

ஆரம்ப பள்ளிகளிற் கல்வி பயிலும் மாணவர்களின் பிற்கால வாழ்க்கையிற் தமிழ் மொழிப் பாடம் பயன்படுமளவு ஏனைய பாடங்கள் பயன் படுதலில்லை யென்பதை உண்மையுணர்வுடைய எவரும் ஒப்புக்கொண்டே தீருவர். இதனால், இப்பள்ளிகட்குத் தனியே தமிழாசிரியர்கள் நியமிக்க வேண்டுவது இன்றியமையாததாகும்.

இக்கால் கல்விப் பகுதி மந்திரியாக அமைந்துள்ளவர் கனம் ராஜா சர். அண்ணாமலை செட்டியாரின் திருமகனும், குமாரராஜா, கனம். முத்தையச் செட்டியார் அவர்களாவார். இவர்கள் செந்தமிழ்ச் சுவை யுணர்ந்த சீரியர் எனப் பேசப்படுகின்றார்கள். மற்றுத் தமிழ் வளர்ச்சியில் இவர்கட்கு ஆர்வம் இயற்கையாயமைந்திருக்கு மென்பதற்கு எடுத்துக் காட்டு வேறு வேண்டா. இவர்கள் தந்தையாரால் நடத்தப் பெறும் அண்ணாமலைத் தமிழ்ப் பல்கலைக்கழக மொன்றே சாலும். 'குலவிச்சை கல்லாமற் பாகம் படும்' என்றாங்கு இவர்கட்குத் தமிழார்வம் இயற்கையில் அமைந்திருக்கும்.

ஆகவே, இவர்கள் தம்மால் செய்து முடிக்கற்பாலதாகிய, "உயர் ஆரம்ப பள்ளிகட்குத் தமிழாசிரியர் நியமித்தல்" என்னும் முடிவைச் செய்து முடித்துத் தமிழறிஞர்களின் பாராட்டுதலைப் பெறுவார்களாக.

இம்முடிவின், இன்றியமையாமையையும், சிறப்பையும் பொதுமக்கள் மூலம் அவர்கட்கு உணர்த்த வேண்டுவது முறையாதலின், ஆங்காங்குள்ள தமிழ்ப் பண்டிதர்கள் கூட்டங் கூட்டியும், முடியுமாயின் தக்கவர்களைக் கொண்டு கோரவும், 'உயர்தர ஆரம்பபள்ளிகட்குத் தமிழ்ப் பண்டிதர் நியமிக்க வேண்டும்' என்னும் இம் முடிவைக் கல்விப் பகுதி மந்திரி அவர்கட்குத் தெரிவித்துப் பெருங்கிளர்ச்சி செய்ய வேண்டும்.

தமிழ் வளர்ச்சியில் ஆர்வமுடைய தமிழ்ப் பத்திரிகாசிரியர்களும் பிறரும் இதைப்பற்றித் தலையங்கள் வரைதல் வேண்டும்.

இம்முடிவால், இதுபோது வேலையிலுள்ள தமிழ்ப் பண்டிதர்கட்கு ஏதும் பாதகமில்லையாதலின், அவர்கள் தங்கள் சகோதரத் தமிழ்ப் பண்டிதர்களின் நலங்கருதி இக்கிளர்ச்சியிற் கலந்து உதவி செய்யுமாறு வேண்டிக் கொள்ளுகின்றேன்.

ரூபாய் மதிப்பை குறைக்க வேண்டுமா?

(திரு. கோவிந்தராஜுலு நாயுடு பி. எ. எல். டி.,)

பிரான்ஸ் தேசம் தன் நாணய மதிப்பைக் குறைத்த நாள் முதல் சில மாதங்களாக ரூபாய் மதிப்பைக் குறைக்க வேண்டுமென்று பலத்த கோஷம் கிளம்பி யிருப்பது நேயர்கள் அறிந்த விஷயம். இந்திய சட்டசபையில் இந்த பிரச்னை எழும்போது போதிய ஆதரவில்லாததால் தோல்வியுற்றது. அது முதல் தென்னாட்டு, வடநாட்டு வர்த்தகர்களாலும், மற்ற பல அரசியல் வாதிகளாலும் பலத்த கிளர்ச்சி செய்யப்படுகிறது. கூட்டங்கள் கூட்டப் படுகின்றன. தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. கவர்ன்மெண்டாரின் செய்கை படுமோசமாக கண்டிக்கப் படுகிறது. இந்நிலையில் ஆசிரியர் தாமஸ் அவர்களின் பிரசங்கம் மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணி விட்டது. அவர் கூற்று உண்மையல்ல வென்று வாதிப்பவருஞ் சிலரே. ஆதலின் ரூபாய் மதிப்பின் குறைவால் நன்மையா தீமையா என்பதை ஆராய்வோம்.

"ஏற்றுமதி"

ஆசிரியர் தாமஸ் ரூபாய் மதிப்பின் குறைவால் நம் நாட்டு ஏற்றுமதி ஒன்றும் அதிகமாகி விடாதென்றும், மற்ற தேசங்கள் இதற்குப் பல தடைகள் ஏற்படுத்தி யிருக்கின்றன என்றும் கூறியிருக்கின்றார். இவ்விஷயம் சரியே என்று ஹிந்து ஆசிரியரும் 16-11-36, தலையங்கத்தில் ஒப்புக் கொண்டிருக்கிறார். இது சரியல்ல என்று ஜமால் மகம்மது போன்ற நிபுணர்கள் தக்க ஆதாரத்தோடு இதுவரையில் சொல்லவில்லை.

"தங்கத்தைத் தடுத்தல்"

மேலும் நம் நாட்டுத் தங்க ஏற்றுமதித் தடை செய்யப்பட வேண்டுமென்று சொல்லும் அர்த்த சாஸ்திர நிபுணர்கள் அதன் பலனை உணர்ந்திலர். நமது தங்கம் ஏற்றுமதி செய்யப் படாவிட்டால் அதன் விலை குறைந்து போகும். அதனால், தங்களுடைய கஷ்டங்களைச் சிறிதேனும் நீக்கிக் கொண்டிருக்கும் ஏழைகளுக்கு இந்த லாபமும் இல்லாமல் போகும் என்பதை அப் பெரியார்கள் உணரவில்லை. 'ஹிந்து' ஆசிரியர் அவர்களும் தங்கம் ஏற்றுமதி செய்வது சரியே என்பதை நியாய முறையில் எடுத்துக் காட்டி யிருக்கிறார். அப்படி யிருக்க இவர்களது கூக்குரல் என்னே!

மதிப்பு உயர்ந்திருக்கிறதா?

மேலும் நம் ரூபாயின் மதிப்பு, தற்காலம் அதிகரித்திருக்கிற தென்றும், அதிகரித்த மதிப்பை குறைக்க வேண்டும் என்றும் சொல்லும் ஜமால் மகம்மதுவின் கொள்கையை 'ஹிந்து' ஒப்புக் கொள்ளவில்லை. இது ஒரு முறையில் சரியே. ஸ்டர்லிங் நாணயத்தோடு ரூபாய் இணைக்கப்பட்டிருப்பதால் ஆங்கில நாணயத்தின் மதிப்பு குறையும்போது நம் ரூபாயின் மதிப்பும் குறைந்தே இருக்கிறது. அப்படி குறைந்தும் நம் நிலையில் அதிக முன்னேற்றம் ஒன்றும் இல்லை. இன்னும் குறைத்தால் எப்படி முன்னேற்றம் அடைய முடியும் என்று கேட்கிறேன்? நாம் குறைத்தால் மற்ற நாடுகள் சும்மா தூங்கிக்கொண்டிருக்குமா? அவைகளும் குறைத்தால் நாம் என்ன செய்வது? ரூபாயை தற்போது ஸ்டர்லிங்கிலிருந்து பிரித்துவிட்டால், ரூபாயின் மதிப்பு ஏறுமா, இறங்குமா? ஏறுமே ஒழிய இறங்காது! இறங்கிவிடும் என்றால் பிரித்து விடுவதற்கு ஏன் இந்த நிபுணர்கள் முயற்சி செய்யக் கூடாது?

ரூபாய் மதிப்பு குறைந்தால், நாம் பிரிட்டனுக்கு, அனுப்ப வேண்டிய பணத்தில் சில கோடிகள் அதிகமாகும் என்பதை எவரும் மறக்க முடியாது! இதுவரையில் மறக்கவுமில்லை. அதற்கு நாம் எப்படி சரிப்படுத்துவது? வரி போடுவது தான் வழி! இப்பொழுதே நமக்குள்ள வரியைத் தாங்கமுடியாமலிருக்கும் போது, இனி வரி போட முடியுமா? பொருளாதார விஷயத்தில் இந்தியா மிகத்தாழ்ந்த தேசம். இப்படியிருக்க பெரிய பணக்கார தேசங்களாகிய பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா முதலிய தேசங்களோடு நம்மை ஒப்பிட்டு போட்டி போட்டால் நாம் ஏமாற்றமடையும்படி நேரும். திரு. தாமஸ் அவர்களும், இந்த நிலைமையில் ஆழ்ந்த ஆராய்ச்சியில்லை என்று சொல்லி விட்டால் மாத்திரம் போதாது. இவ்விஷயத்தை தர்க்க ரீதியாய் வாதித்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமே யல்லாமல் அவசரப்படுவதில் பிரயோஜனமில்லை!

ஒரு எச்சரிக்கை

நாம் பேசுவதெல்லாம் மற்ற தேசத்தார்கள் என்ன செய்வார்கள் என்பதை யோசனை செய்யாமல் பேசுவதாகும். இப்பொழுது அமெரிக்காவில் ரூஸ்வெல்ட் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது கவனிக்கத் தக்க விஷயம். அவர், பொருள் விஷயத்தில், எந்த சமயத்திலும் எதையும் செய்யவல்லவர். ஒரு வேளை விலைக்குக் கிடைக்கும் தங்கத்தைத் திருப்பி நமக்கு அனுப்பினால் என்னவாகும்? தங்கத்தின் விலை குறையும். குறையவே பணக்காரர்கள் தங்கத்தை வாங்குவார்கள். இப்பொழுது வியாபாரத்திலும், கைத் தொழிலிலும் முடக்கியிருக்கும் பணத்தில் பெரும்பாகம் தங்கம் சாப்பிட்டுவிடும். இப்பொழுது தான் உயிர் பெற்றிருக்கும் நம்நாட்டு கைத் தொழிலெல்லாம் முறிந்து போகும். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகும். வட்டி விகிதம் அதிகமாகும். கவர்ன்மெண்டு கடன் பத்திரங்களும், பங்குகளும் குறையும். இன்னும் பல இன்னல்களும் விளையும். நம்மவர்கள், வீணே தங்கம், தங்கம், என்று தங்காத உலோகத்தில் பணத்தை முடக்குவதால், நம் ஏழைத் தேசத்தில் இதுவரை கைத் தொழில் விருத்தியாகாமல் இருந்தது. நம் நாட்டில் என்றைக்கு, தங்கத்தின் மேல் ஆசை குறைகிறதோ அன்றைக்குத் தான் நம்தேசம் கீர்த்தி அடையும் என்பதில் தடை என்ன? ரூபாய் மதிப்பின் குறைவால் விளையும் தீமைகளை விவரமாய் இன்னொரு கட்டுரையில் விளக்குகிறேன்.

பொங்கல்! பொங்கல்!!

அசல் பட்டுப் புடவை

அழகிய சிறு ஜரிகைக் கரை, அசல் பட்டு. சிகப்பு, அரக்கு புளு, பச்சை, ஸ்கை முதலிய கலர்களில் கிடைக்கும்.

12-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 5—12—0
16-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 7—8—0
18-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 8—8—0
5-முழம் x 44" அங்க வஸ்திரம் 1-க்கு ரூ. 3—8—0

வெண்பட்டு அங்க வஸ்திரம்

5 முழம் x 44" அழகிய கரைகள் சலவைக்கு சேர்ந்தியானது.
விலை ரூ. 1—12—0-தான்.
☞ இந்த விலைகள் 15—1—37 பொங்கல் வரை தான்.
ஞாபகத்தில் வையுங்கள். உடனே ஆர்டரை அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
(Proprietors : Sundarams Ltd.,)
சில்க் அவுஸ், காசி.

10,000 பிரதிகள் அச்சிடப்பட்டு வெளிவருகிறது !!!

'ஸிட்டி கெஜட்' 1937-ம் வருட மலர்

தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களால் இலக்கியம், நாவல், சரித்திரம், அரசியல், விஞ்ஞான விமர்சனம், [illegible], சுயமரியாதை இயக்கம், தொழிலாளர் இயக்கம் இவைகளைப் பற்றி எழுதிய கட்டுரைகளும், பிரபல நடிகர்கள் சினிமா நடிகர்கள், பொது-நல [illegible] போட்டோக்களுடன் அழகிய பல வர்ண கலர்களால் அச்சிடப்பெற்ற 200 பக்கங்களுக்கு அதிகமாக 'ஸிட்டி கெஜட்' 1937-ம் வருட மலர் டிஸம்பர் 1 x 4 வாரத்தில் வெளிவருகிறது. விளம்பரங்கள் [illegible]
[illegible]

மானேஜர்:—'ஸிட்டி கெஜட்', 197, மேலவெளி வீதி, மதுரை

விடுதலை யவர் பாதனைக் கேடராயின்
நெடுநிலை கீர்த்தி கநிலை சின்று
நாட்டினரெல்லாம்
பொருள் சகப்பேறுகள் சாவுமும் பெற்று
திருபிக வாழ்தலே யாம்

விடுதலை
VIDUTHALAI

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்று கின்ற
செம்மொழியை திருமொழியை
[தேன்மொழியை
தனித்தியங்கும் ஆற்றலுள தொன்மொழியை
[அமிழ்தனைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
[அது தினமும் பழக்கம் செய்வீர்.

மலர்-2] சென்னை : (5-12-1936) தாது௵ கார்த்திகை௴ 20உ சனிக்கிழமை [இதழ்-53

ஆரணியில் ஜெயினர்கள் கூட்டம்

மடாதிபதி தலைமை வகித்தார்

அப்பர் படத்தைக் காட்டக் கூடாது

ஜெயினர்களின் கண்டனம்

(நமது நிருபர்)

ஆரணி, டிச, 2

நேற்று மாலை 7-மணிக்கு ஆரணியில் ஜெயினர்களின் பொதுக் கூட்டம் கூடியது. ஏராளமான ஜெயினர்கள் வந்து இருந்தார்கள். அப்பர் ஜீவிய சரித்திரத்தை சென்னை வேல் பிக்சர் கம்பெனியார் சினிமாவில் காட்டக் கூடாதென்றும், சர்க்கார் அவர்களுக்கு அனுமதிக்க கூடாதென்றும் கண்டிப்பதற்காக இக்கூட்டம் கூட்டப்பட்டது. இக்கூட்டத்திற்கு ஜெயினர்களின் மடாதிபதியும் குருவுமான ஸ்வஸ்ஸ்ரீ ஸ்ரீமத் ராஜராய குரு, பூமண்டலாசார்ய மஹாவாத வாதீஸ்வர நியாவாதி பிதாமஹ ஸகலித்வத் ஜனசர்வ பௌஷமாத்ய சேக பிருதாவளி விராஜமான ஸ்ரீமன் திகஜகடி கன்தாள, டில்லி கொல்லாபுர பெனிகொண்ட ஜினகஞ்சி, சதுர்ஸிம்ஹாஸன காதீஸ்வரர்களாகிய ஸ்ரீமத் பிரல லட்சுமிசேன பட்டாரக, பட்டாசார்ய வர்ய ஸ்வாமியார் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

ஜெயின மடாதிபதி பிரசங்கம்

சித்தாமூர் ஜெயின மடாதிபதி சுவாமிகள் செய்த பிரசங்கம் வருமாறு:—மகாஜனங்களே இந்த கூட்டம் கூட்டப்பட்டதின் நோக்கத்தை நீங்கள் எல்லோரும் நன்கு அறிவீர்கள். உலகில் இப்போது எங்கு பார்த்தாலும் மத துவேஷம் செய்யப்பட்டு வருகிறது. சில காலமாக பகிரங்கமாய் ஜெயின மதத்தைப் பற்றித் தூஷிக்கப்பட்டு வருகிறது. இதெல்லாம் காலக் கொடுமை, உங்களுக்கு மதத்தின் பேரில் சிரத்தை இல்லை. கல்வியிலும் சிரத்தை இல்லை. சில பணக்காரர்கள் இருந்தும் நம் சமூக நிலைமை மாறவில்லை. கலவடியார், நன்னூல் மூலவியலை வைப் படித்தும் விசேஷமாய் பிரசாரம் செய்கிறார்கள். நாம் எல்லோரும் கொல்லிக்காய் மூட்டைகளாய் இருந்து வருகிறோம். பத்திரிகை மூலமாயும் இப்பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. இப்போது அப்பர் படத்தை ஆபாசமாய் காட்ட முன் வருகிறார்கள். பிலிம் எடுத்து மத துவேஷத்தைப் பரப்புவது இக்காலத் தொழிலாய் இருக்கிறது. இம்மாதிரி காட்டுவதால் நம் சமூகத்துக்கும், மதத்துக்கும் இழிவாய் இருக்கின்றது. இம்மாதிரி அவர்கள் செய்யக் கூடாதென்று நீங்கள் கிளர்ச்சி செய்து வெற்றிபெற வேண்டும். ஒற்றுமையே வலிமையைத் தரும் என்று பேசினர்.

திரு. வி. வசுபால நயினர் பிரசங்கம்

ஆரணி பிரபல வியாபாரியும் ஜெயின சமூக பிரமுகரும், கல்வி பாண்டித்தியம் உள்ளவரும், தனவந்தருமான திரு. வி. வசுபால நயினர் பேசியதாவது:—

நம்முடைய சுவாமிகள் உத்திரவுப்படி, உங்கள் முன்னிலையில் பேச முன்வந்தேன். நம்முடைய ஜெயின மதம் அனாதி காலம் தொட்டு இருந்து வருகிறது. இது யாராலும் உண்டாக்கப்படவில்லை. நம்முடைய மதத்திற்கு ஆதி இல்லை. வெகு சிறப்பானது. நம்முடைய மதத்தால ஒருவருக்கும் அல்லது புல் பூண்டுக்குங்கூட தீங்கில்லை. அஹிம்சா தர்மத்தையே உருவாகக் கொண்டது நம் மதம். இதில் பல பெரியோர்களும், சக்கிரவர்த்திகளும், அறிவாளிகளும் அவதரித்து இருக்கிறார்கள். ரிஷிகளும், தீர்த்தங்கரர்களும், வர்தமான ஸ்வாமியும், சமந்தபத்திரரும் அவதரித்தது ஜெயின மதத்தில்தான. பல காவியங்களையும், அரிய சாஸ்திரங்களையும் நம் மூதாதையர்கள் எழுதி இருக்கிறார்கள். தமிழில் நன்னூல், சிலப்பதிகாரம், ஜீவக சிந்தாமணி முதலிய கிரந்தங்கள் நம்மவர்கள் இயற்றினார்கள். கன்னட பாஷையிலும், சமஸ்கிருதத்திலும் அனேக கிரந்தங்கள் எழுதப்பட்டு இருக்கின்றன. இவ்வளவு சிறப்பான மதம் இன்று கேட்பாரற்றுக் கிடைக்கின்றது. நம்மை பரிகாசம் செய்யும் நிலைமையில் இருக்கிறோம். நம் மதத்தை தூஷிக்கிறார்கள். அப்பர் சரித்திரத்தை படமெடுத்துக் காட்டி இழிவுபடுத்த உத்தேசிக்கிறார்கள் இது பலமாய் கண்டிக்கத் தக்கது. அப்பரை ஹிந்து மதத்தில் சேர்ப்பிக்க பரமேஸ்வரன் அவருக்கு வயிற்று வலி உண்டாக்கினாராம். அதன் பின் பரமேஸ்வரன் அந்த நோயை நிவர்த்தி செய்தாராம். உடனே அப்பர் ஹிந்துமதத்தில் சேர்ந்தாராம் இம்மாதிரி ஓர் கற்பனை உண்டாக்கி சைவ மதத்தை பரவச் செய்தது உண்மையானால், ஏன் இன்று சைவ மதம் அதிகம் உலகில் இல்லை. சிவபிரானுக்கு அவ்வளவு சக்தி இருக்கும் பட்சத்தில் எதை வேண்டுமானாலும் செய்யலாம். இப்போது கிறிஸ்துவ மதமும், முகம்மதிய மதமும் விசேஷமாய் இருக்கிறதே. இது ஏன் சிவபிரானுக்கு தெரியவில்லை. ஒரு ஆண்டவர் சைவ மதப்பிரசாரம் கூட செய்வார். இது எல்லாம் கட்டுக்கதை சமணர்களை தூக்கிலேற்றினார்கள்; அப்பரை சமுத்திரத்தில் தள்ளினார்கள்.—இது வெகு காலத்துக்கு முன்பே நடந்தது அஹிம்சா தர்மிஷ்டரான ஜெயினர்கள் ஒரு சமூகத்துக்கு தீங்கு செய்ய மாட்டார்கள். நாம் கவலை இன்றி இருக்கக்கூடாது பூர்வீக பெருமை பேசுவதில் பயனில்லை. சுயமதிப்புடன் வாழ வேண்டும். நாம் கிளர்ச்சி செய்து வெற்றிபெற வேண்டும்.

திரு. சிவராம அருணகிரி செட்டியார் பேச்சு

திரு. சிவராம அருணகிரிசெட்டியார், திரு. வசுபால நயினர் வேண்டுகோளின்படி பேசியதாவது:— இந்த கூட்டத்தில் பேச வேண்டுமென்று எதிர் பார்க்கவில்லை. ஜெயினர்கள் கூட்டத்தில் பேச சந்தர்ப்பம் வாய்த்தது சந்தோஷம். அதிலும் மடாதிபதி தலைமையில் பேச ஏற்பட்டது பாக்கியமேயாகும். இந்தக் கூட்டத்தின் நோக்கத்தை நீங்கள் அறிவீர்கள். உலகில் ஒவ்வொரு சமயமும் வேகமாய் முன்னேறி வருகிறது. உங்கள் சமூகத்தார் மிகவும் பிற்போக்காய் இருக்கிறார்கள். மகாவீரர் தோன்றிய சமூகம், புராதன மதம், அஹிம்சா மதம் என்று பேசுவதில் பயனில்லை. உங்களில் பலருக்கு கல்வி இல்லை. பரந்த நோக்க மில்லை. நம் வாழ்நாளில் நல்ல காரியங்களில் ஈடுபட வேண்டும்; சமூகத்துக்கு தொண்டு செய்ய வேண்டும். உலகெ வியாபாரமில்லை. தொழில் இல்லை முதலாளிக் கூட்டத்தார் எல்லோரும் சினிமாபிடிக்கும் தொழிலில் இறங்கி பணம் சம்பாதிக்க முன் வந்து விட்டார்கள். வேறு தொழிலில் இவ்வளவு வரும்படி இல்லை. ஒரு சமூகத்தை கேவலப்படுத்தியும். புண் படுத்தியும் சினிமாபடம் எடுப்பது வெறுக்கத் தக்கது. சில தினங்களுக்கு முன்பு ஒரு கம்பெனியார் (3) முட்டாள்கள் என்று ஓர் படம் காட்டினார்கள்.

அம்மூன்று சமூகத்தாரும் அதை பலமாய் கண்டித்தார்கள். சர்க்கார் இதை எல்லாம் கவனிப்பதில்லை. ஒரு சமூகத்தின் உதவி இல்லாமல மற்றொரு சமூகம் வாழ முடியாது ஒரு சமூகத்தார் மனம் வேதனைபடக் கூடாது. இப்போது அப்பர் படத்தைப் பிடித்து உங்கள் சமூகத்தை தூஷிக்க முன் வந்து இருக்கிறார்கள். இதை நீங்கள் கவனித்து கிளர்ச்சி செய்ய வேண்டும் இது பிரசார காலம், என்பதை கவனித்து இப்படத்தை காட்டக் கூடாதென்று போராட வேண்டும் என்று பேசினர்.

அடியில் கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

1. வேல் பிக்சர், கம்பெனியார் அப்பர் ஜீவிய சரித்திரத்தை படமெடுக்கப் போவதாக வெளியிட்டு இருப்பதால் அந்த படம் ஜெயின சமூகத்தை மறைமுகமாகவும் நேர்முகமாகவும் இழிவுபடுத்துவதாய் இருப்பதால் மேற்படி படம் எடுக்காமல் இருக்க வேண்டுமென்று இந்த கூட்டம் மேற்படி கம்பெனியாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

2. அப்பர் படத்தை படம் பிடிப்பதின் மூலம் ஜெயினர்களின் மத உணர்ச்சியை புண் படுத்துவதாயும், கேவலப்படுத்துவதாயும் இருப்பதால் இப்படத்தை காட்டக் கூடாதென்றும், வேல் பிக்சர் கம்பெனியாருக்கு சர்க்கார் தடையுத்திரவு செய்ய வேண்டுமென்றும், பிலிம் போர்டார் அக் கம்பெனியாருக்கு அனுமதி கொடுக்கக் கூடாதென்றும் இக் கூட்டம் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

3. இந்த கூட்டம் நடவடிக்கைகளை சென்னை சர்க்கார் சீப் செக்ரட்டரிக்கும், பிலிம் போர்டாருக்கும், பத்திரிகைகளுக்கும் அனுப்பித் தர வேண்டு மென்ற அதிகாரத்தை மடாதிபதி அவர்கள் திரு. ஜெயராஜ் நயினருக்கு அதிகாரத்தை கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறது.

வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

தஞ்சை பிராமணரல்லாதார் வாலிபர் சங்கம்

(ஒரு நிருபர்)

தஞ்சை, டிச, 2

29-11-36 காலை டி. கழகத்தார் கூட்டம் ஒன்று நடைபெற்றது அதுபோது கழகத்தை 6 ரூபாய்க்கு மேற்படாத வாடகையுள்ள ஒரு கட்டடத்தில் நிறுவ வேண்டுமென்றும், பெரியார் வி. ஓ சிதம்பரம் அவர்கள் மரணத்திற்கு தம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதாகவும், அன்றியும் அவர் பேரால் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் நிதிக்கு பணம் வசூலித்து அன்னார் மகனுக்கு அனுப்ப வேண்டுமென்றும், மற்றும் கழகத் தலைவர் திரு. எ. ஒய். அருணாசலசாமி நாடார் அவர்கள் புதல்வன் மரணத்திற்கு தமது வருத்தத்தை தெரிவித்துக் கொள்ளுவதாகவும் தீர்மானங்கள் நிறைவேறின.

1—11—36 ல் நடந்த திருச்செங்கோடு தாலூகா ஜஸ்டிஸ் மகாநாட்டின் வரவு செலவு கணக்கு

வரவு

	ரூ.	அ.	ப.
சங்ககிரி எடப்பாடி கொமாரபாளையம் அன்பர்களால் வசூல் செய்து அனுப்பிய தொகை	200	0	0
திருச்செங்கோடு ஸ்ரீதர சுவாமிகள்	101	13	10
சவுண்டம் பாளையம் ஜமீன்தார், செங்கோட்டுவேல கவுண்டர் அவர்களால்	23	11	0
திருப்பூர், ஓ. கே. எஸ். ராமசாமி முதலியார்	25	0	0
திருச்செங்கோடு, மூ. வில்வநாத முதலியார் அவர்கள்	10	0	0
,, எ. வேலாயுதம் பிள்ளை	10	0	0
,, எ. காளியண்ண முதலியார்	10	0	0
,, கே. அப்துல் ரஹிம் சாயபு	10	0	0
,, என். கே. வரதராஜுலு	10	0	0
,, கே. ஆர். ராமசாமி செட்டியார்	10	0	0
,, என். வி. ரத்னவேலு முதலியார்	10	0	0
,, டி. என். ராமசாமி முதலியார்	10	0	0
,, என். எஸ். பச்சாக் கவுண்டர்	10	0	0
,, எ. ஸி. பி. அண்ணன்	10	0	0
,, ஒரு கனவான்	10	0	0
,, ஆர். கே. ஆறுமுகம்	10	0	0
,, என். வி. கே. சின்னப்ப செட்டியார்	10	0	0
,, ஜமீன் தாரணி நல்லாயம்மாள்	10	0	0
,, எம். கே. கே. அங்கண்ணன்	10	0	0
வேல கவுண்டம்பட்டி ஜமீன்தார் எ. சுப்பராயன் அவர்கள்	10	0	0
மேற்பதூர் கே. பி. அப்துல் ரஹிமான் சாயபு	10	0	0
புத்தூர் ஜமீன்தார் என். சுப்பராயக் கவுண்டர்	10	0	0
திருச்செங்கோடு எம். வி. பி. காளியப்ப முதலியார்	5	0	0
,, டி. ஜீ. கணேச முதலியார்	5	0	0
,, என். எ. கே. எஸ். வேலாயுதம் செட்டியார்	5	0	0
,, ஆர். ஆர். குப்புசாமி செட்டியார்	5	0	0
,, நல்லசாமி பண்டாரம்	5	0	0
,, ஜமீன்தாரணி கே. வி. பார்வதி அம்மாள்	5	0	0
,, டி. ஆர். வேணுகோபால்	5	0	0
,, பாப்பு நாயுடு	5	0	0
,, ஓர் அனுதாபி	5	0	0
ஆக மொத்தம் வரவு ரூபா.	570	14	10

செலவு விபரம்

		ரூ.	அ.	ப.
1.	விளம்பரச் செலவு	76	1	0
2.	பிரயாணச் செலவு	93	2	5
3.	பந்தல் வர் அலங்காரம் வளைவுகள் கொட்டகை அலங்காரம் புஷ்ப ஆரங்கள் மேளம்	110	15	6
4.	தபால் தந்தி செலவு	32	9	0
5.	தினிச் செலவு	7	11	11
6.	மோட்டார்கார் வாடகை பெட்ரோல் செலவு	29	14	0
7.	கூலி முதல் சில்லறைச் செலவு	17	10	9
8.	சாப்பாட்டுச் செலவு	202	14	3
	ஆக மொத்தம் செலவு	570	14	10

வரவு செலவு நேர்

29—11—36.
திருச்செங்கோடு,

காரியதரிசி, டி. ஏ. கைலாசம்.
பொக்கிஷதார், ஸ்ரீதர சுவாமிகள்.

ஷ. பி. விவரமான கணக்கை பார்வையிட விரும்புவோர் ஸ்ரீதர சுவாமிகள் ஆனந்தாசிரமத்தில் பார்க்கலாம்.

மனைவியை முத்தமிட்டதற்கு இரட்டிப்பு அபராதம்

அட்லாண்டிக் நகரில் கடற்கரையில் காதலர்கள் ஒருவரையொருவர் முத்தமிடக் கூடாதெனத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. சென்ற மாதம் இவ்விதம் குற்றம் செய்ததற்காக மேயரால் 20 பேருக்கு 2 பவுன் அபராதம் விதிக்கப்பட்டது. அதில் ஒருவர் தம் மனைவியைத் தாம் முத்தமிட்டதாக வாதாடினர். பொது இடங்களில் தமது மனைவியை முத்தமிடக் கூடா தென்பது மற்றவர்களைக் காட்டிலும் கணவன்மார்களுக்கு அதிகம் தெரிந்திருக்க வேண்டுமெனக் கூறி மேயர் அவருக்கு இரட்டிப்பு அபராதம் விதித்தார்.

மலேரியாவினால் இந்தியாவுக்கு ரூ. 33,00,00,000 நஷ்டம்

இந்தியா விலேற்படும் மலேரியா ஜுரத்தைத் தடுப்பதற்கு வருடா வருடம் இந்திய கவர்மெண்டார் ரூ 33, 00, 00, 000 செலவழிக்கிறார்களென அரசாங்கசபை அங்கத்தினரான டாக்டர் என். என். சாக்ஸி கூறுகிறார். இவ்வித ஏராளமான நஷ்டத்தைத் தடுக்கும் பொருட்டு வைத்திய நிபுணர்கள் அடங்கிய ஒருகமிட்டியை நியமனஞ் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். அக்கமிட்டியார் குறைந்த விலையில் அதிக குணமுள்ள மருந்துகளைத் தயார் செய்வார்களாம்.

எகிப்து நீலச் சட்டையினர் இயக்கம் வலுக்கிறது

அன்னிய நாட்டினர் பீதி

எகிப்து நீலச் சட்டையினர் இயக்கம் வலுத்து வருவது எகிப்திலுள்ள அன்னிய நாட்டினர்க்கு பீதியை அளித்து வருகிறது. ஆரம்பத்தில் வாப்து கட்சியின் வாலிப படையின் ஒரு பகுதியாயிருந்த நீலச் சட்டையினர் இயக்கம், இப்பொழுது மிகவும் வலுத்து விட்டது. சென்ற ஒரு வருஷத்திற்குள், அவ்வியக்கம் 20,000 க்கு அதிகரித்து விட்டது. மேலும், அவ்வியக்கத் தலைவரின், செலவ நிலைமைக்குத் தக்கபடி அவ்வியக்கத்தினர் ஏற்றிச் செல்லும் ஆயுதங்களுமிருக்கின்றன. பெரும்பாலானவர்கள் கத்திகளாவது, பெரிய பட்டாக் கத்திகளாவது வைத்துக் கொண்டிருக்கின்றனர். வாப்து நிர்வாகக் கமிட்டியார் (எகிப்து சர்க்கார்) நீலச் சட்டையினரை உத்தியோக தோரணையில் அங்கீகாரம் செய்திருப்பதே அன்னிய நாட்டினர்க்கு பீதியை அளித்துள்ளது. எகிப்து பிரதம மந்திரி ஐரோப்பாவிலிருந்து திரும்பிய பொழுது நீலச் சட்டையினர் எகிப்தின் பல பாகங்களிலிருந்தும் அலக்ஸாண்டிரியாவிற்கும், கெய்ரோவிற்கும் போலீசாருக்கு உதவியாக வரவழைக்கப்பட்டனர். இவ்விதம் அவர்கள் போலீசாருக்கு சமமானவராகக் கருதப்பட்டு வருகின்றனர்.

19 தீவுகள் கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன

ஆர்க்டிக் கடலிலுள்ள கார்டன் ஷெல்டு அர்ச்சிபீலகோவைச் சூழ்ந்த பிராந்தியங்களிலுள்ள 19 தீவுகளை கதாவ் என்ற சோவியத்காரர் கண்டு பிடித்திருக்கிறார். இது வடகடல் வழியாகக் கப்பல போக்குவரத்து நடத்த மிகவும் சாதகமாக இருக்கு மெனக் கருதுகிறார்கள். சோவியத் அதிகாரிகளுக்கு அதிக காலமாக வடகடலில் வழி கண்டு பிடிக்க ஆசை இருந்து வந்தது. அவ்வாவல் இன்று கை கூடியிருக்கிறது.

உலகின் அழகிய நகரங்கள்

உலக யாத்திரை செய்பவர்களுக்கு அனுகூலமா யிருப்பதற்காக, ஆக்ஸ்போர்டு யூனிவர்சிடி கல்லூரி மாஸ்டர் சர். மைக்கேல் சாட்லர், உலகின் 20 மிக அழகிய நகரங்களைக் குறிப்பிட்டுள்ளார். அவைகள் பின் வருமாறு:-

அமெரிக்கா : க்யூபெக்
இத்தாலி : ரோம், வெனிஸ், பிளாரென்ஸ்
பிரான்ஸ் : பாரிஸ், ஆங்குலீம், டிஜான்
ஸ்வீடன் : கோதன்பரோ, ஸ்டாக்ஹோம்
கிரீஸ் : ஏதென்ஸ்
ஜெர்மனி : நியூரம்பெர்க்
ஆஸ்திரியா : வியென்னா
ஹாலந்து : ஹேக்
ஹங்கேரி : புடாபெஸ்ட்
துருக்கி : கான்ஸ்டாண்டிநோபிள்
இந்தியா : காசி, ஆக்ரா
பிரிட்டன் : பாத், ஆக்ஸ்போர்டு, எடின்பரோ.

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN, AT THE JUSTICE PRINTING WORKS, 14, MOUNT ROAD, MADRAS. EDITOR ; PANDIT S. MUTHUSWAMI PILLAI.

விலை அரை அணு — 8 பக்கங்கள் — மலாய் நாட்டில் 5 சதம் — Regd. No. M. 32

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா
முன் பணம்

உள்நாடு	
1 மாதம்	0 6 0
3 மாதம்	1 0 0
6 மாதம்	1 14 0
1 வருடம்	3 10 0
சென்னைக்கு	
1 மாதம்	0 4 0
3 மாதம்	0 10 0
6 மாதம்	1 4 0
1 வருடம்	2 6 0

விடுதலை

VIDUTHALAI

(வாரம் இருமுறை வெளிவரும்)

ஆசிரியர்: பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா.
முன் பணம்

வெளிநாடு	
1 மாதம்	0 10 0
3 மாதம்	1 14 0
6 மாதம்	3 12 0
1 வருடம்	7 4 0

சர்க்கார், முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டுகளுக்கு:
உள்நாடே: வருடம் ரூ. 7 8 0
சென்னை: " ரூ. 4 8 0

மலர்-2] சென்னை: (9-12-1936) தாதுவருஷ கார்த்திகைமீ 24உ புதன்கிழமை [இதழ்-54

அந்தோ! பகற் கொள்ளை! ஜாக்கிரதை!! ஜாக்கிரதை!!!

சத்தியமூர்த்தி பணக்காரரானது எப்படி?

ஆரணி குப்புசாமி முதலியார் என்ன வர்த்தகம் செய்தார்? பொருள் தேடினர்?

போட்ட கொள்ளை போதாதென்று மேலும் கொள்ளையா?

படேல் நிதி எதற்கு? பார்ப்பனப் பூசைக்குத்தானே!!

தென்னாட்டு மக்களே! ஏமாறுதீர்கள்!!

நமது பார்ப்பனர்கள் தோழர் பட்டேல் அவர்களை கூடிய சீக்கிரம் தமிழ் நாட்டுக்கு அழைத்து வர ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்.

எப்படியாவது பணம் சம்பாதித்துத் தீரவேண்டும் என்பதும் அதை செலவு செய்து எப்படியாவது பார்ப்பனர்களை சட்ட சபைக்கு வரும்படி செய்து பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்தை தடுத்து ஒழித்து பழயபடி "சூத்திரன்" ஆக்கி, பார்ப்பன ஆட்சியை நிலை நிறுத்த வேண்டும் என்பதுமே நமது பார்ப்பனர்களுக்கு முக்கிய தவமாக ஆகிவிட்டது.

பார்ப்பனரல்லாதார்களில் யாரையாவது காங்கரசில் சேர்த்து காங்கரஸ் மூலம் எந்த தேர்தலுக்கு நிறுத்துவதானாலும், காங்கரசுக்கு முதலில் இவ்வளவு என்று பணம் கொடுத்துவிட்டு தங்களது செலவும் தாங்களே போட்டுக்கொண்டு காங்கரசால் நிறுத்தப்படும் பார்ப்பனர்களுக்கு தேர்தல் செலவுக்கும் பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்கப் படுகிறது.

பார்ப்பனர் யாராவது தேர்தலில் நிறுத்தப் படுவதாய் இருந்தால் அந்தப் பார்ப்பனருக்கு இந்த நிபந்தனைகள் ஒன்றும் கிடையாது. அவருடைய தேர்தல் செலவுக்கு ஒதுக்கி வைத்த மற்றவர்களுடைய பணத்தில்--கொடுக்கப்பட்ட பணத்தில் மீதி செய்து தனித்த முறையில் அந்த அபேட்சக பார்ப்பனர் சொத்து சேர்த்துக் கொள்ளவும் முடிகிறது.

மற்றும் பல இடங்களில் தேர்தலுக்கு நிறுத்தி வைப்பதற்கென்று நிற்பவர்களிடம் காங்கரஸ் விதிப்படி வாங்கும் பணம் தவிர அதிகப்படியாக தயவு பயன் படுத்த என்றும், தனிப்பட்டவர்கள் நன்மைக்காக என்றும் பணம் வசூலித்துக் கொள்ளப் படுகிறது. இதற்கு ஆதாரம் வேண்டுமானால், "காங்கரஸ் தொண்டில்" இறங்கி ஜில்லா பிரமுகர்களாகவும் ஜில்லா தலைவர், காரியதரிசிகளாகவும் ஆன அநேகம் பேர்களுக்கு "காங்கரஸ் சேவை" யின் பயனாய் ஏராளமாகப் பணம் சேர்ந்திருப்பதைப் பார்க்கலாம்.

தோழர் சத்தியமூர்த்தி சாஸ்திரியார் அவர்கள் நிலையையே சற்று யோசிப்போம். அவர் வக்கீலாக இருந்த 16 வருஷத்தில் எத்தனை வழக்குகளுக்கு போயிருக்கக்கூடும்? இதற்கு எத்தனை ரூபாய் பீசு வரும்படி வந்திருக்கும்? பீசு வரும்படிக்கு எத்தனை ரூபாய் வருமானவரி கொடுத்திருக்கக் கூடும்? இன்று அவருக்கு சொத்து எவ்வளவு இருக்கும்? அவரது ௨-வது வகுப்பு பிரயாணத்துக்கு எந்த வகையில் பண வருவாய்? என்பவைகளை வடிகட்டிப் பார்த்தால் காங்கரசு பக்தர்களும் அவர்களது பண நிலை எப்படி சேர்ந்தது என்பதும் நன்றாய் விளங்கும்.

மற்றும் தெரிய வேண்டுமானால் மற்ற ஜில்லாக்களையும் எடுத்துக் கொள்ளுவோம். தோழர் குப்புசாமி முதலியார் காங்கரசுக்கு வரும் போது அவரது நிலை என்ன? அதன் பிறகு அவர் என்ன வியாபாரம் செய்தார்? இப்போது அவருக்கு இருக்கும் பண நிலை எவ்வளவு? இது எப்படிச் சேர்ந்தது? இதற்கு ஆதாரமோ கணக்கு வழக்கோ உண்டா? என்பவைகளை மேல்வாரியாகக் கவனித்தாலும் காங்கரஸ் பக்தர்களும் பண நிலையும் என்ன என்ற விபரம் நன்றாய் விளங்கும். இன்னும் எத்தனை ஜில்லாக்களை வெளிப்படுத்த வேண்டுமானாலும் தயாராய் இருக்கிறோம். ஆனால் வாசகர்கள் மூளைக்கு விருந்தளிக்க வேண்டும் என்பதற்கு ஆகவே சில வற்றை அவர்களையே சிந்தித்துப் பார்க்கும்படி விட்டு விடுகிறோம்.

இந்த மகா உத்தமர்கள்மூலம் "தேசியப் பணியாற்றவும்" "பாரத மாதாவின் விலங்கை உடைத்தெறியவும்" என்னும் பித்தலாட்டத்தின் பேரால் தென்னாட்டில் இன்னமும் லக்ஷக்கணக்காக பணம் வசூலித்து கொடுத்து விட்டுப்போக பட்டேல் வருகிறார் என்றால் அவரை வரவேற்பதா பஹிஷ்கரிப்பதா என்பதை பகுத்தறிவுடனும் சுயமரியாதையுடனும் யோசித்துப் பார்க்கும் படி தமிழ் மக்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

எங்காவது பார்ப்பனன் சத்திரங்கட்டி அன்னதானம் செய்திருப்பதை யாராவது பார்த்திருக்கிறோமா? பார்ப்பான் கோவிலோ, குளமோ, மண்டபமோ, சாவடியோ கட்டி பொது ஜனங்களுக்கு விட்டதாக யாராவது பார்த்திருக்கிறோமா? எங்காவது பார்ப்பான் பள்ளிக்கூடம் கட்டியோ, பள்ளிப் பிள்ளைகளுக்கு உதவி செய்தோ பொதுமக்களை படிப்பித்திருப்பதை யாராவது பார்த்திருக்கிறோமா? வேண்டுமானால் பார்ப்பனர்கள் நன்மைக்கு ஆக மாத்திரம் என்று எங்காவது — மற்றவர்களிடம் மிக்க பொருள்பறித்து ஏற்பாடு செய்து தன் பெயரை எழுதிக் கொள்ளுவான். தன் பெயரை விளம்பரப்படுத்திக் கொள்ளுவான்.

உதாரணமாக தோழர்கள் வி. கிருஷ்ணசாமி அய்யர், சர். பி. எஸ். சிவசாமி அய்யர் முதலிய படித்த "தலைவர்" களான (பார்ப்பனரல்லாதாராலேயே பெரும் பொருள் சம்பாதித்த) கனவான்கள் செய்த தருமங்கள் என்பவைகள் கூட பார்ப்பனர்கள் என்பவர்களுக்கு மாத்திரமே பயன்படக்கூடியதாயும், பார்ப்பனர் என்பவர்களுக்கு மாத்திரமே உத்தியோகம் இருக்கக் கூடியதாகவும் இருக்கிறது என்றால் மற்ற பார்ப்பனர்களைப்பற்றி யோசிக்க நேரத்தை செலவழிக்க வேண்டுமா என்று கேட்கின்றோம்.

இப்படிப்பட்ட சமூகத்தார் நடத்தும் காங்கரசுக்கு அதாவது அவர்களது ஆதிக்கத்தை உயர்த்தி மற்றவர்கள் ஆதிக்கத்துக்கு உலை வைக்கும் முயற்சி ஸ்தாபனத்துக்குப் பார்ப்பனரல்லாதார் பணம் உதவுவதென்றால் இதில் மானமோ, அறிவோ எப்படி இருக்க முடியும் என்று தான் கேட்கின்றோம்.

தோழர் பட்டேல் பகற் கொள்ளை அடிப்பதற்கே வருகிறார். கொள்ளை அடித்த பொருளை பார்ப்பனருக்கு அழவும், பார்ப்பன தாசர்கள் சொத்து சேர்க்கவும் பயன் படுத்த உதவவே வருகிறார்.

தோழர்களே! பட்டேல், ஜாக்கிரதை!!

திருப்பத்தூர் தாலுக்கா

ஜஸ்டிஸ் மகாநாடு

(காரியதரிசி எழுதுகிறார்)

திருப்பத்தூர், டிச, 5

2-12-36-ந் தேதி மாலை 5 மணிக்கு திருப்பத்தூர் பிராமணரல்லாத சங்க கட்டடத்தில் கூடிய கூட்டத்தில் 1937 ஜனவரி 23, 24-ந் தேதிகளில் ஜஸ்டிஸ் மகாநாடும், பிராமணரல்லாத வாலிபர்மகாநாடும் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

ஷை மகாநாட்டுக்கு கனம் மந்திரிகள் மூவரையும், ஆக்டிங் கவர்னர்களான சர். உஸ்மான் சாயபு பகதூர் அவர்களையும், சர். கே. வி. ரெட்டி நாயுடுகாரு அவர்களையும் அழைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டதுடன், தோழர்களான ஈ. வெ. ரா. அவர்களையும், வி. டி. நாயகம், வி. வி. ராமசாமி, சௌந்தரபாண்டியன், டாக்டர் நடேச முதலியார், எம். பி. ரங்கசாமி நாட்டார், சௌகார் வி. அப்துல் ஹமீம் சாயபு பகதூர், கே. வி. அழகிரிசாமி, அ. பொன்னம்பலனார், கி. ஆ. பெ. விஸ்வநாதம், மரகதவல்லி, முருகப்பா, இந்திராணி பாலசுப்பிரமணியம், தண்டபாணி பிள்ளை முதலியவர்களையும் அழைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. முக்கிய தலைவர்களுக்கு தபால் அனுப்பியிருக்கிறது. அவர்களிடமிருந்து பதில் தெரிந்தவுடன், இடம் முதலானது பின் தெரிவிக்கப்படும்.

நாருடை அணிக!

ஜெர்மனியின் புதிய உத்திரவு

கடைசியில் வந்த நாஜீ உத்திரவுப் பிரகாரம் ஜெர்மானியர் யாவரும் 16 சத விதம் மரநார் சேர்த்து செய்யப்பட்ட துணிகளாலமைந்த 'கிக்கர்' போன்ற உள்ளே அணியத்தக்க உடைகளை அணியவேண்டும். பிறதேசங்களிலிருந்து வரும் பஞ்சு முதலிய சாமான்களை எதிர்பாராது தனித்தியங்கும் தன்மையில் தாமிருக்க வேண்டுமென்பதற்காகவே இவ்வுத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக 10 ஆலைகள் வேலையில் ஈடுபட்டு செயற்கை மர நார்களைச் செய்து வருகின்றன. இந் - நார்களுக்கு அடிப்படை மரமே.

உலகிலேயே பெரிய இரகசிய சங்கம்

1,550 வருஷங்களாக வேலை செய்து வருகிறது

ஹங் சங்கம் என்பது சீனாவிலுள்ளது. அது ஏற்படுத்தப்பட்டு 1,547 வருஷங்களாகின்றன. இச்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் உலக முழுவதிலும் பரவி இருக்கிறார்கள். உடை உடுத்துவதில் அவர்கள் கையாளும் சில நுட்பமான முறைகளாலும், சில வார்த்தைகளை உபயோகப் படுத்த படுவதின் மூலமும், சாமான்கள் கொடுத்து வாங்கும் வகைகளிலிருந்தும் அவர்கள் ஒருவரை ஒருவர் தப்பின்றித் தெரிந்து கொள்கிறார்கள். இது இப்பொழுது இருக்கும் இரகசிய சங்கங்களுள் மிகப் பெரிதெனச் சொல்லப் படுகிறது. சுமார் 30 மிலியன் அமெரிக்கர்கள் இவ்விரகசிய சங்கத்து அங்கத்தினர்களாகவிருக்கின்றனர்.

ஒரு ஜோசியம்

அமெரிக்க காதலியையே மணப்பார்

ஆரணி ஜோதிடர் திரு. எம். ஞானம் கூறும் விபரம்

ஆரணி, டிச, 5.

உலக மென்றும் இப்போது விசேஷமாக பிரஸ்தாபிக்கப் படும் எட்வர்டு சக்ரவர்த்தியுடைய விவாஹ விஷயமானது எல்லோர் மனதையும் கவர்ந்து நிற்கின்றது. மன்னர் தான் காதலித்த பெண்ணை, விவாஹம் செய்து கொள்வாரா என்றும், பட்டத்தை விரும்புவாரா என்றும் பலவாறு எங்கும் ஜனங்களிடையே பேசப் பட்டு வருகிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் மட்டுமல்லாமல் ஊரென்றும் இந்த பேச்சு பேசப்படுகிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் மட்டு மல்லாமல் உலகெங்கும் இந்த விஷயம் எப்படி முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகையால் இந்த நெருக்கடியான நிலைமையில் விஷயம் எப்படி முடிவடையும் என்று பலரும் எதிர்பார்ப்பது சகஜமே. நான் எட்வர்டு சக்ரவர்த்தி ஜாதகத்தை கவனித்து கணித்துபார்த்ததில் அவர்(மன்னர்) அமெரிக்க மாது மிஸஸ் சிம்ஸனை கட்டாயம் மணப்பார் என்று அறியக் கிடக்கின்றது. அத்துடன் அவரே பட்டத்தை ஏற்றுக் கொண்டு நமது சக்ரவர்த்தியாக விளங்குவாரென அறிவிக்க சந்தோஷப்படுகிறேன். இது தான் ஜோசிய சாஸ்திரத்தின் முடிவு.

பொங்கல்! பொங்கல்!!

அசல் பட்டுப் புடவை

அழகிய சிறு ஜரிகைக் கரை, அசல் பட்டு. சிகப்பு, அரக்கு புளூ, பச்சை, ஸ்கை முதலிய கலர்களில் கிடைக்கும்.

12-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 5-12—0
16-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 7—8—0
18-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 8—8—0
5-முழம் x 44" அங்க வஸ்திரம் 1-க்கு ரூ. 3—8—0

வெண்பட்டு அங்க வஸ்திரம்

5 முழம் x 44" அழகிய கரைகள் சலவைக்கு சேர்ந்தியானது.
விலை ரூ. 1—12—0-தான்.

☞ இந்த விலைகள் 15—1—37 பொங்கல் வரை தான்.
ஞாபகத்தில் வையுங்கள். உடனே ஆர்டரை அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
(Proprietors Sundarams Ltd.,)
சில்க் பஜார், காசி.

சென்னை மாகாண தாழ்த்தப்பட்டார் கட்சி

பிரசித்தப் பத்திரிகை

சென்னை மாகாண தாழ்த்தப்பட்டார் கட்சியானது தனது வகுப்பினருக்குள் ஒற்றுமையை விருத்தி செய்து, தங்களது பொது நன்மைகளைப் பாதுகாத்து சுயாதீனத்தை நிலை நிறுத்துவதுடன், நமது நாட்டின் அபிவிருத்திக்காகவும், மேற்படி வகுப்பாரது முன்னேற்றத்திற்காகவும் உழைக்கும் ஏனைய கட்சியாருடன் ஒத்துழைக்க வேண்டுமென்பது இக் கட்சியினது முக்கிய நோக்கமென்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது.

மேற்குறித்த நோக்கத்துடன் வருகிற சென்னை சட்டசபை தேர்தலில் தாழ்த்தப்பட்டார் வகுப்பினர்களுக்கென்று ஏற்படுத்தியிருக்கும் பிரத்தியேக ஸ்தானங்களுக்கு இக் கட்சியின் ஆதரவில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்களில் வெற்றியடைந்த பிரதிநிதிகள் மேற்படி வகுப்பாரின் நன்மைகளுக்கும், முன்னேற்றத்திற்கும் இடையூறில்லாத மட்டில் தேசாபிவிருத்தியை முன்னிட்டு தொண்டு புரிந்து தங்கள் வகுப்பாரினது விருப்பங்களில் கலந்து கொண்டு கீழ் குறித்த நோக்கங்களில் சிறப்பாக தங்கள் முழு கவனத்தையும் செலுத்துவார்கள்.

(1) புதிய அரசியல் திட்டம் திருப்தியற்றதாயும், குறைவானதாயும் இருப்பினும் மேற்படி திட்டத்திலிருந்து பொதுவாக நம் நாட்டினருக்கும் சிறப்பாக நம் வகுப்பினருக்கும் எவ்வளவு நன்மை பெற முடியுமோ அவ்வளவையும் அடைய முயல வேண்டும்.

(2) நம் நாட்டின் பல்வேறு இனத்தார்களுக்குள் சிநேக பாவத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

(3) குடியரசு நாடு அத்தன்மை நம் நாடு அடைவதற்குச் சமாதான முறையிலும், ஒழுங்கான முறையிலும் குடியாட்சி ஸ்தாபனங்களை நடத்திவர வேண்டும்.

(4) நம் வகுப்பினரது வறுமை நீங்கும் பொருட்டு,

(அ) வீடு கட்ட மனைகளும்,

(ஆ) பயிரிடத் தகுதியான நிலங்களும்,

(இ) மேய்ச்சல் நிலங்களும், நம்மவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

நம் மக்களின் கொடிய வறுமையையும், பசிப் பிணியையும், ஆடையின்மையையும் ஒழித்து தரிசு நிலங்களும், வியவசாய சகாய கடன்களும் அன்னவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

(5) விவசாயத் தொழிலாளர்களுக்கும், இதர தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க நாடு உற்பத்தி செய்தல், இன்னும் பலவிதமான கஷ்ட நிவாரண பரிகாரங்களைத் தேட முயலவேண்டும்.

(6) நம் வகுப்பினருக்கு அத்யாவசியமான கிராம சீர்திருத்த வேலையில் தங்கள் முழு கவனத்தைச் செலுத்தி கவர்ன்மெண்டில் மேற்படி வேலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் நம்மவர்கள் குடியிருக்கும் இடங்களில் சுகாதாரத்தை அபிவிருத்தி செய்யவும், கிணறுகள் வெட்டவும், போக்குவரவு சௌகரியத்திற்காக ரஸ்தாக்கள் போடவும் வேண்டிய போதுமான பணம் செலவிட காருண்ய கவர்ன்மெண்டாரை வற்புறுத்த வேண்டும்.

(7) நம் இனத்துப் பிள்ளைகள் கல்வியில் தேர்ச்சியடைய கீழ்க்குறித்த வசதிகள் ஏற்பாடு செய்ய வேண்டும்:—

(அ) இலவசக் கல்வி.

(ஆ) இலவசப் பகல் போஜனம்.

(இ) கல்விக்காக வேண்டி—வேலை செய்யும் பிள்ளைகளை வேலையிலிருந்தும் நிறுத்தி பள்ளிக்கனுப்புவதால் மேற்படி பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு ஏற்படும் வருமானக் குறைவிற்காக அன்னவருக்கு கவர்ன்மெண்டார் பண உதவி செய்ய ஏற்பாடு செய்தல்.

(ஈ) சகல வித கைத் தொழில்களில் நம் மக்கள் தேர்ச்சியடையப் பிரத்தியேக ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

(உ) சென்னை பாடிஸன் ஹாஸ்டலைப் போல (மாணவர் விடுதிகள்) எல்லா ஜில்லாக்களிலும் ஹாஸ்டல்கள் ஏற்படுத்தி நம் மக்களின் கல்வியை அபிவிருத்தி செய்தல்.

(8) கல்வியில் தேர்ச்சியடைந்த நம் குலத்தின் இளைஞர்கள் உயர்தரக் கல்வி பெற இந்தியாவின் மற்ற பாகங்களுக்கும், வெளிப் பிரதேசங்களுக்கும் செல்ல பிரத்தியேக உபகார சம்பளம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

(9) கவர்ன்மெண்ட் இலாக்காக்களில் அதிகமாக நம்மவர்களுக்கு உத்தியோகம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

(10) சட்ட சபைகளிலும், இதர பொது ஸ்தாபனங்களிலும் நமது வகுப்பினருக்கு ஜனத் தொகை கணக்கின்படி பிரதிநிதித்வம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

இவ்வண்ணம் முக்கியமாய் நம்மினர் அபிவிருத்தியுடன் பொது ஜன நன்மையை அபிவிருத்தி செய்வது மேற்படி கட்சியினது நோக்கம். மேற்படி நன்மையை விருத்தி செய்ய முயற்சித்து வரும் ஒவ்வொரு கட்சியினரோடும் ஒத்துழைப்பது எம்முடைய கொள்கை.

தலைவர்:—திவான்பகதூர் ஆர். சீனிவாசன் எம்.எல்.ஸி.

உப தலைவர்கள்:—ராவ் பகதூர் எம். ஸி. ராஜா, எம்.எல்.ஏ., ராவ் சாஹிப் என். சிவராஜ், பி.ஏ.,பி.எல்., எம்.எல்.ஸி.

கூட்டுக் காரியதரிசிகள்:—பி. கே. புஷ்பராஜ், பி. எஸ்.ஸி., பி.எல்., அட்வகேட், ஜே. சிவஷண்முகம் பிள்ளை, எம். ஏ., சென்னை நகர பரிபாலன சபை அங்கத்தினர்.

பொக்கிஷதாரி:—ராவ்சாஹிப் எல். ஸி. குருசாமி, மாஜி - எம்.எல்.ஸி.

திரு. வி. ஜி. வாசுதேவ பிள்ளை, எம்.ஆர். ஏ.எஸ்., எம்.எல்.ஸி.

சர்வாதிகாரி ஸ்டாலின்

மாஜி அரசகுமாரி மீது காதல்

ஐரோப்பியத் தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராக அழகிய பெண்களிடம் கட்டுப் கொண்டு வருகின்றனர் என்று, 'பிரிட்டிஷ் வீக்லி' ஒன்று எழுதுகிறது.

உதாரணமாக ருமேனியா தேசத்தின் அரசனை இரண்டாவது கரோலுக்கும், மாடம் லூப்சேயிற்கும் நடைபெற்று வந்த நட்பும், இத்தாலிய சர்வாதிகாரியான பெனிடோ முசோலினிக்கும், அவரது வாழ்க்கை சரிதத்தைத் தொகுத்த மார்கரிதாவுக்கும் இருந்து வந்த நட்பும் உலகமறிந்ததே. அது போன்றே மாஜி அரசகுமாரியான அன்னு விளாடின் ரோவாகிற்கும், ருஷ்ய சர்வாதிகாரியான ஸ்டாலினுக்கும் நட்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக மாஸ்கோவில் பேசப்பட்டு வருகிறது.

ராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தல்

ஜஸ்டிஸ் கட்சிப் பிரசாரம்

திரு. வெங்கடாசலம் செட்டியாருக்கு ஆதரவு

(ஒரு நிருபர்)

கானாடு காத்தான், டிச, 6

நேற்றுக் கானாடு காத்தான் மார்ட்டா ஊருணிக்கரையில் சுமார் 1000 பேர்கள் கொண்ட ஒரு கூட்டத்தில் தேவகோட்டை திரு. சேதுச் செட்டியார் தலைமை வகித்தார். கூட்டத்தில் ஜஸ்டிஸ் கட்சி தொண்டர்கள், திருவாளர்கள். அ. பொன்னம்பலம், வி. என். அண்ணாதுரை எம். ஏ., காஞ்சி. கலியாணசுந்தரம் ஆகியவர்கள் மிக உருக்கமாக காங்கிரஸ்காரர்கள் செய்து வரும் அட்டூழியங்களைப் பற்றிப் பேசினர். மாலை சுமார் 5 மணிக்கு ஆரம்பித்த கூட்டமானது இரவு 9-30 மணிக்கு முடிந்தது. கூட்டத்தில் நேமத்தான்பட்டி திரு. சிதம்பரம் செட்டியார் சில கேள்விகள் கேட்பதாக கூறி திரு. அ. பொன்னம்பலம் பேசும் பேச்சை இடைமறித்தார். அவர் பதில் சொல்லு முன்னர் கேள்வி கேட்டவர் இருந்த இடம் தெரியாமல் ஓடி விட்டார்.

நடவடிக்கை விவரங்கள்

முதன் முதலில் தலைவர், வெங்கடாசலம் செட்டியாருக்கு ஓட்டுப் போட வேண்டும் என்று தனது முகவுரையில் கூறி திரு. பொன்னம்பலனாரை பேசும்படிக் கூறினர். திரு. பொன்னம்பலனார் பேசும் போது கூறியதாவது:—உங்களூரில் இருக்கும் அபேட்சகர் இருவரையும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். யாருக்கு ஸ்தல ஸ்தாபனங்களில் அதிக பழக்கம் இருக்கும் என்பதும் உங்களுக்குத் தெரியும். காங்கிரஸின் சார்பாக நிற்கும் அபேட்சகர் சமீபத்தில் தான் காங்கிரஸில் சேர்ந்தார். அவருக்கு ஸ்தல ஸ்தாபனங்களில் யாதொரு பழக்கமும் கிடையாது. ஆதலால் வெங்கடாசலஞ் செட்டியாருக்கு உங்கள் ஓட்டுக்களை கொடுக்க வேண்டும். காங்கிரஸ்காரர்கள் சிலர் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் தேசத்துரோகிகள் என்று கூறுகின்றனர். நாங்கள் தேசத்துரோகிகள் — காண்ட்ராக்ட், லஞ்சம் முதலியவைகளால் ஜீவனம் செய்பவர்கள் யார்? ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களா? சாமி வெங்கடாசலஞ் செட்டியார் மட்டப்பாறை வெங்கட்ராமய்யர், முதலிய காங்கிரஸ்காரர்கள் எதன் மூலம் ஜீவித்து வருகின்றனர். இன்னும் திருநெல்வேலி, திருச்சி முதலிய இடங்களில் காங்கிரஸ்காரர்கள் செய்த துரோகம் எல்லோரும் கண்டறிந்ததே. ஆதலால் எல்லோரும் வெங்கடாசலஞ் செட்டியாரவர்களுக்கே ஓட்டுச்செய்யுமாறு வேண்டுகின்றேன்.

இரண்டாவதாக, திரு. அண்ணாதுரை எம். ஏ. அவர்கள் பேசினார்:—அவர் குண்டூர், மேல்கோதாவரி முதலிய ஜில்லாக்களில் நடந்த காங்கிரஸ்காரர்களின் யோக்கியதையைக் குறிப்பிட்டார் இன்னும் சத்தியமூர்த்தி தான் நடத்திய காட்சி சாலையில் பாவநாசனை ஏமாற்றிய கதையையும், இலஞ்ச, ஜய ராஜ்யலக்ஷ்மி மோசடியையும், குறிப்பிட்டார்.

மூன்றாவதாக காஞ்சி கலியாணசுந்தரம் பேசும்போது, ஏழைகளை [illegible] படும் காங்கிரஸ் அசெம்பிளி மெம்பர்கள், சட்டசபையில் சென்று என்ன செய்தார்கள்? சர்க்கார் வரி, கார்டுவிலை, புகையிலை வரி இவைகள் எல்லாம் சரிப்படுத்தி வைப்பதாகக் கூறினார்களே அதன் முடிவென்ன என்பதைக் கூறித் தனது பிரசங்கத்தை முடித்துக் கொண்டார்.

தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

ரூ. 1500 போயிற்று!

வட்டி வியாபாரம் செய்யும் வியாபாரி ஏமாந்தார்

ரோல்டு கோல்டு செயினை தங்க செயின் என்று நம்பினார்

(ஒரு நிருபர்)

ஆரணி, டிச, 6

ஆரணியில் சொக்க லேவாதேவி செய்யும் ஒரு செட்டியார் சுமார் 1500 ரூபாய் ஒருவரால் ஏமாற்றப்பட்டதாகவும் அந்த தொகையை சந்தடியின்றி கொடுத்துவிட்டு, மாமிசத்தை பறிகொடுத்த ஒரு பாப்பாத்தி போல் விழிக்கிறார். ஆரணியில் மேலே சொல்லப்பட்ட ஒரு செட்டியார் சொக்க லேவாதேவி செய்வதில் நிபுணர். ஒரு பைசாவையும், ஒருவருக்கும் வட்டியில் தள்ளி கொடுக்க மாட்டார். கருணை என்பதை மருந்துக்கும் கூட பார்க்க முடியாது. அப்படிப்பட்டவர் ஏமாந்து 1500 ரூபாய் பறி கொடுத்தார் என்றால் யார் தான் ஆச்சரியப்பட மாட்டார்கள். யாரோ ஒருவர் அசல் தங்க செயினை செட்டியாருக்கு காண்பித்து அதன் பேரில் சுமார் 700 கடன் கேட்டாராம். வட்டிக்கு பணம் கொடுக்கும் செட்டியார் உடனே அந்த நகையை அவர் சம்மந்தி ஒரு ஷாப்பு வியாபாரிக்கு நகையின் சொந்தக்காரரையே அவர் கடைக்கு அனுப்பி மதிப்புப் பார்த்து, வரும்படி சொல்லி அனுப்பினாராம். மதிப்புப் பார்த்த சம்மந்தி செட்டியார் இவ்வளவு வராகனிடை இருக்கிறது. இவ்வளவு பெறும். அடமானம் வைத்துக் கொண்டு, மேலே சொன்ன 700 ரூபாய் கொடுக்கலாம் என்று சீட்டு கொடுத்து அனுப்பினாராம். சீட்டுடன் அந்த ஆசாமி சொக்க லேவாதேவி செய்யும் செட்டியாரிடம் கொண்டுபோய் ஓர் நகையை அதாவது ரோல்டு கோல்டு செயினை கொடுத்துவிட்டு, மடியில் அசல் தங்க செயினை (அதாவது ஷாப்பு கடையில் காட்டிய தங்க சங்கிலியை) வைத்துக் கொண்டாராம். சம்மந்தி செட்டியார் மதிப்புக் கொடுத்தது சரி என்று நம்பி, அசல் தங்க செயின் என்பதை கவனியாமல் ரோல்டு கோல்டு செயினை வாங்கிக்கொண்டு ரூபாய் கொடுத்து விட்டாராம். அந்த ஆசாமி, 600 ரூபாய் போதும் என்று கேட்டு அந்த அறு நூறு ரூபாயும் பெற்றுக் கொண்டு அசல் தங்க செயினை எடுத்துக்கொண்டு, சென்று விட்டாராம். மீண்டும் 4 மாதம் பொறுத்து சுமார் 20 தினங்களுக்கு முன்பு அந்த ஆசாமி வந்து தான் வைத்த நகையை திருப்பிக் கொடுக்கும்படி கேட்டாராம். செட்டியார் பெட்டியை திறந்து அந்த ரோல்டு கோல்டு செயினை (அது அசல் தங்க செயின் என்றுதான் நம்பி இருந்தது) அந்த ஆசாமியிடம் கொடுக்கவே அவர் "இது எனது அல்ல. பச்சை கடுதாசியில் வைத்து கொடுத்தேன். நீர் வெள்ளை காகிதத்தில் மடித்து வைத்து இருக்கிறீர். இது என் செயின் அல்ல. இது ரோல்டு கோல்டு செயின் என்று கூப்பாடு போட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு வாருங்கள். உங்கள் சம்பந்தி கொடுத்த சீட்டு என்னிடம் இருக்கிறது. யாரிடம் ஏமாற்றுகிறீர்" என்று கேட்கவே செட்டியார் விழி விழி என்று விழித்து அந்த நகைக் கிரயம் என்ன என்று கேட்டதாகவும் அது 1500 ரூபாய் பெறும், என்று சொன்னதாகவும் அப்பணத்தை உடனே கொடுத்து அவன் காலில் விழுந்து இதை எங்கும் சொல்ல வேண்டாம். மன்னியுங்கள் என்று சொல்லிவிட்டுப் 1500 பணத்தை சந்தடியின்றி கொடுத்து அனுப்பி விட்டாராம் இந்த விஷயம் எப்படியோ வெளிவந்து பல இடங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

25 வருஷங்களுக்குள் சினிமாக்கள் ஒழிந்து விடுமென ஒருவர் ஜோஸ்யம் கூறுகிறார்.

'எவரெஸ்ட்' படை யெழுச்சி

மறு முறையும் ஆரம்பமாகும்

"பிரிட்டன்தான் எவரெஸ்ட் மலையை ஜயிக்க வேண்டும். ஏனெனில் மற்றைய நாடுகள் சந்தர்ப்பம் அளிக்கப்படுமா வென எதிர்பார்க்கின்றன."

—புரொபஸர் பின்ச்.

எவரெஸ்ட் மலையின் உச்சியைக் கண்டு பிடிக்க இதுவரை எவ்வளவோ முயற்சிகளெடுத்தும் பயன் படவில்லை. 1922-ம வருடம் ஒரு கோஷ்டி புறப்பட்டு மலையின் மீது ஏற ஆரம்பித்தது. 27,300 அடிகள் ஏறினார்கள். அக்கோஷ்டிக்கு புரொபஸர் ஜீ. இங்லின் பின்ச தலைவராகச் சென்றார். அவரை 'சண்டே எக்ஸ்பிரஸ்' நிருபர் பேட்டிக் கண்டபோது அவர் சொன்னதாவது:—

"இந்திய அரசாங்கம் ஒப்புக் கொண்டால் அடுத்த வருடம் எவரெஸ்ட் படையெழுச்சியை மறுபடியும் ஆரம்பிக்கலாம். இந்த வருடம் சென்ற கோஷ்டியினர் 33,000 அடி உயரமே போக முடிந்தது. ஆனால் அவர்களைப் பற்றிக் குறை சொல்லுவதில் பிரயோஜனமில்லை. பிரிட்டன் தான் எவரெஸ்ட் மலையை ஜயிக்க வேண்டும் ஏனெனில் மற்றைய நாடுகள் தங்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுமாவென எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றன. அடுத்த வருடம் செல்லும் கோஷ்டிக்கு தலைவராக இருக்கத் தகுதியுள்ளவரும், மலையின்மீது ஏறுவதில் அனுபவம் வாய்ந்தவரும், மலைப் பிரதேசங்களின் சீதோஷ்ண ஸ்திதியைத் தாங்கக்கூடிய தேகநிலை உள்ளவருமே தேர்ந்தெடுக்கப்படுவார்கள். கோஷ்டியினர் பிராண வாயுவை உபயோகித்துக் கொள்ளக் கூடியவர்களாக இருக்கவேண்டும். செயற்கைப் பிராண வாயுவை உபயோகித்துக் கொள்ளாதவரையில் பிரயோஜனப்படாது. இதைப் பற்றி இன்னும் கமிட்டி முடிவுக்கு வரவில்லை. இவ்வருடம ஜெயம் பெறாததற்குக் காரணம் பருவங்கள் தான். கோஷ்டியினர் எதிர் பார்த்ததிற்கு முன்பே பருவக் காற்று அடிக்க ஆரம்பமாகி விட்டது."

அடுத்த வருடம் எவரெஸ்ட் படையெழுச்சி கோஷ்டியினர் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப் படலாம்.

குழந்தையில்லாத பிரிட்டிஷ் மந்திரிகள்

ஹோருக்கும் '0'

பிரிட்டிஷ் மந்திரி சபையிலுள்ள அங்கத்தினர்களின் குடும்ப வாழ்க்கை பின் வரும் ரசமான விஷயத்தை வெளியிடுகிறது:—

ஏற்றுமதி, இறக்குமதி இலாகா மந்திரியைத் தவிர்த்து, அடுத்த படியாக பிரம்மச்சாரியாக இருப்பவர் மால்கம் மெக்டானல்டு. மந்திரி சபை அங்கத்தினர்களுக்கு மொத்தம் 48 குழந்தைகளிருக்கின்றன. அதில் 26 பிள்ளைகள், 22 பெண்கள்.

திரு. பால்டுவினுக்கும், கலோனி மந்திரி ஆர்ம்ஸ்பி கோர்க்கும் தலைக்கு 6 குழந்தைகளிருக்கின்றன. திரு. எலியட், சர். சாமுவேல் ஹோர், சர். தாமஸ் இன்ஸ்கிப், சர். கிங்ஸ்லி வுட், எர்னஸ்ட் பிரௌன், லார்ட் ஸ்டான்ஹோப் முதலியோருக்கு குழந்தைகளே கிடையாது.

சாமிக்கு வரி கொடாததினால் ஜாதிப் பிரஷ்டமா ?

ராமசாமியாபுரம் ஆதிதிராவிடர் அடாத செய்கை

(ஏ. டி. சுப்பையா)

திருநெல்வேலி, டிச, 5

சுயமரியாதை இயக்கமானது காட்டுத் தீபோலப் பரவி வரும் இக் காலத்தில், ராமசாமியாபுரம் ஆதிதிராவிடர்கள் பழையகாலக் கொள்கைகளை விடாது கையாடிக் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என நடப்பது மதியீனமாகவே இருக்கிறது. தாங்கள் கெட்டுப்போவதுமின்றி பிறரையும் துன்புறுத்துவது என்று அவர்கள் கொண்டிருக்கும் செய்கையானது வருந்தத்தக்கதே. எனது நண்பர் திரு. கே. பெருமாள் அவர்கள் ஊருக்குப் போயிருந்த பொழுது மேற்படியூர் ஆதிதிராவிட சகோதரர்கள் சாமிக்கு ஏதோ உற்சவம் செய்யும் பொருட்டு அவர் மனைவியை வரி கேட்டார்கள். அந்த அம்மாள் கொடுக்க முடியாதென மறுக்க, அவர்கள் ஓர் கூட்டம் போட்டு, வரி கொடுக்க மறுத்த அக்குடும்பத்தை சாதியினின்றும் விலக்கி வைத்து விட்டதாகத் தீர்மானம் செய்தனர். மேலும், ஏனைய ஆதிதிராவிடர்கள் அக் குடும்பத்தாரோடு பேசினால் தலைக்கு ரூ. 5 அபராதம் விதிக்கப்படுமெனவும் பேசினார்கள். இவ்விஷயத்தைக் குறித்து அவ்வம்மையும் தனது கணவனுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

இலக்கணப் பிழையிருந்தால் !

தண்டிக்கப்படும்

சிராஜீவோவில் புதிய சட்டம்

ஜூகோஸ்லோவோகியாவிலுள்ள சிராஜீவோ என்ற நகரில், இனி இலக்கணப் பிழையுடன் உச்சரிக்கவோ, எழுதவோ, விளம்பரங்கள் வெளியிடவோ முடியாது. போலீஸ் அதிகாரிகளுக்கு சர்க்கார் பின்வருமாறு உத்திரவிட்டுள்ளனர்.

"இலக்கணப் பிழையுடன் தங்கள் விளம்பரங்களை வெளியிடும் கடைக்காரர்கள், பொதுவிடங்களில் இலக்கணப் பிழையுடன் பேசும் ஆண், பெண்கள், வழிப்போக்கர்களிடம் இலக்கண வரம்பு கடந்து கடுமையாகப் பேசுபவர்கள் முதலியோர்மீது அபராதம் விதிக்கலாம்."

சென்னை அசம்பிளித் தேர்தல்

வட ஆற்காடு ராணிப் பேட்டை தொகுதி

திரு. ஆர். சுப்ரமணியம் அபேட்சை

(ஒரு நிருபர்)

ராணிப்பேட்டை, டிசம். 5

சென்னை அசம்பிளியில் வட ஆற்காடு ஜில்லாவிலிருந்து தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு இரண்டு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவ்விரு ஸ்தானங்களில் ஒன்றிற்கு ராணிப் பேட்டைத் தொகுதியில் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் திரு. ஆர். சுப்பிரமணியம் அபேட்சகராக நிற்பதாகத் தெரிகிறது. இவர் தாழ்த்தப் பட்டோரின் முன்னேற்றத்திற்காக அரும் பாடுபட்டு உழைத்து வந்திருக்கிறார். ஆதலின் சமூக நலங்கருதும் அனைவரும் ஏகோபித்து தங்கள் வாக்குரிமைகளை அன்னவருக்கே கொடுத்து ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பள்ளத்தூர் கூட்டத்தில் காங்கரஸ் காலித்தனம்

"ஜஸ்டிஸ்" பிரசாரக் கூட்டத்தைக் கலைக்க முயற்சி

காகிதப் பந்து, தவளை, பாம்புகள் வீச்சு

இந்தக் கொடுமைகளைக் கேட்பாரில்லையா?

(நமது நிருபர்)

பள்ளத்தூர், டிச. 8

திரு. வெங்கடாசலம் செட்டியாரை ஆதரிப்பதற்காக சென்ற ஞாயிற்றுக்கிழமை, பள்ளத்தூரில் ஜஸ்டிஸ் கட்சிக் கூட்டமொன்று நடைபெற்றது. பண்டிட் திருஞான சம்பந்தம் தலைமை வகித்தார். அது சமயம் "ஜில்லா போர்டு தேர்தலும் வாக்காளர்கள் கடமையும்" என்பது பற்றி திருவாளர்கள், ரங்கநாதம், பொன்னம்பலம், கலியாணசுந்தரம் அண்ணாதுரை முதலியோர் பேசினர். கூட்டத்தில் குழப்பத்தையுண்டு பண்ணிக் கூட்டத்தை நடைபெற வொட்டாமற் செய்ய சில காங்கரஸ் வாதிகள் சில போக்கிரிப் பயல்கள் உதவியைக் கொண்டு பேடித்தனமான முறைகளை யெல்லாம் கைக்கொண்டனர். கூட்டம் நடைபெறுமிடத்திற் கருகாமையில் 'ஜே' கோஷம் போட்டுக் கொண்டு பவனிவந்தனர். காகிதங்களைச் சுருட்டி பேசுபவர்கள் மீதெறிந்தனர். பொது ஜனங்கள் அதன் மீது ஆத்திரங் கொண்டனர். காங்கரஸ் காலாடிகளுக்கு செவி சாய்க்க வேண்டாமென்று பொது ஜனங்களைக் கேட்டுக் கொண்டதின் மீது அமைதி நிலவுறத் தொடங்கியது. காங்கரஸ்காரர்களின் தப்பிலித்தனத்தையும், தங்கள் காரியத்தைச் சாதிக்க வேண்டி அவர்கள் கையாளும் முறைகளையும் ஒரு பிரசாரகர் விளக்கிக் கூறினர். கூட்டத்தினர் பொறுமையுடன் கடைசி வரையில் கேட்டு வந்தனர். கூட்டத்தை எப்படியாகிலும் கலைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் வந்த காங்கரஸ் காலிகள் இது கண்டு மனம் சகிக்க மாட்டாமல் கூச்சல் போடத் தொடங்கினர். பிறகு இறந்து போன பாம்புகளையும், தவளைகளையும் கூட்டத்தில் எறிந்தனர். மக்கள் பீதியுற்றனர். காங்கரஸ்காரரின் இத்தகைய பேடித்தனமான முறைகளைக் கண்டு பொது மக்கள் வெறுப்புற்றனர். தங்கள் ஜம்பம் சாயாதது கண்டு, காங்கரஸ்காரர்கள் கடையைக் கட்டிக் கொண்டு பின் வாங்கினர். பிறகு கூட்டம் இரவு 9 மணி வரையிலும் நடைபெற்றது.

தமிழ்நாடு காங்கரஸ்காரர்கள் மகாநாடு

திரு. யாகூப் ஹாசன் திறப்புரை

ஜஸ்டிஸ் கட்சிக்குப் பாராட்டு

வேலூர், டிச. 6

நேற்று மாலை 38-வது தமிழ்நாடு வருஷாந்திர மகாநாடு, ஜெயலக்ஷ்மி தியேட்டரில், திரு. வேதரத்னம் பிள்ளை தலைமையில் கூடியது. பல ஜில்லாக்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

திரு. யாகூப் ஹாசன் மகாநாட்டைத் திறந்து வைக்கையில் பின்வருமாறு பேசினர்:—

தற்பொழுது இந்தியாவில் என்றுமில்லாதபடி ஒற்றுமை மிகவும் குன்றியுள்ளது. வகுப்புத் தீர்ப்பைக் குறித்து காங்கரஸ் என்ன முடிவு செய்து விடுமோ என்று நான் பயந்ததுண்டு. ஆனால் இனி அப்பயத்திற்கு இடமில்லை. இந்தியாவிலுள்ள இதரக் கட்சிகளையும், போன்றே முஸ்லீம்களும், புதிய அரசியல் மீது தங்களுக்குள்ள அதிருப்தியையும், அருவருப்பையும் தெரிவித்துக் கொண்டுள்ளனர். இந்தியாவின் விமோசனத்திற்கு உண்மையாகவும், சமத்வ நோக்கத்துடனும் பாடுபடக் கூடிய எக்கட்சிக்கும் எதிர்கால சட்ட சபைகளில் முஸ்லீம்கள் தங்கள் பூரண ஆதரவையும் அளிப்பார்களென திரு. ஜின்னா முன்னதாகவே ஆணித்தரமாகக் கூறியுள்ளார். ஆகவே, சட்ட சபையில் என் சகோதரக் காங்கரஸ்காரர்கள் தேசத்தின் ஒரு முக்கிய பாகமான முஸ்லீம்களின் நம்பிக்கையைப் பெறும் வழியில் நடக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். சம்பந்தப்பட்ட வகுப்பினருக்குள் சமரச முடிவு செய்வதன் மூலம் தான் வகுப்புத் தீர்ப்பை யொழிக்க முடியும்.

அடுத்த இரண்டு வருஷங்களுக்குள் புதிய அரசியலை ஏற்று நடத்துவதன் மூலம் உண்மையில் நமக்குப் பொதுப்புத் தன்மை ஏற்பட்டு பல்வேறு சமூகங்களுக்குள்ளும் நம்பிக்கையும், நல்லெண்ணமும் ஏற்படுமானால், பிறகு மாகாண சட்ட சபைகள், மத்திய சட்ட சபைகள் முதலியவற்றின் மெம்பர்களடங்கிய அகில இந்திய மகாநாடு ஒன்றைக் கூட்டி, வகுப்பு விஷயத்திலும், அரசியல் விஷயத்திலும் சமாசமாக ஒருமித்த முடிவைச் செய்யக் கூடுமென நான் பூரணமாக நம்புகிறேன். இதன் மூலம் சட்டசபைக் குள்ளிருந்து நாம் புதிய அரசியலை உடைத்து விடலாம். முட்டுக்கட்டை போன்ற பிரயோஜன மற்ற வெளிவேஷம் போடுவதைக் காட்டிலும் இதுவே மிகவும் பலன் தருமென்று கருதுகிறேன்.

சென்னையைத் தவிர்த்து இந்தியாவில் மற்றெம் மாகாணத்திலும் கட்சி முறையில் அரசியலில்லாததால், கவர்னர்கள் பல் வேறு கோஷ்டியிலிருந்தும் மந்திரிகளைப் பொறுக்குவார்கள்.

ஜஸ்டிஸ் கட்சியின் பெரும் முயற்சியினால் நம் மாகாணத்தில் கட்சி முறை அரசியல் வேரூன்றி விட்டது. மெஜாரிடி கட்சித் தலைவரையே மந்திரி சபை அமைக்க கவர்னர் கேட்க வேண்டுமென்ற சம்பிரதாயமும் நிலை பெற்றுள்ளது. அதை எக் கவர்னரும் மாற்றுவதற்கில்லை.

பெயின்பூர் காங்கரஸ் உத்தியோக மேற்புப் பிரச்சினையை சரியாக யோசித்து முடிவுசெய்து சென்னை தனது விருப்பத்தை நடத்தி வைக்க சந்தர்ப்பமளிக்குமேயானால் இந்த உபயோகமற்ற புதிய அரசியலைக்கூட நாம் தேச விடுதலைக்கு உபயோகித்துக்கொள்ள முடியும்.

எனது சகோதர முஸ்லீம்களுக்கு ஒரு வார்த்தை. இம் மாகாணத்தில் முஸ்லீம்களின் தனிமையான நிலையை உணர்ந்து அதற்கேற்ற வழியில் நடந்துகொள்ள வேண்டும். முஸ்லீம்கள் தனிப்பட்ட கட்சியாக விருந்து வேலை செய்வதால் பலன் தராது.

பிறகு மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

சத்தியமூர்த்தி வீழ்ச்சி

தலைமைப் பதவி போட்டியில் படு தோல்வி

வேலூர், டிச. 7

அடுத்த வருஷத்துக்குத் தமிழ்நாடு காங்கரஸ் தலைவர் தேர்தல் சென்ற சனிக்கிழமை இங்கு நடைபெற்றது. திரு. சத்தியமூர்த்திக்கும் திரு. சி. என். முத்துரங்க முதலியாருக்கும் போட்டி பலமாக விருந்தது. ராஜி செய்ய எவ்வளவோ முயற்சிக்கப்பட்டும் பலனின்றிப் போயிற்று. ஆகவே ஓட்டெடுப்பதன் மூலம் நிர்மணிப்பதென முடிவு செய்யப்பட்டது. பெரும் பான்மையான ஓட்டுகளால் திரு சத்தியமூர்த்தி தோல்வியுற்றார். திரு. சி. என். முத்துரங்க முதலியாருக்கு 104 ஓட்டுகளும், திரு. சத்தியமூர்த்திக்கு 59 ஓட்டுகளும் கிடைத்தன. ஆகவே திரு. சி. என். முத்துரங்க முதலியார் அடுத்த வருஷ தமிழ் நாடு காங்கரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு நடைபெற்ற காரியக்கமிட்டிக் கூட்டத்தில் சர்தார் வேதரத்னம் பிள்ளை உபத் தலைவராகவும், திருவாளர்கள் என். சத்தியமூர்த்தியும், சி. பி சுப்பையா முதலியாரும் காரியதரிசிகளாகவும்தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கார்ப்பரேஷன் தீர்மானப் போக்கு

'ஹிந்து', 'மெயில்' கருத்து

சென்னை, நவ. 26

சென்னைக் கார்ப்பரேஷனில் காங்கரஸ்காரர்களால் நிறைவேற்றப்பட்ட சம்பளக் குறைப்புத் தீர்மானத்தைப் பற்றி சென்னை "ஹிந்து"ப் பத்திரிகையும், சென்னை "மெயில்" பத்திரிகையும் எழுதியிருப்பது வருமாறு:—

"ஹிந்து" எழுதுவதாவது:—

புதிதாக அமைக்கப்பட்ட நகர சபையின் நேற்றைய கூட்டம் கார்ப்பரேஷனிலுள்ள ஐந்து பெரும் உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைக் குறைக்க வேண்டுமென்று தீர்மானித்தது. நகர சபை இவ்வளவு சீக்கிரம் தவறு செய்தமைக்காக வருந்துகிறோம். இத் தீர்மானம் கொண்டுவரப்படின் அந்த உத்தியோகஸ்தர்களின் சம்பளம் அதிகம் குறைந்து போகும். பொது ஸ்தாபன நிர்வாகத்தில் சம்பளக் குறைப்புத் திட்டங்கள் ஆலோசிக்கையில் கூடியவரை ஏற்கனவே உத்தியோகத்தில் இருப்பவர்களைப் பாதிக்காமல் பார்த்துக் கொள்வது தான் முறை. காங்கரஸ் அட்ஹாக் கமிட்டியார் வெளியிட்ட தேர்தல் அறிக்கைத் திட்டத்தில் பலவற்றைச் செய்வதாகக் கூறப்பட்டிருந்ததில் ஒரு கட்டுப்பாடான சிக்கனத் திட்டத்தைக் கையாள்வது என்பது முக்கியமானது. ஆனால் நேற்று நடந்த நகர சபைக் கூட்டத்தில் காங்கரஸ் கட்சியார் கையாண்ட திட்டம் கட்டுப்பாடான திட்டத்தை அடிப்படையாகக்கொண்ட ஒரு ஏற்பாடென்றோ அல்லது முழுயோசனையுடன் ஏற்படுத்தப்பட்ட திட்டத்தின் ஒரு பாகமென்றோ கூறுவதற்கில்லையென்றே நாம் மதிக்கிறோம்.

"மதராஸ் மெயில்" எழுதுவதாவது:—

கார்ப்பரேஷன் உத்தியோகஸ்தர்களுக்கு ரூ 500-க்கு மேல் சம்பளம் தரக்கூடாதென்ற தீர்மானம் சபையில் விவாதிக்கப்பட்ட போது ஒரு அங்கத்தினர் "உத்தியோகஸ்தர்களுக்கு ரூ 500-க்கு மேல் சம்பளம் கொடுக்கக் கூடாதென்றதை உங்களுடைய வாழ்க்கையில் கைக்கொண்டீர்களா?" என்று தோழர் பாஷியத்தைக் கேட்டார். அதற்கு ஆமாம் என்று பதில் கொடுக்கப்பட்டது. அதற்கு அந்த அங்கத்தினர் வருமான வரி கணக்கைப் பார்த்தால் உண்மை வெளிப்படுமென்று கூறியபோது தோழர் பாஷியம் புன்னகை செய்தார். கொள்கையிலும், செய்கையிலும் வேற்றுமை இருப்பது முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயம். பொது ஸ்தாபன உத்தியோகஸ்தர்களுக்கு நடுத்தர வாழ்க்கை நிலைமை இருக்க வேண்டுமென்று கூறிய அரசியல் வாதிகள் விலை உயர்ந்த மோட்டாரில் அன்று மாலையிலேயே ஏறிச் சென்றதை நாம் பார்த்தோம். இது போது வேலையிலுள்ளவர்களுக்கு சட்டப்படி கோர்ட்டிலாவது நஷ்ட ஈடு ஏதாவது உண்டானால் அதையும் கொடுத்து பட்டுவாடா செய்தபின்பு இவ்வித நடவடிக்கை எடுத்துக்கொள்வதுதான் சரியான வழியாகும்.

கிராம ஜனங்களுக்கு ஜஸ்டிஸ்கட்சியார் செய்த சேவைகள்

துவேஷப் பிரசாரத்திற்கு மறுப்பு

சென்னையில் பிரசுரமாகும் "மெயில்" என்ற பத்திரிகையானது காங்கரஸ்காரர்களுக்கு எதிலும் உதவி புரிவதற்காகவே கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறதாகும். அதில் ஒரு காங்கரஸ்காரர் ஜஸ்டிஸ் கட்சியார்கள் கிராம ஜனங்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று துவேஷமாக எழுதிய கட்டுரை ஒன்று பிரசுரமாகியிருக்கிறது. இவ்வித துவேஷப் பிரசாரத்திற்கு இடம் கொடுக்கும் பத்திரிகாசிரியரும், கட்டுரையாளரும் இந்த உலகத்தில் இருந்து கொண்டு தான் இந்த விபரம் எழுதினார்களா என்று தெரியவில்லை. இந்த துவேஷமான வார்த்தைகளுக்குச் சரியான மறுப்புக் கொடுத்து 'ஆஸ்பர்' என்பவர் "ஜஸ்டிஸ்" பத்திரிகையில், ஜஸ்டிஸ் கட்சியார் கிராமங்களுக்குச் செய்திருக்கும் நன்மைகளை விளக்கி எழுதுவதாவது:—

கிராமங்களின் அபிவிருத்திக்கு நம் கட்சியானது பாடுபடவில்லை என்பது கொஞ்சமும் ஆதாரமில்லாத செய்தி. கிராம முன்னேற்றத்திற்கு எவ்வளவோ சௌகரியங்களை அவர்கள் செய்திருக்கிறார்கள். கீழே கண்ட சீர்திருத்தங்கள் கிராமங்களின் நன்மைக்கா இல்லையா என்று கவனித்தால் விளங்கும்.

(1) கைத் தொழில்கள் ஆக்கத்துக்கு ராஜாங்க உதவி அளித்தல்.

(2) நயமான கிராம வைத்திய சாலைகள் ஏற்படுத்தல்.

(3) இந்திய வைத்திய பாடசாலை ஸ்தாபனம். (இதற்குப் பிரமாதமான எதிர்ப்பு இருந்தும் நிறைவேற்றப்பட்ட காரியமாகும். இதை டாக்டர் யூ. ராமராவ் முதலிய காங்கரஸ் காரர்களே புகழ்ந்திருக்கின்றனர்.)

(4) விவசாய பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தல்.

(5) கிராமச் சாலைகள் அமைத்தல்.

(6) கிராம ஜனங்களின் சுகாதாரத்திற்கு ஆவன செய்தல்.

(7) தாழ்த்தப் பட்டவர்களை முன்னுக்குக் கொண்டு வரும் விஷயமாக சரியான பாதைகளில் பலமான உதவிகள் செய்யப்பட்டிருக்கின்றன. (இதைத் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் தலைவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.)

(8) ஹிந்து மதக் கோவில்களை ஒழுங்கான நடை முறையில் வைக்க ஹிந்து மத தர்ம பரிபாலன சட்டம் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. இதனால் கோவில்கள் அலங்கோலமடையாமல் காப்பாற்றப் பட்டிருக்கின்றன.

(9) திருப்பதி-திருமலை தேவஸ்தான சட்டம் செய்து திருப்பதிக் கோவிலைக் காப்பாற்றி நல்ல நிலைமையில் வைத்திருக்கிறார்கள் (அது இச்சட்டம் ஏற்படுத்துவதற்கு முன் மகந்துக்களால் சரியானபடி பராமரிக்கப் பட்டில்லை.)

(10) இனாம் மசோதா கொண்டு வந்து சுமார் 5 லட்சம் குத்தகைக்காரர்களான குடியானவர்களுக்கு நிலத்தை சொந்தமாய் அனுபவித்துக் கொள்ள உரிமை கொடுத்திருக்கிறார்கள்.

இவை போன்ற இன்னும் பல நன்மைகளும் கிராமங்களின் ஷேம அபிவிருத்திக்காக வென்று செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் கிராம ஜனங்கள் பயன் அனுபவிக்காமல் இருக்கிறார்களா? உண்மை இப்படி இருக்க, "மெயில்" பத்திரிகையானது ஜஸ்டிஸ்கட்சியின் மேல் பொய்யும், தாறு மாறுமான விஷயங்கள் வெளிவர இடம் கொடுத்துக் கொண்டிருப்பது நீதியல்ல.

காங்கரஸ் சாதித்த தென்ன?

காங்கரஸ் கட்சியார் தான், கடந்த 15 வருஷங்களாக வனத்தில் அலைவதுபோல கண்ட இடங்களைப் பின் பற்றி மக்களுக் கெல்லாம் கஷ்ட நஷ்டங்களையும், துன்பம் துயரங்களையும் உண்டு பண்ணி வருகிறார்கள். ஒத்துழையா இயக்கமும், சட்ட மறுப்பு இயக்கமும், வரி கொடா இயக்கமும், அந்நியத் துணி பகிஷ்கார இயக்கமும், ஸ்கூல், கோர்ட், கவர்ன்மெண்ட், ஊழிய பகிஷ்கார இயக்கமும் நடத்தி இவைபோன்ற வேறு பலவும் செய்து, சொல்ல வொண்ணாத துன்பத்தையும் தாங்க வொண்ணாத துயரத்தையும் ஜன சமூகத்திற்கு உண்டு பண்ணிவிட்டார்கள்.

ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் தான் ஆதி தொட்டு ஒரே நிதானமாய் இருந்து கொண்டு ஒரே கொள்கையோடு நடந்துகொண்டு சிக்கலான இரட்டையாட்சி முறையையும் திறமாக நடத்திக் காட்டி இப்பொழுது மாகாண சுய ஆட்சியையும் ஒப்புக்கொண்டு நாட்டைச் செவ்வையாய் ஆளத் தங்களால் முடியும் என்று மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார்கள்.

ஜஸ்டிஸ் கட்சியின் சேவைகளை காலணாக் கட்சிக்காரர்கள் தான் பாராட்ட மாட்டார்கள். ஆகவே தாங்கள் நெடுங்காலமாய் ஏழைகளையும், ஒன்றும் தெரியாதார்களையும் ஏமாற்றி அனுபவித்த சகல சௌகரியங்களெல்லாம் கெட்டுப் போகின்றனவே என்ற கெட்ட எண்ணத்தினால் தூற்றி வருகிறார்கள்.

திருவாரூரில் ஜஸ்டிஸ் கட்சி கிளை ஸ்தாபனம்

தஞ்சை ஜில்லா ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டை கூட்டுவிக்கத் தீர்மானம்

(ஒரு நிருபர்)

திருவாரூர், டிச. 7

5-12-36-மாலை 5-30-மணிக்கு திருவாரூர் பெரிய கோவிலில் ஜஸ்டிஸ் கட்சி அபிமானிகள் சுமார் ஆயிரத்திற்கு மேம்பட்டவர்கள் கூடி ஏகமனதுடன் கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள். அன்று அக்கூட்டத்தை தலைமை ஏற்று நடத்தி வைத்தவர் வக்கீல் திரு. சி. சிவசுப்ரமணிய முதலியாராவர்.

அன்றைய கூட்டம் என்றுமிலாத உற்சாகத்தைக் காண்பித்துக் கொண்டது மிகவும் போற்றத் தக்கதாகும்.

அன்றைய கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்த பிரபலஸ்தர்கள் திரு. நகரச் சேர்மன் இராமானுஜ முதலியார், மாஜி சேர்மன் சுப்பாயது நாயுடுகாரு, வக்கீல் கே. ஷண்முகம் பிள்ளை, கவுன்சிலர் மாணிக்கம் பிள்ளை, இன்னும் வியாபாரிகளில்பலரும் மிராசுதார்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

வெளியூரினின்று வீரத் தருமலிங்கம், முருகைய முதலியார் சாம்பசிவ முதலியார் முதலியவர்கள் வந்திருந்தார்கள்.

நிறைவேறிய தீர்மானங்கள்

1. இதுபோது நமது நிலைமைகளை அறிந்திருக்கும் நமது சமூக சீர்கேட்டை நீக்கி நல்ல மனதுடன் எதையும் பொருட்படுத்தாது பார்ப்பனரல்லாத சமூக நலனையே குறிக் கோளாய்க் கொண்டு நடைபெற்று வரும் ஜஸ்டிஸ் கட்சியின் போரால் இதுபோது நடைபெற்ற தஞ்சை ஜில்லாபோர்டு தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்ற வீரர்களுக்கும் தோல்வியை சந்தோஷத்துடன் ஏற்று நிம்மதியுடனிருக்கும் பெரியார்களுக்கும், இக்கூட்டம் ஒருமனதோடு தனது மனப்பூர்வமான நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

2. இங்கு நடைபெற்ற தஞ்சை ஜில்லா போர்டு தேர்தலானது நமது சமூக தலைப் பெரியாரான ஈ. வெ. ரா. அவர்கள் சொல்லியபடி நமது நிலைமையை தெள்ளிதில் நமக்கு அறிவுறுத்தி விட்டது. இனி பெரியாரின் மொழியை பொன் மொழியாகக் கொண்டு செயலாற்ற வேண்டுவதே நமது முதற்கடமையாகும்.

அந்த அஸ்திவாரத்தின் பேரிலேயே வரப் போகும் சென்னை சட்டசபைத் தேர்தலுக்காவது நமது சமூக சக்தியை ஒன்று திரட்டி உபயோகித்து வெற்றி மாலைசூட திருவாரூரின்கண் தஞ்சை ஜில்லா ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டை இம்மாதக்கடைசிக்குள் கூட்டுவித்து நன்மையைப் பெற வேண்டி 13-12-36 ஞாயிறு அன்று மாலை 4-30க்கு திருவாரூர் பெரிய கோவிலில் வரவேற்புக் கழகம் ஏற்படுத்த பெறும் அதற்கு தஞ்சை ஜில்லாவிலுள்ள கிளைச்சபையார்கள் பிரதிநிதிகளை அனுப்பிவைப்ப தோடு கூட தாலுக்கா வாரியாகப் பிரதிநிதிகளை அனுப்பி ஆலோசனை கூறி ஆதரிக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறது.

3 பார்ப்பனரல்லாத சமூகத்தவராயிருந்தும் சமூக நலனுக்குத்தங்களது சக்தியை உதவி நலனை பெருது நமது சமூக நலனையே பாதாளத்தில் குழி தோண்டி புதைக்க வரிந்து கட்டி வேலை செய்யும் சுயநலக் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டு தன்னுடைய வாழ்வுக்கே உலைவைத்துக் கொள்ளும் சகோதரர்களின் நிலைமையைக் கண்டு இக்கூட்டமானது தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு நாம் யார்? நமது கடமை என்ன? ஆபத்துக் காலத்தில் ஆதரவு செய்ய வேண்டியவர்கள் யார்? இழவுக்கு இடுகாடு வரை ஈடுபடுபவர்கள் யாவர்? என்பதை யாவது யோசித்து ஓர் முடிவுக்கு வருமாறு வேண்டிக் கொள்ளுகிறது.

4. பார்ப்பனரல்லாதார் சமூக நலனைக் கோரி நடைபெற்று வரும் ஜஸ்டிஸ் கட்சியின் நோக்கங்களை நமது நகர சம்பந்தப்பட்ட மட்டில் நமது மக்களிடம் எடுத்துக் கூறி அவர்களின் சக்தியை சமூக நலனுக்கு உதவுமாறு செய்ய வேண்டி இந் நகரத்தின் கண் நிரந்தரமாய் நின்று வேலை செய்து வர இக்கூட்டம் ஜஸ்டிஸ் கட்சியின் கிளை யொன்றை ஒரு மனதுடன் ஸ்தாபிக்கின்றது. இன்று முதல் ஜஸ்டிஸ் கட்சியின் கிளை யொன்று திருவாரூரின் கண் வேலை செய்து வருமென்பதை பொது ஜனங்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறது.

500-அங்கத்தினர்கள் சேரும் வரையிலும் ஐந்து பேர்கள் அடங்கிய ஓர் பஞ்சாயத்து போர்டானது சகல வேலைகளைக் கவனித்து வரும். பிறகு நிரந்தரமான நிர்வாகஸ்தர்கள் தேர்ந் தெடுக்கப்படுவார்கள்.

(5) பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்களின் மாபெருந் தலைவரான தூத்துக்குடி வி. ஓ. சிதம்பரம் பிள்ளை காலமானது பற்றி இக்கூட்டம் மிகவும் வருந்துவதோடுகூட அன்னாரின் குடும்பத்தாருக்கும் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளுகிறது.

காரியக் கமிட்டி

தலைவர்:-கே. வி. இராஜகோபால் நாயுடு, உபதலைவர்:-கே. என். சௌந்தர ராஜன், காரியதரிசி:- வி. எஸ். இராமன், உபகாரியதரிசி: டி. என். லெக்ஷ்மப்பா, பொக்கிஷதார்:- பி. எஸ். குப்புசாமி.

அங்கத்தினர்கள்:-பி. வி. ஓ இராஜகோபாலன், வி. கோதண்டபாணி நாயுடு, வி. அப்பாபிராஜா, முகமது இப்ராஹிம், சோமசுந்தரம், பி. அன்னாமலை, பி. முத்துக்குமாரசாமி, ஆர். கோவிந்தன், என். வி. வாசுதேவன், ஜி. கண்ணுச்சாமி, என். பழனிவேலு, ஆர். துரைச்சாமி,

"ஒற்றுமை"

14-ம் வருஷம் நவம்பரில் ஆரம்பம். ஸ்டாம்பு செலவுக்கு 12 அணா அனுப்பினால் ஒரு வருஷப் பத்திரிகை அனுப்பப்படும்.

மாதிரிப் பிரதி இனாம்.

ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராயநகர், மதராஸ்.

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே!

ஏழையென்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே!

மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையை கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த வகையினும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! (பாரதி)

விடுதலை

சென்னை: 1936-௵ டிசம்பர்௴ 9-௳
புதன்கிழமை

ஆரம்ப ஆசிரியர்கள் அதிர்ஷ்டம்

ஆரம்ப ஆசிரியர் பதவி மிகவும் பொறுப்பு வாய்ந்தது. பிரஜைகளை உருவாக்குவதற்கு அவர்களே காரணஸ்தர்களா யிருக்கிறார்கள். ஒரு தேசத்துக்கு அந்த தேசத்து இளைஞர்களே மூலச் சொத்து. ஒரு தேசத்தின் வாழ்வும், தாழ்வும் இளைஞர்களையே பொறுத்திருக்கின்றன. ஆகவே இளைஞர்களுக்குக் கல்வி புகட்டி அவர்கள் உத்தமர்களாவதற்குப் பூர்வாங்க வேலை செய்யும் ஆசிரியர்கள் பொது வாழ்வில் எவ்வளவு முக்கியமான ஸ்தானம் வகிக்கிறார்கள் என்பதை ஆழ்ந்து யோசனை செய்ய சக்தியுடையவர்களே நன்குணர்வார்கள். ஆனால் ஆரம்ப ஆசிரியர்கள் மிக்க பொறுப்புடையவர்களாக இருந்தும், அவர்கள் பெற்று வரும் வேதனம் அவர்களது சுகமான வாழ்வுக்குப் போதியதல்லாததாயிருக்கிறது அதிலும் சர்க்கார் பள்ளிக்கூட ஆசிரியர்களைவிட பிரைவேட் பள்ளிக்கூட ஆசிரியர்கள் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் எல்லாம் பெரும்பாலும் பிரைவேட் மானேஜ்மெண்டிலேயே இருந்து வருகின்றன. ஆரம்பப் பள்ளிக்கூடங்களை யெல்லாம் சர்க்காரே நிர்வாகம் செய்யும் நன்னிலைமை இன்னும் ஏற்படவில்லை. எனவே பிரைவேட் பள்ளிக்கூட ஆசிரியர்கள் நிலைமை மிகவும் பரிதாபகரமாக இருந்து வருகிறது. அவர்கள் சம்பளமோ மிகவும் சொற்பம்; அதுவும் கூட சரியாகக் கொடுக்கப் படுவதில்லை. ஆசிரியர்கள் கண்ணில் மண்ணைப் போடும் பொருட்டு மானேஜர்கள் செய்யும் இந்திர ஜாலங்கள் பலப்பல. எனவே ஆரம்ப ஆசிரியர்கள் வெகு காலமாக முறையிட்டு வந்தனர். அவர்களது முறைப்பாடு கடைசியாக இப்பொழுது கல்வி மந்திரி கனம் குமார ராஜா முத்தைய செட்டியார் கருணையினால் ஓரளவு பரிகாரமாகி யிருப்பது கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். பிரைவேட் பள்ளிக்கூட ஆசிரியர்கள் சம்பளத்துக்காகவும், டிவிஷன் இன்ஸ்பெக்டர்களையும் மற்றும் மேற்படி உதவி இன்ஸ்பெக்டர்களையும் நியமிக்கும் பொருட்டும் கனம் கல்வி மந்திரியவர்கள் முயற்சியினால் இப்பொழுது 4,60,000 ரூபாய் அதிகப்படியாக சர்க்காரியும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஒவ்வொரு ஆசிரியருக்கும் சராசரி 2 ரூபாய் அதிகப்படியாகக் கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டு ரூபாய் சிறு தொகை என சட்டசபையில் வீற்றிருக்கும் பாக்கியம் பெற்றவர்களுக்குத் தோன்றக் கூடும். ஆனால் இந்தப் பணப் பஞ்சகாலத்தில் இரண்டு ரூபாய் எவ்வளவு பெரிய தொகை — என்பதை உணவுக்கும் உடைக்கும் ஆலாப் பறக்கும் ஆரம்ப ஆசிரியர்களே அறிவார்கள். உபமான்ய விவாதகாலத்துப் பல ருசிகரமான விஷயங்கள் வெளிவந்தன. ஒரு மெம்பர் ஆரம்ப ஆசிரியர்களுக்குத் தினப்படி ஒரு ரூபாயாவது சம்பளம் கிடைக்க வேண்டுமென்று கூறினார். ஒரு ரூபாயும் கூடக் குறைவென்பதே நமது அபிப்பிராயம். ஆரம்ப ஆசிரியர்களின் குறைந்த பட்ச சம்பளம் தினம் இரண்டு ரூபாய் ஆக்கப்பட்டால் கூட நாம் வருத்தப் போவதில்லை. ஆனால் பணத்துக்கு எங்கு போவது என்பதுதான் கேள்வி. தேச வருமானத்தில் அதிகப் பகுதியை கல்விக்கே முதன் முதலில் செலவுசெய்ய வேண்டுமென்று கர்ஜித்தார் ஒரு மெம்பர். கனம் கல்வி மந்திரி அவருக்குக் கன்னத்தி லடித்தது போல பதிலளிக்கையில், சர்க்கார் கல்விக்காக வருஷா வருஷம் 246 லக்ஷம் ரூபாய் செலவு செய்வதாயும் அதில், 51 சதமானம் ஆரம்பக் கல்விக்கே செலவு செய்யப்படுகிற தென்றும் குறிப்பிட்டார். வாஸ்தவத்தில் சென்னை சர்க்காரைப்போல் எந்த மாகாண சர்க்காரும் கல்விக்காக அதிகப்படியான தொகை செலவு செய்வதில்லை. இந்த உண்மையை அறியாதவர்களும் சட்டசபையில் புகுந்து ஆர்ப்பாட்டம் செய்வது தான் ஆச்சரியமாக இருக்கிறது. பல ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் நிலைமை திருப்திகரமாயில்லை. எனவே வழுவல்களைப்போக்கி, இருக்கும் பள்ளிக்கூடங்களை திருத்தவே சர்க்கார் முக்கிய கவனம் செலுத்தி வருகிறார்கள். வழுவல்கள் நிறைந்த பள்ளிக்கூடங்களைத் திருத்தியமைக்க முயலாமல் மேலும் மேலும் பள்ளிக்கூடங்களை கண்ணை மூடிக்கொண்டு விருத்தி செய்துகொண்டு போவதினால் நன்மையை விடத் தீமையே அதிகமாக உண்டாகும். எனினும் மாஜிக் கல்வி மந்திரி ஸர். பி. ஏ. பாத்ரோ வேறுவிதமாக அபிப்பிராயப்பட்டது தான் ஒரு துரதிர்ஷ்டமான விஷயம். பள்ளிக்கூட நிலைமை எப்படியிருந்தாலும் சரி, பள்ளிக்கூடங்களின் தொகையை விருத்தி செய்ய வேண்டியதே சர்க்காரின் கடமையாக இருக்கவேண்டுமென அவர் அபிப்பிராயப் பட்டதை அதிகப் பேர் ஆதரிக்கமாட்டார்கள் என்பது நிச்சயம். பாடப் புத்தகங்களை யெல்லாம் சர்க்காரே வெளியிட வேண்டுமென்று வேறொரு மெம்பர் கூறினார். பிரைவேட் கம்பெனியாரும், வியாபாரிகளும் பாடப் புத்தகங்கள் வெளியிடுவதில் பல இடையூறுகளும் சங்கடங்களும் இருக்கலாம். ஆனால் அதற்காகப் பாடப் புத்தகங்களை சர்க்கார் தான் வெளியிட வேண்டுமென்று கூறுவது ஜனநாயக உணர்ச்சி பரவி வரும் இக்காலத்து ஆதரவு பெறக் கூடிய அபிப்பிராய மல்ல. எந்தத் தொழிலிலும் போட்டியிருந்தால் தான் அபிவிர்த்தி யேற்படும். பல பிரைவேட் கம்பெனிகள் போட்டி போடுவதினாலேயே ஆங்கில பாடப் புத்தகங்கள் மலிவாகவும், நயமாகவும், சிறப்பாகவும் இருக்கின்றன. நல்ல பாடப் புத்தகங்களை வெளியிட இங்கிலீஷ் புத்தக வியாபாரிகள் லக்ஷோபி லக்ஷம் பவுன் செலவு செய்கிறார்கள். அதனாலேயே பாடப் புத்தகங்கள் விருத்தியடைந்து வருகின்றன. பொது நூல்களும் பெருகி வருகின்றன. எனவே பாடப் புத்தகங்கள் வெளியிடும் பொறுப்பை சர்க்கார் ஏற்றுக்கொள்வது அவ்வளவு உசிதமான ஏற்பாடென்று நமக்குத் தோன்றவில்லை. அப்பால் ஆரம்ப ஆசிரியர்கள் இதர தொழில்களில் ஈடுபடக் கூடாதென்று வேறொரு மெம்பர் அபிப்பிராயப் பட்டார். வறுமையின் கொடுமையினால் இப்பொழுது அநேக ஆசிரியர்கள் தமது தொழிலுக்குப் பொருத்தமில்லாத தொழில்களிலும் மறைமுகமாக ஈடுபட்டு வருகிறார்கள். சில்லறை வர்த்தகம் செய்வது, இன்ஷூரன்ஸ் ஏஜண்டாக உழைப்பது, கோவில் பூஜை செய்வது முதலியனவெல்லாம் கண்டிக்கத் தக்கனவே. அத்தகைய தொழில்களில் ஈடுபடுவோர் ஆசிரியர் வேலைக்கு லாயக்குடையவர்களே அல்ல. அவர்களால் ஆசிரியர் வேலையைத் திறம்பட நடத்தவும் முடியாது. ஆனால் ட்யூஷனையும் அத்தகைய தொழில்களோடு சேர்க்கலாமா என்பது சிந்திக்கத் தக்கது. டியூஷன் ஆசிரியத் தொழிலுடன் நெருங்கிய சம்பந்தமுடையதுதான். டியூஷன் நடத்துவோருக்கு சிறுவர் சிறுமிகளின் மனப்போக்கை உணரவும் அவ்வவர் மனப்போக்குக்குப் பொருத்தமாகப் போதனா முறையைத் திருத்திக் கொள்ளவும் ஒரு நல்ல தருணம் கிடைக்கிறது. அது ஆசிரியர்களின் அபிவிருத்திக்குத் துணைபுரிவதுமாகும். எனவே டியூஷன் நடத்துவது தடுக்கத்தக்கது என்பதை ஆதரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். ஏழை யாசிரியர்கள் தமது வருவாயை ஒரு சிறிது பெருக்கிக் கொள்வதற்காக டியூஷன் நடத்துவது ஒரு குற்றமானால் அது வெகு சுலபமாக மன்னிக்கக் கூடிய குற்றமே. இதர தொழில் நடத்திப் பணந் தேடுவதை விட டியூஷன் நடத்துவது சிலாக்கியமானதே. கடைசியாக கனம் மந்திரியவர்கள் விவாதத்துக்குப் பதிலளிக்கையில் கண்டனங்களுக் கெல்லாம் திருப்திகரமாக பதிலளித்து அனைவருடைய திருப்தியையும் சம்பாதித்தது அவர்களுடைய சாதுரிய புத்தியையும் சொல்லாற்றலையும் நன்கு விளக்கிக் காட்டுகின்றன. கனம் மந்திரியவர்கள் அளித்த பதிலினால் வெட்டுப் பிரேரணையும் வாபீஸ் வாங்கிக் கொள்ளப் பட்டதினால் மானியம் பூராவாக நிறைவேறியது. இம் மானியத்துக்குக் காரண பூதராயிருந்த கனம் கல்வி மந்திரியவர்களை ஆரம்ப ஆசிரியர்கள் எல்லாம் வாழ்த்துவார்கள் என்பது திண்ணம்

சத்தியமூர்த்தி வீழ்ச்சி

இரண்டு வருஷ காலம் தலைகால் தெரியாமல் கூத்தாடி, தமிழ் நாட்டைக் குட்டிச்சுவராக்கிய திரு. சத்தியமூர்த்தி தமிழ் நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவர் பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்டதை யறிந்து தமிழுலகம் திருப்தியடையுமென்பது நிச்சயம். இரண்டு வருஷம் பதவி வகித்த பின்னும் அய்யருக்குத் திருப்தி யேற்படவில்லை. தமக்குத் தோல்வி யேற்படுவது நிச்சயமென அறிந்தும் அவர் துணிந்து போட்டி போட்டார். காங்கரஸ் கமிட்டி மெம்பர்கள் அவருக்கு நல்ல பாடம் கற்பித்து விட்டார்கள். அவருடன் போட்டி போட்ட திரு. முத்துரங்க முதலியாருக்குக் கிடைத்த வோட்டு 104; திரு. சத்தியமூர்த்திக்குக் கிடைத்த வோட்டு 59. எனவே காங்கரஸ்காரர்களே திரு. மூர்த்தியை வெறுக்கிறார்கள் என்பது புலனாகவில்லையா? இவ்வண்ணம் முழுத் தோல்வி யேற்பட்ட பிறகும் அவர் காரியதரிசி பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கத் துணிந்தது தான் ஆச்சரியமாக இருக்கிறது. சென்ற வருஷம் காரைக் குடியிலே தலைவர் பதவிக்கு திருவாளர்கள் முத்துரங்க முதலியாரும் சத்தியமூர்த்தியும் போட்டி போட்டார்கள். தோற்றவர்கள் காரியதரிசி பதவி வகிக்க வேண்டுமென்றும் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளப் பட்டது. திரு. ராஜகோபாலாச்சாரியார் சூழ்ச்சியினால் திரு. சத்தியமூர்த்தி வெற்றி பெற்றார். ஆனால் ஒப்பந்தப்படி காரியதரிசி பதவியை தோல்வி யடைந்த முதலியார் ஒப்புக் கொள்ளவில்லை. ஈயப்பிறந்த மரபில் பிறந்தவரல்லவா முதலியார். எனவே தமது மரபுப் பெருமையைக் காட்டிக்கொண்டார். ஆனால் வேலூரில் தோல்வியடைந்த திரு. சத்தியமூர்த்தி என்ன செய்தார்? கிடைத்தது லாபம் எனக் காரியதரிசி பதவியை ஒப்புக்கொண்டு ஏற்கப் பிறந்த ஜாதிக் குணத்தை நிலை காட்டிக் கொண்டார். தலைவர் பதவிக்கு இவ்வண்ணம் தீவிர போட்டி ஏற்பட்டிருந்தும், வேலூரில் ஒற்றுமை நிலவியதாக "தின மணி" புளுகுகிறது. திரு. சத்தியமூர்த்தி தமிழ் நாட்டார் நம்பிக்கையை இழந்துவிடவில்லை யெனக் காட்ட ஏதோ அண்டப் புளுகன், ஆகாசப் புளுகன் புளுகி, தமிழ் நாட்டை ஏமாற்றவும் முயலுகிறது. பொய்யை மெய்யாக்க "தினமணி" படும்பாட்டைப் பார்க்கும் போது "அப்பா குதிருக்குள் இல்லை" என்ற கதைதான் நமது ஞாபகத்துக்கு வருகிறது. சத்தியமூர்த்திக்குசாயம் பூச தன்னாலான முயற்சிகள் எல்லாம் செய்துவிட்டுக் கடைசியில் தன் பிறவிக் குணத்தைக் காட்டவும் 'தின மணி' பின்வாங்கவில்லை. 'திரு. முத்துரங்க முதலியார் தலைவராயிருக்கும்போது ஜஸ்டிஸ் கட்சி தொலைந்தது என்ற கீர்த்தியை அவர் பெறுவாரென்று நம்புகிறோம்." என அந்தப் போக்கிரி 'தினமணி' கூறுகிறது. திரு. முதலியார் காங்கரஸ்வாதிதான். ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிரிதான். எனினும் ஜஸ்டிஸ் கட்சிக்கு கருமாதி நடத்த அவர் விரும்பமாட்டார் என்றே நம்புகிறோம். ஏனெனில் அவர் கண்ணியமுடையவர்; அரசியல் எதிரிகளை அவமதிக்கத் துணியாத நிறைமனம் படைத்தவர். ஆகவே ஜஸ்டிஸ் கட்சி "தின மணி" விரும்புவது போல் வீழ்த்தப்படும் பட்சத்தில் ஜஸ்டிஸ் கட்சிக்குக் கருமாதி செய்ய "தினமணி" ஆசிரியர் தான் தயாராக இருக்க நேரிடும். எப்படியாவது ஆழ்வார்ப் பட்டம் பெற்றால் போதாதா? 'இடும்பை கூர் என் வயிறே! உன்னோடு வாழ்தல் அரிது!'' எனக் கூறிய ஔவையார் வாயில் சீனிதான் போடவேண்டும்.

ஜப்பானில் இந்திய வர்த்தக கமிஷனர்

திரு. ஆர். ஆர். சாக்சேனா நியமனம்

புதுடில்லி, டிச. 9

இம்பீரியல் கஸ்டம்ஸ் சர்வீஸிலுள்ள திரு. ஆர். ஆர். சாக்சேனா, ஜப்பானில் இந்திய வர்த்தக கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை நகர சபைக் கூட்டம்

"கதருடையும், காந்தி படமும்"

சென்னை, டிச, 9

நேற்று மாலை சென்னை நகர சபைக் கூட்டமொன்று மேயர் திரு. கே. ஸ்ரீராமுலு நாயுடு தலைமையின் கீழ் நடைபெற்றது.

நகரசபை சிப்பந்திகளுக்கு, நகர சபையால் வாங்கப்படும் துணிகள், கையினாலேயே செய்யப்பட்ட சுத்தக் கதருடையாயிருக்க வேண்டுமெனவும், நகரசபை பள்ளிக்கூடங்களில் மகாத்மா காந்தியின் படத்தைத் தொங்க விட வேண்டுமெனவும் தீர்மானங்கள் கொண்டு வரப் பட்டு நிறைவேறின.

திரு. என். சங்கரன், பகத்சிங், காரல் மார்க்ஸ், லெனின் முதலியோரின் திருவுருவப்படங்களையும் மேற்படி பள்ளிக் கூடங்களில் தொங்க விடவேண்டுமெனக் கூறினார்.

திரு. டி. ஆர். கோதண்டராம முதலியார், எல்லாம் நாடகக் கூத்து போல் இருக்கின்றதே எனக் கூறினார். மேலும் பேசுகையில் ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர்கள் நகரசபையில் பெரும்பான்மையோராய் இருந்த காலத்திலேயே கவுன்சில் சேம்பரில் காந்திஜியின் உருவப்படம் இருந்ததாகக் கூறினார்.

கமிஷனர் பதிலளிக்கையில், நகரசபைப் பள்ளிக்கூடங்கள் சிலவற்றில், திரு. காந்தியின் (திரு. சத்தியமூர்த்தி: மகாத்மாவெனக் கூறலாமே) உருவப் படங்கள் இப்பொழுதே இருந்து வருகின்றனவென்றும், கல்வி அதிகாரியின் உத்தரவின்றி உருவப் படங்கள் வாங்குவதற்கில்லை யென்றும், இது விஷயத்தில் செலவு செய்வதற்கு முன்பு, இத் தீர்மானத்திற்குச் சர்க்கார் அங்கீகாரம் வேண்டுமென்றும் கூறினர்.

நகரசபை செலவினங்களில் உருவப் படங்கள் வாங்குவதும் ஒன்றென்பதை சர்க்கார் மறுக்கும் பக்ஷத்தில், நகரசபை, கோர்ட்டில் வழக்காடும்படி நேரிடுமென்று திரு. சத்தியமூர்த்தி கூறினர்.

பிறகு, தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு நிறைவேறியது.

டி. வி. ஞாபகார்த்தக் கூட்டம்

நாளை (10—12—36) மாலை 5-30 மணிக்கு சென்னை மவுண்ட் ரோடு தியாகராயர் ஞாபகார்த்த மண்டபத்தில் மாஜி "திராவிடன்" ஆசிரியர் டி. வி. சுப்பிரமணியம் ஞாபகார்த்தப் பொதுக் கூட்டம் கூடும். அனைவரும் வருக!

"விடுதலை" ஆசிரியர்.

* * *

செட்டி நாட்டில் ஜஸ்டிஸ் தொண்டர்கள் முழக்கம்

(ஒரு நிருபர்)

கானாடுகாத்தான் டிச, 8

14-ந்தேதி நடைபெறப் போகும் இராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தலை முன்னிட்டு அபேட்சகராக நிற்கும் திரு. சி. வி. சி. டி. வெங்கடாசலம் செட்டியார் அவர்களை ஆதரித்து 5-12-36 மாலை கானாடுகாத்தானிலும், 6-12-36 மாலை பள்ளத்தூரிலும் 7-12-36 ல் பெரிய கோட்டையிலும் கூட்டங்கள் நடைபெற்றன. திருவாளர்கள் சி. என். அண்ணாதுரை எம். ஏ., பண்டிட் திருஞானசம்பந்தம், காஞ்சி. கலியாணசுந்தரம், என். ரங்கநாதன், பாலசுந்தரனார், என். தண்டபாணிப் பிள்ளை, அ. பொன்னம்பலனார், விருதுநகர், அருணாசலம் ஆகியவர்கள் சொற்பொழிவு ஆற்றினர்கள். காங்கரசின் புரட்டுகளையும், ஊழல்களையும் வெளியிட்டு வருவதால் மக்கள் விழிப்படைந்து சி. வி. சி. டி. செட்டியாருக்கு ஆதரவளித்து வருகிறார்கள்.

கிராய்டனிலிருந்து, பிரான்சுக்கு விமானம் புறப்பாடு

வழி நெடுக பந்தோபஸ்து

ஸ்ரீமதி சிம்ஸனின் பெருந்தன்மையான குணம்

லண்டன், டிச, 9

இன்று காலை கிராய்டனிலிருந்து கானீசுக்கு ஒரு விமானம் புறப்பட்டுச் சென்றது மிகவும் ஆச்சரியத்தை விளைவித்துள்ளது. புயலையும் பார்க்காமல் அவ்விமானம் லா போர்ஜெட்டிலிருந்து புறப்பட்டதாகவும், அதில் மூன்று ஆடவர் இருந்ததாகவும் கூறப்படுகிறது. லா போர்ஜெட்டிலும், லயான்ஸிலும் பலத்த பந்தோபஸ்து வைக்கப்பட்டிருந்தது. விமான நிலையத்தண்டை எவரும் போக அனுமதிக்கப் படவில்லை.

மார்சேல்ஸில் மூன்று பிரயாணிகள் அவ் விமானத்திலிருந்து இறங்கினர். கானே வரையில் அவர்கள் அங்கு இருப்பர். கானிசிலிருந்து மார்சேல்ஸிற்கு 90 மைலே யுள்ளது. திரு. கர்க்வுட், திரு. தியோடார்ட் காடர்ட் (ஸ்ரீமதி சிம்சன் வக்கீல்) ஒரு குமாஸ்தா, ஆகிய மூவரே அப்பிரயாணிகள் எனக் கூறப்படுகிறது. ஸ்தல விமான நிலையத்தில் விமான ஓட்டியும், ஒயர்லெஸ் ஆபரேட்டரும் தங்கிவிட்டனர். மேற் கூறப்பட்ட மூவர் மட்டும் ஒரு வாடகை மோட்டாரில் புறப்பட்டுச் சென்று விட்டனர்.

பிரான்சில் ஸ்ரீமதி சிம்சன்

பிரிட்டிஷ் மன்னர் எட்டாம் எட்வர்டை மணம் செய்துகொள்ள விரும்பும் அமெரிக்க மாதான ஸ்ரீமதி சிம்சனுக்கு வயது 38. இதற்கு முன்பு அவருக்கு 2 முறை விவாகமாகி இரு விவாகங்களும் ரத்தாயிருக்கிறது. விவாகரத்து செய்யப்பட்ட அவரது இரு கணவன்மார்களும் உயிருடன் இருக்கின்றனர். மேற்படி அமெரிக்க மாது பிரிட்டனின் ராணியாக வரத் தகுதியுள்ளவரா என்பதே மந்திரி சபையின் முக்கிய யோசனையாயிருந்து வருகிறது. தம்மைப்பற்றிப் பிரஸ்தாபம் அதிகமாயிருப்பதால் தம்மை யாரும் நேரே கவனிப்பதைத் தடுப்பதற்காக ஸ்ரீமதி சிம்சன் பிரான்சுக்குப் புறப்பட்டு விட்டார். தற்கால நிலைமையில் அமைதியையும், ஒய்வையுமே தான் விரும்புவதாகவும், மன்னரின் முடிவைப் பொறுத்தே தன்னுடைய திட்டமும் இருக்குமெனவும், பிரிட்டிஷ் அரசியல் நெருக்கடிக்குக் காரணமான பிரச்சினைக்கும், தமக்கும் சம்பந்தமில்லாது செய்து கொள்வதன் மூலம், அந்நெருக்கடி தீர்க்கப்படக் கூடுமாயின், தான் உடனே அதிலிருந்து விலகிக் கொள்ளத் தயாரா யிருப்பதாகவும் ஸ்ரீமதி சிம்சன் அறிவித்துள்ளனர்.

ஜில்லா போர்டுகள் பிரிவினை

கீழ், மேல் கோதாவரி, ராமநாதபுரம்

சென்னை, டிச, 9

டிசம்பர் 15-ந் தேதியன்று கீழ், மேல் கோதாவரி ஜில்லா போர்டுகள் பிரிவினை செய்யப்பட வேண்டுமென்றும், டிசம்பர் 20-ந் தேதி ராமநாதபுரம் ஜில்லா போர்டு பிரிவினை செய்யப்பட வேண்டுமென்றும் சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

பிரிவினை செய்யப்படும் ராமநாதபுரம் ஜில்லா போர்டுகளில் ஒன்றிற்கு திருப்பூர் தலைமைக் காரியாலயமாகவும், மற்றொன்றிற்கு மதுரை தலைமைக் காரியாலயமாகவு மிருக்கும். செய்யப்பட்ட மேல் கோதாவரி ஜில்லா போர்டுகளில் ஒன்றிற்கு காசரோபேட்டை தலைமைக் காரியாலயமாகவும், மற்றொன்றிற்கு எல்லூர் தலைமைக் காரியாலயமாகவும் விளங்கும். கீழ் கோதாவரி ஜில்லா போர்டுகளில், ராஜமுந்திரி ஒன்றின் தலைமைக் காரியாலயமாகவும், காக்கினாடா மற்றொன்றின் தலைமைக் காரியாலயமாகவும் விளங்கும்.

ஸ்தல ஸ்தாபனங்களில் அரசியலுக்கு இடமில்லை

திருநெல்வேலி ஜில்லா போர்டு கலாட்டா

காங்கரஸ் கட்சித் தலைவர் கண்டனம்

திருநெல்வேலி, செப், 22

திருநெல்வேலி ஜில்லா போர்டு காங்கரஸ் கட்சித் தலைவரான அட்வகேட் திரு. என். எஸ். குப்புசாமி அய்யர் தமிழ்நாடு காங்கரஸ் சப்—கமிட்டியார் அறிக்கையைக் கண்டித்துப் பின்வருமாறு ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டியாரால் ஒப்புக்கொள்ளப்பட்ட சப் கமிட்டி ரிப்போர்ட்டில் அடங்கியுள்ள கீழ்வரும் கௌரவமான குற்றச் சாட்டுக்கு விடையளிக்கும் பொருட்டுப் பகிரங்கமாக ஒரு அறிக்கை வெளியிட வேண்டியதாக நேர்ந்துவிட்டது. அந்தக் குற்றச் சாட்டாவது:— 1, திருநெல்வேலிச் ஜில்லா போர்டு நிர்வாகத்தைப் பற்றிச் சில மெம்பர்கள் கூறிய புகார்கள் சாரமற்றவை. அவைகளுக்கு ஆதாரமுமில்லை. குறைந்த டெண்டர்கள் பைசல் செய்யப்பட்டிருக்கின்றன.

(2) டெண்டர்கள் விஷயமாக் கூறப்பட்டிருக்கும் தீர்ப்பைப் பரிசீலனைசெய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது. சம்பந்தப்பட்ட விஷயங்களில் தகராறே இல்லாமலிருப்பது மகிழ்ச்சிக்குரியது. 4லக்ஷம் ரூபாய்க்கு மேல் மதிப்பிடக் கூடிய 296 காண்ட்ரா வேலைகளுக்கு, சட்டப்படி திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவர் டெண்டர்களுக்கு விளம்பரம் செய்தார்கள். சுமார் 183-பேர் குறைந்த டெண்டர்கள் சமர்ப்பித்திருக்கும் ஜில்லா போர்டு தலைவர் அவைகளை நிராகரித்து விட்டார். காண்டிராக்டுகள் அவருடைய ஆட்களுக்குக் கொடுக்கப் பட்டன. 296-டெண்டர்களில் 183-டெண்டர்கள் குறைந்த விகிதமுடையவைகளாயிருந்தும் அவைகளை ஜில்லா போர்டு தலைவர் ஒப்புக் கொள்ளவில்லை. இதை சர்க்கார் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். அந்தக் கண்டன உத்தரவு 28-8-36-ல் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. "சென்ற தேர்தல் பிரசாரத்தின் போது இந்த அநியாயம் பல காங்கரஸ் பிரசாரக் கூட்டங்களில் கண்டிக்கப்பட்டிருக்கிறது. எனவே, விசாரணை செய்த சப் கமிட்டியார் செய்திருக்கும் முடிவு வெகு விநோதமாகவே இருக்கிறது. மற்றும், அந்த அறிக்கையின் மற்றொரு பகுதியில் தென்னாற்காடு ஜில்லா போர்டு நிர்வாகத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் சர்க்கார் விதிகளின்படி காண்டிராக்டு டெண்டர்கள் பைசல் செய்யப்பட்டிருக்கின்றன" என்று கூறப்பட்டிருப்பதைப் பார்த்து திகைப்படைய வேண்டியதாகத்தான் இருக்கிறது.

(3) மற்ற புகார்களை சப் கமிட்டியார் கண்ணை மூடிக்கொண்டு நிராகரித்துவிட்டார்கள். அவைகளைப்பற்றி ரிப்போர்ட்டில் ஒரு வார்த்தை கூட கூறப்படவில்லை. சாக்ஷிகளுக்குச் செலுத்த வேண்டிய கடமை ஒருபுறமிருக்க கேவலம் மரியாதைக்காகவாவது எங்கள் புகார்களையும் அதோடு சம்பந்தப்பட்ட விஷயங்களையும் ரிப்போர்ட்டில் சேர்த்துப் பிரசுரம் செய்ய வேண்டியது அவசியமாகும். எனவே எங்கள் புகார்களின் சாரத்தை கீழே தருகிறேன்.

(அ) குடி நீர், கல்வி அபிவிருத்தி, கிராம சுகாதார வசதிகள் முதலியன சம்பந்தமாக வாக்காளர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றிவைக்க முயற்சி செய்யப்படவே இல்லை.

(ஆ) 56 ஆசிரியர்களை வேலையிலிருந்து நீக்கியிருப்பதாக ஜில்லா போர்டு தலைவர் 3 மாத நோட்டீஸ் கொடுத்தார். அவ்வாறு நோட்டீஸ் கொடுக்கப் பட்டது அக்கிரமம் போர்டு சிப்பந்திகளுக்கு சட்டப்படி அளிக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புக்கு அது முரணானது. அந்த நோட்டீஸ்கள் மூன்று மாதங்களுக்குப் பிறகு வாபீஸ் வாங்கிக்கொள்ளப்பட்டன. எனினும் அம்மாதிரி நோட்டீஸ் கொடுப்பது சிப்பந்திகள் மனதில் வீண் அதிருப்தியை உண்டுபண்ணும் என்பதே என் வாதம். மெஜாரிட்டி கட்சியார் தலைவரின் இச் செயலை ஆட்சேபிக்கவே இல்லை.

(இ) ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கும், ஆசிரியைகளுக்கும் அவர்கள் ஸ்தல மாற்றப்படும் போது அவர்களுக்கு நியாயமாகவும், சட்டப்படியும் கொடுக்க வேண்டிய பிரயாணப் படி கொடுக்கப்படவில்லை.

(4) 1936-ல் நடைபெற்ற திருநெல்வேலி சுதேசி விவசாய கைத்தொழில் பொருட்காட்சியில் கலந்து கொள்ள வேண்டுமென்று ஜில்லா போர்டு கூட்டத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது மெஜாரிட்டி கட்சியார் அதை ஆதரிக்கவில்லை.

(5) ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் செய்யும் காங்கரஸ் கட்சியாரைக்கண்காணிக்கும் விஷயத்தில் தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டியார் இதுவரை எத்தகைய உருவான கொள்கையையும் ஏற்படுத்தவில்லை. காங்கரஸ் கட்சி மூலம் ஸ்தல ஸ்தாபன நிருவாகம் நடத்தும் ஒரு பெரிய பொறுப்பை தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டி ஏற்றுக் கொண்டு இருக்கிறது. இந்த வேலை காங்கரஸ்காரருக்குப் புதியது. இது ஒரு மனோகரமான பரீட்சார்த்த வேலையானாலும், மிகவும் ஆபத்துக்கு இடமானது. நிர்வாகத்தை வெற்றியாக நடத்துவதற்குரிய மார்க்கங்கள் கண்டு பிடிக்கப்படவே இல்லை.

(6) இந்த நிலையில் ஜில்லாக்கள் தோறும் இயங்கிவரும் காங்கரஸ் கமிட்டிகள் சரியாக வேலை செய்ய முடியாது. காங்கரஸ் கமிட்டிகள் சக்தியுள்ள ஸ்தாபனமாயிருப்பதினால் வலிமையும் செல்வாக்குமுடையவர்கள் கமிட்டிகளை கைப்பற்றிக் கொள்ளுகிறார்கள். திருநெல்வேலியில் காங்கரஸ் வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்கும் முறையில் ஜில்லாபோர்டு காங்கரஸ் மெம்பர்கள் காரியங்கள் நடத்தவில்லை.

(7) இவைகளை எங்கள் புகார்களின் சாரம் "சாரமில்லை, ஆதாரமில்லை" என்று கூறுவது சரியான விடையாகாது. ஸப் கமிட்டியார் மைனாரிட்டி கட்சிக்குப் பெரிய அநீதி செய்து விட்டார்கள். ஸப் கமிட்டியார் தம் பொறுப்புகளை சரியாக உணரவே இல்லை.

இந்தத் தொல்லைகளுக்கெல்லாம் ஏற்ற பரிகாரத்தை காங்கரஸ் தலைவர்கள் இனிமேலாவது கண்டுபிடிக்கக் கூடுமென்று நான் நம்பிக்கொண்டு இருக்கிறேன். சற்று காத்திருந்து பார்ப்போமாக !

மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் அபிப்பிராயம்

காங்கரஸ் ஆதிக்கம் பெற்ற ஜில்லா போர்டுகள்

ஒன்றாவது ஒழுங்காக நடைபெறுகிறதா ?

திருச்சி, தென்னாற்காடு, வேலூர் கதை என்ன ?

ஆந்தரா ஜில்லா போர்டுகள் அத்தனையும் ஊழல்

வாக்காளர்களே ! மோசம் போகாதீர் !!

ஜஸ்டிஸ் கட்சியார் ஜில்லா போர்டு நிர்வாகங்களை ஏற்று நடத்திய காலத்து நிருவாகம் ஒழுங்காக நடைபெற்று வந்தது. அவைகளைக் கலைக்க வேண்டுமென்று எவரும் கூறவில்லை.

காங்கரஸ்காரர் ஜில்லா போர்டுகளைக் கைப்பற்றிய சிறிது காலத்துக்குள்ளாக நிர்வாகம் மோசமாகி விட்டதினால் காங்கரஸ் தலைவர்களான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் முதலியோர் ஜில்லா போர்டுகளைக் கலைத்துவிட வேண்டுமென்றும் சர்க்காரே நிருவாகத்தைநடத்த வேண்டுமென்றும் கூற முன்வந்திருக்கிறார்கள்.

திருச்சி நகரசபை உப தலைவரும் காங்கரஸ் வாதியுமான திரு. கோபால ராவ் கூறுவதைப் பாருங்கள்:—

ஸ்தல ஸ்தாபனங்கள் சர்க்காரின் ஒரு பாகம். சர்க்கார் உதவியில்லாமல் ஒரு காரியமும் சாதிக்க முடியாது. ரஸ்தாக்கள், விளக்குகள், சாக்கடைகள், ஜல வசதி முதலியவைகளே முனிசிபாலிட்டிகளின் முக்கியமான வேலைகள். இது விஷயங்களைப் பற்றி எல்லாக் கட்சியாருக்கும் ஒரே மாதிரியான அபிப்பிராயமே இருக்கக் கூடும். எனவே ஸ்தல ஸ்தாபன அதிகாரங்களை ஒப்புக் கொண்டு சர்க்காரை எதிர்க்கப் போவதாக காங்கரஸ் கூறுவது பைத்தியகாரப் பேச்சாகும்.

திரு. சத்தியமூர்த்தி சொல்வதென்ன ?

கலப்பற்ற பூரண சுயராஜ்யம் வேண்டுமென்று காங்கரஸ்காரர் கூறுகிறார்கள் ஆனால் பம்பாயில் செய்த ஒரு பிரசங்கத்தில் திரு. சத்தியமூர்த்தி என்ன சொன்னார் தெரியுமா?

"இந்தியர்களுக்குப் பொதுவாக ஒழுக்கமில்லை. தங்களுக்கென்று சுய நிர்ணய புத்தி கிடையாது. உண்மையைச் சொல்வதற்கு இந்தியர்களுக்குத் தைரியம் கிடையாது. ஒரு கொள்கையைப் பின்பற்றி நடக்கமாட்டார்கள். தற்காலம் இந்தியர்களிடத்தில் காணும் லஞ்ச புத்தியை நான் கண்டிக்காமலிருக்க மாட்டேன். இந்தியாவில் எங்கு பார்த்தாலும் லஞ்சம் தாண்டவமாடுகிறது.

காங்கரஸ் "ஹம்பக்கு"களில் சில 'சாம்பிள்'கள்

ராமநாதபுரம் ஜில்லாவில் சமீபத்தில் நடைபெற்ற ஜில்லா போர்டு தேர்தலில் காங்கரஸ்காரர் செய்த அட்டூழியங்களை விளக்கி ஒரு நிருபர் சென்னை 'மெயில்'ல் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். மாதிரிக்காக அதிலுள்ள சில விஷயங்களைக் கீழே தருகிறோம்.

1. காங்கரசுக்கு வோட்டுக் கொடுப்பதாக மாரியாத்தாள் பேரில் சத்தியம் செய். மீறினால் மாரியாத்தாள் உனக்கு கூலி தருவாள்.

2. காங்கரசுக்கு வோட்டுக் கொடுக்கும்படி சர்க்கார் கட்டளை யிட்டிருக்கிறார்கள். மீறினால் உன் குடி கெட்டுவிடும்.

3. காங்கரஸ்காரருக்கு வோட்டுக் கொடுக்காவிட்டால் வைக்கோல் போரில் தீ வைத்து விடுவோம், கால் நடைகளைச் சுட்டுப் பொசுக்கி விடுவோம்.

4. காங்கரஸ்காரருக்கு வோட்டுக் கொடுக்கா விட்டால் ஊரில் குடியிருக்க முடியாது. சுகமாக உயிர் வாழ வொட்டோம்.

அம்மம்மா ! கொடியர்கள் !

காங்கரஸ்காரர் அஹிம்சா வாதிகளாம். நீதி நெறிப்படி நடப்பவர்களாம். எல்லாம் வாய்ப் பேச்சளவிற்றான். வேறு இடத்து வெளிவரும் டாக்டர் நத்தானியேல தம்பதிகளின் கடிதத்தை வாசித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். காங்கரஸ் உறுதி மொழிச் சீட்டில் கையெழுத்துப் போட்ட நாள் முதல மன நிம்மதியே இல்லை யென்கிறார் டாக்டர் நத்தானியேல. "இந்தப் பாதகர்கள் இல்லாவிட்டால் காங்கரஸ் வாழாதா" என்கிறார் ஸ்ரீமதி ஜூலியா நத்தானியேல். அவ்விருவரும் பொறுப்பற்றவர்களல்ல. வேலூரிலே அந்தஸ்தான பதவியிலிருப்பவர்கள். அவ்விருவரும் அவ்வாறு கூற வேண்டுமானால் காங்கரஸ் எவ்வளவு கேவலமாயிருக்கிறதென்பதைக் கூறவும் வேண்டுமோ?

(இதன் தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

காங்கரசில் "பாதகர்கள்"

டாக்டர் நத்தானியேல் தம்பதிகள் பிரலாபம்

சென்னை, மே, 12

வேலூர் ஜில்லா போர்டு மெம்பர் டாக்டர் ஆர். பி. நதேனியல் தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவருக்கு அனுப்பியுள்ள கீழ்க்கண்ட தமது ராஜிநாமாக் கடிதத்தை பிரசுரிப்பதற்காக அனுப்பியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:—

அவசரத்துடனும், தீர்க்க ஆலோசனையின்றியும், என் மனம் கலக்கமடைந்திருக்கும் பொழுதும் நான் காங்கரஸ் அங்கத்தினனாக பதிவு செய்து கொண்டதைப் பற்றி நான் வருந்தப்படுகிறேன். ஆகவே, நான் இப்பொழுது சந்தோஷத்துடன் அப்பதவியை ராஜிநாமா செய்கிறேன். இனிமேல் ஜாதித் துவேஷம் தன்னலம், கட்டுக் கடங்காத் தன்மை, போக்கிரித்தனம் ஆகிய கைத்தளைகளிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டவனாகின்றேன். வேலூர் லோகல் பண்டு ஜில்லாவில், காங்கரஸ் கட்சியில் நான் இருந்த சில காலத்திற்குள் எனக்கு இத்தகைய அனுபவம் ஏற்பட்டது பற்றி நான் மிகவும் வருந்துகிறேன். ஆகவே, தங்களுடைய பதவியின் மேன்மையாலும், தாங்கள் அடைந்துள்ள பரந்த உலக அனுபவத்தினாலும் கூடிய சீக்கிரத்தில் காங்கரஸ் கட்சியினுள் இருக்கும் குறைபாடுகளை போக்க முயலுவீர்களென நான் நம்புகிறேன்.

'கெட்ட தினம்'

உண்மையைக் கூறமிடத்து சமூகத்திற்கு சமூகம் நான் வித்தியாசம் பாராட்டியது கிடையாது. அது போலவே கட்சி வித்தியாசமும் பாராட்டியது கிடையாது. என்மனதில் அத்தகைய உணர்ச்சிகள் எதுவும் ஏற்பட்டது கிடையாது. வேதக் கோட்பாடுகளுக்கு உண்மையாகவும், பயபக்தியுடனும் நடந்துவந்த கிறிஸ்தவனாகிய எனது முக்கிய ஆவல், இத்தேச பாமரமக்களிடை அவர்களின் சமத்துவ உரிமைகளையும், சகோதரத்வத்தையும், தன்னலமற்று உழைக்கும் தன்மையையும் போதிக்கும் தன்மையாகவே இருந்து வந்தது. இருந்தபொழுதிலும் அந்த கெட்ட தினத்தன்று நான் மயக்கப்பட்டேன்— கெட்டதினமென்று நான் தைரியமாகக் கூறுவது ஏனென்றால் காங்கரஸ் தலைவர்களால் எனக்கு கொடுக்கப்பட்ட பத்திரத்தில் நான் கையெழுத்திட்டது முதல்-எனக்கு மன நிம்மதி யென்பதே கிடையாது.

"சிவிக் போர்டுக்கு ரு. 100 கோடு"

காங்கரஸ் பத்திரத்துடன் என்னிடம் அவர்கள் வந்தபொழுது, ஜில்லா, போர்டின் மெம்பர் பதவிக்கு, குடியாத்தம் தாலுக்காவில் சுயேச்சையாக வேலை செய்துவந்தேன். அப்பதவிக்கு பலத்த போட்டியிருந்தது. அப்பொழுது ஜில்லா சிவிக் போர்டுக்கு 100 ரூபா கட்டிவிட்டு நான் காங்கரசில் சேர்ந்து கொண்டால் என்னை எதிர்ப்பவர்கள் மறைந்து விடக் கூடும், என எனக்கு நம்பிக்கை காங்கரஸ் தலைவர்களால் கொடுக்கப்பட்டது. காங்கரசில் அங்கத்தினராயில்லாத பிறமனிதர்கள் எதிர்த்தாலும், காங்கரஸ் தன் பூரண பலத்தையும் உபயோகித்து நான் வெற்றி பெறும்படி செய்ய உதவி புரியுமென அவர்கள் வாக்குறுதி யளித்தனர்.

காங்கரஸ் வாக்குறுதி நான் கைச்சாத்திட்டு காங்கரசில் நான் சேர்ந்த பின், எனக்கு உறுதி கொடுத்த இத் தலைவர்கள் எனக்காக என்ன செய்தார்களென்பது நான் இன்னும் தெரியக் கூடாமலிருக்கிறேன். சுகம் சௌகரியம், வேலை, வரும்படி எல்லாவற்றையும் துறந்து நான் தனியாக நின்று போராட வேண்டியே நேரிட்டது. ஒரு மூகம் கான் படமுடியாத கஷ்டங்களை எல்லாம் பட்ட பின்னரே, கடைசியில் எதிர்ப்பின்றி நான் வர நேரிட்டது.

காங்கரஸ் அங்கத்தினர்களின் கீழ்த்தர நடவடிக்கைகள்

ஜில்லா போர்டு மெம்பர் பதவிக்கு சிவிக் போர்டு அங்கத்தினர்களை நியமித்த சமயத்தில் சிவிக் போர்டிலுள்ள சில மெம்பர்களை ஜில்லா போர்டு மெம்பர் பதவியில் மோகம் கொண்டு, அது நிமித்தம் தங்களுக்கு வேண்டிய அங்கத்தினர்களையே தேர்ந்தெடுத்தது வருந்தத் தக்கதாகும். ஏனெனில்: அதன் மூலம் தலைவர் தேர்தலின்பொழுது தங்களுக்கே அதிகப்படியான ஓட்டுகள் கிடைக்கக் கூடும் என அவர்கள் எண்ணினர். சிவிக் போர்டு மெம்பர்களின் அத்தகைய மனப்பான்மையாகப் பட்டது கட்சியின் கட்டுப்பாட்டையும், கொள்கைகளையுமே குலைப்பதாகும்.

வகுப்புவாத தீவிரம்

மேலும் மாகாண காங்கரஸ் போர்டில பொறுப்புள்ள பதவியை வகித்து வரும் ஒரு கனவான், தன்னுடைய சமூக அங்கத்தினரொருவரை தலைவர் பதவிக்காக பிரசாரம் செய்யச் சொன்னார். அவ்விதம் செய்யக் கூடாதென ஸ்தல சிவிக் போர்டு கூறியும் அதனை மீறி அந்த அங்கத்தினர் அவ்விதமே பிரசாரம் செய்தார். மற்றும் 3 அங்கத்தினர்களும் தலைவர் பதவிக்காக வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ, பிரசாரம் செய்து வந்தனர். துரதிர்ஷ்டவசமாக அந்த 4 அங்கத்தினர்களில் 2 பேர், ஒவ்வொருவரும் தனித்தனி சமூகத்தைச் சேர்ந்தவராயிருந்த படியால் அவர்களுக்குள்ளாகவே பிளவு ஏற்பட்டு வகுப்புவாதம் தோன்றி, ஒருவரை வெளிப்படையாக பேசிக்கொள்ள ஆரம்பித்து விட்டனர். மாகாண போர்டின் பிரதிநிதிகள் சம்மதத்தின் மேல் வெளிப்படுத்தப்பட்ட ஸ்தல சிவிக் போர்டின் கண்டிப்பான உத்தரவுகளையும் அவர்கள் சிறிதும் பொருட் படுத்தவில்லை. ஏப்ரல் 20-ந் தேதி வரையில் ஓட் செய்யும் அங்கத்தினர்களுக்கு பலவித மாயா ஜால வார்த்தைகள் கூறப்பட்டன. மேற்குறிப்பிட்ட தேதியன்று தலைவர் பதவிக்கு தகுதியான ஒரு அங்கத்தினரை தேர்ந்தெடுப்பதற்காக சென்னையில் காங்கரஸ் மண்டபத்தில் ஒரு கூட்டம் கூடியது.

திரு. அப்துல் ஹகீமுக்கு திரு. ராஜகோபாலச்சாரி ஆதரவு

காங்கரசின் எண்ணங்களுக்கும், கொள்கைகளுக்கும் புறம்பான சில

(இதன் தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தொண்டர்கள் ஓலம்

காங்கரஸ் தேசபக்தர்கள் கூட்டமாம். தேச விடுதலையே காங்கரஸ் லக்ஷியமாம். பட்டம் பதவிகளில் காங்கரசுக்கு விருப்பமில்லையாம். வகுப்பு வாதம் காங்கரசுக்கு துளிகூடக் கிடையாதாம். ஆனால் நெடுங்காலம் காங்கரஸ் ஊழியம் செய்த தொண்டர்கள் கூறுவதென்ன? காங்கரஸ் சுயநலக் கோட்டையாம். வகுப்புவாதக் கோட்டையாம். பிற்போக்காளர் பணக்காரர் பதவி வேட்டைக்காரர் புகலிடமாம். அத்தாட்சி வேண்டுமானால் காங்கரஸ் தொண்டர்களான த. நா. சிவானந்தமும், எஸ். எஸ். ஆறுமுகமும் எழுதியுள்ள கடிதங்களைப் பாருங்கள். அவை வேறிடத்தில் வெளி வருகின்றன.

கார்ப்பரேஷன் கூத்து

சென்னை கார்ப்பரேஷன் உத்தியோகஸ்தர்களுக்கு 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் கொடுக்கக்கூடாதென்று கார்ப்பரேஷன் காங்கரஸ் மெம்பர்கள், ஒரு பட்டுத் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்கள். இது பாமர மக்களை ஏய்க்கும் சூழ்ச்சியே யன்றி வேறல்ல. இதை சென்னை 'மெயில்' 'ஹிந்து' போன்ற பிரபல பத்திரிகைகள் கண்டித்திருக்கின்றன. அந்தக் கண்டனத்தை வேறிடத்துக்காணலாம் "பம்பாய் கிரானிகல்" "செண்டினல்" போன்ற காங்கரஸ் பத்திரிகைகளும் கூட கண்டித்து எழுதியிருக்கின்றன.

சத்தியமூர்த்தி உடன்பாடு

ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றிய காங்கரஸ்காரர்களுக்கு நிர்வாக அநுபவம் இல்லை. ஸ்தல ஸ்தாபன ஊழியத்துக்குப் புதியவர்கள். எனவே பல அசம்பாவிதங்கள் ஏற்பட்டிருப்பது மெய்யே.

சகோதரர்களே!

காங்கரஸ் பகட்டினால் மதிமோசம் போகாதீர்! காங்கரஸ்காரர் வாய் வீச்சுக்காரர்; கையாலாகாதவர்கள். ஆகாயக் கோட்டை கட்டுபவர்கள்.

காங்கரசில் "பாதகர்கள்"

(5-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மேற்கண்ட எதிர்பாராத முடிவுகள் அன்று ஏற்பட்டது எனக்கும், மற்றும் சிலருக்கும் பேராச்சரியத்தை விளைவித்தது.

(1) காங்கரஸ் சிவிக் போர்டால் நிறுத்தப்பட்ட அங்கத்தினர்களும் எதிராக வெற்றி பெற்ற 4 ஜில்லா போர்டு காங்கிரஸ் மெம்பர்களை, எதிர்ப்பு ஏற்பட்டும் காங்கரஸில் சேர்க்கப்பட்டுக் கொண்டனர்.

(2) அச்சமயம் அக்கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்த சென்னை மேயர், சௌகார், சி. அப்துல்ஹமீது சாயபுவுக்கு ஆதரவாக சில வார்த்தைகள் பேசினர். அது தலைவர் பதவிக்கு போட்டி போடும் அங்கத்தினர்கள், அவருக்காக விட்டுக்கொடுக்கும்படி மறைமுகமாக அவர்களைக் கேட்டு கொள்வது போலவே இருந்தது.

(3) மேயரின் வேண்டுகோளைப் பின்பற்றி திரு. சி. ராஜகோபாலாச்சாரியாரும் சௌகார் அப்துல் ஹமீதைக் குறித்து பாராட்டிப் பேசி "நான் ஓர் மெம்பராயிருக்கும் பக்ஷத்தில் அவருக்கே நிச்சயமாக ஓட் போடுவேனென்று கூறினர்.

"நம்பிக்கைத் துரோகம்"

தலைவர் பதவிக்காக முயற்சித்து வந்த அந்த காங்கரஸ் வாதிகள் திரு. ராஜகோபாலாச்சாரியின் குறிப்பை ஏற்காததால், தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக தேர்தலே நடைபெற்றது. முடிவில் ஸ்தலஸ்தாபன அநுபோகமில்லாதவரும், தலைவர் பதவிக்கு வேண்டிய யோக்கியதாம்சங்கள் இல்லாதவருமான ஒருவர் 13 ஓட்டுகள் சாதகமாகவும் 12 ஓட்டுகள் எதிரிடையாகவும் பெற்று வெற்றியடைந்தார். உடனே அங்கு வீற்றிருந்தவர்களிடை அதிருப்தியும் ஏமாற்றமும் காணப்பட்டது. சிலர் துணிந்து தேர்ந்தெடுக்கப் பெற்ற அங்கத்தினர் மீது தங்கள் அதிருப்தியையும் தெரிவித்தனர்.

இத்தகைய சந்தர்ப்பங்களிலே நம்பிக்கைத் துரோகம் ஏற்பட்டே தீரும். அவ்விதம் ஏற்பட்டதிலும் ஆச்சரியப் படத்தக்க தொன்றுமில்லை. மாகாண போர்டின் [illegible] நடவடிக்கையே அதற்குக் காரணமாகும். உண்மை இவ்விதமிருக்க சிவிக் போர்டு, ஜில்லா போர்டு மெம்பர்களில் சிலர் பேடித்தனமான முறையைக் கைக்கொண்டு என்மீது போர் தொடுப்பது ஏனோ தெரியவில்லை—ஒரு சமயம் காங்கரஸ் மெம்பர்களின் மீது ஏற்பட்டுள்ள சந்தேகம் தங்கள் மீதும் ஏற்படாதபடி பாதுகாத்துக் கொள்வதற்காக கைக் கொள்ளப் பட்ட ஒரு தந்திரமாக இருக்கலாம்! அவர்களின் நடவடிக்கையைக் குறித்து ஜில்லா சிவிக் போர்டு தலைவருக்கு நான் முறையிட்டுக் கொண்டதற்கு இதுவரையிலும் ஒரு பரிகாரமும் ஏற்படாமலிருந்து வருவதற்கு நான் வருந்துகிறேன்.

ஆகவே என்னுடைய உணர்ச்சிக்கும் சுயமரியாதைக்கும் நான் காங்கரசில் மேலும் இருந்து வருவது சரியெனத் தோன்றாத படியால் நான் ராஜினாமா செய்கிறேன். தயவு செய்து அதை ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமதி ஜூலியா நதானியல் ராஜினாமா

காங்கரசில் "பாதகர்கள்"

தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவருக்கு ஸ்ரீமதி ஜூலியா நதானியல் மேற்கண்ட கடிதத்தை அனுப்பியுள்ளார்.

காங்கரசில் அங்கம் வகித்து வருவதால் எனக்கு ஏற்படும் தாழ்வையும், கோளையும் பொறுக்க மாட்டாமல் என்னுடைய அங்கத்தினர் பதவியை ராஜினாமா செய்கிறேன். பொறுப்புள்ள அரசியல் ஸ்தாபனத்தின் நன்மைக்கு அதன் ஸ்தாபனங்களின் நடவடிக்கை குற்றமுடையதாகவும், தடுக்கப் படத்தக்கதாகவும், தாழ்மையானதாகவும் இருப்பது கூடாது. தன்னிடத்தே அத்தகைய பாதகர்கள் இல்லாமல் காங்கரஸ் வளர முடியாதா?

த. நா. சிவானந்தம் ராஜிநாமாக் கடிதம்

தஞ்சை, நவ. 20

நீண்ட காலமாக காங்கரஸ் அங்கத்தினராயிருந்த தோழர் த. நா. சிவானந்தம், தான் காங்கரஸிலிருந்து விலகுவதாகவும், இந்த அறிக்கையைப் பத்திரிகைகளில் வெளியிடுமாறும் தெரிவித்துள்ளார்.

1907-ம் ஆண்டிலிருந்து இடைவிடாது காங்கரஸ் வளர்ச்சிக்கு எங்கள் குடும்பமே வேலை செய்து வந்தது. 1922-ல் எனது சகோதரர் தோழர் த.நா. நடராஜன், 3 ஆண்டு, 3 மாதம் சிறை சென்றார். அதற்குப் பிறகு 1932-ம் ஆண்டில் 1-ஆண்டும், அவரது மனைவி 6-மாதமும் சிறை சென்றார்கள். யான் மும்முறை சிறை சென்றேன். காங்கரஸில் பல அதிகார ஸ்தாபனங்களில் தலைவராகவும், காரியதரிசியாகவும் இருந்துள்ளேன். கதர் அணிந்ததற்காக எம். எஸ். எம், ரயில்வே இஞ்சினீயர் ஆபீஸிலிருந்து நீக்கப் பட்டேன். எங்கள் குடும்பத்தில் 73-ஆண்டுகள் நிறைந்த தந்தையுள்பட கடந்த 15-ஆண்டுகளாக கதர் அணிந்து வருகிறோம். எங்களால் ஆனவரை காங்கரசிற்கு இதுவரை சளையாது, முன்னணியில் நின்று உழைத்து வந்தோம். இவைகளைத் தற்பெருமைக்காகவல்ல யான் கூறுவது, எங்களைப் பொதுஜனங்களுக்கு அறிமுகப் படுத்தவே கூறுகிறேன்.

காங்கரஸ் மகாசபையானது இப்போது பணக்காரர், மிதவாதிகளின் கைகளுக்கு இழுத்துச் செல்லப்படுகிறது. ஜில்லா போர்டு தேர்தலிலிருந்து சட்டசபைத் தேர்தல் வரை தனி மனிதர்களின் ஆதிக்கத்திற்காக உபயோகப் படுகிறது என்றும் ஜனநாயக முறைகள் காற்றில் விடப் படுகிறதென்றும், பொருளாதார நிலையில் பொதுஜன வாழ்வில் சளையா உழைப்பினால் சிறுமைக்கு உண்மையான காங்கரஸ்காரர்கள் செல்வந்தர்களின் ஆதிக்கத்திற்காகப் புறக்கணிக்கப்பட்டு ஒடுக்கப்படுவதும் எங்கும் காணப்படுகிறது. பதவி மோகம் பிடித்தவர்கள் பல வேறு வழிகளில் ஸ்தாபனங்களைக் கைப்பற்றிக் கொண்டு, தங்கள் சுயநலத்திற்கு, உபயோகித்துக் கொள்வதைக் காணும்போது அதனின்று விலக என் மனம் துணிகின்றது. புதியவராய், பொருளாதாரத்துறையில் பொதுஜன வாழ்வில், இதுவரையில் கலந்து சனைக்காதவராய், பலர் காங்கரசில் வந்து புகும்போது அந்த வெள்ளத்தினின்று வருகின்ற துன்பங்களுக்கு எதிர் நோக்கி நிற்க ஆற்றல் இலனாய் கரை ஓரத்தே சாய்ந்து கிடக்கும் மரங்களில் சற்றுதக்க, யான் காங்கரஸ் மகாசபையினின்று மிக வருத்தத்துடன் விலகிக் கொள்கிறேன்.

(ஜன நாயகம்)

காங்கரஸ் கட்சியில் எனது அனுபவம்

காங்கரஸ் தொண்டர் பிரலாபம்

திருச்சி, டிச. 1

லால்குடி தாலூகா காங்கரஸ் கமிட்டியின் மாஜி காரியதரிசியான திரு. எஸ். எஸ். ஆறுமுகம் கடந்த 2-ந்தேதி திருச்சி தேவதானம் கருணாநிதி பார்க்கில் கூடிய மருத்துவர் சங்க பொதுக் கூட்டத்தில் பேசியதாவது:—

நான் சென்ற ஐந்தாண்டுகளாக காங்கரஸ் கமிட்டியின் நிர்வாகஸ்தனாக இருந்து வந்திருக்கிறேன். வேலைகாரனாகவோ, சதிகாரனாகவோ சூட்சிக்காரனாகவோ நான் காங்கரசிற்குச் செல்லவில்லை. காங்கரஸ் கட்சியில் வகுப்பு பேதமும் சுயநலமும் பாராட்டப் படுவதில்லை என்னும் விளம்பரத்தைப் பார்த்தே உண்மை உணர்வோடு அங்கு சென்றேன். ஆனால் அதற்கு மாறாக அங்கு வகுப்புப் பேயின் ஆதிக்கமும், சுயநல வேட்டையுமே நிலவுகிறது. இதனை நான் அனுபவ பூர்வமான ஆதாரத்துடன் கூறுகிறேன். அவசியமாயின் அவ்வாறு நிரூபிக்கப் பல சான்றுகளும் கூறுவேன். தேனொழுகப் பேசும் தேசியப் பேச்செல்லாம் வீண் டம்பமே. நம்மை சமூக இயலில் அமிழ்த்தி வைத்த ஒரு கூட்டத்தார் அரசியலிலும் அவ்வாறு செய்ய தம் வாழ்க்கையைக் கருதி காங்கரசிற்கு மெருகேற்றிப் பயன் படுத்தி வருகின்றனர். முடிவாகக் கூறவேண்டுமானால் காங்கரஸ் சுயநலமிக்க சதிக் கூட்டமாகவே இருந்து வருகிறது. அர்த்தமற்ற ஆர்ப்பாட்டங்களையும், வீண் ஆரவாரங்களையும் கண்டு மயங்காது அது விஷயத்தில் மிகுந்த ஜாக்கிரதை யுடனேயே நாம் நடந்து கொள்ளவேண்டும்.

காங்கரஸ்காரர் யோக்கியதை

சென்னை, செப். 4

இம்மாதம் இரண்டாந் தேதி இரவு, ஜார்ஜ் டவுன், முல்லா சாயபு தெருவில் காங்கரஸ்காரர்களால் ஒரு கூட்டம் கூட்டப் பட்டது. அதில் பலர் திரு. சத்தியமூர்த்தி ஐயரின் யோக்கியதையை வெளிப்படுத்தினார்கள். அதன் சாரம் பின் வருமாறு:—

திரு. சபாபதி முதலியார் முதல் முதலில் பேசுகையில் கூறியதாவது:—காங்கரஸ் துவங்கி ஐம்பதாண்டுகள் ஆயிற்று. பலனுள்ள, உருப்படியான காரியம் ஒன்றையும் காங்கரஸ் ஏழைகளுக்குச் செய்யவில்லை. ஏழைகளுக்கு ஆதரவு தருவதாக காங்கரஸ்காரர்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். இருந்தாலும் வரப்போகும் நகரசபைத் தேர்தலில் தொழிலாளர் சார்பாக என்னை அபேட்சகனாக அவர்கள் தேர்ந்தெடுக்க ஆசை கொள்ளவில்லை. எனவே, சொல்வது ஒன்றாகவும் செய்வ தொன்றாகவும் அவர்கள் (காங்கரஸ்) நிலை இருக்கிறது.

என்னைத் தேர்ந்தெடுக்காததன் மூலம் தொழிலாளர் குறைகளை வெளிப்படுத்த இருந்த சந்தர்ப்பத்தைக் காங்கரஸ்காரர்கள் மறந்து விட்டார்கள். ஒரே தன்மையில், ஏழைகளையும், தொழிலாளர்களையும் வசப்படுத்தாமல் போனால் எவ்வாறு சுயராஜ்யம் பெற முடியும்? இவ்வாறு பேசுவதினால் நான் காங்கரசிற்கு விரோதியல்ல. கடந்த பதினாறு ஆண்டுகளாக நான் காங்கரஸ்காரனாக இருந்து வந்திருக்கிறேன். எனவே, என்னை ஒருவரும் காங்கரஸ்காரனல்ல என்று சொல்லிவிட முடியாது.

அடுத்தபடியாக திரு. எம். ரங்கசாமி பேசியதாவது:—

நாங்கள்தான் உண்மையான காங்கரஸ்காரர்கள். இந்தியா விடுதலையடைய வேண்டுமென்பது தான் எங்கள் எண்ணம். தேசத்திற்காக நாங்கள் தடி அடி பட்டோம்? சிறை சென்றோம்; போலீஸ் கண்காணிப்புக்கு ஆளானோம். ஆனால் திரு. சத்தியமூர்த்தி கம்பேனி செய்த தியாகமென்ன? இவ்வளவும் செய்தும் இந்தியா அடைந்ததென்ன?

'ஜஸ்டிஸ் கட்சியும் காங்கரஸ் போன்ற ஒரு கட்சிதான். காங்கரஸ்காரர்களைப் போன்றே அக்கட்சியில் இருப்பவர்களும் மனிதர்கள் தான். சர்க்காருக்கு சம்பந்தமான அலுவல்களில் பங்கு கொள்ள மாட்டோம் என்று முதலில் காங்கரஸ்காரர்கள் சொன்னார்கள். ஆனால் இப்பொழுதோ அவர்கள் (காங்கரஸ்) சர்க்காரின் சகல காரியங்களிலும் கை பொத்தி வாய்மூடி மௌனியாய் கலந்து கொள்ளுகிறார்கள். இது அவர்கள் சுயமதிப்புக்குக் கேடுசூழ்வதல்லவா?

காங்கரசில் எங்களுக்குள்ளாகவே பிளவுகளை உண்டாக்கிக் கொள்ள நாங்கள் காரியம் செய்யவில்லை. ஆனால், இன்று காங்கரசுக்குள் இருந்து வரும் கழிவடைகளை உள்ளிருந்து விரட்டி அடிக்கவே நாங்கள் வேலை செய்கிறோம்.

திரு. என். வி. நடராஜன் பேசியதாவது:—சட்டசபையைக் கைப்பற்ற வேண்டுமென்று தீர்மானித்த தென்னமோ உண்மைதான். இருந்தாலும் துரோகிகளையும், நயவஞ்சகர்களையும் அவ்விடத்திற்கு அனுப்புவதில் பொருளில்லை. சென்னை நகரசபை காங்கரஸ் தேர்தல் கமிட்டி, அபேட்சகர்களைப் பொறுக்கியெடுப்பதில் ஹிமாலயத் தவறைச் செய்துவிட்டது. அப்படி (காங்கரஸ் சார்பாக) தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் யோக்கியதாம்சங்கள் பெரிதும் வெறுக்கத்தக்கன

காங்கரஸ்காரர் காலாடித்தனம்

ரகளை செய்வதே அவர்களின் வாடிக்கை

ஒரு கோடி ரூபாயும், ஒரு லட்சம் தொண்டர்களும் அளித்தால் 1920 டிசம்பர் 31-ந்தேதி இரவு 12 மணிக்கு முன் சுயராஜ்யம் கொண்டு வருகிறேன் என்று கூறினர் உலகப் பெரியாரான மகாத்மா காந்தி.

ஆனால் ஒன்றே கால் கோடி ரூபாயும் ஒரு லக்ஷம் தொண்டர்களும் கொடுத்தோம். கண்ட பலன் என்ன?

ஒன்றேகால் கோடி ரூபாயும் காங்கரஸ் பக்தர்களுக்கு அர்ப்பணமாயிற்று. தொண்டர்கள் சிறை புகுந்தார்கள். தடியடிபட்டார்கள், நோய் கண்டு மரித்தார்கள். ஆண்டிகளானார்கள். அநேக பெற்றோர் மக்களை இழந்தார்கள்; அநேக குடும்பங்கள் குடும்பத் தலைவரை இழந்தனர். அநேகர் வீடிழந்து சொத்திழந்து மனைவி மக்களை இழந்து பரதேசிகளானார்கள்.

சுயராஜ்யம் வரவில்லை. காந்தியார் வாக்குறுதியும் நிறைவேறவில்லை. அவரும் அலுத்துப்போய் அரசியலையே தலை முழுகி விட்டார். அவர் இப்பொழுது ஒரு காலணா காங்கரஸ் மெம்பர்கூட இல்லை. ஆகையால் காங்கரசுக்கு தோல்வி ஏற்பட்டது கண்கூடு.

ஆனால் காங்கரஸ்காரர் ஒப்புக் கொள்வதில்லை.

அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா?

சுயராஜ்யம் வராவிட்டாலும் பாமர ஜனங்களுக்கு புரட்சி மனப்பான்மை தோன்றி இருக்கிறதல்லவா? சர்க்காரை எதிர்க்கும் மனப்பான்மை தோன்றி இருக்கிறதல்லவா? பாமர மக்கள் கோழைத்தனம் ஒழிந்துவிட்டதல்லவா? இது பெரிய காரியமல்லவா! என்றெல்லாம் காங்கரஸ்காரர் சமாதானம் கூறுகிறார்கள்.

அதாவது காங்கரஸ்காரரிடம் முரட்டுத்தனம் தோன்றி யிருக்கிறது என்பதுதான் அர்த்தம்.

அந்த முரட்டுத்தனந்தான் இப்பொழுது நாட்டைக் குட்டிச்சுவராக்குகிறது.

மற்றக் கட்சியார் கூட்டம் போட்டால் காங்கரஸ் அக் கூட்டங்களில் புகுந்து கலாட்டா செய்வதும், அழுகல் முட்டைகளை வீசுவதும், செருப்புகளை வீசுவதும் ஒரு வாடிக்கையாகி விட்டது

ஜவஹர்லால்

கூட முரட்டுத்தனமாகவே நடந்து கொள்ளுகிறார். சமீபத்தில் அவர் தென்னாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்த போது பல இடங்களில் முரட்டுத்தனமாக நடந்து கொண்டதை நீங்கள் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள்.

சுதேசமித்திரன் ஆசிரியர் திரு. ஸி. ஆர். ஸ்ரீநிவாசன் கூறுவதைப் பாருங்கள்:—

(1) (ஜவஹர்லால்) தான் தான் மகா புத்திசாலி, தனக்குத்தோன்றுவதுதான் சரி என்று கருதுபவர். மற்றவர்கள் அபிப்பிராயத்தை சரியானபடி மதிக்காதவர்.

(2) நிதானமற்ற அவசரக் குடுக்கை

(3) முரட்டுத்தனமான சுபாவமுடையவர்.

(4) தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்பவர்.

(5) புஸ்தகம் படித்தவரே தவிர உலகப்படிப்பு படித்தவரல்ல.

சகோதரர்களே! தலைவர் யோக்கியதையே இவ்வாறிருந்தால் தொண்டர்கள் யோக்கியதையைப் பற்றிக் கூறவும் வேண்டுமா?

சுத்த வீரர்கள் காங்கரஸ் தேர்தல் கூட்டங்களிலும் கூட கலவரம் செய்து மண்டையை உடைத்துக் கொள்கிறார்கள்.

சென்னையில் அடிதடி

இம்மாதம் 4-ந்தேதி சென்னை காங்கரஸ் மண்டபத்தில் சமீபத்தில் பெய்ஜ்பூரில் நடைபெறப் போகும் காங்கரஸ் மகாநாட்டுக்கு ஒரு அபேட்சகரைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு ஒரு தேர்தல் நடந்தது.

அதற்கு திரு. விநாயக முதலியாரும், திரு. தியாகராஜ பிள்ளையும் உட்பட 4 பேர் போட்டிபோட்டார்கள்.

முதலியாருக்கும் பிள்ளைக்கும் பலத்த போட்டி யிருந்தது. இரு கட்சியாரும் ஓட்டுச் சீட்டுகளை வைத்துக்கொண்டு கூட்டத்திற்கு வெளியே சென்று தம் தம் கட்சி அபேட்சகருக்கே ஓட்டு செய்ய வேண்டுமாறு வோட்டர்களிடம் சொல்லி பலாத்காரமாகச் சீட்டுகளில் குறிப்பு வைக்கும்படி வற்புறுத்தி வோட்டுகளைச் சேகரித்துப் பாலட்டு பெட்டியில் கொண்டு போய்ப் போட்டார்களாம். இதைச் சிலர் ஆட்சேபித்தார்களாம். இதன் பேரில் இருதிறத்தாருக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டு அடிதடியில் முடிந்தது.

அதற்குள்ளாக பாலட் பெட்டிகளையும் அப்புறப்படுத்தி விட்டார்களாம்.

"தினமணி" காங்கரஸ், "சத்தியமூர்த்தி" காங்கரஸ் என்ற இருகட்சி முக்கியஸ்தர்களே இதற்குக் காரணம்.

நிலைமை மிகக் கேவலமாகி நடக்கவே காங்கரஸ் மண்டபத்திலிருந்து யாரோ ஒருவர் போலீசாருக்கு விஷயத்தை அறிவித்ததின் பேரில் போலீசார் காங்கரஸ் மாளிகைக்குச் சென்று கூட்டத்தைக் கலைத்துவிட்டார்கள். இந்த அமளியில் யாரோ ஒருவர் ஒரு பிரபல காங்கரஸ் அங்கத்தினரைச் செருப்பால் அடித்ததாகவும் சொல்லப்படுகிறது. குழப்பமேற்பட்டதால் தேர்தல் நடைபெறவில்லை.

இதைப்போல், சென்னையில் நடைபெற்ற பல காங்கரஸ் தேர்தல்களில் அடிதடி நடந்தும் இருக்கின்றன.

"குடி அரசு (29-11-36-ல்) எழுதியிருப்பதாவது:—

காங்கரசுக்கு கொள்கையற்று செலவுக்கு பணமும் அற்றுப்போன பின்பு அது தனது உயிர் வாழ்வுக்கு காலித்தனத்தையே குறையாத பொக்கிஷமாய்க் கருதி இருக்கிறது என்பதை சமீப தேர்தல்களில் அவர்கள் நடந்துகொண்ட மாதிரிகளால் நன்றாய் உணர்ந்து கொண்டோம்.

இது விஷயமாய் சர்க்காருக்கும் முன்பு பல தடவைகளில் வலியுறுத்தி பத்திரிகைகளில் எழுதியிருக்கிறோம். சர்க்கார் சிறிதும் கவனித்ததாகத் தெரியவில்லை.

சமீபத்தில் மந்திரிகள் சென்ற இடங்களிலும், தேர்தல் கூட்டங்கள் நடந்த இடங்களிலும், தேர்தல் நடந்த இடங்களிலும் காங்கரஸ்காரர்கள் நடந்துகொண்ட காலித்தனங்கள் சர்க்காரார் அறிந்திருக்க மாட்டார்கள் என்று யாராலும் சொல்லிவிட முடியாது.

அதிகாரிகள் பெரும்பாலோர்கள் பார்ப்பனர்கள் ஆனதினாலும் குறிப்பாக போலீஸ் இலாகா பார்ப்பன ஆதிக்கமாய் இருந்து வருவதாலும் காங்கரஸ் பார்ப்பன ஆதிக்க ஸ்தாபனமானதினால் காங்கரஸ்காரருக்கு காலித்தனம் செய்ய வசதியும் தைரியமும் அதிகமாகஇருந்து வருகிறது என்று கருதவேண்டி இருக்கிறது.

ராமநாதபுரம் ஜில்லாவில் விருதுநகர் தேர்தலிலும், தேர்தல் கூட்டங்களிலும் காலிகள் செய்த அட்டகாசத்திற்கு அளவே இல்லை என்பதோடு எல்லாப் பொறுமைகளும் தீர்ந்துபோக வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டது.

சிறு பையன்களைப் பிடித்து கொடிகளை கொடுத்து எதிர் அபேட்சகர்களை வைய சொன்ன காட்சி மிகவும் சகிக்கக் கூடாததாகவே இருந்திருக்கிறது என்று தெரிகிறது.

கூட்டங்களில் அவர்களைக் கொண்டு தொல்லையும் கலவரமும் செய்த காட்சியும் கடுமையான பொறுமை காட்டாமல் இருந்திருந்தால் கொலைகள் நடந்திருக்கும் படியான நிலைமை உண்டாக்கின.

இவற்றை சர்க்காரார் கவனியாமலிருப்பதன் இரகசியம் இன்னது என்று நமக்கு இன்னும் விளங்கவில்லை.

ஆகையால் இனியாவது அரசாங்கம் சற்று கவலைகொண்டு கூட்டங்களிலும் தேர்தல்களிலும் காலித்தனம் நடைபெறாமல் இருப்பதற்கு ஏதாவது முயற்சி செய்வார்கள் என்று எண்ணுகிறோம்.

ராமநாதபுரம் ஜில்லா போர்டுக்கு சமீபத்தில் நடந்த தேர்தலில் காலித்தனத்தினாலேயே சில இடங்களில் காங்கரஸ்காரர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இது ஜில்லா வாசிகள் பலருக்குத் தெரியும்.

10-ந் தேதியும், 14-ந் தேதியும் நடைபெறப் போகும் தேர்தல்களிலும் காலித்தனம் செய்து வாக்காளர்களைப் பயமுறுத்தி ஹிம்சித்து வெற்றிபெறவே முயற்சி செய்து வருகிறார்கள்.

ஆகவே அன்பார்ந்த சகோதரர்களே! இம்மாதிரி முரட்டுத்தனம் செய்கிறவர்களை நீங்கள் ஆதரிக்கப் போகிறீர்களா? சத்தியத்துக்கும் ஒழுக்கத்துக்கும் கடவுளுக்கும் பய[illegible]யமான பொதுஜன சேவை செய்கிறவர்களை ஆதரிக்கப் பே[illegible]றீர்களா?

கடவுளுக்கும் சத்தியத்துக்கும் பயந்தவர்கள் திரு. வெங்கடாசலம் செட்டியாரவர்களையே ஆதரிக்க வேண்டும்.

கோபி தாலுகா

காங்கரஸ் கமிட்டியின் சூழ்ச்சி

(டவாலி எழுதியது)

காங்கரஸ் கங்கை பிரவாகம் போன்றது என்றும், பணக்காரர் ஆதிக்கமற்றது என்றும், எல்லா ஜன சமூகங்களையும் கொண்டது என்றும், 'கா'என்று சொன்ன மாத்திரத்தில் கேட்போர் மனதில் கலக்கத்தை உண்டாக்கக் கூடிய அபூர்வ சக்தி வாய்ந்தது என்றும் வானளாவ, சத்தியமூர்த்தி போன்ற ஆரியப் புளுகன் கம்பெனியாரால் புகழப்படும் அந்த பார்ப்பன ஸ்தாபனத்துக்கு, தன்னல மற்ற, சுத்தவீர, பார்ப்பனரல்லாத பணக்காரர்கள் அவர்களது அநுமதி யில்லாமலும், அவர்களுக்குத் தெரியாமலும், தாலூகா காங்கரஸ் கமிட்டியின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர் என பத்திரிகைகளில் பிரசுரம் செய்வதும், தாலுக்காவிலுள்ள எல்லா பணக்காரர்களுடைய பெயரையும் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினராகப் பெயரளவில் சுதாவாக காங்கரஸ்காரர்கள் போட்டுக் கொள்வதும், பின்னர் தங்களைக் கலந்து கொள்ளாமலும், தங்களது அநுமதி பெருமலும் காங்கரஸ் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்ததும் கண்டிக்கத் தக்க விஷயம் என்றும், தங்களுக்கும் காங்கரசுக்கும் யாதோர் சம்மந்தமும் கிடையாது என்றும், காங்கரஸ் ஊழல்களைக் கண்டறிந்த பார்ப்பனரல்லாத காங்கரஸ் நிர்வாகஸ்தர்கள் என்று பார்ப்பனர்களால் அழைக்கப்பட்ட அந்த பணக்காரர்கள் மறுப்பு எழுதுவதும், அதைக் கண்டு காங்கிரஸ் பிரதானப்பதிகள் தலை குனிவதும், ஓடோடியும் வந்து 'உங்களை [எங்களது பலத்துக்குத் தானே மெம்பராக போட்டு வைத்திருந்தோம். நீங்களும் காங்கரஸ் கமிட்டி அங்கத்தினர் என்ருல், அந்த ஜஸ்டிஸ் வாலிபர்களுக்கு கோபியில் கொஞ்சம் பயமிருக்கும், என்று பல்லைக் காட்டி நிற்பதும், காங்கரஸ் மகாசபையின் ஆதரவு இன்மைக்கா? அல்லது 1937 ஏப்ரல் 1-ந் தேதி முதல் சத்தியமூர்த்தி சாஸ்திரி மந்திரியார் (?) ஸ்தாபிக்க நினைத்திருக்கும் காங்கரஸ் கவர்மெண்டுக்கு அடிகோலியான வரப்போகும் மாகாணத் தேர்தலில் கோபி தாலுக்காவில் காங்கிரஸ் காலியாகும் என்ற பயமா? அல்லது காங்கிரஸ் அபேக்ஷகர்களை பணக்காரர்கள் தேர்தலில் தாக்குவார்கள்; ஏனெனில் பொதுவுடமைக் கொள்கையை ஆதரிக்கின்ற காங்கிரஸ் தலைவர் அதை ஆதரிப்பது பணக்காரர்களுக்கு அச்சத்தை உண்டாக்கும் என்று எங்கே பணக்காரர்கள் நினைத்து விடுவார்களோ என்ற பயமா? அல்லது காங்கிரஸ் கக்ஷியின் ஊழல்களையும் அட்டூழியங்களையும் அவ்வப்போது பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டி பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிர்ப் பிரசாரம் செய்து வரும் ஒரு சில பார்ப்பனரல்லாத வாலிபர்களை, அவர்கள் செய்யும் நியாய முறையான பிரசாரத்தைத் தடுக்க, பார்ப்பன செல்வாக்கை உயர்த்தவும் பருத்தி அல் காரர்களால் செய்யப்படும் சூழ்ச்சியா என்று கேட்கின்றேன். ஒரு நபரை — அதுவும் பணக்காரர் காங்கரஸ் கமிட்டியின் அங்கத்தினராக அவரது சம்மதமின்றியும், பத்திரிக்கைகளில் வரும் வரை அவருக்குத் தகவலின்றியும் தேர்ந்தெடுப்பது என்ருல், இந்த நேர்மையற்ற, ஒழுக்கமற்ற, நடைமுறையில்லாத தேர்தல் முறையை தேர்தல் என்று கூறுவதா? குச்சிக்காரித் தொழில் என்று கூறுவதா? என்று பொது மக்களைக் கேட்கின்றேன். சென்ற 15 வருடங்களாக பார்ப்பனரல்லாத மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டதும், பாடுபடுவதும், படப்போவதுமான ஜஸ்டிஸ் கட்சியையும், அதன் மாபெருந் தலைவர்களையும், ஜமீன்தார்கள் கட்சி, என்றும், பணக்காரர்கள் கட்சி என்றும், பிற்போக்காளர் கட்சி என்றும் ராக்ஷசர்கள், அரக்கர்கள் என்றும் மனிதத் தன்மையில்லாது பொதுக் கூட்டங்களில் தூற்றும் வீரர்கள் இன்று கொழுத்த பணக்காரர்களையும், மிராசுதார்களையும், பேங்கர்களையும் பொறுக்கி எடுத்து தாலூகா காங்கரஸ் கமிட்டியில் சேர்த்திருப்பதின் நோக்க மென்ன? அவர்கள் பெயர்களைச் சொல்லி பாமர மக்களை ஏத்தி 'ஜவுண்டர் காங்கரஸ் கமிட்டி மெம்பர் நீங்கள் காங்கரசுக்குத்தான் ஓட்டுப் போட வேண்டும்' என்று பல்லைக் காட்டி ஓட்டுப் பிச்சை வாங்கவா என்று கேட்கின்றேன். அவ்வாறு இல்லையானல் தாலூகா கமிட்டியின் எல்லா அங்கத்தினர்களையும் பெருத்த செல்வாக்குடைய பணக்காரர்களையே தேர்ந்தெடுப்பது எதற்கு? அப்படி யில்லையானல் இன்றைய தாலூகா காங்கரஸ் கமிட்டியின் ஒவ்வோர் அங்கத்தினரின் நிலைமையைப் பற்றியும் விளக்கமாகக் கூறி அங்கத்தினர்களாக தேர்ந்தெடுத்ததற்கு முன் அவரவர்களின் சம்மதம் வாங்கப்பட்டதா? அப்படியாயின் தேர்தலின்போது ஒவ்வொருவரையும் பிரேரேபித்தவர் யார்? ஆமோதித்தவர் யார்? என்பதையும் பொது மக்கள் உணருமாறு கோபி தாலூகா காங்கரஸ் கமிட்டி காரியதரிசி பத்திரிகைகளின் மூலம் பிரகரிப்பாரா என்று நான் கேட்கிறேன்.

காங்கரசை இந்த பார்ப்பனரல்லாத பணக்காரர்கள் ஆதரிப்பதாகவே வைத்துக் கொண்டாலும், அவர்களுடைய பெயரை உபயோகப் படுத்துவதின் மூலம் காங்கரஸ் கட்சி தாலூகாவில் பலமடையும், எலக்ஷனில் வெற்றி பெறும்; என்பதைவிட பெருத்த நோக்கம், வரப்போகும் தேர்தல் செலவுக்கு பண்டு என்றும், பட்டேல் நிதி என்றும் பொது மக்களை ஏய்த்துப் பணத்தைப் பறித்து, பார்ப்பனர்கள் விலாப் புடைக்க உண்டு, கஷ்டமின்றிக் காரத்திண்ணையில் தூங்கி விட்டு பணச்செலவானதும் பொய்க் கணக்குப் போட்டோ; அல்லது தோலாவுக்கு செலவு இவ்வளவு; தருத்தியானுக்கு பத்திரிக்கை நடத்திய வகைக்கு கொடுத்தது இவ்வளவு என்று புளுகி கணக்குகளை 'ரைட் ஆப்' செய்து விடலாம், இது நமக்குத் தெரியாதா? திலகர் சுயராஜ் நிதியை விடவா வரப்போகும் தேர்தல் நிதிக்கு பணம் வந்து குவிந்து விடப் போகின்றது! என்ற பகற் கனவு காணவா என்று கேட்கிறேன். ஐயா! அய்யம்மாரே! ஏழை ஜனங்கள் பெயரைச் சொல்லி பணம் வசூல் செய்ததையும் அதை வீணில் சாப்பிட்டு ஏப்பம் விட்டதையும் நாடு அறிந்து விட்டது சாமி! இனிமேல் இந்த சூழ்ச்சி நடக்காது. பணக்காரர்களும் பார்ப்பனரல்லாதாரும் விழித்துக் கொண்டார்கள்! படேலல்ல! அவர் தாத்தா படே! படே! படேல் வந்தாலும் பணம் பெயாது என்பதையும் வீணில் பட்டேல் வந்து பாதலிக்க வேண்டா மென்றும் எச்சரிக்கை செய்கின்றேன். தவிர வஞ்சகப் பார்ப்பனர்களின் சதியாலோசனைக் கழகமாகிய காங்கரஸ் ஊழல்களை அறிந்து, அதற்குத் தனது அனுமதியின்றி தேர்ந்தெடுத்தமைக்குச் சரியான ஆப்பு அறைந்த நமது தோழரை நாம் பெரிதும் பாராட்டுவதுடன், ஏனைய பார்ப்பனரல்லாத பணக்காரர்களும் ஜாக்கிரதையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். முதலில் பெயரைப் பத்திரிக்கையில் போடுவார்கள். பின்பு பட்டேல் வருகிருர்; பணங்கொடு என்பார்கள் ஐயர் எலக்ஷனில் நிற்கிருர்; அஞ்சாமல் அவருக்கே ஓட்டுப் போடு என்பார்கள்! தோழர்களே உங்கள் பணம் பத்திரம்! உங்களுடைய ஓட்டுரிமையைப் பார்ப்பனரல்லாத மக்களின் முன்னேற்றத்துக்கு உழைத்து வருவதும், பஞ்சாங்கப் பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளை வெளிப்படுத்தியதும், மக்களின் நலம் கருதி உழைத்து வந்ததும்-வருவதுமான நமது ஜஸ்டிஸ் கக்ஷி அன்பர்களையே வரப்போகும் மாகாணத் தேர்தலில் ஆதரிக்க வேண்டுமாகவும் கேட்டுக் கொள்கிறேன். தோழர்களே! பார்ப்பனரல்லாத மக்களே! பணக்காரர்களே! வாக்காளர்களே! ஜாக்கிரதை! பார்ப்பனன் பட்டேல் நிதி என்று வருவான்! பணம் உஷார்!! பல்லைக் காட்டி பணம் கேட்டால் பழைய பணத்துக்கு கணக்குக் கேளுங்கள்? முழிப்பான்! அப்போது முதுகு காட்டி ஓடும்படி செய்யுங்கள். ஜாக்கிரதை! உஷார்!! பணம் உஷார்!!!

காங்கரஸ் மாளிகையில் செருப்படி

காங்கரஸ்காரர்களுக்குள் அடிதடி

திரு. சத்தியமூர்த்தியின் சூழ்ச்சி ?

போலிஸ் பிரவேசம்

பாலட் பெட்டிகள் மறைந்தன ?

சென்னை, டிச, 5

சமீபத்தில் பெய்ஸ்பூரில் நடைபெறப் போகும் காங்கரஸ் மகாநாட்டிற்கு, மிஸஸ் ஹானன் அஞ்சலோ என்றவருக்குப் பதிலாக வேறு ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க நேற்று காங்கரஸ் மாளிகையில் தேர்தலுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மிஸஸ் ஹானன் அஞ்சலோ சென்ற நவம்பர் மாதம் 14-ந்தேதி நடந்த தேர்தலில் பெய்ஸ்பூர் காங்கரஸ் மகாநாட்டிற்கு 14 பிரதிநிதிகளில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் அவர் ராயபுரம் முனிசிபல் தேர்தலில் காங்கரஸ் அபேட்சகர்களுக்குப் போட்டியாக நின்றதாகக் கூறி, தமிழ்நாடு காங்கரஸ் நிர்வாகக் கமிட்டியார் மிஸஸ் ஆஞ்சலோவின் தேர்தலை ரத்து செய்து மறு தேர்தல் நடத்துமாறு உத்தரவிட்டார்கள்.

4 அபேட்சகர்கள்

இதை முன்னிட்டுத் தேர்தல் நேற்று நடைபெற்றது. திரு. பி. கே. விநாயக முதலியார், திரு. தியாகராஜபிள்ளை உள்பட நால்வர் தேர்தலுக்கு அபேட்சகர்களாக நின்றார்கள். முதலியாருக்கும் பிள்ளைக்கும் பலத்த போட்டியிருந்தது. இரு கட்சியாரும் ஓட்டுச் சீட்டுகளை வைத்துக் கொண்டு கட்டிடத்திற்கு வெளியே சென்று தம்தம் கட்சி அபேட்சகருக்கே ஓட்டுச் செய்ய வேண்டு மென்று ஓட்டர்களிடம் சொல்லி பலாத்காரமாகச் சீட்டுகளில் குறிப்பு வைக்கும்படி வற்புறுத்தி, ஓட்டுகளைச் சேகரித்து பாலட் பெட்டியில் கொண்டு போய் போட்டார்களாம். இதை சிலர் ஆக்ஷேபித்தார்களாம். இதன் பேரில் இருதிறத் தாருக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டு அடிதடியில் முடிந்தது.

அதற்குள்ளாக பாலட் பெட்டிகளையும் அப்புறப்படுத்தி விட்டார்களாம்.

"தினமணி" காங்கரஸ்! "சத்தியமூர்த்தி காங்கரஸ்"! என்ற, இரு கக்ஷி முக்கியஸ்தர்களே இதற்குக் காரணம்.

நிலைமை மிகக் கேவலமாகிவிடவே, காங்கரஸ் மாளிகையிலிருந்து யாரோ ஒருவர் போலீசாருக்கு விஷயத்தை அறிவித்ததின் பேரில் போலீசார் காங்கரஸ் மாளிகைக்குச் சென்று கூட்டத்தைக் கலைத்து விட்டார்கள். இந்த அமளியில் யாரோ ஒருவர் ஒரு பிரபல காங்கரஸ் அங்கத்தினரை செருப்பால் அடித்ததாகவும் சொல்லப் படுகிறது. குழப்பம் ஏற்பட்டதால் தேர்தல் நடைபெறவில்லை.

காங்கரஸ் மாளிகையில் சண்டை ஏற்பட்டது இது 5-வது தடவை. (ஜன நாயகம்)

சங்கர நயினர் கோவில்

செங்குந்தர் கைத்தறி நெசவாளர்கள் பொதுக் கூட்டம்

(ஒரு நிருபர்)

சங்கர நயினர் கோவில், டிச, 5

மேற்படி பொதுக் கூட்டம் 29-ந் தேதி பகல் 10 மணிக்குச் செங்குந்தர் கார்த்திகை பஜனை நிலையத்தில் நடைபெற்றது. வக்கீல் திரு. என். பழனியாண்டி முதலியார். பி. ஏ. அவர்கள் தலைமை தாங்கினார்கள். தலைவர் அவர்களும் மற்றும் கைத்தறி நெசவாளர்கள் முன்னேற்றத்தில் அக்கரையுடைய அபிமானிகள் பலரும் கைத்தறி நெசவாளர்களின் தற்கால நிலைமையைப்பற்றியும், முன்னேற்றத்திற்கான வழிகளைக் குறித்தும் பேசினார்கள்.

தீர்மானங்கள்

1. அம்பாசமுத்திரத்தில் நடைபெற்ற செங்குந்தர் ஆருவது மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை அநுசரித்து இந்நகரத்தில் மற்ற நகரங்களைவிட சுமார் 2500 தலைக்கட்டு செங்குந்தர்கள் இருப்பதால், அவர்கள் பொது நன்மையை உத்தேசித்து அப்போதைக் கப்போது தங்களுக்கு வேண்டிய சீர்திருத்தங்களைப்பற்றி பிரசாரம் செய்யவும், பின்னும் முன்னேற்றத்திற்கான, வழிகளைத் தேடவும், இந்த ஜில்லாவுக்கே ஓர் பிரதான சபையாக செங்குந்தர் மஹாஜன சங்கம் ஏற்படுத்த இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

2. இந்திய கவர்மெண்டார் கைத்தறி நெசவாளர்களுக்கு ஓர் உபகாரத் தொகை ஒதுக்கிவைத்துச் சென்னை கவர்மெண்டார் மூலமாய் இந்த இராஜதானிக்கு உதவித் தொகை கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதலால், இந்நகரத்தில் கைத்தறி நெசவாளர் சங்கம் ஒன்று ஏற்படுத்தி, சுமார் 3000 கைத் தறிகள் இங்கிருப்பதால் அவர்களுக்கு நன்மை செய்ய சர்க்கார் உத்தியோகஸ்தர்களை வரவழைத்து அவர்கள் மூலமாய் இந்தச் சங்கத்திற்கு வேண்டிய பொருளுதவியும், மற்றும் வசதிகளும் பெற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

3. மேற் கண்ட இரண்டு சங்கங்களுக்கும் நிருவாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கும் வரை திருவாளர்கள். என். எம். திருவுடையா முதலியார், டி. அருணசல முதலியார், எஸ். பிச்சாண்டி முதலியார் இவர்கள் பத்திரிக்கைகளிற் பிரசாரம் செய்யவும், நெசவாளர்கள் முன்னேற்றத்தின் பொருட்டு சர்க்கார் உத்தியோகஸ்தர்களை இந்நகரத்திற்கு விஜயம் செய்யுமாறு கிருபம் எழுதி அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவும் வேண்டுமென்று இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

4. மேற்கண்ட கமிட்டிக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வக்கீல். ஸ்ரீமான் என். பழனியாண்டி முதலியார் பி. ஏ. அவர்களை இக் கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது. அவைத் தலைவரவர்கள் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரம் கூறப் பெற்று 1-மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

அநுதாபக் கூட்டம்

(ஒரு நிருபர்)

அம்பா சமுத்திரம், டிச, 7

இவ்வூர் கைத்தறி நெசவாளர் சங்கத்தின் ஆதரவில் புதன்கிழமையன்று ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திரு. ஆர். ஷண்முகப்பா முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். காலஞ்சென்ற சிதம்பரம் பிள்ளையவர்களின் பெருமையைப் பற்றியும், அவர் தேசத்திற்குச் செய்த சேவையைப்பற்றியும் புகழ்ந்து அநேகர் சொற்பொழிவாற்றினார்கள். அன்னவரின் மரணத்தைக் குறித்து ஓர் அநுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. வழக்கம் போல் தேசியக் கீதம்பாடக் கூட்டம் முடிவடைந்தது.

சமுத்திரம் ஆதிதிராவிட வாலிபர் சங்கம்

மாதாந்தரப் பொதுக் கூட்டம்

(ஒரு நிருபர்)

சமுத்திரம், டிச, 7

சென்ற வியாழக்கிழமை 3-12-36 இரவு 7-30 மணிக்கு ஷை சங்கதின் பொதுக் கூட்டமொன்று திரு. மொட்டையன் அவர்கள் தலைமையில் கூடியது. அன்பர்கள் ஏராளமாக விஜயம் செய்திருந்தனர். தலைவர் முன்னுரைக்குப் பின் திரு. எஸ். வி. முத்து அவர்கள் பேசும் போது வருகிற மார்ச்சு மாதத்தில் ஆதித்திராவிட வாலிபர்களின் 7-வது மகாநாடு நடத்த வேண்டுமென்றும், அதற்கு ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களை அழைக்கவேண்டுமென்றும் கூற எல்லோரும் ஆமோதித்தனர். பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள், ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது.

தீர்மானங்கள்

1. தாழ்த்தப் பட்டவர்களுக்கு ஆலயப் பிரவேசம் அளித்தது பற்றி இக் கூட்டம் திருவாங்கூர் மகாராஜா அவர்களுக்கும், ஆலயப் பிரவேசத்திற்காக அரும்பாடு பட்ட திரு. ஈ. வெ. ரா. அவர்களுக்கும் தங்கள் மன மகிழ்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

2. சென்னையில் நிறுவியிருக்கும் தாழ்த்தப் பட்டோர் ஸ்தல ஸ்தாபன போர்டை இக்கூட்டம் ஆதரிக்கிறது.

3. கோவை திரு. ஆர். வீரையன் அவர்களைச் சென்னை சட்டசபைக்கு அபேட்சகராய் நிற்க இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

வாழ்த்துக் கூட்டம்

(ஒரு நிருபர்)

சென்னை, டிசம், 7

நேற்று மாலை 6 மணிக்குப் புதுப் பேட்டை ஊழிய சங்கம், அருந்ததிய சங்கம், ஆதி ஆந்திர சங்கம் இவைகளின் ஆதரவில் ஓர் வாழ்த்துக் கூட்டம் நடை பெற்றது. அதற்கு ஸ்ரீமதி அலமேலுமங்கைத் தாயார் அம்மாள் தலைமை வகித்தார். சென்னை கார்ப்பரேஷன் கவுன்சிலர்களான திருவாளர்கள். சி. பாசுதேவ், டி. சிவஷண்முகம், வேலாயுதபாணி, எச். எம். ஜெகநாதம் முதலியவர்களைப் பாராட்டி சிலர் பேசினார்கள். காரியதரிசியால் வந்தோபசாரம் கூறப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது.

திருத்துறைப் பூண்டி ஐக்கிய சங்கம்

திருத்துறைப்பூண்டி, டிச, 3

2-12-36 புதன்கிழமை மாலை 6-30 மணிக்கு சங்கக் கட்டடத்தில் சங்கத்தலைவர் எஸ். கே. அய்யா செட்டியார் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் கூடியது. தலைவர் முகவுரைக்குப்பின் மினிட் புத்தகம் வாசிக்கப்பட்டது.

பிறகு காலம் சென்ற தேசபக்தர் வி. ஓ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் மரணத்திற்கு ஒரு அநுதாபத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

பின்பு சங்கத்தின் இரண்டாவது ஆண்டுவிழாவை இம்மாதம் 13-ம் தேதி நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. விழாவில் தலைமை வகிக்க கடலூர் சோதரி டி. எஸ். குஞ்சிதம் பி. ஏ. எல். டி. அவர்களும், சொற்பொழிவாற்ற கடலூர் தோழர் எஸ். குருசாமி பி. ஏ. அவர்களும் பாபநாசம் தமிழ்ப் பண்டிதர் சாமி சிதம்பரனார் அவர்களும் இசைந்துள்ளார்கள். விழாவை முன்னின்று நடத்த 6 பேர்கள் கொண்ட ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. விழா சம்பந்தமான வேலைகள் துரிதமாய் நடந்து வருகிறது என காரியதரிசி எழுதுகிருர்.

காஞ்சீபுரம்

ஆண்டர்சன் உயர் நிலைப்பள்ளி தமிழ்க் கழகம்

பாராட்டுத் தீர்மானம்

(ஒரு நிருபர்)

காஞ்சீபுரம், டிச, 5

இக்கழகத்தின் சார்பாக (4-12-36 வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்கு, திரு. சாமுவேல் பர்க்கன் பி.ஏ. அவர்கள் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தே திருவாங்கூர் அரசர் மக்கள் எல்லோருக்கும் சாதிமத பேதமின்றிக் கோயில்களைத் திறந்து விட்டதைப் பாராட்டி ஓர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. வித்துவான் திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் தீண்டாமை நீக்க அவசியத்தைப் பற்றியும், திருவாங்கூர் அரசர் செய்த அருஞ் செயல்களைப் பற்றியும் விளக்க உரைத்தனர்.

பிறகு 'இசை'யென்ற பொருள் பற்றி நடராஜன், வரதராஜன், வரதன் முதலிய மாணவர்கள் சொற்பொழிவாற்றினர். தலைவர் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

ரயில்வே கால அட்டவணை

சென்னை: (சென்ட்ரல் ஸ்டேஷன்)

வண்டியின் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
பெங்களூர் மெயில் ...	மாலை 9-30	காலை 6-10
,, பாசஞ்சர் ...	மாலை 9-40	காலை 5-30
,, பாசஞ்சர் ...	காலை 6-20	மாலை 7-40
,, எக்ஸ்பிரஸ் ...	மாலை 1-0	மாலை 2-10
பம்பாய் ,, ...	காலை 8-30	மாலை 4-55
,, மெயில் ...	மாலை 8-45	காலை 5-55
வால்டேர் பாசஞ்சர் ...	மாலை 7-30	காலை 10-35
,, பாசஞ்சர் ...	காலை 9-5	மாலை 6-10
கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் ...	காலை 7-45	மாலை 5-51
செய்க்ரூர் பாசஞ்சர் ...	காலை 9-20	மாலை 3-40
ஜோலார்பேட்டை பாசஞ்சர் ...	மாலை 12-50	மாலை 2-0
ரேணிகுண்டா லோகல் ...		காலை 9-40
,, பாசஞ்சர்	—	— மாலை 9-22
காட்பாடி பாசஞ்சர் ...	மாலை 5-30	காலை 9-40
அரக்கோணம் பாசஞ்சர் ...	மாலை 6-30	— —
மலபார் எக்ஸ்பிரஸ் ...	மாலை 8-5	காலை 7-20
கல்கத்தா மெயில் ...	மாலை 8-25	காலை 7-50
புளுமவுண்டன் எக்ஸ்பிரஸ் ...	மாலை 9-15	காலை 6-30

சென்னை : (எழும்பூர்)

வண்டியின் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
செங்கோட்டை பாசஞ்சர் ...	காலை 7-30	மாலை 7-30
கடலூர் பாசஞ்சர் ...	மாலை 4-5	காலை 11-20
இண்டோ—சிலோன் எக்ஸ்பிரஸ்	,, ,, 9-0	... 6-45
திருவனந்தபுரம் பாஸ்டு பாசஞ்சர்	,, 9-30 ,,	... 6-10
திருச்சி பார்சல் பாசஞ்சர்	,, 10-20 ,,	... 5-30
கார்டு லேன்		
தனுஷ்கோடி பாஸ்டு பாசஞ்சர் ...	காலை 11-25	மாலை 2-45
திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் ...	மாலை 8-0	காலை 7-20

விடுதலை யாவழி யாதெனக் கேட்பராயின்
[illegible] [illegible] [illegible] சின்ன
[நாட்டினரெல்லாம்
பொருள் சுகப்பேறுகள் [illegible] பெற்று
திருமிக வாழ்தலே யாம்

விடுதலை

VIDUTHALAI

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்று நின்ற
செம்மொழியை திருமொழியை
[தேன்மொழியை
தனித்தியங்கும் ஆற்றலுள தொன்மொழியை
[அமிழ்தனைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
[அனுதினமும் பழக்கம் செய்வீர்.

மலர்-2] சென்னை: (9-12-1936) தாது ஹூ கார்த்திகை மீ 24உ புதன்கிழமை [இதழ்-54

தமிழ்நாடும், கைத்தறிகளும்

பல தோழர்களின் அபிப்பிராயங்கள்

வேலை இல்லாத் திண்டாட்டத்திற்கு காரணம் என்ன?

மாகாண சங்கமும் மகாநாடும் கூட்ட முன் வாருங்கள்

(உறையூர். கோ. வே. மு. இலட்சமணய்யா எழுதியது)

சென்னை மாகாணத்திலும், பிற மாகாணங்களிலும் சில ஆண்டுகளாகவே கைத் தறி நெசவுகளுக்கு வேலை இல்லாத் திண்டாட்டங்கள் ஏற்பட்டுத் தொழிலாளர்கள், பசிப் பிணியாலும், வறுமையாலும் அவதியுறுவதை பத்திரிகைகளின் வாயிலாக நண்பர்கள் அறிவர்.

கைத் தறி நெசவுகளுக்கு வேலையில்லாத் திண்டாட்டங்கள் ஏற்பட்டதிற்கு பலர் பல காரணங்களைக் கூறியும், எழுதியும், பேசியும் வருகின்றனர். ஆனல் பொது ஜனங்களின் நன்மைக்கே ஏற்பட்டதாக பறை சாற்றி, பாரினில் பல மேதாவிகளையும், அரசியல் தீர்க்க தரிசிகளையும் கொண்டுள்ள ஒரு பெரிய ராஜீய இயக்கம் இன்று வரை கைத்தறி நெசவாளர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு எவ்வித பரிகாரத்தையும் செய்யவில்லை. நமது மாகாணத்தை தவிர்த்து, பிற மாகாணங்களிலாவது வயது முதிர்ந்த மகான்களையும், தீர்க்க தரிசிகளையும் கொண்ட அந்த ராஜீய இயக்கம் என்ன சாதித்து விட்டது?

பரம்பரையாக, கைத் தறி நெசவாளர்களின் வழியத்தால் பணம் சம்பாதித்தவர்கள் இன்று வரை நெசவாளர்களின் நலனுக்கு எவ்வித வழியும் செய்யவில்லையே! ஏழை நெசவாளர்கள் வேலையில்லாக் கொடுமையால் வெளியூர்கட்குச் சென்று பிச்சை எடுத்து வயிறு வளர்க்கும் கொடுமையைக் கண்டும் இவர்கட்கு நெஞ்சிரக்கம் உண்டாகவில்லையே.

தோழர்களே! நமது வேலை இல்லாத் திண்டாட்டங்களையும், பசிப் பிணி, வறுமைகளையும், போக்க தோழர்கள் பலர் வகைகூறியுள்ள உதாரணங்களைக் கவனியுங்கள். 5-11-32 ந்தேதி, "திராவிடன்" பத்திரிகையில், பம்பாய் விளம்பர அதிகாரியால், பம்பாய் மாகாண சர்க்கார் பார்வைக்கு அனுப்பிய அறிக்கையில் பின்வரும் விஷயங்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

பம்பாய் மாகாணத்திற்கு கைத் தறி நெசவு பொருளாதாரத்திற்கு முக்கியமானது; விவசாயத்துக்கு அடுத்தபடியானது. பம்பாய் மாகாணத்தில் மட்டும், கைத்தறி, நெசவுகளில் 3, 23, 231 பேர்களுக்கு வேலையும் உணவும் அளித்து வருகிறது. ஆனல், இப்போது வேலையும், உணவும் கிடைப்பது அரிதாகி விட்டதினுல் கீழ்க்கண்ட காரணங்களை ஆராய்ச்சி செய்ய முன் வந்தனர்.

1. கைத்தறி நெசவுகளுக்கு எதனல் சவுகரியம் குறைவு?

2. சர்க்கார் எவ்வித பரிகாரம் செய்ய வேண்டும்?

3. எத்தகைய துணிகளை கைத் தறிகளில் தயாரித்தால், மில் தொழில் சாலைகளுடன் போட்டி போட முடியும்?

4. எந்த முறையை சர்க்கார் செய்தால் கைத்தறிகளுக்கு நன்மை ஏற்படும், என்றும்.

ஆமதாபாத், சூரத், பிரோச், பம்பாய், ஷோலாப்பூர் முதலான இடங்களில் மில்கள் போட்டி பலமாக இருந்து வருவதால் சர்க்கார் இத்தொழிலாளர்கள் பால் உதவி செய்ய முன் வந்தால் மில்களின் போட்டியை சமாளிக்கவும், மேலும் மேலும் அபிவிருத்தி செய்யவும் சௌரியமாக இருக்கும். கைத்தறியாளர்களில் 100-க்கு 5—பேர்கள் முதலாளிகளாய் இருந்து வியாபாரம் செய்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் 100, 200 தறிகள் வேலை செய்து வருகின்றன. இதில் மூன்று பிரிவுகள் உண்டு. முதல் வகுப்பார்கள் முதலாளிகள்; இரண்டாவது வகுப்பார் ஏதோ கொஞ்சம் பணம் கையில் வைத்துக்கொண்டு தறிகளுக்கு வேண்டிய நூல் முதலிய சாமான்களை வாங்கிச் சொந்தமாக நெய்து விற்பனை செய்யக் கூடிய நிலைமையில் உள்ளவர்கள் 100-க்கு 25 பேர்கள். மூன்றாவது வகுப்பார்கள் நெசவுத் தொழிலாளர்கள். தாழ்ந்த நிலைமையில் குடும்பத்தை நடத்தவும் முடியாமல் முதலாளிமார்களிடம் கடன் பட்டு தங்களிடம் உள்ள சொற்ப சொத்துக்களையும் முதலாளிமார்களே அடையும்படி விட்டு விடுகிறார்கள். இவ்வித நிலைமையில் இருப்பவர்கள் 100-க்கு 70 பேர்களுக்கு குறையாதவர் உண்டு. ஆகையால் மூன்றாவது வகுப்பினர்களான நெசவுத் தொழிலாளர்கள் நல்ல நிலைமைக்கும் கடன் படாமலும் வாழவேண்டுமானல், எவருடைய உதவியையும் எதிர் பாராமல் தறிகளுக்கு வேண்டிய நூல் முதலியன, வாங்கி விற்பனை செய்ய வழிகாண வேண்டும். மேலும் கைத்தறி நெசவுகளில் பல நூற்றுக் கணக்கான வருஷங்களாக; உற்பத்தி செய்து வந்த மாதிரித் துணிகளைத்தான் இன்னும் செய்து வருகின்றனர். அதனை மாற்றி மில் துணிகளுடன் போட்டி போடக் கூடிய மாதிரி துணிகளை உற்பத்தி செய்ய முயற்சிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் மில் துணிகள் கைத்தறி நெசவுத் துணிகளுடன் போட்டி போடாமல் சமாளிக்க முடியும். கைத்தறி நெசவாளர்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையோடு ஒரு ஸ்தாபனம் ஸ்தாபித்து அதன்படி கட்டுப்பாடாகவும், வைராக்கியத்துடனும் இருப்பின் நல்ல பலனை அடையலாம். மேலும், கைத் தறி மூலமாக பலன் பல அடைய வேண்டுமானல ஆங்காங்கே சர்க்கார் கைத் தறி பாடசாலைகள் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

தோழர்களே மேற் கூறிய விஷயங்கள் பம்பாய் விளம்பர அதிகாரியின் அறிக்கையின் சுருக்கமாகும். இவை நிற்க 31-1-36-ந் தேதி "சுதேசமித்திர"னில் "கைத் தறி நெசவுக் காட்சியும், போட்டியும்" என்ற தலையங்கத்துடன் ஒரு விஷயம் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இந்தியாவில் மூன்றில் ஒரு பாகம் கைத் தறி நெசவுகளில துணி உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் பொருளாதாரத் துறையில் முக்கிய அம்சமாக இருந்து வருகிறது.

ஆகையால் கைத் தறி நெசவுகளை அபிவிருத்தி செய்ய பீகார், ஒரிசா மாகாண சர்க்கார் மேற்படி காட்சியை நடத்த இந்தியா கவர்ன்மெண்டார் மாகாண கவர்ன்மெண்டாரிடம் ரூபாய் 10 ஆயிரம் கொடுத்துள்ளார்கள் என்றும் மேற்படி காட்சி பாட்னவில் 10-2-36 முதல் 24-2-36-ந் தேதி வரையில் நடக்குமென்றும், அது காலை கைத் தறியில் ஆர்வம் கொண்டவர்களும் அனுதாபிகளும் வருவார்கள் என்றும், 12 தறிகளில் பலமான போட்டிகள் நடக்கும் என்றும் 30 ம் நெம்பர் நூலில் வேஷ்டிகளும் 40 ம் நெம்பர் நூலில், அழகிய கரைகளுடன் கூடிய புடவைகளும் 30 ம் நெம்பர் நூலில் செக் கோட்டிங் துணிகளும் நெய்து போட்டி போட ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் 5 பேர்களை அழைப்பதென்றும், தக்க பரிசுகளும், பதக்கங்களும் கொடுக்கப்படும் என்றும் கண்டிருந்தன இதன் விஷயமாக காட்சி நடத்தும் அதிகாரிகளுக்கு விபரம் எழுதி கேட்டும் நாளது வரை நமக்குப் பதில் இல்லை இவை நிற்க 7-2-35-ந் தேதிய "சுதேசமித்திர"னில் "மத்திய மாகாண-கைத்தறி நெசவு அபிவிருத்தித் திட்டம்-இந்தியா கவர்மெண்டின் அங்கீகாரம்" என்ற தலைப்பின் கீழ் மத்திய மாகாண கவர்மெண்டார் கைத்தறி நெசவு அபிவிருத்திக்காக தயாரித்திருந்த திட்டத்தை இந்தியா கவர்ன் மெண்டார் அங்கீகாரம் செய்து கொண்டு 5 வருடங்களுக்கு வருடம் தோறும் ரூ. 17 ஆயிரம் கொடுத்து உதவி புரிவதாகவும், இதனைக் கொண்டு கைத் தறி நெசவுகளில் தயார் செய்யப்படும் துணிகளைக் கூட்டுறவு முறையில் விற்பனை செய்ய ஆரம்பித்ததாக கண்டுள்ளது. இவை நிற்க 8-2-35 ந் தேதி 'சுதேசமித்திர'னில் சேலம் பாரத வாலிப சங்கத்தார் கூட்டிய கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் செய்துள்ளார்கள்.

1. கைத்தறி நெசவுகளில் தயாரிக்கப்படும் துணிகளைப் போன்று மில்களில் தயாரிக்காமல் இருக்கும்படி மில் முதலாளிகளைக் கேட்டுக் கொள்வதாகவும், 2. கவர்ன்மெண்டார் இது விஷயத்தில் கவனம் செலுத்தும்படிக்கும் 3 சாயம் போட ஜப்பான் துணிகளை எவரும் வாங்காமலும், கைத்தறிகளில் செய்யப்படும் துணிகளை வாங்கி சாயம் போடும்படிக்கும் தீர்மானித்துள்ளனர். இவை நிற்க.

திருநெல்வேலி மேலப்பாளையத்தில் கைத் தறி நெசவாளர் மகாநாடு ஒன்று 7-3-36 ந் தேதியில் நடந்ததாக "விடுதலை" 18-3-36 ந் தேதியில் பத்திரிகையில் வெளி வந்துள்ளது. அம் மகாநாட்டில் கீழ் கண்ட தீர்மானங்கள் செய்துள்ளனர்.

கைத் தறி நெசவாளர்கள் வேலை இல்லாத் திண்டாட்டத்தை சர்க்கார் கவனிக்குமாறும், கைத் தறி நெசவாளர்களின் வேலை இல்லாத்திண்டாட்டத்தைப் பாதுகாக்க சர்க்கார் முன்வந்து மேற்காணும் பாதுகாப்புகளை அளிக்க வேண்டுமென்றும் 1-40-ம் நெம்பர் நூலுக்கு குறைந்த நூல்களில் தயார் செய்யப்படும் துணிகளை அன்னிய நாடுகளிலிருந்தும் இந்திய மில்களிலிருந்தும் இறக்குமதியும், உற்பத்தியும் செய்யாமல் கைத்தறிகளில் தயாரிக்கப்படும் துணி விலைக்கு அன்னிய ஆடையும், இந்தியா மில ஆடையும் விலை குறைவாக விற்க முடியாதவாறு தீர்வை விதிக்க வேண்டும் என்றும் பிறவும் தீர்மானித்துள்ளார்கள்.

7-5-36ந் தேதி வெளி வந்துள்ள "தமிழ் நாடு" பத்திரிகையில் அய்யம்பேட்டை தோழர்கள்: மூராரி முனிசாமி அய்யரும், கிரி. குப்புசாமியும் எழுதிய "கைத்தறி நெசவாளர் பரிதாப நிலைமை; பரிகரிக்க ஆலோசனைகள்" என்ற அறிக்கையில் கீழ் காணும் விஷயம் காணப்படுகிறது. மிஷின்கள் உற்பத்தியினாலும், அன்னிய தேச இறக்குமதியாலும் இந்திய கைத்தறிகளுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டு நெசவாளர்கள் கிராமங்கள் தோறும் பிச்சை எடுக்கப்போய் விட்டார்கள் என்றும், இதனை சர்க்கார் கவனித்து வேண்டுவன செய்யும்படிக்கும், மாகாண சங்கங்களும், கிராம சங்கமும், மகாநாடுகளும் கூட்ட வேண்டும் என்றும், கைத் தறி நெசவாளர்களின் பிரதிநிதிகள் மாகாண சபையிலும், இந்திய சபையிலும் நியமிக்க சர்க்காரை கேட்க வேண்டுமாயும், பிறவும் கூறியுள்ளார்கள்.—

(தொடரும்)

சகிக்க முடியாத நஷ்டம்

(ஒரு நிருபர்)

கோவை, டிச, 4

கோயம்புத்தூர் பிரபல பத்திரிகை பிரதிநிதியும், விளம்பர ஏஜண்டுமான திரு. சி. என். நாராயண சாமி ராஜுவின் மனைவியார் சில மாதங்களாக நோய் வாய்ப்பட்டிருந்து, சில தினங்களுக்கு முன் காச நோய் கொண்டு, நேற்றைய தினம் காலமானர். இவருக்குச் சில குழந்தைகள் இருக்கிறார்கள். திரு. சி. என். நாராயணன் கோயம்புத்தூர் பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர். அவருக்கு ஏற்பட்ட இவர்கள் மரணம் மிகவும் வருந்தத் தக்கது.

"சமரஸம்"

ஓர் மாத வெளியீடு

மக்களின் நல்வாழ்வு, பொருளாதாரநிலை, கிராம சீரமைப்பு, சுகாதார விஷயங்கள் இவைகளை சமநோக்குடன் அபிவிர்த்தி செய்யும் பத்திரிகை.

மானேஜர்:—
சமரஸம் ஆபீஸ்,
விழுப்புரம்

எது?

தமிழ்நாட்டில் குறைந்த சந்தாவில்
அதிக பக்கங்களோடு வெளிவரும் தமிழ் மாதப் பத்திரிகை.

"சித்தன்"

ஒன்றே. இனிய கதைகள், ஹாஸ்யம், உலகச் செய்தி, வைத்தியக் குறிப்பு, சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன நிறைந்தது.

வருட சந்தா அணா (8) எட்டே. வெளிநாடு ரூ. 1.

மாதிரிப் பிரதி இனும். விளம்பர விகிதம் மிகவும் குறைவு.

விபரங்களுக்கு எழுதவும்:—
மானேஜர்:—"சித்தன்", பழனி, S. I.

"கிராம ஊழியன்"

வாரப் பதிப்பு.

ஆசிரியர்:—S. பூரணம் பிள்ளை.

கிராமப் புனருத்தாரணத்தின் பொருட்டுத் தோன்றி மாதம் இரு முறையாக வெளிவந்த "கிராம ஊழியன்" இரண்டாம் ஆண்டின் ஆரம்ப மாகிய 25—10—36உ முதல் பிரதி ஞாயிறுதோறும், நாட்டின் நலத்திற்கான நல்லோரின் கட்டுரைகள் தாங்கி எல்லோரும் கோரும் நல்லதோர் முறையில் வெளிவருகிறது. எல்லா இடங்களிலும் ஏஜெண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதுக.

உள்நாடு: வருட சந்தா ரூ. 3. வெளிநாடு: வருட சந்தா ரூ. 5.

மானேஜர்:—"கிராம ஊழியன்",
துறையூர். (திருச்சி ஜில்லா)

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

"அறிவுக் கொடி"

ஒரு சிறந்த தமிழ் மாத வெளியீடு.

ஆசிரியர்:—ஸ்ரீமதி சாமி சிதம்பரனர்.

ஒவ்வொரு ஆங்கிலமீ 15-ந் தேதியில் வெளிவருவது.

அறிவு வளர்ச்சி, மாதர் முன்னேற்றம், தமிழ் மொழி வளர்ச்சி, விஞ்ஞானம், வைத்தியம், விகடம், சங்கீதம், நாடகம், படக் காட்சி, மனதைக் கவரும் சிறு கதைகள் முதலிய சிறந்த பல விஷயங்களும், இனிய பாடல்களும் வெளிவரும்.

உள்நாடு வருட சந்தா ரூ. 1. வெளிநாடு ரூ. 1-8-0.

மானேஜர்:—"அறிவுக் கொடி" ஆபீஸ்,
462, கீழ்க் கடலங்குடித் தெரு, கும்பகோணம்.

திருச்சி சமதர்ம வாலிபர் சங்கம்

திருவாங்கூர் மகாராஜாவுக்கு வாழ்த்து

(ஒரு நிருபர்)

திருச்சி, டிச. 6

சென்ற சனிக்கிழமை மாலை இச்சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று திரு. முத்தையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சமதர்மத்திற்கு முதல் முட்டுக்கட்டையான தீண்டாமை ஒழிவதற்கு மகாராஜா அளித்த ஆலயப் பிரவேச பிரகடனத்தைப் போற்றிப் பேசி மகாராஜாவையும், திவான் ஸர். ஸி. பி. ராமசாமி ஐயரையும் வாழ்த்தினார்கள். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் கலைந்தது.

1. திருவாங்கூர் மகாராஜாவைப் போல் மற்றைய சுதேசி மன்னர்களும், பிரிட்டிஷ் இந்தியாவும் தீண்டாதாருக்கு ஆலயப் பிரவேசம் அளிக்குமாறும், இம்மகத்தான சேவையைச் செய்த மகாராஜாவின் ஞாபகார்த்தமாக அன்னாரின் உருவச் சிலையை வைக்க ஏற்பாடு செய்யுமாறும் இக் கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது.

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN, AT THE JUSTICE PRINTING WORKS, 14, MOUNT ROAD, MADRAS. EDITOR: PANDIT S. MUTHUSWAMI PILLAI.

விலை அரை அணா 10 பக்கங்கள் மலாய் நாட்டில் 5 சதம் Regd. No. M. 3298.

"விடுதலை"

வாரம் இருமுறை பதிப்பு சந்தா
முன் பணம்

உள்நாடு

1 மாதம்	...	0	6	0
3 மாதம்	...	1	0	0
6 மாதம்	...	1	14	0
1 வருடம்	...	3	10	0

சென்னைக்கு

1 மாதம்	...	0	4	0
3 மாதம்	...	0	10	0
6 மாதம்	...	1	4	0
1 வருடம்	...	2	6	0

விடுதலை

VIDUTHALAI
(வாரம் இருமுறை வெளிவரும்)
ஆசிரியர்: பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.

"விடுதலை"

வாரம் இருமுறை பதிப்பு சந்தா
முன் பணம்

வெளிநாடு

1 மாதம்	...	0	10	0
3 மாதம்	...	1	14	0
6 மாதம்	...	3	12	0
1 வருடம்	...	7	4	0

சர்க்கார், முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டுகளுக்கு:

உள்நாடு:	வருடம்	ரூ.	7	8	0
சென்னை:	,,	ரூ.	4	8	0

மலர்-2] சென்னை: (12-12-1936) தாதுவருஷம் கார்த்திகைமீ 27உ சனிக்கிழமை [இதழ்-55

திரிகூட சுந்தரனாருக்கு சவால்!

திலகர் நிதிக் கணக்கு என்ன?

பொம்மனாட்டி கணக்கு வேண்டாம்

கோர்ட்டில் வந்து கணக்குச் சொல்ல தைரியமுண்டா?

"ஜஸ்டிஸ்" சவாலுக்கு பதிலளிக்க முடியுமா?

ஆண்மை யிருந்தால், ரோஷமிருந்தால் முன் வாரும்!

(மாஜி "குமரன்" சட்டெறும்பு)

அண்ணே!

ரொம்ப நாளாச்சு உம்மோடு பேசி! நாலஞ்சு வருஷத்துக்கு மேலிருக்கும்! நாகர் கோவிலிலே வேட்டாத்துலே நீங்க சௌகமாக இருக்கிறதாகச் சொன்னாங்க. காந்தி ராசா வேலையெல்லாம் தலை முழுகிப் போட்டு சிவனேன்னு விட்டுக்கி இருந்தீங்களாம். இடையிலே பர்மா பிரசாரத்துக்குப் போனீங்களாம். தினப்படி நூறு, இருநூறு ஒப்பந்தம் செய்துண்டு போனதாகவும் கேள்வி. என் புள்ளே ஆணை சொல்றேன், பணம் வாங்கறதைப் பத்தி எனக்கு ஆச்சேபமே இடையாது. கையிலே காசு! வாயிலே தோசை!! அது தான் என் போக்கு!

காந்தி ராசா கூட!

கூலி வாங்கி வேலை செய்யலாம்னு காந்தி ராசா கூட சொல்லியிருக்காராமே. சொயராச்சியத்துக்காக சும்மா உழைக்கணும்னு தலையெழுத்தா! சொயராச்சியம் வந்தா ஒங்க புள்ளே குட்டிக்கு மட்டுமா வரப்போகுது. வரப்போகும் சொயராச்சியம் ஊராருக் கெல்லாம் பொதுத்தானே, நம்ம மட்டும் கூலியில்லாமே ஏன் வேலை செய்யணும் அண்ணே! மெய்யாகச் சொல்றேன் பணம் வாங்கி வேலை செய்யறது கொறச்சலே யில்லை. ராசாக்கனிய வாங்கலாம். சாப்பிடலாம் ஆரு கேட்கக் கெடக்குது!

செட்டிமார் நாட்டில் திருவிளையாடல்

இப்போ செட்டிமார் நாட்டிலே நீங்க திருவிளையாடல் நடத்துறதாக அறிஞ்சேன். ஏதோ ஜில்லா போர்டாம் இல்லை போர்டாம். தேர்தலாம்; பிரசாரமாம். நல்ல வேட்டையாம். நீங்கோ பிரசாரத்துக்கு நல்ல இடம் தேடியே போவீங்க! ஒங்க புத்திசாலித்தனம் சாமானியமா! செட்டிமார் நாட்டிலே ரொம்ப ரொம்ப ஏழைப் பசங்களுக்குக் கூட ஒண்ணு ரெண்டு லச்சத்துக்கு இருக்குமாமே! லச்சப் புரபுக்கள் ஏராளமா யிருக்கும் நாட்டிலே பிரசாரம்னு சும்மயா போகும்? அண்ணே! எவ்வளவு ஒப்பந்தம் செய்திருக்கிறீங்க. தொகை முழுதும் முன்னாடியே கிடைச்சுட்டுதா! கிடைக்கலேயானாலும் பரவாயில்லே. செட்டிப் பிள்ளேங்கோ களுத்தே அறுத்தாலும் வாக்கு மாற மாட்டாங்கோ. பேசின தொகையே கனிசமாகக் கொடுத்துடுவாங்க. பணத்துக்காக நீங்கோ பிரசாரம் பண்ணலேன்னு ஒத்தர் சொல்றாரு. தேச பக்திக்காகத் தான் பிரசாரம் செய்கிறீங்களாம். சரி! அப்படின்னு ஒங்க சொந்த ஜில்லாவிலே—அது தான் திருநெல்வேலி ஜில்லாவிலே தேர்தல் நடந்ததே! அப்போ நீங்க என்ன செய்தீங்க? தூங்கினீங்களா! சொந்த ஜில்லா பேரிலே இல்லாத பக்தியா ராமநாதபுரம் ஜில்லா பேரிலே உங்களுக்கு வந்திட்டுது. ஒரு வேளை சொந்த ஜில்லாவிலே ஒங்க பருப்பு வேகாதுன்னு பயமா! ஒங்க பழைய அன்பர் குற்றாலலிங்கம் இப்போ பெரிய காங்கரஸ் பக்தர், தலைவர், நகரசபை மெம்பரும் கூட. அவருக்கு ஒங்க வண்டவாளங்களெல்லாம் தெரியும்னு பயமா? அண்ணே! அந்தக் கதையே நினைக்கச்சே கண்ணுலே கண்ணீரு வருது. கொளும்பிலே வசூலான பணத்தை "வை கீழு"ன்னு அதட்டி அந்த எமகாதகன் குற்றாலலிங்கம் ஒங்களை கொஞ்சப் பாடா படுத்தினரு? அந்தப் பொல்லாத ஆசாமி இப்போ திருநெல்வேலிலே காங்கரஸ் தலைவரா யிருக்கும் போது ஒங்க பிரட்டல் பலிக்காதுன்னு ஒதுங்கி நின்னுட்டீங்களா? சரி. எப்படியானாலும் ஆகட்டும். செட்டிமார் நாட்டுக்கு வந்தது நல்லதுதான். நல்ல சகுனம் பார்த்துத்தான் வந்திருப்பீங்கோ. நல்ல மூட்டையோடுதான் திரும்புவீங்கோ. அம்மா புளச்சுக்குட்டுப் போங்க. எனக்கு நட்டமில்லே. வாகில் உத்தியோகம் மட்டும் நடத்தி யிருந்தா ஆயிரம் ரண்டாயிரம் சம்பாரிக்க மாட்டீங்களா? ஊரூரா அலையிணுமா? கட்டப்படணுமா? சொகமாக ராசவாட்டமா இருக்கலாமே! என்ன செய்யறது, விதியில்லே. அந்தப் பாவி பிரம்மா ஒலக்கே கொண்டு தலையிலே எழுதி வச்சுட்டான். விதியிலேனு மதியைத்தான் புடுங்குமாம். போனது போச்சு இனியாவது கருத்தாகப் புளையுங்கோ.

பள்ளத்தூர் விளாசல்

பள்ளத்தூர் பொதுக்கூட்டத்திலே நீங்கோ விளாசு விளாசுன்னு விளாசினீங்களாமே. ஏதோ திலகர் நிதியைப் பத்தி சந்தைக்குப் போன பொம்மனாட்டிங்க மாதிரி கணக்குச் சொன்னீங்களாம். நீங்கோ ஒரு எம்.ஏ. பி.எல். லாயிருந்துகொண்டு அந்தமாதிரி கணக்குச் சொல்றது எனக்குக் கொஞ்சமும் புடிக்கலே; மூக்காலும் புடிக்கலே. திலக நிதியே காங்கரஸ் குண்டர்கள் லச்சக் கணக்கா பூசை போட்டுட்டாங்களாமே! புனா காங்கரஸ் வீரர் மகாஜன் புள்ளி விவரங்களோடு கணக்குக் காட்டி யிருக்கிறாராம். நம்ம ஜஸ்டிஸ் பத்திராதிபரும் பத்தி பத்தியாய் எழுதித் தள்ளினரே! ஒரு காங்கரஸ் குஞ்சாவது பதில் சொல்ல முன்வரலியே. கடைசியிலே அந்த ஜவஹர்லாலு புறப்பட்டார். "திலகர் நிதியைப் பற்றி மூச்சுப் பேச்சுக் காட்டினால் கோர்ட்டுக்கு இழுத்து லடாய்த்து விடுவேன்னு பூச்சாண்டி காட்டினர். அந்த ஜவஹர் சல சலப்புக்கு அஞ்சக் கூடியவரா நம்ம ஜஸ்டிஸ் ஆசிரியர். அவர் பழைய ஆசாமி, எமகாதகப் பேர்வழி. அவர் என்ன செய்தார். தெரியுமா? நிமிர்ந்து நின்றார். மீசையை முறுக்கினர். "ஓய் பண்டிதரே! அலகாபாத் பண்டிதரே! உம்மைத்தான் கூப்பிடறேன். உம்முடைய மிரட்டலுக்கு அஞ்சமாட்டேன். திலகர் நிதிக் கொள்ளையைப்பற்றி மீண்டும் குற்றம் சாட்டுகிறேன். ஆண்மையிருந்தால் கோர்ட்டுக்கு வாரும், ஒரு கை பார்த்து விடலாம்" என்று மார் தட்டிக் கூறினர். பண்டிதர் பதில் சொல்லவே இல்லை. பொம்மனாட்டிங்க மாதிரி முக்காடு போட்டுண்டு மெள்ள நழுவி விட்டார். அவர்தான் போகட்டும். உமக்காவது ஆண்மை யுண்டா? ரோஷம் உண்டா? மானமுண்டா? ஜஸ்டிஸ் ஆசிரியர் மீது வழக்குத் தொடுக்க நெஞ்சழுத்தம் உண்டா? தைரியமுண்டா? தைரியமிருந்தால் ஆண்பிள்ளை மாதிரி முன்னுக்கு வாரும் பார்ப்போம். பாமர மக்கள் முன்னிலையிலே யானைக்குப் பானை சரின்னு கணக்குச் சொல்றது மேதாவித்தனமாகாது. உம்முடைய கணக்கை கோர்ட்டிலே வந்து சொல்லும் பார்க்கலாம். என் சவாலுக்கு பதிலளிக்க உமக்கு ஆண்மை யுண்டா? இல்லின்னு ரவிக்கை பாவாடை கட்டிக்குனு பொம்மனாட்டி மாதிரிதான் வெளியிலே வரணும். மீசை இல்லாதது அதிஷ்டந்தான் மீசையைச் சிரைக்கத் தேவையில்லை யல்லவா?

அப்பட வேதாந்தமே!

அண்ணே! பள்ளத்தூர், கூட்டத்திலே அபேதவாதம் பேசினீங்களாமே.

"உலகிலுள்ள காக்கை குருவி வன விலங்குகள் முதலியவற்றின் இனங்களில் ஏற்றத் தாழ்வு இருக்கிறதா? ராஜா ஸர். காக்கை ஒன்று, மிஸ்டர் காக்கை வேறு என்பது போன்ற வேற்றுமை உண்டா, ஒரு காகத்திலிருந்து மற்றொன்றை அடையாளம் கண்டு பிடிக்க முடியுமா? அது போல் நாமும் சமத்துவம் பெற முயன்றால் அதை அபேதவாதம் என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள்"

என்றெல்லாம் விளாசி வெளுத்து வாங்கினீங்களாமே.

பெண்டாட்டி புள்ளை யாணை சொல்றேன்; எனக்கு இந்த அசட்டு உலக வித்தியாசங்கள் கொஞ்சமும் பிடிக்கலே. வித்தியாசங்களெல்லாம் ஒழிச்சுப்போட்டு பண்டிதான் சொல்லுகிற மாதிரி "ஆடவர், பெண்டிர், இளைஞர், முதியோர்" என்கிற வித்தியாசங்களை இல்லாமே சரிநேர்சமானமாக இருக்கணும்னு தான் என் ஆசை. என்ன செய்கிறது? உலக வணக்கமாம், மரியாதையாம், ஆசாரமாம், கட்டுப்பாடாம், மண்ணுங் கட்டியாம். நாம் நினைச்சபடி நடக்கவே முடியலே, ஒரு சங்கதி சொல்லுட்டுமா? அண்ணே! நேத்து எங்க ஊட்டுக்கு எதிரே ஒரு ஆகாத்தக்காச்சி. பக்கத்து ஊட்டுக்காரி எச்சி எலையே வாரி வெளியிலே போட்டா. உடனே ஒரு கூட்டம் காகம் வந்துது. கா, கூன்னு கத்திக்கு எச்சிச் சோத்தேல்லாம் தின்னுது. அப்பறம் குவி வந்திட்டுது. ஆணும் பெண்ணும் சரிநேர் சமானமாகக் கூடிக் குலாவத் தொடங்கிற்று. அடிக்கடி சோடிகளும் மாற்றிக்கொண்டன. ஆணும் பெண்ணும் கட்டுப்பாடு கிட்டுப்பாடு இலலாமல் காதல் நாடகம் ஆடிச்சுங்க. ஹா! ஹா! எவ்வளவு திவ்யமான அபேத வாழ்வு. நினைச்ச ஆணுக்கு நினைச்ச பெண்! அதுவும் நிமிஷத்துக்கு நிமிஷம்! ஹா! ஹா! எவ்வளவு லொகுஸான வாழ்க்கை. அம்மாதிரி வாழ்வு ஒரு நாள் வாழ்ந்தாப் போதாதா? காடு வாவா வீடு போ போ என்கிறவரை கிழடு தட்டி வாழ்றது என்ன பலன்? கண்ணுலே சொல்றேன். ஒங்க காக்கை உதாரணம் சரியான உதாரணம். போகிற இடங்களில் எல்லாம் அந்த மாதிரி லெச்சர் அடிச்சு விடுங்கோ. லோகத்திலே சமத்துவம் பரவட்டும். பால் வேற்றுமை, நிறவேற்றுமை, வகுப்பு வேற்றுமை ஒழியட்டும். உலகம் முச்சூடும் சமத்துவம், சுதந்தரம், பரவட்டும். கட்டுப்பாடுகள் ஒழியட்டும். ஆசாரம் கீசாரம் ஒண்ணுமே வேண்டாம். அறியாப் பருவத்திலே அப்பனும் அம்மையும் ஒரு ஆணின் கழுத்திலே ஒரு பெண்ணைக் கட்டிப் பூடுறாங்கோ. சாகறவரை அந்த ஆண் அந்தப் பெண்ணைத் தானு கட்டியழ வேண்டும்? இஷ்டப்படி மாற்றிக்கொள்ள உரிமையில்லையா! மணிக்கொண்ணு, நாளைக்கொண்ணு, வாரத்துக்கொண்ணு மாற்ற இடமில்லேன்னாலும் மாதத்துக்கு ஒண்ணாவது மாற்றிக் கொள்ள வேணுமா? அந்த இழவு இல்லையானாலும் வருசத்துக்கு ஒண்ணாவது மாற்றிக் கொள்ள வேணுமா? சாகிறவரை ஒண்ணைத் தானு கட்டி யழவேண்டும். நீங்கோ சொல்கிறமாதிரி காக்கையும் குருவியும் நினைத்த போது சோடி மாற்றிக் கொள்கின்றனவே. இந்த நாசமாய்ப் போன மனித சாதி ஒண்ணுக்குத்தானு கட்டுப்பாடு. எந்தனை காலைக்குப் பொறுத்துக்கு இருக்கறது? இதுக்கு விமோசனமில்லையா? கேட்பார் கேள்வி யில்லையா? அண்ணே! ஒங்களுக்கு கோடி கோடி கும்பிடு. தீவிரமாகப் பிரசாரம் செய்யும். காக்கை குருவிகளைப் பார்த்து இந்த மூளையிலாத மானிசக் கூட்டம் புத்தி படிக்கட்டும். சுதந்தரமாக, சமத்துவமாக வாழக் கற்றுக்கொள்ளட்டும். நீங்க மகாராசா மாதிரி வாழ்வீங்க!

சொந்தச் சங்கதி

என்ன என்ன வெல்லாமோ பேசி சொந்தச் சங்கதியே மறந்தே பூட்டேன். குடும்ப ஷேம லாபங்களை விசாரிச்ச ரொம்ப ரொம்ப நாளாச்சே. கொளந்தே குட்டிங்கோ இப்போ எத்தனை? ஆண் எத்தனை? பெண் எத்தனை? என்னபேர் போட்டிருக்கிங்கோ? கேட்டுவாலேனும்? தேச பக்தர்கள், தேச பக்திகள், தேவிகள் பேர்தானே! குட்டிங்கோ ஹிந்தி படிக்குதுங்களா! தேசிய பாடல் பாடுதுங்களா! இங்கிலீஷ் கிங்கிலீஷ் படிக்கலையே. நீங்கோ எம். ஏ. பி. எல். படிச்ச என்னாச்சு; நாசமாப்போன இங்கிலீசு உங்களோடு குட்டிச்சுவ ராக்கனதோடு நிக்கட்டும். உங்க குஞ்சு, குட்டிகளையும் நாசமாக்கிப் பூடாமல் பார்த்துக் கொள்ளுங்கோ, அப்பறம் இன்ஷியூர் கின்ஷியூர் பண்ணியிருக்கீங்களா? "காயமாவது பொய்யடா காற்றடைத்த பையடா" என்கிறான் ஆண்டிப் பண்டாரம். ஞாபகமாக இருங்கள். வவுத்துவலி இப்போ எப்படி யிருக்கு? காபி, டீ குடிக்கிறதுண்டா? சுத்தநீர் உணவு தானு? கதர் கட்டுறதை விட்டுட்டீங்கன்னு சொன்னாங்களே! மெய்தானு? அப்படி ஏதாச்சும் மோசம் பண்ணிடாதேங்கோ! கதர் கட்டினுத்தான் ஏழைங்கோ புழைக்கும்.

செட்டிமார் நாட்டுத் தேர்தலுக்கப்புறம் என்ன "புரோகிராம்" போட்டிருக்கீங்கோ!

ஒண்ணு மறந்துப்புட்டேன்! சிந்து பூந்துறை வீட்டு வாடகை சரியாக சர்க்கார் கொடுக்கிறாங்களா? அந்த ரெஜிஸ்டிரார் ஆபீஸ் இப்போதும் ஒங்க வீட்டிலேதானு? தேச பக்தர்கள் படமெல்லாம் இப்போது எந்தக் குதிருக்குள்ளே இருக்கு. ஒரு பழமொழி தெரியுமா? ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தின் மேல் கண்ணும். வயசாயிடுச்சு. இன்னைக்கோ, நாளைக்கோ. மந்திரியானத்தில்லா, யார் கண்டார்கள்! புத்தியா புழைச்சு அஞ்சோ பத்தோ ஆயிரம் சேர்த்து வச்சுட்டுப் போங்கோ. நமஸ்காரம்.

ஜஸ்டிஸ் கட்சிப் பொதுக் கூட்டம்

லால்குடி, டிச, 10

மேற்படி கூட்டம் லால்குடியில் நடத்துவதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன. இதை ஒட்டியே நாலைந்து பொதுக் கூட்டங்கள், பக்கத்துக் கிராமங்களிலும் நடத்த வேணுமென்ற அவா பொது ஜனங்களிடை இருந்து வருகிறது. இதற்கு ஆவன செய்ய தோழர் பின்னவாசல் ராஜ கோபால் அவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள். தோழர்கள் வக்கீல் டி. பி. வேதாசலம், ஈ. வெ. ராமசாமி, பட்டுக் கோட்டை கே. வி. அழகிரிசாமி, கே. வி. விஸ்வநாதம், அ. பொன்னம்பலம், முதலியவர்கள் பிரசாரத்திற்கு அழைக்கப் படுவார்கள். இயக்கத் தோழர்கள் மேற்கண்ட கூட்டங்கள் செவ்வனே நடைபெறத் தமை செய்து வேண்டிய உதவி செய்ய வேண்டுமென லால்குடி கணேசன் எழுதுகிறார்.

"மூலாம் பூசிய மூர்த்தி கோஷ்டிக்கு ஜஸ்டிஸ் சாட்டை"

வெளுத்தது "தேசிய வீரரின்" சாயம்!

ஜில்லா போர்டுகளில் காங்கரஸ் ஊழல் ஆட்சி

ஜஸ்டிஸ் தொண்டர்கள் பரணி

இராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தல் போர்

திரு. வெங்கடாசலம் செட்டியாருக்குப் பேராதரவு

(நமது நிருபர்)

காணுடுகாத்தான், டிச, 10

4-12-36-ல் காணுடு காத்தானில் திரு. வெங்கடாசலம் செட்டியாரை ஆதரிக்கும் பொருட்டு ஒரு பொதுக் கூட்டம், பழனியப்ப செட்டியார் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் திரு. பொன்னம்பலம் அவர்கள், வெங்கடாசலம் செட்டியாரை ஆதரித்து நீண்ட நேரம் பேசினர். காங்கரஸானது தற்போது மந்திரி ஸ்தானம், பதவி, பட்டம், முதலிய மோகங்களில் ஈடுபட்டுள்ளது. பதவி மோகம் கருதிப் போலிக் காங்கரஸ்காரராகிய திரு. நாகப்ப செட்டியார் உண்மையான காங்கரஸ்காரரல்ல. இரண்டு பார்ப்பனர்களால் தூண்டி விடப்பட்டு நிற்கிருர். அவரை ஆதரிக்கக் கூடாது. மேலும் அவர் அரசியல் அநுபவம் இல்லாதவர். ஸ்தல ஸ்தாபனம் முதலியவற்றிலும் அநுபவமில்லாதவர். திரு. வெங்கடாசலம் செட்டியார் அரசியல் அநுபவமும், ஸ்தல ஸ்தாபன அநுபவமும் உடையவர். ஆகையினால் அவரையே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பேசினர்.

அடுத்தபடியாக திரு சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்கள் காங்கரஸ்காரர்கள் ஊழல்களையும், ஜில்லா போர்டு முதலிய ஸ்தல ஸ்தாபனங்களாகிய வேலூர், தென்னுற்காடு, திருநெல்வேலி, ஒங்கோல், குண்டூர், முதலிய இடங்களில் காங்கரஸ்காரர்கள் செய்துவரும் அட்டூழியங்களையும் அளவிட்டுச் சொல்ல முடியாது என்று நீண்ட நேரம் பேசினர்.

பின்னர் திரு. கலியாணசுந்தரம் நீண்டநேரம் பேசினர். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

பள்ளத்தூர்

6-12-36-ல் பள்ளத்தூரில், பண்டிட் திருஞான சம்பந்தம் அவர்கள் தலைமையில், சிவன்கோவில் மைதானத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. தலைவர் முகவுரையாக, பள்ளத்தூர் சர்க்கிளில் அபேட்சகர்களாக நிற்கும் இருவரில், திரு. வெங்கடாசலம் செட்டியாரவர்கள் பொதுநலத் தொண்டில் ஈடுபட்டவர் என்றும், காணுடுகாத்தான் பஞ்சாயத்து போர்டு தலைவராக இருந்து பொது மக்களுக்கு தண்ணீர் வசதி, விளக்கு வசதி, முதலிய வசதிகள் செய்தவர் என்றும், இராமநாதபுரம் ஜில்லா போர்டில் அங்கத்தினராயிருந்து கல்வி, சுகாதாரம், ரோடு, ஆஸ்பத்திரி முதலிய பல நன்மையான காரியங்கள் செய்துள்ளாரென்றும், ஆதலால் வரும் 14-ந்தேதி நடைபெற இருக்கும் பள்ளத்தூர் சர்க்கிள் ஸ்தானத்திற்கு திரு. வெங்கடாசலம் செட்டியாரையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் பேசினர்.

பின்னர், திரு. சங்கரதம் அவர்கள் காங்கரஸ் ஊழல்களைக் கண்டித்து திரு. வெங்கடாசலம் செட்டியாரை தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியத்தைப் பற்றிப் பேசினர்.

பின்னர் திரு. பொன்னம்பலம் அவர்கள் நீண்ட நேரம் பேசினர். அவ்வூரிலுள்ள காங்கரஸ் காலிகள் இடையிடையே சத்தம் செய்தும், காகிதங்களை கிழித்துப் போட்டும், கொடிகளைப் பிடித்துக் கொண்டு கூட்டத்தை சுற்றி 'ஜே' போட்டும் எவ்வளவு இடைஞ்சல் உண்டாக்க வேண்டுமோ அவ்வளவும் செய்தார்கள். இதனால் பொது மக்களுக்கு காங்கரசினிடம் அன்பும் ஆதரவும் குறைவு பட்டதேயன்றி வேறல்ல.

பிறகு, திரு. அண்ணாதுரை அவர்கள் காங்கரஸ்காரர்கள் சுயராஜ்யம் வாங்கித் தருவதாக 1¼ கோடி ரூபாய் வசூல் செய்து கொள்ளையடித்ததுமன்றி சுயராஜ்யம் வாங்கிக் கொடுக்கவில்லை. திலகர் பேர், கேட்கர், மகாஜன் முதலியவர்கள் திலகர் நிதியைப்பற்றி எழுதிக் கேட்டதற்கு இதுவரையும் ஐயஹார் முதல் எந்தத் தலைவர்களும், தொண்டர்களும் பதில் சொன்னார்களில்லை. ஜில்லா போர்டில் காங்கரஸ்காரர்கள் யாதும் சாதித்து விடவுமில்லை. காங்கரஸ் அங்கத்தினர்கள், கண்ட்ராக்ட் முதலிய காரியங்களில் அளவு கடந்த ஊழல்கள் செய்தார்கள். இவர்களின் ஊழல் முதலியன ஜில்லா போர்டுகளில் நாறுகின்றது என்றும் பேசினர்.

பிறகு, திரு. கலியாணசுந்தரம் சில வார்த்தை பேசினர்கள். காங்கரஸ்காரர்கள் தவளை, பாம்பு முதலியவற்றை விட்டு பொறுமையாகக் கேட்கும் கூட்டத்தில் குழப்பம் உண்டாக்கிக் காங்கரஸ்காரர்கள் காலாடிகள் என்பதைக் காட்டிக் கொண்டார்கள்.

தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

பெரிய கோட்டை

6-12-36 மாலை 5 மணிக்கு திரு. வெங்கடாசலம் செட்டியாரை ஆதரிக்கும் பொருட்டு கூட்டம் நடைபெற்றது.

பண்டிட், திருஞான சம்பந்தம் அவர்கள் தலைமை வகித்தார். பெருங் கூட்டம் கூடியிருந்தது. தலைவர் முகவுரைக்குப்பின் திரு. சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்கள் ஓட்டர்களும் பொது மக்களும் உற்சாகப்படும்படியும் காங்கரஸ் ஊழல்களை உணரும்படியும் நாகப்ப செட்டியார் போலிக் காங்கரஸ்காரர் என்றும், உண்மை காங்கரஸ்காரர் யார் என உணரும்படியும் பேசினர். கூட்டத்தைக் கலைக்க எண்ணி வந்த காங்கரஸ் காலிகளில் ஒருவர் சில கேள்விகளைக் கேட்டார். அதற்கும் ஆணித்தரமான பதில் கொடுத்து கிராமவாசிகள் உண்மை உணரும்படி செய்தார். பின்னர், திரு கலியாணசுந்தரம் சிறிது நேரம் வெங்கடாசலம் செட்டியாரை இராமநாதபுரம் ஜில்லா போர்டுக்குத் தேர்ந்தெடுக்க வேண்டியதின் அவசியத்தைப்பற்றி விளக்கினர்.

(இதன் தொடர்ச்சி 10-ம்பக்கம் பார்க்க)

ஜில்லா போர்டு தேர்தலில் காங்கரஸ் காலாடித்தனம்

வாக்காளரைப் பயமுறுத்தும் கோரக்காட்சி

"காங்கரசுக்கு வோட்டுக் கொடுப்பதாய் சத்தியம் செய்"

"மறுத்தால் வைக்கோற் போரும் கால் நடைகளும் சாம்பல்"

காங்கரஸ் குண்டர்கள் மிரட்டல்

சென்னை 'மெயில்' பத்திரிகையில், டிசம்பர் 6-ந்தேதி யன்று பின்வரும் கட்டுரை யொன்று வெளிவந்துளது. அக் கட்டுரையாளர் கூறுவதாவது:-

சமீபத்தில் நடைபெற்ற ஜில்லா போர்டு தேர்தல்களின் மூலம் எனக்கு ஏற்பட்டுள்ள அநுபவத்தையும் சிறிது கூற விரும்புகிறேன். இரண்டு அங்கத்தினர்கள் சார்பாக இரண்டு சர்க்கிள்களில் நான் தேர்தல் பிரசாரம் செய்ய வேண்டியிருந்தது. 15 நாட்களுக்கு மேல், அவர்களுக்காக இரவும் பகலும் ஓயாமல் உழைத்து வந்தேன். வாழ்க்கையில் பல் வேறு அந்தஸ்திலுள்ள வாக்காளர்களிடமும் நெருங்கிப் பழக எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. பல கிராமங்களையும் திடீர் திடீரென பார்வையிட்டுள்ளேன். கட்டுப்பாடுள்ள கட்சியே முடிவில் வெற்றி பெறும் என்ற உண்மையை இத்தேர்தல் மூலம் நான் கண்டு கொண்டேன். கட்சிகளின் திட்டங்களைக் குறித்தோ, கொள்கைகளைக் குறித்தோ வாக்காளர்களுக்குக் கவலையில்லை என்பதையும் உணர்ந்தேன்.

தேர்தலுக்கு வெகு காலத்திற்கு முன்பே காங்கரஸ் சபை மூலை, முடுக்குகளிலுள்ள கிராமங்களி லெல்லாம் தன்னுடைய கிளை ஸ்தாபனங்களை ஏற்படுத்தி வேலை செய்யத் தொடங்கி விட்டது. நியமன சீட்டுகள் தாக்கலானது தான் தாமதம், பிரசாரம் செய்வதற்காக தொண்டர்களையும், ஊழியர்களையும், கிராமங்கள் தோறும் ஏராளமாகக் குவித்து விட்டது. கதர் உடுப்பும், காந்தி குல்லாயும் தரித்துக் கொண்டு, காங்கரஸ் மூவர்ணக் கொடியை ஏந்திக்கொண்டு சிறு பிள்ளைகள் கோஷ்டி கோஷ்டியாகச் செல்வதை நீங்கள் எக்கிராமத்திற்குச் சென்றாலும் காணுமலிருக்க முடியாது. காங்கரசிற்குத் தொண்டு செய்ய முன் வந்துள்ள இவ்வூழியர்களில் 100-க்கு 80 பேர் வாக்குரிமையில்லாதவர்கள், சொத்தில்லாதவர்கள், வேலையில்லாதவர்கள். உண்ண, உணவும், உடுக்கத் துணியும் கொடுத்தால், எதையும் செய்யத் தயாராயிருப்பவர்கள். ஒரு சர்க்கிளில் ஒரு காங்கரஸ் அங்கத்தினருக்கு இத்தகைய 200 பேர் உதவி செய்ய முன் வந்துள்ளனர். அவருக்கு எதிரிடையாக நின்ற அங்கத்தினரோ தன் சுயபலத்தைக் கொண்டே போராட வேண்டி ஏற்பட்டது. கட்டுப்பாட்டுடன் விளங்கும் இப்பெரிய ஸ்தாபனத்தின் முன் எவர் தான் என்ன செய்யக் கூடும். ஆகவே காங்கரசுக்கு எதிரிடையாக நிற்க விரும்பும் எந்தக் கட்சியும், தொண்டர்களையும், ஊழியர்களையும் அதிகரிக்கச் செய்து, வாக்காளர்களிடை இடைவிடாமல் தீவிரமாகப் பிரசாரம் செய்து, அதற்குச் சிறிதும் சளைக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

காங்கரசின் அஹிம்சைக் கொள்கையைக் குறித்து பிரமாதப் படுத்திப் பேசப்படுகிறது. ஆனால், உண்மையில் அஹிம்சைக்கும் அவர்களுக்கும் வெகுதூரம் என்பதே எனது முடிவு. நமது ஊழியர்கள், ஓட்டுக்காக பிரசாரம் செய்யச் சென்றும் பொழுது, கதர் உடையும், காந்தி குல்லாயும் தரித்த பேர்வழிகள், அவர்களைக் கண்டு நகைப்பதும், அவர்கள் செல்லும் மோட்டாரைத் தடுப்பதும், ஏகதேசமாகப் பேசுவதுமாயிருக்கிறது. அவர்களை விலக்கிக் கொண்டு முன்னேறுவது பிரம்மப் பிரயத்தனமாயிருக்கிறது. இது மட்டுமின்றி காங்கரசுக்கு எதிரிடையாக நின்ற அங்கத்தினர் மோட்டாரில் சென்று கொண்டிருந்தபொழுது இக் கதருடை தரித்த பேர்வழிகள் காகிதங்களில் கற்களை வைத்துப் பந்தாகச் சுருட்டி அவர் மோட்டாரினுள் வீசியெறிந்தனர். அக்காகிதத்தில் அவரைக் குறைத்து எழுதப் பட்டிருந்தது. நமது அங்கத்தினர்களின் சுவர் ஒட்டி விளம்பரங்களைக்கூட அவர்கள் இருக்க விடுவதில்லை. ஒன்று அவ் விளம்பரங்களைக் கிழித்தெறிந்து விடுகின்றனர், இல்லாவிட்டால் அவற்றின் மீது மண்ணையோ, சாணியையோ விட்டெறிந்து, விஷயம் தெரியாதபடிச் செய்து விடுகின்றனர். போலீசாரிடம் இது விஷயமாக முறையிட்டும் பிரயோஜனமில்லாமற் போயிற்று. கடைசியில் அவற்றைக் காப்பாற்ற நாமே பந்தோபஸ்து செய்யும்படி நேர்ந்தது.

சத்தியம், பயமுறுத்தல்

வாக்காளர்களிடமிருந்து அவர்கள் ஓட்டுப் பறிக்கும் விதத்தையும் எங்கள் தேர்தல் பிரசாரத்தின் பொழுது கண்கூடாகப் பார்த்தோம். ஒரு இடத்தில், அக்கிராமத்திய வாக்காளர்களை ஒரு கோயில் முன்பு நிற்கவைத்து, கற்பூரத்தை கொளுத்தி காங்கரஸ்காரர்களுக்கே ஓட்டுக் கொடுக்க வேண்டுமென அதன் முன்பு சத்தியம் வாங்கினர். மற்றோரிடத்தில் அவ்விதமே வாக்காளர்களை ஒன்று கூட்டிக் காங்கரஸ்காரர்களுக்கு ஓட்டளிக்கா விட்டால் அவர்கள் வைக்கோல் போரையும், கால் நடைகளையும் திரும்பவும் காண முடியாது என பயமுறுத்தினர். இம்மாதிரி காங்கரசுக்குப் போட்டியாக நின்ற அங்கத்தினருக்கும், அச்சுறுத்திப் பல கடிதங்கள் வந்தன. இக் கடிதங்களின் கீழ் 'வந்தே மாதரம்' எனவும் எழுதப் பட்டிருந்தன.

மற்றும் பல இடங்களில் கிராமத் தலைவர்களே காங்கரசுக்கு ஆதரவளித்தும் அவர்களுக்காகப் பொதுக் கூட்டங்கள் கூட்டியும், காங்கரசுக்கே ஓட்டுக் கொடுக்க வேண்டுமென, சர்க்கார் உத்தரவிட்டுள்ளதாக பறையடித்தும், மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்து வந்தனர். சர்க்கார் அவ்விதம் ஒன்றும் உத்தரவிடவில்லை யென்றும், அவைகள் காங்கரஸ்காரர்களின் புரட்டுகளென்றும் மக்கள் அறியச் செய்வது பகீரதப் பிரயத்தனமாகி விட்டது.

ஓரிடத்தில் எங்கள் அங்கத்தினருக்கே ஓட்டுக் கொடுப்பதாக வெற்றிலைத் தோட்டக்காரர்கள் பலர் உறுதிமொழி யளித்தனர். ஆனால், அவர்கள் தோட்டங்களுக்கு தண்ணீர் காங்கரஸ் அங்கத்தினர் முன்னை கிராமத்திலிருந்து வரவேண்டியிருந்தது. அக்கிராமத்தினர், காங்கரஸ் அங்கத்தினருக்கு ஓட்டளிக்காவிட்டால் தண்ணீர் கிடைப்பது அரிதாகி விடும் என்று கூறவே இவர்கள் பயந்து காங்கரஸ் பக்கம் திரும்பி விட்டனர். ஒரு கொடிக்குள் எங்கள் முயற்சிகளெல்லாம் பாழாயின.

வாக்காளர்களுக்கு அவர்கள் அளிக்கும் வாக்குறுதிகளும் விசித்திரமாயிருக்கின்றன. எல்லா சர்க்கிள்களுக்கும் துண்டுப் பிரசுரங்களை வழங்கி யிருக்கின்றனர். சென்னையிலுள்ள தமிழ் நாடு காங்கரஸ் ஆபீசிலுள்ள ஒருவரால் அவைகள் எழுதப் பட்டனவாகத் தெரிகிறது. ஒன்று கூட பாக்கி விடாமல் எல்லாம் பூரணமாகக் கண்டிருக்கிறது. படிப்பதற்கும் ருசிகரமாயிருக்கிறது. அத்துண்டுப் பிரசுரம் கூறுவதாவது:- புதிய ரோடுகள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், புத்தகாலயங்கள் முதலியவற்றை ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுத்துவது, ஜில்லா முழுமையும் கட்டாய இலவச ஆரம்பக் கல்வி ஏற்படச் செய்வது, பாடசாலைகளைத் தேசத் தலைவர்கள் உருவப் படங்களால் அலங்கரிப்பது, தேசியக் கீதங்கள், தேசத் தலைவர்களின் வாழ்க்கைச் சரிதம் முதலியவற்றை ஆரம்பப் பாடசாலைகளில் போதிப்பது, எல்லாப் பொதுக் கூட்டங்கள் மீதும் தேசியக் கொடியைப் பறக்க விடுவது. சுருக்கமாகக் கூறப்போவோமானால் ஒரு புதிய இந்தியாவை சிருஷ்டிப்பது. இவை காகிதத்தில் காண்பன.

எழுத்து மூலம் இருப்பதைக் காட்டிலும் அவர்கள் வாய்மொழியிலே தான் அதிக குழப்புத்தன மிருக்கின்றது. பல இடங்களில், ஜில்லா போர்டுகளில் காங்கரஸ்காரர்கள் மெஜாரிட்டியாக வருவார்களேயானல், ஜமீன்தார்களுக்கு விவசாயிகள் செலுத்திவரும் அபாரமான நிலத் தீர்வை மிக மிகக் குறைக்கப் படுமென்றும், ஜமீன்தார், நிலத் தீர்வை விஷயத்தில் போர்டுக்கு கட்டுப்பட்டு நடக்கும்படிச் செய்யப்படுவாரென்றும் கூறியுள்ளனர். இவ்விதம் போர்டின் வேலையென்ன, அதற்குள்ள அதிகாரம் என்ன என்று தெரியாத பாமர மக்களிடம் உண்மைக்கு மாறாக ஆசை வார்த்தைகளைக் கூறியும், சத்தியம் வாங்கியும், பயமுறுத்தியும், இன்னும் பல வழிகள் மூலமாகவும் ஓட்டைப் பெற்று வருகின்றனர்.

காங்கரசுக்கு வாக்கு அளிக்க வேண்டாம்

சீர்திருத்தங்களை உடைப்பதென்பது மதியீனம்!

பண்டித நேருவின் பொதுவுடமைக் கொள்கை ஆபத்து

சேத் ஜம்னுதாஸ் எச்சரிக்கை

ஜபல்பூர், டிச, 6

ஜபல்பூர் பிரபல வியாபாரியான சேத் ஜமுனாதாஸ், ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகர்களை ஓட்டர்கள் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பின்வரும் பிரசுரத்தை வழங்கி யிருக்கிறார்:-

அன்னிய ஆட்சிக் குட்பட்ட இந்தியர்களின் நிலைமை நெருக்கடியானது.

காங்கரஸ்காரர்கள் புதுச் சீர்திருத்தத்தை உடைப்பதாகச் சொல்லுவது மிக அபாயகரமானது. அதனால் நாம் விடுதலை அடைவதற்குப் பதிலாக அதிக அடிமைத் தனத்துக்குத்தான் ஆளாவோம்.

ஜனங்களின் ஏழ்மை நிலையை அனுசரித்து அதற்குத் தக்க பரிகாரம் தேட வேண்டியது அத்யாவசியம். புதுச் சீர்திருத்தம் ஜனங்களின் விருப்பத்தைப் பூராவும் திருப்தி செய்யக்கூடியதாயில்லை என்பது உண்மை. ஆனல் இந்த சீர்திருத்தம் அமுலுக்கு வந்தபின் நாம இப்புது முறையினால் ஆளப்படுவோம்.

இதைப் பொறுத்த மட்டிலும் நம்மால் கூடுமான மட்டிலும், இச் சீர்திருத்தத்திலிருந்து எவ்வளவு நன்மை பெற முடியுமோ அவ்வளவையும் பெறுவோமே! இதனால் ஒன்றும் பயனில்லை என்று கண்டால் இதை விட நல்லதொன்றுக்காகப் போராடுவோம்.

காங்கரஸ் இந்நாட்டின் பெரிய ராஜீயக் கட்சியே. 1919-ல் ஒத்துழையாமை ஏற்பட்டதிலிருந்து காந்திஜியின் தலைமையின் கீழ் காங்கரஸ் போராட்டம் தொடங்கிய காலத்தில் ஜனங்களிடம் பெரும் விழிப்பு ஏற்பட்டது. அவருடைய தலைமையில் இந்நாடு தனது லக்ஷியத்தை அடையவில்லை. இதனால் காந்திஜி காங்கரஸிலிருந்து விலகும்படி ஏற்பட்டது.

பண்டித நேருவின் கொள்கைகள்

இப்பொழுது காங்கரஸ் காந்திஜியின் நோக்கத்தைக் கைவிட்டு வேறு விதமாக நடந்து வருகிறது. ஜவஹர்லால் நேருவின் தலைமையின் கீழ் காங்கரஸ்காரர்களும், பணக்காரர்களும், ஜமீன்தார்களும் தங்கள் நிலைமையிலிருந்து கீழிறங்கி வரவேண்டுமென்று விரும்புகிருர்கள்.

இப் பொழுதைய காங்கரஸினால் இந்நாட்டில் பல வகுப்பினருடையே பிளவு ஏற்படுவதைத் தவிர வேறு எவ்வித பலனுமில்லை.

இந்நாட்டு மக்களின் பொருளாதார நிலைமையைச் சீர்படுத்தவும், எல்லா வகுப்பாரும் பரஸ்பர நேசப் பான்மையுடன் ஒழுகி வரவும் பாடுபடும் ஐக்ய தேசியக் கட்சி அபேட்சகர்களையே ஓட்டர்கள் ஆதரிக்க வேண்டும். இக்கட்சியார் விவசாயம் கைத்தொழில், வர்த்தகம், இவைகளின் முன்னேற்றத்துக்காக உழைப்பதுடன் தீண்டாமையையும் விலக்கப் பாடுபடுவார்கள்.

சீர்திருத்தத் திருமணம்

(ஒரு நிருபர்)

கும்பகோணம், டிச. 9

நிகழும் தாது ஆண்டு கார்த்திகை மாதம் 28-ந்தேதி (13-12-36) ஞாயிறு காலை 9-மணிக்கு திருவை. கோவிந்தசாமி செட்டியார் மகன் தோழர் வரதராஜன் அவர்களுக்கும், காரைக்கால் திரு. என். இரத்தினசாமி செட்டியார் மகள் செல்வி புனிதவல்லி அவர்களுக்கும் தாராசுரம் மணமகன் இல்லத்தில், தோழர் கே. கே. நீலமேகம் அவர்களின் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெறும். அவ்வமயம் பல தோழர்கள் சொற்பொழிவாற்றுவர்கள்.

மன்னர் துறவு

பார்லிமெண்டில் அறிக்கை

சாம்ராஜ்யம் முழுதும் கலக்கம்

புது அரசர் வரலாறு

லண்டன், டிச, 10

மாட்சிமை தங்கிய எட்டாவது எட்வர்ட் மன்னர் பிரிட்டிஷ் முடியைத் துறந்துவிட்டார்.

8-வது எட்வர்டின் சகோதரரான யார்க் கோமகன் புதிய மன்னரானார்.

பார்லிமெண்ட் கூட்டம்

உலக சரித்திரத்திலேயே, என்றுமே இல்லாத நிலைமையில் இன்று பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சபை கூடியது.

சரியாக மத்தியானம் 2-45 மணிக்கு பார்லிமெண்ட் சபையில் தலைவர் அமர்ந்தார். சபையில் எல்லா மெம்பர்களும் பிரசன்னமாகி மிகக் கவலையுடன் பிரமை பிடித்தது போல் உட்கார்ந்திருந்தார்கள்.

விசிட்டர் காலரிகள் எள்விழவும் இடமின்றி நிரம்பி இருந்தன. பிரதம மந்திரியான மிஸ்டர் ஸ்டான்லி பால்டுவின், மன்னரின் சொந்தக் கையெழுத்துடன் கூடிய ஸ்ரீமுகத்தைப் பார்லிமெண்டில சமர்ப்பித்தார்.

மன்னர் ஸ்ரீமுகம்

பார்லிமெண்ட் சபைத் தலைவர் துக்கத்துடனே மிகவும் ஆழ்ந்த குரலில் இந்த அறிக்கையைப் படித்தார். அது வருமாறு:—

"நான் நீண்டகாலம் கவலையுடன் ஆலோசனை செய்தேன். எனது பிதா காலமானதும் பட்டத்திற்கு வந்த அவரது வாரிசாகிய நான் சிம்மாசனத்தைத் துறந்து விடுவதென்று உறுதி கொண்டேன்.

"இப்போது எனது இந்த முடிவானதும், மாற்ற முடியாததுமான தீர்மானத்தை நான் தெரிவிக்கிறேன்.

"இந்தக் காரியம் எவ்வளவு பிரமாதமானதென்பதை நான் உணர்ந்தே இருக்கிறேன்."

"எனினும் நான் முடிவாகச் செய்த தீர்மானத்தையும் இவ்வித தீர்மானத்திற்கு வரவேண்டிய காரணங்களையும், எனது பல திறப்பட்ட ஜனங்களும் உணர்ந்து ஒப்புக் கொள்வார்களென்ற நம்பிக்கையுடனேயே இருக்கிறேன்."

கடைசி வேண்டுகோள்

"எனது மனதிலுள்ளவைகளை இப்போது நான் எடுத்துச் சொல்ல விரும்பவில்லை."

"ஆனால், ஓர் மன்னருக்கு சதா இருக்கும் பெரும் பொறுப்பாகிய சுமைகள் மிக அதிகம். இப்போது நான் உள்ளாகி யிருக்கும் நிலைமையில் எவரும் இவ்வித பொறுப்புகளைச் சுமப்பதற்கில்லை என்பதை மட்டும் ஞாபகத்தில் வைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

'இனியும் தயக்கம் செய்வது எனது பிரஜைகளுக்கு பாதகமேற்படும். அவர்களது சந்தோஷத்தையும் க்ஷேமத்தையுமே நான் சதா விரும்புகிறேன்.'

"எனக்கு அடுத்தபடியாக சட்டரீதியான வாரிசானஎனது சகோதரர் யார்க் கோமகன் பட்டத்திற்கு வரச் செய்ய உடனே வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படுமென நான் நம்புகிறேன்.'

உடனே அமல்

"கிரேட் பிரிட்டன் அயர்லாந்து, பிரிட்டிஷ் டொமினியன் இவைகளின் அரசரும் இந்தியாவின் சக்கரவர்த்தியுமாகிய எட்டாவது எட்வர்டாகிய நான், எனக்கும் எனது சந்ததிகளுக்கும் பட்டம் வேண்டாமெனத் துறந்து விடுவதை இனி மாற்ற முடியாதபடி உறுதி கொண்டு விட்டதை இதன் மூலம் நான் அறிவிக்கிறேன்.

"இந்த தஸ்தாவேஜியை உடனே அமுலுக்குக் கொண்டு வந்து விட வேண்டுமென்றும் விரும்புகிறேன். சாட்சிகளின் முன்னிலையில் 1936-ம் வருஷம் டிசம்பர் மாதம் 10-ம் நாளாகிய இன்று நான் இதில் கையொப்பமிடுகிறேன்.

(ஒப்பம்) எட்வர்ட் ஆர். ஐ.

மன்னர் தனது ஸ்ரீமுகத்தில் முடிவாகக் குறிப்பிடுவதாவது:—

நான் பட்டத்திற்கு வருமுன்பாகவும், வந்த பின்பும், எனது ஜனங்கள் என்னிடம் எப்போதும் காட்டி வந்த அன்பை நான் மனப்பூர்வமாக உணர்ந்துள்ளேன். எனக்குப் பின்பு மன்னராக வருபவரிடம் அதே அன்பைப் பூரணமாகக் காட்டுவார்களென்று நான் அறிவேன்.

பட்டத் துறவு மசோதா

எட்வர்டு வெளியேற்றம்

லண்டன், டிச, 10

பார்லிமெண்டில் திரு. பால்டுவின் பேச்சுக்குப் பிறகு மேஜர் அட்லியின் யோசனையின் பேரில் சபையை மாலை 6-மணிவரையில் ஒத்திவைத்தனர். பார்லிமெண்டு மீண்டும் கூடியதும் பட்டத்துறவு மசோதா கொண்டு வரப்பெறும். நாளைக்கு இரு சபைகளிலும் நிறைவேறிச் சட்டமாகும். நாளை இரவு மன்னர் பட்டத்தைத் துறந்ததாக கையொப்பமிடுவார். பிறகு உடனே பிரிட்டனை விட்டு வெளியேறுவார்.

இனி 'மிஸ்டர் வின்ட்ஸர்'

எட்வர்ட் மன்னர் பட்டங்களையெல்லாம் துறந்துவிடுவார். இனி மிஸ்டர் வின்ட்ஸர் என்னும் பெயருடன் விளங்குவாரென்றும் தெரிகிறது. புதிய மன்னர் அவருக்கு 'டியூக்' பட்டம் வழங்கலாம்.

புதிய மன்னர்

யார்க் கோமான் சனிக்கிழமை மாலை சிம்மாசன மேறி புதிய மன்னராவார். அவரது பெயர் ஆறும் ஜார்ஜ் என்பதாக விருக்கும்.

யார்க்கோமகன் ஆல்பர்ட் பெடரிக் 1895-ம் வருஷம் டிசம்பர் மாதம் 14-ந் தேதி பிறந்தார். 1923-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 26-ந்தேதி அவர் லேடி எலிஸபெத் போவ்ஸ் லியான் என்பவரை கலியாணஞ் செய்து கொண்டார். இவ்விருவருக்கும் 1926-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 21-ந் தேதி எலிஸபெத் அலெக்ஸாண்டிரா மேரி; 1930-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 21-ந்தேதி மார்கரெட் ரோஸ் என்ற இருபெண் குழந்தைகள் பிறந்தன.

பார்லிமெண்டில்
பிரதம மந்திரி பால்ட்வின் பேச்சு

லண்டன், டிச, 11

நேற்று காமன்ஸ் சபைத் தலைவர் மன்னரின் ஸ்ரீமுகத்தைப் படித்து முடித்தானதும் பிரதம மந்திரி பால்ட்வின், சரித்திரப் பிரசித்தி பெற்ற அச்சபையில் மிக உருக்கமான ஒரு பிரசங்கம் செய்தார். அவர் கூறியதாவது:—

அக்டோபர் மாதம் 20-ந் தேதி யன்று நான்மன்னரை பேட்டி கண்டு, அப்போது அமெரிக்காவில் அவரைக் குறித்து பிரசுரிக்கப்பட்டு வந்த விஷயங்களால் எனக்கு ஏற்பட்டுள்ள கவலைகளை அறிவித்தேன். முடியரசின் அந்தஸ்தும் கௌரவமும் மற்றெல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமானவை யென்றும் சாம்ராஜ்ய நாடுகளை இன்னும் ஒன்றாகப் பிணைத்து வைத்திருக்கும் கடைசி சங்கிலி அதுவே யென்றும், மற்ற நாடுகளைப் பாதித்துள்ள கேடுகள் இந்நாட்டில் ஏற்படாதவாறு தடுப்பதற்கு அது உத்தரவாதமாகவிருந்து வருகிற தென்றும், ஸ்ரீமதி சிம்ஸன் விவாகரத்து நடவடிக்கைகளால் நேரக்கூடிய பாதகங்களையும், மன்னரின் மனைவியின் நிலைமை, மற்றெந்தப் பிரஜையின் நிலைமையிலின்றும் மாறுபட்டதென்றும், மன்னரின் மனைவி, தேசத்தின் ராணியாகிறாளென்றும், ஆகையால் மன்னர் ராணியைப் பொறுக்கி எடுப்பதில் ஜனங்களின் அபிப்பிராயத்தைக் கேட்டாக வேண்டுமென்றும், கூறினேன். அதற்கு மன்னர் தான் ஸ்ரீமதி சிம்சனை மணக்கத் தான் போவதாகவும் அதன் பொருட்டு பட்டத்தைத் துறக்கவும் தயாரா யிருப்பதாகவும் கூறினார். நவம்பர் 25-ந் தேதி யன்று மன்னர் என்னை அழைத்தார். "மன்னர் விவாகம் செய்து கொள்ள வேண்டும். ஸ்ரீமதி சிம்சன் ராணி என்ற அந்தஸ்தில்லாமல் மன்னரின் மனைவியாக மட்டுமிருக்க அனுமதிக்கும்படி பார்லிமெண்டில் சட்டம் செய்ய வேண்டு" மென்றும் கூறினார். அத்தகைய சட்டத்தை பார்லிமெண்ட் ஒருக்காலும் நிறைவேற்றி வைக்காது என்பது என் அபிப்பிராயமென்று கூறினேன். சில தினங்கள் சென்று மீண்டும் என்னை அழைத்து தன்னுடைய கேள்விக்கு நான் பதிலளிக்கக் கூடுமாவெனக் கேட்டார் அது சாத்தியமில்லை என்று கூற நான் அஞ்சுகிறேன் என்று பதிலளித்தேன்.

சம்பாஷணைகளின்பொழுது இரண்டவற்றை பன்முறை வற்புறுத்திக் கூறினார். தான் முடிதுறந்து சென்றால் கவுரவத்துடனேயே செல்ல வேண்டும்; தன் பிரஜைகளுக்கும், மந்திரிகளுக்கும் ஒரு வித கஷ்டமும் கொடுக்காமல் தான் போக விரும்புவது; மேலும் தான் போவதால் தனது தம்பி யார்க் கோமகன் சிம்மாசன மேறுவதற்கு சவுகர்யமான சந்தர்ப்பங்கள் ஏற்படும்படிச் செய்ய விரும்புவது. 'மன்னர் கட்சி' என்ற பிளவை ஏற்படுத்தும் உத்தேசம் தனக்கில்லாமலிருப்பது.

மன்னர் தமது முடிவை ஒரு அறிக்கை மூலம் தெரிவித்தார். என்னால் கூடியவரையிலும் அவர் கொண்டிருக்கும் தீர்மானத்தி லிருந்து மீட்க முயன்றும் பயன்படாமற் போயிற்று. ஆகையால், நாம் ஒன்றுபட்டு அவர் கூறியுள்ளதை நிறைவேற்றி வைப்பதைத் தவிர்த்து வேறு வழியில்லை.

இந்தச் சிறு தீவில் ஜனநாயகத்தின் போஷகர்கள் என்ற தோரணையில் நாம் முடியரசை நிலைபெறச் செய்ய மிக்க பாடுபட வேண்டியிருக்கிறது. இச் சபையில் தேசமக்களின் விருப்பமென்ன வென்பதை ஞாபகப்படுத்திக் கொண்டு புதிய மன்னரை ஆதரித்து அவருக்கு உதவி யளிப்போம். இந்த நெருக்கடியின் விளைவாக ஏற்பட்ட கஷ்டங்கள் சீக்கிரத்தில் பரிகரிக்கப்படுமென நம்புவோம்"

எட்டாம் எட்வர்டு

எட்டாம் எட்வர்டு மன்னர் காலஞ்சென்ற ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் மூத்த குமாரராவர். 1894-ம் வருஷம் ஜூன் மாதம் 23-ந் தேதி ஜனனமானார். 1936-ம் வருஷம் ஜனவரி மாதம் 20-ந் தேதி சிம்மாசன மேறினார். 325 நாட்களே பிரிட்டிஷ் மன்னரா யிருந்தார். இவருக்கு இப்பொழுது வயது 42. ஸ்ரீமதி சிம்சன் என்னும் அமெரிக்க மாதின் மீதுள்ள காதல் மேலிட்டால் 1936-ம் வருஷம் டிசம்பர் மாதம் 10-ந் தேதி முடிதுறந்தார். சுறு சுறுப்பும், உற்சாகமும், ஏழை எளியவர்கள் பால் அனுதாபமும் கொண்டவர். வீண் ஆடம்பரங்கள், சௌகரியங்கள் முதலியவற்றில் விருப்பமில்லாதவர். இனி மிஸ்டர் வின்டசர் என்ற பெயருடன் விளங்குவார். ஸ்விட்ஜர்லாந்து, டென்மார்க், ஆர்ஜெண்டினா முதலிய நாடுகளில் ஒன்றிற்கு போகக் கூடுமெனத் தெரிகிறது.

எட்வர்டு ரேடியோப் பேச்சு

சாதாரண நகரவாசி என்ற ஹோதாவில் நாளை(ஞாயிற்றுக் கிழமை) மாலை 3-30 மணிக்கு எட்வர்டு மன்னர் ரேடியோ மூலம் பேசுவார்.

6-வது ஜார்ஜ்

காலஞ்சென்ற ஜார்ஜ் மன்னரின் இரண்டாவது குமாரரும் யார்க் கோமகனுமாவர். இவர் முழுப் பெயர் ஆல்பர்ட் பிரடரிக் ஆர்தர் ஜார்ஜ். 1895-ம் வருஷம் டிசம்பர் 14-ந்தேதி பிறந்தார். 1923-ம் வருஷம் ஏப்ரல் 26-ந் தேதி ஸ்டிராத்மூர் பிரபுவின் குமாரியாகிய லேடி எலிஸபெத் போவ்ஸ்-லியான் என்பவரை மணம் புரிந்து கொண்டார். 1926-ம் வருஷம் ஏப்ரல் 21-ந் தேதி எலிஸபெத் அலெக்ஸாண்டிரா என்ற ஓர் பெண் குழந்தையும், 1930 ஆகஸ்டு 21-ந் தேதி மார்கரெட் ரோஸ் என்ற மற்றோர் பெண் குழந்தையும் இவர்களுக்குப் பிறந்தன.

லண்டன், டிச, 11

நாளை (இன்று) மாலை 3-மணிக்கு புதிய மன்னர் (6-வது ஜார்ஜ்) சிம்மாசன மேறுவார்.

அடுத்த மார்ச் காலத்தில் தமது மனைவியுடன் இந்தியாவிற்கு விஜயம் செய்வார்.

ஸ்ரீமதி சிம்ஸன்

'மாண்டேரு' என்ற பிரபல அமெரிக்க குடும்பத்தில், பிறந்தவர். இப்பொழுது வயது 41. இருமுறை கலியாண விடுதலை பெற்றவர். நடுத்தரமான உயரம். பழுப்பு நிறமான விழிகள், பழுப்பு நிறமான கூந்தல், நேர் வாக்கு, முத்துப் போன்ற வெண்மையும் உறுதியான பற்களையும் உடையவர்; நகைகள் மீது விருப்பில்லாதவர்; தோட்ட வேலை, படகு ஓட்டுவது, கோல்ப் பந்து விளையாடுதல் நாட்டியம் முதலியவற்றில் பிரீதி. எட்வர்டு மன்னரின் காதலி.

எலிஸபெத் இளவரசி

புதிதாகச் சிம்மாசனமேறிய ஆறும் ஜார்ஜ் மன்னரின் முதல் புத்திரி. 1926-ம் வருஷம் ஏப்ரல் 21-ந் தேதி ஜனனம் ஆறுவது ஜார்ஜ் மன்னருக்குப் பின் பட்டத்திற்கு வரக்கூடியவர்.

மாகாண அசம்பிளி
தாழ்த்தப்பட்டோர்
பூர்வாங்க தேர்தல்

(நமது நிருபர்)

திண்டிவனம், டிச, 11

திண்டிவனம் ஆதிதிராவிட தொகுதி பிரதம தேர்தலில் அடியிற் கண்ட நபர்கள் தவிர மற்றவர்கள் வாபீஸ் பெற்றுக்கொண்டதால் பிரதம தேர்தல் இல்லை.

சென்னை சிவராஜ் (ஜஸ்டிஸ்)
திண்டிவனம் குலசேகரர் (காங்கரஸ்)
கடலூர் தங்கவேலு பிள்ளை (ஜன நாயகம்)
பரமசிவம் பிள்ளை (சுயேச்சை)

சென்னை, மூலகொத்தள
சமதர்ம இலவச வாசகசாலை

திரு. ஜே. சிவஷண்முகத்திற்கு
பேராதரவு

சென்னை, டிச, 11

காரியதரிசி எழுதுகிறார்:—

நாளை (13-12-36) ஞாயிறு மாலை 5-30 மணிக்கு மேற்படி வாசக சாலையின் ஆதரவில் எழும்பூர் ஏரியில் திரு. பி. கே. புஷ்பராஜ் பி. ஏ., பி. எல். (அட்வகேட்) தலைமையின் கீழ் ஓர் கூட்டம் கூடும்.

அதுகாலை திருவாளர்கள்: எஸ். பி. ஐ. பாலசுப்பிரமணியம், வி. வி. முருகேச பாகவதர், ஜி. கோபால், செல்வநாதன், முதலிய தோழர்களால் "ஆதிதிராவிடர்களும், வருங்கால தேர்தலும்" "ஆதிதிராவிடர்களும், நாகரிகம்," எனபதைப் பற்றியும் சென்னை தாழ்த்தப்பட்டோர் ஐக்கிய வகுப்புக் கட்சியின் சார்பாக சென்னை தொகுதிக்கு அபேட்சகராக நிற்கும் திரு. ஜே. சிவஷண்முகம் எம். ஏ. எல். ஸி. யை ஆதரித்தும் சொற்பொழிவு நிகழ்த்தப்படும்.

மதுரையில் ஹோம்
மெம்பர்

(நமது நிருபர்)

மதுரை, டிச, 11

சென்னை சர்க்கார் ஹோம் மெம்பர் கனம் ராவ்பகதூர், எ. டி. பன்னீர் செல்வம் அவர்கள் இன்று கும்பகோணமிருந்து இங்கு விஜயம் செய்தார்கள். ஸ்டேஷனில் ஏராளமான உத்தியோகஸ்தர்களும், அல்லாதவர்களும் கூடி மாலையிட்டு வரவேற்பு செய்தார்கள்.

மன்னர் துறவு

விசேஷ கெஜட் பிரசுரம்

சென்னை, டிச, 11

எட்வர்டு மன்னர் நேற்று பட்டத்தைத் துறந்து விட்டதை முன்னிட்டு, அவர் விடுத்துள்ள அறிக்கையை இன்று சென்னை சர்க்கார் போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டின் விசேஷப் பிரசுரமொன்றின் மூலம் வெளியிட்டிருக்கின்றனர்.

தென்னிந்திய ஆரிய சமாஜம்:—சென்னை முல்லா சாயபு தெரு 67 நெ. தென் இந்திய ஆரிய சமாஜத்தில் 13-12-36-ல் ஞாயிற்றுக் கிழமை காலை 8-30 மணிக்கு அக்னிஹோத்திரமும், மாலை 6-மணிக்கு திரு. சச்சிதானந்தத்தால் 'மதமும மக்களும்' என்னும் விஷயத்தைப் பற்றி ஓர் சொற்பொழிவும் நடைபெறும்.

தியாகராய நகர் சோஷியல் கிளப்:—மேற்படி கிளப்பின் ஆதரவின் கீழ் நாளை (13-12-36) மாலை 6-மணிக்கு பானகல் பார்க்கிற்கு எதிரிலுள்ள கிளப் கட்டிடத்தில் கனம் செட்டிநாட்டுக் குமாரராஜாவிற்கு ஓர் விருந்துபசாரம் நடைபெறும்.

திருவல்லிக்கேணி கூட்டுறவு சங்கம்:-இக்கூட்டுறவு சங்கத்தின் மாதவபுரம் கிளையினுடைய ஆண்டு விழா வைபவம் டிசம்பர் 13-ந்தேதி 4-30 மணிக்கு மயிலாப்பூர் பி. எஸ். உயர்தர ஆரம்ப பாடசாலைக் கட்டடத்தில் மேயர் திரு. கே. ஸ்ரீராமுலு நாயுடுவின் தலைமையின் கீழ் நடைபெறும். அது சமயம் திரு. சாமி வெங்கடாசலம் செட்டியார் "கூட்டுறவும் சமதர்மமும்" என்பது பற்றி பேசுவார்.

சிந்தாதிரிப்பேட்டை கூட்டுறவு பாங்க்:—மேற்படி பாங்கியின் தலைவராயிருந்த காலஞ்சென்ற திரு. வி. சிவப்பிரகாச முதலியார் பி. ஏ., பி. எல்., அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழா வைபவம் நாளை (13—12—36) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சென்னை, சிந்தாதிரிப்பேட்டை, கேப்பியர் பார்க்கிலுள்ள திவான்பகதூர் பி. விஜயராகவ செட்டியார் ஹாலில் சென்னை சர்க்கார் அபிவிருத்தி மந்திரி கனம் பி. டி. ராஜன் அவர்களால் நடத்திவைக்கப்படும். புல்லாங்குழல் கச்சேரி ஒன்றும் நடைபெறும்.

10,000 பிரதிகள் அச்சிடப்பட்டு வெளிவருகிறது !!!

'லிட்டி கெஜட்' 1937-ம் வருட மலர்

தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களால் இலக்கியம், நாவல், சரித்திரம், அரசியல், விஞ்ஞான விமர்சனம், [illegible], கூட்டுறவு இயக்கம், தொழிலாளர் இயக்கம் இவைகளைப் பற்றி எழுதிய கட்டுரைகளும், பிரபல தலைவர்கள், சினிமா நடிகர்கள், பொது ஜன [illegible] போட்டோக்களும் [illegible] அச்சிடப்பெற்று 200 பக்கங்களுக்கு அதிகமாக 'லிட்டி கெஜட்' 1937-ம் வருட மலர் [illegible] 1 x 4 சைஸில் வெளிவருகிறது. [illegible] ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர்:—'லிட்டி கெஜட்', 197, கீழவெளி வீதி, மதுரை.

A. S. ஆனந்தம், புரொப்ரைட்டர்.

இங்கே கவனியுங்கள்!

சென்னைக்கு அடுத்த மதுரை நகரிலும், ஜில்லாவிலும் வியாபாரம், சினிமா சம்பந்தமான வால் போஸ்டர்கள், நாடகப் பிரசுரங்கள், [illegible] விளம்பர போர்டுகள், விசேஷ உற்சவ காலங்களில் [illegible] விளம்பரங்கள், [illegible] முதலியவைகள் [illegible] விளம்பரங்கள் செய்து கொடுத்து வருகிறோம்.

ஒருமுறை எமது கம்பெனி மூலமாய் உங்கள் விளம்பரங்களை கொடுத்து பரீக்ஷித்துப் பாருங்கள். [illegible]

விபரங்களுக்கு உடனே கடிதம் எழுதுக.

ஆனந்தா அட்வர்டைஸிங் ஏஜன்ஸி,

தெற்கு வாசல், மதுரை. S. I.

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே!

ஏழையென்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே!

மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையை கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த வகையிலும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! (பாரதி)

விடுதலை

சென்னை : 1936-ௗ டிசம்பர் 12-௳
சனிக்கிழமை

நமது மன்னர் துறவு

நமது எட்டாவது எட்வர்டு மன்னர், அரியாசன மேறி 325 நாட்களுக்குப் பிறகு புகழ்பெற்ற பிரிட்டிஷ் சாம்ராஜ்யத் தனியரசைத் துறந்து விட்டார். அவரது சகோதரர் யார்க் கோமகனார் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய அதிபதியாகி விட்டார். பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சரித்திரத்திலே நமது மன்னர் துறவு மிகவும் முக்கியமான ஒரு சம்பவமாகும். இவ்வாறு நேருமென்று நமது மன்னர் பிரஜைகள் எதிர்பார்க்கவே இல்லை. மன்னர்பிரானுடைய விசேஷங்களை அவர்களது பிரஜைகள் அறிந்துள்ளனராயினும், அவரது தற்காலத் துறவு மூலம் அவர் மீது அவரது பிரஜைகளுக்கு இருந்து வந்த ராஜபக்தி நூறு மடங்கு அதிகரித்து விட்டது. இவ்வளவு உத்தம குணம் படைத்த ஒரு மன்னனை — இவ்வ புருஷ [illegible] தியாகியை எவ்வாறு இழப்பதென்று அவரது பிரஜைகள் இன்று இரத்தக் கண்ணீர் வடிக்கின்றனர். நமது மன்னர் பெருமானும் அவரது ஆசை நாயகியும் நினைத்திருந்தால் இரகசியமாய் ஒரு தம்பதிகளுக்குள்ள சுகங்களை யெல்லாம் அனுபவித்துக் கொண்டு, தத்தம் நிலைமைக்கு ஆபத்து ஏற்படாமல் வாழ்க்கை நடத்தி யிருக்கலாம். எத்தனையோ மன்னர்களும் அவர்களது ஆசை நாயகிகளும் அவ்வாறு இன்று வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். உலகம் அதைத் தடுக்கவுமில்லை. ஆனால், அத்தகைய கீழ்த்தர வாழ்வு—மிருக வாழ்வு வாழ நமது வீர தம்பதிகள் விரும்பவில்லை. நிஜ வாழ்வு—குறையற்ற வாழ்வு—புனித வாழ்வு வாழவே அவ்விருவரும் விரும்பினர். பொய் வாழ்வு வாழ்ந்து சாம்ராஜ்ய சக்ரவர்த்தியா யிருப்பதைவிட சாமானிய மனிதனாய் மெய் வாழ்க்கை வாழ்வதே மேலென முடிவு கட்டிய நமது மன்னர் பிரானின் மனத்தூய்மைதான் என்னே! என்னே! ஆம், இத்தகைய ஒரு உத்தம வேந்தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ஒருமாது மெய்யாகவே ஒரு உத்தமியாகவே இருக்க வேண்டும். கேவலம் உடலழகில் மயங்கி ஒரு சாம்ராஜ்யத்தைத் துறக்கக்கூடிய அப்பாவியல்ல நமது மன்னர் பிரான். ஒரு சாம்ராஜ்யத்தையும் துறக்கும் மனத்துணிவு அவருக்கு ஏற்பட வேண்டுமானால் சாம்ராஜ்யத்திலும் மிக மிகப் பெரிய — புனிதமான ஏதோ ஒன்று அவ்வம்மையாரிடம் அமைந்திருப்பதாய் சக்கரவர்த்தி உணர்ந்திருக்க வேண்டும். ஸ்ரீமதி சிம்சன் இருமுறை கலியாண விடுதலை பெற்றிருப்பதினால் அவரது உத்தம குணங்களுக்கு இழுக்கு ஏற்படாது. கற்பைப் பற்றிய மேனாட்டுக் கருத்து வேறு; இந் நாட்டுக் கருத்து வேறு. மேனாட்டு வழக்குப்படி ஸ்ரீமதி சிம்சன் ஒரு உத்தமியே. விரும்பும் போது விவாக விடுதலை செய்துகொள்ள மேனாட்டுச் சட்டம் இடந்தருகிறது. எனவே, ஸ்ரீமதி சிம்சன் மீது ஒழுக்கக் குற்றம் சாட்டுவதற்கில்லை. அம்மையார் இருமுறை விவாகம் செய்தவராயினும் அவரது ஆத்மாவுக்குத் திருப்தி யளிக்கும் காதலை அவர் நமது மன்னர் பிரானிடமே கண்டிருக்க வேண்டும். தனது ஆத்மாவுக்கு திருப்தி யளிக்கக் கூடிய காதலி ஸ்ரீமதி சிம்சனே என நமது மன்னர் பெருமானும் உணர்ந்திருக்க வேண்டும். ஆகவே, அவ்விரண்டு வீர உள்ளங்களும் ஒன்றிவிட்டன. தெய்வீக குணம் படைத்த இரண்டு உள்ளங்கள் ஒன்றும் காட்சியே பேரானந்தக் காட்சி. வாஸ்தவத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைத் துறந்த எட்வர்டு மன்னரும், அவரது காதலுக்கு இலக்கான ஸ்ரீமதி சிம்சனும் ஆணுக்கும், பெண்ணுக்கும் எல்லைக் கற்களாகி விட்டனர். நமது மன்னரது அறிவின் காதலும் பெண்மையும் நூறு மடங்கு மதிப்பேறி விட்டன. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தினும் அவர் காதலித்த பெண் தெய்வமே அவருக்கு மேலெனப்பட்டதெனில் பெண்மையின் பெருமையை அளக்கவும் முடியுமோ? தமது தியாகத்தினால் மன்னர் பிரான் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய அதிகாரத்தைத் துறந்துவிட்டது மெய்யே எனினும், அவரது தியாகம் உலக மக்களுக் கெல்லாம் அவரை சக்ரவர்த்தியாக்கி விட்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சக்ரவர்த்தி நிலையில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யக் குடிகளின் பக்திக்கே அவர் சட்டப்படி உரியராயிருந்தார். இப்பொழுது சாமானிய விண்ட்சர் நிலையில் உலக மக்கள் பக்திக்கே அவர் உரியவராகி விட்டார். இன்று உலக மக்களெல்லாம் அவரை வாயார வாழ்த்துகின்றனர். உலகத்திலுள்ள எல்லா தேசத்தாரும், எல்லா மதத்தாரும், எல்லா மொழியாரும் அவரை ஒருமனப்பட்டுப் போற்றுகிறார்கள். இந்நிலை பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சக்கரவர்த்தி நிலையிலும் பன்மடங்கு பெரியதன்றோ! இவ்வளவு சீரிய குணம் படைத்த ஒருவர் பிரிட்டிஷ் மன்னராவதற்குத் தடையாக நின்ற நாட்டு வழக்கு மிகவும் கொடிதே! வெறுக்கத் தக்கதே!! எட்வர்ட் மன்னரும், ஸ்ரீமதி சிம்ஸனும் தம்பதிகளாகி, உலக மதிப்புப் பெற்றுப் பல்லாண்டு பெருவாழ்வு வாழ்வாராக!

அயோக்கிய "தின மணி"யின் ஆபாசப் புளுகு

சர்தார் படேல் சென்னைக்கு வரும்போது அவருக்கு ஒரு உபசாரப் பத்திர மளிக்க வேண்டு மென்றும், அக்காலத்து ரிப்பன் மண்டப அலங்காரங்களில் காங்கரஸ் கொடியையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் சென்னை நகர சபை ஒரு தீர்மானம் நிறைவேற்றி யிருப்பதை நண்பர்கள் அறிவார்கள். சர்க்காரும் அதைத் தடை செய்யவில்லை. ரிப்பன மண்டப அலங்காரங்களில் காங்கரஸ் கொடியையும் சேர்த்துக் கொள்ளலா மென்றும், ஆனால் அதுதேசியக் கொடி யாகாதென்றும், அதை எக்காரணங் கொண்டும் ரிப்பன் மண்டபக் கொடிமரத்தில் பறக்கவிடக் கூடாதென்றும் சர்க்கார் தெளிவாகக் கூறி யிருக்கிறார்கள். நமது புளுகு மணியான "தின மணி"யோ விஷயத்தை வேண்டுமென்றே குழப்பிக் கொண்டு கனம் பொப்பிலி ராஜா அவர்களையும், ஜஸ்டிஸ் கட்சியையும் தன் வழக்கப்படி ஆபாசமாகத் திட்டுகிறது. படேல் உபசாரத்தின்போது காங்கரஸ் கொடியை ரிப்பன் மண்டபத்தின் மீது பறக்கவிட வேண்டும் என திரு. சத்தியமூர்த்தி திருத்தம் கொண்டு வரவே இல்லை. மண்டப அலங்காரத்தில் காங்கரஸ் கொடியையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றுமட்டுமே திருத்தம் கொண்டு வந்தார். 'ஹிந்து' உட்பட எல்லா பார்ப்பனப்பத்திரிகைகளும், மண்டபத்தின் மீது காங்கரஸ் கொடியைப் பறக்கவிட வேண்டுமென்று திரு. சத்தியமூர்த்தி திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றியதாக, தப்பாக ரிப்போர்ட்டுச் செய்து காங்கரசுக்குப் பொய்ப்புகழ் தேட விரும்பின. எனினும், "ஹிந்து" மட்டும் மறுநாள் அதாவது நவம்பர் 25-ந் தேதி தன் தவறைத் திருத்தி ஒரு குறிப்பு வெளியிட்டது. பொறுப்பற்ற மற்றப் பத்திரிகைகள் அந்தத் தவறைத் திருத்த முயலவே இல்லை. இந்தக் கதைகள் எல்லாம் "தின மணி"க்குத் தெரியாமலிருக்க இடமில்லை. எனினும், சர்தார் உபசாரத்தின்போது காங்கரஸ் கொடியை நகரசபை மண்டபத்தின் மீது பறக்க விட வேண்டுமென்று நகர சபை தீர்மானித்திருப்பதாயும், அதை பொப்பிலி ராஜா மறுத்து நகரசபை அலங்காரங்களில் மட்டும் காங்கரஸ் கொடியைச் சேர்த்துக் கொள்ள அனுமதித்திருப்பதாயும், அது கண்டிக்கத்தக்கதென்றும், நகரசபை மண்டபம் நகர மக்களுக்குச் சொந்தமென்றும் நகரசபை மண்டப விஷயத்தில் பொப்பிலி ராஜாவுக்குத் தலையிட உரிமையில்லை யென்றும் பெரிய அரசியல் பிரகஸ்பதி மாதிரி "தின மணி" உபதேசம் செய்ய முன் வந்திருப்பது போக்கிரித்தனமா? அறியாமையா? அகம்பாவமா எனக் கேட்கிறோம்.

நகரசபை மண்டபத்தில் காங்கரஸ் கொடியைப் பறக்க விடுமாறு திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றினாலும் அது குப்பைத் தொட்டியில் போவது நிச்சயமென திரு. சத்தியமூர்த்திக்குத் தெரியும். அவர் தோல்வியாளரானாலும் இந்தச் சிறு விஷயத்தைக்கூட அறியமுடியாதபடி அவ்வளவு அப்பாவியல்ல. அதனாலேயே நகரசபை அலங்காரங்களில் காங்கரஸ் கொடியையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று திருத்தம் கொண்டுவந்து நிறைவேற்றி, நகரசபையில் காங்கரஸ் கொடியைப் பறக்கவிட்டு விட்டதாகக் கூறிப் பாமர ஜனங்களை ஏமாற்றலாமென எண்ணினார் இந்த உட்கிடக்கையை அறிய மூளையில்லாத "தின மணி", "கார்ப்பரேஷன் அங்கத்தினர்கள் இதை (காங்கரஸ் கொடிப் பிரச்சினையை) இத்துடன் விட்டுவிடக் கூடாது. [illegible] கூட்டத்தில் தேசியக் கொடித் தீர்மானத்தை நிறைவேற்றி கார்ப்பரேஷனின் உரிமைகளைக் காப்பாற்றப் போராட வேண்டும்" என்று 9-ந் தேதி புதன்கிழமை தலையங்கத்தில் பூரளியாக எழுதியிருப்பது பெரிய வேடிக்கையாகவே இருக்கிறது. ஆனால், காங்கரஸ் ஹிட்லரான 'தின மணி' கட்டளை யிட்டபடி 9-ந் தேதி புதன்கிழமையன்று கூடிய சென்னை நகரசபைக் கூட்டத்தில் காங்கரஸ் கொடித் தீர்மானத்தை காங்கரஸ் கௌன்சிலர்கள் கொண்டு வரவுமில்லை; நிறைவேற்றவுமில்லை ஏன்? "தின மணி" மாதிரி காங்கரஸ் கௌன்சிலர்கள் பைத்தியக்காரர்களல்ல; மேன்மாடி காலிகளல்ல. நகரசபை மண்டப அலங்காரத்தில் காங்கரஸ் கொடியைச் சேர்த்துக் கொள்ள பொப்பிலி ராஜா அனுமதித்ததே பெரிய காரியம்—பெரிய பாக்கியம் என்று காங்கரஸ் கௌன்சிலர்கள் பொப்பிலி ராஜாவை உள்ளூர வாழ்த்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், அற்ப "தின மணி"யோ என்னவோ மாதிரி "வள், வள்" எனக் கத்துகிறது.

மற்றும் காங்கரஸ் கொடிதான் தேசியக் கொடியென நிலை நாட்ட "தின மணி" ஏதேதோ உளறிக் கொட்டுகிறது.

> "ஜனங்களில் பெரும்பாலோர் எதை ஆதரிக்கிறார்களோ அதுதான் தேசியக் கொடியாகும். இந்தியாவில் பெரும்பாலோர் ஆதரிப்பது காங்கரஸ். பெரும்பாலோர் ஆதரவு கொண்ட சபையின் கொடி தேசியக் கொடி. இல்லையென்றால் எதுதான் தேசியக் கொடி? வேண்டுமானால் வோட்டு எடுக்க வரட்டுமென்று பொப்பிலியை அறை கூவியழைக்கிறோம்."

என "தின மணி" புலம்புகிறது. பெரும்பாலோர் ஆதரிக்கும் கொடிதான் தேசியக் கொடியானால் சிறுபாலோரை எங்கு கொண்டு தள்ளுவது? எந்த தேசத்திலாவது பெரும்பாலோர் ஆதரிக்கும் கொடியென்றும், சிறுபாலோர் ஆதரிக்கும் கொடி யென்றும் இரண்டு கொடியுண்டா? தேச மக்கள் எல்லாம் ஒருமுகமாக ஆதரிக்கும் கொடிதானே தேசியக் கொடியாக இருக்க முடியும். மற்றும் இந்தியாவிலே பெரும்பாலோர் ஆதரவு பெற்றது "காங்கரஸ்" என்பதும் ஒரு அண்டப் புளுகு அல்லவா? இந்தியாவின் ஜனத்தொகை என்ன? காங்கரஸ் மெம்பர்களின் தொகை என்ன? காங்கரஸை கிறிஸ்தவர்கள் பூராவும் ஆதரிக்கிறார்களா? முஸ்லீம்கள் முழுதும் ஆதரிக்கிறார்களா? ஹரிஜனங்கள் அனைவரும் ஆதரிக்கிறார்களா? சீக்கியர், பார்சிகள், ஒடுக்கப்பட்டவர்கள் எல்லாரும் ஆதரிக்கிறார்களா? ஆங்கிலோ இந்தியர்கள், இந்தியப் பிரஜைகளான ஐரோப்பியர்கள் ஆதரிக்கிறார்களா? ஆகவே, இந்தியர்களில் பெரும்பாலோர் காங்கரஸ்காரரை ஆதரிப்பதாகக் கூறுவது ஹிமாலயப் புரட்டல்லவா? தேர்தலில் காங்கரசுக்கு கிடைக்கும் வெற்றியினால் தேசமக்கள் எல்லாம் காங்கரஸை ஆதரிப்பதாக ஏற்பட்டு விடாது. வாக்காளர்களில் பெரும்பாலோர் அப்பாவிகள்; எழுத்து வாசனையில்லாதவர்கள். காங்கரஸ்காரர்களோ காலித்தனத்திலும், ஏமாற்று வித்தைகளிலும், புரட்டுகளிலும் கைதேர்ந்தவர்கள். ஆகவே, பாமர மக்கள் ஏமாந்து காங்கரஸ்காரருக்கு வோட்டுக் கொடுப்பதைப் பார்த்து ஆச்சரியப்படுவதற்கில்லை. பாமர மக்களுங்கூட காங்கரஸ்காரர் பித்தலாட்டங்களை இப்பொழுது உணரத் தொடங்கி விட்டார்கள். அதனாலேயே ஆந்திர தேசத்திலும், வேலூர், திருச்சி முதலிய இடங்களிலும் சமீபத்தில் காங்கரசுக்கு முழுத் தோல்வி ஏற்பட்டது. ஆகவே, காங்கரஸ் கொடியே தேசியக் கொடி என "தின மணி" கூறுவதை விவேகிகள் ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள்.

டி. வி. சுப்ரமண்யம் நிதி

நன்கொடை யளிக்க வேண்டுகோள்

சென்னை, டிச, 11

நேற்று மாலை 5-30-மணிக்கு தியாகராய ஞாபகார்த்த கட்டிடத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. "ஜஸ்டிஸ்" ஆசிரியர் திரு. டி. ஏ. வி. நாதன் தலைமை வகித்தார். மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

(1) காலஞ் சென்ற டி. வி. சுப்ரமண்யம் நிதிக்கு நன்கொடை அளிக்க வேண்டிக் கொள்வது.

(2) நிதி சேகரம் செய்து காலஞ் சென்ற திரு. சுப்ரமணியத்தின் குடும்பத்தாருக்குக் கொடுக்க திருவாளர்கள்: செ. தெ. நாயகம், சி. ஆவுடையப்ப பிள்ளை, டி. ஏ. வி. நாதன் முதலியோரடங்கிய ஒரு கமிட்டியை ஏற்படுத்துவது.

மேற்படி நிதிக்கு ரூ. 515 நன்கொடை கொடுத்துதவிய கனம் செட்டி நாட்டுக் குமார ராஜாவை வாழ்த்தியும் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

சென்னை நகரசபை

கமிஷனருக்கு ரூ. 1000 க்கு மேலில்லை

வரி அப்பீல் கமிட்டித் தலைவர் 'ஹானரரி'

சென்னை, டிச, 10

நேற்று மாலை நடைபெற்ற சென்னை நகரசபைக் கூட்டத்தில் சர்க்கார் புதிய கமிஷனரை நியமித்துள்ளதை ரத்து செய்து விட்டு 1000 ரூபாய் சம்பளத்தில் ஒருவரைக் கமிஷனராக நியமிக்க வேண்டுமென்றும், வரி அப்பீல் கமிட்டித் தலைவர் பதவிக்குச் சம்பளமில்லாத ஒருவரை நியமிக்க வேண்டுமென்றும் இரு தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு நிறைவேறின.

பல காங்கரஸ் அங்கத்தினர்கள் வாராததால், சர்க்காரை முன் குறிப்பிட்டுள்ள விஷயத்தில் கட்டுப்படுத்த 43 ஓட்டுகள் வேண்டுமாதலால் குறிப்பிட்ட ஓட்டு பலம் கிடைக்கவில்லை.

நகரசபை சர்க்காரிடம் கடன் வாங்கிச் சொந்தமாக ஒரு அச்சுக்கூடத்தை நடத்த வேண்டுமென்று திரு. என். சங்கரன் கொண்டு வந்த தீர்மானம் தோல்வியுற்றது.

ஸ்டாரஹன்ஸ் ரோடும், நாக்ஸ் ரோடும் சந்திக்கும் இடத்திலுள்ள ஓட்டேரி பாலத்தின் வழியே பஸ் போக்கு வரத்துக்கள் அதிகரித்து விட்டபடியால் பாலத்தை விரிவு படுத்த வேண்டுமென்று கொண்டு வரப்பட்ட தீர்மானம் விவாதமின்றி நிறைவேறியது.

கல்விச் சபை தலைவர் தேர்தல்

(நமது நிருபர்)

வேலூர், டிச, 10

வடார்க்காடு ஜில்லா கல்விச் சபை தலைவர் தேர்தல் இன்று மாலை 3-30-மணிக்கு மேற்படி ஆபீஸில் நடைபெற்றது. தலைவர் ஸ்தானத்திற்கு திருவாளர்கள்: எம். பி. ரங்கசாமி செட்டியாரும், ஷண்முக முதலியாரும் அபேட்சகர்களாக நின்றனர். திரு. ஷண்முக முதலியார் 16 வாக்குகளும், எம். பி. ரங்கசாமி செட்டியார் 11 வாக்குகளும் பெற்றதால் திரு. ஷண்முக முதலியார் வடார்க்காடு ஜில்லா கல்விச் சபை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜஸ்டிஸ் கட்சி தேர்தல் பிரசாரம்

பல ஜில்லாக்களில் நடைபெறும்

(நமது நிருபர்)

மதுரை, டிச, 10

நாளது 10-12-36 தேதி முதல் ஜஸ்டிஸ் கட்சி பிரசாரகர்கள், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய ஜில்லாக்களில் இயக்கப் பிரசாரம் ஆரம்பம் செய்வார்கள். அவ்வமயம் பிரசாரகர்கள், இயக்கப் பிரமுகர்கள் அழைத்ததின் பேரில் ஒப்புக் கொண்டுள்ளபடி திண்டுக்கல், வடமதுரை, பழனி தாலூகா முழுவதும், உடுமலைப் பேட்டை தாலூகா முழுவதும் இயக்கப் பிரசாரம் செய்வார்கள். நிலக்கோட்டை தாலூகாவில் ஜஸ்டிஸ் கட்சி பிரசாரகர்கள் வேலை செய்து கொண்டு இருப்பதினால் பிரசாரகர்களில் ஒருவரான பண்டிட் எம். கே. முத்துசாமி அவர்கள் 6-12-36 முதல் 12-12-36 முடிய விருதுநகர், அருப்புக்கோட்டை, தூத்துக்குடி, இராமநாதபுரம் ஆகிய ஊர்களுக்கு ஜஸ்டிஸ் கட்சி பிரசாரம் செய்வதற்கு அந்தந்தவூர் இயக்கப் பிரமுகர்களின் அழைப்பின் பேரில் போயுள்ளார். பழனி 'சன்மார்க்கம்' ஆசிரியர் தோழர் ஸ்வாமி சிவநேசன் அவர்கள் முயற்சியால் இப்பொழுது செட்டியார் சத்திரம், பழனி ஆகிய இடங்களில் கட்சி பிரசாரம் நடைபெற்று வருகிறது. பின்னர், 12-12-36 முதல் பண்டிட் எம். கே. முத்துசாமி அவர்கள் தோழர் சிவநேசன் அவர்களுடன் மேற்படி இடங்களில் பிரசாரம் செய்வார். இப்பிரசாரம் டிசம்பர் 31-ந் தேதிக்குள் முடிவடையும். பின்னர் தமிழ் மாகாண மகாநாடு எங்கு நடத்துவதென்பது பற்றி அறிக்கை வெளியிடுவார்கள்.

தென்னாட்டு வன்னிய குல க்ஷத்திரிய மகா நாடு

(ஒரு நிருபர்)

திருச்சி, டிச, 11

மேற்படி மகாநாடு திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலூகா, அரியலூரில் கலியவரதராஜன் தியேட்டரில் 1936-ம் வருஷம் டிசம்பர் மாதம் 20-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு கூடும்.

சென்னை சர்க்கார் ஹோம் மெம்பர் ராவ்பகதூர் ஏ. டி. பன்னீர் செல்வம் மகாநாட்டைத் திறந்து வைப்பார்.

சென்னை ஹிந்து தேவஸ்தான போர்டு கமிஷனர் திரு. இ. வி. சுந்தர செட்டியார் எம். ஏ., பி. எல்., "மத சமூக சீர்திருத்தத்தைப் பற்றி" சொற்பொழிவு செய்வார்.

திருச்சி ஜில்லா ராவ்பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை எம். ஏ., பி. எல்., "ஜாதி முன்னேற்றத்தைப் பற்றி" சொற்பொழிவு நிகழ்த்துவார்.

பிற்பகல் 1-மணிக்குமேல் 4மணி வரையில் மகாநாடு நடைபெறும்.

(மகாநாட்டுக்கு தஞ்சை ஜில்லா திரு. டி. எஸ். ஆறுமுகம் பிள்ளை பி.ஏ., பி.எல்., தலைமை வகிப்பார்.

திருத்துறைப்பூண்டி ஐக்கிய சங்கம்

(ஒரு நிருபர்)

திருத்துறைப்பூண்டி, டிச, 10

நாளது 1936-ம் வருஷம் டிசம்பர் மாதம் 13-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு இச்சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழா போர்டு ஹைஸ்கூலில் நடைபெறும். அவ்வமயம் கடலூர் ஸ்ரீமதி டி. என். குஞ்சிதம் பி. ஏ., எல். டி., அவர்கள் தலைமை வகிப்பார். கடலூர் திரு. என். குருசாமி பி. ஏ. அவர்களும் பாபநாசம் தமிழ் பண்டிதர் சாமி சிதம்பரனார் அவர்களும் பிரசங்கம் செய்வார்கள்.

காங்கரஸால் நலம் பெற்றவருண்டா?

இல்லை! இல்லை!! இல்லை!!!

தொழிலாளர் துரோகி—காங்கரஸ். ஜில்லா போர்டை போர்க்களமாக்கியது—காங்கரஸ்

திலகர் நிதி திருடியது—காங்கரஸ். ஆசை காட்டி ஏமாற்றுவது—காங்கரஸ்

வகுப்புவாதத்தை வளர்ப்பது—காங்கரஸ். உத்தியோக வேட்டையாடுவது—காங்கரஸ்

திருநெல்வேலி ஜில்லா போர்டு ஊழல்

திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவர் தேர்தலுக்கு முதல் நாளன்று காங்கரஸ் மெம்பர்களான தோழர்கள் என். சின்னக்கண்ணுப் பிள்ளை, சங்கரலிங்கநாடார், டேவிட் நாடார், கன்னியப்ப நாடார், ஷண்முக திரவிய நாடார் ஆகிய 5 பேரும் ஜில்லாபோர்டு காங்கரஸ் கட்சியிலிருந்து ராஜிநாமாச் செய்து விட்டதாகத் தெரிகிறது.

தொழிலாளர்களுக்கு காங்கரஸ் துரோகம்

பிப்ரவரி 23-ந் தேதி மாலை சென்னைத் தொழிலாளர் சங்கங்களின் ஆதரவில் தோழர் சக்கரை செட்டியார் தலைமையில் ஒரு மாபெரும் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு சுமார் ஆயிரம் தொழிலாளர்கள் வந்திருந்தனர். சம்பளப்பட்டுவாடா மசோதாவினாலும், தோழர் மோடியின் திருத்தத்தினாலும் தொழிலாளர்களுக்கு ஏற்படக் கூடிய கஷ்டங்களை தோழர்கள்: சக்கரை செட்டியார், செல்வபதி செட்டியார், டாக்டர் மாசிலாமணி முதலியார் முதலியவர்கள் விளக்கிப் பேசினார்கள். தோழர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அசம்பிளி காங்கரஸ் மெம்பர்கள் செய்கையைக் கண்டித்துப் பேசியதாவது:—

காங்கரஸ் ஜனப்பிரதிநிதிகளில் சிலர், சாதகமாகவும், சிலர் நடு நிலைமை வகித்தும் இருக்கின்றனர். நடு நிலைமை வகிப்பதென்பது மோசமானதாகும். தொழிலாளர்கள் விஷயத்தில் காங்கரஸ்காரர் கட்டுப்பாடாக வேலை செய்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. கோயம்புத்தூரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தோழர் சாமி வெங்கடாசலம் செட்டியார் வியாபாரிகளின் பிரதிநிதியாகச் சென்றவராதலால் நடு நிலைமை வகிக்க நேர்ந்ததென்று கூறப்பட்டிருந்தது. தோழர் வெங்கடாசலம் செட்டியார், தோழர் சர். ஷண்முகம் செட்டியாரை காங்கரஸ் பிரதிநிதி என்று சொல்லித்தான் தோற்கடித்தாரே யொழிய, வியாபாரச் சங்கப் பிரதிநிதி என்ற தனிப்பெயர் சொல்லித் தோற்கடிக்கவில்லை. இதைப்பற்றி காங்கரஸ்காரர் கவனிக்கவேயில்லை. தோழர் வெங்கடாசலம் செட்டியார் இவ்விஷயத்தில் மிகத் தவறாக நடந்து கொண்டு இருப்பதாக சில வியாபாரிகள் என்னிடம் சொன்னார்கள். அவர் காங்கரஸ் பேரால் வெற்றி பெற்றும் காங்கரசுடன் இது விஷயமாய் ஒத்துழைக்கவில்லை. இதைத்தான் நீங்கள் முக்யமாக கவனிக்க வேண்டும்.

முஸ்லீம்களுக்கு காங்கரஸ் துரோகம்

ஜின்னாவின் 14 நிபந்தனைகள் அடிபட்டுப்போகக் காரணம் என்ன?

பழைய பாஞ்சால காங்கரஸ் வாதியான பாரிஸ்டர் லால் துனிச்சந்தின் தலைமையில் மீம் ஷஹபதிராய் ஹாலில் லாகூரில் ஒரு பெரிய பொதுக் கூட்டம் கூடியது.

அப்பொழுது புகழ் பெற்ற 14 நிபந்தனைகளைப் பற்றியும், அவற்றைப் பற்றிய அநேக விசித்திர விஷயங்களைப் பற்றியும் தோழர் ஜின்னா அருமையான பிரசங்கம் செய்தார்.

அப்பிரசங்கத்தில் அவர் கூறியதாவது:—

"காங்கரஸ்"காரர்களை கலக்காமல் நான் அந்த 14 நிபந்தனைகளையும் எழுதவில்லை. அந் நிபந்தனைகள் கூட்டுத் தொகுதியை ஆதாரமாகக் கொண்டவை. எனவே, எல்லா காங்கரஸ் தலைவர்களும் அவைகளை அமோதித்தனர். அகில இந்திய காங்கரஸ் கமிட்டி அந் நிபந்தனைகளை ஒப்புக் கொண்டது. அவற்றை உறுதிப்படுத்தும் பொருட்டு சென்னை காங்கரஸ் மகா சபை முன்பாக அவற்றை சமர்ப்பிக்கும்படி காங்கரஸ் கமிட்டி ஒப்புக் கொண்டது. உண்மையில் பண்டித மாளவியாவால் ஆமோதிக்கப்பட்டு சென்னை காங்கரஸ் மகாசபை அவற்றை ஏற்றுக் கொண்டது எனக்காக வேண்டி முஸ்லீம் லீக்கும் அவற்றை ஒப்புக் கொண்டது. எனினும், அந்த ஒப்பந்தத்தை முறித்தது யார்? முஸ்லீம் லீக் அல்ல; காங்கரஸ்காரர்தான் டில்லியில் அதை நிராகரித்தார்கள். வகுப்பு சமரசத்துக்காக நான் காங்கரசை நெருக்கவில்லை யென்ற குற்றச் சாட்டை நான் ஆட்சேபிக்கிறேன்.

காங்கரஸ்காரர் யோக்கியதை

அனந்தப்பூர் ஜில்லா காங்கரஸ் கமிட்டி மெம்பராயிருந்த தோழர் மூலக்கனூர் மல்லா திம்ம செட்டி தமது பதவியை ராஜிநாமாச்செய்து ஜில்லா காங்கரஸ் கமிட்டித் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:—

சென்ற 15 வருஷ காலமாக நான் ஒரு ஜஸ்டிஸ் கட்சித் தொண்டனாக இருந்தேன். சென்ற ஜில்லா போர்டு தேர்தலில் நான் கம்பாதுகர் பிர்காவுக்கு அபேட்சகராக முன் வந்தேன் 'சாதனா' ஆசிரியரும் ஒரு காங்கரஸ் வாதியுமான தோழர் பாப்பூர் ராமாச்சார்யலு என்னிடம் வந்து காங்கரசில் சேரவேண்டுமென்று கட்டாயப்படுத்தி நான் காங்கரசில் சேர்ந்தால் எனக்குப் போட்டியாக எவரையும் காங்கரஸ்காரர் நிறுத்த மாட்டார்கள் என்றும் வாக்குறுதி யளித்தார். அவர் வார்த்தையை நம்பி நானும் காங்கரசில் சேர்ந்தேன். நான் காங்கரசில் சேர்ந்த பிறகு காங்கரஸ்காரர் என்னை ஏமாற்றி விட்டார்கள். எனக்கு எதிரியாக ஒரு சுயேச்சை பார்ப்பனரை நிறுத்தி அவரை ஆதரித்து காங்கரஸ்காரர் பகிரங்கமாகப் பிரசாரம் செய்யவும் தொடங்கினார்கள். எனினும் நான் அஞ்சவில்லை. என்னைத் தோற்கடிக்க காங்கரஸ்காரர் எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்தும் நான் வெற்றி பெற்றேன். என் வெற்றி காங்கரஸ் பார்ப்பனர் தலையில் இடி விழுந்தது போலிருந்தது. எனவே, மீண்டும் எனக்கு எதிரிடையாகப் பிரசாரம் செய்யத் தொடங்கி விட்டார்கள். ஆகையால், நியாய மென்பது துளிகூட இல்லாத காங்கரசில் நான் மேலும் துளி கூட இருக்க விரும்ப வில்லை. எனவே, என் பதவியை ராஜிநாமாச் செய்கிறேன்.

திருநெல்வேலி ஜில்லா போர்டு யோக்கியதை

திருநெல்வேலி ஜில்லா போர்டு காங்கரஸ் கட்சிக் காரியதரிசி தோழர் சங்கரன்கோவில் என். என். அம்பலவாண பிள்ளை காங்கரஸ் கட்சிக் காரியதரிசி பதவியையும், மெம்பர் பதவியையும், ராஜிநாமாச் செய்து விட்டார்.

ராஜிநாமாக் கடிதத்தில் தோழர் அம்பலவாண பிள்ளை குறிப்பிட்டிருப்பதாவது:—

திருநெல்வேலி ஜில்லா போர்டு தேர்தல் காலத்தில் முன்னைய ஜில்லா போர்டு தலைவர்கள் குறைந்த டெண்டர்களை ஒப்புக்கொள்ளாமல் கூடுதல் தொகையுள்ள டெண்டர்களை திருத்தி ஒப்புக் கொண்டார்கள் என்றும், காங்கரஸ் மெம்பர் தலைவரானால் அப்படிச் செய்யமாட்டார் என்றும் காங்கரஸ்காரர் பிரசாரம் செய்து வாக்குறுதியும் அளித்தனர். ஆனால், அந்த வாக்குறுதிப்படி தற்காலத்திய காங்கரஸ் கட்சிப் பிரசிடெண்டு நடக்கவில்லை. 1936, 37-ம் வருஷத்திய காண்டிராக்டுகளுக்கு குறைந்த டெண்டர்களை ஒப்புக் கொள்ளாமல் தமதிஷ்டப்படி திருத்தப்பட்ட டெண்டர்களையே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

தோழர் சாவடிகூத்தநயினார் பிள்ளை வீட்டில் கூடிய ஒரு காங்கரஸ் கட்சிக் கூட்டத்தில் 56 ஆசிரியர்களுக்கு ஜில்லா போர்டு தலைவர் 3 மாத நோட்டீஸ் கொடுத்திருப்பதைப் பற்றி ஆலோசிக்கப்பட்டது. அவ் விஷயத்தைப் பற்றி யோசிக்க ஜில்லா போர்டின் ஒரு விசேஷக் கூட்டம் கூட்டவேண்டு மென்றும், அந்த 56 ஆசிரியர்களுக்கும் மீண்டும் உத்தியோகம் கொடுக்க வேண்டும் என்றும் அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், அந்த தீர்மானத்துக்கு மாறாக, சங்கரன்கோவில் போர்டு ஸ்கூல் ஆசிரியர் தோழர் கிருஷ்ணசாமி அய்யரை வேலையிலிருந்து நீக்கி அவருக்குப் பதில் வேறொருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். குறைந்த சம்பளமுள்ள ஆசிரியர்களை ஒரிடத்திலிருந்து மற்றொரிடத்துக்கு மாற்றும் கெட்ட வழக்கம் காங்கரஸ் நிர்வாகத்திலும் நின்றபாடில்லை. ஜில்லா போர்டு ஸ்கூல்களில் பல வருஷ காலம் ஆக்டிங் பார்த்த ஆசிரியர்களை நீக்கிவிட்டு புது ஆசிரியர்களை ஜில்லா போர்டு தலைவர் நியமனம் செய்திருக்கிறார். காங்கரஸ் திட்டங்களை நிறைவேற்றி வைக்கவும், வாக்குறுதிகளைக் காப்பாற்றவும் தற்கால ஜில்லா போர்டால் முடியாதென்று நான் உண்மையாக நம்புகிறேன். காங்கரஸ் கட்டளைப்படி காந்தி குல்லா அணிய முடியாதென்று தலைவர் கூறிவிட்டார். எனவே, அப்பேர்ப்பட்ட ஒரு கட்சியில் மெம்பரா யிருப்பதைவிட விலகுவதே மேலென்றெண்ணிக் காரியதரிசி பதவியையும், மெம்பர் பதவியையும் ராஜிநாமா செய்கிறேன்.

காங்கரசுக்காரர்கள் பொதுஜனப் பிரதிநிதிகளாவார்களா?

ஜனப் பிரதிநிதி என்பவர்கள் ஜனங்களுக்குத் தெரிந்தவர்களாகவும், ஜனங்களிடம் உண்மையைச் சொல்லி ஓட்டுக் கேட்பவர்களாகவும் இருக்கவேண்டும்.

ஆனால் நமது காங்கரஸ்காரர்கள் எலக்ஷனில் "வெற்றி" பெற்றார்கள் என்றாலும், ஜனங்களுக்குத் தெரிந்தவர்களா? ஜனங்களிடம் உண்மை பேசி ஓட்டுப் பெற்றவர்களா? என்பது கவனிக்கத் தக்கதாகும்.

காங்கரசுக்காரர்கள் கொள்கை இன்னது என்று அநேக மக்களுக்குத் தெரியவே தெரியாது. உண்மையிலேயே காங்கரசுக்கும் இன்னதுதான் எலக்ஷன் கொள்கை என்பதாக ஒன்றும் இல்லவே இல்லை.

1. காங்கரசுக்காரர்கள் ஓட்டுக் கேட்பது காந்திக்கு ஓட்டுப் போடுங்கள் என்பதாக கேட்பது.

2. ஜெயிலுக்கு (யாரோ) போனவர்கள் ஆகலால் (யாருக்கோ) ஓட்டுப் போடுங்கள் என்பது.

3. பொய்யையும் அன்னியர்மீது அபவாதப் பழியையும் கூறி ஓட்டுக் கேட்பது.

4. மூட நம்பிக்கையான மதப் பிரசாரம் செய்து அதை அரசியலுடன் பொருத்தி ஓட்டுக் கேட்பது.

5. பெண்களைத் தனிமையில் அனுப்பி முக்கியஸ்தர்களை வசப்படுத்துவது.

6. அபேக்ஷகர்கள் யார்? அவர்கள் யோக்கியதை என்ன? முன் பின் நடத்தை என்ன? என்பதை மூடி வைத்து ஓட்டு வாங்குவது.

7. தங்கள் அதிகாரத்துக்கு சம்பந்தமில்லாத காரியங்களைச் செய்வதாகச் சொல்லி ஆசைகாட்டி ஏமாற்றி ஓட்டு வாங்குவது.

இதுபோல் அநேக பித்தலாட்டங்களால் ஓட்டு பெற்றவர்கள் உண்மையான பிரதிநிதிகளாவார்களா? என்று கேட்பதோடு யோக்கியமான அரசாங்கத்தார் இவர்களை பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளலாமா என்றும் கேட்க வேண்டியிருக்கிறது.

காங்கரஸ்காரர்கள் நடந்துகொண்டதாகவும், பேசியதாகவும் நாம் சொல்லும் மேல்கண்ட 7, 8 காரியங்களுக்கும் நம் வார்த்தைகளையே நம்பும்படி நாம் சர்க்காரைக் கேட்கவில்லை. அவர்களுக்கு உண்மை தெரியவேண்டுமானால் எலக்ஷன் பிரசாரத்தில் காங்கரஸ்காரர்கள் பேசியதையும், அவர்களது தனிப்பட்ட நடவடிக்கைகளையும், போலீஸ் இரகசிய இலாக்கா குறிப்புகளையும், (சி. ஐ. டி.) சுருக்கெழுத்துக்காரர் எடுத்த பிரசங்கங்களையும், அக்கூட்டத்திற்கு வந்திருந்த மக்களின் யோக்கியதையையும் காங்கரஸ் மெம்பர்களை கமிட்டியில் வைத்தே அலசிப்பார்த்து உண்மை தெரிந்து கொள்ளும்படி வேண்டுகிறோம்.

ஆதலால், ஸ்தல ஸ்தாபனம் என்னும் பேரால் உபயோக மற்ற "சுதந்தரத்தை"க் கொடுத்து விட்டு அதையும், யோக்கியதையும், பிரதிநிதித்துவமும் அற்ற ஆட்கள் வந்து நடத்தும்படி செய்துவிட்டு இந்திய மக்களை வேடிக்கை பார்ப்பதானது மிக மிக அதர்மமான காரியம் என்று நம் அரசாங்கத்தாருக்கு எடுத்துக் காட்டாமல் இருக்க முடியவில்லை. ஏன் என்றால், ஏழைகள் வரிப் பணம் பதறப் பதறக்கொள்ளை போகின்றது; நாசமாகின்றது என்பதால் தான்.

திலகர் நிதி மோசடி— "ஹிதவாதா" கண்டனம்

இந்திய ஊழியர் சங்க, மத்திய மாகாண கிளை ஸ்தாபனத்தின் பத்திரிகையாகிய 'ஹிதவாதா' (நாகபுரி) தனது 13-ந் தேதி வெளியீட்டில் கீழ்க் கண்டவாறு எழுதி யிருக்கிறது:—

மகாராஷ்டிர மாகாண காங்கரஸ் கமிட்டியின் மாஜி காரியதரிசியான தோழர் மாஜன் தமது சிரமத்தையும் பாராமல் திலகர் சுயராஜ்ய நிதியைக் குறித்து ஆராய்ச்சி செய்தன்ன விஷயங்களை 'மராட்டா'வில் வெளியிட்டுள்ளனர். அதை பின் பற்றி 'ஜஸ்டிஸ்' ஸாம், பெருந் தேசீயத் தொகையாகிய 1 கோடி 25 லட்சம் ரூபாயை 'தேசத்தியாகிகள்' எவ்விதம் வருந்தத் தக்க முறையில் ஊதாரித்தனம் செய்துள்ளார்களென்பதைத் தனது பலகட்டுரைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளது. இவைகளின் பயனாக திலகர் நிதி சம்பந்தமாக தென்னிந்தியாவில் பொது மக்களிடை ஓர் விழிப்பு ஏற்பட்டுள்ளது. ஆயினும், இம் மோசடியைக் குறித்த 'டைம்ஸ் ஆப் இந்தியா'வில் தலையங்கம் எழுதப்பட்ட பின்பே பிரபல காங்கரஸ்காரர்கள் தங்கள் மீது ஏற்படுத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளுக்குப் பதிலளிக்கத் தீர்மானித்தனர். காங்கரஸ் ஜூபிலி கொண்டாடப் போகும் இச்சமயத்தில் இம்மோசடி வெளிவந்ததானது, தேசியத் தலைவர்களெனக் கூறிக் கொள்வோரின் ஒரு பெரும் பகுதியினரின் பொது வாழ்க்கையை விளம்பரம் படுத்து வதா யிருக்கிறது.

ஒரு யோசனை

வருந்தத்தக்க இவ்வெளியீட்டிலிருந்து ஒரு நல்ல ஆலோசனை பிறக்கின்றது. பொது வாழ்க்கையின் நன்மையை உத்தேசித்து, தங்களுக்குத் தாங்களே பொறுப்பு தாரிகளாயுள்ள மனிதர்கள், நிதிகள் சேகரிக்கும் விஷயத்தில் சட்ட மூலமாகச் சில தடைகள் ஏற்படுத்த வேண்டுவது அவசியம். தேசத்திலுள்ள எந்த ஸ்தாபனமோ, நபரோ பொது மக்களிடமிருந்து பணம் வசூல் செய்வதானால், குறைந்த பக்ஷம் வருஷம், பிரதி, (அது சம்பந்தப்பட்ட) கணக்குகளையாவது சமர்ப்பிக்குமாறு சர்க்கார் கேட்கலாம். ஆனால், இவ்வித சட்டத்தால், பொது நிதியே திரட்டாமல் படி சர்க்கார் செய்து விட கூடும் என்பது நமக்குத் தெரியும். ஆயினும், நமக்குள் குறைகள் இருக்கும் வரையில் அதற்கும் நாம் உடன் பட்டுத்தான் தீரவேண்டும்.

அழியாக் கறை

நிதியின் வசூல், நிர்வாகம் ஆகிய வற்றிற்குப் பொறுப்பு தாரியாயுள்ளவர்கள், ஒரு அறிக்கை வெளியிடுவார்களென்று எதிர்பார்த்த நாம் இதுவரையிலும் திலகர் சுயராஜ்ய நிதியைக் குறித்து ஒன்றும் எழுதாமலிருந்தோம். ஆனால், இதுவரையிலும் தனிப்பட்ட தலைவர்களே பதில் கூறியுள்ளனர். அதுவும் சமாதானம் கொடுப்பதாயில்லை. நிதியிலிருந்து பெருவாரியான பணத்தைத் தங்கள் சுயநலத்திற்காக, பொறுப்புள்ள மனிதர்கள் உபயோகப் படுத்திக் கொண்டார்களென்று வெளிப்படையாக குற்றச்சாட்டுகள் வெளியிருப்பதால் காங்கரஸ் அதிகாரிகள் அதற்கு தக்க சமாதானங்கள் கூறுவார்களென்று பொது ஜனங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். இல்லாமல் போனால் 'சத்தியம்' 'அஹிம்சா' தருமத்திற்கு தன்னை ஐக்கியப் படுத்தியுள்ள ஒரு பெரிய ஸ்தாபனத்தின் மீது திலகர் சுயராஜ்ய நிதி என்னும் அழியாக் கறையாக இருந்து வருமென்பதில் சந்தேகமில்லை.

(முடி [illegible])

* * *

வாக்காளர்களே! ஒரு வார்த்தை!!

—:o:—

14-ந் தேதி திங்கட்கிழமை நடைபெறப் போகும்
பள்ளத்தூர் பிர்கா தேர்தலில்

நீங்கள் யாரை ஆதரிக்கப் போகிறீர்கள்?

கானாடுகாத்தான் பஞ்சாயத்து போர்டு தலைவராகவும்,
ராமநாதபுரம் ஜில்லா போர்டு மெம்பராகவும்,
ராமநாதபுரம் கல்விச் சபை மெம்பராகவும்,
இருந்து
பொது ஜனத் தொண்டாற்றி அநுபவம் பெற்ற
திருவாளர் க. வெ. சித.
வெங்கடாசலம் செட்டியாரவர்களையே
நீங்கள் தயவுசெய்து ஆதரிக்க வேண்டும்.

* * *

திருநெல்வேலி ஜில்லா மகாநாடுகள்

இம்மாத முடிவுக்குள் பல மகாநாடுகள் கூட்ட, திருநெல்வேலியில் வெகு தீவிரமான வேலைகள் நடந்து வருகிறது.

மகாநாடு சம்பந்தமான விஷயங்களை அவ்வப்போது தெரிந்துகொள்ள, இந்த ஜில்லாவிலுள்ள சகல சங்கங்களும் பொது நலத் தோழர்களும் தங்களுடைய முழு விலாசங்களையும் உடனே தெரியப்படுத்த வேண்டுகிறேன்.

10—12—36
ஏ. இராமநாதர்
திருநெல்வேலி

* * *

சினிமா பகுதி

இரண்டாவது அகில இந்திய சினிமா மகாநாடு

சென்னை, டிச, 11

அகில இந்திய சினிமா மகாநாட்டு கௌரவ காரியதரிசிகள் எழுதுவதாவது:—

சமீபத்தில் சென்னையில் நடைபெறவிருக்கும் அகில இந்திய சினிமா மகாநாட்டிற்கு பம்பாயிலிருந்து இந்திய சலனப்பட சங்கத்தின உபதலைவர் திரு. என். ஜீ. ஜாகிர்தார் தலைமையில் ஒரு கோஷ்டியும் வங்காளத்திலிருந்து ஈஸ்ட் இந்தியா பிலிம் புரோப்ரைட்டர் திரு. பி. எஸ். மெம்கா, திரு. தேவிகாபோஸ், திரு. எ. ஆர். தார் மற்றும் பலரும் வருவதாகச் செய்தி கிடைத்துளது. மகாநாட்டில் சினிமாக் கலை சம்பந்தமான பல முக்கிய பிரச்சினைகள் விவாதத்திற்கு வரும். பம்பாயைச் சேர்ந்த திரு. ஜீ. ஜே. பதாக் அறிவை விளக்கக் கூடிய படங்களைக் குறித்துப் படிப்பார்.

இதுவன்றி ஸ்ரீமதிகள் கே. ஆர். சாரதாம்பாள், எம். என். தேவசேனா, டி. எம். சாரதாம்பாள், டி. வி. ராஜலக்ஷ்மி, எஸ். என். விஜயலக்ஷ்மி, டி. என். கிருஷ்ணவேணி, எம். எஸ். மோகனாம்பாள் முதலியோர் வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களாக சேர முன் வந்துள்ளதை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்

சினிமா சென்ட்ரல்

'சந்திர மோகனா' அல்லது ''சமூகத் தொண்டு'' என்ற தமிழ் பேசும் படம் இங்கு இன்று முதல நான்காவது வாரமாக நீடிக்கப் பட்டிருக்கிறது.

சரஸ்வதி

மாஸ்டர் பிரோஸ் தாஸ்தர், மிஸ் ஷரீபா முதலியோர் நடிக்கும் 'நூர்-ஈ-யாமன்' என்ற உருது பேசும் படம் இங்கு இன்று முதல் காண்பிக்கப் படும்.

பிரைட்டன்

''கிருஷ்ண லீலா'' என்ற பேசும் படம் இங்கு இன்று முதல் மற்றொரு வாரத்திற்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

எல்பின்ஸ்டன்

மிஸ் லோரட்டா யங், பேசில் ராத்போன் முதலியோர் நடிக்கும் 'ரகசிய உடன்பாடு' என்ற ஆங்கில பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும்.

வெல்லிங்டன்

மிஸ் பார்பாரா, ஜேன் ரேமண்ட் முதலியோர் நடிக்கும் 'மணப் பெண்ணின் வெளியேற்றம்' என்ற ஆங்கிலப் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும்.

கெய்டி

மிஸ். தனலக்ஷ்மி, சீனிவாச ராவ் முதலியோர் நடிக்கும் 'பார்வதி கல்யாணம்' என்ற தமிழ் பேசும் படம் இங்கு இன்று முதல இரண்டாவது வாரமாகக் காண்பிக்கப்படும்.

கீழ்நாட்டு ''கிரீடா கார்போ''

லண்டன் (தபால்)

பாஞ்சால தேசத்தைச் சேர்ந்த, அழகே உருவெடுத்த ஸ்ரீமதி பிரபா என்னும் இருபத்திரண்டு வயதே நிரம்பப் பெற்ற நங்கை அகில இந்திய முதல் அழகு ராணியாக தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

கீழ்நாட்டு ''கிரீடா கார்போ'' என பட்டம் சூட்டப் பட்டிருக்கிறார். வைதீக இந்து குடும்பத்தில் பிறந்து வளர்ந்த பிரபா ஒரு சில நாட்களுக்கு முன்பே தனது பர்தாவைக் களைந்தெறிந்து விட்டு சினிமாவில் நடிக்க முன் வந்துள்ளார். 'விழிப்பு' என்ற படத்தில் சமீபத்தில் நடித்து அதிக ஊதியம் பெற்றுள்ளார்.

இராமநாதபுரம் ஜில்லா போர்டு பிரிவினை

டிசம்பர் 24-க்குள் நடைபெறும்

(நமது நிருபர்)

மதுரை, டிச, 10

இராமநாதபுரம் ஜில்லா போர்டை சென்னை சர்க்கார் இரண்டாகப் பிரிக்கும் படி உத்தரவு செய்து விட்டார்கள். இவ்வுத்தரவுப்படி 24-12-36-க்குள் பிரிவினையாகி விடும். அப்படி பிரிக்கப்படும் போர்டு ஆபீஸ்கள் இரண்டும் மதுரையிலும் திருப்பத்தூரிலுமிருக்கும்.

முனிசிபல் கமிஷனர்

மதுரை முனிசிபல் கமிஷனர் நானது மாதம் 14-ந் தேதி முதல் ஒரு மாதம் ரஜாவில் போவதாகவும் அந்தப் பதவியை சேர்மென் பார்த்து வருவாரென்றும் தெரிகிறது.

இந்து தேவஸ்தான போர்டு கமிஷனர்

திரு. ஈ. வி.
சுந்தர ரெட்டியார்
சுற்றுப்பிரயாணம்

சென்னை, டிச, 10

இந்து தேவஸ்தான போர்டு கமிஷனரான திரு. ஈ. வி. சுந்தர ரெட்டியாரின் சுற்றுப் பிரயாண விவரம் பின் வருமாறு:—

19-12-36 சென்னையி லிருந்து புறப்பாடு (திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ், இரவு 8 மணிக்கு).

20-12-36 அரியாலூர் விஜயம் (காலை 2-12 மணிக்கு)

21-12-36 அரியாலூரில் தங்குதல், உடையார் பாளையம், கங்கை கொண்ட புரம் விஜயம்.

22-12-36 அரியாலூரிலிருந்து திருச்சிக்குப் புறப்பாடு.

23, 24, 25, 26-ந்தேதி திருச்சியில் தங்குதல்.

27-12-36 திருச்சியி லிருந்து புறப்பாடு (காலை 7-27 மணிக்கு) பழனி வருகை (காலை 11-56 மணிக்கு)

28-12-36 பழனியில் தங்குதல்.

29-12-36 பழனியி லிருந்து புறப்பாடு. மதுரை வருகை. (காலை 7-மணிக்கு) போடிநாயக்கனூர் விஜயம்.(காலை 10-35 மணிக்கு).

30-12-36 மதுரையி லிருந்து புறப்பாடு (இரவு 7-10 மணிக்கு)

31-12-36 சென்னை வருகை (காலை 7-10 மணிக்கு)

கொச்சி மகாராஜா

சென்னை விஜயம்

சென்னை, டிச, 12

கொச்சி மகாராஜா, திவான் சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியாருடன் இன்று காலை சென்னை வந்திருக்கிறார். சென்ட்ரல் ஸ்டேஷனில் அவரைப் பலர் வரவேற்றனர்.

மாகாண அசெம்பிளி

சென்னை, டிச, 11

மாகாண அசெம்பிளிக்கு தஞ்சை முஸ்லீம் ஸ்தானத்திற்கு தான் ஒரு அபேட்சகராய் நிற்பதாக டாக்டர் சைபத் தாஜுதீன் எம். எல். சி. அறிவிக்கிறார்.

கூடிய சீக்கிரத்தில் ஸ்டார் டாக்கீஸில் காண்பிக்கப் படவிருக்கும் ''பூஜாரின்'' என்ற படத்திலிருந்து ஒரு காட்சி.

ராக்ஸி

வார்னர் பிரதர்ஸ் கம்பெனியாரின் 'அபாய கரமானது' என்ற ஆங்கில பேசும் படம் இங்கு இன்று முதல் ஆரம்பமாகிறது. மிஸ். பெட்டி டேவிஸ், பிராங் சாட்டோன் முதலியவர்கள் முக்கிய நடிகர்களாவர்.

வெஸ்ட் எண்ட்

மிஸ் கமலவேணி, செருகளத்தூர் சாமா, டி. எஸ். சந்தானம் முதலியோர் நடிக்கும் 'திரௌபதி வஸ்திராபரணம்'' என்ற தமிழ் பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும்.

பிராட்வே

எம். கே. தியாகராஜ பாகவதர், மிஸ் தேவசேனா முதலியோர் நடிக்கும் 'சத்திய சீலன்' என்ற தமிழ் பேசும் படம் இங்கு இன்று முதல் இரண்டாவது வாரமாகக் காண்பிக்கப்படும்.

வேல் பிக்சர்ஸாரின் வெற்றிச் சுடர்!
''பட்டினத்தா''ரில் உதயமாயிற்று! ''கிருஷ்ண லீலா''வில் பிரகாசிக்கப்பட்டது!!
இதோ அடுத்தபடியாக
''மாயா பஜார்''
அல்லது
சஸிரேகா பரிணயம்
(தெலுங்கு பேசும் படம்)
ஒவ்வொருவரும் பார்த்தானந்திக்கத்தக்கது!
நூதன ஜோடனைகள்! செவிக்கினிய பாடல்கள்!! சிறப்பாய் அமைந்துள்ளன!!!
ஆந்திர நடிக நட்சத்திரங்கள்
இதனை அழகு செய்திருக்கின்றனர்.
பிராட்வே டாக்கீஸில்
19—12—'36 சனிக்கிழமை முதல்
குதூகலத்துடன் ஆரம்பமாகிறது.

டிசம்பர் 19-ந் தேதி முதல் கொண்டு பிராட்வே டாக்கீஸில் காண்பிக்கப் படப் போகும் தெலுங்கு 'மாயா பஜாரில்' ஓர் காட்சி.

எதிர்பாருங்கள்! ஆரம்ப தினத்தை!! எதிர்பாருங்கள்!!!
ஏராளமான பொருட் செலவில்—அதியுன்னத நடிகர்களுடன்—அற்புதமான நவ நாகரீக முறையில்
Mr. V. S. M. ராஜாராமய்யர் அவர்கள்
டபுள் ரோலில் ஆக்ட் செய்த
★ ''குட்டி'' ★
அல்லது
சாமாஜக சித்திரம்
❁
இந் நகரத்தின் வாழ்க்கையைச் சித்தரித்துக் காட்டும்
ஓர் உயரிய சமூகத் தமிழ் பேசும் படம்.
டைரக்டர்:
T. P. கைலாசம்
B.A., A.R.C.Sc., (London)
ஸ்டுடியோ:
வேல் பிக்சர்ஸ்
மதராஸ்.
விபரங்களுக்கு:—
தந்தி: 'JARIVASTAR'
V. S. டாக்கீஸ்,
மதுரை.
போன் நெ: 58-A
பங்களா 37

தமிழ் நாடும், கைத் தறிகளும்

வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணம் என்ன?

மாகாண சங்கமும், மகாநாடும் கூட்ட முன்வாருங்கள்

(உறையூர் சோ. லெ. மு. இலட்சுமணய்யா எழுதியது)

(9-12-36 இதழ் தொடர்ச்சி)

30-5-36-ந் தேதி "தமிழ்நாடு" பத்திரிகையில் "நெசவாளர் படுந் துயரம்" என்ற தலைப்பின் கீழ் சேலம் தோழர் வை. நடேசன் அவர்கள் பின் வருமாறு எழுதியுள்ளார்.

சுமார் 10, 15 ஆண்டுகளுக்கு முன்இருந்தநிலைமைக்கும்இப்போது கைத்தறி நெசவாளர்களுக்கு மிக்க குறைந்த கூலியும், அதுவும் கிடைக்காமல் அவதியுறுவது பரிதபிக்கக் கூடியதாக இருக்கிறது. இதற்குக் காரணம் ஜப்பானும், அன்னிய தேச துணியும், உள் நாட்டு மில்களுமே யாகும். திரு. சாமி வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் மே மாதம் 28-ந்தேதியில் சென்னை ரோட்டரி சங்கத்தில் "ஜப்பானின் கைத் தொழில் அபிவிருத்தி" என்னும் விஷயமாக பேசியுள்ளதில் கீழ் காணும் விஷயங்களை மிக்க தெளிவாக கூறியுள்ளார். ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ஜப்பான் இதர தேசங்களுடன் வியாபாரம் நடத்தக் கூடாது என்ற தடை இருந்தது. ஆனால் இப்போது ஜப்பான் வியாபாரம் நடத்தாத தேசமே இல்லை. இது பெரிய ஆச்சரியமாகும். ஜப்பானில் நெசவு சாலைகள் குடிசைகளில் தான் இருக்கின்றன. ஒவ்வொரு குடிசையிலும் 6 மின்சார தறிகள் இருக்கின்றன. ஆடவரும், பெண்களும், பிள்ளைகளும் வேலை செய்வதில் சோம்பல் படுவதே இல்லை. காலை 6 மணிக்கு வேலை ஆரம்பித்து மாலை 6-30 மணிக்குள் மூன்று நடவை நெய்து எடுத்துக்கொண்டு நாள் ஒன்றுக்கு 300 கெஜம் துணி உற்பத்தி செய்கின்றனர். ஒரு குடும்பத்தினர் மாதம் ஒன்றுக்கு 98 ரூபாய் சம்பாதித்து மின்சாரத்திற்காக மாதம் 1-க்கு 12 ரூபாய் செலுத்தி வருவதுடன் குழந்தைகளுக்கு சாப்பாடு போட்டு வருஷத்திற்கு 30 ரூபாய் சம்பளமும் தொழில் வரி வருஷத்திற்கு 5 ரூபாய் கொடுத்து வருகிறார்கள். மேலும் மாதத்துக்கு இரண்டு நாள் ஓய்வு எடுத்துக் கொள்ளுகின்றார்கள் பெண்கள் சமையல் வேலைகளிலும் பிறவேலைகளிலும் ஈடுபட்டு ஆடவருக்கு தக்க உதவி யளிக்கின்றனர். வேலை சுறுசுறுப்பாக செய்வதில் சிறு பெண்களே முதன்மையானவர்கள். கூலிவேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தினசரி கூலி 1-12-0 கிடைத்து வருகிறது. ஜப்பானின் கைத் தொழில் அபிவிருத்திக்கு முக்கிய காரணம் 1894-96-ம் ஆண்டு சீன யுத்தமும், 1904-5 ருஷிய யுத்தமும், 1914-18 ஐரோப்பிய யுத்தமுமே மூலகாரணம் என்றும் ஜப்பானிய பணக்காரர் வசமே கைத் தொழில்கள் நடைபெறவும், ஆதரவு பெறவும் இருப்பதுடன், மற்ற தேசங்கள் ஜப்பான் மீது பொறாமை கொண்டிருப்பது தெரிந்தே தனது சாம்ராஜ்யத்தை ஆசியாவில் பெருக்குவதற்காக முயற்சித்து வருவதனால் இந்தியா ஜப்பானைக் கண்டு அஞ்சுகிறது. இவ்வித ஆபத்து ஜப்பானால் இந்தியாவுக்கு நேரா வண்ணம் தக்க நடவடிக்கைகள் இந்தியா எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால், அதிகாரம் இந்தியர் இடமில்லை என்றும், இந்தியா ஜப்பான் வர்த்தக ஒப்பந்தமானது புதிதாக புதுப்பிக்கும் போது இந்தியாவுக்குள்ள குறைகளைப் போக்க வேண்டுவது அவசியமாகும் என்றும் மற்றும் பல காரணங்களையும் கூறியுள்ளார்.

6-ந் தேதி கோயமுத்தூர் வர்த்தக சங்கத்தார் நிர்வாகக் கமிட்டி கூட்ட நடவடிக்கைகள் திவான்பகதூர் ஜி. என். ரத்தினசபாபதி முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

ஜப்பானிலிருந்து இறக்குமதியாகும் நூலுக்கு இப்போதுள்ள தீர்வையைவிட மேற்கொண்டு 25% வீதம் உயர்த்த வேண்டும். இறக்குமதியாகும் நூல் இவ்வளவு தான் என்பதை நிர்ணயித்து விட வேண்டும். துணிகளுக்கும் தீர்வையை இன்னும் 12½% உயர்த்த வேண்டும். இதிலும் நிர்ணயம் செய்ய வேண்டும். கைத்தறி தொழிலாளர்கள் அடைந்துள்ள கஷ்டத்தைக் கண்டு வருந்துவதுடன் சர்க்கார் கைத்தறி நெசவாளர்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தி அவர்கள் குறைகளை நிவர்த்திக்க கேட்டுக் கொள்ளுகிறது என்றும் பிறவும் தீர்மானித்துள்ளனர். தோழர் அய்யம்பேட்டை முராரி. கா. முனிசாமி அய்யர் அவர்கள் கைத்தறி நெசவாளர் சங்கத்தில் ஒரு பிரசங்கம் செய்தபோது கீழ்காணும் விஷயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை மாகாணத்தில் கைத்தறி நெசவாளர்களின் நிலைமை மிக்க கேவலமாக இருப்பதாகவும், தொழிலாளர்களுக்கான சங்கங்கள் காண வேண்டுமெனவும், அதன் சார்பாகத் தக்க பரிகாரங்களைக் காண தக்க வழி ஏற்படும் என்றும், தொழிலாளர்கள் பால் முதலாளிகள் சற்றும் தயை, தாட்சண்யம் காட்டுவதில்லை என்றும், முதலாளிகளின் பேரில்தொழிலாளர் கொண்டுள்ள நம்பிக்கையினால் தொழிற் கஷ்டம் ஏற்பட்டது என்றும், கைத் தறி நெசவுகள் மில்களுடன் ஓட்டத்தில் போட்டி போட முடியவில்லை என்றும், கைத் தறி நெசவுக்குப் போதிய பாது காப்பு அளிக்காவிடில் 19 வது நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஏற்பட்ட கஷ்டம் ஏற்பட ஏதுவாகும் என்றும், மற்றும் அன்னிய தேச போட்டியும் ஜப்பானின் துணிகள் குறைந்த விலைக்கு விற்பதாலும் இந்நாட்டுக் கைத் தொழில்கள் அழிந்து போக வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்றும் சட்ட பூர்வமாக அன்னிய தேச இறக்குமதியை தடைசெய்ய வேண்டுமெனவும், காப்பு வரி போர்டார் தீர்வையைக் குறைத்து அன்னிய தேச இறக்குமதியை இந்தியாவில் பரவ விடுவதால் இந்திய கைத் தறிகளுக்கும், மில்களுக்கும் பாதகம் ஏற்படும் என்றும் காப்புவரி போர்டாரின் தீர்மானத்தை அனைவரும் கண்டிக்கவேண்டியது அவசியம் என்றும், கைத் தறியாளர் நிலைமை சீர்பட வேண்டுமானால் கூட்டுறவு முறையில் சங்கங்கள் காணவேண்டுமெனவும் சர்க்கார் தக்க பரிகாரங்களையும், பாதுகாப்புகளையும் உதவி நலன் செய்ய வேண்டுவது அவசியம் என்றும் மற்றும் பலவும் கூறியுள்ளார். மேலும், யுவ௵ தை மீ 16ந் தேதி "விடுதலை" பத்திரிகையில் என்னுல் "தமிழ் நாடும் கைத்தறியும்; தொழிலாளர் துயரம்" என்ற தலைப்புடன் ஓர் வியாசம் எழுதப்பட்டது. அதற்கு ஆதரவாக சங்க கவிஞர் கோவில் செங்குந்தர் அபிவிருத்தி சங்க உபதலைவர் தோழர் என். எம். திருவுடையா முதலியார் அவர்கள் 29-2-36 ந் தேதி "விடுதலை"யில் ஆதரவு காட்டி மாகாண சங்கமும், மகாநாடும் கூட்டவும், காணவும் வேண்டியது அவசியம் என்று எழுதியதுடன், வேறு பல தோழர்களிடமிருந்தும், மாகாண சங்கமும் மகாநாடும் கூட்டவேண்டும் என்று எழுதியும் பேசியும் கூறியுள்ளார்கள்.

தோழர்களே! மேல் கூறியுள்ள பல தோழர்களின் கட்டுரைகளையும் பேச்சுகளையும் நிதானமாக படித்துப் பாருங்கள். சகல அரசியல் பூதக்கண்ணாடிகளையும் போட்டுக்கொண்டு படிப்பதில் உண்மையும், தெளிவும், நியாயமும் தோன்றும். அது நிலைமையிலிருந்து. வளர்ப் படிப்போர்களானால் இன்று நம நாட்டில் பூர்வபுராதன கால முதற்கொண்டு பல பெரியோர்களால் போற்றி வந்த கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு இன்று கால் வயிற்று கஞ்சிக்கும் காற்றாய் பறக்கவும், வறுமை நோய் கண்டு வாடவும் தெருத் தெருவாகவும் ஊர் ஊராகவும் பெண்டு பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு ஒரு சாண் வயிற்றுக்கு உணவு தேட கண் உறக்கமின்றி, கடும் வெய்யிலிலும் மழையிலும் அவதியுறுகின்றனர்.

அன்னிய தேச லங்காஷயரில் இருந்து இறக்குமதியாகும் துணிகளைவிட இந்திய சுதேசி மில்களில் உற்பத்தியாகும் துணிகள் எவ்வளவு என்பதையும், அன்னிய தேச ஜப்பானி லிருந்து வரும் துணி இறக்குமதியை விட இந்திய சுதேசி மில்களில் உற்பத்தியாகும் துணி எவ்வளவு என்பதையும் கணக்கிட்டுப் பார்த்தால் அல்லவோ உண்மை விளங்கும். முன் காலத்திலும் சரி, சமீப காலங்களிலும் சரியே, நமது இந்திய பூர்வீக கைத்தறி நெசவுகளில் தயாரிக்கப்பட்ட ஆடைகள் இந்தியாவில் செலவாகும் ஆடைகளில் 4 பாகங்களில் மூன்று பாகம் கைத்தறி துணிகளும், மீதி ஒரு பாகம் அன்னிய தேச துணியும், இந்திய மில் சுதேசி துணியும் தான் உபயோகத்திலிருந்து வந்ததாக பல அறிஞர்களால் பேசப்பட்டும், எழுதப்பட்டு முள்ளது. ஆனால், காலடைவில் நம நாட்டு மில் துணிகள் அதிக விரைவாக சுதேசி இயக்க அபிமானிகளினாலும், காங்கிரஸ் மேதாவிகளினாலும் மில்கள் அதிகப்பட்டு, கைத்தறி நெசவுகளில் தயாரிக்கப்பட்டுள்ள ஆடைகளைப் போன்றே மில்களில் தயாரிக்க என்று ஆரம்பித்தார்களோ அன்று முதலே, கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை இல்லாத திண்டாட்டம் ஏற்பட வழி உண்டாகி விட்டது. இந்திய மில் துணிகளைப் போன்றே அந்நிய தேச இறக்குமதியாளர்களாகிய லங்காஷயரும் ஜப்பானியரும் துணிகளை உற்பத்தி செய்து அபரிமிதமாக இறக்குமதி செய்ய ஆரம்பித்தனர். அந்நிய தேசத்துக்கும், இந்திய மில்லுக்கும் துணி தயாரிப்பதில் போட்டி அதிகமாக அதிகமாக அதன் பயனாக விலைவாசிகளும் குறைந்து விற்க ஏற்பட்டது. இவ்வாறான நிலையில் இந்திய கைத்தறி நெசவுகளுக்கு எங்ஙனம் விமோசனம் ஏற்படும்?

இன்று வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியவேண்டுமானால் லங்காஷயர் ஜப்பானிய தேச ஆடைகள் இந்தியாவில் இறக்குமதி செய்வதானால் ஓர் குறிப்பிட்ட அளவுக்கு மேல இறக்குமதியாகாமலும், தீர்வைகளையும் அதிகப்படுத்தச் செய்வதுடன், இந்திய மில்–துணிகளும் குறிப்பிட்ட அளவுக்கு மேல் தயாரிக்காமலும், கைத்தறி நெசவுகளில் தயாரிக்கப்படும் ரகங்களைப் போன்று எக்காரணத்தைக் கொண்டும் தயாரிக்காமலும், கைத்தறி துணிகளைவிட விலைகளிலும் வித்தியாசம் ஏற்படாமலும் சட்ட ரீதியாக அரசாங்கத்தாராலும், பொதுஜன தலைவர்களாலும் முயற்சி செய்யாதவரையில் கைத்தறி நெசவுகள் சிறிது காலங்கூட நீடித்து வாழ முடியாது என்பதுமட்டும் நிச்சயம்.

இப்போது, ஆங்காங்கு நெசவாளர் சங்கங்கள் தோன்றி இருக்கின்றன. நமக்கு இப்போது அவசியமானதும் அவசரமானதும் மாகாண சங்கமும், மாகாண மகாநாடும்தான். இதற்காக ஆங்காங்குள்ள தோழர்கள் பூரண ஆதரவும், அபிமானமும் வைத்து, சங்கத்தையும், மகாநாட்டையும் கூட்டுவிக்க வேண்டிய வேலைகளில் ஈடுபட வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்னை சட்டசபைத் தேர்தல்

தொழிலாளர் தொகுதி

திரு என். ஏ. ஆர். பாபு நாயுடு அறிக்கை

சென்னை, டிச, 4

சென்னை அச்சுக்கூடத் தொழிலாளர் சங்கத்தின் கூட்டுக் காரியதரிசியும், சென்னை சிந்தாதிரிப் பேட்டை வாசியுமான திரு. என். ஏ. ஆர். நாயுடு பின் வரும் அறிக்கையை விடுத்திருக்கிறார்: — தோழர்களே, சமீபத்தில் நடைபெறப் போகும் புதிய சீர்திருத்தத்தின்படி ஏற்பட்டிருக்கும் சென்னைசட்டசபைத் தேர்தலில்தொழிலாளர்க்கென 6 ஸ்தானங்களை ஒதுக்கிப்பட்டிருக்கின்றன. அந்த 6 ஸ்தானங்களுக்கு யார், யார் அபேக்ஷகர்களாக நிற்கலாம் என்ற விஷயம் முதலில் கவனிக்கப்பட வேண்டும். எப்பொழுது தொழிலாளர்கள் ஸ்தானம் என்று ஏற்பட்டிருக்கிறதோ அந்த ஸ்தானங்களுக்கு அசல் கையினால் வேலைசெய்யும் தொழிலாளர்கள் தான் அபேக்ஷகர்களாக நிற்க வேண்டும். ஏனெனில் தொழிலாளர்களுக்குத் தான் சகல வித கஷ்டங்கள் தெரியும். இதை விட்டு தொழிலாளர் சார்பாக மற்றவர்கள் நிற்பது என்றால் இது அவ்வளவு உசிதமல்ல. ஏனெனில் தொழிலாளர்களுக் கென்று ஏற்பட்ட ஸ்தானத்தில் அசல் தொழிலாளர்கள்தான் போகவேண்டும். தொழிலாளர்கள் பிரதிநிதிகள் இத்தனை ஆண்டுகளாகப் பலர் சட்டசபைகளில் அங்கம் வகித்தும் சரியான வழிகளில் போராடவில்லை ஆகையினால், சமீபத்தில் பல கட்சிகளின் சார்பாக பலரை அபேட்சகராக நிறுத்தலாம். எக்கட்சியாய் இருந்தாலும் சென்னை மாகாணத்திலுள்ள சகல தொழிலாளர்களையும் ஒரு மகாநாட்டில் கூட்டி, அங்கே ஒரு அசல் தொழிலாளரை நியமித்தால் போட்டியே இல்லாமல் சரி சமானமாக வாழலாம். இதை விட்டு ஒரு கக்ஷி சார்பாக ஒரு அபேக்ஷகரையும், இன்னொரு கக்ஷி சார்பாக இன்னொருவரையும் ஒருவர் பொதுவாகவும் நிற்பது அவ்வளவு உசிதமல்ல. இதை எல்லாம் தீர்க்க ஆலோசிக்குமாறு சென்னை மாகாணத்திலுள்ள சகல ஸ்தாபனங்களையும் கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர் ஸ்தானமாயினும் எந்தக் கக்ஷியாய் இருந்தாலும் போட்டி என்பதே கூடாது. தொழிலாளர்கள் பணம் செலவழித்துக்கொண்டு தேர்தல்களில் கலந்து கொள்வது முடியாத காரியம். ஆகையினால் தொழிலாளர்களை வரும் காலங்களில் மிக ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன். தொழிலாளரில் சிலர் ஆங்கிலம் தெரியாது. அதனால் அவர்களை நியமிக்க முடியாது என்று ஒரு சிலர் எண்ணுவதாகத் தெரிகிறது. இது சரியான பதிலல்ல. தொழிலாளர்களுக்கு அனுபோகம் இருந்தாலும் போதும். தொழிற் சங்க காங்கிரஸ் சமீபத்தில் நிறைவேற்றிய தீர்மானப்படி தொழிலாளர்களை அபேக்ஷகர்களாக நியமிக்க வேண்டுமென்று அறிக்கை விட்டிருக்கிறது. ஆகையினால் அசல் தொழிலாளர்களாகிய 6 ஸ்தானங்கள் போக பாக்கி சில தொகுதியினருக்கு தொழிலாளர் சார்பாக சிலரை அபேட்சகராக நிறுத்தி அவர்கள் அசல் தொழிலாளர்களுக்கு பக்க பலமாக இருந்து பேசச்செய்தால் உலகம் போற்றும். இதை விட்டு தொழிலாளர் ஸ்தானங்களில் தொழிலாளர் பிரதிநிதிகளை நியமிப்பது அவ்வளவு உசிதமல்ல. ஆகையினால் சமீபத்தில் பலகட்சிகளின் சார்பாகப் பலரை நியமிக்கலாம். ஆகவே அவர்களை எல்லாம் கேட்டுக் கொள்வது என்னவெனில் யாராய் இருந்தாலும் அசல் தொழிலாள அபேக்ஷகர்களை நியமிக்குமாறு மிக தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகிறேன். இல்லையேல் வீண் மனஸ்தாபம் ஏற்படும். அல்லது தொழிலாளர் தொகுதிகளில் ஏற்படும் ஸ்தானங்களுக்கு எக்கட்சியும் அபேட்சகராக நிறுத்தாமல் இதை தேர்தல் உலகிற்கே விட்டுவிட்டால் மிக நலமாய் இருக்கும். இதை எல்லாம் தீர்க்க ஆலோசனை செய்து அபேட்சகர்களை நியமிக்குமாறு வேண்டுகிறேன்.

இராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தல்

தலைமைப் பதவி எந்தக் கட்சிக்கு?

சத்தியமூர்த்தி பேரம் பலிக்கவில்லை

(நமது நிருபர்)

மதுரை, டிச, 8

இராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தல் முடிவு ஒருவாறு தெரிந்து விட்டன. பாக்கியுள்ள 7 சர்க்கிள்களில் தேர்தல் இம்மாதம் 10-ந் தேதியாக இருந்தபோதிலும் இம்மாதம் 10-ந் தேதி நடைபெறும் தேர்தலில் காங்கரஸ் அபேட்சகர்களை முறியடித்து ஜஸ்டிஸ் அபேட்சகர்கள் பெருவாரியான மெஜாரட்டி ஓட்டுகள் பெற்று வெற்றிபெறுவார்கள் என்பது நிச்சயமென்றே சொல்லலாம். ஏனெனில் இராமநாதபுரம் ராஜா ஷண்முக சேதுபதி அவர்கள் ஒரு சர்க்கிளில் நிற்பதுடன் அவரின் சகாக்களையே மற்ற 5 சர்க்கிள்களில் நிறுத்தியுள்ளார். இது தவிர செட்டிநாட்டிலுள்ள பள்ளத்தூர் சர்க்கிளில், ராஜா சர். அண்ணாமலையின் மருமகரான தோழர் சி. வி. வி. டி. வெங்கடாசலம் செட்டியார் நிற்கிறார். காங்கரஸ்காரர்கள் இந்த சர்க்கிள்களில் தோழர் செட்டியாரைப் போன மாதம் 23-ந் தேதி நடைபெற்ற தேர்தலின்று ஜெயிக்க முடியாதென்று எண்ணியவுடன், கலகமும் காலித்தனமும் செய்து போலிங் ஆபீசையே நடைபெறாமல் செய்து விட்டனர். காங்கரஸின் பேடித்தனத்தை யறியாத அரசாங்கமும் தேர்தலை ஒத்தி வைத்து விட்டது. இருந்தாலும் இம்மாதம் 10–ந் தேதி யன்று தோழர் செட்டியார் காங்கரஸிற்கு மூக்கறுத்து கரும்புள்ளி செம்புள்ளிகுத்தி, செட்டிமார் 96 நகரங்களிலும் இந்த காங்கரஸ் வால்லோரும் எள்ளி நகையாடும்படி செய்து விடுவார் என்பதுமட்டும் நிச்சயம்.

நான் 13-11-36 ந் தேதி இராமநாதபுரம் ஜில்லா போர்டின் முடிவு என்னவாகுமென்பதை ஒருவாறு யூகித்து விடுதலையில் எழுதியிருந்தேன். அது, இன்று நிதர்சனமாக வெற்றி பெற்று விட்டது. எப்படியெனில், டிசம்பர் மாதக் கடைசிக்குள் ஜில்லா போர்டு இரண்டாகப் பிரிந்துவிடு மென்றும் இரண்டு போர்டுகளிலும் ஜஸ்டிஸ் கட்சியினர்களே, முன்போல் ஆதிக்கம் பெறுவார்களென்றும் தெரிவித்திருந்தேன். அப்படியே வருவதற்கு தேர்தலின் முடிவு அனுகுணமாகி விட்டது.

பிரிவுபடும் ஜில்லா போர்டானது வடக்கு ஜில்லா போர்டென்று செட்டிமார் நாட்டிலுள்ள சிவகங்கையில் அதாவது மூன்று தாலூகாக்கள் சேர்ந்து ஒரு ஜில்லா போர்டு ஆகின்றது. இந்த போர்டில் நியமன அங்கத்தினர்கள் இரண்டு பேரும், தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் 18 பேரும், ஆக 20, பேர் ஜில்லா போர்டு அங்கத்தினர்களாவர். நியமன அங்கத்தினர்கள் இருவர் தவிர பாக்கி 18 பேர், பொது தொகுதிகளில் ஜஸ்டிஸ், காங்கரஸ் கட்சியின் அபேட்சகர்களாகப் போட்டியிட்டார்கள். இப்போட்டியில் ஜஸ்டிஸ் அபேட்சகர்கள் சி. வி. சி. டி. செட்டியார் அல்லாதபடி, ஒன்பது பேர்களும் காங்கரஸ் அங்கத்தினர்கள் 8, பேரும் வெற்றி பெற்றுள்ளார்கள். தோழர் செட்டியார் வெற்றி பெற்று விடுவாராகையால், அவராவது அல்லது சிவகங்கை ராஜாவாவது (ஜஸ்டிஸ் பிரமுகர்களில் யாராவது ஒருவர்) போட்டியில்லாமல் வடக்கு ஜில்லா போர்டு தலைவராக வருவர். காங்கரஸ் செட்டி நாட்டில் முறியடிக்கப் பட்டு விட்டதென்று சொல்ல ஆசைப்படுவதோடு, தலைவர் தேர்தலன்று, எட்டு காங்கரஸ் அங்கத்தினர்களும் செட்டியார்கள். ஆதலால், குலத்திற்கு துரோகம் செய்யாமல் ராஜா சர். அண்ணாமலையைப் பின்பற்றி ஜஸ்டிஸ் அங்கத்தினர்களாக மாறி விடுவார் என்றும் விடுதலையின் வாசகர்கள் ஆச்சரியப்படமாட்டார்கள்.

இராமநாதபுரம் ஜில்லாவில் மற்ற தாலூகாக்களை ஒன்று சேர்த்து இப்பொழுது மதுரையிலுள்ள ஜில்லாபோர்டுக் கட்டடத்திலேயே, தென் ஜில்லா போர்டு ஸ்தாபிதமாகியுள்ளது. இந்த போர்டில் நியமன அங்கத்தினர்கள் எட்டுப் பேரும் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் 34 பேரும், ஆக 42 அங்கத்தினர்கள், 23-ந் தேதி நடந்த தேர்தல்படி தென் ஜில்லா போர்டுக்கு காங்கரஸ் அங்கத்தினர்கள் 10 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதில் இம்மாதம் 10-ந் தேதியன்று நடைபெறும் தேர்தலின் முடிவு ஜஸ்டிஸ் கட்சியினர்களுக்கே உள்ளபடியால் ஆக ஜஸ்டிஸ் அங்கத்தினர்கள் 16 ஆகி விடுகிறார்கள்.

இராமநாதபுரம் ஜில்லாவிலேயே நியமன அங்கத்தினர்கள் பெருமைக்குப் பாத்திரமானவர்கள் ஜஸ்டிஸ் கட்சியிலேயே யுள்ளபடியினால் எட்டு நியமன அங்கத்தினர்களும் ஜஸ்டிஸ் கட்சியினரே யாவர். தென் ஜில்லா போர்டில் 22 அங்கத்தினர்கள் பார்ப்பனரல்லாதாராகி விடுவதினாலும், மொத்த அங்கத்தினர்கள் 42 பேர்களாகையால் இரண்டு மெஜாரட்டி ஓட்டில் ஜஸ்டிஸ் பிரமுகர் தென் ஜில்லா போர்டில் தலைவராக வருவார். இப் பிரமுகர்களில் ஷண்முக சேதுபதியாவது, விருதுநகர் சேர்மன் வி. வி. ராமசாமியாவது வரலாமெனத் தெரிகிறது.

இம்மாதிரியுள்ள நிலையை யறிந்த தோழர் சத்தியமூர்த்தியும், அவரது பார்ப்பனரல்லாதக் கூலிகளும், 4-12-36 ல் இராமநாதபுரம் வந்து காங்கரஸின் பேரால் ஒரு காலில் நின்று வணக்கத்தோடு கர்தனம் செய்தார்கள், ராஜாவிடம் தோழர் மூர்த்தி நேரில் சென்று தங்களுக்குப் போட்டியாக ஆள் நிறுத்துவதை பற்றி வருந்துவதாகவும், வடக்கு ஜில்லா போர்டிற்கு தாங்கள் தலைவராக வந்தால் காங்கரஸின்பேரால் போட்டி போடுவதில்லை யென்றும், தென் ஜில்லா போர்டை காங்கரஸிற்கு விட்டுக் கொடுக்க வேண்டுமென்றும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள். ராஜா அவர்களும், திரு. ராமசாமியும் கண்டிப்பாக மறுத்ததோடு இரண்டு போர்டிலும் காங்கரஸிற்கு விட்டுக்கொடுக்க முடியாதென்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள்.

தோழர் சத்தியமூர்த்தியும் பார்ப்பனரல்லாத விபீஷண ஆழ்வார்களும் முகத்தில் கரி பூசிய மாதிரி அவமானமடைந்து சென்னைக்குப் புறப்பட்டு விட்டார்களாம்.

இராமநாதபுரம் ஜில்லாவில் காங்கரசை ஆயிரம்கெஜ ஆழத்தில் ஜஸ்டிஸ் பிரமுகர்களும், அவர்களது பிரசாரகர்களும் புதைத்து விட்டதையறிந்த இராமநாதபுரம் மக்கள் யாவரும் ஜாதி பேதமன்னியில் மகிழ்ச்சியடைகிறார்கள்.

சட்டசபைத் தேர்தல்

"ஜஸ்டிஸ்" கட்சித் தலைவர்கள் வருகை

(நமது நிருபர்)

மதுரை, டிச, 6

சமீபத்தில் நடைபெறப் போகும் சட்டசபைத் தேர்தலுக்கு "ஜஸ்டிஸ்" கட்சியின் சார்பாக அங்கத்தினர்களை நிறுத்துவது சம்பந்தமாக கனம். பொப்பிலி ராஜா, கனம் பி. டி. ராஜன், கனம் குமார ராஜா எம். ஏ. முத்தையா செட்டியாரும் நாளது மீ 16-ந்தேதி இவ்வூருக்கு விஜயம் செய்யப் போவதாகத் தெரிகிறது.

"சமரஸம்"

ஓர் மாத வெளியீடு

மக்களின் நல்வாழ்வு, பொருளாதாரநிலை, கிராம சீரமைப்பு, சுகாதார விஷயங்கள் இவைகளை சம நோக்குடன் அபிவிருத்தி செய்யும் பத்திரிகை.

மானேஜர்:—
சமரஸம் ஆபீஸ்,
விழுப்புரம்.

நீயே சிவம் - நீரே மால்

(பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்)

(5—12—36 இதழ் தொடர்ச்சி)

சிவன் கோவில்களில் வழிபாடு செய்யப் போகும் மக்களுக்கு, அக்கோயில் குருக்கள் சிவப் பிரசாதமாக வாழ்த்திக் கையில் கொடுத்து அணியச் செய்வது சாம்பலேயாகும். அங்குள்ள கடவுள் தீயேயென்பதும், அத்தீயே அண்டத்திலும், பிண்டத்திலும் கலந்துநின்று உலகம் நடைபெறுகின்றதெனவும், உடம்பில் இயங்கும் உயிர்த் தீயே 'ஜீவாக்னி, மூலாக்னி, ஜாடராக்கினி, என வழங்கப்படுகிறதெனவும், இத்தீயின் அளவு உடம்பில் மிகுதல், குறைதல் இன்றி காப்பாற்றுவதினால் நோயின்றி உடல் வன்மையோடு, நீண்ட நாள் இன்பமாய் வாழலாமெனவும் கூறி நீற்றைக் கையில் கொடுக்கின்றார்கள். ஆதலால் இதுவரை நாம் சொல்லி வந்த காரணங்களாலும் இருளை அஞ்ஞானத்துக்கும் ஒளியை ஞானத்திற்கும் ஒப்பிட்டு, ஞான சொரூபியும், ஜோதி வடிவினும் கடவுளென்று எம்மதத்தினரும் ஒரே முகமாகக் கூறுவதனாலும் பிற்காலத்தில், சிதம்பரம் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளும் உருவ வழிபாட்டை ஒழித்து, வடலூரில் தமது ஞான சபையில் "ஒளி வளர் விளக்காம்" சுடர் வணக்கத்தையே வற்புறுத்திக் காட்டி விரும்பியதாலும், தீ வழிபாடே சிவ வழிபாடானதென்று நாம் ஒருவாறு கூறுகின்றோம்.

தீக்கடவுள் தங்களைக் காப்பாற்றுகின்றதென்றும், அதை மகிழ்வித்தலே தங்கள் கடமை யென்றும், கருத்துடையவர்களாய் அத்தீயில் வெண்ணெய், நெய் முதலிய பொருட்களைப் பெய்து, தீ வளர்ப்பதால் அத்தீக் கடவுளுக்கு மகிழ்ச்சியுண்டாகி, நன்மையைப்பற்றி வளர்ந்து எரிவதாக, அக்காலத்து மக்கள் நினைத்தார்கள். தீயின் அருகில் செல்ல இயலாத வெப்பம் மிகுந்த காலங்களிலும், பகற் பொழுதில் இவர்கட்கு பல வேலைகள் ஏற்பட்டதாலும், தீக் கடவுளுக்கு எப்போதும் இரை தேடிக் கொடுத்தலன்றி, எரியாது தணிந்து, அவிந்து போகிறபடியாலும், அம்மக்கள் தீக் கற்களை விண்டும் அடிக்கடி தீயை புண்டுபண்ணி வணங்கி வந்ததாலும், தீ வெளிப்படக்கூடிய கடினமான கல்லில் தீச்சுடர் வடிவில் வாழைப்பூப் போல் உருவாக்கித் தீயை வணங்கும் இடங்களிலெல்லாம் நாட்டி அக்கல் வடிவத்தையே தீ வடிவத்திற்குப் பதிலாக வணங்கத் தலைப்பட்டார்கள். எனினும், பலர் பழைய வழக்கத்தால் பகலும் இரவும் அக்கல் உருவத்திற்கு அருகில் சிறு விளக்கேனும் ஏற்றியே வணங்குவார்கள். அதனோடு தங்களுக்கு இன்பம் பயக்கும் நீர், பால், தேன், நெய், பூ, பழம் முதலிய அரும் பொருள்களெல்லாம், அக்கடவுளால் ஆக்கப்பட்டன எனக் கருதி, தீக் கடவுள் உருவத்திற்கு அப்பொருள்களை இட்டு மகிழ்ந்து பின்னர் அப்பொருள்களைத் தாங்கள் அனுபவிப்பார்கள். அக்கல் வடிவத்தின் மேலுள்ள வாழைப்பூப் போன்ற தீக்குறிக்கல் 'சிவலிங்க மெனவும்,' அதன்கீழ் ஏற்பட்ட அடிப்பாகத்திலுள்ள பீடிகையை ஆவுடையார் எனவும், இக்காலத்தில் வழங்கப்படுகின்றன.

உலகில் பல திறப்பட்ட சமயக் கொள்கைகளைக் கொண்ட மக்கள் இருப்பதால் கடவுள் வணக்கம் அவரவர் கருத்து மற்றவருக்குப் பொருந்தாததாகும். இக் காலத்தில் கடவுளுக்கு இவ்வுருவ வணக்கம் வேண்டியதில்லை" என்றும், வீண் காலப் போக்கும், பொருளுக்கு கேடும் ஆகுமன்றி வேறு பயனில்லையென்றும், தீ வணங்கும் ஆரிய சமாஜத்தாரும், மற்ற பிரம சமாஜத்தாரும், இன்னும் பல மதத்தினரும் உருவ வணக்கத்தைக் கண்டிக்கிறார்கள். இக்காலத்தில் அது ஒரு வகையாக மக்களுக்குப் பொருத்தமாயினும், அக்காலத்தில் மக்கள் தீயை புண்டாக்க வேறு வகையொன்று தெரியாமல் கடினமான கற்களினின்றும் தீயை யுண்டாக்கினார்கள். ஆதலால் கல்லில்தான் அத்தீ அடங்கியுள்ள தெனக் கருதிக் கல்லை தீ வடிவத்திற்குப் பதிலாக வணங்கினார்கள் என்பதை மேலே கூறினோம்.

இதன் உண்மையை அறியாமலோ, அல்லது சமயப் பகைமையினாலோ, தீ வடிவாகிய சிவலிங்க உருவத்தை ஆண் குறி எனவும் அக்குறியைத் தாங்கி நீர் சூழ்ந்தோடும் பீடிகைக் கல்லை பெண் குறி எனவும் சொல்லுவோர் கூற்று பொருந்தாததாகும்.

நீர் வணக்கமே மால் வணக்கம்

இக்கடவுளுக்கு இரண்டாவதாக நீர்க்கடவுளைப்பற்றி சிறிது ஆராய்வோம்.

"நாராயணன்" ஜலத்தில் இருப்பவன் எனப் பொருள் படும். நீரின் தன்மையன், கடலில் பள்ளிகொண்டிருப்பவன், கடல் நிற வண்ணன், கார்மேக வண்ணன், நீல நிற வண்ணன், கரியமேனியன், எனத் திருமாலைப் பற்றி சைவ வைணவ புராணங்களில் கூறுவதும், இக்கருத்து பற்றியே யாகும். இதனால் பண்டைக் காலத்தில் மக்கள் தமது உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத வெப்பத்திற் கடுத்தது, தட்பத் தன்மையுடைய நீரே யாதலால் அதனையும் சேர்த்தே தீயும், நீரும், சிவமும், சத்தியும் என வணங்கி வந்தார்கள்.

பழைமையாயுள்ள சிவன் கோயில்களிலெல்லாம், விட்டுணு உருவமும் இருக்கக் காணலாம். தீயானது மேலோங்கி நிமிர்ந்தெரியும் தன்மையால் கோயில்களில் சிவ வடிவத்தை நின்ற நிலையிலும், நீர் மட்டத்தில் சமமாகப் பாய்கிறதும். நீரின் தன்மையைக் காட்டுவது போல, விஷ்ணு வடிவத்தைப் படுக்க வைத்தும் வணங்கினார்கள்.

அதன் பின்னர், சிவன் கோயில் வேறு, விஷ்ணு கோயில் வேறாகப் பிரிந்தது. நீரைப் பெண்ணாகவும், தீயை ஆணாகவும் முன்னர் வணங்கிப் பின்னர் பெண்ணாகப் பாவனை செய்த, நீராகிய சத்தி வடிவத்தை ஆண் வடிவத்தில் மாற்றி அதற்கும் மனைவி மக்கள் முதலியவைகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். பலருடைய பிழைப்புக்காக முருகனுக்கும், கணபதிக்கும் தனித்தனி கோயில்கள் கட்டத் தொடங்கினர்கள்.

"எரியலால் உருவமில்லை
அரியலால் தேவியில்லை"

என்னும் தேவாரத்தாலும், நாலாயிரப் பிரபந்தத்தாலும் அறியலாம்.

நீரின் தன்மையைக் குறிக்கும் விஷ்ணு கோயில்களிலும், அலங்காரத்திற்காக திருவிளக்கேற்றியும், கற்பூரம் கொளுத்தியும், தங்கள் கோயில்களில் கூட்டம் சேர்வதற்கு வேண்டியவைகளெல்லாம் ஒன்றின் பின்னொன்றாக ஏற்படுத்திக் கொண்டே வந்தார்கள். இன்றும் செய்து வருகிறார்கள். இன்றும் விஷ்ணு கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குகிறவர்கட்கு, ஆங்குள்ள கோயில் பட்டாச்சாரி, பூசாரி, அல்லது குருக்கள், என்போர், அர்ச்சனை முடிந்த பின்னர், ஆங்குள்ள நீரின் தன்மையை புணர்த்தும் பொருட்டு, கடவுளின் வடிவத்திற்கு முன் வைத்துள்ள நீரையே திருமாலின் தீர்த்தப் பிரசாதமெனக் கையில் அள்ளிவிட்டுக் குடிக்கச் செய்கின்றார்கள். சிவன் கோயில்களில் தீயின் தத்துவத்தை உணர்த்த வேண்டி சிவப்பிரசாதமெனத் தீயில் எரிந்து நீறப்பட்ட சாம்பலை உடம்பில் பூசிக்கொள்ளும்படி கொடுத்தார்களென மேலே கூறினோம். விஷ்ணு கோயிலில் நீரின் தன்மையை உணர்த்த வேண்டி விஷ்ணு பிரசாதம் முதல் பிரசாதமாக நீரைக் கையில் வார்த்து குடிக்கக் கொடுத்தார்கள்.

ஆனால் பிற்காலத்தில் விஷ்ணு கோயில்களில் கூட்டத்தை மிகுதியாகச் சேர்ப்பதற்காக பலவகைப் பொங்கல், சோறு, சிற்றுண்டி முதலியவைகளை 'பெருமான் பிரசாதமென வழங்கத் தலைப்பட்டார்கள். இதனைக் கண்ட சிவன் கோயில்காரரும், பொங்கல் பிரசாதங்கள் கொடுக்கத் தொடங்கினார்கள். கடவுளை வணங்கும் கோயில்கள், சிலர் வயிறு வளர்க்கும் இடமாக மாறினதால் சிவன் கோயில், விஷ்ணு கோயில் என்று பிரிக்கப்பட்டு, இவர்களுக்குள் வேற்றுமை ஏற்பட்டு எல்லாக் கோயில்களிலும் பாமர ஜனங்களை மிகுதியாகச் சேர்ப்பதற்காகவும் பொருள் பறிப்பதற்காகவும் வேடிக்கை விநோதங்கள் ஆடல், பாடல்கள், வாகனங்கள் தேர் திருவிழாக்கள் மிகுந்துவிட்டது. முற்காலத்தில் தீக்கடவுளின் பிரசாதம் பஸ்பம் (சாம்பலும்), நீர்க்கடவுளின் பிரசாதம் தண்ணீருமேயாகும். இதனை இன்றும் சிவ விட்டுணு ஆலயங்களில் காணலாம். வீடுகளில் விளக்கேற்றி தீயை வணங்கும் காலங்களிலெல்லாம், நீரையும் சேர்த்து தண்ணீரையும் ஒரு குடுவையின் கலசத்தில், வைத்து வணங்குவார்கள்.

பிற்காலத்தில் சிவ விஷ்ணு ஆலயங்களில் போட்டியின் மேல், பரிவாரத் தெய்வங்கள் என்னும் குட்டிச் சாமிகளும் சேர்ந்து, பண்டைக் காலத்துக் கருத்து மாறுபட மாறுபட, மக்களுக்கு அக் கருத்தின் உண்மை மறைந்து போய்விட்டது. இதனால் தீவணக்கமே சிவ வணக்கம், நீர் வணக்கமே மால் வணக்கமாக மாறினது, என ஒருவாறு கூறினோம். இதனை வாசகர்களெல்லாம் ஒத்துக் கொண்டு பழைய முறையில் தான் கடவுளை வணங்க வேண்டு மென்பது எனது கருத்தல்ல. பண்டைக் காலத்திருந்து இவ்வுருவ வணக்கங்களும் கொள்கைகளும் மதக் குறிகளும் மாறிக் கொண்டே வந்த காரணங்களை மட்டும், நான் எனது சிற்றறிவிற் கெட்டிய வரையில் சிறு ஆதாரங்களோடு கூறினேன். மனிதர்கள் அறிவு வளர வளர கடவுள் வழிபாடும், கடவுளைப் பற்றிய கொள்கைகள் மாறுவதும், கடவுளைப் பற்றிய தத்துவங்கள் உயர்வதும் இயற்கையே யாகும், பிற்காலத்தில் கல்வி யறிவு வளர வளர முப்பொருளாகிய பதி பசு பாச இலக்கணங்களைப் பற்றிச் சைவ சித்தாந்த நூல்கள் எழுதப்பட்டன.

சைவ சமயாச்சாரியர்களுடைய தேவார, திருவாசக மாகிய தோத்திரங்களுக்குப் பின்னர் தோன்றிய "சந்தானாச்சாரி" யவர்களின் சித்தாந்த சாஸ்திரங்களுக்கும் வேற்றுமை இருக்கிறது. பழைய புராணக் கதைகள் இன்னும் ஒழியவில்லை. ஏகான்ம வாதமாகிய வேதாந்தமதமும் அனுஷ்டானத்துக்கு வரவில்லை. கற்பிதமான புராணக் கதைகளும், ஆகமக் கதைகளும் கோயில்களில் கலந்து மயங்கித் தற்காலம் தலைகீழ் கோலமாகக் காணப்படுகின்றன.

தற்காலம் இந்து மதம் என்று தவறாகச் சொல்லுகிற சைவ வைணவ அத்வைத சமயங்களும், கலந்து காலத்திற்குத் தக்கபடி திருத்தமடைய வேண்டும். இம்மதங்களை பிரித்துக் காட்டும் வெளிச் சின்னங்களை முக்கியமெனக் கருதாமல் கடவுள் என்பது அன்பு, வாய்மை, அறிவு என்னும் கொள்கைக்கு வரவேண்டும். ஆயிரக் கணக்கான சிறு தேவதைகளுக்கு உயிர்ப் பலிகளிட்டு போராட்டமிடும் பாமர மக்களுக்கு, இயன்றவரையில் "தெய்வம் ஒன்றேயாம்" உணர்ச்சியை முதலில் உண்டு பண்ண வேண்டும். இல்லையேல் மதத்தின் பெயரால் கொடுங் காலமாக நடைபெற்று வரும், கொலை, களவு, பகை முதலிய மகாபாதகங்கள் வளர்ந்து தானிருக்கும்.

மற்ற நாடுகளில் நாஸ்திகர்களே பெரும்பாலும் மக்கள் எல்லோரும் இன்புற்றிருப்பதற்கு வேண்டிய பொது நல ஊழியங்களை மிகுதியாய்ச் செய்கின்றார்கள். கோடிக்கணக்கான தங்கள் செல்வங்களையும், பொது நன்மைக்குச் செலவிடுகின்றார்கள். கடவுள் உண்டென்று சொல்லும் "ஆஸ்திகர்" களோ உணவின்றி பசியோடும், பிணியோடும் உடுக்க உடையின்றியும், இருக்க இடமின்றியும், கல்வியறிவு சிறிதுமின்றியும், நல்லது கெட்டது தெரியாமல், விலங்கினும் கேடாய் உழலும் மக்களைக் கவனிப்பதில்லை. சிறிதும் அவர்களிடத்து அன்பில்லை. கடவுளைத் திருப்திப் படுத்துவதாக நினைத்து வீண்செலவு செய்கின்றார்கள். நாள் தோறும் இதனைக் கண் கூடாய்க் காண்கின்றோம். இன்று இந்து மதமென்று அர்த்தமில்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிற சிவ விஷ்ணு ஸ்மார்த்த மதங்களால், மக்கள் மேன் மேலும் தீமை செய்பவர்களாகவும் வறுமை, பிணி, ஒற்றுமையின்மை முதலியவைகட்கு ஆளாகி என்றும் ஏழைகளாகவும், பலவீனர்களாகவும், மக்களுக்குள் அன்பற்றவர்களாகவும், மனிதத் தன்மையற்ற அடிமைகளாகவும், இருப்போமே யன்றி இந்திய மக்கள் ஒன்றுசேர்ந்து ஒருக்காலும் மற்ற நாட்டார்களைப்போல், தன் மதிப்போடு மனிதத் தன்மையில் வாழவியலா தென்பது, எனது தாழ்மையான எண்ணமாகும்.



சென்ற நவம்பர் 26-ந் தேதி குண்டூரில் 'ஸ்ரீ கூர்மா டெலகா ஹாஸ்டலுக்கு' சர். கே. வி. ரெட்டி நாயுடு அஸ்திவாரக்கல் நாட்டிய பொழுது எடுக்கப்பட்ட படம். சர். கே. வி. ரெட்டி, ராவ்பகதூர் எம். வி. வெள்ளோடி, (குண்டூர் ஜில்லா கலெக்டர்) மற்றும் பலரையும் படத்தில் காணலாம்.

—பி. என்.

பெல்லாரி ஜில்லா போர்டு உபதலைவரும், பெல்லாரி தென்னிந்திய கலவுரிமைச் சங்கத் தலைவர் திரு. ஜீ. கிருஷ்ணசாமி நாயுடுவின் குமாரருமான திரு. ஜீ. லோகராஜ் நாயுடு டிசம்பர் முதல் தேதியன்று இப்படத்தில் காணப்படும் சிறுத்தையை சுட்டுக் கொன்றார். 7 அடி 11 அங்குல நீளமுள்ள அச்சிறுத்தை குட்லிகி தாலூகா, பிலா-குந்தத்திற்கு அருகிலுள்ள கிராமத்தில் கால் நடைகளுக்கு மிகுந்த சேதத்தை உண்டு பண்ணி வந்தது.

கெட்ட பழக்கத்தினால் வந்த வினை

உலோபியின் துரதிர்ஷ்டம்

பயித்தியப் பட்டம்

புடபெஸ்டில் மார்க்கஸ் என்னும் பெயருடன் ஒருவர் இருந்தார். அவர் ஒரு பெரிய தனவான், எனினும் தனக்குக் கூட ஒரு சௌகரியமும் செய்து கொள்ளமாட்டார். அவ்வளவு லோபத்தன்மை வாய்ந்த உலோபி. ஆனால் பிரதிதினமும் காலையில் அவர் தொட்டியில் குளிக்கும்போது அன்றைய பத்திரிகையை வாசித்துக் கொண்டே குளிப்பது வழக்கம். சென்ற மாதத்தில் ஒரு நாட் காலையில் பத்திரிகை வரக் கொஞ்சம் நேரமாகிவிட்டது. அதனால் அவர் வழக்கம்போல் குளிக்கச் சென்று விட்டார். அவர் பாதிகுளியல் முடிந்ததும் முடிக்காததுமாக இருக்கும் போது பத்திரிகைப் பையன் வந்து கூப்பிடுவது அவர்காதில் விழுந்தது. பத்திரிகையைப் பார்க்க அவர் அதிக மூடையவராகி நிர்வாணமுடன் கதவண்டை வந்து மெதுவாக அதைத் திறந்து கொண்டு பத்திரிகையை எடுக்க வெளியே அடியெடுத்து வைத்தார். அதே சமயத்தில் அக்கதவு எப்படியோ, எதிர்பாராத விதமாகத் திடுமெனத் தானே சாத்திக் கொண்டது. மார்க்கஸுக்கு என்ன செய்வதென்று புலப்படவில்லை. உடனே தம்வீட்டின் மற்றொரு பகுதியில் இருந்தவர்களின் மின்சார கூப்பாடு மணியை அழுத்தினார். அவர்களிடமிருந்தாவது ஒரு சட்டை இரவல் வாங்கிக் கொள்ளலாம் என்பது அவர் எண்ணம். மணிச்சத்தம் கேட்டு யாரெனப் பார்க்கும் பொருட்டு ஒரு புதிய வேலைக்காரி வெளியே வந்தாள். மார்க்கஸ் நிற்கும் கோலத்தைக் கண்டாள். அவருக்குப் பயித்தியம் பிடித்து விட்டதென்றெண்ணி பெருங் கூச்சல் போட்டாள். அதைக் கேட்டு அங்கு ஒரு பெருங் கூட்டம் கூடிற்று. போலீசாரும் அங்குற்றனர். மார்க்கஸ் போலீசாரிடம் நடந்ததை கூறினும் அவர்கள் நம்புவதாக இல்லை. அதைக்கண்ட மார்க்கஸுக்கு கோபமும், நிர்வாணமாயிருந்ததால் குளிரும் அதிகரித்தது. அப்போதே போலீசார் அவரை ஒரு சிறு அறையில் போட்டுப் பூட்டிவிட்டார்கள். பின் பல மணி நேரங்கள் சென்ற பிறகு அவர் ஒரு மூளை நிபுணரால் பரிசோதிக்கப்பட்டார். அந்நிபுணர் மூளை சரியான நிலையிலேயே இருந்ததாகத் தெரிவித்தார். அதன் பேரில் போலீசார் அவரை விடுவித்து தம் செய்கைக்கு அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள்.

அறிஞர் பதிப்பகம்

சென்னை, டிச, 16

சிறந்த அறிவியல் வாதிகள் பலரின் ஜீவிய சரித்திரங்களையும், சொற்பெருக்குகளையும் சிறு புத்தகங்களாக பதிப்பித்து ஏராளக் கணக்கில் பொது மக்களுக்கு இலவசமாகவும் மிகக் குறைந்த விலையிலும் வழங்க வேண்டும் என்னும் ஆவலுடன் மேற்படி பதிப்பகம் ஒன்றை நாம் நிறுவியுள்ளோம். பதிப்பிக்கக் கூடிய சிறந்த பெரியார்களின் வரலாறுகள் பல நம் கையில் தற்போது இருக்கின்றது ஆனால் இக்காரியத்திற்குத் தக்க பொருள் உதவி இன்மையால் அவைகள் பதிப்பிப்பதற் கியலாமல் தயங்கலுடைத்திருக்கின்றது. ஆதலால் இதைக் காணும் நண்பர்கள் நமது நோக்கத்தில் ஆதரவும், அனுதாபமும் உடையவர்கள் தகுந்த பொருள் உதவியளிக்க வேண்டுகிறோம். உதவியளிக்க விரும்புவோர் கீழ்காணும் விலாசத்திற்கு அனுப்பவும்.

விலாசம்:— கே. என். நாதன்
அமைச்சர், அறிஞர் பதிப்பகம்,
218, தங்கசாலை வீதி, சென்னை.

சீர்திருத்தத் திருமணம்

ஈ. வெ. ரா. தலைமை

(ஒரு நிருபர்)

திருப்பூர், டிச, 6

இவ்வூர் பிரபல பஞ்சு வியாபாரியாகிய தோழர் எஸ். ராமசாமி முதலியார் குமாரன் தோழர் எஸ். ஆர். சுப்ரமணியத்துக்கும், வள்ளிபாளையம் தோழர் லக்ஷ்மண முதலியார் குமாரத்தி, தோழர் சென்னியம்மாளுக்கும் 6-ந் தேதி காலை 10-மணிக்கு சுயமரியாதை இயக்கத் தலைவர் ஈரோடு தோழர் ஈ. வெ. ராமசாமிப் பெரியார் அவர்கள் தலைமையில் புரோகித மொழிந்த சீர்திருத்தத் திருமணம் மிக்க சிறப்பாக நடந்தேறியது.

திருமண அழைப்புக்கிணங்கி உள்ளூரிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் ஏராளமான பந்துக்களும், வியாபாரிகளும், மில் முதலாளிகளும், உத்தியோகஸ்தர்களும், இயக்க அபிமானிகளும், தோழர்களுமாக சுமார், 500 பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர்.

திருமணத்துக்கு தபால் மூலமாகவும், தந்தி மூலமாகவும் திருவாளர்கள்: கொச்சி திவான் சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார், கோவை ராவ்சாஹிப் எஸ். என். பொன்னைய கவுண்டர், ஏ டி. தேவராஜ முதலியார், குருசாமி, குஞ்சிதம், கே. வி. பி. விஸ்வநாதம், ச. ம. சி. பரமசிவம், கே. கே. ஏ. பெரியசாமி ஆகியவர்களும் மற்றும் பல தோழர்களும் தங்கள் வாழ்த்துக்களை அனுப்பி வைத்தனர்.

திருமணத்துக்கென அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் காலை 9-மணியிலிருந்தே பிரமுகர்கள் நிரம்பி விட்டனர். 9-30 மணிக்கு தலைவர் திரு. ஈ. வெ. ராமசாமிப் பெரியாருடன் தோழர்கள்: ஈ. வெ. கிருஷ்ணசாமி, ரங்கநாயகி, மஞ்சளாபாய், காரை மணி, மாயவரம் சின்னையா, டி. ஜி. வெங்கடாசலம் ஆகியவர்கள் மோட்டாரில் வந்தனர். திருமண மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்கார மேடைமேல் மணமக்களும் தலைவர் திரு. ஈ. வெ. ரா. அவர்களும் அமர்ந்தனர்.

பலத்த கரகோஷத்தினிடையே தலைவர், திரு. ஈ. வெ. ராமசாமிப் பெரியார் இத்திருமண வைபவத்துக்குத் தலைமை ஏற்று முகவுரையாகப் பேசுகையில் முற்கால கலியாண முறைமையையும், அதன் அர்த்தமற்ற சடங்குகளின் தன்மைகளையும் பற்றி விளக்கிப் பின் தற்காலச் சீர்திருத்த முறைத் திருமணம் இருக்கவேண்டியதையும், இத் திருமணம் பூர்ண சீர்திருத்த முறை கொண்டது என்றும் பேசினார். பிறகு மணமக்கள் தங்கள் வாழ்க்கை ஒப்பந்தத்தைத் தனித் தனியே சபையோர் முன்னிலையில் வாசித்தனர். பின் திருமணத்துக்கு வர இயலாத பிரமுகர்களின் வாழ்த்துத் தந்திகளையும், தபால்களையும் மணமகன் வாசித்தார்.

பிறகு தலைவர் ஈ. வெ. ரா. அவர்கள் "சீர்திருத்தத் திருமணம்" என்னும் பொருள்பற்றி சுமார் ஒரு மணி நேரம் தக்க ஆதாரத்துடனும் மிக்க ஹாஸ்யமாகவும், சபையோர் களிக்கவும் ஒரு சொற்பொழிவாற்றினார். பிறகு கோவை ஸ்ரீ உமையாம்பிகா மில் மேனேஜிங் பார்ட்னர் மிஸ்டர் பேசெட்டுரை அவர்கள் இத் திருமணத்தை ஆதரித்தும், மணமக்களை வாழ்த்தியும் சிறிது நேரம் பேசினார். பிறகு திருப்பூர் பஞ்சு வியாபாரியும் முனிசிபல் கவுன்சிலருமான தோழர் கே. என். ராமசாமிக் கவுண்டர் அவர்களும், திருப்பூர் பஞ்சு வியாபாரி தோழர் எம். கே. கே. குமாரசாமி செட்டியார் அவர்களும், தோழர் மஞ்சளாபாய் அவர்களும் திருமணத்தை ஆதரித்தும் மணமக்களை வாழ்த்தியும் பேசினார்கள். பிறகு மணமக்கள் சார்பில் மணமகன் தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டார். பிறகு சபையோருக்கு சந்தன தாம்பூலம் வழங்கப் பட்டது. பகல் போஜனம் மிக்க சிறப்பாக நடந்தேறியது. மாலை, மணமக்களுடன் பிரமுகர்களையும் கொண்ட பல புகைப்படம் பிடிக்கப்பட்டது. மாலை 5.மணிக்கு தேநீர் விருந்து நடந்த பின் தலைவர் ஈ. வெ. ரா. அவர்களும் அவரது சகாக்களும் ஈரோட்டுக்குப் பிரயாணமாயினர்.

இந்துமத பாடசாலை

சட்டசபை உறுப்பினர்கள் வருகை

(ஒரு நிருபர்)

வாலாஜா பேட்டை, டிச, 7

திருச்சிராப்பள்ளிக் கோட்டக் கழகத் தலைவர் திரு. இரத்தினவேலு தேவர் அவர்களும், திரு. டபிள்யூ. பி. ஏ. சௌந்திரபாண்டிய நாடார் அவர்களும், நடந்த 4-12-36 அன்று இப்பாடசாலையைப் பார்வையிட்டனர். அன்று திரு. நாடார் அவர்களின் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. பள்ளிச் சிறுவர்களும், சிறுமிகளும் ஆங்கிலத்திலும், தமிழிலுமாக சில சொல்லாட்டங்களும், நடிப்புக்களும், உரையாடல்களும் நிகழ்த்தினர். தலைவர் பேசுகையில் இம்மாதிரி பள்ளிகள் நம் நாட்டுக்கு மிக்க நன்மை பயப்பன என்றும், பள்ளியில் மாணவர்களுக்கு நல்ல பாடல்கள் கற்பிக்கப்படுவது பாராட்டற்குரியது என்றும், சிறுவர்கள் மனதிலே அடிமை எண்ணம் இல்லாதவாறு வளர வேண்டுமென்றும் கூறினர். பின்னர் இப்பள்ளித் தலைவர்களது நன் முயற்சியினால் ஜாதி வித்தியாசமென்பது நாட்டினின்றும் முழுதும் ஒட்டப்படுமெனவும் எடுத்துச் சொல்லி ஆசிரியர்களுக்கும், பிறர்க்கும் வந்தனம் கூறி முடித்தனர்.

திரு. தேவர் அவர்கள் பேசுகையில் தாம் இப் பள்ளியைப் பார்க்கு முன், இப் பள்ளியானது இவ்வளவு உயர்ந்த நிலையில் பணி செய்யுமென்று எண்ணவில்லை என்றும் பார்க்க முடிந்தது பாக்யமெனவும் கூறினர். அவர் பேசும் போது இடையில் மாணவர்களைப் பார்த்து "இன்று முதல் எல்லாரும் ஜாதி வித்தியாசமின்றி உணவு கொள்ளுவீர்களா?" என்று கேட்டதற்கு மாணவர்கள் தங்கள் கைகளை உயர்த்தித் தங்கள் விருப்பத்தை யறிவித்தது, தலைவர்களுக்கு மிக்க மகிழ்ச்சியைத் தந்தது. இப்பள்ளி மேனிலையை யடையவேண்டி யாசீர்வதித்துப் பின் பள்ளிச் செயலாளர் வா. தி. மாசிலாமணி முதலியாரவர்கள் நன்றி கூறக் கூட்டம் இனிது நிறைவேறியது.

பொதுஜன வாலிப ஊழியர் சங்கம்

(ஒரு நிருபர்)

தேவாரம், டிச, 5

இன்று மாலை 3-மணிக்கு விவேகானந்தா வித்யாலயத்தில் ஷை சங்கத்தின் மூன்றாவது பொதுக் கூட்டம் திரு. பண்டித கே. ஹரி கோவிந்தம் பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

அவ்வமயம் அநேக பிரபலஸ்தர்கள் ஆஜராயிருந்தனர். சென்ற கூட்டத்தின் நடவடிக்கைகள் காரியதரிசி அவர்களால் வாசிக்கப்பட்ட பின் உப காரியதரிசி அவர்களால் சங்கத்தின் சட்ட திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்குப் பின் ஊர்ஜிதம் செய்யப்பட்டன. பின் "இந்தியாவின் வறுமையும், அதனை நீக்கவழியும்" என்பது பற்றி ஏ. துரைராஜ் அவர்களும், "தொழிலாளி" என்பது பற்றி ஏ. நடராஜ் அவர்களும் விரிவாகவும் தெளிவாகவும் உபன்யாசம் செய்தார்கள். பின் தலைவர் அவர்கள் அங்கத்தினர்களுடைய கட்டுப் பாட்டையும், ஒற்றுமையையும், தீவிர முயற்சியையும் பற்றி ஆணித்தரமாகப் பேசினார். பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

ராவ் சாகிப் சி. ஜெயராம் நாயுடு

சென்னை புதிய ஷெரீப்

சென்னை, டிச, 7

கார்ட்டன் சேன் "புரொப்ரைட்டரும்", எம். எல். சி-யுமான ராவ்சாஹிப் சி. ஜெயராம் நாயுடு சென்னையின் புதிய ஷெரீப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை மாகாண வள்ளுவர் மகாஜன சங்கம்

(ஒரு நிருபர்)

திருநெல்வேலி, டிச, 8

இச்சங்கத்தின் கூட்டம் 7-12-36 மாலை 5 மணிக்கு திருநெல்வேலியில் அ. பழனி நாயனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் திருவாளர்கள் ஏ. செல்லையப்ப நாயனார், சி. இசக்கி நாயனார், முறையே சமூக முன்னேற்றம், வள்ளுவர்குலப் பெருமை என்ற பொருள்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அடியிற் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது.

1. மேன்மை தங்கிய திருவாங்கூர் மகாராஜா அவர்கள் செய்துள்ள பிரகடனம் உலகம் போற்றக்கூடியதென இச்சங்கம் மகிழ்வெய்துகிறது.

2. சென்னை மாகாண வள்ளுவர் மகாஜன சங்கத்திற்கு நம் ஜில்லாவிலுள்ளவர்கள் அங்கத்தினர்களாய்ச் சேர்ந்து வருஷ சந்தா அணா 4ம் ஆங்காங்கு உள்ளவர்கள் 1 வாரத்திற்குள் ஜில்லா விசேஷ சங்கத்திற்கு அனுப்புவதோடு சென்னையில் நடைபெறப் போகும் மாகாண மகாநாட்டிற்கு நம்மவர்களால் இயன்ற பொருள் உதவி செய்யும்படி இக் கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

3. ஷெட்யூல் வகுப்பைச் சேர்ந்த நம்மவர்கள் பலர் உபாத்தியாய வேலை பயின்று வேலையின்றி மிகக் கஷ்டமடைகிறதினால் அவ்வவர்களுக்கு வேலை கொடுத்து உதவுமாறு ஸ்தலஸ்தாபன அதிகாரிகளை இக்கூட்டம் மிக அனுதாபத்துடன் கேட்டுக்கொள்ளுகிறது.

பின் காரியதரிசி, சி. இசக்கி நாயனார் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

பழனி

நவவீர செங்குந்த முதலியார்கள் சங்கம்

(ஒரு நிருபர்)

பழனி, டிச. 8

1936-ம் வருஷம் டிசம்பர் மாதம் 6-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் 2-மணிக்கு வருஷாந்திர மகாசபைக் கூட்டம் திண்டுக்கல் வக்கீல் திரு. பி. கே. ஷண்முகநாதன் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் கூடியது.

பிரசிடெண்டு அவர்களை வரவேற்று வாசித்த [illegible] அவருக்குச் சிறப்புடன் அளிக்கப் பின் சந்தன தாம்பூலம் கொடுத்து கூட்டம் ஆரம்பமாயிற்று. மேற்படி [illegible] எஸ். ராமசாமி முதலியார் அவர்களால் கடவுள் வணக்கம் சொல்லப்பட்டது.

காரியதரிசி வெங்கடாசல முதலியார் அவர்களால் சென்ற வருஷம் முதல், நாளது வருஷம் அக்டோபர் முடிய உள்ள வரவு செலவுக் கணக்குகள் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. பின்பு சபையோர்களுக்கு ஷை கணக்கு அச்சடித்த காப்பிகள் வழங்கப்பட்டது.

பிரசிடெண்டவர்களால் செங்குந்தரின் ஆதி நிலைமை, தற்கால நிலை, சமூகத்திலுள்ள குறைகள், அவற்றை நிவர்த்திக்க வேண்டிய மார்க்கங்கள் ஆகிய இவைகளைப் பற்றி தக்க ஆதாரங்களுடன் சபையோருக்கு விளங்கத்தக்க விதமாய் சொற்பொழிவாற்றி அனைவருடைய மனதிலும் பசுமரத்தாணிபோல் பதியும்படி செய்தது குறிப்பிடத்தக்கது.

வைஸ் பிரசிடெண்டு திரு. ராமசாமி முதலியார் அவர்களால் பிரசிடெண்டு அவர்களுக்கு மாலை போடப்பட்டு வந்தனோபசாரத்துடன் இரவு 9 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

தூத்துக்குடி

பெண்கள் ஆஸ்பத்திரி திறப்பு விழா

(நமது நிருபர்)

தூத்துக்குடி, டிச. 9

சென்ற 2-ந் தேதி காலை 9-30 மணிக்குத் தூத்துக்குடி ரோட், [illegible] பிள்ளை தெருவில் தூத்துக்குடி நகரசபைத் தலைவர் திரு ஜே. எல். பி. ரோச் விக்டோரியா அவர்கள் தூத்துக்குடி நகரசபையால் ஏற்படுத்தப்பட்ட பெண்கள் ஆஸ்பத்திரியைத் திறந்து வைத்தார்.

திரு. கே. கே. ஏ. பெரியசாமி நாடார் நகரசபையின் சார்பாக வந்தனம் கூறுகையில் இவ்வித ஆஸ்பத்திரி ஒவ்வொரு வார்டுக்கும் வேண்டியதின் அவசியத்தை விளக்கிக் காட்டினார்.

நூறு ரூபாய் நோட்டு கண்டெடுக்கப் பட்டது

சென்ற 3-12-36 சனிக்கிழமை பகல் ஒரு மணிக்குத் தூத்துக்குடி [illegible] தெருவில் திரு. கே. கே. ஏ. பெரியசாமி நாடார் கம்பவுண்டிலிருப்பவரும், சேனைக் கம்பெனி கூலிக் கண்ட்ராக்டருமான திரு. செவந்தி நாடார் தூத்துக்குடி இம்பீரியல் பாங்க் வாசலில் ஓர் நூறு ரூபாய் நோட்டைக் கண்டெடுத்து ஷை நோட்டை, இம்பீரியல் பாங்க் அதிகாரிகளிடம் கொடுத்து விட்டார். ஷை நோட்டு யாருடையதென்று தெரியவில்லை.

கோவில்பட்டியில் இம்பீரியல் பாங்க்

இம்பீரியல் பாங்கின் கிளை யொன்று சென்ற 3-12-36-ல் கோவில்பட்டி பெரியகடைத் தெருவில் திறக்கப்பட்டது.

வாலிபச் சாரண குருளையர்களுக்கு விருந்து

சென்ற 5-12-36 சனிக்கிழமையன்று தூத்துக்குடி பிரபல வியாபாரியும் முனிசிபல் அங்கத்தினருமான திரு. கே. கே. ஏ. பெரியசாமி நாடார் தூத்துக்குடி செயின்ட் பேட்ரிக்ஸ் உயர்தர ஆரம்ப பாடசாலையின் வாலிப சாரண குருளையர்களுக்கு தூத்துக்குடி எவரன்ஸ் பார்க்கில் ஓர் விருந்து நடத்தினர். இவ்விருந்து மேற்படி குருளையர்கள் சென்ற குருளையர் போட்டியில் கே. கே. ஏ. பி. எஸ். பேடையும் பெற்றதாகவும், மேற்படி பேடையும் தன்னால் கொடுக்கப்பட்டதற்காகவும், ஷை குருளையர்கள் ஷை போட்டியில் வெற்றி பெற்றதைப் பாராட்டுவதற்காகவும் நடத்தப் பட்டது. மத்தியானம் சாப்பாடும், மாலையில் தேனீர் விருந்தும் நடைபெற்றன. ஷை வைபவத்தில் பிரபல சாரண சம்பந்தர்களும், குருளைய உபாத்தியாயர்களும் கலந்து கொண்டனர். மாலையில் தேனீர் விருந்தொன்று நடைபெற்றது.

வள்ளுவர் மகாஜன சங்கப் பொதுக் கூட்டம்

(ஒரு நிருபர்)

அம்பாசமுத்திரம், டிச. 9

அம்பா சமுத்திரம் தாலுகா வள்ளுவர் மகாஜன சங்கத்தின் பொதுக் கூட்டமொன்று சென்ற ஞாயிற்றுக் கிழமை காலை 8-மணிக்கு திரு. சுவாமிதாஸ் நாயனார் தலைமையில் கூடியது. ஷை சங்கத்தின் முந்திய வருட அறிக்கையும், வரவு செலவுக் கணக்கும் காரியதரிசியால் வாசிக்கப்பட்டு அங்கீகாரம் செய்யப்பட்டன. பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப் பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது.

1. சென்னை மாகாண வள்ளுவர் மகாஜன மகாநாடு ஒன்றை, வருகிற ஜனவரிப் பண்டிகையில் ஐக்கிய கட்சித் தலைவர்களைக் கொண்டு, நடத்த வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

2. திரு. சி. டி. நாயகம் அவர்கள் கொண்டு வரும் 'வகுப்புவாரி உத்தியோக முறை' என்ற தீர்மானத்தைக் கவர்மெண்டார் அங்கீகரிக்கும்படி இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

பொங்கல்! பொங்கல்!!

அசல் பட்டுப் புடவை

அழகிய சிறு ஜரிகைக் கரை, அசல் பட்டு. சிகப்பு, அரக்கு புளு, பச்சை, ஸ்ப், முதலிய கலர்களில் கிடைக்கும்.

12-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 5-12—0
16-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 7—8—0
18-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 8—8—0
5-முழம் x 44" அங்க வஸ்திரம் 1-க்கு ரூ. 8—8—0

வெண்பட்டு அங்க வஸ்திரம்

5 முழம் x 44" அழகிய கரைகள் சலவைக்கு சேர்ந்தியானது,
விலை ரூ. 1—12—0-தான்.

☞ இந்த விலைகள் 15—1—37 பொங்கல் வரை தான்.
ஞாபகத்தில் வையுங்கள். உடனே ஆர்டரை அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
(Proprietors : Sundarams Ltd.,)
சில்க் அவுஸ், காசி.

குணமாகாத மூத்திர வியாதிகளுக்குப் புதிதாகக் கண்டுபிடித்திருக்கும் அற்புதமான சிகிச்சை!

வெட்டை ரோகத்திற்கு சிறந்தது!!

வெட்டைரோக கிருமிகளை கொல்லக்கூடியது!

"கோனு கில்லர்" (ரிஜிஸ்டர் செய்யப்பட்டது)

இதுதான் இப்பொழுது எடுத்த நவ ஔஷதம். ஆங்கில, உள்நாட்டு வைத்தியர்கள் உங்களைக் குணப்படுத்திவிடாவிடில் வாக்குறுதிகளும், இன்செக்ஷனும் பலன் தந்திராவிடில் கடைசியாகவேனும் நமது கோனோ-கில்லர் என்னும் ஔஷதத்தைப் பரீக்ஷித்துப் பாருங்கள். உங்களுக்கு வியாதி கண்டு எவ்வளவு காலமிருந்தாலும் அது குணப்படுத்திவிடும். ஸ்திரீகள், புருஷர்கள் இவர்களுக்கு ஏற்படும் மூத்திர வியாதிகளுக்கும், எல்லாவித வெட்டை ரோகங்களுக்கும், மூத்திரம் அதிகமாக இறங்குவதற்கும், மூத்திரம் பெய்கையில் ஏற்படும் கடுப்பை நிவர்த்தி செய்வதற்கும், மூத்திரப் பையில் ஏற்பட்டிருக்கும் அழற்சியைப் போக்கவும், வெட்டை வியாதிக் கிருமிகளால் ஏற்படும் வேறு பல வியாதிகளைப் போக்கவும் இது சிறந்த மருந்து. போலி மருந்துகள் வாங்காதீர்கள்! வாங்கும்போது எங்கள் சேவல்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

சேவல் மார்க்கை பார்த்து வாங்குங்கள்

போலிகளைப்பற்றி உஷார்!

50-மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு ரூபா. 3. வி. பி. சார்ஜு வேறு. வெளி நாட்டு பேர்கள் ரூபா. 4—8—0 முன் பணம் அனுப்பவும்.

டாக்டர் டி. என். ஜஸானி, கிர்காம் பாக் ரோடு, பம்பாய், 4.
Dr. D. N. JASANI, Girgaum Back Road, BOMBAY, 4.
சென்னை ஏஜண்ட்:—[illegible] & கோ.,
நெ. 52, வினியப்ப நாயக்கன் தெரு, P. T., சென்னை.
F. M. S & S. S. ஏஜண்ட்:—N. O. A. முகம்மது இப்ராகிம் & பிரதர்ஸ்
நெ. 193, [illegible] ரோட், சிங்கப்பூர்.
[illegible] மெடிகல் ஸ்டோர்ஸ்
நெ. 89. Old Butcher Street, Pettah, கொழும்பு.

விடுதலை யாவதி யாதெனக் கேட்டாராயின்
கேடுதலை நீக்கி நடுநிலை நின்று
[நாட்டினரெல்லாம்
பொருள் சுகப்பேறுகள் சர்வமும் பெற்று
நிருபிக வாழ்தலே யாம்

விடுதலை

VIDUTHALAI

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்று நின்ற
செம்மொழியை திருமொழியை
[தேன்மொழியை
தனித்தியங்கும் ஆற்றலுள தொன்மொழியை
[அமிழ்தினைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
[அநுதினமும் பழக்கம் செய்வீர்.

மலர்-2] சென்னை: (12-12-1936) தாதுவருஷ கார்த்திகைமீ 27உ சனிக்கிழமை [இதழ்-55

பசிக்குது எனக்கு!
பழையது கொடுங்கள்!!

பசியாமல் இருக்க
வரம் உங்களுக்குத் தருவேன்

நம்மில் அநேகர் ஏதோ காங்கரஸ் என்ற ஒரு கக்ஷி ஜஸ்டிஸ் என்ற ஒரு கக்ஷி என்றெல்லாம் நாட்டில் பெருங் கூக்குரலா யிருக்கிறதே. அதிலும் எலக்ஷன் வந்து விட்டால் இந்தக் கூச்சல் அதிகமாகிறதே என்று பலவாறு யோசிக்கிறார்கள். அதன் உண்மையான தாத்பரியம் இன்னதென அறிய விரும்புகின்றார்கள். ஆனால், அதை அறியவொட்டாதபடி நம் ராஜதானியில் சென்ற 2, 3 வருட காலமாக காங்கரஸ் கட்சியார் பல பகட்டான சொற்களைச் சொல்லிக்கொண்டு ஜனங்களை மனதார ஏமாற்றி வருகின்றார்கள். அதைக் காட்டிக் கொடுத்து உண்மையை இது தான் என்று மகா ஜனங்களுக்கு எடுத்துக்காட்ட மற்றவர்கள்—தாங்கள் ஜனங்களுடைய ஆதரவுகொண்டு அரசியலில் வெற்றி பெற்றதை மறந்தும், என்றும் தம்மவர்கள் ஏமாற மாட்டார்களென்று நம்பியும்—முயற்சிக்காமல் மெத்தனமாக இருந்து வந்திருக்கிறார்கள். இதனால் நாட்டில் இன்றைய நிலையில் தப்பிப் பிராயமானது சில காலமாக அங்குமிங்கும் நடமாடி வருகின்றது ஆச்சரியமல்ல. [மேலும், என்றும் ஏமாற்றிய தங்கள் பிழைப்பை நடு முடுக்காய் நடத்தி வந்திருக்கிற, வந்து ருசியுங் கண்ட ஓர் சிறு பான்மையோர், தங்கள் தொழிலை இதிலும் பிரயோகப்படுத்தி, என்றும் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் அதுபோலவே பிறரை நம்பியும் சிறரும் உன்னத குணமுடைய பெரும் பாலாரை வஞ்சித்து—ஏமாற்றி மதியை மயக்கி கலக்கும்படி செய்ய ஏற்பட்டிருக்கிறார்கள். என்றாலும், அதில் அநேகர் மயங்கி நிற்கிறார்கள் என்றாலும், அது ஒரு ஆச்சரியமாகாது.

உண்மையில் காங்கரஸ் சபையானது முதன் முதல் அரசாங்க முறைப்படியே நடந்து கொண்டு அரசாங்கத்தாருக்கு நம் நாட்டின் குறைகளை அப்போதைக்கப்போது எடுத்துக்காட்டி, அவர்களைக் கொண்டு வேண்டும் காரியங்களைப் பெற்று வந்திருக்கிறது. அக்காலங்களில் இத்தென்னாட்டிலுள்ள அநேகமாய் எல்லாப் பிரமுகர்களும் அச்சபையில் சேர்ந்தும் அச்சபையுடன் ஒத்துழைத்தும் ஆதரவுகாட்டியும் வந்தார்கள். ஆனால், அச்சிரிய சபையானது காலாந்தரத்தில் ஏமாந்து நின்ற சில சுயநலக்காரர் வசப்பட்டு, அவர்கள், பழைய பேரை வைத்து நாட்டின் அமைதிக்கும்—வளர்ச்சிக்கும்—மேன்மேலும் வாய்க்கும் அரசியல் சுதந்தரத்துக்கும் இடைஞ்சல் விளைக்கும்படியான தகுதியற்றதும் வெறுக்கத் தக்கதுமான பல காரியங்களை, தாங்கள் பின்னிருந்து கொண்டு, ஏமாந்த ஏழைமக்களைக் கொண்டு புரிந்துவரத் தலைப் பட்டார்கள். அத்துடன், இத்தகைய முறைகள் பொது நன்மைக்குப் பதிலாக தங்களுக்கும் தங்களுக்கு வேண்டியவர்களுக்கும் நயன்மைகளைப் பெற்றுக்கொள்ளவும் முயற்சித்து வந்தார்கள். ஆங்கில வாசிப்பும் உத்தியோகப்பதவிகளும் - அதன் மூலமாய் பொருள் சேர்த்தலையும் பிரதானமாய்க் கொண்டிருந்த இவர்கள், மற்றோருக்கு—நாட்டின் ஜீவாதாரமாக இருந்துவரும் ஆயிரக்கணக்கான ஏனையோருக்கு இவை எதுவும் சித்தித்து விடாதபடி அவர்கள் கண்ணில் தூசியைப் போட்டு ஏமாற்றி, தாங்கள் பிழைத்து வந்தார்கள். இதனால் காங்கிரஸில் பிளவு ஏற்பட்டது. அச்சமயம் இந்த அநியாயங்களைப் பார்த்திருக்க சகிக்காமல், நம் நாட்டின் பெரியார் பலர் வெறுப்புடன் அச்சபையினின்றும் விலகி—அதினின்றும் பிரிந்து ஆதி நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஜஸ்டிஸ் கட்சியை சுமார் 20 வருடங்களுக்கு முன்னதாக முதன் முதல் நமது மாகாணத்தில் மாத்திரமல்ல மற்றும் எல்லா மாகாணங்களிலும் ஏற்படுத்தி - நீதி நாட்டி - கொடுமையைத் தகர்த்து - கடைநிலைமையிலிருந்தேற்றி—நாட்டின் மக்களுக்கு அறிவையும்—வலிமையையும்—பெருமையையும்—உரிமையையும் - ஒருங்கே அளிக்கக் கூடிய முறைகளில் தங்கள் சுயநலம் கருதாது ஈடுபட்டு, பகைவருடன் வீரப் போராடி ஜெயித்து, நம்மெல்லோருடையவும் அன்பிற்கும்—அபிமானத்திற்கும் உரியவர்களாய் திகழ்ந்து விளங்கியதோடு மன்றி அரசியலிலும் பங்கு பெற்று, அதன் பலனை பல நன்முறைகளாலும் நம் எல்லோருக்கும் செவ்வனே பயன்படும்படி ஏற்பாடுகளும் திட்டங்களும் அது முதல் சென்ற 20 வருட காலங்களாக செய்து வந்திருக்கிறார்கள். இது யாவரும் அறிந்த விஷயம். இதை, இப்போது மகாஜனங்களை தங்கள் வசப்படுத்துவதற்காக மயக்குரை செய்து வரும் காங்கரஸ் வாதிகளும் மறுக்கத் துணியார்கள்.

சென்ற சில ஆண்டுகளுக்குள் நாமறிய, ஜாதிப் பேதத்தின் கொடுமையானது இவர்களுடைய முறைகளின் பயனும் கொடூர மிழந்து, சமத்துவம்-சகோதரத்துவம்-சுயமரியாதை முதலிய உன்னதமான கொள்கைகள் நம் நாட்டில் ஆழ அகல வேரூன்றி விட்டது. இது மாத்திரமா? தம் வழியிலாது தவித்து நின்ற—புறக்கணிக்கப்பட்ட வகுப்பார்களுக்கெல்லாம் போதிய கல்வியும் மற்றும் வசதிகளும், லேபர் டிபார்ட்டுமெண்ட் என்று ஒன்றை ஏற்படுத்தி அதன் வாயிலாகச் செய்து வரப்பட்டிருக்கின்றது. நம் நாட்டின் மருத்துவ முறைகளை நம் நாட்டவர்களுக்குப் பொருந்தும் என்றபடியால், அதற்கான கலாசாலைகளை நிறுவியதுடன் அதற்குரிய வைத்தியசாலைகளையும் நாடெங்கும் திறந்துள்ளார்கள். கைத்தொழிலும், லாபகரமான விவசாய முறைகளும் பெருகும்படிக்கான சட்ட திட்டங்களும், நிலையங்களும், அதற்கான கலாசாலைகளும் நாட்டில் எங்கும் நிறுவப்பட்டிருக்கின்றன, நம் நாட்டின் அறநிலையங்களும் மத நிலையங்களும் அழிந்து போகாதபடி எவருக்கும் தாக்ஷண்யம் காட்டாமல் சட்ட திட்டங்கள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. பிரதமர் கல்வி ஏழைகளுக்கெல்லாம் இலவசமாய்க் கிடைக்கும்படி மிகுந்த பணச் செலவில் நாடெங்கும் பள்ளிக்கூடங்களை திறவியுள்ளார்கள். ஜல வசதிகளும் ரோட்டு வசதிகளும் தொடர்ந்து பெருக்கப்பட்டு வந்திருக்கிறது. இன்னும், பெரும் பணக்காரர்-நிலக்காரர் மட்டு மல்லாமல் சகலரும் அரசியலில் கலக்கும்படியாக வாக்குச் சுதந்தரம் எல்லோருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. துரைத்தனத்தில் ஆங்கிலேயருக் கென்ற மட்டும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த ஐ. ஸி. எஸ். உத்தியோகத்தை, நம் நாட்டினருக்கும் கிடைக்கும்படிக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டது. சகல டிபார்ட்மெண்டுகளிலும் பொறுப்பான அரசியல் ஸ்தானங்கள், நம் நாட்டினருக்குக் கிடைக்கும்படியும் ஏற்பாடுகள் செய்துள்ளார்கள். இன்னும் மாகாண அரசாட்சியில் பெரும் பகுதியும் நம்மவர்களுக்குக் கிடைக்கும்படி வெகு காலமாக முயன்று அதுவும் ஒருவாறு சித்தித்தும் இருக்கிறது. விரிவில் பெருகும்.

இந்நிலையில் இவைகளை யெல்லாம் நேற்று தலை காட்டியவர்கள், தாங்கள் ஏதோ செய்துவிட்டதாயும் இனிச் செய்யப் போவதாயும் கூவிக்கொண்டும், பதவியில் இருப்பவர்களைப் பழிப்பது யாருக்கும் லகுவானபடியால் அவர்களைப் பழித்துக்கொண்டும், 'இக்கரைக்கு அக்கரை பச்சை' என்ற முறையில் ஏமாற்றிக்கொண்டும் திரிவதென்றால் அதை யார்தான் ஒப்புக்கொள்ள முடியும்? பாருங்கள்! 'என் பசிக்குக் கொஞ்சம் பழையது போடு உனக்குப் பசியா திருக்க வரந் தருகிறேன்' என்பது போல, நாட்டின் வறுமைப் பிணியை இனி ஒழிப்போம், பட்டேல் வருகிறார் காங்கரசுக்கு 10 லட்ச ரூபாய் கொடுங்கள்-ஏழை மக்களே! என்று கூவுகிறார்கள். 'உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களைக் குறைப்போம், எங்களுக்கு மாதம் 500 ரூபாய் சிலவுக்குக் கொடுங்கள் என்பார்கள் சொத்தில்லாதவர்களிடம் போய், இனி ஒருவருக்கென்று சொத்திருக்கக் கூடாது எல்லாம் பொதுவுடைமை என்பார்கள்; அதே வாயால் சொத்துக்காரர்களையும் பணமுள்ளவர்களையும் பார்த்து ஏழை ஜனங்களுக்கு நீங்கள் தான் பிரதிநிதியென்று தேர்தலுக்கு நிறுத்துவார்கள். கைத்தொழில்! கைத் தொழிலென்று கதறுவார்கள்; மில்களையும் மிஷின்களையும் வைத்து ஏழைக் கூலிகள் வயிற்றில் மண்ணைப் போடுவார்கள். சர்க்காரோடு போர் புரிவோம் என்பார்கள்; தாங்களே மந்திரி பதவிக்கும் உத்தியோக வேட்டைக்கும் மாரடித்துக் கொண்டு அலைவார்கள். சட்டசபையில் போய் தகர்த்து விடுவோம் என்பார்கள்; படிப் பணத்தைப் பெற்றுக் கொண்டு நாங்கள் என்ன செய்வோம் என்பார்கள். நம் மாகாணத்திலிருந்து அசம்பிளிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அநேக மெம்பர்கள் இக் கூட்டத்தினரேயாவர். அவர்கள் சாயம் நன்றாய் வெளுத்து விட்டதை அறிவோம். இப்பவும், போனது போகட்டும்-இனிப் பாருங்களேன்! பார்லிமெண்டு சட்டத்தையே தகர்த்து விடுவோம் என்று நம் முன் வந்து நிற்கிறார்கள். ஒரு தடவை ஏமாற்றலாம் — இரண்டு தடவை ஏமாற்றலாம் — சதாவும் ஏமாற்ற முடியுமா?

மகாஜனங்களே! ஜாக்கிரதை செய்து கொள்ளுங்கள். உங்களுடைய தயாள குணத்தினால் ஏமாறுதற்கு இடங் கொடுத்து விடாதீர்கள்! கோவிலை இடியுங்கள்-பள்ளி வாசல்களை ஒழியுங்கள் என்று வாய் கூசாமல் நம்முடைய நாட்டின் பழமையைத் துணிந்த பரம்பரை தலைவராகக் கொண்ட—இன்னும் கொள்ளப்போகிற இந்தக் காங்கரஸ் கட்சியாரா நாட்டைக் காப்பாற்றப் போகின்றார்கள்? குளிக்கப்போய் சேற்றைப் பூசிக் கொள்வது மதியீனமாகும். குனிந்து கொடுத்தால் யார்தான் நன்றாய் சவாரி செய்யமாட்டார்கள்? பணத்தை அள்ளிக் கொடுத்தால் யார் தான் வியாபித்துக்கொள்ள மாட்டார்கள்? உண்மையில் நாட்டின் சுதந்தரத்தையும் நலத்தையும் ஒருங்கே விரும்பி உழைத்து நிற்பவர் ஜஸ்டிஸ் கக்ஷியாரே யாவர். அவர்களைப் பற்றி காங்கரஸ் கூட்டத்தார் பொறாமையினால் பிதற்றும் பகட்டுச் சொற்களை நம்பாதீர்கள்! "அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல இல்லாகித் தோன்றாக் கெடும்" என்பது பெரியார் வாக்கு. அதை நாம் என்றும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, நம்முடைய தாய்நாட்டின் சுதந்தரத்தையும் நம்மவர்களின் அபிவிருத்தியையும் பின்னடையச் செய்யும் மார்க்கங்களில் மறந்தும் கலந்துகொள்ளாமல், நேரிய வழியில் தியாக புத்தியுடன் உழைத்து வரும் நம்முடைய உண்மையான பெரியவர்களையும் அவர்களின் நன் முயற்சிகளையும் ஊக்கப்படுத்தி, அவர்களுடன் நாமும் ஒத்துழைத்து நாட்டின் க்ஷேமத்தை வளர்க்க வேண்டியது நம்மில் ஒவ்வொருவருடையவும் கடமையாயிருக்கிறது.

தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்
திருநெல்வேலி ஜில்லா.

ஜைனர் பொதுக் கூட்டம்

அப்பர் படத்திற்குத் தடை

(ஒரு நிருபர்)

செய்யார், டிச. 10

சென்ற திங்கட் கிழமை காலை 9-மணிக்கு வடஆற்காடு ஜில்லா செய்யார் தாலூகா காவல் கிராமத்தில் ஜைனர்களின் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. அவ்வமயம் திருவண்ணாமலை ஜில்லாபோர்டு மெம்பர் திரு அர்க்ககிர்த்தி நயினார் தலைமை வகித்தார். பலர் பேசிய பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது.

1. வேல் பிக்சர் கம்பெனியார் தயாரித்து வரும் அப்பர் என்னும் படமானது ஜைன சமூகத்தினரை இழிவு படுத்துவதாக இருப்பதால் அப்படத்தை நிறுத்தி விடும்படிக்கு அக் கம்பெனியாரை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

2 அப்பர் படமானது ஒரு பெருஞ் சமூகத்திற்கே இன்னலையும், அவதூறையும் விளைவிக்கக் கூடியதாக இருப்பதால் காருண்ய கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தில் சிரத்தை யெடுத்து அப் படம் தயாரிக்கப்படா வண்ணம் தடுக்குமாறு இக்கூட்டம் வேண்டிக் கொள்ளுகிறது.

மூலாம் பூசிய மூர்த்தி
கோஷ்டிக்கு
ஜஸ்டிஸ் சாட்டை

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பின்னர், திரு. தண்டபாணி பிள்ளையவர்கள் வெகு அழகாக காங்கரஸ் ஊழல்களை விளக்கினார்கள். காந்தி குல்லாய் தரித்த அரசியல் அறிவில்லாத சில கூலிகள் கூட்டம் முடிந்தவுடன் சத்தம் செய்தார்கள். அதைக் கேட்ட கிராமவாசிகள் அத்தொண்டரை யடிக்கப் போனார்கள். தண்டபாணிப் பிள்ளை தடுத்து தொண்டரை தப்புவித்தார்.

பின்னர் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

கண்டனூர்

7-12-36 மாலை 4-மணிக்கு கண்டனூரில் திரு. வெங்கடாசலம் செட்டியாரவர்களை ஆதரித்து பொதுக் கூட்டம் நடைபெற்றது. அது சமயம் பண்டிதர் திருஞான சம்பந்தம் அவர்கள் தலைமை வகித்துக் கூட்டத்தின் நோக்கத்தையும் திரு. வெங்கடாசலம் செட்டியாரவர்களை ஆதரித்து ஓட்டுக் கொடுக்க வேண்டிய கடமையையும் எடுத்துக் கூறி, திரு. ரங்கநாதம் அவர்களை பேசும்படிக் கேட்டுக்கொண்டார். திரு. ரங்கநாதம் அவர்கள், காங்கரஸ் ஊழல்களையும் நாகப்பச் செட்டியாரவர்கள் போலிக் காங்கரஸ்காரர் என்பதையும் அவர் சிறு பிள்ளை யென்றும், ஸ்தல ஸ்தாபனங்களில் அநுபவமில்லாதவ ரென்றும் அவரைவிட திரு. வெங்கடாசலம் செட்டியார் ஜில்லா போர்டு அநுபவமும் அரசியலறிவும் பெற்றவர் என்றும், ஆதலால் அவரையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் கூறினார். பின்னர், திரு. அண்ணாதுரை அவர்கள் திலகர் நிதி மோசடி, ஜில்லா போர்டுகளில் காங்கரஸ்காரர் செய்யும் ஊழல்கள், ஒத்துழையாமை, சட்டமறுப்பு, உப்பு சத்தியாக்ரகம், அந்நியத் துணி பகிஷ்காரம் முதலிய காரியங்களை காங்கரஸ் நடத்திய போது திரு. நாகப்பச் செட்டியார் வட்டிக் கணக்கு பார்த்துக் கொண்டு காங்கரஸுக்கு விரோதமாய் நடந்து வந்தார்; பட்டம் பதவி, யென்ற போது மோகங் கொண்டு வந்தவர்; இவர் எப்படிக் காங்கரஸ்காரர் ஆவார், இவர் பதவி பக்தரா? தேச பக்தரா? என்றும் எடுத்து விளக்கினார்.

தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

புது வயல்

7-ந் தேதி மாலை 7-30 மணிக்கு பொதுக் கூட்டம் நடைபெற்றது. பண்டிட் திருஞானசம்பந்தம் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

முகவுரையில், பள்ளத்தூர் சர்க்கிளில் அபேட்சகர்களாக நிற்கும் இருவரில் திரு. வெங்கடாசலம் செட்டியாரவர்களையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் அவர்களையே மீண்டும் தேர்ந்தெடுத்தால் பல நன்மைகளைப் பெறலாம் என்றும், இராமநாதபுரம் ஜில்லா போர்டை இரண்டாகப் பிரித்து செட்டி நாட்டிற்குப் பல நன்மைகள் செய்வதற்கும் செட்டி நாட்டில் ஜில்லா போர்டுக்கு வருகின்ற லட்சக்கணக்கான பணத்தை சிவகெங்கை, முதலான செட்டி நாட்டுப் பக்கங்களில் செலவழித்து ரோட்டு வசதி, ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள் முதலியவைகள் செய்வதற்கு முயற்சிகளை செய்து வருகிறார்களென்றும் பேசினார்.

பின்னர், திரு. தண்டபாணி பிள்ளை அவர்கள் பேசினார். இடையில் காங்கரஸ் கூலிகள் சத்தம் செய்தார்கள். அதனால், குழப்பம் உண்டாக அதைக் கண்ட பொது மக்களும், நாட்டார்களும் திரு. நாகப்பச் செட்டியார் சிறு பிள்ளையென்ற நிலைமைக் கேற்ப காங்கரஸ் போல நின்று காங்கரஸ் கூலிகளை ஏற்படுத்தி, திரு வெங்கடாசலம் செட்டியாரவர்களை ஆதரிக்கும் பொதுக் கூட்டங்களில் காலித்தனம் செய்யும்படிச் சொல்லியிருப்பது மிகவும் வெட்கமானது என்றும் கூறினர்.

பிறகு திரு. அண்ணாதுரையவர்கள் நீண்டநேரம் பேசுகையில் இடையில் ஒருவர் பக்கத்து வீட்டுத் தோட்டத்திலிருந்து சாணியையும், கல்லையும் விட்டெறிந்தார். இது மிகவும் பொது மக்களுக்கு ஆத்திரத்தையும் திரு. வெங்கடாசலம் செட்டியாரவர்களுக்கு ஆதரவையும் அளித்தது.

மற்றும் திரு. சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் மூலாம் பூசிய மெடலை சங்கீத மகாநாட்டில் சங்கீத வித்துவான்களுக்கு அளித்த நாணயமற்ற தன்மையை எடுத்துக் கூறினார்.

தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

பெரிய கோயில்

இவ்வூரில் 10-12-36-ல் காலை 10 மணிக்கு ஓர் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் பண்டிட், திருஞானசம்பந்தம் தலைமை வகித்து நீண்டநேரம் பேசினார். பின்னர், திருவாளர்கள்: தண்டபாணி பிள்ளை, அண்ணல்தங்கோ, பாலசுந்தர கவிஞர், இராமச்சந்திரன், அரிஹர அய்யர், அருணகிரி செட்டியார் ஆகியோர் 2 மணிவரையும் நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

பின்னர் கூட்டம் முடிவுற்றது.

சுயமரியாதைப்
பொதுக் கூட்டம்

சென்னை, டிச. 8

நாளை 13-12-36 ஞாயிற்றுக் கிழமை காலை 9 1/2 மணிக்கு சென்னை வரதராஜபுரம், லாங்ஸ் கார்டன் ரோடில் அமைந்திருக்கும் [illegible] சுயமரியாதை பொதுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் சென்னையில் உள்ள சுயமரியாதை சங்கங்களும், மற்ற சுயமரியாதைத் தோழர்களும், ஏனைய சுயமரியாதைப் பற்றுள்ள தோழர்களும், மேற்படி பொதுக் கூட்டத்தில் கலந்துக் கொள்ளும்படியாய் கேட்டுக் கொள்கிறோம்.

எட்வர்ட் மன்னருக்கு
6 விமானங்கள்

எட்வர்ட் மன்னருக்கு 6 விமானங்கள் சொந்தத்தில் உண்டு. அவர் கடைசியாக வாங்கின விமானம் 12 பேர் உட்காரக் கூடியது. 15,000 பவுன் விலை. விமானத்தில் பறக்கும் முதல் பிரிட்டிஷ் மன்னர் இவரே.

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN, AT THE JUSTICE PRINTING WORKS, 14, MOUNT ROAD, MADRAS. EDITOR: PANDIT S. MUTHUSWAMI PILLAI.

விலை அரை அணா 8 பக்கங்கள் மலாய் நாட்டில் 5 சதம் Regd. No. M. 3298.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா
முன் பணம்

உள்நாடு

1 மாதம்	...	0	6	0
3 மாதம்	...	1	0	0
6 மாதம்	...	1	14	0
1 வருடம்	...	3	10	0

சென்னைக்கு

1 மாதம்	...	0	4	0
3 மாதம்	...	0	10	0
6 மாதம்	...	1	4	0
1 வருடம்	...	2	6	0

விடுதலை

VIDUTHALAI

(வாரம் இருமுறை வெளிவரும்)

ஆசிரியர்: பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா
முன் பணம்

வெளிநாடு

1 மாதம்	...	0	10	0
3 மாதம்	...	1	14	0
6 மாதம்	...	3	12	0
1 வருடம	...	7	4	0

சர்க்கார், முனிசிபாலிட்டி,
ஜில்லா போர்டுகளுக்கு:
உள்நாடு: வருஷம் ரூ. 7 8 0
சென்னை: " ரூ. 4 8 0

மலர்-2] சென்னை: (16-12-1936) தாதுவருஷ மார்கழிமீ 2உ புதன்கிழமை [இதழ்-56

பிள்ளை பிறக்குமுன் பேர்போடச் சண்டையா?

மெஜாரட்டி கிடைத்தாலல்லவா மந்திரி பதவியைப் பற்றி யோசிக்க வேண்டும்.

அபேட்சகர் கிடைப்பதே கஷ்டமா யிருக்கிறதே!

குயவன் சூளையில் உற்பத்தி செய்யலாமா?

காங்கரஸ் கெட்ட கேட்டுக்கு மந்திரி பதவியும் கூடவா?

"குடி அரசு" விளாசல்

"குடி அரசு" எழுதுகிறது:—

"பந்தியில் உட்காரவே அநுமதி இல்லாமல் இருக்கும் போது இலை ஓட்டையாய் இருப்பதைப்பற்றி சொல்லுவதில் பயன் என்ன?" என்று ஒரு பழமொழி உண்டு. அதன் பொருள் என்னவென்றால் ஒரு மனிதன் ஒரு சாப்பாட்டு பந்தியில் உட்கார்ந்து சாப்பிடுவதற்கு தகுதி உடையவனல்ல என்று கருதி வெளியில் தள்ளப்படும் போது இலை ஓட்டையாய் இருக்கிறது என்று ஆவலாதி சொல்வதில் ஏதாவது புத்திசாலித்தனம் இருக்க முடியுமா என்பதே யாகும்.

அப்பாடா எத்தனை கட்சி?

அது போலவே நமது காங்கரஸ் காரர்கள் இன்று மந்திரி பதவி ஏற்க வேண்டும் என்று ஒரு கூட்டமும், ஏற்கக்கூடாது என்று ஒரு கூட்டமும், ஏற்றால் முட்டுக்கட்டை போட வேண்டும் என்று ஒரு கூட்டமும், ஏற்றால் சீர்திருத்தத்தை உடைக்க வேண்டும் என்று ஒரு கூட்டமும், உடைக்க முடியாது என்று ஒரு கூட்டமும், மரியாதையாய் ஏற்று உத்தியோகங்களையும், பதவிகளையும் ஒப்புக் கொண்டு தங்களால் கூடியதை ஜன சமூகத்துக்குச் செய்ய வேண்டும் என்று ஒரு கூட்டமும் ஆக இப்படியாக பலவித அபிப்பிராயங்களைச் சொல்லி சண்டை போட்டுக் கொண்டும் மகாநாடுகளில் தீர்மானங்கள் கொண்டுவந்து வாதப் பிரதிவாதம் செய்து நிறைவேற்றிக் கொண்டும் இருக்கிறார்கள்.

மெனக் கெட்ட வேலை

இது முன் சொன்ன பழமொழி போல் தான் இருக்கிறது. எப்படியெனில் காங்கரசுக் காரர்கள் மெஜாரிட்டியாய்ச் சட்டசபை ஸ்தானங்களை கைப்பற்றுவார்களா? கைப்பற்ற முடியுமா? என்பது ஒரு புறமும், கைப்பற்றினாலும் மந்திரி பதவி கிடைக்கும்படியான அளவுக்கு இவர்களுக்கு பலம் ஏற்படுமா என்பது ஒரு புறமும், அதுவும் சீர்திருத்தத்தை உடைக்கும் மனப்பான்மை உள்ளவர்கள் காங்கரசில் மெஜாரிட்டியாய் இருப்பார்களா என்பது ஒரு புறமும் சந்தேகமாகவும் சில விஷயங்களில் முடியாது என்பது சந்தேகமறவும் இருக்கும் போது இப்போது மந்திரி பதவியை ஆசைகாட்டி தாங்கள் அதிகாரம் வகிக்கப் போவதைச் சொல்லி மக்களை மயக்க வீண் மெனக் கெட்ட வேலை செய்வது புத்திசாலித்தனமான காரியமாகுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்,

மெஜாரட்டி கிடைக்கவே கிடையாது

இன்றுள்ள நிலையில் எந்தக் காரணம் கொண்டும் காங்கரஸ் காரர்கள் மந்திரி சபை அமைக்கும் படியான மெஜாரிட்டி எண்ணிக்கையுடன் சட்டசபைக்கு வரமாட்டார்கள் என்பது அனேகமாய் உறுதி என்றே சொல்லி விடலாம். எப்படியெனில் சட்டசபை அமைப்பு அப்படிப்பட்டது. சட்டசபைக்கு மொத்தம் 215-மெம்பர்கள் என்றாலும் அவர்களில் 116-பேர்கள் தவிர மற்ற 99-மெம்பர்கள் தனித் தொகுதிக் காரர்களே யாவார்கள். அதாவது:-

தாழ்த்தப் பட்டவர்களில் 30; முஸ்லீம்களில் ஒரு பெண் உள்பட 29; கிறிஸ்தவர்களில் ஒரு பெண் உள்பட 9; இந்தியப் பெண்கள் 6; ஐரோப்பியர்கள், ஆங்கிலோ இந்திய தோட்டக்காரர், ஐரோப்பிய வியாபாரிகள் 9; ஜமீன்தார்கள் 6; தொழிலாளிகள் 6; இந்தியவியாபாரிகள் நகரத்தார் உள்பட 2; மலைவாசி 1; கலாசாலை தொகுதிக்கு 1; ஆக 99 ஸ்தானங்கள். இந்த 99-ஸ்தானங்களில் ஒரு 10-அல்லது 15-கூட காங்கரசுக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்பதோடு கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் ஆதி திராவிடர்கள் ஆகியவர்கள் சங்கங்கள் காங்கரசின் பேரால் நிற்கக் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டிருக்கின்றன.

புள்ளி விவரத்தைப் பார்

அப்படியே பத்தோ பதினைந்தோ பெறுவதாய் இருந்தாலும் இவற்றுள் கண்டிப்பாய் 80-ஸ்தானங்கள் காங்கரசுக்குக் கிடையாது என்று இப்போதே சொல்லி விடலாம். 215-க்கு 108-ஸ்தானங்கள் பெற்றால் தான் மொத்தத்தில் காங்கரஸ் காரர்கள் மெஜாரிட்டியாக வந்ததாக கருதப்படுமே யல்லாமல் மற்ற தனித்தனி கட்சிகளைவிட 1, 2 அதிகமாய் தாங்கள் பெற்று விடுவதால் காங்கரஸ் மெஜாரிட்டி என்று ஆகிவிடாது. ஏனெனில், மொத்த 215 ஸ்தானங்களில் காங்கரஸ்காரர்கள் எத்தனை பேர்; காங்கரஸ் அல்லாதவர்கள் எத்தனை பேர் என்று தான் கணக்குப் பார்ப்பார்களே ஒழிய எந்தக் கட்சி அதிகம் என்று பார்க்கமாட்டார்கள். அப்போது 108 பேர்கள் காங்கரஸ் காரர்கள் இருக்க வேண்டும். ஆகலால், தனித்தொகுதிகளில் காங்கரசில் சேராதவர்கள் எண்ணிக்கை 80 பேர் விட்டால் பாக்கி இருக்கும் 135-ஸ்தானங்களில் காங்கரஸ் 108—ஸ்தானங்கள் கைப்பற்றி ஆக வேண்டும். அதாவது 5-ல் 4-பாகம் கைப்பற்றியாக வேண்டும். இது சுலபத்தில் முடியக்கூடிய காரியமல்ல. இப்போதே காங்கரசுக் காரர்களுக்கு ஜில்லா தோறும் பொது தொகுதிகளில் பகுதிக்குக்கூட ஆள்கள் கிடைப்பது கஷ்டமாய் இருக்கிறது.

கோயமுத்தூர்

உதாரணமாக: கோயமுத்தூர் ஜில்லாவை எடுத்துக் கொண்டால் தோழர் டி. எ. ராமலிங்கம் செட்டியாருக்கு ஒரு ஸ்தானம் ஒதுக்கி இருக்கிறார்கள். மற்றவை இன்னமும் நிஷ்கரிஷை செய்ய முடியவில்லை. செட்டியார் அவர்கள் ஸ்தானமும் ஜெயிப்பார்களா என்பது 100-க்கு 75-பாகம் சந்தேகம் தான். ஏனெனில், எதிர் போட்டிக்காரர் 40-ஆயிரம், 50 ஆயிரம் செலவழிக்கத் துணிந்து விட்டார். ஜாதி அபிமானம் வேறு தாண்டவமாடுகின்றது.

அவருடைய தொகுதியில் கொங்கு வேளாளருக்கும் கம்ம நாயக்கர்மார்களுக்கும் தான் போட்டி நடக்கும். மற்ற ஜாதிக் காரர்கள் வந்தால் இருவரும் ஒன்று சேர்ந்து கொள்ளுவார்கள். ஆகையால், செட்டியார் ஜெயிப்பது சந்தேகம்.

திருச்சி

இது தவிர மற்ற திருச்சி ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அங்கும் தோழர் தேவரைத் தவிர வேறு ஆள் கிடைப்பது கஷ்டமான காரியமாய் இருக்கிறது. தேவருடன் போட்டி போடு ஆளும் சுமார் 10, 15 ஆயிரம் ரூபாய் செலவழிக்கத் துணிந்து நிற்கிறார். அங்கும் டவுனில் காங்கரசுக்கு எவ்வளவு மதிப்பு என்பது நாம் எழுதி தெரிந்து கொள்ள வேண்டிய அவசியத்தில் யாரும் இல்லை.

சேலம்

சேலத்தில் தோழர் சுப்பராயன் அவர்களைத் தவிர வேறு ஆள்கள் அந்த ஜில்லாவில் சட்டசபைக்கு நிற்கக் கூடியவர்கள் காங்கரசுக்கு கிடையாது. தோழர் சுப்பராயன் அவர்களுக்கும் அவர்கள் சொந்த ஜனங்களுக் குள்ளாகவே போட்டியும் அதிருப்தியும் பலமாக இருக்கிறது.

வட ஆற்காடு

வட ஆற்காடு ஜில்லாவில் தோழர்கள் அண்ணாமலை குப்புசாமிகள் தான் இதுவரை அபேட்சகர்களாகக் கிடைத்திருக்கிறார்கள். தோழர் வி. எம். ராமசாமி முதலியார் அவர்கள் பயந்து கொண்டிருக்கிறார். வட ஆற்காடு ஜில்லாவில் ஒரு ஐயாயிரம் ஆறாயிரம் ரூபாய் செலவு செய்ய ஒரு அபேட்சகர் முன் வந்து விட்டால் அவரை எதிர்க்க காங்கரசில் அபேட்சகர் கிடைப்பது கஷ்டமாக இருக்கும்.

மதுரை—ராமநாதபுரம்

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களும் இது போல்தான் இருக்கின்றன. மதுரைக்கு மாத்திரம் இதுவரை சுமார் 4 1/2 பார்ப்பனர்களை அபேட்சகர்களாக காங்கரஸ்காரர்கள் பிரஸ்தாபித்து இருக்கிறார்கள். அங்கு பார்ப்பனரல்லாதார் அபேட்சகர்களாக வரக் கூடியவர்கள் நூற்றுக் கணக்காக இருந்தும் காங்கரசுக்கு ஒருவர்கூடக் கிடைக்கவில்லை. வலை போட்டுத் தேடி ஓய்ந்தாய் விட்டது.

இராமநாதபுரத்தில் தோழர் குமாரசாமி ராஜா பேர் அடிபடுகின்றது. அவருடைய இந்திய சட்டசபை ஸ்தானம் இராஜிநாமா ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகுதான் அபேட்சகராய் நிற்க முடியும். அதுவும் 5000 அல்லது 10000 ரூபாயுடன் ஒருவர் போட்டி போட்டால் தோழர் ராஜா நிற்பாரா என்பதே சந்தேகம்.

திருநெல்வேலி

திருநெல்வேலி ஜில்லாவுக்கு இன்னமும் யார் பேரும் பிரஸ்தாபிக்க முடியவில்லை. தளவாய் அவர்கள் இப்பொழுதே காங்கரசுக்கு டிமிக்கி கொடுத்து விட்டார். தோழர்கள் எக்ஞேஸ்வர சர்மாவும், கூத்தநயினார் பிள்ளை அவர்களும் வண்டி வாடகை கொடுத்தால்தான் நட்டுப்போடவே வெளியேறுவார்கள். ஆகவே, அந்த ஜில்லாவுக்கு ஆள்களை இனிமேல் குயவன் சூளையில உற்பத்தி செய்ய வேண்டியதாய் இருக்கிறது.

தஞ்சை

தஞ்சை ஜில்லாவில் தோழர் நாடிமுத்து பிள்ளை ஒரு ஸ்தானத்துக்கு துணிந்து நிற்பார். அதுவும் மந்திரி வேலைக்கு வாக்களித்திருப்பதால் தான். மற்ற ஸ்தானங்களுக்கோ அய்யர்மார்களைத் தான் பிடிக்க வேண்டும்.

தென் ஆற்காடு

தென் ஆற்காட்டில் ஜஸ்டிஸ் கட்சியால் நின்று கொழுத்து உருவமான ஒரு முந்திரிக்கொட்டை செட்டியார் பட்டம் விட்டு விட்டு தலையை நீட்டிக்கொண்டிருக்கிறார். அவரை ஒரு ஸ்தானத்துக்கு வைத்துக் கொள்ளலாம். மற்ற ஸ்தானத்துக்கு காங்கரசின் பேரால் நிற்க ஆள் கிடைப்பது கஷ்டம் ஜில்லா போர்டில் வெற்றி பெற்ற செட்டியார்களும், படையாச்சிகளும் டிமிக்கி கொடுத்துவிட்டார்கள்.

செங்கற்பட்டு

செங்கல்பட்டுக்கு தோழர் முத்துரங்க முதலியார் நிற்பார் என்பது உறுதி. மற்ற ஸ்தானங்களுக்கு ஆள் கிடையாது.

இவ்வளவுக்கும் கிடைப்பதாக இனியும் ஒன்றிரண்டு ஆள்கள் கிடைப்பதாகவே வைத்துக்கொள்ளலாம். என்றாலும், இவைகள் மெஜாரிட்டி ஆகி விடுமா என்பதோடு ஆந்திர தேச நிலவரம் என்ன என்று பார்த்தால் "வேட்டை ஆடினதில் 3 வெடி போட்டதில் 2 குண்டு குறி தவறி விட்டது. ஒன்று வெடிக்கவே இல்லை" என்பது போல் அவ்விடத்திய நிலையும் மிகவும் மோசம் என்று தான் சொல்லவேண்டி இருக்கிறது. கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தபூர் ஜில்லாக்களுக்கு காங்கரஸ் காரர்களுக்கு சும்மா கவுரவத்துக்கு நிறுத்துவதற்குக் கூட அபேட்சகர்கள் பெயர் கிடைக்கவில்லை.

ஆந்திர தேசம்

விசாகபட்டணமோ "பொப்பிலி ராஜ்யம்" என்று ஏற்கனவே காங்கரஸ் காரர்கள் சொல்லிவிட்டார்கள்.

கோதாவரி, கிருஷ்ணா, நெல்லூர் ஆகிய ஜில்லாக்களில் பார்ப்பனர் கம்மா—ரெட்டி முதலிய தகராறுகளில் காங்கரஸ் பேரால் நிற்க பார்ப்பனர்கள் தவிர பார்ப்பனரல்லாதார்களில் அபேட்சகர்கள் கிடைப்பது அரிதாய் விட்டது.

தமிழ் நாட்டிலாவது காங்கரசுக்கு ஏதோ சில ஆள்கள் பார்ப்பனரல்லாதாரில் இருக்கிறார்கள் என்றாலும் ஆந்திராவில் அதுகூட கிடையாது. சுற்றிச் சுற்றி தோழர்கள் பட்டாபி, பிரகாசம், நாகேஸ்வர ராவ், காளேஸ்வரராவ், புலுசு சாம்பமூர்த்தி என்கின்ற பந்துலுகள், அய்யர்கள் கூட்டங்களே தவிர மற்றபடி வேறு ஆள்கள் மிகவும் அபூர்வமாய்ப் போய் விட்டது. சில ரெட்டியார்கள் காங்கரஸ் பேரால் குதியாட்டம் போட்டுக்கொண்டு இருந்தார்கள், அவர்களும் இப்பொழுது முக்கியமானவர்கள் காங்கரசை விட்டு விட்டார்கள்.

சென்னை மாகாண நிலைமை
மோசந்தான்

ஆகவே, சென்னை மாகாணத்தின்லே காங்கரசுக்காரர்கள் ஒரு 50, 60 ஸ்தானம் கைப்பற்றுவது என்பது கூட மிகவும் கஷ்டமான காரியமாகத்தான் இருக்கும். அதுவும் பதவி ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லிவிட்டால் ஒரு 10 ஸ்தானம் கிடைப்பதுகூட காங்கரசுக்கு அருமையாகத்தான் போய் விடும். வெறும் பார்ப்பனரும் குப்புசாமி கம்பெனியும் தான் மீதியிருக்கும்.

ஆகவே, எந்த விதத்திலும் காங்கரஸ்காரர்கள் மொத்தத்தில் 110 ஸ்தானங்கள் சம்பாதித்து மெஜாரிட்டி ஆகி மந்திரி சபை நியமிக்கும் அந்தஸ்துக்கு வருவார்கள் என்று நினைப்பது அமாவாசை யன்றைக்குப் பூரண சந்திரோதயம் ஏற்படும் என்பது போல் தான் முடியும். இதற்குள் பார்ப்பனர்—பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற பிளவு காங்கரசில் காட்டுத் தீ போல் பரவிக் கொண்டிருக்கிறது. மந்திரி சண்டைக்கு இப்போது இருந்தே ஆயுதங்கள் தயாராய்க் கொண்டிருக்கின்றன. யாருக்கு மந்திரி வேலை கிடைத்துவிட்டாலும் தோழர் சத்தியமூர்த்தி அவர்களுக்கு மாத்திரம் மந்திரி வேலை இல்லை என்பதை இப்போதே காங்கரஸ் பக்தர்கள் கல்லில் எழுதி வைத்துக் கொண்டார்கள்.

தோழர் ராஜகோபாலாச்சாரியார் துறவும், தவமும் இனியும் நீண்டு அவை அஞ்ஞாத வாசத்தில் முடியும்போலிருக்கிறது.

மொற்றும், காலித்தனமுமே
மீதமாகும்

ஆதலால், காங்கரஸ் முயற்சி முடிவில் வரை மொற்றி பணம் வருவித்ததும், வாலிபர்களை மொற்றி காலித்தனத்துக்கு உபயோகப்படுத்தி விட்டதும் பெண்களை

(இதன் தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

செட்டிமார் நாட்டில் காங்கரஸ் கட்சி விழுந்தது

காங்கரஸ்காரர்கள் போக்கிரித்தனம்

தேசியக்கொடி தகனம்

காலிகளின் எல்லையற்ற அயோக்கியத்தனம்

ஈ. வெ. ராமசாமி முழக்கம்

(நமது நிருபர்)

கானாடுகாத்தான், டிச, 10

செட்டி நாட்டில் ராமநாதபுரம் ஜில்லா போர்டுக்கு தேர்தல் பிரசாரம் ஜஸ்டிஸ், காங்கரஸ் இரண்டு கட்சிகளினும் வெகு தீவிரமாய் நடைபெற்று வருகின்றது. கானாடுகாத்தான், புதுவயல், பள்ளத்தூர், கோட்டையூர், கண்டனூர் முதலிய இடங்களில் ஜஸ்டிஸ் கட்சி பிரசாரகர்கள் சுமார் 12 பேர் பிரம்மாண்டமான கூட்டங்களில் ஜஸ்டிஸ் கட்சியின் சேவையையும், அது மக்களுக்கு செய்துவந்த தொண்டுகளையும் பற்றி விஸ்தாரமாய் பேசி வருகிறார்கள். இதைக் கண்ட காங்கரஸ்காரர்கள் தங்கள் கட்சியின் போக்கிரித்தனத்தை ஜனங்களுக்குத் தெரிந்து விடுகிறதே இந்த ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களால் என்று ஜஸ்டிஸ் கட்சி கூட்டங்களில் கல் போடுவதும் பாம்பு, தவளைகளை விடுவதும் சாணியினால் அடிப்பதும் இம்மாதிரி போக்கிரித்தனம் செய்து வருகிறார்கள் ஒரு கூட்டமாவது அமைதியாய் நடைபெறாமல் இந்த காங்கரஸ்காரர்கள் செய்து வருவது ஜனங்கள் எல்லோரும் உணர்ந்து விட்டார்கள். காங்கரஸ்காரருடைய போக்கிரித்தனத்தையும், ஜனங்கள் பகிரங்கமாய் அறியும்படி சேர்ந்து விட்டது.

நேற்று மாலை கோட்டையூரில் கூடிய ஓர் பொதுக் கூட்டத்தில் ஈரோடு ஈ. வெ. ராமசாமியார், காங்கரஸ்காரர்களுடைய அரசியல் போக்கியதைகளையும் அவர்கள் தவ்விடப் பிரசாரங்களையும், தலைவர்களுடைய ஒழுக்கமற்ற தன்மைகளையும், காங்கரஸ்காரர்கள் மக்களை ஏமாற்றி வரும் பிரசாரத்தின் யோக்கியதைகளையும், அவர்களுடைய அர்த்தமற்ற கூச்சல்களையும், பணக்காரர்களை ஒழிப்பதாய் செய்யும் போலி பிரசாரத்தையும்' கூலிகளின் அட்டகாசத்தையும், ஓட்டர்கள் எதற்காக தங்கள் ஓட்டுகளை எப்படி யாருக்குக் கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றியும், வெகு அழகாகவும், விஸ்தாரமாகவும், அழுத்தமாகவும் பாமரர்களும் உணரும்படி பேசினார். இதை எல்லாம் கேட்டுக் கொண்டு இருந்த காந்தி குல்லா தரித்த காலிகள் கண்டபடி பேசிக்கொண்டும், காந்திக்கு ஜே என்று கூப்பாடு போட்டுக் கொண்டும் கூட்டம் நடைபெறாமல் இடைஞ்சல் செய்து வந்தார்கள். அப்படியும் கூட்டம் நடைபெற்று வந்தது. யாரோ ஒரு காலி கூட்டத்தின் மத்தியில் ஜஸ்டிஸ் கட்சி ஒழிக என்று சப்தமிட்டு கலகம் செய்தான். அச்சமயம் தண்டபாணி பிள்ளை பேசிக்கொண்டு இருந்தார். உடனே கூட்டத்தில் உள்ள பலர் கூச்சல் போட்ட காலியை தாவி பிடித்தார்கள். உடனே பலத்த குழப்பம் ஏற்பட்டது. மக்களுக்குள் பரபரப்பு ஏற்பட்டது. ஜஸ்டிஸ் கட்சி நாட்டுக்கோட்டை செட்டியாருக்கும், காங்கரஸ் கட்சி நாட்டுக்கோட்டை செட்டியாருக்கும் பலத்த வாக்கு வாதம் ஒரு புறம் நடந்து கொண்டிருந்தது.

எங்கும் ஒரே கூச்சல். இச்சமயத்தில் திரு. அண்ணாதுரை எழுந்து, இம்மாதிரி அஹிம்சா மூர்த்திகள் என்று சொல்லப்படும் காந்தி சிஷ்யர்கள் மிருகத்தனமாய் நடக்கக் கூடாதென்றும், பொறுப்பை உணர்ந்து நடக்க வேண்டுமென்றும், காங்கரஸ்காரர்களுக்கு மாத்திரம் காலித்தனம் சொந்தமல்லவென்றும், யார் பேசினாலும் கூட்டத்தில் அமைதி நிலவ வேண்டுமென்று பேசிக் கொண்டு இருக்கையில் கூட்டத்தில் ஓர் புறத்தில் குழப்பம் ஏற்பட்டது. காங்கரஸ் காலிகளுக்கும், கூட்டத்தினருக்கும் வாக்கு வாதம் நடந்து கடைசியில் காங்கரஸ்காரர்கள் வைத்து இருந்த தேசியக்கொடி கூட்டத்தில் இருந்த உள்ளூர்க்காரர்களால் பிடுங்கப்பட்டு கூட்டம் நடைபெற்ற இடத்துக்குக் கொண்டுவரப்பட்டது. உடனே, அந்தக்கொடி எரிக்கப்பட்டுவிட்டது. காங்கரஸ்காரர்கள் செய்த கொடுமையை எப்படி வர்ணிப்பதென்று தெரியவில்லை. இம்மாதிரி செட்டிநாட்டில் இதுவரையில் காலித்தனம் நடைபெற்றதில்லை.

பள்ளத்தூர்

மாலை 3-மணிக்கு பள்ளத்தூரில் ஓர் ஜஸ்டிஸ் கட்சி பொதுக் கூட்டம் கூடியது. அக் கூட்டத்தில் ஜஸ்டிஸ் கட்சி பிரசாரகர்கள் எல்லோரும், ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகளைப் பற்றியும், ஜஸ்டிஸ் கட்சி நாட்டுக்குச் செய்த சேவைகளைப் பற்றியும் விஸ்தாரமாய் பேசினார்கள். திரு. பொன்னம்பலம், வெகு அழுத்தமாய் ஓட்டர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைகளைப் பற்றியும், காங்கரஸ்காரர்களின் மாயா ஜாலப் பிரசாரத்தைப் பற்றியும் பேசினார்.

காங்கரஸ்காரர்கள் மாலை 5-மணிக்கு ஜஸ்டிஸ் கட்சி கூட்டத்துக்கு அருகில் ஓர் கூட்டம் கூடி பேசிக் கொண்டு இருந்தார்கள். இரண்டு கூட்டங்களிலும் ஜனங்கள் ஏராளமாய் கூடி இருந்தார்கள். அது வரைக்கும் அதாவது மாலை 7-மணி வரையில் எந்த கூட்டத்திலும் குழப்பமில்லை. மாலை 7-மணிக்குமேல் ஈ. வெ. ராமசாமியார் திருச்சி விஸ்வநாதத்துடன் கூட்டத்திற்கு வந்து சேர்ந்தார். திரு. விஸ்வநாதம் சற்று நேரம் பேசி முடித்ததும், ஈ. வெ. ராமசாமியார் காங்கரஸ்காரர்களுடைய அர்த்தமற்ற கூப்பாடுகளை விஸ்தாரமாய்விளக்கி செட்டிநாட்டில் அவர்கள் செட்டியார்களை ஏமாற்றி பார்க்கவே இம்மாதிரி இரு செட்டிமார்களுக்கும் விரோதத்தை உண்டு பண்ணவந்து இருக்கிறார்கள் என்றும், கேவலம் ஜில்லா போர்டுக்கு இவ்வளவு பிரசாரம் அவசியமில்லை என்றும் சொல்லி தேவகோட்டை வக்கீல் பிராமணர்கள் காசிப செட்டியாரை ஆதரித்து வெளியிட்ட அறிக்கை பலமாய் கண்டித்து அதில் மற்ற ஜாதி பிரமுகர்கள் பெயர் ஒன்றுகூட இல்லை என்றும் சொல்லி வருகையில் அவர் பேரில் சாணி உருண்டையும், கல்லும் எறியப்பட்டது. இந்த நிலைமையில் அவர் மீண்டும் பேசிக்கொண்டே இருந்தார். பக்கத்தில் நடைபெற்று வந்த காங்கரஸ் கூட்டம் முடிவடைந்தது. அங்கிருந்த காலிகள் இராமசாமி பெரியாரிடம் வந்து ஏதோ முணு முணுத்தார்கள். சிலர் ஜஸ்டிஸ் தொண்டர்கள்பேரில் கல் போட்டார்கள். ஒரு சிறுவனுக்கு மண்டையில் பலத்த அடி. சென்னை சங்காதத்துக்கு புருவத்தில் கல் அடி விழுந்தது. இந்த நிலைமையில் திரு. காயக்கா கூட்டத்தை முடித்து விடும்படி பலர் கேட்டுக் கொள்ளவே அவர் கூட்டத்தை கலைத்துவிட்டார். இருட்டு ஒரே குழப்பம், திக்கு திசை தெரியவில்லை, எங்கும் கல்மாரி; ஜனங்கள் அங்கு மிங்கும் ஓடிக்கொண்டு இருந்தார்கள்.

மேலே என்ன விபரீதங்கள் நடக்கும் என்றும் ஒன்றும் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. போலீஸ்காரர் அதிகமில்லை. 3-4 போலீஸ் காரர்களால் குழப்பத்தை அடக்க முடியவில்லை. ஒரே கூச்சல், சிறப்பாக மிருகத்தனமும், பலாத்காரத் தனமும் காங்கரஸ் கூலிகளால் நடைபெற்றது. சுமார் 50, 60 பேருக்கு காயங்கள் ஏற்பட்டு இருக்குமென்று சொல்லப் படுகிறது.

செட்டிநாட்டில் நடைபெற்ற எந்த கூட்டத்திலும் சரியான போலீஸ் பந்தோபஸ்து இல்லவே இல்லை. நேற்று மாலை பள்ளத்தூர் கூட்டத்தில் 3, 4 போலீசுக்கு மேல் இல்லை. நேற்று மாலை போலீஸ் பந்தோபஸ்து பலமாய் இருந்திருக்கும் பட்சத்தில் இவ்வளவு கலாட்டாவும், கலகமும் நடைபெறுவதற்கு ஏது இல்லை. கூட்டத்தில் இவ்வளவு கலகம் ஏற்பட்டு அல்லோல கல்லோலம் நடந்த பின் போலீஸுக்கு சொல்லி யனுப்பப்பட்டு, ரிசர்வ் போலீஸ் இரவு 9 மணிக்கு மேல் வந்தது. முன்னாடியே வந்திருந்தால் ஒருவருக்கும் ஓர் கஷ்டமும் ஏற்பட்டு இருக்காது.

செட்டி நாட்டில் காங்கரஸ் பிரசாரம் செட்டிமார்களிடையே குழப்பத்தையும், கலகங்களையும் உண்டாக்கப்பட்டு விட்டதுடன், செட்டிமார்களிடையே பிரிவினையையும். இந்த காங்கரஸ் பிரசாரத்தில் ஏற்பட்டுவிட்டது. பெரிய மனிதர்களை வாயில் வந்தபடி தூஷிப்பதும் காலாடித்தனம் செய்வதுதான் காங்கரஸ் வழியோ. இதனால்தான் சுயராஜ்யம் வரும் என்று அவர்கள் நினைத்து இருக்கிறார்கள் போல தெரிகின்றது.

அகில இந்திய சினிமா மகாநாடு

கோவையில் பேராதரவு

(நமது நிருபர்)

கோயம்புத்தூர், டிச. 13

சென்னையில் டிசம்பர் 26,27 தேதிகளில் நடைபெறப் போகும் இரண்டாவது அகில இந்திய சினிமா மகாநாட்டின் பிரசார கமிட்டி அங்கத்தினராகிய 'சினிமா உலகம்' ஆசிரியர் பண்டிதர் பி.எஸ். செட்டியார் இன்று காலை இங்கு பிரசார நிமித்தம் வந்தார். இவ்வூர் சினிமா ஸ்டூடியோ பட முதலாளிகளும், தியேட்டர் சொந்தக்காரர்களும் அகில இந்திய சினிமா மகாநாட்டிற்கு அதிக ஆதரவு அளித்திருக்கிறார்கள். இவ்வூரிலிருந்து பெருவாரியான பிரதிநிதிகள் மகாநாட்டிற்கு விஜயம் செய்வார்களென்று தெரிகிறது.

* * *

ஜாக்கிரதை ! ஜாக்கிரதை !!

பட்டேல் வருகிறாராம் !!!

நோட்டின் பேரால்,

சுயராஜ்யத்தின் பேரால்,

கதர் பேரால்,

தீண்டாமை பேரால்

இதுவரை

2, 3 கோடி ரூபாய்கள்

வசூலிக்கப்பட்டன.

பார்ப்பனர்கள் பிழைத்துப் பதவி பெற்றதல்லாமல் நமக்குக் காதொடிந்த ஊசியளவு பயனாவது ஏற்பட்டதுண்டா? இனியும் ஏமாறுவதா?

ஜாக்கிரதை !

* * *

பிள்ளை பிறக்குமுன் பேர் போடச் சண்டையா?

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஏமாற்றி மக்களை மயக்கச் சொன்னதும், ஏமாந்த சோணகிரிகளை ஏமாற்றி பட்டம் பகிவட்டம் விடச் சொன்னதும் தான் மீதி ஆகப்போகிறதே தவிர முடிவில் காரியம் ஆகப் போவது ஒன்றும் இல்லை என்று இப்போதே எழுதி வைத்துக் கொள்ளலாம்.

எலக்ஷன் முடிந்தவுடன் கவர்னர் காங்கரசுக்கு எத்தனை பேர் வந்தார்கள்? காங்கரஸ் அல்லாதவர்களில் எத்தனை பேர் வந்தார்கள்? என்று தான் கேட்கப்போகிறாரே ஒழிய சத்தியமூர்த்தியாரோ எத்தனை பேர் உங்கள் ஆட்களும், அடிமைகளும் என்று கேட்கப்போவதில்லை.

மெஜாரட்டி காங்கரஸ் அல்லாதாருக்கே

அப்போது எப்படியோ காங்கரஸ் அல்லாதவர்கள் தான் மெஜாரிட்டியாய் இருக்கப் போகிறார்கள். கவர்னர் பிரபு அவர்கள் (காங்கரஸ் அல்லாதவர்களை) எல்லாம் ஒன்று சேர்த்து ஐரோப்பியருக்கு ஒரு மந்திரி, தாழ்த்தப்பட்டவருக்கு ஒரு மந்திரி, முஸ்லிம்களுக்கு ஒரு மந்திரி ஆக மூன்று மந்திரி போக மீதி நான்கோ ஐந்தோ நீங்கள் தீர்மானித்துக் கொள்ளுகிறீர்களா நான் தீர்மானிக்கட்டுமா என்று கேட்கப் போகிறார். அதிலும் எப்படியாவது பொப்பிலி ராஜாவுக்கு ஒரு மந்திரி பதவியும், செட்டி நாட்டு குமாரராஜாவுக்கு ஒரு மந்திரி பதவியும் கண்டிப்பாய் கிடைத்து விடும். ஆகவே, மூன்றும் இரண்டும் கூடி ஐந்துபோக பாக்கி மூன்று ஸ்தானங்கள் மீதி கட்சி பலத்துக்கோ அல்லது ஜாதி பலத்துக்கோ, ஆள் பலத்துக்கோ கொடுக்கப்பட்டு விடும். இந்த 8 மந்திரிகள் எப்படியும் சட்டசபையில் எப்போதும் மெஜாரிட்டியாகவே இருந்து வரத்தக்கவர்களாக ஆகி விடுவார்கள்.

நடக்கப் போகிறது என்ன?

இந்த நிலை தெரிந்த உடன் காங்கரஸ்காரர்கள் சீ அந்தப் பழம் புளிக்கும் என்கின்ற மாதிரியில் பதவி மறுப்பு, சீர்திருத்த உடைப்பு, முட்டுக்கட்டை ஆகிய நாமாவளி சொல்லிக்கொண்டு வெளியில் நின்று பஜனை பாடி மறுபடியும் பிச்சைக்கு வரப்போகிறார்கள். இதற்குள் காங்கரஸ்காரர்களில் சிலர் ஏதோ ஒரு கொண்டிச் சாக்கை சொல்லிக் கொண்டு ஒவ்வொருவராய் காங்கரசிலிருந்து விலகி சுயேச்சை வாதியாய் மற்ற கட்சிகளில் அனுதாபிகளாகி ஆதரவாளர்களாகி வெட்டாம் எல்லாம் தீர்ந்த உடன் ஜஸ்டிஸ் கட்சி ஜோதியில் இரண்டறக் கலந்துவிடப் போகிறார்கள். இதுதான் நடக்கக் கூடுமே தவிர காங்கரஸ்காரர்கள் மெஜாரிட்டி வந்து கோட்டைக்குள் புகுந்து காங்கரஸ் கொடியைப் பறக்கவிட்டு காரியதரிசிகளையும், கவர்னரையும் கதர் கட்டச் சொல்லப் போகிறோம் என்பதும், போலீஸ்காரர்களை தலை வணங்கச் சொல்லப் போகிறோம் என்பதும், பட்டாளத்தை திருப்பிச் சுடச் சொல்லப் போகிறோம் என்பதும் வெட்டி அளப்பும் ஏதோ சில பார்ப்பனர்களையாவது சட்டசபைக்குள் நுழைய செய்யும் சூழ்ச்சியுமே யாகும்.

பார்ப்பனரல்லாதாரே ஜாக்கிரதை

ஆதலால் ஆங்காங்குள்ள சொந்த செல்வாக்குள்ளவர்களும், சொந்த பணவசதி யுள்ளவர்களுமான பார்ப்பனரல்லாதார்கள் இந்த தோழர் சத்தியமூர்த்தி கூட்டத்தாரின் பித்தலாட்டங்களுக்கு ஆளாகி மானங்கெடாமல்—சுயமரியாதை இழக்காமல் ஜாக்கிரதையாய் இருந்து தங்கள் சுயேச்சையில் நின்று வெற்றிபெற வேண்டுமாய் யோசனை கூறுவதுடன் பின்னால் ஏமாந்துவிட்டோமே இனி எப்படி கட்சி மாறி அவமானமடைவது என்று வருத்தப்படாமல் இருக்க எச்சரிக்கை செய்கிறோம். [illegible]

மற்றும் வீணாக நமது பணத்தை 10000, 150000, 200000 என்று செலவு செய்து நாம் ஆலாய்ப் பறந்து அவதிப்பட்டு ஓட்டு சம்பாதித்து ஸ்தானம் பெற்று "திருப்பதிக்குப் போயும் பறத்தாசன் காலில் தானா விழுக வேண்டும்?" என்கின்ற வைதீக பழமொழிப்படி இந்தப் பார்ப்பனர்கள் பின்னாலும், அவர்களுடைய கூலிகள் பின்னாலும் சுபாந்து பழக வேண்டுமா என்பதையும் நிதானமாய் சொந்த புத்தி கொண்டு ஆராய்ந்து பார்க்கும்படி வேண்டுகிறோம்.

அசம்பிளித் தேர்தல்

திரு. வெ. ஷண்முக முதலியார் அபேட்சை

அம்பலூர், டிச. 13

1936-ம் வருஷம் டிசம்பர் 13-ந் தேதி திருப்பத்தூர் தாலூகா, அம்பலூர் கிராமத்தில் ஜஸ்டிஸ் பிரமுகர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. மேற்படி கூட்டத்திற்கு கனம் எஸ். அர்ஜுன கவுண்டர் அவர்கள் தலைமை வகித்தார். வரப்போகும் சென்னை அசம்பளி தேர்தலுக்கு வ. ஆ. ஜில்லா திருப்பத்தூர் தாலூகா தொகுதிக்கு ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக திரு வெ. ஷண்முக முதலியார்(வாணியம்பாடி)அவர்களை நிறுத்தி வைக்கவும் மேற்படியாரை கேட்டுக் கொள்வதாகவும் ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது.

வள்ளுவர் குலமும், அவர் வாய் மொழியும்

உயர்ந்த வமிசத்திற்றோன்றி, தெய்வப் புலவராய் விளங்கிவந்த திருவள்ளுவரின் குலம் முதலியன பற்றி அநேகர் அநேகவிதமாக வரைந்துள்ளனர். அவை யனைத்தும் ஒன்றற்கொன்று முரண்பாடுடைத்தா யுள்ளன வாதலான், சென்னை தங்கசாலை வீதி 201. செ. சரவண பவானந்த சஹஜீவி நிலையத் தலைவர் இராஜநீதி சாமி சுதாகந்தர் அவர்கள் சங்க ஆற்றலிலேயே தக்க சான்றுகளை விளக்கி, "வள்ளுவரும் அவர் வாய் மொழியும்" என்னும் நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். அது நமது தமிழர்களுக்கும் தமிழ் அபிமானிகட்கும் முற்றாத் துணையா யிருக்குமென்பது மிகையாகாது. அதனை கலாசாலைகளில் பாடபுத்தகமாக வைத்து மாணவர்கட்கு படிப்பித்தல் சாலச்சிறந்தது. அதில் அநேக ஆராய்ச்சிகளை விரிவாய் காணலாம்.

எம். என். வைத்தியநாதன்.

பெங்களூர் பங்கு மார்க்கெட்.

பெங்களூர், டிச, 15

பெங்களூர், புரோக்கர் எம். நஞ்சப்பைய ஜாகிர்தார் கீழ்க்கண்ட பங்கு விலைகளை அனுப்பியிருக்கிறார்.

	செலுத்தப் பட்டது	தற்கால விகிதம்	
	ரூ.	ரூ.	அ.
பாங்கி			
இம்பீரியல் எப்.பி.	500	1574	8
இம்பீரியல் கண்ட்	125	387	0
ரிசர்வ்	100	138	0
இந்தியா	50	134	0
மைசூர்	100	302	0
பெங்களூர்	10	7	8
இண்டஸ்டிரியல்	25	6	0
தேவாங்கா	10	8	
சென்ட்ரல்	25	35	
குவிலான்	25		
ஸ்டேட் எய்ட்			
திருவாங்கூர்நாஷனல்	50		
இந்தியன்	50		
,,	10		
இன்ஷூரன்ஸ்			
ஏஷியாடிக்	5	5	
நரியண்டல்	200	5420	
நியூ இந்தியா	15	47	4
வலகன்	10	8	6
ஆலை			
பெங்களூர்	100	166	0
,, பிரிபரன்ஸ்	100	113	0
பக்கிங்ஹாம்	100	190	0
,, பிரிபரன்ஸ்	100	165	0
கோகாக்	100	296	0
கெய்சர்-இ-ஹிண்ட்	2½	0	14
மினர்வா	100	62	0
மகாராஜா	50	82	0
கிருஷ்ணராஜேந்திரா	25	6	8
சீதாராம்	100	48	0
கம்போடியா	10	10	4
வசந்தா சாதா	100	106	0
,, பிரிபரன்ஸ்	100	114	0
ராஜலக்ஷ்மி சாதா	50	51	0
,, பிரிபரன்ஸ்	50	53	0
காலேஸ்வரா	100	298	0
டிபன்சர்			
கோலார்	100	100	4
ஹாசன்	100	106	0
மைசூர் சர்க்கரை	80	90	8
திருச்சி-ஸ்ரீரங்கம்	100	105	0
சில்லரை			
பிரீவரிஸ் சாதா	75	86	8
,, பிரிபரன்ஸ்	100	112	0
டாடா ஹைட்ரோ சாதா	100	190	8
,, பிரிபரன்ஸ்	100	163	0
டாடா இரும்பு சாதா	75	222	0
,, டிபர்டு	30	852	0
,, 1-வது பி-ன்	150	200	0
,, 2-வது பி-ன்	100	178	0
பி. வி. ரயில்வே	25	20	0
பெங்களூர் பிரஸ்	100	80	0
பார்டன் சன்ஸ் சாதா	10	5	2
,, பிரபரன்ஸ்	10	5	12
ஸ்பென்சர் சாதா	10	7	6
,, ஏ-பிரிபரன்ஸ்	10	11	8
,, பி-பிரிபரன்ஸ்	10	12	4
மின்சாரம்			
ஆம்பூர்	10	14	6
வேலூர்	10	17	10
திருச்சினாப்பள்ளி	100	206	8
,,	10	20	0
விசாகப்பட்டணம்	50	74	8
கும்பகோணம்	10	14	6
கொச்சி	10	14	4
சங்கன்	10	15	0

தங்கம்

	ஷி.	ப.	ஷி.	பெ.
சாம்பியன்	10	2	4	3
மைசூர்	10	1	5	8½
நந்தி துர்க்கம்	10	3	1	6
ஊர்காம் சாதா	10	0	14	4

சர்க்கரை

மைசூர் சர்க்கரை	10	35	8
தேநு இந்தியா	10	6	12
டெக்கான் சாதா	100	366	0
,,	25	92	0

இராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தல்

ஜஸ்டிஸ் கட்சி வெற்றி

காங்கரஸ் புதைக்கப்பட்டது

(நமது நிருபர்)

மதுரை, டிச, 13

இராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தலில் பாக்கி நடைபெற வேண்டியதிருந்த இராமநாதபுரம் சர்க்கிள் 5 ஸ்தானங்களின் தேர்தல் நாளது மாதம் 10-ந் தேதி நடைபெற்றது. தேர்தல் நடைபெறுவதற்கு முன் பல நாட்களாக காங்கரஸ்காரர்கள் செய்து வந்த விஷமப் பிரசாரம் இன்னதென்று எழுத முடியாது. இத் தேர்தலை யொட்டி பல இடங்களிலிருந்து காங்கரஸ் தலைவர்கள் இராமநாதபுரத்திற்கு வந்து போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களை எதிர்த்து "ஜஸ்டிஸ்" கட்சியாரும் ஆடம்பர மில்லாது பிரசாரம் செய்துவந்தார்கள். இராமநாதபுரம் டவுன் சர்க்கிளில் இராஜாவுக்குப் போட்டியாக திரு. சௌமிய நாராயண அய்யங்கார் என்ற ஓர் பிராமண வக்கீல் காங்கரஸ் சார்பாக நின்றார். போலீஸ் பந்தோபஸ்து ஆங்காங்கு ஏராளமாகச் செய்யப்பட்டிருந்து தேர்தல் நடைபெற்றது.

இராமநாதபுரம் தாலூகா தாசில்தார் ஓட்டுப் பெட்டிகளை 11, 12 தேதிகளில் எண்ணி அடியில் கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவித்தார். இத்துடன் இராமநாதபுரம் சர்க்கிளில் காங்கரசும், பிராமணியமும் ஒழிந்ததாகக் கூறுகிறார்கள்.

இராமநாதபுரம் சர்க்கிள்

இராமநாதபுரம் ராஜா (ஜஸ்டிஸ்) வெற்றி.

திரு. சௌமிய நாராயண அய்யங்கார் (காங்கரஸ்) தோல்வி.

டாக்டர் ஜோன்ஸ் (ஜஸ்) வெற்றி

மிஸ். இரோஸ் செல்லம்மா (காங்) தோல்வி.

திருப்புலாணி சர்க்கிள்

திரு. இராஜாராம் பாண்டியன் (காங்) வெற்றி.

தேவி பட்டணம்

திரு. மீராகசேன் (காங்) வெற்றி.

மண்டபம் சர்க்கிள்

திரு. ரெங்கசாமி அய்யங்கார் (ஜஸ்டிஸ்) வெற்றி.

இராமநாதபுரத்தில் வெற்றி குதூகலம் வெகு மும்முரமாக இருக்கிறது. காங்கரஸ் இராமநாதபுரம் டவுனில் தலைகாட்ட முடியாது போயிற்று.

கொழும்பு

பாப்பாக்குடி பகுத்தறிவுக் கழகம்

(ஒரு நிருபர்)

கொழும்பு, டிச, 13

கோன்பிட்டி காலிரோட் 392-ம் இலக்கத்தில் பாப்பாக்குடி பகுத்தறிவுக் கழகத்தின் 2-வது வருட 7-வது பொதுக்கூட்டம் (8-12-36) செவ்வாய்க்கிழமை இரவு 9-30மணி முதல் தோழர் மோ. ஜோசப் அவர்களின் அவைத் தலைமையின் கீழ் நடைபெற்றது. தலைவர் முகவுரைக்குப் பின் கடந்த கூட்டத்தின் நடவடிக்கைகளும் வரவுசெலவு கணக்குகளும் காரியதரிசியவர்களால் வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன. தோழர் தே. ஈ. புஷ்பராஜன் அவர்கள் மதமும், மக்களும் என்பது பற்றி சுமார் ஒரு மணி நேரம் உபன்யாசம் செய்தார். தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் ரு. ஈ. ஜேசுதாசன் அவர்களால் வந்தனம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

'சிறந்த பொதுஜன ஊழியர்'

காலஞ்சென்ற திரு. வி. சிவப்பிரகாச முதலியாருக்குப் பாராட்டுகள்

உருவப் படத் திறப்பு விழா வைபவம்

கனம் பி. டி. ராஜன் பேருரை

சென்னை, டிச, 14

நேற்று மாலை சிந்தாதிரிப்பேட்டை கேப்பியர் பார்க்கிலுள்ள திவான்பகதூர் பி. விஜய ராகவச் செட்டியார் ஹாலில், சிந்தாதிரிப்பேட்டை கூட்டுறவு பாங்கியின் தலைவரா யிருந்த காலஞ் சென்ற திரு. வி. சிவப்பிரகாச முதலியாரின் திருவுருவப்படத்தை, சென்னை சர்க்கார் அபிவிருத்தி மந்திரி கனம் பி. டி. ராஜன் திறந்து வைத்தார்.

திவான்பகதூர் டாக்டர் சி. நடேச முதலியார் முதன் முதலாகப் பேசுகையில், காலஞ் சென்ற திரு. சிவப்பிரகாச முதலியார் சிந்தாதிரிப்பேட்டைக்கே ஒரு ஆபரணம் போன்று விளங்கினரென்றும், எவ்விஷயத்திலும் அவர் உண்மையான சிரத்தையுடன் உழைத்து வந்தாரென்றும், அவர் ஓர் தீவிர ஜஸ்டிஸ் வாதி யென்றும், அவரது மரணத்தால் சிந்தாதிரிப்பேட்டைக்கு மாத்திரமன்றி சென்னைக்கே பெருத்ததோர் நஷ்டமென்றும், சிந்தாதிரிப்பேட்டை கூட்டுறவு பாங்கியின் முன்னேற்றத்திற்காக, அல்லும் பகலும் உழைத்து வந்தாரென்றும், அத்தகைய ஓர் சிறந்த ஊழியரின் திருவுருவப்படத்தை பாங்கி கொண்டிருப்பது அவசியமென்றும் கூறினார்.

திரு. அப்துல் ஹமீத்கான், காலஞ்சென்ற முதலியார், உண்மையும், நேர்மையும் உள்ளவரெனக் கூறினார்.

ஸ்ரீமதி கே. அலமேலுமங்கைத் தாயாரம்மாள், காலஞ்சென்ற முதலியார், சிறந்த சட்ட ஞானம் படைத்தவரென்றும், கொள்கைகளில் விசேஷப் பற்றுடையவரென்றும் கூறினார்.

திரு. என். ஜி. ரங்காமானுஜம், அடுத்தபடியாகப் பேசுகையில், பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கே காலஞ்சென்ற முதலியார் ஒரு திலகம் போன்று விளங்கினரென்றும், ஜஸ்டிஸ் கட்சியினிடம் அவர் விசேஷப் பற்று கொண்டிருந்தாரென்றும், அதன் ஆரம்ப கால வெற்றிக்கு அவரது உழைப்பே காரணமென்றும், மைலாப்பூர் நிதியில் அவரது சேவை பாராட்டற் பாலதென்றும், அவரது மரணத்தால் பார்ப்பனரல்லாதார் சமூகம் ஓர் அரிய நண்பரையும், உண்மை ஊழியரையும், இழந்து விட்டதெனக் கூறுவது மிகையாகாதென்றும் கூறினர்.

க்வீன் மேரி கல்லூரி ஆசிரியர் மிஸ். ராஜேஸ்வரி, திருவாளர்கள்: டி. பி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, கே. வேதாந்த தேசிகர், பி. அண்ணாமலை முதலியார், ஆர். மதனகோபால் நாயுடு முதலியோரும் அவரது அருங்குணங்களைப் பாராட்டிப் பேசிய பின், பாங்க் தலைவர் திரு. சி. என் பாலகிருஷ்ண நாயுடு காலஞ்சென்ற திரு. முதலியாரின் திருவுருப் படத்தை திறந்து வைக்கும்படி கனம் பி. டி. ராஜனைக் கேட்டுக் கொண்டார்.

கனம் பி. டி. ராஜன்

கனம் பி. டி. ராஜன், பலத்த கரகோஷத்தினிடையே அவ்வுருவப் படத்தை திறந்து வைக்க இப் பாங்கியின் மாஜி தலைவரொருவரின் திருவுருவப் படத்தை திறந்து வைக்கும் பாக்கியத்தை தனக்கு அளித்தமைக்காக தனது வந்தனத்தைத் தெரிவித்துக் கொண்டு, காலஞ்சென்ற திரு. சிவப்பிரகாச முதலியார் முனிசிபல் கௌன்சிலராகவும், வக்கீலாகவும், அரசியல் வாதியாகவும் செய்துள்ள சேவைகள் மிகவும் போற்றத்தக்கதென்றும், ஜஸ்டிஸ் கட்சியின் கற்றூண் போன்று அவர் விளங்கி வந்தாரென்றும் சென்னையில் ஜஸ்டிஸ் கட்சியின் ஆரம்பகால வெற்றிக்கு அவரது சேவையே காரணமென்றும், அவரது மரணத்தால் சிந்தாதிரிப் பேட்டை வாசிகள் மட்டுமின்றி, ஜஸ்டிஸ் கட்சியே ஓர் உண்மை உழைப்பாளியை இழந்து விட்டதென்றும், கட்சி அங்கத்தினர்களுக்கு முக்கியமாக வாலிபர்களுக்கு அவரது வாழ்க்கையும், சேவையும் ஒரு உதாரணமாய் விளங்குமென்றும், சிந்தாதிரிப்பேட்டை கூட்டுறவு பாங்கி ஆரம்பித்த காலத்திலிருந்து (1915) காலஞ்சென்ற முதலியார் மிகச் சிரத்தை யெடுத்துக் கொண்டிருந்தாரென்றும், இத் திருவுருவப்படத்தின் மூலம் எதிர்கால சந்ததியார் அவரது குணநிசயங்களைக் கண்டறியக் கூடுமென்றும் கூறி பாங்கியின் தற்கால காரியதரிசியான திரு. சி. தியாகராஜ முதலியாரின், ஊக்கத்தாலும், உழைப்பாலும், பாங்கியின் புகழும், கௌரவமும் அதிகரிக்கப்பட்டு வருகிறதென்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுவதாகவும் கூறினர்.

பிறகு பாங்கியின் காரியதரிசி திரு சி. தியாகராஜ முதலியார் வந்தனோபசாரம் கூற வைபவம் இனிது முடிந்தது.

தென்னாட்டு வன்னியகுல க்ஷத்திரிய மகாநாடு

திருச்சி ஜில்லா உடையார் பாளையம் தாலூகா, அரியலூரில் கலிவரதராஜன் தியேட்டரில் 1936-ம் வருஷம் டிசம்பர் மாதம் 20-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு மகாநாடு கூடும்.

நிகழ்ச்சிக் குறிப்பு

1. கடவுள் வாழ்த்து
2. சென்னை, கவர்ன்மெண்டு ஹோம் மெம்பர் ஹானரபிள் ராவ் பகதூர் எ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைப்பார்.
3. சென்னை ஹிந்து எண்டோமெண்டு போர்டு கமிஷனர் திரு. இ. வி. சுந்தர செட்டியார் அவர்கள் எம். எ.பி. எல்., "மத, சமூக சீர்திருத்தத்தைப்பற்றி" சொற்பொழிவு செய்வார்.
4. திருச்சி ஜில்லா திரு. ராவ் பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் எம். எ. பி. எல்., "ஜாதி முன்னேற்றத்தைப் பற்றி" சொற்பொழிவு நிகழ்த்துவார்.
5. வந்தனோபசாரம் காலை 11 மணி, மாலை 1 மணிக்கு மேல் 4 மணி வரையில் மகாநாடு நடைபெறும்.

கடவுள் வாழ்த்து

(மகாநாட்டுக்கு) தஞ்சை ஜில்லா திரு டி. எஸ். ஆறுமுகம் பிள்ளை அவர்கள் பி.எ., பி.எல், தலைமை வகிப்பார்.

அரும்பாவூர் திரு. என். செங்கசாமி படையாட்சி அவர்கள் வரவேற்புக் கமிட்டித் தலைவர்.

1. மகாநாட்டுத் தலைவர் தேர்ந்தெடுத்தல.
2. அக்கிராசனத் தலைவர் பிரசங்கம்.
3. தொ[illegible] பிரசங்கம்.
4. அக்கிராசனர் முடிவுரை.
5. வந்தனோபசாரம்.

மரண அநுதாபம்

திருநெல்வேலி அம்பிகாபுரம் வாசியும், பொது ஜன சேவையில் அதிக ஊக்கமுடையாரும், "விடுதலை" சந்தாதாருமாகிய திரு. ஆ. சாமியவர்களது தாயாரும், காலஞ் சென்ற திரு. ஆறுமுகம் அவர்கள் மனைவியுமாகிய ஸ்ரீமதி சிவனியம்மாள், கடந்த ஒருமாத காலமாக நோய் வாய்ப்பட்டிருந்து 8-12-36 செவ்வாய்க்கிழமை இரவு 2 மணியளவில் தனது 77-வது வயதில் இயற்கையை யெய்தினர்.

மறுதினம் சகல ஆடம்பரங்களுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னையைப் பிரிந்து வருந்தும் திரு. ஆ. சாமியவர்களுக்கு நமது ஆழ்ந்த அநுதாபம் உரியதாகுக.

—என். பெரியசாமி.

காந்தி-ஜவஹர்லால்

பொருளாதாரக் கொள்கையில் நேர் முரண்

வகுப்புச் சண்டையும், கிராமப் புனருத்தாரணமும்

"உங்கள் பொருளாதாரக் கொள்கை பண்டிதர் ஜவஹர்லாலின் பொருளாதாரக் கொள்கை யினின்றும் வேறுபடவில்லையா" என திரு. பேஸில் மாத்யூஸ் திரு. காந்திஜீயினிடம் ஒரு கேடியான கேள்வியைப் போட்டார். "ஆம்" என திரு. காந்திஜீ அதற்குப் பதில் கூறி, அவ்வேற்றுமைகளை பின் வருமாறு விளக்கிக் காட்டினர்.

கிராம முன்னேற்ற விஷயத்திலும், கிராமப் புனருத்தாரண விஷயத்திலும் நாங்கள் வேற்றுமைப் படுகிறோம். கிராமமுன்னேற்ற இயக்கத்தில் திரு. ஜவஹர்லாலுக்கு நம்பிக்கையில்லை. தொழிற்சாலைகளின் அபிவிருத்தியே இந்தியாவின் முன்னேற்றத்திற்கு அவசியமென்பது அவரது நம்பிக்கை. ஆனல், அது விஷயத்தில் எனக்கு மிகவும் சந்தேகமா யிருக்கிறது.

"ஜமீன்தார் முறையை ஒழித்துவிட பண்டித ஜவஹர்லால் கங்கணங் கட்டிக்கொண்டுள்ளார்" என, திரு. மாத்யூஸ் அடுத்தபடியாக ஒரு கேள்வி போட்டார். அதிலும் நங்களிருவருக்கும் உள்ள அபிப்பிராய பேதத்தை திரு. காந்தி பின் வருமாறு விளக்கினர்.

நான் ஜமீன்தார்களை ஒழித்து விட விரும்பவில்லை. ஆனல் ஜமீன்தார்கள் அத்தியாவசிய மென்பதையும் நான் நம்புவதற்கில்லை. என்னிடம் ஒப்படைக்கப்படும் வேலையை நான் எவ்விதம் நடத்திச் செல்வேனென்பதற்கு ஒரு உதாரணங் கூறுகிறேன். நான் இப்பொழுதிருந்து வரும் கிராமத்தில், திரு. ஜமன்லாலுக்கு 100-ல் 75 பங்கு இருக்கிறது. முன்னேற்பாட்டுடன் இவ்விடத்திற்கு நான் வரவில்லை. அகஸ்மாத்தாகவே வந்தேன். வந்ததும் திரு. ஜமன்லாலின் உதவியை நாடினேன். எனக்குத் தங்குவதற்கு ஒரு குடிசையும், மற்றும் பல சௌகரியங்களையும் அவர் செய்துகொடுத்ததுடன் செய்நாளிலிருந்து வரக்கூடிய லாபத்தையும், எனது கிராம அபிவிருத்தி திட்டத்திற்கு செலவழித்துக் கொள்ளும்படி கூறினர். மற்ற ஜமீன்தார்களையும் இவ்விதம் திருப்ப என்னுல் கூடுமேயானுல், கிராமாபிவிருத்தி இயக்கம் ஒரு சிரமுமின்றிமுன்னேறி வரும்.

'வகுப்புச் சண்டை எப்படியிருந்தாலும் ஏற்பட்டே தீரும்' என திரு. ஜவஹர்லால் நம்புகிறார். ஆனல், அஹிம்சா முறையில் ஜமீன்தார்களையும், இதர முதலாளிகளையும் திருப்பக் கூடுமென நான் நம்புகிறேன். ஆகவே, வகுப்புச் சண்டை ஏற்படுவதற்கு அவசியம் ஏற்படாதென்றே நான் நினைக்கிறேன். குடியானவர்கள் தங்கள் பலத்தை எப்பொழுது உணருகிறார்களோ அப்பொழுதே ஜமீன்தார்களின் ஆணவமும் அடங்கி விடும். உண்ண உணவும், உடுத்தத் துணியும், போதிய அளவு கொடுக்கப்படுவதுடன் தாங்களும், தங்கள் குழந்தைகளும், போதிய கல்வி வசதியைப் பெற சந்தர்ப்பமும் அளிப்பதாயிருந்தால் தான், நிலத்தை உழ முடியுமென அவர்கள் கட்டுப்பாடுடன் நின்று கூறுவார்களேயானுல், பாவம் அவ்வேழை ஜமீன்தார்களால் என்ன செய்ய முடியும். விட்டுக் கொடுத்துத்தானே யாக வேண்டும். உற்பத்தி செய்யும் உழைப்பாளியே உற்பத்தி செய்யும் அப்பண்டத்திற்கு உரியவனுவான். உழைப்பாளிகள் நல்லதோர் விஷயங்களில் ஒற்றுமையுடனும், கட்டுப்பாட்டுடனும் நிற்பார்களேயானுல் அவர்களை அசைக்க ஒருவராலும் முடியாதென்பது முற்றிலும் உறுதி. வகுப்புச் சண்டை ஏற்படுவதற்கு அவசியமிராது என்று நான் கூறுவதற்கு இதுவே காரணம். அவ்விதம் ஏற்படவேண்டுவது அவசியம் தானென்று நான் உணரும் பக்ஷத்தில் அதைப் பிரசாரம் செய்ய நான் சிறிதும் தயங்கமாட்டேன்.

தஞ்சை ஜில்லாவும்

பார்ப்பனரல்லாதார் நிலைமையும்

(கே. ஆர். ஜி. பால்)

சென்னை மாகாணத்தில் மற்ற ஜில்லாக்களை விட தஞ்சை ஜில்லா பார்ப்பனியத்திற்கு தலை சிறந்ததென்பதை எவரும் மறுப்பதற்கில்லை. அதிலும் பார்ப்பனர்களுக்கு உதவியாக பார்ப்பனரல்லாத தனவந்தர்களும், நிலச்சுவான்தார்களும் கை ஆட்களாய் விட்டால் எந்த நிலையில் பார்ப்பனியம் தாண்டவமாடும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? நமது பார்ப்பனரல்லாத தோழர்கள் எவ்வளவுக்கெவ்வளவு உதவி செய்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு பார்ப்பனரல்லாதவர்கள் நிலைமை கேவலமடைவதோடல்லாமல், உதவி செய்த பார்ப்பனரல்லாதார் நிலைமையும் கெட்டுத் தடுமாறி அலையும்படியாகவும் ஏற்படுகின்றது. இந்த நிலைமை நமது ஜில்லாவிற்கும் வந்து விட்டதென்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனென்றால், பார்ப்பனரல்லாத தனவந்தர்களுடைய ஏமாந்த தனத்தாலேயே என்பதை அடியில் கண்ட உதாரணத்தினுல் ஒருவாறு உணரலாம்.

தோழர் மருதமுத்து மூப்பனர் மித்திரனில் எழுதியது போல தஞ்சை ஜில்லா போர்டானது சுமார் பத்து வருஷ காலம் சுத்த பார்ப்பனரல்லாதார் கையிலிருந்து வந்தது. ஆனல், மந்திரி சபையில் ஸ்தானம் கிடைக்காததால் தோழர் சுப்பராயன் தூண்டுதலால் இந்த ஜில்லா பார்ப்பனரல்லாதார்களை இரண்டாகப் பிரித்து அதுவும் பதினுயிரக் கணக்கான ரூபாய்களை செலவு செய்த காரணத்தால் தோழர் நாடிமுத்துப்பிள்ளை அவர்கள் சென்ற தேர்தலில் தலைவராக முடிந்தது என்பதோடு அன்று பார்ப்பனர்களெல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டு தங்களுக்கும் தக்க பதவி கிடைப்பதான தருந்த ஏற்பாட்டை செய்து கொண்டேதான் பிள்ளை அவர்களை தலைவராக்கி வைத்தார்களென்றும் சொல்லலாம்

ஆகலால், இன்றும் பிள்ளையவர்கள் பார்ப்பனர்களின் கை ஆளாகவே இருக்கிறார் என்பதற்கு சமீபத்தில் நடந்த தேர்தலில் தோழர் வாண்டையாரவர்களுக்கு ஜில்லா போர்டில் மெம்பர் ஸ்தானம் கூட கிடைக்கக்கூடாதென்று பல சூழ்ச்சிகள் செய்ததையும் பிள்ளையவர்களை யந்த அளவிற்கும் உபயோகப்படுத்திக் கொண்டிருப்பதையும் பார்த்தால் ஒருவாறு உணரலாம்.

ஆனல், பார்ப்பனர்களை நாடிமுத்து பிள்ளையவர்கள் நம்பினர்களா? அல்லது பார்ப்பனர்கள் பிள்ளையவர்களை நம்பினர்களா என்று பார்த்தால் அதுவும் சந்தேகந்தான். சமீபத்தில் உருமாறிய தோழர்கள் சுப்பராயன், நாடிமுத்துப் பிள்ளை இருவரும் தேர்தல் பிரசாரம் செய்து வந்ததை அனைவரும் அறிவோம். தேர்தல் கிட்டினதும் காங்கரஸ் அபேட்சகராக தேர்தலுக்கு நிறுத்தவதில் பார்ப்பனர்களுக்கும், பிள்ளையவர்களுக்கும் ஏற்பட்ட சந்தேகத்தால் பார்ப்பனர்கள் ஜில்லா அட்ஹாக் கமிட்டியைக் கலைந்து விடுவதாக பாசாங்கு காட்டினர்கள். உடனே பிள்ளையவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் என்னைக் கைவிட்டு விடாதீர்கள். நான் உங்கள் இஷ்டப்படியே நடக்கிறேன என்றும், இந்த ஜில்லா முழுவதற்கும் ஏற்படும் செலவுகளையும் ஒத்துக்கொள்கிறேன் என்றும் வாக்களித்தவுடன் தான் இந்த ஜில்லாவில் பார்ப்பனர்களுக்கு பெருமித வெற்றி ஏற்பட்டது.

ஆனல், இவ்வளவு பண ஒத்தாசை செய்த பிள்ளை அவர்கள் மறுபடியும் தலைவராக வருவாரா என்பது சந்தேகமாகவே இருக்கிறது. தற்பொழுது பார்ப்பனர்கள் ஒன்று சேர்ந்து கொண்டால் பார்ப்பனரல்லாதார்களில் வாண்டையார் கட்சி என்றும், பிள்ளை யவர்கள் கட்சி என்றும் இரு பிரிவாகி விடும். அதில் பார்ப்பனர்கள் எதில் சேருகின்றார்களோ அது தான் பலமுள்ள கட்சியாகும். அதிலும் பிள்ளை அவர்கள் கட்சித் தலைவராக வரக்கூடாதென்று வாண்டையாரும், வாண்டையாரவர்கள் கட்சித் தலைவராக வரக் கூடாதென்று பிள்ளையும் நினைப்பதால் பார்ப்பனர்களுக்கே தலைவர் ஸ்தானம் ஏகபோகமாக கிடைக்க இடமேற் படுகிறது.

ஆகவே, பதவி விஷயத்தில் நாடிமுத்து பிள்ளை அவர்கள் நிலைமை (இவ்வளவு உதவி செய்துங்கூட) திரிசங்கு சொர்க்கமாகவே இருக்கிறது.

ஜில்லா போர்டு ஒருவாறு போகட்டு மென்றாலும் அடுத்து வரும் சட்டசபை தேர்தலில் பார்ப்பனர்களும் பார்ப்பன தாசர்களும் வெற்றி பெறுவதற்கு தகுந்த இடம் இந்த ஜில்லா என்பதை உணர்ந்து கொண்டு (பத்து லக்ஷம் இனும் விவசாயக் குடிகளின் பரம விரோதியான) டாக்டர் சுப்பாரன் அவர்கள் தன் ஜில்லாவில் தனக்கு இடம் கிடைக்காதென்று உணர்ந்து தஞ்சை ஜில்லாவிலேயே எலக்ஷனுக்கு நிற்கப் போவதாக அறிவிக்கப்படுகிறது.

இது உண்மையானுல் இனும் குடிகளின் வரப்பிரதாசமாக வந்த இனும் மசோதாவை தோழர்கள்: சுப்பாரயனும், நாடிமுத்து பிள்ளையும், சிவசுப்பிரமணிய அய்யர் போன்ற பார்ப்பனர்களும் எதிர்த்தார்கள். மறுபடியும் தேர்தலுக்கு இந்த யோக்யதை உடையவர்களை காங்கரசின் பேரால் நிற்கப்போவதாக அறிவிக்கப்பட்டால் அதற்கு நாம் இடந்தரலாகாது. ஆதலால், தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகாநாடும் இனும் குடிகள், தாழ்த்தப்பட்டார் மகாநாடுகளும் கூட்டி நாம் ஒற்றுமையுடன் நமது விரோதிகளை முறியடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முன்வர வேண்டுமாறு தஞ்சை ஜில்லா பிரமுகர்களை கேட்டுக் கொள்கிறேன். அதில் நாம் அசிரத்தையா யிருந்தால் நம் சமூகம் முன்னேறுவதற்கு அநேக ஆண்டுகள் செல்லும், ஆகவே. வெள்ளம் வருமுன் அணைகோல முன்வருவீர்களாக.

ஆதிதிராவிட தரும பாடசாலை

(ஒரு நிருபர்)

சென்னை, டிச, 14

சென்னை மவுண்ட்ரோட் தாயார் சாயபு தெருவிலுள்ள இப்பாடசாலையில் நேற்று மாலை 3-மணிக்கு திரு. பி. கே. புஷ்பராஜ் பி.ஏ., பி.எல்., பி.எஸ். அட்வோகேட் அவர்கள் தலைமையில் ஓர் கூட்டம் நிகழ்ந்தது.

பாடசாலை சிறுவர்களால் திரு. வி. எம். சுப்ரமணியம் (இந்தியன் காண்டிமெண்ட் மேன்யுபேக்சர்) அவர்களுக்கு ஓர் வாழ்த்துப் பாசுரம் அளிக்கப்பட்டது. திருவாளர்கள் பி. கே. புஷ்பராஜ், பி. எம். வெங்கடபதி நாவலர், என். எம். நடேசம், டி. எஸ். ராஜலிங்கம் முதலியோர் "கல்வியின் மீண்டும் அபிவிருத்தியும்" என்பதைப்பற்றி விமரிசையாக எடுத்துக் கூறினர்.

மேற்படி பாடசாலையின் தலைமையாசிரியராகிய திரு. ஞானபானு, வி. சோமசுந்தரமவர்கள் "அறம்" என்பதைப் பற்றிக் கூறிய பின்னர் முடிவுரையுடன் கூட்டம் முற்றுப் பெற்றது.

தங்கம்—வெள்ளி

சென்னை, டிச, 16

	ரூ-அ-பை
பம்பாய் ஆலைத் தங்கம்	34—15—3
,, வாய்தா	35—0—9
மூனா தோலா 1-க்கு	34-9—3
சவரன் மொத்தம்	22—4—3
சவரன் சில்லரை	22—4—6
வெள்ளி ரூ. 100 எடை	53—6—0
,, ரூ. 1 எடை	0—8—9

முத்தத்தின் இன்பம்

3 அணு ஸ்டாம்பு அனுப்புறவர்களுக்கு 50 பக்கம் கொண்ட புத்தகம் இனமாய் அனுப்பப்படும்.

ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராயநகர், மதராஸ்.

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே!

ஏழையென்றும் அடிமை யென்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே!

மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையை கொளுத்துவோம்
வையவாழ்வு தன்னிலெந்த வகையினும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! (பாரதி)

விடுதலை

சென்னை : 1936-ஆ டிசம்பர் 16-உ
புதன்கிழமை

சர்தார் திருப்புலம்பல்

சர்தார் வல்லபாய் படேல் தென்னாட்டுக்குப் புதியவரல்ல. அவரது புலம்பல்களையும் தென்னாட்டார் நன்கறிவார்கள். தென்னாட்டுக்கு அவர் வரும்போதெல்லாம் பார்ப்பனக் கங்காணியாய் அவர் சுற்றுவதும், காங்கரஸ் பார்ப்பனர் கற்றுக்கொடுத்த பாடங்களை அப்படியே ஒப்புவிப்பதும் அவருடைய வாடிக்கை. இப்பொழுதும் அந்த வாடிக்கைப்படியே அவர் நடந்து வருகிறார். சென்ற திங்கட்கிழமை மாலை திருவல்லிக்கேணிக் கடற்கரையில் அவர் பேசிய பேச்சு அவருடைய மாமூல் வழக்கத்தைத் தழுவியதாகவே இருக்கிறது. காங்கரஸ்காரர் எல்லாம் புண்ணியாத்மாக்களாம்; அப்பழுக்கில்லாத மாணிக்கங்களாம்; தேசபக்தியே உருவாகத் திரண்டவர்களாம்; ஏனையோரெல்லாம் தேசத்துரோகிகளாம்; ஆகாவழிகளாம். ஆனால், தென்னாட்டுக் காங்கரஸ்காரர் யோக்கியதையை அவர் அறியவில்லை போலும். வேலூர், திருச்சி, திருநெல்வேலிக் கதையை அவர் அறிந்திருந்தால் இவ்வாறெல்லாம் புலம்ப அவர் துணிந்திருக்கமாட்டார். ஜில்லா போர்டுகளைக் கைப்பற்றிய காங்கரஸ்காரர் ஜில்லா போர்டுகளை கண்டிராக்டு ராஜ்யமாக்கி விட்டதை சர்தார் படேல் அறிவாரா? சென்னை நகரசபை மெம்பராக விருக்கும் திரு. சாமி வெங்கடாசலம் செட்டியார், சட்டத்துக்கு விரோதமாக நகரசபை லிமிட்டில் கண்டிராக்டு நடத்தி வருவதை அறிந்து கொள்ள சர்தார் முயலவில்லையா? காங்கரஸ்காரரின் ஜில்லா போர்டு நகரசபை நிர்வாகங்களைப் பார்த்து நாடு சிரிப்பதை சர்தார் உணரவில்லையா? பட்டம்பதவி வேட்டைக்காரர்கள் சர்க்கார் பட்டங்களைத் துறந்துவிட்டு காங்கரஸ் ஞானஸ்நானம் பெற்று காங்கரசில் நாடகமாடுவதை சர்தார் தெரிந்துகொள்ளவில்லையா? தென்னாட்டு காங்கரஸ்காரர்களின் யோக்கியதையை அறியாமல் சர்தார் கன்னாபின்னா புலம்புவது அவரது மேன்மைக்கு அடுத்த செயலாகுமா?

மற்றும், காங்கரஸ்காரர்களை ஜெயிலுக்கு அனுப்பிய, ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களுக்கா நீங்கள் ஓட்டுக் கொடுக்கப் போகிறீர்கள்? மண்டையை உடைத்தவர்களுக்கா வோட்டுக் கொடுக்கப் போகிறீர்கள்? என்றெல்லாம் திருவல்லிக்கேணி கடற்கரைக் கூட்டத்தைப் பார்த்து சர்தார் கேட்டாராம். அவ்வாறு கேட்ட சர்தார், அப்பொழுது சுயபுத்தியோடு இருந்தாரா என்பது சந்தேகத்துக்கு இடமாகவே இருக்கிறது. ஏனெனில், சுயபுத்தியோடிருப்போர் எவரும் அவ்வாறு கேட்க மாட்டார்கள். காங்கரஸ்காரர்களை ஜெயிலுக்கு அனுப்பியது ஜஸ்டிஸ் கட்சிக்காரரல்ல; அவர்கள் மண்டையை உடைத்ததும் ஜஸ்டிஸ் கட்சிக்காரரல்ல. சிறை புகுந்தால் சுயராஜ்யம் வந்துவிடுமென்று கூறிக்கொண்டு காங்கரஸ்காரர் மதம் பிடித்து வலிய ஜெயிலுக்குப் போனார்கள்; சட்டத்தை மீறினார்கள்; மறியல் செய்தார்கள். சட்டங்களை மீறுகிறவர்களுக்கும், மறியல் செய்பவர்களுக்கும் தண்டனை கிடைக்குமென அவர்கள் அறிந்தும் இருந்தார்கள். தடியடிபட்டுச் சிறை புகுவோரே தியாகிகள், தேச பக்தர்கள்; அந்தப் பதவிகளை தாமே பெறவேண்டும் என்ற ஆசையினால் காங்கரஸ்காரர் சிறை புகுந்திருக்கையில் ஜஸ்டிஸ் கட்சிக்காரர் அவர்களை ஜெயிலுக்கு அனுப்பியதாக கூறுவது பெரும் புரட்டு அல்லவா!

அன்றியும் சட்டமறுப்புச் செய்ததும், சிறை புகுந்ததும் தப்பல்லவென்றும் சர்தார் திருவாய் மலர்ந்தருளினாராம். அந்தச் சட்டமறுப்பு அனுபவங்களை ஒரு நாளும் மறக்க முடியாதென்றும் செப்பினாராம். காந்தி-இர்வின் ஒப்பந்தம் காங்கரஸ்காரர்களுக்குப் பெருமையளிக்கக் கூடியதென்றும் புகன்றாராம்.

சட்டமறுப்புத் தப்பா அல்லவா என்பது ராஜி மகாநாட்டுப் படலத்தைத் திருப்பிப் பார்த்தால் தெரியும். சட்டமறுப்புச் செய்ததும், சிறை புகுந்ததும், தடியடிபட்டதும் அடிமுட்டாள்தனமென அம் மகாநாட்டில் பங்கு கொண்ட பிரபல காங்கரஸ்காரர் எல்லாம் பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கண்றாவியைப் பார்க்க முடியாமல் மனமுடைந்தே "மகாத்மா" சட்ட மறுப்பைத் திடீரென்று நிறுத்தினார். அந்தச் சட்ட மறுப்புக் கால அனுபவங்களை ஒரு நாளும் மறக்க முடியாதென்று சர்தார் கூறியது ஒருவழியாகப் பார்த்தால் உண்மைதான். ஏனெனில் அந்தச் சட்டமறுப்புப் புரளி அவ்வளவு மானக் கேடானது. சிறை புகுந்த தேச பக்தர்கள் "போதும் போதும்" என்று கூறிக்கொண்டு மன்னிப்புக் கேட்டு "தப்பினோம் பிழைத்தோம்" என ஜெயிலைவிட்டு வெளியேறியது பெரிய மானக்கேடான சங்கதி யல்லவா? அதை யாருக்குத்தான் மறக்க முடியும்? எத்தனையோ தேச பக்தர்கள் வயிற்றுவலி யென்றும், குடல் கோவென்னும் ஜாலம் போட்டுக்கொண்டு, அப்பொழுது அதிகார பதவி வகித்த அவர்களது அரசியல் எதிரிகளின் உதவி கொண்டு வெளிவந்து இப்பொழுது எங்களைப்போன்ற வீரர்கள் இந்தியாவில் உண்டா என ஊளையிடுவதைவிட மானக் கேடான விஷயம் வேறுண்டா! இவைகளையெல்லாம் யாருக்குத்தான் மறக்க முடியும்? "காந்தி — இர்வின்" ஒப்பந்தத்தைப் பற்றி சர்தார் பிரமாதமாகப் பேசுவதின் உட்பொருளும் விளங்கவில்லை. காந்தி—இர்வின் ஒப்பந்தத்தால் காங்கரஸ்காரருக்கோ, நாட்டுக்கோ ஏற்பட்ட நன்மை என்ன? உப்பு வாரும் உரிமையை ஜனங்கள் பெற்று விட்டார்களா? உப்பு வரி குறைக்கப்பட்டு விட்டதா? வெளிநாட்டு ஜவுளி இறக்குமதி நின்றுவிட்டதா? எந்த வழியில் காந்தி-இர்வின் ஒப்பந்தம் நன்மையான தென்பதை சர்தார் விளக்கிக் கூறுவாரா? முட்டாள்தனமாக சிறை புகுந்தவர்கள் வெளியில் வர, காந்தி—இர்வின் ஒப்பந்தம் ஓரளவு உதவி புரிந்தது என்பதைத் தவிர அதனால் ஏற்பட்ட நன்மை வேறு இல்லவே இல்லை.

மேலும், எங்களுக்கு வோட்டுப் போடுங்கள் என்று கேட்க ஜஸ்டிஸ் கட்சியாருக்கு வெட்கமில்லையா என்றும் சர்தார் சாடினாராம். உண்மையில் வெட்கப்படும்படியாக ஜஸ்டிஸ் கட்சியார் எதுவுமே செய்யவில்லை. அவர்களுடைய 16 வருஷ அரசியல் வாழ்வும் மகா புனிதமானது. அந்தக் காலத்தில், தலை குனியும்படியாக ஜஸ்டிஸ் கட்சியார் ஒரு பொழுதும் நடந்து கொள்ளவே இல்லை. தம்மாலாகாத காரியங்களை செய்யப் போவதாகக் கூறி தேச மகா ஜனங்களை அவர்கள் ஏமாற்றவே இல்லை. மாண்டு—போர்டு சீர்திருத்தப்படி எவ்வளவு நன்மை செய்ய முடியுமென்பதை நன்குணர்ந்த ஜஸ்டிஸ் கட்சியார், அச் சீர்திருத்தத்தினால் ஜனங்களுக்குச் செய்யக் கூடிய நன்மைகளை யெல்லாம் சரிவரச் செய்தார்கள். அதற்கு சர்க்கார் ரிக்கார்டுகளே அத்தாட்சி. போதாக் குறைக்கு காங்கரஸ் வாதியான மௌலானா யாகூப் ஹசன் சேட்டும் பகிரங்கமாக அத்தாட்சிப் பத்திரமளித்திருக்கிறார். அன்றியும் திலகர் பெயரால் ஒன்றேகால் கோடி ரூபாய் வசூல்செய்து ஜஸ்டிஸ் கட்சியார் 'ஸ்வாஹா' செய்யவில்லை. தீண்டாமை யொழிப்பு நிதியால் வயிறு கழுவவுமில்லை. புதுப் புதுக் காரணங்களைச் சொல்லி பண வசூல் செய்து அவர்கள் பங்கு போட்டுக்கொள்ளவுமில்லை. நாடகக்காரிகள் சினிமா நடிகைகள், சறுக்கி விழுந்த சகோதரிகள் பண உதவியினால் அவர்கள் உயிர் வாழவுமில்லை. மூலாம் பூசிய மெடல்கள் அளித்தும் பொய்க் கணக்கு ஒப்புவித்தும், கணக்குப் புத்தகங்களைப் போக்கடித்தும் ஜஸ்டிஸ் கட்சியார் மோசம் செய்யவில்லை. ஆகவே ஜஸ்டிஸ் கட்சியார் வெட்கப்படத் தேவையே இல்லை. பொது ஜனங்களிடம் வோட்டுக் கேட்க அவர்கள் வெட்கப்படவுமில்லை. ராஜாக்கள் அறிய அவர்கள் வோட்டு கேட்கப்போகிறார்கள், வெற்றி பெறப்போகிறார்கள், ஆண் பிள்ளைகள் மாதிரி மீண்டும் தேச நிருவாகம் நடத்தத் தான் போகிறார்கள்.

வாழ்த்து

ராமநாதபுரம் ஜில்லா பள்ளத்தூர் பிர்கா தேர்தலில் பெருவாரியான வோட்டுகள் பெற்று வெற்றியடைந்த திருவாளர் க. வெ. சி. த. வெங்கடாசலம் செட்டியாரவர்களுக்கு நமது மனமார்ந்த வாழ்த்து உரியதாகுக. எதிரிகள் செய்த சூழ்ச்சிகள் எல்லாம் தோல்வியுற்றன. சத்தியமே-நேர்மையே-சன்னெறியே கடைசியில் வெற்றி பெற்றது.

தஞ்சை ஜில்லா ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு

வரவேற்புத் தலைவர் திரு. ஜி. ரெங்கநாத முதலியார் எம். எல். ஸி.

(ஒரு நிருபர்)

திருவாரூர், டிச. 13

5—12—36-ல் கூடிய பொதுக் கூட்டத்தில் தீர்மானித்த பிரகாரம் 13-12-36 மாலை 6 மணிக்கு திருவாரூர் பெரிய கோவிலில் வரவேற்புக் கழகம் நிறுவவும், கட்சியின் கிளை ஸ்தாபனத்திற்கு நிரந்தர நிர்வாகஸ்தர்களை தேர்ந்தெடுக்கவும், கொத்தங்குடி உயர் திரு. ரா. ரெத்தினசபாபதி அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் கூடி கீழ் காணும் தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறின. அது காலை தஞ்சை ஜில்லாவும், நமது நிலைமையும் என்பது பற்றி, உயர் திருவாளர்களான எ. கண்ணுசாமி, டாக்டர் கண்ணுசாமி பிள்ளை, வக்கீல் சிவ சுப்ரமண்ய முதலியார், கிருஷ்ண பிள்ளை முதலியோர்கள் மிக உருக்கமாக பேசினார்கள். சுமார் 9 மணிக்கு காரியதரிசியின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் (கிளை) நிர்வாகஸ்தர்கள்

தலைவர்:—திரு. சி. சிவசுப்ரமண்ய முதலியார் பி. ஏ.

உப தலைவர்:—கே. வி. இராஜகோபால் நாயுடு.

காரியதரிசிகள்:-வி. எஸ். ராமன், டி. என். லெக்ஷுப்பா.

பொக்கிஷதார்:—வி. குப்புசாமி.

நிர்வாகசபை அங்கத்தினர்கள்:—

டாக்டர் கண்ணுசாமி பிள்ளை, பி. வி. ஏ. ராஜகோபாலன், கே. எஸ். எஸ். ராஜன், முகமது தாவுது, பி. எஸ். குப்புசாமி ஆச்சாரியார், சிவசங்கரன், முகமது அலி சாயபு.

போஷகர்கள்:—பாவா கோபாலசாமி முதலியார், ஜி. ராமானுஜ முதலியார், வி. குப்புசாமி பிள்ளை, துரைசாமி செட்டியார், எஸ். மகாலிங்கம் பிள்ளை.

திருவாரூர் "ஜஸ்டிஸ்" மகாநாடு

வரவேற்புக் கழகம்:—தலைவர் திரு. ஜி. ரெங்கநாத முதலியார் அவர்கள் எம். எல். ஸி.

காரியதரிசிகள்:—சி. சிவசுப்ரமண்ய முதலியார் அவர்கள் பி. ஏ. வக்கீல் கே. முத்தையா நாயுடுகாரு.

பொக்கிஷதார்:—வி. குப்புசாமி.

கமிட்டி மெம்பர்கள்:—பாவா கோபால்சாமி முதலியார் அவர்கள் (மாஜி முனிசிபல் சேர்மன்) முகமது ஹாசிம் கொடிக்கால் பாளையம், எஸ். எம். அப்துல் மஜீது விஜயபுரம் எம். எ. ஆறுமுக நாடார், எஸ். பழனிச்சாமி செட்டியார்.

தாராளமாக அங்கத்தினர்களை சேர்க்க இக்கமிட்டிக்கு அதிகாரம் அளிக்கிறது.

விளம்பர அதிகாரிகள்:—டாக்டர் ஜி. கண்ணுசாமி பிள்ளை ரா. ரெத்தின சபாபதி.

டில்லி தர்பார்

1938-ம் வருஷம் ஜனவரி முதல் தேதி

லண்டன், டிச, 15

1938-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதி டில்லியில் முடிசூட்டு தர்பார் நடைபெறுமென்றும், மன்னர் தம்பதிகள் இந்தியாவிற்கு அது சமயம் விஜயம் செய்து இரண்டு மாத காலம் தங்கியிருப்பார்களென்றும் மாகாணங்களிலெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்வார்களென்றும் தெரிய வருகிறது.

பள்ளத்தூரில் காங்கரஸ் வீழ்ச்சி

திரு. வெங்கடாசலம் செட்டியார் வெற்றி

:o:

காங்கரஸ் அங்கத்தினர் படுதோல்வி

செட்டிநாடு, டிச, 15

சமீபத்தில் நடைபெற்ற பள்ளத்தூர் மறு தேர்தலில் திரு. வெங்கடாசலம் செட்டியார் 401 ஓட்டுகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார். இவருக்கு எதிராக நின்ற காங்கரஸ் அங்கத்தினர் திரு. நாகப்ப செட்டியார் படுதோல்வியுற்றார். ஓட்டுக்கள் விவரம் பின்வருமாறு:—

	ஓட்டுகள்
திரு. வெங்கடாசலம் செட்டியார்	2,173
திரு. நாகப்ப செட்டியார் (கா)	1,772
செல்லுபடியாகாதது	32.

காரைக்குடியில் விதவா மணம்

தோழர் ஏ. ரங்கசாமி ஐயங்கார் தலைமை வகித்தார்

(ஒரு நிருபர்)

காரைக்குடி, டிச, 14

13-12-36 ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணிக்கு காரைக்குடி கா. புதூர் தோழர் மாந்தாதா ப. வ. சுந்தரப்பத்தர் அவர்கள் இல்லத்தில் தமிழர் சீர்திருத்த (காரைக்குடி கிளை) சங்கத்தின் ஆதரவில் தேவகோட்டை அட்வகேட் தோழர் ஏ. ரங்கசாமி ஐயங்கார் பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையின் கீழ் காரைக்குடி சிதம்பர ஆச்சாரியார் புதல்வர் தோழர் சுப்பையாவுக்கும் செட்டியூர் எம். சுப்பையா ஆச்சாரியார் புதல்வி தோழர் காமாட்சி அம்மாளுக்கும் மறுமணம் நடைபெற்றது. உள்ளூர் வெளியூர்களிலிருந்து சகோதர சகோதரிகள் திரளாக வந்திருந்தனர். தோழர் எஸ். வள்ளிக்கண்ணு அம்மாளால் சீர்திருத்தப் பாட்டு பாடப்பட்டதும் தலைவர் கட்டளைப்படி மணமக்கள் தங்கள் ஒப்பந்தங்களைப் படித்து மாலை மாற்றிக் கொண்டார்கள். தோழர்களான ராம. அழகப்பன், வி. ராதாகிருஷ்ணன், முகவை ராஜமாணிக்கம், எம். ஆர். கிருஷ்ணசாமி ஐயங்கார் பி. ஏ., பி. எல்., பிச்சப்பா சுப்பிரமணியம், பி. பரமசிவம், தி. ம. நடராஜன், கே. என். தங்கவேலு ஆகியோர்கள் சீர்திருத்த சம்பந்தமாய் சொற்பொழிவாற்றி மண மக்களை வாழ்த்தினார்கள். மணமக்களும் தலைவர்களும் அடங்கிய படம் எடுக்கப்பட்டது.

மணம் செய்து கொள்ள சம்மதித்து சங்கத்தில் அப்ளிகேஷன் கொடுத்திருக்கும் விதவை சகோதரிகளுக்கு பெற்றோர்களால் ஏற்பட்டிருக்கும் இடைஞ்சலை நிவர்த்தி செய்து அவர்களை மணம் செய்து கொடுக்கிறது வரை சங்கத்திலிருந்து உடை, உணவு, கல்வி முதலிய வசதிகளளித்து ஆதரிப்பதற்கு திருநெல்வேலியில் கூடியசீக்கிரம் விதவா ஆசிரமம் ஸ்தாபிக்க முயற்சி எடுக்கும்படி தலைமை சங்க கமிட்டியாரை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளப்படுகிறதென்ற ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின் தலைவர் முடிவுரையாக விதவை மணமென்று வழங்குவது பெண்களை இழிவுபடுத்த கூடியதென்றும், பெண்களுக்கு மறுமணம் கூடாதென்று மறுப்பவர்கள் கடவுள் கட்டளையை மீறினவர்களென்றும், கலியாணம் என்னும் வழக்கமே பைத்தியமான தென்றும், அன்பு மேலீட்டால் ஏற்படும் காதலே சிறந்ததென்றும், ஆடம்பர கல்யாணங்களின் தீமைகளை பற்றியும் 2 மணி நேரம் சுவாரஸ்யமாகப் பிரசங்கம் செய்தார்கள். கிளை சங்க காரியதரிசி திரு. அ. பெ. திருநெல்லை ஆசி அவர்கள் சபையோர்களுக்கும், பொருளுதவி செய்தவர்களுக்கும் வந்தனோபசாரம் கூறினார்கள். தலைவருக்கு மலர் மாலை அளிக்கப்பட்டு, சந்தன தாம்பூலம், தமிழர் சீர்திருத்த சங்க வெளியீடுகள் வழங்கி மண வைபவம் வெற்றிகரமாக நிறைவேறி செங்கமலேரோடு மணமகன் இல்லத்திற்கு மண மக்களை காரில் அழைத்து வரப்பட்டது. காரைக்குடி விசுவ பிராமணர்களில் இதுவே முதல் கல்யாண மென்பதும் தவிர, சமூக ஆண், பெண் இருபாலார்களும் வந்திருந்து குதூகலத்துடன் ஒத்துழைத்ததுமன்றியில், காரைக்குடி விசுவ பிராமண நாட்டாண்மைக்காரருள் பலர் உள்பட பிரமுகர்கள் ஏராளமாக விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சீன புரட்சி

பல விடங்களுக்கும் பரவுகிறது

லாண்ட் டோவில் யுத்தம்

நான்கின், டிச, 15

வடமேற்கு சீனாவில் பொதுவுடமை இயக்கத்தை ஒடுக்குவதற்காக சீனப் பிரதம மந்திரியான மார்ஷல் சியாங் கே ஷேக் தமது துருப்புகளை சியூசின் மாகாணத்திற்குச் செல்லுமாறு உத்தரவிட்டார். அதற்குக் கீழ்ப்படிய மறுத்து துருப்புகள் புரட்சி செய்ய ஆரம்பித்தன. சியாங் கே ஷேக்கும் காவலில் வைக்கப்பட்டார். கலகத் துருப்புகள் சாங்க லியாங்கின் தலைமையில் ஷென்சி என்ற மாகாணத்தின் தலை நகரான சியான்பூவிலிருக்கின்றன. மஞ்சூரியாவை மீண்டும் கைப்பற்ற வேண்டி ஜப்பானுடன் போர் துவக்க வேண்டுமென்றும், சீனா, ருஷியாவுடன் நேச ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டுமென்றும் கலகத் துருப்புகள் வற்புறுத்துகின்றன.

சியான்பூவில் சர்க்கார் துருப்புகளுக்கும் கலகத் துருப்புகளுக்கும் கடுமையான யுத்தம் நடைபெற்று வருகிறது. சியான்பூவிற்கு 300-மைல் தூரத்திலுள்ள கான்ஸூ மாகாணத்தின் தலைநகரான லாண்டோவிற்கு புரட்சி பரவியுள்ளது. லூங்காய் ரயில்பாதை வழியாக சர்க்கார் துருப்புகள் முன்னேறி வருகின்றன. சியான்பூவிற்கு 15-மைல் தூரத்தில் சர்க்கார் துருப்புகள் வந்து விட்டன.

கலகத் தலைவர் சாங்-சு-லியாங் பிடிபட்டு விட்டதாகவும், பிரதம மந்திரி சியாங்-கே-ஷேக் பத்திரமாக விருப்பதாகவும் தெரிய வருகிறது.

நான்கிங்-ஹாங்கோ முதலிய நகரங்களில் முன்னெச்சரிக்கையாக சர்க்கார் ராணுவச் சட்டத்தைப் பிரயோகித்துள்ளனர்.

விண்ட்ஸர் கோமகன்

வியன்னா வந்து சேர்ந்தார்

வியன்னா, டிச, 15

விண்ட்ஸர் கோமகன் வியன்னாவிலுள்ள பாரன் ராத் ஷீல்டின் மாளிகையில் தங்கியுள்ளார். பிரிட்டன், பிரான்ஸ், ஸ்விட்ஜர்லாந்து, ஆஸ்திரியா முதலிய நாடுகளிலுள்ள போலீசார் விண்ட்ஸர் கோமகனுடைய பிரயாணத்தை மிகவும் மர்மமாகவே வைத்திருந்தனர். வழி நெடுக அவருக்குப் பலத்த போலீஸ் பந்தோபஸ்து வைக்கப்பட்டிருந்தது.

ஜஸ்டிஸ்—சுயமரியாதை தொண்டர்கள் மகாநாடு

திருச்சியில் கூட்ட விசேஷ ஏற்பாடுகள்

அசெம்பிளி சபைக்கு அபேட்சகர் நியமனம்

தெ. இ. ந. உ. சங்க நிர்வாகக் கூட்டத்தில் தீர்மானம்

திருச்சி டி. எம். முத்து பின்வருமாறு எழுதுகிறார்:-

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி சென்ற 14-12-36-ம் தேதி மாலை 6 மணிக்கு திருச்சி ஜில்லா தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டமொன்று மூனிசிபல் சத்திரத்தில் நடந்தது. தோழர் டி. பி. வேதாசலம் பிள்ளை அவர்கள் தலைமை வகித்தார். நிர்வாக அங்கத்தினர்களில் பெரும்பான்மையோர் விஜயஞ்செய்திருந்தனர். அடுத்த சட்டசபைத் தேர்தல் விஷயமாய்ச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைக் குறித்து அநேக நேரம் விவாதித்து ஆலோசனை செய்த பிறகு பின்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது.

1. அடுத்த 3-1-37-ம் தேதியன்று தமிழ் மாகாண ஜஸ்டிஸ் சுயமரியாதைத் தொண்டர்கள் மகாநாட்டை திருச்சியில் கூட்டுவதெனவும், தலைவராக, சென்னைத் தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்களையும் திறப்பாளராக மீனாம்பாள் சிவராஜ் அவர்களையும், கொடியேற்றுபவராக சென்னை என். தண்டபாணி அல்லது ஆத்தங்குடி கே. கே. எ. பெரியசாமி அவர்களையும் கேட்டுக் கொள்ளுவதெனத் தீர்மானிக்கப் பட்டது.

2. மகாநாட்டின் வரவேற்புத் தலைவராக துறையூர் ஜமீந்தார் எம். வெங்கடாஜல துரை பி. ஏ., பி. எல்., அவர்களையும், காரியதரிசிகளாக திருவாளர்கள்: டி. பி. வேதாசலம், டி. எம். முத்து, டீ. வி. சன்னாசி, டி. என். சஞ்சீவி ஆகியவர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

3. அசெம்பிளி சபையின் ஆதி திராவிடத் தொகுதி ஜஸ்டிஸ் கட்சியோரால் நிற்கும் திருச்சி, திரு. சிவபிச்சை அவர்களை ஏற்றுக் கொள்ளுவதோடு, சங்கத்திலிருந்து ரூ. 150 மேற்படியாரின் எலக்ஷன் செலவுக்காக கொடுப்பதெனவும் தீர்மானிக்கப் பட்டது.

4. முடி துறந்த 8-வது எட்வர்டு மன்னருக்கு இக்கூட்டம் தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதுடன் புதிதாக அரசுரிமையை ஏற்றுக் கொண்ட 6-வது ஜார்ஜ் மன்னர் அவர்களை வாழ்த்துகிறது.

குறிப்பிட்ட தேதியில் மகாநாடு நடைபெறுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. மாகாணத்திலுள்ள கட்சியின் தொண்டர்கள் எதிரே நிற்கும் எலக்ஷனில் கட்சி நிலைமை யுத்தேசித்து ஒன்றுபடுதல் அவசியமாகும், தங்கள் ஆதரவை யளிப்பார்களாக.

பஞ்சாயத்து போர்டு ஊழல்கள்

ஒரு பிராமண தலைவரின் கீழ் ஏழு பிராமணரல்லாத பொம்மைகள்

பட்டரின் ஏகேச்சாதிகாரம்

சங்கரநயினார்கோவில், டிச. 10

ஸ்தல ஸ்தாபனங்களில் மேல் பார்வையில்லாத ஸ்தாபனங்கள் பஞ்சாயத்து போர்டுகள் தான். டிஸ்டிரிக்டு பஞ்சாயத்து ஆபீசர் என்று ஒருவரை டிஸ்டிரிக்டு போர்டார் நியமித்திருக்கிறார்கள். ஆனால், அவர் எலக்ஷன் நடத்துவதைத் தவிர பஞ்சாயத்து போர்டு ஆதிக்கத்தின் பேரில் அவருக்கு ஒரு அதிகாரமும் கிடையாது. லோக்கல் போர்டு ஆக்டுபடி ஜில்லாபோர்டு பிரஸிடெண்டுக்கு பஞ்சாயத்து ஆபீசரை நியமிக்க அதிகாரமுண்டு. ஆனால், டிஸ்டிரிக்ட் போர்டு பிரஸிடெண்டுக்கு பஞ்சாயத்து போர்டு ஆதிக்கத்தில் ஒரு அதிகாரமும் கிடையாது. ஒரு பஞ்சாயத்து போர்டு விளக்கை இன்னொரு பஞ்சாயத்து போர்ட்டிற்கு மாற்றக் கூட அதிகாரம் இல்லை. ரூ—3000, 4000—சம்பளம் வாங்குகிற கலெக்டர் அந்தஸ்துள்ள சென்னை பட்டணம் லோக்கல் போர்டு இன்ஸ்பெக்டருக்கும் பஞ்சாயத்து போர்டாரின் பேரில் ஒரு அதிகாரமும் கிடையாது. 500, மைலுக்கப்பால் மலை உச்சியிலிருக்கிற மாட்சிமை தங்கிய கவர்மெண்டாருக்குத்தான் எல்லா அதிகாரமும் உண்டு. சமீபத்திலிருக்கிற மேலதிகாரிகளால் பஞ்சாயத்து போர்டு ஆதிக்கத்தின் பேரில் ஒருவித மேல் பார்வையும், மேல் விசாரணையும் இல்லாமலிருந்தால் அவர்கள் தான்தோன்றி மூர்த்திகளாய் அட்டூழியமும், அநியாயமும் செய்வதில் என்ன தடையிருக்கிறது சங்கரநயினார் கோவில் பஞ்சாயத்து போர்டில் அநியாயமாக நீர்வரியை உயர்த்தி அநாவசியமாய் சிப்பந்திகள் நியமித்திருக்கிறார்கள். அரசன் அன்று கேட்பான் என்பதுமில்லை; தெய்வம் நின்று கேட்குமோ என்னமோ தெரியவில்லை. சங்கரநயினார் கோவில் நகரவாசிகளை தெய்வந்தான் காப்பாற்ற வேண்டும். மனுஷ சகாயம் கிடையாது பரம ஏழைகளின் நீர்வரிகளெல்லாம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஏழைகள் அழுத கண்ணீர் கூறியவாளோடொக்கும்.

ஸ்பானிய யுத்தம்

கலகத் துருப்புகள் தோல்வி

மாட்ரிட், டிச. 15

மாட்ரிட்டிற்கும், எஸ் கோரியாவிற்கும் இடையிலுள்ள வால்டிமாரில்லோ வென்ற விடத்தில், கலகத்துருப்புகளுக்கும், சர்க்கார் துருப்புகளுக்கும் கடுமையான யுத்தம் நடைபெற்றதென்றும் அதில் கலகத்துருப்புகள் தோல்வியுற்று, பின்வாங்கினதாகவும் சர்க்கார் அதிகாரிகள் கூறுகின்றனர்.

புது வருஷப் பட்டங்கள்

1937-பிப்ரவரியில்

லண்டன், டிச. 15

புதுவருஷப் பட்டங்கள், 1937-பிப்ரவரி முதல் தேதிக்கு ஒத்திவைக்க வேண்டுமென்று மன்னர் தீர்மானித்து விட்டதாகவும், கிறிஸ்மஸ் தினத்தன்று மன்னர் ரேடியோவில் பேச மாட்டாரென்றும் உத்தியோக தோரணையில் அறிவிக்கப் படுகிறது.

கிராம முனிசீப் மரணம்

(நமது நிருபர்)

குலசேகரமங்கலம், டிச. 13

சங்கரநயினார் கோவில் தாலுகா, குலசேகர மங்கலம் கிராம முனிசீப் திரு. பி. குமரப் பெருமாள் நாடார் தமது 42-வது வயதில் 10-12-36 வியாழன் காலை 10 மணிக்கு காலமானார். இவரது மரணத்தால் இக்கிராம வாசிகள் மிகவும் வருந்துவதுடன், அவரது குடும்பத்தாருக்குத் தங்கள் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

அசம்பிளித் தேர்தல்

ஒரு யோசனை

வாணியம்பாடி திரு. வெ. ஷண்முக முதலியார் எழுதுவதாவது:—

வரப் போகும் சென்னை அசம்பிளித் தேர்தலுக்கு நம் மாகாணத்திலுள்ள ஜஸ்டிஸ், ஜனநாயகம், காங்கரஸ் ஆகிய மூன்று கட்சிகளும் தங்கள் தங்கள் அபேட்சகர்களை நிற்க வைக்கப் போகிறது. எந்தத் தொகுதியில் ஒரு கட்சிக்கு அதிக செல்வாக்கு இருக்கிறதோ அந்தக் கட்சியின் அபேட்சகர் அதிக செலவில்லாமலும், கஷ்டமில்லாமலும் வரக் கூடும். ஆனால், சிலவிடங்களில் ஒரு கட்சிக்கு அதிக செல்வாக்கு இருந்தபோதிலும், மற்ற இரு கட்சிகளும் இத்துடன் போட்டி போடும்போது இந்தக் கட்சியின் செல்வாக்கானது வெகுவாகக் குறைவதுடன், போட்டியில் ஜெயிப்பதற்கு அதிக செலவும், சிரமமும் நேரிடுகிறது. காங்கரசுக்கு எதிர் கட்சிகளான ஜஸ்டிஸ், ஜனநாயகம் ஆகிய இரு கட்சிகளும் எதிர்ப்பதென்பது அந்தந்தக் கட்சியின் பலம் குறைவதுடன், தங்களுக்குள் போட்டியிட்டுக் கொள்வதென்பது அவ்வளவு சிறந்ததல்ல வென்பதையும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

உதாரணமாக வட ஆற்காடு ஜில்லா, திருப்பத்தூர் தொகுதிக்கு மூன்று கட்சிகளும் தங்கள் தங்கள் அபேட்சகர்களை நிற்க வைக்கப் போகிறது. இதில் காங்கரஸ் அபேட்சகராக நிற்பவர் செல்வந்தர். அவருடன் இரு கட்சிகளும் போட்டி போடும் போது ஓட்டுகளை இரு கட்சிகளும் பங்கிட்டுக் கொள்கிறது. மூன்றாவது கட்சியான காங்கரஸ் சிரமமில்லாமல் பெருவாரியான ஓட்டுகளைப் பெற்றுவிடும்.

ஆகையால் ஜஸ்டிஸ், ஜனநாயகம் இரு கட்சிகளும் ஒவ்வொரு தொகுதியிலும் போட்டி யிடுவதை விட எந்தக்கட்சிக்கு அந்தத்தொகுதியில் அதிக செல்வாக்கிருக்கிறதோ அந்தக் கட்சி நின்று மற்ற கட்சி விட்டுக் கொடுத்தால் காங்கரஸ் அபேட்சகர்களை வெகு சுலபமாக ஜெயிக்கக் கூடுமென்பது எனது அபிப்பிராயம்.

இதை மாபெரும் தலைவர்கள் நன்கு யோசித்து வேண்டுவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். ஆதிதிராவிடர் தொகுதி, ஸ்திரீகள் தொகுதி, பொதுத் தொகுதி ஆகிய எல்லா தொகுதிகளுக்கும் மேலே எடுத்துக் காட்டிய விஷயம் சாலவும் பொருந்தக் கூடுமென்பதை நான் சொல்லாமலே விளங்கும்.

அசெம்பிளித் தேர்தல்

மாரியப்ப நாடார் அபேட்சை

மதுரை, டிச. 14

மதுரை திரு. ப. வெ. தா. மாரியப்ப நாடார் எழுதுவதாவது:—

வரப்போகும் சென்னை மாகாண அசம்பிளி எலக்ஷனில் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக மதுரை ஜில்லா திருமங்கலம் தாலுகாவில், நான் ஒரு அபேட்சகராக இருக்கும் விபரம் தங்கள் பத்திரிகை மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சென்னை சுயமரியாதை மகாநாடு

சென்னை, டிச. 16

சென்னை சுயமரியாதை மத்திய சங்க காரியதரிசி அறிவிப்பதாவது:—

சென்னை நான்காவது சுயமரியாதை மகாநாடுகூட்ட வேண்டுமென்று சில தோழர்கள் என்னை கேட்டுள்ளார்கள். நம் ஜஸ்டிஸ் கட்சியின் தேர்தல் பிரசார வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதால் ஜனரல் எலக்ஷன் முடிந்த பிறகு மார்ச்சு மாதத்தில் மகாநாடு கூட்டலாமென்று விரும்புகிறோம் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

குதிரை கீழே தள்ளியது மன்றி குழியையும் பறித்ததாம்

கைத்தொழில் கற்க வந்த மாணவர்களின் அதோகதி!

சேலம் நகரசபையும், சேலம் அர்பன் கோவாபரேடிவ் சொசைட்டியும்

(உண்மை விளம்பி)

8-4-36-ம் தேதி விடுதலையில் 'சேலம் முனிசிபாலிடியும், கைத்தொழில் பாடசாலையும்' எனும் தலைப்பின் கீழ் வந்த விஷயங்கள் நமது நண்பர்களுக்கு ஞாபகமிருக்குமென நம்புகின்றோம். அன்று நாம் கைத்தொழில் பாடசாலை இருந்து வந்த நிலைமையைத் தெரியப்படுத்தி பொது ஜனத் தலைவர்களும், முனிசிபல் அதிகாரிகளும் கவனித்து தக்கது செய்வார்களா என கேட்டிருந்தமைக்கு இன்று பள்ளிக் கூடத்தையே ஒழித்து விடுவது என தீர்மானித்து விட்டனர்.

இப்பாடசாலையை ஏற்படுத்த 1932-33 ம் வருடத்தில் சேலம் கோவாபரேடிவ் சொசைட்டியார் பொது ஜன பண்டிலிருந்து ரூ. 12,584-2-10 - ஐ சேலம் முனிசிபல் சபைக்குக் கொடுத்து அதை நிர்வகிக்க முனிசிபல் சபையிலிருந்து ஏழு மெம்பர்களும், சொசைடியிலிருந்து ஏழு மெம்பர்களுமாக பதினாலு மெம்பர்களைக் கொண்ட ஒரு கமிட்டியின் நிர்வாகத்திற்குட்பட்டு நடத்தப்பட்டு வந்தது. இதன் மேற்பார்வையாளர் முனிசிபல் கமிஷனரும் இன்ஜினியருமேயாவர். பாடசாலை ஏற்படுத்தி அதற்கு ஒரு ஆந்திர தேசத்து, தமிழ் என்பதே இன்னது எனத் தெரியாத ஐயங்காரை 50 ரூபாய் சம்பளத்தில் ரூப்ரண்டாக நியமித்தனர். கொல்லு வேலை, தச்சு வேலை, எலக்டிரிக் வொயரிங் முதலிய மூன்று வேலைகள் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப் படுமென்றும் இதற்கு இரண்டு வருட கால அளவெனவும் பிராஸ்பெக்டஸ் வெளியிட்டிருந்தனர். சுமார் பதினைந்து மாணவர்களே இதுவரை இருந்து வந்தனர். ஆரம்ப முதல் இதுவரை பதினைந்து பேர்களுக்குமேல் அத்தொழிற் சாலையில் சேரவில்லை யென்றும் போதே இந்த பாடசாலை விஷயத்தில் எவ்வளவு அசிரத்தையுடன் காரியங்கள் நடைபெற்று வந்திருக்குமென வாசகர்களே தெரிந்து கொள்ளலாம். மாணவர்கள் பதினைந்து பேரே தவிர சம்பளம் பெறும் உபாத்திமார்களும் வேலை ஆட்களும் நேமி இருந்தனர். (இப்பொழுதும் மாணவர்கள் தான் வெளியேற்றப்பட்டார்களே தவிர சம்பளம் வாங்குவோர் அப்படியே இருந்து வருகின்றனர்) இதற்கே நாம் அன்று மாணவர்கள் நன்மைக்குப் பள்ளிக் கூடமா? உபாத்திமார்கள் பிழைப்பதற்குப் பள்ளிக் கூடமா எனக் கேட்டிருந்தோம். இருந்த மாணவர்களுக்காவது சரியாகக் கற்றுக் கொடுத்தனரா என்றால் இல்லை யென்று சொல்லவேண்டியதோடு இரண்டு வருடங்களில் பயிற்சி பெறச் செய்வதாகச் சொன்னவர்கள் நான்கு வருடத்திற்கு கால அளவை உயர்த்தி தச்சு வேலை ஒன்று மாத்திரம் மாணவர்களுக்கு பட்டும் படாமலும் சொல்லிக் கொடுத்து வந்தனர். இதில் ஒரு விசேஷம் கவனிக்கத் தக்கது. அதாவது ஐம்பது ரூபாய் சம்பளத்தில் ஏற்படுத்தப்பட்ட ரூப்ரண்டுக்கு தச்சு வேலை என்றால் அது என்ன விலை என்று கேட்க வேண்டியவராயிருந்தார் என்பதே யாகும். இது தவிர இந்த ஐயங்கார் ரூப்ரண்டு பள்ளிக் கூடத்தின் மாணவர்களிடம் விரோத பான்மை கொண்டதாகவும் அதன் மேல் அம்மாணவர்கள் மேலதிகாரிகளுக்கு "இந்த ரூப்ரண்டு தன் உத்தியோகத்திற்கே பள்ளிக் கூடம் நிலைத்திருக்கவும், தன் தப்பு தங்கள் வெளிக்கு வராமலிருக்க அதிகாரிகளிடம் அவர்களுடைய தயவை சம்பாதித்துக் கொண்டு வருவதாகவும், தங்களுக்கு யாதொன்றும் கற்றுக்கொடுக்கப் படுவதில்லையெனவும், தங்களை மிருகங்களுக்கும் கேவலமாக மதித்துப் பேசி வருவதாகவும்'' விண்ணப்பங்கள் மீது விண்ணப்பங்கள் எழுதி தங்களது குறைகளை முறையிட்டு வந்ததாகத் தெரிகிறது. ஆனால் இம்மாணவர்களது வேண்டுகோள்கள் அதிகாரிகளுக்கு ஏறுமல் போகவே இருந்து வந்த மாணவர்களிலும் ஒவ்வொருவராக நின்று போய் சுமார் நான்கு ஐந்துபேரே இருந்து வந்தனர். ஒரு உபயோகமானதும் பரோபகாரமானதுமான வேலையைத் துவக்கி நாம் மேலே குறிப்பிட்ட அவ்வளவு தொகையை ஒதுக்கி அது சரிவர பாராமரிக்கப்படவில்லை யென்றால் இது பொது ஜனங்கள் அழுத்தமாகக் கண்டிக்க வேண்டிய விஷயமேயாகும். 1932-33-ல் துவக்கப்பட்ட பாடசாலை 1936-ம் வருடம் இன்றைய தேதி வரையில் ரூ. 7997-8-2 செலவு செய்தது. இதனால் ஒரு மாணவரும் உருப்படியாகாமல் பாடசாலையை எடுத்துவிட ஜாயிண்டு கமிட்டியார் முடிவு கட்டி விட்டனர். பணம் கொடுத்த சொசைட்டியாரும் மீதி இருக்கும் தொகையாகிய ரூ. 4596-10-8-யும் மிஷின் சாமான்களையும் திருப்பி எடுத்துக் கொள்வதாக 19-12-36-ல் கூடப் போகும் சொசைட்டியின் ஜெனரல்பாடி மீட்டிங்கிற்கு விஷயம் கொண்டுவந்துள்ளனர். பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்பட்ட போதே சென்னை கைத்தொழில் டைரக்டர் அவர்களுடன் கலந்து அவர்களால் இப்பாடசாலையை அங்கீகரிக்கப்பெறச் செய்து அவர்கள் மூலமாகவே நன்கு பயிற்சியடைந்த ஒரு ரூப்ரண்டை போட்டு நடத்துவதையும் விட்டு, மாணவர்களது நியாயமான கோரிக்கைகளை ஆலோசித்து பாடசாலையின் அபிவிருத்தியில் கவலை எடுத்துக் கொள்வதையும் விட்டு ஏராளமான பணம் ஸ்வாஹா ஆனபின் இந்த முடிவுக்கு வந்தால் இக்கமிட்டியை என்னென்று சொல்வது உபாத்தியாயரை மாற்றியிருந்தாலும் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட ஜனங்களிருக்கும் சேலத்தில் அதுவும் தொண்ணூற்றேழு சதவிகிதம் பேர் ஏழைக் கைத் தொழிலாளராயிருக்கும் நகரில் பாடசாலை வெற்றி செய்யத்தக்க விதமாகப் பாடசாலையை திருத்தியமைத்திருக்கலாம். முனிசிபல் அதிகாரிகளாவது பாடசாலை கவனிக்கத் திறமை இல்லையென்றால் சொசைட்டியாரே பள்ளிக்கூடத்தை நடத்த வேறு யோசனை செய்திருக்கலாம் இவைகள் எவ்வாவற்றையும் விட்டு 3,4 வருடங்களாக இருந்து வந்த மாணவர்களை நட்டாற்றில் விட்டாற்போல செய்திருக்கும் இக்கமிட்டியாரையும் இதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் முனிசிபல் வரி செலுத்துவோர் எனும் முறையிலும், சொசைட்டியின் மெம்பர் எனும் முறையிலும், ஏன் இவர்களது முடிவுக்கு வந்தீர்கள் என அழுத்தம் திருத்தமாகக் கண்டிப்பதற்கு உரிமையில்லையென கேட்கின்றோம்.

"இனி அம் மாணவர்கள் வாழ்க்கை யாது. கதி யாது! இந்த மூன்று நான்கு வருடங்களில் வேறு வழியிலாவது தங்களது ஜீவனோபாயத்திற்கு ஒரு மார்க்கம் தேடியிருப்பார்கள், இவர்களை நாம் கெடுக்கலாமா'' என்பதையாவதும் யோசித்தனராகவும் இல்லை. அக் கவலையின்றியே அல்லவா இவ்வளவும் நடந்துள்ளது.

சென்றது போகட்டும். ஜீரணம் ஆனது போக மீதி யிருக்கும் தொகையையும் மிஷின்களையும் திருப்பிப் பெற்றுக்கொள்வதாக முடிவு செய்யும் அர்பன் சொசைட்டியார் இத் தொகையை என்ன செய்யப் போகின்றனர். இது விஷயத்தில் மெம்பர்கள் கவனம் செலுத்தி அத் தொகையைக் கொண்டு சொசைட்டியார் ஒரு அந்தஸ்தின் மீது ஒரு கைத் தொழிற்சாலையை நடத்த ஏற்பாடு செய்யப் பார்ப்பார்களா? அல்லது ரூ. 7997-8-2 ம் உருப்படியான காரிய மில்லாமல் போனபடி இதையும் செய்ய விடுவார்களா? எனக் கேட்பதோடு பொது ஜனங்களின் கவனமும் இதன் பேரில் திரும்பி யுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்து தேவஸ்தான போர்டு

திருச்சியில் மகாநாடு

சென்னை, டிச. 15

திருச்சினாப்பள்ளி, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களிலுள்ள மத ஸ்தாபனங்களின் நிர்வாக சம்பந்தமான விஷயங்களை விவாதிப்பதற்காக மேற்படி டிவிஷன் கமிஷனர் திரு. ஏ. வி. சுந்தர செட்டியார், டிவிஷனிலுள்ள கோவில் கமிட்டிகளின் தலைவர்கள், அங்கத்தினர்கள், போர்டின் ஸ்தல உத்தியோகஸ்தர்கள், போர்டால் நியமிக்கப்பட்டிருக்கும் நிர்வாக உத்தியோகஸ்தர்கள், மற்றும் பல முக்கிய மத ஸ்தாபனங்களின் டிரஸ்டிகள் முதலியோருடன் கலந்து பேச விரும்புகிறார். திருச்சினாப்பள்ளி சர்க்கிள், கோவில் கமிட்டிக் காரியாலயத்தில், மகாநாடு, 24-12-36-ம் தேதி காலை 9-மணி முதல் 12-மணி வரையிலும், 25-12-36-ம் தேதி மாலை 2-மணி முதல் 5-மணி வரையிலும் நடைபெறும்.

ராமநாதபுரம், மதுரை ஜில்லாக்களின் ஆலோசனைக் கமிட்டித் தலைவர்களும், அங்கத்தினர்களும் மகாநாட்டிற்கு விஜயம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மகாநாட்டில் அவசியமாக விவாதிக்கப்படவேண்டிய விஷயங்கள் முன்னதாக அனுப்பப்படலாம்.

மகாநாட்டில் கலந்து கொள்ளுமாறு மேற்படி ஜில்லாக்களிலுள்ள போர்டின் ஸ்தல உத்தியோகஸ்தர்களும், கோவில் கமிட்டிகளின் தலைவர்களும் கமிட்டியின் அங்கத்தினர்களுக்கும், முக்கிய மத ஸ்தாபனங்களின் டிரஸ்டிகளுக்கும் அறிக்கை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது. எக் கமிட்டியின் தலைவராவது மகாநாட்டிற்கு விஜயம் செய்ய சாத்தியப்படாமற் போனால் அக் கமிட்டியில் விஷயம் பூரணமாய் பரிச்சயமுள்ள ஒரு அங்கத்தினரை அவருக்குப் பதில் மகாநாட்டில் பிரதிநிதித்துவம் வகிக்கும்படி முன்னேற்பாடுகள் செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறது. சம்பந்தப்பட்ட எல்லோரும் ஒத்துழைத்து மகாநாடு வெற்றிபெறச் செய்வார்களென நம்பப்படுகிறது என காரியதரிசி எழுதுகிறார்.

'லேடி ஆப் கார்ட்டர்'

ராணிக்கும் புதிய பட்டம்

லண்டன், டிச. 15

தம்முடைய ஜன்ம தினவிழாவின் பொழுது 'லேடி ஆப் கார்ட்டர்' என்ற பட்டத்தை மன்னர் ராணிக்கு வழங்கினர்.

எலிஸபெத் ராணிக்கு இன்புளுயன்ஸா ஜுரம் ஏற்பட்டிருப்பதால், இன்னும் சில தினங்கள் வரை, பிக்காடிலியிலுள்ள தமது மாளிகையிலேயே இருப்பாரென உத்தியோக தோரணையில் அறிவிக்கப்படுகிறது.

தஞ்சை ஜில்லா போர்டு தேர்தல்

காங்கரஸ் வெற்றி மர்மம்

மதுவொழிக்கும் காங்கரசுக்கு கள்ளுக்கடைகாரர்களா தளகர்த்தர்கள் ?

காங்கரஸ் பக்தர் விதேசி ஜவுளி விற்கலாமா ?

தென்னாட்டு “ஜவஹரின்” மாயா ஜால வித்தைகள்

(தஞ்சை தூதன்)

கீழ் தஞ்சை, மேல் தஞ்சை இரண்டு போர்டுகளில் வெற்றி பெற்றிருக்கும் காங்கரஸ் அங்கத்தினர்களில் காங்கரஸ் குடையின் கீழ் நின்று காங்கரஸ் கொள்கையைக் கடைப்பிடித்தவர்கள் எத்தனை பெயர் வழிகள் இருக்க முடியும்.

காங்கரஸ் பேரால் தேர்தலுக்கு நிற்பவர்கள் கள்ளுக்கடை, சாராயக் கடை, பிராந்திக்கடை வியாபாரம் செய்வது கூடாது; கள்ளு, சாராயம், பிராந்தி போன்ற மேல்-கீழ்நாட்டு போதை வஸ்துகளை பானம் செய்வது கூடாது; சீமை ஜவுளிக்கடை வைத்திருப்பதும், சீமை உடை உடுத்துவதும் காங்கரஸ் கொள்கைக்கு மகத்தான பாவம் செய்ததாகும். பட்டம் பதவி வைத்திருப்பவர்கள் காங்கரசுக்கு ஜென்மவிரோதிகள் என்பனபோன்ற இன்னும் பல நிபந்தனைகள் உண்டு. இக்காரியங்கள் செய்பவனும், செய்பவனுக்கு ஒத்துழைப்பவனும் அல்லது அவனுடைய ஒத்துழைப்பை காங்கரசுக்கு விரும்புபவனும், காங்கரஸ் அகராதியில் பஞ்சமா பாதகர்கள், தேசத் துரோகிகள், காங்கரஸ் தகப்பனுக்கு பிறக்காத நவதான்யக் கோத்திரத்தை சேர்ந்தவர்கள் என்று எழுதப்பட்டிருப்பதோடு காங்கரசை அடுத்துக்கெடுக்கும் அயோக்கியன் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

அங்கத்தினர் யோக்கியதை

தஞ்சை ஜில்லாவில் காங்கரஸ் பேரால் தேர்தெடுக்கப்பட்டிருக்கும் அங்கத்தினர்களில் எத்தனை அங்கத்தினர்கள் காங்கரஸ் கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடந்தவர்கள் என்பதை பொது மக்களே பரிசீலனை செய்து பாருங்கள்.

மேலத் தஞ்சை ஜில்லா போர்டு சம்பந்தமாக காங்கரஸ் அங்கத்தினர்களை சிருஷ்டிக்கும் பொறுப்பு காங்கரஸ் அட்ஹாக் கமிட்டிக்கு இருந்தாலும், அட்ஹாக் கமிட்டிக்கு தந்தைப் பிள்ளையான பட்டுக்கோட்டை தோழர் ஏ. பி. எஸ். என். வி. நாடிமுத்துப் பிள்ளை அவர்களின் யோசனையின் பேரில் தான் எல்லா காரியமும் நடைபெற்றன. பெரும் பகுதி தோழர் பிள்ளை அவர்களால் கொடுக்கப்பட்ட அங்கத்தினர் ஜாப்தாவை அட்ஹாக் கமிட்டி அங்கீகரித்தது. தோழர் பிள்ளை அவர்களுக்கு தாளம் போடும் அட்ஹாக் கமிட்டி நியமித்த அங்கத்தினர்களின் யோக்கியதையை சொல்லுமுன் அட்ஹாக் கமிட்டி மீது சர்வாதிகாரம் புரியும் பாரதமாதாவின் தலைப் புதல்வரான தோழர் நாடிமுத்து அவர்களைப்பற்றி கொஞ்சம் சொல்லுகிறேன்.

நாடிமுத்து காங்கரஸ் பித்து

காங்கரஸ் பொது மேடைகளில் தோழர் பிள்ளை சஞ்சரிக்கப் புறப்பட்ட இந்த குறுகிய காலத்திற்குள் அவருடைய தேச பக்தியும், காங்கரஸ் பக்தியும் ஜவஹர்லாலே தான் தோற்றார் என்று பொது மக்கள் பேசும்படியான நிலை ஏற்பட்டு விட்டது. பட்டுக்கோட்டை மண்டகப்படியில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் கதர் கட்டிக் கொண்டு சீமை ஜவுளிக்கடை வைத்திருக்கும் ஒரு நட்டுப் பிரசங்கியார் தோழர் நாடிமுத்துவை அபேதவாதி என்றும், தென்னாட்டு ஜவஹர் என்றும் பகிரங்கமாக சொல்லியும் விட்டார். இது அவர் பேரில் தவறில்லை. எலக்ஷன் பிரசாரத்திற்கு தோழர் பிள்ளை அவர்கள் கிளம்பிய முதல் தினமே தான் போட்டிருந்த எல்லா வைர நகைகளையும் கழற்றி விட்டார். பிள்ளையின் இந்த கோலாகலம் என்னையும் மயக்கி விட்டது. என்றாலும், இந்த வேஷமெல்லாம் எலக்ஷனுக்கா, ஏழை ஓட்டர்களை ஏமாற்றுவதற்கா, அல்லது நியாயமாகத்தானா என்று ஆழ்ந்து சிந்தனை செய்து பார்த்தேன். காங்கரஸ் பொது மேடைகளில் தோழர் நாடிமுத்து அவர்கள் கரகோஷத்தினிடையே பேசிய பேச்சுகளுக்கு புறம்பாக அடியில் கண்ட விஷயங்கள் தென்பட்டன:—

காங்கரஸ் கொள்கைக்கு விரோதமாய் தோழர் நாடிமுத்து பிள்ளை பிரபலமான சீமை ஜவுளிக்கடை பட்டுக்கோட்டையில் வைத்து இன்னும் வியாபாரம் செய்து வருகிறார்.

பாப்பா நாட்டை விட்டதேன் ?

காங்கரஸ் அட்ஹாக் கமிட்டியார் தோழர் நாடிமுத்துவை பட்டுக்கோட்டை தாலுகா பாப்பா நாடு சாகத்தில் நிறுத்தியது. காங்கரஸ்மான அவமானத்திற்கு இவர் பாத்திரப்பட்டு வாழ்வதைவிட பாரதமாதாவின் தலைப் புதல்வனும் இருப்பாரேயானால் பாப்பாநாடு சாகத்திலேயே நின்று வெற்றியோ தோல்வியோ அடையவேண்டும். இதுதான் காங்கரஸ் கொள்கையுமாகும். ஆனால், தோழர் பிள்ளை அவர்கள் செய்ததென்ன? காங்கரஸ் கட்டளையிட்ட பாப்பா நாட்டில் தோல்வியுற்றால் என்ன செய்வதென்ற பயத்தால் தனக்கு செல்வாக்குள்ள காவடிப்பட்டி சாகத்தில் தனிப்பட்ட முறையில் ஒரு நியமனச் சீட்டை தாக்கல் செய்தது காங்கரசுக்கு முதலிலேயே அவமானத்தை தேடிக்கொடுத்ததாகும். அதோடு மாத்திரமில்லை. காங்கரஸ் அட்ஹாக் கமிட்டியாரால் நியமித்த பிரபல காங்கரஸ்காரரும் நமது நாடிமுத்துவுக்கு பிடிக்காதவர்களுமான தோழர் எ. கிருஷ்ணசாமி வாண்டையார் தோழர் ராமலிங்க சுவாமிகள் இருவருக்கும் தனிப்பட்ட முறையில் காங்கரஸ் அல்லாத இரு அபேட்சகர்களை போட்டியாக தோழர் நாடிமுத்து அவர்கள் நிறுத்தி வேலை செய்தது காங்கரசுக்கு மகத்தான துரோகமே! தோழர் நாடிமுத்துப் பிள்ளையை காங்கரசில் நிறுத்திய பாப்பாநாடு சாகத்திலும் காங்கரஸ் கொள்கையைக் கடைப்பிடித்து வெற்றிபெறவில்லை. காங்கரசில் பஞ்சமா பாதகமென்று கருதப்படுவது கள்ளு-சாராயம். ஜில்லாவிற்கே இந்தக் கள்ளு-சாராய வியாபாரத்தில் பிரபல கனவானாகிய தோழர் பொன்னுசாமி நாடார் அவர்களின் பரிபூரண ஒத்துழைப்பாலேயே காங்கரஸ் பக்தர் நாடிமுத்துப்பிள்ளை வெற்றி பெற்றாரென்றால் அதைவிட அவமானம் காங்கரசுக்கு வேறு ஒன்று வேண்டுமா? தோழர் நாடிமுத்துப் பிள்ளை காங்கரசில் சேர்ந்த ஆரம்பத்திலேயே வெற்றிக்காக காங்கரஸ் கொள்கையைக் காட்டிக் கொடுத்தாரென்றால் குறைகாலத்திற்கும் காங்கரஸ் யோக்கியதை என்ன கதியாகுமென்பதையும், எக்கதியாக்குவாரென்பதையும் பொதுமக்களே சிந்திக்கட்டும்.

இந்த மகா உத்தமர் தான் சுயமரியாதைத் தோழர்களை காலிகள்- கலிகள் என்று காங்கரஸ் மேடைகளில் வீர கோஷம் செய்கிறார். ஜஸ்டிஸ் கட்சியை 5000ம் கெஜ ஆழத்தில் புதைத்து விட்டதாகவும் சொல்லுகிறார்.

தோழர் நாடிமுத்துப் பிள்ளை தனது சகாவாக காங்கரசுக்கு அறிமுகப்படுத்தி இருக்கும் முக்கியஸ்தர்களின் காங்கரஸ் கொள்கையைப் பற்றி கொஞ்சம் கவனிப்போம்.

வெற்றி பெற்றோர் ஜாதகம்

மதுக்கூர் சாகத்தில் தோழர் தியாகராஜ சோழகர் என்ற ஒருவர் காங்கரஸ் பேரால் ஜில்லா போர்டுக்கு வெற்றிபெற்றிருக்கிறார். இவர் இப்போது ஒரு கள்ளுக்கடை வைத்து வியாபாரம் செய்துவருகிறார். ஆகவே, தன் பேருக்கு கள்ளுக்கடை குத்தகைக்கு எடுத்தால் காங்கரஸ்காரர் என்ற மானத்துக்குப் பங்கம் வந்துவிடும். ஆகவே, தோழர் நாடிமுத்து பிள்ளையோடு உடன்கட்டை யேறும் பட்டுக்கோட்டை தோழர் வைத்தியலிங்க செட்டியார் பேருக்கு கள்ளுக்கடையை குத்தகைக்கு எடுத்து மறைமுகமாக வியாபாரம் செய்து காங்கரஸ் மானத்தைக் காப்பாற்றுவதாக நடிக்கும் மகா உத்தமர்.

பேராவூரணி சாகத்தில் வெற்றி பெற்றிருப்பவர் தோழர் பாலசுப்பிரமணியம் சேர்வைக்காரர் என்ற பிரபலஸ்தர். இவர்களுடைய குடும்ப பாரம்பரையே கள்ளு வியாபாரத்தை அஸ்திவாரமாகக் கொண்டது.

பொறையாறு சாகத்தில் காங்கரஸ் பேரால் வெற்றி பெற்றிருப்பவர் தோழர் வி. ஜெம்புகேச நாடார் அவர்களாகும். பொறையாறு நாடார் குடும்பத்தைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. சென்னை மாகாணத்திற்கே குடிவகை அபிவிர்த்திக்கு முதல பாக்கு வெற்றிலை பொறையாறு கனம் வி. ஜெம்புகேசர் குடும்பத்திற்கே உரியதாகும். இவர்கள் குடும்பத்திற்கு இன்றும் இரண்டு சாராய டிஸ்டிலரி இருக்கின்றன. மாகாணம் பூராவுக்கும் ஏராளமான கள்ளு-சாராயக் கடைகள் இன்றும் வியாபாரம் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தக் குடும்பத்தை கண்டுபிடித்த பெருமை தமிழ்நாட்டு காங்கரசுக்கே யாகும்.

ஏமாற்று வித்தை வேண்டாம்

“தென்னாட்டு ஜவஹர்” தோழர் நாடிமுத்துவின் கோஷ்டி இதுதான. இக்கோஷ்டியார் ஸ்தல ஸ்தாபனங்களில் ஆதிக்கம் செலுத்துவதில் நமக்கு ஆட்சேபனையில்லை. அவர்கள் என்றும் சிரஞ்சீவியாக ஆதிக்கம்செலுத்தட்டும் ஆனால், காங்கரஸ் பாரதமாதா, சுயராஜ்யம், என்ற போலிக் காரணங்களைச் சொல்லி பொது மக்களை ஏமாற்ற வேண்டாம். நேர்மையான பாதையில் பொது வாழ்வை நடத்தட்டும். தனது சொந்தக் கொள்கையை பொதுமக்களுக்கு பகிரங்கமாகச் சொல்லி பொது வாழ்வில் க்ஷேமமாக வாழட்டும். சொல் ஒன்று—செயல் ஒன்று என்ற மறைமுகமான-கேவலமான-இழிவான கொள்கை வேண்டாம் என்பது தான்.

“வெற்றி என்ற முட்டாள் தனத்திற்காக கொள்கையை காட்டிக் கொடுப்பவனுக்கும், தரித்திரம் வந்தகாலத்தில் பசிப்பிணியை தீர்த்துக் கொள்வதற்கு தன் குடும்பத்தைக் காட்டிக் கொடுப்பவனுக்கும் என்ன வித்தியாசமிருக்க முடியும்? இரண்டு பேரும் ஒரே கூட்டத்தை சேர்ந்தவர்கள் தான்.”

தஞ்சை ஜில்லாவுக்கு காங்கரஸ் சர்வாதிகாரியான தோழர் நாடிமுத்து உள்ளிட்ட அவர் கோஷ்டியாரைப் போல ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் செய்யவில்லை. தமது கொள்கையைப் பகிரங்கமாகச் சொல்லி நியாயமாக வெற்றியடைந்தார்கள்; தோல்வியுமடைந்தார்கள். அணியப் போகும் விளக்கு சுடர்விட்டு எரிவது போல சில வெத்து வேட்டுகள் காங்கரஸ் பேரை சொல்லிக் கொண்டு தற்சமயம் உலவினாலும் அது எப்பொழுதும் நிரந்தரமாக இருக்கும் ஜஸ்டிஸ் கட்சியை ஒன்றும் செய்துவிட முடியாது; செய்யவுமில்லை.

இன்று ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் வெற்றி பெற்றவர்களைப் பற்றியும்; அவர்கள் எந்த இடத்தில் வெற்றி பெற்றிருக்கிறார்களென்பதைப்பற்றியும் காங்கரஸ் போலியர்கள் ஆழ்ந்து சிந்தித்தால் தங்களுக்கு சமீபத்தில் ஏற்படப்போகும் நிலைமையை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம்.

சாமியப்பா விபீஷணனல்ல

தோழர் நாடிமுத்துப் பிள்ளையை போன்ற “தென்னாட்டு ஜவஹர்கள்” வெற்றி பெற்றதும் காங்கரஸ் தொண்டர்கள் வெற்றி கோஷத்தை தெருத் தெருவாய் சொல்லும் போது “சாமியப்பா ஜம்பம் இனி செல்லாது” என்று கோஷித்துக் கொண்டு போனார்கள். இப்படி கோஷித்த காங்கரஸ் மடையர்களுக்கும், அப்படி கோஷிக்கும்படி சொல்லிக் கொடுத்த மூளையில்லா காங்கரஸ் தலைவர்களுக்கும் வாஸ்தவத்தில் கொஞ்சம் சொந்த புத்தி இருந்தால் தோழர் என். ஆர். சாமியப்பாவைப் பற்றி சிந்தித்துப்பார்க்கட்டும்.

அவர் திருத்துறைப் பூண்டி தாலுகா வேதாரணியத்தில் போட்டியில்லாமல் தேர்தெடுக்கப்பட்டார். இவருக்குப் போட்டியாக காங்கரஸ் அட்ஹாக் கமிட்டியாரால் நியமிக்கப்பட்டவர் கொடியாலம் தோழர் கே. வி. ரெங்கசாமி அய்யங்கார் அவர்களுடைய சொந்த தம்பி தோழர் கே.வி. நாராயண அய்யங்காராகும். இவர்கள் குடும்பத்திற்கும், தமிழ்நாடு காங்கரசுக்கும் ரொம்ப காலமாய் பந்துவழியுண்டு. வேதாரணியத்தில் தமிழ்நாட்டு சர்தார் தோழர் எ. வேதரத்தினம் பிள்ளை என்ற ஒரு பிரபல காங்கரஸ்காரர் ஸ்திர வாசம் புரிந்துகொண்டிருக்கிறார். காங்கரஸ் பிரபலமடைந்தது உப்பு சத்தியாக்கிரக போராட்டத்தினு லென்பதை எந்த காங்கரஸ்காரரும் மறக்க முடியாது. அந்த உப்புப் போராட்டத்தில் பொதுவாக தமிழ் நாட்டு மானத்தையும், குறிப்பாக தஞ்சை ஜில்லா மானத்தையும் காப்பாற்றியது வேதாரண்யம்! அது திருத்துறைப் பூண்டி தாலுகாவிலுள்ளது. ஸ்ரீரங்கம் பெருமாள் கோவிலிலிருந்து தென்னாட்டு காந்தி ராஜாஜீ என்றழைக்கப்படும் சக்கரவர்த்தி ராஜ கோபாலாச்சாரியார் கால்நடையாக ஒரு தொண்டர் படையுடன் உப்பு காய்ச்ச வந்த ஊர் வேதாரணியம்! லக்ஷிமிபதிகள், ருக்மணிகள், கோதைநாயகிகள் போன்ற தேவிமார்களும் குழுமியது வேதாரணியத்தில்! ஆயிரக்கணக்கான தொண்டர்கள் அடி உதைபட்டதும் வேதாரணியத்தில்! இந்துக்களுக்கு காசி எப்படியோ, முஸ்லிம்களுக்கு மக்கா எப்படியோ, அதைப்போல தமிழ்நாட்டு காங்கரஸ் காரர்களுக்கு வேதாரண்யம் ஒரு மகா புண்ணிய ஸ்தலம். காங்கரசுக்கு மகா புண்ணிய பூமியான இந்த வேதாரண்யத்தில் ஜஸ்டிஸ் கட்சி கொடைவானான தோழர் என். ஆர். சாமியப்பா போட்டியில்லாமல் வெற்றி பெற்றாரே! அவருடன் காங்கரசுக்கு பரம்பரை பாத்தியமுள்ள தோழர் கே. வி. நாராயண அய்யங்கார் போட்டி போட முடியாமல் அபேக்ஷையை வாபீஸ் பெற்று இருந்தவிடம் தெரியாமல் ஓடினாரே! தமிழ்நாட்டு சர்தார் வேதாரண்யம் வேதரத்தினம் கள்ளுக்கடை வைத்திருக்கும் காங்கரஸ் அபேக்ஷகருக்கு தேர்தல் பிரசாரம் செய்யப் போனவர் சொந்தகோட்டையை பறிகொடுத்து விட்டாரே! வேதாரணியத்தின் அடிவாசலிலுள்ள திருத்துறைப்பூண்டி சாகத்தில் தோழர் பன்னீர் செல்வம் அவர்கள் புத்திரியார் வெற்றி பெற்றிருக்கிறார்களே!

ஆகவே, தஞ்சை ஜில்லா போர்டு எலெக்ஷனில் காங்கரஸ் காரர்கள், கொள்கைக்கு முரண்பட்ட அடுத்து கெடுக்கும் போலிகளிடத்தில் இயக்கத்தைப் பறிகொடுத்த முட்டாள் தனத்தை விட உத்தமமான முறையில் நேர்மையாக எதிர்க்கும் ஜஸ்டிஸ் கட்சிக்காரர் காங்கரசின் மகா புண்ணியஸ்தலத்தை கைப்பற்றிய ஒரு பெருமைதான் தஞ்சை காங்கரசுக்கு ஏற்பட்ட பெரியதொரு சாபத்தம்.

“சாமியப்பா ஜம்பம இனி செல்லாது” என்று கூக்குரலிட்ட கோழைகளும், கோஷமிடுவோருக்கு வாத்தியார் தனம் செய்தவர்களும் ஆழ்ந்து யோசிக்கட்டும்.

(குடி அரசு)

மாகாண சுகாதாரம்

சென்னை, டிச, 14

சென்ற 5-ந் தேதியுடன் முடிவாகிற வாரத்தில் மட்டும் சென்னை மாகாணத்தில் தொத்து நோயால் பிடிக்கப்பட்டவர்கள்; மாண்டவர்கள் எண்ணிக்கை பின்வருமாறு:-

காலரா:— பிடிக்கப்பட்டவர்கள் 2586; மாண்டவர்கள் 1361.

வைசூரி:-பிடிக்கப்பட்டவர்கள் 100; மாண்டவர்கள் 15.

பிளேக்:-பிடிக்கப்பட்டவர்கள் 27; மாண்டவர்கள் 18.

குறிப்பு:—வைசூரி மேற் குறிப்பிட்ட வாரத்தில் சேலத்தில் அதிகரித்திருக்கிறது.

பட்டேல் வருகிறார் !

ஏன் ?

பார்ப்பனர்களின் எலெக்ஷன் செலவுக்குப் பணம் வசூலிக்க !!!

அதற்கு நாம் ஏன் பணம் கொடுக்க வேண்டுமே ?

பார்ப்பனரல்லாதார் தங்கள் செலவில் பட்டத்தையும் விட்டு அபேட்சகராய் நிற்கிறார்கள். பார்ப்பனர்கள் ஊரார் செலவில் அதாவது பார்ப்பனரல்லாதாரிடமிருந்து வசூலிக்கும் பணச் செலவில் அபேட்சகராய் நிற்பதோடு அந்தப் பணத்தில் மிச்சம் செய்து பங்களா வாங்குகிறார்கள் !!

நமக்குப் புத்தி இருக்கிறதா ?

நந்தியால் பெஞ்சு மாஜிஸ்திரேட்டாக மூன்றும் முறை நியமிக்கப் பட்டிருக்கும் பருத்தி, கடலைக் கொட்டை வியாபாரி, திரு. கலவ கேசன்ன செட்டியார்.

6-ந் தேதி நாகபுரியில் சுமார் 400 ஜாதி ஹிந்துக்களும், 400 ஹரிஜனங்களும் சமபந்தியாக உட்கார்ந்து கொண்டு விருந்துண்டனர். அப்பொழுது மகார்களும், தோட்டிகளும் உயர்தர பார்ப்பனர்களுக்குப் பரிமாறினர். இவர்களுடன் தோட்டிகளும் மகார்களும் உட்கார்ந்து உணவருந்தினர். பிரபல சமஸ்கிருத பண்டிதர் திரு. டே. எஸ். தப்தாரி இதற்குத் தலைமை வகித்தார்.

விடுதலை ! விடுதலை !! விடுதலை !!!

“பாலகவி”

பாமரர்க்கும் பணமிலாத ஏழைகட்கும் விடுதலை !
பார்ப்பனிய வலைக்குட்பட்ட சகலருக்கும் விடுதலை !!

சமயபேத சாதித்துவேஷ தீமைநீக்கி யாவரும்
ஜஸ்டிஸ் கட்சி கொடி உயர சேர்வதிந்த வேளையில் !

பதவிநாடி பட்டம் நீக்கல் தியாகமில்லை உண்மையில்
உண்ட கட்சி விட்டு நீங்கி உயர்வதுவும் இல்லையே !

உதவிவேண்டி எதிரி வீசும் வலையறுத்த வீரர்காள்
காங்கரஸ் வீழ போர் புரிந்து வெற்றிபெற்று வாழ்வமே !

ஓட்டர் தம்மை மோசம் செய்யும் காங்கரசை வீழ்த்துவோம்!
வகுப்புவாரி உரிமைநாட்டி சமுகஞாய முறைமையே

நாட்டிலெங்கும் பரவியோங்கி நியாயக் கட்சி வலுக்கவே
ஊக்கமாக சகலபேரும் முயல்வோமிந்தத் தேர்தலில !!!

சிவில் கோர்ட்டு புரோசஸ் சர்வர்கள்

காரியதரிசி அறிக்கை

(முகாம்) ஆரணி, டிச, 14

11 - வது மாகாண மகாநாட்டு தலைவர் கனம் கே. எ. காசியப்ப கவுண்டர் எம்.எல்.சி. அவர்களுக்கு கவர்ன்மெண்டு கனம் செக்ரெடரி அவர்களால் கிடைக்கலான உத்தரவு பேரில் மேற்படி தலைவர் அவர்கள் இண்டர்வ்யூ செய்து சென்னையில் 3-12-36-ந் தேதியில் மத்திய சங்கத்துக்கு கிடைக்கலானதை பெற்றுக் கொண்டு செங்கற்பட்டு, ராய வேலூர் ஜில்லாக்களில் மெம்பர்கள் பதிவு செய்து கொண்டு 12 - வது மகாநாட்டுக்கு திருச்சி யூனியனுக்கு பொருள் சகாயம் முன்னதாக அனுப்பிக் கொடுக்க வேணுமாய் உபந்யாசம் செய்தும் 13 - வது மாகாண மகாநாட்டை காஞ்சிபுரம் யூனியன் அங்கத்தினர்களாகிய கனம் துரைசாமி நாயுடு, கனம் சுந்தரம் முதலியார், கனம் என். துரைசாமி முதலியார் இன்னும் இவர்கள் அதிக ஊக்கம் எடுத்துக் கொண்டு 12-வது மகாநாட்டுக்கு திருச்சிக்கு வந்து 13-வது மகாநாடு நடத்துவதாக மேற்படியார்கள் மகாநாட்டில் சேர்ந்து தயாராயிருந்து வருகிறார்கள். மெம்பர்கள் குறைவுப் பற்றி சகல ரேன்ஜிகள் ஏற்பட்டு தலைவர் அவர்கள் உத்தரவுப்படிக்கு மெம்பர்கள் மெஜாரிட்டியாக இருக்கும் பொருட்டு பிரசாரங்களில் ஓர்கனைஸிங் கமிட்டியார்கள் இருந்து வருகிறார்கள் 20-12-36-ந் தேதிக்குமேல் ஓர்கனைஸிங் கமிட்டியார் மதுரை ஜில்லா மார்க்கம் புறப்படுவார்கள்.

விசுவகர்மர்களுக்கு உணர்ச்சியுண்டா?

(ஏ. முத்துகிருஷ்ணன்)

விசுவகர்மத் தலைவர்களே, குலாபிமானிகளே, எதிர்காலத் தன்னையாய்த் திகழும் வீர இளைஞர்களே! இன்னுமா தூங்குகிறீர்கள்? உங்கள் கும்பகர்ண நித்திரையினின்றும் சற்று கண் விழித்து, உலகப் போக்கை—இந்தியாவின் நிலையை—நம் சமூகத்தின் தற்காலத்தியப் பிற்போக்கான நிலைமையைப் பார்க்கக் கூடாதா? இந்தியாவில் வதியும் ஜீவர்களில் மூன்றிலொரு பங்கு கொண்ட ஜனத் தொகையாளர்களாகிய நாம்—ஓவியம், சித்திரம், சிற்பம் முதலிய புராதனக் கலைகளுக்கும், கைத் தொழில்களுக்கும் தந்தையாகிய நாம்—உலக முற்போக்கிற்குக் காரண கர்த்தர்களாயிருந்த நாம்-இன்று எத்தகைய நிலைமையில் இருக்கிறோம்? நாம் புழுத்து, பொருளற்று, கைத்தொழிலைப் பறிகொடுத்து, கண்ணியத்தையிழந்து, ஆதரிப்பாரற்று, கண்கலங்கி நாமும் மக்களென இப்பாரத உலகில் உயிர் வாழ்கின்றோமே! எவ்வளவோ விசுவகர்மர்கள், இன்றைக்கு உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, உறங்கக் குடிசையின்றி, பொருளாதாரம் என்ற பெரும் பைசாசத்தினால் பிடிக்கப்பட்டு "என் செய்வோம்" என்று ஏங்குகின்றார்களே! இப்பரிதாபகரமான காட்சியைக் காணுமல் கண்ணுறங்குவதேனோ! ......ஆம்! ஒருவேளை இத்தகைய கோரக் காட்சிகளைக் காண சகியாதவர்களாய்த் தூங்குகிறீர்கள் போலும்! நன்று, நன்று. இனியும் இவ்விதம் மௌனம் சாதிப்பீர்களேயானால் உங்களுக்கு—'நாங்களும் விசுவகர்மர்கள், குலத் தலைவர்கள், குலத் தொண்டர்கள்' என சொல்லிக் கொள்ளும் உங்களுக்கு—கண்டிப்பாய் குலத்தின் சாபம் வந்தே தீரும். ஒவ்வொரு சமூகத்தாரும் தங்கள் தங்கள் குல முன்னேற்றத்தை கோரி கவனஞ் செலுத்தி உழைத்து இப்போது நல்ல நிலைமையிலிருக்கிறார்களே! நம் குலத்தைவிட ஈனமான ஸ்திதியில் எச்சமூகம் இருக்கிறது? எங்கே விரலை விட்டு எண்ணுங்கள் பார்க்கலாம்! ஒன்றுமே கிடையாது.

இப்பூவுலகில், கேள்வி முறையற்று—கல்வி, சமூதாயம், பொருளாதாரம், அரசியல் முதலியத் துறைகளில் திக்கற்றுக் கிடந்தாய் வறுமைப் பிணியால் பிடிக்கப்பட்டு சர்வ சுதந்திரத்தையுமிழந்து ஓர் சமூகம் இருக்குமேயானால், அது விசுவகர்ம சமூகமே என்று நான் துணிவுடன் கூறுவேன். நவ நாகரீகத்திற்கு வழிகாட்டியாயிருந்த நம் சமூகம் இன்று அரசாங்கத்தார் "இத்தகையோர் (விசுவகர்ம) சமூகமும் இந்தியாவிலுளதா?" என ஆச்சரியத்துடன் கேட்பார்களாகில் நம் சமூகத்தின் பிற்போக்கை—நம்மைத் தனத்தை என்னென்றுரைப்பது. சுமார் 20 லக்ஷம் மக்களாகிய நமக்கு இவ்விந்தியாவில் என்ன சுதந்திரமிருக்கிறது? அரசியலில் உண்டா? இல்லவே இல்லை. போகட்டும், கல்விக் கேள்விகளில் தேர்ச்சியுற்று அரசாங்கத்தாரால் ஆதரிக்கப்பட்டு வல்லுனர்களாயிருக்கிறோமா? அக்கலமும் பூஜ்யமே! இன்றைய கல்வியுலகில் "நான் நன்குகப் படித்தவன், நான் ஓர் விசுவகர்மா" என்று மார்தட்டி முன்வர நம்மவருள் யாருக்காவது யோக்கியதையுண்டா? போகட்டும், தன் குலப் பெயரையாவது சொல்லிக்கொள்ள இடமுண்டா? கிடையவே கிடையாது ஏன்? விசுவகர்மா என்றால் அவ்வளவு ஏளனம்—கேலி—மதிப்பின்மை! எவ்வளவோ ஜாதி அறிஞர்கள் இப்படியும் குலத்திலுதித்ததின் பயனுய் தங்கள் அறிவு விளக்கத்தை—ஞான திடசித்தத்தைக் காட்ட சந்தர்ப்பம் வாய்க்காது. குப்பையில் கிடக்கும் குண்டுமணி யெனப் பரிதவித்து "ஆ! நாமும் இச் சமூகத்தில் பிறந்தோமே!" என்று பெருமூச் செறிந்து ஏங்குகின்றனர்.

நம் குலம் இவ்வாறு பிற்போக்கடைய வேண்டிய காரணம் என்ன? நமது குலத் தலைவர்களின் கும்பகர்ணத் தூக்கமே—கவனக் குறைவே—நம் குலத்தின்பாற் கொண்ட அசிரத்தையே—நம்மை இவ்வித நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டது. எதிர் காலத்தை யோசிக்காது இவர்கள் செய்ததுதான் நம்மை வருந்த செய்கிறது. இதுவரைக்கும் நமது குலப் பெரியார்கள் நம் முன்னேற்றத்தின் பொருட்டு யாது செய்துள்ளனர்? ஏழெட்டு மகாநாடுகளை அநேகாயிரம் ரூபாய்கள் செலவிட்டு ஆடம்பரமாக நடத்தியிருக்கின்றனர். கவர்ன்மெண்டாருக்கு நமது சமூகத்தின் குறைகளைப்பற்றி எதிர்பார்க்க முடியாத சலுகைகளையெல்லாம் கேட்டு பத்திரங்கள் சமர்ப்பித்தனர். அவைகளெல்லாம் என்னவாயிற்று? கடுதாசிக் கூடையில் தான் விழுந்தன!

சட்ட சபைகளில் பிரதிநிதித்துவம் இல்லாத அநாமதேய சமூகம் எவ்வாறு தன் குறைகளை நிவர்த்தித்துக்கொள்ளக் கூடும்? மகாநாடுகள் கூட்டியதினால் பொருள் விரயமும் தேகப் பிரயாசையும் மிருதியாயிற்றே தவிர ஸ்திரமான நன்மைகளைக் கண்டிலோம். பொதுக் கூட்டங்களும் மகாநாடுகளும் அவசியமே யென்றாலும் அவைகளைப் பிரதிப் பிரயோஜனம் பயக்கும்படி செய்யாதது தான் வருத்தமாயிருக்கிறது.

அது போகட்டும். அரசாங்கத்தாரே அதை கூவியழைத்தார்களே அப்போதாவது தலை தூக்கிப் பார்த்தீர்களா? அதுவும் இல்லை. "நாங்கள் விஸ்வ பிராமணர்கள். எங்களைத் தாழ்த்தப்பட்ட வகுப்பாரோடு சேர்க்க வேண்டாம்" என சரிகைத் தலைப்பா வைத்துக் கொண்டு மீசையை முறுக்கி கர்ஜித்தீர்களே! என்ன அறியாமை! இப்போது தெரிகிறதல்லவா அதன் பயன்! இன்று கஷ்டப்படுவது யார்! என்னைப்போன்ற இளைஞர்கள்—கல்வி கற்றால் சர்க்கார் உத்தியோகம் பெறலாம் என மனப்பால் குடித்து கைத் தொழிலை விட்டு, சாப்பாட்டிற்கு வழியின்று பரிதவிக்கும் வாலிபர்களே—அல்லவா 'வேலை' 'வேலை' என்று உயிர் விடுகின்றனர்! காப்பாற்றி கைதூக்கி விடுபவர்கள் யார்? ...நம்குலத் தலைவர்களா?...... ஐயோ! அவர்கள் தான் தூங்குகிறார்களே! என்போன்ற இளைஞர்களே—குலப்பற்று மிகுந்த வீரர்கள்-தங்களுடைய வேலையேயும் கவனியாது குலச் சேவை புரிந்து வேலை செய்ய முன் வந்தாலோ அதற்கும் இடையூறு? குல முன்னேற்றத்தில் இன்னமும்—உலகோர் புன்னகைப் புரியும் படியான இக்கேவலமையிலும்—தங்கள் கல்நெஞ்சத்தைக் காட்டுகின்றீரே! ஏ தலைவர்களே! கல்லேனும் ஒரு காலத்தில் உருகும் ஆனால், உங்கள் கல்நெஞ்சம் உருகாததேனோ?

டீ லிமிட்டேஷன் கமிட்டி நியமனஞ் செய்த போது தான் தூங்கிக் கொண்டிருந்தீர்களே இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்? வரப்போகும் சட்ட சபைகளுக்கு பிரதிநிதிகளை அனுப்பப் போகிறீர்களா? நம் ஜாதி பிரதிநிதித்துவத்திற்கு சட்ட சபைகளில் எங்கு இடமிருக்கிறது? ஐரோப்பிய சமயத்தில் ஒரு பிரிவினராகிய ஆதி திராவிடர்களுக்குத் தனித் தொகுதியிருக்கும் போது, அச்சமயத்திலேயே மூன்றிலொரு பங்குள்ள விசுவகர்மர்களுக்கு—கல்வி, பொருளாதாரம், அரசியல் முதலியத் துறைகளில் பிற்போக்கானர்களாகிய நமக்கு—பிரதிநிதித்துவம் இல்லாமலிருப்பது நமது குலத்தலைவர்களின் முயற்சி யின்மையே யன்றி பிறிதொன்றில்லை. இம் சமயம் தொழிலாளர் முதலாளிகளுக்கு என்று ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள் 18. அதற்கு நாம் போட்டி போட இயலாது. ஏனெனில், அப்படி ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களுக்கும் செட்டிமார்களும், ஐரோப்பியர்களும், மார்வாடிகளும், ஏனைய வியாபாரிகளும் அபேக்ஷகர்களாக நிற்பார்கள். இதில் நமக்கு ஸ்தானம் கிடைப்பதெங்கே? மேல் சபைக்குப் போக இடமுண்டோ வென்னில் இடமிருக்கிறது. ஆனால், அபேட்சகர்களாக நிற்கத் தகுதி வாய்ந்தவர்கள் நம்மவர்களுள் ஆறே பேர்கள் தானுள்ளார். சுமார் 6-லக்ஷம் விசுவகர்மர்கள் வதியும் இச்சென்னை மாகாணத்தில் 6-பேர்கள் தான் அசம்பிளிக்கு நிற்க முடியுமெனில் நமது குலத்தின் பிற்போக்கை என்னென்றுரைப்பது. வருந்துவதில் பிரயோஜனமில்லை. 1937-ம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ந் தேதியிலிருந்து புதிய அரசியல்—மாகாண சுய ஆட்சி-அமுலுக்கு வரப்போகிறது. அதிலிருந்து அவ்வாட்சி முடியும் வரை நமக்கு அனாத்தகாலமே!...... ஐயோ!...... இச்சொற்களைக் கேட்க எந்த விசுவகர்மாவின் உள்ளந்தான் பதைக்காது? எதிர் காலத்தை நோக்கி "இலவு காத்த கிளியே" போல் இருந்த வீர இளைஞர்கள் உதிரம் உஷ்ணமடையாதோ? இதைக் கண்ணீர் விடார்களோ? இனியாவது நமது குலத் தலைவர்கள், குலாபிமானிகள், தொண்டர்கள், ஒன்று சேர்ந்து நமது முன்னேற்றத்தை நோக்கி வேலை செய்து "நாங்களும் விசுவகர்மர்கள். எங்களுக்கும் இந்தியாவில் பங்குண்டு" என மார்தட்டி முன்னே வர முயற்சிப்பார்களா? இல்லாவிடில், முன்போல் தூங்கிக் கொண்டிருப்பின், நமது சமூகமே இன்னும் பலவாண்டுகளில் மறைந் தொழியும் என்பது திண்ணம். ஆதலால், இனியாவது விசுவகர்மர்களுக்கு உணர்ச்சி யுண்டாகுமாவெனக் கேட்கிறேன்.

'விழிமின்! எழுமின்!! கருதியக்கருமம் கைகூடும் வரை உழைமின்!!!'

உஷார்! உஷார்!!

—:o:—

பார்ப்பனர்கள் பட்டேலைக் காட்டி பணம் வசூலிக்கப் போகிறார்கள்!

அவருக்குக் கொடுக்கும் ஒவ்வொரு காசும்
பார்ப்பனரல்லாதார் சமூகத்தைக்
கழுத்தறுப்பதாகும்!

நம் காசைக் கொடுத்து, நாம் தாசி மக்கள் ஆக வேண்டாம்!
நம் காசைக் கொடுத்து, நமது முன்னேற்றத்தைக்
கெடுத்துக் கொள்ள வேண்டாம்!!

உஷார்!!!

விச்வகர்மர் மாகாண மகாநாடு

ஆலோசனைக்கு வரும் விஷயங்கள்

சென்னை, டிச, 14

புதுவை திரு. ரா. அப்பாசாமி எழுதுவது:—

இவ்வாண்டு கூடவேண்டிய விச்வகர்ம மாகாண மகாநாட்டை ஜனவரி மாதம் சனி, ஞாயிறு கிழமைகளில் (9-1-37) சேலத்தில் நடத்துவதற்கான தீவிர ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

விச்வகர்ம சமூகமும் மற்றனைய சமூகத்தைப் போல் கலை, கைத்தொழில், பொருளாதாரம், அரசியல், சமுதாயம் முதலிய துறைகளில் மேம்பாடடைய வேண்டி, இதுவரையில் நாம் சிற்சில திட்டங்களை வகுத்து, அவைகளைக் குறுகிய காலத்தில் பூர்த்தி செய்யவேண்ட கருதியுள்ளோம். ஆகவே, இந்நான்கு வருட மாகாணத் திட்டத்திலடங்கிய விஷயங்கள் முக்கியமான பன்னிரண்டு அம்சங்கள் பரிசீலிக்கப்பட்டிருக்கின்றன. இந்நான்கு வருட தீர்மான திட்டத்தை சேலத்தில் நடைபெறும் மாகாண மகாநாட்டில் நிறைவேற்றி அநுஷ்டானத்துக்குக் கொண்டு வருவது குலாபிமானிகளின் கடமையாகும். முக்கிய பன்னிரண்டு விஷயங்கள் பின்வருமாறு:—

1. "தென்னிந்திய விச்வகர்ம மகாஜன மாகாண மத்திய சபை"யை பிரதி "ஜில்லா மகாஜன மத்திய சபை"களால் இரண்டிரண்டு நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு "தமிழ், ஆந்திர, கேரள, கன்னடநாட்டு மத்திய சபை"களால் ஆமோதிக்கப்பட்ட நாலு நபர்களடங்கியதாயமைத்தல்.

"தமிழ் நாட்டு விச்வகர்ம மகாஜன மத்திய சபை"யை தமிழ் நாட்டிலுள்ள பிரதி ஜில்லா மகாஜன மத்திய சபைகளால் மும் மூன்று நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களடங்கிய தாயமைத்தல்.

ஒவ்வொரு "ஜில்லா மகாஜன மத்திய சபை"யை பிரதி தாலூகா, கிராம சபை சங்கங்களிலும் ஐந்தைந்து நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களடங்கியதாகவும், "தமிழ்நாட்டு விச்வகர்ம மகாஜன மத்தியசபை"க்கு கட்டுப்பட்டதாயும் அமைத்தல்.

2. சட்டசபைகளிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும், கல்வி, கைத்தொழில், வர்த்தகம், பொருளாதார சபைகளிலும் பிரதிநிதித்துவ ஸ்தானம் பெறுதல்.

3. பிரதி ஜில்லா தாலூகா தலைநகரங்களிலும் கூட்டுறவு முறையில் "கைத் தொழிற்சாலை"கள் ஸ்தாபித்து உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய "விற்பனை சாலை"கள் "ஸ்டோர்கள்" அமைத்தல்.

4. கைத்தொழில் அபிவிர்த்திக்கு பொருளுதவி புரிய பிரதி ஜில்லா தலைநகரிலும் "விச்வகர்ம தொழில் வங்லோர் பாங்கி" ஸ்தாபித்தல்.

5. லேவாதேவி செய்வதற்கு "விச்வகர்மர் ஐக்கிய நாணய (கூட்டுறவு) சங்கங்கள்" தாலூகா, கிராமங்கள் தோறும் ஸ்தாபித்தல்.

6. (விவாக, மரண) சாஸ்வத சகாய நிதிகளுக்காக ஜில்லாக்கள் தோறும் "விச்வகர்மா இன்ஷியூரன்ஸ் கம்பெனி" நடத்தல்.

7. கூட்டுறவு லிமிடெட் கம்பெனி முறையில் ஓர் சஜாதிய வாரப் பத்திரிகை நடத்தல்.

8. ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் மாகாண மகாநாடு நடத்துவதற்கு 'திரு. முக்கண்ணாச்சாரி' சகாய நிதியும், ஜில்லா மகாநாடு நடத்துவதற்கு 'திரு. மி. கிருஷ்ணசாமி ஆச்சாரி' சகாய நிதியும் சேகரித்தல்.

9. மகாநாட்டின் தீர்மானங்களை அமலுக்குக் கொண்டு வருவதற்கு ஆங்காங்குள்ள சபைகள் சங்கங்கள் மூலமாய்ப் பிரசாரம் செய்ய தகுதி பிரசாரர்கள் நியமித்தல்.

10. ஆங்காங்குள்ள சபைகளும் சங்கங்களும் சினிமா நாடகம், சங்கீதம், சிற்பம், சித்திரம் முதலிய கலைகளின் அபிவிர்த்திக்கு உழைத்தல்.

11. பிரதி ஜில்லா தாலூகாக்கள் தோறும் "விச்வகர்ம மாதர் சங்கங்கள்" ஸ்தாபித்தல்.

12. சமுதாய சீர்திருத்தத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட சிக்கனத் திட்டத்தை மரணம், விவாகம் சடங்குகள் முதலிய கிரிகைகளில் அனுஷ்டித்தல்.

மேற்கண்ட இந்நான்கு வருட தீர்மான திட்டத்தை ஐப்பான் திரு. அ. அ. இராமசுவாமி ஆச்சாரியார் (டெக்ஸ்டைல் எக்ஸ்பெர்ட்) மகாநாட்டில் பிரேரேப்பார். இதை திருநெல்வேலி அட்வகேட் திரு. டி. செல்லக் குமார் ஆச்சாரியார் பி. ஏ. பி. எல். சென்னை, திரு. தி. மு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் ஜெ. ஆர். என். ஏ. (லண்டன்), ராயவரம் டாக்டர் ஷண்முகம் ஆச்சாரியார் எல். எம். பி. ஆமோதிப்பார்கள்.

நாகர் கோவில்

கே. ராமையாவின் அறிக்கை

எனக்கு இப்பொழுது வயது 25 ஆகிறது. நான் 11 வயதிலிருந்து ஜாதி, மதம், கிரமம், தேசம் என்கின்றவைகளில் நம்பிக்கை யில்லாதவன். நீங்கள் ஈரோடு "குடி அரசு" ஆசிரியர் கூறியபோது சுயமரியாதைக் காரர்களாக ஆனீர்கள். நான் சுயமரியாதைக்கார னென்று சொல்லிக் கொண்டு அவமரியாதையாக நடக்கவில்லை. நீங்கள் பேசுவதெல்லாம் ஞானம், அதுப்படி [illegible]. பேருக்கு சுயமரியாதை, நடப்பது அவமரியாதை. உங்களின் சுயமரியாதையும் நோக்கமும் வேறு விதமாயிருக்கலாம். அது பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால், பிறரைக் குறை கூறுதல் எந்த விதத்தில் என்பது தான் எனது கேள்வி நான் கோவிலுக்குப் போகிறேன், சுவாமி தெரிசனம் செய்கிறேன். பின் சுயமரியாதையாகப் பேசுகிறேன்.

எனது சுயமரியாதையின் தத்துவம்

1. மனிதப் பிறப்பில் ஆண், பெண் என்ற இரு வகுப்பாரையே கடவுள் சிருஷ்டித்திருப்பார் என்பது எமது திடமான நம்பிக்கை. இன்று இரண்டாயிரம் ஜாதியாயிருப்பது கற்பனை சூழ்ச்சி வஞ்சக வயிற்றுப் பிழைப்பு என்பது.

2. மக்கள் யாவரும் ஒரே மதத்தினர்களாயிருக்க வேண்டும், அந்த மதத்திற்கு எந்தப் பெயர் கொடுத்திருந்தாலும் சரிதான்.

3. பிறதேசத்தினால் ஒருவனை அன்னியன் என்று கருதக் கூடாது. அவன் அமெரிக்கனானாலும் சரி, ஜெர்மனியானானாலும் சரி, ரஷ்யனானாலும் சரி அவனும் மனிதன் தான்.

4. கடவுளைக் காணவும், தொழவும், காசு கொடுக்கவோ, அபிஷேகஞ் செய்யவோ கூடாது. இதைக் கடவுளும் விரும்பவில்லை. அதற்காக ஒரு பிரத்தியேக நேரமோ சமயமோ, கிரமமுடன் இருக்க வேண்டுமெனவும் கூறவில்லை அவை அவரவர்களின் மனோ நிலையைப் பொறுத்தது.

இதுதான் நான் விரும்பும் சுயமரியாதை. கோவிலுக்கு போவது கூடாது, அது சுயமரியாதைக்கு முட்டுக்கட்டை, சுயமரியாதை வளர்ச்சிக்குத் தடை யென்று கருதுகிறவர்கள்; அது தான் சுயமரியாதை இயக்கத்தின் தத்துவம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறவர்கள். அவர்களின் சுயமரியாதை இயக்கத்தி னின்று விலகவேண்டுமென கருதுவதற்கோ, அபிப்பிராயப் படுவதற்கோ அவர்களுக்கு எள்ளத்தனையும் சுதந்திரம் கிடையாது. ஏனென்றால், அவர்களின் சட்ட திட்டத்திற்குள்பட்ட சங்கத்திலோ ஸ்தாபனத்திலோ, நான் கையெழுத்திட்டவனல்ல. என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு நாம் மேலே சொன்ன முறைகளை அனுசரிக்கிறவர்கள் மட்டுமே இனி நமது இளைஞர் சங்கத்தில் அங்கத்தினர்களாயிருக்கவும் வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்கம்

நமது இளைஞர் சங்கத்தின் மூலம் செய்துவந்த பிரசார வேலையை சில மாதகாலமாக நிறுத்தியிருக்கிறது. காரணம் தீவிர சுயமரியாதைவீரர்களின் பொறுமையாலேயாகும். நாம் ஆர்வத்தோடு ஆரம்பிக்கப்பட்ட கோட்டாறு சுயமரியாதை வாசக சாலையானது இரண்டொரு ஆண்டில் மூன்று விழாவோடு, தனது உணர்ச்சியை அடக்கிக்கொண்டு அமர்ந்து விட்டது.

மதிப்பிற்குரிய மாணிக்கத்தை வாசகசாலைத் தலைவராகக் கொண்டிருக்கும் பொறுப்பற்ற நிர்வாகிகளால் சங்கம் புறக்கடையில் கிடக்கலாயின. உணர்ச்சி மிகுந்தவர்களையும் புறக்கணித்து அப்படியே வைத்த நிர்வாகிகளே! பேஷ், நன்றாயிருக்கிறது. பார்த்துக் கொண்டோம்.

முடிவாக கண்ணிய மிகுந்த புண்ணியரான வாசகசாலை தலைவர் அவர்களுக்கு மிகப் பணிவுடன் தெரிவிப்பது யாதெனில், இப்பொழுதிருக்கும் வாசகசாலையில்லா திருந்தால் எப்படியோ அப்படித்தான். ஆகையால் சங்கத்திற்கு புதிய நிர்வாகிகளை நியமித்து நமது லட்சியத்தை நிலை நிறுத்துவது மிகுந்த பலன் தரும் என்று பணிவுடன் அறிவிக்கிறேன்.

புதிய நிர்வாகியர்கள் யார் என்றோ எங்கிருக்கிறார்கள் என்றோ எண்ண வேண்டாம். நிர்வாக விஷயமாக நீங்கள் கூட்டும் பொதுக் கூட்டத்தில் அவர்கள் காணப்படுவார்கள். விருப்பமுடையவர்கள் ஏற்று நடத்துவார்கள்.

“சமரவலம்”

ஓர் மாத வெளியீடு

மக்களின் நல்வாழ்வு, பொருளாதாரநிலை, கிராம சீரமைப்பு, சுகாதார விஷயங்கள் இவைகளை சமநோக்குடன் அபிவிர்த்தி செய்யும் பத்திரிகை.

மானேஜர்:—
சமரவலம் ஆபீஸ்,
விழுப்புரம்.

பொங்கல்! பொங்கல்!!

அசல் பட்டுப் புடவை

அழகிய சிறு ஜரிகைக் கரை, அசல் பட்டு. சிகப்பு, அரக்கு புளு, பச்சை, ஸ்கை முதலிய கலர்களில் கிடைக்கும்.

12-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 5—12—0
16-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 7—8—0
18-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 8—8—0
5-முழம் x 44" அங்க வஸ்திரம் 1-க்கு ரூ. 8—8—0

வெண்பட்டு அங்க வஸ்திரம்

5 முழம் x 44" அழகிய கரைகள் சலவைக்கு சேர்ந்தியானது.
விலை ரூ. 1—12—0-தான்.

இந்த விலைகள் 15—1—37 பொங்கல் வரை தான்.
ஞாபகத்தில் வையுங்கள். உடனே ஆர்டரை அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
(Proprietors : Sundarams Ltd.,)
சில்க் அவுஸ், காசி.

விடுதலை யாவது யாதெனக் கேட்டாராயின்
கேடிலா சீர்த்தி மேவிய சீர்மை
நாட்டினரெல்லாம்
பொருள் சுகப்பேறுகள் சர்வமும் பெற்று
நீடுமிக வாழ்தலே யாம்

விடுதலை

VIDUTHALAI

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர் [போற்று நின்ற
செம்மொழியை திருமொழியை [தேன்மொழியை
தனித்தியங்கும் ஆற்றலுள தொன்மொழியை [அமிழ்தனைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை [அனுதினமும் பழக்கம் செய்வீர்.

மலர்-2] சென்னை: (16-12-1936) தாது ஞு மார்கழி மீ 2உ புதன்கிழமை [இதழ்-56

தமிழ் மாகாண மகாநாடும், உத்தியோக வேட்டையும்

"தினமணி"யின் புலம்பல்

(டி. எஸ். என். எழுதுவது)

மதுரை, டிச, 12

பண மென்றால் பிணமும் வாயைத் திறக்கும் என்பது போன்று மிகவும் காரணமாகவும், யோக்கியமாகவும், எதிர் கட்சியார்களை உத்தியோக வேட்டைக்காரர்களென்று கூசாது எழுதி வந்த அன்பர் தென் காசி சொக்கலிங்கம் அவர்கள் வேலூர் தமிழ் மாகாண மகா நாட்டில் உத்தியோகம் ஏற்கும் தீர்மானம் தோல்வி யடைந்ததைக் குறித்து ஒப்பாரி வைக்க ஆரம்பித்து விட்டார். தலைவர் தீர்ப்புபடி தீர்மானம் மூடியக்கப்பட்டது. ஓர் ஆச்சரியமல்ல; ஆனால், சென்ற 50 வருட காலமாக காங்கரஸ்காரர்கள் எந்த மாகாணத்திலாவது உத்தியோகத்தை ஏற்றுக் கொண்டு அதை செவ்வனே நடத்தி இருப்பதாகத் தெரியவில்லை. அவ்விதமிருக்க வேலூரில் மட்டும் உத்தியோக வெறி பிடித்ததேனோ தெரியவில்லை. ஒரு ஜில்லா போர்டை சரிவர நிர்வாகம் செய்யத் திறமையற்றவர்கள் ஒரு மாகாணத்தை எவ்விதம் நிர்வாகம் செய்ய முடியும். அதற்கு அருகதையாக மற்றவர்களைப் பழக்காமலிருக்கும் போது அன்பர் சொக்கலிங்கம் அழுவானேன். கண்டவரே சிரிப்பும்.

சர்தார் சார்துல் சிங்கிற்கு ஒரு வார்த்தை

சர்தார் சார்துல் சிங் என்பவர் தென்னாட்டு சுற்றுப்பிரயாணம் செய்து முடித்து சென்னைக்கு வந்ததும், பத்திரிகைப் பிரதிநிதியொருவர் சர்தார் சிங்கிடம் சென்று "ஜஸ்டிஸ்" கட்சியைப் பற்றி கேட்டதில் அது செத்துப் போய் விட்டதாகக் கூறினாராம். சர்தார் ஓர் வடநாட்டினர். அவருக்கு தென்னாட்டின் பழக்க வழக்கமும் இன்னின்ன கட்சிகள் உண்டு. இல்லை யென்பதும் தெரியாது. அவ்விதமிருக்க "ஜஸ்டிஸ்" கட்சி இறந்து விட்டது வென்று எப்படி சொல்வார். ஆனால், அவர் வாழும் வடநாட்டில் "ஜஸ்டிஸ்" கட்சி இல்லை யென்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். அதற்கு தென்னாட்டைக் குறிப்பிடுவானேன். இப்படி ஒன்றும் தெரியாத ஒருவரை தேசத் தலைவராக ஏற்றுக் கொண்டால் தேசத்தினுடையவும், மக்களுடையவும் கதியென்ன ஆகுமோ தெரியவில்லை. சர்தாருக்கு நாம் ஒன்று கூறுகிறோம். ஐயா சர்தார் அவர்களே, தாங்கள் தப்பாகக் கூறியபடி ஜஸ்டிஸ் கட்சி இறக்கவில்லை. ஆனால் சோஷலிஸம் முற்றிலும், டிசம்பர் 5-ந் தேதி வேலூர் தமிழ் மாகாண மகாநாட்டோடு செத்துப்போய் விட்டது. இவ் வுண்மையை அறியாது ஏதோ பிராமணர்கள் சொல்லிக் கொடுத்ததை அப்படியே வாந்தி யெடுத்திருக்கிறீர்கள், வேண்டாம் உண்மையை அறிந்து பேசுங்கள். இல்லையேல் மௌனம் சாதியுங்கள். சென்னை மாகாணத்தின் நிலைமை தங்களுக்குத் தெரியாது. பார்த்துக் கொள்ளவும்.

சத்தியமூர்த்தி தலைமைப் பதவி யொழிந்தது

டிசம்பர்மாதம் 5-ந் தேதி வேலூரில் கூடிய தமிழ் மாகாண மகாநாட்டில், சென்ற இரண்டு வருட காலமாக ஏகபோக மிராசாய் தலைமைப் பதவி வகித்து வாய் வீச்சால் அடக்கி ஆண்டுவந்த நண்பர் திரு. சத்தியமூர்த்தி அய்யர் மறுபடியும், தலைமைப் பதவிக்கு போட்டி போட்டு, திரு. முத்துரங்க முதலியாரால் தோல்வியுற்றார். அத்துடன் அவர் ஏகச்சாதிகாரம் மூறியடிக்கப்பட்டு தலைமைப் பதவியும் யொழிந்தது. திரு. சத்தியமூர்த்தி ஓர் பார்ப்பனரல்லாதாரால் பெருந்தோல்வி யடைந்து விட்டதைக் கேட்ட தமிழர்கள் பெரும் ஆனந்த மடைவார்கள். காங்கரஸ் ஸ்தாபனத்தில் போட்டியிடக் கூடாதெனத் தொண்டை கிழியக் கத்திய அதே சத்தியமூர்த்தி தன் சுயநலம் கருதி, பதவி ஆசை மேலிட்டு, திரு. முத்துரங்க முதலியாருடன் போட்டி போட்டு தோல்வியுற்றார், தனக்கொன்றும், பிறருக்கொன்றுமாக கூறும், திரு. மூர்த்திக்கு வேலூர் நல்ல பாடம் கற்பித்து விட்டது. திரு. மூர்த்தியே ஜஸ்டிஸ் கட்சியார் உத்தியோக வேட்டைக்காரர் என்று கூறினீரே! இப்போது வேட்டைக்காரர் யார்? நீரா ஜஸ்டிஸ் கட்சிக்காரரா! தயவு செய்து கூறும்.

ஹாப்புல் புகாரியா சங்கம்

(ஒரு நிருபர்)

மேலப்பாளையம், டிச. 12

9-12-36 மாலை 4-மணிக்கு மேற்படி சங்க ஹாலில் ஆலி ஜனாப் ஆ். எம். ஏ. எஸ். அப்துலதிப் பாரூக் சாஹிப் அவர்கள் தலைமையின்கீழ் மேற்படி சங்கக் கூட்டம் கூடி அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்க சந்தா நிதி துரிதமாக வசூலிக்கும்படியாய் காரியதரிசியைக் கேட்டுக் கொள்ளுகிறது.

ஆலி ஜனாப் அப்துலதிப் பாரூக் சாயபு அவர்களை சங்க பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

வரும் சென்னை சட்டசபை அசெம்பிளிக்கு நமது திருநெல்வேலி ஜில்லா முஸ்லிம் தொகுதிக்கு வுமசதாசிம் ஹாமீம் பள்ளி மதர்ஸா அஸ்தாரும், இனும்தாரும், பாளையங்கோட்டை முனிசிபல் கவுன்ஸிலரும், கோவைப்பெரேட்டிவ் வீவிங் சொஸைட்டி செக்ரெட்டேரியும் சீப் கெமின் டிரேடிங் கம்பெனி லிமிடெட் செக்ரெட்டேரியும், டிரெஷரரும், கலயின்றி பொது நலத்திற்குத் தம்மை அர்ப்பணம் செய்து சமூக நலனைத் தமது வாழ்வாகக் கருதி தொண்டாற்றிவரும் நம் சமூகத் தலைவர் ஜனாப் வ. செ. த. ஷேக்மன்ஸூர் சாஹிப் பஹதூர் அவர்கள் அநேகம் முஸ்லிம் சங்கங்களும் கனவான்களும் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி அபேட்சகராக முன் வந்திருப்பதால், நமது ஜில்லா முஸ்லிம் வாக்காளர்கள் அனைவரும், பொறுப்பு வாய்ந்த சாஹிப் பகதூர் அவர்களுக்கு தமது வோட்டுக்களைச் செய்யும்படி இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.



கொச்சி மஹாராஜா, திவான் சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியாரோடு சென்ற வெள்ளிக்கிழமை சென்னை செண்ட்ரல் ஸ்டேஷனில் வந்திறங்கிய போது எடுத்த படம். —P.P.B.



சென்னை சர்வகலாசாலை மாஜி வைஸ்-சான்ஸலர் சர் கே. ராமுண்ணி மேனன் கொச்சி மஹாராஜாவுக்கு சென்ற சனிக்கிழமை மாலை வில்லிங்டனில் தோட்டக் கச்சேரி நடத்திய போது எடுத்த படம். —P. P. B.



சிந்தாதிரிப் பேட்டை கூட்டுறவு பாங்கியின் மாஜி தலைவர், காலஞ்சென்ற திரு. வி. சிவப்பிரகாச முதலியாரின் திருவுருவப் படத்தை, சிந்தாதிரிப் பேட்டையிலுள்ள திவான்பகதூர் பி. விஜயராகவ செட்டியார் ஹாலில், சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை கனம் பி. டி. ராஜன் திறந்து வைத்த பொழுது எடுக்கப்பட்ட படம். —போட்டோ நியூஸ் ஏஜன்ஸி.

ஒரு ராத்தல் எடை யுள்ள "கார்க்" தண்ணீரில் ஒரு மனிதனை மிதக்கச் செய்யும்.

• • •

மற்ற ஐரோப்பிய தேசங்களை விட அயர்லாந்து தேசத்தில் தற்கொலைகள் மிகக் குறைவாம்.

உலகத்திலேயே வேகமாகப் பறக்கக் கூடிய பட்சி "ஸ்விப்ட்" என்பதாம். அது சில சமயம் மணிக்கு 200 மைல்கள் பறக்கிறதாம்.

• • •

இங்கிலாந்தில் சுமார் 70 லக்ஷம் பூனைகள் இருக்கின்றனவாம்.

தண்ணீரில் பிராணவாயு இல்லாவிடில் மீன்கள் மூழ்கி இறந்து விடுமாம்.

• • •

பெண்கள் பையன்களைவிட சீக்கிரத்தில் நீந்தக் கற்றுக் கொள்கிறார்களாம்.

தாழ்த்தப்பட்டார் கோவில் பிரவேசம்

(நமது சொந்த நிருபர்)

செங்கோட்டை, டிச, 12

25 ஹரிஜனங்கள் அடங்கிய ஒரு கூட்டம் நேற்று காலை 9 மணிக்கு கொழுத்த பணக்காரப் பார்ப்பனர் வதியும் அம்மன் சந்நிதித் தெரு வழியாக குலசேகரநாதர் கோவிலுக்குச் சென்றனர். அவர்களை கோவில் வாயிலில் நின்று தேவஸ்தான அதிகாரிகள் வரவேற்றனர். பிறகு அக் கூட்டம் கோவிலின் உட்பிரகாரத்தைச் சுற்றி வந்து சுவாமி தரிசனம் செய்த பிறகு பிரசாதங்கள் பெற்று, போன வீதி வழியாகவே வீடு திரும்பினர்.

ஆனால், எலட்டூர் கோவில் பிரவேசத்தின் போது அங்குள்ள முக்கியமான சில பார்ப்பனர்கள் குறுக்கிட்டனர். அவ்விஷயம் போலீசாருக்கு எட்டிற்று. உடனே அவ்வூர் இன்ஸ்பெக்டர் சில ஜவான்களோடு அவ்விடத்தை யுற்றதும் ஹரிஜனங்கள் யாதொரு தடையுமின்றி பார்ப்பனர் தெரு வழியே சென்று கோவிலை யடைந்தனர். அதற்கு மேல் அசம்பாவிதமாக யாதொன்றும் நடைபெறவில்லை.

பிறகு, அன்று மாலை சில பஞ்சமர்கள் கடவுள் வணக்கத்திற்காக குலசேகரநாதர் கோவிலுக்குச் சென்றனர். அவர்கள் அம்மன் சந்நிதித் தெரு வழியே சென்று கோவிலின் முக்கிய வாயில் வழியாக உட் சென்று கடவுளை வணங்கி, பிரசாதம் பெற்று சென்ற வழியாகவே யாதொரு தடையுமின்றித் திரும்பினர்.

இராஜபிரகடனத்தின் பேரில் அம்மன் சந்நிதித்தெரு வழியாக தாழ்த்தப்பட்ட மக்கள் அனுமதிக்கப் பட்டது செங்கோட்டை சரித்திரத்தில் இதுதான் முதல் தடவை என்று சந்தேகமின்றிக் கூறலாம்.

கற்பூரம் ஏற்றப்பட்ட தாம்பளத்தை ஜாதிமத வேற்றுமை பாராது பூசாரி கடைசிவரை எடுத்துச் செல்ல வேண்டுமென்று இலஞ்சி குமார் கோவிலில் கோவிலதிகாரிகள் உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

இன்று காலை கடைசியாக சில ஹரிஜனங்கள் பாண்டு வாத்தியங்களுடன் சந்நிதித் தெரு வழியாக பெருமாள் கோவிலுக்குச் சென்று பிரசாதம் பெற்று வெளிப் போந்தனர். அப்போது சில பார்ப்பனர்கள் தடைசெய்ய முயன்றும், தாழ்த்தப்பட்ட மக்கள் உறுதியுடன் இருந்ததால், விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று.

திருத்தம்

சென்ற 5-12-36-ந் தேதி வெளிவந்துள்ள நமது இதழில் 'இராசிபுரம் பஞ்சாயத்து போர்டு' என்ற தலைப்பின்கீழ் வெளிவந்துள்ள செய்தியில், திருவாளர்கள்: சின்னத்தம்பி உடையார் பி. ஏ. அவர்களும், என். காவேரி செட்டியாரவர்களும் என்றிருப்பதை "சின்ன முத்து உடையார் அவர்களும், பி. ஏ. என். காவேரி செட்டியாரவர்களும் என்று திருத்தி வசிக்கும்படிக் கோருகிறோம்.

வெள்ளாட்டுப் பாலிலிருந்து எடுக்கப்படும் பாலாடை இதர பாலாடைகளை விட மிகவும் ருசியுள்ளதாம்.

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN, AT THE JUSTICE PRINTING WORKS, 14, MOUNT ROAD, MADRAS. EDITOR: PANDIT S. MUTHUSWAMI PILLAI.

விலை அரை அணா 12 பக்கங்கள் மலாய் நாட்டில் 5 சதம் Regd. No. M. 3298.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா
முன் பணம்
உள்நாடு
1 மாதம் ... 0 6 0
3 மாதம் ... 1 0 0
6 மாதம் ... 1 14 0
1 வருடம் ... 3 10 0
சென்னைக்கு
1 மாதம் ... 0 4 0
3 மாதம் ... 0 10 0
6 மாதம் ... 1 4 0
1 வருடம் ... 2 6 0

விடுதலை
VIDUTHALAI
(வாரம் இருமுறை வெளிவரும்)
ஆசிரியர்: பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா.
முன் பணம்
வெளிநாடு
1 மாதம் ... 0 10 0
3 மாதம் ... 1 14 0
6 மாதம் ... 3 12 0
1 வருடம் ... 7 4 0
சர்க்கார், முனிசிபாலிட்டி,
ஜில்லா போர்டுகளுக்கு:
உள்நாடு: வருடம் ரூ. 7 8 0
சென்னை: " ரூ. 4 8 0

மலர்-2] சென்னை: (19-12-1936) தாது௵ மார்கழி௴ 5௳ சனிக்கிழமை [இதழ்-57

ஹரிஜன சேவா சங்கப் பித்தலாட்டம்

திருவிதாங்கூர் சீர்திருத்தத்துக்கு காரணஸ்தர் யார்?

திருவிதாங்கூர் ராஜ குடும்பத்தாரே காரணம்

ஹரிஜன சேவா சங்கக் கூச்சல் வீண்

"மகாத்மா" காந்தியும் ஏமாந்தார்

திருவிதாங்கூர் சட்டசபை டிப்டி பிரசிடெண்டும் பிரபல வக்கீலுமான ஸதஸ்ய திலகன் டி. கே. வேலுப் பிள்ளையவர்கள் ஹிந்துப் பத்திரிகையில் எழுதியிருப்பதாவது:—

திருவிதாங்கூர் மகாராஜா பிறப்பித்த தீண்டாதார் ஆலயப் பிரவேச பிரகடனத்தை உலகம் முழுதும் கொண்டாடுகிறது. எல்லா ஹிந்துக்களுக்கும் ஆலயப் பிரவேச உரிமை அளிப்பதுபற்றி மகா ராஜா அவர்கள் 5 வருஷங்களுக்கு முன்பே முடிவு செய்திருந்ததாக திவானே பகிரங்கமாகக் கூறியுள்ளார். இதைப் பற்றி எவரும் சந்தேகம் கொள்ளவே இல்லை.

காந்தியார் மழுப்பல்

ஆனால் காந்தியார் "ஹரிஜன்" பத்திரிகையில் பின் வருமாறு எழுதியிருக்கிறார்.

"இந்த பிரகடனம் வெகு காலத்துக்கு முன்பே பிறந்திருக்க வேண்டும். எனினும் இப்பொழுதாவது வெளி வந்தது பாராட்டத்தக்கதே. இதற்கு, திரு. சங்குண்ணி பரமேசுவரன் பிள்ளையைத் தலைவராகக் கொண்ட திருவிதாங்கூர் ஹரிஜன சேவா சங்கக் கிளையின் முயற்சியே முக்கிய காரணம்."

காந்தியார் இவ்வாறு கூறுவதற்கு தப்பெண்ணமே காரணமாக இருக்க வேண்டும். எனவே ஹரிஜன சேவா சங்கத் தலைவர் உண்மையை விளக்கிக்கூற முன் வந்திருக்க வேண்டும். ஆனால், காந்தியார் மேலே கூறிய அபிப்பிராயத்தை வெளியிட்டு மூன்று வாரங்களுக்கு மேலாகியும் அதைத் திருத்த ஹரிஜன சேவா சங்கத் தலைவர் முன்வரவில்லை. அதனாலேயே நான் இந்தக் கட்டுரை எழுத முன் வந்திருக்கிறேன்.

உண்மை என்ன?

உண்மை நிலையை அறியாமலே ஹரிஜன சேவா சங்கத்தைப் பாராட்ட காந்தியார் முன் வந்திருக்கிறார். ஒருகால் ஹரிஜன சேவா சங்க நிர்வாகிகள் அனுப்பிய தகவல்களை நம்பி காந்தியார் அவ்வாறு எழுதியிருக்க வேண்டும். கேரள ஹரிஜன சேவா சங்கம் நான்கு வருஷங்களுக்கு முன்தான் தோன்றிற்று. திரு. சங்குண்ணி பரமேசுவரன் பிள்ளை 3 வருஷங்களுக்கு முன்தான் அதன் தலைவரானார். ஈழவர்களின் ஸ்தாபனமான ஸ்ரீநாராயண தர்ம பரிபாலன யோகம் 25 வருஷ காலமாக ஆலயப் பிரவேசக் கிளர்ச்சி செய்து கொண்டு வந்திருக்கிறது. ஜாதி ஹிந்துக்களின் ஸ்தாபனங்களான நாயர் சமாஜங்களும், நம்பூதிரி யோக க்ஷேம சபையும் தீண்டாதார் ஆலயப் பிரவேசக் கிளர்ச்சியை ஆதரித்து வெகு காலமாகத் தீர்மானங்கள் நிறைவேற்றி வந்திருக்கின்றன. திருவிதாங்கூர் ஆலயப் பிரவேச விசாரணைக் கமிட்டியார் தமது முடிவுகளை 1933-ல் வெளியிட்டார்கள். அப்பொழுது தீண்டாதாருக்கு ஆலயப் பிரவேச உரிமையளிக்க வேண்டுமென்ற உணர்ச்சி ஜாதி ஹிந்துக்களுக்கு அதிகமாக இருந்து வந்தது.

ராஜ குடும்பத்தார் தூண்டுதல்

சென்ற சில வருஷங்களாக ராஜ குடும்பத்தார் தம் சொந்த நடைமுறைகளினால் வைதீகர்களான ஜாதி ஹிந்துக்களுக்குள்ளே பெரிய மன மாற்றத்தை உண்டு பண்ணி வந்திருக்கிறார்கள். மகாராஜா அரண்மனையும் ஸ்ரீ பத்மநாப சாமி ஆலயமும் இடம் பெற்றிருக்கும் கோட்டைக்குள்ளே முன் தாழ்த்தப்பட்டவர்கள் பிரவேசிப்பதில்லை. ஆனால் திருவிதாங்கூர் ராஜகுமாரியின் விவாகத்தின்போது மகாராஜாவும் அவரது தாயார் சேது பார்வதி பாய் ராணியாரும் ஒடுக்கப்பட்டோர் பிரதிநிதிகளுக்கு அழைப்பு அனுப்பினார்கள். ஒடுக்கப் பட்டோர் பிரதிநிதிகளும் விவாக வைபவங்களில் தாராளமாகக் கலந்து கொண்டார்கள். அகில இந்திய மாதர் மகாநாடு நடைபெற்ற காலத்தில், அம் மகாநாட்டுக்குத் தலைமை வகித்த சேது பார்வதி பாய் மகாராணியாரின் தூண்டுதலினால் ஒடுக்கப்பட்ட பெண்கள் உயர் ஜாதிப் பெண்களுடன் சமபந்தி போஜனம் செய்தனர். இவ்வண்ணம் மகாராஜாவும் அவரது தாயாரும் தீண்டாதவர்களை சமத்துவமாக நடத்தி வந்ததினால் வைதீகர்களுக்கிடையே மனமாற்றம் ஏற்பட்டது. இம்மாதிரி மனமாற்றம் இந்தியாவில் வேறு எங்கும் ஏற்படவேயில்லை. ராஜ குடும்பத்தாரின் நேரடியான நடக்கையினால் தீண்டாமைக்குச் சாவு மணி அடிக்கப்பட்டது. திருவிதாங்கூர் மகாராஜாவின், தாராள மனப்பான்மையுடன் கூடிய அரசியல் கொள்கையே ஒடுக்கப்பட்டோர் ஆலயப் பிரவேசப் பிரகடனத்துக்குக் காரணமாகும். எனவே இவ்விஷயமாக ஹரிஜன சேவா சங்கத்தார் பெருமை பாராட்டிக் கொள்வது எனக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது.

சீர்திருத்தத்துக்கு ஹரிஜன சேவா சங்கம் காரணமில்லை

ஆலயப்பிரவேசக் கிளர்ச்சியை ஆதரித்து ஹரிஜன சேவா சங்கம் சில பொதுக் கூட்டங்கள் நடத்தியதுண்டு. ஆனால், இக்கூட்டங்களுக்கு வைதீகர்களோ மாமூல் பிரியர்களோ சென்றதே கிடையாது. மெஜாரட்டிகளின் பலாத்காரத்தினால் மைனாரட்டிகளின் உணர்ச்சியை மாற்ற முடியாது. பிரிட்டிஷ் இந்தியாவிலும் மற்றும் சில சுதேச சமஸ்தானங்களிலும் ஹரிஜன சேவா சங்கத்தார் வேலை செய்துதான் வருகிறார்கள். காந்தியாரின் கோட்டையான அகமதாபாத் பிரதேசங்களில் கூட ஒடுக்கப்பட்டவர்களுக்கு இன்னும் ஆலயப் பிரவேசஉரிமை அளிக்கப்படவில்லை. மற்ற இடங்களில் செய்ததை விட திருவிதாங்கூரில் ஹரிஜன சேவா சங்கத்தார் அதி தீவிரமான வேலைகள் செய்யவுமில்லை, மற்றும் திருவிதாங்கூர் சீர்திருத்தத்துக்கு குருவாயூர் சத்தியாக்கிரகமோ பொதுஜன வாக்கெடுப்போ காரணமுமல்ல. அவை காரணமாயிருந்திருந்தால் மலபார் ஜில்லாவிலும் கொச்சி சமஸ்தானத்திலும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு இதற்கு முன் ஆலயப் பிரவேச உரிமையளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

சேவா சங்கப் பித்தலாட்டம்

திருவிதாங்கூர் ஹிந்து சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் இந்தச் சீர்திருத்தத்தை உலகமக்கள் எல்லாம் பாராட்ட முன் வந்திருப்பது இயற்கையே. ஆனால் இந்த வெற்றிக்குக் கர்த்தாமே காரணமென்று ஹரிஜன சேவா சங்கத்தார் கூறுவது முழு மோசடியாகும். அந்தப் பெருமையைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும் பொருட்டு ஹரிஜன சேவா சங்கத்தார் வெகு அவசரம் அவசரமாக ஒரு பாராட்டுக் கூட்டம் கூட்டினார்கள். அந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகிக்க திரு. ராஜகோபாலாச்சாரியையும் அவர்கள் அழைத்தார்கள். ஊர்வலம் நடத்தும் பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். சில தீண்டாத ஜாதிச் சிறுவர்களைக் கூட்டி திரு. ராஜகோபாலாச்சாரி தலைமையில் ஸ்ரீ பத்மநாபசாமி ஆலயத்துக்கும் அனுப்பினார்கள். பத்திரிகைகளில் பிரமாதமாக விளம்பரம் செய்யும் பொருட்டே காங்கரஸ் தலைவரான ராஜகோபாலாச்சாரியாரையும் இக் கூட்டத்தில் சேர்த்துக் கொண்டார்கள். ஹரிஜன சேவா சங்கத்துக்காகச் செலவு செய்யும் பணம் பாழாகவில்லை யென வெளியுலகம் நம்பும் பொருட்டே ஹரிஜன சேவா சங்கத்தார் இந்தத் தடபுடல்கள் எல்லாம் நடத்தியிருக்கிறார்கள். உலக மதிப்பைப் பெறுவதற்கு இது ஒரு குறுக்கு வழிதான், ஆனால் நேர்மையான யோக்கியப் பொறுப்பான வழியில்லை.

4-வது தென்னிந்திய சங்கீத மகாநாடு

சென்னை, டிச, 17

இந்திய பைன் ஆர்ட்ஸ் சொசைடியின் காரியதரிசிகள் எழுதுவதாவது:—

இந்திய பைன் ஆர்ட்ஸ் சொசைடியின் ஆதரவின் கீழ் கூட்டப்படும் மேற்படி மகாநாட்டின் திறப்புவிழா வைபவம் 1936-டிசம்பர் 24-ந்தேதி காலை 9-15 மணிக்கு ஆர்மீனியன் தெரு, கோகலே ஹாலில், கொச்சி திவான் சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியாரால் நடத்தி வைக்கப்படும். மகாநாட்டுத் தலைவராகவும், வரவேற்புக் கமிட்டித் தலைவராகவும் புரொபஸர். பி. சாம்பமூர்த்தியும், ஸ்ரீமதி அலமேலு ஜெயராமய்யரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

மதுரையில் ஜஸ்டிஸ் கட்சி தலைவர்கள்

குதூகலமான வரவேற்பு

(நமது நிருபர்)

மதுரை, டிச, 17

ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக சட்ட சபை தேர்தலுக்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதை முன்னிட்டு, ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் கனம் பொப்பிலி ராஜா அவர்களும் மூன்றாவது மந்திரி கனம் செட்டிநாட்டு குமார ராஜா அவர்களும் இன்று காலை திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் இவ்வூருக்கு விஜயம் செய்தார்கள். அவர்களை எதிர் கொண்டழைக்க பல ஜமீன்தார்களும், கட்சிப் பிரமுகர்களும், உத்தியோகஸ்தர்களும் ரெயிலடிக்கு விஜயம் செய்து மந்திரிகளுக்கு மாலை இட்டார்கள். கோவில் விருதுகளும் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்திருந்தன.

பகல் 10-30-மணிக்கு போடி பங்களாவில் ஜஸ்டிஸ் கட்சி கூட்டம் கூடிற்று. அக்கூட்டத்திற்கு கட்சி தலைவர் கனம் பொப்பிலி ராஜா தலைமை வகித்து சமீபத்தில் நடைபெறப் போகும் சட்டசபைத் தேர்தலுக்கு கட்சியின் சார்பாக பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் விஷயமாக யோசனைகள் செய்யப்பட்டு. கூட்டம் மறுநாளைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

அதுசமயம் அடியில் கண்டவர்கள் விஜயம் செய்திருந்தார்கள் இராமநாதபுரம் ராஜா, மூன்று மந்திரிகள், எட்டயாபுரம் ராஜா, சேத்தூர், வடகரை, கடலூர், கொல்லபட்டி, செய்க்காரபட்டி முதலிய பல ஜமீன்தார்கள், ராவ்சாஹிப் எ. என். அழகண்ணன் செட்டியார், திவான் பகதூர் முருகப்ப செட்டியார், ராவ் பகதூர் முத்து செட்டியார், திருவாளர்கள்: டபிள்யூ. பி. எ. சௌந்திர பாண்டியன், சந்தனக் கவுண்டர், இ. மா. கோபால கிருஷ்ண கோன், பி. டி. தேவர், திரு. கிருஷ்ண நாயுடு, வி. வி. வி. டி. வெங்கடாசலம் செட்டியார், வி. வி. ராமசாமி, ராவ்பகதூர் செந்திக்குமார நாடார், ஆர். எஸ். நாயுடு, பழனிக் கவுண்டர், ஐ. வி. சங்கரன் பிள்ளை, தளவாய் ரெங்கநாத முதலியார், சொ. முருகப்பா, அருணாசலம் செட்டியார், கொண்டல் நாயுடு, அப்துல் வஹாப் சாகிப், எஸ். எ. ரெங்கசாமி செட்டியார், ஈ. வெ. ராமசாமி முதலிய பல பிரமுகர்கள்.

புரட்சி! புரட்சி!!
வர்த்தக புரட்சி!!!

சென்னைக்கு அடுத்த மதுரை நகரிலும், ஜில்லாவிலும் வியாபாரம், சினிமா சம்பந்தமான வால் போஸ்டர்கள், துண்டுப் பிரசுரங்கள், நீடித்த கால விளம்பர போர்டுகள், விசேஷ உற்சவ காலங்களில் ஸ்பெஷல் விளம்பரங்கள், பிரிண்டிங், சித்திர போஸ்டர்கள் முதலியவைகள் எங்கள் நேர் பார்வையிலேயே தேர்ந்த வேலைபாட்களைக் கொண்டு நூதன முறையில் குறைந்த சார்ஜில் அச்சிட்டு பிறர் மனதைக் கவரக்கூடிய வண்ணம் விளம்பரங்கள் செய்து கொடுத்து வருகிறோம்.

ஒருமுறை எமது கம்பெனி மூலமாய் உங்கள் விளம்பரங்களைக் கொடுத்து பரீக்ஷித்துப் பாருங்கள்--அதிசயமடைவீர்கள்.

விபரங்களுக்கு
உடனே கடிதம் எழுதுக.
ஆனந்தா அட்வர்டைஸிங் ஏஜன்ஸி,
தெற்கு வாசல், மதுரை. S. I.

பொங்கல்! பொங்கல்!!

அசல் பட்டுப் புடவை

அழகிய சிறு ஜரிகைக் கரை, அசல் பட்டு. சிகப்பு, அரக்கு பளு, பச்சை, ஸ்கை முதலிய கலர்களில் கிடைக்கும்.

12-முழம் x 44"	புடவை 1-க்கு விலை	ரூ. 5-12—0
16-முழம் x 44"	புடவை 1-க்கு விலை	ரூ. 7—8—0
18-முழம் x 44"	புடவை 1-க்கு விலை	ரூ. 8—8—0
5-முழம் x 44"	அங்க வஸ்திரம் 1-க்கு	ரூ. 3—8—0

வெண்பட்டு அங்க வஸ்திரம்

5 முழம் x 44" அழகிய கரைகள் சவைக்கு சேர்த்தியானது, விலை ரூ. 1—12—0-தான்.

☞ இந்த விலைகள் 15—1—37 பொங்கல் வரை தான். ஞாபகத்தில் வையுங்கள். உடனே ஆர்டரை அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
(Proprietors : Sundarams Ltd.,)
சில்க் அவுஸ், காசி.

ஜஸ்டிஸ் பொதுக் கூட்டம்

சொன்ன சொற்படி நடப்பது நீதிக் கட்சியே!

சூது செய்து ஏய்ப்பது காங்கரசேயாகும்

ஈ. வெ. ரா. அவர்களின் வீர கர்ஜனை

குருவிகுளம், டிச, 14

குருவிகுளம் மாஜி ஜமீன்தார் பி. என். கொண்டல்ராய சுவாமி நாயுடு காரு அவர்களின் 7-வது பிரிவு விழா கொண்டாட்ட வைபவத்தின் பொருட்டு நடந்த கூட்டத்திற்கு, கிராம வாசிகள் அழைப்பிற்கிணங்கி தோழர் ஈ. வெ. ராமசாமிப் பெரியார் விஜயம் செய்திருந்தார். கூட்டத்திற்கு பல பாகங்களி லிருந்தும் சுமார் 2000 ஜனங்கள் வரை வந்திருந்தனர். இந்தக் கூட்டத்திற்கு தலைமை வகித்த இளையரசேனந்தல் முதல் பாகம் ஜமீன்தார் அவர்களும் தோழர் ஈ. வெ. ரா. அவர்களும் மேள வாத்தியத்துடன் கூட்டத்திற்கு அழைத்து வரப்பட்டார்கள். அப்போது குருவிகுளம் நகர் வாசிகளின் சார்பாக சபைத் தலைவர் அவர்களுக்கும், நம் சுயமரியாதை இயக்கத் தலைவர் தோழர் ஈ. வெ. ரா. அவர்களுக்கும் யூனியன் போர்டு தலைவர் திரு கிருஷ்ணபிள்ளை அவர்களால் வரவேற்பு உபசாரப் பத்திரங்கள் வாசித்துகொடுக்கப்பட்டன. பின் தலைவர் வரவேற்பு பத்திரத்திற்கு பதில் கூறி, தோழர் ஈ. வெ. ரா. அவர்களை கூட்டத்திற்கு அறிமுகம் செய்து வைத்து, அரசியல் நிலையும், சமூக சீர்திருத்தமும் என்பது பற்றி பேசும்படி கேட்டுக்கொண்டார். பின் தோழர் ஈ. வெ. ரா. பேசியதின் சாராம்சமாவது; தோழர்களே? ஜாதி மத புராணங்கள் ஒழிய வேண்டுமென்று கூறுகிற எனது கொள்கைக்கு நாட்டில் இருக்கும் எதிர்ப்பைப்பற்றி உங்களுக்குத்தெரியும். அப்படி யிருந்தாலும் ஆங்காங்கு பல வாலிபர்கள் வீரத்துடன் முன் வந்து சீர்திருத்தத்திற்காக பாடுபட முன் வருவது கண்டு நான் நன்றி செலுத்துகிறேன். இப்போது உலகத்தில் சீர்திருத்தமானது வெகு விரைவாக பரவி வருகிறது. நாட்டில் அரசியல் சம்பந்தப்பட்டவரை கட்சி வாதங்களும், அபிப்பிராய பேதங்களும் இருந்தாலும் கூட சீர்திருத்த விஷயத்தில் எல்லோரும் ஒரு முகமாக உழைக்க முன் வந்து கொண்டிருக்கிறார்கள் என்பது நிச்சயமாகும். சீர்திருத்தத்தின் வேகத்தினாலேயே வைதீகம் கொழுத்த திருவாங்கூர் ராஜ்யத்திலே வளர்ந்திருந்த தீண்டாமை நோயானது விலகத் தலைப்பட்டு மக்களுக்கு ஏற்பட்ட சமூக சுதந்தரத்தை வழங்கத் திருவாங்கூர் அரசர் முன் வந்து விட்டார். இதிலிருந்து நாளடைவில் நாட்டில் ஏற்பட்டு வரும் திருத்தங்களைப் புறக்கணிக்க இனிமேல் மக்களால் முடியாத தாகும். மக்களோ இன்னும் பழய மூட பழக்க வழக்கங்களை நம்பி, டாம்பீக வாழ்க்கையிலீடுபட்டு வீணாப் பணம்விரையம் செய்து கடனாளியாவதற்கு முதற் காரணம், நம்மில் பகுத்தறிவில்லாமையேயாகும். வருவாய் வராம லிருக்கிறதா? அல்லது விளையாமலிருக்கிறதா? அப்படி ஒன்றும்இல்லை இருந்தும், கடன்படவேண்டிய அவசியம் என்ன என்பது பற்றி சற்று சிந்தியுங்கள். இரண்டொரு தினக் கூலி வாங்கக்கூடிய ஏழை நாட்டில் ஒருவருக்கு கலியாணத்திற்கு 1000-க் கணக்கில் செலவு செய்தால் அதனால் ஏற்படும் கஷ்டம் யாருக்கு. மணமக்களை சாருகிறதென்பதை பெற்றோர்கள் உணரவேண்டும். அதேபோல், கோவில் நோம்பு விஷயமாயும் திருவிழாக்களுக்கும், பண்டிகைகளுக்கும் கண்மூடித்தனமாக வீணாய் பணத்தை செலவிடுவது போன்ற பழக்க வழக்கங்களை அறவே ஒழித்து பகுத்தறிவை பயன் படுத்தி முன்னேறவேண்டுமென்று பேசியபின் அரசியலைப் பற்றி ஈ. வெ. ரா. பேசியதின் சாராம்சமாவது.

தோழர்களே! அரசியல் என்பது ஓர் பெரிய விஷயமாகும். அது பல கட்சிகளால் நடத்தப்பட்டு வருகிறது. அந்த கட்சிகள் எதற்காக ஏற்பட்டது? என்ன செய்கிறது? என்பதை பொது மக்கள் உணர்ந்து நடக்க வேண்டியவர்களாகிறார்கள். சுமார் 50 வருடத்திற்கு முன் சர்க்கார் உத்தியோகங்களையும் பதவிகளையும், தனி மனிதர்களே தங்கள் பொறுப்பில் அடைந்து வந்தார்கள். இப்போது அதே உத்தியோகங்களை கட்சியின் பேரால் ஒரு கூட்டத்தினரே பெற முயற்சிக்கிறார்கள். அப்படி முயற்சிப்பவர்களில், காங்கரஸ், ஜஸ்டிஸ், ஜன நாயகம் என்பன போன்ற கட்சிகள் கிளம்பி உள்ளன. இந்தக் கட்சிகள் ஒவ்வொன்றும் என்னேனத்திற்காக ஆரம்பிக்கப்பட்டது, என்ன செய்து வருகிறது என்பதை பொது மக்கள் உணர்வதற்கு முயற்சிக்க வேண்டும். காங்கரஸ் ஏற்பட்டதின் முதல் நோக்கம், சர்க்கார் உத்தியோகம் பெறுவதற்காகவே சர்க்கார் தாசர்களால் ஆரம்பிக்கப்பட்டு, அதன் மூலம் உத்தியோகம் பெற்று வந்தார்கள். அந்த உத்தியோகங்களை ஒரு பார்ப்பன வகுப்பினர்களே அநுபவித்து வந்ததால், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் சர்க்காரிடம் சென்று முறையிட்டு எங்களுக்கு தனியான விகிதாசாரப்படி உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தார்கள். அதன் பின் நாளடைவில் காங்கரஸின் பெயரால் சகல உத்தியோகங்களையும் பார்ப்பனர்களே அநுபவிக்க முற்பட்டதால், ஜஸ்டிஸ் கட்சி என்று பார்ப்பனரல்லாதார் கட்சி ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலமாக பார்ப்பன ரல்லாதார் உத்தியோகம் பெற ஏற்பாடு செய்யவே, காங்கரஸ் இட்டமும் படிப்படியாக மாறுபட்டு வந்தது. ஜெம்ஸ் போர்டு சீர்திருத்தம்வரவே, மந்திரிபதவிகளையும் மற்றும் உத்தியோகங்களையும் காங்கரஸின் பெயரால் பார்ப்பனர் பெறமுடியாதபடி ஜஸ்டிஸ் கட்சியார் கைப்பற்றவே, காங்கரஸின் பெயரால் ஒத்துழையாமை என்றும், சட்ட மறுப்பு என்றும் கூறி சட்டசபை, உத்தியோகம், பள்ளிக்கூடம் முதலியவைகளைப் பகிஷ்கரித்தபோதிலும், காங்கரஸ்காரர்கள் பூரண சுயராஜ்யமே லட்சியம் என்ற காலத்திலும் ஜஸ்டிஸ் கட்சியார் குடியேற்ற நாட்டு அந்தஸ்தும், ஒத்துழைப்புமே நம ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கை என்றபடி இன்றும் ஜஸ்டிஸ் கட்சியார் அதே நிலையில் தமக்குக் கிடைத்த அதிகாரத்தைக் கொண்டு அதற்கு மேற்பட்ட நன்மைகளை ஜனங்களுக்குச் செய்து வருகிறார்கள். காங்கரஸ்காரர்கள் பூரண சுயராஜ்யத்தின் பேரில் ஒத்துழையாமை என்ற நிலைமையை விட்டு, இப்போது ஜஸ்டிஸ் கட்சியின் இட்டத்தின்படி, அதுவும் மாஜி தமிழ்நாடு காங்கரஸ் தலைவர் ஆனமலை ஐரோப்பியர் சங்கத்தில் பேசியதை அநுசரித்தும், சர்க்காருடன் ஒத்துழைக்கப் போவதாக கூறி வருகிறார்கள். இதிலிருந்து ஜனங்களிடம் சொன்ன சொற்படி நடப்பவர்கள் யார் என்பதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். ஆகையால், தோழர்களே! நீங்கள் இந்தக் காங்கரஸ்காரர்களின் வீண் கூச்சலில் மயங்கி விடாது உங்கள் வாக்கு சுதந்திரத்தை (பகுத்தறிவு கொண்டு பார்த்தறிந்து) நல்ல முறையில் பயன்படுத்த வேண்டுமென்று தெரிவித்து, முடிவுரையாக கழுகுமலை ஆள்வார்சாமி அவர்கள் கேட்டிருந்த கேள்விகளுக்கும் சீரிய முறையில் செவ்வனே பதிலிறுத்தார். பின் தலைவர் முடிவுரையாக அமைதியாகக் கேட்டிருந்த கூட்டத்திற்கு நன்றி செலுத்துவதாகவும், ஈ. வெ. ரா. அவர்களின் சொற்பொழிவை நாம் ஒவ்வொருவரும் நடைமுறையில் கொண்டு வர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள். பின் திரு. ஆள்வார்சாமி அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டுக் கூட்டம் கலைந்தது.

கூட்டத்திற்கு முக்கியமாக இளையரசனேந்தல் என். கொண்டல் ராயஸ்வாமி நாயுடுகாரும், கம்பா என். செங்கசாமி நாயுடுவும், திருவேங்கடம் கல்யாணசுந்தரம் ஐயரும், ஸ்ரீவில்லிபுத்தூர் முத்தசாமி தேவரும் மற்றும் பல பிரபலஸ்தர்களும் விஜயம் செய்திருந்தனர்.

அரசியலைக் கவிழ்ப்பது சாத்தியமல்ல!

சீர்திருத்த அம்சமான சட்டசபைகள் மூலம் சீர்திருத்தத்தை அழிக்கவே முடியாது

காங்கரசுக்கு இதர கட்சிகளை ஒழிக்கவும் சக்தியில்லை

ஆகவே சமஷ்டி முறையே சிறந்தது

திரு. வி. ஆர். ரெட்டி சாட்டை

சென்னைச் சட்டசபை காங்கரஸ் கட்சித் தலைவர் திரு. வி. ஆர் ரெட்டி சென்னை "மெயில்" பத்திரிகையில் எழுதி யிருக்கும் ஒரு அழகிய 'கட்டுரையின் சாராம்சம் பின் வருமாறு:-

பதவி யேற்பது நமது ஜீவித லக்ஷியமல்ல; ஆனால், அது நமது லக்ஷியத்தைக் கைவல்லியப் படுத்துவதற்கு ஒரு மார்க்கம்.

சட்டசபை அதிகாரத்துக்கு உட்பட்ட வரிவிதிப்பு, ஸ்தல ஸ்தாபனங்கள், முதலிய துறைகளில் தேச முன்னேற்றத்துக்கான சீர்திருத்தங்கள் செய்யும் எந்தக் கட்சியும் தனியாகவோ இதர கட்சிகளுடன் சேர்ந்தோ பதவி ஏற்கத்தான் செய்யும்.

நாட்டுக்கு இப்பொழுதே பூரண சுதந்தரத்தைப் பெற்று விடவேண்டுமென்று விரும்பும் கட்சிகளுக்கு சட்டசபைப் பிரவேசம் அவ்வளவு நல்ல பலனை யளியாது.

ஏனெனில், ஒரு சர்க்கார் அமைந்த சட்ட சபைகள் மூலம் எந்த தேசமும் சுதந்தரம் பெற்றது கிடையாது; அம்மட்டோ! சுதந்தரம் பெற அச்சட்ட சபைகளை ஒரு கருவியாக உபயோகிக்கவும் முடியாது.

காங்கரசுக்குச் சோர்வு ஏற்பட்ட காலத்திலேயே சட்ட சபைப் பிரவேசம் தீர்மானிக்கப்பட்டது. காங்கரஸ் வலிமையுடையதா யிருந்த போது சட்டசபைப் பிரவேசம் தீர்மானிக்கப் படவில்லை.

காங்கரஸ் வலிமை யுடையதாக இருந்த காலத்து சாதிக்க முடியாத ஒன்றை களைப்படைந்த பிறகு அதற்கு சாதிக்க முடியாது. போர்க்கள வெற்றிக்கு வெடி குண்டு உதவியா யிருப்பது போல மக்களின் மனப்போக்கை யறிய தேர்தல் உதவியாக இருக்கக் கூடும்.

ஆனால், தேர்தல் வெற்றியினால் மட்டும் எதையும் சாதிக்கமுடியாது. தேர்தலில் வெற்றி பெறும் கட்சிக்கு பொதுஜன ஆதரவும் இதர சக்திகளும் இருந்தால் தான் அரசியலில் வெற்றி பெற முடியும்.

தேர்தலில் வெற்றி பெறுவது, தமது துக்கத்தைத் தெரிவிக்க ஜனங்கள் கூட்டம் கூடி அழுவதற்கே ஒப்பாகும். தமது உரிமைகளுக்காகப் போராட சக்தியில்லாமல் கூட்டம் போட்டு அழுவதினால் பலன் ஏற்படுமா?

சீர்திருத்த உடைப்பு "ஹம்பக்" பேச்சு

காங்கரஸ் காரரில் சிலர் சீர்திருத்தத்தைக் கவிழ்த்து விட வேண்டுமென்று கூறுகிறார்கள். அதைக் கவிழ்க்காவிட்டால் அதைவிட மேலான சீர்திருத்தம் ஒன்றைப் பெற ஜனங்களுக்குத் தூண்டுதல் ஏற்படாதாம்.

சீர்திருத்தத்தைக் கவிழ்த்து விட்டால் சர்க்கார் நம்மிடம் ராஜி பேச வருவார்களாம். அல்லது பிரதிநிதித்துவ சபை கூடி நமது அரசியலை நாமாகவே வகுத்துக் கொள்ளலாமாம்.

மந்திரி சபையைக் கவிழ்த்து விட்டால் சர்க்கார் நம்மிடம் ஸமரஸம் செய்து கொள்ள வருவார்கள் என்று தேசபந்து தாசரும் அவரது சகாக்களும் கூறினார்கள்.

ஆனால், மந்திரிமார் சர்க்கார் அல்ல; சர்க்காரின் முக்கிய அம்சமுமல்ல என அப்பொழுதே மாறுதல வேண்டாதார் சுட்டிக் காட்டினார்கள். மந்திரி சபையைக் கவிழ்த்தல் அரசியலைக் கவிழ்ப்பதாகாதென்றும் தெரிவித்தார்கள்.

வரப்போகும் சீர்திருத்தத்தைப் பொறுத்த வரையில் அந்த அபிப்பிராயம் பொருத்தமாகவே இருக்கிறது.

வரவு செலவுத் திட்டத்தைக் கவிழ்த்துப் பார்த்தோம்; மானியங்களை மறுத்துப் பார்த்தோம். ஆதலால் நமக்குக் கிடைத்த சட்டசபை வெற்றிகளினால் அரசியல் ஸ்தம்பிக்கவுமில்லை; நாடு சுதந்தரம் பெறவுமில்லை.

மந்திரி சபை இயங்காமல் முட்டுக் கட்டை போடுவதினால் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்குத் தடை ஏற்படாது. ஏனெனில், அரசியல் அமைப்பின்படி கவர்னர்களுக்கும் வைஸ்ராய்க்கும் ஏராளமான விசேஷாதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. மற்றும் அரசியல் சட்டத்தில் ஏராளமான பாதுகாப்புகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, சட்டசபைக்குள் புகுந்து அரசியலைக் கவிழ்க்கவே முடியாது.

அரசியலைக் கவிழ்ப்பது அரசியல் அமைப்புக்குப் புறம்பான வேலை; ஆகவே, அரசியல் அமைப்புக்குப் புறம்பான முறைகளினால்தான் அரசியலைக் கவிழ்க்க முடியும். அதாவது, பலாத்காரமான அல்லது சாத்விகமான கோடியான போரினால்தான் அரசியலைக் கவிழ்க்க முடியும்; அல்லது எல்லாக் கட்சியாரும் சேர்ந்து கொண்டு வேலை செய்வதினாலும் அரசியலைக் கவிழ்க்கலாம். எல்லாக் கட்சியாரும் சேர்ந்து கொண்டால் பிரிட்டன் இணங்கித்தான் தீரவேண்டும்.

எகிப்து வெற்றி

எகிப்திலே எல்லாக் கட்சியாரும் சேர்ந்து கொண்டு இரத்தம் சிந்தாமலே சுதந்தரம் பெற்று விட்டனர். ஆனால், எகிப்திலே இந்தியாவில் இருப்பது போன்ற ஜாதிப் பிளவுகள் இல்லை. எகிப்தில் எல்லாப்புற நிலைமையும் எகிப்துக்கு அனுகூலமானது. மற்றும் தேசியத்தோடு அபேதவாதத்தையும் கலந்து எகிப்தியர் அரசியலைக் குழப்பவில்லை. இருந்தாலும் இந்தியாவிலுள்ள முக்கிய அரசியல் கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து தேசிய உரிமைகளை வற்புறுத்தி ஒற்றுமையுடன் வேலை செய்தால் வெற்றி உண்டாவது நிச்சயம்.

அழிவு வேலைக்காரர் கடமை

சட்டசபை மூலம் அரசியலைக் கவிழ்ப்பது சாத்தியமில்லையானால் அழிவு வேலைக்காரர் ஒன்றில் சட்டசபைப் பிரவேசத்தைக் கைவிடவேண்டும். அல்லது சட்டசபைக்குச் சென்று, நாட்டை சுயராஜ்யத்துக்குப் பக்குவப்படுத்துவதற்குத் தேவையான அரசியல் சீர்திருத்த வேலைகளைச் செய்ய முயல வேண்டும். அத்தகைய சீர்திருத்த வேலைகளையும் கவர்னர் ஒருகால் தடுக்கக் கூடும். ஏனெனில், வரப்போகும் அரசியல் மூலம் தேசைப் புரட்டான சீர்திருத்தங்கள் செய்ய முடியாது. உத்தியோகம் ஏற்க கட்டுப்பாடான கட்சிகள் இருந்து வரும் வரை கட்சிகளுக்குள் பிளவை உண்டுபண்ணி, சர்க்காருக்கு ஆதரவு தேட கவர்னர் முயற்சி செய்யத்தான் செய்வார். எனவே, தமக்குச் சொந்த பலமில்லா விட்டால் இதர கட்சிகளையும் சேர்த்துக் கொண்டு காங்கரஸ்காரர் தமது சக்தியைப் பெருக்கவேண்டியது அவசியமாகும்.

அவ்வாறு செய்தால் ஏனையோர் மந்திரி சபை ஸ்தாபிக்க இடமேற்படாது போய்விடும். அதிகப் படியான சீர்திருத்தம் செய்ய சௌகரியம் செய்துகொள்ளும் பொருட்டு மெஜாரட்டி பலமுடைய கட்சிகளும் கூட இதர கட்சிகளின் உதவியை மறுக்கமாட்டா.

சூழ்ச்சி வேண்டாம்

பிற்போக்காரும், புரட்சிக்காரரும், அபேதவாதிகளும், பொதுவுடைமைக்காரரும். அரசியலைக் கைப்பற்றுவதைத் தடுப்பதற்காக காங்கரஸ்காரர் மந்திரி பதவிகளைக் கைப்பற்றித் தீரவேண்டுமென்று காங்கரஸ்காரரில் சிலர் கூறுகிறார்கள். அது ஒரு நல்ல வழிதான். ஆனால், அது அரசியலைக் கவிழ்ப்பதாகாது. மற்றும் இந்த நோக்கத்துடன் ஒரு கட்சி மந்திரிசபை அமைக்குமானால் கவர்னர் அவர்களுக்கு எதிரிடையாக நடக்கும் காலத்திலும்கூட அந்த மந்திரிமார் ராஜீநாமாச் செய்யமாட்டார்கள். ஏனெனில், ராஜீநாமாச் செய்தால் மற்றவர்கள் மந்திரிகளாகி விடுவார்கள் என்று அவர்கள் பயந்துகொண்டு இருப்பார்கள். மற்றும், தேச விடுதலையை நோக்கமாகக் கொள்ளாமல் மற்றக் கட்சியார் மந்திரிகளாவதற்கு முட்டுக்கட்டை போடுவதை முக்கியமான நோக்கமாகக் கொண்டவர்கள் கவர்னர் தயவைப்பெற போட்டி போட்டுக்கொண்டுதா னிருப்பார்கள். ஆகவே, அந்த மனப்பான்மை மிக மோசமானது. திட்டமான வேலைத் திட்டங்களுடனேயே அரசியல் கட்சிகள் சட்டசபைக்குச் செல்ல வேண்டும்.

சாசுவத எதிர்ப்பு சாத்தியமா?

பதவி மறுப்பதென்பதை இரண்டு விதமாக வியாக்கியானம் செய்யலாம். (1) நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ ஒரு பொழுதும் பதவி ஏற்காது இருப்பது. அதாவது எப்பொழுதும் எதிர் கட்சியிலேயே இருப்பது. இவ்வண்ணம் எக்காலும் எதிர்கட்சியி லிருப்பதினால் எத்தகைய நன்மையையும் ஏற்படாது. சாசுவத மந்திரி சபை எப்படி பொறுப்புடைய மந்திரி சபை யாகாதோ அப்படியே சாசுவத எதிர்ப்பும் பொறுப்புடைய எதிர்ப்பு ஆகாது. கவிழ்க்க முடியாத சாசுவத மந்திரி சபை நாளுக்கு நாள் வலுப் பெற்றுக் கொண்டே இருக்கும் மந்திரி சபை வலுப்பெற, வலுப்பெற எதிர் கட்சி வலிவிழந்து கொண்டிருக்கும். சந்தர்ப்பம் வாய்க்கும் போது பதவி ஏற்கத் தயங்கும் எதிர்ப்புக் கட்சியினால் பலனே இல்லை.

மற்றும், நேர் முகமாகவோ, மறைமுகமாகவோ பதவி ஏற்க மறுப்பது ஸ்திர மந்திரிசபையை ஆதரிப்பதாகவே முடியும். ஸ்திர மந்திரிசபை ஏற்படாமல் பொறுப்புடையவர்களுக்கு சக்தியிருக்காது, சக்தியுடையவர்களுக்கும் பொறுப்பு இருக்காது. அதனாலே அரசியல் வாழ்வே சீரழிந்துவிடும்.

பதவி இன்றியமையாதது

சட்டசபைகளினாலோ மந்திரி பதவி ஏற்பதினாலோ புரட்சிகளை ஏற்படுத்தமுடியாதென்பதே எனது திடமான அபிப்பிராயம். ஆனால், தேச முன்னேற்றத்துக்காக ஓரளவு பரிணும வேலைகள் செய்ய முடியும். தேச ஒற்றுமையை உண்டுபண்ணி எதிர்கால பலத்தை வளப்பதற்கு சமஷ்டி மந்திரி சபைகளும் ஒரு கருவியாகும். நமது நாட்டினர் தற்கால நிலைமையில் சமஷ்டி மந்திரி சபைகளை அலட்சியம் செய்ய முடியாது. முக்கிய கட்சிகள் எல்லாம் ஐக்யப்பட்டால் அதிகப்படியான சீர்திருத்தங்கள் செய்யலாம். காங்கரசுக்கு மற்றக் கட்சிகளை யெல்லாம் ஒழித்துவிட்டு சுயபலத்தை விருத்தி செய்து கொள்ள முடியவே முடியாது. இந்நிலையில் ஏனைய கட்சிகளுடன் ஒத்துழைப்பதே சிறந்தது.

காங்கரஸ் மகாசபை தலைவர்கள் கவனிப்பார்களா?

திருக்கோவிலூர், டிச, 17

வரப்போகும் சட்டசபை எலக்ஷனில் முஸ்லீம் தொகுதிக்கு சென்னை மாகாணத்தில் முஸ்லீம்கள் ஒரே கட்சியாக இருந்திருக்கலாம். தெய்வாதீனமாக முஸ்லீம்களுக்குள் முஸ்லிம் லீக் என்றும், முஸ்லீம் முன்னேற்றக் கட்சி என்றும் இருவகை கட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. மூன்றாவதாக காங்கரஸ் சார்பாக முஸ்லீம் தொகுதிக்கு முஸ்லீம்களை நிறுத்தாமலிருப்பது ஒழிந்து முஸ்லீம் ஒற்றுமைக்கும், காங்கரஸ் மகாசபைக்கும் கண்ணியமாகும். அப்படி போட்டி போடுவதாக இருந்தால் முஸ்லீம்களுக்குள் பிளவுபட்டு சிரமங்களும் விரோதங்களும் ஏற்படுவதுடன் ஒழிந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு விரோதமாக முடியுமென்பது காங்கரஸ் மகாசபைத் தலைவர்களுக்கு தெரியாததன்று. காங்கரஸ் முஸ்லீம்களும் ஏனைய முஸ்லீம்களுடன் சேர்ந்து முஸ்லீம்களின் பெயரால் நிற்கட்டும். இல்லாவிடில் பொது தொகுதியில் முஸ்லீம்களை நிறுத்தி காங்கரஸ் சபையால் எத்தனை அதிகம் ஸ்தானம் கொடுத்து கவர்மெண்டை விட நாங்கள் இத்தனை ஸ்தானம் விட்டுக் கொடுத்தோம், என்று காண்பிப்பது நன்று. அம்மாதிரி விட்டுக்கொடுக்க முடியாவிடில் முஸ்லீம்களுக்குள் எப்படியாவது போகட்டு மென்று காங்கரஸ் நடுநிலை வகிப்பதே போற்றத் தக்க முறை. ஆகையால் தலைவர்கள் கவனித்து முஸ்லீம்களுக்கு போட்டி போடாமலிருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வே. வு. மம்மு சாஹிப்.

10,000 பிரதிகள் அச்சிடப்பட்டு வெளிவருகிறது!

'ஸிட்டி கெஜட்'
1937-ம் வருட மலர்

தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களால் இலக்கியம், நாவல், சரித்திரம், அரசியல், சினிமா விமர்சனம், ஸ்தல ஸ்தாபனங்கள், கூட்டுறவு இயக்கம், தொழிலாளர் இயக்கம் இவைகளைப் பற்றி எழுதிய கட்டுரைகளும், பிரபல தலைவர்கள், சினிமா நடிகர்கள், பொது ஸ்தல சிறப்பு போட்டோக்களுடன் அழகிய பல கலர் மைகளால் அச்சிடப்பெற்று 200 பக்கங்களுக்கு அதிகமாக 'ஸிட்டி கெஜட்' 1937-ம் வருட மலர் கிரவுன் 1 x 4 சைசில் வெளிவருகிறது. விற்பனைக்கு ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர்:—'ஸிட்டி கேஜட்',
197, கீழவெளி வீதி,
மதுரை.

மேலத் தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் தேர்தல்

அர்த்த இராத்திரியில் பேசிய பேரத்துக்கு அடிமைப் பட்ட அட்ஹாக் கமிட்டி !!

பட்டுக்கோட்டை நாடிமுத்துப் பிள்ளைக்கு மீண்டும் தலைமைப் பதவியா?

காங்கரசை அடுத்துக் கெடுக்கும் நாடிமுத்து

(தேசபக்தன்)

மேலத் தஞ்சை ஜில்லா போர்டுக்கு தேர்தெடுக்கப் பட்டிருக்கும் காங்கரஸ் அங்கத்தினர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் அசாத்தியமான பொறுப்பு சுமத்தப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் விசேஷமாக கவனிக்கவேண்டிய பல முக்கிய சம்பவங்கள் தற்போது ஏற்பட்டிருப்பதை கவனிக்க வேண்டும். மேற்படி போர்டின் தலைவர் தேர்தலுக்கு வருகிற 22-ந் தேதி நாள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்ற 12-ந் தேதி தஞ்சையில் கூடிய காங்கரஸ் அட்ஹாக் கமிட்டி ஏற்கனவே மேற்படி ஜில்லா போர்டுக்கு தலைவராக இருந்த பட்டுக்கோட்டை கனம் ஏ. பி. எல். என். வி. நாடிமுத்து பிள்ளை அவர்களையே மீண்டும் நியமித்திருக்கிறது. இக் கமிட்டிக் கூட்டத்திற்கு சில காங்கரஸ் அங்கத்தினர்கள் விஜயம் செய்ய வில்லை. ஜன நாயகத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கும் காங்கரஸ் அட்ஹாக் கமிட்டியின் இந்த செய்கை உள்ளபடியே காங்கரஸ் அப்பனுக்கு பிறந்த அங்கத்தினர்களை புண்படுத்தாமலிருக்க முடியாது. பிரஸ்தாப தலைவர் தேர்தல் விஷயத்தில் அட்ஹாக் கமிட்டிக்கு சர்வாதிகாரம் புரியும் ஒரு சில காங்கரஸ் சுய நலமிகளின் நோக்கத்தை பூர்த்தி செய்துகொண்டதாக இருக்கிறதே ஒழிய ஸ்தாபனத்தின் கௌரவத்தை காப்பாற்றுவதாய் இல்லை. அன்று நடந்த அட்ஹாக் கமிட்டியின் முடிவு அங்கு விஜயம் செய்திருந்த சிலருக்குப் பிடிக்க வில்லை. சுயநலமே யுருவாயமைந்த சத்தியமூர்த்தியின் இழிவான,கேவலமான செய்கையே திருநெல்வேலி, திருச்சி, தென்னார்க்காடு ஜில்லா, வேலூர், திருவண்ணாமலை இந்த ஜில்லா போர்டு, முனிசிபாலிடிகளில் புனிதமான காங்கரஸ் கொள்கைகள், சுயவாளித்தனமாக மாறியதற்கு மூல காரணம் சுயநலமில்லாமல் காங்கரஸ் கொள்கைக்கு முரண் இல்லாத நேர்மையான பாதையில் சகல விஷயங்களும் சென்றிருந்தால் ஸ்தல ஸ்தாபனங்களில் இன்று ஏற்பட்டிருக்கும் கேவல நிலைமை ஏற்பட்டிருக்காது. இந்த போர்டுகளில் காங்கரஸ் மெஜாரடியாயிருந்தும் முடிவில் எக்கதி அடைந்ததென்பதை மேலத் தஞ்சை ஜில்லா போர்டுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் காங்கரஸ் அங்கத்தினர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும். அட்ஹாக் கமிட்டியார், எலக்ஷனில் காங்கரஸ் இறங்கிய ஆரம்பத்தினத்திலிருந்தே சுயநலத்தை குறியாகக் கொண்டு மகத்தான தவறுதலை செய்து யிருக்கிறது. திருநெல்வேலியில் புதிதாக ஒருவரை ஸ்வீகாரம் செய்து ஜில்லா போர்டு தலைமைப் பட்டத்தை முடிசூட்டி வைத்த ஒரு பாவமே கவர்னருக்கு வரவேற்புப் பத்திரம் படித்துக் கொடுக்கும் நிலைக்கு வந்தது. திருச்சியில் நடந்த சம்பவம் தமிழ் நாட்டு காங்கரஸ் சரித்திரத்திலேயே மிக இழிவானதாகும். அட்ஹாக் கமிட்டி ஒரு புதியவரை திருச்சி முனிசிபாலிட்டிக்கு காங்கரஸ் தலைவராக பிடிக்க செய்த சூழ்ச்சியின் முடிவு காங்கரஸ் சிருஷ்டியும், அகில இந்தியாவுக்கும் அறிமுகப் படுத்தப்பட்ட பிரபல தேசபக்தர் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் அவர்களை காங்கரஸ் இழக்கும்படி நேர்ந்தது. சிதம்பரம் முனிசிபாலிட்டிக்கு அட்ஹாக் கமிட்டி ஆள் பிடித்த யோக்கியதையும் சொல்ல வேண்டியதில்லை. முனிசிபாலிட்டிக்குச் சொந்தமான தென்னை மரங்களை கலால் குத்தகைதாரரான கனம் முத்து மாணிக்க நாடார் அவர்களுக்கு பகிரங்கமாக குத்தகைக்கு கொடுத்தார். வேலூரில் மெஜாரட்டியாக காங்கரஸ் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தும் காங்கரஸ்காரர் தலைமை பதவிக்கு வர முடியவில்லை.

ஆகவே, மேலத் தஞ்சை ஜில்லா போர்டுக்கு தன்னையே (அதாவது நாடிமுத்துப் பிள்ளை அவர்களையே) தலைவராய் தேர்ந்தெடுக்க வேண்டுமாய் திரு சத்தியமூர்த்தி அவர்களுடனும், ஒரு தமிழ் நாட்டு சர்தாருடனும் (எல்லோராலும் பரம யோக்கியர் என்று கருதப்பட்டவர்) அர்த்தராத்திரியில் பேசிய பேரம் கபடு, சூது, வாது அறியாத இதர காங்கரஸ் அங்கத்தினர்களுக்குத் தெரியாது. கனம் நாடிமுத்துப்பிள்ளை சட்ட மறுப்புகாலத்தில் இல்லை, அடி உதை பட்ட காலத்திலில்லை. சொத்து பறிகொடுத்த காலத்தில் இல்லை. காங்கரஸ் மந்திரி பதவி என்ற ஒரு ஜாடையை கடைக் கண்ணால் காண்பித்ததுதான் தாமதம் உடனே பாரத மாதாவின் ஜேஷ்ட புத்திரராக கிளம்பப் புறப்பட்டிருக்கிறார் என்பதை சொல்ல வேண்டியது இல்லை.

எதார்த்த வாதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் போர்டு அங்கத்தினர்கள் நாடிமுத்து பிள்ளையின் கபட வஞ்சகத்தை கூர்ந்து கவனிக்க வேண்டும்.

கனம் நாடிமுத்துப் பிள்ளை அவர்கள் பொது ஜனங்களை ஏமாற்றி ஓட்டு வாங்கவும் பட்டம், பதவி, பணம் பெறவும் காங்கரஸ் பெயரை பொதுவில் சொல்லிக் கொள்ள முன் வந்து இருக்கிறாரே ஒழிய. காங்கரஸ் கட்டளையிட்ட சீமை ஜவுளிக்கடை வியாபாரத்தை பட்டுக்கோட்டை கடைத்தெருவிலிருந்து இன்றும் எடுக்கவில்லை.

காங்கரஸ் அகராதியில் பஞ்சமா பாதகம் என்று கருதப்படுவதுகள் சாராயம். மக்களைக் கெடுக்கும் இந்த போதை வஸ்துக்களை வைத்து பிரபலமாக வியாபாரம் செய்யும் தஞ்சை கனம் பொன்னுசாமி நாடார் அவர்கள் பூரண ஒத்துழைப்பாலேயே காங்கரஸ் பேரால் நின்று வெற்றி பெற்றிருக்கிறார்.

தனக்கு செல்வாக்குள்ள பட்டுக்கோட்டை தாலுகாவில் தனது சகாவாக காங்கரஸ் பேரால் நிறுத்தப்பட்டிருப்பவர்களில் இருவர்கள்: தியாகராஜ சோழகர், பாலசுப்பிரமணியம் சேர்வைகாரர் என்ற இருவர்களும் பிரபலமான கள்ளுக்கடை வியாபாரிகள்.

காங்கரசில் நம்பிக்கையில்லை என்றும், இரண்டு வருஷத்திற்கு காங்கரசின் பேரால் கலந்து கொள்ளக் கூடாது என்றும் வெருட்டப்பட்ட தோழர் ஜே. என். கண்ணப்பரை, தான் நின்ற பாப்பாநாடு சரகத்தில் ஓட்டு சேர்க்கும் பிரசங்கம் புரிய சொன்னார்.

காங்கரஸ் அட்ஹாக் கமிட்டியில் கனம் நாடிமுத்துப் பிள்ளையை பட்டுக்கோட்டை தாலுகா பாப்பாநாடு சரகத்தில் நிறுத்தியிருந்தும், ஒருக்கால் பாப்பாநாடு சரகத்தில் தோற்று விட்டால் என்ன செய்வது என்ற பயத்தால் தனக்கு செல்வாக்குள்ள காவாலிப்பட்டி சரகத்திற்கும் தனிப்பட்ட முறையில் ஒரு நியமனசீட்டை தாக்கல் செய்திருந்தார். பாப்பாநாட்டில் வெற்றி பெற்றதோடு காங்கரஸ் அட்ஹாக் கமிட்டியால் நிறுத்தப்பட்ட காங்கரஸ் அபேட்சகர் வெங்கட்டராம அய்யர் அவர்களையும் தோல்வி அடையும் படி செய்திருக்கிறார். இதுகாங்கரசுக்கு செய்த மகத்தான துரோகமல்லவா!

இன்னும் காங்கரஸ் அட்ஹாக் கமிட்டியால் நியமித்தவர்கள் கனம் ஏ. கிருஷ்ணசாமி வாண்டையார்! கனம் ராமலிங்கசுவாமிகள் ஆகும். இவ்விருவர்களும் கனம் நாடிமுத்து பிள்ளை அவர்களுக்கு மேல் வெகு காலமாகவே காங்கரஸில் பங்கு கொண்டிருக்கும் தேச பக்தர்கள். இவர்கள் தனக்கு (நாடிமுத்து பிள்ளைக்கு) விரோதிகள் என்ற காரணத்திற்காக தனிப்பட்ட முறையில் காங்கரஸ் அல்லாத இவர்களை நிறுத்தி அவர்களை யொழிக்கப்பாடுபட்டார். ஆனால், அது மாத்திரம் முடியவில்லை.

தன் காரியத்திற்காக கொள்கையை காட்டிக் கொடுக்கும் கனம் நாடி முத்துப் பிள்ளை மேலே கண்ட தகாத காரியங்கள் செய்ததோடு மாத்திரம் நிற்கவில்லை.

தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் போர்டு அங்கத்தினர்களில் பலர் பழமை வாய்ந்த காங்கரஸ்காரர்கள் இருக்கிறார்கள். சிறைவாசம் புகுந்த சில தேச பக்தர்கள் இருக்கிறார்கள். காங்கரசின் இன்றைய மகத்துவத்திற்கு அடிப்படையான அடி உதை பட்ட காங்கரஸ்காரர்கள் இருக்கிறார்கள். அப்படியிருந்தும் தாமே தலைமைப் பதவிக்கு வரவேண்டும் என்று கனம் நாடிமுத்துப் பிள்ளை நினைத்ததைப் பற்றி நாம் குறை கூற வில்லை. தன் எண்ணத்தை உடன் ஒத்த எல்லா அங்கத்தினர்களுடனும் வெளிப்படையாக கலக்கலாம். அதை விட்டு விட்டு அக்கிரமமாக அட்ஹாக் கமிட்டி முக்கியஸ்தர்களை அர்த்தராத்திரி வேளையில் சரி கட்டிய சூழ்ச்சி வேலை எதற்கு? அந்த சூழ்ச்சியே யுருவாயமைந்த கனம் நாடிமுத்துப் பிள்ளை அவர்களைப் பற்றி எல்லா அங்கத்தினர்களும் மௌனம் சாதித்து காங்கரஸ் மகத்துவத்தை கெடுக்கப் போகிறார்களா?

கனம் நாடிமுத்துப் பிள்ளை அவர்களுக்கு ஏராளமான பூஸ்திதியிருக்கலாம்! ஏராளமாய் பணமிருக்கலாம்! சனம் பிள்ளைக்கிருக்கும் இத்தனை பெருமைகளுக்கும் பித்தலாட்டங்களுக்கும் காங்கரஸ் அட்ஹாக் கமிட்டி தங்களிடத்தில் அகப்பட்டுக் கொண்டதென்ற பாவத்திற்காக அடிமைப் படுத்தலாம்! ஆனால், பகுத்தறிவுள்ள தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் கனம் அங்கத்தினர்களும் அதற்கு அடிமைப்பட போகிறார்களா என்று கேட்கிறேன்?

காங்கரஸில் ஜெயிலுக்குப் போன கொடாச்சேரி தியாகராஜ பிள்ளையும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். நாச்சியார் கோவில் சுப்பையாவும் (ஏழைப் பங்காளர்) தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். கனம் கோவிந்தசாமி மூப்பனார், கனம் சிவசுப்பிரமணிய அய்யர் எம். எல். சி (குனியூர்) இருக்கிறார்கள், நல்லமுத்து நாடார் இருக்கிறார். கனம் மாணிக்கம் பிள்ளை யிருக்கிறார். கனம் தியாகராஜ சாஸ்திரிகள் என்ன? இவர்கள் எல்லோரையும் விட கனம் நாடி முத்துப் பிள்ளை அவர்கள் காங்கரஸ் கொள்கையில் எந்த அம்சத்தில் சிறந்தவர் என்று கருதுகிறீர்கள்?

இம்மாதிரியே நாடி முத்துப் பிள்ளையைப் போல காங்கரஸை அடுத்துக் கெடுக்கும் ஆசாமிகளை காங்கரஸில் சேர்த்ததாலேயே எலக்ஷன் உலகத்தில் காங்கரஸ் காலடி வைத்த இந்த குறுகின காலத்திலும் அநேக காங்கரஸ் வெற்றி பெற்ற ஜில்லா போர்டு நிர்வாகங்களும் காங்கரஸ் கட்டுப் பாடுகளும் சிதைக்கப்பட்டிருக்கின்றன என்பதை மேலத் தஞ்சை ஜில்லா போர்டு அங்கத்தினர்கள் உணரவேண்டும். இதற்கு திருநெல்வேலி, திருச்சி, தெ. ஆ. ஜில்லா, வ. ஆ. ஜில்லா, இவைகளே தக்க சான்றாகும். அந்த ஜில்லாக்கள் மாதிரி தஞ்சை ஜில்லாவையும் ஆக்கிவிடவேண்டாம்.

காங்கரஸ் அட்ஹாக் கமிட்டி கனம் நாடி முத்துப் பிள்ளை அவர்களை தேர்ந்தெடுத்து விட்டதென்று கனம் அங்கத்தினர்கள் வீண் கனவு காண வேண்டியதில்லை. அட்ஹாக் கமிட்டி தேர்ந்தெடுத்த மேலே குறிப்பிட்ட ஜில்லாக்களின் யோக்கியதையை ஞாபகப்படுத்திக் கொண்டு காங்கரஸ் மானத்தை காப்பாற்றுவதற்கு சொந்த புத்தியை கனம் அங்கத்தினர்கள் உபயோகப்படுத்தலாம். காங்கரஸ் கொள்கை என்றும் சிரஞ்சீவியாக வாழ வேண்டுமானால் சுய நலத்துக்காக முடிவு செய்யும் அட்ஹாக் கமிட்டியின் முடிவை புனராலோசனை செய்வது தான் புத்திசாலித்தனமாகும். பொய்யுடன் போர் தொடுக்க "சத்தியம்" பயப்படுவதாக சொல்லலாமா?

உலகத்தைக் கெடுப்பதன் காரிய பாபத்திற்காக போடும் பொய் வேஷந்தானே. பொய் வேஷத்தை ஒழிப்பது உத்தமர்களின் முதற் கடமையல்லவா! ஆகவே, காங்கரஸ் மகாசபைக்கு தற்சமயம் தோன்றியிருக்கும் உரம்பெற்ற உணர்ச்சியை பணம், பணம் என்ற பாஷாணத்தைக் கொடுத்து கொலை செய்ய வேண்டவே வேண்டாம்.

கனம் நாடிமுத்துப் பிள்ளை காங்கரஸ் கொள்கையைத் தான் அடுத்துக் கெடுக்கிறார் என்று குறிப்பிட்டதோடு மாத்திரமில்லை. அவருடைய கடந்த ஜில்லா போர்டு நிர்வாக திறமையையும் பரிசீலனை செய்து பார்த்தாலே ஸ்பஷ்டமாகவே உண்மை விளக்கும்.

அவருடைய கடந்த நிர்வாகத்தில் பினாமி காண்டிராக்டு ராஜ்யம் சர்வ சாதாரணமாகத் தாண்டவமாடியது. பல காண்டிராக்டுகளை ஒரே பேர்வழிக்கு கொடுத்திருக்கும் அநீதி, கப்பி சப்ளை மெயின்டெனென்ஸ் ரிப்பேர் எல்லா வேலைகளையும் ஒரே குறிப்பிட்ட ஆசாமிக்கு கொடுத்திருப்பதோடு, மதுக்கூர், முத்துப் பேட்டை, அதிராம்பட்டணம், தஞ்சை இந்த ரோடுகளுக்கு கப்பி சப்ளை செய்திருப்பதை நேரில் சென்று பாருங்கள். பிரஸ்தாப ரோடுகளில் கொட்டியிருப்பது கப்பிகளா அல்லது காவிமண்ணு என்பது தெற்றென விளங்கி விடும். இன்னும் இவை போன்றவைகள்பல உள சந்தர்ப்பம் வாய்க்கின் பின்பு எழுதுகிறேன்.

ஷெடியூல் வகுப்பார் பிரசாரக் கமிட்டி

(ஒரு நிருபர்)

நாமக்கல், டிச. 14

நாமக்கல் தாலுகா தாழ்த்தப்பட்டோர் மகாஜன சபையின் ஆதரவின் கீழ் ஷெ. சபையின் பிரசிடெண்டு திரு. எம். வி. சொக்கநாதன் தலைமையின்கீழ் 14-12-36ந் தேதி காலை 9-மணிக்குக் கூடி வரப்போகும் சென்னை அசம்பிளி ஷெடியூல் தொகுதியில் காங்கரஸ் அபேட்சகர் எம். பி. பெரியசாமிக்குப் போட்டியாக நிற்கும் தோழர்கள் ஒ. ஏ. கஞ்சப்பன், வி. கவிஞன் இவர்களுக்கு சாதகமாகப் பிரசாரம் செய்ய அடியிற் கண்டவர்கள் இக்கமிட்டிக்கு அனுப்பியிருக்கும் விண்ணப்பங்களை இச்சபை அங்கீகாரம் செய்து 25-12-36 தேதி முதல் பிரசாரத்திற்குப் போவதாக இச்சபைத் தீர்மானித்திருக்கிறது.

பிரசாரகர்கள்:— திருவாளர்கள்: ஆர். ஆறுமுகவேலு, மாஜி ஜில்லா போர்டு மெம்பர் கல்லிபாளையம்; எஸ். கந்தசாமி, ஆனரரி பெஞ்சு மாஜிஸ்டிரேட் நாமக்கல்; எம். வெள்ளைசாமி தேவேந்திர வேளாளர் கொசவம் பட்டி; வி. பழனியாண்டி, நாமக்கல்; ஏ. குழந்தை நாமக்கல் எம். காளிசாமி காரியதரிசி தாழ்த்தப் பட்டோர் மகாஜன சபா, நாமக்கல்; எம். வி. சொக்கநாதன் பிரசிடெண்டு தாழ்த்தப் பட்டோர் மகாஜன சபா நாமக்கல் மாநாடு.

குணமாகாத மூத்திர வியாதிகளுக்குப் புதிதாகக் கண்டுபிடித்திருக்கும் அற்புதமான சிகிச்சை!

வெட்டை ரோகத்திற்கு சிறந்தது!!

வெட்டைரோக கிருமிகளை கொல்லக்கூடியது!

"கோனு கில்லர்" (ரிஜிஸ்டர் செய்யப்பட்டது)

இதுதான் இப்பொழுது எடுத்த ஒளஷதம். ஆங்கில, உள்நாட்டு வைத்தியர்கள் உங்களைக் குணப்படுத்தியிராவிடில் வாக்குறுதிகளும், இன்செக்ஷனும் பலன் தராவிடில் கடைசியாகவேனும் நமது கோனு-கில்லர் என்னும் ஒளஷதத்தைப் பரீக்ஷித்துப் பாருங்கள். உங்களுக்கு வியாதி கண்டு எவ்வளவு காலமிருந்தாலும் அது குணப்படுத்தி விடும். ஸ்திரீகள், புருஷர்கள் இவர்களுக்கு ஏற்படும் மூத்திர வியாதிகளுக்கும், எல்லாவித வெட்டை நோய்களுக்கும், மூத்திரம் அதிகமாக இறங்குவதற்கும், மூத்திரம் பெய்கையில் ஏற்படும் வலியை நிவர்த்தி செய்யவும், மூத்திரப் பையில் ஏற்பட்டிருக்கும் அழற்சியைப் போக்கவும், வெட்டை வியாதிக் கிருமிகளால் ஏற்படும் வேறு பல வியாதிகளைப் போக்கவும் இது சிறந்த மருந்து. போலி மருந்துகள் வாங்காதீர்கள்! வாங்கும்போது எங்கள் கோழிமார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

சேவல் மார்க்கை பார்த்து வாங்குங்கள்.

போலிகளைப்பற்றி உஷார்!

50-மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு ரூபா. 3. வி. பி. சார்ஜு வேறு. வெளி நாட்டு வேயர்கள் ரூபா. 4—8—0 முன் பணம் அனுப்பவும்.

டாக்டர் டி. என். ஜஸானி, கிர்காம் பாக் ரோடு, பம்பாய், 4.

Dr. D. N. JASANI, Girgaum Back Road, BOMBAY, 4.

சென்னை ஏஜண்டு:—தாதா & கோ.,
நெ. 52, ஈவினியப்ப நாய்க்கன் தெரு, P. T., சென்னை.
F. M. S. & S. S. ஏஜண்டு:—N. O. A. முகம்மது இப்ராஹிம் & பிரதர்ஸ்,
நெ. 198, காலாங் ரோட், சிங்கப்பூர்,
எஸ். ஈ. காதர் மொய்தீன், சிட்டுக் குருவி மெடிகல் ஸ்டோர்.
நெ. 39. Old Butcher Street, Pettah, கொழும்பு.

"கிராம ஊழியன்"

வாரப் பதிப்பு.

ஆசிரியர் :—S. பூரணம் பிள்ளை.

கிராமப் புனருத்தாரணத்தின் பொருட்டுத் தோன்றி மாதம் இரு முறையாக வெளிவந்த "கிராம ஊழியன்" இரண்டாம் ஆண்டின் ஆரம்பமாகிய 25—10—36௳ முதல் பிரதி ஞாயிறுதோறும், நாட்டின் நலத்திற்கான நல்லோரின் கட்டுரைகள் தாங்கி எல்லோரும் போற்றும் நல்லதோர் முறையில் வெளிவருகிறது. எல்லா இடங்களிலும் ஏஜெண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதுக.

உள்நாடு : வருட சந்தா ரூ. 3. வெளிநாடு : வருட சந்தா ரூ. 5.

மானேஜர் :—"கிராம ஊழியன்",
துறையூர். (திருச்சி ஜில்லா)

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

"அறிவுக் கொடி"

ஒரு சிறந்த தமிழ் மாத வெளியீடு.

ஆசிரியர் :—ஸ்ரீமதி சாமி சிதம்பரனார்.

ஒவ்வொரு ஆங்கிலேய 15-ம் தேதியில் வெளிவருவது.

அறிவு வளர்ச்சி, மாதர் முன்னேற்றம், தமிழ் மொழி வளர்ச்சி, விஞ்ஞானம், வைத்தியம், விகடம், சங்கீதம், நாடகம், படம் காட்சி, மனதைக் கவரும் சிறு கதைகள் முதலிய சிறந்த பல விஷயங்களும், இனிய பாடல்களும் வெளிவரும்.

உள்நாடு வருட சந்தா ரூ. 1. வெளிநாடு ரூ. 1-8-0.

மானேஜர் :—"அறிவுக் கொடி" ஆபீஸ்,
462, மேலக் கடலங்குடித் தெரு, கும்பகோணம்

ஜப்பானில் தாடி வளர்ப்போர் சங்கம் ஒன்றிருக்கிறது. அச்சங்கத் தலைவரின் வயது 72.3/2 அடி நீளமுள்ள வெண்மையான தாடியை அவர் வைத்திருக்கிறார். அச்சங்கத்தின் மெம்பர்கள் தாடி உடையவர்களாயிருக்க வேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப் பட்டிருக்கிறது. வருஷத்தோறும் டோக்கியோவில் இவர்கள் மகாநாடு கூடும்.

• • •

ஒரு விட்டிற்பூச்சியின் உடலில் சுமார் 4061 தசைநார்கள் இருக்கின்றனவாம்,

சந்திரனானது பூமியைச் சுற்றும் பொழுது சமுத்திர ஜலத்தைத் தன்னிடம் இழுக்கிறது. அதனால் தான் அலைகள் உண்டாகின்றனவாம்.

• • •

கொசுவானது பறக்கும்பொழுது ஒரு விநாடிக்குள் 15 ஆயிரம் முறை சிறகுகளை அடித்துக் கொள்கிறதாம்.

• • •

நியூகினியாவில் நாயின் பற்களையே பணத்திற்குப் பதிலாக உபயோகிக்கிறார்கள்.

காங்கரஸ் தாழ்த்தப்பட்ட அபேட்சகர்

சேலம் ஜில்லாவில் நாமினேஷன் போடாததேன்?

நாமக்கல் வெங்கடாஜல ரெட்டியார் சூழ்ச்சி

சுப்பராவ் பொய் கூற்றுகளுக்குப் பதில்

திரு. எம். முத்து அறிக்கை

இராசிபுரம், டிச, 15

சேலம் ஜில்லா நாமக்கல் டிவிஷன் தாழ்த்தப்பட்டவர்களின் தொகுதிக்கு நியமிக்கப்பட்ட காங்கரஸ் அபேட்சகரான திரு. இராமசாமி தன்னுடைய நாமினேஷனைப் பதிவு செய்யாததைப் பற்றி பலவித வதந்திகள் வெளி வருகின்றன. மேற்படி ஸ்தானத்திற்கு நானும் ஒரு அபேட்சகராக நிற்பதற்கான முயற்சியைச் செய்ததால் திரு. இராமசாமியை ஏமாற்றுவதற்காக செய்யப்பட்ட சூழ்ச்சி விளக்கமாக தெரியவேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது.

திரு இராமசாமி சேலம் டவுனில் குடியிருந்து கொண்டு வருவதால் அவருக்கு சேலம் டவுனில் தான் ஓட்டு இருக்கிறது. வேறு ஒரு தொகுதியில் ஓட்டு இருந்தால் வாக்கு உள்ள தொகுதியிலுள்ள எலக்ஷன் ஆபீஸரிடமிருந்து ஓட்டை ஸ்பார்ஸ் செய்யும் சர்டிபிகேட் ஒன்றை வாங்கிக்கொண்டு நாமினேஷன் பேபருடன் அபேக்ஷகராக நிற்கும் ஒருவர் அந்த தொகுதி ரிடர்னிங் ஆபீஸரிடம் நாமினேஷன் விண்ணப்பம் கொடுத்தால் தான் மேற்படி விண்ணப்பம் சட்டப்படி செல்லும்.

நாமினேஷன் 11 மணியிலிருந்து 3 மணி வரை தான் அனுமதிக்கப்படும். திருவாளர்கள்: கே. வி. சுப்பராவும், நாமக்கல் வெங்கடாஜல ரெட்டியாரும் காங்கரஸ் அபேக்ஷகரான திரு. இராமசாமிக்கு உதவியாக இன்று பிரசன்னமாயிருந்தார்கள்.

திரு. சுப்பராவ் சிறந்த அறிவாளி. சாமர்த்தியமான வக்கீல். தாழ்த்தப்பட்டவர்க்கு மிக நெருக்கமானவர். இவருக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் உள்ள அதிக நட்பால் சிலர் அவரைப் 'பற சுப்பராவ்' என்று கூட அழைப்பதுண்டு. தாழ்த்தப்பட்டவர்களின் அரசியல் பிரச்சினைகளைப் பற்றிய முக்கியமான விஷயங்கள் திரு. சுப்பராவுக்கு முதன்மையாக தெரியவேண்டிய அவசியமிருக்கிறது.

ஆனல், அவர் திரு. இராமசாமியிடம் மேற்படி சர்டிபிகேட் வாங்கும் சங்கதி சுமார் 10-30-மணிக்குத் தெரிவித்து அவரை திரு. வெங்கடாஜல ரெட்டியாருடைய காரில் சேலத்திற்கு சர்டிபிகேட் வாங்கிவர அனுப்பினார். ரெட்டியாருடைய கார் மிகவும் மோசமாயிருந்தால் திரு இராமசாமி வேறு ஒரு நல்ல கார் வேண்டுமென்று வற்புறுத்தியும் அவர்கள் கேட்காமையால் திரு. ரெட்டியாருடைய காரிலேயே போக வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இதற்குப் பிறகு, திரு. சுப்பராவும், ரெட்டியாரும் செய்த காங்கரஸ் வேலைகள் மிகவும் விசித்திரமானவை. திரு. இராமசாமியை சேலத்திற்கு அனுப்பி விட்டதும், ஜனநாயகக் கட்சியின் சார்பாக நாமினேஷன் போட வந்திருந்த மோகனூர் பெரியசாமி என்பவரை தனியாகக் கூப்பிட்டு திரு. சுப்பராவ் அவரது நாமினேஷன் பாரத்தைத்தானே பூர்த்திசெய்து அவரை 11-மணிக்கு முதன் முதலாக நாமினேஷன் போடும்படி செய்துவிட்டார். திரு. சுப்பராவுக்கு உண்மையில் காங்கரஸ் உத்தியோக அபேக்ஷகரான திரு. இராமசாமி வெற்றியடைய வேண்டுமென்ற எண்ணம் இருந்ததென்றால் எதிர்க் கட்சியைச் சேர்ந்த மற்றொருவரின் நாமினேஷனை இவர்கள் கைப்பட எழுதவேண்டிய அவசியம் என்ன?

திரு. பெரியசாமி பள்ளர் வகுப்பைச் சேர்ந்த பணக்காரர். இவரை எப்படியாவது காங்கரஸ் அபேக்ஷகராக எடுத்துக்கொள்வதாக திரு. ரெட்டியார் வாக்களித்து சென்ற 2 மாத காலமாக அதற்கான முயற்சியை செய்து வந்தார். ரெட்டியார் மேற்படியாரை பிரபல காங்கரஸ் தலைவர்களிடம் அழைத்துச் சென்றதுடன் அதற்கான தகுந்த சன்மானமும் பெற்றுக்கொண்டார் என்று சொல்லப்படுகிறது. ஆனல் காங்கரசில் இன்று அவருக்குள்ள செல்வாக்கில்தான் ஒப்பந்தம் செய்துக்கொண்ட காரியத்தை முடிக்க முடியவில்லை. இவருடைய முயற்சிக்கு விரோதமாக திரு. இராமசாமியை சென்னை காங்கரஸ் தலைவர்கள் தேர்ந்தெடுத்து விட்டதால் ஒப்பந்தத்தை நிறைவேற்ற நாமினேஷன் தினமன்று இரகசியமான ஓர் சூழ்ச்சியை திரு. சுப்பராவின் உதவியால் செய்யவேண்டிய அவசியம் அவருக்கு ஏற்பட்டு விட்டது.

திரு. இராமசாமி 10 1/2 மணிக்கு நாமக்கல்லை விட்டு புறப்பட்டார். அவர் சென்ற ரெட்டியாரின் கார் மணிக்கு 20 மைல் போனல் 2 தடவை பஞ்சர் ஆகும் நிலைமையில் இருந்தது போகும் பொழுது நடுவழியில் பஞ்சர் ஆய்விட்டதாக தெரிவித்து டிரைவர் ஒருமணி நேரம் காலதாமதம் செய்தாராம்.

என்னுடைய ஓட்டும் சேலம் டவுன் தொகுதியில் பதிவாயிருப்பதால் நானும் முனிசிபல் கமிஷனரிடமிருந்து சர்டிபிகேட் ஒன்று வாங்கிக் கொண்டுவர வேண்டுமென்று எனக்குத் தெரிந்ததால் நானும் ஒரு நல்ல வாடகை கார் பேசிக்கொண்டு 12 மணிக்கு எனது நண்பர் திரு. எ. எம். பாலு அவர்களுடன் புறப்பட்டேன். சுமார் 30, மைல் தூரமுள்ள சேலத்திற்கு நாங்கள் ஒரு மணி நேரத்திற்குள் வந்து சேர்ந்தோம், நானும், திரு. பாலுவும் காரில் முனிசிபல் ஆபீஸுக்கு வந்தும் கமிஷனர் ஆபீஸில் இல்லாததால் கமிஷனர் வீட்டில் சந்திக்க ஆபீஸ் கேட்டுக்கு காரை எடுத்துக்கொண்டுவரவும் கமிஷனர்காரும் கேட்டின் எதிரில் வந்துக் கொண்டிருந்ததால் உடனே எங்கள் காரை ஆபீஸுக்குள் திருப்பிக் கொண்டோம். அதே நிமிஷத்தில் தான் திரு. இராமசாமியின் காரும் அங்கு வந்தது உடனே திரு. இராமசாமியும் நானும் கமிஷனர் ஆபீஸ் ரூமிற்குச் சென்று சர்டிபிகேட்டுக்காக மனுச் செய்து கொண்டோம்.

துரதிஷ்ட வசமாக அந்த சந்தர்ப்பத்தில் அந்த இலாகா சம்பந்தப்பட்ட குமஸ்தா கோர்ட்டு வேலையாக வெளியில் சென்றிருந்தார். அபேட்சகர்களை விசாரித்து சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்ட பிறகுதான் சர்டிபிகேட்டுகள் கொடுக்கப்படும். ஆதலால்மேற்படி குமஸ்தா ஆபீசுக்கு வரும் வரை நாங்கள் இருவரும் ஆபீசில் காத்துக்கொண்டு இருக்கும் நிலைமை ஏற்பட்டது. மேற்படி குமஸ்தா சரியாக 2 மணிக்கு வந்தார். உடனே திரு. இராமசாமி அவரிடம் முதலில் [illegible] சர்டிபிகேட் ஒன்றை எழுதிக் கொடுக்கும்படி கேட்டார். அதற்குப் பத்து நிமிஷ நேரமானதால் திரு. இராமசாமி சர்டிபிகேட்டுக் கூட பெறுக்கொள்ளாமல் சர்டிபிகேட்டுக்காக கொடுத்த மனுவை கையில் எடுத்துக் கொண்டு உடனே புறப்பட்டு விட்டார்.

இதற்குப் பிறகுதான் மேற்படி குமஸ்தா எனக்கு சர்டிபிகேட் கொடுத்தார். மேற்படி குமஸ்தாதான் திரு. இராமசாமியை சர்டிபிகேட் கூட எடுத்துக் கொள்ளாது போய் விட்டதாக தெரிவித்தார். எங்களுடைய சர்டிபிகேட்டில் கமிஷனர் கையொப்பம் இடும்பொழுது மணி 2-10 இருக்கும் எங்களுடைய கார் மணிக்கு 40, 50 மைல் கூடப்போகு மாதலால் குறித்த காலத்தில் போய் சேரலா மென்ற தைரியம் எனக்கு இருந்தது ஆனல் மேற்படி ரோட்டு மிக மோசமாயிருந்ததால் குறித்த காலத்தில் என்னாலும் போக முடியவில்லை. சுமார் 15 மைல் வந்ததும் வழியில் திரு. இராமசாமி வந்த ரெட்டியாரின் கார் மறுபடியும் பஞ்சர் ஆயிருந்ததைக் கண்டோம். மேற்படி டிரைவரை விசாரித்ததில் அந்த வழியாக வந்த பஸ் ஒன்றை பேசிக் கொண்டு நேராக நாமக்கல்லுக்கு திரு. இராமசாமி போயிருப்பதாக தெரிவித்தார். ஆனலும், திரு. இராமசாமி 3-15 க்குத் தான் நாமக்கல்லுக்குப் போக முடிந்ததால் அவர் நாமினேஷன் போட முடியாது போயிற்று. நாங்களும் 3-20 க்குத்தான் போய் சேர்ந்தோம். தாமதித்ததற்குக் காரணம் சொல்லியும் ரிடர்னிங் ஆபீஸர் எனது நாமினேஷனையும் தள்ளி விட்டார். இது தான் அன்று நடந்த உண்மையான விஷயங்கள்.

திரு. இராமசாமி ரெட்டியாரின் காரில் போகாமல் பஸ்ஸில் புறப்பட்டிருந்தாலுங்கூட 12 மணிக்கு நாமக்கல்லிலிருந்து சேலம் வந்திருக்கலாம். அந்த சந்தர்ப்பத்தில் மேற்படி குமஸ்தா ஆபீஸில் இருந்ததால் சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு உடனே நாமக்கல்லுக்குப் பஸ்ஸில் புறப்பட்டிருந்தால் எவ்வளவு தாமத மேற்பட்டாலும் 2-30 மணிக்கு முன்னல் நாமக்கல் சேர்ந்திருக்கக் கூடும். அவரும் நாமினேஷன் போட்டிருக்கலாம். ரெட்டியாரின் காரினுலேற்பட்ட தாமதம்தான் அன்றைய ஏமாற்றத்திற்கு முக்கிய காரணமாகும். ரெட்டியாரின் கார் வேண்டாமென்று மறுத்தும் ரெட்டியாரும், சுப்பராவும் விடாப்பிடியாக திரு. இராமசாமியை மேற்படி காரிலேயே அனுப்பி வைத்து அவர்களுடைய காரியத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டார்கள்.

காங்கரஸ் உத்தியோக அபேட்சகர் மனு போடாததாலும், அன்று நாமினேஷன் போட்டிருந்த மற்ற 5 பேரும் ஒரே கட்சியைச் சார்ந்தவர்களாகையாலும் அன்றிரவு வக்கீல் திரு. வெங்கடபதி முதலியார் அவர்கள் வீட்டில் 4 பேர்கள் வாபீஸ் வாங்கிக் கொள்வதற்காகக் கூட்டம் கூடியிருந்தனர். அக் கூட்டத்திற்கு நானும் தோழர் பாலுவும் சென்றிருந்தோம். நாமினேஷன் போடும் பொழுது ஆரம்ப தேர்தலில் 5 பேர்களும் ஜெயித்தால் 5 பேர்களில் யார் வெற்றியடைந்தாலும் திரு. கஞ்சப்பன் என்பவருக்காக மற்றவர்கள் வாபீஸ் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று இவர்களுக்குள் ஒப்பந்தம் இருந்ததால் மத்தியஸ்தர்கள் அனைவரும் திரு. கஞ்சப்பனைத் தவிர மற்ற நால்வரையும் அன்றைய தினமே வாபீஸ் வாங்கிக் கொள்ளும்படி கேட்டார்கள். அதற்கு பெரியசாமியைத் தவிர மற்ற எல்லாரும் ஒப்புக் கொண்டார்கள். கடைசி வரையிலும் பெரியசாமி தான் செய்த வாக்குறுதிப்படி நடந்து கொள்ளாமலும், பிடிவாதமாக பேசியதாலும் அன்று ஒரு முடிவுக்கு வராமல் கூட்டம் கலைந்தது.

அன்று இரவு 12 மணிக்கு முதலிலே ஏற்பாடு செய்திருந்த பிரகாரம் பெரிய சாமியை காங்கரஸ் காரர்கள் சேலத்திற்கு காரில் "அழைத்துச் சென்று விட்டார்கள். இதற்கான ஏற்பாடுகள் சேலமும் ஏற்கெனவே செய்யப்பட்டிருந்ததால் திரு. சுப்பராவ் ஜில்லா காங்கரஸ் கமிட்டியையோ, காங்கரஸ் தலைவரையோ கலந்து பேசாமல் மாகாண காங்கரஸ் கமிட்டிக்கும், அகில இந்திய பார்லிமெண்டரி போர்டுக்கும் தந்திகளடித்து பெரியசாமியைக் காங்கரஸ் அபேட்சகராக எடுத்துக் கொள்ளுவதற்கு உத்தரவும் பெற்று விட்டார்.

திரு. சுப்பராவுக்கும், பெரியசாமிக்கும் ஏற்கெனவே இம்மாதிரி ஒப்பந்த மில்லாதிருந்தால் திரு. சுப்பராவ் நாமினேஷன் தினமன்று பெரிய சாமியின் நாமினேஷனை எதற்காக பூர்த்தி செய்கிறார்?

இவர்களுக்குள் சம்மந்தமில்லாதிருந்தால் எதிர்க் கட்சியில் உள்ள ஒருவரை காங்கரஸ் அபேட்சகராக செய்ய திரு. சுப்பராவால் முடியுமா?

திரு. பெரியசாமியை காங்கரஸ் அபேட்சகராகக் கொண்டு வருவதற்காக காங்கரஸ் உத்தியோக அபேட்சகரான திரு. இராமசாமியை சூழ்ச்சி செய்து வெற்றியடைந்த பெருமை திரு. சுப்பராவுக்கும், வெங்கடாஜல ரெட்டியாருக்குமே சேர்ந்ததாகும்.

நடந்த விஷயம் இவ்வாறிருக்க திரு. சுப்பராவ் தான் செய்த சூழ்ச்சியை மறைப்பதற்காக டவுன் பூராவும்பொய்ப் பிரசாரம் செய்து வருகிறார். இன்னும் இதே மாதிரி பிழைப்பு இவர்கள் எத்தனை காலைக்கு நடத்த முடியும்? இவர்களுடைய யோக்கியதை பொது ஜனங்களுக்குத் தெரிந்த விஷயமாகும் ஜில்லா போர்டு மெம்பர் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் இவர்கள் நடந்து கொண்ட நிலை சந்தி சிரிக்கிறது. அவசியம் ஏற்படின் அவைகளையும் வெளியிடுவோம்.

திரு. இராமசாமியை குறித்த நேரத்தில் வாராதபடி திரு. பாலு அவர்கள் தடுத்து விட்டதாகவும், நான் சர்டிபிகேட்டுக்காக போகவில்லை யென்றும் திரு. இராமசாமியை தாமதஞ் செய்வதற்காக சர்டிபிகேட் என்ற காரணம் சொல்லி போனதாகவும் டவுன் பூராவும் திரு. சுப்பராவ் இம்மாதிரி பொய்ப் பிரசாரம் செய்து வருகிறார். இதற்குத் தகுந்த பதில் சொல்லி உண்மையை வெளிப்படுத்துவதற்காக வேண்டியே இவ்வறிக்கை வெளியிட வேண்டியதாயிற்று.

நான் பள்ள வகுப்பைச் சார்ந்தவன் எப். ஏ. (இண்டர் மீடியேட்) வரையிலும் படித்திருக்கிறேன். சேலம் ஜில்லாவில் எங்கள் வகுப்பில் என்னைவிட அதிகம் படித்தவர் கிடையாது. சென்னை மாகாணத்திலே எங்கள் வகுப்பில் படித்தவர்களே மிகக் குறைவு நான் கோ ஆப்பரேடிவ் இன்ஸ்பெக்டராக கோயம்புத்தூரில் வேலை பார்த்து வந்தேன். இந்த மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்படும் 30 தாழ்த்தப்பட்ட ஸ்தானங்களில் பள்ள வகுப்பார் ஜன சங்கையில் பாதிக்குச் சமமாக இருப்பினும் ஒரு பள்ளரைக் கூட காங்கரஸ் கமிட்டியார் தேர்ந்தெடுக்காததால் எங்கள் வகுப்பார் என்னைத் தேர்தலுக்கு அவசியம் நிற்கும்படி வற்புறுத்தினார்கள். 2 வாரங்களுக்கு முன் சேலத்திலிருந்து என் உத்தியோகத்தை ராஜினாமா செய்துவிட்டு வரும்படி எனது சமூக முக்கியஸ்தர்கள் 2 தந்திகள் அனுப்பியிருந்தார்கள். இதற்குப் பிறகு தான் கவர்ன்மெண்டு வேலை செய்து உயர் பதவிக்குப் போவதைவிட சமூக சேவை செய்ய என் போன்ற படித்தவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்களென்றுணர்ந்து உடனே என் வேலையை டிசம்பர் 1-ம் தேதி ராஜினாமா செய்தேன். என் மீதுள்ள அன்பு கடந்த பற்றுதல் டிப்டி ரிஜிஸ்டிரார் 2 தடவை என்னை புனராலோசனை செய்யும்படி வற்புறுத்தியும் அதற்கு செவி சாயாது ராஜினாமா செய்து விட்டேன்.

என்னுடைய ராஜினாமா கடிதத்திலேயே நான் சென்னை அசெம்பிளிக்கு நிற்கப்போவதால் ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளேன். இப்படியிருக்க நான் சர்டிபிகேட்டுக்காக சேலம் போகவில்லை என்று திரு. சுப்பராவ் சொல்வது எவ்வளவு அற்பத்தனமான பொய்யாகும்.

2 வதாக திரு. இராமசாமியை நானும் திரு. பாலுவும் தாமதப் படுத்தியதாக சொல்வது முழுதும் பொய்யாகும். இராமசாமியை நாம் எப்படி தாமதப்படுத்த முடியும்? நாங்கள் இருவரும் முனிசிபல் ஆபீஸுக்கு 12 மணிக்கு போய் சேர்ந்ததும் அதே நிமிஷத்தில் தான் திரு. இராமசாமியும் முனிசிபல் ஆபீஸுக்கு வந்தார் உடனே நானும், திரு. இராமசாமியும் சர்டிபிகேட்டுக்காக மனு செய்து கொண்டோம். இதில் நானே திரு. பாலுவோ எந்த விதமாக திரு. இராமசாமியை தாமதம் செய்ய முடியு மென்பது எனக்கு விளங்கவில்லை. நாம் ஆபீஸுக்குப் போகும் பொழுது எலக்ஷன் குமாஸ்தா ஆபீஸில் இல்லை. மேற்படி குமஸ்தா வரும் வரையில் நாங்கள் அனைவரும் ஆபீஸிலேயே காத்திருக்க வேண்டியதாயிற்று. குமஸ்தா வந்ததும் திரு. இராமசாமி சர்டிபிகேட் கூடவாங்காமல் மனுவை எடுத்துக் கொண்டு நாமக்கல் புறப்பட்டார். புறப்படு முன் ஒரு நிமிஷமும் தாமதிக்கவில்லை. வெளியில் காபி சாப்பிடப்போன டிரைவரை திரு. இராமசாமி அடுத்த செகண்டிலேயே சந்தித்து உடனே காரை எடுத்துக் கொண்டு போனர். ஆகவே எங்களால் எப்பொழுது எப்படி தாமத மேற்பட்டதென்று சொல்ல முடியுமா?

தாமத மேற்பட்டால் யாருக்கு கஷ்டம்? திரு. சுப்பராவுக்கா? (திரு. சுப்பராவுக்கு லாபம்தானே) சுப்பராவுக்கும், இராமசாமிக்கும் எவ்வளவு கஷ்டமோ அதைவிட 10 மடங்கு கஷ்டம் எனக் குண்டு. திரு. இராமசாமியை தாமதம் செய்து நானும் குறித்த நேரத்தில் போகாமலிருப்பதற்கா அரசாங்க உத்தியோகத்தையும் நான் ராஜினாமா செய்தேன்?

உண்மை இவ்வாறிருக்க திரு. சுப்பராவ் சேலம் டவுன் பூராவும் என்மீதும், எனது நண்பர் திரு. பாலு அவர்கள் மீதும் அனாவசியமாக துஷ்டப் பிரசாரம் செய்து வருவது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். தன் குற்றத்தை மறைப்பதற்காக திரு. சுப்பராவ் சும்மாயிருப்பவர்கள்மீது வீண் பழி சுமத்தி ஏமாற்ற முயற்சிப்பது மிகவும் நன்றிகெட்ட தனமாவதோடு இதனால் அவருடைய சாயமும் வெளுக்க வேண்டிய அவசிய மேற்பட்டு விட்டது. காங்கரசிலிருந்து தூரத்தியடித்த பிறகுகூட இந்த அரசியல் பிழைப்புக்காரரின் அக்கிரமம் இன்னும் ஒழிந்தபாடில்லை.

இவைகளெல்லாம் பொதுத் தொகுதியால் ஏற்பட்ட தீமைகளே ஆகும். பூனா ஒப்பந்தமென்ற பெயரால் காங்கரசும், காந்தியும் தாழ்த்தப்பட்டவர்களுக்குச் செய்த துரோகம் அந்த ஒப்பந்தம் அமுலிலிருக்கும்வரை மறக்க முடியாது தனித் தொகுதி யிருந்திருந்தால் இந்த வண்டல்களுக்கும் துரோகிகளுக்கும் எங்கள் தேர்தலில் சம்பந்தம் வைக்க இடம் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

நான் மேலே சொல்லியிருக்கும் விஷயங்களி லொன்றையாவது திரு. சுப்பராவோ, ரெட்டியாரோ மறுக்க முடியுமா? முடியுமானல் வெளிவரட்டும். பிறகின்.

திருத்துறைப்பூண்டி

ஐக்கிய சங்கம்

(ஒரு நிருபர்)

திருத்துறைப்பூண்டி, டிச, 13

இன்று காலை 9-30 மணிக்கு இச்சங்கத்தின் இரண்டாவதாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சங்கத்து உறுப்பினர்களும் பொது ஜனங்களும் திரளாகக் குழுமி யிருந்தனர். திருமதி டி. என். குஞ்சிதம் பி. ஏ. எல். டி., அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துச் சங்கத்தின் அவசியம் என்னும் பொருள் பற்றி முகவுரையில் பேசினர்கள். தமிழ் நாவலாசிரியர் நாகை, என். பாலசுப்ரமண்யம் அவர்கள் சங்கத்தின் ஊழியத்தைப் பாராட்டியும், விழாவிற்கு விஜயம் செய்த தலைவர்களை வாழ்த்தியும் ஒரு வாழ்த்துப் பா வாசித்துக் கொடுத்தார்கள். பின்பு சங்கத்தின் காரியதரிசி என். அப்துல்லா அவர்களால் சங்கத்தின் இரண்டாவதாண்டு அறிக்கையும் வரவு செலவு கணக்கும் வாசித்தளிக்கப் பெற்றன. பாபநாசம் தமிழாசிரியர் சாமி சிதம்பரனர் அவர்கள் 'ஐக்கியமும் சங்க முன்னேற்றமும்' என்பது பற்றி நீண்ட சொற்பொழிவாற்றினர்கள். பிறகு கடலூர் என். குருசாமி பி. ஏ. அவர்கள் சங்க முன்னேற்ற மென்றால் என்னவென்றும் சங்கத்தினால் நாட்டுக் கேற்படும் நன்மை யென்ன வென்றும் விளக்கிப் பேசினர்கள். வாலிபர்கள் எந்தெந்த முறையில் பயன்படவேண்டுமென்பதைப் பற்றியும் சங்கத்தின் மூலமாக இவ்வூரில் என்னென்ன தொண்டுகள் செய்யலாம் என்பதைப் பற்றியும் இளைஞர்கள் அரசியலில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதைப் பற்றியும் உணர்ச்சி ததும்ப ஓர் பிரசங்கம் செய்தார். தலைவர் முடிவுரையில் இச்சங்கத்தின் நிர்வாகஸ்தர்களைப் பாராட்டியும், மென்மேலும் விர்த்தியடைய வேண்டிய வழிகளைப் பற்றியும்பேசினர்கள். இறுதியாக காரியதரிசி எல்லோருக்கும் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

மாலை கூட்டம்

பிற்பகல் 3-30 மணிக்கு சாமி சிதம்பரனர் தலைமையில் சங்கத்தின் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் முகவுரைக்குப் பின் தோழர் என். குருசாமி அவர்கள் சமூக சீர்திருத்தத்தின் அவசியம் என்பதுபற்றி விளக்கமாகச் சொற்பொழிவாற்றினர். பின்னர் ஸ்ரீமதி டி. என். குஞ்சிதம் அவர்கள் 'பெண் கல்வி' என்னும் பொருள் கொண்டு ஓர் அரிய பிரசங்கம் செய்தார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின், காரியதரிசி வந்தனோபசாரம் கூற கூட்டம் 5 மணிக்கு இனிது கலைந்தது. கூட்டத்தில் பெண்மணிகள் விஜயம் செய்திருந்தார்களென்பது குறிப்பிடத் தக்கது. பிறகு சங்கத்தின் அங்கத்தினர்களும் தலைவர்களும் சேர்ந்து ஒரு புகைப்படமெடுத்துக்கொண்டனர். 6-30-மணி வண்டியில் திரளாக ஜனங்கள் சூழ தலைவர்கள் வழியனுப்பப் பட்டனர்.

செங்குந்தர் மஹாஜன சங்கம்

மாதாந்தரக் கூட்டம்

(ஒரு நிருபர்)

சூலூர், டிச, 16

மேற்படி சங்கத்தின் மாதாந்தரக் கூட்டமொன்று சென்ற 13-12-36ல் கோவை திரு. எஸ். கே. அங்கப்ப முதலியார் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

1. தேசிய திலகமான தூத்துக்குடி திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் மரணத்துக்கு துக்கம் அடைவதுடன் இக்கூட்டம் தங்கள் அநுதாபத்தை அன்னாரின் குமாரருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

2. திருவாங்கூர் மகாராஜா தாழ்த்தப்பட்டோருக்கு ஆலயப் பிரவேச மளித்தது பற்றி இக்கூட்டம் பாராட்டுவதோடு மகாராஜா அவர்களுக்கும் திவான் சர். ஸி. பி. ராமசாமி ஐயர் அவர்களுக்கும், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களுக்கும் தங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

3. சைவ சமய வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருபவருமான கோவை, திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்களுக்கு அறுபதாண்டு பூர்த்தியானது பற்றி இக் கூட்டம் வாழ்த்துகிறது.

4. பட்டந்துறந்த மாஜி-மன்னர் எட்வர்டு சக்கரவர்த்தியின் செயலை இக் கூட்டம் பாராட்டி புதிய மன்னர் தம்பதிகளை வாழ்த்துகிறது.

5. கோவை ஜில்லா போர்டு தேர்தலில் வெற்றி பெற்ற திரு. கே. கருப்பண்ண தேவர் அவர்களுக்கு இக் கூட்டம் தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

இலங்கையின் புராதன குடிகள் தமிழர்களே! சிங்களவர்களல்ல !!

மறுக்க முடியாத சரித்திர உண்மைகள் கணக்கின்றி யிருக்கின்றன

இலங்கை தமிழர்களுக்கே சொந்தம்! சிங்களவர்க்கல்ல !!

சிங்களவர்கள் வங்காளத்தி லிருந்து தமிழர்களுக்குப் பின்னர் குடியேறியவர்களே யென்று இலங்கை சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றார்கள்.

இலங்கை தேசத்தின் புராதனக் குடிகள் தென்னிந்தியத் தமிழர்களே யன்றி சிங்களவர்களல்ல. இந்த உண்மையை நிரூபணம் செய்வதற்கு சரித்திர ஆதாரங்கள் மலிந்து கிடக்கின்றன. டாக்டர் ஜீ. வி. மெண்டிஸ் என்பவர் தாம் வரைந்துள்ள "இலங்கை சரித்திரமும் உலக சரித்திரமும்" என்ற நூலில் இலங்கையின் பூர்விக மக்கள் வேடர்களே யென்றும், கி. மு. 543-ம் ஆண்டில் வந்த சிங்களவர்கள் இலங்கைக்கு அந்நியர்களாகவே யிருந்தார்களென்றும் திட்டமாகச் சொல்லியிருக்கிறார். அதே புத்தகத்தின் 14-ம் பக்கத்தில் "சிங்களவர்களின் வருகைக்குச் சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்னதாகவே ஆரியத் தமிழர்கள் இலங்கைக்கு வந்திருக்க வேண்டும்" என்றும் கூறப்பட்டிருக்கிறது. இதுபோலவே திரு. ஜேர் என்னும் பிரபல சரித்திர ஆராய்ச்சியாளர் தம்முடைய "மகா வம்சத்தில்" பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்:—

இலங்கையின் பூர்விகக் குடிகள் நாகர்களும் யக்ஷர்களுமே. சிங்களவர்களின் வருகைக்கு முன்னால் இவ்விரு வகுப்பைச் சேர்ந்த மன்னர்களும் இலங்கையை ஆண்டு வந்தார்கள். அந்த அரசர்களுள் மணியக்கிரா, மஹோதரன், குலோதரன் ஆகிய நாகவம்சத்து மன்னர்களும், குவினி, மஹாகல சேனன் ஆகிய யக்ஷ வம்சத்து மன்னர்களும் குறிப்பிடத் தகுந்தவர்கள். கி. மு. 543-ம் வருடத்திற்கு முன்பு வரை சிங்களவர்கள் இலங்கைக்கு அந்நியர்களாகவே இருந்தார்கள்.

நாகர்களும் யக்ஷர்களும் யார்?

நாகர்கள் என்ற பதத்திற்கும், யக்ஷர்கள் என்ற பதத்திற்கும் முறையே "சர்ப்பங்களை பூஜிப்பவர்கள்" "பிசாசுகளைப் பூஜிப்பவர்கள்" என்று பொருள். இலங்கையிலிருந்த புராதனத் தமிழர்கள் சர்ப்பங்களையும் பிசாசுகளையும் பூஜை செய்பவர்களாக இருந்து அது காரணமாக இப்பெயர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கக் கூடும். தவிர பண்டைக் காலத்து திராவிடர்களில் பெரும்பாலோர் வேட்டையாடுவதையே ஜீவனமாகக் கொண்டிருந்தார்கள்.

சிங்களவர் சரிதை என்ன கூறுகிறது?

ஆகையால், வேடர்களென்ற பெயரும் அவர்களுக்கு உண்டாயிற்று. இந்த அபிப்பிராயத்தை திரு. ஜான் எம். செனிவிரத்னெ என்ற பிரபல சரித்திர நூலாசிரியர் தம்முடைய "சிங்களவர் சரிதை" என்ற புத்தகத்தில் ஆதரிக்கிறார். அவரும் "வித்தியாலங்கார லங்கா இதிகாசய" என்ற நூலின் ஆசிரியரான திரு. டப்ளியூ. எம். பெரேராவும் இலங்கை புராதனக் குடிகளாகிய நாகர், யக்ஷர், வேடர் ஆகியோர்களைப் பற்றி பின்வருமாறு எழுதியிருக்கின்றனர்.

"நாகர், யக்ஷர், வேடர் ஆகியோர் திராவிட வம்சத்தைச் சேர்ந்தவர்கள் மணிக்கிரா, மஹோதரன், குலோதரன், குவினி, ராவணன், மஹாகல சேனன் முதலான திராவிட மன்னர்கள் சிங்களவர்களின் வருகைக்கு முன்னால் இலங்கையை ஆண்டு வந்தவர்கள்."

ஐரோப்பியர்கள் அபிப்பிராயம்

மேற்படி ஆதாரங்களைத் தவிர டாக்டர் கால்ட்வெல், டாக்டர் ஜீ. யு. போப் முதலான ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்களும் இவ்வாறே கூறியிருக்கின்றார்கள். 'தமிழர்' என்ற தமிழ்ப் பதத்திற்கு "திராவிடர்" என்பது சமஸ்கிரத மொழி பெயர்ப்பென்றும் ஆகையால் இலங்கையின் பூர்விகக் குடிகளான திராவிடர்கள் தென்னிந்தியத் தமிழர்களே யென்றும் அவர்கள் வர்ஜிதம் செய்திருக்கின்றனர்.

லங்கையைத் திராவிடர்களே ஆண்டார்கள்

சந்திரசேகர பாவலரின் "இராமாயண ஆராய்ச்சி" (இரண்டாம் பாகம்) புரொபசர் எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையின் "இலங்கைச் சக்கரவர்த்தி இராவணன்," திரு வி.பி. சுப்பிரமணிய முதலியாரின் "இராமாயண உள்ளுரை" திரு. என். எஸ். கந்தையா பிள்ளையின் 'தமிழகம்' ஸ்ரீமத் சிவானந்த சரஸ்வதியின் 'மத விசாரணை' அகஸ்திய மகா முனிவரின் 'அகஸ்தியர் இலக்கணம்' ஸ்வாமி வேதாசலத்தின் 'மாணிக்கவாசகர் சரிதை' மாணிக்கநாயகரின் 'காவலுசனம்' தேவாரம் திருவாசகம் முதலான நூல்களிலும் இதே அபிப்பிராயம் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருப்பதை காணலாம்.

திராவிட நாகரீகம் பரவியிருந்தது

சிங்களவர்களின் வருகைக்குமுன் இலங்கையிலிருந்த திராவிடர்களின் நாகரீகம் உச்சஸ்தானத்தை யடைந்திருந்ததாயும் மேற்படி நூல்கள் சாற்றுகின்றன. இதை திரு. ஜான் எம். செனிவிரத்னவும் தமது 'சிங்களவர் சரிதை" என்ற புத்தகத்தில் ஆதரித்து எழுதியிருக்கிறார். இலங்கையை ஆண்ட முதல் சிங்கள மன்னனான விஜயன் மஹாகலசேன் என்ற திராவிட மன்னனிடமிருந்து தான் சிங்காதனத்தைப் பெற்றுனென்பது மேற்படி சரித்திர ஆசிரியர்களின் திட்டமான அபிப்பிராயம். அதோடு இலங்கையை ஆண்ட கடைசி மன்னரும் (கண்டி மன்னர் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கா) தமிழ்நாடனென்பதை திரு. பிரேன் வர்ஜிதம் செய்கிறார்.

புராதனத் தமிழர்கள் கால் நடையாகவே வந்தார்கள்

இலங்கையின் புராதனக் குடிகள் தமிழர்களே யென்பதற்கு இதுவரையில் அநேக சரித்திர ஆதாரங்களை எடுத்துக் காட்டினோம். அதே சரித்திர நூல்களில் இந்தியத் தமிழர்கள் முதன் முதலாக இலங்கைக்கு எப்படி வந்தார்களென்பதும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. திரு. ஜீ. வி. மெண்டிஸ் என்பவர் தமது "இலங்கை சரித்திரமும், உலக சரித்திரமும்" என்ற நூலின் 3-வது பக்கத்தில் இது விஷயமாக எழுதியிருப்பதாவது:—

"இலங்கையின் புராதனக் குடிகளான தென்னிந்தியத் தமிழர்கள் கப்பல்களின் மூலமாகவோ அல்லது படகுகளின் மூலமாகவோ இலங்கைக்கு வரவில்லை. அவர்கள் கால்நடையாகவே இலங்கையை வந்தடைந்தார்கள். அவர்கள் வந்த காலத்தில் இலங்கை தேசம் ஒரு தனித்தீவாக இல்லாமல் இந்தியாவோடு சேர்க்கப்பட்டு இந்தியாவின் ஒரு பாகமாக இருந்தது. இந்தியாவிற்கும் இலங்கைக்கு மிடையிலுள்ள கடலின் இடையே முழுகி கிடக்கும் ஆடம் பாலம் (இராமர் பாலம்) என்பது அக்காலத்தில் தரையான ஸேதுபாதையாகவே இருந்தது. அதன் மூலமாகத்தான் தென்னிந்தியாவிலிருந்த வேடர்கள் இலங்கைக்கு நடந்து வந்தார்கள்."

முன்னர் இலங்கை கடலினுல் பிரிக்கப்படவில்லை

மேற்படி அபிப்பிராயம் திரு. பி. குணசேகரரின் 'ராஜாவலி' "வித்யாலங்கார இலங்கா இதிகாசய" "மாணிக்கவாசகர் சரிதை" புரொபசர் என்னஸ்டு ஹூக்கின்ஸின் "திருப்பதி சரிதை" டாக்டர் எலியட்டின் "மறைந்து போன தீவுகள்" முதலான மற்றும் பல நூல்களிலும் ஆதரிக்கப்பட்டிருக்கின்றது. தவிர, ஈழநாடு எனப்படும் இலங்கையும் பாண்டியநாடு, சோழநாடு, சேரநாடு, (மலையாளம்) முதலான பிரதேசங்களும் கடலினுல் இடையில் பிரிக்கப்படாதிருந்தன வென்பதை அநேக ஐரோப்பிய ஆசிரியர்களும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

எனவே, மேற்படி ஆதாரங்களிலிருந்தும் (1) இலங்கையின் பூர்விகக் குடிகள் இந்தியத் தமிழர்கள் தான். (2) அவர்கள் வசித்து வந்த நாட்டில் சிங்களவர்களே குடியேறினார்கள். (3) சிங்களவர்களின் வருகைக்கு முன்னால் இலங்கை தேசம் தமிழ் மன்னர்களின் ஆட்சியிலேயே இருந்தது. (4) அக்காலத்தில் இலங்கை வாசிகளின் (இந்தியத் தமிழர்களின்) நாகரீகம் உச்சஸ்தானத்தை அடைந்திருந்தது. (5) கி. மு. 543-ம் வருடத்திற்கு முன்புவரை தமிழர்கள் வாழ்ந்து வந்த இலங்கைக்கு சிங்களவர்கள் அந்நியர்களாகவே இருந்தார்கள் என்னும் விஷயங்கள் மறுக்க முடியாத சரித்திர உண்மைகளாகப் புலப்படுகின்றன. (செட்டி நாடு)

கொச்சி மகாராஜா பிறந்தநாள் கொண்டாட்டம்

சென்னை, டிச, 18

கொச்சி மகாராஜா 'திவான் சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியாருடன், ஜனவரி 3-ந் தேதி சென்னையிலிருந்து எர்ணாகுளத்திற்கு புறப்படுவார். ஜனவரி 11-ந் தேதி மகாராஜாவின் பிறந்த நாள் கொண்டாட்டம் நடைபெறும். அன்றைய தினம் சமஸ்தான தர்பாரும், தோட்டக் கச்சேரியும் நடைபெறும். 12-ந் தேதி சமஸ்தான விருந்து நடைபெறும்.

கனம் பொப்பிலி ராஜாவுக்கும், மைசூர் திவான் சர். மிர்ஸா இஸ்மாயிலுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டு ஏற்றுக் கொள்ளப் பட்டது.

இத்தாலியன் வெற்றி

பிரிட்டன் அங்கீகரிக்காது

லண்டன், டிச, 17

எதியோப்பியாவை, இத்தாலி ஜெயித்துக் கொண்டுள்ளதை சட்டரீதியாக அங்கீகரிக்க பிரிட்டன் மறுப்பதாக நேற்று காமன்ஸ் சபையில், பிரிட்டிஷ் அன்னிய நாட்டு மந்திரியான திரு. ஈடன் கூறியுள்ளார்.

தொழிலாளர் துயரம்

கார்ப்பொரேஷன் கமிஷனருக்குக் கடிதம்

விசாரணை நடத்த வேண்டுகோள்

சென்னை, டிச, 15

சென்னை தொழிலாளர் சங்கத்தின் பொது காரியதரிசியான திரு ராமாநுஜலு நாயுடு பக்கிங்ஹாம், கர்னாடிக் மில் தொழிலாளரில் ஒரு பகுதியினர் குறைகளைத் தெரிவித்துக் கார்ப்பரேஷன் கமிஷனருக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:—

"சென்னை முனிசிபல் சட்டத்தின் 288, 289 ஏ, 289 பி, 289 ஸி. ஆகிய பிரிவுகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து சில விஷயங்களைத் தெரிவிக்கும்படியாக சங்கம் என்னை கேட்டுக்கொண்டிருக்கிறது.

ஒரு நீராவி சக்தி இயந்திரம் அல்லது இயந்திர சாதனங்கள் வைத்து கார்ப்பரேஷன் எல்லைக்குள் நடத்தப்படும் தொழிற்சாலையில் இந்த இயந்திரங்களின் புகையினலோ, தூசியினலோ அல்லது இயந்திரங்களினின்று வெளியாகும் அசுத்தங்களினலோ இங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு எவ்விதத்திலும் பாதக மேற்படாதவாறு, இவைகளைச் சரிவர செய்ய மேற்படி தொழிற்சாலையின் முதலாளியைக் கட்டாயப்படுத்த மேற்சொன்ன சட்டத்தின் பிரிவுகள் பிரகாரம் கமிஷனருக்கு அதிகாரமிருக்கிறது.

பக்கிங்ஹாம் கர்னடிக் மில்லில் பெர்மனெண்டாக வேலை செய்பவர்கள் மேற்படி கம்பெனியின் மானேஜிங் டைரக்டருக்குக் கொடுத்திருக்கும் அக்கறை விண்ணப்பத்தை உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன்.

அதில் கூறப்பட்ட புகார்களில் சில வருமாறு:—

1 தற்சமய வேலை நிலைமையினல் பாய்லர் மென்களுக்கு அடிக்கடி ஜுரம் வருகிறது.

2. திறமையானவர்கள் அகப்படாததால் இப்பொழுது இந்த பாய்லர் இலாகாவில் தேவையான நபர்கள் இல்லை ஆதலால், வேலை செய்பவர்களுக்கு மிகுந்த கஷ்டமேற்படுகிறது.

3 இப்பொழுதுள்ள ஆட்கள் ஷிப்ட் முறையில் வேலை செய்வதானது தேக சுகத்திற்கு பாதகமாக இருப்பதுமன்றி, துயிற்கும் இடைஞ்சலாக இருப்பதால், வேலை இந்தமாதிரியாக பிரித்திருப்பதை ஒழிக்கவேண்டும்.

4 பாய்லரில் போடவேண்டிய தற்கச பெரிய நிலக்கரி கட்டிகளை உடைக்கும்போது எழும் நிலக்கரி தூசியை சுவாசிப்பதினல் தொழிலாளர்களுக்குள்ள தொந்திரவு அபாயம்.

5. மிக உஷ்ணமாக இருக்குமிடத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஏற்ற உடை இல்லாதிருக்கிறது.

பாய்லர் இலாகாவில் ஆட்கள் குறைவாக இருப்பதானது தொழிலாளர்கள் தேகாரோக்கியத்திற்குப் பாதகமாக இருக்கிறதென்று கடுமையாக புகார் கூறப்படுகிறது. நிலக்கரி உடைக்கும்போது கரித் தூள்களை சுவாசிக்க வேண்டியதால் சுவாச விஷயத்தில் சிரமமிருக்கிறதாம். அதிக உஷ்ணமும், கடுமையான வேலையும் தொண்டை சம்பந்தமான நோய்களைப் பெர்மனென்டுகளுக்கு உண்டாக்கி யிருக்கிறதென்றும் விட்டு விட்டு 12-மணி நேரம் வேலை செய்வதென்று இருந்தபோதிலும் 9 மணி நேரம் கடுமையாக வேலை செய்யவேண்டியிருக்கிறதென்றும், இந்த 9-மணி நேரத்திற்குத்தான் சம்பளம் கொடுக்கப்படுகிற தென்றும், இது தொழிலாளர்களுக்கு மிகுந்த கஷ்டத்தை அளிக்கிறதென்றும் கூறப்படுகிறது. 88, 82, 83, 91, 95 ஆகிய டிக்கட் நம்பருள்ள பாய்லர் ரூமில் வேலை பார்த்து வந்த தொழிலாளர்கள் இந்த அபாயகரமான கொடுமை விளைவிக்கும் வேலையில் ஈடுபட்டு மாண்டனர் என்றும் சொல்லப்படுகிறது.

சர்வதேச தொழிற்சபை காரியாலயத்தினர் "வேலையும், தேக ஆரோக்யமும்" என்று வெளியிட்டிருக்கும் பிரசுரமொன்றில் மேற்சொன்னவிதமான புகார்கள் கூறப்பட்டால் அவைகள் உண்மையானதாக இருக்குமென்றும், ஏனென்றால், இந்த இடங்களில் வேலை நிலைமை கெடுதலாக இருக்குமென்றும் குறிப்பிட்டுள்ளதை இது சம்பந்தமாக உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இது சம்பந்தமாக சங்கத்தின் பிரதிநிதி ஒருவரையும் சேர்த்துக் கொண்டு பூரா தகவல்களையும் அறிய ஒரு விசாரணை நடத்தும்படியாக இந்த சங்கத்தினர் உங்களைக் கேட்டுக் கொள்கின்றனர். இல்லாவிட்டால் முதலாளிகளுக்குப் பயந்து விஷயத்தை வெளியிடமாட்டார்கள். இப்பொழுது தொழிலாளர்களுக்கிருக்கும் அபாயத்தினின்று அவர்களை காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்."

லார்ட் எர்ஸ்கின் பெற்றோர்கள்

ஜனவரி 16-ந்தேதி இந்தியா விஜயம்

சென்னை, டிச, 19

சென்னை கவர்னர் லார்ட் எர்ஸ்கின் பெற்றோர்களான மார்- கென்லீ பிரபுவும், சீமாட்டியும், வருகிற ஜனவரி 16-ந் தேதி சென்னைக்கு விஜயம் செய்து சர்க்கார் மாளிகையில் சிறிது காலம் தங்கியிருப்பர்.

திருத்தம்

சென்ற 16-ந் தேதி இதழில், பக்கம் 5-ல், "இந்து தேவஸ்தான போர்டு" என்ற தலைப்பின் கீழ் வெளிவந்துள்ள செய்தியில், டிமகாநாட்டின் கூட்டம் '24-12-36ந் தேதி காலை 9-மணி முதல் 12-மணி வரையிலும், 25-12-36 ந் தேதி மாலை 2-மணி முதல் 5-மணி வரையிலும் என்றிருப்பதை' 24-12-36ந் தேதி மாலை 2-மணி முதல் 5-மணி வரையிலும், 25-12-36 ந் தேதி காலை 9-மணி முதல் 12-மணி வரையிலும், மாலை 2-மணி முதல் 5-மணி வரையிலும்' என்று திருத்தி வாசிக்கவும்.

சென்ற திங்கட்கிழமையன்று மாலை கனம் பி. டி. ராஜன் விவசாயப் பண்ணை பிரதிநிதிகளுக்கு தேநீர் கச்சேரி நடத்திய போது எடுத்த படம்.

மதிப்புரை

"விசித்திரன்" வாரப் பத்திரிகை

திரு. அ. க. சந்திரசேகர முதலியாரை ஆசிரியராகக்கொண்டு வெளிவரத் தொடங்கியிருக்கும் 'விசித்திரன்' என்னும் தமிழ் வாரப் பத்திரிகையை வரப் பெற்றோம். தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சி யளிக்கக் கூடிய பல விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. எக்கட்சியிலும் சேராது நடு நிலைமையில் நின்று விஷயங்களை விமர்சனம் செய்யும் 'விசித்திர'னின் கொள்கை பாராட்டத் தக்கதே. சித்திர சகிதம் வெளிவரும் இப்பத்திரிகையின் விலை தனிப்பிரதி அணா அரை.

கிடைக்குமிடம்:—
"விசித்திரன்" காரியாலயம்
32, பிராட்வே, சென்னை.

ஜலகண்டபுரம் சன்மார்க்க சபை

பொதுக் கூட்டம்

(ஒரு நிருபர்)

ஜலகண்டபுரம், டிச, 19

சென்ற செவ்வாய்க் கிழமை மாலை ஜலகண்டபுரம் சன்மார்க்க சபையின் ஆதரவில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திரு. துடிசைக் கிழார் அ. சிதம்பரனார் அவர்களின் தலைமையில் அநேக அன்பர்கள் சொற்பொழி வாற்றினார்கள். பின்னர் கீழ்க் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது:—

1. காலஞ்சென்ற திருவாளர்கள்: கி. ரு. சிவலிங்கம் செட்டியார், வி. தம்மண்ணஞ் செட்டியார், வி. அண்ணாமலை செட்டியார், தேசியத் திலகம் வி. ஓ. சிதம்பரம் பிள்ளை முதலியவர்களின் மரணத்தைக் குறித்து இக் கூட்டம் தங்கள் மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

2. திருவாளர்: துடிசைக் கிழார் அ. சிதம்பரனார் இயற்றிய "சிவலிங்க உருவ விளக்கம்" என்ற நூலை அச்சிட ஏற்பாடுகள் செய்ய இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

3. பள்ளிக்கூடங்களில் 'ஹிந்தி' பாஷையை கட்டாயப் பாடமாக வைப்பதை இக் கூட்டம் பலமாக ஆக்ஷேபிக்கிறது.

4. மேற்படி தீர்மானத்தை கல்வி இலாகா மந்திரி அவர்களுக்கும், சென்னை டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கும் தெரிவித்து வேண்டுவன செய்யுமாறு இக் கூட்டம் சங்கக் காரியதரிசியைக் கேட்டுக் கொள்கிறது.

மாகாண சுகாதாரம்

சென்னை, டிச, 19

சென்ற 12-ந் தேதியுடன் முடிவாகிற வாரத்தில் மட்டும் சென்னை மாகாணத்தில் தொத்து நோயால் பிடிக்கப்பட்டவர்கள், மாண்டவர்கள் எண்ணிக்கை பின்வருமாறு:—

காலரா:—	பிடிக்கப்பட்டவர்கள்	2288
	மாண்டவர்கள்	1193
வைசூரி:—	பிடிக்கப்பட்டவர்கள்	60
	மாண்டவர்கள்.	14
பிளேக்:—	பிடிக்கப்பட்டவர்கள்	39
	மாண்டவர்கள்	15

தங்கம்—வெள்ளி

சென்னை, டிச, 19

	ரூ-அ-பை
பம்பாய் ஆலைத் தங்கம்	84—15—
„ வாய்தா	85—0—
பூனா தோலா 1-க்கு	34—9—
சவரன் மொத்தம்	22—4—
சவரன் சில்லரை	22—4—
வெள்ளி ரூ. 100 எடை	58—4—
„ ரூ. 1 எடை	0—8—

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே!

ஏழையென்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே!

மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையை கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த வகையினும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! (பாரதி)

விடுதலை

சென்னை : 1936-ஞு டிசம்பர்மீ 19-உ
சனிக்கிழமை

அசடுகளுக்கு புத்தி வருமா!

நாயர்—நாயர் சகாப்தத்தில் உருப் பெற்ற அரசியல் வாதிகளில் திரு. வி. ஆர். செட்டியார் ஒருவர். அவர் அரசியல் பாலபாடம் கற்றது ஜஸ்டிஸ் ஜோடியில் கலந்திருந்தபோது தான். அவர் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து பிரிவதற்குள்ள காரணம் எதுவாயிருந்தாலும் சரி, அவர் இப்பொழுது எக்கட்சியில் இருந்தாலும் சரி, அரசியல் விஷயங்களில் அவர் ஜஸ்டிஸ் கட்சியாரிடமிருந்து கற்றுக்கொண்ட படிப்பினையை மட்டும் அவர் மறக்கவில்லை. பெயர்பெற்ற ராஜ்ய தந்திரியான பானகல் ராஜாவோடு வெகுகாலம் பழகிய புண்ணியத்தினால் திரு. வி. ஆர். செட்டியாரின் கூரான புத்தி இன்னும் பழுதடையாமலே இருந்து வருகிறது. அழிவு வேலைக்காரரான காங்கிரஸ்காரர் கோஷ்டியில் அவர் இப்பொழுது சேர்ந்திருந்தாலும் அவரது அரசியல் ஞானம் களங்கமடையாமலே இருந்து வருகிறது. தற்காலம் இந்திய அரசியல் வாதிகளை வாட்டி வரும் முக்கியமான பிரச்னைகளுக்கெல்லாம் அவர் சரியான பரிகாரம் கூறியே வருகிறார். ஒரு அரசியல் சட்டத்தினால் உருப் பெற்ற ஒரு ஸ்தாபனத்தின் மூலம் அந்த அரசியலையே கவிழ்த்து விடலாமெனக் கூறுவது அடி முட்டாள்தனமென்றும், ஒரு நாட்டிலுள்ள பல திறப்பட்ட கட்சியாரும் ஐக்கியப்பட்டு வற்புறுத்தினாற்றான் அரசியலில் மாற்ற மேற்படுமென்றும் பாடலிபுர சர்வகலா சங்க அக்ராசனப் பிரசங்கத்தில் அவர் குறிப்பிட்டதை நாம் ஏற்கனவே நமது வாசகர்களுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறோம். அவரது அபிப்பிராயங்களை அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் முதல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாஜித் தலைவர் திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரி வரை எந்த காங்கிரஸ் வாலாவும் மறுத்துக் கூற முன்வரவில்லை. காங்கிரஸ் கங்காணி வேலை செய்வதையே தனது பிறவி நோக்கமாகக் கொண்ட அரசியல் பிரசுரபதியான "தின மணி"யும் கூட திரு. செட்டியார் அபிப்பிராயங்களைக் கண்டித்து ஒரு வார்த்தையாவது இதுவரை எழுதவில்லை. இதற்குக் காரணம் என்ன? திரு. செட்டியார் அபிப்பிராயம் சரியானது; எவராலும் மறுக்க முடியாதது. காங்கிரஸ்காரர் அறிவுடையவர்களாயிருந்திருந்தால் பாடலிபுர பிரசங்கத்துக்குப் பிறகும் அரசியல் சீர்திருத்தப் பல்லவிபாட முன் வந்திருக்க மாட்டார்கள். ஆனால் காங்கிரஸ்காரருக்குப் பகுத்தறிவும் கிடையாது; தேச முன்னேற்றத்தில் கவலையும் கிடையாது. ஏதாவது ஒரு காரணத்தைச்சொல்லி பொது ஜனங்கள் பணத்தைப் பிடுங்கவேண்டும்; தத்தம் வயிற்றை நிரப்பவேண்டும்; பாமர மக்களை ஏமாற்ற சமயோசிதம் போல் புரளி செய்ய வேண்டும். இவைகளே காங்கிரஸ்காரரின் லட்சியங்கள். ஆகவே, அநுபவ சாத்தியமல்லாத பேச்சுகளைப் பேசி, அவர்கள் தேச மக்களை ஏமாற்றிக் கொண்டே இருக்கிறார்கள். அது திரு. வி. ஆர். செட்டியாருக்கு மிக்க அதிருப்தியை உண்டு பண்ணி யிருக்கிறது. காங்கிரஸ்காரர் நாட்டைக் குட்டிச் சுவராக்குவதை அவர் அறவே வெறுக்கிறார். ஆகவே, காங்கிரஸ்காரருக்கு புத்தி புகட்டும் பொருட்டு சென்னை 'மெயில்' பத்திரிகையில், சென்ற வியாழக்கிழமை பதவி ஏற்பு விஷயத்தைப்பற்றி அவர் ஒரு அழகிய கட்டுரை எழுதியிருக்கிறார். அதன் சாரத்தை வேறிடத்து வெளியிட்டிருக்கிறோம். அதனை நமது வாசகர்கள் எல்லாம் ஒன்றுக்குப் பலமுறை படிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம். ஜஸ்டிஸ்கட்சிப் பிரசாரகர்கள், பிரசாரக் கூட்டங்களில் அவ்வழகிய கட்டுரையை படித்துக் காட்டவேண்டும் என்றும் வேண்டிக்கொள்கிறோம். பொதுத் தேர்தல் அடுத்துவிட்டது. காங்கிரஸ்காரர்களோ தெரிந்தும் மான உணர்ச்சியின்றி தேச மகாஜனங்களை ஏமாற்றி வயிறு வளர்க்க கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தேச க்ஷேமத்தை விரும்புவோரெல்லாம் அதைத் தடுக்க தம்மாலானதைச் செய்யவேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

காங்கிரஸ்காரர் கூறும் ஒவ்வொரு வாதத்தையும் திரு. செட்டியார், அக்கட்டுரையில் மிகவும் ஆணித்தரமாகக் கண்டித்திருப்பதை நமது வாசகர்கள் முக்கியமாக கவனிக்கவேண்டும். அரசியலைக் கவிழ்க்க முடியாதென்பதற்கு அவர் கூறும் காரணங்களை எந்த காங்கிரஸ் வாலாவுக்கும் மறுக்க முடியாது. மந்திரி சபையைக் கவிழ்ப்பது அரசியலைக் கவிழ்ப்பதாகாதென அவர் கூறுவது சரியான வாதமாகும். காலஞ்சென்ற தேச பந்து சித்தரஞ்சன தாஸர் காலத்திலே வங்காள மந்திரி சபை கவிழ்க்கப் பட்டது. கண்ட பலன் என்ன? சர்க்கார் ஸ்தாபித்ததா? சமரசம் செய்துகொள்ள பிரிட்டிஷ் சர்க்கார் ஸி. ஆர். தாஸர் கோஷ்டியாரை அழைத்தார்களா? வங்காள கவர்னர் மூட்டை முடிச்சுகள் கட்டிக்கொண்டு லண்டனுக்குக் கப்பலேறினரா? அவ்வாறொன்றும் நடக்கவில்லை. நாம் செய்தது முட்டாள் தனமென சுயராஜ்யக் கட்சியார் தான் ஒப்புக்கொண்டனர். ஆகவே, அரசியல் கவிழ்ப்புப் பேச்சு அடி முட்டாள்தனமான — அயோக்கியத்தனமான—ஏமாற்றுப் பேச்சாகும். மற்றும், திரு. செட்டியார் கேட்கும் ஒரு கேள்வியை நமது வாசகர்கள் முக்கியமாக கவனிக்க வேண்டும். காங்கிரஸ்காரர் மிக்க வலிமையுடையவர்களாயிருந்த போதுதோன்றியது சட்டமறுப்பு; காங்கிரஸ்காரர் தோல்வியடைந்த பிறகு தோன்றியது சட்டசபைப் பிரவேசயோசனை. ஆகவே, காங்கிரஸ்காரர் சக்தியுடையவர்களாயிருந்த காலத்து சட்டமறுப்பினால் சாதிக்க முடியாத ஒரு காரியத்தையா, அவர்கள் தோல்வியடைந்திருக்கும் இக்காலத்து சட்டசபைப் பிரவேசத்தினால் சாதித்துவிடப் போகிறார்கள் என, திரு. செட்டியார் கேட்கும் கேள்விக்கு விடையளிக்க ஜவஹர்லாலுக்கோ, தேசாய்க்கோ, சத்தியமூர்த்திக்கோ, படேலுக்கோ நாக்குண்டா?

அப்பால் சட்டசபைத் தேர்தலில் மெஜாரட்டி பெறுவதினாலும் காங்கிரஸ்காரருக்கு ஒன்றும் செய்ய முடியாதென சந்தேகத்துக்கு இடமின்றி அவர் விளக்கிக் காட்டுகிறார். சென்ற அசம்பிளித் தேர்தலில் நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றதை காங்கிரஸ்காரர் பிரமாதமாகக் கூறுகிறார்கள். தென்னாட்டில் மட்டுமே அசம்பிளித் தேர்தலில் காங்கிரஸ்காரருக்கு 100-க்கு 100 வெற்றி கிடைத்தது காரணம் அவர்களது பொய்ப் பிரசாரமும், எதிர் கட்சியாரின் அமோக தன்னம்பிக்கையும் அலக்ஷிய பாவனையுமாகும். தென்னாட்டு நூற்றுக்கு நூறு வெற்றியினாலும் காங்கிரசுக்கு அசம்பிளியிலே மெஜாரட்டி கிடைக்கவில்லை. தமது கொள்கைகளை விட்டுக் கொடுத்து, இதர கட்சியாரின் துணை கொண்டு சர்க்காரை அவர்கள் பலமுறை தோற்கடித்தது உண்மையே. சர்க்காருக்குத் தோல்விமேல் தோல்வி, காங்கிரசுக்கு வெற்றி மேல் வெற்றி என காங்கிரஸ் பத்திரிகைகள் பொய்ப் பிரசாரம் செய்ததும் உண்மையே. ஆனால், காங்கிரசுக்கு ஏற்பட்ட அந்த வெற்றிகளினால் நாட்டுக்கு ஏற்பட்ட நன்மையென்ன? தபாற் கார்டு விலையில் காலணாவையாவது காங்கிரஸ்காரருக்குக் குறைக்க முடிந்ததா? தமது சக்தியைப் பிரயோகம் செய்ய வழியில்லாதிருக்கையில் காங்கிரஸ்காரர் சட்ட சபையில் மெஜாரட்டியா யிருப்பதினால் என்ன பலன் விளையக் கூடும்? திரு. செட்டியார் கூறுவது போல் கூட்டங் கூடி ஒப்பாரி வைப்பதற்குத் தான் அந்த மெஜாரட்டி பலம் பயன்படும்.

அப்பால் காங்கிரஸ்காரர் பின்பற்ற வேண்டிய நேர்வழியையும் அவர் சுட்டிக் காட்டுகிறார். இப்பொழுதே சுயராஜ்யம் பெறுவது தான் காங்கிரஸ்காரரின் லக்ஷியமானால் சட்டசபைப் பேச்சை நிறுத்திவிட்டு நேரடியாக வேலை செய்ய முன் வரட்டுமென்றும், அது சாத்தியமில்லையானால் சட்டசபைகளில் புகுந்து பதவி ஒப்புக்கொண்டு சாத்தியமான நன்மைகளை செய்யட்டுமென்றும் அவர் கூறுகிறார். தமக்கு போதுமான அளவுக்கு மெஜாரட்டி பலம் கிடைக்கவில்லையானால் ஏனைய கட்சிகளையும் சேர்த்துக் கொண்டு தமது பலத்தை விருத்தி செய்து எதிர்காலத்து சுயராஜ்யம் பெறுவதற்குத் தேவையான சீர்திருத்தங்களை இப்பொழுதே செய்யத் தொடங்கட்டும் என்றும் அவர் வற்புறுத்துகிறார். தேச முன்னேற்றமே காங்கிரஸ்காரர்களுக்கு முக்கிய லக்ஷியமாக இருக்கும் பக்ஷத்தில் திரு. செட்டியார் கூறும் யோசனையைப் பின் பற்றுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. ஆனால், தென்னாட்டைப் பொறுத்தவரை காங்கிரஸ்காரர் லக்ஷியம் என்ன? ஜஸ்டிஸ்கட்சியை ஒழிப்பதே அவர்களின் நோக்கம். இந்த ஜஸ்டிஸ் கட்சிப் பகை, வடநாட்டு வீரர்—உத்தம தேச பக்தர் — களங்கமற்ற தியாகி, ஸர்தார் படேலையும் கூடப் பிடித்துக்கொண்டு விட்டது. சேலத்தில் பேசுகையில் காங்கிரஸ்காரர் பதவி ஏற்றாலும் சரி, ஏற்காவிட்டாலும் சரி, ஜஸ்டிஸ் கட்சியார் பதவி ஏற்க முடியாதபடி காரியம் செய்துவிடுவோம் என அவர் சிறிதளவேனும் வெட்கமின்றிக் கூறியிருக்கிறார். கலப்பற்ற பூரண சுயராஜ்யமே காங்கிரஸ் லக்ஷியம் எனக் கூறும் வாயால் ஒரு காங்கிரஸ்காரர் இவ்வாறு கூறவேண்டுமானால் அவர் எவ்வளவு மூளை பலமுடையவராயிருக்கவேண்டும்? சிறுமனம் படைத்தவராயிருக்கவேண்டும்? உயரிய லக்ஷியமுடையவராயிருக்க வேண்டுமென்பதை வாசகர்களே நிர்ணயம் செய்து கொள்ளவேண்டும். அவரது சேலம் பேச்சைக்கேட்ட பிறகு உபயதுல்லா, குப்புசாமி கம்பெனியில் இடம் பெறுவதற்கே சர்தாருக்கு யோக்யதையுண்டென நமக்குத் தோன்றுகிறது. இத்தகைய மனப்பான்மையுடையோருக்கு அரசியலைக் கவிழ்க்க முடியாதென்பதையும் திரு. செட்டியார் தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறார்.

தமக்கு சொந்தமான ஆக்கத் திட்டம் எதுவுமில்லாமல் பிற்போக்காளரும், அபேதவாதிகளும், பொதுவுடைமைக்காரரும், பதவியேற்காமல் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், சட்டசபைகளுக்குச் செல்வோர், பதவிகளுக்குப் போட்டிப் போட்டுக்கொண்டு கவர்னர் தயவைப் பெறுவதிலேயே சதா கண்ணும் கருத்துமாயிருப்பார்கள் என திரு. செட்டியார் கூறுகிறார். அதை மறுக்க சர்தார் படேலுக்கு ஆற்றலுண்டா? ஆண்மையுண்டா? அறிவுண்டா?

ஏனைய அரசியல் கட்சிகளை அறவே ஒழிக்க காங்கிரசுக்கு முடியவே முடியாதென்றும், வி. ஆர். செட்டியார் கண்டிப்பாகக் கூறுகிறார். தேச விடுதலையே காங்கிரசின் லக்ஷியமாக இருந்தால், அகம்பாவத்தை ஒழித்து விட்டு ஏனைய கட்சிகளுடன் சமரசம் செய்து கொண்டு சட்டசபை வேலையை நடத்தமுன் வரவேண்டியதுதான். தென்னாட்டைப் பொறுத்தவரையில் ஜஸ்டிஸ் கட்சியை காங்கிரசுக்கு ஒழிக்கவே முடியாது. ஆயிரம் சத்தியமூர்த்திகளும், படேல்களும், ஜவஹர்களும், "தின மணி"களும் சேர்ந்துகொண்டு ஜஸ்டிஸ் கட்சி ஒழிந்துவிட்டதென்று கூச்சல் போட்டாலும் ஜஸ்டிஸ் கட்சி ஒழியப் போவதில்லை அவர்கள் திட்டத் திட்ட ஜஸ்டிஸ் கட்சியின் சக்தி பெருகிக் கொண்டு தான் இருக்கும். வாஸ்தவத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் சக்தி நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு தான் இருக்கிறது. இது காங்கிரஸ் கும்பல்களுக்கும் "தின மணி" போன்ற கந்தல்களுக்கும் நன்கு தெரியும். அதனால் தான் சதா ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி அவை கனவு காணுகின்றன. தென்னாட்டில் காங்கிரஸ் மானம் பறிபோகாமல் இருக்க வேண்டுமானால் எக்காலமாவது ஒருநாள் காங்கிரஸ் ஜஸ்டிஸ் கட்சியுடன் சமரஸம் செய்து கொள்ளவேண்டியதுதான். வருகிற பிப்ரவரி தேர்தலோடு அதற்குத் தேவையான சக்தியை 'ஜஸ்டிஸ்' கட்சி பெற்றுவிடுமென்பது நிச்சயம். ஜஸ்டிஸ் கட்சிக்கு நிதியில்லாமல் இருக்கலாம்; பிரசாரகர்கள் இல்லாமலிருக்கலாம்; பத்திரிகை இல்லாமல் இருக்கலாம். ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் பலர் காங்கிரஸ் கோட்டையில் சரணடைந்திருக்கலாம். எனினும், கட்சிக் கொள்கை புனிதமானது, தன்னலமற்ற தியாகிகளால் வகுக்கப்பட்டது; இதுவரைச் செய்துள்ள வேலைகளோ அபாரமானவை. காங்கிரஸ்காரரின் பொய்ப் பிரசாரத்தினால் தேச மக்களில் ஒரு சாரார் ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி ஒரு சிறிது தப்பெண்ணம் கொண்டிருக்கலாம். ஆனால், அந்தத் தப்பெண்ணத்தை மாற்றுவது அவ்வளவு பிரமாதமான வேலையில்லை. அந்தத் தப்பெண்ணம் ஒழியும்போது காங்கிரஸ்காரர் பஞ்சாய்ப் பறப்பர்; ஜஸ்டிஸ் கொடி வானமண்டலத்திலே உயர்ந்து பறக்கும். இது நிச்சயம்! நிச்சயம்!! நிச்சயம்!!!

திரு. வி. ஆர். செட்டியாரின் சென்னை 'மெயில்' கடிதத்துக்கு காங்கிரஸ் கங்காணியான "தின மணி" நேற்று விடையளித்திருக்கிறது. திரு. செட்டியார் வாதம் ஒன்றையாவது "தின மணி" தக்க ஆதாரங்களுடன் மறுக்கவில்லை. "திரு. செட்டியார் மிகுந்த புத்திசாலி என்பதையும் சட்டசபை வேலைகளில் அநுபவம் உள்ளவர் என்பதையும்" 'தின மணி' ஒப்புக் கொள்கிறது. ஆனால், அவரது யோசனைகளின் அடிப்படை மிதவாதத் தன்மையுள்ளதாயிருக்கிறதாம். இது தான் "தின மணி"யின் ஆட்சேபம். ஆனால், அமித வாதக்கொள்கையினால் காங்கிரஸ் இதுவரை சாதித்த தென்ன? நாட்டைக் குட்டிச் சுவராக்கியது தானே கண்ட பலன். திரு. செட்டியார் புத்திசாலித்தனமுடையவரானால் சட்டசபை அநுபவமுடையவரானால் அவரது யோசனைகளைக் கண்ணை மூடிக் கொண்டு ஒப்புக் கொள்ளவேண்டியதே தேச க்ஷேமத்தை விரும்புவோரின் நீங்காக் கடமை. அடிமுட்டாள்களுடையவும் சட்டசபை அநுபவம் துளி கூட இல்லாதவர்களுடையவும் யோசனைகளைக் கேட்டால் தேசம் பின் நோக்கித் தான் செல்லும்; ஒரு அங்குலம் கூட முன்னேறாது.

கல்லூரி முன்பு 1000 மாணவர் சத்தியாக்கிரகம்

பரீட்சை நாட்களில் பிரார்த்தனை செய்ய முடியாது

அதிகாரிகள் பிடிவாதம்

கல்லூரிக் கட்டிடத்தின்மீது கற்கள் பறந்தன

உபாத்தியாயருக்கு அடி

போலீசார் பிரசன்னம்

லாகூர், டிச, 18

பரீட்சை நாட்களில்கூட, பிரார்த்தனை செய்து தானாக வேண்டுமென்று கல்லூரி அதிகாரிகள் கட்டாயப் படுத்தியதின்பேரில், லாகூர் ஆங்கிலோ-வேதிக் கல்லூரி மாணவர்கள் 1000 பேர், கல்லூரி முன்பு சத்தியாக்கிரகம் செய்தனர். கல்லூரிக் கட்டிடத்தின்மீது கற்களை வீசியும், கோஷ்டம் புரிந்தும் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஒரு உபாத்தியாயரும் அவர்களால் தாக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. போலீஸ் படையொன்று வெளியிலிருந்து கண்காணித்து வருகிறது.

பரீட்சை நாட்களில் தங்களை பிரார்த்தனை செய்யுமாறு கட்டாயப் படுத்தக்கூடாதென மாணவர்கள் கல்லூரி அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டனர். உபாத்தியாயர்கள் சப் கமிட்டி அவர்கள் கோரிக்கையை நிராகரித்ததுடன், பிரார்த்தனைக்கு வாராதிருந்த 6 மாணவர்களை கிராமத்திற்குத் திருப்பி அனுப்பி விட்டனர். அதன்மேல் மாணவர்கள் சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்தனர். சத்தியாக்கிரகத்தில் எல்லா மாணவர்களும் கலந்து கொண்டனர்.

கல்லூரி அதிகாரிகள் போலீஸ் உதவியை நாடினர். போலீஸ் சூபரிண்ட் தலைமையின் கீழ் 20 போலீஸார் மேற்படி ஸ்தலத்திற்கு வந்து கல்லூரி அதிகாரிகளுடன் ஆலோசித்து, கட்டிடத்திற்கு வெளியிலிருந்து கொண்டு கண்காணித்து வந்தனர். மாலை 2 மணிக்குமேல் கல்லூரி பிரின்ஸிபால் ஷெ 6 மாணவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்து விட்டதாக அறிவித்தார். மாணவர்கள் சாயங்கால பிரார்த்தனை சம்பந்தமாக உள்ள உத்திரவையும் உடனே எடுத்து விட வேண்டுமெனக் கேட்டனர். ஆனால் அதிகாரிகள் அதற்குடன்பட மறுத்துவிட்டனர். பிரின்ஸிபாலும், உபாத்தியாயர்களும் கல்லூரியை விட்டுச் செல்லும் வரையில் மாணவர்கள் சத்தியாக்கிரகம் புரிந்து கொண்டிருந்தனர். போலீஸாரும் பிறகு சென்று விட்டனர். அவ்வுத்தரவை ரத்து செய்யும் வரையிலும், சத்தியாக்கிரகம் செய்வதென மாணவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இன்றைய தினம் மாணவர்கள் பரீட்சைக்குச் செல்லாமல் நின்று விட்டனர்.

சீனத்தில் சமரச முயற்சி

சியாங் - கே. ஷேக் மைத்துனருக்கு அழைப்பு

நான்கிங், டிச, 16.

சீன சர்க்கார், கலகக்காரரை அடக்க ஒன்றரை லட்சம் துருப்புகளை அனுப்புவதென்று தீர்மானித்தார்களல்லவா?

அதற்கு ஜெனரல் ஹோ-யிங்-சின் ஜெனரல்-யு-யியால் என்னும் இருவரும் தான் காரணமென்று தெரிகிறது.

படை அனுப்பக் கூடாதென்று, ஜெனரல் சியாங்-கே-ஷேக்கின் மனைவியும், பிரமுகர்களின் உறவினரும், ஆக்டிங் பிரதம மந்திரியும் சியாங்-கே-ஷேக்கின் மைத்துனருமாகிய திரு. குங்கும் வேண்டாமென்று எவ்வளவோ மறுத்தார்கள். ஆனால் அதை மேற்கண்ட ஜெனரல்கள் லட்சியம் செய்யவேயில்லை.

சமரஸ முயற்சி

நான்கிங், டிச, 16

கலகத் தலைவரின் அழைப்பின்பேரில், தாம் ஸியான்பு செல்லுவதாக திரு. டி. வி. ஸூங் அறிவிக்கிறார்.

அவர் சீன பாங்கியின் டைரக்டர் என்பதுடன் சியாங்-கே-ஷேக்கின் மைத்துனருமாவார்.

சமாதானத்துக்குத்தான் இந்த ஏற்பாடு நடைபெறுகிறதென்று நினைக்க இடமுண்டாகிறது.

மார்ஷல் சியாங்-கே-ஷேக் துரதிருஷ்டவசமாக மாண்டு போனால் ஜெனரல் ஹோ-யிங்-சின், ஜெனரல் பெய்-சீ-யியாவ் ஆகிய இருவரும் சர்க்காரில் பிரதம ஸ்தானத்தை அடைவார்கள். ஆனால் ராஜ்யத்தை அவர்கள் அடக்கியாள்வது சந்தேகம் தான்.

மாட்ரிட் மீது விமானங்கள்

கலகக்காரர் அட்டகாசம்

80 பேர் மரணம் ; 100 பேருக்குக் காயம்

ஜெர்மன் போர்க் கப்பல் அட்டூழியம்

மாட்ரிட், டிச, 17

சென்ற வாரம் முழுதும் இங்கே கடுமையான குளிர். அதனால், கொஞ்சம் ஓய்ந்திருந்த யுத்த முழக்கம் இன்று மீண்டும் அதி தீவிரமாக ஆரம்பமாயிற்று.

கலகக் காரருக்குச் சொந்தமான 20 பெரிய வெடி குண்டு விமானங்களும், 32 சிறிய யுத்த விமானங்களும் மாட்ரிட் மீது பறந்துவந்து மேற்குப் பிரதேசத்தில் குண்டுகளை வீசி எறிந்தன.

உடனே சர்க்கார் விமானங்கள் மேலே கிளம்பிச் சென்று, பகைவரை விரட்டியடித்தன. ஆனால், அதற்குள்ளாக, குண்டுகள் பட்டு 80 பேர் மரணமடைந்தனர். 100 பேருக்குக் காயமேற்பட்டது.

தொழிலாளர் வசிக்கும் பிரதேசங்களில் பலத்த சேதம் உண்டாயிற்று. சர்க்கார் குண்டுகள் பட்டு நான்கு கலக விமானங்கள் கீழே விழுந்து நொறுங்கின.

பொடில்லா - டெல் - மாண்டியிலும் சண்டை வெகு மும்முரமாயிருந்தது.

கலகக்காரர்கள் மீண்டும், மீண்டும், முன்னால் உந்திக்கொண்டு செல்ல முயன்றார்கள்.

ஆனால், சர்க்கார் துருப்புகள் அசையாமல் எதிர்த்து நின்று அவர்களைப் புறமுதுகிட்டோடும்படி அடித்துத் துரத்தின.

முடிவில், கலகக்காரர்கள் தாங்கள் முன்னால் தங்கியிருந்த இடத்துக்கே சென்று விட்டார்கள். சண்டையில் பல கலகக்காரர்கள் ரணகளத்தில் மாண்டு விழுந்ததாகத் தெரிகிறது.

பர்காஸ்

பர்காஸ் போர்முனையில் யுத்தம் ஓய்ந்திருக்கிறது. பொறுக்க முடியாத குளிர்தான் அதற்குக் காரணம்.

சர்க்கார் துருப்புகள் ஒவிடோ மீது மீண்டும் கட்டம் செலுத்தியிருக்கின்றனர்.

இன்று நடந்த சண்டையில், அநேக கலகக்காரர்கள் தோல்வியடைந்தனர்.

ஜெர்மன் கப்பலின் துடுக்கு

ஜிப்ரால்டர், டிச, 16

லிவர்பூலிலிருந்து, "லிடி ஆப் ஆக்ன் போர்டு" என்னும் பிரிட்டிஷ் கப்பல், சாக்குகளை ஏற்றிக்கொண்டு அலிகான்டியாவுக்குப் போய்க் கொண்டிருந்தது.

போர்ச்சுகேசிய கடற்கரைக்கருகில் ஒரு ஜெர்மன் யுத்தக் கப்பல், மேற்படி பிரிட்டிஷ் கப்பலை, எங்கிருந்து வந்தது போகிறதென்று சமிக்ஞை செய்து கேட்டதாம்.

கப்பல் தலைவர் காப்டன் ஹில்டிச் இவ்விஷயத்தை ஜிப்ரால்டர் அதிகாரிகளுக்கு அறிவித்திருக்கிறார்.

பிராங் கைதிகள் பரிவர்த்தனை

லண்டன், டிச, 15

பிராங் கைதிகள் பரிவர்த்தனை விஷயமாக பாஸ்க் சர்க்காருக்கும், ஜெனரல் பிராங்கோவுக்கு மிடையில் ஒரு ஒப்பந்தம் தயாராகியிருக்கிறதென்று பிரிட்டிஷ் ஸ்தானிகர் தெரிவிக்கிறார். இதன் மூலம் 4000 பேர் நன்மையடைவார்கள். பரிவர்த்தனையாகும் கைதிகளை ஏற்றிச் செல்ல பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் கப்பல்களைக் கொடுத்துதவ முன் வந்துள்ளனர்.

பொடில்லா மாண்டி பிடிபட்டதா?

டோலிடோ, நவம்பர், 17

மாட்ரிடுக்கு வடமேற்கிலுள்ள பொடில்லா டெல்-மாண்டியைத் தங்கள் படைகள் கைப்பற்றி விட்டதாக கலகக்காரர்கள் கூறுகிறார்கள்.

கலகப் படைகள், நீட்டிய துப்பாக்கி ஈட்டிகளுடன் முன்னேறிச் சென்றனவாம்.

மேற்கண்ட பிரதேசத்தில் பல இடங்கள் தற்போது கலகக்காரர் கைக்கு வந்துவிட்டனவாம்.

காஸாடெல் காம்போ

காஸாடெல் காம்போ யுத்த முனையில் சர்க்கார் துருப்புகள் வெகு கடுமையாகக் கலகப் படைகளைத் தாக்கின.

நாள் முழுதும் சண்டை நடந்தது.

முடிவில் முன்னேற முடியாமல் சர்க்கார் துருப்புகள் பின் வாங்கிச் சென்றதாகக் கலகக்காரர்கள் சொல்லுகிறார்கள்.

விண்ட்ஸார் கோமகன்

சினிமாக்காரர் கோரிக்கை

விண்ட்ஸார் கோமகனை (மாஜி எட்வர் மன்னர்) படம் பிடிப்பதற்காக பத்திரிகைக்காரர்களும் சினிமாக்காரர்களும் எவ்வளவோ முயன்றும் பயன் படாமற் போகவே, அவர்களனைவரும் கையெழுத்திட்டு மாஜி மன்னருக்கு ஓர் வேண்டுகோள் அனுப்பினர். அதில் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு தங்கள் குடும்பங்கள் உள்ள இடங்களுக்கு போய்ச் சேர வேண்டியிருப்பதாகவும் அதற்கு முன்னர் தங்களுக்கு பேட்டி யளித்து தங்கள் எண்ணத்தை ஈடேறச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளனர். விண்ட்ஸார் கோமகன் அவர்கள் கோரிக்கையை ஏற்பதாகவும் அதிசீக்கிரத்தில் அவர்களுக்கு பேட்டியளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கிரிக்கட்

சென்னை-மைசூர்

சென்னைக்குப் பெரும் வெற்றி

சென்னை, டிச, 19

சென்ற சில தினங்களாக மைசூர் கிரிக்கட் கோஷ்டிக்கும், சென்னைக் கட்சிக்கும் நடைபெற்ற சவ மாகாண கிரிக்கட் போட்டிப் பந்தயத்தில் சென்னை 379 ரன்கள் அதிகமெடுத்து வெற்றி பெற்றது. சென்னை முதல் ஆட்டத்தில் 303 ரன்களும், இரண்டாவது ஆட்டத்தில் 237 ரன்களும் எடுத்தது. மைசூர் இரு ஆட்டங்களிலும் முறையே 123 ரன்களும், 38 ரன்களும் எடுத்தது. சென்னை கோஷ்டியைச் சேர்ந்த ராமசிங் முதல் ஆட்டத்தில் செஞ்சரி எடுத்தார்.

மெக்கானிகல் இஞ்சினீயர்கள் மகாநாடு

காசி, டிச, 17

அகில இந்திய மெக்கானிகல் இஞ்சினீயர்கள் 17-வது வருஷாந்திர மகாநாடு காசியில் 22, 23-ந் தேதிகளில் காசி சர்வ கலாசாலை உப அத்தியக்ஷர் ராஜா ஜ்வாலா பிரசாத் தலைமையில் நடைபெறும்.

அசான்சால் சுரங்க விபத்து

150 பேர் மாண்டனர்

ஐரோப்பிய மானேஜரும் இறந்தார்

கல்கத்தா, டிச, 18

அசான் சாலுக் கருகிலுள்ள போய்டிகென்ற விடத்திலுள்ள கல்கத்தா ஆண்ட்ரு யூல் கம்பெனிக்குச் சொந்தமான நிலக்கரிச் சுரங்கத்தில் பூமிக்கடியில் வெடிவிபத்து ஏற்பட்டு அச்சுரங்கத்தின் மானேஜரான ஈ. டாப்சம், மற்றும் 150 பேரும் மாண்டதாக சம்சயப்படுகிறது. பிரேதங்களை எடுக்க முயற்சிக்கப்பட்டு வருகிறது. தான்பாத் சுரங்க பிரதம இன்ஸ்பெக்டர் திரு டி. ஆர். பென்மன், போய்டிக்கிற்கு சென்றுள்ளார்.

தாமதமாக அனுப்பும் கடிதங்கள்

புதிய வசதிகள்

சென்னை, டிச, 16

ஜனங்களின் சௌகரியத்தை உத்தேசித்து 1936, டிசம்பர் 16-ம் தேதி முதற்கொண்டு, மாகாணத் தலைநகரங்களான சென்னை, பம்பாய், கல்கத்தா, ரங்கூன் முதலிய விடங்களில் ரயில்வே ஸ்டேஷன் தபால் பெட்டிகளில் தாமதமாக கடிதங்கள் போடலாமென்றும், வெளிநாட்டுத் தபாலுக்கு இதுவரையிலுமிருந்து வந்த காலதாமதக் கட்டணத்தை 4 அணாவிலிருந்து 2 அணாவாகக் குறைத்திருப்பதாகவும் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் அறிவிக்கிறார்.

அதே போன்று உள்நாட்டு கடிதங்களை ரயில்வே தபால் பெட்டியில் போட்டாலும், சார்டிங் ஆபீஸில் போட்டாலும் 1 அணா 'லேட்பீ' (காலதாமதக் கட்டணம்) வசூலிக்கப்படும். சாதாரணமாக தபாலாபீஸ்களில் போடப்படும் கடிதங்களுக்கு காலதாமதக் கட்டணம் அரையணா. எப்பொழுது முதற்கொண்டு காலதாமதக் கட்டணம் வசூலிக்கப்படுமென்று ஒவ்வொரு தபாலாபீஸிலும் தெரியப்படுத்தப்பட்டிருக்கும் தபால் கொண்டுபோகும் ஒவ்வொரு மெயில் வண்டியிலும் தபால் பெட்டி வைப்பதற்கு ஏற்பாடாகி வருகிறது. பெட்டியில்லாத வண்டிகளில், அதில் உள்ள உத்தியோகஸ்தர்களே 'லேட்பீ' ஒட்டியுள்ள கடிதங்களை ஜன்னல் வழியாக வாங்கிக் கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது

கொச்சி மகாராஜாவுக்கு உபசாரம்

சென்னை, டிச, 18

சென்னை, காஸ்மாபாலிட்டன் கிளப் போஷகர்களுள் ஒருவரான கொச்சி மகாராஜாவுக்கு மேற்படி கிளப்பில், கிளப் கமிட்டியினர் நேற்று மாலை ஒரு தேக் கச்சேரி நடத்தினர். கிளப் மெம்பர்களும், மற்றும் பல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர். மகாராஜா, திவான் சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியாருடன் சரியாக 5-மணிக்கு வந்தார். கிளப் தலைவர் ஜஸ்டிஸ் பி. மாதவன் நாயர், மகாராஜாவை வரவேற்று மாலை போட்டார். குரூப் போட்டோ எடுக்கப்பட்ட பிறகு மகாராஜாவுக்கு பல மெம்பர்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். பிறகு அங்கிருந்த எல்லோருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. புல்லாங்குழல் கச்சேரி யொன்றும் நடைபெற்றது.

சென்னை மாணவர் மன்றம்

சென்னை, டிச, 19

இம்மன்றத்தின் ஆதரவில் பெத்து நாயக்கன் பேட்டை சிவஞானம் பூம்பொழிலுக் கடுத்த சைவ பாடசாலையில் 20-12-36-ஞாயிறு காலை 8-30-மணிக்கு திரு. தண்டபாணித்தன், சம்பந்த முதலியார் தலைமையில் திரு. ம. ஆ. கன்னியப்பன் "[illegible]" என்பதைப் பற்றி பேசுவர்.

இந்திய விஞ்ஞானக் கழகம்

ஜிம்கானா கூட்டத்தில் கலாட்டா

விளக்குகள் அணைந்தன; கற்கள் வீசப்பட்டன

சர். சி. வி. ராமனுக்கு எதிர்ப்பு

பெங்களூர், டிச. 17

இந்திய விஞ்ஞானக் கழகத்து ஜிம்கானாவின் வருஷாந்திரக் கூட்டம் சென்ற 14-ந்தேதி, சர். சி. வி. ராமன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கழகத்தின் நிர்வாகஸ்தர்களால் 'ஸஸ்பெண்ட்' செய்யப்பட்டுள்ள கழக மாணவர் திரு. எல். சக்கிர தேவர் வந்திருந்தார். இது ஜிம்கானா காரியதரிசியால் தலைவருக்கு அறிவிக்கப்பட்டது. கமிட்டி 'ஸஸ் பெண்ட்' செய்துள்ளதால் கூட்டத்திலிருக்கக் கூடாதென்று கூறி, ஹாலினின்று வெளியேறுமாறு தலைவர் திரு. சக்கிர தேவை கேட்டுக் கொண்டார். கூட்டத்திலிருந்த சில அங்கத்தினர்கள் தலைவர் தீர்ப்பை எதிர்த்துப் பேசினர். அதன் மேல் குழப்பம் ஏற்பட்டது. கழக ஆசிரியர்கள் இருவர்; பத்து மாணவர்கள் பின்தொடர ஹாலினின்று வெளியேறினர். சிறிது நேரத்திற்கெல்லாம் ஹாலிலிருந்த மின்சார விளக்குகள் அணைந்துபோயின கற்களும் கட்டடத்தின் மீது வீசப்பட்டன. பின்னர் சர்.சி.வி. ராமன் வீட்டிற்குப் புறப்பட்ட போது சில மாணவர்கள் போலீஸ் பந்தோபஸ்திலே மோட்டாரில் செல்லும் படி அவரை வேண்டிக் கொண்டனர். சென்ற இரண்டு மாதங்களாக சர். சி. வி. ராமன் பங்களாவுக் கருகே ஒரு போலீஸ் பாரா போடப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்ற சங்கப் பொதுக் கூட்டம்

(ஒரு நிருபர்)

இருகூர், டிச. 18

சென்ற 13-12-36-ந் தேதி மாலை 5-மணிக்கு மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டமொன்று திரு. பேச்சிமுத்து தலைமையில் கூடியது. சமதர்ம கீதம் பாடப்பட்டபின் திரு. என். பி. கிசிரம் "தொழிலாளர் விடுதலை", "காலஞ்சென்ற வ. உ. சிதம்பரம் பிள்ளையின் சேவை" என்னும் பொருள்கள் பற்றி சொற்பொழிவாற்றினர். பின்னர் காலஞ்சென்ற பிள்ளையின் மரணத்தைக் குறித்து அநுதாபங் காட்டியும், ஆலயப்பிரவேசமளித்த திருவிதாங்கூர் மகாராஜாவைப் பாராட்டியும், ஆலயப்பிரவேச மசோதாவைக் கண்டித்து பிரசாரம் செய்து வரும் ஹிந்து தர்ம பரிபாலன சபையாரின் செய்கையைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

சைவ சித்தாந்த சபை ஆண்டு விழா

ஆத்தங்குடி, டிச, 18

இச்சபையின் 53-ம் ஆண்டு நிறைவு விழா, நிகழும் டிசம்பர் 26—27—ம (மார்கழித் திங்கள் 12-13-ல்) நாட்களில் நடைபெறும். அவ்விழாவின் பேரவைக்கு சென்னை நகரசபைக் கல்வி அதிகாரி திரு. எஸ். சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ. எல். டி. தலைமை வகிப்பார். சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜ அமைச்சர் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் பி. ஏ. பி. எல். விழாப் பேரவையைத் திறந்து வைப்பார். 28-ந் தேதி மேற்படி விழாவின் சார்பாக சைவ மங்கையர் மகாநாடும் நடைபெறும்.

மதிநுட்பம் நூலோடுடைய அறிஞர் பலர், சித்தாந்தம், தமிழ் இலக்கியம், ஒழுக்கம் முதலிய பொருள்கள் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவர்கள் என காரியதரிசி எழுதுகிறார்.

சிதம்பரம் நகரசபை காங்கரஸ் நிர்வாக ஊழல்கள்

நீங்கள் இதுவரை செய்த வேலைகளை பொது ஜனங்களிடம் சொன்னீர்களா?

இல்லையேல் ராஜிநாமா செய்து விடுங்கள்

பேடித்தனம் வேண்டாம்

(நகர தூதன் எழுதுவது)

சிதம்பரம் நகரசபை காங்கரஸ் கௌன்சிலர்களே! நீங்கள் இது வரை சாதித்ததென்ன என்பதை பொது ஜனங்களிடம் பகிரங்கமாய் சொல்ல முடியுமா? வீட்டு வரியை குறைக்க வேண்டும் என்று அப்பீல் செய்துக் கொண்டால் ஏழைகளுக்கு வரியைகுறைப்பது கிடையாது. பிரபல காசுக்கடை ரெத்தினசாமி செட்டியாருக்கு வரியை குறைக்க வேண்டும் என்று அப்பீல் செய்தால் பேடித்தனமான சிதம்பரம் காங்கரஸ் கௌன்சிலர்கள் அநேகர்கள் தவளையைப் போல் குறைக்க வேண்டும் என்று ஒரே சத்தமாக கத்துகிறார்கள். பரியாரி தெருவில் உள்ள ஓர் பரியாரியின் பழைய குட்டை இடிக்க வேண்டும் என்று உத்திரவு விடுகின்றீர்களே, அந்த பரியாரி தெரு பெரிய வண்டி போக்கு வரத்துப் பாதையா? இல்லவேயில்லை. அந்த குட்டால் யாருக்கு என்ன கெடுதி உண்டாகிறதோ தெரியவில்லை. சிதம்பரம் காங்கரஸ் கௌன்சிலர்களின் மூளை கோளாறு போல் தெரிகிறது. நிற்க சதா பொதுஜன நடமாட்டமும், கார்கள் வண்டிகள் அடிக்கடி போகும் பூக்கடை தெருவில் உள்ள ரெத்தினசாமிசெட்டியார் (வெள்ளிக்கடைக்கு) கடைக்கு புதிதாக படிகட்டிகொள்ள உத்தரவு கொடுத்தீர்களே? என்ன மதியீனம். நிற்க, தெல்லுக்கடைத் தெரு (மாதவ அய்யர் வீடு) வில் உள்ள காஞ்சனூர் பிள்ளை அவர்கள் வீட்டுக்கு வரி குறைக்க அப்பீல் செய்தாரே அந்த அப்பீல் தேதி தவறி அப்பீல் கொடுத்தது என்று தள்ளுபடி செய்தீர்களே? அந்த வீட்டுக்குப் பிறகு எப்படி வீட்டு வரியை குறைத்து போட்டீர்களோ? நீங்கள் செய்யும் பேடித்தனத்தை பொது ஜனங்களுக்கு எடுத்துச் சொன்னால் சிரிப்பார்கள். இதுதான் காங்கரஸ் நீதி! நாளையதினமே பொதுக் கூட்டம் போட்டு பொது ஜனங்களுக்கு நீங்கள் செய்த நன்மைகளை பகிரங்கமாக எடுத்துச் சொல்லுங்கள் இல்லையேல் யோக்கிய பொறுப்பு உள்ளவர்களாக இருந்தால் உடனே ராஜிநாமா செய்துவிட்டு முக்காடுமிட்டு வீட்டுக்குப் போய் விடுங்கள். நிற்க, திரு. முத்துகிருஷ்ணபிள்ளை (காங்கரஸ் கௌன்சிலர்) ஜில்லா கலெக்டரை கண்டால் பிரிட்டிஷ் ஆட்சிதான் நல்ல ஆட்சி என்று பேசுகிறார். சீர்காழியில் நடந்த தேர்தல் விருந்தில் காங்கரஸ்தான் முக்கியம் என்று வேதாந்தம் பேசுகிறார். இவர் எந்த கட்சியின் யோக்கிய சிகாமணியோ தெரியவில்லை.

கத்தோலிக்கருள் ஜாதித் துவேஷம்!

சகல வழிகளிலும் முட்டுக்கட்டை

ஆர்ச் பிஷப்பிடம் தூதுகோஷ்டி

சென்னை, டிச,

கடந்த ஞாயிற்றுக்கிழமை (13-12-36) கத்தோலிக் சவுத் இண்டியன் பிலாக்தாசிக் சொசைட்டியார் சென்னை கத்தோலிக் ஆர்ச் பிஷப்பினிடம் தூது சென்றனர். ஆயுள் மெம்பர்களில் பிரபலஸ்தர்கள் 16 பேர் திரு எ. பிரான்ஸிஸ் பிள்ளை தலைமையில் தூது கோஷ்டியாகச் சென்றிருந்தனர்.

கத்தோலிக் கிறிஸ்தவ சமூகத்திலும் ஜாதித் துவேஷம் பலம் பெற்று இருக்கிறதென்பதையும், கோவில், குரு மடம், ஹாஸ்டல் முதலிய இடங்களிலும் ஒதுக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு சம உரிமை வழங்கப்படுவதில்லை என்பதையும் விளக்கிக் கூறி, தங்களது இக்குறையை நிவர்த்தித்து போதிய வசதிகள் ஏற்படுத்தி, தங்கள் பிள்ளைகளுக்கு ஸ்காலர்ஷிப் முதலிய உதவிகளும் அளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர்.

ஆர்ச் பிஷப், இவர்களது முறையீடுகளை மிகவும் கவலையுடன் கேட்டு, அவர்கள் கோரிக்கைப்படி சகலமும் செய்யத்தக்கதை கவனத்தைச் செலுத்துவதாக கூறினார்.

எதியோப்பியாவில் இத்தாலியர்

காம்பேலாவை ஆக்கிரமித்துக் கொண்டனர்

ரோம், டிச, 18

மேற்கு எதியோப்பியாவில், கோருக்கு மேற்கிலுள்ள காம்பேலாவில் ஒரு இத்தாலியப் படை பிரவேசித்து, அவ்விடத்திலுள்ள சுங்க முகக் காரியாலயத்தை ஆக்கிரமித்துக் கொண்டனர். அதே சமயத்தில் விமானங்கள் அங்கு மீது வட்டமிட்டு, யுத்த தளவாடங்களையும், ஆஸ்பத்திரிக்கு வேண்டிய சாமான்களையும் இறக்கியதாம்.

திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேடிவ் சொஸைட்டி, லிமிடெட்

ஆண்டு விழா

மேற்படி சொஸைட்டியின் 2-வது தின ஸ்தாபனத்தின் ஆண்டு விழாவானது நாளை ஞாயிற்றுக்கிழமை (20-12-36) மாலை 4-மணிக்கு ஜார்ஜ் டவுன் கிருஷ்ணப்பன் நாயக்கன் அக்கிரகாரத் தெருவிலுள்ள திரு. இராமகிருஷ்ண பெண்பாடசாலையில் நடைபெறும். அவ்வமயம் சென்னை கிறிஸ்தவ கலாசாலை "கிருகஸ்த முறை" ஆசிரியர் திரு. என். சுப்பிரமணிய அய்யர் எம். ஏ. "[illegible] கூட்டுத் தொழில்" என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார். கார்ப்பரேஷன் கௌன்ஸிலர் திரு. என். கோபால மேனன் அவர்கள் பி. ஏ., பி. எல், தலைமை வகிப்பார்.

சினிமா பகுதி

சினிமாக் குறிப்புகள்

சரஸ்வதி

மானே பயில்வான் நடிக்கும், பிரபாத் கம்பெனியின் "சந்திரசேனா" அல்லது "மயில் ராவணன்" என்னும் அற்புத தமிழ் பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும்.

பிராட்வே

வேல் பிக்சர்ஸாரின் "மாயா பஜார்" அல்லது "சசிரேகா பரிணயம்" என்ற தெலுங்கு பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும். ஸ்ரீ சஞ்சிவி, லக்ஷ்மண சாமி, சாந்தகுமாரி முதலியோர் இதில் நடிக்கின்றனர்.

பிரைட்டன்

மிஸ். ராஜசுந்தரி, மிஸ். கமலா தேவி, கோபால ராவ் முதலியோர் நடிக்கும் 'விஸ்வாமித்திரா" என்ற தமிழ் பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும்.

ஏகாதசியை முன்னிட்டு 24-ந் தேதி இரவு 1-மணிக்கு, பி. டி. வி. கிருஷ்ணன், வேலம்மாள் நடிக்கும் "கபீர்தாஸ்" என்ற தமிழ் பேசும் படம் காண்பிக்கப்படும்.

பிரசிடென்ஸி

இனி பிரசிடென்ஸி டாக்கீஸ் என அழைக்கப் படப்போகும் பாரகன் டாக்கீஸில், இன்று மாலை 5-15 மணிக்கு, திருப்பூர் டாக்கீஸாரின், "வசந்தசேனா" என்ற தமிழ் பேசும் படம் சர். கே. வி. ரெட்டி நாயுடுவின் முன்னிலையில் ஆரம்பமாகிறது.

இதுவரை ஆங்கிலப் படங்களே காண்பிக்கப்பட்டு வந்த இத் தியேட்டரில் இனி தமிழ்ப் படங்கள் காண்பிக்கப்படும்.

ராக்ஸி

"இன்றிரவு ஞாபகமிருக்கட்டும்" என்ற ஆங்கில பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும். பெனியமினோ ஜிகிலி என்ற பிரபல பாடகர் இப்படத்தில் நடிக்கிறார்.

சினிமா செண்ட்ரல்

தியாகராஜ பாகவதர், தேவசேனா முதலியோர் நடிக்கும் 'சத்திய சீலன்' என்ற தமிழ் பேசும் படம் இன்று முதல் இங்கு ஆரம்பமாகிறது. சென்னையில் இப்படம் மூன்றாவது வெற்றிகர வாரமாக காண்பிக்கப்படுகிறது.

கிரௌன்-வெஸ்ட் எண்ட்

ஜே. ஆர். ரங்கராஜுவின் 'சந்திரகாந்தா" என்ற தமிழ் பேசும் படம் இன்று முதல் இவ்விரு தியேட்டர்களிலும் ஆரம்பமாகிறது. ஸ்ரீமதிகள் ராஜலக்ஷ்மி, சரஸ்வதி, ராம்குமார் முதலியோர் இதில் நடிக்கின்றனர்.

கெய்டி

நேஷனல் மூவிடோன் கம்பெனியாரின் "பார்வதி கல்யாணம்" என்ற தமிழ் பேசும் படம் இன்று முதல் 3-வது வாரமாக இங்கு காண்பிக்கப்படும். இத்துடன் "துஷ்ட சிஷ்யன்" என்ற ஹாஸ்யப் படமும் காண்பிக்கப்படும்.

எல்பின்ஸ்டன்

ரோனால்ட் கோல்மன், மிஸ் கிளாடெட் கோல்பர்ட் முதலியோர் நடிக்கும் இரு கொடிகளின் கீழ் என்ற ஆங்கில பேசும் படம் இன்று முதல் ஒரு வாரத்திற்குக் காண்பிக்கப்படும்.

அடுத்த சனிக்கிழமை முதல் கோயமுத்தூர் பரமேஸ்வர் செண்ட் பிக்சர்ஸ் கம்பெனியாரின் "இரு சகோதரர்கள்" என்ற தமிழ் பேசும் படம் இங்கு காண்பிக்கப்படும்.

வெல்லிங்டன்

இன்று முதல் பிரதிதினமும் இங்கு வெவ்வேறு படங்கள் காண்பிக்கப்படும். நார்மா ஷியரர், பிரடரிக் மார்ச் நடிக்கும் 'பாரட்ஸ் ஆப் விம்போல் ஸ்ட்ரீட்' என்ற படமும், ஞாயிற்றுக்கிழமை கிரீடா கார்போ, ஜான் ஜில்பெர்ட் நடிக்கும் 'ராணி கிறிஸ்டினா' என்ற படமும், திங்கட்கிழமை கிரீடா கார்போ, பிரடரிக் மார்ச் நடிக்கும் 'அனா கரினினா' என்ற படமும் காண்பிக்கப்படும். 'ஐஸ்வரியத் தீவு' 'உல்லாச விதவை' 'டேவிட் காப்பர் பீல்ட்' என்ற படங்களும் வெள்ளிக்கிழமை வரையில் காண்பிக்கப்படும்.

பேசும் படங்களும் கிராமப் புனருத்தாரணமும்

அவுந்து ராஜா சொற்பொழிவு

பம்பாய், டிச, 17

இந்திய சலனப்பட சங்கத்தின் ஆதரவின் கீழ் சென்ற 11-ந் தேதி பம்பாய் பிளாவட்ஸ்கி லாட்ஜில் அவுந்து ராஜா சாகிப் 'பேசும் படங்களும், கிராமப் புனருத்தாரணமும்' என்பது பற்றி ஓர் சொற்பொழிவாற்றினர். விவசாயம், கால்நடைப் பண்ணைகள், கோழி வளர்த்தல் முதலியவற்றில் நவீன முறைகளை அனுசரிக்க பிலிம்கள் மிகவும் உபயோகமாகவிருக்கு மென்றும், தன்னுடைய சமஸ்தானத்தைப் பொறுத்தவரையில், அவ்விதமே செய்து வருவதாகவும், இந்தியா முழுவதிலும் அவ்விதம் பிலிம்கள் மூலம் கிராமவாசிகள் அவற்றை அறியும்படிச் செய்ய வேண்டுமென்றும், தனது ஐரோப்பிய யாத்திரையின் பொழுது அறிவை விளக்கக் கூடிய பல படங்களை பிடித்துக் கொண்டு வந்திருப்பதாகவும் கூறினர்.

மேரி பிக் போர்டு திருமணம்

11-வயது குறைந்த புருஷன்

'உலக காதலி' எனப் புகழ் பெற்ற மேரி பிக் போர்டுக்கும், சார்லஸ் ரோஜர்சுக்கும் சமீபத்தில் திருமணம் நடந்தேறியது. மேஜர் ரோஜர்சும் ஓர் பேர் பெற்ற சினிமா நடிகர். அவருக்கு வயது 32 மேரி பிக் போர்டுக்கு வயது 43. வயதில் தன்னை விட இளையவராயிருந்தாலும், அறிவில் தன்னைவிட மேம்பட்டவரென மேரி சந்தோஷத்துடன் கூறியது மட்டுமின்றி காதலுக்கு வயது நிர்ணயம் கிடையாதென்றும் கூறினாள்.

போட்டோ படங்களைப் பட்டுத் துணியிலும், கான்வஸ் துணியிலும் பிடிப்பதற்கு ருஷியாவில் ஒரு நூதன முறையைக் கண்டு பிடித்திருக்கின்றனர்.

Fredric March and Norma Shearer in "The Barretts of Wimpole Street"

"பாரட்ஸ் ஆப் விம்போல் ஸ்ட்ரீட்" என்னும் படத்தில் நடிக்கும் பிரடரிக் மார்ச்சும் நார்மா ஷியரரும். இப்படம் இன்றுமுதல் வெல்லிங்டனில் ஆரம்பமாகிறது.

"இரு சகோதரர்கள்"

கோயமுத்தூர் பரமேஸ்வர் செண்ட் பிக்சர்ஸ் கம்பெனியாரின் "இரு சகோதரர்கள்" என்ற உயரிய தமிழ் பேசும் படத்தின் பிரத்தியேகக் காட்சி யொன்று இன்று காலை 8-30-மணிக்கு செலக்ட் டாக்கீஸில் காண்பிக்கப்பட்டது.

கே. பி. கேசவன், கே. கே. பெருமாள், டி. எஸ். பாலையா ஸ்ரீமதிகள் எஸ். என். கண்ணுமணி, என். என். விஜயலக்ஷ்மி, கிருஷ்ணவேணி, எம். எம். ராதாபாய் முதலியோர் இதில் முக்கிய நடிகர்களாவர்.

பசுபதியாக நடிக்கும் கே. பி. கேசவனின் நடிப்பு மெச்சத்தக்கது. மிக்க உணர்ச்சியுடன் நடிப்பதுடன் பாடல்களும் இனிமையாயிருக்கிறது. தேவாரத்திலிருந்து அவர் பாடும் பாட்டு மிகவும் அருமையாயிருக்கிறது. திருவல்லிக் கேணி கடற்கரையிலுள்ள ரேடியோவில் ஜனத்திரள் பாடல் கேட்பது இதில் காண்பிக்கப்படுகிறது. இதர நடிகர்களும் தங்கள் தங்கள் பாகங்களை திறமையாகவே நடித்திருக்கின்றனர். பாட்டுகள் சொற்பமாக இருப்பது குறிப்பிடத் தக்கது. படமெடுப்பும் ஒலி பதிவும் சுத்தமாயிருக்கின்றன. டைரக்ஷன் நேர்த்தியாகயிருக்கிறது. எல்லிஸ் ஆர். டங்கனால் இப்படம் டைரக்ட் செய்யப்பட்டுளது. எல்லோரும் பார்க்க வேண்டிய படங்களுள் இது ஒன்றாகும் என்று கூறுவது மிகையாகாது.

இப்படம் 26-ந்தேதி சனிக்கிழமை முதல் எல்பின்ஸ்டன் டாக்கீஸில் காண்பிக்கப்படும்.

மிஸ் சுலோசனா

1907-ம் ஆண்டு அக்டோபர் 9-ந்தேதி புனாவில் பிறந்தார். ஒரு சிலகாலம் 'டைபிஸ்ட்'டாய் இருந்தார். தற்போது மாதச் சம்பளம் ரூ 5200 பெற்று வருகிறார். இந் நடிகை டி. பில்லிமோரியாவுடனும், ராஜா சாண்டோவுடனும் இம்பீரியல் கம்பெனி படங்களில் நடித்துள்ளார். இன்னும் விவாகமாகவில்லை.

விண்ட்ஸர் கோமகன்

4000 ஏகர் விஸ்தீரணமுள்ள எஸ்டேட் வாங்க யோசனை

புடாபெஸ்ட், டிச, 17

புடாபெஸ்டுக்கு 80-மைல் தூரத்தில், பலாடன் ஏரிக்கரையில், கிலி பிரபுவுக்குச் சொந்தமான, 4000 ஏகர் விஸ்தீரணமுள்ள ஒரு எஸ்டேட்டை விலைக்கு வாங்க விண்ட்ஸர் பிரபு முயற்சித்து வருவதாகத் தெரியவருகிறது. அதில் கோல்ப் பந்து விளையாடுவதற்கும், துப்பாக்கி வேட்டை யாடுவதற்கும் வசதிகளிருப்பதுடன், ஒரு மாளிகையும் இருக்கிறது.

பிரட்டி பார்த்தலோமியோ நடிக்கும் 'டேவிட் காப்பர் பீல்டு' என்ற ஆங்கில பேசும் படத்திலிருந்து ஒரு காட்சி. இப்படம் கூடியசீக்கிரம் வெல்லிங்டன் டாக்கீஸில் காண்பிக்கப்படும்.

தமிழ்நாடு விஸ்வ கர்ம இளைஞர் மத்திய கழகம்

ஆண்டு விழாவும் இளைஞர் மகாநாடும் நடைபெறும்

சென்னை, டிச, 19

மேற்படி கழகமானது சென்ற 1935-ம் ஆண்டு நவம்பர் மாதம் சென்னை அரசாங்க மந்திரி கனம் பி. டி. ராஜன் அவர்களால் சென்னையில் திறவப்பட்டது. அக்கழகத்தின் ஆண்டுவிழாவானது. நாளது 1937-ம் வருடம் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் கொண்டாடப்படும் அது சமயம் சென்னை இளைஞர் மகாநாடும் நடைபெறும். இவ்விரு வைபவங்களுக்கும் சென்னை அரசாங்க மந்திரிகளும் பிரபல உத்தியோகஸ்தர்களும் அழைக்கப்படுவார்கள். வருடாந்தரக் கொண்டாட்டமும் மகாநாடும் வெற்றிகரமாக செவ்வனே நடைபெற வேண்டும் காரியங்களை பிரம்மஸ்ரீ ஏ. பி. பால சுப்ரமணிய ஆச்சாரியார், எம். ஏ., (தலைவர்) அவர்களும் பிரமஸ்ரீ சி. என். வரதாச்சாரியார், பி. ஏ., பி. எல்., அட்வொகேட் (போஷகர்) அவர்களும் அதி தீவிரமாகக் கவனித்து வருகின்றனர். மேற்படி விழாக்களைப் பற்றிய முழு விபரங்களும் பின்னர் வெளியிடப்படும். தமிழ்நாட்டிலுள்ள மற்றைய கிளைச் சங்கங்களுக்கு விபரங்கள் தபால் மூலமாய் கூடிய சீக்கிரத்தில் அறிவிக்கப்படும் என மேற்படி கழகத்தின் காரியதரிசி எழுதுகிறார்.

உபந்நியாசம்

சென்னை, டிச, 19

நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு சென்னை இராயப் பேட்டை ஸ்ரீபாலசுப்ரமணிய பக்த ஜன சபையின் ஆதரவில் தெ சபா கட்டிடத்தில் திரு. வி. உலகநாத முதலியார் அவர்கள் "விறகு விற்ற படலம்" என்னும் பொருள் பற்றி சொற்பொழி வாற்றுவார்கள் அன்பர்கள் போதருவார்களாக.

ஈரோடு ஜில்லா போர்டு

தலைவர் தேர்தல்

பட்டக்காரர் வெற்றி

(ஒரு நிருபர்)

ஈரோடு, டிச, 19

கோயம்புத்தூர் ஜில்லா கலெக்டர் இன்று ஈரோடு ஜில்லா போர்டு தலைவர் தேர்தலை நடத்தினர். 26 மெம்பர்கள் பிரசன்னமாயிருந்தார்கள். பழைய கோட்டைப் பட்டக்காரர் ஜில்லாபோர்டு தலைவராக ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப் பட்டார். புதிய தலைவர் தலைமையின் கீழ் நடந்த உப தலைவர் தேர்தலில் திரு. சுப்பிரமணிய கவுண்டர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

புது ஜில்லா போர்டுகளுக்கு நியமனம்

சர்க்கார் அறிக்கை

சென்னை, டிச, 17

புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் ஈரோடு ஜில்லா போர்டுக்கு திரு. ஆர். மாரிசாமி ஸ்ரீமதி கண்ணம்மாளும் சர்க்காரால மெம்பர்களாய் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

கோயம்புத்தூர் ஜில்லா போர்டுக்கு திரு. ஜெமாலிங்க சாயபும், திரு. பிச்சைமுத்தும், திரு. ஜே. சி. பொன்னுரங்கம், ஸ்ரீமதி ருக்மணி அம்மாளும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

முனிசிபல் கூட்டம்

ராமநாதபுரம் ஜில்லா கல்விச் சபைக்கு மெம்பர் தேர்தல்

(ஒரு நிருபர்)

ஸ்ரீவில்லிபுத்தூர், டிச. 16

டிசம்பர் மாதம் 15-ந் தேதி மாலை 5-30 மணிக்கு, ஸ்ரீவில்லிபுத்தூர் முனிசிபல், ஸ்பெஷல் கூட்டம், சேர்மென் திரு. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. ஏ ஸ்ரீனிவாசாச்சாரி யாரவர்களால், பிரேரேபிக்கப்பட்டு, திரு. சங்கரநாராயண நாயுடு அவர்களால் ஆமோதிக்கப் பட்டு, திரு. பாலையா பிள்ளை என்ற இரு. என். சிவகாமிநாத பிள்ளை அவர்கள், ராமநாதபுரம் ஜில்லா கல்விச் சபைக்கு மெம்பராக ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

ராஜாங்க சபை

முஸ்லீம் தொகுதி

சென்னை, டிச, 17

ராஜாங்க சபைத் தேர்தலில், சென்னை முஸ்லீம் தொகுதிக்கு திரு. சையத் முகம்மது பாஷா 126-வோட்டுகள் பெற்று வெற்றி பெற்றார். இவருக்குப் போட்டியாக நின்ற திரு. ஆமத் மீரான் சாகிபுக்கு 55-வோட்டுகளே கிடைத்தன.

ஜஸ்டிஸ் இளைஞர் கழகம்

சென்னை, டிச, 19

ஜஸ்டிஸ் இளைஞர் கழகத்தின் (பெத்து நாய்க்கன் பேட்டைகிளை) கூட்டமொன்று நாளை காலை 9-மணிக்கு சென்னை, பெத்து நாய்க்கன் பேட்டை நெ. 4 வெங்கய்யர் தெருவில் நடைபெறும். அது சமயம் பல முக்கிய விஷயங்கள் ஆலோசிக்கப்படும்.

தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ, தலைமை வகிப்பார்.

சென்னை முதலியார்கள் சங்கம்

வருஷாந்திரக் கூட்டம்

சென்னை, டிச, 19

காரியதரிசிகள் எழுதுவதாவது:—

சென்னை முதலியார்கள் சங்கத்தின் வருஷாந்திரக் கூட்டம், நாளை மாலை 4-மணிக்கு ஜார்ஜ்டவுன் ஆதியப்பநாய்க்கன் தெருவிலுள்ள "திருமணம் அண்ணாமலை முதலியார் ஹாலில்" நடைபெறும். அங்கத்தினர்கள் யாவரும் விஜயம் செய்ய கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

வருகிறது! உங்களூர் வெள்ளித் திரையில் வருகிறது!!
என்று மில்லாத இனிமை! சினிமாவிற்கே ஓர் புதுமை!!
அது என்ன?
ஒருவரே இருவராகத் தோன்றி ஒருவர்க்கொருவர்
பேசிக் கொள்ளும் விந்தையே விந்தை!!!
இதை
★ "குட்டி" ★
என்னும்
தமிழ்—இங்கிலீஷ் கலந்த சமூக பேசும் படத்தைப் பார்த்து
தெரிந்து கொள்ளுங்கள்.
★
Mr. V. S. M. ராஜாராமய்யர்
மிஸ். T. P. லக்ஷ்மிகாந்தம், மிஸ். P. S. கிருஷ்ணமணி
முதலிய பிரபல நடிகர்களுடன் நடிக்கப் பெற்றது.
டைரக்டர்: ஸ்டுடியோ:
T. P. கைலாசம் வேல் பிக்சர்ஸ்
B.A., A.R.C.Sc., (London) மதராஸ்.
விவரங்களுக்கு:— V. S. டாக்கீஸ், டெலிபோன் நெ: 58-A
புரொப்ரைட்டர்ஸ்:—V. S. K. முத்துராமய்யர் & சன்ஸ்,
தந்தி: "JARIVASTAR" மதுரை.

முச்சங்க காலம்

(வித்வான் மா. இராசமாணிக்கம் அவர்கள் P. O. L)

(முன் தொடர்ச்சி)

கடலால் கொள்ளப்பட்ட தென் மதுரையில் முதற் சங்கம் நடைபெற்ற தென்ற களவியல் கூற்றில் உண்மையுள்ளது என்பதே எமது நம்பிக்கை. 'ஸ்காட் எலியட்' என்பார் வரைந்துள்ள 'இறந்த லெமூரியா' என்ற ஆங்கில நூலில் படமொன்றுளது. அதனைப் பார்வையிடின், இப்போதுள்ள குமரி முனைக்குத் தெற்கே இமயம் போன்ற பெருமலைத் தொடர்ச்சி ஒன்று தெற்கு வடக்காக நெடுந் தூரம் செல்வதைக் காணலாம். இப்போதைய குமரி முனைக்கும், இம்மலைக்கும் இடையே ஒரு மலையும் இருந்ததாகத் தெரியவில்லை. எனவே கடலால் கொள்ளப்பட்ட 'பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடு'* இதன் ஒரு பகுதி யெனத் துணியலாம். அதற்கு வடக்கே இப்போதைய குமரிக்குத் தெற்கே 'நெடியோன் நன்னீர்ப் பஃறுளி யாறு' ¶ இருந்திருக்கக் கூடும். இவ்விரண்டிற்கும் இடையே 49 நாடுகள் இருந்ததாக அடியார்க்கு நல்லார் கூறுதலும் பொய்யில்லை என்றே தோற்றுகிறது. 'நாடு' என்பது தமிழகத்தில் சிறிய நிலப் பரப்புடையதே என்பதைச் சான்ற அறிவுள்ளார் அறிவர். மேற், கூறப் பெற்ற பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடு இப்போதைய குமரிக்குத் தெற்கே யிருந்த நிலப் பகுதி வழியாகச், சென்று, பின் தென் மேற்காகத் திரும்பி மடகாஸ்கர் வரை சென்றதாகத் தெரிகிறது லெமூரியாக் கண்டம் கடலால் கொள்ளப்பட்டதற்குக் கால எல்லை பெரிதாகப் போகிறது. அங்ஙனம் அப்பேரழிவு உண்டானபோது சிலப்பதிகாரம் கூறும் குமரிக்கோடு (தொடர் - மலையின் ஒரு பகுதி) எஞ்சிய தாதல் வேண்டும். அதுவே தமிழகத்தின் பழைய எல்லை. இம்மலைப் பகுதியின் பேரளவையே முதல் கடல் கோள், பஃறுளியாற்றுடனும், இடைப்பட்ட நாடுகளுடனும் அழித்திருக்க வேண்டும். இக்குமரி மலைப் பகுதியையே 'பொதியிற்குத் தென்பால் மகேந்திரம்; அதனடியில் பொன் மயமான இலங்கை யுண்டு' † எனச் சிவ தருமோத்திரம் கூறுகிற தெனக் கோடல் பொருந்தும்.

இனி, 'இலங்கைச் சரிதம்' எழுதிய 'டென்னென்ட்' என்பார் 'இலங்கை, முதற் கடல் கோளில் இந்தியாவினின்றும் பிரிந்தது; அக்கடல் கோள் உண்டான காலம் சுமார் கி. மு. 2387" என்பர். இந்தியாவினின்றும் இலங்கை பிரிந்து நிற்கத் தக்க நிலையுண்டாக்கிய கடல் கோளால், இப்போதைய குமரிக்குத் தெற்கே இருந்த குமரி மலையும், பஃறுளியாறும், அவற்றின் இடைப்பட்ட 49 நாடுகளும் அழிந்ததில் வியப்பென்னை? அங்ஙனம் அழிந்த 49 நாடுகளில் ஒரு நாட்டில் பாண்டியன் தலைநகர் 'தென் மதுரை'‡ இருந்த தென்றும், அஃதும் அகத்தியர் காலத்தில் அழிந்து பட்டதென்றும், இப்பெருங் கடற்கோளாற்றான் பண்டைத் தமிழ் நூல்கள் அழிந்தன என்றும் கொள்வதில் ஐயமுண்டாதல் யாங்ஙனம்? 'ஆரியர் வருகைக்கு முன்னமே தமிழர் சிறந்த நாகரிக நிலையில் இருந்தனர்', என மேனாட்டுச் சரித்திர நிபுணர் பலரும் மன்னூற் புலவரும் ஒத்துக் கொண்ட செய்தியினிருந்து தமிழர்க்கு மொழியுண்டு, நூல்கள் உண்டு என்ற உண்மை இருப்ப—' தாஸ்யுக்கள் (ஆரியர் அல்லார்) பட்டணங்களிலும் கோட்டைகளிலும் பொன் அணிகளோடு பொலிவுறுகின்றனர்'' என வேதகால ஆரியரே அழுது புலம்பிய வேதச் சுலோகங்கள் சான்று இருப்ப—கி. மு. 2000 க்குச் சிறிது முன் அல்லது கி. மு. 2000 ல் ஆரியர் வட இந்தியாவிற் புகுந்தனர் என்ற முடிபு இருப்ப—அகத்தியர் காலத்தில் கடல் கோள் ஏற்பட்டு 49 நாடுகளை அழித்தது எனச் சிலப்பதிகாரமும் இறையனார் களவியலும் தமிழ் இலக்கிய இலக்கணச் சான்றாக இருப்ப—இவற்றின் துணைக்கொண்டு "அகத்தியர் காலம் இலங்கைச் சரிதம் கூறிய முதற் கடல் கோள் காலம், அஃதாவது கி. மு. 2387'' எனக் கொள்வதில் இருக்கும் ஐயப்பாடென்னை?*

நமது தமிழகத்துக்கும் இலங்கைக்கும் மிக நெருக்கமான தொடர்பு உண்டென்பதை நாம் உளங்கொண்டாற்றான், களவியல் கூறும் கடல்கோள் இரண்டிற்கும் 'டென்னென்ட்' கூறும் இலங்கைக் கடல் கோள் கட்கும் மிக நெருங்கிய உறவு உண்டெனக் காட்டலாகும். அகத்தியர் முதலியோர் இருந்த கடல் கோளுக்கு முற்பட்ட காலமும், தொல்காப்பியற்கு முற்பட்ட காலமும் முதற் சங்க காலமெனவே பின்னையோர் (களவியல் உரையாளர்) கொண்டனர் எனத் தெரிகிறது. ஏனெனின், பாரதப் போரில் பெருஞ் சோறு படைத்த உதியன் சேரலாதனைப் பாராட்டிப் பாடிய முரஞ்சியூர் முடிநாகராயர் முதற் சங்கத்தவர் எனக் கூறப்படுதலின் என்க. பல நூற்றாண்டுகள் இடையே சென்று விட்டமையின் முடிநாகராயர் காலம் இன்னதெனக் கி. பி. 8-ம் நூற்றாண்டினரான களவியல் உரையாளர் அறிந்திலாமை இயல்பே. பாரத இராமாயண காலம் கி. மு. 1400-கி. மு. 750 எனச் சரித்திராசிரியர் கூறுதலால், பெருஞ் சோற்று உதியன் சேரலாதன் காலம் குறைந்தது கி. மு. 750 எனக் கோடல் தவறாகாது. எனவே, அவனைப் பாடிய முடிநாகராயர் காலமும் அஃதாக இருக்கக்கூடியதே. இம் முடிநாகராயர் ஈழமண்டலத்தார் என்பது அவர் பெயராலும், இலங்கைச் சரித்திரத்தாலும் துணியப்படும்.† இப்புலவர் இத்துணைத் தொன்மை வாய்ந்தவராதலின், இவருடைய பிறபாக்கள் காணப்பட்டில; இவர் வேறெந்த அரசனையும் பாடியதாகவும் தெரியவில்லை. இவரைப் போன்றே 'ஈழத்துப் பூதன் தேவனார்' என்னும் இலங்கைப் புலவர் ஒருவர் இருந்ததாகத் தெரிகிறது.‡ இவற்றால் தமிழகத்துக்கும், ஈழநாட்டுக்கும் அக்காலத்திலேயே நெருங்கிய தொடர்பிருந்தமை நன்கு புலனாதல் காண்க. இது நிற்க,

கி. மு. 2387-ல் நடந்த கடல் கோளுக்குப் பின் இலங்கைக்கும் தமிழகத்துக்கும் இடையே கடல் தோன்றிற்று என மேற் கூறினோமல்லவா? இராமாயண காலத்தில் இச் செய்தி (இரண்டிற்கும் இடையில் கடல் இருந்தமை) உண்மை எனவே புலனாதல் வான்மீகி இராமாயணத்தால் அறியலாம். அக்காலத்தேதான் (கி. மு. 1400-750) ஆரியர் தமிழகத்தில் நுழைந்திருக்கக்கூடும் எனச் சரித்திராசிரியரே கூறுகின்றனர்.*

இனி 'டென்னென்ட்' என்பார் "இலங்கையில் இரண்டாம் கடல் கோள் நிகழ்ந்தது கி. மு. 504-ல்; அதனால் இலங்கையின் பெரும் பகுதி கடலுள் ஆழ்ந்தது" என்பர். இந்நிகழ்ச்சி இராமாயண காலத்துக்குப் பின்னரே என்பது நினைவில் இருத்தத் தக்கது. சைவ நூலாய சிவதரு மோத்திரம், "பொன் மயமான இலங்கையின் பெரும்பகுதி கடலுள் ஆழ்ந்தது"† எனக் கூறுதல் டென்னென்ட் கூற்றை அரண் செய்தல் காண்க.‡ இங்ஙனம் இலங்கைக்குப் பேரழிவு உண்டாக்கிய கடல் கோளே தொல்காப்பியர் வீற்றிருந்து தமிழாய்ந்த பாண்டியன் தலைநகரான கபாடபுரத்தையும் அழித்தது எனக் கோடல் எவ்வாற்றானும் தவறாகாதன்றோ? கபாட புரத்தையும் அதனை அடுத்த கடல் சார்ந்த நிலப்பகுதியையும், குமரியாற்றையும் இரண்டாம் கடல் கோள் கொள்ளை கொண்டது.§

இவ்விரண்டாம் கடல்கோள் ஏற்படுதற்குச் சிறிது முன்னரே தொல்காப்பியர் கபாட புரத்தில் தொல்காப்பியம் அரங்கேற்றியிருத்தல் வேண்டும். இன்றேல் 'வடவேங்கடம் தென் குமரி' எனப் பணம்பாரனர், தமிழகத்தின் தென் எல்லையாகக் குமரியாற்றைக் கூறியிரார் என்க. கடல் கோளுக்குப் பின்னர்த் தொல்காப்பியம் இயற்றப்பட்ட தென்பர் சிலர். ஏனெனில், 'நிலந்தரு திருவிற் பாண்டியன்'—கடல் கோளுக்குப் பின் குடிகட்கு வேற்று நிலங்களைத் தந்தவன் எனப் பாயிரத்தில் அரசன் புகழப்படுதலின் என்பர். அது பொருந்தாது. என்னை? 'பிறநாட்டுப் பகுதியை வென்று தன்னாட்டுக் குடிகட்குத் தரும் போர்த் திருவினை உடையவன்' என 'உரையாசிரியர்' கூறுதலின் என்க. கடல் கோளுக்குப் பின் நூல் செய்யப்பட்ட தாயின், அது செய்தற்கு உறு கருவியாக இருந்த இலக்கண - இலக்கியங்கள் எங்கே? தொல்காப்பியம் இருப்ப, அவை மட்டும் யாண்டு ஒழிந்தன? என்பன போன்ற வினாக்கட்கு விடையின்மை யறிக.

ஆயின், 'தொல்காப்பியம் - கடல் கோளுக்கு முற்படச் செய்ததாயின், அது மட்டும் உயிர் பெற்றிருத்தல் யாங்ஙனம்?' எனின், கூறுவல்: தொல்காப்பியர் அது காலை உயிரோடிருந்தால் அது பிழைத்த தென்க. கடல் வெள்ளம் திடீரென வருமாயின், அவரவர் தம் உயிரையே சிறப்பாகக் கருதுவர். அம்முறையில் தொல்காப்பியர் தம்மையும் தம் உயிர் போன்ற தொல்காப்பியத்தையும் காத்துப் பிழைத்தார் என்க. அவரோடிருந்த ஏனைப் புலவர் தாம் செய்தனவற்றை (எவையேனும் இருந்திருப்பின்) அவற்றோடு மீண்டிருப்பர். அங்ஙனம் அவர்களால் காப்பாற்றப் பெற்றனவே மாபுராணச் செய்யுட்கள் சில, அகத்தியச் சூத்திரங்கள் சில, பன்னிரு படலம் (வெண்பா மாலைக்கு முதல் நூல்) முதலியனவும் அடி நனி அற்ற பாக்கள் சிலவும் என்க.

''பணம்பாரனர் 'வடவேங்கடம் தென் குமரி' எனக் குமரியாற்றை எல்லையாகக் கூறிப் பாயிரம் செய்தமையின், சகரர் வேள்விக் குதிரை நாடித் தோட்ட கடலகத்துப்பட்டுக் குமரியாறு பனைநாடு கெடுவதற்கு முன்னையது தொல்காப்பியம்''* எனப் பேராசிரியர் கூறுதலும் தொல்காப்பியம் கடல் கோளுக்கு முன் செய்யப்பட்ட தென்பதை வலியுறுத்தல் காண்க.

"முதற் சங்கத்தில் அரங்கேறிய நூல்களுள்ளே பிற்காலத்தில் பெயர்தானுங் கேட்கப் படாதிறந்த நூல்கள் எத்தனையோ பல அவற்றுள்ளே இரண்டாம் சங்கத்து வழங்கினவும் சிலவேயாம். அவையும் இரண்டாம் சங்கம் இருந்த கபாட புரத்தோடு ஒழிந்தன. இரண்டாம் சங்கத்தார்க்கு ஆதார நூலாயது தொல்காப்பியம் ஒன்றேயாம்.........கபாடபுரம் அழிந்தபோது இடைச் சங்கத்துக்குரிய நூல்களும் கடல் வாய்ப்பட்டு அழிந்தன. அரசனும் இருக்கை இழந்து வடக்கின்கண் சென்றிருந்து இப்போதுள்ள 'மதுரை' நகரை அமைத்து, அங்கிருந்து அரசியற்றி வந்தான். தெற்கின்கண் இருந்து அழிந்து போன மதுரையை நோக்கி இம்மதுரை 'வட மதுரை' என வழங்கப்பட்டது''†

எனவே, இதுகாறுங் கூறியவற்றால், கி.மு. 504-ல் இரண்டாம் கடல்கோள் இடையிட்ட காலத்தே நிலந்தரு திருவிற் பாண்டியன் முன் கபாட புரத்தில்‡ தொல்காப்பியர் தம் நூலை அரங்கேற்றினர்; அது போது இருந்த அகத்தியம், பூதபுராணம், மாபுராணம், இசை நுணுக்கம், இன்னோரன்ன நூல்களும் இருந்த அலைவாய், அலை வாய்ப்பட்டது; எனவே, தொல்காப்பியமும் பிற நூல்களில் எஞ்சிச் சிதறுண்ட சில பகுதிகளுமே இதுகாறும் நின்று நிலவலாயின என்பன நன்கறியலாம்.

"கி. மு. 3-ம் நூற்றாண்டிற்றான் புத்த மதமும், சமண மதமும் தமிழகத்தில் நுழைந்தன. தொல்காப்பியம் முழுவதும் எப்பக்கம் திருப்பிப் பார்ப்பினும் பௌத்தம் சமணம் என்பவற்றின் கொள்கைகளோ பிறவோ பேசப்படவில்லை. எனவே, தொல்காப்பியர் கி. மு. 4-ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் என எக்காரணமுங் கொண்டு கூறுதல் இயலாது.''§

கி. மு. 306-ல் மூன்றாம் கடல் கோள் இலங்கையில் உண்டாயிற்றென்றும், ஆனால் குறிப்பிடத்தக்க பெரு விபத்தில்லை என்றும் டென்னென்ட் கூறுவதால், நாமும் அதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்க. (தொடரும்)

---

* சிலப்பதிகாரம் - காதை 11, வரி—19, 20.

¶ புறம்—9.

† தொல் - எழுத் - நா. சு. பிள்ளையவர்கள் முகவுரை.

‡ முதற் சங்க காலத்திய மதுரை இப்போதைய மதுரைக்குத் தெற்கே இருந்து அழிந்தமையால், அதனைத் 'தென் மதுரை' என்றும், இப்போதைய மதுரையை 'வட மதுரை' என்றும் பின்னுளோர் கூறலாயினர் என்பது உணரத் தக்கது.

* உலகத்தில் சில நடுக் கோட்டுக்கு அருகேயுள்ள நாடுகளே பண்டைய என்பதும், அவை பண்டைய வாயிருந்தபோது இப்போதைய இமயமும், கங்கை சிந்துச் சமவெளியும் இல்லை என்பதும், ஆஸ்ட்ரேலிய கடலின் கிழக்கு ஒன்றே பெருங் கடல் கோளால் (இதுவரை யாம் கூறிவந்த முதல் கடல் கோள் அன்று) பண்டைத் தமிழகமாகிய லெமூரியாக் கண்டம் அழிந்து பட்ட தென்றும் கூறிய இற்றைத் தமிழகத்தே ஆராய்ச்சிப் போரேறாக விளங்கிய திரு. பா. வே. மாணிக்க நாய்க்கர் அவர்கள் கூற்று ஈண்டு நினைவில் இருத்தத் தக்கது.

செந்தமிழ்ச் செல்வி-முதற்பகுதி, பக். 5, 39, 74.

"வடபாகம் தாழத் தென்பாகம் உயர்ந்தது'' என்னும் காஞ்சிப் புராணச் செய்தியுள் உள்ள உண்மை இதனுள் காணலாம்.

† தென் மொழி வரலாறு, ப. 25.

‡ குறுந் தொகை, செ. 189, நற்றிணை, செ. 366,

* V. A. Smith's Oxford of India, p. 5.

† இராமாயணத்தில் 'இலங்கைக்குச் செல்ல அநுமான் மகேந்திர மலையிலிருந்து கடல் தாண்டினன்' என்பதும், 'மகேந்திரமும் இலங்கையின் பெரும் பகுதியும் கடலுள் ஆழ்ந்தன' என்னும் சிவதருமோத்திரக் கூற்றும் - முதல் கடல்கோளுக்குப் பின்னும் குமரியின் மிக உயர்ந்த மலைப் பகுதி இலங்கைக்கு எதிரே இருந்ததெனக் கொள்ள இடந் தருதல் காண்க.

‡ இராவணன் அழிந்தான், இலங்கையும் அழிந்தது. என்னும் பழமொழி சரித்திரத் தொடர்புடைமை அறியற்பாலது.

‡ இழந்த நாட்டை ஈடு செய்யப் பாண்டியன், சோழனுக்கும் சேரனுக்கும் உரித்தான 'குண்டூர்-முத்தூர்' என்னும் இரு சிறிய நிலப் பகுதிகளைக் கைப்பற்றினன் எனக் கூறுதலால், இலங்கைக்குப் பேரழிவினையுண்டாக்கிய இக்கடல் கோள் தமிழகத்துச் சிறிதளவே கேடு பயந்ததெனத் தெரிதல் காண்க.

* தொல்-மரபியல், சூ. 94 உரை.

† தென் மொழி வரலாறு, பக். 25, 27.

‡ இதனையே தமிழர் 'அலைவாய்' என்பர்; இராமாயணம் 'கபாட புரம்' என்னும் சரித்திராசிரியர் கருத்துப்படி இராமாயணத்தின் முற்பகுதி எழுதப்பட்ட காலம் கி. மு. 6-ம் நூற்றாண்டெனக் கொள்ளினும், இஃது உண்மை எனப் பெறப்படுதல் காண்க.

§ T. R. Sesha Iyengar's 'Ancient Dravidians', p. 109

சென்னை மாகாண தாழ்த்தப்பட்டார் கட்சி

தலைவர்கள் கவனிப்பார்களா ?

(ஜீ. டி. கனகமலை)

நடந்த 9-12-36-ல் வெளிவந்த 'விடுதலை' பத்திரிகையில் சென்னை மாகாண தாழ்த்தப்பட்டார் கட்சி வேலைத் திட்டங்கள் எமது கட்சித் தலைவர்கள் வெளிப்படுத்தி யிருந்ததை நமது தாழ்த்தப்பட்டார் சமூகத்தார் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. மேற்குறித்த நமது கட்சியின் சார்பாகவே வரப்போகும் மாகாண சட்ட சபை தேர்தலுக்கும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் போவதையும் யாரும் ஆட்சேபிக்க முடியாது.

நமது சென்னை மாகாணத்தில் பல ஜில்லாக்களில் தாழ்த்தப்பட்டார் சமூகத்திற்காக பல காலமாக தங்கள் உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்து அரும்பாடு பட்டு வந்த தலைவர்கள் பலர் இருக்கிறார்கள். நமது கட்சியின் ஆதாவில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பதற்கு முன் நம் மாகாணத்திலுள்ள பல ஜில்லாக்களிலும், பல தாலூகாக்களிலும், நமது தாழ்த்தப்பட்டார் சமூக விடுதலைக்காக உழைத்து நம்மவர்களின் முன்னேற்றத்திற்குரிய பல காரியங்களைச் செய்து வந்தவர்கள் வருகிறவர்கள் யார் என்பதை நமது தலைவர்கள் அறியும் பொருட்டு (கட்சித் தலைவர்கள்) ஒரு கமிட்டியை ஏற்படுத்தி அதன் மூலம் முதலில் விசாரணை செய்து, நமது சமூக விடுதலைக்கும் நமது கட்சித் திட்டங்களுக்கும், உட்பட்டு வேலை செய்யும் பிரதிநிதிகளையே நமது கட்சியின் சார்பாக நிறுத்த வேண்டும். நமது கட்சியின் சார்பாகவே, ஜில்லாக்கள்தோறும், தாலூகாக்கள்தோறும் தேர்தல் பிரசாரம் செய்ய தாலூகாவுக்கு ஒரு கமிட்டி ஏற்படுத்த வேண்டும். அதற்கான முயற்சிகளை செய்ய முக்கியமான பல ஜில்லாக்களில் தாழ்த்தப்பட்டார் கட்சி ஜில்லா மகாநாடு கூட்டி அதன் மூலம் நமது கட்சியின் வேலைத் திட்டங்களையும், தேர்தல் பிரசாரங்களையும் ஒழுங்கோடு செய்யவும், அபேட்சகர்களாக நிற்கும் பிரதிநிதிகளையும் ஒரு கட்டுத் திட்டத்தோடு வேலை செய்யவும் ஏற்பாடு செய்ய ஒரு சந்தர்ப்பமாய் இருக்கும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மேற்சொன்ன யோசனைகள் நமது கட்சித் தலைவர்களுக்குத் தெரியாது என்று நான் இதை எழுதவில்லை. மேற்கண்டபடி நமது கட்சியார் வேலை செய்வார்களானால், நமது கட்சித் தலைவர்களையும், நமது கட்சியின் வேலைத் திட்டங்களைப் பற்றியும், நம் குல சமூகத்தார் நன்றாய் தெரிந்து கொள்ளுவதோடு வரப்போகும் புதிய அரசியல் ஞானத்தையும் தெரிந்து கொள்ள ஒரு நல்ல சந்தர்ப்பமாய் இருக்கும். அதோடு நமது சமூகத்திற்கு ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியதாகவும் இருக்கும்.

பல கிராம வாசிகளுக்கு தாழ்த்தப்பட்டார் கட்சி என்றால் என்ன? அதன் தலைவர்கள் யார்? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? அவர்கள் சட்டசபைகளில் அங்கம் வகித்திருக்கிறார்களா? அவர்களால் நம் சமூகத்திற்கு என்ன நன்மைகள் உண்டானது என்பது போன்ற விஷயங்கள் கூட தெரியாமல் இருக்கிறார்கள். மேலும் தேர்தல் முடிந்த பின்னும், நம் சமூகத்தார் நமது கட்சியோடும் தலைவர்களோடும், ஒருமுகமாக வேலை செய்யவும், பலகிளைச் சங்கங்களை ஸ்தாபிக்கவும், அதன் மூலம் நமது கட்சிக்குப் பணம் சேகரித்து இன்னும் பல நன்மையான காரியங்களைச் செய்யவும், ஏதுவாய் இருக்கும் என்ற ஆசையின் பேரிலேயே என் அபிப்பிராயத்தை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்னை மாகாணத்தில் எல்லா ஜில்லாக்களையும் விட மிகவும் பிற்போக்கான ஜில்லா, வட ஆற்காடு ஜில்லாதான். அந்த ஜில்லாவில் நமது சமூகத்தார் எந்த வகையிலும், அதாவது சர்க்கார் உத்தியோகங்களிலோ, ஸ்தல ஸ்தாபனங்களிலோ நமது சமூகத்தார் எட்டிப் பார்க்காத முறையில் இருந்து வருகிறார்கள்.

எனவே, அந்த ஜில்லாவிற்கு தாழ்த்தப்பட்டார் சமூகத்திற்கு இரண்டு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்த இரண்டு ஸ்தானங்களுக்கும் இந்த ஜில்லாவில் தாழ்த்தப் பட்டார் சமூகத்திற்கு பல நன்மைகளைச் செய்த சில தலைவர்கள் இருக்கிறார்கள்.

அதாவது:—வீட்டுமனைகள் இல்லாதவர்களுக்கு வீட்டுமனைகளும் சுடுகாடு இல்லா இடத்திற்கு சுடுகாடும், பள்ளிக்கூடம் இல்லாத கிராமங்களில் பள்ளிக்கூடங்களும், கிணறுகள் இல்லாத கிராமங்களுக்கு கிணறுகளும், தர்க்காஸ்து நிலங்களும் சர்க்கார் மூலமாக வாங்கிக் கொடுத்து உதவி செய்திருக்கிறார்கள். அவ்வளவோடு நில்லாமல் வட ஆற்காடு ஜில்லாவில் ஆதிதிராவிடர்கள் வசிக்கும் கிராமங்களில் எல்லாம் அடிக்கடி பொதுக் கூட்டங்கள் கூட்டியும், தாலூகாக்களில் அநேக மகாநாடுகளையும் கூட்டி அவ்வப் போது தாழ்த்தப் பட்டார் குறைகளை சர்க்காருக்குத் தெரியப்படுத்தி வந்திருப்பது மல்லாமல் நமது சமூக முன்னேற்றத்திற்கான பல சங்கங்களையும் ஏற்படுத்தி அதன் மூலம் நம் சமூகத்தாருக்கு பல நன்மைகளைச் செய்து வந்திருக்கிறார்கள். மேற் சொன்ன தலைவர்களை தலைமையாகக் கொண்டே பல வாலிபர்களும் வட ஆற்காடு ஜில்லாவில் நமது குல அபிவிருத்திக்காக பாடுபட்டு வருகிறார்கள். மேல் சொன்ன தலைவர்கள் சர்க்கார் சட்ட திட்டங்களையும், ஸ்தல ஸ்தாபன நிர்வாக ஞானமும் பொது ஜன சேவையில் ஆர்வமுள்ளவர்களாயும் இருக்கிறார்கள் என்பதை குறிப்பிட ஆசைப்படுகிறேன். நமது கட்சியின் நோக்கங்களுக்கும், கட்டுப்பட்டே பலர் உழைத்து வந்திருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களையே நமது கட்சித் தலைவர்கள் விசாரணை செய்து வரப்போகும் மாகாண தேர்தலில் தாழ்த்தப்பட்டார் பிரதிநிதியாக நம் குலத்தவரையே தேர்ந்தெடுக்க வேண்டு மென்று சென்னை மாகாண தாழ்த்தப்பட்டார் கட்சித் தலைவர்களை வேண்டிக் கொள்ளுகிறேன்,

---

சென்னை ஸ்ரீ விட்டல் பஜனை மந்திர பரிசளிப்பு விழா

(ஒரு நிருபர்)

சென்னை, டிச, 16

சென்ற 10-12-36 குருவாரம் மாலை 5 மணிக்கு பார்க் டவுன் காளப்ப ஆச்சாரி வீதியிலுள்ள பஜனை மடத்தில் திரு. டி. வி. வரதராஜுலு செட்டியார், பி. ஏ. அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் திரு. விட்டல் கிருஷ்ணதாஸ், ஏ. டி. கந்தசாமி ஆச்சாரியார் இயற்றிய பஜனை கீர்த்தனைகள் படிக்கப்பட்டன. திருவாளர்கள்: என். ராதா கிருஷ்ண சாஸ்திரி, தமிழ் பண்டித வி. நடேசன் மாந்தாதா சுந்தரமூர்த்தி ஆச்சாரி, கோபாலச்சாரி முதலியோர் சொற்பொழி வாற்றினர்கள். பின்னர் கீழ்க் கண்டவர்களுக்குப் பரிசளிக்கப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

ஸ்ரீமதி கோமளவல்லி-முதற்பரிசு திரு. ஏ. ஆர். நடராஜன் — இரண்டாம் பரிசு, நாராயண அய்யர்—மூன்றாம் பரிசு, ஸ்ரீமதி காமாக்ஷி அம்மாள்—லாட்டரி பரிசு. பரிசு பெற்றவர்கள் தாரக மந்திரம் அதிகம் எழுதியவர்களாவார்கள்.

"சமரஸம்",

ஓர் மாத வெளியீடு

மக்களின் நல்வாழ்வு, பொருளாதாரநிலை, கிராம சீரமைப்பு, சுகாதார விஷயங்கள் இவைகளை சமநோக்குடன் அபிவிருத்தி செய்யும் பத்திரிகை.

மானேஜர்:—
சமரஸம் ஆபீஸ்,
விழுப்புரம்.

கோயில் மாறி கொட்டகையான ஜாலம்

(யதார்த்தவாதியின் பதார்த்தம்)

"விந்தையிலும் விந்தை, விநோதத்திலும் விநோதம், வேடிக்கையிலும் வேடிக்கை, என்று இன்னும் பலவாறு சொல்லிக் கொண்டே, காலை 9 மணிக்குச் சுமார், வேலன் என்பவன் வீதி வழியே செல்லலாயினன். எதிர்ப்புறமாக வந்து கொண்டிருந்த ஏழுமலை, அத்தெருவில் வேலனைச் சந்தித்ததும் திகிலடைந்தவனாய், "வேலு, வேலு, என்னடா சமாச்சாரம், பயித்தியம் பிடித்தவனைப் போல உளறுகிறாயே," என்று ஆவலுடன் கேட்டான்.

வேலு—தமாஷ், பலே தமாஷ்; இந்த ஜன்மம் செய்த புண்யமே புண்யம். வைத்தால் குடுமி; சிரைத்தால் மொட்டைதானே.

ஏழு—என்னடா! ஒன்றுக்கொன்று சம்பந்த மில்லாத வார்த்தைகளைக் கொட்டுகின்றாய். உண்மையில் உனக்குப் பைத்தியம் தான் (தெய்வமே, நேற்று நன்றாயிருந்தானே பேர்வழி.)

வேலு :- எனக்கா பைத்யம்; நன்றாய் யோசித்துச் சொன்னாய். என்ன செய்வது? நீ கொடுத்து வைக்காத தோஷந்தான். பாவம் உங்களுக்கெல்லாம் கிட்டுமா? தவம் பண்ணினாலும் சித்திக்குமா? சரி சரி. மறுமுறை அவ்விதம் நடக்குமென்று வாயைப் பிளக்கின்றாயா? அதுதான் கிடையாது. போச்சு சமயம். ஆஹா! என்ன அதிசயம்! ஏழுமலை, நீயும் நானும் இந்த சிறு வயதிலே எவ்வளவோ அதிசயங்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால்,

ஏழு :-அடே, அரைப் பைத்யமே, 'காணாது கண்ட கம்பங் கூழைச் சிந்தாது குடித்த சில்லி மூக்கி'யைப் போலப் பிதற்றுகின்றாய். என்னதான் நடந்தது? சீக்கிரம் சொல்லித் தொலை.

வேலு :-சச், அசடே, என்ன? அற்ப காரியமா அது. நேற்று நான் வலியக் கூப்பிட்டும் என்னோடு வராமல் பீச்சுக்குப் போயிருந்தாயே. என்னடா பார்த்துவிட்டாய் அந்த பீச்சிலே.

ஏழு :-வீண் ஜாலஞ் செய்யாதே நேரம் ஆகின்றது. ஆபீஸுக்குப் போக வேண்டும்.

வேலு :-ஆபீஸ், பொல்லாத ஆபீஸ். நாளைக்குப் போனால் போகிறது. இந்த மாதிரி எப்போடா கேட்டாவது, தெரிந்து கொள்ளப் போகிறாய்.

ஏழு:-லேசான ஆசாமியா நீ.

வேலு :-நான் லேசாயில்லை. பம்பின் மாடல் தான். சரி. ஒரு சிட்டிகைப் பொடி எடு. (பொடியை நன்றாய் மூக்கில் ஏற்றிக்கொண்டதும், ஒரு கனை கனைத்துக் குரலை நன்றாய் திருத்திக்கொண்டு), பக்கத்து தெருவிலே இருக்கிறதே, பஜனை கோயில் அங்கே நேற்று ஒரு விழா. பிராட்டிக்கும் உடையவருக்கும் என்பதாக ஞாபகம்.

ஏழு :-அப்பாடா-கொய்யா தோப்பிலே குரங்கைக் கண்டவனைப் போலப் பேசிவிட்டாய். உன் மூளையே மூளை. எகிறிக் குதித்துவிட்டாய். கோயில் என்றிருந்தால் பலவகையான விழாக்கள் பக்குவமாய் நடப்பது சகஜந்தானே. அதிலும் சாக்ஷாத் லோக மாதா, மகாலக்ஷ்மி அவதாரம், ருக்மணி பிராட்டியாருக்கும், ஆதிசேஷ அவதாரம் இராமானுஜர் எனச் சொல்லப் படும் எதிராஜருக்கும் விழா நடந்தது என்றால், அதைத் தமாஷ் என்றும், வேடிக்கை என்றும் வாயில் வந்தபடி பிதற்ற வெட்கமின்றி முன்வந்து விட்டாய். என் தாரிஷ்டம் பீச்சுக்குப் போகச் செய்தது நான் மாத்திரம் போகாமல் இருந்திருந்தால் என்ன செய்திருப்பேன் தெரியுமா?

வேலு :-என்னடா செய்திருப்பாய்? பெருமானின் சந்நிதி எங்குதான் இருக்கின்றதோ என்ற வேமன்ன கவியின் சந்தேகத்தை நிவர்த்தி செய்திருப்பாயா?

ஏழு—நீ, இன்னும் அரை டிக்கெட் பேர்வழிதான். கண்ணாரக் கண்டு சேவித்து, விழா நடத்திவைத்த உத்தம குண சீலர்களை மனமார வாழ்த்துவது மன்றி, சுத்த சாத்விக சமரச சன்மார்க்க நிலையில் சதா அக்கோலத்தை அனுபவித்துக் கொண்டே இருப்பேன்.

வேலு:- நீ யோக்யனே; உனது எண்ணமும் மகா யோக்யமானதே. ஆனால் சரியாகச் சொல்லி முடிவதற்குள், உன் வாய் வேதாந்தத்தை வாரி இறைக்கிறாய். நிதானமாய், பொறுமையாய், அமைதியாய், அடக்கமாய், மௌனமாயிருந்து சகல விஷயத்தைத் தெரிந்து கொண்ட பிறகு உன் ஷாப்பைத் திறக்கிறது தானே! இருந்திருந்தும் உன்னோடு சொல்லவந்தேனே நான்! சும்மாயிருப்பதே சுகம். நான் போய் வருகிறேன். (திரும்புகிறான்.)

ஏழு:- (அவன் கையைப் பிடித்து நிறுத்தி) அப்பா, பலே ஆசாமியடா நீ. மூக்கு மேலே முழுங் கோபம் வருகிறது. உன் இஷ்டம் போல நடக்கிறேன். மீதியும் சொல்லு.

வேலு:- விழா என்றேனே. அதை என்ன விழா வென்று நினைத்துக் கொண்டாய். புதுமையான விழா. அதைப்போல் எங்கும் நடந்தது கிடையாது; நடப்பதும் கிடையாது; நடக்கப் போவதும் கிடையாது. உலகத்திலே எட்டாவது அதிசயமாக அதைத்தான் சொல்லலாம். மேளமா, தாளமா — சப்பரமா, சாமரமா—கொம்பா, குடையா—சிலையா, படமா—பஜனையா, பட்டாச்சாரியா—வாழை மரமா, வைதிகமா—ஒன்றுமே கிடையாது.

ஏழு:-(திடுக்கிட்டவனாய்) என்ன ஆச்சர்யம் நீ சொல்லுவது உண்மை தானா? கோயிலில் விழா என்றால் அவ்விதச் சின்னங்களில் ஒன்றுமே இல்லையா? ஆனால் (மிகவும் பரபரப்பாய்) என்ன விழாதான் நடந்தது?

வேலு:- (புன்சிரிப்போடு) அப்படிக் கேள் நன்றாய்ச் சொல்லுகிறேன். நடு தெருவிலே பந்தல்; சாதாரண பந்தலா. ஏகாதசி பந்தலை ஏளனஞ் செய்யும் ஸ்ரீராம நவமி பந்தலை சிறுமையைச் செய்யும். என்னவென்று நினைத்துவிட்டாய்? கண்டமாதிரி அண்டச்செய்யும் காகிதக் கொடிகள் காற்றில் அசைந்து ஆடிக்கொண்டிருந்தன. நிமிர்ந்து பார்க்க நேரமில்லாத நிபுணர்கள் சிலர், அங்கு மிங்குமாய் ஓடிக்கொண்டிருந்தனர். கதராடையைக் கழுத்து வரையிலும் தரித்த கனவான்கள்—வயதைக் குறித்தும் நடத்தையும் குறித்தும் கேட்டுவிடாதே-உள்ளே போவதும் வாயைத் துடைப்பதுமாக இருந்தார்கள்.

ஏழு:- பொறு. பொறு. கொஞ்சம் நிதானி. எனக்கென்னமோ உலகம் புரளுவதைப் போலத் தோன்றுகிறது. கால்கள் தளர்கின்றன. ஏதோ அருகில்வா, (என்று சொல்லிக் கொண்டே வேலுவின் மேல் சாய்கிறான். வேலு அவனை அருகிலிருந்த திண்ணைக்குக் கொண்டு போய் தேற்றுகிறான். சிறிது நேரங்கழித்து மயக்கத்திலிருந்து விடுபட்டவனைப் போல விழித்துப் பார்த்து.) பிறகு—

வேலு:- நான் சொல்லமாட்டேன் என்னைத்தான் கொஞ்ச நேரத்திற்குள் காப்ரா படுத்தி விட்டாயே.

ஏழு:—ஒன்றுமில்லையே ஆரம்பி

வேலு:- நாணய மிகுந்தவர்களுக்கு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அன்பின் வடிவங்கள் இரண்டு நடுவில் அழகாய் அமர்ந்திருந்தன. பல்லிளித்த வண்ணமாய் பலர் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தனர். முக்யஸ்தர்கள் மூலையில் நின்று கொண்டிருந்தனர். சர்வாதிகாரிகள் சைகை செய்து கொண்டிருந்தார்கள். பிறகு விழா ஆரம்பிக்கப்பட்டது.

ஏழு:- (முன்னிலும் அதிகமாய் ஆவல் கொண்டவனாய்) சொல்லு சொல்லு. அதைத்தான் சொல்லு விபரமாய் இருக்கட்டும்.

வேலு:-என்னமோ தேர்தலாம் எப்போதோ நடந்ததாம், ஏதோ ஜயமாம். அதற்காக அந்த விழாவாம்.

ஏழு:- அப்பய்யோ. என்ன அநியாயமிது. பஜனை கோயில், பெருமான் சந்நிதி பலகினைகள் நிட பரமனைப் பூஜிக்கும் புண்ய ஸ்தலம்- அங்கேயா இவ்வளவும் நடந்தது. அதை யாரும் தடுக்கவில்லையா? அப்படிச் செய்வதில் தப்பாகாது என்பவர் தன்யாரா? கலியுகத்தின் சாக்கு கண்டவர்களின் போக்கானதோ.

வேலு:- நீ பேசத்தான் கற்றுக் கொண்டாய். நீ பேசி என்ன ஆகப் போகின்றது. அதிகம் பேசினால் சதிகாரன் என்பார்கள். பட்டென்று பேசினால் பெட்டிஷன்கள் வீசுவார்கள். ஏண்டா அண்ணாமலையார் அருளண்டானால் மன்னார்சாமி—போடா போ. அவர்கள் எல்லோரும் அபிமானிகள். தேசாபிமானம் அவர் சரீரத்திலேயே தோய்ந்திருக்கிறது. குலாபிமானம் அவர்கள் விலாவிலே கலந்திருக்கிறது.

ஏழு:-அபிமானமாம். எப்போது தான் ஏற்பட்டதோ. எட்டினால் குடுமி, எட்டாவிட்டால் காலைப் பிடிப்பதா' எப்படி இருந்தாலும் என்ன. கோவிலுக்கும்- ஐயோ என் உள்ளம் பதைக்கின்றதே - கூட்டங்கள் நடத்தி வைக்கும் கொட்டகைக்கும் வித்தியாசம் தெரியாமலா போகும்! அறிவு இருக்கிறது ஆலோசிக்க; கண் இருக்கிறது கவனிக்க. அப்பேர்க்கொத்தக் காரியங்களை நடத்திவைக்க வேறு தகுதியான இடமா கிடைக்காது? ஏற்கனவே, இழிவாகவும், குறைவாகவும் பேசிவந்த மற்ற ஜாதியினர் அவர்களைப் பற்றி எவ்விதந்தான் நினைப்பார்கள்? அக்கோயிலைப் பற்றியும் என்னதான் சொல்லத் துணிவார்கள்? இவ்விதத்தில்தான் ஜாதியின் முன்னேற்றத்தைத் தேடுகிறார்களா?

(சற்று தூரத்தில் மறைவாய் நின்றிருந்து மேலே நடந்த சம்பாஷணையை ஊக்கமாகக் கேட்டுக்கொண்டிருந்த முனுசாமி, இடசோனளம்பி, அவர்கள் அருகே வந்து) "ஏம்பா ஏழுமலை! என்ன குடி முழுகிப் போனாப் போலே பேசறே நானும் ரொம்ப நேரம் நின்னு நீங்க பேசின தெல்லாம் கேட்டுகிட்டுத்தான் இருந்தேன். என்னப்பா பிரமாதமான விஷயம் நடந்துட்டுது?

ஏழு:-(வெறுப்பும் அருவருப்பும் கொண்டவனாய்) அடேயப்பா நீ அக் கூட்டத்தில் கலந்தவனா? அதான் அப்படி முட்டிக் கொண்டு வருகிறது கோபம். நாங்கள் சும்மாபேசிக் கொண்டிருந்தோம்.

முனு:-ஏம்பா இந்தபொய். கல்பத்துக்கெல்லாம் கூசாமே பொய் சொல்றீங்கோ. நான் தான் கால் அவுசு தின்னு, எல்லாம் கேட்டுக் கிட்டே இருந்தேனே. நீங்க நேத்து பஜனை கோவுல்லே நடந்ததைப் பத்தி பேசலே? என்னு ஜோரா நடத்தினுங்கோ. தெரியுமா?

வேலு:-(உடனே குறுக்கிட்டு) ஆமாம் அதைப்பத்தி தான் பேசிக் கொண்டிருந்தோம். அவர்கள் செய்தது சரிதானா அந்த இடம் எவ்வளவு புனிதமான இடம்.

முனு:—(பெரு மூச்செறிந்து) அ-ப்-பா அவங்கதான் சாமியையும் சத்யத்தையும் கண்டவங்க. மத்தவங்க, மண்ணை பாக்க மல்லார்த்து படுப்பாங்கோ. போங்கயா, போங்கோ சாமியை யார்யா கண்டது சாமீ, இடீ. அவங்களை சாமின்னு சொன்னாலும்தகும். இல்லே, இல்லே சாமியை வுட ரெண்டுபடி மேலின்னு கூட நல்லாச் சொல்லலாம். அவங்க புத்திக்கும் ஒங்க புத்திக்கும் எவ்வளோ தூரம் இருக்குது. ஒன்னும் தெரியாமெ அசடுப் புசட்டுண்ணு பேசாதிங்கோ என்னு புரிஞ்சுதா?

வேலு:-உன்னுடன் என்னமாய்த் தான் பேச முடியும். நியாயமா நீதியா? இருந்தாலும் ஒன்று மாத்திரம் சொல்லுகிறேன். டீபார்டி, டீ பார்டி நடத்தி ஜோர் செய்து, அந்த பரிசுத்தமான இடத்தை எச்சிலாக்கி அசுத்தம் செய்தது எனக்குக் கொஞ்சமேனும் பிடிக்கவில்லை.

(அதுவரையிலும் மரம்போல் நின்று கொண்டிருந்த ஏழுமலை ஆவேசம் வந்தவனைப்போல் அலறி) "என்ன டீ பார்டியா, அந்த அக்ரமம் கூடவா கோயிலிலே நடந்தது ஹரி ஹரி' (ஒரு தரம் வாயைப் பொத்திக் கொள்கிறான்) நரகக் குழியிலே விழுவதற்கு வேறு நாத கிருத்தியங்களை செய்ய வேண்டியதில்லை. இதைக் கேட்டாலே போதும். ஐயோ கேட்டாகி விட்டதே. இந்த கர்மத்தை எங்கு சென்று தொலைப்பது, ராமச்சந்திரா! (தலைமேல் கையை வைத்துக் கொள்ளுகிறான்.)

முனு:-என்னா இவர் இன்னுமா எங்க வல்லமையை தெரிஞ்சிக்கலே. ரொம்ப பரிதாபமாத்தான் இருக்குது! நாங்கசாமியே வோணுன்னு, வோணும், வாணுன்னு வாணும். மின்னே அந்த சாமியை, கோயிலே வாணு எண்ணு சொல்லிட்டு என்னென்னமோ செய்தோமே, எப்படி எப்படியோ பேசினோமே. சாமி என்னு நா செய்ஞ்சது? இப்போ உன்னே பூந்து எப்படி செய்றோம் பாத்தியா? சாமி எதுனு செய்யுன்னு பாக்கிறயா? சுத்த பைத்யம். நாங்கதா எல்லாத்தையும் கைக்குள்ளே போட்டுக்கினு வந்திருக்கோமே! இதெல்லாம் இவருக்குத் தெராது போயிருக்குது. தெரிஞ்சிருந்தா இப்படி பேசமாட்டார். வேலு, அவருக்கு எங்களைப் பத்தி நல்லா சொல்யா கடைக்கி போறேன் போட்டுமா?

வேலு:—நீ போடா யப்பா, ஒழி. (அவன் போனதும் ஏழுமலையை நோக்கி), நீ வீணுக் கவலைப் படுவதில் பிரயோஜனமில்லை. ஸ்ரீரங்கத்துக் காகமானாலும் கோவிந்தம் பாடுமா?

ஏழு:—பிறகு ஏன் வீண் டம்பங்கள். எந்தெந்தக் காரியங்களை எங்கெங்கு செய்யவேண்டுமோ அங்கல்லவோ செய்யவேண்டும். வழியற்ற முறைகளில் அவர்கள் ஈடுபட மற்றவர்களுக்கல்லவோ அவமானமாக முடிகிறது. தேசத்துக்காகத் தொண்டு புரியும் தீரர்களாம். அதே சமயத்தில் ஜாதியின் முன்னேற்றத்தை மூன்று காலங்களிலும் விரும்புகிற வீர சிகாமணிகளாம். நன்றாயிருக்கிறது.

வேலு:-கையிலே ஜபமாலை கக்கத்திலே வைக்கிறது கன்னக்கோல் என்னும் வாக்யம் உனக்குத் தெரியுமா அல்லவா அவ்விதந்தான் இது.

ஏழு:-நீ என்ன சொன்னாலும் சொல்லு எனக்கு என்னமோ மனம் நிம்மதியடைந்த பாடில்லை. பஜனை கோயிலிலே அப்பேர்க் கொத்தக் காரியம் செய்யலாமா?

வேலு:—(சிரித்துக் கொண்டு) யாரைக் கேட்கின்றாய் அந்த கேள்வி நேராக அந்த பெருமானையே கேட்டு விடு.

ஏழு:-பெருமானையா கேட்கச் சொல்லுகிறாய். அவரா செவி சாய்க்கப் போகின்றார். 'நம்மையும் நம் தாசர்களையும் அந்த பாவிகள் அனுவசியமாகப் பேசிச் சரியாய் ஆறு மாதங்களும் முடியவில்லையே. அப்படியிருந்தும் நாம் அவர்கள் செய்கையை ஆமோதிப்பது நலமா' என கொஞ்சமாகிலும் நினைக்கின்றாரா?

வேலு:-அவரா நினைக்கமாட்டார். ஆனாலும் நீ அவர்களை அற்ப சொற்பரென்று கருதாதே. தலையைத் தட்டி மூளையைப் பதம் பார்ப்பவர்களாச்சே! அவர்கள் பெருமாள் தலையிலும் கையை வைத்திருப்பார்கள்! போகட்டும்; அலை எப்போ ஒழியும். தலை எப்போ முழுகலாம்' என்று யோசித்துக் கொண்டிருந்தால் ஒன்றும் நடக்காது அவர்களைப் போல உன்னே புகுந்து ஒடியாடி ஒட்டாண்டியைப் போல வேலை செய்தால் தான் பலன் ஏற்படும், பேரும் வரும்.

ஏழு:-என்ன பேரோ. என்ன முன்னேற்றமோ, சி! சி!! பொல்லாத உலகம். 'மெச்சிக் கொள்ள எச்சிலையுமா எடுப்பது' செய்வதில் வகையில்லையா, வழியில்லையா, முறையில்லையா, நிலைமையை அனுசரித்து நடக்கும் நிதானமில்லையா?

வேலு:-நல்லதைச் சொன்னால் யாருக்கோ என்னமோ மீண்டும் ஆகிவிடுகிறதாம். ஆகவே அதைப் பற்றி சிந்திப்பதில் வீண் மனவியாகுலமே.

ஏழு:-அப்படிச் செய்வதிலும் தற்கொலையே மேல் என்று தோன்றுகிறது. இன்று யார் முகத்தில் விழித்தேனோ? இவ்வளவு காலையில் இதைக் கேட்க நேர்ந்தது அதிக நேரம் பேசிவிட்டது போலத் தோன்றுகிறது. பிறகு யோசிக்கலாம் சாயந்திரம் என்னை சந்திக்கின்றாயா?

வேலு:-அப்படியே! சந்தோஷம், சென்று வருகிறேன்.

தயானந்த பாரதியின் வழக்கு தள்ளுபடியாயிற்று

ஓர் பாராட்டுக் கூட்டம்

(நமது நிருபர்)

திண்டிவனம், டிச, 16

திண்டிவனம் பகுத்தறிவு சங்கத் தலைவரான தோழர் தயானந்த பாரதியின் மீது தொடரப்பட்ட வழக்கு அப்பீலுக்கு வரவே ஹைகோர்ட்டார் அவ்வழக்கைத் தள்ளுபடி செய்து கீழ் கோர்ட்டுகளில் விதித்த அபராதத்தைத் திருப்பிக் கொடுக்குமாறு உத்தரவிட்டனர். அன்பர் பாரதியார் அவர்கள் தான் அடைந்த வெற்றியையொட்டி சென்ற 13-12-36-ல் பெருமுக்கல் தேவஸ்தானத்தில் ஓர் விருந்து நடத்தினர். அதற்கு ஏராளமான பிறமுகர்கள் விஜயம் செய்திருந்தனர். மலையடிவாரத்தில் பகல் 11 மணிக்கு ஏழைகளுக்கு கஞ்சி யளிக்கப்பட்டது. மாலை 4 மணிக்கு பெருமுக்கல் கௌரவ மாஜிஸ்டிரேட் திரு. சையத் அகமத் சாயபு அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் அன்பர்கள் பலர் சொற்பொழி வாற்றினார்கள். காரியதரிசியினால் வந்தனோபசாரம் கூறப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது.

சென்னை மாகாண வள்ளுவர் மகாஜன சங்கம்

(ஒரு நிருபர்)

அம்பாசமுத்திரம், டிச, 15

அம்பாசமுத்திரம் தாலுகா பிரமதேசம் 13—12—36 காலை திரு. டி. ராஜகெம்பீர நாயனார் அவர்கள் தலைமையில் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வமயம் திருவாளர்கள்: எம். திருமலைக்கொழுந்து நாயனார், பி. ஆறுமுகம் நாயனார், என். ராஜமணி நாயனார், கே. என். சிவாமூவேல் நாயனார் முறையே சமூக முன்னேற்றம் சங்கமும் நமது கடமையும் 'பெண்கள் கல்வியும்' என்ற பொருள் பற்றி சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரையில் வாலிபர்கள் கடமை என்பது பற்றி மிக தெளிவாய் எடுத்துரைத்தார், கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

1. ஷெட்யூல் வகுப்பைச் சேர்ந்த நம்மவர்கள் பெரும்பாலோர் உபாத்தியாயர் வேலை பயின்று ஸ்தல ஸ்தாபனங்களில் வேலை கிடையாமல் கஷ்டப்படுகிற படியால் ஜில்லா சங்கமும் மாகாண சங்கமும் ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளுக்கு வேண்டிய மனுக்கொடுத்து வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறது.

2. ஆரம்ப ஆசிரியர்களின்பேரில் அனுதாபம் கொண்டு கிராண்டை அதிகப்படுத்தின படியால் கனம் கல்வி மந்திரி குமார ராஜா முத்தையா செட்டியார் அவர்களுக்கு இச் சங்கம் நன்றி செலுத்த என்றும் கடமைப்பட்டதுடன் கூடிய சீக்கிரம் அங்கீகாரம் செய்து தாலுகா தோறும் சர்க்குலர் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறது.

3. 'விடுதலை'ப் பேப்பரை சென்னை மாகாண வள்ளுவர் சங்கத்தின் கிளைச் சங்கமாகிய அம்பா சமுத்திரம் தாலுகா சங்கத்திற்கு இனமாய் அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறது.

4. சென்னை மாகாண வள்ளுவர் மகாஜன சங்கத்தின் 2-வது மகாநாடு விஷயமாய் சுற்றுப் பிரயாணம் செய்ய காரியதரிசி பி. ஆறுமுகம் அவர்களை கேட்டுக் கொள்கிறது காரியதரிசி, ஆறுமுகம் வந்தனோபசாரம் கூற கூட்டம் கலைந்தது.

பூமியின் மீது சந்திரனுடைய சக்தி

மனித வர்க்கத்தின் அதிருஷ்டங்களை மாற்றக்கூடும்

இவ்விருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞான கலையானது அதிதீவிரமாக முற்போக்கடைந்து வருகிறதென்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஆராய்ச்சியாளர்கள் கண்ணும் கருத்துமாய் ஆராய்ச்சி செய்து மனித அறிவுக்கு எட்டாதெனத் தோன்றும் அதியாச்சரியமான விஷயங்களை யெல்லாம் கண்டுபிடிக்கின்றனர். பௌதிக சாஸ்திரத்தில் மட்டுமின்றி வான சாஸ்திரத்திலும் நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். ஆராய்ச்சியாளர்களில் பெரும் புகழ் எய்திய அமரிக்க வானசாஸ்திரி யொருவர் சந்திரனைப் பற்றிய ஆராய்ச்சியில் தான் கண்டுபிடித்ததைச் சொல்லுகிறார். [illegible]

பூமியின் மீது சந்திரன் கொண்டுள்ள சக்தி அபாரமானது. பருவம், சமுத்திரம் முதலியவைகளின் மீது சந்திரன் கோபாவேசம் கொண்டால் அது மனித வர்க்கத்தினுடைய அதிருஷ்டங்களை அடியோடு மாற்றக் கூடும். சந்திரனுக்கு இதன்றி வேறு சக்திகளிருப்பினும் அவைகள் மர்மமாகவே இருக்கின்றன.

சந்திரனுடைய மையக் கவர்ச்சியினால் பூமி இழுக்கப்படும் போது அஃது சற்று மேலெழுகிறது. இதைக் கொண்டுதான் விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள், சந்திர வெளிச்சத்தில் (நிலவு) காதலர்கள் இருப்பார்களேயானால், அவர்களுடைய மனோதானத்திற்குப் பங்க மேற்படுகிறதெனக் கூறுகின்றனர்.

மழை, சுழற் காற்று, பஞ்சம் முதலியன உண்டாதல் சந்திரன் பூமியின் மீது கொண்டிருக்கும் சக்தியினாலேயாகும். குளிர்காலம் உண்டாவது சந்திரனாலேயே என்பது பழங்காலத்து நம்பிக்கையாகும். ஆனால் இன்று ஆராய்ச்சி வாயிலாகக் கவனிக்க அக்கூற்று உண்மையான தாத்பரியத்தைக் கொண்டதாகவே இருக்கிறது.

பூமியைச்சுற்றி சந்திரன் வடக்கு நோக்கி ஒன்பது வருடங்களும், தெற்கு நோக்கி ஒன்பது வருடங்களும் நகருகிறது. இது என்றும் மாறுதலின்றி சர்வ சதாகாலமும் நடந்து வருகிறது. இப்படி சந்திரன் வடக்கு நோக்கிச் செல்லும் போது ஐரோப்பாவிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் குளிர்காலம் உண்டாகிறது. தெற்கு நாடி நகரும் போது பருவம் மிகவும் அமைதியாகவிருக்கிறது. இவ்விதம் பருவங்களில் வித்தியாசம் ஏற்படுவதற்கு, சமுத்திரங்களின் மீதும் அவைகளின் உஷ்ண நீரோட்டங்களின் மீதும் சந்திரன் செலுத்தும் வித்தியாசமான சக்திதான் காரணம்.

இன்னும், பிறப்பு, பயிர் செழிப்பு இவைகளிலும் சந்திரனின் சக்தி பரவியிருக்கிறது. அறியக்கூடாத மற்றுமுள்ள சக்திகளும் காலக்கிரமத்தில விஞ்ஞான கலையின் அபிவிருத்தியினால் உலகத்திற்குத் தெரியவரும்.

சென்னை அசெம்பிளி

சேலம், டிச, 16

சென்னை மாகாண அசெம்பிளிக்கு, சேலம் ஜில்லா, தர்மபுரி-ஹரூர் தொகுதிக்கு தாம் ஓர் அபேட்சகராய் நிற்பதாக, சேலம் ஜில்லா, பாலக்கோடு நாட்டாண்மைக்காரர் திரு. பி. முனுசாமி கவுண்டர் அறிவிக்கிறார்.

விரலடையாள விஷயங்களில் நன்கு பயிற்சி பெறுவதற்காக இராக் சர்க்கார், 3 இராக்கியப் போலீஸ் ஆபீஸர்களைக் கல்கத்தாப் போலீஸ் டிரெய்னிங் காலேஜுக்கு அனுப்பி வைத்திருக்கின்றனர்.

பார்ப்பனரல்லாப் ருங்குடி மக்களே

படேல்! படேல்!!

ணப்பை பத்திரம்

(போளுரான்)

. பட்டேலுக்குப் பணம் கொ தல் பார்ப்பனீயத்தை வளர்ப்ப க்கோப்பாரும்.

2. பார்ப்பனர்களின் ஆயிர வரு கணக்கான கொடுமையை டிடின், சுயமரியாதைக் கட்சிகள் லம் மக்களறிந்து கொண்டனர். படேல் நிதிக்குதவின் அது ர்ப்பனீயம்) மீண்டும் வளருவ கேதுவாகும்.

3. 16 வருட காலம் பார்ப்பன லாதார்களே சென்னை மாகாண வாகத்தைத் திறம்பட நடத்தி சாட்சிப் பெற்றிருக்கின்றனர். து தேசியப் பார்ப்பனர்கள் இவ் ட்சியால் ஊழல் மலிந்து விட் என்கின்றனர். நம்பாதீர்கள்.

4. ஜஸ்டிஸ் கட்சியின் 16 வருட சி பார்ப்பனர் அல்லாத பல க்கு ஸ்தல ஸ்தாபன நிர்வாக த்தை நன்கு கற்பித்துக் கொடு ஜில்லாபோர்டு தலைவர்களையும், லுகா போர்டு தலைவர்களையும் பத்தி செய்திருக்கிறது. ஜஸ்டிஸ் ன்றி இந்த 16 ஆண்டுக பார்ப்பனர்களே நிருவாகி இருந்திருந்தால் வேதத் தத் தொடாமலும், பார்க்காம , படிக்காமலும் தடுக்கப் பட் து போலவே ஸ்தல ஸ்தாபன ட்டத்தை பார்ப்பனரல்லாதார் ட்டிப் பார்க்கக் கூடாது எனத் டுக்கப்பட்டிருப்பர். ஸ்தல ஸ்தா ன நிருவாகங்களும் பார்ப்பன மய வே யிருந்திருக்கும். அந்த ! நிலைமையைத்தான் இன்று கரஸ் பார்ப்பனர்கள் எதிர்பார்க் னர். அதற்குத்தான் பட் டல் நிதி! உஷார்!

5. பானகல், பொப்பிலி கோஷ் ன்னாட்டுப் பெருங் குடி மக் கவர்னர்களாகவும் கவர்னர் சபை அங்கத்தினர் ளாகவும், மந்திரிகளாகவும், வான்களாகவும் செய்திருக் றது. இது பார்ப்பன தேவதை ளுக்குப் பிடிக்கவில்லை.

6. தமிழ்நாடு தமிழர்களுக்கே து என்னும் ஜஸ்டிஸ்கொள்கை பாக்கானதாம். பார்ப்பனர்கள் ர்த்தை பிது. இவ் வார்த்தையை ன் உதாசினம் செய்வது நிச்சய ாயின படேல் நிதியைப் பகிஷ்கரி ங்கள்.

7. தமிழ் மாகாணக் காங்கரஸ் ட்டித் தலைவர் உபதலைவர்களா தோழர்கள் முத்துரங்கம், வதாஸ் மாலியோர் தேர்ந்தெடுக் பட்ட பெருமை ஜஸ்டிஸுக்கே ரியது. மூர்த்தி கோஷ்டியாரைக் ட்டிலும் முதன் முதல் சந்தோ த்தவர்கள் ஜஸ்டிஸார்தான். இது ம் பிற்போக்கானதாம். தமிழ ா உஷார்!

8. தமிழர்களையும், அவர்களின் லைவர்களையும் சூர சூரன், பகா ரன், கும்பகர்ணன், இராவணன் மிலேச்சக் கூட்டங்கள் அழைக் த் தொடங்கி விட்டனர். தக்க டம் கற்பிக்க வேண்டியது அவ யமாயின் படேலைப் பகிஷ்கரியுங் ள்.

9. தேவஸ்தான மசோதா, பாட்டுப்பு மசோதா, இனும் சோதா, வகுப்புவாரி உத்தியோ ம் போன்ற எண்ணிறந்த மசோதா மிழர்களின் நிமித்தம் ஜஸ்டிஸ் ட்சியாலன்றி தென்னாட்டில் வேறு ாராலும் நிறைவேற்றி வைக்க யலவில்லை. இவை பிற்போக்காளர் ளின் செய்கையாம்; முற்போக்கா ர்கள் கூறுவதைக் கவனியுங்கள். ஷார்!

10. நிலவரிநிதி, ஹரிஜனநிதி, கதர் தி போன்றவையே சரிவர திருவ க்கப்பட வில்லை என மக்களால் செய்யப்படும் பொழுது டல் நிதிக்கும் கொடுத்து கஷ்ட டாதீர்கள்.

11. காங்கரஸ் பார்ப்பனரல்லா தார் வசமிருப்பதாயின் பட்டேலுக் குத் தென்னாட்டில் வேலையில்லை. எப்படியும் பொதுத்தேர்தலில் காங் கரஸ், ஜஸ்டிஸ், ஜன நாயகம் போன்ற பார்ப்பனரல்லாதார்களே பெருவாரி யாகத் திரண்டு வருவர். பட்டேல் பார்ப்பனர்களுக்கே சலுகை காட்ட வருகிறார். உஷார்!

12. காங்கரசிலே பணம், படிப்பு விஷயத்தில் தகுதி வாய்ந்த பார்ப்பனரல்லாதார் பலர் ஒருவர் சகாயமின்றி ஜெயிக்கும் ஆற்றலுடன் இருக்கின்றனர். காங்கரஸ் பார்ப்பனர்கள் அவர்களது வெற்றியை விரும்பவில்லை. தங்களுக்கு கையாள்களாக இருக்கக் கூடியவர்களையே சட்ட சபைக்கு எதிர் பார்க்கின்றனர். அவர்களையும் (கையாள்களையும்) பார்ப்பனரல்லாதார் செலவிலேயே எதிர் பார்க்கின்றனர். அதற்குத் தான் படேல் நிதி. உஷார்!

13. தமிழ் நாட்டுக் காங்கரசில் வகுப்பு வாதத் தீ வேலூர் மகா நாட்டிலிருந்தே காட்டுத் தீ போல பற்றிக் கொண்டு விட்டது. காங்கரஸ் பிற்போக்காளர்களாய வேத மோதி வயிறு வளர்க்கும் வித்தகர் குலத்தை யடக்கிக் குழிவைக்கச் சுயமரியாதைச் சமதருமிகள் உட்புகுந்திருக்கின்றனர். ஆகவே, படேல் நிதியும் திலகர் நிதி கதி படையாதிருக்க எச்சரிக்கையாயிருங்கள்.

14. காங்கரஸ், காலிகள் ராஜ்யமாகக்கூடாதென்பது தேச மகா ஜனங்கள் கருத்து. படேல் நிதி காலிகளை வளர்க்கவே திரட்டப்படுகிறது வேண்டாம்; ஒரு சல்லி கூடக் கொடாதீர்கள்.

15. கவர்னரைப் பொதுத் தேர்தலுக்கு சவால் கூறி வாய் மூடு முன் தங்களது தலைமைப் பதவிகள் பறிபோவதை யறியாதார் செய்யும் ஆரவாரங்களைக் கவனியாதீர்.

16. போலீஸ் காரனை சலாம் போட வைக்கப் போகிறேன் சட்ட சபைக்கு என்பார். அதனால் நீங்கள் அடையும் பயன் என்ன உங்களுக்கெல்லாம் கூட சலாம் போட்டதாகுமா.

17. நிறைந்த கொள்கை வீரரான காங்கரஸ் தியாகி போட்டியின்றி, பணமின்றி ஜெயிக்க வேண்டியிருக்க தேர்தலுக்குப் படேல் நிதி மூலம் உதவப்படுவதேன்.

18. ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் லஞ்சம் கொடுப்பதாய்ப் புகார் கூறும் இவர்கள் இந்தப் பணத்தைக் கொண்டு வோட்டர்களுக்குக் கொடுத்து மயக்காது வேறு என்ன செய்யப் போகின்றனர்.

19, காங்கரஸ் பேரால் "கழுதை நின்றாலும் ஜெயிக்கும்" எனக் கூறி வோட்டர் மகா ஜனங்களை முட்டாள்களாக்கும் இந்த யோக்கியர்கள் கழுதைக் குணமுள்ள சிகாமணிகளை நிறுத்திப் பார்க்கவே இந்த நிதி திரட்டப்படுகிறது. காலிகளிடம் பணமும், காலித்தனமும் போய்ச் சேருமாயின் தமிழகத்தின் கதியென்ன என்பதைப் பொது மக்களே யோசிக்க வேண்டுகிறோம்.

20. சென்னை மாகாண சட்ட சபை நிர்வாகம் பெரிதும் போற்றப்படுகிறது. அதன் மூலம் பார்ப்பனரல்லாதார் அரசியல் நிர்வாகத் தகுதியுடையவர்களாகக் கருதப்படுகின்றனர். தங்கள் மூளைக்கு மதிப்பில்லையே எனக் காங்கரஸ் பார்ப்பனர்கள் பட்டேல் நிதி மூலம் சட்ட சபையில் நுழையப் பார்க்கின்றனர். உஷார்!

21. வடநாட்டாரைக் கொண்டு தென்னாட்டினரிடம் பணந் தண்டும் வழக்கம் நம் நாட்டுக்குத்தான் பொருந்தும். அம்மாதிரி வடநாட்டு உச்சவ விக்ரமாக இன்று படேல் கொண்டுவரப்பட்டிருக்கிறார். தென்னாட்டினர் வட நாட்டினரைக் காட்டிலும் அரசியலறிவில் எவ்வளவோ மேம்பட்டிருந்தும் இவர்களைக் கொண்டு வட நாட்டினர் ஒரு செல்லாக் காசுகூட வசூலித்ததில்லை. வட நாட்டாரைக் கண்டு காங்கரஸ்காரர்கள் ஆசை வார்த்தைகளில் சிக்கி மோசம் போகாதீர். உஷார்.!

22. பார்ப்பனர்கள் மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தம் வழங்கப்பட்டபோது சம்பள நிர்ணயம் முதலியவை செய்துவிட்டு தேசியப் பணியிலிறங்கிப் பலவித சத்தியாக்கிரகங்கள் போன்ற சண்டித்தனங்கள்மூலம் கவர்ன்மெண்டை பயமுறுத்தி சுயராஜ்யம் பெற்று தங்களாதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்ள எண்ணி காங்கரஸ் ஸ்தாபன மென்னும் குறுக்கு வழியில் நுழைந்தனர். அதில் அவர்கள் படுதோல்வியே யடைந்து விட்டதாகக் கருதுகின்றனர். உதாரணம் வேண்டுமானால் சென்ற சில மாதங்களுக்கு முன் மெயில் பத்திரிகையில் போதாயினர் என்னும் புனைப்பெயருடன் எழுதப்பட்ட நிருபத்தைக் கவனியுங்கள். 5000 த்து சொச்சம் மாதா மாதம் பெற்று காருண்ய சர்க்காரின் செல்லப் பிள்ளைகளாக இருக்க வேண்டிய பார்ப்பனர்கள் நெறி தவறிய ஆடுகள் போல் தேசியவனுக்கிரங்களில் 16 ஆண்டுகள் அலைந்தலைந்து இன்று 500 ரூபாயே போதும் என்னும் பல்லவியுடன் பொப்பிலி கோஷ்டியை வைது கொண்டு வருகின்றனர். உஷார்.!

படேல் நிதிப் படுமோசம். பார்ப்பனரல்லாப் பழங்குடி மக்களே பதறவேண்டாம். உஷார்! ஒரு சல்லி கூடக் கொடாதீர்கள்.

சுயமரியாதை திருமணம்

(ஒரு நிருபர்)

தாராபுரம், டிச, 16

தாராபுரம் பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பரும், உஷார் சங்க கமிட்டி பிரஸிடெண்டும், சமூக சீர்திருத்த நடிகர் சபையின் பொக்கிஷதாரும் பிரபல எண்ணெய் வியாபாரியுமான தோழர் வி. ஜி. சக்கிரபாணி அவர்களின் சகோதரர் சுயமரியாதை வீரர் தோழர் வி. ஜி. வரதராஜன் அவர்களுக்கும், காரைக்கால் தோழர் என். இரத்தினசாமி செல்வி தோழர் புனிதவல்லி அவர்களுக்கும் 13-12-36 ஞாயிற்றுக்கிழமை அமாவாசியன்று காலை 9 மணிக்கு மணமகன் இல்லத்தில் தோழர் கே. கே. நீலமேகம் அவர்களின் தலைமையில் சீர்திருத்த திருமணம் சுயமரியாதைக் கொள்கைப்படி ஒரே காலில் யாதொரு சடங்குமின்றி நடைபெற்றது. அவ்வமயம் 500,600 பேர் ஆண்களும், பெண்களும் ஜாதிமத பேத மன்னியில் விஜயம் செய்திருந்தார்கள். தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் வந்திருந்த ஜனங்களுக்கு மணமக்களை அறிமுகப்படுத்தியபின் அன்னவரின் தோழர்கள் அளித்த திருமண வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. தோழர் கே. கே. நீலமேகம் புரோகித மணத்தின் அடிமை நிலைமையும், சடங்கும், பழமையும், கற்பனையென வந்தனோர் அறியும் முறையில் பேசியபின் இத் திருமணம் செய்து கொள்ள இசைந்த மணமக்களை பாராட்டுவதாகவும் கூறினர்.

பின் தோழர்கள், மூவலூர் ராமாமிர்தம் பொட்டுகட்டும் மூட பழக்கத்தைப் பற்றியும், சீர்திருத்த திருமண ஒப்பந்தத்தைப் பற்றியும் பேசியபின் தோழர்கள்: ஜி. சுப்பிரமணியம் நாயுடு கும்பகோணம் சப் மாஜிஸ்டிரேட் ஆபீஸ் லெக்கு முதலியோர்கள் சீர்திருத்த திருமணத்தைப் பற்றி பேசி மணமக்களை பாராட்டினார்கள். தாராபுரம் யூனின் சான்டோ உடற் பயிற்சி நிலையத்தார்கள். இத்திருமணத்தை நடத்திக் காட்ட பெருமுயற்சி எடுத்து கொண்டார்கள். பின் வந்திருந்த யாவருக்கும் வந்தனோபசாரம் கூறி சந்தன தாம்பூலம் பெப்பர் மின்ட் வழங்கியபின் ஓர் சமபந்தி போஜனம் 600 பேருக்கு மேல் செய்விக்கப்பட்டு திருமணம் இனிது முடிவடைந்தது.

இளைஞர் மன்றம்

வாராந்திரக் கூட்டம்

(ஒரு நிருபர்)

போளூர், டிச, 16

இவ்வூர் இளைஞர் மன்றத்தின் வாராந்திரக் கூட்டம் சென்ற 15-ந் தேதி இரவு தோழர் என். நடேசன் (உப தலைவர்) தலைமையில் கூடியது. ஆரம்பத்தில் தோழர்கள் ஆ. கு. மாணிக்கம், க. சுப்பிரமணியம் அதி வக்கிதங்கள் பாடினர். சென்ற வார நிகழ்ச்சிக் குறிப்புகள் வாசித்து ஏற்கப்பட்ட பின் தலைவர் முகவுரைக்குப் பின் "புரோகிதர்களும் யாகமும்" என்பது பற்றிய கட்டுரை வாசிக்க வேண்டியவர் சில அசந்தர்ப்பங்களால் வரக் கூடாமையால் மேற்படி விஷயத்தைப் பற்றிப் பலர் சொற்பொழிவாற்றினர்கள். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றிவைக்கப்பட்டன. தலைவரது முடிவுரை, வந்தனபசாரங்களுடன் கூட்டம் இரவு 11-45 க்கு இனிது கலைந்தது.

நிறைவேறிய தீர்மானங்கள்:—

1. நமது மாகாணத்தில் மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தத்தை 16 ஆண்டுகள் வெற்றிகரமாய் நடத்தி, மேலும் அளிக்கப்படும் சீர்திருத்தத்தை நடத்த இந்தியர்கள் அருகதையுள்ளவர்கள் என நிரூபித்து, பாராளும் மன்றம் முதலில் சென்னைக் கவர்னர்கள் வரை பலராலும் பாராட்டப்படும் பாக்யம் பெற்று, புதிய அரசியலை இந்தியாவுக்குத் தருவதால் இந்திய நிருவாகத்தை பிரிட்டிஷார் அனுபவமற்றவர்களிடம் ஒப்படைக்கிறார்கள் என கூறி முட்டுக்கட்டையிட்ட சர்ச்சில் கோஷ்டியினர் கூற்றை பொய்யென நிரூபித்த ஜஸ்டிஸ் கட்சியை இம்மன்றம் மனமாறப் பாராட்டுகிறது.

மேலும் நமது மாகாணத்துக்கு மட்டுமன்றி இந்தியர்களுக்கே அவர்களது அரசியல் திறனுக்காக ஓர் நற்பெயரைச் சம்பாதித்துத் தந்திருக்கிறது. புதிய அரசியலில் அக்கட்சியே பெருவாரியான ஸ்தானங்களைப் பெற்று சீர்திருத்த அரசியலைத் திறம்பட நடத்த இம்மன்றம் விழைகிறது.

2. இம்மன்றத்துக்கென ஆங்கில தினசரி கிடைக்காதது மிகுந்த குறையாக இருக்கிறது. சந்தா செலுத்தி வரவழைக்கவும் மன்றத்தின் பொருள் வலிவு மிகுதியும் குறைபாடுற்று இருக்கிறது. ஆகவே, இம்மன்றத்தின் ஏழ்மைக்கு இரங்கி ஜஸ்டிஸ் பத்திரிகாசிரியரும், காரியாலயத்தாரும் சேர்ந்து தங்களது ஆங்கில தினசரி யொன்றை இலவசமாயனுப்பி ஆதரிக்கக் கேட்டுக் கொள்கிறது.

3. சென்னை வேல் பிச்சர் கம்பெனியார் தங்களால் பிடிக்கவிருக்கும் அப்பர் படத்தின் மூலம் ஒரு சமூகத்தினரின் மனந் தாக்கலுக்கு ஆளாக நேரிடுவதால் புராண மத சம்பந்தமற்ற "மேனகா" போன்ற சீர்திருத்தப் படங்களையேப் பிடித்து தமிழ் சினிமாக் கலையை அபிவிருத்தி செய்து தமிழர்களின் பரிபூரண ஆதரவைப் பெரும்படியாய் மேற்படியார்களை இம் மன்றம் கேட்டுக்கொள்கிறது.

4. திரு. பட்டேல் அவர்கள் தமிழ்நாடு சுற்றுப் பிரயாணத்தில் இச் ஜில்லாவுக்கு விஜயம் செய்யும் போது அவரை பகிஷ்கரிக்கவும், பட்டேல் நிதிக்குப் பணம் உதவாதிருக்க துண்டு பிரசுரங்களை வினியோகிக்கவும் தீர்மானிப்பதுடன் அதற்குரிய செலவினத்தை அங்கீகரிக்கிறது.

குணியமுத்தூர் தேவேந்திர வாலிபர் சங்கப் வாராந்திரக் கூட்டம்

குணியமுத்தூர், டிச, 13

13-12-36 ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு மேற்படி சங்க கூட்டத்திற்கு தலைவர் திரு. சி. பா. பேச்சி பண்ணாடி தலைமை வகித்தார். அது பொழுது க. ராமசாமி மதுபானத்தைப்பற்றியும், ச. வேலுமயில் ஜீவகாருண்யம் என்பது பற்றியும், காரியதரிசி வை. ஆறுமுகம் சங்க ஒற்றுமை என்பது பற்றியும் பி. ஆறுமுகம் 'அன்பே கடவுள்; அறிவே தெய்வம்' என்பது பற்றியும் அநேக உதாரணங்களுடன் நீண்ட நேரம் சொற்பொழிவாற்றினர்கள். பிறகு கீழ்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு. பி. ஆறுமுகம் வைஸ்பிரசிடெண்டாகவும், ச. வேலுமயில் மேனேஜராகவும், கோ. ராமசாமி காஷியராகவும் எல்லோரும் ஏக மனதாக தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் காரியதரிசி வந்தனோபசாரம் கூற கூட்டம் 9 மணிக்கு இனிது கலைந்தது.

குணியமுத்தூர் தேவேந்திரர் வாசகசாலை திறப்புவிழா

ஷை விழாவிற்கு குணியமுத்தூர் யூனியன் சேர்மென் திரு. காளியப்ப கவுண்டர் கரகோஷத்தினிடையே தலைமை வகித்தார். திரு. மு. நமசிவாய சேர்வை திறப்புவிழா ஆற்றினர். அதுபொழுது குணியமுத்தூர் பஞ்சாயத்துக் கோர்ட் பிரசிடெண்ட் திரு. வேலாயுதம் சேர்வை வாலிபர் ஒற்றுமை பற்றியும், திரு. அங்கமுத்து நாயுடு கல்வி விஷயமாகவும், திரு. மருதப்பா உபாத்தியாயர் ஆலயப் பிரவேசத்தைப் பற்றியும், கோவை திரு. எ. ஆர். சிவானந்தம் வாசகசாலையும் மக்கள் கடமையும் என்பது பற்றியும் அநேக உதாரணங்களுடன் நீண்ட நேரம் சொற் பொழிவு ஆற்றினர்கள். பிறகு சந்தன தாம்பூலம் வழங்க தலைவர் முடிவுரைக்குப்பின் காரியதரிசி வந்தனோபசாரம் கூற பகல் 12-மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

ரம்ஜான் கொண்டாட்டம்

"சேலம் முஸ்லீம் ஊழியர்கள் சேவை"

(ஒரு நிருபர்)

சேலம், டிச, 16

இன்று இங்கு முஸ்லீம்களால் ரம்ஜான் பெருநாள் மிகவும் சிறப்பாக கொண்டாடப் பட்டது. நகர ஈதுகாவிலும், ஜாமியா மசூதியிலும் மற்றுமுள்ள மசூதிகளிலும் பல்லாயிரக் கணக்கான முஸ்லீம்கள் கூடி பிரார்த்தனை செய்தார்கள். ஈதுகாவிலும் மற்றுமுள்ள மசூதிகளிலும் இடம் கொள்ளவில்லை ஆகையால், ஏராளமான முஸ்லீம்கள் வெளிப்புறங்களில் நின்று தொழுகை நடத்தி வந்தார்கள்.

சேலம் முஸ்லீம் ஊழியர்கள் சங்க நிர்வாகிகளாகிய ஜனாப்கள் முனிசிபல் கவுன்சிலர் எம். அப்துல் ரஷித் சாயபு முஹம்மத் யாகூப் அலி சாயபு பி. ஏ. முஹம்மத் இஸ்மாயில் சாயபு, ஏ. அப்துல் ரவுப் சாயபு, எம். அப்துல் ஜப்பார் சாயபு, ஐ. அப்துல் வஹாப் சாயபு ஆகியவர்கள் சேலம் சென்ட்ரல் ஜெயில் சூபரின்டெண்ட் அவர்களின் அனுமதி பெற்று ஜெயிலிலுள்ள 95 முஸ்லீம் கைதிகளுக்கு ரம்ஜான் தொழுகை செய்வித்து அவர்களுக்கு பழ வர்க்கங்களும், மிட்டாய் - தினுசுகளும் கொடுத்து மகிழ்வித்தார்கள்.

சென்னை சட்டசபை தேர்தல்

(ஒரு நிருபர்)

காட்டறம்பள்ளி, டிச, 15

15—12—36 செவ்வாய்கிழமை பனிஜவார் பொதுஜன சங்கத்தின் சார்பாக ஒரு கூட்டம் திரு. டி. லக்ஷ்மண நாயுடு அவர்கள் தலைமையில், காட்டறம்பள்ளி ஜாகிரில் கூடியது. அது சமயம் கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

அடுத்து வரும் சென்னை மாகாண சட்டசபை தேர்தலில் திருப்பத்தூர் தாலூகா கிராம தொகுதிக்கு அபேட்சகராக நிற்க உத்தேசித்து இருக்கும், வாணியம்பாடி தோழர் சி. கோவிந்தராஜன் (ஜில்லா போர்டு மெம்பர்) அவர்களை ஆதரிப்பதாகவும், வாக்காளர் அனைவரும் அன்னவருக்கே ஓட் கொடுக்கும்படியாக வாக்காளர்களை கேட்டுக் கொள்ள வெளியீடுகள் வெளியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

முத்தத்தின் இன்பம்

3 அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு 50 பக்கம் கொண்ட புத்தகம் இனமாய் அனுப்பப்படும்.

ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராயநகர், மதராஸ்.

பெங்களூர் பங்கு மார்க்கெட்.

பெங்களூர், டிச, 19

பெங்களூர், புரோக்கர் எம். கஞ்சப்பைய ஜாகீர்தார் கீழ்க்கண்ட பங்கு விலைகளை அனுப்பியிருக்கிறார்.

	செலுத்தப் பட்டது	தற்கால விகிதம்	
	ரூ.	ரூ.	அ.
பாங்கி			
இம்பீரியல் எப்.பீ.	500	1575	8
இம்பீரியல் கண்ட்	125	387	4
ரிசர்வ்	100	138	0
இந்தியா	50	136	0
மைசூர்	100	302	0
பெங்களூர்	10	7	8
இண்டஸ்டிரியல்	25	6	0
தேவாங்கா	10	8	8
சென்ட்ரல்	25	35	6
குபேலான்	25	27	8
ஸ்டேட் எய்டட்	25	17	0
திருவாங்கூர்நாஷனல்	50	55	6
இந்தியன்	50	144	8
,,	10	30	0
இன்ஷூரன்ஸ்			
ஏஷியாடிக்	5	5	4
ஓரியண்டல்	200	5430	0
நியூ இந்தியா	15	46	8
வலகன்	10	8	6
ஆலை			
பெங்களூர்	100	166	8
,, பிரிபரன்ஸ்	100	117	0
பக்கிங்ஹாம்	100	190	0
,, பிரிபரன்ஸ்	100	165	0
கோரக்	100	208	2
கெய்சர்-இ-ஹிண்ட்	2½	0	14
மினர்வா	100	64	0
மகாராஜா	50	82	8
கிருஷ்ணராஜேந்திரா	25	6	8
சீதாராம்	100	47	8
கம்போடியா	10	10	4
வசந்தா சாதா	100	106	0
,, பிரிபரன்ஸ்	100	114	8
ராஜலக்ஷ்மி சாதா	50	51	4
,, பிரிபரன்ஸ்	50	53	0
காவேலஸ்வரா	100	209	0
டிபன்சர்			
கோலார்	100	100	2
ஊரகான்	100	106	0
மைசூர் சர்க்கரை	80	91	0
திருச்சி-ஸ்ரீரங்கம்	100	105	0
சில்லரை			
பிரிவரில் சாதா	75	85	8
,, பிரிபரன்ஸ்	100	112	0
டாடா ஹைட்ரோ சாதா	100	192	0
,, பிரிபரன்ஸ்	100	162	8
டாடா இரும்பு சாதா	75	224	8
,, டிபர்டு	30	856	0
,, 1-வது பி-ஸ்	150	198	8
,, 2-வது பி-ஸ்	100	178	6
பி. வி. ரயில்வே	25	20	4
பெங்களூர் பிரஸ்	100	80	0
பார்டன் சன்ஸ் சாதா	10	5	2
,, பிரபரன்ஸ்	10	5	12
ஸ்பென்சர் சாதா	10	7	0
,, ஏ-பிரிபரன்ஸ்	10	11	9
,, பி-பிரிபரன்ஸ்	10	12	4
மின்சாரம்			
ஆஜ்மீர்	10	14	8
வேலூர்	10	17	10
திருச்சினாப்பள்ளி	100	206	0
,,	10	20	4
விசாகப்பட்டணம்	50	75	0
கும்பகோணம்	10	14	4
கொச்சி	10	14	10
ரங்கூன்	10	15	2
சுரங்கம்			
	ஷி.	ப.ஷி.	பெ.
சாம்பியன்	10	2 3	0
மைசூர்	10	1 5	8
நந்தி துர்க்கம்	10	3 1	2
ஊர்காம் சாதா	10	0 14	8
சர்க்கரை			
மைசூர் சர்க்கரை	10	35	12
நியூ இந்தியா	10	7	0
டெக்கான் சாதா	100	366	8
,,	25	92	0

விடுதலை யாவதி யாதெனக்-கேட்டாயின
கேடிலே நேசக் கூரிலே தீண்மை
[காட்டினரெல்லாம்
பொருள் சுகப்போகங்கள் சர்வமும் பெற்ற
திரும்க வாழ்தலே யாம

விடுதலை
VIDUTHALAI

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்றி நின்ற
செம்மொழியைத் திருமொழியை
[தேன்மொழி
தனித்தியங்கும் ஆற்றலுள தொன்மொழியை
[அமிழ்தினைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
அனுதினமும் பழக்கம் செய்வீர்.

மலர்-2] சென்னை : (19-12-1936) தாது ஹ மார்கழி மீ 5உ சனிக்கிழமை [இதழ்-57

ஆழ்ந்த தூய சிந்தனை

உலக கஷ்டங்களை ஒழிக்க வழி

பரம்பரை வழக்கங்கள் முன்னேற்றத்துக்குத் தடை

விசால ஹிருதயமே அன்புக்குப் பிறப்பிடம்

அறிவுக்கு அடிப்படையா யுள்ளதை அறிபவனே பிரபஞ்ச ரகசியத்தை உணர்ந்தவன்

"லோக குரு" கிருஷ்ணமூர்த்தி அபிப்பிராயங்கள்

சென்னை, டிச, 14

நேற்று சாயந்திரம் அடையாறு வசந்தவிஹாரில், திரு. ஜே. கிருஷ்ணமூர்த்தி, "வாழ்க்கையின் சில பிரச்னைகள்" என்பதைப் பற்றி ஒரு சம்பாஷணை நடத்தினர். அதைக் கேட்பதற்கு ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தார்கள்.

அவர் பேசுகையில், சொன்னதாவது:—

"அநேக விதமான கோட்பாடுகளிலும், முறைகளிலும், எது சரியான கருத்தையுடையது, நாம் எதைப் பின் பற்றுவது; எது உண்மையான மார்க்கம் என்று நீங்கள் உங்களையே கேட்டுக்கொண்டிருந்திருப்பீர்கள். பலவித முறைகளையுடைய அநேக உபாத்தியாயர்கள் இருக்கிறார்கள். அவர்களில் எவரைப் பின் பற்றுவது? பலவித அபிப்பிராயத்தினால், ஒவ்வொருவரும் தன் வழியே போகப் பிரியப்படுகிறார்கள். தலைவர்கள் உன் வழியே போய் உன் முறைகளையே அனுசரி, நான் என் வழியைப் பின்பற்றுகிறேன்; கடைசியில் நாம் சந்திப்போம்; அதுவரையில் சிநேகிதமாகவும், சகிப்புத் தன்மையுடனும் இருப்போம் என்கிறார்கள். பலவித அபிப்பிராயமும் குழப்பமும் உள்ள இந்த உலகில் உங்கள் கொள்கைகளை உண்மையாக அனுஷ்டிப்பதாயிருந்தால் சகிப்புத் தன்மை இருக்க முடியுமா? அவரவர்கள் வழியை அவரவர்கள் பின்பற்றுவது என்பது முடியாத விஷயம். அது உண்மையாகவும் இருக்க முடியாது. நமது நம்பிக்கையாலும், ஆழ்ந்த கொள்கையாலும் உண்மையில்லாத சிநேகிதத்தையும், சகிப்புத் தன்மையையும் நாம் ஸ்தாபிப்பது சரியா? அவ்விதம் ஸ்தாபிப்பது பொய்யாகும்.

நாம் நம்மைச் சுற்றிலும் உள்ள உண்மைகள், விதிவசப் பட்ட அபிப்பிராயங்கள், குழப்பங்கள், ஆசைகள் ஆகியவைகளை ஆழமாக சகிப்புத் தன்மை இன்றி எப்படியாவது சமாளிக்க முடியும் என்று பார்க்க வேண்டும். எனக்கு ஒரு வழி தோன்றுகிறது. அதைப் பின்பற்றினல் மட்டுந்தான் நமது கஷ்டங்களை நிவர்த்திக்கலாம்."

தெளிவான யோசனை

அவ்வழி நாம் யாவரும் தெளிவாக யோசிப்பதென்பதே. நாம் ஆழ்ந்த யோசித்தால், வீண் எதிர்ப்பும், பிறரை நம்முடைய கொள்கைக்கு மாற்ற வேண்டுமென்பதும் நின்றுவிடும். தெளிவாக யோசிப்பது என்பது நமது எண்ணம் விரிவாகவும், சுறுசுறுப்பாகவும், பலமாகவும் இருக்க வேண்டுமே யொழிய யந்திரம் மாதிரி ஒரே நோக்கு உடையதாக விருக்கலாகாது.

தெளிவான யோசனை என்ன என்பதை அறிவதற்கு எது இடையூறாயிருக்கிறது என்பதைக் கண்டுணர வேண்டும். அதாவது, நமது மனத்தை அடிக்கடி மாறுதல் அடையச் செய்யும் கொள்கைகளும், யோசித் தோற்றங்களும் எவையென்று நாம் கண்டோமானல் அப்பொழுதுதான் நாம் சுத்த யோசனையை வளர்ப்பதாகப் பொருள்படும். நீங்கள் ஒரு குருவின் போதனைப்படி நடக்கிறீர்கள். நான் சொல்லுவது அதற்கு முற்றும் மாறுபட்டது."

குறுக்கேயுள்ள தடை

தெளிவான எண்ணத்திற்குக் குறுக்கே நிற்பது பாரம்பரையான வழக்கங்களே. நான் முன்னோர்களின் பழக்க வழக்கங்கள் இருக்கக் கூடாது என்று சொல்லவில்லை. ஆனல், நடும் பழக்க வழக்கங்களும், உபாத்தியாயர்களும், சமூகக் கட்டுப்பாடும், சாஸ்திரங்களும் இருக்கும், விபசாரமும், குழப்பங்களும் இருந்தபாடில்லை. ஆதலால், பழக்க வழக்கங்கள் போய்விட்டால் அவை தாண்டவமாடுமென்று சொல்ல முடியாது.

பழக்க வழக்கங்கள் என்பதென்ன? உங்களை மாறுதல் அடையச் செய்வதும், அங்கும் இங்கும் போகச் செய்வதும் என்ன? இதனல் என்னை ஒரு நாஸ்திகன் என்றும், உண்மையில் நம்பிக்கையில்லாதவன் என்றும் நினைக்கவேண்டாம். எனக்கும் நம்பிக்கையுண்டு. ஆனல் அதற்கும் பழக்க வழக்கத்திற்கும் சம்பந்தமில்லை. எனது நம்பிக்கை அறிவைப் பற்றியது. அதைத் தெரிந்துகொள்ள வேண்டுமானல், பயமும், கட்டாயமுமின்றி நீங்களாகவே தெரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு குழந்தை ஜனித்தவுடன் அதற்கு காலையில், கடவுள், மறு பிறப்பு, வர்க்கம் முதலியவற்றில் பலவிதமாக நம்பிக்கை புண்டாக்கப்படுகிறது. இக் கொள்கைகள் அதன் மனதில் பதிந்த பிற்பாடு மற்ற விஷயங்களை அது ஒப்புக்கொள்ளாது. அதனல் அதன் எண்ணம் கட்டுப்படுத்தப்படுகிறது. ஒரு கட்டுப்படுத்தப்பட்ட யோசனையிலிருந்து மற்றொரு கட்டுப்படுத்தப்பட்ட யோசனை உண்டாகிறது.

நீங்கள் எந்த மதஸ்தராயிருந்தாலும் சரி. உங்கள் யோசனை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது அந்த கட்டுப்பாட்டுடனேயேதான் நீங்கள் பழக்க வழக்கங்களையும், கொள்கைகளையும் உணர்கிறீர்கள். உங்கள் கொள்கை புதிய கொள்கை ஒன்றுடன் சம்பந்தப்பட்டால் உங்கள் கொள்கையையும் மாற்றிக் கொள்கிறீர்கள். ஆகவே, உங்களுக்கென ஒரு நோக்கமும், ஞாபகமும், உணர்ச்சியும் நீங்கள் மதிக்கும் கொள்கைகள் இருப்பதாகவும், இவற்றுடன் சம்பந்த மேற்படும் பொழுது அவை மாறுதல் அடையுமென்றும் தெளிவாகிறது. இதனல் குழப்பம் ஏற்படும். ஏனெனில், முன்னதாகவே கட்டுப்பட்ட எண்ணம் புதியவற்றை ஏற்பதில்லை. இவ்விதம் இருக்கும் வரையில் ஒற்றுமையின்மையும், அன்பின்மையும் இருக்கத்தான் செய்யும்.

மனம் கட்டுப்பாடின்றி விசாலமுடையதாக விருந்தால் தான் உண்மையான எண்ணங்களும், ஆர்வமும், அன்பும் இருப்பதாகப் பொருள்படும். அது தான் உலகத்தில் உண்மையான அன்பையும் ஒற்றுமையையும், சமாதானத்தையும் ஏற்படுத்தும். இதை உணராவிட்டால் தலைவர்களும் இயக்கங்களும் மக்களை கருவிகளாக உபயோகித்துக் கொள்ளும்.

அவை உங்களுக்கு விளங்கினதோ, விளங்க வில்லையோ, விளங்காவிட்டால் நமக்குள் விவாதித்து அறிந்து கொள்வோம். இதைக் காண்பது உங்கள் கடமை. ஒருவனின் கட்டுப்படுத்தப்பட்ட மனம் கடவுளைப் பற்றியும், மற்றதைப் பற்றியும் விவாதித்து உண்மையிலிருந்து விலகிப் போகும். நீங்கள் உங்கள் சந்தேகங்களைக் கேள்விக் கேட்டு நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். அவ்விதம் செய்வதின் முடிவென்னவென உங்களுக்குத் தெரியாது. அப்பொழுது தான் அன்பு என்னவென்பது உங்களுக்குத் தெரியும்.

துக்கத்தைப் போக்க முடியுமா?

பிறகு அவர் சில கேள்விகளுக்குப் பதில் சொன்னர்.

கேள்வி:-துக்கத்தை அடியோடு போக்க முடியுமா?

பதில்:-"துக்கம், பணக்காரர் ஏழை யென்ற வித்தியாசமில்லாமல் எல்லோரையும் பாதிக்கிறது. துக்கமும், வருத்தமும் மனதிற்கு பிடித்தமில்லாமலும் இருப்பதால் அதை எல்லோரும் வெறுக்கின்றனர். ஆனல் சந்தோஷத்தை போக்குவதற்கு ஒருவரும் ஆசைப்படவில்லை. துக்கத்தைப் போக்குவதற்கு ஒரு வழியைத் தேடுகிறார்கள். ஆனல் அது முடியாத காரியம். மனதை துக்கத்திலும், வருத்தத்திலும் செலுத்தாமல் விருந்தால் துக்கம் தெளிவான எண்ணத்தையும், அறிவையும் உண்டாக்கும். துக்கம் கட்டுப்படுத்தப்பட்ட எண்ணத்தின் அறிகுறியாகும். துக்கத்தைப் போக்குவதற்கு அதில் தலையிடவே கூடாது. இதனல வருத்தத்திலேயே இருக்க வேண்டுமென்பது பொருள் அல்ல. அதைப் பற்றி கவலைப்பட்டு அதில் தலையிடும் வரையில் அது இருந்து கொண்டே இருக்கும். துக்கத்தை ஒப்புக் கொள்ளாமலும், அதற்குப் பணியாமலும் இருந்தால் அது அதை அது பணிப்பவரின் ஒருபாகமாக ஆகிவிடும்."

கேள்வி:—"எந்த பொருளில் நீங்கள் அறிவு என்னும் பதத்தை உபயோகிக்கிறீர்கள்? அந்த அறிவு எல்லோரிடத்திலும் இருக்கிறதா? அவ்வறிவு மாறுபடுமா?"

பதில்:—"நான், அறிவை ஒரு தனிப் பொருளில் செலுத்துகிறேன், எனக்கு அது வாழ்க்கைக்கு முக்கியமான ஒரு புதிய விஷயம். எண்ணமும், உள்ள வெழுச்சியும் சேர்ந்திருக்கும் போது அது உண்டாகிறது. உண்மையான அறிவு எல்லோருக்கும் எப்பொழுதும் இருக்கிறது. அறிவு என்பது பிரத்தியட்சம். இந்த அறிவுக்குரிய எண்ணம் எது என்பதை சரியாக அறிந்து கொண்டால் தான் அவ்வறிவைத் தெரிந்து கொள்ள முடியும்."





மேற்கண்ட இரு கட்டடங்களும் சென்னை கூட்டுறவு தொழிலாளர் சங்கத்தாரால் கட்டப்பட்டு சமீபத்தில் கூட்டுறவு சங்கங்களின் ரிஜிஸ்திரார் திரு. ஸிரியப்பாவால் திறந்து வைக்கப் பட்டன. இம்மாதிரியான கூட்டுறவு சங்கம் சென்னை இராஜதானியில் இதுவே முதலாவது. இச் சங்கம் கனம் பி. டி. ராஜன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

ரயில்வே விசாரணைக் கமிட்டி

சென்னை, டிச, 1

இந்திய ரயில்வேக்களின் நிலைமையைப் பரிசீலனை செய்வதற்காகவும், பொது வரவு செலவுத் திட்டத்தை பாதிக்காத வகையில் அபிவிருத்தி செய்வதற்குண்டான வழிகளைத் தேடுவதற்கும், இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டுள்ள ரயில்வே விசாரணைக் கமிட்டியார் நேற்று மாலை சென்னைக்கு விஜயம் செய்துள்ளனர். இவர்கள் விசாரணை எம். என். எம். ரயில்வே காரியாலயத்தில் நடைபெறும். இக்கமிட்டி இந்தியாவுக்கு வந்தது முதல் பல முக்கிய ஊர்களையும், நகரங்களையும் பார்வையிட்டு ஸ்தல சர்க்காரையும், வர்த்தக ஸ்தாபனங்களையும் கலந்து விஷயம் சேகரித்து வருகிறது. மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளின் சௌகரியங்களைப் பிரத்தியேகமாகக் கவனிக்கும்.

செவ்வாய்க் கிழமை இரவு கல்கத்தாவுக்கு கமிட்டியார் புறப்படுவர்.

ரயில்வே கால அட்டவண

சென்னை : (சென்ட்ரல் ஸ்டேஷன்)

வண்டியின் பெயர்	புறப்படும் நேரம்	வ
பெங்களூர்		
மெயில்	மாலை 9-30	காலை 6-
,, பாசஞ்சர்	மாலை 9-40	காலை 5-
,, பாசஞ்சர்	காலை 6-20	மாலை 7-
,, எக்ஸ்பிரஸ்	மாலை 1-0	மாலை 2-
பம்பாய் ,,	காலை 8-30	மாலை 4-
,, மெயில்	மாலை 8-45	காலை 5-
வால்டேர் பாசஞ்சர்	மாலை 7-30	காலை 10-
,, பாசஞ்சர்	காலை 9-5	மாலை 6-1
கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ்	காலை 7-45	மாலை
ரெய்ச்சூர் பாசஞ்சர்	காலை 9-20	மாலை
ஜோலார்பேட்டை பாசஞ்சர்	மாலை 12-50	மாலை 2.
ரேணிகுண்டா லோகல்	காலை 9-4	
,, பாசஞ்சர்	— —	மாலை 9-2
காட்பாடி பாசஞ்சர்	மாலை 5-30	காலை 9-4
அரக்கோணம் பாசஞ்சர்	மாலை 6-30	—
மலபார் எக்ஸ்பிரஸ்	மாலை 8-5	காலை 7-
கல்கத்தா மெயில்	மாலை 8-35	காலை 7.
புளூமவுண்டன் எக்ஸ்பிரஸ்	மாலை 9-15	காலை 6-30

சென்னை : (எழும்பூ

செங்கோட்டை பாசஞ்சர்	காலை 7-30	மாலை 7-
கடலூர் பாசஞ்சர்	மாலை 4-5	காலை 11-2
இண்டோ—சிலோன் எக்ஸ்பிரஸ்	,, ,, 9-0	... 6-45
திருவனந்தபுரம் பாஸ்டு பாசஞ்சர்	,, 9-30 ,,	... 6-1
திருச்சி பார்சல் பாசஞ்சர்	,, 10-20 ,,	... 5-3
கார்டு லேன்		
தனுஷ்கோடி பாஸ்டு பாசஞ்சர்	காலை 11-25	மாலை 2-45
திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்	மாலை 8-0	காலை 7-20

திருவொற்றியூர் திருவடிப்பூசை

நாளது ஆங்கில மாதம் 20-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று திருவொற்றியூரில் திருவடிப் பூசையும், அன்னதானமும், பல பெரியோர்களால் அரிய பிரசங்கங்களும் ஒன்றன் பின்னொன்றாக நடைபெறும். அதுசமயம் அன்பர்கள் விஜயம் செய்து கலந்து மாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

எ து ?

தமிழ்நாட்டில் குறைந்த சந்தாவில்
அதிக பக்கங்களோடு வெளிவரும் தமிழ் மாதப் பத்திரிகை.

"சித்தன்"

ஒன்றே. இனிய கதைகள், ஹாஸ்யம், உலகச் செய்தி, வைத்தியக் குறிப்பு சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன நிறைந்தது.

வருட சந்தா அணு (8) எட்டே. வெளிநாடு ரூ. 1.
மாதிரிப் பிரதி இலவசம். விளம்பர விகிதம் மிகவும் குறைவு.

விபரங்களுக்கு எழுதவும் :—
மானேஜர் :—"சித்தன்", பழனி, S. I.

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN. AT THE JUSTICE PRINTING WORKS, 14, MOUNT ROAD, MADRAS. EDITOR: PANDIT S. MUTHUSWAMI PILLAI.

Sivapichai 2805
R. Maruthai 534
Pitchai muthiran 455
Regupathy 34
Balakri 107
N. Sivaraj 44

விலை அரை அணா 8 பக்கங்கள் மலாய் நாட்டில் 5 சதம் Regd. No. M. 3298.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா
முன் பணம்

உள்நாடு

1 மாதம்	...	0 6 0
3 மாதம்	...	1 0 0
6 மாதம்	...	1 14 0
1 வருடம்	...	3 10 0

சென்னைக்கு

1 மாதம்	...	0 4 0
3 மாதம்	...	0 10 0
6 மாதம்	...	1 4 0
1 வருடம்	...	2 6 0

விடுதலை

VIDUTHALAI

(வாரம் இருமுறை வெளிவரும்)
ஆசிரியர்: பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா.
முன் பணம்

வெளிநாடு

1 மாதம்	...	0 10 0
3 மாதம்	...	1 14 0
6 மாதம்	...	3 12 0
1 வருடம்	...	7 4 0

சர்க்கார், முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டுகளுக்கு:
உள்நாடு: வருடம் ரூ. 7 8 0
சென்னை: " ரூ. 4 8 0

மலர்-2] சென்னை: (23-12-1936) தாதுஹூ மார்கழிமீ 9உ புதன்கிழமை [இதழ்-58

திருவாரூரில் படேலுக்குக் கறுப்புக் கொடிகள்

"பார்ப்பனக் கங்காணியே திரும்பிப் போ!"

பார்ப்பனரல்லாத இளைஞர்களின் வீர எழுச்சி

கதர்க் கொடிக்குப் பதில் கறுப்புக் கொடிகள்

(ஒரு நிருபர்)

திருவாரூர், டிச. 19

இவ்வூர் கருணாநிதி தியேட்டரில் படேல் வருகையை முன்னிட்டு இவ்வூர் காங்கரஸ் சபையாரால் அநேக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதைக் கண்ணுற்ற பார்ப்பனரல்லாத இளைஞர்கள் கூடி ஒரு மனதுடனும், தைரியத்துடனும் கதர்க் கொடிகள் கண்ணுக்குப் புலப்படாத வண்ணம் கறுப்புக் கொடிகள் கம்பங்களில் கட்டி அலங்கரித்திருந்தார்கள். "பார்ப்பனக் கங்காணியே திரும்பிப்போ" என்ற வாக்கியம் அடங்கிய கறுப்புக் கொடித் தோரணங்களை மிகுதியாய்க் காணப் பட்டன. மேற்படி இளைஞர்கள் சார்பாக, 'படேலுக்குப் பணமுடிப்புக் கொடுப்பது பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே பெருங்கேடு' என்ற தலைப்பின் கீழ் பல விஷயங்களடங்கிய துண்டு பிரசுரங்கள் ஆயிரக்கணக்காய் வழங்கப்பட்டன. படேல் தமது கோஷ்டியுடன் மாலை 5-30 மணிக்கு வந்திறங்கியதும் மூன்று கேள்வி களடங்கிய ஓர் கடிதத்தை தோழர் செங்காராஜு அவர்கள் கொடுத்தார். அதற்குப் படேல் அவர்கள் மாமூல் பிரகாரம் பதிலளித்து விட்டு வழக்கம் போல் சில வார்த்தைகள் கூறிய பின் கூட்டம் கலைந்தது.

கேள்விகள் விபரம்

1. தேர்தலுக்கு நிதி திரட்டப் புறப்பட்ட தாங்களும், தங்கள் கூட்டத்தாரும் வடநாட்டில் இன்று வரை நடந்துவரும் இந்து-முஸ்லிம் கலகப் பூசல்களுக்கும், தென்னாட்டில் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என்கிற கிளர்ச்சிக்கும் செய்த முடிவு என்ன?

2. இதைச் சமாதானம் செய்ய முடியாத தாங்களும், தங்கள் கோஷ்டியும் சட்டசபைக்குள் சென்று சாதிக்கப் போவதென்ன?

3. ஜஸ்டிஸ் கட்சியை சென்னையிலும், கோவையிலும் வாயில் வந்தபடி தூஷித்த தாங்கள், தேசத்தை மீட்க, சமூகத்தை எப்படி ஒன்று சேர்க்க முடியும்?

நீடாமங்கலத்தில் படேல் பகிஷ்காரம்

"படேலுக்கு ஷேம், காங்கரசுக்கு ஷேம்" என்ற கூச்சல்

படேல் கம்பெனியார் ஓட்டம்

உபசாரக் கூட்ட மர்மம்

(ஒரு நிருபர்)

நீடாமங்கலம், டிச, 20

தேர்தலுக்காகப் பணக் கொள்ளை அடிப்பதற்கு தோழர்கள்: படேல் சத்தியமூர்த்தி, சுப்பையா, வேதரத்னம் முதலியவர்கள் சென்ற சனிக்கிழமை 1-30 மணிக்கு வடபால் வெண்ணாற்றங்கரைக்கு அருகில் காரில் வந்ததும் சுமார் 50 பேர் கொண்ட கறுப்புக் கொடி பகிஷ்கார கூட்டமானது தோழர் அ. நாராயணன் அவர் தலைமையில் "படேலுக்கு ஷேம்", "காந்திக்கு ஷேம்", "காங்கரசுக்கு ஷேம்", "சத்திய மூர்த்தி வீழ்க", "காங்கரஸ் வீழ்க", "பார்ப்பனியம் ஒழிக", என்ற ஆரவாரம் செய்து கொண்டு தம் வெறுப்பையும், மனக் கசப்பையும் காட்டிக் கொண்டிருந்தது. தோழர் படேலின் கார் இவ்வூருக்கு ஒரே காங்கரஸ் வாதியாய் வடபுறமாயுள்ள அறலூர் திரு. எ. என். பி. ரெத்தினசபாபதி உடையார் (அவர் சகோதரர் திரு. டி. கெ. பி. சந்தானராமஸ்வாமி உடையார் உள்பட) அவர்களது பங்களா காம்பவுண்டிற்குள் சென்றது.

அங்கு இவரும், 5, 6 பார்ப்பனர்களும் சொற்பத் தொகை கொடுத்ததும் படேல் அதைப் பெற்றுக் கொண்டு அம்மாப்பேட்டை செல்வதற்காக காரில் வரின் வீதிகளின் வழியாகச் செல்லுகையில் நெடுக கறுப்புக் கொடி தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. வழி நெடுக ஆங்காங்கும் "படேலுக்கு ஷேம், ஷேம், ஷேம்" என்ற ஆரவாரமும் "ஜஸ்டிஸ் கட்சிக்கு ஜே" என்ற கோஷமும், "ஈ. வெ. ராமசாமிக்கு ஜே" என்ற பேரிரைச்சலும் காரமான குரலோசையோடு ஆகாயத்தைப் பிளந்தது.

மேற்படி படேல் கம்பெனியார் இவ்வளவையும் ஏற்றுக் கொண்டு அம்மாப்பேட்டைக்குச் சென்று திரும்பி அரை மணியில் மன்னார்குடிக்குப் போக வரும்பொழுது நீடாமங்கலத்தில் மேல்புறமாய் ஓடும் கோரை ஆற்றங்கரை ரோட்டு வழியாகவே வர வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் அச்சமயத்திலும் கூட பகிஷ்காரக் கூட்டத்தார் திரு. வி. ஞானானந்தம் தலைமையில் மேற்சொல்லிய வகையிலேயே கறுப்புக் கொடிகளோடு தமது பகிஷ்கார உணர்ச்சியைத் தெரிவித்தனர்.

ஐயரூர், நாகையில் கறுப்புக் கொடிக்காரர்கள்மேல் சென்று, கேள்வி கேட்டு மயக்க முயற்சித்தது போல் படேல் நடந்து கொண்டால் அவரை சரியானபடி கேள்விகள் கேட்டு அவருடைய புரட்டான வாதங்களை யெல்லாம் வெளிப்படுத்தி, வெட்கப்படும்படி செய்வதற்காக நாங்கள் எல்லோரும் நினைத்துத் தயாராய் இருந்தோம். ஆனால், அவர் தமது [illegible] கூட்டத்துடன் கடுகி, பதுங்கி நில்லாமல் சென்று விட்டார்.

"நூல்" ராஜயம் நொறுங்கி வீழ்ந்தது!

பஞ்சாயத்து போர்டு தேர்தலில் பலத்த போட்டி

காங்கரஸ் பார்ப்பனர் கவிழ்ந்தார்

திரு. ஏ. எல். ஆர். எம். அண்ணாமலை செட்டியார் வெற்றி

(ஐயாறுவாணன்)

திருவையாறு, டிச. 20

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் தலைவர் தேர்தல் நேற்று மாலை 5-மணிக்கு நடைபெற்றது. காங்கரஸ் டிக்கட் மூலம் மேலைத் தஞ்சை ஜில்லா போர்டின் மெம்பர் ஆனவரும், சுமார் இரண்டு மாத காலமாக மாஜி ஜில்லா போர்டு தலைவர் திரு. வி. நாடிமுத்து பிள்ளையின் தயவால் ஆக்டிங் பிரசிடெண்டு வேலை பார்த்துவருபவருமான திரு. டி. என். கிருஷ்ணராவ் என்ற பார்ப்பன காங்கரஸ் வாதியும், தனவணிகச் செல்வர் திரு. ஏ. எல். ஆர். எம். அண்ணாமலை செட்டியாரும் பலத்த போட்டியிட்டனர். முன்னவருக்கு 6 ஓட்டுகளும், பின்னவருக்கு 7 ஓட்டுகளும் கிடைத்ததால் பின்னவரான திரு. செட்டியாரைப் பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதாக அறிவிக்கப் பட்டது. இதைக் கேட்டதும் வெளியில் காத்திருந்த நூற்றுக் கணக்கான மக்கள் மிகுந்த சந்தோஷமடைந்து, ஒரே ஆரவாரம் செய்து "காங்கரஸ் வீழ்க! பார்ப்பனக் கோட்டை இடிக"! என்று கோஷம் செய்தனர். இந்த முடிவு வரும் என்று நினைத்தே இது வரை பிரசிடெண்ட் தேர்தலுக்குத் தேதி குறிப்பிடாது சுமார் 2 மாத காலமாக ஒத்திவைத்துக் கொண்டே வந்தனர். இப்பொழுது ஜில்லா போர்டு நிர்வாகம் ஜில்லா கலெக்டர் வசம் இருப்பதால், இவர்களுடைய பகீரதப் பிரயத்தனம் ஒன்றும் பலியாது, தேர்தலை ஒத்தி வைக்க முடியாது போனதுடன் நேற்று நடந்த தேர்தலில் படுதோல்வியடைந்தனர்.

இன்றிலிருந்து பார்ப்பனரல்லாத பெரியார்களிடை ஒருவித கிளர்ச்சி-வேகம் உண்டாயிருக்கின்றது. சென்ற இரண்டு வருடங்களுக்கு மேலாக பார்ப்பனர் ஆதிக்கத்திலிருந்து வந்த போர்டைக் கைப்பற்றிய நம் செட்டியார் அவர்கள் பொது மக்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்வதாக வாக்களித்துள்ளார். இவர் காலத்தில் மின்சார விளக்குகள் போடப்படும். (சென்ற ஆண்டு போட ஆரம்பித்து அரைகுறையாக இருக்கின்றது) என்று பொது மக்கள் ஆவலுடன் எதிர் பார்க்கின்றனர். நிற்க, இத்திருவையாறு ஓர் காங்கரஸ் கோட்டை, அதிலும் பார்ப்பனர் கோட்டை என்று எண்ணி இறுமாந்திருந்த தோடல்லாது நேற்றையே பிரசிடெண்ட் தேர்தலில் காப்பி கிளப் பார்ப்பனன் முதல் வக்கீல் பார்ப்பான் வரையில் எவ்வளவோ முயன்றும், சூழ்ச்சிகள் செய்தும் தோல்வி யடைந்து தலைகுனிய நேரிட்டது. பார்ப்பனரல்லாத பெரியார்களே! இனியாவது காங்கரஸ்காரரின், பார்ப்பனரின் வஞ்ச வலையுள் — காங்கரசில் சிக்காது உணர்ச்சி பெற்றெழுங்கள்! எழுந்து ஆவன செய்யுங்கள்!! காலந் தாழ்க்கா தீர்கள்!!!

ஏழை மாணவர்களுக்கு இலவச போஜனம்

சிலோன் சர்க்கார் நன்முயற்சி

1 லக்ஷம் ஒதுக்கப்பட்டது

பாடசாலை செல்லும் சிறுவர்களுக்கு இலவச போஜன மளிப்பதற்காக சிலோன் சர்க்கார் ஒரு லக்ஷம் ரூபாய் ஒதுக்கி வைத்துள்ளனர். இயந்திரத்தில் தீட்டப்படாத சத்துள்ள அரிசி சாதமே அவர்களுக்கு அளிக்கப்படும். அத்துடன் பருப்பு, தேங்காய் எண்ணெய், அல்லது நெய், புதிய காய்கறிகள், மீன், தயிர், பால் முதலியனவும் அவர்களுக்கு அளிக்கப்படும். நல்ல தேர்ந்த சமையற் பாகர்களைக் கொண்டே சமையல் செய்விக்கப்படும்.

சிறுவர்களின் ஆரோக்கிய முன்னேற்றத்தை அறிவதற்காக 3 அல்லது 4 பாடசாலைகள் ஒரு வைத்திய அதிகாரியின் மேற்பார்வையிலிருந்துவரும்.

உலகின் தடித்த பையன்

நியூஜெர்ஸியில் பட்டி ஹெய்க் என்ற 11 வயது சிறுவன் இருக்கின்றான். அவன் 245 பவுண்டு எடையுள்ளவனாயிருந்தும் விளையாட்டுகளில் மிகவும் ஆவலுடையவனாயிருக்கின்றான். அவன் உயரம் 5 அடி 2 அங்குலம். தன் பூட்ஸ் நாடாவைக் கட்டுவதற்கு குனிய முடியாமலிருப்பதே அவனுக்குப் பெருத்த கஷ்டமாயிருக்கிறது.

உலகிலேயே ஜப்பானியர்களுக்குத்தான் கெட்டியான இருதயம் இருப்பதாக ஜப்பானிய ஆரோக்ய பீரோ கூறுகிறது. மேலும் இருதய கோளாறினாலும், புகைகளாலும் இறப்பவர்கள் ஜப்பானில் வெகு சிலரே யென்றும் அக் கமிட்டி கூறுகிறது.

இன்னும் 18 மாதங்களுக்குள் பிரிட்டிஷ் ஆகாயப் படை, உலகிலேயே மிகவும் பலம் பொருந்தியதாயிருக்குமென பிரெஞ்சு மாஜி பிரதம மந்திரி எம். பிளாண்டின், பாரிசில் பேசியபொழுது குறிப்பிட்டுள்ளார்.

"நாய் இறந்தால் நானும் இறப்பேன்"

கலிபோர்னியா கல்வர் நகரிலுள்ள ஸ்ரீமதி மார்கரெட் மேக்கேடி என்ற 75 வயதுள்ள பாட்டி தனது நோய் வாய்ப் பட்டுள்ள நாயை மிருக வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு அனுப்பினள். 'நாய் இறந்தால் நானும் இறப்பதாக' அவர்களுக்கு எச்சரித்திருந்தாள்.

ஒரு வாரம் கழித்து, நாய் இறந்து விட்டதாக ஸ்ரீமதி மேக்கேடிக்கு மிருக வைத்தியசாலையிலிருந்து செய்தி தெரிவித்தார்கள். ஆனால் அச் செய்தி கிடைப்பதற்கு சில நிமிஷங்களுக்கு முந்தியே அவள் இறந்து விட்டதாகத் தெரிய வந்தது.

80 மணி நேரம் கொட்டாவி

நியூயார்க்கிலுள்ள, ரோசெஸ்டர் என்ற விடத்தில் வசிக்கும் ஆக்னிஸ் காப் என்ற 27 வயதுள்ள மாதிற்குத் திடீரென கொட்டாவி நோய் பிடிக்கத் தொடங்கியது. வைத்தியர்கள் அதனை அடக்க எவ்வளவோ முறைகளைக் கையாண்டு பார்த்தும் பலனில்லை. விடாமல் 80 மணி நேரம் அவள் கொட்டாவி விட்டபடியே இருந்தாள். அதன் மேல் ஓர் இளம் வைத்தியர் அவளுக்கு ஒரு தூக்கம் வரத்தக்க மருந்து கொடுத்தார். அவள் அதைச் சாப்பிட்டதும் அயர்ந்து தூங்கிவிட்டனள். விழித்ததும் கொட்டாவியும் நின்று விட்டது.

பொங்கல்! பொங்கல்!!

அசல் பட்டுப் புடவை

அழகிய சிறு ஜரிகைக் கரை, அசல் பட்டு. சிகப்பு, அரக்கு, புளு, பச்சை, ஸ்கைப் முதலிய கலர்களில் கிடைக்கும்.

12-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 5-12—0
16-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 7—8—0
18-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 8—8—0
5-முழம் x 44" அங்க வஸ்திரம் 1-க்கு ரூ. 3—8—0

வெண்பட்டு அங்க வஸ்திரம்

5 முழம் x 44" அழகிய கரைகள் சலவைக்கு சேர்ந்தியானது.
விலை ரூ. 1—12—0-தான்.
☞ இந்த விலைகள் 15—1—37 பொங்கல் வரை தான்.
ஞாபகத்தில் வையுங்கள். உடனே ஆர்டரை அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
(Proprietors : Sundarams Ltd.,)
சில்க் அவுஸ், காசி.

விதவையை மணந்த பிரிட்டிஷ் வேந்தன்

அரசியான அந்தப்புர மாது

16-வது நூற்றாண்டின் காதல் கதை

ஸ்ரீமதி சிம்ஸன் என்னும் அமெரிக்க அழகிமீது கொண்ட காதலால் எட்டாவது எட்வர்டுமன்னர், பரந்த ஏகாதிபத்தியத்தின் சக்கரவர்த்தி என்ற தமது பட்டத்தையும் பதவியையும் துறந்து விட்டார். காதலுக்காக தமது அந்தஸ்தைத் தியாகம் செய்த இவரது செய்கை உலகினரால் போற்றப்படினும், அறிவு சான்ற அவரை அரசராக வைத்துக் கொள்ள முடியவில்லையே என்று பிரஜைகள் வருந்துவார்களென்பது உண்மை. சாதாரண ஒரு மாதின் பிணைப்பு அவரது சகல விதமான ஆடம்பரங்களையும், பட்டங்களையும் பதவிகளையும் துறக்கச் செய்து விட்டது. இந்த உலகில் பிரிட்டிஷ் அரசருக்கு மேலான பதவியோ பட்டமோ இடையாது என்பது உலகறிந்த விஷயம். அந்தப் பெரியபதவியையும் பட்டத்தையும் ஒருவர் காதலின் பொருட்டு துறக்கவேண்டுமானால் அக்காதலின் பெருமை எத்தன்மையதாக இருக்க வேண்டுமென்று யாரால் தான் நிர்ணயிக்க முடியும். சுருக்கச் சொல்லின் இந்த நூற்றாண்டிலேயே இக் காதல் நாடகம் உன்னதமானது என்று தான் கூறவேண்டும்.

பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் இதற்குமுன் இத்தகைய காதல் நாடகம் ஏதேனும் நடந்திருக்கிறதா என்பதை ஆராய்வது இச் சமயம் பொருந்தும். அதற்கான ஆதாரங்கள் பல இருக்கின்றன. எட்டாவது ஹென்றி அரசரின் வாழ்க்கை இப்போது நினைவுகூர்ந்து கொள்வதற்கு ஏற்றதாகும். சற்று உங்கள் கவனத்தை 16-வது நூற்றாண்டுக்குத் திருப்புங்கள். 16-வது நூற்றாண்டில் இங்கிலாந்தை 8-வது ஹென்றி ஆட்சி செய்துவந்தார். தமது 18-வது வயதில் அவர் சிம்மாசனம் ஏறினர். அப்போது அவர் எடுத்த காரியத்தை முடிக்காம லிருப்பதில்லை. சிம்மாசனமேறும்போது அவர் நமது எட்டாவது எட்வர்ட் மன்னர் பிரானைப் போல் விவாகமாகாமலே இருந்தார். சிம்மாசனமேறிய சில மாதங்கள் கழித்து ஹென்றி மன்னர் தமது மூத்த சகோதரர் ஆர்தரின் விதவையாகிய காதரைன் அரசியை மணந்து கொண்டார். முதல் இரண்டு வருடங்களில் அவர் அரசியலில் கவனம் செலுத்தவில்லை. பின்னர், சேர்ந்தாற் போன்று மூன்று வருடங்கள் பிரான்சோடு போர் புரிந்தார். போர்க்களத்திலிருந்து திரும்பியதும் அவரிடம் விசேஷ மாறுதல்கள் காணப்பட்டன. இங்கிலாந்தின் செல்வாக்கை அபிவிருத்தி செய்ய அவர் வன்மையாக உழைத்தார். சகல விஷயங்களிலும் பார்லிமெண்டுடன் ஒத்துழைத்தார். பிரிட்டிஷ் தீவுகளை இணைப்பதற்கும் அவர் பல ஏற்பாடுகளை ரகசியமாகச் செய்து வந்தார்.

தம்முடைய ராஜ்ய பாரப் பொறுப்பை ஒப்படைப்பதற்கு தமக்குப் புதல்வர்கள் பிறக்காதது குறித்து வருந்தினர். காதரைன் அரசி அவருக்கு ஒரு ஆண் குழந்தையைக் கூடப் பெற்றுக் கொடுக்கவில்லை. அது அவருடைய துரதிர்ஷ்டமென்றே கூறவேண்டும். இதனுல் அவர் காதரைன் அரசியைத் தள்ளிவைக்கத் தீர்மானித்து விட்டார்.

ஹென்றி மன்னரின் அரண்மனையின் அந்தப் புரத்தில் நூற்றுக்கணக்கான அழகான இளம் பெண்கள் இருந்தனர். அவர்களில் அனிபொலின என்ற யுவதி இணையற்ற அழகுடையவளாக இருந்தாள. அவள் சரித்திரப் பெருமையுடையவ ளென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அவள்மீது ஹென்றி மன்னர் தமது காதல் வலையை வீசினர். அனிபொலின் மன்னர் தன் மீது திடீரென கருணைகாட்டத் தொடங்கியதைக் கண்டு ஆச்சரியமடைந்தாள். ஓர் சாதாரணப் பெண்ணை—அந்தப் புரப்பணிப் பெண்ணை—அனிபொலினை ஹென்றி மன்னர் காதலிக்கத் தொடங்கிய கதை காட்டுத் தீபோல் தேசம் முழுவதிலும் பரவி விட்டது. அப்போது தமது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அனிபொலினை ஹென்றி மன்னர் அரண்மனையிலிருந்து வெளியேற்ற வேண்டியதாயிற்று. தமது அருமைக் காதலியைப் பிரிய நேரிட்டது குறித்து அவர் மிக மிக வருந்தினர். எனினும் அவர் அனிபொலினுக்கு அடிக்கடி காதற் கடிதங்கள் அனுப்பிக்கொண்டே இருந்தார் அவர் அவளை அரண்மனையை விட்டு வெளியேற்றியதற்காக ஒரு கடிதத்தில் அவளிடம் மன்னிப்புக் கேட்டிருக்கிறார். மற்றொரு கடிதத்தில் அவர் காதல் வியாதிக்குச் சிறந்த மருந்து என்னவென்று கேட்டிருந்தார். 1528-ம் வருடம் ஆகஸ்டு மாதத்தில் எழுதிய அவரது காதல் கடிதம் 4-வதாகும். அக் கடிதத்தில் அனிபொலினைப் பட்டமகிஷியாக ஆக்குவதாகவும் அவளுடன் போட்டி போடும் பெண்களை உதைத்துத் தள்ளிவிட்டு அவளுக்கு கிரீடத்தைச் சூட்டுவதாகவும் அவளது அபிப்பிராய மென்ன என்றும் கேட்டிருந்தார்.

வேறொரு கடிதத்தில் அவர் வரைந்திருந்தது வருமாறு:— "காதலி! நீ என்னுடைய ராணியாவதை எவராலும் தடை செய்ய முடியாது. காதரைன் அரசியுடன் விவாகரத்து செய்து கொள்ளுதல் எவ்வளவு தூரம் நியாயமாகுமென்பதைப் பரிசிலனை செய்யும் பொருட்டு சில நிபுணர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்களின் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளும்வரை நாம் ஒருவரை ஒருவர் சந்திக்க முடியாது."

இக் கடிதங்கள் வரைந்து சில மாதங்கள் கடந்தன. காதரைன் அரசியுடன் தாராளமாக விவாகரத்துச் செய்து கொள்ளலா மென்று ஐரோப்பிய சர்வ கலாசாலைகள் ஏகோபித்து அபிப்பிராயம் தெரிவித்து விட்டன. 1533-ம் வருடம் ஜனவரி மாதம் 25-ந் தேதியன்று ஹென்றி மன்னர் தமது காதலியாகிய அனிபொலினை மணந்து கொண்டார்.

அனிபொலின் மணவாழ்க்கை அதிக நாள் நீடிக்கவில்லை. அவள் ஹென்றி மன்னரை மணக்காமலிருந்திருந்தால் தன்னுடைய உயிரைப் பறிகொடுத்திராமலிருக்கலாம். ஆனால் விதியை வெல்ல யாரால் முடியும்? விரைவில் அனிபொலின் ஹென்றி மன்னரின் துரோகியாகி விட்டாள். அனிபொலின் மன்னரின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டதால், அவர் அவளை சிறையிலடைக்க உத்தரவிட்டார். விசாரணையின்றி தன்னைத் தன் கணவர் சிறையிலடைத்தது குறித்து அனிபொலின் வருத்தமடைந்தாள். வருத்தம் தாங்கமாட்டாது அவள் இறுதியில் ஹென்றி மன்னருக்கு ஒரு கடிதம் எழுதினள். அக்கடிதத்தில் தன்னை பகிரங்கமாக விசாரணை செய்யுமாறு வேண்டியிருந்தாள், அந்த வேண்டுகோளை ஹென்றி மன்னர் நிராகரித்து விட்டார். அவர் அனிபொலின் அரசிக்கு மரண தண்டனை விதித்தார்.

பின்னர் ஜேன்ஸெமர் என்னும் மங்கைமீது அவர்காதல்கொண்டார் அனிபொலின் தூக்கிலிடப்பட்டபின் ஜேன்ஸெமருக்கும், ஹென்றி மன்னருக்கும் விவாகம் நடந்தது. ஜேன் ஸெமரை மணப்பதற்கு முன்னர் அவருக்கு ஹென்றி மன்னர் பல கடிதங்களை எழுதியனுப்பினர். அவர் தமது காதற் கடிதங்களிலொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறர்:—

என்னுடைய ஆருயிர்த் துணைவியே? இக்கடிதத்துடன் நான் அனுப்பியிருக்கும் வெகுமானத்தை நீ பிரியத்துடன் ஏற்றுக் கொள்வாயென்று நம்புகிறேன். அது நான் உன்மீது கொண்டிருக்கும் காதலின் அரிய சின்னமாகும். உன்னையும் என்னையும்பற்றி ஓர் அவதூறான பாட்டு வெளிவந்திருப்பதாக கேள்விப் படுகிறேன். அப்பாட்டில் அடங்கிய விஷயங்களை நீ நம்பாதே. மேற் கூறிய பாட்டை எழுதிய பேர்வழி யாரென்று தெரிய வந்தால் அவன் என்னிடமிருந்து மிக மிகக் கடுமையான தண்டனையை அடையாமல் போகமாட்டான்.

ஜஸ்டிஸ் கட்சிக்கு வெற்றி

சந்தேகம் வேண்டாம்!

(உத்தம பாளையம் பி. டி. ராமையா எழுதுவது)

சென்னை சட்டசபை மன்றங்களுக்கு தேர்தல் காலம் சமீபித்து விட்டது என்பது பத்திரிகைப் படிக்கும் பலரும் அறிந்த விஷயமே! அவைகளில் பெரும்பாலும் ஜஸ்டிஸ் கட்சியார்கள் வெற்றி யடைந்து (எவ்விதத்திலும்) நிர்வாகம் செய்யப் போகிறார்கள் என்பதற்கு எள்ளத்தனையும் ஐயம் வேண்டாம். ஏனெனில், சமீபத்தில் நடைபெற்ற காங்கரஸ் மகா நாடுகளிலும், தாலுகா ஜில்லா மாகாண பிரதிநிதிகள் தேர்தல்களில் ஏற்பட்ட போட்டியும், அதன் மூலமாக ஏற்பட்ட குரோதங்களும், வெறுப்பு வாதங்களுமே காங்கரஸ் கட்சி தோல்வியடையு மென்பதற்குப் போதிய சான்றாகும்.

மேலும், எங்கள் பெரியகுளம் தாலுகா சம்பந்தப்பட்ட மட்டில் காங்கரஸ் நிர்வாகஸ்தர்கள் தேர்தலில் ஏற்பட்ட போட்டியும் அதில் அரசியல் அஞ்ஞாதவாச ஆசாமிகள் வந்து ஜில்லா கமிட்டி பிரதிநிதிகளாகப் போனதும், பதவிகளை ஏற்றதும், அங்கு வெறுப்புவாத நோய் கண்டதும், அதற்கு ராஜிநாமா என்ற மருந்து கொடுத்து தீர்த்த விபரங்களைப்பற்றி விளக்கிக் கொண்டேபோனால் எழுதத் தொலையாது, ஏடும் அடங்காது. ஆனதால் அதை விட்டு விட்டு அதிலுள்ள சாரத்தை மாத்திரம் கைக் கொள்ளுவதே போது மென்று நினைக்கிறேன்.

இது இவ்வாறிருக்க, இத்தாலுகாவில அதி தீவிர காங்கரஸ் வாதியாக விருந்த ஒரு நபரை சந்தித்து, இத்தாலுகாவில் காங்கரஸ் டிக்கட்டில் நிற்கும் அபேட்சகர் விஷயமாக வினவிக் கொண்டிருக்கும் போது (உள்ளக் கிடக்கையை தன்னை அறியாமல்) அவர் கூறியதாவது:- "இந்த வாரத்தில் நான் சுற்றி வந்த சில இடங்களில் மேற்படி அபேட்சகருக்கு பிரசாரக போது ஜனங்களிடமும், காங்கரஸ்காரர்களிடமும் பேசிப் பார்த்தேன். அதற்கு அவர்கள் கட்டுப்படாத மாதிரியில் பதில் கூறிவிட்டார்கள்" என்றார். இன்னும் இது விஷயமாய்ப் பல பேச்சுக்கள் பேசியபின் முடிந்தது.

இதனால் இத்தாலுகாவில் கபட நாடக சூட்சிகள், பசப்பு வார்த்தைகள், படாடோப விளம்பரங்கள் முதலியவைகளையும், தூஷணையாகப் பேசுவது, காலித்தனம் செய்வது முதலிய செய்கைகளையே கை முதலாக வைத்து பொது ஜனங்களை ஏமாற்றி பணம்வசூலித்துத்திரியும், அகில இந்திய தேசிய ஸ்தாபனமாம்! காங்கரஸ் அபேட்சகர் கட்டாயம் தோல்வியடையப் போவது நிட்சயம் என்பதற்கு இன்னும் வேறு உதாரணங்கள் கூறவேண்டுவதில்லை யென்றும், ஜஸ்டிஸ் கட்சி சார்பாக கனம் பி. டி. ராஜன் அவர்கள் தேர்தலில் வெற்றியடையப் போகிறார் என்று கோபுரத்தின் மீது நின்றும் கூசாமல் கூறலாம்.

இன்னும், சட்டசபைத் தேர்தலுக்கு அபேட்சகரை காங்கரசின் பேரால் பார்ப்பனர்கள் தங்கள் ஜாதி அபிமானத்தையும், சுய நலத்தையும் உண்டாக்கி கொள்ளத்தக்க முறையில் பொறுக்கி எடுத்துக் கொண்டு பொது ஜனங்களை காங்கரஸ் என்ற கபட வலைக்குள் விழும்படி செய்ய பற்பல காட்சிகளும், வேஷங்களும் காட்டி வருகிறார்கள். இவ்வலையிலிருந்து விடுபட வேண்டுமானல், விடுதலை யடையவேண்டுமானல், பார்ப்பனர்களின் சூழ்ச்சிகள் பலிக்காமலிருக்க பார்ப்பனரல்லாதாரியக்கத்தின் சார்பாகவுள்ள அபேட்சகர்களையே ஆதரிக்க வேண்டுவது நாட்டின் முன்னேற்றத்தில் நாட்ட முள்ளவர்களும், கட்சியின் முன்னேற்றத்தில் கருத்துள்ளவர்களும், மக்கள் விடுதலையில் மனதுடையவர்களும் செய்ய வேண்டிய முக்கிய முதல் கடமையாகும்.

நிற்க, கோழியடிக்க குறுந்தடி வேண்டுமாவென்ற குறுகிய மனப்பான்மை யுடனில்லாமல், சிறிய பாம்பானாலும் பெரிய தடி கொண்டு தான் தாக்க வேண்டு மென்ற தாராள மனப்பான்மையோடு முன்னேற்பாடுகளுடன் தலைவர்கள் ஆங்காங்கே தேர்தல் வேலைகளைக் கவனிக்கத்தக்க பிரமுகர்களும் கட்டுப்பாடுடன்-ஊக்கமுடன் உழைக்கும் தொண்டர்களும் கொண்ட தேர்தல் நிலையங்கள் ஏற்படுத்தி வைத்து பிரசார வேலைகள் ஆரம்பிக்கும் படி கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

ஜில்லா மகாநாடுகள்

திருநெல்வேலி

அறிக்கை—2

இம்மாத இறுதியில் திருநெல்வேலி டவுனில் நடைபெறப் போகும் ஜஸ்டிஸ் மகாநாடு - வாலிபர் மகாநாடு - தொழிலாளர் மகாநாடு - சுயமரியாதை மகாநாடு - ஆதிதிராவிட மகாநாடு ஆகிய மகாநாடுகளுக்குப் பணம் வசூலிப்பதற்காக, காரியதரிசி ஏ. இராமநாதர் திருநெல்வேலி ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்கிறார். ஒவ்வொருவரும் அவர்களிடம் கூடுமானவரை பொருள் சேர்த்துக் கொடுத்து மகாநாட்டைச் சிறப்புறச் செய்ய வேண்டியது தற்கால நிலையில் மிக முக்கியமான கடமையாகும்.

வைஸ்ராய் கவுன்சில் மெம்பர்

ராமேஸ்வரம் விஜயம்

(நமது நிருபர்)

மதுரை, டிச, 20

மே. த. வைஸ்ராய் அவர்களின் நிர்வாக கமிட்டி மெம்பரான கனம் குன்வர் ஸர். ஜகதீஷ் பிரசாத் கே. டி. ஸி. எஸ். ஐ. ஸி. ஐ. ஈ. ஓ. பி. ஈ அவர்கள் 9-1-37-ந் தேதி இராமேஸ்வரத்திற்கு விஜயம் செய்து 11-ந் தேதி காலை வரை தங்கி இருப்பார்.

முத்தத்தின் இன்பம்

3 அணு ஸ்டாம்பு அனுப்புவோர்களுக்கு 50 பக்கம் கொண்ட புத்தகம் இனமாய் அனுப்பப்படும்.

ஒற்றுமை ஆபீஸ்,
பிரகாசகர், மதராஸ்.

என்னே படேலின் மூளை!

(ராஜ்)

படேலைப்பற்றி நான் ரொம்ப ரொம்ப கேள்விப்பட்டிருக்கிறேன். தென்னாட்டுக் காங்கரஸ் பிரகஸ்பதிகளின் வண்டவாளங்களைப்பற்றி நாடு சிரித்து அலங் கோலப்படுவதும் அதன் தலைவர்கள் என்று சொல்லப்படும் கயவர்களின் கபடங்களும் மகாத்மாக்களின் மடமைகளும் அறியாதார் இவர் ஆனல் வடநாட்டுத் தலைவர்களைப் பற்றி ஏதோ நான் கொஞ்சம் விசேஷமாய் எண்ணியதை தோழர் ஜவஹர் வரவால் என் அபிப்பிராயம் பூராவும் மாறி விட்டது. ஏதோ கொஞ்ச நஞ்சம் இருந்ததும் படேல் வரவால் அடியோடு மறைந்து விட்டது. இவருக்குள்ள மூளையின் விசேஷமே விசேஷம். வரப்போகும் அசம்பிளி தேர்தல்களில் காங்கரசுக்கு வெற்றி ஏற்படுமா அல்லது தோல்வி ஏற்படுமா என்பதைப்பற்றி தென்னாட்டுத் தலைவர்கள் தங்களுக்குள் முடிவு செய்ய முடியாதவர்களாய் ஏதாவது ஒன்றிரண்டு வெற்றி ஏற்படவேண்டுமானல் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து பல காரணங்களால் சலிப்படைந்திருந்த ஒன்றிரண்டு லட்சாதிபதிகளையும் ஜமீன்தார்களையும் தம் கட்சியில் சேர்த்து பணத்தை வாரி இறைத்து, பொய்ப்பிரசாரம் செய்து எப்படியாகிலும் வெற்றி கிடைத்தால் சரி என்கின்ற மட்டில் நபர்களை தேடிவருகிறார்கள்.

அந்தோ பரிதாபம்! இவர்கள் பொது ஜனங்களின் அபிப்பிராயத்தை சர்தார் தெரிந்து கொண்ட மாதிரி ஒரு சிறு உபாயத்தால் தெரிந்திருந்தால் இவ்வளவு கஷ்டமும் பணவசூலிலும் இறங்கி முயற்சிக்க மாட்டார்கள் என்றே எண்ணுகிறேன். இதிலிருந்தே வடநாட்டுத் தலைவர்களின் யோக்யதை வெளியாகிறதல்லவா?

நாளது டிசம்பர் மாதம், 17-ந் தேதியன்று படேல் மதுரைக்கு வந்திருந்தார். அன்றிரவு அவரிடம் காங்கரஸ் தேர்தல் எலக்ஷன் செலவுகளுக்காக பணம் வசூலித்துப் படேலுக்கு பணமுடிப்பு அளிக்க ஒரு பெருங் கூட்டம் நடந்தது. அப்போது அந்தக் கூட்டத்தில் படேல் ஒரு ஆவேசமான சொற் பொழிவாற்றினர். கூட்டத்தின் முடிவில் அந்தக் கூட்டத்தில் காங்கரசுக்கு ஓட்டுப் போடுகிறவர்கள் யார் யார் இருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் கைதூக்குங்கள் என்றார். எல்லோரும் கை தூக்கினர்கள். எதிர்க் கட்சிக்கு ஓட்டுப் போடுகிறவர்கள் யாராவது இருந்தால் அவர்கள் கைதூக்கும்படி கேட்டார். ஒருவரும் தூக்கவில்லை. உடனே அவர் "நான் காங்கரஸ் தேர்தல் பிரசார விஷயமாய் இங்கு வந்திருக்கிறேன். உங்களில் இப்போது ஓட்டு எடுத்ததில் ஜஸ்டிஸ் கட்சிக்கு ஒரு ஓட்டுமில்லை; காங்கரஸ் கட்சிக்குத்தான் ஏகமனதாய் ஓட்டுப் போட்டு விட்டீர்கள். ஆகவே ஜஸ்டிஸ் ஒழிந்தது. காங்கரஸ் ஜெயித்து விட்டது. நான் வந்தகாரியமும் அதனல் ஜெயமடைந்து விட்டது என்பதாக முடிவு கட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

ஆஹா இதுவல்லவோ மூளை! இதற்குத்தான் சர்தார் என்ற பட்டம் அளிக்கப்பட்டார் போலும் இந்த அறிவு இதுவரை ஒருவருக்கும் இல்லாது போய் விட்டதே! இவர் பிரசங்கத்தை கேட்க வந்தவர்கள் எல்லாம் இவருடைய இனத்தைச் சேர்ந்தவர்கள் தானே தவிர மற்றக் கட்சியினர்களுக்கு அங்கிடம் என்ன வேலை என்பதை இம்மேதாவி அறிந்து கொண்டாரில்லை. ஆனலும் தோல்வியா, வெற்றியா என்னும் "டெஸ்ட்" பார்த்துக் கொள்வதற்கு இதை விடவேறு அத்தாட்சியும் வேண்டுமோ! ஆஹா இதுவல்லவோ மூளை!! என்னே படேலின் மூளை!!!

பெங்களூர் பங்கு மார்க்கெட்.

பெங்களூர், டிச, 22

பெங்களூர், புரோக்கர் எம். நஞ்சப்பைய ஜாகீர்தார் கீழ்க்கண்ட பங்கு விலைகளை அனுப்பியிருக்கிறார்.

	செலுத்தப் பட்டது	தற்கால விலை	
	ரூ.	ரூ.	
பாங்கி			
இம்பீரியல் எப்.பீ.	500	1576	8
இம்பீரியல் கண்ட்	125	392	0
ரிசர்வ்	100	137	12
இந்தியா	50	136	8
மைசூர்	100	302	8
பெங்களூர்	10	7	6
இண்டஸ்டிரியல்	25	6	0
தேவாங்கா	10	8	8
சென்ட்ரல்	25	35	2
குமிலான்	25	27	8
ஸ்டேட் எய்டட்	25	46	8
திருவாங்கூர்நாஷனல்	50	55	4
இந்தியன்	50	144	12
,,	10	30	6
இன்ஷூரன்ஸ்			
ஏஷியாடிக்	5	5	4
ஓரியண்டல்	200	5428	0
நியூ இந்தியா	15	46	10
வல்கன்	10	8	4
ஆலை			
பெங்களூர்	100	165	0
,, பிரிபரன்ஸ்	100	116	0
பக்கிங்ஹாம்	100	190	0
,, பிரிபரன்ஸ்	100	165	0
கோகாக்	100	205	0
கெய்சர்-இ-ஹிண்ட்	2½	0	14
மினர்வா	100	65	0
மகாராஜா	50	82	8
கிருஷ்ணராஜேந்திரா	25	6	8
சீதாராம்	100	48	0
கம்போடியா	10	10	2
வசந்தா சாதா	100	106	0
,, பிரிபரன்ஸ்	100	114	0
ராஜலக்ஷ்மி சாதா	50	51	8
,, பிரிபரன்ஸ்	50	53	0
காவேஸ்வரா	100	296	0
டிபன்சர்			
கோலார்	100	100	4
ஹாசன்	100	105	6
மைசூர் சர்க்கரை	80	90	8
திருசி-ஸ்ரீரங்கம்	100	105	0
சில்லரை			
பிரீவரீஸ் சாதா	75	85	0
,, பிரிபரன்ஸ்	100	112	0
டாடா ஹைட்ரோ சாதா	100	192	0
,, பிரிபரன்ஸ்	100	162	12
டாடா இரும்பு சாதா	75	228	0
,, டிபர்டு	30	886	0
,, 1-வது பி-ஸ்	150	199	0
,, 2-வது பி-ஸ்	100	177	8
பி. வி. ரயில்வே	25	20	4
பெங்களூர் பிரஸ்	100	80	0
பார்டன் சன்ஸ் சாதா	10	5	4
,, பிரபரன்ஸ்	10	5	14
ஸ்பென்சர் சாதா	10	7	4
,, ஏ-பிரிபரன்ஸ்	10	11	8
,, பி-பிரிபரன்ஸ்	10	12	4
மின்சாரம்			
ஆஜ்மீர்	10	14	8
வேலூர்	10	17	10
திருச்சினுப்பள்ளி	100	206	0
,,	10	20	4
விசாகப்பட்டணம்	50	76	0
கும்பகோணம்	10	13	8
கொச்சி	10	14	10
ரங்கூன்	10	15	2
சுரங்கம்			
	ஷி.	ப.ஷி.பெ.	
சாம்பியன்	10	2 3	6
மைசூர்	10	1 5	8
நந்தி துர்க்கம்	10	3 1	3
வஜ்ரம் சாதா	10	0,14	6
சர்க்கரை			
மைசூர் சர்க்கரை	10	36	0
நியூ இந்தியா	10	6	14
டெக்கான் சாதா	100	366	0
,,	25	92	0

காங்கரஸ்காரர்கள் தாழ்த்தப்பட்டார்களிடமும் மானங்கெடப் போகிறார்கள்

தாழ்த்தப்பட்டாருக்கு எச்சரிக்கை

(ஜீ. டி. கனகமலை)

காங்கரஸ்காரர்கள், திருச்சியிலும், திருநெல்வேலியிலும், இராமநாதபுரத்திலும், வேலூரிலும், இன்னும் இதர இடங்களிலும், மானங்கெட்டு மர்கை சிரித்தது போதாமல் கடைசியாக தாழ்த்தப்பட்டார்களிடமும் மானங்கெடப் போவதாகத் தெரிகிறது. எப்படியெனில், வரப்போகும் மாகாண சட்ட சபையில் தாழ்த்தப்பட்டார் சமூகத்திற்காக 30ஸ்தானங்கள் இருக்கப்போகின்றன. அந்த 30 ஸ்தானங்களுக்கும் மாகாணத்திலுள்ள ஜில்லாக்கள் தோறும் தாழ்த்தப்பட்டார் சமூகத்தார் அபேட்சகராக நின்று தங்களுடைய நாமினேஷன்களையும் தாக்கல் செய்திருப்பதுமல்லாமல் தேர்தல் பிரசாரமும் நடந்து வருகிறது. மேற்படி அபேட்சகர்களுக்குப் போட்டியாக காங்கரஸ்காரர்கள் பல இடங்களிலும் தாழ்த்தப்பட்டார் சமூகத்தாரை தூண்டி காங்கரசின் பேரால் சில தாழ்த்தப்பட்டார் சகோதரர்களை போட்டியாக நிற்கும்படி செய்து வருகிறார்கள். தங்கள் சுயநலத்தை நிலை நிறுத்துவதற்காக காங்கரஸ்காரர்கள் எங்கள் சமூகத்தாரிடத்திலும், துவேஷத்தையும், சமூகப் பிளவையும் உண்டு பண்ணுவதோடு எங்கள் ஒற்றுமையையும் கலைக்க முன் வந்து விட்டார்கள்.

ஏதோ எங்களுக்கு ஏற்பட்ட அரசியல் சுதந்தரத்தை நாங்கள் கைப்பற்ற முற்பட்டிருக்கும் இந்த சமயத்திலும் காங்கரஸ்காரர்கள் எங்கள் சமூகத்திற்கு சதி செய்ய புறப்பட்டிருப்பதை நாங்கள் கவனிக்கும்போது எங்கள் மனம் பற்றி எரிகிறது. எங்களுக்கு ஏற்பட்டிருந்த தனித் தொகுதி முறையையும், தாழ்த்தப்பட்டார் துரோகி திரு. காந்தியாரால் பலியாக்கப்பட்டது. போதாக் குறைக்கு மாகாண தேர்தலிலும் காங்கரஸ்காரர்கள் கை வைக்க வந்து விட்டார்கள்.

கேவலம் திருச்சி முனிசிபல் உப தலைவர் தேர்தலிலே காங்கரசின் சார்பாகவே நின்ற, திரு. மருதையா அவர்களை காங்கரஸ்காரர்கள் என்ன செய்தார்கள் என்பதை நாங்கள் மறந்து விடவில்லை. திருச்சி, திரு. சன்னாசியை காங்கரஸ்காரர்கள் செய்த அவமரியாதையை நாங்கள் மனதில் எழுதி வைத்திருக்கிறோம். ஹரிஜன சேவா சங்கத்தின் பேராலே ஆதிதிராவிடர்கள் பெயரைச் சொல்லி காங்கரஸ்காரர்கள் கொள்ளையடித்து சாப்பிட்டு ஏப்பமிட்டு விட்டதை நாங்கள் மறந்துவிடவில்லை. இவ்வளவும் செய்தது போதாதென்று எங்கள் அரசியல் உரிமையையும் காங்கரஸ்காரர்கள் தங்கள் சுயநலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள முற்பட்டிருக்கிறார்கள். காங்கரஸ்காரர்கள் செய்யும் பித்தலாட்டங்களைக் கவனிக்கும்போது ஆதிதிராவிடர்களிடமும் கட்டாயமாக மானங்கெடப்போகிறார்கள் என்று சொல்லுவதில் தப்பு ஒன்றும் இருக்க முடியாதென்று நம்புகிறேன்.

காங்கரஸ் மேதாவிகளே! உங்கள் மானம் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளுவதாய் இருந்தால் தாழ்த்தப்பட்டாருக்கு ஏற்பட்டிருக்கும் மாகாண சட்டசபை தேர்தலில் காங்கரஸ் அபேட்சகராய் தாழ்த்தப்பட்டாரை நிறுத்திவைக்காமல் உங்கள் சொந்த காரியத்தில் கவனம் செலுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன். இல்லையேல் கண்ட கண்ட இடத்தில் காங்கரஸ்காரர்கள் மானங்கெட்டுப் போவார்கள் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கடைசியாக எனது தாழ்த்தப்பட்டார் நண்பர்களுக்கு தெரிவிப்பது யாதெனில் காங்கரஸ்காரர்களை நம்பி மோசம் போகாதீர்கள். காங்கரஸ் காரர்கள் இதுவரையிலும் எந்த அசம்பளியிலாவது சரி, அல்லது ஸ்தல ஸ்தாபனங்களிலாவது சரி தாழ்த்தப்பட்டார்களை முன்னுக்குக் கொண்டு வந்திருக்கிறார்களா என்பதை சற்று யோசித்துப்பாருங்கள். போகட்டும் அவர்களுடைய சுயநல கோட்டையாகிய காங்கரசை எடுத்துக் கொள்ளுங்கள், அகில இந்திய காங்கரஸ் கமிட்டியிலாவது நம் மாகாணத்தில் ஒரு ஆதிதிராவிடன் இருக்கிறானா? அல்லது மாகாண காங்கரஸ் கமிட்டியிலாவது ஒரு ஆதிதிராவிடன் இருக்கிறானா? அல்லது தாலூகா காங்கரஸ் கமிட்டியிலாவது ஒரு ஆதிதிராவிடன் இருக்கிறானா? அல்லது அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட ஹரிஜன சேவா சங்கத்திலாவது ஒரு ஆதிதிராவிட காரியதரிசி இருக்கிறானா? என்பதை கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். காங்கரஸ்காரர்கள் நம்மை எந்த விதத்தில் முன்னுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்? நடந்த வாரம் 19-12-36 ல் வெளி வந்த "விடுதலை" பத்திரிகையிலே, சேலம் திரு. முத்து அவர்களின் அறிக்கையை படித்துப் பார்த்தாலே, காங்கரஸ்காரர்களின் விஷம யுத்தி தெரிந்து விடும்.

ஆகவே எனது ஆதிதிராவிட நண்பர்களே! காங்கரஸ் காரர்களின் மாயஜால வித்தைக்கு ஆளாகாமல் நம்முடைய அரசியல் உரிமையைக் காப்பாற்ற காங்கரஸ்காரர்களிடம் போர் புரிந்து, நாங்களும் மனித சமூகந்தான், எங்களுக்கும் இந்த தேச காரியத்தில் பங்குண்டு என்பதை அறிவிக்க கங்கணம் கட்டிக் கொண்டு காங்கரஸ் அபேட்சகராய் நிற்காமல் தாழ்த்தப்பட்டார் கட்சி சார்பிலேயே அபேட்சகராக நின்று வெற்றிப் பெறும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

பார்ப்பனப் பட்டர்களின் குறும்புத்தனம்

அதிகாரிகள் கவனிப்பார்களா?

(ஒரு நிருபர்)

செங்கோட்டை, டிச, 21

சென்ற வெள்ளிக்கிழமையன்று குலசேகரநாதர் கோவிலுக்கு சில ஹரிஜனங்கள் சுவாமி தெரிசனஞ் செய்யச் சென்றனர். அக்கோவிலின் கணக்கப்பிள்ளையின் வேண்டுகோளின்படி ஹரிஜனங்கள் தூண் பிள்ளையாருக்குச் சற்று அப்பாலேயே நின்றார்கள். என்றாலும் அக்கோவிலின் பட்டர் டி. பிள்ளையாருக்கு நைவேத்திய தீபாராதனைகள் செய்ய மறுத்துவிட்டார்.

இதுவரைக்கு சாதாரணமாக கோவில் பட்டர்தான் பிரசாதம் வழங்குவது வழக்கமாக இதுவரை இருந்து வந்தது. ஆனால், தற்சமயம் மூன்று பார்ப்பனர்கள்—ஒரு அர்ச்சகர்—ஒரு மேம்பார்வையாளர்-ஒரு பார்ப்பன வேலையாள் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். ஹரிஜனங்கள் ஆலயப்பிரவேச உரிமையை யடைந்ததும் ஏற்பட்ட சீர்திருத்தம்! இப்போது பிரசாதம் கொடுப்பது இந்த பார்ப்பனர்களே! இப்போது இதுவுமன்றி நேற்றைய தினம் ஒரு பண்டாரம் கோவிலில் விபூதி கேட்க அப்பார்ப்பனர் கொடுக்க மறுத்தாராம். ஆகவே, மேலே குறிப்பிட்ட விஷயங்களிலிருந்து அக்கோவில் பார்ப்பனர் பட்டர்களின் குறும்புத்தனமும், சூழ்ச்சியும் நன்கு தெரிய வருகிறது இதை தேவஸ்தான அதிகாரிகள் கவனிப்பார்களாக.

திருவள்ளுவர் —தமிழ் மாணவர் கழகம்

திருவையாறு, டிச, 21

அமைச்சர், திரு. அ. கணபதி அறிவிக்கின்றார்:—

எக்கழகத்தின் வாராந்திரக் கூட்டம் நேற்று மாலை 4-மணிக்கு அரசர் கல்லூரியில் நடைபெற்றது பாபநாசம், போர்டு விக்டோரியா உயர்தரப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் திரு. சாமி சிதம்பரனார் அவர்கள் தலைமை வகித்தார். தலைவர் முன்னுரைக்குப் பிற, அமைச்சர், திரு. அ. கணபதி "மகளிர் மாண்பு" என்ற பொருள் பற்றிப் பேசினர். அவரைப் பின்பற்றித் திருவாளர்கள்: ஐ. இராமையன், என். தாமன், டி. வி. சாந்தலிங்கம், ஆர். சக்கரபாணி செங்கம் பெருமாள், கே. நடராசன் ஆகியோர் பேசினார்கள்.

தலைவர் முடிவாகப் பேசுகையில் 'மகளிர் மாண்பு' என்பதின் அவசியம் குறித்து ஆடவர்களாகிய நாம் பேச எடுத்துக் கொண்ட நிலையை எண்ணும்பொழுதே மகளிர் தாழ்ந்த நிலையில் இருக்கின்றார்கள், அவர்களது உரிமை பறிக்கப்பட்டிருக்கிறதென்பது நன்கு விளங்குகின்றது. அந்நிலை மிகவும் வருந்தத்தக்கது. "பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்" என்ற பாரதியார் வாக்குக் கிணங்கவும், "எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை" என்பதற் கிணங்கவும் ஆடவரை விட, பெண்கள் எந்தவகையிலும் தாழ்ந்தவர் அல்லர். அவர்கள் உரிமையை நமது சுயநலம் காரணமாகப் பறித்தல் கூடாது. பெண்கட்குச் சம உரிமைகள் கொடுத்தல் வேண்டும். பெண்கட்கு ஆண்மையில்லை, வீரமில்லை, பெண்மைத் தன்மையே வாய்ந்தவர்கள் என்பது தவறு. இராணுவத்திற் சேர்ந்து போர் முனையில் நிற்கும் இக்கால ஸ்பெயின், ரஷியா, சீனம், காபூல் முதலிய நாடுகளிலுள்ள பெண்கட்கு வீரம் இல்லையென்று சொல்ல முடியுமா? ஏன்? நந்தமிழ்நாட்டில் வாழ்ந்திருந்த சங்ககாலப் பெண்மணிகளை நோக்குங்கள்! அதுவே, போதும்.

பின்னர் கற்பின் சிறப்பைக் கூறுகையில் கற்பினை இருவர்க்கும் பொதுவில் வைத்தல் வேண்டும்; "ஒரு குலத்துக்கொரு நீதி கூடாது" என்பதாகப் பேசினர்.

இக்கூட்டத்திற்கு, இக்கல்லூரி ஆசிரியர்களான திருவாளர்கள்: ஆர். வெங்கடாசலம் பிள்ளை, வித்துவான். இ. கோவிந்தசாமி பிள்ளை, வித்துவான் தி. கு. சோமசுந்தர தேசிகர் முதலியோர் வந்திருந்தனர்.

பின்னர், அமைச்சர் வந்திருந்தவர்கட்கு வந்தனங் கூறித் தலைவருக்கு மாலை சூட்ட 5-30-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

தமிழ் நாடு காங்கரஸ் நிலைமை

(சேலம் ஸி. விஜயராகவாச்சாரியார்)

யாரையும் குறை கூற நான் கங்கணம் கட்டிக்கொண்டு முன் வரவில்லை. 6 வருஷங்களுக்கு முன் இருந்த நிலைமையை ஒப்பிட்டுப் பார்த்தால் தற்போதைய நிலைமை மிகவும் மோசமானதா யிருக்கிறது. உண்மை, தியாகம், அடக்கம், ஒடுக்கம், நாணயம், யோக்யதை, பொதுநல சிந்தனை, மரியாதைப் பேச்சு, ஒழுக்கம், நன்னடக்கை முதலான அரிய குணங்களெல்லாம் பரந்த நோக்கத்துடன் அக்காலத்தில் காங்கரஸ் தொண்டர்களிடமும், தலைவர்களிடமும் தலை சிறந்து விளங்கின. இப்போது அவை மறைந்து விட்டன. எங்கு பார்த்தாலும் அகம்பாவமும், திமிரும், போக்கிரித் தனமும், துடுக்கான வார்த்தைகளும், வஞ்சனையும், சூதும், சூதர்க்கமான எண்ணங்களும், சுயநலமும் குடிகொண்டு, பிறரையும் இழித்துக் கூறும் மனோபாவனையும் தலைவிரித்தாடுகின்றன. வடநாட்டி லிருந்து ஜவஹர்லால் நேரு விஜயம்செய்தார்; சர்தார் பட்டேலும் விஜயம் செய்தார். சென்னைத் தலைவர்களுக்கு சக்தி அவ்வளவு போதாது என்பதை அவர்கள் எடுத்துக் காட்டிவிட்டனர். திருச்சி டாக்டர் ராஜன் போன்ற பெரியார்கள் நடத்திய ஒத்துழையா இயக்கத்தின் போது எழுந்த தலைவர்களெல்லாம் சொத்து, ஆஸ்தி, பூஸ்திதிகளை யெல்லாம் கருதாமலும், பதவி மோகம், பதவி வேட்டைகளையும் கவனியாமலும், சுய நலம் பாராட்டாமலும் உன்னதமான கொள்கைகளுக்காக உடல் பொருள் ஆவி சகலவற்றையும் தேச விடுதலைக்காக தத்தம் செய்துவிட்டு, இப்போது ஒன்றுமே யில்லாமல் ஆண்டிகளாய்த் திரிகின்றார்களென்றால், அவர்களுடைய கேவல ஸ்திதியைப் பார்த்து, தற்சமயம் சென்னை காங்கரஸ் மண்டபத்தில் கொலுவிற்றிருக்கும்சத்தியமூர்த்தி போன்ற தலைவர்களெல்லாம் நாங்களும் சிறை சென்றோம், தலைவர்களானோம், நாவன்மையாலும் பிரசாரத்தாலும் தமிழ் நாட்டை ஆட்டி வைக்கின்றோம் என்ற மமதை கொண்டும், மந்திரி பதவியடைந்து சதா சுயநல வேட்டையாடிக் கொண்டு தானிருப்போம் என்றும், சட்டசபை பிரவேசத்தில் நாங்கள் வைத்த பேர் வழிகள் தான் வர வேண்டுமென்றும் அறிக்கைகள் வெளியிட்டுக் கொண்டும், டாம்பீகமாக திரிந்து கொண்டும், தங்கள் காங்கரஸ் சபை தான் இந்திரலோகம் என்று கர்வங் கொண்டும் ஷடி கேவல ஸ்திதியடைந்த பெரிய தேச பக்தர்களை மும்முறை சிறை சென்ற உத்தமர்களைப் பார்த்து அலக்ஷியம் செய்து விட்டு ஒருதவியும் செய்ய முடியாது என்ற பாவனையாய் காங்கரஸ்மாளிகையை விட்டு வெளியே போகலாம் என்று உத்திரவிடும் இந்த மேதாவிகள் (மானேஜர், குமாஸ்தாக்கள் உள்பட குறிப்பிடுகிறேன்) எத்தனை நாள் இக்கொலு மண்டபத்தில் வீற்றிருப்பார்களோ தெரியவில்லை. ஆனால், காலச் சக்கரம் மாறிக்கொண்டு தான் வருகிறது என்பது நிச்சயம்.

கதர் சுதேசி கண்காட்சி சாலை திறமை நடத்தி வருகிறார்கள். இக்கமிட்டியில் பெரிய ஜமீன்தார் வம்சத்தினர் தலைவர்களாகவும் அங்கத்தினராகவும் இருக்கின்றனர். இதில் "ஜெய பாரதி" பத்திராதிபர் திரு. வெங்கடராமனும் ஒருவர். இவர்கள்ளதேசாதிகாரம் செலுத்தி வருகிறார்கள். தங்கள் தங்களுடைய பந்து மித்திரர்களுக்கும் "ஜெய பாரதி" ஆபிசிலிருப்போர் அனைவருக்கும் சீசன்பாசுகள் (இனாம் பாசுகள்) வழங்கியிருக்கிறார்கள். ஆனால், திரு. சர்தார் பட்டேல் திறப்பு விழாவுக்கு ஒருநாள் முன்னதாகவே நான் திரு. பக்தவத்சலத்தைக் கண்டு ஓர் அனுமதி சீட்டு எனக்கு கொடுக்கும்படியாகக் கேட்டேன். அதற்கு அவர் நான் காரியதரிசி தான். அநேகருக்கு பாசுகள் கொடுக்கப்பட்டன. நான் நிர்வாகிகளை பார்த்து விட்டுத் தான் சொல்ல வேண்டுமென்று மழுப்பி விட்டார். இவரும் மந்திரி கனம் பி. டி. ராஜனுக்கு ஷட்டகர் முறையில் பந்து ஆவர். ஆனால், இந்த வருஷத்துடன் இவருடைய காரியதரிசி பதவி முடிவடைந்து விடுகிறது. இவர் சத்தியமூர்த்திக்கு பயந்து இம்மாதிரி என்னிடம் நடந்துகொண்டார் என்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. போதாக் குறைக்கு, இந்த மாதம் 20-ந் தேதியன்று ஷடி கண்காட்சி சாலை நிறுவப்பட்டிருக்கும் காங்கரஸ் மண்டபத்திற்குள் செல்லலாமா என்று அங்கு வெளியே நிறுத்தப்பட்டிருக்கும் காங்கரஸ் தொண்டர்களைக் கேட்டேன். அதற்கு அவர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து பரிகாசம் செய்து சிரித்துவிட்டு, "நீ உள்ளே போகக்கூடாது, பாஸ் இருந்தால் போலாம்" என்று முரட்டுத் தனமாகப் பேசினார்கள். மறுபடியும் அவர்களிடம் உள்ளே பக்தவத்சலம் இருக்கிறாரா என்ற விவரத்தைக் கேட்டேன். அதற்கு அவர்கள் எங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று இறுமாப்புடன் பதிலுரைத்தனர்.

காணும்! சிறை சென்ற தேசபக்தன், காங்கரஸ் தொண்டன் என்றோ, காங்கரஸ்காரன் என்றோ சொல்லிக்கொள்ள எனக்கு மனம் வரவில்லை. இம்மாதிரி அயோக்யத்தனமாயும் சுயநலமாயும் நடந்து கொள்ளும் ஆசாமிகள் எங்கு பார்த்தாலும் மலிந்து கிடக்கின்றனர் என்பது எனது அனுபவமேயாகும்.

இவர்கள் வருஷா வருஷம் சுதேசி பொருட்காட்சிசாலை யென்று கொட்டகைகள் நிறுவி ஷெட்டுக்கு ரூ. 50 வீதம் அட்வான்சாக 50 ஷெட்டுகளுக்கு ரூ. 2500 வரை வசூலித்து விட்டு, டிக்கட்டுகள் மூலம் ரூ. பதினாயிரமாகத் திரட்டி, தங்களுடைய இஷ்ட மனுஷ்யர்களை குமாஸ்தாக்களாக வைத்து சம்பளம் கொடுத்துவிட்டு, தொண்டர்களையும் இதரர்களையோ சிறை சென்ற அடியார்கள் போன்ற தங்களுக்கு அடிமைகளாக சம்மதிப்போர்களை காட்சிசாலை நடக்கும் ஒரு மாதத்திற்கு ஆள் 1-க்கு ரூ. 15 சம்பளம் கொடுத்து விட்டு (இப்பேர்ப்பட்ட தொண்டர்கள் 35 க்கு அதிகமில்லாமல் வைப்பார்கள்) மீதி யிருப்பதை காங்கரஸ் சுதேசி நிதியென்று டாம்பீகமாக வைத்துக் கொள்வார்கள். இந்த கணக்குகளை பரிசீலனை செய்வோரும் அடிமை வாய்ந்தவர்களாகவோ முகஸ்துதி பேசுபவர்களாகவோ, பேர் கீர்த்திவந்தால் போதும் என்றிருப்பவர்களாகவோ யிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

என்னைப்போன்ற ஒரு மனுஷ்யன் கதரைக் களைந்து விட்டு வேஷங்களும், நடனங்களும், தப்பு எண்ணங்களும் வேண்டாம் என்று மனோதிடம்செய்து சுதேசித் துணி அணிந்து கொண்டு வந்தால் இவர்களுடைய ஏளனமும், பரிகாசமும், சிரிப்பும், கர்வமும், என்னென்று சொல்வது! இப்பேர்ப்பட்டவர்களா சுதேசி இயக்கத்தை முன்னுக்குக் கொண்டு வருபவர்கள்? என்னைப் போன்ற எளியோருக்கு, வேலையில்லாத் திண்டாட்டத்தில் நாள்தோறும் பசியுடன் வாடிக்கொண்டிருக்கும் என் போன்றவனுக்குப் பரிகாரம் செய்ய முடியாமலா இவர்களிருக்கக் கூடும்? எப்படி இவர்கள் அரசாங்கத்தையே நிர்வகிக்கும்படி செய்து சுயராஜியம் வாங்கிக் கொடுக்கப் போகின்றார்களோ தெரியவில்லை. சுப்ரமணிய பாரதியாரை உயிருடனிருக்கு மனவும் அவரை வாடும்படி விட்ட தமிழ்நாடு, இப்பேர்ப்பட்ட விசித்திர கபடதாரிகளை உற்பத்தி செய்வித்தது என்பது சாதாரணம். ஆனால் பாரதியார் மாத்திரம் இப்போது இருப்பாரேயானால் இவர்களை யெல்லாம் உயிருடன் புதைத்து விட்டு மறுகாரியம் பார்த்திருப்பார் என்பது திண்ணம்.

ஈன்ஸ்டின் மனைவி மரணம்

பிரின்ஸ்டன், டிச, 22

பிரபல சாஸ்திர ஆராய்ச்சியாளரான திரு. ஈன்ஸ்டீனின் மனைவியாரான எல்ஸா ஈன்ஸ்டீன் காலமானார்.

மதுரை நகரெங்கும் இதே பேச்சு!!!

இந்திர சபா!

T. K. சுந்தரப்பா,
K. சாந்தா தேவி,
J. சுசீலா தேவி,
T. S. கிருஷ்ணவேணி
ஆகியோர்
முழுத் திறமையுடன் நடித்த
புண்ணிய புராணிக
சிறந்த தமிழ் பேசும் படம்

இந்திர சபா!!
இந்திர சபா!!!

19-12-36 புதன்கிழமை.

மதுரை நியூ சினிமாவில் ஆயிரக்கணக்கான மக்கள் இடமின்றி திரும்ப நேரிடுகிறது!

ரசிகர்களே, இடத்திற்கு முந்துங்கள்!

அறந்தாங்கி — "அறந்தாங்கி சினிமா"வில் 26—12—'36உ ஆரம்ப விழா.

கும்பகோணம்—சரஸ்வதி டாக்கீஸ்.
திருச்சி —வெல்லிங்டன் டாக்கீஸ்.
தஞ்சை —நியூ ராஜாராம் டாக்கீஸ்.
மாயவரம்—சுந்தரம் டாக்கீஸ்.
கோயமுத்தூர்—
டிலைட் டாக்கீஸ்

ஆகியவைகளிலும், இன்னும் இதர ஊர்களிலும் ஆரம்ப தினங்களை ஆவலுடன் எதிர்பாருங்கள்!

கைவசமிருக்கும் படம் :— "மதராஸ் மெயில்"
விவரங்களுக்கு :— இந்திரா டாக்கீஸ், 59, மஞ்சணக்காரத் தெரு, மதுரை.
புரோப்ரைட்டர் : T. B. கிருஷ்ணய்யர். தந்தி : "Teebeekey". போன் நெ. 96.

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே!
ஏழையென்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே!
மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையை கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த வகையிலும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! (பாரதி)

விடுதலை

சென்னை : 1936-ளு டிசம்பர்மீ 23-உ
புதன்கிழமை

மூர்த்தியார் கட்டளை

தேர்தல் பிரசாரம் செய்யவும் நிதி திரட்டவும் தென்னாட்டுக்கு விஜயம் செய்த சர்தார் படேல் சுமார் இரு வாரம் தென்னாட்டில் சுற்றி விட்டு பம்பாய்க்குச் சென்று விட்டார். அவர் சுற்றுப் பிரயாணத்தில் பேசிப் பேசித் தொண்டையும் கட்டி விட்டதாம். ஆனால், பணப்பை நிறையவில்லை. இரண்டு லட்சத்துக்கு காங்கரஸ் தலைவர்கள் விண்ணப்பம் செய்திருந்தார்கள். வசூல் வேலையும் வெகு மும்முரமாகத்தான் நடந்தது. ஆனால், பலன் தான் பூஜ்யம். காங்கரஸ் தலைவர்கள் கோடியாகக் கத்தினாலும் பணப் பையை அவிழ்க்க முடியாதென்று தென்னாட்டார் கூறி விட்டனர். அவர்களைக் குறை கூறவும் இடமில்லை. முடிச்சுட சுயராஜ்யம் பெற ஒன்றேகால் கோடி கொடுத்தார்கள். கதர் சமதேனுவுக்காகப் பல லக்ஷம் வழங்கினர்கள்; தீண்டாமை யொழிப்புக்கும் லக்ஷம் லக்ஷமாய்க் கொடுத்தார்கள். முடிவென்ன? பணங்களெல்லாம் "ஸ்வாஹா" ஆயின. கோரிய பலன் கை கூடவில்லை. எனவே, மேலும் மேலும் காங்கரஸ்காரர் கேட்கும்போதெல்லாம் அழமுடியாதென்று தென்னாட்டார் கூறிவிட்டதைப் பற்றி ஆச்சரியப்படுவதற்கோ, சங்கடப்படுவதற்கோ காரணமில்லை. இந்தப் பஞ்சகாலத்திலே ஒரு ரூபாய் ஒரு குதிரைக் கொம்பாக இருக்கிறது. காங்கரஸ்காரர் மதிப்புப்படி ஒரு இந்தியரின் சராசரி தினவருமானம் ஒன்றேகால் அணுத்தான். இந்தச் சொற்பவருமானத்தில் காங்கரசுக்கும் அவன் எவ்வாறு தண்டமளிப்பான்? இரண்டு லக்ஷத்துக்கு மதிப்புப் போடப்பட்டிருக்கும் ரொக்கமாக 10 ஆயிரம்கூட வசூலாக வில்லையென்றே தோற்றுகிறது. காங்கரஸ் அபேட்சகர்களில் பலர் எளியவர்கள் என்றும் அவர்களுக்காகவே பணம் வசூல் செய்யப்படுகிற தென்றும் சொல்லப்பட்டதல்லவா? ஆகவே அவர்கள் ஏமாற்றம் அடையும்படி தஞ்சை உபதேசத்தில் சர்தார் படேல் பேசிவிட்டார். "காங்கரஸிலிருந்து அதிக உதவியை எதிர்பார்க்க முடியாது. ஒவ்வொருவரும் தம் சொந்த தோரணையில் பண வசூல் செய்து தேர்தல் செலவை நடத்திக்கொள்ள வேண்டியது தான்" என சர்தார் கண்டிப்பாகக் கூறிவிட்டாராம். ஆனால், தேசமக்களெல்லாம் காங்கரஸை ஆதரிக்கத் துடித்துக் கொண்டிருக்கையில் பணம் எதற்கு என்பது தான் விளங்கவில்லை. சுற்றுப் பிரயாணத்தின் போது, தென்னாட்டுக் கூட்டங்களில் எல்லாம் "காங்கரஸ் அபேட்சகர்களை ஆதரிக்கப் போகிறவர்கள் எல்லாம் கை தூக்குங்கள்" [illegible] கட்டளை யிட்டாராம். கூட்டத்திலிருந்தவர்கள் எல்லாம் ஒரே அடியாகக் கை தூக்கினர்களாம். காங்கரஸ் எதிரிகளுக்கு வோட்டுக் கொடுப்பவர்கள் கை தூக்குங்கள் என்று கட்டளை யிட்டபோது ஒருவருமே கை தூக்கவில்லையாம். அவ்வளவு தான். உடனே ஜஸ்டிஸ் கட்சி தோற்று விட்டது, அல்லது (சத்தியமூர்த்தி பாஷையில்) 500 அடி ஆழத்தில் புதைக்கப்பட்டு விட்டது என்று சர்தார் தீர்ப்புக் கூறினாராம். இனி, தேர்தல்தான் ஏன் நடத்த வேண்டும்? சர்தார் தீர்ப்புக் கூறிய பிறகும் சர்க்காருக்கு சந்தேகமா? காங்கரஸ் அபேட்சகர்கள் எல்லாம் எதிர்ப்பின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என சர்க்கார் ஒரு உத்தரவு பிறப்பித்து விட்டால் "பீடை தொழிந்தது" எனச் சும்மா இருந்து விடலாம். எவ்வளவோ பணமும், சிரமமும் இலாபமாகும். ஆனால், சர்க்காருக்குப் புத்தியில்லை. தேர்தல் நடத்தத்தான் போகிறார்கள் போல் தோற்றுகிறது. சர்தார் தீர்ப்பை அவர்கள் லட்சியம் செய்ய தயாரில்லையென்றும் தோற்றுகிறது. ஆகவே, தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டி மாஜித் தலைவரும் தற்காலக் காரியதரிசியுமான திரு. சத்தியமூர்த்தி தென்னாட்டு மக்களுக்கு கட்டளை பிறப்பிக்கத் தொடங்கி விட்டார். தென்னாட்டாரெல்லாம் காங்கரஸ்காரருக்குத்தான் கண்டிப்பாக வோட்டுக் கொடுக்க வேண்டுமாம். காங்கரஸ்காரர் அல்லாத அபேட்சகர்களுக்கு கடுகத்தனையாவது தாட்சண்யம் காட்டக் கூடாதாம். "உங்களுக்கு வோட்டு கொடுக்க முடியாது" என்று அவர்கள் மூஞ்சியைப் பார்த்து பளிச்சென்று கூறிவிட வேண்டுமாம். எதிர்ப்பின்றி காங்கரஸ் அபேட்சகர்கள் கொஞ்சப் பேராவது வெற்றி பெற வேண்டுமாம். சாதா போஸ்டர்கள், துண்டுப் பிரசுரங்கள் அனுப்பப் படுகின்றனவாம். தேவையானால் ஸ்பெஷல் போஸ்டர்கள், துண்டுப் பிரசுரங்கள் முதலியனவும் அனுப்பப் படுமாம். இனி, தேர்தல் முடியும் வரை திரு. சத்தியமூர்த்தி இவ்வண்ணம் வாண வேடிக்கைகள் நடத்திக்கொண்டு தான் இருப்பார். அதை நாம் லக்ஷியம் செய்யத் தேவை யில்லை.

நம்முடைய கடமை என்ன? அதைத் தான் நாம் முக்கியமாக கவனிக்க வேண்டும். யார் செய்த புண்ணியமோ நமக்கு அபேட்சகர்ப் பஞ்சம் இல்லை. எதிர் கட்சியாரை விலைபோட்டிழுக்கவும் நமக்குத் தேவையில்லை. போனவர்கள் போக அந்தரங்கக் கட்சிப் பற்றுடையவர்கள் ஏராளமாக இருக்கத்தான் செய்கிறார்கள். காங்கரஸ்காரர் அபேட்சகர்களைத் தேடி அலையும் போது நம்மவர்கள் எத்தனையோ பேர் வலிய முன்வந்து ஜஸ்டிஸ் கட்சி பேரால் அபேட்சகர்களாய் நிற்கப் போவதாய் கம்பீரமாகப் பிரகடனம் செய்துவிட்டனர். ஜில்லா வாரியாக இப்பொழுது நமது தலைவர்கள் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்தும் வருகிறார்கள். வெகு சீக்கிரம் அபேட்சகர்கள் ஜாபிதா வெளிவந்துவிடும். நமது அபேட்சகர்கள் காங்கரஸ் அபேட்சகர்களைப் போல பித்தளை, செம்பு, பேரீச்சம் பழங்களாய் இருக்க மாட்டார்கள். குடிப்பிறப்பினாலும், கல்வியறிவொழுக்கங்களினாலும், செல்வ நிலையினாலும், அரசியல் அநுபவத்தினாலும் ஏனைய சிறப்புகளினாலும் சட்ட சபைகளில் இடம்பெற லாயக்குடையவர்களாகவே இருப்பார்கள். எனினும் காங்கரஸ் வம்பர்கள் விஷமப் பிரசாரம் செய்து வருவதினால் நாமும் தீவிரமாகப் பிரசாரம் செய்ய வேண்டியது அவசியமாகும். அந்தப் பிரசாரப் பொறுப்புப் பார்ப்பனரல்லாத இளைஞர்களையே சேர்ந்தது. தலைவர்கள் கட்டளைகளையோ, உதவியையோ நமது இளைஞர்கள் எதிர்பார்க்கத் தேவையில்லை. கரும்பு தின்னக் கூலிகேட்பாருண்டா? நமது கடமையைச் செய்ய உத்தரவு வேண்டுமா? உதவி வேண்டுமா? ஆகவே, தென்னாட்டிலுள்ள பார்ப்பனரல்லாத இளைஞர்கள் எல்லாம் தேர்தல் முடியும் வரை தினம் ஒரு மணி நேரமாவது கட்சிப் பிரசாரம் செய்வதென்று சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும். வீடு வீடாகச் சென்று வாக்காளர்களைக் கண்டு ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகரை ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்ள வேண்டும். "விடுதலை" "குடி அரசு" "ஜஸ்டிஸ்" பத்திரிகைகளை எல்லாரும் படிக்கும்படி தூண்டவேண்டும். அப் பத்திரிகைகளுக்கு ஏஜண்டுகள் இல்லாத இடங்களில் நம்பிக்கையுள்ள ஏஜண்டுகளை ஏற்படுத்தி பத்திரிகைகளை வரவழைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதுவே பார்ப்பனரல்லாத இளைஞர்களின் நீங்காக் கடமை. நமது கட்சி முன்னேற்றம் நமது இளைஞர்களின் சலியா உழைப்பையே பொறுத்திருக்கிறது.

"ஹிந்தி" இந்தியப் பொது மொழியாகுமா?

"ஹிந்தியே" இந்தியாவின் பொது மொழியாய் இருத்தல் வேண்டுமென ஒரு சாரார் தீவிர கிளர்ச்சி செய்து வருகின்றனர். "ஹிந்தி"ப் பிரசார சபை மூலம் ஆங்காங்கு பள்ளிகள் திறவியும் ஆண்டுதோறும் பரீட்சைகள் நடத்தியும் "ஹிந்தி"யை நாடெங்கும் பரப்பியும் வருகின்றனர். காங்கரஸ் ஆதிக்கம் பெற்ற ஸ்தலஸ்தாபனங்கள் தத்தம் ஆதிக்கத்திலுள்ள பள்ளிக் கூடங்களில் "ஹிந்தி"யை தனி பாஷையாகக் கற்பிக்கவும் ஏற்பாடு செய்து வருகின்றன. இது கிளர்ச்சிக்காலமாதலின், கிளர்ச்சி செய்வதில் பெயர் பெற்ற "ஹிந்தி" அபிமானிகளே வெற்றியடைய நேருமோ என அஞ்ச வேண்டியிருக்கிறது. தேச ஒற்றுமைக்கு ஒரு பொது மொழி இன்றியமையாததே. ஆனால், அப் பொது மொழி இந்தியர்களின் தேவைகளை யெல்லாம் பூர்த்தி செய்யும் ஆற்றலுடையதாயிருத்தல் வேண்டும். "ஹிந்தி" இந்தியப் பொது மொழியாதல் வேண்டுமென்று கூறுவோர், தமக்கு ஆதாரமாகக் கூறும் காரணம் என்ன? "ஹிந்தி" இந்தியர்களில் பெரும்பாலாரால் பேசப்படுகிறதாம். எனவே, "ஹிந்தி"யே இந்தியாவின் பொது மொழியாக இருக்க வேண்டுமாம். "ஹிந்தி" இந்தியாவில் பெரும்பாலாரால் பேசப்படுகிற தென்பதும் சந்தேகத்துக்கு இடமானதே. ஹிந்திக்கும், உருதுவுக்கும் நெருங்கிய ஒற்றுமையுண்டெனினும் இரண்டும் லிபியமைப்பில் தனிமொழிகளாகவே மதிக்கப்படுகின்றன. ஹிந்தியையும் உருதுவையும் தனித்தனி மொழிகளாய்ப் பிரித்துப் பார்த்தால் இந்தியர்களில் பெரும் பாலார் பேசுவது "ஹிந்தி" என்னும் வாதம் அடியற்று வீழ்ந்துவிடும். 'ஹிந்தி'யே பெரும்பாலார் பேசும் பாஷையாக வைத்துக் கொண்டாலும் இந்தியர்களின் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் ஆற்றல் "ஹிந்தி"க்கு உண்டா என ஆராய்தல் வேண்டும். "ஹிந்தி" பூரண வளர்ச்சி யடைந்த பாஷையன்று. மக்களுக்கு இன்றியமையாத விஞ்ஞான, கலை நூல்கள் "ஹிந்தி"யில் இல்லை. இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கும், இந்திய மக்கள் முன்னேற்றத்துக்கும் உதவிபுரிந்த-புரிகின்ற பாஷை ஆங்கிலமே. ஆங்கிலமே இப்பொழுது இந்தியாவுக்கு மட்டுமன்றி உலகம் முழுமைக்குமே பொது மொழியாகவே இருந்து வருகிறது. இந்தியர் உள்ளத்து பகுத்தறி வுணர்ச்சியையும் சுதந்தர உணர்ச்சியையும் எழுப்பிவளர்த்து வருவது ஆங்கிலமே. ஆகவே, ஆங்கிலமே இந்தியாவின் பொதுமொழியாக இருக்கவேண்டும்.

சென்னையில் காங்கரசுக்கு முதல் தோல்வி

"ஹரிஜன"ங்களுக்கு நாங்களே தர்மகர்த்தர்கள், எங்கள் புண்ணியத்தினாலேயே சென்னைச் சட்டசபையிலே ஹரிஜனங்களுக்கு 30 ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன என்றெல்லாம் காங்கரஸ்காரர் பெருமையடித்துக் கொள்கிறார்கள். ஆனால், "ஹரிஜன"ங்களுக்கோ காங்கரஸ்காரரிடம் நம்பிக்கையில்லை. சென்ற திங்களன்று நடைபெற்ற ஆரம்பத் தேர்தல் முடிவே அதற்கு அத்தாட்சி. தேர்தல் முடிவு வேறிடத்து வெளிவருகிறது. ஜஸ்டிஸ் கட்சியாரான நான்கு பேரும் அதிகப்படியான வோட்டுகள் பெற்று வெற்றியடைந்திருக்கிறார்கள். காங்கரஸ் அபேட்சகர் படு தோல்வியடைந்திருக்கிறார். இவ்வண்ணம் காங்கரஸ்காரரிடம் "ஹரிஜன"ங்களுக்கு நம்பிக்கை யில்லாது போகக்காரணமென்ன? 'ஹரிஜன'ங்களின் க்ஷேமத்தில் காங்கரஸ்காரருக்கு நாட்டமில்லை. தமது சுயநலத்துக்காக "ஹரிஜன"ங்களை ஒரு கருவியாக உபயோகித்துக் கொள்ளவே காங்கரஸ்காரர் விரும்புகிறார்கள். அந்த சூழ்ச்சியை 'ஹரிஜன'ங்கள் உணர்ந்து விட்டார்கள். இனிமேல் அவர்கள் ஏமாறமாட்டார்கள். 'ஹரிஜன' க்ஷேமத்தில் காங்கரஸ்காரருக்கு எள்ளத்தனையாவது கவலை யிருந்திருந்தால் அவர்கள் ஆரம்பத் தேர்தலில் தலையிட்டு ஹரிஜனங்களுக்குள்ளே பிரிவினையை உண்டுபண்ணியிருக்கமாட்டார்கள். காங்கரஸ்காரர்களின் சூழ்ச்சியை உணர்ந்து வெகு புத்திசாலித்தனமாக நடந்துகொண்ட ஆதிதிராவிட சகோதரர்களை நாம் பாராட்டுகிறோம். திருவாளர்கள்: பாலகுரு சிவமும், குமாரசாமிப் பிள்ளையும், செல்வநாதனும், திரு. ஜே. சிவஷண்முகம் பிள்ளைக்கு விட்டுக்கொடுக்கும் பொருட்டு பின் மாறிக்கொள்ள இணங்கி யிருப்பதாகச் சொல்லப்படுவதினால் திரு. ஜே. சிவஷண்முகம் பிள்ளை போட்டியின்றி வெற்றி பெறுவது நிச்சயம். தமது சமூகத்தின் பூரண ஆதரவு பெற்று வெற்றியடையப் போகும் திரு. சிவஷண்முகம் பிள்ளையை மனமார வாழ்த்துகிறோம். திரு. பாலகிருஷ்ண பிள்ளைக்கும் அவரது சமூக நலனைக் கருதி ஒரு யோசனை கூற விரும்புகிறோம். ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு காங்கரசிடம் நம்பிக்கையில்லை யென்பது இந்தத் தேர்தல் மூலம் புலனாகி விட்டது. எனவே, தமது சமூகத்தின் நம்பிக்கையை இழந்த காங்கரசைத் தலை முழுகி விட்டு திரு. பாலகிருஷ்ண பிள்ளை தமது சமூகத்தாருடன் சேர்ந்து சமூக விடுதலைக்காக உழைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

ராஸ் காஸா குமாரர்கள் தூக்கிலிடப்பட்டனர்

எதியோப்பியத் தளபதியாயிருந்த ராஸ் காஸாவின் இரு குமாரர்களையும் இத்தாலியப்போலீஸ் படையொன்று பிடித்து, பிச்சி பொது மைதானத்தில் தூக்கிலிட்டு விட்டதாகத் தெரிகிறது.

காங்கரஸிற்குள் முதல்தர நெருக்கடி

சேத் கோவிந்தாஸ், பண்டிட் மிஸ்ரா ராஜிநாமா

பார்லிமெண்டரி போர்டு முடிவு நிராகரிப்பு

சர்தார் படேல் எதேச்சாதிகாரம்

பண்டித நேருவிடம் தூது

மேலும் அநேகர் விலகுவர்

ஜப்பல்பூர், டிச, 21

மகாகோசல மாகாண பார்லிமெண்டரி போர்டு தலைவர் திரு. மகன்லால் சதுர்வேதியையும், அப்போர்டால் சிபார்சு செய்யப் பட்ட இதர அபேட்சகர்களையும், அகில இந்திய பார்லி மெண்டரி போர்டு தலைவர் சர்தார் வல்லபாய் படேல் நிராகரித்ததால், முதல் தரமான அரசியல் நெருக்கடி யேற்பட்டிருக்கிறது. இவ்வபேட்சகர்கள் யாவரும் மாகாண போர்டாரால் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர்.

சேத் கோவிந்த தாஸ், பண்டிட் துவாரகா பிரசாத் மிஸ்ரா ஆகிய இருவரும் மாகாண காங்கரஸிலுள்ள தங்கள் பதவிகளை ராஜிநாமாச் செய்து விட்டனர். சேத்தாஸ் இந்திய சட்டசபை அங்கத்தினர் பதவியையும், திரு. மிஸ்ரா நகரசபைத் தலைவர் பதவியையும் கூட ராஜிநாமாச் செய்துள்ளனர்.

பார்லிமெண்டரி போர்டின் இதர அங்கத்தினர்களும் அவர்களைப் பின் பற்றுவரென எதிர் பார்க்கப்படுகிறது. சில காங்கரஸ் அபேட்சகர்கள், காங்கரஸ் பேரால் நிற்கப் போவதில்லையென அறிவித்துள்ளனர்.

நேருவிடம் தூது

மகா கோசல காங்கரஸ் பார்லிமெண்டரி போர்டார், சேத் கோவிந்த தாஸ், பண்டிட் துவாரகா பிரசாத் மிஸ்ரா. திரு. மகன்லால் சதுர்வேதி ஆகியோரது ராஜிநாமாபற்றி ஆலோசிப்பதற்கு முன்பு பண்டித ஜவஹர்லால் நேருவிற்கு நிலைமையை விளக்குவதற்கு, போர்டு அங்கத்தினர் திரு. துர்காசங்கர மேத்தாவை ஏற்பாடு செய்துள்ளனர்.

இன்றுமாலை திரு. மேத்தா அலகாபாத்திற்குப் புறப்பட்டு விட்டார்.

சென்னையில் காங்கரசுக்கு முதல் தோல்வி

ஷெட்யூல் வகுப்பு ஆரம்பத்தேர்தல்

ஜஸ்டிஸ்கட்சி அபேட்சகர்கள் வெற்றி

சென்னை, டிச, 23

சென்னை அசெம்பிளிக்கு சென்னை நகர் தெற்கு மத்திம பொதுத் தொகுதிக்கு, ஷெட்யூல் வகுப்பிலிருந்து முதல் 4 அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக, ஆரம்பத் தேர்தல் சென்ற திங்கட்கிழமையன்று நடைபெற்றது. இன்று காலை 8 மணிக்கு ரிப்பன் கட்டிடத்தில் தேர்தல் அதிகாரி கமிஷனர் திரு. ஜவாத் ஹுசேன் ஓட்டுகளைக் கணக்கிட்டார். 6 அங்கத்தினர்கள் மேற்படி தேர்தலில் போட்டி யிட்டனர். அவர்கள் அடைந்த ஓட்டுகள் விவரம் பின் வருமாறு:-

திரு. ஜே. சிவஷண்முகம் பிள்ளை	1,057
" எஸ். பி. ஐ. பாலகுரு சிவம்	576
" ஏ. குமாரசாமி பிள்ளை	343
" பி. செல்வநாதன்	298
" எஸ். பாலகிருஷ்ண பிள்ளை (காங்கரஸ்)	117
" ஜீ. முனிசாமி பிள்ளை (போட்டியினின்று விலகி விட்டதாகவே முன்னதாகவே அறிவித்தவர்)	10

திருவாளர்கள் ஜே. சிவஷண்முகம் பிள்ளை, எஸ். பி. ஐ. பாலகுருசிவம், ஏ. குமாரசாமி பிள்ளை, பி. செல்வநாதன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

திரு. ஜே. சிவஷண்முகம் பிள்ளைக்கு விட்டுக் கொடுக்க வேண்டி பின் கூறப்பட்ட 3 அங்கத்தினர்களும் தங்கள் பெயர்களை வாபீஸ் வாங்கிக் கொள்ள விரும்புவதாகக் கூறப்படுகிறது. அவ்விதமாயின் சென்னை நகருக்கு எதிர்ப்பின்றி தேர்ந்தெடுக்கப்படும் முதல் அங்கத்தினர் திரு. ஜே. சிவஷண்முகம் பிள்ளையே யாவர்.

ரயில் தண்டவாளத்தை விட்டிறங்கியது

8 பேர் மரணம்; 35 பேர் படுகாயம்

கேப்டவுன், டிச, 22

போர்ட் எலிஸபெத்திலிருந்து கேப்டவுனுக்குச் சென்றுகொண்டிருந்த ஒரு ஜன நெருக்கமான ரயில்வண்டி விலாடி ப்ராட்ஸ் என்ற ஸ்டேஷனுக்கருகில் தண்டவாளத்தை விட்டிறங்கிவிட்டதால் 8 பேர் மாண்டதுடன் 35 பேர் படுகாயமுற்றதாகவும் தெரிய வருகிறது.

பூகம்பத்திற்கு 100 பேர் பலி

சான்சால்வடார், டிச, 23

சான்சால்வடார் குடியரசைச் சார்ந்த சான்வின்சென்டி நகரில் சமீபத்தில் தொடர்ச்சியாய்ப்போல் இரு பூகம்பங்கள் ஏற்பட்டு, அக்நகரை அழிவுற்றதுடன் 100 பேர் மாண்டதாகவும் தெரியவருகிறது. மாண்டவர்களில் அன்னிய நாட்டினர் எவரும் இல்லை.

சென்னை—ரங்கூன் டெலிபோன்

வியாழக்கிழமை ஆரம்பம்

சென்னை, டிச, 23

சென்னை—ரங்கூன் டெலிபோன் சர்வீஸ், வியாழக்கிழமை (நாளைய தினம்) முதற்கொண்டு பொது மக்கள் உபயோகத்திற்கு காலை 8-மணி முதல் மாலை 5-மணி வரையில் திறந்துவைக்கப் படுமென சென்னை போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் அறிவிக்கிறார். 3 நிமிஷத்திற்கும் அதற்கு உட்பட்டும் பேசுவதற்கு ரூ. 16 கட்டணம். 3 நிமிஷத்திற்கு மேற்பட்ட ஒவ்வொரு நிமிஷத்திற்கும் ரூ. 5 அதிகம் செலுத்தவேண்டும். ஞாயிற்றுக் கிழமைகளில் மேற்கண்ட நேரத்தில் மட்டும் அரைக் கட்டணம்.

காங்கரசுக்கு பலத்த போட்டி

இந்து மகாசபையினர், பார்ப்பனரல்லாதார் முஸ்தீபு

ராஜாங்கசபைத் தேர்தலில் காங்கரஸ் அங்கத்தினர் தோல்வி

நாகபுரி, டிச, 22

காங்கரஸ் அபேட்சகர்களின் ஜாப்தாவை திரு. வல்லபாய் படேல் வெளியிட்டவுடன் இதர கட்சியினரும், வரும் தேர்தல்களில் காங்கரசை எதிர்க்க பலத்த ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

முதலாவதாக இந்து மகா சபையினரே, வரும் தேர்தல்களில் தங்கள் சொந்த ஹோதாவில் போட்டியிட முனைந்துள்ளனர். சில தினங்களுக்கு முன்பு நடைபெற்ற மாகாண இந்து மகா சபை காரியக் கமிட்டி தேர்தல் பிரசாரத்தை நடத்தவும், அபேட்சகர்களை நியமிக்கவும் 6 பேர் அடங்கிய ஒரு பார்லிமெண்டரி போர்டை அமைத்துள்ளது. இவ்வாற முடிவில் இப்போர்டு கூடி மேற்படி சபையின் சார்பாக நிற்கும் அபேட்சகர்களின் பெயர்களை வெளியிடும்.

இதுவன்றி காங்கரஸ் வாதிகளிலேயே ஒரு பிரிவினர் சேத்பூனும் சந்த் ரங்கா, திரு. அவாரி தலைமையில் சில அபேட்சகர்களை நியமிக்கத் தீர்மானித்துள்ளனர். நாகபுரி ஸ்திரீகள் தொகுதிக்கு காங்கரஸ் சார்பாக நிற்கும் ஸ்ரீமதி சேனுக்குப் போட்டியாக ஸ்ரீமதி வித்யாவதி தேவியை இவர்கள் நிறுத்தியுள்ளனர்.

சென்ற வாரத்தில் மத்திய மாகாண மகாராஷ்டிர பார்லிமெண்டரி கமிட்டி அங்கத்தினர் பதவியை திரு. ரங்கா ராஜினாமச் செய்து விட்டார்.

சென்ற வாரம் வார்தாவில் நடைபெற்ற பார்ப்பனரல்லாதார் கட்சியின் கூட்டத்தில் தங்கள் சொந்த ஹோதாவிலேயே தேர்தலுக்கு அபேட்சகர்களாய் நிற்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

மத சம்பந்தமான விஷயங்களில் நடு நிலைமை வகித்து நிலச்சுவான்தார்களின் உரிமைகளிலும் பாத்யதைகளிலும் தலையிடாமல் இருப்பதாக உறுதி கூறுகின்ற அபேட்சகர்களையே ஆதரிக்க வேண்டுமென்று மல்குஸார்களும் மற்றும் வைதிக சனாதனிகளும் தீர்மானித்துள்ளனர்

சுயேச்சைத் தொழிற் கட்சி இதுவரையிலும் தங்கள அபேட்சகர்களை வெளியிடா விட்டாலும் நாகபுரி வியாபார சங்கத் தொகுதிக்கு நிற்கும் திரு. ஆர். டபிள்யூ. புலேவை ஆதரிப்பது நிச்சயம். அடுத்த ஜனவரி இரண்டாம் வாரத்தில் அலிப்பூர் சிறையிலிருந்து திரு. ஆர். எஸ். ருய்கர் விடுதலையானவுடன் மாகாண வியாபார சங்கக் காங்கரஸின் விருப்பத்திற்கிணங்கி நாகபுரி தொழிலாளர் ஸ்தானத்திற்குப் போட்டி யிடுவார்.

காங்கரஸ் படு தோல்வி

இராஜாங்க சபைக்கு, மத்திய மாகாணத்தின் சார்பாக திரு. வி.வி. கலிகார் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு. வி. வி. கலிகாருக்கு 308 ஓட்டுகளும், அவருக்குப் போட்டியாக நின்ற காங்கரஸ் அங்கத்தினர் திரு. என். கே. கேல்காருக்கு 279 ஓட்டுகளும் கிடைத்தன.

காலமானார்

செம்மங்கலம் திரு. தாண்டவராய முதலியார் பாரியாளும், ஆற்காடு மண்டி வியாபார சங்கத் தலைவரும், ஆற்காடு பஞ்சாயத்து போர்டு உபத் தலைவருமான திரு. ஏ. டி. பாலசுந்தர முதலியார் மாமியாருமான ஸ்ரீமதி சீதா அம்மாள் 17-12-36-மாலை 5-40-மணிக்கு சென்னை முத்துகிருஷ்ணன் தெரு நெ 14 இலக்கத்தில் தமது 62-வது வயதில் காலமானார் என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

சென்னை மாகாண பொதுத் தேர்தல்

பிப்ரவரியில் நடைபெறும்

சென்னை, டிச 22

சென்னை மாகாண அசெம்பிளி, ராஜாங்க சபை ஆகியவற்றிற்கு பின் கண்ட தேதிகளில் தேர்தல் நடைபெற வேண்டுமென சர்க்கார் உத்திர விட்டிருக்கின்றனர்.

1937 ஜனவரி 18-ந் தேதி அசெம்பிளிக்கும், ராஜாங்க சபைக்கும் நியமன சீட்டு தாக்கல் செய்ய வேண்டும். 19-ந் தேதி நியமன சீட்டுகள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். அசெம்பிளிக்கு முஸ்லீம், இந்திய கிறிஸ்துவர் தொழிலாளர், வியாபாரத் தொகுதிகளுக்கு பிப்ரவரி 16-ந் தேதி தேர்தல் நடைபெறும். பொதுத் தொகுதிக்கு பிப்ரவரி 18, 20-ந் தேதிகளில் தேர்தல் நடைபெறும்.

தபால் மூலமாய் ஓட்டுக் கொடுக்கும் தொகுதிகளுக்குக் கடைசித் தேதி பிப்ரவரி 19.

ராஜாங்க சபைக்கு பிப்ரவரி 15-ந் தேதியன்று தேர்தல் நடைபெறும்.

சென்னை மாகாண அசெம்பிளி

வாணியம்பாடி, டிச, 23

சென்னை மாகாண அசெம்பிளிக்கு, வடாற்காடு ஜில்லா திருப்பத்தூர் தொகுதிக்கு, வாணியம்பாடி, பெரியபேட்டை கூட்டுறவு சங்க அங்கத்தினரான திரு. வி. ஷண்முக முதலியார் ஓர் அபேட்சகராய் நிற்பதாக அறிவிக்கப்படுகிறது.

சென்னை மாணவர் மன்றம்

சென்னை, டிச, 23

பெத்துநாயக்கன்பேட்டை சைவ பாடசாலையில் 25-12-36 காலை 8-மணிக்கு திரு. வ. ச. தேவசுந்தரம் தலைமையில் ஓர் நிர்வாகக் கூட்டம் கூடும்.

கோடம்பாக்கம் ரேஷனலிஸ்ட் ரெக்ரியேஷன் கிளப்

ஆண்டு விழா

(ஒரு நிருபர்)

கோடம்பாக்கம், டிச, 22

மேற்படி சங்கத்தின் நான்காம் ஆண்டின் முடிவு விழா, நாளது ஞாயிற்றுக் கிழமை 27-12-36 மாலை 3-மணிக்கு, கோடம்பாக்கம் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் உள்ள வரதராஜப் பேட்டையில், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களின் தலைமையில் நடைபெறும். அது சமயம் பல தோழர்கள் சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

அகில இந்திய சினிமா மகாநாடு

சென்னை, டிச, 23

டிசம்பர் 26-ந் தேதியன்று சனிக்கிழமை பகல் 11-மணிக்கு பச்சையப்பன் கல்லூரியில் அகில இந்திய இரண்டாவது சினிமா மகாநாட்டை சென்னை மேயர் திரு. கே. ஸ்ரீராமுலு நாயுடு திறந்து வைப்பார்.

அட்டிஸ் அபாபாவில் பிரிட்டிஷ் ஸ்தானிகர் காரியாலயம்

லண்டன், டிச, 22

அட்டிஸ் அபாபாவில் இதுவரை இருந்து வந்த சாதாரண பிரதிநிதிக்குப் பதிலாக, ஒரு ஸ்தானிகரை நியமிக்கத் தீர்மானித்து விட்டதாக பிரிட்டிஷ் சர்க்கார் இத்தாலி சர்க்காருக்குத் தெரிவித்துள்ளனர். இதற்கும், மத்திய தரைக்கடல் சம்பந்தமாக பிரிட்டனுக்கும், இத்தாலிக்கும் நடந்த பேச்சுகளுக்கும், எதியோப்பியாவில் இத்தாலி வெற்றியை அங்கீகரிப்பது பற்றிய பிரச்சினைக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை யென கூறப்படுகிறது.

பல்கேரியா, பிரான்ஸ் முதலிய நாடுகளும் பிரிட்டனைப் பின்பற்றி தங்கள் தங்கள் ஸ்தானிகர்களை நியமித்திருப்பதாக இத்தாலி சர்க்காருக்குத் தெரிவித்துள்ளன.

ரூ. 55,000 கொடு!

மதுரை முனிசிபாலிடி தீர்மானம்

(நமது நிருபர்)

மதுரை, டிச, 21

மதுரை முனிசிபல் மோட்டார் லாரி சொந்தக்காரர் திரு. இங்கிலிகாக பிள்ளை தனக்கு வரவேண்டிய பாக்கிக்காக முனிசிபாலிடி மீது ஓர் வழக்குத் தொடுத்தார். அவ் வழக்குத் திரு. பிள்ளைக்கு அநுகூலமாகத் தீர்ப்பாகி விட்டது. தீர்ப்புப் படி ரூ 72,000 கொடுக்க வேண்டியதைக் குறித்து ஆலோசிக்க சென்ற வெள்ளி யன்று முனிசிபல் கவுன்சில் மீட்டிங் நடை பெற்றது. அது சமயம் மேல் கண்ட விஷயத்தைக் குறித்து பலத்த விவாதம் நடைபெற்று முடிவில் மெஜாரட்டி அங்கத்தினர்கள் தீர்மானப்படி ரூ 55,000 கொடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

தேக் கச்சேரி

ராமநாதபுரம் ஜில்லா போர்டு பிரசிடெண்டு கனம் ராமநாதபுரம் ராஜா அவர்கள் தம் தலைமையின் கீழுள்ள போர்டு உத்தியோகஸ்தர்களுக்கு சென்ற சனி யன்று ஒரு தேக்கச்சேரி நடத்தி வைத்தார். மறு நாள் போர்டு உத்தியோகஸ்தர்கள் தலைவருக்கு தேக் கச்சேரி நடத்தி வைத்தார்கள்.

ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர் தம் தலைமைப் பதவியை ராமநாதபுரம் கலெக்டரிடம் ஒப்புவித்து விட்டதாகத் தெரிகிறது.

வருந்துகிறோம்

டிசம்பர், 9-ந் தேதி வெளிவந்த 'விடுதலை'யில், ராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தல் சம்பந்தமாக வெளிவந்த ஒரு செய்தியில் திரு. மட்டப்பாறை வெங்கடராமய்யரவர்களைப்பற்றி தூஷணைபாகவும், பொய்யாகவும் எழுதப்பட்டதை, வேலை நெருக்கடியில் தவறுதலாகப் பிரசுரம் செய்ததற்காக மிகவும் வருந்துகிறோம்.

ஆசிரியர்,
"விடுதலை"

பார்க் வேடிக்கை

சென்னை, டிச, 23

முப்பத்தைந்தாவது பார்க் வேடிக்கையும், விளையாட்டும் பதினைந்தாவது கண் காட்சியும் தென்னிந்திய அத்லெடிக் சங்கத்தாரால் டிசம்பர் 24-ந் தேதி முதல் 1937-ம் வருஷம் ஜனவரி முதல் தேதி வரையில் நடத்தப்படும்.

24-ந் தேதி வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு ஸ்ரீ எ. எஸ். டாட் திறப்பு வைபவத்தை நடத்தி வைப்பார். 31-ந் தேதி கவர்னர் விஜயம் செய்வார். ஆரம்ப தினத்தன்று திவான் பகதூர் டாக்டர் ஸி. நடேச முதலியார் தலைமை வகித்துப் பரிசுகள் வழங்குவார். முதல் நாள், 24-ந் தேதி மாலை 6-30 மணிக்கு சங்கீத மகாநாடொன்றை திவான் பகதூர் டாக்டர் ஸி. நடேச முதலியார் திறந்து வைப்பார். ஒவ்வொரு நாளும் சங்கீதக் கச்சேரி நடைபெறும்.

டிராட்ஸ்கிக்கு பிடித்த சனியன்

மெக்ஸிகோவில் அடைக்கலம்

ஆஸ்லோ, டிச, 22

நார்வேயில் தற்பொழுது தங்கியிருக்கும் எம். லியான் டிராட்ஸ்கிக்கு அவ்விடம் மேலும் தங்கியிருக்க அநுமதி கொடுக்கப் படாததால் இன்னும் 15 தினங்களுக்குள் அவர் நார்வேயை விட்டு வெளிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டிருக்கிறது. மெக்ஸிகோ சர்க்கார், அவருக்கு அநுமதி யளித்திருப்பதால் அவ்விடத்தில் தங்கியிருப்பாரென உத்தியோக தோரணையில் தெரியவருகிறது.

கைத்தறி நெசவுத் தொழிலாளர் மகாநாடு

மில்களைப்போல பாதுகாப்பு அவசியம்

திரு. ரத்தினசபாபதி முதலியார் பிரசங்கம்

சென்னையில் கூட்டம்

சென்னை, டிச, 21

சென்னை மாகாண கைத்தறி நெசவுத் தொழிலாளிகளின் முதலாவது மகாநாடு நேற்று மாலை சென்னை கைத்தறி நெசவு சங்கத்தாரின் காரியாலயத்தில் திரு. சி. என். ரத்தினசபாபதி முதலியாரின் தலைமையின்கீழ் நடைபெற்றது. சென்னை மாகாணத்திலிருந்து அநேக தொழிலாளர்கள் விஜயம் செய்திருந்தனர். திரு. கே. ரங்கசாமி நாயுடுவும், ஜாயிண்ட் ரிஜிஸ்தரார் கோ ஆபரேட்டிவ் சொசைட்டி, திரு. அமலசாமும் மகாநாட்டிற்கு வந்திருந்தனர்.

திரு. ரத்தினசபாபதி முதலியாரின் பிரசங்கம் பின் வருமாறு:—

உங்கள் யாவரையும் இந்த மகாநாட்டிற்கு வரவேற்பதற்கு நான் சந்தோஷப் படுகிறேன். எனக்கு உங்களைக் கண்டு கைத்தறி நெசவுத் தொழிலை எப்படி அபிவிருத்தி செய்வது என்று பேசுவதற்கு அவகாசம் தந்ததற்காக என் வந்தனம். கைத்தறி நெசவுத் தொழில் பொருளாதார விஷயத்தில் சம்பந்தப்பட்டது. எங்கு பார்த்தாலும் வறுமையும், வேலையின்மையும், கஷ்டமும் அதிகமாக இருக்கின்றன. தொழிலாளர்கள் நிலைமை நெருக்கடியாக இருக்கின்றது என்று சொல்ல வேண்டும். சுலபமாக இந்த நெருக்கடியைப் போக்க முடியாது. விவசாயத்திற்குப் பிறகு கைத்தறி நெசவு தான் கிராமத் தொழில்களில் முக்கியமானது. 1 கோடி ஜனங்களுக்கு மேல் நம் மாகாணத்தில் இந்தத் தொழிலால் ஜீவனம் செய்து வருகின்றனர். மேலும் இத்தொழில் பரம்பரையாகக் குடும்பங்களில் கையாளப்பட்டு வருகிறது. இத்தொழிலால் கிராமவாசிகளுக்கு அநுகூலமுண்டு.

மேற் கூறியவைகளை மனதில் வைத்துக் கொண்டு நாம் இத்தொழிலை எவ்விதமாக அபிவிருத்தி செய்வதென்று கவனிக்க வேண்டும். இப்பொழுது நெசவுக்காரர்கள் அநேக கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள். இந்த கஷ்டங்களிலிருந்து அவர்களை மீட்க வழிதேட வேண்டும். அவர்கள் கஷ்டங்களுக்கு அநேக காரணங்கள் உண்டு. அந்நிய நாட்டு துணிகள், மில் துணிகள், கடன் கொடுக்க சக்தியில்லாதிருப்பது முதலியவைகள் நெசவு தொழிலுக்கு இக் கட்டுகளாயிருக்கின்றன. உதாரணமாக 1930-ம் ஆண்டை எடுத்துக்கொள்வோம். நம் தேசத்திலிருந்து ஏராளமாகப் பஞ்சு ஏற்றுமதி செய்யப்பட்டது.

பெரும்பாலும் இந்த பஞ்சு, துணிகளாக செய்யப்பட்டு நமது நாட்டிற்கே அனுப்பப் பட்டது. கைத்தறி நெசவுத் தொழில் அபிவிருத்திக்கு முக்கியமாக மில்கள் தடையாக இருக்கின்றன. இந்திய மில்களை அந்நியநாட்டு துணிகளினின்று எப்படிக் காப்பாற்ற சட்டங்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்களோ அதேவிதமாக கைத்தறி நெசவை மில்களிலிருந்து காப்பாற்ற சட்டம் ஏற்படுத்தவேண்டும். கைத்தறி நெசவு தேசத்திற்கு க்ஷேமம் தரக்கூடியது. இத்தொழிலினால் அநேக ஏழைகள் பிழைப்பதற்கு வழி உண்டு. இவர்களுக்கு வேலையில்லாமல் போனால் கிராமங்களில் வறுமை ஏற்படும். மில்களையும், கைத்தறி நெசவையும் சமமாக நாம் ஆதரிக்க வேண்டும். இந்த இரண்டு தொழில்களும் நம் தேசத்தில் இருக்க வேண்டியது தான். ஆகையால், நாம் இன்று செய்யும் தீர்மானத்தில் மில்களை ஒழிக்க வழி தேடாமல் இரண்டு தொழில்களை அபிவிருத்தி செய்யும் மார்க்கத்தைப் பற்றியதாக இருக்க வேண்டும். தரகர்கள் நூல்களை கைத்தறி நெசவாளிகளுக்கு கடனுக்கு விற்று அவர்கள் நெய்யும் துணிகளை குறைந்த விலைக்கு வாங்குவதால் இரண்டு விதத்தில் லாபம் சம்பாதிக்கிறார்கள். கஷ்டப்பட்டு பட்டினியால் வருந்துவது கைத்தறி நெசவாளிகள் தான். தரகர்களைப் போக்கி விட்டால் நெசவுத் தொழிலுக்கு க்ஷேமமென்று சொல்லவேண்டும். அவர்களை இல்லாமல் செய்வதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டென்று எனக்குத்தெரிகிறது. அதாவது கோவாபரேடிவ் சொஸைடி தான். நாம் விற்பனை சங்கங்களை ஏற்படுத்தி அவைகளின் மூலமாக துணிகளை விற்க வேண்டும். சென்னை மாகாண கைத்தறி நெசவு சங்கத்தார் இந்த வேலையைப் புகழக்கூடிய விதமாகச் செய்து வருகிறார்கள். கோவாபரேடிவ் சொஸைடிகள் மூலதனம் சம்பாதித்து அதைக் கொண்டு தொழிலை விருத்தி செய்ய வேண்டும். இம்மாதிரியாக நம் மாகாணத்தில் 36 சங்கங்கள் வேலை செய்து வருகின்றன. நெசவுத் தொழிலாளிகளுக்கு சொஸைடிகளின் உபகாரத்தைப் பற்றி தெளிவாகச் சொல்லவேண்டும். இப்பொழுது புதிதாக 16 சொஸைடிகளை ஏற்படுத்தி யிருக்கின்றனர். ரெஜிஸ்டிரார் ஜில்லாக்களில் பணக்காரர்களையும், கைத்தறி நெசவு அபிவிருத்தி அடைய வேண்டுமென்னும் எண்ணம் உடையவர்களையும் சொஸைடியில் பங்கு எடுத்துக் கொள்ளும்படி தூண்டி வருகிறார். சென்னையில் 1936-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் வாரத்தில் ஒரு பெரிய ஜவுளிக்கடை திறந்து வைக்கப்பட்டது. இதன் பிறகு, மதுரை, பெல்லாரி, கள்ளிக்கோட்டை முதலிய இடங்களில் டிப்போக்கள் திறக்கப்பட்டன. பவானி, கர்நூல், குண்டூர் முதலிய ஊர்களில் தங்கள் ஜில்லாக்களில் செய்யும் துணிகளை மாத்திரமல்லாமல் இதர ஜில்லாக்களில் செய்யும் துணிகளையும் விற்க டிப்போக்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சர்க்கார் கைத்தறி நெசவுதொழிலாளர்களின் கோவாப்பரேட்டிவ் சங்கங்களுக்கு 30,000 ரூ. கடன் கொடுத்திருக்கிறார்கள். இந்தமொத்தத்தைக்கொண்டு இன்னும் அநேக சொஸைடிகள் ஆரம்பிக்கப்படும். நாம் நெசவு தொழிலாளிகளுக்கு நூல் கடனாகக் கொடுக்கவேண்டும். துணிகளை நெய்த பிறகு, நாம் அவைகளை எடுத்துக்கொண்டு வியாபாரம் ஆகும் வரையில் ஒரு சிறு தொகையை தொழிலாளிக்கு முன் பணமாக கொடுக்கவேண்டும். மேலும் துணிகளை அதிக செலவில்லாமல் நல்ல விலைக்கு விற்க ஏற்பாடு செய்ய வேண்டும். நெசவு தொழிலாளிகள் தங்கள் நிலைமையை அவர்களே அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும்.

திரு. ரங்கசாமி நாயுடு

கோவாப்பரேடிவ் சொஸைடி கூட்டு ரெஜிஸ்டிரார் திரு. ரங்கசாமி நாயுடு பேசியபோது சொன்னதாவது:-

நெசவு தொழிலாளிகள் க்ஷேமமடைய வேண்டுமானால் அவர்கள் நெய்யும் துணிகளை விற்பதில் திறமை உடையவர்களாய் இருக்க வேண்டும். நெசவு தொழிலாளிகள் துணிகள் நெய்வதிலும், விற்பதிலும் ஊக்கத்துடன் வேலைசெய்ய வேண்டும். இப்பொழுது இவர்கள் செய்து வரும் வேலை திருப்திகரமாக இல்லை. இவர்கள் சென்னையில் திறந்திருக்கும் ஜவுளிக்கடையில் வியாபாரம் திருப்திகரமாக இல்லை. பொதுவாக உள்ளூரில் விலையாகாத துணிகள் இந்த கடைக்கு அனுப்பப்படுகின்றன. வியாபாரிகளிடமிருந்து ஒப்பந்தம் செய்துகொண்டு அவர்கள் கேட்கும் துணிகளை நெய்து அனுப்புவதால் கஷ்டம் ஏற்படாது. இவ்வேலையை டிபாஷ்கள் மூலமாகச் செய்ய வேண்டும். பெரிய வியாபாரிகளிடமிருந்து அவர்களுக்கு வேண்டிய துணிகளை நெய்து கொடுப்பதால் கஷ்டம் ஏற்படாதென்று சொல்லி முடித்தார்.

திரு. பி. வி. கிருஷ்ணய்யா சவுத்ரி நெசவு தொழிலாளர் தங்கள் துணிகளை விற்பதற்குப் போதுமான வசதிகள் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்.

ஷெடியூல் வகுப்பு பூர்வாங்க தேர்தல்

காங்கரஸ்காரர் காலித்தனம் பலிக்கவில்லை

ஆதிதிராவிடர்கள் ஆரவாரம்

சிவபிச்சைக்கு பலத்த ஆதரவு

(ஒரு நிருபர்)

திருச்சி, டிச, 22

சென்னை மாகாண அசம்பிளிக்கு ஷெடியூல் வகுப்பினரின் பூர்வாங்க தேர்தல திருச்சி ஜில்லாவிற்கு பெரம்பலூர், உடையார்பாளையம் தாலூகாக்களில்நடைபெற்றது இரு தாலூகாக்களிலும் 41 இடத்தில் ஓட்டுகள் பதிவு செய்ய போலிங் ஸ்டேஷன்கள் ஏற்படுத்தி யிருந்தனர். காலையில் ஓட்டுப் பதிவு மிகவும் துரிதமாக இருந்தது. திரு. பி. சிவபிச்சை உள்பட 6 பேர்கள் போட்டி போட்டார்கள். அதில் அநேகமாக காங்கரஸ் திரு. ஆர். மருதைக்கும், ஜஸ்டிஸ் திரு. பி. சிவபிச்சை அவர்களுக்கும் பலத்த போட்டி இருந்தது. அதில் காங்கரஸ்காரர் பெரம்பலூர் போலிங்கில் ஓட்டர்களை வரவிடாமல் தடுத்தும் பி. சிவபிச்சைக்கு ஓட்டு போடவந்தவர்களை விரட்டியும் தள்ளினார்கள். ஆனால், அவர்கள் ஜம்பம் பலிக்கவில்லை. ஒவ்வொரு போலிங்கிலும் போட்ட ஓட்டுகளில் முக்கால் பாகம் சிவபிச்சை அவர்களுக்கே விழுந்தது.

காந்தி பூனா ஒப்பந்தம் பிரகாரம் தாழ்த்தப்பட்டவர்களே அவர்கள் இஷ்டப்படி தேர்ந்தெடுக்கட்டும் என்று ஒப்பந்தம் செய்து இருந்தும் காங்கரஸ்காரர்கள் தேர்தல்களில் கலந்து காலித்தனம் செய்தார்கள். அப்படியிருந்தும் அவர்கள் காலித்தனம் தாழ்த்தப்பட்டவர்களால் அடக்கப் பட்டது.

சென்னை சட்ட சபை

தொழிலாளர் தொகுதி

திரு. என். ஏ. ஆர். பாபு நாயுடு அபேட்சகர்

சென்னை, டிச, 22,

சென்னை, தில்லைவனத்தில் சென்ற ஞாயிறன்று மாலை 7-மணிக்கு மேல சென்னையிலுள்ள பல தரப்பட்ட தொழிலாளர்களின் காரியக் கமிட்டிக் கூட்டமொன்று திரு. ஆர். வி. கே. நாயுடு தலைமையில் கூடி வெகு நேரம் விவாதத்திற்குப் பின் கீழ் கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது:- சமீபத்தில் நடைபெறப் போகும் சென்னை சட்டசபைத் தேர்தலில் தொழிலாளர் தொகுதிக்கு சென்னையிலிருந்து செக்கப்பட்டு வகையிலுள்ள ஒரு பொது தொழிலாளர் ஸ்தானத்திற்கு சென்னை சுதேசமித்திரன் அச்சுக்கூடத் தொழிலாளர் சங்கம் முதலிய சங்கங்களின் காரியதரிசியும், அச்சுக்கூடத் தொழிலாளர் இயக்கத்தை விடா முயற்சியுடன் நடத்தி வரும் சென்னை சிந்தாதிரிப்பேட்டை திரு. என். ஏ. ஆர். பாபு நாயுடுவை அபேட்சகராக நிறுத்துவதென்று தீர்மானிக்கப் பட்டது.

பிஜியில் இந்தியர்

வகுப்புப் பிளவு குறைந்து விட்டது

ஐக்கியம் நிலவுகிறது

திரு. ஆண்ட்ரூஸ் கட்டுரை

பிஜியில் இந்தியர்களுடைய நிலைமையைப் பற்றி திரு. ஸி. எப். ஆண்ட்ரூஸ் எழுதிய மூன்றாவது நான்காவது கட்டுரைகள் பின் வருமாறு:—

பிஜி திடீரென்று ஒரு வர்த்தகக் கியாதியை அடைந்து விட்டது. தென் பஸிபிக் மகா சமுத்திரத்திலுள்ள விசாலமான தீவுகளில் இது ஒரு முக்கிய ஸ்தானத்தை அடைந்து விட்டது. ஆகாயப் போக்குவரத்து துரிதமாக முன்னேற்றமடைந்திருப்பதே இதற்குக் காரணம். ஸான்பிரான்ஸிஸ்கோவிலிருந்து தென் கண்டங்களுக்கு பஸிபிக் மேலாகப் பறக்கும் பெரிய விமானங்கள் தங்குவதற்கு இது கடைசித் தங்குமிடமாம்.

சமரேகைக்கு வடக்கே ஹோனலுலு எப்படியோ அப்படியே தென் பஸிபிக்கில் பிஜி வந்துவிடும்; கூடிய சீக்கிரம் வாரத்திற்கு இரண்டு முறை கடல் விமானங்கள் பிரயாணிகளுடனும், கடிதங்களுடனும், பத்திரிகைகளுடனும் இங்கு வந்து இறங்கும் நவீன முறையில் விமான நிலையங்கள் இங்கு கட்டப்பட்டு வருகின்றன. ஒரு விமானம் ஸிட்னிக்குச் செல்லும், மற்றொன்று நியூஜீலாந்து தலைநகர் ஆக்லந்துக்குச் செல்லும். இந்த இரண்டு இடங்களுக்கும் ஒரு ஒழுங்கான சர்வீஸ் ஏற்படுத்தப்படும்.

போக்குவரத்துக்கு வேண்டிய சாதனங்கள் பூராவும் நவீன முறையில் பூர்த்தியானவுடன் இப்பொழுது (பிஜி) ஜனத்தொகையில் பாதியாகவுள்ள பிஜி இந்தியர்களுக்கு நல்ல நன்மை ஏற்படும். புதிய கைத் தொழில்கள் கிளம்பும். நல்ல அறிவாளிகள் தேவையாயிருக்கும் தங்களுடைய பூர்வீக வித்தையால் இந்தியர்கள் பெருமிதமாக அறிவை பெற்றிருக்கின்றனர். அதே சமயத்தில் இந்தியர்களின் விசேஷ கைத்தொழிலான சர்க்கரை உற்பத்திகாரர்களுக்கு கான் பெருகும். பிரிட்டிஷ் கனடா மார்க்கெட்டுகளில் அதற்குச் சலுகை காட்டப்படுகிறது.

அனுகூலமான இந்த சந்தர்ப்பங்களைப் பூராவும் பயன் படுத்திக் கொள்ள வேண்டுமானால் இந்தியர்கள் நல்ல கல்வியைப் பெறவேண்டியது அத்யாவசியமாகும். ஆதியில் பழைய குலத்தினராக இருந்த பிஜியர்கள் இப்பொழுது பூராவும் கிறிஸ்துவர்களாக மாறிவிட்டனர். சென்ற 50 வருஷங்களுக்குள்ளாக அவர்கள் நல்ல முன்னேற்றமடைந்து விட்டனர். இப்பொழுது அவர்களுடைய குழந்தைகளில் நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்கு எழுதப்படிக்கத் தெரியும். இந்தியர்களோ வென்றால் ஒப்பந்தச் சீட்டு முறையின் தீங்குகளின் பயனாக (1920ம் வருஷத்தில் ஒழிக்கப்பட்டது) மிகவும் பின்னடைந்து விட்டனர். அவர்கள் குழந்தைகளில் நூற்றுக்கு 20 பேர்தான் கல்வியைப் பெற்று வருகின்றனர். இந்த தாரதம்மியம் சீக்கிரம் விலக்கப்பட்டாலொழிய இந்தியர்கள் பின்னடைவது நிச்சயம். ஏற்கனவே பிஜியிலிருந்து 60 இந்தியர்கள் நியூஜிலாந்திலும் ஆஸ்திரேலியாவிலும் சர்வகலாசாலைகளில் சேர்ந்திருக்கின்றனர். சிலர் நேரே பிரிட்டனுக்கும் போயிருக்கின்றனர்.

பாரபட்சம்

துரதிர்ஷ்டவசமாக பிஜியில் ஒரு கடுமையான வகுப்பு வரையறை பள்ளிக் கூடங்களில் இருந்து வருகிறது. ஐரோப்பியர்களும் இந்தியர்களும் ஒரே பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிப்பதற்கு விரோதமான கவர்ன்மெண்டு சட்டங்களை இயற்றியிருக்கிறது. ஹோனலுலுவில் இம்மாதிரி வித்தியாசம் கிடையாது எல்லா ஜாதியினரும் சேர்ந்தே கற்றுக் கொடுக்கப்படுவார்கள்.

எல்லாவற்றைக் காட்டினும் மிகவும் அத்தியாவசியமான தேவை பெண்கள் கல்விதான். தங்களுடைய பெண்களை பள்ளிக் கூடங்களுக்கு அனுப்ப இந்தியப் பெற்றோர்கள் ஆவலுடனிருக்கின்றனர். ஆனால், முக்கியஸ்தலங்களில் பள்ளிக்கூடக் கட்டிடங்கள் போதுமானதாக இல்லை. உபாத்தியாயர்களும் குறைச்சல் பெண்கள் கல்விசம்பந்தமான இக்குறை இந்திய விவசாயப் பிரச்னைகளை அதிகரிக்கச் செய்கிறது. நன்றாகக் கவனித்துக் கொள்ளக்கூடிய பள்ளிக்கூடத்தில் பெண்கள் இருப்பார்களேயானால் சிசு விவாகம் அவ்வளவாக ஏற்பட நியாயமில்லை. அப்படியானால், இந்தியர்களின் சமூக அந்தஸ்து உயரும். பெண்கள் படிக்கக்கூடிய நடுத்தரப் பள்ளிக்கூடம் வெகு அபூர்வமாகவே யிருக்கிறது. ஆரிய சமாஜத்தார்களும், கிறிஸ்துவப் பிரசாரகர்களும் கல்வியின் நடைமுறையின் அந்த முக்கிய பாகத்தை ஏற்றுக்கொண்டு வேலை செய்து வருகின்றனர். அவர்களுடைய முயற்சியால் இப்பொழுது பிஜியில் ஏற்பட்டுள்ள பலன்களுக்கு பலன் சொற்பமாயிருந்தாலும்-அவர்களை வாழ்த்தவேண்டும்.

ஐக்கியம் ஏற்படுமோ ?

எதிர் காலத்தைப் பற்றி முக்கியமாக யோசிக்கவேண்டிய விஷயமென்ன வென்றால் பிஜியிலுள்ள ஐரோப்பியர்கள், இந்தியர்கள், பிஜியர்கள் முதலிய எல்லாக் குலத்தினரும் ஒன்றாகக் கலந்து ஐக்கியப்படுவார்களா? அல்லது அவர்களுக்குள் விரோதமேற்பட்டு, சரிசமானமாக அவர்களை ஆக்குவதற்கான முயற்சியினைக் கெடுமா? என்பது தான்.

20 வருடங்களுக்கு முன் இம்மாதிரியான ஒற்றுமைக்கு பிரதிகூலங்கள் மிகவும் இருந்தன. "ஒப்பந்தச் சீட்டு" முறையால் இந்தியர்களுடைய நிலைமை வெகு கேவலமாய்ப் போய்விட்டது. சர்க்கரை சாகுபடி சப்ளைக்கு அவர்கள் சொற்பக் கூலியிலேயே அமர்த்திக் கொள்ளப்பட்டனர். மிருகத் தனமான இம்முறை மிக பயங்கரமானதாக விருந்தது. புதிதாக வேலைக்கு அமர்த்திக்கொண்டு வரப்பட்டவர்களில் நூற்றுக்கு 80 பேர் மோசம் செய்யப்பட்டே அழைத்து வரப்பட்டனர். ஐக்கிய மாகாணங்கள், பீகார், சென்னை முதலிய மாகாணங்களைச் சார்ந்த கிராமவாசிகளுக்கெல்லாம், பிஜி வெகு தூரத்திலிருக்கிற தென்பது தெரியாது. அது எங்கேயோ கல்கத்தாவுக்கு பக்கத்திலிருக்கிற தென்றும், வருஷம் பூராவிலும் நாளொன்றுக்கு 12 அணா விதம் கூலி கிடைக்குமென்றும், அவர்கள் சொல்லப்பட்டனர். ஸ்திரீ கூலியாட்களின் கூலி விகிதமோ ஆண்கள் கூலியைவிட வெகுக் குறைவு.

மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்த முறையால் பிஜியர்கள் இந்தியர்களைக் கேவலமாக மதித்தார்கள். இது இந்தியர்களுக்கு மனக் கசப்பை உண்டாக்கியது. ஆனால், இப்பொழுதோ எல்லா இந்தியர்களும் விடுதலை பெற்று விட்டனர்.

பழையநிலைமை செத்து விட்டது ஆகவே, நிலைமை ஆச்சரியகரமாக மாறி விட்டது. இந்தியர்கள் வெகு உயர்தரமான வித்தையை பெற்றவர்களென்று, பிஜியர்கள், அவர்களுக்கு மரியாதை செய்ய ஆரம்பித்தனர்.

கலப்பு மணம் இல்லை

பிஜியில் நான் இந்தியத் தலைவர்களோடு கிராமங்கள் வழியாக பிரயாணம் செய்கையில் எங்களுக்கு எல்லாவித உபசாரத்தையும் செய்த பிஜிய அதிபதிகளைப் பார்ப்பதற்காக நாங்கள் வழியில் இறங்குவோம். இரு ஜாதியினருக்கும் எந்த விதமான இணக்கமும் ஒற்றுமையும் இருந்து வருகிறதென்பதை இலகுவாகக் கண்டு பிடிக்க முடிந்தது. ஒரு ஸ்வாரஸ்யமான விஷயமென்ன வென்றால் அங்கு கலப்பு மணம் கிடையாது. அந்த வழியில் உத்தேசமும் கிடையாது எல்லா விஷயங்களிலும் இரு ஜாதியினரும் வெகு அன்னியோன்யமாகப் பழகிக் கொள்ளுகின்றனர்; இந்த நெருங்கிய விவாகப் பிணைசல் சம்பந்தப் பட்டவரை அவர்கள் ஒருவருக்கொருவர் ஒதுங்கியே நிற்கிறார்கள்.

இன்னொரு முக்கியமான விஷயம் கவனிக்கப்பட வேண்டும். ஐரோப்பியர்கள் தங்களைக் காண்டும்போது, தங்களுடைய நலன்களும், இந்தியர்களுடைய நலன்களும் ஒரே தன்மையுள்ளன வென்பதை பிஜியர்கள் உணர்ந்துகொள்ள ஆரம்பித்து விட்டனர். ஐரோப்பியர் கொண்டுள்ள நிறவெறுப்பும் இரு ஜாதியினரையும் பாதிக்கக் கூடியதாக விருக்கிறது. ஒரு அதிபதி என்னிடம் சொன்னதாவது:—

"எப்படியிருந்தாலும் நாங்களும் இந்தியர்களும் கறுப்பு நிறத்தினர்கள். ஆகையால் நாங்கள் ஒன்று சேர வேண்டும்" என்றார்.

ஐரோப்பியர்கள் ஜனத்தொகையில் வெகு குறைவானவர்கள் அவர்களுக்கு உஷ்ணம் தாங்குவதில்லை. பொருளாதாரம் அரசியல் சமூகம் முதலிய துறைகளில் அவர்களுடைய அதிகாரம் க்ஷீணித்து வருகிற தென்பதையும் அது இன்னும் கொஞ்சகாலம் தான் செல்லுமென்பதையும் அவர்கள் உணர்ந்து வருகின்றனர். இதே காரணத்தால் தான் அவர்கள் தேர்தல் முறையை ஒழிக்க முயன்று அதற்குப் பதிலாக நியமனத்தை ஏற்படுத்த முற்பட்டனர். எல்லா அதிகாரமும், கவர்னர் கையிலேயே இருக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினர். ஆனால், அது பலிக்கவில்லை இந்த வெற்றி பூர்த்தியானதாக வில்லாவிட்டாலும் இது ஒரு முக்கிய வெற்றியே. ஏனெனில் இப்பொழுது தேர்தலோடுகூட நியமனமும் நடைபெறுகிறது.

தாராள நோக்கம்

உண்மையென்னவென்றால், நான் வசிக்கக்கூடிய மட்டும் பிஜி சிநேகமான நிலைமைக்குத் தருந்தாற்போல் ஐரோப்பியர்கள் வசதி பண்ணிக் கொள்வதுமல்லாமல் புதிய சமூக நிலைமைகளுக்கும் அவர்கள் சரிப்படுத்தி கொள்ளுகின்றனர். பிஜியர்களும், இந்தியர்களும் சர்வகலாசாலை கல்வியின் பரிமாணத்தை அடைந்துவருவதை அவர்கள் கவனித்து வருகின்றனர். இதுவுமன்னியில் அவர்களிடம் ஒருவித தாராள நோக்கமும் இருந்து வருகிறது. பிஜி ஐரோப்பியர்களுக்குள் உள்ள இந்த தாராள அம்சந்தான் நிறவகை முறையைத் தொலைப்பதற்கு காரணமாக விருந்தது. இந்தியத் தலைவர்களுள் அவர்களுடைய நண்பர்கள் பலர் இருக்கின்றனர். ஆசியில் விபரீதமாக முடிந்திருக்கக் கூடியதை தொலைப்பதற்கு அவர்கள் அத்தலைவர்களுடன் சேர்ந்து வேலை செய்தனர்.

கடைசியாக இந்தியர்களுக்குள்ளாகவே 20 வருஷங்களுக்கு முன்னிருந்ததுபோல் அவ்வளவு கடுமையாக இப்பொழுது வகுப்புப் பிளவு ஒன்றுமில்லை. முஸ்லீம் ஹிந்து பிரச்னை தீவிரமாக இல்லை. எப்பொழுதாவது ஒரு சமயத்தில்தான் அது ஏற்படுகிறது. பொதுவாக இந்தியர்களின் முன்னேற்றத்திற்கு கிறிஸ்தவர்கள் பூரா ஒத்துழைக்கின்றனர். அவர்கள் ஒருவருக்கொருவர் விலகி நிற்கவில்லை. பாஷை சம்பந்தமாக பிளவு ஒன்றுமில்லை. தொகையில் அதிகமிருக்கும் தமிழர்கள் இலகுவாக ஹிந்தி கற்றுக்கொள்ளுகின்றனர். காலக்கிரமத்தில் பஸிபிக் பூராவிலும் இங்கிலீஷ் பாஷையேயாகும். வீடுகளில் வழங்கும் ஹிந்தி பாஷை இந்தியர்களுக்குள் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்திவிட்டது. அத்துறையில் பிஜி சர்க்கார் புத்திசாலித்தனமாக நடவடிக்கையை எடுத்துக்கொண்டதற்கு அவர்களைப்போற்றவேண்டும்.

பிஜிக்குச் சென்றுள்ள விவசாயிகளான இந்திய கிராமவாசிகளின் உத்கிருஷ்டமான குணங்களிலும், தன்மைகளிலும் எனக்கு அபார மதிப்பு உண்டாகி விட்டது. அவர்களுடைய உயர்ந்த வித்தை அங்கு நன்கு வேரூன்றிவிட்டது. அன்னிய நாட்டில் அவர்கள் புதிய விதையை விதைக்க யோக்யதையுள்ளவர்கள்.

பூந்தமல்லி ஹைரோடிலுள்ள குஷால்தாஸ் தோட்டத்தில், இந்தியா சர்க்கார் நிதி மந்திரி சர். ஜேம்ஸ் கிரிக்குக்கு திரு. ஆடம்ஹாஜி மகமது சேட் சென்ற 21-ம் தேதி மாலை தோட்டக் கச்சேரி நடத்திய போது எடுத்த படம். (போட்டோ நியூஸ் ஏஜன்ஸி.)



கனம் பி. டி. ராஜன் சமீபத்தில் வேலாச்சேரியில் நடந்த விவசாயப் பொருட் காட்சிக்கு விஜயம் செய்த போது எடுத்த படம்.

போப் பேசுவார்

ரோம், டிச, 22

தமது படுக்கையிலிருந்தபடியே வியாழக்கிழமை பகல் 11-30 மணிக்கு ரேடியோ மூலம் நோய் வாய்ப்பட்டிருக்கும் போப் உலக மக்களுக்கு ஒரு செய்தி விடுப்பார்.

தூத்துக்குடி

பேட்ரிக்ஸ் உயர்தர ஆரம்பபாடசாலை ஆண்டு விழா

(நமது நிருபர்)

தூத்துக்குடி, டிச, 20

தூத்துக்குடி மேலூர் ஸெயிண்ட் பேட்ரிக்ஸ் உயர்தர ஆரம்ப பாடசாலையின் ஆண்டு விழா நேற்று மாலை 5-30 மணிக்குத் தூத்துக்குடி நகரசபைக் கவுன்ஸிலர் திரு. கே. கே. ஏ. பெரியசாமி நாடார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தலைவர், இதர பிரமுகர்கள், பள்ளி ஆசிரியர்கள், நிர்வாகஸ்தர்கள், மாணவர்கள் முதலானவர்களின் புகைப்படம் எடுக்கப்பட்டபின் ௸ விழா ஆரம்பமாயிற்று.

௸ விழாவிற்கு ஏராளமான பொது ஜனங்கள் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தலைவர் தமது முகவுரையில் ௸ பாடசாலையானது இந்நகரிலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் தலை சிறந்து விளங்குவதைப் பற்றியும், சாதிமத பேதமின்றியும், யாவரும் சமமென வணங்குவது பற்றியும், இதர பள்ளிக்கூடங்களைப் பார்க்கிலும் இப்பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்குக் கைத்தொழில் முதலானவைகளில் விசேஷ கவனம் செலுத்துவது பற்றியும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கத்தக்க முறையில் கல்வி புகட்டுவது பற்றியும் மிகவும் தெளிவாக பேசியபின் பாடங்களிலும், அநேக வித விளையாட்டுகளிலும், ஒழுக்கத்திலும் தலை சிறந்த மாணவர்களுக்குப் பரிசுகள் தலைமை ஆசிரியரின் பள்ளி நிர்வாக அறிக்கை வாசித்த பின் வழங்கினர்.

தலைவர் தமது முடிவுரையில் ௸ பள்ளியின நிர்வாகம் மிகவும் திறம்பட நடப்பது பற்றியும், சென்னை சர்க்கார் இனிமேல் இவ்விதம் செவ்வனே நடத்தப்படும் பள்ளிக்கூடங்களுக்குக் கிராண்ட் அதிகமாக கொடுக்க உத்தேசித்திருப்பதையும் மிகவும் தெளிவாக எடுத்தோதியதோடு பள்ளிக்கூடங்களுக்குப் புத்தகங்களும் சர்க்காரே பிரசுரம் செய்து அப்புத்தகங்களையே பள்ளிக்கூடங்களுக் கேற்படுத்தினால் மிகவும் நலமாக இருக்குமெனவும், தற்கால படிப்பானது நம் மக்களின் பகுத்தறியும் தன்மைக்கு மிகவும் பிற்போக்காயுள்ள தென்பதைச் சமீபத்தில் சென்னை சர்வீஸ்கமிஷன் ரிப்போர்ட்டிலிருந்துமிகவும் தெளிவுபட அறிய ஏதுவாக இருக்கின்ற தென்றும் நம் நாட்டின் பாஷை என்ன என்று கேட்ட கேள்விக்கு மாணவர்கள் ராமாயணமும், மகா பாரதமும் என்றும் சொல்லும்படியான கேவலஸ்திதியிலிருப்பதால் அதைக் கூடிய சீக்கிரம் தடுக்கத் தக்க ஏற்பாடுகள் செய்து கல்வி முறையைச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்றும் சொன்னார்.

பின்னர் மாணவர்களால் பலவித தமாஷ்கள் நடத்தப்பட்ட பின் ஆங்கிலத்தில் ஓர் நாடகமும், தமிழில் ஓர் நாடகமும் நடைபெற்றது. இரவு 9 மணிக்கு ௸ ஆண்டு விழா வைபவம், வந்தனோபசாரத்துடன் முடிவு பெற்றது.

எஸ். ஏ. வி. ஸ்கூல் பழைய மாணவர்கள் சங்க ஆண்டு விழா

இவ்வூர் சாஸ்வதி ஆங்கிலோ வெர்னாகுலர் ஹைஸ்கூலின் பழைய மாணவர்கள் சங்க ஆண்டு விழா இன்று மாலையில் இவ்வூர் சப் ஜட்ஜ் திரு. சாரங்கராஜ அய்யங்கார் அவர்கள் தலைமையில் ௸ பள்ளியில் நடைபெற்றது. முடிவில் ஓர் நாடகம் தமிழில் நடைபெற்ற பின் வந்தனோபசாரத்தோடு கூட்டம் இனிது கலைந்தது.

ஸர்தார் பட்டேல் விஜயம்

சென்ற வெள்ளிக்கிழமை (18-12-36) மாலையில் இந்நகருக்கு திரு. வல்லபாய் பட்டேல் கோஷ்டியார் விஜயம் செய்திருந்தார்கள். அன்று நகரெங்கும், 'பட்டேல் கொள்ளையடிக்க வருகிறார்' என்ற துண்டுப் பிரசுரங்களும், கழுதைக்கு ஓட்டுக் கேட்டவர்கள் என்ற துண்டுப் பிரசுரங்களும் வழங்கப் பட்டிருந்தன. மாலை சுமார் 3½ மணிக்கு திரு. பட்டேல் தருவை மைதானத்தில் ஓர் பொதுக் கூட்டத்தில் பேசினார். திரு. சத்தியமூர்த்தி ௸யார் பேச்சைத் தமிழில் மொழி பெயர்த்தார். திரு. பட்டேல் திருநெல்வேலி ஜில்லாவில் காங்கிரஸ் சார்பாக நிற்க ஆட்கள் கிடைக்கவில்லையே என்று ஓலமிட்டார். கடைசியில் தூத்துக்குடி டிவிஷனுக்கு திரு. அரி. அ. ச. துரைசாமி நாடாரை நிறுத்தி யிருப்பதாகவும் அவரை ஆதரிக்கும் படியாகவும் கேட்டுக்கொண்டார். பின்னர் அபேட்சகராக நிற்கும் திரு. துரைசாமி நாடார் இரண்டொரு வார்த்தைகள் பேசினார்.

திரு. பட்டேலுக்கு தூத்துக்குடி காங்கரஸ்காரர்கள் ரூ 500கொண்ட பண முடிப்பும், திருநெல்வேலி நகர காங்கரஸ்கமிட்டியார் ரூ. 300ம் திருசெந்தூர் தாலுகா காங்கரஸ் கமிட்டியார் ரூ. 210ம், முறையே முதலில் சொல்லிய பணமுடிப்பு தூத்துக்குடியில் வைத்தும் மற்றவை திருநெல்வேலியில் வைத்தும் கொடுக்கப்பட்டது.

அசம்பிளித் தேர்தல்

திரு. டானியல் தாமஸ் அபேட்சை

பாளையங்கோட்டை, டிச, 18

பாளையங்கோட்டை வக்கீலும் நகரசபைத் தலைவரும் சென்னை சட்டசபை மெம்பருமான திரு. டானியல் தாமஸ் எழுதுவதாவது:-

"வரப்போகும் சென்னை அசம்பிளித் தேர்தலுக்கு திருநெல்வேலி ஜில்லா இந்தியக் கிறிஸ்தவர் ஸ்தானத்திற்கு நான் ஒரு அபேட்சகராக நிற்கிறேன்"

ஜஸ்டிஸ் கட்சி கூட்டம்

தலைவர்கள் ஆலோசனை

(நமது நிருபர்)

மதுரை, டிச, 19

17-ந் தேதி நடைபெற்று மதுரைக்கு ஒத்திபோடப்பட்ட ஜஸ் ஸ் கட்சி தலைவர்கள் மகாநாடு 8-12-36 காலை 10 மணிக்கு போடி க்கனூரில் கனம் பொப்பிலி ராஜா லைமையின் கீழ் கூடிற்று. பல பிரமுகர்கள் விஜயம் செய்து இருந்தார் ள். சட்டசபை தேர்தலுக்கு அ த்தினர்களை நிறுத்தும் விஷயமாக பேசினர்கள். பின்னர் கூட்டம் லைந்தது.

கனம் பொப்பிலி ராஜாவுக்கு தேக் கச்சேரி

சட்டசபைத் தேர்தல் பிரசார ர்த்தமாக இக்கருக்கு விஜயம் திருந்த "ஜஸ்டிஸ்" கட்சி தலை கனம் பொப்பிலி இராஜாவுக்கு று பிற்பகல், சிவகெங்கை ராஜாவால் ஓர் தேக்கச்சேரி நடத்தி வைக்கப்பட்டது. பல பிரபலஸ்தர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

தலைவர்கள் புறப்பாடு

ஜஸ்டிஸ் கட்சி தலைவர்கள் நேற்று மாலை திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் சென்னைக்குப் புறப்பட்டார்கள். இராமநாதபுரம் ராஜாவுள்பட பல பிரபலஸ்தர்கள் ரெயிலடிக்கு வந்து வழியனுப்பினர்கள்.

சோழத்திரம்

வாலிப ஆதிதிராவிட மகாநாடு

(ஒரு நிருபர்)

சோழத்திரம், டிச, 18

14-12-36-ல் சோழத்திரம் ஆதிதிராவிடத் தெருவுக் கருகில் பட்டணம் ரோட்டிற்கு மேற்புறத்திலுள்ள ஸ்ரீ காளியம்மன் ஆலயத்திற்கு முன் அமைக்கப்பெற்ற பந்தலில் சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகத்தின் அதிபதி ஸ்ரீலஸ்ரீ சுவாமி சகஜாநந்தா அவர்கள் தலைமையில் ஒரு ஆதிதிராவிட மகாநாடு நடைபெற்றது.

மேற்படி மகாநாட்டிற்கு பாளையங்கோட்டை பிர்காவைச் சேர்ந்த எல்லா கிராம ஆதிதிராவிட நாட்டாண்மை காரியஸ்தர்களும், மற்றவர்களும் குழுமியிருந்தார்கள். மரியாதை வரவேற்பு வளைவுகள் கட்டப்பட்டிருந்தன. இடங்கொள்ளாத ஜனத்திரள் பேரிகைச் சத்துடனும் மேளவாத்தியங்களுடனும் சங்கீத பஜனைக்கோஷ்டியுடனும் தலைவரவர்களைக் காண ஆவலுடன் எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்தார்கள். குறித்தபடி மாலை 2 மணிக்குத் தலைவரும், திரு. பெருமாள் நாயனாவர்களும் காரில் வருவதையறிந்து யாவரும் எதிர் சென்று மேளவாத்தியங்கள் முழங்க வரிசையாக பழம், சர்க்கரை, கற்கண்டு, மலர்மாலை முதலியவைகளுடன் ஊர்வலமாக அழைத்துக் கொண்டு வந்து வெல்கம் போர்டுக் கருகில் தலைவருக்கு, சோழத்திரம் ஆதிதிராவிட பொது மக்கள் சார்பாக நாட்டாண்மை காரியஸ்தர்களால மாலை சூட்டப் பெற்று சுவாமியவர்களையும், திரு பெருமாள் நாயனாவர்களையும் பந்தலுக்கு அழைத்துச் சென்று தத்தம் ஆசனத்திலமரச் செய்தனர். இதனைக் கேள்வியுற்ற டி கிராம முன்சீப் கனம் வெங்கட்டபெருமாள் நாயுடவர்கள் மற்றும் சில நண்பர்களுடன் கூட்டத்தில் கலந்து கொண்டார். பின் கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டது. திரு. பெருமாள் நாயனாவர்களும், தலைவரவர்களும் வெகு நீண்டநேரம் பொது மக்களுக்குரிய அரிய புத்திமதிகளை தெளிவாக எளிய நடையில் எடுத்துப் பேசினர்கள். வாலிபர்களால் பஜனை செய்யப்பட்டு தலைவரவர்களுக்கு பூமாலை சூட்டி, பயனை திரு நாயனவர்களால வந்தனோபசாரம் கூற பெருத்த கரகோஷத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

ஸ்ரீ முஷ்ணம்

ஆதிதிராவிட மகாநாடு

(ஒரு நிருபர்)

ஸ்ரீ முஷ்ணம், டிச, 18

15-12-36-ல் திருப்பாணாழ்வார் தெருவின் பக்க முள்ள தென்னந்தோப்பில் அமைக்கப்பட்ட பந்தலில், ஸ்ரீ முஷ்ணம் வட்டத்திற்குட்பட்ட எல்லா கிராம ஜனங்களும் வந்து கூடிவிடவே, சுமார் 9 மணிக்கெல்லாம், ஆதிதிராவிட சமூகத் தலைவரும் நந்தனார் மடாதிபதியுமாகிய ஸ்ரீ ஜத் சுவாமி சகஜாநந்தம் எம். எல். ஸி. அவர்களும் திரு. எல். பெருமாள் நாயனாரும் மோட்டாரில் வந்து திருப்பாணாழ்வார் பாடசாலையில் தங்கி தேநீர் பருகியபின், ஜனங்கள் திரளாக வந்து கூடிவிடவும் அங்கிருந்து மாணவர்களால் திருப்பாணாழ்வார் பாடல்களும், தேவாரப் பண்களும் பாடி மேள வாத்தியங்களுடன் தோப்புக்கு வெளியில் அலங்கரிக்கப்பட்ட "திருவாளர் சுவாமி சகஜாநந்தம் அவர்கள் வருக! வருக!!" என்ற போர்டருகில் தலைவருக்குப் பூமாலைசூட்டி பெருத்த கரகோஷத்துடன் பீடத்திலமரவே தலைவர் தேர்தல் நடைபெற்றது. பின் மாணவர்களால் கடவுள் வாழ்த்தும், தலைவர் மீது பாடலும் வரவேற்பு பத்திரமும் வாசித்தளிக்கப்பட்டு திரு. எ. பாம்பன் பிள்ளை, திரு. வி. நடராஜன், திரு. எல். பெருமாள் நாயனார் முதலியோர்களால் சொற்பொழிவாற்றிய பின் தலைவர் கரகோஷத்துடன் எழுந்து, கடவுள், கோவில், கல்வி, சிக்கனம், ஒற்றுமை, சுகாதாரம், புலால், மதுமானம், புதிய அரசியல் என்னும் விஷயங்களைப் பற்றி சாங்கோபாங்கமாக பேசியமர்ந்தார். அதன் பிறகு அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறி வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைவுற. தலைவரும், மற்றும் சிலரும் பகல் போஜனத்திற்காக சோழத்திரம் புறப்பட்டார்கள்.

மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்

1. திருவாங்கூர் மகாராஜா அவர்கள் சகலஜாதியார்களுக்கும் கோவில் திறந்து விட்டதை இக்கூட்டம் பாராட்டுகிறது.

2. ஸ்ரீ முஷ்ண வட்டத்தைச் சேர்ந்த கிராம ஆதிதிராவிடர்களுக்கு குடி ஜல வசதி, நடைபாதை, மயானப்பாதை இல்லாமல் கஷ்டப்படுவதால் விசாரித்து சௌகரியங்கள் செய்து கொடுக்கும்படி கனம். லேபர் கமிஷனர் அவர்களையும், ஜில்லா லேபர் ஆபீஸரவர்களையும் கேட்டுக் கொள்ள இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

3. திருப்பாணாழ்வார் தெரு வக்காமாரி, தென்பாதி, கஸ்பா, ஆதிதிராவிட தெருக்கள் சுகாதார விஷயத்தில் கேடுற்றிருப்பதையும், பின்னும் குறிப்பிட்ட விடத்தில் விளக்குகள் போட்டுக் கொடுப்பதுடன், கவனமும் செலுத்தும்படி ஸ்ரீமுஷ்ணம் யூனியன் போர்டு தலைவரவர்களை மிகவும் வணக்கமாய் கேட்டுக் கொள்ள இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

4. கொம்புக்காரன் சேரி என்ற பெயரானது தற்கால இழிவைக் குறிப்பதால் டி சேரிக்கு, "திருப்பாணாழ்வார் தெரு" என்னும் பெயர் கொடுத்து எழுதும்படி உத்தரவு செய்ய ரெவினியூ டிபார்ட்மெண்ட் அதிகாரிகளையும், கனம் யூனியன் சேர்மன் அவர்களையும் கேட்டுக்கொள்ள இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

5. ஸ்ரீமுஷ்ணம் திருப்பாணாழ்வார் பாடசாலையைச் சேர்ந்த சுற்றுப் பக்கமுள்ள கிராம ஆதிதிராவிட பிள்ளைகள் இக்கற்ற மிக்க ஏழைமையாயிருப்பதாலும் ஒரு வேளை கஞ்சிக்குக்கூட வழியின்றி மாடு மேய்க்கவிட்டு விடுவதால் கல்வியபிவிர்த்திக்கு முட்டுக்கட்டையாயிருப்பதால் பகல் ஒருவேளை போஜனத்திற்கு உதவி செய்ய காருண்ய கவர்ன்மெண்டாரவர்களுக்கு சிபார்சு செய்ய இம் மகாநாட்டுத் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்ள இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

திருக்கடையூர் பஞ்சாயத்து போர்டு

ஸ்ரீமான் கே. கனகசபைப் பிள்ளை தலைவரானார்

(ஒரு நிருபர்)

திருக்கடையூர், டிச, 18

மாயவரம் தாலூகா திருக்கடையூர் பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல் இன்று மாலை 2 மணிக்கு பஞ்சாயத்துப் போர்டு காரியாலயத்தில் நடைபெற்றது. பிரபல மிராசுதாரரும் பொதுநலத் தியாகியுமான ஸ்ரீமான் கே. கனகசபைப் பிள்ளை போட்டியின்றி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். போர்டு ஸ்தாபகமான இதற்கு முந்திய தேர்தலிலும் இன்னவர் போட்டியின்றியே தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கிராம புனருத்தாரண திட்டத்தில் இத் திருக்கடையூர் தேர்ந்தெடுக்கப்பட்டு வேலை செய்து வரும் முன்னிலையில் இவ்வூர் போர்டு ஆதிக்கத்தின் தலைமையைத் தான் தொடர்ச்சியாக வகிக்க ஏற்பட்டிருக்கும் தன் பொறுப்பை முன்னிலும் விசேஷமாக அங்கத்தினர்களின் கூட்டுறவைக் கொண்டு பொது ஜனங்களின் க்ஷேமத்தைக் குறிக்கொடு தொண்டாற்றுவதாகக் கூறி அங்கத்தினர்களுக்கு தன் வந்தனம் தெரிவிக்க கூட்டம் இனிது கலைந்தது. இத் தலைவர் தேர்தல் செய்தி கிராமத்தார்களிடை மிக்க மகிழ்ச்சியை அளித்தது.

லக்ஷார்ச்சனை

"இத் திருக்கடையூர் ஸ்ரீ அபிராமி அம்பாள் ஸமேத ஸ்ரீ அமிர்தகடேசுவரர் ஆலயத்தில் இன்று முதல் ஸ்ரீ அம்மனுக்கு பொது ஜனங்களால் லக்ஷார்ச்சனை ஆரம்பமாகி மிகவும் சிறப்பாய் நடைபெற்று வருகிறது. அரை மண்டலம் வரை மேல்படி அர்ச்சனை நடந்து ஸம்பூர்ணமாகும் எனத் தெரிகிறது. பக்த கோடிகள் தேவியின் தெரிசனப் பிராப்தர்களாகக் கோரப் படுகிறார்கள்."

அம்பாசமுத்திரம் தாலூகா முஸ்லிம் மகாநாடு

(ஒரு நிருபர்)

அம்பாசமுத்திரம், டிச, 21

சென்ற வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு அம்பாசமுத்திரம் தாலூகா முஸ்லிம் மகாநாடு ஒன்று கல்லிடைக்குறிச்சியில் நடைபெற்றது. இம்மகாநாடு பதருல் இஸ்லாம் சங்கத்தின் ஆதரவிலும், வை. எம். சொசைட்டியின் ஆதரவிலும், ஆலி ஜனாப் ஆர். எம்.ஏ.எஸ். அப்துல் லத்தீப் பாருக் சாஹிப் அவர்கள் தலைமையில் நடந்தேறியது. மகாநாட்டில் ஆலோசனைக்குக் கொண்டுவர வேண்டிய விஷயங்களையெல்லாம் விவாதித்த பின்னர், சென்னை சட்டசபைக்கு திருநெல்வேலி ஜில்லா முஸ்லிம் தொகுதிக்கு ஆலி ஜனாப் வி. எஸ். டி. ஷேய்கு மன்சூர் சாஹிப் பகதூர் அவர்களை நிறுத்துவதென்றும், அதற்கு முஸ்லிம்களெல்லாம் ஒத்துழைத்து தங்கள் ஓட்டுகளை அன்னாருக்கே கொடுக்க வேண்டுமென்றும் ஓர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப்பின் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

கவர்ன்மெண்டு வக்கீலுக்கு உபசாரம்

பிரபலஸ்தர்கள் விஜயம்

திரு. ஜார்ஜ் ஜோஸப் பிரவேசம்

(நமது நிருபர்)

மதுரை, டிச, 18

மதுரை அட்வோகேட் திரு. பி. ரெங்கசாமி நாயுடு அவர்களை கவர்ன்மெண்டு வக்கீலாக நியமித்திருப்பதை முன்னிட்டு, அவரை உபசரிக்கும் பொருட்டு, செல்வாக்குள்ள கமிட்டியாரால் நேற்று மாலை 5-30 மணிக்கு காஸ்மாபாலிட்டன் கிளப்பில் ஓர் தோட்டக்கச்சேரி நடத்தப்பட்டது. பிரதம விருந்தாளியாகிய திரு. நாயுடு அவர்களை ராவ்பகதூர் தேவாஜிராவும், திரு. எம். துரைசாமி பிள்ளையும் வரவேற்றார்கள்.

தோட்டக் கச்சேரியை முன்னிட்டு காஸ்மாபாலிட்டன் கிளப் மைதானத்தை மின்சார விளக்குகளைக்கொண்டு நன்கு அலங்கரித்திருந்தார்கள். தோட்டக் கச்சேரி முடிந்ததும். சென்னை அரசாங்கம் இரண்டாவது மந்திரி கனம் பி. டி. ராஜன் அவர்களால் திரு. பி ரெங்கசாமி நாயுடு அவர்களுக்கு பலத்த கரகோஷத்தினிடையே மாலை சூட்டப்பட்டது.

தோட்டக் கச்சேரி முடிவடைவதற்கு முன் சமீபத்தில் காங்கிரஸில் சேர்ந்த திரு. ஜார்ஜ் ஜோஸப் காந்திக் குல்லாயுடன் மைதானத்தில் பிரவேசித்தார். எல்லோரும் கரகோஷம்செய்து வரவேற்றார்கள். திரு. ஜோஸப் கனம் ஹோம் மெம்பர் பக்கத்தில் அமர்ந்து வார்த்தையாடிக் கொண்டிருந்தார்.

உத்தமசேரி

தாழ்த்தப்பட்ட வாலிபர் சங்கம்

(ஒரு நிருபர்)

உத்தமசேரி, டிச, 17

14-12-36 மாலை 8 மணிக்கு இச்சங்கத்தின் கூட்டமொன்று திரு. டி. எம். மாரிமுத்து தலைமையில் கூடிற்று. தலைவர் முன்னுரைக்குப் பின் திருச்சி ஜில்லா தாழ்த்தப்பட்டவர் கூட்டுச் சங்க காரியதரிசி தோழர். பி. எம். சாமி அவர்கள் நமது கடமையையும், வாலிபர்களாகிய நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும், வைஸ் பிரஸிடெண்ட் எம். ராமசாமி அவர்கள் 'இனிநமது வேலை என்ன' என்பதைப் பற்றியும், சீர்திருத்தத்தைப் பற்றியும் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர்கள்.

ஆடிட்டரவர்கள் தங்கள் பதவியை அநேக ஜோலிகளை முன்னிட்டு ராஜிநாமா செய்துவிட்டதால் அந்த ஸ்தானத்திற்குதிரு.க.ரங்கசாமியும், திரு.க.சி.ரங்கசாமியும் போட்டியாக நின்றார்கள் திரு.க.சி.ரங்கசாமி அவர்களுக்கு 2 வோட்டுகள் அதிகமாய்க் கிடைத்ததால் திரு.க. சி. ரங்கசாமி அவர்கள் ஆடிட்டராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அடியில் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறிய பின் தலைவருக்கு வந்தனோபசாரம் கூறி கூட்டம் இனிது முடிந்தது.

(1) "விடுதலை", "ஜனநாயகம்" பேப்பர்களை நமது சங்கத்திற்கு அனுப்புமாறு கேட்க வேண்டுமென்றும், (2) பழைய ஆடிட்டரவர்களுக்கு தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதாயும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஸ்திரீகளைப் பற்றி அறிஞர்கள் கூறுவதென்ன?

ஸ்திரீகள் நம்மை ஆளுகின்றனர். அவர்கள் முற்போக்கிற்கு நாம் உதவி செய்ய வேண்டும். அவர்கள் எவ்வளவு பரிசுத்தப் படுகின்றனரோ அவ்வளவு நாமும் நலமடைவோம். மனிதனின் ஞானம் மிளிருவது ஸ்திரீகளின் அறிவு விளக்கத்தையே பொருத்திருக்கிறது.

—ஷெரிதன்.

• • •

ஸ்திரீயானவள் ஒரு நாணல் போன்றவள், நாணலானது இளங்காற்று அடிக்கும்போது வளைந்து கொடுக்கிறது. ஆனால், புயல் காற்று அடித்தாலோ ஒடிவதில்லை.

—வேட்னி.

• • •

ஓர் அழகி ஆபரணம் போன்றிருக்கிறாள். ஓர் குணவதியோ பணக்குவியல போன்றிருக்கிறாள்.

—காடி.

• • •

ஆடவர்களுக்கு பலம் என்பதே இடையாது. அவர்கள் பலமெல்லாம் சட்டப் புத்தகங்களில்தானிருக்கின்றன. ஆனால், ஸ்திரீகளுக்கு அவர்கள் பார்வையிலேயே பலம் பிரகாசிக்கிறது. ஆடவர்கள் தர்க்கத்தினாலேயே தங்கள் சக்தியைக் காண்பிக்கின்றனர். ஸ்திரீகளோ அதற்குப் பன்மடங்காக கண்ணீரினால் தங்கள் சக்தியை வெளிப்படுத்துகின்றனர்.

—சாவில்லி.

• • •

ஸ்திரீகள் சங்கமே நன்னடத்தைக்கு மூலபலம்.

—கோத்தி.

• • •

புத்தகங்கள், கலைகள், கல்வி நிலையங்கள், காட்சிகள் எல்லாம் ஸ்திரீகளே. உலகத்தைப் போஷிப்பவர்களும் அவர்களே யாவர்.

—ஷேக்ஸ்பியர்.

• • •

ஸ்திரீகளின் ஒழுக்கத்தில் நம்பிக்கை கொள்வதே குடும்பத்தில் சந்தோஷத்தைக் காண்பதற்கு அஸ்திவாரமாகும்.

—லாண்டார்.

• • •

உலகில் ஒருவன் கஷ்டப்படுவானேயாகில் அவனைவிட அதிகமாக மனவேதனை யடைவது யார்?

தானே சந்தோஷமடைவதைவிட மற்றொருவர் மூலம் அச் சந்தோஷத்தைப் பிறப்பிக்கச்செய்து களிப்படைவது யார்?

கௌரவமடைந்த ஒருவன் சந்தோஷமடைவதைவிட பன்மடங்கு அகமகிழ்ச்சி யடைவது யார்?

வேறொருவர் மேம்பதவி அடைவது கண்டு பொறாமையுறாது சந்தோஷமடைவது யார்?

மற்றவருடைய குற்றங் குறைகளைத் தன்னுடையதே போல் நினைந்து வெளிப்படுத்தாதிருப்பது யார்?

தன்னலமின்றி மற்றவர்பால் நிகழும் அன்பு, ஆசை முதலியவைகளுக்குப் பாத்திரமாவது யார்?

அவள்தான் ஸ்திரீயாகும்.

—வாஷிங்டன் இர்விங்.

எது?
தமிழ்நாட்டில் குறைந்த சந்தாவில்
அதிக பக்கங்களோடு வெளிவரும் தமிழ் மாதப் பத்திரிகை.
"சித்தன்"
ஒன்றே. இனிய கதைகள், ஹாஸ்யம், உலகச் செய்தி, வைத்தியக் குறிப்பு, சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன நிறைந்தது.
வருட சந்தா அணா (8) எட்டே. வெளிநாடு ரூ. 1.
மாதிரிப் பிரதி இனாம். விளம்பர விகிதம் மிகவும் குறைவு.
விபரங்களுக்கு எழுதவும் :—
மானேஜர் :—"சித்தன்", பழனி, S. I.

"கிராம ஊழியன்"
வாரப் பதிப்பு.
ஆசிரியர் :—S. பூரணம் பிள்ளை.
கிராமப் புனருத்தாரணத்தின் பொருட்டுத் தோன்றி மாதம் இருமுறையாக வெளிவந்த "கிராம ஊழியன்" இரண்டாம் ஆண்டின் ஆரம்பமாகிய 25—10—36௳ முதல் பிரதி ஞாயிறுதோறும், நாட்டின் நலத்திற்கான நல்லோரின் கட்டுரைகள் தாங்கி எல்லோரும் கோரும் நல்லதோர் முறையில் வெளிவருகிறது. எல்லா இடங்களிலும் ஏஜெண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதுக.
உள்நாடு : வருட சந்தா ரூ. 3. வெளிநாடு : வருட சந்தா ரூ. 5.
மானேஜர் :—"கிராம ஊழியன்",
துறையூர். (திருச்சி ஜில்லா)

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!
"அறிவுக் கொடி"
ஒரு சிறந்த தமிழ் மாத வெளியீடு.
ஆசிரியர் :—ஸ்ரீமதி சாமி சிதம்பரனார்.
ஒவ்வொரு ஆங்கில௴ 15-ந் தேதியில் வெளிவருவது.
அறிவு வளர்ச்சி, மாதர் முன்னேற்றம், தமிழ் மொழி வளர்ச்சி, விஞ்ஞானம், வைத்தியம், விகடம், சங்கீதம், நாடகம், படக் காட்சி, மணத்தைக் கவரும் சிறு கதைகள் முதலிய சிறந்த பல விஷயங்களும், இனிய பாடல்களும் வெளிவரும்.
உள்நாடு வருட சந்தா ரூ. 1. வெளிநாடு ரூ. 1-8-0.
மானேஜர் :—"அறிவுக் கொடி" ஆபீஸ்,
462, கீழ்க் கடலங்குடித் தெரு, கும்பகோணம்.

"சமரஸம்"
ஓர் மாத வெளியீடு
மக்களின் நல்வாழ்வு, பொருளாதாரநிலை, கிராம சீரமைப்பு, சுகாதார விஷயங்கள் இவைகளை சமநோக்குடன் அபிவிர்த்தி செய்யும் பத்திரிகை.
மானேஜர்:—
சமரஸம் ஆபீஸ்,
விழுப்புரம்.

விடுதலை வெறி யாதெனக் கேட்பாயின்
கேடிலா [illegible]
[காட்டினரெல்லாம்
பொருள் சகப்பேறுகள் சர்வமும் பெற்று
நீடுமிக வாழ்தலே யாம்

விடுதலை

VIDUTHALAI

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்றுஞ் சீர்ச்
செம்மொழியை திருமொழியை
[தேன்மொழியை
தனித்தியங்கும் ஆற்றலுள தொன்மொழியை
[அமிழ்தனைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
[அனுதினமும் பழக்கம் செய்வீர்.

மலர்-2] சென்னை: (2,-12-1936) தாதுவருஷ மார்கழிமீ 9உ புதன்கிழமை [இதழ்-58

கடிதங்கள்

குனியமுத்தூர் வேளாளர் சங்கத் தலைவர்களுக்கு வேண்டுகோள்

நாகரிகம் பரவிவரும் இந்நாட்டில் ஒவ்வொரு சமூகமும் தாங்கள் இதுகாறும் அனுஷ்டித்து வந்த மூடப் பழக்க வழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும் அறவே விட்டு தேச முன்னேற்றத்தில் ஈடுபட்டிருக்கின்றன. ஏனைய சமூகத்தோர் முன்னேற்ற விஷயத்தில் பாடுபட்டுக்கொண்டிருக்கும்போது, குனியமுத்தூர் தேவேந்திர வேளாளர் சமூகம் மட்டும் ஆதிகாலத்து அனுசாரப் பழக்கங்களை விடாது அவைகளில் நம்பிக்கை கொண்டு சாதிக்கட்டு, சமயக்கட்டு என்னும் விஷயங்களில் தலையிட்டுக் கொள்வதானது வருந்தத் தக்கதே. சென்ற 1-9-35 ந் தேதி டிை சமூகத்தைச் சார்ந்த சிலருக்கு சீர்திருத்த மணம் நடைபெற்றது. இதைக் குறித்து அச் சங்கத்தின் தலைவர்கள் மேற்படி மணமக்கள் மீது குற்றங்கள் சாட்டி அவர்கள் தங்கள் இனத்தவரோடு சம்பந்தப்படக் கூடாது என்னும் கட்டுப்பாட்டையும் செய்து வருகின்றனர். பொருளாதார நெருக்கடியான இக்காலத்தில், பணச்செலவு அதிகமின்றியும், மூடப்பழக்க வழக்கங்களை அறவே நீக்கியும், நாகரிகத்திற்குத் தகுந்தாற்போலும் மணஞ் செய்வதில் என்ன குற்றமிருக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை. சமூகம் முன்னேற வழிதேடாமல் இச்சிறு காரியங்களில் தலையிட்டு இவர்கள் குதர்க்கத்தையும், மனவேறுபாட்டையும், ஒற்றுமையையும் குலைத்து வருவதானது வருந்தத் தக்கதே. இனியாவது நமது தேவேந்திர வேளாளர் சங்கத்தலைவர்கள் எவ்வித இடையூறுஞ் செய்யாமல் குலநலத்தைக் கருதி உழைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என். பி. தீவிரம்,
இருகூர் திராவிட முன்னேற்ற சங்கம்.

ஆரம்பப் பள்ளிக்கூடங்கட்கு தமிழாசிரியர்கள் நியமிக்க வேண்டுவது அவசியமா?

ஆசிரியர், 'விடுதலை'

ஐயா! சென்ற சனிக்கிழமை (5-12-36) 'விடுதலை'யில் 7-ம் பக்கத்தில் "தமிழ்ப் பண்டிதர்கட்கு விமோசனம்" என்ற தலைப்பின் ஓர் கட்டுரை வெளிவந்துள்ளது. அதில் 'உயர்தர ஆரம்பப் பள்ளிக் கூடங்கட்குத் தமிழ்ப் பண்டிதர்கள் நியமிக்க வேண்டுவது மிக மிக இன்றியமையாததாகும்' என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆம்! உண்மையே. இது எவ்வோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதோர் செய்தியாவதுடன் பாராட்டப்படக் கூடியதுமாகும். அத்துடன், உயர்தரப் பள்ளிக்கூடங்கட்கும் இன்னும் ஒவ்வோர் தமிழ் ஆசிரியர்கள் நியமித்தல் வேண்டும். ஏனெனின், இப்போது உயர்தரப் பள்ளிகளில் ஒவ்வோர் [illegible] தமிழாசிரியரே இருக்கின்றனர். அவர்களும் எட்டு, ஒன்பது, பத்தாவது வகுப்புகட்கே பாடம் சொல்லித் தருகின்றனர். சில பள்ளிகளில் ஏழாவது வகுப்புகட்கும் அவர்கள் வருதல் உண்டு. பாக்கியுள்ள கீழ் வகுப்புகளுக்குச் சாதாரண நல்ல தமிழறிவில்லாத (ஒரு எஸ். எ. ஆசிரியர் கூட கிடையாது) ஆசிரியர்களே தமிழ்ப் பாடத்தை மாணவர்களுக்கு போதிக்கின்றனர். இவர்களுடைய போதனை எவ்வாறு இருக்கும்? இவர்கள் அப்பாடங்களின் - செய்யுட்களின் கருத்தைச் செவ்வனே உணர்ந்திருந்தாலல்லவா அதனை மாணவர்கட்கு எடுத்துச் சொல்ல முடியும்! இந்நிலையில் அந்த மாணவர்களின் தமிழ் அறிவு சொல்ல வேண்டுவதில்லை! நாளிற்குத் தகுந்தாற் போலத்தானே சேனை நயமாக விருக்கக் கூடும்! இந்த ஆசிரியர்களின் தமிழறிவை விளக்க ஓர் உதாரணம் கூறுவல். ஓர்நாள் ஒரு உயர்தரப் பள்ளியில் ஆறும் வகுப்பில் படிக்கும் ஒரு மாணவனின் வியாச நோட்டை யான் பார்க்க நேர்ந்தது. அதில், "மட்டிலா மகிழ்ச்சியடைந்தான்" என்ற தொடர், சிகப்பு மையினுல் அடிக்கப்பட்டு, மேலே "அதிக சந்தோஷம் கொண்டான்" என்று திருத்தி எழுதப் பட்டிருந்தது. முன்னதை எழுதியவன் அம்மாணவன். பின்னது, தமிழறிவு சிறிதுமில்லாத தமிழ் சொல்லிக் கொடுக்கும் ஒரு சாதாரண ஆசிரியரால் எழுதப் பட்டது. சிறிது நேரத்திற்குப் பிறகு யான் அமைதியடைந்த காலை, அந்த நோட்டு இரண்டாகக் கிழிக்கப்பட்டு என் கையிலிருப்பதை யுணர்ந்தேன். இதற்காக நான் அம்மாணவனிடம் மன்னிப்புக் கேட்க நேர்ந்தது. எனக்கு அப்பொழுது வந்த கோபத்திற்கு அவ்வாசிரியர் என் கண்களில் பட்டிருப்பாராணுல்...! நோட்டுப்பட்ட பாட்டிற்கு அவர் எந்த மூலை! இத்தகைய ஆசிரியர்களிடம் அம்மாணவர்கள் ஒப்புவிக்கப் படுவார்களானுல், அவர்கள் கதி என்ன? மாணவர்களுக்கு இயற்கையாக உண்டாகும் அறிவு கூட கெடுகின்றது. இதற்காக அவ்வாசிரியர்கள் என் மீது சீற்றங்கொள்வதில் பயனில்லை. இவர்கட்கு சென்ற கட்டுரையாளர் (தமிழ்ப் பண்டிதர்கட்கு விமோசனம்) குறிப்பிட்டுள்ளபடி ரகர, றகர பேதமோ அன்றி, னகர, ணகர, நகர பேதமோ அல்லது, ளகர, லகர, ழகர பேதமோ தெரிதல் யாங்ஙனம்? தெரியாதவர்கள் பலர் இருக்கின்றார்கள் என்று கூறுவேன்.

மற்ற, இதுதான் சரியான - தூய தமிழ் வார்த்தைகள் என்று தெரியாதவர் பலரிருக்கின்றனர். ஒரு ஆரம்பப் பள்ளியாசிரியர் 'மரியாதை' என்ற சொல் சரியானதல்ல 'மதியாதி' (கிராம வழக்குச் சொல்) என்பதே திருத்தமான சொல் என்று என்னுடன், யான் எவ்வளவு கூறியும் கேளாது வாதாடினர். யான் என் செய்வது? "மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா தன்றோ!" இவருடைய போதனை மாணவர்களுக்கு எந்த வகையில் பயன் தரும்?

இவ்வுதாரணங்களெல்லாம் எதற்காக இங்கு கூறுகின்றேனென்றல் அவர்கள்மீதுள்ள வெறுப்பாலா? அன்றி பொறாமையாலா? இவை யொன்றிலுமன்று. தமிழ்மொழி முன்னேற வேண்டும்; தமிழை யாவரும் தவறறக் கற்றல்வேண்டும்; கற்றதோடமையாது தூய-தனித் தமிழில் எழுதல்வேண்டும். பேசல் வேண்டும்; நம் தமிழன்னை அரியணையமர்ந்து செங்கோல் ஓச்சும் சீரிய காட்சியை நாம் அனைவரும் கண்ணாரக் கண்டு களிப்பதன் மூலம், கண்கள் பெற்றோர் அடையும் சிறந்த பயனை, அடைந்தவராக வேண்டும் என்ற ஒரே கருத்துப் பற்றியேதான்.

ஆகவே, கனம் கல்வி மந்திரியவர்கள் 'உயர் ஆரம்பப் பள்ளிகட்குத் தமிழாசிரியர்கள் நியமித்தல் வேண்டும்' என்பதுடன், 'இரண்டு தமிழாசிரியர்களில்லாத உயர்தரப் பள்ளிகட்கு, மற்றோர் தமிழாசிரியரை நியமித்தல் வேண்டும்' என்பதனையும் சேர்த்து "உயர் ஆரம்பப் பள்ளிகட்கும், உயர்தரப் பள்ளியின் 'கீழ் வகுப்பு'களுக்கும் தமிழாசிரியர்களை நியமிக்கவேண்டும் என்ற முடிவைச் செய்து தமிழ் உலகத்தின் நன்மதிப்பை அடைவார்கள் என்றும் துணிபுடையேன்.

அவர்கள் அண்மையில் ஆரம்ப ஆசிரியர்களின் சம்பள உயர்விற்காகப் பெரிதும் பாடுபட்டு ஓர் மசோதா நிறைவேற்றியதன் காரணமாக ஒவ்வொரு ஆசிரியர்களும் சுமார் இரண்டு ரூபாய்கள் அதிகம் பெறுகின்றனர். தாங்கள் இன்றைய (9-12-36) 'விடுதலை'யில் குறிப்பிட்டுள்ளபடி நகரங்களில் வாழ்வோர் இரண்டு ரூபாயை அலட்சியமாகக் கருதினும், பெரிதும் கிராமத்தில் வாழும் ஆரம்ப ஆசிரியர்கட்கு அவ்விரண்டு ரூபாய்களும் இரண்டு ஏன்? இருபது பொற்காசுகட்குச் சமானமாகும். எனவே, அஃதே போல இத் 'தமிழாசிரியர்கள் நியமித்தல்' என்ற விஷயத்திலும் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு கனம் கல்வி மந்திரியவர்களை தமிழ் மக்கள், தமிழ் மாணவர்கள் சார்பாக வேண்டிக் கொள்ளுகின்றேன்.

'கல் தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றி மூத்த குடியின் வந்த தமிழ்ப் பெரியோர்களே! தமிழறிஞர்களே!! தோழர்களே!!! ஆங்கிலம் வந்து விட்டது; துயில் நீத்து எழுந்து ஆவன செய்யுங்கள்; காலையாகட்டு மென்று கவலாதிர்கள்; காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டுவது கடமை யல்லவா?

தமிழ் வளர்ச்சியில் பெரிதும் ஊக்கமுள்ள ஆசிரியர் அவர்களே! தாங்கள் "விடுதலை" யில் இதற்காக அதிக இடமளிப்பதுடன், இக் கிளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாயிருந்து வெற்றியினைத் தேடித் தரவேண்டுகின்றேன். "காலத்தாற் செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப் பெரிது" என்பது தாங்கள் அறியாததல்ல.

"க—நி"
திருவையாறு.

சங்கரன் கோயில் பஞ்சாயத்து போர்டு

பார்ப்பனத் தலைவர் கூத்து

காங்கரஸ் மகாசபையின் ஆதிக்கத்தில் பிராமணர்கள் உயர்ந்த ஸ்தானங்களை கைப்பற்றிக் கொண்டார்கள் என்று குறை கூறும்போது காங்கரஸில் சேர்ந்த சில பிராமணரல்லாதார்கள் நூற்றுக்கு மூன்று பிராமணர்களின் ஆதிக்கத்தைக் குறைக்க மற்ற 97 பிராமணரல்லாதார்கள் காங்கரஸில் சேர்ந்து விட்டால் பிராமணர்கள் ஆதிக்கம் குறைந்து போகுமென்று அபிப்ராயம் கொள்ளுகிறார்கள். மற்றும் சிலர் அது தவறு கடுகத்தனை விஷம் கலந்தால் ஒரு பானை சோற்றையும் அழித்துவிடுமென்று அபிப்பிராயப் படுகிறார்கள். ஏராளமான எண்ணிக்கையாக பிராமணரல்லாதார்கள் சேர்ந்தாலும் கூட சிறு தொகையினை ஜெயிக்க முடியாதென்பது சிலருடைய திண்ணமான அபிப்பிராயம்.

இதை நிரூபிக்க சங்கரநயினர் கோவில் பஞ்சாயத்துப் போர்டு சாலச் சிறந்த உதாரணமாகும். மேற்படி போர்டின் அங்கத்தினர்கள் பதிமூன்று. அதில் ஒரே ஒருவர் பிராமணர். அவர் தான் தலைவர். அவரும் கோவில் பூஜை செய்யும் பட்டர். மற்ற பிராமணரல்லாதார்கள் பன்னிரண்டில் பெரும் பணக்காரர்களும் நிறைந்த செல்வாக்குடையவர்களும், பெரிய வியாபாரிகளும், இரண்டு மிட்டாதார்களும் அவர்கள் சம்மந்தியும் அங்கத்தினர்களாயிருக்கிறார்கள். அப்படி இருந்தும் மேற்படி போர்டில் சதா காலமும் தலைவர், பட்டரது சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார்கள். தலைவர், பட்டருடைய அபிப்பிராயமே மற்றெல்லாருடைய அபிப்பிராயம். இந்நகரத்தில் பிரபலமாயிருக்கிற சங்கர நயினர் சுவாமி விக்கிரகத்திடத்தில் எவ்வளவு பக்தி அங்கத்தினர்களுக்குண்டோ அவ்வளவு பக்தி பட்டரிடம் இருக்கிறது. சென்ற 5-9-36ல் யூனியன் ஆபிசில் கூட்டம் கூடாமல் அங்கத்தினர்கள் ஆஜர் ஜாபிதாவை அவரவர்கள் வீட்டுக்கு அனுப்பி கையெழுத்துப் பெற்றுக் கொண்டதாக சில அங்கத்தினர்கள் ஸ்தல அதிகாரிகளிடம் புகார் கொடுத்ததின் பேரில் அவ்விதமாகவே நடந்ததென்று அசிஸ்டெண்டு பஞ்சாயத்து ஆபீஸர் சென்னை ஸ்தலஸ்தாபன இன்ஸ்பெக்டருக்கு ரிப்போர்ட்டு அனுப்பி இருக்கிறார்கள். இந்நகரில் நூற்றுக்கு 99 பேர் பிராமணரல்லாதார் இருக்கிறார்கள். 99 1/2 என்றும் சொல்லலாம். சகல ஜனங்களும் தங்களது பிரதிநிதிகளாக பன்னிரண்டு அங்கத்தினர்களை போர்டுக்கு அனுப்பியும் அவர்களில் ஒரே ஒரு பிராமணர் அவர்களை பொம்மைகளாக ஆட்டி வைக்கிறாரென்றால் பிராமணர்களுடைய சூழ்ச்சியும், வலிமையும் தான் என்னே! பிராமணரல்லாதார்கள் ஒரு ஸ்தல ஸ்தாபனத்தை பூராவாகக் கைக் கொண்டாலும் அதில் மாகாணி அல்லது கால்மாகாணி பங்காவது பிராமண ஆதிக்கம் புகுந்தால் ஏராளமான பிராமணரல்லாதார் நிறைந்த படைக்குள், ஒரே ஒரு விஷப்பாம்பை புகுத்தியது போலாகும். இந்த பஞ்சாயத்துப் போர்டு ஆதிக்கத்தின் அழிவும், பொது ஜனங்களது நன்மையும் எப்பொழுது விமோசனமாகுமோ தெரியவில்லை. ஒன்று பஞ்சாயத்து போர்டை கலைக்கவேண்டும்; அல்லது பொம்மைகளை ஆட்டிவைக்கிற [illegible] பட்டரை தன் சொந்த பரம்பரை அலுவலான கோவில் பூஜைக்கு அனுப்பவேண்டும்; அல்லது இந்தப் பட்டரையும் ஆட்டி வைக்கிற [illegible] வேறிடத்திற்கு மாற்றவேண்டும்.

செங்குந்தர் அபிமானி.

விச்வகர்மர் மகாநாடு

எச்சரிக்கை

வாலிப இரத்தம் ஓடுகின்ற தோழர்கள்!

இன்று பத்திரிகைகளில் வெளிவரும் விச்வகர்மர்களின் தமிழ் மாகாண மகாநாடு பற்றிய அறிக்கைகள் பல நம் கண்களுக்குத் தென்படுகின்றனவே. அதற்கு நாம் செய்ய வேண்டுவது என்ன என்பதை ஆராய்ந்தீர்களா?

இதற்கு முன் மாகாண மகாநாடுகள் ஏழு தொடர்ந்தாற் போல் கூட்டப்பட்டன. பின்னர் சுமார் 12-வருடங்கள்வரை மகாநாடு பற்றிய பேச்சேயில்லை. மகாநாட்டின்பால் பேராசை கொண்ட கும்பகோணம் (வாசகசாலை) தோழர் பலரால் மீண்டும் ஓர் மகாநாடு, பெரும் எதிர்ப்புகளுக்கிடையே வெற்றிகரமாகக் கூட்டப்பட்டது. அது பொறுக்கமாட்டாது போட்டியாக ஓர் மகாநாடு இறந்துபோன ஓர் கமிட்டியால் சில மாதங்களுக்குள் கூட்டப்பட்டது. இப்பொழுது சேலத்தில் மாகாண மகாநாடு கூடப்போவதாகத் தெரிகிறது. எந்த இடத்தில் நடந்தாலும் நமக்குக் கவலையில்லை.

தோழர்களே! இதுவரை நடந்த மகாநாடுகளால் நம் கூட்டத்தாருக்கு (விசுவகர்மருக்கு) ஏற்பட்ட நன்மைகள் என்ன? கும்பகோணம் மகாநாட்டுக்கு முன்னுள்ள மகாநாடுகளின் பயனாக, அரசாங்கத்தாரால் சட்டசபை, ஸ்தலஸ்தாபனம் ஆகியவைகளில் ஸ்தானங்கள் நாமிநேஷன் மூலம் கிடைத்தன. கும்பகோணம் மகாநாட்டின் பயனாக பல சங்கங்கள் ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட்டன. எல்லா மகாநாடுகளுக்கும் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான மக்கள், மோட்டார், ரயில் ஆகியவைகளுக்கு பொருள் செலவு செய்து ஒன்று கூடி விருந்துண்டு களித்தோம். அன்றியும் சட்டசபை மூலம், தம் பெயருக்கு முன் 'பிரமஸ்ரீ' என்றும் பின் ஆச்சாரியார் அல்லது ஆச்சாரி ஆகாரு என்றும் எழுத வேண்டுமென்றும், குலப் பெயரை 'விச்வ பிராமண' என்று அழைக்கப்பட வேண்டுமென்றும், இரண்டு மூன்று தோல்விகளுக்குப் பின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலே கண்ட நன்மைகள் என்று சொல்லப்படுபவைகளில் சங்கங்கள் ஸ்தாபித்தல் என்னும் விஷயத்தைத் தவிர வேறு எதுவும் நன்மையானது தான் என்று எவராலும் ஒப்புக்கொள்ள முடியுமா? முடியாது.

ஏன்? இன்று நமக்கு வேண்டுவது உணவு. நம்மவர்களில் 100-க்கு 99 பேர்கள் நாளொன்றுக்கு ஒரு முறை அரை வயிற்று உணவுக்குக் கூட வழியின்றி வாடிவதங்கித் துடிதுடிக்கின்றார்கள். இவர்கள் பசிப்பிணியைப் போக்குவதற்குரிய வழியினை ஆராய்வதற்காக மகாநாடு தேவைதான். இதற்காகவே இனிமேல் கூடவிருக்கும் மகாநாடுகளில் வாலிபர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டியதுதான். ஆனால், சேலத்தில் நடைபெறப் போகும் மகாநாடோ, பசிப்பிணி தீர்க்கும் மகாநாடாகத் தெரியவில்லை. சட்டசபையில் இப்பொழுது காலியாகவிருப்பதும், அரசாங்கத்தின் கையில் நாமிநேஷன் செய்யத் தகுந்த நிலைமையில் இருப்பதுமான ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களில் நம் கூட்டத்தாருக்கு ஸ்தானம் வேண்டுமென்று கேட்பதற்காகவே இச் சேலம் மகாநாடு கூடப்போவதாகத் தெரிகிறது. சட்டசபை ஸ்தானம், இன்று நம் சமூகம் இருக்கின்ற நிலைமையில் அவ்வளவு முக்கியமானதல்ல. வேறு என்ன முக்கியம்? வயிற்றுக் குணவே. அதற்குக் காரணமாகிய கைத்தொழிலைப் பாதுகாப்பதுதான். சட்டசபை ஸ்தானம் நம்மவருக்கு வேண்டுமென்று கேட்டு அதற்கு அரசாங்கமும் ஒப்புக்கொண்டால் யாரை அங்கு அனுப்புவது? அதற்கு லாயக்கானவர்கள் யார்? என்பது சிந்திக்கத் தகுந்தது.

வெளியுலகம் தெரிந்த பொது மக்களின் நன்மதிப்புப் பெற்ற, பொதுஜன சேவை செய்து அதற்காகவே உயிரையும் கூட தியாகம் செய்யத் துணிகின்ற, கைத்தொழில் பாதுகாப்பு விஷயத்தில் அரசியல் ஞானமும், வீர உணர்ச்சியும், பணியாத பேச்சு வன்மையும் கொண்ட வாலிபச் சிங்கங்களே அதற்குரியவர்களாவர். இவ்வளவு தன்மையும் கொண்டவர், பணக்காரர்களிடையே கிடையாது. வறுமையில் ஆழ்ந்திருக்கும் கூட்டத்தில் தான் கிடைக்கும். அன்னவரைக் கண்டு பிடிக்க வேண்டுமெனின், இன்று சென்னை மாகாணத்தில் தோன்றியுள்ள சுமார் 50 சங்கங்களையாவது கலந்து கொள்ள வேண்டும். அந்தச் சங்கத்தார்கள் தேடிப் பிடித்துக் கொண்டு வருவர் என்பது உறுதி.

தான் 'தோன்றித் தம்பிரான்களாய் நினைத்தபடி ஒரு சிலர் மகாநாடு கூட்ட முன் வருகின்றார்கள். மகாநாடு கூட்ட ஆசைப்பட்டால் மாகாணமெங்கும் இருக்கும் சங்கங்களை கலந்து ஆலோசிக்கவேண்டும். சங்கங்களைப் புறக்கணித்து நடைபெறும் எவ்வித மகாநாடும் மகாநாடு என்று கூறமுடியாது. ஆகவே, பிரதிநிதித்துவமும், வாழ்க்கைக்கு இன்றியமையாத கைத்தொழில் பாதுகாப்பும் அளிக்கின்ற மகாநாடு தேவையாதலால், மேற்கூறிய நோக்கத்தோடு சேலம் மகாநாடு நடைபெறுமென்று பத்திரிகை மூலம் உறுதி கூறப்பட்டால் வாலிபர்கள் பூரணமாக ஒத்துழைப்பார்கள். இன்றேல் வாலிபர்கள் [illegible] நடந்துகொள்வார்கள் என்பது அனுபவத்தில் காணலாம். "வெற்றி என்பது இளைஞருக்கே!"

ஆகவே, பட்டம் பதவி மோகம் கொண்ட பெரியார்களே! இது உங்களுக்கு ஓர் எச்சரிக்கை. வாலிபர்கள், விழிமின்! எழுமின்! ஒன்று படுமின்.

திருச்சி விச்வகர்ம வாலிபர்கள்:— 1. சே. மா. நாகலிங்கப் பத்தர், 2. த. பத்மானந்தம், 3. என். ஆர். பத்மநாபன், 4. டி. கே. பெருமாள், 5. ச. அப்பாவு.

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN, AT THE JUSTICE PRINTING WORKS, 14, MOUNT ROAD, MADRAS. EDITOR: PANDIT S. MUTHUSWAMI PILLAI.

விலை அரை அணா | 8 பக்கங்கள் | மலாய் நாட்டில் 5 சதம் | Regd. No. M. 3298.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா
முன் பணம்

உள்நாடு	
1 மாதம்	... 0 6 0
3 மாதம்	... 1 0 0
6 மாதம்	... 1 14 0
1 வருடம்	... 3 10 0
சென்னைக்கு	
1 மாதம்	... 0 4 0
3 மாதம்	... 0 10 0
6 மாதம்	... 1 4 0
1 வருடம்	... 2 6 0

விடுதலை

VIDUTHALAI
(வாரம் இருமுறை வெளிவரும்)
ஆசிரியர்: பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.

"விடுதலை"
வாரம் இருமுறை பதிப்பு சந்தா.
முன் பணம்

வெளிநாடு	
1 மாதம்	... 0 10 0
3 மாதம்	... 1 14 0
6 மாதம்	... 3 12 0
1 வருடம்	... 7 4 0

சர்க்கார், முனிசிபாலிட்டி,
ஜில்லா போர்டுகளுக்கு:
உள்நாடு: வருடம் ரூ. 7 8 0
சென்னை: ,, ரூ. 4 8 0

மலர்-2] சென்னை: (26-12-1936) தாது௵ மார்கழி௴ 12௳ சனிக்கிழமை [இதழ்-59

ஜஸ்டிஸ் கட்சியாரின் எதிர்கால வேலைத் திட்டம்

—:o:—

வரப் போகும் அரசியலை அமல் நடத்துவது

சாத்தியமானவரை ஜனங்களுக்கு நன்மை செய்வது

நில வரிக் கொள்கையைத் திருத்தி யமைப்பது

பஞ்சாயத்துகளை விருத்தி செய்வது

கடன் சமரஸ சட்டங்கள் இயற்றுவது

கட்டாய ஆரம்பக் கல்வி ஏற்படுத்துவது

கிராமப் புனருத்தாரணம் செய்வது

திவான்பகதூர் ஏ. அப்பாதுரைப் பிள்ளை அறிக்கை

ஜஸ்டிஸ் கட்சிப் பிரதம கொறடாவான திவான்பகதூர் ஏ. அப்பாத்துரைப் பிள்ளையவர்கள் ஜஸ்டிஸ் கட்சியின் எதிர்கால வேலைத் திட்டத்தைப் பற்றி வெளியிட்டிருக்கும் அறிக்கையாவது:—

சமீபத்தில் அரசியல் சீர்திருத்தம் வரப்போகிறது. அப்பொழுது தேச நிருவாகத்தில் ஜனங்கள் அதிகப்படியான பங்குகொள்ள வேண்டியதாக ஏற்படும்; தற்கால ஒதுக்கப்பட்ட இலாகாக்கள், மாற்றப்பட்ட இலாகாக்கள் என்ற வித்தியாசங்கள் ஒழிந்து, பூரண மாகாண சுயஆட்சி ஏற்படும். ஆகவே, மாற்றப்பட்ட இலாகாக்களை இதுநாளும் நிர்வாகம் செய்து வந்த ஜஸ்டிஸ் கட்சியார், இதுவரைத் தாம் செய்து வந்த வேலைகளையும், இனிமேல் செய்யப்போகிற வேலைகளையும் தேச மகா ஜனங்களுக்குத் தெரிவிக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

(2) ஜஸ்டிஸ் கட்சியார் இதுவரை சாதித்த வேலைகளை பொது ஜனங்கள் அறிந்தே இருக்கிறார்கள். எல்லா சமூகங்களுக்கும் சம சந்தர்ப்ப மளிப்பதும் தேசத்தின் பொதுவான முன்னேற்றமுமே ஜஸ்டிஸ் கட்சியார் வேலையின் அடிப்படையான கொள்கைகளாக இருந்து வந்திருக்கின்றன. கிராமவாசிகள் க்ஷேமாபிவிர்த்தி, ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட சமூகங்களின் முன்னேற்றம், பொது ஜன சுகாதார அபிவிர்த்தி, நீர்ப்பாசனம் (போக்குவரத்து வசதிகள், குடிதனைச் செட்டு) கூட்டுறவு பாங்கி ஏற்பாடு, சகல சமூக ஆண் பெண் குழந்தைகளுக்கு சம வசதியுடன் ஆரம்பக் கல்வி முன்னேற்றம், அறநிலையப் பாதுகாப்பு, குடியிருப்பு பாத்தியதை, குடிவாரப் பாதுகாப்பு, கிராம வாசிகளுக்கும் நகர வாசிகளுக்கும் அதிகப்படியான நலமேற்படும் முறையில், ஸ்தலஸ்தாபன முனிசிபல் நிர்வாகம் நடத்துதல் முதலியவைகளே ஜஸ்டிஸ் கட்சியாரின் முக்கியமான நோக்கங்களாக இருந்து வந்திருக்கின்றன.

மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு விஷயங்களையும்பற்றி எவ்வளவோ விஸ்தாரமாக எழுதலாம். ஆனால், அவைகளை பொது ஜனங்கள் ஏற்கனவே அறிந்திருப்பதினால் மீண்டும் விளக்கிக் கூற நாங்கள் விரும்பவில்லை. எனவே, எங்களது எதிர்கால வேலைத் திட்டத்தைப்பற்றிச் சுருக்கமாகக் கூற விரும்புகிறோம்.

(3) எங்கள் எதிர்கால வேலைத் திட்டத்தை விளக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எங்கள் கட்சிக் கொள்கைகளைப் பற்றிக் கூற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஏனெனில், எங்கள் வேலைத் திட்டங்களுக்கெல்லாம் அந்தக் கொள்கைகளே அடிப்படையாக இருக்கின்றன.

எங்கள் கொள்கைகள் ஆவன

(A) பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக, சட்ட வரம்புக் குட்பட்ட நியாய முறைகளினால் சாத்தியமான மட்டும் விரைவாக சுயராஜ்யம் பெறுவது.

(B) எல்லாப் பொது ஸ்தாபனங்களிலும் சர்க்கார் சர்விசிலும் எல்லா சமூகங்களுக்கும் சமமான பிரதிநிதித்துவமும், சந்தர்ப்பமும் அளித்து எல்லா வகுப்புகளுக்குள்ளும் நல்லெண்ணத்தையும், ஒற்றுமையையும் உண்டுபண்ணுவது. கடைசியில் எல்லா சமூகங்களும் ஒன்றுபடுவதற்கு அநுகூலமாக ஒவ்வொரு சமூகத்தையும் சீர்திருத்துவது.

(C) தென்னிந்தியாவிலுள்ள சகல சமூகங்களுடையவும், கல்வி, சமூக, பொருளாதார கைத்தொழில், விவசாய, அரசியல் முன்னேற்றங்களுக்காகப் பாடுபடுவது.

(D) முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி தென்னிந்திய பொது ஜன அபிப்பிராயத்தை உருப்படுத்தி அதைத் தாராளமாக வெளியிட வசதியுண்டுபண்ணுவது.

மேலேகுறிப்பிட்ட லக்ஷியங்களை நிறைவேற்றுவதற்காக தேவையான வேலைகளை யெல்லாம் செய்வது.

4. அரசியல்

கட்சிக் கொள்கைகளுக்கு அநுகுணமாகவே இதுவரை வேலைத் திட்டம் வகுக்கப்பட்டு வந்திருக்கிறது. மேற்கொண்டும் கட்சிக் கொள்கைகளுக்குப் பொருத்தமாகத் திட்டம் வகுக்கவே முயற்சி செய்யப்படும்.

சீர்திருத்தங்கள் குறைபாடுடையனவா யிருந்தாலும் பிரிட்டிஷ சாம்ராஜ்யத்துக்குள்ளே குடியேற்ற நாட்டந்தஸ்துப் பெறுவதை லட்சியமாக வைத்துக்கொண்டு தேச மகா ஜனங்களுக்கு சாத்தியமான நன்மைகளையெல்லாம் செய்யும் முறையில் புதிய சீர்திருத்தத்தை ஜஸ்டிஸ் கட்சியார் அமல் நடத்துவார்கள். இதற்காக சட்ட வரம்புக்குட்பட்ட சகல முறைகளையும் ஜஸ்டிஸ் கட்சியார் கையாளுவார்கள்.

செயலிலும், கொள்கையிலும் வகுப்பு நோக்குடன் இன்றி பரந்த நோக்குடன் வேலைசெய்யும் கட்சி ஜஸ்டிஸ் கட்சி ஒன்றே. சர்க்கார் சர்விஸிலும், இதர இடங்களிலும் ஒரு சமூகத்தார் ஏகபோக உரிமை பாராட்டி வருவது இந்நாட்டின் துரதிர்ஷ்டமாக இருந்து வருகிறது. அதை ஒழித்து எல்லா சமூகங்களுக்கும் சம சந்தர்ப்பங்களும், உரிமைகளும் அளிக்கும் பொருட்டு எல்லா ஸ்தாபனங்களிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்ற ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கையே சமூக வேற்றுமைகளை ஒழித்து ஒற்றுமையை உண்டுபண்ண ஏற்ற மார்க்கமாக இருந்து வருகிறது. ஒரு நாட்டிலே தேசிய உணர்ச்சி விருத்தியடைய வேண்டுமானால் சமூக ஒற்றுமை ஏற்பட்டுத் தீரவேண்டும். எனவே, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் மூலமே சமூக ஒற்றுமையும், பரஸ்பர நல்லெண்ணமும், திருப்தியும் ஏற்படுமென்பது ஜஸ்டிஸ் கட்சியாரின் திடமான நம்பிக்கை.

5. நிலவரிக் கொள்கை

விலைவாசிகள் வீழ்ச்சியினாலும், உலகப் பொருளாதார மந்தத்தினாலும், நிலவரிவருமானம் துரதிர்ஷ்டவசமாகக் குறைந்து வருகிறது, அத்துடன் நிலவரியை வஜா செய்ய வேண்டுமென்ற கூச்சலும் தொடர்ச்சியாகக் கேட்கப்பட்டு வருகிறது.

நிலவரி, கலால், வன வருமானந்தான் மிகவும் குறைவாக இருக்கிறது. வருமானம் குறையும் போது தேசோத்தாரண வேலைகள் தடைபடுகின்றன. கைத்தொழில் அபிவிர்த்தி, விவசாய முன்னேற்றத் திட்டங்களுக்கும் பாதகம் ஏற்படுகிறது. இவைகளுக்கெல்லாம்பணம் தேவையாக இருக்கிறது. எனவே, தேச நிருவாகத்துக்குத் தடை ஏற்படாமல் சாத்தியமான வழிகளில் எல்லாம் வருமானத்தைப் பெருக்கத் தேவை யுண்டாகிறது.

எவருக்கும் பளுவேற்படாமல் நியாயமான முறையில் நிலவரி முறையை வகுக்கத் தேவையான முயற்சிகள் செய்யப்படும்.

தற்காலப் பொருளாதார மந்தகாலத்தில் மறு பைசல் செய்வதை ஆதரிக்க முடியாதென்று சட்டசபையிலும், மகா நாடுகளிலும் ஜஸ்டிஸ் கட்சியார் வற்புறுத்தியே வந்திருக்கிறார்கள். எனவே, போதுமான அளவுக்கு வரி வஜா செய்ய ஜஸ்டிஸ் கட்சியார் மேற்கொண்டும் முயற்சி செய்தே வருவார்கள்.

மறு பைசல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இடங்களில் விலை வாசியை முன்னிட்டு வரிகளை உயர்த்துவதில்லையென்றும் அந்தப் பொறுப்பை புது அரசியல் திட்டத்தின்படி ஏற்படும் சர்க்காருக்கு விட்டுக் கொடுப்பதென்றும், ஜஸ்டிஸ் கட்சியார் தூண்டுதலின்பேரிலே சர்க்கார் சம்மதித்திருக்கிறார்கள். மறுபைசல் ஏற்பாடுகள் யோசனைக்கு வரும்போது ரயத்துகளுக்கு அதிகப்படியான நன்மைகள் கிடைக்கும்படி பார்த்துக் கொள்ளப்படும்.

நிலச்சுவான்தார்களும், விவசாயிகளும் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து ஒற்றுமையுடன் வேலை செய்தால் தான் விவசாயிகள் பிரச்சினை திருப்திகரமாக முடியுமென்பது ஜஸ்டிஸ் கட்சியார் நம்பிக்கை. சமீபத்தில் ஜமீன் சட்டம் திருத்தப்பட்டபோது மகாநாடுகள் மூலம் நிலச்சுவான்தார்களுக்கும், விவசாயிகளுக்கும் உள்ள குறைகளை நிவர்த்தி செய்ய முயற்சி செய்யப்பட்டது. அம்முயற்சி வெற்றியும் பெற்றது. குடிகளுக்கு, குடி இருப்பு உரிமை, மேய்ச்சல் வசதிகள், நீர்ப்பாசன உரிமை முதலியன கிடைக்கும் பொருட்டு ஜஸ்டிஸ் கட்சி நிலச்சுவான்தார் மெம்பர்கள் தூண்டுதலினாலேயே ஜமீன் சட்டத்தில் பல திருத்தங்கள் செய்யப்பட்டன,

பெரிய நிலச்சுவான்தார்களும், ஜமீன்தார்களும் இருக்க வேண்டியது அவசியமென ஜஸ்டிஸ் கட்சியார் ஒப்புக் கொள்வதுடன் அவர்கள் க்ஷேமத்துக்கு குடிகள் திருப்தியாகவும், செழிப்பாகவும் இருக்க வேண்டியது அவசியமெனவும் ஜஸ்டிஸ் கட்சியார் ஜமீன்தார்களுக்கு எடுத்துக் காட்டி வருகிறார்கள்.

ஆகவே, குடிகளின் நியாயமான குறைபாடுகளை யெல்லாம் பரிசீலித்து அவர்களது நியாயமான உரிமைகளைப் பாதுகாக்க ஜஸ்டிஸ் கட்சியார் சதா முயற்சி செய்து கொண்டே இருப்பார்கள்.

விவசாயப் பொருள்களின் விலைவாசிகள் குறையும் போது ஜமீன் குடிகளின் வாரங்களையும் குறைக்க வேண்டு மென்று ஏற்கனவே சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையை முடிவு செய்யும் விஷயத்தில் ஜமீன் குடிகளும், ஜமீன்தார்களும் ஜஸ்டிஸ் கட்சியாருடன் ஒத்துழைத்தே வந்திருக்கிறார்கள்.

சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட இனாம் சட்டத்தினால் இனாம்குடிகளும், இதர ஜமீன் குடிகளும் அநேகமாக சம நிலையை அடைந்திருக்கிறார்கள்.

இந்தச் சட்டத்தினால் மாகாணம் முழுதுமுள்ள சுமார் 50 லக்ஷம் இனாம் குடிகள் நன்மையடைந்திருக்கிறார்கள்.

ஜஸ்டிஸ் கட்சியார் எவ்வளவோ எதிர்ப்புகளுக்கிடையில் மிகவும் பாடுபட்டு இனாம் சட்டத்தை நிறைவேற்றி வைத்திருக்கிறார்கள்.

6. நகர சபைகளும், ஸ்தல ஸ்தாபனங்களும்

நகர சபைகளில் நிர்வாக வேலைக்கு, நகரசபைகளுக்கும் சர்க்காருக்கும் ஜவாப்தாரிகளான கமிஷனர்களை நியமனம் செய்து சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதனால், நகரசபைத் தலைவர்களுக்கு எவ்வளவோ ஆறுதல் ஏற்பட்டிருக்கிறது. நக. சபை, ஸ்தல ஸ்தாபன க்ஷேமத்தைக் கருதி, நகரசபை, ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகளை இடமாற்றும் அதிகாரம் சர்க்காருக்கு இருக்கும்படி ஸ்தல ஸ்தாபனச் சட்டங்கள் திருத்தப்பட்டிருக்கின்றன.

இதனால் நகரசபை, ஸ்தல ஸ்தாபன உத்தியோகஸ்தர்கள் சர்க்கார் ஒழுங்கு முறைகளை மீறி நடவாமல் தடுக்கப்பட்டிருப்பதுடன் ஸ்தலக் கட்சிப் பிணக்குகளினால் அவர்களுக்குத் தொல்லைகள் ஏற்படாமலிருக்கவும் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

மேலும், சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி நகரசபை ஸ்தல ஸ்தாபன அபிவிருத்திக்குத் தேவையான ஏற்பாடுகள் எல்லாம் அவ்வப்போது செய்யப்படும்.

தாலூகா போர்டுகள், நிர்வாகச் செலவுக்குப் பணமில்லாமல் கஷ்டப் பட்டதினால் நிறுத்தப்பட்டன. தாலூகா போர்டு நிர்வாகத்தில் இருந்த இடங்கள் 1934 ஏப்ரல் முதல் ஜில்லா போர்டு நிர்வாகத்துக்கு மாற்றப்பட்டன. ஸ்தல ஸ்தாபன நிருவாகத்தைச் சீர்படுத்தும் பொருட்டு, சில ஜில்லாபோர்டுகள் பிரிக்கப்பட்டன. பிரிக்கப்பட்ட ஜில்லா போர்டு ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தலைவரும், உபதலைவரும் ஏற்படுத்தப்பட்டனர். பொருளாதார நெருக்கடியினால் பிரிக்க வேண்டிய ஏனைய ஜில்லா போர்டுகளும் காலக்கிரமத்தில் பிரிக்கப்படும். ஜில்லா போர்டுகளைப் பிரிவினை செய்வது சம்பந்தமான வேலைகளை கவனிக்கும் பொருட்டு ஒரு ஸ்பெஷல் உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

7. பஞ்சாயத்துகள்

லோக்கல் போர்டு ஆக்டின்படி அமைக்கப்பட்ட யூனியன் போர்டுகளும், 1920-வது வருஷத்திய சென்னை கிராமப் பஞ்சாயத்தார் சட்டப்படி அமைக்கப்பட்ட பஞ்சாயத்து போர்டுகளும் 1930-வது வருஷத்திய XI-வது சட்டப்படியுள்ள பஞ்சாயத்துகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. ஸ்தல நிருவாக சம்பந்தமாக அவைகளுக்கு ஏராளமான அதிகாரங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன குடிநீர் உற்பத்தி ஸ்தானம், மார்க்கட்டுகள், வண்டிப் பேட்டைகள், கைத் தொழில்கள், ஆலைகள், கிராம ரஸ்தாக்கள், பொது ஸ்தலங்கள், முதலியவைகளை பஞ்சாயத்துகள் மேல் பார்த்து நிர்வகித்து வருகின்றன. கிராம வனங்கள், நீர்ப்பாசன வேலைகள் முதலியவைகளையும் பஞ்சாயத்து நிர்வாகத்துக்கு விட்டுக் கொடுக்கலாம். வீட்டு வரி முதலியன வசூல் செய்வதைப்பற்றி பஞ்சாயத்துகள் சர்க்காருக்கு சிபார்சு செய்யலாம். ஜில்லா போர்டு, ஸ்தல ஸ்தாபன சர்க்கார் அதிகாரிகளுக்கு சில விஷயங்களில் கட்டுப்பட்டு, பஞ்சாயத்துகளும் லோக்கல் பண்டு நிர்வாகத்தைப் பொறுத்த

(இதன் தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

ஜஸ்டிஸ் கட்சியாரின் எதிர்கால வேலைத் திட்டம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வசமாயில்ல சுய ஆட்சி ஸ்தாபனங்கள் ஆகிவிட்டன.

கிராம ஜனங்களின் தேவைகளை கவனித்து, சரியானபடி பூர்த்தி செய்ய வசதி கிடைக்கும்படி கிராமப் பஞ்சாயத்துகளை விருத்தி செய்ய ஜஸ்டிஸ் கட்சியார் மேற்கொண்டும் தேவையான முயற்சிகள் எல்லாம் செய்வார்கள்.

(8) கூட்டுறவு ஸ்தாபனங்கள்

கூட்டுறவு ஸ்தாபனங்கள், கிராம வாசிகள் கடன் பளுவைக் குறைக்க தேவையான முயற்சிகள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன.

மத்திய நில அடமான பாங்கி விடுத்துள்ள கடன் பத்திரங்களில் ஒன்றேகால் கோடி ரூபாய்க்கு சர்க்கார் உத்தரவாதம் சொல்வதாக ஒப்புக் கொண்டிருப்பது மூலம் நில அடமான பாங்கிகளின் நிலைமை மிகவும் விருத்தியடைந்திருக்கிறது.

இந்த ஏற்பாட்டின்படி கடன் வாங்க ஜனங்கள் ஏராளமாக முன் வருகிறார்கள். மேற்கொண்டும் அவர்கள் அதிகமாக முன் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அது சம்பந்தமான தஸ்தாவேஜிகளுக்கு கட்டணம் வாங்கப்படுவதில்லை. மற்றும், தேவையான சலுகைகள் எல்லாம் காட்ட ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. கூட்டுறவு நாணய சங்கங்களை விருத்தி செய்யவும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. கரும்புச் சாகுபடி, பழவிற்பனை, நெசவுத் தொழில், குடிசைக் கைத் தொழில் முதலியவைகளையும் கூட்டுறவு முறையில் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

சமீபத்தில் விவசாயக் கடன் சட்டத்தில் சர்க்கார் செய்த திருத்தங்களினால், கால நிலை வேற்றுமையினால் ஏற்பட்ட கஷ்டங்களைத் தவிர இதர கஷ்டங்களுக்காகவும் கடன் வாங்க விவசாயிகளுக்கு வசதியளிக்கப்பட்டிருக்கிறது.

விவசாயிகள் கடன் பளுவைக் குறைப்பதற்காக கடன் சமரச போர்டுகள் ஏற்படுத்தும் விஷயங்களிலும் ஜஸ்டிஸ் கட்சியார் எப்பொழுதும் ஆதரவளித்தே வந்திருக்கிறார்கள்.

தம்துபட் சட்டப்படி முதலை விட இரட்டிப்பான வட்டியை ஒரே முறையில் வசூலிக்க முடியாது. சென்னை மாகாணத்தில் இந்தச் சட்டம் அமுலில் இல்லாமலிருந்தாலும், சென்னை கடன் சமரசச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ள ஒரு திருத்தம் மூலம் முதலைவிட இரட்டிப்பான வட்டியை எந்தக் கடன்காரரும், வசூல் செய்யக் கூடாதென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது விவசாயக் கடனாளிகளுக்கு மிகுந்த ஆதரவளிக்கும்.

நீண்ட காலக் கடன்களை சிறு சிறு தவணைகளாகச் செலுத்தவும், குறைந்த வட்டியில் அது வகைக்கும் கடன் கொடுக்கவும் ஜஸ்டிஸ் கட்சியார் ஏற்பாடு செய்வார்கள்.

கிராமவாசிகளின் க்ஷேமத்துக்குத் தேவையான சட்டங்கள் இயற்ற ஜஸ்டிஸ் கட்சியார் ஒரு பொழுதும் பின்வாங்கமாட்டார்கள். மாகாணத்திலுள்ள பல இறப்பட்ட ஐக்கிய நாணய ஸ்தாபனங்களை யெல்லாம் ஒன்றாக இணைத்து விவசாயிகள் கடன் பளுவைக் குறைக்கச் சௌகரியம் செய்யும் பொருட்டு ஒரு தனி ஸ்தாபனம் ஏற்படுத்தவும் ஜஸ்டிஸ் கட்சியார் எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள்.

மக்கள் கடனாளிகளாவதற்கு வேலையில்லாத் திண்டாட்டமும் காரணம். ஆகவே, குறைந்த வட்டிக்கும் தேவையுடையவர்களுக்குக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்வதுடன் ஏராளமானபேருக்கு வேலை கொடுப்பதற்காக பெரிய கைத்தொழிற் சாலைகள் ஸ்தாபிக்கவும் வசதிகள் செய்து கொடுக்கப்படும். விவசாயம் மூலம் கிராமவாசிகளுக்கு வேலை கிடைப்பது கஷ்டமாய் விட்டதினால் கைத்தொழில் ஸ்தாபனங்கள் மூலமே கிராம வாசிகளுக்கு வேலை கொடுக்க முடியும். போஸ்டு ஆபீஸ் முதலிய சர்க்கார் ஸ்தாபனங்கள் மூலம் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பெற்றுவரும் இன்ஷியூரன்ஸ் வசதிகள் எல்லோரும் பெறும்படி ஏற்பாடுகள் செய்யப்படும்.

9. கல்வி

10 வருஷகாலத்துக்கு எல்லாருக்கும் ஆரம்பக் கல்வியளிப்பதே ஜஸ்டிஸ் கட்சியின் லட்சியம். சில குறிப்பிட்ட இடங்களில் கட்டாய ஆரம்பக் கல்வி ஏற்பாடு அமுலில் இருந்து வருகிறது. சொற்ப காலத்துக்குள் கட்டாய ஆரம்பக் கல்வி ஏற்பாடு எங்கும் அமுலில்கொண்டு வரப்படும்.

ஆரம்பக் கல்விச் சட்டத்தைத் திருத்த ஏற்கனவே முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. உத்தேசிக்கப்பட்டிருக்கும்படி, உயர்ந்த வகுப்பு வரைப் படியாமல் இடையில் பள்ளிப் படிப்பை நிறுத்துபவர்களுக்குத் தண்டனையளிக்கப்படும். இதனால் ஆரம்பக் கல்வி விஷயத்தில் ஏற்படும் வீண்செலவு தடைபடும். ஆரம்பக் கல்விப்பயிற்சிக்குத் தடையேற்படாமல் இருக்கும் பொருட்டு ஏழை மாணவர்களுக்கு மத்தியான சாப்பாடு கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் மத்தியான சாப்பாடு கொடுக்கும் விஷயத்தில மேற்கொண்டும் கண்டிப்பான ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாணவர்களுக்கு இலக்கிய கல்வியளிப்பதுடன் தொழிற் கல்வி கற்பிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

தகுதியற்ற பள்ளிக்கூடங்களுக்கு அளிக்கப்பட்டு வரும் கிராண்டை நிறுத்தல் செய்துவிட்டு தகுதியுடைய பள்ளிக்கூடங்களுக்கு அதிகப்படியான கிராண்டுகள் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

கிராண்டு கொடுக்கும் விஷயத்தில் இதுவரையில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் ஆள் வீத முறை நிறுத்தப்பட்டு விடும். ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த மாதவாரி கிராண்டு 12 ரூபாயி லிருந்து 13 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

எல்லாருக்கும் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ள வசதியளிக்கும் பொருட்டு ஸ்பெஷல் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து பருவமடைந்தவர்களுக்கும் கல்வி புகட்ட மாகாணம் முழுதும் ஏற்பாடுகள் செய்யப்படும். யூனிவர்சிட்டி, செக்கண்டரி, பிரைமரி கல்விகளுக்கு மொத்தம் 232 லக்ஷம் ரூபாய் வருஷந்தோறும் செலவாகிறது.

கைத் தொழில் விவசாயக் கல்விகளுக்கு சுமார் 4 லக்ஷம் ரூபாய் செலவாகும். இது மொத்தக் கல்விச் செலவில் 1·8 சதமானமாகிறது. இந்தத் தொகை சர்க்கார் கைத் தொழில் சாலைக்கும், சர்க்கார் சாங்கேதிகக் கல்விச் சாலைக்கும் செலவு செய்யப்படுகிறது. சர்க்கார் சாங்கேதிகக் கல்விச்சாலை உயர்தர எலக்ட்ரிக்கல், மெக்கானிக்கல் கலைப் பயிற்சியளித்து வருகிறது. அத்துறைகளில் நிபுணர்களை உற்பத்தி செய்யவும் அது முயலுகிறது. அப்பள்ளிக் கூடத்தை விருத்தி செய்ய ஜஸ்டிஸ் கட்சியார் மேலும் முயற்சி செய்வர்.

கைத்தொழிற் பயிற்சி யளிக்க ஒரு உருவான திட்டம் போடப்படுகிறது. ஒவ்வொரு ஜில்லாத் தலை நகரத்திலும் ஒவ்வொரு கைத் தொழில் கல்விச் சாலை ஸ்தாபிக்கவும் அந்தந்த இடத்துக்குப் பொருத்தமான கைத் தொழில்களில் மாணவர்களைப் பழக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

10. குடி

முன்னமே கூறியுள்ளபடி கலால் வருமானம் தற்பொழுது சிறிது சிறிதாகக் குறைந்து வருகிறது. எதிர்கால சர்க்கார் கலால் வருமானத்தில் இனிநம்பிக்கை வைப்பதில் பிரயோஜனமில்லை. இவ் வருமானத்திற்கு ஈடு செய்ய வேறு வழிகளைக் கண்டு பிடித்தாக வேண்டும். குடி ஒழிப்புப் பிரச்சினை இதன் மூலம் தானாகவே தீர்ந்து விடும்.

மேலும், குடியை ஒழிக்க வேண்டிக் கள், சாராயம் முதலிய வற்றிற்கு காண்பிக்கப்படும் சலுகையைத் தவிர்க்கவும், திருட்டுத்தனமாக சாராயம் காய்ச்சப் படுவதைத் தடுக்கவும், சட்டமூலம் இயன்றவற்றைச் செய்ய கட்சி தன் முழுப் பலத்தையும் கொண்டு பாடுபடும்.

11. தீண்டாமை

சமூக சமத்வம், சகோதரத்வமே கட்சியின் அடிப்படையான கொள்கைகளில் முக்கியமான தாகும். தீண்டாமையை வேருடன் களைந்தெறிய கட்சி கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது. பாடசாலைகள், கல்லூரிகள், குடி தண்ணீர், பொது காட்சிச் சாலைகள், மற்றும் பல பொதுவிடங்கள் முதலியவற்றிலும் தாழ்த்தப்பட்ட மக்களும் யாதொரு நிர்ப்பந்த மின்றி இதர ஜாதியினருடன் சமத்துவமாய் இருந்துவர, சட்டபூர்வமாகவும் கட்சி தன்னாலானவற்றைச் செய்ய பின்வாங்காது.

எம்மாணவனாவது வகுப்பு வித்தியாசக் காரணத்தைக் கொண்டு எப்பாடசாலையிலும் சேர்வதற்கு அநுமதி மறுக்கப்படுமேயானல், அப்பாடசாலையை அங்கீகரிப்பதில்லையென்றும், அப்பாடசாலைக்கு நன்கொடை யளிப்பதில்லையெனவும் சென்னை ஆரம்பக் கல்விச் சட்டத்தில் கண்டிருக்கிறது. அதைக் கண்டிப்பாக அமுலுக்குக் கொண்டு வருவதன் மூலம் தாழ்த்தப்பட்ட (ஷெட்யூல் வகுப்பு) மக்களுக்குத் தற்பொழுதிருந்து வரும் தடையும் கொடிப்பொழுதில் மறைந்து விடுமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

1933-ம் வருஷத்திய திருத்தச் சட்டப்படி பஞ்சாயத்தின் மேற்பார்வையிலிருந்து வரும் கிணறுகள், குளங்கள், தண்ணீர்த் தேக்கங்கள் முதலியவற்றில் ஜாதி, மத வித்தியாசமின்றி எம்மக்களும் அநுபவிக்கலாமென்று கண்டிருக்கிறது. கிராமப் பஞ்சாயத்துக்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களின் பிரதிநிதித்துவத்திற்கும், ஸ்தல ஸ்தாபன ஊழியங்களில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தை கண்டிப்பாய் அனுசரிக்கவும், ஸ்தல ஸ்தாபன போர்டு சட்டத்தில் விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக சட்டங்கள் மேலும் வேண்டியிருந்தால், அவைகளும் இயற்றப்படும்.

12. கிராம சுகாதாரம்

கிராம சுகாதாரமே கட்சியின் பிரதம நோக்கமாயிருந்து வருகிறது. வாழ்க்கையை இன்புறச் செய்வதற்கு சுத்தம், சுகாதாரம் என்பவை அவசியம் என்பதை விவசாயிகளுக்கு போதிக்க வேண்டி ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும், ஒவ்வொரு சுகாதார இன்ஸ்பெக்டரை அளிக்க நோக்கங் கொண்டுளது.

சேரி அபிவிருத்தி

கிராமங்களிலும், நகரங்களிலும் சேரி அபிவிருத்திக்கான எல்லாக் காரியங்களையும் செய்ய கட்சி தன் முழு பலத்தையும் செலுத்தும். சேரிகளில் நெருக்கத்தைத் தவிர்க்கவும், சுகாதார முறைப்படி புதிய வீடுகள் அமைக்கவும் தகுந்த திட்டத்தின்மீது முயற்சிகள் கையாளப்படும்.

ஒவ்வொரு கிராமத்திற்கும் சுத்தமான தண்ணீர் சப்ளை செய்வதற்கு ஒரு திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கிறது. அடுத்த 10 வருஷங்களில் மாகாணத்தின் அதிகப்படியான வருமானத்தில் இச் செலவு சேரும்.

சேரிகளைத் திறம்பட நிர்வகிக்கவும், நகர மக்கள் அநுபவிக்கும் வசதிகளை சேரி மக்களும் அநுபவிக்கச் செய்யவும் வேண்டி சென்னை நகர முனிசிபல் திருத்தச் சட்டத்தில் விதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. மற்ற ஸ்தலங்களுக்கும் கால காலத்தில் சட்டங்கள் அதே போன்று இயற்றப்படும்.

13. போக்குவரத்துகள்

கிராம போக்குவரத்துக்களை அபிவிருத்தி செய்ய வேண்டுவதே கட்சியின் இடைவிடா நோக்கமாயிருந்து வருகிறது.

கிராமங்களை ஒன்றோடொன்று இணைக்கவும், தனது விளைபொருள்களை முக்கியமான சந்தைகளுக்கு கிராமவாசி கொண்டு செல்லவும், கிராமங்களில் வண்டிப் போக்குவரத்துக்கான தக்க ரோடுகளை அமைக்கவும், கடைசியில் அவற்றையெல்லாம் கிராமத்தின் பெரிய ரோட்டில் கலக்கும்படி செய்யவும் நகரிலுள்ள வைத்திய வசதிகளை கிராமவாசியும், கஷ்டமின்றி அடையும்படிச் செய்யவும் செலவிடாதபணம் சரியான முறையில் செலவிட்டதாகாது.

இது சம்பந்தமாக ரோடு அபிவிருத்தி விசேஷ இஞ்சினியர் திரு. வைப்பன் தயாரித்த திட்டம் உடனே அமுலுக்குக் கொண்டுவரப்படும். மாகாணம் முழுமைக்கும் இத்திட்டப்படி 5 கோடி ரூபாய்கள் பிடிக்குமென கணக்கிடப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக இந்தியா சர்க்காரிடமிருந்து கடன் வாங்கிக் கொள்வதெனவும், மத்திய சர்க்காரிடமிருந்து பெட்ரோல் சம்பந்தமாக வருஷா வருஷம் கிடைக்கும் 16 லக்ஷம் ரூபாயிலிருந்து இக்கடனை திருப்பி அடைத்து விடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற பட்ஜட் கூட்டத்தின் பொழுது இது சம்பந்தமாக சட்டசபையின் அனுமதியும் பெறப்பட்டிருக்கிறது.

14. வைத்திய உதவி

வைத்திய உதவியை அதிகரிக்க முயற்சிகள் கையாளப்படும். ஒவ்வொரு கிராமத்திற்கும், அல்லது பல கிராமங்களுக்கும் சேர்த்தாற் போலும், சிசு சமரக்ஷண ஸ்தலங்களும், வைத்திய நிவாரண ஸ்தலங்களும் அளிக்கப்படும்.

சென்னையிலுள்ள இந்திய வைத்திய பாடசாலையும், மாகாணத்தின் பல பாகங்களிலும், கிராமங்களிலுமுள்ள இந்திய வைத்திய சாலைகள் யாவும் கட்சியின் முயற்சியினால் ஏற்பட்டனவே. அவைகள் மேலும் அதிகரிக்க எதிர் காலத்தில் முயற்சிக்கப்படும்.

சுகாதார நிபுணர்கள் தற்பொழுது பொறுக்கி எடுக்கப்பட்டுள்ள ஸ்தலங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். அவை இன்னும் அதிகரிக்கப்படும்.

15. பொருளாதார முன்னேற்றம்

விவசாயிக்கு ஏற்பட்டுள்ள கடன் சுமையை நிவர்த்திக்கவும், மேல் கொண்டு கடன் ஏற்படுவதினின்றும் அவனைப் பாதுகாக்கவும் சட்ட மூலமாகவும் இதர வழிகள் மூலமும் எல்லா முயற்சிகளும் கையாளப்படும்.

500 ரூபாய்க்கு மேற்படாத சிறிய கடன்காரர்களை, சௌகார்களின் இம்சையினின்றும் பாதுகாப்பதற்காகவே, சமீபத்தில் சட்டசபையில் கடன்கார பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுளது.

அரிசி, நெல், மற்றும் பல தானியங்களும், கடலைக்காய், கரும்பு, புகையிலை, எள், முதலியனவும், பழவகைகளுக்கும் தக்கவிலைக்கு விற்கும்படிச் செய்ய சர்க்கார் மார்க்கெடிங் உத்தியோகஸ்தர்களை நியமனம் செய்துளது. அவைகளின் உற்பத்தி அதிகரிக்கச் செய்வதும் புது புது சரக்குகளை உற்பத்தி செய்வதும், பயிர்களுக்கு நோய் வருவதைத் தடுக்க தக்க முயற்சிகளைக் கையாளுவதும் அவர்கள் வேலையாயிருந்து வரும்.

16. தொழிற் சாலைகள்

உள்நாட்டுத் தொழில்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பதே தற்போதைய முக்கிய பிரச்சினையாயிருந்து வருகிறது. 100-க்கு 75 பேர் விவசாயிகளாயிருந்தாலும் விவசாயம் மட்டும் பலன் தராது. தொழிற்சாலைகளும், நம தேசத்தில் அதிகரிக்க வேண்டும். இறக்குமதியைக் காட்டிலும் தயார் செய்யப்பட்ட சரக்குகளின் ஏற்றுமதி அதிகரிக்க வேண்டும். தொழிற்சாலைகளின் அபிவிருத்திக்குக் கட்சி தன்னாலானவற்றையெல்லாம் செய்யும். இத்தேசத்திலும், வெளிநாடுகளிலும், தொழிற் பயிற்சி அடையும் மாணவர்களுக்காகத் தொகை ஒதுக்கி வைக்கப்படுவது அதிகரிக்கப் படும். பயிற்சி முடிந்தவுடன் அவர்கள் அத்தொழில்களுக்கு நியமிக்கப் படுவர்.

வியாபாரக் கல்வியும், பயிற்சியும் கூட போதிக்கப்படும். வியாபாரத்தில் திறமையும், பயிற்சியும் பெறுவதற்காக அன்னிய நாடுகளுக்கு அனுப்பப்படும் மாணவர் கோஷ்டிகள் அதிகரிக்கப்படும்.

குடிசைத் தொழில்கள்

குடிசைத் தொழில்களை புதுப்பிப்பது கட்சியின் பிரதம திட்டங்களில் ஒன்றாகும்.

நெசவு, பிரம்பு வேலை, விளையாட்டுச் சாமான்கள், பொத்தான் உற்பத்தி, டேப், லேஸ், பின்னல் வேலை, காருரித்தல், கயிறு பின்னுதல், சாயம் போடுதல், சோப் உற்பத்தி, மற்றும் பல கைத்தொழில்களும் இத் தேசத்திலிருந்துவருகின்றன. சிறிய பண உதவி அளிக்கப்படுமாயின் இக் கைத்தொழில் வளர்ச்சி பெறுவதற்கு ஏதுவாயிருக்கும். அதை அளிக்கச் செய்து அவற்றின் அபிவிருத்திக்கான யாவற்றையும் கட்சி செய்யும்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக நம் தேசத்தில் இருக்கும்படியான முக்கியமான தொழில் கைத்தறியே யாகும். இத்தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டுவதே கட்சியின் இடைவிடா முயற்சியாயிருந்து வருகிறது.

கையால் செய்யப்பட்ட சரக்குகளை நல்ல விலைக்கு விற்க வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக சர்க்கார் ஐந்து வருஷத்திற்கு அரை லட்ச ரூபாய்க்கு மேல் திரவிய சகாயம் செய்துள்ளனர். அன்னியநாட்டு நூல்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி வரியிலிருந்தே இத்தொகை பெறப்படுகிறது. மாகாணக் கைத்தறியாளர் கூட்டுறவுச்சங்கம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. பண முடையால் கஷ்டப்படும் கைத்தறியாளர்க்கு பணவுதவி செய்வதும், ஸ்தல நெசவாலைகளிலிருந்து அவர்களுக்கு வேண்டிய நூல்களை கொடுத்து உதவுவதும், ஸ்தலத்தில் விற்பனையாவது போக செய்யப்பட்ட இதர சரக்குகளை சென்னையில் விற்பனையாக்க முயற்சிகளை எடுத்துக் கொள்வதும் அதன் பிரதம வேலையாயிருந்து வருகிறது.

கைத்தறிக்கு உதவுவது போன்று, கம்பளித் தொழிலுக்கும் 5 லக்ஷம் ரூபா உதவி செய்ய இந்தியா சர்க்கார் சமீபத்தில் தீர்மானித்துள்ளனர். இத்தொகை கிடைக்கப் பெற்றதும், இத்தொழிலாளர்களின் நன்மைக்காகவே உபயோகிக்கப்படும்.

பட்டு உற்பத்தி எதிர் காலத்தில் இன்னும் அதிகரிக்க முயற்சிக்கப்படும். கொலலேகல், குப்பம், பாலமனேர், மதனபள்ளி, பெத்தாபுரம் போன்ற இடங்களில் மைசூரில் நடந்து வருவதைப் போன்று பட்டு உற்பத்தித் தொழில அதிகரிக்கச் செய்ய வசதியிருக்கிறது. ஆயிரக்கணக்கான வேலையில்லாதவர்களுக்கும், பட்டு உற்பத்தித் தொழில் மூலம் வேலை கிடைக்கும்.

இதற்காக, ஒரு கட்டுப்பாடான திட்டத்தின் மீது தீவிரப் பிரசாரம் செய்ய கட்சி மேற்கொண்டிருக்கிறது.

எண்ணெய் வித்துக்கள் விஷயத்திலும் நம்மாகாணம் பெரும் பாக்கியம் அடைந்திருக்கிறது. ஆனால், அவற்றை நாம பலன் படுத்திக் கொள்ளாமலிருக்கிறோம். மேற்குக் கடற்கரை ஜில்லாக்களிலும் கிழக்குக் கடற்கரை ஜில்லாக்களிலும் ருசிகரமான எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாகின்றன. அவற்றிலிருந்து சமையலுக்கும், மருந்து வகைகளுக்கும் எண்ணெய் எடுப்பதன் மூலம் நம்பிக்கையான வருமானம் கிடைப்பதுடன், ஆயிரக்கணக்கான வேலையில்லாதவர்களுக்கும் வேலை கிடைக்கும். இதையும் கட்சி மேற்கொள்ளும்.

17. சர்க்கார் உத்தியோகங்கள்

தற்போதைய நிர்வாகம் தாங்க முடியாதபடி இருந்து வருகிறது. ஆகவே, நிர்வாகத் திறமையில் சிறிதும் குறைவேற்படாத வண்ணம், நம தேச பொருளாதார நிலைமைக்குத் தக்கபடியும், இந்திய வாழ்க்கைக்குத் தக்கபடியும் சர்க்கார் உத்தியோகங்களுக்கு சம்பளம் தரப்பட வேண்டும்.

ரயில்வேக்கள், தண்ணீர் சப்ளை, மின்சாரம், நீர்ப்பாசனம் போன்ற பொதுஜன நன்மைக்குகந்தவற்றை, சர்க்காரே தங்கள் மேற்பார்வையில் நடத்த கட்சி முயலும்.

வடக்கு, தெற்கு ஜில்லாக்களிலுள்ள டெல்டா பிராந்தியங்களில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆரம்பித்து நடத்தப்பட்டு வருகின்றன. அது போன்றே மேற்கு மத்திம ஜில்லாக்களிலும், சீடெட் ஜில்லாக்களிலும் நீர்ப்பாசனத் திட்டங்கள் கூடிய சீக்கிரத்தில் ஆரம்பித்து நடத்தப்படும்.

18. பெண்ணுரிமை

பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் கட்சி எப்பொழுதும் முயன்று வரும்.

19. மீன்

மீன் பண்ணையும் அபிவிருத்தி செய்யப்பட்டு வரும். உணவுக்கு அருமையான, விலை மதிக்கக் கூடிய உயர்தர மீன்கள், தற்பொழுது மீன் இலாகாவின் முயற்சியினால் நதிகளில் விடப்படுவது, இன்னும் தீவிரமாக நடைபெற்று வரும்.

20. தொழில்

தொழிலாளர் பிரச்சினையின் அவசியத்தை கட்சி உணராமலில்லை. தொழிலாளிக்கு குடியிருக்க சௌகரியமான வீடு, போதிய சம்பளம், வேலை நேர நிர்ணயம் தொழிலாளிகளின் குழந்தைகளுக்குப் படிப்பு, வயது வராத சிறுவர்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்வதைத் தடுப்பது, வாழ்க்கைக்கு வேண்டிய மற்றும் பல அத்தியாவசியமானவைகளும் கட்சியால் கவனிக்கப்பட்டு வரும்.

21. மாகாண பொருளாதார கவுன்சிலும் 10 வருஷத் திட்டமும்

மாகாண பொருளாதார கவுன்சில்கள் அமைக்க சர்க்கார் தீர்மானித்துள்ளனர். சர்க்கார் இலாகாக்கள் பலவற்றுடனும் இக் கவுன்சில்கள் ஒத்துழைத்து தேச முன்னேற்றத்துக்கான ஒரு பத்து வருஷத் திட்டத்தை வகுக்கும். அக் கவுன்சிலில் உத்தியோகஸ்தர் பாதிபேரும் உத்தியோகஸ்தரல்லாதார் பாதி பேருமிருப்பர், அதன் அமைப்பு, வேலை, நடவடிக்கை முதலியன இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. ஆயினும் இம்மாகாண விவசாய அபிவிருத்தியைக் குறித்தும், ஆரம்பக் கல்வியைக் குறித்தும் ஆலோசிக்க இரு கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

விளை பொருள்கள் உற்பத்தி விஷயத்தில் பிறரை எதிர்பாராத முறையில், இம்மாகாண விவசாய அபிவிருத்

(இதன் தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

"மாகாண சுயாட்சியில்"

சிறுபான்மையினர் அஞ்ச வேண்டியதில்லை

பாலஸ்தீன் நிலைமையில் சிறிது சாதகம்

மகமதியர் வரவேற்பிற்கு வைஸ்ராய் பதில்

கல்கத்தா, டிச, 22

இன்று கல்கத்தா மத்ய தேசிய மகமதியர் சங்கத்தினர் வைஸ்ராய்க்கு உபசாரப்பத்திரமொன்று வாசித்தளித்தனர். அப்பத்திரத்திற்கு பதிலுரைக்கையில் வைஸ்ராய் பேசியதாவது:-

"நான் வங்காளத்திற்குப் புதியவனாயினும் ராயல் கமிஷன் பார்லிமெண்டரி கமிட்டி முதலியவைகளில் பதவி வகித்து பல பிரமுகர்களுடன் பழகி இருப்பதால் உங்கள் பிரச்னைகளைப் பற்றியும் தேவைகளைப்பற்றியும் அறிந்திருக்கிறேன். பொது மக்கள் நிலைமையை உயர்த்துவதற்கு நாட்டின் வாழ்க்கையை விருத்தி செய்வதற்கும் விவசாயிகள் நிலைமை அபிவிருத்தி செய்ய நமக்குக் கிட்டிய வழிகளில் வேலை செய்வது மிக முக்கியமாகும். இது விஷயமாக என்னால் இயன்றதைச் செய்யத் தவறுவதில்லையென்பதை நீங்கள் அறிவீர்கள். எனக்கு மாகாண சர்க்கார்களும் உத்தியோகஸ்தரல்லாதவர்களும் எனக்கு ஆதரவளிக்கின்றனர். மேற்கொண்டுள்ள பிரச்னை மகத்தானதும் மிகவும் சிக்கலானது. எனவே, அபிவிருத்தி மெதுவாகத்தான் இருக்கும். சத்துணவு சம்பந்தமான விஷயம் மற்றொன்று. இதுவும் மிக மிக முக்கியமாகும். இது மனிதர், பிராணிகள் அனைத்திற்கும் இன்றியமையாதது. இவ் விஷயமாக அவ்வளவு அதிகமாக கவனஞ் செலுத்த வேண்டுமென்பதற்கு நான் மாகாண சர்க்கார்களுடன் கலந்தாலோசித்து வருகிறேன்.

புதிய சீர்திருத்தம்

இச் சங்க அங்கத்தினர்களும் வங்காளத்திலுள்ள இதர முஸ்லீம்களும் சேர்ந்து புதிய அரசியலை நடத்தி வருவதாக வாக்களித்துள்ளார்கள். மற்ற வகுப்பினர்களும் இதைப் பின்பற்றும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். சீர்திருத்தம் பெரியதொரு அரசியல் மாறுதலாகும். அதில் அமைந்துள்ள பரிசோதனை மகத்தானதாகும். தோற்றுவிக்கப்படும் இந்திய ராஜ தந்திரிகளிடம் பிரிட்டிஷ் மக்களும் பார்லிமெண்டும் கொண்டுள்ள நம்பிக்கைக்கு ஒரு அறிகுறியாகும். மாறுதல் சிறியதோ, பெரியதோ அது வெற்றிகரமாக நடைபெறுவதற்கு நாட்டு மக்களின் நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் தேவையாகும். தனிப்பட்டவர்களின் நன்மையை விட நாட்டு நலத்தை முன்னிறுத்தி வேலை செய்ய வேண்டும். சர்க்கார் சம்பந்தப்பட்ட வரையில் நீங்கள் பயப்படத் தேவையில்லை. பார்லிமெண்ட் வழங்கிய தன்மையில் புதிய அரசியல் வேலை நடைபெறுமென்பது உண்மை. எனவே அதை ஏற்றுக்கொண்டு நமக்கு முழு நன்மையும் கிடைக்கக் கூடிய மாதிரியில் புதிய அரசியலை மாற்றக்கூடும். தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் வசம் சகல பொறுப்பும் அமைந்துள்ளது.

நிதி முதலிய கஷ்டங்கள் இருக்குமென்பதும் எனக்குத் தெரியும். புதிய சீர்திருத்தம் ஏற்படும் எந்த நாட்டிலும் இத்தகைய கஷ்டம் இல்லையென்று சொல்ல முடியாது. பொறுப் பேற்றுக்கொள்ளும் ராஜ தந்திரிகளுக்கு இப் பிரச்னை தீர்ப்பதற்குள்ள சாமர்த்தியத்தை விளக்கும் அறிகுறியாகும். வங்காளத்தின் நிதி நிலைமையையும் நீங்கள் குறிப்பிட்டுக் காட்டிய கஷ்டங்களையும் நான் அறிவேன்."

பின்னர் ஓட்டோ நீமியர் அறிக்கையை சிலாகித்து ஐக்கிய ஆட்சிக்குள் முஸ்லீம்களுக்கும் உள்ள சம்பந்த விஷயமாக சமீபத்தில் சுதேச மன்னர்களுக்கும், தனது பிரதிநிதிகளுக்கும் நடைபெற்ற பேச்சைக் குறிப்பிட்டு இந்திய முஸ்லீம்கள் சம்பந்தமாக தான் கொண்டுள்ள நோக்கத்தை பலப்படுத்துவதாக இருக்கிறதென்பதைக் குறிப்பிட்டார்.

பாலஸ்தீன் பிரச்னை

மேலும் அவர் பேசியதாவது:— புதிய அரசியல் சம்பந்தமாக எனக்குள்ள அனுபவத்தைக் கொண்டு சிறுபான்மை வகுப்பினர் மாகாண சுயாட்சியில் எந்த வகையிலும் பயப்பட வேண்டியதில்லை. எனக்கேற்பட்ட குறுகிய காலத்தில் நீங்கள் குறிப்பிட்ட விஷயங்கள் ஒவ்வொன்றையும் விவரிக்க போதிய அவகாசமில்லை. பாலஸ்தீன சம்பந்த விஷயமாக நான் ஏற்கனவே விளக்கியிருக்கிறேன். அத்தேதியிலிருந்து பாலஸ்தீன நிலைமை சிறிது சாதகமாக இருந்து வருகிறது. மன்னர்பிரான் சர்க்கார் பல சமூகத்தாரின் உரிமைகளைப் பற்றி விசாரணை செய்வதற்கு கமிஷன் ஒன்றை நியமித்துள்ளனர். உங்கள் ராஜவிஸ்வாசத்தை மன்னர் தம்பதிகளுக்குத் தெரிவிக்கத் தவறமாட்டேன்.

தூத்துக்குடி

படத்திறப்பு விழா

(நமது நிருபர்)

தூத்துக்குடி, டிச, 22

நேற்றைய மாலை 5-30 மணிக்குத் தூத்துக்குடி ஜிம்கானா கிளப்பில் தூத்துக்குடி ஜில்லா முன்சிப் திரு. வி. டி. பழனியப்ப முதலியார் அவர்களின் படத்திறப்பு விழா வைபவம் நடைபெற்றது. புகைப்பட மெடுத்தபின் திரு. ஏ. ராமசாமி அய்யர் திரு. கே. கே. ஏ. பெரியசாமி நாடார் முதலியவர்கள் திரு. முதலியாரின் பொதுஜன சேவையைப் பாராட்டிப் பேசினார்கள்.

பின்னர் ஜிம்கானாவின் தலைவரும் தூத்துக்குடி முனிசிபல் சேர்மனுமான திரு. ஜே. எல். பி. ரோச் விக்டோரியா அவர்கள் திரு. வி. டி. பழனியப்ப முதலியாரின் புகைப்படத்தைப் பலத்த கரகோஷத்திற்கிடையே திறந்து வைத்தார்.

பின்னர் இராவில் விருந்தொன்று நடைபெற்றது. மேற்படி விருந்து வைபவத்திற்குப் பின் திருவாளர்கள்: என். எம். மிராண்டா அவர்களும், தூத்துக்குடி மோட்டார் டிரைவர்கள் சங்கச் சார்பில் கே. கே. ஏ. பெரியசாமி நாடார் அவர்களும், ஆரோக்கியசாமி முதலியாரவர்களும் ஜில்லா முன்சிப் திரு. வி. டி. பி. முதலியாரைப் புகழ்ந்து பேசி திரு முதலியாருக்கு மாலை சூட்டினார்கள். பின்னர், வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

இராமநாதபுரம் ஜில்லா தமிழர் சமத்துவ சங்கம்

கொழும்பு, டிச, 19

காரியதரிசி எழுதுகிறார்:—

தெமட்டக்கொடை, செயின்ட் அந்தோனி ரோட், 9 நம்பர் கம்பவுண்டில் 15-12-36 இரவு 9-30 மணிக்கு தோழர் பி. கே. பெரியசாமி அவர்களின் மரண அனுதாபக் கூட்டமொன்று தோழர் பி. வி. மாயன் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது.

தலைவர் முகவுரைக்குப்பின் தோழர்கள்: கே. ஈ. புஷ்பராஜன், ஏ. ஏ. பழனிநாதன், ஏ. எம். துரைச்சாமி, கே. பெரியசாமி, ஏ. செல்வநாதன், எஸ். ஓ. சங்கரலிங்கம் ஆகியவர்கள் தோழர் பெரியசாமி அவர்கள் ஆயுள் முடிவெய்தியதைக் குறித்து மிகவும் உருக்கமாக சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

ஹைதராபாத் தர்பார்

கவர்னர் பிரசங்கம்

மாஜி மன்னர் முடிதுறவுக்கு அனுதாபம்

கராச்சி, டிச, 23

ஹைதராபாத் தர்பாரில் கலந்து கவர்னர் செய்த பிரசங்கத்தின் சுருக்கம் பின்வருமாறு:—

நான் முதல் முதலாக நமது மாஜி மன்னர் 8-ம் எட்வர்ட் முடி துறந்ததைப்பற்றி மிகவும் வருந்துவதாக தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர் முடி துறவாதிருந்தால் இந்தியாவுக்குப் பெரும் உபகாரம் செய்திருப்பார் என்பதில் ஐயமில்லை. அவர் தன்னுடைய பிரஜைகளால் மிகவும் நேசிக்கப்பட்டிருந்தார். ஆனால், அவர் செய்த முடிவைப்பற்றி அவர் பிரஜைகளான நாம் ஒன்றும் சொல்ல முடியாது. நமக்கு புதிதாக வந்திருக்கும் சக்கரவர்த்தியினிடத்தில் நாம் பூரணமும் ராஜபக்தி கொண்டிருப்பதல்லாமல் அவரை அன்புடன் வரவேற்கிறோம். சிந்து இப்பொழுது பிரத்யேகமான மாகாணமாயிருக்கிறது. சிந்துவை பம்பாயிலிருந்து பிரித்திருப்பது உங்கள் யாவருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்குமென்று நம்புகிறேன். நான் இந்த மாகாணத்திற்கு கவர்னராக இருக்கும் வரையில் பம்பாயிலிருந்து சிந்து பிரிந்துபோனதின் காரணமாக ஒருவருக்கும் ஒரு கஷ்டமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வேன்.

நமது சக்கரவர்த்தி ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் மரணத்தால் நாம் நமது தந்தையை இழந்தோமென்று சொல்ல வேண்டும். அவருடைய ஞாபகார்த்தத்திற்காக ஒரு நிதி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. நீங்கள் யாவரும் அந்த நிதிக்கு பண உதவி செய்திருப்பீர்களென்று நம்புகிறேன்.

இப்பொழுது நாம் நமது சர்க்கார் இலாக்காக்களை பம்பாய் சர்க்கார் இலாக்காக்களில் இருந்து பிரிப்பதில் உழைத்து வருகிறோம். கூடிய சீக்கிரத்தில் பம்பாய் கவர்ன்மெண்டாரைப் போல் நமக்கும் தனி இலாக்காக்கள் ஏற்பட்டுவிடும். கூடிய சீக்கிரத்தில் சிந்து மாகாணத்திற்கு சட்டசபை ஏற்படும். அவ்வமயம் நீங்கள் உங்கள் பிரதிநிதிகளை அங்கு அனுப்ப நேரிடும். புதிய சீர்திருத்தத்தில் உங்களுக்கு சுய ஆட்சி அளிக்கப்பட்டிருக்கிறது. சிந்தில் வரப்போகும் சீர்திருத்தங்களை உடைக்க கருதிய ஒருவரும் இஷ்டப்படவில்லை என்று நான் நினைக்கிறேன். வரப்போகும் சீர்திருத்தங்களை சரியாக அமுலுக்குக் கொண்டுவந்து நடத்துவதால் நீங்கள் சுயாட்சிக்குப் பொறுப்பாளிகள் ஆகிறீர்களென்று நான் சொல்லாமல் உங்கள் அனுபோகத்தில் உங்களுக்குத் தெரியும். நீங்கள் அசம்பிளிக்கு அனுப்பும் அங்கத்தினரிலிருந்து சிலரை நான் மந்திரியாக நியமிப்பேன். அவர்களை வேலையிலிருந்து நீக்குவதற்கு அசம்பிளிக்கு அதிகாரம் உண்டு. ஆனால், பொது தேர்தலில் தவிர மற்ற காலங்களில் அசம்பிளி அங்கத்தினரை வெளியில் போகச்சொல்லும் உரிமை உங்களுக்கு இல்லை. ஆகையால், சட்டசபைக்கு சரியானவர்களை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். சட்டசபை நடைபெற முடியாத தடைகள் ஏற்பட்டால் புதிய தேர்தல் நடைபெறும். அப்பொழுதாவது நீங்கள் சரியானவர்களை சட்டசபைக்கு அனுப்ப வேண்டும்.

இறுதியில் புதிய கவர்ன்மெண்டை நடத்துமாறு கேட்டுக் கொண்டு கவர்னர் தன் பிரசங்கத்தை முடித்தார்.

தோழர் சி. நடராஜன்

சென்னை, டிச, 26

மாயவரம் தோழர் சி. நடராஜன் அவர்கள் 26-ந் தேதி காலை சென்னை வந்து சேர்ந்தார். 27-ல் நடக்கும் சுயமரியாதை இளைஞர் மன்ற ஆண்டு விழாவிலும், கோடம்பாக்கம் பகுத்தறிவு சங்க ஆண்டு விழாவிலும் கலந்து கொண்டு 2-3 தினங்களில் மாயவரம் போவார்.

கராச்சியில் காங்கரசுக்கு பலத்த எதிர்ப்பு

திரு ஜெயராம்தாஸ் தௌலத்ராம் பிரலாபம்

கராச்சி, டிச, 25

ஐக்கிய இந்திய தேசீய காங்கரஸ் தலைவருக்கு திரு. ஜெயராம்தாஸ் தௌலத்ராம் பின் கண்ட செய்தியை அனுப்பியுள்ளார்:—

இந்தியாவிலுள்ள வேறெந்த இடத்தையும் விட சிந்து பிரதேசத்திலேயே காங்கரசுக்கு பலத்த எதிர்ப்பு இருந்து வருகிறது. காங்கரசை முறியடிக்க பலத்த முஸ்தீபுகள் நடைபெற்று வருகின்றன. மற்ற மாகாணங்களை விட இங்கு அதிகக் கடுமையாகப் போராட வேண்டியிருக்கிறது. சமூக அரசியல், வகுப்பு துவேஷம், பணம் ஆகிய எல்லாம் காங்கரசுக்கு எதிராக இங்கு ஒன்று சேர்ந்திருக்கின்றன.

போப் கிறிஸ்மஸ் செய்தி

வாடிகன், டிச, 25

நோய் வாய்ப்பட்டிருக்கும் போப் தமது படுக்கையிலிருந்தபடியே உலக மக்களுக்கு பின்வரும் செய்தியை ரேடியோ மூலம் விடுத்துள்ளார்.

ஜன சமூகமும், மாதா கோவில்களும் கோரமான கொள்ளை நோய்களைப் போன்ற கொடிய துன்பங்களுக்காளாயிருக்கின்றன. கடவுள் சித்தத்திற்கு விரோதமாக நெறி தவறிய மனப்போக்குள்ள நமது விரோதிகள் இழைக்கவரும் பெருங்கேட்டை எதிர்க்கவேண்டியிருக்கிறது. உலகத்தில் நாசத்தை விளைவிப்பதையே தங்கள் தொழிலாகக் கொண்டுள்ள நமது விரோதிகள் அழிவு வேலைக்கான சாதனங்களனைத்தையும் பிரயோகிக்க விரும்புவதாகத் தெரிகிறது. ஐரோப்பாவிலும், உலகமெங்கும் தாங்கமுடியாததோர் பயங்கர சம்பவம் கேடு விளைவதற்குரிய ஏற்பாடுகளும், அபாயக் குறிகளும் தயாராகியிருக்கின்றன. சமாதானத்தை நிலைநிறுத்துமாறு நான் அனைவரையும் வேண்டிக்கொள்கிறேன்.

சைலேந்திரநாத் கோஷ்

20 வருஷத்திற்குப்பின் தாய்நாடு திரும்பினார்

கராச்சி, டிச, 25

இந்தியாவிலிருந்து தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டு, 20 வருஷ காலம் அமெரிக்காவிலிருந்து வந்த திரு. சைலேந்திரநாத் கோஷ் நேற்று காலை தமது அமெரிக்க மனைவியுடனும் இரு குமாரத்திகளுடனும் இந்தியா வந்து சேர்ந்தார். இவருக்கு வயது இப்பொழுது 44 ஆகிறது. சர்க்காருக்குவிரோதமான பலாத்கார இயக்கங்களில் இனித் தான் கலந்து கொள்வதில்லை யென உறுதிமொழி கொடுத்திருப்பதாக அவர் கூறினர்.

சென்னை ஜி. பி. ஓ. சார்டிங் யூனியன்

திரு. டி. ஏ. வி. நாதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்

சென்னை, டிச, 26

சமீபத்தில் நடைபெற்ற சென்னை சர்க்கிள் அகில இந்திய தபால், ஆர். எம். எஸ். யூனியன் ஆகியவற்றின் சென்னை ஜி. பி. ஓ. சார்ட்டிங் கிளையின் பொதுக் கூட்டத்தில் திரு. டி. ஏ. வி. நாதன் தலைவராக ஏகோபித்து தேர்ந்தெடுக்கப் பட்டார்.

கெண்ட் தம்பதிகளுக்கு பெண் பிறந்தது

லண்டன் டிச, 25

இன்று காலை 11-20 மணிக்கு கெண்ட் சீமாட்டிக்கு பெண் குழந்தை பிறந்தது. தாயும் குழந்தையும் பூரண ஆரோக்கியத்துடன் இருக்கின்றனர்.

சியாங்-கே-ஷேக் விடுதலை

பாரிஸ், டிச, 25

சீன கலகக்காரர்களால் சிறை வைக்கப்பட்டிருந்த சீன பிரதம மந்திரி சியாங்-கே-ஷேக் விடுதலை யடைந்ததாக ஷாங்காய் செய்தி வெளியாகியிருக்கிறது.

ஜஸ்டிஸ் கட்சியாரின் எதிர்கால வேலைத் திட்டம்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நிலைச் செய்ய ஒரு பத்து வருஷத் திட்டத்தை வகுக்கவே முதற் கமிட்டி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் பல கிராமங்களுக்கு வேண்டிய விதைகள் சேகரம் செய்வதும், எருக்களை அதிகப்படியாக உபயோகிக்க வசதிகள் ஏற்படுத்துவதும், இல்லாத இடங்களில் நீர்ப்பாசனங்களை உண்டாக்குவதும், கால்நடைகளை அபிவிருத்தி செய்வதும் அதன் நோக்கமாயிருந்து வரும்.

கிராமங்கள், நகரங்களிலுள்ள வயது வந்த சிறுவர், சிறுமிகளுக்கெல்லாம் கல்வி கிடைக்கத் தக்க விதமாய் ஆரம்பக் கல்வியை விஸ்தரிக்கச் செய்வதே கல்வி சப் கமிட்டியின் முக்கிய நோக்கமாய் இருந்து வரும். மேலும் விவசாய தொழிலையே இருக்கத் தக்க விதமாய் ஆரம்பக் கல்வி திருத்தி அமைக்கப்படும். விவசாயக் காட்சிகளும் அடிக்கடி தகுதியான இடங்களில் நடத்திக் காண்பிக்க முயற்சிக்கப் படும்.

மேலும் தகுதியான விலை வரும் வரையில், தங்கள் விளைபொருள்களை விவசாயிகள் சேமித்து வைப்பதற்காக தானியக் களஞ்சியங்களைத் தக்க இடங்களில் கட்டவும் கமிட்டி நோக்கங் கொண்டுள்ளது. விவசாயிகளுக்கு இலவச பொது மேய்ச்சல் தரைகிடைக்கும்படிச் செய்வதற்காக ஸ்தல ஸ்தாபனங்கள், மேய்ச்சலுக்குத் தகுதியான இடங்களை விலக்கு வாங்கும்படிச் செய்யவும் ஆலோசனையிலிருந்து வருகிறது.

ஆகவே கட்டாய ஆரம்பக் கல்வி, கிராமங்களில் எல்லாக் காலத்துக்கும் தக்கதான ரோடுகள் அமைப்பது, பாதுகாப்பு தண்ணீர் சப்ளை, கிராமாந்தரங்களுக்கு குறைந்த விகித மின்சாரம் முதலியனவே ஜஸ்டிஸ் கட்சியின் 10 வருஷத் திட்டமாகும். சுருங்கக் கூறுமிடத்து தேச வருமானத்தையும், வாழ்க்கையின் அந்தஸ்தையும் உயர்த்துகிறபடியுடன், தற்கால நிலைமையில் அடையக்கூடிய எல்லா விதசௌகரியங்களையும் கிராமவாசியும் அடையும்படிச் செய்வதே யாகும்.

22. பொது

ஜாதி, மத பேதமின்றி எம் மக்களுக்கு, இவற்றுடனும், இன்னும் பலவற்றுடனும் நன்மையை அடைய வேண்டுவதே கட்சியின் அடிப்படையான நோக்கமாய் இதுவரை இருந்து வந்தது போன்றே, இனியும் இருந்து வரும். வருங்காலத்தில் சரித்திராசிரியர்களே இது பற்றித் தீர்ப்புக் கூற வேண்டியவர்களாவர்.

டிசம்பர் 23-ந் தேதி புதன்கிழமை தினம் பிலிம் டைரக்டர் திரு. எல்லிஸ் ஆர். டங்கன் பம்பாய் எக்ஸ்பிரஸில் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் வந்திறங்கியபோது எடுத்த படம்.

கஞ்சீவரத்திலுள்ள பச்சையப்பன் உயர்தர பாடசாலைக்கு தலைமை ஆசிரியராகப் போகும் திரு. எம். என். கோடீஸ்வரனுக்கு வெள்ளாளர் கூட்டுறவு பாங்கியார் வில்லிங்டன் இலவச வாசகசாலையில் சென்ற 22-ந் தேதி மாலை டீக்கச்சேரி நடத்திய போது எடுத்தபடம் ஐ. பி. பி. என்.

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

பறையருக்கும் இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ்வமிந்த நாட்டிலே!

ஏழையென்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்பது இந்தியாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் சமானமாக வாழ்வமே!

மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னிலெந்த வகையினும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! (பாரதி)

விடுதலை

சென்னை: 1936-ளு டிசம்பர் 26-உ
சனிக்கிழமை

ராய. சொக்கலிங்கனாருக்கு ஒரு வார்த்தை!

நேற்று (25-12-36) வெளியான "ஊழியன்" பத்திரிகையில் செட்டிமார் நாட்டில் அரசியல் போர் என்னும் தலைப்பின் கீழ், ஒரு தலையங்கம் வெளிவந்திருக்கிறது. செட்டிமார் நாட்டில் இன்று ஒரு பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, செட்டிமார் நாட்டுப் பிரமுகர்களில் ஒருவரான அன்பர் ராய. சொக்கலிங்கனாரை ஆசிரியராகக் கொண்ட "ஊழியன்" பத்திரிகையின் தலையங்கத்தைப் பற்றிச் சில வார்த்தை கூறவேண்டியது நமது கடமையாக ஏற்பட்டிருக்கிறது. இதுகாலை செட்டிமார் நாட்டில் அரசியல் போர் மிகவும் கடுமையாக நடக்கிறதென்றும், பொது ஜனங்கள் கண் விழித்து விட்டனர் என்றும், தம் உரிமையை உணரத் தலைப்பட்டு விட்டனர் என்றும், மக்கள் உணர்ச்சி செட்டிமார் நாட்டில் செழித்து வளரத் தொடங்கி விட்டதென்றும், இனி அப்பெருவெள்ளத்தைத் தடுக்க எவ்வளவு பெரிய பண மூட்டையைத் தாங்கிக் கொண்டிருப்பவராலும் பட்டங்களைச் சுமந்து கொண்டு இருப்பவர்களாலும் நிச்சயமாக ஆகாதென்றும், சாதாரணமான ஒரு ஜில்லா போர்டு தேர்தல் செட்டிமார் நாட்டை அல்லோல கல்லோலப்படுத்தி விட்டது என்றும் ஜில்லா போர்டு தேர்தல் இந்த உலகத்தில் என்றுமே இப்படி நடந்திருக்கமாட்டாதென்றும், செட்டிமார் நாட்டின் காங்கிரஸ்காரர் தமிழ்நாடு முழுதையுமே திரட்டி மிகப் பலமாக வேலை செய்தனர் என்றும், எதிர் கட்சியார் திருவிளையாடல்களைச் சொல்லி முடியாதென்றும் மனிதத்தன்மை அடியோடு கைவிடப்பட்டே காரியங்கள் ஆற்றப்பட்டன என்றும் "ஊழியன்" விஸ்தாரமாகக் கூறிக்கொண்டு போகின்றான். "ஊழியனது" அபிப்பிராயப் போக்கைப் பார்த்தால் செட்டிமார் நாட்டில் நடைபெற்ற கலவரங்களுக்கெல்லாம் எதிர் கட்சியாரே காரணம் என்று எண்ணுவதற்கு இடமேற்படுகிறது. நகர வணிக சமூகத்தில் இப்பொழுது பிளவு ஏற்பட்டிருக்கிறது. அன்பர் ராய. சொக்கலிங்கனார் காங்கரஸ் வாதியாக இருந்தாலும், செட்டிமார் நாட்டு ஊழியர்களில் ஒரு பிரபலஸ்தர். எனவே அவர் பாரபட்சமின்றி விஷயங்களை விளக்கி முடிவு கூற வேண்டியதே நியாயம். ஆனால், அன்பர் சொக்கலிங்கனார் துரதிருஷ்டவசமாக அவ்வாறு செய்யவில்லை. காங்கரஸ்கண்ணாடி மூலமே செட்டிமார் நாட்டுக் கலவரங்களை நோக்குகிறார்; முடிவு கூறுகிறார். "செட்டிமார் நாட்டுப் பொது ஜனங்கள் கண் விழித்துத் தங்கள் உரிமையை உணரத் தலைப்பட்டிருப்பது" உண்மையானால், அதைப்பற்றி, அன்பர் சொக்கலிங்கனார் பார்வையில் எதிர்க்கட்சியாராகத் தோன்றப்படுபவர்களும் பெரு மகிழ்ச்சியடையத்தான் செய்வார்கள். ஆனால், செட்டிமார் நாட்டில் இன்று ஏற்பட்டிருப்பது உண்மையான "கண் விழிப்பா" பகை, பொறாமை காரணமாக ஏற்பட்ட மதிமயக்கமா" என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயமாக இருக்கிறது. காங்கரஸ்காரரை உத்தமர்களாகச் சித்திரித்துக் காட்டுவதே "ஊழியன்" தலையங்கத்தின் நோக்கமாக இருக்கிறது. ஆனால், கட்சிப் பற்றில்லாத நடுநிலைமைக்காரர் அபிப்பிராயமோ வேறு விதமாக இருக்கிறது. "ஊழியன்" மேற்கண்டவாறு தலையங்கம் எழுதிய அதே தினத்தில் "மித்திரன்" பத்திரிகையிலும் திருப்பத்தூர் திரு. எஸ். சுப்பிரமணிய அய்யர் செட்டிமார் நாட்டுக் கலவர நிலைமையை விளக்கி ஒரு நீண்ட கடிதம் எழுதி இருக்கிறார். பிராமணர்கள் பொதுவாகவே காங்கரஸ் அபிமானிகள். காங்கரசுக்கு விரோதமான செய்திகளைத் தயக்கமின்றி வெளியிடுவது "மித்திரன்" வின் வழக்கமுமில்லை. ஆகவே, திரு. சுப்பிரமணியய்யர் "மித்திரன்"க் கடிதத்தில் கூறும் விஷயங்கள் சந்தேகத்துக்கு இடமின்றி உண்மையானவைகளாகவே இருக்க வேண்டும். அவர் கூறுவதென்ன? "செட்டிமார் நாட்டிலே பெரும்பாலர் எக்காரணம் கொண்டோ காங்கரசுக்கு எதிரிகள். அவர்களை காங்கரஸ் வழி திருப்ப காங்கரஸ்காரர் நியாய ரஹிதமான முறைகளைக் கையாண்டனர். சில பிரசங்கிகள் சிலரை ஆபாசமாகத் திட்டவும் தொடங்கினர். தனிப்பட்ட நபர்களைத் திட்டத் தேவையே இல்லை. மற்றும் சில இடங்களில் காங்கரசுக்கு வோட்டுக் கொடுக்க விரும்பாதவர்களை பலவந்தப்படுத்தவும் ஹிம்சிக்கவும் முயற்சிகள் நடந்தன. எனவே, பல இடங்களில் கலவரங்கள் ஏற்பட்டன". என்றெல்லாம் திரு. சுப்பிரமணியய்யர் தமது கடிதத்தில் விளக்கிக் கூறியிருக்கிறார். மற்றும் சாமராதபுரம் ஜில்லா போர்டு தேர்தலில் காங்கரஸ்காரர் கையாண்ட கேவலமான கொடிய முறைகளை வேறொரு கண்யமான நிருபர் மெயில் பத்திரிகையிலும் விளக்கிக் கூறியிருக்கிறார். தேம்மாபட்டு கிராமத்திலுள்ள நாட்டார்கள், காங்கரசுக்கு வோட்டுக் கொடுக்காத ஏழை ஜனங்களை அடித்துக் காயப்படுத்தியது சம்பந்தமாய் சிலர் 147, 323 பிரிவுகளின்கீழ் கைது செய்யப்பட்டு லாக்கப்பில் வைக்கப்பட்டிருப்பதாய் இம்மாதம் 17-ந் தேதி வெளிவந்த "தினமணி"யில் 4-வது பக்கத்தில் ஒரு செய்தியும் வெளிவந்திருக்கிறது. இவைகளையெல்லாம் நுட்பமாக நோக்கினால் செட்டிமார் நாட்டுக் கலவரங்களுக்குக் காரணஸ்தர்கள் யார் என்பதை எவருக்கும் மிக எளிதில் அறிந்து சொல்ல முடியும். உண்மையிவ்வாறிருக்க காங்கரஸ்காரர் அல்லாத பணம் படைத்தவர்கள் மீது பழி சுமத்தி "ஊழியன்" எழுதியது ஒழுங்கேயல்ல.

செட்டிமார் நாட்டில் ஏற்பட்டிருக்கும் கட்சிப் பிணக்கில் அரசியலையும் புகுத்திக் குழப்புவது அன்பர் சொக்கலிங்கனாரின் பெருமைக்கு அடுத்த செயலே அல்ல. செட்டிமார் நாட்டுச் சீமான்கள் மீது ஏனையோருக்கு துவேஷமுண்டாகுமாறு காரியங்கள் நடத்தப்படுவதைத் தடுக்க முயல வேண்டியது அன்பர், ராய. சொக்கலிங்கனார் போன்றோர்களின் கடமையாகும். பணம் படைத்தவர்களையெல்லாம் ஒழிக்க வேண்டுமென்றும் அன்பர் சொக்கலிங்கனாரின் அரசியல் ஞானாசிரியரான காந்திஜீ கூடக் கூறவில்லையே. சீமான்கள் ஏழை எளியோரின் "டிரஸ்டி"களாக இருக்க வேண்டுமென்று தானே காந்திஜீ கூறுகிறார். செட்டிமார் நாட்டுப் பிரபுக்கள் எதிரிகளால் சித்திரித்துக் காட்டப்படுவதுபோல் அவ்வளவு பாவிகளுமல்லவே. பரோபகாரமே தனவணிகப் பிரபுக்களின் மரபுத் தருமமாக இருந்து வருகிறது. பண்டைக்கால சீமான்கள் ஆலய தர்மம் செய்து நாட்டு நலத்தையும் தம் குலப் பெருமையையும் பேணி வந்தார்கள். தற்காலச் சீமான்களோ, சர்வ கலா சங்கங்கள், கல்லூரிகள், ஆஸ்பத்திரிகள் போன்ற தேசிய தருமங்கள் நடத்தி தேச க்ஷேமத்தை விருத்தி செய்வதோடு தம் மரபுப் புகழையும் காப்பாற்றி வருகிறார்கள். அன்பர் சொக்கலிங்கனார் பார்வையில் இன்பமாகத் தோன்றும் ராஜா ஸர்களும், திவான்பகதூர்களும், ராவ்பகதூர்களுமே தனவணிக சமூக அந்தஸ்தை உயர்த்தி வருபவர்கள்; அன்றி அன்னார்களை இழித்துக் கூறும் ஜீவானந்தர், திரிகூடசுந்தரம் கம்பெனியார் அல்ல வென்பதை அன்பர் சொக்கலிங்கனார் அறியாதிருக்க இடமில்லை. செட்டிமார் நாட்டில் சமீபத்தில் நடைபெற்றதும் மேற்கொண்டு நடக்கப் போவதும் "ஊழியன்" கூறுவது போல், அரசியல் போரன்று; கட்சிப் போர் அல்லது தனவணிக சமூகப் போரே நடைபெறப் போகின்றது. அன்பர் சொக்கலிங்கனார் ஒரு கட்சியார் மட்டும் பணம் படைத்தவர்கள், பணத் திமிர் கொண்டவர்கள் எனக் கூறுவதும் பிழையன்று; இரு கட்சியாரும் பணம் படைத்தவர்களே. இரு கட்சியாரையும் தூண்டிவிட்டு இலாபமடைய, பணம் படைத்தோரின் எதிரிகள் எனக் கூறிக் கொள்ளும் புண்யாத்மாக்கள் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றனர். அன்னோர் வலையில் சிக்கி அரசியலின் பெயரால் தனவணிக சமூகத்துக்கே கேடு சூழ்வது தன வணிக சமூக க்ஷேமத்தில் ஆர்வங் கொள்ள வேண்டியவர்களின் செயலன்று. "ஜம்புகோ மேஷ யுத்தேன" என்ற வடமொழி சுலோகத்தை அன்பர் சொக்கலிங்கனார் அறிந்திருக்க வேண்டும். ஆகவே, தன வணிக சமூகத்துக்கு ஏற்பட்டிருக்கும் பேராபத்தைத் தடுக்கத் தேவையான முயற்சிகள் செய்ய வேண்டியது அன்பர் சொக்கலிங்கனாரின் தலைசிறந்த கடமையாகும். கூட்டத்தோடு சேர்ந்து கொண்டு கோவிந்தா போடுவதினால் விளையும் பலன் ஆபத்தே.

கூடலூரில் கனம். பி. டி. ராஜன்

திரு. கே. தெய்வசிகாமணி முதலியார் உருவப்படத் திறப்புவிழா

வரவேற்புப் பத்திரத்திற்கு பதில்

கூடலூர், டிச, 23

சென்னை சர்க்கார் அபிவிருத்தி மந்திரி கனம். பி. டி. ராஜன். இன்று காலை இங்கு விஜயம் செய்தார். உத்தியோகஸ்தர்களும், உத்தியோகஸ்தரல்லாதார் பலரும் கனம் மந்திரியை ஸ்டேஷனில் வரவேற்றனர். கூடலூர், முனிசிபல் தலைவர் ராவ்பகதூர் டி. எம். ஜம்புலிங்க முதலியாரின் விருந்தினராக அவர் பங்களாவில் தங்கியுள்ளனர்.

சென்னை கூட்டுறவு சங்கங்களின் ரிடையர்டு ஜாயிண்ட் ரிஜிஸ்திரார் திவான்பகதூர் கே. தெய்வசிகாமணி முதலியாரின் திருவுருவப்படத் திறப்பு விழாவை ஆற்றி வைப்பதற்காக தென்னாற்காடு கூட்டுறவு சென்ட்ரல் பாங்கியின் காரியாலயத்தில் ஒரு தனிப் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது.

கான்பகதூர் முகம்மத் ஹூமாயூன் சாகிப் (கலெக்டர்), திருவாளர்கள்: எச். ஜே. ஸ்டோக்ஸ் (சப் டிவிஷனல் மாஜிஸ்திரேட்), என். பார்த்தசாரதி ஐயங்கார் (ஜில்லா போலீஸ் சூபரிண்ட்), டாக்டர் என். பத்மநாப சர்மா (ஜில்லா மெடிகல் ஆபீஸர்), டி. பி. கிருஷ்ணசாமி முதலியார் (ஜில்லா கல்வி அதிகாரி), ராவ்பகதூர் டி. எம். ஜம்புலிங்க முதலியார் (முனிசிபல் கவுன்சில் தலைவர்), செ. தெ. நாயகம் எம். எல். சி., எம். வேதாசல முதலியார் (தென்னாற்காடு கூட்டுறவு சென்ட்ரல் பாங்கியின் தலைவர்) ஆர். எ. சிவானந்த முதலியார் (மேற்படி பாங்கியின் உப தலைவர்) என். கிருஷ்ணசாமி ஐயங்கார் (ஜில்லா முன்சீப்), ராவ்சாகிப் டி. ஆர். சக்கரபாணி ஐயங்கார் (பப்ளிக் பிராஸிகியூடர்) மற்றும் பல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர்.

ஜில்லா போர்டு உபத் தலைவர் திரு. ஆர். என். பெரியண்ண கவுண்டர் (காங்கரஸ்), ஜில்லா போர்டு அங்கத்தினர் திரு. கேசவ ரெட்டியார் (காங்கரஸ்) ஆகியோரும் வந்திருந்தனர்.

சரியாக காலை 9-மணிக்கு கனம் மந்திரி வந்தார். நாதசுர சங்கீதம் வாசிக்கப்பட்டது.

பிரார்த்தனைக்குப் பின் பாங்க் டைரக்டர் திரு. சி. வி. சீனிவாசாச்சாரியார் வரவேற்புப் பத்திரத்தை வாசித்து, ஒரு அழகிய வெள்ளிப் பேழையில் வைத்து கனம் மந்திரியிடம் சமர்ப்பித்தார்.

கனம் மந்திரி பதில்

வரவேற்புப் பத்திரத்திற்குப் பதிலளிக்கையில் கனம் மந்திரி கூறியதாவது:—

"கூட்டுறவு சங்கங்களின் ஜாயிண்ட் ரிஜிஸ்திராரான திவான்பகதூர் கே. தெய்வசிகாமணி முதலியாரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கவும், இச் ஜில்லாவிலுள்ள முக்கிய கூட்டுறவாளர்களை சந்திக்கவும் எனக்கு ஓர் சந்தர்ப்பமளித்ததைக் குறித்து, தென்னாற்காடு ஜில்லா கூட்டுறவு சென்ட்ரல் பாங்கியின் அங்கத்தினர்களுக்கு எனது வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்பாங்கியின் வெற்றிக்கும், பொதுவாக இவ்வியக்கத்திற்கும் திவான்பகதூர் கே. தெய்வசிகாமணி முதலியாரின் சேவைகளை நீங்கள் உங்கள் வரவேற்புப் பத்திரத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இத்திருவுருவப் படத்தைத் திறந்து வைப்பதற்கு முன் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

27-11-36 சர்க்கார் உத்தரவு பாங்கியின் நன்மையை உத்தேசித்தே வெளியிடப்பட்டது.

பாங்கியின் பொக்கிஷ நிலைமையில் விருத்தி யேற்படுமானால், சர்க்கார் அவசியம் தங்கள் உத்தரவை புனராலோசனை செய்து ரத்து செய்வார்கள்.

தென் ஆற்காடு கூட்டுறவு சென்ட்ரல் பாங்கிக்கு ஒரு சொந்த கட்டடம் சீக்கிரத்தில் கிடைக்கக் கூடுமென நம்புகிறேன். பாங்கி வெற்றிகரமாக நடந்து வருவதையே அது குறிப்பிடும். பாங்கியின் தலைவராயிருந்து காலஞ் சென்ற ராவ்சாகிப் எம். அப்பாசாமியின் சேவையைப் பாராட்டிப் பேசியிருப்பதைக் குறித்து நான் சந்தோஷிக்கிறேன். அவரது மரணத்தால் கூட்டுறவு இயக்கம் இம்மாகாணத்தில் ஓர் அரிய ஊழியரை இழந்து விட்டது. பாங்கியின் தற்போதைய தலைவரான திரு. எம். வேதாசல முதலியாரால் அக் குறை ஒருவாறு நீக்கப்பட்டுளது.

மேலும், திவான் பகதூர் கே. தெய்வசிகாமணி முதலியாரின் அரிய முயற்சியின் பயனாக நில அடமான பாங்குகள் இம்மாகாணத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. அவைகள் வெற்றிகரமாக நடந்து வருவதால் ஒவ்வொரு தாலூகாவுக்கும் ஒவ்வொரு நில அடமான பாங்கியை ஸ்தாபிக்க சர்க்கார் விருப்பங் கொண்டுள்ளனர்.

திரு. தெய்வசிகாமணி முதலியாருக்குப் பாராட்டு

திரு. தெய்வசிகாமணி முதலியாரின் வாழ்க்கையைக் குறித்து நான் உங்களுக்கு அதிகம் சொல்லவேண்டிய அவசியமிருக்காதென நம்புகிறேன். எனினும் அவரைக் குறித்து ஓரிரண்டு விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். தேசத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதன் காரணமாக சர்க்கார்புதிய பாங்குகள் ரிஜிஸ்தர் செய்யப்படுவதை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது. அச் சமயத்தில் கூட்டுறவு சென்ட்ரல் பாங்குகளின் நிர்வாகம் திறமையாக நடைபெற்று வரும் பொருட்டு திரு. தெய்வசிகாமணி முதலியார் ஒரு திட்டம் தயாரித்தார். அத் திட்டத்தின் முடிவும் திருப்திகரமாயிருந்தது. சென்ட்ரல் பாங்குகள் ஏற்பட்டதால் கடன் கொடுக்கும் பாங்குகள் தங்கள் வட்டி விகிதத்தை குறைக்கத் தொடங்கின. அதனால் விவசாயிகளுக்கு மிகவும் பலனேற்பட்டது. சென்னையில் பால் சப்ளை யூனியன் ஏற்பட்டதற்கும் திவான்பகதூர் கே. தெய்வசிகாமணி முதலியாரின் அரிய முயற்சியே காரணம். பொது ஜனங்களுக்கும், ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகளுக்கும் அதனால் மிகுந்த நன்மை ஏற்பட்டுளது. ரிடையராகி விட்ட பொழுதும் யூனியன் முன்னேற்றத்திற்காக அவர் மிகுந்த கவனமெடுத்துக் கொண்டுள்ளார். கூட்டுறவு இயக்கத்திற்கு அரிய ஊழியம் செய்துள்ள அவரது திருவுருவப் படத்தை வைக்க நீங்கள் முடிவு செய்திருப்பது பாராட்டற்பாலது."

பிறகு திவான்பகதூர் கே. தெய்வசிகாமணி முதலியாரின் திருவுருவப்படத்தைக் கனம். பி டி. ராஜன் திறந்து வைத்தார்.

திரு சி. வி. சீனிவாசாச்சாரியாரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு வைபவம் இனிது முடிந்தது.

பிறகு ராவ்பகதூர் ஜம்புலிங்க முதலியாருடன் கனம் மந்திரி திருப்பாபுலியூர் ஸ்ரீ பாடலேஸ்வரசாமி கோவிலைப் பார்வையிட்டார். கோவில் மரியாதைகள் செய்யப்பட்டன. ஜில்லா கூட்டுறவு சென்ட்ரல் பாங்கி அங்கத்தினர்கள், பாங்கி கட்டிடத்தின் மேல் மாடியில் கனம் மந்திரிக்கு ஒரு சிற்றுண்டி உபசாரம் நடத்தினர்.

தேக் கச்சேரி

தென்னாற்காடு ஜில்லா கலெக்டர் கான்பகதூர் முகம்மத் ஹூமாயூன் சாகிப் பகதூர் இன்று மாலை கனம் மந்திரிக்கு ஒரு தேக்கச்சேரி நடத்தினர்.

பிறகு, கனம் மந்திரி திண்டிவனத்திற்கு புறப்பட்டார்.

திருவாரூர் சுயமரியாதை சங்கம்

திருவாரூர், டிச, 20.

இன்று மாலை 7-மணிக்கு ஷை சங்க கட்டடத்தில் தோழர் ஆர். கோவிந்தன் அவர்கள் தலைமையின் கீழ் கூட்டம் கூடியது. அதுகாலை தலைவர் முன்னுரையாக திரு. சி. ஆர். ரெட்டி அவர்களின் அறிக்கையைப் பற்றியும், காங்கரஸ்காரர்களின் பித்தலாட்டம் என்பதைப் பற்றியும், பேசிய பின்னர் தோழர்கள்: எஸ். சிவசங்கரன், வி. ஜி. ஆர். ராஜீ முதலியவர்கள் "சங்கமும் நமது கடமையும்" என்பதைப் பற்றி சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன

1. வங்காள நாகபுரி ரயில்வே தொழிலாளர்களின் நியாயமான குறைகளை கேட்டதற்கு ஷை ரயில்வே நிர்வாகஸ்தர்கள் செவிசாய்க்காமல் இருந்து வருவதைப்பற்றி இக்கூட்டம் மிகுந்த வருத்தமடைவதோடு கூட இந்த விஷயத்தைப் பற்றி இந்திய சர்க்கார் உடன் விசாரித்து ஆவன செய்ய வேண்டுமாய் இந்தியா சர்க்காரை இக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

2. மேற்படி சங்கத்திற்கு உதவி காரியதரிசியாக தோழர் எஸ். சிவசங்கரன் அவர்களை இக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பின் இரவு 8-30 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது என சங்க உப காரியதரிசி எழுதுகிறார்.

இராசிபுரம் பஞ்சாயத்து போர்டு

ராசிபுரம், டிச, 24

இராசிபுரம் பஞ்சாயத்து போர்டின் சாதாரணக் கூட்டம் இம்மாதம் 22-ந் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4-30 மணிக்கு, போர்டு தலைவர் திரு. சின்னமுத்துசாமி உடையார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

வழக்கப்படி செய்ய வேண்டிய பில்கள் பாஸ் செய்யப்பட்டபின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 1 சேலம் முனிசிபாலிட்டியார் மேட்டூர் ஜலத்தைக் கொண்டு வருகிறபடியால் [illegible] ராசிபுரத்திற்கும் கொண்டு வரும்படி கவர்மெண்டாரையும், சேலம் முனிசிபாலிட்டியாரையும் கேட்டுக் கொள்வதெனவும், இராசிபுரத்திற்கு சாக்கடைத் திட்டம் ஏற்படுத்துவதற்கு வேண்டிய எஸ்டிமேட் தயாரித்துக் கொடுக்கும்படி மதராஸ் சானிடரி என்ஜினியரிங் டிபார்ட்மெண்டாரை கேட்டுக் கொள்வதெனவும், பன்றிகளை தெருக்களில் திரியவிடாமல் 1937-38-முதல் பன்றி ஒன்றுக்கு ரூ. 1-0-0 விதம் லைசென்ஸ் பீஸ் ஏற்படுத்தலாமெனவும், தீர்மானிக்கப்பட்டது. குப்பை வண்டி [illegible] இவைகளைப் போர்டுக்கு சப்ளை செய்ய மாஜி பிரசிடெண்டு திரு. மா. வெங்கடாஜல உடையார் அவர்களால் வழக்கத்திற்கு மாறுதலாகவும், போர்டாரின் அனுமதி பெறாமலும், [illegible] பேரால் 3 வருஷத்திற்கு டெண்டர் கொடுக்கப்பட்டிருந்ததை சேலம் ஜில்லா பஞ்சாயத்து ஆபீசர் அவர்களுடைய உத்தரவின்படி 3 வருஷத்திய டெண்டரை ரத்துச் செய்து ஒரு வருஷத்திற்கு விடலாமெனவும் தீர்மானிக்கப்பட்டதுடன் மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு சபை கலைந்தது. ஷை மீட்டிங்கை கவனிப்பதற்காக வரி செலுத்துவோர்களும் ஏராளமாய் ஆஜராயிருந்தனர்.

பெஜவாடா, கிருஷ்ணா ஜில்லா போர்டுகள்

தலைவர்கள் தேர்தல்

செல்லப்பள்ளி ராஜாவும், மிர்ஸாபுரம் ராஜாவும் எதிர்ப்பின்றி தேர்ந்தெடுப்பு

மசூலிப்பட்டணம், டிச, 24

கிருஷ்ணா, பெஜவாடா ஜில்லா போர்டுகளின் தலைவர்கள் தேர்தல் இவ்வாரம் மசூலிப்பட்டணம் கிலாகலாபுரியிலுள்ள போர்டு கட்டிடத்தில் நடைபெற்றது.

கிருஷ்ணா ஜில்லா போர்டுக்கு செல்லபள்ளி ராஜா எதிர்ப்பின்றி தேர்ந்தெடுக்கப் பட்டார். பெஜவாடா ஜில்லா போர்டுக்கும் மிர்ஸாபுரம் ராஜா எதிர்ப்பின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். இருவருக்கும் வாழ்த்துக்கள் கூறப்பட்டு மாலைகள் சூட்டப் பட்டன.

பிராமணரல்லாதார் வாலிபர் சங்கம்

(ஒரு நிருபர்)

திருப்பத்தூர், டிச, 24

வட ஆற்காடு ஜில்லா திருப்பத்தூர் பிராமணரல்லாத வாலிப சங்கக் கட்டடத்தில் 23-12-36-ம் தேதி மாலை 6-மணிக்கு சி. ஆர். அருணாசலம் செட்டியார் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் 4, 5 கிராமத்திலிருந்தும் உள்ளூர் பிரமுகர்களுமாக சுமார் 200 பேர்கள் வரையில் வந்திருந்தார்கள். அது சமயம் சென்னை மாகாண அசெம்பிளிக்கு வடார்க்காடு ஜில்லா திருப்பத்தூர் தொகுதிக்கு நமது ஜஸ்டிஸ் கட்சி சார்பாக வாணியம்பாடி திரு. வி. ஷண்முக முதலியாரை நிறுத்தி வைப்பதாக ஒரு தீர்மானம் திரு. எம். ராமசாமி கொண்டு வந்தார். மேற்படி தீர்மானத்தை ஆதியூர் பெருமாள் ஆமோதித்து பேசி மேற்படியார் பொது மக்களுக்காக செய்த சேவைகளையும் எடுத்துச்சொல்லி ஆமோதித்தார். கனியம் பி. என். கந்தசாமி முதலியார் மேற்படி தீர்மானத்தை ஆதரித்து நீண்ட நேரம் சொற்பொழிவு ஆற்றினர். பிறகு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு மேற்படியாரை ஆதரித்து தங்கள் ஓட்டுகளும் போடும்படியாக தீர்மானிக்கப்பட்டது. ஓட்டர்களை கண்டு மேற்படியாருக்கே ஓட்டு போடும்படியாகச் சொல்லவும் கிராமாந்திரங்களுக்கும் போய் பிரசாரம் செய்யவும் 5 பேர்கள் அடங்கிய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

பிறகு சங்கத்தில் மெம்பர்களாக 100 பேர் வரையில் சேர்ந்தார்கள். இன்னும் நமது சங்கத்தில் மெம்பர்களாக சேரவேண்டிய அவசியத்தை பற்றி திரு. டி. என். சுப்பிரமணியம் நீண்டநேரம் பேசினர். பிறகு ஜனவரி மாதம் கூட்டுவதாக இருக்கும் மகாநாடு விஷயமாய் தலைவர்களுக்கு எழுதிய கடிதம் ஒப்புக்கொண்டு பதில் வந்ததும் வேண்டிய ஏற்பாடுகள் செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

மதுரை செங்குந்தர் இளைஞர் சங்கம்

(ஒரு நிருபர்)

தல்லாகுளம், டிச, 24

இச்சங்கத்தின் ஏழாம் ஆண்டு நிறைவுவிழா 2-1-36 சனிக்கிழமை நடைபெறும். அதற்குரிய வேலைகள் துரிதமாய் நடைபெறுகின்றன. அவ்வமயம் தென்னிந்திய செங்குந்தர் ஏழாவது மகாநாட்டு விஷயம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். பலபாகங்களிலிருந்தும் திரளான செங்குந்தர்கள் விழாவில் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. கொல்லங்கோடு உயர். திரு. கே. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் தலைமை தாங்குவார்கள்.

மிஸ் ராஜமாணிக்கம் அம்மாள்

(ஒரு நிருபர்)

மதுரை, டிச, 25

சென்னை இராஜதானியிலே முதல் இந்து அகம்படிய சமூக லேடி டாக்டரும் மதுரை ஜில்லாவைச் சேர்ந்தவரும், மதுரை முனிசிபல் புதிய டி. டி. பிரசவ ஆஸ்பத்திரியை முன்னேற்ற நிலைமையில் நடத்திக்கொண்டிருந்தவருமான லேடி சூப்ரண்டெண்ட் ஸ்ரீமதி டாக்டர் (மிஸ்) எஸ். இராஜமாணிக்கம் அம்மாள் (எல். எம். பி.) அவர்கள் பிரமோஷன் பேரில் மேற்கு தஞ்சை ஜில்லா போர்டு முழுமைக்கும் ஸ்திரீ மெடிகல் ஆபிசராக நியமிக்கப்பட்டு 21-ம் தேதி இங்கு சார்ஜ் கொடுத்துவிட்டு நேற்று தஞ்சைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இவ்வம்மையார், மதுரை ஜில்லா சோழவந்தானை அடுத்த மன்னாடிமங்கல கிராமம் திரு. எம். எ. சிவசாமிபிள்ளை அவர்களின் குமாரத்தியும், மதுரை டவுன் வக்கீல் எஸ். இராஜா ராமச்சந்திரன் பி. ஏ. பி. எல். மதுரை அமெரிக்கன் காலேஜில் இண்டர் மீடியட் கிளாஸில் முதலாவது இந்துப் பெண்ணாகச் சேர்ந்து வாசித்தவரும் மிஸ். எஸ். தெய்வராஜமணி அம்மாள், இவர்களின் உடன் பிறந்த சகோதரியும் இராமநாதபுரம் ஜில்லா சிவகங்கை சமஸ்தானம் பிரபல வக்கீல்களும் பிரபல குடும்பஸ்தர்களுமான திரு. எம். கற்பூர சுந்தர பாண்டியன், திரு. எஸ். இராமசந்திரன் சேர்வை. பி. ஏ. பி. எல். ஆகியவர்களின் நெருங்கிய பந்துவுமாவார்.

தில்லைத் தமிழ்க் கழகம்

(ஒரு நிருபர்)

சிதம்பரம், டிச, 24

இக்கழகத்தின் சார்பில் 21-12-36 திங்கட்கிழமை மாலை 6-15 மணிக்கு பச்சையப்பன் கல்லூரியில், ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் கோவை வழக்கறிஞர் உயர்திரு: வி. கே. சுப்பிரமணிய முதலியார் "பெரிய புராணத்தின் தமிழ்ச் சுவை" என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றினர். திரு. பண்டித மணி கதிரேச செட்டியார் அவர்கள் (அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் விரிவுரையாளர்) தலைமை வகித்தார்.

தலைவர் முன்னுரையில், திரு. முதலியார் அவர்கள் தமிழ்ச் சைவ சமய நூல்களை நன்கு ஆய்ந்து உணர்ந்தவரென்றும், பெரிய புராணத்திற்கு விரிவான உரை எழுதி வெளியிட்டு வருகிறார் என்றும் குறிப்பிட்டார். அமைச்சர் நன்றி கூறியபின் கூட்டம் கலைந்தது.

முதலியார்கள் சங்கம்

வருஷாந்திரக் கூட்டம்

சென்னை, டிச, 22

கோயம்புத்தூர், விவசாய கல்லூரி, ரிடையர்டு பிரின்ஸிபால், ராவ்பகதூர் சி. தாதுலிங்க முதலியார் தலைமையின் கீழ் சென்னை முதலியார்கள் சங்கத்தின் வருஷாந்திரப் பொதுக் கூட்டம், சென்ற ஞாயிற்றுக் கிழமை மாலை ஜார்ஜ் டவுன் "திருமணம் அண்ணாமலை முதலியார்" ஹாலில் நடைபெற்றது.

சிற்றுண்டி விருந்திற்குப் பின் சங்கத்தின் 1935-36 அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகரிக்கப் பெற்றது.

திருவாளர்கள் எஸ். வி. ராஜூவும், சி. நாராயணசாமி முதலியாரும் சங்கத்தின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

சங்க நிர்வாக வேலையை நடத்துவதற்கு தற்பொழுதிருக்கும் இரு காரியதரிசிகளுக்கு மேற்கொண்டு மற்றொரு பொதுக் காரியதரிசி இருக்க வேண்டுமென்றும், 10 டைரக்டர்களுக்குப் பதில் 11 டைரக்டர்கள் இருக்க வேண்டுமென்றும் திரு. எஸ். எஸ். சங்கர முதலியார் கொண்டுவந்த தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களை ஒரு கமிட்டியாக அமைத்து சங்கத்தின் அடுத்த பொதுக் கூட்டத்தில் தற்போதிருக்கும் விதிகளுக்கு அவசியமான திருத்தங்களைச் சமர்ப்பிக்க அதிகாரமளிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்

பிறகு பொங்கல் தினத்தன்று, 'பொங்கல் நிதி' ஒன்று திரட்டப்படுமெனவும், அதற்கு இந்நகரிலும் இம்மாகாணத்திலுமுள்ள முதலியார் பெருமக்கள் தாராள பொருளுதவி செய்ய வேண்டுமென்றும், அத்தொகை முதலியார் வகுப்பு மாணவ, மாணவிகள் 'ஸ்காலர்ஷிப்'பிற்கு உபயோகப் படுத்தப்படுமெனவும் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

உத்தியோகஸ்தர்கள்

பின் கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:

தலைவர்:-திரு. எம். முத்தைய முதலியார், சி. ஐ. ஈ.

உபதலைவர்கள்:— திவான்பகதூர் டாக்டர் சி. நடேச முதலியார் எம். எல். ஸி., ராவ்பகதூர் பி. சம்பந்த முதலியார், திவான்பகதூர் சி. எஸ். ரத்னசபாபதி முதலியார்.

பொதுக் காரியதரிசி:-திரு. எஸ். ஜி. சங்கராமானுஜ முதலியார்.

காரியதரிசிகள்:— திருவாளர்கள்: சி. மோகனரங்க முதலியார், சி. எஸ். நடேச முதலியார்.

பொக்கிஷதார்:-திரு. வி. பரசிவம்.

போர்டு டைரக்டர்கள்:—ராவ்பகதூர் சி. தாதுலிங்கம் முதலியார், திருவாளர்கள்: எம். ஷண்முகசுந்தர முதலியார், டபிள்யூ. வி. சுந்தரராகவ முதலியார், எஸ். எஸ். சங்கர முதலியார், எஸ். வி. ராஜன், கே. வி. சுப்ரமண்யம் செட்டியார், என். சங்கரன், ஏ. முத்தையா பிள்ளை, டாக்டர் பி. எம். சுந்தரவதனம், பி. நடராஜ முதலியார், பண்டிட் சி. ஆர். கோவிந்தராஜ முதலியார்.

தலைவர் தமது முடிவுரையில், முதலியார்கள் தங்கள் சமூக முன்னேற்றத்திற்கும், நன்மைக்கும் அதிக ஊக்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், சங்கத்தை நடத்திச் செல்வதற்கு தாராள பொருளுதவி செய்ய வேண்டுமென்றும், கேட்டுக் கொண்டார்.

சென்னை ஹைகோர்ட்டு முதல் முதலியார் ஸ்திரீ அட்வகேட்டான மிஸ். ஈ. டி. சொக்கம்மாளுக்கு சங்கத்தின் சார்பாக டீபார்ட்டி நடத்துவதற்காக அங்கத்தினர்கள் தாராளமாக பொருளுதவி செய்யும்படி கேட்டுக் கொள்ளுவதாகவும், காரியதரிசிகள் அதற்காகப் பணம் சேகரிக்க அதிகாரமளிப்பதாயும் தலைவர் கூறினர்.

திரு. எஸ். ஜி. சங்கராமானுஜம் வந்திருந்தவர்களுக்கு நன்றி கூறுகையில், 'பொங்கல் நிதி'க்கு அங்கத்தினர்கள் தாராளமாக பொருளுதவி செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல்

பார்ப்பன சூழ்ச்சி பலிக்கவில்லை

(ஒரு நிருபர்)

கல்லாஞ்சேரி, டிச, 23

19-12-36-ம் தேதியன்று நன்னிலம் தாலூகா கல்லாஞ்சேரி பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தெடுப்புக் கூட்டம் நடந்தது. அதுகாலை பார்ப்பனரல்லாதார் தலைவரும் சேர்வைகாரர் சத்திர தர்மகர்த்தாவுமான திரு. கோ. ஏ. பக்கிரிசாமி நாயுடுகாரு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ராசிபுரம் பஞ்சாயத்து போர்டு

(ஒரு நிருபர்)

ராசிபுரம், டிச, 22

சென்ற 22-ம் தேதி ராசிபுரம் பஞ்சாயத்து போர்டு கூட்டம் ஒன்று போர்டு கட்டடத்தில் போர்டு தலைவர் திரு. சின்னமுத்து உடையார் தலைமையில் நடைபெற்றது. அதுகாலை ராசிபுரத்திற்கு குடி தண்ணீர் வசதி வேண்டியதைப் பற்றியும், சாக்கடைத் தண்ணீர் ஜனங்களின் சுகாதாரத்தைப் பாதிக்காதிருக்கும் பொருட்டு அதை வெளிப்படுத்துவது பற்றியும் தீர்மானங்கள் நிறைவேறின.

கடைசியாக, நகர குப்பைகளை அள்ள வண்டி முதலியவைகள் உதவுவதாகத் திரு. வெங்கடாசலம் உடையார் போர்டாரிடமிருந்து பெற்றிருந்த மூன்று வருஷ டெண்டர் உரிமை ஜில்லா பஞ்சாயத்து அதிகாரி உத்தரவுப்படி தள்ளப்பட்டு, வருஷா வருஷம் டெண்டர் விடுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. பின் கூட்டம் கலைந்தது.

கோடம்பாக்கம் ரேஷனலிஸ்ட் ரிக்ரியேஷன் கிளப்

4-வது ஆண்டு விழா

மேற்படி கிளப்பின் 4-வது ஆண்டு விழா தோழர் ஈ. வெ. ராமசாமியார் தலைமையில் 27-12-36-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30 மணிக்கு கோடம்பாக்கம் வரதராஜபேட்டையில் நடைபெறும். அவ்வமயம் தோழர்கள் சி. டி. நாயகம், எம். எல். ஸி., சி. குஞ்சிதம், பி. ஏ., எல். டி., ஏ. பொன்னம்பலனார், எஸ். குருசாமி, பி. ஏ., சி. என். அண்ணாதுரை, எம். ஏ., டி. என். ராமன் முதலியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

எம். டி. கிருஷ்ணன்,
காரியதரிசி.

வி. ராமசாமி, தலைவர்.

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்

நான்காவது ஆண்டு விழா

27-12-36 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு சென்னை தம்புசாமி வீதி, 327 நெம்பர் வீட்டில் காரைக்குடி 'குமரன்' ஆசிரியர் சொ. முருகப்பா தலைமையில் நடைபெறும்.

தோழர்கள்: ஈ. வெ. ராமசாமி, எஸ். குருசாமி பி.ஏ., என். குஞ்சிதம் பி.ஏ., எல்.டி., சி.என். அண்ணாதுரை எம்.ஏ., சி. கல்யாணசுந்தரம், ஆர். நாராயணி அம்மாள் முதலியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

காங்கரசின் 2-வது தோல்வி

அங்கத்தினர் ஜாமீன் தொகையை இழந்தார்

ராணிப்பேட்டை தேர்தல் முடிவு

ராணிப்பேட்டை, டிச, 24

சென்னை அசெம்பிளிக்கு ராணிப்பேட்டை டிவிஷனுக்கு ஆதித்திராவிட வகுப்பினருக்குள்ள ஒரே ஸ்தானத்திற்கு, அபேட்சகராக நிற்க நான்கு பேரைத் தேர்ந்தெடுக்க 21-12-36-ம் தேதி தேர்தல் நடைபெற்றது 8 பேர் போட்டியிட்டனர். காங்கரஸ் அங்கத்தினர் படு தோல்வியுற்றதுடன் ஜாமீன் தொகையையும் இழந்தார். ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர், எல்லாருக்கும் மேலாக பெருவாரியான ஓட்டுக்கள் பெற்று வெற்றி யடைந்தார். ஓட்டுகள் விவரம் பின்வருமாறு:—

1.	ஜமேதார் ஆதிமூலம் (ஜஸ்டிஸ்)	1,749
2.	திரு. மாணிக்கம்	466
3.	திரு. வேலாயுதம்	369
4.	திரு சி. டி. தயாளம்	230
5.	திரு. சங்கரநாதன்	164
6.	திரு. முத்துசாமி	140
7.	திரு. பாலகிருஷ்ணன்	124
8.	திரு. பார்த்தசாரதி (காங்கரஸ்)	72

ஜமேதார் ஆதிமூலம், திருவாளர்கள்: மாணிக்கம், வேலாயுதம், தயாளம் ஆகிய நால்வரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

காங்கரஸ் அங்கத்தினரான திரு. பார்த்தசாரதி தமது ஜாமீன்தொகையை இழந்தார்.

மழுசாபுரம் பகுத்தறிவு சங்கம்

மாதக் கூட்டம்

மழுசாபுரம், டிச, 23

மேற்படி சங்கம் 23-12-36-ம் தேதி இரவு 8 மணிக்கு சிவந்திபட்டி எட்டாவது எட்வர்ட் நாடார்கள் வித்தியாசாலையில் தோழர் சரவண முத்துக் குமாரசாமியவர்கள் தலைமையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. தோழர்கள் அழகர்சாமி, கதிர்வேல் இவர்களால் சுயமரியாதைக் கீதங்கள் பாடப்பட்டு தலைவர் முகவுரைக்குப் பின் காரியதரிசியால் சென்ற மாத அறிக்கை வாசிக்கப்பட்டு தோழர்களான எஸ். தங்கையா, எம். ஆர். சாமி இவர்களால் முறையே சங்கத்தின் கடமை செல்வம் இவைகளைப்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. பின் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேறி தலைவர் முடிவுரைக்குப் பின் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

தீர்மானம்

சங்கத்திற்கு வாசகசாலை அவசியம் ஏற்படுத்த வேண்டுமென்று எஸ். தங்கையா அவர்களால் தீர்மானம் கொண்டுவரப்பட்டு சீனியப்பன் அவர்கள் ஆமோதிக்க தீர்மானம் நிறைவேறியது.

நன்கொடை

மேலேகண்ட தீர்மானத்திற்கிணங்க தோழர் லெனின் விலாஸ பெரியசாமி யவர்கள் தங்களுடைய கட்டடத்தை இலவசமாக வாசகசாலைக்குத் தருவதாக உறுதி மொழி கூறினர். இன்னும் நாற்காலி, பீரோவ் ஸெட், தினசரிப் பத்திரிகை, மாதப் பத்திரிகை இவைகளை முறையே தோழர்களான கதிர்வேல், பொன்னுசாமி, எஸ். தங்கையா, சிங்காரவேல், எம். ஆர். சுவாமி இவர்கள் தயாரித்து தருவதாக ஒப்புக்கொண்டனர் என காரியதரிசி எழுதுகிறார்.

சுயமரியாதை இளைஞர் மன்றம்

சென்னை, டிச, 26

மேற்படி மன்றத்தின் வருடாந்திர அங்கத்தினர்களின் பொதுக் கூட்டம் 27-ம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 10-மணிக்கு 327, தம்புசாமி தெருவில் நடைபெறும். அது சமயம் 1936-37 வருஷத்திற்கு நிர்வாகசபை தேர்ந்தெடுக்கப்படும். எனக் காரியதரிசி எழுதுகிறார்.

தோழர் பி. கே. பெரியசாமி அவர்கள் காலஞ் சென்றார்

கொழும்பு, டிச, 24

இராமநாதபுரம் ஜில்லா கள்ளிப்பட்டு ம. பெ. கருப்பையா அவர்கள் குமாரரும், கள்ளிப்பட்டு பகுத்தறிவு சங்கக் காரியதரிசியும், கொழும்பு சுயமரியாதை சங்க அங்கத்தவரும், தமிழர் சமத்துவ சங்க முக்கிய அங்கத்தவரும், பொதுநலமே தனது நலமாகக் கருதுபவருமான தோழர் பி. கே. பெரியசாமி அவர்கள் 2-ம் தேதியில் மோட்டார் விபத்திற் குள்ளாகி 7-ம் தேதி திங்கட்கிழமை இரவு 10-மணிக்கு தமது 20-வது வயதில் கொழும்பு ஜெனரல் ஆஸ்பத்திரியில் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார். அவரது மரணம் இராமநாதபுரம் ஜில்லா ஆதித் திராவிட வாலிபர்களுக்கும், சிறப்பாக இங்குள்ள சுயமரியாதைத் தோழர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும். ஆதிதிராவிட வாலிபர்களில் அவர் ஓர் திலகம் போல் திகழ்ந்தார். அன்னவர் தமிழர் சமத்துவ சங்க தோழர்கள் ஆஸ்பத்திரியில் பார்க்கப்போயிருக்குந் தருவாயில் அவர் சங்கங்களைப் பற்றி பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தது எல்லோருக்கும் வியப்பாயிருந்தது. மனிதர் பிறப்பதும் இறப்பதும் இயற்கையே யாயினும் தோழர் பெரியசாமி போன்ற உண்மை வாலிபர் பிரிவு நமது நாட்டுக்கு பெரிய நஷ்டமாகும். காதலருமை புதல்வனை இழந்து பரிதபித்துக் கொண்டிருக்கும் பெற்றோருக்கும் சகோதரருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எ. எம். துரைசாமி.

தாழ்த்தப்பட்ட வாலிபர் சங்கம்

(ஒரு நிருபர்)

குளித்தலை, டிச, 23

மேற்படி சங்கத்தின் ஆதரவில் மணத்தட்டை சேரியில் திரு. எம். என். மூர்த்தி தலைமையில் மாலை 5-மணிக்கு ஓர் கூட்டம் நடைபெற்றது. திரு. வாத்தமுத்து, திரு. சின்னத்துரை முதலியவர்கள் 'நாகரிகம்' என்பது பற்றிப் பேசினர்கள். கூட்டம் இரவு 8-மணிக்கு இனிது முடிவுபெற்றது.

அசம்பிளித் தேர்தல்

ஜனாப் பீர்ஜி ஸாஹிப் அபேட்சை

(ஒரு நிருபர்)

திருநெல்வேலி, டிச, 23

திருநெல்வேலி வக்கீல் ஜனாப் ஏ. கே. பீர்ஜி ஸாஹிப் வரப்போகும் அசம்பிளித் தேர்தலில் திருநெல்வேலி ஜில்லா முஸ்லிம் தொகுதிக்கு ஒரு அபேட்சகராக நிற்கப் போவதாகத் தெரிகிறது.

சினிமா பகுதி

சென்னை மாகாண சினிமா மகாநாடு

நிறைவேறிய தீர்மானங்கள்

சென்னை, டிச, 26

சென்ற சனிக்கிழமை மாலை சென்னை மாகாண முதல் சினிமா மகாநாடு, சென்னை கோகலே ஹாலில் திரு ஜீ ராமசேஷன் தலைமையில் கூடியது. பிரபல சினிமா நடிகையான ஸ்ரீமதி ஜானகி ராஜாராவ் மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

மகாநாட்டுக்குத் தலைமை வகித்த திரு ஜீ. ராமசேஷன் பேசுகையில் தென்னிந்திய சினிமாத் தொழில் இந்தியாவின் மற்றெம்மாகாணத்தையும்விட மிகவும் முன்னேறியுள்ளதென்றும், படங்களின் மதிப்பை உயர்த்தவும், பட விநியோக முறையை சீர்திருத்தவும், படக்காட்சி வர்த்தகத்தை அதிகரிக்கவும் செய்தாலன்றி இப்போதுள்ளவைகளைவிட அதிகமான ஸ்டுடியோக்களையோ, முதலாளிகளையோ வரவேற்கக் கூடாதென்றும், மேல் நாடுகளின் உன்னத நிலையை இந்தியாவும் அடைய வேண்டுமானால் தற்போதுள்ளதைப் போன்று இருபது மடங்கு எண்ணிக்கையுள்ள காட்சி சாலைகள் அமைக்க வேண்டுமென்றும் தமிழ்ப் படங்களில் பாட்டுக்களை அதிகம் புகுத்துவதனாலேயே படத்தின் 'டெம்போ' கெட்டுப் போய் விடுகிறதென்றும், 14 ரீல்களும் 14 பாட்டுகளுமே போதுமென்று தான் கருதுவதாக கூறி, மொத்தத்தில் 2 1/2-மணிக்கு மேல் படம் நீடிக்கக் கூடாதென்றும், 10 ரீல்களில் ஒரு பிரதமக் கதையையும், மற்ற 4 ரீல்களில்பலதரப்பட்ட விஷயங்களையும் காட்ட ஏற்பாடு செய்யலாமென்றும், காலத்திற் கேற்றாற் போல் நடந்து கொள்ள வேண்டுமென்றும் கூறினார். மகாநாட்டில் முதலில் அனுதாபத் தீர்மானம் நிறைவேறிய பின்பு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

தீர்மானங்கள்

இந்தியாவில் அவ்வப் போது நடக்கும் சம்பவங்களைப் படம் பிடித்துச் செய்திகளாக வெளியிடுவதை உசிதமின்றித் தணிக்கை செய்யப்படுவதைக் கண்டு இம்மகாநாடு வருத்தலுடன் செய்திப் படங்களை அதிகமாகத் தயாரிக்க பொதுஜனங்களும், சர்க்காரும் ஆதரவளிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறது.

பாரத தேசிய நோக்கத்துடன் கூடியதும் கல்வி, சீர்திருத்த அம்சங்கள் கொண்டதாயும், ஜனங்களுடைய தினசரி வாழ்க்கையை அனுசரித்ததாயுமுள்ள படங்களை அதிகமாகத் தயாரிக்க வேண்டுமென்று இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

ஒரே கதையை பல மாறுபெயர்கள் கொடுத்து படமெடுக்கும் நாசகரமான ஒழுக்கமற்ற மனப்பான்மையை இம்மகாநாடு கண்டிக்கிறது.

சினிமாப் படங்களின் குழுக்களை நேர்மையற்ற வழியில் உபயோகித்து லாபம் சம்பாதிப்பதைக் கண்டிப்பதுடன், அவர்களுக்கு தக்க வைத்திய உதவி விளையாட்டு முதலிய வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

குறுகிய காலத்திற்கு மொத்த பணம் கொடுத்து நடிகர்களை காண்டிராக்டுக்கு அமர்த்திக்கொள்வதை மாற்றி நீண்ட கால சம்பள திட்டத்திலேயே நடிகர்களை அமர்த்த வேண்டுமென்று மகாநாடு கருதுகிறது.

சில பட முதலாளிகள் வட நாட்டில் ஸ்டுடியோக்களில் படமெடுக்கச் செல்லும் மனப்பான்மையைக் கண்டு வருத்தத்துடன் தமிழ்ப் படமெடுப்பவர்கள் மாகாணத்திலுள்ள ஸ்டுடியோக்களிலேயே படமெடுக்கும் படியாக இம் மகாநாடு சிபார்சு செய்கிறது.

ஸ்திரீகள் புருஷ வேஷமும், புருஷர்கள் ஸ்திரீ வேஷமும் போடுவது இயற்கைக்கு விரோதமென்றும், இவ்வழக்கத்தைத் தடுக்க வேண்டுமென்றும், 14 ரீல்களுக்கு மேல் நீள முள்ள படங்கள் தயாரிக்கக் கூடாதெனவும், பிலிம் தொழில் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு சர்க்கார் இன்ஸ்டிட்யூட் ஏற்படுத்தி பிலிம் தொழிலைக் கற்பிக்க முன்வர வேண்டு மென்றும், காட்சி பார்ப்பதற்கு விதிக்கப்படும் வரியை எடுக்க வேண்டு மென்றும் பல தீர்மானங்கள் நிறைவேறின.

சினிமாக் குறிப்புகள்

பிரசிடென்ஸி (பாரகன்)

திருப்பூர் டாக்கீஸ் லிமிடெட்டாரின் "வசந்த சேனை" அல்லது "மிருச்சகடிகா" என்ற தமிழ் பேசும் படம் இன்று முதல் இங்கு இரண்டாவது வாரமாக நீடிக்கப்பட்டிருக்கிறது. பிரபல இந்திய சினிமா நடிகரான ராஜா சாண்டோ, மிஸ். தனலக்ஷ்மி முதலியோர் இதில் முக்கிய நடிகர்களாவர். ஸ்ரீமதி ராகினி தேவியின் நடனமும் இதில் காண்பிக்கப்படுகிறது.

கேப்டி

ஸ்ரீமதி டி. பி. ராஜலக்ஷ்மி நடிக்கும் "மின் மலர்" என்ற சமூக சம்பந்தமான தமிழ் பேசும் படம் இன்று முதல் இங்கு காண்பிக்கப்படும். இக்கதை எழுதியும், டைரக்ட் செய்தும், நடித்துமிருப்பவர் ஸ்ரீமதி டி.பி. ராஜலக்ஷ்மி. இந்தியப் பெண்களின் கற்பு நெறியையும், பெண்களின் சுதந்திரத்தையும் இப்படம் விளக்குகிறது.

எல்பின்ஸ்டன்

கோயமுத்தூர் பரமேஸ்வர் சௌண்டு பிக்சர்ஸாரின் "இரு சகோதரர்கள்" என்ற உயரிய தமிழ் பேசும் படம் இன்று முதல் இங்கு ஆரம்பமாகிறது. கே. பி. கேசவன், பெருமாள், ஸ்ரீமதிகள் எஸ். என். கண்ணமணி, எஸ். என். விஜயலக்ஷ்மி முதலியோர் இதில் முக்கிய நடிகர்களாவர். வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமையையும், அதனால் ஒரு குடும்பமே படும் ஆற்றொணாக் கஷ்டங்களையும் இப்படம் விளக்கிக் காட்டுகிறது. நவீன வாழ்க்கையை சித்தரித்துக் காட்டும் ஓர் சமூக சம்பந்தமான படம். பாட்டுக்கள் சிலவேயாயினும், கேட்பதற்கு இனிமையாகவும் பொருத்தமாகவுமிருக்கிறது. உணர்ச்சி ததும்பும் சம்பாஷணைகளும் அதற்கேற்ற நடிப்பும் படத்தை இன்னும் சிலாகிக்கச் செய்கிறது. உண்மையும், சத்தியமுமே கடைசியில் வெற்றி பெறும் என்பதை இப்படம் ரூபிக்கிறது. யாவரும் அவசியம் பார்க்கவேண்டிய படங்களில் இது ஒன்றாகும். திரு. எல்லிஸ் ஆர். டங்கனால் இப்படம் டைரக் செய்யப்பட்டுளது.

கிரௌன்-வெஸ்ட் எண்ட்

சமூக ஊழல்களையும், போலிச் சன்னியாசிகளின் இரகசியங்களையும், உண்மைக் காதலின் உயர்வையும், அப்பதிவோரின் சாமர்த்தியங்களையும் விளக்கிக் காட்டும், திருப்பூர் ஜுபிடர் பிக்சர்ஸ் லிமிடெடாரின் "சந்திர காந்தா" என்ற தமிழ் பேசும் படம் இன்று முதல் இத்தியேட்டர்களில் இரண்டாவது வாரமாக நீடிக்கப்பட்டிருக்கிறது. மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியின் நடிகர்களான காளி என். ரத்தினம், டி. ஆர். பாபுராவ், எஸ். ராம்குமார், முதலியோர் இப்படத்தில் நடிக்கின்றனர்.

வெல்லிங்டன்

பிரெட் ஆஸ்டர், ஜிஞ்சர் ரோஜர்ஸ் நடிக்கும் "கடற்படையைப் பின்பற்று" என்ற ஆங்கில பேசும் படம் இன்றும் நாளையும் இங்கு காண்பிக்கப்படும்.

ராக்ஸி

ராண்டோல்ப் ஸ்காட், பின்னி பார்னஸ் முதலியோர் நடிக்கும் "மோஹிகனின் முடிவு" என்ற ஆங்கில பேசும் படம் இங்கு இன்று முதல் காண்பிக்கப்படும்.

பாரகன் டாக்கீஸில் காண்பிக்கப் பட்டு வரும் "வசந்த சேனை" என்ற தமிழ் பேசும் படத்திலிருந்து ஒரு காட்சி.

எதிர்பாருங்கள்! ஆரம்ப தினத்தை!! எதிர்பாருங்கள்!!!

திறைமுகக் காட்சி! கலங்குமா மாட்சி!!
வஞ்சகரின் சூட்சி! விந்தை தரும் கந்தன் பேச்சி!!

மூளைக்கு விருந்தளிக்கும் ஜெகஜாலப் புரட்டுகள் நிறைந்து
இதுவரை வெளிவந்திருக்கும் தமிழ் பேசும் படங்களில் காணாத விஷயங்கள் கண்டு மகிழ

★ "குட்டி" ★

என்னும்
சமூக தமிழ் பேசும் படம்
உங்களூர் வெள்ளித் திரைக்கு வருகிறது.

★

Mr. V. S. M. ராஜாராமய்யர்
மிஸ். T. P. லக்ஷ்மிகாந்தம், மிஸ். P. S. கிருஷ்ணமணி
முதலிய பிரபல நடிகர்களால் முழுத் திறமையுடன் நடிக்கப் பெற்றது

டைரக்டர்: T. P. கைலாசம் B.A., A.R.C Sc., (London)
ஸ்டுடியோ: வேல் பிக்சர்ஸ் மதராஸ்.

விவரங்களுக்கு:— V. S. டாக்கீஸ், டெலிபோன் நெ: 58-A பங்களா 37.
புரொப்ரைட்டர்ஸ்:—V. S. K. முத்தாரமய்யர் & சன்ஸ்.,
தந்தி: "JARIVASTAR" மதுரை.

எல்பின்ஸ்டன் டாக்கீஸில் இன்று முதல் காண்பிக்கப்படும் "இரு சகோதரர்கள்" என்ற தமிழ் பேசும் படத்திலிருந்து ஒரு காட்சி.

மதுரை நகரெங்கும் இதே பேச்சு!!!

இந்திர சபா!
இந்திர சபா!!
இந்திர சபா!!!

T. K. சுந்தரப்பா,
K. சாந்தா தேவி,
J. சுசீலா தேவி,
T. S. கிருஷ்ணவேணி
ஆகியோர்
முழுத் திறமையுடன் நடித்த
புண்ணிய புராணிக
சிறந்த தமிழ் பேசும் படம்

19-12-36 புதன்கிழமை.

வெற்றி முழக்கத்துடன் மகத்தான 2-வது வாரம்! மதுரை நியூ சினிமாவில் ஆயிரக்கணக்கான மக்கள் இடமின்றி திரும்ப நேரிடுகிறது!

ரஸிகர்களே, இடத்திற்கு முந்துங்கள்!

தூத்துக்குடி — "தூத்துக்குடி சினிமா"வில் 26—12—'36உ ஆரம்ப விழா.

கும்பகோணம்—சரஸ்வதி டாக்கீஸ். தஞ்சை —நியூ ராஜாராம் டாக்கீஸ். கோயமுத்தூர்—
திருச்சி —வெல்லிங்டன் டாக்கீஸ். மாயவரம்—சுந்தரம் டாக்கீஸ். எடிஸன் டாக்கீஸ்

ஆகியவைகளிலும், இன்னும் இதர ஊர்களிலும் ஆரம்ப தினங்களை ஆவலுடன் எதிர்பாருங்கள்!

கைவசமிருக்கும் படம்:— "மதராஸ் மெயில்"
விவரங்களுக்கு:— இந்திரா டாக்கீஸ், 59, மஞ்சணக்காரத் தெரு, மதுரை.
புரொப்ரைட்டர்: T. B. கிருஷ்ணய்யர். தந்தி: "Teebeekey". போன் நெ. 96.

விடுதலை பாவலர் பாடினைக் கேட்பாயின்
செதேசிய கீத்தி சுதேசிய சிந்தை
[நாட்டினரெல்லாம்
பொருள் சுகப்பேறுகள் சர்வமும் பெற்று
நிரும்பிக வாழ்தலே யாம்

விடுதலை
VIDUTHALAI

மும்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்று நின்ற
செம்மொழியை திருமொழியை
[தேன்மொழியை
தனித்தியங்கும் ஆற்றலுள தொன்மொழியை
[அமிழ்தனைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
[அநுதினமும் பழக்கம் செய்வீர்.

மலர்-2] சென்னை: (26-12-1936) தாதுவருஷ மார்கழிமீ] ௨ சனிக்கிழமை [இதழ்-59

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்

நான்காவது ஆண்டு அறிக்கை

நிர்வாக சபை 1935—36

தலைவர்:—திரு. சி. டி. நாயகம் எம்.எல்.ஸி.

உப தலைவர்கள்:—தோழர்கள்: என். குஞ்சிதம் பி. ஏ. எல் டி., கே. எம். பாலசுப்ரமணியம் பி. ஏ., பி.எல்., டாக்டர் மே. மாசிலாமணி.

காரியதரிசி:—திரு. என். ரங்கநாதன்.

நிர்வாக அங்கத்தினர்கள்:—தோழர்கள்: சி. தங்கராஜு, டி. ராதா கிருஷ்ணன், பி. என். குருசாமி, டி. என். ராமன், வி. வி. துரைசாமி, கே. சிவஞானம், கே. கிருஷ்ண சாமி, பி. சத்தியமூர்த்தி, கே. கல்யாணசுந்தரம், என். என். சங்கரலிங்கம்.

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்

15-12-32-ல் ஸ்தாபிக்கப் பட்டு நான்கு வருட காலம் வரையில் மகத்தான பல தொண்டுகளைப் புரிந்து வருகின்றது. முதல் வருட அறிக்கை 12-11-33 லும், இரண்டாவது வருட அறிக்கையை 25-11-34 லும், மூன்றாவது வருட அறிக்கையை சென்ற 12-1-36 லும் பொது மக்களுக்குச் சமர்ப்பிக்கப் பட்டது.

மூன்றாவது ஆண்டு விழா

12-1-36 ஞாயிற்றுக் கிழமை மாலை 5-மணிக்கு சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் சுயமரியாதை இயக்கத் தலைவர் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் நடந்தேறியது. அதுசமயம், தோழர்கள்: அ. பொன்னம்பலனார், சோ. முருகப்பா, ஈ. நாராயணியம்மாள், அ. மேரி. சௌந்தரி, டி. சுப்ரமண்யம், பா. மஞ்சுளாபாய், ஆகியவர்கள் இயக்கத்தைக் குறித்தும், மன்றத்தின் வேலைகளைக் குறித்தும் விரிவுரை ஆற்றினர்கள்.

நான்காவது வருட சங்க வேலை

அங்கத்தினர் பொதுக் கூட்டம்:- மன்றத்தின் நிர்வாகத்தைக் கவனிக்கும் பொருட்டு 22-2-36 மாலை 6-45 மணிக்கு கூடி 1935–36 க்கு நிர்வாக சபை தேர்ந்தெடுக்கப் பட்டது. பொக்கிஷதார் வேலையை காரியதரிசியே பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

அங்கத்தினர்கள் அவசர பொதுக் கூட்டம்:-30-4-36-ல் மன்றத்தின் உபதலைவர் தோழர் கே. எம். பாலசுப்ரமணியம் பி.ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் கூடியது. அது சமயம் காரியதரிசியாக இருந்த தோழர் எம். என் முத்து அவர்கள் மீது நம்பிக்கை இல்லை தீர்மானம் நிறைவேறியது. அதனால் ஏற்பட்ட காரியதரிசி ஸ்தானத்திற்கு தோழர் என். ரங்கநாதம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

நிர்வாக சபைக் கூட்டம் மன்றத்தின் நிர்வாக சபைக் கூட்டம் இவ்வருடம் 9 தடவை கூடி மன்றத்தின் காரியங்களை கவனித்து வந்துள்ளது.

பிரசாரம்

19 பிரசாரக் கூட்டங்கள் இவ்வருடம் முறையே நடந்தேறியது.

பொதுக் கூட்டங்கள்:—இவ்வருடம் மன்றத்தின் சார்பில் இரு பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன* அதிக கூட்டங்கள் நடைபெறுவதற்கு நமக்கு போதுமான அவகாசமும், வசதியுமின்மையே காரணம். தவிர நமது இயக்கம் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்து தேர்தலில் ஈடுபட்டு வேலை செய்தமையால் நமது பிரசாரத்தை நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. (*விவரம் Appendix A-ல் காணவும்.)

புத்தகாலயம்:—சென்ற வருடம் கையில் உள்ள புத்தகங்கள் 130. இவ்வருடம் சேர்க்கப்பட்டது 20 ஆக மொத்தம் 150 புத்தகங்கள் உள்ளன. அங்கத்தினர்கள் புத்தகங்களை நன்கு பயன்படுத்தி வருகின்றனர்.

உண்மை விளக்கம் வாசகசாலை

மன்றத்தின் சார்பில் நடைபெறுகின்றது. மேற்படி வாசகசாலைக்கு தினசரிகளான (ஆங்கிலம்) "மெயில்", "ஜஸ்டிஸ்", (தமிழ்) "தமிழ்நாடு", "தினமணி", "ஜனசக்தி" பத்திரிகைகளும் வாரம் இருமுறையான "விடுதலை" யும், வாரப் பத்திரிகையான "குடி அரசு", "சுதந்தரன்", மாதப் பத்திரிகை (ஆங்கிலம்) "கிட்டாசி கெவட்", (தமிழ்) "பகுத்தறிவு", "தமிழரசு", "குமார விகடன்" ஆகிய பத்திரிகைகள் தருவிக்கப் படுகின்றன.

விசேஷ சம்பவங்கள்:—மன்றத்தின் தலைவர் தோழர் சி. டி. நாயகம் அவர்கள் சென்னை சட்டசபை அங்கத்தினராக அரசாங்கத்தாரால் தேர்ந்தெடுத்ததை முன்னிட்டு சிற்றுண்டி விருந்தும், வாழ்த்துப் பத்திரமும் வழங்கப்பெற்றது.

சொற்பொழிவு போட்டி:—அதி போட்டி 31-10-36-ல் நடைபெற்றது. அது சமயம் கீழ்கண்டவர்கள் பரிசு பெற்றவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

முதல் பரிசு தோழர் சி. தங்கராஜு, இரண்டாவது பரிசு தோழர் கே. கிருஷ்ணசாமி. மூன்றாவது பரிசு தோழர் பி. என். குருசாமி.

வியாசப் போட்டி:—மேற்படி போட்டி 12-7-36-ல் நடைபெற்றது. தோழர் என். பிரகாசம் பரிசு பெற்றவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பகிஷ்காரம்:—12—11—35-ல் அகில இந்திய காங்கரஸ் தலைவர், பாபு ராஜேந்திர பிரசாத் அவர்கள் தமிழ்நாடு சுற்றுப்பிரயாணத்தை முன்னிட்டுக் கொண்டு சென்னை எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனில் வந்தபோது கறுப்புக் கொடி பிடித்து பகிஷ்காரம் செய்யப்பட்டது.

5-10-36-ல் அகில இந்திய காங்கரஸ் தலைவர் பண்டிட் ஜவஹர்லால் நேரு சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் வந்து இறங்கியபோது கறுப்புக் கொடி பிடித்து பகிஷ்காரம் செய்யப்பட்டது.

காங்கரஸ் பார்லிமெண்டரி போர்டு தலைவர் தோழர் புலாபாய் தேசாய் சுயமரியாதை ஸ்தாபனத்தைப் பற்றி அவதூறாக உரைத்ததைக் குறித்தும், பண்டிட் ஜவஹர்லால் அவர்களின் வருகையைக் குறித்தும் மன்றத்தின் காரியதரிசியைக் கொண்டு இரு அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

விளையாட்டு:—அங்கத்தினர்கள் விளையாடும் பொருட்டு கேரம், செஸ் ஆகிய விளையாட்டுகள் வைக்கப்பட்டன.

தீர்மானங்கள்

கண்டனத் தீர்மானங்கள்

1. மு. ராகவய்யங்கார் தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி என்ற நூலில் தமிழர்களை இழிவுபடுத்தி எழுதியிருப்பதைக் கண்டித்து தீர்மானம் நிறைவேறியதுடன் மேற்படி நூலை பாடபுத்தகமாக வைக்கக்கூடாது என்றும் சென்னை சர்வ கலாசாலையாரைக் கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானம் நிறைவேறியது.

2. இனும் மசோதாவை எதிர்த்து பிரசாரம் செய்த பார்ப்பனர்களைக் கண்டிப்பதாக தீர்மானம் நிறைவேறியது.

3. இந்திய சட்டசபையில் காங்கரஸ்காரர்கள் மோடி திருத்தத்திற்கு ஆதரவளித்ததால் அவர்களை ராஜீனாமா செய்யும்படி தீர்மானம் நிறைவேறியது.

பொதுத் தீர்மானங்கள்

4 ஜஸ்டிஸ் கட்சி பிரசாரத்தை உத்தேசித்து "லிபரேட்டர்" பத்திரிகை பெயரையும், உரிமையையும் கட்சிக்குக் கொடுக்க வேண்டும் என்று செட்டிநாட்டு குமார ராஜா அவர்களைக் கேட்டுக்கொள்ளுவதாக தீர்மானம் நிறைவேறியது.

5. இந்திய சட்டசபையில் தோழர்கள்: எம். வி. ராஜு, டாக்டர் தேஷ்முக் ஆகியவர்களால் கொண்டுவரப்பட்ட இந்துமத விவாக மசோதா- பெண்கள் சொத்துரிமை மசோதா ஆகியவைகளை ஆதரித்து தீர்மானங்கள் நிறைவேறின.

பாராட்டுத் தீர்மானங்கள்

6. நமது சங்கத்தின் தலைவர் தோழர் சி. டி. நாயகம் அவர்கள் சென்னை சட்டசபை அங்கத்தினராக நியமிக்கப்பட்டதைப் பாராட்டி தீர்மானம் நிறைவேறியது.

அனுதாபத் தீர்மானங்கள்

7. தோழர்கள்: டி. வி. சுப்பிரமண்யம், டபிள்யூ பி. ஏ. எஸ். ராஜு சேகரன் ஆகியவர்கள் மரணத்தைக் குறித்து அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேறின.

அங்கத்தினர்கள்:—சென்ற வருடம் (1934—35) அங்கத்தினர்கள் தொகை 30. இவ்வருடம் புதியதாக சேர்ந்தவர்கள் 31. ஆக மொத்தம் 61 ராஜீனாமா செய்யப்பட்டது 1. போக 60.

வரவு செலவு:—மன்றத்தின் சந்தா வரவு 1-11-35 முதல் 31-10-36 வரையில் ரூ. 52-14-0.

நன்கொடை:—1-11-35 முதல் 31-10-36 வரை ரூ. 43-12-0. சென்ற வருடம் கை இருப்பு ரூ. 1-14-2. கடன் வாங்கியது ரூ. 13-2-6. பிரவேசக் கட்டணம் வரவு 0-5-0. ஆகமொத்தம் ரூ 111—15—8.

மேற்படி தேதியிலிருந்து மேற்படி தேதிவரை பலவகைப்பட்ட செலவு ரூ. 110—3—6.

கை இருப்பு ரூ. 1—12—2

கடன் திருப்பிக் கொடுக்க வேண்டியது ரூ.—7—8—3. விவரம் Appendix B-ல் பார்க்கவும்.

முடிவுரை

மேலே குறிப்பிட்ட காரியங்கள் நடைபெறுவதற்கு நமது மன்றத்தின் அங்கத்தினர்களின் ஒற்றுமையும், உழைப்பும் நமது இயக்க அபிமானிகளின் ஆதரவும் என்று கூறுவது மிகையாகாது. அடுத்த வருடங்களுக்கும் நமது அங்கத்தினர்களும், அபிமானிகளும் ஒருமைப்பட்டு வேலை செய்வார்களென்று நம்புகிறோம்.

நிர்வாக அங்கத்தினர்களின்
உத்தரவுப்படி,
எஸ். ரங்கநாதன்,
காரியதரிசி.

சர்வ தொழிலாளர் சங்கம்

ஜார்ஜ் வாசகசாலை

(ஒரு நிருபர்)

தேதூர், டிச, 21

மேற்படி சங்கத்தின் பொது கூட்டம் இன்று மாலை 6-30-மணிக்கு திரு டி. பி. துரைசாமி அவர்கள் தலைமையில் கூடியது.

அதில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டன.

எட்டாவது எட்வர்டு பட்டம் துறந்ததை முன்னிட்டு இச்சங்கம் விசனிக்கிறது.

6-ம் ஜார்ஜ் பட்டத்திற்கு வந்ததை முன்னிட்டு இச்சங்கம் சந்தோஷப்படுகிறது.

28-4-36-ல் இந்த ஊரில் சர்வ தொழிலாளர் சங்க சார்பாய் ஜார்ஜ் வாசகசாலை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இத்தவரில் ஜஸ்டிஸ் கட்சியினுடைய கொள்கைகளையும் பிரசாரம் செய்தது கிடையாது. பார்த்ததும் கிடையாது. தோழர்கள்: ஈ. வெ. ராமசாமி அவர்களையும், டபிள்யூ. பு. அ. சௌந்தர பாண்டியன் அவர்களையும் இச்சங்கத்தின் சார்பாய் ஒரு மீட்டிங் போடும் படியாக கேட்டுக் கொள்ளுகிறது. பொது ஜனங்களுக்குச் செய்து இருக்கிற நன்மையையும் இனி செய்யப்போகிற நன்மைகளையும், நமது கட்சி அபிமானிகள் விபரமாய் தெருவிக்கும்படி இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

இரவு 9-30 மணிக்கு கூட்டம் வந்தனோபசாரத்துடன் இனிது கலைந்தது.

மூத்தத்தின் இன்பம்

3 அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு 50 பக்கம் கொண்ட புத்தகம் இனமாய் அனுப்பப்படும்.

ஒற்றுமை ஆபீஸ்,
நியாகராயநகர், மதராஸ்.



இரண்டாவது அகில இந்திய சினிமா மகாநாடு முடிவடைந்த பின் மகாநாட்டுத் தலைவருக்கும் பிரதிநிதிகளுக்கும், சென்னை பிலிம் கழகத்தார் ஒரு தேக்சசேரி நடத்தியபோது எடுத்த படம். P. N. A.

சங்கர நயினார் கோவில்

ஜஸ்டிஸ் கூட்டம்

(ஒரு நிருபர்)

சங்கரநயினார்கோவில், டிச, 20

இன்று இரவு 8-மணிக்கு தேனப்பபுரம் 1-வது தெருவில் ஜஸ்டிஸ் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டில் ஜஸ்டிஸ் சம்பந்தமான வேலைத் திட்டங்களையும், வரும் தேர்தல் சம்பந்தமான விஷயங்களையும், மற்றும் கடிதப் போக்கு வரத்து முதலியவைகளையும் கவனிக்க திரு. டி. பி. சுப்பையா முதலியார் அவர்களை இக்கூட்டம் ஏகமனதாகத் தீர்மானித்திருக்கிறது.

மேற்படியாரது முழுவிலாசம்:—டி. பி. சுப்பையா முதலியார், தேனப்பபுரம் 2-வது தெரு, சங்கர நயினார் கோவில்.

ஜஸ்டிஸ் தலைவர்கள், சங்கங்கள், பொது ஊழியர்கள் ஜஸ்டிஸ் சம்பந்தமான தகவல்களை அப்போதைக்கப் போது மேற்கண்ட திரு. முதலியார் அவர்களுக்கு அறிவிக்க இக்கூட்டம் கேட்டுக் கொண்டது.

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்

(காரியதரிசி)

சென்னை, டிச, 29

மேற்படி மன்றத்தின் வருடாந்திர அங்கத்தினர்கள் பொதுக் கூட்டம் 27-12-36 ஞாயிறு காலை 11-30 மணிக்கு அடி மன்ற காரியாலயத்தில் நடைபெற்றது. அது சமயம் 1936-37 வருஷத்திற்கு கீழ்கண்ட நிர்வாகசபை தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர்:—செ. தெ. நாயகம் எம். எல். ஸி.

உபதலைவர்கள்:—திரு. என். குஞ்சிதம் பி. ஏ, எல் டி., திரு. வி. தாமோதரம், டாக்டர் எம். பாலசுந்தரம்.

காரியதரிசி:—திரு. கே. கிருஷ்ணசாமி, உபகாரியதரிசி, திரு. என். பிரகாசம்

நிர்வாகசபை அங்கத்தினர்கள்:—திரு என். ரங்கநாதம், திரு. சி. தங்கராஜு, திரு. டி. ராதாகிருஷ்ணன், திரு. பி. என். குருசாமி, திரு. வி. வி. துரைசாமி, திரு. கே. சிவஞானம், திரு. கே. கல்யாணசுந்தரம், திரு. பி. என். சம்பந்தம், திரு. டி. சுப்பரமணியம், திரு. எம் கணேசன்.

பொக்கிஷதார்:—திரு. ஆர். நாராயணி அம்மாள்.

"கிராம ஊழியன்"

வாரப் பதிப்பு.

ஆசிரியர்:—S. பூரணம் பிள்ளை.

கிராமப் புனருத்தாரணத்தின் பொருட்டுத் தோன்றி மாதம் இருமுறையாக வெளிவரும் "கிராம ஊழியன்" இரண்டாம் ஆண்டின் ஆரம்பமாகிய 25—10—36ல் முதல் பிரதி ஞாயிறுதோறும், [illegible] முறையில் வெளிவருகிறது. [illegible]

உள்நாடு: வருடசந்தா ரூ. 3. வெளிநாடு: வருடசந்தா ரூ 5.

மானேஜர்:—"கிராம ஊழியன்",
துறையூர். (திருச்சி ஜில்லா)

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN, AT THE JUSTICE PRINTING WORKS, 14, MOUNT ROAD MADRAS. EDITOR: PANDIT S. MUTHUSWAMI PILLAI.

சாத்தூரில் ஜஸ்டிஸ் கட்சிப் பொதுக் கூட்டம்

காங்கரஸ் இதுவரை சாதித்ததென்ன?

தலைவர்களின் வீர கர்ஜனை

(ஒரு நிருபர்)

சாத்தூர், டிச, 21

இன்று மாலை 5-30 மணிக்கு இந்நகரப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகேயுள்ள ராமசாமியார் சதுக்கத்தில் ஒரு பிரம்மாண்டமான ஜஸ்டிஸ் கட்சிப் பொதுக் கூட்டம் கூட்டப் பட்டது.

அம்மையம் ஜஸ்டிஸ் கட்சியின் மாபெருந் தலைவர் உயர்திரு. ஈ. வெ. ராமசாமி அவர்களும், விருதுநகர் முனிசிபல் தலைவர் திரு. வி. வி. ராமசாமி அவர்களும் தோழர் அ. பொன்னம்பலம் அவர்களும், மாஜி யூனியன் சேர்மன் சொக்கலிங்கம் பிள்ளை அவர்களும், மற்றும் பல பிரமுகர்களும் விஜயஞ் செய்திருந்தனர். திரு. ராமசாமி அவர்களை தரிசிக்க வெகு ஆவலுடன் இந்நகரைச் சுற்றியுள்ள பல கிராம வாசிகள் ஏராளமாக விஜயஞ் செய்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

சரியாக 5-30 மணிக்கு கூட்டம் கூடிற்று. இந்நகர் பிரபல வர்த்தகர் திரு. மாணிக்க நாடார் பி. ஏ. பி. எல். அவர்கள் அவைத் தலைமை வகித்தார். பின்பு விருதுநகர் முனிசிபல் சேர்மனும் சென்னை அசம்பிளி அபேட்சகருமான திரு. வி. வி. ராமசாமி அவர்கள் பேசியதின் சாராம்சமாவது:-

சகோதர சகோதரிகளே! வரப்போகும் தேர்தலில் சட்டசபையின் அமைப்பு முழுவதும் மாறுதலடைந்திருக்கின்றது. அத்தேர்தலில் வெற்றி பெறுவதற்கு பொதுஜனங்களின் உண்மையான உணர்ச்சியும் மிக மிக அவசியமானது. நீண்ட காலமாக தேசத்தின் பாதுகாப்பு ஸ்தாபனம் என்னும் காங்கரஸ் இதுவரை செய்ய முடியாத பல அரிய காரியங்களை ஜஸ்டிஸ் கட்சி செய்து முடித்திருக்கிறது. என்பதை யாவரும் மறக்க முடியாது. உத்தியோக முறையில் பல சீர்திருத்தங்கள் வழங்கப்பட்டு வகுப்பு வாரியாக எல்லோரும் பதவிகளைப் பெற்று வாழ்ந்தனர். ஆங்காங்கே வேண்டிய தண்ணீர் வசதிகள் செய்யப்பட்டன. பெரிய பெரிய ரோடுகள் போடப்பட்டன. லோகல் முனிசிபாலிடி முதலிய வற்றில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. தென்னிந்தியாவிலுள்ள பார்ப்பனரல்லாத ஒரு சமூகத்துக் கென்று தன் வாழ்நாள் முழுவதும் உழைத்துவந்த மகத்தான இந்த ஜஸ்டிஸ் கட்சிக்குள்ள பொதுஜன ஆதரவும், முற்போக்கையும் கண்டு பொறாமை கொண்டு வயிறெரியும் காங்கரஸ் கட்சியானது புனிதமான ஜஸ்டிஸ் கட்சியையும், அதன் தலைவர்களையும் தூஷித்து வரும் வசை மொழிகளுக்கு உங்கள் செவி சாய்க்கப் படாமல் இருக்கும்படி வேண்டுகிறேன். இனியும் நாங்கள் ஏமாற மாட்டோம் என்பதை காங்கரஸ்காரருக்கு எடுத்துக் காட்டுவதின் நிமித்தம் வரப்போகும் சட்டசபைத் தேர்தலில் நீங்கள் அனைவரும் பூரணமாக என்னை ஆதரித்து ஜஸ்டிஸ் கட்சியின் புனிதமான நோக்கத்தை ஆதரிப்பீர்கள் என்று நம்புகிறேன் என்று பேசி முடித்தார்.

பின்னர், திரு. ஈ. வெ. ராமசாமி அவர்கள் எழுந்து பேசியதின் சாராம்சமாவது:—

சகோதர சகோதரிகளே! எனக்கு முன் பேசிய நண்பர் வி. வி. ராமசாமி அவர்களைக் குறித்து எனைவிட நீங்களே அதிகம் அறிந்திருக்க வேண்டும். சென்னையில் பல மைல்களுக்கப்பால் இருக்கும் நான் இந்த ஜில்லா வாசியான திரு. வி. வி. ராமசாமி அவர்கள் தன் ஜில்லா மக்களுக்குச் செய்திருக்கும் நன்மையை இந்த ஜில்லா மக்கள் அறிந்திருப்பதை விட நான் அதிகம் அறிந்திருக்க நியாயமில்லை. ஆகையால் இப்பொழுது நான் எலெக்ஷனைப் பற்றியோ, ஜஸ்டிஸ்கட்சியைப்பற்றியோ ஒன்றும் சொல்ல வரவில்லை. ஆனால் ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றிக் குறை கூறி வரும் காங்கரஸ்காரரின் விஷயத்தைப் பற்றிக் கூறவே விரும்புகிறேன். நான் சொல்வதை நீங்கள் வேத வாக்கியமாகக் கொள்ளவேண்டும் என்பது என்னுடைய விருப்பமில்லை. காங்கரஸ் இருக்கிறது காங்கரசின் ஜீவிய சரித்திரத்தைக் குறித்து அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களே எழுதிய புஸ்தகமே இருக்கிறது. அதை ஒரு முறை படித்துப் பாருங்கள். ஆதியில் காங்கரசில் எல்லாச் சாதியினரும் மதத்தினரும் ஒன்று சேர்ந்திருந்தனர். அப்பொழுது முஸ்லீம் தலைவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து நாம் எல்லோரும் இந்தியாவில் நான்கில் ஒரு பங்கு ஜனத் தொகை உள்ளவர்கள். இந்தியப் பதவிகளில் பெரும்பாலனவற்றில் இந்துக்களே இருப்பது எங்களால் இனியுஞ் சகித்திருக்க முடியாது. ஆகையால், எங்கள் ஜனத் தொகைக்குத் தக்கபடி எங்களுக்குப் பதவிகொடுக்க வேண்டுமென்று கேட்டவுடன் இதை மறுத்தால் முஸ்லீம்களுக்குள் பிளவு ஏற்படும் என்று எண்ணி அதற்குச் சம்மதித்தவர்கள். அதன் பிறகு காலடைவில் சென்னை மாகாணத்தில் உள்ள பார்ப்பனரல்லாத சமூகத்தாரில் வரும் ஒன்று சேர்ந்து பார்ப்பனர்கள் செய்து வரும் அநீதிகளை எடுத்துக் கூறி தங்களுக்கும் அரசியல் வாழ்வில் பங்குண்டு என்று வாதாட அதைக் காங்கரஸ் ஏற்றுக் கொள்ளாது மறுக்கவே அதை விட்டுப் பிரியவேண்டிய தாயிற்று. இந்தியாவில் பிறந்த நாம் எல்லாம் இந்தியர்கள்தான் என்பதைநாங்களும்ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால், இந்தியாவில் கிடைக்கும் சீர்திருத்தங்களுக்கெல்லாம் நாங்களும் [illegible]. ஆனால், நாங்கள் இந்தியாவிற்குண்டாகும் சகல சௌகரியங்களில் எங்களுக்கும் பங்கு கொடு என்று கேட்கின்ற பொழுது எங்களைக் காங்கரஸ் விரோதிகள் என்றும், தேசத் துரோகிகள் என்று திட்டினால் இது நியாயமா என்பதை நீங்களே ஒரு நிமிஷம் யோசியுங்கள். காங்கரஸ் இதுவரை நமக்குச் சொல்லி வந்தவைகளில் எந்தக் காரியம் முடிந்திருக்கிறது என்பது உங்களுக்கே தெரியும். சுயராஜ்யம் ஒரு வருஷத்திற்குள் வந்து விடும் என்று சொல்லி முதலில் ஒரு கோடி ரூபாய் சேர்த்தார்கள். ஒரு வருஷம் ஆயிற்று. பின்பு பல லட்ச ரூபாய்கள் காங்கரசுக்காகத் தேச மக்கள் வழங்கினார்கள். பின்பு ஒரு வருடத் தவணை படிப்படியாக மாதக் கணக்கில் குறைந்துகொண்டே வந்தது. காலடைவில் இதோ வருகிறது சுயராஜ்யம், அதோ தூரத்தில் தெரிகிறது சுயராஜ்ய ஒளி என்று பேச ஆரம்பித்து விட்டார்கள். உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது என்ன முடிவேற்றப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியே கவிழ்ந்து விட்டது என்று பெரிய கூக்குரல் போட்டது. பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்க்கச் செல்கிறோம் என்று பேசினார்கள். பார்ப்பனரல்லாத பலரும் சிறைக்குச் சென்றார்கள். காந்தி இர்வின் ஒப்பந்தம் உண்டாயிற்று. நாங்கள் இனி சட்டத்தை மீறுவதில்லை, என்று கையெழுத்திட்ட பின்பு கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். திரும்பி வீட்டுக்குச் சென்றார்கள் இதைத் தவிர வேறு என்ன பயன் உண்டாயிற்று என்று கேட்கிறேன். சில வருடங்களுக்கு முன்பு மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் வழங்கப்பட்ட பொழுது காங்கிரஸ்காரர்கள் அனைவரும் சேர்ந்து சட்டசபையைப் பகிஷ்கரித்தனர். கழுதைகளின் உடம்பில் போர்டுகள் கட்டித் தொங்கவிடப்பட்டு எனக்கு ஓட்டுப் போடுங்கள் என்று விளம்பரம் செய்யப்பட்டது. இப்பொழுது அதே காங்கிரஸ்காரர்கள் ஓட்டுக் கேட்க வந்தால் கழுதைகள் யாரென்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் ஏராளமாய் பணம் சம்பாதிக்கிறார்கள் என்றால், காங்கரஸ்காரர்கள் "காங்கரஸ் ஏழை ஸ்தாபனம்" என்று சொல்லி பல லட்ச ரூபாய் ஏன் சேர்க்கிறார்கள் என்று நான் கேட்கிறேன். இந்தியாவில் ஜனங்களிடம் வசூல் செய்த பணத்தைக் கொண்டு காங்கரசின் சக்தியை அவர்கள் பலப்படுத்துகிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியை அரசியலில் வரும் சம்பளத்தோடு பல ஆயிரம் ரூபாய்கள் வழங்கி நாங்கள் பலப்படுத்துகிறோம். இதில் என்ன தவறாயிருக்கிறது என்று நான் உங்களைக் கேட்கிறேன். வரப்போகும் சட்டசபைத் தேர்தலில் அபேட்சகராய் நிற்பதற்கு தென்னாடியும், வடநாடியும் ஏழைகளே யிலையா? எவனாவது ஒரு தோட்டியின் பெயரை எங்கேயாவது நீங்கள் பார்த்ததுண்டா? இந்த நிலைமையில் இருந்து கொண்டு காங்கரஸ் ஏழை ஸ்தாபனம் என்று சொல்ல அவர்களுக்கு வெட்கமில்லையா என்று நான் கேட்கிறேன். காங்கரசின் கொள்கை தான் எது என்று நாம் கேட்கப்போனால் எல்லோரும் கராச்சித் திட்டத்தைக் காட்டுகிறார்கள். கராச்சித் திட்டத்தை அப்படியே கண்ணை மூடிக் கொண்டு ஒப்புக் கொண்டு விடுகிறோம். வெள்ளைக்காரர் நாளைக்கே இந்நாட்டை விட்டுப் போக வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் நாங்கள் இன்று இரவு எட்டுமணிக்கே போய்விட வேண்டும் என்று சொல்லுகிறோம் பிரிட்டிஷ் ஆட்சி ஒழிக்க என்று நீங்கள் விரும்பினால் அடியோடு அழிய வேண்டும் என்று நாங்கள் சொல்லுகிறோம் ஆனால், கராச்சித் திட்டத்தில் ஒரே ஒரு விஷயமாயிருக்கிறது. சாதி மத வருணாசிரம தருமங்களை ஆதரிக்கின்றோமென்பது அதிலொன்று எங்களுக்கு அது சகிக்க வில்லை. ஆகையினால் அதைமாற்றி இந்திய மக்கள் எல்லோரும் சமம்; இந்திய சுதந்திரத்தில் எல்லோருக்கும் பங்குண்டு என்று திருத்து என்று சொல்லுகிறோம். இவ்வாறு கூறுகின்ற நாங்கள் தேசத்துரோகிகளா என்பதை நீங்கள் அறிவினால் அலசிப் பாருங்கள். எது சரியானது என்பதை நீங்கள் முடிவுசெய்து உங்களுடைய அறிவு ஒப்புக்கொள்ளும் ஒருவரைச் சட்டசபைக்கு அனுப்பி வையுங்கள்.

பின்பு பூவாளூர் அ. பொன்னம்பலம் எழுந்து பேசியதாவது.

வரப்போகும் சட்டசபைத் தேர்தலில் பூரண வெற்றி பெருவதற்கு ஜஸ்டிஸ் கட்சி மிகவும் முனைந்து நிற்பதை உணர்ந்து காங்கரஸ் பயந்து பல காலிகளை ஏவி காலித்தனம் செய்யச் சொல்கிறது. இதிலிருந்து ஜஸ்டிஸ் கட்சியின் செல்வாக்கையும், இதர கட்சியின் செல்வாக்கின்மையையும் காட்டுகிறது. எங்கள் கட்சி இந்தியாவிற்கு அதிக நன்மை செய்திருக்கிறது. எங்களுக்கே ஓட்டு கொடுக்க என்று அவர்கள் கேட்கட்டும் அதைப்பற்றி எனக்கு ஆட்சேபணையில்லை. எங்கள்கட்சியை குறித்துத் திட்டும்போதுதான் எங்களுக்கு வருத்த முண்டாகின்றது. அவர்கள் எங்களைக் குறை கூறுவது போல நாங்களும் அவர்களைத் திட்டத் தயாராயில்லை. எங்கள் வாய்களும் பூட்டுப்போடவில்லை (கரகோஷம்) அவர்கள் செய்யும் காலித்தனங்களுக்கு நாங்களும் இளைத்தவர்களல்ல, அவர்கள் செய்யும் காலித்தனமான செய்கைகளுக்கு ஒன்றுக்குப் பத்துப் பங்கு நாங்களும் செய்ய தயார்! தயார்! தயார்! (பெருத்த கரகோஷம்)

பின்பு அவைத் தலைவர் ஜஸ்டிஸ் கட்சியின் பொது நல ஊழியத்தையும் திரு. வி. வி. ராமசாமி அவர்களின் பெருந்தன்மையையும் எடுத்துக் காட்டி ராமசாமி அவர்களுக்கே ஓட்டுக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். பின் மாஜி யூனியன் சேர்மன் சொக்கலிங்கம் பிள்ளையவர்கள் வந்தனம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

பித்தலாட்டம் செய்வது எது?

காங்கரஸா? ஜஸ்டிஸா?

தோழர் பி. முத்திருளாண்டியின் வீரவுரை

(ஒரு நிருபர்)

மதுரை, டிச, 25

நிலக்கோட்டை தாலூகாவைச் சேர்ந்த குரும்பபட்டி வட்டகையில் 20-12-36 ஞாயிற்றுக் கிழமையிலும் 21-12-36 திங்கள் 22-12-36 செவ்வாய் கிழமைகளில் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றது. அவ்வமயம் முறையே வி. பி. குழந்தைவேல் பத்தர் அவர்கள், டாக்டர் கந்தசாமி மணியம் அவர்கள் தலைமை வகித்தார்கள். தாழ்த்தப்பட்டவர் பொதுக் கூட்டத்திற்கு தோழர் மாணிக்கம் தலைமை வகித்தார். ஆண்களும், பெண்களும் ஏராளமாக கூடியிருந்தார்கள். பிரசாரத்திற்காக விஜயம் செய்திருந்த மதுரை எஸ். ஆர். ஒய். எல். காரியதரிசியான பி. முத்திருளாண்டி அவர்களை ஜனங்களுக்கு அறிமுகப் படுத்தி பேசும்படியாகக் கேட்டுக் கொண்டார்கள்.

தோழர் பி. முத்திருளாண்டி பேசியது வருமாறு:—

அன்புடைய மகா ஜனங்களே நிலக்கோட்டை தாலூகாவிற்கு ஒரு தொந்தரவு ஏற்படும்படியான நிலைமை வந்திருக்கிறது. இந்த தொந்தரவு உங்களையும் பிடித்து ஆட்டும். அப்போது உங்களுடைய அறிவைச் செலுத்தி அதிலிருந்து உங்களுடைய சுதந்தரத்தை நல்ல மார்க்கமாக உபயோகிக்க வேண்டும். இப்போது எங்கு பார்த்தாலும் காங்கரஸ், ஜஸ்டிஸ் பேரிகை அடிபட்டு வருகிறது. உங்களுக்குத் தெரியும். அந்த பேரிகை என்னும் தொந்தரவு தான் நிலக்கோட்டைக்கும் வரப்போகிறது அது விஷயங்களை உங்களுக்கு எச்சரித்து விட்டுப் போகத்தான் இங்கு வர நேர்ந்தது. ஆகவே, இப்போது இந்த தாலூக்காவில் காங்கரஸ் கட்சிக்கும், ஜஸ்டிஸ் கட்சிக்கும் போராட்டம் நடக்கப்போகிறது. அப்போது நீங்கள் எதை ஆதரிக்கப் போகிறீர்கள்? நமது நாட்டில் காங்கரஸ் ஆரம்பித்து 50 வருஷமாகிறது. இந்த 50 வருஷத்தில் நாம் ஏதாவது நன்மை அடைந்தோமா? இல்லை பின் என்ன கண்டோம். சுயராஜ்யம் வாங்கித் தருவதாக கோடிக்கான ரூபாய்களை ஏழை மக்களிடம் வாங்கி செலவு செய்தார்கள். அதனால், சுயராஜ்யமும் வரவில்லை. பாழாய்ப்போன ராமராஜ்யமும் வரவில்லை. இன்னும், இவை போதாது திலகர் நிதி, ஹரிஜன நிதி, கதர் நிதி என்று ஏழை பாமர மக்களிடம் ஏமாற்றி வாங்கின அந்த நிதி எப்படிப்பட்ட செலவு செய்யப்பட்டது என்று கேட்கப்போனால் ஜெயிலில் போட்டுவிடுவேன் என்று அதட்டுகிறார்கள். இந்த மாதிரி பகல் கொள்ளை அடிப்பது ஏது. அதுதான் காங்கரஸ். ஜஸ்டிஸ் அல்ல. இந்தியாவிலுள்ள 35 கோடி மக்களும் காங்கரஸ் சுயராஜ்யம் வாங்கித் தரப்போகிறதென்று நம்பினார்கள். 7½ கோடி தாழ்த்தப்பட்டவர்களை முன்னேற்றுவதாகச் சொல்லி ஆலயப் பிரவேச மசோதாவை சட்டசபையில் வைத்துக் கொண்டு ஹரிஜன நிதி என்று ஒன்றை திரட்டினார்கள். தாழ்த்தப்பட்ட மக்களும் நம்பி தாம அணிந்திருந்த நகைகளையும் வளையல்களையும் விற்றுக் கொடுத்தார்கள். அது என்ன ஆச்சு அழுகிற பிள்ளைக்கு வாழைப்பழமும் கொடுத்து ஏமாற்றினது போல ஆகிவிட்டது. ஒரு காலத்தில் காங்கரஸ்காரர்கள் உத்தியோகத்தை நாயும், கழுதையும் வேலைபார்க்கும் கொட்டடி என்று சொன்னார்கள். இப்போது அதே உத்தியோகத்தை அடைவதற்கு பகிரத பிரயத்தனம் செய்கிறார்கள். ஏனையா முன்னை கழுதையும், நாயும் வேலைபார்க்கும் கொட்டடி என்று சொன்னீர்களே இப்போது ஏனையா ஆசை படுகிறீர்கள் என்று கேட்டால் நாங்கள் போய் வெள்ளை அதிகாரத்தை நாசமாக்க போகிறோம் என்று சொன்னார்கள். அப்படியாவது முடிந்ததா, யோசித்துப் பாருங்கள். எல்லாம் பித்தலாட்டம் சொல்வது ஒன்று, செய்வது ஒன்றாய் இருக்கிறது; அல்லாது, ஜஸ்டிஸ் கட்சியானது. இந்த மாதிரியான செய்கையில், ஈடுபட்டிருக்கிறதா என்று யோசித்துப் பாருங்கள் என்றும் பேசிவிட்டு ஜஸ்டிஸ் கட்சி நாட்டுக்கு செய்த நன்மைகளை சுமார் 1-30 மணி வரை மிக விரிவாகப் பேசினார். ஜனங்கள் மனதில் காங்கரஸ் செய்வது எல்லாம் மோசம் என்று உணர்ந்து எல்லாம் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிப்பதாக முடிவு செய்து விட்டார்கள். 24-12-36 காலை 2-மணிக்கு பி. முத்திருளாண்டி மதுரை பயணமானார்.

திருப்பத்தூர் ஜில்லா முன்சீப் கோர்ட்

அம்பலூர் கால்வாய் வழக்குத் தீர்ப்பு

(ஒரு நிருபர்)

அம்பலூர், டிச, 28

திருப்பத்தூர் தாலூகா தெக்குப்பட்டு கிராமத்து பாலமுகது மஹதி வகையறாக்கள், வேலூர் ஜில்லா போர்டைச் சேர்ந்த அம்பலூர்-ஜோலார்பேட்டை சந்தாயிருக்கு குறுக்கே கால்வாய் வெட்டகூடாதென வேலூர் ஜில்லா போர்டு மீதும் ஏ. டி. இராதாகிருஷ்ண மூப்பர் வகையறா, கஸ்தூரி ஐயேந்தா முதலியவர்கள் பேரிலும், திருப்பத்தூர் டி. மு. கோர்டில இஞ்சங்ஷன் தாவா தொடர்ந்திருந்தார்கள். கால்வாய் விஷயத்தில் ஜில்லா போர்டு தலையிடக் கூடாதென வாதிகள் டெம்பரரி இஞ்சங்ஷன் ஆர்டர் கோரினது தள்ளுபடியாகவே, டிக்ரி வழக்கு சென்ற மூன்று வருடகாலமாக நடந்து வந்தது. "அம்பலூர்-ஜோலார்பேட்டை சந்தா வேலூர் ஜில்லா போர்டுக்குச் சொந்தமாதலால், கால்வாய் முதலியன வெட்டிக்கொள்வதற்கு டி. போர்டாருக்கு அதிகாரம் உண்டு. அதைத் தடுக்க வாதிகளுக்கு சாசுவத இஞ்சங்ஷன் ஆர்டர் கொடுக்க முடியாது. இவ் வழக்கில் ஜில்லா போர்டாருக்கும் மூப்பர் வகையறாவுக்கும் ஏற்பட்ட செலவு தொகைகளை வாதிகள் கொடுக்கவேண்டும்" என ஜில்லா முன்சீப் திரு. எம். கோவிந்த பிள்ளை, பி. ஏ., பி. எல்., அவர்கள் சென்ற 21-12-36-ல் தீர்ப்புக் கூறினார்கள்.

வாதிகளுக்கு திருப்பத்தூர் வக்கீல்கள் திருவாளர்கள்: ஆர். சீனிவாச அய்யரும் ஈ. எல். இராகவ முதலியாரும் ஆஜரானார்கள்.

பிரதிவாதிகளுக்கு திருவாளர்கள்: ஜீ. சாமிநாதயரும், கே. ஜெயராம செட்டியாரும் ஆஜரானார்கள்.

பொங்கல்! பொங்கல்!!

அசல் பட்டுப் புடவை

அழகிய சிறு ஜரிகைக் கரை, அசல் பட்டு. சிகப்பு, அரக்கு புளு, பச்சை, ஸ்கை முதலிய கலர்களில் கிடைக்கும்.

12-முழம் x 44"	புடவை 1-க்கு	விலை	ரூ. 5-12—0
16-முழம் x 44"	புடவை 1-க்கு	விலை	ரூ. 7—8—0
18-முழம் x 44"	புடவை 1-க்கு	விலை	ரூ. 8—2—0
5-முழம் x 44"	அங்க வஸ்திரம் 1-க்கு		ரூ. 3—8—0

வெண்பட்டு அங்க வஸ்திரம்

5 முழம் x 44" அழகிய கரைகள் சல்வைக்கு சேர்த்தியானது.

விலை ரூ. 1—12—0—தான்.

☞ இந்த விலைகள் 15—1—37 பொங்கல் வரை தான்.

ஞாபகத்தில் வையுங்கள். உடனே ஆர்டரை அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
(Proprietors : Sundarams Ltd.,)
சில்க் அவுஸ், காசி.

எ து ?

தமிழ்நாட்டில் குறைந்த சந்தாவில்
அதிக பக்கங்களோடு வெளிவரும் தமிழ் மாதப் பத்திரிகை.

"சித்தன்"

நன்றே. இனிய கதைகள், ஹாஸ்யம், உலகச் செய்தி, வைத்தியக் குறிப்பு, சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன நிறைந்தது.

வருட சந்தா அணா (8) எட்டே. வெளிநாடு ரூ. 1.

மாதிரிப் பிரதி இலவசம். விளம்பர விகிதம் மிகவும் குறைவு.

விபரங்களுக்கு எழுதவும் :—
மானேஜர் :—"சித்தன்", பழனி, S. I.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

"அறிவுக் கொடி"

ஒரு சிறந்த தமிழ் மாத வெளியீடு.

ஆசிரியர் :—ஸ்ரீமதி சாமி சிதம்பரனார்.

ஒவ்வொரு ஆங்கில மாதம் 15-ம் தேதியில் வெளிவருவது.

அறிவு வளர்ச்சி, மாதர் முன்னேற்றம், தமிழ் மொழி வளர்ச்சி, விஞ்ஞானம், வைத்தியம், விகடம், சங்கீதம், நாடகம், படக் காட்சி, மனதைக் கவரும் சிறு கதைகள் முதலிய சிறந்த பல விஷயங்களும், இனிய பாடல்களும் வெளிவரும்.

உள்நாடு வருட சந்தா ரூ. 1. வெளிநாடு ரூ. 1-8-0.

மானேஜர் :—"அறிவுக் கொடி" ஆபீஸ்,
462, பிஷ் டவுன்குடித் தெரு, கும்பகோணம்.

விலை அரை அணா
8 பக்கங்கள்
மலாய் நாட்டில் 5 சதம்
Regd. No. M. 3298.

''விடுதலை''		
வாரம் இருமுறை பதிப்பு சந்தா முன் பணம்		
உள் நாடு		
1 மாதம்	...	0 6 0
3 மாதம்	...	1 0 0
6 மாதம்	...	1 14 0
1 வருடம்	...	3 10 0
சென்னைக்கு		
1 மாதம்	...	0 4 0
3 மாதம்	...	0 10 0
6 மாதம்	...	1 4 0
1 வருடம்	...	2 6 0

விடுதலை

VIDUTHALAI

(வாரம் இருமுறை வெளிவரும்)
ஆசிரியர்: பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.

''விடுதலை''		
வாரம் இருமுறை பதிப்பு சந்தா. முன் பணம்		
வெளி நாடு		
1 மாதம்	...	0 10 0
3 மாதம்	...	1 14 0
6 மாதம்	...	3 12 0
1 வருடம்	...	7 4 0
சர்க்கார், முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டுகளுக்கு:		
உள்நாடு: வருடம்	ரூ.	7 8 0
சென்னை: ,,	ரூ.	4 8 0

மலர்-2] சென்னை: ~~(26~~ 30-12-1936) தாதுவருஷ மார்கழிமீ ~~12~~ 14உ ~~சனி~~ புதன்கிழமை [இதழ்-~~59~~ 60

:-: ஆரியர் வருகையால் அழிந்தது தென்னாடு !!! :-:

தென்னாடு எழுச்சிக்கு ஜஸ்டிஸ் கட்சியே காரணம்!

பார்ப்பனச் சூழ்ச்சியில் மயங்காதீர்!

...ஞ்சை ஜில்லா ஜஸ்டிஸ் மகாநாட்டுக்கு விஜயம் செய்யுங்கள்

ஜஸ்டிஸ் கொடியை உயர்த்துங்கள்

திருவாரூர் தோழர் வி. எஸ். ராமன் கர்ஜனை

...காதார்கள்,

...கெடுதலும் ஓர் நன்மைக்கே' ...பது ஓர் பழமொழி. நமது ...க அபிவிருத்தியைக் கொலை ...பவதென்ற முடிவில் பார்ப்பனர் செய்யும் சூழ்ச்சிகளைக் கண்டும், ...ட்டும் வருகிறீர்கள். அவர்கள் ...ண்டப் புளுகை அஸ்திவாரமாய்க் ...காண்டு ஆகாயக் கோட்டை கட்டி ...ருகிறார்கள் என்பதை நாம் யாவ...ம் நன்கு அறிவோமாயினும் ...தை அலட்சியம் செய்வதற் ...லை. அதைப் பற்றி சிறிது கவ...னஞ் செலுத்தி கடமை செய்ய வேண்டியது நமக்கு அவசியமாயிருக்கிறது. என்றைய தினம் ...மது நாட்டில் ஆரியர்கள் அடி ...யெடுத்து வைத்தார்களோ அன்...றைய தினமிருந்து நமக்கு பிடித் ...த சனியன் அன்றைய தினமிரு...து இன்றைய வரைக்கும் ஆரியர் ...் (பார்ப்பனர்கள்) செய்து வரும் ...ட்டூழியங்களையும், அநியாயச் ...யல்களையும் யாரே வகுக்க வல் ...ர்!

ஆரியர் துரோகம்

''...ருகெட நூலை விடு, ஆ... ...ட காண விடு'' என்பதற்கொப்ப ...ரியர்கள் அடிவைத்த நாள் ...முதல் இன்றையவரைக்கும் அல்...லல்கள் தான்; அபிப்பிராய பேதங்...கள் தான். 'அவநம்பிக்கை' மயம் ...பது அவர்களுடனே நமது நாட்டில் ...நுழைந்து புகுந்து விட்டது; 'ஒற்றுமை' ...உருக்குலைந்தது. ஆரியர்கள் அவர்களின் நன்மையை வேண்டி நம்மவர் ...கட்கு இழைத்து வந்த எந்த சாத...னத்தையும் நாட்டை விட்டு அகற்றி ...யார்கள். காலக்கடையில் இதனைக் ...ட பெரியார்கள் பலர் அதனை ...டும் நம் நாட்டிடை குடிபுகச் ...ய அநேக வழிகளைக் கண் ...டனர். அது வேண்டிய பலனை ...ளித்ததாய்க் கண்டனரில்லை மீண் ...ம் நம் சமூகப் பெரியார்கள் பலர் ...'முயற்சி திருவினையாக்கும்' ...பதற்கொப்ப ஆழ்ந்த அறிவு ...முதிர்ந்த அநுபவத்தை அஸ் ...திவாரமாய்க் கொண்டு நீதி மார்க்கமே சிறந்த பலனைத் தரும் என்பதாக நீதி கட்சி என்ற பெயரால் ஓர் இயக்கத்தைக் கண்டனர்.

நீதிக்கட்சி தோற்றம்

நம்மிடை அக்கொள்கைகளைப் பரப்பினர்கள். நம்மவர்களும் அதை முழு மனதுடன் ஏற்றுக் கடமையைச் செய்ய தலைப்பட்டனர். நமது ஆங்கில கவர்ன்மெண்டாரும் அதற்குச் சிறிது ஆதரவளிக்க முன் வந்தனர். அதனை கண்ணுற்றார்கள் ஆரியப் பார்ப்பனர்கள். அவர்கட்கு அடிவயிற்றில் நோய் கண்டு விட்டது. ஐயர்மார் கூட்டத்தார் தங்கள் வாழ்வை குலைத்துக்கொள்ள சம்மதிப்பார்களா? அண்டப் புளுகை அஸ்திவாரமாய்க்கொண்டு ஆகாயக் கோட்டைக் கட்டி வாழ்ந்து வந்தவர்களல்லவா அவர்கள். நீதியே அஸ்திவாரமாய்க் கொண்ட ஆயுதத்தைக் கண்டதும் இனி பொய்க் கோட்டை பொடி பொடியாய்ப் போய் விடுமே என்பதை யறிந்து அந்த மாயாஜால மந்திர ஆரியர்கள் மீண்டும் நீதியைக் கொலை செய்ய கங்கணங்கட்டிக்கொண்டு முன்பு எப்படி சாமி, பூதம், மதம், ஜாதி, யாகம், யோகம், மோக்ஷம் நரகம் என்பதையெல்லாம் சொல்லி எப்படி பாமரர்களை சிறிது காலம் ஏமாற்றி வாழ்ந்து வந்தார்களோ அது போலவே இதுபோது காங்கரஸ், காந்தீயம், கதர், தேசீயம், சுயராஜ்யம், பொதுவுடைமை என்ற சில பயனற்ற சொற்களைச் சொல்லிக் கொண்டு அங்குமிங்கும் ஓடி அலைந்து ஆங்காங்கு மாயவலைகளை விரிக்கிறார்கள். அதை நம்மவர்கள் பலர் உணர்ந்தாரில்லை.

ஏமாந்த நம்மவர்கள்

அதன் காரணமாய் அந்த மாயவலையில் அநேகர் சிக்கிக் கொண்டு அவர்கட்கு ஆதரவளித்து வருவது மன்னியில், தங்களது சந்ததியாரையும், சமூகத்தாரையும் [illegible] கூலிகளாய், நிரபராதியாய் ஆக்கிவிட அடிகோலியும் வருகிறார்கள். இந்த பரிதாப நிலையைக் கண்ட நாம் வாளா யிருந்தல் முடியுமா? அநுதாபத்துடன் அவர்கள் பால் கவனஞ் செலுத்தி அநேக காரியங்கள் செய்து முடிக்க அவசியமேற்படுகிறது. ஆரியர்கள் வருகையை அறிந்த பெரு சில மன்னன், வணங்கா முடியானன், இராவணேசுவரன் என்ற தீர்க்கதரிசி ஆரம்பத்திலேயே அவர்களின் சூழ்ச்சியையும், சுயநலத்தையும் கண்டறிந்தவனும் தனது சகாவான மன்னன் தசரதனிடம் ஏராளமான எச்சரிக்கை செய்தும் பலன் காணாது அதற்கெனவே அநேக அரும் பெரும் காரியங்களைச் செய்து தனது உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தஞ் செய்து நமக்கு வழி காட்டியாய் நின்று புகழுடம்பு பெற்றான்.

தசரதன் கதி

அம்மாமனிதனாகிய நாம் அறிவிருந்தும் கற்றுக் கொண்டது என்ன? இராவணப் பெரியாரால் எவ்வளவோ எச்சரிக்கை செய்தும் கோரத தசரதராஜ வம்சம் கடைசியில் எந்த நிலையை யடைந்தது என்பதை ஆழ்ந்து சிந்தித்தால் அதன் உண்மை புலனாகும். ஆரியப் பார்ப்பனர்கட்கு அவ்வரசியலார் அளித்த ஆதரவுக்கு ஏதாவது அளவுண்டா? கடைசியில் கண்ட பலன் என்ன? தசரத வம்சம் அடியுடன் அற்றுப் போனதை கண்டோம். பார்ப்பனர்கட்கு செய்யும் சிறு உதவியும் பெரும் பலனையளிக்குமென்பதாக நம் மக்களிடை ஓர் நம்பிக்கை இருந்து வருகிறதே; மேலே கண்ட சரித்திர கூற்றுக்கு என்ன சொல்வார்களோ? அடுத்தபடியாக சமீப சம்பவமொன்றை எடுத்துக்கொள்வோம். நமது தஞ்சை மகாணை ஆண்டுவந்த போசளர்கள் ஆரியப் பார்ப்பனர்கட்கு செய்யாத உதவி ஏதாவது உண்டா என்பதை வினவ யாராவது முன் வருவார்களா? அக்கூற்றை நமது மாபெரும் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் எத்தனையோ தடவை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்த அரச வம்சம் இதுபோது எந்நிலையை அடைந்திருக்கிறது. இன்னும் இதைப்பற்றி விவரிக்கப் புகுந்தால் எத்தனையோ சான்றுகள் கூறலாம். நிற்க,

ஆரூர்க் கதை

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம். உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு'' என்பது நமது பேராசிரியரின் கருத்து. ஆரியர் நீதிக்கும், வழக்க பழக்கத்திற்கும், தமிழர்களின் நீதி, வழக்க பழக்கங்களுக்கும் வெகுதூரம் என்பது அநுபவ வாயிலாய் கண்டோர் உண்மையாகும், அதற்குச் சான்றாக ஆரூரின்கண் நிகழ்ந்த சம்பவமொன்றை கீழே காணலாம். அதிலிருந்தாவது அநேகர் உண்மையை உணர்தல் கூடும். நமது தஞ்சை ஜில்லாவிலுள் உள்ள பிரபல குடும்பங்கட்குள் வடபாதி மங்கலம் மைனர் எஸ்டேட்டானது சிகரம் போன்றது என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். அந்த எஸ்டேட்டின் வருமானத்தில் பெரும் பாகம் பார்ப்பனர்களின் நன்மைக்கெனவே உதவப்பட்டு வருகிறது இந்த சம்பிரதாயம் நீண்ட காலமாக என்பதை ஞாபகப் படுத்துகிறேன். எச்சமயத்தில் வகையில் அவர்கட்கு உதவி செய்து வருகிறார்களென்பதை யறிய முற்படுவீர்கள். தெரிந்தவரை கூறுகின்றேன். அடியேனும் ஆரூர் வாசியே. அந்த வடபாதி மங்கலம் எஸ்டேட்டாரும் ஆரூரைத்தான் வாசஸ் தலமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆரூரில் அவர்களின் சத்திரம் ஒன்று இருக்கிறது. அதில் தினம்தினம் பார்ப்பனர் எவ்வளவு பேர் வந்தாலும் மத்தியான போஜனமும், இரவு போஜனமும் அவர்களுக்கு இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது. அச்சத்திர இலாகாவிலேயே சில வருடமாக ஓர் புது ஏற்பாடு பகுத்தறிவிற்கு ஒத்ததாய் செய்து வருவது மிகவும் குறிப்பிடத்தக்கது.

ஹைஸ்கூல் தருமம்

திருவாரூரில் ஹைஸ்கூல் ஒன்று இருந்து வருவது யாவரும் அறிந்ததே. அந்த ஸ்கூலில் வாசிக்கும் ஏழை மாணவர்களுக்கு மூன்று வேளையும் உண்ண உணவு அளிப்பதன்றியில் எண்ணெய் முழுக்குக்கு வேண்டிய உதவியும், படிக்க இடமும் தந்து பேருதவி செய்து வருகிறார்கள். அதில் இதுபோது சுமார் 100 மாணவர்கள் அவ்வுதவியைப் பெற்றுப் படித்து வருகின்றனர். அதில் பெரும்பாலோர் பார்ப்பனர்கள் என்பதையும் ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறேன். அடுத்தபடியாக 'தியாகராஜ பெண் பாடசாலை' என்ற பெயரால் ஓர் ஆரம்ப பாடசாலை வெகுகாலமாக அவர்கள் சொந்தச் செலவில் மிகச் சிறப்புடன் நடத்தி வரப்படுகின்றது. அதிற்படிக்கும் மாணவிகட்கு சம்பளமென்பதே யில்லை. அதோடு வருடா வருடம் ஓர் குறிப்பிட்ட தினத்தில் தேர்ச்சி பெற்றவர்கட்கு சன்மானம் அளிக்கப்படுகிறது.

அதிற் கல்விபயிலும் மாணவிகளில் பெரும்பாலர் பார்ப்பனச் சாதியாரே. ஆசிரியர்களும் அவர்களே யென்பது பொருந்தும். அதுவுமன்றி திருவாரூர் பெரிய தேவஸ்தானத்திற்கும் அவர்கள் நிரந்தர பஞ்சாயத்தாரராவார்கள். அவர்களின் சொந்த செலவில் அநேக சடங்குகள் தினப்படி நடைபெறுகின்றன. சில காலங்களில் பக்தி மிகுதியில் ஏறுபடி விசேஷமும் அடிக்கடி நிகழ்வதுண்டு. கோவிலின் போசல் ஓர் விசேஷமானால் அதில்பங்குபெறுவோர் யாரென்பதை அதிகம் விளக்க வேண்டியதில்லை. அதைத் தவிர அந்த எஸ்டேட்டானது மிகுதியும் விவசாயத்தையே ஆதாரமாய்க் கொண்டது. லேவா தேவியும் சிறிதுண்டு என்று கூறலாம்.

சர்வம் பார்ப்பன மயம்

அந்தத் துறைகளில் பெரும்பாலும் பார்ப்பனர்களையே நம்பி உதவியாளராக வைத்துக் கொண்டிருக்கின்றனர். அதைத் தவிர கோர்ட்டு வியவகாரம் வெளிவிவகாரம் முதலியவைகளிலும் அது மாதிரியே குடும்ப வக்கீல், வைத்தியர், ஏஜண்ட் முதலியவைகளிலும் பெரும்பாலும் பார்ப்பனர்களே. பார்ப்பனர்கள் உதவியை வேண்டும், பார்ப்பன ரல்லாதார்க்கு ஏற்படும் செலவு எப்படிப்பட்டது என்பதை வாசகர்களே வைத்துக் கொள்ளுங்கள். அதைத் தவிர பூணூல் கல்யாணம், மாங்கல்ய தாரணம், கல்வி கற்க உதவி, யாத்திரை, பிதிர் சடங்கு, வாழ்வு தாழ்வு முதலிய பல வருமானங்கள் இதில் ஐயாவிடம் பெறுவது வேறு; அம்மாவிடம் பெறுவது வேறு. மற்றப்படி வெளியிலுள்ள பாழுங் கோவில் திருப்பணி, கும்பாபிஷேகம் பிராமணார்த்தம் முதலியன.

ஜில்லா போர்டு தேர்தல் படலம்

அது நிற்க இதுபோது நடைபெற்ற தஞ்சை ஜில்லா போர்டு தேர்தலில் கீழத் தஞ்சை போர்டுக்கு ஓர் அங்கத்தினராக திருவாரூர் நகரத் தொகுதியில் மேலே கண்ட எஸ்டேட் ஸ்ரீமானும், திருவாரூர் நகர பரிபாலன சபைத் தலைவரும், கொடையாளியுமாகிய ஜி. ராமானுஜ முதலியாரவர்கள் அபேட்சகராய் நின்றார்கள். அந்த எஸ்டேட்டார் அரசியல் கட்சியோ ஜஸ்டிஸ் கட்சியை ஆதிமுதலாக ஆதரித்து வருபவர்கள். ஆனாலும் ஆரியர்களின் சூட்சமத்திற்கு கட்டுப்பட்டு சமூகத்தின் கடமைக்கும் [illegible] கட்சிக்கொள்கையை அதிகம் செயலில் [illegible] இருந்து வந்தார்கள்; வருகிறார்கள். அதற்குச் சான்று வேண்டுமானால் கவனியுங்கள். திருவாரூரிலிருந்து வேலை செய்து வந்த இஸ்தாபனமானது உள்ளூர் பிரமுகர்களின் கவனக் குறைவால் பலங்குன்ற ஆரம்பித்தது. அது சமயம் பார்த்து காங்கரஸ் பார்ப்பனர்கள் தங்களில் காங்கரஸ் வேலைக்குத் தகுதியான ஒருவரைத் தலைவராய்க் கொண்டு தங்களின் சுபாவத்திற்கேற்ப சில பார்ப்பனரல்லாதாரை தங்கள் மாயவலையில் சிக்கச் செய்து கொண்டு காந்தியார், ராஜேந்திர பிரசாத், ஜவஹர்லால் முதலிய வடநாட்டு ஒற்றர்கள் தென்னாட்டுக்கு விஜயம் செய்த பொழுது திருவாருக்கும் அம்மஹான்களை வருவிக்க ஏகபோக இடமாக ஆக்கிக் கொண்டார்கள். அந்தப் புண்ணிய கைங்கரியத்தை தலைமைவேற்று நடத்தி வந்த கனவான் டாக்டர் வி. வி. நாகநாதய்யர் அவர்களாவார்கள். அவர்களின் பிறப்பிடம் திருச்சி என்பார்கள். ஆரிய வகுப்பைச் சார்ந்தவர். ஆங்கில வைத்தியத்திற் பட்டம் பெற்று ஆரூரில் வந்து தனி வைத்தியசாலை மூலம் சம்பாதியம் வைத்துக் கொண்டிருப்பவர். மேற்படி எஸ்டேட்டின் குடும்ப வைத்தியர். திருவாரூர் காங்கரஸ் சபைக்குத் தலைவர். மேலே கண்ட வடநாட்டுப் பெரியார்கள் திருவாருருக்கு வந்த போழ்து தங்களது எஸ்டேட்டின் வைத்தியரானடாக்டரவர்கள் அம் முயற்சியில் ஈடுபட்டிருப்பதை முன்னிட்டு ஜி. இரா. முதலியாரவர்கள் ஆற்றுக்கணக்கான ரூபாயடங்கிய பணப் பை ஒன்றை கதருடையுடன் காந்தியாருக்குச் சமர்ப்பிக்க முன் வந்தார்கள்; தனது பாக்கெட் மணியின் காணிக்கை செலுத்தியதோடு வரவேற்புக்கு வேண்டிய பல உதவிகளையும் செய்தார்கள். ராஜேந்திர பிரசாத், ஜவஹர்லால் முதலியவர்களின் வருகைக்கும் அது பொருந்தும். தனது கட்சியின் கொள்கையை விட ஐயர்மார்களுடைய தாக்ஷண்யம் அவர்கட்கு அதிகம் பெருமையைத்தர வல்லது என்பது அவர்களின் எண்ணம் போலும். மேற்படி கனவான் நின்ற தொகுதியில் போட்டியாக யார் அபேக்ஷகராய் முன்வந்தாரென்றால் மேற்படி கனவானின் நம்பிக்கைக்குப் பாத்திரமான குடும்ப வைத்தியர் டாக்டர் வி. வி. நாகநாதய்யர் அவர்களே யாவார்கள்.

அம்மா! அதிசயம்!!

நண்பர்களே, இது என்ன அதிசயிக்கத்தக்க செயலாயிருக்கிறதே யென்று வினவலாம். அவ்விதமே எங்கள் கவனமும் அதில் சென்றதுண்டு. முடிவிற்கு வர முடியவில்லை. பிறகு, விபரம் தெரியலானேனும். அதாவது 'காங்கிரஸ் கட்சி' என்ற ஒரே பதில் தான். காங்கிரஸ்காரர்கட்கு இது சமயம் பணத்திற்கு பஞ்சமா? பார்ப்பனரல்லாதாரிற் பலர் பணப் பையோடு தான் முந்தி, நீ முந்தி என்று காத்துக் கொண்டிருக்கிறார்களே. அதற்குப் பஞ்சமில்லை. அடுத்தபடியாய் தேர்தலுக்கு வேண்டியது ஒரு மனதோடு கூடிய உதவிப்படை. எப்போ, எப்போ என்றுதான் காப்பி ஹோட்டல் பார்ப்பனர் முதல் வக்கீல் பார்ப்பனர் வரை அச்சேவைக்கு காத்துக் கொண்டிருக்கிறார்களே. அதுவும் அய்யர்வாள் என்றதும் அணியணியாக படையும் தயாராய் விட்டது. ஓட்டர்களைப் பற்றியோ சொல்ல

(இதன் தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

ஐயா ஒரு சேதி!

நீங்கள் உருப்பட வேண்டாமா?

(தோழர் வீர நாமனர்)

பொது மக்களே சற்று கவனமாகக் கேளுங்கள். வெகு ரசமான சங்கதி. எல்லாம் உங்கள் நன்மையைப் பற்றியது தான். இப்போது முந்தி மாதிரியில்லை, எல்லாம் மாறுதல்!

“காலம் கலிகாலம் ஐயா!” என்று பலர் கதறுகிறார்கள். “இல்லை, இது புதிய நாகரீக காலம்” என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால், ஏழை மக்களுக்கு என்னவோ கஷ்ட காலமாகத் தானிருக்கிறது. இந்த மாகாண மக்களில் பெரும் பாலோர் ஏழைகள் தான் நீங்களும், உங்கள் நண்பர்களும் கூட இந்தப் பெருங் கூட்டத்தைச் சேர்ந்தவர்களல்லவா? இப்படி எத்தனை காலம் கஷ்டப்படுவது?

நீங்கள் உருப்பட வேண்டாமா?

நீங்கள் உருப்படுவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது அரசாங்கத்தில் பங்கு பெறவேண்டும். அரசாங்க இலாக்காக்களிலே பெரிய உத்தியோகங்களிலும், சின்ன உத்தியோகங்களிலும் உங்கள் சொந்த மனுஷர்கள் ஒருத்தர் இரண்டு பேர் இருந்தால் தானே உங்களுக்கு நல்லது.

ஆகையால், இந்த மாகாணத்திலுள்ள எல்லா வகுப்பாருக்கும் ஜனத்தொகை விதப்படி பூரணமான சம உரிமை ஏற்படுத்துவதற்காக இப்போது நடை முறையிலிருக்கும் வகுப்புவாரித் திட்டத்தை திருத்தி அமைப்பது அவசியம். இந்த நெருக்கடியான காலத்தில செய்ய வேண்டிய முக்கிய வேலை இதுவே யாகும்.

இதற்காக திரு. செ. த. நாயகம் எம். எல். சி. அவர்கள் ஒரு திட்டம் தயாரித்திருக்கிறார். சமீபத்தில் நடந்த சென்னைச் சட்டசபைக் கூட்டத்தில் அதைக் கொணர்ந்து நிறைவேற்ற முடியாமற் போனது வருந்தத்தக்கது. ஆனால், அதன் விவரம் என்னவென்று தெரிந்து கொண்டால் அடுத்த புதிய சட்டசபையில அதைக் கொண்டு வந்து சட்டமாக்க முயற்சிக்கலாம். அந்தத் திட்டம் பின்வருமாறு சற்றே கவனித்துப் படியுங்கள்.

அரசியலில் சம உரிமை திட்டம்

முதலாவது—சர்க்கார் இலாகா உத்தியோகங்கள் பல வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகுப்பிலும் பல 'கிரேடுகள்' உண்டு. இந்த வகுப்புகள், கிரேடுகள் எல்லாவற்றிலுமுள்ள உத்தியோகங்களுக்கும் இந்த மாகாணத்திலுள்ள எல்லா வகுப்பார்களிலிருந்தும், அந்தந்த வகுப்பு ஜனத் தொகை விதாசாரப்படி உத்தியோகஸ்தர்களை பொறுக்கி யெடுத்து நியமிக்கவேண்டும்.

2. இந்த மாகாணத்திலுள்ள ஒவ்வொரு வகுப்பினரும், இந்த மாகாண முழு ஜனத் தொகையில நூற்றுக்கு எத்தனைவீத மிருக்கிறார்களோ, அந்த விதாசாரப்படியே அரசாங்க உத்தியோகங்கள் எல்லாவற்றிலும், பிரிவிலும் அந்தந்த வகுப்பாருக்கு உத்தியோகங்களை பகிர்ந்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. அரசாங்க உத்தியோகங்களை இப்படி ஜனத்தொகை வாரி பகிர்ந்து கொடுப்பதற்காக இந்த மாகாணத்திலுள்ள பொதுமக்களை (1) முஸ்லீம்கள், (2) கிறிஸ்தவர்கள், (3) ஆதிதிராவிட இந்துக்கள், (4) பிற்போக்கான நிலையிலுள்ள இந்துக்கள், (5) பிராமண இந்துக்கள், (6) மற்ற இந்துக்கள், (7) மற்றவர்கள் என்று பிரித்துவிட வேண்டும்.

4. அரசாங்க உத்தியோகங்களில எந்த பிரிவுக்காவது அல்லது கிரேடுக்காவது ஒரு காலியாக ஆட்களை நியமிக்கும் போது அந்த பிரிவு அல்லது கிரேடில எந்த வகுப்பினர் குறைவாயிருக்கிறார்களோ அந்த வகுப்பு ஆட்களுக்கே முதலில் உத்தியோகம் கொடுக்க வேண்டும். எல்லா வகுப்பினருக்கும் ஜனத்தொகை விதாசாரப்படி உத்தியோகம் கிடைக்கிறவரையில், இப்பொழுது ஜனத்தொகை விதத்திற்கு அதிகமாக அரசாங்க உத்தியோகங்களிலிருக்கிற எந்த வகுப்பு ஆட்களுக்கும் உத்தியோகம் கொடுக்கப் படாது.

5. வகுப்புவாரி பிரதிநிதித்துவ திட்டப்படி உத்தியோகம் பெற வேண்டிய ஒரு குறிப்பிட்ட வகுப்பினரில் தகுதியான ஆள் இல்லாவிட்டால், அந்த வகுப்பிலிருந்து தகுதியான ஆள் கிடைக்கும் வரையில், அந்த வகுப்புக்கு அடுத்தபடியிலுள்ள வகுப்பைச் சேர்ந்த ஒருவரை தற்காலிகமாக நியமி[illegible]ம்.

6. ஜனத்தொகை வாரியாகப் பிரித்துக் கொடுப்பதற்கு சில 'உத்தியோகங்கள் எண்ணிக்கைக் குறைவாயிருக்கலாம். அப்படியானால் அந்த உத்தியோகங்களில் ஜனத்தொகை விதப்படி பங்கு கிடைக்குமாறு ஒவ்வொரு வகுப்பினரையும் முறை மாற்றி நியமிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

7. கீழ் பிரிவிலிருந்து மேல் பிரிவுக்கோ அல்லது கீழ் கிரேடிலிருந்து மேல் கிரேடுக்கோ உத்தியோக உயர்வு (பிரோமோஷன்) கொடுக்கிற பொழுது அதனால் கூடி மேல் பிரிவிலோ அல்லது மேல் கிரேடிலோ ஏற்கனவேயுள்ள வகுப்புவாரி ஜனத்தொகை விதாசார பிரதிநிதித்துவத்துக்கு பாதகம் நேரிடாத முறையிலேயே உத்தியோக உயர்வு கொடுக்கப்பட வேண்டும்.

8. உத்தியோக உயர்வு (புரோமோஷன்) கொடுப்பதால் ஜனத்தொகை வித வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்கு பாதகம் ஏற்படுவதாயிருந்தால், மேல் பிரிவு அல்லது கிரேடிலுள்ள காலிஸ்தானத்துக்கு உத்தியோக உயர்வு மூலம் ஆட்களை நியமிக்கப் படாது. அதற்குப் பதிலாக வகுப்புவாரி ஜனத் தொகை வித பிரதிநிதித்துவத்துக்கு இடையூறு இல்லாத முறையில் பொது மக்களிலிருந்தாவது அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தரிலிருந்தாவது நேரடியாக உத்தியோகஸ்தரை நியமிக்க வேண்டும்.

இரண்டாவது இந்திய சர்க்காரும் ஹைக்கோர்ட் ஜட்ஜுகளும், இந்தமாகாணத்திலே அவர்கள் அதிகாரத்துக்குட்பட்ட உத்தியோகங்களுக்கு மேல் விவரிக்கப்பெற்ற முறைப்படியே உத்தியோகஸ்தர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

இவ்விதமாக அரசாங்க உத்தியோகங் எல்லாவற்றிலும், பொது ஸ்தாபன வேலைகளிலும் நாட்டிலுள்ள எல்லா வகுப்பாருக்கும் ஜனத்தொகை விதப்படி வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கிடைக்குமாயின், பொது மக்களுக்கு அரசாங்க விஷயமாக பொறுப்புணர்ச்சி வளர்ச்சியடைவதுடன் பசி, பட்டினி, வேலையில்லா திண்டாட்டம் ஆகிய கஷ்டங்களை வேரறக் களைந்து விரைவில் மக்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கும் அனுகூலமாகும் என்பது திண்ணம். இத்தகைய ஜனத் தொகை விதாசார பிரதிநிதித்துவம்தான் சமராஜ்யத்துக்கும், சுயராஜ்யத்துக்கும் அடிகோலுவதாகும்.

“சமரஸம்”

ஓர் மாத வெளியீடு

மக்களின் நல்வாழ்வு, பொருளாதாரநிலை, கிராம சீரமைப்பு, சுகாதார விஷயங்கள் இவைகளை சமநோக்குடன் அபிவிருத்தி செய்யும் பத்திரிகை.

மானேஜர்:—
சமரஸம் ஆபீஸ்,
விழுப்புரம்.

காங்கரசுக்கு சாவு மணி அடித்த சென்னை ஆதிதிராவிட வீரர்களுக்கு ஜே!

திரு. சிவஷண்முகத்திற்கு விட்டுக் கொடுங்கள்

(ஜீ. டி. கனகமலை)

சென்னை நகர தெற்கு மத்திம பொதுத் தொகுதிக்கு காங்கரஸ் சார்பாக நின்ற திரு. எஸ். பாலகிருஷ்ணன் பிள்ளை அவர்களை படுதோல்வி யடையச் செய்த திரு ஜே. சிவஷண்முகம், திரு. எஸ். பி. பாலகுருசிவம், திரு. குமாரசாமி பிள்ளை, திரு. பி. செல்வநாதன் ஆகியவர்களின் வெற்றியை சென்னை நகர ஆதிதிராவிட மக்கள் கண்டு மகிழ்ச்சி கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. திருவாளர்கள்: சிவஷண்முகம், பாலகுருசிவம், செல்வநாதன் ஆகியவர்களைப்பற்றி நம் தமிழ் நாட்டிலுள்ள ஆதிதிராவிடமக்களுக்கு அறிமுகப் படுத்த வேண்டிய அவசியமே யில்லையென்று நான் நம்புகிறேன். மேல் சொன்ன நால்வரும் வயதில் தளர்ந்து உணர்ச்சிக் குன்றிய வீரமில்லாத வாலிபர்கள் அல்ல. ஆதிதிராவிட உதிரத்திலே பிறந்து, ஆதிதிராவிடர் சமூக விடுதலைக்கும், அரசியல் விடுதலைக்கும் அஞ்சாமல் போர் புரிந்து வரும் அஞ்சா நெஞ்சமபடைத்த அருங்குண வீரர்களாவார்கள் என்பதில் குற்றமொன்றும் இருக்க முடியாது.

லண்டன் வட்ட மேஜை மாநாட்டில் திரு. காந்தியார் ஆதிதிராவிட பிரச்சினை விஷயமாக சண்டிப்பிடிவாதமாக இருந்த போதும், பூனாவில் காந்தியார் தனித்தொகுதி முறையை படுகுழி வெட்டி புதைத்தபோதும், திருவாளர்கள்: சிவஷண்முகம், பாலகுருசிவம், செல்வநாதம் ஆகியவர்கள் காங்கரஸ் மகாசபையையும், திரு. காந்தியாரையும் கண்டித்துப் பேசிய வீரமொழிகள் என் செவிகளில் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. தனித்தொகுதி முறை ஆதிதிராவிடர்களுக்கு இன்றியமையாதது தென்று சென்னையிலே பல பெரியோர்கள் கிளர்ச்சி செய்த காலத்திலே இம் மூவரும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டவர்களாவார்கள். அக்காலத்திலே காங்கரஸ் மோகம் பிடித்த பேர்வழிகளால் பலவித இடையூறுகள் மேல் சொன்னவர்களுக்குச்செய்யப்பட்டது. என்றாலும் அவர்கள் பொருட் படுத்தாமல அன்றுமுதல் இன்று வரையிலும் தம சமூகத்தாருக்கு தொண்டு செய்தே வந்திருக்கிறார்கள். இம் மூவருடைய வெற்றிகள் சென்னை மாகாணத்திலுள்ள அத்தனை ஆதிதிராவிட நண்பர்களையும் கண் விழிக்கச்செய்யும் என்பதில் சந்தேகமிராது. சென்னை மாகாணத்தில காங்கரஸ் சார்பாக நிற்கும் தாழ்த்தப்பட்டோர் அபேட்சகர்களுக்கும், நல்ல புத்தி கற்றுக் கொடுத்த மாதிரியாகவும் இருக்கும். சென்னையில காங்கரசுக்கு அடித்த சாவு மணி மாகாண முழுவதும் காங்கரசுக்கு சாவு மணி அடிக்க ஒரு வழி காட்டியாகுமென்று நம்புகிறேன். காங்கரஸ் கோட்டையாகிய, அதிலும் சத்தியமூர்த்தி சர்வாதிகாரி வாழும் சென்னையிலேயே இப்படிப் பட்ட படுதோல்வி என்றால், உபயதுல்லா, குப்புசாமி இருக்கும் இடத்தில எப்படிப்பட்ட படுதோல்வி இருக்குமோ என்று இப்போதே ஆதிதிராவிட மக்கள் சிரிப்பாய் சிரிக்கிறார்கள். காங்கரஸ்காரர்களின் சூழ்ச்சியையும், பித்தலாட்டங்களையும், நன்றாய் தெரிந்து கொண்ட சென்னை நகர ஆதிதிராவிட மக்களே இப்படி நடந்துக் கொண்டார்களென்றால், ஆதிதிராவிட பெருங்குடி மக்களுக்கு காங்கரசின் மீது என்ன நம்பிக்கை இருக்கப் போகிறது. காங்கரஸ்காரர்கள் ஆதிதிராவிட மக்களை ஏமாற்றிய காலம் மலையேறி விட்டது. என்பதை ஒவ்வொரு காங்கரஸ் வாலாவும் கண்டுணர வேண்டும்.

கடைசியாக திருவாளர்கள்: பாலகுருசிவம், செல்வநாதன், குமாரசாமிப் பிள்ளை ஆகியவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுவது என்னவென்றால், திரு. ஜே. சிவஷண்முகம் பிள்ளைக்கு நீங்கள் விட்டுக்கொடுத்து உங்கள் பெயர்களையும் வாபீஸ் வாங்கிக் கொள்ளப் போவதாகத் தெரிகிறது. அப்படி உங்கள் மேலான யோசனைகளின் படி செய்வீர்களானால், திரு. ஜே. சிவஷண்முகத்தை போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்படும். திரு. ஜே. சிவஷண்முகத்தை "போட்டி யின்றி தேர்ந்தெடுத்து வெற்றி மாலை சூட்டி கௌரவப் படுத்துவீர்களானால் ஆதிதிராவிட பெருங்குடி மக்களையே நீங்கள் கௌரவப் படுத்தியதாகும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சட்ட சபையில் ரப்பர் பொம்மைகளைப் போல் நாற்காலிக்குக் கேடாக உட்கார்ந்து கொண்டிருக்கும் பேர்வழியல்ல நமது சிவஷண்முகம். ஆதிதிராவிடர்களின் அரசியல் விடுதலைக்காக, சட்ட சபையில் வீரமாக பேசும் சொல்லாற்றல் படைத்தவர் நமது சிவஷண்முகம். ஆங்கில கல்வியிலும் எம். ஏ. பட்டத்தையும் உடையவராக இருப்பவரும் நமது சிவஷண்முகம் பிள்ளையவர்களாவார்.

ஆகவே, தாங்கள் மூவரும் அவருக்கு விட்டுக் கொடுத்து வெற்றி பெறச் செய்து பெருங்குடி மக்களாகிய 8-கோடி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு “விடுதலை”யை உண்டாக்க வழி காட்டிகளாக இருப்பீர்களென்று மனமார்ந்த வந்தனத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

11-வது மாகாண ரெட்டியார் மகாநாடு

(ஒரு நிருபர்)

திருச்சி, டிச. 26

திருச்சி ரெட்டி ஜன சங்கத்தின் ஆதரவில பதினோராவது மாகாண ரெட்டியார் மகாநாட்டை திருச்சினாப்பள்ளியில் கூட்ட வேண்டிய விஷயத்தை ஆலோசிப்பதற்காக மேற்படி சங்கத்தின் சார்பில் ஒரு கூட்டம் கூடியது. திருச்சினாப்பள்ளியில் மாகாண மகாநாட்டை கூட்ட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அடுத்த ஜனவரி 23, 24 தேதிகளில் கூட்ட வேண்டு மென்றும் முடிவாயிற்று. பதினோராவது மாகாண ரெட்டியார் மகாநாட்டிற்கு தலைமை வகிக்க ஆந்திர சர்வகலாசாலை உப அத்யட்சகர் திரு. சி. ஆர். ரெட்டியையும், மகாநாட்டைத் திறந்து வைக்க முனகால ராஜா அல்லது வனபர்த்தி ராஜாவையும், இரண்டாவது நாள் நிகழ வேண்டிய இளைஞர் மகாநாட்டிற்கு சட்டசபைத்தலைவர் கனம் பி. இராமச்சந்திர ரெட்டியார் அவர்களையும் இளைஞர் மகாநாட்டைத் திறந்துவைக்க இந்து மத தேவஸ்தான போர்டு கமிஷனர் திரு. இ. வி. சுந்தர ரெட்டியாரையும் அழைப்பது தென்று தீர்மானிக்கப்பட்டது. இத்துடன் மகாநாட்டிற்கு வரவேற்புக் கழகமும், வரவேற்புக் கழகத் தலைவராக திரு கே. ராஜா சிதம்பர ரெட்டியார் (திருவானைக்காவல்) அவர்களும், மகாநாட்டுக் காரியதரிசிகளாக திருச்சி ஜில்லா போர்டு உபதலைவர் திரு ஏ. வி. ரங்கசாமி ரெட்டியாரும், 'ரெட்டி நாடு' உதவியாசிரியர் திரு கு. பா. கோபாலனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் வரவேற்புக் கழக அங்கத்தினர் கட்டணம் ரூபா ஐந்தாகவும், பிரதிநிதிக் கட்டணம் ரூபா ஒன்றாகவும் வரையறுக்கப்பட்டது.

இறுதியில் வரவேற்புக் கழகத்தினர் மகாநாட்டு வேலைகளை வேகமாகச் செய்ய வேண்டு மென்றும், சென்னை மாகாணத்திலுள்ள ரெட்டி ஜன சமூகத்தினர் ஆதரவு அளித்து மகாநாட்டிற்கு விஜயம் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டதென்று திருச்சி ரெட்டி ஜன சங்கக் காரியதரிசி எழுதுகிறார்.

ஆரியர் வருகையால் அழிந்தது தென்னாடு!

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வேண்டியதில்லை. நமது சமூக ஓட்டர்கள்தான் வெளுத்ததெல்லாம் பால் என்று கொள்பவர்கள். தேர்தல் திருவிழா நடந்தது. வெற்றியைப் பற்றிக் கேட்பானேன் ஐயர்வாள் அதிக ஓட்டுப்பெற்று ஜயமடைந்தார்கள். அதைக் கண்டு களிக்கூத்து ஆடியவர்களில் பலர் பார்ப்பனரல்லாதாராய் இருந்ததைக் கண்டு அநுதாபத்துடன் மனம் வருந்தவேண்டி யிருந்தது. முதலியாரவர்கட்கு கிடைத்த ஓட்டின் எண்ணிக்கையையும் மேற்படி எஸ்டேட்டில பல பெயரால் பங்கு பெறும் பார்ப்பனர்களின் எண்ணிக்கையையும் ஒத்திட்டுப் பார்த்தால் அப்போதுதான் நமது சமூகத்தின் வேறுபாடான உணர்ச்சி தெள்ளிதில் புலனாகும். மேற்படி எஸ்டேட்டில் பங்கு பெறும் பார்ப்பனர் ஒவ்வொருவரும் ஒரு வோட்டுவீதம் சேகரம் செய்வதென்ற முடிவிலிருப்பார்களானல் இதுபோது கிடைத்த ஓட்டைவிட அதிக ஓட்டுக் கிடைத்து வெற்றிமாலை சூடியிருக்கலாம். அதை என்போன்றோர் எடுத்துச் சொல்ல முன்வந்தால அதிகப் பிரசங்கி என்ற ஓர் வார்த்தையால் தெரிவித்துவிட்டு மீண்டும் ஐயாவாள் கூட்டத்திற்கு அன்பாகச சேவைசெய்ய முன் வருவார்கள்.

தஞ்சை ஜஸ்டிஸ் மகாநாடு

இத்தியாதி காரணங்களைக் கண்டு வரும் நம்போன்ற இளைஞர்கள் அந்தப் பார்ப்பனச் சூழ்ச்சியைக் கண்டு அலட்சியம் செய்வதற்கு முடியுமா, நமது சமூக சீர்கேட்டையல்லவா அது நமக்கு அறிவுறுத்துகிறது. அதனை முன்னிட்டே தங்களது சகோதர இளைஞர்களான சிலர் கூடி அந்தச் சூழ்ச்சி வலையில அகப்பட்டுமேலும் சகோதரர்களை மீட்கவும் இனி அவ்வலையில் நம்மக்கள் சிக்கி அல்லல்படாமல் காக்கவும் தஞ்சை ஜில்லா ஜஸ்டிஸ் கட்சி மாநாடு ஒன்றை கூட்டி நாம் யாவரும் ஒரு மனதுடன் ஒரு வேலைத்திட்டதை ஏற்படுத்திக்கொண்டு, வீடு வீடாகவும், தெருத் தெருவாகவும் ஊர் ஊராகவும் சென்று நமது கருத்தை எடுத்துச் சொல்லி வரப் போகும் சென்னை சட்டசபைத் தேர்தலுக்கு சிறிதளாவது நமது சேவை பலன் தரும் வண்ணம ஊக்கத்துடன் வேலை செய்யவே உயிரையும் திரணமாக மதித்து உண்மையே உயிர் காக்குமென நம்பி பலர் வெளி வந்துள்ளோம். எங்கள் ஆருயிரன்ன சகோதர இளைஞர்களே, நமது சமூக வாழ்வு இனி நமதுகையில் தானிருக்கிறது இனியும் முதியோர்களை நம்பி பயனில்லை. நமக்கு இச்சேவைக்கு வேண்டிய சாதனம் உண்மையான அன்பும், ஒற்றுமையான மனப்பான்மையும், ஓர் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடக்குந்தன்மையும், உலைவிலா உழைப்பும் ஊக்கமுமே யாகும். நமக்கு அடுத்தபடியாக வேண்டுவது உடல் வலியும், ஆற்றலும், அறிவுமேயாம். நம் இளைஞர்களாகிய தோழர்களே அறிவு சுலபத்தில கிடைக்க முடியாததாயிருக்கிறதே யென்று கவலை வேண்டாம் இன்றையினுக்கே நமது மாபெருந்தலைவர் ஈ. வெ. ரா. அவர்கள் காந்தியாரைப் போல் இனி ஒன்றிலும் சம்மதப்படுவதில்லை யென்ற முடிவிற்கு வந்து விடினும் முன்பு அவராலே நமது சமூகத்திறகும், அதிலும் இளைஞருலகிற்கும் அமிர்தமாரி போல வழங்கி வந்த 'பொன் மொழிகள் தமிழ் நாடெங்கும் [illegible] ஒலிக்கின்றன. கவலை வேண்டாம். ஜனவரி மாதம 15-ம் தேதிக்குள் தஞ்சை ஜில்லா மகாநாட்டை திருவாரூரில நடத்த ஏற்பாடு செய்து வருகிறோம். 'சோழ நாடு சோறுடைத்து' என்றபடி அதற்கும் பஞ்சமில்லை. கடல் போன்ற இடவசதி யிருக்கிறது. நமது காரியம் கைகூடும் காலமிதுவேயாகும். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும். ஒரு குலத்திற்கொரு நீதியென்ற மனு தர்மத்தை நிலைநாட்ட பார்ப்பன காங்கரஸார் ராமராஜ்ய கோருகிறார்கள். அதனை அடியுட அழித்து சமதர்ம ராஜ்யத்து அடிகோல எழுங்கள்! எழுங்கள் யம் கை கூடும்வரை உழை முன் வாருங்கள். எச்சரிக்கை! எச் ரிக்கை !!

குறிப்பு

இந்தத் தேர்தலானது எங்கள் ஊர்த் தலைவர்கட்கு சிறிது உணர்ச்சியைத் தந்திருக்கிற தென்பதை பட்டேல் வருகையானது எங்கட்கு சான்று தந்தது. இல்லையானால் ஆயிரக் கணக்கான ரூபாய் சமூக தவரிடமிருந்து விலகியிருக்கு அடுத்தபடியாக காங்கரஸ்காரர்க டைய அண்டப்புளுகுக்கு வில்லை யென்பதையும் பட்டே வருகை வெட்ட வெளிச்ச விட்டது திருவாரூருக்குப் டேல் வந்தபோழ்து வரவே வைபவம் ஸ்ரீ கரு நிதி தியேட்டரில் நடைபெற்ற அந்த தியேட்டர் 1000 ஜனங்களை தன்னுள் அடக்கிக்கொள்ள சக்தி இல்லாதிருந்தும் 'தின மணி' நிருபர் 20,000 ஜனங்களை அந்தத் தியேட்டரில் வெகு சாமர்த்தியமாக அடக்கசெய்ததற்கும், பார்ப்பனர் தயவைப் பெற பணத்தையும் பணமென்று பாராமல் உடல் நலத்தையும் கவனியாது காவலர் போல காத்துக் கொண்டிருந்து முதல் முதல் பட்டேலுக்கு தரிசனந் தந்து வரவேற்ற திரு. டி. என். சபாபதி முதலியார் அவர்களின் பெயரை மிகவும் ஜாக்கிரதையாக மறைத்து எழுதிய 'தின மணி' நிருபருக்கு நமது வந்தனம் உரித்தாகுக.

சுகாதார விழா

(ஒரு நிருபர்)

ஜக்கார்பாளையம், டிச. 28

சென்ற வெள்ளிக்கிழமை (11-12-36) பொள்ளாச்சிக் கடுத்த ஜக்கார் பாளையத்தில் போர்டு பாடசாலை ஆசிரியர்களால் சுகாதார விழா கொண்டாடப் பட்டது. உபாத்தியாயர் திரு. கே. என். ரெங்கசாமி நாயக்கர் வீட்டில் ஆதிதிராவிட குழந்தைகளுக்கு ஓர் விருந்து அளிக்கப்பட்டது. அவ்விருந்தில் திருவாளர்கள்: பா. சின்னசாமி நாயக்கர், பே ரங்கசாமி நாயக்கர், செல்லையா பிள்ளை, வித்துவான் என். கே. சுப்பையா செட்டியார், வித்வான் என். வி. கோவிந்தராஜீ நாயக்கர், பா. வெங்கிடசாமி நாயக்கர், கே. என். ராமகிருஷ்ண நாயக்கர், ஜி. இராமசாமி செட்டியார், என். கன்னம ராஜு முதலியார் முதலியவர்கள் கலந்து கொண்டனர். பிறகு ஹரிஜன குழந்தைகளுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் திரு பாப்பா நாயக்கர் பரிசு வழங்கினர். காலஞ்சென்ற வ. உ. சிதம்பரம் பிள்ளை பேரில் ஓர் அநுதாபக்கவி பாடிய பின்னர் 'சுகாதாரம் சம்பந்தமான ஓர் நாடகம் நடிக்கப்பட்டது. “சுகாதாரம்”, “ஆதிதிராவிடர்களின் முன்னேற்றம்”, 'கிராமச் சீர்திருத்தம்' என்னும் பொருள்கள்பற்றி மேற் கூறிய நண்பர்கள் சொற்பொழி வாற்ற, சந்தன தாம்பூலம் வழங்கி, வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

விக்கிரம சிங்கபுரம்

பஞ்சாயத்து போர்டு தேர்தல்

(ஒரு நிருபர்)

அம்பாசமுத்திரம், டிச. 25

அம்பாசமுத்திரத்தை சேர்ந்த விக்கிரம சிங்கபுரம் பஞ்சாயத்து போர்டில காலியான 1. மெம்பர் ஸ்தானத்திற்கு அம்பாசமுத்திரம் தாசில் தாரவர்கள் முன்னிலையில போர்டில் வைத்து 20-12-36-மாலை 1-மணிக்கு தேர்தல் நடந்தது. அது சமயம் மூன்று பேர் அபேட்சகர்களாக நின்றனர். மூன்று தரப்பாருக்கும் பல முக்கியஸ்தர்கள் பலமாக வேலை செய்தனர். பின் யாது காரணங்கொண்டோ இருவர் வாபீஸ் வாங்கி கொண்டதால், திருவாள சேதுப்பிள்ளை தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முச்சங்க காலம்

களவியலுரைகாரரின் உண்மை வரலாறு

(நாமக்கல் தி. பொ. அரங்கசாமி பிள்ளை பி. ஏ, எழுதியது)

சென்ற 2-12-36-ந் தேதியில் வெளியான “விடுதலை”யில் வித்வான் இராசமாணிக்கம் அவர்கள் எழுதியுள்ள வரலாற்றைப் படித்த அன்பர்களுக்கு என் சிற்றாராய்ச்சிக் கெட்டியவரை உள்ள முடிபுகளை எடுத்துக் காட்டுதல் கடனாகிறது. ஆகவே, நான் அச்சிட விருக்கும் “சங்க இலக்கிய வரலாறு” என்னும் சிறு சுவடியினின்றும் முச்சங்க காலம் என்பது பற்றியுள்ள விவரங்களைச் சுருக்கித் தருகிறேன்.

பண்டைக் காலத்தில் தமிழ் கலை வளர்ச்சி கருதி தலைச் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என மூன்று சங்கங்கள் பாண்டிய மன்னர்களால் பேணப்பட்டு வந்தனவென்று கர்ண பரம்பரையாக வந்த வரலாறு ஆங்காங்கு தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ளது. இம் முச்சங்கங்களைப் பற்றி “களவியலுரை” எனப்படும் “இறையனாரகப் பொருளுரை”யின் கட் கூறப்பட்டிருப்பதே மிக விரிவான வரலாறு. இவ்விரிவான வரலாற்றில் தலைச் சங்கம் 89 பாண்டியர்களால் 4440 யாண்டும், இடைச் சங்கம் 59 பாண்டியர்களால் 3700 யாண்டும், கடைச் சங்கம் 49 பாண்டியர்களால் 1350 யாண்டும் கூட்டப்பட்டிருந்தன என்று கூறப்பட்டுள்ளது தான் தற்கால சரித்திர ஆராய்ச்சியாளரேற் படும் அளவரையறைக்கு ஒப்ப முடிந்ததாயில்லை என்பர். இதனையே காரணமாகக் கொண்டு சிலர் முச்சங்கங்கள் இருந்தனவென்பதே பொய் யென்று கூறிடுவர். ஆனால், பண்டை நாளில் இச் சங்கங்கள் இருந்தமை மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், நாச்சியார், திருமங்கையாழ்வார், சேக்கிழார் முதலிய தெய்வப் பெரியார்களும், பெரும்புலமை படைத்த பேராசிரியர், நச்சினார்க்கினியர், அடியார்க்குநல்லார் முதலிய உரையாசிரியர்களும் ஆங்காங்கு தமிழ் நூல்களில் கூறியிருப்பது கண்டும், முச்சங்க வரலாறே கற்பிதம் என்று ஒதுக்கித் தள்ளுவது தவறாகும்.

இனி “சங்கம்” என்னும் சொல்லே வட சொல்லாதலாலும், பழந் தமிழ்ச் செய்யுட்களில் இச்சொல் காணப்படாமையின் தமிழ்ச் சங்கமென்பது பிற்காலத்தோர் படைத்துக் கொண்ட தென்பர் சிலர். எனின் “கபாடபுரம்” “உத்தர மதுரை” என்ற சொற்களும் வட சொற்களாதலின் அவைதாமும் தமிழகத்தில் இருந்தனவும் பொய்யேயாமோ? சங்கம் என்ற சொல்லே இல்லாவிட்டாலும், அப்பொருள் கொடுக்கும் மன்றம், அவை, பொதியில், என்பன போன்ற பல சொற்கள் பழந் தமிழ்ச் செய்யுட்களில் காணலாம். மிகப் பழைய நூலாகிய தொல்காப்பியமே ‘நிலந்தரு திருவிற் பாண்டியனவையத்து’ அரங்கேற்றப் பட்டது என்பர் பனம்பாரனார் தமது தொல்காப்பியப் பாயிரத்தில்.

இனி இறையனாரகப் பொருளுரை கூறும் தமிழ்ச் சங்க வரலாற்றின் உண்மையை ஆராய்வோம். இவ்வரலாற்றினின்றும் அறியக் கிடக்கும் காரியங்களாவன:

சங்கம்.	புலவர்கள்.	பாடினோர்.	ஆண்டுகள்.
தலைச் சங்கம்	549	4449	4440
இடைச் சங்கம்	59	3700	3700
கடைச் சங்கம்	49	449	1850

தமிழ் சங்கம் என்பது பாண்டிய மன்னர் ஒவ்வொருவராலும் அரசியல் நடாத்தும் வேறு அவைகள் போன்று தமிழ் வளர்ச்சி கருதி புலவர்கள் பலர் ஒருங்கிருந்து தமிழாராய்ச்சி செய்ய நிறுவியதோர் அவை யென்க. புலவர்கள் என்ற பட்டியில் காணப்படும் தொகை சங்கத்திலிருந்த உறுப்பினராவார். மூன்றாவது பட்டியில் உள்ளது சங்க உறுப்பினர் உள்ளிட்டு சங்கத்தில் வந்திருந்து பாடிய புலவர்களின் மொத்த எண்ணிக்கை. பண்டை நாளில் அளப்பரும் புலமை சான்ற ஒவ்வொருவர் ஒவ்வொரு காலத்தில் நாடுதோறும் சென்று ஆங்காங்குள்ள புலவர்களுடன் வாது புரிந்தும் தருக்கினும் பற்பல கிளைகளை யெழுப்பி பட்டிமை புரிந்தும் வாரா நிற்ப, இவர் தம்புலமையை ஆராய்ந்து அளந்து, அறிவான் பொருட்டு பாண்டியன் அவர்களை வரவழைத்துத் தன் தமிழவையை அடிக்கடி கூட்டுவிக்க வேண்டியதாயிற்று. இங்ஙனம் 4449 புலவர்தம் புலமையை ஆராய்வான் பொருட்டு தலைச் சங்கம் 4440 முறையும், 3700 புலவர் தம்புலமையை ஆராய்வான் பொருட்டு இடைச் சங்கம் 3700 முறையும் 449 புலவர் தம் புலமையை ஆராய்வான் பொருட்டு கடைச் சங்கம் 1850 முறையும் கூடிற்று.

களவியலுரையில் “அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதியாண்டு சங்க மிருந்தாரென்ப” “அவர் மூவாயிரத் தெழுநூற்றியாண்டு சங்க மிருந்தாரென்ப” “அவர் சங்க மிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத் தெண்ணூற்றைம்பதிற்றி யாண்டு என்ப” என்று கூறுவதி னின்றும் “சங்கமிருந்து” என்பதற்கு ‘கூட்டம் கூடி’ என்று ஒவ்வொரு முறையிலும் கூடியதற்கே பொருள் கொள்ள ஏது இருக்கிறது காண்க. மற்றும் யாண்டுகள் என்று சொன்னதெனின் சங்கம் ஆண்டுக் கொரு முறை குழுமுதல் என்ற வழக்கு பற்றி யென்க.

இனி, தலை, இடைச் சங்கங்கள் ஒரு புலவருக்கொரு முறையாகக் கூடினமை காண்டலின் கடைச் சங்கம் அவ்வாறன்றி 449 புலவர் தம் புலமையை ஆராய்வான் பொருட்டு 449 முறை மட்டுமேயன்றி 1850 முறை கூடியது எற்றற்கோவெனின் கூறுதும். கி. மு. 504-ல் ஏற்பட்ட கடல் கோளினால் இடைச் சங்கம் அழிந்து போக அக்காலத்திருந்த பாண்டியனாலேயே கடைச் சங்கம் துவக்கப்பட்டதென்றும், கி. மு 306-ல் ஏற்பட்ட கடல் கோளினாலும் அதனடுத்து வந்த பன்னீராண்டு வற்கடனாலும் அது கலைக்கப்பட்டு மீண்டும் கூட்டப்பட்டதென்றும் அறிஞர் ஆராய்ச்சியின் முடிபு. இவ்வாறு கடல் கோளினாலும், வற்கடனாலும் மன்னுயிர்கள் அநேக மடிந்தன; புலவர்களும் அயல் நாடுகள் சென்றிருந்தனர் ஆதலின் கடைச் சங்கத்தில் 1850 முறை கூடியதற்கு அக்காலத்தில் புலவர்கள் இல்லாமல் 449 புலவர்களே வந்திருந்தனர் என்க. பின் 1850 முறை கூடுவானேனெனின், தலை இடைச் சங்கங்களைப் போல் புலவர் தம் புலமையை ஆராய்ந்தது மட்டுமின்றி, அவ்வாறு ஆராய்ந்த பின்னர், ஏனைய முறைகளில் கூடிய காலத்து, பாண்டியனும், புலவர்களும் சுமார் இரண்டாயிர வருடங்களாக தலை இடைச் சங்கப் புலவர்களின் பாட்டுக்களையும், தங்கள் காலத்துப் புலவர்களின் பாட்டுக்களையும் அறிந்து பாடுபட்டுச் சேகரித்து, பல நூல்களையும், செய்யுட்களையும் ஆராய்ந்து தொகை நூல்கள் வகுத்தனரென்க. எட்டுத் தொகை பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க் கணக்கு என வகுக்கப்பட்ட வற்றுள் பெரும்பாலன கடைச் சங்கத்தாரால் தொகுக்கப் பட்டனவே. இத் தொகை நூற்களிலுள்ள செய்யுள்களின் எண்ணிக்கையைக் கொண்டு கடைச் சங்கம் 449 முறை மட்டுமே யன்றி அதற்கு மேல் 1400 முறை கூடியது மிகையாகாது காண்க.

தலை, இடை, கடைச் சங்கங்கள் 4440, 3700, 1850 முறைகள் கூடினவென்றும், அத்தொகைகள் சங்கங்களின் கால எல்லையை அத்துணை யாண்டுகள் என்று காட்டுவன வல்ல என்றும் முன்னர் கூறினோமல்லவா? ஈண்டு ஒவ்வொரு சங்கத்தின் காலத்தைத் தனித்தனியே யாராய்வோம்.

முதலிரு சங்கங்கள் கடல்கோள்களினால் முடிவு பெற்றமை “தலைச் சங்கத்தார் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை யென்ப” இடைச் சங்கத்தார் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாட புரமென்பது; அக்காலத்துப் போலும் பாண்டி நாட்டைக் கடல் கொண்டது” என்று களவியலுரை கூறுவதாலறிக. சரித்திர ஆராய்ச்சியாளர் முதற் கடல்கோளுக்கு முந்திய காலம் முதலூழி என்றும், அதற்குப் பின்னிட்டு, இரண்டாம் கடற்கோளுக்கு முன்னிட்ட இடைக்காலத்தை இரண்டாமூழி என்றும் கொள்ளுவர்.

முதலூழி—முதற் சங்கம்*

இப்போது நமக்குக் கிடைத்தவற்றுள் மிக பழமையான பாட்டு தலைச் சங்கத்து நல்லிசைப் புலவரான முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய “மண் டிணிந்த நிலனும்” என்னும் செய்யுளே. இச் செய்யுளில் பாரதப் போரில் முனைந்து நின்ற பாண்டவர் ஐவருக்கும், துரியோதனாதியர் நூற்றுவருக்கும் “பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்” என்று உதியஞ் சேரலாதன் என்ற சேரவேந்தனை “முன்னிலைப் படுத்தி” அவர் பாடியிருத்தலாலும், மேற்படி சோறு கொடுத்ததாகிய வரலாறு அகநானூறு, சிலப்பதிகாரம் முதலிய பிற்காலத்து நூல்களால் வலியுறுத்தப் பட்டிருப்பதாலும், தலைச் சங்கத்துப் புலவரான முரஞ்சியூர் முடிநாகராயர் பாரதப்போர் நிகழ்ந்த காலத்து இருந்தவரென்று அறியப்படும். பாரதப்போர் கி. மு. 3101-ல் நிகழ்ந்தது என்பது அறிஞர் துணிந்துள்ள ராதலின் அதற்குச் சமீபமான காலத்தில் நிகழ்ந்ததொரு கடல்கோளினாலேயே தலைச் சங்கம் அழிவுற்றதாக வேண்டும்.

கி. மு. 2000-த்தில் பாபிலோனியரால் செதுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில் ஒரு பெருங் கடல் கோள் வரலாறு கூறப்பட்டிருக்கிறது. யூத வேதத்தின் முதலாகமத்தில் குறிக்கப்பட்ட பெருங் கடல் கோள் கி. மு. 2344-ல் நிகழ்ந்தது என்று யூத நூலாராய்ச்சிக்காரர்கள் கணக்கிட்டிருக்கின்றனர். கி. மு. 2300க்கு முன் இயற்றப்பட்ட சதபத பிராமணத்தில் ஒரு கடல் கோள் கூறப்பட்டுள்ளது. இலங்கைத் தீவின் வரலாற்றில் கி. மு. 2387ல் ஒரு கடல் கோள் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் வைத்துப் பார்த்துத் தலைச் சங்கம் முடிவு பெற்றது கி. மு. 2387-ல் என்ப. அதனை நடாத்திய பாண்டிய மன்னர் எண்பத்தொன்பதின்மர் என்றமையால் ஒவ்வொரு பாண்டியனுக்கும் சராசரி ஆட்சி காலம் 20 ஆண்டுகளாகத் தலைச் சங்கம் துவங்கியது கி. மு. 4167-ல் என்க.

அத்துணை பழமையான காலத்தில் சங்கம் நிறுவுதற்கான நாகரிகம் வாய்ந்திருந்தவர் நமது மூதாதைகளான தமிழர்கள் என்பதை அறிய நமக்கு உண்டாகும் மகிழ்ச்சியை அளவிட முடியுமோ? இற்றைக்குச் சுமார் 7000 ஆண்டுகளுக்கு முன்பு இப்போது மெசொபடோமியா எனப்படும் நாட்டில் ஸுமேரியர் என்ற சாதியார் குடியேறி அந்நாட்டு மக்களுக்கு நாகரிக வழிகளைக் கற்பித்ததாக அவர்களது பழைய சரித்திரத்தால் தெரிய வருகிறது. இந்த ஸுமேரியரது முகமும், தமிழரது முகமும் ஒரேவிதமாய் இருப்பதாலும், அவ்வளவு பழமையான காலத்தில் தமிழரே நாகரிக மிக்குடையாராய் அயல் நாடுகளுக்கும் கப்பலேறிச் சென்று வாணிகம் நடத்தின ராதலாலும் ஸுமேரியர் எனப்படுவோர் தமிழ் மக்களின் ஒரு பிரிவினர் என்பது “இன” ஆராய்ச்சியாளர் கருத்தாகும். மெசொபடோமியாவின் ஒரு பகுதியாகிய கால்டியா என்ற நாட்டில் “ஊர்” என்ற பெயருடன் ஒரு பட்டணமும் பழைய காலத்தில் இருந்தமையும், அவ்வூரில் 4000 வருஷங்களுக்கு முன் இருந்து மண்ணில் ஆழ்ந்துபோன கட்டிடங்களை வெட்டிப் பார்த்ததில் மலையாளத்துத் தேக்கு மரத்துண்டுகள் அகப்பட்டமையும் இக்கருத்தை வலியுறுத்தும் ஆதாரங்களாகுமாறு காண்க. பாபிலோனில் பூமியை வெட்டிப் பார்த்ததில் மூரக என்ற விலாசமுள்ள தமிழ் வியாபாரிகள் எழுதின கணக்குகள் அகப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் நுணுகி ஆராயுழி கி. மு. 4000 த்தில தமிழ் சங்கம் (தலைச் சங்கம்) இருந்த தென்பது ஆச்சரியப்படத்தக்க தல்ல; நம்பற்பாலதாகும்.

இரண்டாம் ஊழி-இடைச் சங்கம்

தலைச் சங்கம் அழிவுற்றதற்குக் காரணமாய் நின்ற முதல் கடல் கோள் தனித்தனி பல்வேறிடங்களிலிருந்த தமிழர், ஆரியர், பாபிலோனியர், யூதர் என்பவர்களால் மிகப் பெரிய தொன்றாகவும் இந்நில வுலக அமைப்பிற் பேரிடர் பயப்பனவாகிய பெருமாறுதல்களும், பெருங் குழப்பங்களும் உண்டாக்கிய தொன்றாகவும் கொள்ளப்பட்டிருந்தமையால், அக்கடல் கோளினால் குமரிநாடு விழுங்கப்பட்ட பின்னர், பாண்டி மன்னர் அரசு ஒழுங்கு பெற்றுத் திரும்பவும் தமிழ் சங்கம் கூட்டப்படுதற்கு மூன்று நான்கு நூற்றாண்டுகளாவது சென்றிருத்தல் வேண்டும் என்பர் மறைமலை அடிகள்.

இனி கி மு. 504-ல் ஒரு பெருங் கடல்கோளும் கி. மு. 306-ல் ஒரு சிறு கடல்கோளும் நிகழ்ந்தனவாக இலங்கைத் தீவின் சரித்திரத்தில் அறியக் கிடக்கின்றது. இவற்றுள் இடைச் சங்க மிருந்த கபாடபுரத்தை விழுங்கிச் சென்றது கி. மு. 504-ல் நிகழ்ந்த கடல்கோளே என்ப. என்னே? கி. மு. 504-ல் நடந்த கடல்கோளே தமிழ்நாட்டு கடற்றுறை நகர்களை அழித்ததன்றி கி.மு. 306-ல் நிகழ்ந்தது தமிழ்நாட்டின் தென்பகுதியை வாய் வைத்து கொள்ளவில்லை யாகலின். மேலும் கி. மு. 504-க்கு பின்னர் இடைச் சங்கத்திறுதி யிலிருந்த பாண்டியனே கடைச் சங்கத்தையும் நிறுவினமையின், கடைச் சங்க கால எல்லையை ஆராயுமளவில், இடைச் சங்கத்தினிறுதி கி. மு. 504-ல் என்பது பெறப்படும். இடைச்சங்கத்தை நடாத்திய பாண்டியர் ஐம்பத்தொன்பதின் மருக்கும் சராசரி ஆட்சி காலம் ஒவ்வொருவருக்கும் 20 ஆண்டுகள் விகிதம் 1180 ஆண்டுகளாக இச் சங்கத்தின் கால எல்லை கி.மு. 1684-முதல் கி. மு. 504 வரை என்க.

கடைச்சங்க கால எல்லை

இடைச்சங்கத் திறுதியில் கடல் கோள்பட்டுப் போந்திருந்த பாண்டியன் முடத்திருமாறனே உத்தர மதுரையில் கடைச சங்கத்தை நிறுவினான் என்பது களவியலுரை கூறுமாறு. அப் பாண்டியன் மணலூரில் தங்கிக்கொண்டு இப்பொழுது நான் மாடக் கூடலாகிய மதுரையைப் புதுவதாக வியற்றித் தலைநகராக்கிக்கொண்டு கடைச் சங்கத்தை நிறுவினமையின் இடைச் சங்கம் இறுதி யடைந்தபின் மதுரையைப் புதுவதாக இயற்றுமளவும் சென்ற சில வாண்டுகளுக்குப் பின் சுமார் கி. மு. 510-ல் கடைச சங்கம் துவங்கியது என்று கொள்ளுவது தவறாகாது.

கடைச் சங்கத்தில் அரங்கேற்றப்பட்டதாகிய திருக்குறளுக்குச் சிறப்புப்பாயிரச் செய்யுள் ஒன்று இயற்றிய பாண்டியன், கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி யென்பான். அவனுடனிருந்த புலவர்களில் மதுரை கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் ஒருவர். இவரும் திருக்குறளுக்குச் சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்று இயற்றியுள்ளார். இக்கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியே கோவலனைக் கொல்வித்த பாண்டியனென்றும் சிலப்பதிகாரத்தில் இவனையே ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ் செழியன் என்றும் கூறப் படுகிறது. என்பது சரித்திர ஆராய்ச்சியாளரின் முடிவு. கோவலன் இறந்தது கி. பி. 157-ல என்பது ஜோதிஷக் குறிப்புகள் கொண்டுகணித்ததில் ஏற்படுகிறது. அதையே பிற ஆராய்ச்சியாளரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். கோவலன் இறந்த நாளிலேயே அரசுகட்டிலிருந்து வீழ்ந்து இறந்த பாண்டியன், நெடுஞ் செழியன் என்றும், அவன் காலம் கி. பி. 157 வரை என்றும் சொல்லலாகும். இவனுக்குப்பின் இவன் தம்பி கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் “நன் மாறன்” என்ற பட்டத்துடன் கி. பி. 157 முதல் சில காலம் கி. பி. 167 வரை அரசாண்டு வந்தான். இவனே கோவலன் கொலைக்குக் காரணமாயிருந்த பொற் கொல்லன் சாதியாரில் ஆயிரவரை கண்ணகி தேவியின் கோபம் தீரும்பொருட்டு களபலியிட்டவன். இவனுக்குப் பின் அரசுக்கு வந்த இவன் மகன் இளம்பிராயத்துடைய தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ் செழியனும் அவனுக்குப் பின் கடைச் சங்கமிருந்த பாண்டியருள் இறுதியில் வைத்துக் கூறப்பட்டுள்ள உக்கிரப் பெருவழுதியும் ஆவர். தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனுக்கு 38 ஆண்டுகளும் உக்கிரப் பெருவழுதிக்கு 15 ஆண்டுகளும் ஆட்சி காலம் என்பர் சரித்திர நூலோர். இவற்றால் கடைச் சங்கம் இறுதியுற்றது கி.பி. 220-ல் என்க. கண்ணகி வழிபாட்டிற்கு வந்திருந்த இலங்கை மன்னன் முதலாம் கயவாகுவின் காலத்தைக் கொண்டும் கடைச் சங்கம் இறுதியுற்றது கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில். அதாவது சுமார் கி.பி. 220-ல் என்பர். அதனை நடாத்திய பாண்டியர் நாற்பத் தொன்பதின் மரில் பாண்டியன் முடத்திருமாறன் சிலவாண்டுகளே கடைச் சங்க ஆரம்பத்தில் இருந்தவனாதலாலும், நெடுஞ்செழியன் அரசுகட்டிலேறி சிலவாண்டுகளில் கோவலனுடன் இறந்தமையாலும், நன்மாறன் 10-வருடங்களே ஆட்சி புரிந்தமையாலும், உக்கிரப் பெருவழுதி 15-வருடங்களே ஆண்டிருந்தமையாலும், கடைச் சங்ககாலத்து பாண்டிய மன்னர்களில் பலர் ஏனைய பகை மன்னர்களுடன் பொருது பொருது சொற்பகாலமே ஆட்சியிலிருந்தமையின் நாற்பத் தொன்பதின் மருக்கும், சராசரி ஒவ்வொருவருக்கு 15-ஆண்டுகளே ஆட்சி காலமாக வைத்துப் பார்க்க கடைச் சங்க கால எல்லை கி. மு. 504-முதல் கி. பி. 220-வரை என்பது பெறப்படும்.

இது காறும் கூறியவற்றால் தலைச் சங்கம் 89-பாண்டிய மன்னர்களால் கி. மு. 4167-முதல் கி. மு. 2387 வரை சுமார் 1780 வருடங்களில் 4440 முறை கூடிற்று என்றும், இடைச் சங்கம் கி. மு. 1684-முதல் கி. மு. 504-வரை சுமார் 1180-வருடங்களில் 3700-முறை கூடிற்று என்றும், கடைச்சங்கம் கி. மு. 504 முதல் கி. பி. 220-வரை சுமார் 724-வருடங்களில் 1850 முறை கூடிற்று என்றும் சராசரியாக ஒவ்வொரு சங்கமும் ஒரு ஆண்டுக்கு மும்முறை கூடிற்று என்றும் கொள்வது தவறாகாது என்பதே எனது சிற்றாராய்ச்சியின் முடிவாகும்.

---

* இனி வருவனவற்றிற் கெல்லாம் மறைமலை அடிகளியற்றிய அரிய புத்தகமாகிய “மாணிக்க வாசகர் காலமும், வரலாறும்” என்பதே ஆதாரம்.

பொங்கல்! பொங்கல்!!

அசல் பட்டுப் புடவை

அழகிய சிறு ஜரிகைக் கரை, அசல் பட்டு. சிகப்பு, அரக்கு, புளு, பச்சை, ஸ்கை முதலிய கலர்களில் கிடைக்கும்.

12-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 5-12—0
16-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 7—8—0
18-முழம் x 44" புடவை 1-க்கு விலை ரூ. 8—8—0
5-முழம் x 44" அங்க வஸ்திரம் 1-க்கு ரூ. 3—8—0

வெண்பட்டு அங்க வஸ்திரம்

5 முழம் x 44" அழகிய கரைகள் சலவைக்கு நேர்த்தியானது.
விலை ரூ. 1—12—0-தான்.

☞ இந்த விலைகள் 15—1—37 பொங்கல் வரை தான்.
ஞாபகத்தில் வையுங்கள். உடனே ஆர்டரை அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
(Proprietors : Sundarams Ltd.,)
சில்க் அவுஸ், காசி.

முத்தத்தின் இன்பம்

3 அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு 50 பக்கம் கொண்ட புத்தகம் இனாமாய் அனுப்பப்படும்.

ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராயநகர், மதராஸ்.

10,000 பிரதிகள் அச்சிடப்பட்டு வெளிவருகிறது!

‘விட்டி கெஜட்’
1937-ம் வருட மலர்

தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களால் இலக்கியம், நாவல், சரித்திரம், அரசியல், ஸினிமா விமர்சனம், ஸ்தல ஸ்தாபனங்கள், கூட்டுறவு இயக்கம், தொழிலாளர் இயக்கம் இவைகளைப் பற்றி எழுதிய கட்டுரைகளும், பிரபல தலைவர்கள், ஸினிமா நடிகர்கள், பொதுஜனத் தலைவர் சிறப்பு போட்டோக்களுடன் அழகிய பல கலர் மைகளால் அச்சிடப்பெற்று 200 பக்கங்களுக்கு அதிகமாக ‘விட்டி கெஜட்’ 1937 ம் வருடமலர் கிரவுன் 1 x 4 சைஸில் வெளிவருகிறது. விற்பனைக்கு ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர்:—‘விட்டி கெஜட்’,
197, கீழவெளி வீதி,
மதுரை.

புரட்சி! புரட்சி!!
வர்த்தக புரட்சி!!!

சென்னைக்கு அடுத்த மதுரை நகரிலும், ஜில்லாவிலும் வியாபாரம், ஸினிமா சம்பந்தமான வால் போஸ்டர்கள், துண்டுப் பிரசுரங்கள், நீடித்த கால விளம்பர போர்டுகள், விசேஷ உற்சவ காலங்களில் ஸ்பெஷல் விளம்பரங்கள், பிரிண்டிங், விந்தை போஸ்டர்கள் முதலியவைகள் எங்கள் நேர் பார்வையிலேயே தேர்ந்த வேலையாட்களைக் கொண்டு நூதன முறையில் குறைந்த சார்ஜில் அச்சிட்டு பிறர் மனதைக் கவரக்கூடிய வண்ணம் விளம்பரங்கள் செய்து கொடுத்து வருகிறோம்.

ஒருமுறை எமது கம்பெனி மூலமாய் உங்கள் விளம்பரங்களைக் கொடுத்து பரீக்ஷித்துப் பாருங்கள்—அதிசயமடைவீர்கள்.

விபரங்களுக்கு
உடனே கடிதம் எழுதுக.

ஆனந்தா அட்வர்டைஸிங்
ஏஜன்ஸி,
தெற்கு வாசல், மதுரை. S. I.

விடுதலை யாவது யாதெனக் கேட்பாயேல்
கெடுதலை நீக்கி நகரிலே சிறந்த
[நாட்டினரெல்லாம்
பொருள் சுகப்பேறுகள் சர்வமும் பெற்று
திருப்தி வாழ்தலே யாம்

விடுதலை
VIDUTHALAI

முன்மொழியை முதன்மொழியை மூவேந்தர்
[போற்று மின்ற
செம்மொழியைத் திருமொழியை
[தேன்மொழியை
தனித்தியங்கும் நூறவள தொன்மொழியை
[அமிழ்தனைய
தாய்மொழியாம் நம் தமிழ்மொழியை
[அனுதினமும் பழக்கம் செய்வீர்.

மலர்-2] சென்னை: (26-12-1936) தாது௵ மார்கழிமீ 11உ சனிக்கிழமை [இதழ்-59

மாஜி எட்வர்ட் மன்னரின் காதலி

பால்டிமூர் அழகி ஸ்ரீமதி சிம்ஸனின் வாழ்க்கை வரலாறு

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மன்னர் எட்டாம் எட்வர்டின் துறவுக்குக் காரண பூதராய் விளங்கியவரும், தற்பொழுது உலகம் பூராவும் பிரமாதமாகப் பேசப்பட்டு வருபவருமான, பால்டிமூர் அழகி, ஸ்ரீமதி சிம்ஸனின் வாழ்க்கை விவரம் பின்வருமாறு:—

ஸ்ரீமதி சிம்ஸன் பால்டிமூரில் (அமெரிக்காவில் உள்ள ஓர் பட்டணம்) பிறந்தார். இவருக்கு தற்பொழுது வயது 41. இவரது தந்தை கடலோர ரயில் வரிசையின் பிரசிடெண்டாக இருந்த சாலமன் டேவிஸ் வார்பீல்ட் என்பாரின் சகோதரரான டிக்வாலிஸ் வார்பீல்ட் என்பாராவார். இவரது தாய் மாண்டேகு குடும்பத்தைச் சார்ந்தவர். மேரிலாந்தில் கவர்னராக இருந்த வார்பீல்டுக்கும், ஸ்ரீமதி சிம்ஸனுக்கும் தூர சொந்தம் உண்டு. சிம்ஸனுக்கு மூன்று வயதிருக்கும்பொழுது இவரது தந்தை காலமானார். உடனே இவரது தாயார் பால்டிமூர் நகரில் பிடில் தெரு என்னுமிடத்தில் மூன்றடுக்கு மாடி வீடொன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு பல வருஷங்கள் வரை அதில் வசித்து வந்தனர். நடுத்தர வாழ்க்கையே இவர்கள் நடத்தி வந்தனர். போர்டிங் விடுதியொன்று அமைத்து, அதில் கிடைக்கும் வருவாயின் மூலம் தங்கள் வாழ்க்கையை எட்டு வருஷ காலம் வரை நடத்தி வந்தனர். ஆனால், சமையல் செய்வதற்கும் வீட்டு வேலைகளைக் கவனிப்பதற்கும் ஆட்களிருந்து வந்தனர்.

மிஸ் வார்பீல்டிற்கு (ஸ்ரீமதி சிம்ஸன்) 12 வயது நடக்கையில் இவளது பணக்கார மாமனான திரு. எஸ். டேவிஸ் வார்பீல்டு இவளைத் தன் பராமரிப்பில் வைத்துக்கொண்டார். அதே சமயத்தில் இவளது தாயார் ஜான் பிரீமன் கெட்பின் மறுமணம் புரிந்து கொண்டார். திரு. எஸ். டேவிஸ் வார்பீல்டு தன் ஆயுள் முழுமையும் பிரமச்சாரியாகவே யிருந்து காலமானார். மிஸ் வார்பீல்டு (ஸ்ரீமதி சிம்ஸன்) அவர் வீட்டில் பல வருஷங்கள் வரை இருந்து பால்டிமூரிலுள்ள முதல்தர பாடசாலைகளில் கல்வி பயின்று வந்தனள். படிப்பு முடிந்து அக்கலாசாலையினின்று வெளிவந்தபொழுது இவளை முதல் நம்பர் பெண்ணென எல்லோரும் மதித்தனர்.

தமது 18 வயதில் அதாவது 1914-ம் ஆண்டு டிசம்பர் 7-ந் தேதியன்று மிஸ் வார்பீல்டு (ஸ்ரீமதி சிம்ஸன்) முதன் முதலாக அமெரிக்க சமூகத்தில் வெளி வரலானார். அடுத்த சில வருஷங்களுக்குள் வாஷிங்டன், பிலாடெல்பியா, அனபோலிஸ் (அமெரிக்க கடற்படைக் கல்லூரி ஸ்தலம்) முதலிய இடங்களைப் பார்வையிட்டார். 1916-ல் அமெரிக்க கடற்படையில் ஊழியம் செய்து வருபவரொருவரின் மனைவியான ஸ்ரீமதி ஹென்ரி மஸ்டினைப் பார்ப்பதற்காக ப்ளாரிடாவிற்கு விஜயம் செய்திருந்தார்.

முதல் திருமணம்

அங்கு சிகாகோ வாசியும், அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கடற்படையைச் சேர்ந்த வாலிப விமானியுமான லெப்டினண்ட் கமாண்டர் ஏர்ல் வின்பீல்டு ஸ்பென்சரைச் சந்தித்து அவர் மீது காதல் கொண்டார். 1916 நவம்பர் 18-ந் தேதியன்று மாலை 6-15 மணிக்கு, பால்டிமூர், கிரைஸ்ட் பிராடெஸ்டெண்ட் எபிஸ்கோபல் மாதா கோவிலில் மிஸ் வார்பீல்டிற்கும் (ஸ்ரீமதி சிம்ஸன்) ஸ்பென்சருக்கும் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்குப்பின் அட்லாண்டிக்சிடி, ஒயிட் சல்பர் ஸ்பிரிங்ஸில் சிறிது காலம் தங்கள் இன்ப வாழ்க்கையை நடத்தினர். ஆனால், இவர்களது இன்பவாழ்க்கை அதிக காலம் நீடித்திருக்கவில்லை.

திரு. ஸ்பென்சர் உத்தியோக அலுவலின் பேரில் சீனத்திற்குச் செல்ல உத்தரவு பிறந்தது. இப்பயணந்தான் தம்பதிகளிருவரையும் கடைசியாகப் பிரித்துவிட்டது. திரு. ஸ்பென்சர் 1925-ம் ஆண்டு சீனநாடு சென்றார். அங்கு சென்றதிலிருந்து தமது மனைவியை மறுபடியும் அவர் பார்க்கவேயில்லை. 1922-ல் டிசம்பரில் கார்போக்கில் அவர் ஸ்ரீமதி வாலிசுக்கு (ஸ்ரீமதி சிம்சனின் உண்மைப்பெயர்) இட்டது தான் கடைசி முத்தம். தமது கணவர் அடிக்கடி தன்னை தனித்து விட்டுச் செல்வது ஸ்ரீமதி வாலிசுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, 1925-ல் விவாகரத்து செய்து கொண்டார்.

பிரிட்டிஷ் அரசியல் உலகிலேயே சமீபத்தில் ஏற்பட்ட நெருக்கடிக்குப் பின்பு காலிபோர்னியாவிலுள்ள சாண்டியாகோ நகர கடற்படை ஆஸ்பத்திரியில் ஒரு கால் நொண்டியாக இருக்கும் ஸ்ரீமதி சிம்சனின் முதல் கணவரான கமாண்டர் ஸ்பென்ஸர் தமது முதல் மனைவியைப் புகழ்ந்து பின்வருமாறு கூறினர்.

“வாலிஸ் (ஸ்ரீமதி சிம்ஸன்) மனதிற்கினிய மங்கையர், நகைச் சுவை மிக்கவள், அபார புத்தி நுட்பமும் சாதுரியமும் நிறைந்தவள். எப்பொழுதும் சந்தோஷத்தை உண்டாக்குபவள். எதிர்காலத்தில் அவள் எந்த நிலையில் இருப்பினும், எந்த நிலையை அவள் விரும்பினும் அவள் க்ஷேமமாக இருக்க வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை. அவள் எப்பொழுதும் எனது அன்பையும், மதிப்பையும் பெற்றிருக்கிறாள்.”

இரண்டாவது திருமணம்

மூன்று ஆண்டுகளுக்குப் பின், 1928-ல் மிஸ் வார்பீல்டு (ஸ்ரீமதி ஸ்பென்சர்) லண்டன் மாநகருக்கு தமது அத்தையுடன் விஜயம் செய்தார். அங்கு திரு. எர்னஸ்ட் ஆல்டிரிச் சிம்சனை இவர் சந்திக்க நேர்ந்து, அவர்களிடை காதல் வளரத் தொடங்கியது. திரு. சிம்சன் கலியாணமானவர். லண்டனிலுள்ள கப்பல் ஏஜண்டுகளாகிய சிம்சன ஸ்பென்ஸ் அண்ட் யங் கம்பெனியில் அவர் ஓர் பங்காளியாவர். நியூயார்க்கில் பிறந்தவர். ‘கிரெனேடியர் கார்ட்ஸ்’ என்ற ராணுவப் படையில் சில காலம் சேர்ந்திருந்தார். 1928-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஸ்ரீமதி ஸ்பென்சரை (மிஸ் வார்பீல்டு) செல்ஸி ரிஜிஸ்டர் ஆபிஸில் மணம் புரிந்து கொண்டார். திரு. ஸ்பென்சருடன், ஸ்ரீமதி சிம்ஸனின் இல்வாழ்க்கை சுமார் 6 வருஷ காலம் நடந்தேறியது. சென்ற அக்டோபர் 27-ந் தேதியன்று இப்ஸ்விச்சில் ஸ்ரீமதி சிம்ஸன், திரு. ஸ்பென்சருடன் விவாகரத்து செய்துகொண்டார். அவர் மற்றொரு பெண்ணுடன் தொடர்பு வைத்துக்கொண்டிருந்ததாக அப்பொழுது காரணம் கூறப்பட்டது. ஆறுமாத காலம் வரை இவர் குற்றமற்ற வாழ்க்கையை நடத்தினால் 1937-ம் வருஷம் ஏப்ரல் 27-ந் தேதிக்குப் பின்னர் இவர் வேறு மணம் செய்து கொள்ளலாமெனக் கூறப்பட்டது. இதற்குப் பின்னரே மாஜி எட்வர்ட் மன்னரை இவர் விவாகம் செய்து கொள்ளப் போகிறார் என்ற செய்தி பத்திரிகைகளில் அடிபடத் தொடங்கியது.

எட்வர்ட்-ஸ்ரீமதி சிம்ஸன் சந்திப்பு

1920-ம் ஆண்டு ஏப்ரல் 7-ந் தேதி நடைபெற்ற கானேடா கடற்படை காட்சியத்தின்பொழுது ஸ்ரீமதி சிம்சன் (அப்பொழுது ஸ்ரீமதி ஸ்பென்சராயிருந்தார்) முதல் முதலாக எட்வர்ட் இளவரசரைக் காணச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஆனால், அவரிடத்துப் பேசவில்லை. 1926-ம் ஆண்டில் அவர் ஆங்கிலேய ராஜ சபையில் வந்தார். அப்பொழுது தான் மாஜி எட்வர்ட் மன்னரை நேருக்கு நேராக சந்திக்கும் பாக்கியம் திருமதி சிம்சனுக்குக் கிடைத்தது. பின்னர் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மாஜி எட்வர்ட் மன்னரும் திருமதி சிம்ஸனும் மீண்டும் சந்தித்தனர். முகப்பழக்கம் விரைவில் நட்பாக முற்றிற்று. முதல் மந்திரி திரு. பால்ட்வின் அவரது மனைவி போன்ற பிரபலஸ்தர்களுக்கு அளிக்கப்படும் பிரத்தியேக விருந்துகளுக்கு சிம்ஸன் தம்பதிகளை மாஜி மன்னர் அழைத்து வந்தார். பிரிட்டிஷ் பத்திரிகைகள் இது சம்பந்தமாக சிறிதும் வாய் திறக்கவில்லை. கடந்த வருஷம் மே மாதம் 27-ந் தேதி செயிண்ட் ஜேம்ஸ் மாளிகையில் மன்னர் டெர்பி தின விருந்தளித்த பொழுது விஜயம் செய்திருந்தோரின் பெயர்கள் வெளி வந்த பொழுது திருமதி சிம்ஸனின் பெயரும் அதில் இருந்தது. அப்பொழுது தான் அரசர் திருமதி சிம்ஸனுடன் நட்புக் கொண்டிருந்தது ஸ்பஷ்டமாக விளங்கியது. கடந்த வருஷம் அட்ரியாடிக், ஈஜியன் ஆகிய கடல்களில் ‘நாலின்’ என்ற கப்பலில் மாஜி மன்னர் கடைசியாக உல்லாசப் பிரயாணம் செய்திருந்தபொழுது திருமதி சிம்ஸனும் கூடச் சென்றிருந்தார். அப்பொழுது அவரது நகைச் சுவை ததும்பும் பேச்சும், வாக்கு வன்மையும் திருமதி சிம்ஸனை மாஜி எட்வர்ட் மன்னர் என்றும் மறவாதிருக்கும்படி செய்து விட்டது. இது சம்பந்தமான செய்திகளை லண்டன் பத்திரிகைகள் வேண்டுமென்றே பிரசுரிக்கவில்லை. ஆனால், அமெரிக்கப் பத்திரிகைகளிலும், ஐரோப்பியப் பத்திரிகைகளிலும் மாஜி மன்னரும் திருமதி சிம்சனும் சேர்ந்து உல்லாசமாகக் காலம் கழிப்பதைப் பற்றிய புகைப்படங்கள் நிறைந்து விளங்கின. மாஜிமன்னருக்கு மகிமையளிப்பதற்காக துருக்கி, பால்கன் முதலிய நாடுகளில் நடைபெற்ற தர்பார் விருந்துகளிலெல்லாம் திருமதி சிம்ஸன் மன்னருக்கருகில் வீற்றிருப்பது வழக்கமாம். சென்ற செப்டம்பர் 23-ந் தேதியன்று திருமதி சிம்ஸன் பால்மோரல் அரண்மனைக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது.

இரண்டாவது கலியாணத்திற்குப் பிறகு ஸ்ரீமதி சிம்சன் ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்த பொழுது ஹங்கேரியில் வேல்ஸ் இளவரசருடன் நடனமாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதுபோது ஸ்ரீமதி சிம்ஸன் கண்ணாடியால் செய்யப்பட்ட ஒரு அற்புதமான உடை தரித்திருந்தாராம்.

வாழ்க்கையில் முக்கியமென்று கருதப்படும் விஷயங்களில் மாஜி மன்னருக்கு ஸ்ரீமதி சிம்ஸன் திறமையோடும், விருப்பத்தோடும் உதவி செய்து வந்ததே அவ்விருவருடைய நட்பையும் உறுதிப்படுத்தி வந்ததாயிற்று என்று சொல்லப்படுகிறது.

ஸ்ரீமதி சிம்ஸன் குணாதிசயங்கள்

ஸ்ரீமதி சிம்ஸன் அறிவுக் கூர்மை படைத்தவர்; நல்ல குணம், நெருங்கிப் பழகுவோரைக் கவரும் ஆற்றல் மிக்கவர்; ஆடம்பரமான ஆடைகளை அணிவதில் விருப்பமில்லாதவர். ஆனால், அணிவதை சுத்தமாகவும், அழகாகவுமிருக்கும். சமையல் செய்வதில் மிகத் திறமையுடையவர்; சங்கீதத்தில் விருப்பமுடையவர். நன்கு நீந்துவார். ‘பிரிட்ஜ்’ விளையாடுவார். தோட்ட வேலையில் அதிக ஊக்கம். மாஜி எட்வர்ட் மன்னரைக் காண பெல்விடியர் கோட்டைக்கு வரும் போதெல்லாம் தோட்டத்தைச் சுற்றிப் பாராமல் செல்வதில்லை. பூக்களிடத்து அளவு கடந்த அன்பு உண்டு. மெல்லிய, துவளும் தன்மையான உடல், சிறிய கைகள், அழகான கால்கள், பட்டுப்போன்ற மிருதுவான சரீரத்தை உடையவர். கண்களில் குழந்தைகளின் தன்மை தொனிக்கும். அவருடைய ஒரே புன்சிரிப்பு உலகை மயக்கி விடும். இனிமையாய்ப் பேசுவார்.

ஸ்ரீமதி சிம்ஸன் தற்பொழுது கானிஸில் (பிரான்ஸ்) இருந்து வருகிறார். இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் வரை விண்ட்ஸர் கோமகனை (மாஜி எட்வர்ட் மன்னர்) சந்திக்க மாட்டாரெனத் தெரிகிறது. விண்ட்ஸர் கோமகன் தற்பொழுது வியன்னாவில் (ஆஸ்திரியா) பாரன் ராத்ஷீல்டின் விருந்தினராக இருந்து வருகிறார்.

சுவாமி சிரத்தானந்தர் திருநாள்

சென்னை, டிச. 25

தென்னிந்திய ஆரியசமாஜ ஆதரவில் நாளை 26-ம் தேதி சுவாமி சிரத்தானந்தர் திருநாள் ஆரிய சமாஜ கட்டடத்தில் கொண்டாடப்படும்.

“சமரவலம்”

ஓர் மாத வெளியீடு

மக்களின் நல்வாழ்வு, பொருளாதாரநிலை, கிராம சீரமைப்பு, சுகாதார விஷயங்கள் இவைகளை சமநோக்குடன் அபிவிருத்தி செய்யும் பத்திரிகை.

மானேஜர்:—
சமரவலம் ஆபீஸ்,
விழுப்புரம்.

குணமாகாத மூத்திர வியாதிகளுக்குப் புதிதாகக் கண்டுபிடித்திருக்கும் அற்புதமான சிகிச்சை!

வெட்டை ரோகத்திற்கு சிறந்தது!!

வெட்டைரோக கிருமிகளை கொல்லக்கூடியது!

“கோனு கில்லர்” (ரிஜிஸ்டர் செய்யப்பட்டது)

இதுதான் இப்பொழுது சிறந்த ஒளஷதம். ஆங்கில, உள்நாட்டு வைத்தியர்கள் உங்களைக் குணப்படுத்தமுடியாவிடில் ஊசிகளாலும், இன்ஜெக்ஷனாலும் பயன் தராவிடில் கடைசியாகவேனும் எமது கோனே-கில்லர் என்னும் ஒளஷதத்தைப் பரீக்ஷித்துப் பாருங்கள். உங்களுக்கு வியாதி கண்டு எவ்வளவு காலமிருந்தாலும் அது குணப்படுத்திவிடும். ஸ்திரீகள், புருஷர்கள் இவர்களுக்கு ஏற்படும் மூத்திர வியாதிகளுக்கும், எல்லாவித வெட்டை நோய்களுக்கும், மூத்திரம் அதிகமாக இறங்குவதற்கும், மூத்திரம் பெய்கையில் ஏற்படும் வலியை நிவர்த்தி செய்யவும், மூத்திரப் பையில் ஏற்பட்டிருக்கும் அழற்சியைப் போக்கவும், வெட்டை வியாதிக் கிருமிகளால் ஏற்படும் வேறு பல வியாதிகளைப் போக்கவும் இது சிறந்த மருந்து. போலி மருந்துகள் வாங்காதீர்கள்! வாங்கும்போது எங்கள் சேவல்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

சேவல் மார்க்கை
பார்த்து வாங்கவும்.

போலிகளைப்பற்றி உஷார்!

50-மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு ரூபா. 3. வி. பி. சார்ஜு வேறு. வெளி நாட்டு கேயர்கள் ரூபா. 4—8—0 முன் பணம் அனுப்பவும்.

டாக்டர் டி. என். ஜஸானி, கிர்காம் பாக் ரோடு, பம்பாய், 4.
Dr. D. N. JASANI, Girgaum Back Road, BOMBAY, 4.
சென்னை ஏஜண்டு:—தாதா & கோ.,
நெ. 52, தம்பிசெட்டி நாய்க்கன் தெரு, P. T., சென்னை.
F. M. S. & S. S. ஏஜண்டு:—N. O. A. முகம்மது இப்ராகிம் & பிரதர்ஸ்,
நெ. 193, மார்க்கெட் ரோட், சிங்கப்பூர்,
எஸ். ஈ. காதர் மொய்தீன், பிட்டுக் குருவி மெடிகல் ஸ்டோர்ஸ்
நெ. 39. Old Butcher Street, Pettah, கொழும்பு.

எது?

தமிழ்நாட்டில் குறைந்த சந்தாவில்
அதிக பக்கங்களோடு வெளிவரும் தமிழ் மாதப் பத்திரிகை.

“சித்தன்”

ஒன்றே. இனிய கதைகள், ஹாஸ்யம், உலகச் செய்தி, வைத்தியக் குறிப்பு, சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன நிறைந்தது.

வருட சந்தா அணு (8) எட்டே. வெளிநாடு ரூ. 1.

மாதிரிப் பிரதி இலவசம். விளம்பர விகிதம் மிகவும் குறைவு.

விபரங்களுக்கு எழுதவும்:—
மானேஜர்:—“சித்தன்”, பழனி, S. I.

“கிராம ஊழியன்”

வாரப் பதிப்பு.

ஆசிரியர்:—S. பூரணம் பிள்ளை.

கிராமப் புனருத்தாரணத்தின் பொருட்டுத் தோன்றி மாதம் இரு முறையாக வெளிவந்த “கிராம ஊழியன்” இரண்டாம் ஆண்டின் ஆரம்ப மாகிய 25—10—36ல் முதல் பிரதி ஞாயிறுதோறும், நாட்டின் நலத்திற்கான நல்லோரின் கட்டுரைகள் தாங்கி எல்லோரும் போற்றும் நல்லதோர் முறையில் வெளிவருகிறது. எல்லா இடங்களிலும் ஏஜெண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதுக.

உள்நாடு:-வருட சந்தா ரூ. 3. வெளிநாடு: வருட சந்தா ரூ. 5.

மானேஜர்:—“கிராம ஊழியன்”,
துறையூர். (திருச்சி ஜில்லா)

PRINTED AND PUBLISHED BY T. A. V. NATHAN, AT THE JUSTICE PRINTING WORKS, 14, MOUNT ROAD, MADRAS. EDITOR: PANDIT S. MUTHUSWAMI PILLAI.

கோடம்பாக்கம் ரேஷனலிஸ்ட் ரெக்ரியேஷன் கிளப்

நான்காம் ஆண்டு அறிக்கை

கோடம்பாக்கம் ரேஷனலிஸ்ட் ரெக்ரியேஷன் கிளப் 1932-ம் ஆண்டில் நிறுவப்பட்டது. தொடக்கத்தில் 4 அங்கத்தினரே இருந்தனர். மூன்றும் ஆண்டின் முடிவில் 22 அங்கத்தினர்கள் இருந்தனர். இந்த நான்காம் ஆண்டின் முடிவில் 40 அங்கத்தினர் இருக்கின்றனர்.

நோக்கம்

சகோதரத்துவத்தை வளர்க்க ண்டும்; ஜாதி மத வித்தியாசங் அறவே ஒழிக்க வேண்டும்; க்களை மூடப் பழக்க வழக்கங்களிலிருந்து விலக்க வேண்டுமென்னும் சில அரிய நோக்கங்களைக் கொண்டு இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டதாகும். அன்றியும் உடற் பயிற்சி விருத்தியடையச் செய்ய வேண்டுமென்னும் முதன்மை நோக்கத்தையும் கொண்டது.

மூன்றும் ஆண்டு விழா

29-12-35-ந் தேதி ஞாயிற்றுக் கிழமைமாலை 4 மணிக்கு, கோடம்பாக்கம், வரதராஜப் பேட்டையில் தோழர் சி. டி. நாயகம் அவர்களின் தலைமையில், மேற்படி சங்கத்தின் மூன்றும் ஆண்டுவிழா நடந்தது. அவ்விழாவில் தோழர்கள். என். ராமசுப்ரமணியம், எ. முத்தையா, என். என். ஆனந்தம். டி. என். குஞ்சிதம், என். நீலாவதி முதலியவர்கள் சங்க வேலைகளைக் குறித்து விரிவுரை யாற்றினர்.

1935-36 ௵

போஷகர்கள்: தோழர்கள்: சி. டி. நாயகம் பி. ஏ., எம். எல். சி., கே. ராமலிங்கம் பி. ஏ., டி. ஏ. வி. நாதன் பி. ஏ. பி.எல்., கே. எம். பாலசுப்ரமணியம் பி. ஏ. பி. எல். ஜே. சிவஷண்முகம் எம். ஏ., பண்டிட் என். என். ஆனந்தம், எ. தனராஜ் சௌகார்.

தலைவர்: தோழர் வி. ராமசாமி. உபதலைவர்: தோழர் கே. கலியாணசுந்தரம். காரியதரிசி: தோழர் எம். டி. கிருஷ்ணன். உபகாரியதரிசி: தோழர் எம். சுப்ரமணி. கேப்டன்: தோழர் ஆர். வெங்கடாசலம், உப கேப்டன்: தோழர் ஆர். அரிகிருஷ்ணன் பொக்கிஷதார்: தோழர் டி. சிதம்பரம், பத்திரிகை பொறுப்பாளர்: எம். தாமோதரம், நிர்வாக அங்கத்தினர்கள்: தோழர்கள், ஜி. சுப்ரமணி, எம். டி. பாளையம், எம். சி. நடராஜன், ஆர். அண்ணாமலை, எம். கோவிந்தராஜலு, டி. ஆரோக்யசாமி என். நாராயணசாமி.

மற்ற அங்கத்தினர்கள்: தோழர்கள் கே.பொன்னுசாமி, கதிர்வேலு, எ.துரைராஜ், சிவசங்கரன், எ. சின்னப்பன், எல்லப்பன், சாமிநாதன், எ. மனோகரன், எம். கண்ணன், எம். சந்திரவேலு, எ. எம். ஆரோக்கியசாமி, எம். சுந்தரமூர்த்தி எ. துரைவேலு, எ. அந்தோனி. டி. கன்னையன், டி. சிதம்பரம், டி. நாராயணசாமி, வி. சொக்கலிங்கம், எ. தாஸ், கே. பெருமாள், இ. பொன்னு, பி. மாரிமுத்து, ஜி. தருமலிங்கம், எ. ராமன், எம். ஆறுமுகம், கே. சிங்காரவேலு,

அங்கத்தினர்கள் பொதுக் கூட்டம்

சங்கத்தின் நிர்வாகத்தைக் கவனிக்கும் பொருட்டும், அங்கத்தினர்கள் சொற்பொழிவாற்றப் பயிற்சி பெறும் பொருட்டும் இவ்வாண்டில் 23 கூட்டங்கள் கூட்டப்பட்டன. பல பாராட்டுத் தீர்மானங்களும், கண்டனத் தீர்மானங்களும், அநுதாபத் தீர்மானங்களும் அவ்வப்போது நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

வாசகசாலை

இவ்வாண்டில் திருவாளர் என். பத்மநாபபிள்ளை (கிராமமுனிசீப்) அவர்களின் கருணையால் வாசகசாலை கட்டிக்கொள்ள இலவசமாக ஒரு இடம் கிடைத்தது. அந்த இடத்தில் தற்போது ஒரு நீளக் கொட்டகை அமைத்து உபயோகித்து வருகிறோம். அடுத்த ஆண்டில் அதை ஒரு நல்ல வசதியான கட்டடமுள்ள வாசகசாலையாக்க எண்ணியுள்ளோம். மேலும், இச் சங்கத்திற்கு 'குடி அரசு' 'பகுத்தறிவு', 'விடுதலை', 'ஜஸ்டிஸ்', 'ஜன நாயகம்', 'நகர தூதன்' முதலிய பத்திரிகைகள் (பகுத்தறிவு தவிர) இலவசமாக வருகின்றன. பத்திரிகைகள் செவ்வையாக உபயோகப்பட்டு வருவதுடன் அங்கத்தினர்களின் உலக அறிவும் முன்னேற்றம் அடைந்து வருகின்றது. இத்தருணத்தில் மேல் குறிப்பிட்ட பத்திரிகைகளை இலவசமாக அனுப்பிய தோழர்களுக்கு இச்சங்கம் நன்றி செலுத்துவதுடன் சென்ற ஆண்டில் அனுப்பியதுபோல் இவ்வாண்டும் அனுப்பும்படி கேட்டுக் கொள்கின்றது.

விளையாட்டுகள்

சென்ற ஆண்டில் பேட்மிண்டன் என்ற விளையாட்டு ஆடப்பட்டு வந்தது. இவ்வாண்டு கால்பந்து விளையாட்டும் ஆடப்பட்டு வருகின்றது. அடுத்த ஆண்டில் கோகோ ஆடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. விளையாடுவதற்காக வேண்டிய இடம் தகுதியாய் கிடைக்காததால், தற்போது ஆடிவரும் இடத்திற்கு வாடகை கொடுத்துக்கொண்டுவருகின்றோம். பிரயோஜனப்படாத அநேக நிலங்கள் இப் பேட்டையின் பக்கத்தில் இருக்கின்றன வாதலால் அந்நிலத்தில் விளையாடுவதற்கு உரிமை வாங்கித் தரும்படியாக தோழர் சி. டி. நாயகம் அவர்களைச் சென்ற ஆண்டு விழாவின்போது கேட்டுக் கொண்டோம். இவ்வாண்டிலாவது அவ்வுரிமை வாங்கித் தரப்படும் என்று எதிர்பார்க்கின்றோம்.

போட்டிப் பந்தயங்கள்

சென்ற ஆண்டின் முடிவில் அங்கத்தினர்களுக் குள்ளாகத் தனித் தனி பேட்மிண்டன் போட்டி விளையாட்டுகள் ஆடப்பட்டன. அதில் வெற்றி பெற்ற தோழர் எம். சுப்பிரமணியம் அவர்களுக்கு ஒரு வெள்ளிப்பதக்கம் அளிக்கப்பட்டது. இவ்வாண்டிலும் அம்மாதிரி டபுள்ஸ் போட்டி பந்தயங்கள் ஆடப்பட்டன. இதில் சுமார் 16 அங்கத்தினர் பங்கெடுத்துக் கொண்டனர். தவிர, இவ்வாண்டில் வெளிச் சங்கங்களுடன் 11 பேட்மிண்டன் போட்டி விளையாட்டுகளும், 9 கால்பந்து போட்டி ஆட்டங்களும் ஆடப்பட்டு முறையே 4,3 வெற்றிகள் கிடைத்தன.

முடிவுரை

இவ்வருடம் என்னுடன் ஒத்துழைத்த அங்கத்தினர்களுக்கும், சங்கத்திற்கு உதவியும், ஊக்கமும் தந்த மற்றத் தோழர்களுக்கும், குறிப்பாகத் தலைவர் வி. ராமசாமி அவர்களுக்கும், இதன் முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாயிருந்து உழைத்து வரும் தோழர் கே. கலியாணசுந்தரம் அவர்களுக்கும் இச்சங்கம் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகிறது.

—எம்.டி. கிருஷ்ணன், காரியதரிசி.

விஞ்ஞான நிலைய அங்கத்தினர் உல்லாசப் பிரயாணம்

(ஒரு நிருபர்)

தஞ்சை, டிச, 27

ஜஸ்டிஸ் தொண்டர்களும் கல்லூரி விஞ்ஞான நிலைய அங்கத்தினர்களுமான திருவாளர்கள் மயி. செ. பாக்கியசாமி, செ. வீரகுமாரு, எம். வி. செல்லம், மயி. பாக்கியசாமி ஆகிய நால்வரும் 21-12-36 விருது நகரிலிருந்து புறப்பட்டு தென் குற்றாலம், திருவனந்தபுரம், கன்னியாகுமரி, கொல்லம், ஆலப்புழை, வைக்கம், கொச்சி முதலியவைகளின் மார்க்கமாக எர்ணாகுளம், கோயமுத்தூர், சேலம், மேட்டூர் அணை முதலிய இடங்களுக்குச் சென்று ஆங்குள்ள காட்சிகளைப் பார்த்து விட்டு திருச்சி, தஞ்சை விஜயம் செய்து சென்னை வருவார்கள்.

2-வது அகில இந்திய சினிமா மகாநாடு

திரு. சிமன்லால் தேசாய் தலைமை யுரை

சென்னை, டிச, 28

இரண்டாவது அகில இந்திய சலனப்பட மகாநாடு சென்ற சனிக்கிழமை காலை 11 மணிக்கு சென்னை பச்சையப்பன் கல்லூரி ஹாலில் கூடியது. திரு. சிமன்லால் பி. தேசாய் மகாநாட்டிற்கு தலைமை வகித்தார். சென்னை மேயர் திரு. கே. ஸ்ரீராமுலு நாயுடு மகாநாட்டுத் திறப்பு விழாவை நடத்தினர். மகாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவர் ராவ் பகதூர் பி. சம்பந்த முதலியார், வரவேற்புச் சொற்பொழிவுக்குப் பின், தலைவர் திரு. சிமன்லால் பி. தேசாய் நிகழ்த்திய தலைமை யுரையின் சாரமாவது:-

எனக்கு முதலில் தென்னிந்தியாவில் தான் சினிமாத் தொழிலில் பழக்க மேற்பட்டது. 1913-ல் திரு. டி. ஜி. பால்கி முதலாவது இந்தியப் படத்தைத் தயாரித்தார்.

1913-ல் இந்தியப் படங்களைக் காட்ட ஒரு தியேட்டர் கிடையாது. இப்பொழுது இந்தியாவில் 650 தியேட்டர்களில் 450 தியேட்டர்கள் இந்தியப் படங்களைக் காண்பிக்கின்றன. அமெரிக்காவில் 2000 தியேட்டர்கள் இருக்கின்றன. வாரத்துக்கு 10 கோடி ஜனங்கள் சினிமா பார்க்கிறார்கள். இதற்காக 300-கோடி டாலர் மூலதனம் போடப்பட்டிருக்கிறது. 300,000 பேர்கள் இதனால் ஜீவிக்கிறார்கள்; அவர்களில் பட உற்பத்தியில் 27,000-பேரும், விநியோகத்தில் 10,000 பேரும் 240,000 பேர் காட்சியிலும் ஈடுபட்டுள்ளனர். இதன்றி தொழிலுக்காக விளம்பரத்துக்கு 750 லக்ஷம் டாலர் செலவு. அவற்றில் பத்திரிகைகளுக்கு 600 லக்ஷமும், போஸ்டர்களுக்கு 100 லக்ஷமும், சில்லறை விஷயங்களுக்கு 50 லக்ஷமும், செலவு ஆகும். உலகம் முழுவதும் 65,000 தியேட்டர்களுள் இந்தியாவில் 650 தான். 23 வருஷங்களுக்குப் பிறகு இப்போது நாம் இத்தொழிலில் 11 கோடி ரூபாய் மூலதனம் போட்டிருக்கிறோம். இதில் நேரடியாக 25,000 பேர் வேலை செய்கின்றனர். இந்திய படங்களுக்கு 450 தியேட்டர்கள் உள. விளம்பர விஷயமாக செலவிடுவது இதன் வளர்ச்சிக்கே மிகக் குறைவு.

படங்கள் மூலம் போதனை

ஜனங்கள் படிக்க முடியாதபோது அவர்கள் பார்த்ததையும், கேட்டதையும் வைத்துக்கொண்டு வீட்டுக்கு புத்தி விசாலத்தோடு செல்கிறார்கள். சாப்பாடு மட்டும் ஜனங்களுக்கு போதுமானதல்ல; அவர்கள் சௌகரியத்தையும் தேடுகிறார்கள். ஆனால் பக்குவமில்லாதவர்கள் படத்தைப் பார்த்து பிரயோஜனமடைகிறார்கள். சலனப் படம் சங்கீதத்தை எல்லோரும் ரசிக்கும்படி தருகிறது. ஹாலிவுட்டுக்கு 1935-36-ல் 2 அல்லது 3 சத விகிதத்தில் பாங்கிகள் 30 கோடி ரூபாய் கொடுத்து உதவின. இந்தியாவில் ஒன்றுமில்லை. இந்திய படத் தொழில் விருத்தியடைய பணம் மிக மிக அவசியம்.

சர்க்காருடைய உதவிகொண்டு பிலிம் வளர்ச்சி ஸ்தாபனம் ஏற்பட வேண்டும். இத்தொழில் வளர்ச்சிக்காக சலனப்பட சங்கம் ஒற்றுமையுடன் உழைக்க வேண்டும். தென்னிந்தியாவைப் பொறுத்த மட்டிலும் இங்குள்ள பிலிம் லீக்கின் வேலைத் திறமை பாராட்டத்தக்கது. 'இந்தியா பேசுகிறது' 'வங்காள சிப்பாய்' போன்ற படங்களுக்கு விரோதமாக நமது சங்கம் போராட வேண்டும். லாபம் வந்தால் போதும் என்று பட முதலாளிகள் எதிர்பார்ப்பது சரியான முறையல்ல.

இந்தியாவில் 700000 கிராமங்களுள் பல கிராமங்களுக்கு பேசும் படம் என்றாலோ, வெள்ளித்திரை என்றாலோ ஒன்றும் தெரியாது. இதற்கு நகரும் தியேட்டர் வேண்டும். இந்தியாவில் ரொம்ப வெற்றி கொடுத்த படமே மொத்தமாக 14 லக்ஷ ரூபாய் வசூலிக்கவில்லை. 35 கோடியில் 40 லட்சம் பேர் ஓர் படத்தைப் பார்ப்பதென்றால் என்ன கேவலம். ஜனங்களின் அஞ்ஞானத்தைப் போக்க காட்சி சாலைகளோ புது வழிகளைக் காணவேண்டும். பெரிய பட்டணங்களில் போட்டி தியேட்டர்களைக் கட்டிக் குட்டிச் சுவராவது நம்மவர்களின் வழக்கம். பிலிம் தணிக்கை இருக்க வேண்டும்; ஆனால், இந்தியாவிலிருப்பது போல் அவ்வளவு மோசமாக இருக்கக் கூடாது. படத்தின் முன்னேற்றம் இதனால் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. இங்கிலாந்தில் போலல்லாமல் இங்கு சமாச்சாரப் படங்கள் தணிக்கை செய்து பழைய செய்திப் படங்களாக வெளியாகின்றன.

நமது பட உற்பத்திக் காரர்களுக்கு ஓர் யோசனை

பத்திரிகை விமரிசனமும், பொது ஜனங்களின் வரவேற்பும பட உற்பத்திக்காரர்களுக்குப் பட விஷயத்தில் நல்ல முயற்சிக்கான பொறுப்பைக் கொடுக்கிறது. இப் பொறுப்பு அவசியமும், அவசரமுமாகும். சென்ற வருஷம் பக்க உதவியில்லாமலேயே நமது படங்களில் நல்ல அம்சங்கள் வெளியாகியிருக்கின்றன. உலகம் இலக்கியப் படத்தை வரவேற்கிறது. சிறந்த ஆசிரியர்கள், படக்காரர்கள் இவ்விஷயத்தை முயற்சி செய்ய வேண்டும். ஜனங்களுக்கு ருசி கொடாத படங்களை இனி நமது படங்களில் இடம்பெற வேண்டும். நாமெல்லோரும் ஒன்று சேர்ந்து போராடி நல்ல படங்களைக் கொண்டு வருவோமாக.

* * *

நற் செய்தி! நற் செய்தி!!

இந்தியாவின் அரசியல்—சமூக—சமய விடுதலைக்காகப் பாடுபடும் "ஜஸ்டிஸ்" கட்சியின் ஏக தமிழ்ப் பத்திரிகையான

"விடுதலை"

1937 ஜனவரி மாதம் 1-ந் தேதி முதல் தினசரியாக வெளிவரும்.

விலை, தனிப்பிரதி காலணா.

தமிழ்நாடு முழுதும் ஏஜண்டுகள் தேவை.

ஏஜன்ஸி வேண்டுவோர்:— "ஜஸ்டிஸ்" ஜெனரல் காரியதரிசி, சென்னை, என்ற விலாசத்துக்கு எழுதவும்.

* * *

மே

27-12-36
ஸ்ரீமதி எம். ஏ.
காசியார் அம்மா
தலைமையின் கீழ்
ளாவில் கூடிற்று.
500 பெண்கள் வரை
கண்ட தீர்மானங்களை
ளுர்கள்.

1. இருபத்தையாயிரம் தொகையுள்ள இந்நகரில் கல்வி அமலுக்குக் கொண் வேண்டுமென்று 1932-ம் வருஷத்தில் பாளையங்கோட்டை முனிசிபல் கவுன்சில் தீர்மானம் செய்திருக்கும்போது, இப்போது யாதொரு காரணமுமின்றி இந்நகரிலுள்ள பெண் பாடசாலைகளை மூடிவிட்டதை இம் மகாநாடு கண்டிக்கிறது. அதனால் பெண்கள் கல்வி பெரிதும் பாதிக்கப் படுவதுமன்றி வருங்கால வாசிகளின் வாழ்க்கை வீணாவதற்கு ஏதுவாகும். அதனால் மேற்படி பாடசாலைகளை உடனே திறப்பதற்கு ஏற்பாடு செய்யும்படி கவர்ன்மெண்டை வேண்டிக்கொள்வதாயும் தீர்மானிக்கலாயிற்று.

2. கோஷா பெண்கள் மிகுந்த இந்நகரில் மருத்துவ உதவியோ, வைத்திய சாலையோ இல்லாது தவிக்கும்பொழுது இருந்த ஒரே சிறு ஆஸ்பத்திரியையும் அடைத்துவிட்டதை இம்மகாநாடு மிகவும் கண்டிக்கிறது. காலதாமதமின்றி மேற்படி ஆஸ்பத்திரியைத் திறந்து வைக்க கவர்ன்மெண்டை வேண்டிக்கொள்கிறது.

3. இந்நகரில் பஞ்சாயத்துப் போர்டு ஸ்தாபித்திருப்பதை இம் மகாநாடு ஆர்வத்தோடு ஏற்றுக் கொள்ளுகிறது. ஆனால், கூடிய சீக்கிரம் எலெக்ஷன் நடத்தி ஜனப் பிரதிநிதிகளிடம் நிர்வாகத்தை ஒப்படைக்க கவர்ன்மெண்டை வேண்டுகிறது.

மேலப்பாளையம் பஞ்சாயத்துப் போர்டில் பெண்களுக்குப் போதிய பிரதிநிதித்வம் வழங்கவும் கவர்ன்மெண்டை வேண்டுகிறது.

4. சென்னை அசெம்பிளி சபை எலக்ஷனில் வோட்டுரிமை ஏராளமான பெண்களுக்கு வழங்கப்பட்டிருப்பதற்கு கவர்ன்மெண்டை பாராட்டுவதோடு எலக்ஷனில் பெண்களுக்கு வசதியான தனி போலிங் ஸ்டேஷன்கள் அமைத்து, பெண்களையே போலிங் ஆபீஸர்களாக நியமிக்கவும் வேண்டுகிறது. அதில் ஆண்கள் சம்பந்தமில்லாமல் பெண்கள் நிர்வாக மயமாக வைக்கவேண்டுமென்றும் என்றும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று.

சௌராஷ்ட்ர பிராஹ்மண மஹாஜனங்களுக்கு ஒரு வேண்டுகோள்

நமது இந்தியாவிற்கு லார்டு செம்ஸ் போர்டு சீர்திருத்தம் வழங்கிய காலம் முதல் அரசியல் துறையிலும், சமூக சேவையிலும் அனுபவம் கொண்டவரும், நமது சமூகத் தலைவர்களில் ஒருவருமான காலஞ்சென்ற ராவ்சாஹேப் கே. வி. ராமாச்சாரி அவர்கள் சென்னை சட்டசபையில் அங்கம் வகித்து சேவை செய்தார். அவருக்குப்பின் நமது ராஷ்ட்ரபக்த எல். கே. துளசிராம் அவர்கள் அங்கத்தினரானார். மறு தேர்தலின்போது நமது சமூகத்தருக்குள் ஏற்பட்ட வேற்றுமையால் அவர் உழைப்ப வீணுகி மீண்டும் சட்டசபை அங்கத்தினராகி சேவை செய்ய முடியாமல் போய்விட்டதானது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும்.

தற்போது புதிய சீர்திருத்தப்படி சென்னை மாகாணத்துக்கு, லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி, லெஜிஸ்லேடிவ் கவுன்சில் எனஇரண்டு சட்டசபைகள் ஏற்பட்டு அவைகளுக்கு 18-2-37-ந் தேதி தேர்தல் நடக்கப் போகிறது. அதற்கு 18-1-37-ந் தேதி நாமினேஷன் கொடுக்கப்பட வேண்டும். அது மிகவும் நெருங்கி விட்டது. இது சமயம் நமது தலை

ளுக்கு
உதவியும்
வருமல் அவர்களை
பெறும்படியும் செய்ய
வண்டும்.

நம் சமூகம் தற்போது மிகவும் க்ஷீண திசை அடைந்திருக்கிறது. தொழில் மந்தம் ஏற்பட்டு நெசவுக்காரர்கள் அரை வயிற்றுக் கஞ்சிக்குக்கூட வழியில்லாது தவிக்கும் நிலைமை மிகவும் பரிதாபகரமாயிருக்கிறது. இந்த மாதிரி வேளையில நம் சமூகத்தார் சென்னை சட்டசபைக்குப் போனால்தான் உருப்படியான காரியங்கள் செய்து நம் நிலையை உயர்த்த முடியும். மற்றவர்கள் போனால் அவர்களால் நம் சமூகத்துக்கு ஒரு இம்மி நன்மையும் ஏற்படப் போவதில்லை. மிகவும் ஆழ்ந்த அனுபவமும், அறிவும் உள்ளவர்களே சட்டசபையில் காரியத்தைச் சாதிக்க முடியும். ஆகையால், எல்லா வகையிலும் திறமை வாய்ந்த மேற்படி தலைவர்களை சட்டசபையில் அங்கத்தினராகும்படி செய்ய எல்லோரும் வேலை செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

சௌராஷ்ட்ர,
சமூக விளம்பர சபையார்.

2-தினங்களில் 20-கோடி தபால்கள்!

லண்டன், டிச, 29

தபாலாபீஸ்கள் மூலமாகவும், ரயில்வேக்கள் மூலமாகவும் சென்ற வருஷத்தை விட இவ்வருஷம் கிறிஸ்துமஸ் நாட்களின் பொழுது போக்குவரத்து அதிகரித்திருக்கின்றது.

இரண்டு தினத்திற்குள்ளாக தபாலாபீஸ் 20 கோடி தபால்களை அனுப்பியிருக்கிறது. பார்சல்களும் சென்ற வருஷத்தை விட இவ்வருஷம் 75% அதிகரித்திருக்கிறது.

பெருந்துறை

பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல்

(ஒரு நிருபர்)

பெருந்துறை, டிச, 29

இவ்வூர் பஞ்சாயத்து போர்டு ஆபீசில பஞ்சாயத்துபோர்டு தேர்தல் நடைபெற்றது. தோழர் புதூர் சின்னப்ப கவுண்டர் தலைவராகவும், தோழர் தெய்வசிகாமணி செட்டியார் உபதலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேவை

தமிழ் நாட்டிலுள்ள முக்கிய இடங்களில் எல்லாம் "விடுதலை' தினசரிக்கு நம்பிக்கையுடைய நிருபர்கள் தேவை.

ஆசிரியர் "விடுதலை"

முக்கிய அறிவிப்பு

பத்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டிய விஷயங்கள் எல்லாம் ஆசிரியர் விலாசத்துக்கும், நிர்வாக சம்பந்தமான கடிதங்களும், பணங்களும் "ஜஸ்டிஸ்" ஜெனரல் காரியதரிசி விலாசத்திற்கும் அனுப்பப்பட வேண்டும்.

!!

ய!

ருத்துவோம்
கருளே
பண்களும்
1 (பாரதி)

விடுதலை

சென்னை : 1936-௵ டிசம்பர்௴ 30-உ
புதன்கிழமை

பெய்ஸ்பூர் நாடகம்

பெய்ஸ்பூர் காங்கரஸ் நாடகம் முடிவடைந்து விட்டது. பாமர மக்களை ஏமாற்ற என்னென்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் காங்கரஸ் வீரர்கள் செய்து முடித்து விட்டார்கள். ஜெகஜாலப் புரட்டுகளில் காங்கரஸ்காரர்களை தேர்ந்தவர்கள் அல்லவா? ஆகவே, அவர்களது கைச்சரக்கு முழுவதையும் பெய்ஸ்பூரில் அவர்கள் காட்டிவிட்டார்கள். ஏன்? காங்கரசுக்கு இது சோதனை காலம். "இருப்பதா! இறப்பதா!" என்ற பிரச்சினைக்கு காங்கரஸ் முடிவு கூற வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சட்டமறுப்பு, ஒப்புப்போர்கள் முழுத்தோல்வியடையவே காங்கரஸ்காரர் ஏமாந்தனர்; இழந்த மானத்தை எப்படி மீட்பதென யோசித்தனர்; சட்டசபைக்குள் சென்று சீர்திருத்த அரசியலை கவிழ்ப்பதாக முழங்கினர்; பிரதிநிதித்துவ சபை கூட்டி எதிர்கால அரசியலை வகுக்கப் போவதாக கர்ஜித்தனர். எங்களை டெல்லி அசம்பிளிக்கு மெஜாரட்டியாக அனுப்புங்கள் என தேச மகாஜனங்களைக் கேட்டனர் "ஒரு முறை அவர்களை அனுப்பித்தான் பார்ப்போமே!" என பரிக்ஷார்த்தமாக, மெஜாரட்டியாக அல்லாவிட்டாலும் ஓரளவு ஜாஸ்தியாக அவர்களை அசம்பிளிக்கு தேச மகாஜனங்கள் அனுப்பினர். அவர்கள் அசம்பிளியில் சாதித்ததென்ன? சீர்திருத்தத்தைக் கவிழ்த்தார்களா? பிரதிநிதித்துவ சபை கூட்டினர்களா? இல்லவே இல்லை "பிரதிநிதித்துவ சபை" என்ற பேரைக் கூட அவர்கள் அசம்பிளியில் உச்சரிக்கவில்லை. "பிரதிநிதித்வ சபையைப் பற்றி மூச்சுப் பேச்சுக் காட்டாததேனோ?" என சட்ட மந்திரி ஸர். என். என். சர்க்கார் அசம்பிளியில் ஆத்திரமாய்க் கேட்டபோது காங்கரஸ் வீரர்கள் கோஷாப் பெண்கள் மாதிரி தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு இருந்தார்கள். வாய் திறக்கவில்லை; ஒரு வார்த்தையாவது பேசவில்லை; மௌனச் சாமிகளானார்கள். எனினும், சர்க்காருக்குத் தோல்வி மேல் தோல்வி உண்டு பண்ணி விட்டதாக ஜம்பம் பேசினார்கள். அந்தத் தோல்விகள் எல்லாம் காகிதத் தோல்விகளே என காங்கரஸ்காரர்களே கேலி செய்கிறார்கள். ஏன்? அந்தத் தோல்விகளினால் சர்க்கார் ஒரு அணுவளவுகூட அசையவில்லை. அறிவு வேலைக்காரர்களான காங்கரஸ்காரரைப் போன்ற ஆசாமிகளால் அரசியலுக்கு பாதகம் ஏற்படாத முறையில் அரசியல் சட்டம் வகுத்த புத்திசாலிகள் அநேக பாதுகாப்புகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆகவே, சர்க்காரை அசைக்கவே முடியாது. எந்த அரசியலிலும் பாதுகாப்புகள் இருந்தே தீரும். நாம் வீடு கட்டும்போது என்ன செய்கிறோம். ஆடு மாடு புகாமல் வீட்டைச் சுற்றி வேலி எழுப்புகிறோம்; அல்லது மதில் கட்டுகிறோம்; திருடர் புகாமல் பலமான கதவுகள் அமைக்கிறோம்; ஜன்னல்களில் பலமான இரும்புக் கம்பிகள் போடுகிறோம்; பறவை முதலியவை தொந்தரவு செய்யாமல் வலை போடுகிறோம். இம்மாதிரி பாதுகாப்புகள் ஏற்படுத்துவது முட்டாள்தனமென்றோ, அநீதி யென்றோ ஆடு மாடுகளும், திருடர்களும், பறவைகளும் புகார் செய்தால் யாராவது அதை லக்ஷியம் செய்வார்களா? எனவே, எந்த அரசியல் அமைப்பிலும் பாதுகாப்புகள் இருந்தே தீரும், இருக்கத்தான் வேண்டும். எனினும் பாதுகாப்புகளும், விசேஷாதிகாரங்களும் சர்க்காருக்கு இருப்பதினால் தங்களுக்கு எதுவும் சாதிக்க முடியவில்லை எனக் கூறி பொது ஜனங்களை காங்கரஸ்வாலாக்கள் ஏமாற்ற முயலுகிறார்கள்.

அப்பால் மாகாணத் தேர்தல் வந்ததும் மாகாணத் தேர்தலிலும் போட்டி போடுகிறார்கள்; அபேக்ஷகர்களும் நிறுத்தியாகி விட்டது. ஆனால், அவர்களை ஆதரிக்க தேச மகா ஜனங்கள் தயங்குகிறார்கள். அசம்பிளி வாக்குறுதிகளை காங்கரஸ் மெம்பர்கள் நிறைவேற்றி வைக்காததை தேச மகா ஜனங்கள் மறக்கவில்லை. தொழிலாளர்களுக்கு அவர்கள் துரோகம் செய்ததும் அவர்கள் நினைவிலிருக்கிறது. மற்றும், ஜில்லா போர்டுகளை அவர்கள் ஆட்டிச் சுவாக்கி வருவதையும் தேச மகா ஜனங்கள் அறிந்திருக்கிறார்கள். ஆகவே, காங்கரஸ் அபேட்சகர்களை தேச மகா ஜனங்கள் ஆதரிக்க மாட்டார்கள் என்பதை காங்கரஸ்காரர் உணர்ந்து விட்டனர். ஆகவே, பெய்ஸ்பூர் காங்கரஸ் பேரைச் சொல்லியாவது தேச மகா ஜனங்களை ஏமாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. பெய்ஸ்பூர் காங்கரஸை எவ்வளவு தூரம் விளம்பரப் படுத்தலாமோ அவ்வளவு தூரம் காங்கரஸார் விளம்பரப்படுத்தினார். காங்கரஸ் பத்திரிகைகளும் பெய்ஸ்பூர்ச் செய்திகளை வெகு ஆடம்பரத்துடன் பிரகாசம் செய்தன. பெய்ஸ்பூர் காங்கரசுக்கு பம்பாயிலிருந்து 'ஜோதி' கொண்டு போகப்பட்டதாம். இந்த ஜோதி மர்மம் சாமானிய ஜனங்களுக்கு விளங்கவில்லை. "பம்பாயிலிருந்து ஜோதி கொண்டுபோனார்களே! பெய்ஸ்பூரில் அடுப்புமூட்ட தீ கிடையாதா?" எனவுங்கூடப் பலர் கேட்கலாயினர். யார் என்ன கேட்டாலென்ன? தந்திரவார்த்தைகள் கூறுவதில் காங்கரஸ்காரர் சமர்த்தர்களல்லவா? ஏதேதெல்லாமோ கூறினர். ஏமாறக்கூடியவர்களும் திருப்தியடைந்தனர். மகாநாடும் கூடி முடிவடைந்து விட்டது. கடைசிப்பலன்? கேட்கவா வேண்டும்? பூஜ்யந்தான். அரசியலைத் தகர்க்க முடியாதென திரு. வி. ஆர். செட்டியார் கூறியபோது காங்கரஸ் பத்திரிகைகள் சீறி விழுந்தன. ஆனால் காங்கரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லாலே சட்டசபை மூலம் அரசியலைத் தகர்க்க முடியாதென்று இப்பொழுது ஒப்புக்கொண்டு விட்டார். தேச மகா ஜனங்களெல்லாம் ஒன்றுசேர்ந்து போராடினால்தான் சீர்திருத்தத்தைக் கவிழ்க்க முடியுமாம். பிரதிநிதித்துவ சபை மூலந்தான் தற்கால அரசியலைத் தகர்த்து இந்தியர்களுக்குத் திருப்தி யளிக்கும் எதிர்கால அரசியலை வகுக்க முடியுமாம். இந்த விஷயத்திலாவது காங்கரஸ்காரர்களுக்குள் ஒற்றுமையுண்டா? அதுவுமில்லை. அரசியல் அதிகாரம் கைக்குள் வராமல் பிரதிநிதித்துவ சபை கூட்டி எதிர்கால அரசியலை எவ்வாறு வகுக்க முடியுமென பல காங்கரஸ் தலைவர்களே கேட்கிறார்கள். பிரபல ராஜ்யதந்திரியான ஸர். டெஜ்பகதூர் சாப்ருவும் அவ்வாறே அபிப்பிராயப்படுகிறார். ஆனால், காங்கரஸ்காரர் அதை யெல்லாம் லக்ஷியம் செய்யப்போவதில்லை. பொது ஜனங்களை ஏமாற்றுவதே அவர்கள் லக்ஷியம். எனவே, பாமர மக்கள் கண்ணில் மண்ணைப்போடுவதற்கு அனுகூலமாக பல ஆடம்பரத் தீர்மானங்களை நிறைவேற்றி விட்டு அவர்கள் கலைந்து விட்டார்கள். உருவான வேலை யொன்றையும் அவர்கள் செய்யவே இல்லை; அவர்களால் செய்யவும் முடியாது. இருந்தாலும் காங்கரஸ் மகாநாடு வெற்றிகரமாக முடிந்து விட்டதாக காங்கரஸ் பத்திரிகைகள் விளம்பரம் செய்கின்றன. சட்ட சபைகளைக் கைப்பற்றப் போகும் காங்கரஸ்காரர், மந்திரி பதவி ஏற்பதைப் பற்றியும் முடிவு செய்யவில்லை. அரசியல் கவிழ்ப்புப் பல்லவியையே திருப்பித் திருப்பிப் பாடிக்கொண்டு இருக்கிறார்கள். சட்ட சபைக்குள் சென்று தாம் சாதிக்கப்போகும் காரியங்களை விளக்கிக் கூறாமல், தமக்கு வோட்டுக் கொடுக்கும்படி தேச மகாஜனங்களைக் கேட்கும் காங்கரஸ்காரர் எவ்வளவு யோக்கியப்பொறுப்புடையவர்கள், நாணயமுடையவர்கள், அறிவுடையவர்கள் என்பதை தேச மகாஜனங்களே நிர்ணயம் செய்து கொள்ளட்டும்.

இந்த பெய்ஸ்பூர் நாடகத்தினால் ஏற்பட்ட நன்மை ஒன்றே ஒன்றுதான். அதாவது, காங்கரஸ் தலைவருக்கு 'ராஷ்டிரபதி' பட்டம் அளிக்கப்பட்டிருக்கிறது. [illegible] பண்டித ஜவஹர்லாலுக்கு இந்தப் பட்டம் மிகப் பொருத்தமானதல்லவா! ஆகவே, புது வருஷப்பட்டம் பெற்ற பண்டித நேருவுக்கு நாம் மனமார வாழ்த்துக் கூறுகிறோம்.

ஜஸ்டிஸ்-சுயமரியாதைத் தொண்டர்கள் மகாநாடு

ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது

(ஒரு நிருபர்)

திருச்சி, டிச, 28

3-1-37-ந் தேதி அன்று திருச்சியில் நடைபெறுவதாகவிருந்த தமிழ் மாகாண ஜஸ்டிஸ்—சுயமரியாதைத் தொண்டர்கள் மகாநாடு தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் கல்கத்தாவுக்குச் சென்று திரும்பி வராததாமதம் ஏற்பட்டது காரணமாய் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஜனவரி இரண்டு, அல்லது மூன்றாவது வார இறுதிக்குள் கூட்டுவதற்கான ஏற்பாடுகளை கவனிக்கப்படும். எதிர்பாராத விதமாய் ஏற்பட்ட தேதி மாற்றத்திற்கு இயக்கத் தோழர்கள் மன்னிக்க வேண்டுகிறோம்.

சென்னை சட்டசபை

முஸ்லீம் முன்னேற்றக் கட்சி அபேட்சகர்கள்

சென்னை, டிச, 30

முஸ்லீம் முன்னேற்றக் கட்சி காரியதரிசி எழுதுவதாவது:—

சென்ற 27-ந் தேதி சௌகார் ஸி. அப்துல் ஹகீம் சாயபு தலைமையில் நடைபெற்ற முஸ்லீம் முன்னேற்றக்கட்சியின் விசேஷ பொதுக் கூட்டத்தில் கீழ்க் கண்டவர்கள் கட்சியின் சார்பாக சட்டசபைக்கு அங்கத்தினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அசெம்பிளி

கர்நூல்:—நவாப். அமீர். உல். அம்ரா பகதூர்.

நெல்லூர்:—ஹாஜி சையத் ஜலாலுத்தீன் சாகிப்.

சித்தூர்:—சௌகார் சையத் சுலைமான் சாகிப்.

பெல்லாரி:—கான்சாகிப் முகம்மது அப்துல் வஹாப் சாகிப்.

கடப்பை:—முகம்மது சையத் சாகிப்.

அனந்தபூர்:—சௌகார் மௌலானா ஹாஜி அகமது உசேன் சாயபு பகதூர்.

ராஜாங்க சபை

மேற்குக் கடற்கரை:—(மலையாளம், தென் கன்னடம் ஜில்லாக்கள்) திரு. ஏ. டி. பாவட்டாய் சாகிப் பகதூர்.

மற்ற தொகுதிகளுக்கு அபேட்சகர்களைப் பொறுக்கி எடுப்பதற்காக கட்சியின் அடுத்த பொதுக் கூட்டம், சென்னை, ஜார்ஜ்டவுன் ஜாபர் சிராங் தெரு, நெ. 5-6 ஹகீம் மாளிகையில் 1937, ஜனவரி முதல் தேதி மாலை 5 மணிக்குக் கூடும்.

கோடம்பாக்கம் ரேஷனலிஸ்ட் ரெக்ரியேஷன் கிளப்

(ஒரு நிருபர்)

கோடம்பாக்கம், டிச, 28

மேற்படி சங்கத்தின் நான்காம் ஆண்டு விழா 27-12-36 மாலை 30 மணிக்கு தோழர். ஈ. வெ. ராமசாமியார் அவர்களின் தலைமையில் கோடம்பாக்கம் ரயில் நிலையத்தை அடுத்த வரதராஜப் பேட்டையில் நடந்தேறியது. ரயில் நிலையத்திலிருந்து தோழர். ஈ. வெ. ராமசாமியார் அவர்களை பாண்டு வாத்தியங்களுடன், ஏராளமான ஜனங்கள் சூழ அழைத்துச் செல்லப்பட்டு புகைப்படம் எடுக்கப்பட்டது. பின்னர் சங்கத் தலைவர் பண்டிட் வி. ராமசாமி தோழர். ஈ. வெ. ரா. அவர்களை தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொள்ள பலத்த கரகோஷத்தின் இடையே தோழர், ஈ. வெ. ரா. அவர்கள் தலைமை வகித்தார். தோழர் எம், சுப்ரமணி அவர்களால் சீர்திருத்தக் கீதங்கள் பாடப்பட்டன. தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் எம். டி. கிருஷ்ணன் அவர்களால் ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டது. பின்னர் தோழர்கள் என். குருசாமி பி, ஏ, சௌந்தரபாண்டியன் எம், எல், ஸி, ராவ் சாயப் என், சிவராஜ் எம். எல். ஸி. எஸ், குஞ்சிதம் பி. ஏ. எல். டி., வித்துவான் முருகசாமி பிள்ளை, டி. என், ராமன், ஏ, எம், ஆரோக்கியசாமி, முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் முகம்மது துராப் சாயபு அவர்களால் பேட்மிண்டன் போட்டி விளையாட்டின் முடிவில் வெற்றி பெற்றவர்களான தோழர்கள்: கே. கல்யாணசுந்திரம், எம். கண்ணன், இவர்களுக்கு வெள்ளிப் பதக்கங்களும், முடிவில் தோல்வி யுற்றவர்களான எம். தாமோதரம், டி. சிதம்பரம் இவர்களுக்கு காற்சவிகளும் பரிசு அளிக்கப்பட்டது. பின்னர் தலைவர் முடிவுரை கூறி, கேட்கப்பட்ட பல கேள்விகளுக்குத் தக்க பதிலளித்தார். பின்னர். தோழர். கே. கல்யாணசுந்தரம் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 8 மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது.

காங்கரசின் 3-வது தோல்வி

திருச்சி ஷெட்யூல் வகுப்பு ஆரம்பத் தேர்தல்

திரு. சிவபிச்சை எதிர்ப்பின்றி தேர்ந்தெடுக்கப்படுவோர்

திருச்சிராப்பள்ளி, டிச, 30

சென்ற 21-ந் தேதி நடைபெற்ற திருச்சி ஜில்லா (அரியாலூர் டிவிஷன்) ஷெட்யூல் வகுப்பு ஆரம்பத் தேர்தலில் பின் காணும் முதல் நால்வரும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகரான திரு. பி. சிவபிச்சை எதிர்ப்பின்றி தேர்ந்தெடுக்கப் படுவார் எனத் தெரிகிறது. ஓட்டுகள் விவரம் பின் வருமாறு:—

திரு. சிவபிச்சை	(ஜ)	2,805
,, ஆர். மருதை	(கா)	535
,, பிச்சைரத்தினம்	(சு)	455
,, ஆர். ரகுபதி	(சு)	341
,, எம். பாலகிருஷ்ணன்	(கா)	107
,, என். சிவராஜ்		44

பவானியில் தர்ம வைத்தியம்

(ஒரு நிருபர்)

பவானி, டிச, 28

காமாலை, சொத்தைப்பல், விஷக்கீட்டு முதலியவைகளுக்கு 'பகந்தலை' முறையில் திரு. பி. எஸ். சின்னத்தம்பி முதலியார் இலவசமாக மருந்து கொடுத்து குணப்படுத்துகிறார். அவ்வியாதிகளை உடையோர் அவரிடம் இலவசமாக சிகிச்சை பெறலாம். அவர் இருப்பிடம்: பவானி தாலுக்கா ராஜா மில்லுக்கு பின்புறமுள்ள தோட்டம்.

ஜில்லா மகாநாடுகள்

திருநெல்வேலி

1936 டிசம்பர் மாத இறுதியில் நடைபெறுவதாக இருந்த மகாநாடுகள் 1937-ஜனவரி 23, 24 சனி, ஞாயிறுகளில் திருநெல்வேலி டவுனில் நடைபெறும். அதற்கான வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

எ. இராமநாதர்,
காரியதரிசி

சென்னை முதலியார்கள் சங்கம்

சென்னை, டிச, 28

திரு. என். எஸ். சங்கர முதலியார் தலைமையில் நேற்று மாலை நடைபெற்ற போர்டு டைரக்டர்கள் கூட்டத்தில், கீழ்க்கண்ட விஷயங்கள் நிறைவேறின.

சென்னை நகரிலுள்ள பார்ப்பனரல்லாதார் சமூக மக்கள் வசிக்கும் வீடுகள் தோறும் சென்று நன்கொடைகள் வசூலிப்பது, ஜில்லாக்களிலிருந்தும் நன்கொடைகள் வரவழைப்பது.

நகரிலுள்ள ஒவ்வொரு டிவிஷன்களிலும் கமிட்டிகள் அமைத்து, 'பொங்கல் வார'த்தின் பொழுது நன்கொடைகள் வசூலிக்க அவைகளுக்கு அதிகாரமளிப்பது.

சங்கக் கல்வி நிதிக்கு, பொது மக்கள் தாராளமாக உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்ளுவதற்காக பொங்கல் தினத்திற்கு முன்பு ஒரு பொதுக் கூட்டம் கூட்டுவது.

கோயம்புத்தூர் திவான்பகதூர் ரத்தினசபாபதி முதலியார் எம். எல். ஸி., திருவாளர்கள்: என். சங்கரன், பி ஏ., என். ஜீ. ராஜன் எம். பி. பி. எஸ்., ஆகியோர் முறையே ஆயுள் அங்கத்தினராகவும், சாதாரண அங்கத்தினராயும் சங்கத்தில் சேர அனுப்பியுள்ள விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப் பட்டன.

காஞ்சிபுரம், பச்சையப்பன் உயர்தர பாடசாலை, தலைமை உபாத்தியாயராக திரு. எம். என். சோமஸ்வரன் நியமனமானதைக் குறித்துப் பாராட்டுவதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது.

வட ஆற்காடு ஜில்லா

ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகர்கள் ஜாப்தா

ஜில்லா காரியக் கமிட்டி அமைப்

சென்னை, டிச, 29

சென்ற 28-ந் தேதி கனம் பி. டி. ராஜன் தலைமையில் வேலூரில் கூடிய ஜஸ்டிஸ் கட்சிக் கூட்டத்தில் கீழ்க்கண்டவர்கள் வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள பல தொகுதிகளுக்கும் கட்சியின் அபேட்சகர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

சென்னை அசெம்பிளி

திருவண்ணாமலை, செங்கம், போளூர்:—திரு. எம். பி. ரங்கசாமி ரெட்டியார், திரு. முத்தன் (த தப்பட்ட வகுப்பு)

வந்தவாசி—செய்யார்:—திரு. ச பராயலு நாயுடு.

வாலாஜா-அரக்கோணம் :—திரு. பி. பக்தவச்சலு நாயுடு, ஜமேதார் ஆதிமூலம் (தாழ்த்தப்பட்டவர் வகுப்பு)

வேலூர்-ஆரணி:—திரு. சி. என். சதானந்த முதலியார்.

குடியாத்தம்:-பெயர்கள் பின்னர் வெளியிடப்படும்.

திருப்பத்தூர்:-பெயர்கள் பின்னர் வெளியிடப்படும்.

சென்னை ராஜாங்க சபை

திரு. பி. சங்கரநாத முதலியார்.

கீழ்க்கண்ட அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு ஜில்லா காரியக் கமிட்டி அமைக்கப்பட்டது.

1 ராவ்பகதூர் அருணாசல முதலியார், 2 டாக்டர் நதானியேல், 3 ராவ் சாகிப் சிங்காரவேலு முதலியார், 4 திருவாளர்கள்: ஏ. ஆர். செல்லப்பா, 5 பி. சீனிவாச முதலியார், 6 ஜி. சாமி நாயுடு, 7 பீம செட்டியார், 8 சி. என். சுப்பிரமணிய நாயுடு, 9 வி. அப்பாதுரை முதலியார், 10 கே. பி. சிதம்பர முதலியார், 11 பி. ஆர். குப்புசாமி செட்டி, 12 ஐதாம்பேட்டை ராமச்சந்திர செட்டியார், 13 ஆரணி பாலசுந்தர முதலியார், 14 கே. துரைசாமி நாயுடு, 15 அசின்கான் சாகிப் பகதூர், 16 டி. என். நாராயணசாமி முதலியார், 17 டி. துரைசாமி நாயுடு, 18. ஆர். சுப்பிரமணியம், 19. பஞ்சாக்ஷர செட்டியார், 20 அர்ஜுனக் கவுண்டர், 21 எம். வி. துரைசாமி முதலியார், 22 எம். எம். அப்துல் சுக்கூர் சாகிப், 23. முகம்மது பாட்சா சாகிப், 24 நாராயணசாமி கவுண்டர், 25 வெங்கடாசலம் முதலியார், 26 வேணுகோபால் செட்டியார், 27 ஜோலார்பேட்டை பார்த்தசாரதி, 28 என். அப்துல் அஜீஸ் சாகிப்பகதூர், 29 சைதாப்பேட்டை சோமசுந்தர முதலியார், 30 சேலூர் பத்ர பாருஷிஞர்.

ராவ்பகதூர் முருகேச முதலியார் இக்கமிட்டி தலைவராவார்.

டாக்டர் வி.சி. கிருஷ்ணசாமியும், திரு. வி. டி. அருணாசல முதலியாரும் கூட்டுக் காரியதரிசிகளாவர்.

அவசியமிருப்பின் மேற்கொண்டு அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ள இக்கமிட்டிக்கு அதிகாரமிருக்கிறது.

பொறுக்கி எடுக்கப்பட்ட அபேட்சகர்கள் ஒவ்வொருவரும் கூட்டுக் காரியதரிசிகளிடம் 50-ரூபாய் கட்ட வேண்டும்.

மதராஸ் சோஷியல் லீக்

வண்ணாரப்பேட்டை, டிச, 30

மதராஸ் சோஷியல் லீக் ஆதரவில் (2-1-37) சனிக்கிழமை மாலை 5-க்கு மணிக்கு சென்னை வண்ணாரப்பேட்டை காக்ரேன் பேசின் ரோட்டிலிருக்கும் கார்ப்பொரேஷன் ஆண்பிள்ளை பாடசாலையில் ஆனரபில் ஸர். கே. வி. ரெட்டி அவர்கள் தலைமையின் கீழ் ஒரு கூட்டம் நடைபெறும். அது சமயம் லேடி, வில்லியம் காட் அம்மாளால் அநேக ஏழை பிள்ளைகளுக்கு துணியும், மிட்டாயும் கொடுக்கப்படும். ராவ்பகதூர் எம். [illegible] பேசுவார் எனக் காரியதரிசி எழுதுகிறார்.

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்

4-வது ஆண்டு விழா வைபவம்

திரு. சி. என். அண்ணாதுரை தலைமையுரை

தேசத்திற்கு காங்கரசின் துரோகம்

சென்னை, டிச. 28

நேற்று மாலை, சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றத்தின் நான்காவது ஆண்டு விழா 302 தங்கசாலைத் தெருவிலுள்ள மேற்படி மன்றக் கட்டடத்தில் நடைபெற்றது.

தோழர்கள்: கே. ஜயராம், என். சச்சிதானந்தம், என். ஆனந்தம், ஈ. துரைசாமி, திருஞானசுந்தரம் ஆகியோர் சுயமரியாதைக் கீதங்கள் பாடினர்.

காரைக்குடி 'குமரன்' ஆசிரியர் திரு. என். முருகப்பா, தமது மனைவியின் திடீர அசௌக்கியத்தை முன்னிட்டு, மேற்படி வைபவத்திற்கு வர முடியாமற் போனதாகவும், ஆகவே, வாலிப தலைவரான திரு. சி. என். அண்ணாதுரையை மேற்படி வைபவத்திற்கு தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொள்வதாகவும், திரு. எஸ். ரங்கநாதன் கூறினார். திரு. டி. ராதாகிருஷ்ணன் ஆமோதித்தார். பிறகு, திரு. சி. என். அண்ணாதுரை பலத்த கரகோஷங்களினிடையே தலைமை வகித்து தமிழில் ஓர் சொற்பொழிவாற்றினார். அவர் கூறியதாவது:—

செட்டிநாட்டில் சுயமரியாதை இயக்கத்திற்கு கற்றூண் போன்று விளங்கிவரும் திரு. முருகப்பா இவ்வைபவத்திற்கு தலைமை வகிக்க முடியாதது பற்றி நாம் வருந்துகிறோம். மன்றத்தின் நோக்கங்கள் எதுவாயினும், அரசியல் சம்பந்தப்பட்டவரையில் அதற்கும், ஜஸ்டிஸ் கட்சிக்கும் யாதொரு வித்தியாசமும் கிடையாது. நான் ஓர் சுயமரியாதைக் காரனென்று எனது தோழர்கள் அறியாமலிருக்கலாம். ஆனால் எனது எதிரிகளுக்கு நான் ஓர் சுயமரியாதைக் காரனென்று ஸ்பஷ்டமாகத் தெரியும். சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளில் எனக்குத் தீவிர பற்றிருக்கிறது. ஆகவே, நான் ஓர் சுயமரியாதைக்காரனென்று கூறிக்கொள்ள சந்தோஷப் படுகிறேன். ஜஸ்டிஸ் கட்சியினருக்கும் சுயமரியாதை கட்சியினருக்கும் சில விஷயங்களில் அபிப்பிராய பேதமிருந்தாலும், அடிப்படையான கொள்கைகளில் இரு கட்சியினரும் ஒன்றுபட்டே இருக்கின்றனர்.

தென்னிந்தியாவில் சமத்துவக் கொள்கையை முதன் முதலில் நிலைநாட்டியது ஜஸ்டிஸ் கட்சிதானென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தங்கள் தேசத்தைத் தாங்களே ஆள வேண்டுமென்ற உணர்ச்சியை நம் தேச மக்களிடை எழச் செய்ததும் ஜஸ்டிஸ் கட்சியே. சுயராஜ்யத்தின் பேராலும் தேசியத்தின் பேராலும் ஒரு சிறுபான்மை சமூகத்தார் பாமர மக்களைச் சூறையாடி அதனால் பெருத்த லாபத்தைச் சம்பாதித்து வருகின்றனர். பொருளாதார விடுதலை நம் இந்தியா அடைவதற்கு முட்டுக்கட்டையாக இருப்பனவற்றை களைந்தெறிய ஜஸ்டிஸ் கட்சியினரும், சுயமரியாதைக் கட்சியினரும் ஒரு முகமாகப் பாடுபட்டு வருகின்றனர்.

சமதர்மம்

ஒருவரின் உரிமையை நிலைநிறுத்துவதே சமதர்மமாகும், ஒரு சிலரிடை குவிந்துள்ள பணத்தை பலரும் அனுபவிக்க பங்கிட்டுக் கொடுப்பதே சமதர்மம் என்பதே ஒரு சாரார் கொள்கை. அது பகிர் முதலாளருமேயன்றி சமதர்மமாகாது. பணக்காரர்களைக் கொலை புரிவதே சமதர்மம் என்று மற்றும் சிலர் அபிப்பிராயப் படுகின்றனர். அப்படியாயின் அது கொலைக்குச் சமமாகுமேயன்றி சமதர்மமாகாது. ஜமீன்தாரி முறையை ஒழிப்பதே சமதர்மத்தின் நோக்கமென வேறு சிலரின் அபிப்பிராயமாயிருந்து வருகிறது. அது அவர்களுடைய சுவாதீனத்தை மறுப்பதாகும். ஆகவே, சமதர்மம் என்பது உண்மையில் ஒருவனது வாழ்க்கை சம்பாத்யம், சமத்துவம் ஆகியவற்றிற்கு அவனுக்குள்ள உரிமைகளை ஊர்ஜிதப் படுத்துவதே யாகும். அதற்காகப் போராட வேண்டுமே யன்றி திருட்டுத்தனமான வழிகளை மேற் கொள்ளக் கூடாது.

துரோகம்

தற்பொழுது காங்கரஸ், சர்க்காருக்கு எதிரான ஸ்தாபனமாகக் கருதப்படவில்லை. அதன் கூட்டங்களில் சி. ஐ. டி. ஆசாமிகள் கிடையாது. அதற்கு மாறாக சுயமரியாதைக்காரர்களைத் தான் சர்க்கார் சந்தேகித்து வருகின்றனர். சாத்தான் அரசாங்கமென பிரிட்டிஷ் சர்க்காரையும் காங்கரஸ் அழைப்பதில்லை. ஆனைமலையில் ஐரோப்பியர்களும் காங்கரஸ்காரர்களும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர். இத்தேசத்திலிருந்து ஜஸ்டிஸ் கட்சியினரை விரட்டியடிக்க இருவரும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஜஸ்டிஸ் கட்சி மனிதர்களுக்கு வேலையோ, இடமோ அளிப்பதில்லையென அவர்கள் ஒப்பந்தம் புரிந்து கொண்டனர். காங்கரஸ் சார்பாக திரு. என். சத்தியமூர்த்தி கைச்சாத்திட்டார். ஆனைமலை ஐரோப்பியர்களும் பிரதி கையெழுத்திட்டனர். இதிலிருந்து தேசத் துரோகிகள் யாரென்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அது ஓர் தந்திரமென அவர்கள் கூறக் கூடும். பச்சையாகக் கூறவேண்டுமானால் தேசத் துரோகத்தைத் தவிர்த்து அது வேறொன்றுமில்லை.

பிறகு மன்றத்தின் 1936-ம் வருஷ அறிக்கை வாசிக்கப்பட்டது. (அதன் விபரம் மற்றோரிடத்தில் காணலாம்)

திரு. ஐயாகண்ணு

திரு. ஆர். டி. ஐயாகண்ணு அடுத்தபடியாகப் பேசுகையில் கூறியதாவது:—

கடவுள் பேராலும், தேசியத்தின் பேராலும் பாமர மக்களை ஏய்த்து வரும் ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் உறைவிடமாகவே காங்கரஸ் விளங்கி வருகிறபடியால், சுயமரியாதை இயக்கத்தில் பற்றுள்ள எவரும் அத்தகைய காங்கரசில் சேர விரும்ப மாட்டார்கள். எல்லாவற்றையும் இந்திய மயமாக்க வேண்டும் என்று காங்கரஸ் தோன்றிய காலத்திலிருந்து, ஒரு சமூகமே எல்லா உயர் பதவிகளையும், கொழுத்த சம்பளங்களையும் பெற்று வருகிறது. எவ்வேலையிலும் பார்ப்பனரல்லாதார் தலை தூக்க முடியாதிருந்த காலமும் ஒன்றுண்டு. எவ்வேலைகளையும் நடத்துவதற்கு பார்ப்பனர்கள் தான் லாயக்கானவர்கள் என்ற நம்பிக்கையும் பார்ப்பனரல்லாதாரிடை இருந்து வந்தது. பார்ப்பனர்களின் ஆசீர்வாதம் இருந்தால்தான் பார்ப்பனரல்லாதார் க்ஷேமமடைய முடியும் என்ற நம்பிக்கையும் பார்ப்பனரல்லாதாரிடை இருந்து வந்தது.

பிறகு, வேத காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் இருந்த நிலைமைக்கும், தற்போதவர்களிருந்துவரும் உயர் நிலைமையும் விளக்கிக் கூறி, பார்ப்பனர்களின் எவ்வித கெடுபிடிக்கும் அஞ்சாமல், தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடவேண்டுமெனவும், ஜாதிப் பிரிவுகள் ஒழிய

வே
சார்
வே

ஸ்ரீப

ஸ்ரீ
த்தப
தின்
வருவ
கள் அ
வதும்
அளிக்
களின்
யும் அட
மரியாதை
நம்பிக்கை
னர்கள்
சென்றும்
சமூகம்
பிழைத்து
தாங்கள்
கடவுள்
விரும்பவி
யல் அ
கட்சியினரு
கட்சியினரு
யாசமு மில
யாதைக் கட்
யில் சேர்ந்
பிரசாரம்
சென்றும் க

திரு. எ

திரு. என்.
படியாகப் பே
தின் முன்னே
பேசியதுடன்,
விரும்புபவர்கள
லத் தெரிய
கட்டுக் கதை
வேண்டுமென்று
வேடிக்கை பார்
களின் பிறவிக்
பார்ப்பனர்களின்
காமல் பார்ப்பன
தையாயிருக்க
மன்றத்தில் அங்க
மாகச் சேர்ந்து ம
படுத்த வேண்டும
திற்கு ஏராளமா
செய்யும்படி வேண்
யும் கூறினர்.

ஸ்ரீமதி எஸ்.

ஸ்ரீமதி என். குஞ்
படியாகப் பேச
தாவது:

ஒரே இயக்கத்
லிகள் ஒரே நாளி
இடங்களில் தங்
விழாவை நடத்துவ
தக்கது. இனி அம்ப
பெறும்படி ஆண்டு
குறிப்பிடு முன்னர் ஒரு
வர் கலந்தாலோசிப்பது
நாம் தேர்தல் கால
க்கி வருகிறோம். பார்ப்
சிப்பதா அல்லது பார்
தாரை ஆதரிப்பதா எ
முன் இப்போதுள்ள மு
சினையாகும். இம்மன்றம்
தியாசத்தை ஒழிக்க
வருகிறது. நாம் சுய
புடன் விளக்க வேண்
இப்பிரச்சினை முதலில் தீ
வேண்டும். சென்னையில்
யமில்லாம லிருக்கலாம்.
ஜில்லாக்களில் விஷயம்
மேலும் பார்ப்பனரல்லா
நமது ஓட்டுகள் அளிக்
வேண்டியதை நமது கட
கொள்வதுடன், பார்ப்ப
தார் ஓட்டுகள் எப்பார்ப்பன
போய்ச் சேராமலிருக்கவும்
பார்த்துக் கொள்ள வேண்டு
தலைவர் முடிவுரைக்குப்பி
என். பிரகாசத்தால் வந்
சாரம் கூறப்பட்டு கூட்டம் இ
கலைந்தது.

தோழர். ஈ. வெ. ரா

(ஒரு நிருபர்)

சென்னை, டிச.

தோழர். ஈ. வெ. ராமசா
கோடம்பாக்கம் சோஷலிஸ்ட்
யேஷன் ஸின் 4-வது ஆ
விழாவில் தலைமை வகிக்கும் பொ
-டு 21-ந் தேதி காலை இங்கி
வந்து சேர்ந்தார். நேற்று மாலை இ
ருந்து சேலத்திற்கு பிரயாண
மானர். ஜனவரி 1-ந் தேதி ஈரோ
செல்வார்.

ட்
ர்
லை
ழுந்த
ளை
வறை
ன்யா
டன்,
பிர்வ
ளாய்
ந. பி.
ர்களே
இ இ
கொடு
ளையும்
ர்க்கப்

ாமிக்கு
ாரம்

டிச, 25
மாலை 3-50
மரியாதை
ஈ. வெ.
களை திரு
டுக்களுக்கு
யில் நிம
ன்.
ல்வேண்டே
மோட்டார்
தைக் கண்ட
ன் தொடர்
ஷெட்டிருச்
ம் நூற்
டார் ஷெட்
. தோழர்
தூத்துக்குடி
தங்கியிருந்த
டுத் தீ போல்
விடவே ஜனத்
க்காதபடி கூடி
கூட்டத்தில்
ஏ. பெரியசாமி,
ந்கோடி நாடார்,
ணியம் முதலிய
முக்கியஸ்தர்களா
ம்கண்டவர்களிடம்
ா. சிறிது நேரம்
ருந்துவிட்டு தமது
யமாகப் புதுக்
புறப்பட்டுச் செல்
நாட் காலையில்
ஜயம் செய்வதாக
ர்களிடம் விடை
டு புதுக்கோட்டை
ரிக்குப் புறப்படும்
ரயாணமானர்.
ாலை சுமார் 8-மணி
யாபாரியும் சமதர்ம
ன கே. கே. ஏ.
டார் அவர்கள் வியா
இற்கு தோழர்: ஈ.வெ.
விஜயம் செய்தார்கள்.
தோழர், ஈ. வெ. ராவும்
ாரும் கட்சி சம்பந்த

லண்டன் டிரினி, கல்லூரியில் சங்கீதத்தில் முதல்வகுப்புப் பரீட்சையில் முதல்தரமாகத் தேறிய முதல் முஸ்லிம் மாணவியும், கனபகநூர் ஜி. என். ஏ. கரீம், எம். பி. ஈ. அவர்களின் குமாரியுமான மிஸ். சுபேதா கரீம். இப்பெண்ணுக்கு வயது எட்டு.

மான அநேக பொது விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள்.

பின்னர் தோழர்கள்: வைகுண்டம், மிராண்டா முதலியவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி தோழர் ஈ. வெ. ரா. அவர்கள் தூத்துக்குடி தெற்கு காட்டன் ரோட்டிலுள்ள ஈ. வெ. ரா. நாகம்மாள் ஞாபகார்த்த சமதர்ம வாசக சாலையைப் பார்வையிடச் சென்றார். அங்கு வாசகசாலைக் காரியதரிசியால் தோழர் ஈ. வெ. ரா. வுக்கு மாலைகள் சூட்டப்பட்டன. தோழர் ஈ. வெ. ரா. மேற்படி வாசகசாலையைப் பார்வையிட்டு கீழ்க்கண்ட குறிப்பையும் எழுதியுள்ளார்.

"இன்று நான் இந்த ஈ. வெ. ரா. நாகம்மாள் வாசகசாலையை பார்வையிட நேர்ந்ததைப்பற்றி மிகவும் சந்தோஷப் படுகிறேன். இவ் வாசகசாலையில் சகலவித பத்திரிகைகளும், புஸ்தகங்களும் பிறருக்குப் பயன்படத் தக்கவாறு இருப்பதோடு, இவ்வாசகசாலைக்கு வாலிபர்கள் ஏராளமாக வருவதை நான் நேரில் பார்க்க நேரிட்டதையும் மிகவும் பாராட்டுவதோடு, இவ்வாசகசாலை ஆரம்ப கர்த்தாக்கள் இதில் அதிக ஊக்கம் செலுத்துவதையும் நான் பாராட்டுகிறேன்."

வாசக சாலையில் அநேக பிரமுகர்கள் தோழர் ஈ. வெ. ரா. அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். தோழர்கள் இசக்கியா பிள்ளை ஆர். கே. பெருமாள், டாக்டர் பி. சுப்பிரமணியம் முதலானோர்களுடன் சில விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டு தோழர் வைகுண்டம் அவர்களுடன் தோழர் கே. கே. ஏ. பெரியசாமி அவர்களிடம் மறுபடியும் சில விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்து விட்டு காலை 11-10 மணி வண்டிக்குச் சாத்தூரில் நடக்கும் ஜஸ்டிஸ் கட்சி முதல் நாள் தேர்தல் பிரசாரத்திற்குச் சென்றார்.

தோழர் சொ. முருகப்பா அவர்கள்

தென்னிந்திய நலவுரிமைச் சங்க அங்கத்தினர் பதவி ராஜிநாமா

(ஒரு நிருபர்)

காரைக்குடி, டிச, 28

காரைக்குடி தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் அங்கத்தினர் பதவியிலிருந்து 'குமரன் ஆசிரியர்' தோழர் சொ. முருகப்பா அவர்கள் ராஜிநாமா கொடுத்து விட்டார். அவர் ராஜிநாமாவை அங்கீகரித்துக் கொள்ளும்படி தோழர் சி. வி. சி. டி. வெங்கடாசலம் செட்டியார் அவர்கட்கு 25-12-36-ல் அனுப்பியிருக்கின்றார். இதற்குக் காரணம் வடக்கு ராமநாதபுரம் ஜில்லா போர்டில் ஸ்ரீமதி மரகதவல்லி அம்மாள் அவர்கட்கு நாமிநேஷன் கொடுக்காத கோபமென்று கூறப்படுகின்றது.

இந்தக் கோபத்தின் காரண இனி காங்கரஸில் போய்ச்சேரப் போவதாகவும் ஒரு வதந்தி.

"விசுவகர்மா"

தெலுங்கு திங்கள் வெளியீடு

விசுவகர்ம குலத்திற்குத் தொண்டாற்ற மேற்படி பத்திரிகை பிரதி மாதமும் வெளிவரும். இதில், குல முன்னேற்றத்திற்கான பல விஷயங்களையும் தங்கு தடையின்றி பிரசுரிக்கப்படும். சித்திரம், சிற்பம், ஓவியம் முதலிய புராதனகலைகளைப் பற்றியும், பல திறப்பட்ட கைத்தொழில்களைப் பற்றியும், குலஆசாரம், பழக்க வழக்கங்கள் முதலியவைகளைப் பற்றியும் கட்டுரைகள் எழுதப்படும். இப்பத்திரிகை முக்கியமாக தெலுங்கு சஜாதி சகோதரர்களுக்கு இன்றியமையா திருப்பதனால் அனைவரும் சந்தா சேர்ந்து ஆதரிக்கு மாறு வேண்டுகிறோம். வருட சந்தா ரூ. 1-0-0 ஆதரிப்பாளர் சந்தா ரூ. 5 மற்ற விபரங்களுக்கு என். நாராயண ஆச்சார்யலு, 28, சவரிமுத்து தெரு, மண்ணடி, சென்னை, என்ற விலாசத்திற்கு எழுதவும்.

முழக்கம் !
சுந்தரப்பா,
ாதேவி,
ாதேவி,
ணி,
ன் சேர்ந்து நடித்த

சபா

இந்திரா டாக்கிஸாரின் வெற்றி !!

லக்ஷக்கணக்கான ஜனங்கள் கண்டு மகிழ்கிறார்கள். மஹா ராஜாக்களும், ஜமீன்தார்களும், பிரபுக்களும் பல முறை பார்த்து புகழ்கிறார்கள்.

மகத்தான வரம்
நியூ சினிமாவிலும்,
நடி சினிமாவிலும்

காந்தர்வகானம் ததும்பும் சிங்கார ரச புராணீக தமிழ் பேசும் படம் பார்க்கத் தவறாதீர்கள்.

க்கள் இடமின்றி திரும்ப நேருகிறது. முந்துங்கள்; மறுசமயம் வாய்ப்பதரிது.

டாக்கீஸ்.
டன் டாக்கீஸ்.
தஞ்சை —நியூ ராஜாராம் டாக்கீஸ்.
மாயவரம்—சுந்தரம் டாக்கீஸ்.
கோயமுத்தூர்—
எடிஸன் டாக்கீஸ்

ம், இன்னும் இதர ஊர்களிலும் ஆரம்ப தினங்களை ஆவலுடன் எதிர்பாருங்கள்!

ண்டாள் கல்யாணம்

கைவசம் இருக்கும் படம்:—
மதராஸ் மெயில்
மிஸ் T. N. மீனாக்ஷி, மிஸ் T. செல்லம் முதலியோர நடித்தது.

இந்திரா டாக்கிஸ்
புரொப்ரைட்டர்: T. B. கிருஷ்ணய்யர். தந்தி: "Teebeekey".
59, மஞ்சணக்காரத் தெரு,
மதுரை.
போன் கெ. 96.